ஸ்ரீ
கம்பராமாயணம்

ஆறுவது
யுத்தகாண்டம்

(இரண்டாம் பாகம்)

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்
இயற்றிய உரையுடன்

குவை பப்ளிகேஷன்ஸ்
51, பெல்சு சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005
தொலைபேசி : 843933 & 845264

ஏழாம் பதிப்பு : 1976

விலை ரூ. 25-00

வைரம் அச்சகம், சென்னை - 600 005

இப்புத்தகத்திலடங்கியவை

முகவுரை

கல்வியிற் பெரியராய கம்பர் செய்த இராமாயணத்துக்குத் திருத்தமுற உரையெழுதும் பெரும் பணியிலீடுபட்டு அடியேன் திருத்தமப்பனூர் முற்றிலும் உரையெழுதி முற்றுவித்த உண்மை இப்பேருலகு அறியும். அவற்றினுள் யுத்தகாண்டத்தின் உரை ஆறும் பதிப்பாக இப்போது வெளிவந்துள்ளது. இவ்வுரையில் சொன்னயம், பொருணயம், அணிவகை, தத்துவக் கருத்துக்கள் முதலியன ஆங்காங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்தப் பதிப்பு அச்சாகுங்கால், ஒப்பு நோக்குதல், பிழைபார்த்தல் முதலிய வகையால் முற்றிலும் உதவியவர் விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரான வித்வான் C. ஜெகந்நாதாசார்யர், M A., L.T., அவர்களும், ஈகை E. S. வரதாசார்யர், B. A., அவர்களும் ஆவர். இவ்விருவர் திறத்தும் நன்றி யறிதலுடையேன்.

எமது உரைகளை உபயோகித்தும் உபயோகிக்குமாறு தூண்டியும் ஊக்கத்தை விளைத்து வருகிற கைம்மாறு வேண்டாக் கடப்பாளர்கள் திறத்தில் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்ஙனம்

சாதாரண ஹு பங்குனிமீ } வை. மு. நரசிம்மன்.

ஸ்ரீ

கம்பராமாயணம்

யுத்தகாண்டம்.

19-ஆவது படைத்தலைவர் வதைப்படலம்

மகாபாரிசுவன் தூமிராட்சன் முதலிய படைத்தலைவரின் வதையைக் கூறும் படலமென்பது, பொருள். ஒரு பிரதியில் இப் படலமும் அடுத்த படலமும் சேர்க்கப்பட்டு, **கங்குல்மகாராட்சப் படைத்தலைவர் மகரகண்ணன் வதைப்படலம்** என்ற பெயர் கொண்டு காணப்படுகின்றது.

வானரர்கள் ஆரவாரித்ததைக் கேட்டு அரக்கர் போர்வேட்கை கொண்டு இராவணனிடஞ் சென்று போர்க்குச் செல்ல விடை கேட்டனர். இராவணன் மகாபாரிசுவ தூமிராட்சரை நோக்கி, 'நீவிர் பிரதானராக இருந்து போர்க்குச் செல்க' என்றனன். அதுபொழுது தூதர்கள் அன்று பகலில் நிகழ்ந்த போரில் அவர்கள் இந்திரசித்தைத் தனியே விட்டிட்டு ஓடி வந்திட்டதைத் தெரிவித்தனர். இராவணன் அவர்மீது சினங்கொண்டு அவர்களைப்பற்றி மூக்கை யறுக்கும்படி சொல்ல, கிங்கரர் அங்ஙனஞ் செய்யமுயல, மாலியென்பவன் நியாயங்கூறித் தடுத்தான். இராவணனும் சினம் மாறினன். உடனே, மகாபாரிசுவதூமிராட்சர், தாம் சபதஞ் செய்து, போர்க்குச்செல்லத் தம்மையேவ வேண்டினர். இராவணன் உடன்பட்டுப் பத்துவெள்ளஞ் சேனையுடனே யஜ்ஞஹா சூரியசத்துரு முதலியோரையும் பக்கபலமாக ஏவினன். யாவரும் போர்க்களங் குறுகினர்.

விபீஷணன், ஸ்ரீராமனுக்கு அப்படைத்தலைவர்களை இன்னுரின்னுரென்று தெரிவித்தனன். பிறகு வானரசேனைக்கும் இராட்சச சேனைக்கும் கைகலந்த போர் நிகழ்ந்தது. அப் போரில் தூமிராட்சன் அநுமானுடனும், மகாபாரிசுவன் அங்கத குமாரனுடனும், மாலி நீலனுடனும், பிசாசன் பனசனுடனும், சூரியசத்துரு சுக்கிரீவனுடனும், யஜ்ஞஹா இளையபெருமாளுடனும், வச்சிரதம்ஷ்ட்ரன் விருஷபனுடனும் எதிர்த்து நின்றூர்கள்: அப்போது நிகழ்ந்த மும்முரமான போரைக் கண்டு தேவர்களும் நடுநடுங்கினர். அப்போரில் ஆறுவெள்ளஞ் சேனையை வானரத்தலைவர் மாய்த்தனர். மற்றை நாலுவெள்ளஞ் சேனையை இலட்சுமணன் மாய்த்தனன்.

இவ்வாறு கடும்போர் நிகழ்கையில், இரவு கழிந்து சூரியன் உதயமானுன். பின்னும் மும்முரமாக நிகழ்ந்த போரில், அநுமான் தூமிராட்சனைத் தரையில் வீழ்த்தி உதைத்து, அவனுடைய தலைகளைத் திருகிக் கடலில் தள்ளிக் கோபம் மாறினன். மகாபாரிசு

வனும் அங்கதனும் உக்கிரமாகப் பொருகையில், மகாபாரிசுவன் அம்புகளை மிகுதியாக அங்கதன் மேலெய்ய, அவன் அவ் வரக்கனது வில்லை முறித்துத் தேருடனே அவனை வானத்தின்மீது எறிந்தான். அரக்கன் தேரை விட்டிழிந்து யுகாந்தகாலத்து இடிபோன்ற சூலத்தை அங்கதன்மேலெறிய, இராமபிரான் தமது அம்பால் அதனை அறுத்துத் தள்ளினர்: அப்பால், அங்கதன் மிக்க வலிமையோடு அவ் வரக்கனைப் பிடித்து இருபிளவாகப் பிளந்து எறிந்திட்டான். மாலி யென்பவன் கடும்போர் புரிகையில், நீலனென்னும் வானரன் ஒருமலையை யெறிந்து அவன் வில்லை இரு துண்டாக்கினன். மாலி வாட்படைகொண்டு நெருங்க, குமுதன் ஒருமலையை யெறிந்து அவ் வரக்கன்தேரைச் சிதைத்தனன். நீலன் ஒரு மராமரத்தைப் பிடுங்கி அவ்வரக்கன்மீது எறிய, அதை அவன் வாட்படையாற் சிதைத்துப் பின்னுந் தொடர்ந்தான். இலட்சுமணன் வாளேந்திய அவ் வரக்கன் தோளை வெட்டி வீழ்த்தி, இனி இவனுடன் பொருதல் தகாதென்று அப்பாற் சென்றனன். இளையபெருமாளின் அவ்வீரகுணத்தை யாவரும் புகழ்ந்தனர். பின்பு இலட்சுமணன் கடுங்கோபங்கொண்டு யஜ்ஞஹாவைக் கொன்றனன். வச்சிரதம்ஷ்ட்ரன் இடபனோடு பொருது தண்டாயுதத்தால் உயிரைப் பற்றி ஐயமுண்டாகும்படி அவனை மோதினனாக, அநுமான் பொருது குத்தி அவனைக் கொன்றான். பனசனோடு பொருத பிசாசன் அவன்மீது தோமரத்தை விட்டெறிந்து, வியக்குந் திறலுள்ள குதிரைமீது ஏறி வானரர்களை வருத்திக்கொண்டு போர்க்களத்தில் திரிந்துகொண்டிருந்தான். அப்போது இலட்சுமணன் வாயவ்யாஸ்திரத்தினால் அவன் தலையை யறுத்துத் தள்ளிவிட்டான். பின்பு இராவண தூதுவர்கள் படைத்தலைவரெல்லாம் மாண்டமையைத் தெரிவிக்கும் பொருட்டு இராவணனிடம் ஓடினார்களென்பது, இப்படலத்துக் கூறப்படுகின்றது.

1.—வானரர்கள் ஆர்த்தெழும் ஓசையைக் கேட்டு, அரக்கர் சினம் பொங்கப் போர்விரும்பி இராவணனிடம் விடை கேட்டல்.

ஆர்த்தெழு மோசை கேட்ட வரக்கரு முரசு மார்ப்பப்
போர்த்தொழில் [1]வேட்கை பூண்டு [2]பொங்கினர் புகுந்துமொய்த்தார்
தார்த்தட மார்பன் றன்னைத் தாவிடை யென்னச் [3]சார்ந்தார்
பார்த்தனன் [4]முனிந்து மன்ன னினையன பகர்வ தானான்.

(இ - ள்.) ஆரவாரித்தெழுந்த ஓசையைக் கேட்ட அரக்கரும்,—முரசம் ஆரவாரிக்கப் போர்த்தொழிலில் விருப்பம்பூண்டு (சீற்றம்) பொங்கினவராய், (இராவணனிருக்குமிடத்திற்) புகுந்து மொய்த்தாராகி, மாலையையணிந்த விசாலமான மார்பையுடையவனை இராவணனைப் பார்த்து, 'விடை தருவாய்' என்று அணுகினர்; (அரக்கர்) மன்னவனான இராவணனும் பார்த்துச் சினங்கொண்டு இவ்வார்த்தைகளைச் சொல்வதானான்; (எ - று.)—அரக்கன் வார்த்தையை மேற்கவியிற் காண்க. பி-ம்:—[1] வேடம். [2]பொங்கியே. [3]சொன்னார். [4]அரக்கர்கோனும் போமெனப்பகருங்காலை. (2253)

2.—தம்மைப் போருக்கு ஏவுமாறு கேட்ட மகாபார்சுவதூமிராட்சர்கட்கு இராவணன் விடைதர, தூதுவர் பொருமி அவர்தன்மையை இராவணனிடஞ் சொல்லத்தொடங்குதல்.

மாபெரும் பக்க னோடு [1]வான்புகைக் [2]கண்ணன் [3]வந்திங்கு
[4]ஏவுதி யெம்மை யென்று னவர்முக [5]மினிதி னோக்கிப்
போவது புரிதி [6]ரென்னப் [7]புகறலும் பொருத தூதர்
தேவ! மற்றிவர்கள் செய்கை கேளெனத் தெரியச் சொன்னார்.

(இ - ள்.) மகாபாரிசுவனென்பவனோடு சிறந்த தூமிராட்சன் வந்து 'இப் போரில் எம்மை ஏவுக' என்றான்: அவர்முகத்தை (இராவணன்) இனிதாகப் பார்த்து '(போர்த்தொழிலுக்குப்) போவதைச் செய்க' என்று சொல்லுதலும், (அதனைக்கேட்டுப்) பொருத தூதர்;—'தேவ! இவர்கள் செய்த செய்கையைக் கேள்' என்று சொல்லி (அவர்கள் செய்கையை) விளங்கச் சொல்லலாயினர்; (எ - று.)—தூதர் கூறுவதை அடுத்த கவியிற் காண்க. பி-ம்.—[1]மா. [2]கண்ண. [3]நீயும். [4]ஏகுமினென்னப் பாராவவர், ஏவுதிரெம்மையென்பார்தம், ஏவுதியெம்மையென்றூரவர், ஏவுறுமெம்மையென்பார்தம். [5]இனிது. [6]என்னப். [7]புகுதலும். மற்று - வினைமாற்று. (2254)

3.—தூதர் மகாபார்சுவதூமிராட்சரின் செய்கையை இராவணனிடம் கூறுதல்.

ஆனையும் பரியுந் தேரு மரக்கரு [1]மமைந்த [2]வாழித்
[3]தானைகள் வீய நின்ற தலைமகன் றனிமை யோரார்
மானவன் வாளி வாளி யென்கின்ற மழலை வாயார்
[4]போனவர் மீள வந்து [5]புகுந்தனர் [6]போலு மென்றார்.

(இ-ள்.) ஆனையும் குதிரையும் தேரும்(பதாதிகளான) அரக்கருமாகிய (சதுரங்கங்களும்) அமைந்த கடல்போன்ற சேனைகள் அழிந்திட(த் தனித்து) நின்ற தலைமகனான இந்திரசித்தின் தனிமையைச் சிறிதும் எண்ணாமல், 'மானவனுடைய வாளிவாளி' என்கின்ற குதலைச் சொல்லைச் சொல்லும் வாயையுடையவராய் ஓடிப்போனவரான இந்தமகா பார்சுவ தூமிராட்சர்கள் மீளவந்து(தமது வீரத்தைக் காட்டுமாறு) புகுந்தார்போலுமென்றார்; (எ - று.)

'சமயத்திற் பின்வாங்கிய இவரும் ஒருவீரராவரோ?' என்ற குறிப்புப்பட, தூதுவர் 'போனவர் மீளவந்து புகுந்தனர்போலும்' என்றார். இலட்சுமணனது அம்பினிடத்துள்ள அச்சத்தினால் அதனைச் சொல்லும்போது வாய்தழுதழுத்ததென்பதுபட 'மழலை வாயார்' என்றது. பி-ம்:—[1]ஐய. [2]ஆளித், யாளித், வெள்ளத். [3]தானையும். [4]ஆனவர்மீண்டு. [5]புகுந்துளர். [6]அரச. (2255)

வேறு.

4.—மகாபாரிசுவ தூமிராட்சரின்மீது இராவணன் சீற்றங்கொண்டு அவர்களைப் பற்றுமினெனல்.

[1]அற்றவர் கூறலு மா[2]ரழ லீற்றாய்
முற்றிய கோப முருங்க முனிந்தான்

[3]இற்றது வோவிவர் சேவக மென்னுப்
பற்றுமி[]னென்றனன் வெம்மை பயின்ருன்.

(இ-ள்.) அவ்வாருன வார்த்தையை அந்தத்தூதுவர்சொல்லவும்,—கொடுமையிற் பழகியவனுன இராவணன்,—நிறைந்தநெருப்பின் தன்மையைக் கொண்டதாய் முதிர்ந்த சினத்தால் (தன்னிலே) அழிய மிக முனிந்தவனுய், 'இவர் சேவகம் இப்படிப்பட்டதோ!' என்று சொல்லி '(இவர்களைப்) பற்றுங்கள்' என்ருன்; (எ - று.)—பி-ம்:—[1] அற்றதுணர்த்தலும். [2] அழலிற்காய். [3] இற்றித. (2256)

5.—இராவணன் கட்டளைப்படியே கிங்கரர் அவ்விருவரையும் பற்றுதல்.

என்றலு [1]மெய்தினர் கிங்கர ரென்பார்
[2]பின்றலி லாரை வலிந்து பிடித்தார்
நின்றன ராயிடை நீல நிறத்தான்
[3]கொன்றிடு வீரலிர் கொண்மினி தென்ருன்.

(இ - ள்.) என்று கூறியவுடனே, கிங்கரரென்பவர் கிட்டிப் (போரிற்) பின்வாங்கிய அவர்களை வலியப் பிடித்துக்கொண்டு நின்றனர்; அப்போது கருநிறமுள்ள இராவணன், '(இவர்களைக்) கொல்லவேண்டா; (யான் கூறப்போகின்ற இதை) உறுதியாக மனத்துக்கொள்ளுங்கள்' என்று கூறலானுன்; (எ - று.)—அதனை மேற் கவியிற் காண்க.

பின்றலிலார்-பின்னிடுதலையுடையவர்: பின்றல்-பின்னுடுதல்: "அரசிலார்" "தவமிலார்" என்ற இடங்களிற்போல, இல் - சாரியை. கொண்ம்=கொள்ளும். கொண்மின் இது என்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1]ஏயினர். [2]பின்றலிஞேரையுடன்று பிடித்தே, பின்றின வோரை...பிடித்தே, [3]கொன்றிடுவீரெனக் கொல்லலிர், கொன்றிடுவீரர் கேண்மினிது, கொன்றிடுவீரலிர் கொண்மினீர்.()

6.—அவ்விருவரையும் மூக்கறுத்துப் பறைகொட்டி ஊர்க்குத் தெரிவிக்குமாறு இராவணன் கட்டளையிடல்.

ஏற்ற மினிச்செயல் வேறிலை [1]யீர்வீர்
நாற்ற [2]நுகர்ந்துயர் நாசியை [3]தாமக்
[4]கோற்றரு திண்பணை [5]கொட்டினிர் [6]கொண்டூர்
[7]சாற்றுமி னஞ்சின [8]ரென்றுரை தந்தே.

(இ-ள்.) 'நாற்றத்தை நுகர்ந்து ஓங்கித்தோன்றுகின்ற (இவர்களுடைய) மூக்கினை யீர்வீர்: (ஈர்ந்து பின்பு இவர்களை) ஊர் முழுதுங் கொண்டுபோய் (இவர்) அஞ்சினவரென்றுசொல்லி, சிறந்த கடிப்பினுல் அறைகின்ற திண்ணிய பறையைக் கொட்டிய வண்ணம் அறிவியுங்கள்; இனித்தகுந்த செயல் (இதனின்) வேறில்லை; (எ - று.)—(என்று இராவணன் கட்டளையிட்டான்) என வருவித்துமுடிக்க. இனி, இருசெய்யுளும் ஒரே தொடராகவுமாம். பி-ம்:—[1]வீரை, ஈர்ந்து, ஈர்ந்தவர். [2]நுகர்ந்திடு. [3]ஈவீர். [4]கோற்றெருகு' [5]கொட்டினர். [6]கொண்டே. [7]சாற்றினர். [8]என்றதனைத்தான். (2258)

7.—மாலி அச்செயலைத் தடுத்தல்.

அக்கணனே [1]யயில் வாளினர் [2]நேரா
மிக்குயர் நாசியை யீர விரைந்தார்
[3]புக்கன ரப்பொழு திற்புகழ் தக்கோய்
தக்கில தென்றனன் மாலி தடுத்தான்.

(இ - ள்.) அப்போதே, (கிங்கரர்),—உடன்பட்டு, கூரிய வாளினை யுடையவராய், மிக்குயர்ந்த நாசியை யீர்தற்கு விரைந்து புகுந்தார்; அப்பொழுது மாலியென்பவன் (இராவணனைப் பார்த்து), 'புகழப்படுகின்ற பெரியோனே! (இது) தக்கதன்று' என்று சொல்லித்தடுத்தான்; (எ - று.)—பி-ம்:—[1]அரி, உயர். [2]ஆனோர், வாளால், வந்தார். [3]புக்கனன். .(2259)

8.—எட்டுக்கவிகள்-ஒருதொடர்: மாலி மகரபாரிசுவ தூமிராட்சரின் மூக்கை யரிதலாகாதென்பதற்கு நியாயங் காட்டுதலைத் தெரிவிக்கும்.

அஞ்[1]சம மஞ்சி யழிந்துள [2]ரானோர்
வெஞ்சமம் [3]வேறலும் [4]வென்றிய தின்றாய்த்
துஞ்சலு மென்றிவை [5]தொல்லைய வன்றே
தஞ்சென வாருள ராண்மை [6]தகைந்தார்.

(இ-ள்.) அழகியபோரில் அஞ்சி யழிந்தவரானவர் (பின்னர்க்) கொடியபோரில் வெல்லுதலும், (முன்பு வென்றவர் மற்றொருபோது) வெற்றியென்பது விளைந்திடாமல் துஞ்சுதலும் என்ற இவை, பழமையாய் நடந்துவரும் முறைமையன்றோ? ஆண்மையைத் தஞ்சமாக(த் தம்மிடத்து)த் தடுத்து வைத்துக்கொண்டிருப்பவர் யாவருளர்? (எ - று.)

ஒருமுறை, அஞ்சியோடியதற்காக இவரைத் தண்டித்தல் தக்கதன்று: தோற்ற இவர் இப்போது வென்றாலும் வெல்லலாமென்று குறிப்பித்தபடி. ஆண்மையைத் தடுத்துத் தம்மிடத்திலேயே ஸ்திரமாக இருக்கும்படி வைத்துக்கொள்ளுதல், எவர்க்கும் இயலாதென்க. 'அழிந்துளரானோர்' என்பதற்கு ஏற்ப 'முன்பு வென்றவர்' என்று வருவிக்கப்பட்டது. இங்ஙன் வருவியாது 'ஒருமுறை அழிந்துளரானோர் மறுமுறை வேறலும் அன்றித்துஞ்சலும் இவை தொல்லைய' என்றுரைத்தலும் ஒன்று. துஞ்சுதல் - சோர்தல், இறத்தல் என்ற பொருள்களைத் தரும். தஞ்சம் - ஸ்திரமானது. சமம் = ஸமரம்: வடசொற்றிரிபு. பொதுப்பொருளால் சிறப்புப்பொருள் விளங்கிய பிறிதுமொழிதலணி. பி - ம்:—[1]சமர். [2]ஆனால். [3]வென்றதும். [4]வென்றியதன்றே. [5]தொல்லையவன்றோ, தொல்லையதன்றே. [6]தகைந்தே. (2260)

9. **அந்தர மொன்று மறிந்திலை யன்றே**
[1]வந்தது நம்வயி [2]னெத்தனை மன்றா
[3]தந்திரம் வானவர் தானவ [4]ரென்னும்
[5]இந்திர னஞ்சினெ னென்னுநி யன்றே.

(இ - ள்.) (நீ) வேறுபாடு சிறிதும் அறிந்திலே; தேற்றம்; மன்னு! வானவர் தானவர் என்கிற எத்தனைச்சேனை நம்மிடத்து (எதிர்க்க) வந்தது? (அதெல்லாம் தோற்றிடவில்லையோ?) இந்திரன் அஞ்சினுனே: (அதை) எண்ணிப்பார்; (எ-று.)

எப்போதும் ஒருவர் வென்றே இருக்கவேண்டுமென்கிற நியதி யில்லை யென்பதை ஆராய்ந்துணரவேண்டு மென்பது, 'அந்தர மொன்று மறிந்திலே' என்றதன் குறிப்பு. முதல் வாக்கியத்தைச் சமர்த்திக்குமாறு, தேவதானவர் தம்மிடத்துத் தோற்றதையும், தேவேந்திரனும் தோற்றதையும், எடுத்துக்காட்டுகிறுன். தேவர் தோற்றதில் இந்திரன் தோற்றமையும் அடங்குமாயினும், சிறப் பினதாதலால், அவன் தோற்றமையைத் தனியே எடுத்துக் கூறி ஞன். அந்தரம் - நடுவுநிலையுமாம்: செயல் நிகழ்த்தற்கும் உரிய இடமுமாம். அன்றே-தேற்றம்: இனி, ஏ-அசை என்று கொண்டு, அன்று-முற்காலத்தில் எனினுமாம். பி - ம்:—[1]வந்தன, வந்தனே. [2]எத்துணே. [3]தந்திர. [4]எனும், என்றும். [5]இந்திரரஞ்சினர். (2261)

10\. வருண னடுங்கினன் வந்து வணங்கிக்
கருணை பெறுந்துணை யும்[1]முயிர் காலா
[2]இருணிற வஞ்சக ரெங்குள [3]ரெந்தாய்
பருணிதர் தண்ட மிதன்று [4]பகர்ந்தால்.

(இ - ள்.) (இராமனிடத்து) வந்து வணங்கி (அவனது) கருணை பெறுமளவும் வருணதேவன் பெருமூச்சுவிடுபவனுகி நடுங்கினுன்; (அந்த இராமனிடத்துத்தேவர்களே அஞ்சவேண்டியிருத்தலினுல்) இருணிறமுள்ள வஞ்சகர் [அரக்கர்] எங்கே இருப்பார்? [அவ்விரா மனுக்கு முன்னே சாதாரண ராட்சசர் போரில் முனைந்து இருப் பது முடியாததே யென்றபடி]: எந்தாய்! ஆராய்ந்து சொல்லு மிடத்து, (நாசியையறுப்பது என்ற) இச்செயல் அறிந்தோர் செய் தற்கு உரிய தண்டனையல்ல; (எ-று.)—பி-ம்:—[1]உயிர்கால்வான். [2]இருணிறை. [3]உய்ந்தார். [4]பகர்ந்தாய், பகர்ந்தான். (2262)

11\. பத்தொரு [1]நாலு பகுத்த பரப்பின்
அத்தனை வெள்ள மரக்க [2]ரவிந்தார்
ஒத்தொரு மூவர் [3]பிழைத்தன ருய்ந்தார்
[4]வித்தக [5]யாரினி வீரம் விளைப்பார்.

(இ - ள்) நாற்பது வெள்ளமாகப் பகுத்த பரப்பினையுடைய அத்தனை யரக்கரும் உயிரவிந்தார்: (அந்நாற்பது வெள்ளஞ்சேனை யில்) தூமிராட்சன் மகாபார்சுவன் இந்திரசித்து என்ற இம்மூவர் தாம் உயிர் பொருந்தித் தப்பிப் பிழைத்தார்கள்; வித்தகனே! இனி (இவர்களைக் காட்டிலும்) வீரம் விளைத்தற்கு உரியவர் யாவ ருளர்?— (எ-று.)

[4]வித்தகர் என்ற பாடத்துக்கு - நாற்பது வெள்ளஞ் சேனைய ழியவும் தப்பிப்பிழைத்த இவர்கள் வல்லமையுள்ளவராவ ரென்க. பி - ம்:—[1]நான்கு. [2]அடைந்தார், இடைந்தார். [3]பிறிந்தனர், பிளந் தனர். [5]ஆருளர். (2263)

12. பாசமு மிற்றது பாதியின் மேலும்
[1]நாசமு முற்றது நம்பி நடந்தாய்
பூசன் [2]முகத்தொரு [3]கான்முளை [4]போதா
நீசரை [5]வெட்டுதி யோநெடு நாசி.

(இ - ள்.) (இராமலட்சுமணரை இந்திரசித்து கட்டிய) நாக பாசமும் இற்றுப்போய்விட்டது; பாதிக்குமேலாகவே (இராட்சச சேனை) மாண்டுவிட்டது; நம்பி! (நீயும் ஒருமுறை போர்க்குப்) போய்த் திரும்பிவந்திட்டாய்; போர்முகத்திலே ஒப்பற்ற உன்புதல்வனுடன் போகாத எளிய பணியாளரானவரை நெடிய நாசியை வெட்டக் கடவையோ? (எ - று.)

உன்னாலும் எதிரிகளை எதிர்க்க முடியவில்லை; உன்புதல்வன் செயலும் பயனற்றுப்போயிற்று: இப்படியிருப்பதனால், எதிரிகளுடன் செய்த போரில் உன் மகனுக்குத் துணையாய்ப் போகவில்லையென்று இவர்கள் நாசியை வெட்டுதல் தகுதியாமோ? என்றவாறு. [4]போதஎன்ற பாடத்திற்கு - பூசன்முகத்தினின்று உன்கான்முளை மீண்டுவந்திட, நீசரை நாசிவெட்டுதியோ? என்க: பூசன் முகத்து மீண்டுவந்த கான்முளையின் நாசியை வெட்டவேண்டாவோ? அது புரியாது இவர்கள் நாசியைவெட்டுதல் முறையோ? என்றவாறு. பி-ம்:—[1] தாசமுமற்றது தம்பி நடந்தாய், நாசமுமுற்றது நம்படைசாய்ந்து, நாசமுமுற்றது நம்பி நடந்தான். [2]முடித்து. [3]கார். [4]போக போகா. [5]ஈருதியோ, வெட்டுதுமோ. (2264)

13. வாழி யிலக்குவ [1]னென்னின் மறுக்குற்று
ஆழி யரக்கர்தம் வாயி லடைப்பார்
ஏழு கடற்றுணை யோவினி நாசி
ஊழி யறுத்திடி னும்[2]முல வாதால்.

(இ - ள்.) இலக்குவனென்று சொன்னாலும் மனக்கலக்கமடைந்து ஆழிபோல் மிக்குள்ள அரக்கரெல்லாம் தம்(வீட்டு) வாசலை மூடிக்கொள்வார்கள்; (ஆகையால், அவர்கள் எல்லாருடைய நாசியையும் அறுக்கவேண்டும்: ஆகவே), இனி நாசி ஏழு கடலளவு மாத்திரமோ? (அவற்றினும் மிகுமன்றோ? அவ்வாறு அறுக்கத் தொடங்கினால்), ஊழிக்காலம் வரையிலும் அறுத்துக் கொண்டிருந்தாலும் (நாசியெல்லாம்) அறுத்தாகாது; (எ - று.) வாழி-அசை. பி-ம்:—[1] என்ன, என்று. [2]ஒழியாதால். (2265)

14. தூது நடந்தவனைத்தொழு [1]தந்நாள்
ஓது நெடுஞ்செரு வஞ்சி யுடைந்தார்
தீதிலர் [2]நின்றவர் சேனையி [3]னுள்ளார்
[4]பாதியின் மேலுளர் நாசி படைத்தார்.

(இ - ள்.) ஓதுகின்ற நெடுஞ்செருவில் அன்று அஞ்சித் தூது வந்த அநுமானைத் தொழுது தோற்றவர் தீதில்லாது [உயிர்ப்பிச்சை பெற்று] நின்றவராய் (இப்போது நமது) சேனையிலுள்ளவர் பாதியளவுக்கும் மேலாவர்: (அவர்களெல்லாம்), நாசி படைத்துள்ளார்கள்; (எ - று.)—அவர்கள் நாசியையெல்லாம் வெட்டி

யிருக்க வேண்டாவோ? என்றபடி. பி-ம்:—[1]அன்னார், அன்னான். [2]நின்றுளர், நின்றனர். [3]நின்றார். [4]பாதியினன்றுயர். (2266)

15. விட்டிலை சீதையை யாமெனின் [1]வீரர்
ஒட்டிய [2]போருள தோவொரு நாளே
[3]வெட்டுதி நாசியை வெந்தொழில் வல்லோர்
பட்டில [4]ரென்றிலை யென்று [5]பகர்ந்தான்.

(இ-ள்.) சீதையை விட்டிடாதபடியினால், வீரர் சபதஞ்செய்த (படி நடத்திய) போர் ஒருநாளேனும் உளதோ? வெவ்விய போர்த் தொழிலில் வல்லவரான இராமலட்சுமணரோ உயிர்பட்டொழிந்திலர்; (ஆகவே, போர்க்குச் சென்றவர்) நாசியையெல்லாம் வெட்டுவாயென்று சொல்லவில்லையே; [அங்ஙனமும் சொல்லவேண்டாவோ?] என்று சொல்லி முடித்தான், (மாலி); (எ - று)—பி-ம்:—[1]வீர. [2]போரினிலாருளரொட்டார், நாளுளதோவொருநாளே, நாளுளதேயொழியாமல். [3]வெட்டிடு. [4]ஏலெனில், என்னலை, என்னிலை. [5]பகர்ந்தார். (2267)

16.—பின்பு தூமிராட்சமகாபாரிசுவர் இராவணனிடம் கூறலுறுதல்.

ஆறின [1]னென்ப தறிந்தன ரன்னார்
[2]தேறினர் நின்றனர் சிந்தை தெளிந்தார்
சீறிய நெஞ்சினர் செங்கண [3]ரொன்றே
[4]கூறினர் தந்நிலை செய்கை குறித்தார்.

(இ-ள்.) (மாலியின் வார்த்தைகேட்டு இராவணன்) கோபம் அடங்கினானென்பதை யறிந்தவராய், அந்த மகாபாரிசுவன் தூமிராக்ஷன் என்ற இருவரும்,—மனக்கலக்கந் தீர்ந்து தெளிந்து தைரியமடைந்து நின்று, சீறிய நெஞ்சத்தை யுடையவரும் (அதனால்) செந்நிறமடைந்த கண்களை யுடையவருமாகி, தம்முடைய நிலைமையையும் செய்கையையும் குறித்து ஒன்று கூறலாயினர்: (எ-று.)—அதனை, மேல் மூன்றுகவிகளிற் காண்க. பி-ம்:—[1]பின்னரழிந்தனர், மன்னரழிந்திலன், என்னவறிந்தனர், என்னை யறிந்தனர். [2]தேறினனென்பது சிந்தை தெரிந்தார், தேறினரன்னது சிந்தையுணர்ந்தார். [3]அன்றே, ஒன்றே. [4]கூறினரன்னிலை, கூறுவதின்னிலை, கூறுவதன்னிலை. (2268)

17.—இதுமுதல் மூன்றுகவிகள்-ஒருதொடர்: தூமிராட்ச மகாபாரிசுவர் கூறுவதைத் தெரிவிக்கும்.

உன்மக [1]னொல்கி யொதுங்கின [2]னன்றே
மின்னகு வானிடை [3]யேகி [4]விரைந்தே
[5]அன்னதின் மாயை [6]யியற்றி யகன்றான்
இந்நக ரெய்தின னுய்ந்தன னெந்தாய்.

(இ-ள்.) எந்தாய்! உன் மகனாகிய இந்திரசித்து (போரிற்) பின்வாங்கி யொதுங்கினான்: இம்மட்டோ? மின்னல் விளங்குகின்ற வானிலே விரைந்து சென்று, அங்கு மாயையையியற்றி அகன்று

போய் இந்நகரை யடைந்து பிழைத்தான்; (இது நிகழ்ந்தவிஷயம்); (எ - று.)—பி - ம்:—[1]அஞ்சி, [2]அன்றோ. [3]ஏக. [4]விரைந்தான், [5]அன்னது. [6]இயற்றியதன்றே, இயற்றியதென்றான். (2269)

18. இப்பக [1]லொன்றினி [2]நாளையி னெல்லாம்
[3]முப்பக [4]நீர்க்கில மாவி முடிப்போம்
வெப்பக லாவெரி [5]வெந்தழல் வெந்த
செப்பகல் வெண்ணெயி னோன்மை [6]தெரிந்தோய்.

(இ-ள்.) வலிமையை யுணர்ந்தோனே! (நாங்கள் அப்படியெல்லாம் ஓடாமல்) இப் பகலொன்றிலும் நாளையிலும் எல்லாம் வெம்மை நீங்காத எரிகின்ற வெவ்விய நெருப்பிலே வெந்த செப்பு அகலிலே பட்ட வெண்ணெய்போலாம்படி (எதிர்த்தவரின்) ஆவியை முடிப்போம்; (அங்கனன்றி) மூன்றும்பகல் போக விடோம்; (எ-று.)

இன்றைய நாளையில் பகைவரின் ஆவியைத் தொலைத்துவிடுகின்றோம்: மூன்றும் நாளும் இந்தப் போர் போகும்படி விடுவதில்லையென்றனர், அந்த மகாபாரிசுவதூமிராட்சர்களென்க. பின்னிரண்டடியைத் தனியேயெடுத்து, (எதிர்த்தவரை) நெருப்பிற் பட்ட அகலிற்பெய்த வெண்ணெய்போலாக்கவல்ல எமது நோன்மையை [வலியை] அறிந்தோனே! என்று விளியாக்கினுமாம். பி - ம்:—[1]அன்றெனில், அன்றியல். [2]நாளையிதெல்லாம். நாளையினல்லால். [3]முகப்பகை. [4]திர்கிலம். [5]வெந்தழிவந்த. [6]திரிந்தார். (2270)

19. [1]விட்டனை யெம்மை [2]விடுத்தினி [3]வெம்போர்
பட்டன [4]ரொன்று படுத்தன ரொன்றோ
கெட்டன ரென்பது [5]கேளலை யென்று
ஒட்டின ராவி முடிக்க [6]வுவந்தார்.

(இ - ள்.) எம்மை(ப் போர்க்கு) அனுப்பினவனாய், விடுத்த பின்பு, இனி வெவ்விய போரில் (தாம்) இறந்தார்களென்பதொன்று, (பகைவரை) அழித்தாரென்பதொன்று: (இவ்விரண்டிலொன்றனையே கேட்பாய்; போரில்) தோற்றுவந்திட்டாரென்று கேட்கமாட்டாயென்று, (தம்முடைய) ஆவியைப் போக்க மகிழ்ச்சி கொண்டவராய்ச் சபதஞ் செய்தனர்; (எ - று.)

தூமிராட்ச மகாபார்சுவர் தாம் ஆவியிழக்கவும்உறுதிகொண்டு 'ஒன்று' வென்றுவரவேண்டும்; அன்றி, உயிரையிழக்கவேண்டும்: தோற்றுவருவதில்லை' என்று இராவணனிடம் சபதஞ் செய்து தெரிவித்தனரென்க. ஒன்றோ என்பதன்பின் ஒரு வாக்கியம் வருவித்து உரைக்கப்பட்டது. பி-ம்:—[1]விட்டினி. [2]விடுத்தனை. [3]வெய்யோர். [4]என்று. [5]கேளினி, கேட்கலை. [6]உணர்ந்தார், உகந்தார். ()

20.—இராவணன் தூமிராட்சமகாபாரிசுவருடன் சேனையை யேவுதல்.

அன்னவர் [1]தம்மொடு மையிரு வெள்ளம்
மின்னு படைக்கை யரக்கரை விட்டான்

சொன்ன தொகைக்கமை யானை சுடர்த்தேர்
[2]துன்னு வயப்பரி யோடு [3]தொகுத்தான்.

(இ - ள்.) (இராவணன்),—அவர்களுடனே மின்னும் படைக்கலத்தைக்கைக்கொண்ட பத்துவெள்ளம் அரக்கரை அனுப்பினான்; (முன்) சொன்ன பதாதிகளான அந்தச் சேனைத்தொகைக்கு ஏற்ற யானைகளையும் சுடரைக்கொண்ட தேரையும், நெருங்கிய வலிமையுள்ள குதிரைகளுடனே சேர்த்து அனுப்பினான்; (எ-று.)—பி-ம்:—[1]தாமொடும். [2]மன்னும்வயப், துன்னவயப், துன்னிவயப். [3]வகுத்தான், தொகுத்தார். (2272)

21.—இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்: யஜ்ஞசத்துரு முதலியோரும் சதுரங்கசேனைகளும் அவ்வரக்கர்கட்குப் பக்கபலமாகச் சென்றமை கூறும்.

[1]நெய்யழல் வேள்வி நெடும் [2]பகை நேர்விண்
தைவரு சூரிய சத்துரு [3]வென்பான்
பெய்கழன் மாலி பிசாச னெனும்பேர்
வெய்யவன் [4]வச்சிரம் வென்ற வெயிற்றான்.

(இ - ள்.) நெய்சொரியப்பெற்ற அனலைக்கொண்ட பெரிய வேள்விக்குச் சத்துரு [யஜ்ஞசத்துரு], நேராக விண்ணிற் சஞ்சரிக்கின்ற சூரியனுக்குச் சத்துரு [சூரியசத்துரு], அணிந்த வீரக்கழலையுடைய மாலி, பிசாசனென்னும் பேரைக்கொண்ட கொடியவன், வச்சிரத்தைவென்ற கோரப்பற்களையுடையவன் [வஜ்ரதம்ஷ்ட்ரன்], (எ-று.)—என்பான்-முதல்வேற்றுமைச்சொல்லுருபு. யஜ்ஞசத்துரு=யஜ்ஞஹா. பி - ம்:—[1]நெய்யெரி, நெய்யெழில். [2]பகையோன், படைதேர், பகைதேர். [3]என்றார், என்றோர், ஏற்றால், ஒன்றோ. [4]வச்சிரமென்ற. (2273)

22. என்றவ ரோடு மெழுந்துல கேழும்
வென்றவ [1]னேவலின் முன்னம் விரைந்தார்
சென்றன [2]மால்கரி தேர்பரி செல்லக்
[3]குன்றின மென்ன [4]நடந்தனர் கொட்பால்.

(இ-ள்.) என்றவருடனே (மகாபாரிசுவ தூமிராட்சர்கள்),—எழுந்து, உலகேழும் வென்றவனான இராவணனுடைய ஏவலினால் முன்னம் விரைந்தவராய், பெரிய யானை தேர் பரி என்றவைகளும் நடந்தன (உடன்) போக, வலிமையோடு மலையினம்போல நடந்தார்கள்; (எ-று.)—பி-ம்:—[1]ஏவலினேகி. [2]மா. [3]குன்றினமாக, குன்றினுமுயரியர். [4]நடந்தது கொட்ப, வீரியர் கொட்பால். (2274)

23.—ஆறுகவிகள்-அரக்கருடைய பெருஞ்சேனையின் வருணனை கூறும்.

விண்ணை விழுங்கிய [1]தூளிய விண்ணோர்
[2]கண்ணை விழுங்கு தலிற்கரை [3]காணார்
[4]எண்ணை விழுங்கிய சேனையை யாரும்
[5]பண்ணை விழுங்க வுணர்ந்திலர் [6]பண்பால்.

(இ-ள்.) விண்ணை விழுங்கிய தூளியானது அந்த விண்ணோரின் கண்ணை மறைத்தலால், (அவர்கள், சேனையின்) கரையைக் காணாதவராயினார்; (இப்படித் தேவரே காண மாட்டாமையால்), எண்ணைக் கடந்த சேனை அமைந்துள்ள வகையை எவரும் முறைமையால் முற்ற உணராதவராயினார்; (எ - று.)

பேருணர்வுபடைத்தவரென்னப்படுந் தேவர்களே உணராதபோது, மற்றவர் அச்சேனை அமைந்துள்ள அளவைக் காண முடியாமை இயல்பேயென்க. அவ்விண்ணோரென்பது தொகுத்தல் விகாரப்பட்டது. பண்-அமைந்துள்ளவகை. பி-ம்:—[1] தூளியின், தூளியர். [2] எண்ணை. [3] காணும், காணு. [4] மண்ணைவிழுங்கியெழுந்துயர்சேனை, மண்ணைவிழுங்கியசேனை வரும்போர், எண்ணைவிழுங்கிய சேனையர்யாரும். [5] மண்ணை. [6] வானோர். (2275)

24. கால்கிளர் தேரொடு [1]கால்வரை யோடும்
மேல்கிளர் பல்கொடி வெண்டிரை வீச
மால்கட லானது [2]மாப்படை வாள்கள்
பால்கிளர் [3]மீனிடை யாடிய பண்பால்.

(இ - ள்.) சக்கரத்தோடு விளங்குகின்ற தேர்களோடு கால்படைத்த மலைபோன்ற யானைகளிடத்தும் மீது விளங்குகின்ற பல கொடியாகிய வெள்ளிய அலைகள் வீச, வாட்படைகள், சேனையினிடத்து விளங்குகின்ற மீன்போல இடையே சஞ்சரிக்கின்ற தன்மையால், பெரியசேனை, பெரியகடல்போன்றது; (எ-று.)—இச்செய்யுள், சிலபிரதியிற் காணப்படவில்லை. பால்-இடம். உருவக வணியை யங்கமாகக் கொண்டுவந்த தற்குறிப்பேற்றவணி. பி-ம்:—[1] கார்வரையோடு. [2] மாமழைவானம், மாமழைவானப். [3] மின்னிடையோடிய. (2276)

25. பேரி கலித்தன [1]பேருல கைச்சூழ்
[2]வாரி கலித்தன வாமென [3]யானை
[4]காரி கலிக்கட லோடு [5]கலித்த
மாரி [6]கலித்தென வாசி [7]கலித்த.

(இ - ள்.) பெரிய உலகைச் சூழ்ந்த கடல் ஒலித்தனபோலப் பேரி ஒலித்தன; யானைகள் காரோடு போட்டிபோட்டுக் கடலோடு கலித்தன; மாரிகலித்தாற்போல வாசிகள் ஒலித்தன; (எ - று.)—வாரி-கடலுக்கு, இலக்கணை: இரண்டாமடியில், மூன்றுஞ்சீரில் 'வாமென' என வருவது மோனையாகக்கொள்ளப்பட்டது: இங்ஙன் சிறுபான்மை சந்தியக்கரத்தை மோனையாகக் கொள்வதுமுண்டு: இனி [2]ஏரிகலித்தன என்ற பாடமுமுண்டு: ஏரி-கடல். பி-ம்:—[1]பேருலகுஞ். [3]யானைக். [4]காருருமேறு கலித்தனவொப்ப. [5]கலிப்ப. [6]கலித்தன. (2277)

26. சென்றன சென்ற [1]சுவட்டொடு செல்லா
நின்று [2]பிணங்கிய [3]கல்வியி [4]னில்லா
ஒன்றினை யொன்று தொடர்ந்தன வோடைக்
குன்று நடந்தன போற்கொலை யானை.

(இ-ள்.) கொலைபுரியுந் தன்மையனவான யானைகள்,—சென்ற படைகள் சென்ற சுவட்டினிற் செல்லாமல் நின்று பிணங்கியனவும் (பாகரின்) கல்விக்கு அடங்காதனவுமாகி, நெற்றிப்பட்டமுள்ள குன்று நடந்தனபோல ஒன்றினையொன்று தொடர்ந்து சென்றன; (எ-று.)—'அளவடிப்பாக்களில் சீரின் முதலிலன்றி, இடையிலும் மோனையெழுத்து வருவதுண்டு' என்பதை, இச்செய்யுளின் நான்காமடியிலும் அறிக. பி-ம்:—[1]சுவட்டின், சுவட்டினைச். [2]பிணங்கள். [3]கவ்வையின். [4]நில்லாது. (2278)

27. மாக நெடுங்கரம் [1]வானின் வழங்கா
மேக [2]நெடும்புனல் வாரின [3]மேன்மேற்
போக [4]விலங்கின வுண்டன [5]போலாங்
[6]காக நெடுங்களி யானை களிப்பால்.

(இ-ள்.) காகங்கள் சூழப்பெற்ற மிக்க மதக்களிப்புப் பொருந்திய யானைகள்,—களிப்பினாலே வானம்வரையில் செல்லுமாறு நீண்டுள்ள (தமது) துதிக்கையை வானத்திலே செலுத்தி, மேகத்திலுள்ள மிக்கபுனலை முகந்தனவாய், மேன்மேற் செல்லுதலை விட்டிட்டு (அப்புனலை) உண்பனவாயின; (எ-று.)—போல், ஆம்-அசைகள், வெறிகொண்டு கொல்லும் பிராணிகளின் தசையையுண்ணக் காகங்கள் களியானைகளைச் சூழுமென்க. மாகம்= மஹாகம்: பெருவானம். பி-ம்:—[1]மானின். [2]இரும். [3]வீசி. [4]விலங்கினர் விண்ணவர். [5]போதக், போலக், போவ. (2279)

28. எரிந்தெழு பல்படை யின்னொளி [1]வீரர்
அருங்கல [2]மின்னொளி தேர்பரி யானை
பொருந்திய பண்ணொளி [3]தாரொளி பொங்க
[4]இரிந்தது பேரிரு ளெண்டிசை [5]யெங்கும்.

(இ-ள்.) விளங்கியெழுகின்ற பல படைக்கலங்களினொளியும், வீரரின் அரிய அணிகலங்கள் மின்னுகின்ற ஒளியும், தேர்பரி யானைகளுக்கு அமைந்த அலங்காரங்களினொளியும், கிண்கிணி மாலைகளினொளியும் மிகுதியாயிருத்தலால், எண்டிசை முழுதுமுள்ள மிக்க இருள் நிலைகெட்டு ஓடிற்று; (எ-று.)—பி-ம்:—[1]யாணர். [2]நன்னிழல். [3]தாரொலி. [4]இரிந்தன. [5]தோறும். (2280)

29.—இராமன் 'இந்திரசித்தே சேனையோடு மீண்டு வருகின்றனா?' என்று விபீஷணனை வினவுதல்.

எய்திய சேனையை யீச னெதிர்ந்தான்
[1]வெய்திவண் [2]வந்தவன் மாயையின் [3]வெற்றி
செய்தவ [4]னேகொ றெரித்தி யிதென்றான்
[5]ஐயமில் வீடண [6]னன்ன [7]துரைத்தான்.

(இ-ள்.) (யாவர்க்குந்) தலைவனாகிய ஸ்ரீராமன்,—(அவ்வாறு) வந்தசேனையை எதிரே கண்டு 'உக்கிரங்கொண்டு இந்தச் சேனையில் வந்துள்ளவன் மாயையினால் வெற்றியை யுண்டாக்கிக்கொண்டவனாகிய இந்திரசித்துதானா? இதனைத் தெரிவிப்பாய்' என்று வினவினான்; சந்தேகமற உணர்ந்தவனாகிய விபீஷணன் அது குறித்துச் சொல்பவனானான்; (எ-று.)—பி-ம்;—[1]வெய்தினில்.

[2]வந்திவண். [3]வெற்றஞ். [4]என்கொல். [5]எய்யென, ஐயனவ். [6]அன்றிது. [7]உரைப்பான். (2281)

வேறு.

30.—இதுமுதல் ஆறுகவிகள்-ஒருதொடர்: விபீஷணன் முக்கியமானவரையெல்லாம் இன்னர் இன்னரென்று தெரிவித்தலைக் கூறும்.

முழைக்குலச் சீயம் [1]வெம்போர் வேட்டது முனிந்த தென்னப்
புழைப்பிறை யெயிற் றுப் பேழ்வா [2]யிடிக்குலம் பொடிப்ப வார்த்துத்
[3]தழற்பொறி வாளிப் புட்டில் கட்டிவில் தாங்கிச் சார்வான்
மழைக்குரல் தேரின் மேலான் மாபெரும் பக்கன் மன்னோ.

(இ-ள்.) குகையில்வாழ்கின்ற சிறந்த சிங்கம் கொடியபோரை விரும்பியதாய்ச் சீற்றங் கொண்டதுபோல, பிறைபோன்ற எயிற்றைக்கொண்ட பிளவுபட்ட வாய்ப் புழையினாலே இடிக் குலமும் பொடியாகும்படி [பேரொலியுண்டாக] ஆரவாரித்து.—நெருப்புப் பொறியைக் கக்கவல்ல வாளிப்புட்டிலை [அம்புத்தூணியை] (முதுகிற்) கட்டிக்கொண்டு வில்லைப் பிடித்தவண்ணம் மழைக்குரல் போன்ற (சக்கரத்) தொனியைக்கொண்ட தேரின்மீதாக வருபவன், மஹாபார்சுவனென்பவன்; (எ-று.)—மன் ஓ-ஈற்றசைகள். இந்திரசித்து வந்திலனென்பதைத் தெரிவிக்க, வெவ்வேறு படைத்தலைவர் வந்துள்ளாரை விபீஷணன் தெரிவிக்கின்றானென்க. குலம்-சிறப்பு. புழை-துவாரம். பி - ம்:—[1]மெய்ப்போர், மாப்போர். [2]பொருகளிறென்ன. [3]தழைப்பொறி, தழைப்பொழி. (2282)

வேறு.

31\. சிகை [1]நிறக் கனல்பொழி தெறுகட் [2]செக்கரான்
பகைநிறத் தவருயிர் பருகும் [3]பண்பினன்
நகைநிறப் பெருங் [4]கடை [5]வாயை நக்குவான்
புகைநிறக் [6]கண்ணவன் பொலம்பொற் றேரினன்.

(இ-ள்.) சுவாலையினாலே நிறத்தைப்பெற்ற நெருப்பைக் கக்குகின்றனவும் அழிக்கவல்லனவுமான கண்கள் செந்நிறமாக இருக்கப்பெற்றவனும், பகைத்தன்மையைக் கொண்டவரின் உயிரைப் பருகுகின்ற தன்மையையுடையவனும், சிரிப்பினால் நிறம் பெற்ற பெரிய கடைவாயை (அடிக்கடி) நக்குபவனுமான அழகிய பொற்றேரிலிருப்பவன்,—தூமிராட்சனென்பவன்; (எ-று.)

தூமிராட்சன் என்பதை மொழிபெயர்த்து 'புகைநிறக் கண்ணவன்' என்றார். நகை, வெகுளியால் தோன்றியது. பி - ம்:—[1]நிறத்தனல். [3]தியினன். [4]கடல். [5]வாயில். [6]கண்ணனப். [3]பண்பினல் என்று பிரிக்கலாம். (2283)

32\. பிச்சரிற் [1]நிகைத்தவன் பெற்றிப் பேச்சினன்
முச்சிரத் தயிலினன் மூரித் தேரினன்
[2]இச்சிர மும்மதே [3]யெனவந் தெய்துவான்
வச்சிரத் [4]தெயிற்றவன் [5]மலையின் மேனியான்.

(இ - ள்.) பித்தரைப்போன்று திகைத்த வலியதன்மையுடைய பேச்சையுடையவனும், மூத்தலைச் சூலப்படையை யுடையவனும், வலியதேரினை யுடையவனும், 'இந்தத்தலை உம்மதா?' என்று வந்து (போரிற்) பொருந்துபவனும், மலைபோன்ற மேனியையுடையவனுமானவன்,—வச்சிரதம்ஷ்ட்ர னென்பவன்; (எ - று.)

'போரில் என்தலையைக் கொள்ளலாமென்று நீர் கருதுவது சிறிதும் பொருந்தாது' என்பது, 'இச் சிரமும்மதே?' என்றதன் கருத்துமாம்: இனி, இச் சிரமென்றது-எதிரியின் தலையைச் சுட்டியது. ஏகாரம்-வினா. அன்றி, இச் சிரமும் அதே என என்று பிரித்து-இந்தச் சிரமும் எயிறுபோல வச்சிரமானதே என்னுமாறு [வலிய தலைபடைத்து] என்று உரைப்பாருமுளர். பி-ம்:—[1] திகைத்தன பெற்றிப்பேச்சினன், திகைத்தனன்பெற்றபோரினன், திகைத்தவன் பெற்றபேச்சினன். [2] இச்சிரமுறுவதோ. [3] என்பது, என்ன. [4] எயிற்றினன். [5] மழையின். (2284)

33. காலையு மனத்தையும் பிறகு காண்பதோர்
வாலுளைப் [1]புரவியன் மடித்த வாயினன்
வேலையி னார்ப்பினன் விண்ணை மீக்கொளுஞ்
சூலமொன் றுடையவன் பிசாசன் [2]றோன்றுவான்.

(இ-ள்.) காற்றையும் மனத்தையும் பின்னிடச்செய்வதாகிய [வாயுவேகம் மனோவேகம் இவற்றினும் விரைந்து செல்வதாகிய] வெள்ளிய பிடரிமயிரைக்கொண்ட ஒப்பற்ற குதிரையையுடையவனும் மடித்தவாயையுடையவனும் கடல்போன்ற ஆரவாரத்தையுடையவனும் வானுலகத்தை வெல்லவல்ல சூலமொன்றுடையவனுமாகித் தோன்றுபவன், பிசாசனென்பவன்; (எ - று.)—இச்செய்யுள், சிலபிரதிகளில் "சூரியன் பகைஞன்" என்ற அடுத்த பாடலின் பின் காணப்படுகின்றது. பி - ம்:—[1] புரவியின். [2] தோளினன், தோன்றினன். (2285)

34. சூரியன் பகைஞ [1]னச் சுடர்பொற் றேரினன்
[2] நீரினு முழக்கின னெருப்பின் [3]வெம்மையான்
ஆரிய ! வேள்வியின் பகைஞ னுமரோ
சோரியுங் [4]கனலியுஞ் சொரியுங் கண்ணினன்.

(இ-ள்.) கடலினும்மிக்க முழக்கத்தையுடையவனும் நெருப்பினும்மிக்க வெம்மையையுடையவனுமாகிய அந்த ஒளிர்கின்ற பொற்றேரிலிருப்பவன், சூரியசத்துருவென்பவன்; ஆரியனே! இரத்தத்தையும் நெருப்பையுங் கக்குகின்ற கண்களுடைய அவன், யஜ்ஞசத்துருவென்பவன்; (எ - று.)—நீர்-கடலுக்கு, இலக்கணை. பி-ம்:—[1] னுந்துரிதத், முன்றுரகத், முன்தொடுத்த, முன்னுறுத்த. [2] நீர்தரு, நீரிரு, நீரக. [3] நீர்மையான், கண்ணினல். [4] கனல்களும். சிலபிரதியில் இச்செய்யுளின் நான்காவதடி இரண்டாவது அடியாக உள்ளது. (2286)

35. [1]சாலிவண் கதிர்நிகர் புரவித் தானையான்
[2] மூலவெங் [3]கொடுமையிற் றவத்தின் முற்றினன்
[4]சூலியும் வெருக்கொளத் தேரில் தோன்றுவான்
மாலியென் றடி[5]முறை வணங்கிக் [6]கூறினன்.

(இ - ள்.) செந்நெற்பயிரின் வளப்பம் பொருந்திய கதிரை யொத்த குதிரைச் சேனையையுடையவனும், அநாதியாயுள்ள மிக்க கொடுமையினைக்கொண்ட தவத்தினால் முற்றுப்பெற்றவனும் [தவப்பயனை நிரம்பப் பெற்றிருப்பவனும்] ஆகி, சிவனும் அஞ்சும்படி தேரில்தோன்றுபவன், மாலியென்பவனாவன் என்று (ஸ்ரீராமனது) பாதங்களில் முறைமையுடனே வணங்கிக் கூறிமுடித்தான், (விபீஷணன்); (எ - று.)—பி-ம்:—[1]சாலியின். [2]மூலி. [3]கொடுமையான். [4]சூரியும். [5]இணை. [6]கூறுவான். (2287)

36.—இனி, அரக்கவானரர்கட்குக் கைகலந்த போர்நடப்பது ஒன்பது கவிகளிற் கூறப்படும்.

ஆர்த்தெதிர் நடந்தஅவ் வரியி [1]னார்கலி
தீர்த்தனை வாழ்த்தி [2]ஒத்திரண்டு சேனையும்
போர்த்தொழில் [3]புரிந்தன புலவர் போக்கிலார்
வேர்த்துயிர் பதைத்தனர் நடுங்கி [4]விம்மியே.

(இ-ள்.) பரிசுத்தமூர்த்தியான இராமபிரானை வாழ்த்திவிட்டு அந்தக் குரங்குச் சேனாசமுத்திரம், ஆரவாரித்துக்கொண்டு (அரக்கர் சேனைக்கு) எதிரேநடந்தது; (பின்பு) இரண்டுசேனையும் ஒத்துப் போர்த்தொழில் செய்தன; தேவர்,—(அந்தப்போரின் கடுமையைக் கண்டு வானத்தைவிட்டுச்) செல்லமாட்டாதவராய், நடுங்கிவிம்மி வேர்த்து உயிர் துடித்தனர்; (எ - று.)—வானவர்க்கு வேர்த்தல் முதலியன நிகழ்ந்தமை, போக்கிலாமையாலாம்: ஒருகால் வானரர் கட்குத்தோல்வி நேர்ந்திடுமோ என்ற அச்சத்தினாலெனினுமாம். பி - ம்:—[1]தானையுந். [2]உற்று. [3]புரிந்தது, புரிந்தனர். [4]விம்மவே, விம்மினார். (2288)

37\. கல்[1]லெறிந் தனகடை [2]யுருமின் [3]காரென
வில்லெறிந் தனகணை விசும்பின் [4]மேகத்துச்
செல்[1]லெறிந் தனவெனச் சிதறி வீழ்ந்தன
பல்லெறிந் தனதலை மலையின் [5]பண்பென.

(இ - ள்.) கடைக்காலத்தில் [யுகாந்த காலத்தில்] உருமைக் கொண்ட கார் கல்லையெறிந்தனபோல (அரக்கர் தம்) விற்கள் கணைகளை வெளிவிட்டன: (அதனால்), விசும்பின்மேகத்தினின்று இடியெறிந்தனவாக, (அப்போது) மலையின் தன்மையையொப்ப (வானரங்களின்) தலைகள் பல்லையெறிந்த வண்ணம் சிதறி வீழ்ந்தன; (எ-று.)

மேகத்தினின்று மலைமீது இடிவிழுந்தால் அம்மலை பலபடி சிதறி விழுதல்போல, அரக்கரெறிந்த கணையால் வானரங்களின் தலைகள் தம்பற்களுக வீழ்ந்தனவென்றவாறு. மேகத்தினின்று ஒளியுள்ள இடிகள் விழுவனபோலப் பற்கள்சிதற மலைவிழுந்தன போலத் தலைகள் விழுந்தன என்று உரைப்பாருமுளர். முதலடியைத் தனி வாக்கியமாகக்கொண்டு, வானரங்கள் யுகாந்தகாலத்து மேகம்போலக் கல்லையெறிந்தன என்றலும் ஒன்று செல்-இடி. பி-ம்:—[1]எறிந்தனர். [2]உருமிற். [3]காலென. [4]மேகத்த. [5]பண்ணைய, பண்பின. (2289)

38. கடம்படு [1]கரிபடக் [2]கலின மாப்பட
இடம்படு சில்லியி [3]னீர்த்த தேர்பட
உடம்படு மரக்கரை யனந்த னுச்சியிற்
படம்படு மெனப் [4]படுங் கவியின் [5]கற்பல.

(இ-ள்.) மதம்பெருகுகின்ற யானை இறந்துபடவும், கல்லணை பூண்ட குதிரை இறந்துபடவும், விசாலம் பொருந்திய சக்கரத்தா லிழுத்துச் செல்லப்படுகின்ற தேர் அழியவும், உடம்பு அடப்படும் அரக்கரை அநந்தனுச்சியிற் படம் அழிந்தொழியு மென்னுமாறு குரங்குகளெறிந்த பல கல் படுத்தும் [வீழ்த்தும்]; (எ - று.)— படும்=படுத்தும்: பிறவினைப்பொருளில்வந்த தன்வினை: இவ்வாறு வருவதனை வடநூலார் அந்தர்ப்பாவிதணிச் என்ப. பி - ம்:— [1]கிரி. [2]புரவிக்கால். [3]எழினித்தேர், எழிலிற்றேர், எழுனிபிற். [4]படு. [5]கற்படை. (2290)

39. [1]கொலையொடுங் காநெடும் புயத்தின் குன்றொடும்
நிலைநெடுங் காலொடு நிமிர்ந்த வாலொடும்
மலையொடு மரத்தொடுங் கவியின் [2]வன்னெடுந்
தலையொடும் [3]போம்விசைத் [4]தெறிந்த சக்கரம்.

(இ - ள்.) விரைவுகொண்டு (அரக்கர்) எறிந்த சக்கரம்,— குரங்குகளின் கொலைத்தொழில் ஒடுங்காத நெடியபுயக்குன்றொடும் நெடியநிலையையுடைய பாதங்களோடும், நிமிர்ந்த வாலோடும், மலையோடும், மரத்தோடும், வலியநெடிய தலையோடும் போகும்;(எ-று.) —அரக்கரெறிந்த சக்கரம், குரங்குகளின் புயம் முதலியவற்றை அறுத்துக்கொண்டு செல்லுமென்க. மலையும் மரனும், மாற்றார் மீது எறிதற்காக வானரங்கள் கொண்டவை. பி - ம்:—[1]கொலை யொடுங்கரனெடும்புகறின். [2]மார்பொடுந், மன்னெடுந். [3]போர். [4]எறியும். (2291)

40. ஆண்டகைக் கவிக்குல[1]த் தலைவ ராக்கையைக்
கீண்டன [2]புவியினைக் கிழித்த [3]மாதிரம்
தாண்டுவ குலப்பரி [4]மனத்திற் றுவுவ
[5]தூண்டினர் கைவிசைத் [6]தெறிந்த தோமரம்.

(இ - ள்.) திக்குக்களைத் தாண்டுவனவும் மனத்தைப்போல் தாவுந் தன்மையனவுமான சிறந்த குதிரைகளைத் தூண்டின குதிரைவீரரின் கைகள் விரைவுபட எறிந்த தோமரமென்னும் படைக்கலம்,—ஆண்மைக் குணமுள்ள கவிக்குலத் தலைவரின் உடலைக் கீண்டனவாய்ப் புவியைக் கிழித்தன; (எ-று.)—இச்செய் யுள் "சில்லியந்தடந்தேர்" என்ற அடுத்த பாடலுக்குப்பின் சில பிரதியிலுள்ளது. பி-ம்:—[1]வீரராக்கைகள். [2]புவியிடை. [3]மாத் திரம், மாக்கிரி, மாக்கரி. [4]மனத்திற்றுய்மிக. [5]தூண்டுவ. [6]எறியும், எரிந்த. (2292)

41. சில்லியந் [1]தேர்க்கொடி சிதையச் சாரதி
பல்லொடு நெடுந்தலை மடியப் பாதகர்
வில்லொடு கழுத்[3]திறப் பகட்டை வீட்டுமால்
கல்லெனக் கவிக்குலம் வீசுங் கல்லரோ.

(இ - ள்.) கல்லென்ற ஒலிதோன்றக் கவிக்குலம் வீசுங் கல்லானது,—சில்லியையுடைய அழகிய தேர்களின் கொடிகள் சிதையவும், சாரதியினுடைய பற்களுடனே நெடியதலை அறுபட்டு விழவும், பாதகரான அரக்கருடைய வில்லோடு கழுத்து இறவும் (செய்து), யானைகளையும் ஒழிக்கும்; (எ - று.)—பி - ம்;—[1]தேர் கொடிபரிகள். [2]பல்லுடை. [3]அற. (2293)

42. [1]கரகமுந் தியமலை முழையிற் கட்செவி
[2]உரகமுந் தினவென வொளிக்கு மொள்ளிலை
[3]அரகமுந் தின[4]நெடுங் கவியி [5]னுக்கையில்
துரகமுந் தின [6]ரெடுத் தெறியுஞ் [7]சூலமே.

(இ-ள்.) குதிரையையேறிச் செலுத்தியவரான அரக்கர் எடுத்தெறிவனவான ஒள்ளிய இலைகளையுடைய சூலங்கள், ஆலங்கட்டி மழை பெய்யப்பெற்ற மலையின் முழைஞ்சுகளிற் கண்ணையே செவியாகவுடைய உரகம் விரைந்து புகுந்தன வென்னும்படி, நெடிய வானரர்களின் உடலில் (அவர்கள்) அழியும்படி விரைந்துமறையும்; (எ - று.)—அரக - அரங்க என்பதன் விகாரம். இக்கவி "வால்பிடித்து" என்ற அடுத்த பாடலின்பின் சில பிரதியிலுள்ளது. பி-ம்.—[1]காகமுந்திய. [2]ஊகம். [3]ஆகமுந்தின, அரகமுந்துறு, ஆகமுந்துவ, ஆகமுந்துறு. [4]நெடுங்கவிகள், கவித்தலைவர். [5]மார்பினில். [6]விசைத்து. [7]தோமரம். (2294)

43. வால்பிடித் தடிக்கும்வா னரத்தை மால்கரி
கால்பிடித் தடிக்குமக் [1]கரியி னைக்கவி
[2]தோல்பிடித் தரக்கரை யெறியுஞ் [3]சூர்முசு
வேல்பிடித் தெறிவரம் முசுவை வெங்கணர்.

(இ-ள்.) பெரியயானை, வானரத்தை வாலினாற்பிடித்து அடிக்கும்; (அதினின்று தப்பி) வானரம் அக் கரியைக் காலைப்பிடித்து அடிக்கும்; (அன்றியும்), சூரத்தன்மையுள்ள குரங்கு, யானைகளை(க் கையிற்) பற்றி (அவற்றால்), அரக்கரை மோதும்; அம் முசுவைக் கொடுங்கண்ணையுடைய அரக்கர் வேல்பிடித்தெறிவர்; (எ-று.)—தோல்-யானை. பி - ம்:—[1]கரிகளை. [2]கோல். [3]சூற்பொறி, கோண்முசு. (2295)

44. முற்படு கவிக்குல [1]முடுக வீசிய
கற்படக் [2]களம்படு மரக்கர் கார்க்கடல்
பற்படு தலைபடப் [3]படுவ பாதகர்
விற்படு கணைபடக் [4]குரங்கின் வேலையே.

(இ-ள்.) முற்படுகின்ற கவிக்குலமானது விரையவீசிய கற்கள் படுவதனால், அரக்கரின்கருங்கடல்போன்ற சேனை ,களத்திற்படும்: பாதகரான அரக்கரின் வில்லிலிருந்து வெளிப்படுகின்ற கணைகள் படுவதனால், குரங்குச் சேனை பற்களைக் காட்டுகின்ற தலையறுந்திட உயிரிறப்பனவாகும்; (எ - று.)—பி - ம்:—[1]முட்டிவீசிய, முடுகவீக்கிய. [2]களப், [3]படுவர். [4]குரக்கு. (2296)

45.—நான்கு கவிகள்-போரிலே அரக்கரின் சதுரங்கசேனை யடைந்த தன்மையைக் கூறும்.

இச்சுறு கிரிபடக் கிளர்பொற் [1]தேர்நிரை
[2]அச்சிறச் செல்கில வாடல் [3]வாம்பரி
எச்சுறு துயரிடை [4]யெய்த[5]ஈத்துணு
[6]மூச்சிறு [7]வாழ்க்கையின் மூண்டு ளோரென.

(இ-ள்.) (மனவூக்கம்) குறைதற்குக் காரணமான வறுமைத் துன்பம் இடையில் நேர்வதனால் ஈத்துண்ணுமல் மூச்சு இறுகின்ற உலகவாழ்க்கையில்மூண்டுள்ளோர்போல,—நெருப்பைக்கொண்ட மலைகள் படுவதனால் விளங்குகின்ற பொன்மயமான தேர்க்கூட்டம் அச்சு இற்றுப்போகவே, வலிமைபொருந்திய தாவும் பரிகள், (அத்தேரை யிழுத்துச்) செல்லமாட்டாவாயின; (எ-று.)

இது - தேர்ப்படை யடைந்த நிலை கூறியது. வறுமையுற்றோர்க்கு இல்வாழ்க்கை இனிது நடவாததுபோலக் குதிரைகட்கு அச்சிற்ற தேரை யீர்த்துச் செல்லுகை யியலாதாயிற்றென்றவாறு. ஏழைமையால் வாழும் வாழ்க்கையை 'மூக்கைப்பிடித்தாற் பிராணன் போகிறது' என்று சொல்லுகின்ற உலகவழக்குப்பற்றி, 'முச்சிறு வாழ்க்கை' என்றது. மூச்சு என்பது 'முச்சு' என்றாயிற்று. க்ருஶாநு என்ற வடசொல், 'கிச்சு' எனத் திரிந்ததென்பர். ஆடல்=அடல். நீட்டல்விகாரம். இனி, ஆடுதலையுடைய எனினுமாம். பி - ம்:—[1]தேர்க்கிழை. [2]அச்சுறச். [3]மாப். மால். [4]எய்தி. [5]ஈர்க்கொணு, ஈத்தினம். [6]மூச்சுறு, முச்சறு.[7]வாழ்க்கையை.(2297)

46. மீயவர் யாவரும் [1]விளிய வெங்கரி
[2]சேயிருங் குருதியில் திரிவ [3]சேர்வில
[4]நாயக் ராளொடு [5]மவிய [6]நவ்விகள்
பாயொடு வேலையில் திரியும் [7]பண்பின.

(இ - ள்) (தம்) மீதிருப்பவரான யாவரும் (மாற்ருரின் படைக்கலங்களால்) இறந்துபட, கொடிய யானைகள் (தம்மீது நாட்டிப் துவசங்களுடனே) செந்நிறமுள்ள மிக்க இரத்தவெள்ளத்தில் (தம்மனம் போனபடி) திரிவனவாய் (அப்பாற்) சேரமாட்டாதனவாயினவை,— (கடற்கொள்ளைக்காரரால் தம்) மாலுமிகளெல்லாம் பணியாளருடனே அழிந்திடப் பாய்மரத்துடனே கடலில் திரியும் மரக்கலங்களின் தன்மையையுடையனவாயின; (எ - று.)

இது, யானைச்சேனை யடைந்த நிலை கூறியது, களிறுக்கு மரக்கலம் உவமையாதலை, "மொய்களிறுடைதிரைமரக்கலம்" என்ற இடத்துங் காண்க. மரக்கலத்திற்கு யானையும், பாய்மரத்திற்கு அவ்யானையின்மீது கட்டி நாட்டிய கொடியும் ஒப்பாம். பி-ம்:— [1]அடைய. [2]சேயருங், சேயறுங். [3]சேர்கில, சோர்வில. [4]நாயகராரொடுங், ஆயதனுளொடும், ஆயதனுளெலாம். [5]வீய. [6]நவ்விதம், அம்பிதம், நவ்விதான். [7]பண்பென, பான்மைபோல். (2298)

47. படையொடு மேலவர் மடியப் பல்பரி
[1]இடையிடை தாவெழுந் [2]தழுந்து [3]பண்பன
கடனெடுங் குருதிய [4]கனலி காலுறு
வடவையை நிகர்த்தன வுதிர [5]வாயன.

(இ-ள்.) பலபரிகள்,—படைக்கலத்துடனே (கூடிநடத்திவந்த தம்) மேலேயுள்ளவர் மடிந்திடக் கடல்போன்ற பெருங்குருதியில் அகப்பட்டனவும் நடுநடுவே தாவியெழுந்து(அந்தஇரத்தவெள்ளச் சேற்றிலே) அழுந்துந்தன்மையை யுடையனவும் உதிரங்கக்கும் வாயை யுடையனவுமாகி, நெருப்பை (வாயினாற்) கக்குந்தன்மையுள்ள (கடலிடையேவாழும்) வடவையை யொத்தன; (எ-று)

இது - குதிரைப்படையடைந்த நிலை கூறியது, **தன்மைத்தற்குறிப்பேற்றவணி.** வடவை-பெண்குதிரை: இது கடலினிடையேயிருந்து மழை முதலியவற்றால் கடலில் நீர்மிகாதவாறு தன்வாயிலுள்ளகனலினால் வற்றச்செய்யுமென்பது, புராணநூற்கொள்கை. [1]இடையிடைதரவிழுந்து என்றபாடத்திற்கு-போர்க்களத்து அவ்வவ்விடந்தோறும் (வானரங்கள் மலைமுதலியவற்றை) வீசியதனாற் கீழ் விழுந்து என்க. காலுறுதல-கக்குதலைப்பொருந்துதல். பி-ம்:— [2]இழிந்த. [3]பண்ணன், பண்ணின. [4]கனலிகால்வுறு, கனலிற்காய்வுறு, கனலுங்கால்வன. [5]வாயின. (2299)

48. எயிற்றொடு நெடுந்தலை யிட்ட கல்லொடும்
வயிற்றிடைப் [1]புகப்பல பகலும் [2]வைகிய
[3]பயிற்றிய ராயினுந் தெரிக்கும் பண்பிலார்
[4]அயிர்ப்பர்தங் கணவரை யணுகி யந்நலார்.

(இ-ள்.) எயிற்றோடுகூடிய நெடிய (தம்கணவரின்) தலைகள் (வானரர்) வீசிய மலையினால் (அக்கணவரின்) வயிற்றிற் புகவே (அன்னார் கபந்தன் போலாக), பலநாளிலும் (அவருடனிருந்து) கழித்த பழக்கத்தையுடையவராயிருந்தும் (அத்தலை இன்னாரது என்று) ஆராய்ந்து அறிதற்குஏற்ற (அறிவாகிய) பண்பு இல்லாதவரான அவர்மனைவிமார், தங்கணவரை நணுகி (இது யாருடைய உடலோ? என்று) சந்தேகிப்பர்; (எ-று.)—இது தம் கணவர் இறந்தனரெனக் கேள்வியுற்ற மாதராரின் செயலைக் கூறும் முகத்தால், **காலாட்படை வீரர்நிலை கூறியது.** இச்செய்யுள், சில பிரதிகளில், "முற்படுகவிக்குலம்" (44) என்பதன்பின் உள்ளது. நலார்=நல்லார்: (மனைவிமாரான) மகளிர். பி-ம்:—[1]புக்கபல. [2]வைகியே. [3]பயிற்சியர். [4]அயிர்ப்ப. (2300)

வேறு.

49.—இரண்டு பாடல்கள்-சிற்சில அரக்கர்க்கும் சிற்சில வானரர்க்குமாக நிகழ்ந்த தொந்தயுத்தம் கூறும்.

தாமக் கண்ணனு மனுமனு மெதிரெதிர் தொடர்ந்தார்
தாமத் தங்கதன் மாபெரும் பக்கனைத் தடுத்தான்
சேமத் திண்சிலை மாலியு நீலனுஞ் செறுத்தார்
வாமப் போர் [1]வயப் பிசாசனும் பனசனு மணைந்தார்.

(இ-ள்.) தூமிராட்சனும் அநுமனும் எதிரெதிராக(ப்பொர)த் தொடர்ந்தார்கள்: (வெற்றி) மாலையையணிந்துள்ள அங்கதன் மகாபார்சுவனைத் தடுத்தான்; சேமமான [அழியாத்தன்மையுள்ள] வலிய வில்லைக்கொண்ட மாலியும் நீலனும் கோபித்துப் பொருதார்; நேர்மையற்ற போரைப்புரிகின்ற வலிய பிசாசனும் பனசனும் பொருதார்கள்; (எ - று.)—பி-ம்:—[1]வலிப். (2301)

50. சூரி யன்பெரும் பகைஞனுஞ் சூரியன் மகனும்
நேரெ திர்ந்தனர் [1]நெருப்புடை வேள்வியின் பகையும்
ஆரி யன்[2]றனித் தம்பியு [3]மெதிரெதி ரடர்ந்தார்
வீர வச்சிரத் தெயிற்றனு மிடபனு மிடைந்தார்.

(இ - ள்.) சூரியசத்துருவும் சூரியபுத்திரனான சுக்கிரீவனும் நேரே யெதிர்ந்தனர்; யஜ்ஞஹாவும் இராமபிரானது ஒப்பற்ற தம்பியான இலட்சுமணனும் எதிர்க்கெதிராகப் போர்புரிந்தார்கள்;வீரங்கொண்ட வச்சிர தம்ஷ்ட்ரனும் இடபனும் நெருங்கி மலைந்தார்கள்; (எ - று.)

வேள்வியின்பகை - யஜ்ஞசத்துரு. வேள்விக்கு அடைமொழியாக 'நெருப்புடை' என்பது வந்தது. ஐவகை வேள்வியுள் யஜ்ஞமென்னும் வேள்வியே தீயையுடையது ஆதலால், அதனை 'நெருப்புடை வேள்வி' என்றார். பி-ம்:—[1]நெருப்பிடை. [2]துணைத். [3]அவரெதிரடர்ந்தார், எதிரடர்ந்தனரால். (2302)

51.—இங்ஙனம் இருபக்கத்துத் தலைவரும் இரட்டையராய்ப் பொருதல்.

வெங்கண் வெள்ளெயிற் றரக்கரிற் கவிக்குல [1]வீரச்
சிங்க மன்னபோர் [2]வீரரிற் றலைவராய்த் [3]தெரிந்தார்
அங்க மர்க்களத் தொருவரோ டொருவர்சென் [4]றடைந்தார்
பொங்கு வெஞ்செருத் தேவரு நடுக்குறப் பொருதார்.

(இ - ள்.) (இவ்வாறு) கொடுங்கண்ணையும் வெள்ளிய எயிற்றையுமுடைய அரக்கரிலும்கவிக்குலத்துஉதித்து வீரச்சிங்கமன்ன போரில் மேம்பாடு பெற்றவரிலும் தலைவராயுள்ளவர்,—அங்கே அமர்க்களத்தில் ஒருவரோடொருவர் சென்றடைந்து, மனக்கிளர்ச்சி கொண்டு செய்யப்படுகின்றகொடியபோரைத் தேவரும் நடுக்குறும்படி பொருதார்கள்; (எ - று.)—பி-ம்:—[1]வீரர். [2]தலைவரில். [3]செறிந்தார். [4]அடர்ந்தார். (2303)

52.—பத்துவெள்ளஞ்சேனையில் கவிக்குலத்தலைவர் ஆறுவெள்ளஞ் சேனையையும் இலட்சுமணன் நாலுவெள்ளஞ் சேனையையும் அழித்தல்.

இன்ன காலையி னீரைந்து வெள்ளம்வந் தேற்ற
மின்னும் வெள்ளெயிற் றரக்கர்தஞ் [1]சேனையில் [2]வீரர்
அன்ன வெஞ்சமத் தாறுவெள் ளத்தையு மவித்தார்
சொன்ன நாலையு மிலக்குவன் பகழியாற் றொலைத்தான்.

(இ-ள்.) இவ்வாறு நிகழும்பொழுதில், அத்தக்கொடியபோரில் வந்து எதிர்க்கலான ஈரைந்துவெள்ளமுள்ள மின்னும் வெள்ளிய

எயிற்றைக்கொண்ட அரக்கர்சேனையில் ஆறுவெள்ளத்தையும் (கவிக்குல) வீரர் ஒழித்தார்; (மிச்சமாகச்) சொல்லப்பட்ட நாலு வெள்ளஞ்சேனையையும் இலக்குவன்(தன்)பகழியால் தொலைத்திட்டான்; (எ-று.)—[2]வீரன்...அவித்தான் என்று கொண்டு, ஸ்ரீராமன் அழித்தானென்று பொருள் கூறுவாருமுளர். பி - ம்:—[1]சேனையை. [2]வீரன்...அறுத்தான். (2304)

53.—அப்போது தோன்றிய இரத்தப்பெருக்கின் வருணனை.

உப்பு டைக்கடன் [1]மடுத்தன [2]வுதிர நீ ரோதம்
அப்போ டொத்தன [3]கடுத்தில வார்கலி முழுதுஞ்
செப்பு ருக்கெனத் [4]தெரிந்தது மீன்குலஞ் செருக்கித்
துப்போ டொத்தன முத்தினங் குன்றியிற் [5]றோன்ற,

(இ-ள்.) உப்பைக்கொண்ட கடலில் நிரம்பிப் பாய்ந்தனவான உதிரநீர்ப்பெருக்குக்கள், (கடலின்) நீரோடு கலந்தனவாய்த் தோன்றவில்லை: (அக்) கடல்நீர் முழுதும், செப்பையுருக்கின உருக்குப் போலச செந்நிறமாகக் காணப்பட்டது: (அக்கடலி லுள்ள) முத்துத் தொகுதிகள் குன்றிமணியைப்போற் (செந்நிற முடையனவாகக) காணப்பட, மீன்குலமெல்லாம் (இறைச்சியாகிய நிரம்பிய உணவு கிடைத்தமையாற்) செருக்குக்கொண்டு பவழம் போலத் தோன்றன; (எ-று.)

அப்போரில் இருதிறதது்ச் சேனைகளும் பிளப்புண்டதனால் தோன்றிய இரத்தநீர்கள் கடலின்நீரினும் மிகவிஞ்சியிருந்ததனால் கடலினீரில் தாம் கலந்தது போலத்தோன்றாமல், கடனீரைச் செந்நிறத்தன ஆக்கவே, அக்கடலின்நீர் செம்புருக்குப்போலத்தோன் றிற்றென்றார்: கடலின் நீரும் மீன்களும் முத்துக்களும் வேற்றுருவத்தை உதிரப்பெருக்கால் அடைந்தனவெனக்கூறியது - **வேற்றுருப் பெறலணியாம்.** மீன்குலம் முத்துச்சிப்பியை இறைச்சியெனக் கருதிச் செருக்குக்கொண்டன என்ற இடத்து **மயக்கவணி**யுள்ளது. பி-ம்—[1]மடுத்தது. [2]குருதியினோதம். [3]தடித்தில, கடுக்கில. [4]திரிந்தது, திரிந்தன. [5]தோன்றி, துவன்றி. (2305)

54.—இதுவும் அது.

தத்து நீர்க்கடன் முழுவதுங் [1]குருதியாய்த் தயங்கச்
சித்தி ரக்குலப் [2]பன்னிற மணிகளுஞ் [3]சேந்த
ஒத்து [4]வேற்றுருத் [5]தெரியல வுயர்மதத் தோங்கல்
மத்த கத்துகு தரளமும் [6]வளைசொரி முத்தும்.

(இ-ள்.) (அலை) தாவுகின்ற நீரைக்கொண்ட கடல்முழுவதும் இரத்தமாய் விளங்க, விசித்திரமான [வெவ்வேறுவகையாயுள்ள] தொகுதியான பல நிறத்தைக்கொண்ட இரத்தினங்களும் செந்நிறமடைந்தன: மதம்பெருக்குவனவான மலைபோன்ற யானைகளின் மத்தகத்தினின்று வெளிப்பட்டமுத்துக்களும் சங்குகளீன்ற முத்துக்களும் ஒத்து [செந்நிறத்தை யடைந்து] வேறு நிறம் தெரியாதனவாயின; (எ - று.)

இச்செய்யுளும் கீழைச்செய்யுளில் வந்த **வேற்றுருப்பெறலணியே.** யானை-போர்க்களத்திலுள்ளன, சங்கு-கடலிலுள்ளவை.

இச்செய்யுள் சிலபிரதியிலில்லே. மதத்தோங்கல்-அடையடுத்த உவமையாகுபெயர். பி - ம்:—[1]குருதியிற்றழுங்கச், குருதியாய்த்தழுங்கச். [2]பன்னெடு. [3]சேர்ந்த, சேர்ந்தது. [4]வேறுருத். [5]தெரிகில, தெரிக்கில. [6]இத்தகைமானும், அத்தகைமுற்றும். (2306)

55.—சூரியோதய வருணனே.

[1] அதிரும் வெஞ்செரு வன்னதொன் [2] றமைகின்ற வளவிற்
கதிர வன்[3] கொழுஞ் சேயொளிக் கற்றையங் கரத்தால்
[4]எதிரும் [5]வல்லிருட் [6]கரியிறுத் தெழுமுறை மூழ்கி
உதிர [7]வெள்ளத்து [8]ளெழுந்தவ னுமென வுதித்தான்.

(இ - ள்.) அதிர்கின்ற அப்படிப்பட்ட கொடியபோரொன்று நிகழ்கின்றபொழுதில், சூரியன், கொழுவிய செந்நிற வொளித்தொகுதியாகிய அழகியகரத்தால், எதிர்ந்த வலிய இருளாகிய யானையை யழித்து எழும்போது உதிரவெள்ளத்துள் மூழ்கியெழுந்தவனுமென்று தோன்றுமாறு உதித்தான்; (எ-று.)

சூரியன் உதிக்கும்போது மிக்கசெந்நிறமுள்ளவனுகத்தோன்றுமியலபுபற்றி, 'மூழ்கி உதிரவெள்ளத்துளெழுந்தவனுமென' என்று வருணித்தார்; **தற்குறிப்பேற்றவணி**. பகையொழித்தபின் நீராடியெழுந்திருக்குந் தன்மை சூரியனிடத்திலேற்றப்பட்டது. இவ்வணிக்கு 'கற்றையங்கரத்தால், வல்லிருட்கரியிறுத்து' என்ற இடங்களிலுள்ள **உருவகவணி** அங்கமாய்நின்றது. பி-ம்:—[1] அதிர. [2]அமைக்கின்ற. [3]செழுஞ். [4]எதிர, எதிரிற். [5]எல்லிருட், பல்வகைக். [6]கரிசெறுத்து, கரியறுத்து, பகையறுத்து. [7]வெள்ளத்தின். [8]எழுந்தனன். (2307)

56.—வெயில் பரத்தல்.

அரக்க [1]ரென்றபே ரிருளினே யிராம[2]ன மிரவி
துரக்க வெஞ்சுடர்க் கதிரவன் புறத்திருள் [3]துரக்கப்
புரக்கும் வெய்யவ [4]ரிருவரை யுடையன போல
[5]நிரக்கு நல்லொளி [6]பரந்தன வுலகெலா நிமிர.

(இ-ள்.) அரக்கரென்ற பெரிய இருளினே இராமனென்கிற இரவி ஓட்டாநிற்க, வெவ்விய சுடரையுடையவனுன சூரியன் புறத்திருளைத் துரத்தலினலே, பாதுகாக்கின்ற இரண்டு சூரியரை உடையனபோல மிகுதிபட்டுத்தோன்றும் மிக்க ஒளிகள் உலக முழுவதும் பரந்தன; (எ-று.)—உதித்த சூரியனேயும் இராமனேயும் ஒப்பிட்டுக் கூறினர், இதில் **தன்மைத்தற்குறிப்பேற்றவணி**. பி - ம்:—[1]என்பதோர். [2]அப்போரில், ஆமிந்து, ஆமருக்கன். [3]தொலேக்கப். [4]இருவரையுடையவர். இருவரும் ஒருவரே. [5]நிரைக்கும். [6]பரத்தலில், பரந்தென. (2308)

57.—மூன்றுகவிகள்-விளங்கித்தோன்றிய படுகளத் தன்மையைக்கூறும்.

நிலேகொள் பேரிரு ணீங்கலு நிலத்திடை நின்ற
மலேயும் வேலேயும் வரம்பில வயின்றெரு றும் [1]பரந்து

[2]தொலைவி றன்மைய தோன்றுவ போன்றன சோரி
அலைகொள் வேலையும் [3]மருப்பினக் குன்றமு [4]மணவி.

(இ-ள்.) நிலையாகவுள்ள மிக்க இருள்நீங்குதலும், அலையைக் கொண்ட இரத்தக்கடலும் தந்தங்களைக்கொண்ட இனமாகவுள்ள யானைகளும் பொருந்தி, நிலத்தில் நின்ற மலையும் கடலும் வரம்பில்லாதனவாய் ஆங்காங்குப்பரந்து ஒழியாததன்மையவாய்த்தோன்றுபவற்றை யொத்தன; (எ-று.)

உதயகாலத்தில் கடலும்மலையும் வெளிப்பட்டுத்தோன்றுவன போல, இரத்தப்பெருக்கும் யானைகளும் விளங்கிக்காணப்பட்டன வென்றவாறு; **தற்குறிப்பேற்றவணி.** குன்றம்-உவமவாகுபெயர். மலையும் வேலையும் என்றதற்கு மாறாக வேலையும் குன்றமும் என வந்தது - எதிர்நிரனிறை. பி - ம்:—[1]பரந்த, வதிந்து, வதிந்த. [2]தொலையுந் தன்மையதோன்றுவ, தொலைவிலாதவைதோன்றுவ, தொலைவிறன்மயத்தோன்றுவ. [3]இருப்பிணக்குன்றமும், அரும்பிணக்குன்றமும். [4]நிரம்ப, நிரம்பி, நிரவி, நிரப்பி. (2309)

58. **நிலந்த வாதசெந் நீரிடை நிணக்கொழுஞ் சேற்றில்**
புலர்ந்த காலையிற் பொறிவரி யம்பெனுந் தும்பி
கலந்த தாமரைப் பெருவனங் கதிரவன் கரத்தால்
மலர்ந்த தாமெனப் பொலிந்தன வுலந்தவர் வதனம்.

(இ-ள்.) விடியற்காலத்திலே நிலத்தினின்றுநீங்காத இரத்த வெள்ளத்திலே நிணமாகிய கொழுவியசேற்றில் பொறியையும் வரியையுமுடைய அம்புகளாகிற தும்பிகலந்தனவாகி் உயிரிழந்தவரின் வதனங்கள்,—தும்பிகலந்த தாமரைப்பெருவனம் சூரியன் கிரணத்தால் மலர்ந்துதோன்றுவதுபோல விளங்கின; (எ-று.)

தற்குறிப்பேற்றவணி: இதற்கு, 'அம்பெனுந்தும்பி' என்ற **உருவகவணி** அங்கமாய் நின்றது. 'தும்பிகலந்த' என்பது 'தாமரைப் பெருவனம்' என்பதனோடு மீண்டுங் கூட்டப்பட்டது. பொறி என்ற மொழி-நெருப்புப்பொறி புள்ளியென்ற இருபொருளைச் சிலேடை வகையாலுணர்த்திற்று. வரி-அழகு, இரேகை: "பொறிவரியசிறு வண்டே" என்றார், பெரியாரும். (2310)

59. **தேரும் யானையும் புரவியும் விரவின தேவர்**
ஊரு மானமு [1]மேகமு முடுக்கள் தம் முலகும்
பேரு மானவெங் காலத்துக் கால்பொரப் பிணங்கிப்
பாரின் வீழ்ந்தன போன்றன [2]கிடந்தன பரந்து.

(இ-ள்.) (போர்க்களத்திலே), தேரும் யானையும் புரவியும் கலந்து (பூமியிற்) பரவிவிழுந்து கிடப்பவை,—(உலகம்) நிலைபேர்கின்ற பொருந்திய அந்த வெவ்விய (யுகாந்த) காலத்தில் கொடுங்காற்று வீச, மாறுபட்டுத் தேவர்ஊர்ந்து செல்கின்ற விமானமும் மேகமும் நட்சத்திர மண்டலமும் பாரின்வீழ்ந்தனவாய்ப் பரந்து கிடப்பனவற்றை யொத்தன; (எ - று.)—தேர் யானை பரிஎன்பன முறையே விமானம் மேகம் உடுக்கள்போலும்: **நிரனிறையணி**யுடன்வந்த **தற்குறிப்பேற்றவணி.** உடுக்கள் தம்முலகு-நட்சத்திர

மண்டிலம். பி-ம்:—[1]உடுக்களுமுலகமுமலையும், மேகமுமுடுக்களு முலகும். [2]பரந்தனகிடந்த, கிடந்தனபரந்த. (2311)

60.—அரக்கியர் களத்தில்வீழ்ந்திட்ட கணவரைப் புல்லுதல்.

எல்வி சுற்றிய மதிநிகர் முகத்திய ரெரிவீழ்
[1] அல்லி சுற்றிய கோதையர் களம்புகுந் தடைந்தார்
புல்லி முற்றிய வுயிரினர் [3]பொருந்தினர் கிடந்தார்
வல்லி சுற்றிய [4]மாமர நிகர்த்தனர் வயவர்.

(இ-ள்.) இரவிற் சஞ்சரிக்கின்ற சந்திரனையொத்த முகத்தை யுடையவரும் நெருப்புத்தோற்கின்ற [நெருப்பினுஞ் செந்நிறத் தனவான] பூவிதழ்களைச் சுற்றியுள்ள தலைமயிரையுடையவரும் போர்க்களத்தையடைந்து உட்புகுந்தவருமான அரக்கியரால் தழு வப்பட்டு முடிந்த உயிரையுடையவராய் (அப்போர்க்களத்திலே) பொருந்திக் கிடக்கின்ற அரக்க வீரர் கொடியினால் தழுவப்பட்ட பெரியமரம் (வீழ்ந்து) கிடப்பதை, யொத்தனர்; (எ-று.)—தற் குறிப்பேற்றவணி. தலைமயிர் செந்நிறத்தனவாதலால், 'எரிவீழ் கோதை' என்றார். பி-ம்;—[1]வல்லி. [2]கோதையிற். [3]பொருந்திடக். [4]மராமரம். (2312)

61.—போர்க்களத்தைச் சார்ந்த அரக்கியரின் தன்மை இதுமுதல் ஏழுகவிகளிற் கூறப்படும்.

வணங்கு நுண்ணிடை [1]வனமுலைச் செக்கர்[2]வார் கூந்தல்
அணங்கு வெள்ளெயிற் றரக்கியர் [3]களத்துவந் தடைந்தார்
குணங்[4]கொ ளுந்துணைக் கணவர்தம் பசுந்தலை கொடாது
பிணங்கு [5]பேய்களைப் பிளந்தனர் தொடர்ந்தனர் [6]பிடித்தார்.

(இ - ள்.) தொய்யுந்தன்மையுள்ள நுண்ணிய இடையையும் அழகிய தனங்களையும் சிவந்த நீண்ட கூந்தலையும் வருத்தவல்ல வெள்ளிய எயிற்றையுமுடைய போர்க்களத்திலே வந்தவரான அரக்கியர்கள், (தம்மிடத்து அன்புவைத்தலாகிய) குணத்தைக் கொண்ட (தம்) துணையாகிய கணவரின் பசுந்தலையை (உண்பதற் காகக் கையிற்கொண்டு) கொடாமல் மாறுபடுகின்ற பேய்களைத் தொடர்ந்து பிடித்துப் பிளந்தனர்; (எ-று.)—பி-ம்:—[1]மலைமுலை. [2]வான். [3]அமர்க்களத்து, அமர்க்களம். [4]கடந்ததங். [5]பேய்களின் வாய்களைப் பிளந்தனர். [6]பிடிப்பார், பிடித்தே. (2313)

62\. சுடரும் வெள்வளைத் தோளிதன் [1]கொழுநனைத் தொடர்வாள்
[2]உடரு [3]மங்கமுங் கண்டுகொண் டொருவழி [4]யுய்ப்பாள்
குடலு [5]மீரலுங் கண்ணுமோர் குறுநரி கொள்ளத்
தொடர வாற்றல ணெடிதுயிர்த் தாருயிர் துறந்தாள்.

(இ - ள்.) ஒளிர்கின்ற வெள்ளியவளையைப்பூண்ட தோள் களைக்கொண்ட ஒருத்தி தன் கொழுநனைக் காணச் செல்பவர்கள், (அவனது) உடலும் (கைகால் முதலிய) உறுப்புக்களும் (தனித் தனியிருத்தலைக்) கண்டு, (அவற்றைத்) தாங்கிக்கொண்டு ஓரிடத் திற் சேர்ப்பவளாய், (அக்கணவனுடைய) குடலையும் ஈரலையும் கண்

களையும் ஒருசிறிய நரி கொண்டிட (அதனைத்) தொடர்ந்துசெல்லு தற்கு வலிமையில்லாதவளாகி, நெடிதாக மூச்சுவிட்டு(த் தன்னுடைய) அரிய உயிரைத் துறந்தேவிட்டனள்; (எ - று.)—குறுநரி-குள்ளநரி. கண்டுகொண்டொருவழியுய்த்தாள் என்று பாடம் இருக்கலாம். பி-ம்—[1]கணவனை. [2]உடலும். [3]கைகளும். [4]உய்யாள். [5]ஈருளும். (2314)

63. பெரிய வாட்டடங் [1]கண்ணியர் [2]கணவர்தம் பெருந்தோள்
[3]நரிக ளீர்த்தன [4]வணங்கவு [5]மிணங்கவு நல்கா
இரியல் போவன தொடர்ந்[6]தய லினப்படை கிடந்த
அரிய [7]நொந்தில ரலத்தகச் சீறடி [8]யந்தோ.

(இ-ள்.) பெரிய வாள்போன்ற பரந்த கண்களையுடையமகளிர், —(தம்) கணவரின் பெரியதோள்களை ஈர்த்தனவான நரிகள் வணங்கிக் கேட்கவும் இணக்கமான மொழியைச் சொல்லியிரக்கவும் கொடாமல் ஓடுபவற்றைத் தொடரலுற்று, அயலில் வீழ்ந்து கிடக்கின்ற தொகுதியான படைகள் அறுத்திடவும், செம்பஞ்சு ஊட்டிய சிறிய அடிகள் வருந்தாராயினர்: ஐயோ! (எ - று.)— 'அந்தோ' என்பது, கவியினிரக்கத்தைக் குறிக்கும். அரியவும் நோவாமைக்குக் காரணம், கணவரிடத்து அன்பு. பி-ம்:—[1]கண்ணியோர். [2]கணவன்றன். [3]நரியுமோரியுங். [4]வணங்கிட. [5]கவர்ந்தவா, வணங்கிட, வணங்கவும். [6]அயிலெனப். [7]நேர்ந்திலர், நொந்தில, நொந்திலது. [8]அயர்ந்தார், அயர்ந்தாள், ஈர்ந்து. (2315)

64. நலங்கொ ணெஞ்சினர் தந்துணைக் கணவரை நாடி
விலங்க லன்னவான் பெரும்பிணக் குப்பையின் மேலோர்
அலங்க லோதிய [1]ரருந்துணை பிரிந்துநின் [2]றயரும்
பொலங்கொண் மாமயில் [3]வரையின்மேற் றிரிவன போன்றார்.

(இ-ள்.) தம்முடைய துணையாகிய கணவரை நாடி மலையைப் போன்ற ஓங்கியமிக்க பிணக்குவியலின்மேலே திரிபவரான மாலையையணிந்த கூந்தலையுடைய நன்மையைக் கொண்ட நெஞ்சையுடையவரான அரக்கமகளிர், (தமது) அரிய துணை மயில்களைப் பிரிந்து வருந்துகின்ற அழகுகொண்ட பெரிய பெண்மயில்கள் மலைமீதுதிரிவனவற்றை யொத்தார்; (எ - று.)—தற்குறிப்பேற்றவணி. பி-ம்:—[1]துணைவரைப், பெருந்துணை. [2]அயர்வின, அகவும். [3]மலையின்மேல். (2316)

65. சிலவர் தம்பெருங் [1]கணவர்தஞ் செருத்தொழிற் சினத்தால்
பலரும் வாய்மடித் துயிர்துறந் தார்களைப் பார்த்தார்
[2]அலைவில் வெள்ளெயிற் றுலிதழ் [3]மறைத்துள தயலாள்
கலவி யின்குறி [4]காண்டுமென் றுமெனக் கனன்றார்.

(இ-ள்.) சிலமகளிர்,—தம்பெருமைபெற்ற கணவர்பலரும் தம் செருத்தொழிலிலே (மூண்ட) சினத்தினால் வாய்மடித்தவண்ணம் உயிர் துறந்தவர்களைப் பார்த்து,-(இவர்கள்) அசைதலில்லாத வெள்ளிய எயிற்றினால் இதழை மறைத்துள்ளது அயலாளின்

கலவிக்குறியை (நாம்) கண்டுவிடுவோமென்ற கருத்தினாற்போலுமெனக்கருதி (அவர்மீது) கோபித்தார்கள்; (எ-று.)

சினமூண் — நிலையில் வாயிதழைப் பல்லினாற் கடித்துக் கொள்ளல், இயல்பு: அங்ஙனம் வாயிதழைக் கடித்தபடியே இறந்துள்ள கணவரைப்பார்த்து அவர் உயிர்நீங்கினவரென்பதைக் கவனியாது சிலமாதர்கள் 'தம்' கணவர்வேறொருத்தியோடு புணர்ந்து அந்நிலையில் அம்மகளிர் வாயிதழிலேசெய்த பற்குறிகளை நாம் காணாமலிருக்கவேணு மென்ற கருத்தினால் இவர் இவ்வாறு அவ்விதழை மறைத்துக்கொண்டுள்ளார் எனக்கருதி அவர்கள்மீது சினம் மூண்டனரென்பதாம். பி - ம்:—[1]கணவர்கள். [2]அலரும், அலகில். [3]மறைந்துளது. [4]காண்குவம்யாம், காண்குதும்யாம். ()

66. ' [1]நவசெய் வன்றலை [2]யிழந்தத [3]மன்பரை நணுகி
அவச [4]மெய்திட [5]மடந்தைய ருருத்தெரிந் தறியார்
துவச மன்னதங் கூருகிர்ப் பெருங்குறி தோண்மேற்
கவச [6]நீக்கினர் [7]கண்டுகண் டாருயிர்க் [8]கழித்தார்.

(இ-ள்.) வானத்தையொத்த [கறுத்துத் தோன்றுகின்ற] வலியதலையை(ப் போரில்) இழந்தவரான தமதுகணவரை நணுகி, மங்கையர் (தம்கணவரின்) உருவினைத் தெரிந்தறியமாட்டாதவராய் அவசத்தையடைய, (பின்பு அவரது) கவசத்தைநீக்கி அவரது தோள்மேல் துவசவடிவத்தையொத்த தம்கூரிய நகத்தாற் செய்த பெருங்குறிகளைக் கண்டுகண்டு (தம்) ஆருயிர் நீக்கினார்;

தலைநீங்கிய கணவருடலை 'இது கணவருடல்தான்' என்று கண்டறியமாட்டாத அரக்கமகளிர அவரணிந்த கவசத்தை நீக்கியதனால் தாம் புணர்ச்சிக் காலத்திற் செய்த துவசக்குறியைக்கண்டு கணவரேயென்று துணிந்து இன்னுயிர் துறந்தாரென்பதாம். ஆகாயம் அல்லது மேகம் என்ற பொருளுள்ள நபஸ் என்ற வடசொல், நவசு எனத் திரிந்துவந்தது; எய்=ஏய்: உவமவுருபு. இனி, நவஞ்செய் என்பது 'நவசெய்' என விகாரப்பட்டதாகக்கொண்டு, புதிதாக மணந்தவராதலால் கணவருருவைத் தெரியாதவராயினரெனவுமாம். துவசமன்ன குறி என இயையும். பி-ம்:—[1]நவைசெய். [2]இழந்தனர். [3]நண்பரை. [4]எய்திய. [5]மங்கையர். [6]நீங்கினர்க். [7]கண்டு கொண்டு. [8]அழிந்தார். (2318)

67. மாரி யாக்கிய கண்ணியர் கணவர்தம் வயிரப்
[1]போரி யாக்கைக [2]ணாடியப் பொருகளம் [3]புகுந்தார்
பேரி [4]யாக்கையின் [5]பிணப்பெருங் குன்றிடைப் பிறந்த
சோரி யாற்றிடை [6]யழுந்தின ரின்னுயிர் துறந்தார்.

(இ-ள்.) மாரியையுண்டாக்கிய [மழைபோல்நீர்வடிக்கின்ற] கண்களையுடையவர்களான மகளிர், கணவருடைய வயிரம்போலுறுதியான போர்செய்த உடல்களை நாடி அந்தப் பொருகளத்திற் புகுந்தவராய், பெரிய யாக்கையைக் கொண்ட பெரும் பிணமலையினின்று பிறந்த இரத்தநதியிலே அழுந்தி இனிய உயிரைத் துறந்தார்கள்;

(எ-று.)—பி-ம்:—[1]போரிலாக்கைகள். [2]நாடினர், நாடிய. [3]புக்கார். [4]யாக்கையை. [5]பெரும்பிணக். [6]ஒழுக்கினர். (2319)

வேறு.

68.—அநுமானுக்கும் தூமிராட்சனுக்கும் நிகழ்ந்தபோரில் தூமிராட்சன் இறந்தமை, ஐந்துகவிகளால் கூறப்படும்.

[1]வகைநின் றுயர் [2]தாளெடு மாருதியும்
[3]புகையின்பொரு கண்ணவ னும்பொருவார்
மிகைசென்றிலர் பின்றிலர் வென்றிலரால்
சிகைசென்று நிரம்பிய தீயுமிழ்வார்.

(இ-ள்.) அழகாக ஓங்குகின்ற தாளையுடைய பெருமைபெற்ற அநுமானும் புகையோடு பொருகின்ற கண்ணையுடையவனும் [தூமிராட்சனும்],—போர்செய்பவராய், கொழுந்து எழுந்து நிரம்பிய தீயையுமிழ்பவராகிய, (ஒருவரையொருவர்) மேம்படுதலும் பின்னிடுதலும் வெல்லுதலும் இல்லாதவராயினர்; (எ - று.)—இந்தப் பாக்களை வஞ்சிவிருத்தமாகவன்றி, 'வகைநின் றுயர்தாளெடுமா ருதியும்' என அளவடி கொண்ட கலிவிருத்தமாகவும் பிரிக்கலாம். பி - ம்:—[1]வகைநிற்றிரு, வகையின்னுயர், வகையின் றுயர். [2]தாளுயர், தோளெடு. [3]புகைவெங்கணனும்பொருவார் பொரவே. (2320)

69. ஐயஞ்[1]சழல் வாளி [2]யழற்கொடியோன்
மெய்யஞ்சனை கான்முளை மேனியின்மேல்
[3]வையஞ்சிலை யாறு வழங்கின [4]னல்
மொய்யஞ்சன மேக முனிந்தனையான்.

(இ-ள்.) அழல்போற்கொடியவனான தூமிராட்சன்,-நெருங்கிய கறுத்தமேகம் முனிந்ததனையொத்தவனாகி, அழல்கின்ற இருபத்தைந்து அம்புகளை, உண்மையுள்ள அஞ்சனாதேவியின் புதல்வனான அநுமானுடைய உடலின்மீது (தான்) கொண்டுள்ள அழகிய வில்லின்வழியால் எய்தான்; (எ - று.)—அழற்கொடி-புகை; அப்பெயரையுடையோனுமாம். வை(த்த) அம் சிலை ஆறு எனப்பிரிக்க. ஆறு-வழி. வை-கூர்மையுமாம். பி-ம்:—[1]அயில். [2]அமர்க். [3]வையஞ்சலிபாய, வையஞ்சலில்பாய். [4]ஆம். (2321)

70. பாழிப்புய [1]மம்புரு வப்படலும்
வீழிக்கனி போற்புனல் [2]வீசவெகுண்டு
ஆழிப்[3]பெருந்தேரை யழித்தனனால்
ஊழிப்பெயர் [4]கார்நிக ரொண்டிறலான்.

(இ - ள்.) வலியபுயத்திலே அம்பானது உருவுமாறு படலும், வீழிக்கனிபோன்ற [செந்நிறமுள்ள] இரத்தநீர் (உடலினின்று) வெளிப்பட, ஊழிக்காலத்திலே சஞ்சரிக்கின்ற மேகத்தையொத்த பெருந்திறமையுடைய அநுமான், வெகுண்டு, (அவ்வரக்கனுடைய) ஆழியைக்கொண்ட பெரியதேரை யழித்தான்; (எ-று.)—ஒண்டிறலான்-அநுமான்: 72-ஆம் பாடலைப் பார்க்க. பி-ம்:—[1]அம்புபுகப். [2]வீழ. [3]பொரு. [4]கானிகர். (2322)

71. சில்லிப்பொரு தேர்சிதையச் சிலையோடு
[1]எல்லிற்[2]பொலி விண்ணின் [3]விசைத்தெழுவான்
வில்லிற்ற திலக்குவன் வெங்கணையால்
புல்லித்தரை யிட்டன னேர்பொருவான்.

(இ-ள்.) சக்கரத்தைக்கொண்ட பொருதற்குவுற்ற தேர்சிதையவே, (தன்) வில்லோடு சூரியனால் விளக்கமுற்ற விண்ணிலே விரைந்தெழுந்தவனான தூமிராட்சனுடைய வில்லானது இலக்குவனுடைய கொடியகணையால் முறிந்தது; நேரேபொருபவனாகிய அனுமான், (தாவி அவனைத்) தழுவித் தரையிலே யிட்டான்; (எ-று.)—பி-ம்:—[1]எல்லிப், [2]பொரு, பெரு. [3]விரைந்து. (2323)

72. மலையிற்பெரி யானுடன் மண்ணிடையிட்டு
[1]உலறக்கட ருவிய கால்கொடுதைத்து
[2]அலையிற்[3]றிரு கிப்பகு வாயனல்கால்
[4]தலைகைக்கொ டெறிந்து தணிந்தனனால்.

(இ - ள்.) (அநுமான்),—மலையினும் பெருந்தோற்றமுடையவனான தூமிராட்சனுடைய உடலை மண்ணிலிட்டுக் கடலைத் தாவிய காலைக்கொண்டு (அவ்வரக்கனுடையஆவி) வற்றும்படி உதைத்து, பிளந்தவாயினாலே அனலைக் கக்குகின்ற (அவன்) தலையைக் கையால் திருகிக் கடலிலெறிந்து (சினந்) தணிவடைந்தான்; (எ-று.)—உலற=உளற:கதற எனினுமாம். அலையிலெறிந்து என்க. அலை - கடலுக்கு, இலக்கணை. பி-ம்:—[1]உலைய. [2]அலையத். [3]பருகி. [4]வலை. மலை. (2324)

73.—இனி ஆறுபாடல்கள், அங்கதன் மகாபார்சுவனுடன் பொருது அவனைக் கொன்றமையைக் கூறும்.

மாபக்கனு மங்கத னும்மலைவார்
தீபத்தி [1]னெரிந்தெழு செங்கணினர்
கோபத்தினர் கொல்ல நினைந்தடர்வார்
தூபத்தி னுயிர்ப்பர் [2]தொடர்ந்தனரால்.

(இ - ள்.) (ஒருவரோடொருவர்) பொருபவரான மகாபார்சுவனும் அங்கதனும், கோபங்கொண்டு தீபம்போல் எரிந்தெழுகின்ற செங்கண்ணையுடையவரும் தூபம்போற்புகை வெளிப்படுகின்ற பெரு மூச்சையுடையவருமாகி, (ஒருவரையொருவர்) கொல்லநினைந்து அடர்பவராய்த் தொடர்ந்தார்கள்; (எ - று.)—[1]எரிந்திடு. [2]தொடங்கினராய். (2325)

74. ஐம்பத்தொரு வெங்கணை யங்கதன்மா
மொய்ம்பிற்புக வுய்த்தனன் [1]மொய்தொழிலான்
வெம்பிக் களியோடு [2]விளித்தெழுதிண்
கம்பக்கரி யுண்டை கடாயெனவே.

(இ-ள்.) நெருங்கிப்பொருகின்ற தொழிலையுடையவனான மகாபாரிசுவன் கோபித்து, மதக்களிப்புடனே ஆரவாரஞ்செய்து கொண்டெழுகின்ற வலிய கட்டுத்தறியிற் பிணிக்கத்தக்க மதயானைமீது

உண்டையைச் செலுத்தினாற்போல, ஐம்பத்தொருகோடியபாணங்களை அங்கதனுடைய பெரிய தோள்களிலே புகுமாறு செலுத்தினான்; (எ - று)—கடாயென = கடாவினானெனு: எச்சத்திரிபு. பி-ம்:—[1]மொய்த். [2]விளிங்தெழு. (2326)

75. ஊரோடு [1]மடுத்தொளி யோனையுறுங்
[2]காரோடு நிறக்கத நாகமனான்
தேரோடு மெடுத்துயர் திண்கையினாற்
பாரோடு [3]மடுத்தெறி பண்பிடையே.
இரண்டு கவிகள் - குளகம்.

(இ-ள்.) ஊர்தல்தொழிலோடுபொருத்திச் சூரியனையுறுகின்ற மேகத்துடனே கருநிறம்பூண்டசீற்றமுள்ள இராகுகேதுக்களையும் ஒத்தவனான அங்கதன், (தனது) உயர்ந்த திண்ணிய கைகளால் (மகாபாரிசுவனைத்) தேரோடும் எடுத்துப் பூமியிலே பொருந்துமாறு எறிந்த நிலையில்,—(எ - று.)—'வழங்கினன்' என மேற்கவியிற் குளகமாக முடியும்.

தேவரைப்பற்றுமாறு சென்ற அங்கதனுக்குச் சூரியனைப்பற்றுமாறு செல்லும் காரையும் பாம்பையும் உவமை கூறினார்; 'எல்லிற்பொலிதேர்'' என அடுதத செய்யுளிலும் தேருக்குச் சூரியனை உவமை கூறுவர். 'ஊரோடுமடுத்தொளியோனை யுறும்' என்ற விசேஷணம் கார் நாகம் இரண்டற்கும் சேரும். [2]காரோடு நிகர் என்ற பாடத்திற்கு நாகத்திற்குக் காரை உவமை கூறியதெனின், அடுக்கிவரலுவமையாமாதலால் அங்ஙன் கூறலாகாது. ஊர்ந்து செல்லுதல் பாம்பிற்கு இயற்கை. ஊரோடும் அடுத்த எனப் பிரித்து-ஊர்கோளோடும் பொருந்திய எனினுமாம். மகாபாரிசுவனெறிந்த ஐம்பத்தொருகணைகளாற் பற்றப்பட்ட அங்கதனுக்கு இராகுகேதுக்களாகிய நாகங்களினாற் பற்றப்பட்ட சூரியன் உவமையெனக் கொள்வாருமுளர். பாரோடு-பாரில்: வேற்றுமை மயக்கம். அடுத்து—அடுக்க: எச்சத்திரிபு. பி-ம்:—[1]எடுத்து. [3]எடுத்தெறி. (2327)

76. வில்லைச்செல வீசி [1]விழுந்தழியும்
எல்லிற்[2]பொலி தேரிடை நின்றிழியாச்
சொல்லிற்[3]பிழை யாததொர் சூலமவன்
மல்லிற்பொலி மார்பின் வழங்கினனால்.

(இ-ள்.) (மகாபார்சுவன்,—தன்) வில்லை (அப்பாற்) செல்லுமாறு எறிந்துவிட்டு, சூரியனைப்போல் விளங்குவதும் கீழ்வீழ்ந்தழிவதுமான தேரிடையினின்று இழிந்து, சாபச்சொற்போலத் தவறாது அழிக்கவல்ல ஒரு சூலத்தை அந்த அங்கதனுடைய வலிமையோடு விளங்குகின்ற மார்பிலே விடுத்தான்; (எ—று.)—பி-ம்: —[1]வெகுண்டடரா. [2]பொரு. [3]பிழையாதொரு. (2328)

77. சூலம்மெனி [1]னன்றிது தொல்லைவரும்
காலம்மென வுன்னு [2]கருத்தினனாய்
ஞாலம்முடை யானது நாமறவோர்
[3]ஆலம்முடை யம்பி னறுத்தனனால்.

(இ - ள்.) உலகநாயகனுகிய ஸ்ரீராமன்,—(அந்தச்சூலத்தைக் குறித்து) இது, (சாதாரண) சூலம் என்போமெனின் அன்று, பழமையாய்வருகின்ற (முடிவைவிளைக்கும்) காலபாசத்தின்சொரூபமானது என்று நினைத்த எண்ணத்தையுடையவனுய், அது பேரும் அறும்படி, நஞ்சுபூசிய அம்பைக்கொண்டு அறுத்தான்; (எ - று.)—நாம்-நாமம் என்பதன் விகாரம். பி-ம்:—[1]நின்றது, நன்றது. [3]கருத்தினுல், கருத்தினனு. [2]ஆலம்முகவம்பின். ஒவ்வோரடியிலும் விரித்தல் விகாரமாகிய மகரவொற்று இல்லாத பாடம் சிலபிரதிகளில்.()

78. உளந்தா னினையாதமு [1]னுய்த்துகவாக்
[2]கிளர்ந்தானை யிரண்டு கிழித்[3]துணையாய்ப்
பிளந்தா னுலகேழிரு டேழுபெயர்ந்து
அளந்தான்வலி நன்றென வங்கதனே.

(இ-ள்.) (அப்போது) அங்கதன்,—பதினுன்கு உலகங்களையும் (தன் நிலையினின்று) பெயர்ந்து அளந்தவனுன திருமாலின் அமிசமான இராமனுடையவலியை நன்றென்று (சொல்லிக்) கொண்டாடிவிட்டு,—மனத்தினுல் நினைப்பதற்கு முன்னமே [விரைவாக] (சூலத்தைச்) செலுத்தி உவந்து மனக்கிளர்ச்சி கொண்டவனுன மகாபாரிசுவனை இரண்டுகிழியின் தன்மையாகப் பிளந்திட்டான் [இரண்டாகக் கிழித்திட்டான்]; (எ-று.)—உகவா = உகந்து: செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம். பி-ம்:—[1]உற்றுதவாக். [2]கிளர்ந்தானை. [3]துணையாப். (2330)

79.—மாலியும் நீலனும் பொருதல்.

மாமாலியு நீலனும் வானவர்தங்
கோமானெடு தானவர் கோனிகலே
ஆமாறு மலைந்தன ரென்றிமையோர்
பூமாரி பொழிந்து புகழ்ந்தனரால்.

(இ-ள்.) 'பெருமைபெற்ற மாலியென்பவனும் நீலனும் வானவர்தம் தலைவனுடனே தானவர்கோன் புரிந்த போரே உவமையாகுமாறு பொருகின்றனர்' என்று இமையோர் மலர்மாரிபெய்து புகழ்ந்தார்கள்; (எ-று.)—இமையோர் புகழ்ந்தாரென்று கூறினும், புகழுமாறு பொருதாரெனப்தே கருத்தாகக்கொள்க. 'வானவர் தலைவன்-ஸ்ரீதவாதிதேவனுன திருமாலினமிசமாகிய நரசிங்கமூர்த்தி: தானவர் கோன்-இரணியன்' என்பர். (2331)

80.—நீலன் மலையால் வில்லையழிக்க, மாலி வாளோடும் தேரின்மேல் ஏறிவந்து அவனைத் தடுத்து நிற்றல்.

கல்லொன்று கடாவிய காலையவன்
வில்லொன்றிரு [1]கூறு [2]விளைத்திடலும்
[3]மல்லொன்றிய தோளினன் [4]வாளினெடும்
நில்லென்றிடை சென்று நெருக்கினனுல்.

(இ-ள்.) (நீலன்) மலையொன்றை யெடுத்துச் செலுத்திய காலையில், (அது) அந்தமாலியினுடைய வில்லொன்றை இருகூருகச்

செய்திடலும்,—வலிமைபொருந்திய தோளையுடையவனான மாலி, வாளுடனே (வந்து) நில்லென்றுசொல்லி (நீலன் போக்கைத் தடுத்து) அவனிடையே சென்று அடர்க்கலானான்; (எ - று.)— பி - ம்:—[1]கூறின். [2]விழுந்திடலும், விளைந்திடலும். [3]செல்லொன்றியவாளொடு. [4]தேரினனாய், தோளினனாய். (2332)

81.-குமுதன் இடையேவந்து மாலியின்தேரைப் பொடியாக்கல்.

அற்றத்தொழி லெய்தலு மக்கணமே
மற்றப்புற நின்றவன் வந்தணுகாக்
கொற்றக் குமுதன்னொரு குன்றுகொளா
[1]எற்றப்பொரு தேர்பொடி யெய்தியதால்.

(இ - ள்.) அப்போது அத்தொழில் நிகழ்கையில், அக்கணமே மற்றொருபுலத்திலே நின்றவனாகிய வெற்றிபொருந்திய குமுதன்,— ஒரு குன்றைக் கொண்டுவந்தணுகி மோத, பொருதற்கு உதவியான (மாலியின்) தேர் பொடியாய்விட்டது; (எ - று.)- அன்று அத்தொழில் என்றதொடர், அற்றத்தொழிலென்றாயிற்று: அற்றத்தொழில் என்பதற்கு - வலிமையறுதலாகிய செயல் என்று கூறுவாருமுளர். பி - ம்:—[1]எற்றிப். (2333)

82.—நீலனெறிந்த மரத்தை மாலி வாளால் துண்டுபடுத்த, அவன் வாள்பிடித்த தோளை இலட்சுமணன் வெட்டிவிடுதல்.

தாளார்மர நீல [1]னெறிந்ததனை
வாளான் மடிவித்து [2]வலித்தடர்வான்
தோளாசற வாளி துரந்தனனால்
மீளாவினை நூறும் விடைக்கிளையான்.

(இ-ள்.) நீலன் எறிந்ததாகிய தாள்பருத்த மரத்தை (த் தன்) வாளினால் துண்டித்து வலிகாட்டிப்பொருபவனான மாலியின் தோளின் மூட்டு அறும்படி, போக்குதற்கு அரிய வினைகளைப் போக்குபவனாகி இடபம்போன்ற இராமபிரானது தம்பி [இலட்சுமணன்] அம்பைச்செலுத்தினான்: (எ-று.)—பி.ம்:—[1]எடுத்தனதன், எறிந்தனதன். [2]வதித்து, வலிந்து. (2334)

83.—மீண்டும் பொரவந்த மாலியினிடம் 'கையற்றுப்போன உன் போலியரோடு பொருதல் தகாது' என்று இலட்சுமணன் போய் விடுதல்.

மின்போல் மிளிர்வாளொடுதோள்விழவும்
தன்போர் தவிராத வனைச்சலியா
என்போலியர் போரெனி [1]னன்றிதுவோர்
புன்போரென நின்றயல் போயினனால்.

(இ-ள்.) மின்போல் விளங்குகின்ற வாளுடனே தோள் அறுபட்டு விழவும், தன் போர் தவிராமல் பொருபவனான மாலியை (நோக்கி,இலட்சுமணன்),'என்போன்றவருடன் செய்யும் போரோ என்றால் அன்று; இது ஓர் புல்லிய போராகும்' என்று சொல்லி வெறுத்து அங்குநின்று அப்பாற் சென்றிட்டான்; (எ - று.)

'சரியான வீரரோடு பொரலாம்; தோளற்றவனோடு பொருதல் முறைமையன்று' என்று சொல்லிப் போயினன், இளைய பெருமாளென்க. சலியா-வெறுத்து; சலியா தவிராதவனை என்று கூட்டுவாருமுளர். நன்றிது என்றும் பிரிக்க இடனுண்டு. பி-ம்:—[1] இன்றிது. (2335)

84.—இலட்சுமணனைப் புகழ்ந்து வானரவீரர் இராமனிடம் கூறுதல்.

நீர்வீரை யனுனெதிர் நேர் [1]வரலும்
போர்வீரனை வாசி பிடித்தவனை
யார்[2]வீரதை யின்னசெய் தார்களெனுப்
போர்[3]வீர ருவந்து [4]புகழ்ந்தனரால்.

(இ - ள்.) (இலட்சுமணன்) நீரைக்கொண்ட கடல் போன்ற நிறத்தவனான ராமனுடைய எதிரே நேரேவருதலும், போர் வீரர்கள், பெரிய வீரனும் அம்பைப் பிடித்துள்ளவனுமாகிய அவ் விலட்சுமணனைக் குறித்து, 'எவர்(தம்)வீரத்தன்மையால் இப்படிப் பட்ட தருமயுக்தத்தைச் செய்தார்கள்?' என்று சொல்லி, உவந்து புகழ்ந்தார்கள்; (எ - று)—வாஜம் - சிறகு: சிறகு கட்டப் பட்டுள்ளது பற்றி வடமொழியில், அம்பு 'வாஜி' எனப்படும்; அது, வாசி எனத் திரிந்து வந்தது: இனி, வாசி-போருமாம்; வாசி பிடித்தவன்-போரை (செய்யத்தக்கதுஎன)க் கொண்டவன் என்க. அன்றி, வாசிபிடித்தவன்-('போர்செய்யத்தக்கவர் இன்னார், தகாதவ ரின்னார்' என்ற) வேறுபாட்டை யறிந்தவனெனினுமாம். வீரதை=வீரதா: வடசொல். பி-ம்:—[1]வரவும். [2]வீரமது. [3]வீர னும்வந்து. [4]புகழ்ந்தனனுல். (2336)

85.—யஜ்ஞஹா என்பவனை இலட்சுமணன் மாய்த்தல்.

வேள்விப் பகையோடு வெகுண்டடருந்
[1]தோள்வித்தக னங்கொர் சுடர்க்கணையால்
வாழ்வித்தனை யென்றவன் மார்பகலம்
போழ்வித்தன னுருயிர் [2]போயினனுல்.

(இ-ள்.) யஜ்ஞசத்துருவுடனே சினந்து பொருகின்ற தோள் வலிமையுடைய வல்லவனான இளையபெருமாள், வாழ்வித்தா யென்றுசொல்லி அப்போது ஒளிபொருந்திய ஓரம்பினால் அவன் மார்பின் பரப்பைப் பிளக்கச்செய்தான்: (அவ்யஜ்ஞசத்துரு) அரியஉயிர் போகப்பெற்றான்: (எ - று.)

யஜ்ஞஹாவை யஜ்ஞசத்துரு என்றும் சொல்லலாம். இப் போது உயிர் நீங்கப்போகின்றாயாதலால் அரக்கரை இனி வாழ் விக்கமுடியாதென்பான் 'வாழ்வித்தனை' என்கின்றான்: பிறகுறிப்பு. இனி, நீ என் கையிற்பட்டிறக்கப் போகின்றாயென்ற குறிப்பினால் இவ்வாறு கூறினனுமாம். இச் செய்யுள் ஒரு பிரதியில் "மல்லற் றடமார்பன்" என்ற அடுத்த பாடலின்பின் உள்ளது. பி - ம்:—[1]காழ்வித்தக முற்றகடுங். [2]போயினதால். (2337)

86.—இதுவும் அது.

[1]மல்லற்றட மார்பன் வடிக்கணையால்
[2]எல்லுற்றுயர் வேள்வி யிரும்பகைஞன்
[3]வில்லற்றது தோளொடு [4]மேனிமிரும்
கல்[5]லற்ற கழுத்தொடு காலகளொடும்.

(இ - ள்.) வளப்பம்பொருந்திய பரந்த மார்பையுடையவனான இலட்சுமணனது கூரிய அம்பினால், ஒளிபொருந்தி ஓங்கி (த் தீ) எரிகின்ற வேள்விக்குப் பெரும்பகைவனது [யஜ்ஞசத்துருவின்] வில் அற்றிட்டது; (அவனது) தோளுடனும் கழுத்துக் கால்களுடனும் மேல்நிமிர்ந்துவரும் கற்களும் அற்றன; (எ - று.)

யஜ்ஞசத்துரு என்ற இவ்வரக்கன், யாகஞ்செய்வோர்மேலும் யாககுண்டங்களின் மேலும், கல் முதலியன மழைபோல் விழும்படி வானத்திலிருந்து சொரிந்து வேள்வியை யழிப்பவனாதலால், இனி அவ்வாறு யாகத்தைக் கெடுக்குமாறு கல்லைச் சொரிபவரில்லையென்பார் 'கல்லற்ற' என்றார்: இவ்வாறு அறுதல் தொழிலைச் சமத்காரந் தோன்றக் கூறியிருத்தலால், 'தோளொடு கழுத்தொடு கால்களொடும் கல்லற்ற' என்றது-உடனவிற்சியணி. பி-ம்:—[1]மல்விற்றடமாரன்வயக். [2]எல்லொத்துயர், எல்லிற்றுயர். [3]வில்லிற்றதுதேரொடு, வில்லிற்றதுதோளென. [4]மேனியிருங் [5]இற்ற. ()

87.—சூரியசத்துருவைச் சுக்கிரீவன் போரிற் கொல்லுதல்.

தன்றாதையை முன்பு தடுத்தொருநாள்
வென்றானை விலங்கலின் மேனியனைப்
பின்றாத வலத்துயர் பெற்றியனைக்
கொன்றான் கவியின்குல மாளுடையான்.

(இ-ள்.) தன்தாதையாகிய சூரியனை முன்பு ஒருநாள் தடுத்து வென்றவனும் மலைபோன்ற மேனியையுடையவனும் பின்னிடையாத வலிமையோடு உயர்ந்த தன்மையையுடையவனுமான சூரிய சத்துருவை, கவியின் கூட்டத்தையெல்லாம் (தன்) அடிமைக் குடியாகக்கொண்டவனான சுக்கிரீவன், (செய்தபோரிற்)கொன்றான். ()

88.—இதுவும், அடுத்த கவியும்-இடபனும் வச்சிரதம்ஷ்ட்ரனும் பொருதலைக் கூறும்.

இடபன்றனி வெஞ்சம முற்றெதிரும்
விடவெங்கணையிற்றவன் விண்ணதிரக்
கடவுங்கதழ் தேர்[1]கட வாளிநெடும்
படவங்கொரு குன்று [2]படர்த்தினனால்.

(இ - ள்.) இடபனென்ற வானரவீரன், - ஒப்பற்றகொடிய போரைப் பொருந்தி எதிர்க்கின்றவனும் விடம்கக்குங் கொடுங் கண்ணையுடையவனுமான வச்சிரதம்ஷ்டரனது வானதிரும்படி செலுத்துகின்ற விரைவுபொருந்திய தேரை (அதனை)ச் செலுத்துகின்ற ஆளுடனே [பாகனுடனே] அழியுமாறு அங்கு ஒரு மலை

யைச் செலுத்தினன்; (எ - று.)—படர்த்தினன்-படரச் [செல்லு மாறு] செய்தான். [2]படைத்தனனால் என்ற பாடத்திற்குப் பெற்றா னென்க. எயிற்றவன்-எயிறுகளை [தம்ஷ்ட்ரங்களை] யுடையவன்: எனவே, வச்சிர தம்ஷ்ட்ரனைக் காட்டிற்று: இச்சொல்லில், இலக் கணையுடனே நாமைகதேசே நாமக்ரஹண [பெயரின் ஒரு பகுதி யால் முழுப்பெயரைக் கொள்ளவைப்பது]வும் உள்ளது. பி-ம்:— [1]கெடவாளியொடும், கதிர்வாளியொடும். (2340)

89. திண்டே[1]ரழி யச்சிலை விட்டொருதன்
[2]தண்டோடு மிழிந்து தலத்தினனாய்
உண்டோவுயி ரென்ன [3]உருத்துருமோடு
எண்டோளனு முட்கிட வெற்றினனால்.

(இ - ள்.) (தன்) வலிய தேர் அழியவும் (தான் கைப்பற்றி யிருந்த) வில்லை விட்டிட்டு, (அந்த வச்சிரதம்ஷ்ட்ரன்),—ஒப்பற்ற தனது தண்டாயுதத்துடனே (தேரினின்று) இழிந்து தலத்துநிற் பவனாகி, இடியும் எண்டோளையுடைய மூர்த்தியும் அஞ்சும்படி கோபித்து (க் கண்டவர் 'இனி இவனுக்கு) உயிரும் உளதாகுமோ?' என்னுமாறு (அந்தத்தண்டாயுதத்தினால இடபனை) மோதினான்; (எ-று.)—பி-ம்:—[1]ஒழிய. [2]தண்டேகொடு. [3]உருத்திரனும். (2341)

90.—அப்போது அநுமன் அவ்வரக்கனுக்கு முற்படுதல்.

அடியுண்டவ னாவி [1]யுலைந்தயர
இடியுண்ட மலைக்குவ [2]டிற்றதுபோல்
முடியுமெனு [3]மெல்லையின் [4]முந்தினனால்
நெடியன்குறி யன்னெனு நீர்மையினான்.

(இ - ள்.) அடியுண்டவனான இடபன் உயிர் மரணவேதனை யடைந்து துன்பப்பட, (இவன்) இடியுண்ட மலைச்சிகரங்கள் இற்றதுபோல முடிந்திடுவானென்கின்ற காலத்திற்குள்,—(தான் வேண்டியபடி) நெடியனும் குறியனும் ஆகுந்தன்மையுள்ளவனான அநுமான் முற்பட்டுத்தோன்றினான்; (எ-று.)—அநுமான் நெடிய வனும் குறியவனும் ஆனதைச் சுந்தரகாண்டத்துங் காணலாம். பி-ம்:—[1]குலைந்தயரா, குலைந்தலையா. [2]இற்றன. [3]எல்லையின். [4]முற்றினனால். (2342)

91.—இதுவும், அடுத்த கவியும் அநுமான் வச்சிரதம்ஷ்ட்ர னுடன் பொருது அவனைக் கொன்றமை கூறும்.

கிடைத்தானிகன் மாருதி யைக்கிளர்வான்
[1]அடைத்தானென மீதுய [2]ராக்கையினைப்
படைத்தானை நெடும்புகழ் பைங்கழலான்
புடைத்தா[3]னவன் மார்பு [4]பொறிச்சிதற.

(இ - ள்.) வந்துகிட்டினவனும் விளங்குகின்ற வானத்தை யடைத்தவனென்னுமாறு மேலோங்கிய சரீரத்தைப் படைத்தவனு மான வலிமைபொருந்திய அநுமனை, மிக்கபுகழ்படைத்த பசும் பொன்னினாற்செய்த வீரக்கழலை யணிந்தவனாகிய வச்சிரதம்ஷ் ட்ரன், அவன் மார்பினின்று நெருப்புப்பொறி சிதறுமாறு (தண்டு

கொண்டு) அடித்தான்; (எ - று.)—பி-ம்:—[1]மிடைத்தானெனமீ, விடைத்தானெனமீ. [2]ஆர்கையனை. [3]அகல். [4]பொடிச். (2343)

92. எற்றிப்பெயர் வானை யிடக்கையினால்
பற்றிக்கிளர் தண்டு பறித்தெறியா
[1]வெற்றிக்கிளர் கைக்கொடு [2]மெய்வலிபோய்
[3]முற்றத்தனிக் குத்த [4]முடிந்தனனால்.

(இ - ள்.) மோதிவிட்டுச் செல்பவனாகிய வச்சிரதம்ஷ்ட்ரனை இடக்கையினாற் பற்றிக்கொண்டு (அவனது போரில்) மூளகின்ற தண்டாயுதத்தைப் பறித்தெறிந்துவிட்டு, (அநுமான்),—வெற்றியோடு விளங்குகின்ற (தன்) கையைக்கொண்டு உடல்வலியெல்லாம் (ஓரிடத்துச்) சென்று முதிர [மிக்கவலிமையோடு] தனிக்குத்துக் குத்த, (அவ்வரக்கன்) உயிர்முடிந்திட்டான்; (எ-று.)—இரண்டாமடியில், கிளர்தல்-மூளுதல். பி-ம்:—[1]மற்றைக். [2]மைவலிமொய். [3]முற்றி. [4]முடித்தனனால். (2344)

93.—இதுமுதல் ஆறுகவிகள்-பிசாசன் செய்த கடும்போரைக் கூறும்.

[1]காத்தோர்மரம் வீசுறு [2]கைக்கதழ்வன்
போர்த்தோர்புலி போற்பன சன்புரளக்
[3]கோத்தோட நெடுங்[4]குரு திப்புனல்திண்
மாத்தோமர மார்பின் வழங்கினனால்.

(இ - ள்.) (பிசாசனென்பவன், — தன்னைப்) பாதுகாத்துக் கொண்டு ஒருமரத்தை வீசுகின்ற கைவிரைவையுடைய ஒரு வலிய புலிப்போத்துப்போன்ற பனசன் புரளவும், மிக்க இரத்தநீர் வெள்ளங்கோத்து ஓடும்படியும், வலிய பெரிய தோமரத்தை (அவனது) மார்பில் விடுத்தான்; (எ - று.)—போத்து - புலி மரை முதலிய சில விலங்குகளின் ஆணைக்காட்டுஞ் சொல். பி-ம்:—[1]காத்தோமரம். [2]கைக்கழுதன், கைக்கதமுன். [3]தேத்தோட. [4]குருதித்திரைகள். ( )

94 [1]கார்மேலினனோகடன் மேலினனோ
பார்மேலினனோபகன் மேலினனோ
யார்மே[2]லின னோ[3] இன வென்றறியேம்
போர்மேலினன் வாசியெனும் [4]பொறியான்.

(இ - ள்.) போர்மேலிருப்பவனும் குதிரையெனப்படுகின்ற யந்திரத்தைக் கொண்டவனுமாகிய அந்தப் பிசாசன், கார்மேலிருக்கின்றானோ? கடன்மேலிருக்கின்றானோ? பூமியின் மீதிருக்கின்றானோ? (வானத்துச்) சூரியனிடத்துத்தான் இருக்கின்றானோ? யார்மேல்தான் பொருகின்றானோ? இன்னவையென்று சொல்லுதற்கு (யாம்) உணரோம்; (எ-று.)

இது, கவிக்கூற்று. பொருகையிற் பிசாசன் யந்திரத்திலிருப்பவன்போன்று இன்ன இடத்து இருக்கின்றானென்பதும் இன்னார் மேற்பொருகின்றானென்பதும் தெரியாதவாறு பல இடங்களிலுஞ் சுற்றியவண்ணம் பலருடனும் பொருதன னென்றவாறு. சாதாரணக் குதிரைபோலவன்றி ஓரியந்திரம்போற் சுழலுந் தன்மையது அவனதுபரி யென்பார் 'வாசியெனும் பொறி' என்றார்; இது,

கைதவாபநுதியணி. பி-ம்:—[1]கார்மேலெனவோ. [2]எனவோ. [3]என வென்றறியாப். [4]புரையான். இங்கே சிலபிரதிகளில் ஒருபாடல் காணப்படுகின்றது வருமாறு:—

*விசைகண்டுயர் வானவர் விண்ணிரியக்
குசைதங்கிய கோளென வாசியுடன்
திசையெங்கணும் நின்று திரிந்துளதால்
பசைதங்கு களத்தொரு பாய்பரியே. (2346)

95. [1]நூருயிர கோடிகொ லன்றுகொலென்று
[2]ஆருயிர வானவ ரும்மறிவில்
தேருவகை நின்று திரிந்துளதால்
பாருடு களத்தொரு [3]பாய்பரியே.

(இ-ள்.) ஆருயிரம் வானவர்களும், 'நூருயிரகோடிக்குதிரைகள் திரிகின்றனவோ? அன்றோ?' என்று அறிவில் தெளியாதபடி [ஐயமுறும்படி] (விரைந்து), பருந்துகள் உலாவுகின்ற போர்க்களத்திலே பாயுந் தன்மையுள்ள (அந்தப்பிசாசனுடைய) ஒப்பற்ற குதிரை திரிந்துநிற்பதாகும், (எ-று.)—இது, குதிரையின் விரைவைக் கூறியது. போர்காண ஆருயிரவானவர் அப்போது வந்திருந்தனரென்றுகொள்க. பி-ம்:—[1]நூருயிரம், கோருயிர. [2]ஆருயுத, ஆருயிரம். [3]வன். (2347)

96. கண்ணிற்கடு கும்மன னிற்கடுகும்
விண்ணிற்[1]பட காலின் மிகக்கடுகும்
உண்ணிற்கு மெனிற்புற னிற்குமூனாய்
மண்ணிற்[2]றிரி யாத வயப்பரியே.

(இ-ள்.) மண்ணில் திரிதலில்லாத (பிசாசனுடைய) வலிமை பொருந்திய குதிரை,-கண்ணின் பார்வையைக்காட்டிலும் விரைந்து செல்லும்; மனத்தினும் விரைந்துசெல்லும்; போர்க்களத்தினுள்ளே நிற்கின்றதென்றால் (அப்போதே) உலாவிப் புறத்திலும் நிற்கும்; (எ-று.)—இதுவும், பிசாசன் குதிரையின் விரைவு கூறியதே. மண்ணில் திரியாத-வானத்தில் தாவிச்சஞ்சரிக்கின்ற என்றபடி பி-ம்:—[1]படுகாலின். [2]திரியாது. (2348)

97. [1]மாப்புண்டர [2]வாளியின் [3]வட்டணைமேல்
[4]ஆப்புண்டவ ளுெத்தவ ளுரயிலான்
பூப்புண்டர வாவி புறத்தகலக்
கோப்புண்டன வானர வெங்குழுவே.

(இ-ள்.) பெரிய கழுகுபோற் (பரந்து) செல்லுகின்ற குதிரையின் விரைந்த நடையிலே கட்டப்பட்டவன் போன்றவனான [குதிரைமீது உறுதியாயிருந்த] பிசாசனுடைய அரிய வேற்படையினால், பூமிதேவி புண்ணைப்பெற்றிருக்கவும் (தம்) ஆவி (உடம்பி

---

* குசை-கடிவாளம். களத்துத் திசையெங்கணும் பரி குசைதங்கியகோள் என வானவர் இரியத திரியும். பசை-இரத்தம் நிணம் முதலியவற்றின் ஈரத்துடன் ஒட்டும்ஙிலே. வாசியுடன்-வேறுபாட்டுடனே.

னின்று) வெளிப்படவும், கொடியவானரக்கூட்டம் (மடிந்து) குவிந்தன. இது, வானரர்கூட்டம் மடிந்து குவிந்தமை கூறிற்று. இச்செய்யுள் சில பிரதிகளிலில்லை. புண்டரம்-கழுகு. வாளி - குதிரைக்கு ஆகுபெயர். இரத்தப்பெருக்கினால் 'பூப்புண்டர' என்றது. பி-ம்:—[1]மார்புண்டன. [2]வாசியின். [3]வட்டணையாய். [4]ஆப்புண்டன ரொத்தனராவியலாற். (2349)

98. நூறும்மிரு நூறும் நொடிப்பளவின்
ஏறுந்[1] நுதி வேலி னிறைப்பொழுதில்
சீறுங்கவி சேனை சிதைக்குமெனு
ஆறுந்திற லும்பரு மஞ்சினரால்.

(இ-ள்.) ஓரிமைப்போதும் ஓய்வில்லாமல் நொடிப்பொழுதில் நூறும் இருநூறுமாகச் சீறுங் கவிசேனையைக் கூர்மையேறிய வேலினால் சிதைக்கின்றானே, (இப்பிசாசன்!,' என்று தணிந்துள்ள வலிமையுள்ள தேவரும் அஞ்சினர்; (எ - று.)— 'நொடிப்பளவில்' எனவந்ததனால், இறைப்பொழுது இல்—இறைப்பொழுதும் வெறுமனே யில்லாமல் என்று உரைக்கப்பட்டது பி-ம்:—[1]திறல்... பொழுதில், பரியுந்தியிமைப்பொழுதில். (2350)

99.—இலட்சுமணன் வாயவ்யாஸ்திரத்தினாற் பிசாசனைக் கொன்றிடுதல்.

தோற்றும்முரு வொன்றெனவே[1] துணியாக்
கூற்றின்கொலை யாலுழல் கொள்கையனை
ஏற்றுஞ்[2] சிலை யாண்மை யிலக்குவன்வெங்
காற்றின்படை கொண்டு [3]கடந்தனனால்.

(இ - ள்.) (போர்செய்யுமாறு) தோன்றியுள்ள உரு ஒன்றே என்று துணியமுடியாதபடி கூற்றுக்குஉரிய கொலைத்தொழிலோடு (சாரிகைதிரிந்து) சஞ்சரிக்கின்ற தன்மையுடையவனான பிசாசனை நாணேற்றுகின்ற வில்லைக்கொண்ட ஆண்மையையுடைய இலக்குவன் கொடிய வாயுவின் அத்திரத்தினால் வென்றிட்டான்; (எ-று)

விரைந்துசெல்லுந் தன்மையுள்ள குதிரையின் மீதேறித் திரிந்துகொல்லுந்தன்மையனான பிசாசனுடைய தலையை, இலக்குவன் வாயுவைத் தெய்வமாகக்கொண்டுள்ள அம்பையெய்து கொய்திட்டனனென்க. சாரிகைதிரிந்து பலவிடத்துங் காணப்படுவதனால், பிசாசனை 'உருவொன்றெனவே துணியா உழல் கொள்கையன்' என்றார். பி-ம:—[1]துணியார். [2]சிலையானை. [3]கரந்தனனால். (2351)

100.—பிசாசன் தலையற்றபின்பும் வினைத்தொடர்ச்சியால் கீழ்விழாது கொலைத்தொழில் புரிதல்.

குலையப்பொரு [1]சூல னெடுங்கொலையும்
உலைவுற்றில வுய்த்தன [2]மோய்விலனொண்
தலையற்றக வுந்தரை யுற்றிலனால்
இலையப் [3]பரி மேற்கொ [4]ளிருக்கையினான்.

(இ-ள்.) இலயத்திற்கு ஏற்ப அடிவைத்து நடக்கின்ற பரியின் மேல் நிலையாக இருக்கையைக் கொண்டவனான பிசாசன்,—ஒள்ளிய

தலைபற்று விழுந்தபின்பும், (உயிர்) குலையும்படி பொருகின்ற சூலப்படையையுடையவனாய், (தான் கொண்ட) நெடியகொலையையும் குறைதலில்லாதனவாய் நிகழ்த்துதலையும் ஒழியாதவனாகித் தரையில் வீழாதிருந்தனன்: (எ-று.)—இது, இறந்தபின்பும் சற்று நேரம் முன்தொடங்கிய தொழில் நிகழ்தலைக் கூறியது. இங்ஙன் நிகழ்வது-தொல்காப்பியப்பொருளதிகாரவுரையில் அட்டையாடல் எனக்கூறப்பட்டுள்ளது. தாளால் லயத்திற்கு ஏற்ப அடிவைப்பது அவன் குதிரையென்பார் 'இலயப் பரி' என்றார். இலயம்-எதுகைபற்றிய போலி. பி-ம்:—[1]சூலநெடுங். [2]ஒய்விலதொண், ஒவிலதோள், ஒய்விலவன். [3]பரிகோளின். [5]இருக்கையினால். ()

101.—சீதைக்கு நன்னிமித்தந் தோன்றுதலும் யமதூதரும் அரக்கத்தூதரும் தம்நகர் சேர்தலும்.

இன்றாகிய முண்டென [1]வின்னகைபாற்
சென்றூதின [2]தும்பிகள் தென்றிசையான்
வன்றூதரு [3]மெய்தினர் வஞ்சனையான்
தன்றூதரு [3]மெய்தினர் [4]தந்நகர்வாய்.

(இ-ள்.) இனிய பற்களையுடையளான சீதாதேவியினிடத்தில் இன்றைக்கு க்ஷேமமுண்டென்று தெரிவிக்கும்படி [நன்னிமித்தமாக] வண்டுகள் சென்று ஊதின; தெற்குத்திக்குப் பாலகனாகிய யமனது வலியதூதரும், (போரிலிறந்த உயிர்களைக்கொண்டு) தம் நகருக்குச் சென்றனர்; வஞ்சனைக்குணமுள்ளவனான இராவணனுடைய தூதரும், தம் நகரினிடத்துச் சென்றனர்; (எ-று.)

'தந்நகர்வாய்' என்ற தொடரை, 'வன்றூதரும்' என்றதன் பின்னும் கூட்டுக. இன்னகை - பண்புத்தொகையன்மொழி: சீதையைக் காட்டிற்று. சில பிரதிகளில் இந்தப் பாடலோடு இப்படலம் முடிகின்றது. பி-ம்:—[1]இன்னசையாற். [2]கூளிகள். [3]ஏகினர், [4]தன்னெதிரே. (2353)

102.-இராவணனிடத்துச் சென்று தூதுவர் செய்தியுரைத்தல்.

ஏகித்தனி மன்ன னிருந்துழிபுக்கு
ஓகைப்பொரு [1]ளின்றென வுள்ளழியா
[2]வேகத்தடல் வீரர் [3]விளிந்தவெலாம்
சோகத்தொ டிறைஞ்சினர் சொல்லினரால்.

(இ-ள்.) (ஒற்றர்கள்,—தம் நகர்க்குச்) சென்று தனியே மன்னவனான இராவணனிருந்த இடத்திற் புகுந்து (அவனை) வணங்கி மகிழ்வுச் செய்தி சொல்வதிற்கில்லையே யென்று மனமழிந்து, வேகத்தோடு வலிமைகாட்டுகின்ற படைவீரர் இறந்த செய்தியையெல்லாம் சோகத்துடனே சொல்லினார்கள்; (எ - று.)—'வேகத்தடல் வீரர்' என்ற தொடர் - ஒற்றரைக்காட்டு மெனினுமாம். பி - ம்:—[1]கேளெனவுற்றுழிவாய். [2]வேகக்கடல். [3]விளிந்தது. ()

படைத்தலைவர் வதைப்படலம் முற்றிற்று.

20-ஆவது மகரக்கண்ணன் வதைப்படலம்-

மகரக்கண்ணனை ஸ்ரீராமன் வதைத்தலைப்பற்றிக் கூறும் படல மென்பது பொருள். மகரக்கண்ணனென்பது மகராட்சனென்பதன் பரியாயம்: இவன், மகரம்போன்ற கண்ணையுடையவனென்பது, 13-ஆஞ் செய்யுளிற் கூறப்பட்டுள்ளது: இவன், கரனுடைய புதல்வனுவன். இது, இந்தப் படலத்து 16-ஆங் கவியாற் பெறப்படும்.

படைத்தலைவர் இறந்தொழிந்ததைக் கேட்ட இராவணன் வருந்தி வெய்துயிர்த்திருக்கையில், கரன்புதல்வனான மகராட்சன் 'என்னையேவின், என் தந்தையைக் கொன்ற பழம் பகைவனைக் கொன்று தீர்வேன்' என்று உறுதிகூற, இராவணன் அனுமதிதர, தன் சேனையுடனே இராவணனனுப்பிய இருபது வெள்ளஞ் சேனையும் இரக்தாட்சன் சிங்கன் என்ற தேர்ச்சக்கரக் காவலாளரும் உடன்வரப் போர்க்களங் குறுக, அரக்கவானரர்கட்கு மும்முரமான போர் நிகழலாயிற்று. நிகழ்கையில், அந்த மகரக்கண்ணன் இராமனிருக்குமிடத்தை நோக்கித் தன்தேரைச் செலுத்தி, 'என் தந்தையைக் கொன்ற உன்னுயிரை வாங்குவேன்' என்று கூறிப் பொரலுற்றான். அந்தப் போரில் மகராட்சன் தவத்தின் சித்தியினாலும் மாயையினாலும் காற்று இருள் முதலியவற்றையுண்டாக்கித் தன் நிசவுருவந் தோன்றுவண்ணம் நின்றுபொர, ஸ்ரீராமன், தனது அம்புகளாலடிபட்டு இரத்தம் பெருகுகின்ற சுவட்டால் அவ்வரக்கனது நிசவடிவத்தை யறிந்து அவனைக் கணைகளினால் வீழ்த்தினார். அப்பால் இரக்தாட்சனை நீலனும், சிங்கனைப் பனசனும் பொருது மாய்த்தன ரென்ற செய்தி இப்படலத்துக் கூறப்படுகின்றது.

1.—தூதர்சொல்லைக் கேட்டு இராவணன் வருந்துதல்.

சொன்னாரவர் சொற்[1]செவி பாற்[2]றொடர்வோன்
இன்னாத மனத்தி னிலங்கையர்கோன்
வெந்[3]நாக வுயிர்ப்பினன் விம்மினனால்
அன்னானிலை கண்டய னின்றறைவான்.

(இ - ள்.) சொன்ன அத்தூதரின் சொல் காதில் தொடரப் பெற்றவனாகி, இலங்கையர்தலைவனான இராவணன், துன்புற்ற மனத்தோடு கொடிய நாகம்போற் பெருமூச்சை விடுபவனாய், வருந்தினான்; அவன் நிலை கண்டு (மகரக்கண்ணன்) அயலில் நின்று சொல்பவனானான்; (எ - று.)—'அறைவான்' என்பதற்கு எழுவாய் வருவிக்க. மகரக்கண்ணன் எழுவாயென்பது, மேல் 5-ஆங்கவியால் விளங்கும் பி - ம்:—[1]செவியிற். [2]தொடர்ந்தொன்று. தொடர்கொண்டு. [3]நாமுயிர்த்தென. (2355)

2.—இதுமுதல் மூன்றுகவிகள்-ஒருதொடர்: போர் வென்றுவர அனுமதி யளிக்குமாறு மகரக்கண்ணன் இராவணனைக் கேட்டலைத் தெரிக்கும்.

முந்தேயென [1]தாதையை மொய்யமர்வாய்
அந்தோ வுயிருண்டன னாருயிர்மேல்

உந்தா யெனையாது முணர்ந்திலையோ
எந்தா[1]யொரு நீயிடர் கூருதியோ.

(இ-ள்.) என்னுடைய தந்தையை [கரனை] நெருங்கியபோரில் ஐயோ! உயிரையுண்டவனின் அரிய உயிர்மேல் முன்னமே என்னைச் செலுத்தாது இருந்துவிட்டாய்; என் தந்தையே! என்னைச் சிறிதும் அறிந்திலாயோ? (அங்ஙனம் அறியாமையால்), ஒப்பற்ற நீ துயர் மிக்கிருக்கக் கடவையோ? (எ - று.)—என்னை யறிந்திருப்பின், நீ துயர்கூர வேண்டுவதில்லை: யான் பகை யொழித்துத் துயர் தீர்ப்பது திண்ணமென்று கூறியவாறு.

மகரக்கண்ணனென்பவன், கரனுடைய புதல்வன். ஸ்ரீராமன் இவன் தந்தையைக் கொன்றமை, ஆரணியகாண்டத்துக் கரன் வதைப்படலத்தா லறிக. 'கங்குல்மகாராட்சப் படைத்தலைவர் மகரகண்ணன் வதைப்படலம்' என்று எழுதிய பிரதியில், இச் செய்யுளினிறுதியில் படைத்தலைவர் வதைப்படலம் முற்றும் என்று எழுதியுள்ளது; ஆயினும், அடுத்த பாடலுக்குச் செய்யுட்டொகை தொடர்ச்சியாகவேயுள்ளது. பி-ம்:—[1] தந்தையை. [2]இனி. (2356)

3. யானே [1]செல வெண்ணுவ னெய்தவவண்
தானேர்வது தீதெனவே தணிவேன்
வானேநில னேமுதன் மற்றுமெலாம்
கோனேயெனை வெல்வதோர் கொள்கையதோ.

(இ-ள்.) நானே (போர்புரியுமாறு) அங்கு [போர்க்களத்தில்] செல்ல எண்ணியிருப்பேன்; தானே நேர்ந்துசெல்வது தீதென்றே (அவ்வெண்ணந் தவிர்ந்து) ஆறியிட்டேன்: தலைவனே! வானும் நிலனும் (இவை) முதலிய மற்றுமெல்லாமும் என்னை வெல்லவல்ல வலிமையுள்ளதோ? (எ - று.)

வானே நிலனே, ஏகாரம் - எண்ணுப்பொருளது. பி - ம்:—[1]பொரவெய்துவதெண்ணிலனால், செலவெண்ணுவெனேவுதியேல், செல...எய்துதலால், செல...எய்தவவன். [2]தானேயது நின்று தடுப்பரிதாம், தானேர்வதுதீயதெனத்தணிவன், தானேவுதிநன்று தடுப்பரிதால்.

இங்கே ஒருபாடல் ஒரு பிரதியிற் காணப்படுவது வருமாறு:—

இந்திரியத் தையிகழ்ந்தவ னந்தோ
மந்திரவெற் றிவழங்க வழங்கும்
இந்திரமற்ற னெக்கடி திக்கொள்
வந்ததென் விற்றொழிலைக் கோலமான. 2357)

வேறு.

4. அருந்துயர்க் [1]கடலு ளாழு மம்மனை யழுதகண்ணள் [தோன்
பெருந்திருக் [2]கழித்த லாற்றுள் கணவனைக் கொன்று பேர்ந்
கருந்தலைக் கலத்தி னல்லாற் கடனது கழியே னென்றாள்
பருந்தினுக் கினிய வேலா யின்னருள் பணித்தி யென்றான்.

(இ-ள்.) (என்னுடைய) தாய் அழுகின்ற கண்களையுடையவளாய்(க் கடத்தற்கு) அரிய துயர்க்கடலுள் ஆழ்ந்திருக்கின்றாள்: (இன்னும்) பெருமைபெற்ற மங்கலியத்தையும் கழித்திடப்பொறுக்ககில்லாள்; கணவனைக் கொன்றுபோனவனுடைய கரிய தலையாகிய கலத்திலேயல்லாமல் (கணவனுக்குச் செய்யவேண்டிய) கடமையைக் கழிக்கமாட்டேனென்று சொன்னாள்; (உணவளித்தலால்) பருந்துக்கு இனிதாகத்தோன்றுகின்ற வேற்படையையுடையவனே! (உனது) இனிய அருளால் (என்னை) ஏவுவாய் என்று வேண்டிக்கொண்டான், (மகரக்கண்ணன்); (எ-று.)—பி-ம்.—[1]கடலுளாளென். [2]துறக்கலாற்றாள், கழித்திலாதாள். [3]பேர்ந்தார். [4]தலத்தின், தரைவீழ்ந்து, களத்தின். [5]அருங்கடன்கழியேன், கழியேனென். (2358)

5.—இராவணன் அநுமதியளிக்க, மகரக்கண்ணன் பொரச்செல்லத் தேரேறுதல்.

அவ்வுரை மகரக் கண்ண [1]னறைதலு [2]மரக்க னைய
[3]செவ்விது சேறி [4]சென்றுன் பழம்பகை தீர்த்தி யென்றான்
வெவ்வழி யவனும் பெற்ற விடையினன் றேர்மேற் கொண்டான்
வவ்விய வில்லன் போனான் [5]வரம்பெற்று வளர்ந்த தோளான்.

(இ-ள்.) அவ்வார்த்தையை மகரக்கண்ணன் சொன்னவுடனே, அரக்கன் [இராவணன்],—'ஐய! நல்லது: (நீ போருக்குச்) செல்வாய், சென்று உன்பழம்பகைமையைத் தீர்த்துக்கொள்வாய்' என்றான்; கொடுவழியை யுடையவனான அந்த மகரக்கண்ணனும்,—விடைபெற்றுக்கொண்டவனாகி, அநுமதி பெற்றமையால் ஓங்கிவளர்ந்த தோளையுடையவனும் வில்லை(க் கையிற்)பற்றிக்கொண்டவனுமாய்த் தேர்மீது ஏறிக்கொண்டு போனான்; (எ-று.) வரம்-சம்மதி. வரம்பெற்றுவளர்ந்ததோளான்-(தேவர்களிடத்து) வரம்பெற்றதனால் வலிமைமிக்க தோளையுடையவனாகிய, வெவ்வழியவனும் என்பாருமுளர். பி-ம்:—[1]உரைத்தலும். [2]அரக்கர்கோமான். [3]செவ்வழி. [4]ஏன்றுன், இன்றுன். [5]அமர். (2359)

6—மகரக்கண்ணன், தன்சேனையுடன் இராவணன்சேனையும் வரச்செல்லுதல்.

தன்னுடைச் சேனை [1]கோடி யைந்துடன் தழுவத் தானை
மன்னுடைச் சேனை வெள்ளம் [2]நாலைந்து [3]மழையிற் பொங்கிப்
பின்னுடைத் தாகப் [4]பேரி கடல்படப் பெயர்ந்த தூளி
பொன்னுடைச் [5]சிமையத் துச்சிக் குச்சியும் [6]புதையப் போனான்.

(இ-ள்.) தன்னுடையசேனை ஐந்துகோடி உடன்தழுவிவரவும் தானைகொண்ட மன்னவனுடையசேனை இருபது வெள்ளம் மழைபோற் பொங்கிப் பின்னேவரவும், பேரி கடல்போல் ஒலிக்கவும், (அப்போது பூமியினின்று) கிளம்பிய தூளியால் திரிகூடபருவதத்து உச்சிமுகடும் புதைந்திடப்போனான், (மகரக்கண்ணன்);

பின்னுடைத்தாக-பின்னிக்கொண்டுவர [சூழ்ந்துவர] என்றலும் உண்டு. பொன்னுடைச்சிமையம் - மேருமலை; அதனுடைய

மூன்று சிகரங்களே திரிகூடமலையாதலால், அந்தத் திரிகூடமலையி னுச்சிமுகடும் புதைய, எனப்பட்டது. சிமையம்-மலை: உச்சி - சிகரம்: குச்சி-மேல்முகடு. பி - ம்:—[1] வெள்ளம். [2] ஓரைந்து. [3] மழை போற். [4] பேரிக்கடல். [5] புவனத்துச்சி. [6] பொதிய. (2360)

7.—சோணிதாட்சன் முதலியோர் மகரக்கண்ணனைத் தொடர்ந்து செல்லுதல்.

சோணிதக் கண்ண னோடுஞ் சிங்க னுந் [1] துரகத் திண்டேர்த்
தாண்முதற் காவல் பூண்டு செல்கெனத் தக்க தென்று
ஆண் [2] முதற் றானை யோடு [3] மனை வரும் தொடரப் [4] போனான்
நாண்முதற் றிங்க டன்னைத் தழுவிய [5] வனைய [6] நண்பான்.

(இ-ள்.) 'சோணிதாட்சனோடு சிங்கனென்பவனும், குதிரை கட்டிய திண்ணிய தேரின் சக்கரத்தினிடத்துக் காவல்பூண்டு செல்க' என்று (இராவணன்) கட்டளையிட, தக்கதேயென்று உடன் பட்டு, பதாதி முதலிய (நால்வகைச்) சேனையுடனே (வீரர்) யாவரும் தொடர்ந்துவர, நட்சத்திரம் முதலியவை சந்திரனைத் தழுவியதை யொத்த நண்பினரையுடைய மகரக்கண்ணன் போனான்; (எ-று)

சந்திரன் பிரதானமாகத் தோன்ற மற்றை நட்சத்திரம்முதலி யன அவனைத் தழுவித் தோன்றுவதுபோல, யாவரும் தன்னைத் தழுவி நிற்கத் தான் பிரதானனாய் மகரக்கண்ணன் போர்க்குச் சென்றன னென்பதாம். பி - ம்:—[1] துரிதத், துருதத். [2] முகத். [3] யாவரும், அனையவர். [4] வந்தார், வந்தான். [5] மீனம். [6] போனாரா, நண்பர், நண்டால். (2361)

8.—அரக்கச் சேனையால் வானரச்சேனை சிரமந் தீர்தல்.

பல்பெரும் பதாகை [1] ப் பத்தி மீமிசைத் தொடுத்த பந்தர்
[2] செல்லவெங் கதிரொண் கற்றை [3] முற்றவுந் தெரியா வண்ணம்
[4] தொல்வன யானை யங்கை [5] விழைமிழிநீர்த் துவலை [6] சுற்றச்
[7] செல்வன கவியின் சேனை யமர்த் தொழிற் சிரமம் [8] வீய்ந்த.

(இ-ள்.) பல பெரிய பதாகைப்பத்தியாகிய மிக்க மேலிடத் திட்ட பந்தர் வெவ்விய கிரணங்களையுடைய சூரியனது ஒள்ளிய கிரணத்தொகுதி ஒரு சிறிதுந் தெரியாவண்ணம் செல்லவும், பழமையான காட்டியானைகளின் அழகிய கையினின்று புறப்படு கிற உமிழ்நீர்த்துவலை (எங்குஞ்) சூழவும் செல்வனவான அரக்கச் சேனைகளால் கவிச் சேனைகளின் அமர்த்தொழிற்சிரமம் தீர்ந்தன;

சேனைகளிற் பிடிக்கப்பட்ட கொடிகள் நடைப்பந்தல் போன்று நிழலைச் செய்ய, யானையின் விலாழிநீர்கள் நீர் தெளிந்தன போலாக, அந்தப் போர்க்களம் குளிர்ச்சிபெற்று வானரச் சேனை களின் சிரமத்தைத் தீர்த்த தென்றவாறு. வெங்கதிர் - சூரியன், பண்புத்தொகையன்மொழி. பத்தி-தொகுதி. பி - ம்:—[1] பற்றி, செற்றி. [2] ஒல்வன சுடரோன், எல்லவன் சுடரோன், எல்லவன் சுடரிற், எல்லவன் சுடரொண். [3] முற்றவின்னிழலையீந்த, முற்ற வுந்தோற்றுவண்ணம், முற்றியநீழலீய. [4] கொல்சின, தொல்சின. [5] ஆழிநீர்த். [6] தூற்றச், தூற்றிச், [7] செல்பெருங். [8] தீர்ந்த. (2362)

9.—அரக்கரின் யுத்த கோலாகலம்.

முழங்கின [1]யானை வாசி[2]யொலித்தன முரசின்[3]பண்ணை
தழங்கின வயவ [4]ரார்த்தா ரென்பதோர் முறைமை [5]தள்ள
[6]வழங்கின பதலை யோதை யண்டத்தின் [7]வரம்பின் [8]காறும்
புழுங்கின வுயிர்க ளி[9]யாவுங் கால்புகப் புரை[10]யின் ருக.

(இ-ள்.) '(அங்ஙனம் வானரங்கள் சிரமந் தீர்ந்திருக்கையில்), யானைகள் முழங்கின; குதிரைகள் கனைத்தொலித்தன: முரசத் தொகுதி ஒலித்தன; அரக்கவீரர் ஆரவாரித்தார்கள்' என்கின்ற ஒருமுறைமை அடங்கும்படி, அண்டத்தின் எல்லைவரையும் பதலை யோசை வழங்கின: (அதுகேட்ட) உயிர்கள் யாவும் காற்றுப்புகவும் இடமில்லாமையால் வேர்த்தன; (எ-று.)—யானைகளின் பிளிறல் முதலியன அடங்கும்படி பதலையோசைகள் தோன்றின என்க: பதலை - தோற்கருவிவகை: ஒருகட்பகுவாய்ப்பறை. பி - ம்:— [1]ஆனை. [2]ஒலித்ததன், மொய்த்தன. [3]மும்மை. [4]ஆர்ப்பது. [5]தள்ளி. [6]தழங்கின. [7]வரம்பு. [8]தாறும், தானும். [9]யாண்டும். [10]இன்ருகி. ()

10.—மூன்று கவிகள்-அரக்கர் வானரர் என்ற இருவர்க்கும் கைகலந்த போர் நிகழ்ந்தமை கூறும்.

வெய்தினி னுற்ற தானை முறை[1]விடா நூழில் வெம்போர்
[2]செய்தன செருக்கிச் சென்று [3]நெருக்கினர் தலைவர் [4]சேர்த்திக்
கையொடு கைக ளுற்றுக் [5]கலந்தன கல்லும் வில்லும்
[6]எய்தன எறிந்த யானை ஈர்த்தன [7]கோத்த சோரி.

(இ-ள்.) வெம்மையோடு பொருந்திய (அரக்கச்) சேனை, முறை விடாமல் கொல்லுதல்தொழிலைக்கொண்ட வெவ்விய போரைச் செய்தன; (இரு திறத்துத்) தலைவரும் செருக்கிச் சென்று சேர்த்தியால் நெருக்கினர்: (சேனைகள்) கையோடு கைகள் பொருந்திக் கலந்தன; கல்லும் வில்லும் எய்தலும் எறிதலுஞ் செய்யப் பட்டன; (அப்போது) பெருகிய இரத்தம் யானைகளையும் இழுக்க லாயின: (எ - று.)—கல்லும் வில்லும் எறிந்த எய்தன எனச் சென்றியைதலால், எதிர்நிரனிறைப்பொருள்கோள். பி - ம்:—[1]விட நூழில், விடா நூழின். [2]செய்தனர்செருக்கி, செய்தனர்செருக்கில். [3]நெருக்கின. [4]செற்றிக், சாற்றிக், சேர்ந்து. [5]கலந்தனர். [6]எய்தன ரெறிந்தார். [7]சோரிவெள்ளம். (2364)

11. *வானர வீரர் விட்ட மலைகளை யரக்கர் வவ்வி*
மீனொடு மேகஞ் சிந்த விசைத்தனர் [1]மீட்டும் வீசக்
கானகம் [2]இடியுண் டென்னக் கவிக்குலம் [3]மடியுங் கவ்விப்
போனக நுகரும் பேய்கள் [4]வாய்ப்புறப் புடைப்பொ டார்ப்ப.

(இ-ள்.) வானரவீரர்கள் விட்ட மலைகளை, அரக்கர், (தம்கையி னால்) கவர்ந்து நட்சத்திரங்களுடனே மேகமும்சிந்தும்படி மீண்டும் விரைந்தவராய் வீச, (அதனால், பிணங்களைக்) கவ்வி உணவு உண் கின்ற பேய்கள் வாயின்புறத்திலேபுடைத்துக்கொள்ளும் புடைப் புடனே [வாயிலறைந்துகொண்டு] ஆரவாரிக்கும்படி, கவிக் குலங்கள் காட்டினிடம் இடியுண்டாற்போல மடிந்துவிழும்;

வாயிற் புடைத்துக்கொண்டு பேய்கள் ஆரவாரித்தமை, பேருணவு கிடைப்பதுபற்றிய மகிழ்ச்சியினாலாகும். வானரவீரரின் படைக்கலங்களே அவர்களைமடியச்செய்தன என்க; மேற்கவியிலும் இவ்வாறே. இங்ஙன் வருவது-தகுதியின்மையணி. பி - ம்:-- [1]விட்டு. [2]இடிப்புண்டென்ன. [3]மடியக். [4]புறம். (2365)

12\. மைந்[1]நிற வரக்கர் [2]வன்கை வயிரவாள் [3]வலியின் வாங்கி
மெய்ந்நிறத் தெறிந்து [4]கொல்வர் வானர வீரர் [5]வீரர்
கைந்[6]நிறைத் தெடுத்த [7]கல்லு மரனுந்தங் கரத்தின் வாங்கி
மொய்ந்நிறத் [8]தெறிவ ரெற்றி முருக்குவ ரரக்கர் [9]முன்பர்.

(இ-ள்.) வானர வீரர்கள்,—மைந்நிறமுள்ள அரக்கரின் வலிய கையிலுள்ள உறுதியான வாளை வலாற்காரத்தால் வாங்கி,(அவ்வரக்கர்களுடைய) உடலின் மார்பிலே யெறிந்து கொல்வார்கள்; அரக்கரில் வலிமையுள்ளவர்,—குரக்கு வீரருடைய கையில் நிறைய வெடுத்த கல்லையும் மரங்களையும் தம் கையால் வாங்கி (அக்குரக்கு வீரருடைய) வலிய மார்பிலே யெறிவர்; எற்றியழிப்பர்; (எ-று.)—பி-ம்:—[1]நிறத்து. [2]வன்மை, வண்மை [3]உறையின். [4]கொல்ல. [5]வீரக், தங்கள், [6]நிறத்து [7]குன்றும். [8]எறிந்து பற்றி. [9]மொய்ம்பர். (2366)

13.—மகரக்கண்ணன் தன்தேரை இராமனிருக்குமிடம் நோக்கி ஓட்டிச் செல்லுதல்.

வண்[1]டுலா [2]மலங்கன் மார்பன் [3]மகரக்கண் மழையே [4]றென்னத், திண்டிற லரக்கன் கொற்றப் பொற்றடஞ் சில்லித் தேரைத், தண்டலை மருத வைப்பிற் கங்கைநீர் [5]தழுவு [6]நாட்டுக், கொண்டல்மே[7]லோட்டிச் சென்றான் குரக்கினப் [8]படையைக் [9]கொன்றான்.

(இ - ள்.) (இவ்வாறு இருதிறத்தார்க்கும் கை கலந்த போர் நிகழ்கையில்), வண்டுகள் உலாவுகின்ற மாலையையணிந்த மார்பையுடையவனும் மகரக்கண்ணையும் மழையேற்றையொத்த மிக்க வலிமையையும் படைத்தவனும் வானரத்தொகுதிப்படையைக் கொன்றவனுமான அரக்கன் [மகரக்கண்ணன்], (தன்னுடைய) வெற்றி பொருந்திய பொன்மயமான பெரிய சக்கரமுள்ள தேரை, குளிர்ந்த இடத்தையுடைய மருதநிலத்தை(ப் பெரிதும்) கொண்ட கங்கைநீர் பாயப்பெற்ற கோசலநாட்டையுடைய மழை போன்றவனை ஸ்ரீராமன்மேல் ஓட்டிச் சென்றான்: (எ - று.)—பி - ம்:— [1]உலா. [2]மாலை. [3]மகராக்கன். [4]என்னும், அன்ன. [5]தழுவ. [6]நாட்டார். [7]ஓடிச். [8]பரப்பைக். [9]கொன்றே. (2367)

14.—சேனைகளையும் சேனைத்தலைவர்களையும் முறியவடித்து ஸ்ரீராமனையடைந்து மகரக்கண்ணன் சொல்லத்தொடங்குதல்.

இந்திரன் பகைஞ [1]னேகொ லென்பதோ ரச்ச மெய்தித்
தந்திர [2]மிரிந்து சிந்தப் படைப்பெருந் தலைவர் தாக்கி
எந்திர [3]மெறிந்த வென்ன வேவுண்டு புரண்டா ரெய்திச்
சுந்தரத் [4]தோளி னானை நோக்கிநின் றினைய சொன்னான்.

(இ-ள்.) 'இந்திரசத்துருவேயோ [இந்திரசித்துத்தானோ?]' என்பதாகிய ஒப்பற்ற அச்சமடைந்து(வானர)சேனை நிலைகெட்டுச் சிதறவும், (வானர) சேனைப் பெருந்தலைவர் (தாம்) எந்திரத்தால் தாக்கி எறியப்பட்டாற்போல அம்பிலையடியுண்டுபுரளலானார்கள். (மகரக்கண்ணனும்)அழகிய தோள்களையுடையவனான ஸ்ரீராமனைக் கிட்டி (அவனை) நோக்கிநின்று இவ்வாறான சொற்களைச்சொல்பவனானான்; (எ - று.)—மகரக்கண்ணன் கூறுவதை மேற்கவியிற் காண்க. பி-ம்:—[1]கொல்லாம். [2]அழிந்து. [3]எறிந்தது, மறிந்த. [4]வில்லினானை. (2368)

15.—மகரக்கண்ணன் என்தந்தையைக் கொன்ற உன்னோடுபொருது பகைபோக்கிக் கொள்வேனெனல்.

*என்னுடைத் தாதை தன்னை யின்னுயி ருண்டா [1]யென்று
முன்னுடைத் தாய தீய முழுப்பகை [2]மூவர்க் கின்றி
[3]நின்னிடத் [4]தாய தன்றே [5]யின்றது [6]நிமிர்வ தென்றான் [றான்.
பொன்னுடைத் தாதை வண்டு குடைந்துணும் பொலம்பொற்

(இ - ள்.) பொன்னிறத்தையுடைய தாதினை வண்டு குடைந்து உண்ணப்பெற்ற மிக அழகிய மாலையை யணிந்தவனாகிய மகரக்கண்ணன், (ஸ்ரீராமனை நோக்கி),— 'என்னுடைய தந்தையை இன்னுயிருண்டாயென்பதனால், முன்முதலுள்ளதாகிய கொடிய நிறைந்த பகை (எனக்குத்)திரிமூர்த்திகளிடம் இல்லாமல் உன்னிடத்துள்ள தன்றோ? அது இன்று வளர்கின்றது' என்றான்; (எ - று.)

யான் திரிமூர்த்திகளை வெல்லவல்லேன்: ஆயினும், அவர்களிடத்துப் பகைகொள்ளாது நின்னிடம் பகைகொண்டது, நீ என் தாதையைக் கொன்றமையாலாகும்; இப்போது பொருது அந்தப் பழம்பகையைத் தீர்த்துக்கொளவேனென்கிறான், மகரக்கண்ணனென்க. [5]'இன்றது நிமிர்வன்' என்ற பாடத்திற்கு - இன்றைக்கு உன்னைக் கொல்வதனால் அப்பகை தீரப்பெறுவேனென்றுமாம். பி - ம்:—[1]என்னும். [2]மூவர்க்கன்றி. [3]நின்னுடைத்து. [4]ஆயதாமே. [5]இன்றிது. [6]நிமிர்வான், நேர்வன், நீப்பன். (2369)

16.—இராமபிரான் மகரக்கண்ணன் வார்த்தையைத் தக்கதே யெனல்.

தீயவன் பகர்ந்த மாற்றஞ் சேவகன் றெரியக் கேட்டான்
நீகரன் புதல்வன் [1]கொல்லோ நெடும்பகை நிமிர வந்தாய்
[2]ஆயது கடனே [3]யன்றோ வாண் [4]பிறந் தமைந்தார்க் கைய
ஏயது சொன்னா யென்றா னிசையினுக் கிசைந்த தோளான்.

(இ - ள்.) புகழ்பெறுதற்கு அமைந்த தோள்வலியுள்ளவனும் வீரனுமான ஸ்ரீராமன், கொடியவன் சொன்ன சொல்லை விளங்கக் கேட்டு, 'நெடிய பகையைப்போக்கவந்தவனே! நீ கரன் புதல்வனோ? (நீ) கூறிய அது முறைமையே யன்றோ; ஐய! வீரத்தன்மையுடன்

---

* "யத்ததா தண்டகாரண்யே பிதரம் ஹதவாந்மம | மதக்ர தஸ்ஸ்வகர்மஸ்தம் - த்ருஷ்ட்வா ரோஷோபிவர்த்ததே" என்ற ஸ்ரீ வால்மீகி ராமாயணம் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

பிறந்தவர்க்கு ஏற்றதையே சொன்னாய்' என்றான்; (எ - று.)—
பி - ம்:—[1]கொல்லாம், போலாம். [2]ஆனது. [3]அன்றே. [4]திறன் மைந்தர்க்கெல்லாம். (2370)

17.—இதுமுதல் நான்குகவிகள்-மகராட்சனுக்கும் இராமபிரானுக்கும் நிகழ்ந்த போரைத் தெரிவிக்கும்.

உருமிடித் தென்ன வின்னா ணொலிபடுத் துன்னோ [1]டேய்ந்த
செருமுடித் தென்க ணின்ற சின[2]முடித் தமைவ னென்னுக்
கருமுடித் [3]தமைந்த மேகங் [4]கால்பிடித் தெழுந்த காலம்
பெருமுடிக் கிரியிற் பெய்யுந் தாரைபோற் [5]பகழி பெய்தான்.

(இ-ள்.) இடியிடித்தாற்போல வில்நாணியிலிருந்து ஒலியை யெழுப்பி, 'உன்னுடனே பொருந்திய போரைமுடித்து என்னிடமுள்ள சினத்தைப் போக்கி(ப் பின்பு) அமைதியா யிருப்பேன்' என்று சொல்லி, (மகரக்கண்ணன்), கருவை நிரம்பப் பெற்றுள்ள மேகம் (வானத்தின்மீது) எழுந்தகாலத்து மழைக்கால்பற்றிப் பெரிய சிகரங்களையுடைய மலையிற் பொழியுந் தாரைபோற் பகழியைச் சொரிந்தான்; (எ - று.)

நீர்கொண்டு கருமுற்றிய மேகம் கால்வீழப்பெற்று மலைச் சிகரத்தின் மேல் மழைபெய்வதுபோல், இராமபிரான்மீது மகரக் கண்ணன் அம்புமழை பெய்யலானா னென்க. இராமபிரானுக்கு மலைச்சிகரத்தை உவமை கூறியதனால், அச்சரமழைக்கு அப்பிரான் சிறிதுஞ் சலியாமை பெறப்படும். கால் பிடித்தெழுந்த காலம் - காற்றுப் பிடிக்கப் பெற்று மேலெழுந்த காலம் எனினுமாம்.
பி - ம்:—[1]எந்தை. [2]முடிக்குவனின்று. [3]எழுந்த. [4]கான்முடித்து, கார்பிடித்து. [5]கணைகள். (2371)

18. **அம்புயக் கண்ணன் கண்டத் தாயிரம் பகழி நாட்டித்**
தம்பிதன் கவச மீதே யிரட்டிச்சா யகங்கள் தாக்கி
வெம்பிக லனுமன் மீதே வெங்கணை மாரி வித்தி
உம்பர்தி முலக முற்றுஞ் சரங்களாய் மூடி யுய்த்தான்.

(இ-ள்.) (அந்த மகரக்கண்ணன்),—தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய இராமபிரானுடைய கண்டத்திலே ஆயிரம் அம்புகளைப் பதியவைத்தும், (அவன்) தம்பியினுடைய கவசத்தின் மேல் இரண்டாயிரம் அம்புகள் கொண்டு தாக்கியும், (பிறர்) தவிப்பதற்குக் காரணமான வலிமையையுடைய அநுமான்மீது கொடிய அம்புமழைகளை விதைத்தும், வானவரினுலகமெல்லாம் அம்புமயமாகி மூடுமாறு (பல கணைகளைப்) பொழிந்தான்; (எ - று.)

மூடி-எச்சத்திரிபு. இத்துணை யென்னுமல் வெங்கணை யென்று கூறியதனால், அநுமன்மீது எய்த அம்புகள் கணக்கிடமுடியா வென்பது, பெறப்படும். இச்செய்யுள் பலபிரதிகளி லில்லை. (2372)

19. **சொரிந்தன பகழி யெல்லாஞ் சுடர்க்கடுங் கணைகள் தூவி**
[1]அரிந்தன னகற்றி மற்றை [2]யாண்டகை யலங்க லாகத்து

[3]எரிந்தொரு பகழி பாய [4]வெய்தன னிராம னேவ
நெரிந்தெழு புருவத் தான்றன் [5]நிறத்துற்று நின்ற தன்றே.

(இ-ள்.) (மகரக்கண்ணன்) பொழிந்த அம்புகளையெல்லாம் சுடருள்ள கொடியகணைகளைத் தூவி அரிந்துபோக்கி, பின்பு ஆண்மைக்குணமுள்ள அந்த மகரக்கண்ணனுடைய (வெற்றி) மாலையையணிந்த மார்பிலே எரிந்து ஒரு அம்பு பாயுமாறு இராமபிரான் எய்தான்: (அவ்வண்ணம்) ஏவவே, நெரிந்தெழுகின்ற புருவத்தையுடைய மகரக்கண்ணனுடைய மார்பில் (அந்த அம்பு) தங்கியிருந்தது; (எ-று.) பி-ம்:—[1]அரிந்துகவகற்றிமற்ற, அரிந்தனனகற்றிமாற்றி. [2]அரக்கனது, ஆண்டவன். [3]எரிந்ததோர். [4]ஏவினன். [5]நிறத்துற. (2373)

20. ஏவுண்டு துளக்க மெய்தா [1]விரத்தகப் பரிதி யீன்ற [வான்
பூவுண்ட கண்ணன் வாயிற் புகையுண்ட [2]துமிழ்வான் போல்
தேவுண்ட கீர்த்தி யண்ணல் திருவுண்ட கவசம் சேரத்
தூவுண்ட வயிர வாளி யாயிரந் தூவி யார்த்தான்.

(இ-ள்.) (இராமபிரானால்) அம்பு எய்யப்பட்டுச் சலித்துச் செந்நிறமுள்ள சூரியனை யீன்ற பூவை [சூரியகாந்திப்பூவை] ஒத்தகண்களையுடையவனும் (முன்பு உண்ட) புகையை வாயினாலுமிழ்கின்றவன்போல்பவனுமான மகரக்கண்ணன், தெய்வத்தன்மைபொருந்திய கீர்த்தியைக்கொண்ட பெருமையிற் சிறந்தவனான ஸ்ரீராமனுடைய அழகுள்ள கவசத்தைச் சேருமாறு, மாமிசம் படியப்பெற்ற வச்சிரம் போலுறுதியான அம்புகள் ஆயிரங்களைத் தூவி ஆரவாரித்தான்; (எ-று.)—பி-ம்:—[1]இலத்தகப், ஈர்த்தகைப். [2]உமிழ்வ. ()

21.—ஸ்ரீராமன் மகரக்கண்ணனது வில் குதிரைக்குளம்புகள் சாரதியின்தலை இவற்றை அம்புகளா லறுத்தல்.

அன்னது [1]கண்ட வானோ ரதிசய முற்றா ராழி
மன்னது முறுவல் [2]செய்து வாயம்போ ராறு வாங்கிப்
பொன்னெடுந் தடந்தேர் பூண்ட [3]புரவியின் குரங்கள் போக்கி
வின்னடு வறுத்துப் பாகன் தலையையு நிலத்து வீழ்த்தான்.

(இ-ள்.) அதனைக்கண்ட வானவர் வியப்படைந்தனர்; ஆஜ்ஞாசக்கரத்தையுடைய ஸ்ரீராமனும்,—புன்சிரிப்புச் செய்து, கூர்மை வாய்ந்த ஓராறு அம்புகளை யெடுத்து, அழகிய நெடிய பெரிய தேரிலே பூட்டியுள்ள குதிரைகளின் குளம்புகளைப் போக்கி, (அந்த மகரக்கண்ணனேந்திய) வில்லை நடுவிடத்திலே துண்டித்துப் பாகனுடைய தலையையும் நிலத்திலே விழுமாறு தள்ளினான்; (எ-று.)—பி-ம்:—[1]கண்டு. [2]எய்தி. [3]துரகதக், துரகத்தின், துரகங்கள். (2375)

22.—மகரக்கண்ணன் பேரிடி காற்று முதலியவற்றைத் தவவலிமையா லுண்டாக்குதல்.

மார்பிடை நின்ற வாளி வாயிடை [1]வெயிலின் வாருஞ்
[2]சோரியன் விசும்பி [3]னூடோ ரிமைப்பிடைத் [4]தோன்று நின்றான்

காருரு மேறுங் காற்றுங் கனலியுங் கடைநாள் வையம்
பேர்வுறு கால மென்னப் பெருக்கினன் றவத்திற் பெற்ருன்.

(இ - ள்.) தவத்திற் சித்திபெற்றவனுகிய அந்த மகரக்கண்ணன்,—(தன்) மார்பிலே தங்கிய அம்பினுலே வாயினின்று வெயில் போன்ற நிறத்துடன் பெருகுகின்ற இரத்தத்தை யுடையவனுய் [வாயிலிருந்து இரக்தம் வெளிப்பட], ஓரிமைப்பொழுதிற்குள் வானத்தினிடத்துத் தோன்றுபவனுய், மேகத்திற் பொருந்திய பேரிடியும் காற்றும் நெருப்பும் என்ற இவற்றை, வையம் நிலைபெயர்கின்ற கடைநாளாகிய ஊழிக்காலந்தான் வந்திட்டதோ என்னுமாறு மிகுதியாக உண்டாக்கினுன்; (எ - று.)

யுகாந்தகாலத்தில் மேகங்கள் தோன்றுதலும் கடுங்காற்று வீசுதலும் நெருப்பு எங்குஞ் சுடுதலும் நிகழுமென்பது, நூற்கொள்கை. இவ்வாறு பேரிடி முதலியவற்றை மகரக்கண்ணன் பெருக்கியது, தவச்சித்திபெற்றவனுதலாலென்பார் 'தவத்திற் பெற்ருன்' என்ருர்: ஆகவே, இத்தொடர்-கருத்துடையடைகொளியணியாம். **பி-ம்:**—[1]வெரிநின். [2]சோரியின். [3]ஈண்டோர். [4]மறைந்து தோன்ருன். (2376)

23.—மகரக்கண்ணன் செயலால் வானரர்கள் நிலைகெட்டு ஓடுதல்.

உருமுறை யனந்தகோடி யுதிர்ந்தன வூழி நாளின்
இருமுறை [1]காற்றுச் சீறி யெழுந்தது [2]விரிந்த தெங்கும்
கருமுறை[3] நிறைந்த மேகங் [4]கான்றன கல்லின் மாரி
பொருமுறை மடங்கிச் [5]சுற்று மிரியலிற் கவிகள் போன.

(இ - ள்.) இடிகள் முறையாகப் பல கோடிகள் விழுந்தன; யுகாந்த காலத்து நிகழும் முறைப்படி பெருங்காற்றுச் சீறியெழுந்து எங்கும் வீசிற்று; கருநிறம் நிறைந்த மேகங்கள் கன்மாரியை வெளிப்படுத்தின; வானரங்கள், பொருகின்ற முறைமையினின்று மயங்கிச் சுற்றிலும் நிலைகெட்டு ஓடிப்போயின; (எ - று.)—இருங்காற்று என இயையும். **பி-ம்:**—[1]காற்றும். [2]எழுந்தது, விழுந்த. [3]மேகம் [4]கலந்தன, கலித்த. [5]சுற்றி. (2377)

24.—ஸ்ரீராமன் மகரக்கண்ணனுக்குக் காற்று முதலியவற்றை யுண்டாக்கும் வல்லமை எதனுல் நேர்ந்ததென, விபீஷணன் கூறலுறல்.

போயின திசைக ளெங்கும் புகையொடு நெருப்புப் போர்ப்பத்
தீயின [1]மமையச் செல்லு [2]மாயமா மாரி சிந்த
ஆயிர கோடி மேலு மவிந்தன கவிக ளையன்
மாயமோ வரமோ வென்ருன் வீடணன் வணங்கிச் [3]சொல்வான்.

(இ - ள்.) வானரங்கள், (தாம்) ஓடிப்போன திசைகளிலெல்லாம் புகையோடு நெருப்பும் கவிந்துகொள்ளவும், மேகமும் நெருப்புத் தொகுதி பொருந்த மாயத் தன்மையுள்ள பெரு மழையைப் பொழியவும், ஆயிரகோடிக்கும் அதிகமாக மடிந்தன; (அதுகண்ட) ஸ்ரீராமன், '(இது) மாயத்தால் நிகழ்வதா?' அன்றி, பெற்ற வரத்தின் பயனுல் நிகழ்வதா?' என்று வினவினுன்; விபீஷணன்

வணங்கி (மறுமொழி) சொல்லலானான்; (எ - று.)—அதனை மேற் கவியிற் காண்க. பி-ம்:—[1] அனைய. [2] கல்லின். [3] சொன்னான். (2378)

25.—விபீஷணன், வரத்தால் நேர்ந்த திறனென்று தெரிவிக்க, ஸ்ரீராமன் இவற்றைப் போக்குவேனெனல்.

நோற்றுடைத் தவத்தி னோன்மை நோக்கினர் கருணை [1] நோக்கிக்
காற்றுடைச் செல்வ னானு மழையுடைக் கடவு டானும்
[2] மாற்றல ரீந்த தெய்வ வரத்தினால் [3] வந்த தென்றான்
நூற்றிதழ்க் கமலக் கண்ண னகற்றுவ னொடியி னென்றான்.

(இ - ள்.) வாயுதேவனும் வருணதேவனும் (இவன்) நோற்றுள்ள தவத்தின் வலிமையை ஆராய்ந்து கருணை நோக்கங்கொண்டு மறுக்கமுடியாதவராகி யீந்த தெய்வத்தன்மையுள்ள வரத்தினால் (இது) நிகழ்ந்துள்ளதென்றான், (விபீஷணன்); நூறு இதழ்களையுடைய செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய ஸ்ரீராமன் ஒரு நொடிப்போதில் இதனைப் போக்குவேனென்றான்; (எ - று.) — பி - ம்:—[1] நோக்கக், நோக்கால். [2] ஆற்றலாலீந்த, ஆற்றலிற்றீர்ந்தே. [3] அமைந்தது. (2379)

26.—இராமன் வாருணாஸ்திர வாயவ்யாஸ்திரங்களால் மகரக்கண்ணனால் விளைந்த இடிமுதலியவற்றைப் போக்குதல்.

காலவன் படையுந் தெய்வக் கடலவன் படையுங் [1] காலக்
கோல[2] வன் சிலையிற் [3] கோத்த கொடுங்கணை யோடுங் கூட்டி
மேலவன் றுரத்த லோடும் [4] விசும்பினி [5] னிரிந்து வெய்தின்
மாலிருங் கடலின் வீழ்ந்து மறைந்தன மழையுங் காற்றும்.

(இ-ள்.) மேன்மை பெற்றவனாகிய ஸ்ரீராமன்,— காற்றுக்கு உரிய கடவுளாகிய வாயுதேவனது அஸ்தரமும் [வாயவ்யாஸ்த்ரமும்], கடல் தெய்வமாகிய வருணபகவானுடைய அஸ்த்ரமும் [வாருணாஸ்த்ரமும்], வெளிப்படும்படி அழகிய வலிய வில்லிலே கோத்த கொடிய கணையோடுங் கூட்டிச் செலுத்தியவுடனே, மழையும் காற்றும் வானத்தினின்று விரைந்து ஓடி மிகப் பெரிய கடலிலே வீழ்ந்து மறைந்தன; (எ - று.)—பி-ம்:—[1] கால்கொள். [2] வெஞ். [3] கோத்துக். [4] விசும்பினின்று. [5] திரிந்து. (2380)

27.—மகரக்கண்ணன் மாயையால் மறைந்துபொருதல்.

[1] அத்துணை யரக்க னோக்கி [2] யந்தர வான மெல்லாம்
[3] ஒத்ததன் னுருவே [4] யாக்கித் தான்மறைந் தொளித்துச் [5] சூலப்
பத்திகள் கோடி கோடி பரப்பின னதனைப் [6] பார்த்த
வித்தக னொருவன் [7] செய்த வினையமென் னென்று சொன்னான்.

(இ - ள.) அத்தன்மையை [தன்வரத்தினால் தோற்றுவித்த மழையுங் காற்றும் மறைந்ததை]க் கண்டு, மகரக்கண்ணன், இடைவெளியாயுள்ள வானமெல்லாம் ஒத்த தன்னுருவே யமையுமாறுசெய்து தான் மறைந்தொளித்துச் சூலவரிசைகளைக் கோடி

கோடியாகப் பரப்பினான்; அதனைக் கண்ட ஞானஸ்வரூபியாகிய ஸ்ரீராமன் 'ஒருவன்செய்த மாயம் என்னே!' என்று சொன்னான்; ()

வானமுழுதும் மகரக்கண்ணனுருவே யானதால், அவனது உண்மையுருவம் தெரியவொண்ணாதபடி ஒளிந்ததென்க. பி-ம்:—[1]அத்திறம். [2]அந்தரம். [3]ஒத்தன. [4]ஆகி [5]சூலம். [6]பார்த்து. [7]செய்யும். (2381)

28.—அதுகண்டு ஸ்ரீராமன் மனம்நோதல்.

மாயத்தால் வகுத்தா னியாண்டும் [1]வரம்பிலா வுருவந் தானெத்
தேயத்தா [2]னென்னு வண்ணங் கரந்தனன் [3]தெரிந்தி லாதான்
[4]காயத்தா [5]னினைய னென்று நினையலாங் கருத்த னல்லன்
[6]தீயொத்தான் றிறத்தி [7]னென்னை செயலெனச் சிந்தை [8]நொந்தான்.

(இ - ள்.) '(மகரக்கண்ணன்) மாயத்தினால் வரம்பில்லாத உருவத்தை யாண்டும் வகுத்தவனாய்த் தான் எவ்விடத்திலுள்ளானென்று அறியாவண்ணம் ஒளிந்தான்: (அவன் கண்ணுக்குப்) புலனாகாதுள்ளான்; உடலைக் கொண்டு இவன்தான் என்று துணியும் மனவறிவுக்கு எட்டியவனல்லன்: தீயையொத்த கொடியவனாகிய அந்த மகராட்சன் விஷயத்திற் செய்யவேண்டுவது யாது?' என்று மனம்நொந்து கருதினான், (ஸ்ரீராமன்); (எ-று.)—பி-ம்:—[1]வரம்பிலா வுருவத்தானெத், வரம்பில்லா வுருவந்தானே. [2]எண்ணு. [3]தெரிந்திலானிக், தெரிந்திலாத, [4]காயத்தில். [5]இனையதென்று நீக்கலாங், இனையனென்று நோக்கலாங். [6]தீயத்தான். [7]என்னே, ஒன்று. [8]செய்தான். (2382)

29.—ஸ்ரீராமன் மகரக்கண்ணனது நிசவடிவத்தை யநுமானித்துக் கணையால் வீழ்த்துதல்.

அம்பின்வா யாறு சோரு [1]மரக்கன்ற னருளில் யாக்கை
உம்பரிற் [2]பரப்பித் தான்வே றொளித்தன னென்ன வோர்வான்
செம்புனற் சுவடு நோக்கி [3]யிது நெறி யென்று தேவர்
தம்பிரான் பகழி தூண்டத் தலையற்றுத் [4]தலத்த னானான்.

(இ-ள்.) '(நான் விட்ட) அம்பினால் வாயினின்று (குருதி) யாறு பெருகப்பெற்ற அரக்கன் தன்னுடைய அருளில்லாத யாக்கையை வானத்திற் பரப்பினனாய்த் தான் வேறே யொளித்துள்ளானே!' என்று சிந்தைகொண்டவனாகி, தேவாதி தேவனான ஸ்ரீராமன்,—(ஓரிடத்து) இரத்தச் சுவட்டைக்கண்டு, 'இது (அவனுள்ள) இடம்' என்று துணிந்து (தன்) பகழியைச் செலுத்த, (அந்த மகரக்கண்ணன்) தலையற்றுப் பூமியில் விழுந்திட்டான்;

பல வுருவங்களுள், அம்பு பட்டதனாற் குருதி சோரப்பெற்ற உருவமே அரக்கனுடைய உண்மை வடிவமென்று ஸ்ரீராமன் தெரிந்தானென்க: இது - அநுமானாலங்காரம். பி-ம்:—[1]அரக்கன தருளில், அரக்கன்றனளவில், ஆகத்தனளவில். [2]பரந்தானாக. [3]அது நெறிசென்று. [4]தரையின் வீழ்ந்தான், தலத்திலானான், ()

30.—அரக்கனொழியவே மாயைநீங்குதல்.

அயில்[1] படைத் துருமிற் செல்லு மம்பொடு மரக்கன் [2]யாக்கை
[3]புயல்படக் குருதி [4]வீசிப் படியிடைப் புரள்த லோடும்
வெயில்[5]கெடுத் திருளை [6]யீட்டுங் [7]காலத்தின் [8]விளைவி னோடும்
துயில்[9] கெடக் கனவு மாய்ந்தா [10]லொத்தது சூழ்ந்த [11]மாயை.

(இ-ள்.) கூர்மைபெற்று இடிபோலச் செல்லுகின்ற அம்புடன் [இராமபிரான் அம்பைச் செலுத்தியவுடனே] அரக்கனுடைய யாக்கை புயல் தன்மையைப் பொருந்த இரத்தத்தைக் கக்கிக் கொண்டு [இரத்த மழை பொழிந்துகொண்டு] பூமியிற் புரளத் தொடங்கிய வளவில்,—சூழ்ந்திருந்த மாயையானது, வெயிலை யொழித்து இருளை மிகுதியாகக் கொண்டுள்ள இராக்காலத்தில் நிகழ்ச்சியுடனே துயிலுங்கெட [யாவரும் துயிலுணருமாறு இரா நீங்கிப் பொழுது புலருமளவிலே] கனவு ஒழிவதுபோல வொழிந்தது; (எ-று.)

துயிலுணருங்காலத்துக் கனா நீங்குவதுபோல் அரக்கனுயிர் நீங்க அவனுடல் பூமியிற் புரண்டகாலத்து அவனால் விளைந்த மாயையும் நீங்கிற்றென்றவாறு. பி - ம்:—[1]படுத்து, மடுத்து. [2]ஆக்கை. [3]புயலுடைக். [4]வீசப். [5]எடுத்து, படைத்த. [6]ஓட்டும். [7]கருமத்தின். [8]இயற்கை வீயத், விளைவையொத்த, விடிதலோடும். [9]படக். [10]ஒத்ததச். [11]மாயம். (2384)

31.—நான்குகவிகள்-இரக்தாட்சனோடு நளன் பொருது அவன்தலையைத்தரையில் தள்ளுதலைத் தெரிவிக்கும்.

குருதியின் கண்ணன் வண்ணக் கொடிநெடுந் தேரன் கோடைப்
பரிதியி [1]னடுவட் டோன்றும் [2]பசுஞ்சுடர் மேகப் பண்பன்
எரிகணை சிந்திக் [3]காலி னெய்தினான் றன்னோ டேற்றான்
விரிகடற் றட்டான் கொல்லன் வெஞ்சினத் தச்சன் வெய்யோன்.

(இ - ள்.) (அதுகண்டு பல) வண்ணக் கொடிகட்டிய நெடிய தேரை யுடையவனும் கோடைக்காலத்துச் சூரியனிடையே தோன்றும் பசுஞ்சுடரைக்கொண்ட மேகத்தின் தன்மையையுடையவனுமாகிய எரிகின்ற அம்புகளைச் சிந்தியவண்ணம் காற்றுப்போல விரைந்து வந்தவனை இரக்தாட்சனென்பவனுடன், பரந்தகடலை (அணைகட்டி)த் தடுத்திட்டவனும் கொல்லுந்தன்மையை யுடையவனுமான கடுங்கோபத்தைக்கொண்ட கொடியவனாகிய தச்சத் தொழில் புரியும் நளன் எதிர்த்தான்; (எ - று.)—எரிகின்ற அம்புகளினிடையே தோன்றும் அரக்கனுக்கு, கோடைப்பரிதியினடுவண் தோன்றும் மேகம் உவமை. வெஞ்சினத்து அச்சன்-வெவ்விய சினத்தையே அச்சாக [உருவாக] உடையவனென்றலும் ஒன்று. தட்டான் என்பதில், தள் - பகுதி. இச்செய்யுளில் தட்டான் கொல்லன் தச்சன் என்ற சாதிப்பெயர்கள் அமைந்துள்ள நயம் காணத்தக்கது. பி - ம்:—[1]கடுவட். [2]பரஞ்சுடர்நயனப், பரஞ்சுடர் மேய. [3]கால் போலெதிர்த்தவன். (2385)

32. அன்[1]றவ னுமவின்னு ணலங்கற்றோ [2]ளிலங்க வாங்கி
ஒன்றல பகழி மாரி யூழித்தீ யென்ன வுய்த்தான்
நின்றவ னெடிய தாங்கோர் தருவினு [3]லகல நீக்கிச்
சென்றனன் [4]கரியின் வாரிக் கெதிர்படர் சீய மன்னுன்.

(இ-ள்.) அன்றைக்கு அந்த ரக்தாட்சன்,— (பகைவர்க்கு) அச்சத்தைத்தருகின்ற வில்லின் நாணியை, மாலையையணிந்த தோள் விளங்குமாறு வளைத்து, ஒன்றல்லாத அம்புமழைகளை யுகாந்தகாலத்துத் தீப்போலச் செலுத்தினன்; அங்கே நின்றவனாகிய நளன் நெடியதான ஒருமரத்தினால் (அவற்றை) அப்பாற் படும்படி நீக்கி, யானை கட்டியுள்ள இடத்துக்கு எதிராகச் செல்லுகின்ற சிங்கத்தை ஒத்தவனாகிச்சென்ருன்; (எ-று.)

பகழிமாரியை மரத்தினால் நீக்கிக்கொண்டு, அவ்வரக்கனுள்ள இடஞ்செல்கின்ற நளனுக்கு வாரிக்கு எதிரேபடர் சிங்கம் உவமையாம். வாரி-யானையின் கட்டுத்தறி. பி-ம்:—[1]இடிபோலும், அவனும். [2]குலுங்க. [3]கலக்கி, அடித்து. [4]பகழிமாரிக்கெதிர்பட்டு, கரியின் வாரிக்கெதிர்ப்பட்ட. (2386)

33. கரத்தினிற் றிரியா நின்ற மரத்தினைக் கண்ட [1]மாகச்
சரத்தினிற் றுணித்து வீழ்த்த தறுகணுன் றன்னை நோக்கி
[2]உரத்தினைச் சுருக்கிப் பாரி னொடுங்கினுன் [3]றன்னை யொப்பான்
சிரத்தினிற் குதித்தான் றேவர் திசைமுகங் கிழிய [4]வார்த்தார்.

(இ-ள்.) கையிலே சுழல்கின்ற மரத்தினைத் துண்டமாகுமாறு சரத்தினால் துணித்துவீழ்த்திய அஞ்சாமையையுடைய அரக்கனைப் பார்த்து, தன்னைத்தானேயொப்பவனான நளன்,—மார்பையொடுக்கிப் பூமியிலொடுங்கினன்போற் பதுங்கி (உடனே அந்த ரக்தாட்சனுடைய) சிரத்திலே குதித்தான்; திசைமுகங்கிழியத் தேவர்களும் ஆரவாரித்தார்; (எ-று.)—பி-ம்:—[1]ஆக்கிச். [2]உரத்தினிற் சுருக்கிப்பார்நின் றொடுங்கினன். [3]மகுடமோங்குஞ், தன்னைத் தேரான், தன்னையொவ்வான். [4]ஆர்த்தான். (2387)

34. [1]எரியும்வெங் குன்றி னும்ப [2]ரிந்திர வில்லிட் டென்னப்
பெரியவன் றலைமே னின்ற பேரெழி லாளன் சோரி
சொரிய[3]வன் கண்ணின் மூக்கிற் செவிகளின் மூளை [4]தூங்க
நெரியவன் றலையைக் காலா லுதைத்துமா நிலத்தி விட்டான்.

(இ-ள்.) எரிகின்ற கொடியமலையின் மீது இந்திரவில் இட்டாற் போலப் பெருந்தோற்றமுள்ள அவ்வரக்கனது தலைமேனின்ற மிக்க எழிலையுடைய நளன்,—வலியகண்ணின் வழியாகவும் மூக்கின்வழியாகவும் செவிகளின்வழியாகவும் இரத்தஞ்சொரியும்படியும் மூளைதொங்கும்படியும் வலிய (அவ்வரக்கனது) தலையை நெரியக் காலாலுதைத்துப் பெரியபூமியில் வீழ்த்திவிட்டான்; (எ-று.)—பி-ம்:—[1]எரியவன். [2]இந்திரன். [3]வெங். [4]தூங்கி.

35.—மூன்றுகவிகள்-சிங்கனைப் பனசன் கொன்றிடுதலைக் கூறும்.

அங்கவ [1]னுலத்த லோடு மழற்கொழுந் தொழுகுங் கண்ணுன்
சிங்கன்வெங் கணையன் வில்லன் [2]றூரணி தேரின் மேலான்

எங்கடா போதி யென்று வெய்தின [3]னெதிரி லாத
பங்கமின் மேரு வாற்றற் பனசன்வந் திடையிற் பாய்ந்தான்.

(இ - ள்.) அப்போது அந்த ரக்தாட்சன் இறந்தவுடன், தீக் கொழுந்து ஒழுகுகின்ற கண்களையுடையவனாகிய சிங்கனென்பவன் கொடிய அம்பையுடையவனும் வில்லையுடையவனும் சிறுமணிகள் கட்டிய தேரின்மேலேறியவனுமாகி, 'எங்கடா போகிறாய்?' என்று சொல்லிக்கொண்டு வந்தான்: குற்றமற்றமேருவையொத்த வலிமை படைத்த ஒப்பில்லாத பனசன் வந்து நடுவேகுதித்தான்; (எ - று.) —'எங்கடா போதி' என்பது நளனைச் சுட்டிக்கூறியது. பி - ம்:— [1]உதைத்தலோடும். [2]தாரணித். [3]தன்னுடெய்திப், தன்மு னெய்திப் (2389)

36. **பாய்ந்தவன் றோளின் மார்பின் பல்லங்க ணல்ல [1]பண்போடு**
[2]ஏய்ந்தன வசனி [3]போல வையிரண் டழுந்த [4]வெய்தான்
[5]காய்ந்தனன் [6]கனலி [7]நெய்யாற் கனன்றது போலக் காந்தி
ஏய்ந்தெழு தேரி னோடு மிமைப்பிடை யெடுத்துக் கொண்டான்.

(இ-ள்.) பாய்ந்தவனான பனசனுடைய தோளிலும் மார்பிலும் நல்ல பண்பைப்பொருந்தியனவான பல்லமென்னும் பாணங்கள் பத்தினை, (சிங்கன்) இடிபோல அழுந்தும்படி யெய்தான்: சினந்தவனாகிய பனசன், தீயானது நெய்யினாற் சொலிப்பதுபோல வெம்பி, பொருந்தியெழுந்துவருகின்ற தேரினோடும் (அவ்வரக்கனை) இமைப்பிற்குள் (கையினால்) எடுத்துக்கொண்டான்; (எ - .று) — பி - ம்:— [1]பார்ப்போடு. [2]ஆய்ந்தன. [3]என்ன. [4]எய்யக். [5]காய்ந்தெழு, காய்ந்தெரி. [6]கனலின். [7]நெய்யிற். (2390)

37. **தேரொடு மெடுத்த லோடு நிலத்திடைக் [1]குதித்த [2]செங்கண்**
மேருவிற் றோற்றத் தான்ற னுச்சிமே லதனை [3]வீசப்
பாரிடை [4]விழுத லோடுந் [5]தானவ னும்பர் [6]பாயச்
சோரியு முயிருஞ் சோரத் துகைத்தனன் வயிரத் தோளான்.

(இ-ள்.) தேரோடும் (சிங்கனை) எடுத்தவளவில், செங்கண்ணையும் மேருப்போன்ற தோற்றத்தையுமுடையவனை நிலத்திடையிற் குதித்த அந்தச் சிங்கனுடைய உச்சிமீது (பனசன்) அந்தத் தேரை வீச, அவ்வரக்கன் பாரிடை விழுந்தவளவில், இரத்தம் மேலேபாயவும் உயிர்சோரவும் வயிரம் போலுறுதியான தோளையுடைய அந்தப் பனசன், துகைக்கலானான்; (எ - று)— தானவன்- அரக்கன். பி-ம்:— [1]குதிக்கச். [2]செம்பொன். [3]வீசிப். [4]வீழ்த்தலோடும். [5]அந்தரமவனும், மானவனம்பிற், தானதன்மீது. [6]பாய்ந்து. (2391)

38.—அரக்கச்சேனையில் யாவரும் இறக்க, செய்திசொல்லத் தூதர் இலங்கை சேர்தல்.

தராதல வேந்தன் [1]மைந்தர் சரத்தினுங் கவியின் முனை
மராமர மலையென் றின்ன [2]வழுங்கவும் [3]வளைந்த தானை
பராவருங் [4]கோடி யைந்தும் வெள்ளநா லைந்தும் பட்ட
இராவணன் றூதர் போனார் படைக்கல மெடுத்தி லாதார்.

(இ - ள்.) சக்கரவர்த்தி குமாரர்களாகிய இராமலக்ஷ்மணர் அம்புகளை வழங்கலானும், குரக்குச்சேனை மராமரம் மலை என்ற இவற்றை வழங்கலானும்,—வளைந்திட்ட (அரக்கச்) சேனை சொல்லுதற்கு அரிய ஐந்துகோடியும் இருபது வெள்ளமும் இறந்து பட்டன: படைக்கலம் எடுக்காதவராயும் (அதனால்) இறவாமல் நின்றவருமான இராவணன் தூதர் (செய்திசொல்லுமாறுநகர்க்குச்) சென்றனர்; (எ - று.)—மகராட்சன்சேனை ஐந்துகோடி: மன்னவன் சேனை நாலைந்து வெள்ளம்: நாலைந்து-இருபது: பண்புத்தொகை: பி-ம்:—[1]மைந்தன். [2]வழங்கலும். [3]தானைப். [4]வெள்ளமொக்கப் பட்டது பட்டிலாதார், வெள்ளம்பத்தும்பட்டன பட்டிலாதார்.()

மகரக்கண்ணன் வதைப்படலம் முற்றிற்று.

21-ஆவது பிரமாத்திரப்படலம்

இந்திரசித்து பிரமாஸ்திரத்தை விடுத்து இலக்குமணனையும் வானரர்களையும் உயிரொடுங்கச் செய்தமையைக் கூறும் படலமென்று விரியும்.

மகரக்கண்ணன் தன்சேனையோடும் தேர்ச்சக்கரக் காவலாளரோடும் இறந்திட்டானென்ற செய்தியைச் சொல்லினர், தூதுவர். கேட்ட இராவணன், இந்திரசித்தை விரைவிலழைத்து வருமாறு கூறினான். பணியாளர் தெரிவிக்க, இந்திரசித்து உடனேவந்து, 'யான் நரரையும் வானரரையும் வென்றுவருவேன்: வருந்தற்க' என்று கூறி அறுபது வெள்ளத்தானையோடும் போர்க்குஉரிய வாச்சியங்கள் முழங்க, முனைமுகஞ்சார்ந்தான். சார்ந்தவன் கிரௌஞ்சவியூகமாகச்சேனையையணிவகுத்துச்சங்கநாதஞ்செய்து நின்றானாக, அவன் சேனையுங் கிளர்ந்து நின்றது. அதுகண்ட வானரசேனை நிலைகெட்டோடிற்று. அநுமான் சுக்கிரீவன் அங்கதன் ராமலட்சுமணர் விபீஷணன் முதலிய சிலரே நிற்கலாயினர். அப்பால் அநுமான் தோளின்மீது ஸ்ரீராமனும் அங்கதன்தோளின் மீது இளையபெருமாளும் ஏறிநிற்க, வானவர் மலர்மழை பொழிந்தனர். நீலன் முதலியோர் மரங்களையும் குன்றுகளையு மேந்தி அரக்கரைத் தடுக்கத் தொடங்கியபோது, ஸ்ரீராமன் 'தெய்வப் படைகளை இந்திரசித்து விடுத்தால் நீங்கள் தாங்கமாட்டீராகையால், அவற்றைத் தாங்குமாறு முன்னிடத்தை எமக்குவிட்டுப் பின்னேநின்று எம்முடைய விற்றிறமையைக் காண்க' என்றான். அவர்களும் உடன்பட்டுநிற்க, இந்திரசித்து பிரமிக்கும்படி அறுபதுவெள்ளஞ்சேனையையும் இராமலட்சுமணர் அழித்தனர். ஆயிரகோடித் தேர்வீரர்தவிர மற்றையோரெல்லாம் மாய்ந்திடவும், இந்திரசித்தினிடத்து அச்சத்தால் நிலைகெட்டோடிய குரக்குச்சேனை மீண்டிலது. ஸ்ரீராமலக்ஷ்மணர் செய்த போர்த்திறனைக்கண்டு அநுமான் தோள்கொட்டி யாரவாரித்தனன். அவனுடைய ஆரவாரத்தால் அரக்கச்சேனை பின்னிட்டது. அதுகண்டு இந்திரசித்து அவர்களை முனிந்துநோக்கிப் பழித்து இராமலட்சுமணர்மீது பொருமாறு தான் ஒருவனுமே வந்தான்.

அவன் வருவது கண்டு அவனோடு தான் ஒருவனாகவே பொருவ
தாக ஸ்ரீராமனிடத்து இலட்சுமணன் அநுமதிபெற்றுப் பொரலா
னான். ஆயிர கோடிச்சேனையும் இந்திரசித்துக்குப் பக்கபலமாக
வந்தது இந்திரசித்து சுக்தளிக்கும்படி இலக்குமணன் அரக்கச்
சேனையைக்கொன்று வீழ்த்துகையில், ஸ்ரீராமனும் அநுமானைத்
தூண்டி அரக்கர்மீது சரமாரிபொழிந்து தேரும் அவனுமே மிச்ச
மாக இந்திரசித்தைச் செய்தனன். அவ்வேளை இந்திரசித்து 'நீங்கள்
தனித்துப்பொருவீரோ? சேனையுடன் கூடியவராய்ப்பொருவீரோ?
நுமது கருத்துயாது?' என்று வினவ, இலக்குமணன் தான் இந்திர
சித்தைக் கொல்லுமாறு சூளுரைத்திருப்பதைத் தெரிவித்தான்.
இந்திரசித்து இலட்சுமணனைக் கொல்வதாகச் சூளுரைக்க, வாக்கு
வாதத்திற்குப்பின் இருவர்க்கும் கடும்போர் நிகழ்ந்தது. அப்
போரில் இலட்சுமணன் இந்திரசித்தின்தேரையழிக்க இந்திரசித்து
அங்கதன்மீதும் இலட்சுமணன்மீதும் கணைகளைத் தூர்த்துச் சங்
கெடுத்து முழக்கினன். அக்காலையில் இலக்குவன் இந்திரசித்தின்
கவசத்தைப் பத்துக்கணையாற் பேதிக்க, அப்போது ஸ்ரீராமன்
கட்டளையால்வானரர் பேராரவாரஞ்செய்தனர். இமைப்பொழு
திற்குள் இந்திரசித்து ஆகாயத்து மறைய, இலட்சுமணன் பிரமாத்
திரத்தைத் தொடுப்பேனென்ன, ஸ்ரீராமன் தடுத்தனன். இவரது
ஆலோசனையையறிந்த இந்திரசித்து தான் பிரமாத்திரத்தை
விடுக்கக்கருதி மெல்லப்பெயர்ந்து செல்ல, கண்ட வானவர் அரக்
கன் அஞ்சிச் சென்றானென்று நகைத்தனர்; வானரரும் ஆரவாரித்
தனர். இராமலட்சுமணரும் தூணி முதலியவற்றைத் துறந்திருந்
தனர்.

இந்திரசித்து, பிரமாத்திரம் விடுத்தற்கு முயற்சிகொண்டு
அதற்குரிய வேள்வியைத் தொடங்க அமைந்தான். சூரியன் அத்த
மித்தான். ஸ்ரீராமன் சேனைகட்கு விரைவில் உணவுகொணருமாறு
ஸ்ரீவிபீஷணாழ்வானை யனுப்பிவிட்டு, சேனையைக் காத்திருக்குமாறு
இலக்குவற்குக் கட்டளையிட்டு, அத்திரபூசை செய்யச்சென்றான்.
இந்திரசித்து இலங்கையிற்சேர்ந்து இராவணனிடம் போரில்
நிகழ்ந்ததைச் சொல்லி, 'மாறுசெய்யாதபடி மாற்றார் என்னை மறந்
திருக்கையில் வஞ்சனையாகப் பிரமாத்திரம் விடுத்துப் பகையை
முடிப்பேன்' என்றான். அதுகேட்ட இராவணன், மன்னின்ற
மகோதரனை நூறுவெள்ளஞ்சேனையோடு மாயைப்போர் புரியு
மாறு ஏவ, அவ்வரக்கச்சேனை முடுகிச்சென்று வானரர்களைக்கடுமை
யாகத் தாக்கிற்று. ஒருபக்கத்து அநுமான் அரக்கரையழிக்கத்
தொடங்கிக் கீழேகிடந்த கும்பகர்ணனது தண்டாயுதத்தைக் கை
யிற்கொண்டு சாரி திரிந்து அன்னவரை நீறாக்கலானான். நீலன்
முதலியதலைவர் ஒருவரையொருவர் காணமாட்டாது அரக்கரின்
படைக்கடலுளிருந்தனர். அநுமான் அரக்கரை நீறாக்குகையில்
முற்பிறவியில்தாருகனாயிருந்து குமாரக்கடவுளாற்கொல்லப்பட்டு
இப்போது அகம்பனென்றுபிறந்துள்ள சேனாதிபதியான வீரனை
நெருங்க, இருவர்க்கும் பெரும்போர் நிகழ்ந்தது. முடிவாக அகம்
பன் அம்புதூவுவதைவிட்டுத் தண்டாயுதங்கொண்டுபொர,
அநுமான் தண்டுகொண்டு தாக்கவே, அவனது கதாயுதத்துடனே

வலக்கையும் இற்றது. பிறகு குத்துச் சண்டையால் அவனுயிரை அனுமான் குமைத்திட்டான். மற்ெறாரு பக்கத்து மாயையாற் பரந்திருந்த அரக்கச்சேனையில் தென்மேற்குத்திக்கில் ஏழுயோசனை தூரம் அங்கதன் சென்றிருந்தான்: அப்பால்பதினான்கு யோசனை தூரம் சுக்கிரீவனும் அப்பால் பின்னும் நான்மடங்கு மிக்க யோசனை தூரம் இலட்சுமணனுஞ் சென்றிருந்தனர்; மற்றையோர் நாலைந்துகாததூரமே சென்றிருந்தனர். அப்போது அநுமான், இலக்குமணனுள்ள இடம்தெரியாமலும் அவன் வில்லொலியுங் கேளாமலும், என்ன நிகழ்கின்றதென்ற செய்தியுரைப்பார் இல்லாமலும் இருப்பதுகண்டு, பொருமலுற்றுச்சென்று இலட்சுமணனுள்ள இடத்துக்கு இரண்டுமூன்று காததூரமிருக்குமிடத்தைச் சார்ந்து அப்பிரானது சரணையால் யானை முதலியன அழிந்துகிடக்கும் பலகாட்சிகளைக்கண்டு, முடிவாக இலட்சுமணனைக் கிட்டிப் பெருமகிழ்ச்சியாலார்ப்பரித்து, 'இப்போர் மாயத்தால்விளைந்திருத்தலால் மந்திரப்படைகொண்டுபோக்கவேணும்' என்ன, இலட்சுமணன் பாசுபதாஸ்திரத்தை விடுக்க, மாயையெல்லாம் நீங்கவே, மகோதரன் மறையப்போயினன். வானரர் இலக்குவனை யடைந்தனர்: வானவர் பூமாரிபொழிந்தனர்.

தூதுவர் இச்செய்தியை இராவணனுக்கு உணர்த்த, அவன் இந்திரசித்துக்குச் சொல்லுமாறு பணிக்க, அவ்வாறே செய்தனர். இந்திரசித்து இஷ்ட தேவதையைப் பூசித்துவிட்டு மாயையால் வானத்து மறைந்துநின்று காலம் நோக்கிநிற்க, மகோதரன் இந்திரனுருக்கொண்டு ஐராவதவுருவுள்ள யானைமீதேறி வானவர் இருடியர் முதலியவரின் உருக்கொண்டவீரருடன் இலட்சுமணன் மீது எதிர்த்துவந்தனன். அதுகண்ட இலட்சுமணன் அதிசயமுற்று 'இது என்?' என்று அநுமானை வினவினன். அப்போது இந்திரசித்துப் பிரமாஸ்திரத்தைத் தொடுத்து விடுக்க, இலட்சுமணன் அறிவொடுங்கிச் சாய்ந்தான். அநுமான் 'இந்திரனு இவ்வாறு செய்தான்? அவனை யானையோடு எற்றுவேன்' என்று எழ, அவ்வநுமானைப் பிரமாஸ்திரம் இறுக்க, அ னும் நினைவுஞ்செய்கையும் மறந்து நிலஞ்சேர்ந்தான். சுக்கிரீவன் அங்கதன் நீலன் மயிந்தன் துவிவிதன் சுடேணன் கேசரி முதலிய வீரர்யாவரும் அந்த அஸ்திரத்தினால் உயிரொடுங்கிச் சாய்ந்தனர். இந்திரசித்து 'வானரசேனையுடனே இளையவன் இறந்தான்: இராமன் அகன்றிட்டான்' என்று வெற்றிச்சங்கு ஊதி, தன் வெற்றிச்செய்தியை இராவணனிடம் தெரிவித்துத் தன்னரண்மனைக்குச் செல்ல, மகோதரனும் தன்னிருப்பிடஞ் சேர்ந்தான்.

பூசனை செய்துவிட்டு மீண்டுவந்த ஸ்ரீராமன், ஆக்கினேயாஸ்திரத்தால் இருளை யொழித்துச் சுக்கிரீவன் முதலிய தலைவர் உயிரொடுங்கி விழுந்திருப்பது கண்டு பெருந்துயரடைந்து பலபடி பேசிப் புலம்பி, பின் இலட்சுமணனும் உயிரொடுங்கி விழுந்திருப்பதுகண்டு அவனைத்தழுவி வெம்பி மனம்மூறிந்து பூமியிற்சாய்ந்து மூர்ச்சித்துக்கிடந்தான். அவனது நிலையைக்கண்டு சராசரங்கள் யாவும் புலம்பின. சற்றுநேரம் கழிந்ததும் ஸ்ரீராமனுக்குச் சற்று உணர்வுவர, அப்பிரான், இலட்சுமணனை இறந்தவனாக வெண்ணிப்

பலபடியாகப் புலம்பி மூர்ச்சையாகிவிழ, தேவர்கள் அப்பரமனைத் துதிசெய்து துயருற்றிருந்தனர். தூதுவர் இராவணனிடஞ்சென்று 'தன் தம்பியுந் துணைவரும் இந்திரசித்து விடுத்த பிரமாத்திரத்தினால் இறந்தது கண்டு பெருந்துயரெய்தி அத்துயர்மிகுதியால் இராமனும் மாண்டனன்: ஆகவே, உன்பகையொழிந்தது' என்று செய்தியுரைத்தார் என்பது, இப்படலத்திற் கூறப்படுகின்றது.

1.—மகராட்சன் முதலியோர் மாண்டதைத் தூதர் உரைக்க, இராவணன் இந்திரசித்தை யழைத்துவரச் சொல்லுதல்.

கரன்மகன் பட்ட வாறுங் குருதியின் கண்ணன் [1]காலிற்
சிரனெரிந் [2]துக்க வாறுஞ் [3]சிங்கன தீறுஞ் சேனைப்
பரமினி யுலகுக் [4]காகா தென்பதும் பகரக் கேட்டான்
வரம்முறை [5]தவிர்ந்தான் வல்லைத் தருதிரென் மகனை யென்றான்.

(இ - ள்.) கரனுடைய புத்திரனான மகரக்கண்ணன் இறந்த வகையினையும், இரக்தாட்சன் (குரங்கின்) காலினாற் சிரம்நெரிந்து போய் உயிரொழிந்தவகையினையும், சிங்கனுடைய மரணத்தையும், சேனைக்கூட்டம் இனி உலகினில் இல்லாமலொழிந்ததென்பதையும் (தூதர்) சொல்லக்கேட்டவனாய், நீதிமுறை நிகழ்வதைத்தவறின வனாகிய இராவணன், 'என்மகனை விரைவில் அழைத்துவாருங்கள்' என்று (அத்தூதருக்குக்) கட்டளையிட்டான்; (எ - று.)

இராவணன் சேனையெல்லாம் நாசமாதற்குக் காரணம் அவனுடைய முறைக்கேடேயென்பார், அவனை 'வரன்முறை தவிர்ந்தான்' என்றார். வரன்முறை தவிர்ந்தான் = முறைவரல் தவிர்ந்தான்: முறை-நீதி. சில பிரதிகளில் இந்தச் செய்யுளோடு மகரக்கண்ணன் வதைப்படலம் முடிகின்றது. பி-ம்:—[1]காலுஞ, காலற். [2]இற்ற. [3]சிங்கனுஞ்சீறுஞ், சிங்கனிற்சீறும், செறிந்தனசீறும். [4]ஆகாவென்பதும், ஆகானென்பதும். [5]துறந்தான். (2393)

2.—இராவணன் கட்டளையைத் தூதர் அறிவிக்க, செய்தியுணர்ந்த இந்திரசித்து விரைந்து வருதல்.

கூயின னுந்தை யென்றார் குன்றெனக் [1]குவிந்த [1]தோளான்
போயின நிருத ரியாரும் [3]பொன்றினர் போலு மென்றான்
ஏயின பின்னை [4]மீள்வார் நீயலா தியாவ ரென்னா
மேயது சொன்னார் [5]தூதர் தாதைபால் விரைவின் வந்தான்.

(இ-ள்.) 'உமதுதந்தையார் (உம்மை) அழைத்தனர்' என்று (தூதுவர்) தெரிவித்தார்; குன்றுபோலத் திரண்ட தோளையுடையவனான இந்திரசித்து '(போருக்குச்) சென்ற நிருதர்யாவரும் இறந்தார்போற் காண்கிறதே' என்று வினவினான்; '(போருக்கு) ஏவினபின் (அப்போரிற் செல்பவரில்) மீளவல்லவர் நீயல்லாது எவர் (உளர்?)' என்று கூறி, நிகழ்ந்ததைத தூதுவர் சொன்னார்: (தன்) தாதையினிடத்தில் (இந்திரசித்து) விரைந்துவந்தான்; (எ-று.)—பி-ம்:—[1]குவவு [1]தோளரர். [3]போர்திலர். [4]மீள்வானீயல தியாவ தில்லை. [5]கேட்டான். (2394)

3.—இந்திரசித்து இராவணனைத் தேற்றி, நான் வானரரையும் நரரையுங் கொல்வேனெனல்.

[1]வணங்கிநீ யைய நொய்தின் [2]மாண்டனர் மக்க ளென்ன
உணங்கலை யின்று காண்டி [3]யுலப்பறு [4]குரங்கை நீக்கிப்
பிணங்களின் குப்பை மற்றை [5]நரருயிர் பிரிந்த யாக்கை
கணங்[6]குழைச் சீதை [7]தானு மமரருங் காண்ப [8]ரென்றான்.

(இ - ள்.) (வந்த இந்திரசித்து,—தன் தந்தையை) வணங்கி, 'ஐய! நீ மக்கள் இலேசாக மாண்டிட்டனரென்று மனம் வாட வேண்டா; அளவற்ற குரங்குச் சேனைகளை (உயிர்) நீக்குவதனால் (படுகளத்திற் கிடக்கும் அந்தக்குரங்குப்) பிணங்களின் குவியலையும் மற்றை நரரான இராமலட்சுமணரின் உயிர் பிரிந்த உடலையும், திரண்ட பொன்னாற் செய்த குழையென்னும் காதணியணிபவளான சீதையும் அமரரும் காண்பார்; [வானரர்களையும் நரரையும் அதஞ்செய்வேனென்றபடி]: (இவ்வாறு நிகழ்வதை) இன்று (நீயே) காண்பாய்' என்று கூறினான்; (எ - று.)—உலப்பறு குரங்கை நீக்கி - அழிதலில்லாத [சிரஞ்சீவியான] குரங்கை [அனுமானை]த் தவிர்த்து, மற்றைப்பிணங்களின்குப்பை-மற்றை(க் குரங்குகளின்) பிணக்குவியலை என்பாருமுளர். பி-ம்:—[1]வணங்கினன். [2]மாண்டன மாக்கள், மாண்டன ரரக்கர். [3]உலப்புறு. [4]குரங்கினோங்கல். [5]ஆருயிர். [6]குழற் [7]காணும். [8]அன்றே. (2395)

4.—இங்ஙன் கூறிவிட்டு இந்திரசித்து தானையோடு போர்க்களம் நோக்கிச் செல்லுதல்.

வலங்கொண்டு வணங்கி வான்செ லாயிர மடங்கல் [1]பூண்ட
பொலங்[2]கொடி நெடுந்தே ரேறிப் [3]போர்ப்பணை [4]முழுங்கப்
அலங்கல்வா ளரக்கர் தானை யறுபது[5]வெள்ள மியானைக்[போனான்
குலங்களுந் தேரு மாவுங் குழாங்கொளக் [6]குழீஇய வன்றே.

(இ - ள்.) (பின்பு தன் தந்தையைப்) பிரதட்சிணஞ்செய்து வணங்கிவிட்டு, வானத்திலுஞ் செல்லவல்லதும் ஆயிரஞ்சிங்கம் பூண்டதும் அழகிய கொடியுடன் கூடியதுமான நெடிய தேரின் மீது ஏறிக்கொண்டு, போர்க்குரிய வாச்சியங்கள் முழங்க, (அவ்விந்திரசித்து), சென்றான்; (வெற்றி) மாலைசூடிய வாட்படையைக கொண்ட அரக்கர்சேனை அறுபது வெள்ளமும் யானைக்கூட்டங்களும் தேர்களும் குதிரைகளும் கூட்டமாகத திரண்டு சென்றன; (எ - று.)—அன்றே-ஈற்றசை: தேற்றமுமாம். பி - ம்:—[1]பூண்டான். [2]கொடியடுங். [3]பொரு. [4]பொலியப். [5]வெள்ளயானை. [6]குழீஇயது. (2396)

5.—பலவகைவாச்சியங்களும் அப்போது ஒலித்தல்.

கும்பிகை திமிலை செண்டை குறடுமாப் [1]பேரி கொட்டும்
[2]பம்பைதார் முரசஞ் [3]சங்கம் பாண்டில்போர்ப் பணவந் தூரி
கம்பலி யுறுமை தக்கை கரடிகை [4]துடிவேய் கண்டை
[5]யம்பலி கனுவை யூலம சகடையோ டார்த்த வன்றே.

(இ-ள்.) கும்பிகை திமிலை செண்டை குறடு பெரிய பேரிகை கொட்டுகின்ற பம்பை மாலைசூடிய முரசம் சங்கம் பாண்டில்

போர்க்கு எடுத்த பணவம் தூரி கம்பலி உறுமை தக்கைகரடிகை துடி புள்ளாங்குழல் கண்டை அம்பலி கணுவை ஊமை சகடை என்ற இவ்வாச்சியங்கள் ஆரவாரித்தன; (எ - று.) -- பி-ம்:—[1]பேரிகோடி, பேரிகொட்டி. [2]பம்பமர், பம்பைமா. [3]கஞ்சம். [4]துடிகை கண்டை, துடிசெய்கண்டை. [5]அம்புலிகடுமை, அம்பலிதடுமை. (2397)

6.—யானைமுதலிய படைகளினின்று தோன்றிய ஒலி.

யானைமேற் பறை[1]சா லீட்டத் தறைமணி யார்த்த தாழி
[2]மானமாப் புரவி [3]பொற்றார் [4]மாக்கொடி [5]கண்டை மானச்
சேனையோர் [6]கழலுந் தாருஞ் சேடகப் புளகச் சில்லி
[7]வானகத் தோடு மாழி யலையென வளர்ந்த வன்றே.

(இ - ள்.) யானையின்மீதுஉள்ள பறைகளின் மிக்ககூட்டத்தோடு (அவைகளின் இருபுறத்துந்தொங்கி) ஒலிக்கின்ற மணி ஆழிபோல் ஒலித்தது; ரோஷத்தையுடைய சிறந்த குதிரைகளணிந்த பொன்னாலியன்ற கிங்கிணிமாலையின் பெரியவரிசைகள் கண்டைபோலாறு ஒலிக்க, சேனையோரின் கழலினொலியும், பொன்னரிமாலையினொலியும், (உருளுகின்றனவான) பெருமைபொருந்திய கண்ணாடி பதித்துள்ள தேர்ச்சக்கரங்களின் ஒலியும் வானம்வரையில் கடலொலிபோல மிக்கு வளர்ந்துதோன்றின; (எ - று.)

பி-ம்:—[1]கீழ்ப்பட்டதெறிமணியிரதத்தாழி, கீழ்ப்பட்டதெறிமணியயிர்த்ததாழி, கீழட்டத்தெறிமணியிரைத்ததாழி, கீழ்ப்பக்கத்தெறி...ஆழி, கீழ்ப்பட்டத்தெறிமணியீர்த்ததாழி. [2]மானமார். [3]பொற்றேர். [4]மாக்கடற். [5]கொண்டடண்ணைச், கடலைமானச், கண்டைவாவுஞ். [6]கழலுங்...சேண்டரப்புலம்பமற்றை, கழலுங்...சேண்டரப்புரளுஞ்சில்லி, கலிப்பத்தாவிச்சென்றதேருருமினசில்லி. [7]வானகதமேதாடுமாழிமலையென வளர்ந்ததன்றே, வானகத்தோடு வானையரியென வளைந்ததன்றே, ஏனையபிறவுமெல்லாமரியென வளைந்தவன்றே, ஏனையபிறவுமெல்லா மெழுமொலியெழுந்ததன்றே, ஆனகத்தோடு வானையரியெனவளைந்தவன்றே. (2398)

7.—பலவகை வாச்சியம் சேனையொலி இவற்றின் வருணனை.

சங்கொலி [1]வயிரி ரோசை யாகுளி தழங்கு காளம்
பொங்கொலி [2]வரிகண் பீலி[2]போரொலி வேயின் பொம்மல்
சிங்கத்தின் முழக்கம் வாசிச் சிரிப்புத்தே ரிடிப்புத் திண்கைம்
மங்குலி [3]னதிர்வு வான மழையொடு [4]மலைந்த வன்றே.

(இ - ள்.) சங்கினொலியும், வயிரென்னும் ஊதுகொம்பினொலியும், ஆகுளியினொலியும், ஒலிக்கின்ற காளத்தினின்று மிக்குத்தோன்றுகின்ற ஒலியும், மயிற்கண் வரிந்த பீலியென்ற வாச்சியத்தின் போர்க்கின்ற ஒலியும், புல்லாங்குழலின் ஓசையும், சிங்கத்தின் முழக்கமும், குதிரையின் கனைப்பொலியும், தேரினின்று தோன்றுகின்ற இடிபோன்ற ஒலியும், வலிய துதிக்கைகளைக் கொண்ட மேகம் போன்ற யானையினொலியும், வானத்துத் தோன்றுகின்ற மேகத்தினொலியோடு மாறுபட்டன; (எ-று.)—அன்றே-தேற்றம். சிங்கம்-தேரிற்கட்டப்பட்டிருப்பன. வரிகணபீலி-பெரியார்பாசுரத்

தில் "தாழ்பீலி" என்றவிடத்துப் பீலிதாழ்ந்ததொரு வாத்திய விசேஷமுமாமென்று அருளிச்செய்திருத்தல் காண்க. பி-ம்:—[1]வரிதாட்பீலி. [2]பேரொலி. [3]குரல்போல்வானின், அதிர்ப்பும்வான. [4]மலிந்ததன்றே, மலைந்ததன்றே. (2399)

8.—பலவகைச்சங்கீதம்.

[1]பண்டரு கிளவிச் செவ்விப் [2]பல்லியத் தொழுகு தீந்தேன்
கண்டினிற் குயின்ற வீணை நரம்பொடு [3]கமழுந் தேறல்
வண்டினிற் பொலியு நல்யாழ் [4]வழியுறு நறவம் வானத்து
அண்டர் தஞ்[5]செவியி னுண்ணு மமிழ்தென [6]லாய வன்றே.

(இ-ள்.) இனிய ராகத்தைத் தோற்றுவிக்கின்ற சொற்களின் தன்மையைக் கொண்டனவாய்ப் பல்வகை வாச்சியங்களினின்று தோன்றுகின்ற இனிய சங்கீதமும், (முறைப்படி) அமைந்த வீணை நரம்பினின்று கற்கண்டுபோல் இன்சுவை தோன்றுகின்ற சங்கீதமும், நல்யாழிடத்தினின்று தோன்றுகின்றதும் வண்டினொலி போல் விளங்குவதுமான சங்கீதமும், வானத்திலுள்ள தேவர்கள் தஞ்செவியாலுண்கின்ற அமிழ்துபோலத் தோன்றின; (எ-று.)

போர்க்குச் செல்வோர்க்கு மனக்கிளர்ச்சியுறுமாறு அந்த இராக்கதசேனையிற் சங்கீதமயமாக இருந்த தென்க. வாச்சியம் பேசுவதுபோல அவற்றினின்று இன்னொலி தோன்றுகின்றதென்பது முதலடியிற் கூறிய பொருள். நக்கியுண்ணப்படுந்தேன்நாவுக்கு இனிமைதருவதுபோலச் செவிப்புலன்கொண்டு முகந்துண்ணப் படுஞ் சங்கீதம் அச்செவிப்புலனுக்கு இனித்தலால், உவமவாகு பெயரால், சங்கீதத்தொனியை 'தேன், தேறல், நறவம்,' என்ற சொற்களாற் கூறினார். இச்செய்யுள் பல பிரதிகளிலில்லாமையைக் காணுமிடத்து, புதிதாகப் பாடிச்சேர்க்கப்பட்ட வெள்ளிப் பாட்டிற்சேர்ந்ததோ என்று ஐயந் தோன்றுகின்றது. பி-ம்:— [1]பண்டொகு. [2]பலகையின். [3]கள்ளுங். [4]அளவுறு. [5]செவிகள். [6]ஆயிற்று. (2400)

9.—வில்லொலி முதலியன.

வில்லொலி வயவ ரார்க்கும் விளியொலி தெழிப்பி னோங்கும்
ஒல்லொலி வீரர் பேசு முரையொலி [1]யுரப்பிற் [2]றோன்றுஞ்
[3]செல்லொலி [4]திரடோள் கொட்டுஞ் [5]சேணொலி நிலத்திற் செல்லுங்
கல்லொலி [6]துரப்ப மற்றைக் கடலொலி [7]கரந்த தன்றே.

(இ-ள்.) வில்லினொலியும், வீரர் ஆரவாரிக்குங் குரலொலியும் அதட்டுதலாலோங்கித் தோன்றுகின்ற ஒல்லென்ற ஒலியும், வீரர் பேசுகின்ற உரையொலியும், கனைப்பில்தோன்றும் இடிபோன்ற ஓசையும், திரண்ட தோளைக் கொட்டும் மிக்கஒலியும், நிலத்தில் நடந்து செல்வதனாலான கல்லென்றஒலியும் ஓட்டிவிடுவதனால், இவற்றினும் பிறிதான கடலொலியானது ஒளித்திட்டது; (எ-று.) —வில்லொலி முதலியவற்றாற் கடலொலி யடங்கிற்றென்க. இதில், ஒப்புமையால் ஒன்றில் மற்றொன்று மறைதலாகிய மறைவணி காண்க. பி-ம்:—[1]உரப்பித். [2]சொல்லுஞ். [3]சொல். [4]தாடோள். [5]தோள், [6]யோடுங்கூடிக், பரப்பமற்றைக். [7]பரந்த, கடந்தது. ()

10.—தூளிவருணனை.

**நாற்கட லனைய தானை [1]நடந்திடக் கிடந்த பாரின்
மேற்[2]கடுத் தெழுந்த தூளி விசும்பின்மேற் [3]றொடர்ந்து வீச
மாற்கடற் [4]சேனை காணும் வானவர் மகளிர் மானப்
பாற்கட லனைய வாட்கண் பனிக்கடல் படுத்த தன்றே.**

(இ - ள்.) நாற்கடலையொத்த (நால்வகைச்) சேனை நடந்திட்டதனாற் கிடந்த பாரிலிருந்து மேலே விரைந்து புறப்பட்டெழுந்த தூளி,—ஆகாயத்தின் மீது தொடர்ந்து வீசுவதனால், பெரியகடல் போன்ற சேனையைக் காண்கின்ற வானவமகளிரின் பெருமை பெற்ற பாற்கடலையொத்த ஒளியுடைதத கண் குளிர்ந்தகடலை [மிக்ககண்ணீரை]த் தோற்றுவிததது; (எ - று.)

சேனைப்பரப்பாலெழுந்த தூளி வானத்தளவும் மிக்குச்சென்றதென்ற கருத்தை விளக்குதற்பொருட்டு, தூளி தம்கண்களிற் படுதலால் வானவர் மகளிர் கண்களிலும் கண்ணீர் மிக்குத்தோன்றிற்றெனத் தொடர்புயர்வுநவிற்சியணிபடக் கூறினாரென்க. பாற்கடல் பனிக்கடலைப்படுத்தது என்ற நயம்கருதத்தக்கது. கடுத்து எழுந்த-விரைந்து எழுந்த. மானம்-பெருமை. பி - ம்—[1]நயத்தலையெய்தப். [2]கடந்து. [3]கொழுந்து. [4]சேனையோடும். (2402)

11.—பலதேர்களினிடையே இந்திரசித்து தேரில் தோன்றுதலின் வருணனை.

**ஆயிர கோடித் திண்டே ரமரர்கோ னகர மென்ன
[1]மேயவர் சுற்றத் தானோர் கொற்றப்பொற் றேரின் மேலான்
[2]தூயபொற் சுடர்க ளெல்லாஞ் [3]சுற்றுற நடுவட் டோன்றும்
நாயகப் பரிதி போன்றான் [4]றேவரை நடுக்கங் [5]கண்டான்.**

(இ - ள்.) தேவேந்திரனுடைய மாளிகை (யிற்பொருந்தியவர்) என்னுமாறு ஆயிரகோடி வலியதேரின்மேற் பொருந்தியவர் சுற்றிநிற்க, தேவரை நடுக்கங்கண்டவனான இந்திரசித்து,—தான் ஒரு வெற்றி பொருந்திய பொற்றேரின் மேலேறியவனாய், பரிசுத்தமாகிய அழகிய ஒளிமயமான நட்சத்திரங்களெலாஞ் சுற்றிநிற்க (அவற்றின்) இடையே தோன்றுகின்ற தலைமை பூண்ட சூரியனுக்கு ஒப்பானான்; (எ - று)—சுடர்-கிரகங்களுமாம். மனமகிழ்வு தோற்றுவித்தலால், தேருக்கு அமரநகரம் உவமை. பி - ம்:—[1] மேயின. [2]தூயவற், தூயவச் [3]சுற்றிட. [4]எவரையும். [5]கொண்டான். (2403)

12.—இந்திரசித்து கிரவுஞ்சவியூகம் வகுத்தல்.

**[1]சென்றுவெங் களத்தை [2]யெய்திச் சிறையொடு துண்டஞ் செங்கண்
ஒன்றிய கழுத்து [3]மேனி காலுகிர் [4]வாலோ டொப்பப்
பின்றலில் வெள்ளத் தானை [5]முறைபடப் பரப்பிப் பேழ்வாய்
அன்றிலி [6]னுருவ தாய வணிவகுத் தமைந்து நின்றான்.**

(இ - ள்.) (இந்திரசித்து),—போய்க் கொடிய போர்க்களத்தையடைந்து, சிறையும் மூக்கும் செங்கண்ணும் பொருந்திய கழுத்தும்

உடலும் காலும் உகிரும் வாலும் என்ற இவை ஏற்ற அளவின வாக அமைய, பின்னிடுதலில்லாத வெள்ளக்கணக்கான சேனையை முறைமைபொருந்தப் பரப்பிப் பிளவுபட்ட வாயையுடைய அன்றிலினுருவத்தைக்கொண்டதான அணியை வகுத்து(ப் போர் செய்ய)ச் சித்தனாக இருந்தான்; (எ - று.)—பி - ம்:—[1]சென்ற. [2]எய்த. [3]மெனகாமெலாள். [4]வாலிஞெப்பப். [5]முற்படப். [6]உருவமாக. (2404)

13.—சங்கநாதஞ்செய்தல்.

புரந்தரன் செருவிற் றந்து போயது புணரி யேழும்
[1]உரந்தவிர்த் தூழி பேருங் [2]காலத்து ளொலிக்கு மோதை
கரந்தது [3]வயிற்றுக் கால வலம்புரி கையின் வாங்கிச்
சிரம் [4]பொதிர்ந் தமர ரஞ்ச வூதினன் றிசையுஞ் [5]சிந்த.

(இ - ள்) இந்திரன் போரில் தந்திட்டுப்போனதும் ஏழுசமுத்திரங்களும் (மற்றைப்பொருளின்) உரத்தைத் தவிர்த்துக் கற்பம் மாறுங்காலத்தில் ஒலிக்கின்ற ஓதையை(த் தன்) வயிற்றினுள்ளே ஒளித்து வைத்துக்கொண்டிருப்பதுமான யமன்போல்அச்சம் விளைக்கும் வலம்புரிச்சங்கத்தை(த் தன்)கையிலே வாங்கிக்கொண்டு, அமரர் தலைநடுக்கமெடுத்து அஞ்சும்படியும் திசைகள் நிலைகெட்டிடும்படியும் ஊதினான்; (எ - று.)—பி - ம்:—[1]உரத்தையுற்று. [2]காலத்தின். [3]வயிற்றுள். [4]பொதிந்து. [5]தீந்த. (2405)

14 —சங்கத்தொனிகேட்டு வானரச்சேனை நிலைகெட்டோட, இந்திரசித்து நாணொலிசெய்து ஆரவாரித்தல்.

சங்கத்தின் முழக்கங் கேட்ட [1]கவிப்பெருந் தானை [2]யானை
சிங்கத்தின் முழக்கங் கேட்ட தொத்தது விரிந்து சிந்தி
[3]எங்குற்ற தென்னு வண்ண [4]மிரிந்ததீ தன்றி யேழை
பங்கத்தன் மலைவி [5]லென்னச் சிலையொலி பரப்பி யார்த்தான்.

(இ-ள்.) சங்கத்தின் முழக்கத்தைக்கேட்ட பெரிய குரங்குச்சேனை சிங்கத்தின் முழக்கங்கேட்டதான யானையை யொத்ததாய், (நாற்புறமும்) பரவிச் சிதறி எங்கேசென்றது என்பதுதெரியாமல் நிலைகெட்டோடிற்று; (நிகழ்ந்த) இது அல்லாமல், உமாதேவியை (வாம) பாகத்திலே கொண்டவனான சிவபிரானது மலைவில்லை யொப்ப(த் தன்)வில்லின் ஒலியைப்பரவச்செய்து, (இந்திரசித்து, தானும்) ஆரவாரித்தான்; (எ - று.)பி-ம்:—[1]வயப். [2]தள்ளிச்சிங்கத்தினுதம் வந்துசெவிப்புகவிலங்கு. [3]எங்குத்தம்முயிரினோடும். [4]இரிந்தனதிருந்தவ், இரிந்தபோலிரிந்த, இரிந்தபோலாங்க. [5]அன்ன. ()

15.—வானரத்தின் நிலைமை.

கீண்டன செவிக ணெஞ்சங் கிழிந்தன கிளர்ந்து செல்லா
மீண்டன கால்கள் கையின் விழுந்தன மரனும் வெற்பும்
பூண்டன நடுக்கம் வாய்கள் புலர்ந்தன மயிரும் [1]பொங்க
மாண்டன மன்றோ என்ற வானர மெவையு மாதோ.

(இ-ள்.) வானரங்களெவையும்,—செவிகள் கிழியப்பெற்றன; மனம் விண்டன; கால்கள் உற்சாகங்கொண்டு செல்லமுடியாதன

வாகத் திரும்பின; (அவற்றின்) கைகளிலிருந்து மரமும் மலைகளும் (கீழ்) விழுந்தன; நடுக்கங்கொண்டன; வாய்கள் உலரப்பெற்றன; (உடல்) மயிரும் மிகுதியாகச்சிந்த 'உயிர்மாண்டேபோயினோமல்லவா?' என்றன; (எ-று.)—இச்செய்யுளில் அச்சத்தின் மெய்ப்பாடுகளைக் காண்க. என்ற - பலவின்பால்முற்று. பி-ம்:—[1]பொங்கா.

16.—சுக்கிரீவன் முதலிய சிலரன்றி மற்றையோர் நிலைகெட்டோடியமை.

செங்கதிர்ச் செல்வன் சேயுஞ் சமீரணன் [1]சிறுவன் றானும்
அங்கதப் பெயரி னானு மண்ணனு மிளைய கோவும்
வெங்கதிர் மௌலிச் செங்கண் வீடணன் [2]முதலாம் வீரர்
இங்கிவர் நின்றார் அல்ல திரிந்தது [3]குரங்கி னீட்டம்.

(இ - ள்.) செந்நிறக்கிரணங்களையே செல்வமாகவுடைய சூரியனது புதல்வனான சுக்கிரீவனும் வாயுபுத்திரனான அநுமானும் அங்கதனென்ற பெயரையுடையவனும் ஸ்ரீராமனும் இளையபெருமாளும் கொடிய கிரணங்களையுடைய சூரியனைப்போன்று ஒளி வீசுகிற கிரீடந்தரித்த செங்கண்ணையுடைய விபீஷணனும் முதலிய வீரர் இங்கே நின்றார்: இவர்களல்லாமல் மற்றைக் குரங்குக்கூட்டம் நிலைகெட்டோடிற்று; (எ-று.)—வெங்கதிர்-பண்புத்தொகையன்மொழி. பி-ம்:—[1]தனயன். [2]முதல, முதலர். [3]சேனையெல்லாம். (2408)

17.—வானரச்சேனை இரிந்தோடியதாக, அரக்கர்சேனை கிளர்ந்து ஆரவாரிக்க, அவ்வரக்கர் போர்க்களத்துப் புகுதல்.

படைப்பெருந் தலைவர் நிற்கப் பல்பெருந் [1]தானை வேலை
உடைப்புறு புனலி னோடை வூழிநா ளுவரி யோதை
[2]கிடைத்திட [3]முழங்கி யார்த்துக் [4]கிளர்ந்தது நிருதர் சேனை
[5]அடைத்தது திசைக ளெல்லாம் அன்னவ [6]ரகத்த ரானார்.

(இ - ள்.) படைக்குரியபெருந்தலைவர் நிற்கவும் மிகப்பெரிய (குரங்குச்) சேனாசமுத்திரம் கரையுடைத்துக்கொண்டு செல்லுகின்ற (பெருக்கு) நீர்போல் ஓடாநிற்க,—நிருதர்சேனையானது,—யுகாந்த காலத்துக் கடலினின்று தோன்றும் பேரொலி யுண்டாகுமாறு முழங்கியாரவாரித்து உற்சாகமூண்டதாகித் திசைகளெல்லாவற்றிலும் (வெற்றிடமில்லையாம்படி) நெருங்கி நின்றது: அவ்வரக்கரும், போர்க்களத்தவரானார்; (எ-று.)—படைப்பெருந்தானைத்தலைவர் - செங்கதிர்ச்செல்வனசேய் முதலியோர். இச்செய்யுள், "செங்கதிர்" என்ற பாடலின்முன் சில பிரதிகளிலுள்ளது. பி-ம்:—[1]சேனைவெள்ளம். [2]கிடைத்திடை. [3]பொங்கி. [4]கிளர்ந்தெழும், கிளைத்தெழும். [5]அடைத்தன. [6]கதத்தரானார். (2409)

18.—அநுமான் தோளின்மீது ஸ்ரீராமனும் அங்கதன் தோளின்மீது இலக்குமணனும் ஏறிநிற்க, வானவர் பூ மழை பொழிதல்.

மாருதி யலங்கல் மாலை மணியணி வயிரத் தோண்மேல்
வீரனும் வாலி சேய்தன் விறல்கெழு சிகரத் தோண்மேல்
ஆரியற் கிளைய கோவு [1]மேறின ரமரர் வாழ்த்தி
வேரியம் பூவின் மாரி சொரிந்தன ரிடை[2]வி டாமை.

(இ-ள்.) அநுமானுடைய அசையுந்தன்மையுள்ள மாலையை யணிந்த அழகிய உறுதியான தோளின்மேல் ஸ்ரீராமனும், வாலியின் புதல்வனான அங்கதனுடைய வலிமைவிளங்குகின்ற (மலைச்) சிகரத்தையொத்த தோளின்மீது இளையபெருமாளும் ஏறினார்கள்; (அப்போது) தேவர்கள், வாழ்த்தித் தேனைக்கொண்ட அழகிய மலர்மாரியை இடைவிடாமற் சொரிந்தனர்;(எ-று.)—இச்செய்யுள், சிலபிரதிகளி லில்லை. பி-ம்:—[1]மேவரின்று. [2]விடாமல். (2410)

19.—அநுமான் அங்கதன் இவர்களின் தோளின்மேலிருக்கும் இராமலட்சுமணரின் வருணனை.

விடையின்மேற் கலுழன் றன்மேல் வில்லினர் விளங்கு கின்ற
கடையின்மே லுயர்ந்த [1]காட்சி யிருவருங் கடுத்தார் கண்ணுற்று
அடையின்மே ருவையுஞ் சாய்க்கு மனுமனங் கத[2]னென் றின்னார்
தொடையின்மேன்[3]மலர்ந்த தாரர் தோளின்மேற் றோன்றும் வீரர்.

(இ-ள்.) கண்ணுக்குப்புலனாகிச் சேருமாயின் மேருவையும் அழிக்கவல்ல அநுமன் அங்கதன் என்ற இவர்களின் தோளின்மேல் தோன்றுகின்றவரும், தொடுத்தநிலையில் மலர்ந்த பூமாலையணிந்தவரும், வில்லினருமான வீரர் [இராமலட்சுமணர்]—விருஷபத்தின் மீதும் கருடன்மீதும் விளங்குகின்ற எல்லையில்லாமல் மேன்மையாக வுயர்ந்த காட்சியையுடைய (திருமால் சிவன் என்ற) இருவரையும் ஒத்தார்; (எ-று.)—பல இடங்களில் உருத்திரமூர்த்தியை இலட்சுமணனுக்கு உவமை கூறுதலைக் காணலாம். மேருவையுஞ் சாய்க்குந் தோளென்க. இரண்டாம் அடியில், கடை-இலை என்று பிரிக்க. பி-ம்:—[1]காட்சிக்கு. [2]என்றன்னோர், அன்றன்னார், என்றின்ன. [3]அமர்ந்த, உயர்ந்த. (2411)

20.—நீலனை முதலாகவுள்ள படைத்தலைவர் பொருமாறு சமைந்துநிற்க, ஸ்ரீராமன் விலக்கிக் கூறத் தொடங்குதல்.

[1]நீலனை முதலா யுள்ள நெடும்படைத் தலைவர் நின்றார்
தாலமு மலையு மேந்தித் தாக்குவான் [2]சமைந்த வேலை
ஞாலமும் விசும்புங் காத்த நாணிலக் கிழவன் மைந்தன்
[3]மேலமர் [4]விளைவை யுன்னி [5]விலக்கினன் விளம்ப லுற்றான்.

(இ-ள்.) நீலனை முதலாகவுடைய நெடிய படைத்தலைவர் பனைமரங்களையும் மலைகளையும் ஏந்திக்கொண்டு நின்றவராய்த் தாக்குமாறு முயன்ற பொழுதில், மண் விண் என்றஇரண்டையுங் காத்த சக்கரவர்த்தி திருக்குமாரனான ஸ்ரீராமன்,—மேல் நிகழும்போர் விளைவைக்கருதி, விலக்கினனாய் (ப்பின்வருமாறு) கூறத்தொடங்கினான்; (எ-று.)—அதனை மேற்கவியிற் காண்க. பி-ம்:—[1]நீலனே. [2]சமையுங்காலை. [3]மேலமை, மேலவாம் [4]வினையை. [5]விலங்கினன், வினவினான். (2412)

21.—'இந்திரசித்து விடும் கடவுட்படையைத் தாங்க முடியாதாகையால் பின்னிரையில் நிற்க' என்று நீலன் முதலியோர்க்கு ஸ்ரீராமன் கூறல்.

கடவுளர் [1]படையை நும்மேல் வெய்யவன் றுரந்த [2]காலை
தடையுள [3]வல்ல [4]தாங்குந் [5]தன்மையி [6]ரல்லிர் தாக்கிற்கு

இடையுள [7]தெம்பா னல்கிப் [8]பின்னிரை நிற்றி ரீண்டிப்
படை[9]யுள தனையு மின்றெம் விற்றொழில் பார்த்தி ரென்றான்.

(இ - ள்.) 'கொடியவனான இந்திரசித்து தெய்வப்படைகளை நும்மீது விடுத்த போது, (அவை மரம் மலை முதலியவற்றால்) தடைப்படுவனவாகா: (நீங்களும் அவற்றைத்) தாங்கும்வல்லமை யுடையீரல்லீர்; தாங்குதற்கு (வேண்டியதாய்) உள்ளதாகிய இடத்தை இங்கே [முன்னிரையில்] எமக்குக்கொடுத்திட்டுப் பின் வரிசையில் நில்லுங்கள்; இந்த (அரக்கப்) படை உளவரையும் இன்று எம்முடைய வீற்றொழிலைக் காணுங்கள்' என்று கூறினான், (இராமன்); (எ - று.)—பி - ம்:—[1]படைகள். [2]காலங். [3]அல்லது, அல்லல். [4]ஆகும். [5]தானையிர், தன்மையால். [6]வீரத்தானைக்கு, [7]ஓம்பல். [8]பின்னுற. [9]உளவதனையெம்பி, உளதனையேயின்றெம். உளதனையென்றம்பி, உளதனையுமெம்பி. (2413)

22.—இராமலட்சுமணர் அரக்கர்சேனையோடு பொருதல்.

அருண்முறை யவரு நின்றா ராண்டகை வீரர் ஆழி
உருண்முறை தேரின் மாவி னுடைமால் வரையி [1]னூழி
இருண்முறை நிருதர் தம்மே [2]லேவின ரிமைப்பி லோரும்
மருண்முறை [3]யெய்திற் றென்பர் சிலைவழங் கசனி மாரி.

(இ-ள்.) (பின்பு இராமபிரானது) அருளின்முறையிலே [இராமன் சொல்லியபடியே] அந்தவானரரும் (பின்னிரையில்) நின்றார்: ஆண்மைக்குணமுள்ள வீரரான இராமலட்சுமணரும்,(பொருமாறு அமைந்து நின்றவர்களாய்), சக்கரம் உருளுகின்ற முறைமையினாற் செல்லுகின்ற தேரின்மீதும் குதிரைமீதும் முகபடாமணிந்த பெரிய மலைபோன்ற யானைமீதும் ஊழிக்காலத்து இருளின் தன்மையைக் கொண்ட [மிக்ககருநிறமுள்ளவரான] அரக்கர்மீதும் வில்லானது வெளியிடுகின்ற இடியேற்றோடுகூடிய (அம்பு) மழையை ஏவினர்; (அதுகண்ட) இமையாக்கண்ணரான தேவர்களும், மருளும்காலம் உண்டாயிற்று என்பவராயினர்: (எ - று.)—எல்லாம் அழியும் பிரளயகாலத்து எங்கும் இருள்மயமாக இருக்குமென்க. பி - ம்:— [1]ஊழின். [2]ஏவினான். [3]எய்திநொய்திற்சிலைவழங்கசனிகேட்டார்.()

23.—இராமலட்சுமணருடைய வீரத்தொழிலின் சிறப்பு: கவிக்கூற்று.

இமைப்பதன் முன்னம் வந்த [1]விராக்கத வெள்ளந் தன்னைக்,
குமைத்தொழில் புரிந்த வீரர் தனுத்தொழில் [2]குறித்துஇன் றெம்
மால், [3]அமைப்பதென் பிறிதொன் [4]றுண்டோ [5]மேருவென் றமைந்த
வில்லான், உமைக்கொரு பாக னெய்த புரங்களி னுருங்கி வீழ்ந்த.

(இ-ள்.) (பொருமாறு) வந்த வெள்ளக்கணக்கான இராக்கத சேனையை இமைப்பதற்கு முன்னமே அழிக்குந்தொழிலைப் புரிந்த வீரரான இராமலட்சுமணரின் வில்லின் செயலைக் குறித்து, இப்போது எம்மால் சொல்லத்தக்கது யாதுஉளது? உமாதேவியார்க்கு (த் தன்) வாமபாகத்தைக் கொடுத்தவனான சிவபெருமான் மேரு என்று அமைந்தவில்லால் எய்த திரிபுரத்து அசுரசேனைபோல உயிரொழிந்து வீழ்ந்தன (என இவ்வாறு சொல்லலாமேயன்றி),

வேறொன்று உளதோ? (எ - று.)—ஒருங்குதல்-அழிதல். பி-ம்:—[1] இராக்கதர் வேலைதன்னை. [2] குறைந்தின்றம்பால். [3] அமைப்பதின். [4] ஆண்டு, ஈண்டு. [5] மேகம். (2415)

24.—இராமலக்ஷ்மணரின் போர்த்திறனை இந்திரசித்து காணுதல்.

தேரின்மேற் சிலையி னின்ற விந்திர சித்தென் றோதும்
வீரருள் வீரன் கண்டான் [1]விழுந்தன விழுந்த வென்றும்
பாரின்மே [2]னோக்க [3]லன்றேற் பட்டனர் பட்டா ரென்றும்
போரின்மே [4]னோக்கி லாத விருவரும் பொருத பூசல்.

(இ - ள்.) (மேன்மேலும்) விழுந்தபடியேயுள்ளன என்று சொல்லுதற்கு இடமான (போர்செய்யும்) பூமியின்மீது (சேனைகள் இறந்து விழுந்துகொண்டிருப்பதைக்) காண்பதல்லது (இன்னார்) பட்டனர் (இன்னார்) பட்டார் [இறந்தார்] என்று பகுத்துச் சொல்லத்தக்க போரின்மேல் நோக்கமுடியாத வகையாக இருவரும் பொருத (உக்கிரமும் விரைந்துசெய்யப்படுவதுமான) போரை, தேரின்மீது சிலையை யூன்றிக்கொண்டுநின்ற இந்திரசித்தென்று சொல்லப்பட்ட வீரர்க்குள் வீரன், கண்டான்; (எ - று.)

இராமலட்சுமணர் அப்போது பொருத பூசலானது போர்க்களத்தில் சேனைகள் உயிர்மடிந்து விழுந்துகொண்டே யிருக்கின்றன என இம்மாத்திரஞ் சொல்லலாமே தவிர,இன்னார் இறந்தார் இன்னாரிறந்தாரென்று கண்டு குறித்துச்சொல்வதற்கும் முடியாதவாறு மிகவும் உக்கிரமும் விரைவுமாக நிகழ்ந்தது: இந்திரசித்து எதிர்த்துப் பொரமுடியாது அப்போரை வில்லை யூன்றிக்கொண்டு கண்டானென்பதாம். பி-ம்:—[1] வீழ்ந்தனர் வீழ்ந்த. [2] நோக்க, நோக்கின். [3] அன்றே. [4] நோக்கியிந்த, நோக்கிலீதிவ். (2416)

25.—யானைமுதலியன பட்டதுகண்டு, இந்திரசித்து திகைப்படைந்து வெருவிக் கூறுதல்.

யானைபட் டனவோ வென்று னிரதமிற் றனவோ வென்றான்
மானமா [1]வந்த வெல்லாம் மறிந்தொழிந் தனவோ வென்றான்
ஏனைவா ளரக்க ரியாரு மில்லையோ வெடுக்க வென்றான்
வானுயர் பிணத்தின் குப்பை மறைத்தலின் மயக்க முற்றான்.

(இ-ள்.) (இந்திரசித்து), வானம்வரையில் ஓங்கிய பிணத்தின் குவியல் (எதிரிகளைத் தெரியவொட்டாமல்) மறைப்பதனால் திகைப்படைந்தவனாகி, யானைகள் இறந்தனவோ என்றான்; இரதங்கள் முறிந்தனவோ என்றான்; மானமுள்ள குதிரைகள் வந்தனஎல்லாம் உயிர்மடிந்துபோயினவோ என்றான்; (இறந்து போனவர்களை) எடுத்து அப்பாற்போடுதற்கு மற்றும் வாட்படையையுடைய அரக்கர் எவரும் இல்லையோ என்றான்; (எ - று.)—பி-ம்:—[1] ஆனதெல்லா மடிந்தழிந்தன. (2417)

26.—ராமலட்சுமணரின் போர்த்திறமையை இந்திரசித்து வியத்தல்.

செய்கின்றா ரிருவர் வெம்போர் சிதைகின்ற சேனை [1]நோக்கின்
ஐயர்தா [2]னில்லா வெள்ள [3]மறுபது வீகவென்று

வைகின்ற ⁴ரல்ல ராக வரிசிலை வலத்தான் மாள
எய்கின்ற ரல்ல ⁵ரீதெவ் ⁶விந்திர சால மென்றான்.

(இ - ள்.) கொடியபோரைச் செய்கின்றவரோ, இருவரே? அழிந்து வீழ்கின்ற சேனையைப் பார்த்தாலோ, ஐயமில்லாத அறுபதுவெள்ளமாகும்: (இவர் 'அறுபது வெள்ளஞ்சேனையையும்) அழிந்திடுக' என்று வைதல்மூலமாகச் (சேனைகளைச்) சிதைக்கின்றார்; அங்ஙனல்லராக, கட்டமைந்தவில்லின் வலத்தினால் (உயிர்) மாளுமாறு எய்கின்றவரல்லர்: இவ்வண்ணம் நிகழ்ந்தது, என்ன இந்திரசாலமோ! என்றுகூறினான், (இந்திரசித்து); (எ-று.) —எய்து அறுபதுவெள்ளஞ் சேனைகளை இருவர் இவ்வளவு சொற்பகாலத்துக்குட் சிதைத்தல் இயலாத காரியம் என்றபடி: பி-ம்:—[1]நோக்கி. [2]அறுக, இல்லை. [3]அறுபதும்வீக. [4]அல்லராகின், அல்லவாகின். [5]ஈதாம், ஈதோர், எந்த. [6]இந்திரஞாலம். (3418)

27.—இதுமுதல் மூன்றுகவிகள்-போரின் நிகழ்ச்சியை இந்திரசித்து வியப்புடன் கவனித்துப்பார்த்தலைக் கூறும்.

அம்பின்மா மழையை [1]நோக்கும் உதிரத்தி னாற்றை நோக்கும்
உம்பரி [2]னளவுஞ் சென்ற பிணக்குன்றி [3]னுயர்வை நோக்கும்
கொம்[4]பற வுதிர்ந்த முத்தின் குப்பையை நோக்கும் [5]கொன்ற
தும்பியை நோக்கும் [6]வீரர் சுந்தரத் தோளை நோக்கும்.

(இ - ள்.) (இந்திரசித்து), அம்பினாலியன்ற பெருமழையைப் பார்ப்பான்; உதிரத்தினாலியன்ற நதியைப் பார்ப்பான்; வானம் வரையிலோங்கிய பிணமலையின் ஓக்கத்தைப் பார்ப்பான்; தந்தம் அற்றதனா லுதிர்ந்த முத்தின் குவியல்களைக் காண்பான்; கொல்லப்பட்ட யானைகளைக் காண்பான்; (இவற்றிற்கெல்லாம் ஏதுவான) வீரர்களின் [ராமலக்ஷ்மணரின்] அழகியதோளைப் பார்ப்பான்; (எ - று.)—பி - ம்:—[1]நோக்கி. [2]அளவினின்ற, அணவிநின்ற, அளவிச்சென்ற. [3]ஒழுக்கை. [4]இற, உற. [5]கொண்ட [6]வீரன். இங்கே ஒரு செய்யுள் சிலபிரதியிற் காணப்படுகின்றது வருமாறு:-

தலைகளை நோக்குந் தான்றன் சரங்களை நோக்குந் தன்கைச்
[1]சிலையினை நோக்குஞ் செம்பொற் [2]றேரினை நோக்குஞ் செய்த
கொலைகளை நோக்குங் கொன்ற கொற்றவர் தம்மை நோக்கும்
அலை[3]பொருங் குருதி யென்னு மளக்கரை யமைய நோக்கும்.

இச்செய்யுளிற் கூறிய விஷயங்கள் பலவும், "மலைகளை நோக்கும்" என்ற பாடலில் வந்திருந்தலால், இது, வெள்ளிப்பாட்டாயிருக்கலாமென்று தோன்றுகின்றது பி - ம்:—[1]சிலைகளை. [2]தேர்களை. [3]பெறு. (2419)

28. மலைகளை [1]நோக்கும் மற்றவ் வானுறக் [2]குவிந்த வன்கண்
தலைகளை நோக்கும் வீரர் சரங்களை நோக்கும் [3]தாக்கி நோக்கும்
உலைகொள்வெம் பொறியி னுக்க படைக்கலத் [4]தொழுக்கை
சிலைகளை நோக்கும் நாணேற் [5]றிடியினைச் செவியி [6]னோக்கும்.

(இ - ள்.) மலைகளை நோக்குவான்; மற்று வானுற (ஓங்கிக்) குவிந்த கொடிய கண்களைக்கொண்ட அந்தத் தலைகளை நோக்கு

வான்; (இவ்வாறு குவிதற்குக்காரணமான) வீரரின் சரங்களின் வல்லமையை யாராய்வான்: மோதி உலைக்களத்துக்கொண்ட நெருப்புப் பொறியினுடனே கீழ்விழுந்துகிடக்கின்ற படைக்கலங்கள் நீளச்சென்றிருத்தலைப் பார்ப்பான்; (இங்ஙன் ஆகுமாறு அம்பு மழை பொழிகின்ற ராமலக்ஷ்மணரின்) விற்களைப் பார்ப்பான்; (அன்னார்) நாணேற்றி யொலிப்பிக்கின்ற பேரொலியைச் செவியினாற் காண்பான்; (எ - று.)

நோக்குதல், ஐம்பொறிகட்கும் உள்ள செயலாகும். மலைகள் - ஒடிந்து வீழ்ந்ததேர்க்குலங்களென்றேனும், யானைகளென்றேனும், அரக்கவீரரின் உடற்குவையென்றேனுங் கொள்க. உலைக்களத்திற் காய்ச்சி யடிக்கும்போது படைக்கலம் தீப்பொறிகளுடன் இருப்பது போலப் போரில் தாக்கும்பொழுது இருக்குமாதலால், 'தாக்கி உலைகொள்வெம்பொறியி னுக்க படைக்கலம்' என்றார். ஒழுக்கு - ஒழுங்காயிருப்பதுமாம். இச்செய்யுள் "ஆர்க்கின்ற" (33) என்ற பாடலின்பின் சில பிரதியி லுள்ளது. பி-ம்:—[1] நோக்குமா போல். [2] குவித்த. [3] தாங்கி, தாக்கும். [4] ஒழுங்கை. [5] இடிகளை. [6] ஏற்கும். (2420)

29. ஆயிரந் தேரை யாட லானையை யலங்கன் மாவை
ஆயிரந் தலையை யாழிப் படைகளை [1] யறுத்தும் அப்பாற்
போயின பகழி வேகத் தன்மையைப் புரிந்து நோக்கும் [கும்.
பாயும்வெம் [2] பகழிக் கொன்றுங் கணக்கிலாப் பரப்பைப்பார்க்

(இ - ள்.) ஆயிரந்தேர்களையும், வலிமையுள்ள யானைகளையும், கூத்தாடுந் தன்மையுள்ள குதிரைகளையும், (ஆயிரக்கணக்கான அரக்கர்) தலைகளையும், அழிக்குந்தன்மையுள்ள அரக்கர் படைக்கலங்களையும் அறுத்திட்டும், (அமையாது) அப்பாற்போயின வாகிய அம்புகளின் வேகத்தன்மையை விரும்பிப் பார்ப்பான்; பாய்கின்ற வெவ்வியபகழிக்கு ஒரு வரம்பும் இல்லாத பரப்பைப் பார்ப்பான்; (எ - று.)

'வீரர்சரங்களைநோக்கும்' என்று சரத்தைப்பற்றிக் கீழ்க்கவியிற்சொல்லிய கவி, அச்சரங்கள் யானைமுதல் படைக்கலம் ஈறாகக் கூறியவற்றை யழிக்குந் தொழிற்சிறப்பை இங்கே எடுத்துக் கூறுகின்றாரென்க. பி-ம்:—[1] அறுக்கும். [2] பகழியென்னும். (2421)

30.—அறுபதுவெள்ளவரக்கரின் படைகளும் சாம்பராய்ப் போய்விட்டதை இந்திரசித்து நோக்குதல்.

அறுபது [1] வெள்ள மாய வரக்கர்த மாற்றற் [2] கேற்ற
எறிவன [3] வெய்வ பெய்வ வெற்றுறு படைக ளியாவும்
பொறிவனம் வெந்த போலச் [4] சாம்பராய்ப் [5] போய தல்லால்
செறிவன வில்லா [6] வாற்றைச் சிந்தையால் தெரிய நோக்கும்.

(இ - ள்) அறுபதுவெள்ளந் தொகையினரான அரக்கர், தம் வல்லமைக்கு ஏற்றனவான எறிவனவும் எய்வனவும் பொழிவனவும் தாக்குவனவுமான படைக்கலங்கள்யாவும், தீப்பொறிபறக்க

வனம் வெந்ததுபோலச் சாம்பராய்ப் போனதல்லாமல் (தாக்குமாறுவந்து) நெருங்குபவை இல்லாத தன்மையை மனத்தினால் ஆராய்ந்து பார்க்கலானான்; (எ-று.)— இச்செய்யுள், சிலபிரதிகளில் "வயிறலைத்து" என்ற அடுத்த பாடலுக்குப்பின் காணப்படுகின்றது. பொறி - வண்டுமாம். பி-ம்:—[1] வெள்ளத்தாய. [2] ஒத்த. [3] எய்யப்பெற்றது. [4] சாம்பலாற். [5] போவது. [6] வார்த்தை. (2422)

31.—இந்திரசித்து படுகளநிகழ்ச்சியைப் பார்த்தல்.

வயிறலைத் தோடி வந்து கொழுநர்மேன் மகளிர் மாழ்கிக்
குயிறலத் துக்க வென்னக் குழைகின்ற குழைவை நோக்கும்
எயிறலைத் [1]திடிக்கும் பேழ்வாய்த் தலையிலா வாக்கை யீட்டம்
பயிறலைப் பறவை [2]பாரிற் படிகிலாப் படியைப் [3]பார்க்கும்.

(இ-ள்.) வயிற்றிலடித்துக்கொண்டு ஓடிவந்து (தம்) கணவர் மீது மகளிர் மனம் வருந்திக் குயில் பூமித்தலத்திலே (இறகொடிந்து) வீழ்ந்துகிடக்கின்றன என்னுமாறு வருந்துகின்ற வருத்தத்தைப் பார்ப்பான்; பல்லைக்கடித்துக்கொண்டு சத்தமிடுகின்ற பிளவுபட்ட வாயையுடைய தலைகளைப் பெற்றிராத உடலின் கூட்டம் [கபந்தங்கள்] கூத்தாடுதலையும், (அதனால் அஞ்சிப்) பறவைகள் பூமியிற்படியமுடியாத தன்மையையும் பார்ப்பவனானான்; (இந்திரசித்து); (எ-று.)

பயிறல்-பழகுதல்: இங்கே கூத்தாடுதல். தங்கணவர் இறந்ததுபற்றிப் பூமியில் விழுந்துஅழுகின்ற அரக்கியர்க்குக் குரலிற் குயில்உவமை. 'எயிறலைத்திடிக்கும் பேழ்வாய்தலை' என்றது-இப்போது கபந்தமாயிருக்கும் யாக்கைக்கு உரிய வீரர் பொருங் காலத்திய நிலையைக் கூறியதாம். பி - ம்:—[1]இடுக்கும். [2]ஈட்டம். [3]பரப்பை. (2423)

32.—அநுமான் அங்கதன் இவர் சாரிதிரிந்த திறனை இந்திரசித்து வியத்தல்.

அங்கத ரனந்த கோடி [1]யுளரென்று மநும [2]னென்பாற்கு
இங்கினி யுலக [3]மெல்லா மிடமிலை போலு [4]மென்னும்
[5]எங்குமிம் மனித ரென்பா [6]ரிருவரே கொல்லென் றுன்னும்
சிங்கவே றனைய வீரர் கடுமையைத் [7]தெரிகி லாதான்.

(இ - ள்.) ஆண்சிங்கத்தையொத்த வீரரான அங்கதன்முதலியோரின் வேகத்தையறியமாட்டாதவனான இந்திரசித்து,—'அங்கதரென்பார் பலகோடிக்கணக்கினர்உள்ளார்' என்பான்; அநுமான் என்றுபேர்கொண்டவர்க்கு இனி இங்கேஉலகமெல்லாமும்செல்லுதற்கு இடம் போதியதாக இல்லைபோலும்' என்பான்; 'எல்லாவிடத்துமாகக் காணப்படுகின்ற இந்தமனிதரென்பவர் இருவரேதாமோ?' என்று நினைப்பான்; (எ-று.)

33ழ இராமலட்சுமணரின் வில்தொழிலின் கடுமையைக் கூறிய கவி, இதனால் அநுமான் அங்கதன் என்ற இவர்களுடைய சாரிதிரிந்த திறனைக் கூறுகின்றானென அறிக. அநுமானும் அங்கதனும் இராமலட்சுமணரைத் தோளிற்சுமந்தவண்ணம் போரிற் சாரிதிரிவதனால், எங்கும் அங்கதனும் எங்கும் அநுமானும் எங்கும் இராமலட்சுமணரும் காணப்பட்டனர். அநுமான் பெருவேகமுள்

ளவனுதலால், அவன் சாரிதிரிதற்கு இவ்வுலகமே போதாதென்று கருதினுன், இந்திரசித்து. பி - ம்:—[1]உள. [2]என்பார்க்கு. [3]யாவும். [4]என்பான். [5]எங்குமே. [6]இருவர்கொல்லென்ன, இருவரேகொல்க. [7]தெரிக்கிலாதான். (2424)

33.—இதுவரையில் நேராத நிகழ்ச்சிகளை அப்போது இந்திரசித்து காணல்.

ஆர்க்கின்ற [1]வமரர் தம்மை நோக்குமாங் கவர்க ளள்ளித்
தூர்க்கின்ற பூவை நோக்கும் துடிக்கின்ற [2]விடத்தோ ளேக்கும்
பார்க்கின்ற திசைக ளெங்கும் [3]படும்பிணப் பரப்பைப் பார்க்கும்
ஈர்க்கின்ற குருதி [4]யாற்றின் யானையின் பிணத்தை நோக்கும்.

(இ - ள்.) (இராக்கதசேனை பெரும்பாலும் அழிந்தது கண்டு மகிழ்வுகொண்டு) ஆரவாரிக்கின்ற தேவர்களைப் பார்ப்பான்; அங்குள்ள அவர் கையினுல்முகந்து தூர்க்கின்ற பூவை நோக்குவான்; (தீநிமித்தமாகத்) துடிக்கின்ற (தன்) இடத்தோளை நோக்குவான்; பார்க்கின்ற திசைகளெங்கும் விழுந்துகிடக்கும் பிணத்தின் பரப்பைப் பார்ப்பான்; குருதியாற்றினுல் ஈர்க்கப்படுகின்ற யானையின் பிணத்தைப் பார்ப்பான்; (எ-று.)—ஆங்கவர்கள் என்ற சொல், "தத்ரபவந்த:" என்ற வடமொழியின் மொழிபெயர்ப்பாய்ப் பெரியோரான அத்தேவர்களென்ற பொருளினது எனலுமாம். பி-ம்:—[1]தேவர். [2]தோளை. [3]பெரும். [4]யாற்றாடு, யாருேடி. (2425)

34.—அரக்கரிற் பெரும்பாலோர் இறந்தது கண்டும் வானரசேனை இந்திரசித்தினிடமுள்ள அச்சத்தினுல் திரும்பிவராமை.

ஆயிர கோடித் தேரு மரக்கரு மொழிய [1]அல்ல
மாயிருஞ் சேனை யெல்லா மாய்ந்தன கண்டும் வல்லை
போயின [2]குரக்குத் தானை [3]புகுந்தில தன்றே பொற்றேர்த்
தீயவன் தன்மே லுள்ள [4]பயத்தினுற் [5]கலக்கந் தீரா.

(இ - ள்.) ஆயிரங்கோடித்தேர்களும் அரக்கரும்தவிர மற்றையோரான அரககரின் மிக்கபெருஞ்சேனையெல்லாம் மாய்ந்தவற்றைக் கண்டும், விரைவாக நிலைகெட்டோடின குரங் நச்சேனை, பொற்றேரைக்கொண்ட தீயவனுன இந்திரசித்தினிடமுள்ள பயத்தினுல், கலக்கந்தீராமல் மீண்டுவந்தில து; (எ-று.)—பி-ம்:—[1]அல்லார். [1]வல்ல என்றும் பிரிக்கலாம். [2]குரங்கின். [3]புகுந்தில. [4]மனத்தினுற். [5]சிறுமைதீர்ந்தார். (2426)

35.—இராமலட்சுமணர் அரக்கரிற் பெரும்பாலோரை அழித்திட்டது கண்டு, அநுமான் தோள்கொட்டி ஆரவாரித்தல்.

தளப்பெருஞ் சேனை [1]வெள்ள மறுபதுந் தலத்த தாக
அளப்பருந் தேரி [2]னுள்ள தாயிரக் கோடியாகத்
துளக்கமி லாற்றல் வீரர் பொருதபோர்த் தொழிலை நோக்கி
அளப்பருந் தோளைக் கொட்டி யஞ்சனை [3]மதலை யார்த்தான்.

(இ - ள்.) கூட்டமான பெருத்தசேனையெல்லாம் அறுபதும் தரையில் (உயிரொழிந்து) விழுந்ததாய்விடவும், (கண்களாற் கண்டு) கணக்கிடமுடியாத தேரினுள்ள (அரக்கச்)சேனை ஆயிரங்

கோடியே எஞ்சியதாய்விடவும், கலக்கமில்லாத வல்லமையுள்ள வீரரான இராமலட்சுமணர் பொருத போர்த்தொழிலைப் பார்த்து, அஞ்சனை தேவியின் குமாரனான அநுமான், அளக்கமுடியாத [மிகப்பரந்த] (தன்) தோளைக்கொட்டி ஆரவாரஞ்செய்தான்; (எ-று.)—பி-ம்:—[1]வெள்ளத்து. [2]உள்ள. [3]சிங்கம். (2427)

36.—அநுமானது முழக்கத்தைக் கேட்ட அரக்கரின் நடுக்கம்.

ஆரிடை யனும னார்த்த [1]வார்ப்பொலி யசனி கேளாத்
தேரிடை நின்று வீழ்ந்தார் சிலர்சிலர் படைகள் சிந்திப்
பாரிடை [2]யிழிந்து போகப் பாரித்தார் பைம்பொ னிஞ்சி
ஊரிடை [3]நின்று ளாரு முயிரினோ டுதிரங் கான்றார்.

(இ-ள்.) (காணுவதற்கு) அரிய [கொடிய] போர்க்களத்தில் அநுமான் ஆரவாரித்த பேரொலியாகிய இடியைச் செவியிலேற்று, சில அரக்கர், தேரிடையினின்று (கீழ்) வீழ்ந்திட்டார்கள்; சிலர், (தாம்கையிற்கொண்டிருந்த) படைக்கலங்களைச் சிந்திப் பூமியிலே யிழிந்து (ஊர்க்குத்திரும்பிப்) போய்விடப் பரபரப்புக்கொண்டார்கள்; பசும்பொன்னாலியன்ற மதிலையுடைய ஊரிலிருந்த அரக்கர்களும், உயிருடனே இரத்தத்தைக் கக்கினார்கள் [இரத்தங்கக்கிய வண்ணம் உயிரொழிந்தார்கள்]; (எ-று.)—பி-ம்:—[1]ஆர்கலி. [2]வீழ்ந்துபோகப் பாரித்தார், அழிந்துபோதப்பரித்தனர், இருந்து வீழ்ந்து பதைத்தனர். [3]நின்றுளார் தம்முயிரொடும். (2428)

37.—அஞ்சினவர்களைச் சினந்திட்டு, இந்திரசித்து இராமலட்சுமணர் மீது வருதல்.

[1]அஞ்சினீர் போமி [2]னின்றோ ரார்ப்பொலிக்கு [3]அழியற் பாலிர்
வெஞ்சமம் விளைப்ப [4]தென்னோ [5]நீருமிவ் வீர ரோடு
துஞ்சினிர் போலு [6]மன்றோ என் றுஅவர்ச் [7]சுளித்து நோக்கி
[8]மஞ்சினிற் கரிய மெய்யா னிருவர்மே லொருவன் வந்தான்.

(இ-ள்.) மேகத்தினும் கருமையான வடிவுடைத்தவனான இந்திரசித்து,—'இன்று ஓர் ஆரவாரவொலிக்கே மனமழிவுபடுதலைக்கொண்ட தன்மையுடையவர்களாய் அஞ்சினவர்களே! (நீங்கள் திரும்பி ஊர்க்கே) போய்விடுங்கள்; (இப்படிப்பட்ட நீவிர்) கொடும் போரை விளைப்பதென்பது என்ன உள்ளது? [இப்படி அஞ்சுபவர்களாற்கடியபோர் செய்யமுடியாதென்றபடி]; நீங்களும் (உயிர்போய்த் தரையில் வீழ்ந்துகிடக்கின்ற) இந்த வீரரோடு இறந்தவரைப்போல் பயனற்றவராகவேயுள்ளீரன்றோ?' என்று (கூறி, அஞ்சிய) அவ்வரக்க வீரரைச் சினந்து பார்த்துவிட்டு, இராமலட்சுமணர் இருவரின்மீது தானொருவனாகவே வந்தான்; (எ-று.)—பி-ம்:—[1]அஞ்சினர், அஞ்சினர். [2]என்றான். [3]இழியற்பாலிர். [4]என்னே. [5]நீவிரும், நீரிரு. [6]என்றென்றவர்முகஞ், அன்றேயென்றவர். [7]சுளிய, சுளிந்து. [8]மஞ்சினும். (2429)

38.-ஆயிரகோடித்தேரும் ரோஷங்கொண்டு பொரப்புகுதல்.

அக்கணத் தார்த்து மண்டி யாயிர கோடித் தேரும்
புக்கன நேமிப் பாட்டிற் கிழித்தன புவன மென்னத்

[1]திக்கணி நின்ற [2]யானை சிரம்பொதி ரெறியப் [3]பாரின்
உக்கன விசும்பின் மீன்க ளுதிர்ந்திடத் தேவ ருட்க.

(இ - ள்.) அந்தக்கணத்தில்தானே, (அதுகண்டு), திக்குக்கு அலங்காரமாகநின்ற திக்கஜங்களெல்லாம் (தமது) சிரம் நடுக்க லெடுக்கவும், ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்கள் பூமியில்விழுந் தனவாக உதிர்ந்திடவும், தேவர்கள் அஞ்சவும், ஆயிரகோடித் தேரும் ஆரவாரஞ்செய்து நெருங்கிச் சக்கரம் ஓடுவதனுற் புவனம் கிழிவனவாய்விடுமென்று (யாவரும்) கருதுமாறு (பேரதிர்ச்சியுண் டாகப் போர்க்களத்திற்) புக்கன; (எ - று.)—பி-ம்:—[1]திக்கிடை, திக்கிடம். [2]ஆனை. [3]சிந்தி. (2430)

வேறு.

39.—இதுமுதல் ஐந்துகவிகள்-ஒருதொடர்: இலட்சுமணன் பொருது இந்திரசித்தின் தலையைவீழ்த்துவதாகச் சபதங் கூறுதல்.

மாற்றமொன் றிளையவன் [1]வளைவிற் செங்கரத்து
[2]ஏற்றினன் வணங்கிநின் றியம்பு வான்இகல்
[3]ஆற்றின [4]னரவுகொண் [5]டசைப்ப ஆரமர்
தோற்றன னென்று[6]கொண் டுலகஞ் சொல்லுமால்.

(இ-ள்.) (நாணேறிட்டதனுல்) வளைந்துள்ள வில்லைத் (தன்) செவ்வியகையிலேந்திய (ஸ்ரீராமனை) வணங்கிநின்று, இளையபெரு மாள், ஒரு வார்த்தையை (ப் பின்வருமாறு) கூறலானுன்:—வல்ல மையை (மிகுதியாகக்) காட்டியவனுகிய இந்திரசித்து, நாகாஸ் திரத்தைக்கொண்டு கட்டியதனுல் அரியபோரில் (நான்) தோற்றே னென்று உலகஞ் சொல்லும்; (எ-று.)—'இயம்புவான்' என்பதை, இச்செய்யுளின் பின்னீரடிமுதல் நான்கரைச்செய்யுள்களால் கூறு வர். என்றுகொண்டு, கொண்டு-அசை. பி - ம்:—[1]மழையிற், மழையின். [2]ஏற்றினை. [3]ஆற்றலன். [4]ஆற்றல்கொண்டு. [5]இசைப்ப. [6]எனை. (2431)

40. காக்கவுங் [1]கிற்றிலன் காத னண்பரைப்
போக்கவுங் [2]கிற்றில னொருவன் போய்ப்பிணி
ஆக்கவுங் [3]கிற்றிலன் [4]வென்றி யாருயிர்
நீக்கவுங் [5]கிற்றில [6]னென்று நின்றதால்.

(இ - ள்.) (யாதொருதீங்கும் வரவொட்டாமல்) அன்புள்ள நண்பரைக் காக்கவும் வல்லமையற்றவன்: (அவர்கட்குநேர்ந்த தீங் காகிய பாசக்கட்டைப்) போக்கவும் வல்லமையற்றவன். ஒருவ னுகப்போய் (த் தீங்குபுரிந்த அந்த இந்திரசித்துக்கு)ப் பிணிப்பை யுண்டாக்கவும் வல்லமையற்றவனுகி விட்டான்; (இங்ஙனுள் ளவன்) வெற்றிபொருந்திய தனது அரியஉயிரை நீக்கவல்லமை யற்றவனுனுனென்று (வசைச்சொல்லொன்று உலகத்தில்) நின் றிட்டது; (எ - று.)

நண்பர்க்குத் தீங்குவராமலே காக்கவேண்டும்: அது முடியா விட்டாலும் அவர்க்குத் தீங்குவந்தபின்பாவது அந்தத்தீங்கை

[நாகபாசப்பிணிப்பைப்] போக்கவாவதுவேண்டும்: அதுவும் செய்யாவிட்டாலும், பிணித்தலைவிளைத்த அந்தப்பகைவனுக்கு மாறாகப் பிணிப்பையாவது ஆக்கவேண்டும்: அதுவும் செய்ய மாட்டாதான் தன்னுயிரைப்போக்குவது உத்தமம்: அதுவும் செய்ய வில்லையென்ற ஏச்சு உலகத்தில் எனக்குநிலைத்துநின்றதென்ப தாம். (எ-று.)—வென்றியார்-இப்போது வெற்றிபெற்ற பகைவர் [இந்திரசித்து] எனினுமாம். பி - ம்:—[1]கற்றிலன். [2]அமரின். [3]ஒன்று. (2432)

41. இந்திரன் பகையெனு மிவனை யென்சரம்
அந்தரத் தருந்தலை [1]யறுத்தி லாதெனின்
வெந்தொழிற் [2]செய்கையன் விருந்து மாய்நெடு
மைந்தரிற் கடையெனப் [3]படுவன் வாழியாய்.

(இ - ள்.) வாழ்ச்சிபெறுபவனானவனே! இந்திரன் பகைவனென்கின்ற இவனுடைய அரிய தலையை என்சரம் அந்தரத்தில் அறுத்துத்தள்ளாதெனின், கொடுந்தொழிலைச் செய்கின்றவனுக்கு (யமனுக்கு] விருந்தாகி [இறந்துபோய்]ப் பெருமைபெற்ற மனிதரிற் (சேராது) கடைப்பட்டவனென்னப்படுபவனாவேன்; (எ-று.) —பி.ம்:—[1]அறுக்கிலாதெனின், அறுக்கலாதெனின். [2]செய்கையர் விருந்துமாய், செவ்வையின் முந்துமேல். [3]வாழ்வன், திரிவன். ()

42. நின்னுடை [1]முன்னரியான் நெறியி னீர்மையான்
தன்னுடைச் சிரத்தையென் சரத்திற் றள்ளினால்
பொன்னுடை [2]வனைகழற் பொலம்பொற் றோளினாய்
என்னுடை யடிமையு [3]மிசையிற் றுமரோ.

(இ-ள்.) பொன்னாலியன்றுபூண்ட வீரக்கழலுடனே அழகிய பொன்னணிகளையணிந்த தோள்களையுடையவனே! உன்னுடைய (கண்)முன்பாக யான் நன்னெறியிற் செல்லுந்தன்மையில்லாதவனை இந்திரசித்தினுடைய தலையை என் அம்பினால் தள்ளினால்தான், என்னுடைய அடிமையும் புகழ்பொருந்தியதாகும்; (எ-று.)— அரோ-ஈற்றசை. நெறி இல்என்று பிரியும். பி - ம்:—[1]முன்னரின் ...நீர்மையான், முன்னரிந்...நீர்மையான், நெடும்பகை மனையினோர்ந் தவன். [2]பொலங், வரி. [3]இயைபிற்றுமரோ. (2434)

43 [1]நெடியன வுலகெலாங் கண்டு நிற்கவென்
அடுசர மிவன்றலை யறுத்தி லாதெனின்
முடிய[2]வொன் [3]றுணர்த்துவ னுனக்கு நான்முயல்
அடிமையின் [4]பயனிகந் தறுவ தாகென்றான்.

(இ - ள்.) பரந்தனவாகிய உலகமெல்லாங் கண்டுநிற்கையில் தானே என்னுடைய அடவல்ல சரம் இவ்விந்திரசித்தின் தலையை அறுக்காததானால், முடிவாக (நான் உன்னிடத்து) ஒன்றுசொல்லுவேன்: உனக்கு நான் முயல்கின்ற அடிமைத்தொழிலின் பயன் (என்னைவிட்டு) நீங்கிப்போய் விடுவதாக என்று கூறிமுடித்தான், (இலக்குமணன்): (எ-று.)—பி-ம்:—[1]கடிதினிலுலகெலாங் கண்டு நிற்பவென் - கடுசரமிவன்றலை துணிக்கலாவெனின். [2]நின்று.

[3]உணர்த்தியென். [4]பயனிழந்தறுகவாழியாய், பயனிழந்தாவனுழியாய். (2435)

44.—அதுகேட்டுத் தேவர்முதலியோர் மகிழ்ச்சியினுல் ஆரவாரித்தல்.

[1]வல்லவ னவ்வுரை வழங்குங் [2]காலையின்
[3]அல்லனீங் கினமெ்ன வமர ரார்த்தனர்
எல்லையி [4]னுலகங்க ளெவையு மார்த்தன
நல்லற [5]மார்த்தது நமனு மார்த்தனன்.

(இ-ள்.) வல்லமையுள்ளவனுகிய இலக்குமணன் அவ்வாருன பேச்சைச் சொல்லுஞ் சமயத்தில்,—தேவர்கள் (இனி நம்பகைஞனை இந்திரசித்து ஒழிவது திண்ணமென்ற உறுதியான கருத்தினுல்), 'துன்பம் நீங்கினோம்' என்று (மகிழ்ச்சிகொண்டு) ஆரவாரித்தார்கள்; எல்லையில்லாத உலகமும் மற்றுமுள்ள பிராணிகளும் ஆரவாரித்தன; நல்லதருமத்திற்குஉரியதேவதையும் (இனி உலகத்தில் தருமம் தடையில்லாமல் நடைபெறுமென்ற கருத்தினுல்) ஆர்த்தது; யமனும் (இதுவரையிற்கிட்டுதற்கு அரியனவான அரக்கருயிர்களைக் கொள்ளை கொள்ளலாமென்று) ஆரவாரித்தான்: (எ - று.)—நமனும், உம்மை-இறந்தது தழுவியது. பி - ம்:— [1]வல்லையினிவ். [2]எல்வையுள், போழ்தினில், மாலையின். [3]அல்லலை நீங்கிய. [4]உலகமுமெவையும், உலகமும்யாவும். [5]ஆர்ந்தன. (2436)

45.–இராமபிரான் இலட்சுமணன் திறத்தைக் கொண்டாடுதல்.

முறுவல்வாண் முகத்தினன் முளரிக் கண்ணனும்
[1]அறிவைநீ [2]யடுவலென் றமைதி யாமெனின்
இறுதியுங் [3]காவலு மியற்று மீசரும்
வெறுவியர் வேறினி [4]விளைவ தி யாதென்ருன்.

(இ - ள்.) தாமரைக்கண்ணனுன ஸ்ரீராமனும்,—புன்சிரிப்புத்தோன்றுகின்ற ஒளிபொருந்திய முகத்தையுடையவனுய், 'நீ (இன்னுரைச்) சங்கரிப்பேனென்று (மனத்தினுற்) கருதினுயாயின், (அதற்குஏற்ற உபாயத்தையறிய) அறிவுபடைத்துள்ளாய்: சங்காரமும் காத்தலும் என்றதொழிலைச் செய்கின்ற உருத்திரமூர்த்தி விஷ்ணுமூர்த்தி என்ற இருதலைவரும் (உன் திறமைக்கு முன்னே) ஒன்றுமில்லாதவர்; இனி வேறேவிளையக்கூடியது என்னஉளது?' என்று (இலட்சுமணன் திறமையைப்) புகழ்ந்துகூறினுன்; (எ-று.) —பி·ம்:—[1]அறிவன், அறிவ, அறிய. [2]செய்தி, செய்வன், அடுவை. [3]காலமும். [4]விளைவ. (2437)

46.—ஸ்ரீராமனைத்தொழுது அரக்கரைச் சங்காரஞ் செய்வேனென்று இலட்சுமணனெழுதல்.

[1]சொல்லிது [2]கேட்டடி தொழுது சுற்றிய
பல்பெருந் தேரொடு [3]மரக்கர் பண்ணையைக்
[4]கொல்வனிங் கன்னது [5]காண்டி கொல்லென
ஒல்லையி னெழுந்தனனுவகை யுள்ளத்தான்.

(இ-ள்.) இச்சொல்லைக்கேட்டுத் திருவடிகளை வணங்கி, 'சூழ்ந்துள்ள பலபெருந்தேரோடும் அரக்கர்கூட்டத்தைக் கொன்றிடுவேன்: இப்போது அத்தன்மையைக் காண்பாய்' என்றுசொல்லி, மகிழ்ச்சி நிரம்பிய மனத்தையுடையவனாய், விரைந்தெழுந்தான்; (எ-று.)—கொல் - அசை. பி-ம்:—[1]சொல்வது. [2]கேட்டவன், கேட்டபின். [3]அரக்கன். [4]கொல்லுவனீங்கிது. [5]காண்டிகோ. ()

47.—அங்கதனாரவாரிப்பும் ஸ்ரீராமபிரானது சங்கநாதமும்.

அங்கத னார்த்தன னசனி யேறென
[1]மங்குனின் றதிர்ந்தன வயவன் றேர் [2]வருஞ்
சிங்கமு நடுங்குறத் திருவி னாயகன்
சங்கமொன் [3]றொலித்தது கடலுந் தள்ளுற.

(இ-ள்.) வீரனான இந்திரசித்தின் தேரிற்கட்டிய சிங்கங்களும் நடுங்கும்படி,மேகத்தினின்று அதிர்ந்தனவான பேரிடிகள்போல(ப் பேரொலி தோன்ற) அங்கதன் ஆரவாரித்தான்; கடலொலியும் பின்னிடும்படி ஸ்ரீராமனுடைய சங்கமொன்று ஒலித்தது; (எ-று.)

இலக்குமணன் வாகனமான அங்கதன் சிங்கநாதஞ்செய்ய, ஸ்ரீராமன் சங்கநாதஞ் செய்தானென்றவாறு. இலட்சுமணனுக்கு உற்சாகமூட்ட ஸ்ரீராமன் சங்கை யூதினனென்க. மங்குல்-மேகம். சிங்கம் நடுக்குறவும் கடல்தள்ளுறவும் சங்கமொன்று ஒலித்தது என்று கூட்டியுரைத்தலுமொன்று. திருவினாயகன் என்ற தொடர்க்கு - வெற்றித்திருவிற்குஉரிய தலைவனான இளையபெருமாள் என்றலும், "லக்ஷ்மணோலக்ஷ்மிஸம்பந்ந:" என்றபடி கைங்கர்ய ஸ்ரீக்கு உரியவனான இலட்சுமணனென்றலுமாம். பி - ம்:—[1]மங்கிரின்றுதிர்ந்துகவயவற். [2]புணை. [3]ஒலித்தனன், ஊதினான். ()

48.—அரக்கர் பலபடைக்கலங்களை வீசுதல்.

எழு[1]மழுச் சக்கர மீட்டி தோமரம்
[2]முழுமுரண் தண்டுவேன் முசுண்டி மூவிலை
கழு[3]வயிற் கப்பணங் [4]கவண்கல் [5]கன்னகம்
விழுமழைக் கிரட்டிவிட் [6]டரக்கர் வீசினார்.

(இ-ள்.) எழுக்கள் மழுக்கள் சக்கரம் ஈட்டி தோமரம் பெருவலிமைகொண்ட தண்டு வேல் முசுண்டி மூவிலையைக்கொண்ட முனையோடுகூடிய சூலம் கழு கூரியகப்பணம் கவண்கல் கன்னகம் ஆகியஇவற்றை (வானத்தினின்று) விழுகின்ற மழைக்குஇருமடங்காக அரக்கர் விட்டெறிந்தனர்; (எ - று.)—மூவிலை - பண்புத்தொகையன்மொழி. பி - ம்:—[1]மரச். [2]முழுமுதல். [3]வயக். [4]கணைகற். [5]பின்னகம். [6]அரக்கன்வீசினான். (2440)

49.—அரக்கரெறிந்த படைக்கலம்யாவும் இலக்குமணனால் துணிக்கப்பட்டு விழுந்திடுதல்.

மீனெலாம் விண்ணினின் றொருங்கு [1]வீழ்ந்தென
வானெலா மண்ணெலா மறைய [2]வந்தன

[3]தானெலாந் [4]துணிந்துபோய்த் தகர்ந்து [5]சாய்ந்தன
வேனிலா னனையவன் பகழி வெம்மையால்.

(இ-ள்.) மன்மதனையொத்த கட்டழகையுடையவனான இலட்சுமணனது அம்புகளின் கொடுமையால், நட்சத்திரங்களெல்லாம் வானத்தினின்று ஒருங்குவீழ்வனபோல வான்முழுதும் மண்முழுதும் மறையும்படி வந்தனவான எல்லாப் படைக்கலங்களும், துண்டுபட்டுத் தகர்ந்து சாய்ந்தன; (எ-று.)—தான்-அசை. பி-ம்:—[1]வீழ்ந்தன. [2]வந்தெனத். [3]கான். [4]தணர்ந்து. [5]காந்தின. (2441)

50.-அரக்கச்சேனை முறிந்தவகையை நான்குபாடல்கள் கூறும்.

ஆயிரந் தேரொரு தொடையி னச்[1]சிறும்
பாய்பரிக் குலம்படும் பாகர் பொன்றுவர்
நாயகர் நெடுந்தலை [2]துமியும் [3]நாமறத்
தீயெழும் புகையெழு [4]முலகந் [5]தீய்ந்தற.

(இ-ள்.) ஒருமுறை தொடுத்துவிட்ட அம்பில் ஆயிரந்தேர் அச்சிற்றுவிழும்; பாயுந்தன்மையுள்ள குதிரைக்கூட்டம் இறந்துபடும்; பாகரும் இறந்துபடுவர்; அச்சம் அறும்படி தலைவர்களின் நெடியசிரங்கள் அறுபடும்; உலகம் தீய்ந்துவிடும்படி (அந்த அம்பின் விசையிலே) தீயெழும்: புகையும் எழும்; (எ-று.)—நாமற என்பதற்கு-நாமமும் [பெயரும்] ஒழியும்படி என்று உரைத்தலும் ஒன்று. பி-ம்:—[1]அறும். [2]துணியும். [3]நாகமுந். [4]உலகும். [5]தீயுமால்.

51. அடி[1]யறுந் தேர்முர ணுழி[2] யச்[1]சறும்
வடிநெடுஞ் சிலை[1]யறும் [3]வாசி மார்[1]பறும்
கொடி[1]யறுங் குடை[1]யறுங் கொற்ற வீரர்தம்
முடி[1]யறு முர[1]சறு [4]முழுதுஞ் சிந்துமால்.

(இ-ள்.) தேர் அடிப்பகுதி யற்றிடும்: (அன்றியும்), வலிமையுடைய சக்கரம் அச்சுடனே அற்றிடும்; தேர்ந்தெடுத்து(த் தேரில் வைக்கப்பட்டுள்ள) நெடியவில்அற்றிடும்;(தேரிற்பூட்டிய) குதிரை மார்பு அற்றிடும்; கொடி அற்றிடும்; குடை அற்றிடும்; வெற்றி பொருந்திய வீரருடையமுடிகள் அற்றிடும்: (வெற்றிக்கு அறிகுறியாக அடித்தற்கு வைத்துள்ள) முரசம் அற்றிடும்; மற்றுமுள்ளனவும் வீழ்ந்திடும்;(எ-று.)— சொற்பொருட்பின்வருநிலையணி. பி-ம்:—[1]இறும். [2]அக்கு. [3]கவசம். [4]முகிலும். (2443)

52. [1]இன்னதோ ருறுப்பிவை யினைய தேர்பரி
மன்னவ ரிவ[2]ரிவர் படைஞர் மற்றுளோர்
என்னவோர் தன்மையுந் தெரிந்த தில்லையால்
சின்ன[3]பின் னங்களாய் மயங்கிச் [4]சிந்தலால்.

(இ-ள்.) (எல்லாமும்) சின்னபின்னங்களாய் (ஒன்றோடொன்று) கலந்து சிந்தியதனால், 'இது இன்னஉறுப்பு: இவை இப்படிப்பட்டனவான தேர்களும் பரிகளும்: இவர் மன்னவர்: இவர் படைஞரும் மற்றுமுள்ளாரும்' என்று ஓர் தன்மையும் தெரிந்த

தில்லே; (எ - று.)—பி-ம்:—[1] இன்னவோர், இன்னதோல். [2] உவர். [3] சின்னங்களாய். [4] சிந்துமால். (2444)

53. [1] தந்தையர் தேரிடைத் தனயர் வன்றலே
வந்தன தாதையர் வயிர வான்சிரம்
சிந்தின [2] காதலர் தேரிற் சின்னமாய்
அந்தரத் தம்பொடு மற்றெ ழுந்தன.

(இ-ள்.) துண்டமாக அற்று அம்புடனே ஆகாயத்துஎழுந்தன வாகிய புதல்வரின் வலியதலேகள், தந்தைமார்களின் தேர் நடுவே வந்துவிழுந்தன; தாதையரின் உறுதிபொருந்திய பெரிய சிரங்கள், புத்திரருடைய தேரிற்சிந்தின; (எ - று.)—'சின்னமாயந்தரத் தம் பொடு மற்றெழுந்தன' என்ற தொடர், முன்வாக்கியத்திலும், பின் வாக்கியத்திலும் இயையும், காதலர்-புதல்வர். பி-ம்:—[1] தந்தையை. [2] கரதலஞ்சிரந்தலத்திடை, காதலர்க்கியைந்ததேருடை. (2445)

54.—ஐந்துகவிகள் - படுகள வருணனே.

செம்பெருங் குருதியிற் றிகழ்ந்த செங்கண்மீன்
கொம்பொடும் பரவையிற் றிரியுங் [1] கொட்பெனத்
[2] தும்பியந் தொடையலர்த் தடக்கை தூணிவாங்கு
அம்பொடுந் துணிந்தன [3] நிலேயொ டற்றன.

(இ-ள்.) தூணியினின்றுவாங்கின அம்பைப்பற்றிய நிலேமை யுடனே துண்டிக்கப்பட்டு அறுபட்டனவாகி வண்டுகள்மொய்க் கும் மலர்மாலேயைப் புனேந்த பெரியகைகள், செங்கண்களேப் படைத்த மீன்கள் கொம்புடனே கடலிலே திரிகின்றதன்மைக்கு ஒப்பாகச் செந்நிறப்பெருங்குருதிவெள்ளத்திடையே விளங்கின; (எ-று.)—அம்பைப்பற்றிய மீனுக்குக் கொம்புமீன், ஒப்பு: **தற் குறிப்பேற்றவணி**. கொட்பு-தன்மை. பி-ம்:—[1] கொட்பன. [2] தும்பை யின்றொடையலார், தும்பையுந்தொடைமலர், தும்பையந்தொடை யலார். [3] சிலேயொடு. (2446)

55. தடிவன கொடுஞ்சரந் தள்ளத் தள்ளுற
மடிவன கொடிகளுங் குடையு மற்றவும்
[1] வெடிபடு கடனிகர் குருதி வெள்ளத்தில்
படிவன [2] வொத்தன பறவைப் [3] பன்மைய.

(இ - ள்.) வெட்டிவீழ்த்துந் தன்மையனவாகிய கொடுஞ்சரம் மிகுதியாக வெட்டித்தள்ளுதலால் அழிந்து வீழ்ந்தனவாகிய கொடி களும் குடைகளும் மற்றுமுள்ளனவும்,—அச்சம்பொருந்திய கடலே யொத்த குருதிவெள்ளத்திலே படிவனவாகிய பலவகைப்பட்ட பற வைகளே யொத்தன; (எ - று.)—**தற்குறிப்பேற்றவணி**. தள்ளத்தள் ளுற-ஒருபொருட்பன்மொழி. வெடி-அச்சம். பி - ம்:—[1] முடிவறு பெரும்பிணக்கணத்தின் மொய்த்தன, முடிவறுபிணப்பெருங் களத் தின்மொய்த்தன. [2] போன்றன. [3] பான்மையே, பான்மைய. (2447)

வேறு.

56\. சிந்து ரங்களின் பருமமும் பக்ழியுந் தேரும்
குந்து வுன்னெடுஞ் சிலைமுதற் படைகளுங் கொடியும்
இந்த னங்களா யிறந்தவர் விழிக்கன [1]லிலங்க
வெந்த வெம்பிணம் [2]விழுங்கின [3]கழுதுகள் விரும்பி.

(இ - ள்) யானைகளின் மேலிடுதவிசும், அம்புகளும், தேரும், (அம்பு) ஊன்றுகின்ற வலிய நெடிய சிலை முதலிய படைக்கலங்களும், கொடிகளும் விறகாக (அமைய), இறந்தவர்களின் விழியினின்று தோன்றுகின்ற நெருப்புச் சொலித்துக்கொண்டிருத்தலால் வெந்திட்ட கொடியபிணங்களைப் பேய்கள் விரும்பினவாய் உட்கொண்டன; (எ-று.)—போர்க்கருவிகளைக் காணுமிடத்து வீரர்க்கு விழியினின்று நெருப்புப்பொறி பறக்குமென்பார் 'சிந்துரங்களின் பருமமும்...இந்தனங்களாய்' என்றார். இது கழுதுகள் பிணந்தின்னலைக் கூறியது. பி-ம்:—[1]பிறங்க. [2]அருந்தின. [3]கழுகினம். (2448)

57\. சில்லி [1]யூடறச் சிதறின சிலசில [2]கோத்த
வல்லி யூடற [3]மறிந்தன புரவிகள் [4]மறையப்
புல்லி மண்ணிடைப் புரண்டன சிலசில போரான்
வில்லி சாரதி யொடும்படத் திரிந்தன வெறிய.

(இ - ள்.) (எதிராளி எறிந்ததனால்), சிலதேர்கள், சக்கரங்கள் இடையில் முறியச் சிதறின; சிலதேர்கள் (தம்மிற்) பிணைத்த குசைக்கயிறுகள் இடையில் அற்றுப்போக, மண்ணினிடம் மறையுமாறு தழுவிப் புரண்டனவாய்க் குதிரைகள் உயிர்மடங்கிவிழப் பெற்றன; சில சிலதேர்கள், போரைச்செய்கின்ற வில்லாளி சாரதியுடனே இறந்திட வெறிச்சென்த்திரிவனவாயின; (எ-று.)—இது போர்க்களத்து அழிந்த தேர்களின் வருணனை கூறியது. பி-ம்:—[1]ஊடுற. [2]சேர்ந்த. [3]மறைந்தன. [4]மறியப், மடியப். (2449)

58\. அலங்கு பன்மணிக் [1]கதிரன குருதியி [2]னழுந்தி
விலங்கு [3]செஞ்சுடர் விடுவன [4]வளவின்றி மிடைந்த
குலங்கொள் வெய்யவ [5]ரமர்க்களத் தீயிடைக் [6]குளித்த
இலங்கை மாநகர் [7]மாளிகை நிகர்த்தன விரதம்.

(இ - ள்.) விட்டுவிட்டு விளங்குகின்ற பல்வகை மணிகளினொளியை யுடையனவும் குருதியிலழுந்தி விளங்குகின்ற செந்நிறக் காந்தியை வெளி விடுவனவுமாகி, அளவின்றிநெருங்கிய இரதங்கள்,—கூட்டமாகவுள்ள கொடிய அரக்கர்களின் போர்க்களத்துத் தோன்றிய தீயினிடையிலே அமிழ்ந்த இலங்கைமாநகரின் மாளிகையை யொத்தன; (எ - று.) இதுவும், அழிந்ததேர்களின், வருணனையே. குருதியினிடையழுந்திய தேர்கள், தீயினிடையிலே குளித்த இலங்கைமாநகரின் மணிமாளிகைபோலுமென்றார்: தற்குறிப்பேற்றவணி. விலங்கு = விளங்கு. பி - ம்:—[1]கதிரினம். [2]அழுந்த. [3]வெஞ்சுடர், வெஞ்சரம். [4]வெளி. [5]மறுகிடத். [6]கொதித்தார். [7]மாளிகைக் கொத்தன. (2450)

59.—ஸ்ரீராமனும் அம்புதூவ, இந்திரசித்து தானுந்தேருமாகத் தனிப்பட்டவனுதல்.

ஆன காலையி னிராமனு மயின்முகப் பகழி
சோனை மாரியிற் சொரிந்தன னனுமனைத் தூண்டி
வான மானங்கண் [1]மறிந்தெனத் தேரெலா [2]மடியத்
தானுந் தேருமே யாயின னிராவணன் றனயன்.

(இ - ள்.) அப்போது இராமனும் அநுமானை (இந்திரசித்தின் சமீபத்திற் செல்லத்) தூண்டிக் கூரியமுனையையுடைய அம்பை விடாப்பெருமழைபோற் சொரிந்தான்: (அப்போது) வானத்தி லுள்ள விமானங்கள் ஒடிந்துவிழுந்தாற்போலத் தேரெல்லாம் மடிய, இராவணகுமாரனான இந்திரசித்து, தானும் (தன்) தேருமாகத் தனிப்பட்டவனாயினன்; (எ - று)—பி-ம்:—[1]மடிந்தெனத். [2]மடிந்த. (2451)

60.—இந்திரசித்து ஒன்றுகூறத் தொடங்குதல்.

பல்வி லங்கொடு புரவிகள் பூண்டதேர்ப் பரவை
வல்[1]வி லங்கல்போ [2]லரக்கர்தங் குழாத்தொடு [3]மடிய
வில்வி லங்கிய வீரரை நோக்கினன் வெகுண்டான்
சொல்[4]வி லங்கலன் சொல்லின னிராவணன் றோன்றல்.

(இ - ள்.) பலமிருகங்களுடனே குதிரைகள்பூட்டிய தேர்த் தொகுதிகள் வலிய மலைகள்போல அரக்கர்கூட்டத்தோடு அழிந் திட, (அப்போது) விற்றொழிலிற் பின்னிட்ட வீரரையெல்லாம் நோக்கி வெகுண்டவனாய், இராவணன் குமாரனான இந்திரசித்து, —(தன்னிலையினின்று) பின்வாங்காதவனாய், (ராமலக்ஷ்மணரை நோக்கிப் பின்வருமாறு ஒரு) சொல்லைக் கூறலானான்; (எ-று.)

தேர் மிகப்பலவாதலால் 'தேர்ப்பரவை' என்றார். பரவை- கடல்: தொகுதிக்கு, இலக்கணை. தேர்கள்ஒடிந்து மலைகள் கிடப் பனபோல இருந்தனவென்க. வில்விலங்கியவீரர் - விற்றொழிலில் விளங்கிய வீரரென்று இராமலக்ஷ்மணரைக் குறிக்குமென்று கொள்ளுதல், பொருந்தும்: விலங்கிய = விளங்கிய. பி - ம்:— [1]விலங்கு. [2]அரக்கரைக் குலத்தொடும். [3]அவிய. [4]விலங்கில, விலங்கல்கள். (2452)

61.—இந்திரசித்து நீவிர் எவ்வண்ணம் பொரப்போகின்றீ ரென்று இராமலக்ஷ்மணரை வினவுதல்.

[1]இருவி [2]ரென்னொடு பொருதிரோ வன்றெனி னேற்ற
[3]ஒருவிர் வந்[4]தமர் தருதிரோ வன்றியும் படையோடும்
பொருது பொன்றுதல் புரிதிரோ வுறுவது புகலும்
[5]தருவ னின்றுமக் [6]கேற்றுள [7]தொன்றெனச் [8]சலித்தான்.

(இ - ள்.) (நீங்கள்) இருவீரும் (சேர்ந்து) என்னுடன் பொரு கின்றீரோ? அல்லாவிடின், (எனக்கு) ஏற்றஒருவீர் வந்து போர் செய்கின்றீரோ? அன்றி [தனித்தோ, சேர்ந்தோ என்னொடுபொராமல்] (இருவீரும்) உம்படையோடும் (சேர்ந்து) போர்செய்து இறத்

தற்கு உடன்பட்டிருக்கின்றீரோ? (நீங்கள்) செய்யப்போவதைச் சொல்லுங்கள்; இன்று உமக்கு ஏற்றுள்ளதான ஒரு போரைத் தருவன்என்று சினங் கொண்டுரைத்தான், (இந்திரசித்து); (எ-று.)

'இருவீருமே ஒருங்கேபோர்செய்யப் போகின்றீரோ? அன்றித் தனித் தனியே பொரப்போகின்றீரோ? அல்லாக்கால், சேனையுடன் வந்து பொருது இறக்கப்போகின்றீரோ? என்று வினவினான்: நீவிர் சேனையுடன்வந்து பொருதாலும் இறப்பது திண்ணமென்பதை வலியுறுத்தற்கு, 'அன்றியும் படையோடும் பொருது பொன்றுதல் புரிதிரோ' என்றான். சலித்தான் - சினமென்று பொருளுள்ள 'சலம்' என்ற பெயரினடியாப்பிறந்த முற்று. பி - ம்:—[1]இருவர். [2]என்னுடன். [3]ஒருவர். [4]உயிர். [5]தருவல். [6]ஒன்றுளது, உற்றுளது. [7]யானெனச், சொல்லினன். [8]சலத்தான், சமைந்தான். (2453)

62.—இலக்குமணன் உன்னைக்கொல்லுமாறு சபதங் கூறியுள்ளேனென்று மறுமொழி கூறுதல்.

வாளிற் றிண்[1]சிலைத் தொழிலினின் மல்லினின் மற்றை
ஆளுற் றெண்ணிய படைக்கல மெவற்றினு மமரில்
கோளுற் றுன்னொடு [2]குறித்தமர் செய்துயிர் [3]கொள்வான்
சூளுற் றேனிது சரதமென் றிலக்குவன் சொன்னான்.

(இ - ள்.) வாளினாலும் திண்ணிய வில்தொழிலினாலும் உடல் வலிமையினாலும் மற்றும் ஆளுதல்பொருந்தி யெண்ணப்பட்டுள்ள படைக்கல மெல்லாவற்றினாலும் போர்க்களத்திலே வலிமை பொருந்தி உன்னோடு நேர்நின்று பொருதுஉன்னுயிரைக்கொள்ளும்படி சபதஞ்செய்துள்ளேன்; இது திண்ணம் என்று இலட்சுமணன் மறுமொழி சொன்னான்; (எ - று.)—நீ வாள் முதலியவற்றில் எதனால் பொருவாயோ, அதற்குஏற்ப நானே பொருது உன்னுயிரைக் கொள்வேன் என்று தன்சபதத்தைக்கூறினான், இலக்குவன். பி-ம்:—[1]சிலைமல்லினின்றோளினின். [2]குறித்தது. [3]கொள்ளச். (2454)

63.—இந்திரசித்து இலட்சுமணனைநோக்கி, உன்னைக் கொன்று, பின்பு இராமனைக் கொல்வேனெனல்.

முன்பி றந்த[1]நின் [2]றமையனை முறைதவிர்த் துனக்குப்
பின்பி றந்தவ னாக்குவன் பின்பிறந் தோயை
முன்பி றந்தவ னாக்குவ னிதுமுடி யேனேல்
என்பி றந்தத னாற்பய னிராவணற் கென்றான்.

(இ-ள்.) 'முன்னேபிறந்த உன்தமையனை முறைமைதவிர்த்து உனக்குப் பின்பு இறந்தவனாக்குவேன்: பின்பிறந்த உன்னை (அவனுக்கு) முன்பு இறந்தவனாக்குவேன்; இச்செயலைச் செய்துமுடியேனானால், (நான்) இராவணற்கு (மகனாக)ப் பிறந்ததனால் யாது பயன்?' என்று (இந்திரசித்து) கூறினான்; (எ-று.)

நான் இராவணனுக்கு மகனாகப்பிறந்ததற்குப் பயன் அவன் கருத்தை முற்றுவிப்பதே யாதலாலும், அவன்கருத்து ராமலக்ஷ்மணரைக் கொல்வதேயாதலாலும், முதலிற் போருக்கு வருகின்ற உன்னை முடித்திட்டுப் பிறகு உன்தமையனையும் முடிப்பேனென்று

இந்திரசித்து கூறினனென்க. பின்னே பிறந்தவனை முன்னே பிறந்தவனாகவும், முன்னேபிறந்தவனைப் பின்னே பிறந்தவனாக வும் ஆக்குவேனென ஒருபொருளுந்தோன்றக்கூறிய நயங்காண்க. வயசினால்மூத்தவர் முன்னேயிறத்தலும், இளையவர் மூத்தவர்க் குப்பின் இறத்தலும் அக்காலத்துமுறை யாதலால், 'முறைதவிர்த்து' எனப்பட்டது. பி-ம்:—[1]உன். [2]தம்முனை, நும்முனை. (2455)

64.—பின்னும் இந்திரசித்து இலக்குவனைநோக்கி உன்னைக்கொல்வேனெனல்.

இலக்கு வன்னெனும் பெயருனக் கியைவதே [1]யென்ன
இலக்கு வன்கணைக் காக்குவ னிதுபுகுந் திடையே
விலக்கு வன்னென விடையவன் [2]விலக்கினும் [3]வில்லால்
[4]விலக்கு வன்னிது காணுமுன் றமையனும் விழியால்.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) இலக்குவனென்னும் பெயர் உனக்குத்தக்கதே யென்று (யாவரும்) கருதுமாறு, (உன்னை என்னுடைய) வலிய கணைக்கு இலக்கு ஆக்குவேன்: (விலக்குவேனென்று சொல்லி) இப்போர்க்களத்திடையே புகுந்து விலங்கின்வடிவத்தையெடுத்த அந்தத்திருமால்போலவே (எங்கட்கு வரமீந்த) விருஷபத்தை வாகனமாகவுடைய உருத்திரமூர்த்தியே விலக்கினாலும் (அவனுடைய வீரத்தையும்) வில்லால்விலக்குவேன்: இந்த (என்) வலிமையை உன் தமையனும் கண்களாற் காண்பான்; (எ-று.)

இலக்குவனென்று உனக்கு வழங்கும்பெயர் செவ்வனே பொருள்புலப்படாமலுள்ளது: இப்போது என்சரத்திற்கு உன்னை இலக்கு ஆக்கி, "இலக்குவன் [இந்திரசித்தின்கணைக்கு இலக்கு ஆனவன்]" என்று யாவரும் உன்பெயர்ப்பொருளை யுணர்ந்து உனக்கு இப்பெயர் தக்கதே யென்னுமாறு செய்வேன்: யார் உனக்குப் பக்கபலமாக இருப்பினும், அவர்கள் வீரத்தையும் குலைப்பே னென்றனன் இந்திரசித் தென்க: மூன்றாமடியில், விலங்குஉவன் என-மச்சம் கூர்மம் வராகம் சிங்கம்என்ற விலங்குகளினுருவ மெடுத்த அத்திருமால்போல எனப்பொருள்காண்க. இச்செய்யுள் முன்னிரண்டடி ஒருவகையாகவும் பின்னிரண்டடி ஒருவகையாக வும் நின்ற யமகமென்னுஞ் சொல்லணி பெற்றது. லக்ஷ்மணன் என்ற வடசொல்லின்திரிபு ஆகி, இராமகைங்கரியமாகிய இலட்சுமியையுடையவனென்று பொருள்படுகிற 'இலக்குவன்' என்ற சொல்லைத்தமிழில்வந்த மொழியாக்கி, கணைக்கு 'இலக்குஆகுபவன்' என்று சமத்காரமாக வேறு ஒருபொருள் கற்பித்துக் கூறியது-பிரிநிலைநவிற்சியணி. இது-வடமொழியில், நிருக்தியலங் காரமெனப்படும். விழியால் என்றது - இதுவரையில் அரக்கர் கொலையுண்ணக்கண்டதன்றி, அரக்கரால் தாம் கொலையுண்ணக் காணாத கண்ணால்என்று குறிப்பித்தற்கு. பி-ம்:—[1]என்னே, என்றுன், என்று, என்னில். [2]விலங்கினும். [3]வீரம். [4]கலக்குவன் னிது...கண்ணால், விலக்குவனின்னை...விழியால். (2456)

65.—இந்திரசித்து வானரப்படைகளையே யொழிப்பேனெனல்.

அறுப [1]தாகிய [2]வெள்ளத்தி னரக்கரை யம்பால்
இறுவ [3]தாக்கிய விரண்டு[4]வில் வினருங்கண் டிரங்க
மறுவ தாக்கிய வெழுபது வெள்ளமு மாள
[5]வெறுவி தாக்குவ [6]னுலகினைக் கணத்திேனார் வில்லால்.

(இ - ள்) அறுபதுவெள்ளமாகவுள்ள அரக்கரை அம்பினால் இற்றுப்போமாறுசெய்த இரண்டுவில்வீரரும் [ராமலக்ஷ்மணரும்] கண்டு இரங்க, (அரக்கர்க்கு) மறுவை உண்டாக்கிய எழுபதுவெள்ளம் (குரங்குச்) சேனைகளும் மாளுமாறு ஓர் வில்லினால் கணப்பொழுதிலே உலகை வெறிச்சென்றுள்ளதாக ஆக்குவேன்; (எ - று.)—மறுவது, அது - பகுதிப்பொருள்விகுதி. பி - ம்:— [1]ஆக்கிய. [2]அரக்கர் தம்வெள்ளத்தை. [3]ஆகிய. [4]வில்லீரும். [5]வெறுவது. [6]உலகையிக், உலகினிற். (2457)

66.—இந்திரசித்து 'உங்கள் இரத்தத்தைக்கொண்டு இறந்த தம்பிமார்க்கும் சிற்றப்பனுக்கும் நீர்க்கடன் செய்வேன்' எனல்.

கும்ப கன்னனேன் [1]ஒருவனீ ரம்பிடைக் குறைத்த
தம்பி [2]யல்லனு னிராவணன் மகனொரு தமியேன்
எம்பி மாருக்கு மென்சிறு தாதைக்கு மிருவிர்
செம்பு ணீர்[4]கொடு கடன்[5]கழிப் பே[6]னென்று [7]தெரித்தான்.

(இ - ள்.) நீர் அம்பினாற்குறைத்த கும்பகர்ணனென்று பேர் பூண்ட ஒருவனாகிய (இராவணன்) தம்பியல்லன் நான், உங்களாற் கொல்லப்படுதற்கு): (நான்), இராவணன்மகனாவேன்: (ஆனால், இராவணன் மக்களான அட்சகுமாரன் அதிகாயன் என்பார்போல, அல்லேன்): ஒப்பற்றுத் தனிப்பட்டுள்ளவன்: (உம்இருவரையும் கொல்லவல்லேன்: இதற்குமுன்னே இறந்த) என் தம்பிமாரான அட்சகுமாரன் அதிகாயன் என்பவர்க்கும் என்சிறியதந்தை கும்பகர்ணனுக்கும் உங்கள் இருவரின் செந்நிறமுள்ள இரத்தத்தைக் கொண்டு புனற்கடனைக்கழிப்பேன் என்றுதெரிவித்தான்; (எ-று.)

தான் கும்பகர்ணனல்லன் என்பது பிரசித்தமாகத்தெரிந்திருக்கவும் 'நான் கும்பகன்னன் அல்லன்' என்றுகூறியது, அவன்போல் உமது அம்பாற்கொல்லத்தக்கவனல்லேனென்ற கருத்தை விளக்கற்கு: இது, விலக்கணியாம். பி-ம்:— [1]இராமனன்றமரிடைக் கொன்ற. [2]அல்லயானிராவணனொருமகன். [3]இருவர். [4]கொண்டு. [5]கழிப்பான். [6]இன்று, எனத். [7]தீர்ந்தேன், தீர்ந்தான். (2458)

67.—இலட்சுமணன், 'உனக்கு உன் தந்தையும் உன் தந்தைமுதலியோர்க்கு விபீஷணனும் அந்திமக்கடன் செய்வார்' எனல்.

அரக்க ரென்பதோர் பெயர்[1]படைத் தவர்க்கெலா[2]மடுத்த
புரக்கு [3]நன்கடன் செயவுளன் வீடணன் போந்தான்
கரக்கு [4]நுந்தைக்கு நீசெயக் கடவன கடன்கள்
இரக்க முற்[5]றுனக் கவன்செயு மென்றனன் [6]னிளையோன்.

(இ-ள்.) அரக்கரென்று ஓர்பேர் பெற்றவர்கட்கெல்லாம் ஏற்றதும் (ஆன்மா) ஈடேறுதற்குஉரியதுமான சிறந்த (அந்திமக்) கடனைச் செய்ய விபீஷணன் இங்குவந்துள்ளான்; இறக்கப்போகின்ற உன் தந்தைக்கு நீ செய்யவேண்டியனவாகிய அந்திமக்கடன்களை-(நீ இப்போதே இறந்துவிடப்போகின்றாயாதலால்) மனத்துயரங்கொண்டு உனக்கு அத்தந்தை செய்வானென்று கூறினன், இளைய பெருமாள்; (எ-று.)—'எம்பிமாருக்கும்...கடன்கழிப்பேன்' என்றதற்கு மாறுகூறுகின்றான், இலக்குவனென்க. பி - ம்: —[1]படைத்திர்க்கு, படைத்துயிர்க்கு. [2]அடுத்துப், அடையப். [3]மந்திரஞ்செயவுளன், நன்கடன் செய்யவும். [4]உந்தைக்கும். [5]உமக்கிவன். [6]இளங்கோ, இளங்கோன். (2459)

68.—இதுமுதல் நான்குகவிகள்-இந்திரசித்தின் கடும்போரைக் கூறும்.

ஆன காலையி னயிலெயிற் றரக்கனெஞ் [1]சழன்றான்
[2]வானும் வையமுந் திசைகளு [3]மியாவையு மறையப்
[4]பானல் வேலையைப் பருகுவ சுடர்முகப் பகழி
சோனை மாரியி னிருமடி மும்மடி [5]துரந்தான்.

(இ - ள்.) அப்போது கூரிய கோரப்பற்களையுடைய இந்திரசித்து,—மனங்கொதித்தவனாய்; வானமும் வையகமும் திசைகளும் யாவையும் மறையுமாறு, சிறந்த பாற்கடல்போன்ற குரங்குச்சேனையைப் பருகுவனவான சுடரை முகத்திலேகொண்ட பகழியை, பெருமழைபொழியும் மேகத்தினும் இருமடங்கு மூன்றுமடங்கு (மிகுதியாகப்) பொழிந்தான்; (எ-று.)—அங்ஙன் இலக்குமணன் கூறவும், இந்திரசித்து எதிர்மொழிகூறாமல் கணையை விடுக்கலாயினனென்க. மூன்றாமடியில் பானல்வேலையென்றது-வானரச்சேனையை; உவமேயத்தை உவமைச்சொல்லாற் கூறினார். பி-ம்:—[1] அழன்று. [2]வானம். [3]பரவையும். [4]பானு, பான. [5]சொரிந்தான். (2460)

69. அங்கதன் றன்மே லாயிர மவற்றி னுக் கிரட்டி
வெங்கண் மாருதி மேனிமேல் வேறுள [1]வீரச்
சிங்க மன்னவ ராக்கைமே லுலப்பில செலுத்தி
எங்கும் வெங்கணை யாக்கின னிராவணன் சிறுவன்.

(இ - ள்.) இராவணகுமாரன்,—அங்கதன்மேல் ஆயிரம் அம்புகளும், கொடுங்கண்ணையுடைய அநுமான் உடலின்மீது அவற்றிற்கு இரட்டி [ஈராயிரம்] அம்புகளும், வேறேயுள்ள வீரசிங்கத்தையொத்தவருடைய உடலின்மீது கணக்கில்லாத அம்புகளும் செலுத்தி, எங்கும் கொடிய அம்புமயமாக்கினான்; (எ - று.)—பி - ம்:—[1]வீரர். (2461)

70. இளைய மைந்தன்மே லிராமன்மே [1]லிராவணி [2]யிகலி
விளையும் வன்றொழில் வானர வீரர்மேன் மெய்[3]யுற்று
[4]உளையும் வெஞ்சரஞ் சொரிந்தன ஞழிகை [5]யொன்று
[6]வளையு [7]மண்டலப் பிறையென [8]நின்றதவ் வரிவில்.

(இ - ள்.) இராவணகுமாரனை இந்திரசித்து,—இளையபெருமாள்மேலும் இராமன்மேலும் மாறுபட்டுத்தோன்றுகின்ற வலிய

தொழிலையுடைய வானரவீரர்மேலும் உடம்பில்பொருந்தி வருத்துதற்குக்காரணமான கொடிய அம்புகளைப் பொழிந்தான்; (அந்த இந்திரசித்தினுடைய) கட்டமைந்தவில்லானது, வளைந்துதோன்றுகின்ற வானமண்டலத்திலுள்ள பிறைச்சந்திரன்போல ஒருநாழிகைப்போது நின்றது; (எ-று.)—பி-ம்:—[1] அநுமன்மேல். [2] இகலில். [3] இற்று. [4] உளைய. [5] ஒன்றில். [6] வளைய. [7] மண்டலம். [8] நின்றது. ()

71. பச்சி மத்தினு [1] முகத்தினு மருங்கினும் பகழி
உச்சி முற்றிய வெய்யவன் கதிரென வுமிழக்
[2] கச்ச முற்றவன் [3] கைத்துணைக் கடுமையைக் காணு
அச்ச முற்றனர் கண்புதைத் [4] தடங்கின ரமரர்.

(இ-ள்.) உச்சியில்வந்துள்ள முற்றிய வெம்மையுடையவனான சூரியனுடைய கிரணங்கள்போல (மிகவெவ்விய) அம்புகளைப் பின்புறத்திலும் முகத்திலும் பக்கங்களிலும் சிந்தக் கச்சங்கட்டிக்கொண்டுள்ளவனான இந்திரசித்தினுடைய இருகைகளின் வேகத்தைக் கண்டு, அமரரும், அச்சமடைந்தவராய், (தமது இமையாக்) கண்களை மூடிக்கொண்டு அடங்கிக்கிடந்தனர்; (எ-று.)—தொடர்புயர்வுநவிற்சியணி. தொழில்புரியத் தொடங்குகையில் கச்சத்தையிழுத்துக் கட்டிக்கொள்ளுதல், இயல்பு. பி-ம்:—[1] மருங்கினுமுகத்தினும். [2] கச்சுமுற்றவன். [3] கைத்தொழிற், தகத்தொழிற். [4] ஒடுங்கினர். (2463)

72.—இலக்குவன் இந்திரசித்தின் அம்புகளைப் போக்குதல்.

மெய்யிற் பட்டன படப்படா தனவெலாம் விலக்கித்
தெய்வப் [1] பொற்கணைக் கத்துணைக் கத்துணை செலுத்தி
ஐயற் காங்கிளங் கோளரி [2] யறிவிலா னறைந்த
பொய்யிற் போம்படி [3] யாக்கினன் கடிதினிற் புக்கான்.

(இ-ள்.) அப்போது இராமபிரானுக்கு இளைய வலியசிங்கம் போன்ற இலக்குமணன்,—விரைவிற் (போர்) செய்யத் தொடங்கினவனாகி, தன்னுடம்பிற் பட்டவைபடப் படாதனவெல்லாவற்றையும் விலக்கி, அறிவில்லாதவன் கூறிய பொய்யைப்போல (எதிராளி யெறிந்த) தெய்வத்தன்மையுள்ள பொற்கணைகள் அவ்வளவுக்கு அவ்வளவு (தெய்வக்கணைகளைச்) செலுத்தி(அக்கணைகளை வீணாய்)ப் போம்படி செய்திட்டான்; (எ-று.)

அறிவுள்ளபெரியோன் சிலசமயங்களிலே கூறும்பொய் நன்மை பயப்பதாய் மெய்போலப் பாராட்டப்படுமாதலால், 'அறிவிலானறைந்த பொய்யிற் போம்படி யாக்கினன்' என்றார். பி-ம்:—[1] போர்க். [2] அறமிலானறைந்த, அறமிலான்மறைத்த. [3] போக்கினன். (2464)

73.—இனி ஆறுகவிகள்-இந்திரசித்துக்கும் இலக்குவனுக்கும் கடும்போர் நிகழ்கையில் இறுதியாக இந்திரசித்தின்தேரை இலக்குவன் சிதைத்துக் கவசத்தை முறித்தமையைத் தெரிவிக்கும்.

[1] பிறகி னின்றனன் பெருந்தகை யிளவலைப் பிரியான்
அறனி [2] தன்றென வரக்கன்மேற் சரந் [3] தொடுத் தருளான்

இறவு [4]கண்டில ரிருவரு மொருவரை யொருவர்
விறகின் வெந்தென விசும்பிடைச் [5]செறிந்தன விசிகம்.

(இ-ள்.) பெருமைக்குணமுள்ளவனான ஸ்ரீராமன், 'இது அற மன்று' என்றகாரணத்தினால் இந்திரசித்தின்மீது அம்புதொடுத்து விடாதவனாகி, இளையபெருமாளைப் பிரியாதவனாய்ப் பின்புறத்தில் தானே நின்றான்; (இந்திரசித்து இலக்குவன் ஆகிய) இருவரும் ஒருவரையொருவர் (வெற்றியினால்) மேம்படுதலைக் கண்டாரில்லை; (அவர்கள் சொரிந்த) அம்புகள், விறகுபோல எரிந்தனவாய் ஆகாயத்து நெருங்கின; (எ - று.)—ஒருத்தன்மீது இருவர் அம்பு தொடுத்தல் அறனன்றென ஸ்ரீராமன் சரத்தைத் தொடுக்காதவனானான். பி - ம்:—[1]பிறகு. [2]அல்லவென்று, என்றல். [3]துரந்து. [4]கண்டிலன். [5]சென்றன. (2465)

74. மா[1]டெ ரிந்தெழுந் திருவர்தங் [2]கணைகளும் வழங்கக்
காடெ ரிந்தன கனவரை யெரிந்தன கனக
வீடெ ரிந்தன வேலைக ளெரிந்தன [3]விலங்கல்
[4]ஊடெ ரிந்தன வூழியி னெரிந்தன வுலகம்.

(இ - ள்.) இருவரும் தங்கணைகளை விடும்போது,—(அவை,)— பக்கங்களிலெல்லாம் சொலித்துக்கொண்டு எழுதலாலே காடுகள் எரிந்தன; பருத்தமலைகள் எரிந்தன; பொன்மயமான (இலங்கா நகரத்து)மாளிகைகள் எரிந்தன: கடல்களெரிந்தன; அதன்மத்தியி லுள்ள விலங்கினங்கள் எரிந்தன; யுகாந்தகாலத்திற்போல உலக மும் எரிந்தன: (எ - று.)

அம்புகளின் கொடுமையை விளக்கவந்த **உயர்வுநவிற்சியணி** யோடு **சொற்பொருட்பின்வருநிலையணி**யும் சேர்ந்துவந்தது. விலங் கல், அல் - சாரியை. விலங்கல் - திரிகூடமலையுமாம். பி - ம்:— [1]எரிந்தெரிந்து, எரிந்தன, [2]சரங்களின் மயங்கிக், சரங்களும் வழங்கக். [3]விரிஞ்சன், மேகம். [4]ஊர். (2466)

75. படங்கொள் பாம்பணை துறந்தவற் கிளையவன் பகழி
விடங்கொள் வெள்ளத்தின் [1]மேலன வருவன விலக்கி
இடங்க [2]ரேறன வெறுழ்வலி யரக்கன்றே [3]ரிழுக்கும்
மடங்க லையிரு நூற்றையுங் கூற்றின்வாய் மடுத்தான்.

(இ - ள்.) படத்தைக்கொண்டுள்ள ஆதிசேஷனாகிற படுக்கை யைத் துறந்து ஸ்ரீராமனாகத் திருவவதரித்தவனுக்கு இளையவனான இலக்குமணன், வெள்ளத்தினும் மேம்பட்டனவாய் வருவனவாகிய விடத்தைக்கொண்ட அம்புகளை விலக்கி, பெருவலியைப்படைத்த அரக்கனதுதேருடனே [அத்தேரைச்சிதைத்து] (அதனை) இழுத் துச் செல்வனவான ஆண்முதலைபோன்ற சிங்கங்கள் ஆயிரத்தை யும் யமன்வாயில் உட்புகச்செய்தான்; (எ-று.)—'இடங்கரேறன' என்பதை அரக்கனுக்கும், 'எறுழ்வலி' என்ற அடைமொழியை மடங்கலுக்கும் கூட்டினுமாம். மேல் "தேரழிந்திட" என வருவ தனால், இங்குத் தேரையுஞ் சிதைத்ததாகப் பொருள்கொள்ளப்

பட்டது: ஏறும்வலி - மிக்கவலிமை. பி-ம்:—[1]மேலவன்விடுவன. [2]ஏறனுன். [3]ஈர்க்கும். (2467)

76. தே[1]ர ழிந்திடச் சேமத்தேர் பிறிதிலன் செறிந்த
ஊர ழிந்திடத் தனிநின்ற கதிரவ னொத்தான்
பார ழிந்தது [2]புரமெனும் படியவான் பகையின்
சூரழிந்திடத் [3]துரந்தனன் சுடுசரஞ் [4]சொரிந்தான்.

(இ - ள்.) (இந்திரசித்து, தன்) தேர்அழிந்திட (ஏறிச்செல்வ தற்குச்) சேமத் தேரும் வேறு இல்லாதவனாய், நெருங்கிய ஊர் கோள் அழிந்திடப்பெற்றுத் தனித்துநின்ற சூரியனை யொத்தான்; (அப்போது இந்திரசித்து) சுடுகின்ற சரத்தைச் சொரிந்தவனாய்ப் பெரும்பகையின் சூரத்தன்மை யழிந்திட (அதனை) ஓட்டினான்: (அதனால், அப்போது) திரிபுரமென்னுந் தன்மையதாய், (வானரர் களிருந்த) போர்க்களமே யழிந்தது; (எ - று.)—பி - ம்:—[1] அழிந் துகச். [2]குரங்கெனும் பெயரெனப்பதைத்தார், புரமெனும்... பகையை. [3]சொரிந்தநற். [4]துரந்தான். (2468)

77. அற்ற [1]தேர்மிசை நின்றுபோ ரங்கத னலங்கற்
கொற்றத் தோளினு மிலக்குவன் புயத்தினுங் [2]குளித்து
முற்ற வெண்ணிலா முரட்கணை [3]தூர்த்தனன் முரட்போர்
ஒற்றைச் சங்கெடுத் தூதினு னுலகெலா மூலைய.

(இ - ள்.) வலிய போரிலே, (இந்திரசித்து),—சிதைந்திட்ட தேரின்மீதே நின்று, போரில்வல்ல அங்கதனுடைய மாலையை யணிந்த வெற்றித்தோளின்மீதும் இலக்குவனுடைய புயத்தின் மீதும் உட்புக்குநிரம்பும்படி வெள்ளிய பிறைச்சந்திரன்போன்ற வலிய கணைகளை [அர்த்தசந்திர பாணங்களை] நிரம்பச் செலுத்தி, உலகெலாம்வருந்தும்படி (தனது) ஒற்றைச்சங்கையெடுத்து ஊதி னன்; (எ-று)—பி-ம்:—[1]தேரின்மேல். [2]குளிக்க. [3]துரந்தனன். ()

78. சங்க [1]மூதிய தசமுகன் றனிமகன் றரித்த
[2]கங்க மார்பெருங் கவசமு [3]மிற்றுடன் கழல
வெங்கொ டுங்கணை யையிரண் டுருமென வீசிச்
சிங்கவே [4]றன்ன விலக்குவன் சிலையைநா ணெறிந்தான்.

(இ - ள்.) ஆண்சிங்கத்தை யொத்தவனான இலக்குவன்,— சங்கத்தை யெடுத்தூதிய இராவணனுடைய ஒப்பற்றமைந்தன் தரித்திருந்த பொன்னினாலியன்ற பெரிய கவசமும் இற்றுப்போய் உடனே கழன்றுவிடும்படி வெவ்விய கொடிய கணை பத்து இடி போல (த் தாக்குமாறு) வீசி (அந்த இந்திரசித்தின் சங்கொலிக்கு மாறாகத் தன்) சிலையின் நாணைத் தெறித்தான்; (எ-று.)—கங்கம்- ஒருதேசம்: அங்கு உண்டாகும் பொன்னுக்கு ஆகுபெயர் என்ப. இனி, கங்கம் ஆர்-பருந்துகள் (தசை) உண்ணுதற்குக் காரணமான, கொடுங்கணை என்று கூட்டுதலும் ஒன்று. பி - ம்:—[1]ஊதினன். [2]தங்கடற்பெருங், கங்கணத்தொடு. [3]மூட்டறக். [4]என்ன. (2470)

79.—இலக்குமணனது போரைக் கண்ட இராமன் ஆரவாரஞ் செய்யுமாறு கட்டளையிட, வானரர் ஆர்த்தல்.

கண்ட கார்[1] முகில் வண்ண னுங் கமலக்கண் கலுழத்
துண்ட வெண்பிறை நில[2] வென முறுவ லுந்தோன்ற
அண்ட முண்டதன் வாயினு லார்மினென் றருள
விண்ட தண்டமென் றுலைந்திட வார்த்தனர் வீரர்.

(இ-ள்.) (அதனைக்)கண்ட கரியமுகில்போன்ற திருநிறத்தை யுடையவனான ஸ்ரீராமனும், கமலம்போன்ற கண்களில் (மகிழ்ச்சி) நீர் பெருக, வெள்ளிய துண்டமான பிறைச்சந்திரனிடத்தினின்று நிலவு தோன்றுவதுபோலப் புன்சிரிப்புந் தோன்ற, அண்டமுண்ட தன்வாயினாலே '(இலக்குமணனது சிலை நாணொலிக்கு ஏற்ப) ஆர வாரஞ் செய்யுங்கள்' என்று அருளிச்செய்ய அண்டம் விண்டிட்ட தென்று வருந்தும்படி வானரவீரர் பேராரவாரஞ்செய்தனர்;(எ-று.) —பி-ம்:—[1] மழை. [2] எனும். (2471)

80.—இந்திரசித்து ஆகாயத்தில் மறைய, இராமனிடத்து இலக்குமணன் பிரமாத்திரம் தொடுப்பேனெனல்.

கண்ணி மைப்பதன் [1]முன்புபோய் [2]விசும்பிடைக் கரந்தான்
அண்ணல் மற்றவ னுக்கைகண் [3] டறிகில [4]னுகிப்
மண்ண வற்கிவன் பிழைக்குமேற் படுக்கு[5] நம் படையை
எண்ண மற்றிலை யயன்படை தொடுப்பெனென் றிசைத்தான்.

(இ-ள்.) (அப்போது இந்திரசித்து இங்குநின்றால் நமக்கு அபாயம் விளையுமென்று) கண்ணிமைப்பதற்கு முன்னம் போய் வானத்தில் மறைந்திட்டான்; பெருமையிற் சிறந்தவனான இலட்சு மணன், அவனுடலைக் கண்டறியாதவனாகி, 'இவன் பிழைத்திடு வானானால் நம்சேனையையழிப்பான்; (ஆதலால்), வேறு ஆலோசனை யின்றிப் பிரமாஸ்திரத்தை (இவன்மீது) தொடுப்பேன்' என்று ஸ்ரீராமனுக்குக் கூறினான்; (எ-று.)—பண்ணவன்-தேவன்: இங்கு, ஸ்ரீராமன். பி-ம்:—[1] முன்னம். [2] விண்ணிடைக். [3] அறிந்திலன். [4] ஆழிப். [5] வெம். (2472)

81.—ஸ்ரீராமன் 'வேண்டா' என்ன, இலக்குமணன் பிரமாஸ்திரம் விடுவதைத் தவிர்தல்.

ஆன்ற வன்[1] னது [2]புகற லு [3]மறவனீ முனிந்தால்
ஈன்ற வந்தணன் படைக்கலந் [4]தொடுக்கவிவ் வுலகம்
மூன்றை யுஞ்சுடு மொருவனுன் [5]முடிகல தென்றான்
சான்ற வன்னது தவிர்ந்தன னுணர்வுடைத் தம்பி.

(இ-ள்.) மிக்கோனாகிய இலட்சுமணன் (பிரமாஸ்திரத்தைத் தொடுப்பேனென்ற) அந்த வார்த்தையைச் சொன்னவுடனே, தரும சொரூபியாகிய ஸ்ரீராமன்,—(இலக்குவனை நோக்கி) '(உலகங்களை யெல்லாம்) படைத்த கடவுளாகிய பிரமனுடைய படைக்கலத்தை [பிரமாஸ்திரத்தை]த் தொடுக்குமாறு நீ முனிந்தாயானால், (அது) இவ்வுலக மூன்றையுஞ் சுடும்; ஒருவனால் (விலக்க) முடிவதன்று; '(ஆகையால், அது செய்யற்க)' என்றான்; அறிவுடைய தம்பியாகிய

சான்ருேன்,அச்செயலை [பிரமாஸ்திரத்தை விடுவதை]த் தவிர்ந்திட்டான்; (எ-று.)—அறவன், சான்றவன் -கருத்துடையடைகொளி. உணர்வுடைத்தம்பி-கருத்துடையடைமொழி. அறவன் என்பதை நீ என்பதற்கு அடையாக்கினுமாம். பி-ம்:—[1] அவை. [2] புகலவும். [3] அறனிலைவழாதாய், மறனிலைவாழாய். [4] தொடுக்கில். [5] முடியுமோவென்னச், முடிகுருவென்ருற். (2473)

82.—இவர்களெண்ணத்தையறிந்த இந்திரசித்து, தான் பிரமாஸ்திரம் விடுவதாக எண்ணி மறைந்துசெல்ல, அவன் கருத்தை அறியமாட்டாத தேவர்கள் ஆவலங்கொட்டிச் சிரித்தல்.

மறைந்து போய்நின்ற [1] வஞ்சனு மவருடை மனத்தை
அறிந்து தெய்வவான் படைக்கலந் தொடுப்பதற் கமைந்தான்
பிரிந்து [2] போவதே கருமமிப் பொழுதெனப் பெயர்ந்தான்
[3] செறிந்த தேவர்க ளாவலங் கொட்டினர் சிரித்தார்.

(இ-ள்.) மறைந்துபோய்நின்ற வஞ்சனைக்குணமுள்ள இந்திரசித்தும்,—அவ்விராமலட்சுமணருடைய கருத்தையறிந்து, தெய்வத்தன்மையுள்ள சிறந்தபடைக்கலத்தை [பிரமாஸ்திரத்தை]த் தொடுப்பதற்கு எண்ணினவனாய், (அதற்குவேண்டிய சடங்குகளைச் செய்யும்பொருட்டு இவ்விடத்தை)விட்டு அப்பாற் போவதே இப்போது செய்யத்தக்கதெனக் கருதிச்சென்ருன்; (வானத்து) நெருங்கிய தேவர் ஆவலங்கொட்டிச் சிரித்தார்கள்; (எ-று.)

இந்திரசித்து விசும்பில் மறைந்தவுடன் இலக்குவன் பிரமாத்திரம் விடுவேனென்றதையும் இராமபிரான் தடுத்ததையும் அறிந்த இந்திரசித்து, பிரமாத்திரந்தொடுத்தலைத் தானே செய்வதாகத் தீர்மானித்து அதற்கு ஏற்ற சடங்கு செய்ய அப்பாற்போனுன்; இந்திரசித்தின் கருத்தை யாராயாது தோற்ருேடினுனெனக்கருதித் தேவர்கள் ஆவலங்கொட்டியார்த்தனரென்க. இந்திரசித்து சென்று சேர்ந்தது இலங்கையென்பதை 84-ஆஞ் செய்யுளிற்காணலாம். ஆவலங்கொட்டுதல் - செருக்குத்தோன்றக் கைக்கொட்டுதல். பி-ம்:—[1] அரக்கனும். [2] போயதே. [3] செறிந்து. (2474)

83.—முன்பு தோற்ருேடிய வானரரும் இந்திரசித்து அஞ்சியோடியதாகக் கருதிக் களிப்பினுல் ஆரவாரித்தல்.

செஞ்[1] ச ரத்தொடு [2] சேண்கதிர் [3] விசும்பின்மேற் [4] செல்லா
[5] மஞ்சன் மாமழை [6] போயின தாமென மாற
அஞ்சி னுன் [7] மறைந் தானகன் ருனென வார்த்தார்
வெஞ்சி னந்தரு [8] களிப்பினர் வானர வீரர்.

(இ-ள்.) செந்நிறச்சரத்தோடுகூடி வெகுதூரத்திற் சூரியன் சஞ்சரிக்கிற விசும்பின்மேற் சென்று, (இராவண) குமாரனை இந்திரசித்து, கறுத்த [நீர்கொண்ட] மேகம் போயதுபோல (அக்களத்தினின்று) நீங்க, (முன்பு தோற்ருேடிய) வானரவீரரும் (மீண்டு வந்து, ('இந்திரசித்து போர்க்கு) அஞ்சி மறைந்து அகன்ருன்' என்று கருதிக் கடுஞ்சினத்தின்மேலெழுந்த களிப்பையுடையவராகி

ஆரவாரித்தார்கள்; (எ-று.)—பி - ம்:—[1]சரங்கொடு. [2]செம்மழை, சேண்மழை, சினமழை. [3]விசும்பிடைச். [4]செல்வான், செல்ல. [5]மஞ்சின். [6]ஓவியதாம், ஓவியந்தாம். [7]அகன்றனென்பதறிந்தனர், அகன்றனெனவறிந்தனர். [8]தோளினர். (2475)

84.—முன்தோற்றோடிய வானரசேனை வந்து ஆரவாரிக்க, இந்திரசித்து இலங்கை சேர்தல்.

உடைந்த வானரச் சேனையு மோதநீ ருவரி
அடைந்த தாமென வந்திரைத் தார்த்தெழுந் [1]தாடித்
தொடர்ந்து சென்றது [2]தோற்றவன் யாவர்க்குந் தோன்றாக்
கடைந்த [3]வேலைபோற் கலங்குறு [4]மிலங்கையைக் கலந்தான்.

(இ-ள்.) தோற்ற வானரசேனையும் வெள்ளநீரையுடையகடல் அடைந்ததாமென்னுமாறு வந்து உரக்க ஆரவாரித்து எழுந்து ஆடியவண்ணம் தொடர்ச்சியாகச் சென்றது; தோற்றவனாகிய இந்திரசித்து, யாவர்க்கும் கட்புலனாகாமல் கடையப்பட்ட பாற்கடல்போற் கலக்கமுற்ற இலங்கையைச் சேர்ந்தான்; (எ-று.)— இரைத்தார்த்து-ஒருபொருட்பன்மொழி. **உவமையணி. பி-ம்:—** [1]ஓடித். [2]கொற்றமன் றிளவற்குத் தோற்றான், தோற்றவன் யாவற்குந் தோற்றான். [3]வேலையிற். [4]இலங்கையிற் கரந்தான். ()

85.—இந்திரசித்தின் மனக்கருத்தை இராமலட்சுமணருணராமை.

எற்கொ ணான்முகன் படைக்கல மிவரென்மேல் [1]விடாமுன்
முற்கொள் வேனென்னு முயற்சியன் மறைமுறை மொழிந்த
சொற்கொள் வேள்விபோய்த் தொடங்குவா[2]னமைந்தவன் றுணிவை
மற்கொ டோளவ ருணர்ந்தில [3]ரவன்றிற மறந்தார்.

(இ-ள்.) வலிமைகொண்ட தோளையுடைய இராமலட்சுமணரும், அவ்விந்திரசித்தின் திறமையை மறந்திட்டாராய், 'ஒளியைக்கொண்டபிரமன் படைக்கலத்தை இவர் என்மேல்விடுவதற்கு முன்னம் (நான்) முற்படுவேன்' என்னும் முயற்சியுடையவனாய், வேதம்முறையாகமொழிந்த மந்திரங்களைக்கொண்ட வேள்வியைத் தொடங்கும் பொருட்டுப் போய் முயல்கின்ற இந்திரசித்தின் மனத்துணிவை உணராதவராயினர்: (எ - று.)—இந்திரசித்தின் திறமையை இராமலட்சுமணர் மறவாதிருப்பின், அவ்விந்திரசித்தின் மனத்துணிவை யூன்றிநோக்கி யுணர்ந்திருப்பரென்க. **பி - ம்:—** [1]விடுமுன். [2]துணிந்தவன். [3]அமர்த்தொழில். (2477)

86.—இராமலட்சுமணர் போர்க்கோலங் களைந்து நிற்றலும், வானவர் பூமழை பொழிதலும்.

அனும னங்கதன் றோளினின் றிழிந்தன ராகித்
தனுவும் வெங்கணைப் புட்டிலுங் கவசமுந் தடக்கைக்கு
இனிய கோதையுந் துறந்தன [1]ரிருந்தன ரிமையோர்
பனி[2]ம லர்த்தொகை பொழிந்தனர் [3]வாழ்த்தொலி பரப்பி.

(இ - ள்.) (இந்திரசித்தின் மனத்துணிவை யறியாமையினால்) அநுமான் அங்கதன் இவ்விருவருடைய தோளினின்று (இராம

லட்சுமணர்) இறங்கியவராய், விற்களும் கொடிய அம்புப்புட்டில்களும் கவசங்களும் பெரியகைக்கு இனியவாகிய கையுறைகளும் துறந்திட்டிருந்தார்கள்; தேவர்கள் வாழ்த்தொலியைப் பரப்பிய வண்ணம் குளிர்ந்த மலர்த்தொகுதிகளைப் பொழிந்தனர்; (எ-று.) —சிலபிரதியில் இச்செய்யுள் இல்லை. பி - ம்:—[1] இருவரும். [2] மலர் பொழிந்தார்த்தனர். [3] வாழ்த்தினர்பல்கால், வாழ்த்தினர்பரப்பி.()

87.—சூரியாஸ்தமன வருணனை.

ஆர்த்த சேனையி னமலைபோய் விசும்பினை யலைக்க
ஈர்த்த தேரொடுங் கடிதுசென் று [1] னந்த விரவி
[2] தீர்த்தன் மேலவன் றிசைமுகன் படைக்கலஞ் செலுத்தப்
[3] பார்க்கி லேன்முந்திப் படுவதே நன்றெனப் பட்டான்.

(இ - ள்.) ஆரவாரித்த சேனையின் பேரொலி போய் வானத்தினைக் கலக்க, (குதிரைகளால்) இழுக்கப்பட்ட தேருடனே அந்த இரவி (அவ்வானத்தை) விட்டுக் கடிதுசென்றவனாகி, 'பரிசுத்த மூர்த்தியாகிய இலட்சுமணன்மீது அந்த இந்திரசித்து பிரமாஸ்திரத்தைச் செலுத்தக் காணப்போறேன்; (ஆகையால்), முந்தி(க்கடலிற்)படுவது நலம்' என்பான்போல (மேல்கடலில்) மறைந்தான்; இயற்கையாகச் சூரியன் அஸ்தமித்ததற்குத் தன்குலக் குமாரனுக்கு ஒரு தீங்கும் நேரக் காணப்பொறுதான்போலச் சூரியன் பட்டானெனக் காரணங் கற்பித்துக் கூறியதனால், இது—ஏதுத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1] அகன்றிரவி. [2] தீர்த்த. [3] பார்க்ககிற்கிலேன் படுவன் யானெனப், பார்க்கிலேன் முந்தப்படுவலென்பானெனப். (2479)

88.—இராமன் 'விரைவில் சேனைகட்கு உணவுகொணர்க' என விபீஷணனை யனுப்புதல்.

இரவு நன் [1] பக லும் [2] பெரு நெடுஞ்செரு வியற்றி
உரவு [3] நம்படை மெலிந்துள தருந்துதற் குணவு
வரவு தாழ்த்தது வீடண வல்லையி [4] னேஇத்
தரவு [5] வேண்டின னென்றனன் றாமரைக் கண்ணன்.

(இ - ள்.) 'இராத்திரியிலும் நல்லபகலிலுமாக மிக்க பெரும் போர்செய்து வலிய நமதுசேனை மெலிவுற்றுள்ளது; (இச்சேனை) உண்பதற்கு உணவுவரத் தாழ்த்திட்டது; விபீஷணனே! (நீ) விரைவிற்போய் (அவ்வுணவைக்)கொணருவதை வேண்டினேன்' என்று புண்டரீகாட்சனான ஸ்ரீராமன் கூறினான்; (எ-று.)—பி - ம்:—[1] பகலிலும். [2] நெடும்பெருஞ்செரு, பெருஞ்செருவினை. [3] நன்படை மேலெறிந்துந்துதற்கு. [4] எய்திக். [5] வேண்டினது. (2480)

89.—விபீஷணன் உடன்பட்டுச் செல்லுதல்.

இன்ன தேகடி தியற்றுவ னெனத்தொழு தெழுந்தான்
பொன்னின் மௌலியன் வீடணன் றமரொடும் போனான்
கன்ன லொன்றிலோர் [1] காலினின் வேலையைக் கடந்தான்
அன்ன [2] வேலையி னிராமனீ திளையவற் கறைந்தான்.

(இ - ள்.) பொற்கிரீடமணிந்தவனான விபீஷணன் இச்செயலையே விரைவிற்செய்வேனென்று தொழுது எழுந்து தம்மவ

ரோடுஞ் சென்றான்: (சென்று) ஒரு நாழிகைப்போதிற்குள் ஒப்பற்ற வாயுபகவான்போலக் கடலைக் கடந்திட்டான்; அப்போது இச்சொல்லை ஸ்ரீராமன் இளையபெருமாளுக்குக் கூறலானான்; (எ-று.)—ஸ்ரீராமன் கூறுவதை அடுத்த செய்யுளிற் காண்க. பி-ம்:—[1]கங்குலின். [2]காலையில், காலையீது. (2481)

90.—சேனையைப்பாதுகாப்பாயென்று இளையபெருமாளுக்குச் சொல்லிவிட்டு ஸ்ரீராமன் அஸ்திரபூசைக்குச் செலலுதல்.

தெய்வ வான்பெரும் படைகட்கு வரன்முறை [1]திருந்து
மெய்கொள் பூசனை [2]யியற்றினம் [3]விடுமிது விதியால்
ஐய நா [4]னிவை யாற்றினன் வருவதோ ரளவும்
கைகொள் சேனையைக் காவெனப் போர்க்களங் கடந்தான்.

(இ-ள்.) 'தெய்வத்தன்மையுள்ள மிகச்சிறந்த அஸ்திரங்கட்கு வரன்முறையாகத் திருத்தமான உண்மையான பூசையை யியற்றினோமாகி(ப் பிறகு அவற்றை)ப் பிரயோகிக்கின்ற இச்செயலை முறைமையான செயலாகும்: ஐயனே! நான் அப்பூசனைகளைச் செய்து (மீண்டு) வருமளவும் அணிவகுத்தலைக் கொண்ட சேனையைப் பாதுகாத்துக் கொண்டிருப்பாய் என்று சொல்லிப் போர்க்களத்தைக் கடந்துசென்றான், (ஸ்ரீராமன்); (எ - று.)

பரிசுத்தமான இடத்திலேயிருந்து அஸ்திரதேவதைகட்குப் பூசனைபுரிய ஸ்ரீராமன் சென்றானென்க. பி-ம்:—[1]திருத்து. [2]இயற்றினன். [3]விடுவது. [4]அவையியற்றியே. (2482)

91.—இந்திரசித்து களத்து நிகழ்ந்தன முதலியவற்றை இராவணனிடஞ் சொல்ல, 'இனி யாது செய்யவேண்டுவது?' என்று அவன் வினவல்.

தந்தை யைக்கண்டு புகுந்துள தன்மையுந் தன்மேல்
[1]முந்தை நான்முகன் படைக்கலந் தொடுக்குற்ற முறையும்
சிந்தை யுட்புகச் செப்பின னனையவன் றிகைத்தான்
[2]எந்தை யென்னினிச் செயத்[3] தக்க தியாதென விசைத்தான்.

(இ - ள்.) (இந்திரசித்து, தன்) தந்தையைப் பார்த்து நேர்ந்துள்ள செயலையும் தன்மீது பழமையான பிரமாஸ்திரத்தைத் தொடுக்குமாறு (மாற்றார்) நினைந்த முறைமையையும் (அந்த இராவணனுடைய) மனத்திற் புகுமாறு கூறினான்; (அதுகேட்டு) அந்த இராவணன் திகைப்புற்றவனாய், 'எந்தாய்! இப்போது செய்யத் தக்கது என்? சொல்' என்று வினவினான்; (எ - று.)—எந்தை - அண்மைவிளி: அன்புபற்றியது. பி - ம்:—[1]முந்த. [2]எந்தையே. [3]தக்கதாமென. (2483)

92.—இரண்டு கவிகள்-ஒருதொடர்: இந்திரசித்து பகைவர்கள் அறியாமல் மறைந்து பிரமாஸ்திரம்விடுத்து அவர்களை யொழிப்பேனெனல்.

தன்னைக் [1]கொல்வது துணிவரேற் றனக்கது [2]தகுமேல்
[3]முன்னர்க் கொல்லிய [4]முயல்கவென் [5]றறிஞரே மொழிந்தார்

அன்னப் போரவ [6]ரறிவுரு வகைமறைந் தயன்றன்
[7]வென்னப் [8]போர்ப்படை விடுதலே நலமிது [9]விதியால்.

(இ-ள்) '(ஒருவர்) தன்னைக் கொல்வதற்குத் துணிந்தாராயின், அங்ஙனம் தன்னைக்கொல்லத் துணிந்தவரைக் கொல்வதென்பது தனக்குக் கூடுமாயின், முன்னர் (அவர்களைக்) கொல்லுமாறு முயல்க' என்று அறிஞரே கூறியுள்ளார்; அப்படிச் செய்யும் போரை அந்தமானுடர் அறியாதபடி மறைந்து பிரமதேவனுடைய அழகிய போர்க்குரிய படைக்கலத்தை விடுதலே நல்லது: இதுவே முறையாம்: (எ - று.)—தன்னைக் கொல்லவந்த பசுவைக் கொல்லு [Revenge is sweet] என்பது, பழமொழி. தன்னைப் போக்கித் தருமமென்ப: இது ஆபத்தருமம். வர்ணம் என்ற வடமொழி வன்னம் என்று திரிந்து 'வென்னம்' என்று மொழிமுதல் அகரம் எகரமாயிற்று. அன்னபோரென்பது செய்யுளோசையின்பநோக்கி, அன்னப்போரென விகாரப்பட்டது. பி-ம்:—[1]கொல்லிய. [2]துணிய. [3]முன்னரிற்கொலே, முன்னற்கொல்லுகை, முன்னைச்சொல்லியது. [4]உலகமென்று, நலமென. [5]அறிஞரோ. [6]அறிவரும். [7]வென்னற். [8]பொற்படை. [9]மெய்யால். (2484)

93. தொடுக்கின் றேனென்ப [1]துணர்வரே லப்படை [2]தொடுத்தே
தடுப்பர் காண்பரேற் கொல்லவும் [3]வலத்தரத் தவத்தோர்
இடுக்கொன் றாகின்ற தில்லைநல் [4]வேள்வியை யியற்றி [தான்.
முடிப்ப னின்றவர் [5]வாழ்வையோர் [6]கணத்தென [7]மொழிந்

(இ - ள்.) '(யான் பிரமாஸ்திரத்தைத்) தொடுக்கின்றேனென்பதை (அவர்கள்) அறிந்தால், அந்தப்படையைத் தொடுத்தே (யான் தொடுத்த அஸ்திரத்தைத்) தடுப்பார்கள்; காண்பார்களேயானால் (என்னைக்) கொல்லவும் வல்லமையுடையவர் அந்தத்தவத்தோர்கள்; இடுக்கில் ஒன்றும் ஆகின்றதில்லை; நல்ல வேள்வியைச்செய்து அந்த மானுடரின்வாழ்வை ஓர்கணத்தில் (மாயவஞ்சனையால்) முடிப்பேன்' என்று சொல்லி(த் தன்வார்த்தையை) முடித்தான், (இந்திரசித்து); (எ - று.)—கொல்லுதல்-படைக்கலத்தைக் கொல்லுதலுமாம் இடுக்கு-சங்கடம். வருத்தம். பி-ம்:—[1]அறியவரேல். [2]தொடுத்துத். [3]வல்லவர், வல்லரத். [4]வேள்வியின். [5]ஆவியோர். [6]கணத்தென்று. [7]முடித்தான். (2485)

94.—இந்திரசித்து சொல்லியதுகேட்டு இராவணன் மகோதரனை நோக்கிக் கூறத் தொடங்குதல்.

என்னை யன்னவர் [1]மறந்தனர் நின்றிக வியற்றத்
துன்னு [2]போர்ப்படை [3]முடிவிலா தவர்வயிற் [4]றூண்டின்
பின்னை நின்றது புரிவனென் [5]றன்னவன் பேச
[6]மன்னன் முன்னின்ற மகோதரற் கிம்மொழி வழங்கும்.

(இ-ள்.) (மற்றும்) 'என்னை அவ்விராமலட்சுமணர் மறந்தனராய்நின்று போர்செய்வதற்காக நெருங்கிய போரைப்புரியவல்ல சேனைகளை முடிவில்லாமல் [மிக அதிகமாக] அவ்விராமலட்சுமணர் மீது (செல்லத்) தூண்டினாயானால், பின்பு நான் (செய்ய வேண்டியதாய்) நின்றதை [பிரமாஸ்திரத்தைஅவர்களறியாமல்

விடுப்பதை]ச் செய்வேன்' என்று அந்த இந்திரசித்து பேச, இராவணன் (தன்) முன்னின்ற மகோதரற்கு இம்மொழியைச் சொல்வானானான்; (எ - று.)—இராவணன் கூறுவதை மேலிரண்டு கவிகளிற்காண்க. பி-ம்:—[1]அறிந்திலாவகை செயல், மறைந்திலனென்றிகல். [2]பொய்ப்படை. [3]மூடிவிலா. [4]தூண்டிப். [5]இனையவன். [6]மன்னனுந் திறன், மன்னனின்றவன். (2486)

95.—இதுவும், அடுத்த கவியும்-ஒருதொடர்: நூறுவெள்ளஞ் சேனையோடும் அகம்பன்முதலியோரோடும் போய் இராமலட்சுமணருடனும் பொருது உதவுவாயென இராவணன் மகோதரனுக்குக் கூறுதல்.

வெள்ள நூறுடை வெஞ்சினச் [1]சேனையை [2]வீர
அள்ளி லைப்படை [3]யகம்பனே முதலிய வரக்கர்
எள்ளி லெண்ணிலர் தம்மொடு விரைந்தனை [4]யேகிக்
[5]கொள்ளை வெஞ்[6]செரு வியற்றுதி மனிதரைக் குறுகி.

(இ-ள்.) வீரனே! நெருங்கிய இலையையுடைய வேற்படையைக் கொண்டுள்ள அகம்பன் முதலிய அரக்கர் குற்றமற்றுக் கணக்கிட முடியாமல் மிகப்பலராயிருப்பவருடனே நூறுவெள்ளமென்னுங் கணக்குடைய கொடுங் கோபத்தையுடைய சேனையையும் (உடன் கொண்டு) விரைந்துசென்று (உயிரைக்) கொள்ளை கொள்ளுதற்கு உரிய கொடிய போரை மனிதரைக் குறுகி இயற்றுவாய்; (எ-று.)—பி-ம்:—[1]தானையை. [2]விரவி. [3]அகம்பனை. [4]எய்திக். [5]கொள்ளும். [6]சமம். (2487)

96. *மாயை யென்றன வல்லன யாவையும் வழங்கித்*
தீயி ருட்பெரும் [1]பரப்பினைச் செறிவுறத் திருத்தி
நீயொ ருத்தனே யுலகொரு மூன்றையு நிமிர்வாய்
போயு ருத்தவ ருயிர்[2]குடித் துதவெனப் புகன்றான்.

(இ-ள்.) நீ ஒருத்தனே வல்லனவாகிய மாயையென்றன எல்லாவற்றையுஞ் செய்து, கொடிய மிக்க இருட்பரப்பினை நெருக்கமுற வுண்டாக்கி, மூவுலகத்தினையும் வெல்லவல்லாய்: (அப்படிப்பட்ட நீ இங்குநின்றும்) போய், (நம்மைக்) கோபித்துப் போர்புரிபவராகிய இராமலட்சுமணரின் உயிரைக் குடித்து உதவுவாயென்று (மகோதரனை நோக்கி இராவணன்) கூறினான்; (எ - று.)

எதிரிகள் அறியாதபடி இந்திரசித்து பிரமாத்திரமெய்து அவர்களைக் கொல்லுதற்கு மகோதரனுதவுவதையே உபசாரம் பற்றி, 'உருத்தவருயிர்குடித்துதவு' என்கின்றான். முதலடிக்கு - மாயை வித்தை யென்றன எவை, மற்றும் அவையல்லாத வித்தைகள் எவை, எல்லாவற்றையும் உபயோகித்து என்பாருமுளர். பி-ம்:—[1]பிழம்பினைத்திகழ்வுறத், பரப்பினைச் செருவுறத். [2]உகுத்து. ()

97.—அதுகேட்ட மகோதரன் மகிழ, அரக்கர் உடன்செல்லுமாறு அம்மகோதரனைச் செறிதல்.

என்ற காலையி னென்றுகொ லேவுவ தென்று
நின்ற வாளெயிற் றரக்கனு மூவலையி னிமிர்ந்தான்

சென்று தேர்மிசை யேறின னிராக்கதர் செறிந்தார்
குன்று சுற்றிய மதகரிக் [2]குலமன்ன குறியார்.

(இ - ள்.) என்று (இராவணன்) கூறியபோது, '(நம்மை இராவணன்) ஏவுவது எப்போதோ?' என்று (பார்த்துக்கொண்டு) நின்றுள்ள வாள்போன்ற பற்களையுடைய அரக்கனும் [மகோதரனும்]—(இப்போது ஏவப்பெற்றதனால்) உவகையின்மேற்பட்டவனாகிப் புறப்பட்டுத் தேர்மிசையேறினான்; மலையைச் சுற்றிய மதயானைக் கூட்டம் போன்ற நிலையையுடையராகி, இராக்கதர், (அவனுடன் செல்லுமாறு) நெருங்கினார்; (எ - று.)—பி - ம்:—[1]நிமிர்ந்து. [2]குலமெனக். (2489)

98.—மகோதரனுடன்சென்ற தேர் முதலியவை.

கோடி கோடிநூ றாயிர மாயிரங் [1]குறித்த
ஆட லானைக ளணிதொறு மணிதொறு [2]மமைந்த
ஓடு தேர்க்குல முலப்பில [3]வோடிவந் [4]துற்ற
[5]கேடில் வாம்பரி [6]கணக்கையுங் கடந்தன [7]கிளர்ந்த.

(இ-ள்.) கோடிகோடி நூறாயிரம் ஆயிரமென்னுங் கணக்கினவான வலிய யானைகள் அணிதோறும் அணிதோறும் பொருந்தியிருந்தன; ஓடுகின்ற தேர்க்குலம் அளவற்றன ஓடிவந்துற்றன; கெடுதலில்லாத தாவுகின்ற பரிகள் எல்லைகடந்தனவாய்க்கிளர்ச்சிகொண்டுவந்தன; (எ-று.)—பி-ம்:[1]குவித்த. [2]அமைத்தது. [3]கோடி. [4]உற்றது. [5]ஆடல்வாம்பரிக். [6]அரந்தை. [7]அடைந்த. (2490)

99.—அரக்கப்பதாதிகள் மிடைதல்.

படைக்க லங்களும் பருமணிப் பூண்களும் பகுவாய்
இடைக் [1]கலந்தபே ரெயிற்றிளம் பிறைகளு மெறிக்கப்
புடைப்ப ரந்தன வெயில்களு நிலாக்களும் புரள
விடைக்கு லங்கள்போ [2]லிராக்கதப் பதாதியு மிடைந்த.

(இ - ள்.) (தாம் கைக்கொண்ட) படைக்கலங்களும் பருத்த மணிகளழுத்திய பூண்களும் பிளந்த வாயினிடையே கலந்துள்ள பெரும்பற்களாகிய இளம்பிறைகளும் ஒளிவீசுவதனாற் பக்கங்களிற் பரவியனவான வெயில்களும் நிலாக்களும் மாறிமாறி விளங்க, விடைக்குலங்கள் போல இராக்கதப்பதாதியும் நெருங்கின; (எ-று.)—படைக்கலவொளியால் நிலவும், மணிப்பூண்களினொளியால் வெயிலும், பற்களினொளியால் நிலவுந் தோன்றின. விடைக்குலம்-எருதுகளின் குழு. பி - ம்:—[1]கலந்தன, கலந்தனர். [2]அரக்கர்தம். (2491)

100.—கொடிகள் குழுமியிருத்தலும், தூளிகள் மேலெழுதலும்.

கொடிக்கு ழீஇயின கொழுந்தெடுத் தெழுந்து [1]மேற் கொள்ள
இடிக்[2]கு ழீஇயெழு மழைப்பெருங் குலங்களை யிரித்த
அடிக்கு ழீஇயிடு [3]மிடந்தொறும் [4]பிதிர்ந்தெழுந் தார்த்த
பொடிக்கு ழீஇயண்டம் படைத்தவன் கண்ணையும் புதைத்த.

(இ - ள்.) திரண்டனவாகிய கொடிகள், (தம்) கொழுந்துகள் (காற்றினால்) கிளர்ந்தெழுந்து மேலிடைத்தைக் கொள்வதனால் இடிகள் திரண்டுஎழுவனவாகிய மழைகளின் பெரியதொகுதிகளை நிலைகெடுத்தன; (அச்சேனைகளின்) அடிகள் திரண்டுபதிகின்ற இடந்தோறும் பிதிர்ப்பட்டு எழுந்துநிரம்பிய தூளிகள், திரண்டு அண்டத்தைப் படைத்தவனான பிரமதேவனது கண்களையும் மறைத்தன; (எ - று.)—தொடர்புயர்வுநவிற்சியணி. கொழுந்து - கொடிச்சிலையின் நுனி. பிதிர்தல் - பொடிபடுதல். பி-ம்:—[1]செற் கொள்ள, கொள்விசும்பின். [2]குழீஇயின. [3]இடத்தொடும். [4]பிரிந் தெழுந்து. (2492)

101.—யானைகுதிரைகளுடைய மிகுதியின்வருணனை.

ஆனை யென்னுமா [1]மலைகளி னிழிமத வருவி
வான [2]யாறுகள் வாசிவாய் நுரையொடு [3]மயங்கிக்
கான மாமரங் கல்லொடு மீர்த்தன [4]கடிதிற்
போன [5]போக்கரும் பெருமைய [6]புணரியுட் புக்க.

(இ-ள்.) ஆனைகளென்கின்ற பெரியமலைகளினின்று இழிகின்ற மதவருவிகளினாலாகிய வானநதிகள், குதிரைகளின் வாயினின்று வெளிப்படுகின்ற நுரைகளுடன் கலந்து, காட்டிலுள்ள பெரிய மரங்களைக் கற்களுடனே இழுத்துக்கொண்டு கடிதிற்போனவை யாய், போக்கமுடியாத பெருமையையுடையவாகிக் கடலினுள்ளே புக்கன; (எ - று.)

இவ்வருணனையால் யானைகுதிரைப் படைகளின் மிகுதி தொனித்தல் காண்க. **உருவகவணி**யோடு **தொடர்புயர்வுநவிற்சியணி** சேர்ந்துள்ளது. பி-ம்:—[1]மலையினின்றிழிதரும். [2]யாறெனை வாசியின் விலாழியின், யாறுகள்வாசியினுரையொடு. [3]மயங்கக். [4]கடுகிப். [5]போக்கரும்பெருமையிற், போக்கரும் பெருமையைப், நீர் தரும் பொரும்புழை, போதரும்பெருநதி, போதரும்பெருந்திரைப், போதரும்பெருமைய. [6]புணரியிற். (2493)

102.—அரக்கர் தம்படைக்கலங்களை விதிர்த்தல்.

தடித்து [1]மின்குலம் விசும்பிடைத் தயங்குவ சலத்தின்
மடித்த வாயினர் வாளெயிற் றரக்கர்தம் [3]வலத்திற்
பிடித்த திண்படை [4]விதிர்த்திட விதிர்த்திடப் [5]பிறழ்ந்து
பொடித்த [6]வெம்பொறி [7]கொதித்துமேற் போவன [8]போல்வ.

(இ-ள்.) கோபத்தோடு மடித்த வாயையுடையவரான வாள் (போற்கூரிய) எயிற்றைக்கொண்ட அரக்கர் தம் வலப்புறத்திலே பிடித்த வலியபடைக்கலங்களை அசைக்குந்தோறும் மாறிமாறி வெளிப்பட்டகொடிய அனற்பொறிகள் கொதித்து மேலேபோவன,-தடித்து என்றுசொல்லப்படுகின்ற மின்னலின் கூட்டங்கள் விசும்பினிடத்திலே விளங்குவனவற்றை யொத்தன; (எ-று.)

இங்கு மின்னற்குலத்தை வருணித்தாற்போற் கூறியிருப்பி னும், அரக்கர்தம் படைக்கலங்களை விதிர்க்குந்தோறும் அவைகளி

னின்று எழும் அனற்பொறிகள் வானத்துத் தோன்றும் மின்னற் குலம்போல் விளங்கின என்பதே கருத்தாம். தன்மைத்தற்குறிப் பேற்றவணி. சலம்-கோபம். பி-ம்:—[1]மீன்களும். [2]தயங்கிய. [3]வரத் திற். [4]அங்கையால் விதிர்த்திடைப். [5]பிறழ்ந்த, பிறந்த, பிறந்து, மின்னும். [6]வெம்பிறை. [7]தொத்தின, கொதித்துமுன். [8]போன்ற.

103.—சேனை இலங்கைவாயிலினின்று வெளிப்படுவதன் வருணனை.

சொன்ன [1]நூறுடை வெள்ள[2]மன் றிராவணன் றுரந்த
அன்ன [3]சேனையை வாயிலூ டுமிழ்கின்ற வமைதி
முன்னம் [4]வேலையை முழுவதுங் குடித்தது முறையீது
என்ன மீட்டுமிழ் [5]குறுமுனி யொத்ததவ் விலங்கை.

(இ - ள்.) அன்று இராவணன் அனுப்பியனவான (மேற் கூறிய நூறுவெள்ளமென்ற கணக்குக்கொண்ட அந்தச்சேனையை) இலங்கை நகரானது,—(தன்) வாயிலின் வழியாக வெளியிடுகின்ற தன்மையால்,—முன்னம் கடலை முழுவதுங் குடித்திட்டதை (வெளி விடுகின்ற) இதுவே முறையென்று மீண்டும் உமிழ்ந்தகுறு முனியை யொத்தது; (எ-று.)—தற்குறிப்பேற்றம். பி - ம்:—[1]நூறி டை. [2]என்று. [3]சேனையவ். [4]வேலைகள். [5]தமிழ். (2495)

104.—பலவகையொலி.

[1]சங்கு பேரியுங் [2]காளமுந் தாளமுந் தலைவர்
சிங்க நாதமுஞ் சிலையினா ணொலிகளுஞ் சினமாப்
பொங்கு மோதையும் புரவியி [3]னமலையும் [4]பொலிதேர்
வெங்க ணொலமு மாலென [5]விழுங்கிய வுலகை.

(இ - ள்.) சங்கங்களும் பேரிகளும் எக்காளங்களும் தாளங் களும் தலைவரின் சிங்கநாதங்களும் விற்களின் நாணொலிகளும் கறுக்கொள்ளுந்தன்மையுள்ள மிருகமாகிய யானைகளின் கிளர்ந் தெழுகின்ற வீரிடுமொலியும் குதிரைகளின் கனைப்பொலியும் விளங்குகின்ற தேரின் கொடிய (சக்கரக்) கண்ணிலிருந்து புறப் படும் ஒலியும் திருமாலைப்போல உலகை(த் தன்னுள்) அடக்கிக் கொண்டன; (எ-று.)

உலகை எப்புறமும் ஒலிகள் சூழ்ந்துகொண்டதனால், அவ் வொலிகள், உலகை விழுங்கியவென்றார்: அதனால், அவ்வொலிக் குத் திருமாலை யுவமைகூறினார். தற்குறிப்பேற்றம் ஒலியென்று பொருளுள்ள சொற்கள் பல வந்தது—பொருட்பின்வருநிலையணி யாம். பி-ம்:—[1]சங்கும், சங்க. [2]தாளமுங்காளமும். [3]ஓதையும். [4]பொலந்தேர். [5]விழுங்கியது. (2496)

105.—இனி, நான்குகவிகள்-அரக்கர்க்கும் வானரர்க்கும் கைகலந்தபோர் நிகழ்தலைக் கூறும்.

புக்க தாற்பெரும் போர்ப்படை பறந்தலைப் புறத்தில்
தொக்க தானெடு வானரத் தானையுந் துவன்றி
ஒக்க [1]வார்த்தன [2]வுறுக்கின தெழித்தன வுருமின்
மிக்க வான்படை விடுகணை [3]மாமலை [4]விலக்கி.

(இ - ள்.) பெரும்போரைச் செய்தற்குரிய (அரக்கப்) படை, போர்க்களத்திடத்துப் புக்கது; நெடியவானரச்சேனையும், நெருங்கிக் கூடிற்று: (பிறகு சேனையிலுள்ள வானரங்கள்),—மிகுதியாகவுள்ள பெரிய அரக்கப்படை எய்கின்ற அம்புகளைப் பெரியமலைகளால் விலக்கி, ஒருசேர ஆரவாரித்தன; கோபித்தன; இடியைப்போல(ப் பேரொலிபட) அதட்டின; (எ-று.)—இது, இருதிறத்தாரும் கைகலந்து பொருதலைக்கூறிற்று. பி-ம்:—[1] ஆர்த்தனர். [1]உறுக்கினர், உறுக்கின. [3]மாமழை. [4]விலங்கி, விலக்க. (2497)

106. குன்று கோடியுங் கோடிமேற் கோடியுங் குறித்த
வென்றி வானர [1]வீரர்கண் முகந்தொறும் [2]விலங்கல்
ஒன்றில் நால்வரு மைவரு மிராக்கத ருலந்தார்
பொன்றி [3]வீழ்ந்தன [4]பொருகரி பாய்பரி பொலந்தேர்.

(இ-ள்.) இடந்தோறும், கோடியும் கோடிக்குமேற் கோடியுமாகக் குன்றுகளைக் குறிபார்த்துவிட்ட வெற்றிபொருந்திய வானர வீரர்களின் ஒருகுன்றுக்கு நால்வரும் ஐவருமாக இராக்கதர் உயிரொழிந்தார்: போர்செய்ய வல்ல யானைகளும் பாய்கின்ற பரிகளும் அழகிய தேர்களும், அழிந்து விழுந்தன; (எ-று.)—இது, அரக்கச்சேனையழிந்தமை கூறியது. விலங்கல்-மலை. முகம்-இடம். பி-ம்:—[1]வீரர்தம். [2]விலங்க. [3]வீழ்ந்தனர். [4]பொருகளம், மதகரி. (2498)

107 மழுவுஞ் சூலமும் வலயமும் நாஞ்சிலும் வாளும்
எழுவு மீட்டியுந் தோட்டியு [1]மெழுமுனைத் தண்டும்
[2]தழுவும் வேலொடு கணையமும் பகழியுந் தாக்கக்
குழுவி னோடுபட் டுருண்டன வானரக் குலங்கள்.

(இ - ள்.) (அரக்கருடையனவான) மழுவும் சூலமும் வலயமும் நாஞ்சிலும் வாளும் எழுவும் ஈட்டியும் தோட்டியும் எழுந்த கூர்முனையையுடைய தண்டாயுதமும் (கைகளால்) தழுவும்வேலும் கணையமும் அம்பும் ஆகிய இவைகள் தாக்குதலால், கூட்டத்தோடு வானரங்கள் கொல்லப்பட்டு உருண்டன; (எ-று.)—பி-ம்:—[1]எழுமுனைத், எழுமுழுத். [2]கழுவும்...காத்த. (2499)

108. முற்க ரங்களு [1]முசலமு முசுண்டியு [2]முளையும்
சக்க ரங்களும் பிண்டிபா லத்தொடு தண்டும்
கப்ப ணங்களும் [3]வளையமுங் [4]கவண்விடு கல்லும்
வெற்பி னங்களை [5]நுறுக்கின கவிகளை வீழ்த்த.

(இ - ள்.) (மற்றும் அரக்கர் விடுத்தனவான) முத்கரங்களும் உலக்கையும் முசுண்டியும் முளையும் சக்கரங்களும் பிண்டிபாலமும் தண்டும் கப்பணங்களும் வளையமும் கவண்கல்லும், (குரங்குகள் விடுத்த) மலைக்கூட்டங்களை நொறுக்கினவாய்க் குரங்குகளையும் (உயிரொழிந்து) விழச்செய்தன; (எ - று.)

இம்ச்செய்யுளும் இச்செய்யுளும், குரங்குகள் உயிரொழிந்தமை கூறின. பி-ம்:—[1]முசுண்டியும் வளையமும். [2]முனையும். [3]கணையமும். [4]கவணுமிழ். [5]தூக்கின்ற. (2500)

109.—இருதிறத்துச் சேனைகளும் இயங்கமாட்டாமை.

கதிர யிற்படைக் கலம்[1]வரன் முறைமுறை கடாவ
[2]அதிர்பி ணப்பெருங் குன்றுகள் படப்பட வழிந்த
[3]உதிர முற்றபே ராறுகள் திசைத்திசை யோட
எதிர்நடக்கில [4]குரக்கின மரக்கரு மியங்கார்.

(இ-ள்.) ஒளிவிடுகின்ற கூரிய படைக்கலங்களை வரன்முறை பிறழாமல்முறையே (அரக்கர்) கடாவுவதனால், கவிக்குலம், (அரக்கரின்) எதிரே நடக்கமாட்டாவாயின; அதிர்ந்து விழுகின்ற பெரிய பிணமலைகள் மிகுதியாகப் படுவதனாலும், (அப்பிணங்களினின்று) மிகுதியாகத் தோன்றிய இரத்தத்திலையன்ற பேராறுகள் திசைத்திசைதோறும் ஓடுவதனாலும், அரக்கரும், (வானரர்க்கு எதிரே) இயங்க முடியாதவராயினர்; (எ - று.)—பி - ம்:—[1]அவர்முறை, வரமுறை. குலம்வரன். [2]எதிர்விளைப்பெருங் குன்றுகள் படப்படவிழுந்த. [3]உதிரவிற்பிணைப். [4]கவிக்குலம். (2501)

110.—மடிந்த வானரர் தேவர்களாதல்.

யாவ[1]ராங்கிகல் [2]வானர ராயின ரெவரும்
தேவ ராதலி [3]னவரோடும் [4]விசும்பிடைத் திரிந்தார்
மேவு காதலின் மெலிவுறு [5]மரம்பையர் விரும்பி
ஆவி யொன்றிடத் [6]தழுவினர் பிரிவுநோ யகன்றார்.

(இ-ள்.) அப்போர்க்களத்திலே எவர் மாறுபட்டுப் பொருதலையுடைய வானரரோ, அவரெல்லாம் (தமது இயற்கை வடிமான) தேவராகிவிடுதலினால் அவ்வானவருடனே விசும்பிடைத் திரிந்தவராகவே (இத்துணைக்காலம்) பொருந்திய காதல்நோயினால் தளர்ச்சியடைந்த தேவமாதர்கள், (இப்போது தம்) விருப்பம் கைகூடப் பெற்று உயிரொன்று என்னும்படி (காதலரைத்) தழுவினராய் விரகநோய் தீரப்பெற்றனர்; (எ-று)

திருமால் ஸ்ரீராமனாகத் திருவவதரிக்கையில் அப்பெருமானுக்கு உதவுமாறு தேவர்களே வானரராய்ப் பிறந்தாராதலால் அத்தேவர்களின் மனைவிமாரான தேவமங்கையர் இத்துணைக்காலம் தம் கணவரைப் பிரிந்த துயரால் மெலிவுற்று இப்போது போரில் மடிந்து மீண்டு சுவர்க்கத்தையடைந்த அக்கணவரை இரண்டறத் தழுவித் தம்பிரிவுநோய் தவிர்ந்தன ரென்க. பி - ம்:—[1]இங்கு. [2]வானரம். [3]அவருடன். [4]விசும்பினில். [5]மங்கையர். [6]விழைவினர். (2502)

111.—மடிந்த அரக்கர் தேவராதல்.

கரகரு மாயமும் வஞ்சமுங் களவுமே கடனா
[1]இரக்க மேமுதல் தருமத்தி [2]னெறிக்கென்று [3]மிழியா
அரக்க ரைப்பெருந் தேவர்க [4]ளாக்கின வமலன்
சரத்தின் வேறினிப் பவித்திர [5]முளதெனத் தகுமோ.

(இ - ள்.) ஒளித்துச்செய்கின்ற மாயமும் வஞ்சமும் களவுமே (தமது) கடமையாகக்கொண்டு இரக்கம்முதலிய தருமவழியில் என்றும் இறங்காதவரான அரக்கரையும்பெரியதேவர்களாக்கின குற்ற

மற்ற இலட்சுமணனது அம்புகளைக் காட்டிலும் இனிப் பரிசுத்த மான வேறுபொருள் உள்ளது என்றுசொல்லுதல் தகுமோ? (எ-று.)

பெரும்பாவிகளான அரக்கரையும் தாம் தீண்டியதனால் தேவர்களாகச் செய்ததனால் இலட்சுமணனது அம்புகளைக்காட்டிலும் பரிசுத்தியை யுண்டாக்கவல்ல பொருள் வேறில்லை யென்பதாம். இலட்சுமணனது அம்புகளாற் கொடிய அரக்கர் பலரும் இறந்து வீரசுவர்க்க மடைந்தன ரென்றவாறு. கருத்துடையடைமொழியணியும் கருத்துடையடைகொளியணியும் தொடர்நிலைச் செய்யுட்குறியணியும் காண்க. பி-ம்:—[1]இரக்கமாம். [2]நெறியென்றும், நெறியொன்றும், நெறிக்கொன்றும். [3]இல்லா. [4]ஆக்கின்ற. [5]உள.()

112—இலக்குமணன் செய்த போர்.

அந்தகன்பெரும் படைக்கல [1]மந்திரித் தமைந்தான்
இந்து வெள்ளெயிற் றரக்கரு மியானையுந் தேரும்
வந்த [2]வந்தன வானக மிடம்பெறா வண்ணம்
சிந்தி னான்சர மிலக்குவன் முகந்தொறுந் [3]திரிந்தான்.

(இ-ள்.) இலக்குவன்,—யமனது சிறந்த அஸ்திரத்தை அபிமந்திரித்துக் (கையிற்) கொண்டவனாய், முனைமுகத்திலெல்லாந் திரிந்தவண்ணம், சந்திரனைப்போன்ற வெண்ணிறப் பற்களையுடைய அரக்கரும் யானையும் தேரும் ஆகிய (தன்மீது) வந்தவந்த அவைகளை வானகத்தில் தங்க இடம்பெறாதபடி சரங்களைச் சிந்தினான்; (எ-று.)—இறந்த உயிர்கள் மிகப்பலவானதனால் வானத்தில் தங்க இடம் பெறாவாயினவென்றார்; தொடர்புயர்வுநவிற்சியணி. பி-ம்:—[1]மந்திரத்து. [2]வந்துயர். [3]தெரிந்தான். (2504)

113.—இதுமுதல் எட்டுக்கவிகள்-அனுமான் தண்டாயுதங் கொண்டு பொருதலின் சிறப்பைக் கூறும்.

கும்ப கன்ன [1]னாண் டிட்டது வயிரவான் குன்றின்
வெம்பு வெஞ்சுடர் விரிப்பது தேவரை மேனாள்
தும்பை யின்றலைத் துரந்தது சுடர்மணித் தண்டொன்று
இம்பர் ஞாலத்தை [2]நெளிப்பது மாருதி யெடுத்தான்.

(இ-ள்.) கும்பகர்ணன் அங்கே [போர்க்களத்திலே] போகட்டதும், பெரிய வயிரக்குன்றுபோல வெம்புதற்குக்காரணமான கொடுஞ்சுடரை விரிப்பதும், தேவரை முன்னாளில் போர்முனையில் ஓட்டியதும், இவ்வுலகத்தை நெளியச்செய்வதும், ஒளிபொருந்திய மணிகளழுத்தியதுமான தண்டாயுதமொன்றை, அநுமான், (கையில்) எடுத்துக்கொண்டான்; (எ-று.)

'ஆண்டு இட்டது' என்பதற்கு, அந்தத் தண்டாயுதத்தை யெடுத்துப் பொரும் வலிமையுள்ளார் எவரும் இன்மையால் அங்கேயே தண்டுகிடந்தது என்று கருத்து விரிப்பர், ஒருசாரார். ஆண்டிட்டது என்று ஒரு சொல்லாக எடுத்து-ஆண்டது என்று உரைத்தாரு முளர். தும்பை-போர் பி-ம்:—[1]அன்று. [2]தடுப்பது, தடுத்தது. (2505)

வேறு.

114. காற்றன்றிது [1]கனலன்றென விமையோரிடை காணு
வேற்றங் [2]கடு விசையோடுயர் கொலைநீடிய[3] வியல்பால்
சீற்றந்தனி யுருவாயிடை தேறுத[4]தோர் மாறுய்க் [றான்.
கூற்றங்[5]கொடு [6]முனை[7] வந்தெனக் கொன்றானிகல்[8] நின்

(இ - ள்.) வீரத்தில் நிலைநின்றவனான மாருதி,—அப்போது (எப்போதுமில்லாத) வேறுவகையான கொடிய விசையுடனே பெருங்கொலைத்தொழிலும் மிக்குள்ள இயல்பினால், 'இதுகாற்று அன்று: (இது) கனலும் அன்று' என்று சொல்லி இமையோரும் நிலைமையைக் காணமாட்டாமலிருக்க, யமன் சீற்றமென்பதே தனியே உருவாகப் படைத்து (த்தன்) நிலை தேறமுடியாதபடியான ஒப்பற்ற மாறுபாடுகொண்டு கொடிய முனைக்களத்து வந்தாற் போல (அந்தத் தண்டாயுதத்தைக்கொண்டு அரக்கரைக்) கொல்லலுற்றான்; (எ - று.)—இரண்டாம் அடியில், வேறு அங்கு கடு என்று பிரிக்க, அங்குகடுஎன்பன அங்கடு என்று திரிந்தன. வேறு அம் கடு என்றும் ஏற்றம்கடு என்றும், பிரிக்கலாம். பி-ம்:— [1]கனலாமென. [2]கொடுவிசையோடின. [3]இயலால். [4]ஒருமாறுங். [5]கடு. [6]முன். [7]வந்துளதென்னும்படி. [8]கொன்றான். (2506)

115. வெங்கண்மத மலைமேல்விரை பரிமேல்விடு தேர்மேல்
சங்கந்தரு படைவீரர்க ளுடன்மேலவர் தலைமேல்
எங்கும்முள [1]னொருவன்னெதிர்த் திருந்தான்மறை [2]தெரிக்குஞ்
செங்கண்ணவ னவனேயெனத் திரிந்தான்கலை தெரிந்தான்.

(இ - ள்.) (சகல) சாஸ்திரங்களையும் கற்றுத்தேர்ந்தவனாகிய அநுமான்,—கொடுங்கண்ணையும் மதத்தையுமுடைய மலைபோன்ற யானைமீதும் விரையுந்தன்மையுள்ள குதிரைமேலும் விடுகின்ற தேரின்மேலும் கூட்டமாகவுள்ள படைவீரர்களின் உடலின் மேலும் அவர்களின் சிரசின்மேலும், பெரிய நான்மறைகளாலுந் தெரிவிக்கப்படுகின்ற புண்டரீகாட்சன் இவனே என்னும்படி (தான்) ஒருவனே எங்குமுளனாகி எதிர்த்துத்திரிந்தான்; (எ-று.) —எங்குமுள்ள தன்மையினால் இவன் திருமாலோ என்று கருதும்படி அனுமான் அத்துணைவிரைவுபடத் திரிந்தானென்க. பி-ம்:— [1]ஒருவன்னென. [2]தெரியும். (2507)

116. [1]கிளர்ந்தாரையுங் [2]கிடைத்தாரையும் கிழித்தான்கனல் விழித்தான், களந்தானொரு குழம்பாம்வகை யரைத்தா[3]னுருக் கரைத்தான், [4]வளர்ந்தானிலை யுணர்ந்தாருல கொருமூன்றையும் வலத்தால், [5]அளந்தான்முன மிவனேயென விமையோர்களு மயிர்த்தார்.

(இ-ள்.) பொங்கிமேல் வந்தாரையும் அகப்பட்டாரையும் கனல்புறப்படவிழித்துக் கிழித்துப் போர்க்களம் (எங்கும்) ஒப்பற்ற நிணக்குழம்பு நிறையும்படி (அவருடலை) அரைத்துஉருவைக் கரைத்திட்டான், (மாருதி); ஓங்கிவளர்ந்தவனான (அந்த) அனுமானுடைய நிலையை யுணர்ந்தவராய், தேவர்களும், 'ஒரு மூன்றுலகங்களையும்(தன்) வலிமையால் முன்னம்அளந்தவன் இவனோ?' என்று

ஐயவுணர்வுகொண்டார்; (எ - று.)—பி - ம்:—[1]கிளர்ந்தானியல் [2]கிடந்தாரையும். [3]இருகரத்தான். [4]வளர்ந்தேர்நிலை. [5]அளர்ந் தானுமுன். (2508)

117. மத்தக்கரி நெடுமத்தகம் [1]வகிர்ப்பட்டுக [2]மண்மேல்
[3]முத்திற்பொலி முழுமேனியன் [4]முகில்விண்டொடு மெய்யான்
[5]ஒத்தக்கடை யுகமுற்றுழி [6]யுறுகால்பொர [7]வுடுமீன்
[8]தொத்தப்பொலி கனகக்கிரி வெயில்சுற்றிய தொத்தான்.

(இ-ள்.) மதம்பிடித்த யானைகளின் நெடிய மத்தகம் பிளவு பட்டுச் சிந்துவதனால் (இப்)பூமியிலே (அம்மத்தகத்தினின்று வெளிப்பட்ட) முத்துக்களினால் விளங்குகின்ற முழுவுடலையுடையவனும் முகில்படிந்த ஆகாயத்தைத் தொடுகின்ற உடலையுடையவனுமான அநுமான்,—(எல்லாப் பொருளும்) ஒருசேர அந்த யுகாந்த காலத்து அழியும்போது பெருங்காற்று வீச, உடுவெனப் படுகின்ற மீன்கள் [நட்சத்திரங்கள்] (தன்மீது) தொத்திநிற்க விளங்குவதும் சூரியன் சுற்றுவதுமான மேருமலையை யொத்தான்;

"காஞ்சநாத்ரிகமநீயவிக்ரஹம்" என்றவாறு உள்ள அநுமானது மேனியில் யானைமத்தகத்து முத்தம்விளங்கும்போது, அவனுக்கு, விண்மீனோடு பொலியும் கனகக்கிரி ஒப்பாமென்க; தற்குறிப்பேற்றவணி. கனகக்கிரிக்கு 'வெயில் சுற்றியது' என்ற அடைமொழி, அதன் இயற்கையை விளக்கவந்தது. வெயில்-சூரியனுக்கு, இலக்கணை: இனி, ஒளியுமாம். கடல்மீனை விலக்க, 'உடுமீன்' என்றார். பி - ம்:—[1]அதிர்பற்றுக. [2]மணிமேல். [3]வித்தப்பொலி. [4]மழை. [5]ஒற்றைக். [6]உடுகார். [7]உடுவின். [8]தொத்திப் பெயர், செத்தப்பொலி. (2509)

118. இடித்தா [1]னிலம் விசும்போடென விட்டானடி யெழுந்தான், பொடித்தான்கடற் பெருஞ்சேனையைப் பொலந்தண்டுதன் வலத்தால், [2]பிடித்தான்மத கரிதேர்[3]பரி [4]பிழம்பானவை குழம்பா, அடித்தானுயிர் குடித்தானெடுத் தார்த்தான்பகை தீர்த்தான்.

(இ - ள்.) (பின்னும் அநுமான்),—அழகிய தண்டைத் தன் வலியாற் பற்றியவனாய், நிலத்தை விசும்புடனே இடித்தானென்று கருதும்படி (மண்ணுலகில்) அடியிட்டு (வானத்தை யளாவ) எழுந்து, (களமெங்கும் நிரந்து) கடல்போன்ற பெரிய (பகைவரின்) சேனையைப் பொடியாக்கினான்; (அன்றியும்), மதகரி தேர் குதிரை யென்ற இவற்றுள் வடிவுள்ள பொருள்களை யெல்லாம் குழம்பாகும்படி செய்திட்டு (அவற்றினுடைய) உயிரைப் பருகி, பகையை (இவ்வாறு)ஒழித்தவனாகிக் குரலெடுத்துப் பேராரவாரஞ் செய்தான்; (எ-று.)—பி-ம்:—[1]இகல்விசும்போடுடன். [2]படித்தான் மதக்கரி. [3]முதல். [4]பிழம்பாமதி, பிழம்பாயுற, பரியாவையும். ()

119. நூறுயிர மதமால்கரி யொருநாழிகை நுவல்போது
[1]ஆறுய்நெடுங் கடுஞ்[2]சோரியி னளரும்வகை யரைப்பான்
ஏறுயிர [3]மெனலாயெழு வயவீரரை [4]யிடறித்
தேறுதுறு கோலமேனிய திசையானையிற் றிரிந்தான்.

(இ-ள்.) ஒருநாழிகையென்று சொல்லக்கூடிய காலத்திற்குள் ஆருய்ப்பெருகுகின்ற மிக்ககொடிய இரத்தத்தில் நூருயிரம்மதம் பிடித்த பெரியயானைகளைச் சேருகும்படி யரைப்பவனுன அநுமான்,-ஆயிரக்கணக்கான ஆண்சிங்கமென்று சொல்லுமாறு (தன்) மேல் வருகின்ற வலிமைபொருந்திய (அரக்க)வீரரை(க் காலினுல்) இடறி, தெளிவடையாது [மதமயக்கங்கொண்டு] மிக்க கொலைத் தொழிலை விரும்பிச்செய்கின்ற திக்கஜம்போலத் திரிந்தான்; (எ-று.)—பி-ம்:—[1]ஆரு. [2]சோரியினுரும்வகை, சோரியினுரும்படி. [3]எனலாய்வரும், எனலாவெழும். [4]இடித்த. (2511)

120. தேரேறினர் பரியேறினர் [1]விடையேறினர் சினவெங்
காரேறினர் மழையேறினர் [2]கலையேறினர் [3]பலவெம்
போரேறினர் புகழேறினர் [4]புகுந்தார்புடை வளைந்தார்
நேரேறினர் விசும்பேறிட நெரித்தான்கதை திரித்தான்.

(இ-ள்.) காளைத்தன்மைகொண்டவராய்த் தேரின்மீது ஏறிவந்தவரும் குதிரையின்மீது ஏறிவந்தவரும் கோபம்மூண்ட கொடிய மேகத்தையொத்த ஆனையின்மீது ஏறிவந்தவருமாகி, (அம்பு) மழையை மிகுதியாகப் பொழிகின்றவரும் போர்க்கலையில் தேர்ந்தவரும் பலகொடிய முனைமுகத்திற்சென்று பொருது வெற்றிப்புகழ் படைத்தவரும் (இப்போது போர்க்களத்திற்) புகுந்து (தன்னை) எப்புறத்திலும் வளைந்துகொண்டு நேரேபொருபவருமான (அரக்க) வீரர்களையெல்லாம், (அநுமான்), தண்டாயுதத்தைச் சுழற்றி விசும்பிலேறும்படி நெரித்திட்டான்; (எ-று.)

ஒரேபொருளைக்கொண்ட ஏறுதல் என்றசொல் பன்முறை வந்தது - சொற்பொருட்பின்வருநிலையணி. விடையி லேறிவந்து பொருதல் சிவபெருமானுக்கு அன்றி மற்றையோர்க்கு இல்லையாதலால், விடையேறினர் என்பதற்கு - விடையின்தன்மைமிக்கவர் [காளைபோன்றவர்] எனப் பொருளுரைக்கப்பட்டது. பி-ம்:— [1]களிறு. [2]கடல். [3]மழைவெம், பலவும். [4]புகுந்தாரிடை. (2512)

வேறு.

121.—சுக்கிரீவன்முதலியோர் ஒருவரையொருவர்காணுமல் அரக்கர்சேனைக்கடலினிடையி லிருத்தல்.

அரிகுல மன்ன னீல னங்கதன் [1]குமுதன் சாம்பன்
பருவலிப் பனச னென்றிப் படைத்தலை வீரர் யாரும்
பொருசினந் திருகி [2]வெற்றிப் போர்க்கள [3]மருங்கிற் புக்கார்
ஒருவரை யொருவர் காணு ருயர்படைக் கடலி னுள்ளார்.

(இ-ள்.) வானரராசனுன சுக்கிரீவனும் நீலனும் அங்கதனும் குமுதனும் சாம்பனும் மிக்கவலிமையையுடைய பனசனும் என்ற தலைமைபெற்ற இந்தச் சேனுவீரர்யாரும்,—போர்செய்தற்குஉரிய சினத்திஞல் மாறுபட்டு, வெற்றியைத் தருகின்ற போர்க்களத்தினிடையிலே புகுந்து ஒருவரையொருவர் காணுமல் பெரிய அரக்கர் சேனையாகிய கடலினுள்ளே இருப்பவரானுர்கள்; (எ-று.)—பி-ம்:— [1]அநுமன். [2]வென்றிப், [3]நெருங்கப். (2513)

122.—அநுமான் அகம்பனென்ற அரக்கவீரனை எதிர்ப்படல்.

தொகும்படை [1]யரக்கர் வெள்ளந் துறைதுறை [2]யள்ளித் தூவி
[3]நகம்படை யாகக் கொல்லு நரசிங்க [4]நடந்த தென்ன
மிகும்படைக் கடலுட் செல்லும் மாருதி வீர வாழ்க்கை
அகம்பனைக் கிடைத்தான் றண்டா லரக்கரை யரைக்குங் கையான்.

(இ - ள்.) வெள்ளக்கணக்கான தொகுதியாகவுள்ள அரக்கர் படையை முனைத்துறைதோறும் வாரி யிறைத்து, நகத்தையே படையாகக்கொண்டு கொல்லுந்தன்மையுள்ள நரசிங்கமூர்த்தி (முன்பு) நடந்ததுபோலப் பெரிய (அரக்கர்)படையாகிய கடலுட் செல்லும் மாருதி,—தண்டாயுதங்கொண்டு அரக்கரையரைக்குங் கையையுடையவனாகி, வீரத்தினால் வாழ்தலையுடைய அகம்பனைச் (சேய்மையிற்) சந்தித்தான்; (எ - று.) பி - ம்:—[1]அவுணர் தம்மை. [2]அள்ளத். [3]நகும்படைத்தலைவர்க். [4]நடந்ததேபோல். (2514)

123.—அகம்பன் இன்னானெனல்.

மலைப்பெருங் கழுதை யைஞ்ஞூற் றிரட்டியான் மனத்திற் செல்லுந்
தலைத்தடந் தேரன் வில்லன் றருக னென்னுந் தன்மைக்
கொலைத்தொழி [1]லவுணன் [2]பின்னை யிராக்கத வேடங் கொண்டான்
சிலைத்தொழிற் குமரன் கொல்லத் தொல்லைநாட் செருவிற் றீர்ந்தான்.

(இ - ள்.) மலையொத்த பெருந்தோற்றமுள்ள கழுதைகள் ஆயிரங் கட்டியிருத்தலால் மனத்தைக்காட்டிலும் (விரைந்து) செல்லவல்ல தலைமைபெற்ற பெருந்தேரையுடையவனும் வில்லைக் கொண்டிருப்பவனுமான அந்த அகம்பன், தாருகனென்று பெயர் பூண்ட கொலைத்தொழிலையே தன்மையாகக்கொண்ட அவுணன்: (அவன்), சிலைத்தொழிலையுடைய குமாரக்கடவுள் முற்காலத்து நிகழ்ந்த போரிற்கொல்லப் போர்க்களத்து உயிர்நீங்கியவனாய்ப் பின்பு [இப்போது]இவ்விராக்கதவடிவு கொண்டுள்ளான்;(எ - று.)

குமாரக்கடவுளாற் சங்கரிக்கப்பட்ட தாருகாசுரனே இப்போது அகம்பனென்ற அரக்கனாய்ப் பிறந்துள்ளா னென்றவாறு; இது கவிக்கூற்று. பி - ம்:—[1]வீரன். [2]பின்னோர். (2515)

124.—அகம்பன் அநுமானதுதிறத்தை வியத்தல்.

பாகசா தனனு மற்றைப் பகை[1]யடுந் திகிரி பற்றும்
[2]ஏகசா தனனும் மூன்று [3]புரமும்பண் டெரித்து ளோனும்
போகதா மொருவர் [4]பற்றிக் குரங்கொடு பொரக்கற் றாரே
[5]ஆககூற் றுவி யுண்ப திதனின்[6]மேற் றருகு மென்றான்.

(இ - ள்.) (அந்த அகம்பன்),—'தேவேந்திரனும் மற்றும் பகையையடுந் தன்மையுள்ள சக்கராயுதமென்கின்ற கையிற்கொண்டுள்ள ஒப்பற்றசாதனத்தையுடைய திருமாலும், முப்புரங்களையும் முன்பு எரித்துள்ளோனான சிவபிரானும் போரப்போகட்டும்; (வேறே எவரேனும்) ஒருவர் தாம் எதிர்ந்து (இந்தக்) குரங்குடன் போர் செய்யக் கற்றாரே யாகட்டும்: (அங்ஙனம் போர் செய்குவா

ராயின்), கூற்றைக்கொண்டு அவருயிரை யுண்பது இந்தக்குரங்கி னிடத்திலே யமைந்துள்ளது' என்றான்; (எ - று.)

தேவேந்திரன்முதல் ஒருவராலும் இந்தக்குரங்கின் எதிரில் நிற்கவும் முடியாது, எப்படிப்பட்ட திறலினோரையும் இது மாய்த் திடுமென்றவாறு. பாகசாதனன் - ஸாதனத்தை யுடையவன்: ஸாதனம் - கருவி. போக, ஆக - வியங்கோள். பி - ம்:—[1]படும். [2]ஏகமால்தானும். [3]புரங்கள். [4]மற்றிக். [5]ஆகடற்றுவி. [6]மேலாகும்.

125.—அகம்பன் அம்புதொடுத்தவண்ணம் அனுமான்மீது செல்ல, அனுமானும் எதிர்த்துவருதல்.

யான்றடே னென்னின் மற்றிவ் வெழு[1]திரை வளாக [2]மென்னும்
[3]வான்றடா தரக்க ரென்னும் பெயரையு மாய்க்கு மென்னு
ஊன்றடா நின்ற வாளி [4]மழைதூரந் [5]துருத்துச் [6]சென்றான்
மீன்[7]றொடா நின்ற திண்டோ ளனுமனும் விரைவின் வந்தான்.

(இ - ள்.) '(இவ்வநுமானை) யான் தடுக்காமற்போனால், பின்பு ஏழுகடலாற் சூழப்பட்ட இந்தப் பூமண்டலம் யாதாகும்? பூமியே இவனாற் பாழாய்விடுமென்றபடி]; வானத்தாரோ தடுக்கமாட் டார்: (இவன்), அரக்கரென்ற பெயரே இல்லாதபடி மாய்த்திடு வான்' என்றுஞ்சொல்லி, (எதிர்க்கின்ற) உடல்படைத்த பிராணி களைத் தடுக்கின்ற அம்புமழையைப் பொழிந்துகொண்டு கோபித் துச் சென்றான்; வானமீனை [நட்சத்திரமண்டலத்தை] அளாவி யோங்கி நின்ற வலிய தோளையுடைய அநுமானும் விரைவாக (அந்த அகம்பனிடம்) வந்தான்; (எ - று.)—பி - ம்:—[1]கடல். [2]எல் லாம், என்ன. [3]மான். [4]மழையெனத். [5]துரந்து, உரத்துச். [6]சொன் னான், வந்தான். [7]தடாநின்ற. (2517)

126.—இதுமுதல் மூன்றுகவிகள்—அகம்பன்வர அனுமான் தண்டாயுதத்தைச் சுற்றித் தன்வீரத்தைக் காட்டுதலைத் தெரிவிக்கும்.

தேரொடு களிறும் மாவு மரக்கரு [1]நெருங்கித் [2]தெற்றக்
காரொடு [3]கனலுங் காலுங் கிளர்ந்ததோர் கால மென்ன
வாரொடுந் தொடர்ந்த பைம்பொற் கழலினான் வருத லோடும்
சூரொடுந் தொடர்ந்த தண்டைச் [4]சுழற்றினான் வயிரத் தோளான்.

(இ - ள்.) தேரோடு யானைகளும் குதிரைகளும் அரக்கரும் நெருங்கி உடன்வர, மேகத்தோடு நெருப்பும் காற்றும் பொங்கி யெழுந்ததொரு காலம்போல வாரினாற்கட்டப்பட்ட பைம்பொற் கழலையணிந்த அகம்பன் வருதலோடும், வயிரம்போலுறுதியான தோளையுடைய அநுமான்,—சூரத்தனத்தோடு (தான்) பற்றி யிருந்த தண்டாயுதத்தைச் சுழற்றினான்; (எ - று.)—பி - ம்:— [1]நெருக்கி. [2]செற்றிக், தெற்றிக். [3]காலுங்காற்றுங். [4]சுற்றினன். ()

127. எற்றின வெறிந்த [1]வெல்லை [2]யெய்தின வெய்த [3]பெய்த
முற்றின படைக ளியாவு முறைமுறை முறிந்து சிந்தச்

[4]சுற்றின வயிரத் தண்டால் துகைத்தன னமரர் துள்ளக்
கற்றில [5]னின்று கற்ருன் கதையினுல் வதையின் கல்வி.

(இ - ள்.) (அகம்பனுடன் வந்த அரக்கர்), எற்றியவைகளும் எறிந்தவைகளும் தன்னெல்லையை யடைந்தனவாக எய்தவைகளும் சொரிந்தவைகளும் ஆகிய (வலிமை)முற்றின எல்லாப்படைகளும் முறைமுறையே முறிந்து சிந்துமாறு, சுற்றின வயிரத்தண்டினுலே, அமரர்கள் (கண்டு) துள்ளாநிற்கத் துகைத்திட்டான்; (இது வரையில்) கதையின்மூலமாய் (வதைத்தொழிலைக்) கற்காதிருந்த அநுமான் இப்போது வதைத்தலாகியகல்வியைப் பழகினுன்; (எ - று.)—இன்று செய்தாற்போல் ஒருபோதும் இத்துணை மிகுதியாக அநுமான் வதைத்தொழிலைச் செய்ததில்லையென்பது, ஈற்றடியின் கருத்து. இங்கு முரண்தொடை காண்க. பி - ம்:—[1]வல்லை. [2]ஏயின. [3]போர்க்கண். [4]சுற்றினன். [5]அன்று. (2519)

128\. அகம்பனுங் காணக் காண வையிரு கோடிக் கைம்மா
முகம்பயில் கலினப் பாய்மா [1]முனைவயின் தூண்டு மூரி
நுகம்[2]பயில் தேரி னேடு நுறுக்கினன் [3]நூழில் தீர்த்தான்
உகம்பெய ரூழிக் [4]காற்றி [5]னுலைவிலா மேரு வொப்பான்.

(இ-ள்.) கற்பம் முடிகின்ற யுகாந்தகாலத்தில் தோன்றுகின்ற (பெருங்) காற்ருலும் சலிப்படையாத மேருவோடொத்தவனுன அநுமான்,—அகம்பனும் பார்த்துக்கொண்டே யிருக்கையில், பத்துக்கோடி யானைகளையும், முகத்திற் பொருந்திய கடிவாளம் பூண்ட (அத்துணைக்) குதிரைகளையும், போர்க்களத்திலே தூண்டப்படும் வலியநுகத்தோடுகூடிய (அத்துணைத்) தேர்களோடும் நுறுக்கிக் கொன்று குவித்தலைத் தீரச்செய்தான்; (எ-று.)

யுகாந்தகாலத்துச் சண்டமாருதம்போன்றவனுன அகம்பன் பார்த்திருக்கும்போதே நூழிலை நடத்தியதனுல், அநுமானை 'உகம்பெயரூழிக்காற்றி னுலைவிலாமேருவொப்பான்' என்ருருமாம். நூழில்-கொன்றுகுவிக்கை: நெருங்கிய போர் எனினுமாம். பி-ம்:—[1]முனையெயிற்றரக்கர், முனையெயிற்றிட்டி. [2]படு, பல. [3]ஊழிதீர்த்தான். [4]காற்ருல். [5]உலாவினுன். (2520)

129.—அனுமானைக் கொல்லக்கருதி அகம்பன் நெருங்க, அனுமானும் 'வா' என்றுசொல்லிச் சேர்தல்.

இன்றிவன் றன்னை [1]விண்ணு டேற்றி[2]வா ளிலங்கை வேந்தை
வென்றிய னுக்கி மற்றை மனிதரை வெறிய ராக்கி
[3]நின்றுழி நெடிய துன்ப மமரர்பால் [4]நிறுப்ப னென்னுச்
சென்றன னரக்க னன்று வருகென [5]வனுமன் [6]சேர்ந்தான்.

(இ-ள்.) 'இன்று இவனை வீரசுவர்க்கத்திலேற்றி வாட்படை பெற்றுள்ள இலங்காபதியாகிய இராவணனை வெற்றிபெற்றவனுக்கி, மற்றை மனிதரைத் தோல்வியடைந்தவராகச்செய்து, நிற்கும் இடத்தில்தானே தேவர்களிடத்துப் பெருந் துயரத்தை நிலைநிறுத்துவேன்' என்றுசொல்லி, அரக்கன்சென்ருன்; அப்போது 'வருக' என்றுசொல்லி அநுமானுஞ் சேர்ந்தான்; (எ - று.)—சில

பிரதிகளில் இச்செய்யுள் "வில்லினால்" (133) என்ற பாடலின்பின். பி - ம்:—[1] விண்ணில். [2] வாழ், வான். [3] நின்றுயர். [4] நிற்குமென்னச். [5] அவனுஞ். [6] சென்றான். (2521)

130.—இதுவும், அடுத்த கவியும்-அகம்பன் அனுமானைக் கடிய அம்புமழைபொழிந்ததைக் கூறும்.

படுகளப் பரப்பை நோக்கிப் பாழிவாய் [1] மடித்து [2] நூழிற்
[3] சுடுதழற் புகைவெங் கண்ணிற் றோன்றிடக் கொடித்தேர் தூண்டி
[4] விடுகணைப் படல மாரி மழையினு மும்மை வீசி
முடுகுறச் [5] சென்று குன்றின் முட்டினான் முகிலி னார்ப்பான்.

(இ-ள்.) (அகம்பன்), போர்க்களப்பரப்பை நோக்கி, குகை போன்ற (தன்) வாயை மடித்துக்கொண்டு, (பகையைக்) கொன்று குவிக்குந் தொழிலிலே சுடுகின்ற நெருப்புடன்கிளர்கின்ற புகை (தன்) கொடுங்கண்ணிலே தோன்றிட, கொடிகட்டியதேரைத் தூண்டி, விடுகின்ற அம்புக்கூட்டமழையை மழையினும் மும்மடங்கு அதிகமாக வீசிக்கொண்டு, மேகம்போன்ற பெருங்குரலுடனார்ப்பவனாகி, விரைந்து சென்று குன்றுபோல(அநுமானைக்) கிட்டி நின்றான்; (எ - று.)—பி - ம்:—[1] மடுத்து, படுக்கும், அதுக்கி. [2] ஊழின். ஊழிச். [3] சுடுகின்ற பொறிகள்வெங்கண். [4] விடுகின்ற பகழி, விடுகனற்பகழி. [5] சென்ற. (2522)

131. **சொரிந்தன பகழி மாரி தோளினு மார்பின் மேலும்**
தெரிந்தன [1] வசனி போல்வ செறிபொறி பிதிர்வ திக்கின்
[2] வரிந்தன [3] எருவை மானச் [4] சிறைகளா [5] லமரர் மார்பை
அரிந்தன வடிம்பு பொன்கொண் [6] டணிந்தன வாகுங் கண்ண.

(இ-ள்.) இடியைப்போல்வனவாய் நெருங்கியதீப்பொறிகளைத் திக்குக்களிற் சிந்துவனவும், கழுகுகளின்பெருமைபொருந்திய சிறகுகளாற் கட்டப்பட்டிருப்பனவும், அமரர்மார்பை (முன்னர்) அரிந்தனவும், கூறிய முனைகள் பொன் கொண்டணிந்தனவாகும் இடத்தைக் கொண்டனவுமான (அகம்பன்) சொரிந்தனவான அம்புமழைகள்,—(அநுமானது) தோளின்மீதும் மார்பின்மீதும் தெரிந்தன; (எ - று.)—பி-ம்:—[1] அசனிபோலத்தெறு. [2] விரிந்தன. [3] மேருமானச், வீரமானச். [4] சிறைகளாம். [5] வீரர். [6] அணிந்தனவாங்கு கண்ண, அணிந்தனவாகுமென்ன, அமைந்தனவாகுங்கண்ண. ()

132.—அனுமான் அகம்பனதுதேரின் அச்சுமுதலியன துண்டித்தல்.

மார்பினுந் தோளின் மேலும் வாளிவாய் மடுத்த வாயில்
சோர்பெருங் குருதி [1] சோரத் துளங்குவான் தேரு முன்னம்
தேரிரண் [2] டருகு பூண்ட கழுதையு மச்சுஞ் [3] சிந்தச்
சாரதி புரள வீரத் தண்டினாற் [4] கண்டஞ் செய்தான்.

(இ-ள்.) (தன்) மார்பிலும் தோளின்மீதும் வாளி துளைசெய்து சென்ற வாய்வழியாகப் பெருகுந்தன்மையுள்ள பெருங்குருதி பெருகியவண்ணமிருக்கச் சலித்தவனான அநுமான்,—(தான்) தேறு

வதற்கு முன்னமே, தேரின் இருபக்கத்தும்பூண்ட கோவேறு கழுதையும் அச்சும் முறிந்துசிந்திவிடவும், சாரதி புரண்டுகீழ்விழவும் வீரதண்டாயுதத்தினுற் கண்டமாக்கினுன்; (எ-று.)—'தேருமுன்னம்' என்றார், தேறினவுடனே கண்டஞ்செய்தானென்றற்கு **மிகையுயர்வுநவிற்சியணி.** வாளி-அம்பு. பி-ம்:—[1]கக்கித்தொன்; னிறஞ்சிவந்து தோன்றத். [2]அருகும். [3]சிந்திச். [4]துண்டம். (2524)

133.—அகம்பன் தானும் தண்டாயுதத்தை யெடுத்துக் கொள்ளுதல்.

வில்லினு லிவனை [1]வெல்ல லரிதென நிருதன் வெய்ய
மல்லினு லியன்ற தோளின் வலியினுல் [2]வானத் தச்சன் [டான்
கொல்லினு [3]லமைந்த [4]தாண்டோர் [5]கொடுமுனைத் தண்டுகொண்
அல்லினுல் வகுத்த தன்ன மேனியான் கடலி னுர்ப்பாள்.

(இ-ள்.) 'இவனை வில்லினுல்வெல்வது அருமை' என்று நினைத்து, இருளைக்கொண்டு வகுத்தாற்போன்ற [கருநிறமுள்ள] மேனியையுடையவனும் கடல்போற்பேராரவாரஞ்செய்பவனுமான (அகம்பனென்ற) அரக்கன்,-கொடிய உடல்வலிமையோடு பொருந்திய தோள்வலியால் (வெல்லக்கருதி), தெய்வத்தச்சன் கொல்லுத்தொழிலினுலியற்றியகொடிய முனையையுள்ள ஓர் தண்டாயுதத்தை அப்போது எடுத்துக்கொண்டான்; (எ-று.)—கொல்லுத்தொழில்-பூண்கட்டுதல். பி-ம்:—[1]வெல்ல, வெல்வது, வென்றல். [2]வாய்ந்த. [3]அமைந்தது. [4]ஆங்கோர். [5]சுடர்மணித், குருமுனை, குழுமுனை. ()

134.—இதுமுதல் ஆறுகவிகள்-அகம்பனுடனே அநுமன் தண்டாயுதங்கொண்டு பொருது அவனைக் கொன்றமை கூறும்.

தாக்கினு [1]ரிடத்தும் மற்றும் வலத்தினுந் [2]திரிந்தார் சாரி
[3]ஒக்கினு [4]ரூழி னுர்ப்புக் கொட்டினுர் [5]கிட்டி னுர்கீழ்த்
தூக்கினுர் [6]சுழற்றி மேன்மேற் சுற்றினு [7]ரெற்றி வெற்றி
நீக்கினுர் நெருக்கி னுர்மே [8]னெருங்கினுர் நீங்கி னுர்மேல்.

(இ-ள்.) (அனுமானும் அகம்பனும் ஒருவரையொருவர்) தாக்கினுர்கள்; இடத்திலும் மற்றும்வலத்திலுமாகச் சாரிதிரிந்தார்கள்; யுகாந்தகாலத்தைப்போலப் பேராரவாரத்தை ஓங்குவித்தார்; (தோள்) கொட்டினுர்; கீழ்ப்புறமாக்கிட்டித் தூக்கிச் சுழற்றி மேன்மேற்சுற்றி மோதிவெற்றியை நீக்கப்பார்த்தார்; நெருக்கினுர்: மேன்மேலே நெருங்கினவராய் (ப் பின்) நீங்கினுர்; (எ-று.)—பி-ம்:—[1]வந்துமற்றையிடங்களுந், வலத்துமற்றையிடத்தினுந், வந்து மற்றெவ்விடத்திலுந். [2]திரிந்து. [3]போக்கினுர். [4]தெழிப்பின், கழிப்பின். ஒட்டினுர்கள். [5]சுழற்றினுற்மேற். [6]எற்றவெற்ற, எற்றவெற்றி. [8]நெருக்கினுர். (2526)

135. **தட்டினுர் [1]தழுவி னுர்மேல் தாவினுர் தரையி னேடும்**
கிட்டினுர் இடைத்தார் வீசிப் புடைத்தவை கீழும் மேலும்
கட்டினுர் காத்தா [2]ரொன் றுங் காண்கிலா ரிறவு கண்ணுற்று
ஒட்டினுர் [3]மாறி வட்ட மோடினு [4]ராதி போனுர்.

(இ - ள்.) (பின்னும் தோள்) தட்டி, (ஒருவரையொருவர்) தழுவினார்; மேலே தாவினார்; தரையிற் கிட்டினார்: (ஒருவரையொருவர்) நெருங்கினார்; ஓங்கியறைந்தவை (படாதபடி) கீழும்மேலும் (கையால்) கட்டிக்காத்தார்; (மற்றையோரினும் தாம் வலிமையில்) மேம்படுவதைச் சிறிதுங்காண மாட்டாதவராய், (ஒருவரையொருவர்) பார்த்துச்சபதஞ்செய்தார்: வட்டமாகப் போதலைமாறி நேராகப்போனார்; (எ-று.)—இறவு—மேம்படுகை. பி-ம்:—[1]தடவினார். [2]என்றுங். [3]மாழ்கி, திகிரி, மாதி. [4]சாரிபோனார், அதிபோரானார். (2527)

136. மையொடும் பகைத்து நின்ற நிறத்தினன் [1]வயிர மார்பில்
பொய்யொடும் பகைத்து நின்ற குணத்தினன் [2]புகுந்து மோத
வெய்யவ னதனைத் தண்டால் விலக்கினன் விலக்க லோடும்
கையொடு [3]மிற்று மற்றக் கதைகளங் [4]கிடந்த தன்றே.

(இ - ள்.) பொய்யொடு பகைத்துநின்ற குணத்தையுடையவனான அனுமான்,—அஞ்சனத்தோடு பகைத்துநின்ற நிறத்தையுடையவனான [மிகக்கரியவனான] அகம்பனுடைய உறுதியான மார்பிலே (தண்டுகொண்டு) புகுந்துமோத,—கொடிய அகம்பன் அந்த மோதுதலைத் தண்டாயுதத்தினால் விலக்கினான்; விலக்கியவுடனே, அந்தக்கதாயுதம், (பற்றியிருந்த வலக்) கையுடனே இற்றுப் போர்க்களத்தில் விழுந்திட்டது; (எ-று.)

தண்டாயுதம் மோதுதலைத் தண்டாயுதத்தினால் விலக்கப் பார்க்க, அவ்விசையைத் தாங்கமாட்டாமல் தண்டாயுதத்துடனே அதனைப்பற்றிய அரக்கன் கையும் இன்றுவீழ்ந்திட்டதென்பதாம். பி - ம்:—[1]வயிரத்தோண்மேற். [2]புகன்று. [3]அற்று. [4]கண்டது. ()

137. கையொடு தண்டு [1]நீங்கக் கடலெனக் கலக்க [2]முற்ற
மெய்யொடு நின்ற [3]வெய்யோன் மிடலுடை யிடக்கை
ஐயனை யலங்க லாகத் தடித்தன னடித்த லோடும் [[4]யோச்சி
[5]ஓய்யென வயிரக் குன்றத் துருமினே றிடித்த [6]தோத்த.

(இ-ள்.) (வலக்) கையுடனே தண்டாயுதமும் நீங்கிவிட, கடல்போலக் கலக்கமுற்ற உடலோடுநின்ற கொடியோனான அகம்பன், வலிமையுள்ள இடக்கையை யோங்கி அனுமானை மாலைபூண்ட மார்பில் அடித்தான்; அடித்தலோடும், திடீரென வயிரக்குன்றத்து ஆணிடி இடித்ததை யொத்திருந்தது; (எ-று.)—ஓய்யென - ஒலிக்குறிப்புமாம். அலங்கல்-வெற்றிமாலை. மிகப்பரந்த உடலுக்குக் கடலுவமை. பி-ம்:—[1]நீக்கி. [2]உற்று. [3]வீரன். [4]வீசி. [5]மெய்யொளிர். [6]ஒத்தான், ஒப்ப. (2529)

138. அடித்தவன் றன்னை நோக்கி யசனியே றனைய தண்டு,
பிடித்துநின் றேயு[1]மெற்றான் வெறுங்கையான் பிழையிற் றென்னா,
மடித்துவா [2]யிடத்துக் கையான் மார்பிடைக் குத்த [3]வாயால்,
குடித்துநின் றுமிழ்வா [4]னென்னக் கக்கினன் [5]குருதி வெள்ளம்.

(இ-ள்.) (அனுமான்), பேரிடியையொத்த தண்டாயுதத்தைத் (தான்) பிடித்து நின்றாலும், (தன்னை) அடித்தவனைப்பார்த்து (இவன்) வெறுங்கையான்: (இவனைத் தண்டுகொண்டு அடித்தல்)

அதருமமாகும்' என்று கருதி, (தண்டுகொண்டு) மோர்தாதவனும் வாயைமடித்து (அந்த அகம்பனைப்போலவே) இடக்கையினால் (அவன்) மார்பினிற் குத்த, (அவ்வரக்கன்) இரத்தப் பெருக்கை வாயால் (முன்னம்) குடித்துநின்று (இப்போது) உமிழ்பவன் போலக் கக்கினான்; (எ-று.)—பி-ம்:—[1]ஆற்றான். [2]இடத்தகை யான், இடக்கையானை. [3]வாயிற். [4]போல. [5]குருதிகொள்ள, குருதிக்கொள்ளை (2530)

139. மீட்டுமக் கையால் வீசிச் செவித்தலத் [1]தெற்றி [2]வீழ்த்தான்
[3]கூட்டினு னுயிரை விண்ணோர் குழாத்திடை யரக்கர் கூட்டம்
காட்டில்வாழ் விலங்கு மாக்கள் கோளரி[4]கண்ட வென்ன
ஈட்டமுற் [5]றெதிர்ந்த வெல்லா மிரிந்தன திசைக ளெங்கும்.

(இ-ள்.) மறுபடியும் (அனுமான்) அந்த இடக்கையாலேயே (அகம்பனை) யோங்கிக் காதினிடத்துமோதி (க்கீழ்) வீழ்த்தி, அவனுயிரை வானவர் கூட்டத்திற் சேர்த்தான்; (அதுவரையிற்) கூட்டமாகப் பொருந்தி எதிரிட்ட அரக்கர் கூட்டமெல்லாம், (அப் போது) காட்டில் வாழ்கின்ற விலங்குகளாகிய மிருகங்கள் வலிய சிங்கத்தைக் கண்டனபோல எல்லாத்திசைகளிலும் நிலைகெட் டோடின; (எ-று.)—பி-ம்:—[1]எற்ற. [2]வீழ்ந்தான். [3]கூட்டினார். [4]கண்டது. [5]எதிர்ந்தது. (2531)

140.—இலட்சுமணனம்பால் அரக்கச்சேனை மாளுதல்.

மாண்டன னகம்பன் மண்மேன் மடிந்தன நிருதர் சேனை
[1]மீண்டனர் குரக்கு வீரர் விழுந்தன சினக்கை வேழம்
தூண்டின [2]கொடித்தே ரற்றுத் துணிந்தன தொடுத்த வாசி
ஆண்டகை யிளைய வீர னடுசிலை பொழியு மம்பால்.

(இ-ள்.) அகம்பன் மண்மேல் மாண்டு வீழ்ந்திட்டான்; நிருதர் சேனைகளும் (மண்மேல்) மடிந்தன; குரக்குவீரர் மீண்டார்கள்; ஆண்மைக்குணமுள்ள இலட்சுமணனுடைய வில்லிலிருந்து வெளி ப்படுகின்ற (பகைவரைக்) கொல்லும் அம்புகளால், சினம்பொருந் தியகையையுடைய வேழங்கள் (உயிர்மாண்டு) விழுந்தன: (அரக்கர்) தூண்டிய கொடித்தேர் அற்றுப் (போகப்) பூட்டிய குதிரைகள் துண்டுபட்டன: (எ-று.)—அனுமான்செய்கை அவனுக்கு உரிய திக்காகிய ஒருபக்கத்து நடக்க, இலட்சுமணன் தென்மேற்குத் திக் கில் பகைவர் சேனையை யொழித்துக் கொண்டிருந்தானென்க; இவ் விஷயம், அடுத்த இரண்டு பாடல்களினால் விளங்கும். சிலைபொழி யும் அடு(கின்ற) அம்பால் என இறையும். பி-ம்:—[1]மீண்டன குரங்குவெள்ளம். [2]கொடித்திண் டேர்க டுளைக்கையம் பொருப்பு, கொடித்திண் டேர்கடுணிந்தன பொருப்பு. (2532)

141.—இலக்குமணன் முதலியோரைப்பற்றி ஒன்றுந் தெரியாமையால் அனுமான் துயருறுதல்.

ஆர்க்கின்ற குரலுங் கேளா னிலக்குவ னசனி யேற்றைப்
போர்க்கின்ற சிலையி னாணின் பேரொலி கேளான் [1]வீரர்
[2]யார்க்கின்ன லுற்ற தென்ப [3]துணர்ந்தில னிசைப்போ ரில்லைப்
போர்க்குன்ற மனைய தோளா [4]னனையதோர் பொரும லுற்றான்.

(இ-ள்.) (மற்றைப்படைத்தலைவர்) ஆரவாரிக்கின்ற குரலையும் கேளாதவனும், இலக்குவனுடைய பேரிடியினொலியையும் அடக்க வல்ல வில்நாணியின் பேரொலியையும் கேளாதவனும், வீரரில் யார்க்குத் துயரம் நேர்ந்துள்ளதென்பதை இசைப்பாரில்லாமையால் உணராதவனுமாகி, போர்செய்யவல்லகுன்றத்தையொத்த தோளையுடையவனுமான அனுமான், அவ்வாறுனதொரு [மிகவும் அதிகமான] துன்பத்தை யடைந்தான்; (எ - று.)—சிலபிரதிகளில், இச்செய்யுள் இலக்குவனைப் பாதுகாக்க வைத்திட்டு அஸ்திரபூசை செய்து வரச்சென்ற ஸ்ரீராமன் மீண்டுவந்ததும், சேனைக்காவலனாக நியமித்துச்சென்ற இலட்சுமணனது குரலொலிமுதலியன ஒன்றுஞ் செவிப்படாமையால் அவ்விராமன் வருந்தினனென்பதைத் தெரிவிப்பதாக 188-ஆம் பாடலுக்குப் பின் அமைந்துள்ளது. பி-ம்:—[1]வீரன். [2]ஆர்க்கின்னதுற்றதென்பது, யார்க்கின்னலுற்றதென்ன, ஏற்கின்றதுற்றதென்பது, யார்க்கின்னலுற்ற தென்றுது, ஈர்க்கின்ற தென்னையுற்றது. [3]உணர்கிலன், அறிகிலான். [4]இனைய தோர், வெய்யதோர். (2533)

142.—அங்கதன் முதலியோர் அரக்கர் பெருஞ்சேனையில் வெகுதூரஞ் சென்றிருமைந்தமை.

[1]வீசின நிருதர்சேனை வேலையிற் றென்மேற் றிக்கின்
யோசனை யேழு சென்று னங்கத [2]னவனுக் கப்பால்
ஆசையி னிரட்டி சென்று னரிகுலத் [3]தலைவ னப்பால்
ஈசனுக் கிளைய வீர னிரட்டிக்கு மிரட்டி சென்றுன்.

(இ - ள்.) வெகுதூரம்பரவியிருந்த அரக்கர்சேனையாகிய கடலின் தென்மேற்குத்திக்காக அங்கதன் ஏழுயோசனைதூரஞ் சென்றிருந்தான்: குரங்குக்குலங்கட்கு அரசனான சுக்கிரீவன், அவ்வங்கதனுக்கு அப்பால் அத்திக்கில் இரட்டிப்பாக [பதினான்கு யோசனை தூரஞ்] சென்றுன்; ஸ்ரீராமனுக்கு இளையவனாகிய இலட்சுமணன் (சுக்கிரீவனுக்கும்) அப்பால் நான்கு மடங்குதூரம் [ஐம்பத்தாறு யோசனை தூரம்] சென்றிருந்தான்; (எ-று.)— பி - ம்:—[1]வீசினன், வீசினர். [2]அதனுக்கு. [3]அரசன், மன்னன். முதலடிதவிர மற்றை மூன்றடிகள் 'ஓசனையெழுந்து சென்றுனரிகுலமன்னனுப்பால், ஈசனுக்கிளைய...சென்றுன், நீசரைத்தொலைத்து நீலனேசனையாறு சென்றுன்' என்று சிலபிரதியிற் காணப்படுகின்றன. (2534)

143.—அனுமான் தனக்கும் இலக்குமணனுக்கும் இரண்டு மூன்றுகாவதமிருக்குமாறு சேர்தல்.

மற்றையோர் நாலு மைந்தும் யோசனை மலைந்து புக்காற்
கொற்றமா ருதியும் வள்ள லிலக்குவன் [1]நின்ற சூழல்
[2]முற்றின னிரண்டு மூன்று காவத மொழியப் பின்னுஞ்
சுற்றிய சேனை நீர்மேற் [3]பாசிபோன் [4]மிடைந்து [5]துன்ன.

(இ - ள்.) மற்றைவானரர்கள் போர்புரிந்து நாலும் ஐந்தும் யோசனை (அந்தச் சேனைக்கடலுக்குட்) புகுந்தார்கள்: பின்னும் சுற்றியசேனை நீர்மேற்பாசிபோல் நெருங்கிக்கிட்ட, வெற்றி

பொருந்திய மாருதியும், வள்ளலான இலக்குவன் நின்ற இடத்திற்கு இரண்டு மூன்றுகாவததூரமிருக்கச் சேர்ந்தான்; (எ - று.) —பி-ம்:—[1]நின்ற கொற்றம், உற்றகொற்றம், நின்றுகொற்றம். [2]முற்றின. [3]பாசியின். [4]மிடையுங். [5]துள்ளி, துன்னி. (2535)

144.—இளையபெருமாளைக்கிட்டுமாறு சென்ற மாருதி, தன் துயர் நீங்க, அவனால் நிகழ்ந்த பல்வேறுகுறிகளைக் காணுதல்.

இளையவன் நின்ற சூழ லெய்துவென் விரைவி [1]னென்றோர்
உளைவுவந் துள்ளந் தூண்ட வூழிவெங் காலிற் செல்வான்
களைவருந் [2]துன்பம் [3]நீங்கக் கண்டன னென்ப [4]மன்னோ
[5]விளைவன செருவிற் பல்[6]வே றுயின குறிகள் [7]மேய.

(இ - ள்.) (இலக்குமணனைக் காணாமையால்) மனத்திலோர் வருத்தந்தோன்றித் தூண்ட, (அனுமான்), 'இளையபெருமாளுள்ள இடத்தே விரைவிற்கிட்டுவேன்' என்று சொல்லி, யுகாந்தகாலத்துச் சண்டமாருதம்போல (விரைந்து) செல்பவனாய், (வேறு வகையால்) போக்குவதற்கு அரிய துன்பம் நீங்குமாறு செருவில் விளைவனவாகிய பலவேறான குறிகள் பொருந்தியவற்றைக்கண்டான்; (எ - று.)—என்ப, மன்னோ-அசைகள்.

குறிகள்-இலக்குமணன் போர்செய்வதனால் நிகழ்ந்த குறிகள்; அவற்றை, மேல் ஏழுகவிகளிற் காண்க. களை வரும் என்று பிரித்து-களைப்புத்தோன்றுவதற்குக் காரணமான துன்பம் என்றலும் ஒன்று. பி - ம்:—[1]என்றான், என்னா. [2]துயரம். [3]நீங்கிக். [4]மாதோ. [5]இளையவன். [6]வேறாக்கினகுறியீது. [7]என்ன, மெய்யின், ஏய. (2536)

145.—ஏழுகவிகள்-இலக்குமணன் போர்செய்வதனால் நிகழ்ந்த அடையாளங்களைக் கூறும்.

ஆனையின் கோடும் பீலித் தழைகளு மாரத் தோடு
மானமா மணியும் பொன்னும் முத்தமுங் கொழித்து வாரி
மீனென வங்கு மிங்கும் படைக்கலம் மிளிர [1]வீசும்
[2]பேனவெண் குடைய வாய குருதிப்பே ராறு கண்டான்.

(இ - ள்.) ஆனையின் தந்தங்களையும் பீலிக்குடைகளையும் ஹாரங்களுடனே சிறந்த (பல்வகை) இரத்தினங்களையும் பொன்னையும் முத்துக்களையும் கொழித்துக்கொண்டு, நீரில்வாழ்கின்ற மீனென்னுமாறு அங்கும் இங்கும் படைக்கலங்கள் விளங்க, வீசுகின்ற நுரையென்று சொல்லத்தக்க வெண்குடையையுடைய அப்படிப்பட்ட குருதிப்பேராற்றை (அநுமான்) கண்டான்; (எ-று.) —பீலித்தழை-வாச்சியமென்பாருமுளர். பி-ம்:—[1]ஈர்க்கும், வீசிப், வீங்கும். [2]மானைவெண்குடையவாறுமுதிரப் பேரியாறு, காண... பேராறு, ஆனவெண்குடைய வாயகுருதிப்பேராறு. (2537)

146. **ஆசைக டோறுஞ் சுற்றி [1]மலைநின்ற [2]வரக்கர் தம்மேல்**
வீசின பகழி [3]யற்ற [4]தலையொடும் விசும்பை முட்டி
ஓசையி னுலக மெங்கு [5]மதிர்வுற வூழி நாளிற்
காசறு கல்லின் மாரி பொழிவபோல் [6]விழுவ கண்டான்.

(இ-ள்.) திக்குக்கள்தோறுஞ் சூழ்ந்துகொண்டு பொருகின்ற அரக்கர்களின் மேல் வீசின பகழிகள், (தம்மால்) அறுபட்ட தலைக ளோடும் விசும்பை முட்டி, ஓசையினால் உலகமெங்கும் அதிர்வுற, யுகாந்தகாலத்திலே குற்றமற்ற கல்மழைபொழிவனபோல விழு வனவற்றை (அனுமான்) கண்டான்: (எ - று.)—பி - ம்:—[1]அலை கின்ற, அலைக்கின்ற. [2]அரக்கன்றன்மேல். [3]பற்றத், அற்றத். [4]தலைகளும். [5]உதிர்வுற, தானிறும். [6]வீழக். (2538)

147. மானவே லரக்கர்விட்ட படைக்கல [1]வான மாரி
ஆனவன் பகழி சிந்தத் [2]திசைதொறும் [3]பொறியோ டற்ற
மீனினம் விசும்பி னின்று [4]மிருளுக விழுவ போலக்
கானகந் தொடர்ந்த தீயிற் சுடுவன பலவுங் கண்டான்.

(இ-ள்.) (அன்றியும், அனுமான்),—(பொருதற்குப்) பொருந் தியவனான இலக்குமணனுடைய பகழிகள் (தம்மேற்) சிந்துவத னால், பெருமைபொருந்திய வேற்படையையுடைய அரக்கர் விடுத்த படைக்கலமாகிய வானமாரிகள். திக்குக்கள்தோறும் தீப்பொறி யோடும் அற்றனவாய், நட்சத்திரக்கூட்டங்கள் விசும்பிலிருந்து இருள்கெட வீழ்வனபோல (விழுவனவாகி), காட்டில் தொடர்ந்த தீப்போலச் சுடுபவை பலவற்றையுங் கண்டான்; (எ - று.)— பி - ம்:—[1]ஆனவாரி. [2]பொறியொடுந், திசையொடும். [3]திசையோ டற்ற. [4]மீச்செலவீழ்வ. (2539)

148. அருளுடைக் குரிசில் வாளி [1]யந்தர மெங்குந்[2]தாமாய்த், தெருளுறத் [3]தொடர்ந்து [4]வீசிச் செல்வன தேவர் காண, [5]இருளி டைச் சுடலை[6]யாடு மெண்புயத் தண்ணல் வண்ணச், சுருளுடைச் சடையின் கற்றைச் சுற்றெனச் சுடர்வ கண்டான்.

(இ - ள்.) (மற்றும் அனுமான்),—அருளையுடைய ஆண்களிற் சிறந்தவனான இலக்குமணனுடைய அம்புகள் ஆகாயமெங்கும் தாமேயாய் (யாவரும்) உணரும்படி தொடர்ச்சியாக வீசப்பெற்றுச் செல்பவை,—இராக்காலத்தில் மயானத்திலே தேவர்காண ஆடு கின்ற எண்புயங்களையுடைய சிவபெருமானுடைய அழகிய சுருளு தலைக்கொண்ட சடைக்கற்றைச்சுற்று (திசைகளெங்கும் விரிந்து பரந்தது) போலச் சுடர்பவற்றைக் கண்டான்; (எ-று.)

இலக்குமணனுடைய இப்போதைய போர் கறுத்த இரவில் நடப்பதனால் அவ்விரவில் ஒளிரும் வாளிகட்கு உவமை கூறுவார், இருளிடைச்சுடலையாடும் அண்ணலின் சடைக்கற்றைச்சுற்றைக் கூறினார். [5]இருளுடை என்ற பாடத்திற்கு-மரச்செறிவாலிருண்ட, மயானத்திலேயென்று உரைப்பர்: அன்றி, விஷகண்டனாதலால், 'இருளுடையண்ணல்' என்றாரென்னலாம். பி - ம்:—[1]பரந்திட. [2]தானாய். [3]துரந்து. [4]வீசச். [5]அருளுடைச். [6]ஒடும். (2540)

149. நெய்யுறக் கொளுத்தப் பட்ட நெருப்பெனப் பொருப்பி னெங்கும், மெய்யுறக் குருதித் தாரை விசும்புற [1]விளங்கி நின்றது, [2]ஐயனைக் கங்குன் மாலை [3]யரசென வறிந்து காலம், கைவிளக் கெடுத்த தென்னக் கவந்தத்தின் காடு கண்டான்.

(இ - ள்.) (பின்னும்) நெய்பொருந்தக் கொளுத்தப்பட்ட நெருப்புப்போன்று மலைபோல ஓங்கிநிற்கும் உடலினின்று மிகக் குருதித்தாரை வானத்துற விளங்கிநின்றது;—ஐயனை இலக்குமணன் அரசனென்று அறிந்து, கங்குலாகும் காலம், கைவிளக்குப் பிடித்தாற்போலத் தோன்ற, (அந்தக்) கவந்தக்காட்டை (அனுமான்) கண்டான்; (எ-று.)

அனுமான் கவந்தத் தொகுதிகளைக் கண்டமை, இதிற் கூறப் படுகின்றது. கவந்தம்-தலையற்ற உடல். இலக்குவன் சரங்களினால் அரக்கர் தலைகளறுபடவே, அவ்வுடல்களினின்று மேலே பீரிட்டுப் பாயும்இரத்தம் நெய்யிட்டெரிக்கும் தீப்பந்தத்தின் சுவாலை போலு மென்று கொண்டார்: அங்ஙன் கொண்டவர், 'இலட்சுமணன் இராசகுமாரனாயிற்றே! செறிந்த இருளில் அன்னான் தடுமாற்ற மின்றிச் செல்லட்டும்' என்று, உபசாரமாக, இராக்காலம் தீப்பந் தம்பிடிப்பது போலும் எனத் தீப்பந்தம் அப்போது அங்குப் பிடிக் கக் காரணமும் கற்பித்தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி மூல மாக வந்த ஏதுத்தற்குறிப்பேற்றவணி. கங்குல்மாலைக்காலம்- கங்குலென்னப்படுகிற இராக்காலம்என்க.பி-ம்:—[1]விளங்குகின்ற. [2]வையகங். [3]ஒன்றவரறிந்து வந்த, ஆமெனவறிந்துவந்த, ஆச் செனவறிந்துகாலன். (2541)

150. ஆளெலா [1]மழிந்த தேரு மானையு மாடன் மாவும், நாளெலா மெண்ணி னானுந் தொலைவிலா [2]நாத ரின்றித், [3]தாளெலாங் குலைய வோடித் திரிவன [4]தாங்க லாற்றும், [5]கோளிலா மன்ன [6]னாட்டிற் குடியெனக் குலைவ கண்டான்.

(இ - ள்.) (அன்றியும் அனுமான்,-தம்மீது இருக்கப்பெற்ற) வீரரெல்லாம்அழியப்பெற்ற தேரும் ஆனையும் ஆடுந்தன்மையுள்ள குதிரைகளும்,-நாளெலாமெண்ணினாலும் (தம்வாழ்நாட்கு) அழிவு இல்லாத (தம்) தலைவரை யில்லாமல் தாளெல்லாங் குலையுமாறு ஓடித்திரிவனவாய், தாங்குதலைச் செய்யுங் கொள்கையில்லாத மன்னவனாட்டிலுள்ள குடிகள்போல நிலைகுலைவனவற்றைக் கண்டான்; (எ - று.)

அழிந்திடாமல் வெகுநாள் வாழ்ந்திருக்கக்கூடியவர் தேர்முத லியவற்றின் நாத ரென்பது, 'நாளெலாமெண்ணினாலுந் தொலை விலா நாதர்' என்பதன் கருத்து. இனி, மிகப்பலவுள்ளன என்ற கருத்துப்படத் தேர்முதலியவற்றை 'நாளெலாமெண்ணினாலுந் தொலைவிலா' என்றாரெனினுமாம். ஈற்றடியில் "ஆள்பவர்கலக் குற அலைபெற்ற நாடுபோற், பாழ்பட்டமுகத்தோடு பைதல் கொண்டமைவாளோ" (பாலைக்கலி—4) "முறைதளர்ந்த மன் னவன் கீழ்க் குடிபோலக் கலங்குபு, பொறைதளர்பு பனிவாருங் கண்ணாயின் எவன் செய்கோ" (பாலைக்கலி—33) என்ற கலித் தொகையடிகள் நினைவுக்கு வருகின்றன. பி-ம்:—[1]இழந்த. [2]நாக ரிகத். [3]தோளேலாங். [4]துரகன்றானுங். [5]கோளுலாம். [6]நாட்டுக். ()

151. மிடல்கொளும் பகழி [1]மாரி வானினு மும்மை வீசி
மடல்கொளு மலங்கன் மார்பன் மலைந்திட [2]வுலந்து மாண்டார்

உடல்களு முதிர நீரு [3]மொளிர்[4]படைக் கலமு [5]முற்ற
கடல்களும் நெடிய[6]கோ னுங் கார்தவழ் மலையுங் கண்டான்.

(இ - ள்.) (மற்றும் அனுமான்), -இதழைக்கொண்ட பூமாலையை யணிந்த மார்பையுடையஞன இலட்சுமணன் வலிமைகொண்ட அம்புமழைகளை மழையைக்காட்டிலும் மும்மடங்கு வீசிப் போர் செய்திட்டதனல், உயிரொழிந்து மாண்டவரான அரக்கரின் உடல்களும் இரத்தநீரும் விளங்குகின்ற படைக்கலங்களுமாகப் பொருந்திய கடல்களையும் நெடிய கானகத்தையும் மேகந்தவழ்கின்றமலையையும் கண்டான்; (எ-று.)

உடல்களை மலையாகவும், உதிரநீரைக் கடல்களாகவும், படைக்கலங்களைக் கானகவுங் கொள்க. பி - ம்:—[1]வானின் மாரியின், மாரி வாளினும். [2]உலைந்தோர்; உலைந்து, அலைந்து. [3]உடைப், மிடை, மிடல். [4]படைக்கலக்கம், படக்கலக்கம். [5]இற்ற. [6]வானுங். (2543)

152.—அநுமான் இலட்சுமணனது நாணொலிகேட்டு மகிழ்ச்சியாற் பேராரவாரஞ் செய்தல்.

சுழித்தெறி யூழிக் [1]காலின் றுருவினன் றொடருந் தோன்றல்
[2]தழிக்கொண்ட குருதி வேலை தாவுவான் றனிப்பே ரண்டம்
கிழித்தது கிழித்ததென்னும் நாணுரு மேறு கேட்டான்
[3]அழித்தொழி காலத் தார்க்கு மார்கலிக் கிரட்டி யார்த்தான்.

(இ-ள்.) சுழித்தடிக்கின்ற யுகாந்தகாலத்துக்காற்றுப்போலத் தேடித்தொடர்பவனும் தழுவிக்கொண்ட இரத்தக்கடலைக்கடந்து செல்பவனுமாகிய ஆண்களிற்சிறந்த அனுமான், 'தனித்தபெரிய அண்டத்தைக் கிழித்தது கிழித்தது' என்று சொல்லத்தக்க நாணியின் பேரோசையைக் கேட்டு, (அதனல் தோன்றிய களிப்பினல் உலகத்தையெல்லாம்) அழித்தொழிக்கின்ற கற்பாந்தகாலத்து ஆரவாரிக்கின்ற கடலினும் இருமடங்கு ஆரவாரித்தான்; (எ-று.) —கீழ்ச்செய்யுளிற் கூறிய குருதிக்கடலைத் தாவுவான் என்று இங்குக் கூறியது, மற்றும் கானும் மலையும் கடந்தமைக்கும் உபலட்சணம். பி - ம்:—[1]காலத்துருமெனத்தொடர்ந்து தோன்றத். [2]தழிக்கொடு. [3]அழித்தொழில் வீரர். (2544)

153.—அநுமான் இலட்சுமணனைக் காண அவன் தழுவுதல்.

ஆர்த்தபே ரமலை கேளா வணுகின னநும [1]னெல்லார்
வார்த்தையுங் கேட்ட லாகு மென்[2]றக மகிழ்ந்து வள்ளல்
[3]பார்ப்பதன் முன்னம் வந்து வணங்கினன் விசயப் பாவை
[4]தூர்த்தனை யிளைய வீரன [5]றழுவின னினைய சொன்னான்.

(இ-ள்.) (பிறகு வில்நாணி) ஒலித்த பெருஞ்சத்தத்தைக் கேட்டு, அனுமான், (இலட்சுமணனைக்) கிட்டியவனுகி, (இனி) எல்லார் செய்தியும் கேட்டல்கூடுமென்று மனமகிழ்ந்து, உதாரகுணமுள்ளவனுன அவ்விலட்சுமணன் பார்ப்பதற்கு முன்னம் வந்து வணங்கினன்: விசயமங்கையின் ஆசைநாயகனுகிய அநுமானை இளையபெருமாள் தழுவினவனுய் இவ்வார்த்தைகளைச் சொன்னான்; (எ - று.)—இளையபெருமாள் சொல்லியதை, மேற்கவியிற் காண்க. பி - ம்:—[1] எல்லா, [2]உளம், [3]பார்த்தனன்..., பார்த்தவன்

முன்னஞ் சென்று பணிந்தனன். [4]தூர்த்தனன், சேர்த்தனை. [5]தமுவிநின்று. (2545)

154.—இலட்சுமணன் அநுமானை வானரவீரர்களைக் குறித்து வினவுதல்.

அரிகுல வீர ரைய யாண்டைய ரருக்கன் மைந்தன்
[1]பிரிவினைச் செய்த தெவ்வா றங்கதன் [2]பெயர்ந்த தெங்கே
[3]விரியிருட் பரவைச் சேனை வெள்ளத்து [4]விளைந்த தொன்றும்
தெரிகிலே னுரைத்தி யென்றான் [5]சென்னியிற் கையன் சொன்னான்.

(இ-ள்.) 'ஐயனே! வானரகுலவீரர்கள் எங்கேயுள்ளார்? சூரிய குமாரனான சுக்கிரீவன் உன்னைப் பிரிந்தது எவ்வாறு? அங்கதன் சென்றது எங்கே? விரிந்த இருட்கடலிற் கலந்த சேனைவெள்ளத்திலே விளைந்தது ஒன்றும் அறிந்திலேன்; சொல்வாய்' என்று (இலட்சுமணன்) வினவினான்: (அநுமான்) சிரசிற்(கூப்பிய)கையையுடையவனாகிக் கூறலானான்; (எ-று.)—அநுமான் கூறுபவற்றை மேலிரண்டுகவிகளிற் காண்க. பி-ம்:—[1]திருவினை செய்தலைன், [2]பேர்ந்தது. [3]விரியருட்பரவைவேலை. [4]விளைந்த, விளைத்தது. [5]சென்னிமேற். (2546)

155.—தானும் ஒன்றும் அறிந்திலாமையை அநுமான் தெரிவித்தல்.

போயினார் போய வாறும் போயின தன்றிப் போரில்
ஆயினா [1]ராய தொன்று மறிந்தில [2]னைய யாரும்
மேயினார் மேய போதே [3]தெரியலாம் விளைந்த தென்றான்
[4]தாயினான் வேலை யோடு [5]மயிந்திரப் பரவை தன்னை.

(இ-ள்.) கடலினுடனே ஐந்திரவியாகரணமாகிய கடலையுங் கடந்தவனாகிய அநுமான்,—(இலக்குமணனைநோக்கி),—ஐயனே! (ஓடிப்)போயினார் போனபடியையும், (ஓடிப்)போனதன்றிப் போரிலே சென்றவர் அடைந்தவகையையும் சிறிதும் அறிந்திலேன்: யாரைப்பற்றியும் சென்றவர் மீண்டுவந்தபோது விளைந்தது அறியமுடியும் என்றான்; (எ-று.)—ஈற்றடியில் உடனவிற்சியணி காண்க. இலட்சுமணனுள்ளவிடத்து எல்லார் வார்த்தையுங் கேட்கலாகுமென்று வந்த அநுமான், அவ்விலட்சுமணனே பலரைப்பற்றி வினவவே, மேயினார் மேயபோதே விளைந்தது தெரியலாமென்றானெனக. பி-ம்:—[1]ஆயவாறும். [2]அனைய. [3]தெரிவது, தெரியுறும். [4]தாயினார்வேலையொன்று, தாயினான்பரவையோடும். [5]இந்தியப்பரவை தன்னை,...பரவைத்தானை,...பரவைதானே.()

156.—மனமயக்கந்தோன்றியதைவிலக்கும் உபாயத்தை அநுமான் கூறல்.

மந்திர மூளதா லைய வுணர்வுறு [1]மாலைத் தவிர்துன்
சிந்தையி னுணர்ந்து [2]செய்யற் பாற்றெனிற் செய்தி தெவ்வர்
தந்திர [3]மிதனைத் தெய்வப் [4]படையினாற் [5]சமைக்கி னல்லால்
எந்தைநின் னடியர் யாரு மெய்தலர் நின்னை யென்றான்.

(இ-ள்.) 'ஐயனே! (திகைப்புநீங்கி) உணர்வைப்பொருந்தும் தன்மையதான உபாயம் உளது; அதை உன் சிந்தையினிலே

உணர்ந்து செய்தற்குஉரியதாதலால், செய்வாய்; (நம்) பகைவரின் தந்திரத்தால் நேர்ந்த இம்மதிமயக்கத்தைத் தெய்வப்படையினுற் போக்கினலல்லாமல், எந்தையே! நின்னடியார் எவரும் நின்னை (உணர்வுபெற்று) அடையமாட்டார்' என்று (அனுமான் இலட்சுமணனிடம்) தெரிவித்தான்; (எ-று.)—மேயினுர் மேயபோதே விளைந்தது தெரியலாமென்ற அனுமான், இங்கு அன்னுர் மீளும் உபாயத்தைக் கூறுகின்றான். பி-ம்:—[1] மாலைகாறும், மாலைதானும், மாலைத்தொன்றும். [2] செய்யற்பாற்றினி. [3] அதனைத். [4] படைகளாற். [5] சமைப்பின். (2548)

157.—அனுமான் சொற்கேட்ட இலட்சுமணன் பாசுபதம் தொடுத்தல்.

அன்னது புரிவ னென்னு வாயிர நாமத் தண்ணல்
தன்னையே [1] வணங்கி வாழ்த்திச் சரங்களைத் தெரிந்து [2] வாங்கிப்
பொன்மலை வில்லி னுன்றன் படைக்கலம் பொருந்த [3] வேந்தி
மின்னெயிற் றரக்கர் தம்மேல் [4] வீசினுன் வில்லின் செல்வன்.

(இ-ள்.) வில்தொழிற் செல்வத்தையுடையவனுன இலட்சுமணன்,—'அதனைச் செய்வேன்' என்றுசொல்லி, சகஸ்ரநாமத்துக்கு உரியவனுன ஸ்ரீராமனையே வணங்கி வாழ்த்திவிட்டு, (பிறகு) அம்புகளைத் தெரிந்து எடுத்து, மேருமலையை வில்லாகக்கொண்டவனுன சிவபெருமானது அத்திரத்தைப் பொருந்தச்செய்து ஏந்தி, மின்னல் போன்ற பற்களையுடைய அரக்கர்மீது வீசினுன்; (எ-று.) பாணங்களிற் பாசுபதாஸ்திரத்தை அபிமந்திரித்து லட்சுமணன் அரக்கர் மீது விடுத்தானென்க. பி-ம்:—[1] தொழுது. [2] தாங்கிப். [3] பற்றி. [4] ஏவினுன். (2549)

158.—பாசுபதாத்திரத்தினுல் அரக்கர்படை யெரிய, இருளொழிதல்.

முக்கணுன் படையை நீட்டி விடுதலும் மூங்கிற் காட்டில்
புக்கதோ ரூழித் தீயிற் [1] புறத்தினே ருருவும் போகாது
[2] அக்கணத் தெரிந்து வீழ்ந்த தரக்கர்தஞ் சேனை [3] யாழி
திக்கெலா [4] மிருளுந் தீர்ந்த தேவரு [5] மயக்கந் தீர்ந்தார்.

(இ-ள்.) சிவபெருமானுடைய அத்திரத்தை (இலட்சுமணன்) தொடுத்து விடுதலும், மூங்கிற்காட்டிலே புக்கதான ஓர் ஊழித் தீப் போலப் புறத்தே ஒரு பொருளும் போகாமல் அரக்கர்சேனைக் கடல் அக்கணத்தில்தானே எரிநதுவீழ்ந்தது: திக்குகளிலெல்லாம் இருளும் நீங்கிற்று: (வானரர்) யாவரும் அறிவுமயக்கந் தீர்ந்தார்; (எ-று.)—தீர்ந்த தேவரும் என்று பிரிப்பாருமுளர். பி-ம்:—[1] புறத்தின்...போகா, புறத்தொன்றும்போகாவண்ணம். [2] அக்கணத்தெரித்து வீழ்த்தா னரக்கர்தம்படையை, அக்...வீழ்ந்த... படையை. [3] ஆழித். [4] மருளுந் தீர்ந்தான். [5] இடுக்கண். (2550)

159.—மகோதரன் மறையப்போக, வானரர் இலட்சுமணனைக் கூடல்.

தேவர்தம் படையை விட்டா [1] னென்பது சிந்தை செய்யா
[2] மாபெரு மாயை நீங்க மகோதரன் மறையப் போனுன்

[3]யாவரு மிரிந்தா ரெல்லா [4]மினமழை கழிய வார்த்துக்
கோவிளங் களிற்றை வந்து கூடினு ராடல் கொண்டார்.

(இ - ள்.) (இலட்சுமணன்) பாசுபதாத்திரத்தை விடுத்தானென்பதை யறிந்து கருநிறமாகவந்த பெருமாயை நீங்கிவிட, மகோதரன் (வானத்து) மறையப்போயினன்; நிலைகெட்டவராகிய (வானரர்) யாவரும், தொகுதியான மேகம்எல்லாம் பின்னிடும்படி ஆரவாரித்து இளையபெருமாளை வந்துகூடி ஆடல்புரிந்தார்; (எ - று.)—மறையப்போனானென்பதற்கு - எங்கேயோமறைந்திட்டானென்பாரு முண்டு. மாயை மகோதரனால் விளைந்த தென்பதை 96-ஆம் பாடல் முதலியவற்று லறிக. பி - ம்:—[1]என்பதுஞ். [2]மாபெருந்தேரினின்ற, மாவருமாயைநீங்க. [3]ஏவரும். [4]மேன்மழையென்ன, இனமழையிரிய. (2551)

160.-இலட்சுமணன் வானரசேனையோடு மகிழ்ந்திருத்தல்.

யாவர்க்குந் தீதிலாமை [1]கண்டுகண் டுவகை யேறத்
தேவர்க்குந் தேவன் றம்பி திருமனத் தையந் தீர்ந்தான்
காவற்போர்க் [2]குரக்குச் சேனை [3]கல்லெனக் [4]கலந்து புல்லப்
பூவர்க்க மிமையோர் தூவப் [5]பொலிந்தனன் தூதர் போனார்.

(இ-ள்.) தேவதேவனான ஸ்ரீராமனது திருத்தம்பியான இலட்சுமணன், எவர்க்குந் தீதிலாமையைச் செவ்வனேகண்டு உவகைமிக மனத்தில் ஐயந்தீர்ந்தவனாய், (தன்னுடைய) காவலாய்ப் போர்க்குரியதான குரங்குச்சேனை கல்லென்றவொலியுடன் (தன்னைச்) சேர்ந்து தழுவிநிற்க, மலர்த்தொகுதியைத் தேவர் தூவ, விளங்கி நின்றான்: (அச்செய்தி சொல்ல இராவணனிடம் அவனுடைய) தூதுவர் சென்றார்; (எ-று)—பி-ம்:—[1]கண்டு வந்துவகையெய்தித். [2]குரங்கின். [3]கடலென். [4]கடிதுகூட,கிளர்ந்து சுற்ற. [5]பொலிந்தனர்.

161.—அரக்கர்சேனை யொழிந்தமையைத் தூதர் இராவணனுக்குத் தெரிவித்தல்.

இலங்கையர் கோனை யெய்தி யெய்திய துரைத்தார் [1]நீவிர்
விலங்கினிர் போலும் வெள்ள [2]நூற்றையோர் [3]வில்லின் வேழக்
குலங்களி னோடுங் கொல்லக் கூடுமோ வென்னக் கொன்றை
அலங்கலான் படையி னென்று ரன்னதே லாகு மென்றான்.

(இ - ள்.) இலங்கைக்கு அரசனான இராவணனை யடைந்து, (தூதர்), நிகழ்ந்ததை யுரைத்தார்; (அதுகேட்ட இராவணன்) 'நீங்கள் (அஞ்சி) விலகிவந்திட்டீர்போலும்; யானைக்கூட்டங்களுடனே நூறு வெள்ளம் (அரக்கச்) சேனையையும் ஒருவில்லினாலே கொல்ல முடியுமோ?' என்று வினவ, '(இலட்சுமணன் சேனையெல்லாவற்றையும் கொன்ற இது நிகழ்ந்தது), கொன்றை மாலையையணிந்த சிவபெருமானுடைய படையினால்' என்று (தூதர் விடை)கூறினார்; 'அப்படியானால் (அரக்கர்சேனையெல்லாம் அழிந்த தென்பது) நிகழ்ந்திருக்கும்' என்று (தூதுவர்வார்த்தையை இராவணன்) உடன்பட்டான்; (எ-று.)

நீங்கள் இலக்குமணனுடைய அம்புக்கு அஞ்சி விலகிவிட்டு, அவன் சேனைகளையெல்லாங் கொன்றதாகக் கூறுகின்றீரென்ற

குறிப்போடு '¹நீவிர்விலங்கினிர்போலும்: வெள்ளம் ²நூற்றை ஓர் ³வில்லின் வேழக்குலங்களினோடும் கொல்லக்கூடுமோ?' என்று வினவினன், இராவணனென்க. பி-ம்:—¹நீங்கள், நீர்கள். ²நூற்றையும். ³வில்லால்வீழக். (2553)

162.—அச்செய்தியை இந்திரசித்திற்கு உணர்த்துமாறு இராவணன் கூற, அங்கன் கூறிய தூதரை இந்திரசித்து இராமாதியருள்ளஇடம் வினவல்.

தோடவி ழலங்க லென்சேய்க் குணர்த்துமி னென்னச் சொன்னான்
ஓடினர் ¹சாரர் வல்லை யுணர்த்தினர் துணுக்க மெய்தா
ஆடவர் திலகன் யாண்டை ²யானிக லனும னேனோர்
³வீடணன் யாங்க னுள்ளா ருணர்த்துமின் விரைவி னென்றான்.

(இ - ள்.) 'இதழ்கள் மலரப்பெற்ற மாலையையணிந்த என் குமாரனுக்கு (இச்செய்தியை) உணர்த்துங்கள்' என்று (இராவணன்) கூறினான்; ஒற்றர் ஓடி விரைந்து (அச்செய்தியை இந்திரசித்துக்கு) உணர்த்தனார்கள்; (அது கேட்ட இந்திரசித்து),—மனநடுக்கமடைந்து, (தூதரைநோக்கி), 'ஆடவரில் திலகம்போன்றவனான இராமன் எங்குஉள்ளான்? வலிமையுள்ள அனுமானும் மற்றை வானரரும் வீடணனும் எங்கேயுள்ளார்? விரைவில் உணர்த்துங்கள்' என்று வினவினான்; (எ-று.)—இச்செய்யுள், பலபிரதிகளிலில்லை. பி-ம்:—¹சாரா. ²அனலனோடனிலன். ³வீடணக்குரிசில்.

வேறு.

163.—தூதர் இராமன்முதலியோருள்ள இடத்தை இந்திரசித்தினிடம் கூறல்.

வந்தில னிராமன் வேறோர் ¹மலையுளா ²னுந்தை மாயம்
³தந்தன தெரிவான் போனா னுண்பன ⁴தாழ்க்கத் தாழா
எந்தை⁵யீ தியன்ற ⁶தென்ன மகோதர னியாண்டை ⁷யென்ன
அந்தரத் ⁸திடைய ⁹னென்ன விராவணி ¹⁰யழகிற் றென்றான்.

(இ - ள்.) 'இராமன் வந்திலன்: (அவன்) வேறோர்மலையிடத்துள்ளான்; (அரக்கர்) விளைப்பனவாகிய மாயத்தை அறியுந்தன்மையனான உன்சிறியதந்தை [விபீஷணன்] (படைகட்கு) உணவுப்பொருள் தாமதிக்கவே (அவற்றைக் கொணரப்) போனான; தாமதியாத [விரைந்துதொழில்செய்யவல்ல] எந்தையே! இது நிகழ்ந்த செயல்' என்று (தூதர்) தெரிவிக்க, (இந்திரசித்து), 'மகோதரனென்பவன் எங்கே?' என்றுவினவ, (தூதர்) ஆகாயத்திடத்தேயுள்ளானென்ன, இராவணகுமாரன 'அழகிற்று' என்றுகூறினான்;

சேனையெல்லாம் ஒழிகையில் மகோதரன் வானத்தில் மறைந்திருப்பது தகுதியன்று என்று பிறகுறிப்பாகக்கூறுவான் 'அழகிது' என்றான். 159 - ஆம் பாடலில் 'மகோதரன் மறையப்போனான்' என்பதற்கு எங்கேயோ மறைந்துபோய்விட்டான் என்று பொருள் கூறுபவர், 'மகோதரன் அந்தரத்திடையன் என்று ஒற்றர் கூற இராவணி 'அழகிது' என்றதற்கு, நீங்கள் ஒற்றுத்தொழிலைச்சரியாகக் கவனித்துச் செய்யவில்லை யென்று ஏசியதாகுமெனக்கருத்துக்கூறுவர், இராவணி-இராவணகுமாரன். பி - ம்:— "தோடவி ழலங்கல்" என்ற முன்பாடல் இல்லாத ஏடுகளிற்

காணப்படும் பாடம் வருமாறு:—[1]மலையின். [2]உம்பி. [3]தந்திரந் தீர்ப்பான். [4]தாழாது. [5]தீதியன்றது, நீதியென்றது. [6]என்றார். [7]என்றான். [8]இடையாய். [9]என்றார். [10]அழகிது. (2555)

வேறு.

164.—இருகவிகள்-இந்திரசித்து பிரமாத்திரம்விட வேட்பது கூறும்.

கால மீதெனக் [1]கருதிய விராவணன் [2]காதல்
ஆல மாமர மொன்றினை விரைவினி னடைந்தான்
மூல வேள்விக்கு வேண்டுவ கலப்பைகண் முறையால்
கூல [3]நீங்கிய விராக்கதப் பூசுரர் கொணர்ந்தார்.

(இ-ள்.) 'இதுவே (பிரமாத்திரம் விடுதற்குஉரிய) காலம்' என்று கருதிய இராவணகுமாரன் [இந்திரசித்து], பெரியதோர் ஆலமரத்தினடியை விரைவினிலடைந்தான்; ஒழுக்கவரம்பை மீறிய இராட்சசப்பிராமணர், பிரதானவேள்விக்கு வேண்டியனவான கருவிகளை முறைப்படக் கொணர்ந்தார்கள்; (எ-று.)—இராமனும் விபீடணனும் இல்லாமையால் 'காலம் ஈது' என்றான், இந்திரசித்து. மகாபாரதத்தும் பதினெட்டாம்போர்முடிவில் ஆலமரத்தடியில் அசுவத்தாமன் பாண்டவரைக்கொல்லுமாறு படைக்கலம் பெறப் பூசனைபுரிந்ததாக வில்லிபுத்தூரார் கூறியதுஇங்குக் கருதத்தக்கது. காதல்—காதலன்: ஆகுபெயர். பி-ம்:—[1]கருதியிட்டு. [2]மைந்தன். [3]நீங்கிலா. (2556)

165. *அம்பி னற்பெருஞ் சமிதைக [1]ளமைத்தன [2]னளவில்*
தும்பை மாமலர் [3]தூவினன் காரியெட் [4]சொரிந்தான்
[5]கொம்பு [6]பல்லொடு கரியவெள் [7]ளாட்டிருங் குருதி [டான்.
வெம்பு வெந்தசை முறையினிட் டெண்ணெயால் [8]வேட்

(இ-ள்.) (இந்திரசித்து), அம்பினாலேயே பெரியசமித்துக்களை அமைத்தான்; அளவில்லாத சிறந்த தும்பைமலர்களைத் தூவினான்: கருநிறஎள்ளைப் பெய்தான்; கொம்பு பற்கள் என்ற இவற்றோடுகூடிய கருநிறமுள்ள வெள்ளாட்டின் மிக்க இரத்தத்தையும் வேகக்கூடிய வெவ்விய தசையையும் முறையாக இட்டு நெய்யைச் சொரிந்து ஓமஞ்செய்தான்: (எ-று.)—பி-ம்:—[1]அமைத்தனர். [2]அனலில். [3]தூவினர். [4]சொரிந்தார். [5]கொம்பர். [6]பல்லெழும். [7]ஆட்டொடுங. [8]வேட்டார். (2557)

166.—நற்குறிப்புக்கண்டு, இனித் தனக்கு வெற்றி கிடைக்குமென்று பிரமாத்திரந்தொடுக்க இந்திரசித்து வானத்தில் நிமிர்தல்.

வலஞ்சு ழித்துவந் [1]தெழுந்தெரி நறுவெறி வயங்கி
நலஞ்[2]சு ரந்தன பெருங்குறி [3]முறைமையி னல்கக்
குலஞ்சு ரந்[4]தெழு கொடுமையான் [5]முறையினிற் கொண்டே
நிலஞ்சு ரந்[6]தெழும் வென்றியென் றும்பரி னிமிர்ந்தான்.

(இ-ள்.) அக்கினியானது, நறுமணம் விளங்கப்பெற்று வலப்பக்கமாகச் சுழன்றுவந்து கிளர்ந்து நன்மைசுரப்பனவான பெரிய குறிப்பை முறைமையாகத் தெரிவிக்க, (அரக்கர்) குலத்திற் சுரந்து

தோன்றுகின்ற கொடுமைகட்கு இருப்பிடமான இந்திரசித்து,— வெற்றி போர்க்களத்தினின்று தோன்றுமென்று முறைமையால் மனத்திற்கொண்டு, (பிரமாஸ்திரந்தொடுக்குமாறு) மேலிடத்திலே நிமிர்ந்தான்; (எ-று.)—நிமிர்தல் - ஓங்கிய இடத்திலிருத்தல்.

போரச்செல்பவன் வேள்வி செய்கையில் அக்கினிவலமாகச் சுழித்துவீசின், போரில் வெற்றி கைகூடுமென்பது, நூற்கொள்கை. எரி-அக்கினி. பி-ம்:—[1]எரியெழுமுவகையை வணங்கி, எழுந்தன வுவகையின் வணங்கி. [2]சிறந்தன, செறிந்தன. [3]எனனின்றுநல்கி. [4]அனற் [5]வரன்முறைகொண்ட, நிறையினிற்கொண்டான். [6]உயர், எழு. (2558)

167.—இந்திரசித்து எவரும் உணராதவாறு மாயையால் மறைந்திருத்தல்.

விசும்பு போயினன் மாயையின் பெருமையான் மேலைப்
பசும்பொ னுட்டவர் [1]நாட்டமு முள்ளமும் [2]படரா
[3]அசும்பு விண்ணிடை யடங்கினன் முனிவரு [4]மறியார்
தசும்பு நுண்ணெடுங் [5]கோளொடு காலமுஞ் [6]சார.

(இ - ள்.) மிக்கமாயையையுடையவனான இந்திரசித்து, விசும்பிற் சென்றவனாய், செல்லுந்தன்மையுள்ள நுண்ணிய நெடிய கிரகங்களுடனே (வெற்றியைத்தருகிற) காலம் வர, மேலைப்பசும்பொன்னுட்டிருப்பவரான தேவர்களின் கண்ணும் உள்ளமும் செல்லாத நீர்த்திவலையையுடைய வானத்திடை மறைந்தான்; (அவன் அங்ஙனிருப்பதை) முனிவரும் அறியாதவராயினர்; (எ-று)

கண்ணுக்குச் சிறிதாகத் தெரியினும் பெரும்பயன் விளைக்கும் கிரகமென்பார் 'நுண்ணெடுங்கோள்' என்றார். சாரவரும் வரையில், விண்ணிடையடங்கியிருந்தான் என்று உரைப்பாருமுளர். எதுகைநோக்கி, 'ததும்பு' என்பது 'தசும்பு'என வந்தது: சஞ்சரிக்கின்ற என்பது பொருள்.பி-ம்:—[1]உள்ளமும் நாட்டமும்.[2]பதைப்ப, பதைத்தார். [3]அசும்பின். [4]அறியாத். [5]கோலமுஞ். [6]சோர. (2559)

168.—இதுவும், அடுத்த கவியும்-மகோதரனது மாயப்போரைக் கூறும்.

அனையன் [1]நின்றன னவ்வழி மகோதர னறிந்தோர்
வினைய மெண்ணின னிந்திர வேடத்தை [2]மேவித்
[3]துனைவ லத்[4]தயி ராபதக் கழுத்தின்மேல் [5]தோன்றி
முனைவர் [6]வானவ ரவரொடும் போர்செய மூண்டான்.

(இ - ள்.) அந்த இந்திரசித்து, (வானத்து அடங்கினவனாய்) நின்றான்; அப்போது மகோதரன் ஆலோசித்து ஒருமாயச் செய்கையைச் செய்யக் கருதினான்; (கருதியபடியே), இந்திர வேடத்தைக் கொண்டு, விரைவையும் பலத்தையுமுடைய ஐராவதத்தின் பிடரிமேல்தோன்றி, முனிவர் வானவர் என்ற இவரோடும் (கூடி), போர் செய்ய முனைந்தான்; (எ-று.)—மகோதரன்தான் இந்திரனாகவும், தன்வாகனம் ஐராவதமாகவும், தன்பரிவாரமான அரக்கர்கள் இருடியராகவும், மாயையால் தோன்றுமாறுசெய்து பொருதற்கு வந்தனனென்க. பி-ம்:—[1]நின்றவன். [2]மேவா. [3]துனைமதத்து. [4]ஐரா

வதக்களிற்றின்மேல். [5]தோன்ற. [6]வானவரெவரொடும்...மூண்டான்; வானவரொடும் போயதிசயமுற்றூர். (2560)

169 அரக்கர் மானிடர் குரங்கெனு [1]மவைவ்யெலா மல்ல
உருக்களி [2]யாவுள வுயிரினி யுலகத்தி னுழல்வ
[3]தருக்கு போர்க்குடன் [4]வந்துள வாமெனச் [5]சமைத்தான்
[6]வெருக்கொ ளப்பெருங் கவிப்படை குலைந்தது [7]விலங்கி.

(இ-ள்.) 'அரக்கரும் மானுடரும் குரங்கும் என்ற அவைமாத்திரம் அல்ல: (இப்போது) உலகத்திற் சஞ்சரிப்பனவாய் உருவைப் படைத்த பிராணிகள் எவையுள்ளன, (அவை) எல்லாமும் செருக்கிச் செய்கின்றபோர்க்கு உடன்வந்துள்ளனவாம்' என்று கருதுமாறு (மாயைகளைச்) செய்தான்; (அதுகண்டு உலகம் முழுதும் தம்மை யெதிர்ப்பதற்கு வந்திருப்பனவாகக் கருதி), பெரியவானர சேனை, அச்சங்கொண்டதனுற் பின்வாங்கி நடுங்கலாயிற்று;(எ-று.) —பி - ம்:—[1]இவையெலாமல்லா. [2]யாவுளயாவையு முலகத்தினுழல்வ, யாவுளவுயிரெனவுலகினுழலவத், ஆயுளயாவையு முலகத்தினுலவாத். [3]தருக்கும். [4]வந்துளது. [5]சார்ந்தான். [6]வெருக்கொளாப், [7]விளங்கி, வெருவி. உருக்களி யாவுள—"தன்னொழிமெய்ம்முன்" [நன். மெய். 3] (2561)

170.-'இந்திரன் தேவர் முதலியவரோடு நம்மீது பொருதற்கு வரக்காரணம் என்?' என்று வானரர் திகைத்தல்.

கோடு நான்குடைப் [1]பானிறக் குன்றமேற் கொண்டான்
ஆட லிந்திர னல்லவ ரியாவரு மமரர்
சேடர் சிந்தனை முனிவர்க ளமர்பொரச் சீறி
ஊடு வந்துற்ற தென்கொலோ [2]திபமென வுலைந்தார்.

(இ-ள்.) 'நான்கு தந்தங்களையுடைய (ஐராவதமென்ற)வெண்ணிறயானையின் மேலேறி நடத்துபவன், வலிமைபொருந்திய இந்திரன்: மற்றையோரான (பரிவாரமாக அமைந்தவர்) யாவரும், தேவர்கள்: மிச்சமானவர், கடவுட் சிந்தனைபுரிகின்ற இருடியர்; (இவர்யாவரும்) போர்புரியுமாறு சீற்றங்கொண்டு இப்போர்க்களத்தினிடையே வந்து பொருந்தியதற்குக்காரணம்என்னையோ!' என்று சொல்லி (வானரர்) வருந்தினர்; (எ - று.)

'தேவர்கோன் தேவர்முனிவர்களுடனே நம்மீது போர்க்கு வருமாறு நாம் யாதொருபிழையும் புரிந்திலோமே: அப்படியிருக்க இவர்கள் பொரவருதற்குக் காரணம் என்னே!' என்று திகைப்புடன் வருத்தமுங்கொண்டார் வானரரென்க. பி-ம்:—[1]பாகடுங் குன்றின், பானிறக்களிற்றின். [2]ஆம். (2562)

171.—இலக்குமணன் 'முனிவர்முதலியோர் சினந்துவர யாது காரணம்?' என்று அனுமானை வினவுதல்.

அனுமன் வாண்முக நோக்கின னழியை யகற்றித்
[1]தனுவ லங்கொண்ட தாமரைக் கண்ணவன் றம்பி
முனிவர் வானவர் முனிந்து[2]வந் தெய்தயாம் முயன்ற
[3]துனிக ளென்கொலோ சொல்லுதி [4]விரைந்தெனச் சொன்னான்.

(இ - ள்.) சக்கரப்படையை நீக்கித் தனுசை வலப்புறத்திற் கொண்ட புண்டரீகாட்சனான ஸ்ரீராமனுக்குத் தம்பியான இலட்சுமணன், அனுமானுடைய ஒளிபொருந்திய முகத்தைப்பார்த்து, 'முனிவரும் தேவர்களும் சினந்து (நம்மேற் போர்செய) வந்து சேருமாறு நாம் முயன்றுசெய்த அபராதங்கள் என்னோ? விரைந்து சொல்வாய்?' என்று வினவினான்; (எ - று.)—பி-ம்:—[1] தனுவிடங். [2] வந்தேயமர், வந்தெய்தமர். [3] தனியிது. [4] புணர்ந்தென. (2563)

172.-இவ்வாறு வினவிக்கொண்டிருக்கையில், இந்திரசித்து இலட்சுமணன்மீது பிரமாத்திரத்தை விடுத்தல்.

இன்ன காலையி னிலக்குவன் மேனிமே லெய்தான்
[1] முன்னை நான்முகன் படைக்கல மிமைப்பதன் முன்னம்
பொன்னின் மால்வரைக் [2] குரீஇயினம் மொய்ப்பன போலப்
பன்ன லாந்தர மல்லன [3] சுடர்க்கணை பாய்ந்த.

(இ - ள்.) இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போதே, பழைய நான்முகனது படையை [பிரமாஸ்திரத்தை] இமைப்பதற்கு முன்னம் இலக்குமணனுடலின்மீது விடுத்தான்; பொன்மயமான பெரியமலையிலே குருவியினம்மொய்ப்பனபோல சொல்லத்தரமல்லாதனவான ஒளியையுடைய அம்புகள் (அவ்விலக்குமணன் மேனியிற்) பாய்ந்தன; (எ - று.)—இலக்குவன் வினவுக்கு விடையிறுப்பதன் முன்னமே இந்திரசித்து அவ்விலக்குவன்மீது பிரமாத்திரத்தைத் தொடுத்திட்டனனென்க. பி - ம்:—[1] முன்னம். [2] குரீஇயின மொய்த்ததுபோலப், குருசிலைமேயதுபோலப். [3] சுடு, சுடுங். (2564)

173.—இலக்குமணன் பிரமாஸ்திரத்தால் அறிவுஒடுங்கி யயர்தல்.

கோடி கோடிநூ றாயிரங் [1] கொடுங்கணைக் குழாங்கள்
மூடி மேனியை முற்றுறச் சுற்றின மூழ்க
ஊடு செய்வதொன் றுணர்ந்தில னுணர்வு [2] புக் கொடுங்க
ஆடன் [3] மாகரி சேவக மமைந்தென [4] வயர்ந்தான்.

(இ-ள்.) கோடிகோடி நூறாயிரங் கொடியகணைக்கூட்டங்கள் மேனியை முற்றுறமூடிச் சுற்றினவாய் மூழ்க, அவ்வேளையில் (இலட்சுமணன்) செய்வதின்னதென்பதைப்பற்றி அறியமாட்டாதவனாய்த் தன்னுணர்வுபோயொடுங்க, வலிய பெரியயானை படுக்கையிடத்தில் அடங்கினாற்போல அயர்ந்திருந்தான்; (எ - று.)—பி - ம்:—[1] சுடுகணைக்குழாங்கள், கொடுஞ்சுடர்க்கணைகள். [2] ஒகட்டொதுங்க. [3] வாம்பரி. [4] அசைந்தான். (2565)

174.—இனி, ஏழுகவிகள்-அனுமான்முதலியோர் பிரமாஸ்திரத்தால் பலபலபடியாக விழுந்தமை தெரிக்கும்

அனுமனிந்திரன் வந்தவனென்கொலீ [1] தமைந்தான்
[2] இனிய னெற்றுவன் களிற்றினோ டெடுத்தென வெழுந்தான்
[3] தனுவி னாயிரங் கோடிவெங் [4] கடுங்கணை தைக்க
நினைவுஞ் செய்கையு மறந்துபோய் நெடுநிலஞ் [5] சேர்ந்தான்,

(இ - ள்.) அனுமனானவன், '(நமக்கு) இனியனான இந்திரன் (இப்போது) வந்தவனாகி, (நம்மோடுபொருதலாகிய) இச்செயலை ஏன் பொருந்தினான்? (என்று எண்ணமிட்டுக் காரணம் யாதாயினும் ஆகுக: அவ்விந்திரனை) யானையோடு எடுத்து எற்றுவேன்' என்று எழுந்தான்: (அப்போது தன்) உடலில் ஆயிரகோடிக் கொடிய கணைதைத்ததனால் நினைவுஞ் செய்கையும் மறந்துபோய் நெடிய நிலத்திற் சேர்ந்தான் [தரையில் விழுந்திட்டான்]; (எ-று.) —பி-ம்:—[1] அமைத்தான். [2] இனிதினெற்றுவான்களிற்றினோடெடுத்தென, இனியெனெற்றுவன்..., இனியவன்களிற்றினொடுமெடுக்கென. [3] தனுமன். [4] கணைபலதைப்ப. [5] உற்றான். (2566)

175. அருக்கன் மாமக னுடகக் [1]குன்றமொன் றலர்ந்த
முருக்கின் கானக [2]மாமெனக் குருதிநீர் [3]முடுகத்
[4]தருக்கி வெஞ்சரந் தலைத்தலை [5]மயங்கின [6]தைக்க
[7]உருக்கு [8]செம்பன கண்ணினன் நெடுநில முற்றான்.

(இ - ள்.) சூரியனது சிறந்த குமாரனாகிய சுக்கிரீவன், பொன்மயமானதொரு குன்றமொன்றில் அலர்ந்த பலாசங்காடாமென்னும்படி குருதிநீர் விரைந்து (தன்னுடலினின்று) பெருகுமாறு, செருக்கிக் கொடிய அம்புகள் உடலினிடங்களிலெல்லாம் மாறி மாறித் தைக்க, மாறுசெய்ய இயலாது சினத்தினால் உருக்கின செம்புபோன்ற கண்களையுடையவனாய் நெடுநிலத்துவீழ்ந்திட்டான்; (எ-று.)—பி-ம்:—[1] குன்றினில். [2] ஒத்தனவாமென. [3] முழங்கத். [4] தருக்கின். [5] மயக்குறத். [6] தைப்ப. [7] உருக்குஞ். [8] செம்பெனக். (2567)

176. அங்க தன் [1]பதி னாயிர மயிற்கணை யழுந்தச்
சிங்க வேறிடி யுண்டென நெடுநிலஞ் சேர்ந்தான்
சங்க மேறிய பெரும்புகழ்ச் சாம்பனுஞ் சாய்ந்தான்
துங்க மார்பையுந் தோளையும் வடிக்கணை [2] துளைக்க.

(இ - ள்.) அங்கதனென்பவன், (தன்னுடலின்மீது) கூரிய பதினாயிரங் கணைகள் அழுந்தியதனால் ஆண்சிங்கம் (தன்மீது) இடிவிழப்பெற்றதுபோல நெடுநிலத்துச் சேர்ந்தான்: (வீரர்) கூட்டத்திலே ஏறிய பெரும்புகழையுடைய ஜாம்பவானும் உயர்ந்த மார்பையும் தோளையும் (இந்திரசித்துவிடுத்த) கூரிய அம்புகள் தொளைத்ததனால் (நிலத்திற்) சாய்ந்திட்டான்; (எ - று.)—பி - ம்:—[1] நெடியதாயிரம். [2] துளைப்ப, தொலைப்ப, தொலைக்க. (2568)

177. நீல னாயிரம் வடிக்கணை நிறம்புக்கு [1]நெருங்கக்
கால னார்முகங் கண்டன னிடபன்விண் கலந்தான்
ஆல மேயன்ன பகழியாற் பனசனு [2]மயர்ந்தான்
[3]கோலின் மேவிய கூற்றினாற் குமுதனுங் [4]குலைந்தான்.

(இ-ள்.) நீலனென்பவன் ஆயிரம் கூரிய அம்புகள் மார்பிற் புகுந்து நெருங்கவே, யமனார் முகத்தைப் பார்த்திட்டான் [இறந்தான்]; இடபனும் வானுலகஞ் சேர்ந்தான்; பனசனும் விஷத்தையே யொத்த (இந்திரசித்தின) பாணங்களால் உயிரொழுங்கினான்;

குமுதனும் அம்புவடிவாகப் பொருந்திய யமனால் உயிரொழிந்தான்; (எ - று.) கோலினால்-செங்கோலோடு: அதிகாரத்தோடு எனினுமாம். பி - ம்:—[1] நீநெடுங். [2] அசைந்தான். [3] கோலமேனிமால் வரையன்ன, கோலின் மேனியன் கூற்றினால். [4] குறைந்தான். ()

178. வேலை [1] தட்டவ னாயிரம் பகழியால் வீழ்ந்தான்
வாலி நேர் [2] வலி மயிந்தனுந் [3] துமிந்தனும் [4] மடிந்தார்
கால வெந்தொழிற் கவய னும் வானகங் கண்டான்
மாலை வாளியிற் கேசரி மண்ணிடை [5] மறைந்தான்.

(இ-ள்.) (மலைகொண்டு) கடலைக் கட்டினவனாகிய [சேதுபந்தனஞ்செய்த] நளன் ஆயிரம் அம்புகளால் இறந்திட்டான்: வாலியை யொத்த வலிமையையுடைய மயிந்தனென்பவனும் (அவனுடைய) தம்பியான துமிந்தனென்பவனும் மடிந்தார்கள்; யமன்போற் கொடிய தொழிலையுடைய கவயனும் வானலோகத்தைப் பார்த்தான் [இறந்தான்]; மாலைபோல(த் தொடர்ச்சியாக) வீழ்ந்த அம்புகளினால் கேசரியும் மண்ணில் மறைந்துபோனான்: [இறந்துபோனான்]; (எ-று.)—பொருட்பின்வருநிலையணி. பி-ம்:—[1] கட்டவன், கட்டனோன். [2] வரும், [3] தம்பியும். [4] மாண்டார். [5] மடிந்தான்.

இப்பாடலுக்குப்பின் சிலபிரதிகளில் காணும்பாடல் வருமாறு:—

கனக னாயிரங் கணைபட [1] வானிடைக் [2] கலந்தான்
அனக னாயின சங்கனு [3] மக்கணத் தயர்ந்தான்
[4] முனையின் வாளியிற் சதவலி யென்பவன் முடிந்தான்
புனையு [5] மம்பினில் தம்பனும் பொருப்பெனப் புரண்டான்.

பி - ம்:—[1] விண்ணிடைக். [2] கரந்தான். [3] அமர்க்களஞ் சார்ந்தான். [4] மொய்ம்பனும். [5] மைந்நிறத்துமிந்தனும். 'முனையும்வாளையிற்றரக்கனுமொய்யமர் முடிந்தான், புனையும்வாளியாற்றுன் மருடனு முயிர் புலந்தான்' என்று பின்னிரண்டடிகள் சிலபிரதியிலுள்ளன. "கனகன்" என்று தொடங்கும் இச்செய்யுள், சில பிரதிகளில் 177-ஆம் பாடலுக்குப்பின்னே காணப்படுகின்றது. (2570)

179. விந்த [1] மன்னதோட் [2] சதவலி சுசேடணன் வினதன்
கெந்த மாதன னிடும்பன்வன் றதிமுகன் [3] இளர
[4] உந்து வார்கணை கோடிதம் முடல் [5] முற்றொளிப்பத்
தந்த நல்லுணர் [6] வொடுங்கினர் மண்ணுறச் சாய்ந்தார்.

(இ - ள்.) விந்தமலையையொத்த தோளையுடைய சதவலியும் சுசேடணனும் வினதனும் கந்தமாதனனும் இடும்பனும் வலிய ததிமுகனும், பொங்கி மேல்விழுகின்ற நீண்ட கோடி அம்புகள் தம்முடைய உடலிற் பொருந்தி ஒளிக்க, தங்கள் தங்களுடைய நல்ல அறிவு ஒடுங்கப்பெற்றவராய்ப் பூமியிற்பொருந்த வீழ்ந்திட்டார்கள; (எ - று.)—உடலம் முற்று என்று பிரிக்கவும் இடமுண்டு. இச்செய்யுள், சிலபிரதிகளிலில்லை. பி - ம்:—[1] என்னுங். [2] சுரபனிற். [3] இளரும். [4] துங்க. [5] முற்றுக்தொளைப்ப. [6] ஒடுங்கிட. (2571)

180.—மற்றும் வானரர்யாவரும் உயிர்குன்றி விழுதல்.

[1]மற்றை வீரர்க ளியாவரும் வடிக்கணை மழையால்
[2]முற்றும் வீந்தனர் முழங்குபே ருதிரத்தின் முந்நீர்
எற்று வான்றிரைக் கடலொடும் பொருதுசென் [3]றேற
ஒற்றை [4]வான்கணை யாயிரங் குரங்கினை யுருட்ட.

(இ-ள்.) ஒலிக்கின்ற மிக்க இரத்தக்கடலானது மோதுகின்ற பேரலைகளையுடைய (நீர்க்) கடலோடு மாறுபட்டுச் சென்று சேருமாறு ஒப்பற்ற சிறந்த ஆயிரம் அம்புகள் குரங்குகளை யுருட்டுதலால், மற்றுமுள்ள வானரவீரர்கள் எல்லோரும் கூரிய அம்பு மழையினால் முழுவதும் [நன்றாக] உயிர்போகப் பெற்றவராயினர்; (எ - று.)—வான் - சிறந்த, ஒற்றைக்கணை ஆயிரங் குரங்கினை யுருட்ட என்றுமாம். பி - ம்:—[1]மற்றும். [2]முற்றும் வீழ்ந்தனர், இற்ற விந்தனர். [3]ஏற்ற, ஏறி. [4]வார்கணை. (2572)

181.—பிரமாஸ்திரத்தால் வானரம்யாவும் உயிரொழிந்து பூமியிற்கிடத்தல்.

தளைத்து வைத்தது [1]சதுமுகன் பெரும்படை தள்ளி
ஒளிக்க மற்றொரு புகலிட [2]முணர்கில ருருமின்
வளைத்து [3]வித்திய வாளியான் மண்ணொடுந் திண்ணம்
மூளைப்பு டைத்தன [4]வொத்தன வானர முடிந்த.

(இ - ள்.) பிரமனுடைய பெருமைபெற்ற அஸ்திரமானது (கீழே) வீழ்த்தித் தளைபூட்டியதுபோற்செய்திட்டது: (அந்தஅஸ்திரத்தினின்று) தப்புவதற்கு (வானரவீரர்) வேறோர்புகலிடத்தைக் காணாதவராயினர்; (தம்மை இந்திரசித்து) மின்னலைப்போல வளைத்துக்கொண்டு விடுத்த அம்புகளினாலே வானரங்கள் மண்ணோடும் உறுதியாய் (அசைவற்று நிற்குமாறு) முளையடிக்கப்பட்டன போன்றனவாய் உயிர்முடிந்தன; (எ - று.)—பி-ம்:—[1]திசைமுகன். [2]இல்லென. [3]வீட்டிய. [4]ஆமென. (2573)

182.—குருதியிற் கிடந்த வானரக்கடலின் வருணனை.

குவளைக் [1]கண்ணியர் வானவர் மடந்தையர் [2]கோட்டித்
துவளப் பாரிடைக் [3]கிடந்தனர் குருதிநீர் சுற்றித்
திவளக் கீழொடு மேல்புலட பரந்திடை செறியப்
பவளக் காடுடைப் பாற்கட லொத்ததப் பரவை.

(இ-ள்.) குவளைமலர்போன்ற கண்களையுடையவராகி வானுலகத்தவரான தேவமடந்தையர் தலைசாய்த்துத் துவளுமாறு, (வானவர்) பாரிற் கிடந்தனர்; (அவர்களுடைய) குருதிநீர் வளைத்துக் கீழுடனே மேலிடத்தும் பரந்து எங்கும் விளங்கி நெருங்குதலால், (அந்த வானர சேனை) சமுத்திரம் பவழக்காட்டைக்கொண்ட பாற்கடலையொத்தது; (எ - று.)—பி-ம்:—[1]கண்ணினை, கண்ணுடை. [2]கோடி. [3]கிடந்தது. (2574)

183.—மூன்றுகவிகள்-ஒருதொடர்: வானரர் விருந்தினராய் வந்ததுகண்டு வானவர் உபசரித்துப் புனைந்துரை கூறி 'பூமியிற்செல்லுக' எனல்.

விண்ணிற் சென்றது கவிக்குலப் பெரும்படை வெள்ளம்
கண்ணிற் [1]கண்டனர் வானவர் விருந்தெனக் காற்றா

உண்ணிற் கும்பெருங் ²களிப்பின ரளவளா யுவந்தார்
மண்ணிற் செல்லுதி ரிக்கணத் தே³யென வலிந்தார்.

(இ-ள்.) வானரக்கூட்டங்களின் பெரும்படைவெள்ளம், வானுலகத்துச் சென்றது: வானவர், (அவர்களைக்) கண்ணிற்கண்டவராய், விருந்தினர் என்று நட்புக்கொண்டு, மனத்திற்பொருந்திய பெருமகிழ்ச்சியையுடையராய் க்ஷேமம்விசாரித்து உவப்புக்காட்டி, 'இப்போதே (அரக்கரைக்கொல்லுமாறு) பூமியிற்செல்க' என்று வலாற்காரஞ் செய்தார்கள்; (எ-று.)

வானவர் வானரர்களை அளவளாயுவந்தமையை மேலிரண்டு செய்யுளிற் காண்க. அவ்விரண்டு செய்யுள்களின் பின் இச்செய்யுளின் ஈற்றடியிலுள்ள 'மண்ணிற் செல்லுதி ரிக்கணத் தேயென வலிந்தார்' என்பது இயையத் தக்கது, "பாடக்கிரமத்தினும் பொருண் முறை வலியுடைத்து" என்பது நூல்வழக்கு ஆதலின். பி ம்:—¹கண்டவர். ²களியினர். ³எனுமனத்தார். (2575)

184. பார் படைத்தவன் படைக்கொரு பூசனை படைத்தீர்
நீர்ப டக்கட வீரலீர் வரிசிலை நெடியோன்
பேர்ப டைத்தவற் ¹கடியவர்க் கடியரும் பெறுவார்
வேர்ப டைத்தவெம் ²பிறவியால் துவக்குறு விடு.

(இ - ள்.) (ஸ்ரீராமபக்தரான) நீர் இறத்தற்கு உரியீரல்லீர்: (இறக்கும் பாவனையால்) உலகங்களைப் படைத்தவனான பிரமதேவனது அஸ்திரத்துக்கு ஒருபூசனை செய்தீர்: கட்டமைந்த வில்லையுடையவனாகித் திருமாலென்னும் பேரைப்படைத்தவனான ஸ்ரீராமனது அடியவர்க்கு அடியவரும், வேரூன்றிய கொடியபிறவியால் நேருங்கட்டுப்படுதல் இல்லாது மோட்சத்தையே பெறுவர்; (எ-று.)

'நீர் இப்போது பிரமதேவனுடைய அஸ்திரத்தைக் கௌரவிப்பதற்காக இங்ஙன் இறந்தவர்போன்றீரே யல்லது நுமக்கு இறப்புக் கிடையாது: இனிப்பிறப்புக்கிடையாது, மோக்ஷமே' என்று வீரசுவர்க்கம்புகுந்த வானரருயிர்க்கு வானவர் உபசாரமொழி கூறினர். இந்தச் செய்யுளில், 'நீவிர் ஸ்ரீராமனுக்கு அடியவராதலால் பிறவியுடையார்க்கு உண்டாகக்கூடிய துவக்கின்றி இந்த அஸ்திரத்தினின்று விடுதலை யடைவீர்' என்பது, பின்னிரண்டடிகளாற் கூறியதெனக் கருத்துக்காண்டலும் ஒன்று. பி-ம்:—¹அடியருக்கு. ²பிறவியிற். (2576)

185. நங்கள் காரிய மியற்றுவா ¹னுலகிடை நடந்தீர்
²உங்க ளாருயி ரெம்முயி ருடல்பிறி துற்றீர்
செங்க ணுயகற் காகவெங் களத்³திடைத் தீர்ந்தீர்
எங்க ⁴ணுயகர் ⁵நீங்களென் றிமையவ ரிசைத்தார்.

(இ - ள்.) '(நீங்கள்) எங்கள் காரியத்தைச் செய்வதற்காகவே உலகத்திற் பிறந்தீர்: உங்கள் அரிய உயிர் எம்முயிரே; உடல் (மாத்திரம்) வேறாகப் பொருந்தியிருந்தீர்; புண்டரீகாட்சனான ஸ்ரீராமனுக்கு உதவும் பொருட்டுக் கொடியபோரிலே உயிர் நீங்கினீர்; நீங்கள் எங்களுக்குத் தலைவராவீர்' என்று தேவர்கள் கூறி

ஞர்கள்;(எ-று.)—இங்ஙன் கூறினவர்களாய் 'இனி எமது காரியத்தை முற்றுவிக்க இக்கணத்தே பூமிக்குச் செல்வீராக' என அவ்வானரர்களைவலிந்து வேண்டினர் வானவரென்று 183-ஆஞ் செய்யுளின் இறுதியடியை இங்குத் தந்து முடிக்க.

"ஆண்மின்கள் வானக மாழியான் தமரென்று, வானோண் கண்மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே" என்ற பெரியார் பாசுரம், இங்கு ஒருசார் ஒப்பு நோக்கத்தக்கது. பி-ம்:—[1]பாரிடை. [2]எங்களாருயிரும் முயிருடல்பிறிது, உங்களாருயிரோடுலகம்பிற. [3]உயிர். [4]நாயகம். [5]நீர்கள். (2577)

186.—இந்திரசித்து வெற்றிச்சங்கு ஊதி இராவணனையடைதல்.

வெங்கண் வானரக் குழுவொடு [1]மிளையவன் [2]விளிந்தான்
இங்கு வந்தில [3]னகன்றன னிராமனெனன் [4]றிகழ்ந்தான்
சங்க மூதினன் றாதையை வல்லையிற் சார்ந்தான்
பொங்கு போரிடைப் புகுந்துள பொருளெலாம் புகன்றான்.

(இ-ள்.) 'கொடியகண்களையுடைய வானரக்கூட்டங்களுடனே இளையவன் இறந்தான்: இராமனோ இப்போர்க்களத்தில் வராதவனாய் அப்பாற்சென்றிட்டான் [வந்திருந்தால் அவனும் இறந்திருப்பான்]' என்று (இந்திரசித்து) இகழ்ந்தான்: (பின்பு, வெற்றிச்) சங்கமூதினவனாய், தந்தையை விரைவிலடைந்து, கிளர்ச்சிகொண்டு செய்யும் போரிலே நிகழ்ந்த விஷயங்களையெல்லாஞ் சொன்னான்: (எ-று.)—பி-ம்:—[1]இலக்குவன். [2]வீழ்ந்தான். [3]இராமனிப்போதென. [4]இசைத்தான். (2578)

187.—'இராமன் இறந்திலனோ?' என்று இராவணன் வினவ இந்திரசித்து சமாதானங் கூறுதல்.

இறந்தி லன் [1]கொலவ் விராமனெனன் றிராவண னிசைத்தான்
அறந்து [2]நீங்கிலை லல்லனேற் றம்பியைத் தொலைத்துச்
சிறந்த நண்பரைக் கொன்றுதன் சேனையைச் சிதைக்க
[3]மறந்து நிற்குமோ [4]மற்றவன் திறனென்றான் மதலை.

(இ-ள்.) 'அந்த இராமன் இறந்திலனே கொல்?' என்று இராவணன் வினவினான்: (அதற்கு அவனது) புதல்வனாகிய இந்திரசித்து,—"(அச்சத்தினால் இராமன் யாவரையும்) விட்டிட்டுச் சென்றிட்டான்: (இது திண்ணம்:) அவ்வாறு விட்டிட்டுச் செல்லாதவனாயின், (தன்) தம்பியை உயிர்போக்கிச் சிறந்த நண்பரைக் கொன்று தன் சேனையைச் சிதைக்கவும், அவ்விராமன் (தன்) திறமையை மறந்திட்டு (ப் பதிலொன்றுஞ் செய்யாதவனாக) இருப்பனோ? என்று சமாதானங்கூறினான்; (எ-று.)—பி-ம்:—[1]கொலாம். [2]நீங்கிலன். [3]மறைந்துபோகுமோ, மறந்து நீங்குமே. [4]என்றனன் றசானனன்மதலை. (2579)

188.—சமாதானத்தினால் இராவணன் திருப்தியடைய, இந்திரசித்தும் மகோதரனும் தம்மனை சேர்தல்.

அன்ன தேயென வரக்கனு [1]மாதரித் தமைந்தான்
சொன்ன மைந்தனுந் தன்பெருங் கோயிலைத் [2]தொடர்ந்தான்

மன்ன [3]னேவலின் [4]மகோாதரன் போயினன் வந்தான்
என்னை யாளுடை நாயகன் வேறிடத் திருந்தான்.

(இ - ள்.) இராவணனும், 'அப்படித்தான் (இருக்கும்) என்று (அவ்விந்திரசித்து சொல்லியதை) ஆதரித்து மனவமைதிகொண்டான்: சொன்ன (இராவண) குமாரனும், தன் பெரிய அரண்மனையைச் சேர்ந்தான்; அரசனேவலினால்வந்திட்டவனான மகோதரனும் (தன்னிருப்பிடத்திற்குப்) போயினான்; வேறிடத்து இருந்தவனும் என்னையாளுடைய நாயகனுமாகிய,—(எ - று.)— "வீரன் (189)" என அடுத்த கவியோடு தொடருமென்க.

பின்னிரண்டடிகட்கு - மன்னனேவலின் மகோதரன் போயினன்: வேறிடத்திருந்தானாகிய என்னையாளுடைநாயகன் (போர்க்களம் நோக்கி) வந்தான் எனப்பொருள் கூறுதல் அமையும்: எனினும், இப்பொருட்கு அடுத்த பாடலில்லாதிருப்பின் நலம்: அங்ஙனமே சில பிரதிகள் காணப்படுகின்றன: பி-ம்:—[1]அனுதரித்தகன்றான். [2]சூழ்ந்தான். [3]ஆணையின். [4]மகோதரன்போனவன் இப்பாடலுக்குப் பின் "ஆர்க்கின்ற" என்று தொடங்கும் 141-ஆவது பாடல் சில பிரதியில் உள்ளது. (2580)

189.—ஸ்ரீராமன் அஸ்திரபூஜை செய்தபின் போர்க்களம் குறுக முயறல்.

செய்ய தாமரை நாண்மலர்க் கைத்தலஞ் சேப்பத்
துய்ய [1]தேவர்தம் படைக்கெலாம் [2]வரன்முறை துரக்கும்
மெய்கொள் பூசனை [3]விதிமுறை யியற்றிமேல் வீரன்
மொய்கொள் போர்க்களத் [4]தெய்துவா மினியென முயன்றான்.

(இ - ள்.) வீரனாகிய ஸ்ரீராமன் அன்றுமலர்ந்த செந்தாமரை மலர்போன்ற (தன்) கைத்தலம் (பின்னுஞ்) சிவக்கும்படி பரிசுத்தமாகிய தேவர்படைக்கெலாம் [அஸ்த்ரங்கட்கெல்லாம்] முறைப்படி செய்யவேண்டிய உண்மையான பூசனையை விதிப்படியேசெய்து, பிறகு, (போர்வீரர்) நிரம்பிய போர்க்களத்து இனிச்செல்வோமென முயன்றான்; (எ - று.)—பி - ம்:—[1]தெய்வவான். [2]முறைமுறை. [3]முறை. [4]எய்துவன். (2581)

190.—ஸ்ரீராமன் போர்க்களஞ் சேர்தல்.

கொள்ளி யிற்[1]சுட ரனலிதன் பகழிகைக் கொண்டான்
அள்ளி [2]நுங்கலா மாரிருட் பிழம்பினை யழித்தான்
[3]வெள்ள வெங்களப் [4]பரப்பினைப் [5]பொருக்கென விழித்தான்
[6]தள்ளில் தாமரைச் சேவடி [7]நுடங்குறச் சார்ந்தான்.

(இ - ள்.) கொள்ளிக்கட்டைபோல ஒளிவிடுகின்ற அக்கினிதேவனது பாணத்தை [ஆக்நேயாஸ்திரத்தை] க்கையிற்கொண்டு, (கையினால்) அள்ளிஉண்ணுதற்குரியதுபோன்று செறிந்த போக்குதற்கு)அரிய இருட்பிழம்பினைப் போக்கினான்; தள்ளப்படுதலில்லாத [சிறந்த] தாமரைச்சேவடி அசையநடந்து சேர்ந்து, (மடிந்து கிடக்கும் வானரச்சேனை) வெள்ளத்தைக்கொண்ட கொடிய பரந்த போர்க்களத்தினை விரைவிற் பார்த்தான்; (எ-று.)—ஒருபிரதியில்

நான்காமடி 'தள்ளுவானரத்தலைவரைத் தனித்தனிகண்டான்' என்று உளது. பி-ம்:—[1]சுடர்ப்பகழியினங்கி, சுடரனலியின்பகழி. [2]நுங்கலா, நீக்கலா. [3]வெள்ளி. [4]பரப்பினில். [5]விழிமுகத்துதரம். [6]தள்ளித். [7]நுடங்கிடத்தளர்ந்தான். (2582)

191.—ஸ்ரீராமன் களத்திற்கிடக்கும் வானரத்தலைவரைத் தனித்தனிப் பார்த்தல்.

நோக்கி னுன்பெருந் திசைதொறு முறைமுறை நோக்கி
[1]ஊக்கி னுன்றடந் தாமரைத் [2]திருமுகத் துதிரம்
போக்கி னு[3]னிணப் பறந்தலை யழுவத்துட் புக்கான்
[4]காக்கும் [5]வன் றுணைத் தலைவரைத் தனித்தனிக் கண்டான்.

(இ-ள்.) முயன்றவனாய் விசாலமான திக்குகள்தோறும் நோக்கினான்; முறைமுறையே பார்த்துப் பரந்த தாமரைமலர்போன்ற திருமுகத்திலே உதிரத்தை வெளிப்படுத்தினான்; நிணம் நிறைந்த போர்க்களப்பரப்பினுள்ளே புகுந்தான்; (இதுவரையில்) காத்தல் தொழிலை மேற்கொண்டிருந்த வலிமைகொண்ட (தனது) துணைத் தலைவர்களைத் தனித்தனிக்கண்டான்; (எ - று.)—சினத்தினால் முகத்தில் இரத்தங்குழம்பக் கண்வழியாக உதிரம் வெளிப்பட்டதென்பது, இரண்டாமடியிற் கூறிய பொருள். பி - ம்:—[1]நூக்கினான், தூக்கினான். [2]திருமுகஞ்சோரப். [3]நிணப்பங்கயத்து, நிணப் பங்கயம். [4]தாக்கும். [5]வான்றுணைத், வானரத். (2583)

192.—ஸ்ரீராமன் சுக்கிரீவனையும் அனுமானையும் காண்டல்.

சுக்கி ரீவனை [1]நோக்கித்தன் றாமரைத் துணைக்கண்
[2]உக்க நீர்த்திர ளொழுகிட நெடிதுநின் றுயிர்த்தான்
தக்க தோ[3]விது நினக்கென்று [4]தன்மனந் [5]தளர்ந்தான்
பக்க நோக்கினன் மாருதி [6]தன்மையைப் பார்த்தான்.

(இ - ள்.) (கீழ்க்கிடக்கும்) சுக்கிரீவனைப்பார்த்துத் தன் தாமரை மலர்போன்ற இருகண்களிலிருந்து வெளிப்பட்ட நீர்த் தொகுதிகள் ஒழுகியபடியேயிருக்க, வெகுநேரம்நின்று பெருமூச்சு விட்டு 'இந்நிலை நினக்குத் தக்கதோ?' என்று தன்மனம் தளர்ச்சியுற்றான்; பக்கத்திற் பார்த்தான்; மாருதியின்நிலையைக் கண்டான்; (எ-று.)—பி-ம்:—[1]நோக்கினான். [2]உக்கு. [3]உது. [4]தனி. [5]தளர்வான். [6]தன்மையும். (2584)

193.—அநுமானைக் கண்டதும் ஸ்ரீராமன் புலம்பல்.

கடல் [1]கடந்து[2]புக் கரக்கரைக் கருவொடுங் கலக்கி
இடர்[3]கடந்து[4]நா னிருக்கநீ நல்கிய [5]திதற்கோ
உடல்கடந்தன வேவுனை யரக்கன்வில் லுதைத்த
அடல்[6]கடந்தபோர் வாளியென் றுகுலித் தழுதான்.

(இ - ள்.) கடல்கடந்து (இலங்கையிற்) புகுந்து (சீதையைக் கண்டு) அரக்கரைக் கருவுடனே கலக்கி, இடரைக்கடந்து நான் இருக்குமாறு நீ (அந்தச்சீதையின் சேமத்தைத்தெரிவித்து) உதவியது, (முடிவில் நீ) இவ்வாறு ஆகுவதற்கு [இறத்தற்கு]த்தானோ? அரக்கனுடைய வில் வெளிப்படுத்திய வலிமைமிகுந்த போர்க்குரிய

அம்புகள் உன்னுடைய உடலை(த் தொளைத்து)க்கடந்து சென்றனவோ? என்று மனத்துயருற்றுப் புலம்பினான்; (எ - று.)—ஒன்று, மூன்று, நான்காம் அடிகளில் லகரரகரப்போலியாக 'கடர், உடர், அடர்' என்றும் பாடமுண்டு. பி - ம்:—[1]புகுந்து. [2]பேயரக்கரைக் கருமுதற். [3]கடந்த. [4]நாமிருக்க, யானிருப்ப. [5]இதுவோ. [6]கிடந்த. (2585)

194.—மூன்றுகவிகள்-இராமபிரான் தன்னைநோதலைத் தெரிவிக்கும்.

முன்னைத் தேவர்தம் வரங்களு முனிவர் தம்மொழியும்
பின்னைச் சானகி யுதவியும் பிழைத்தன [1]பிறந்த
புன்மைச் செய்தொழி லென்வினைக் [2]கொடுமையாற் புகழோய்
என்னைப் போல்பவ ராருள ரொருவரென் றிசைத்தான்.

(இ - ள்.) 'புகழோனே! (உடன்) பிறந்த இழிவான செய்தொழிலையுடைய என் தீவினைக் கொடுமையால், முன்பு தேவர்கள் (உனக்குக்) கொடுத்த வரங்களும் முனிவர்களின் வாழ்த்துச் சொற்களும் பிறகு சீதை (உனக்குப்புரிந்த) உதவியும் பயனில்லாமற் போயின; (இப்படிச்செய்த) என்னைப்போல்பவர் ஒருவர் யாருளர்?' என்று (தன்னை வெறுத்துக்) கூறினான், (ஸ்ரீராமன்); (எ - று.)

தேவர் முதலியோரின் வரம் முதலியன பயனற்றமைக்குத் தன் தீவினையே காரணமென்று ஸ்ரீராமன் தன்னை நொந்து கொள்ளுகின்றானென்க. தேவர் முதலியோர் அனுமானுக்கு வரங் கொடுத்ததை "பாய நோக்கிய, வானவர் தானவர்பழிப்பில், தூய மாதவர் முதலினோர் தோன்றியவியப்பால், வாயுவேகமும் வயினதேயன் றன்மாக்கதியும், ஓய்விலாதிவனிடத்தினிலிருக்க வென்றுரைத்தார்," "கூர்பற்றியவென்குலிசத்தாற் கூறுபடுபுண்வடுத்திர", "பொல்லாவிருளைக் கடிந்தோட்டும் புவனதீபன்புகல்வானென், வில்லார் கரத்திற் சதகூற்றி லொருகூற்றுனக்கு மேவிடுக, எல்லாவிஞ்சைகளுந்தரிக்க விசைந்தசக்தியுண்டாக," என்பனமுதலாக அனுமப்படலத்து வருவதுகாண்க. சானகியுதவி - அனுமான்வாலில் அரக்கர் தீக்கொளுவிப் பறையறைந்தபோது அதனை யுணர்ந்த சீதை வருந்தி அக்கினிபகவானைக்குறித்து "கற்புதனிற் றூயேனென்னில் தொழுகின்றேன் எரியே! அவனைச் சுடல்" என்று வேண்டிக் குளிர்வித்தமை. இவற்றையெல்லாம் ஸ்ரீராமன் வானரர் வாயிலாக அறிந்திருந்தான்போலும். சானகியுதவியென்றது - உருக்காட்டுபடலத்தில் "ஊழியோர்பகலாயோதும் யாண்டெலாம் உலகமேழும், ஏழும் வீவுற்றஞான்றும் இன்றெனஇருத்தி" என்று சீதை உதவியவரத்தைக் காட்டுமென்பாருமுளர். பி-ம்:—[1]பிறிதென். [2]கொடுமையிற்புகழோர். (2586)

195. *புன்றொ ழிற்புலை யரசினை [1]வெஃகினேன் [2]பூண்டேன்*
கொன்றொ ருக்கினே னெந்தையைச் சடாயுவைக் குறைத்
இன்றொ ருக்கினே [3]னித்தனை [4]வீரரை யிருந்தேன் [தேன்
வன்[5]றொ ழிற்கொரு வரம்புமுண் டாய்[6]வர வற்றோ.

(இ - ள்.) (பின்னும் ஸ்ரீராமன் புலம்புவான்:—) இழிவான தொழிலைச் செய்யவேண்டிய இழிவான அரசினை விரும்பினேனாய் மேற்கொண்டேன்: (அதனால்), என் தந்தையைக் கொன்றொழித்தேன்; (எனக்குத் தந்தைமுறையான) சடாயுவையும் (என்பொருட்டாக) உயிர்குறையச்செய்தேன்; இன்று இத்தனை வீரரையும் அழித்திட்டேனாய் (நான் சிந்தையற்று) இருந்தேன்; (எனது) வன்மையான தொழிற்கு ஒருவரம்பும் உண்டாய்வரக் கூடியதோ? (எ - று.)—என்வன்றொழில் ஒருவரம்புக்கு உட்படாதென்றபடி. பி-ம்:—[1]வாவினன். [2]பூண்ட. [3]இத்துணை. [4]வீரையுமிருந்தே. [5]தொழிற்குமோர். [6]வரமற்றே. (2587)

196. தமைய னைக்கொன்று தம்பிக்கு வானரத் தலைமை
அமைய நல்கின னடங்கலு [1]மவிப்பதற் கமைந்தேன்
கமைபி டித்துநின் றுங்களை யித்துணை கண்டேன்
[2]சுமையு டற்பொறை சுமக்க[3]வந் தனனெனச் சொன்னான்.

(இ - ள்.) தமையனைக்கொன்று தம்பிக்கு வானரங்கட்கு அரசனாந்தன்மையைப் பொருந்தத் தந்து (நன்மைசெய்தேன் போலத் தோன்றிய) நான், எல்லாவற்றையும் அழிப்பதற்கே முயன்றவனானேன்; பொறுமையை உறுதியாகக்கொண்டுநின்று, உங்களை இவ்வளவு வருத்தத்திற்கு உள்ளாக்கினேன்; (பூமிக்குப் பாரமான உடற்சுமையைச் சுமக்கத்தான் பிறந்தேனென்று சொல்லிப்புலம்பினன், (இராமன்); (எ - று.)—சீதையை மீட்பதற்கே சுக்கிரீவபட்டாபிஷேகஞ் செய்ததனால், ஸ்ரீராமன் இவ்வாறு கூறுகின்றான். பி - ம்:—[1]வீப்பதாகமைந்து. [2]எமையுடைப். [3]வந்தேன். (2588)

197.—அங்கதனைப் பார்த்து ஸ்ரீராமன் புலம்புதல்.

விடைக்கு லங்களி [1]னடுவணோர்[?]விடைகிடந் தென்னக்
கடைக்கண் டியுக வங்கதக் களிற்றினைக் கண்டான்
[2]படைக்க லங்களைச் [3]சுமக்கின்ற பதகனேன் [4]பழிபார்த்து
அடைக்க லப்பொருள் காத்தவா றழகிதென் றழுதான்.

(இ - ள்.) இடபக் கூட்டங்களின் நடுவில் ஓர் இடபம் கிடந்தாற்போல (க் கிடக்கின்ற) அங்கதனென்ற சிறந்த வீரனைக் கண்டான்; (கண்டு, ஸ்ரீராமன்), கடைக்கண்ணினின்று தீ வெளிப்பட '(எதிரிகளினிடத்தினின்று நண்பரைக்காவாது) படைக்கலங்களைச் சுமக்கின்ற பாவியாகிய யான் (எனக்கே) பழியுண்டாகப்பார்த்து அடைக்கலப்பொருளைக் காத்தவகை அழகியது!' என்று அழுதான்;

அடைக்கலப்பொருளான அங்கதன் உயிர் நீங்கிக் கிடந்திருத்தலைக் கண்டபோது அவனைக்கொன்ற எதிரியின்மீது சினத்தால் ஸ்ரீராமனது கடைக்கண்ணில் தீ உகுவதாயிற்று. பழி-அடைக்கலப்பொருளைக் காவாமையாலானது. பயன்படாமையால் 'படைக்கலங்களைச் சுமக்கின்ற' என்றது. தன்னையடைந்தவர் உயிரிழக்குமாறு தான் அசாக்கிரதையாய் இருந்ததனால் 'அடைக்கலப்பொருள் காத்தவா றழகிது' என்றான். வாலி இறக்கும்போது அங்கதனை ஸ்ரீராமனிடம் அடைக்கலமாக ஒப்புவித்தானென்பதை

"நெய்யடை...தூயன்...புனிதமற்றுன் கையடையாகும்" என்று வாலிவதைப் படலத்து வருவதாலறிக. பழிபார்த்து அடைக்கலப் பொருள் காத்தவாறழகிது—பிறகுறிப்பு. பி-ம்:—[1] இடையொரு, நடுவொரு. [2] படைக்கலக்கடல், படைக்கலஞ்சுமந்து. [3] உழல் கின்ற. [4] பாதத்து. (2589)

198.—இலட்சுமணனை ஸ்ரீராமன் காணுதல்.

[1] உடலி டைத்தொடர் பகழியி னொளிர் [2] கதிர்க் கற்றைச்
[3] சுடரு டைப்பெருங் குருதியிற் [4] பாம்பெனச் சுமந்த
[5] மிடலு டைப்பிண மீமிசைத் தான்பண்டை வெள்ளக்
கடலி டைத்துயில் வானன்ன தம்பியைக் கண்டான்.

(இ - ள்.) உடலினிடையே தொடர்ந்த அம்புகளின் விளங்கு கின்ற கதிர்க் கற்றையினுற் சுடரையுடைய மிக்க குருதியிலே வலி மையையுடைய பாம்பென்று சொல்லுமாறு சுமந்த பிணங்களின் மேலே, பழமையர்ன வெள்ளக்கடலின்மீது துயில்வானுன தன்னை யொத்த தம்பியை ஸ்ரீராமன் கண்டான்; (எ-று.)

உடலினிடமெங்கும் பொத்திய அம்புகள் தொகுதியாக ஒளி வீசக் குருதிவெள்ளத்திலே பிணங்களின்மீது தூங்குபவன் போ துள்ள இலட்சுமணன், கடலினிடையே ஆதிசேஷசயனத்திலே பள்ளிகொள்ளுந்திருமாலுக்கு ஒப்பாவனென்க. [2] கதிர்க்கற்றை, [3] மிடலுடைப்பணமீமிசை என்ற பாடத்திற்கு - குருதியிற் கிடக் குஞ் சுடர்க்கற்றை கடல்வெள்ளத்துப்பாம்பு என்னுமாறுஇருக்க, கடலிடை சுமந்த மிடலுடைப்பணமீமிசைத்துயில்வான் தன் போலவேயுள்ள தம்பியைக் கண்டானென்க. பி - ம்:—[1] உடலிற் றைத்தன, உடலிடைத்தைத்தன, உடலுடைத்துயர். [2] தளிர்க்கற் றைச். [3] சுடரிற்சூழ் [4] பாரம் போற். [5] மிடலுட்பன்மணிப்பார் மிசைத். (2590)

199.—மூன்றுகவிகள் - ஸ்ரீராமனது துயரத்தைக்கூறும்.

பொருமி னைகம் பொங்கினு னுயிர்முற்றும் புகைந்தான்
குருமணித்திரு மேனியு [1] மனமெனக் குலைந்தான்
தரும [2] நின்றுதன் கண் [3] புடைத் தலம்வரச் சாய்ந்தான்
உருமி னுலிடி யுண்டதோர் மராமர [4] மொத்தான்.

(இ - ள்.) மனம் வருந்தினுன்; (துயரங்) கிளர்ந்து தோன்ற உயிர்ப்பு முழுவதும் புகைந்துதோன்றப்பெற்றுன்; சிறந்த நீலரத் தினம் போன்ற திருமேனியும் மனம்போலவே நடுங்கினுன்; தரும தேவதை நின்று தன் கண்ணைப் புடைத்துக்கொண்டு வருந்துமாறு, உருமினுலிடியுண்டதான ஒரு மராமரத்தை யொத்தானுய் (ப் பூமி யில்) விழுந்திட்டான்; (எ - று.)—பி - ம்:—[1] அன்னவன். [2] நின்ற. [3] புதைத்தனவலம்வர, புடைத்தலமரச். [4] ஒப்பான், ஒப்ப. (2591)

200. உயிர்த்தி லன்னொரு நாழிகை யுணர்ந்தில னென்றும்
[1] வியர்த்தி லனுடல் விழித்திலன் [2] கண்ணிணை விண்ணோர்
[3] அயர்த்த னன்கொலென் றஞ்சின ரங்கையுந் தாளும்
பெயர்த்தி லன் [4] னுயிர் பிறித்திலன் கருணையாற் பிறந்தான்.

(இ-ள்.) கருணையாற் பிறந்தவனான ஸ்ரீராமன்,—ஒருநாழிகை நேரம் மூச்சுவிட்டானில்லை; ஒன்றும் உணர்ந்தானில்லை; (பெருந் துக்கமுடைமையால்) உடல் வேர்த்தானுமில்லை; (சோகத்தால் மூடிய) கண்ணிணையை விழித்தானுமில்லை; அங்கையுங் காலும் நிலை பெயர்க்காதவனாயினான்: உயிர் பிரிந்தானென்பது மாத்திரமில்லை; விண்ணவர் 'உயிரொடுங்கினனோ?' என்று அஞ்சினர்;

ஸ்ரீராமனுக்குப் பெருந்துயரால் உயிர்பிரிதலென்பது மாத்திரம் நிகழவில்லையே தவிர, உயிர் பிரிந்தார்க்கு உளவாகுந் தன்மைகளெல்லாம் நிகழ்ந்திட்டனவென்பதாம். பி-ம்:—[1]வெயர்த்திலன். [2]கண்ணினை. [3]அயிர்த்திலன். [4]உயிர்த்திலன். (2592)

201. தாங்கு வாரில்லைத் தம்பியைத் தழீஇக்கொண்ட [1]தடக்கை
வாங்கு வாரில்லை வாக்கினால் தெருட்டுவா ரில்லை
பாங்க [2]ராயுள்ளோ ரியாவரும் பட்டனர் [3]பட்ட
[4]தீங்கு தானிது தமியனை யார்துயர் தீர்ப்பார்.

(இ-ள்.) (இராமனுக்குத்) தோழராயுள்ளோர் யாவரும் இறந்திட்டனர்; (சாய்ந்த இராமனை அப்போது வந்து) தாங்குவாரோ இல்லை; தம்பியைத் தழுவிக்கொண்டு கிடக்கின்ற (இராமனது) பெரியகையை (அவ்வுடம்பினின்று) எடுப்பவருமில்லை; வாயினால் தேறுதல் கூறுபவருமில்லை; அவன் பட்ட துன்பம் இது; (நண்பர் சுற்றத்தார் எவருமின்றித்) தமியனானவனைத் துயர்தீர்ப்பவர் யாருளர்? (எ - று.)—பி - ம்:—[1]தன்னை, [2]ஆயினோர். [3]பட்டது. [4]தீங்கினாலிது, தீங்குமாலிறைத், தீங்குவாலிது. (2593)

202.—ஸ்ரீராமனைத் தேற்றுபவரில்லாமைக்குக் காரணம்.

கவந்த பந்தமுங் கழுதுந்தங் கணவரைக் காணாச்
சிவந்த கண்ணியர் தேடினர் திரிபவர் திரளும்
உவந்த [1]சாதகத் தீட்டமும் ஓரியி [2]னொழுக்கும்
நிவந்த வல்லது [3]பிறவில்லைக் கடத்திடை [4]நின்ற.

(இ - ள்.) கவந்தங்களின் தொகுதியும், பேய்களும், தம்கணவரைக்காணாமையால் (துயரத்தாற்) சிவந்த கண்களையுடையராய்த் தேடித்திரியும் மடநதைமாரின் திரளும், (இரைமிகுதியாகக் கிடைத்ததுபற்றி) மகிழ்ந்த பூதங்களின் கூட்டமும், நரிகளின் வரிசையும் மிக்கனவேயன்றி (அந்தப்பிணக்) காட்டில் உயிருடனிருந்தன வேறு இல்லை;(எ -று)—"தாங்குவாரில்லை" என்று மேற்கவியிற் கூறியதை விளக்குவது, இது. பி-ம்:—[1]சாதகர், பாதகர். [2]ஒழுங்கும். [3]பிறர். [4]நின்றார். (2594)

203.—தேவர்முதலிய யாவரும் துயர் கூர்தல்.

வான நாடியர் வயிறலைத் தழுதகண் [1]மழைநீர்
சோனை மாரியிற் [2]சொரிந்தனர் தேவருஞ் [3]சொரிந்தார்
ஏனை நிற்பவுந் திரிபவு [4]மிரங்கின வெவையும்
ஞான நாயக னுருவமே யாதலா லடுங்கி.

(இ -ள்.) வானநாட்டிலுள்ள மங்கையர் வயிற்றிலடித்துக் கொண்டு (தாம்) அழுத கண்மழைநீரை விடாப்பெருமழைபோலச்

சொரிந்தார்; தேவர்களும் (கண்ணீரைச்) சொரிந்தார்கள்; எவையும் ஞானசொரூபியான திருமாலின் உருவமே யாதலினால், நிற்பனவும் திரிவனவுமாகவுள்ள ஏனைப்பொருள்களெல்லாமும் நடுங்கித் துயரத்தை வெளிக்காட்டின; (எ-று.)—சரீரிக்கு வருத்தம் நேரிடுகையில், சரீரத்துக்கு வருத்தவுணர்வு தோன்றுவது இயல்பேயென்க. சரீரத்துக்கு நேரும் உணர்ச்சியே சரீரியான பகவானைச் சாராது என்று வியாசமகர்ஷி அறுதியிட்டுள்ளார். பி - ம்:—[1]மலி. [2]சொரிந்தன [3]சோர்ந்தார். [4]இரங்கின மயங்கின.()

204.—இதுவும் அது.

முகையி னுண்மலர்க் கிழவற்கு முக்கணன் றனக்கும்
[1]நகையு நீங்கிய திருமுகங் [2]கருணையி னலிந்த
தொகையி னின்றவர்க் [3]குள்ளது சொல்லியென் தொடர்ந்த
பகையும் [4]பார்க்கின்ற பாவமுங் கலுழ்ந்தன பரிவால்.

(இ - ள்.) அன்றுமலரும் முகையின் தன்மைகொண்ட (நாபீ) கமலத்தில் வசிப்பவனான பிரமனுக்கும் திரிநேத்திரனான உருத்திரமூர்த்திக்கும் சிரிப்பும் நீங்கிய திருமுகங்கள் கருணையினால் வருந்தின; இனத்தைச்சேர்ந்தவர்க்கு உள்ளதாகிய துன்பத்தைப் பற்றிக்கூறுவதிற் பயன் யாது? தொடர்ந்துள்ள பகையும், (அத்துயரத்தைக்) காண்கின்ற பாவத்திற்குஉரிய தேவதையும் துன்பத்தினால் கண்ணீர்விட்டன; (எ-று.)

பகையாயினவரும், துன்பத்தை யனுபவிக்குமாறு செய்கின்ற பாவமும் இரக்கங்கொள்ளும்படி ஸ்ரீராமன் பெருந்துயருற்றானென்று, அப்பிரானது துயர்மிகுதியைப் புலப்படுத்தியவாறு. திருமால் வருந்துகையில் த்ரிமூர்த்தியரிற் சேர்ந்த பிரமதேவனும் உருத்திரமூர்த்தியும் வருந்துதல இயல்பே யென்பார் 'தொகையினின்றவர்க்கு உள்ளது சொல்லியென்' என்றார். நகையும்என்ற எச்சவும்மை முகமலர்ச்சியும் நீங்கியஎன்ற பொருளைக் காட்டும். பி - ம்:—[1]தகையினீங்கிய திருமுகக், நகையுநீக்கிய திருமுகங். [2]கருணையுநலியத். [3]உற்றது. [4]பார்த்தன்று, ஆர்த்தது. (2596)

205.—ஸ்ரீராமன் கண்விழித்துப்பார்த்துத் தம்பி இறந்தானென்று புலம்பததொடங்குதல்.

அண்ண லுஞ்சிறி துணர்வினோ டயர்வுயிர்ப் பணுகிக்
கண்வி ழித்தனன் தம்பியைத் தெரிவுறக் கண்டான்
விண்ணை யுற்றனன் மீள்கில னென்றகம் [1]வெதும்பப்
புண்ணி [2]னுற்றதோ [3]ரெரியன்ன துயரினன் புலம்பும்.

(இ - ள்.) பெருமையிற் சிறந்தவனான ஸ்ரீராமனும்—சிறிது உணர்ச்சியோடும் நெட்டுயிர்த்தலோடும் பொருந்திக் கண்விழித்துத் தம்பியை நன்கு கண்டான்: (கண்டு, 'தம்பி)விண்ணகஞ்சேர்ந்திட்டான்; மீளமாட்டான்' என்று கருதி மனம் பெருவாட்டங்கொள்ள, புண்ணிற் கனல் நுழைந்தாற்போன்ற துன்பத்தை யடைந்தவனாய்ப் (பின்வருமாறு) புலம்புபவனானான்; (எ - று.)— இராமன்புலம்புவதை மேற் பதினைந்து கவிகளிற் காண்க.

மிக்க வருத்தத்தினால் ஸ்ரீராமன் பேச்சுமூச்சின்றிக் கண்விழியாதுகிடந்த நிலை 200-ஆம் பாடலிற் கூறப்பட்டதனால், அந்நிலையினின்று சிறிது தேறி நிகழ்ந்தநிலையை இங்குக் கூறுகின்றார். மனைவியை மாற்றான்கையிற் பறிகொடுத்ததோடு தம்பியையிழந்த துயரமுஞ் சேர்ந்து புண்ணிலெரியிட்டாற்போலாயின. பி - ம்:—[1]வெதும்பிப், வெதும்பாப். [2]உற்றன. [3]வேலன்ன. (2597)

வேறு.

206.—பதினைந்துகவிகள்-இராமன் புலம்புதலைத் தெரிவிக்கும்.

எந்தை யிறந்தா [1]னென்று மிருந்தே னுலகெல்லாம்
தந்தன [2]னென்னுங் கொள்கை தவிர்ந்தேன் [3]றனியல்லேன்
[4]உய்ந்து மிருந்தாய் நீயென நின்றே [5]னுரைகாணேன்
வந்தன [6]னையா வந்தன [7]னையா வினிவாழேன்.

பதினாறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (என் தந்தைசெய்யும் உதவிகளையெல்லாம் நீ செய்பவனாக இருந்ததனால்) என் தந்தையிறந்தான் என்று கேள்வியுற்றும், (என்தந்தையிருப்பதாகவே எண்ணி) இருந்தேன்; உலகெல்லாவற்றையும் (பரதனுக்குத்) தந்தேனென்ற கொள்கையையும் தவிர்ந்தேன்; (நான்) தனிப்பட்டவனல்லாதவனாய், நீ உய்ந்து இருந்தாயென்றே (இவ்வாறு உறுதியாக) நின்றேன்; (இப்போது உன்) பேச்சைக் காணேன்; (ஆகையால், யான்), இனி வாழேன்; ஐயா! வந்திட்டேன்; ஐயா! வந்திட்டேன்; (எ-று.)

'தந்தைசெய்வனவெல்லாம் செய்யும் நீ என்னுடன் இருக்கின்றாய்' என்ற உறுதியால் தந்தையிறந்தானென்ற துக்கத்தையுங் கொள்ளாமல், நான் உன்னுடைய உதவிகொண்டு எளிதாக ஆளலாமென்ற நம்பிக்கையுடன் பரதனுக்குக்கொடுத்த அரசையும் அவன் திருப்பிக்கொடுக்கப் பெற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டேன். நீ இறந்திட்டாயாதலால், யான் இனி உயிர்வைத்திரேனென்றவாறு, ஸ்ரீராமன் தன் தந்தை இறந்ததைக் கேள்வியுற்று, இலட்சுமணனைப் பார்த்து *உன் தந்தை இறந்தாரென்று கூறியதாகவும், சீதாபிராட்டியைப் பார்த்து உன் மாமனார் இறந்தாரென்று கூறியதாகவும் வான்மீகிபகவான் அருளியன இங்குக் காணத்தக்கன. பி - ம்:—[1]யானும். [2]என்றும். [3]தமியல்லேன். [4]கந்தனிருந்தாய். [5]கரைகாணேன், தனிகாணேன். [6]எம்பி. (2598)

---

* "பித்ரா ஹீநோஸி லக்ஷ்மண", ஸீதே! ம்ருதஸ்தே ஶ்வஶுர:" என்பன அவை: இங்கு லக்ஷ்மணனைப்பார்த்து உனக்குப் பிதா இறந்தாரென்று ஸ்ரீராமன் அருளிச்செய்யக் காரணம்-எனக்குப் பிதா செய்ய வேண்டியவற்றைச் செய்ய நீ இருத்தலால், என்வரையில் தந்தையிறந்தாரல்லர் என்பது: இவ்விஷயத்தை "பாவஜ்ஞேந-க்ருதஜ்ஞேந-தர்மஜ்ஞேநசலக்ஷ்மண, த்வயாபுத்ரேண தர்மாத்மா-ந ஸம்வ்ருத்த: பிதாமம" என்று வெளிப்படையாகவும் அருளிச்செய்திருத்தல் காண்க.

207. தாயோ [1]நீயே தந்தையு நீயே தவ நீயே
சேயோ [1]நீயே [2]தம்பியு நீயே திரு நீயே
போயோ நின்றா யென்னை [3]யிகந்தாய் புகழ்பாராய்
[4]நீயோ யானோ [5]நின்னினு நெஞ்சம் [6]வலியேனால்

(இ-ள்.) தாயோ நீதான்: தந்தையும் நீதான், தவமும்நீதான்: சேயோ நீதான்; தம்பியும் நீதான்: செல்வமும் நீதான்: (இப்படிப்பட்ட) நீயோ புகழைக்கருதாமல் என்னைவிட்டுப் போனவனானாய்; யானோ (இன்னும் உயிர்வைத்துக் கொண்டிருக்கின்றேனாதலால்) உன்னைவிட நெஞ்சம் வலிமையானவன்; (எ - று.)

தம்பியென்னப்படுகிற நீ என் தந்தையாகமட்டுமென்றி, தாயாகவும், சேயாகவும் தவமாகவும் செல்வமாகவும் இருந்தாய்: எனது நன்மையே வடிவான நின்னை யிழந்ததனால் தந்தைமுதலிய எல்லாரையும் தவம்முதலிய எல்லாவற்றையும்இழந்தவனானேன். இங்ஙன் யான் இழக்கும்படி நீ வன்னெஞ்சனாய் என்னை விட்டுப்போனாய்: உன்னாற்பலவகையுதவிகளையும்பெற்ற யான், போனஉன்னைப்பின் தொடர்ந்து வராததனால் நின்னினும் வன்னெஞ்சன் என்று தன்னை ஸ்ரீராமன் பழித்துக்கொள்கின்றான். சேய் - புதல்வன். பி - ம்:— [1]நீயென். [2]செய்பொருணீயே. [3]இகழ்ந்தாய். [4]நீயோயானோ, நீயேயானும். [5]நின்றனன், நின்றனில், நின்றன. [6]வலியேமால், வலியேனோ.

208. [1]ஊறாய் நின்ற புண்ணுடை யாய்பா லுயிர்காணேன்
ஆறா நின்றே னாவி [2]சுமந்தே யழுகின்றேன்
ஏறே யின்னு முய்யினு முய்வே னிருகூறாக்
கீறா நெஞ்சம் பெற்றன [3]னன்றோ [4]கெடுவேனே.

(இ - ள்.) ஊறுபட்டுத் தோன்றியுள்ள புண்ணையுடைய உன்னுடலில் உயிரைக் காணேன்: (காணாதிருந்தும் உடனே உயிரை விடேனாகி, பொறுமையுடையேனாய் உயிரைச் சுமந்தவண்ணம் நின்றே யழுகின்றேன்: சிங்கம் போன்றவனே! கெடுவேன் இரு கூறாகப் பிளவாத நெஞ்சம் பெற்றேனன்றோ? (ஆதலால்), இன்னும் (வாழ்ச்சியுடன்) உய்ந்திருப்பதென்றாலும் இருப்பேன்;

எனக்குச் சகோதரவாஞ்சை யிருக்குமானால், உன்னுடலைக் கண்டபோதே உயிர்போகவேண்டாவோ? உயிர்போகப்பெறாத யான் பெருந்தீங்கு உடையவன் என்று தன்னைப் பழிப்பான் 'கெடுவேன்' என்கின்றான்.—பி - ம்:—[1]ஊறா, [2]சுமந்தேனழுகின்றேன். [3]அன்றே [4]கெடுவேனான். (2600)

209. பயிலுங் காலம் பத்தொடு நாலும் [1]படர்கானத்து
அயில்கின் றேனுக் [2]கானவை நல்கி யயிலாதாய்
வெயிலென் றுன்னாய் நின்று [3]தளர்ந்தே மெலிவெய்தித்
துயில்கின் றாயோ [4]வின்றிவ் வுறக்கந் துறவாயோ.

(இ-ள்.) பரவியகாட்டிலே பழகும் பதினான்குவருஷம் (காட்டிற் கிடைக்கும் உணவுகளை யெல்லாம்) உண்கின்றஎனக்கு வேண்டு

வனவற்றைத் தந்து உண்ணுதிருந்தவனே! வெயிலென்றுகருதாத நீ (உடல்) தளர்ந்துநின்றே (மனமும்) மெலிவுற்று இன்று துயில் கின்ருயோ? இவ்வுறக்கத்தை (என்றுந்) துறக்கமாட்டாயோ? (எ - று.)—ஒருநாளல்ல இருநாளல்ல, பதினுன்கு வருஷம் வெயி லென்று பாராது அலைந்து தேடிக் காட்டில் உணவுதந்து என்னைப் போற்றினுய். உன்னுடைய உணவுகுறித்துக் கருதாதவனே! மெலிந்துதளர்ந்து இப்போது உறங்குகின்ருயோ? என்றும் இவ் வுறக்கத்தைவிட்டிடாயோ? என்று புலம்புகின்ருன் ஸ்ரீராமன். காலம்-ஒரு வருஷமென்னும் பொருளது. பி - ம்:—[1]பயில். [2]ஆனவை. [3]தளர்ந்து. [4]இன்றி. (2601)

210. அயிரா நெஞ்சு மாவியு மொன்றே யெனுமச்சொல்
பயிரா [1]வெல்லைப் பாதக னேற்கும் பரிவுண்டோ
செயிரோ [2]வில்லா வுன்னை யிழந்துந் திரிகின்றேன்
உயிரோ நானோ ஆரினி யுன்னோ டுறலவயா.

(இ - ள்.) 'ஐயுருத [ஒருத்தரை யொருத்தர் நம்புகின்ற] நெஞ்சும் ஆவியும் (இருவர்க்கும்) ஒன்றே' என்று (உலகத்தார்) சொல்லுகின்ற அச்சொல் பொருளுடையதாகாதபோது, பாவி யான என்னிடத்தும் இரக்கம் என்ற குணந்தான் உளதாகுமோ? குற்றமென்பது சிறிதும் இல்லாத உன்னை யிழந்தபின்பும் (உயி ரோடு) திரிகின்றேன்: ஐயா! இப்போது உன்னோடு உறவு (எனது) உயிரோ, யானோ, யார்? (எ-று.)—ஆவி ஒன்றே எனும் அச்சொல் பொருளற்றதாக, நான் இறவாது உயிரோடிருத்தலினுல் உண்மை யுறவினனல்லேனென்று தன்னைப் பழித்தவாறு. பயிர்தல்=பயிலு தல். பி-ம்: [1]வேலைப்பதகனெனக்கும். [2]இல்லாய்நின்னை. (2602)

211. வேள்விக் [1]கேகி வில்லு மிறுத்தோர் விடமம்மா
[2]வாழ்விக் கும்மென் றெண்ணினன் முன்னே வருவித்தேன்
சூழ்வித் தென்னைச் சுற்றின ரோடுஞ் சுடுவித்தேன்
தாழ்வித் தேனோ வித்தனை கேடுந் தருவித்தேன்.

(இ - ள்.) (சனகராசன் புரிந்த) வேள்விக்குச் சென்று (சிவ) தநுசையும் முறித்து ஓர்விடத்தை [சீதையை], (நம்மை இது) வாழ்விக்குமென்று எண்ணினேனுய் முன்புவருவித்தேன்; (அதனுல்) துராலோசனைசெய்து என்னைச் சுற்றினவரோடும் [நண்பரோடும்] சுடுவித்தேன்: இத்தனை தீங்கையும் உண்டாக்கி விட்ட யான், (சிறிதேனும்) பின்வாங்கினேனோ? (எ-று.)—அம்மா - வியப்பிடைச்சொல்: சீதையைக்கொண்டதன் மூலம் விளைந்த கேட்டைப்பற்றி வியந்தவாறு. சூழ்வித்து, தாழ்வித்தேனோ என்பன-தன்வினைப் பொருளில் வந்த பிறவினை. இப்பாடலுக்குப் பின் சிலபிரதிகளில் "மாண்டாய" (213) என்ற பாடலுள்ளது. பி-ம்:—[1]எய்தி. [2]மாள்விக்கும் மென்றெண்ணிலன். (2603)

212. மண்மேல் வைத்த காதலின் மாதா [1]மூதலோர்க்குப்
புண்மேல் வைத்த [2]தீநிகர் துன்பம் புகுவித்தேன்

பெண்மேல் வைத்த காதலி னிப்பே றுகள்பெற்றேன்
எண்மேல் [3]வைத்த வென்புகழ் [4]நன்று லெளியேனே.

(இ-ள்.) பூமியின்மேல்வைத்த ஆசையினால் மாதா[கைகேயி] முதலானவர்க்குப் புண்மேல்வைத்த தீயையொத்த துன்பத்தை உண்டாக்கினேன்; பெண்மேல்வைத்த காதலினால் இப்பேறுகளைப் பெற்றேன்; மதிக்குமாறுள்ள என்புகழ் மிகஅழகிது; (நான்) சாமானியமானவனே! (எ-று.)

'இப்பேறுகள் பெற்றேன், எண்மேல்வைத்த என்புகழ்நன்று' என்பன-பிறகுறிப்பு. இப்பேறு என்றது - தம்பியையும் நண்பரையும் இழந்தமையை. இச்செய்யுள் சிலபிரதிகளில் "சான்றோர்" (215) என்ற பாடலுக்குப்பின்: சிலபிரதிகளில் இதன்பின் "இருந்தேனனால்" (217) என்ற பாடல். இங்கு, மண்ணாசையும் பெண்ணாசையும் பெருந்துயர் விளைக்கும் என்று தொனிக்கவைத்திருத்தல் காண்க. பி-ம்:—[1]முதலோர்க்கும். [2]தீயன. [3]வைத்தேன். [4]யான்றான், நன்றே. (2604)

213\. மாண்டாய் நீயோ யானொரு போது முயிர்வாழேன்
ஆண்டா [1]னல்ல னானில மந்தோ பரதன்றான்
பூண்டா ரெல்லாம் பொன்றுவர் [2]துன்பம் பொறையாற்றார்
வேண்டா வோநா னல்லற மஞ்சி மெலிவுற்றால்.

(இ - ள்.) நீயோ மாண்டாய்: யான் (இனிமேல்) ஒருபோதும் உயிர்வாழேன்: (நான் உயிர்வாழாவிடின்), பரதன் (தான்) பூமியை யாள்பவனாகான் [இறந்திடுவான்]: அந்தோ! துன்பத்தைத் தாங்க மாட்டாதவராகி, (உறவு) பூண்டவரெல்லாம் இறப்பர்: நான் சிறந்த தருமத்திற்கு அஞ்சி மெலிவுற்றால், (அதன்பயனாக இவ்வளவு) உண்டாகவேண்டாவோ? (எ - று.)

'பிரமாத்திரத்தை விடவேண்டா என்று என்தம்பியைத் தடுத்ததற்குப் பயன், இவ்வாறு விளைந்ததென இரங்குகின்றான்' ஸ்ரீராமனென்னலாம். பி-ம்:—[1]அந்தோநானிலமன்றே. [2]துன்பப்.

214\. அறந்தாய் [1]தந்தை சுற்றமு [2]மற்று மெனையல்லால்
[3]துறந்தா யென்று [4]மென்னை மறாதாய் துணைவந்து
பிறந்தா யென்னைப் பின்பு தொடர்ந்தாய் [5]பிரிவாற்றாய்
இறந்தா யுன்னைக் கண்டு மிருந்தே னெளியேனே.

(இ-ள்.) அறமும் தாயும் தந்தையும் சுற்றமும் மற்றுமுள்ளனவும் என்னையல்லாமல் (வேறொன்று உளதென்றுகொள்ளாது) விட்டிட்டவனே! எப்போதும் என்னை மறவாதவனே! (எனக்குத்) துணையாகவந்து பிறந்தவனே! (என்) பிரிவை யாற்றாதவனாய் என்னைப் பின்பற்றி(க் காட்டிலும்) தொடர்ந்துவந்தவனே! (இவ்வாறான நீ) இறந்தாய்: (அங்ஙனம் இறந்த)உன்னைக் கண்டும் (யான்) உயிருடன் இருந்தேன்: (நான்) சாமானியமானவனே? (எ-று.)

தன்னுடன் காட்டில் வசிப்பதற்காக மனைவிமுதலியோரை இலக்குமணன் விட்டிட்டுவந்ததனால், 'அறந்தாய்,...துறந்தாய்'

என்றது. அறம்-மனைவியோடு கூடிவாழும் இல்லறம்என்க. பிரிவாற்றாய் இறந்தாய் என்றாஎடுத்து, எளியேனோ-நான் மிகக்கொடியவனன்றோ என்றபடி: இவ்வாறுகூறுதல் உலகவழக்காதலுணர்க. மறாதாய்=மறவாதாய்: இனி, என்சொல்லைத் தட்டாதவனே? எனினுமாம். இச்செய்யுளும், "வேலைப்பள்ளக்குண்டகழி" (216) என்ற செய்யுளும் "கொடுத்தேன்" (220) என்ற செய்யுட்குப்பின் முறையே யுள்ளன. ஒருபிரதியில் இந்தச்செய்யுள் மாத்திரம் "வேலைப்பள்ளக்" என்பதன்பின் உள்ளது. பி-ம்:—[1]எந்தை. [2]மற்றையவையெல்லாம், மற்றையனவெல்லாம். [3]மறந்தாய். [4]மெய்ம்மைமறந்தாயுடன், மெய்ம்மறவாதாய்துணை. [5]பிரிவற்றாய். (2606)

215. சான்றோர் மாதைத் [1]தக்க வரக்கன் சிறை [2]தட்டால்
ஆன்றோர் சொல்லு நல்லற மன்னான் [3]வயமானால்
மூன்றாய் நின்ற பேருல கொன்றாய் முடியா வேல்
தோன்றா வோவென் [4]வல்வில்லின் [5]தீரத் தொழிலம்மா.

(இ-ள்.) சான்றோரின் பெண்ணை வலிமைமிக்க அரக்கன் சிறையிலே தடுத்துவைத்திட்டால், (தருமம் அவனுக்கு விரோதமாக இருந்து அவனை யழிக்கவேண்டும்: அங்ஙனம்புரியாமல்), ஆன்றோர் பாராட்டிக் கூறுகிற நல்ல அறமும் அவனுக்கு வசப்பட்டிருக்குமானால், மூன்றாய்நின்ற பெரிய உலகமெல்லாம் ஒருங்கே (அழியவேண்டும்: அங்கன்) அழிந்திடாதாயின், என் வலியவில்லின் தைரியத்தோடுகூடிய தொழில் வெளிப்படமாட்டாவோ? (எ - று.)

முறைகேடான செயலைப்புரிந்த அரக்கனை அறக்கடவுள் அழிக்காது அவன் வாழ்ந்திருப்பதனால், இந்த மூவுலகத்தையும் என்வில்வலியால் ஒழித்துவிடுவேனென்று ஸ்ரீராமன் கூறியவாறு. பி-ம்:—[1]தக்கது. [2]தட்ட, கட்ட, வைக்க, செய்ய. [3]வசமானால். [4]வில்வலி. [5]வீரத். (2607)

216. வேலைப் பள்ளக் குண்டக ழிக்கும் [1]விராதற்கும்
காலிற் [2]செல்லுங் காக மணிக்குங் கரனுக்கும்
மூலப் [3]பொத்தற் [4]செத்த மரத்தேழ் முதலுக்கும்
வாலிக் கும்மே [5]யாயின [6]வாறென் வலியம்மா.

(இ-ள்) கடலென்று சொல்லப்படுகின்ற பள்ளமாகிய ஆழ்ந்த (இலங்கையின) அகழிக்கும், விராதனுக்கும், காற்றுப்போற் செல்லுங் காகாசுரனுடைய (கண்ணின) கருமணிக்கும், கரனுக்கும், வேரிலேதொளையையுடைய ஆராய்வதற்குஉரிய ஏழுமராமரமாகிய முதலுக்கும், வாலிக்குமே எனவலி செல்லுபடியாயினவாறு என்? (எ - று.)— அம்மா-இத்தனைப்பேரைக் கொன்ற வில் இவ்விந்திரசித்தைக் கொல்லாமலிருக்கின்றதே! என வியந்தவாறு. தனால் அழிக்கப்பட்டன வலியற்றனபோலுமென்று குறிப்பிக்க 'பள்ளக்குண்டகழி,' 'மூலப்பொத்தற் செத்தமரத்து' என்றான். செத்த-ஆராய்வதற்குரிய: இனி, செத்த-செத்துப்போன: வலியற்ற எனினுமாம். பி - ம்:—[1]விரதிக்கும். [2]செல்லாக்கவந்தனுயிர்க்கும். [3]பொத்தைச். [4]சொத்தை. [5]ஆயினது. [6]என்றனை, ஒருவன். (2608)

217. இருந்தே னுறு லிந்திரசித்தே முதலாய
பெருந்தே ராரைக் கொன்று பிழைக்கப் [1]பெறுவேனே
[2]வருந்தேல் [3]நீயே [4]வெல்லுதி யென்னும் வலிகொண்டேன்
[5]பொருந்தேன் நானிப் பொய்ப்[6]பிறவிக்கும் [7]பொறையல்லேன்.

(இ - ள்.) '(இந்திரசித்தைக் கொல்லுமாறு) வருந்தி முயற்சி செய்யாதே நீயே வெல்லுவாய்' என்று (உன்னை நோக்கிக்) கூறிய வலிகொண்ட நான், (அஸ்திரபூசை செய்யப் போர்க்களத்தை விட்டுச் செல்லாமல் இங்குத் தானே) இருந்தேனுனால் (அப்போது தான்) இந்திரசித்து முதலான பெரிய தேர்வீரரைக்கொன்று பிழைக்கப்பெறுவேனே? நான் (உண்மையான அன்புஉற்ற உடன் பிறவியையும் இப்போது உயிருடன்) இருக்கப்பெறுதவனுயினேன்; (அதனுல்) இப்பொய்ப்பிறவியைச் சுமக்கவும்வல்லே னல்லேன்;

இந்திரசித்துமுதலிய பெரியதேர்வீரரைக் கொல்லும்வலிமை பெற்றிருந்தேனுனல் இந்திரசித்து வந்தபோதே என்திறமையால் வென்றிருக்கமாட்டேனே என்று கூறியவாறு. பொருந்தேன் என்பதற்கு-நான் உன்னுடன் பிறந்ததாகவும் உடன்படேன் என்றுமாம்: இவ்வாறு கூறுவது-சகோதரவாஞ்சையற்றுத் தான் உயிரோடிருப்பதுபற்றி யென்னலாம். வருந்தேன்நீயே என்று பிரிக்கவும் இடனுண்டு. பி - ம்:—[1]பெறுவேனேல், பெரியோனே, [2]மருந்தே. [3]நானீ. [4]வெல்லுமதன்றே. [5]பொருந்தேனன்றே. [6]பிறவிக்குப். [7]பொருள், புரை. (2609)

218. மாதா வும்நஞ் சுற்றமு நாடும் மறையோரும்
ஏதா னுரோ வென்று தளர்ந்தே யிறுவாரைத்
தாதாய் காணச் சால நினைந்தேன் [1]றளர்கின்றேன்
போதா யையா பொன்முடி யென்னைப் [2]புனைவிப்பான்.

(இ - ள்.) தாயும் நமது சுற்றத்தாரும் நாட்டிலுள்ளாரும் பிராமணரும் '(காட்டிற்குச்சென்ற இராமலட்சுமணர்) எந்தக்கதி யானுரோ?' என்று தளர்ச்சியுற்று மனமுறிந்து வருந்துபவரை, குழந்தாய்! காணவேணுமென்று மிகவும் நினைந்துள்ளேனுய் மனத்தளர்ச்சியடைகின்றேன்: ஐயா! என்னைப் பொன்முடிபுனைவிக்குமாறுவருவாய்; (எ - று.)—'தாதாய்' என்பது - அன்புபற்றியது. பி - ம்:—[1]தரைவாழ்வேன், தரையாள்வேம். [2]புனைவிக்க, புனைவிப்பாய். (2610)

219. பாசமு முற்றச் சுற்றிய போதும் பகையாலே
நாச[1]மு ளுற்றிப் போதும் நடந்தே னுடனல்லேன்
நேசமு மற்ருர் செய்வன [2]செய்தே நிலைநின்றேன்
தேசமு [3]முற்றென் [4]கொற்ற நலத்தைச் [5]சிரியாரோ.

(இ - ள்.) நாகபாசம் (உடல்)முழுதுஞ் சுற்றியபோதும் பகையாலே நாசம் ஏற்பட்ட இப்போதும் உடன்இராதவனுய் அப்பாற்சென்றிட்டேன்; நேசமற்ருர் செய்வனவும்செய்தே உயிரோடுள்ளேன்: தேசத்திலுள்ளாரெல்லாம் பொருந்தி என்வெற்றிநலத்தைச் சிரியாரோ? (எ - று.)

உலகத்தாரெல்லாம் என்தோல்வி யுணரும்படி நேர்மையற்ற வழியில் நடந்துகொண்டேனே என்று தன்னை நொந்தவண்ணம் புலம்பியவாறு. பி-ம்:—[1]உழற்றிப், உளுற்றப். [2]செய்தேன் றனி. [3]மற்றென். [4]சொற்றநலத்தும். [5]தெரியாதோ. (2611)

220. கொடுத்தே [1]னன்றே வீடண னுக்குக் [2]குலமாள
முடித்தோர் செல்வ மியான்முடி யாதே மூடிகின்றேன்
[3]படித்தே னன்றே பொய்ம்மை குடிக்குப் பழிபெற்றேன்
ஒடித்தே னன்றே யென்புகழ் [4]நானே யுணர்வற்றேன்.

(இ-ள்.) (நான் முன்பு) விபீடணனுக்கு (அரக்கர்) குலத்தை யாளும்படி முடிசூட்டி (அதற்குஉரிய) ஒப்பற்ற (அரசச்) செல்வத்தையும் கொடுத்தேனல்லவா? (அதனை) யான் நிறைவேற்றிவையாமலே (இப்போது) உயிர்முடிகின்றேன்: (இதனால்), பொய்யைப் படித்தேனென்றே (இட்சுவாகு) வமிசத்துக்குப் பழியைச் சம்பாதித்து வைத்திட்டேன்; அவிவேகியான நான், (சுயமாகவே) என் புகழைக் கெடுத்துக்கொண்டேனல்லவா? (எ-று.)—திறமையற்ற நான் விபீடணனுக்கு முடிசூட்டிப் பொய்ம்மைக்கும் பழிக்கும் ஏன் உள்ளாகவேணுமென்று நொந்து கொண்டவாறு. பி-ம்:—[1]அன்றென், அன்றோ. [2]குலமாளும். [3]படித்தோனென்றே, படித்தேனன்றே, படித்தோனன்றே, படுத்தேனன்றே, பிடித்தேனன்றே. [4]நான்றானுடையேனே. (2612)

221.—புலம்பிய ஸ்ரீராமன் அறிவுசோர்ந்து துயிலுறுதல்.

என்றென் [1]றேங்கா விம்மு முயிர்க்கு [2]மிடையஃகிச்
சென்றான் [3]றென்றே டித்திய மெல்லாஞ் சிறை[4]யெய்தப்
பொன்றும் [5]மென்னுந் தம்பியை [6]யார்வத் தொடுபுல்லி
ஒன்றும் [7]பேசான் றன்னை மறந்தான் [8]துயில்வுற்றான்.

(இ-ள்.) என்றென்றுசொல்லியவண்ணம் ஏக்கங்கொண்டு விம்முவான்; பெருமூச்சுவிடுவான்: (இவ்வாறெல்லாஞ்செய்தபின்), இடையிலே குறைந்துபோய் ஓரிந்திரியத்தோடு [மனத்தோடு] மற்றையிந்திரியமெல்லாம் ஒன்றாகிச்சிறைப்பட, இறந்தவனாகின்றானென்னுந் தம்பியை அன்போடுதழுவி ஒன்றும் பேசாதவனாய்த் தன்னைமறந்தவனாகித் துயில்கொண்டான்; (எ-று.)—'துயில்வுற்றான்' என்பதற்கு - ஆவியுள்ளடங்கினான் என்று பொருள் கொள்ளலாம். பி-ம்:—[1]ஏங்கும். [2]இடையெய்த, இடையாகி. [3]ஒன்றோ. [4]செய்து. [5]என்னுத். [6]மார்பத்தொடு. [7]தேறான். [8]துயில். (2613)

222.—அது கண்டு தேவர் அன்போடு சொல்லத் தொடங்குதல்.

கண்டார் விண்ணோர் கண்கள் புடைத்தார் கலுழ்கின்றார்
கொண்டார் துன்ப மென்முடி வென்னக் குலைகின்றார்
அண்டா வையா வெங்கள் பொருட்டா லயர்கின்றாய்
உண்டோ வுன்பால் [1]துன்பென வன்போ டுரைசெய்தார்.

(இ - ள்.) தேவர்கள் (ஸ்ரீராமன் துயிலுற்றதனைக்) கண்டார்கள்; கண்களிலே புடைத்துக்கொண்டவராய் வருந்துபவரானார்; துன்பங் கொண்டவராய், 'முடிவு யாதாகுமோ?' என்று நடுங்குபவரானார்; 'தேவனே! ஐயனே! எங்கள் பொருட்டாக வருந்துபவனாகப்பாவிக்கின்றாய்: உன்னிடத்துத் துன்பு உண்டோ?' என்று அன்போடு சொல்லத்தொடங்கினார்; (எ - று.)—தேவர்கள் அன்போடு கூறுவதனை, மேல் ஏழுகவிகளிற் காண்க. பி - ம்:— [1] துன்பமுமென்றே, துன்பெனவன்பால். (2614)

வேறு.

223.—இனி ஏழுகவிகள்—தேவர்கள் உண்மையுணர்த்தி அன்போடு கூறுவன தெரிவிக்கும்.

உன்னை யுள்ள படியறியோ [1]முலக முள்ள திற [2]முள்ளோம்
பின்னை [3]யறியோ முன்[3]னறியோ மிடையு [3]மறியோம் பிறழா
நின்னை வணங்கி நீவகுத்த [4]நெறியி னிற்கு மதுவல்லால் [மல்
என்னை யடியேஞ் [5]செயற்பால வின்ப துன்ப மில்லோனே.

எட்டுக்கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) இன்பதுன்பங்களில்லாதவனே! உன்னை உள்ளபடியறியும் வல்லமையுள்ளோமல்லோம்: உலகு (உன்னிடத்து) அமைந்துள்ள கூறுபாட்டையும் ஆராய்ந்தறியோம்; இனி நடக்கப்போவதையும் அறியும்வல்லமையுடையோமல்லோம்: இடையிலே நடப்பதையும் மாறுபாடில்லாமல் அறியும்வல்லமையுடையோமல்லோம்; நின்னை வணங்கி நீ ஏற்படுத்தியுள்ளவழியில் நிற்பதல்லாமல் அடியவர்களாகிய நாங்கள் (சுதந்திரமாகச்) செய்யத்தக்கவை யாவையுள? (எ - று.)

உடலிலுள்ள நரை திரை முதலியவை ஆன்மாவைச்சேராதவாறுபோல உலகத்துநிகழும் இன்பதுன்பங்கள் உலகத்துஉயிர்க்கெல்லாம் உயிரான பரமான்மாவைச் சேராவென்க. பி - ம்:— [1] உலகை. [2] அறிவோம், உணரேம், உள்ளாய். [3] அறியேம். [4] நெறியே. [5] செயற்பாலம், செயற்பாலது. (2615)

224. அரக்கர் குலத்தை வேரறுத்தெம் மல்ல னீக்கி யருளா
யென்று, இரக்க வெம்மேற் கருணையினு [1]லிசையா வுருவ மிவை
யெய்திப், புரக்கு மன்னர் குடிப்பிறந்து போந்தா [2]யறத்தைப்
பொறைதீர்ப்பான், கரக்க [3]நின்றே நெடு [4]மாய மெமக்குங் காட்டக்
கடவாயோ.

(இ-ள்.) 'அரக்கர்குலத்தை வேரோடுபோக்கி எம்துன்பத்தை நீக்கியருள்வாய்' என்று (நாங்கள்) வேண்டிக்கொள்ள, எம்மீதுள்ள கருணையினாலே (உனக்கு) ஏற்காத இவ்வுருவங்களை மேற்கொண்டு காக்குந்தொழிலைக் கைக்கொண்ட (சூரியவமிசத்து) மன்னவரின் குடியிலேபிறந்து போந்தவனே! (தீயோர்பலர் இங்குப்பிறந்திட்டதனால்) தருமதேவதைக்கு நேர்ந்துள்ள பாரத்தைப் போக்கும்பொருட்டு மறைந்துநின்றே (யுள்ள உன்) பெரிய மாயத்தை எமக்குங் காட்டக் கடவாயோ? (எ - று.)

திருமால் இராமனாகி நாலுவடிவாகப் பிறந்தானென்பதுபற்றி, 'உருவமிவையெய்தி' என்றதென்னலாம்; இனி, மச்சம் கூர்மம் முதலிய அவதாரங்களைக் கருதியதென்பாருமுளர். "இம்மாஞாலம் பொறைதீர்ப்பான்...பிறந்தமாயனே" என்ற நம்மாழ்வார்பாசுரம் இச்செய்யுளின் பின்னிரண்டடியில் நினைவுக்குவருகின்றது; பி-ம்:— [1]இவையாவுருவமிலைதெய்தி, இவையாவுருவமிசைவெய்தி. [2]இந்தப் பொறை. [3]சின்ற. [4]மாயை. (2616)

225. [1]ஈன்றேம் [2]மிடுக்கண் துடைத்தளிப்பா னிரங்கி யரசரிற் [3]பிறந்தாய், [4]மூன்று முலகந் துயர்தீர்த்தி யென்னு மாசை முயல் கின்றேம், என்றும் [5]மறந்தோ மவனல்லன் மனிதனென்றே [6]யிது மாயம், போன்ற தில்லை யாளுடையாய் பொய்யும் புகலப் புக்காயோ.

(இ-ள்.) (உன்னால்) பெறப்பட்டவரான எம்முடைய துன்பத்தைப் போக்கிப் பாதுகாத்தற்காக இரக்கங்கொண்டு அரசரில்லிற் பிறந்தவனே! மூன்றாகிய உலகத்துக்குநேர்ந்துள்ள துயரத்தைத் தீர்ப்பாயென்கின்ற ஆசையினால் (நாங்கள்) முயல்கின்றோம்; (இவ்வாறு) முயன்றும், '(இவன்) அவனல்லன்: மனிதன்' என்ற உறுதியான கருத்தினால் (நின்தெய்வத்தன்மையைச்சிலகாலத்து) மறந்திட்டோம்: இம்மாயம்போன்ற செயல் (யாதும்) இல்லை: (எம்மை) அடிமையாகவுடையவனே! (எமது அறியாமைக்குஏற்ப நீ) பொய் பேசவும் தொடங்கிவிட்டாயோ? (எ-று.)

தேவர்களின் முன்னிலையிலும் மனிதன்போலவே ஸ்ரீராமன் நடிப்பதனால், 'பொய்யும் புகலப்புக்காயோ' என்கின்றனர் தேவர். மூன்றாமடியில் 'என்று' என்றே கொண்டு. (நீ துக்கித்து மூர்ச்சித்திருப்பதாக நடிப்பதை உண்மையாக) ஏற்றுக்கொண்டு என்று உரைத்தலும் ஒன்று. பி-ம்:—[1]ஈன்றாய். [2]இடுக்கந்துடைத்தளிப்பாய். [3]பிறந்து. [4]மூன்றுதலமுந், மூன்றுமுலகத், மூன்றுமுலகைத். [5]அறிந்தோம். [6]இம். (2617)

226. அண்டம் பலவு மனைத்துயிரு மகத்தும் புறத்து [1]முள வாக்கி, உண்டு முமிழ்ந்து மளந்திடந்து முள்ளும் [2]புறத்து முளையாகிக், [3]கொண்டு சிலம்பி தன்[4]வாயிற் [5]கூர்நூ லியையக் கூடியற்றிப், பண்டு மின்று [6]மமைக்கின்ற படியை [7]யொருவாய் பரமேட்டீ.

(இ-ள்.) பரமேட்டியே! அண்டம்பலவற்றையும் அனைத்துயிர்களையும் உண்டும் உமிழ்ந்தும் (வயிற்றின்) உள்ளும் புறத்தும் உளவாக்கியும், அளந்தும் இடந்தும் உள்ளும்புறத்தும் உளனாவாயாகியுமிருந்து, சிலம்பி தன்வாயில் மெல்லியநூலினாலியையக் கூட்டையியற்றி முன்னும் இப்போதும் அமைக்கின்ற நிலையை நீங்காதிருப்பாய்; (எ - று.)—முன்னிரண்டடிகளில் **நிரனிறை.**

சிலந்திப்பூச்சி தன்உருவத்திற்கு விகாரம் சிறிதுமில்லாமலே நூலையுண்டாக்கி மீண்டும் தான் உண்டாக்கின நூலை உட்கொள்வதுபோலவே, சருவேசுவரன் தன்சுயரூபத்திற்கு விகாரமில்லாமலே அண்டங்களைப்படைத்து மீண்டும் அவற்றை விழுங்குவனென்றுவேதங்கூறுவதையொட்டி இந்தச்செய்யுளின் பின்னிரண்

டடிகள் வந்தன: "சின்னூல் பலபலவாயாலிழைத்துச் சிலந்தி பின்னும், அந்நூ லருந்திவிடுவதுபோல வரங்கரண்டம், பன்னூறு கோடிபடைத்தவையாவும் பழம்படியே,மன்னூழி தன்னில்விழுங்கு வர் போதமனமகிழ்ந்தே" என்ற திருவரங்கத்துமாலையும், "யதோர்ண நாபிஸ் ஸ்ருஜதே க்ருஹ்ணதேச", "ஊர்ணநாபிர் யதா ஸ்ருஷ்ட்வா-ஸ்வயம்தத்க்ரஸதேபுந:— ததாஸ்ருஷ்ட்வேதமகிலம் - ஸ்வயம்தத்க்ரஸதேஹரி:" என்பனவும் காண்க. 'தன்ஸ்வருபத்திற்கு விகாரமில்லாமலே படைத்தலும் படைத்தவற்றை யுட்கொள்ளுதலும் கூடுமோ?' என்று பரம்பொருளின் ஸ்ருஷ்டிஸம்ஹார விஷயங்களில் தோன்றும் ஐயத்தைப் போக்க இந்தச்சிலம்பி திருஷ்டாந்தம் கூறப்பட்டது; 'ஒருசிலந்திக்கு உண்டானஸ்வபாவம் ஸர்வஶக்திக்குக் கூடாதொழியாதிறே' என்ற தத்வத்ரயத்தையுங் காண்க. பரம்பொருளான எம்பெருமானுக்கு அற்பஜந்துவான சிலந்தியை உவமைகூறியது இழிவுவமையின்பாற் படாதோ? எனின்,—பரம்பொருள் தனக்கு யாதொருவிகாரமுமின்றிப் படைத்துப் படைத்ததை உட்கொள்ளுதலை விளக்குதற்கு இவ்வுவமை சிறத்தலால், இழிவுவமைக்குற்றத்தின்பாற்படாது ஏற்றதேயாகுமென்க. பி - ம்:—[1] அளவாகி, உளவாகி. [2] புறம்பும். [3] கொண்டுஞ். [4] வயிற்றின். [5] நூலான்மேயக். [6] அமைகின்ற. [7] ஒருவராப். (2618)

227. [1] துன்ப விளையாட் டிதுவேயு முன்னைத் துன்பந் [2] தொடர் பின்மை,இன்ப விளையாட் டாமெனினு [3] மறியா தேமுக் கிடருற்றால், [4] அன்பு [5] விளையு மருள் [5] விளையு மறிவு [5] விளையு [6] மவையெல்லாம், முன்பு பின்பு நடுவில்லாய் [7] முடித்தா லன்றி [8] முடியாவே

(இ-ள்.) முன் பின் நடுஇல்லாமல் எப்போதும் இருப்பவனே! உன்னைத் துன்பந்தொடர்தல் இல்லாமையால் (நீ துன்புற்றாய் போலவும் சோர்வுற்றாய்போலவும் விளையாடுகின்ற) இது துன்ப விளையாட்டேயென்றாலும், (இதுவும் உனக்கு) இன்ப விளையாட்டேயாம்: என்றாலும், (தோற்றத்தையன்றி உண்மையை) அறியமாட்டாதஎங்கட்கு, (நீ) இடருற்றாயென்றால், (உன்பக்கல்) அன்புதோன்றும்; இரக்கமும் தோன்றும்; துன்பவுணர்ச்சி தோன்றும்: அவையெல்லாம் நீ போக்கிவைத்தாலன்றி (எம்மாற்) போக்க முடியாது; (எ-று.)—உன் திருவிளையாடலால் எமக்குத் தோன்றும் இடர் உன்னாலேயே போக்கவல்ல தென்றபடி. பி - ம்:—[1] துன்பம். [2] தொடர்வு. [3] அறியாதோருக்கிடருறுமால், அறியாதோருக்கிடருற்றால். [4] அன்பின். [5] விளைவும். [6] அது, இது. [7] முடிந்தால். [8] முடியாதால், முடியாதே. (2619)

228. வருவாய் போல வாரா தாய் வந்தா யென்று மனங் [1] களிப்ப, வெருவா திருந்தோம் நீயிடையே துன்பம் விளைக்க மெலிகின்றோம், கருவா [2] யளிக்குங் களைகண்ணே நீயே [3] யிதனைக் களையாயேல், திருவாழ் மார்ப நின் [4] மாயை யெம்மால் தீர்க்கத் தீருமோ.

(இ - ள்.) அறியப்பட்டாய்போலநின்று அறிவுக்கு இலக்கு ஆகாதவனே! (அரக்கரையொழிக்க எங்கட்காக நீ) அவதரித்தா

யென்று மனம்மகிழ அச்சம்நீங்கியிருக்தோம்: நீ இடையிலே [இராட்சச சங்காரமாகிற காரியம்முடியுமுன்] துன்பம் விளைக்க (அதனால்) மெலிவடைகின்றோம்: கருப்பத்திற் பிறந்தவனாகி (எம்மைப்) பாதுகாக்கின்ற (எமது) புகலிடமே! நீயே இத் துன்பத்தைப் போக்காயாயின், திருவாழ்மார்பனே! உன்மாயை எம்மாலே தீர்க்கத்தீர்ந்து விடத்தக்கதோ? (எ - று.)

எவரொருவர் கடவுளை முற்றஅறிந்திட்டோமென்று கருது கின்றனரோ அவரால் அறியப்படாதவனாகவும், எவரொருவர் கடவுள் முற்ற அறியமுடியாதவரென்று கருதுகின்றாரோ அவரால் அறியப்பட்டவனாகவும் அக்கடவுள் இருப்பானென்ற நூற்கொள் கைபற்றி, 'வருவாய்போலவாராதாய்' என்றார். "வந்தாய்போல வாராதாய் வாராதாய்போல் வருவானே", "யஸ்யாமதம் தஸ்ய மதம், மதம்யஸ்ய ந வேத ஸ: அவிஜ்ஞாதம் விஜாநதாம், விஜ்ஞாதம் அவிஜாநதாம்" என்பன, இங்குக்காணத்தக்கன. உன்மாயையை நீக்கி எங்களுடைய துன்பத்தைப் போக்கவேணுமென்று வேண்டியபடி. பி - ம்:—[1]களித்து. [2]களிக்கும். [3]இடரைக்காவா யேல். [4]மாயம். (2620)

229. அம்பரீடற் கருளியது மயனார்[1]மகனுக் [2]களித்ததுவும்,
எம்பிரானே யெமக்கின்று [3]பயந்தா யென்றே யேமுறுவோம்,
வெம்பு துயர நீயுழக்க வெளிகா ணாது மெலிகின்றோம், தம்பி
துணைவா நீயிதனைத் [4]தவிர்த்தெம் முணர்வைத் தாராயோ.

(இ-ள்.) அம்பரீடனுக்கு அருள்புரிந்ததையும், அயனுருடைய மகனை உருத்திரமூர்த்திக்குக் கருணைபுரிந்ததையும், எம்பிரானே! எமக்கு இன்று உண்டாக்கினையென்றே பாதுகாவல் நாடுகின்றோம்: மனங்குழைதற்குக்காரணமான துன்பத்தை நீ யடைய, வெளி யிடம் தெரியாது மெலிவடைகின்றோம்: தம்பிக்குத் துணைவனே! நீ இத்துயரைத் தவிர்த்து எங்களறிவைத் தரமாட்டாயோ? (எ-று.) வெளி-துயருக்குப்புறம்பானநிலை. பி - ம்:—[1]மகனார்க்கு. [2]அளித் தன. [3]பயந்தாமென்றே, பயந்தாயென்றென்று. [4]தவிர்ந்து.

அம்பரீடற்கு அருளிய கதை:—சூரியகுலத்துதித்த அரசனாகிய அம்பரீஷன் ஏகாதசிநோன்பைமேற்கொண்டு துவாதசிபாரணை செய்ய இருக்கையில், துருவாசமுனிவர் விருந்தினராக வர, மன்ன வன் அவரை வரவேற்க, அவர் நித்தியக்கடமைகளைச் செய்துவரு மாறு யமுனைக்கு ஏக, அரசன் பாரணைக்குஉரிய காலங்கடத்தல் கண்டு பகவானைப்பூசித்த தீர்த்தத்தை யுட்கொண்டான்: நித்தியக் கடமைகளைச்செய்து மீண்டுவந்த முனிவர் அரசன்செய்கையை யுணர்ந்து சினந்து அவனைத் தொமிசஞ்செய்யக்கருதித் தன்சடை மயிரிலொன்றை மண்ணிலெறிய, அதினின்று பூதமொன்று உண் டாகி அரசனை யெதிர்த்தது: மன்னவன் திருமாலைத் தியானிக்க, அப்பரமனருளாற் சக்கராயுதந் தோன்றிப் பூதத்தைக் கொன்று பின் முனிவரைத் துரத்த, முனிவர் திரிமூர்த்திகளிடமும் அடைக் கலம்பெறாமல் மன்னவனையே வேண்ட, அவ்வரசன் சக்கரத்தைத் தொழுதுவேண்டி முனிவர்க்கு யாதொரு துன்பமும் வரவொட் டாது காத்தனனென்பது.

அயனூர் மகனுக்கு அளித்த கதை:— பஸ்மாசுரனென்பவன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம்புரிந்து, தான் எவர்தலைமீது கை வைத்தாலும் அவர் உயிரிழந்து சாம்பராய்ப் போகும்படி வரம் பெற்றுத் தான் பெற்ற வரத்தைச் சோதிப்பதற்காகச் சிவபெருமான் முடிமீது கைவைக்கத் தொடங்கவே, அப்பெருமான் அஞ்சி உருக்கரந்து திருமாலை வேண்டினனாக, திருமால் அசுரன்முன்னே பெண்ணுருவாய்த்தோன்றவும் அவன் அப்பெண்ணை யணைய வர, அப்பெண் 'நீராடிச் சுத்தனாக வருக' என்ன, அசுரன் நீரில்மூழ்கித் தன் தலையைத் துவட்டுதற்காகத் தன்சிரசிற் கைவைத்தான்: வைக்கவே, தானே உயிரிழந்து சாம்பராயினனாக, அதனால் சிவபெருமான் அச்சம்நீங்கப் பெற்றன னென்பது. கையிலொட்டிய பிரமகபாலத்தைப்போக்கியது முதலியனவும் கொள்ளலாம். திருமால் அவ்வவ்வமயத்திற்கு ஏற்ப இடர்போக்கி அருள்புரியுந் தன்மை, இவ்விரண்டு கிளைக்கதைகளிலும் காணப்படும். (2621)

230.—ஸ்ரீராமன் செய்தியைத் தூதர் இராவணனுக்குச் சொல்லச்செல்லல்.

என்ப பலவு மெடுத்தியம்பி யிமையா தோரு மிட [1]ருழந்தார்
அன்பு மிகுதி யாலைய [2]னாவி யுள்ளே யடங்கினான்
துன்ப மனிதர் கருமமே [3]புணர [4]முன்பு துணிந்தமையால்
புன்க ணிருதர் பெருந்தூதர் போனா ரரக்க னிடம்[5]புக்கார்.

(இ-ள்.) என்பவை பலவற்றையும் எடுத்துச்சொல்லித் தேவர்களும் துயர்கொண்டு வருந்தினார்: துன்பத்தையனுபவிக்கின்ற மனிதருடைய செயலே (தன்னிடத்துச்) சேருமாறு (திருவவதரித்தற்கு) முன்னமே சங்கற்பித்ததனால் (தம்பியினிடத்துள்ள) அன்பு மிகுதி காரணமாக ஸ்ரீராமன் ஆவி உள்ளே யடங்கப் பெற்றான்; இழிதகைமையுள்ள அரக்கரின் பெருந்தூதர் (அச்செய்தியைத் தெரிவிக்கப்போய்) இராவணனிடத்திற் சேர்ந்தார்; (எ - று.)— "துயரில் மலியும்மனிசர் பிறவியில் தோன்றிக் கண் காணவந்து - துயரங்கள்செய்து தன்தெய்வநிலையுலகில் புகவுய்க்கு மம்மான்" என்ற நம்மாழ்வார்பாசுரம் ஒருசார் ஒப்புநோக்குக. பி - ம்:— [1]உழந்தே. [2]அறிவும். [3]புரிய. [4]முன்னே. [5]புகுந்தார். (2622)

231.—இராவணனிடம் தூதர் ஸ்ரீராமன் செய்தியைத் தெரிவித்தல்.

என்வந் ததுநீ ரென்றரக்கர்க் கிறைவ னியம்ப வெறிசெருவில், நின்[1]மைந்தன்றன் நெடுஞ்சரத்தாள் துணைவரெல்லாம் நிலஞ் [2]சேரப், பின்வந் தவனு [3]முயிரிழந்த பிழையை நோக்கிப் பெருந் துயரால், முன்வந்தவனும்[4]முடிந்தானுன் [5]பகைபோய் முடிந்த தென மொழிந்தார்.

(இ - ள்.) அரக்கர்தலைவனான இராவணன் 'நீர் வந்தது என்ன காரணம்பற்றி?' என்று (அத்தூதரை) வினவ, (அவர்), 'மோதுகின்ற போரில் உன் மைந்தனான இந்திரசித்தின் நெடிய

அம்பினால் துணைவரெல்லாம் உயிரொடுங்கி நிலத்தில்வீழ்ந்து கிடக்க, (அத்துணைவருடனே தன்) பின்பிறந்தவனும் உயிரிழந்த துன்பச்செயலைக்கண்டு மிக்க துயரத்தினால் மூத்தவனான இராமனும் உயிர்முடிந்தான்: (ஆகவே), உன்பகை முடிந்துபோய் விட்டது: (இனி, உனக்குப்பகையில்லை)' என்று கூறினார்கள்; (எ - று.)—
பி - ம்:—[1]மைந்தனது. [2]சேர்ந்தார். [3]முன்முடிந்த......பின்னவற்காய். [4]பின்முடிந்தான். [5]பகையும். (2623)

பிரமாத்திரப்படலம் முற்றிற்று.

22-ஆவது சீதைகளங்காண்படலம்

பிரமாத்திரத்தால் உயிரற்றுக்கிடந்த இலட்சுமணனையும், இலட்சுமணனை யிழந்தோமென்ற துயரத்தின் மிகுதியால் உயிரொடுங்கிக்கிடந்த ஸ்ரீராமனையும் சீதாபிராட்டியார் போர்க்களத்திலே கண்டதைக் கூறும் படல மென்பது பொருள். **களங்காட்டு படலம்** என்று சிலபிரதிகளிலும், **பிராட்டிகளங்காண் படலம்** என்று சிலபிரதிகளிலும், **சானகிகளங்காண்படலம்** என்று சில பிரதிகளிலும் இப்படலத்துக்குப் பெயர் காணப்படுகின்றது.

இந்திரசித்தின் பிரமாத்திரத்தால், வானரர்களும் இலட்சுமணனும் இலட்சுமணனையிழந்த துயரால் ஸ்ரீராமனும் உயிரொடுங்கி வீழ்ந்திட்டதை ஒற்றர்மூலமாக வுணர்ந்த இராவணன் மிகமகிழ்ந்து, சீதை அவ்வுண்மையை நம்புதற்பொருட்டு அவளைப் புட்பகவிமானத்தி லேற்றி யுத்தகளத்தை அவட்குக் காட்டுமாறு கட்டளையிட, அரக்கியர் அங்ஙனமே செய்ய, பிராட்டி தன்பிராண நாயகனான ஸ்ரீராமனும் இளையபெருமாளும் உயிரொடுங்கிப் போர்க்களத்தில வீழ்ந்திருப்பதுகண்டு பெருந்துயர்கொண்டு புலம்பித் தன்னுயிரை விட்டிடுவதென்று எண்ணுகையில், விபீடணன் புதல்வியான திரிசடையென்பவள் பலவகையடையாளங்களால் இராமலட்சுமணர் உயிரோடிருக்கின்றாரென்பதை நிரூபித்துச் சீதையை அந்தச்செயலினின்று மீட்ட செய்தி இந்தப படலத்திற் கூறப்படுகின்றன.

1.—மாற்றார்செய்தியை ஊரெங்கும் பறையறைந்து தெரிவிக்குமாறு இராவணன் கட்டளையிடுதல்.

பொய்யார் தூத ரென்பதனாற் பொங்கி யெழுந்த [1]வுவகையனாய்
மெய்யார் [2]நிதியின் பெறுவெறுக்கை [3]வெறுக்க வீசி விளைந்தபடி
கையார் வரைமேன் [4]முரசேற்றிச் [5]சாற்றி நகரங் களிசிறப்ப
தெய்யாராடல் [6]கொள்கென்று [7]நிகழ்த்துகென்றான் நெறியில்லான்.

(இ-ள்.) நெறியில்லானாகிய இராவணன்,—தூதர்பொய்கூறாரென்பதனால் (தன்பகைநீங்கிற்றென்ற காரணம்பற்றி உள்ளடங்காமல்) மேலேபொங்கித் தோன்றிய மகிழ்ச்சியையுடையவனாகி,

(தன்னிடத்து) நிலையாகப்பொருந்திய தொகுதியாயுள்ள பெருஞ் செல்வத்தை(ப் பெற்றுக்கொள்பவர்) வெறுப்படையும்படி [மிகவும் அதிகமாக] வாரியிறைத்து, 'நடந்தசெய்தியை [பகைவர் யாவரும் பட்டாரென்பதை]த் துதிக்கையையுடைய மலைபோன்ற யானையின் மேல் முரசத்தையேற்றி அடித்துத் தெரிவித்து, இலங்காநகரத்திலுள்ள யாவரும் (வெற்றிவிழாக் கொண்டாட்டத்து) மகிழ்ச்சிமிக நெய்யிட்டு முழுகுக என்று சொல்லுக' என்று (பறைசாற்றுமவர்க்குக்) கட்டளையிட்டான்; (எ - று.)

இந்திரசித்துவிடுத்த பிரமாத்திரத்தால் வானரவீரர்களும் இலக்குமணனும் இறந்ததையும் அதுகண்ட பெருந்துயரால் ஸ்ரீராமனும் உயிரொடுங்கி வீழ்ந்திட்டதையும் ஒற்றர்கூற, இராவணன், அந்தப் பேச்சை உண்மையென்று நம்பி அடங்காப் பெருமகிழ்ச்சி கொண்டு, அந்தமகிழ்மொழிகூறிய தூதர்க்குப் பெருந்திரவியத்தை வாரியிறைத்து, நடந்த செய்தியை ஊர்முழுதும் பறையறைந்து தெரிவித்து, ஊரார்யாவரும் பெருமகிழ்ச்சியோடு மங்களஸ்நாநம் செய்யும்படி கட்டளையிட்டனனென்க. செல்வம் நிலையில்லாததாயினும், இராவணன், தனக்குக்கிடைத்துள்ள பெருஞ்செல்வம் என்றும் அழியாது நிலைநிற்குமென்ற கருத்துக்கொண்ட அவிவேகியாதலால், அவன்நினைவுபற்றி 'மெய்யார்நிதியின் பெருவெறுக்கை' என்றான். இனி, இராவணன் குபேரனை வென்று அவனது சங்கநிதி பதுமநிதி முதலியவற்றைத் தன்வசத்தனவாக்கிக் கொண்டுளனதனால், சங்கம் பதுமம் முதலியவற்றின் வடிவங்கொண்டுள்ள அந்த நிதிகளைக் குறிக்குமாறு 'மெய்யார்நிதி' என்றானுமாம்; மெய்-வடிவம். நிதி - குவியலான செல்வம். 'மகன் தோன்றினன், பகைவன் பட்டான்' என்று பெருமகிழ்ச்சிக்குக் காரணங்கள் இரண்டென்றும், அரசனுக்கு அவை நிகழும்பொழுது அவனதுகுடிகள் அந்தமகிழ்ச்சியைத் தாமும் கொண்டாடுவரென்றும் அறிக. பிறர் தாரத்தைக் கவர்ந்த பெரும்பாவியாதலால் இராவணனை, 'நெறியில்லான்' என்றது. முரசு-வெற்றிமுரசு. பி-ம்:—[1] உவகையினான், உவகையினாய். [2] நிதியம். [3] விளைந்த படியேமிகவீந்து. [4] முரசியற்றி. [5] நகரமெங்குங்களிகூர. [6] ஆட்டென்று, ஆகென்று. [7] நிகழ்த்துகின்றான், நிகழ்த்துமென்றான், நிகழ்ந்தானெஞ்சம். (2624)

2.—இறந்த அரக்கருடலைக் கடலிலிடுமாறு மருத்தனுக்குப் பணிக்க, அவன் அவ்வாறே செய்தல்.

அந்த நெறியை யவர்செய்ய [1]வரக்கன் [2]மருத்தன் றனைக்கூவி
முந்த [3]நீபோ யரக்கருடல் முழுதுங் கடலில் [4]முடுக்கிடுநின்
சிந்தை யொழியப் பிற[5]ரறியிற் சிரமும் வரமுஞ் சிந்துவனென்று
உந்த வவன்போ யரக்கருடல் [6]முழுதுங் கடலி[7]னுள்ளிட்டான்.

(இ - ள்.) (இராவணனிட்ட) அந்தக்கட்டளையை அந்தப்பணியாளர் செய்ய,—இராவணன் மருத்தனை வரவழைத்து 'முற்பட்டு நீ போய் அரக்கருடைய உடல்முழுவதையும் கடலில் விரைவாகச் செலுத்திவிடு: (நீ இவ்வாறுசெய்வது) உன்மனத்துக்குத் தவிரப் பிறர் அறிந்தால் (உன்) சிரத்தையும் (உனக்கு யான் கொடுத்

முள்ள) மேம்பாட்டையும் வாங்கிவிடுவேன்' என்று சொல்லி யனுப்ப அந்தமருத்தனும் போய் அரக்கருடைய உடல் எல்லா வற்றையும் கடலினுள்ளேயிட்டான்; (எ - று.)

இந்த மருத்தனே சனகவுருக்கொண்டு சானகியை மயங்கச் செய்தவன். சீதையை விமானத்திலேற்றிப் போர்க்களத்துக்கு இட்டுக்கொண்டுவந்து அங்குஉயிரின்றி வீழ்ந்துகிடக்கின்ற இராம லட்சுமணரைக் காட்டுமாறு இராவணன் ஏற்பாடுசெய்யப் போவத ஞல், அரக்கரில் எவருமிறக்கவில்லையென்று அந்தச்சீதை கருத வேண்டுமென்ற கருத்தினுல், அரக்கருடலையெல்லாம் கடலுக்குள் இடுமாறு கட்டளையிட்டானென்க. பி-ம்:—[1] அரசன். [2] மருத் தோன். [3] நீயே. [4] முடுக்கிவை. [5] அறிவிற்செல்லாவுன்றன்செயல் செய்கென்று. [6] அடங்கக். [7] உதிர்ப்பித்தான். (2625)

3.—இராவணன் கட்டளைப்படி அரக்கியர் சீதையை விமானத்திலேற்றிப் போர்க்களத்திற்குக் கொண்டுபோதல்.

தெய்வ [1]விமானத் திடையேற்றி மனித்தர்க் குற்ற செயலெல்லாம்
தையல் [2]காணக் காட்டுமின்கள் கண்டா லன்றித் [3]தன்னுள்ளத்து
ஐய நீங்கா [4]ளென்றுரைக்க வரக்கர் மகளி [5]ரிரைத் தீண்டி [தார்.
[6]உய்யு முணர்வு [7]நீத்தாளை நெடும்போர்க் [8]களத்தின் மிசை [9]யுய்த்

(இ - ள்.) (பின்பு இராவணன் சீதைக்குக் காவலாக இருந்த இராக்கதமகளிரை யழைத்து, 'சீதையைத்) தெய்வத்தன்மையுள்ள விமானத்தின் மேலேற்றி, மனிதர்களாகிய ராமலக்ஷ்மணர்கட்கு நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளையெல்லாம் [இராமலக்ஷ்மணர் உயிர் நீங்கிக்கிடத்தலை] சீதை பார்க்கும்படி காட்டுமின்; (அவள் நேரிற்) பார்த்தாலல்லாமல், (நிகழ்ந்தசெய்தியை நாம் சொல்லக் கேட்பத ஞல்), தன்மனத்திலுள்ள ஐயம் நீங்கப்பெருள்' என்று உரைப்ப, இராக்கதப்பெண்கள்,—(அதுகேட்ட பெருமகிழ்ச்சியால்) பேரார வாரஞ்செய்து நெருங்கி '(இனி நாம்) பிழைத்திருப்போம்' என்கிற எண்ணம் நீங்கிய அந்தச்சீதையை (விமானத்திலே) ஏற்றிக் கொண்டுபோய்ப்) பெரிய (அந்த) போர்க்களத்தின்மீது சேர்த் தார்கள்; (எ-று.)

'சீதையைப் போர்க்களத்திற்கு இட்டுக்கொண்டுபோய்க் காட் டினுல் அங்கே உயிர்நீங்கி விழுந்துகிடக்கிற ராமலக்ஷ்மணர்களை நேரிற்கண்டால் அப்போதாவது இந்தச்சீதை தன்மனத்தில் ஐயந் தீர்ந்து நமக்கு வசப்படலாம்' என்ற கருத்தோடு, இராவணன், சீதையைப் புட்பகவிமானத்தி லிட்டுக்கொண்டுபோய்ப்போர்க் களத்தைக் காட்டும்படி ஏவ, ஏவலாளிகளான இராக்கதிகளும் அங்ஙனமே செய்தன ரென்பதாம். இராமலக்ஷ்மணர் பகைவென்று தன்னை மீட்பாரென்ற உறுதியான நம்பிக்கையோடு அரிதின் உயிர் தாங்கியிருந்த சீதை, அவர்கட்கு நேர்ந்த துர்க்கதியைத் தான் கேட்டதனுல், உய்யுமுணர்வு தீர்ந்தன ளென்க. அலட்சியந் தோன்ற 'மனித்தர்' என்ருன். ஒருபிரதியில் இந்தப் பாடலோடு பிரமாத்திரப்படலம் முடிகின்றது. பி - ம்:—[1] மானத்தேர், மானத் திடை. [2] அறியக். [3] தனது. [4] எனவுரைப்ப, என்றுரைப்ப. [5] இரைத்

தார்ப்ப, இரைத்தார்த்தே, தங்கணவர். [6]உய்வு முணர்வும். [7]நீர்ந் தானே, உற்றுளே. [8]களத்தினிடை. [9]உயர்ந்தார். (2626)

4.—சீதையின் பெருந்துயரம்.

கண்டாள் கண்ணுற் கணவனுரு வன்றி [1]யொன்றுங் காணு தாள், உண்டாள் விடத்தை யென[2]வுடனு முணர்வு முயிர்ப்பு முட னேய்ந்தாள், தண்டா மரைப்பூ நெருப்புற்ற தன்மை[3]யுற்றுள் [4]தரியாதாள், பெண்டா னுற்ற பெரும்[5]பீழை யுலகுக் கெல்லாம் பெரி[6]தன்றே.

(இ - ள்.) (அந்தப்போர்க்களத்தில் உயிர்நீங்கி விழுந்து கிடக்குந் தனது) கணவனான இராமபிரானது உருவத்தைக் கண்ணுற் கண்டாள்: அதனையேயல்லாமல் வேறு எதையும் கண் ணெடுத்துப் பாராத சீதை,—விடத்தையுட்கொண்டவள் போல உடம்பும்அறிவும் மூச்சும் ஒருசேரஓய்ந்து, அத்துயரத்தைத் தாங்கமாட்டாதவளாகி, குளிர்ந்த தாமரைமலர் நெருப்பிற்பட்ட தன்மையை யடைந்தாள் [நெருப்பிலே விழுந்த தாமரைப்பூப் போல வாடினுள்]; (இவ்வாறு) ஒரு பெண் அடைந்த பெருந் துனபம்,உலகத்துக்கு மிகப்பெரிதாகத் தோன்றுமன்றோ! (எ-று.)

அப்போது சீதாபிராட்டி போர்க்களத்தில் ஸ்ரீராமன் உயி ரொடுங்கி விழுந்துகிடப்பதைக் கண்ணுற் கண்டு, அதனுலுண் டான பெருந்துன்பத்தால் நஞ்சையுண்டவள்போன்று தனது உடலும் அறிவும் உயிர்ப்பும் சோர்ந்துவிட, நெருப்பிற்பட்ட தாமரைமலர்போல வாடி அந்தத்துயரத்தைத் தாங்கமாட்டாத வளாகி நின்றுள்; இவ்வாறு உத்தமியான ஒருத்தி பெருந்துன் பத்தையடைவது, உலகத்தார்க்கே நினைக்கநினைக்கப் பெருந் துயரை யுண்டாக்குமல்லவோ? என்பதாம். 'பெண்ணென்றுற் பேயும் இரங்கும்' என்ற பழமொழி இங்குக் கருதத்தக்கது. ஈற் றடிக்கு-பெண்ணுகிய சீதாபிராட்டியார் அடைந்த பெருந்துயர மானது, உலகத்துத் தோன்றும் துயரமெல்லாவற்றைக் காட்டி லும் பெரிதாமல்லவோ? என்று பொருள் கூறுவாருமுளர். மிகக் கொடிய துயருற்றவர் அத்துயர்க்காரணத்தை யன்றி வேறொன்றையும் காணுமை இயல்பு ஆதலால் 'கண்டாள்—காணு தாள்' என இவ்வாறுகூறியது. பி - ம்:—[1]என்றுங். [2]உயிர்த் தாளுடலுமுணர்வும். [3]ஒத்தாள். [4]தரியாத, [5]பீடை. [6]அன்றே. (

5.—இதுவும் அடுத்தசெய்யுளும்-சீதாபிராட்டியின் துயரத்தால் மற்றையோர் துயருறுவதைக் கூறும்.

மங்கை [1]யழுதாள் வானுட்டு மயில்க ளழுதார் மழவிடையோன்
பங்கி னுறையுங் குயிலழுதாள் [2]பதுமத் திருந்த மாதழுதாள்
கங்கை யழுதாள் நாமடந்தை யழுதாள் கமலத் தடங்கண்ணன்
தங்கை யழுதா ளிரங்காத வரக்கி மாருந் [3]தளர்ந்தழுதார்.

(இ - ள்.) (அங்ஙன் தரிக்கமாட்டாது பெருந்துயர்கொண்ட) சீதாபிராட்டி, புலம்பினுள்; (அதனைக் கண்டதனுல்), தேவலோகத்

திலுள்ளவராய் மயிலைப்போன்ற சாயலுள்ளவரான தேவமங்கையர், புலம்பினார்; (என்றும்) இளமையாய்த்தோன்றுவதான இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபெருமானது (இடப்)பக்கத்தில் (எப்போதும்) வசிப்பவளும் (குரலினாற்) குயில்போன்றவளுமான பார்வதி, அழுதாள்; செந்தாமரைமலர்மேல் வீற்றிருப்பவளான ஸ்ரீமஹாலக்ஷ்மி, அழுதாள்; (சிவனது சடாமகுடத்திலிருக்கும்) கங்காதேவியும், அழுதாள்; (பிரமனது)நாவினில்வாழும் பெண்ணாகிய சரசுவதிதேவியும், அழுதாள்; செந்தாமரை மலரைப்போன்ற பெரியகண்களை யுடையவளான திருமாலினது உடன்பிறந்தவளான துர்க்கை அழுதாள்; (பலசொல்லி என்? எதற்கும்) இரக்கங்கொள்ளுதலில்லாத [கல்நெஞ்சரா யிருக்கின்ற] அரக்கமங்கையர் தாமும், (மனஞ்) சோர்ந்து புலம்பினார்கள்; (எ-று.)

‘பெண்தானுற்றபீழை உலகுக்கெல்லாம்பெரிதன்றோ’ என்று கீழ்க்கவியிற் கூறியதை, இனி, இரண்டுகவிகளால் விவரித்துக் கூறுகின்றனரென்னலாம். கணவன்உயிரொடுங்கிக் கிடப்பது கண்டு மனம்பொறாமற் சீதாபிராட்டி புலம்பவே, மேலுலகத்துள்ள பெருஞ்சிறப்பினரான தெய்வமங்கையரேயன்றி எதற்கும் மனமிளகாத அரக்க மங்கையரும் மனமிளகிப் புலம்பலானாரென்பதாம். ஒரு பெண்ணின் துயர் அவ்வினத்தைச் சார்ந்தவர்க்கெல்லாம் துயரத்தை மிகுதியாக விளைக்குமென்பது பற்றிப் பெண்பாலாரையே முற்பட இச்செய்யுளிற் கூறினர். (உயிரொடுங்கிக் கிடந்த இலக்குமணனைக் கண்டு ஸ்ரீராமபிரான் துயரமுற்றபோது பரமசிவன் முதலியோரும் துயருற்றாரென்று கீழ்ப்படலத்துக் கூறிய கவி, சீதைபுலம்புகையில் பார்வதி முதலியோரும் புலம்பினாரென்றது பொருத்தமே.)

கங்கையென்றது-கங்காநதியின் பெண்தெய்வத்தை. பார்வதியினது அமிசவிசேடமான துர்க்கை, திருமால் கிருஷ்ணனாகி வசுதேவன் மனைவியான தேவகியின் வயிற்றில் அவதரித்தவுடனே அப்பெருமானது விருப்பத்தின்படி தான் நந்தகோபன்மனைவியான யசோதையின் வயிற்றில் ஒரு பெண்குழந்தையாய்ப் பிறந்ததனாலும், கண்ணன் கட்டளைப்படி வசுதேவன் எவருமறியாமல் கண்ணனாகிய ஆண்குழந்தையை யசோதையினிடத்திற் கொண்டுபோய்விட்டு அங்கிருந்த துர்க்கையாகிய பெண்குழந்தையை எடுத்துக்கொண்டு வந்து அக்குழந்தையையே தமக்குப் பிறந்ததாகக் கம்சனுக்குக் காட்டியதனாலும், துர்க்கைக்குத் தந்தையான நந்தகோபன் துர்க்கையின்முன்பிறந்தவனான கண்ணபிரானை வளர்த்த தந்தையாகுதலாலும், துர்க்கை ‘கமலத்தடங்கண்ணன் தங்கை’ எனப்பட்டாள். பி - ம்:—[1]அழலும். [2]பதுமமலர்மேன், மலர்மேலிருந்தாள்பரிந்தழுதாள். [3]தாந்தளர்ந்தார். (2628)

6. பொன்றாழ் குழையா டனையின்ற பூமா மடந்தை புரிந்தழு
தாள், குன்றா மனையுந் தருமமுமெய் [1]குழைந்துகுழைந்து [2]தளர்ந்
தழுத, பின்றா துடற்றும் பெரும்பாவ மழுத பின்னென் பிறர்செய்
கை, நின்றார் நின்ற படியழுதார் நினைப்பு முயிர்ப்பும் [3]நீத்திட்டார்,

(இ - ள்.) பொன்னாற்செய்யப்பெற்றுத் தொங்குந்தன்மையுள்ள குழையென்னுங்காதணியை (முன்பு) அணிந்தவளான சீதாபிராட்டியைப்பெற்ற சிறப்புள்ள பூமிதேவி, (மனத்திற்) பேரிரக்கங்கொண்டு புலம்பினாள்; குறையாத [மிகப்பலவாகவுள்ள] வேதங்களும் தருமதேவதையும் (உடல்) மிகவும் வாடிப்போய் மனஞ்சோர்ந்து அழுதன; பின்வாங்காமல் (தனக்குஉரியாரை) வருத்துந்தன்மையுள்ள பாவமும், (சீதாபிராட்டிதிறத்தில் இரக்கங்கொண்டு) அழுதது: அயலார்வருந்தின செய்கையைக் குறித்து இனி, (வேறு சொல்லவேண்டுவது) யாது? ஆங்காங்கிருந்தவர், (செய்யவேண்டுவது இன்னதென்று தோன்றாமல் திக்பிரமை கொண்டு அசையாது) நின்றபடியே புலம்பலானார்கள்; (அப்போது சீதாபிராட்டி, மிக்க துயரத்தால்), பிரஜ்ஞையையும் மூச்சுவிடுதலையும் நீங்கினாள்; (எ - று.)

சீதாபிராட்டியைப் பெற்றவளாதலால், பூமிதேவியை இங்கே தனியாக முதலில் எடுத்துக்கூறினார். தருமத்துக்கு மாறானசெயல் நிகழ்கையில், அத்தருமத்திற்குஉரிய தேவதை வருந்துதல் இயல்பே. தன்னைச்செய்தாரை எப்போதும் வருத்துவதையே தொழிலாகக்கொண்ட பாவமும், இந்தச்சீதையின் துயரத்தைக் கண்டு தான் மனம்பொறாமல் வருந்திற்றென்றால், மற்றையோர் யாவரும் வருந்தினரென்பது கூறவேண்டுமோ? என்னும் கைமுதிக நியாயம்தோன்றக்கூறினார்: தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. இவ்வாறு யாவரும் அழும்போது சீதாபிராட்டி துயரமிகுதியால் பிரஜ்ஞைதப்பி மூர்ச்சித்தனளென்க. பி - ம்:—[1]குலைந்துகுலைந்து. [2]விழுந்தழுத. [3]நீக்கினார், நீங்கினார். (2629)

7.—அரக்கியர் சைத்தியோபசாரஞ்செய்யவே, சீதை தெளிந்து மிகவருந்தல்.

நினைப்பு முயிர்ப்பு நீத்தாளை நீரால் தெளித்து நெடும்பொழுதின்,
இனத்தி னரக்கர் மடவார்க ளெடுத்தா ருயிர்வந் தேங்கினாள், கனத்
தின் நிறத்தான் றனைப்[1] பெயர்த்துங் கண்டாள் கயலைக் கமலத்தால்,
சினத்தி[2] னலைப்பா ளெனக்கண்ணைச் [3]சிதையக்கையால் மோதினாள்.

(இ - ள்.) பிரஜ்ஞையும் சுவாசமும் இல்லாமல் (மூர்ச்சித்துக் கீழேவிழுந்து)கிடந்த அந்தச் சீதாபிராட்டியை, கூட்டமாகவுள்ள அரக்கர் குலத்தில் தோன்றின மங்கையர்,—நீரைக்கொண்டுமேலே தெளித்து (த் தமது கைகளினால் பிடித்து வாரி) எடுத்தார்கள்; (சீதாபிராட்டி), வெகுநேரங்கழிந்தபின்பு (ஒடுங்கியிருந்த) பிராணன் (செவ்வனே) வரப்பெற்று அழுது,—காளமேகம்போற் கறுத்த திருநிறமுடைய ஸ்ரீராமனை மறுபடியும் பார்த்து, சினத்தினாற் கயல் மீனைத் தாமரையைக்கொண்டு மோதுபவள்போல (அப்பிரானது அந்நிலையைக்கண்ட தனது) கண்களை அடியுண்ணும்படி (தன்) கையால் மோதினாள்; (எ - று.)

மூர்ச்சித்துவீழ்ந்திட்ட சீதாபிராட்டி அரக்கமகளிர்செய்த வெம்மைதீரும் செயல்களால் மூர்ச்சைதெளிந்து, பெருந்துயர் கொண்டு தன்கணவனுடலை மீண்டும் கண்ணுற்கண்டு, அந்தக்

கொடுமையைக் காணும்படி நேர்ந்த தன் கண்ணின்மீதுள்ள சினத்தினால் அந்தக்கண்ணைத் தனது கைகளால் மோதிக் கொண்டன ளென்பதாம். சினங்கொண்டு கயலைக் கமலத்தால் அலைப்பாள்போல என்ற இடத்து உவமையணியோடு ஏதுத்தற் குறிப்பேற்றவணியும் கலந்து வந்தது. சீதைக்கு இராமனைப் பற்றியுள்ள அன்பைக் கெடுத்து இராவணன்மீது அதனை யுண்டாக்க வேணு மென்ற கருத்தோடு இருப்பவராதலால், அரக்கியர், சீதைக்கு ப்ரஜ்ஞையுண்டாகும்படி சைத்தியோபசாரஞ் செய்தன ரென்க. நீரால் தெளித்து என்பதற்கு-நீரின்மூலமாகத் தெளிவுண்டாகச் செய்து என்றுஉரைப்பாருமுளர். உயிர்-உயிர்ப்புமாம். பி-ம்:—[1]பின்னும். [2]அலைத்தா லெனக் கண்ணை, அலைத்தாளிலைய கணை. [3]சீதை. 'சினத்தாற்சிதையாலிலைவயிற்றைச் சிதையக்கை யான் மோதினள்' என்று ஒருபிரதியில் நான்காமடி. (2630)

8.—இதுவும் அடுத்த கவியும்-சீதையின் பெருந்துயர நிலையைக் கூறும்.

அடித்தாண் முலைமேல் வயிறலைத்தா ளழுதாள் தொழுதாளனல் [1]வீழ்ந்த, கொடித்தா னென்ன மெய்சுருண்டாள் கொதித்தாள் பதைத்தாள் குலைவுற்றாள், [2]துடித்தாள் மின்போ [3]லுயிர்கரப்பச் சோர்ந்தாள் சுழன்றாள் துள்ளினாள் குடித்தாள் [4]துயரை யுயிரோடுங் குழைத்தா[5]ளுழைத்தாள் குயிலன்னாள்.

(இ-ள்.) குயில்போல் (இனிய) குரலையுடையவளான சீதை, முலையின்மேல் அடித்துக்கொண்டாள்; வயிற்றிலும் அறைந்து கொண்டாள்; அழுதாள்; தொழுதாள்; நெருப்பில் வீழ்ந்த கொடி யென்னும்படி உடல்சுருண்டு துடித்தாள்; துயரத்தால் (மனம்) வெதும்பினாள்; பதைத்தாள்; நடுநடுங்கினாள்; துடித்தாள்; மூச்சுக் குறைய மின்னல்போலத் துவண்டாள்; சுழன்றாள்; துள்ளினாள்; துயரத்தை யுட்கொண்டவளாய் உயிரோடும் ஒன்றாக்கினாள்; (இவ்வாறு) மிகவும் வருந்தினாள்; (எ-று.)

இச்செய்யுளிற்கூறிய செயலெல்லாம், துன்பத்தினால் நேர்ந்தவை. உயிரைக்குடித்தாள்-மரபுவழுவமைதி. பி-ம்:—[1]விழித்தாள். [2]நடித்தாள். [3]உயிர்வங்தேங்கினாள். [4]உயிரையுயிரோடுங் குழைந்தாள், உயிரையுரையோடுங்குழைந்தாள். [5]உழைத்த, உலைந்தாள், உளைந்தாள். (2631)

9. **விழுந்தாள் புரண்டா ளுடன்முழுதும் [1]வியர்த்தா ளயர்த்தாள் [2]வெதும்பினாள், எழுந்தா ளிருந்தாண் [3]மலர்க்கரத்தை நெரித்தாள் சிரித்தா ளேங்கினாள், கொழுந்தா வென்றா ளயோத்தியர்தங் கோவே யென்றா [4]ளெவ்வுலகுந், தொழுந்தா ளரசே யோவென்றாள் சோர்ந்தா ளரற்றத் தொடங்கினாள்**

(இ-ள்.) (பின்னும் சீதை,—விமானத்தில்) விழுந்து, புரண்டாள்; உடம்பு முழுதும் வியர்வைகொண்டாள்; (உடம்பு) சோர்ந்தாள்; மனங்கொதித்தாள்; எழுந்து உட்கார்ந்துகொண்டு, (தன்) தாமரைமலர்போன்ற கையை (மடக்கிக்கொண்டு) நெரித்தாள்;

(இன்னதென்று தோன்றாமல்) சிரிப்புக்கொண்டாள்; ஏங்கினாள்; கொழுந்தனே! என்று உரக்கக்கூவினாள்; அயோத்தியிலுள்ளார்க்குத் தலைவனே! என்றாள்; எல்லாவுலகத்தவரும் வீழ்ந்து வணங்கத்தக்க திருவடிகளையுடைய அரசனே என்றும் கூவினாள்; (மனம்) தளர்ந்தாள்; (முடிவாக), வாய்விட்டுப் புலம்பத்தொடங்கினாள்; (எ - று.)—புலம்புவதை, மேல் பன்னிரண்டு கவிகளிற் காண்க.

பெருந்துயரத்தால் விழுதல் முதலிய செயல்கள், சீதாபிராட்டியினிடம் நிகழ்ந்தன வெனக. பிறர் இகழும்படி தன் நிலை மிகவும் மாறுகிக் கேடு விளைந்ததுபற்றி, சீதாபிராட்டி நகைக்கலாயினாள்: இது, எள்ளல்பற்றிவந்த நகை: அவலம் தோன்ற நின்றது. கொழுந்தன்-கணவனுடன் பிறந்தவன். இலக்குமணன் ஸ்ரீராமன் என்ற இருவரும் யுத்தகளத்தில் வீழ்ந்து கிடத்தலால், இருவரையும் கூவிச் சீதை கதறலாயினள். அரசேயோ—விளி. பி - ம்:—[1]வெயர்த்தாளயர்த்தாள், வியர்த்தாளுயிர்த்தாள். [2]வெய்துயிர்த்தாள், மேன்மேலும். [3]இரு, தளிர்க். [4]ஏழுலகும், மூவுலகும். ()

வேறு.

10.—பதினொருகவிகள் - சீதை அரற்றுவதைத் தெரிவிப்பன.

உறமே வியகா தலுனக் குடையார்
[1]புறமே துயிலா ரொடு[2]பூ ணகிலாய்
மறமே புரிவார் வசமா யினையோ
அறமே கொடியா [3]யிதுவோ வருள்தான்.

பன்னிரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) அறக்கடவுளே! உன்னிடத்தில் மிகுதியாகப் பொருந்திய அன்பையுடையவராய் (உனக்குப்) புறம்பானரிடத்துச் சிறிது சம்பந்தமும் வைத்துக்கொள்ளாதவரான என்கணவரோடு (நட்பைப்) பூணமாட்டாது, அதருமத்தையே புரிபவரான அரக்கரது வசத்தில் ஆய்விட்டனையோ? கொடியோய்! (உனது) அருள் இவ்வாறுனதோ? (எ-று.)—உனக்கு-வேற்றுமைமயக்கம். பி-ம்:—[1]புறமேதுயிலாரொடு, புறமேதுயில்வாரொடு, புறமேபயிலாரொடு. [2]பூண்முலையான், பூண்முலையார். [3]இவையோ. உறமேவியகாதலுனக் குடையார் என வஞ்சிவிருத்தமாகவும் பிரிக்கலாம் (2633)

11\. முதியா ருணர்வே த[1]மொழிந் தவலால்
கதியே துயிலார் துயர்கா ணுதியோ
[2]மதியேன் மதியே னுனை [3]வாய் மையிலா
விதியே கொடியாய் விளையா டுதியோ.

(இ-ள்.) சத்தியத்தினிடத்திலே (பட்சபாதம்) இல்லாத ஊழ்வினையே! (அறிவினாலும் நன்னடத்தையினாலும்) சிறந்தவராகி (எல்லாவற்றையும்) அறிந்துசொல்லுகிற வேதம் சொல்லிய வழிகளில் (செல்வது) அல்லாமல் (வேறு) எந்த வழியிலும் செல்லாதவரான பெரியோர்களுக்குத் துன்பத்தையுண்டாக்கக்கடவையோ?

[உண்டாக்குதல் தகுதியன்று என்றபடி]; உன்னை (நான் ஒரு பொருளாக) மதிக்கவேமாட்டேன்; மதிக்கவேமாட்டேன்; (நீ) கொடுமையுள்ளவனாக இருக்கின்றாய்; (நீ இவ்வாறு செய்து) விளையாடுகின்றாயோ? (எ - று.)

விதியென்பது - இப்பிறவியிலே சத்தியத்திற் பற்றுடையவர்களாய் அதைக் கைவிடாதிருப்பவரையும் பீடித்தலும், சத்தியத்திற் சிறிதும் பற்றில்லாமல் அசத்தியத்திலேயே செல்வாரையும் இன்பத்திற்கு உள்ளாக்குதலும் உடைமையால், 'வாய்மையிலாவிதியே' என்று அதனைச் சீதை திட்டுகின்றாள். ராமலக்ஷ்மணர்களின் நாசத்தாற் சத்தியத்திற் பற்றுள்ள பெரியோர்களான இருடியர்க்குத் துன்பம்விளைவதும், அதனால் அரக்கர்கட்கு மகிழ்ச்சி விளைவதும் காண்க. நீ ராமலக்ஷ்மணர்களை இறந்தவராகச்செய்தது எங்கள் மனத்தைச் சோதிக்கச்செய்த விளையாட்டோ? என்பது, 'விளையாடுதியோ' என்பதன் கருத்து; நி விளையாட்டு வகையாகச்செய்தாயென்றாலும் இந்த உன்செயல் மிகக்கொடியது என்பாள் 'கொடியாய்' என்றாள். முன் இரண்டடிகட்கு—'பெரியோரும் வேதமும் கூறிய முறையில் அல்லாமல் வேறுமுறையிற் செல்லுதலில்லாதவரான என்னைப்போன்றவரின் அல்லது என்கணவரானஸ்ரீராமபிரானின் துயரத்தைக் காணக்கடவையோ?' என்று பொருள் உரைப்பாருமுளர்; 'தருமமுணர்ந்த பெரியோரின் ஒழுக்கமும் வேதமுமே உலகத்தோர் மேற்கொண்டு நடத்தற்கு உரிய பிரமாணங்கள்' என்று நூல்கள் கூறுவது, இங்கு உணரத்தக்கது. பி - ம்:—[1]மொழிந்தகலார். [2]மதியேமதியேயுனை, மதியான்மதியேனுனை, மதியேமதியேனுள. [3]வாய்மையினால். (2634)

12. கொடியே [1]னிவைகாண் கிலனென் னுயிர்கோள்
முடியா [2]தமனே முறையோ முறையோ
விடியா [3]விருள்வா யெனை [4]வீ சினையே
அடியே னுயிரே யரு[5]ணா யகனே.

(இ - ள்.) கொடும்பாவியாகிய யான்,—(ராமலட்சுமணர்கட்கு நேர்ந்த) இந்தநிலைமையைப் பார்த்துச் சகிக்கமாட்டேன்; என்னுடைய உயிரைக்கொள்வதையும் செய்துதீர்க்காத யமனே! (நான் பெருந்துயருறுமாறு அவ்விருவருயிரைமாத்திரம் முடித்துவிட்டது உனக்கு) முறைமையாகுமோ! முறைமையாகுமோ!! என்னுயிர் போன்றவனே! (என்னிடத்துப்) பேரருள்வைத்திருக்கின்ற தலைவனே! (ஒருபொழுதும்) விடிதலில்லாத (பெருந்துயராகிய) இருளில் (எப்போதும் நான இருக்குமாறு) என்னைத் தள்ளிவிட்டாயே?

முன்னிரண்டடி-ராமலக்ஷ்மணர்களின் உயிரைக் கவர்ந்த யமனையும், பின்னிரண்டடி தன்னைப் பெருந்துயரம் அடையும்படி விட்டிட்டுப் பரலோகஞ் சேர்ந்த ஸ்ரீராமபிரானையும் குறித்த சீதையின் புலம்பல். பரிகாரமில்லாத துன்பமென்பாள் 'விடியாவிருள்' என்றாள். 'முடியாய்' என்ற பாடத்திற்கு, நான் இத்துயரைக் காணுதபடி என்னுயிரைக்கொள்ளுதலை முடிப்பாய் என்க. பி-ம்:—[1]உயிர். [2]தவமே. [3]இருளாகென. [4]வீசினையோ. [5]நாயகமே. (2635)

13. எண்ணு[1]மெயி ேனு டுயிருந் ததுநின்
புண்ணு கியமே னி[2]பொருந் திடவோ
மண்ணே ருயிரே யிமையோர் வலியே
கண்ணே [3]யமுதே கருணு கரனே.

(இ - ள்.) உலகத்தார்க்கு உயிர்போல் அருமையானவனே! தேவர்கட்குப் (பகைவரை யொழித்தலாற் சிறந்த) பலமாக இருப்போனே! (எனது) கண்போன்றவனே! அமிருதம்போல இனிமையானவனே! தயைக்கு இருப்பிடமானவனே!(நேர்ந்தவருத்தத்தைப்) பொருள்செய்யாமல் (இந்த) உடம்போடும் (நான் இத்தனை நாள் இங்கே) பிழைத்திருந்தது, (பகைவர் அம்பாற்) புண்பட்டுக் கீழ் விழுந்துகிடக்கிற(உனது)திருமேனியைச் சேர்வதற்காகத் தானே?

நான் அரக்கர்கையிலகப்பட்டும் பெருந்துன்பத்தை யடைந்தாலும், உயிரைவிட்டிடாமல் இந்த உடம்போடு இத்தனைநாள் காத்திருந்தது, நீ பகைவரையெல்லாம் வென்று என்னைச் சிறை மீட்க நான் உன்னைச் சேரலாமென்ற எண்ணத்தினுலே யல்லவோ? அப்படியிருக்க, பகைவர் அம்பு உடம்பெல்லாம் துளைத்துப் புண்ணுக்க அந்தப் புண்ணேடு கீழே கிடக்கின்ற நின்திருமேனியைப் பொருந்தும்படி நேர்ந்ததே! இந்தத் தீவினைக்கு என்செய்தேன்!! என்று சீதை கதறினளென்க. இலக்குமணனைப் பிரிந்த துயரமேலீட்டால் ஸ்ரீராமன் உயிரொடுங்கிக்கிடக்கின்ருனென்ற உண்மையையறியாமல் பகைவரின் அம்பாலடியுண்டு வீழ்ந்துகிடப்பதாகக் கருதுவதால், சீதை 'புண்ணுகிய மேனி' என்கின்றனளென்னலாம்: "ஆழியானுக்கை தன்னை யம்பொன்று மறுக்கிலாமை, ஏழைநீ காண்டியனறே" எனத் திரிசடை தேற்றுமொழியில் வருவது காண்க. மெய் - உடம்பு. பி - ம்:—[1]மயலோடும், உயிரோடும். [2]பொருந்துறவோ. [3]கருணுகரனேயமிழ்தே. (2636)

14. [1]மேவிக் கனன்முன் மிதிலைத் தலையென்
பாவிக் கைபிடித் ததுபண் ணவநின்
ஆவிக் கொருகோள் வரவோ வலர்வாழ்
தேவிக் கமுதே மறையின்[2]தெளிவே.

(இ - ள்.) தாமரைமலரில் வாழ்கின்ற இலக்குமிதேவிக்கு அமிருதம்போல் இனிமையாக இருப்பவனே! வேதத்தினுல் (ஆராய்ந்து முதற்பொருளென்று) தெளியப்படுபவனே! கடவுளே! மிதிலாபுரியில் அக்கினிக்கு முன்னேயிருந்து (நீ) என்னுடைய பாவமுள்ள கையைப்பற்றியது [மணஞ்செய்துகொண்டது] உனது உயிருக்கே ஒருதீங்கு வருவதற்காகத்தானே? (எ - று.)

'பாவி' என்பது - கைக்கு அடைமொழி. பாவி என் என்று கூட்டி யுரைப்பினுமாம். தன்னைச் சிறைமீட்கப் புரிந்த போரில் இவ்வாறு இராமனுக்கு ஆபத்து நேர்ந்ததுபற்றி, 'நான் பெரும் பாவி: அப்படிப்பட்ட எனது கையைத் தீக்கடவுள் சாட்சியாகப் பிடித்து நீ மணஞ்செய்து கொண்டதனுல்தான் உனக்கு இப்போது

இவ்வாறான பெருந்தீங்கு நேர்ந்தது' என்று சீதை தன்னைப் பழித்துக்கூறுகின்றன ளென்க. இராமபிரானைத் திருமாலின் திருவவதாரமென்று குறிப்பிக்க, 'அலர்வாழ் தேவிக்கழுதே' என்றது. பி-ம்:—[1]வேள்விக். [2]திருவே. (2637)

15. [1]உய்யா [2]ளுயர்கோ சலை [3]தன் [4]னுயிரோடு
ஐயா [5]விளை யோருயிர்வாழ் கிலரால்
[6]மெய்யே [7]வினை யெண் ணிவிடுத் தகொடுங்
கைகே சிகருத் திதுவோ களிறே.

(இ - ள்.) ஆண்யானைபோன்றவனே! (உனக்கு நேர்ந்த இந்த நிலையைக்கேட்டால், நற்குணங்களாற்) சிறந்த (உனதுதாயாகிய) கௌசல்யை, (தனது) உயிரை வைத்துக்கொண்டு பிழைத்திராள்; தலைவனே! இளையவராகிய மற்றைமகளிரும், (இனி) உயிர்பிழைத்திருக்கமாட்டார்; (நமக்கு நேரவேண்டிய) தீமையை நினைத்து, (க்காட்டிற்கு) அனுப்பிய கொடிய கைகேசியினது கருத்து உண்மையாகவே இதுதானோ? (எ-று)

உன் தாயாகிய கௌசல்யாதேவியார் உனக்கு நேர்ந்த நிலையைக் கேட்டால், இனிப் பிழைக்கப்போகிறதில்லை; மற்றை மாதராரும் பிழைத்திருக்கப் போகிறதில்லை; கைகேசி உன்னைக் காட்டிற்குப் போகுமாறு சொல்லியது, யாவரும் இறந்தொழியத் தான் தன்புதல்வனோடு இனிதாக இருக்கவே என்று தோன்றுகின்றதென, கைகேசியைச் சீதைபழித்துரைக்கின்றாளென்க. ஒரேபுதல்வனான இராமபிரானைப் பிரிந்தகாலத்திலும் தனது கணவனுக்கு உற்றனசெய்துகொண்டு நாட்டிலிருந்த உத்தமியாதலால், 'உயர்கோசலை' என்றது. தசரதன் மனைவிமார் யாவரும் கௌசலையைவிட வயசிறுல் இளையவராதலின் இளையோர் என்றாள். இனி இளையோர்-(உனது) தம்பிமார் எனினுமாம். சிறந்த இராசகுலத்திலே பிறந்தும் அதற்கு ஏற்ற முறைமையைக் கைவிட்டு மூத்தமகனுக்கு உரிய அரசாட்சியை இளையவனான தன் மகனுக்கு வேண்டியதோடு நில்லாமல், மூத்தவனைக் காட்டிற்குச் செல்லும்படியும் ஏவினளே யென்ற தகுதியின்மையை விளக்குதற்கு, 'கொடுங் கைகேசி' என்கிறாள். சிலபிரதிகளில் இரண்டாமடி 'வெய்யாளில் சுமித்திரை யாணகர்வாய்' என்றும், 'வெய்யாளில் சுமித்திரை மாநகர்வாய்' என்றும் உள்ளது. பி - ம்:—[1]உய்யார். [2]உயிர். [3]இன். [4]உயிரோ, உயிரும். [5]இளையோனகராளகிலான், இளையாரவர் வாழ்கிலரால், இளையானகர்வாழ்கிலனும். [6]மெய்யா. [7]உனை. (2638)

16. தகை[1]வா ணகர்நீ தவிர்வா யெனவும்
வகையா துதொடர்ந் தொருமான் [2]முதலாப்
புகையா டியகா டுபுகுந் துடனே
பகையா டியவா பரிவே துமிலேன்.

(இ - ள்.) '(உனக்குத்) தகுதியான [நீ அரசாட்சி செய்யும் முறைமையையுடைய] ஒளியுள்ள (அயோத்தி)நகரை, (இராமனே! நீ)தவிரவேணும்' என்று (கைகேயி) சொல்லவும், (உடனே அதற்கு

வேறுவகையாக மொழிகூறும்ல் (அந்தச்சொல்லைப்) பற்றுக்கோடாகக் கொண்டு (அங்கங்கே) பற்றியெரியுந் தன்மையுள்ள காட்டிற் புகுந்து ஒப்பற்ற மான் முதலாகக்கொண்டு (இதுவரையிலும் நீ) பகைவர்களை வென்ற விதம் (என்னே? இப்படிப்பட்ட உன் திறத்தில் நான்), அன்பு ஏதும் இலேன்; (எ-று.)

உன் திறத்தில் உண்மையான அன்பு எனக்கு இருக்குமாயின் உனக்கு இவ்வகையான நிலை நிகழ்ந்தபின்பு என்னுடலில் உயிர் தங்கியிருக்கலாமோ? இன்னும் என்னுயிர் போகாமல் நிற்பதனால் உன்னிடத்து எனக்கு அன்பு சிறிதும் இல்லை யென்பது பெறப்படுமென்று தனது தன்மையைச் சீதாபிராட்டி பழித்துக்கூறுகின்றாள்: இச்செய்யுளுக்கு வேறு வகையாகவும் பொருள் கூறலாம்: அது வருமாறு:—'தகை-(பலவகைக்) குணங்களும் நிரம்பிய, வாள்நகர்-ஒளியுள்ள நகரில்தானே, நீ தவிர்வாய்-நீ தங்கியிருப்பாய்,' எனவும் - என்று (நீ என்னை நோக்கிச்) சொல்லவும், (நான்), வகையாது-ஒருவகைப்படுத்தாமல் [அப்பேச்சைக் கேளாமல்], தொடர்ந்து-(உன்னைத்) தொடர்ந்து, புகையாடிய காடு புகுந்ததனால், உடனே, (என்பொருட்டாக), ஒருமான் முதல்ஆ - ஒப்பற்ற (மாயமானான) மாரீசனை முதலாக, பகை-பகைவர்களை, ஆடிய - கொல்லுமாறு நேர்ந்த, ஆ விதம் (இருந்தபடி என்னே!) என்பது. "நீ வருந்தலை நீங்குவென் யான்," "நாட்டயற், கல்லரக்குங் கடுமைய அல்லநின், சில்லரக்குண்ட சேவடிப்போது" என்று இவ்வகையாகத் தன்னைக் குறித்து இராமபிரான் கூறிக் காட்டிற்கு உடன்வருவதை விலக்கவும், தான் அதனைக் கேளாமல் தொடர்ந்து சென்றதனால்தான் அவ்விராமபிரானுக்கு மாரீசன் முதலாகிய பகைவரோடு போர் நேர்ந்ததென்று தன்னாற் பலவகைக் கஷ்டங்கள் ஸ்ரீராமனுக்கு விளைந்தது பற்றித் தன்னை நொந்து சீதாபிராட்டி 'பரிவேதுமிலேன்' என்கின்றனள் பி - ம்:—[1]வானகர், வாணகை. [2]முதலாய்ப். (2639)

17. இன்றீச் சிலையே [1]பிறரில் விடைவாய்ப்
[2]பின்றீ யெனவே [3]பிரிவோ டடியேன்
நின்றீ வதுநின் னைநெடுஞ் செருவிற்
கொன்றீ வதோர்[4]கொள் கை [5]குறித் தலினே.

(இ-ள்.) (நான் இலக்குமணனை நோக்கி, 'இராமனுக்கு மாயமானினால் ஆபத்து நேர்ந்த) இப்பொழுது, (அவ்வாபத்தை நீக்கச் செல்லாததனால் நீ வீணே வீரக்குறியாகக் கொண்டுள்ள) வில்லையும் ஒழிவாய்; பிறர்மனைவியினுடைய இடத்தில் தங்குவாய்' என்று (சினமும் வெறுப்பும் தோன்றுமாறு) சொல்லவே,—(இலக்குமணன் என்னைப் பாதுகாப்பதைவிட்டுப்)பிரிதலினால் நான் (தனிப்பட்டு) நின்றது,—(இந்தப்) பெரிய போரில் நின்னைக்கொல்வதாகிய ஓரெண்ணத்தை எண்ணியதனால்தானோ? (எ - று.)

மாயமானான மாரீசனைத் தொடர்து சென்ற ஸ்ரீராமன் இலக்குமணனைச் சீதைக்குப் பாதுகாவலாக வைத்திட்டுச் சென்று அந்த

மாயமானை அம்பெய்து வீழ்த்துகையில், அது தான் இறக்குந் தருணத்தில் இராமனது குரலால் 'ஹா ஸீதே! ஹா லக்ஷ்மணா'! என்று கூறியவண்ணம் இறந்ததாக, அதுகேட்ட சீதை கலங்கி 'இலக்குமணனைநோக்கி "குற்றம்வீந்தகுணத்தினெங் கோமகன், மற்றை வாளரக்கன் புரிமாயையால், இற்றுவீழ்ந்தன னென்னவும் என்னயல், நிற்றியோ"; "பெருமகனுலைவுறு பெற்றி கேட்டும் நீ, வெருவலைநின்றனை" என்று மிகமிகப் பழித்துச் சொன்னாள். சொல்லவே, அவ்விலக்குமணன் சீதையைப் பாதுகாப்பதை விட்டுச் செல்ல, சீதைதனிப்பட்டாள். அதுவே இராவணன் சீதையைக் கவர்ந்துசென்று இராமனுக்குக்கேடு விளைக்கக் காரணமானதனால, 'பிரிவோடடியேன் நின்றீவது - நின்னை நெடுஞ்செருவில் கொன்றீவதோர் கொள்கை குறித்தலினோ' என்று சீதை தன்னை நொந்து பழித்துக் கூறுகின்றனள்.

'நீ ஆபத்துவரவொட்டாமற் காப்பதற்காகக் கையில் வில்லை வைத்துக் கொண்டிருந்தும் இராமபிரானுக்கு ஆபத்துநேர்ந்த இந்தச் சமயத்தில் உதவச் செல்லாது இங்கே கிடக்கின்றனையே! இந்த வில் உனக்கு எதற்காக?' என்று பழிப்பாள் 'ஈ சிலையே; பிறரில்லிடைவாய்ப் பின்றீ' என்றாள். கொடுத்தலென்று பொருளுள்ள 'ஈ' என்பது-இங்கே தவிர்தலென்ற பொருளைத் தந்தது; "ஈபாவஞ்செய்தருளாலளிப்பாரார்" என்ற இடத்துப்போல. இடை-இடப்; வாய்-ஏழனுருபு. பின்றீ-பின்என்ற இடைச்சொல் வினைத்தன்மையயடைந்து, பின்னேயிருத்தல் என்ற பொருளைத் தர, அச்சொல், "முன்னிலை முன்னரீயுமேயும், அந்நிலைமரபின் மெய்யூர்ந்து வருமே" என்ற விதிபற்றி 'றீ' என்பதைப் பெற்று வந்தது. நின்றீவது-தொழிற்பெயர்வினைத்திரிசொல்: "செல்லாது நின்றீயல்" என்ற கலித்தொகையில், இங்ஙனமே நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்: இதில், இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமாக வந்தது,காலவழுவமைதி, கொன்றீவது என்பதும்-அவ்வாறனதே.

இனி, இச்செய்யுளின் முன்னிரண்டிகள் வேறுவகையாக வழங்குகின்றன: அவை வருமாறு:—"இன்றீகிலையேலிறவிவ் விடைமான், அன்றீயெனவும் பரிவோடடியேன்" என்பது பாடம். அடியேன்-யான், அன்று-அந்தக்காலத்தில், (இராமனைநோக்கி), இன்று இவ்விடை மான் ஈகிலையேல் - இன்றைக்கு இந்த இடத்தில் (இங்க) மானைப் பிடித்துத் தாராவிட்டால், இறவு - (எனக்கு) மரணம் (வருவதுநிச்சயம்); (ஆதலால், இந்தமானை), ஈ-(பிடித்துத்) தருவாய், எனவும்-என்றுவேண்டவும், (உடனே), (அந்தஇராமன் பிரிந்து சென்றதனால்), பரிவோடு - வருத்தத்தோடு, நின்றீவது - (நான் தனியே) நின்றது, நெடுஞ் செருவில் கொன்றீவது ஓர் கொள்கை குறித்தலினோ? என்பது பொருள். பி - ம்:—[1]பிறன். [2]பன்றீ. [3]பரிவோடு. [4]தீமை. [5]குறித்திலரோ, குறித்ததினோ, கொடுத்தலினோ. (2640)

18. [1]மேதா வினையோய் விதியார் வினைவால்
[2]போதா நெறியெம் மொடுபோ துறுநாள்

[3]மூதா மிவன்[4] முன் னமுடிந் திடெனும்
மாதா வுரையின் வழிநின் றனையோ.

(இ - ள்.) தீவினையின் பயனால், போவதற்குக்கடுமையான (காட்டு) வழியே (இராமன் சீதைஎன்ற) எங்களிருவரோடும் செலப்புறப்பட்ட காலத்திலே,—'இளையோய்! அறிவுடையோனே! மூத்தவனான ஸ்ரீராமன் (விதியினால் மரணத்தையடைவதாக விருந்தால், அவன் இறப்பதற்கு) முன்னமே (நீ) மரிப்பாயாக' என்று கட்டளையிட்ட (உனது) தாயாகிய சுமித்திராதேவியினது சொல்லின் வழியிலே இருந்து விட்டாயோ? (எ-று.)

சீதாபிராட்டி தனக்குப் பாதுகாவலாக இருந்த இளைய பெருமாளைத் தன் கடுஞ்சொல்லினால் பிரியுமாறுசெய்த செயலே இவ்வாறான தீமை ஸ்ரீராமனுக்கு நேர்ந்ததற்குப் பரம்பரைக் காரணம் என்று கீழ்க்கூறியதனால், அவ்விளையபெருமாள் கீழே இறந்து வீழ்ந்திருப்பது கண்டு அப்பிரானைக் குறித்து இரண்டு செய்யுளாற் புலம்புகிறாள்: 'நாங்கள் புறப்பட்டபொழுது நீயும் எங்களுடன்வர விரும்பி உனது தாயை வணங்கி விடைகேட்கையில், அவள் "மகனே இவன், பின் செல்தம்பி என்னும்படி யன்றடியாரினில் ஏவல்செய்தி. மன்னும் நகர்க்கே இவன்வந்திடின் வா அதன்றேல், முன்னம்முடி" என்று கூறினாளன்றே! அதையொட்டி இராமனுக்குத தீங்குவருமென்பதை முன்னமே உணர்ந்து அவனுக்குமுன்னமே நீ இப்பொழுது இறந்திட்டாயோ? என்று இலக்குமணன் இறந்துகிடப்பது கண்டு சீதை இரங்கிக் கூறியவாறு. 'பிதா உரை வழி நின்றார் அண்ணல், மாதாஉரைவழிதம்பிநின்றனையோ!' என்ற இடத்து, அவலம் நனி சொட்டுகிறது. மேதன் - அறிவையுடையவன்; இச்சொல் - விளிபெற்று வந்தது. மேதம் - அறிவு: இது 'மேதா' என்ற வடசொல்லின் விகாரம். இரண்டாமடியில் முரண்தொடை காண்க. விதியார்-இழிப்பின்கண் வந்தது; செறலினுமாம். பி - ம்:—[1]வேதாவினைபோய், வேதாவிளையோய். [2]போதே. [3]மூதாவிவன், மூதானவன். [4]முன்னர். (2641)

19. பூவுந் தளிருந் [1]தொகு [2]பொங் கணைமேல்
[3]கோவுந் [4]துயிலத்[5]தவிர்வாய் [6]கொடியார்
[7]ஏவின் றலைவந் தவிருங்[8]கணையின்
மேவுங் குளிர்மெல் லணைமே வினையோ.

(இ - ள்.)மலர்களும் தளிர்களும் நிரம்பிய சிறந்த படுக்கையில் அரசரான ஸ்ரீராமபிரான் துயிலவும் (துயிலுதலை) நீங்கினவனே! கொடிய இராக்கதருடைய வில்லினிடத்தினின்று தோன்றின பெரிய அம்புகளாலியன்ற குளிர்ந்த மெல்லிய படுக்கையை (இப்போது) விரும்பிச் சேர்ந்தாயோ! (எ-று.)

இலக்குமணன் அம்புப் படுக்கையில் உயிர்ப்பின்றிக் கிடப்பது கண்டு சீதை 'இலக்குமண' "கல்லணையிலே கண்டுயிலலாகாது" என்று பூவுந்தளிருங்கலந்த மெல்லணைமேல் என் கணவனார் ஸ்ரீராமரைக் கண்துயிலுமாறுபுரிந்து துயிலுதலையே விட்ட

வனே! படுக்கவில்லையென்ற குறைதீர இப்போது பகைவரின் கணைப்படுக்கையில் துயிலலாறுயோ என்று புலம்புகின்றனளென்க. கணையால் மேவுங் குளிர்மெல்லணை என்றது-எதிர்மறையிலக்கணை: வெப்பம்மிகுந்த வலிய அணை என்றவாறு. இனி, "துயிலத்தருவாய்" என்ற பாடமும் தருவாராரெனத்தொனிப்பொருளைக்கொண்டு சிறக்கும். ஏவு என்பது-அம்புகளை ஏவுதற்கு உரிய 'வில்' என்ற பொருளது. பி - ம்:—[1] தகு, தரு. [2] பொங்கணையிற். [3] கோவின், கோமுன். [4] துயிலித். [5] துயிலாய். [6] கொடியான். [7] ஏவுன். [8] கணையாம், கணையால். (2642)

20 நெய்யார் [1] பெருவேள் வி நிரப் பிநெடுஞ்
செய்யார் புனல்நா டு[2] திருத் துதியால்
மெய்யா மெய[3] வா சகமும் விதியும்
பொய்யா னவென்மே னிபொருந் துதலால்.

(இ - ள்.) நெய் நிரம்பப்பெய்யப்பெறும் பெருவேள்விகளைப் பூர்த்தி செய்துகொண்டு, நீண்ட வயல்கள் நிரம்பிய நீர்வளமுள்ள கோசலநாட்டை நீதிநெறிதவருமல் ஆட்சிசெய்திருப்பாய்;(நீ) என்னுடம்பைத் தீண்டியதனால் [என்னை விவாகஞ்செய்துகொண்டதனால்], (உனது) சத்தியமான பேச்சும், (உனது) நல்வினைப் பயனும், பொய்த்துவிட்டன; (எ-று.)—ஆல்-தேற்றம்.

'அரக்கரிடத்து அஞ்சித் தண்டகாரணியத்தில் உன்னைச் சரணமடைந்த முனிவர்கட்கு, "சூரறுத்தவனுஞ் சுடர்நேமியும், ஊரறுத்த வொருவனு மோம்பினும், ஆரறத்தினொடன்றிநின்றுரவர், வேரறுப்பென் வெருவன்மினீர்" என்று அபயமளித்த வாக்கும், இராமா! நீ என்னை மணந்ததனுற் பொய்க்க, இராச்சியத்தை ஆளவேண்டிய நல்வினையையும் இழந்தனை' எனச் சீதாபிராட்டி தன்னைப் பழித்துக்கூறிப் புலம்புகின்றனள். இது சிலபிரதிகளில் 18-ஆவது பாடலாகவுள்ளது. "ஏர்பிடித்தவன் என்னசெய்வான், பானைபிடித்தவள் பாக்கியம்" என்று வழங்கும் பழமொழி, இங்கு நினைவுக்கு வருகின்றது. பி - ம்:—[1] அழல், எரி, புரி. [2] திருத்துதியோ, திருத்துதியாம், திருத்துமெனும், திருத்துநியோ. [3] வாய்மையுநீதியுநீ. (2643)

21.—புலம்பிய சீதை இராமபிரான்மீது விழப்புக, திரிசடை தடுத்தல்.

மழுவாள் [1] வரினும் பிளவா [2] மனனுண்டு
[3] அழுவே னினியென் னிட[4] ரா றிடயான்
[5] விழுவே னவன்மே னியின்[6] மீ தெனலு
எழுவா ளைவிலக் கி[7] யியம் பினளால்.

(இ - ள்.) மழுவென்னும் ஆயுதமும், வாளாயுதமும் வந்து பிளந்தாலும் (அவற்றிற்கும்) பிளவுபடாத மனத்தைக்கொண்டு புலம்புபவளாகிய யான், இனிமேல் எனது துன்பம் தணியுமாறு அந்த இராமபிரானது திருமேனியின்மேல் விழுந்து இறப்பேன் என்றுசொல்லி, (அங்ஙனம் விழுதற்கு) எழுந்த சீதாபிராட்டியைத் தடுத்த(த் திரிசடை) சொல்லலானுள்; (எ - று.)

'என் துயர் நீங்குவதற்கு வேறுவகையில்லாமையால், யான் என் பிராணநாயகனுகிய இராமன்மேல் விழுந்து தழுவி உயிரை விட்டிட்டு என் துயரத்தை யொழிப்பேன்' என்று சொல்லி அங்ஙனம் செய்யத் துணிந்த சீதாபிராட்டியை விலக்கித் திரிசடை கூறலானுளென்க. ஆல்-ஈற்றசை. பி-ம்:—[1]உறினும். [2]மனனேடு. [3]அழுவாரினியென், அழுவேனினியின்று, எழுவேனெனிலென், எழுவானெனினென்று. [4]ஆறுவன்யான், ஆற்றிடுநாள். [5]விழுவான். [6]மீதர். [7]இயம்பினர். (2644)

வேறு.

22.—திரிசடை அரக்கியரைவிலக்கிச் சீதையைக் கிட்டி அவள்காதோடு சில சொல்லத் தொடங்குதல்.

மாடுற வளைந்து நின்ற [1]வளையெயிற் [2]றரக்கி மாரைப்
பாடுற [3]வற்றம் நோக்கிப் பாவையைத் தழுவிக் கொண்டு
கூடின ளென்ன நின்று செவியிடைக் குறுகிச் சொன்னாள்
தேடிய [5]தவமே [6]யன்ன திரிசடை மறுக்கந் தீர்ப்பாள்.

(இ-ள்.) (முற்பிறப்பிலே சீதாபிராட்டி) தேடிவைத்த தவம் போலிருப்பவளான திரிசடையானவள்,—(அச்சீதையின்) மனக் கலக்கத்தைப் போக்குபவளாகி,—(அவளைச்) சுற்றிலும் நெருங்கச் சூழ்ந்துகொண்டிருந்த வளைந்துள்ள கோரப்பற்களையுடைய அரக்கிகளையெல்லாம் பக்கத்திலே பொருந்துதல் நீங்கிய நேரத்தைப் பார்த்து அச்சீதாபிராட்டியை நெருங்கி, இறுகத்தழுவிக் கொண்டு, (அவளுடம்பில்) ஒன்ருய்விட்டவள்போல இருந்து, (அப்பிராட்டியின்) காதிலே சொல்பவளானுள்; (எ-று)—அதனை அடுத்த ஏழுகவிகளிற் காண்க.

திரிசடை-விபீடணனது பெண்: பெருந்துன்பத்தால் தன்னுயிரையும் இழக்கலாமென்று சீதாபிராட்டி துணிவுகொள்ளும் போதெல்லாம் ஏற்பன சொல்லிச் சமாதானப்படுத்தி உதவுதலால், அந்தத்திரிசடையை 'தேடியதவமேயன்னதிரிசடை' என்ருர். புட்பகவிமானம் எத்தனைபேர்வந்தாலும் அகன்று இடம்கொடுக்குமாறு பரந்துநிற்குந் தன்மையதாதலால், அவ்வரக்கியர் பாடுற வற்றம் திரிசடைக்குக் கிடைத்தது, பி - ம்:—[1]வாள். [2]அவரை நீக்கிப். [3]அகற்றிநோக்கிப், நீக்கிநின்ற. [4]பற்றி, நின்று. [5]தெய்வம். [6]என்னத். (2645)

23.—ஏழுகவிகள்-ஒருதொடர்: திரிசடை சீதாபிராட்டியை மறுக்கந்தீர்த்தல்.

மாயமான் விடுத்த வாறுஞ் சனகனை வருத்த வாறும்
[1]போயநாள் நாக பாசம் [2]பிணித்தது போன வாறும்
நீயமா [3]தினையாய் மாள [4]நினைதியோ நெறி[5]யி லாரால்
ஆயமா மாய மொன்று [6]மறிந்திலை [7]போலு மன்னுய்.

(இ-ள்) தாயே! கழிந்த முன்னுள்களில், (இராவணன், மாரீசனென்ற) மாயத்தினுல் மானுனவனை (உன்னை மயக்க) அனுப்பிய

வகையும், மாயாசனகனை ஏற்படுத்தின வகையும், நாகபாசத்தினால் (இராமலக்ஷ்மணர்) கட்டுண்டதும் வெவ்வேறுவகையாகப் போயின ஆதலால் அவற்றை நீசமாக [இழிவான மாயச்செயலாக] நினையாதவளாய் உயிரைவிட்டிடும்படி நினைக்கின்றாயோ? சன்மார்க்கத்திற் செல்லாதவரான [துன்மார்க்கத்திற் செல்பவரான] அரக்கராலுண்டாகிய மிக்க மாயச்செயலைச் சிறிதும் உணராதவள் போலிருக்கின்றாயே; (எ - று.)

'அரக்கர் மாயச்செயலில் மிகவும் வல்லவராதலால், அவர் தமது மாயச் செய்கையாற் கட்டுப்படுத்த, அதனால் இந்த ராமலட்சுமணர்கள் இறந்தவர்போல இருக்கின்றார்களே யன்றி, உண்மையில் இவர்கள் இறந்துபோகவில்லை; நாகபாசத்தாற் கட்டுண்ட இவர்கள் எப்படி மீண்டும் அதுநீங்கப்பெற்று எழுந்தனரோ, அதுபோலவே இப்போதுள்ள இந்நிலைமைநீங்கி எழுந்து இவர்கள் மீண்டும் ஒருகுறைவுமின்றிப் பகைவெல்வார்கள்; ஆதலால், இது அரக்கர் மாயமென்பதை நினையாமல் உயிர்விடக்கருதுவது தக்கதன்று' என்று திரிசடை சீதாபிராட்டியைத் தேற்றினளென்க. 'போயநாள்' என்பதை எல்லாவற்றோடுங் கூட்டாமல் 'நாகபாசம் பிணித்ததும்' என்றதனோடு மாத்திரம் கூட்டி, நாகபாசத்தாற் பிணித்தது பிரமாத்திரத்தாற்கட்டியதற்கு முந்தின நாள் நிகழ்ந்ததெனக் கூறியதாகக் கொள்ளலுமாம். பிணித்தது போயவாறும் என்றவிடத்து உம்மை பிரித்துக்கூட்டப்பட்டது. இராவணன் மாயமானை விடுத்த செய்தி ஆரணியகாண்டத்தில் வந்துள்ளது. அன்னையென வருதலால், 'நீயமா' என்பவற்றிற்கு நீ அம்மாவெனக் கூறலாகாது. பி - ம்:—[1]போயமா. [2]பொதுவுறப். [3]நினைவாய். [4]நினைத்தியோ. [5]இலாதார், [6]அஞ்சலை. [7]அன்னம். (2646)

24. [1]கண்டன கனவும் பெற்ற நிமித்தமும் [2]நினது கற்பும்
[3]தண்டக முறையு [4]நாளிற் செய்கையும் தருமந் தாங்கும்
அண்டர் [5]நா யகன்றன் வீரத் [6]தன்மையு [7]மயரேல் செங்கண்
புண்டரீ கற்கு முண்டோ விறுதியிப் [8]புல்லர் கையால்.

(இ - ள்.) கண்டுள்ளனவான கனாக்களும், அடைந்துள்ள நல் நிமித்தங்களும், உன்னுடைய கற்பும், தண்டகாரணியத்தில் வசித்தபோது நிகழ்ந்த செயலும், தருமத்தை நிலைநாட்டுவதற்காகத் திருவவதரித்துள்ள தேவாதிதேவனான ஸ்ரீராமனுடைய வீரத்தன்மையும் (ஆகிய இவற்றையெல்லாம்) மறவாதே: செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய ஸ்ரீராமனுக்கும் அற்பரான இந்த அரக்கர்கையினால் மரணம் உண்டாகுமோ? (எ - று.)

அரக்கர் யாவரும் இறக்க ராமலட்சுமணர் வெற்றிபெறுவரென்பதற்கு அறிகுறியாகக் கனவும் நல்நிமித்தங்களும் நமக்குத் தோன்றியிருக்கவும், நீ அவற்றையெல்லாம் மறந்துவிட்டு இவ்விராமலட்சுமணர் அரக்கராற் கொலையுண்டாரென்று எண்ணிக் கலங்குவது சிறிதும் தகாது; தருமத்தை நிலைநாட்டவந்த இராமபிரானுக்கு அரக்கரால் இறுதியுண்டாக்கமுடியாதெனத் திரிசடை தேற்றினளென்க. கண்டன கனவுகள் "எண்ணெய்பொன்முடி

தொறு மிழுகியி றிலாத், திண்ணெடுங்கழுதைபேய் பூண்ட தேரின்மேல், அண்ணலவ்விராவண னரத்தவாடையன், நண்ணினன் றென்புலன் நவையில் கற்பினாய்'', "மக்களும் சுற்றமும்மற்றுளோர்களும், புக்கனரப்புலம்போந்ததில்லையால்'' எனவும், "இன்றிவணிப்பொழுதியைந்ததோர்கனு, வன்றுணைக் கோளரியிரண்டு மாறிலாக், குன்றிடை யுழுவையங்குழுக்கொண்டீண்டியே'', "வரம்பிலா மதகரி யுறையுமவ்வனம், நிரம்புறவளைந்தன நெருக்கிநேர்ந்தன, குரம்பறுபிணம் படக் கொன்றமாறிலாப், புரம்புகவிருந்ததோர் மயிலும்போயதால்'', "ஆயிரந் திருவிளக்கமையமாட்டிய, சேயொளி விளக்கமொன் றேந்திச் செய்யவள், நாயகன்றிருமனை நின்று நண்ணுதல், மேயினள் வீடணன் கோயின்மென்சொலாய்'' எனவும் வந்துள்ளவை யென்னலாம். நிமித்தம் - பின்னேவரும் நன்மை தீமைகளை முன்னரே யறிவிப்பன; சீதைக்கு நன்மையும் அரக்கர்க்குத்தீமையும்உண்டாமென்பதைத்தெரிவிக்கும் பலவகை நிமித்தங்கள், "ஆண்டகை யிராவணன் வளர்க்கு மவ்வனம், ஈண்டனவிறந்தவா லினங்கொள்செஞ்சிகை, தூண்டருமணிவிளக் கழலுந்தொன்மனை, கீண்டதால் வானவேறெறியக் கீழைநாள்'' என்பது முதலாகச் சுந்தரகாண்டத்திற் கூறப்பட்டுள்ளன. இனி, நிமித்தம்-சீதைக்கு இடக்கண் துடித்தல் இடத்தோள் துடித்தல் முதலியன எனக் கொள்ளலுமாம். செங்கட்புண்டரீகன்-புண்டரிகச்செங்கண்ணன்; விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது. கற்புடை மகளிர்க்கு அவரதுகற்பே தமது மாங்கலியத்தைக் காக்குமென்ற கொள்கைபற்றி, 'நினதுகற்பும் அயரேல்' என்றாள். தண்டக முறையும் நாளிற்செய்கை - அரக்கரிடத்திலிருந்து அபயம் வேண்டிய முனிவர்கட்கு "புகல்புகுந்திலரேல் புறத்தண்டத்தி, னகல்வரேனும் என்னம் பொடும் வீழ்வரால், தகவில் துன்பந்தவிருதிர் நீர்'', "சூரறுத்த வனுஞ்சுடர்நேமியும், ஊரறுத்தவொருவனுமோம்பினும், ஆரறத்திறேடன்றிநின்றாரவர், வேரறுப்பென் வெருவன்மின் நீர்'' என்று இராமபிரான் அபயமளித்தது.

கற்பு-பாதிவிரத்தியம்; அஃதாவது - தன்கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்; அது, கொண்டானிற் சிறந்த தெய்வம்இன்றெனவும், அவனை இன்னவாறே குற்றேவல்செய்து நீ வழிபட்டொழுகெனவும், இருமுதுகுரவர் அங்கியங்கடவுள் அறிகரியாக மந்திரவகையாற் கற்பித்தலானும், அந்தணர்திறத்தும் சான்றோர்தேத்தும் ஐயர்பாங்கினும் அமரர்ச் சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன் கற்பித்தலானும், கற்பாயிற்று. பி-ம்:— [1]கண்டவக்கனவும். [2]நின்ற. [3]தண்டகவிலாதார், தண்டவாளரக்கர். [4]பாவச்செய்கையும், செய்யுந்தகைமையும். [5]நாயகர்தம். [6]திண்மையும். [7]அயர்த்தாய் போலும், அயர்த்தாய்போலப், அயர்க்கலாமோ. [8]புலையர்க்கல்லால், புலையர்கையால்.

'தண்டகம்' என்ற பெயர்க்காரணம்:—சூரியகுலத்து மநுசக்கரவர்த்தியினது குமாரனான இட்சுவாகுமகாராசனுடைய மக்கள் நூற்றுவருள் கடைப்பட்டவனும், மூடனும் மூர்க்கனும் துஷ்டனு

மாய்த் தண்டனைக்குஉரிய னென்ற காரணத்தால் எதிர்காலவுணர்ச்சியையுடைய தந்தையால் 'தண்டன்' என்று பெயரிடப்பட்டவனும், தண்டகனென்று வழங்கப்படுபவனுமாகிய ஓரரசன் விந்திய மலைக்கும் சைவலமலைக்கும் இடையிலுள்ள நிலத்தைத் தன்னாட்சிக்கு உரியதாகக்கொண்டு மதுமந்தமென்கின்ற பட்டணத்தையமைத்து அங்கு அரசுபுரிந்துவருகையில், ஒருநாள் தனது புரோகிதரான சுக்கிராசாரியரது ஆச்சிரமத்தினுட் சென்று அவர் மகளாகிய அரஜை யென்பாளைக் காதலித்து வலியக் கற்பழிக்க, பின்பு அதனையுணர்ந்த அந்தப் பார்க்கவர் சினந்து 'ஏழுநாள்களில் அவன் குடும்பத்தோடும் சேனை முதலிய பரிவாரத்தோடும் அழிந்துபோக, அவனதுநாடு மண்மழையால் யாதொரு ஜீவஜந்துவுமில்லாமற் பாழாகக்கடவது' என்று சபிக்க, அங்ஙனமே அந்நாடும் அவ்வரசனும் ஏழாநாள் மண்மழையால் அழிந்துபோய்விட, அவ்விடம் பின்பு காடாகித் தண்டகாரணிய மெனப் பெயர்பெற்றதென்பதாம். (2647)

25\. ஆழியா [1]னாக்கை [2]தாக்கி யம்பொன்று [3]மறுக்கி லாமை
ஏழைநீ காண்டி யன்றே யிளையவன் வதன மின்னும்
ஊழிநா ளிரவி யென்ன [4]வொளிர்கின்ற துயிருக் [5]கின்னல்
வாழியாற் கில்லை வாளா [6]மயங்கலை [7]மண்ணில் வந்தாய்.

(இ - ள்.) அறிவில்லாதவளே! நீ சக்கராயுதத்திற்கு உரியவனை இவ்விராமனுடைய திருமேனியில் ஓர் அம்பும் மோதிக் கலங்கச்செய்யாத தன்மையைக் காண்கின்றாயன்றோ? (அதனால் அவனுயிருக்குச் சேதமில்லையென்பது திண்ணம்); பூமியினின்று தோன்றினவளே! (அம்பினால் தாக்கப்பட்டிருந்தாலும், இராமபிரானுக்கு) இளையவனான (இந்த) இலக்குமணனுடைய முகமானது இன்னும் (பிணமூஞ்சிப்படாமல்), கற்பாந்தகாலத்திலுதிக்கின்ற சூரியன்போல விளங்குகின்றது; (ஆதலால், ஸ்ரீராமகைங்கர்யத்தால்) நல்வாழ்வு பெற்றுள்ள இந்த இலக்குமணனுடைய உயிருக்கும் மரணம்இல்லை: (நிச்சயம்): வீணாக (நீ) கலங்க வேண்டாம்; (எ - று.)

திரிசடை பிரதியட்ச அநுமானப் பிரமாணங்களால் சீதையைத் தெளிவிக்கின்றனளென்க. துயரமடைந்து கலங்கவேண்டியதல்லாப் பொழுதிற் கலங்கித் துயரமடைவதனால், சீதையை 'ஏழை' எனவிளித்தாள். மறுக்கிலாமை=மறுக்கமில்லாமை. அம்பொன்றும் அறுக்கிலாமை என்று பிரித்தும் உரைக்கலாம். சீதாபிராட்டியை நோக்கி 'நீ சாமானியமானவளல்லை' என்று தெரிவிக்க 'மண்ணில் வந்தாய்' என்று விளிக்கின்றாள். பி - ம்:— [1]ஆகம். [2]பேணி, தன்னின், கன்னை, காணாய். [3]அறுத்திலாமை, உறுகிலாமை, அறிகிலாமை. [4]ஒளிர்கின்ற. [5]ஈனம், ஊனம். [6]மயங்கலர். [7]வேள்வி. (2648)

26\. [1]வியந்துள [2]னிராம [3]னென்னி னுலகமோ ரேழு மேலும்
[4]தீர்ந்தற மிரவி [5]பின்னுந் [6]திரியுமே தெய்வ மென்னும்
[7]வியந்துறும் விரிஞ்சன் மூன்று வுயிரெலாம் [8]வெருவ லன்னை
[9]ஆய்ந்தவை யுன்ன போதே யவ[10]னுளா றமு முண்டால்.

(இ-ள்.) ஸ்ரீராமன் (அரக்கனது அஸ்திரத்தாற் பிளப்புண்டு) உயிரொழிந்திருப்பானேயானால், (அப்போது) கீழும் மேலும் என்ற பதினான்குலோகங்களும் அழிந்தொழியும்; (அன்றியும்), இனியும், (தெய்வத்தின் கட்டளைக்கு அடங்கித் தவறாதுஉதித்து நடக்கின்ற) சூரியன் (வானத்திற்) செல்வனோ? தெய்வமுண்டென் பது யாதாய் முடியும்? பிரமன் முதலாகவுள்ள பிராணிவர்க்கங்கள் யாவும் அழிந்தொழியும்: (கீழே) ஆராய்ந்த உலகம் முதலிய பொருள்கள் அழியாமலிருக்கையில், அந்த ஸ்ரீராமர் உயிரோடிருக் கின்றார்; தருமமும் அழியாமல் நிலைத்துநின்றுள்ளது: (இது திண்ணம்;) ஆதலால், தாயே! ('ஸ்ரீராமனுயிர்க்குக் குறைநேர்ந்து விட்டதோ?' என்று நீ) அஞ்ச வேண்டா; (எ-று.)

ஸ்ரீராமன் உலகத்துக்கெல்லாம் உயிர் ஆதலால், அந்த உயிர் நீங்கினால் அவனுக்கு உடலாயுள்ள உலகம்முதலியனவும் அழிந்து விடும்: அவை அழியாதுநிற்றலால் அவ்விராமபிரான் உயிரோடு இருக்கின்றனனென்பது நிச்சயமென்று அருத்தாபத்தியாற் சீதை யைத் திரிசடை தெளிவித்தவாறு. தருமத்தை நிலைநாட்டப் பிறந்த ஸ்ரீராமன் ஒருகுறைவுமின்றி யிருத்தலினால், அவனால் நிலைநாட்டப் பட்டுத் தருமமும் உளதாகுமென்றனள். இராமபிரான் அரக்க ராற் கொலையுண்டானென்றால், தருமந் தோற்கப் பாவம் வென்ற தென்று ஏற்படும்; அப்போது தெய்வமில்லையென்ற நாஸ்திகக் கொள்கையே வலியுறுமென்பது, 'தெய்வமென்னும்' என்பதன் கருத்து. அவர்-இராமலட்சுமணருமாம். பீ-ம்:—[1] ஓய்ந்துளன், ஈர்ந்துளன். [2] வீரன. [3] எண்ணும். [4] தீர்ந்துறும், தீய்ந்துறும், தீய்ந் தறும். [5] பின்னைத். [6] திரியுமோ. [7] ஈய்ந்துளவெண்கணான்முன். [8] வெருவும். [9] ஆய்ந்தவர். [10] உள்ளார். (2649)

27. மாருதிக் கில்லை யன்றே மங்கைநின் வரத்தி னாலே
ஆருயிர் [1] நீங்கல் [2] நின்பாற் கற்புக்கு [3] மழிவுண் டாமே
[4] சீரிய [5] தன்றி தொன்றுந் திசைமுகன் படையின் செய்கை
பேருமிப் பொழுதே தேவ ரெண்ணமும் பிழைப்ப துண்டோ.

(இ - ள்.) பெண்ணே! நீ கொடுத்துள்ள வரத்தினால், அநுமா னுக்கு அருமையான உயிர் நீங்கப்பெறுதல் [மரணமடைதல்], இல்லை யல்லவோ? (அவனுக்கு மரணம் உண்டாயின்), நின்பால் கற்புக்கும் கேடு விளைந்ததாகுமே; இப்படி (நாம்) ஆலோசிப்பது, சிறிதும் சிறப்புடையதன்று; பிரமாத்திரத்தினால் நேர்ந்துள்ள (வானரர்களும் ராமலக்ஷ்மணரும் இறந்தாற்போன்ற) செயல் இப் பொழுதே நீங்கிவிடும்; தேவர்களின் கருத்துத் தவறுவது உண்டோ? (எ-று.)

இதுவரையில் ராமலட்சுமணர்கள் இறக்கவில்லையென்பதைப் பலவகையாகச் சொல்லி, இப்போது, 'அநுமான் இறந்துகிடக்கின் றான்போலத் தோன்றுகின்றானே; அவனுக்கு இறப்பு உண்டோ? நீ அவனுக்குச் சிரஞ்சீவியாக இருக்குமாறு வரமளித்திருக்கின் றாயே? அவ்வரம் பழுதுபட்டதாயின உன் கற்பே பழுதுபட்ட

தாகவேண்டாவோ? நாம் இப்படியெல்லாம் கருதுவது நன்றாக இல்லை; பிரமாத்திரத்தால் இவர்கள் கட்டுண்டிருப்பது விரைவில் தானே நீங்கிவிடும்; அப்போது எல்லோரும் உயிரொழிந்தாற் போன்ற நிலை நீங்கி எழுந்திருப்பார்கள்; தேவர்கள் இவர்களைப் பற்றி இவ்வாறு தான் நினைத்திருக்கிறார்கள்; அவர்கள் கருத்துப் பழுதுபடாது: மனந்தேறியிருப்பாயாக' என்று சீதையைத் திரிசடை தேற்றினளென்க. சீதை அநுமனுக்குச் சாவாமலிருக்குமாறு வரமளித்ததை "பாழியபணைத்தோள்வீர! துணையிலேன் பரிவுதீர்த்த, வாழிய வள்ளலே **யான்மறுவிலாமனத்தே** னென்னின், **ஊழியோர் பகலாயோதும் யாண்டெலா** முலகமேழும், ஏழும் வீவுற்ற ஞான்றும் **இன்றென விருத்தி** யென்றாள்" என்ற உருக்காட்டுபடலச் செய்யுளால் அறிக. அங்கு, '**யான்மறுவிலாமனத்தேன்** என்னின்... யாண்டெலாம்...இருத்தி' என்று சீதாபிராட்டி தன்கற்பின் மகிமையை முன்னிட்டே அநுமானுக்கு வரம் அளித்திருப்பதனாலும், கற்புக்குக் குறைவில்லையென்பது திண்ணமாதலாலும் அநுமான் இறந்திலனென்பது நிச்சயமென்பாள் 'மாருதிக்கில்லை... ஆருயிர்நீங்கல், நின்பாற் கற்புக்கு மழிவுண்டாமே' என்றாள். சீரியதன்றிது என்பதற்கு - இவ்வரக்கர் செயல் சீர்மை பெறுவதாகாது எனினுமாம். பி - ம்:—[1]நீங்கின் [2]ஆனால், உன்பால். [3]அழிவுமுண்டோ, அழிவுண்டாமல். [4]சீரியர். [5]அன்றித்தோன்றும், ஒன்றிதன்றே. (2650)

28. **தேவரைக் [1]கண்டேன் [2]பைம்பொற் செங்கரஞ் சிரத்திற் [3]சேர்த்தி,மூவரைக் [4]கண்டா [5]லென்ன [6]விருவரை முறையி னோக்கி, ஆவலிப் [7]பெய்து கின்றா [8]ரயர்த்திலை ரஞ்ச [9]லன்னை, கூவலிற் [10]புக்கு வேலை கோட்படு [11]மென்று கொள்ளேல்.**

(இ - ள்.) தேவர்களை (என்ன செய்கின்றார்களென்று) பார்த்தேன்; (அவர்கள்), திரிமூர்த்திகளைக் காண்பதுபோல (உயிரொடுங்கிக்கிடக்கின்ற) இராமலட்சுமணரிருவரையும் முறைமையோடு (பக்திபூர்வமாகத்) தரிசித்து, (தமது) பசும்பொன்னாபரணம் பூண்ட செவ்வியகைகளைத் தலையின்மேற் சேர்வித்துப் பெருஞ் செருக்கை யடைந்திருக்கின்றார்கள்: (சிறிதும்) வருந்துகின்றார்களில்லை; (ஆதலால்), தாயே! (நீ) அஞ்சாதே; 'சமுத்திரம் கிணற்றினுட் புகுந்ததனால் (அதனாற்) கொள்ளப்படும்' என்று கொள்ளாதே; (எ - று.)

'ராமலக்ஷ்மணர் இவ்வாறுகிடக்கையில் 'தேவர்கள் என்ன செய்கிறார்கள்?' என்று பார்த்தேன்; அவர்கள் திரிமூர்த்திகளைக் காணும்போது தலையின்மேற் கைகுவித்து வணங்குவதுபோலவே, இவர்களை வணங்கித்துதித்துப் பகைதீரும் என்று செருக்கொடிருக்கின்றார்களே யன்றி 'இவருக்கு ஊறுவந்திட்டதே!' என்று சிறிது வருத்தப்படுவதாகவும் தோன்றவில்லை; அதனாலும், இவர்கட்குக் குறையொன்றுமில்லையென்று நாம் துணியலாம்; ஆகலால், நீ அஞ்சவேண்டா' என்று தேற்றினளென்க. "கிணற்று நீரைக்கடல் கொள்ளாது" அன்றி "கிணற்றுநீரை வெள்ளங் கொள்ளாது"

[கொள்ளாது - ஒரு பொருட்டாக மதியாது] என்று பழமொழி யமைத்துள்ளவாறும்.

ஈற்றடிக்கு, கிணற்றின் நீரினுட் கடல்வெள்ளம் புகுந்தால் அக்கடல்வெள்ளத்தைக் கிணற்றுநீராற் கொள்ளமுடியாதவாறு போலவே, வற்றாத பலபராக்கிரமத்தையுடைய இராமபிரானது வலிமையால் அற்பபலத்தையுடைய அரக்கர் அழிவரேயன்றி, அரக்கரால் இராமபிரானை வெல்லமுடியாதென்பது கருத்து: இக் கருத்துக்கு ஏற்ப, விபீடணனடைக்கலப்படலத்தில் "ஆபத்தின் வந்தபய மென்றானை யயிர்த்தகல விடுதியாயின், கூவத்தின் சிறு புனலைக் கடலயிர்த்த தொவ்வாதோ கொற்றவேந்தே" என்று அநுமான் கூறியிருப்பதுங் காண்க. "கூவலந்தீம்புனலும் கொள்ளுமோ வெள்ளங் கோளிழைத்தே" என்ற சடகோபரந்தாதி, இங்கே ஞாபகத்துக்கு வருகின்றது. இவ்வடியிலே உபமானப் பொருளை நீ கொள்ளேல் என்று *ப்ரஸ்துதத்தில் அமைத்துக் கூறியது வனப்புநிலையணி: வடமொழியில் லலிதாலங்கார மெனப்படும். கீழ்ச்செய்யுளில் 'தேவரெண்ணம் பிழைப்பதுண்டோ?' என்று கூறியதை, இச்செய்யுளால் திரிசடை விரித்துக் கூறினளென்ன லாம். பி-ம்:—[1]கண்டேம். [2]அப்பால் [3]ஏற்றி. [4]கண்டார். [5]அன்ன. [6]இருவரும். [7]எய்திநின்றார், [8]அயர்த்தில வஞ்சில். [9]என்னை. [10]புக்கும், புக்கவ். [11]என்றல்கோளே. (2651)

29. மங்கல [1]நீங்கி னாரை யாருயிர் வாங்கி னாரை
நங்கையிக் கடவுண் மானந் [2]தாங்குறு [3]நவையிற் றன்றால்
[4]இங்கிவை [5]யளவை யாக விடர்க்கடல் கடத்தி யென்றாள்
சங்கைய ளாய தையல் சிறிதுயிர் தரிப்ப தானாள்.

(இ-ள்.) பெண்ணே! (தமது) பிராணநாயகன் இறக்கப்பெற்றவராய் (அதனால்) மங்கலநாண்வாங்கப்பெற்றவர்களைத் தெய்வத் தன்மையுள்ள இந்த விமானம் தாங்குகின்ற குற்றமுடையதன்று; இப்போது நான் கூறிய யாவும் (உண்மையை யறிதற்கு ஏற்ற) அளவை யாதலால் (இவற்றால் உண்மை தெளிந்து நீ அடைந் துள்ள) துக்கசாகரத்தைக் கடந்திடுவாய்' என்று கூறி முடித்தாள், (திரிசடை); (மனத்திற்) சங்கைகொண்டிருந்தவளான சீதாபிராட்டி, (அச்சொற்களால் தான்கொண்டசங்கை ஒருவாறு நீங்க), சிறிதளவாகப் பிராணனைத் தாங்கினாள்; (எ - று.)

உன்னை இந்தவிமானஞ் சுமப்பதும் உனது தலைவனான ஸ்ரீராமன் உயிரோடிருக்கின்றா னென்பதைத் தெரிவிக்குமெனவும் தேற்றினாள். இவ்வாறு பலகாரணங்கள் காட்டி இராமபிரான் உயிரோடிருப்பதைத் திரிசடை நிரூபிக்கவே, சீதாபிராட்டி சிறிது தேறி உயிர்தரிக்கலாயின ளென்க. முதலடிக்கு மங்கலம் நீங்கினாரையும் [கைம்பெண்களையும்] அருமையான தமது உயிர் நீங்கிச் சவமானவரையும் என்று உரைப்பாரு முளர். பி-ம்:—[1]நீக்கினாரை. [2]தாங்குதல், தாங்கல், தங்குதல். [3]நவையிற்றின்றால். [4]நங்கை. [5]அளவையாகும், உளவையாக. (2652)

* ப்ரஸ்துதம்-சொல்லுமாறு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள பொருள்.

30.—திரிசடையைநோக்கிச் சீதை 'உன்பேச்சிலுள்ள நம்புதலால் நான் இன்று உயிர்வைத்துக்கொண்டிருக்கின்றேன்' எனல்.

[1]அன்னை நீ யுரைத்த தொன்று [2]மழிந்தில தாதலாலே
உன்னையே [3]தெய்வ மாக்கொண் டித்தனை கால முய்ந்தேன்
இன்னமிவ் விரவு முற்று மிருக்கின்றே னிறத்த லென்பால்
முன்னமே [4]முடிந்த தன்றே யென்றனள் முளரி [5]நீத்தாள்.

(இ-ள்.) தாமரைமலரில் வசிப்பதைவிட்டு (ஜநகன்மகளாக)த் திருவவதரித்தவளான சீதாபிராட்டி,—(திரிசடையை நோக்கி), 'அன்னை! நீ சொல்லியது எதுவும் (இதுவரையிலும்) பழுதுபட்டதில்லை; ஆதலால், உன்னையே தெய்வமாகநினைத்து, இத்தனை காலம் உயிர்வாழ்ந்திருந்தேன்; இன்னும் இந்த இராத்திரி முடியுமளவும் உயிர்வைத்துக்கொண்டிருக்கின்றேன்; இறத்தலென்பது, என் விஷயத்தில் முன்னமே தீர்ந்துள்ளதன்றோ?' என்றாள்;

இராவணன் என்னை எப்போது தூக்கிக்கொண்டு வந்திட்டானோ, அப்போதே வேறுவழியில்லாவிடின் உயிரை மாய்த்துக்கொள்வதென்று தீர்மானஞ் செய்துள்ளேன்; ஆயினும், நீ சொல்லுகிற பேச்சு தெய்வவாக்குப்போலத் தவறாதிருத்தலால் அவ்வப்போது உயிரைமாய்த்துக்கொள்வதைநிறுத்தியதுபோலவே இப்போதும் உயிரைமாய்த்துக்கொள்வதை நிறுத்தி, இன்று, இரவுவரையில் பார்ப்பேனென்று சீதை திரிசடைக்கு மறுமொழி கூறினளென்பதாம். பி - ம்:—[1]அன்ன. [2]அழிந்தில, அழிவில்லை. [3]தெய்வமாக். [4]முடிந்த. [5]தீர்ந்தாள். (2653)

31.—சீதை, 'உயிர்விட்டிடுதல் எளிதாயினும், இராமனையடையலாமோ?' என்ற எண்ணமே நான் உயிர்வைத்திருக்கக் காரணம் எனல்.

நாணெலாந் துறந்தே [1]னில்லின் நன்மையின் நல்லார்க் கேய்ந்த
[2]பூணெலாந் துறந்தே னென்றன பொருசிலை மேகந் தன்னைக்
காணலா மென்னு மாசை [3]தடுக்கவென் னாவி காத்தேன்
ஏணிலா [4]வுடல நீக்க லெளிதெனக் [5]கெனவுஞ் சொன்னாள்.

(இ-ள்.) (பின்னும் சீதை திரிசடையை நோக்கி 'பெண்கட்கு வேண்டிய) நாணமென்ற குணத்தை முழுதும் துறந்திட்டேன்; இல்லறத்திற்கு வேண்டிய நல்லதன்மையோடு அமைந்த மகளிர்க்குத்தகுந்த எல்லாவகை யாபரணமாகவுள்ள (மடம்அச்சம்முதலிய மற்றைக்) குணங்களையும் துறந்திட்டேன்; (இவ்வாறாகவும்) 'பொருகின்ற வில்லைப்படைத்த மேகம்போன்ற எனது ஸ்ரீராமனை மீண்டும் அடைதல்கூடும்' என்னும் ஓர் ஆசை தடுத்தலினால் (நான்) என்னுயிரை (விடாமல்) பாதுகாத்திருக்கின்றேன்; (பெண்கட்கு உரிய நற்குணம் ஒன்றும் இல்லாமையால்) பெருமையுடையதாகாத (என்) உடம்பை நீத்தல் எனக்கு எளிமையானதே' என்றும் சொன்னாள்; (எ - று.)

'இவ்வுடம்பை ஒழித்துவிடுதலென்பது எனக்கு அருஞ்செயலன்று: அப்படியிருக்கவும், மகளிர் குணங்களெல்லாம் என்

னிடத்து இல்லாமற் போய்விடவும் நான் உயிரோடிருப்பது- 'ஒரு கால் எனது இராமனை யடையக்கூடுமோ?' என்ற ஆசையினாலே யேயன்றி வேறொன்றினாலன்று' என்று தான் உயிர்வைத்திருக்குங் காரணத்தைச் சீதாபிராட்டி விளங்கவுரைத்தனளென்க. இராவணனாற் கவரப்பட்டு அவன்மனையிற் சிறைப்பட்டிருப்பதுபற்றி, தன்குணங்களெல்லாம் போயினவாகக் கூறுகின்றாள். பொருசிலை மேகம் - வில்லோடு விண்ணிற்காணப்படுகிற மேகம் மண்மேற் காணப்படுவதுபோன்ற இராமனென்க. உருவகம். பி - ம்:—[1]எல்லினாண்மையுந் துறந்தார்க்கெல்லாம், இல்லினன்மையும் நல்லோர்க்கெய்தும். [2]பூணெலாமாகி நின்றகுணங்களும் பொதுவிற் போகச். [3]கடுக்க, கருகி. [4]உடலினீங்கல், உடலநீத்தற்கு, உடலைத் தாங்கி, உடல் நீக்க. [5]என்றும், என்னச். (2654)

32. தையலை யிராமன் மேனி தைத்த [1]வேல் தடங்க ணாளைக்
[2]கைகளிற் பற்றிக் [3]கொண்டார் [4]விமானத்தைக் கடாவு கின்றார்
[5]மெய்யுயி ருலகத் தாக விதியையும் [6]வலித்து விண்மேல் [றார்.
பொய்யுடல் கொண்டு செல்லும் நமனுடைத் [7]தூதர் [8]போன்

(இ - ள்.) இராமபிரானுடைய திருமேனியிலேபதிந்த வேற்படைபோன்ற பெரியகண்களையுடையவளான பெண்ணாகிய சீதையைக் கைகளினாற் பற்றிக்கொண்டு விமானத்தை (மீள)த் தூண்டி (ப்போர்க்களத்தினின்று அசோகவனத்து)ச் செலுத்துகின்ற அரக்கிமார்,—மெய்யானஉயிர் உலகத்திலிருக்க விதியையும் வலிமையாற் கடந்து விண்மீதாகப் பொய்யான உடலைக் கொண்டு செல்லுகின்ற யமதூதரைப் போன்றார்கள்; (எ - று.)

கொடுமைபற்றி, உயிர்மண்மீதுள்ளதாக உடலைவிண்மீதாகக் கொண்டு செல்லும் யமதூதரை அரக்கியர்க்கு இல்பொருளுவமை கூறினார். உடல் மண்மீதிருக்க, உயிரைக்கொண்டுபோதல், காலதூதர் செய்யவேண்டிய விதி: அதற்குமாறாக இருந்தலால், 'விதியையும் வலித்து' என்றது. மெய்யுயிர் - ஸ்ரீராமன். பொய்யுடல் - உண்மையான உயிர் நீங்கியிருக்கையில் உயிர் உள்ளது போலத்தோன்றும் உடல்: சீதை. வலித்து - பலாத்காரஞ்செய்து எனினுமாம். பி-ம்:—[1]வாள். [2]கையினை. [3]கொண்டு. [4]மானத்தை. [5]மெய்யுரைநல்லதாகவுயிரையுர். [6]நலிந்து, வலிந்து. [7]தூதிற். [8]போனார். (2655)

சீதைகளங்காண்படலம் முற்றிற்று.

23-ஆவது மருத்துமலைப்படலம்

(ஸஞ்சீவகரணிமுதலிய) ஓஷதிகளையுடைய மலையை (ச் சாம்பவான் மொழிப்படியே அநுமான்) கொணர்ந்து (யாவரும் உயிர் பெற்றெழுந்ததும்) திருப்பிக்கொண்டுபோனதைக் கூறும் படலமென்பது, பொருள். இப்படலத்துக்குப்பெயர், 'மருத்துவப்படலம்' என்று பலபிரதிகளிற் காணப்படுகின்றது; மருந்துப்படலம் என்றும் காண்கின்றது. மருந்து+மலை=மருத்துமலை: வேற்றுமைத்தொகையில் மென்றொடர் வன்றொடராயிற்று.

ஸ்ரீராமனது கட்டளையின்படி சென்ற ஸ்ரீவிபீடணனும்வான் உணவைக்கொண்டு மீண்டுவந்து போர்க்களத்தில் யாவர்க்கும் பிரமாஸ்திரத்தால் நேர்ந்துள்ள கேட்டினையும் ஸ்ரீராமன் அடைந்திருக்கும் நிலையையுங் கண்டான். அநுமானிடஞ்சென்று அவனது களைப்பை நீக்கினான். பின் அவ்வநுமான் ஸ்ரீவிபீடணனோடு சாம்பவானை யடைய, சாம்பவான் 'மருத்துமலையை விரைவிற் கொண்டு வரவேண்டும்' என்றுசொல்லி அஃது இருக்கும் இடம் முதலிய வற்றையும் விளக்கமாகத் தெரிவித்தான். உடனே அநுமான் பேருருக்கொண்டு செல்ல, அக்காலையில் சாம்பவானும் விபீடணனும் ஸ்ரீராமனிடஞ் சென்று திருவடி வருட, அப்பிரான் திருக்கண் விழித்து நிகழ்ந்த குறையைச் சொல்லித் துயருற்றான். சாம்பவான் யாவரையும் உய்விக்கும்படி சஞ்சீவி மலையைக் கொணருமாறு அநுமான் சென்றிருக்குஞ் செய்தியைச் சொல்லித் தேற்றினான். அவ்வேளையில் ஆஞ்சநேயன் சஞ்சீவிமலையை வேருடன் பறித்துக் கொண்டு வானவழியாய் யுத்தகளத்திற்கு நேரே வந்து சேர்ந்தான்: அதன் காற்றுப் பட்டமாத்திரத்தில் இலட்சுமணன் முதலியோர் உயிர்பெற்றெழுந்தனர்: அதுகண்டு ஸ்ரீராமன் அநுமானை வாழ்த்த, பிறகு சாம்பவானது வேண்டுகோளினால் அநுமான் அம்மலையை முன்னிருந்த இடத்திற் கொண்டுபோய்வைக்கும்படி திரும்பவும் போனானென்ற சரிதை இப்படலத்திற் கூறப்படுகின்றது.

1.—விபீடணன் உணவைக்கொண்டுசேர்த்துப் போர்க்களஞ் சேர்தல்.

[1]போயினள் தைய லிப்பாற் [2]புரிகெனப் புலவர் கோமான்
ஏயின கருமம் நோக்கி [3]யேகிய விலங்கை வேந்தன்
மேயின [4]வுணவு கொண்டு மீண்டவை யுறையுள் [5]விட்ட
[6]ஆயின வாக்கித் [7]தான்வந் தமர்ப்பெருங் [8]களத்த ணுற்றான்.

(இ-ள்.) சீதை (தன்னிருப்பிடத்துக்குப்) போயினள்: இங்கே '(உணவுகளைக்கொண்டுவருந்தொழிலைச்) செய்க' என்று தேவாதிதேவனான ஸ்ரீராமபிரான் ஏவிய காரியத்தின் பெருமையைப் பார்த்துச்சென்ற இலங்காதிபதியான விபீடணன் தக்கவுணவுகள் கொணர்ந்து மீண்டு அவைகளைப் பாசறையுள் வைக்கப்பட்டனவாகச்செய்து, தான்வந்து பெரியபோர்க்களத்தையடைபவனானான்; (எ - று.)—புலவர்-தேவர். பி.ம்:—[1]போயினளடைய, போயினளாண்டை. [2]புகுந்துள, புகுந்துளன், புகுந்தனன். [3]எய்திய, எய்தினன். [4]உணர்வு. [5]விட்டால், விட்டது. [6]ஆயினவாகத். [7]தானே வந்தமர்க். [8]களத்தின். (3656)

2.—வானரர்களின் நிலைமையைக் கண்டு விபீடணன் உணர்வறுதல்.

நோக்கினான் கண்டான் பண்டிவ் [1]வுலகங்கள் படைக்க நோற்றான்
வாக்கினான் மாண்டா ரென்ன வானர வீரர் முற்றும்
தாக்கினா ரெல்லாம் பட்ட [2]தன்மையை விடத்தைத் தானே
தேக்கினா னென்ன நின்று தியங்கினா னுணர்வு நீர்ந்தான்.

(இ - ள்.) (அடைந்த விபீடணன்,—அந்தப் போர்க்களத்திலே), முன்பு இவ்வுலகங்களையெல்லாம் படைக்குமாறுநோற்

றுள்ளவனான பிரமதேவனால் [பிரமதேவனது அத்திரத்தினாலே] (சாப)வார்த்தையால் மாண்டவர்போல வானரவீரர் (உடம்பு) முழுவதும் தாக்கப்பட்டவராய் யாவரும் இறந்தார்போல(த் தரையில்) வீழ்ந்துள்ள தன்மையை(த் தான்) நேரேகண்டு, நஞ்சினைத் தானே யுண்டவன்போல (முதலில்) தியக்கங்கொண்டு நின்று, (பின்பு) உணர்வு நீங்கினவனானான் [மூர்ச்சித்தான்]; (எ - று.)—பி - ம்:—[1] உலகினைப் படைப்ப. [2] தன்மைய. (2657)

3.—மிக்கவருத்தத்துடனே வந்த விபீடணன் பிறகு இளையபெருமாளுடனே ஸ்ரீராமனைக் காணுதல்.

விளைந்தவா [1] றுணர்ந்தி லாதா [2] னேங்கினான் வெதும்பி னால் [3] மேல்
உளைந்துளைந் துயிர்த்தா னாவி யுண்டிலை யென்ன வோய்ந்தான்
வளைந்தபோய்க் கணமும் நாயும் நரிகளு மிரிய வந்தான்
[4] இளங்கிளை யோடுஞ் சாய்ந்த விராமனை யெய்திக் கண்டான்.

(இ - ள்.) நிகழ்ந்த தன்மையை யறியாதவனான விபீடணன், —(சிறிதுதேறி), ஏக்கங்கொண்டு (மனம்) வெதும்பிப் பிறகு வருந்தி வருந்திப் பெருமூச்சுவிட்டு, 'ஆவி உளதோ? இலதோ?' என்று (கண்டவர்) கருதுமாறு ஓய்வுற்றவனாய், சூழ்ந்துள்ள பேய்க்கணமும் நாயும் நரிகளும் நிலைகெட்டோடவந்து, இளையபெருமாளுடனே சாய்ந்துள்ள ஸ்ரீராமனை யடைந்துகண்டான்; (எ - று.) —விபீடணனைக் கண்டு பேய்க்கணம்முதலியன அஞ்சியோடின வென்க. பி-ம்;—[1] உணர்கிலாதான். [2] வீங்கினான். [3] போய், மெய். [4] இளங்களிறோடும். [5] இடையிற். (2658)

4.—கவிக்கூற்று.

[1] என்பென்ப வியாக்கை யென்ப துயிரென்ப திவைக ளெல்லாம்
பின் [2] பென்ப வல்ல [3] வேனுந் [4] தம்முடை நிலையிற் பேரா
[5] முன்பென்ப வுளதென் றூனு முழுவதுந் [6] தெரிந்த வாற்றால்
அன்பென்ப தொன்றின் றன்மை யமரரு [7] மறிந்த தன்றால்.

(இ - ள்.) என்பு என்பதும் யாக்கையென்பதும் உயிரென்பதும் இவைகளெல்லாம் (அன்பைநோக்குமிடத்துப்) பிற்பட்டன [முக்கியமானவையல்ல]: (அன்பு உண்டாதற்கு அவை ஆதாரமாதலால் பிற்பட்டன) அல்ல [முற்பட்டன] என்று கூறினாலும், (அவை, அன்பிற்கு ஆதாரமாக இருக்கும்) தம்முடைய அந்நிலையினின்று பேரா. நன்றாக ஆராய்ந்து பார்த்த வகையினால், அன்பு என்று சொல்லப்பட்டது ஒன்றின் தன்மையோ அமரரும் அறிந்ததன்றாகும்; (எ - று.)

'விபீடணன் ஸ்ரீராமலட்சுமணரிடம் பேரன்புடையவன்' என்பதைக் கூறக் கருதிய கவி, இந்தச் செய்யுளில் என்பு முதலியவற்றினும் ஒருத்தற்கு அன்பேமுக்கியமானது என்கின்றார். என்போடு கூடிய உடல் உயிரோடு இருக்கும்போதே அன்பு ஆண்டுத் தோன்றுதலால், என்பு முதலியவை முக்கியமானவையென்று ஒருசாரார் வாதிப்பினும் "அன்போடியைந்தவழக்கென்பவாருயிர்க்கு, என்போடியைந்த தொடர்பு" என்றபடி உடலெடுத்து

இவ்வுலகத்திற் பிறந்ததற்குப்பயன் அன்புகொண்டு இருத்தலே யாதலால்,அந்த அன்பே மற்றையவற்றினும் மேம்பட்டது: அதன் சிறப்பைத் தேவராலும் முற்றிலுங்கூறமுடியாதென ஆராய்ந்து கூறியவாறு. இனி, என்பும் உடலும் உயிரும் உண்டானபின்பே அன்பு உண்டாமாதலால், என்பு முதலியன பிற்பட்டனவாகாது முற்பட்டனவே யென்றாலும், அவை தம்நிலைமையினின்று மாறுவாயிருப்ப, அன்போ பின்பு தோன்றியதாயிருந்தாலும் தன்நிலையிற் பேர்ந்து பயன் விளைப்பதில் முந்துகின்றது: மற்றும் அதன் தன்மை அமரராலும் அறிய முடியாதென்று கூறுதலும் ஒன்று. பி - ம்:—[1]என்பென்பதுயிரென்றாயும். [2]என்பது. [3]எனுனும். [4]தன்னுடை. [5]முன்பென்னு முளவென்றாலும், முன்பென்று முள தென்றாலும். [6]தெரியக்காணூர். [7]அறிந்ததன்றே. (2659)

5.—இராமன் துன்பமிகுதியால் இவ்வாறுள்ளானேயன்றி இறந்திலனென்று விபீடணன் உணர்ந்து துன்பந் தீர்தல்.

ஆயினு மிவருக் கில்லை யழிவெனு [1]மதனு லாவி
போயின தில்லை வாயாற் [2]புலம்பிலன் பொருமிப் பொங்கித்
தீயினு மெரியு [3]நெஞ்சின் [4]தெரியலன் தெரிய நோக்கி
[5]நாயகன் மேனிக் கில்லை வடுவென நடுக்கந் தீர்ந்தான்.

(இ - ள்.) (உயிரினுஞ் சிறந்த அன்பை விபீடணன் உடையவனாகி) இருந்தாலும் இவருக்கு அழிவில்லை யென்ற காரணத்தால், ஸ்ரீவிபீடணாழ்வானுக்கு ஆவி போயினதில்லை; வாய்விட்டுப் புலம்பாதவனைப் பொருமி(த் துயரங்) கிளர்ந்து தீயினும் மிக்கெரிகின்ற நெஞ்சினால் (முதலில்) ஆராய்ச்சியில்லாதிருந்து (பிறகு) ஆராய்ந்து பார்த்துத் தலைவனை ஸ்ரீராமனுடையமேனிக்குவடுவில்லையென்று நடுக்கந் தீர்ந்தான்; (எ - று.)—பி - ம்:—[1]இதனால். [2]புலம்பினன், புலம்பலன், புலம்புவான். [3]நெஞ்சன். [4]வெருவலன், வெருவலால். [5]நாயக மேனிக்கு. (2660)

6.—விபீடணன் விளைந்துள்ளதை நுண்மையாக ஆராய்ந்து தெளிந்து பிரமாத்திரத்தின் விளைவைத் தீர்க்க உபாயம் நாடுதல்

அந்தணன் படையால் வந்த தென்பது மாற்றல் [1]சான்ற
இந்திர சித்தே யெய்தா னென்பது [2]மிளவற் காக
நொந்தன னிராம [3]னென்னு முண்மையும் [4]நொய்து நோக்கிச்
சிந்தையி னெண்ணி யெண்ணித்[5] தீர்வதோ ருபாயந் தேர்வான்.

(இ - ள்.) (இளையபெருமாளுக்கும் வானரர்களுக்கும் உயிரொடுங்கிய நிலை) பிரமாத்திரத்தினால் நேர்ந்ததென்பதையும், வலிமைமிக்க இந்திரசித்தே(அப்படையை)எய்தவனென்பதையும், இளையபெருமாளுக்காகவே இராமன் நொந்து இவ்வாறுள்ளானென்ற உண்மையையும் (தான்) எளிதிலுணர்ந்து மனத்தில் மிகவும் ஆராய்ந்து (அதனினின்று) நீங்குவதோருபாயத்தைத் தேர்பவனானான்; (எ - று.)—இராமபிரானது திருமேனியில் அத்திரத்தின் தழும்பு இல்லாமையால் அத்திரத்தினாலன்றி இளையவனாலேயே நொந்தானென்று விபீடணன் உய்த்துணர்ந்தான். பி-ம்:—

[1]ஆன்ற. [2]இளையோற்காக. [3]என்னுநுண்மையும், இன்னுமுணர் வினை. [4]நொய்தினோக்கி, நோக்கிநோக்கி. [5]உணரவெண்ணி. [6]அறி வினாற்கண்டானன்றே, தீர்வதோருபாயந்தேர்ந்தான். (2661)

7.—துயரத்தால் ஸ்ரீராமன் இப்போது இவ்வாறிருப்பினும் தம்பிமாய்ந்தாற் பிழைத்திரானேயென்று வீடணன் வருந்துதல்.

உள்ளுறு துன்ப மூன்ற [1]வுற்றன னுறக்க [2]மன்றே
தெள்ளிதி னுணர்ந்த பின்னைச் சிந்தனை [3]தெரிவ தன்றே
வள்ளலோ தம்பி [4]மாய [5]வாழ்கிலன் மாய வாழ்க்கைக்
[6]கள்வரோ வென்றா ரென்னா மழையெனக் கலுழுங்கண்ணான்.

(இ - ள்.) உள்ளே பொருந்திய துன்பம் ஊன்றியதனால் (ஸ்ரீராமன்) உறக்கம் [மூர்ச்சை] உற்றானன்றோ? தெளிவாக உணர்ந்த பின்பு (அவன்) சிந்தனை (இன்னதென்று நம்மால்) அறியத்தக்கதன்றே: (ஏனெனில்),—உதாரகுண முள்ளவனான இவ்விராமனே, தம்பிமாய்ந்திட உயிர்வாழான்: (ஆகவே),மாயத்தினால் வாழும் வாழ்க்கையைக்கொண்ட வஞ்சரான அரக்கரா வென்றவராவார்?' என்று மழைபோலக் கண்ணீர் சொரிகின்ற கண்களையுடையவனானான் (விபீடணன்); (எ - று.)—பி - ம்:— [1]உற்ற. [2]என்றே, என்னா, ஒன்றோ. [3]தெரிவதன்றால், தெரிவனன்றால், தெரிவனன்றி. [4]மாள, மாளில். [5]வாழ்கின்றானல்லன் வஞ்சக். [6]கள்ளனோ வென்றா னென்றான். (2662)

8.—விபீடணன் மனத்தடுமாற்றம் ஒழிதல்.

பாசம்[1]போ யிற்றாற் போலப் பதுமத்தோன் படையு [2]மின்றே
நாசம்போ யெய்தும் நம்பி தம்பிக்கும் [3]நாச மில்லை
வீசும்போர்க் களத்து [4]வீழ்ந்த சேனையு [5]மீளும் வெய்ய
[6]நீசன்போர் வெல்வ துண்டோ [7]என்றுளம் நிலையி னின்றான்.

(இ - ள்.) (பின்னர் விபீடணன்),—நாகபாசமானது இற்றுப் போனதுபோலவே, பிரமாத்திரமும் இன்றைக்கே நாசமாய்விடும்: ஸ்ரீராமனது தம்பிக்கும் அழிவு இல்லை; (படைக்கலங்களை) வீசி யெறிகின்ற போர்க்களத்திலே (உயிரொடுங்கி) வீழ்ந்துள்ள சேனையும் (உயிர்)மீளப்பெறும்; கொடிய நீசனான இராவணன் போரில் வெல்வதென்பது உண்டாகுமோ? என்று(தன்) மனம் (தடுமாற்றம் நீங்கி) நிலையில் நிற்கப்பெற்றான்; (எ - று.)—பி-ம்:—[1]பேரற்றாற் போல. [2]இன்னே. [3]நடுக்கம். [4]வீய்ந்தவீரரும். [5]மீள்வர். [6]நீசர். [7]என் றகநினைந்து, என்றுள்ள நினைப்பின், என்றனனெறியின். (2663)

9.—'எவரேனும் இறவாதவருளரோ?' என்று விபீடணன் கொள்ளிக்கட்டையைக் கையிற்கொண்டு போர்க்களத்திற் பார்த்தல்.

உணர்வதன் [1]முன்ன மின்னே யுற்றுழி [2]யுதவற் கொத்த
துணைவர்கள் துஞ்ச [3]லில்லா ருளரெனில் அருவித் [4]தேடிக்
கொணர்குவன் விரைவி னென்னாக் கொள்ளியொன் றங்கை கொண்
புணரியி [5]னுதிர [6]வெள்ளத் தொருதனி விரைவிற் போனான். [டான்

(இ - ள்.) (ஸ்ரீராமன்) உணர்ச்சி பெறுவதற்கு முன்பே இப்போதே ஆபத்து நேரிட்ட காலத்தில் உதவுதற்கு ஏற்ற துணைவர்கள் இறவாதவருளராஞல் ஆராய்ந்து தேடி (அவர்களை) விரைவிற் கொணர்வேனென்று சொல்லி, (விபீடணன்), கொள்ளியொன்றை அழகிய கையிலேந்திக்கொண்டு கடல்போன்ற இரத்த வெள்ளத்திலே தன்னந்தனியனாய் விரைவிற்போயினான்; (எ-று.) —பி - ம்:—[1]முன்னர்முன்னே, முன்னேமுன்னே [2]உதவத்தக்க, உணர்தற்கொத்த. [3]செல்லார். [4]தோன்றக், தோன்றிக். [5]குருதி. [6]வெள்ளக்கொள்ளத்து. (2664)

10.—தேடும் விபீடணன் அநுமானைக் காணுதல்.

வாய்மடித் திரண்டு கையு முறுக்கித்தன் வயிரச் செங்கண்
தீயுகக் கனகக் குன்றில் [1]திரண்டதோள் மழையைத் தீண்ட
ஆயிர கோடி யானைப் பெரும்பிணத் தமளி [2]மேலான்
காய்சினத் தனும னென்னுங் கடல் [3]கடந் தானைக் கண்டான்.

(இ - ள்.) வாயை மடித்துக்கொண்டும் இரண்டுகையையும் முறுக்கிக்கொண்டும், (தன்னுடைய) வயிரம் [பகைமை] தோன்றுஞ் செங்கண்ணிலிருந்து நெருப்புப்பொறி பறக்க, மேருமலையைப்போல் திரண்ட தோள் மேகமண்டலத்தை யளாவுமாறு, ஆயிரகோடியானைகளின் மிக்க பிணங்களாகிய படுக்கையின்மேலிருப்பவனாய், காய்கின்ற சினத்தைக்கொண்ட அநுமனென்கிற கடல் கடந்தவனான வீரனைக் கண்டான், (விபீடணன்); (எ - று.)— கடல் கடந்தான் - இப்போது நேர்ந்துள்ள துக்கசாகரத்தைக் கடத்தற்கு உரியவனென்ற கருத்துந் தோன்றும். பி-ம்:—[1]திரண்ட தோர் மழையிற்றீண்ட. [2]மேலாக். [3]கிடந்தானைக். (2665)

11.—விபீடணன் அநுமானது உடலம்புகளைக் களைந்து அவனுடைய களைப்பைப் போக்குதல்.

கண்டுதன் கண்க ளூடு மழையெனக் கலுழி [1]கால
உண்டுயி [2]ரென்ப துன்னி யுடற்கணை யொன்றொன் றாக
[3]விண்டநீர்ப் புண்ணி னின்று [4]மெல்லென வாங்கிக் கையால் [தான்.
கொண்டல்நீர் [5]கொணர்ந்து [6]கோல முகத்தினைக் குளிரச் செய்

(இ - ள்.) (விபீடணன், அநுமானைக்)கண்டு, தன் கண்களின் வழியாக மழைபோல (க் கண்ணீர்) வெள்ளம் பெருக, (இவனுக்கு) உயிருள்ள தென்றுகருதி, வெளிப்படுகின்ற குருதி நீரைக்கொண்ட புண்ணினின்று மெல்ல [நோவாமல்] (அவனுடைய) உடலிற் பொருந்திய கணைகளை ஒவ்வொன்றாகக் கையால் வாங்கி, மேகத்தின் நீரைக்கொணர்ந்து அழகிய முகத்தின்மேல் தெளித்துக் குளிருமாறு [களைப்பு நீங்குமாறு] செய்தான்;(எ - று)—பி - ம்:— [1]சோர, வார. [2]என்ன. விண்டுநிர்புண்ணினின்று, விண்டுமேல் வைரப்புண்ணின். [4]மெல்லெனவிரகின்வாங்கிக், மெல்லெனவிரைவின் வாங்கிக்,விரகினின் வாங்கிவேந்தன்.[5]முகந்து.[6]பல்கால்,வீரன்.

12.—அநுமான் களைநீங்கி உணர்வு பெறுதல்.

உயிர்ப்புமுன் னுயிர்த்த பின்ன ருரோமங்கள் [1]சிலிர்ப்ப [2]வூடு
வியர்ப்[3]புள தாகக் கண்கள் [4]விழித்தன மேனி [5]மெல்லப்

பெயர்த்துவாய் புனல்வந் தூற விக்கலும் [6]பிறந்த தாக
அயர்த்திலே [7]னிராம நாமம் வாழ்த்தின னமர ரார்த்தார்.

(இ-ள்.) உயிர்ப்பு முன்னே தோன்றியபின்பு மயிர்கள் சிலிர்க்க, இடையே [உயிர்ப்புத்தோன்றியபின் மயிர்ச்சிலிர்ப்பு உண்டாவதற்கு முன்னே] (களைப்பு நீங்குதலின் அடையாளமாக) வெயர்வை நீர் தோன்றியதாக, கண்களும் விழித்தலை யடைந்தன; (அப்போது தன்) உடம்பை மெல்லப் பெயர்த்து வாயில்நீர்வந்துஊற விக்கலும் தோன்றியதாக மறவாதவனாய், இராமநாமத்தை (அவ்வநுமான்) வாழ்த்தினான்: (அதுகண்ட) தேவர் ஆரவாரித்தார்கள்; (எ - று.)

அநுமான் இடையீடின்றி ஸ்ரீராமனைத் தியானித்தலும் அப்பிரானது நாமத்தைச் சொல்லுதலும் உடையவனாதலால், பிரமாத்திரத்தால் உணர்வு நீங்கும்போது நீங்கிய தியானமும் ஜபமும் மீண்டு வந்தன என்பார் 'அயர்த்திலே னிராம நாமம் வாழ்த்தின' னென்றார். ஈற்றடிக்கு இராமநாமத்தை அயர்த்திலனாய், '(இராமன்) வாழ்க' என்று வாழ்த்தினனெனினுமாம். மூர்ச்சையுற்றார் தெளிவுறும்போது அவரிடத்துக் காணப்படும் மெய்ப்பாடுகள், இப்பாட்டிற் கூறப்பட்டுள்ளன. அயர்த்திலன்-மூர்ச்சையற்றவனா யென்பாருமுளர். பி - ம்:—[1]சிலிர்க்க [2]ஊறி, ஆறி [3]உள. [4]விழித்தனன். [5]என்னப். [6]பிறந்த. [7]இராமனு மம். (2667)

13.—இராமனை விசாரித்தறிந்து அநுமான் தொழுதல்.

அழுகையோ டுவகை யுற்ற வீடண னார்வங் கூரத்
தழுவின னவனைத் தானு மன்பொடு [1]தழுவித் தக்கோய்
[2]வழுவில னன்றே [3]வள்ள லென்றனன் வலிய னென்றான் [ன்.
தொழுதன னுலகை [4]மூன்றுந் தலையின்மேற்[5]கொள்ளுந் தூயா

(இ-ள்.) அழுகையுடனே உவகையையு மடைந்த விபீடணன் அன்புமிக அந்த அநுமானைத் தழுவினான்; (அநுமான்) தானும் அந்த விபீடணனைத் தழுவி, 'பெரியோனே! ஸ்ரீராமப் பிரபு தீங்கு இல்லாது உள்ளாரல்லவா?' என்று வினவினான்: அதற்கு விபீடணன்), 'க்ஷேமமாயுள்ளார்' என்று விடைகூறினான்: உலகம் மூன்றினாலும் சிரசின்மேற்கொள்ளத்தக்க தூய்மை வாய்ந்தவனான அநுமான, (அவ்விராமபிரானைத் திக்குநோக்கித்) தொழுதான்; (எ-று.) —பி-ம்:-[1]தழுவிக்கொண்டான் [2]வழுவினன். [3]அண்ணல். [4]எல்லாம். [5]சுமக்குந்தாளான், கொள்ளுந்தாளான், கொள்ளுந்தோளான்.

14.—விபீடணனால் ஸ்ரீராமனுடைய நிலையை யறிந்தபின் அநுமான் சாம்பவானை விசாரித்தல்.

அன்புதன் தம்பி [1]மேலாத்து அறிவினை மயக்க லவ்வயன்
[2]துன்பொடுந் துயிலே னுறு [3]னுணர்வினித் தொடர்ந்த [4]பின்னே
என்[5]புகுந் தெய்து மென்ப [6]தறிகில [7]மென்ற லோடும்
தன்பெருந் [8]தன்மைக் கொத்த [9]சாம்பனைத் தலைய னென்றான்.

(இ-ள்.) அன்புதன் தம்பியின்மீது பிணைத்தலால் அறிவினை மயக்க ஸ்ரீராமன் துன்பத்துடனே துயிலையுண்டயவனானான்;

இனி உணர்வு வந்த பின்பு என்ன வந்து நேரிடுமென்பதை அறியே மென்று (மீண்டு விபீடணன்) கூறியவுடனே, (அநுமன்), தன்னுடைய பெருந்தன்மைக்கு ஏற்றவனை சாம்பவானை 'எவ்விடத்துள்ளான்?' என்று வினவினன்; (எ - று.)

அநுமானது தகைமை சாம்பவானலேயே விளங்குதலால், 'தன்பெருந் தன்மைக்கொத்த சாம்பன்' என்றது. அநுமான் சோர்ந்துள்ள நிலையில் அவனுடைய திறனைச் சொல்லிக் கடல் கடக்குமாறு அவனைத் தூண்டிவிட்டதும், மருந்து மலையைக் கொணருமாறு இப்போது அவனைத் தூண்டிவிடுவதுஞ் செய்து அவ்வநுமனுடைய பெருமையைச் சாம்பவான் வெளிப்படுத்துவது காண்க. ஆத்து=யாத்து. பி - ம்:—[1]மேலாய், மேல்வைத்து, மேலே, மேலோத்து. [2]துன்புறத், துன்பினன், துன்பவன், பின்பவன். [3]உணர்வினை, உணர்வினில். [4]பின்னர். [5]புகுந்தேயும். [6]அறிகிலேன். [7]என்றபோது. [8]தகைமைக்கு. [9]சாம்பனே தலைவன், சாம்பனைத் தலத்தன், சாம்பனைத்தகையன். (2669)

15.—விபீடணன் சாம்பவானைப்பற்றி அறிந்திலேனென்ன அநுமான் அவனுக்குச் சாவின்மையால் அவனை நாடிக் கண்டுபிடிப்பேனெனல்.

அறிந்திலெ னவனை [1]யாண்டுங் கண்டில [2]னாவி யாக்கை
[3]பிறிந்தில னுளனென் றென்றுந் தெரிந்திலன் பெயர்ந்தேனென்று
செறிந்ததார் நிருதர் வேந்த னுரைசெயக் காலின் [4]செம்மல்
இறந்திற மவனுக் [5]கின்றால் நாடுது மேகி யென்றான்.

(இ-ள்.) 'அந்தச்சாம்பவானைப்பற்றி (யான் ஒன்றும்) அறிந்திலேன்; (அவனை) யாண்டும் காணவில்லை; (அவன்) உடலைவிட்டு உயிர்பிரிந்துஇலனாயினனோ (அன்றி உயிருடன்) உள்ளானோ? என்று ஒன்றும் தெரியாதவனாகவே வந்துள்ளேன்' என்று நெருங்கிய மாலையை யணிந்தஅரக்கர் தலைவனான விபீடணன் சொல்ல, வாயுபுத்திரனான அநுமான் 'அவனுக்குச் சாகுந்தன்மை இல்லை (ஆகையால்), சென்று (அவனைத்) தேடுவோம்' என்று கூறினன்; (எ-று.)-பி-ம்:—[1]யானும். [2]ஆவியாதும். [3]பிறிந்துள இலதென்று. [4]தோன்றல். [5]உண்டோ, இல்லை. (2670)

16.—அநுமான் 'சாம்பவானைக் கண்டால் பிழைப்பிக்கும் உபாயம் கூறுவான்' என்ன, இருவரும் சாம்பவானைச் சேர்தல்.

அன்னவன் றன்னைக் கண்டா [1]லையனே [2]யரக்கர்க் கெல்லாம்
மன்னவ [3]நம்மை மீட்டு வாழ்விக்கு [4]முபாயம் வல்லன்
என்ன லு [5]முய்ந்தோ மைய வேகுதும் விரைவி [6]னென்னாச்
[7]சென்னெறி யிருளிற் சென்றார் சாம்பனை [8]யிரைவிற் சேர்ந்தார்.

(இ - ள்.) (பின்னும் அநுமான் விபீடணனை நோக்கி),—'அரக்கர்கட்கெல்லாம் மன்னவனே! அந்தச் சாம்பவானைக் கண்டால், (அவன்) சத்தியமாக நம்மை (இத்துயரத்தினின்று) மீளச் செய்து வாழ்விக்கும் உபாயத்தை(ச் சொல்ல) வல்லான்' என்று சொன்னவுடனே, 'ஐயனே! (அப்படியானால் நாம்) உய்ந்தோம்; விரைவிலே (அவனிடம்) செல்வோம்' என்று (விபீடணன்) சொல்ல

(இருவரும்), அவ்விரவில்தானே சிறிது தூரம்போய்ச் சாம்பனை விரைவிற் சேர்ந்தார்; (எ-று.)—மீட்டு வாழ்விக்கும் உபாயம்வல்ல சாம்பவானுக்கு இறுதியில்லை யென உணர்ந்ததனால், விபீடணன் 'உய்ந்தோம்' என்கிறான். இரண்டாமடி 'மன்னவன் றனிமை யெல்லாம் வாழ்விக்கும் வாயம் வல்லோன்' என்று ஒரு பிரதியி லுள்ளது. திரிவிக்கிரம மூர்த்தியின் திருவடி பிரமலோகத்துக்கு வருகையில் பிரமபுத்திரனான சாம்பவான் அத்திருவடிகளைப் பூசித் தனாக, மனமுவந்த திருமால் அந்தச் சாம்பவானது வேண்டு கோளின்படியே தன்சக்கரப்படையால் கிருஷ்ணாவதாரத்தில் விண்ணுலகு எய்துமாறு அவனுக்கு வரம் ஈந்தனனென்க. பி-ம்:— [1]ஆணையவ், ஆணைய. [2]அரக்கர்க்கோலம். [3]நம்மையெல்லாம், நம்மைமீண்டு, எம்மையீண்டு. [4]உறுதி. [5]உவந்தோன், உயர்ந் தோம். [6]என்றான். [7]மின்னிறவொளியிற். [8]விரைவிற்கண்டார், விதியிற்சேர்ந்தார். (2671)

17.—வருத்தநிலையிலும் சாம்பவான் இருவர் வருகையை யறிதல்

எரிகின்ற மூப்பி னாலும் ஏவுண்ட [1]நோவி னாலும்
அரிகின்ற துன்பத் தாலு மாருயிர்ப் படங்கி [2]யொன்றும்
தெரிகின்ற [3]தில்லா[4]மம்மர்ச் சிந்தைய[5]னெனினும் [6]வீரர்[ளான்.
வருகின்ற சுவட்டை [7]யோர்ந்தான் [8]செவிகளால் வயிரத் தோ

(இ - ள்.) மிகமுதிர்ந்த கிழத்தன்மையிலும், அம்பு பொத்திய தனாலான நோவினாலும் (நண்பர்களெல்லாம் இறந்தனரே என்ப தைக்கருதுவதனால் மனத்தை) ஈர்க்கின்ற துன்பத்தினாலும், அரிய மூச்சு அடங்கி ஒன்றும் அறியமாட்டாத மயக்கங்கொண்ட மனத் தையுடையவனா யிருந்தபோதிலும் வயிரம்போலுறுதியான தோள் களையுடையவனான சாம்பவான், வீரரிருவர் வருகின்ற அடையாளத் தைச் செவிகளினாலறிந்தான்; (எ-று.)

மூப்புமுதலிய காரணங்களால் மூச்சு அடங்கிக் கண்களை மூடிக் கொண்டிருந்ததனாற் கண்களாற் காணவிட்டாலும், சாம்ப வான், அநுமானும் விபீடணனும் வருகின்ற ஒலி செவியிற் படவே, வீரர் வருகின்றாரென்று உணர்ந்தானென்க. பி - ம்:— [1]புண்ணினாலும், ஒய்வினாலும். [2]யாதும். [3]இல்லை. [4]அம்மா, மற்றைச். [5]ஏனும். [6]செல்வர், சேர்வார். [7]ஏற்றான், ஓர்த்தான். [8]செவியினால். (2672)

18.—யாவர் வருகின்றாரென்று சாம்பவான் நினைப்பிடுதல்.

அரக்கனோ வென்னை யாளு மண்ணலோ வனுமன் றானோ
இரக்கமுற் [1]றருள வந்த தேவரோ முனிவ ரேயோ
வரக்கட வார்க [2]ளெல்லின் மாற்றலர் [3]மலைந்து போனார்
புரக்க[4]வுள் ளாரே யென்ன [5]நினைந்தனன் [6]பொருமல் தீர்ந்தான்.

(இ-ள்.) '(வருபவன், விபீடணனென்ற) அரக்கனோ? (அன்றி), என்னையாள்பவனான ஸ்ரீராமனோ? (அல்லாக்கால்), அநுமன் தானோ? (அன்றேல்), இரக்கங்கொண்டு அருள்புரியுமாறுவந்த தேவர்களோ? (அல்லது), முனிவர்தாமோ? இரவில் நடக்கக்கூடிய

வரான [நிசாசரர்களான] (நமது) பகைவரோ பொருதுவென்று (மகிழ்ச்சியோடு ஊர்க்குப்) போயினர்; (ஆகவே, நம்மைப்) பாது காக்கவுள்ளவரே (வருபவர்)' என்று துணிந்து மனத்துயரந் தீர்ந்தான். (எ-. று.)

ஒற்றைக்காலொலி செவியிற்பட்டதும் 'அரக்கனோ?' முதலவாக ஒருமையாற் சங்கித்து, செவிப்படுவது ஒற்றைக்காலொலியல்லாமை தெரிந்தபிறகு 'தேவரோ?' முதலியவாகப் பன்மையாற் சங்கிக்கின்றான். பி - ம்:—[1] அருளி, அருளின், ஆள. [2] எல்லாமாற்றலர், அல்லர்மாற்றலர், அல்லாமாற்றவர். [3] மறிந்து. [4] உள்ளாரோவென்னாக். [5] கருதினன். [6] பொம்மல். (2673)

19.—அயல்வந்துநின்றாரைச் சாம்பவான் வினவியறிதல்.

வந்[1]தய னின்று குன்றின் [2]வார்ந்துவீ ழருவி மானச்
சிந்திய [3]கண்ணி னீர [4]ரேங்குவார் தம்மைத் [5]தேற்றி
அந்தமில் குணத்தி ரீ[6]யாவி ரணுகினி [7]ரென்றா னைய [டான்.
உய்ந்தன முய்ந்தோ [8]மென்ற வீடண னுரையைக் கேட்

(இ - ள்.) வந்து (அந்தசாம்பவானுடைய) பக்கத்திலேநின்று மலையிலிருந்து பெருகிவீழ்கின்ற அருவியையொப்பச் சிந்துகின்ற கண்ணீரை யுடையவரும் ஏங்குபவருமாகிய அவர்களைத் தேற்றி, (சாம்பவான்) 'எல்லையற்ற குணத்தையுடையவரே! வந்து சேர்ந்த நீவிர் யாவீர்?' என்றுவினவினான்: 'ஐயா! உய்ந்தனம் உய்ந்தோம்' என்ற விபீடணனுடைய வார்த்தையைச் செவியேற்றான்: (சாம்பவான்); (எ - று.)—கண்களால் விழித்துப்பார்க்கவும் முடியாமையால், 'அணுகினீர் யாவீர்? என்றான். சாம்பவனுய்ந்துள்ளானென்பதைக் கண்கூடாகஅறிந்ததனாலான மகிழ்ச்சியினால், விபீடணன், 'உய்ந்தனம், உய்ந்தோம்' என்றனனென்க. பி-ம்:—[1] அவணின்று, அயனின்றார். [2] வந்து. [3] கண்ணீரெங்கும், கண்ணினீரின், கண்ணினின்றார். [4] ஏங்குவான் றன்னை. [5] நோக்கி. [6] யாவர். [7] என்கின்றானை. [8] என்றா, என்று. (2674)

20.—அநுமான் வந்துள்ளமையையறிந்து சாம்பவான் இனி யாவரும் உய்ந்தேவிட்டோம் எனல்.

[1]மற்றயல் [2]நின்றா னியாவ னென்னமா ருதியும் வாழி
கொற்றவ வநுமன் நின்றேன் றொழுதன னென்றுகூற
[3]இற்றில [4]மைய வெல்லோ மெழுந்தன மெழுந்தோ மென்னா
உற்றபே ருவகை யாலே [5]யோங்கினா னாற்ற முற்றான்.

(இ - ள்.) பின்பு 'அயலிலே நின்றவன் யாவன்?' என்று (மீண்டும் சாம்பவன்) வினவ, அநுமானும் 'கொற்றவனே! வாழி: அநுமன் நின்றுள்ளேன்: தொழுதேன்' என்று சொல்ல, (அது கேட்டு) வலிமைபெற்றவனான சாம்பவான், '(நாம்) இறந்திட்டோமல்லோம்:ஐயனே! எல்லோமும் திண்ணமாக உயிர்பெற்றெழுந்துவிட்டோம்' என்று சொல்லிப் பொருந்திய பெருமகிழ்ச்சியினால் மிக்கவனானான்; (எ - று.)—'அநுமான் மூலமாக யாவரையும் பிழைப்பிக்க முடியும்' என்ற உறுதியான எண்ணத்தினால், 'எல்

லோமெழுந்தனம் எழுந்தோம்' என்முன்: இந்த அடுக்கு, தேற்றப்பொருளது. பி - ம்:—[1]மற்றவன். [2]அயலேனின்முர்யாரென, னின்முரியாவரென்ன. [3]இற்றனம்.[4]வையம்வெல்வோம். [5]ஓங்கினர்.

21 —சாம்பவான் 'ஸ்ரீராமன் என்னசெய்துகொண்டுள்ளான்?' என்றுவினவ, அநுமான் துன்பத்தினுல் அன்னுன் துயில்கின்முனென்றுணர்த்துதல்.

விரிஞ்சன்[1]வெம் [2]படையென்முலும் வேதத்தி[3]னுட்பங் கூறும்
[4]அரிந்தமன் றன்னை யொன்று [5]மாற்றல தென்னு மாற்றல் [முன்
தெரிந்தனன் முன்னே [6]யன்னுன் [7]செய்தகென் [8]தெரித்தி யென்
பெருந்தகை துன்ப [9]வெள்ளத் துயிலுளான் [10]பெரும வென்முன்.

(இ - ள்.) 'பிரமதேவனுடைய கொடிய அத்திரமே (விடுவிக்கப்பட்டது) ஆனுலும், வேதத்தினுடைய நுண்ணியபொருளாகக் கூறப்படுகின்ற சத்துருக்களை யடக்கவல்லவனுகிய ஸ்ரீராமனை ஒன்றுஞ்செய்கிலதென்ற (மனத்துக்கு) வலிமையைத்தரக்கூடிய விசயத்தை யறிந்துள்ளேன்: அப்பிரான் செய்த செயல் யாது? முன்னம்தெரிவிப்பாய்' என்று வினுவினுன், (சாம்பவான்; அதற்கு அநுமான் சாம்பவானைநோக்கி), 'பெருமையோனே! பெருந் தகுதியுள்ளவனுன ஸ்ரீராமன் துன்பவெள்ளத்தினுல் தோன்றிய துயிலுக்கு உட்பட்டுள்ளான்' என்று தெரிவித்தான்; (எ-று.) பி-ம்:—[1]தன். [2]படையினுலே. [3]வேதமன்ன. [4]வருஞ்சமர். [5]மாற்றலரென்றுமாற்றல், ஆற்றலவறிகிலாமால். [6]என்னச். [7]செய்தது. [8]தெரிதி. [9]வெள்ளத்திடை. [10]பெருமை. (2676)

22.—சாம்பவான், 'விரைவில் யாவரையும் பிழைப்பிக்கும் மருந்து கொணர்க' எனல்.

அன்னவன் [1]றன்னைக் கண்டா [2]லாற்றுமோ வாக்கை வேறே,
இன்னுயி ரொன்றே மூலத் திருவரு மொருவ ரேயால், [3]இன்னது
இடப்பத் [4]தாழா விங்கினி யிமைப்பின் முன்னர்க், [5]கொன்னியல்
வயிரத் தோளாய் மருந்துபோய்க் கொணர்தி யென்முன்.

(இ-ள்.) அந்த இலக்குமணனை (உயிரொடுங்கிவீழ்ந்திருக்கக்) கண்டால், (ஸ்ரீராமன உயிர்) தாங்கவல்லனே? (அடியேபிடித்து ஆராய்ந்துபாாத்தால்) இருவரும் ஒருவரே: (இது திண்ணம்:) (அவ்விருவருக்கும்) உடம்புவேறே: (ஆயினும்) உயிர்ஒன்றேயாம்: (பகைவர்க்கு) அச்சந்தோன்றக் காரணமான வயிரம்போன்ற தோள்களையுடையவனே! (இத்தன்மை) இவ்வாறு இருப்பதால், இனி, இங்குத் தாமதியாமல் இமைப்பொழுதிற்கு முன்னமேபோய் (யாவரையும் பிழைப்பிக்கவல்ல) மருந்தைக் கொணர்வாய் என்முன், (சாம்பவான்); (எ-று.)—பி-ம்:—[1]தன்மை. [2]ஆற்றுமே. [3]என்னது, இங்கிலே. [4]தாழ்வதினியில்லை, தாழாவினியில்லை, தாழாதினியில்லை, தாழினினியிலே. [5]பொன். (2677)

23.—சாம்பவான் 'தாழாது மருந்து கொணரின் யாவரும் பிழைப்பார்' எனல்.

எழுபது வெள்ளத் தோரு மிராமனு மிளைய கோவும்
[1]முழுதுமிவ் வுலக மூன்று நல்லற மூர்த்தி தானும்

[2]வழுவலின் மறையு முன்னால் வாழ்ந்தன வாகு மைந்த
பொழுதிறை தாழா தென்சொல் [3]நெறிதரக் கடிது [4]போதி.

இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) மைந்தனே! (மருந்தைக்கொணர்ந்தால்), எழுபது வெள்ளஞ் சேனைகளும் இராமனும் இளையபெருமாளும் முழுதாகிய இந்த உலகம் மூன்றும் நல்லதருமதேவதையும் குற்றமற்ற வேதங்களும் உன்னால் வாழ்ந்தனவாகும்: (ஆதலால்) சிறிதுபொழுதும் தாமதியாமல் நான் சொல்லும் வழியே விரைந்துபோவாய்; (எ - று.) —பி - ம்:—[1]முழுவதிவ். [2]வழுவிலா. [3]தேறுதி. [4]போநீ. (2678)

வேறு.

24.—இதுமுதல் மூன்றுகவிகள்-மருத்துமலையுள்ள இடத்துக்குச் சாம்பவான் வழிகூறுதலைத் தெரிவிக்கும்.

பின்புளதிக் கடலென்னப் [1]பெயர்ந்ததற்பி னியோசனைகள்[2] பேசநின்ற, ஒன்பதினாயிரங்கடந்தா லிமயமெனுங் குலவரையையுறுதியுற்றால், தன் பெருமை யோரிரண்டா யிர[3]முளயோ சனையதுபின் றவிரப் போனால், முன்புளயோ சனை[4]யெல்லா [5]முற்றினைபொற் கூடஞ்சென் றுறுதி [6]மொய்ம்ப.

(இ - ள்.) வலிமையுள்ளவனே! இந்தக்காண்கின்றகடல் பின்புளதென்னும்படி (இதனைக்கடந்து) சென்றபிறகு பேசப்படுகின்ற ஒன்பதினாயிரம் யோசனை கடந்தால் இமயமெனுங் குலபருவதத்தை யடைவாய்: அடைந்தால் (அது) தன்பரப்பு இரண்டாயிரம் யோசனை யுள்ளது: அது பின் தவிருமாறு முன்புள்ள ஓசனை [ஒன்பதினாயிரம் யோசனை] யெல்லாம் கடந்துபோனால், ஏமகூடத்தைச் சென்று சேருவாய்; (எ - று.)—பி - ம்:—[1]போந்ததற்பின். [2]பேசாநின்ற. [3]உளதியோசனையது. [4]கடந்து. [5]முற்றின. [6]முன்ப. (2679)

25. [1]இம்மலைக்கு மொன்பதினா யிர[2]முள தா வியோசனையினிடத மென்னுஞ், [3]செம்மலைக்கு முளவாய [4]வத்தனையோ சனை கடந்தாற் சென்று காண்டி, எம்மலைக்கும் [5]பெரிதாய வடமலையை யம்மலையி னகல மெண்ணின், மொய்ம்[6]மலைந்த திண்டோளாய் முப்பத்தீ ராயிரமியோ சனையின் முற்றும்.

(இ - ள்.) இவ் ஏமகூடமலைக்கும் (அப்பால்) ஒன்பதினாயிரம் யோசனை தூரத்தில் நிடதமென்னுஞ் செவ்வியமலை யுளது: அம்மலைக்கும் அவ்வளவுதூரம் [ஒன்பதினாயிரம் யோசனை தூரம்] கடந்து சென்றால் எமமலைக்கும்பெரியதாய மேருமலையைக் காண்பாய்: அம்மலையின் பரப்பை யெண்ணினால், வலிமையோடுபொருகின்ற திண்ணிய தோள்களையுடையவனே! முப்பத்திராயிரம் யோசனை முற்றுப்பெற்றிருக்கும்; (எ - று.)—பி-ம்:—[1]அம். [2]உளவோசனை யதனினிடதமென்னும், உளதாவோசனையிலிடபமென்னும், உளவோசனையவனிநிடதமென்னும். [3]செம்மலையம் மலைக்கு

முள, செம்மலைக்குமப்பாலும். [4]அத்துணையதுணை, அத்தகையவது. [5]அரசாய...மலையை, பெரிதாகிய வடமலை. [6]மலைந்ததிரள், மலையின்றிரள், மலையதிரள். (2680)

26. மேருவினைக் கடந்தப்பா [1]லொன்பதிறு யிரமுளவோசனையை விட்டால், [2]நேரணுகு நீலகிரி தானிரண்டா யிரமுளயோசனையி னிற்கும், மாருதிமற் றதற்கப்பா லியோசனை [3]நா லாயிரத்தின் [4]மருந்து வைகும், கார்வரையைக் காணுதிமற் றது[5]காணவித் துயர்க்குக் [6]கரையுங் காண்டி.

(இ-ள்.) மேருவைக்கடந்து அப்பால் ஒன்பதிறுயிரம்யோசனை தூரத்தைக்கடந்தால் நேரேயணுகுகின்ற நீலகிரியென்பது தான் இரண்டாயிரம் யோசனை தூரத்தில் இருக்கும்; மாருதியே! அதற்கு அப்பால் நாலாயிரம் யோசனை மருந்துகள் தங்கியிருக்கப்பெற்ற கரிய மலையைக் காண்பாய்; அதனைக் காணவே, பின்பு இப்போது நமக்கு நேர்ந்திருக்குந் துயருக்குக் கரையையுங் காண்பாய்: (எ-று.)—இத்துயர்க்குக்கரை - இலக்குவப்பெருமாளும் நம் நண்பர்களெல்லாரும் இறந்ததனலாகிய துன்பக்கடலினது கரை. பி-ம்:—[1]எண்பதிறுயிரம். [2]நேரணுகி. [3]நாலாயிரத்து, [4]மருத்து. [5]காணிலித் [6]துயரங். (2681)

27.—சாம்பவான் அங்குள்ள மருந்துகள்இன்னவை யென்பதை அடையாளத்தோடு அநுமானுக்குக் கூறுதல்.

மாண்டாரை யுய்விக்கு மருந்[1]தொன்று மெய்வேறு வகிர்களாகக், கீண்டாலும் [2]பொருந்துவிப்ப தொருமருந்தும் படைக்கலங்கள் [3]கிளர்ப்ப தொன்றும், மீண்டேயுந் தம்[4]முருவே யருளுவதோர் மெய்ம்மருந்து [5]முளநீ வீர. ஆண்டேகிக் கொணர்தியென வடையாளத் தொடுமுரைத்தா னறிவின் மிக்கான்.

(இ-ள்.) அறிவின்மிக்கவனுன சாம்பவான,—மாண்டவரை யுய்விக்கும் மருந்து ஒன்றும், உடப்பு வெவ்வேறுபிளவுகளாகப் பிளந்திட்டாலும் பொருந்தச்செய்வதொரு மருந்தும், (பொத்திய) படைக்கலங்களை வெளிப்படுததுவதொரு மருந்தும், (உருவம்மாறிவிட்டாலும்) மீண்டும் தம்முருவையே யடையச் செய்யவல்ல மெய்ம்மை மருந்தொன்றும் உள்ளன: வீரனே! நீ அங்கேபோய் (அம்மருந்துகளைக்) கொணர்வாயென்று அவ்வம்மருந்துக்குஉரிய அடையாளத்தோடும் (அநுமானுக்குக்) கூறினுன்; (எ-று.)

இதனுல், அந்த மருந்துமலையிலிருக்கும் மருந்துப் பூண்டுகளைச் சாம்பவான் விவரித்தனன். மாண்டாரை யுய்விக்கும் மருந்து-ஸஞ்ஜீவகரணி: படைக்கலங்கள் கிளர்ப்பது - விஶல்யகரணி: தம்முருவை யருள்வது - ஸாவர்ண்யகரணி. பி-ம்:—[1]ஒன்றிவ்வுடல். [2]பொருந்துவிக்கும். [3]கிளைப்பது. [4]உருவை. [5]உளது. (2682)

28.—அம்மருந்துகள் தோன்றியவிதமும் சாம்பவான் தான் அவற்றை அறிந்த விதமும்.

**இன்னமருந் தொருநான்கும் பயோ ததியைக் கலக்கிய [1]ஞான்
றெழுந்த தேவர், [2]முன்னியமைத் தனர்மறைக்கு மெட்டாத பரஞ்
சுடரிவ் வுலக [3]மூன்றும் தன்னிருதா ளுள்ளடக்கிப் பொலிபோழ்
தின் யான்முரசஞ் சாற்றும் [4]வேலை, [5]அன்னவைகண் [6]டுயாவுதலுந்
தொழுமுனிவ [7]ரவற்றியலெற் கறிவித் தாரால்.**

இரண்டுகவிகள்-ஒருதொடர்.

(இ-ள்.) இப்படிப்பட்ட நான்குமருந்துகளும் தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றியன: (அத்தேவர் அவைகளை) ஆராய்ந்து அரண்பொருந்த வைத்துள்ளார்: வேதத்துக்கும் எட்டாத பரஞ்சுடரான (வாமனனான) திருமால் (திரிவிக்கிரமனாகி) இவ்வுலக மூன்றையும் தன்னுடைய இரண்டு தாளுக்குள்ளடக்கிப் பொலிந்த காலத்தில் யான் வெற்றிமுரசை யறைகையில், அந்த ஓடதிகளைக் கண்டு விறுவுதலும் பழமையான முனிவர் அவைகளின் தன்மையை எனக்குத் தெரிவித்தார்கள்; (எ - று.)—இச்செய்யுள் சில பிரதியில் இல்லை. பி - ம்: [1]நாள். [2]உன்னியமைத்தொரு, உன்னியமைந்தன. [3]யாவும். [4]அந்நாள். [5]அன்னது. [6]உரைத்தலும். [7]அதன்றிறம். (2683)

29.—சாம்பவான் 'அம்மருந்துகளைக்கொண்டு எம்மைக் காக்க' எனல்.

**இம்மருந்து [1]காத்துறைவ [2]வெண்ணிலவாற் றெய்வங்க [3]ளிரங்
கா யார்க்கும், நெய்ம்மருங்கு படரகில்லா நெடுநேமிப் படையுமவற்
றுடனே [4]நிற்கும், பொய்ம்[5]மருங்கி னில்லாதாய் புரிகின்ற காரியத்
தின் [6]பொருளை நோக்கிக், கைம்மருங்குண் டாறின்னைக் காயாவா
மப்புறம்போய்க் கரக்கு மென்றான்.**

(இ - ள்.) 'இந்த மருந்துகளைக் காத்துக்கொண்டிருப்பவை, எண்ணில்லாத தெய்வங்களாகும்: (அவை) எவரிடத்தும் இரக்கங்கொள்ளா: நெய்பூசியதும் மருங்கேசெல்வதற்கும் முடியாததுமான நெடியசக்கரப்படையும் அத்தெய்வங்களுடனே (பாதுகாவலாய்) நிற்கும்: பொய்யின் சமீபத்திலும் நில்லாதவனே! (நீ) செய்யப்போகின்ற காரியத்தின் பயனைப் பார்த்து அம்மருந்துகள் உன் கையில் தானே வந்துசேரும்: (அம்மருந்துகளைக் காக்கின்ற தெய்வங்களும்) உன்னைக் கோபியாதனவாய் அப்புறம்போய் மறைந்துவிடும்' என்றான்; (எ - று.)

பி - ம்:—[1]காத்துறையுங், காத்துறைவது, கரந்துறையுங். [2]தெய்வங்களெண்ணிலவால். [3]இரங்கி. [4]காக்கும். [5]மருங்குமில்லாதாய். [6]பொதுமை. 'கைம்மருங்குதொடர்ந்துன்னைக் காவாவென்றப் புறம்போய்க் கரக்குமென்றான்' என்றும், 'கைம்மருந்து கொணர்ந்தெம்மைக் காவாயெலப்புறம்போய்க் கரக்குமென்றான்' என்றும் நான்காமடி. (2684)

30.—அநுமான் மருந்தைக்கொணர்வேனென்று ஒருப்பட்டு அங்குச்செல்லப் பெருவடிவங்கொள்ளுதல்.

ஈங்கிதுவே பணியாகி லிறந்தாரும் பிறந்தாரே யெங்[1]கோக் கியாதுந், தீங்கிடையூ றெய்தாமல் தெருட்டுதிர்போ யெனச் சொல்லி [2]யவரைத் [3]தீர்ந்தான், ஓங்கினன்வான் நெடுமுகட்டை [4]யுற்றனன் பொற் றோளிரண்டுந் திசையோ [5]டொக்க, வீங்கினவா காசத்தை விழுங்கினனே யெனவளர்ந்தான் வேதம் போல்வான்.

(இ - ள்.) 'இப்போது இச்செயலே (யான் செய்யவேண்டிய) ஏவலாயின், இறந்தோரெல்லாம் (மீண்டும்) பிறந்தவராய்விடுவர்: எமது தலைவனாகிய ஸ்ரீராமனுக்குத் தீங்கைத்தரும் தடை யாதும் நேரிடாதபடி போய்த் தேற்றரவு கூறுங்கள்' என்றுசொல்லி அவர்களை நீங்கினவனாய், வேதம்போல்பவனான அநுமான், உயர வளர்ந்து வானத்துமேல்முகட்டை யுற்றனன்: (அவனுடைய) அழகிய தோள்களிரண்டும் திசையோடொப்ப வளர்ந்தன; ஆகாயத்தைவிழுங்கினான்போல(ப் பேருருவமெடுத்து) வளர்ந்தனன்; (எ-று.)— பி - ம்:—[1]கோற்கு. [2]அவனைத். [3]தீர்ந்தே. [4]உற்றன. [5]ஒப்ப. ஓங்கி. (2685)

31.—அநுமான்கொண்ட பேருருவத்தின் நிலை.

கோளோடு [1]தாரகைகள் கோத் [2]தமைத்த மணியாரக் கோவை போன்ற, தோளோடு தோளகல மாயிரமியோ சனை [3]யெனவுஞ் சொல்ல வொண்ணா, தாளோடு தாள்பெயர்க்க விடமில[4]தா கிய இலங்கை தடக்கை வீச, [5]நீளோடு திசை[6]போதா விசைத்தெழுவா னுருவத்தி [7]னிலையி தம்மா.

(இ - ள்.) கிரகங்களும் நட்சத்திரங்களும் (அந்த அநுமானுக்குக்) கோத்து அமைத்த முத்துமணிகளாலியன்ற வடங்களையொத்தன: தோளொடுதோளுக்குஉள்ள அகலம் ஆயிரம்யோசனையெனவுஞ் சொல்லமுடியாது: [ஆயிரம் யோசனையிலும் மிக்கிருந்ததென்றவாறு]; (வைத்துள்ள) அடியோடு பெயர்த்து வேறோரடி வைக்க இலங்கையில் இடமில்லாமற் போயிற்று: பெரியகையை வீசுவதற்கு நீளமாகஓடுகின்ற திசையே போதாவாம்: (மருந்து கொணர) விரைந்து எழுபவனான அவ்வநுமானது உருவத்தின் நிலை இதுவாகும்; (எ - று.)— அம்மா - ஆச்சரியம்: உருவத்தின் பெருமையை வியந்துகூறியவாறு. பி - ம்:—[1]தாரகைநிலையின். [2]அமைந்தமணிக்கோவைபோன்று கொற்றத். [3]அளவு, அகன்ற, [4]ஆகிய, ஆயின. [5]நீளோடத், நீளோடி. [6]போத. [7]நிலையது. (2686)

32.—அநுமான் விசைத்தெழும்போதைய வருணனை.

வால்[1]வளைத்துக் கைந்நிமிர்த்து வாயினையுஞ் சிறிதகல [2]மடித்து மானக், காலிலத்தி னிடையூன்றி [3]யுரம்விரித்துக் கழுத்தினையுஞ் [4]சுருக்கிக் [5]காட்டித், தோண்மயிர்க்[6]குந் தளஞ்சிலிர்ப்ப விசைத்[7]தெழுந்தா னவ்விலங்கை துளங்கிச் சூழ்ந்த, வேலையிற்புக் கழுந்திய தோர் மரக்கலம்போற் [8]சுரித்துலைய விசயத் தோளான்.

(இ - ள்.) வெற்றி தங்கியதோளையுடையவனான அநுமான்,— வாலை வளைத்துக் கையையுயரத்தூக்கி வாயையுஞ் சிறிது அகலு மாறு மடித்து, பெருமைபொருந்திய தாளை நிலத்திலூன்றி மார்பை விரித்துக் கழுத்தினையுஞ் சுருக்கிக்காட்டி, உடல்தோலின்மீதுள்ள மயிர்ச்செறிவுகள் சிலிராநிற்க, நிலைகலங்கி(த் தன்னைச்) சுற்றிய கடலிற் புக்குஅழுந்தின ஒருமரக்கலம்போல அந்தஇலங்கைஅயரு மாறு விரைவுகொண்டெழுந்தான்; (எ - று.)— அநுமான் விரைந் தெழுந்தபோதைய இயற்கையை இனிது கூறியது-தன்மைநவிற்சி யணி. ஈற்றடியில்உவமையணியும் சேர்ந்துள்ளது. பி - ம்:— [1]விசைத்து. [2]வகுத்து, உகுத்த. [3]ஒருமித்துக், உரநெருக்கிக், உரம் விசைத்துக். [4]சுரித்து. [5]தாண்டி. [6]கொந்தளம். [7]எழுவான். [8]சுரித் துலைய, திரிந்துலைய, திரிந்துயர. (2687)

33.—அனுமான்சென்ற வேகத்திஞல் விளைந்த நிகழ்ச்சி மூன்றுகவிகளாற் கூறப்படும்.

கிழிந்தனமா [1]மழைக்குலங்கள் [2]கீண்டது [3]நீண் டகல்வேலை கிழக்குமேற்கும், பொழிந்தன [4]மீன் றொடர்ந்தெழுந்த பொருப் பினமுந் தருக்குலமும் பிறவும் [5]பொங்கி, [6]அழிந்தன [7]வா னவர்மான மாகாயத் [8]திடையினிற்பே ரசனி யென்ன, விழுந்தன நீர்க் கடல மூந்த வேறினமேற் கீறினபோய்த் திசைக ளெல்லாம்.

(இ - ள்.) பெரிய மழைக்குலங்கள் கிழிந்தன; நீண்டுபரந்த கடல் பிளவுபட்டது; கிழக்கிலும் மேற்கிலும் நட்சத்திரங்கள் உதிர்ந்தன; பொருப்புக்கூட்டங்களும் மரக்கூட்டங்களும் பிறவும் கிளர்ந்து உடன்தொடர்ந்தெழுந்தன; வானவரின் விமானங்கள் ஆகாயத்தினிடையே நிலைகெட்டனவாய்ப் பெரிய இடிபோல் நீர்க் கடலிலே அழுந்த விழுந்தன: (அதனாற் கடல்நீர்கள்) திசைகளி லெல்லாம்போய்க் கிழித்து மேலேறின; (எ - று.)—பி-ம்:—[1]மலை. [2]கீண்டன [3]நீணெடுவேலை. [4]மீண்டெழுந்தபெரும், பின்றொடர்ந் தெழுந்த. [5]போக்கி. [6]அழிந்தனர். [7]வானவர்நகரம், ஆமானததேர். [8]இடையேபோய், இடையினிற்போய், இடையனபேர், இடையன போல். (2688)

34. [1]பாய்ந்தனனங் கப்பொழுதே பருவரைக ளனைப்பலவும் [2]வடபா கத்துச், சாய்ந்தனபே ருடற்பிறந்த சண்ட[3]மா ருதம்வீசத் தாதை [4]சால, ஓய்ந்தனனென் றுரைசெய்ய விசும்பூடு படர்கின்ற [5]னுருவே கத்தால், காய்ந்தனவே லைகள் [6]மேகங் கரிந்தனவெந் தெரிந்தபெருங் கான மெல்லாம்.

(இ - ள்.) அப்பொழுதே அங்குப் பாய்ந்தான்: பருத்தமலைகள் மிகப் பலவும் பெரியஉடலிலிருந்து பிறந்த சண்டமாருதம் வீசுத லால், வடபாகத்துச் சாய்ந்தன: தந்தையான வாயுபகவானும் மிகவும்ஓய்ந்திட்டானென்று சொல்லுமாறு விசும்பினிடையே செல்பவனான அநுமானுடைய மிக்கவேகத்தினால் சமுத்திரங்கள் வற்றின: மேகங்கள் கரிந்தன; பெரிய காடுகளெல்லாம் வெந் தெரிந்தன; (எ - று.)—உருவேகம்-ஊருவேகமுமாம். வாயுவேகத்தி னும் மிக்குள்ள வேகத்தை அநுமான் அப்போது கொண்டிருந்தன

னென்பது 'தாதைசால ஒய்ந்தனனென்றுரைசெய்ய விசும்பூடு படர்கின்ருன்' என்பதன் கருத்து. இச்செய்யுள் "கடல்முன்னே" என்ற அடுத்த பாடற்குப் பின் சில பிரதிகளில். பி-ம்:—[1]காய்ந்தனனப்பொழுதத்தே. [2]படரவார்த்து, படர்ந்துபாரிற். [3]மாருதவிசையிற்ருதை. [4]காலே. [5]உறு. [6]கன லுங். (2689)

35. கடல் [1]முன்னே நிமிர்ந்தோடக் கால்பின்னே [2]தொடர்ந்தோடக் கடிதிற் செல்வான், உடல்முன்னே [3]செலவுள்ளங்[4]கடைக்குழையாய்ச் [5]செலச்செல்வா னுருவை நோக்கி, அடன்முன்னே தொடங்கியநா ளாழ்கடல்சூ ழிலங்கையெனு மரக்கர் [6]வாழுந், திடர் [7]முந்நீரிடைப்படுத்துப் பறித்தனனந் துயரென்ருர் தேவ ரெல்லாம்.

(இ - ள்.) கடல் முன்னேநிமிர்ந்துசெல்லவும் கால் பின்னே விரைந்துசெல்லவும் காற்றுப்போல விரைந்துசெல்பவனும், உடல் முன்னேசெல்லவும் மனம் கடைக்கூழையாய்(ப் பின்னே) செல்லவும் செல்பவனுமான அநுமானுடைய உருவத்தைப் பார்த்து, தேவரெல்லாம்-'(இவன்) முன்னே (தன்) வலிமையை(க் காட்ட)த் தொடங்கியபோதே ஆழ்ந்தகடல்சூழ்ந்த இலங்கை யென்னும் அரக்கர் வாழ்கின்ற திட்டை(த் துயர்)க் கடலிலே வீழ்த்தி நந்துயரைப் பறித்தானென்ருர்; (எ-று.)

அநுமான் உருவத்தைத் திருமாலின் உருவமென்றே கருதி, இவன் முன்பு அரக்கரைக்கொன்று எஞ்சினுரைத் துயர்க்கடலில் வீழ்த்தி நந்துயரந்தீர்த்தவனென்று கொண்டாடினுர்களென்பதாம்; திருமால் பூர்விகராட்சசரைத் தொலைத்தமை முன்னரே கூறப்பட்டது. இனி, சுந்தரகாண்டத்துத் தன் வலிமையை அநுமான் காட்டியதைக் கூறியதுமாம்; அன்றி அநுமான் பிறந்தபோது காட்டிய வலிமையைச்சுட்டிக் கூறியதெனினுமாம். அநுமான் வானத்து எழும்போது தோன்றிய காற்று கடலைத்தள்ளிக்கொண்டு செல்வதும், அவ்வநுமானின் நடைக்குப் பின்னேயாயிற்றென்பது, முன்னடியிற்கூறிய பொருள். மனத்தினும் அவ்வநுமானுடையஉடல் விரைந்துசென்றதென்பது, இரண்டாமடியிற் கூறியபொருள். கடைக்குழை = கடைக்கூழை: பின்னணி: இறுதிவரிசை. பி-ம்:—[1]பின்னே...கால்முன்னே. [2]தொடர்ந்தோடக்கடிதிற். [3]செல்லுமுளம். [4]கடைக்குழைவால். [5]வான். [6]வைகும். [7]முந்நீரிடைப்படுத்துஞ் செல்வமலரேறெழுந்து, முந்நீர்க்கிடையெறிந்தான் முரிந்தது...என்ருர். முந்நீர்க் கிடையெறிந்தான்...என்ருர், முன்னரிடைமறித்துப் பறித்திலன்...என்ருர். (2690)

36.—அநுமான் எழுந்த உயரத்தின் வருணனை.

மேகத்தின் பதங்கடந்து வெங்கதிருந் தண்கதிரும் [1]விரைவிற் செல்லும், மாகத்தின் நெறிக்கப்பால் வானமீன் குலம்[2]வழங்கும் [3]வரைப்பு நீங்கிப், போகத்தின் [4]நெறிகள் தந்தார் புகலிடங்கள் பிற்படப்போய்ப் பூவின் வந்த, [5]ஏகத்தந் தணனிருக்கை யினிச்சேய்த் தன்ருமென்ன [6]வெழுந்து சென்ருன்.

(இ - ள்.) மேகமண்டலத்தைக் கடந்து, வெம்மையான கிரணனுன சூரியனும் குளிர்ந்த கிரணங்களையுடையவனுன சந்திரனும்

விரைந்துசெல்கின்ற வானவழிக்கு அப்பால் நட்சத்திரங்களின் தொகுதிசஞ்சரிக்கின்ற (நட்சத்திரமண்டிலத்தின்) எல்லையினின்றுங்கடந்து, போகஸ்தாநத்தை (வேள்வியினாற்) பெற்றவர்கள் புகும் சுவர்க்கத்தினிடங்களும் பிற்படப்போய், (நாபீ) கமலத்தில் தோன்றிய ஒருமூர்த்தியாகிய பிரமதேவனது இருப்பிடம் இனித் தூரமானதன்று என்னும்படி உயரவெழுந்துசென்றான், (அவ்வநுமான்); (எ - று.)—போகத்தின் [4]குறிதொடர்ந்தார் என்ற பாடத்துக்கு - போகத்தைப்பெறக் குறித்துஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகத்தைச்செய்தவர் சுவர்க்கத்தைப் பெறுவரென்பது, நூற்கொள்கையென்க. பி - ம்:—[1]விரகிற். [2]வழுவும், விளங்கும். [3]வரம்பு நீங்கிப், வரம்பைநீங்கிப், வரையைவிட்டுப். [4]நெறிகடந்தார். [என்று புணர்ச்சியில்வரும்.] [5]வேதத்தனிருக்கையினிச் சேய்த்தன்றாமென்னமிக. [6]விரைந்து. (2691)

37.—அநுமானது வேகத்தைக் கண்டு மேலுலகத்தவர் வெவ்வேறுவகை ஊகித்துக் கூறலை இதுமுதல் மூன்று கவிகள் தெரிவிக்கும்.

வானநாட்டுறைகின்றார் வயக்கலுழன் வல்[1]விசையான் மாயன் வைகும், தானநாட்[2]டுறுகின்றா னென்றுரைத்தார் [3]சிலர்சிலர்கள் விரிஞ்சன் [4]றான்றன், ஏனைநாட் டெழுகின்றா னென்றுரைத்தார் சிலர் சிலர்களீச [5]னல்லால், போனநாட் டிடைபோக [6]வல்லனோ விவன் முக்கட் புனித னென்றார்.

(இ-ள்.) வானநாட்டிலுறைபவர்களிற் சிலர் வலிமைபொருந்திய கருடன் மிக்கவிரைவையுடையானாய்த் திருமால் வாழ்கிற தானமான வைகுந்த நாட்டிற்குச் செல்கின்றானென்றுரைத்தார்;(வேறு) சிலர், பிரமனென்பவன் தான் தன்னுடைய சத்தியலோகத்தினும் வேறானலோகத்துக்குச் செல்கின்றானென்றுரைத்தார்; (மற்றுஞ்) சிலர், ஈசனாக இல்லாவிட்டால் வெகுதூரத்திலுள்ள மேலுலகத்துப் போகவல்லனோ? (ஆகையால்), இவன் திரிநேத்திரங்கொண்ட பரிசுத்த மூர்த்தியாகிய சிவபெருமானேயென்றார்; (எ-று.)—'ஏனைநாடு' என்றது-தான் படைத்த பூமண்டலமல்லாத வேறுலகு என்றபடியுமாம். பி - ம்:—[1]விசையின். [2]உயர்கின்றான், எழுகின்றான். [3]சிலர்கள்சிலர், சதுமறையோன். [4]என்றார்க்கு, தானே, என்பான். [5]அல்லார். [6]வல்லரோ. (2692)

38 ***வேண்டுருவங் [1]கொண்டுவந்து விளையாடு கின்றான்மெய் வேத நான்கும், தீண்[2]டுருவ னல்லாத திருமாலே யிவனென்றார் தெரிய நோக்கிக், காண்டு [3]மென விமைப்பதன்முன் [4]கட்புலத்தைக் கடந்தகலு மின்னுங் காண்மின், மீண்டுவருந் தர[5]மல்லா வீட்டுலகம் புகுமென்றார் மென்மே லுள்ளார்.***

(இ - ள்.) மென்மேலான உலகத்துள்ளவர்கள் '(இவன்) வேண்டிய உருவத்தைக் கொண்டுவந்து விளையாடுகின்றவனாகிய உண்மையான வேதம் நான்குக்கும் எட்டாத்தக்க வடிவமுடையவனல்லாத திருமாலேயாவன்' என்று கூறினார்: (மற்றும்), 'நன்கு

ஆராய்ந்துபார்த்துக் காணக்கடவோ மென்றுகருதி இமைப்பதன் முன்னம் கட்புலத்தைக் கடந்தகல்கின்றான்: இன்னும் காண்மின்: மீண்டுவருந்தரமல்லாத மோட்சலோகத்தைப் புகுவான்' என்றுங் கூறினார்; (எ-று.)—பி - ம்:—[1] கொண்டெழுந்து. [2] உருவமல்லாத, உருவனல்லானேல், உருவந்தானல்லான், உருநான்முகனல்லால். [3] எனநினைப்பதன்முன், முன்னினைப்பதன்முன். [4] கட்புலமும், மேலேபோற். [5] அல்லன். (2693)

39. உருவென்றார் [1] சிலர்சிலர்க [2] ளொளியென்றார் சிலர்சிலர்க [3] ளொளிரு மேனி, அருவென்றார் [4] சிலர்சிலர்க [5] ளண்டத்துக் கப்புற நின் றுலக [6] மாக்கும், கருவென்றார் [1] சிலர்சிலர்கள் [7] காற்றென்றார் [1] சிலர்சிலர்கள் கடலைத் தாவிச், செரு [8] வென்ரு னிலை [9] யொன்றுந் [10] தெரியகிலா ருலகனைத்துந் [11] தெரியுஞ் செல்வர்.

(இ - ள்.) உலகனைத்தையும் தெரிந்த ஞானசெல்வத்தை யுடைய பெரியோர்,—கடலைக் கடந்து போரில் வென்றவனாகிய அநுமானுடைய நிலையை ஒன்றுந் தெரியமாட்டாதவரானார்: (அதனால் அவருட்) சிலச்சிலர், விளங்குகின்ற (இவ்வநுமானுடைய) திருமேனி, உருவுடையதென்றார்கள்; வேறுசிற்சிலர், ஒளிவடிவமானதென்றார்கள்; பின்னுஞ் சிலச்சிலர் காற்றுவடிவமான தென்றார்கள்; மற்றுஞ்சிற்சிலர், அருவடிவமானதென்றார்கள்: சிற்சிலர் அண்டத்துக்கு அப்புறத்திலிருந்து உலகத்தைப்படைக்கவல்ல காரணப்பொருளென்றார்; (எ-று.)—பி - ம்:—[1] சிலர்சிலவர். [2] ஒளியென்ன. [3] ஒளிருமேனும். [4] சிலர்கள்சிலர், சிலர்சிலவர். [5] அண்டத்துக்கப்பானின்று, அண்டத்தும் புறத்தும் நின்று. [6] காக்கும். [7] மற்றென்றார், அன்றாயிற். [8] வென்றார். [9] ஒருவர். [10] தெரிக்கிலார், தெரிகிலார்கள். [11] தெரியுந்தேவர், சொல்வார்தேவர். (2694)

40.—அநுமானுடலிலிருந்து தோன்றிய ஒலி.

வாசநாண் [1] மலரோன்ற னுலகளவு [2] நிமிர்ந்தனமேல் [3] வானமான, காச [4] மா யினதெல்லாங் [5] கரந்ததன துருவிடையே கனகத் தோள்கள், வீசவான் முகடுரிஞ்ச விசைத்தெழுவா [6] னுடற்பிறந்த முழக்கம் விம்ம, [7] ஆசைகா வலர் தலைகள் பொதி [8] ரெறிந்தார் விதிரெறிந்த தண்ட கோளம்.

(இ - ள்.) நறுமணம்பொருந்திய அன்றுமலர்ந்த தாமரைமலரில் தோன்றியவனை பிரமனுடைய உலகளவும் நிமிர்ந்தனவாகி. மேல்வானமான ஆகாசமெல்லாம் மறைவதற்குக் காரணமான தனது உருவிடையேயுள்ளவான பொன்னிறத் தோள்கள் வீசுவதனால் வான்முகட்டையளாவ விசைத்து எழுபவனான அநுமானுடைய உடலிலிருந்து பிறந்த முழக்கம், விம்மியதனால், திக்குப்பாலகர்கள் (தம்) தலைகள் நடுக்கமெடுத்தனர்; அண்டகோளமும் விதிர் விதிர்ப்புற்றது; (எ-று.)—பி - ம்:—[1] மலரவன்றன், மலரயன்றன். [2] இரிந்தன, இமிர்ந்தன, விரிந்தன. [3] வானமானக். [4] ஆயினது. [5] கரந்து தனதுருவிடையே, கவர்ந்தது தன்னுருவென்ன. [6] உடன். [7] வாசற்காவலர்கள். [8] எறிந்தவிடைபிளந்த. (2695)

வேறு.

41.—அநுமானெழுந்த நாளின் வருணனை.

தொடுத்தநாண் மாலை வானோர் [1]முனிவரே முதல தொல்லோர்
அடுத்த[2] நான் மறைக ளோதி [3]வாழ்த்தலா லவுணர் வேந்தன்
கொடுத்தநா ளளந்து கொண்ட [4]குறளனார் குறிய பாதம்
எடுத்தநா ளொத்த [5]தன்ன லெழுந்தநா ளுலகுக் கெல்லாம்.

(இ - ள்.) பெருமையிற் சிறந்த அநுமான் வளர்ந்தெழுந்த அந்த நாளானது,—உலகுக்கெல்லாம், அன்று மலர்ந்த மலர் கொண்டு தொடுக்கப்பெற்ற மாலையையணிந்த வானவரும் முனிவரும் முதலான பழமையோர் (தமக்கு உரிய) நான்கு வேதங்களை யோதி வாழ்த்தியதனால், அவுணர் தலைவனான மகாபலிசக்கரவர்த்தி (தாரைவார்த்துக்) கொடுத்தகாலத்தில் (பூமியை) அளந்துகொண்ட வாமனாவதாரமூர்த்தியானவர் (தமது) சிறியபாதத்தை யெடுத்த காலத்தை யொத்திருந்தது; (எ - று)

முதலிற்சிறுகிய வடிவினனாயிருந்த அநுமான் மருத்துமலையைக்கொணரச் செல்லும்போது பெருவடிவினனாகை, வாமனாவதாரமூர்த்தி முதலிற் குறுகிய வடிவினனாயிருந்து பிறகு பேருருவு கொண்டு அளக்கையில் முனிவர் முதலியோர் மகிழ்வுடன் வேத மந்திரங்கொண்டு துதித்தாற்போல அப்போது உலகோர் மகிழ்வு கொண்டு துதித்தன ரென்க. பி - ம்:—[1]முனிவரர்தொல்லை நல்லோர், முனிவர்மற்றுள்ளோர் தொல்லோர். [2]நாள். [3]ஆய்ந்த நாள். [4]குறளனன். [5]அன்னன். (2696)

42.—தேவர்முதலியோர் மணிமுதலியன தூவுதல்.

தேவரு முனிவர் தாமுஞ் சித்தருந் தெரிவை மாரும்
[1]மூவகை யுலகி னுள்ளா ருவகையால் தொடர்ந்து மொய்த்தார்
[2]தூவின மணியுஞ் சாந்துஞ் சுண்ணமு மலருந் [3]தொத்தப்
பூவுடை யமரர் தெய்வத் தருவென விசும்பிற் போனான்.

(இ - ள்.) மூவுலகிடத்துமுள்ளவரான தேவரும் முனிவரும் சித்தரும் அவர்களின் பெண்டிரும், மகிழ்ச்சியினால் தொடர்ந்து நெருங்கினவர்களாய்த் தூவின மணியும் சாந்தும் சுண்ணமும் மலரும் (தன்மீது) தொத்தியதனாலே பூவைக்கொண்ட தேவர்களின் தெய்வத்தருவைப்போல (அநுமான்) விசும்பிற்போனான்; (எ - று.)—மணி முதலியன தொத்தியதனால் அநுமான் தெய்வத் தருவைப்போன்றன னென்க. பி - ம்:—[1]மூவுலகிடையுளோரும், மூவகையுலகுளோரும். [2]தூவினர்மலருஞ்...அரியும். [3]தொக்க, தொக்குப், தொற்றப். (2697)

43.—இமயத்தையும் கயிலையையும் அநுமான் அடைதல்.

இமயமால் வரையை யுற்றா [1]னங்குள விமைப்பி லோரும்
கமையுடை முனிவர் [2]மற்றும் அறநெறி [3]கலந்தோ ரெல்லாம்
அமைகநின் கரும மென்று வாழ்த்தினா ரதனுக் கப்பால்
உமையொரு பாகன் வைகுங் கயிலைதன் னுலகை யுற்றான்.

(இ - ள்.) (அநுமான்),—இமயமென்ற பெரியமலையை யடைந்தான்: அங்கேயுள்ள இமைப்பில்லாத தேவர்களும் பொறுமையுடைய முனிவரும் மற்றும் தருமமார்க்கத்தில் நடப்போரும் ஆகிய யாவரும், 'நீ எடுத்த காரியம் இனிதாகுக' என்று வாழ்த்தினர்: அதனுக்கு அப்பால் உமையை (த் தன்) வாமபாகத்தே கொண்டவனாகிய சிவபெருமான் தங்கியருளும் கயிலாசகிரியைக்கண்டு மகிழ்ச்சியடைந்தான்; (எ-று.)—பி - ம்:—[1] அங்குறை. [2] தாமுந்தன்னெறி, மூற்றுமறநெறி, மற்றுநன்னெறி. [3] கடந்தோர். (2698)

44.—சிவபெருமான் அநுமானைச் சுட்டிக்காட்டி உமைக்கு உரைத்தல்.

வடகுண திசையிற் றோன்று மழுவலா ளுண்டு வைகுந்
தடவரை [1] யதனை நோக்கித் தாமரைச் [2] செங்கை கூப்பிப்
படர்குவான் றன்னை [3] யன்ன பரம னும் [4] பரிவிற் பார்த்துத்
தடமுலை யுமைக்குக் காட்டி வாயுவின் [5] தனய னென்றான்.

(இ - ள்.) அங்கே வடகீழ்திசையிற் காணப்படும் மழுப்படையை யுடையவன் தங்கியருளுகின்ற பெரிய கைலாசமலையை நோக்கி(த் தன்) தாமரை மலர்போன்ற செங்கையைக் கூப்பிப் போகுபவனான அநுமானை, அந்த மலைக்கு உரிய சிறந்தோனான சிவபெருமானும், அன்போடு பார்த்துப் பருத்த தனங்களையுடைய உமாதேவிக்குச்சுட்டிக்காட்டி, '(இவன்) வாயுகுமாரனான அநுமான்' என்று கூறினான்; (எ-று.)—வடகுணதிசைக்கு உரியவன்-சிவபெருமான்-ஈசானன் எனப்படுகிற சிவபிரானுக்கு உரிய திக்கு ஆதலால்தான் வடகீழ்திசை ஈசானியம் எனப் பெயர் பெறும். பி-ம்:—[1] அதனில். [2] கைகள். [3] அன்பால். [4] விசும்பைப் பார்த்தான், விசும்பிற்பார்த்தான். [5] மதலை. (2699)

45.—அநுமான் செல்லுங் காரணத்தைச் சிவபெருமான் உமையினிடத்துத் தெரிவித்தல்.

என் [1] னிவ [2] னெழுந்த தன்மை [3] யென்றுல கீன்றாள் கேட்ப
மன்னவ னிராமன் றூதன் மருந்தின்மேல் வந்தான் வஞ்சர்
தென்னக ரிலங்கைத் தீமை [4] தீர்வது திண்ணஞ் சேர்ந்து
நன்னுதல் நாமும் வெம்போர் காணுதும் நாளை யென்றான்.

(இ-ள்.) 'இவன் (விசும்பிலே) எழுந்து செல்லுகின்ற காரணம் என்னோ?' என்று உலகையீன்றவளான உமை வினவ, 'அரசகுலத்திற் பிறந்துள்ளவனான இராமபிரானது தூதனாகிய இவன் மருந்தைக்கொண்டு செல்ல வந்துள்ளான்: வஞ்சகரான அரக்கருடைய தென்றிசையிலுள்ளதாகிய இலங்கை நகரத்தின் தீமை தீர்வது திண்ணமாகும்: அழகியநெற்றியையுடையாய்! நாமும் (தேவருடன்) சேர்ந்து நாளைக் கொடியபோரைக் காண்போம்' என்று (சிவபெருமான்) கூறினான்; (எ-று.)—பார்வதியை 'உலகீன்றாள்' என்றது, கருதுதற்கு உரியது: "பெற்றாள் செகதண்டங்களனைத்தும்" என்றார், வில்லிபுத்தூராரும். பி ம்:—[1] அவன். [2] ஏகுந். [3] என்றுமையவடான்கேட்ப என்று படிப்பாரு முளர். [4] தீர்ப்பது ()

46.—அநுமான் ஏமகூடஞ்சேர்ந்து பின் நிடதத்தை யடைதல்.

நாமயோ சனைகள் [1]கொண்ட நாயிர நடுவு நீங்கி
ஏமகூடத்தி னும்ப [2]ரெய்தின னிறுதி யில்லாக்
காமமே நுகருஞ் செல்வக் கடவுள ரீட்டங் கண்டான்
நேமியின் விசையிற் செல்வான் [3]நிடதத்தி னெற்றி யுற்றான்.

(இ - ள்.) சக்கரப்படைபோல விசைகொண்டு செல்பவனாகிய அநுமான்,—பேர்பெற்ற (ஒன்பதின்) ஆயிரம்யோசனைகள் தூரங் கொண்டதான நடுவிடத்தை நீங்கி ஏமகூடத்தின் மேற்புறத்தை யடைந்து, இறுதியில்லாத காமவின்பத்தை யனுபவிக்கும் செல்வ வளத்தோடுகூடிய தேவர்களின் கூட்டத்தைக் கண்டான்: (அப்பால்) நிடதமலையின்மேலிடத்தைச் சேர்ந்தான்; (எ - று.)— காமமே நுகருங் கடவுளர் - கின்னரர் கிம்புருடர் போல்வார். இச்செய்யுள் சிலபிரதியிலில்லை. பி - ம்:—[1]கொண்டேர், சொன்ன. [2]எய்தினின்று. [3]இடபத்தின். (2701)

47.—அநுமான் மேருவின்மீது சென்றான்.

எண்ணுக்கு மளவி லாத வறிவினோ [1]ரிருந்து நோக்கும்
கண்ணுக்கும் [2]கருதுந் தெய்வ மனத்திற்குங் கடிய னானன்
மண்ணுக்குந் திசைகள் வைத்த வரம்பிற்கும் மலரோன் வைகும்
விண்ணுக்கு மளவை யாய மேருவின் மீது சென்றான்.

(இ - ள்.) (மனிதரின்) மனத்திற்கும், அளவிடமுடியாத அறிவையுடையவர் இருந்துநோக்குகின்ற (ஞானக்) கண்கட்கும், (எதையும்) நினைக்கவல்ல தெய்வமனத்திற்கும் (எட்டாதபடி) விரைவையுடையனான அநுமான்,-பூமிக்கும் திசைகளின் ஏற்பட்டுள்ள எல்லைக்கும் மலரவனானபிரமதேவன் தங்கியுள்ள வானுலகத்திற்கும் அளக்குங் கருவிபோலுள்ள மேருவின்மேலே சென்றான்; (எ-று.)

பூமியினிடையே திக்குகளை வியாபித்துக்கொண்டு வானுற வோங்கி நிற்பதனால், மேருவை 'மண்ணுக்கும்...அளவையாய மேரு' என்றார்; இமயமலையை "மாநதண்டம" என்று காளிதாச மகாகவி கூறியது, இங்கு நினைவிற்கு வருகின்றது. பி - ம்:— [1]இமைத்து, இரைத்து. [2]கருணைத். (2702)

48.—மேருமலையின்மீது நாவன்மரத்தைக் காணுதல்.

யாவது நிலைமைத் தன்மை யின்னதென் [1]றிமையா நாட்டத்
தேவருந் [2]தெரிந்தி லாத வடமலைக் கும்பர்ச் சென்றான்
நாவலம் பெருந்[3]தீ வென்னு [4]நளிர்கடல் வளாக வைப்பில்
காவன்மூன் றுலக மோதுங் கடவுண்மா மரத்தைக் கண்டான்.

(இ - ள்.) இமையாக்கண்களைப்படைத்தவரான தேவரும் நிலையாயுள்ள தன்மை இன்னதென்று சிறிதும் தெரியமுடியாத மேருமலையின்மீது சென்று, (அநுமான்),—குளிர்ந்தகடலாற் சூழப்பட்ட இடமான பூமியில் பெருமைபெற்ற நாவலந்தீவு என்று காவலைக்கொண்ட மூன்றுலகமும் ஓதுவதற்குக்காரண

மான தெய்வத் தன்மையைக் கொண்ட பெரிய நாவன்மரத்தைக் கண்டான்; (எ-று.)—வடமலையின் நிலைமை இமையாக்கண்ணரான தேவர்களாலுந் தெரியமுடியாத தென்க. இமையாநாட்டத் தேவர் - கருத்துடையடைமொழி. பி-ம்:—[1]அறியா. [2]தெரிக்கிலாத. [3]தீயென்னும், தியென்ன. [4]நளி. (2703)

49.-அனுமான் மேருமலையிற் பிரமனைக் கண்டு வணங்குதல்.

அன்னமா மலையி னும்ப ருலகெலா மமைத்த வண்ணல்
[1]நன்னக ரதனை நோக்கி யதனடு [2]நாப்பண் நாமப்
பொன்[3]மலர்ப்பீடந் தன்மேல் நான்முகன் [4]பொலியத் தோன்றுந்
தன்மையும் கண்டு கையால் வணங்கினான் தருமம் போல்வான்.

(இ-ள்.) தருமமே வடிவமெடுத்தாற் போன்றுள்ளவனான அநுமான்,—அந்தப்பெரிய மேருமலையினுச்சியிலே உலகெல்லாவற்றையும் படைத்த பெருமையிற்சிறந்த பிரமதேவனது சிறந்த நகரத்தைப் பார்த்து, அதன் நட்டநடுவிலே சிறந்த பொன்மலர்ப் பீடத்தின்மேல் நான்முகனான பிரமதேவன் விளங்கத்தோன்றுகின்ற தன்மையையுங் கண்டு முறைப்படி வணங்கினான்; (எ-று.) —மேருமலைச் சிகரம் எல்லாத்தேவர்கட்கும் இருப்பிடமானதனால், அங்குப் பிரமன் முதல் தேவர்கள் எழுந்தருளியிருக்க, அத்தேவர்களையெல்லாம் முறையே கண்டு அநுமான் வணங்கினமையை ஐந்து கவிகளிற் கூறுகின்றனரென்க. கை - முறைமை. கையால் வணங்கினனுமாம். பி-ம்:—[1]நன்னெடுநகரம். [2]நாப்பணை. [3]மலைப். [4]பொலிந்து. (2704)

50.—திருமாலைக் கண்டு வணங்குதல்.

தருவன [1]மொன்றி வானோர் தலைத்தலை மயங்கித் [2]தாழப்
பொருவரு முனிவர் வேதம் புகழ்ந்துரை யோதை பொங்க
மருவிரி துளப மௌலி மாநிலக் கிழத்தி யோடும்
திருவொடு மிருந்த மூலத் தேவையும் வணக்கஞ் செய்தான்.

(இ-ள்.) (பின்பு அனுமான்),—தருக்களடர்ந்த வனம் பொருந்தி,—வானவர் ஆங்காங்குப் (பக்தியினாற்) பரவசப்பட்டு வணங்கவும் ஒப்பற்றமுனிவர் வேதத்தினாற் புகழ்ந்துரைக்கும் ஒலி எங்கும் பரவவும், பூமாதேவியோடும் இலக்குமிதேவியோடும் நறுமணம் விரிகின்ற திருத்துழாயைத் தாங்கிய மௌலியுடனேயிருந்த (எல்லாப்பொருள்கட்கும்) மூலகாரணமான திருமாலையும் வணங்கினான்; (எ-று.)—இச்செய்யுள் சிலபிரதிகளில் "ஆயதன்" என்ற அடுத்துள்ள பாடலுக்குப்பின் உள்ளது. திருமாலைக் கூறுமிடத்து 'மூலத்தேவு' என்றது, இக்கவிஞர் வைணவரென்பதைக் காட்டும். பி-ம்:—[1]ஒன்று, ஒன்றில். [2]தாழ்ந்து, தாழ்ந்த. ()

51.—உருத்திரமூர்த்தியைக் கண்டு வணங்குதல்.

ஆயதன் வடகீழ் பாகத் தாயிர மருக்க [1]ரான்ற
காய்கதிர் [2]பரப்பி யஞ்சு கதிர்முகக் கமலங் காட்டித்
தூயபே ருலக மூன்றுந் தூவிய மலரிற் சூழ்ந்த
[3]மூசயிழை பாகத் [4]தெண்டோ ளொருவனை வணக்கஞ் செய்தான்.

(இ - ள்.) (அன்றியும் அநுமான்),—அந்தமலையின் வடகீழ் பாகத்தில் [ஈசானதிசையில்] சிறந்தனவும் (இருளைக்) கடிகின்றனவுமான ஆயிரம்சூரியரின் கதிர்களைப் பரப்பிக்கொண்டு ஒளியுள்ள ஐந்து முககமலத்தைத் தோற்றுவித்து, பரிசுத்தமாகிய பெரியமூவுலகத்தோரும் அருச்சித்த மலர்களினாற் சூழப்பெற்றுச் செம்பொனணிகளையணிந்த உமாதேவியை (வாம) பாகத்திற் கொண்ட எண்தோள்களையுடைய ஒருவனை [சிவபெருமானை] வணங்கினான்; (எ - று.)

சிவபெருமான் ஆயிரம்சூரியரின் பிரகாசம் பொருந்திய ஐந்து முகங்களுடனும் எட்டுத் தோள்களுடனும் இம்மலையிலுள்ளனனென்க. இக்கவி, சிவபெருமானிடத்து இக்கவிஞர்க்குஉள்ள மதிப்பைக்காட்டும். சேயிழை - உமாதேவிக்கு, பண்புத்தொகையன்மொழி. ஆன்ற=அகன்ற, விரிந்தனனினுமாம். பி - ம்:—[1]கான்ற, கற்றை. [2]பரப்பில். [3]சேயிதழ். [4]திண்டோள். (2706)

52.—இந்திரனைக் கண்டு வணங்குதல்.

சந்திர னனைய [1]கொற்றத் தனிக்குடை [2]தலையிற் றுகச்
சுந்தர மகளி ரங்கைச் சாமரை தென்றல் தூவ
அந்தர வான நாட ரடிதொழ முரச மார்ப்ப
இந்திர னிருந்த தன்மை கண்டுவந் திறைஞ்சிப் போனான்.

(இ - ள்.) (மற்றும் அனுமான்),—சந்திரனையொத்த வெற்றி பொருந்திய தனிக்குடை தலையின்மீதாக (நிழல்செய்ய)வும், அழகிய மகளிர் அழகிய கையிலேந்திய சாமரை தென்றலைவீசவும், அந்தரமென்று வழங்கப்படும் வானத்திலுள்ள நாடாகிய சுவர்க்கலோகத்தவர் [தேவர்] பாதங்களை வணங்கவும், (வெற்றி) முரசம் ஆரவாரிக்கவும், தேவேந்திரன் வீற்றிருந்த நிலையைக்கண்டு மகிழ்ந்து வணங்கிச் சென்றான்; (எ - று.)—பி-ம்:—[1]தோற்றத். [2]தலையது. (2707)

53.—அனுமான் திசைக்காவலர் எண்மரைக் காணுதல்.

[1]பூவளர் மரத்தைப் போர்ப்பப் பொற்பகம் விரிந்து [2]பொங்கித்
தேவர்த மிருக்கையான மேருவின் சிகர[3]ச் சேர்ப்பின்
மூவகை யுலகுஞ் [4]சூழ்ந்த மூ ண்டிசை முறையில் தா[5]ங்கும்
காவல ரெண்மர் நின்ற தன்மையுந் தெரியக் கண்டான்.

(இ - ள்.) மலர்கள்மலர்ந்துள்ள கற்பகதருக்களைச் சூழும்படி பொலிவு தன்னிடத்து விரிந்துள்ள து தேவர்கட்கு இருப்பிடமாகவுள்ள மேருமலையின் சிகரத்தின் எல்லையிலே மூவகையுலகத்திலுஞ் சூழ்ந்துள்ள மாறுபட்ட திசைகளை முறைமையாகத் தாங்குகின்ற அஷ்டதிக்குப்பாலகர்நின்ற தன்மையையும் கண்ணுக்குப் புலனாக (அவ்வநுமான்) கண்டான்; (எ - று.)

கற்பகதருக்களை மேருவின் ஒளி போர்த்துக்கொண்டுள்ளதென்க. மேருகிரியின் சிகரத்து எட்டுப்புறத்திலும் எண் திசைக்குங் காவலர் தங்கியுள்ளாராவர். பொங்கி ஆன மேருவின்

சிகரம் என்க. பி - ம்:—[1]பூவலரமைந்தபொற்பிற் இரணங்கள் பொலிந்து, பூவிலமரத்தைப்போல வந்தரமறைந்து. [2]பொங்கத், பொங்கும். [3]வெற்பில், வைப்பின். [4]சூழ்ந்து. [5]தாங்கக். (2708)

54.—உத்தரகுருவையடைந்து உதயமாய்விட்டதேயென்று அனுமான் கருதுதல்.

அந்தடங் கிரியை நீங்கி யந்தலை யடைந்த [1]வள்ளல்
உத்தர குருவை யுற்ற னொளியவன் [2]கதிர்க ளூன்றிச்
செற்றிய [3]இருள்இன் ருக்கி விளங்கிய செயலை நோக்கி
வித்தகன் விடிந்த தென்ற முடிந்ததென் வேக மென்றான்.

(இ - ள்.) அந்தப் பெரியமலையைக் கடந்து அப்புறத்தை யடைந்த உதாரகுணமுள்ளவனான அநுமான், உத்தரகுருவை யடைந்தான்; (அங்குச்) சூரியனுடைய கதிர்கள் ஊன்றி நெருங்கிய இருளை இலவாகச்செய்து விளங்கிய தன்மையைப் பார்த்து, செய் தொழிலில் திறமையமைந்தவனாகிய அநுமான், 'விடிந்திட்டதே!' என்றுசொல்லி, எனதுவேகம்முடிந்தது என்று (வருத்தங் கொண்டு) கூறினான்; (எ-று)

விடிவதற்குள் மருத்துமலையைக்கண்டு கொண்டுபோய் இறந் தவர்யாவரையும் பிழைப்பிக்கவேண்டுமென்று கருதியிருந்ததனால், உத்தரகுருவிற் சூரியன் பேரொளிவீசியது கண்ட அநுமான் 'இவ் வளவில் விடிந்திட்டதே! என்னுடைய வேகம் பயனற்றதாய் முடிந்திட்டதே!' என்று வருத்தமுற்றுக் கருதினனென்பதாம். பிறரைப் பிழைப்பிப்பதில் தன்வருத்தம்பாராது விரைதல் பற்றி, 'வள்ளல்' என்றார். வித்தகன்-எடுத்துக்கொண்ட காரியத்தைத் திறனுறச்செய்பவன். பி-ம்:— [1] அண்ணல். [2]கதிரை. [3]இருளிற்ருக.

55.—அனுமான் வருந்திய வகை.

ஆதியா னுணரா முன்ன மருமருந் துதவி [1]யல்லிற்
பாதியா லனைய துன்ப [2]மகற்றுவான் பாவித் தேற்குச்
சோதியா னுதயஞ் [3]செய்தா [4]னுற்றதோர் துணிவு [5]லாற்றேன்
ஏதியான் செய்வ தென்னு விடருற்ற னிணையி லாதான்.

(இ-ள்.) தன்னை யொப்பாரில்லாதவனாகிய அநுமான்,—'ஆதி மூர்த்தியாகிய ஸ்ரீராமன் தெளிவடைதற்குமுன்னம் அரியமருந் தைக் (கொண்டுபோய்க்) கொடுத்து, பாதியிரவுக்குள் அந்தத் (தம்பி முதலியோர் இறந்ததனால் நேர்ந்துள்ள) துன்பத்தை நீக்கு மாறு எண்ணியிருந்த எனக்கு, (என்னெண்ணத்திற்குமாருகப்) பேரொளியுடையவனான சூரியன் உதித்திட்டான்: (அதனால் துன்பம்) நேர்ந்திட்டதற்கு (இப்போது செய்யவேண்டுவது இன் னது என்று) ஓர் துணிவைக் கொண்டிலேன; யான் செய்யத் தக்கது எது? என்று துன்பத்தையடைந்தான்; (எ-று.)—ஏது+ யான்=ஏதியான். பி - ம்:—[1]அல்லாற். [2]ஆற்றுவான். [3]செய்தால். [4]உற்றது. [5]தேற்றேன். (2710)

56.—இரவு கழியவில்லையென்பதுணர்ந்த அநுமான் துயர்தீர்தல்.

**காற்றிசை [1]சுருங்கச் செல்லுங் கடுமையான் கதிரின் செல்வன்
மேற்றிசை யெழுவா னல்லன் விடிந்தது மன்று மேரு
மாற்றினன் வடபாற் றேன்று மென்பது மறைகள் வல்லோர்
சாற்றினா [2]ரென்னத் துன்பந் [3]தணிந்தனன் [4]தவத்து மிக்கான்.**

(இ - ள்.) தவத்தினால்மிக்கவனும் காற்றுத் திசையிலே சுருங்குமாறு [திக்கில்வீசுங் காற்றுச் சுருங்கியவேகமுள்ள தென்னுமாறு] செல்கின்ற வேகமுடையவனுமான அநுமான்,—(வடதிசையாகச்செல்லும் தன்னுடைய இடப்பக்கத்திலே சூரியனிருப்பது கண்டு, ஆயிரங்) கிரணங்களைச் செல்வமாகக்கொண்டுள்ள சூரியன் மேற்குத்திசையில் உதிப்பவனல்லன்: (இப்போது) பொழுது விடியவும் இல்லை: மேருவில் (தன் கதியை) மாற்றினவனாய் (சூரியன்) வடபுறத்தில் (இருப்பார்க்கு மேற்குப்பக்கத்தில்) தோன்று மென்பதை மறைகள்வல்லவர் கூறியுள்ளார் என்று (தன்) துன்பம் நீங்கப்பெற்றான்; (எ - று.)—முதலடியில் கால் திசை என்று பிரிக்க. மேருமலையின் வடக்குப்பக்கத்திலுள்ளார்க்குச் சூரியன் மேற்கே தோன்றும்போது காலையும், கிழக்கே தோன்றும்போது மாலையுமுண்டாமென்பது, புராணக்கொள்கையென்ப. ஆகவே, மேருவின் தென்புறத்திலுள்ளார்க்கு அப்போது இரவே யென்க. பி-ம்:—[1]கருத்தாச்செல்லுங். [2]என்று. [3]தவிர்ந்தனன். [4]தவத்தின். (2711)

57.—உத்தரகுருநாட்டைக் காணுதல்.

**இருவரே தோன்றி யென்று மீறிலா வாயு ளெய்தி
[1]ஒருவரோ டொருவ ருள்ள முயிரொடு மொன்றே [2]யாகிப்
பொருவரு [3]மின்பத் துய்த்துப் புண்ணியம் புரிந்தோர் வைகும்
திருவுறை கமல மன்ன நாட்டையுந் தெரியக் கண்டான்.**

(இ - ள்.) (ஆண் பெண் என்ற) இரட்டையராகவே தோன்றி என்றும் அழிதலில்லாத ஆயுளைப் பெற்று ஒருவரோடு ஒருவர் உயிருடன் மனமும் ஒன்றுபட்டவராய் [இருவர்க்கும் ஒருயிரே யென்னுமாறு அன்புபொருந்தியவராய்] நிகரற்ற இன்பத்தை யநுபவித்துக்கொண்டு புண்ணியம்புரிந்தோர் தங்குவதான இலக்குமி தங்குகிற தாமரையை யொத்த [இலக்குமி மாறாது உறைதற்கு இடனான] உத்தரகுருநாட்டையும் விளங்கப்பார்த்தான்; (எ-று.)—பி - ம்:—[1]ஒருவரோடொருவரென்றும் [2]ஆகப். [3]இன்பதுன்பம். (2712)

58.—உத்தரகுருவைக் கண்டபின் அப்பாற் போதல்.

**வன்னிநாட் டியபொன் மௌலி வானவன் மலரின் மேலான்
கன்னிநாட் டிருவைச் [1]சேர்ந்த கண்ணனு மாளுங் [2]காணிச்
சென்னிநாட் டெரியல் வீரன் றியாகமா விநோதன் றெய்வப் [னுன்.
பொன்னிநாட் டுவமை வைப்பைப் [3]புலன்கொள நோக்கிப்போ**

(இ-ள்.) நெருப்பைநாட்டினாற்போன்ற பொன்னிறச்சடையைச் சிரசிலேகொண்டவனான தேவனும் [சிவபெருமானும்],

தாமரைமலரின்மீதுவீற்றிருப்பவனுகிய பிரமதேவனும் செவ்வி மாருத கன்னிப்பருவமுள்ள திருவை (த் திருமார்பிலே) கொண்டுள்ள திருமாலும் ஆட்சிபுரிகின்ற இடமாகி, சிரசிலே அன்று மலர்ந்த மலர்மாலையைத்தரித்த வீரனும் தியாகத்தையே பெரும் போதுபோக்காகக்கொண்டவனுமான சோழனுடைய பொன்னி நாட்டுக்கு உவமையான (அந்நாட்டு) நிலங்களைக் கண்ணுக்குப் புலனுகக் கண்டு (களித்து, அநுமான்), போகலானுன்; (எ - று) பொன்-சடைக்கு, ஆகுபெயர், கம்பர் தமது தேசாபிமானத்தால் சோழநாட்டை உவமையாகக் கூறினுர். நாள் கன்னி - செவ்வி மாருத கன்னிப்பருவம். பி-ம்:—[1]சேரும். [2]காட்சிச். [3]பொலன். ()

59.—நீலமால்வரையைக் காணுதல்.

[1]விரியவன் மேரு வென்னும் [2]வெற்பினின் மீது செல்லும்
பெரியவ னயனுர் செல்வம் பெற்றவன் [3]பிறப்பிற் பேர்ந்தான்
அரியவ னுலக மெல்லா மளந்தநாள் வளர்ந்து தோன்றும்
கரியவ னென்ன நின்ற நீலமால் [4]வரையைக் கண்டான்.

(இ-ள்.) விரிவுற வலியமேருவென்னும்வெற்பிற்குமீதாகவுஞ் செல்லும் பெருமையுள்ளவனும் பிரமபட்டத்தை நிச்சயமாகப் பெறப்போகின்றவனும், (இனிப்)பிறப்பு இல்லாதவனுமாகிய அருங்குணத்தையுடைய அநுமான்,-(திரிவிக்கிரமனுகி) உலக மெல்லாம் அளந்தநாளிலே வளர்ந்துதோன்றிய கருநிறமுள்ள திருமால் போல (ஓங்கிவளர்ந்து) நின்ற நீலமால்வரையைக்கண்டான்; (எ-று.) தெளிவுபற்றி, 'பெற்றவன்' என இறந்தகாலத்தாற் கூறினுர். அரியவன் கரியவன் என்று எடுத்து-ஹரியென்று பேரைக்கொண்ட கரியவனுகிய திருமால் என்றலும் ஒன்று. பாதலம் பூதலம் மீதலம் என மூன்றையும் ஊடுருவி நீலநிறத்தையும் பெற்றிருத்தலால், அந்நீலமலை நெடுமாலை நிகர்க்குமென்க. பி - ம்:—[1]விரியவான். [2]வெற்பினும். [3]பிறப்பும். [4]மலையைக். ()

60.—அநுமான் மருத்துமலையைக் காணுதல்.

அற்[1]குன்ற [2]வலங்கு சோதி யம்மலை யகலப் போனுன்
பொற்குன்ற மனைய தோளான் நோக்கினுன் புலவன் சொன்ன
நற்குன்ற மதனைக் கண்டா னுணர்ந்தனன் நாக முற்ற
எற்[3]குன்ற வெரியுந் தெய்வ மருந்தடை யாள[4]மென்ன.

(இ-ள்) இருளும் (தன்முன்னே) ஒடுங்கும்படி [மிகக்கறுத்து] விளங்குஞ் சோதியையுடைய அம்மலை அகன்றிடும்படி கடந்து சென்றவனுய், பொன்மலையையொத்த தோள்களையுடைய அநுமான், (கண்களால்) நோக்கி, பேரறிவாளனுன சாம்பவான் சொன்ன சிறந்த மருத்துமலையைக் கண்களாற் கண்டு, 'தெய்வ மருந்துக்கு அடையாளம் மேலுலகம் முற்றிலும் ஒளிகெடும்படி (ஒளி) வீசும்' என்றதனுல் உணர்ந்தான்; (எ-று.)

வானுலகத்து ஒளியும் கெடும்படி பேரொளி வீசுவதே,தெய்வ மருந்து உள்ள மலை யென்பதற்கு அடையாளமென்று அநுமான் ஊகித்து, மருத்துமலையை யுணர்ந்தானென்றவாறு. கண்டான் உணர்ந்தனன்-கண்டுணர்ந்தவனுய், நாகம் முற்ற மருந்து அடை

யாளம் என்ன - மலை முற்றிலும் மருந்தின் அடையாளம் (உள்ளன) என்ற காரணத்தாலே, 'பாய்ந்தனன்' என மேற்கவியோடு குளகமாக உரைத்தலும் ஒன்று. பி - ம்:—[1]குன்றம். [2]விளங்கு, விலங்கு, மலங்கு. [3]குல்ருந்தெரியும். [4]என்ருன். (2715)

61.—அனுமான் அம்மலைமீதுபாய்தலால் மலைதாழவே, ஓஷதிகளைக் காக்குந் தேவதைகள் அனுமானைததடுத்துச் செய்திவிசாரித்தறிதல்.

பாய்ந்தனன் பாய்த லோடு மம்மலை [1]பாத லத்துச்
[2]சாய்ந்தது காக்குந் தெய்வஞ் [3]சலித்தன [4]தடுத்து வந்து
[5]காய்ந்தன நீதா னியாவன் கருத்தென்கொல் கூறு கென்ன
[6]ஆய்ந்தவ[7]னுற்ற தெல்லா மவற்றினுக் கறியச் சொன்னான்.

(இ-ள்.) (அநுமான் அம்மலைமீது) பாய்ந்தான்: பாய்தலோடும் அம்மலை (அனுமானது வேகத்தைத் தாங்கமுடியாமல்) பாதாளத்துச் சாய்ந்திட்டது: (மருந்துகளைக்) காக்குந் தேவதைகளும் (முதலில்) நிலைகலங்கினவாய், (பிறகு தேறி அவ்வனுமானைத்) தடுத்து வந்து காய்ந்து, 'நீ யாவன்? (உன்) கருத்து என்னை? சொல்வாய்' என்று வினவ, ஆராய்ந்தறியுந் தன்மையனான அனுமான் (தான்) நெருங்கிவந்த காரணத்தையெல்லாம் அத்தேவதைகட்குத் தெரியும்படி கூறினான்; (எ-று.)—பி - ம்:—[1]பாதாளத்துச். [2]சாய்ந்தன. [3]சலித்தது. [4]கடுத்து. [5]காய்ந்தனை...என்கொல், காய்ந்தன...கருத்தென்ன, காய்ந்த நீயாவனோது கருத்தென்னை. [6]ஆய்ந்துதான். [7]உற்றதன்மை. (2716)

62.—தெய்வங்கள் அனுமதிதந்தபின் அனுமானுக்குத் திருவாழி காட்சிகொடுத்துச் செல்ல, அம்மலையை அநுமான் பேர்த்தல்.

[1]கேட்டுஅவை யைய வேண்டிற்று இயற்றிப்பின் கெடாம லெம்பால்
காட்டென [2]வுணர்த்தி வாழ்த்திக் [3]கரந்தன கமலக் கண்ணன்
வாள்தலை நேமிதோன்றி [4]மறைந்தது மண்ணி னின்றுந்
தோட்டன னனுமன் மற்றக் குன்றினை வயிரத் தோளால்.

(இ-ள்.) அத்தெய்வங்கள் (அவன் சொன்னவற்றைக்) கேட்டு, 'ஐயனே!' (மருந்துகளினால் உனக்கு) வேண்டிய செயலைச் செய்துகொண்டிட்டு, பின்பு கெடாமல் எம்மிடம் (அவைகளை) வரவிடுக' என்று தெரிவித்து வாழ்த்தி மறைந்தன: (பின்பு) புண்டரீகாட்சனை திருமாலின் கூரிய நுனியையுடைய சக்கரப்படை காட்சி கொடுத்து (அதுவும்) மறைந்திட்டது; வயிரம்போலுறுதியான தோளினால் அனுமான் பின்பு அக்குன்றினைப் பூமியிலிருந்து (வேரோடு) தோண்டியெடுத்தான்; (எ-று.)—அம்மலையைவேரோடு பறித்துக்கொண்டதற்குக் காரணம்,—மேலைக்கவியில் விளங்கும். காக்குந்தெய்வம் தடுத்ததைக் கூறிய கவி உதாரணமாக நேமியைக் கூறினார்: இனி கமலக்கண்ணன் - திருமாலினுடைய, வாள் தலை- பேரொளியைத் தன்னிடத்தே கொண்ட, நேமி - சக்கரம்போன்று வேண்டும் இடத்துச் சென்று தொழில் செய்யும் அனுமானுக்கு, தோன்றி மறைந்தது: அதனால் பெருஞ் சினங் கொண்டு வேரோடு ஓஷதி மலையைத் தோட்டனன் என்னலாம். ஓஷதிமலை காணப்

பட்டு மறைந்திட்டது. பி-ம்:—[1]கேட்டனவுய்ய. [2]உரைத்து. [3]கரந்தனன். [4]மற்றந்தன. (2718)

வேறு.

63.—அனுமான் மருத்துமலையைக் கையிலேந்தி விரைந்து போதல்.

இங்குநின் [1]றின்னன மருந்தென் றெண்ணினால்
[2]சிங்குமாற் காலமென் [3]றுணர்ந்த [4]சிந்தையான்
அங்கது வேரொடும் அங்கை தாங்கினன்
[5]பொங்கிய விசும்பிடைக் [6]கடிது [7]போகுவான்.

(இ-ள்.) 'இங்கிருந்துகொண்டு இன்னவை நமக்கு வேண்டிய மருந்துகளென்று ஆராயத்தொடங்கினால், காலங்கழியும்' என்று ஆராய்ந்த மனத்தை யுடையவனாய், (அனுமான்), அப்போது அம்மலையை வேருடன் அழகிய கையில் தாங்கி, ஓங்கிய சிறந்த விசும்பில் விரைந்துசெல்பவனானன்; (எ - று.)—ஓஷதிகளைமாத்திரம் தேடிக்கொண்டு செல்லாமல் அனுமான் மலையை அவ்வாறு தோண்டியெடுத்துச் சென்றதற்குக காரணங் கூறியவாறு. பி - ம்:—[1] இன்னமா. [2]சிங்குமாங், தங்குமாங். [3]உணரும். [4]தன்மையான். [5]பொங்குநல். [6]கடந்து. [7]போதுவான். (2718)

64.—அம்மலையின் கீழ்மேற்பரப்புக்கள்.

[1]ஆயிர மியோசனை [2]யகல மீ[3]துயர்ந்து
ஆயிர மியோசனை [4]யாழ்ந்த தம்மலை
ஏயெனு மாத்திரத் தொருகை யேந்தினன்
[5]தாயின னுலகெலாந் [6]தவழ்ந்த [7]சீர்த்தியான்.

(இ - ள்.) உலகெலாம்பரவிய கீர்த்தியையுடையவனான அனுமான்,—ஆயிரம்யோசனை தூரம் அகலம் மேற்புறக்துயர்ந்து, ஆயிரம்யோசனை தூரம் ஆழ்நதுள்ளதான அந்தச் சஞ்சீவிமலையை ஒருநொடிப்பொழுதுக்குள் ஒருகையிலேந்தித் தாவினன்; (எ-று.) —பி-ம்:—[1] ஆயிரமியோசனை. [2]அகன்று. [3]மீ. [4]ஆழ்ந்த. [5]தாயினும். [6]தழுவுங், தழைத்த. [7]கீர்த்தியான். (2719)

65.—கவிக்கூற்று.

அத்தலை [1]யன்னவ [2]னனைய னாயினன்
இத்தலை யிருவரும் [3]விரைவி னெய்தினர்
கைத்தலத் தாலடி வருடுங் காலையில்
உத்தமற் குற்றத்தை யுணர்த்து வாமரோ.

(இ - ள்.) அங்கு அந்த அனுமான் அவ்வாறாயினன்; இங்கே (இலங்கையிற்போர்க்களத்திலே சாம்பவான் விபீடணன் என்ற) இருவரும், விரைவினில் (ஸ்ரீராமனை) அடைந்தவர்களாய், கைத்தலத்தினால் (அப்பிரானுடைய) திருவடிகளை மெல்லப் பிடிக்கின்ற காலத்தில், உத்தமனான அவ்விராமனுக்கு நிகழ்ந்ததை உணர்த்துவோம்; (எ - று.)—அரோ - ஈற்றசை. அத்தலை என்றது- அனுமானுள்ள இடத்தை. இத்தலையென்றது - போர்க்களத்துச் சாம்பவான் விபீடணன் ஸ்ரீராமன் என்பாருள்ள இடத்தை. பி - ம்:— [1]அனையவன். [2]அனையவாந்துணை, அணையவாந்துணை. [3]இசைய, அசைய. (2720)

66.—இராமபிரான் கண்களை விழித்தல்.

[1]வண்டென மடந்தையர் மனத்தை வேரொடும்
[2]கண்டன கொளவருங் [3]கருணை தாமெனக்
கொண்டன கொடுப்பன [4]வரங்கள் கோளிலாப்
[5]புண்டரீ கத்துணை தருமம் [6]பூத்தன.

(இ-ள்.) (தம்மீது படிந்திருக்கும்) வண்டென்னும்படி மடந்தையரின் மனத்தை வேரோடுங்கொண்டனவும்,(எல்லாப் பிராணிகளும் முகந்து)கொள்ளும்படி தோன்றுகின்ற கருணையே தாமென்னுமாறு (அக்கருணையை நிரம்பக்)கொண்டனவும், வரங்களைக் கொடுப்பனவுமான மாறுபாடில்லாத புண்டரீக விணைகளாகிய (அப்பிரானுடைய) திருக்கண்கள் தருமம்போல மலர்ந்து விளங்கின; (எ - று)

ஸ்ரீராமபிரான் திருக்கண்களை விழித்துப் பார்த்தானென்றவாறு. தாமரைமலரில் வண்டுகள் படிவதுபோல இத்திருக் கண்களின் அழகிலீடுபட்டு மடந்தையர் மனங்கள் முற்றும் படிந்துள்ளனவென்பது, முதலடியிற் கூறிய பொருள்: கருணைவடிவமானவையென்பது, இரண்டாமடியின்பொருள். முதலடிக்கு - வண்டைப்போலத் தொடரும் மடந்தையர்மனத்தைத் தம்மிடத்து அணுகவொட்டாது வேருடனே நீக்கியவை யெனப் பொருள் கொள்வாருமுளர். பி - ம்:—[1]வண்டன. [2]கண்டனனிருவருங், கண்டனகெழிஇவருங். [3]கருணைத்தாமெனக். [4]வரத்தைக். [5]புண்டரீகத்தடங். [6]பூத்தன. (2721)

67.-அருகிருக்கும் சாம்பவ விபீடணரை ஸ்ரீராமன் காணுதல்.

நோக்கினன் கரடிகட் கரசு நோன்[1]புகழ்
ஆக்கிய நிருதனு மழுத [2]கண்ணினர்
தூக்கிய தலையினர் தொழுத கையினர்
ஏக்கமுற் றருகிருந் [3]திரங்கு வார்களை.

(இ - ள்.) கண்ணீரைவடிக்குங் கண்களை யுடையவரும், தூக்கிய தலையையும் தொழுத கையையுங் கொண்டவரும் ஏக்கங்கொண்டு தன்னருகேயிருந்து இரங்குகின்றவருமான கரடிகட்கு அரசனை சாம்பவானும் மிக்க புகழைப்பெற்றுள்ளவனான அரக்கர்குலத்துப் பிறந்த வீபீடணனும் என்பவர்களைப் பார்த்தான், (ஸ்ரீராமன்); (எ - று)—பி - ம்:—[1]புமல். [2]கண்ணினீர். [3]ஏங்குவார்களை. (2722)

68.—விபீடணன் சாம்பவான் இருவரையும் ஸ்ரீராமன் விசாரித்தல்.

ஏவிய காரிய மியற்றி [1]யெய்தினை
நோவிலை [2]கொல்லென நோக்கி வீடணன்
[3]தாவரும் பெரும்புகழ்ச் சாம்பன் [4]றன்னையும்
ஆவிவந் தனைகொ லென் றருளி னனரோ.

(இ-ள்.) விபீடணனைநோக்கி, 'விபீடணா! ஏவின காரியத்தைச் செய்து வந்தாயா? நோயின்றியுள்ளாயா?' எனவும், குற்றமற்ற புகழையுடைய சாம்பவானை (நோக்கி) 'ஆவிவரப்பெற்றாயா?' எனவும் அருள்கொண்டு வினவினன் (ஸ்ரீராமன்); (எ-று.)—'எய்தினை

கொல், நோவிலைகொல்' என்று 'கொல்' என்பதை, ஈரிடத்துங் கூட்டுக. இனி, எய்தினை - எய்தினை நீ என வினையாலணையும்பெயராகவுமாம். பி-ம்:—[1]வந்தனை. [2]வீடணவென்று நோக்கிப்பின். [3]தாழ்வரும். [4]தன்னை நீ. (2723)

69.—ஸ்ரீராமன் 'இப்போது நாம் செய்யத்தக்கது யாது?' என வினவுதல்.

ஐயன்மீர் [1]நமக்குற்ற அழிவி தாதலின்
[2]செய்வகை [3]பிறிதிலா வுயிரிற் றீர்ந்தவர்
உய்வில ரினிச் [4]செயற் குரிய துண்டெனிற்
பொய்யிலீர் [5]புகலுதிர் புலமை யுள்ளத்தீர்.

இதுமுதல் பதின்மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஐயன்மீர்! மாறாகச்செய்யத்தக்க செயல் இல்லாமல் உயிர் நீங்கினவர் உய்யாமலேபோயினர்: நமக்கு நேர்ந்த அழிவு இவ்வாறாயிருத்தலால், இப்போது செய்தற்குஉரிய செயல் (ஏதேனும்) உண்டாயின், தேர்ந்த அறிவுபொருந்திய மனத்தையுடையவரே! பொய்யிலீர்! சொல்லுவீர்களாக; (எ - று.)—பிறிது செய்வகை - உயிர்பிழைக்குமாறு செய்யுஞ்செயல். பி-ம்:—[1]நங்குலத்து, நாமுற. [2]செய்கையோ, செய்கையோர். [3]பிறிதிலை, பிறிதிலார், பிறிதிலம். [4]செயல். [5]புகலுநீர், புகலுவீர். (2724)

70.—பதினொருகவிகள்-இராமபிரான் பலபடி வருந்துதலைத் தெரிவிக்கும்.

சீதையென் றொருத்தியா லுள்ளந் [1]தேம்பிய
[2]பேதையேன் சிறுமையா லுற்ற [3]பெற்றியை
யாதென வுணர்த்துகே [4]னுலகொ டிவ்வுருக்
[5]காதைவன் பழியொடு நிறுத்திக் காட்டினேன்.

(இ - ள்.) சீதையென்ற ஒருத்தியால் மனம்வாடிய அறிவில்லாதயான், தாழ்மையான புத்தியினால் அடைந்த தன்மையை யாதென்று சொல்லுவேன்! இவ்வுலகத்தோடு பொருந்தாத (உலகத்தில் எங்கும் நடந்திலாத) இந்த (என்) கதையைக்கொடிய பழியோடும் நிலைபெறச் செய்துகாட்டினேன்; (எ - று.)—பி - ம்:—[1]தீர்விலாப். [2]பேதையன். [3]பேதைமை, பெற்றிமை. [4]உலகொடீர் வுருக், உலகொடீவுருர். [5]காதலன்வழியொடு நிறுத்தி, காதைவன் பழியொடு நிறுத்தி. (2725)

71. மாயை[1]யின் மானென எம்பி [2]வாய்மையால்
[3]தூயன வுறுதிகள் சொன்ன சொற்கொளேன்
போயினன் பெண்ணுரை மறாது [4]போனதால்
ஆயதிப் பழியுடை [5]ஆனி யன்பினீர்.

(இ - ள்.) அன்பையுடையவர்களே! '(இது), மாயையினால் வந்தமானாகும்' என்று என் தம்பி உண்மையால் தூய்மைபெற்றனவான உறுதிகளைச்சொன்ன சொற்களைக் கொள்ளேனாய், (அம்மானைப்பிடிக்கப்) போயினேன்; பெண்ணினுரையை மறுக்காமல் (அங்ஙனம்) போனதனால், பழியைக்கொண்ட இந்தத் தீங்கு உண்டாயிற்று; (எ - று.)—ஆனி - ஹாநி; தீங்கு. பி - ம்:—[1]இம்,

[2]வாய்மையான். [3]தூய்மையினுணர்த்தினனுணர்த்தச்...தூய்மையினுணர்த்தினனுணர்ந்த...தூயனவுறுதிதான் சொற்கொளேனெனப். [4]போகலால். [5]மரணம். (2726)

72. கண்டன னிராவணன் றன்னைக் கண்களால்
மண்டமர் [1]புரிந்தனன் [2]வலியி னாருயிர்
கொண்டில [3]னுறவெலாங் கொடுத்து [4]மாளநான்
பண்டுடைத் தீவினை பயந்த பண்பினால்.

(இ - ள்.) இராவணன் தன்னைக் கண்களாற் கண்டேன்: வலிமையோடு நெருங்கிய போரைச் செய்தேன்; (ஆயினும்), நான் முன்னே செய்துள்ள தீவினை யுண்டாக்கிய நிலைமையினால், நான் உறவினருயிரையெல்லாம் மாண்டிடுமாறு பறிகொடுத்தும் (என்) வலிமையினால் (அவ்விராவணனுடைய) அருமையான உயிரைக் கொள்ளாதவனாயினேன்; (எ-று.)

முன்னமே வலிமையினால் இராவணனுயிரைக் கொண்டிருந்தால், இப்போது உறவினருயிரை மாளப் பறிகொடுக்க நேர்ந்திராது: அங்ஙனஞ்செய்யா தொழிந்தது, எனது தீவினையின் தூண்டுதலே யென்றவாறு. பி-ம்:—[1]புரிந்திலன். [2]வலியினாலுயிர். [3]உயிரெலாம். [4]மீள. (2727)

73. தேவர் தம் படைக்கலந் தொடுத்துத் தீயவன்
சாவது [1]காண்டுமென் றிளவல் [2]சாற்றவும்
[3]ஆவதை [4]யிசைந்தில [5]னழிவ தென்வயின்
மேவுத லுறுவதோர் விதியின் [6]வெம்மையால்.

(இ - ள்.) (என்) தம்பி பிரமதேவருடைய படைக்கலத்தைத் தொடுத்துத் தீயவன்சாவதைக் காண்போமென்று சொல்லியபோதும், அழிவு என்னிடத்துப் பொருந்துவதான ஒப்பற்ற விதியின் கொடுமையால், பொருந்திய அச்செயலை உடன்படாதவனாயினேன்: (எ-று.)—அழிவது, அது-பகுதிப்பொருள் விகுதி. இனி, மேற்செய்யுளோடு குளகமாக 'ஆவதை இசைந்திலன்: என் வயின் அழிவது மேவுதலுறுவதோர் விதியின் வெம்மையால், உடன் நின்றிலன்: எறிபடைக்கு நீதியால் பூசனை இயற்ற உன்னினேன்' என்று தொடருமெனினுமாம். பி-ம்:—[1]காண்பினென்று, காண்டியென்று. [2]சாற்றலும். [3]ஆவகை. [4]அறிந்திலன், உணர்ந்திலேன். [5]நவையினின்றமர், அழிவிதென்வயின். [6]வென்றியால். (2728)

74. நின்றில னுட [1]னெறி படைக்கு நீதியால்
ஒன்றிய பூசனை [2]யியற்ற வுன்னினேன்
பொன்றினர் தமரெலா மிளவல் போயினான்
[3]வென்றில [4]னரக்கனை [5]விதியின் [6]வெம்மையால்.

(இ - ள்.) (போர்க்களத்துத்) தம்பியுடன் நிற்காதவனாய் எறிகின்ற படைக்கலத்துக்கு முறைப்படி பொருந்திய பூசனையை இயற்றநினைத்தேன்: தீவினையின் மிகுதியால், (நம்) தமரெல்லாம்

இறந்திட்டனர்: என் தம்பி அரக்கனை வெல்லாதவனாய் உயிர்நீங்கி னான்; (எ - று.)—போதல்-உயிர்நீங்குதல். பி - ம்:—[1] ஒரு, கெடும். [2] அமைக்க. [3] வென்றிலேன். [4] அரக்கரை. [5] வினையின். [6] மேன்மையால். முதலடியில் நெறி படைக்கு என்றுபிரித்து உரைப்பினு மாம். (2729)

75. [1]ஈண்டிவ ணிருந்[2]திவை யியம்பு மேழைமை
வேண்டுவ[3]தன்றினி யமரின் விடிய
ஆண்டகை யன்பரை யமரர் நாட்டிடைக்
காண்டலே நலம்[4]பிற கண்ட தில்லையால்.

(இ - ள்.) இப்போது இங்கேயிருந்து இவ்வாறானசொற்களைச் சொல்லுகின்ற அறிவின்மை, வேண்டத்தக்கதன்று: இனி, அமரி லிறந்த ஆண்மைக்குணமுடைய அன்பரைத் தேவலோகத்திற் காண்டலே நலம்: (இனி அவர்களைக் காண) வேறுஉபாயம் காணப் படவில்லை; (எ - று.)—இதனால், தானும் இறப்பதில் துணிவு பூண்டமையை ஸ்ரீராமன் தெரிவிக்கின்றான். அமரர் நாட்டிடைக் காண்டல்-இறந்து சுவர்க்கலோகத்தையடைந்து அங்குக்காணுதல். இறத்தலே நலமென்பதை வேறுவகையாகக் கூறியது - பிறிதி னவிற்சியணி. பி-ம்:—[1] ஈண்டிருந்திவை. [2] அவை. [3] இன்று. [4] இனிக்.

76. எம்பியைத் துணைவரை[1]யிழந்தப் பாலினி
வெம்புபோ ரரக்கரை முருக்கி வேரறுத்து
அம்பினி னிராவண னாவி பாழ்படுத்து
உம்பருக் குதவிமே[2]லுறுவ தென்னரோ.

(இ-ள்.) என் தம்பியையும் சிநேகிதர்களையும் இழந்துவிட்டு அதற்குப் பிறகு இனிமேல் (மனம்) வெதும்பிச்செய்கின்ற போரிலே அரக்கரை அழித்து(அவர்களை) அடியோடுஒழித்திட்டு, (என்)அம்பினால் இராவணன் ஆவியையும் ஒழித்துத் தேவர்கட்கு உதவுதலைச் செய்திட்டுப் பின்னர் (யான்) அடையப்போவது என்? (எ-று.)—தம்பியுந் துணைவரும் இறந்தபிறகு தேவகாரியத்திற்காக அரக்கரை யொழிப்பது எனக்குப் பயன்தருவ தாகாதென்றபடி. பி-ம்:—[1] இழந்தயானினி, இழந்தநானினி. [2] உறுதனன்றரோ. ()

77. இளையவ னிறந்தபின்[1]னெவரு மென்னெனக்கு
[2]அளவறு சீர்த்தியென் [3]அறனென் னாண்மையென்
கிளையுறு சுற்றமென் [4]அரசென் [5]கேண்மையென்
விளைவுதா னென்மறை விதியென் [6]மெய்ம்மையென்.

(இ - ள்.) இளையவன் இறந்தபிறகு, எனக்கு எவர்தான் எதற்கு? அளவற்றகீர்த்திதான் எதற்கு? அறந்தான் எதற்கு? ஆண்மைதான் எதற்கு? கிளைபோல(த் தழுவுந்தன்மை) பொருந்திய சுற்றந்தான் எதற்கு? அரசுதான் எதற்கு? நட்புத்தான் எதற்கு? நல்விளைவுதான் எதற்கு? வேதவிதி எதற்கு? மெய்ம்மைதான் எதற்கு? (எ - று.)

தம்பியில்லையானால் எவற்றாலும் எவராலும் நான் அடையத் தக்க பயன் எதுவுமில்லை யென்றபடி. மெய்ம்மையென்பதற்கு - பரம்பொருள் என்றலும் ஒன்று. பி - ம்:—[1]ஏவம், எவ்வம். [2]அளவுறு. [3]அறிவென், அரசென், தவமென். [4]அறமென், அரக்கன். [5]கேள்வி. [6]மேன்மை, வேள்வி. (2732)

78. இரக்கமும் பாழ்பட வெம்பி யிறுகண்டு
அரக்கரை [1]வென்றுநின் றுண்மை [2]யாள்வனேல்
மரக்கண்வன் [3]கள்வனேன் வஞ்ச னேனினிக்
[4]கரக்கும தல்லதோர் கடனுண் டாகுமோ.

(இ - ள்.) தயையென்கின்ற குணமும் பாழ்படும்படி என் தம்பியின் நாசத்தைக் கண்டபின் அரக்கரைச் சயித்துநின்று பராக்கிரமத்தையாள்வேனேயானால், மரப்பாவையின் (கண்போன்ற) கண்களைப்பெற்ற வலியகள்வனும் வஞ்சகனுமாவேன்: (ஆதலால்), இனி உயிரை யிழப்பதல்லது ஒரு செய்யவேண்டிய செயலுண்டாகுமோ? (எ - று.)

கரத்தல்-உயிர்போயொளித்தல். கண்படைத்ததற்குப்பயன்- இரக்கத்தைப் பெற்றிருத்தல்: அவ்விரக்கமில்லா விடின், என்னுடையகண் மரப்பாவைக்கண்ணைப்போன்றதாக, கள்வனென்றும் வஞ்சகனென்றும் சொல்லும் பழிச்சொல்லுக்கு இடனாவேனாதலால், உயிரைவிடுவதே தகுதியெனறபடி. அன்பின்செயல் என்னிடத்து இல்லாவிடின் யான் இத்துணைநாள் தம்பியிடத்தும் துணைவரிடத்தும் பேரன்புடையவனபோலக் காட்டியது, கள்ளமும் வஞ்சகமுமாய் முடியுமெனக. மரம் - மரத்தினாலியன்ற பாவைக்கு, ஆகுபெயர்: "மரக்கண்ணோமண்ணாள வார்கண்" என்றது. இங்குக்காணத்தக்கது. பி - ம்:—[1]முருக்கி. [2]ஆள்வனே. [3]கள்வனே. [4]கரக்குமாறு. (2733)

79. தாதையை [1]யிழந்தபின் சடாயு இற்றபின்
[2]காதலின் றுணைவரு [3]முடியக் காத்துழல்
கோதறு தம்பியும் [4]விளியக் [5]கோளிலன்
சீதையை [6]யுவந்துளா னென்பர் சீரியோர்.

(இ - ள்.) (நான் இப்போது அரக்கரைவென்று சீதையை மீட்பேனானால்), 'தந்தையாகிய தசரதசகரவர்த்தியை யிழந்தபின்னும் (தாதைமுறையாகிய) சடாயு அழிந்தபின்னும், அன்பையுடைய நண்பரெல்லாம் உயிர்முடியவும், (எல்லாநிலையிலும்) காத்து வருந்திய குற்றமற்ற தம்பியும மாளவும், சீதையையுவந்துள்ளான்: நல்லெண்ணமில்லாதவன என்று பெரியோர் (என்னைப்) பழிப்பர்; (எ - று.)—இவ்வாறு பழிச்சொல்லைப்பெறுமாறு சீதையைமீட்டு வாழ்வதினும் உயிரையிழப்பதே கடமை யென்றவாறு. பி - ம்:—[1]இழந்து. [2]காதலென். [3]படியக், மடியக். [4]மடியக், பிரியும். [5]கோதிலன, கோளினன். [6]உகந்து. (2734)

80. வென்றனெ [1]னரக்கரை [2]வேரும் வீழ்ந்தறக்
கொன்றனெ னயோத்தியைக் குறுகினேன் குனித்து

இன்றுணைத் [3]தம்பியை யின்றி யாருளேன்
நன்றர சாளு[4]மா சால நன்றரோ.

(இ - ள்.) (போரில்) வெற்றிபெற்று அரக்கரை வேரும் ஒழிந்திடக் கொன்றவனாகி, அயோத்தியாபுரியையடைந்து, நற்குணம் நிறைந்த இனியதுணைவனான தம்பியையில்லாமலே யான்உயிர் வாழ்பவனாய் அரசுபுரியும்வகை நன்று: மிகவும்நன்று; (எ - று.)— அரோ - ஈற்றசை. தம்பியையின்றி அயோத்திசென்று அரசுபுரிவது எனக்கு மிகவும் பழிப்பைத்தருவதா மென்பது, குறிப்பு. பி - ம்:—[1] அரக்கனை. [2] வெருவி. [3] எம்பியை. [4] அவ்வரசு. (2735)

81.—முடிவதே தகுதி யென்று ஸ்ரீராமன் கூறுகையில், சாம்பவான் கூறலுறல்.

[1]படியின தாதலின் யாதும் பார்க்கிலன்
முடிகுவ [2]னுடனென [3]முடுக்கிக் கூறலும்
அடியிணை [4]வணங்கியச் சாம்ப னாழியாய்
நொடிகுவ துளதென நுவல்வ தாயினான்.

(இ - ள்.) (என்) நிலைமை இவ்வாறுஉள தாதலால், எதையும் ஆலோசியாதவனாய் உடனே முடிந்திடுவேனென்று தீர்மானமாக (ஸ்ரீராமன்) கூறினவுடனே,—சாம்பவான் (அப்பிரானது) இணையடிகளை வணங்கி 'ஆழியாய்! சொல்லவேண்டுவது (ஒன்று) உள்ளது' என்று சொல்லி, சொல்லலாயினன்; (எ - று.)—சாம்பவான் கூறுவதை, மேல் பத்துக்கவிகளிற்காண்க. இனது = இன்னது. பி-ம்:—[1] படியின்மேற்காதலின், படியிணைக்காத்தலோ. [2] யானென. [3] முடியக். [4] வணங்கிய. (2736)

82.—இதுமுதல் பத்துக்கவிகள் - ஒரு தொடர்: சாம்பவான் ஸ்ரீராமனைத் துதித்து 'அனுமான் கொணரும் சஞ்சீவி மலையினால் யாவரும் உய்வர்' எனல்.

உன்னை நீ யுணர்கிலை யடிய னேனுனை
முன்னமே [1]யுணர்குவன் மொழிதல்[2] தீதது
[3]என்னெனி லிமையவ [4]ரெண்ணுக் [5]கீனமாம்
பின்னரே [6]தெரிகுதி[7] தெரிவில் பெற்றியாய்.

(இ - ள்.) (எவராலும்) தெரிந்துகொள்ளமுடியாத தன்மையுள்ளவனே! உன்னை நீ அறியாதவன் போலிருக்கிறாய்: அடியேன் உன்னை முன்னரே அறிகுவேன்; (அதனை) மொழிதல் நன்றன்று; ஏனெனின், இமையவருடைய எண்ணத்துக்குக் குறைவாம்: (உன் தன்மையை நீ) பின்பே அறிகுவாய்; (எ - று.)

பரம்பொருளை "யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மநஸா ஸஹ" என்று வேதபுருஷனும் தன்வாக்குமனசுகளுக்கு எட்டாதவ னென்பதனால், 'தெரிவில் பெற்றியாய்' என்றது. இராவணவதத்தின் பொருட்டுத் தெய்வவுருக்கரந்து வேற்றுருக் கொண்டு கடவுளாகிய நீயும் தேவர்களும் வந்திருக்கையில் அந்தப்

பரமரகசியத்தை வெளியிடுவது அபசாரமாகு மென்பான், 'இமை யவரெண் ணுக்கெனமாம்' என்றான். பி-ம்:—[1]அறிகுவேன். [2]தீதிது. [3]என்னினி. [4]எண்ணக்கு. [5]ஈனமால். [6]தெரிகுதும். [7]தெரியும். ()

83. அம்புயத் தவன்படை யாதல் [1]தேறினன்
[2]உம்பியை யுலப்பரு [3]முருவை யூன்றிட
வெம்பு [4]வெங் களத்திடை [5]விழுத்த வென்றியான்
[6]எம்பெருந் [7]தலைவவி தெண்ண [8]முண்மையால்.

(இ-ள்.) எம்முடையபெருந்தலைவனே! சினம்வெளிப்படுகின்ற கொடிய போர்க்களத்திலே உன் தம்பியையும் அழித்தற்கு அரிய உடம்பிலேஊன்ற (ப் பதிந்து) உயிரைப்போக்கிய வெற்றியைப் படைத்துள்ளதனால், (எதிரி விட்டது) பிரமதேவனது அஸ்திர மென்பதை யுணர்ந்திட்டேன்; இந்தஎன்னெண்ணம் சத்தியமா தேயாகும்; (எ-று.)—உம்பியை-உன் தம்பியையும், உலப்ப அரு உருவை-அளவிடமுடியாத வானரரையும் என்று கூறுவாருமுளர். ஆல்-ஈற்றசை: தேற்றமுமாம். பி - ம்:—[1]தேறிமுன். [2]தம்பியை. [3]அவற்றிலேதைத்த, வலத்தையோய்த்தது, வலத்தையொத்தது. [4]போர்க். [5]மேவும், வீழ்த்த, விழுந்த. [6]எம்பதி. [7]தலைவரின் மேலும். [8]மெய்மையால், எய்தலால். (2738)

84. அன்னவன் படைக்கல [1]மமரர் தானவர்
[2]தன்னையும் விடினுயிர் [3]குடிக்குந் [4]தற்பர
உன்னையொன் [5]றிழைத்தில [6]தொழிந்து நீங்கியது
இன்னமு [7]முவகையொன் [8]றெண்ண வேண்டுமோ.

(இ-ள்.) அந்தப் பிரமதேவனுடைய அத்திரமானது பிரயோகிக்கப்படுமாயின் அமரர் தானவர் என்பவர்களையும் உயிர்போக்கியே தீரும்;. எல்லாப் பொருளிலும் மேம்பட்டவனே! (அது) உன்னை யொன்றுஞ்செய்யமாட்டாது ஒழிந்து நீங்கியது; இதைக் காட்டிலும் (வேறே) மகிழ்ச்சியைத்தரக்கூடியது ஒன்று எண்ணவேண்டுமோ? (எ - று)—ஈற்றடியில் 'உவமை வேறெண்ண வேண்டுமோ' என்ற பாடத்திற்கு-இது பிரமாத்திரமென்பதற்கு உன்னைத் தவிர யாவரையும் ஒழித்ததுவே போதிய நிதரிசனமென்று பொருள்கூறலாம். பி - ம்:—[1]அமலகல்லது, மாறென்றன்னது. [2]தன்னையேவிடின். [3]தவிர்க்குந். [4]சாய்விலாது, தாழ்க்கிலாது, சார்தலால். [5]இழைக்கிலாது [6]ஒளிந்துநீங்கியது, ஒழிந்து வீங்கியது. [7]உளவை. [8]எண்ணில். (2739)

85. பெருந்திற லனுமனின் றுணர்வு [1]பெற்றுத்தான்
அருந்துய [2]ரளவிலா தாற்று வானையான்
மருந்தினைப் பொழுதினிற் [3]கொணர்கு வாயெனப்
பொருந்தினன் வடதிசைக் கடிது போயினான்.

(இ-ள்.) பெருஞ்சாமர்த்தியம் படைத்த அநுமான் இப்போது உணர்வு அடைந்து (போக்குவதற்கு) அரிய துயரை அளவில்லா தவாறு காட்டுவானை நோக்கி, யான், '(யாவரையும் பிழைப்பிக்க வல்ல) மருந்தை நொடிப்பொழுதிலே கொணர்வாய்' என்று கூற,

உடன்பட்டவனாய், (அவன் அம்மருந்து கொணரும்பொருட்டு) வடதிசைக்கு விரைந்துசென்றுளான்; (எ-று.)—பி-ம்:—[1]பெற்றுளான், பெற்றுத்தன். [2]முடிக்குறுமளவினாற்றலான், முடிவுறுமளவிலாற்றலான், அளவினாலாற்றுவான்றனை. [3]கொணரும்வாய்மொழி. (2740)

86. பனிவரை கடந்தனன் பருப்ப தங்களின்
[1]தனியர சின்புறந் தவிரச் சார்ந்துளன்
இனியொரு கணத்தின்வந் தெய்து [2]மீண்டுறும்
துனிவரு துன்பநீ [3]துறத்தி [4]தொல்லையோய்.

(இ - ள்.) இமயமலையைக்கடந்து பருப்பதங்கட்கு ஒப்பற்ற அரசானமேருமலையினிடமும் நீங்க (அப்பால்) சேர்ந்துள்ளானாகிய அநுமான் இனியொருகணத்திற்குள் இங்கே வந்துசேர்வான்; பழமையானவனே! மிக்க மனக்கலக்கம் வருவதற்குக்காரணமான துன்பத்தை நீ விட்டிடுவாய்; (எ-று.)—உறும்-மிக்க. எய்தும் - முற்று: பி - ம்:—[1]தனியரசிதன் புரந்தவிர்ந்து, தனிவரை சிறப்பவுந்தவிர்க்கச். [2]மீண்டவன், ஈண்டவன்என்றும் படிக்கலாம். [3]துடைத்தி. [4]நேமியாய். (2741)

87. யானலா [1]லெந்தையா [2]யுலகை [3]யீன்றுளான்
தானலாற் சிவனலால் நேமி [4]தாங்கிய
கோனலா [5]லியாவரு [6]முணருங் [7]கோளிலர்
வேனிலான் [8]மேனியாய் மருந்தை [9]மெய்யுற.

(இ-ள்.) மன்மதன்போற் கட்டழகுவாய்ந்தவனே! யான் அல்லாமலும், எனது தந்தையாகி உலகைப்படைத்தவனான பிரமதேவனல்லாமலும், சிவனல்லாமலும், சக்கராயுதத்தைத் தாங்கிய தலைவனாகிய திருமாலல்லாமலும், எவரும், மருந்தை உண்மைபொருந்த அறியும அறிவு இல்லாதவராவர்; (எ - று.)

அம்மருந்துகளின் தன்மை எனக்கும் திரிமூர்த்திகட்குந் தெரியுமேயன்றி, மற்றையோர்க்குத்தெரியாதென்றபடி. மூன்றுமடியில். [7]கோளிலா என்று படித்து—யானும் பிரமன்முதலியோருமின்றி மற்றைஎவரும் அறியுந்தன்மையில்லாத அம்மருந்தை மெய்யிற்பொருந்த (அங்ஙனம் பொருந்தியவர்க்கு) மன்மதன் போன்ற மேனியுண்டாகுமெனினுமாம். பி - ம்:—[1]எந்தையால். [2]உலகம். [3]ஈன்றவன். [4]தாங்கும். [5]எனைவரும், எனையரும். [6]கோளிலார். [8]மேனிய, மேனியா. [9]மேயுற. (2742)

88. ஆர்கலி கடைந்தநா ளமிர்தின் வந்தன
[1]கார்நிறத் தண்ணல்தன் [2]நேமி காப்பன
மேருவி னுத்தர குருவின் [3]மேலுள
யாரு[4]முற் [5]றுணர்கிலா [6]வரண மெய்தின.

(இ-ள்.) (அம்மருந்துகள்),—கடலைக்கடைந்தபோது அமிழ்தத்துடனே தோன்றினவை; கருநிறமுடையகடவுளான திருமாலின் சக்கரப்படையால் பாதுகாக்கப்படுவன: மேருவின் வடக்கி

லுள்ள குருநாட்டிற்கும் அப்பாலுள்ளன: எவராலும் பொருந் அறியப்படாத பாதுகாவலையடைந்தன; (எ - று.)—பாரதயுத்த நிகழ்ந்தகுருக்ஷேத்திரத்திலும் வேறுபாடு விளங்க, [1]மேருவினுத்தர' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. பி - ம்:—[1]கார்நிறக் கண்ணன்றன். [2]மேனி. [3]மேலுளோர். மேலது. [4]மற்று. [5]அணுகலா, உணர்கிலர். [6]வானமெய்திஞேர். (2743)

89. தோன்றிய நாள்முத லியாருத் [1]தொட்டில
ஆன்ற[2]பே ரண்ணலே [3]யவற்றி ஞற்றல்கேள்
[4]மூன்றென வொன்றிய வுலக [5]முன்னைநாள்
ஈன்றவ னிறப்பினு [6]மாவி யீயுமால்.

(இ - ள்.) தோன்றினநாள்தொடங்கி எவராலுந் தொடப்படாதன; மிக்க புகழ்பெற்ற பெருமையிற் சிறந்தோனே! அவற்றின் வல்லமையைக் கேட்பாயாக: மூன்றென்றுஒருமித்துச் சொல்லப்படுகின்ற (எல்லா) வுலகங்களையும் ஆதியிற்படைத்தவனான பிரமதேவன்இறப்பையடைந்தாலும்,(அம்மருந்துகள் அவனுடைய) உயிரையும் ஈயும்; (எ - று.)—பி - ம்:—[1]தொட்டிலார். [2]பேரமுதினவ் [3]அளவினுற்றல, அதனினுற்றல்கேள், மருந்தின்...[4]மூன்றிஞெடொன்றுள. [5]முன்ன நாள். [6]உயிரை. (2744

90. சல்லிய மகற்றுவ தொன்று சந்துகள்
புல்லுறப் [1]பொருந்துவ தொன்று போயின
நல்லுயிர் [2]நல்குவ தொன்று நன்னிறம்
[3]தொல்லைய தாக்குவ தொன்று தொல்லையோய்.

(இ - ள்.) பழமையானவனே! (அம்மருந்துகளில்) ஒன்று, சல்லியத்தைப் போக்குவது: ஒன்று, கூட்டுகளைப் பொருந்தும்படி கூட்டுவது: ஒன்று, போன [இறந்த] பிராணனைத் தருவது; ஒன்று, நல்லஉடலைப் பழமைபோல ஆக்குவது; (எ - று.)

கீழ்ச்செய்யுட்களில் மருந்து கொணர்வதைக் குறித்துப் பொதுவாகக் கூறிய சாம்பவான், அம்மருந்துகளில் நான்குவகையுண்டென்பதை இங்குத் தெரிவிக்கின்ருன். உடலில் எதிரிகளுடைய படைபொருந்தியிருந்தால் அவற்றை நீக்குவது ஒன்று: அது விசல்லியகரணியெனப்படும். அங்ஙனம் சல்லியத்தைப்போக்கிய பின் மூட்டு விட்டிருந்தால் சேர்ப்பது-மற்றொன்று: அது, ஸந்தானகரணியெனப்படும். போனஉயிரைத்தருவது-பிறிதுஒன்று: அது சஞ்சீவகரணியெனப்படும். அடிப்பட்ட வடு இருந்தால் அவ்வடுவை நீக்கி உடலை முன்போல ஆக்குவது ஒன்று: அது - ஸாவர்ண்யகரணியெனப்படுமென்க. இந்நான்கனுள் உயிரைப்பிழைப்பிப்பதே முக்கியமாதலால், அதனைப் பாராட்டி 'ஈன்றவனிறப்பினுமாவியீயும்' என்றுகீழும் கூறினன். பி-ம்:—[1]பொருத்துவது. [2]ஈகுவது. [3]தொல்லையதாகவேதோன்றும். (2745)

91. [1]வருவது நின்னை நீ வருந்தல் மாருதி
தருநெறி தருமமே [2]காட்டத் [3]தாழ்கலன்

அருமைய தன்றென வடிவ ணங்கினன்
இருமையுந் [4]துடைப்பவ னேம்ப லெய்தினன்.

(இ-ள்.) (மருந்து) வருவதென்பது நிச்சயம்: நீ வருந்தாதே: அநுமான் தருமமே வழிகாட்டத் தாமதியாதவனாய்க் கொணர்வான்: (அவனுக்கு இது), அருமையான தன்று என்றுகூறி (சாம்பவான் ஸ்ரீராமபிரானுடைய) திருவடிகளில் வணங்கினன்: (அது கண்டு, தன்னையடைந்தாருடைய நல்வினை தீவினையென்ற) இரண்டுவினைகளையும் போக்குபவனான (திருமாலின் அமிசமான) ஸ்ரீராமன் மகிழ்ச்சியடைந்தான்; (எ - று.)—பி - ம்:—[1]வருமது. [2]காட்டுங், காணமுங். [3]தாழ்க்கிலன். [4]துறப்பலன். (2746)

92.—அநுமான் மருந்துகொணர்வானென்பதை நம்பினே னென்று ஸ்ரீராமன் கூறுகையில் வடதிசையிலொலியெழுதல்.

பொன்மலை மீதுபோய்ப் போக பூமியின்
நன்மருந் துதவுமென் றுரைத்த [1]நல்லுரைக்கு
[2]அன்வய மில்லையென் [3]றயிர்க்கின் றேனலேன்
என்னலும் [4]வடதிசை யெழுந்த [5]தங்கொலி.

(இ-ள்.) மேருமலைக்கும் அப்பாற்போய்ப் போகபூமியிலுள்ள நல்ல மருந்துகளை (அநுமான்) கொணர்வானென்று சொன்ன நல்ல உரைக்குப் பொருத்தமில்லையென்று சந்தேகிக்கின்றேனல்லேன் என்று (ஸ்ரீராமன்) சொல்லுமளவிலே, அங்கே வடதிசையில் ஒலிஎழுந்தது: (எ-று.)—பி - ம்:—[1]நல்லுரை. [2]அன்மையம், அன்மயம். [3]அயர்க்கின்றேனரோ, அயிர்ப்புநீங்கினேன். [4]விசும்பிடை. [5]ஈண்டொலி, ஆண்டொலி, ஈட்டொலி. (2747)

93.—பெருங்காற்றுத் தோன்றுதல்.

கடல்கிளர்ந் தெழுந்துமேற் படரக் கார்வரை
[1]இடையிடை பறிந்துவிண் ணேற [2]விற்றிடை
தடை [3]யிலா துடற்றுறு சண்டமாருதம்
வடதிசை [4]தோன்றிய [5]மறுக்க [6]முற்றதால்.

(இ - ள்.) கடல் பொங்கியெழுந்து (கரை) மீதுசெல்லவும், கார் தங்கியமலை இடையிடைபறியுண்டு வானத்திலேறவும், நடுவே இற்றுத் தடுக்கப்படுதலில்லாமல் வீசுகின்ற சண்டமாருதம் வடதிசையிலே தோன்றியதனாலான கலக்கம் உண்டாயிற்று; (எ-று.) —சண்டமாருதம் தோன்றியது, அநுமான் வரும்விரைவினாலென்க. கீழ்ச்செய்யுளிற்கூறியபடி ஒலியெழுந்ததும் மேலே மீன்குலம்குலைதல் முதலியனவும் அநுமன் வரும் விரைவு பற்றியனவேயாம். பி-ம்:—[1]இடைபறிந்துதிர. [2]வீற்றிடை. [3]இலனுற்றுறு, இலதுடற்றுவ, இலதுற்றெருரு. [4]வந்ததோர். [5]மயக்கம். [6]வந்ததால்.

94.—நட்சத்திரக்கூட்டம் நிலைகுலைதல்முதலியன நிகழ்தல்.

மீன்குலங் குலைந்துக வெயிலின் மண்டிலம்
தான்குலைந் துயர்[1]மதி [2]தழுவத் [3]தன்னுழை

[4]மான்குலம் வெருக்கொள [5]மயங்கி மண்டிவான்
தேன்குலங் கலங்கிய நறவிற் [6]சென்றவால்.

(இ - ள்.) நட்சத்திரக்கூட்டம் நிலைகுலைந்துசிந்தவும், சூரிய மண்டலம் தான் நிலை தடுமாறி உயர்ந்துள்ள சந்திரனைத் தழுவவும், தன்னிடத்து [சந்திரனிடத்து] உள்ள மானால் மான்குலம் வெருட்சியை யடையவும், தேன்கூண்டிலே மொய்ப்பனவாய் நிலை கலங்கப் பெற்ற தேனினம்போல மேகம் (ஒன்றோடொன்று) நெருங்கி மயங்கிச் சென்றன; (எ-று.)—நறவுகலங்கிய தேன் குலத்தின் என உருபு மாறுக: நறவு-தேன்கூண்டிற்கு, இலக்கணை. உழை-மான்: இனி, இடம்-எனினுமாம்: தன்னுழைமானால் என்க. குலம்-மான்குலம். மான்குலம் என்றே எடுக்கவுமாம். பி - ம்:— [1]மழை. [2]தழுவித். [3]தன்னசை. [4]வான். [5]தெற்கு. [6]சென்றதால்.()

95.—அனுமான் ஆரவாரித்தல்.

[1]வேர்த்துணர் தாரொடு விசும்பை மீச்செலப்
[2]போர்த்தன மலையொடு [3]மரனு முன்புபோல்
[4]தூர்த்தன வேலையைக் காலின் தோன்றலும்
ஆர்த்தன [5]னனையவ [6]ரரந்தை யாற்றுவான்.

(இ-ள்.) வேரும் பூங்கொத்தும் தாருடனே ஆகாயத்தின்மேற் சென்றதனால் (அவ்விடத்தை) மூடிக்கொண்டனவாகி, மலையும் மரமும் முன்புபோல் [நளன்சேதுவைக்கட்டியபொழுதிற்போல] கடலைத் தூர்த்தன; அநுமானும், அங்குள்ள ஸ்ரீராமன் சாம்பவான் விபீடணன் என்பவருடைய துயரத்தைத் தீர்க்கும்பொருட்டு ஆரவாரஞ்செய்தான்; (எ - று.)—பி - ம்:—[1]வேர்த்துள, வேர்த்தன. [2]போர்த்துள. [3]மரனும்போவன, வானம்போல்வன. [4]தூர்த்தனன். [5]அனையவன். [6]அரதி. (2750)

96.—அநுமான் செய்த பேரொலியின் வருணனை.

மழைகளுங் கடல்களு மற்று முற்றுமண்
[1]உழையவும் விசும்பவு மொலித்தற் கொத்துள
[2]குழீஇயின குமுறின கொள்கை [3]கொண்டவால்
[4]உழுவையின் சினத்தன னார்த்த வோசையே.

(இ - ள்.) புலிபோன்றசினத்தை யுடையவனான அநுமான் ஆரவாரித்த ஓசையானது,—மண்ணினிடத்திலிருப்பனவும் விசும்பினிடத்தனவுமாகி ஒலித்தற்கு ஏற்றனவான மழைகளும் கடல்களும் மற்றுமுள்ள எல்லாமும் (ஒன்று) கூடியனவாய் ஒலித்த தன்மையைக் கொண்டது; (எ - று.)

அநுமான் செய்த பேரொலியானது, பூமியிலும் வானத்திலுமிருப்பனவாகி ஒலிசெய்வனவான மேகம் கடல்முதலிய யாவும் ஒன்றுதிரண்டு ஒலிக்குங்காலெழும் ஆரவாரத்தைப்போல மிக்கிருந்ததென்க; தற்குறிப்பேற்றம். மண் உழை- ஒலித்தற்கு ஒத்துளவும் விசும்ப ஒலித்தற்கு ஒத்துளவும், மற்றும் முற்றும்-பத்துத்திசைகளில் மண்ணின் தவிர மற்றை எண்டிசையிலுள்ளன யாவும்

என்க. விசும்ப-பலவின்பாற்குறிப்புப்பெயர். பி-ம்:—[1]உழைகளும் விசும்பு மேலொலி தந்துள, உழையவும் விசும்பின்மே லொலி வந்துள. [2]குழைஇயின. [3]கொண்டன, கண்டதால். [4]உழுவையை நிகர்த்தவன். (2751)

97.—மருத்துமலையைக்கொண்டுவரும் அனுமானுடைய தோற்றம்.

[1]எறிதிரைப் பெருங்கடல் கடைய வேற்றநாள்
செறிசுடர் [2]மந்தரந் தருதி சென்றென
[3]வெறிதுகோ லெனக்கொடு விசும்பின் [4]மீச்செலும்
உறு[5]வலிக் கலுழனே யொத்துத் தோன்றினான்.

(இ - ள்.) வீசுகின்ற திரைகளையுடைய பெரியபாற்கடலைக் கடையும்படி (தேவரும் தானவரும்) ஏற்றுக்கொண்டகாலத்தில், 'நெருங்கியஒளியையுடைய மந்தரமலையைப் போய்க் கொணர்வாய்' என்று கட்டளையிட, '(இவ்விடம்) வெறுமையானதுதானே' (என்று மந்தரமிருந்த இடத்தைக் கண்டவர்) சொல்லும்படி (வேரொடு பெயர்த்துக்) கொண்டு ஆகாயத்தின்மீது செல்லுகின்ற மிக்க வலிமையை யுடைய கருடனையே யொத்து (மருத்துமலையைக் கையிலேந்தியுள்ள) அநுமான் தோன்றினான்; (எ-று.)—தற்குறிப் பேற்றவுவமையணி. கருடன் மந்தரமலையைக் கொணர்ந்த செய்தி கும்பகர்ணன் வதைப்படலத்து 346-ஆஞ்செய்யுளிலும் வந்துள்ளது. பி-ம்:—[1]எறிசுடர்ப், எரிசுடர். [2]மந்த மத்தருகுசென்றனள், மந்தரந்திருகிச்சென்றென. [3]வெறிதுலகெனக்கொடு. [4]மேற். [5]வகைக். (2752)

98.—இதுவும் அது.

பூதலத் [1]தரவொடு மலைந்து போனநாள்
ஓதிய [2]வென்றிய [3]வுடற்று மூற்றத்தன்
[4]ஏதமி லிலங்கையங் [5]கிரிகொ டெய்திய
தாதையு மொத்தன னுவமை [6]தாழ்க்கிலான்.

(இ - ள்.) பூலோகத்திலே ஆதிசேடனோடு பொருதுபோன காலத்தில், (யாவரும்) சிறப்பித்துக்கூறுகிற வெற்றியுடையவனும் போர்செய்யவல்ல பெருவலிபடைத்தவனுமாகி, குற்றமற்ற இலங்கையுள்ள அழகிய திரிகூடமலையைக்கொண்டுவந்த தாதையாகிய வாயு பகவானையும், உவமையிற்பின்வாங்காதவனை ஒத்தவனாயினான், (அவ்வநுமான்); (எ-று.)—பூதலத்தரவு காத்திருக்கையில் மேருவின் முச்சிகரங்களைப் பெயர்த்திட்டதனால், வாயுதேவன் வென்றவனாவன். பி-ம்—[1]அரசொடுமலிந்து. [2]வென்றியேன்று. [3]ஊற்றமுற்றவன். [4]ஏதமிலங்கையங். [5]கரங்கொடெய்திய, கிரியொடேந்திய. [6]தற்கிலான். (2753)

99.—வந்தானென்றுசொல்லுதற்குமுன்னே அனுமான் வந்து அடியூன்றி நிலத்தைச் சேர்தல்.

தோன்றின [1]னென்னுமச் சொல்லின் முன்னம்வந்து
ஊன்றின னிலத்தடி கடவு ளோங்கலுன்

[2]வான்றனில் நின்றது வஞ்ச ரூர்வர
[3]ஏன்றில தாதலி னனும னெய்தினான்.

(இ-ள்.) (கடல்முதலியனாகிலைகுலைந்ததையும் பெருங்காற்றும் பேராரவாரமுந் தோன்றியதையுங் கண்டு, 'அநுமான்) வந்திட்டான்' என்று (சாம்பவான்) பேசிய அச்சொல்லுக்கு முன்னமே [சாம்பவான் சொன்னவுடனே], வந்து நிலத்திலே (தன்) பாதம் ஊன்றப்பெற்று (அவ்விடத்தை) அடைந்தான், அநுமான்; வஞ்சகருடைய ஊரிலே வருவதற்கு உடன்படாததால், தெய்வத் தன்மையுள்ள அந்த மருத்துமலையானது வானில்தானே நின்றது. 97 - ஆஞ்செய்யுளில் கலுழனேயொத்துத்தோன்றினான் என வந்ததனால், இங்கு "தோன்றின னென்னும் அச்சொல்லின்" என்றது. பி-ம்:—[1]என்பதோர். [2]வான்றனி. [3]ஏன்றலவாதலால், ஏன்றலதாதலின். (2754)

100.—வாயுபகவான் மருந்தின்மீதுபட்டு வீசிச் சுக்கிரீவன் முதலியோரை ஆர்த்தெழுமாறு செய்தல்.

வந்தனன் மருந்தினை மருத்து வானவன்
சிந்தையிற் பெருமகிழ் சிறப்பச் சேர்ந்துறீஇ
அந்தரத் தருக்கன்மா மகனோ டாயவர்
வந்திரைத் தார்த்தெழும் வகைசெய் தானரோ.

(இ - ள்.) வாயுபகவான் வந்து சிந்தையிலே மிக்கமகிழ்ச்சி சிறக்குமாறு அம்மருந்தைச் சேர்ந்துபொருந்தி, அந்தரத்திற்செல்பவனாகுரியனது சிறந்த குமாரனோடு பொருந்தியவரான மற்றைய வீரரும் (உயிர்பெற்று) வந்து இரைச்சலிட்டு ஆரவாரஞ் செய்து எழும்படி செய்தான்; (எ - று.)—மருத்துவானவன்-வாயுதேவன். இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை. (2755)

101.—யாவரும் உயிர்பெற்றெழுதல்.

காற்றுவந் தசைத்தலுங் கடவு ளுட்டவர்
போற்றினர் [1]விருந்துவந் திருந்த புண்ணியர்
ஏற்றமும் பெருவலி [2]யழகொ டெய்தினார்
கூற்றினை வென்று[3]த முருவுங் கூடினார்.

(இ-ள்.) வானுலகத்தவராற் போற்றப்பட்டவராய் விருந்தாக வந்திருந்த புண்ணியவான்கள்,—(இறந்த தம்முடலின்மீது) காற்று வந்து வீசுதலும், மேன்மையும் பெருவலியுடனே அழகும் பெற்றவராய், யமனைவென்று தம்முருவையுங் கூடினார்கள்; (எ-று.)

பிரமாத்திரத்தினால் மரணம்நேரிட்டதுபற்றிச் சுவர்க்கத்தை யடைந்து வானவராற் போற்றப்பட்ட வானரர் மருந்துக்காற்று பட்டவுடனே தம்முடலை மீண்டும் அடைந்து, ஏற்றம் பெருவலி முதலியவற்றைப்பெற்றனரென்க. பி-ம்:—[1]நந்தவந்து. [2]அழகும். [3]தம்முயிரும். (2756)

102.—அரக்கர்உயிர்பெறுமைக்கும் வானரர்உயிர் பெற்றமைக்குங்காரணம்.

[1]அரக்கர்த மாக்கைக [2]ளழிவி லாழியிற்
[3]கரக்கமற் றொழிந்தன வொழியக் கண்டன

மரக்கல முதலவு முய்ந்து வாழ்ந்தன
குரக்கின [4]முய்ந்தது கூற வேண்டுமோ.

(இ-ள்.) அரக்கருடைய உடல்கள் அழிவில்லாத சமுத்திரத்திலே (எறியப்பட்டு) அமிழ்ந்ததனல் (உயிரைப் பெருமல்)உயிர் நீங்கியபடியேயிருந்தன: (அவை) தவிரக் காணப்பட்டனவான மரக்கலம்முதலியனவும் உய்ந்து வாழ்வுபெற்றன: குரக்கினம்உய்ந்தது பற்றிக்கூறவேண்டுமோ? (எ - று.)—ஒழிந்தன-முற்று. கண்டன-பெயர். மரக்கலம் - மரக்கலத்திலிருந்த உயிர் நீங்கியவுடலென்ப. அரக்கருடல்களைக் கடலிலெறியுமாறு இராவணன் மருத்தனுக்குக் கட்டளையிட, அவன் அங்ஙனமே செய்தனனெனக் கீழ்ப்படலத்துக் கூறப்பட்டது. மற்று-வினைமாற்று. பி-ம்:—[1] அரக்கர்கள். [2] அளக்கராழியில், அரக்கராழியில். [3] கரக்கலுற்று. [4] உற்றது. ()

103.—இலட்சுமணன் உயிர் பெறுதல்.

கழன்றன நெடுங்கணை [1]கழன்ற புண்கடுத்து
[2]அழன்றன குளிர்ந்தன அங்கஞ் செங்கண்கள்
[3]சுழன்றன வுலகெலாந் [4]தொழுத [5]தொங்கலின்
[6]குழன்றபூங் குஞ்சியா [7]னுணர்வு கூடினான்.

(இ - ள்.) நெடியகணைகள் (இலட்சுமணனுடைய உடம்பை விட்டுக்)கழன்றன: கழன்றதனல் உடம்பிலே தோன்றிய புண்கள் கடுப்புக்கொண்டு எரிந்தவை, குளிர்ந்துவிட்டன: செந்நிறக்கண்கள் சுழலத்தொடங்கின: மாலைபோலக் குழற்சிகொண்டு அழகிய மயிர்முடியையுடைய இலட்சுமணன் உணர்வு கூடப்பெற்றான்; உலகெலாம் தொழுவனவாயின: (எ - று.)—தொழுத-முற்று. பி - ம்:—[1] கரந்த. [2] அழன்றில. [3] சுழன்றில. [4] தொழுவ. [5] ஓங்கலே. [6] குழன்றெழுங். [7] உணர்வுங். (2758)

104.—இலட்சுமணன் எழுதல்.

யாவரு [1]மெழுந்தன ரார்த்த வேழ்கடல்
[2]தாழ்வரும் பேரொலி [3]செவியிற் சார்தலும்
தேவர்கள் வாழ்த்தொலி கேட்ட செங்கணான்
[4]யோகநீங் கினனென விளவ லோங்கினான்.

(இ - ள்.) (வானரவீரர்) யாவரும் உயிர்பெற்றெழுந்தனராகி ஆரவாரித்ததனாலான ஏழ்கடலும் தாழ்தற்குக்காரணமான பேரொலி (தன்) செவியிற்பட்டவுடனே, தேவர்கள் வாழ்த்துகின்ற ஒலியைக் கேட்ட செங்கணனாகிய திருமால் யோகநித்திரையினின்று நீங்கியெழுந்தான்போல, இளையபெருமாள் எழுந்து நின்றான்: (எ - று.)—யோகம்-தியானசமாதியுமாம். ஏழ்கடல்களின் ஒலி வானரரின் ஆர்ப்புக்கு முன்னே அடங்கிவிட்டன என்பார் 'ஏழ்கடல் தாழ்வரும் பேரொலி' என்றார். பி - ம்:—[1] எழுந்தவரேத்த, எழுந்துவந்தார்த்த, எழுந்தனரேத்த. [2] தாவரும். [3] செவியைச். [4] ஏவம். (2759)

105.—இராமன் தம்பியைத் தழுவுதல்.

ஓங்கிய தம்பியை யுயிர்வந் துள்ளுற
வீங்கிய தோள்களால் தழுவி வெந்துயர்

நீங்கின னிராமனு முலகி [1]னின்றில
தீங்குள தேவரு மறுக்கஞ் [2]சிந்தினர்.

(இ - ள்.) உயிர்வந்து உடம்பினுள்ளே பொருந்தியதனால் எழுந்த தம்பியை (உவகையாற்) பூரித்த தோள்களினால் தழுவி, ஸ்ரீராமனும், (தனது) கொடியதுயர் நீங்கப்பெற்றான்; தேவரும் (தம்பகைக்) கவலையொழியப் பெற்றனர்: தோன்றிய தீங்கும் உலகில் நின்றில; (எ - று.)—உள என்பதை 'தீங்கு' என்பதனோடு இயைக்காமல் அமுதமுண்டதனாற் சாவாமலிருப்பவ ராதலின், 'உளதேவர்' என்றா ரெனினுமாம். பி - ம்:—[1]நின்றவர், நின்றுள. [2]தீர்ந்தனர். (2760)

106.—அரம்பையர்முதலியோரின் மகிழ்ச்சிச் செயல்.

அரம்பைய [1]ராடின ரமுத வேழிசை
நரம் [2]பியல் [3]கின்னர முதல [4]நன்மையே
நிரம்பின [5]வுலகெலா மூவகை நெய்விழாப்
[6]பரம்பின முனிவரர் வேதம் பாடினர்.

(இ - ள்.) அரம்பையர் ஆடினர்: நரம்பினாலியன்ற கின்னரம் முதலிய இசைக்கருவிகள் இனிதாக அமிழ்தம்போலினிய ஏழிசை நிரம்பப்பெற்றன; உலகமுழுவதும் உவகைக்கு அறிகுறியாக நெய்யாடல்திருவிழா, பரவின: முனிவரர்வேதம்பாடினார்; (எ - று.)— ஒருபிரதியில், 'ஓங்கிய" (105) என்றதன்பின் "உந்தின" (108) என்ற செய்யுளும், அதன்பின் இச்செய்யுளும் உள்ளன. நெய்யாடல்-விழாக்காலங்களில் மங்களமாகச்செய்யும் எண்ணெய் முழுக்கு. பி - ம்:—[1]வாழ்த்தொலி. [2]அயர், அயில். [3]கின்னரர், முதல்வர். [4]நாணுற, நாதமே. [5]உலகென. [6]விரும்பின மூனிவரும்.()

107.—அப்போது வேதம் முதலியன ஆர்த்தல்.

[1]வேதம்நின் றார்த்தன வேத வேதியர்
[2]போதம்நின் றார்த்தன [3]புகழு மார்த்தன
ஓதம்நின் றார்த்தன [4]வோத வேலையிற்
சீதம்நின் றார்த்தன தேவர் [5]சிந்தனை.

(இ - ள்.) வேதங்கள் (மகிழ்ச்சியோடு) நின்று ஆரவாரித்தன; வேதம் வல்ல வேதியரின் ஞானமும், (மகிழ்ச்சியோடு) நின்று ஆர்த்தன; புகழ்களும், ஆர்த்தன; கடல்களும், (கிளர்ந்து) நின்று ஆர்த்தன; தேவர்களின் மனமும், நீர்ப்பெருக்கைக் கொண்ட கடலைப்போலக் குளிர்ச்சிகொண்டு ஆரவாரித்தன; (எ - று.)—புகழார்த்தல் - புகழ்பலராலுஞ்சொல்லப்படுதல். பி - ம்:—[1]வேதநின்றார்த்தனர் வேதவேள்வியர். [2]தாதைநின்றார்த்தனன். [3]தருமம்பூத்தன. [4]ஓதமுள்ளுறச். [5]ஆர்த்தனர். (2762)

108.—பிரமாத்திரம் ஸ்ரீராமனை வலம்வந்து வணங்கித் தன்னிடஞ்சேர்தல்.

[1]உந்தின பின்கொலை [2]யொழிவி லுண்மையும்
தந்தனை [3]நீயது நினக்குச் சான்றெனாச்
சுந்தர வில்லியைத் தொழுது சூழவந்து
அந்தணன் படையுநின் [4]றகன்று போனதால்.

(இ - ள்.) கொலை நீங்கினபின் [யாவரும் உயிர்பெற்றெழுந்த பின்], பிரமாத்திரமும், அழகிய வில்லாளியான ஸ்ரீராமனைச் சூழ வந்து தொழுது, எதிர்நின்று 'நீ ஒழிவில்லாத சத்தியத்தைத் தந்தாய்; அது நினக்குப் பெருமையே' என்றுசொல்லி, மறைந்து போயிற்று; (எ - று.)—இச்செய்யுள்சிலபிரதிகளில் ''வேதநின்றூர்த்தன'' (107) என்றதன் முன் உள்ளது. பி - ம்:—[1] உந்தினைபின், உய்ர்தனனினிச். [2] ஒழிவதுண்மையுந்தந்தனன். [3] இனையது. [4] அயர்ந்து.

வேறு.

109.—ஸ்ரீராமன் அநுமானைத் தழுவுதல்.

[1] ஆய [2] கானலயி னமர ரார்த்தெழத்
[3] தாயி னன்பனைத் தழுவி னுன்தனி
நாய கன்பெருந் [4] துயரம் நாமறத்
[5] தூய காதல்நீர் துளங்கு [6] கண்ணினுன்.

(இ - ள்.) அப்போது ஒப்பற்ற தலைவனான ஸ்ரீராமன்,—மிக்க துயரம் பெரும் அற்றதாயொழியவே, பரிசுத்தமான அன்பினால் நீர்ததும்புகின்ற கண்களையுடையவனாய், தாய்போல் அன்புடையவனான அநுமானை அமரர் (மகிழ்ச்சியால்) ஆரவாரித்து எழாநிற்க, ஆலிங்கனஞ்செய்து கொண்டான்; (எ - று.)—நீர் - மகிழ்ச்சிக்கண்ணீர். பி - ம்:—[1] ஆயின. [2] காலைவாய். [3] தாயினும். [4] துயரகன்று, துயர்நாளும். [5] தூயவர், தூயினுன். [6] கண்ணினுர். இங்ஙனம் பாடபேதமுள்ள பிரதிகளிலெல்லாம் அடுத்தபாடலின்முதலில்தான் வேறு என்று உள்ளது. (2764)

110.—தன்னைத் தொழுத அநுமானுக்கு ஸ்ரீராமன் பின்வருமாறு கூறுதல்.

எழுது குங்குமத் திருவி னேந்துகோடு
உழுத மார்பினு னுருகி யுள்ளுறத்
[1] தழுவி நிற்றலும் தாழ்ந்து தாளுறத்
தொழுத மாருதிக் [2] கினைய சொல்லுவான்.

(இ-ள்.) (கோலமாக) எழுதிய குங்குமச்சாந்தத்தைக்கொண்ட தாய்ச் சீதையின் சாயாத முலையினுச்சியினாலே உழப்பெற்றமார்பை யுடையவனான ஸ்ரீராமன், மனமுருகி (அநுமனை) அழுந்த அணைத்து நின்றவளவில்,பாதங்களிற்பொருந்தப்பணிந்துதொழுத வாயுகுமாரனுக்கு இவ்வார்த்தைகளைக் கூறுவானானான்; (எ - று)—ஸ்ரீராமன் கூறுவதை மேல் நான்குகவிகளிற் காண்க. அநுமான் செய்ததும் யாவரும் பெருவியப்படைந்து மருட்சிகொள்ளும்படியுள்ளதுமான மலையைக்கொணர்ந்துமருந்துதந்ததுக்கு, ஸ்ரீராமன் திருமகட்கே யுரியமார்பைக் கொடுத்ததாகிய இதைக்காட்டிலும் மேம்பட்ட சம்மானமுண்டோ? அன்றியும், மேல் இராமபிரான் நன்றிகூறுதலாக வருவனவற்றினும் மேம்பட எவராலேனும்பேசமுடியுமோ? இவற்றை அறிஞர்களே ஆராய்ந்து அகமகிழற்குரியர். பி - ம்:— [1] தழுவியுற்றலும். [2] இனியசொல்லினுன். (2765)

111.—நான்குகவிகள்-ஒருதொடர்: ஸ்ரீராமன் அநுமானைப் புகழ்ந்து வாழ்த்துதல்.

முன்னிற் றோன்றினோர் முறையி [1]னீங்கலாது
என்னிற் றோன்றிய துயரி னிறுசேர்
மன்னிற் றோன்றினோ [2]முன்ன மாண்டுளோம்
நின்னிற் றோன்றினோ நெறியிற் றோன்றினாய்.

(இ-ள்.) முன்னே (எங்குலத்துப்) பிறந்தாருடைய முறைமையினின்று நீங்காமலிருந்து என்னால் தோன்றிய துயரினால் மரணத்தையடைந்த [என்பிரிவினால் இறந்த] தசரதமன்னவனிடத்து நின்று முன்பு பிறந்த நாங்கள், (பிரமாத்திரத்தினால்) மாண்டுபோனோம்: (பிறகு), நன்னெறியிலேயே விளங்குபவனே! உன்னிடத்தினின்று (மீண்டு) தோன்றினவரானோம்; (எ - று.)

முன்னிற்றோன்றினோர்முறை - சத்தியம் பிறழாமை. முதல் மூன்றடிகள் - ஸ்ரீராமன் தசரதனைப்பற்றிப் பாராட்டியமையை விளக்கும். முன்னம் தசரதனிடத்துப் பிறந்தோம்: இப்போது உன்னால் மறுபிறவி நேர்ந்தது: நீ எமக்குத் தந்தைபோல்வாய் என்றபடி: அநுமான் சீதையைக் கண்டு செய்திசொல்லி "ஈது அவன் கைமோதிரமே" என்று இராமநாமாங்கிதமான மோதிரத்தைத் தந்தபின், அப்பிராட்டி "மும்மைசா லுலகுக்கெல்லா முதல்வற்குமுதல்வன் றாதாய்ச், செம்மையா லுயிர் தந்தாய்க்குச் செயலென்னுலெளிய துண்டே, அம்மையாயத்தனை வப்பனே! அருளின் வாழ்வே, இம்மையே மறுமைதானு நல்கினையிசையோடு" என்று கூறியதோடு இதனை ஒப்பிட்டுப் பார்க்க. பி - ம்:—[1]நீங்கலா, நின்றிலாது, நீங்கலான். [2]முதல. (2766)

112. அழியுங் கால்தரு [1]முதவி யையனே
மொழியுங் கால்தரு [2]முயிரின் முற்றுமே
பழியுங் [3]காத்தரும் பகையுங் காத்தெமை
வழியுங் [4]காத்தனை [5]மறையுங் [6]காத்தனை.

(இ - ள்.) ஐயனே! சொல்லுமிடத்து, (உயிர்) அழியுங்காலத்திற்செய்கின்ற உதவியானது, தருகின்ற உயிரினால் [உயிரைப் பதிலுக்குக்கொடுத்தலால்தான்] ஈடுசெய்த தாகுமோ? (நீ எம்முயிரைக்கொடுத்ததன்மூலம்) பழியும் (எமக்குவரவொட்டாமல்) தடுத்து அரியபகைவரையும் அழிந்திடும்படியடக்கி, எம்மைக் குலத்தோடும் காத்தாய்; (இம்மூலமாக) வேதமார்க்கத்தையும் நிலைநிறுத்தினாய்; (எ - று.)

விதைத்தவிதைக்கு விளைவு மிக்கிருத்த லியல்பு ஆதலால் உயிருக்கு உயிரைக் கொடுத்தல் ஈடாகாதென்க. ஸ்ரீராமலட்சுமணர்க்குத் தீங்கு நேரின் பரதன் முதலியோரும் இறப்பது திண்ணமாதலால், சூரியகுலமே நாசமுறும்: அவ்வாறு யோகவொட்டாமற் செய்தா யென்பான் 'வழியுங்காத்தனை' என்றான். இனி அரக்கர் நசிப்பது திண்ணமாதலால் மறையும் காக்கப்பட்டனவாகும். நீ செய்த உதவி உயிர்க்கு உயிர்கொடுத்தது மாத்திரமன்று: நீசெய்த

உதவி மிகப்பல என்றவாறு. முற்றுமே, ஏ-எதிர்மறை. பி - ம்:—[1]உதவிக்கு. [2]உயிரின் முற்றுமோ,உயிருங்காத்தனை. [3]காத்தனை..., பகையுங்காத்தனை. [4]காத்துநம். [5]மரபுங். [6]காத்தநீ. (2767)

113. [1]தாழ்வு மீங்கிறைப் பொழுது [2]தக்கதே
வாழி யெம்பிமே லன்பு [3]மாட்டலால்
ஏழும் [4]வீயுமென் பகர்வது [5]எல்லைவாய்
ஊழி [6]காணுநீ உதவி னுயரோ.

(இ - ள்.) என் தம்பிமேலுள்ள அன்பை நிலை நிறுத்திக்காட்டியதனால், இப்போது ஒரு கணப்பொழுது (எங்கட்கு நேர்ந்த) தாழ்ச்சியும் தகுதியானதே: (வானுளோடிருந்து) 'யுகாந்தகாலத்தையும் காணவல்ல நீ தக்க காலத்தில் உதவினுய்: (அவ்வாறு தக்க சமயத்தில் நீ உதவாவிட்டால், நான்), என் சொல்லுவது? இந்த ஏழுலகங்களுமே யழிந்திருக்கும்; (எ - று.)—பிரமாத்திரத்தினால் இலட்சுமணன் இறைப்பொழுது உயிர் நீங்கியதும் நான் அனுனிடத்துக் கொண்ட அன்பைக் காட்ட இடமானதால் தக்கதே யென்று கூறிய இது, குற்றமுள்ளஒன்றை நற்குணத்தைக் கண்டு வேண்டுவதாகிய வேண்டலணியாம்: வடமொழியில் அநுஜ்ஞாலங்காரமெனப்படும். எல்லைவாய் - யுகாந்த காலத்தில், ஊழிகாணும்- பிரளயத்தைக்காணப்போகின்ற, நீ என்றுமாம். வாழி - அசை. பி - ம்:—தாழ்விலிங்கு, தாழவீங்கு. [2]தாழ்ந்ததேல். [3]மாட்டிவான். [4]வீழும். [5]எல்லைநாள், எல்லையின். [6]காணநீ, காலமும். (2768)

114. இன்று வீகலா தெவரு மெம்முடன்
நின்று [1]வாழுமா நெடிது நல்கினாய்
ஒன்று மின்னல்நோ யுறுகி லாதுநீ
என்றும் [2]வாழ்தியா லினிதெ னேவலால்.

(இ - ள்.) (இந்திரசித்து பிரமாத்திரத்தைத் தொடுத்த) இன்றைய தினம் எவரும் உயிரொழிந்திடாமல் எம்மோடு நின்று வெகுகாலம் வாழ்ச்சிபெறுமாறு பேருதவி புரிந்தாய்; (இவ்வாறு உதவி புரிந்த) நீ, துன்பம் விளைதற்குஉரிய நோயொன்றும்உறாமல் என்னேவலினால் இனிதாக என்றும் வாழ்வாய் (என்றான், ஸ்ரீராமன்); (எ - று.)—பேரன்பினால் வேறொன்றுஞ் செயலில்லாத காலத்து வாழ்த்துதலே முடிவான செயலாதலறிக. பி.ம்:—[1]வாழுநான். [2]வாழுவாயினிநின். (2769)

115.—மற்றையோரும் அநுமானைத் தொழுதுவாழ்த்துதல்.

மற்றை யோர்களு மனுமன் [1]வண்மையால்
பெற்ற வாயுளார் பிறந்த காதலார்
சுற்று [2]மோயினர் தொழுது [3]வாழ்த்தினார்
உற்ற வாறெலா முணரக் [4]கூறினான்.

(இ - ள்.) மற்றைய யாவரும், அநுமானுடைய உதாரகுணத்தினால் பெற்ற வாழ்நாளையுடையவரும் [பிழைத்தெழுந்தவரும்], (அநுமானிடத்துத்)தோன்றிய அன்பையுடையவருமாகி,(அவனைச்)

சுற்றிலும் பொருந்தியவராய்த்தொழுது வாழ்த்தினார்கள்: நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் (அவர்கள்) தெரிந்துகொள்ளுமாறு (அவ்வநுமான்) கூறினான்; (எ-று.)—பி-ம்:—[1]வன்மையால். [2]மேவினார், எய்தினார். [3]வாழ்த்தினார்க்கு. [4]கூறினார். (2770)

116.—சஞ்சீவிமலையைத் திருப்பிக்கொண்டுவைத்திடுமாறு சாம்பவான் அனுமானுக்குக் கூறுதல்.

உய்த்த மாமருந் துதவ [1]வொன்னலார்
பொய்த்த சிந்தையா ரிறுதல் [2]பொய்க்குமால்
மொய்த்த குன்றையம் [3]மூல முழைவாய்
வைத்து மீடியால் வரம்பி லாற்றலாய்.

இதுவும் அடுத்த கவியும் - ஒரு தொடர்.

(இ - ள்.) எல்லையில்லாதவல்லமையுடையவனே! (நீ) கொணர்ந்த சிறந்த மருந்து உதவிபுரிவதால் பொய்த்த சிந்தையையுடையரான (நம்) பகைவர் உயிரொழிதலும் பொய்த்துவிடும்: [இம்மலை இங்குத்தானே யிருப்பின், நம்பகைவரும் உயிர்பெற்றெழுந்திடுவ ரென்றபடி]; (ஔஷதிகள்) நெருங்கியுள்ள இம்மலையை அது இருந்த முன்னைய இடத்தில்தானே வைத்து மீண்டுவருவாயாக; (எ-று.)—வரம்பிலாற்றலாய்-சஞ்சீவிமலையைக் கொணரவும் திரும்பக் கொண்டுபோகவும் வல்லமையுடையாய் நீ என்றவாறு; கருத்துடையடைகொளியணி. முழை = முழை: பள்ளமான இடம். பி - ம்:—[1]ஒன்றலாப். [2]போக்குமால், போகுமால். [3]மூல ஆழின்வாய். (2771)

117.—அநுமான் சஞ்சீவிமலையை மீட்டுங்கொண்டு செல்லுதல்.

என்று [1]சாம்பவ னியம்ப வீதரோ
நன்று சாலவென் [2]றென்று நாழிகைச்
[3]சென்று மீள்வனென் [4]றுணர்ந்து தெய்வமாக்
குன்று [5]தாங்கியக் குரிசில் போயினான்.

(இ - ள்.) என்று சாம்பவான் சொல்ல, '(இவன் சொன்ன) இது மிகவும் நன்று' என்று சொல்லி, ஒரு நாழிகையிற்போய் மீண்டுவருவேனென்று மனத்திற் கருதி,பெரிய(அத்) தெய்வமலையை எடுத்துக்கொண்டு அந்த ஆண்களிற் சிறந்த அநுமான் போயினான்; (எ - று.)—பி - ம்:—[1]சாம்பனுண்டு. [2]உவந்தோர், உவந்து. [3]ஒன்றி, ஒன்றில். [4]எழுந்து. [5]தாங்கிய.

ஒருபிரதியில் இங்கு 'மருத்துமாமலைப்படலம்' முற்றும் என்று உள்ளது. (2772)

அதிகாயன்வதத்திற்குப்பின் இதுவரையிலுமுள்ள படலங்களின் சரித்திரம் ஸ்ரீவான்மீகத்திற்கூறியபடி வருமாறு:—இராவணன் புத்திரசோகத்தினால் தன் இல்லத்தில் நெட்டுயிர்ப்பெறிந்த வண்ணமிருந்தானாக, துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவ்விராவணனைப் பெருவீரனான இந்திரசித்து அடைந்து, 'இந்திரசித்து இருக்கையில் நீ துயரமடையலாமோ? என்னுடைய கூரியபாணங்

களிஞல் மாற்ருரை இதோ தொலைத்து விடுகின்றேன்: நீ கவலை யற்று இருப்பாய்' என்றுகூறி அவனைத்தேற்றி அந்தத்தந்தையி னிடத்து வாழ்த்துக்களைப்பெற்றுக்கொண்டு போர்க்களத்துக்குச் சென்றனன். அவனைத் தொடர்ந்து புகழ்ந்தவண்ணம் மிகப்பல அரக்கர் பலவகைப்படைக்கலங்களையேந்திச்சென்றனர். அப்போது இந்திரசித்து அந்தப்போர்க்களத்தில் திவ்வியரதம்பெறுதற்கு ஓமஞ்செய்யக் கருதி அரக்கர்களைக் காவல்வைத்து ஆயுதங்களை நாணலாகவும் தானிக்கட்டைகளைச் சமித்துக்களாகவும் தோமரங்களை பரிஸ்தரணமாகவுஞ்செய்து, இரும்புஸ்ருவத்தையுங் கொண்டு கருநிறமுள்ள ஆட்டின் கழுத்தை யறுத்து ஓமஞ்செய் தான். அவன் ஈந்தஹவிசை அக்கினி புருஷன் நேராகவந்து பெற்றுக்கொண்டனன். அக்கினியில் வெற்றியைத் தோற்றுவிக் கும் அடையாளங்கள் காணப்பட்டன. அப்பொழுது இந்திரசித்து பிரமாத்திரத்தையழைத்து, அந்த அத்திரத்திஞல் தனது தேர் வில் முதலிய எல்லாவற்றையும் அபிமந்திரித்தனன்; பின், வில் அம்பு கத்தி தேர் குதிரை பாகன் முதலியவற்றை ஆங்குப்பெற்று ஆகாயத்திற்சென்று மறைந்தனன். அப்பால் அரக்கச்சேனை கிளர்ந்து பலவகைப்படைக்கலங்களால் வானரசைனியத்தைத் தாக்கிற்று. இந்திரசித்தும் வானத்திலிருந்தபடி படைக்கலங்களால் தாக்கிஞன். வானரங்கள் ஒன்று கூடி எதிர்த்தும் இந்திரசித்தின் பாணவேகத்தைத் தாங்கமாட்டாது பறந்துபோயின. சிலவானரத் தலைவர்கள் தம்முயிரின்மீது நசைகொள்ளாது இந்திரசித்தை யெதிர்த்தனர்; அங்ஙனம் எதிர்த்த கந்தமாதனன் நீலன் சாம்பவான் சுக்கிரீவன் ருஷபன் அங்கதன் முதலியோர்மீது இந்திரசித்து அம்பு களையும் பலவகைப்படைகளையும் பொழிந்து அவர்களை மூர்ச்சிக்கச் செய்தனன். சிலர் தலையைத்தூக்கிவானத்தைப்பார்த்துக்கொண்டே யிருந்து கண்களிற் கூரிய அம்புகள்தைக்கப்பெற்று ஒருவர்மீது ஒருவர்சாய்ந்து விழுந்தனர். ஹநுமான் சுக்கிரீவன் அங்கதன் கந்தமர்தனன் சாம்பவான் ஸுஷேணன் வேகதர்சி மயிந்தன் த்வி விதன் நீலன் கவாக்ஷன் கஜன் கோமுகன் கேஸரீ ஹரிலோமன் வித்யுத்தம்ஷ்ட்ரன் ஸூர்யாநநன் ஜ்யோதிர்முகன் ததிமுகன் பாவ காக்ஷன் நளன் குமுதன் முதலிய வானரத்தலைவர்கள் பலரையும் இந்திரசித்து பிரமாத்திரத்திஞல் அபிமந்திரித்த ஈட்டிகளாலும் சூலங்களாலும் அம்புகளாலும் இமிசித்தனன். அங்ஙனம் வான ரரை வருத்தியபின் இராமலக்ஷ்மணர்மீது அந்தப் பாணங்களை விடுக்கலாஞன். அப்போது மஹாதீரஞன ஸ்ரீராமன் லக்ஷ்மணனைப் பார்த்து 'லக்ஷ்மண! இந்திரசித்து பிரமாத்திரத்தைக் கைக்கொண்டு வானரர்களைவீழ்த்தி நம் மீதுபாணங்களை விடுக்கின்ருன்; பிரம தேவனுடைய வரமகிமையால் தன்னுடல் கண்ணுக்குத்தெரியாத படி வானத்திற்போர்புரியும் இவனைக் கொல்வதுஎப்படி? இந்த அத்திரத்துக்கு உரியதேவதையின் மகிமை எண்ணுதற்கு அரியது, நீ என்னுடனே மனக்கலக்கமின்றி இந்தப் பாணங்களைப் பொறுத் திருப்பாயாக; நாம் இந்தப்பாணங்களால் மூர்ச்சித்துத் தரையில் வீழ்ந்தமையைக் கண்டவுடனே இந்திரசித்து வெற்றித்திருவை யடைந்ததாக இலங்கைக்கு மீளுவான்: இது திண்ணம்' என்று ஞன். அவ்வண்ணமே இந்திரசித்தின் அத்திரத்திஞல் இராம

லக்ஷ்மணர் மூர்ச்சித்துவிழ, இந்திரசித்து மகிழ்ந்து கர்ச்சித்து நகரத்திற்குட் சென்றான்.

அப்பால் விபீடணன் வானரசைனியங்களெல்லாம் ஒடுங்கியிருப்பது கண்டு 'நீங்கள் அஞ்சவேண்டா: இராமலக்ஷ்மணர்கள் பிரமதேவனைக் கௌரவிக்கும்பொருட்டு உயிரற்றவர்போலக் கிடக்கின்றனரேயன்றி வேறில்லை' என்றனன். அநுமான் பிரமாத்திரத்தைக் கௌரவித்தற்காக ஒருமுகூர்த்தகாலம் உயிரற்றான்போலிருந்து பின்பு அத்திரத்தினின்று விடுவித்துக்கொண்டு 'இந்த வானரசேனையில் எவர் உயிரைவைத்துக் கொண்டிருக்கின்றார்களோ அவர்களைச்சமாதானப்படுத்துவோம்' என்று சொல்லி, விபீடணனுடனே கொள்ளிக்கட்டையைக் கையிற்கொண்டு, கைபோயும் கால்போயும் மூத்திரம்விட்டுக்கொண்டும் வீழ்ந்துகிடக்கும் வானரவீரர்களெல்லாம் பாணங்களாற்பீடிக்கப்பட்டிருப்பதைக் கண்டனன். அப்பால் அவ்விருவரும் சாம்பவானைத்தேடலாயினர். விபீடணன், வயதுமுதிர்ந்து பாணங்களாற் பொத்தப்பட்டு வீழ்ந்திருக்குஞ் சாம்பவானைக் கண்டு அவனருகேசென்று 'பெரியோனே! நீ உயிருடனிருக்கின்றாயோ?' என்றுவினவினான். சாம்பவான் கண்விழித்துப்பார்க்கமுடியாமையால் குரலினாலே விபீடணனைக் கண்டு, 'அநுமான் உயிரோடு இருக்கின்றானா?' என்று வினவினான். சாம்பவான் மொழிந்ததுகேட்டு, விபீடணன், வியப்புற்று 'இராமலக்ஷ்மணர்களையும்கூட வினவாமல் அனுமானிடத்து இவ்வளவு பேரன்புவைத்து வினவக் காரணம் என்?' என்றான். சாம்பவான் 'அந்த அனுமான் ஒருவன்மாத்திரம் பிழைத்திருந்தால், மற்றை யாவரும் இறந்திடினும் அஞ்சவேண்டுவதில்லை: அவன் ஒருவன் இல்லாவிடின் யாவரும் பிழைத்திருப்பினும் இறந்தவராவர்! அவனுடைய திறமை அத்துணை பாராட்டத்தகுந்தது' என்றான். அப்பால் அநுமான் சாம்பவானைக் கிட்டி வணங்கினன். அநுமான் குரலைக் கேட்டதும், சாம்பவான் உடலெங்கும் அம்புகளாற் பொத்துண்டிருப்பினும் புதுப்பிறவியெடுத்தான்போலாயினான்.

பின்னர்ச்சாம்பவான் அநுமானைப்பார்த்து, 'பெருந்திறலுடையோனே! இந்த அறுபதுகோடிசேனையும்பிழைத்தெழுவது உன் வசத்திலுள்ளது. உற்றசமயத்தில் உன்னைப்போன்று பராக்கிரமத்தைக் காட்டக்கூடியவர் வேறு எவருமில்லை. நீ இந்தராமலக்ஷ்மணர்களையும் வானரசைனியங்களையும் சல்லியந்தீர்ந்து இனிதிருக்கச்செய்வாய். அநுமானே! நீ வானில்வெகுதூரஞ்சென்று இமாலயத்திற்குப் போகவேண்டும். அப்பால் சொர்ணமயமான ருஷபமென்னும் மலையையும் கைலாசசிகரத்தையும் காண்பாய். அவ்விரண்டுசிகரங்களின் இடையில்தான் ஸஞ்ஜீவகரணீ முதலிய ஒஷதிகளையுடைய ஒஷதிமலை இருக்கின்றது. இந்த ஒஷதிகளைக் கொணர்ந்துவானரர்களைப்பிழைப்பிப்பாய்' என்றனன். அதுகேட்டுப் பெருமகிழ்ச்சியடைந்த அநுமான், அந்தச்சாம்பவான் சொற்படியே செல்லக்கருதிப் பேருருக்கொண்டுவானத்தில் தாவிப்பாய்ந்து இமாலயத்தையடைந்தனன். அங்கே அநுமான் மஹரிஷிளின் ஆச்சிரமங்களும் பிரமகிருகமான பிரமகோசமும் இந்திரன்

வச்சிராயுதம் பெற்ற இடமும் குபேரஸ்தானமும் முதலியன கண்டு, சுவர்ணமயமான ருஷபபர்வதத்தையும் கைலாசபருவதத்தையும் அவற்றினிடையே ஓஷதிமலையையும் கண்டனன்: அம்மலையைக் கண்டதும் சஞ்சீவகரணீ முதலிய ஓஷதிகளைத் தேடிப் பார்க்க, அவை அநுமானுக்குப் புலனாகாதுமறைந்தன. அநுமான் சினந்து அந்தமலையைப்பார்த்து, 'இராமகாரியத்தில் தயைகாட்டாதிருக்கின்றனையே: நீ இப்படியிருப்பதேன்? நான் என் தோள்வலிமையால் உன்னையே பறித்துக்கொண்டு செல்கின்றேன், பார்' என்றுசொல்லி, அந்த மலையை வேரோடு பேர்த்துக்கொண்டு இலங்கையிற் போர்க்களஞ் சேர்ந்தான். சேர்ந்ததும் அம்மலையிலுள்ள மூலிகைகளின்காற்றுப் பட்டமாத்திரத்தில் யாவரும் உயிர்பெற்றெழுந்துபேராரவாரஞ் செய்தனர். வெளிக்குத்தெரியாதிருக்கும் பொருட்டு, இறந்த அரக்கர்களை அவ்வப்போது கடலிலிடுமாறு இராவணன் கட்டளையிட்டிருந்ததனால், அரக்கர் எவரும் உயிர் பெற்றெழுந்தாரில்லை. பின்பு அநுமான் அம்மலையைத் திருப்பிக் கொண்டுபோய் இருந்தவிடத்தில் வைத்திட்டு மீண்டுவந்தனன்.

பிறகு சுக்கிரீவன், 'தன் தம்பி கும்பகர்ணனும் அதிகாயன் முதலிய மக்களும் மாண்டனராதலால், இராவணன் இப்போது போருக்குவாரான்: ஆகையால் வல்லமைவாய்ந்த வானரர்கள் மதிலைக் கடந்து இலங்கையில் தீ வைக்கட்டும்' என்று கட்டளையிட்டான்; அந்தக் கட்டளையின்படியே வானரர்கள் அவ்விரவில் இலங்கையையெரிக்கலாயினர். இலங்கையையெரித்துக்கொண்டு அந்தப்புரத்துக்கு அருகில் வானரர்கள் அணுகுவது கண்டு சீற்றம் விஞ்சியவனாய், இராவணன், கும்பகர்ணன்புதல்வரானகும்பநிகும்பர்களை, யூபாட்சன்சோணிதாட்சன்ப்ரசங்கன் கம்பனன்முதலிய அரக்க வீரருடன் செல்லுமாறு கட்டளையிட்டான். அந்தக்கட்டளையின்படி கும்பநிகும்பர் ராட்சச முக்கியரோடும் பெரிய அரக்கப் படையோடும் கொக்கரித்துக்கொண்டுவருவதுகண்டு, வானர சைன்யம், ஆரவாரஞ்செய்துகொண்டு எதிர்த்தது. அப்போது வானரர்க்கும் அரக்கர்க்கும் அச்சத்தைவிளைக்கத்தக்க கைகலந்த கடும்போர் நிகழ்ந்தது. அப்போரில், அங்கதன் கம்பனனென்பவனோடு பொரத் தலைப்பட்டான். கம்பனன் அங்கதனை வெருட்டிக் கொண்டுவந்து கதையினாற் புடைக்க, துடித்துப் பூமியில் வீழ்ந்த அவ்வங்கதன் பேராற்றலனாதலால் தெளிந்து பர்வத சிகரத்தைக் கொண்டு கம்பனனுடைய மார்பில் தாக்க, அவன் உயிரற்றுக் கீழே விழுந்தான். அதுகண்ட சோணிதாட்சன் விரைந்துவந்து அங்கதனை அம்புகொண்டு எதிர்த்தான். அரக்கனுடைய அம்பால் தொளையுண்ட அங்கதன் அவனுடைய வில் தேர் அம்புகள் இவற்றை முறித்துப் பொடியாக்கினன். பின்பு சோணிதாட்சன் கத்தியைக் கையிற் கொண்டு வானத்திலெழ, அங்கதன் அவனிலும்ஓங்க வானத்தெழுந்து, அவன் கத்தியைப் பிடுங்கிக் கொண்டு அதனால் பூணூல்போல் அவன் மார்பிற் சீறினான். ஆனால், அரக்கன் மாண்டிலன். பின் அங்கதன் அக் கத்தியை யேந்தியவண்ணம் கர்ச்சித்துக் கொண்டு, ப்ரஜங்கன் முதலியபகைவர்மேல் எதிர்த்துப்போயினன். யூபாக்ஷன் ப்ரஜங்

கனோடு கூடி அங்கதனை யெதிர்த்தான்; சோணிதாட்ச
னும் உடன் வந்தான். மூவர் அங்கதனை யெதிர்ப்பதுகண்டு
அவ்வங்கதனுடைய மாமன்மார்களான மயிந்ததுவிவிதர் அங்கத
னுக்குத் துணையாயினர். மூவருடன் போர்நிகழ்கையில், ப்ரஜங்கன்
கத்தியைக்கொண்டு அங்கதனைத் தொடர, அவன் ஆச்சாமரத்
தினாலடித்துப் பின்பு கத்தியேந்திய அரக்கன்முஷ்டியைத் தாக்க,
கத்தி கீழ்விழுந்திட்டது: அரக்கன் முஷ்டியினால் அங்கதனை
நெற்றியின்மீது தாக்க, சிறிது நேரம் உணர்வற்றிருந்துதெளிந்து,
அங்கதன், கத்தியினால் அவன்சிரசைக் கொய்தனன். தனது சிறிய
தகப்பனாகிய ப்ரஜங்கன் மாண்டதுகண்டு, யூபாட்சன் கத்தியைக்
கையிற்கொண்டுவர, துவிவிதன் அவனைப் பிடித்துக்கொண்டான்:
தன்னுடன்பிறந்தோன் பிடியுண்டதுகண்டுசோணிதாட்சன் கதை
யினால் தாக்கினான்: அடியுண்ட துவிவிதன்வருந்தினானாயினும்
கதையைப்பிடுங்கிக்கொண்டான். மயிந்தன் யூபாட்சனதுமார்பில்
மோதினான்: இங்ஙனம் மயிந்ததுவிவிதர்களுடனே யூபாட்ச
சோணிதாட்சர்கட்கு நிகழ்ந்த நெருங்கிய போரில், இறுதியாகத்
துவிவிதன் சோணிதாட்சனைப் பீறித் தரையிலறைந்து உடலைப்
பிசைந்து பிண்டமாக்கினன். மயிந்தன் கையால் யூபாட்சன் மாண்
டனன். பிரதான அரக்கவீரர் மாண்டதனால் அரக்கப்படை அஞ்சி
யோடிற்று.

அதுகண்ட கும்பன் அஞ்சியோடிய சேனைகளை நிறுத்தி இது
வரையில் நிகழ்ந்திராத கடும்போரைச் செய்தவனாய் மயிந்ததுவி
விதர்களைத் தோற்கடித்துக் கடும்போர் நிகழ்த்தி, அங்கதனையும்
அம்புகளைப்பொழிந்து மூர்ச்சிக்கச் செய்தனன். அங்கதன் மூர்ச்
சையடைந்த செய்தியை ஸ்ரீராமனுக்கு வானரர் அறிவிக்க, அப்
பெருமான் அங்கதனுக்குத் துணையாகப்போரச் சாம்பவான் முதலி
யோரை யனுப்பினான். அப்போரில் இறுதியாகச் சுக்கிரீவன் கும்ப
னோடு தொந்தயுத்தஞ்செய்து அவனைக் கடலில் தூக்கியெறிய
அவன் மீண்டுவந்து முஷ்டியினால் தாக்க, சுக்கிரீவன் தன்முஷ்டியி
னால் அந்தக்கும்பனுடைய உயிரைப் போக்கினான். தன்னுடன்
பிறந்தோன் இறந்தது கண்டு பெருஞ்சீற்றத்துடன் நிகும்பன்
கடும்போர் புரிந்து வானரர்களை வெருட்டியடிக்க, அநுமான் எதிர்
த்துப்பொருது அவன்தலையைத் திருகியெறிந்து அவனுடலைப்
பிண்டமாக்கிவிட்டான். அரக்கப்படை நிலைகலங்கியோடிற்று.

கும்பநிகும்பர் மாண்டதுகேட்டு இராவணன், கரனுடைய
புதல்வனான மகராட்சனைப் பொருமாறு ஏவினான். அவன் நேர்ந்த
நிமித்தங்களையும் பொருட்படுத்தாது பெருஞ்சேனையோடு ஆர்ப்
பாட்டஞ்செய்துவந்து எதிர்க்க, உடன்வந்த அரக்கர்களும்
எதிர்த்து வானரர்களைத்தொலைத்து நிலைகுலையச் செய்தனர்: அது
கண்ட ஸ்ரீராமன் அரக்கர்களைக் கணைகொண்டுநலிய, மகராட்சன்
சீற்றம் கொண்டு இராமபிரானைநோக்கி 'நீ என்தந்தையைத்
தண்டகாரணியத்திற் கொன்றவனல்லவா? தெய்வாதீனமாய் நீ
எதிர்ப்பட்டாய்; உன்னைத் தொமிசஞ்செய்கிறேன்' என்று இவை
முதலாகவீரவாதஞ்செய்ய, ஸ்ரீராமன் 'வாயாற் பிதற்றி என்ன?

செய்கையாற் காட்ட வேணும்' என்று சொல்ல, இருவர்க்கும் பெரும்போர் நிகழ்ந்தது. முடிவாக, ஸ்ரீராமன் அவ்வரக்கனுடைய வில்லைத் துண்டித்துச் சாரதியைவதைத்துத் தேரைமுறித்துக் குதிரைகளைக் கொன்றனன். அப்போது சூலத்தை அரக்கன் ஸ்ரீராமன் மீதுஎறிய அதை அப்பிரான் துண்டித்தான். அரக்கன் முஷ்டியுத்தஞ்செய்யவர, ஸ்ரீராமன் ஆக்நேயாத்திரத்தினால் அவனுயிரைப் போக்கினன்.

மகராட்சன் மாண்டதுகேட்டு இராவணன் சினங்கொண்டு செய்யவேண்டுவதை யாலோசித்து இந்திரசித்தைப்புகழ்ந்து போருக்கு அனுப்பினான். அவனும் உற்சாகங்கொண்டு, யாகசாலைக்குப்போய், ஆயுதங்களையே பரிஸ்தரணம் முதலியனவாகக் கொண்டு, கருநிறமுள்ள ஆட்டை அறுத்து ஓமமியற்றி, அந்த வேள்வியின் வலிமையினால் கண்ணுக்குப்புலப்படாமல் மறைந்திருக்கும் வல்லமையைப் பெற்று, அவ்வாறான வல்லமைவாய்ந்த தேரினாலும் பிரமாத்திரத்தினாலு பாதுகாக்கப்பெற்று வானத்தெழுந்து, போர்க்களத்தில் சரமாரி பொழிந்து வானரர்களைப் பெருவாரியாக உயிரொழித்து நடுநடுங்கச்செய்து இராமலட்சுமணர்களையும் கணைக்கூட்டங்களாற் பொத்தினான். இராமலட்சுமணர்கள் தமது திவ்யாத்திரங்களை அவ்விந்திரசித்தின்மீது விடுத்தும், அவன் தான் படைத்திருந்த வல்லமையால் அவைகட்குத் தப்பினான் இந்திரசித்து கண்ணுக்குப் புலனாகாமலே கணைத்தொகுதிகளை விடுத்து வானரர்களை யொழித்துத் தம்மையும் தாக்குவது கண்ட இலட்சுமணன் பெருஞ்சினமடைந்து ஸ்ரீராமனைப்பார்த்து 'பிரமாத்திரத்தைத்தொடுத்து அரக்கர்களை யெல்லாம் தொலைத்து விடுகிறேன்' என்ன, ஸ்ரீராமன், ஒருவனுக்காகப் போர்புரியாமலிருப்பவரையுமுளப்படக் கொன்றிடுவது தகுதியன்று; நமது திவ்யாத்திரங்களால் அவ்விந்திரசித்தைக் கொன்று தரையில் வீழ்த்தலாம்' என்று சொல்லி இலட்சுமணனைச் சமாதானப்படுத்தி, அந்தஇந்திரசித்தைக் கொல்லுதற்குரிய உபாயத்தைச் சிந்தித்துக்கொண்டிருந்தனன் என்பது.

மருத்துமலைப்படலம் முற்றிற்று.

———

24-ஆவது களியாட்டு படலம்

அரக்கமகளிர் இராவணன் காணுமாறு கள்ளைப்பருகிக் களியாலாடியதைக் கூறும் படலமென்பது, பொருள். களியாட்டம் -கள்ளுண்டு ஆடும் ஆட்டம். களியாட்டுப்படலம் எனவும் சில பிரதிகளிற்காணகின்றது.

இந்திரசித்துவிடுத்த பிரமாத்திரத்தினால் தமது பகைவர் சேனையோடும் மாண்டனரென்ற அந்தமகிழ்ச்சிச்செய்தியைச்செவியேற்றதனால், ஆங்குள்ள மடந்தையர் கள்ளுண்டு, வெறியோடு ஆடல்பாடல்முதலியன நிகழ்த்தினர்: அவற்றைக் கண்டு களித்தவனாய் இராவணன் இருந்தான். அப்போது, அநுமான்கொணர்ந்த

மருத்துமலையிலுள்ள ஓஷதிகளின் காற்றுப் பட்டதனால் உயிர் பெற்று முன்னிலும் வலிமையோடு கிளர்ந்தெழுந்த வானரர்கள் ஆரவாரித்தனர். அந்த ஆர்ப்பொலியையும் இராமலட்சுமணரின் வில்நாணியினொலியையும் செவியேற்று இராவணன் திடுக்குற்றிருக்க, அப்போது ஒற்றர் நிகழ்ந்தசெய்தியை யுணர்த்தினர். இராவணன் மந்திரசாலைக்குச் சென்றானென்ற செய்தி இப்படலத்துக் கூறப்படுகின்றது. பெருங்காப்பியவிலக்கணம்பற்றி, உரிய இடத்து மகாகவியாகிய கம்பரால் இக்களியாட்டு அமைக்கப்பெற்றதென அறிக.

வேறு.

1.—இராவணன் மகளிரின் களியாட்டங் காணுதல்.

இன்னதித் [1]தலைய தாக விராவண னெழுந்து பொங்கித்
தன்னையுங் [2]கடந்து நீண்ட வுவகையன் [3]சமைத்த கீதம்
[4]இன்னரர் முதலோர் பாட முகத்திடைக் கிடந்த கெண்டைக்
கன்னிநன் மயிலன் னாரை நெடுங்களி யாட்டங் கண்டான்.

(இ - ள்.) இவ்விடத்து [இராமனுடையசேனையில்] நிகழ்ந்த செயல் இவ்வாறாக,—(பிரமாத்திரத்தால் பகைவர் உயிரொழிந்து கிடந்தாரென்று அறிந்ததனால்), இராவணன்,—ஊக்கங்கொண்டு கிளர்ந்து தன்னையும் கடந்துநீண்ட [விஞ்சிய] உவகையை யுடையனாய், (இலக்கணப்படி) அமைந்த சங்கீதத்தைக் கின்னரர் முதலோர் பாட(ச் சென்று, தம்) முகத்தினிடத்துத் தங்கிய கெண்டைமீனையுடைய [கெண்டைமீன்போற் கண்களையுடைய] இளம்பருவமுள்ள அழகியமயிலையொத்தசாயலையுடையரான மகளிரின் நெடியகளியாட்டங் கண்டான்; (எ - று.)

அரக்கியர் தம்மரசனுக்குநேர்ந்த வெற்றியால்தோன்றிய பெருமகிழ்ச்சியாற் கள்ளுண்டு ஆடுதலைச்செய்தனராக, இராவணன், கின்னரர்முதலோர் பாடச் சென்று அந்தக்களியாட்டத்தைக் காணலாயினனென்பதாம்: களியாட்டங்கண்டான் - களியாட்டத்தையாடுமாறு செய்தானெனினுமாம். இந்தக்களியாட்டம் தெய்வப்போருகு பந்தரில் நிகழ்ந்ததென்பது, இந்தப்படலத்தின் ஈற்றுச்செய்யுளாற் பெறப்படும். பி-ம்:—[1]தலையவாக [2]கடக்க. [3]சமயந்தன்னில். [4]கின்னரமுதல்வர். (2773)

2.—அரம்பையர் முதலோர் வருதல்.

அரம்பையர் விஞ்சை மாத ரரக்கிய ரவுண மாதர்
குரும்பையங் கொங்கை நாகர் [1]கோதைய ரியக்கர் கோதில்
கரும்பினு மினிய சொல்லார் சித்தர்தங் கன்னிமார்கள்
வரம்பறு [2]சும்மை போர்கள் மயிற்குல மருள வந்தார்.

(இ - ள்.) தேவலோகத்துஸ்திரீகளும், வித்யாதரஸ்திரீகளும், ராட்சசஸ்திரீகளும், அசுரஸ்திரீகளும், குரும்பைபோன்ற அழகிய தனங்களையுடைய நாகஸ்திரீகளும்,யட்சஸ்திரீகளும்,கரும்பைக் காட்டிலும் இனியசொற்களையுடையவரான குற்றமற்ற சித்த

ஸ்திரீகளும் ஆகிய எல்லையற்ற தொகுதியானவர் மயிலின்கூட்டமும் மருளும்படி (அவனுடன்) வந்தார்கள்; (எ - று.)

இராவணன் களியாட்டத்தைக் காணவந்தபோது அரம்பையர்முதலியோர் உடன்வந்தனரென்க. அரம்பையர்முதலியோர் களியாட்டமாடவந்தன ரென்பாருமுளர். அரம்பையர் முதலியோரைக்கண்டு சாயலொப்புமையால் தம்மினமோ என்று மயிற்குலம் மருளும். பி-ம்:—[1] தோகையர். [2] மகளிர்கூடி. (2774)

3.—மேனகை அரம்பைமுதலியோர் நர்த்தனஞ்செய்து கொண்டு வருதல்.

மேனகை [1] யிலங்கு [2] வாட்கண் திலோத்தமை யரம்பை மெல்லென்
தேனகு மழலை யின்சொ லுருப்பசி [3] முதல தெய்வ
[4] வானக மகளிர் வந்தார் [5] சில்லரிச் [6] சதங்கை பம்ப
[7] ஆனக முரசஞ் சங்க [8] முருட்டொடு மிரட்ட [9] வாடி.

(இ - ள்.) மேனகையும், விளங்குகின்ற வாட்படைபோன்ற கண்களையுடைய திலோத்தமையும், அரம்பையும், தேன்போல் விளங்குகின்ற மெல்லியவான முற்றுதஇன்சொல்லையுடைய உருப்பசியும்முதலிய தெய்வத்தன்மையுள்ள வானுலகத்துமகளிர்கள்,— ஆனகமென்னப்படுகிற முரசப்பறை சங்கவாச்சியத்துடனும் முருடு என்னும் பறையுடனும் ஒலித்துக்கொண்டிருக்க, சிலவாகிய அரிகளையுடைய சதங்கை யொலிக்குமாறு ஆடிக்கொண்டு வந்தனர்;

கீழ்ச்செய்யுளில் 'அரம்பையர்' என்றதனால் வானுலகத்து மகளிர் வந்தமையைக் கூறியிருக்கவும், இந்தச்செய்யுளில் மேனகை முதலிய வானுலகத்து மகளிர்வந்தமைகூறியது - சிறப்புடைப்பொருளைத் தனிப்பட எடுத்து மொழிதல் ஒருவகை மரபு ஆதலாலென்ப. இனி, இந்த மேனகை முதலியோர் வாச்சியத்திற்குஏற்ப நடனம்செய்து கொண்டுவந்தனரென்பதைத் தெரிவித்தற்காகக் கூறியதுமாம். [9] ஆடஎன்றபாடம், இவர்களே களியாட்டமாட வந்தனரென்று கீழ்க்கவியிற்கூறிய உரைக்கு ஏற்கும். பி - ம்:— [1] விசய, விஞ்சை, இலங்கும். [2] ஒண்கட், வான்கட். [3] முதலார். [4] வானவர். [5] ஆர்வமென். [6] கொங்கைமாழ்க, பாண்டில்வேணு, மழலைமாழ்க, மழலைப்பாடல், பாண்டில்மாழ்க, சதங்கைமாழ்கி. [7] ஆனசீர். [8] முருடொடும். [9] ஆட. (2775)

4.—கள்ளுண்டமையால் மடந்தைமாரின் முகம் செந்நிறத்தன வாதல்.

தோடுண்ட சுருளுந் [1] தூங்குங் குழைகளுஞ் சுருளிற் [2] றோன்றும்
[3] ஏடுண்ட பசும்பொற் பூவுந் திலதமு [4] மிலவச் செவ்வாய்
[5] மூடுண்ட முறுவன் முத்தும் [6] முள்ளுண்ட முளரிச் செங்கட்
காடுண்டு [7] புகுந்த தென்ன முனிந்தது கறைவெண் டிங்கள்.

(இ - ள்.) பனந்தோட்டினுலியன்றது போன்ற (பொன்னாற் செய்த) சுருளென்னும் அணியும், தொங்குகின்ற குழையென்னுங் காதணியும்,(ஐம்பால் முடிவகையிலொன்றான)சுருளிலே தோன்றுகின்ற இதழ்பொருந்திய பசும்பொற் பூவும், திலகமும், இலவமலர்

போன்ற செந்நிறவாயால் மூடப்பெற்ற புன்சிரிப்பைச்செய்கின்ற முத்துப்போன்ற பற்களும் முள்ளையுடைய தாமரைமலரையொத்த கண்களும் என்றவற்றைக்கொண்டு, கறையையுடைய வெள்ளிய திங்கள், (கூந்தற்) காடு (தன்னை மறைக்குமாறு) புகுந்துள்ள தென்ற காரணத்தினால் சீற்றத்தைக் கொண்டது; (எ - று.)

மாதரார் கள்ளுண்டமையால், சுருளணி முதலியவற்றைக் கொண்ட அவர்களின் முகமாகிய மதிகள் தம்முடைய இயற்கை நிறத்தை நீத்துச் செந்நிறத்தை யடைந்தமையை, தம்மை மறைக்குமாறு கூந்தற்காடு புகுந்ததுண்டு என்ற கருத்தினாற் சீற்றங் கொண்டு சிவந்தனவாகக் கற்பித்துக் கூறினார்: தற்குறிப்பேற்ற வணி. திங்கள் - உருவகம்: இது, இங்கே சாதியொருமை. சுருள் குழை பூ திலகம் முத்து என்ற இவைகளைத் துணையாக்கொண்டு (தனக்குப்பகையாகிய) முளரிக்காடு புகுந்துள்ளதனால் திங்கள் முனிந்த தென்றலுமாம். முள்ளுடை முளரிக்காடு என்றது - கண்டாரைமிகநலிதலால். செந்நிறத்தையடைந்ததென்பார் 'முனிந்தது' என்றார். பி - ம்:—[1]தூண்டுங். [2]தோய்ந்த, தொத்தும், கோதை. [3]தேடுண்ட. [4]இலங்கச். [5]ஊடுண்ட. [6]முள்ளுடைக்கமலச் செங்கேழ்க், முள்ளுண்டகமலச்செங்கேழ்க், உலப்பிலாக்கமலச் செங்கேழ்க். [7]பரந்ததென்ன. (2776)

5.—மாதராரின்முறுவல் முதலியவற்றால் இருளும் மருளுதல்.

முனைக்கொழுங் கதிரின் கற்றை முறுவல்வெண் [1]ணிலவு மூரி
ஒளிப்பிழம் [2]பொழுகும் பூணி [3]னுமிழிள வெயிலு மொண்பொன்
விளக்கையும் விளக்கும் மேனி [4]மிளிர்கதிர்ப் பரப்பும் [5]வீச
வளைத்த [6]பேரிருளுங் கண்டோ ரறிவென [7]மருளு மாதோ.

(இ - ள்.) தோன்றுதலையுடைய கொழுவிய கிரணத்தொகுதியைக்கொண்ட புன்சிரிப்பாகிய வெண்ணிறநிலவும், மிக்கஒளித்திரட்சிவெளிப்படுகின்ற ஆபரணங்களினின்று வெளித்தோன்றுகின்ற இளவெயிலும், ஒள்ளிய பொன்போன்று விளக்கையும் விளங்கச்செய்யவல்ல (அங்குவந்துள்ள மகளிரின்) மேனியிலிருந்து கிளர்ந்தெழுகின்ற கதிர்த்தொகுதியும் வீசுதலினால்,—வளைத்திருந்த மிக்க இருளும் கண்டவரின் அறிவைப்போல மருள்வதாயிற்று; (எ - று.)

களியாட்டத்தில் இரண்ட மடவாரைக் கண்டவரின், அறிவு எவ்வாறு திகைப்புறுமோ, அவ்வாறு இருளும் திகைப்புறுவதாயிற்றென்றார்: இருள் நிலைகெட்டதென்றவாறு. மடவாரின் முறுவலினின்று வெண்ணிலாப்போன்ற ஒளியும் அன்னாரின் பூண்களினின்று இளவெயில்போன்ற ஒளியும் வெளிப்பட, அன்னாருடைய மேனியினின்று விளங்கச்செய்யவல்ல பேரொளியும் வெளிப்பட்டன வென்க. இவ்வாறு தோன்றிய ஒளிகளினால் களியாட்டம் நிகழ்ந்த அந்தத் தேய்பிறை இரவும் விளக்கமுற்றிருந்த தென்றபடி. பி - ம்:—[1]நிலவின். [2]ஒழுகு. [3]ஊடுமிழ், உமிக்குறு. [4]வீரி. [5]வீசி. [6]பேருலகிற்கண்டோரறிவையும். [7]மருட்டும், மயக்கும். ()

6.—கள்ளின்வேகம் பரத்தல்.

நற்பெருங் கல்விச் [1]செல்வ நவையறு [2]நெறியை நண்ணி
முற்பய னுணர்ந்த தூயோர் மொழியொடும் பழகி முற்றிப்
பிற்பய னுணர்தல் [3]தேற்றாப் [4]பேதைபால் வஞ்சன் செய்த
கற்பனை யென்ன வோடிக் [5]கலந்தது கள்ளின் வேகம்.

(இ - ள்.) சிறந்த மிக்க கல்விச்செல்வத்தாலே குற்றமற்ற வழியைச் சார்ந்து மேலேவரும்பயனையறிந்த பரிசுத்தகுணமுடையவரான பெரியோன் நல்லுபதேசமொழியோடும்பழகி அறிவு முதிர்ந்து பின்னால்வினையும்பயனையும் (அறியவேண்டியதாயிருக்க, அங்கனம்) தெளிந்தறியமாட்டாத பேதையோனிடத்தில் வஞ்சகக்குணமுடையோன் செய்த ஏமாற்றச்செயல் போல, கள்ளினுடைய வேகமானது (மடவாரிடத்து) விரைந்துகலந்தது; (எ - று.)

கள்ளின் வேகம் - உண்டாரை விரைவில் மயங்கச்செய்வதான மதுவினிடமுள்ள குணம்: அது விரைந்து கலந்தமை, மேற்கவி முதல் விளங்கும். கல்விச் செல்வத்தால் நவையறு நெறியைக் கடைப்பிடித்தும், மேல் வினையும் பயனையுணரும் தூயோரின் உபதேசமொழிகளைப் பெற்றும் இவ்வாறான செயலால் பின் வினையும் பயன் இன்னவெனத் தெரிந்து ஒழுகுபவன் மேதையெனப்படுவான்; நவையறுநெறியை நண்ணித் தூயோர்மொழியொடும் பழகி முற்றிப் பிற்பயனுணரும் உணர்ச்சியைத் தேற்றாதவன் 'பேதை' எனப்படுவான். அந்தப் பேதையனை வஞ்சகக்குணமுடையோர் ஏமாற்றமடையுமாறு தமது வசமாக்கிக்கொள்ள வல்லவராதல் போலக் கள்ளின் வேகமும் உண்டமடவாரைத் தம்வசமாக்கிக் கொண்டதென்க. கள்ளின் தன்மையை விவரிப்பார்போன்று பேதையரின் தன்மையையும் விளக்கினார்; பல நல்லுபதேசங்களை மாந்தர்க்கு அறிவுறுத்துவதே காவியத்தின் பயனாகும். பி - ம்:— [1]செவ்வி. [2]நெறியின். [3]தோற்றாப். [4]பேதைபோல், பேதைமை. [5]கலந்தன. (2778)

7.—இனி, மதுவுண்டதனால் மடவாரிடத்துத் தோன்றிய நிலைமை பத்துக்கவிகளாற் கூறப்படும்.

பலபட முறுவல் வந்து [1]பரந்தன [2]பனித்த மெய்வேர்
இலவிதழ் [3]துடித்த முல்லை யெயிறுவெண் ணிலவை யீன்ற
கொலைபயில் நயன [4]வேலின் கொழுங்கடை சிவந்த கொற்றச்
சிலைநிகர் புருவம் [5]நெற்றிக் [6]குனித்தன [7]விளர்த்த செவ்வாய்.

(இ - ள்.) சிரிப்பு, மிகுதியாகவந்து பரவின; உடல், வேர்வைத் துளியை யடைந்தன; இலவமலர் போன்ற அதரங்கள், துடித்தன; முல்லையரும்பு போன்ற பற்கள், வெண்ணிறமுள்ள ஒளியை வெளி வீசின; கொலைத்தொழிலில் [ஆடவரை வருத்துவதில்]பழகின வேற்படைபோன்ற கொழுவிய கண்களின் ஓரங்கள், செந்நிறத்தை யடைந்தன; வெற்றிபொருந்திய வில்லையொத்தபுருவங்கள் நெற்றிமீது வளைந்தன;செந்நிற வாய் வெளுத்தன;(எ - று.)

மதுபானஞ் செய்தார்க்கு முறுவல்வருதல் முதலிய மெய்ப்பாடுகள் தோன்றுதல் இயற்கையாம்: அவ்வியற்கையை இனிது

கூறியது - தன்மைநவிற்சியணி. பி - ம்:—[1]பயந்தன. [2]வேர்த்த மெய்ய, பனித்த மெய்வேர்வு. [3]வெளுத்த. [4]வேல்கள், வேற்கள். [5]தேற்றிக். [6]குளிர்த்தன. [7]வெளுத்தசெவ்வாய், மயக்கஞ் செய்ய.()

8. கூந்தலம் பாரக் கற்றைக் கொந்தளக் [1]காலக் கொண்டல்
ஏந்தக லல்குல் [2]தேரை யிகந்துபோ [3]யிறங்க யாணர்ப்
பூந்துகி [4]லோடும் பூசன் மேகலை [5]சிலம்பு பூண்ட
[6]மாந்தளி [7]ரெய்த நொய்தின் மயங்கினர் மழலைச் சொல்லார்.

(இ - ள்.) '(தமது) கூந்தலின் அழகிய சுவையான தொகுதியாகிய பொங்கியெழுதலையுடைய காளமேகம் ஏந்திய அகன்ற அல்குலாகியதேரையும் கடந்துபோய்த் தாழ்ந்திருக்க, புதுமையான பூந்துகிலினுடனே ஆரவாரஞ் செய்கின்ற மேகலையென்னும் இடையணி சிலம்பையணிந்துள்ள மாந்தளிரை [பாதத்தை] யுடைய குதலைச்சொல்லையுடையவரான மகளிர் விரைவில் மயங்கினார்கள்;

மடவார் மதுவையுண்டதால், குழல்சோர, உடையும் மேகலையும் நெகிழ்ந்துவீழ, மயங்கிக்கிடந்தன ரென்பதாம். அவிழ்ந்து வீழ்ந்த கூந்தல் நீண்டிருத்தல்பற்றி அந்நிலையில் அல்குற்றேரையும் இகந்து இறங்கிற்றென்க. பாதத்தை உவமச்சொல்லாகிய 'மாந்தளிர்' என்பதனாலேயே குறித்தார்: 'சிலம்புபூண்ட' என்ற அடைமொழி, இதனை விளக்கும். கொந்தளம் - பொங்கியெழுகை; (மயிர்க்) குழற்சியுமாம். பி-ம்:—[1]கோலக். [2]தேரிழிந்து, தேரையிகழ்ந்து. [3]இறங்கி. [4]படுமாப். [5]சிலம்பப். [6]மாந்தரின். [7]நொய்தினெய்தி, பாதநோக்கி. (2780)

9. கோத்தமே கலையி னோடுந் துகின்மணிக் [1]குறங்கைக் கூடக்
காத்தன கூந்தற் கற்றை [2]யற்றமத் தன்மை கண்டு
வேத்தவை [3]கீழு ளோர்கள் கீழ்மையே விளைத்தார் [4]மேலாஞ்
சீர்த்தவர் செய்யத் தக்க கருமமே செய்தா ரென்ன.

(இ - ள்.) இராசசபையிலே தாழ்நிலையிலிருப்பவர்கள் கீழ்மையான தொழிலையே செய்தாராக, மேன்மைபெற்ற சிறந்தகுணமுடையோர் செய்யத்தக்க செயல்களையே செய்பவராவதுபோல, கோக்கப்பட்ட மேகலையுடனே ஆடையும் (இடையைவிட்டு) அழகிய தொடையைச் சேர, அந்தநிலைமையைக்கண்டு கூந்தற் கற்றை அவமானம் (நேரிடாதபடி) பாதுகாத்தன; (எ-று.)

மேகலையும் துகிலும் அரையினின்று தொடையைச்சேர்ந்து மானபங்கம்விளைப்பனவாக, அத்தன்மையைக்கண்டு கூந்தற் கற்றைகள் மடவாருடைய அவயவம் பிறர்க்குத் தெரியாதவாறு செய்து மானக்கேடு நேராதபடி பாதுகாத்தன வென்பதாம்: இவ்வாறு செய்தற்குக் கீழோர் கீழ்மையைச்செய்ய நினைக்கையில், மேலோர் சீர்த்ததொழிலால் அக்கீழ்மையை யகற்றுதலை உவமை கூறினார். கூந்தல் மேலிருப்பதாதலும், மேகலையும் துகிலும் கீழிருப்பதாதலுங் காண்க. உலகநடையையொட்டி உவமையமைத்துள்ள கவிசாதுரியம் மிகவும் பாராட்டற்குரியது. பி - ம்:—[1]கோவை. [2]அற்றவத், உற்றவத். [3]கீழோரும். [4]மேலோர். சிலபிரதியில் ''வேர்த்தமைகீழோரும் கீழ்மையை விளைத்தார்

மேலோர், சேர்த்தமை தவிரத்தக்ககருமமேசெய்தாரென்ன" என்று பின்னிரண்டடிகள். (2781)

10. [1]பாணியிற் றள்ளிக் கால மாத்திரைப் படாது [2]பட்ட
[3]நாணியின் முறையிற் [4]கூடா தொருவழி [5]நடையிற் செல்லும்
[6]ஆணியி [7]னழிந்த பாட [8]லீன்றன ரனங்க வேடன் [னூர்.
தூணியி [9]னடைந்த வம்பிற் கொடுந்தொழில் [10]துறந்த கண்

(இ - ள்.) அநங்கனாகிய வேடன் (உலகத்தவர்மேலெய்யாமல்) தூணீரத்திலே அடைத்துவிட்ட அம்பைப்போலக் கொடுந்தொழிலைத் துறந்த கண்களையுடைய மகளிர்கள்,—(பாடவேண்டிய)முறைமையினின்று தவறி, (துருதம் மத்திமம் மந்தம் என்பவைகட்குஏற்பட்ட) அட்சரகாலத்துக்குக் கட்டுப்படாமலும்(நரப்புக்கருவியிற்) பொருந்தியுள்ள நரம்பு ஒலிக்கின்ற முறைக்குஏற்காமலும் வேறொருவழியான ரீதியிற் செல்லுகிற வரம்புதவறிய பாடலைப் பாடலானார்; (எ - று.)

நரம்புஒலிக்கும் காலமாத்திரைக்கும் பாடவேண்டிய முறைக்கும் மாறாக, மகளிர், மதுபானமயக்கத்தால் வேறுவகையாகப் பாடினரென்பதாம். மன்மதன் அம்பெய்து ஆடவரையும் மகளிரையும் ஆசைநோய்விளைத்து வருத்துதலால், 'அநங்கவேடன்' என்றார். அவ்வனங்கன் ஆடவர்மகளிராகிய இவர்கள்மீது எய்யாமல் தனதுதூணீரத்தில் அம்புகளை வைத்திட்டால் அந்த அம்புகள் ஸ்திரீபுருஷர்களுக்கு நோயை விளைக்கமாட்டாவாதல் போல, மதுவுண்ட மகளிர் மதவெறிகொண்டு காமக்குறிப்புத் தோன்றிப் பார்க்கும் பார்வையின்றி யிருத்தலால், அம்மகளிர் கண்கள் அந்நிலையிற் காமநோயை விளையாவாயின வென்பார் அவைகட்கு, அநங்கவேடன் தூணியிலடைத்த அம்புகளை உவமை கூறினார்; இது, கள்ளுண்டமயக்கத்தாற் கண் செருகியநிலையைக் கூறியது. பி -ம்:—[1]வாணியிற். [2]வட்ட. [3]நாணினம், நாணியன். [4]செல்லாது. [5]நடப்பவான. [6]பாணியின. [7]உமிழ்ந்த, அழித்த, பாடப். [8]பயின்றனர், நறவென. [9]இருந்த. [10]தோற்றும், புரிந்த ()

11. [1]வங்கியம் வகுத்த கான [2]மாறுகொண் [3]மழலை வாயர்
சங்கையில் [4]பெரும்ப ணூற்ற [5]நிறத்துறை நிரம்பித் தள்ளச்
சிங்கலி னமுதி னோடும் [6]புளியளாந் தேற லென்ன
[7]வெங்குர லெடுத்த பாடல் [8]விளித்தனர் மயக்கம் [9]வீங்க.

(இ - ள்.) புள்ளாங்குழலினின்று வெளித்தோன்றுகின்ற இசைப்பாடலுடனே மாறுகொள்ளும் நிரம்பாமென்சொல்லைக் கொண்ட வாயையுடைய மாதரார்,—(கள்ளுண்ட)மயக்கம்மிகவே, குற்றமற்ற பெரும்பண்ணின் பொருந்திய விளக்கமான துறையினின்று மிக்குமாறுபட்டுப்போக, குறைவில்லாத அமிருதத்துடனே புளிச்சுவைபொருந்திய கள்(சேர்ந்தாற்) போல வெவ்விய [கர்ணகடூரமான] குரல்கொண்டு உரத்துள்ள பாடலைப் பாடலானார்கள்; (எ-று.)

மழலைவாயரான மகளிர் குடிமயக்கம்மிக்கதனால் பெரும்பண்ணின் துறையினின்று மிகவும் திறம்பிப்போகுமாறு உரத்தகுரலோடு பாடலானாரென்க. மழலைவாயில்துறைதள்ள வெங்குரல்வக்

தது, அமிழ்திஞேடு புளிப்புச்சுவையுள்ள தேறல்கலந்ததுபோலு மென்க. சிங்குதல் குறைதலாதலை "சிங்காமைவிரித்தவன்" என்ற பெரியார்பாசுரத்திலும், விளிதல் பாடுதலாதலை "விளியாதான் கூத்தாட்டுக்காண்டலும்" என்ற இடத்துங் காண்க. பி - ம்:— [1]வங்கியம்வகுத்த நாதம், வங்கியங்குருகுற்றென்ன. [2]வயங்கிய, மாறுகோள். [3]மழலைமாறச், மழலைமானச், மழலையீருச், மலைத்த தாகச். [4]பெரும்பாணுற்ற, பெரும்பணீத்துத். [5]துறைதொறும் திறம்பித், நிறத்துறைதிறம்பத். [6]அளியளி. [7]இங்கிசையமுதப் பாடல். [8]விரிந்தன, விளிந்தனர். [9]வீங்கி. (2783)

12\. [1]ஏனைய பிறவுங் [2]கண்டார்க் [3]இந்திர சால மென்னத்
தானவை யுருவிற் [4]றோன் றும் பாவனைத் தகைமை [5]சான்ருேர்
மானமர் [6]நோக்கி ஞரை மைந்தரைக் காட்டி வாயால்
ஆனையை [7]விளம்பித் தேரை [8]யபிநயத் தியற்றி யுற்ருர்.

(இ - ள்.) (பாடுபவராய்) அவ்வப்பொருள்கள் தம்முருவில் தோன்றும் அபிநயத்திலே மேம்பாடு மிக்கவர்கள்,—(இப்போது கள்ளுண்டதனாலான மயக்கமிகுதியால், தம்முடைய) மற்றைய அபிநயச்செயல்களும் கண்டவர்க்கு இந்திரசாலத்தோற்றம்போல நிற்க, மானையொத்த பார்வையையுடைய மகளிரையும் ஆடவரையும் சுட்டி வாயினால் (பாடும்போது) ஆனையைச் சொல்லி, அபிநயங் காட்டும்போது தேரைக் காட்டிவிட்டார்கள்; (எ - று.)— தான் - அசை.

இந்திரசாலவித்தைக்காரர் ஒருநொடியில் ஒருபொருளை முதவிற் காட்டி அப்பொருளைப் பின் வெவ்வேறுபொருளாகக் காட்டும் வல்லமையுடையவர். அங்ஙனமே அபிநயம்வல்லவர்களும், இப்போது கள்ளுண்டமயக்கத்தால், ஆடவரையும் மகளிரையும் சுட்டிக் களிற்றைச்சொல்லித் தேரினை அபிநயத்தில் தெரிவித்தன ரென்க. அபிநயச்செயல் முடிவதற்குள், வெவ்வேறு பொருளைக் காட்டியதனால், இந்திரசாலம் வல்லோர் இந்த அபிநயம்செய் வோர்க்கு உவமையாவர். 'மானமர் நோக்கிஞரைக் காட்டி' என்ற தால் துரகத்தையும், [மான் - குதிரை; 'ன்-சாரியை] 'மைந்தரைக் காட்டி' என்றதால் பதாதியையும் கொள்ளவைத்து, இங்ஙனே நால்வகைப்படையையும் குறிக்கச்செய்ததிறன் கம்பனுக்கே சாலும். பி-ம்:—[1]ஏனையர். [2]கண்டார். [3]இந்திரஞாலம். [4]தேருன். [5]சான்ற. [6]நோக்கிஞர்க்கும். [7]காட்டி. [8]அபிநயத்தாற்றி, அபிநயந் தெரிக்கல். (2784)

13\. [1]அழுகுவார் நகுவார் பாடி யாடுவா [2]ரயனின் ருரைத், தொழுகுவார் துயில்வார் [3]துள்ளித் தூங்குவார் [4]துவர்வா யின் றேன், ஒழுகுவா ரொல்கி யொல்கி யொருவர்மே லொருவர் புக்கு, முழுகுவார் [5]குருதி வாட்கண் [6]முகிழ்த்திட மூரி போவார்.

(இ - ள்.) (மதுபானமயக்கத்தாற் சிலர்), அழுவார்; (சிலர்) சிரிப்பார்; (சிலர்), பாடியாடுவார்; (சிலர்) அயலிலேயின்றவரைத் தொழுவார்; (சிலர்), துயில்வார்; (சிலர்), துள்ளிச்சோர்வார்; (சிலர்),செங்நிறமுள்ளவாயினின்று தேன்போன்றநீர் ஒழுகப்பெறுவார்; (சிலர்) தளர்ந்து தளர்ந்து ஒருவர்மேல்மற்றொருவர் புகுந்து

படிவார்: (சிலர்), இரத்தம்போலுஞ் சிவப்புநிறமடைந்த வாளை யொத்த கண்ணைமூடிக்கொண்டு சோம்பல் முறிப்பார்; (எ - று.) —குருதி - சிவப்புநிறத்துக்கு, இலக்கணை. வாட்கண் - உவமைத் தொகை. பி - ம்:—[1] அழுகுவர், அழுவார்கள். [2] ஆயினுரை. [3] தள்ளித்தூங்குவார், தூங்கித்துள்ளுவர். [4] வாயிற்றீந்தேன். [5] மூரி. [6] முகிழ்த்திடை. (2785)

14 உயிர்ப்புறத் துற்ற தன்மை [1]யுணர்த்தின ருள்ளத் [2]துள்ளது
[3]அயிர்ப்பினி [4]லறிதி [5]ரென்றே யதுகளி யாட்ட மாகச்
செயிர்ப்பறு [6]தெய்வச் சிந்தைத் திருமறை முனிவர்க் கேயும்
மயிர்ப்புறத் தோறும் வந்து [7]பொடித்தன [8]மதன வாளி.

(இ - ள்.) (மகளிர், 'எமது) மனத்திலுள்ளதைச் சந்தேகித்தலினாலல்லாமல் [தெளிவாக] எல்லீரும் அறிவீர்' என்று தமது உயிரினிடத்து உள்ள இயல்பை உணர்த்தினார்கள்: அவ்வாறு களியாட்டம் நிகழ்கையில், (அதனைக் கண்டவர்) குற்றம்நீங்கிய [தமது ஐம்பொறிகளையடக்கிய] கடவுட் சிந்தனையையே புரியும் சிறந்த நான்மறைவல்ல முனிவராக இருப்பினும் (அவர்கட்கும்) மன்மதனுடைய அம்புகள் மயிர்க்கால்கள்தோறும் வந்து நிரம்பின:

இங்ஙனம் மடவார் களியாட்டயர்கையில் அந்தக்களியாட்டத்தைக் கண்டவர் தெய்வசிந்தனையேயுடைய முனிவராக இருப்பினும் அவர்கட்கும் அது வேட்கையையுண்டாக்கிற்றென்பதாம். கள்ளுண்டவர் எவரிடத்துஞ்சொல்லாது தம்மனதிலேயே இரகசியமாகவைத்திருந்ததைச் சொல்லிவிடுதல் இயல்பென்பது, முன்னிரண்டடிகளிற் கருதத்தக்கது. "நெஞ்சத்தொளித்ததூஉமாங்கே மிகும்" என்றார் வள்ளுவனாரும். அயிர்ப்பின்இல் - அயிர்ப்போடு இல்லாமல் என்றபடி. பி - ம்:—[1] உணர்த்தினல், உணர்த்தினும். [2] உள்ள. [3] உயிர்ப்பினல், அயிர்ப்பினை. [4] அறிந்தும், அரியது, அறிதும், அற்றது, அறிதி. [5] அன்றே. [6] சிந்தைத்தெய்வத். [7] பொடித்தது. [8] காமவாரி. (2786)

15. மாப்பிறழ் நோக்கி னார்தம் [1]மணிநெடுங் குவளை வாட்கண், சேப்புற [2]வரத்தச் செவ்வாய்ச் செங்கிடை வெண்மை [3]சேரக், [4]காப்புறு படைக்கைக் கள்வ நிருதர்க்கோ[5]ரிறுதி காட்டிப், பூப்பிறழ்ந்துருவம் வேருய்ப் [6]பொலிந்ததோர்[7] தன்மை போன்ற.

(இ - ள்.) வண்டுகள் போன்று பிறழுந்தன்மையைக்கொண்ட கண்களையுடையரான அரக்கமகளிரின் சிறந்தகுவளைமலர்போன்ற கருமணியைப்பொருந்திய ஒளியுள்ள கண்கள் செந்நிறத்தைப் பொருந்தியதும், செங்கிடையையும் செவ்வாம்பல்மலரையும் ஒத்துச் செந்நிறம் பொருந்திய வாய்கள் வெண்ணிறத்தைச் சேர்ந்ததும்,-காவலாகப்பொருந்திய படைக்கலங்களைக் கையிற் கொண்ட வஞ்சனைக்குணமுள்ள அரக்கர்க்கு (நேரப்போகின்ற) ஒப்பற்ற முடிவை முன்னந்தோற்றுவித்து, மலர்கள் (தமதுநிறம்மாறி) வேறாகி விளங்குகின்ற ஒருதன்மையைப் போன்றன; (எ - று.)

மலர்கள் நிறம்மாறி வேறுநிறத்தனவாகப் பூத்தல், பின்னர் விளையும் தீங்கை முன்னர்த் தெரிவிக்கும் உற்பாதமாம். மகளிருடைய கண்களாகிய குவளைமலர்களும், வாய்களாகிய செவ்வாம்

பல்மலர்களும்,—கள்ளுண்டதனால் நிறம்மாறிச் செந்நிறத்தையும் வெண்ணிறத்தையும் முறையே அடைந்து, உற்பாதமாக நிறம் மாறிப்பூத்தமலர்களைப்போன்றனவென்றார்; **தன்மைத்தற்குறிப் பேற்றவணி** இச்செய்யுள் சிலபிரதிகளில் "கயல்வரு" என்ற அடுத்தபாடலின்பின் உள்ளது, அரத்தம்=ரக்தகம்: செவ்வாம்பல். 'போன்ற' என்ற முற்றுக்குத் தொழிற்பெயர்த்தன்மையை யடைந்த 'சோப்புற,' 'சேர' என்ற செயவெனெச்சங்கள் எழுவாய். பி - ம்:—[1]மணிக்கருங். [2]வாய்த்த...துவர்த்தவாயார். [3]தோன்றக். [4]காப்புறழ். [5]இறுதிக்காலம். [6]மலர்ந்ததோர். [7]பழனம். (2787)

16. [1]கயல்வரு [2]காலன் [3]வைவேல் காமவேள் கணையென் றானும்
இயல்வரு இற்கி லாத நெடுங்கணா ரிணைமென் கொங்கைத்
துயல்வரு கனக நாணுங் காஞ்சியுந் துகிலும் வாங்கிப்
புயல்[4]வரு கூந்தற் பாரக் கற்றையிற் புனைய லுற்றார்.

(இ - ள்.) கயல்மீனும் (உயிரைக்கொள்ள) வருகின்ற யமனுடையகூரிய வேற்படையும் காமவேளின் அம்பும் என்றும் உவமை கூறினாலும் ஒப்புமை பொருந்தாத நீண்டகண்களையுடைய அரக்க மகளிர்,—(களிமயக்கத்தால் தம்முடைய) இரட்டையாகிய மெல்லிய தனங்களிற் புரள்கின்றபொற்சரட்டினையும், (இடையிற் பூண்டுள்ள) மேகலையினையும் ஆடையையும் கையிலெடுத்து, மேகத்தையொத்த மயிர்ச்சுமைத்தொகுதியில் அணியத் தொடங்கினார்கள்; (எ - று.)

களிமயக்கத்தால் தாஞ் செய்யுஞ் செயல் இன்னதென்று தெரியாது மகளிர் கனகநாண்முதலியவற்றை வேற்றிடத்தில் அணியலானாரென்க. முதலிரண்டடிகளில் கண்ணுக்குச்சிறந்த உவமைப் பொருளான கயல்முதலியவற்றை உபமானமாகாவென்று மறுத்துச் சொன்னது, எதிர்நிலையணியாம். ஒருபிரதியில்இச்செய்யுளோடு **களியாட்டுபடலம்**முடிய, அடுத்தபாடலில் **மாயாசீதைப் படலம்**தொடங்குகின்றது. பி - ம்:—[1]கயல்வருங். [2]காமன். [3]கை. [4]பொரு. (2788)

17.—இங்ஙனம் களியாட்டயர்தலை இராவணன் கண்டு நிற்கையில் வானரசேனை ஆர்த்தஓசை அவன்காதில் விழுதல்.

முத்தன்மை மொழிய லாகா [1]முகிழிள முறுவல் நல்லார்
இத்தன்மை [2]செய்தல் நோக்கி யரசுவீற் றிருந்த [3]வெள்ளை
அத்தன்மை யரியின் சேனை யார்கலி யார்த்த வோசை
மத்தன்மெய்[4]மயங்க வந்து செவிதொறு [5]மடுத்த தன்றே.

(இ-ள்.) முத்தல்லாமையைச் சொல்லமுடியாத [முத்துஎன்றே சொல்லத்தக்க] தோன்றுகின்ற புன்சிரிப்பையுடைய (அரக்க) மகளிர் (களியாட்டினால் கீழ்க் கூறிய) இவ்வாறான நிலைமையையடைதலை (அரக்கர்) மன்னவனை இராவணன் கண்டுகொண்டு வீற்றிருந்தபோது,—(அத்திரத்தினால் தோன்றிய மனவிருட்சியால் ஒடுங்கிக்கிடந்து மருத்துமலைவரப்பெற்றதனால் உயிர்பெற்று எழுதலாகிய) அத்தன்மையையுடைய குரங்குச்சேனையாகிய சமுத்திரம் ஆரவாரித்த ஓசையானது, காமப்பித்துள்ள அந்த இராவண

னுடையவுடல் சோரும்படி (அவனுடைய) செவிதோறும் வந்து நுழைந்தது; (எ-று.)

உயிர்பெற்றெழுந்த வானரசேனை ஆர்த்ததென்பது கீழ் மருத்துமலைப்படலத்து 100, 104-ஆஞ் செய்யுளிற் கூறப்பட்டிருந்தல் காண்க. முத்து அன்மைஎன்றுபிரியும். 'முத்துத்தன்மையென்றதொடர் 'முத்தன்மை' என்று விகாரப்பட்டுவந்ததெனக்கொண்டு, முத்தின் தன்மையையுடையது என்று சொல்லுதற்காகாத [முத்தினுஞ்சிறந்த] முகிழ்நகை என்று உரைத்தலும் ஒன்று. பி-ம்:—[1]முகிணகை, முகிணிலா. [2]செய்தநோக்கி, எய்தநோக்கி. [3]வேலை. [4]மயக்க. [5]மடுத்தமாதோ. (2789)

18.—வானரங்களி னார்ப்பொலியால் மகளிரினுடல்முதலியன ஒடுங்குதல்.

[1]ஆடலுங் களிப்பின் வந்த வமலையு [2]மமுதி னுன்ற
பாடலும் [3]முழவின் தெய்வப் பாணியும் பவள வாயார்
[4]ஊடலுங் கடைக்கண் [5]நோக்கும் [6]மழலைவெவ் வுரையு மெல்லாம்
[7]வாடன்மென் மலரே யொத்த ஆர்ப்பொலி வருத லோடும்.

(இ - ள்.) பவழம்போன்ற வாயையுடைய மகளிரின்ஆடலும் அமிழ்திலும் சிறந்த பாடல்களும், (பாடலுக்கேற்ற) முழாக்களின் தெய்வத்தன்மையுள்ள ஒலிகளும், (அவற்றைக் காண்போரின்) களிப்பினால் தோன்றிய ஆரவாரங்களும், (அம்மகளிரின்மீது மோகங்கொண்டு நோக்குவோர்க்கு) அம்மகளிர் வெளிக்காட்டும் ஊடலும், (அவ்வூடலினால் அக்காமுகர் வருந்துதல் கண்டு அம்மகளிர் இரக்கங்கொண்டு தம் இசைவைத்தெரிவிக்கும்) கடைக்கண்பார்வையும், (அவர்களுடைய) விருப்பத்தைத் தெரிவிக்கின்ற கொச்சைச் சொற்களும் ஆகிய இவைகளெல்லாம், (வானரசேனையின்) ஆரவாரம் காதிற் கேட்டவுடன் வாடியமெல்லியமலரைப் போன்றன [பொலிவழிந்தன]; (எ - று.)—பி - ம்:—[1]ஆடலின்களிப்பின், ஆடலுங்களியின். [2]அழகினுன்ற, அளவிலாத. [3]முழவும், அளவில். [4]ஊடலின். [5]நோக்கம். [6]முதல. [7]வாடினமலரே, ஆடல்செய்வேலே, ஆடுவல்லரவே. (2790)

19.—இராமலட்சுமணரின் நாணொலி தோன்றுதல்.

[1]தறிபொரு களிநல் யானை [2]சேவகந் தள்ளி யேங்கத்
துறுசுவற் புரவி [3]தூங்கித் துணுக்குற அரக்கர் உட்கச்
செறிகழ லிருவர் தெய்வச் சிலையொலி [4]பிறந்த தன்றே
எறிகடல் [5]கடைந்த மேனா ளெழுந்த [6]பே ரோசை யென்ன.

(இ - ள்.) நெருங்கிய வீரக்கழலையணிந்த ராமலக்ஷ்மணர் இருவரின் தெய்வத்தன்மைபொருந்திய விற்களின் நாணோசையானது,—கட்டுத்தறியைப்பொருகின்ற மதக்களிப்புள்ள சிறந்த யானைகள் (தாம்) படுக்குமிடங்களில் சோர்ந்து ஏங்கவும், பிடரிமயிர் நெருங்கிய குதிரைகள் திடுக்கிட்டுச் சோரவும், அரக்கர்கள் அஞ்சவும்,—(அலை) மோதுகின்ற பாற்கடலைக்கடைந்த முற்காலத்தில் எழுந்த பேரோசைபோலத் தோன்றிற்று; (எ - று.)—சிலையொலிக்குக் கடைந்தகாட் பேரோசையும், வானரரார்ப்பொலிக்குப் பாற்கட

லொலியும் உவமை கொள்க. பி - ம்:—[1]தெறுபொருக். [2]சோர்வுற்றுத்தள்ளியேங்க, சேவகந்...ஓங்கத். [3]தூங்கத். [4]சிறந்ததன்றே, பரப்புஞ் செய்கை. [5]கடந்த. [6]பேரொலிகொல். சிலபிரதியில் இந்தச் செய்யுளோடு களியாட்டுபடலம் முடிகின்றது. ()

20.—அப்போது இராவணனுக்குக் களியாட்டுமகளிரிடத்தில் வெறுப்புத் தோன்றினமை.

[1]முத்தம்வா ணகைக்குத் தோற்கும் முகத்தியர் முழுக்கண் வேலால்
குத்துவார் கூட்ட மெல்லாம் வானரக் குழுவிற் றேன்ற
மத்து [2]வாழ் கடலி னுள்ளம் [3]மறுகுற வதன மென்னும்
பத்து[4]வாண் மதிக்கு மந்நாட் பகலொத்த [5]திரவு பண்பால்.

(இ-ள்.) முழுக்கண்ணுகியவேலினுலே குத்துவாராகி முத்துக்கள் ஒளி பொருந்திய (தமது) நகைக்குத் தோற்கும் முகத்தையுடையரான அரக்கமகளிரின் கூட்டமெல்லாம், (இன்பத்தைச் செய்யாமல் துன்பத்தைச் செய்தலால் அவ்விராவணனுக்கு) வானரக்கூட்டத்தைப்போற் காணப்படவும், (மந்தரமாகிய) மத்து பொருந்தப்பெற்ற கடல்போல (அவன்) மனம் கலங்கவும், அந்நாளின் இரவானது (பொலிவை நீங்கச்செய்த) தன்மையால் (அவனுடைய) முகமென்று சொல்லப்படுகின்ற ஒளியுள்ள பத்துச் சந்திரர்களுக்கும் பகலை ஒத்தது; (எ-று.)

மனத்தில் அச்சந்தோன்றியதனுல், இராவணன் மகளிரிடத்துப் பகைவரிடத்துப்போல வெறுப்புக்கொண்டு விருப்பமற்றவனுய் மனங்கலங்கி முகவொளி குறையப் பெற்றன னென்க. பி - ம்:—[1]முத்தவாணகையின்மூரல், முத்துவாணகைக்குங்கொற்றம், முத்துவாள்முறுவன்மூரல். [2]வார். [3]மறுகிட, மறுக்கிட. [4]வாழ், வான். [5]இரவும்பைய. (2792)

21.—இராவணன் ஒற்றராற்செய்தியுணர்ந்து மந்திர சாலைக்குச் செல்லல்.

ஈதிடை யாக வந்தா [1]ரலங்கன்மீ தேறி னூர்போல்
[2]ஊதினர் வேய்கள் [3]வண்டி னுநவினு ருற்ற [4]வெல்லாம்
தீதிலர் பகைஞ ரென்னத் [5]திக்கென்ற மனத்தன் தெய்வப்
[6]போதுகுபந்தர் நின்று [7]மந்திரத் திருக்கை புக்கான்.

(இ-ள்.) (இராவணன் களியாட்டம் காணுமிடத்து) இவ்வாறு நிகழுஞ்சமயமாக, வந்த ஒற்றர்கள் வண்டினுநவத்தைக்கொண்டவராய், (இராவணனுடைய) மாலையின்மீது ஏறிப்போய், (அனுமான் மருந்துமலை கொணர்ந்ததனுல் யாவரும் உயிர்பெற்று எழுந்ததாகிய) நிகழ்ந்த செயலையெல்லாம் ஊதினர்கள்: (இராவணன்) 'பகைவர்கள் குறைவின்றிப் பிழைத்துள்ளார்' என்று (தூதர்கள்) சொல்லக் கேட்டதனுல் திடுக்கிட்ட மனத்தையுடையவனுய், கற்பக மலர்கள் சிந்தியுள்ள (அந்தப்) பந்தலைவிட்டு மந்திரசாலையைப் போய்ச் சேர்ந்தான்; (எ-று.)

தூதர்கள் வண்டினுநவங்கொண்டு ஊதியது, பிறர் அறியாமலிருத்தற்காக. பி - ம்:—[1]இலங்கையர்வேந்தன்றன்னேடு. [2]ஓதி

ஞர். [3]வண்டிற்றுருவினர், வண்டினுருவதாய். [4]தன்மை. [5]தீகின்ற, திக்கின்ற. [6]போதவிழ்சோலை. [7]மந்திரத்தெல்லை, மந்திரவிருக்கை. "ஈதிவணிகழுங்காலை இராவணன் செவியில் மெல்ல" என்றுசில பிரதிகளில்முதலடி. சீதைக்குக் களங்காட்டியதும் களியாட்டுக் காண்டலும் முதனூலிற் காணப்படவில்லை. (2793)

களியாட்டுபடலம் முற்றிற்று.

25-ஆவது மாயாசீதைப்படலம்

(நிகும்பலையில் வேள்விசெய்து முடிக்கக்கருதிய இந்திரசித்து, அதற்கு இடையூறு செய்யாமல் பகைவரின் கருத்தை வேற்றிடத் திற் செலுத்தக்கருதி, சஞ்சீவிமலையைக்கொணர்ந்துவைத்துமீண்டு வந்த அநுமான் இலங்கையின் மேலைவாயிலிலிருக்க, அவன் முன் னிலையில்) மாயையால் நிருமித்த சீதையை வெட்டியதைத் தெரி விக்கும் படலமென்பது, பொருள்.

இராவணன் மந்திரசாலைக்குப் போனபோது, இந்திரசித்து, சேனைத்தலைவனாகிய மகோதரன்,மாலியவான் முதலியோர் பக்கத்தி லிருந்தனராக, தனக்கு நேர்ந்த துயரத்தையெல்லாம் அவரறியும் படி அவ்விராவணன் கூறினான். அப்போது மாலியவான் 'ஓஷதி மலைகொணர்ந்ததனால் பிரமாத்திரமும் பழுதுபட்டது: இனி மாற்றலரை எங்ஙனம் வெல்வது? இனியாவது சீதையைக் கொடுத்து அடைக்கலம் புகுவதே தக்கது' என்ன, அதுகேட்ட இராவணன், மிச்சீறி 'என்னநேர்ந்தாலும் சீதையைவிடேன் : அஞ்சினவர்களெல்லாம் போய்விடுங்கள்: நான் நாளைக்கே பகை வெல்கின்றேன்' என்றான். அப்போது இந்திரசித்து 'மாற்றார் திறமையைப்பற்றி இப்போது சொல்வது சரியன்று: எனக்கு ஒன்று. தோன்றுகின்றது. நான் நிகும்பலைக்குப் போய் யாகஞ் செய்து முடித்தால் பகைவெல்லலாம்: ஆனால், உன் தம்பி நான் யாகஞ் செய்வதை அப்பகைஞர்க்குச் சொல்லிவிட்டால், அன்னார் யாகத்தை முடிக்கவொட்டார்கள்: ஆகவே, சானகியைப் போல் உருவஞ்செய்து அநுமான் கண்முன் நிறுத்தி அந்தமாயா சீதையை என்கைவாளாற் கொன்று வீழ்த்தி, அயோத்திக்குப் போவதாக வழிகாட்டிப் போய்விட்டால், அவர்கள் அத்துயரத்தினாற் போய் விடுவார்கள்: போகாவிட்டாலும், நான் அயோத்திக்குச்சென்ற உண்மையை அநுமான் மூலமாகத் தெரிந்துகொள்ளப் பார்ப்பார் கள்: அதற்குள் வேள்வியை முற்றினால் வெற்றிபெறலாம்' என்றான்: அதற்கு இராவணனும் உடன்பட்டான். இது இவ் வாறாக:

சுக்கிரீவனுடைய ஆலோசனையினால் ஸ்ரீராமனனுமதியின் மேல் வானரர்கள் இலங்கையில் கொள்ளிக்கட்டையைக் கொண்டு தீ வைத்துக்கொண்டிருந்தனர். இவ்வாறு நிகழ்கையில், அநுமான் மருத்துமலையை வைத்திட்டு மீளவந்தனனாக, இந்திரசித்து மாயா சீதையை அவன்கண்முன்னே நிறுத்தி அவ்வநுமான் பலபடி சொல்லித் தடுக்கவும் கேளாது அவ்வுருவத்தை வாளால்வெட்டிப்

பிறகு 'அயோத்தியிலுள்ளார்மீதும் செல்லப் போகின்றேன்' என்று சொல்லி, பெருஞ்சேனையோடு புஷ்பகவிமானத்தை அத்திசை செல்வதாகக்காட்டி நிகும்பலையைச் சேர்ந்தான்.

அநுமானோ மூர்ச்சையடைந்திட்டான்: தெளிந்ததும், பல வகையாகப் புலம்பி, செய்திதெரிவிக்குமாறு ஸ்ரீராமனைச்சேர்ந்து, சீதையை இந்திரசித்து மாய்த்தசெய்தியை அரிதில் தெரிவித்தான். அதனால், அப்பெருமான் கொண்ட துயரத்திற்கோ அளவில்லை; வானரர்களும் பெருந்துயர்கொண்டு அப்பிரான் காலில் விழுந்தழுதனர்; இலக்குமணனும் அயர்ந்துவீழ்ந்தான். விபீடணனும் இந்திரசித்து அங்ஙனஞ் செய்திருக்கலாமென்று ஓரையங் கொண்டான். பின்பு பிரஜ்ஞையற்றிருக்கிற ஸ்ரீராமபிரானை விபீடணன் நன்னீர் தெளித்தல் விசிறியால் காற்று உண்டாக வீசுதல் முதலிய குளிர்ச்சி தரும் செயலால் தெளிவிக்க, இலக்குவன் 'சீதையைக் கண்ணெதிரே கொன்ற பாவியரைக் கொல்லாமல் துயரத்தினால் நம்முயிரை மாய்ப்பது தக்கதன்று' என்று பலபடிகூற,சுக்கிரீவன், கனுக்கண்டவன்போலெழுந்து, 'அரக்கர்மார்பிற்போய்க்குதிப்போம். வாருங்கள்' என்று முயல, அப்போது பரதன் முதலியோரைத் தாக்க இந்திரசித்து அயோத்தி சென்றிருப்பதை அனுமான் தெரிவித்தான். அப்பால் ஸ்ரீராமன் சீதையைக்குறித்த துயரத்தை விட்டு அயோத்தியைக் குறித்து மிகத்துயருற்று 'அயோத்தி சென்ற அரக்கர்சேனையைத் தொலைத்தபின் இலங்கையைவெல்வேன்: உடனே அயோத்தி செல்ல உபாயமுண்டோ?' என்றான். தன்தோளிலேறிக்கொண்டால் புஷ்பகத்தினும் விரைந்து செல்வதாக அநுமான் கூற, இராமலக்ஷ்மணர்ஏற இருந்தனர். விபீடணன், 'துயரத்தால் அயர்ந்திட்டேன்: இந்திரசித்தின் செயல் மாயையெனக் கருதுகின்றேன்: நான் உண்மையறிந்து சொன்னபின் உரியதுசெய்யலாம்' என்று சொல்லிவிட்டு, அவ்விபீடணன் வண்டினுருவங்கொண்டு அசோகவனிகைசென்று சீதை இனிதிருப்பதையுணர்ந்து மீண்டுவந்து அச்செய்தியைத் தெரிவித்தான். யாவரும் மகிழ்ந்தனர் என்பது இப்படலத்துக் கூறியபொருள்.

1.—இந்திரசித்து முதலியோர் சூழ்ந்துநிற்க, இராவணன் தனக்கு நேர்ந்துள்ள நிலையைத்தானேகூறுதல்.

மைந்தனும் மற்று ளோரும் [1]மகோதரன் முதலோ ராய
தந்திரத் [2]தலைமை யோரும் முதியருந் தழுவத் தக்க
[3]பந்திய ரெவரும் வந்து [4]மருங்குறப் [5]படர்ந்தார் பட்ட
[6]அந்தர முழுதுந் தானே யணையவர்க் கறியச் சொன்னான்.

(இ - ள்.) புதல்வனாகிய இந்திரசித்தும் மகோதரன் முதலியவரான சேனைத்தலைவரும் முதியவரும் மற்றுமுள்ளோராகிய காலங்களில் வந்து தழுவுதற்குஉரிய கூட்டமாகவுள்ள எல்லோரும், அருகிற்பொருந்த வந்து சேர்ந்தார்கள்; நேர்ந்துள்ள துன்பங்களை யெல்லாம் தானே அவர்கட்குத் தெரியும்படி (இராவணன்) சொன்னான்; (எ - று.)—பி-ம்:—[1]மகோதரப் பெயரினானும், மகோதரன் முதலோராய்ந்த. [2]தன்மையோரும். [3]மந்திரர். [4]மறுகுற. [5]பரந்தார். [6]தந்திரமெழுந்ததன்மைதான். (2794)

2.—ஏழுகவிகள்—மாலியவான் இராவணனுக்கு இதோபதேசஞ்செய்தல்.

நங்கிளை [1]யுலர்ந்த தெல்லா [2]முய்ந்திட நணுகு மன்றே
வெங்கொடுந் தீமை தன்னால் வேலையி னிட்டி லோமேல்
இங்[3]குள வெல்லா மாடற் கினிவரு மிடையூ றில்லை
பங்கயத் தண்ணன் மீளாப் படைபழு துற்ற பண்பால்.

எட்டுக்கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (அதுகேட்டு மாலியவான் இராவணனை நோக்கிக் கூறுவான்):—மிகக்கொடிய தீவினையினால் கடலிலிட்டிராவிட்டால், நமது கிளை அழிந்ததெல்லாம் உயிர்பெற்றிருக்க(இப்போது போருக்குச்) செல்லுமல்லவா? பிரமனுடைய மீட்கமுடியாத அத்திரமும் பழுதுபட்ட தன்மையினால், இங்குள்ள (எதிராளிகளின்) சேனையெல்லாம் போர்புரிவதற்கு வரும்: இனி அச்சேனைக்கு இடையூறில்லை; (எ - று.)—ஆடற்கு - போர்புரிதற்கு. இங்குள வெல்லா மாடற்கு இனிவரும் இடையூறில்லையென்ற தொடர்க்கு - இங்குள்ள (நம்) சேனையெல்லாம் மாண்டு போகும்படி பொருதற்கு (முடியாதவாறு எதிராளிகளுக்கு) இனி வரக்கூடிய இடையூறில்லையென்றும் உரைக்கலாம். இது சிலபிரதியில் "இலங்கையின்" என்ற அடுத்த பாடலின்பின் உள்ளது. இவை மாலியவான் கூற்று என்பது 9-ஆங்கவியால் விளங்கும். பி - ம்:—[1]உலந்ததேயும், உலர்ந்ததெல்லாம். [2]நயந்திட. [3]உளது. (2795)

3. இலங்கையி னின்று [1]மேருப் பிற்பட விமைப்பிற் [2]பாய்ந்து
வலங்கிளர் மருந்து நின்ற மலையொடுங் கொணர வல்லான்
அலங்கலந் தடந்தோ ளண்ண லனுமனே [3]யாதல் வேண்டும்
கலங்கலி லுலகுக் கெல்லாங் காரணங் கண்ட வாற்றால்.

(இ - ள்.) கலங்குதலில்லாத உலகங்கட்கெல்லாம் காரணமான கடவுள் [ஸ்ரீராமன்] (தனதுகருணைநோக்காற்) கடாட்சித்திருத்தலால்,-இலங்கையிலிருந்து மேருவும் பிற்பட இமைப்பொழுதிற்குட் பாய்ந்து சென்று வெற்றிபொருந்திய மருந்துகளை (அவை) நின்ற மலையுடனே பேர்த்துக்கொணர வல்லமை பெற்றவன், வெற்றி மாலையை யணிந்த பெருந்தோளையுடைய பெருமையிற் சிறந்த அநுமனேயாகவேண்டும்; (எ - று.)—பி - ம்:—[1]மேருபிற்பட. [2]தாவி. [3]ஆக. (2796)

4. நீரினைக் கடக்க [1]வாங்கி [2]யிலங்கையா நின்ற குன்றைப்
[3]பாரினிற் கழிய வீசின் ஆருளர் பிழைக்கற் பாலார்
[4]போரினிப் பொருவ தெங்கே போயின வனுமன் பொன்மா[மேரு.
மேருவைக் கொணர்ந்[5] திவ்வூர்மே [6]விடுமெனின் விலக்கலா

(இ - ள்.) (அவ்வநுமான்), இலங்கையாகுமாறு நின்ற திரிகூட மலையைக் கடலினின்று பெயர்த்தெடுத்துப் பூமியின்மீது கழியுமாறு (எறியவும் வல்லான்: அங்ஙன்) எறிந்தால், (இறவாது) பிழைத்தற்குஉரியரான அரக்கர் யாருளர்? (ஆகவே, அப்பகைவ

ருடன்) இனிப் போர்புரிவது எவ்வாறு சாத்தியம்? (மருத்துமலையை வைத்துவிட்டு வருமாறு) போயுள்ள அநுமான் பொன்மயமான மகாமேருவைக்கொண்டுவந்து இந்த இலங்காபுரியின்மேல் (வீசியும் எறியலாம்; அவ்வாறு) எறிவானானால், (அதனை நம்மால்) தவிர்க்க முடியுமோ? (எ - று.)—பி - ம்:—[1]ஓங்கி. [2]இலங்கையாய். [3]பாரினைச் சுழிக்க. [4]போரினில். [5]இவ்வூரில். [6]விடுமெனில். (2797)

5. முறைகெட [1]வேண்டின் முன்பு [2]நினைத்ததே முடிப்பன் [3]முன்பின், [4]குறைவிலாக் குணங்கட் காங்கோர் [5]கோதிலர் வேதங் கூறும், இறைவர்கள் மூவ ரென்ப [6]தெண்ணிலா ரெண்ண மேதான், அறைகழ லனும னோடும் [7]நால்வரே முதல்வ ரம்மா

(இ - ள்.) (அநுமான் உலகப்படைப்பின்) முறை அழிந்திடுமாறு (எண்ணுவ)ன்); எண்ணுவானானால், முன்னம் (தான்) வலிமையோடு நினைத்தபடியேசெய்து முடிக்கவல்லான்; குறைவில்லாத குணங்கள் விஷயத்தில் ஒப்பற்ற குற்றமற்றவராகி வேதங்கள் கூறுகின்ற தலைமைத்தேவர்கள் மூன்றுபேரென்பது, ஆராயும் வன்மையில்லாதவரின் கருத்தாகும்; ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த அநுமானோடுஞ்சேர்த்து முதல்வராமவர், நால்வரேயாவர்; (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல்: அநுமானுடைய திறமையைக்குறித்து வியந்தவாறு. ஆங்கு - அசை. இறைவர்கள் மூவரென்பதைமறுத்து இறைமையை அனுமானிடத்தும் ஏற்றிக் கூறியது - அபநுதியணி. இங்ஙன் அநுமன்பெருமையைக் கம்பர் மாலியவான் வாயிலாகத் தெற்றெனவுணரக்கூறியிருப்பவும், ஆராய்ச்சியாளர் என்றுபேர்வைத்துக்கொண்டு அநுமனை வாலிவதைக்கு முதன்முதல் வழிவகுத்த கொடியவன் என்பதுபோல வாய்கூசாது பேசுகின்றனர்; கம்பன் கருத்தறிந்த ஆராய்ச்சியாருமோ இது! இவ்வாறு உள்ளவர் ஆராய்ச்சியாளரென எழுவது கலியின் கூத்தே. பி - ம்:—[1]வென்றுவேண்டின். [2]நினைந்ததே. [3]முன்னிற. [4]குறையிலை குணங்கட்கென்றோ. [5]கோளிலா. [6]எண்ணமோ வெண்ணிலந்த. [7]முதல்வரோர்நால்வர். [5]கோதிலா என்றும் படிக்கலாம். (2798)

6. [1]இறந்தவ ரிறந்து தீர விணியொரு பிறவி வந்து
பிறந்தன மாகி னுள்ளோ முய்ந்தனம் பிழைக்கும் பெற்றி
[2]மறந்தன மெனினு மின்னஞ் சனகியை மரபி [3]னீந்தவ்
அறந்தரு சிந்தை யோரை யடைக்கலம் புகுது மைய.

(இ - ள்.) ஐயனே! (வானர அநுமானைப்போல அரக்கரான நம் பக்கத்து உதவவல்லார் எவரும் இல்லையாதலால்) இறந்துபோனவரக்கர்கள் இறந்தவராகவே யொழியட்டும்; இனி வேறொரு பிறவியிலேவந்துபிறந்தாற் போன்றுள்ளோமாகில் (இறவாது எஞ்சிய நாம்) உள்ளவராவோம்: (அங்ஙனம் நாம்) உயிர்தப்பினோமாகிப் பிழைக்குஞ்செய்கைமுறையை (இதுவரையில்) மறந்துவிட்டோம்: என்றாலும், இப்போதாவது சீதையை முறைப்படி கொடுத்திட்டு அந்தத்தருமத்தையே நினைக்கின்ற எண்ணமுடையரான அவரை அடைக்கலம் புகுவோம்! (எ - று.)

'அறந்தருசிந்தையோர்' என்றதனால், அவர்கள் அடைக்கலம் புகுந்தோரை யாதரிக்குந்தன்மையுள்ளவ ரென்பது, பெறப்படும். இனியொருபிறவிவந்துபிறந்தனமாகினுள்ளோம் என்றது - அரக்கத்தன்மைநீங்கிச்சாதுத்தன்மையை மேற்கொண்டால் உள்ளவ ராகலாமென்றபடி; அவ்வாறுஉள்ளராதற்கு உபாயம் மேலே கூறப்படுகின்றதென்க. தீர-வியங்கோள்முற்று: இனி ஒருசாரார் 'இறந்து தீர - இறந்தேயொழிய என்றும், 'இனிஒருபிறவிவந்து பிறந்தனமாகின் உள்ளோம் - இனிவேறொருபிறவியில்வந்து பிறந்தோமானால் உள்ளோமாவோம் என்றும், 'உய்ந்தனம்பிழைக்கும் பெற்றி மறந்தனம் - உய்ந்து உயிர் தப்பிப்பிழைக்கும் வழியை யசட்டைசெய்திட்டோம்' என்றும் கூறுவர். பி-ம்:—[1] இறந்தனர். [2] மறந்திலம். [3] ஈய்ந்தே. (2799)

7. வாலியை வாளி யொன்றால் வானிடை வைத்து வாரி
வேலையை வென்று கும்ப கருணனை வீட்டி னானை
ஆலியின் மொக்கு ளன்ன வரக்கரோ [1] வமரின் வேல்வார்
சூலியைப் பொருப்பி னோடுந் [2] தூக்கிய விசயத் தோளாய்.

(இ-ள்.) சூலப்படையைக்கொண்ட சிவபெருமானை (க்கைலாய) மலையோடும் தூக்கிய வெற்றிபொருந்திய தோள்களையுடையவனே! வாலியென்னும்வீரனை ஓரம்பினாற் சுவர்க்கத்திலிருத்தி [இறக்கச் செய்து] நீர்க்கடலை (அணைகட்டுமாறு) ஜயித்துக் கும்பகர்ணனை யழித்தவனான இராமனை, (ஊதினால் அழிந்துபோவதாகி) நீரில் தோன்றுங் குமிழியைப்போன்ற [எளிதிலழிபவரான] அரக்கரா போரில்வெல்லவல்லார்? (எ - று.)—முன்னம் கயிலைமலையையே தூக்கினோமென்றுகருதற்க: உன்னைவென்ற வாலியைக் கொன்றவாளியுடையவனல்லவோ அவ்விராமனென்கிறான். இச்செய்யுள்சில பிரதியில் "மறிகடல்" என்ற அடுத்தபாடலின் பின் உள்ளது. சில பிரதியில் 'கட்டுரை' (10) என்றபாடலின்பின் உள்ளது. பி - ம்:—[1] வல்லரென்றான். [2] துளக்கிய. (2800)

8. மறிகடல் குடித்து [1] வான [2] மண்ணொடும் பறிக்க வல்ல
எறிபடை யரக்க ரெல்லா மிறந்தன ரிலங்கை [3] யூரும்
சிறுவனு நீயு மல்லால் யாருள ரொருவர் தீர்ந்தார் [வான்.
வெறிதுநம் வென்றி யென்றான் மாலிமேல் விளைவ [4] தோர்

(இ - ள்.) (அலை) மடங்குகின்ற கடலினீரைப் பருகி, வானை மண்ணுலகத்தோடு பேர்த்தெடுக்கவல்ல வீசுகின்றபடைக்கலங்களைக் கொண்ட அரக்கர்யாவரும் இறந்துவிட்டனர்; இலங்கையூரும் (உனது) குமாரனாகிய இந்திரசித்தும் நீயும் அல்லாமல் உயிர் தப்பிப் பிழைத்தவர் ஆர்ஒருவர் இருக்கின்றனர்? நமக்குவெற்றியென்பது வெறும்பேச்சே [காரியத்திற்கைகூடுவதல்ல]; என்று கூறினான், மேல்விளைவதை யாராய்ந்தறிபவனாகிய மாலி; (எ-று.)

இச்செய்யுளில், மாலியென்றது-மாலியவானைக்குறிக்கும்:மேற்செய்யுளில் "என்றுமாலியவான்கூற" என வருதல் காண்க: இனி அச்செய்யுளை இல்லையென்றுகொள்வார் மாலியென்பவனே புத்தி கூறியதாகக் கொள்ளலாம். அணிவகுப்புப்படலத்து "மாதுலத் தலைவன்", "மாலி" என வந்துள்ளது காண்க. அங்கும் மாலிஎன்

பது-மாலியவானைக்குறிக்குமென்றும், மாதுலத்தலைவன் என்பது-தாய்ப்பாட்டன் என்றபொருளைத் தருமென்றும் கொள்ளுவதும் ஒன்று. மாலிமேல் என்றஇடத்து மாலியவான் என்று பாடங்கொள்ளினுமாம். தீர்ந்தார்-உயிர்தப்பிப்பிழைத்தவர். பி - ம்:—[1]வானம். [2]மண்ணொடு மறிக்க, மண்ணொடுமறைக்க. [3]ஊரில். [4]ஓரான். (2801)

9.—மாலியவானை இராவணன் சினத்தல்.

என்றுமா லியவான் கூறப் [1]பிறையெயிற் றெழிலி நாப்பண்
மின்றெரிந் தென்ன நக்கு [2]வெருவர வுரப்பிப் பேழ்வாய்
[3]ஒன்றினொன் றசனி யென்ன [4]வுருத்துநீ யுரைத்த மாற்றம்
நன்றுநன் றென்று சீறி யுரைத்தனன் [5]நலத்தை யோரான்.

(இ-ள்.) என்று மாலியவான் சொல்ல, மேகத்தினிடையிலே மின்னல் விளங்கினாற்போலப் பிறைபோன்ற எயிறு (தோன்றச்) சிரித்து, அச்சமுண்டாகுமாறு அதட்டி, பிளவுபட்ட வாய் ஒவ்வொன்றினாலும் (நெறுநெறென்ற ஒலியுண்டாகுமாறு பற்களைக் கடித்தலால்) இடியென்னுமாறு [பேரொலிதோன்ற] அச்சமுண்டாக அதட்டி, 'நீ கூறியசொல் நன்றாயுள்ளது! நன்றாயுள்ளது!' என்று சீறிக் கூறினான்: (யாவனெனில்),—(தன்) நன்மையையாராயாதவனாகிய இராவணன்; (எ-று.)—இச்செய்யுள் பலபிரதிகளிலில்லை; ஒருகால் வெள்ளிப்பாட்டாயிருப்பினும் இருக்கலாம். பி - ம்:—[1]எயிறுடை. [2]வெற்புகவிழித்து. [3]ஒன்றொடொன்று. [4]கடித்து. [5]அரக்கர்நாதன். (2802)

10.—இதுவும், அடுத்த கவியும்-ஒருதொடர்: இராவணன் சீதையைவிட்டிட ஒருப்படாமையோடு வீரவாதம்படப் பேசுதல்.

கட்டுரை யதனைக் கேளாக் கண்ணெரி கதுவ நோக்கிப்
பட்டன ரரக்க ரென்னிற் படைக்கலம் [1]படைத்த வெல்லாம்
கெட்டன [2]வெனினும் வாழ்க்கை கெடாதுநற் கிளிய னாளை
விட்டிட வெண்ணி யோநான் பிடித்தது வேட்கை [3]வீய.

(இ - ள்.) (மாலியவான் கூறிய) அந்த உறுதிமொழியைக் கேட்டு (இராவணன்), கண்கள் நெருப்பைக்கொள்ள விழித்துப் பார்த்து(க் கூறுவான்):—அரக்கர் இறந்தாரென்றாலும் (நாம்) வைத்துக்கொண்டுள்ள படைக்கலமெல்லாம் அழிந்திட்டனவென்றாலும், (நாம்) வாழ்ந்திருக்கை கெடாமலிருக்கையில் இனிக் கிளியை யொத்து (இன்மொழி) பேசுபவளான சீதையை விட்டிடுமாறு எண்ணியா வேட்கையானது கொன்றுகொண்டிருக்க நான் கவர்ந்து கொண்டுவந்தது? (எ-று.)

வேட்கை மரணவேதனையை விளைவிக்க நான் சீதையைக் கவர்ந்துகொண்டு வந்தது, அவளை விட்டிடுவதற்காகவல்ல; அவளுடன் இனிதிருக்க வேணுமென்ற கருத்தினாலேயே: ஆகவே, அரக்கர்பலர் இறத்தல் முதலிய காரணங்களை முன்னிட்டுச் சீதையை விட்டிடேனென்றவாறு. இந்தச் செய்யுளில், உயிர் வாழ்க்கை கெடுவதற்காகவே நான் சீதையைப் பிடித்த தென்ற

அமங்கலப்பொருள் தோன்றுதல் காணத்தக்கது. 'நோக்கி' என்றது, அடுத்த செய்யுளில் 'என்றான்' என்பதனோடு முடியும். பி-ம்:—[1] படைத்தது. [2] என்னில்யாக்கை கெடாதெனிற்...கெடாது நற். [3] வீரம். (2803)

11. [1] மைந்தனென் மற்றை யோரென் [2] னஞ்சினிர் [3] வாழ்க்கை [4] வேட்டீர், [5] உய்ந்துநீர் போவீர் நாளை யூழிவெந் தீயி னோங்கிச், [6] சிந்தினன் [7] மனித ரோடு குரங்கினைத் [8] தீர்ப்ப னென்றான், வெந்திற லரக்கர் வேந்தன் மகனிவை [9] விளம்ப லுற்றான்.

(இ-ள்.) 'மைந்தனென்ன, மற்றையோரென்ன, (இவ்வாறாக) அஞ்சியுள்ளவராய் வாழ்க்கையை விரும்பினவர்களே! நீங்கள் உயிர் பிழைத்தவராய்ப்போங்கள்: நாளைக்குக் கற்பாந்தகாலத்துக் கொடிய தீப்போலக் கிளர்ந்து (அம்பைச்) சிந்தினவனாய் மனிதருடனே அநுமானென்ற குரங்கினையும் உயிர்தீர்த்துவிடுவேன்' என்று கூறினான், கொடியதிறமையுடைய அரக்கர் தலைவனான இராவணன்; (அதுகேட்ட) மைந்தன் இவை கூறத்தொடங்கினான்; (எ - று.)—மைந்தன் கூறுவதை மேல்மூன்றுகவிகளிற் காண்க. மைந்தனென்-மைந்தனால்தான் என்னபயன்? மற்றையோரென் - மற்றையோரால்தான் யாதுபயன்? என்று உரைப்பினுமாம். பி-ம்:—[1] மைந்தர். [2] எஞ்சினிர். [3] வாழ்வு. [4] வேண்டில். [5] உய்ந்துநீர் போமின், உய்ந்தனிர்போவிர். [6] சிந்தனை, சிந்திய. [7] மனித்தரோடக். [8] தீப்பேனென்றான், தீர்வனென்றான். [9] காண்மினென்றான். (2804)

12.—மூன்றுகவிகள்-ஒருதொடர்: இந்திரசித்து இராமலட்சுமணரைப் புகழ்ந்து, பிறகு 'நான் நிகும்பலையில் வேள்வி முடித்தால் உன்மனத்துயர் நீங்கும்' என்றதைத் தெரிவிக்கும்.

உளதுநா னுணர்த்தற் [1] பால துணர்ந்தனை கோட லுண்டேல்
தள்மலர்க் கிழவன் தந்த [2] படைக்கலந் தழலிற் [3] சாற்றி
அளவில தமைய விட்ட திராமனை [4] நீக்கி யன்றால்
[5] விளைவில தையன் மேனித் [6] தீண்டில [7] மீண்ட தம்மா.

(இ - ள்.) உணர்ந்தவனாய் (ச்சொல்வதை) மேற்கொள்வது உண்டாகுமானால் நான் அறிவிக்கவேண்டுவது ஒன்றுண்டு: (நான்) இதழ் நிறைந்த தாமரைமலரில் வாழ்பவனான பிரமதேவன் தந்திட்ட அத்திரத்தை யபிமந்திரித்து எல்லையற்றதழலோடு அமையவிட்டது, இராமனை நீக்கியன்றாகும்: (அப்படைக்கலம்) பயன்விளைவிப்பதாகாமல் அவ்விராமனுடைய மேனியைத் தீண்டிலதாய் மீண்டது; (எ - று.)—அம்மா-வியப்பிடைச்சொல்: பிரமாத்திரமும் இராமனைத் தீண்டாமையைப் பற்றி வியந்தவாறு. பி-ம்:—[1] பால. [2] சரப்படை. [3] சாத்தி. [4] அடையாவென்றால், வீட்டியன்றால். [5] இளவலதனையமேனி. [6] தீண்டின்றி. [7] இழந்ததம்மா. ()

13. [1] மானிட னல்லன் தொல்லை வானவ னல்லன் மற்றும்
மே[2] னிவர் முனிவ னல்லன் வீடணன் மெய்யிற் சொன்ன
[3] யானென தெண்ணல் தீர்ந்தா னெண்ணு றுமொருவ [4] னென்றே
[5] தேனகு தெரியல் மன்னா [6] சேகறத் தெரிந்த தன்றே.

(இ - ள்.) தேன்விளங்குகின்ற மாலையையணிந்த அரக்கர் தலைவனே! (இவ்வாறு பிரமாத்திரமும் தீண்டாதிருத்தலால் அந்த இராமன், சாதாரண)மனிதன் அல்லன்: பழமையான [சாதாரண] தேவசாதியானும் அல்லன்: மற்றும் மேன்மைமிகுந்த முனிவன் அல்லன்: வீடணன் உண்மையாகச்சொன்ன அகங்கார மமகாரங்களற்றவரான யோகியர் தியானிக்கின்ற ஒப்பற்ற கடவுளென்றே ஐயமின்றித் தெரிந்தது; (எ - று.)—சேகு-ஐயம். பி - ம்:—[1]மானவன். [2]விமிர். [3]ஏனவனெண்ணிற், யானெனதெண்ணிற். [4]அன்றே. [5]தேனுறு. [6]சிக்குறத். (2806)

14\. அனையது [1]வேறு நிற்க வன்னது பகர்த லாண்மை
[2]வினையெனி னன்று நின்று [3]வீழ்ந்தது வீழ்க வீர
[4]இனையலி முண்டி யான்போய் நிகும்பலை [5]விரைவி னெய்தித்
துனியறு வேள்வி வல்லை [6]யியற்றினால் முடியுந் துன்பம்.

(இ-ள்.) அவ்வாறானவார்த்தை வேறேயிருக்கட்டும்: அதனைக் கூறுவது ஆண்மைவினையாகுமோ என்றால், அன்று: நிகழ்ந்து கழிந்தது கழியட்டும்: வீரனே! நீ வருந்தாதே: யான் முனைந்து போய் நிகும்பலையென்னுமிடத்தை விரைவாக அடைந்து, குற்றமற்ற வேள்வியை விரைவில் முடித்தால் (உன்மனத்) துன்பம் ஒழிந்திடும்; (எ - று.)—நிகும்பலை-ஓர்தேவாலயம்: வடமொழியில் 'நிகும்பிலா' என்று கூறியுள்ளது. அங்கு வேள்விமுற்றினால், பகைவர் தவறாதழிவராதலால் துன்பந்தீருமென்கின்றான், பி-ம்:— [1]பிறவும், வென்றி. [2]வினையன, வினையென. [3]வீழ்ந்தவர். [4]மூனையது, வினையது. [5]விறலின். [6]தொடங்கினால். (2807)

15.—இராவணன் உடன்பட்டு 'அவ்வேள்விக்கு இடையூறு நேராமல் செய்யும் உபாயம் யாது?' என்று வினவுதல்.

அன்னது [1]நல்ல தேயா லமைதியென் றரக்கன் சொன்னான்
[2]தன்மக [3]னும்பி கூற [4]நண்ணலார் கண்டு நண்ணி
முன்னிய வேள்வி முற்றா வகைசெரு [5]முயல்வ ரென்னா
என்னவ ரெய்தா வண்ண மியற்றலா முறுதி யென்றான்.

(இ - ள்.) '(நீ கூறுகின்ற) அது நல்லதே: அவ்வாறே செய்வாய்' என்று இராவணன் கூறினான்: (அவனது) சிறந்தகுமாரனை இந்திரசித்து 'உன்தம்பி வீடணன் (உளவு) சொல்ல (நமது) பகைவர் கண்டுகிட்டி (நாம்செய்யக்) கருதிய வேள்வி நிறைவேறாதபடி போர்முயல்வரே' என்று சொல்ல, 'அவர் வராதபடி என்ன உபாயம் செய்யலாம்?' என்று (இராவணன் மீண்டும்) வினவினான்; (எ - று.)—பி - ம்:—[1]நலத்ததேயால். [2]நன்னெறி. [3]நம்பி [4]நண்ணுவராண்டு. [5]முயல்வனென்றான். (2808)

16.—மூன்றுகவிகள்—ஒருதொடர்: தன் வேள்வி முற்ற இந்திரசித்து உபாயம் கூறுதல்.

சானகி [1]யுருவ மாகச் சமைத்தவன் றன்மை கண்ட
வானுய ரனுமன் முன்னே [2]வாளினாற் கொன்று மாற்றி
யானெடுஞ் சேனை யோடு மயோத்தியின் மே [3]லெழுந்தே னென்னப்
போனபின் [4]புரிவ தோன்றுந் [5]தெரிகிலர் துன்பம் பூண்பார்.

(இ-ள்.) சானகியினுருவமாக ஒன்று (மாயையினால்) நிருமித்து அவளுடைய தன்மையைக் கண்ட மிக்க உயர்ச்சியுள்ள அநுமானுடைய முன்னே வாளினாற்கொன்று (அவளுடைய) உயிரைப் போக்கி, யான் பெருஞ்சேனையுடனே அயோத்திமீது படையெடுத்துச் சென்றுள்ளேனென்றுசொல்ல, (இவ்வாறு) நிகழ்ந்துவிட்ட பின் [சீதையும் கொல்லப்பட்டு யானும் அயோத்திமீது படையெடுத்தேனென்ற எண்ணம் பகைவர்கட்கு உண்டானபின்பு], (தாம்) செய்யக்கூடியாது ஒன்றுந்தோன்றாமல் (பகைவர்) துன்பம் அடைவார்: (எ - று.)—பி - ம்:—[1]வடிவமாக. [2]வாளியிற். [3]எழுகேன். [4]புகுந்தது. [5]இலாதவர் துயரம். (2809)

17\. இத்தலைச் சீதை மாண்டாள் [1]பயனிவ ணில்லை யென்பார்
அத்தலைத் தம்பி மாருந் தாயரு மடுத்து ளோரும்
உத்தம [2]நகரு மாளு மென்பதோ [3]ரச்ச மூன்றப்
பொத்திய [4]துன்பத் தோடுஞ் சேனையுந் தாமும் போவார்.

(இ - ள்) 'இவ்விடத்திற் சீதையோ மாண்டாள்; இங்கே (பொருதுவென்று நாம் பெறக்கூடிய) பயன் ஒன்றுமில்லை' என்று கருதுகின்ற இராமலட்சுமணர், 'அங்கே [அயோத்தியில்] தம்பிமார்களும் தாய்மார்களும் சேர்ந்த பந்துக்களும் (ஆகிய இவர்களைக் கொண்ட) சிறந்தநகரமும் மாண்டுவிடும்' என்ற அச்சம்பொருந்தவே, (மனத்தைக்) குத்துகின்ற துன்பத்துடனே சேனையும் தாமுமாக (இங்கு நின்று அயோத்திக்கே மீண்டு) செல்வார்; (எ-று)— என்பார் போவார் என இயையும். பி - ம்:—[1]பயனிவை. [2]நகருளோரும், தமருமாரும். [3]வருத்தம். [4]துன்பமூளச். (2810)

18\. போகில ரென்ற போது மனுமனை யாண்டுப் போக்கி
ஆகிய தறிந்தா லன்றி யருந்துய ராற்ற லாற்றார்
ஏகிய கரும முற்றி யா[1]னவண் விரைவி னெய்தி
வேகவெம் படையிற் கொன்று தருகுவன் வென்றி யென்றான்.

(இ-ள்) (அயோத்திக்கு அவர்கள்) போகவில்லை யென்றாலும், அநுமனை அங்கே யனுப்பி நிகழ்ந்ததை யுணர்ந்தாலன்றி, (தாங்குதற்கு) அரிய துயரத்தைத் தாங்கமாட்டார்: நான், சென்ற (வேள்வியாகிய) காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு அங்கு [போர்க்களத்தில்] விரைவில் அடைந்து, வேகமுள்ள கொடிய படைக்கலத்தாலே (பகைவரைக்) கொன்று வெற்றியைத் தருவேன் என்று முடித்தான், (இந்திரசித்து): (எ - று.)—பி-ம்:— [1]இவண். (2811)

19.—இராவணன் உடன்படவே மாயாசீதையையமைக்கு மாறு இந்திரசித்து சென்றிட, சுக்கிரீவன் இலங்கையைக் கொள்ளியாற் சுடுவேமெனல்.

அன்னது [1]புரிதல் நன்றென் றரக்கனு [2]மமைய [3]வஞ்சப்
[4]பொன்னுரு வமைக்கு மாய மியற்றுவான் [5]மைந்தன் போனான்
இன்ன [6]இத் தலைய தாக இராமனுக் கிரவி செம்மல்
தொன்னக ரதனை வல்லைக் [7]கடிகெடச் சுடுது மென்றான்.

(இ-ள்.) அச்செயலைச் செய்வது நல்லதென்று இராவணனுமுடன்பட, வஞ்சனைச் சீதையின் உருவத்தையமைக்கவல்ல

மாயத்தையியற்றும் இராவணன்மைந்தனை இந்திரசித்துசென்றான்; இங்கே இன்னதுநிகழ, (அங்கே) ஸ்ரீராமனிடத்தில்,சூரியபுத்திரனை சுக்ரீவன் 'பழமையான இலங்கைநகரத்தை விரைவிலே காவல்கெடும்படி கொள்ளியாற் சுடுவோம்' என்று (ஓராலோசனை) கூறினான்; (எ-று.)—பொன்-இலட்சுமியின் அமிசாவதாரமான சீதை. கடி-காவல்: விளக்கமுமாம். பி - ம்:—[1]புரிவை. [2]அருள். [3]அஞ்சொற். [4]பொன்னுருக்குவமை. [5]அமைந்து. [6]இத்தலைய. [7]கடிதினிற். (2812)

20.—ஸ்ரீராமனனுமதியின்மேல் வானரங்கள் இலங்கையைச் சுடுமாறு கையிற் கொள்ளிக்கட்டையைக் கொள்ளுதல்.

அத்தொழில் புரிதல் நன்றென் [1]றண்ண லுமமைய வெண்ணித்
தத்தின னிலங்கை மூதூர்க் கோபுரத் தும்பர்ச் [2]சார்ந்தான்
[3]பத்துடை யேழு சான்ற [4]வானரப் பரவை பற்றிக்
[5]கைத்தலத் தோரோரார் கொள்ளி யெடுத்ததெவ் வுலகுங் காண.

(இ - ள்) அத்தொழிலை [இலங்கையைக் கொள்ளிகொண்டு சுடுதலை]ச் செய்தல நல்லதென்று ஸ்ரீராமனும்ஆலோசித்து உடன்பட, (சுக்கிரீவன்) தாவி இலங்கையென்ற முதுமையான நகரின் கோபுரத்தின்மீது சேர்ந்தான்; எழுபதுவெள்ளமான வானரசேனை சமுத்திரத்தில் (ஒவ்வொன்றும்) ஒவ்வொரு கொள்ளிக்கட்டையை எவ்வுலகமுங்காணக்கையிற்பிடித்து எடுத்துக்கொண்டது;(எ-று.)—[1]அருளினனிராமனண்ணல். [2]சார்ந்தார். [3]பத்துடனேழு. [4]வானரக்குழுவும். [5]கைத்தலத்தாலோர். (2813)

வேறு.

21.—கொள்ளிக்கட்டையையெடுத்த வானரசேனையின் வருணனை.

[1]எண்ணின கோடிப் பல்[2]படை யாவும்
மண்ணுறு காவல் திண்[3]மதில் வாயில்
வெண்ணிற மேக [4]மின்னினம் வீசி
நண்ணின [5]போல்வ தொன்னகர் [6]நாண.

(இ-ள்.) பழமையான இலங்கைநகர் கூச்சமடையும்படி, எண்ணப்பட்டுள்ள கோடிக்கணக்கான பலவகையாயுள்ள வானரசேனை யாவும், பூமியிலே மிக்ககாவலாகவுள்ள திண்ணியமதிளின்வாசலிலே, வெணணிறமேகங்கள் மின்னினத்தை வீசிக்கொண்டு நண்ணினவற்றைப்போல்வனவாயின; (எ-று.)—கொள்ளியெடுத்து மதில் வாசலிலே சென்றவானரசேனைக்கு மின்னினம்வீசி நணணுறும் வெண்ணிற மேகத்தை ஒப்புக் கூறினார்; தற்குறிப்பேற்றவணி. நகர்-நகரத்தார்க்கு ஆகுபெயர். பி - ம்:—[1]எண்ணில. [2]கவி. [3]மதிருவி. [4]மின்னினை. [5]போலத். [6]நண்ணி. நாமம். (2814)

22.—வானரங்கள் கொள்ளிக்கட்டையை வீசுதல்.

ஆசைக டோறு மள்ளின கொள்ளி
[1]மாசறு தானை மரக்கட வெள்ளம்
நாசமில் ஆநுக் குண்டென [2]நளினின்
வீசின வானின் மீன்[3]விழு மென்ன.

(இ-ள்.) குற்றமற்ற தானையாகிய வெள்ளக்கணக்காகவுள்ள குரங்குகள், திக்குக்கள்தோறும் கொள்ளியைக் கையிற்கொண்டன வாய் வீசியெறிந்தவை,— இவ்வூருக்குநாசமுண்டென்பதை (த் தீக்குறியாக முன்னம்) அறிவிக்க நள்ளிரவில் வானினின்று மீனி னங்கள் விழுவதையொத்தன; (எ - று.)—வானத்தினின்று மீனி னம் மிகுதியாகவுதிர்தல். தீக்குறியென்ப. பி-ம்:—[1]காசறுதானைக் கார்க்கடல்..., காசறுவீரர்கடாவிடவீழ்வ. [2]நாளின். [3]விழல். ()

23.—வானரங்கள் வீசிய் கொள்ளிக்கட்டையின் வருணனை.

[1]வஞ்சனை மன்னன் வாழு மிலங்கைக்
குஞ்சர [2]மன்னார் வீசிய கொள்ளி
அஞ்சன வண்ண னாழியி லேவுஞ்
செஞ்சர மென்னச் [3]சென்றது மென்மேல்.

(இ-ள்.) வஞ்சனையையுடைய அரக்கர்தலைவனான இராவ ணன் வாழ்கின்ற இலங்கையிலே யானையையொத்தவரான வானரர் வீசிய கொள்ளியானது,—அஞ்சனம்போன்ற திரு நிறத்தையுடையவனான ஸ்ரீராமன் கடலின்மீதுஏவிய செந்நிற முள்ள ஆக்நேயாத்திரத்தைப் போல மேன்மேலுஞ் சென்றது; (எ-று.)—தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]வஞ்சனையாளன், வஞ்சனையன்னவர். [2]அன்னவர். [3]சென்றன. (2816)

24.—இலங்கையில் நெருங்கிய தீயின் வருணனை.

கையக [1]விஞ்சிக் காவல் [2]கலங்கச்
செய்ய [3]கொழுந்தீச் சென்று நெருங்க
[4]ஐய னெடுங்கா ராழியை [5]யம்பால்
எய்ய [6]வெரிந்தா லொத்த திலங்கை.

(இ-ள்.) இடமகன்ற மதிளாகிய காவல் கலங்குமாறு செந்நிற முள்ள கொழுவிய தீச் சென்றுநெருங்கியதனால், இலங்கைநகர்,— ஸ்ரீராமன்நீண்ட கரிய கடலை அம்பினாலெய்ய எரிந்ததை யொத் தது; (எ - று.)—ஸ்ரீராமன் ஆக்நேயாஸ்திரத்தை விட்டபோது எரிந்த கடலையொத்தது, இலங்கை கொள்ளியினாலெரிந்ததென்க. பி - ம்:—[1]அஞ்சிக். [2]இலங்கைச். [3]கொளுந்திச். [4]ஐய. [5]அம்மா. [6]உலர்ந்தால். (2817)

25.—சோலையில் எரி பற்ற, பறவைக்குலங்கள் விண்ணி லெழுதல்.

பரற்றுறு [1]பல்பழு வத்தெரி பற்ற
நிரற்றுறு பல்பற வைக்குல [2]நீளம்
உரற்றின விண்ணி னொலித்[3]தெழும் வண்ணம்
அரற்றியெ ழுந்தது அடங்க விலங்கை.

(இ-ள்.) பரலில்நெருங்கிமுளைத்துள்ள பலசோலைகளிலும் எரி பற்றியதனால் வரிசையாக நெருங்கிவாழ்கின்ற பலபறவைக் குலங்கள், (தம்முடைய) கூட்டினின்று ஆகாயத்தில் பிரதித் தொனி எழும்வகையாகக் கத்தின:(இவ்வாறு)இலங்கை முழுதும் (பறவைக்குலங்களால்) அரற்றிக்கொண்டெழப்பெற்றது; (எ-று.) —நீளம்-பறவைக்கூடு: வடசொல்: இனி, (இலங்கையின்மீது) எரி பரந்ததனால், அதிலுள்ள அரக்கர்கள், பழுவத்தில் எரிபற்றப்

பறவைக்குலம் தம்கூட்டினின்று விண்ணில்வந்து ஒலிப்பதுபோல, வெளியே வந்து அரற்றியெழுந்தார்களென, இச்செய்யுளுக்கு உரைகூறலாம். இவ்வுரைக்கு, இலங்கை-இலங்கையிலுள்ளவரக்கர் என்க. இலங்கை மலைமீதுஉள்ளதனால் அவ்விடத்துச்சோலையைப் 'பரற்றுறுபழுவம்' என்றது. பி-ம்:—[1] தொல். [2] நெஞ்சில். [3] எழு. ()

26.—இராமசரத்தாற் கோபுரம் விழுதல்.

[1] மூவுல கத்த வரும்முத லோரும்
[2] மேவின விற்றொழில் வீர னிராமன்
[3] தீவ மெனச்சில வாளி செலுத்தக்
[4] கோபுர [5] மிற்று [6] விழுந்தது குன்றின்.

(இ - ள்.) (அப்போது) மூவுலகத்தவரும் முதல்மூர்த்திகளும் விரும்பத்தக்க விற்றொழிலையுடைய வீரனாகிய ஸ்ரீராமன்,—தீபத்தைப்போன்ற சில அம்புகளைச் செலுத்த, கோபுரம்முறிந்து மலைபோலவிழுந்தது; (எ-று.)—இரண்டாமடியில், ஏவின என்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1] மூவுலகத்தெவரும். [2] ஏவல்வலத்தொழில். [3] தீபம். [4] கோவுரம். [5] முற்றும். [6] முறிந்தது. (2819)

27.—மருத்துமலையை வைத்திட்டு அனுமான் திரும்பிவருதல்.

இத்தலை யின்ன நிகழ்ந்திடு [1] மெல்லைக்
கைத்தலை யிற்கொடு காலி னெழுந்தான்
[2] உய்த்த [3] பெருங்கிரி மேருவி [4] னுப்பால்
[5] வைத்த நெடுந்தகை மாருதி வந்தான்.

(இ - ள்.) இங்கு [இலங்கையிலே] இவ்வாறு நிகழுமிடத்து, கையிலே (மருத்துமலையைக்) கொண்டு காற்றுப்போல விரைந்தெழுந்துசென்றவனாகி, கொணர்ந்த பெரியமருத்துமலையை மேருவுக்கு அப்பால் வைத்த பெருந்தகுதியையுடைய அநுமான் (இலங்கைக்குமீண்டு)வந்துசேர்ந்தான்; (எ-று.)—பி-ம்:—[1] வேலை. [2] அத்த [3] நெடுங்கிரி. [4] அப்பால். [5] வைத்து. (2820)

28.—அநுமான் ஆரவாரித்ததைக் கேட்டு இலங்கையரின் நடுக்கம்.

அறையர வக்கழன் மாருதி யார்த்தான்
உறையர வஞ் [1] செவி யுற்றுள தவ்வூர்
சிறையர வக்கலு முன்கொடு சீறும்
இறையர வக்குல மொத்த திலங்கை.

(இ-ள்.) ஒலிக்கின்ற ஒலியைக்கொண்ட வீரக்கழலையணிந்த அநுமான் ஆரவாரித்தான்; (அங்குத்) தோன்றிய அரவம், அந்த இலங்கையிற் கேட்டது; (அதனால்), இலங்கை, கருடனுடையசிறையொலியினால் சீறுந்தன்மையுள்ள தலைமையையுடைய நாககுலங்கள் அடைந்தநிலையை யடைந்தது; (எ - று)—'கலுழன்சிறையரவக்கொடு' என மாற்றுக. பி-ம்:—[1] சிறையுற்றுளது, செறிவித்துளது.

29.—அநுமான்சேர்ந்த மேற்றிசைவாயிலை இந்திரசித்து அடைதல்.

மேற்றிசை வாயிலை மேவிய வெங்கண்
காற்றின் மகன்றனை வந்து கலந்தான்

மாற்றலின் மாயை வகுக்கும் வலத்தான்
கூற்றையும் [1]வென்றுயர் வட்டணை கொண்டான்.

(இ - ள்.) மாற்றுதல் முடியாத மாயத்தை யியற்றும் வலிமையைப் பெற்றவனும் கூற்றுவனையும்வென்று பெருந்தாளமிட்டவனுமான இந்திரசித்து,—(இலங்கையின்) மேற்குத் திக்குவாயிலைப் பொருந்தியிருந்த கொடுமையையுடைய வாயுகுமாரனான அநுமானை வந்துகூடினான்; (எ - று)—பி - ம்:—[1]வென்றொரு, வெங்கூய. ()

30.—மாயையைச்சீதைவடிவமைத்து அவள்குழலைப் பற்றியீர்த்துவாளைக் கையிற்கொண்டு பின்வருமாறு இந்திரசித்து கூறுதல்.

சானகி யாம்வகை கொண்டு [1]சமைத்தோர்
மானனை யாளை வடிக்குழல் பற்றா
ஊனகு வாளொரு கைக்கொ டுருத்தான்
ஆனவன் அந்நிலை [2]யின்ன தறைந்தான்.

(இ - ள்.) சானகியென்றுதோன்றுமாறு (மாயையைக்) கொண்டு (ஓர்உருவத்தை) அமைத்து, ஒப்பற்ற மான்போன்றவளான (அந்த மாயா) சீதையினது தேனைக்கொண்ட கூந்தலைப் பற்றி, ஊன் விளங்குகின்ற வாளை மற்றொருகையிற்கொண்டு கோபித்தவனாகி,—அந்தஇந்திரசித்து, அப்போது இவ்வாறான வார்த்தையைக் கூறினான்; (எ - று.)—இந்திரசித்தின் கூற்றை, மேற்கவியிற் காண்க. பி-ம்:—[1]சமைத்த. [2]இன்னன, சொற்கள் ()

31.—இந்திரசித்து 'இவள்காரணமாகவே போர் நிகழ்ந்ததனால் இவளைக் கொன்றுவிடுவேன்' என அநுமான் அச்சமடைதல்.

வந்திவள் காரண மாக மலைந்தீர்
எந்தை யிகழ்ந்தன னியானிவ ளாவி
சிந்துவ னென்று செறுத்துரை செய்தான்
அந்தமில் மாருதி அஞ்சி அயர்ந்தான்.

(இ-ள்.) '(நீங்கள்) இந்தச்சீதையின்பொருட்டே வந்து போர் புரிந்தீர்கள்; என்தந்தை உபேட்சையாக இருந்திட்டான்; யான் இவளுடைய ஆவியை யழிப்பேன்' என்று சினந்து சொன்னான், (இந்திரசித்து); நாசமில்லாதவனான [சிரஞ்சீவியான] அநுமான், —(அதுகேட்டு) அஞ்சி மனந்தளர்ந்தான்; (எ-று.) (2824)

32.—அநுமானது துயரநிலை.

கண்டவ ளேயிவ ளென்பது கண்டான்
விண்டது [1]போலுநம் வாழ்வென [2]வெந்தான்
கொண்டிடைத் தீர்வதொர் கோளறி வில்லான்
உண்டு யிரோவென [3]வாயு முலர்ந்தான்.

(இ-ள்.) '(நான் தூதுசென்றபோது) பார்த்தவளான சீதையே இவள்' என்று கண்டவனாய், (அநுமான்), 'நம்வாழ்வு ஒழிந்தது போலும்' என்று (மனம்) வெதும்பினான்; அவ்விடத்து(த் தான்) மேற்கொண்டு அத்துயரினின்று நீங்குவதான ஒருபாயம் அறியாத

வனுய், உயிர் உண்டோ இல்லையோ என்னுமாறு வாய் உலரப் பெற்றான்; (எ-று.)—பி-ம்:—[1]போயகம், போகநம். [2]வேர்த்தான். [3]நாவும். (2825)

33.—இதுமுதல் நான்குகவிகள் - அனுமான் இந்திரசித்தைப் புகழ்ந்து, 'சீதையைக்கொல்லவேண்டா' என்றதைத் தெரிவிக்கும்.

யாது மினிச்செயல் [1]வேறிலை [2]யென்றால்
நீதி யுரைப்பது [3]நேரென வோராக்
கோதில் [4]குலத்தொரு நீகுண மிக்காய்
மாதை [5]யொறுத்தல் வசைத்திற [6]மென்றான்.

(இ-ள்.) 'இப்போது (இவளை மீட்குமாறு) என்றால்(செய்யத் தக்க)செய்கை (இதைக்காட்டிலும்)வேறுஎதுவுமில்லை: (இவனுக்கு) நீதியுரைப்பதே நேர்மையான உபாயம்' என்று ஆராய்ந்து, (அநுமான்), 'குணம்மிக்கவனே! குற்றமற்றகுலத்துப்பிறந்த ஒப்பற்ற நீ மாதைக்கொல்வது பழிப்பின் கூறுபாட்டிற் சேரும்' என்றான்; (எ - று.)—பி-ம்:—[1]இல்லென. [2]என்று, எண்ணு [3]நீரென. [4]குணத்து. [5]வதைத்தல் [6]அன்றோ. (2826)

34. *நான்முக னுக்கொரு நால்வரின் வந்தாய்*
நூன்முக முற்றும் நுணங்க வுணர்ந்தாய்
பான்முக முற்ற பெரும்பழி யன்றோ
[1]மான்முக மற்றொரு மாதை [2]வதைத்தல்.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (நீ)—பிரமதேவனுக்கு ஒரு நாலாந்தலைமுறையிற் சேர்ந்தவனாக வந்துள்ளாய்: சாஸ்திரங்களின் முக்கியாமிசம்முழுவதையும் நுட்பமாக அறிந்துள்ளாய்; முகதாட்சிணியமில்லாமல் ஒருமாதைவதைத்தல், (செய்யத்தகாதவையென்று விலக்கப்பட்ட) பகுதிகளில் முதன்மைபெற்ற பெரும்பழிவிளைக்குஞ்செயலன்றோ! (எ-று.)— நூல்முகம்-நூலினிடமுமாம். முகமால்-முகதாட்சிணியம். இனி, மால் - புத்திமாறுபட்டமுமாம். பால் - பகுதி. முகம் - முதன்மை. [1]மான்முகமுற்று என்ற பாடத்திற்கு-முகத்தில் மான் போன்ற பார்வையைப் பொருந்தியுள்ள ஒரு மாதை என்க.பி-ம்:—[2]வதைத்தால். (2827)

35. *மண்குலை கின்றது [1]வான நடுங்கிக்*
கண்குலை கின்றது காணுதி கண்ணால்
எண்குலை கின்ற [2]இரங்கல் துறந்தாய்
பெண்கொலை [3]செய்கை பெரும்பழி யன்றோ.

(இ - ள்.) இரக்கத்தைக் கைவிட்டவனே! (நீ செய்யக்கருதுகின்ற இந்தவிபரீதச்செய்கையைக் கண்டு) பூமியிலுள்ளாரும் நடுங்குகின்றனர்: வானத்திலுள்ளாரும் நடுங்கி(த்தம்முடைய இமையா)க் கண்கள் நடுக்கமடையப் பெற்றுள்ளார்; (நீ இவற்றைக்) கண்ணாற்காண்பாய்; (என்) எண்ணமும் நடுங்குகிறது! பெண்கொலைசெய்வது பெரும்பழியாகுமல்லவோ? (எ-று.) —"கண்ணுக்கணிகலம் கண்ணோட்டம்" என்றவாறு கண்

படைத்ததற்குப்பயன் இரங்கத்தக்கதைக் கண்டவிடத்து இரக்கங் கொள்வதேயாதலால், நீ கண் படைத்தபயனைக்கொள்வா யென்பான் 'கண்ணுற் காணுதி' என்றான். கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டமாதலாம். மண், வானம்-ஆகுபெயர்கள். பி-ம்—[1]வானும். [2]நெஞ்சிலிரங்கப். [3]செய்தல். (2828)

36. என் [1]வயி னன்கினை [2]யேகுதி யென்றால்
[3]நின்வய மாமுல கியாவையு நீநின்
[4]அன்வய மேது மறிந்திலை யையா
புன்மை தொடங்கல் புகழ்க்[5]கழி வென்றான்.

(இ - ள்.) என்னிடத்திலிரக்கங்கொண்டு [என் பேச்சைக் கேட்டு இரக்கத்தைமேற்கொண்டு], (இச்செயலைவிட்டுச்) சென்றாயென்றால், (உன் குணத்தைக்கண்டு) உலகமெல்லாம் உன்வயத்ததாம்; நீ நின்மரபைச் சிறிதும் ஆராய்ந்துணர்ந்தாயில்லை: ஐயா! புல்லியதொழிலைத்தொடங்குவது புகழுக்கு அழிவாகும்என்றுகூறி முடித்தான், (அநுமான்); (எ - று.)—பி - ம்:—[1]வயம். [2]ஏகினை. [3]உன். [4]அன்மயமொன்றும். [5]அழிவன்றோ. (2829)

37.—இந்திரசித்தின் பதில்.

என்றனன் மாருதி இந்திர சித்தும்
ஒன்றுரை கேள்என தெந்தையு மூரும்
பொன்றுதல் தீரு மிதிற்புக ழுண்டே
நன்றுரை யென்றுபின் நக்குரை செய்தான்.

(இ - ள்.) என்று மாருதி கூறினான்; (பின்பு) இந்திரசித்தும், —(அவனை நோக்கி), 'எனது ஒருவார்த்தையைக் கேள்: என் தந்தையும் இவ்விலங்காபுரியும் அழிவதினின்று நீங்குவதற்குக் காரணமான இச்செயலைக் காட்டிலும் [சீதையை வதைப்பதைக் காட்டிலும்] புகழ்தருஞ்செயல் (வேறு) உண்டோ? நன்கு [ஆய்ந்து] சொல்வாய்' என்று சொல்லிச் சிரித்துப் பின்னுஞ் சொல்லலானான்; (எ - று.)—கீழ்ச்செய்யுளினீற்றில் 'புகழ்க்கழிவு' என்று அநுமான் கூறியதனால், தந்தையையும் ஊரையுங் காத்தலாற் புகழேவிளையுமென்று இந்திரசித்து மறுமாற்றங் கூறினான். இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை. (2830)

38.—இந்திரசித்து மாயாசீதையை வெட்டுவேனெனல்.

எந்தை [1]யுமிந்த விலங்கை யுளோரும்
[2]உய்ந்திட வானவ ரியாவரு மோடச்
சிந்துவென் வாளினி லென்று [3]செறுத்தான்
இந்திர சித்[4]தவ னின்ன விசைத்தான்.

(இ-ள்.) 'என்தந்தையும் இந்த இலங்கையிலுள்ளவரும் உய்ந்திடவும் வானவர்யாவரும் ஓடவும் (சீதையை) வாளினால் வெட்டுவேன்' என்று சொல்லிக் கோபித்தவனாய், இந்திரசித்து (பின்னும்) இவைகளைக் கூறலானான்; (எ-று.)—பி-ம்:—[1]உவந்தவிலங்கிழைமானை. [2]உந்துவன். [3]செயிர்த்தான். [4]இயலின்னனசொன்னான். "எந்தை யிகழ்ந்த விலங்கிழைதன்னைத், தந்தனனென்று தரும் புகழுண்டோ" என்று முன்னிரண்டடிகள் சிலபிரதிகளிலுள்ளன. (2831)

39.—இந்திரசித்து இனி அயோத்தியையும் எரிப்பேனெனல்.

போமி [1]னடாவினை போயது போலாம்
ஆமெனி [2]லின்று மயோத்தியை [3]யண்மிக்
காமி[4]ன தின்று கனற்கரி யாக
[5]வேமது [6]செய்தினி [7]மீள்குவெ னென்றான்.

(இ - ள்.) 'அடா! (குரங்குகாள்!) போங்கள்; (நீங்கள் வந்த காரியம் [சீதையை மீட்டலென்பது], (கைகூடாமற்) போய் விட்டது; இன்னும் (உங்களாற்) கூடுமானால், அயோத்தியைச் சேர்ந்து காத்துக்கொள்ளுங்கோள்: அந்நகரம் இன்று அனலெரித்த கரியாகும்படி வெந்திடுந்தொழிலைச்செய்து இப்போதுமீள்குவேன்' என்றான்; (எ - று.)—பி-ம்:—[1]எடாவிவள்போயினள். [2]இன்னம். [3]கண்ணிக். [4]அன்றுகளங், எடாக்கனலாய்க். [5]வேமிது, வேமின். [6]எடாவினி, மெய்யினி. [7]மீள்கிலதன்றே. (2832)

40.—இருகவிகள்-இராமனுக்குத் தம்பியர் தாய்மார்கள் என்கையம்புக்குத் தப்பாரெனல்.

தம்பியர்தம் மொடு [1]தாயரு மாயோர்
உம்பர் விலக்கிடி னும் [2]மினி யுய்யார்
வெம்பு கடுங்கனல் வீசிடு மென்கை
அம்புக [3]ளோடு [4]மவிந்தன ரம்மா.

(இ - ள்.) சினந்ததுபோல் தோன்றுகின்ற கொடியகனலைக் கக்குகின்ற என்கை அம்புகளினால் (இராமனது) தம்பியருடனே தாய்மாருமாயுள்ளவர் அவிந்தனராவர்: தேவர்கள் வந்துவிலக்கி னாலும் இனி அவர்கள் உயிருடனிருக்கமாட்டார்கள்; (எ - று.)— அம்மா-வியப்பிடைச்சொல்: தன்திறமையை வியந்தவாறு. பி-ம்:— [1]தாயொடும். [2]இவர். [3]ஒன்றும். [4]அறிந்திலரம்மா. (2833)

41. இப்பொழு தேகடி [1]தேகுவ னியானிப்
புட்பக மான [2]மதிற்புக நின்றேன்
தப்புவ ரேயவர் [3]சங்கை யிலாவென்
வெப்புறு [4]வாளிக ளின்று [5]விரைந்தால்.

(இ-ள்.) யான் இந்தப்புஷ்பகவிமானத்திற்புக்கு நின்றவனாய் இப்பொழுதேவிரைந்துசெல்வேன்; (அங்ஙனம்சென்று அயோத்தி சேர்ந்த) என்னுடைய வெப்பம் பொருந்தியனவான எண்ணிக்கை யற்ற [மிகப்பலவான] அம்புகள் (இராமனது தம்பியர்முதலி யோர் மீது) இப்போது விரைந்துபாய்ந்தால் அவர் உயிர் தப்புவ ரோ? (எ - று.)—என்றும் இந்திரசித்து கூறினான் என வருவித்து முடிக்க. சங்கை=சங்க்யா: வடசொல்: பி-ம்:—[1]எய்துவன். [2]மிசைப் பொலிகின்றேன், அதிற்கொடுகின்றேன். [3]தாமினியென்கை. [4]வாளிகளோடு, வாளிகளோடி. [5]விளைத்தால். (2834)

42.—இந்திரசித்து சீதையை இரக்கமின்றி வெட்டிப் புறப்பட்டிடுதல்.

ஆளுடை யாயரு ளாயரு ளாயென்று
[1]ஏழை வழங்குறு சொல்லி னிரங்கான்
வாளி னெறிந்தனன் மாகடல் போலும்
நீளுறு சேனையி னோடு நிமிர்த்தான்.

(இ - ள்.) '(என்னை) அடிமையாக வுடையவனே! இரங்குவாய், இரங்குவாய்' என்று பேதைமைக்குணத்தையுடையளான (மாயா) சீதை (அஞ்சி யேங்கிக் கதறி இரந்து) சொல்லுகின்ற சொல்லில் இரக்கங் கொள்ளாதவனாய், (இந்திரசித்து, அந்த மாயா சீதையை) வாளினால் வெட்டினான்; (வெட்டினபின்) பெரியகடல் போலும் நீட்சி பொருந்திய சேனையுடனே (புட்பகவிமானத்திலேறிப்) புறப்பட்டான்; (எ - று.)—பி - ம்:—[1] ஏழையவன்புறுசொல்லியிரங்க, ஏழைவணங்குறு... (2835)

43.—வடக்குநோக்கிப் புட்பகத்தின்மீது இந்திரசித்து செல்ல மாருதி கண்டு மூர்ச்சித்தல்.

தென்றிசை நின்று [1]வடாது திசைக்கண்
[2]பொன்றிகழ் புட்பக மேல்கொடு போனான்
ஒன்று முணர்ந்திலன் மாருதி [3]யுக்கான்
வென்றி நெடுங்கிரி போல விழுந்தான்.

(இ - ள்.) தெற்குத்திக்கிலிருந்து வடக்குத் திக்குக்காகப் பொன்னணி விளங்குகின்ற புட்பகத்தின் மேலேறிக்கொண்டு போனான், (இந்திரசித்து); மாருதி சிறிதும் உணர்ச்சியில்லாதவனாய் [மூர்ச்சித்து] உயிரொடுங்கி, வெற்றிபொருந்திய [மேம்பட்டிருந்த] நெடிய கிரிபோல விழுந்தான்; (எ - று.)—பி-ம்:—[1] வடாதிசையின்கட். [2] பொன்றிணி. [3] உட்கா. (2836)

44.—இந்திரசித்து நிகும்பலை சேர, அநுமான் துயர்மிக்கு நெஞ்சமொடுங்கிப் புலம்பத் தொடங்குதல்.

போயவன் மாறி நிகும்பலை புக்கான்
தூயவ [1]னெஞ்சு துயர்ந்து சுருண்டான்
[2]ஓய்வொடு [3]நெஞ்ச மொடுங்க வுலர்ந்தான்
ஏயன பன்னின னின்னன சொன்னான்.

(இ - ள்.) (அயோத்திமேற் செல்வதுபோற் காட்டிய) அந்த இந்திரசித்து, மாறிப்போய் நிகும்பலையிற் புகுந்தான்: பரிசுத்த குணமுடையவனாகிய அனுமான் நெஞ்சு துயர்கொண்டு சுருண்டவனாய், சோர்வுடனே மனமொடுங்க (நாக்கு) வறண்டுநின்று, மனத்துக்குத் தோன்றினவற்றைச் சொல்லத்தொடங்கினவனாய், இவ்வாறான வார்த்தைகளைச் சொல்லலானான்: (எ - று.)—அயோத்தி நோக்கி வடதிசையிற் செல்வதுபோலக்காட்டிய இந்திரசித்து, அநுமான் மூர்ச்சித்து வீழ்ந்தசமயத்தில் அங்குச் செல்வதினின்று மாறி, நிகும்பலையிற் சென்றானாக, மூர்ச்சித்த அநுமான் சிறிது அறிவுதோன்றப் பின்வருமாறு புலம்பலானான், பி-ம்:—[1] ஆவி தொலைந்து. [2] ஓய்வொரு, ஓய்வரு. [3] சாரியொருங்கவுணர்ந்தான். ()

வேறு.

45.—அனுமான் புலம்புதல்.

அன்னமே யென்னும் பெண்ணி னருங் [1]குலக் கலமே யென்னும்
என்னமே யென்னுந் தெய்வ மில்லையோ யாது மென்னும்

சின்னமே செய்யக் கண்டுந் தீவினை நெஞ்ச [2]மாவி
பின்னமே யாய தில்லை யென்னும்பே ராற்றல் பேர்ந்தான்.

(இ - ள்.) (அநுமான்,—தனது) பெரியவல்லமை குறையப் பெற்றவனாய், 'அன்னமே!' என்பான்: 'பெண்களின் அருங்குலத்திற்கு அணிகலம்போன்றவளே!' என்பான்; 'என் அம்மே!' என்பான்: 'தெய்வமென்பது சிறிதும் இல்லையோ!' என்பான்; '(வாளினால்) வெட்டுதலைச் செய்யக் கண்டும் (பாவியானஎனது) தீவினையையுடைய நெஞ்சமும் ஆவியும் பின்னம் ஆகவில்லையே!' என வருந்துவான்; (எ-று.)—[1]கலக்குலமே, கலக்கலமே. [2]பாவி. ()

46.—அனுமானுடைய பெருந்துயரச்செயல்.

எழுந்தவன் மேலே பாய வெண்ணும்பே [1]ரிடரிற் றள்ளி
விழுந்து[2]வெய் துயிர்த்து விம்மி வீங்கும்போய் மெலியும் வெந்தீக்
[3]கொழுந்துக வுயிர்க்கு மியாக்கை குலைவுறுந் [4]தலையே கொண்டுற்று
உழுந்தரை தன்னைப் [5]பின்னு மினையன வுரைப்ப தானான்.

(இ - ள்.) ஊற்றங்கொண்டெழுந்து, (அந்த இந்திரசித்து சென்றதாத்தோன்றிய) வானவழியே பாய்ந்துதொடர்ந்து செல்ல எண்ணுவான்: மிக்க துயரத்தினால் தள்ளப்பெற்று விழுந்து வெப்பமுறப் பெருமூச்சுவிட்டு விம்மி (ஏக்கம்) மிகுவான்; மிகவும் மெலிவுறுவான்: கொடிய நெருப்பின்சுவாலை வெளிப்படப் பெருமூச்சுவிடுவான்: உடம்பு நடுங்குவான்; (தன்) தலையைக்கொண்டு தரையில் உழுவதுபோல முட்டிக்கொள்வான்: பின்னும் இவ்வாறான வார்த்தைகளைச் சொல்லலானான்; (எ-று.)—அநுமான் வார்த்தைகளை மேல் ஏழுகவிகளிற் காணக. பி - ம்:—[1]இடரை. [2]வெய்துயிர்ப்பமேனி. [3]கொழுந்துகள். [4]தலைமேற். [5]பின்னை. ()

47.-ஏழுகவிகள்-அனுமான் இரங்கிக்கூறுதலைத் தெரிவிக்கும்.

முடிந்தது நந்த [1]மெண்ண [2]மூவுல கிற்குங் கங்குல்
விடிந்ததென் றிருந்தேன் மீள வெந்துய ரிருளின் வெள்ளம்
படிந்தது [3]வினையச் செய்கை [4]பயந்தது பாவி வாளால்
[5]தடிந்தனன் றிருவை [6]யந்தோ தவிர்ந்தது தரும மம்மா.

எட்டுக்கவிகள் - குளகம்.

(இ-ள்.) அந்தோ! 'நம்முடைய எண்ணம் முடிந்தது: மூவுலகிற்கும் இரவு விடிந்திட்டது' என்று எண்ணியிருந்தேன்; (விடிந்த இரவு) மீளக் கொடுந்துயரமாகிய இருட்பெருக்குப் படியப் பெற்றது; பாவி [இந்திரசித்து], வாளினால் திருவை [சீதாபிராட்டியை] வெட்டிவிட்டானே! அரக்கரின் வஞ்சச்செய்கை பலித்திட்டதே! தருமம் நீங்கிவிட்டதே!! (எ - று.)—அம்மா-இரக்கம்.

முடிந்தது நந்தமெண்ணம் என்பதற்கு-சீதையைச் சிறைமீட்கக் கருதி மனப்பால் குடித்த நம்மெண்ணம் இனி எக்காலத்

தும் நிறைவேற முடியாததாய் முடிந்திட்டது என்று கூறுதலும் ஒன்று: அன்றி, இது, எதிர்மறையிலக்கணை யெனினுமாம்: நம் எண்ணம் முடியவில்லை என்றபடி; சொல்வகையால் உடன்பாட்டுப் பொருளையும் கருத்துவகையால் எதிர்மறைப் பொருளையும் உணர்த்துவது, இதனிலக்கணம். மூவுலகிற்குங்கங்குல்விடிந்தது-அரக்கர் கொடுமையால் இருண்டுதோன்றிய உலகம்மூன்றும் இனி அத்துயர்நீங்கி வெட்டவெளிச்ச மாயிற்றென்றபடி. மூவுலகிற்குங் கங்குல் விடிந்த தென்றிருந்தேன் மீளவெந்துயரிருளின் வெள்ளம்படிந்தது-துன்ப இரவு நீங்கியதாகக் காட்டிய வெளிச்சம் இன்பப் பகலுக்கு முன்வரும் காலைவெளிச்சமென்றெண்ணி யிருந்தேன்: நான் எண்ணியதற்கு மாறாக, அந்த வெளிச்சம் துன்ப இரவுக்கு முன்நிற்கும் மாலை வெளிச்சமாக ஆய்விட்டதே! விடிந்தபின் பகல்வராமல் இரவே வந்ததே! என்று அனுமான் ஏங்கியபடி. சொல்லுகிற பொருளின் கருத்து வலியுறுதற்காக வினையை முன்னே சொல்வது ஒரு மரபு ஆதலால், ‘தவிர்ந்தது தருமம்’ என, வினை முன்னர்க் கூறப்பட்டது. பி-ம்:—[1]எண்ணும். [2]மூவுலகிற்குமுடி, மூவுலகிற்குமுடம். [3]வினையின் செய்கை. [4]பரந்தது. [5]தடிந்தது. [6]அன்றோ, என்றே. (2840)

48\. பெருஞ்சிறைக் கற்பி னாளைப் பெண்ணினைக் கண்ணிற்கொல்ல
[1]இருஞ்[2]சிற கற்ற புட்போ லியாதுமொன் றியற்ற லாற்றேன்
[3]இருஞ்சிறை [4]யழுந்து கின்றே னெம்பிரான் தேவி பட்ட
அருஞ்சிறை மீட்ட வண்ண மழகிது [5]பெரிது மம்மா.

(இ - ள்.) பெரியசிறையிலே வைக்கப்பட்டுள்ள கற்பைக்கொண்ட பெண்ணாகிய சீதாபிராட்டியை (அரக்கன்) கண்ணெதிரிலே கொல்ல, பெரியசிறகு அற்ற பறவைபோல யாதொருசெயலும் செய்யமுடியாது பெரியசிறையில் அழுந்துகின்றேன்: எமது தலைவனாகிய ஸ்ரீராமபிரானுடைய மனைவியார் அடைந்துள்ள அரிய சிறையினின்று நான் (அவரை) மீட்டவண்ணம் மிகவும் அழகியது! (எ - று.)—அம்மா-இரக்கக்குறிப்பு. துயரமானது ஒன்றுஞ்செய்ய வொட்டாது கட்டுப்படுத்துவதனால் அத்துயரில் அழுந்துகின்ற தன்னை ‘இருஞ்சிறை யழுந்துகின்றேன்’ என்கிறான். அருஞ்சிறை மீட்டவண்ணம் அழகிது-எதிர்மறையிலக்கணையான பிறகுறிப்பு. புள்-சடாயு என்னலாம். பி - ம்:—[1]அருஞ். [2]சிறையிற்ற, சிறையற்ற. [3]பருஞ். [4]அழுங்குகின்றேன். [5]பெரிதின்று. (2841)

49\. பாதக வரக்கன் தெய்வப் பத்தினி தவத்து ளாளைப்
பேதையைக் குலத்தின் வந்த [1]பிழைப்பிலா தாளைப் பெண்ணைச்
சீதையைத் திருவை[2]த் தீண்டிச் சிறைவைத்த தீயோன் சேயே
காதவுங் கண்டு நின்ற கருமமே [3]கருணைத் தம்மா.

(இ - ள்.) தெய்வப்பத்தினியும் தவத்திலிருப்பவளும் பேதைமைக் குணத்தைக்கொண்டவளும் (ஜநக) குலத்திற்பிறந்த குற்ற

மற்றவனுமான பெண்ணாகிய இலக்குமியின் திருவவதாரமான சீதையைத் தீண்டிச் சிறைவைத்த தீயோனான பாவியரக்கன் இராவணனது புத்திரனான இந்திரசித்தே (வாள்கொண்டு) வெட்டவும் நான்கண்டு நின்ற செயலே கருணையுடன் கூடியது! (எ - று.)

எல்லாவகையினாலும் மிகச்சிறந்த பேருத்தமியைப் பாவியின் மகன் என் கண்ணெதிரிலே வாளினால் வெட்டப் பார்த்திருந்தேனே! என்னுடைய கருணையற்ற தன்மையை யென்னென்பது! என்று தனக்குநேர்ந்த நிலையைவெறுத்துத் தன்செயலைப் பழித்துக் கூறுகின்றான் அநுமானென்க. 'கருணைத்து'-பிறகுறிப்பு. பி - ம்:—[1]அறம்பிழைத்திலாளைப். [2]நீண்டசில்லரித் தடங்கண்ணாளை, தீண்டிச்சிறைவைத்தவரக்கன்றனே. [3]பெருமைத்தம்மா, கருணைத்தாமால். (2842)

50\. கல்விக்கு நிமிர்ந்த கீர்த்திக் காகுத்தன் தூதனாகிச்
சொல்விக்க வந்து [1]போனே [2]னோய்வுறு துயர்செய் தாரை
வெல்விக்க [3]வந்து நின்னை மீட்பிக்க வன்று வெய்திற் [டேன்.
கொல்விக்க வந்தே[4]னென்றே கொடும்பழி[5]கூட்டிக்கொண்

(இ-ள்.) கல்வியிலே மிக்கபுகழ்பெற்ற ஸ்ரீராமதூதனாகி(அவர்) சொன்ன சொல்லைத் தெரிவிக்க வந்துபோன நான், (இப்போது) 'நோயைச் செய்கின்ற துயரத்தைச் செய்த அரக்கரை வெல்விக்க என்று வந்திட்டு, உன்னை மீட்பிக்க வரவில்லை: கொடுமையாகக் கொல்விக்கவந்தேன்' என்ற ஒருகொடிய பழியைக் கட்டிக்கொண்டேன்; (எ-று.)

சீதே! நான் செய்தசெயல் உன்னை எதிரிகள்கொல்வதற்கு உதவியாயிற்றேயன்றி, உன்னைமீட்பிக்க உதவவில்லையே! என்று இரங்கியவாறு. பி - ம்:—[1]போந்தேன். [2]ஆதலிற்றுயர்கள்செய்தேன், ஆயவித்துயர்செய்தாரை, ஒய்விலித்துயர்செய்தாரை. [3]அன்றுநுன்னை, வந்தேனுன்னை. [4]என்று, என்றோர், அன்றே. நன்றேஎன்றும் பிரிக்கலாம். [5]தேடிக். (2843)

51\. வஞ்சியை யெங்குங் [1]காணா துயிரினை மறந்தா னென்னச், செஞ்சிலை யுரவோன் [2]தேடித் திரிகின்றா னுள்ளந்தேற, அஞ்சொலாளிருந்தாள் கண்டே [3]னென்றயா னரக்கன் கொல்லத், துஞ்சினா[4]ளென்றுஞ் சொல்லத் தோன்றினேன் [5]தோற்ற மீதால்.

(இ-ள்.) வஞ்சிக்கொடிபோன்ற சீதாபிராட்டியை எங்குங் காணாமல் தன்னுயிரினை மறந்தவன்போன்று, செவ்வியவில்லில் வல்லவீரனும் தேடித் திரிகின்றவனுமான ஸ்ரீராமனுடைய மனம் (துயரம்நீங்கித்) தெளிவுபெறுமாறு 'அழகியசொல்லையுடையசீதை இருந்தாள்: கண்டேன்' என்று கூறினயான், அரக்கன் [இந்திரசித்து] கொல்ல இறந்திட்டாளென்று சொல்லவும் தோன்றினவனானேன்; என்பிறப்பு இவ்வாறாயிற்றே! (எ - று.)

'எந்தவாயினால் சீதை இலங்கையில் அசோகவனிகையில் இனிதிருக்கின்றாளென்று கூறி ஸ்ரீராமனைத் தேறச்செய்தேனோ,

அந்தவாயைக் கொண்டே அவள் அரக்கன்வாளால் வெட்டுண்டு இறந்திட்ட செய்தியைச்சொல்லித் துயரத்தில் அப்பிரானை மூழ்குவிக்கவும் வேண்டியவனானேனே! என்னுடைய இந்தப்பிறவி எற்றுக்கு?' என்றுவருந்திக் கூறுகின்றனன் அநுமானென்க. ஒன்றற்குக் கருவியானது அதற்குமாறான மற்றொன்றற்குங் கருவியாயினதாகக் கூறும் மற்றதற்காக்கலணி இங்குக் காணத்தக்கது: இதனை, வடநூலார் வ்யாகாதாலங்காரமென்பர். பி-ம்:—[1]காணுத் துயரிடை. [2]ஓடித். [3]என்றனன். [4]என்று. [5]தோற்றந்திர்ந்தேன்.()

52. அருங்கடல் கடந்திவ் வூரை [1]யள்ளெரி [2]மடுத்துவெள்ளக், கருங்கடல்[3]கட்டி மேருக் கடந்தொரு மருந்து காட்டிக், குரங்கினி [4]யுன்னோ டொப்பா ரில்லெனக் களிப்புக் கொண்டேன், பெருங்கடற் [5]கோட்டத் [6]தேய்வை யொத்ததென் னடிமைப் பெற்றி.

(இ - ள்.) (கடத்தற்கு) அரிய கடலைக் கடந்து இந்தவூரை அள்ளிக் கொள்கின்ற எரியால் உண்பித்து வெள்ளமாயுள்ள கரிய கடலைச் சேதுகட்டி, மேருவையுங்கடந்துசென்று ஒப்பற்ற மருத்து மலையை(க் கொண்டு)வந்து காட்டி (இறந்தோரையெல்லாம் உயிர்ப்பித்து), 'இனி உன்னோடு ஒப்பதாகிய குரங்குஇல்லை' என்று சொல்ல (அதனாற்) களிப்பைக் கொண்டேன்: என்னுடைய அடிமையின் தன்மை, பெரியகடலிலே தேய்த்துக்கரைத்தகோட்டத்தின் தேய்வைபோலப் பயனற்றதாயிற்றே! (எ-று.)

கடல்நீருக்குநறுமணமுண்டாகுமாறு கோட்டத்தைத் தேய்த்துக்கரைத்தால் அத்தேய்வை எங்ஙனம் பயனற்றதாகுமோ அவ்வாறே என்செயலெல்லாம் பயனற்றதாயிற்றேயென்று இரங்குகின்றான் அநுமானென்க. கோட்டம்-ஓர்வாசனைப்பண்டம். 'கடலிடைக்கோட்டம் தேய்த்துக் கழிவது' என்றார் முன் கும்பகருணன்வதைப்படலத்தும். பி-ம்:—[1]அனலெரி. [2]ஊட்டி. [3]தட்டு. [4]என்னோடு. [5]கோட்டந். [6]தேய்த்ததாயது,தேய்வையாயது. ()

53. விண்டுநின் றாக்கை [1]சிந்தப் புல்லுயிர் விட்டி லாதேன், கொண்டுநின் றானைக் கொல்லக் கூசினே னெதிரே கொல்லக், கண்டு [2]நின் றேன்மற் றின்னுங் கைகளாற் கனிகள் வெவ்வேறு, உண்டுநின் றுய்ய வல்லே னெளியனோ வொருவ னுள்ளேன்.

(இ - ள்.) விண்டுநின்று ஆக்கையினின்று சிந்துமாறு அற்பமானஉயிரைவிட்டிலாத நான், (உன்னைக்கொல்லுதற்குப் பற்றிக்) கொண்டுநின்றவனான இந்திரசித்துவைக் கொல்லப் பின்வாங்கினேனே! (என் கண்ணின்) எதிரில்தானே (அவன் உன்னைக்) கொல்லவும் பார்த்துநின்றேனே! (என் தன்மை வெகு நன்றாயிருந்தது!) இன்னுங் கைகளினாற்பறித்து வெவ்வேறு கனிகளைப் புசித்துநின்று உயிர்பிழைத்திருக்கவல்லேன்: (நான்) சாமானியனோ? தனிப்பட்டவனாக உள்ளவனன்றோ? (எ-று.)

என்னைப்போல் இப்படி இழிவுபட உயிர்பிழைத்திருப்பவர் எவரும் இராரென்று தன்னைப் பழித்துக்கூறியவாறு. பி - ம்:—

[1]சிந்திப். [2]நின்றேனே நன்றென்கையினிற் கலத்தின வெண்சோறு, நின்றேனையென்னென்கைகளாற்கலத்தின் வெண்சோறு, நின்றேனே நன்றென்கையினிற்... (2846)

54.—இரங்கிய அநுமான் தான் இனிச்செய்யவேண்டுவது பற்றிக் கருதுதல்.

என்னநின் றிரங்கிக் கள்வ னயோத்திமே லெழுவே னென்று
[1]சொன்னது முண்டு போன சுவடுண்டு தொடர்ந்து செல்லின்
மன்னனிங் குற்ற தன்மை [2]யுணர்கிலன் வருவ [3]தோரேன்
பின்[4]னினி முடிப்ப தியாதென் றிரங்கினா னுணர்வு [5]பெற்றான்.

(இ - ள்.) என்று (வாய்) சொல்லிநின்று இரங்கி, (பின்னும் அநுமான்), 'வஞ்சகக்குணமுடையனான இந்திரசித்து அயோத்திமேற்செல்வேனென்று சொன்னதுஉண்டு: போன அடையாளமும் உண்டு: (நான் அவனைத்) தொடர்ந்துசென்றால், (நமது) மன்னவனாகிய ஸ்ரீராமன் இங்குநிகழ்ந்ததை உணராதவனாவான்: (அதனால்) விளைவது (இன்னதென்று) அறியேன்: பின்பு இனிச் செய்து முடிக்கவேண்டுவது யாது?' என்று இரங்கினவனாய், (அது குறித்து ஒருவாறு) உணர்ச்சியையடைந்தான்; (எ - று.)

செய்வது இன்னது என்பதையுணராது கலங்கிய அநுமான் பின்பு ஒரு முடிவுக்கு வந்தானென்க. அநுமான் முடிவுக்கு வந்தது இன்னது என்பது மேற்கவியிற் பெறப்படும். இங்கன் தன்னை நொந்த அநுமான் தன்னுயிரை மாய்க்க எண்ணியபோது இந்திரசித்து அயோத்திநோக்கிச்சென்றது நினைவுக்குவரச் சாகும் எண்ணத்தைத்தவிர்ந்து 'கள்வனயோத்திமே லெழுவேனென்று சொன்னதுமுண்டு என்பது முதலியவாகக் கூறினான்' என்று கொள்வாருமுளர். பி - ம்:—[1]சொன்னசொல். [2]உணர்ந்திலன். [3]ஓரான். [4]இது. [5]பேர்ந்தான். (2847)

55.—அநுமான் ஒருதுணிவுகொண்டு ஸ்ரீராமனை யடைதல்.

உற்றதை யுணர்த்திப் பின்னை யுலகுடை யொருவ னோடும்
இற்றறி [1]னிற்று மாள்வ னன்றெனி [2]னென்னை மெண்ணிச்
சொற்றது செய்வன் வேறோர் [3]பிறிதிலென் [4]துணிவி தென்னாப்
பொற்றடந் தோளான் வீரன் பொன்னடி மருங்கிற் போனான்.

(இ - ள்.) 'நிகழ்ந்ததை (ஸ்ரீராமனுக்குத்) தெரிவித்துவிட்டு, பின்பு (அப்பிரான்) உயிரை ஒழிந்திடின், உலகுடைய ஒருவனை அவனோடும் உயிரிற்று மாண்டொழிவேன்; (அவன்) அப்படிச் செய்யாவிட்டால்,(அப்பிரானுடைய)எண்ணத்தைக்கருதி (அவன்) சொன்னதைச் செய்வேன்: வேறே பிறிது செய்யவேண்டுவது இல்லேன்: (என்)துணிவுஇதுவே' என்று சொல்லி, அழகிய பெரிய தோளையுடைய அநுமான் ஸ்ரீராமனுடைய அழகிய திருவடிவாரத்தை நோக்கிப்போனான்; (எ-று.)—பி - ம்:—[1]இன்று. [2]என்னையேவின். [3]பிறிதிலை. [4]துணிவது, துணிவிற்று. (2848)

56.—ஸ்ரீராமனைச்சார்ந்த அனுமான் துயர்மிகுதியாற் கீழ்விழுதல்.

சிங்கவே றனைய வீரன் செறிகழற் பாதஞ் சேர்ந்தான்
[1] அங்கமு மனமுங் கண்ணு மாவியு மலக்க னுற்றான்
பொங்கிய பொருமல் வீங்கி [2] யுயிர்ப்பொடு புரத்தைப் போர்ப்ப
வெங்கணீ ரருவி [3] சோர மால்வரை யென்ன வீழ்ந்தான்.

(இ - ள்.) (சென்ற அனுமான்), உடம்பும் மனமும் கண்ணும் ஆவியும் (பதைக்க) வருத்தமடைந்தவனாகி, பொங்கியெழுந்த துய்ரம்மிகுந்து பெருமூச்சுடனே உடம்பெங்கும் கவிந்துகொள்ள, ஆண்சிங்கத்தையொத்த வீரனுடைய [ஸ்ரீராமனுடைய] நெருங்கிய வீரக்கழலையணிந்தபாதத்தைச் சேர்ந்தவனாகிக் கண்களிலிருந்து வெவ்விய நீரருவிபெருகப் பெரியமலைபோல விழுந்தான்; (எ - று.) —பி - ம்:—[1] அங்கவன். [2] உயிர்ப்பொடும்புறத்தை. [3] சிந்த. (2849)

57.—பெருந்துயருடனே ஸ்ரீராமனுக்கு அனுமான் செய்தி தெரிவித்தல்.

வீழ்ந்தவன் றன்னை வீரன் விளைந்தது விளம்பு கென்னாத்
[1] தாழ்ந்திரு தடக்கை பற்றி யெடுக்கவுந் தரிக்கி லாதான்
[2] ஆழ்ந்தெழு துன்பத் தாளை [3] யரக்கனின் றயில்கொள் வாளால்
போழ்ந்தன [4] னென்னக் கூறிப் புரண்டனன் பொருமு கின்றான்.

(இ - ள்.) (பாதத்தில்) வீழ்ந்த அநுமானை ஸ்ரீராமன் 'விளைந்ததைச் சொல்க' என்று சொல்லியவண்ணம் குனிந்து இரண்டு பெரியகைகளைப் பற்றி யெடுக்கவும், (அவ்வநுமான் துன்பமேலீட்டால்) நிலைகொள்ளாதவனாகி[தள்ளாடி], 'ஆழ்ந்தெழுகின்ற துன்பத்தையுடையவளான சீதையை இந்திரசித்து இன்று கூரியவாட்படையாற்பிளந்திட்டான்' என்றுகூறிப் புரண்டவனாய் விம்மியழுபவனானான்; (எ - று.)—பி - ம்:—[1] தாழ்ந்தனன். [2] ஆழ்ந்தழி, ஆழ்ந்தழு. [3] அரக்கன் றன். [4] கூறுயென்னப். (2850)

58.—ஸ்ரீராமனுடைய துயரம்.

துடித்திலை னுயிர்ப்பு [1] மில்ல னிமைத்திலன் றுள்ளிக் கண்ணீர்
பொடித்திலை னியாது மொன்றும் புகன்றிலன் பொருமி [2] யுள்ளம்
வெடித்திலன் விம்மிப் பாரின் வீழ்ந்திலன் [3] வியர்த்தா னல்லன்
[4] அடுத்துள துன்ப மியாவு மறிந்தில ரமர ரேயும்.

(இ - ள்.) (அதுகேட்ட ஸ்ரீராமன்),—உடம்பு அசைத்தானுமில்லை; மூச்சை யுடையவனாகவுமில்லை: கண்ணிமைத்தானுமில்லை; கண்ணீர்த்துளியைப் பெருக்கவுமில்லை; ஏது ஒருசொல்லும் சொல்லவுமில்லை; மனம் துயர்மிகுந்து வெடிக்கப்பெற்றானுமில்லை: புலம்பிப் பாரில் வீழ்ந்தானுமில்லை; (உடம்பு) வெயர்த்தானுமில்லை; (அப்பிரானுக்கு) மேநேர்ந்துள்ள துன்பம்முழுவதையும் அமரரும் அறிந்தாரில்லை; (எ - று.)

ஸ்ரீராமன் அச்செய்தியைக்கேட்டதும் உலகத்தவர் சாதாரணமாகத் துன்பத்தைக்காட்டுவதுபோலக் கண்ணீர்துளித்தல் முதலியனசெய்யாமல் பேச்சுமூச்சற்றுத் திகைத்துச் சித்திரம் போல் நின்றானென்பதாம், இச்செய்யுள், அநுமானது துன்ப

நிலையைக்காட்டுமென்று கொள்வாருமுளர். துள்ளி - துளிஎன்பதன் விரித்தல். துள்ளியென்பதை வினையெச்சமாகக் கொள்ளலுமாம். இச்செய்யுளினீற்றடி - "அன்பென்பதொன்றின் றன்மையமரரு மறிந்ததன்றால்" என்ற மருத்துமலைப்படலத்துச் செய்யுளடியை நினைப்பூட்டுகின்றது. பி - ம்:—[1] இல்லையிமைக்கிலன். [2] ஒன்றும். [3] விளிந்தான். [4] அடுத்துளான் றன்னையொன்றுமறிந்திலனமலனேயும். (2851)

59.—அநுமான் சொல்லக் கேட்டதும் வானரர் பெருந்துயர் கொண்டு ஸ்ரீராமனுடைய தாளில் விழுதல்.

[1] சொற்றது [2] கேட்ட லோடுந் துணுக்குற வுணர்வு சோர
நற்பெரு வாடை யுற்ற மரங்களி னடுக்க மெய்தாக்
கற்பக மனைய வள்ளல் கருங்கழற் கமலக் [3] கான்மேல்
வெற்பின மென்ன வீழ்ந்தார் வானர வீர ரெல்லாம்.

(இ - ள்.) (அநுமான்) சொல்லியசொல்லைக் கேட்டதும், வானர வீரரெல்லார்தாமும்,—(நெஞ்சம்) திடுக்கிட, உணர்வுதளர, மிக்க பெரியவாடைக்காற்றிலடிபட்ட மரங்களைப்போல் நடுக்கமடைந்து, கற்பகமரத்தையொத்த [வேண்டுவார்க்கு வேண்டிய வரத்தைக் கொடுக்கவல்ல] உதாரனை ஸ்ரீராமனுடைய பெரிய வீரக்கழலை யணிந்த கமல பாதங்களின்மேல் மலையினம்போல விழுந்தார்; (எ - று.)—மிகவுயர்ந்தாரை மிகத்தாழ்ந்தவர் துயரம் விசாரிக்கும் முறை இது. பி - ம்:—[1] சொற்பதம். [2] கேட்டபோது. [3] தாள். (2852)

60.—ஸ்ரீராமன் மூர்ச்சையடைதல்.

சித்திரத் தன்மை யுற்ற சேவக னுணர்வு தீர்ந்தான்
[1] மித்திரர் வதன நோக்கா னிளையவன் வினவப் பேசான்
பித்தரு மிறைபொ றாத பேரபி மான மென்னும்
சத்திர மார்பிற் றைக்க வுயிரில னென்னச் [2] சாய்ந்தான்.

(இ - ள்.) சித்திரத்தன்மையை யடைந்திட்ட பெருவீரனான ஸ்ரீராமன், (பிறகு) உணர்வு தீரப்பெற்றவனாய், (தாளில் வீழ்ந்த) நண்பர்முகத்தைப் பாராமலும், (துயரத்தைப்போக்கித் தேறுதல் பெறும் உணர்வையுண்டாக்கும் பொருட்டு) இளையபெருமாள் வினவவும் பேசாமலும், பித்தர்களும் சிறிதும் பொறுக்கமாட்டாத பெரிய அபிமானமென்கின்ற படைக்கலம் மார்பில்தைக்க, உயிரற்றவனென்று கருதும்படி [மூர்ச்சித்துச்] சாய்ந்திட்டான்; (எ - று.)—சித்திரத்தன்மை யுற்றமை 58-ஆஞ் செய்யுளிற் கூறப்பட்டது. சத்திரம் = ஶஸ்த்ரம்: வடசொல். அபிமானமென்பது பித்தர்களாலும் வெளிக்காட்டாது உள்ளே தாங்குதற்குரியதன்றென்பார் 'பித்தருமிறைபொறாத அபிமானம்' என்றார். இங்கு, அபிமானம் - சீதைபால்வைத்த பேரன்பு. பி-ம்:—[1] வித்தகர்வதனநோக்கி. [2] சார்ந்தான். (2853)

61.—இலக்குமணனும் துயரத்தால் தரையில் விழுதல்.

நாயகன் றன்மை கண்டுந் [1] தமக்குற்ற நாணம் பார்த்தும்
[2] ஆயின [3] கரும மீன வழிவுற்ற வதனைப் பார்த்தும்

வாயொடு மனமுங் கண்ணு மியாக்கையு [4]மயர்ந்து சாம்பித்
தாயினை யிழந்த கன்றின் தம்பியுந் [5]தலத்த னானான்.

(இ - ள்.) (தமது) தலைவனான ஸ்ரீராமனது தன்மையைப் பார்த்தும், தமக்கு நேரிட்ட வெள்கத்தகுந்த நிலையைக் கண்டும், (இதுவரையிற்) கைகூடிவந்த செயல் மீண்டும் அழிவுற்ற அதனைப் பார்த்தும், இளையபெருமாளும் வாயுடனே மனமும் கண்ணும் உடலும் என்ற இவற்றின் செயல்கள் ஒடுங்கி யோய்ந்து சாய்ந்து, தாயையிழந்த கன்றுபோலத் தரையில் விழுந்துவிடப்ப வனானான்; (எ - று.)—ஆயினும், அறிவுமுழுதும் அற்றானில்லை யென்க. பி-ம்:—[1]தனக்கு. [2]ஆயன. [3]தருமம் [4]மறந்து. [5]தலத்தின்.

62.—இந்திரசித்து சீதாபிராட்டியைக் கொன்றிருக்கலா மென்று விபீடணன் கருதுதல்

தொல்லைய துணரத் தக்க வீடணன் துளக்க முற்றான்
எல்லையில் [1]துன்ப மூன்ற இடையொன் றுந் தெரிக்கி லாதான்
[2]வெல்லவு மரிது நாச மிவள்தனால் விளைந்த தென்னாக்
[3]கொல்வதும் அடுக்கு மென்று மனத்தினோ ரையங் கொண்டான்.

(இ - ள்.) நிகழ்ந்துபோனவைகளை யுணரத்தக்க விபீடணன், (அவ்விஷயத்தைக்கேட்டு) மனக்கலக்கங் கொண்டவனாய், அள வற்ற துன்பம் மனத்திற் பொருந்தியதனால் நிகழ்ந்ததன்மையைச் சிறிதும் ஆராய்ந்தறியமாட்டாதவனாகி, '(ஸ்ரீராமலக்ஷ்மணரை) வெல்வதும் அரிது: இவளால் நாசம் விளைந்தது' என்றுகருதி (இந்திரசித்து சீதையைக்) கொல்லுதலும் தகும் என்று (தன்மனத் திலே) ஓரையங்கொண்டான்; (எ - று.)—தொல்லையது உணரத் தக்க விபீடணனும் துளக்கமுற்றதற்குக் காரணம், எல்லையில் லாத் துன்பம் உள்ளத்து ஊன்றியமை யென்க. பி - ம்:—[1]துன்ப மூற்ற, துன்பமுற்றும். [2]வெல்லுமது, வெல்லுமிது. [3]கொல்லவும்.

63.—விபீடணனது சைத்யோபசாரத்தால் ஸ்ரீராமன் மூர்ச்சைதெளிதல்.

சீதநீர் முகத்தி னப்பிச் சேவகன் மேனி தீண்டிப்
போதம்வந் தெய்தற் பால யாவையும் புரிந்து [1]பொற்பூம்
பாதமுங் [2]கையு மெய்யும் பற்றினன் வருட லோடும்
வேதமுங் காணு வள்ளல் விழித்தனன் [3]கண்ணை மெல்ல.

(இ - ள்.) குளிர்ந்தநீரை (இராமனுடைய) முகத்திலே தெளித்து, வீரனான ஸ்ரீராமனது உடம்பைப் பரிசித்துப் (பின்னும்) பிரஜ்ஞை வருதற்குஉரிய எவற்றையும் செய்து, (அப்பிரானது) அழகிய தாமரைமலர்போன்ற கால்களையும் கையையும் உடலையும் (மெல்லப்) பிடித்தான்; (அங்ஙனம்) பிடித்தவளவில், வேதங்களி னாலுங் காணமுடியாத மகோதாரனான ஸ்ரீராமன், மெல்ல(த் தன்) கண்ணை விழித்துப்பார்த்தான்; (எ - று.)—விபீடணன் தன் ஐயத்தைப் பிறகு தீர்த்துக்கொள்ளலாமென்று கொண்டு, அப் போது செய்யக்கடவ சைத்தியோபசாரத்தைச் செய்யலானா னென்க. பி - ம்:—[1]பூம்பொற், பொன்போற். [2]மெய்யுங்கையும். [3]உயிர்ப்புவீங்க, விழியைமெல்ல. (2856)

64.—இலக்குமணன் ஸ்ரீராமனைத் தேற்றுமாறு கூறத்தொடங்குதல்.

ஊற்றுவார் [1]கண்ணீ ரோடு முள்ளழிந் துற்ற தெண்ணி
[2]ஆற்றுவா னல்ல னாகி [3]யயர்கின்ற னெனினு மையன்
மாற்றுவா னல்லன் மான முயிருக [4]வருந்து மென்னாத்
தேற்றுவா னினைந்து தம்பி யிவையிவை செப்ப லுற்றான்.

(இ - ள்.) இளையபெருமாள்,—'ஊற்றுப்போல் பெருகுகின்ற கண்ணீருடனே மனமழிந்து, நேர்ந்ததையறிந்து, ஆற்றமுடியாமல் மிகவும் வருந்துகின்றவனாயிருந்தும், ஸ்ரீராமன், (எதிரியைப்)போக்கான்: மானத்தினால் உயிர்சிந்த வருந்துகின்றான்' என்றெண்ணி (அவனைத்) தேற்றக் கருதி, இவ்வாறான வார்த்தைகளைக் கூறலானான்; (எ - று.) மானம்-பகைவர்கைப்படும்படி மனைவியைவிட்டிட்டு அவளை மீட்கமுடியாமற் போயிற்றேயென்பதனாலானது. பி-ம்:—[1]கண்ணினோடும். [2]ஆற்றுவானென்ன. [3]அயர்கின்றான்போலும். [4]வந்தது. (2857)

65.—இதுமுதல் ஏழுகவிகள்-துயரத்தினால்தேம்பியிராது பகைஞரை ஒழிப்பதே கடமை யென்று இலக்குமணன் கூறுதலைத் தெரிவிக்கும்.

முடியுநாள் தானே வந்து [1]முற்றினாற் றுன்ப முந்நீர்
படியுமாஞ் சிறியோர் தன்மை நினகிது பழியிற் றாமால்
குடியுமமா சுண்ட தென்னி னறத்தொடு முலகைக் [2]கொன்று
கடியுமா றன்றிச் சோர்ந்து [3]கழிதியோ கருத்தி லார்போல்

(இ-ள்.) சிறியோரின்தன்மை, (ஒன்றற்கு) முடிவுகாலம்(ஊழ்விதிப்படி) தானேவந்து நேரிட்டால், துன்பமாகிய கடலில் மூழ்கிக்கிடப்பதேயாகும்: (நீ அத்தொழிலை மேற்கொள்கின்ற) இது, உனக்குப் பழியையுண்டாக்கும்: (நமது) குடியும் மாசை யடைந்திட்டதென்னில், தருமநெறி தவறாமல் உலகை [எதிராளியாயிருப்பவரை]க் கொன்று கடிகின்ற வகையினாலல்லாமல், உறுதியான எண்ணமில்லார்போல, (உயிர்) சோர்ந்து இறப்பாயோ?

ஊழ்வினையால் ஏதேனும் தீங்கு நேரிடுவதாயின் அப்போதும் குடிப்பழி நேராதவாறு தருமமுறையாக எதிரியைக்கொன்று கடியவேண்டுவதே செய்யவேண்டிய கடமையன்றி, சோர்ந்துகிடத்தல் முறையன்றென்றவாறு. முடியுநாள் வந்ததனால்,சீதை மாற்றானால் உயிர்முடிந்தாள்;அங்ஙனம் சீதையைக் கொல்லும்படிவிட்டதனால், நம்குடி மாசுண்ணும்: அதனை ஒருவகையாகத் தீர்ப்பது, எதிரியாயினாரைக் கொல்லுவதனாலன்றிச் சோர்ந்திருப்பதனாலன்றென்றான், இலக்குவன். உலகு-சத்துருலோகம்; சத்துருவாயுள்ள ஜனம். அறத்தொடும் உலகைக்கொன்று என்பதற்கு - அறத்துடனே உலகையுங் கொன்று என்று கொள்ளுதலும்ஒன்று: மேல் 67-ஆஞ் செய்யுளில், 'நல்நெறியில்நடக்கும் நமக்குத் தீமைநேர, தீநெறியோர்க்கு வெற்றி நேருமாயின், வேதத்தின்கொள்கைதானென்? இம்மூன்றுலகையும் எரிமடுப்போம்' என்று கூறுவதனாலும், வானமீசற்றிலும் இவ்வாறான கருத்துக்கள், இந்தச்

சந்தர்ப்பத்து வந்துள்ளன. பி-ம்:—[1]முற்றுநாட் டுன்பமுன்னிப். [2]கொண்டு. [3]கழியுமோ. (2858)

66. தையலைத் துணையி லாளைத் தவத்தியைத் தருமக் கற்பின்
தெய்வதந் தன்னை மற்றுன் தேவியைத் திருவைத் தீண்டி
வெய்யவன் கொன்று [1]னென்றால் வேதனை [2]யுழப்ப தின்னம்
உய்யவோ [3]கருணை யாலோ தருமத்தோ டுறவு முண்டோ.

(இ-ள்.) பெண்ணும் உதவியற்றவளும் தவத்தின்சின்னத்தை யுடையவளும் தருமந்தவறாத கற்புக்குத் தெய்வம்போன்றவளும் மற்றும் உன்தேவியுமான சீதாபிராட்டியைப் பரிசித்துக் கொடியவனான இந்திரசித்துகொன்றானென்றால், வருத்தங்கொண்டு (இன்னும்) வருந்துவது, பின்னும் உய்வதற்காகவோ? கருணையாலோ? தருமத்துடன் தொடர்புஉள்ளதாகுமோ? (எ - று.)

உன்மனைவியை இந்திரசித்து கொன்றால் பெரும்பாவியராகிய அவ்வரக்கரைக் கொன்றொழித்துத் தருமத்தை நாட்டுவதே முறையன்றி வருந்திக்கிடப்பது, தருமத்தை நடப்பிக்க வேண்டுமென்பதற்கும் சேராது: கருணையும் ஆகாது: நாம் உய்வதற்கும்வழியாகாதென்றவாறு. நல்லோர்க்கு வருத்தம் நிகழும்போது காட்டும் மனவிரக்கமே கருணை யெனப்படு மென்க. 'தையல்' என்றதனால் பொருதற்குஉற்ற ஆண்மையில்லாதவளென்றும், 'துணையிலாளை' என்றதனால் இராவணன் வஞ்சகச்செயலைத் தடுக்க உதவுபவரில்லை யென்றும் குறிப்பித்தபடி. தருமத்தோடு உறவு உண்டோ என்பதற்கு-இந்த அதிபாதகச்செயலைத் தடுக்கத் தவறிவிட்ட நமக்கு தருமத்தோடு உறவில்லை என்று கொள்ளலுமாம்: இக்கருத்து - "அரக்கரென...வேதத்தின் கொள்கைதானென்? இருக்குமிதென்றோ மிம்மூன்றுலகையு மெரிமடாதே" என்று இங்ஙன் மேல்வருவதற்கு ஏற்கும். பி - ம்:—[1]என்று. [2]உழப்பதெல்லாம். [3]எளிமைதானோ, எளிமையாலோ. (2859)

67. அரக்கரென் னமரர் [1]தாமெ னந்தணர் [2]தாமெ னந்தக்
குருக்களென் முனிவர் [1]தாமென் வேதத்தின் கொள்கைதா
[3]செருக்கினர் வலிய ராகி நெறிநின்றார் சிதைவ [4]ராகின் [னென்
[5]இருக்குமி தென்றோ மிம்மூன் றுலகையு மெரிம டாதே.

(இ-ள்.) அரக்கரென்ன, அமரர்தாமென்ன, அந்தணர்தாம் என்ன, அந்தக்குருக்களென்ன, முனிவர்தாம்என்ன, வேதத்தின் கொள்கைதான்என்ன, (நாம் எதையும் கவனிக்கவேண்டுவதில்லை); செருக்குக்கொண்டவர் வலியவராகி நல்வழியில்நின்றவர் அழிவரானால், (அப்போது) இம்மூன்றுலகத்தையும் அக்கினிக்கு இரையாக்காமல், வெறுமனேயிருப்பது என்னவாகும்? (எ - று.)

செருக்கினர் வலியராகிநல்நெறியினராகிய நாம்சிதைவதென்று ஏற்படுமானால், அப்போது 'நமக்குவேண்டியவர் வேண்டாதவர்' என்ற எதனையுங் கருதாமல், இம்மூவுலகத்தையும் அழித்தொழிக்க வேண்டுவதே செய்யவேண்டிய கடமை யென்றவாறு. பி - ம்:—[1]தானென். [2]இயக்கர்தாமென், தானெனந்தங். [3]செருக்கினர். [4]என்றோ, என்றால், என்னின். [5]இருக்குமதென்றோ. (2860)

68. முழுவதே [1]மூலக மின்ன முறைமுறை செய்கை மேன்மூண்டு
[2]எழுவதே யமர ரின்ன [3]மிருப்பதே யறமுண் டென்று
[4]தொழுவதே [5]மேக மாரி சொரிவதே சோர்ந்து நாம்வீழ்ந்து
[6]அழுவதே நன்று நந்தம் விற்றொழி லாற்ற லம்மா.

(இ - ள்.) (நன்னெறியிற்செல்லும் நாம் சீதையைக் கொன்று அரக்கர் வெற்றியடைந்த) இன்னும் ஏழுலகமுழுவதும் முறையாக முறைசெய்கைமேல் முயன்றுவிருத்தியாகுவதே! அமரர்கள் இன்னும் இருப்பதே! அறம் உள்ளதென்று தொழுவதே! மேகம் மாரியைச் சொரிவதே! நாம் சோர்ந்துவீழ்ந்து அழுவதே! நம்முடையவிற்றொழிலின்வல்லமை நன்றாயுள்ளது!! (எ - று.)

'எழுவதே' முதலியவற்றிலுள்ள வினைப்பொருளைக்கொண்ட ஏகாரம், அவ்வச்செய்கை இனி தக்கதன்று என்ற பொருளைக் குறிப்பிக்கும். நமக்கு இவ்வாறு தீங்கு நேர்ந்தபின்பு, வில்லாளிகளெனப் பெயர்வைத்துக் கொண்டுள்ள நாம் ஏழுலகம் முறைசெய்கைமேல் மூண்டெழுதல் முதலியன நிகழாதபடி எல்லாவற்றையும் நாசஞ்செய்யவேண்டுமென்றவாறு. பி - ம்:—[1]உலகோடு. [2]எழுவதென். [3]இருப்பதென். [4]தொழுவதென். [5]மோகவாரிசொரிவதே, மோகவாரிசுரப்பதென். [6]அழுவதென். (2861)

69. புக்கிவ்வூ ரிமைப்பின் முன்னம் பொடிபடுத் [1]தரக்கன் போன
திக்கெலாஞ் சுட்டு வானோ [2]ருலகெலாந் தீய்த்துத் [3]தீர்க்கத்
தக்கநாம் [4]கண்ணீ ராற்றித் தலைசுமந் [5]திருகை நாற்றித்
துக்க[6]மே யுழப்ப மென்றால் [7]சிறுமையாய்த் தோன்று மன்றே.

(இ - ள்.) புகுந்து இந்த இலங்கையரை இமைப்பளவிற்குள் பொடியாக்கி, அரக்கன்சென்ற திக்கையெல்லாம் எரித்து, வானோருலகத்தையெல்லாம் தீக்கு இரையாக்கி ஒழிக்கத்தக்க நாம் கண்ணீரைப் பெருக்கி, தலையைச் சுமந்தவண்ணம் இருகை தொய்யத் துக்கத்தை அநுபவிப்போமென்றால், அது சிறுமையாகக் காணப்படுமல்லவோ? (எ - று.)

இனி, தலை நாற்றி இருகை சுமந்து என்றுமாறலுமாம். இருகைகளையும் தலைமீது வைக்கும்போது அவ்விருகையையும் தலை சுமப்பதாகும். தலைநாற்றிக் கையைத் தலைமேல்வைத்துக் கொள்ளுதல், துயரக்குறியாம். நாம் துயரக்குறியைக் காட்டிக்கொண்டிருந்தால், பார்ப்பவர் நம்மை எளிமைப்படக் கருதுவரென்றபடி. பி - ம்:—[1]அரக்கர். [2]உலகையுந்தீர்த்து. [3]தீரத். [4]கைகளூற்றித். [5]இருந்துதாவித், இருந்துதாழ்வில். [6]ஆயுழைப்பதெல்லாம். [7]சிறுமையிற். (2862)

70. அங்குமிவ் வறமே நோக்கி யரசிழந் தடவி யெய்தி
மங்கையை வஞ்சன் பற்ற வரம்பழி யாது வாழ்ந்தேம்
இங்குமித் துன்ப மெய்தி யிருத்துமே லெளிமை நோக்கிப்
பொங்கு[1]வன் றனையிற் பூட்டி யாட்செயப் [2]புகல்வ ரன்றே.

(இ - ள்.) அவ்விடத்தும் [அயோத்தியிலும்] இந்தத்தருமத்தையே பார்த்து இராச்சியத்தையிழந்து (துன்புற்றோம்): காட்டை

யடைந்து மனைவியை வஞ்சனைக்குணமுள்ள இராவணன் கவர்ந்து செல்ல(த் தரும) வரம்பழியாது (துன்புடன்) வாழ்ந்தோம்: இவ் விலங்கையையடைந்தபினபும், (தேவியைக்கொன்ற நீயோரைச் சிதையாமல்) இத்துன்பத்தையடைந்து இருப்போமானால், (நம் முடைய) எளிமையைப்பார்த்து(த் தாம்) உற்சாகம்மிகுதற்குக் காரணமான கொடியவிலங்கைப் பூட்டி, அடிமைத்தொழில் செய்யு மாறு (நம்பகைவர்) கூறுவாரன்றோ? (எ - று.)—பொங்குவன் தளை-மிகவும் வன்மையையுடைய தளையுமாம். தளையில் = தளையை. பி-ம்:—[1]வான், வெங். [2]புகல்வன். (2863)

71. மன்றலங் கோதை யாளை [1]நம்மெதிர் கொணர்ந்து வாளிற்
கொன்றவர் தம்மைக் கொல்லுங் [2]கோளிலா நாணங் கூரப்
பொன்றின ரென்ப ராவி [3]போக்கினூற் பொதுமை பார்க்கின்
அன்றிது [4]கரும [5]மென்னி [6]யயர்கின்ற தறிவி லார்போல்.

(இ - ள்.) (இப்போது துயரத்தினால் நம்முடைய) உயிரைப் போக்கினாலும், நறுமணமுள்ள அழகிய மயிர்முடியையுடைய பெண்ணை நம்மெதிரே கொணர்ந்து வாளினாற்கொன்ற பகைவர் களைக் கொல்லுகின்ற வலிமையிலலாமையால், நாணம்மிக (இன் னார்) இறந்தாரென்று (உலகத்தவர்) பழிப்பார்கள்: பொதுவாகப் பார்க்குமிடத்தும் இப்போது (துயரத்தினால்) உயிரைவிட்டிடுவ தென்ற இச்செயல செய்யததக்கதன்று: (ஆகையால்), அறிவிலா தவர் போல் நீ துயரத்தினால் அயர்ந்திருப்பது என்னே! (எ - று)

நாம் துயர்க்காரணத்தினால் உயிரைநீப்பின், கொடிய அரக்கர் உலகத்தாரை மிகவும் நலியத்தொடங்குவ ராதலின், 'பொதுமை பார்க்கின் அன்றிது கருமம்' என்கின்றான். பொதுமைபார்க்கின் அனறிதுகருமம் என்பதற்கு, பொதுமை - (யாவர்க்கும்) பொது வாகவுள்ள தருமத்தை, பார்க்கின்-பார்த்தால், தருமம் - (அந்தத் தருமச்) செயலுக்கு, இது-இக்காலம், அன்று-ஏற்றதன்று என்று உரை கூறினுமாம். பி-ம்:—[1]தம். [2]கோளிலர் என்றும்படிக்கலாம். [3]போக்கினார். [4]தருமம். [5]எண்ணி, என்னீர். [6]அயர்கின்றீரறிவிலீர்.

72.—அதுகேட்ட சுக்கிரீவன் உணர்வுற்று, இலங்கையில் அரக்கன்மார்பிற் குதிப்போமெனல.

[1]அனையன விளவல் கூற வருக்கன்சே [2]யயர்கின் றானே
கனவுகண் டனனே யென்னக் கதுமென வெழுந்து காணும்
வினையினி [3]யுண்டே [4]வல்லை விளக்கின்வீழ் விட்டி[5]லன்ன [ன்.
மனை[6]யிடை யரக்கன் மார்பிற்[7]குதித்தும் நாம் வம்மி னென்றா

(இ-ள்.) அவ்வாறானவார்த்தைகளை இளையபெருமாள் சொல்ல, துயரத்தினால் அயர்கின்றவனான சூரியகுமாரனான சுக்கிரீவன் ஒரு கனவைக் கண்டவன்போலத் திடீரென்று எழுந்து '(நாம்) ஆராய வேண்டியசெயலும் இனி உண்டோ? விரைவாகவிளக்கில்வீழ்கின்ற விட்டிலை யொத்தவனும் மனையிடையிலுள்ளவனுமான அரக்க னுடைய மார்பிற் குதிப்போம், நாம்; வாருங்கள்' என்றான்; (எ-று) —சீதையை நச்சிக் கவர்ந்ததனால், 'விளக்கின்வீழ்விட்டிலன்ன

அரக்கன்' என்றது. அரக்கன்-இராவணன்: இந்திரசித்தெனக் கொள்ளலுமொன்று. பி - ம்:—[1] அனையவனன்ன. [2] ஆகின்றேன். [3] உண்டோ. [4] வல்லே, இல்லை. [5] என்ன. [6] உறையரக்கர். [7] குறிக்குதும், குறித்துமால். (2865)

73.—அரக்கரை வேரோடு அழிப்போமெனல்.

இலங்கையை யிடந்து வெங்க ணிராக்கத ரென்னின் றூரைப்
பொலங்குழை மகளி ரோடும் [1] பால்நுகர் புதல்வ ரோடும் [மேல்
குலங்களோ டடங்கக் கொன்று கொடுந்தொழில் குறித்து நம்
விலங்குவா ரென்னில் தேவர் விண்ணையும் [2] நிலத்து வீழ்த்தும்.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ-ள்.) இலங்கையைப் பெயர்த்தெடுத்து, கொடுங்கண்ணை யுடைய இராக்கதரென்கின்றவரைப் பொன்குழையணிந்த மனைவிமாரோடும் (முலைப்) பால்குடிக்கின்ற புதல்வரோடும் இனத்தாரோடும் ஒருசேரக்கொன்று, (அப்போது அவ்வாறு நாம் செய்கின்ற) கொடுந்தொழிலையெண்ணி நம்மேல் தேவர் எதிர்ந்து வருவாரேயானால் (அந்தத்) தேவருடைய விண்ணுலகத்தையும் (இம்) மண்ணுலகில் விழச்செய்வோம்; (எ - று.)

அரக்கரை நாம் கொன்றோமானாலும், தேவர்கள் தருமத்திற் கருத்துள்ளவராதலால், அக்கிரமமாக அவ்வரக்கரின் மனைவிமக்களைக் கொல்வதுகண்டு நம்மீது ஒருகால் பொரவந்தாலும் அவர்களையும் தொலைப்போமென்கின்றான் என்க. குலங்கள் - சுற்றத்தாரைக் குறிக்கும். பி - ம்:—[1] அவருடைப். [2] மண்ணில். (2866)

74.—சுக்கிரீவன் இலங்கைமீது தாவுதல்.

அறங்கெடச் செய்து [1] மென்ப தமைந்தன மாகி னைய
புறங்கிடந் [2] துரைப்ப தென்னே பொருதினிப் புவன மூன்றும்
கறங்கெனத் திரிந்து தேவர் [3] குலங்களைக் கட்டு மென்னு
மறங்கிளர் வயிரத் தோளா னிலங்கைமேல் வாவ லுற்றான்.

(இ - ள்.) அறத்தைக் கெடுமாறு செய்வோமென்று உடன்பட்டோமாகில், ஐயனே! புறத்திலேகிடந்து வருந்துவது எதற்கு? இனிப் போர்புரிந்து புவனம்மூன்றையும் காற்றாடிபோலத்திரிந்து தேவர்குலங்களையும் வேரோடறுப்போம் என்று நிச்சயித்து, வலிமையால்விளங்குகின்ற உறுதியான தோள்களையுடைய சுக்கிரீவன் இலங்கையின்மேற் பாயத்தொடங்கினான்; (எ - று)—தருமப்படியன்றித் தருமங்கெடத் தொழில் செய்வதானாலும் எப்படியும் பகைவரைவதைப்பதே செய்யத்தக்கதென்கின்றான், சுக்கிரீவன். பி-ம்:—[1] என்றே. [2] உழைப்பதெண்ணிப் பொழுதிறைப். [3] குலங்களும். (

75.—சுக்கிரீவனுடன் மற்றைவானரரும் இலங்கைமீது பாயத்தொடங்க, அயோத்திக்கு இந்திரசித்து சென்றிருத்தலை அநுமான் கூறுதல்.

மற்றைய வீர ரெல்லா மன்னனின் முன்னந் [1] தாவி
எற்றுது மரக்கர் தம்மை [2] யில்லொடு மெடுத்[3] தென் றேகஸ்
உற்றன ருறுத லோடு முணர்த்துவ துளதென் றன்னூச்
சொற்றன னனுமன் [4] வஞ்ச னயோத்திமேற் போன சூழ்ச்சி.

(இ-ள்.) மற்றைவானர வீரரெல்லாரும் (தம்முடைய) அரசனுக்கு முன்னே தாவி, 'அரக்கர்களை (அவர்களுடைய) இல்லத்துடனே பெயர்த்தெடுத்து மோதுவோம்' என்று செல்லத்தொடங்கினர்; தொடங்கவே, அநுமான், 'சொல்லவேண்டுவது ஒன்று உண்டு' என்று எண்ணி, வஞ்சனைக்குணமுள்ள இந்திரசித்து அயோத்திமீது சென்ற சூழ்ச்சியைச் சொல்லினன்; (எ - று.)—பி - ம்:—[1]வாவி, வாரி. [2]எயிலொடும். [3]இன்றேகல். [4]தீயோன். ()

76.—இராமனுக்குச் சீதைதுயரினும் தம்பிமுதலியோரைப் பற்றித் துயர் மிகல்.

தாயருந் தம்பி மாருந் தவம்[1]புரி நகரஞ் [2]சாரப்
போயின னென்ற மாற்றஞ் செவித்துளை புகுத லோடும்
மேயின [3]வடியி னின்ற [4]வேதனை கனைய வெந்த
தீயிடைத் தணிந்த தென்னச் சீதைபால் [5]துயரந் தீர்ந்தான்.

(இ - ள்.) தாய்மார்களும் தம்பிமார்களும் தவம்புரிந்துகொண்டுள்ள அயோத்திநகரத்தைச் சாருமாறு (இந்திரசித்து) போயினனென்ற சொல் செவித்துளையிற் 'புக்கவுடனே,—பொருந்திய அடிபட்டதனாலுண்டான வேதனையானது மிக,வெம்மைவாய்ந்தநெருப்பினிடையிலே தணிந்து விடுவதுபோலச் சீதையினிடத்துக் கொண்ட துன்பம் தீர்ந்தான், (ஸ்ரீராமன்); (எ - று.)

இதனால் சீதையைக் காட்டிலும் தம்பிமார் தாய்மார்களிடத்து மிக்க அன்பைக் கொண்டிருந்தனன் ஸ்ரீராமனென்பதுபெறப்படும். அடிபட்டதனால் தோன்றும் வேதனை நெருப்புப்படும்போது தோன்றும் வேதனைக்குமுன் தோன்றாமைபோல, தாயர் முதலியோருக்கு நேரவிருக்குந் துன்பத்தை நினைக்கையில் சீதையைப் பற்றி நேர்ந்துள்ள துன்பம் மறையலாயிற்றென்று விளக்கினார். கணவனையிழந்த தன் தாய்மார் கைம்மை நோன்பைநோற்பாரென்பது பற்றியும், ஸ்ரீராமனைத் தியானித்தவண்ணம் ஜடாவல்கலதாரியாய்ப் பரதன் வாழ்வதுபற்றியும், 'தாயருந்தம்பிமாரும் தவம்புரிநகரம்' என்றது. பரதன்முதலியோர் நந்திக்கிராமத்தில் வசிப்பது அனுமனுக்குத் தெரியாமையால், 'நகரம்' என்றது:இனி, நகரம் என்றது - அரசுபுரிகின்ற இடத்தையே குறிக்குமெனினுமாம். பி - ம்:—[1]புரிந்தோரும். [2]சேரப். [3]வடுவினின்ற, அடியினுற்ற. [4]வேதனைக்கிடையேவெந்த, வேதனையமையவெய்ய. [5]துன்பம். (2869)

77.—ஸ்ரீராமன் மனநிலை கலங்குதல்.

அழுந்திய பாலின் வெள்ளத் தாழிநின் றனந்தர் நீங்கி
எழுந்தன னென்னத் துன்பக் கடலினின் றேறி யாருக்
கொழுந்துறு கோபத் [1]தீயு நடுக்கமு மனத்தைக் கூட
உழுந்துருள் பொழுதுந் தாழா [2]வினையினன் மறுக்க முற்றான்.

(இ-ள்.) ஆழமாகவுள்ள பால்வெள்ளத்தைக்கொண்ட கடலினின்று யோக நித்திரை நீங்கி(த் தான்) எழுந்துவந்தனன் போலச் (சீதையைப்பற்றிய) சோகசாகரத்தினின்று கரையேறி, உழுந்துருள்கின்ற காலமளவும் தாமதித்தலில்லாத முயற்சியையுடைய

னை ஸ்ரீராமன், தணியாத சுவாலைபொருந்திய கோபத்தீயும் நடுக்கமும் மனத்தைப்பொருந்தக் கலக்கங்கொண்டு நின்றான்; (எ-று.)—நடுக்கம், கோபத்தினால் நிகழ்ந்தது. பி - ம்:—[1] தீயினோடுமுள், தியினடுக்கமும். [2] விரைவினான். (2870)

78.—நான்கு கவிகள்-நேர்ந்துள்ள நிலையைக்குறித்து ஸ்ரீராமன் வருந்துதல்.

தீருமிச் சீதை யோடு மென்னில தன்றென் றீமை
வேரொடு முடிப்ப தாக விளைந்தது வேறு [1]மின்னும்
ஆரொடுந் தொடரு மென்ப [2]தறிகிலே னிதனை யைய
[3]பேரிட வவதி யுண்டோ வெம்பியர் பிழைக்கின் றாரோ.

ஐந்துகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) 'என்னுடைய தீவினை இந்தச் சீதையுடனே தீருமென்று சொல்லக்கூடியதாகவும் ஆகவில்லை: (அன்றியும், சூரிய வமிசத்தை) வேருடனே முடிப்பதாக வேறாகவும் விளைந்துள்ளது; இன்னும் யாருடனே தொடர்ந்து செல்லுமென்பதனையும் அறியவில்லேன்: ஐயனே! இதனைப் பேர்ந்திடுமாறு செய்ய வகை ஏதேனுமுண்டோ? என் தம்பியர் பிழைத்தவராவரோ?(எ-று.) பி - ம்:—[1] என்னா, இன்னம். [2] அறிந்திலனதனை. [3] பெருறுமவதி. (2871)

79. நினைவதன் [1]முன்னஞ் செல்லு [2]மானத்தி னெடிது [3]நின்றான், வினையொரு கணத்தின் முற்றி மீள்கின்றான் வினையேன் வந்த, மனைபொடி பட்ட தங்கு [4]மாண்டது தார மீண்டும், எனையன [5]தொடரு கின்ற துணர்கிலே னிறப்புங் காணேன்.

(இ-ள்.) நினைப்பதற்கு முன்னே செல்லவல்ல விமானத்திலே வெகு நேரத்துக்கு முன்னம் ஏறிநின்ற இந்திரசித்து, (தன்) காரியத்தை ஒருநொடிப்பொழுதில் முடித்துக்கொண்டு மீள்கின்றவனாவன்: தீவினையேனாகிய யான்பிறந்த மனையும் அங்கே [அயோத்தியில்] நீறானதாகிவிடும்: இங்கேயும் மனைவி மாண்டாள்: (இன்னும்) எப்படிப்பட்ட தீமைகள் தொடரப்போகின்றனவென்பதை உணரும்வல்லமையற்றிருக்கின்றேன்: (சாவாவது வருமோ என்றால் அந்தச்) சாவையும் காண்கின்றிலேன்: (எ-று.)—பி-ம்:—[1] முன்பு. [2] மானத்தன். [3] போனான். [4] மாண்டன. [5] தொடருமென்பது, தொடங்குமென்பது. (2872)

80. தாதைக்குஞ் சடாயு வான தாதைக்குந் தமிய ளாய
சீதைக்குங் கூற்றங் காட்டித்[1] தீர்ந்தில தொருவன் றீமை
பேதைப்பெண் பிறந்து பெற்ற தாயர்க்கும் பிழைப்பில் லாத
காதற்றம் பியர்க்கு மூர்க்கும் நாட்டிற்குங் காட்டிற் றன்றே.

(இ - ள்.) ஒருத்தனான என்னுடைய தீவினையானது,—பெற்ற தந்தையான தசரதனுக்கும் (உற்றபிள்ளையாக என்னைத்தழுவிக்கொண்ட)சடாயுவான தந்தைக்கும் இராவணனாற்கவரப்பெற்றுத் தனிப்பட்டவளாய்விட்ட சீதைக்கும் யமனைக் காட்டி, (இவ்வளவோடு) நீங்கியதில்லை: (என் தீவினையே),—(சீதையென்ற)பேதைப்

பெண்ணுய்ப்பிறந்து, (இந்திரசித்தினுற்கொல்லப்பட்டு), பெற்ற தாய்மார்க்கும் குற்றமற்ற அன்புபூண்ட (பரதசத்துருக்கின ரென்ற) தம்பியர்க்கும் அயோத்திநகரார்க்கும் கோசலைநாட்டி லுள்ளார்க்கும் (யமனைக்) காட்டிவிட்டதே; (எ - று.)—அன்றே-தேற்றம்.

தாய்மார் தம்பிமாரையன்றி, ஊரார் நாட்டார்களையும் அரக்கர் கொல்லக் கூடுமென்று ஸ்ரீராமன் இவ்வாறுகூறுகின்றான். பி - ம்:—[1] தவிர்ந்திலது. (2873)

81. உற்றதொன்[1] றுணர இல்லா ருணர்ந்துவந் தருந்தா ரேனும், வெற்றிவெம் பாசம் வீசி விசித்தவன்கொன்று வீழ்த்தால், [2]மற்றைவெம் புள்ளின் வேந்தன் வருகிலன் மருந்து நல்கக், கொற்ற [3]மா ருதியங் கில்லை யாருயிர் கொடுக்கற் பாலார்.

(இ - ள்.) (அயோத்திநோக்கிச் சேனையோடு சென்ற அரக்கன் அழிக்கும்போது தம்பியர் இங்கே) உற்றதொன்றையும் உணர மாட்டாதவராவர்: (ஒருகால்) அறிந்துவந்து கோபித்தாரேனும், வெற்றியைத் தரத்தக்க கொடிய நாகபாசத்தை வீசிக்கட்டி அந்த இந்திரசித்து கொன்று வீழ்த்தினுனுல், பின்பு கொடிய பறவைக் கரசனுன கருடனும் வரானே! மருந்து மலையைக் கொணர வெற்றி பொருந்திய அநுமனும் அங்கே இல்லையே!! அவர்களுயிரை (மீட்டு)க்கொடுத்தற்கு உரியவர் யாவர்? (எ - று.)

விசித்தவன் என்று ஒருசொல்லாக எடுப்பினுமாம். திடீரென்று ஒருவன் பொருதானுல் அயோத்தியிலுள்ளார் செய்வதின்னதென்பது தெரியாது திகைப்பரென்பது, உற்றதொன்றுணர இல்லார் என்பதன் கருத்து. உணர்ந்து வந்து-திகைப்பு நீங்கித் தாம் செய்யவேண்டிய செயலை அறிந்துவந்து. பி-ம்:—[1] உணர்கிலா தாரறிந்து. [2] மற்றைய. [3] மாருதியுமாங்கில். (2874)

82.—ஸ்ரீராமன் இந்திரசித்தை வானில் தொடர உபாயங் கேட்டல்.

மாக[1]வா காயஞ் செல்ல[2]வல்லையின் வயிரத் தோளாய்
எகுவா னுபாய முண்டே லியம்புதி [3]நின்ற வெல்லாஞ்
சாகமற் றிலங்கைப் போருந் தவிர்கவச் சழக்கன் கண்கள்
காகமுண் டதற்பின் மீண்டு முடிப்பனென் கருத்தை யென்றான்.

(இ - ள்.) (இந்திரசித்தைத் தொடர்ந்துசெல்லவிரும்புகின்ற எனக்கு)வயிரம்போலுறுதியான தோள்களையுடையவனே! மாகம் எனப்படுகிற வானவழியே விரைவிற்சென்றுசேர உபாயமுண்டாயின், சொல்லுவாய்: (இங்கே) இருப்பதெல்லாஞ் சாகட்டும்: பின்னும் இலங்கைப்போரும் ஒழிக: அந்தக் கொடியனுன இந்திரசித்தினுடைய கண்களைக் காகங்கள் (கொத்தித்) தின்ற பிறகு அங்கு நின்றுதிரும்பி என்கருத்தை முடிப்பேனென்று கூறிமுடித்தான், (ஸ்ரீராமன்); (எ - று.)

'வயிரத்தோளாய்' என்றது-அநுமானைநோக்கிய விளியென்னலாம். 'எது எக்கேடுகெட்டால் கெடட்டும்' என்று உலக

வழக்கிற் சொல்வதுபோல, 'நின்றவெல்லாஞ்சாக' என்கிருன். பி - ம்:—[1]வானகரஞ், மாநாகஞ். [2]வல்லிசை. [3]நின்றது. (2875)

83.—இதுவும் அடுத்த கவியும்-இலட்சுமணன் வார்த்தை: 'பரதனை இந்திரசித்தால் வெல்லமுடியாது' எனல்.

அவ்விடத் திளவ லையா பரதனை யமரி[1]னூர்க்க
[2]எவ்விடற் குரியான் போன [3]விந்திரசித்தே [4]யன்று
[5]தெவ்விடத் தமையின் மும்மை யுலகமுந் [6]தீந்த ருவோ
வெவ்விடர்க் கடலின் வைகல் கேளென விளம்ப லுற்ருன்.

(இ - ள்.) அப்போது, இளையபெருமாள், (ஸ்ரீராமனைநோக்கி), —ஐயனே! பரதனைப் போரிலே (பாசம்போன்ற படையினுற்) கட்டுவதற்கு, அம்புசெலுத்தற்கு உரியவனுய்ப்போனஇந்திரசித் தேயன்று; பகைப்புலத்துப் பொருந்துவதாளுல், மூவுலகமும் தீந்து விடாவோ? கொடியதுன்பக்கடல் தங்கவேண்டா; (யான் கூறு வதைக்)கேள்' என்று (பின்னுஞ்) சொல்லத் தொடங்கினுன்;

இந்திரசித்தேயன்றி, இம்மூவுலகும் எதிர்த்துநின்ருலும், பரதனுக்கு முன்னே வலியொழிந்திடுமென்கிருன். ஏவிடல் என்பது, எவ்விடல் என்று விகாரமாயிற்று. பி - ம்:—[1]வெல்ல. [2]எவ்விடர்க்கு [3]இந்திரசித்தை. [4]என்னும், என்று. [5]தெவ்விடர்க் கிமைப்பின். [6]தீய்ந்தருதே. (2876)

84. *தீக்கொண்ட வஞ்சன் வீசத் திசைமுகன் பாசந் [1]தீண்ட*
வீக்கொண்டு [2]விழுயாளே [3]பரதனும் வெய்ய கூற்றைக்
கூக்கொண்டு குத்துண் டன்னுன் குலத்தொடு நிலத்த னாதல்
போய்க்கண்டு கோடி யன்றே யென்றனன் புழுங்கு கின்ருன்.

(இ - ள்.) 'தீத்தன்மையைக்கொண்ட வஞ்சனைக்குணமுள்ள இந்திரசித்து வீசியதனுல் திசைமுகன் பாசமானது தீண்டினமாத் திரத்தில் மரணத்தையடைந்து வீழ்ந்திடுதற்குப் பரதனும் நாணு வனே? கொடுங்கூற்றத்தைக் கூவிக்கொண்டு (பரதன் படை கொண்டுபொருதலினுற்) குத்துண்டு அந்த இந்திரசித்து சுற்றத் தோடு நிலத்தில் உயிர்துறந்து விழுந்தவனுதலை, நீ போய்க் கண்டு கொள்ளப்போகிருயன்ருே?! என்று மனம் புழுங்கினவனுக் கூறினுன்; (எ - று.)

வீழ யாளேபரதன்-பிரமாஸ்திரத்தினுல் வீழ்த்தப்படுதற்கு என்னைப்போல் பரதன் எளியவனென்று நினைத்திரோ, நினைக்க வேண்டா என்றபடி. பி-ம்:—[1]தீண்டி. [2]வீழ்க. [3]பரதனும். (2877)

85.—நான்குகவிகள்-ஒருதொடர்: அயோத்திக்குத்தொடர்ந்து செல்லத் தனமீது ஏறிக்கொள்ளும்படி அனுமான் இராமலட்சுமணரை வேண்டுதல்.

அக்கணத் தனுமன் நின்ரு னையவென் றேனி [1]னுதல்
கைத்துணைத் [2]தலத்தே யாத லேறுதிர் [3]காற்றுந் தாழ
இக்கணத் தயோத்தி மூதூ [4]ரெய்துவெ னிடமுண் டென்னில்
இக்கணத் தினியுஞ் செல்வே னியானேபோய்ப் பகையுந் தீர்வேன்.

(இ-ள்.) அப்போது நின்றுனாகிய அநுமான் அழகிய என்றோளிலாதல் (மருத்துமலையைக் கொணர்ந்துவந்த) இரண்டாகிய (என்) கையிலேயாதல் நீவீர் ஏறுமின்; காற்றும்பிற்பட இக்கணத்தே அயோத்தியென்கின்ற பழமையான ஊரை அடைந்த வருவேன்: அவகாச மிருக்குமாயின், திக்கெல்லாவற்றிலுஞ் செல்லுவேன்: (அனுமதியளிப்பின்) யானேபோய்ப் பகையையும் ஒழிப்பேன்; (எ - று.)—ஐய - ஸ்ரீராமனைப்பற்றிய விளியுமாம். பி-ம்:—[1] ஆக. [2] தனுவினோடும், தலத்தேயாக. [3] காலந் தாழாது. [4] எய்தினென். (2878)

86. எழுபது வெள்ளத் தோடு மிலங்கையை யிடந்தென் தோண்மேல், [1] தழுவுற வைத்தின் றேகென் றுரைத்தியேற் சமைவென் தக்கோய், பொழுதிறை தாழ்ப்ப [2] தென்னோ புட்பகம் போதன் முன்னம், குழுவொடுங் கொண்டு [4] போவென் கணத்தொடு குதிப்பென் கூற்றின்.

(இ-ள்) தகுதியையுடையவனே! இன்று எழுபது வெள்ளஞ் சேனையோடு இலங்கையைத் தோண்டியெடுத்து என்தோளின்மீது பொருந்தவைத்து 'செல்லுவாய்' என்று சொல்லுவாயானால், (அவ்வாறே) செய்வேன்: இறைப்பொழுது தாமதிப்பதும் எதற்கு? புட்பகம் போய்ச்சேர்வதற்கு முன்னம் (வானரக்) கூட்டத்துடனே (உங்களிருவரையும்) சுமந்துகொண்டுபோய், ஒரு நொடிப்போதில் யமனைப்போல அங்குக் குதிப்பேன்; (எ - று.)—இச் செய்யுள் சில பிரதிகளிலில்லை. பி-ம்:—[1] உழுவுற. [2] என்னே. [3] போகா. [4] தோண்மேற்கொணர்கெனிற், தோண்மேற்கணத்தினிற். (2879)

87. கொல்லவந் தானை நீதி கூறினென் விலக்கிக் கொள்வான், [1] சொல்லவுஞ் சொல்லி நின்றேன் கொன்றபின் றுன்ப [2] மென்னை, வெல்ல[3]வுந் தரையின் வீழ்வுற் றுணர்ந்திலன் விரைந்து போனான், இல்லையென் [4] றுள்னேல் தீயோன் பிழைக்குமோ விழுக்க[5]முற்றான்.

(இ - ள்.) (சீதாபிராட்டியைக்) கொல்லவந்த இந்திரசித்தை விலக்கி(ச் சுவாதீனமாக்கி)க் கொள்ளும்பொருட்டு நீதிகூறக் கருதியவனாய்(ப் பல பேச்சுக்களைச்) சொல்லுதலையுஞ் செய்துநின்றேன்: (அதனைப் பொருட்படுத்தாமல்) அக்கொடியவன் சீதாபிராட்டியை (வாளால் கொன்றிட்டான்): கொன்றபின்பு துன்பமானது என்னை வென்றிட்டதனால் [துன்பம் எனக்கு மிக்குத் தோன்றியதனால்] தரையில் வீழ்ந்து உணர்ச்சியற்றவனானேன்: (அச்சமயத்தில்) அந்தத்தீயோன் விரைந்து சென்றிட்டான்: இப்படியில்லாமல் இருப்பானேயானால் குற்றமுற்றவனாகிய அவன் எனக்கு முன்னே உயிர் பிழைப்பனோ? [என்னாற் கொல்லப்பட்டு அவன் செத்தேயிருப்பானென்றபடி]; (எ - று.)

இதனால், இந்திரசித்து சீதையைக் கொன்றபோதே தான் கொல்லாமற் போனமைக்குக் காரணத்தை அநுமான் காட்டியவாறு. சீதாபிராட்டியைக் கொல்லவந்த அவனை நான் கொல்ல முயன்றேனானால் 'நான் இறக்குமுன் இந்தச் சீதையைக் கொல்வேன்' என்று அன்னான் அத்தொழிலில் மூளக்கூடு மாதலால்,

சீதையைக் கொல்லக்கூடாது என்பதற்கு நீதிசொல்லிப் பார்த்தே னென்கின்றான் அநுமானென்க. பி - ம்:—[1]சொல்லலும். [2]உற்றென். [3]வெந்தரையில். [4]உளதேல். [5]உற்றேன். (2880)

88\. மனத்தின்முன் செல்லு மானம் போனது வழிய தாக
நினைப்பின் முனையோத்தி [1]யெய்தி வருநெறி பார்த்து நிற்பென்
இனிச்சில தாழ்ப்ப் [2]தென்னே யேறுதி ரிரண்டு தோளும்
புனத்துழாய் மாலை மார்பீர் புட்பகம் போதன் முன்னம்.

(இ - ள்.) மனத்திலும் கடிதாகச்செல்லவல்ல புட்பகவிமானம் போனவழியாகவே (அவ்விமானம் பிந்தும்படி) நினைப்பின் முன் அயோத்தியையடைந்து (அவ்விமானம்) வருகின்றவழியைப் பார்த்துநிற்பேன், (யான்): இனியும் சிலநேரம் தாமதிப்பது எதற்காக? புனத்தில் விளைகின்ற திருத்துழாய்மாலையை யணிந்த மார்பை யுடையவரே! புட்பகம் போய்ச்சேர்தற்கு முன்னம் (அயோத்தி சேருமாறு நீவிரிருவீரும் என்) இரண்டுதோளிலும் ஏறுமின் (என்றான், அநுமான்); (எ - று.,—பி - ம்:—[1]புக்கு. [2]என்னே. (2881)

89\.—மூன்றுகவிகள்—ஒருதொடர்: விபீடணன் 'சீதையைக் கொன்ற உண்மையை யறிந்து வருவேன்' என ஸ்ரீராமன் உடன்படலைக் கூறும்.

[1]ஏறுது மென்று வீர ரெழுதலு மிறைஞ்சி யீண்டுக்
கூறுவ துளது துன்பம் கோளுறக் குலுங்கி யுள்ளம்
[2]தேறுவ தரிது செய்கை [3]மயங்கினன் திகைத்து நின்றேன்
ஆறின [4]னதனை யைய மாயமென் றயிர்க்கின் றேனால்.

(இ - ள்.) ஏறுவோமென்று ஸ்ரீராமலக்ஷ்மணர் எழுகையில் (விபீடணன் ஸ்ரீராமனை) வணங்கி(க் கூறுவான்:—) ஐயனே! இப்போது கூறவேண்டுவது ஒன்று உள்ளது; துன்பம்) மனத்தைக் கவரவே, (அம்) மனம் நிலைகலங்கி, தெளிவது அரிதாகச் செய்ய வேண்டியசெயலைச்சிந்தியாது மயங்கினேனாகித்திகைப்புக்கொண்டு நின்றேன்; (இப்போது) தெளிவுபெற்றேன்: அந்தச்சீதை வெட்டுண்ட செய்கையை மாயமென்று சந்தேகிக்கின்றேன்; (எ - று.)—இச்செய்யுளிலுள்ள 'இறைஞ்சி' என்றது, 91 - ஆஞ்செய்யுளில் 'விளம்ப' என்ற எச்சத்தோடு தொடரும்: இதற்குஎழுவாயும் அதிலுள்ள 'வீடணன்' என்பதே. பி - ம்:—[1]ஏறுதிரென்ன. [2]தேறுதலருமை. [3]மறந்தனன். [4]இதனை. (2882)

90\. பத்தினி தன்னைத் தீண்டிப் பாதகன் [1]படுத்த [2]போது
முத்திறத் துலகும் வெந்து சாம்பராய் [3]முடியு மன்றே
அத்திற மான தேறு மயோத்திமேற் போன [4]வார்த்தை
சித்திரம் [5]இதனை யெல்லாத் [6]தெரியலாஞ் சிறிது போழ்தின்.

(இ - ள்.) பத்தினியாகியசீதையைத் தீண்டிப் பாதகனாகிய இந்திரசித்து கொன்றபோது (சுவர்க்கம் மத்திமம் பாதாளம் என்ற) மூவகைப்பட்ட உலகும் வெந்துசாம்பராய் ஒழிந்திடு மன்றோ? (ஒருகால்) அச்செயல் நிகழ்ந்ததென்றாலும் அயோத்தி

மேற்போன செயல், விசித்திரமாகவுள்ளது: இதனையெல்லாம் சிறிதுபோதுக்குள் (உண்மை) அறியலாம்; (எ-று.) பத்தினியைப் பாதகன் தீண்டினாலே மூவுலகும் வெந்து சாம்பராம்; தீண்டிக் கொலைசெய்தானென்றால் மூவுலகும் வெந்து சாம்பராகாது நிற்குமோ? நிகழக்கூடாத அச்செயல் நிகழ்ந்ததென்று கொண்டாலும், தம்மைத் தொந்தரவுபடுத்தும் வானரசேனைகளும் இராமலக்ஷ்மணராகிய நீங்களும் இங்கு இருக்கையில், அவன் அயோத்திக்குச்செல்லுதல், அசம்பாவிதமான செயலாகும்: சிறிதுநேரத்தில் இதனுண்மை வெட்டவெளிச்சமாமென்றவாறு. பி - ம்:—[1]கொன்ற. [2]போதின். [3]முற்றும். [4]தன்மை. [5]அதனை. [6]தெரிக்கலாம், தெரிகலாம், தெரிவிலாம். (2883)

91. இமை[1]யிடை யாக யான் போ யேந்திழை யிருக்கை [2]யெய்தி
அமைவுற நோக்கி யுற்ற தறிந்து[3]வந் தறைந்த பின்னர்ச்
சமைவது செய்வ தென்று வீடணன் விளம்பத் தக்கது [றான்.
[4]அமைகவென் றிராமன் சொன்னான் அந்தரத் தவனுஞ்[5]சென்

(இ - ள்.) 'இமைப்பொழுதிற்குள்ளாக யான் போய்ச் சீதாபிராட்டியின் இருப்பிடத்தை யடைந்து பொருத்தமுறக்கண்டு நிகழ்ந்ததை யறிந்துவந்து சொன்னபின்பு, ஏற்றது செய்யத்தக்கது' என்று விபீடணன் சொல்ல, '(நீ சொல்லியது) தக்கதே; அங்ஙனமே யாகட்டும்' என்று ஸ்ரீராமன் சொன்னான்; அந்த விபீடணனும் வானவழியாகச் சென்றான்; (எ - று.)—பி - ம்:—[1]இடைப்பொழுதின். [2]சென்று. [3]பின். [4]அமைவது. [5]போனான். (2884)

92.—இதுவும் அடுத்த கவியும்-குளகம்: விபீடணன் வண்டினுருவங் கொண்டுசென்று சீதையைக் காணுதலைத் தெரிவிக்கும்.

வண்டின துருவங் கொண்டான் மானவன் மனத்திற் போனான்
தண்டலை யிருக்கை தன்னைப் பொருக்கெனச் சார்ந்து தானே
கண்டன னென்ப மன்னோ கண்களாற் [2]கருத்தா லாவி
உண்டிலை யென்னச் [3]செய்த வோவிய மொக்கின் றாளை.

(இ - ள்.) வண்டினுருவத்தைக் கொண்டவனாய், ஸ்ரீராமனுடைய மனம்போற்சென்று அசோகவனிகையிற் சீதையினிருப்பிடத்தை விரைவாகச் சேர்ந்து, மனத்தாற்படைத்த சித்திரப்பதுமை போன்றிருக்கின்ற சீதாபிராட்டியை 'ஆவி உண்டோ, இல்லையோ?' என்னுமாறிருக்கத் தானே நேரேகண்களாற்கண்டான், (விபீடணன்); (எ - று.)—என்ப, மன் ஓ - அசைகள்.

இனி, மானவன் மனத்திற்போனான்-ஸ்ரீராமனுடைய கருத்தை [அநுமதியை]ப் பெற்றுப் போனான்: ஸ்ரீராமனது மனம்சீதையுள்ள இடத்தை நாடிச் செல்லுமதுபோலப் போனானென்றலும் உண்டு. சீதையின் வடிவுக்கு ஓவியன் கையினாலெழுதிய சித்திரப்பதுமை ஒப்பாகாதென்பார் 'கருத்தினாற் செய்த ஓவியம்' என்றார். பேரழகினாலன்றித் துயரமிகுதியால் திகைத்து அசைவற்றுநிற்றலாலும், ஓவியம், சீதைக்கு உவமையாகும். பி-ம்:—[1]வானவன். [2]கருத்தில். [3]நின்ற, சாய்ந்த. (2885)

93. தீர்ப்பது துன்ப மியானென் னுயிரொடென் [1] றுணர்ந்த சிந்தை
[2]பேர்ப்பன செஞ் [3]சொ லாளத் திரிசடை பேசப் [4]பேர்ந்தாள்
கார்ப்பெரு மேகம் வந்து கடையுகங் [5]கலந்த [6]தென்ன
ஆர்ப்பொலி யமுத மாக வாருயி ராற்றி னாளே.

(இ - ள்.) 'யான்(என்) துன்பத்தைப் போக்குவது என்னுயிரோடுதான்' என்று எண்ணுகின்ற சிந்தையை மாற்றுவனவான செவ்விய சொற்களையுடையளான அந்தத்திரிசடை பேசுவதனால் (துயரம்) நீங்கப்பெற்றவளாகி, கருநிறமுள்ள பெரியமேகம் வந்து யுகாந்தகாலத்திற் கலந்தவொப்ப(வானரர்களுயிர்பெற்றெழுந்து ஆரவாரிக்கின்ற) ஒலி அமிழ்தம்போன்றிருக்க அரிய உயிரையாற்றினவளை,—(எ - று.)—கண்டனன்' என்று கீழே தொடரும்.

விபீடணன் சீதாபிராட்டியைக் கண்டபோது அவளுடைய நிலை இச்செய்யுளிற் கூறப்படுகின்றது. இராமலட்சுமணரின் நிலையைக் கண்டு சீதை உயிர்விடத் துணிந்தாளாக, அப்போது திரிசடை தேறுதல் கூற, அதனால் உயிர்விடத் துணிந்த எண்ணம் சற்று நீங்கினவளான சீதை(விடத்தை யுட்கொண்டார்போலத்) துன்பத்தை யுட்கொண்டிருந்தவளவில், (விடத்தின் தீங்கு அமுதத்தினால் நீங்குவதுபோல்) இலக்குவனாதியரெல்லாம் சஞ்சீவிமலை மருந்தால் எழுந்து ஆர்த்த ஆரவாரத்தினொலியால் துன்பமும் நீங்கி ஆருயிரை யாற்றியிருந்தாளென்க. பி - ம்:— [1]உணர்ந்து, [2]போர்ப்பனசெஞ், போர்ப்பதுமின். [3]சொலன்னை. [4]போந்தாள் என்றும் படிக்கலாம். [5]கலந்த. [6]வந்த, அன்ன. (2886)

94.—வஞ்சனையென்பதுணர்ந்த விபீடணன், நிகும்பலை நோக்கி அரக்கச்சேனை செல்வதைக் காணுதல்.

வஞ்சனை யென்ப துன்னி வானுய ருவகை வைகும்
நெஞ்சின னாகி யுள்ளந் தள்ளுற லொழிந்து நின்றான்
வெஞ்சிலை மைந்தன் போனான் நிகும்பலை வேள்வியா னென்று
எஞ்சலி [1]லரக்கர் சேனை யெழுந்தெழுந் தேகக் கண்டான்.

(இ - ள்.) (சீதையை வதைத்தது) மாயச்செய லென்பதை யறிந்து மிகவும் ஓங்கிய மகிழ்ச்சிதங்கிய நெஞ்சையுடையவனாகி மனத்துயரம் நீங்கப்பெற்றவனான விபீடணன், கொடியசிலையை யுடையவனான இந்திரசித்து நிகும்பலையில் வேள்விசெய்பவனாய்ப் போனானென்று எஞ்சுதலில்லாத [மிகப்பல] அரக்கர்சேனை எழுந்தெழுந்துசெல்வதையுங் கண்டான்; (எ-று.)

தான் நிகும்பலையிற் போய் வேள்விசெய்தால் அப்போது மாற்றாரோடு போர்தரத்தக்க வீரர் இலங்கையிலில்லை யென்ற காரணத்தினாலேயே இவ்வாறு இந்திரசித்து மாயச்செயல்செய்து போயினான்: அன்றியும், ஸ்ரீராமனுடைய கண்ணெதிரில் மாயச்செயல் செய்யத்தொடங்கினால், அப்பெருமான் தன்மீது பெருவெகுளியினனாயிருந்ததனால் அவன் கண்முன்னே நிற்கும்போதே எங்கே எரித்துவிடுவானோஎன்ற அச்சத்தினால் இந்திரசித்து தான் அங்ஙனஞ் செய்ய வில்லையென்பர். பி - ம்:— [1]அரக்கன். ()

95.—இந்திரசித்தின் சூழ்ச்சியைத் தெரிவிக்க இராமபிரானிடத்து விபீடணன் மீளுதல்.

வேள்விக்கு வேண்டற் பால [1]தருப்பையும் விறகும் நெய்யும்
[2]வாழ்விக்குந் தாழ்வி[3]லென் றும் வானவர் மறுக்கங் கண்டான்
சூழ்வித்த வண்ண மீதோ நன்றெனத் துணிவு கொண்டான்
[4]தாழ்வித்த [5]முடியன் வீரன் றாமரைச் சரணந் தாழ்ந்தான்.

(இ - ள்.) 'வேள்விக்குவேண்டியனவான தருப்பையும் விறகும் நெய்யும் (நம்மைத்) தாழ்விலே வாழச்செய்யும்' என்று கருதுகின்ற வானவரின் கலக்கத்தைக்கண்டவனான விபீடணன், 'ஆராய்ந்து செய்தவகையான இதுவோ மிகநன்று!' என்று (அவ்விந்திரசித்தின்செயலை) நிச்சயித்தவனாய், தாழ்த்தியமுடியையுடையவனாகி, ஸ்ரீராமனுடைய தாமரைச்சரணத்தில்வணங்கினான்; (எ - று.)—சீதையைக்கண்டபிறகு வேள்விக்குவேண்டிய பொருள்களுடன் அரக்கர் சேனை எழுந்துசெல்வதையும், வானவர்மறுக்கத்தையும் கண்டு, சீதையின்வதையும் அயோத்திப்பயணமும் ஆகிய இந்திரசித்தின் சூழ்ச்சியை விபீடணன் துணிந்தானென்க. இந்திரசித்து இப்போது தொடங்கிய வேள்வியை முடித்தானானால் அவனே வெல்வானென்ற காரணம்பற்றி, வானவர் 'வேள்விக்கு ...வாழ்விக்கும் தாழ்வில்' என்றுகருதி மறுகினரென்க. [1]கலப்பையும் என்றபாடத்திற்கு - (மற்றும்வேள்விக்குஉரிய) கருவிகளும் என்க. பி - ம்:—[2]மாள்விக்கும். [3]அன்ன. [4]தாழ்விக்கும். [5]முடிய.

96.—விபீடணன் இந்திரசித்தின் சூழ்ச்சியைத் தெரிவித்தல்.

இருந்தனள் தேவி யானே யெதிர்ந்தன [1]னென்க ணார
அருந்ததி கற்பி னாளுக் கழிவுண்டோ அரக்கன் நம்மை
வருந்திட மாயஞ் செய்து நிகும்பலை மருங்கு புக்கான்
முருங்கழல் வேள்வி முற்றி முதலற [2]முடிக்க மூண்டான்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) தேவி (இனிது) இருந்தனள்: என்கண்நிரம்பயானே எதிரிற்கண்டேன்; அருந்ததியையொத்த கற்புடையாளுக்கு அழிவு நேருமோ? (தான் சித்திபெறுமாறுசெய்யும்வேள்வி நம்மால் தடுக்கப்படாது நிறைவேறும்பொருட்டு) அரக்கன் நம்மை வருந்தும்படி மாயஞ்செய்து [நம்மை ஏமாற்றிவிட்டு] நிகும்பலையினிடத்துப் புக்கான்; அழிக்கவல்ல அழலிற் செய்யப்படும் வேள்வியை முடித்து (நம்மை) அடியோடு அறும்படி அழிக்க மூண்டுள்ளான்; (எ - று.)—பி - ம்:—[1]கண்களானம். [2]முடிக்கை. (2889)

97.—அதுகேட்டு வானரர்யாவரும் மகிழ்தல்.

என்றன னுலக மேழும் [1]ஏழுமாத் தீவும் எல்லை
ஒன்றிய கடல்க ளேழும் [2]ஒருங்கெழுந் தார்க்கு மோதை
அன்றென வாகு மென்ன அமரரு மயிர்க்க வார்த்துக்
குன்றின [3]மிடியத் துள்ளி யாடின குரக்கின் [4]கூட்டம்.

(இ-ள்.) என்று விபீடணன் சொன்னவுடனே, 'ஏழுலோகங்களும் இந்த உலகத்து ஏழுபெரியதீவுகளும் எல்லையிற்பொருந்திய

ஏழுகடல்களும் ஒருங்கெழுந்து ஆர்க்கின்ற ஓதை அன்று (இது) என்னவும், '(இது அவ்வாறான ஓதையே) ஆகும்' என்னவும் தேவர்களும் ஐயுறும்படி ஆரவாரித்து, குன்றினமும் இடியும்படி குரங்கின் கூட்டம் துள்ளியாடின; (எ-று.)—பி-ம்:—[1] ஏந்தினவெல்லையாக. [2] உடன். [3] மடிய. [4] ஈட்டம். சிலபிரதியில் "என்றலு மிறைஞ்சி" (நிகும்பிலையாகப்படலம்-2) என்ற செய்யுளோடு மாயாசீதைப்படலம் முடியும். (2890)

ஸ்ரீவான்மீகத்தில் இச்சரிதம் கூறியுள்ளவிதம் வருமாறு:-இராமன் தன்னைக்கொல்ல உபாயஞ்சிந்திப்பதை யுணர்ந்து இந்திரசித்து இலங்கையிற்புகுந்து கும்பகர்ணாதியரிறந்ததைநினைத்துக் கண்கள் சிவக்கச்சிவந்து இராமலக்ஷ்மணர் துயரத்தினால் போர் முயற்சியை விட்டிருக்குமாறு மாயையை வெளியிடக்கருதி அரக்கச்சேனை சூழ இலங்கையின் மேலைவாயிலாற் புறப்பட்டான். பின்பு அந்த இந்திரசித்து மாயையினாற் சீதையைப்போன்ற உருவத்தைப் படைத்து, வானரர்கட்கு எதிராகப் போக, அநுமானோடு மற்றை வானரர்களும் கற்களையும் மலைச்சிகரங்களையும் ஏந்திச்சென்றனர். அப்போது சீதை மகிழ்ச்சியற்ற உருவத்துடன் இந்திரசித்தின் தேரிலிருப்பதுகண்டு, வானரப்படையோடு அநுமான் அவனை யணுகினான். வானரப்படை நெருங்குவதுகண்ட இந்திரசித்து, 'ராம! ராம!' என்று சீதை கதறிக்கொண்டிருக்கும் போதே வாளை யுருவிச் சீதையின் தலையைப் பிடித்துக்கொண்டான். அநுமான் கண்ணீர் ஆறாய்ப் பெருகக் குற்றமற்ற பெண்ணைக் கொலைசெய்வதைச் சுட்டி இந்திரசித்தைப் பலபடியாகத் திட்டினன். இந்திரசித்து, 'நீங்களெல்லாம் எவள்பொருட்டாக இங்கு வந்திர்களோ, அவளையே கொன்றுவிடுகின்றேன். பின்பு ராமாதியரான உங்களையெல்லாம் கொல்லுவேன். குரங்கே! பகைவர்க்கு வருத்தத்தை விளைப்பது எதுவோ, அது அவசியம் செய்யத்தக்கது: ஆகவே, சீதையைக் கொல்வது தக்கதே' என்று சொல்லி, அந்த மாயாசீதையை அவள் புலம்பிக்கொண்டிருக்கும் போதே வெட்டி வீழ்த்திக் கர்ச்சித்தான். அது கண்டு அஞ்சியோடப் பார்த்த வானரரைத்தைரியமூட்டி முதலிற் பொருது மாற்றாரான அரக்கரைத் தடுத்துப் பின் உற்சாகங்குன்றி, அநுமான் 'எவள் பொருட்டுப் போர்நேர்ந்ததோ, அவளோ இறந்திட்டாள். இனி நாம் பொருது என்ன பயன்? இராமபிரானிடத்தும் சுக்கிரீவனிடத்தும் இச்செய்தியை யறிவித்து அவர்கள் சொன்னபடி செய்வோம்' என்று சேனையுடன் மெல்லத் திரும்பினான். அது கண்டு இந்திரசித்து தான் ஓமஞ்செய்ய விரும்பி நிகும்பிலையென்ற தேவாலயத்திற்குச் சென்று, அங்கு முறைப்படி ஓமஞ் செய்யலானான். இது நிற்க.

ஸ்ரீராமன் ராக்ஷஸவானரர்கட்கு நிகழும்போரின் பேரொலியைக் கேட்டு, திடீரெனவந்த சாம்பவானை நோக்கி 'அநுமான் பெரும்போர் புரிவதாகத் தோன்றுகின்றது: அவனுக்கு உதவ உன்சேனையுடன் ஆங்குச்செல்வாய்' என்றான். சாம்பவான் அநுமானைச் சந்திக்க, யாவரும் ஸ்ரீராமனிடம் திரும்பினார்கள். ஸ்ரீராமனைச் சேர்ந்ததும், அநுமான், அப்பிரானிடத்துச் சீதையின்

செய்தியைக் கூறினன். அதுகேட்டதும், ஸ்ரீராமன் துயரமிகுதியால் மூர்ச்சித்து வேரற்றமரம்போல் வீழ்ந்தனன். வானரர்கள் பலவகைச் சைத்தியோபசாரங்களினல் அப்பிரானைத் தேற்றலானுர்கள். இலட்சுமணன் மிகவும்வருந்தி அப்பிரானைத் தன் கைகளால் அணைத்துப்பலபடிசொல்லித்தேற்றி, 'மாற்றார் உனக்கு வருத்தத்தை யுண்டாக்கியதனுல், இலங்கையை இதோ தொலைத்து விடுகிறேன்' என்றனன். இவ்வண்ணம் தேற்றிக்கொண்டிருக்கையில் வீபீடணன் சேனைகளைத் தம்தமது தொழிலைச்செய்யுமாறு ஏற்பாடுசெய்துவிட்டு, அங்குவந்துசேர்ந்து யாவரும் கண்ணீருடனிருப்பதையும் இலட்சுமணன் துடைமீது புலம்பியவண்ணம் ஸ்ரீராமன் படுத்திருப்பதையும் கண்டு 'இதுவென்?' என்றுவினவ, இலட்சுமணன் செய்தியைச் சுருக்கமாகக் கூறினன். அவன் சொல்லும்போதே வீபீடணன் செய்தி தெரிந்தவனுகையால், 'இது எல்லாம் மாயச்செயல். சீதையை வீட்டிடவும் விரும்பாத இராவணன், அவளைக் கொல்லுமாறு விடுவனே? இந்திரசித்து வானரர்களை யேமாற்றி விட்டு நிகும்பிலைக்குப் போயுள்ளான்: அவன் வேள்வியை முற்றுமுன் அவனைப் போருக்கு அழைத்தால் பிரமனது வரத்தின்படி கொல்லத்தக்கவனுவான். காலதாமதமின்றி என்னேடு இலட்சுமணனை அனுப்புக. வேள்வியை நிறைவேற்றிவிட்டானுனல்தேவர்களாலும் அவனை வெல்லமுடியாது' என்றான் என்பது.

மாயாசீதைப்படலம் முற்றிற்று.

26-ஆவது நிகும்பிலை யாகப்படலம்

(மாயாசீதையை வாளால் வெட்டிப் போக்குக்காட்டிய இந்திரசித்து த்வருமல்வெற்றிபெறவேணுமென்ற கருத்தினுல்) நிகும்பிலையென்ற இடத்து யாகஞ்செய்ய, (அச்செய்தியை யுணர்ந்த விபீடணனுல் அறிவிக்கப் பெற்ற ஸ்ரீராமன் அனுமதியினுல் ஆங்கு அவ்விபீடணனேடும் வானரசைனியத்தோடும் இலக்குமணன் சென்று பொருது) அதனை முடிக்கவொட்டாது தடுத்திட்டதைக் கூறும் படலமென்று, பொருள். இது, நிகும்பலையாகப் படலம், நிகும்பிலைப்படலம் என்றும் வழங்குகின்றது.

ஸ்ரீராமபிரான் 'சீதையைக் கொன்று அயோத்திமீது இந்திரசித்து சென்றிட்டானே?' என்றுகொண்ட ஐயந்தீர்ந்து விபீடணனை இறுகத்தழுவிப்புகழ்ந்தான். நிகும்பிலையில் இந்திரசித்து யாகத்தை முடிக்குமுன் அதனை யழிக்குமாறு இளையபெருமாளைத் தன்னேடு அனுப்புமாறு விபீடணன் வணங்கிவேண்ட, ஸ்ரீராமன் இளையபெருமாளுக்கு அஸ்திரங்களைத் தொடுக்கும் விஷயத்தில் உபதேசித்து, வில கவசம் அம்புக்கூடு என்பன அளித்து உறுதிகள் சொல்லி விடைதர, இலட்சுமணன் விடைபெற்றுக்கொண்டு நிகும்பிலை சார்ந்து, வேள்விக்குப் பாதுகாவலாகிச் சக்கரவியூகமாக இருந்த ஒலியற்ற அரக்கப் பெருஞ்சேனையினைக் கண்டான்,

காண்கையில், வானரர் அச்சேனையைக் கண்டு ஆரவாரிக்க, அரக்கரும் எதிரே யாரவாரிக்க, இருவருக்கும் பெரும்போர் விளைந்தது. இலக்குமணனும் அச்சேனையிற் பொருதுகொண்டிருந்தனன். விபீடணன் 'யாகத்தையொழிக்காமல் சேனையின் முன்னின்று பொருது பொழுதுபோக்குவது தக்கதன்று' என்ன, இலட்சுமணன் புகுந்து பொருது பெருவாரியாகக் கொன்று வீழ்த்தவே, யாகப்பொருள்கள் அழியலாயின. வேள்வியும் பாதுகாவலான பெரும்படையும் அழிந்ததுகண்டு இந்திரசித்து முகப்பொலிவுகுன்றி மனம்வருந்தினன். அப்போது அநுமான் இந்திரசித்தை யணுகிப் பலபடி யேசினன். இந்திரசித்து பதிலாகச் சிலகூறி யுத்த சன்னத்தனாய் அநுமானோடு பொருது அவனை மெலிவுறச்செய்ய, அங்கதன் முதலியோர் பொருமாறுவர, அவ்விந்திரசித்து அவர்களையிகழ்ந்து இலக்குமணனைக் குறித்துச் செல்ல, அப்போது வானரர் கல் மரம் முதலியவற்றை யெறிய, அரக்கன் அவற்றைச் சிதைத்து வானரர்களையும் வலி ஓயுமாறு செய்தான். அப்போது வீபீடணன் இலக்குமணனை நோக்கி 'நமது வானரப்படை குலைகின்றதே! இந்திரசித்தைப் பிழைப்புறாமல் விரைந்து கிட்டிப் பொருக' என்று விண்ணப்பிக்க, அநுமான் தோளினமீது ஏறிக்கொண்டு இலக்குமணன் இந்திரசித்தைக் கிட்ட, இருவர்க்கும் கடும்போர் நிகழ்ந்தது. அப்போரில் இந்திரசித்து மெலிய, அதுகண்ட வீபீடணன் அச்செய்தியை இலக்குமணனிடம் விண்ணப்பித்தான். இந்திரசித்து கடுங்கோபங்கொண்டு வாயவ்யாஸ்திரம் முதலிய அஸ்திரங்களைத் தொடுக்க, அவைகளை அந்த அந்த அஸ்திரங்களாலேயே இலக்குமணன் குலைத்தான். அப்பால் 'இதற்குத் தப்பாமல் இறந்தொழிவாய்' என்று பிரமாத்திரத்தை அரக்கன் தொடுக்க, இளையபெருமாளும் அந்த அத்திரத்தையே யெடுத்து 'உலகத்தையழிக்காமல் எதிரி விடுத்த அத்திரத்தையே அழிப்பாய்' என்றுசொல்லி விடுத்தான். இலக்குமணனது அருளைக்கண்டு தேவர்கள் வியந்துகொண்டாடினர். அப்போது தேவேந்திரன் அவதாரரஹஸ்யத்தைத் தேவர்கட்கு நினைப்பூட்டினன். தேவர்களெல்லாம் 'அறிந்தும், மாயையால் மறந்திடுகின்றோம்; இப்போது உண்மையறிந்தோம்' என்று சொல்லி இலக்குமணனைத் தொழுதனர். பிரமாத்திரம் தணிந்தது. பிறகு இந்திரசித்து நாராயணாஸ்திரத்தைத் தொடுக்க, யாவரும் அஞ்சிக் கைகூப்பிவணங்க, இலக்குமணன் தன்னை நாராயணனாகப் பாவித்து நிற்க, அது இவனை வலங்கொண்டு வானவழியே சென்றது. பின்னர்ப் பாசுபதாஸ்திரத்தை அரக்கன் தொடுக்க, அதனை அந்த அஸ்திரத்தினாலேயே இலக்குமணன் தடுத்திட்டான். தெய்வப்படைகள் பழுதுபடவும் இந்திரசித்து சலிப்பில்லாமல் வில்வித்தையில் வெல்வோமென்று அம்புகளைப் பொழிய, வானரர்கள் ஓயாமல் மலைகளைப் பொழிய, இளையபெருமாள் இனி அரக்கர் பிழையாரென்னுமாறு நூறுகோடி அம்புகளைத் தொடுத்தான். அப்போது இந்திரசித்து இலக்குமணனருகேயிருந்த தன் சிறிய தந்தையைக் கண்டு இகழ்ந்து பலபடி பேசினன். விபீடணன் சீற்றங்கொள்ளாமல் 'தருமந்தவறாமல் நடக்கவேண்டுவது கடமையேயன்றிப் பாவவழியில் நடப்பது தகுதியன்று. அதுவே எனக்குச்

சிறப்பு'என்று விரிவாகக் கூறினன்,பின்பு இந்திரசித்து 'உன்சிறப்பெல்லாம் என்கையம்பால் தீரும்'என்று அர்த்த சந்திரபாணத்தை விபீடணன்மீது விடுக்க,அதனை இலக்குமணன் ஒழித்தருள, வேற்படையை அரக்கன் விட்டான். அதனையும் இளையபெருமான் கருணையால் வெட்டிவீழ்த்தினர். அப்போது விபீடணன் தனது கதாயுதத்தினால் இந்திரசித்தின் சாரதியையும் தேர்க்குதிரைகளையும் கொன்று தேரையும் கட்டுக்குலையச்செய்தான். அத்தேரிலிருந்தபடியே இந்திரசித்து, விபீடணன் இளையபெருமாள் வானரர் என்ற எல்லார்மீதும் அம்புகளைப் பொழிந்து அட்டகாசஞ்செய்து, இனி இதிலிருந்து பொரமுடியாதென்று கருதிக் கண்ணிமைப்போதிற்குள் வானத்தெழுந்து மறைந்து இராவணனருகிற் சேர்ந்தானென்பது இப்படலத்திற்கூறிய பொருள்.

1.—ஸ்ரீராமன் விபீடணனைத் தழுவிக் கொண்டாடுதல்.

வீரனு மையந் தீர்ந்தான் வீடணன் றன்னை மெய்யோடு
ஆர்வமு முயிரு மொன்ற வழுந்துறத் தழுவி யைய
தீர்வது பொருளோ துன்பம் [1] நீயுளை தெய்வ முண்டு
மாருதி [2]யுளன்நாஞ் செய்த தவமுண்டு [3]வலியு முண்டால்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஸ்ரீராமனும் ஐயம்நீங்கப்பெற்று, விபீடணனை(த் தன்) உடலோடு அன்புடன் உயிரொன்றாக அழுத்தமாகத்தழுவி, (அவ்விபீடணனை நோக்கி) 'ஐயனே! (யான்) துன்பம் நீங்குவது ஒரு பெரியகாரியமோ? (அன்று:ஏனெனின்),—நீ உள்ளாய்: தெய்வமுளது! மாருதி உள்ளான்: நாம் செய்த தவமு முண்டு: வலியும் உள்ளதே'; (எ - று.)—'என்றலும்' என அடுத்த கவியோடு தொடரும். வீரனும், உம்மை இறந்ததுதழுவியது. பி-ம்:—[1]உண்டு. [2]உண்டுநாஞ்செய். [3]மறையும். (2891)

2.-இந்திரசித்தின்யாகத்தைத் தடுக்கும்படி இலக்குமணனை யனுப்புமாறு ஸ்ரீராமனை விபீடணன் வேண்டுதல்.

என்றலும் இறைஞ்சி யாக முடியுமே [1]லியாரும் வெல்லார்
வென்றியு மரக்கர் [2]மாடே விடையருள் இளவலோடும்
சென்றவ னுவியுண்டு வேள்வியுஞ் [3]சிதைப்ப னென்றான்
நன்றது புரிதி ரென்று நாயகன் நவில்வ தானான்.

(இ - ள்.) என்று கொண்டாடிக் கூறியவுடனே, (ஸ்ரீவிபீடணன் இராமபிரானை) வணங்கி, '(இந்திரசித்து தொடங்கும்) யாகத்தை முடிப்பானானால், யாரும் (அவனை) வெல்லமாட்டார்: வெற்றியும் அரக்கரிடமேயாம்: (ஆதலால்), இளவலுடனேசென்று அவ்விந்திரசித்தின் ஆவியை யொழித்து (அவன்தொடங்கிய) யாகத்தையும் அழிப்பேன்: விடையருள்வாய்' என்று வேண்டினன்: 'அது நல்லது: அவ்வாறேசெய்மின்' என்று ஸ்ரீராகவன் (சில) சொல்லலானான்; (எ - று.)—இராமபிரான் சொல்வனவற்றை மேற்கவிகளிற் காண்க. வேள்விமுடியாது இந்திரசித்தின் வாழ்வு முடிய இளவலையனுப்புக என்றான். பி - ம்:—[1]ஆரும். [2]மேற்சே. [3]சிதைக்க. (2892)

3.–ஐந்துகவிகள்-ஸ்ரீராமன் இலக்குமணனைத்தழுவிக்கொண்டு அம்புவிடுவதுகுறித்துச் சிலஉபதேசித்ததைத் தெரிவிக்கும்.

தம்பியைத் தழுவி [1]ஐயன் தாமரைத் தவிசின் மேலான்
வெம்படை தொடுக்கு மாயின் [2]விலக்குமதன்றி வீர
அம்புநீ [3]துரப்பா யல்லை அனையது [4]துரந்த காலை
உம்பரு முலகு மெல்லாம் [5]விளியுமஃ தொழிதி யென்றான்.

(இ - ள்.) ஸ்ரீராமன்,—இளையபெருமானைத் தழுவி, 'வீரனே! (பகைவன்) பிரமனது கொடிய அஸ்திரத்தைத் தொடுப்பானாயின், (அதை) விலக்குவதன்றி, நீயே (முந்த) அந்தப்படையைத் தொடுத்துவிடாதே; அந்தப் படையைத் தொடுத்துவிட்டகாலத்து மேலுலகமும் இவ்வுலகமுமெல்லாம் இறந்துபடும்: ஆதலால், அதனை ஒழிந்திடுவாய்' என்று கூறினான்; (எ - று.)

இந்திரசித்து பிரமாத்திரத்தைத் தொடுப்பானாயின், அதனை விலக்கும் பொருட்டாக நீயும் பிரமாத்திரத்தைத் தொடுக்கலாமேயன்றி, மற்றைவேளையில் முற்பட்டு நீ பிரமாத்திரத்தைத் தொடுத்துவிடவேண்டா என்று உபதேசித்தவாறு. இராமபிரான் அறத்திற்கு வரம்புகாண முடியவில்லையே! பி - ம்:— [1]ஐய. [2]விலக்குவான்பொருட்டாலந்த, விலக்குவதன்றிவெய்தின். [3]தொடுப்பாய். [4]நடந்த. [5]விளியுமஃதொழிநீ, முடியுறத்தொழுதி.

4. முக்கணான் படையும் ஆழி [1]முதலவன் படையும் [2]முன்னின்று
ஒக்கவே விடுமே விட்டா [3]லவற்றையும் அவற்றி னாயத்
தக்கவா றியற்றி மற்றுன் சிலைவலித் தருக்கி னாலே
புக்கவ னாவி [4]கொண்டு [5]போதுதி [6]புகழின் மிக்கோய்.

ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) புகழினால்மிக்கவனே! மூன்றுகண்களையுடையவனான சிவபிரானது அஸ்திரமும் [பாசுபதாஸ்திரமும்] சக்கரப்படையையுடைய முதற்கடவுளினது அஸ்திரமும் [நாராயணாஸ்திரமும்] முன்னேநின்று (யாவும் அழிவனவாக இந்திரசித்து) ஒருசேரவிடக்கூடும்: அங்ஙனம்விட்டால், அந்த அஸ்திரங்களையும் அவற்றாலேயே ஓயுமாறு தகுந்தவகையாகத்தொடுத்து, பின்பு உன்னுடைய வில்வலியாகிய திறமையினால் (போரிற்) புகுந்த (அந்த) இந்திரசித்தினுடைய ஆவியைக் கவர்ந்துகொண்டுபோவாய்; (எ - று.)

பாசுபதாஸ்திரம்போன்ற அஸ்திரங்களைப் பிரயோகித்து மாற்றானைக் கொல்லாது உன் வில்வலிமையினாலேயே அவனைக்கொல்வாயென்றான் ஸ்ரீராமனென்க. பி-ம்:—[1]முதலவ. [2]முன்னி. [3]அவற்றினாலவற்றையோய்த்து, அவற்றையு மவற்றாற்றள்ளி. [4]உண்டு. [5]போதுநீ. [6]புகழுமஃதே. (2894)

5. வல்லன மாய [1]விஞ்சை வருத்தன வறிந்து மாளக்
கல்லுதி [2]தரும மென்னுங் [3]கண்ணகன் [4]கருத்தைக் கண்டு
[5]பல்பெரும் போருஞ் செய்து [6]வருந்தின வற்றம் பார்த்துக்
கொல்லுதி [7]யமரர் தங்கள் [8]கூற்றினைக் [9]கூற்ற [10]மொப்பாய்.

(இ-ள்.) (பகைவர்க்கு) யமன்போன்றவனே! (அவ்விந்திரசித்து தனக்கு) கைவந்தனவான மாயவித்தைகள் செய்தவற்றையறிந்து (அவை) ஒழிய, தருமமென்கின்ற கண் பரந்துள்ள கருத்தைப் பிரதியட்சீகரித்துப்பேர்த்துத் தள்ளுவாய்; (எதிரி) பல பெரும்போரைச்செய்து வருந்தின சமயம்பார்த்து அமரர்க்குக் கூற்றமாகவுள்ள அவனை யொழிப்பாய்; (எ - று.)—பி - ம்:— [1]விச்சை. [2]கருமம். [3]கருமங்கள், கன்னகங். [4]மனத்திற்கொண்டாய், கருத்திற்கொண்டோய். [5]பல்பல. [6]வருந்தலை. [7]சீர்மைத்தாக. [8]என்றனன், எண்ணின்ற, மேனின்ற. [9]குற்றம். [10]மாறாய், அற்றான்.

6\. பதைத்தவன் வெம்மை [1]யோடிப் பல்பெரும் பகழி மாரி
[2]விதைப்பன விதையா நின்று [3]விலக்கினை மெலிவு [4]மிக்கால்
[5]உதைத்தவன் சிலையின் வாளி மருமத்தைக் [6]கருதி [7]யோட்டி
வதைத்தொழில் புரிதி சாய நூல்நெறி மறப்பி லாதாய்.

(இ-ள்.) வில்நூலின் முறையைமறவாதவனே! (இந்திரசித்து) பதைப்புக்கொண்டவனாய் உக்கிரம்மிகுந்து மிக்க பல பகழிமாரி விதைப்பவற்றை (நீயும் பாணங்களை) விதையாநின்று விலக்கினவனாய், (அவனுக்கு) மெலிவுமிக்கால் (அப்போது) உதைந்த வலிய சிலையினின்று வாளியை (அவனது) மருமஸ்தானத்தை நோக்கிச் செலுத்திச் சாய்ந்திட வதைத்தொழிலைப் புரிவாய்: (எ - று.)

மருமம் - உயிர்நிலை. வாளியுதைத்த வல்சிலையினது, மருமத்தை - நடுவிடத்தை, கருதி - குறியாகவைத்து, ஓட்டி - அம்பைச் செலுத்தி (அந்தவில்லையொடித்திட்டு) என்றுமாம். பி - ம்:— [1]ஆடி. [2]விதைத்தவன். [3]விலக்கினும், விலக்குதி. [4]மீதால்; [5]உதைப்பன. [6]கிழிய. [7]ஒடி. (2896)

7\. தொடுப்பதன் முன்னம் வாளி தொடுத்தவை துறைக டோறும்
தடுப்பன தடுத்தி [1]யெண்ணங் குறிப்பினு [2]லுணர்ந்து தக்க
கடுப்பினு [3]மளவிலாத [4]கதியினுங் கணைகள் [5]காற்றின்
விடுப்பன வவற்றை நோக்கி விடுதியால் [6]விரகின் மிக்காய்.

(இ - ள்.) தந்திரம்மிக்கவனே! (எதிரி) தொடுப்பதற்கு முன்னமே [தொடுத்தவளவில்தானே] தொடுத்தனவாகிய அம்புகளைத் தடுத்தற்குஉரிய வழியினுலெல்லாம் தடுத்தற்குரியவற்றைத் தடுப்பாய்: (பகைவனது) எண்ணத்தைக் குறிப்பினுலறிந்து, தக்கவேகத்தோடும் அளவிடமுடியாத கதியினோடும் காற்றைப்போற் கணைகளை (எதிரி விடுத்தால்) விடுப்பனவாகிய அவைகளைக் கவனித்து (அவை தணியும்படி மாற்றுக்கணைகளை) விடுவாய்; (எ - று.)— கடுப்புஎன்றது - ஓரம்பைச்செலுத்தியபின் மற்றோரம்பைச் செலுத்துதற்கு உரியகாலம் சொற்பமாம்படி மேன்மேல் விடும் வேகம். கதிஎன்றது - விடுத்தகணை விரைந்துசெல்லுகை. பி-ம்:— [1]எண்ணும், எண்ணி. [2]உணரத். [3]விளம்புமாற்றக், விளைவுமாறக். [4]கதியெனும். [5]ஆற்றின். [6]விரகிலாதாய், விரைவிலாதாய். (2897)

8.—இராமபிரான் வைஷ்ணவவில்லைப் பெற்றுக்கொள்வாயெனல்.

என்பன [1]முதலு பாய மியாவையு மியம்பி [2]யேற்ற
முன்பனை நோக்கி யைய மூவகை யுலகுந் தாவுந்

தன்பெருந் தன்மை தானு மறிகிலா வொருவன் தாங்கும்
வன்பெருஞ் சிலை[3]யி தாகும் [4]வாங்குதி வலமும் [5]கொள்வாய்.

(இ - ள்.) என்பனமுதல் உபாயம் எவற்றையும் சொல்லி, தகுதியுள்ளவலியனுன (அந்த) இளையபெருமாளை நோக்கி, ஐய னே! மூவகை யுலகமும் தானுகித் தனது பெரியதன்மையைத் தானும் அறியமாட்டாத ஒப்பற்றவனுன திருமால் தாங்குகின்ற வலிய பெரிய வில், இதுவாகும்: (இதனைப்) பெற்றுக்கொள்வாய்: வெற்றியையும் அடைவாய்; (எ - று.)

இச்செய்யுளிலுள்ள 'நோக்கி' யென்பது அடுத்தசெய்யுளில் 'என்றுகொடுத்தனன்'என முடியும். தன்பெருந்தன்மை தானும் அறியாவொருவன்- "தனக்குந்தன் றன்மையறிவரியானை' என்றார், நம்மாழ்வாரும் 'தன் தன்மையறிவரியான்' என்றால், ஸர்வேஶ்வரனுடைய ஸர்வஜ்ஞதைக்கு[முற்றுணர்வுக்கு]க் குறைவராதோ? என்னில்—அளவிடமுடியாததை அங்ஙனமுள்ளதாக அறிந்திடுதலால் வாரா தென்ப. பி-ம்:—[1]முதலாயாவும், முதலவாய. [2]ஏக. [3]ஈதாகும், ஈதன்றே, இதொன்ரே, இதென்ரே, ஈதொன்றே, ஈதன்ரே. [4]வணங்குதி. [5]கொண்டே. (2898)

9.—ஸ்ரீராமன் வில்லுடனே கவசத்தையுந் தருதல்.

இச்சிலை யியற்கை மேனுள் தமிழ்முனி யியம்பிற் றெல்லாம்
[1]அச்சனக் [2]கேட்டா யன்றே யாயிர [3]மௌலி யண்ணல்
மெய்ச்சிலை விரிஞ்சன் [4]மூட்டும் வேள்வியின் வேட்டுப் பெற்ற
கைச்சிலை [5]யென்று தானே கொடுத்தனன் கவசத் தோடும்.

(இ - ள்.) 'இந்த வில்லின் தன்மையைக்குறித்து மேனுளில் அகஸ்திய முனிவன் கூறியதெல்லாம் மனத்திற்படியும்விதமாகக் கேட்டுள்ளாயல்லவோ? (இந்தவில்), ஆயிரந்திருமுடிகளையுடைய பரமபுருஷனின் மெய்ம்மையான சிலையாகும்: (இது), விரிஞ்சன் முயன்று செய்த யாகத்தில் ஓமஞ்செய்து பெற்ற கைச்சிலை' என்று சொல்லிக் கவசத்தோடும் (ஸ்ரீராமன்) கொடுத்திட்டான்;—அச்சு - இலக்கணையால், மனத்துப்பதிதலைக்காட்டிற்று. ஆயிரமௌலியண்ணல் - "ஸஹஸ்ர ஶீர்ஷாபுருஷ:" பி - ம்:—[1]அச்சன. [2]கேட்டி. [3]நாமத்து. [4]தானே. [5]கோடியென்று, என்றுகாட்டிக். (2899)

10.—அம்பருத்தூணி கொடுத்தல்.

ஆணியிவ் வுலகுக் கான ஆழியான் புறத்தி [1]னூர்த்த
தூணியுங் கொடுத்து [2]மற்று முறுதிகள் பலவுஞ் சொல்லித்
தானுவின் [3]றோற்றத் தானைத் தழுவினன் தழுவ லோடுஞ்
சேணுயர் விசும்பில் தேவர் தீர்ந்ததெஞ் சிறுமை யென்றார்.

(இ - ள்.) இவ்வுலகுக்கெல்லாம் ஆதாரமான சக்கரப்படையையுடைய திருமால் முதுகிற்கட்டியிருந்த அம்பருத்தூணியும் கொடுத்து, மேலும் பல உறுதிகளையுஞ் சொல்லிச் சிவபெருமான் போன்ற [உக்கிரமான] தோற்றத்தையுடையவனுன இளையபெருமானைத்தழுவினன்,(ஸ்ரீராமன்);தழுவினவுடனே,மிகவுயர்ந்தவிசும்

பிலுள்ள தேவர் எம்முடைய சிறுமை நீங்கிற்றென்றார்; (எ-று.)—பி-ம்:—[1]ஆர்க்கும், ஆத்த, ஆர்க்க. [2]மற்ற. [3]ஆற்றலானை. (2900)

11.—போர்மேற்செல்லும் இலக்குமணனுடைய பொலிந்த தோற்றம்.

மங்கலந் [1]தேவர் கூற [2]வானவ மகளிர் [3]வாழ்த்திப்
பங்கமி லாசி [4]கூறிப் பலாண்டிசை பரவ பாகத்
திங்களின் மௌலி யண்ணல் திரிபுரந் [5]தீக்கச் சீறிப் [வான்.
பொங்கின னென்னத் தோன்றிப் பொலிந்தனன் [6]போர்மேற் போ

(இ - ள்.) தேவர்கள் மங்கலத்தைச் சொல்லவும், தேவமகளிர் வாழ்த்திக் குற்றமற்ற ஆசியைக் கூறிப் பல்லாண்டுபாடவும், போர் மேற்செல்பவனாகிய இலக்குமணன்,—(அப்போது) பிறைச் சந்திரனை முடியிற்கொண்டவனாகிய பெருமைபெற்ற சிவபெருமான் திரிபுரத்தைத்தீக்குமாறுசீறிப் பொங்கினான் போலத் தோன்றி விளங்கினான்; (எ - று.)—பி.ம்:—[1]முனிவர். [2]வானவர். [3]வாழ்த்த. [4]கூற. [5]எரிக்க. தீப்ப, எரிய. [6]பகைமேற். (2901)

12.—ஸ்ரீராமன்விடைகொடுக்க, அவனைவணங்கி வானர சேனையோடு நிகும்பிலைக்கு இலட்சுமணன் புறப்படுதல்.

மாருதி [1]முதல்வ ராய வானரந் தலைவ ரோடும்
வீரநீ சேறி யென்று விடைகொடுத் தருளும் [2]வேலை
ஆரியன் கமல பாத [3]மகத்தினும் புறத்து [4]மாகச்
சீரிய சென்னி [5]சேர்த்துச் சென்றனன் தருமச் செல்வன்.

(இ-ள்.) 'வீரனே! மாருதிமுதலாகவுள்ளவரான வானரத் தலைவருடனே நீ செல்வாய்' என்று (ஸ்ரீராமன்) விடைகொடுத்தருளும்போது, அந்த ஸ்ரீராமனுடைய கமலபாதம் மனத்திலும்புறத்திலுமாக இருக்குமாறு சிறப்புப் பொருந்திய முடிமீதுசேர்த்து, தருமத்தைச்செல்வமாகக்கொண்டவனான இலட்சுமணன், (நிகும்பிலைக்குச்) செல்பவனானான்; (எ - று.)—மனத்திலேயே தியானித்திருப்பதனால் அகத்திலும், சென்னியிற்சேர்த்தலாற் புறத்திலும் ஆரியன்பாதம் இருந்ததென்க. பி-ம்:—[1]முதலவீரர். [2]எல்லை. [3]அகத்துதன். [4]ஆக்கிச். [5]சேரச்சேர்த்தினன். (2902)

13.—இலக்குமணன் நிகும்பிலை நோக்கிச் செல்லுதல்.

பொலங் [1]கொண்ட லனைய மேனிப் புரவலன் பொருமிக் கண்ணீர்
நிலங்கொண்டு படர நின்று நெஞ்சழி வானை நம்பி
வலங்கொண்டு வயிர வல்வி லிடங்கொண்டு வஞ்சன் மேலே
சலங்கொண்டு[2]கடிது சென்றான் றலைகொண்டு [3]வருவெ[4]னென்றே.

(இ - ள்.) அழகிய மேகத்தையொத்த மேனியைக்கொண்ட மன்னவனும் விம்மிக் கண்ணீர் புவியிலேவிழுந்து பரவுமாறுநின்று மனம் வருந்துபவனுமான ஸ்ரீராமனை, இளையபெருமாள்,—பிரதட்சிணஞ்செய்து, (அப்பிரானளித்த) வலிய உறுதியானவில்லை இடப்புறத்திற்கொண்டு, (இந்திரசித்தினுடைய) தலையை (அறுத்துக்) கொண்டு வருவேனென்று சொல்லி, வஞ்சகனான (அந்த) இந்திரசித்தின்மீது கோபங்கொண்டு விரைந்துசென்றான்; (எ - று.)—

மூன்றுமடியில் தொடைமுரண் காண்க. கொண்டு என்பது பல முறை வந்தது-சொற்பொருட்பின்வருநிலையணி. பி-ம்:—[1]கொண்ட கரிய. [2]விரைவிற். [3]தருவென். [4]என்று. (2803)

14.—இலட்சுமணனைப்பிரிந்த இராமபிரான்நிலை.

தான்பிரி வின்றி லாத தம்பிவெங் கடுப்பிற் [1]செல்லா
வூன்[2]பிரி வின்றி லாத வுயிரென [3]மறைத லோடும்
வான்பெரு [4]வேள்வி காக்க [5]வளர்கின்ற பருவ [6]நாளில்
தான்[7]பிரிந் தேகக் கண்ட தயரதன் றன்னை யொத்தான்.

(இ - ள்.) தான் பிரிந்திராத தம்பி மிக்கவேகத்தோடுசென்று உடலைவிட்டுப்பிரிந்திராத உயிர்(சென்றாற்)போல(ப் பிரிந்து சென்று கண்ணுக்கு) மறைந்தவுடனே,—வளர்ந்துவருகின்ற இளம்பருவத்தில் (விசுவாமித்திரன் செய்யும்) மிக்கபெரியவேள்வியைப் பாதுகாக்கும்பொருட்டுத் தான் பிரிந்து செல்லக் கண்ட தயரதனை யொத்தான்; (எ - று.)

இந்தச்செய்யுளும் இலட்சுமணனிடத்து இராமன் எவ்வளவு அன்பு பூண்டிருந்தானென்பதை விளக்கும். ஊன் - உடலுக்கு, இலக்கணை. பி-ம்:—[1]செல்வான், செல்ல. [2]பிரிவுடையதாக, பிரிவுடையதான. [3]உலாவலோடும். [4]வேள்விக்காக. [5]வருகின்ற. [6]மாலைத். [7]பிரிகின்றநாளிற், பிரிகின்றநாளத். (2804)

வேறு.

15.—வானரர்களும் இலட்சுமணனுடனே நிகும்பிலையை யடைதல்.

சேனாபதி யேமுதல் சேவகர்தாம்
ஆனார்திமிர் [1]கொள்ளிகொ ளங்கையினார்
கானார்[2]நெறி யும்மலை யுங் [3]கழியப்
போனார்கள் நிகும்பிலை புக்கனரால்.

(இ-ள்.) சேனாபதிமுதலிய வீரர்களாயுள்ளவர், எரிகின்ற கொள்ளிக்கட்டையை யேந்திய அகங்கையையுடையவர்களாய், காட்டிற்பொருந்திய வழியும் மலையும் கழிந்துவிடும்படி போனார்களாய், நிகும்பிலையைப் புகுந்தார்கள்; (எ - று.)—சேவகரானார் தாம் என இயைக்க. இந்தவிருத்தச் செய்யுள்களை சேனா பதியே முதல்சேவகர்தாம் என இவ்வாறு நாற்சீராகவும் பிரிக்கலாம். பி - ம்:—[1]கொள்ளியின். [2]மலையுங்நெறியும். [3]ஒழியப். (2805)

16.—சென்றவர்கள் அரக்கர்சேனையைக் காணுதல்.

உண்டாயதோ [1]ராலில குன்னொருவன்
[2]கொண்டா றுறை கின்றது [3]போற்குலவி
[4]விண்டாளும் [5]விழுங்க விரிந்ததனைக்
கண்டார வரக்கர் [6]கருங்கடலே.

ஐந்துகவிகள்—ஒருதொடர்.

(இ - ள்.) தோன்றியதான ஓராலில் உலகை யுட்கொண்ட ஒருவன் உறைகின்றதுபோல் விளங்கி, ஆகாயமும் தன்னுளடங்

கப் பரந்ததாகிய அந்த அரக்கர்கருங்கடலை(ச் சென்றவர்கள்) கண்டார்; (எ-று.)

சிறியஇடத்தில் மிகப்பரந்தசேனை யிருப்பதற்கு, ஆலிலையிலே உலகத்தையெல்லாமுட்கொண்ட திருமால் பள்ளிகொண்டதனை உவமையாகக் காட்டினர்: ஆதாரத்தினும் ஆதேயம் மிக்கிருத்தலைக் கூறுவது பெருமையணியாம். பி - ம்:—[1] ஆலிடை. [2] தண்டா துறை. [3] தானெனலாய். [4] விண்டாலம். [5] விழுங்கியிருந்ததனை. [6] பெருங்கடலை, கருங்கடலை. (2906)

17.—நான்குகவிகள்-அரக்கர்சேனையின் வருணனை.

நேமிப் [1] பெயர் யூக [2] நிரைத்துநெடுஞ்
[3] சேமத்தது நின்றது [4] தீவினையோன்
[5] ஓமத்தனல் வெவ்வட வைக்குடனே
[6] பாமக்கடல் நின்றதொர் [7] பான்மையதை.

(இ-ள்.) கொடுஞ்செயலையுடையோனான இந்திரசித்தினுடைய ஓமாக்கினியைச் சக்கரயூகம் வரிசைப்பட்டு நெடுஞ்சேமத்தை [பாதுகாப்பை]ச்செய்வதாகக்கொண்டு நின்றது,-வெவ்வியவடவைக்குடனை ஒளியையுடையகடல் நின்றதன்மையையுடையதனை;—(எ-று.)—'கண்டார்' என்றுகீழ்க்கவியோடு இயையும். இவ்வாறே மேல்மூன்றுகவிகளிலும் ஈற்றிலுள்ள இரண்டாம் வேற்றுமைச்சொல் 16-ஆங்கவியில் 'கண்டார்' என்பதனோடு முடியும்.

கீழ் அரக்கர்சேனைக்குக் கடலை உவமைகூறிய கவி, இங்கு அரக்கர்சேனை சூழ இந்திரசித்தினுடைய வேள்விக்கனலிருப்பதற்கு, கடலினிடை வடவைக்கனலிருப்பதை உவமை கூறினர். பாமம்-ஒளி: இனி, இச்சொல்லுக்குக் கோபமென்ற பொருளுள்ளதனால், பாமக்கடல்-பொங்குதலையுடைய கடலுமாம்; பாமம்-வடசொல். பி-ம்: [1] பெயருக்கு, பெயரூகம். [2] நிறைத்து. [3] சேமத்துற. [4] தீவினையோர். [5] ஓமக்கனல்..., நாமக்கடல் வேறுநவைக்குடனன். [6] பாமைக். [7] பான்மையதே. (2907)

18. [1] காராயின காய்கரி தேர் [2] கலிமா
தாராயிர கோடி [3] தழீஇயதுதான்
நீராழி [4] யொடாழி [5] நிரீஇயதுபோல்
ஓராயிர [6] மியோசனை யுள்ளதனை.

(இ - ள்.) மேகத்தையொத்தனவாகிய சினக்குந்தன்மையுள்ள யானைகளும் தேரும் குதிரையும் காலாட்படையும்(ஆகிய சேனை) ஆயிரகோடிதழுவப்பெற்றது,—நீர்மயமான கடலுடனே வேறே கடல் (சேர) நிறுத்தப்பட்டதுபோல ஓராயிரம்யோசனை தூரம் பரவியுள்ளதனை,—(எ- று.)—நீர்க்கடலோடு மற்றைக்கடல்சேர்ந்தால் எவ்வளவு ரந்திருக்குமோ அவ்வளவு பரந்திருந்தது அந்த அரக்கச்சேனையென்க. தார்-சேனை: இங்கு, பதாதிச்சேனை.பி-ம்:—[1] காராயினதார்கலி. [2] கரிய, பரிமாத், பரியாட். [3] தழீஇயனபோர். [4] ஒரேழும். [5] நிரீஇயன. [6] மால்புடை, மாவுடை. (2908)

19. பொற்றேர்[1]பரி மாகரி மாபொருதார்
எற்றேபடை வீரரை [2]யெண்ணிலமால்
உற்றேவிய [3]யூக முலோகமுடைச்
சுற்றுயிர மூடு [4]சுலாயதனே.

(இ - ள்.) பொருகின்ற முன்னணியிலுள்ள பொற்றேர்களும் குதிரைகளும் யானைகளும் எவ்வளவோ? படைவீரரையே எண்ண முடியாதவராவேனும்; (இவ்வாறு) பொருந்தி யேவிய வியூகம் உலகத்தினுடைய சுற்றுப்புறத்தை ஆயிரம் முறைச்சுற்றவல்லதனை,— (எ - று.)—தார்-முன்னணி. பரிமா-பரியாகியமா: கரிமா-கரியாகிய மா. பி - ம்:—[1]கரிமாகலிமாபொருகால். [2]எண்ணிலவால். [3]ஊகயிலேனமுடன், யூபமுலோகமுடைச். [4]குலாயதனே. (2909)

20. வண்ணக்கரு மேனியின் மேன் [1]மழைவாழ்
விண்ணைத்தொடு செம்மயிர் வீசுதலால்
அண்ணற்கரி யா[2]னன லம்படவெம்
பண்ணைக்கடல் [3]போல்வதொர் [4]பான்மையதை.

(இ-ள்.) (தமது) கருநிறமான மேனியின்மீதுள்ள செம்மயிர் மழை வாழ்கின்றவிண்ணைத் தொடுமாறு வீசுவதனால், பெருமையிற்சிறந்த ஸ்ரீராமன் விடுத்த ஆக்கினேயாஸ்திரம்பட வெவ்விய நீர்த்திரளைக்கொண்ட கடலையொத்த தன்மையையுடையதை,— (எ-று.)—'கண்டார்' (16) என்று இச் செய்யுளோடு குளகம் முடியும். செம்பட்டமயிர் மேல் நிமிர்ந்து நிற்கப்பெற்ற அரக்கச் சேனை, ஸ்ரீராமனால் ஆக்கினேயாஸ்திரம் தொடுத்துவிடப்பெற்று வானுறவோங்கிய அக்கினிச்சுவாலையையுடைய கருங்கடல் போலு மென்க; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி-ம்:—[1]மழுவாள் [2]அனலப்படை. [3]நின்றதொரா. [4]பான்மையதே. (2910)

21.—அவ்வரக்கர்சேனை நாணொலி முதலியன குன்றியிருந்தமை.

[1]வழுங்காசிலை நாணொலி வானில்வரும்
பழுங்கார்முக மொத்த [2]பணிக்குலமும்
[3]தழுங்காகடல் வாழ்வன போல்தகைசால்
முழுங்காமுகி லொத்தன [4]மாமுரசே.

(இ - ள்.) (அந்த அரக்கச்சேனை கொண்டிருந்த) விற்கள், நாணியினொலியை வெளிப்படுத்தாதனவாய்,—மேகத்தினிடத்துத் தோன்றுகின்ற பழமையான இந்திரவில்லை யொத்தன: சங்குகளின் கூட்டமும், கடலில் வாழ்கின்றவைபோல் முழங்காமலிருந்தன: பெரிய முரசமும், பெருமை பொருந்திய முழங்காத முகிலை யொத்தன: (எ - று.)

'நாணொலிமுதலியன செய்யப்படின் மாற்றார் அங்குவந்திடுவரே' என்ற காரணத்தினால், அரக்கர்சேனை நாணொலிமுதலியன செய்யாது ஒலியடங்கி யிருந்ததென்க. அங்ஙனமிருக்கும் சிலை முதலியவற்றிற்கு, இந்திரதனுசு முதலியவற்றை யுவமைகூறினர். முரசத்திற்கு முழங்காமையிலமாத்திரம் உவமையாவதன்றி, வடிவத்தினால் முகில் உவமையாகாது. பணிக்குலமென்பது, பணிக்

குலமெனக் குறைந்துவந்தது. பி-ம்:—[1]வழங்கார். [2]பணைக். [3]தழங்கார். [4]மும்முரசே, வான்முரசே. (2911)

22.—அரக்கர் சேனையைக் கண்டு வானரசேனை யார்த்தல்.

[1]வலியான விராகவன் வாய்[2]மொழியால்
சலியாத நெடுங்கடல் தானெனலாய்
[3]ஒலியாதுறு சேனையை யுற்றொருநாள்
மெலியாதவ [4]ரார்த்தனர் [5]விண்கிழிய.

(இ - ள்.) சலியாமல்நின்ற நெடியகடலென்று (உவமை) சொல்லத்தக்கதாய் ஒலியாமலிருந்த (அரக்கர்) சேனையை, வலிமையுள்ளவனான ஸ்ரீராமனுடைய வாய்மொழியினாற் பொருந்தி, ஒரு நாளும் மெலியாதவரான வானரர், வானமும் கிழியும்படி யாரவாரித்தனர்: (எ-று.) பி-ம்:—[1]வலியானவ் [2]மொழியாம். [3]ஒலியாவொரு. [4]ஒத்தன. [5]விண்கழியே. (2912)

23.—நான்குகவிகள்-வானரசேனையுடனே அரக்கர்சேனைக்கு நிகழ்ந்த கைகலந்த போரைக் கூறும்.

ஆர்த்தாரெதி ரார்த்த வரக்கர்[1]குலம்
போர்த்தார் முரசங்கள் [2]புடைத்தபுகத்
தூர்த்தாரிவர் கற்படை சூன்முகிலின்
நீர்த்தாரையி [3]னம்பவர் நீட்டினரால்.

(இ-ள்.) ஆரவாரித்தவரான வானரர்கட்கு எதிராக அரக்கர் குலம் ஆரவாரித்தன; போர்க்குரிய மாலைசூட்டிய முரசங்கள், அறையப்பட்டன: இவ்வானரர்கள், (அரக்கர் சேனையிடையே) செல்லுமாறு கல்லாகிய படைக்கலங்களைத் தூர்த்தார்: அந்த அரக்கர்கள், கருக்கொண்ட மேகத்தினின்று நீர்த்தாரை (பொழிவது) போல அம்புகளைச் செலுத்தினார்கள்; (எ - று.)—பி - ம்:—[1]வலம். [2]புடைக்கமுகம், புடைத்ததகால். [3]அம்புகள். (2913)

24. **மின்னும்படை [1]வீசவின் [2]வெம்படைமேல்**
பன்னும்[3]கவி சேனை [4]படிந்துளதால்
துன்னுந்துறை நீர்நிறை வாவிதொடர்ந்து
அன்னங்கள் படிந்தன வாமெனலாய்.

(இ-ள்.) துறைநெருங்கிய நீர்நிறைந்த வாவியிலே தொடர்ந்து அன்னங்கள் படிந்தனபோலுமென்று சொல்லுமாறு, மின்னுகின்ற படைக்கலங்களை வீசுவதனாற் கொடிய (அரக்கர்) சேனையின் மேற் சிறப்பித்துக் கூறப்படுகிற கவிச்சேனை படிந்துள்ளது; கருநிறமுள்ள அரக்கர்சேனை மீது கவிக்குலங்கள் படிந்தது, வாவியில் அன்னங்கள் படிந்தனபோலு மென்க: **தற்குறிப்பேற்றம்.** பி - ம்:—[1]வீசினர். [2]வெம்பகைமேல், வெம்பகைபோய். [3]கவிமீது. [4]படிந்துளவால், படிந்துளமால். (2914)

25. **வில்லும்மழு வும்மெழு வும்[1]மிடலோர்**
பல்லுந்தலை யும்முட லும்படியில்
செல்லும்[2]படி சிந்தின [3]சிந்தினவால்
கல்லும்மர முங்கர முங்கதுவ.

(இ - ள்.) (வானரங்கள் வீசிய) கல்லும் மரமும் (அவ்வான ரங்களுடைய) கைகளும் கௌவியதனால், வலியவரான அரக்க ருடைய வில்லும் மழுவும் எழுவும் பற்களும் தலையும் உடலும் பூமியிற்செல்லும்படி மிகச்சிந்தின; (எ - று.)—வானரர்வீசிய கல் லும் மரமும் கதுவின: கரத்தினாலும் வானரர் கதுவினரென்க. பி-ம்:—[1]விடுவோர். [2]பொறி. [3]சென்றனவால். (2915)

26. வாலுந்[1] தலை யும்முட லும்வயிறும்
காலுங்கர முந்[2] தரை கண்டனவால்
கோலும்மழு வும்மெழு வுங்கொழுவும்
வேலுங்கணை யும்வளை யும்விசிற.

(இ - ள்.) (அரக்கர்கள்) தண்டாயுதங்களையும் மழுக்களையும் எழுக்களையும் கொழுக்களையும் வேல்களையும் அம்புகளையும் வளை யங்களையும் விசிறியதனால், (வானரங்களின்) வாலுந் தலையும் உட லும் வயிறும் காலும் கரமும் தரையில்விழுந்தன; (எ - று.)—பின் னால் 'கணையும்' என வருவதனால் கோல் - தண்டாயுதமெனப்பட் டது. பி - ம்:—[1]உடலுந்தலையும் வயிறும், தலையும் வயிறும்முட லும். [2]கரைகண்டிலவால். (2916)

27.—இந்திரசித்தின் வேள்வியை யழிக்காது அச்சேனையி னிடத்துப் போதுபோக்குதல் தகாதென விபீடணன் கூறல்.

வென்றிப்[1]படை வீரனை விட்டணன்நீ
நின்றிக்[2]கடை தாழுதல் [3]நீதியதோ
சென்றிக்கடி வேள்வி [4]சிதைத்திலையேல்
[5]என்றிக்கடல் வெல்குது மியாமெனலும்.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) விபீடணன்,—வெற்றிபொருந்திய படைவீரனை இலட்சுமணனைநோக்கி, 'நீ,இவ்விடத்துநின்று தாமதித்தல் முறை மையையுடையதாகுமோ? போய் இந்தக் காவலுள்ள (இந்திர சித்து செய்யும்) வேள்வியை யழிக்காவிட்டால், நாம் எப்போது இந்த அரக்கர்சேனையாகிய கடலை வெல்லுவோம்?' என்று கூறிய வளவில்,—(எ - று.)—'விசும்புறைவோர்மேவாதவரில்லை' என அடுத்த கவியோடு முடியும். பி - ம்:—[1]சிலை. [2]கடருழ்வன. [3]நீதி யவோ. [4]சினத்துக்கலை. [5]இன்றிக்கடல்வெல்கிலம். (2917)

28.—தேவர்முதலியோர் அப்போரைக் காண வானத்து வருதல்.

[1]தேவாசுர ருந்திசை நான்முகனும்
மூவாமுத லீசனு [2]மூவுலகின்
கோவாகிய கொற்றவ னும்[3]முதலோர்
மேவாதவ ரில்லை விசும்புறைவோர்.

(இ - ள்.) (இலக்குமணன் செய்யும் போரைக் காண) தேவா சுரரும் நான்குதிசையைநோக்கிய நான்கு முகங்களையுடையபிரம தேவனும் மூவாமுதலோனாகிய திருமாலும் மூவுலகின் தலைவ னான இந்திரனும் முதலோரான விசும்புறைவோரில் விரும்பி வரா

தவர் இல்லை; (எ - று.)—மூவாமுதலீசன் - சிவன் எனக்கொண்டு, மூவுலகின்கோ - திருமால் என்பாருமுளர். பி - ம்:—[1]தேவாதிய ரும். [2]முன்னினரால். [3]முதலாம். (2918)

29.—அரக்கர்சேனையில் நால்வகைப்படையும் இருத்தல்.

பல்லார்படை [1]நின்றது பல் [2]லணியால்
பல்லார்படை [1]நின்றது [3]பல்பிறைவெண்
பல்லார்படை [1]நின்றது பல்லியமும்
பல்லார்படை [1]நின்றது பல்படையே.

(இ - ள்.) பல் படை - பலவகைப்பட்ட சேனைகளில்,—பல் லார் - பலவீரரேறிய, படை-தேர்ப்படை, நின்றது—; பல் அணி யால்-பலநிரையாக, பல் ஆர்-பலவாகப்பொருந்திய, படை - குதி ரைச்சேனை, நின்றது-;—பல்பிறை வெண் பல்லார் - பலவான அர்த்த சந்திரபாணமும் வெள்ளியபற்கள்போற்பொத்துகின்ற தம்ஷ்ட்ரபாணமும் பொருந்தியவரான பதாதியரின், படை-சேனை, நின்றது-;—பல்லியம் - வாச்சியங்களுடனே, உம்பல் ஆர் படை - யானைகள் நிரம்பிய படை, நின்றது—; (எ - று.)

இச்செய்யுள், அரக்கச்சேனையில் நால்வகைச் சேனையும் நின்ற மையைக்கூறியது. பின்னிரண்டடிகளில் பதாதிச்சேனை யானைச் சேனைகளைக்கூறினமையால், முன்னிரண்டடிகளில் மற்றைத்தேர் பரிச்சேனைகளைக் கூறினரெனக் கொள்ளப்பட்டது. அணியணியா நிற்பது குதிரைப்படைக்குச்சிறத்தலால், பல்லணியாற் பல்லார் படையென்பதைக் குதிரைச்சேனையென்றது. இரண்டாமடியிலும் நான்காமடியிலும், முறையே, ஆர்தல் - பொருந்துதல் நிறைதல் என்றபொருளில் வந்தது. இச்செய்யுளில் யமகமென்னுஞ்சொல் லணியும், சொற்பொருட்பின்வருநிலையணியும் காணத்தக்கன. பிறை, வெண்பல் என்பன - பாண விசேடங்கள். பி-ம்:-[1]நின்றன, [2]அணியும், அணியார்ப். [3]பல்லிறை. (2919)

30.—இருகவிகள்-இலக்குவன் அரக்கச்சேனையை யழித்தல் கூறும்.

அக்காலை யிலக்குவ னப்படையுள்
புக்கானயி லம்பு பொழிந்தனனால்
[1]உக்கார வரக்கர்த மூரொழியப்
புக்கார்தம னுறை தென் [2]புலமே.

(இ-ள்.) அப்போது, இலக்குவன்,—அந்த (அரக்கர்)சேனையுட் புகுந்து, கூரிய அம்புகளைப் பொழிந்தான்: (அதனால்), அவ்வரக்க ரும்,—(உயிர்) சிந்தினவராய், தம்மூரொழிய [தம்மூர்க்குத் திரும் பாமல்] யமன் வாழ்கின்ற தென்புலத்தைச் சேர்ந்தார்கள்;— (எ-று.) பி-ம்:-[1]உக்கார்களரக்கர்கள், உக்காரவரக்கரும். [2]புலமேல்.

31. தேருமத மாகரி தேர்பரிமா
[1]நூருயிர கோடியின் நூழில்படச்
சேருர்குரு திக்[2]கட லிற்றிடரில்
கூருயுக [3]வாவி [4]குறைத்தனனால்.

(இ - ள்.) தெளிவடையாமலிருத்தற்குக் காரணமான மதமுள்ள விலங்காகிய யானைகளும் தேரும் குதிரையும் நூறாயிர கோடிக்கணக்காகக் கொன்று குவிக்கப்படவும், சேருகப்பொருந்திய இரத்தக் கடலிலே திட்டுப்போலக் கூறுபட்டுச்சிந்தவும், (அரக்கச்சேனையின்) உயிரையொழித்தான், (இலட்சுமணன்); (எ - று.)—பி - ம்:—[1] நூறாயிரமாயிரம். [2] கடலற்றிடலில், கடலிற்றிடராய். [3] வாளி. [4] குதித்தனரால். (2921)

32.—இதுமுதல் பதினொருகவிகள்-படுகளச் சிறப்புக் கூறும்.

வாமக்கரி [1] தானழி வார்க்குழிவன்
[2] தீமொய்த்த [3] வரக்கர்கள் செம்மயிரின்
தாமத்தலை [4] புக்க தழங்கெரியின்
ஓமத்தை நிகர்த்த வுலப்பிலவால்.

(இ - ள்.) அழகிய யானை பிடிபட்ட நீண்ட குழியிலே வலிய தீ மொய்த்தாற்போன்றுள்ள செம்பட்டமயிர்களைக்கொண்ட அரக்கர்களின் ஒளிபொருந்திய தலைகள் புக்கவை,—ஓமகுண்டத்தில் புக்க தழங்கெரியை நிகர்த்தன; (எ - று.)—தற்குறிப்பேற்றவணி. அழிவார்குழி - (காலால்) தரையைப் பேர்த்ததனால் தோன்றியபெரியகுழி என்றலுமுண்டு. ஓமத்தின் தழங்கெரியை என உருபு பிரித்துக் கூட்டுக. பி - ம்:—[1] தேர், தாள். [2] தீமத்த. [3] அரக்கனல். [4] உக்க. (2922)

33. *சிலையின்கணை யூடு [1] திறந்தனதிண்*
கொலைவெங் [2] களிமால்கரி செம்புனல்கொண்டு
உலைவின்று கிடந்தன [3] வொத்துளவால்
மலையுஞ்சுனை யும்வயி றும்முடலும்.

(இ - ள்.) (இலட்சுமணனுடைய) வில்லினதுகணையினாலே இடையே பிளக்கப்பட்டனவான திண்ணியகொலைத்தொழிலையுடைய கொடிய மதமயக்கங்கொண்ட வலியபெரியானைகளின் இரத்தத்தைக் கொண்டு கலைதலில்லாமற் கிடந்தனவான உடலும் வயிறும், மலையையும் சுனையையும் ஒத்துள்ளன; (எ - று.) யானையுடல் மலையையும், வயிறு சுனையையும் ஒத்தன; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1] திரிந்தன. [2] குலம். [3] ஒத்தனவால். (2923)

34. *விற்றெறிந்திய வெங்கணை யெண்ணின்வியன்*
[1] பற்றெரிந்திய [2] போற்படி யப்பலவும்
முற்றச்சுடர் மின்மினி [3] மொய்த்துளவன்
[4] புற்றொத்த முடித்தலை [5] பூழியன.

(இ - ள்.) புழுதியிற்கிடப்பனவான கிரீடமணிந்த தலைகள்,—கரடியின் பெரிய பற்கள் தொத்தினபோல வில்லினின்று வெளிப்பட்ட கொடிய அம்புகள் பலவும் படிதலாலே, விளங்குகின்ற மின்மினி முழுவதும்மொய்த்துக்கொண்டுள்ள வலிய புற்றுக்களையொத்தன; (எ - று.)—அம்புகள்பொத்துண்டு தரையிற்கிடக்கும் முடித்தலைகள் எங்கும் மின்மினிமொய்த்துக்கொண்டுள்ள புற்றுக்கள்போலுமென்றார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்;—

[1]மற்றொருத்திய. [2]வென்றடியும்பலவும். [3]ஒத்துளவால். [4]புற்றொருத்து. [5]புழியபோல். (2924)

35. படுமாரி நெடுங்கணை பாய்தலினுல்
[1]விடுமாறுதி ரப்புனல் வீழ்வன [2]வால்
தடுமாறுநெ டுங்கொடி தாழ்கடல்வாய்
நெடிமாமுகில் வீழ்வ நிகர்த்தனவால்.

(இ - ள்.) தோன்றியமாரியையொத்து நெடிய அம்புகள்பாய்தலினுற் பெருகுகின்ற உதிரப்புனலாறுகள், (கடலில்) வீழுவனவாயின: (அங்கே) அலைகின்ற நெடிய துவசங்கள், ஆழ்ந்தகடலினிடையில் நெடியமாமுகில் வீழ்வனவற்றை யொத்தன; (எ - று.)—தன்மைத்தற்குறிப்பேற்றவணி. விடுதல் - பெருகுதல். உதிரப்புனலாறு என மாறுக. பி-ம்:—[1]விடுமால். [2]மின், வல். (2925)

36. மின்னூர்கணை [1]தாளற [2]வீசவிழுந்து
[3]அன்னூருதி ரத்து [4]ளழுந்துவதால்
ஒன்னார்முழு வெண்குடை [5]யொத்தனவால்
[6]செந்நாகம் விழுங்கிய திங்களினை.

(இ-ள்.) பகைவரின் முழுமையான வெள்ளியகுடைகள்,—ஒளிபொருந்திய அம்புகளினுலே காம்புகள் அற்றுப்போக (க் காற்று) வீசுதலால் விழுந்து, அப்பகைவரின் இரத்தப்பெருக்கினு ளழுந்துதலால்,—(பற்றும்படி) செல்லுகின்ற இராகுவென்ற பாம்பினுல் விழுங்கப்பெற்ற சந்திரனை யொத்தன; (எ-று.)—இரத்தப்பெருக்கிலழுந்திய குடை ஒவ்வொன்றும் தனித்தனியே செந்நிறப்பாம்பான இராகுவால் விழுங்கப்பெற்ற சந்திரன்போலு மெனக் குறித்தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]கான்றிட. [2]வீசி. [3]அந்நாள். [4]அழுந்துதலால். [5]ஒத்துள. [6]சென்னுகம். (2926)

37. கொடுநீள்கரி [1]கையொடு தாள்குறையப்
படு[2]நீள்குரு திப்படர் இன்றனவால்
[3]அடுநீளுயி [4]ரின்மையி னுழ்கிலவால்
நெடு[5]நீரிடை வங்கம் நிகர்த்தனவால்.

(இ-ள்.) கொடிய நீண்ட யானைகள்,—கையுடனே தாள்களும் அறுபட(ப் படைக்கலங்களினுல்) அடப்பெற்றுநீண்டவுயிர் இல்லாமையினுல், பெருகுகின்ற மிக்க இரத்தப்பெருக்கின்வழியே ஆழ்கிலவாகிச் செல்கின்றவை,—நெடியநீர்ப்பெருக்கினிடையே தோன்றும் மரக்கலங்களை யொத்தன; (எ-று.) உயிரில்லாமையால் குருதி செல்லும்வழியாக அவ்யானையினுடல்கள் சென்றன வென்க. இதுவும் தற்குறிப்பேற்றவணியே. இச்செய்யுள் சிலபிரதிகளில், "வாயிற்கனல் (39)" என்ற பாடலின்பின் உள்ளது. பி-ம்:—[1]தாளொடுகை. [2]நீர். [3]இடு. [4]இன்மையனீக்கிலவால். [5]நீரினிடங்கர். ()

38. கரியுண்ட களத்திடை யுற்றன [1]கார்
நரி[2]யுண்டி யுகப்பன நட்டனவால்
[3]இரியுண்டவ ரின்னிய மிட்டிடலால்
[4]மரியுண்ட வுடற்பொறை மானினவால்,

(இ - ள்.) யானைகள் நிரம்பியிருந்த போர்க்களத்திடையே கானில்வாழும் நரி உணவையுகப்பனவாய் விரும்பிவந்துசேர்ந்தன; நிலைகெட்டுஓடியவரின் இனிய பறைகள் (அவர்கள்) விட்டுச் சென்றதனால், மரித்த உடற்பொறையை யொத்தன; (எ - று.)— பி-ம்:—[1]கார். [2]உண்டியுகப்படை தட்டனஞன், உண்டையகப்பட நட்டனவால். [3]உண்டியவிந்தியமிட்டிடலால், உண்டிடையின்னியம்விட்டிலரால். [4]வரியுண்ட. (2928)

39. வாயிற் [1]கனல் வெங்கடு வாளியினம்
பாயப்பரு மக்குலம் வேவனவால்
வேயுற்ற நெடுங்கிரி மீ[2]வெயிலாந்
தீயுற்றன [3]போன்ற சினக்கரியே.

(இ - ள்.) சினத்தையுடைய யானைகள்,—வாயில் நெருப்பைக் கொண்ட வெவ்வியகொடிய அம்புகளின்தொகுதிபாய்தலினுல் மேலேபூண்ட அலங்காரங்கள் வேவப்பெறு வை,—மூங்கிலைப் பொருந்திய நெடியமலைகளின் மேலே வெம்மையையுடைய நெருப்புப்பற்றின போன்றன; (எ-று.) பருமக்குலம் வேவனவான சினக்கரிகள் தீயுற்றன, வேயுற்ற கிரிகள் போன்றன என்க. பி - ம்:— [1]சுடுவெங்கனல். [2]வயினுன், வயினுர். [3]ஒத்த. (2929)

40. அலைவேலை யரக்கரை [1]யெண்ணிலுகிர்
[2]தலைமேன்முடி யைத்தரை தள்ளுதலான்
மலைமேலுயர் புற்றினை வள்ளுகிரால்
நிலைபேர மறிப்ப நிகர்த்தனவால்.

(இ - ள்.) கரடிகளின் நகங்கள் அலைகளையுடையகடல்போற் பரந்த அரக்கரின் மேலுறுப்பான முடித்தலையை(க் கிள்ளித்) தரையில் தள்ளுவதனால், மலைமேலுயரவுள்ளபுற்றினைக் கூரியநகத்தினால் நிலைபேரும்படிபேர்த்துத் தள்ளுவதை யொத்தன; (எ-று.)— முடித்தலைக்குப் புற்று உவமை: கீழ் 34-ஆஞ்செய்யுளும் பார்க்க. பி-ம்:-[1]என்னனுகித். [2]தலைமேலைமுடித்தலை, தலைமேவுமுடித்தலை.

41. மாவாளிகண் மாமழை போல்வரலால்
மாவாளிகள் [1]போர்தெறு [2]மாமறவோர்
மாவாளிகள் வன்றலை [3]யின்றலைவாம்
மாவாளிக ளோடு [4]மறிந்தனரால்.

(இ - ள்.) பெரிய ஆளிகளைப் போரி லழிக்கவல்ல (காலாட்களாகிய) சிறந்த அரக்கவீரர்களும்,—அழகிய அம்புகள் பெருமழை போலவருதலால், யானை குதிரையென்னும் இவற்றையாளின்றவரான யானை குதிரைவீரர்களும், (தமது) வலிய தலையினிடத்துத்தாவிமொய்க்கின்ற கருநிறமுள்ள வண்டுகளோடும் இறந்து வீழ்ந்தனர்; (எ-று.)

வீரர்புனைந்த போர்மாலைகளில் வண்டுகள் மொய்க்கின்றன வென்க. புனைந்த பூமாலைகளுடனே மூவகைவீரரும் இறந்தனரென்றவாறு. மூவகை வீரரைக்கூறியது, தேர்வீரர்க்கும் உபலட்ச

ணம். முதலடியில், மா-அழகு: வாளி-அம்பு. இரண்டாமடியில் மா-பெரிய, ஆளிகள் - யாளிகள்; மூன்ருமடியில், மா - விலங்கு: இங்கு, யானை குதிரைகள்: அவற்றை ஆள்பவர்-ஆளிகள். தலையின்றலை-தலையினிடத்து. வாம் - தாவுகின்ற, நான்காமடியில், மா-கரிய. ஆளிகள்-அளிகள் என்பதன் நீட்டல். யமகமென்னுஞ் சொல்லணி. பி - ம்:—[1]பேர். [2]மாமிகவோர். [3]விண்டலைவாய், இன்றலைவாழ். [4]மறிந்தனவால். (2931)

42. [1]அங்கங்கிழி யத்துணி பட்டதனுல்
[2]அங்கங்கிழி குற்ற வமர்த்தலைவர்
அங்கங்[3]கிழி செம்புனல் [4]பம்பவலைந்து
அங்கங்க ணிரம்பி [5]யலம்பியதால்.

(இ-ள்.) அங்குஅங்கு-அவ்வப்போர்த்துறைகளில், இழிகுற்ற-தோல்வியடைந்த, அமர் தலைவர்-போர்த்தலைவர், அங்கம்-(தமது) உடல், கிழிய-(போரிற்)கிழியும்படி, துணிபட்டதனுல்-துண்டு பட்டதனுல், அம்-அழகிய, கங்கு-பருந்துகள், இழி-(உண்ணும் பொருட்டு) இழிகின்ற, செம் புனல்-உதிரநீரானது, பம்ப-நிரம்ப, அலைந்து-அலைகளெறிந்து, அம்[ஆம்]-கிடக்கின்ற, கங்கள்-சிரசுக்களை, நிரம்பி-முழுவதும், அலம்பியது-கழுவிற்று: (எ-று)-பி-ம்:—[1]அங்கங்கமிகத்துணி, அங்கங்கமதிற்றுளை. [2]அங்கங்க மிகுத்த வமர்த்துறைவாய், அங்கங்கள்மிகுத்தவமர்த்தொழில்வாய். [3]கனி, கழி. [4]அங்கமமைந்து, பம்பவமைந்து. [5]அலம்பினவால். (2932)

43.—இலக்குமணன் அரக்கர்தானையை யெய்து குறைத்தல்.

[1]வன்ருனையை வார்கணை மாரியினுல்
[2]முன்ருதையொர் தேர்கொடு மொய்பலதேர்ப்
பின்ருவெதிர் [3]தானவர் பேரணியைக்
கொன்ருனென வெய்து [4]குறைத்தனனுல்.

(இ - ள்.) (அப்போது இலக்குமணன்),—முன்பு ஒரு தேரைக் கொண்டு (பத்துத்திசையிலுஞ் சென்று) நெருங்கிய பலதேரைக் கொண்டு பின்னிடாமலெதிரிடுகின்ற தானவரின் பெரிய அணி வகுப்பினைக் கொன்றவனுன (தன்) தாதையாகியதசரதன்போல, நீண்டகணைமாரியினுல் (அரக்கரின்)வலிய தானையை எய்துகுறைத்தான்; (எ - று.)—பி-ம்:-[1]வன்ருனையர். [2]அன்ருயிரமோலியனந்தனெழாப், அன்ருயிரமோலியனந்தனமர்ப். [3]தாரணி. [4]குறித்த தனுல், குறைத்ததனுல். (2933)

வேறு.

44.—இலட்சுமணன் செய்த போரினுல் இந்திரசித்தின் யாகங்கெடுதல், இனி எட்டுக்கவிகளாற் கூறப்படும்.

மலைகளு மழைகளும் வான மீன்களும்
அலையவெங் [1]கால்பொர வழிந்த வாமென
[2]உலையவெங் கனல்பொதி யோம முற்றவால்
கலைகளு முடல்களுஞ் [3]சரமுந் தாவுவ.

(இ - ள்.) அலையுமாறு கொடுங்காற்றுவீசுவதனால் மலைகளும் மழைகளும் வானத்திலுள்ளநட்சத்திரங்களும் அழிந்துவிழுந்தன போல, (அரக்கரின்) தலைகளும் உடல்களும் சரங்களும் தாவினவாய் (இந்திரசித்து) மனவருத்தமுறும்படி வெவ்வியகனல்நிரம்பிய ஓமகுண்டத்தையுற்றன; (எ - று.)—இலக்குமணனம்புகளா லறுபட்ட தலைகளும் உடல்களும் அந்த அம்புகளோடு ஓமகுண்டத்தையுற்றன. உடல் தலை சரம் இவற்றிற்கு மலை மழை வான மீன்கள் ஒப்பு என்னலாம். பி-ம்—[1]கால்வழியழிந்த. [2]உலைகொள்...உற்றவால், உலகள வெங்கனல் பொதியுமொத்தவால். [3]சரமுந்தாவின, சரங்கடாவின. (2934)

45. வாரண மனையவன் றுணிப்ப வான்படர்
தாரணி [1]முடிப்பெருந் தலைகள் தாக்கலால்
ஆரண மந்திர மமைய வோதிய
பூரண [2]மணிக்குட முடைந்து [3]போயதால்.

(இ-ள்.) யானையையொத்தவனான இலட்சுமணன் துண்டித்து வீழ்த்துதலாலே வானத்திற்படர்ந்தனவான மாலையையணிந்த (அரக்கரின்) முடிப் பெருந்தலைகள்(வந்து) மோதுவதனால், வேதமந்திரங்கொண்டு நன்கு அபிமந்திரிக்கப்பெற்ற பூரணமணிக்குடம் உடைந்து போயிற்று; (எ - று.)—பி - ம்:—[1]முடியெலாந்தகர்ந்து சாய்தலால். [2]பொற்குடம். [3]போயவால், போயதே. (2935)

46. தாறுகொண் மதகரி [1]சுமந்து தாமரை
சீறிய [2]முகத்தலை யுருட்டிச் செந்நிறத்து
ஊறுகள் [3]சொரிந்தபெ ருதிரத் தோங்கலை
[4]யாறுக ளெழுங்கன லவியச் [5]சென்றவால்.

(இ - ள்.) அங்குசத்தைக்கொண்ட மதயானைகளைச் சுமந்தும், தாமரையைச்சீறியமுகத்தோடுகூடிய தலைகளை யுருட்டியும், செந்நிறமுள்ள வடுப்பட்ட இடங்கள் சொரிந்த மிக்கஉதிரத்தின் ஓங்கிய அலைகளைக்கொண்ட யாறுகள், (வேள்வியில்) எழுகின்ற கனல் அவிந்திடும்படி பெருகிச்சென்றன; (எ - று.)—பி-ம்:-[1]சுமந்த. [2]நெடுந்தலை. [3]செறிந்த. [4]ஆறுகளருங்கனல், யாறுகண் முருங்கனல். [5]சென்றதே. இச்செய்யுள் சிலபிரதிகளில் "தெரிகணை" என்ற அடுத்த பாடலுக்குப்பின் காணப்படுகின்றது. (2936)

47. தெரிகணை விசும்பிடைத் [1]துணிப்பச் செம்மயிர்
[2]வரிகழ லரக்கர்தந் தடக்கை வாளொடும்
உருமென [3]விழ்தலு [4]மனலுக் கோக்கிய
எருமைகண் [5]மறிந்தன [6]மறியு மீர்ந்தவால்.

(இ - ள்.) (இலக்குமணன்) ஆராய்ந்துதொடுத்த அம்புகள் ஆகாயத்திலே துணிப்ப, செம்மயிரையும் கட்டியவீரக்கழலையுமுடைய அரக்கரின் பெரியகைகள் (பிடித்த) வாளுடனே இடிபோல விழுதலால், ஓமாக்கினியில் ஓமஞ்செய்யப்படுமாறு வைக்கப்பட்டுள்ள எருமைகள் அறுப்புண்டனவாக, ஆடுகளும் அறுப்புண்டன; (எ - று.)

இலட்சுமணன் அம்புகளை யெய்ததனால், ஏந்தியவாளுடனே அறுப்புண்ட அரக்கர்கைகளாலே, வெட்டி வேள்விக்கனலில் ஓமஞ் செய்யுமாறுயூபத்திற்கட்டப்பட்டுள்ள எருமைகளும் ஆடுகளும் அறுப்புண்டனவென்றவாறு. வேள்வியைக்காக்கஅமைந்த அரக்கர் கைவாட்களே வேள்விக்கு அமைந்த எருமைமறிகளை ஈர்ந்தன என்க: மற்றதற்காக்கலணி. பி-ம்:—[1]சுமந்து, துணித்த. [2]விரிதலை [3]விழுதலின். [4]அனலிலேனுக்கிய,மறலித்தோச்சிய. [5]மறிந்தென. [1]குறிப்புவீய்ந்தவால், குறிலும்வீழ்ந்தவால், குறியும்மீர்ந்தவால். (2937)

48. அங்கடங் [1]கழிந்தபே ரருவிக் [2]குன்றினின்று
அங்கடங் [3]கிழிந்தில ரழிந்த வாடவர்
அங்கடங் கனும்படர் குருதி யாழியின்
[4]அங்கடங் கினர்தொடர் [5]பகழி யஞ்சினர்.

(இ-ள்.) அழகியகன்னத்தினின்று வெளிப்பட்ட மிக்க (மத) நீரருவியையுடைய யானையிலே தங்கிய தம்முடல்கிழிபட்டிலராயினும், ஊக்கங்குறைந்த இராக்கதர், அவ்விடத்தெல்லாம் பரவிய இரத்தக்கடலில் (இலக்குமணன்) தொடர்ச்சியாகஎய்கின்ற அம்புக்கு அஞ்சினவராய்த் தங்கினார்கள்; (எ - று.)

முதலடியில், கடம்-கன்னம்: வடசொல். இரண்டாமடியில் அம்-ஆம் என்பதன்விகாரம். கடம்-கடம் என்றவடசொல்லின் விகாரம்: உடலென்று பொருள் மூன்றாமடியில், அங்குஅடங்கலும் என்று பிரிக்க. ஆழியினங்கண் தங்கினர்எனப்பிரியும். இது-யமகமென்னுஞ்சொல்லணி: ஆசிமடக்கு ஆகும். இச்செய்யுள், சில பிரதியில், "காறலைத்தலத்தொடு" (49) என்ற பாடலுக்குப் பின் உள்ளது. பி-ம்:—[1]கழித்த, களித்த, கிழிந்த. [2]குன்றினின். [3]கழித்திலரழிந்த, கிழிந்திலவழிந்த, கழிந்தவாளிழுந்த, கழித்தவர்நளித்த. [4]அங்கடர்ந்திழிபடர், அங்கடங்கிழிபடர், அங்கடங்கழிபடப். [5]பழியினஞ்சலால். (2938

49. [1]காறலைத் தலத்தொடுந் துணியக் காய்கதிர்க்
கோறலைத் தலை[2]யுற[3]மறுக்கங் கூடினர்
வேறலைத் தூன்றினர் [4]துளங்கு [5]மெய்யினர்
நாறலைக் குடலினர் பலரு நண்ணினர்.

(இ-ள்.) கால்கள் தலையுடனே துணிந்திட(ப் பின்னும் காய்)கின்ற கிரணங்களையுடையனவான (இலட்சுமணனெய்த) அம்புகள் (தம்உடலில்) ஆங்காங்குப் பதிதலால், கலக்கங்கொண்டவராய், (தாம் கையிற்பிடித்த) வேலைத் தரையிலூன்றி நடுக்கமெடுத்த உடலையுடையவரும், வெளித்தோன்றுகின்ற அலையுங்குடரைக் கொண்டவர்களுமாகி, பல அரக்கர்களும் சேர்ந்து நின்றார்கள்; (எ-று.)—நான்காமடியில் நாறு அலைஎனப்பிரிக்க. இனி, நால்+தல் என்பன விகுதிபெற்ற நாறல் என்றாகி, இரண்டனுருடைப் பெற்றுவந்ததாகக்கொண்டு, நாறலை - தொங்குதலை(யுடைய) என்று பொருள்கூறலாம். தலைத்தலம்-தலையிடம். பி - ம்:—[1]கால்கரத்தொடு தலையற்றகால், [2]அற. [3]வருக்கங்கூட்டினர். [4]விளங்கு. [5]மேனியர். (2939)

50. [1]பொங்குடற் றுணிந்ததம் புதல்வர்ப் [2]போக்கிலார்
[3]தொங்குடற் றோண்மிசை யிருந்து சோர்வுற
[4]அங்குடற் றம்பியைத் [5]தழுவி யண்மினர்
[6]தங்குடர் முதுகிடைச் சொரியத் தள்ளுவார்.

(இ-ள்.) சினந்துபோர்செய்த உடல் துணிந்த தம்புதல்வரைப் போக்கமாட்டாதவராய்த் தொங்குகின்ற அவ்வுடல் (தம்) தோளின்மீது இருந்தவண்ணம் தொங்க, (தம்முடைய) குடர் முதுகிடையே வெளிப்பட (அதனையுட்புறத்துத்) தள்ளுபவராய்(ச் சில அரக்கர்), அங்கு மாறுபட்டுப்போர்செய்கின்ற இளையபெருமானை நெருங்கிக் கிட்டினார்கள்; (எ - று.)—மூன்றாமடியில் உடற்றம்பி- வினைத்தொகை: உடலுதல்-மாறுபட்டுப் பொருதல். பி-ம்:—[1]பொருங். [2]போக்கினார். [3]சுருங்குடற்றோண்மிசையிருந்து, தொங்குடைத் ...சுமந்து. [4]அருங்கடற் [5]அண்மினாரவர். [6]தருங்குடர்முழுதுடற்.

51. [1]மூடிய நெய்யொடு நறவ முற்றிய
[2]சாடிகள் பொரியொடு தகர்ந்து தள்ளுறக்
கோடிகள் பல[3]படுங் [4]குழாங்கு ழாங்களாய்
ஆடின வறுகுறை [5]யறுக்கு [6]மாக்கையே.

(இ - ள்.) நெய்யும் பொரிகளும் நறவும் நிரம்பியனவான மூடியுள்ள சாடிகள் உடைந்துவீழ்ந்திடுமாறு, அறுக்கப்பட்ட அரக்கரின் பெரியகைகள் குழாங் குழாங்களாய்ப் பலகோடிகள் விழும்; (அன்றியும்), தலையற்றஉடற் குறைகள் ஆடும்; (எ - று.)—ஈற்றடியினீற்றில், மா - பெரிய, கை என்க: இனி, ஆக்கையெனப் பிரித்து, உடலென்பாருமுளர். பி - ம்:—[1]சூடிய. [2]சாடிகளங்கியிற் சரிதல் போலவே, காடிகள்...கரந்துகாய்தலாற். [3]பல. [4]படுங். [5]இறுக்கும், மறுகும், அரக்கர். [6]ஆக்கைகள். (2941)

52.—போர்க்களத்து இலட்சுமணன் அரக்கச்சேனையை வெட்டி வீழ்த்தல்.

காலெனக் கடுவெனக் [1]கலிங்கக் கம்மியர்
நூலென [2]வுடற்பொறை தொடர்ந்த நோயெனப்
பாலுறு [3]பிரையெனக் கலந்து பன்முறை
[4]வேலுறு சேனையைத் துணித்து [5]வீழ்த்தினான்.

(இ - ள்) காற்றுப்போலவும் விஷம்போலவும் ஆடைநெய்வோரின் நூல்போலவும் உடற்சுமையைத்தொடர்ந்த நோய்போலவும் பாலைப்பொருந்திய பிரைபோலவும் பலமுறைகலந்து வேல் பொருந்திய அரக்கச்சேனையை (இலக்குமணன்) வெட்டி வீழ்த்தினான்; (எ - று.)—பி - ம்:—[1]கலங்கிக்கம்மியர், கழுங்கமம்மியர். [2]உயிர்ப்பொறைதொடர்ந்து. [3]மோரது. [4]மேலுறு. [5]வீழ்த்தினார்.

53.—மூன்றுகவிகள்-இலக்குமணனால் நிகும்பிலையிற் சேனை முதலியன நிலைகுலைந்தமையை இந்திரசித்து காணுதலைக் கூறும்.

கண்டனன் றிசைதொறும் நோக்கிக் கண்ணகன்
மண்டல மறிகட லன்ன மாப்படை
[1]விண்டெறி [2]கால்பொர [3]மறிந்து [4]விற்றுறுந்
தண்டலை யாமெனக் கிடந்த [5]தன்மையை.

(இ - ள்.) இடமகன்றபூதலத்தில் (அலை) மடங்குகின்ற கடல்போலப் பெரிய [பரந்திருந்த] இராக்கதசேனை, வானத்தினின்று வீசுகின்ற காற்று, மோதுதலால் ஒடிந்து சின்னபின்னப்பட்ட சோலைபோல(ச் சின்னபின்னப்பட்டு)க்கிடந்த தன்மையைத் திசைதோறும் நோக்கிக்கண்டான், (இந்திரசித்து); (எ - று.)—'கண்டான்' என்பதற்கு, எழுவாய்வருவிக்க. மேலிரண்டுசெய்யுள்களிலும் இவ்வாறே. விண்டு=விஷ்ணு: வானம்: விண் டெறிஎனவும் பிரிக்கலாம். பி - ம்:—[1]விண்டொடர். [2]கால்பட. [3]மறித்து. [4]வீழ்ந்தனன், வீற்றிருந். [5]தன்மையே. (2943)

54. மிடலின்வெங் கடகரிப் பிணத்தின் விண்டொடும்
[1]திடலும்வெம் புரவியுந் தேருஞ் [2]சிந்திய
உடலும்வன் தலைகளு முதிரத் தோங்கலைக்
கடலு[3]மல் லாதிடை யொன்றுங் கண்டிலன்.

(இ - ள்.) வலிமையையுடைய கொடிய மதம்பெருகும் (கன்னத்தையுடைய) யானைகளின் சவத்தினாலான வானத்தையளாவுகின்ற மேடும், வெவ்வியகுதிரைகளும் தேரும் சிந்திய உடலும் வலியதலைகளும், ஓங்கிய அலைகளையுடைய உதிரக்கடலும் அல்லாமல் இடையே வேறொன்றுங் காணாதவனாயினான், (இந்திரசித்து); (எ-று.)—பதாதியை உபலட்சணத்தாற் கொள்க. சதுரங்க சேனைகளும் அழிந்து குவிந்திருப்பதையும், இரத்தம் கடல்போலப் பெருகியிருப்பதையும் இந்திரசித்து கண்டானென்பதாம். பி-ம்:—[1]திடரும். [2]ஏஞ்சினர், சிந்தினர். [3]அல்லால் (2944)

55. நூறு[1]நூ றாயிர கோடி நோன்கழன்
[2]மாறுபோ ரரக்கரை யொருவன் வாட்கணை
கூறுகூ றாக்கிய [3]குவையுஞ் சோரியின்
ஆறுமே யன்றி[4]யோ ராக்கை கண்டிலன்.

(இ. - ள்.) வலியவீரக்கழலையும் மாறுகச்செய்யும் போரினையுமுடைய நூறுநூறாயிரகோடியரக்கரை ஒருவனுடைய [இலட்சுமணனுடைய] கொடிய அம்புகள் துண்டுதுண்டாக்கிய குவியலையும் சோரியின் ஆற்றையுமேயன்றித் (துண்டுபடாத) ஓராக்கையையும் கண்டிலன், (இந்திரசித்து); (எ-று.)—பி-ம்:—[1]நூறாயிரம். [2]மாறில். [3]நவையின். [4]வேறரக்கன். (2945)

56.—அப்போது அரக்கர்களின் நிலைமை.

நஞ்சினும் வெய்யவர் நடுங்கி நாவுலர்ந்து
அஞ்சினர் சிலர்சில ரடைகின் றார்சிலர்
வெஞ்சின வீரர்கள் மீண்டி லாதவர்
துஞ்சினர் [1]துணையில ரெனத்[2]து ளங்கினார்.

(இ - ள்.) (அப்போது) விஷத்தைக் காட்டிலும் கொடியவரான சிற்சில வரக்கர்,—அஞ்சினவராய் (உடல்) நடுங்கி நாவறண்டு, இந்திரசித்தை யடைகின்றவராயினார்; கொடிய சினத்தையுடைய வீரர்களான (மற்றுஞ்) சிலர், (தாமுள்ள இடத்தினின்று) மீண்டுவரமாட்டாதவராய்த் துணையில்லாதவரென்ற காரணத்தினாற் கலங்கி யிறந்தொழிந்தார்; (எ - று.)—[1]தொலைவிலார். [2]தடங்கினார். (2946)

57.—ஆங்குள்ள நிலையைக் கண்ட இந்திரசித்தின் தோற்றம்.

ஓமவெங் கனலவிந் துழைக்க லப்பையும்
காமர்[1]வண் தருப்பையும் பிறவுங் கட்டற
[2]நாமமந் திரத்தொழின் மறந்து [3]நந்துறு
தூமவெங் கனலெனப் பொலிந்து தோன்றினான்.

(இ-ள்.) வெப்பமுள்ள ஓமாக்கினியும் அவிந்து அவ்விடத்திருந்த ஓமசாமக்கிரிகளும் அழகியவளப்பமுள்ள தருப்பையும்பிற பொருள்களும் நிலைகுலைய, அச்சத்தைத் தரக்கூடிய மந்திரத் தொழிலையும்மறந்து, அவிந்துகொண்டிருக்கின்ற புகைநிறைந்த வெவ்விய அக்கினிபோல விளங்கிக்காணப்பட்டான், (இந்திரசித்து); (எ-று.)

கொழுந்துவிட்டெரியுந் தன்மைநீங்கிப் புகையுந்தன்மையடைந்துள்ள அக்கினி எவ்வாறு தோன்றுமோ, அவ்வாறே பொலிவின்றி வெம்மையுடன் காணப்பட்டான் இந்திரசித்தென்றவாறு. பி-ம்:—[1]வண்டிரவியக்குலமும், வண்டருப்பையின் குலமும். [2]வாம மந்திரத். [3]மற்றவன், நன்குறும். (2947)

58.—எஞ்சிய அரக்கர் இந்திரசித்தைச் சார, பொருமாறு வானரசேனை அங்குப் புகுதல்.

அக்கணத் தடுகளத் தப்பு மாரியால்
உக்கவ ரொழிதர வுயிரு ளோரெலாம்
தொக்கன ரரக்கனைச் சூழ்ந்து சுற்றுறப்
புக்கது [1]கவிப்பெருஞ் சேனைப் போர்க்கடல்.

(இ-ள்.) அந்தக்ஷணத்தில் போர்க்களத்தில் (இலக்குமணனுடைய) அம்புமழையால் உயிரொழிந்தவர்போக, உயிருள்ளவரான அரக்கரெல்லாம் ஒருங்கு கூடினவராய் இந்திரசித்தை வளைந்து சுற்றிக்கொள்ள, வானரப் பெருஞ் சேனையாகிய போர் புரியுங் கடலானது (அவ்விடத்துப்) புகுந்தது; (எ-று.)—பி-ம்:—[1]கவிக்குலப்பொருவில். (2948)

59.—இந்திரசித்து மனம்வெம்புதல்.

[1]ஆயிர மலருடை [2]யாழி மாப்படை
ஏயெனு [3]மளவினி னழிந்த தென்பதும்
தூயவன் சிலைவலித் தொழிலுந் துன்பமும்
மேயின வெகுளியுங் கிளர வெம்பினான்.

(இ-ள்.) ஆயிரந்தாமரையென்னுங் கணக்கைக்கொண்ட கடல்போன்ற பெரிய (அரக்கச்) சேனை ஏ யென்னும் மாத்திரத்திலே யழிந்த தென்பதும், பரிசுத்தமூர்த்தியாகிய இலட்சுமணன் வில்வலியின்செயலும், துன்பமும் பொருந்திய சினமும் (மனத்துக்) கிளர்ந்து கொண்டிருக்க, (இந்திரசித்து) மனம் வெதும்பினான்;

மலர் - பதுமமென்ற எண். துன்பம் - தான் தொடங்கிய தொழில் முற்றப் பெறாமையாலானது. பி-ம்:—[1]ஆயிர கோடியின், ஆயிரங்கோடியின். [2]அழிவில்வெம், அளவிலப், அளவுருப். [3]மாத்திரத்திற்றகொற்றமும். (2949)

60.—அரக்கர்இறத்தலை இந்திரசித்து காணுதல்.

மெய்[1] குலைந் திருநில மடந்தை விம்முறச்
செய்கொலைத் தொழிலையுஞ் சென்ற தீயவர்
மொய்குலத் திறுதியு முனிவர் [2]கண்டவர்
கை[3]குலைக் கின்றதுங் கண்ணி னேக்கினன்.

(இ - ள்.) பெரிய பூமாதேவி உடல்நடுங்கித் துன்புறும்படி (இலட்சுமணன்) செய்கின்ற கொலைத்தொழிலையும், (போரச்) சென்ற கொடியவர் நெருங்கியதொகுதியாக இறந்ததையும் கண்டவரான முனிவர் கைகுலைக்கின்றதையும் கண்ணினால் (இந்திரசித்து) கண்டான்; (எ-று.)—பெரும்பாரம்விழுவதனால் நிலமடந்தை மெய்குலைந்துவிம்மினாள். 'நிகும்பிலையில் வேள்விமுடிந்தால் என்செய்வது!' என்ற அச்சத்தினால் முனிவர்கை குலைப்பதாயிற்று. இனி, முனிவர்-ஓமஞ்செய்கின்ற அரக்கமுனிவரெனினுமாம் கண் - இவ்வாறுனகாடசியைக் கண்டிராதகண். பி - ம்:—[1]குலைத்து [2]கண்டனர். [3]குலுக்கின்றதும். (2950)

61.—இந்திரசித்து நியமங்குலையவே வருந்திக் கூறததொடங்குதல்.

மானமும் பாழ்பட வகுத்த வேள்வியின்
மோனமும் பாழ்பட முடிவி லாமுரட்
சேனையும் பாழ்படச் சிறந்த மந்திரத்து
ஏனையும் பாழ்பட வினைய [1]செப்பினன்.

(இ - ள்.) (தன்) மானம் பாழ்படவும், வகுத்தவேள்வியின் மோனம் பாழ்படவும், முடிவிலாத வலிமையையுடைய சேனை பாழ்படவும், சிறந்த மந்திரத்துக்குஉரிய ஏனையும் பாழ்படவும், (இந்திரசித்து), இவ்வாறுன சொற்களைச் சொல்பவனானன்; (எ - று) — அவற்றை மேல் 4-கவிகளிற் காண்க. அரக்கர்க்குக்கேடுவிளைந்தது பற்றி மானம்பாழ்பட்டன. யாகத்தில் யஜமானன் மௌனத்துடனிருக்கவேண்டியது விதியென்பர். மந்திரபூர்வமாகச் செய்யத்தொடங்கிய வேள்வி பாழ்பட்டதென்க. பி - ம்:—[1]கூறினன். ()

62.—நான்குகவிகள்-இந்திரசித்து வருந்திக்கூறுதலைத் தெரிவிக்கும்.

[1]வெள்ளமை யைந்துடன் விரிந்த [2]சேனையின்
உள்ளதக் குரோணியீ ரைந்தொ [3]டோயுமால்
எள்ளரு வேள்வி[4] நின் றினிதி யற்றுதல்
பிள்ளைமை யனையது சிதைந்து பேர்ந்ததால்.

ஐந்துகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) இருபத்தைந்து வெள்ளத்துடன் பரந்த(அரக்கர்)சேனையில் (இப்போது) மிச்சமாகவுள்ளது, பத்து அக்குரோணிசேனையோடும் ஆகும்; (அதுவும்) ஓய்ந்துவிடும்: (இனி), பழிப்பு இல்லாத வேள்வியை மனம் ஒருப்பட்டிருந்து இனிதாக இயற்றுதல் குழந்தைத்தனம்: அந்தவேள்வி சிதைந்தொழிந்தது; (எ-று.)—பி-ம்:—[1]வெள்ளநானூறுடன். [2]வேலையின். [3]ஏயுமால். [4]நின்றினி. இன்றினி.

63. தொடங்கிய வேள்வியின் றூம வெங்கனல்
[1]அடங்கிய தவிந்துள தமையு மாமன்றே
[2]இடங்கொடு வெஞ்செரு [3]வென்றி யின்றெனக்கு
அடங்கிய தென்பதற் கேது [4]வாகுமால்.

(இ-ள்.) தொடங்கிய வேள்வியினுடைய புகையோடுகூடிய வெவ்விய கனல் அடங்கியதாகி யவிந்துவிட்டதென்பது, அமைந் துள்ள தன்றோ? (இது),—இடத்தைக்கொண்டு [பரந்து] (உள்ள) மிகக் கொடிய போரிலே வென்றி எனக்கு இன்று அடங்கிவிட்ட தென்பதற்குக் குறிப்பாகும்; (எ - று.)—பி-ம்:—[1]அடங்கிடாது, [2]விடங்கொள்வெஞ்செருத்தொழில். [3]நாலொடும். [4]ஆமரோ, வாய்மையால், ஆனதால். (2953)

64. அங்கது கிடக்கநான் மனிதர்க் காற்றலன்
சிங்கினே னென்பதோ ரெளிமை தேய்வுற
இங்குறின் றிவையிவை [1]நினைவ தென்னினி
பொங்கு[2]போ ராற்றவென் றோளும் போனவே.

(இ-ள்.) அது கிடக்கட்டும்: நான் மனிதர்க்குமுன் (பொர) வல்லமையற்றவனாய்க் குன்றினே னென்பதாகிய எளிமையொடு தேய்ந்திடுமாறு இங்கேயிருந்து இவ்விவைகளை நினைவது எதற்காக? [இவைகளை நினைத்திருப்பது தக்கதன்று]; இப்போது கிளர்ந்து செய்யப்படும் போரைப் புரிவதற்கு என்தோள்வலியும் போயினவோ? (எ - று.)—அங்கு-அசை. பி-ம்,—[1]நினைக்கிலென். [2]போராற்றற்கு.

இச்செய்யுள் வேறுவகையாகப் பாடம் காண்கின்றது வருமாறு:—

ஆங்கது கிடக்கநான் மனிதர்க் காற்றலேன்
நீங்கினே னென்பதோ ரிழிவு நேருற
ஈங்குநின் றியாவரு மியம்ப வென்குலத்
தோங்குபே ராற்றலு மொளியு மொல்குமால். (2954)

65. மந்திர வேள்விபோய் மடிந்த தாமெனச்
சிந்தையி னினைந்து[1]நொந் திருந்து தேய்வுறல்
அந்தரத் [2]தமரர்தா மனிதர்க் காற்றலன்
[3]இந்திரர்க் கேயிவன் வலியென் றேசவோ.

(இ-ள்.) 'மந்திரத்தோடுசெய்யப்படும் யாகம் போய்மடிந்த தாகும்' என்று மனத்திலே நினைந்து நொந்திருந்து குறைவது,—ஆகாயத்திலேவாழும் அமரர்கள் '(இவ்விந்திரசித்து), மனிதர்க்கு முன் வல்லமையற்றவனானான்; இவன்வலிமை இந்திரனுக்குத்தானா (செல்லுவது?) என்று பழித்தற்காகவோ? (எ - று.)பி-ம்:—[1]நான் வருந்துஞ்சிற்றியல். [2]அமரரும். [3]இந்திரற்கோ, இந்திரற்குளி. ()

66.—அப்போது வானரவீரரெறிந்த குன்றுமுதலியவற்றால் அரக்கச்சேனை சின்னபின்னப்படுதல்.

[1]என்றவன் பகர்கின்ற வெல்லை [2]யின்னிருங்
[3]குன்றொடு மரங்களும் பிணத்தின் கூட்டமும்
பொன்றின கரிகளுங் கவிகள் போக்கின
சென்றன பெரும்படை யிரித்து [4]சிந்தின.

(இ-ள்.) என்று அவன் (தன்னுட்) சொல்லிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், பெரிய மலைகளுடனே மரங்களும் பிணத்தின் கூட்டமும் இறந்தயானைகளும் ஆகியவற்றை வானரங்கள் போக்கின; (இந்திரசித்துடன்) சென்றிருந்த பெருஞ்சேனை நிலைகெட்டுச் சிந்தின; (எ-று.)—பி-ம்:—[1]என்றது, என்றின. [2]வல்லிசைக். [3]குன்றமும். [4]சிந்திட. (2956)

67.—வானரர் வீசிய குன்றுமுதலியவற்றாலும் இலட்சுமண பாணங்களினாலும் அரக்கரொடுங்குதல்.

ஒதுங்கின ரொருவர்கீ ழொருவர் புக்குறப்
பதுங்கினர் நடுங்கினர் பகழி பாய்தலிற்
பிதுங்கினர் குடருடல் பிளவு பட்டனர்
மதம்புலர் களிறெனச் சீற்ற [1]மாற்றினார்.

(இ-ள்.) (அரக்கர், வானரசேனையெறிந்த குன்றுமுதலியவற்றைத் தாங்கமாட்டாமல்),—நடுங்கினவராய் விலகி ஒருவர்கீழ் ஒருவர் புகுந்துகொண்டு மிகவும்பதுங்கினர்: (அப்போதும் இலட்சுமணன் விடுத்த) அம்பு பாய்தலினால், (அவ்வரக்கர்) குடல்பிதுங்கி உடல் பிளவுபட்டு மதம்புலர்ந்த யானைபோலச் சீற்றம் ஒழிந்தார்கள்; (எ-று.) பி-ம்:—[1]மாறினார். (2957)

68.—வானரரும் இலட்சுமணனும் விடுத்தவை அரக்கர் சேனையிற் படிந்தவை.

வீரன்வெங் கணையொடுங் [1]கவிகள் வீசிய
கார்வரை யரக்கர்[2]தங் கடலின் [3]வீழ்ந்தன
போர்நெடுங் கால்பொரப் [4]பொழியு மாமழைத்
தாரையு மேகமும் படிந்த தன்மைய.

(இ-ள்.) இலட்சுமணன் விடுத்த கொடியஅம்புகளுடனே குரங்குகள் வீசிய பெருமலைகள், அரக்கருடைய (சேனை) சமுத்திரத்திலே வீழ்ந்தவை, போர்த்தபெருங்காற்று வீசப்பொழியும் மாமழையின் தாரையும் மேகமும் படிந்தாற்போன்ற தன்மையையுடையன; (எ-று.)-இலக்குமணனுடைய கணை-மழைத்தாரையையும், வானரரெறிந்தவரைகள் மேகத்தையும்போலும் என்க. பி-ம்:—[1]முதல்வர். [2]வெங். [3]வீழ்ந்தனர். [4]படியும். (2958)

69.—அநுமான் இந்திரசித்துக்குக் கோபம்வரப் பரிகாசமாகக் கூறலுறல்.

திரைக்கடற் பெரும்படை யிரிந்து சிந்திட
மரத்தினிற் [1]புடைத்தடர்த் [2]தருந்த மாருதி
அரக்கனுக் கணித்தென வணுகி யன்னவன்
[3]வரக்கதஞ் சிறப்பன மாற்றங் கூறுவான்.

(இ-ள்.) திரையையுடைய கடலைப்போன்ற பெரிய (அரக்கச்) சேனை நிலைகெட்டுச் சிதறிவிடுமாறு மரத்தினாற்புடைத்து அடர்த்துச் சினந்த அநுமான்,—இந்திரசித்துக்குச் சமீபமாக நெருங்கி, அவனுக்குக் கோபம்வரச் சிறந்துள்ளனவான வார்த்தைகளைக்

கூறலானுன்; (எ-று.)—அவற்றை, மேல்பத்துக்கவிகளிற் காண்க. கதம்-கோபம். பி-ம்:—[1] புடைத்தரைத்து. [2] உதிர்த்த, உருத்து. [3] உரைக்கதமுறுவதோர்மாற்றமோதினுன். (2959)

வேறு.

70.—பத்துக்கவிகள்—ஒருதொடர்: அநுமான் கூறும் பரிகாசமொழி.

நானுனை யிரந்து கூறும் நயமொழி யொன்றுங் கேளாய்
சானகி தன்னை வாளாற் றடிந்ததோ தனதன் றந்த
மானமேற் சேனை யோடும் வடதிசை நோக்கி மீது
போனதோ கோடி கோடி வஞ்சமும் பொய்யும் வல்லாய்.

(இ-ள்.) பலகோடிக்கணக்கான வஞ்சனையையும் பொய்யையும் வல்லவனே! நான் உன்னை இரந்து கூறிய நீதிமொழியொன்றையுங்கேளாதவனாகி, நீ சானகிதன்னை வாளால்வெட்டியது யாதாயிற்றோ? குபேரன் கொடுத்திட்ட புஷ்பகவிமானத்தின்மீது சேனையுடனே வடதிசைநோக்கிமேற்சென்றது யாதாயிற்றோ! (எ-று.)—தடிந்ததோ, போனதோ என்ற இடங்களிலுள்ள வினுவோகாரம், அச்செயல்கள் நிகழவில்லையென்பது குறிப்பிக்கும்.—இச்செய்யுள் பல பிரதிகளிலில்லை. (2960)

71. *நடந்திரைப் பரவை யன்ன சக்கர [1] யூகம் புக்குக்*
கிடந்தது கண்ட துண்டோ நாஞெலி [2] கேட்டி லோமே
தொடர்ந்துபோ யயோத்தி தன்னைக் கிளையொடுந் துணிய நூறி
[3] நடந்ததெப் பொழுது வேள்வி [4] முடிந்ததே கரும நன்றே.

(இ-ள்.) பெரிய அலைகளையுடைய கடலையொத்த சக்கரவியூகம் (நிகும்பிலையிற்) புகுந்து கிடந்ததை (நாங்கள்) கண்டதுண்டோ? நாஞெலியைக்கேட்டிலோமோ? அயோத்தியைத் தொடர்ந்து சென்று (பரதனைச்) சுற்றத்தாருடனே துண்டாம்படி அழித்து (நீ) மீண்டுவந்தது எப்போது? (நீ தொடங்கிய) வேள்வி முடிந்திட்டதா? (உன்) செயல் நன்றாயிருந்தது! (எ-று.)

அநுமான் பிறகுறிப்புவகையால் இந்திரசித்தை இகழ்கின்றனனென்க. கிடைத்தது கண்டதுண்டோ நாஞெலிகேட்டிலோமே என்றது - உனதுசேனை நாஞெலிசெய்யாமல் ஒலியற்றிருக்கவும், இங்கு மறைந்து வேள்விசெய்வதையும் சக்கரயூகம் காவல்செய்ததையும் கண்டிட்டோமென்று குறிப்பித்தபடி. பி-ம்:—[1] யூபம். [2] கேட்டிலாபோ, கேட்டிலாமோ [3] கடந்ததே. [4] முடித்ததே. ()

72. *எந்தகன் ஞால மெல்லா மினிதுறைந் [1] தியற்கை தாங்கும்*
பாந்தளிற் பெரிய திண்டோட் பரதனைப் பழியிற் றீர்ந்த
வேந்தனைக் கண்டு [2] நீநின் வில் [3] வலங் காட்டி மீண்டு
[4] போந்ததே வுயிருங் கொண்டே [5] யாயினும் புதுமையன்றே.

(இ-ள்.) (பலபொருள்களையும்) தாங்குகின்ற அகன்றபூமியையெல்லாம் இனிதாகவுறைந்து இயற்கையாகத் தாங்குகின்ற குற்றமற்ற வேந்தனாகி, ஆதிசேஷனைக்காட்டிலும் மிக்கதோள்வலியையுடைய பரதனைக்கண்டு, நீ உன்னுடைய வில்வலிமையைக்காட்டி மீண்டுவந்ததென்பது உயிரையுங் கொண்டே யானாலும், (இது உன்விஷயத்திற்) புதுமையன்று; (எ-று.)

பரதனுடன் பொருது வென்று உயிருடன்மீண்டு வரமுடியாதென்பது, கருத்து. ஆதிசேஷன் பூமியைத் தாங்குவது போலத் தன் தோள்வலியாற் பூமிமுழுவதையும் தாங்குவதனால் 'பாந்தளிற் பெரிய திண்டோட்பரதன்' எனப்பட்டான். ஞாலமெல்லாம் உறைந்து = உறைய எனினுமாம். பி - ம்:—[1]இவரத், இவரைத். [2]நீர் நும்வில், நீர் நும்மிகு. [3]வலி. [4]போந்ததேயளவை யன்றே. [5]போனவை பொருந்திற்று. (2962)

73. [1]அம்பரத் தமைந்த வல்விற் சம்பர னுவி வாங்கி
உம்பருக் குதவி செய்த வொருவனுக் குதயஞ் செய்த
[2]நம்பியை முதல்வ ரான மூவர்க்கு நால்வ ரான
தம்பியைக் [3]கண்டு நின்றன் [4]றனுவலங் காட்டிற் றுண்டோ.

(இ - ள்.) ஆகாயத்தே (போர்செய்யுமாறு) வந்த வலிய வில்லைக்கொண்ட சம்பராசுரனுடைய உயிரைப் போக்கித் தேவருக்கு உதவிபுரிந்த ஒப்பற்ற தசரதனுக்குப் பிறந்த குணபூர்ணனும் முதல்வரான மூவர்க்கு நாலாமவனுமான சத்துருக்கினனுழ்வானைக் கண்டு உன்னுடைய வில்வலிமையைக் காட்டினது உண்டோ? (எ - று.)—மூவரான முதல்வர் - இராமலட்சுமணபரதர். பி - ம்:—[1]அம்பியைந்து, அம்புயத்து. [2]நம்பியாம். [3]கண்டதுண்டோ. [4]அவரொடுந்தாக்கினீரோ, வலனொடுந்தாக்கினீரோ. (2963)

74. தீயொத்த வயிர வாளி யுடலுறச் சிவந்த சோரி
[1]காயத்தின் செவியி னூடும் வாயினுங் [2]கண்க ளூடும்
பாயப்போ யிலங்கை புக்கு வஞ்சனை [3]பரப்பச் செய்யும்
மாயப்போ ராற்ற லெல்லா மின்றொடு [4]மாளு மன்றே.

(இ-ள்.) (இலட்சுமணனுடைய) நெருப்பையொத்த உறுதியான அம்புகள் உடம்பிற் பொருந்துவதனாலே சிவந்த இரத்தம் உடம்பிலே காதின்வழியாகவும் வாயின் வழியாகவும் கண்களின்வழியாகவும்பாய்ந்துகொண்டிருக்கையிற் போய் இலங்கையிலே புகுந்துகொண்டு வஞ்சனையைப்பரப்புமாறு செய்கின்ற மாயப்போரின் வல்லமை யெல்லாம் இன்றோடு முடிந்திடும்; (எ - று.)—அன்றே-தேற்றம். உன்னை இனிமாயஞ் செய்ய வொட்டாது இன்றைக்கே கொன்றிடுவோ மென்றபடி. பி - ம்:—[1]காயத்துஞ். [2]கண்கடாமும். [3]பலவுஞ், பரப்பிச். [4]முடியும், மடியும். (2964)

75. பாசமோ மலரின் மேலான் பெரும்படைக் கலமோ பண்டை
ஈசனார் படையோ மாயோ னேமியோ யாதோ வின்னம்
வீசநீர் [1]விரும்பு கின்றீ ரதற்குநாம் வெருவிச் சாலக்
கூசினேம் போதும் [2]போதும் கூற்றினார் குறுக வந்தார்.

(இ-ள்.) நாகபாசமோ, தாமரைமலரின்மீது வாழ்பவனாகிய பிரமதேவனுடைய பெரிய அஸ்திரமோ, பழமையான சிவபிரானது அஸ்திரமோ, மாயைக்குரிய கடவுளான திருமாலினது சக்கரப்படையோ இன்னும் யாதோ, நீர் (எங்கள்மீது) வீசுமாறு விரும்புகின்றீர்? அந்தப்படைக்கு நாங்கள் அஞ்சி மிகவும் பின்வாங்கினோம்; (உம்முடையதிறமை) அமையும் அமையும்; நமனார் நெருங்க வந்து விட்டார்; (எ - று.)

கூசிலேனும் - கூசவில்லையென்ற பொருளைக் குறிப்பிக்கும் எதிர்மறையிலக்கணையான பிறகுறிப்பு. கூற்றினுரென்பது-இலட்சுமணனைக்குறிக்குமென்றலுமாம். ஒகாரம்-விகற்பம். பி-ம்:—[1]விரும்பு இன்றதற்கு. [2]நும்மை. (2965)

76\. வரங்களி ருடைய வாறு மாயங்கள் வல்ல வாறும்
பரங்கொள் [1]வா னவரிற் றெய்வப் படைக்கலம் படைத்த வா
[2]உரங்களு நின்ற தன்றே யும்மைநா முயிரி னோடுஞ் [றும்
[3]சிரங்களைத் துணித்து மென்னக் கண்டது திறம்பி னேமோ.

(இ-ள்.) நீங்கள் வரங்களைப் பெற்றிருக்கின்ற வகையும், மாயங்களில் வல்ல தன்மையும், பெருமையைக்கொண்ட தேவர்களிடத்தில் தெய்வப்படைக்கலங்களைப் பெற்றுள்ள தன்மையும்,-(உமது) தேக வலிமையும் நின்றனவல்லவா? 'உம்மை நாம் உயிரோடு சிரங்களைத் துணிப்போம்' என்று சொல்லியதில் மாறுபட்டும் போனவராளேமோ? (எ - று.)

வரம்முதலியவற்றால் மிக்குள்ளோமென்று நீர் செருக்கவேண்டா: தவறாமல் நாங்கள் சொல்லியபடி உமது சிரத்தைக் கொய்து உயிரை மாய்ப்போமென்றபடி. 'நீர்' என்பது ஏளனத்தைக் குறிக்கும். நின்றதன்றே-நிலையானதல்ல என்றபடி. ஆறும் ஆறும் ஆறும் உரங்களும் நின்றது - ஒருமைப்பன்மைமயக்கம். பி-ம்:—[1]வான்வரிவிற். [2]உரங்களோடுன்னியன்றோ. [3]சிரங்கொளத் துணிந்ததன்ன துண்டது. (2966)

77\. விடந்துடிக் கின்ற கண்டத் தண்ண லும் விரிஞ்சன் றானும்
படந்துடிக் கின்ற நாகப் பாற்கடற் பள்ளி யானுஞ்
சடந்துடிக் கிலாய் வந்து தாங்கினுஞ் சாத றிண்ணம்
இடந்துடிக் கின்ற துண்டே [1]யிருத்திரோ வியம்பு வீரே.

(இ - ள்.) விஷந்ததும்புகின்ற கண்டத்தையுடைய பெருமானான சிவனும், பிரமதேவனும், (சீறிப்) படமெடுக்கின்ற ஆதிசேஷனிடத்துத் திருப்பாற்கடலிற் பள்ளிக்கொண்டுள்ளவனை திருமாலும், (தங்களுடைய) உடல் நடுங்காதவராய்வந்து (உம்மைத்) தாங்கினாலும், (நீர்) சாவது திண்ணம்; (உங்களுக்கு) இடப்பக்கம் துடிக்கின்றதன்றோ? (இவ்வாறு நிமித்தமும் உமக்குவரும் மரணத்தைத் தெரிவிக்க நீர்) உயிருடனிருப்பீரோ? சொல்வீர்; (எ-று.) —சடம்-உடல். பி-ம்:— [1]என்னிருந்தெழுகிலீரோ. (2967)

78\. கொல்வனென் றுன்னைத் தானே [1]குறித்தொரு சூளுங் கொண்ட
வில்லிவந் தருகு சார்ந்துன் சேனையை முழுதும் வீட்டி
[2]வல்லைநீ [3]பொருவா யென்று விளிக்கின்றான் வரிவி லுணின்
ஒல்லொலி யையை செய்யு மோமத்துக் குறுப்[4]பொன் றாமோ.

(இ - ள்.) கொல்வேனென்று சொல்லி உன்னைக் குறித்தே ஒருசபதமும் செய்துகொண்ட வில்லாளியான இலக்குமணன் வந்து சமீபத்திற் சேர்ந்து உன்சேனையை முழுவதும் கொன்று, 'விரைவில் நீ பொருவாய்' என்று அழைக்கின்றான்; (அவனுடைய) கட்டமைந்த வில்லின் நாணியினின்று எழுகின்ற ஒல்லென்ற

ஒலியானது, ஐயனே! (நீர்) செய்கின்ற (வேள்வியின்) ஓமத்துக்கு உறுப்பாவதொன்றோ? (எ-று.)—இந்திரசித்து செய்யும் வேள்வி அழிக்கப்பட்டதுபற்றி, 'ஒல்லொலியுறுப்பொன்றாமோ?' என்று இகழ்ச்சியாகக் கூறுகின்றான். பி-ம்:—[1]ஏன்றொருசபதங். [2]வல்லநீ, வல்லையேல். [3]வாவா. [4]உண்டோமோ. (2968)

79. மூவகை [1]யுலகுங் காக்கு முதலவன் றம்பி பூசல்
தேவர்கண் முனிவர் மற்றுந் திறத்திறத் துலகஞ் சேர்ந்தார்
யாவருங் காண நின்றா ரினியிறை தாழ்ப்ப [2]தென்னோ
சாவது சரத மன்றோ வென்றனன் றருமங் [3]காப்பான்.

(இ-ள்.) மூவகை யுலகங்களையும் காக்கின்ற முதற்கடவுளான திருமாலின் அமிசமான ஸ்ரீராமனுடைய தம்பி செய்யப்போகின்ற போரை, தேவர்களும் இருடியரும் மற்றும் பலவேறுவகைப்பட்ட உலகத்திலுள்ளாரும் யாவரும் காணும்பொருட்டு (வானத்தில்) வந்துநின்றார்கள்: இனி இறைப்பொழுதேனும் தாமதிப்பது ஏன்? (நீ) இறப்பது திண்ணமன்றோ? என்று கூறினான், தருமத்தைக் காக்கவந்தவனான அநுமான்; (எ - று.)

தருமத்தை நிலைநிறுத்துதற்பொருட்டு அவதரித்துள்ள ஸ்ரீராமனுக்குப் பெருந்துணையாயிருத்தல்பற்றி, அநுமான் 'தருமங் காப்பான்' என்றது. பி - ம்:—[1]வினையினின்ற முழுமுதற்றலைவர் முன்னாத். [2]முன்னே. [3]போல்வான். (2969)

80.-அதுகேட்ட இந்திரசித்து மறுமாற்றங்கூறத் தொடங்குதல்.

அன்னவா சகங்கள் கேளா வனலுயிர்த் [1]தலங்கற் பொற்றோள்
மின்னகு பகுவா யூடு [2]வெயிலுக நகைபோய் வீங்க
முன்னரே வந்திம் மாற்ற [3]மொழிகின்றீர் மொழிந்த மாற்றம்
என்னதோ [4]நீயி ரென்னை யிகழ்ந்ததென் றினைய சொன்னான்.

(இ - ள்.) அந்தவார்த்தைகளைக்கேட்டு, நெருப்பெழப் பெருமூச்செறிந்து, மாலையையணிந்த பொன்தோளையுடைய இந்திரசித்து,—ஒளிவிளங்குகின்ற பிளவுபட்டவாயிலிருந்து வெம்மை வெளிப்படவும், வெகுளிச் சிரிப்பென்பது மிகுதியாகத் தோன்றவும், ('என்)முன்னே வந்து இவ்வாறான வார்த்தையைச் சொல்கின்றீர்; நீர் என்னை இகழ்ந்ததாகிச் சொன்ன சொல் என்னபொருளுள்ளதோ!' என்றுசொல்லிப்பின்வருமாறு கூறலானான்; (எ-று.)—இந்திரசித்து கூறுவதனை, மேல் ஐந்துகவிகளிற் காண்க.

அலங்கல்பொற்றோள் - இந்திரசித்துக்கு, அன்மொழித் தொகை. இனி, இந்திரசித்து என எழுவாய்வருவித்து, பொற்றோளூடு வெயிலுக, மின்னகுபகுவாயூடு நகைபோய்வீங்க என்று இயைத்து, பொற்றோளில் அணிகலவொளிவீசுவதையும் வாயிலே வெகுளிச் சிரிப்பு மிகவருவதனையும் இத்தொடர்கள் குறிக்குமென்றலும் ஒன்று. வலியற்றநீர்சொல்லிய மாற்றம் பொருளுள்ளதன்றென்பான் 'மொழிந்த மாற்றம் என்னதோ நீயிரென்னை யிகழ்ந்தது' என்றான். பி - ம்:—[1]அலங்கற்றோளான். [2]நகையுக வெயில்போய். [3]ஆற்றலின்மொழிந்தவாறே, ஆற்றலான்மொழிந்த

வாறது. [4]நீங்கள், முன்னம் வந்திரந்தமாற்ற மாற்றலன்மொழிந்த வாறே' என்று, சிலபிரதியில் மூன்றுமடி. (2970)

81.—இதுமுதல் ஐந்துகவிகள்-இந்திரசித்து அநுமன்முதலியோரை இகழ்ந்துகூறுதலைத் தெரிவிக்கும்.

மூண்டபோர் தோறும் பட்டு முடிந்தநீர் முறையிற் றீர்ந்து
மீண்டபோ ததனை யெல்லாம் [1]மறந்திரோ விளிதில் வேண்டி
[2]ஈண்டவா வென்று [3]நின்றீ ரித்தனை பேரும் பட்டு
மாண்டபோ துயிர்[4]தந் தீயு மருந்து[5]வைத் தனிரோ [6]மான.

(இ-ள்.) பெருமை பாராட்டுபவனே! நேர்ந்த போர்தோறும் இறந்தொழிந்த நீங்கள் (இறந்தவர் உயிர்பெறுவதில்லையென்ற) முறைமையினின்று நீங்கி உயிரைமீளப்பெற்றபோது அந்தச்சாவு நேர்ந்ததையெல்லாம் மறந்து விடுகின்றீரோ? இருத்தலைவிரும்பி, 'நெருங்கவா' என்று அழையாநின்றீர்: நீங்கள் இத்தனைபேரும் உயிரொழிந்து இறந்தபோது உயிரைத்தரவல்லமருந்தை வைத்துக்கொண்டிருக்கின்றீர்களோ? [யாவரும் இறப்பீராதலால், இப்போது விளையும்போரில் உயிரளிக்கவல்லமருந்து கொணரமுடியாதென்றபடி]: (எ-று.)-நாகபாசத்தால் மாண்டபோது கருடனாலும் பிரமாத்திரத்தினாற்பட்டபோது மருத்துமலையின் மருந்தாலும் பிழைத்ததனால் 'மூண்டபோர்தோறும் பட்டு மீண்டநீர்' என்கின்றான். பி-ம்:—[1]மறத்திரே. [2]ஈண்டவொட்டு. [3]நின்றுயத்தனைவீரு மின்னம். [4]தந்துய்யும். [5]வைத்தனையோ. [6]மீண்டு. (2971)

82 இலக்குவ னாக மற்றை யிராமனே யாக [1]வீண்டு
விலக்குவ ரெல்லாம் வந்து [2]விலக்குக [3]குரங்கு வெள்ளங்
குலக்குல மாக மாளுங் கொற்றமு மனிதர் கொள்ளும்
அலக்கணு [4]முனிவர் தாமு மமரருங் காண்ப [5]ரன்றே.

(இ-ள்.) இலக்குவனாகட்டும்: (அன்றி), மற்றையோனை இராமனையாகட்டும்: இவ்விடத்து (எம்முடையவலிமையை) விலக்குவோரெல்லாம் வந்து விலக்கட்டும்; குரங்கின்வெள்ளக்கணக்கான சேனை கூட்டங்கூட்டமாக மாள்வதனை(யான் அடையும்) வெற்றியையும், மனிதராகிய இராமலட்சுமணர் அடையும்வருத்தத்தையும் முனிவர்களும் அமரரும் காணப்போகின்றார்; (எ-று.) அன்றே-தேற்றம். பி-ம்:—[1]மீண்டு. [2]விலக்குறக், விலக்கினுங். [3]குரங்கின், குரக்கின். [4]முனிவர்தம்மோடமரரும். [5]இன்றே. ()

83. யானுடை வில்லு மென்பொற் றோள்களு மிருக்க வின்னும்
ஊனுடை யுயிர்க ளியாவு [1]முய்யுமோ [2]வொளிப்பி லாமல்
கூனுடைக் குரங்கி னோடு மனிதரைக் கொன்று [3]சென்றவ்
[4]வானினுந் [5]தொடர்ந்து கொள்வன் மருந்தினு முய்யமாட்டீர்.

(இ-ள்) யான் கொண்டுள்ள வில்லும் என்னுடைய அழகிய தோள்களும் இருக்கையில், இன்னமும் சரீரத்தைப்படைத்த பிராணிகளெல்லாம் ஒளிந்துகொள்ளுதல் செய்யாமல் [ஒளிந்து

கொள்ளாவிட்டால்] (என்னுற்கொல்லப்படாமல்) உயிருய்யுமோ? கூனலையுடையகுரங்குடனே மனிதரைக் கொன்று போய் அந்த வானத்திலும்தொடர்ந்து (அங்குள்ளாரையும்) கொல்வேன்: (இப்போது இறந்தால் நீவிர்) மருந்தினாலும் பிழைக்கமாட்டீர்; (எ-று.)

ஒளிப்பிலாமல் கொன்று என இயைத்து உரைத்தலுந் தகும். [2]ஒழிப்பிலாமல் என்றபாடத்துக்கு-குரங்கினோடுமனிதரை விலக்கில்லாமற் கொன்றுஎன்க. மருந்தைக்கொணர்வாரில்லாமையால் மருந்தினுமுய்யமாட்டீரென்கின்றான். இனி, ஒருமுறைமண்ணுலகிற் கொன்று இரண்டாம்முறை வீரசுவர்க்கத்திலும் தொடர்ந்து கொல்வதனால் மருந்தினுமுய்யமாட்டீர் என்றுமாம். மருந்து - சஞ்சீவிமருந்து. வானினுந்தொடர்ந்துகொல்வன்-என்னுற் கொல்லப்பட்டவர் வீரசுவர்க்கஞ்சென்றாலும் அங்கும் அவரை இருக்கவொட்டாது வருத்துவேன் என்றுபொருள்கூறுவர் சிலர். பி-ம்:— [1]உய்யுமே. [2]கழுதுண்ணவே, உயிருணவே. [3]நின்ற. [4]வானிலும், வானிடைத். [5]தொடர்ந்துகொள்வென். (2978)

84. வேட்கின்ற வேள்வி [1]யின்று பிழைத்தது [2]வென்றேமென்று
கேட்கின்ற வீர மெல்லாங் [3]கிளத்துவீர் கிளத்தல் வேண்டா
தாழ்கின்ற தில்லை [4]யும்மைத் தனித்தனித் தலைகள் [5]பாறச்
சூழ்கின்ற [6]வீர மென்கைச் சரங்களாய்த் தோன்று மன்றே

(இ-ள்.) (நான்) செய்கின்றவேள்வியானது இன்று (முற்றாமல்) தவறிவிட்டது: (இந்தக்காரணத்தைக்கொண்டு), சயித்தோமென்று கருதிக்கேட்கப்படுகின்ற வீரவாதமெல்லாஞ் சொல்லுபவர்களே! (அங்ஙனம்) சொல்லவேண்டா; தாமதியாமல் உம்மைத் தனித்தனியே தலைகள்சிந்துமாறு ஆராய்ந்துசெய்யவல்ல வீரத்தன்மை என்கையிலுள்ள அம்புகளாய்த் தோன்றும்; (எ-று.)— உம்மைப் போலவெறும்பேச்சினாலன்றி எனதுகரங்களின்மூலமாகவே என் வீரம்வெளிப்படுமென்கின்றான். அன்றே-தேற்றம். பி-ம்:-[1]அன்றோ. [2]வேறுமின்று. [3]கிளத்துதல், கிளத்தது. [4]நும்மை. [5]சிந்திச். [6]விதியார்செய்கைதொடங்குமின்றுணிந்ததெல்லாம். ()

85. மற்றெலா நும்மைப் போல வாயினாற் சொல்ல மாட்டேன்
வெற்றிதா [1]னிரண்டுந் தந்தீர் [2]விரைவது வெல்லற் கொல்லா
[3]உற்றுநா னுருத்த காலந் தொருமுறை யெதிரே நிற்கக்
கற்றிரோ வின்ன [4]மாண்டு கிடத்திரோ [5]கடத்தி ரோதான்.

(இ-ள்.) (இனி), நும்மைப்போல எல்லாம் வாயினாற் சொல்ல மாட்டேன்: இரண்டுமுறையும் (எனக்கே) வெற்றியைத் தந்தீர், விரைவதால் வெல்வதற்கு முடியாது: நான் (போருக்கு) நின்று கோபித்தகாலத்தில் (இன்னம்) ஒருமுறை என்னெதிரேநிற்கக் கற்றுக்கொண்டீரோ? இன்னமும் மாண்டுகிடக்கப்போகின்றீரோ? (எ-று.)—தான்-அசை. இருமுறை வெற்றிதந்தது-நாகபாசம் விடுத்தபோதும், பிரமாத்திரம்விடுத்தபோதும் என்க. பி-ம்:— [1]மூன்றும். [2]விளைவதுவிளம்பவீவர், விரைவதுவெல்லற்கெல்லாம். [3]முற்றிக். [4]கடத்திரோதான். (2975)

86.—இந்திரசித்து யுத்தசன்னத்தனுல்.

நின்மின்க ணின்மி னென்று நெருப்பெழ விழித்து நீண்ட
[1]மின்மின்கொள் கவச மிட்டான் வீக்கினுன் தூணி வீரப் [போர்வில்
பொன்மின்கொள் கோதை கையிற்பூட்டினுன் பொறுத்தான்
என்மின்கொள் வயிரத் திண்டே ரேறினு னெறிந்தா ணுணி.

(இ - ள்.) '(ஓடிக்கடவாதுநிற்பீராகில்) நில்லுங்கள், (சற்று) நில்லுங்கள்: (இதோ பொருதற்குவருகிறேன்)' என்றுசொல்லி, (இந்திரசித்து),—நெருப்புப்பொறி பறக்க விழித்து நீண்ட [நிலைத்துள்ள] மின்னலைப்போல் ஒளிவிடுகின்ற கவசத்தை (உடலிற்) பூண்டு, தூணியை(த் தோளிற்) கட்டி, வீரத்திற்கு அறிகுறியான பொன்னிறுற் செய்து ஒளிவிடுகின்ற விரலுறையைக் கையிற் பூட்டினவனுய், போர்வில்லைத் தாங்கி, சூரியன்போல் ஒளிவிடுகின்ற வயிரத்திண்டேரிலேறி, வில்நாணியையெறிந்தான்;(எ-று.) எல்-சூரியன். மின்கொள்ளுதல்-ஒளிவிடுதல். பி-ம்:—[1]வில். ()

87.—இந்திரசித்து சங்கினை வாய்வைத்துமுழக்குதல்.

ஊதினுன் சங்கம் வானத் தொண்டொடி மகளி ரொண்கண்
மோதினுர் கணத்தின் முன்னே முழுவது [1]முருக்கி முற்றக்
காதினு னென்ன வானேர் கலங்கினுர் கயிலை யானும்
போதினுன் ருனு[2]மின்று புகுந்தது பெரும்போ ரென்ருர்.

(இ - ள்.) (பிறகு) சங்கத்தை (வாயில் வைத்து) ஊதினுன்: கணத்திற்கு முன்னே [க்ஷணகாலத்திற்குள்ளே] முழுவதும் அழித்து மிச்சமின்றிப் பொருவானென்றே கருதி, வானேர் கலங்கினுர்கள்: வானத்துள்ள ஒள்ளிய தொடியையணிந்த மகளிர் ஒள்ளிய கண்ணின்மீது மோதிக்கொண்டார்கள்: கயிலையில் வசிப்பவனுன சிவபெருமானும் தாமரைமலரில் வாழ்பவனுகிய பிரமதேவனும் 'இன்று பெரும்போர் புகுந்தது' என்றனர்; (எ – று.)— 'தமக்கு விருப்பமில்லாத செயல் நிகழ்வதைக் கண்ணுற் பார்க்க நேருமே!' என்று வானவமகளிர் கண்ணின்மீது மோதிக்கொண்டனர். தெளிவு பற்றி, காதினுனென்று இறந்தகாலத்தாற் கூறியது. பி-ம்:-[1]முருங்கமுற்றிக், ஒருங்கமுற்றக், முருகமுற்றிக். [2]வல்லே ()

88.—முன்னர்க்கலங்கின வானவர் பின்புதேறி இந்திரசித்து இறப்பானென்று மகிழ்தல்.

இழைத்தபே ரியாகந் தானே யாஞ் [1]செய்த தவத்தி னுலே
பிழைத்தது பிழைத்த லாலே யிவனினிப் பிழைக்க லாற்றுன்
[2]அழைத்தது விதியே [3]யாகு மிலக்குவ [4]னம்பி னுலே
[5]உழைப்பது காண்கின் ருேமென் [6]ருேங்கினு ரும்ப ரெல்லாம்.

(இ - ள்.) (இந்திரசித்து) செய்யத்தொடங்கிய பெரிய யாகமானது யாம்செய்த தவத்தினுலே (முற்றுமல்)பிழைபட்டுவிட்டது; (அவ்வாறு) பிழைபட்டதனுல் இவ்விந்திரசித்து, இனிப் பிழைக்க மாட்டான்; (இவனைப்) போர்க்கு அழைத்தது விதியின் செயலேதான்; இலக்குவன் அம்பினுலே (இவ்விந்திரசித்து) வருந்திப்போவதைப் பார்க்கப்போகின்ருேமென்று, (முதலிற்

கலங்கிய) தேவர்களெல்லாம், தெளிந்து மனத்திலூக்கங்கொண்டு விளர்ந்தார்கள்; (எ - று.) பி-ம்:— [1] செய்மா. [2] பிழைத்த தவிதுவே. [3] கொல்லென்றஞ்சினர். [4] அம்பினேரும், அம்பினேடும். [5] உழைத்தது. [6] வணங்கினர். (2978)

89.—குரங்குகள் இந்திரசித்தினுடைய வில்லின் நாணொலிகேட்டதும் நிலைகெட்டோடுதல்.

நாண்டொழி லோசை வீசிச் செவிதொறு நடந்த லோடும்
[1] ஆண்டொழின் மறந்து கையி னடுக்கிய மரனுங் கல்லும்
[2] மீண்டன மறிந்து சோர விழுந்தன [3] விழுந்த மெய்யே
மாண்டன [4] மென்றே யுன்னி [5] யிரிந்தன [6] குரங்கின் மாலை.

(இ - ள்.) நாணைத்தெறித்தலாகிய தொழிலினாலே (தோன்றிய) ஓசை, பரந்து (தம்முடைய) காதுகள்தோறும் படுதலும், குரங்குகளின் வரிசைகள் (தம்முடைய)பராக்கிரமச் செயலை மறந்து, கையிலே வரிசையாகக்கொண்டிருந்த மரமும் கல்லும் (போர்க்குஉதவாமல்) மடங்கிப் (பூமியிற்) சோர்ந்து விழ,(தாமும் போரினின்று) மீண்டனவாய்க் கீழ்வீழ்ந்தன; (அங்ஙனம்) விழுந்தவை, (இங்கே தாமதித்துநின்றால் இந்திரசித்தின் கணையால்) மெய்யாகவே மாண்டுவிடுவோமென்று நினைத்து, நிலைகெட்டோடின; (எ - று.)—இங்ஙனம் நிலைகெட்டோடியவர் சேனாபதியரல்லாத மற்றைவானர ரென்பது, அடுத்த கவியால் விளங்கும். மாண்டனம்-காலவழுவமைதி. பி - ம்:—[1] ஆண்டொழிலுடனே. [2] மீண்டென. [3] வீழமென்போல், விழுந்தமெய்ம்மை. [4] எனவே. [5] இரிந்தது. [6] கவியின். [1] மாண்டொழில்என்றும் பிரிக்கலாம். (2979)

90.—அநுமான் ஒருமலையைக்கொண்டு போர்க்கு நிற்றல்.

படைப்பெருந் தலைவர் நின்றா ரல்லவ ரிறுதி பற்றும்
அடைப்பருங் காலக் காற்றா [1] லாற்றல தாகித் தேிப்
[2] புடைத்திரிந் தோடும் வேலைப் புனலென விரிய லுற்றார் [டான்.
கிடைத்தபே ரநும னுண்டோர் நெடுங்கிரி கிழித்துக் கொண்

(இ-ள்.) படையிலே பெருமைபெற்ற சேனாபதியாகவுள்ளவர் தவிர மற்றையோர், நாசத்தை யுண்டாக்கவல்ல தாங்க முடியாத யுகாந்தகாலத்துக் காற்றினாலே தாங்கும் வல்லமையற்றதாகித் (தன் கரையைவிட்டு) மீறிப் பக்கங்களிலெல்லாம் நிலைகெட்டு ஓடுகின்ற கடல்நீர்போல நிலைகெட்டோடத் தொடங்கினர்கள்: (போர்க்கு) நேர்ந்த பெருமைபெற்ற அநுமான், அங்கே ஒரு பெரிய கிரியைப் பூமியினின்று பேர்த்து எடுத்துக்கொண்டான்; (எ-று.) —பி - ம்:—[1] ஆற்றலவாகிக். [2] உடைத்திரிந்து. (2980)

91.—இந்திரசித்தின் வீரவாதம்.

நில்லடா நில்லு நில்லு [1] நீயடா வாலி பேசிக்
கல்[2] லெடா நின்ற [3] தென்னே போர்க்களத் தமரர் காணக்
கொல்லலா [4] மென்றோ நன்று குரங்கென்றாற் கூடு மன்றே
[5] நல்லபோர் வாவா வென்றான் நமனுக்கும் நமனாய் நின்றான்.

(இ - ள்.) (அப்போது அதுகண்ட) யமனுக்கும் யமனைப் பின் றவனான இந்திரசித்து,—(அந்த அநுமானை நோக்கி) நில்அடா! நில்லு நில்லு; அடா! நீ விசேஷவார்த்தைகளைப் பேசிக்கொண்டு கல்லையெடுத்துக்கொண்டு நிற்பது என்ன காரணம்பற்றி? போர்க் களத்திலே தேவர் காணும்படி (என்னைக்) கொல்லலாமென்று கருதியோ? (உன்செயல்) நன்றாயுள்ளது; குரங்கென்பதனால் (இந் தச் சாபலம்) பொருந்தியதே; (நீ) நல்லவன்தான்; போருக்கு வரு வாய், வருவாய்' என்றான்; (எ - று.)—பி - ம்:—[1]நீயெடா. [2]அடா நின்ற. [3]என்னைப். [4]என்றேற முன்னி, என்றேற நின்று. [5]நல்லையே போர. (2981)

92.—அப்போது தேவர்கள் நடுங்குதல்.

வில்லெடுத் துருத்து நின்ற வீரருள் வீரன் நேரே
கல்லெடுத் தெறிய [1]வந்த வனுமனைக் கண்ணி னோக்கி
மல்லெழுத் [2]துயர்ந்த [3]தோளாற்கென்கொலோ [4]வலிய தென்னுச்
சொல்லெடுத் தமரர் சொன்னார் தாதையுந் துணுக்க முற்றான்.

(இ-ள்) வில்லை யெடுத்துக் கோபித்துநின்ற வீரருள் வீரனான இந்திரசித்துக்கு நேரே கல்லையெடுத்துஎறியவந்த அநுமானைக் கண்களால் நோக்கி, 'வலிமையோடு ஓங்கிநின்ற தோளையுடைய இந்த அநுமானுக்கு மனவுறுதி என்கொலோ?' என்று சொல்லை யெடுத்து அமரர் சொன்னார்கள்: (அநுமானுடைய) தந்தையும் மன நடுக்கமடைந்தான்; (எ - று.)—பி - ம்:—[1]நின்ற. [2]அமைந்த. [3]தோளார்க்கு. [4]வருவது. (2982)

93.—அநுமான் வீசிய மலையைக் கண்டு அரக்கர் நடுங்குதல்.

வீசினன் வயிரக் [1]குன்றம் வெம்பொறிக் குலங்கள் விண்ணின்
ஆசையி னிமிர்ந்து செல்ல வாயிர [2]முருவொன் றாகப்
பூசின [3]பிளப்பி தென்னு வருமதன் புரிவை நோக்கிக்
கூசின வுலக மெல்லாங் குலைந்ததவ் வரக்கர் கூட்டம்.

(இ - ள்.) (அநுமான்) உறுதியுள்ள அந்த மலையை, வானத்தி லும் திக்கிலும் கொடிய தீப்பொறிக்குலங்கள் பரந்து செல்ல வீசி னான்; 'வெவ்வேறாகவுள்ள ஆயிரம் உருவம் ஒன்றாகச் சேரப் பூசிய தாகும் இது' என்னுமாறு வருகின்ற அந்தமலையின் செயலைப் பார்த்து, உலகமெல்லாம் அஞ்சின; அந்த அரக்கர்கூட்டமும் நிலை குலைந்தது; (எ - று.) பிளப்பு என்பதனால், வெவ்வாறானமலை யென்பது பெறப்படும். ஆயிரம் மலைகளை ஒன்றாகச் சேர்த்து இயற் றினாற் போன்றது, அநுமான் எறிந்த அம்மலையென்க. பி - ம்:— [1]குன்றைவெறி. [2]உருவொன்றாக. [3]பிழம்பிதென்ன, பிழம்பி தென்ன. (2983)

94.—அம்மலையை இந்திரசித்து தூளாக்கி வீழ்த்தல்.

குண்டல நெடுவில் வீச மேருவிற் குவிந்த தோளான்
அண்டமுங் குலுங்க [1]வார்த்து மாருதி யசனி யஞ்ச
விண்டலத் தெறிந்த குன்றம் வெறுந்துக [2]ளாகி வீழக்
[3]கண்டன னெய்த தன்மை கண்டில ரிமைப்பி லன்னார்.

(இ-ள்.) (தன்) குண்டலம் பேரொளியை வீசிக்கொண்டிருக்க மேருவைப்போலக் குவிந்த தோளேயுடையவனுன இந்திரசித்து,— அண்டமுங் குலுங்கும்படி ஆரவாரித்து, இடியும் அஞ்சும்படி விண்தலத்திலே அநுமானெறிந்த குன்றம் வெறுந்துகளாகி வீழச் செய்தான்: இமைத்தலில்லாத கண்களேயுடைய தேவர்களும், அவன் எய்த செயலேக் கண்டாரில்லே; (எ - று.)—அநுமான் மலேயை வீசிய மாத்திரத்தில் அம்பையெய்து பொடியாக்கி வீழ்த்தனன் இந்திரசித்தென்க. பி - ம்:—[1] ஆர்த்த. [2] ஆக்கி. [3] கண்டனர்.

95.—அம்பெய்து இந்திரசித்து அநுமானேத் துன்புறுத்துதல்.

மாறொரு குன்றம் வாங்கி மறுகுவான் [1]மார்பிற் றேளிற்
[2]காறரு காலிற் கையிற் கழுத்தினின் நுதலிற் கண்ணின்
ஏறின வென்ப மன்னே [3]வெரிமுகக் கடவுள் வெம்மை
சீறிய பகழி மாரி தீக்கடு விடத்திற் றேய்ந்த.

(இ - ள்.) வேறொரு குன்றத்தை யெடுத்துச் சுழல்பவனுன அநுமானுடைய மார்பின்மீதும் தோளின்மீதும் நுதலின் மீதும் கண்களின் மீதும், தீய கொடியவிடத்திற் படிந்தனவாய் எரியை முகத்திற்கொண்டு தெய்வத்தன்மைவாய்ந்து வெம்மையோடு சீறி வருகின்றனவான (இந்திரசித்தின்) அம்புகளின் மழைகள் ஏறின; (எ - று.)—என்ப, மன்னே - அசைகள். பி - ம்:—[1] வயிரமார்பிற். [2] காறுறு. [3] எரிமுதற். (2985)

96.—அம்பினுலடிபட்ட அநுமானுடைய தோற்றம்.

வெதிரொத்த சிகரக் [1]குன்றின் மருங்குற விளங்க லாலும்
எதிரொத்த விருளேச் [2]சீறி யெழுகின்ற வியற்கை யாலும்
கதிரொத்த பகழிக் கற்றை [3]கதிரொளி காட்ட லாலும்
உதிரத்தின் செம்மை யாலு முதிக்கின்ற கதிரோ னுெத்தான்.

(இ-ள்.) மூங்கில் பொருந்திய சிகரத்தோடுகூடிய மலேயின் பக்கத்திலே விளங்குவதாலும், (தன்னுடலொளியால்) எதிரிற் பொருந்திய இருளேப் போக்கித் தோன்றுகின்ற தன்மையாலும், கதிரையொத்த அம்புத்தொகுதி கதிர்களினுெளியைக் காட்டுதலாலும் உதிரத்தாற்றேன்றிய செம்மைநிறத்தாலும், (அநுமான்), உதிக்கின்ற சூரியனேயொத்தான்; (எ - று.)—திரிகூடாசலத்து மருங்கில் தோன்றும் அநுமானுக்குச் சூரியனுவமை; தற்குறிப் பேற்றவணி. மலேயைக்கொண்டு அதன் மருங்குத் தோன்றுவதால், 'குன்றின் மருங்குற விளங்கலாலும்' என்றுரெனினுமாம். பி-ம்:— [1] குன்றம். [2] கீறி. [3] கரவொலி, கரனெளி. (2986)

97.—அநுமான் அயரவே, அங்கதன் முதலியோரும், சுக்கிரீ வனும்வர, இந்திரசித்து கூறத் தொடங்குதல்.

ஆயவ னயர்த லோடு மங்கதன் முதல்வ ராஞேர்
காய்சினந் திருகி வந்து [1]கலந்தனர் கதிரோன் பெற்ற
தூயசுக் கிரீவன் வந்து தோன்றினன் தோன்றக் கண்டு
தீயவ [2]னவரை நோக்கிக் கனலெனச் சினத்துச் சொன்னுன்.

(இ - ள்.) அந்த அநுமான் (இந்திரசித்து எய்த அம்புமழைகளால்) அயர்ந்தவளவில, அங்கதன் முதலியோர் காயவல்ல சினத்தோடு மாறுபட்டு வந்து (அங்குச்) சேர்ந்தார்கள்; சூரியன் பெற்ற பரிசுத்தகுணமுள்ள சுக்கிரீவனும் (அங்கு) வந்துதோன்றினான்; தோன்றக்கண்டு, தீயவனான இந்திரசித்து.—அவ்வானரரைப் பார்த்துக் கனல்போலச் சினத்துடனே கூறலானான்; (எ-று.)—அதனை, மேலே காண்க. பி-ம்:—[1]'கலந்துள்ளார் தம்மைக்காணு, நீயிர்கணின் மினின்மினிருமுறைநெடியவானிற், போயவனெங்கே நின்றானென்றனன் பொருள்செயாதான்' என்ற இந்தப்பாடத்திற்கு, இருமுறை நெடியவானிற்போயவன் - (நாகபாசத்தாற் கட்டுண்டபோதும் பிரமாத்திரம் விடுத்தபோதுமாக) இருமுறை உயிர் நீங்கிச் சுவர்க்கஞ் சேர்ந்த இலட்சுமணனென்க. [2]அவனை.()

98—இருகவிகள்-இந்திரசித்து இலக்குமணனைக் காட்டுக எனல்.

[1]வெம்பின [2]செருவின் வந்து மேவினும் வெகுண்டு சீயம் [டோ
தும்பியைத் தொடர்வ தல்லாற் குரங்கினைத் [3]தொடர்வ துண்
அம்பினை மாட்டி யென்னே சிறிதுபோ ராற்ற வல்லான்
தம்பியைக் காட்டித் தாரீர் சாதிரோ [4]சலத்தி னென்றான்.

(இ - ள்.) 'கோபித்துச் செய்யும் போரிலேவந்து எதிர்த்து நின்றாலும், சிங்கமானது சினங்கொண்டு யானையைத் தொடருமேயல்லாமல் குரங்கினைத் தொடர்வது உண்டோ? (நும்மீது) அம்பைச் செலுத்தி என்ன பயன்? [உம்மை என்னம்பினாற் கொல்வதால் எனக்குப் புகழுண்டாகாதென்றபடி]; (என்னுடன்) சிறிது போரைச் செய்யவல்லவனாகிய (இராமன்) தம்பியைக் காட்டிக் கொடுங்கள்; கோபத்தினால் மடியக்கடவீரோ?' என்று கூறினான்; (இந்திரசித்து); (எ-று.)-பி-ம்:—[1]வெம்பினர். [2]பின்னுமேன்மேற் சேறலும். [3]சுளிவது. [4]சவத்தின். (2988)

99. அநுமனைக் கண்டி லீரோ வவனிலும் வலிய ரோவென்
[1]தநுவுள தன்றோ தோளி னவ்வலி தவிர்ந்த துண்டோ
[2]இநு[3]முனை நீர லீரோ வெவ்வலி யீட்டி வந்தீர்
மனிதரைக் காட்டி நுந்த [4]மலைதொறும் வழிக்கொ ளீரோ.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) அநுமானைப் பார்த்திரில்லையோ? அவ்வநுமானைக் காட்டிலும் (நீங்கள்) வலிமையுடையவர்களோ? என்னுடைய வில் உள்ளதன்றோ? (என்) தோளின் அவ்வலி நீங்கிற்றுண்டோ? இன்னும் போர்முனையில் முன்னேவந்த நீங்களே யல்லீரோ? (இப்போது) எந்தவலிமையை (ப் புதிதாக)ச் சம்பாதித்துக்கொண்டு வந்தீர்? மனிதனைக் காட்டிவிட்டு நும்முடைய மலைதோறும் வழிக்கொள்க [சென்றிடுக]; (எ - று.)

இநுமுனைநீரலீரோ-முன்னம் பல முறைகளில் நீங்கள் என்னால் அடிபட்டவரல்லீரோ? என்றபடி. வெவ்வலியீட்டி வந்தீர் என்று பிரித்து அதன் பின்னும் ஓகாரஞ் சேர்த்துப் பொருளுரைப்பாருமுளர். பி - ம்:—[1]தநுவலமின்றோ தோளுமவையல. [2]இனி. [3]முன்நீர். [4]மலையிடை. (2989)

100.—இந்திரசித்தின்மீது மரம்முதலியனவீசிய வானரங்கள் வலிமை ஒய்தல்.

என்றுரைத் திளவ றன்மே லெழுகின்ற வியற்கை நோக்கிக்
குன்றமு மரமும் [1]வீசிக் குறுகினார் [2]குழாங்க டோறுஞ்
[3]சென்றன பகழி மாரி மேருவை யுருவித் தீர்வ
வொன்றல கோடி கோடி [4]யுளைந்தன [5]வலியு மோய்ந்த.

(இ-ள்.) என்று (இந்திரசித்து) சொல்லி, இளையபெருமாள் மீது எழுகின்ற செயலைப்பார்த்து, (வானரர்கள்) குன்றங்களையும் மரங்களையும் வீசிக் கிட்டினார்கள்; (அவ்வானரக்) கூட்டங்க டோறும் மேருவையும் உருவியே தீர்வனவாகிய பகழிமழை ஒன்றல்லாமற் பல கோடிக்கணக்காகச் சென்றன: (அம்மழைகளினால் வானரங்கள்) வருந்தினவாய், (தம்) வலிமையையும் இழந்தன; (எ - று)—பி-ம்:—[1]கல்லும் வீசின. [2]குழாங்களோடும். [3]சென்றனன். [4]நுழைந்தன. [5]வலியினுய்ததான்,வலியுமோய்ந்தார். (2990)

101.—விபீடணன் சொல்ல, இந்திரசித்துள்ளவிடத்துக்கு வந்து இளையபெருமாள் போரில் மூளுதல்.

படுகின்ற தன்றோ [1]வுன்றன் பெரும்படை பகழி மாரி
விடுகின்ற தன்றோ வென்றி யரக்கனுங் காள மேகம்
[2]இடுகின்ற வேள்வி மாண்ட தினியவன் பிழைப்பு றாமே
முடுகென்றா னரக்கன் தம்பி நம்பியுஞ் சென்று மூண்டான்.

(இ-ள்.) (அப்போது) இராவணனுடைய தம்பியாகிய விபீடணன், (இலட்சுமணனை நோக்கி), வெற்றிபொருந்திய அரக்கனாகிய காளமேகம் பகழிமாரியை விடுகின்றதன்றோ? (அதனால்) உன்னுடைய பெரிய வானர சேனை இறந்துபடுகின்றதன்றோ? (பலி) இடப்படுகின்ற வேள்வி ஒழிந்திட்டது: இனி அந்த இந்திரசித்து (உயிர்) பிழைத்துப்போகாதபடி விரைவாயென்றான்: இளையபெருமாளும், (இந்திரசித்து இருக்குமிடத்துச்) சென்று (போரில்) மூண்டான்; (எ-று.)—பி-ம்:—[1]மற்றுன், முற்றுன். [2]அடுகின்ற. ()

வேறு.

102.—அநுமான் வேண்டுகோளின்படி இலட்சுமணன் அவன் தோளின்மீது ஏறுதல்.

வந்தானெடுந் தகைமாருதி மயங்காமுக மலர்ந்தான்
எந்தாய்கடி தேறுயென திருதோண்மிசை யென்றான்
[1]அந்தாகவென் றுவந்தையனு மமைவாயின னிமையோர்
சிந்தாகுலங் [2]களைந்தானென நெடுஞ்சாரிகை திரிந்தான்.

(இ-ள்.) நெடுங்குணமுள்ள மாருதி மயங்காமல் [அயர்வுநீங்கி] வந்து முகம் மலர்ந்து, 'எந்தாய்! எனது இரண்டு தோளின்மீது கடிது ஏறுவாய்' என்று வேண்டினான்; அவனும் அப்படியேயென்று உவந்து உடன்பட்டான்; 'இமையோருடையசிந்தாகுலத்தை (இவன்) போக்கிவிட்டான்' என்று (கண்டோர்)கருதும்படி நெடுஞ்சாரிகை திரிபவனானான், (அநுமான்); (எ - று.)—அநு

மான் சாரிகை திரிவதனால் இந்திரசித்தை இலட்சுமணன் எளிதில் வெல்லலாமென்ற எண்ணமுண்டாக, அவ்வழியால் தேவர்களின் சிந்தாகுலத்தைக் களைந்தானென்க. அந்து - கன்னடத்தினின்று தமிழில் வந்து வழங்கிய திசைச்சொலென்பர். பி-ம்:—[1] அந்தாவற வுவந்து. [2] திறந்தாரவன். (2992)

103.—25-கவிகள்-இந்திரசித்துக்கும் இலட்சுமணனுக்கும் நிகழ்ந்த போர்.

காராயிர [1] முடனாகிய தெனலாகிய கரியோன்
ஓராயிரம் பரிபூண்டதோ ருயர்தேர்மிசை [2] யுயர்ந்தான்
நேராயின ரிருவோர்களு நெடுமாருதி நிமிரும்
பேராயிர முடையானெனத் திசையெங்கணும் பெயர்ந்தான்.

(இ-ள்.) 'ஆயிரம்மேகங்கள் ஒருசேர நின்றது' என்று சொல்லுதற்கு ஏற்ற [மிகக்கரிய] கொடியவனை இந்திரசித்து, ஓராயிரம் பரிபூண்டதான ஒரு உயர்ந்ததேரின்மிசை யுயரத்தோன்றினன்: (இலட்சுமணன் இந்திரசித்து என்ற) இருவீரர்களும் நேர்க்குநேராயினர்: நெடியமாருதி, (திரிவிக்கிரமனாகி) ஓங்கிய ஆயிரம்பேர் படைத்த திருமால்போல எல்லாத்திசைகளிலும் சென்றான்; (எ - று.)—'காராயிரமுடனாகிய தெனலாகிய' என்பதை, விரைவு பற்றிப் பரிக்கு உவமை கூறியதாகப் பொருள்கூறுவாரு முளர். பி-ம்:—[1] உடனாயின வெனலாயின. [2] உருத்தான். (2993)

104. *தீயொப்பன வுருமொப்பன [1] வுயிர்வேட்டன திரியும்*
பேயொப்பன பசியொப்பன பிணியொப்பன பிழையா
மாயக்கொடு வினையொப்பன [2] மனமொப்பன கழுகின்
தாயொப்பன சில [3] வாளிகள் துரந்தான்றுயில் துறந்தான்.

(இ-ள்.) துயிலை நீத்தவனாகிய இலட்சுமணன்,—(எரிக்குந் தன்மையுள்ள) தீயையொப்பனவும், (உக்கிரமுள்ள) இடியையொப்பனவும், உயிரை விரும்பியனவாய்த் திரியும் பேயையொப்பனவும், (உள்ளிருந்துவருத்துவனவான) பசியையொப்பனவும், (உள்ளும் புறமுமிருந்து வருத்துவனவான) பிணியையொப்பனவும், தவறாது பயன் விளைத்துப் பிரகிருதிசம்பந்தத்தாலுளதாகிய கொடிய வினையை யொப்பனவும், விரைந்துசெல்லும் மனத்தையொப்பனவும், கொத்தியுணவளிக்கும் கழுகின் தாய்ப்பறவையொப்பனவுமான சில அம்புகளைத் துரந்தான்; (எ - று.)

வாளி - அம்பு. இலக்கு ஆனவனைத் தவறாமற் பயனை நுகர்வித்தலில், வினை உவமை. தாய்ப்பறவை தம்குஞ்சுகளுக்கு உணவளிக்குந் தன்மையன: கழுகுகட்கு இரை தருதலால், 'கழுகின் தாயொப்பன' என்றது. பி-ம்:—[1] உயிர்வேட்டெனத். [2] மழு வொப்பன. [3] வெங்கணை. (2994)

105 *[1] அவ்வம்பினை யவ்வம்பினி னறுத்தா [2] னிக லரக்கன்*
எவ்வம்பினி யுளகத் [3] துன தென் னும்படி யெய்தான்

[4]எவ்வம்பர மெவ்வெண்டிசை யெவ்வேலைகள் பிறவும்
[5]வவ்வுங்கடை யுகமாமழை பொழிகின்றது [6]மான.

(இ - ள்.) வலிமைபொருந்திய அரக்கன்,—(இலக்குவன் எந்த அம்புகளை விடுத்தானோ) அந்த அம்புகளை அவ்வாறான அம்புகளினாலேயே முறித்துத் தள்ளினன்: (பின்பு), ஆகாயம் எவ்வளவு (உண்டோ), எட்டுத்திசைகள் எவ்வளவு (தூரம் உண்டோ), எத்துணைச் சமுத்திரங்கள் (உண்டோ, அவைகளையும்) மற்றைப் பிரதேசங்களையும் கவிந்து கொள்கின்ற கடையுகத்து மிக்க மழைகள் பொழிவதையொப்ப, 'இனி எந்த அம்பு உலகத்து (மிச்சமாக) உள்ளது [எந்த அம்பும் மிச்சம் இல்லை]' என்னும்படி (மிகப் பல அம்புகளை இலட்சுமணன்) தொடுத்துவிட்டான்! (எ - று.)— பி-ம்:—[1] அவ்வம்பையும். [2] அடல். [3] உள. [4] வெவ்வம்பரம்வையத் திசைமலை. [5]வய்யம். [6]மானம். (2995)

106. ஆயோனெடுங் குருவிக்குல [1]மென்னுஞ்சில வம்பால்
[2]போயோடிடத் தூரந்தான்அவை பொறியோவென [3]மறியத்
தூயோனுமத் துணைவாளிகள் தொடுத்தானவை [4]தடுத்தான்
தீயோனுமக் கணத்தாயிரம் நெடுஞ்சாரிகை திரிந்தான்.

(இ - ள்.) அந்த இந்திரசித்து, நெடிய குருவிக்கூட்டமென்று சொல்லுதற்குரிய சில அம்புகளினால் (அவைகளை) ஒழிந்துபோய் விடும்படி துரந்தான்: அவை தீப்பொறியோவென்னுமாறு மீண்டிட, பரிசுத்தனாகிய இலட்சுமணனும் (பின்னும்) அத்துணை வாளிகள் தொடுத்தான்: அவற்றைத் தடுத்தவனாய்க் கொடியவனாகிய இந்திரசித்தும், அக்கணத்தில் ஆயிரம் நெடுஞ்சாரிகை திரிந்தான்; (எ - று.)—இழைச்செய்யுளில் அரக்கன் அம்புஎய்தானெனக் கொள்பவர் 'ஆயோன்...துரந்தான்' என்பதுவரை அநுவாதமாகக் கொண்டு, அந்த அம்புகள் ஊழ்வினையோ என்னுமாறு (இலக்குமணனை) மறிக்க, அந்தஇலக்குமணனும் அத்துணைவாளிகளால் அவற்றைத் தடுத்தான்:இந்திரசித்து சாரிகை திரியலானானென்பர். பி-ம்:—[1] எனலாஞ்சில, என்பானென. [2]போயோவிடத். [3]மறைய. [4]துணித்தான். (2996)

107. கல்லுந்நெடு [1]மலையும்பல மரமுங்[2]கடைகாணும்
புல்லுஞ்சிறு [3]கொடியும்மிடை தெரியாவகை புரியச் [வோன்
செல்லுந்நெறி [4]தொறுஞ்சென்றன [5]நெறுங்கால்புரை மற
[6]மல்லின்முதிர் தேருஞ்[7]சின வயமாருதி [8]தாளும்.

(இ - ள்) (இந்திரசித்தின்தேர் சாரிகைவரவே இலட்சுமணன் வாகனமாகிய அநுமானுஞ் சாரிகைவர), அப்போது கற்களும் நெடியமலைகளும் பலமரங்களும் (தாவரவருக்கத்திற்) கடையாய் நின்ற புல்லும் சிறுகொடியும் வேறுபாடு தெரியாதபடி [எல்லாவிடத்திலும் சமனாக], விரும்பச்செல்லுகின்ற வழிதோறும், (யுகாந்தகாலத்திலே உயிர்களையெல்லாம்) அழிக்கின்ற சண்டமாருதத்தையொத்த மறத்தையுடையவனான இந்திரசித்தின் வலிமை மிக்கதேரும், சினங்கொண்ட வலிய மாருதியின் கால்களும், சென்றன; (எ - று.)

அநுமன் கால்சென்றவழி இந்திரசித்தின்தேரும், இந்திரசித்தின் தேர் சென்றவழி அநுமன்காலும், கல் மலை முதலிய இடவேறுபாடு கருதாது ஒரு நிகராகச் சென்றன வென்க. பி - ம்:—[1]மரனும் பலமலையும். [2]இடை. [3]பொடியும். [4]முறை. [5]தெறு. [6]சில்லும், மல்லும், சில்லின். [7]கவி. [8]காலும். (2997)

108. இருவீரு மிவனின்னவ னிவ[1]னின்னவ னென்னச்
[2]செருவீரு மறியாவகை திரிந்தார்கணை சொரிந்தார்
ஒருவீரு மிவ[3]ரொக்கில ரெனவானவ ருவந்தார்
பொருவீரையும் பொருவீரையும் பொருதாலெனப் பொருதார்.

(இ-ள்.) (இந்திரசித்து இலட்சுமணன் என்ற) இருவீரர்களும் 'இவன் இன்னான், இவன் இன்னான்' என்றுபோர்வீரரும் அறியாவகை (சாரி) திரிந்தவராய்க் கணைகளைப் பொழிந்தார்கள்; (அப்போது) 'ஒருவீரரும் இவரை ஒத்திலர்' என்று தேவர்களும் பாராட்டிக் கூறினார்கள்: (அலை) மோதுகின்ற கடலும் (அலை) மோதுகின்ற கடலும் (தம்மிற்) பொருதாலென (அவ்விரு வீரரும்) பொருதார்கள்; (எ - று)—வீரை-கடல். பி - ம்:—[1]இன்னனென்றிமையாத் [2]திருவீரருந்தெரியா. [3]சேர்கிலர். (2998)

109 விண்[1]செல்கில செல்கின்றன விசிகம்மென இமையோர்
கண்செல்கில மனஞ்செல்கில கணிதம்முறு [2]மெனிதோர்
எண்செல்கில நெடுங்காலவன் இடைசெல்கில [3]னுடன்மேற்
புண்செல்வன [4]வல்லாலொரு பொருள்[5]செல்வன தெரியா.

(இ - ள்.) '(எய்த) அம்புகள் விண்ணிற் செல்கில, செல்கின்றன' என்று உணருமாறு தேவர்களின் கண்களும் செல்கில: மனமுஞ் செல்கில: எண்ணுவதற்கு (அந்த அம்புகள்) அடங்குமெனிலோ, ஓரெண்ணும் செல்லவில்லை [அவை கணக்கிடமுடியாதபடி மிக்குள்ளன என்றபடி]: (அவ்வம்புகளின்) இடையே நெடியவாயுதேவனும் செல்லமாட்டாதவனாயினன் [அவ்வளவு நெருங்கியிருந்தன]: (அவைகளைப்பற்றித் தெரிந்தனஎல்லாம்) உடலின்மீது புண்செல்வனவல்லாமல் வேறொருபொருள் செல்லுந் தொழில்கள் காணப்பட்டில; (எ -று.)—விண்-ஆகுபெயர். கண் முதலியவற்றின்பின் உம்மைகள் விகாரத்தால் தொக்கன. கால் அவன் - கால்என்று சொல்லப்படுகின்ற அத்தேவன்: வாயுதேவன்: சொற்பொருட்பின்வருநிலையும்தொடர்புயர்வுநவிற்சியணியும் காண்க. மேற்செய்யுளிலும் இதுகாண்க. புண்செல்லல் - புண் தோன்றுதல். பி-ம்: [1]செல்வன செல்கின்றன, செல்கில செல்கின்றில. [2]எனிலோ. [3]உடனே. [4]வல்லார். [5]செய்வன. (2999)

110. எரிந்தேறின திசையாவையும் [1]இடியாமெனப் [2]பொடியாய்த்
தெரிந்தேறின நெடுநாணொலி [3]படர்வானிறை [4]யுருமின்
[5]சொரிந்தேறின சுடுவெங்கணை தொடுந்தாரகை முழுதும்
கரிந்தேறின வுலகியாவையுங் கனல்வெம்புகை கதுவ.

(எ-று.) பரந்த வானத்தில்(யாவையும்)தெரியும்படி மிகுந்தோன்றிய நெடியநாணொலி நிறைகின்ற இடிபோல(க்காணப்பட, அவ்விருவீரரும்) சொரிந்ததனால் வெளியேறின சுடுவெங்கணைகள்

உலகெங்கும் கனலின் வெவ்வியபுகை கதுவ (ஒன்றையொன்று மோதி)ப் பொடியாகி இடிபோல எரிந்துகொண்டு திசையெங்கும் பரவின: (ஆகாயத்துத்) தோன்றுகின்ற நட்சத்திரமுழுதும் (அந்த அம்புகளினுற்) கரிந்துகொண்டு பரவீகின்றன: (எ-று.)—பி-ம்:—[1] மலையாவையும். [2] இடியா, இமையா, [3] பட. [4] உருமுஞ். [5] துரந்தேறினசுடுவெங்கணை. (3000)

111. வெடிக்கின்றன [1] திசையானையும் [2] விழுகின்றன [3] இடிவந்து
இடிக்கின்றன [4] சிலைநாணொலி இருவாய்களு மெதிரக்
கடிக்கின்றன கனல்வெங்கணை கலிவா [5] னுற விசைமேல்
பொடிக்கின்றன பொறிவெங்கன லிவைகண்டனர் புலவோர்.

(இ-ள்.) வில்நாணியினொலி,—திசையானையும் வெடிக்கின்றன வாய், விழுகின்றனவான இடிபோலத்தோன்றி ஒலிக்கின்றன வாயின: (வில்லின்) இரண்டுமுனைகளும் எதிர்தலாலே [வளைதலாலே] (உடலிற்) கடிக்கின்றனவான கனலைக்கொண்டகொடிய அம்புகள்,—ஒலியைக்குணமாகக் கொண்ட வானத்திற்பொருந்தச் சென்ற விசையினுல் மேலே வெங்கனற்பொறியைத் தோற்று விப்பனவாயின: இவற்றையெல்லாம் தேவர்கள் கண்டார்கள்; (எ-று.)—இருவாய்களும் எதிரக்கடிக்கின்றன என்று எடுத்து இரண்டுவீரரின் வாய்களும் மாறுபட்டு(க் கோபத்தால் நெறு நெறென)க்கடிப்பனவாயின என்றுமாம். பி-ம்:—[1] மலைகின்றன. [2] அழிக்கின்றன. [3] விழ. [4] சிறு. [5] உரை. (3001)

112. கடல்வற்றின மலையுக்கன [1] பருதிக்கனல் [2] கதுவுற்று
உடல் [3] பற்றின மர [4] முற்றன [5] கனல் [6] பட்டன வுதிரஞ்
[7] சுடர்வற்றின சுறுமிக்கது துணிபட் [8] டுதிர் கணையின்
இடர் [9] பட்டது பரவைக் [10] குழி [11] திரியுற்றது புவனம்.

(இ-ள்.) (அவ்விருவரும் எய்த அம்புகளினுல்), கடல்களெல்லாம் வற்றின; மலைகள் பிளவுபட்டன; சூரியனுடைய உடல் (முழுதும்) கனலாற்கதுவப்பட்டுப் பற்றியெரிந்தன; மரங்கள் உற்றன வான கனலினுல் அழிந்தன; இரத்தம், சுடர்வற்றின; சுறுநாற்றம், மிக்குத்தோன்றிற்று; துணிபட்டுஉதிர்கின்ற கணைகளாலே கடலாகியகுழிந்தஇடம் மேடாகிவிட்டது; புவனமும் சுழன்றது: (எ-று.)—பி-ம்:—[1] பருவக். [2] பருகுற்று. [3] வற்றின. [4] முற்றின. [5] அனல். [6] பற்றின. [7] சுடர்பற்றினசுறவுக்கன, சுடுவற்றனவெரியுக்கது. [8] உயர். [9] உற்றது. [10] புவி. [11] திரிவுற்றன, திரிவுற்றது. (3002)

113 எரிகின்றன [1] வயில்வெங்கணை யிருசேனையு மிரியத்
திரிகின்றன [2] புடைநின்றில திசைசென்றன சிதறிக்
கரிபொன்றின பரிமங்கின கவிசிந்தின கடல்போற் [யால்.
சொரிகின்றன பொருசெம்புனல் [3] தொலைகின்றனர் கொலை

(இ-ள்.) (இருவரும் விடுத்த) எரிகின்றனவான கூரிய வெவ்வியகணைகள்,—இருசேனைகளும் நிலைகெடும்படி திரிவனவாய் அங்குத்தானே நில்லாமல் திக்குகளிற் சிதறிச் சென்றன; (அக்கணை

களினால்), யானைகள் இறந்தன; குதிரைகள் அவிந்தன; வானரங்கள் சிதறின: கடல்போல (அலை) மோதுகின்ற இரத்தம் வெளிப்படுவனவாயின; (பலவீரர்களும்) கொலையால் உயிர்தொலைபவராயினர்; (எ-று.)—பி-ம்:—[1] விரி. [2] இடை. [3] தொலைகின்றன. ()

114. [1] புரிந்தோடின [2] புகைந்தோடின பொரிந்தோடின [3] புகைபோய்
எரிந்தோடின [4] கரிந்தோடின இடமோடின வலமே
[5] திரிந்தோடின [6] செறிந்தோடின விரிந்தோடின திசைமேற்
[8] சரிந்தோடின [7] கருங்கோளரிக் கிளையான்விடு [9] சரமே.

(இ-ள்.) கருநிறமுடைய வலிய சிங்கம்போன்ற ஸ்ரீராமனுக்கு இளையவனாகிய இலட்சுமணன் விடுத்த சரங்களுள் சில, வளைந்தோடின: (சில), புகைந்தோடின; (சில), பொரிந்தோடின; (சில), புகை நீங்கி எரிந்தவண்ணம் ஓடின; (சில), கரிந்தவண்ணம் ஓடின; (சில), இடமோடின; (சில), வலமே திரிந்தோடின; (சில), நெருங்கியோடின; (சிலஒன்று நூறாகி), விரிந்தோடின; (சில), திக்குகளிற்சரிந்து ஓடின; (எ-று.)—பி-ம்:-[1] பொரிந்தோடின. [2] பொறிந்தோடின. [3] புகையோடு. [4] எதிர்ந்தோடின, இரிந்தோடின. [5] தெரிந்தோடின. [6] கரிந்தோடின. [7] செறிந்தோடின. [8] கரிந்தோடின. [9] விசிகம். (3004)

115. நீரொத்தன நெருப்பொத்தன பொருப்பொத்தன நிமிருங்
காரொத்தன வுருமொத்தன கடலொத்தன கதிரோன்
தேரொத்தன விடைமேலவன் [1] சிரிப்பொத்தன வுலகின்
வேரொத்தன [2] செருவொத்திக லரக்கன்விடு [3] விசிகம்.

(இ-ள்.) போரிலே ஒத்துப்போர்செய்கின்ற இந்திரசித்து விடுத்த அம்புகளுட் சில, நீரையொத்தன; (சில), நெருப்பையொத்தன; (சில), மலையையொத்தன; (சில), வானத்து நிமிரும்மேகத்தையொத்தன; (சில), இடியையொத்தன; (சில), கடலையொத்தன; (சில), சூரியன்தேரைப்போன்றன; (சில), இடபத்தை வாகனமாகக்கொண்டு ஊர்பவனாகிய சிவபெருமானின் சிரிபபையொத்தன; சில (அச்சத்துத்தோன்றிய) உலகத்தின் வேர்வைநீரை யொத்தன;

சொற்பொருட்பின்வருநிலை. நீரொத்தன என்பதற்கு-மேகத்தினின்றுநீர்த்தாரை வெளிபடுவதுபோல விற்களினின்றுஅம்புகள் வெளிப்பட்டன எனக்கருத்துக்காணலாம். வேர்-மூலமெனக்கொள்ளலும் ஒன்று; உலகம் நிலைகெடும்படி களைந்து வெளிவிட்ட வேரை யொத்தன என்க. பி-ம்:—[1] சினம். [2] வாயொத்தனஙிருதன, விறன்மேதகுநிருதன். [3] சரமே. (3005)

116. [1] ஏமத்தடங் கவசத்திக ளகலத்தன விருவோர்
வாமப் [2] பெருந் தோள் [3] மேலன வதனத்தன [4] வயிரத்
[5] தாமத்தன மார்பத்தன சரணத்தன [6] தத்தங்
காமக்குல மடமங்கையர் கடைக்கண்ணெனக் கணைகள்.

(இ-ள்.) காமத்தையுண்டாக்குகின்ற குலத்திற் பிறந்த மடமைக் குணம்பூண்ட தம்தமது மங்கையரின கடைக்கண்களைப் போல, (இந்திரசித்தும் இலட்சுமணனும் என்ற)இருவோர் விட்ட

அம்புகள்,—பாதுகாவலாகிய பெரிய கவசத்தின் வலிய பரப்பில் தங்குவனவும் அழகிய பெரிய தோளிற் பதிவனவும், முகத்திற் பாய்வனவும், உறுதியானமாலையையணிந்தனவான மார்பிற் பாய்வனவும், இரண்டுகால்களிலும் பாய்வனவு மாயின: (எ - று.)— மங்கையர் கண்கள்போல மார்பு முதலியவிடங்களில் அம்புகள் பாய்ந்தன என்றபடி. பி-ம்:—[1]ஏமத்தடுகவசத்தனவொருவோரென. [2]பொருந். [3]மேலவன், மேலென. [4]வயிர்த்த, உயிர்த்த. [5]தாமத்துணைக்குறங்கோடிரு. [6]தங்காக். (3006)

117 எந்நாளினி னெத்தேவர்க ளெத்தானவ [1]ரெவரே
[2]அன்னார்செரு வொத்தாரென விமையோரெடுத் தார்த்தார்
பொன்னார்சிலை யிருகால்களு மொருகால்பொறை யுயிரா
முன்னாளினி லிரண்டாம்பிறை முளைத்தாலென வளைத்தார்.

(இ - ள்.) பொற்கட்டு அமைந்த விற்களின் இருமுனைகளும் ஒருமுறை பொறையுயிர்க்குமாறு முதற்பட்சமாகிய சுக்கிலபட்சத்தில் இரண்டாம் பிறை முளைத்தாற்போல (அவ்விருவரும் சிலையை) வளைத்தார்; 'எந்தநாளினில் எந்தத்தேவர்கள் எந்தத் தானவர் (மற்றுமுள்ள) எவர்தாம் (இந்திரசித்து இலட்சுமணன் என்ற) அவருடைய செருவையொத்துப்போர்புரிந்தார்?' எனத் தேவர்கள் குரலெடுத்து ஆரவாரித்தார்கள்; (எ - று.)—116-ஆங் கவியிற் கூறிய அம்புகளின் செய்கைக்குக் காரணம் சிலைபொறையுயிர்த்தமை என்று இங்குக் காட்டுகின்றார். பொறையுயிர்த்தல் - (அம்புகளை வெளிப்படுத்துதலால் தம்) பாரம் நீங்குதல். ஒருமுறை வளைத்த வில் அம்புகளை உமிழ்ந்தபடியே இருந்ததென்பார், 'ஒருகால் வளைத்தார்' என்றார். நாள்-பட்சம்; "இருணாட்பிறந்த வம்மானை" என்ற இடத்துங் காண்க. முன்னாள்-பூர்வபட்சம். பி-ம்: [1]இவரே. [2]என்னே, இன்னார். (3007)

118. வேகின்றன [1]வுலகிங்கிவர் விடுகின்றன விசிகம்
போகின்றன [2]சுடர்வெந்தன விமையோர்களும் [3]புலர்ந்தார்
ஆகின்றதொ ரழிகாலமி தாமன்றென வயிர்த்தார்
நோகின்றன திசையானைகள் [4]செவிநாணொலி நுழைய.

(இ - ள்.) இப்போது இவர் விடுகின்றனவான அம்புகளால் உலகங்கள் வேகின்றன; (வானத்திற்) சஞ்சரிப்பனவான (சூரியன் முதலிய) சுடர்கள் வெந்தன; இமையோர்களும் உடல்வற்றினார்; (அன்றியும்), 'தோன்றுகின்ற ஊழிக்காலம் இதுவாகும், அன்று' என்று அயிர்த்தார்கள்; திக்கஜங்கள், (தம்) செவியிலே நாணியினொலிநுழைய வருந்துவனவாயின; (எ - று.)—பி-ம்:—[1]உலகங்கிளர். [2]கடல்வெந்தன, சுடர்கின்றன. [3]புலந்தார். [4]சிலை. (3008)

119. மீ[1]னுக்கது நெடுவானகம் வெயி[1]லுக்கது சுடரும்
மா[1]னுக்கது முழுவெண்மதி மழையுக்கது வானம்
தானுக்கது குலமால்வரை [2]தலையுக்கது தகைசால்
[3]ஊனுக்கன வுயிருக்கன வுலகத்தினி னெங்கும்.

(இ - ள்.) (இருவரும் எய்த அம்புகள் படுவதனால்), நெடிய வானத்திலிருந்து நட்சத்திரங்கள் உதிர்ந்தன; சூரியனும் வெம்

மையை யுகுத்திட்டது; முழுவெண்மதி மானைச் சிந்திவிட்டது, வானம் மழைகளைச் சிந்திற்று; அஷ்டகுலாசலமும் பொடியாகிவிட்டது: உலகத்திலெங்கும் (எல்லாப் பிராணிகளும்) உடம்பைச் சிந்தினவாய் உயிரைச்சிந்தின; பெருமைமிக்க (பல) தலைகள் கீழ் சிந்தின: (எ-று.)—மீன், வரை, தலை என்பன - சாதியொருமையாதலால், ஒருமைமுற்றைக் கொண்டன. தானுக்கதுகுலமால்வரை தலையுக்கது என்பதற்கு - குலமால்வரை உகத்தொடங்கி முதலில் தலையுக்கதெனக் கூறுவாருமுளர். சொற்பொருட்பின்வருநிலையணி. பி ம்:—[1] உக்கன. [2] தரையுக்கது, தரையுக்கன. [3] ஊனுக்கன வுயிருக்கன வுலகத்தினுளவரும், ஊனுக்க வெவ்வுலகத்தினுமுள வாயினவுயிரும், ஊனுக்கதெவ்...னெங்கும், ஊனுக்கது முயிரோடுடனுலகத்தினுளவையும். 3009)

120 அக்காலையி னயில்வெங்கணை யையைந்துபுக் கழுந்தத்
திக்காசற வென்றான்மக னிளங்கோ[1]வுடற் செறித்தான்
கைக்கார்முகம் வளையச்சில [2]கனல்வெங்[3]கணை கவசம்
புக்காகமுங் கழன்[4]றோடிட விளங்கோளரி பொழிந்தான்.

(இ-ள்.) திக்குக்களையெல்லாம் குற்றமற வென்றவனான இராவணனுடைய மகனான இந்திரசித்து,—அந்தக்காலத்தில், கூரிய வெவ்விய கணை இருபத்தைந்து புக்கு அழுந்தும்படி இளைய பெருமானின் உடலில் நெருங்க விடுத்தான்; இளையசிங்கம் போன்ற இளைய பெருமாளும்,—(தன்) கையிற்பிடித்த வில் வளைய, சில கனல்கின்ற கொடிய அம்புகள் (இந்திரசித்தினது) கவசத்திற் புகுந்து உடலைத்துளைத்து வெளிப்படுமாறு பொழிந்தான்; (எ-று.) பி·ம்:—[1] உடல். [2] கதிர். [3] சரங். [4] ஆடிட. (3010)

121. தெரிந்தான்சில சுடர்வெங்கணை [1]தேவேந்திரன் சினமா
இரிந்தோடிடத் துரந்தோடின விமையோரையு [2]முன்னாள்
அரிந்தோடின [3]வெரிந்தோடின அவைகோத்தட லரக்கன்
சொரிந்தா[4]னுயர் நெடுமாருதி தோண் [5]மேலினில் தோன்ற.

(இ-ள்.) வலிமைபொருந்திய அரக்கன்,—தேவேந்திரனுடைய சினங்கொண்ட ஐராவதயானை நிலைகெட்டு ஓடிவிட (விலலை விட்டு) மிக விரைந்துசென்றனவும், தேவர்களையும் முற்காலத்தில் அரிந்தோடினவும், எரிந்தோடினவுமான சில சுடர்கின்ற வெவ்வியகணைகளைத் தெரிந்தெடுத்து அவற்றைக் கோத்து, உயர்ந்துள்ள நெடிய மாருதியின் தோளின்மேல் தோன்றுமாறு பொழிந்தான்; (எ-று.)—பி-ம்:—[1] தேர்பூண்டன, தெய்வேந்திரன். [2] அந்நாள். [3] எரிந்தோடுறும். [4] அவை. [5] புக்கன தோன்ற. (3011)

122. குருதிப்புனல் [1]சொரியக்குணங் குணிப்பில்லவன் குணபால்
[2]பருதிப்படி பொலிவுற்றதை யிளங்கோளரி பார்த்தான்
ஒருதிக்கினும் [3]பெயராவகை யவன்றேரினை யுதிர்த்தான்
பொருதிக்கணம் வென்றானெனச் சரமாரிகள் பொழிந்தான்.

(இ-ள்.) எண்ணமுடியாத [மிக்க] குணங்களையுடையவனான அநுமன் குருதிநீர் சொரிவதனால் கீழ்த்திசையிற் சேர்ந்த [உதிக்குர்

திருணத்தை யடைந்த] சூரியன்போலப் பொலிவுற்றதை இளைய சிங்கம்போன்ற இலட்சுமணன்,—பார்த்து, 'பொருது இக்கணத்தில்தானே வென்றானவன்' (என்று கண்டோர்) கருதும்படி சரமாரிகளைப் பொழிந்து, ஒருதிக்கிலும் பெயர்ந்து செல்லமுடியாதபடி அந்த இந்திரசித்தின் தேரைப் பொடிப் பொடியாக) உதிரச்செய்தான்; (எ - று.)—பி-ம்:—[1]சொரியும் முயர்குன்றென்னுமவ்வநுமன். [2]பருதித்திருவீறமொத்தவை. [3]உயராவகை. (3012)

123 அத்தே[1]ரழிந் ததுநோக்கிய விமையோரெடுத் தார்த்தார்
முத்தேவரு மூவந்தா[2]ரவ னுருமேறென முனிந்தான்
தத்தாவொரு தடந்தேரினைத் தொடர்ந்தான்சரந் தலைமேற்
பத்தேவின னவை[3]பாய்தலி னிளங்கோளரி பதைத்தான்.

(இ - ள்.) அந்த இந்திரசித்தின்தேர் அழிந்ததை நோக்கிய தேவர்கள் எடுத்து [ஓங்கியகுரலுடன்] ஆரவாரித்தார்கள்; (அயன் அரி அரன்என்னும்) மூன்றுதேவர்களும் மகிழ்ந்தார்கள்; அந்த இந்திரசித்து இடியேறுபோலச்சினந்து பாய்ந்துசென்று ஒரு பெரியதேரினைத் தொடர்ந்தேறி,(பின்பு) பத்துச்சரங்களை (இலட்சுமணனுடைய) தலைமேல் ஏவினான்; அவை பாய்தலினால், இளைய பெருமாள் பதைத்தார்; (எ - று.)—பி - ம்:—[1]அழிந்திட நோக்கினர். [2]முதல். [3]பாயதலும். (3013)

124. பதைத்தானுட[1]னிலைத்தான்சில பகுவாயயிற் பகழி
விதைத்தா[2]னவன்விலக்காதமுன் விடைமேல்வரு[3]விமலன்
[4]மதத்தாலெதிர் வருகாலனை யொருகாலுற மருமத்து [த்தான்.
[5]உதைத்தாலெனத் தனித்தோர்கணை யவன்[6]மார்பினி[7]லுதை

(இ - ள்.) பதைத்த இலட்சுமணன்,—உடம்பு தேறினவனாய் சில பிளவுபட்ட வாயையுடைய கூரிய அம்புகளை வித்தினான்: அவ் விந்திரசித்து (அவைகளை) விலக்குவதற்கு முன்னமே, விடைமேல் வருகின்ற விமலனான சிவபெருமான் உடற்கொழுப்பினால் எதிர்த்து வந்த யமனை ஒருகால் மருமத்திலே யூன்ற உதைத்தாற் போலத் தனித்த ஒருகணையை அந்த இந்திரசித்தினுடைய மார்பிலே செலுத்தினான்; (எ - று.)—பி-ம்:—[1]தரித்தான்சிலை. [2]அவை. [3]நெடியோன், சடையோன். [4]மதத்தானென, மதித்தானென. [5]உதைத்தானெனத். [6]மார்பிடை. [7]உய்த்தான், தைத்தான். (3014)

125. கவசத்தையும் நெடுமார்பையுங் [1]கழன்றக்கணை கழிய, அவசத்தொழி லடைந்தானதற் கிமையோரெடுத் தார்த்தார், திவசத்தெழு [2]கதிரோனெனத் [3]தெரிகின்றதோர் கணையால், துவசத்தையுந் துணித்தேயவன் மணித் [4]தோளையுந் துளைத்தான்.

(இ-ள்.) (இலட்சுமணன்விடுத்த) அந்த அம்பானது (இந்திரசித்தினுடைய (கவசத்தையும் நெடியமார்பையும் (தொளைத்துக் கொண்டு) வெளிப்பட்டு அப்பாற்செல்ல, மெய்ம்மறந்ததன்மையை யடைந்தான், (இந்திரசித்து); அதற்காகத் தேவர்கள்குரலெடுத்து ஆரவாரித்தார்கள்; (அப்போது இலட்சுமணன்),—பகலில் உதயமாகின்ற சூரியனைப்போலத் தோன்றுகின்றதான ஒருகணையி

னாலே (அந்த இந்திரசித்தின் தேர்த்) துவசத்தையுந் துணித்து அவனுடைய அழகியதோள்களையுந்தொளைத்திட்டான்; (எ - று.) —பி-ம்:—[1]கடந்தக்கணை. [2]சுடரோன். [3]திரிகின்றதொர். [4]தோள்களைத். (3015)

126\. உள்ளாடிய வுதிரப்புனல் [1]கொழுந்தீயென [2]வொழுகத்
தள்ளாடிய வடமேருவிற் சலித்தா [3]னுடல் தரித்தான்
[4]தெள்ளாயிரங் கடும்போர்க்கணை தூரந்தானவை [5]சுடர்போல்
விள்ளாநெடுங் கவசத்திடை நுழையாதுக வெகுண்டான்.

(இ - ள்.) (அவ்வாறு இலட்சுமணனெய்த அம்பினால்) உள்ளே ஓடிக்கொண்டிருந்த இரத்தநீர் கொழுவிய நெருப்புச்சுவாலைபோல வெளிப்பட, தள்ளாடிய வடமேருவைப்போல (முதலில் இந்திரசித்து) நிலைகலங்கினான்: (உடனே) உடம்புநிலைநிற்கப்பெற்றவனாய், தொள்ளாயிரம் கடிய போர்க்கணைகளை (இலக்குமணன் மீது) தூரந்தான்; அவை சுடரைப்போன்ற பிளவாத (இலக்குமணனது) நெடிய கவசத்தினிடையே நுழையாது சிந்திவிடவே (அரக்கன்) சினந்தான்; (எ-று,)—[1]எழுந்தீயினொடு. [2]உமிழ்ந்தான். [3]உடன். [4]புள்ளாடிய. [5]துறைபோம். (3016)

127\. [1]மறித்தாயிரம் வடிவெங்கணை [2]மருமத்தினை மதியாக்
குறித்தாயிரம் பரித்தேரவன் [3]விடுத்தானவை [4]குறிபார்த்து
[5]இறுத்தானெடுஞ் சரத்தாலொரு தனிநாயகற் கிளையோன் [ன்.
செறித்தா [6]னுடல்சிலபொற்கணை சிலை [7]நாணறத் [8]தெரித்தா

(இ - ள்.) ஆயிரம்பரிபூண்ட தேரையுடையவனான இந்திரசித்து,—மீண்டும் வெவ்விய வடித்துக்கூராக்கின ஆயிரங்கணைகளை மருமத்தைக் குறியாக எண்ணி விடுத்தான்: ஒப்பற்றதனிநாயகற்கு இளையவனான இலட்சுமணன், நெடுஞ்சரத்தாற் குறிபார்த்து அவற்றையெல்லாம் முறித்திட்டு, சில பொற்கணைகளை (அவ்விந்திரசித்தின்) உடலிலே நெருங்கச்செலுத்தினான்: (சில்பொற்கணைகளைச்) சிலையின் நாணியறும்படி தெரிந்துவிடுத்தான்; (எ - று.)—பி - ம்:—[1]மறுத்து. [2]மருமந்துளை, மருமங்களை. [3]தூரந்தான். [4]குறியால், குறியாத். [5]தறித்தான். [6]நுதற்சில, உதைசில. [7]நாணுறற், நாணையுந். [8]தெறித்தான். (3017)

128.—இந்திரசித்து சலித்தல்.

வில்லிங்கிது நெடுமால்சிவ [1]னயன் மேலவர் தனுவே
கொல்லென்றுகொண் டயிர்த்தான்நெடுங் கவசத்தையுங் [2]குலையாச்
செல்லுங்[3]கொடுங் கணையாவையுஞ் சிதையாமையுந் தெரிந்தான்
வெல்லுந்தர [4]மில்லாமையு மறிந்தா[5]னக மெலிந்தான்.

(இ - ள்.) 'இப்போது இவ்விலட்சுமணன் பிடித்துள்ள வில், நெடுமால் சிவன் பிரமன் என்று சொல்லப்படுகின்ற சிறந்த தேவர்களின் தனுவேதானோ?' என்று (திகைத்துக்) கருதி (இந்திரசித்து) ஐயுற்றான்: (தன்னுடைய) நெடிய கவசத்தையும் அழித்துக் கொண்டு செல்கின்ற கொடியகணை எல்லாமும் அழிவுபடாமலிருப்பதையும் ஆராய்ந்தான்: (தான்) வெல்லுந்தன்மை இல்லாமையையும் அறிந்தவனாய் மனம் மெலிந்தான்; (எ - று.)—பி-ம்:—[1]எனும். [2]கொலையாற். [3]கடுங். [4]அல்லாமையும். [5]அற. (3018)

129.—இந்திரசித்து சலித்தமையை விபீடணன் இலட்சுமணனிடம் கூறல்.

[1] அத்தன்மையை யறிந்தானவன் சிறுதாதையு மனுகா
முத்தன்முக நோக்காவொரு மொழிகேளென [2] மொழிவான்
எத்தன்மையு மிமையோர்களை வென்றானிகல் [3] வென்றாய்
பித்தன் [4] மனந் தளர்ந்தானினிப் பிழையானெனப் பகர்ந்தான்.

(இ - ள்.) அந்த இந்திரசித்தின் சிற்றப்பனான விபீஷணனும் வானும், (இந்திரசித்தின்) அந்தத்தன்மையை யுணர்ந்து (இலட்சுமணனை) நெருங்கி, முத்திக்கு உரிய திருமாலினம்சமான இலட்சுமணனுடைய முகத்தை நோக்கி 'ஒருமொழி கேள்' என்று மொழிபவனாய், 'எந்த நிலைமையிலும் [எப்படிப்பட்டவராயிருந்தாலும்] இமையோர்களை வென்றவனான இவனைப் போரில் வென்றவனானாய்: (எவ்வாறெனில்?—) (போர்ப்) பித்துப்பிடித்தவனான இவ்விந்திரசித்து மனஞ்சோர்ந்திட்டான்: இனி, உயிர்பிழையான்' என்று கூறினான்: (எ - று.)—பி-ம்:—[1] அத்தன்மையும். [2] மொழிந்தான். [3] கண்டாய், கண்டால். [4] மகன். (3019)

130.—இரண்டுகவிகள்-இந்திரசித்து பலவகையஸ்திரங்களைத் தொடுத்தலையும், இலட்சுமணன் அவற்றை மாற்றுதலையும் கூறும்.

கூற்றின்படி [1] கொதிக்கின்றவக் கொலைவாளெயிற் றரக்கன்
ஏற்றுஞ்சிலை நெடுநாணொலி யுலகேழினு மெய்தச்
சீற்றந்தலைத் தலைசென்றுற விதுதீரெனத் தெரியாக்
காற்றின்படை [2] தொடுத்தானவ னதுவேகொடு காத்தான்.

(இ-ள்.) கூற்றினையொப்பக் கொதிக்கின்றவனான அந்தக் கொலைபுரியும் வாட்படையையும் எயிற்றையுமுடைய அரக்கன் (இந்திரசித்து) ஏற்றிய சிலையின் நெடியநாணொலி உலகேழினுஞ் சென்றுசேர, சீற்றம் தலைக்குமேற் சென்று பொருந்த, 'இதைப் போக்குவாய்' என்றுசொல்லி ஆராய்ந்து, வாயுபகவானைத் தேவதையாகக்கொண்ட அம்பைத் தொடுத்தான்; அவ்விலக்குமணன் அதனையேகொண்டு தடுத்தான்; (எ - று.)—முதல்நூலில் வெவ்வேறு அஸ்திரங்களை விடுத்தே இந்திரசித்தின் அஸ்திரங்களை இலக்குமணன் போக்கியதாக உள்ளது. பி - ம்:—[1] கொடுத்தானறக். [2] துரந்தான். (3020)

131 அனலின்படை தொடுத்தானவ னதுவேகொடு [1] தடுத்தான்
புனலின்படை [2] தொடுத்தானவ னதுவேகொடு பொறுத்தான்
[3] கனவெங்கதி ரவன்வெம்படை [4] துரந்தான் மனங் [5] கரியான்
சினவெந்திற லிளங்கோளரி யதுவேகொடு தீர்த்தான்.

(இ - ள்.) ஆக்கினேயாஸ்திரத்தை (இந்திரசித்து) தொடுத்தான்: அவ்விலக்குமணன் அதனையேகொண்டு தடுத்தான்: வாருணாஸ்திரத்தைத் தொடுத்தான் (இந்திரசித்து): இலட்சுமணன் அதனையேகொண்டு தாங்கினான்; நெருங்கிய வெவ்விய கிரணங்களையுடையவனான சூரியனது வெவ்விய அஸ்திரத்தைச்

செலுத்தினான், கரியமனமுள்ளவனான இந்திரசித்து: சினம்பொருந்திய வெவ்விய திறலையுடைய இளையசிங்கமான இலட்சுமணன், அந்தச் சூரியாஸ்திரத்தையே கொண்டு போக்கினான்; (எ - று.)— 'மனங்கரியான்'—பாவச் சிந்தையை யுடையவன். பி - ம்:—[1]காத்தான். [2]தொடுத்தார்க். [3]கனலின். [4]தொடுத்தான். [5]களியான். ()

132.—இந்திரசித்து அஸ்திரம் விடுதல்.

இதுகாத்தி கொலென்றுவெடுத் திசிகப்படை யெய்தான்
அதுகாப்பதற் கதுவே[1]யள வென்றுத்தொடுத் [2]தமைந்தான்
செறுகாப்படை [3]தொடுப்பேனென [4]நினைந்தான் திசைமுகத்தான்
[5]முதுமாப்படை [6]துரந்தானினி முடிந்தாயென மொழிந்தான்.

(இ-ள்.) 'இது தன்னைக் காப்பாயோ?' என்றுசொல்லி எடுத்து இசிகப்படையை (இந்திரசித்து) எய்தான்: அதனைக்காப்பதற்கு அதுவே தக்கவளவினதென்று (அதனையே) தொடுத்து (இலட்சுமணன்) அடங்கினான்; (பிறகு), அழியாத படையைத் தொடுப்பேனென்று நினைத்தானாய், நான்முகத்தை யுடையவனான பிரமதேவனது முதுமாப்படையை விட்டு, 'இனி (நீ) இறந்தவனாவாய்' என்றுமொழிந்தான், (அந்த இந்திரசித்து); (எ - று.)— இசிகப்படை - இஷீகாஸ்த்ரமென்ப. பி - ம்:—[1]உளதென்றுத். [2]அறுத்தான். [3]துரவேனென. [4]அமைத்தான். [5]முதுகாப்படை. [6]துரந்தேன், துரந்தால். (3022)

133.—போர்காணவந்த தேவர்களின் அச்சம்.

வானின்றலை [1]நிலைநின்றவர் மழுவாளியும் மலரோன்
றானும் [2]முனி வரரும்பிற [3]தவத்தோர்களும் அறத்தோர்
கோனும்பிற பிறதேவர்கள் குழுவும்மனங் குலைந்தார்
ஊனம்மினி [4]யிலதாகுக விளங்கோக்கென வுரைத்தார்.

(இ-ள்.) வானத்தினிடத்து இருந்தவராகிய சிவபெருமானும் பிரமதேவனும் முனிவரரும் பிறதவத்தோர்களும் அறத்தையுடையரான தேவர்கட்குத் தலைவனும் [இந்திரனும்], மற்றுமுள்ள தேவவர்க்கங்களும் மனம்நடுங்கி, 'இளைய பெருமாளுக்கு இனி ஊனம் இல்லாதிருக்க' என்று உரைத்தார்; (எ - று.)

'இந்திரசித்து பிரமாஸ்திரத்தை விடுத்ததனாலே ஊனம்உளதாகும்' என்று அஞ்சி, மழுவாளி முதலியோர் 'ஊனம்இலதாகுக' என்றனர். பி - ம்:—[1]நின்றோர்முழு [2]முனிவோரும். [3]அறத்தோர்களுந்தவத்தோர். [4]உளதாகுமிவ். (3023)

134.—இந்திரசித்து பிரமாத்திரம் தொடுத்ததை இலட்சுமணன் காணுதல்.

ஊழிக்கடை [1]யிறுமத்தலை யுலகியாவையு முண்ணும்
ஆழிப்பெருங் கனல்[2]தன்னொடு சுடரென்னவு [3]மாகாப்
பாழிச்சிகை [4]பரப்பித்தனி படர்கின்றது பார்த்தான்
ஆழித்தனி முதனாயகற் கிளையா[5]னது மதித்தான்.

(இ-ள்.) ஆழியையுடைய ஒப்பற்ற தலைவனான ஸ்ரீராமனுக்கு இளையவனான இலட்சுமணன்,—யுகாந்தகாலத்தில் (யாவும்) அழிகின்ற அப்போது உலகுளவற்றையும் உண்ணுகின்ற கடலிடையேயுள்ள பெரியவடவைக்கனலினுடனே சூரியன் என்றாலும் உவமை

பெறாத வலியசுவாலைகளைப் பரப்பிக்கொண்டு தனியே (பிரமாத்திரம்) படர்கின்றதைப் பார்த்தவனாய், அது குறித்து எண்ணினான்; (எ-று.)—பி-ம்:—[1] இறுதித்தலை. [2] தன்னொரு. [3] ஆகப். [4] விரியத். [5] இவை. (3024)

135.-இலட்சுமணன் தானும் பிரமாத்திரம் விடுமாறு துணிதல்.

மாட்டா[1] னிவன் மலரோன்படை [2] முதற்போதுதன் வலத்தால்
[3] மீட்டானலன் தடுத்தானலன் முடிந்தானென விட்டான்
காட்டாதினிக் [4] கரந்தாலது கருமம்[5] அல தென்னாத்
தாட்டாமரை மலரோன்படை தொடுப்பேனெனச் சமைந்தான்.

(இ-ள்.) 'வலிமையற்றவனாகிய இவன், பிரமாத்திரத்தை முதற்போதில் [முன்முறையில்] தன்வலிமையினால் மீட்டிலன்: தடுத்திலன்: முடிந்திட்டான்: (ஆகவே, இப்போதும் இறந்தே தீருவான்) என்றுகருதி (இந்திரசித்து நம்மீது) விடுத்தான்: இப்போது (நம் திறமையை) வெளிக்காட்டாமல் ஒளித்தால், அது செய்தக்க செயலாகாது' என்று கருதி, (இலக்குமணன்), நாளத்தைக் கொண்ட தாமரைமலரின் மீதிருப்பவனாகிய பிரமதேவனுடைய அத்திரத்தைத் தொடுத்துவிடுவேனென்று துணிந்தான்; (எ-று.) -பி-ம்:-[1] இனி, இகல். [2] முற். [3] மீட்டாவகை. [4] கரர்தில்லது. [5] அல ()

136.—'எவர்க்குந் தீமைவிளைக்காது அரக்கன்விடுத்த பிரமாத்திரத்தை மாத்திரம் ஒழிக்க' என்று இளையபெருமாள் பிரமாஸ்திரம் விடுதல்.

நன்றாகுக வுலகுக்கென முதலோன்மொழி நவின்றான்
[1] பின்றாதவ னுயிர்மேற்செல வொழிகென்பது பிடித்தான்
[2] ஒன்றாகவிம் முதலோன்படை தனைமாய்க்கவென் றுரைத்தான்
நின்றானது துரந்தா[3] னவன் நலம்வானவர் நினைந்தார்.

(இ-ள்.) (அப்போது) முதன்மைபெற்றவனான இலக்குமணன், 'உலகுக்கு (த் தீங்குவிளையாமல்) நன்மையுண்டாகுக' என்று (இந்த) மொழியைக் கூறினான்; '(பிரமாஸ்திரத்தை விடுதற்குப்) பின்வாங்காதவனான இந்திரசித்தினுடைய உயிர்மேற் செல்லுதலை ஒழிவாயாக' என்பதையும் உறுதியாகக் கூறினான்; '(பின்னும்) தவறாமல் இந்த முதலோனுடைய படையை [பிரமாத்திரத்தை] மாய்க்க' என்றும் கூறிநின்றானாய், அந்தப் பிரமாத்திரத்தை விட்டான்; வானவர் அந்த இலட்சுமணனுடைய நற்குணத்தை யெண்ணி வியந்தார்கள்; (எ-று.)—வியந்த வகை மேற்கவியிற் கூறப்படும். இந்திரசித்துவிடுத்த பிரமாத்திரத்தினால் உலகத்து எவர்க்கும் தீமையுண்டாகாதிருக்கவேணு மென்ற கருத்தினால் அதனை யடக்குமாறு இலட்சுமணன் பிரமாத்திரத்தை விடுத்தானென்க. பி-ம்:—[1] பின்றாதவருயிர்மேல்விடலொழி. [2] ஒன்றாதவிம், ஒன்றாதவம். [3] இவன்றனி. (3026)

137.—தேவர்கள் இலக்குமணனது நற்குணத்தைப் பாராட்டுதல்.

தான் [1] விட்டது மலரோன்படை [2] யெனின் [3] மற்றிடை தருமே
வான்விட்டது மண்விட்டது மறவோ[4] னுட [5] லறுமே

தேன்[6]விட்டிழு மலரோன்படை [7]தீர்ப்பாயெனத் தெரிந்தான்
ஊன்[8]விட்டவன் மறம்விட்டில னெனவானவ ருவந்தார்.

(இ - ள்.) 'இவ்விலக்குமணன் விடுத்தது பிரமாத்திரமாதலால், (அது) வானத்தை அழியாதுவிட்டதும் பூமியை அழியாது விட்டதுமாகி, (இந்திரசித்தினுடலை யறுத்திடு என்றால்) மறத்தையுடையோனான அந்த இந்திரசித்துனுடல் அறுபட்டுவிடுமே:(அது) பின்னிடையுமோ? [பின்னிடையாது]; தேனை வெளியிட்டுச் சிந்துகின்ற மலரிலெழுந்தருளியிருப்பவனான பிரமதேவன் படையைத் தீர்ப்பாயென்றே (இந்தப் படையைத்) தெரிந்து விடுத்தான்: குற்றமற்ற இலட்சுமணன் மறக்குணத்தை வெளிவிட்டானில்லை'என்று வானவர்உவந்து கூறினார்கள்; (எ - று.)

'பிரமாஸ்திரத்தையே பிரயோகித்திருத்தலால், இவ்விலட்சுமணன், அந்த அஸ்திரத்தைவிடுத்தபோது வானையும் மண்ணையும் அழியாமல், இந்திரசித்தையழியென்றால் அழித்திருக்குமே: அவ்வாறு செய்யாமல் அரக்கன் விடுத்த பிரமாஸ்திரத்தையே ஒழிப்பாயென்று விடுத்தானே! இவனுடைய கருணையைஎன்னென்பது!' என்று தேவர் வியந்துகூறினார்கள். ஊன் = ஊனம்: வடசொல். மற்று-வினைமாற்று: பி - ம்:—[1]விட்டனமலரோன், விட்டதுமுதலோன். [2]என. [3]மற்றிவைதருமோ. [4]உடன். [5]இறுமோ, இறுமே. [6]விட்டுகு. [7]தீர்ப்பாயெனத்தீர்ந்தான். [8]விட்டவும். (3027)

138.—இலட்சுமணன் விடுத்த பிரமாஸ்திரம் அரக்கன் விடுத்த அஸ்திரத்தையழித்து எங்குமாதல்.

உருமேறுவந் [1]தெதிர்த்தாலத னெதிரேநெருப் புய்த்தால்
வருமாங்கது தவிர்ந்தாலென [2]மலரோன்படை மாயத்
திருமால்தனக் கிளையான்படை [3]யுலகேழையுந் தீய்க்கும்
அருமாகன லெனநின்றது விசும்பெங்கணு மாகி.

(இ - ள்.) நெருப்பைச் செலுத்தினால் அதனெதிரே பேரிடிவந்து எதிர்க்கத்தொடங்கினால் அப்போது (முதலில்) வந்த அந்த நெருப்புத் தவிர்ந்தாற்போல (இந்திரசித்துவிடுத்த) பிரமாஸ்திரம் மாய்ந்திட்டதாக, திருமாலுக்கு [ஸ்ரீராமனுக்கு] இளையதம்பியாகிய இலட்சுமணன் விடுத்த பிரமாஸ்திரம் உலகேழையும் தீய்க்கவல்ல அரியபெரிய நெருப்புப்போல ஆகாயத்திலே எங்குமாகி நிறைந்தது; (எ - று.)— இலக்குமணன் விடுத்த பிரமாஸ்திரத்துக்கும் இந்திரசித்து விடுத்த பிரமாஸ்திரத்துக்கும், பேரிடிக்கும் நெருப்பிற்குமுள்ள வேறுபாடு இருத்தலறிக. பி - ம்:—[1]ஓழிந்தால். [2]மறவோன். [3]உலகியாவையும். (3028)

139.—இலட்சுமணன் ஒருபாணத்தால் பிரமாஸ்திர வேகத்தைத தீர்த்தல்.

படையங்கது படராவகை பகலோன்குல மருமான்
[1]இடையொன்றது தடுக்கும்படி செந்தீயுக வெய்தான்
[2]தொடையொன்றினைக் கணைமீமிசைத் துறுவாயனியென்றான்
[3]விடமொன்றுகொண் டொன்றீர்ந்தது போல்தீர்ந்தது வேகம்.

(இ-ள்.) சூரியகுலத்துத் தோன்றியவனான இலட்சுமணன், அப்போது அந்த அஸ்திரம் (வானத்தில்) படராதபடியும்

வானத்திடத்திலொன்றிய அதைத் தடுக்கும்படியும் 'இனி, (அந்தப்) பிரமாஸ்திரத்தின்மீது நெருங்குவாய்'என்று சொல்லியவனாய், ஒருபாணத்தைச் செந்திப்புறப்பட எய்தான்: ஒருவிடத்தால் மற்றொருவிடம் ஈரப்பட்டதுபோல (இலட்சுமணன் பின்னர் விடுத்த கணையால் முன்விடுத்த பிரமாஸ்திரத்தின்) வேகம் நீங்கிற்று; (எ - று.)—[3]விடையொன்றொரு விடமுற்றென என்ற பாடத்துக்கு - ஒருவிடத்தால் மற்றொருவிடம் விடைகொண்டு போனாற்போல எனப் பொருளாம். பி - ம்:—[1]உடையென்றெடுத் தொடுக்கும்படியதனுலுறுகளிற்றை. [2]இடையொன்றணைப் பவன்போலமைத் திருவாயினி யென்றான். (3029)

140.—இராமலட்சுமணரின் திறமையைத் தேவர்கள் வியந்துகூற, சிவபெருமான் கூறத்தொடங்குதல்.

விண்ணோரது கண்டார்வய [1]வீரர்க்கினி மேன்மேல்
ஒண்ணாதன வுளவோவென மனந்தேறின ருவந்தார்
[2]கண்ணார்நுதற் பெருமான் [3]இவர்க் கரிதோவெனக் கடைபார்த்
தெண்ணாதிவை பகர்ந்தீர்பொருள் [4]கேளீரென விசைத்தான். [து

(இ-ள்.) விண்ணோர் அந்த இலட்சுமணனது செயலைப் பார்த்து, 'வலிமைபொருந்திய வீரராகிய இவ்விராமலக்குமணர்கட்கு இனி மேன்மேல் செய்து முடித்தற்கு அரியனவும் உளவோ?' என்று சொல்லி, (தங்கள் காரியம் நிறைவேறலாமென்று) மனந்தேறினவராய் மகிழ்ந்தார்கள்: கண்பொருந்திய நெற்றியையுடைய சிவபெருமான் (அத்தேவர்களைப்பார்த்து), 'இவர்க்கு அரியது உண்டோ? என்று கடைவரையிற்பார்த்து உண்மையையெண்ணாமல் இவ்வார்த்தையைச் சொன்னீர்கள்: உண்மைப்பொருளைக் கேளீர்' என்று சொல்லிக் கூறலானான்; (எ-று.)—சிவபெருமான் கூறுவதை மேலே காண்க பி - ம்:—[1]வீரற்கு. [2]கண்ணாநுதல். [3]அவர்க்கு, இவற்கு. [4]கேணீர். (3030)

141.—நான்குகவிகள்-ஒருதொடர்: சிவபெருமான் தேவர்கட்குக் கூறியது.

நாராயண நரரென்றிவ ருளராய்[1]நமக் கெல்லாம்
வேராய்முழு முதற்காரணப் பொருளாய்வினை கடந்தோர்
ஆராயினுந் தெரியாததோர் நெடுமாயையி னகத்தார்
பாராயண மறைநான்கையுங் கடந்தா[2]ரிவர் பழையோர்.

(இ-ள்.) இந்த இராமலட்சுமணர்,—நாராயணன் நரன் என்று (இருவராக) உள்ளவராய், நமக்கெல்லாம் மூலகாரணமாக, (இவ்வண்டங்கட்கெல்லாம்) முழுமுதற்கடவுளான காரணவஸ்துவாய், வினைகடந்தவர் ஆராய்ந்தாலும் (அவர்கட்குந்) தெரியாததான ஒப்பற்ற பெரியமாயையினுள் மறைந்திருப்பவராய், (நாம்) பாராயணஞ்செய்கின்ற மறைநான்கிற்கும் அப்பாற்பட்டவர்: இவர் புராணபுருஷராவர்; (எ - று.)

திருமாலே உலகத்தார்க்கு ஆசாரியனும் சிஷ்யனும் இருக்க வேண்டிய முறையைக் காட்டுவதற்காக, பதரிகாச்சிரமத்திலே நர

நாராயணராகத் திருவவதரித்து நரனைசிஷ்யனுக்கு நாராயணனென்ற தான் ஆசிரியனாகித் திருமந்திரத்தையுபதேசித்தானென்று நூல்கள் கூறும்; அந்த இருவராய்த் திருவவதரித்த மூர்த்தமே இராமலட்சுமணராகத் திருவவதரித்துள்ளதென்றபடி.—"உன்னை யான் பிரிவதில்லை யொருமுறை பிரிந்து மேனாள், நன்னிலாவெறிக்கும் பூணாய் நரனு நாரணனுமானோம்" "பின்னொரு பிறப்பில் யாமே யிராமலக்குவப்பேர்பெற்றோம்" என்று கண்ணன் வார்த்தையாக வில்லிபாரதத்தில் வருவது காண்க. பி - ம்:—[1]நமர்க்கு. [2]சில. (3031)

142. அறத்தாறழி வுளதாமென வறிவுந்தொடர்ந் தணுகாப்
புறத்தார்[1]புகுந் தகத்தாரெனப் [2]புகுந்தன்னது புரப்பார்
மறத்தார்[3]குல முதல்வேரற மாய்ப்பானிவண் வந்தார்
[4]திறத்தாலது தெரிந்தி யாவருந் தெரியாவகை [5]திரிவார்.

(இ-ள்.) அறிவும் தொடர்ந்து நெருங்கமுடியாதபடி (அவ்வறிவுக்கு) அப்பாற்பட்டவரும், தருமமார்க்கம் அழிவுள்ளதாகுமென்கையில் புகுந்துள்ள பூதலத்தவர்போலவே (தாமும்)புகுந்து அந்தத் தருமத்தைப் பாதுகாப்பவருமான அவர்கள், கொடுமையையுடைய அரக்கரின் குலம் முதன்மை பெற்ற வேரோடு அறும்படி ஒழிப்பதற்காக இங்குவந்துள்ளார்; (ஆயினும், தம்)திறமையால் அச்செயலை யாவரும் ஆராய்ந்து உணராதபடி சஞ்சரிப்பார்; (எ - று.)—புகுந்தகத்தார்-பெயரெச்சத்தின் அகரவீறு, தொகுத்தல். பி.ம்:—[1]புகுந்தறத்தாரென. [2]புறந்தாரது. [3]முதற்குலம். [4]இறத்தாலவை, திறத்தாரவை. [5]தெரிவார். (3032)

143. [1]உயிர்தோறுமுற் றுளன்[2]தோத்திரத் தொருவன்னென வுரை
அயிராநிலை [3]யுடையானிவ னவனிவ்வுல கனைத்தும் [க்கும்
தயிர்தோய்பிரை யெனலாம்[4]வகை கலந்தேறிய தலைவன்
பயிராததோர் பொருளின்னதென் [5]றுணர்விரிது பரமால்.

(இ-ள்.) 'உயிர்தோறும் பொருந்தியுள்ளவனைத் தோத்திரஞ் செய்தற்கு உரிய ஒப்பற்ற கடவுள் என்று சொல்லத்தக்கவனைச் சந்தேகிக்கவேண்டாத நிலையையுடையவன் இந்த இலட்சுமணன்; அந்த இராமனும் இவ்வுலகனைத்திலும் தயிராகத்தோய்தற்குக் காரணமானபிரைமோரென்றுசொல்லலாம்படி கலந்து எங்கும் பரந்த தலைவன்: தவறுதலில்லாத ஒப்பற்றபொருள் இன்னதாகுமென்று நீங்கள் உணர்வீர்: இது, பரமார்த்தமாகும்; (எ - று.)-முதற்கடவுளே இருமூர்த்தியாக வந்துள்ளார்: இது உண்மையென்றவாறு. பி-ம்:—[1]உயிர்தோறும்முளன். [2]கோத்திரத்து [3]உடையானென. [4]அவை. [5]அறிவீர், உணரீர். (3033)

144. நெடும்பாற்கடற் [1]கிடந்தாரும்பண் டிவர்[2]தாங்குறை நேர, விடும்பாக்கிய முடையார்களைக் [3]குலத்தோடற வீட்டி, இடும்பாக்கியத் தறங்[4]காப்பதற் கிசைந்தாரென [5]விதெலாம், அடும்[6]பாக்கியத் துடைச்செஞ்சடை முதலோன்பணித் தமைந்தான்.

(இ-ள்.) முன்பு நாம் குறை நேர, அழியத்தக்க பாக்கியத்தையுடையவர்களான அரக்கரைக் குலத்தோடு அறுமாறுகொன்று

பொருந்திய பாக்கியத்தையுடைய அறத்தைக் காப்பதற்கு இசைந்தாரும், நெடியபாற்கடலிலே இடந்தவரும், இவர் என இதனையெல்லாம், சங்காரத்தொழிலை(த் தனக்கு) உரியதாகக்கொண்டு அஷ்டைசுவரியங்களுக்கு உரியனுன செவ்விய சடையையுடைய முதல்வனுன சிவபெருமான் சொல்லி அமைந்து நின்ருன்! (எ - று.)

விடும்பாக்கியமுடையார் - தம்முடையபாக்கியம் விட்டுப்போகுங் காலத்தை யடைந்துள்ளவர். பாக்கியத்து இடும் அறம் - சௌபாக்கியத்தைக்கொண்ட தருமம் எனினுமாம். பி-ம்:—[1] இடந்தானும். [2] நீர். [3] தவத்தோடற. [4] காப்பதில். [5] எல்லாம். [6] பாக்கியத்தொடை. (3034)

145.—தேவர்கள் பரமார்த்தமுணர்த்திய சிவபெருமானைப் புகழ்ந்துதொழுதல்.

அறிந்தேயிருந்[1]தறியேமவ னெடுமாயையி[2]னயிர்ப்போம்
பிறிந்தோமினி முழுதையமும் பெருமானுரை பிடித்தோம்
எறிந்தோம்பகை முழுதும்[3]மினித் தீர்ந்தோமிடர் கடந்தோம்
செறிந்தோர்வினைப் பகைவாவெனத் தொழுதார்நெடுந் தேவர்.

(இ - ள்.) 'நெருங்கினவரின் தீவினையைப் போக்குபவனே! அறிந்திருந்தே அவனுடைய நெடியமாயையினுலே அறியோமாகிச் சந்தேகிப்போம்;' இப்போது ஐயம்முழுதும் நீங்கப்பெற்ருேம்: பெருமானுகிய உம்முடைய உரையை (உறுதியுரையாக)க் கொண்டோம்: பகைமுழுதையும் போக்கினவரானேம்: இனித் துயர் தீர்ந்தோமாகி (அவற்றை)க் கடந்திட்டோம்' என்று சொல்லிப் பெருமை பெற்ற தேவர்கள், (சிவபெருமானைத்) தொழுதார்கள்; (எ-று.)—பி-ம்:—[1] அயர்ந்தோம். [2] அயர்ப்பால், அயர்ப்போம். [3] இனிதிருந்தோம், இனியிருந்தோம். (3035)

146.—இந்திரசித்து இலட்சுமணன்மீது திருமாலின்படையை விடுத்தல்.

மாயோனெடும் படைவாங்கிய வளைவாளெயிற் றரக்கன்
[1]நீயேயிது [2]தடுப்பாயெனி னினக்காரெதிர் [3]நிற்பார்
[4]போயேவிசும் படைவாயிது பிழையாதெனப் புகலாத்
தூயோன்மிசை யுலகியாவையுந் தடுமாறிடத் துரந்தான்.

(இ - ள்.) மாயையையுடையவனுகிய திருமாலின் நெடிய படையை யெடுத்த(வனுன) வளைந்த ஒளியுள்ள கோரப்பற்களையுடையவனுன அந்த இந்திரசித்து, 'நீ இதனைத் தடுப்பாயேயானுல் உனக்கு எதிரேநிற்கவல்லவர் எவருளர்? (இதனுல் நீ இவ்வுலகத்தைவிட்டுப்) போய் விசும்பையடைவாய்: இது தவருது' எனச் சொல்லி, பரிசுத்தமூர்த்தியாகிய இலட்சுமணன்மீது உலகெல்லாம் தடுமாறும்படி விடுத்தான்; (எ-று.)—மாயோன்படை என்பதற்கு-சக்கரப்படை யென்று ஒரு சாராரும், நாராயணுஸ்திரமென்று மற்ருெரு சாராரும் கூறுவர். பி-ம்:—[1] நீயோ. [2] தடுத்தாய். [3] நிகர்ப்பார். [4] போயோ. (3036)

147.—இரு கவிகள்-யாவரும் கைகுவிப்ப, அந்தப்படைக்கு முன்னே இலட்சுமணன் தன்னை நாராயணனாகத் தியானிக்க, அதுவிலகிச்செல்லுதல்.

சேமித்தன ரிமையோர்தமைச் சிரத்தேந்திய [1]கரத்தார்
ஆமித்தொழில் பிறரியாவரு [2]மடைந்தார்பழு தடையாக்
[3]காமிப்பது முடிவிப்பது [4]படிகின்றது கண்டான்
[5]நேமித்தனி யரிதானென நினைந்தா[6]னெதிர் [7]நடந்தான்.

(இ - ள்.) தேவர்கள் சிரத்திலேந்திய கையையுடையவராய்த் தம்மைக் காத்துக்கொண்டனர்; பொருந்திய இத்தொழிலையே (முனிவர் முதலிய) மற்றையோர் யாவரும் செய்தனர்: பழுது அடையாமல் வேண்டியதை முடிப்பதாகிய அந்தப்படை (கைகூப்புவார்க்குப்) படிந்துபோவதைக் கண்ட இலட்சுமணன், 'ஒப்பற்ற சக்கரப்படையைக்கொண்ட அரி, தான்' என்பதை நினைந்தவனாய் (அந்தப்படைக்கு) எதிரேநடந்தான்; (எ - று.)

இலட்சுமணன்மேல் பிரயோகிக்கப் பட்டிருப்பினும், திருமாலின் படை இடையிலிருப்பவற்றையெல்லாம் அறுத்துக்கொண்டு செல்லவல்ல தன்மையதாதலால், தேவர்முதலியோர் 'நம்மை இது துண்டித்து விடுமோ?' என்று அஞ்சிக் கைகுவித்தாராக, அது அவர்களையெல்லாம் ஒன்றுஞ்செய்யாது படிந்துபோயிற்று; அது கண்ட இலட்சுமணன், வருவது திருமாலின்படையாதலை யறிந்து, தன்தன்மையைக் காட்டக் கருதித் தன்னைத் திருமாலாக உள்ள நிலையை நினைந்தவண்ணம் அதனெதிரே நடந்தானென்பதாம்.
பி - ம்:—[1]கரத்தால். [2]அமைத்தார், அமைந்தார். [3]காமித்தது. [4]படர்கின்றது, படர்வுற்றது, படர்வுற்றிது [5]நாமத். [6]அது. [7]நயந்தான், நயத்தான். (3087)

148. *தீக்கின்றதிவ் [1]வுலகேழையு மெனச்[2]செல்வதுந் தெரிந்தான்*
நீக்குந்தர [3]மல்லா[4]முழு முதலோனென நினைத்தான்
[5]வீக்கின்றில தயல் [6]சென்றது விலங்காவலங் கொடுமேல்
போய்த்தங்கது கனன்மாண்டது புகைவீய்ந்தது பொதுவே.

(இ-ள.) இவ்வுலகேழையும் தீக்கின்றதென்றுமாறு (அந்தப் படை) செல்வதையும் உணர்ந்தான்: ஒழிக்குந்தன்மை உடையோனல்லாத முழுமுதற்கடவுளே (தான்) என்றுநினைந்தான்; (பின்பு) அங்கே அந்தப்படை, (அவ்விலக்குமணனை) அழிக்காததாகி விலகிப் பக்கத்துச்சென்று பிரதட்சிணஞ்செய்து அந்தரத்திலே போயிற்று; (அப்போது அது), பொதுவாக [எவர்க்குமாக] நெருப்புச்சுடர்ஒழிந்து புகையும் அற்றது; (எ-று)—போய்த்து - முற்று.
பி - ம்: [1]உலகியாவையும். [2]சேறலுந்தெளிந்தான். [3]அல்லான். [4]முழுமுதலாமென, முழுமுதனெனன. [5]மீச்சென்றில. [6]சென்றில.

149.—இமையோர் முதலோரின் களிப்பு.

ஏத்தாடின [1]ரிமையோர்களும் கவியின்குல மெல்லாம்
கூத்தாடின ரரமங்கையர் குனிந்தாடினர் தவத்தோர்
காத்தாயுல கனைத்தும்மெனக் களித்தாடினர் கமலம்
[2]பூத்தானுமம் மழுவாளியும் முழுவாய்கொடு புகழ்ந்தார்.

(இ-ள்.) இமையோர்களும் (இலக்குமணனைத்) துதித்து ஆடினார்கள்: கவியின்குலத்தார்யாவரும் (ஆனந்தக்) கூத்தாடினர்: அமர மங்கையர் குதித்தாடினர்: தவத்தவர் 'உலகனைத்துங்காத்தவனுனாய்' என்று மனமகிழ்ந்தாடினர்: (நாபீ)கமலத்தில் தோன்றியவனான பிரமதேவனும் அந்தமமுவாளியும், முழுவாயைக் கொண்டு புகழ்ந்தார்; (எ - று.)—சொற்பொருட்பின்வருநிலையணி. முழுவாய்கொடு புகழ்தல் - தம்மாலியன்றவரையும் பூர்ணமாகப் புகழ்தல். பி-ம்:—[1] இமையோர்புலம். [2] பூத்தானுடன்...புகழ்ந்தான்.

150.-இந்திரசித்து பாசுபதாத்திரத்தைத்தொடுக்கக்கருதுதல்.

அவனன்னது கண்டானிவ னாரோவென வயிர்த்தான்
[1] இவனன்னது முதலேயுடை யிறையோனென [2] வியவா
[3] எவனென்னினு நன்றாகுக வினியெண்ணல னென்னுச்
[4] சிவனின்படை தொடுத்தாருயிர் முடிப்பேனெனத் [5] தெரிந்தான்.

(இ - ள்.) அவ்வாறு திருமாலின்படை போனதைக் கண்ட அந்த இந்திரசித்து 'இவன் ஆரோ?' என்று சந்தேகித்தான்: 'இவன் அந்தச்சக்கரப்படையையுடைய முதல்வனான தலைவனே' என்றுவியந்து, 'எவனானாலும் (என்செயல்) நன்றாகுக; இனி (இதனைப்பற்றி) எண்ணேன்' என்று சொல்லி, சிவனுடைய அஸ்திரத்தை [பாசுபதாஸ்திரத்தைத்]த் தொடுத்து (இவனுடைய) அரிய உயிரை முடிப்பேனென்று எண்ணினான்; (எ - று)—இவன் அன்னது உடைமுதல் இறையோனே என இயையும். இனி, அன்னது முதலேயுடையிறையோன் என்பதற்கு - அந்தப்படைக்கு முதல்வனும் எல்லாவற்றையுந்தனதாகவுடைய இறைவனுமாவனெனினுமாம். பி - ம்:—[1] இவனின்னது முதலேயுடையிறையோவென. [2] எண்ணு. [3] எவனென்னினி. [4] சிவனன்படை. [5] தெளித்தான். (3040)

151.—அதுகண்டு வானோரும் உலகோரும் கலங்குதல்.

பார்ப்பான்தரு முலகியாவையு [1] மொருநாளினொரு பகலே
தீர்ப்பான்படை தொடுப்பேனெனத் [2] தெரிந்தானது தெரியா
மீப்பாவிய விமையோர்குலம் வெருவுற்ற [3] திப் பொழுதே
மாய்ப்பானென வுலகியாவையு [4] மருகுற்றன [5] மயங்கா.

(இ-ள்.) பிரமதேவன்படைத்த உலகை எல்லாம் ஒருநாளின் ஒருபகற்பொழுதில்தானே ஒழிப்பவனான பசுபதியின் படையைத் தொடுப்பேனென்று கருதினான (இந்திரசித்தினுடைய) அக்கருத்தை யுணர்ந்து, மேலே பரவியிருந்த தேவர்கூட்டம், அச்சங்கொண்டது;உலகமெல்லாம், 'இப்பொழுதே இவன் (நம்மை) மாய்ப்பான்' என்று மயங்கிக் கலக்கங்கொண்டன;(எ-று.)—பி-ம்:—[1] ஒருகால். [2] மனத்தோடுறத்தெளியா. [3] அப். [4] மறுகுற்றது. [5] மயங்கி. ()

152.—இருகவிகள்-ஒருதொடர்: இதைவிடின் அழிவது திண்ணமென்று சிவபெருமான் நேரேதந்த படையை இந்திரசித்து விடுதல்.

[1] தானேசிவன் தரப்பெற்றது தவநாள்பல [2] வுழந்தே
தானேபிற ரறியாதது தந்தேனெனச் சமைத்தான்
ஆனாலிவ னுயிர்கோடலுக் கையம்மிலை யென்னா
[3] மேனாளுமி தனையேவிடி னெதிர்நிற்பவ ரில்லை.

(இ - ள்.) 'இது, (நான்) பலநாள் வருந்தித் தவஞ்செய்ததனால், சிவபிரான் (பிரதியட்சமாகவந்து) தானே தரப்பெற்றது: (அன்னான்) பிறரறியாத இதனைத் தந்தேனென்று தானே (அநுக்கிரகித்துக்) கொடுத்தான்: இப்படியானால் [இப்படியிருத்தலால்], இவன் உயிரை (இதனால்) கொள்ளுதற்குச் சந்தேகம் இல்லை; முற்காலத்திலும் இதனைவிடினே எதிர்நிற்பவரில்லாதவராயினர்' என்று (இந்திரசித்து) கூறி,—(எ - று.)—அடுத்தசெய்யுளில் 'விட்டான்' என்பதனோடு இயையும். பி - ம்:—[1]நானே. [2]உழந்தேன். [3]மேனாளிலுமதனாலெதிர் தடைசெய்தவர்மீளார், ஏனோருமிதனாலெதிர் தடையில்லதையெடுத்தான். (3042)

153. மனத்தான்மலர் புனல்சாந்தமொ டவி[1] தூபமும் வகுத்தான், நினைத்தானிவ னுயிர் [2]கொண்டிவ ணிமிர்வாயென நிமிர்த்தான், சினத்தானெடுஞ் சிலைநாண்டடந் தோண்[3]மேலுறச் செலுத்தா, [4]எனைத்தாயதோர் பொருளாலிடை தடையில்லதை விட்டான்.

(இ - ள்.) புஷ்பமும் (அர்க்கியபாத்தியங்கட்கு ஏற்ற) ஜலமும் சந்தனமும் (நிவேதனத்திற்குஉரிய) அவிசும் தூபமும் ஆகிய எல்லாவற்றையும் மனத்தினாலேயே வகுத்தவனாய், (இந்திரசித்து), —தியானஞ்செய்து பூசித்தான்; எப்படிப்பட்டதொரு பொருளாலும் இடையே தடையில்லாத அந்தப் படையை (நோக்கி), 'இந்த இலட்சுமணனுடைய உயிரைப் பறித்துக்கொண்டு இங்கேவருவாய்' என்றுசொல்லி,சினத்துடனே நெடியவில்லின் நாணை பெரிய தோள்மேற் பொருந்தச் செலுத்தி மேலெடுத்து விட்டான்: (எ - று.)—நிமிர்த்தான் விட்டான்=நிமிர்த்துவிட்டான். பி-ம்:—[1]தீபமும். [2]கோடனை நிமிர்வாயென நெஞ்சாற், கொண்டனைநிமிர் வாயென நெஞ்சார். [3]வேலுற. [4]வினைத்தாயதொர். (3043)

154.—அப்போதைய கடுநிலையை இருகவிகள் தெரிவிக்கும்.

சூலங்களு மழுவுஞ்சுடு கணையுங்[1]கனற் சுடரும்
ஆலங்களு மரவங்களு மசனிக்[2]குல மெவையும்
காலன்றன துருவங்களுங் கரும்பூதமும் பெரும்பேய்ச்
சாலங்களும் நிமிர்கின்றன வுலகெங்கணுந் தானாய்.

(இ - ள்.) (அப்போது அந்தப்பாசுபதத்தினால்), சூலங்களும் மழுக்களும் சுடுகின்ற அம்புகளும் அக்கினிச்சுவாலைகளும் விஷங்களும் பாம்புகளும் இடிக்குலமெல்லாமும் யமனுருவங்களும் கரும்பூதங்களும் பெரியபேய்களின் கூட்டங்களுமாகி உலகெலாம் பரந்து வரலாயின; (எ - று.)—பி - ம்:—[1]கனை. [2]குலத்து. (3044)

155. ஊழிக்கன லொருபாலதை னுடனேதொடர்ந் துடற்றும்
சூழிக்[1] கொடுங் கடுங்[2]காற்றத னுடனேவரத் [3]தூர்க்கும்
[4]எழிற்குமப் புறத்தாயுன பெரும்போர்க்கட லிழிந்தாங்கு
ஆழித்தலைக் [5]கிடந்தாலென நெடுந்தூங்கிரு ளடைய.

(இ-ள்.) யுகாந்தகாலத்து அக்கினி ஒருபக்கத்து அதனுடனே தொடர்ந்துவந்து (உலகத்ததை) வருத்தாநிற்கும்; (ஒருபக்கத்துச்) சுழலுந்தன்மையதான கொடியசண்டமாருதம், அந்தப் படைக்

கலத்துடனேவாராநிற்க ஏழுகடல்களுக்கும் அப்புறத்ததாகி யுள்ள பெரும்புறக்கடல் அங்கு[ப் போர்க்களத்திலே] இழிந்தாற் போன்றுள்ள சேனசமுத்திரத்திலே கிடந்தாற்போல நெடிய மிக்க இருள்யாவும் (உலகமெல்லாவற்றையும்) தூராநிற்கும்; (எ-று.)—சேனசமுத்திரம் பெரும்புறக்கடல் வந்தாற்போலிருக்க, அது தனக்கு அப்பாலுள்ள இருள்வந்தாற்போலப் பேரிருள் வந்து சேரப் பெறுமென்க. பாசுபதத்தாற் கனலும் காற்றும் இருளுஞ் செறிந்தன என்றபடி. பி - ம்—[1]கடுங்கொடுங். [2]காற்றதனயலே, காற்திதனயலே. [3]தொடங்கும். [4]ஏழுக்கும். [5]கடந்தாங்கென, கிடந்தாங்கணே. (3045)

156.-பாசுபதாஸ்திரத்தால் பலவிடத்து முண்டான நிலைதிரிவு.

இரிந்தார்சூல நெடுந்தேவர்க ளிருடிக்குலத் தெவரும்
பரிந்தா[1]ரிது பழுதாகில திறுவானெனு மபயத்தால்
நெரிந்தாங்[2]கழி குரங்குற்றது பகருந்துணை நெடிதே
திரிந்தா[3]ரிரு சுடரோடுல கொருமூன்றுடன் திரிய.

(இ - ள்.) சிறந்த பெருமைபெற்றதேவர்கள், நிலைகெட்டோடி னார்கள்; இருடிக்குலத்திலுள்ள எவரும், 'இது பழுது ஆகுந் தன்மையதன்று: [ஆதலால் இலட்சுமணன்] அழிந்திடுவான்' என்ற அச்சத்தினால் வருந்தினார்; அப்போது வானரங்கள் நொருங் கிப்போய் அழிதலையடைந்தது; (அந்தப் பாசுபதத்தினால் நிகழ்ந் ததைபற்றிச்) சொல்லும் அளவு மிக்கதோ? (அந்தப்படை) திரித லாலே இருசுடர்களோடு உலகொருமூன்றிலுள்ளவர்களும் உடன் திரிந்தார்; (எ-று.)—நெடிதே என்பதன்கருத்து, எவ்வளவுசொன் னாலும் அந்தப் பாசுபதத்தைப் பற்றித் தகுமென்பது. அழி - முத னிலைத் தொழிற்பெயர். பி - ம்:—[1]அது பழுதாகியது, அதுபழு தாகிலது. [2]இனி. [3]அதிர்ந்திடவே. (3046)

157.—'விபீடணன் இதனை விலக்கமுடியுமோ?' என்ன, இளையபெருமாள் சிரித்தல்.

பார்த்தா[1]னெடுந் தகைவிடண னுயிர் [2]காலுறப் பயத்தால்
வேர்த்தானிது விலக்குந்[3]தர முளதோ[4]முதல் வீரா
தீர்த்தாவென [5]வழைத்தானதற் கிளங்கோளரி சிரித்தான்
போர்த்தா[6]ரடர் கவிவீரரு மவன் [7]தாணிழல் புகுந்தார்.

(இ - ள்.) பெருங்குணமுடையவனை விபீடணன் (அதனைக்) கண்டு, அச்சத்தால் உயிர்ப்புவெளிப்பட உடல்வேர்த்தவனாய், (இலட்சுமணனை நோக்கி), 'இதனை விலக்குதற்குஉரிய ஆதரவு இருக்கின்றதோ? முதல் வீரனே! பரிசுத்தமூர்த்தியே!' என்று கூவினான்: அதற்கு இளையபெருமாள் சிரித்தார்: போர்மாலையை யணிந்த (பகைவரை) அடர்க்கின்ற வானரவீரர்களும், அந்த இலட்சுமணனுடைய பாதநிழலிலே பதுங்கிக்கொண்டார்கள்; (எ - று)—போர்த்தார்-ஒன்றுசேர்ந்தவராய் எனினுமாம். பி-ம்:—[1]அதனெதிர். [2]சால்வுற. [3]துணை. [4]உடல். [5]உரைத்தான். [6]உடல், அடற். [7]தாளிணை. (3047)

158.—யாவர்க்கும் அபயமளித்து, இதனைச் சமிப்பிக்குமாறு பாசுபதாஸ்திரத்தையே தொடுப்பேன என்று இலக்குமணன் கருதுதல்.

[1] அவயம்மூனக் [1] கவயம்மெனு மனைவோரையு [2] மஞ்சல்
[1] அவயம் [3] மூமக் [4] களித்தோமெனத் தன்கைத்தலத் தமைத்தான்
[5] உவயம்மூறு முலகின்பய [6] முணர்ந்தேனினி யொழியேன்
[7] சிவனைம்முக முடையான்படை தொடுப்பேனெனத் [8] தெளிந்தான்.

(இ - ள்.) 'அபயம்: உனக்கு அபயம்' என்கின்ற அனைவோரையும் பார்த்து, (இலட்சுமணன), 'அஞ்சற்க: உமக்கு அபயம் அளித்தோம்' என்று சொல்லித் தன்கைத்தலத்தினால் அமர்த்தினான்: '(பூமி விண் என்ற) இரண்டு உலகின் மிகக அச்சத்தை யுணர்ந்திட்டேன்: இனி, வெறுமனே இரேன்: ஐம்முகமுடையவனான சிவபெருமானுடைய படையையே தொடுப்பேன்' என்று (மனத்தில்) தெளிவுகொண்டான்; (எ-று.)—சிவையன் மனமுடையான் என்ற பாடத்திற்கு - பார்வதியை ஒருபாகத்துக் கொண்டவனைத் தன்னையணுகினாரைக் காக்கும்மனமுடையான் என்க. சிவை - பார்வதி. மனமுடையானென்ற தொடர் இலக்குமணனைக் காட்டுமெனக் கொள்ளினுமாம். அண்ணன் போர்க்குமுன் விபீடணனுக்கு அபயம் அளித்ததொருபுறத்திருப்ப, தம்பி போர்க்களத்தே அபயமளித்த திறம் பாராட்டற்குரித்து. பி - ம்:—[1] அபையயம். [2] அஞ்சேல்,அஞ்சற்க. [3] உனக்கு. [4] என்றருளினை யெனக்கைத்தலங் கவித்தான். [5] உபயம், உவையம். [6] உணாவான். [7] சிவனின மனம். [8] திரிந்தான். (3048)

159.—இலட்சுமணன்விடுத்த பாசுபதாஸ்திரம் இந்திரசித்தின் படையை விழுங்கிவிடுதல.

அப் [1] பொற்படை மனத்தால்நினைந் [2] தர்ச்சித்ததை யழிப்பாய்
இப் [1] பொற்படை தனைமற்றொரு [3] தொழிலசெய்கிலை யென்றூத்
துபபொப்பதோர் கணைகூட்டினன் துரந்தா [4] னிடை தொடரா
எப் [5] பொற்பெரும் படையும்புக விழுங்குற்றதொ ரிமைப்பின.

(இ - ள்.) அந்த அழகிய படையை மனத்தினால நினைத்து, அதனை அருச்சித்து 'இந்த (இந்திரசித்து விடுத்த) பொற்படையை அழிப்பாய்: மற்றொரு செயலும் செய்யவேண்டா' என்று (சொல்லித் தன்) வலிமைக்கு ஒப்பதாகிய ஒருபாணத்துடனே (அந்தப்பாசுபதாஸ்திரத்துக்கு உரிய மந்திரத்தைக்) கூட்டி விடுத்தான: (அது முன இந்திரசித்து விடுத்த அஸ்திரத்தின) இடத்தைத் தொடர்ந்து எப்படிப்பட்ட [மிக்க கொடுமையுள்ள] பெரும்படைகளையும் ஓரிமைப்பிற்குள் (தன்னுள) அடங்க விழுங்கிவிட்டது; (எ-று.)—பி-ம்:—[1] போர்ப்படை. [2] அமைந்தானிவை, அருசித்துவைத்து. [3] செயல்செய்யல. [4] அவை. [5] பொற்படையெவையும், போப்படை யெவையும். (3049)

160. *விண்ணூர்த்தது மண்ணூர்த்தது மேலோர்மனி முரசின்*
கண்ணூர்த்தது கடலார்த்தது மழையார்த்தது [1] கலோர்
எண்ணூர்த்தது [2] மறை [3] யார்த்தது விசயமமென [4] வியமும்
பெண்ணூர்த்தன ளறமார்த்தது [5] புறமார்த்தது பெரிதால்.

(இ - ள்.) விண்ணுலகத்தார் ஆரவாரித்தனர்; மண்ணுலகத்தார் ஆரவாரித்தனர்: மேலேயுள்ளாரான வானவருடைய அழகிய முரசின் கண் ஆர்த்தது; கடல்ஆர்த்தது; மழையார்த்தது;கலை வல்லோரின் மனம் ஆர்த்தது; மறை ஆரவாரித்தது; விசயப்பெண் ஆர்த்தனள்: அறம் ஆர்த்தது: (இவ்வாறு) புறம்பே ஆர்த்தது பெரிதாகும்; (எ - று.)—பி - ம்:—[1]கலையோடு. [2]கவி. [3]ஆர்த்தன. [4]விசயப். [5]பிறர், பிற. (3050)

161.—இலட்சுமணன் திறனைக் கண்டு இந்திரசித்து திகைக்க, வானரவீரர் அவனைத் திருமாலே யென வுணர்தல்.

இறுகாலையி னுலகியாவையு [1]மவிப்பானிகற் படையை
மறுகரவகை [2]வலித்தானது வாங்கும்படி வல்லான்
தெறு[3]காலனிற் கொடியோனுமற் றதுகண்டகந் திகைத்தான்
[4]அறுகாஸ்வயக் கவிவீரரு மரியென்பதை யறிந்தார்.

(இ-ள்.) (யாவையும்) அழியும் யுகாந்தகாலத்தில் உலகம் முழுவதையும் அழிப்பவனாகிய உருத்திரமூர்த்தியின் வலிமையுள்ள அந்தஅஸ்திரத்தைப் பின் வாங்கும்படி செய்ய வல்லவனான இலட்சுமணன்,—(உலகம்) கலங்காவகை இழுத்திட்டான்; அழிக்கின்ற யமனைக்காட்டிலும் கொடியவனான இந்திரசித்தும்—அந்த இலட்சுமணனது திறலைக் கண்டு மனந் திகைத்தான்; (பாசுபதம் வருவதைக்கண்டு முன்பு) காலற்ற [ஓய்ந்த வலிமையுள்ள] வானரவீரரும் (அவன்) அரியேயாவனென்றநிலையை யுணர்ந்தார்கள்;(எ-று.)—பி - ம்:—[1]வீய்ப்பான். [2]புரிந்தான், புரந்தான். [3]காலினில். [4]அருகாம்...யறிந்தார், மறுகாவயக்...யாம்வகையறிந்தார். (3051)

162.—இந்திரசித்து எய்யும் வல்லமை கொண்டு கணை தூவுதல்.

தெய்வப்படை [1]பழுதுற்றது வெனக்கூசுதல் [2]சிதையா
எய்வித்தக [3]முள[4]தனது [5]பிழையாதென விசையாக்
கைவித்தக மதனூற்சில கணைவித்தின னவையும்
மொய்வித்தகன் தடந்தோளினும் நுதற்சூட்டினு மூழ்க.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ-ள்.) 'தெய்வப்படைபழுதுற்றது' என்று பின்வாங்குதலையொழித்து, (இந்திரசித்து), 'எய்கின்றவல்லமை (எனக்கு) உள்ளது, அது பிழைபடாது' என்று சொல்லி, கைத்திறமையாற் சில கணைகளை (இலட்சுமணன்மீது) தூவினன்; அவைகளும், வலிமைபெற்ற சமாத்தனான இலட்சுமணனுடைய பெரியதோள்களிலும் நெற்றியினுச்சியிலும் மூழ்க, (பின்னும்); - (எ-று.)—'உய்த்தான்' என அடுத்த கவியில் முடிவுபெறும். பி - ம்:—[1]முழுதிற்றது. [2]தெளியா, சிதைவால். [3]உள. [4]என்னிது. [5]பிழையோ. (3052)

163.—சுக்கிரீவன் முதலியோர்மீது பல அம்புகளைத் தூவி, இந்திரசித்து அயல்நின்ற விபீடணனைச் செறுத்தல்.

வெய்யோன்மகன் முதலாகிய [1]விறலோர்மிகு திறலோர்
கையோய்விலர் மலைமாரியி னிருநூற்கடல் கடப்பார்

உய்யாரென வடிவாளிகள் சதகோடிக ளுய்த்தான்
[2]செய்யோனயல் தனிநின்றதன் சிறுதாதையைச் [3]செறுத்தான்.

(இ-ள்.) (அந்த இந்திரசித்து),—சூரியபுத்திரனான சுக்கிரீவன் முதலாகிய வலிமையுடையவரான மிக்கபராக்கிரமசாலிகள் கையோய்வு இல்லாதவராய் மலைமாரிபோலத் தூவி நிருதக்கடல் கடப்பவரை, '(இவர்) உய்யார்' என்னுமாறு கூரிய அம்புகள் சதகோடிகள் செலுத்தினான்: (மேலும்), செம்மை நிறமுள்ளவனான இலட்சுமணனுடைய அயலில் தனியேநின்ற தன்னுடையசிறிய தந்தையைப்பார்த்துச் சினந்து கூறலானான்; (எ-று.)—மலைமாரி-மலைமீதுதங்கும் மேகம். பி-ம்:—[1]மிடலோர். [2]வெய்யோன். [3]வெறுத்தான். (3053)

வேறு.

164.—எட்டுக்கவிகள்-ஒருதொடர்: விபீடணனை இந்திரசித்து இகழ்தல்.

முரட்டடந் தண்டு மேந்தி [1]மனிதரை [2]முறைமை குன்றப்
பிரட்டரிற் புகழ்ந்து பேதை யடியரிற் [3]தொழுது பின்சென்று
இரட்டுறு முரச [4]மென்ன விசைத்ததே யிசைக்கின் றானைப்
புரட்டுவன் தலையை [5]யின்று [6]பழியொடு மொழிவன் போலாம்.

(இ-ள்.) (ஒருவீரன்போல்) வலிய பெரிய தண்டாயுதத்தை(க் கையில்) ஏந்தியும், (இராட்சசசாதியிற் பிறந்தும் இந்தச் சாதியினின்றும்) பிரஷ்டராணரைப்போல் வீரமுறைமைதவற (நம்மினும் மிகத்தாழ்ந்த)மனிதரைப் புகழ்ந்தும், பேதைமையையுடைய அடியவரைப்போலத் தொழுதுகொண்டு (அவருடைய)பின்னேசென்று அறையப்படுகின்ற முரசவாத்தியம்போல (அந்தமனிதர்)சொன்னதையே சொல்லுகின்றவனுமான உன்னைத் தலையை இன்றுபுரட்டுவேன்: (புரட்டிச் சிறியதாதையைக்கொன்றானென்ற) பழியொடும் ஒழிவேன்: (எ-று.)...ஒலித்தவண்ணமே ஒலிப்பதால், சொல்லியதே சொல்லுவதற்கு, முரசு உவமையாயிற்று. போலாம்-கட்டுரைச் சுவைபயக்கவந்தது. முரசு தானாக ஒலியாமல் கொட்டுவார் கொட்ட ஒலித்தல்போலத் தானாகச் சுதந்திரமாக ஒன்றுஞ்சொல்லாமல்பராதீனனாய் இராமலட்சுமணர் கூறுவதையே விபீடணன் தான் கூறுவதால், முரசு விபீடணனுக்கு உவமையென்பாருமுளர். தண்டும், உம்மை-மனிதரைப் புகழ்தல் முதலியன செயற்பாலன வல்ல என்பதைக் காட்டும். பி-ம்:—[1]நேரின். [2]முறைமைகூறி, முறைமை குன்றிப். [3]இரந்து. [4]என்ன. [5]அந்தோ, ஒன்றோ. [6]பழியென. (3054)

165. விழிபட முதல்வ ரெல்லாம் வெதும்பின [1]ரொதுங்கி[2]வீழ்ந்து
வழிபட வுலகமூன்று [3]மடிப்பட வந்த தேனும்
அழிபடை தாங்க லாற்று மாடவ ரியாண்டும் [4]வெஃகாப்
பழிபட வந்த வாழ்வை [5]யாவரே [6]நயக்கற் பாலார்.

(இ-ள்.) (கண்)விழி பட்டமாத்திரத்தில் (உடலம்) வெதும்பினவராய் முதல்மூர்த்திகளான பிரமருத்திர விஷ்ணுக்கள் யாவரும் ஒதுங்கிக் கீழ்வீழ்ந்து வழிபடுமாறு உலகமூன்றும் (உனக்குச்) சுவாதீனமாக (ஆளுகின்ற ஆட்சி) வந்தாலும், தோற்றோடுகின்ற சேனைகளை (ஓடவொட்டாது) தாங்கும் வல்லமைபெற்ற ஆடவர்

எங்கும் விரும்பாத பழிவினையுமாறுவந்த வாழ்வை, யாவர்தாம் விரும்புதற்கு உரியார்? (எ - று.)—வீரர் விரும்பா வாழ்வை நீ விரும்புகின்றாயெனப் பழித்தவாறு. பி - ம்:—[1]ஓதுங்க. [2]வீழ. [3]அடி தாழ. [4]ஆகாப், வைகார், வைகப். [5]யாவரோ. [6]பகரற். ()

166\. [1]நீருள தனையு முள்ள [2]மீனென நிருத ரெல்லாம்
வேருள தனையும் [3]வீவ ரிராவண னோடு மீளார்
ஊருள தொருவ னின்றாய் நீயுனை [4]யுறைய நின்னோடு
ஆ[5]ருள ரரக்கர் நிற்பா ரரசுவீற் றிருக்க வையா.

(இ-ள.) நீர் இருக்குமளவும் உயிருடனுள்ள மீனென்னுமாறு நிருதரெல்லாம் வேருள்ளதனையும் (பொருது) இராவணனுடனே இறந்துபடுவரே யன்றி, (எவரும் உயிருடன்) மீளமாட்டார்; (பின்பு) இலங்கைநகரம் உனனதாகும்: (அப்போது) ஒருத்தனாய் நின்றவனான நீ (அந்தநகரத்தில்) வசிப்பதற்கு உள்ளவனாவாய்: ஐயா! (நீ) அரசுசெய்து வீற்றிருக்குமாறு உன்னுடன் நிற்கப் போகின்றவரான அரக்கர் யாவருளர்? (எ-று.)—பி - ம்:—[1]நீருள தனையே. [2]மீனினம். [3]வீய. [4]உறையும். [5]உளராகி. (3056)

167\. முந்தைநா ளுலகந் தந்த [1]மூத்தவா னோர்கட் கெல்லாம்
தந்தையார் தந்தை யாரைச் செருவிடைச் சாயத் தள்ளிக்
கந்தனார் தந்தை யாரைக் கயிலையோ டொருகைக் கொண்ட
எந்தையா ரரசுசெய்வ திப்பெரும் பலங்கொண் டேயோ.

(இ - ள்.) முந்தைநாளில் உலகங்களைப்படைத்த மூத்த(வரும்) வானோர்களின் தந்தையாருமான பிரமதேவரது தந்தையான திருமாலைப் போரிலே தளர்ந்து விழுமாறுதள்ளி, கந்தனாருடைய தந்தையாரான சிவபிரானைக் கயிலைமலையுடனே ஒருகையில் தூக்கிக் கொண்ட என் தந்தையார் அரசுசெய்வது, இந்த (மானுடரின்) பெரும்பலத்தைக் கொண்டுதானோ? (எ-று.)—மானுடரின் துணை வலிகொண்டு இலங்கையை யாளவேணுமென்று கருதுவது, சிறிதுந் தகுதியன் றென்றவாறு. இராவணனார் அரசுபுரிவது மனிதருடைய அற்பபலத்தைக் கொண்டோ? என்றுகருத்துக்கூறு வாருமுளர். பெரும்பலம் என்றது-இகழ்ச்சி. இராவணன் மந்திரப் படலத்து 114, 116-ஆம் செய்யுளைக் காண்க. பி-ம்:—[1]மூர்த்தி... எல்லாம், முழுமுதலிமையோர்க் கெல்லாம். (3057)

168\. பனிமலர்த் தவிசின் மேலோன் பார்ப்பனக் குலத்துக்கெல்லாம்
தனிமுதற் றலைவ [1]னான வுன்னைவந் தமரர் தாழ்வார்
மனிதருக் கடிமை [2]யாய்நீ யிராவணன் [3]செல்வ மாள்வாய்
[4]இனியுனக் [5]கென்னோ மான மெங்களோ [6]டடங்கிற் றன்றே.

(இ-ள.) குளிர்ந்த தாமரைமலராகிய ஆசனத்தின்மீது இருப்பவனான பிரமதேவனுடைய பார்ப்பனக்குலத்துக்கெல்லாம் தனி முதல்தலைவனான உன்னை வந்து (பிறந்தகுலப் பெருமைக்காகத்) தேவர்களும் வணங்குவார்: (அப்படிப்பட்ட பெருமைப்பதவியைப் பெற்றிருந்த நீயோ, அற்பரான) மனிதருக்கு அடிமையாகி, இராவணனுடைய செல்வத்தை யாளப்போகிறாய்: இனி உனக்கு மானம் என்பது என்ன இருக்கின்றது? (மானமென்பது நாங்களொழியின்) எங்களோடு அடங்கிவிட்டதேயாம்; (எ-று.)-பி-ம்:—

[1] ஆனால், ஆவாய். [2] செய்வாய். [3] செல்வமாள. [4] இனிதுனக்கு, இனிதுளது, இனிதுபின். [5] எண்ணமெந்தாய். [6] அடங்கிற்றென்றால், அடங்கிற்றன்றால். (3058)

169. [1] சொல்வித்தும் [2] பழித்தும் நுங்கை மூக்கினைத் [3] துணிவித் தோரால், [4] எல்வித்தும் படைக்கை யுங்கள் தமையனை யெங்களோடும், [5] கொல்வித்துத் தோற்று நின்ற கூற்றினு ருலத்தை யெல்லாம், வெல்வித்தும் வாழும் வாழ்வின் [6] வெறுமையே [7] விழுமி தன்றே.

(இ - ள்.) (பிறரைக்கொண்டு இழிமொழிகளைச்) சொல்வித்தும், (நேராகவே) பழித்தும், உன் தங்கைமூக்கினைத் துணித்தோரால் ஒளியைவெளிவிடுகின்ற படையைக் கையிற்கொண்ட உங்கள் தமையனை எங்களுடனே கொல்வித்தும், (இதுவரையில்) தோற்றுக்கிடந்த யமனுடைய பரிவாரங்களை யெல்லாம் வெல்வித்தும் (நீ) வாழ்கின்றவாழ்வைக்காட்டிலும், வெறுமையே [வாழ்ச்சியற்ற நிலைமையே] சிறந்ததாகுமல்லவோ? (எ - று.)— சொல்வித்தும் உளவுகளைச் சொல்லியும் என்றுமாம். துணிவித்தோர் = துணித்தோர். பி - ம்:—[1] சொல்வித்துப் [2] பழிதந்துங்கை. [3] துணித்தோராலே, துணிவித்தோரார். [4] வெல்வித்தும். [5] கொல்வித்துத். [6] பெருமையே. [7] விழுமிதன்றோ. (3059)

170. எழுதியே ரணிந்த திண்டோ ளிராவண னிராம னம்பால், புழுதியே பாயலாகப் புரண்டநாள் புரண்டு மேல்வீழ்ந்து அழுதியோ நீயுங் கூட வார்த்தியோ [1] விவனை வாழ்த்தித், தொழுதியோ [2] வென்றோ செய்யத் [3] துணிந்தனை விசயத் தோளாய்.

(இ-ள்.) வெற்றிதங்கிய தோள்களையுடையவனே! (சித்திரம்) எழுதப்பெற்று அழகைக்கொண்ட வலியதோள்களையுடைய இராவணன் இராமனுடைய அம்பினாலே புழுதியே பாயாகப் புரள்கின்ற காலத்தில் நீயும்கூடப் புரண்டு மேல்வீழ்ந்து அழப்போகிறாயோ? (அன்றி மகிழ்ச்சியினால் ஆரவாரிக்கின்றபகைவரோடு) மகிழ்ச்சியாரவாரஞ் செய்யப்போகின்றாயோ? இந்த இராமனை வாழ்த்தித் தொழப்போகின்றாயோ? என்ன செய்யத் துணிந்துள்ளாய்? (எ-று.) விசயத்தோளாய்-இகழ்ச்சி. மன்மதவுருவம் முதலிய சித்திரங்கள் ஆடவர்தோளிலெழுதப்பெறுமென்க. பி-ம்:—[1] அவனை. [2] யாதோ. [3] துணிந்தது. (3060)

171. ஊனுடை [1] யுடம்பி [2] னீங்கி [3] மருந்தினு லுயிர் [4] வந் தெய்தும்
மானிட ரிலங்கை வேந்தைக் [5] கொல்வரோ நீயு மன்னான்
தானுடைச் செல்வந் [6] துய்க்கத் தகுதியே சரத்தி னோடும்
வானிடைப் [7] புகுதி யன்றே யான்பழி மறுக்கி லென்றான்.

(இ - ள்.) ஊனையுடைய உடம்பினின்று (உயிர்) நீங்கி மருந்தினாலே (மீண்டும் அந்த) உயிர்வந்துசேரப்பெறும் மானுடர் இலங்கைவேந்தைக் கொல்லமாட்டுவரோ? நீயும், அந்த இராவணனுடைய செல்வத்தைப் பெற்று அனுபவித்தற்குத் தக்கவனாவாயோ? யான் பழியென்பது பாராது (அம்பினால்) கொன்றேனாயின், அவ்வம்பினோடும் வானிடைப்புகுவாயல்லவோ! என்று கூறிமுடித்தான், (இந்திரசித்து); (எ - று.)—பழி மறுக்கில்-பெரியதந்தையைக்

கொல்வது பழியென்பதை மறுத்து உன்னைக்கொன்றால். பி - ம்:—
[1]உடம்பு. [2]நீக்கி. [3]மருந்தினின். [4]பெற்றுய்யும், வந்துய்யும்.
[5]கொல்வதே. [6]துய்யத்துறுதியே. [7]படுதி. (3061)

172.—விபீடணன் பதிலுரைக்கத் தொடங்குதல்.

அவ்வுரை யமையக் கேட்ட வீடண னலங்கல் மௌலி
[1]செவ்விதில் துளக்கித் [2]தன்பால் மூறுவலுந் தெரிவ தாக்கி
வெவ்விது பாவஞ் சாலத் தருமமே விழுமி தைய
இவ்வுரை கேட்டி யென்று வினையன [3]விளம்ப லுற்றான்.

(இ-ள்.) (இந்திரசித்து கூறிய) அந்தவார்த்தையைப் பொருந்தக் கேட்ட விபீடணன், மாலையையணிந்த முடியை நன்கு அசைத்துத் தன்னிடத்துப் புன்முறுவலும் வெளித்தெரிவதாகச்செய்து, 'ஐயனே! பாவம் கொடியது: தருமமே மிகவுஞ் சிறந்தது: இந்த வுரையைக் கேட்பாய்' என்று இவ்வார்த்தைகளைக் கூறத்தொடங்கினான்; (எ-று)—விபீடணன் கூறுவதை, மேல் ஐந்து கவிகளிற் காண்க. பி-ம்:—[1]செவ்விது. [2]வீர, மூரல். [3]இயம்பல். (3062)

173.—ஐந்துகவிகள்-ஒருதொடர்: விபீடணன் கூறுவதைத் தெரிவிக்கும்.

அறத் [1]துணை யாவ தல்லா லருநர கமைய [2]நல்கும்
மறந்துணை யாக மாயாப் பழியொடும் வாழ மாட்டேன் [லால்
துறந்திலேன் [3]மெய்ம்மை மெய்தும் பொய்ம்மையே துறப்ப தல்
[4]பிறந்திலே னிலங்கை வேந்தன் பின்னவன் [5]பிழைத்த போதே.

(இ - ள்.) தருமமே துணையாவதல்லது (கடப்பதற்கு) அரிய நரகத்தைப் பொருந்துமாறு தருகின்ற பாவம் துணையாக மாயாத பழியோடும் வாழமாட்டேன்: செய்யுமாறு நேர்கின்ற பொய்ம்மையைத் துறப்பதல்லாமல், மெய்ம்மையைத் துறந்திலேன்: இலங்கை வேந்தனான இராவணன் பிழைபட நடந்தபோதே, (நான் அவனுக்குத்) தம்பியாகப் பிறவாதவனே யாயினேன்; எ - று)—பி-ம்:—
[1]துணையாக. [2]நல்க. [3]மெய்ம்மைபொய்ம்மையும்மையே. [4]பிறந்திலன். [5]இறந்த. (3063)

174. உண்டில னறவம் பொய்ம்மை யுரைத்திலன் வலியாலொன்றும், கொண்டிலன் மாய வஞ்சங் குறித்திலெ [1]னியாருங் குற்றங்,கண்டில ரென்பா லுண்டே நீயிருங் கண்டி ரன்றே,பெண்டிரிற் [2]றிறம்பி னோரைத் துறந்தது பிழையிற் [3]றாமே.

(இ - ள்.) மதுவைப் பருகினதில்லை; பொய் பேசியதில்லை; வலிமையால் எதையும் கவர்ந்துகொண்டதில்லை: மாயத்தினாற் செய்யும் வஞ்சனைச்செயலை(ச்செய்ததில்லையென்பதன்றி மனத்தினால்)எண்ணியதுமில்லை;எவரும் என்னிடத்தில் தீச்செயலைக்கண்டதில்லை; என்னிடத்து (த் திமை) உளதோ? நீங்களும் பார்க்கிறீர்களல்லவா? பெண்டிரின் பொருட்டு முறைதிறம்பி நடந்தவரைத் துறந்திட்டது, பிழையையுடையதாகுமோ? (எ-று)—'என்பால்' என்பது, மத்திமதீபமாக எரிடத்தும் இயைந்தது. பி - ம்:—
[1]எவரும். [2]திறம்பினானை. [3]ஆமோ. (3064)

175. மூவகை [1]யுலகு [2]மேத்து முதலவ னெவர்க்கு மூத்த
[3]தேவர்தந் தேவன் றேவி கற்பினிற் [4]சிறந்து ளாளை
[5]நோவன செய்தல் தீதென் றுரைப்பநுன் றுந்தை சீறிப் [னோ.
போவென [6]வுரைக்கப் போந்தே னரகத்திற் பொருந்து வே

(இ-ள்.) 'மூவகையுலகமும் துதிக்கின்ற முதற்கடவுளும் எல்லாத் தேவரினும் மேம்பட்ட தேவாதிதேவனுமான திருமாலின் பத்தினியான கற்பிற் சிறந்துள்ளவளை வருந்தத்தக்கனசெய்தல் தீமையானது' என்று(நான்)உரைப்ப, உன் தந்தை சீற்றங்கொண்டு 'போ' என்றுசொல்ல, (அவனை விட்டு) வந்திட்டேன்: (இதனால்), நரகத்திற் சேர்வேனோ? (எ - று.)—பி.ம்:—[1]உலகம். [2]தந்தமுதல்வனே. [3]காவலன்றேவியன்றே. [4]பிறந்துளாளை [5]நோவது. [6]பொருந்தேனின்று. (3065)

176. [1]வெம்மையில் தரும [2]நோக்கா வேட்டதே வேட்டு வீயும்,உம்மையே புகழும் [3]பூண[4] துறக்கமு மும்மக்கே யாக,செம்மையிற் பொருந்தி மேலோ ரொழுக்கினோ டறத்தைத் தேறும், எம்மையே பழியும் [5]பூண நரகமு மெமக்கே யாக.

(இ-ள்.) கொடுமையினாலே தருமத்தைப்பாராமல் காமத்தையே விரும்பி இறக்கப்போகின்ற உம்மையே, புகழும் அடையட்டும்: நல்லுலகமும் உமக்கேயுண்டாகட்டும்: நற்குணத்திற்பொருந்தி நின்று மேலோருடைய ஒழுக்கத்தினோடு அறத்தைத் தேறுகின்ற எம்மையே பழியும் அடையட்டும்: நரகமும் எங்கட்கே யுண்டாகட்டும்: (எ-று.)—தருமத்தைச் செய்வதனால் பழியும் நரகமும் கிடைக்குமென்றாலும், நாங்கள் தருமத்தை நாடுவோமே யன்றி அதருமத்தை நாடமாட்டோமென்றகருத்து இதில் தோன்றும். பி-ம்:—[1]மெய்ம்மையிற். [2]நோக்கேர். [3]பூண்க, பூணத். [4]சுவர்க்கமும். [5]பூண்க. (3066)

177. அறத்தினைப் பாவம் வெல்லா தென்னுமி தறிந்து[1]ஞானத், [2]திறத்தினு முறுமென் றெண்ணித் [3]தேவர்க்குந் தேவைச் சேர்ந்தேன், புறத்தினிற் புகழே யாக பழியொடும் புணர்க [4]போதச்,[5]சிறப்பினிப் பெறுக[6]தீர்க வென்றனன் சீற்ற [7]மில்லான்.

(இ - ள்.) 'அறத்தைப் பாவம் வெல்லாது' என்கின்ற அதனை யறிந்து,(இராமபிரானைச் சேர்கின்ற அச்செயல்) ஞானத்தின் கூறுபாட்டிலும் பொருந்து மென்று கருதி, தேவாதிதேவனை ஸ்ரீராமனைச் சேர்ந்தேன்: வெளியே (எனக்குப்) புகழுண்டாகட்டும்: (அல்லது) பழியோடும் (நான்) சேர்க; மிகவும் இனிச்சிறப்புப்பெறுக: (அல்லது சிறப்பு) ஒழிக;(அதுபற்றிக் கவலையில்லை)என்றுகூறினான்: (யாவனெனில்), சீற்றம்நீங்கினவனாகிய விபீடணன்; (எ - று.)—விபீடணன் தன் மீது கூறப்படும் குறைகட்கெல்லாம் நுட்பமாகக் கண்டித்து மறுமாற்றம் கூறியிருப்பதை அறிக. இக்காவியரத்நத்தின் பாவிகமாகிய 'அறம் வெல்லும் பாவந்தோற்கும்' என்பது, ஈண்டு சிறக்கவெளிப்படுத்தப்படுதல் காண்க. பி - ம்:—[1]யானே, நானே, தானே. [2]திறத்தினை துறும். [3]தேவர்க்குத். [4]போக. [5]சிறப்பினைப். [6]தீர்க்க, போக, தக்காய். [7]தீர்ந்தான். (3067)

178.—விபீடணன்மீது வீரவாதத்துடன் இந்திரசித்து அம்பு எய்தல்.

**பெருஞ்சிறப் பெல்லா மென்கைப் பிறைமுகப் [1]பகழி பெற்றால்
இறுஞ் [2]சிறப் பல்லா லப்பா லெங்கினிப் [3]போவ தென்னாத்
தெறுஞ்சிறைக் கலுழ னன்ன வொருகணை [4]தெரிந்து செம்பொன்
உறுஞ்சுடர்க் கழுத்தை நோக்கி நூக்கினா [5]னுருமின் வெய்யோன்.**

(இ - ள்.) இடியைப்போல் வெய்யவனான இந்திரசித்து, '(நீ) பெறுவதாகக் கருதுகின்ற சிறப்புகளெல்லாம், என்கையிலேயுள்ள பிறைமுகத்தையுடைய பகழியைப் பெற்றால் அழிகின்ற சிறப்பாகுமேயல்லாமல், இனி எங்கே (இதற்குத் தப்பி) அப்பாற் போவது?' என்று சொல்லி, (சர்ப்பத்தை) அழிக்கின்ற சிறையையுடைய கருடனையொத்த ஒருகணையை ஆராய்ந்தெடுத்து, (விபீடணனுடைய) செம்பொன்னணிபொருந்திய ஒளியுள்ளகழுத்தை நோக்கிச்செலுத்தினான்; (எ - று.)—பெருஞ்சிறப்பு இறுஞ்சிறப்பாகும் என்றது-நீ பெறக்கருதுஞ்சிறப்பு இற்றதாய்விடுமென்றபடி. பி - ம்:—[1]வாளியொன்றால். [2]சிறப்பில்லையைய. [3]பெறுவை, போவை. [4]தொடுத்துக். [5]அசனியொப்பான். (3068)

179.—இலட்சுமணன் அந்தக்கணையைத் தடுத்தல்.

**அக்கணை யசனி யென்ன [1]வனலென்ன வால முண்ட
முக்கணான் சூல மென்ன முடுகிய முடிவை நோக்கி
[2]இக்கணத் திற்றா னிற்றா [3]னென்கின்ற [4]விமையோர் காணக்
கைக்கணை யொன்றால் [5]வள்ள லக்கணை கண்டங் கண்டான்.**

(இ - ள்.) அந்தக்கணையானது இடியேயென்னவும், அனலே என்னவும், விஷத்தையுண்ட திரிநேத்திரனான உருத்திரமூர்த்தியினது சூலப்படையென்னவும் விரைந்துசென்ற முடிவான நிலையை நோக்கி, 'இக்கணத்திலே (இந்த விபீடணன்) ஒழிந்தான் ஒழிந்தான்' என்கின்ற இமையோருங் காணும்படி உதாரகுணமுடையவனாகிய இலக்குமணன் (தன்) கையிலிருந்த கணையொன்றினாலே (இந்திரசித்து விட்ட) அக்கணையைத் துண்டமாக்கினான்; (எ - று.) விபீடணன்மீது கணை செல்லாதபடி செய்யத் தான் கணை எய்ததனால் இலக்குமணனை 'வள்ளல்' என்றது.—பி - ம்:—[1]அன்றென, அன்றவன். [2]இக்கணம். [3]என்பதன். [4]இடையேயெய்தான், இடையேயீண்டு. [5]ஐயன். (3069)

180.—இந்திரசித்து ஏவிய வேற்படையையும் இலட்சுமணன் அழித்தல்.

**கோலொன்று துணித லோடுங் கூற்றுக்குங் [1]கூற்ற மன்னான்
வேலொன்று வாங்கி விட்டான் வெயிலொன்று [2]விழுவ தென்ன
நாலொன்று மூன்று [3]மான புவனங்கள் நடுங்க லோடும்
நூலொன்று [4]வரிவி லானு மதனையுந் துறுக்கி வீழ்த்தான்.**

(இ - ள்.) ஒப்பற்ற அம்பு துணிபட்டவுடனே, யமனுக்கும் யமனையொப்பவனான இந்திரசித்து,—வேற்படையொன்றைக் கையிலெடுத்துவிட்டான்: ஒருசூரியன் விழுவதுபோல (அந்தச் சூலப்படை ஒளிர்ந்து கொண்டுவர), ஏழான புவனங்கள் நடுங்குதலும், சாஸ்திரமுறைப்படியே கட்டமைந்த விற்றொழிலில் வல்லவனான இலட்சுமணனும் அந்தவேற்படையையும் அழித்துத்

தள்ளினான்; (எ - று.) -பி-ம்:-[1] கூற்றுமென்ன, கூற்றமன்ன. [2] விழுந்த. [3] ஆயவுலகங்கள். [4] விதிவலானும், வரிவிலன்றான், வரிவில்வல்லான்.

181.—விபீஷணன் இந்திரசித்தினதுதேரின் சாரதி குதிரைகளை யழித்தல்.

[1] வேல்கொடு நம்மே லெய்தா னென்றொரு வெகுளி [2] பொங்கக்
[3] கால்கொடு காலிற் கூடிக் கைதொடர் கனகத் தண்டாற்
கோல்கொளு மொருவ னோடுங் [4] கொடித்தடந் தேரிற் பூண்ட
பால்கொளும் [5] புரவி யெல்லாம் [6] படுத்தினான் [7] படியின் மேலே.

(இ - ள்.) வேலைக்கொண்டு நம்மேல் எறிந்தானென்று ஒரு கோபம் எழுந்தெழ, (விபீடணன்),—காலினால் காற்றுப்போல (விரைவு) பொருந்திய கையிற்பற்றிய பொன்மயமான தண்டாயுதத்தினால் தேரைச்செலுத்துகின்ற ஒருவனுடனே [பாகனுடனே] கொடிகட்டிய பெரிய தேரிற் பூட்டிய பால்நிறமான குதிரைகளை யெல்லாம் பூமியின்மீது விழுத்தினான்: (எ - று.)—பி - ம்:—[1] வேலொடுகொல்லலுற்றானென்பதோர். [2] வீங்கக், தோன்றக். [3] காலொடு... கூட்டிக்கைகொடு. [4] அவனொடுங்கொடித்திண்டேரும், அவனொடும்... தேரின். [5] புரவியோடும், புரவிபாரிற். [6] பரப்பினான். [7] துடிப்புமாற, துடிப்பும்மாற. (3071)

182.—விபீடணன் இலட்சுமணன் முதலியோர்மீது இந்திரசித்து அம்புபொழிந்து ஆரவாரித்தல்.

அழிந்ததேர் மீது நின்றா னாயிர கோடி [1] யம்பு
பொழிந்தவன் றோளின் [2] மேலு மிலக்குவன் புயத்தின் மேலும்
[3] ஒழிந்தவ ருரத்தின் மேலு முதிர நீர் வாரி [4] யாக
[5] அழிந்திழிந் தோட [6] நோக்கி [7] யண்ட மு [8] மிரிய வார்த்தான்.

(இ - ள்.) அழிந்த தேரின்மீது நின்றவனான இந்திரசித்து, அந்த விபீஷணனது தோளின்மேலும் இலக்குமணனுடைய புயத்தின்மேலும் ஒழிந்தவரின் மார்பின்மேலும் ஆயிரகோடி யம்புகளைப் பொழிந்து, இரத்தப் புனற்கடல் ஊரம்பினறி யிழிந்தோட நோக்கி அண்டமும் நிலைகெட்டோட ஆரவாரித்தான்; (எ - று.) —பி - ம்:—[1] அம்பாற். [2] மீதும். [3] ஒழிந்தபேர். [4] ஓதம். [5] அழிந்தழிந்து. [6] தாக்கி. [7] பகிரண்டம். [8] மடிய, வெடிக்க. (3072)

183.—இந்திரசித்து வானத்துமறைந்து இராவணனிடம் செல்லுதல்.

ஆர்த்தவ னனைய போதி னழிவிலாத் தேர்கொண் டன்றிப்
போர்த்தொழில் [1] புரியலாகா தென்பதோர் பொருளை யுன்னிப்
[2] பார்த்தவ ரிமையா முன்னம் விசும்பிடைப் [3] பாய்ந்தா னென்னும்
வார்த்தையை நிறுத்திப் போனா னிராவணன் மருங்கு சென்றான்.

(இ - ள்.) ஆரவாரஞ்செய்த அந்த இந்திரசித்து, அப்போது 'அழிவில்லாத தேரைக் கொண்டல்லாமல் போர்த்தொழிலைச் செய்யமுடியாது' என்பதான ஒருவிஷயத்தைக் கருதி, பார்த்தவர் கண்ணைக் கொட்டுங்காலத்திற்குள், விசும்பினிடத்துப் பாய்ந்தானென்னும் வார்த்தையை யுண்டாக்கிவிட்டு (மாயமாக)ப் போனவனாய், (அங்குநின்று) இராவணனுள்ள இடத்துக்குச் சென்றான்; (எ - று.)—பி-ம்:—[1] வெல்லல். [2] காத்தவர், [3] காந்தான், புக்கான். ()

நிகும்பிலையாகப்படலம் முற்றிற்று.

———

27 - ஆவது இந்திரசித்துவதைப்படலம்.

(இலக்குமணன் செய்த) இந்திரசித்தினுடைய வதையைக் கூறும் படலமென்பது, பொருள்.

இராவணன் மருங்கு சென்று சேர்ந்த இந்திரசித்து, அவ்விராவணனைக்கண்டு விபீஷணன் உளவுசொல்லித் தருவதையும் இலட்சுமணனுடைய பராக்கிரமத்தையுஞ் சொல்லி, 'சீதையை விட்டிடுவதே செய்யத்தக்கது' என்ன, அதுகேட்ட, இராவணன் சினந்து தான் போருக்கு எழுமுயல, அப்போது இந்திரசித்து அவ்விராவணனைத் தடுத்துத் தானே போருக்கு எழுந்துசென்று இலட்சுமணனோடு கடும்போர் விளைக்க, சூரியனுதித்ததும், இலட்சுமணன் இந்திரசித்துசெய்த மாயப்போரை வென்று அவனைச் சங்கரிக்கவே, அரக்கரிரிந்தோடினர். தேவர்கள் மகிழ்ச்சியினால் ஆரவாரித்தனர். அப்போது கடவுளருளால் இறந்த வானரர் உயிர்பெற்றெழ, அங்கதன் இந்திரசித்தின் தலையை யேந்தி முன்னணியில் வர, இலக்குமணன் அநுமான் தோளின்மீதே சென்றனன். இந்திரசித்தின் தலையைக் காணிக்கையாக வைத்து, இலட்சுமணன் வணங்க, ஸ்ரீராமன் அவனைப் புகழ்ந்து அவனிடத்துள்ள பேரன்பினால் அவனுடலிலுள்ள புண்களை யொற்றிப்போக்கினனென்பது, இந்தப்படலத்திற் கூறிய பொருள்.

1.—இராவணன் இந்திரசித்தைநோக்கி வினவத் தொடங்குதல்.

விண்ணிடைக் [1]கரந்தா [2]னென்ன வஞ்சனை விளைக்கு மென்பார்
கண்ணிடைக் [3]கலக்க நோக்கி யையுற வுழக்குங் காலை
[4]புண்ணிடை யாக்கைச் செந்நீ ரிழிதரப் புக்கு நின்ற
எண்ணிடை மகனை நோக்கி யிராவண னினைய சொன்னான்.

(இ-ள்.) வானத்தினிடத்தே ஒளிந்துகொண்டானென்பதைக் கண்ணினாற் பொருந்தப் பார்த்து, (வானவர் முன்போல்) மாயச் செயலைத் தோற்றுவிப்பானென்பாராய் ஐயுறவினால் வருந்திக் கொண்டிருக்கும்போது, உடலின் புண்ணினிடத்தினின்று இரத்தம் பெருக(த் தன் முன்னே) வந்து நின்றவனான (மகாவீரனென்று) மதிப்புப்பெற மகனை [இந்திரசித்தை]ப் பார்த்து, இராவணன் இவ்வாறான வார்த்தையைக் கூறலானான்; (எ-று,)—மேற்கவியிற் காண்க. ஐயுறவுழந்தவர் வானரரென்றுகொண்டு கண்ணிடைக் கலக்கநோக்கி என்பதற்கு-தமது கண் வானத்தினிடத்துப் பொருந்தப் பார்த்தவண்ணம் என்றும், கண்ணினிடத்துக் கலக்கமுண்டாக என்றும் உரைத்தலுமாம். பி-ம்:—[1]கலந்தான். [2]என்பார். [3]கலக்க நோக்கி. [4]புண்ணுடை. (3074)

2.—நிகழ்ந்ததைச் சொல்வாயென்று இராவணன் இந்திரசித்தை வினவல்.

தொடங்கிய வேள்வி[1] முற்றுப் பெற்றிலாத் [2]தொழில்நின் றோன்
அடங்கிய [3]அம்பே யென்னை [4]யறிவித்த [5]தழிவி லியாக்கை[மேல்
நடுங்கினை [6]போலச் சாலத் தளர்ந்தனை கலுழ னன்னப்
படங்குறை யரவ மொத்தா யுற்றது பகர்தி யென்றான்.

(இ-ள்.) (நீ) தொடங்கிய வேள்வியானது முடிவுபெற்றிலாத தன்மையை, உன்னுடைய தோளின்மேற் பதிந்துள்ள அம்பே எனக்குத்தெரிவித்தது; அழிவில்லாத உடல் நடுக்கமடைந்தாய் போல மிகத்தளர்ந்து, கருடன் கிட்டப் படமொடுங்கின சர்ப்பம் போன்றாய்: நிகழ்ந்ததைக் கூறுவாயென்றான்: (எ - று.)—பி - ம்:— [1]முற்றும், முற்றிப். [2]தொழிலும். [3]அம்பிற்றேற, அம்புதோன்ற. [4]அறைந்தன. [5]அயர்வில்யாக்கை. [6]மனமுஞ். (3075)

3.—நான்குகவிகள்-ஒருதொடர்; இந்திரசித்து கூறிய பதிலைதெரிவிக்கும்.

சூழ்வினை [1]மாய மெல்லா மும்பியே துடைக்கச் சுற்றி
வேள்வியைச் சிதைய நூறி வெகுளியா லெழுந்து வீங்கி
[2]ஆள்வினை யாற்றல் [3]தன்னு லமர்த்தொழில் தொடங்கி யார்க்குந்
தாழ்விலாப் படைகண் மூன்றுந் தொடுத்தனன் றடுத்துவிட்டான்.

(இ - ள்.) (நான்) ஆராய்ந்து செய்த மாயச்செயலையெல்லாம் உன்தம்பியே (உளவுசொல்லிக் கொடுத்துப் பயனிலவாக்கி) யொழிக்க,(பிறகு இலட்சுமணன் வானரசேனையுடனே)முற்றுகை செய்து வேள்வியைக் கெடும்படி யழித்ததனால், (நான்) சினத்தோடு எழுந்து பராக்கிரமத்தோடு கூடிய வல்லமையால் மிக்குப் போர்த் தொழிலைத் தொடங்கி ஆரவாரிக்கின்ற தாழ்வில்லாத முத்தேவர் களின்படைகளையும் தொடுத்துவிட்டேன்: (அவற்றை யெல்லாம் அவ்விலக்குமணன்) தடுத்துவிட்டான்; (எ - று.)—ஆற்றல்தன்னால் வீங்கித் தொடங்கி என்க: வீங்குதல் - மிகுதல் யார்க்குந் தாழ்வு இலா-எவர்க்கும்பின்னிடையாத எனினுமாம். பிரமாஸ்திரம்நாராய ணாஸ்திரம் பாசுபதாஸ்திரம் என்ற இம்மூன்றையும் இந்திரசித்து தொடுத்துவிட அவற்றை இலட்சுமணன் தடுத்தமையை நிகும் பிலையாகப்படலத்து 132-ஆம் செய்யுள் முதல்காண்க. பி - ம்:— [1]மாயை. [2]ஆழ்வினை. [3]ஆற்றான்...புக்கு நின்றான். (3076)

4. **நிலஞ்செய்து விசும்புஞ் செய்து [1]நெடியமால் படைநின் றானை**
வலஞ்செய்து [2]போயிற் றென்றால் மற்றினி வலிய [3]துண்டோ
குலஞ்செய்த[4]பாவத்தாலே கொடும்[5]பகை தேடிக்[6]கொண்டாய்
சலஞ்செயி னுலகை மூன்று மிலக்குவன் [7]முடிப்பன் றானே.

(இ - ள்.) நிலத்தையுண்டாக்கி மேலுலகத்தையுண்டாக்கிப் பெருமை பெற்ற திருமாலின் படையும் (போரில் நின்ற) இலக்கு மணனைப் பிரதட்சிணஞ்செய்து போயிற்றென்றால், பின்னர் இனி வலிமையுடைய படையும் உண்டோ? (அரக்கர்)குலஞ் செய்த தீவினையாலே கொடிய பகையைத் தேடிக்கொண்டாய்: இலக்கு வன் கோபங்கொண்டால் தானொருவனே உலக மூன்றையும் முடிப் பான்; (எ-று)-சலம்-கொதிப்புமாம். பி-ம்:—[1]நெடியவன். [2]போவ தானால். [3]உண்டே. [4]தீமையாலே. [5]பழி. [6]கொண்டேம். [7]முடிக்கும்.

5. **முட்டிய செருவின் முன்ன முதலவன் படையை [1]யென்மேல்**
[2]விட்டில னுலகை யஞ்சி யாதலால் வென்று மீண்டேன்
கிட்டிய [3]போதுங் [4]காத்தா னின்னமுங்[5]கிளர வல்லான்
கட்டிய [6]வலியி னாலே கோறலைத் துணிந்து நின்றான்.

(இ - ள்.) நெருங்கச்செய்த போரில் முன் (மும்மூர்த்தியரில்) முதலிற் சொல்லப்படுபவனான பிரமதேவன் படையை உலகை (யழித்துவிடுமேயென்று) அஞ்சி என்மீது விடுத்திலன்: அதனால் வென்றுமீண்டேன்; (நான் பிரயோகித்த பிரமாஸ்திரம் தன்னைக்) கிட்டியபோதும் காத்துக்கொண்டான்: இன்னமும் உற்சாகங் கொண்டு போர்செய்ய வல்லான்: பெருமைபெற்ற(தன்)வலிமையாலேயே (என்னைக்) கொல்வதைத் துணிந்து நின்றான்; (எ-று.) உயிருடன் மீண்டதையே வெற்றியாகக்கொண்டு 'வென்று மீண்டேன்' என்கிறான். பி - ம்:—[1]முன்பா, முன்பால், என்பால். [2]வீட்டிலர். [3]போது. [4]காத்தார்...வல்லார். [5]கிளர்வரல்லாச். [6]முனையிலன்றுன் றொடங்கிய சொல்லற்பாற்றோ, வலியினாலே...நின்றார். (3078)

6. ஆதலா லஞ்சி னேனென் றருளலை யாசை தானச்
சீதைபால் விடுதி யாயி [1]னனையவர் சீற்றந் [2]தீர்வர்
போதலும் புரிவர் செய்த தீமையும் பொறுப்ப ருன்மேற்
காதலா லுரைத்தே னென்றா னுலகெலாங் கலக்கி வென்றான்.

(இ - ள்.) இவ்வாறு நடந்ததனால் (நான்) அஞ்சினேன் என்று நினையாதே: (நீ) அந்தச்சீதையினிடத்து ஆசையை விடுவாயாயின், அந்த இராமலட்சுமணர் சினம் நீங்கிவிடுவர்; (போர்செய்து நம்மைக் கொல்லாமல்) மீண்டு போதலையுஞ் செய்வார்கள்: (நீ) செய்த தீமையையும் பொறுப்பார்கள்: (என் உயிர் போய்விடப் போகிறதே என்ற அச்சத்தினாலன்று நான் இவ்வாறு கூறுவது): உன்மீது அன்பினாற் கூறினேன் என்று கூறிமுடித்தான்; (யாவனெனில்),—உலகத்தையெல்லாம் கலங்கவடித்து வென்றவனான இந்திரசித்து; (எ - று.)

உலகத்தையெல்லாம், கலங்கவடித்தவன், இப்போது தான் கலக்கமடைந்து இவ்வாறு கூறலானானென்க. தான் கூறுவது அச்சத்தினாலன்று: தந்தைமீதுள்ள அன்பினாலென்று இந்திரசித்து தான் கூறுவதற்குக் காரணத்தை விளக்குகின்றான். பெரியோரிடத்துப் பேசுமிடத்து 'அருள்' என்ற சொல்லை உடன் சேர்த்துச்சொல்லும் மரபுபற்றி, நினையாதேயென்ற பொருளில் 'அருளலை' என்றான். போதலும், தீமையும், உம்மைகள் - எச்சப் பொருளன. ஆதலால் என்பதற்கு-வலியினாலே கோறலைத்துணிந்தானென்றதற்காக என்றலும் ஒன்று. பி-ம்:-[1]அன்னவர். [2]தீர்ந்து.

7.—ஆறு கவிகள்—ஒருதொடர்: இராவணன் இந்திரசித்தை வெறுத்துக் கூறுதல்.

இயம்பலு மிலங்கை வேந்த னெயிற்றிள [1]நிலவு தோன்றப்
புயங்களுங் குலுங்க [2]நக்குப் [3]போர்க்கினி [4]யொழிதி போலாம்
மயங்கினை [5]மனிதன் றன்னை யஞ்சலை வருந்த லைய
சயங்கொடு தருவன் இன்றே மனிதரைத் தனுவொன் றாலே.

(இ-ள்.) (இவ்வாறு இந்திரசித்து) கூறியவுடனே, இலங்காதிபதியாகிய இராவணன் கோரப்பற்களினின்று இளநிலா வெளிப்படவும் தோள்கள் குலுங்கவுஞ் சிரித்து, 'இனிப் போர்க்குச்செல்லாமல் நீங்குவாய்போலும்: மனிதனைப்பார்த்து மயக்கமடைந்து

விட்டாய்: அஞ்சாதே: வருந்தாதே: ஐயனே! (என்னுடைய) ஒற்றை வில்லைக்கொண்டு இன்றே மனிதரி த்து வெற்றியைக் கொண்டு தருவேன்: (எ - று)—இச்செய்யுளில் 'நக்கு' என்பது "என்னு" (12) என்று இயையும். பி - ம்:—[1]நிலவுமெய்தப். [2]நக் கான். [3]போக்கு. [4]ஒழிநீபோத, ஒழிதிபோல, ஒழிதல்போலாம். [5]மனமுமஞ்சி வருந்தினை, மனிதன்றன்னையஞ்சினை. (3080)

8. முன்னையோ ரிறந்தோ ரெல்லா மிப்பகை முடிப்ப ரென்றும்
[1]பின்னையோர் நின்றோ ரெல்லாம் [2]வென்றவர்ப் பெயர்வரென்றும்
[3]உன்னை நீ யவரை வென்று தருதியென் றுணர்ந்து மன்றால்
என்னையே நோக்கி [4]யானிந் நெடும்பகை [5]தேடிக்கொண்டேன்.

(இ - ள்.) (நான் சீதையைக்கவர்ந்து பகைதேடிக்கொண்டது),—முன்னரே போர்க்குச் சென்றவராய் இறந்தவரெல்லாம் (எனது) இப்பகையை யொழிப்பாரென்றாவது, (இன்னும் போர்க்குச் செல்லாது) பிற்பட்டவராய் நிற்பவரெல்லாம் அப்பகைவரை வென்று மீள்வரென்றாவது, உன்னைக்குறித்து 'நீ அவரை வென்று தருவாய்' என்றாவது கருதி அன்று; என் வலிமையையே எண்ணி யான் இந்த நெடியபகையைத் தேடிக்கொண்டேன்; (எ - று.)— என்றும் என்றும் உணர்ந்தும் அன்று என்க நோக்குதல்-எண்ணு தல். பி - ம்:—[1]பின்னையே. [2]வென்றவர் [3]இன்னநீ... இன்றால். [4]அன்றே. [5]கொண்டதென்றான். (3081)

9. பேதைமை யுரைத்தாய் [1]பின்னா யுலகெலாம் பெயரப் பேரக்
காதையென் புகழி னோடு நிலைபெற வமரர் காண
மீதெழு மொக்கு ளன்ன யாக்கையை விடுவ தல்லாற்
சீதையை விடுவ துண்டோ விருபது [2]தோளுண்டாக.

(இ - ள்.) அறிவு நிரம்பாதவனே! அறிவில்லாத ஆலோசனையைச் சொன்னாய்: (நான் மாற்றாரை வெல்வது திண்ணம்; ஒருகால் எனக்கு வெற்றியே யுண்டாகாதென்றாலும், எனக்கு) இருபது தோள் உண்டாயிருக்கையில், உலகமெல்லாம் பெயர்கையிலும் அழியாத என்புகழினோடு கூடிய பாடல் நிலைபெறுமாறு அமரர் கண்டு கொண்டிருக்க (நீரின்)மீது தோன்றுகிற குமிழியையொத்த (என்) யாக்கையை விடுவதல்லாமற் சீதையை விடுவது உண்டோ?

இரண்டு தோள்களையே பெற்ற மனிதர்க்கு அஞ்சி மாற்றாரான தேவர் காணச் சீதையைத் திருப்பிக்கொடுத்து நிலைத்த பழியைப் பெறுவதைக் காட்டிலும், அத்தேவர் காண நிலையாத இவ்வுடலைப் போரில் விட்டிட்டு நிலைத்துள்ள புகழுடம்பைப் பெற்றுப்போவதே இருபது தோள்படைத்த யான் செய்யத் தக்கதென்றான், இராவணன். இவ்விராவணன் கூறியபடியே இவன் பெயர், காதையாகி வழங்குதல் காண்க. *பௌலஸ்த்யவதம் என்று இந்த ராம சரிதத்துக்கு ஸ்ரீவான்மீகிபகவான் ஒரு பெயர் சூட்டியுள்ளார்: பேதைமை, புகழ் - ஆகுபெயர். பி-ம்:—[1]மைந்தா. [2]இரடோளுண்டால், திண்டோளுண்டாய். (3082)

---

*காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் - ஸீதாயாஶ்சரிதம் மஹத்- பௌலஸ்த்யவத மித்யேவ-சகாரசரிதவ்ரத: (பாலகாண்டம், 4,7.)

10. வென்றில னென்ற போதும் வேதமுள் ளளவு மியானும்
[1]நின்றுள னன்றே மற்றவ் விராமன்பேர் நிற்கு மாயின்
பொன்றுத லொரு[2]கா லத்துந் தவிருமோ பொதுமைத் தன்றே
இன்றுளார் நாளை மாள்வர் புகழுக்கு மிறுதி யுண்டோ.

(இ - ள்.) (நான்) வெற்றிபெற்றிலே(னாகி மாற்றானாற் கொல்லப்பட்டே)னென்ற காலத்தும், மாற்றானை அவ்விராமனுடைய (வீரப்)பேர் நிலைத்து நிற்குமாயின், வேதமுள்ள அளவும் யானும் (பெயரினால்) நிலைபெற்றுள்ளே னுவனன்றோ? (எந்தக்காலத்திலாவது) ஒருகாலத்தில் இறப்பு என்பது நீங்காது வருவதேயன்றோ?(இறப்பென்பது, பிறந்தபிராணிகட்கெல்லாம்)பொதுமையானதன்றோ? இன்றுஉள்ளவர் நாளைக்கு [வருங்காலத்தில்] இறந்தே தீர்வர்: புகழுக்கும் அழிவுண்டாகுமோ? (எ - று.)—கீழ்ச்செய்யுளிற் கூறிய கருத்தையே இங்கு விவரித்துக் கூறுகின்றனன் இராவணனென்க இங்குக் கூறும்பேச்சு புகழையே சிறப்புறக் கருதுபவன் இராவணன் என்றுதோன்றுமாறு இருப்பினும் "யாக்கையை விடுவதல்லாற் சீதையை விடுவதுண்டோ" என்பதைக் கூர்ந்துநோக்கின் இவன்பேச்சு காதற்பித்தையே அடிப்படையாக்கொண்டமை விளக்கமுறும். பி-ம்:—[1]நின்றவன். [2]காலத்தும்.

11. விட்டனன் [1]சீதை தன்னை [2]யென்றலும் விண்ணோர் நண்ணிக்
கட்டுவ தல்லா [3]லென்னை [4]யானெனக் கருது வாரோ
பட்டன னென்ற போது மெளிமையிற் படுகி லேன்யான்
[5]எட்டினோ டிரண்டு மான திசைகளை யெறிந்து [6]வென்றேன்.

(இ - ள்.) (நான்) சீதையை (இராமனிடம்) விட்டேனென்றவுடனே, (பின்பு) தேவர்கள் என்னைக் கிட்டிக் கட்டிக்கொண்டு போவதல்லாமல், நான் [இராவணன்] என்று எண்ணி அஞ்சிநிற்பாரோ? பத்துத் திசைகளை(ப் படைக்கலங்களை) எறிந்துவென்றவனாகிய நான் இறந்தேனே யென்றாலும் எளிமையோடு இறக்கமாட்டேன்;[எனது பராக்கிரமத்தைக்காட்டி வீரச்சாவு சாவேன்;] (எ - று.)—பி - ம்:—[1]சனகிதன்னை. [2]என்னலும். [3]பின்னைப். [4]பொருள். [5]எட்டுமோர். [6]கொண்டேன். (3084)

12. சொல்லியென்பலவும் நீநின் னிருக்கையைத்தொடர்ந்துதோளிற்
புல்லிய பகழி வாங்கிப் போர்த்தொழிற் சிரமம் போக்கி
எல்லியுங் கழித்தி யென்னா வெழுந்தன [1]னெழுந்து பேழ்வாய்
வல்லிய [2]முனிந்தா லன்னான் வருகதேர் [3]விரைவி னென்றான்.

(இ-ள்.) பலசொல்லி யென்? நீ உன்னுடைய இருப்பிடத்தைச் சார்ந்து, தோளிலேபடிந்த அம்புகளைப் பேர்த்தெடுத்து, போர்த்தொழிலால் நேர்ந்த இளைப்பை நீக்கி, இரவையுங்கழிப்பாய் என்று சொல்லி எழுந்தனன்: எழுந்து, பிளந்தவாயையுடையபுலி கோபித்தால் (அதை) ஒத்தவனான இராவணன், 'தேர் விரைவில் வரட்டும்' என்றுசொன்னான்; (எ - று.)—பி-ம்:—[1]எயிற்றுப். [2]முனிந்தவன்னான், முனிந்ததென்ன. [3]தருக, வருக. (3085)

13.—இந்திரசித்து இராவணனைத் தடுத்துத் தானேபொருமாறு செல்ல இரதமேறுதல்.

[1]எழுந்தவன் றன்னை நோக்கி யிணையடி யிறைஞ்சி யெந்தாய்
ஒழிந்தருள் சீற்றம் சொன்ன வுறுதியைப் பொறுத்தி [2]யான்போய்க்
கழிந்தன னென்ற [3]பின்னர் [4]நல்லவா காண்டி யென்று
[5]மொழிந்தனன் தெய்வத் தேர்மே லேறினன் முடிய லுற்றான்.

(இ - ள்.) எழுந்த இராவணனைப் பார்த்து, இணையடிகளிலே வணங்கி, 'எந்தாய்! சீற்றம் ஒழிந்தருள்: (உனக்கு நான்) சொன்ன உறுதிமொழியைப் பற்றி (என்மீது சினங்கொள்ளாது) பொறுத்தருள்வாய்: யான் (போர்க்குச்) சென்று இறந்தேனென்ற பின்பு (நான் சொல்லியவற்றை) நல்லனவாகக் காண்பாய்' என்று கூறியவனாய், இறத்தற்கு நிச்சயங்கொண்டவனான இந்திரசித்து, தெய்வத்தேரின்மீது ஏறினான்; (எ-று.)—"அழிவிலாத்தேர்மேலன்றிப் போர்த்தொழில் புரியலாகாது" எனக் கீழ் நிகும்பிலையாகப் படலத்து வந்திருப்பது காண்க. அத்தேர் அச்சுவேறு ஆணிவேறு ஆக ஆக்கப்பட்டதன்றிக் கணைகளால் அழிக்க முடியாமற் போனமை காண்க. பி - ம்:—[1]எழுந்தனன். [2]யானே. [3]போதும், பின்னும். [4]நல்லவாக், நாவலா. [5]மொழிந்துதன். (3086)

14.—தானம்முதலியன செய்து, இந்திரசித்து இராவணனை நோக்கிக் கண்ணீர்பெருக்கிச் செல்லுதல்.

படைக்கல விஞ்சை [1]மற்றுப் படைத்தன பலவுந் தன்பால்,
அடைக்கல[2]மென்ன வீச னளித்தன [3]தேர்மே லாக்கிக், கொடைத்
தொழில் வேட்டோர்க் கெல்லாங் [4]கொடுத்தனன் கொடியோன்
றன்னைக்,கடைக்கணால் நோக்கிநோக்கி[5]யிருகணீர் கலுழப்போனான்.

(இ-ள்.) பின்பு (தான் தேறிய) படைக்கலவிச்சையிலே படைத்தன்ன பலவகைப்படைக்கலங்களையும், தன்னிடத்து அடைக்கலம் போலச் சிவபிரானளித்துள்ள படைக்கலங்களையும், தேர்மேலே வைத்து, கொடைத்தொழிலிலே விரும்பினவர்க்கெல்லாம் (விரும்பியன எல்லாம்) கொடுத்து, (பின்பு) கொடியோனான இராவணனைக் கடைக்கண்ணினாற் பார்த்துப் பார்த்து இரு கண்களினின்றும் கண்ணீர்பெருகப் புறப்பட்டுச் சென்றான், (இந்திரசித்து);

இனி, இராவணனைப் பார்க்கப்போகிறதில்லை யென்ற கருத்தினாலும், 'தன் நன்மொழிப்படி நடவாது இவன் நாசமடையப் போகிறானே' என்ற கருத்தினாலும், கொடியோனைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் பெருக்கினன், இந்திரசித்து. பி-ம்:—[1]மற்றும். [2]ஆகத்தேவர். [3]எல்லாம்வாங்கி. [5]கொடுத்தபின். [6]பிரிவினிற் கழிந்து, பிரிவினாற் கலுழ்ந்து. (3087)

15.—இலங்கைவீரர் மனமழிந்து தொடர, இந்திரசித்து அவர்களை இராவணனைக் காக்குமாறு கூறித் தேற்றிச் செல்லுதல்.

இலங்கையி னிருத ரெல்லா [1]மொழுந்தனர் விரைவி னெய்தி
விலங்கலைத் [2]தோள நின்னைப் பிரிகலம் விளிது [3]மென்ன

வலங்கொடு தொடர்ந்தார் தம்மை மன்னனைக் காமின் யாதும்
கலங்கலிர் [4]இன்றே சென்று மனித்தரைக் [5]கடப்ப லென்றான்.

(இ-ள்) இலங்கையிலுள்ள அரக்கரெல்லாம், எழுந்து விரைவிற்கிட்டி, 'பலைபோன்ற அழகிய தோளையுடையவனே! உன்னைப் பிரியோம்: இறப்போம்' என்றுசொல்லித் தாமே வலியத் தொடர்ந்தார்: தொடர்ந்தவரான அவ்வரக்கரைநோக்கி, 'மன்னவனைக் காத்திடும்: சிறிதும் கலங்காதீர்: இன்றேபோய்மனிதரை வெல்வேன்' என்று கூறினான், (அவ்விந்திரசித்து); (எ - று.)—வலங்கொடு தொடர்ந்தார் என்பதற்கு-தம்சேனைவலிமைமுதலியன கொண்டு போரத்தொடர்ந்தாரென்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]அழிந்தனர். [2]தோளாயுன்னை. [3]என்ற, என்று. [4]இனிமேற். [5]கடப்பேன். ()

16.—அரக்கமகளிர் அஞ்சிநோக்க, இந்திரசித்து போர்க்களஞ் செல்லுதல்.

வணங்குவார் [1]வாழ்த்து வார்தன் வடிவினை நோக்கித் தம்வாய்
உணங்குவா ருயிர்ப்பா ருள்ள முருகுவார் [2]வெருவ லுற்ற
கணங்குழை மகளி ரீண்டி யிரைத்தவர் கடைக்க ணென்னும்
[3]அணங்குடை நெடுவேல் பாயு மமர்கடந் தரிதிற் போனான்.

(இ - ள்.) அஞ்சுதல் பொருந்திய திரண்ட குழையென்னுங் காதணியையணிந்த மகளிர், நெருங்கி, வணங்குபவரும் வாழ்த்துபவரும் இந்திரசித்தின் வடிவத்தைப் பார்த்துத் தம்வாய் உலரப் பெறுபவரும் பெருமூச்செறிபவரும் மனமுருகுபவருமாகி(த் துயரத்தினால்) கதறுகின்றவரின் கடைக்கண்ணென்கிற வருத்துந்தன்மையமைந்த நெடியவேற்படை பாயப்பெற்ற போர்க்களத்தைக் கடந்து, (இந்திரசித்து போர்க்களம் நோக்கி) அரிதிற் சென்றான்;

தனக்கு மரணம் நேருமென்று மனத்திற் பட்டுள்ளதனால் சிரமப்பட்டுத் தன்மீது காதலுள்ள மகளிர் அச்சத்தோடு விரும்பி நோக்குகையிற் சென்றானென்பார் 'வெருவலுற்ற மகளிர் கடைக்கணென்னும் வேல்பாயும் அமர்கடந்து அரிதிற்சென்றான்' என்றார்: வேல்பாய்வதனால் அவ்விடமே அமர்க்களமாயிற்று. மகளிர் இரைத்தவரின் கடைக்கணெனக பி-ம்:-[1]வாழ்த்துவார்கள். [2]வெருவலுற்றுக், ஆகிமேயும். [3]அணங்குறை, அணங்குலை. (3089)

17 — இலக்குமணன் இந்திரசித்தின் தேரொலியைக்கேட்டல்.

ஏயின [1]னின்ன னாக விலக்குவ னெடுத்த வில்லான்
சேயிரு விசும்பை நோக்கி வீடண நீயோ னப்பால்
போயின னாதல் [2]வேண்டும் புரிந்தில னென்று மென்பான்
ஆயிரம் புரவி பூண்ட தேரின்பே ரரவங் [3]கேட்டான்.

(இ-ள்.) (விசும்பின்வழியாகச்)சென்ற இந்திரசித்து இவ்வாறு மீண்டு [illegible] வறியவனைப் போர்க்களம் நோக்கிவருபவனாக விருக்க,— [illegible] வான்,—(எய்யச்சித்தனாகிக்)கையிலெடுத்த வில்லையுடையவனை [illegible] யர்ந்து [illegible] ஆகாயத்தைப்பார்த்து, (இந்திரசித்தின் செயலொன்றையும் காணாமையால் விபீடணனை நோக்கி),

'விபீடணா! (விண்ணிற்சென்ற) கொடுங்குணமுடையவனான இந்திரசித்து யாதொருசெயலையும் செய்திலனாதலால், (வானத்தை விட்டு) அப்புறம்போயினவனாக வேண்டும்' என்று சொல்பவனாக, (அப்போது) ஆயிரங்குதிரைகள் பூட்டிய தேரின் மிக்க ஒலியைக் கேட்டான்; (எ - று.)

நிகும்பிலையாகப்படலத்தின் இறுதிச் செய்யுளில் "விசும்பிடைக்கரந்தானென்னும் வார்த்தையை நிறுத்திப்போனான்" என்று கூறிய கவி, இங்கு 'ஏயினன்' என்று அதனோடு தொடர்பு படுத்திக் கூறுகின்றார். அங்ஙனம் இந்திரசித்து விசும்பில்மறைந்து இராவணனிடம்வந்து அவனுக்குப் புத்திமதி கூறியும் அவ்விராவணன் இசையாது சினங்கொளளவே, அவ்விந்திரசித்து அவனைத் தெளிவித்துப் போர்க்கோலங்கொண்டு போர்க்களம் நோக்கி ஆயிரம்புரவிபூண்ட தேரின்மீது வர, அவ்வரவம், வானத்தில் இந்திரசித்தின்செயல் யாதும் இல்லாமைகண்டு விபீடணனோடு அது குறித்துப் பேசிக்கொண்டிருந்த இலக்குமணனுடைய செவியிலே பட்டதென்க. ஒன்றும் புரிந்திலாமையாகிய ஏதுவை முன்னிட்டு அப்பாற்போயினனாதல்வேண்டுமென்று இலட்சுமணன் அநுமானித்ததனால், இது-அநுமானாலங்காரம். பி-ம்:—[1] இன்னது. [2] ஒன்றும் புரிந்திலனாகும். [3] கொண்டான். (3090)

வேறு.

18.—இந்திரசித்தின் இரதம் வருவதை, இதுவும்-அடுத்த கவியும் தெரிவிக்கும்.

குன்றிடை நெரிதர வடவரையின் குவடுருள் குவதென [1] முடுகு தோறும்,பொன்றிணி கொடியின திடி [2] யுருமி [3] னதிர்குரன் [4] முரல்வது புனைமணியின்,[5] மின்றிரள் சுடரது கடல்பருகும் வடவனல் வெளியுற வருவதெனச், சென்றது திசைதிசை யுலகிரியத் திரிபுவனமுமுறு [6] தனியிரதம்.

(இ - ள்.) திரிபுவனத்திலும் சென்றதான ஒப்பற்ற (அந்த இந்திரசித்தின்) இரதம்,—பொன்தண்டத்தில் திண்ணியதாகப் பொருந்திய கொடியையுடையதும், விரைந்துவருந்தோறும் திரிகூடாசலத்தினிடம் நெரிந்திட மேருமலையின்உச்சி உருள்வதென்னுமாறு (உருண்டு) இடியேற்றின் குரல்போல அதிர்கின்ற ஓசையை யுண்டாக்குவதும், அலங்காரமாகப்பதித்த இரத்தினங்களால் மின்னலின் திரண்டசுடரை யுடையதுமாகி, கடலைப்பருகுகின்ற வடவைக்கனல் (அக்கடலினின்று) வெளியே பொருந்தவருவதென்று கருதுமாறு திசைதோறும் உலகு நிலைகெட்டோடச் சென்றது; (எ - று.)—குற்றெழுத்துப் பயின்றுள்ளதனால், இச்செய்யுள-குறுஞ்சீர்வண்ணம்: மேற்கவிகளிலும் இங்ஙனமே காண்க. மற்றும் சந்தச்செய்யுளாகவும் உள்ளது:-தந்தன தனதன தனதனன தனதன தனதன தனதனன எனச் சந்தக்குழிப்புக் காண்க. பி-ம்:-[1] முகடுதொறும். [2] உருமென். [3] பொாகிர். [4] முகர்வது. [5] மின்றிணிவிரிசுடர் கடலபருகும், மின்றிணிவிரிகடல் பருகுறுமவ். [6] திறல். (3091)

19. **கடன்மறு கிட [1] வுல குலையநெறிங் [2] கரியிரி தரவெதிர் கவிகுலமும், [3] குடர்மறு கிட [4] மலை குலைய [5] நிலங் குழியொடு மிழிபட பமி**

படரும், இட[6]மறு இயபொடி முடுகிடவு மிருளுன தெனவெழு[1]மிகலரவின், படமறுகிடவெதிர்[7]விரவியதவ் விருள்பக லுறவரு பகையிரதம்.

(இ - ள்.) அந்த இரவு பகல்போலாகுமாறு (பேரொளியுடன்) வருகின்ற பகைவனுடைய இரதம்,-எதிர்நிற்கின்ற வானரர்கூட்டமும் குடல் மறுகிடவும், நெடிய (திக்) கசங்கள் நிலைகெட்டோடவும், அஷ்டகுலாசலங்களும் குலுங்கவும், கடல் கலங்கவும், உலகு வருந்தவும், நிலம் குழிவுபடுதலுடனே கீண்டிடவும், செல்லுகின்ற வழியாகிய இடம் தூள் தூளான புழுதி விரைந்து (வானத்துச்) செல்லவும், (அந்த இரவின் இருளுக்கு மேலும்) இருள் உள்ளதென்னுமாறு (விஷத்தைக் கக்கிக்கொண்டு) எழுகின்ற வலிய ஆதிசேஷனது படம் மறுகும்படி (லட்சுமணனுக்கு) எதிராகப் பொருந்தியது; (எ - று.)—தனதன தனதன தனதனன என்பதை இரட்டித்து இச்செய்யுட்குச் சந்தக் குழிப்புக் காண்க.

புழுதிபோய்விடவே பூமியின் கீழிருந்துதாங்குகின்ற ஆதிசேடனுடைய படம் மறுகுவதாயிற்றென்று **உயர்வுநவிற்சியணி** படக்கூறியவாறு. **பி-ம்:-**[1]உலகிடைய, நிலைகுலைய. [2]கதிர். [3]குடல். [4]நிலைகுலைய, மலையுலைய, உடல் குலைய. [5]நெடுங். [6]மறுகியபடி. [7]பரவியவண்பகலிருள்வருவன, விரவ விருள்பகலுறவருவன.

20.—இந்திரசித்துக்கும் இலட்சுமணனுக்கும் போர்நிகழ்தல்.

ஆர்த்தது நிருதர்த மனிக [1]முட னமரரும் வெருவினர் கவிகுலமும், வேர்த்தது வெருவலொ [2]டலம்வரலால் விடுகணை [3]சிதறினனடுதொழிலோன், தீர்த்தனு மவனெதிர் முடுகிநெடுந் திசை செவிடெறிதர விசைகெழுநின், போர்த்தொழில் புரிதலு [4]மிலகு கடும் புகையொடு சிகையனல் பொதுளியதால்.

(இ-ள்.) அரக்கரின்சேனை, (ஒருசேர) ஆரவாரித்தது; (அது கேட்டு) உடனே அமரர்களும் அஞ்சினர்: குரங்குகளின் கூட்டமும், அச்சத்துடனே மனச்சுழற்சி தோன்றியதால் (உடல்) வேர்க்கலாயிற்று; (பின்பு), கொல்லுந் தொழிலையுடையவனான இந்திரசித்து, (வில்) வெளிவிடுகின்ற அம்பைச் சிதறினான்: பரிசுத்த மூர்த்தியாகிய இலட்சுமணனும், அந்த இந்திரசித்துக்கு எதிரே விரைந்து நெடியதிசை செவிடு(படும்படி நாணியை) எறிய(ப் பிறகு) விரைவுபொருந்திய வலிய போர்த்தொழிலைப் புரிதலும், உலகிற் கொடிய பகையுடனே சுவாலையோடுகூடிய நெருப்பு நெருங்கிற்று;

நிருதசேனை ஆரவாரிக்கவும் அதுகேட்டு அமர ரஞ்சினராக 'இந்திரசித்து போர்க்கு வந்திட்டானே! என்னசெய்திடுவானோ?' என்று கருதுவதனால், மனச்சுழற்சியும் அச்சமும் மனத்துத் தோன்ற வானரங்கள் உடல் வேர்த்தனவென்க. இலக்குமணனெதிரம்புவிடவே, இருவர்கணைகளாலு முண்டாகிய நெருப்பு புகையுடன் நிறைந்த தாயிற்று. **பி-ம்:—**[1]உடன்றமரரும். [2]அலம்வரலும். [3]சிந்தினன். [4]உலகநெடும். (3093)

21.—வீடணன் 'இப்போது இந்திரசித்தை விட்டிட்டால் பின் வெல்லல் அரிது' என, இலட்சுமணன் கடுங்கணை விடல்.

வீடண னமலனை விறல்கெழுபோர் விடலையை யினியிடை விட லுளதேல், சூடலை துறுமலர் வாகையெனத் தொழுதன [1]அவ்வளவி லழகனுமக், கோடணை வரிசிலை யுலகுலையக் குலவரை பிதிர்பட [2]நில வரையில், சேடனும் வெருவுற வுருமுறழ்தின் தெறுகணை முறைமுறை [3]சிதறினனால்.

(இ-ள்.) குற்றமற்றவனும் வலிமைபொருந்திய போரில்வல்லவனுமான இலட்சுமணனை நோக்கி, வீடணன், 'இனி(போராது) இடைவிடல் ஏற்படுமாயின், நெருங்கிய வாகைமலர்மாலையைச் சூடமாட்டாய் [வெற்றிபெறமாட்டாய்]' என்று தொழுதுகூறினன்; அவ்வளவிலே அழகியவனான இலட்சுமணனும்,—அந்தப் பேரொலி செய்துள்ள கட்டமைந்த வில்லை, உலகு வருந்தவும் குலமலைகளும் பொடிபடவும் பூமியின் கீழெல்லையிலுள்ள ஆதிசேடனும் அச்சமடையவும் இடியையொத்த வலிய அழிக்கவல்ல அம்புகளை முறை முறையே தூவினன்; (எ - று.)—வாகைமலர்மாலை - பகைவென்றோர் சூடுவது. இலங்கையின் மேற்றிசைவாயிலைச் சேர்ந்த இடமாகி நிகும்பிலையென்கிற பத்திரகாளியினது கோயிலாகிய ஆலமரத்தடியிலே ஹோமத்தை முடித்திடின் இந்திரசித்தைப் பின்வெல்வது அரிது என வீடணனுரைத்ததாக முதனூலிற் கூறியது, இங்குக் காணத்தக்கது. கோடணை-கோஷணா என்ற வடசொல் திரிந்துவந்தது. பி - ம்:—[1]அவ்வளவு, உரைசெய. [2]நில வரையுஞ். [3]சிதறிடலும். (3094)

22.—இனி ஐந்துகவிகள்-இந்திரசித்துக்கும் இலட்சுமணனுக்கும் கைகலந்த போர்நிகழ்தலைக் கூறும்.

[1]ஆயிர வளவின [2]வயின்முகவா யடுகணை யவன்விட விவன் [3]விடவத், தீயினு மெரிவன வுயிர்பருகச் சிதறின [4]கவிகளோ டின நிருதர், போயின [5]பேயின திசைதிறையப் புரள்பவர் முடிவிலர் பொருதிறலோர், [6]எயின ரொருவரை யொருவர்குறித் தெரிகணை [7]யிரு மழை [8]பொழிவனபோல்.

(இ-ள்.) ஆயிரக்கணக்கான கூரியமுனை பொருந்திய கொல்லவல்ல அம்புகளை அந்த இலட்சுமணன் பிரயோகிக்க, இந்த இந்திரசித்தும் (எதிரே) பிரயோகிக்கவே, அந்தத் தீயைக்காட்டிலும் (கடுமையாக) எரிவனவான (இருவரின்) அம்புகளும் உயிர்பருகுவதனால், சிதறினவானரர்களுடனே கூட்டமாயுள்ள அரக்கர்களும், ஓடிச் சென்ற திக்குக்களிலெல்லாம் நிறையப் புரண்டு வீழ்பவர் அளவில்லாதவராயினர்; போர்செய்கின்ற வல்லமையுடைய அவ்விருவரும்,—எரிகின்ற கணைகளை, பெரிய இரண்டு மேகங்கள் சொரிவனபோல ஒருவரையொருவர் இலக்காகவைத்துச் சிந்தினார்கள்; (எ - று.) பி-ம்:—[1]ஆயினவளவையின். [2]அனல். [3]விடலும். [4]கவிகளோடினர். [5]திசைதிசையனல். [6]ஏயின. [7]சொரிவன. [8]இருமழைபோல். (3095)

23. *[1]அற்றன வளைவிழி நிருதன்வழங் கடுகணை யிடையிடை [2]யடலரியின், கொற்றவன் விடுகணை முடுகியவ னுடல் [3]போழ*

குருதிகள் பருகினகொண்டு, உற்றன ஒளிகிளர் கவசநுழைந் துறு கில தெறுகில வனுமனுடல், புற்றிடை யரவென நுழைய நெடும் பொருசர [4]மவனவை யுணர்கிலனால்.

(இ-ள்.) நெருப்புப் புறப்படுகின்ற கண்களையுடைய இந்திரசித்து விடுத்த கொல்லுங் கணைகள் இடையிடையே யற்றனவாக, வலிய சிங்கம்போன்ற வெற்றியையுடையவனான இலக்குவன் விட்ட கணைகள் விரைந்து அந்த இந்திரசித்தினுடைய உடலில் நிறைந்த இரத்தங்களைப் பருகினவாய்க் கொண்டு பொருந்தின; (பின்னர் இந்திரசித்து விடுத்த) நெடிய பொருகின்ற சரங்கள், ஒளிவிளங்குகின்ற (இலட்சுமணனுடைய) கவசத்திலே நுழைந்து பொருந்தில: (ஆகவே, இலட்சுமணனை) ஊறுபடுத்தவுமாட்டாவாயின: (ஆயினும்), அநுமனுடலிலே புற்றிடைஅரவு (நுழைவன) போல நுழைய, அவற்றை அவ்வநுமான் (வீராவேசங்கொண்டிருந்ததனால்) உணரவில்லை; (எ - று.)—அவனவையுணர்கிலன் - தன்னுடலிலே நுழைந்தசரங்களை அநுமான் இலட்சியஞ் செய்யவில்லை யென்பது கருத்து. பி-ம்:-[1] அற்றவன். [2] ஆரியவிளங், அரியினங். [3] பொதிர், பொழி [4] அவன்விட. (3096)

24 **ஆயிடை யிளையவன் [1]விடமனையா னவனிடு கவசமு மழிவுபடத், தூயின னயின்முக விசிகநெடுந் [2]துளைபட [3]விழிகனல் சொரிய [4]முனிந்து, [5]ஏயின நிருதன தெரிகணைதா னிடனில படுவன விடையிடைவந்து, ஓய்வுறு வனவது தெரிவுறலா லூரறின ரிமையவ ருவகையினால்.**

(இ - ள்) அப்போது [அநுமானுடலில் நுழையும்படி இந்திரசித்து சரங்களைத் தூவினபோது], இளையபெருமாள் விஷத்தையொத்தவனாய் [பெருஞ்சினங்கொண்டு], அந்த இந்திரசித்து தரித்திருந்த கவசமும் அழிவுபடக் கூரியமுகத்தையுடைய அம்புகளைத் தூவினான்; (அந்த அம்புகளால் தன்னுடல்) பெருந்தொளைபட்டதனால், விழியினின்று அனல்புறப்படச் சினங்கொண்டு ஏவின இந்திரசித்தினுடைய எரிகின்ற கணைகள், (குறித்த) இடத்திலே படுதலில்லாதனவாகி இடையிடையே வந்து தளர்வுறுவன; அதனைத்தெரிதலால், இமையவர் உவகையினால் ஆரவாரித்தனர்; (எ - று.)—பி-ம்:—[1] விடநினைவான். [2] திரள். [3] வழிபுனல், விழியனல். [4] முகந்து. [5] ஏயினன். (3097)

25. **வில்லினின் வலி[1]தர லரிதெனலால் வெயிலினு [2]மனலுமி ழயில்விரைவில், செல்லென [3]மிடல்கொடு கடவினன்மற் றதுதிசை முகன்மக னுதவியதால், [4]எல்லினும் வெளிபட [5]வெதிர்வது கண் டிளையவ னெழுவகை [6]முனிவர்கள்தம், சொல்லினும் வலியதொர் சுடுகணையால் [7]நடுவிரு துணிபட வுரறினனால்.**

(இ - ள்.) (தன்) வில்லின்வலிமை யோங்காதது கண்டு, இனி வில்லினுடைய வலியைக் காட்டுகல் முடியாதென்ற கருத்துக் கொண்டதனால், வெயிலைக்காட்டிலும் (வெப்பமான) அனலையுமிழ் கின்ற அயிற்படையை 'விரைவிலே செல்வாய்' என்று வலிமை கொண்டு செலுத்தினான் (இந்திரசித்து): அது பிரமதேவனுடைய மகனான பரமசிவன் உதவியதாதலால் பகற்பொழுதினும் விளக்க

முண்டாக எதிர்த்து வருவதுகண்டு, இளையபெருமாள், எழுவகை முனிவர்களின் சாபச் சொல்லினும் வலியதான ஒரு சுடுகணை (எய்ய அக்கணை)யினால் (அந்த அயில்) நடுவிலே இரண்டு துண்டுபடவே (உவகையால்) முழங்கினான்; (எ - று.)—எழுவகையிருடிகள்-ஓம் பூ: முதலிய ஏழுவியாஹ்ருதிகட்கு உரியரான அத்திரி ப்ருகு குத்ஸர் வசிஷ்டர் கௌதமர் காச்யபர் ஆங்கிரஸர் என்ற இவர். மற்று-வினைமாற்று. ஆல்கள் - அசை. பி - ம்:—[1] தரவருமையினால். [2] மிளிர்வதொரயில். [3] முடுகினனனையதுமுற்றிசைமுகன்மகன் முதல். [4] எல்லியை. [5] வருவதுகண்டு. [6] முனிவரர்தம், முனிவர்தாம். [7] உடலிருதுணிபடவுதவினால். (3098)

26. ஆணியின் [1] நிலையென விசிக [2] நுழைந் தாயிர முடல்புக [3] வழிபடுசெஞ் சோணித நிலமுற வுலறிடவுந் தொடுகணை [4] விடுவன மிடல்கெழுதிண், பாணிகள் கடுகின முடுகிடலும் பகலவன் மருமக [5] னடு[6] கணையின், [7] தூணியை யுருமுறழ் பகழிகளால் துணிபட முறைமுறை சிதறினனால்.

(இ - ள்.) ஆணிவந்து நிற்பதுபோல (இளையவனேவிய) அம்புகள் ஆயிரமுகமாக நுழைந்து உடலிலே புக்கனவாக, (அங்கிருந்து) பெருக்கெடுத்த செந்நிறமுள்ள இரத்தம் நிலத்திலே பொருந்த (உடல்) வற்றவும், தொடுக்கும் அம்புகளை விடுவனவாக விளங்குகின்ற (இந்திரசித்தின்) வலிய கைகள் மிகவும் விரைவு கொண்டு சென்றவளவில், சூரியனுடைய குலத்தோன்றலாகிய இலட்சுமணன், (அவ்விந்திரசித்தின்) அடுகணை நிறைந்த தூணீரத்தை இடியையொத்த அம்புகளினால் சிதறும்படி முறை முறையே துண்டுபடுத்தினான்; (எ - று.)—துணிபடச் சிதறினன்=சிதறத் துணிபடுத்தான் என விகுதிபிரித்துக்கூட்டல். பி-ம்:—[1] நிலையவன். [2] நுழைத்து. [3] வடிபடுசெங், அழிவுபடும். [4] தொடுவன, தொகுவன. [5] எரி [6] கணைவன். [7] தூணியின். (3099)

27.—இந்திரசித்தின் தேர்ப்பாகனை இலக்குமணன் துணித்துவீழ்த்துதல்.

தேருள தெனினிவன் வலி[1] தொலையா னெனு[2] மது [3] தெரிவுற வுணருறுவான், [4] போருறு புரவிகள் படுகில[5] வால் [6] புனைபிணி[7] துணிகில [8] பொருகணையால், சீரிது பெரி[9] திதனிலைமையெனத் தெரிபவ னொரு[10] சுடு தெறுகணையால், சாரதி மலைபுரை தலையைநெடுந் தரையிடை யிடுதலும் [11] திசைதிரிய.

இதுவும் அடுத்தகவியும் - குளகம்.

(இ - ள்.) 'தேர் உள்ளதாயின், இவன் வலிதொலையமாட்டான்' என்கிற அதனை (மனத்திற்பட) நன்கு உணர்பவனான இலட்சுமணன், 'பொருகின்ற கணையால் போரில் அருமையாகச் செல்கின்ற குதிரைகள் இறந்துபட்டில; (அன்றியும்) புனைந்துள்ள கட்டும், துணிவுபட்டில: இந்தத் தேரின்நிலை மிகவும் சீர்மையுற்றதாகும்' என்று ஆராய்பவனாய், (இத்தேரைப் பயனற்றதாக்க இதுவே உபாயம் என்று எண்ணி), அழிக்கவல்ல ஒருசுடுகணையினால் (அத்தேரின்) சாரதியினுடைய மலையையொத்த தலையை(க்

கொய்து) நெடியதரையிலே தள்ளுதலும், (தேரின்) நிலை மாறுபட;—(எ - று.)—'தேர்போன்றது' என அடுத்த கவியோடு முடியும்.

நிகும்பிலையாகப் படலத்தினிறுதிச் செய்யுளில் "அழிவிலாத் தேர்கொடன்றிப் போர்த்தொழில் புரியலாகாது" என்று உன்னி இந்திரசித்து விசும்பிடைப் பாய்ந்து சென்றதாக வந்துள்ளதனுலும், இங்கு "தேருளதெனினிவன்வலி தொலையான்" என்று இலட்சுமணன் பேச்சாகவருவதாலும், பரிகள் படுதலதாகி அழியாத தெய்வதத்தேரில் ஏறிப் போருக்கு இப்போது இந்திரசித்து வந்துள்ளானென்பது பெறப்படும். இவன் வில்லும் அழியாத தென்பதும் மேல் 36-ஆஞ் செய்யுளில் வெளியாம். புணைபிணி-தேருறுப்புகள் ஒன்றோடொன்று பொருந்தப்பட்டுள்ள பொருத்து எனினுமாம். பி - ம்:—[1]தொலையாது. [2]இது. [3]தெரிகுறவுணர்குறுவான். [4]போரரு, போரது. [5]திண். [6]தன்பிணி. [7]துறுகில. [8]அது. [9]அதன். [10]தெறுசுடு. [11]முறைதிரிய. (3100)

வேறு.

28.—பாகன் அழிந்த தேரின் நிலைமை.

[1]உய்வினை யொருவன் [2]தூண்டா துலத்தலின் தவத்தை தன்னி, ஐவினை நலிய நைவா னறிவிற்கு முவமை யாகி,மெய்வினை யமைந்த காமம் விற்கின்ற [3]விரகில் தோலாப், பொய்வினை மகளிர் [4]கற்பும் போன்றதப் பொலம்பொற் றிண்டேர்.

(இ - ள்.) அந்த அழகிய வலிய பொற்றேரானது,—உய்வினையுண்டாக்குகின்ற ஓராசான் (அருகேயிருந்து அதிவைத்) தூண்டாமல் அழிந்திட்டதனால், தவத்தைப்பொருந்தி (ஓசைஊறு முதலிய) ஐந்து புலன்களைக்கொண்ட ஐம்பொறிகள் நலிவதனால் நைபவனாகிய (மாணவகத்) தவசியின் அறிவிற்கும் உவமையாகப் பொருந்தி, மெய்ம்மைச் செயலமைந்தாற் போன்றுள்ள காமத்தை விற்கின்ற தந்திரத்திற் பின்வாங்காத பொய்ம்மைச்செயலையுடைய பொதுமகளிரின் கற்பையும் போன்றது; (எ - று.)

'உய்வினை...உலத்தலின்' என்பதற்கு - உய்வினையுண்டாக்குகின்ற ஒப்பற்றசாரதி தூண்டமுடியாதவனாய் அழிந்திட்டதனால் என்று கூறலுமாம். சாரதியற்றதனால் ஒருநிலைப்படாத தேருக்கு-தவத்தைத் தொடங்கிச் செய்தும் பஞ்சேந்திரியங்களை யடக்கமாட்டாதவனுடைய மனத்தையும், வேசியரின் கற்பையும் உவமைகூறினர். ஐவினை-சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்துபுலன்களையுடைய ஐம்பொறிக்குப் பண்புத்தொகையன்மொழி. பி-ம்:—[1]நைவினை. [2]தூண்டான். [3]விரைவிற்சோரப், வீரகிற்றோராம். [4]கற்பே. (3101)

29.—இந்திரசித்து தன்தேரைத் தானே தூண்டித் தன்னுடம்பிற் பொத்திய அம்புகளை யெடுத்துத் தூவுதல்.

துள்ளு [1]பாய் புரவித் தேரும் முறைமுறை தானே தூண்டி, அள்ளினன் பறிக்குந்தன்பே ராகமே யாவமாக, வள்ளன்மேலனுமன் றன்மேன் மற்றையோர் [2]மற்றிண் டோண்மேல்,உள்ளுறப் பகழி [3]தூவி யார்த்தன னெவரு முட்க.

(இ - ள்.) துள்ளுதலுடனே பாய்ந்துசெல்கின்ற குதிரைகள் பூட்டிய தேரையும் முறைமுறையாகத் தானேசெலுத்தி, தன்பெரிய

மார்பே அம்புப் புட்டிலாகக்கொண்டு, அள்ளிப்பிடுங்கிய (மார்பிற் பொத்திய) அம்புகளை இலட்சுமணன்மீதும் அநுமான்மீதும் மற்றையோரின் வலிய திண்ணிய தோளின்மீதும் எவரும்உட்க உள்ளேபாயும்படி தூவி யாரவாரித்தான், (இந்திரசித்து); (எ-று.)

அம்பறாத்தூணி துணிபட்டுப் போய்விட்டதனாலும் சாரதி இறந்துபட்டதனாலும், இந்திரசித்து தானே தேரைக் கடாவிய வண்ணம் தன்னுடலிற் பொத்தியிருந்த அம்புகளை யெடுத்துத் தூவின னென்பார், ஆகமே ஆவமாகப்பறித்தனன் அள்ளும் பகழி தூவி யார்த்தனன் என்றாரென்க. அம்பறாத்தூணியிற்போல இவனுடம்பில் அம்புகள் மிக்கிருந்ததனால், 'பேராகமே யாவமாக' என்றது. பி - ம்:—[1] வான். [2] மாத்திண். [3] தூண்டி. (3102)

30.—தேவதைகள் இந்திரசித்தின்திறனை வியந்து மலர்மாரி தூவுதல்.

வீரரென் பார்கட் கெல்லாம் [1]முன்னிற்கும் வீரர் வீரன், பேர ரென் பார்க [2]ளாகும் பெற்றியிற் பெற்றித் தாமே, சூரரென் றுரைக் கற் பாலார் அஞ்சும்போ துணர்விற் [3]சோரார், தீரரென்றமரர்[4]பேசிச் சிந்தினர் தெய்வப் பொற்பூ.

(இ - ள்.) '(இவன்) வீரரென்று சொல்லப்படுபவர்கட்குள் முதலில் நிற்கும் மகாவீரனுவன்: பேர்பெற்றவரென்னப்படுபவர்களிடத்து உண்டாகும் வீரத்தன்மையைப் போன்ற தன்மையை யுடையதோ (இவனுடைய வீரத்தன்மை)? [இவனுடைய வீரத்தன்மை எவ்வீரரிடத்தும் கண்டதில்லை யென்றபடி]; சாவுநேரும் போதும் (தமது) வீரவுணர்ச்சியிற் சோர்வுபடாமல் தைரியத்தோடு இருப்பவரே, சூரரென்று சொல்லத்தக்கார்' என்று தேவர்கள் சொல்லித் தெய்வத்தன்மையுள்ள பொற்பூவைச் சிதறினார்கள்; (எ-று.)—பி-ம்:—[1] இனிமற்றில். [2] ஆகாப், அல்லாற். [4] சோராத்திரன். [3] செப்பிச். (3013)

31.—இளையபெருமாளும் இந்திரசித்தின் ஆற்றலை வியத்தல்.

[1]எய்தவன் பகழி யெல்லாம் [2]பறித்திவ னென்மே லெய்யும், கைதடு மாறு அள்ள [3]மூயிரினங் கலங்கா யாக்கை, மொய்கணை கோடி கோடி மொய்க்கவு [4]மிளைப்பொன் றில்லான், ஐயனு மிவனோ டெஞ்சு மாண்டொழி [5]லாற்ற லென்றான்.

(இ - ள்.) 'இந்த இந்திரசித்து (நான்) எய்த வலிய அம்புகள் (தன்னுடலிற்பொத்த அந்த) அம்புகளையெல்லாம் பிடுங்கினவனாய், என்மேலேயே தொடுப்பான்; (தன்னுடலத்து அம்புகளைப்பிடுங்கும்போது தோன்றக்கூடிய நோவினால் பிடுங்கும்போதோ, அன்றி அவற்றை எய்யும்போதோ இவனது) கை நடுங்காமலேயிருக்கின்றது: இவன் யாக்கையில் இன்னும் உள்ளமும் உயிரும் கலங்கா; (யான் எய்த) நெருங்கிய அம்புகள் பலகோடிகள் (உடம்பிலே) மொய்த்துக் கொண்டிருக்கவும், (இவன்) சோர்வு சிறிதும் இல்லாதவனாக இருக்கிறான்; (இப்படி மகாவீரனாக இருத்தலால் இவனிறந்தால்), ஆண்மைத் தொழிலும் வல்லமையும் இவனுடனே

(இவ்வுலகத்தில்) ஒழிந்திடும்' என்று இலட்சுமணனும் (வியந்து) கூறினன்; (எ - று.)

'இவன் இறந்தபின், இவ்வாறான ஆண்தொழிலும் ஆற்றலும் வேறெங்குங் காணமுடியா' என்று அந்த இந்திரசித்தின் திறத்தை இலட்சுமணன் வியந்துகூறினனென்க. கைதடுமாறுதல்-அவ்வாறு பறித்து எய்வதற்குக் கைதடுமாறுவதில்லை: உள்ளமும் உயிருங்கலங்காவனினுமாம். ஐயன்-உயர்ந்தோன்! இலக்குமணன். பி-ம்:—[1]எய்தன. [2]பறித்தவன். [3]உயிர்நின்றுகலங்காது, உயிரின்றுங்கலங்காது, உயிரினங்கலங்காது. [4]முடிவின்றில்லான், மொய்ம்பின்றில்லென்று. [5]ஆற்ற. (3104)

32.—விபீடணன் இந்திரசித்தைப்பற்றிக் கூறுதல்.

தேரினைக் கடாவி [1]வானிற் செல்லினுஞ் செல்லுஞ் செய்யும்
போரினைக் கடந்து [2]மாயம் புணர்க்கினும் புணர்க்கும் [3]போயக்
காரினைக் [4]கடந்து வஞ்சங் கருதினுங் கருதும் காண்டி
வீரமெய் பகலி னல்லால் விளிகில னிருளின் [5]வெய்யோன்.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) இந்த (இந்திரசித்து), தேரினைத் தூண்டி வானத்திற் சென்றாலும் செல்வான்: (நேராகச்) செய்கின்ற போரை நிறுத்திவிட்டு மாயச்செயலை (இங்குத் தானே) செய்தாலும் செய்வான்; (இங்குநின்று) வெளிப்பட்டுப் போய் அந்தமேகமண்டலத்தைக் கடந்திருந்து வஞ்சனை செய்யக் கருதினாலும் கருதுவான்: வீரனே! (கருத்துடனே) காண்பாய்: கொடியவனான இந்திரசித்து பகற்பொழுதிலல்லாமல் (அரக்கருக்குவலிமைதரக்கூடிய) இருட்பொழுதில் இறந்திடான்; (இது) உண்மை: (எ-று.)—தேரினைக்கடாவி வானிற் செல்லுதல்முதலியன இந்திரசித்தின் செயலாதல், கீழ்க் கண்டனவே. பி-ம்:—[1]விண்மேற். [2]மாயை. [3]அம்பால். [4]கலந்து, கடந்தும். [5]வெல்வான். (3105)

33.—இலட்சுமணன் இப்பொழுதே வெல்வேனெனல்.

என்றெடுத் திலங்கை [1]வேந்தற் கிளையவ னியம்ப [2]வின்றே
பொன்றுவ தல்லா லப்பா லினியொரு போக்கு முண்டோ
சென்றுழிச் செல்லு மன்றே [3]தெறுகணை வலியில் [4]தீர்ந்தான்
வென்றியிப் போதே கோடுங் காணென [5]விளம்பு மெல்லை.

(இ - ள்.) என்று எடுத்துக்கூறிய இலங்காதிபதியான விபீடணனுக்கு, இளையபெருமாள் இயம்புமாறு, 'இப்போதே (இவன்) இறப்பதல்லாமல் அப்பால் (போவதற்கு) இனி ஒருபோக்கும் உண்டாகுமோ? (எனது) அழிக்குந்தன்மையுள்ள அம்பு (இவன்) சென்ற இடமெல்லாம் செல்லுமல்லவோ? (மேலும் இவன் தன்) வலிமையினின்று ஒழியப்பெற்றான்: இப்பொழுதே வெற்றியைப் பெறுவோம்: காண்' என்று சொல்லுமளவில்,—(எ-று.)—"உதித்தனனருக்கனுப்பால்" எனமேற்கவியோடுமுடியும். இயம்பவென்னே என்ற பாடத்துக்கு-சொல்லுமாறு யாது உள்ளது? என்க. பி-ம்:—[1]வேந்துக்கு. [2]இன்னே, ஒன்றே. [3]தெரி. [4]தீர்ந்தால். [5]விளம்பலுற்றான், விளம்பும்வேலை. (3106)

34.—சூரியனுதித்தல்.

செம்புனற் சோரிச் செக்கர் திசையுறச் [1]செறிகை யாலும்
[2]அம்பென வுற்ற கொற்றத் தாயிரங் கதிர்க ளாலும்
வெம்புபொற் றேரிற் றோன்றுஞ் [3]சிறப்பினு மரக்கன் [4]வெய்யோன்
உம்பரிற் [5]சென்றா னோடொத் துதித்தன [6]னருக்க னுப்பால்.

(இ - ள்.) செந்நீராகிய இரத்தத்தாற் செவ்வானம் திசைகளிற் பொருந்த நெருங்கித் தோன்றுகையாலும், அம்பென்று சொல்லுமாறு பொருந்திய வெற்றிபொருந்திய ஆயிரங்கிரணங்களைப் பெற்றிருத்தலாலும், வெம்புகின்ற பொற்றேரிலே தோன்றுகின்றசிறப்பினாலும், அரக்கனாகிய வெய்யோன் உம்பரிலே சென்றானையொத்து மேலிடத்துச் சூரியன் உதித்தான்; (எ - று.)—எதிர்நிலையணி: சிலேடையையங்கமாகக்கொண்டு வந்தது. பி-ம்:—[1]சேறலாலும். [2]அம்புடற்றுற்ற, அம்பெனத்துற்ற. [3]விசையினும், சிறப்பொடும். [4]மெய்யோடு. [5]செல்கின்றான். [6]அருக்கனப்பால். (3107)

35.—பொழுது விடிந்தது கண்டு, இந்திரசித்து ஒழிந்திடுவானென்று வானவர் மகிழ்தல்.

விடிந்தது [1]பொழுதும் வெய்யோன் விளங்கின னுலகை [2]மீதா
விடுஞ்சுடர் விளக்க மென்ன [3]வரக்கரி னிருளும் வீயக்
கொடுஞ்சின மாயச் செய்கை வலியொடுங் [4]குறைந்து குன்ற
முடிந்தன னரக்க னென்று [5]முழங்கின ரும்பர் முற்றும்.

(இ-ள்.) பொழுதும் விடிந்தது; சூரியன் உலகம் மீதாகவிளங்கினன்: சுடர்விடும் விளக்குகள்போலவே அரக்கர்போன்ற இருளும் ஒழிய, (அப்போது) வானவரெல்லாம், 'இந்திரசித்து, வலிமையுடனே கொடிய சினம் மாயச்செய்கை என்பன குறைந்து ஒழிய (இனி) முடிந்திட்டான்' என்று (மகிழ்ச்சியினால்) ஆரவாரித்தனர்;

மாயத்திற்கு இடங்கொடுக்கும் இராக்காலம் இருந்தவரையில் இந்த இந்திரசித்து 'என்ன மாயச்செயலைத் தொடங்கிச்செய்வானோ?' என்று அஞ்சியிருந்த தேவர், இரவுஒழியச் சூரியனுதித்திட்டதனால், 'இனி மாயஞ்செய்ய இடமில்லையாகையால், இவன் பொன்றுவது திண்ணம்' என்று கருதி, மகிழ்ச்சியினால் ஆரவாரித்தார்களென்பதாம். முடிந்தனன் - தெளிவினால் வந்த காலவழுவமைதி. பி-ம்:—[1]பொழுது. [2]மீதாய். [3]அரக்கராமிருளும். [4]கரைந்து. [5]முழங்கினது. (3108)

36.—சிவபெருமானீந்தசிலையும் தேரும் இருக்க இவன் அழியானென்று விபீடணன் எச்சரிக்கைசெய்தல்.

ஆழி யாத சூலத் [1]தண்ணறன் அருளி யீந்த
தேரழி யாத போதுஞ் சிலைகரத் திருந்த போதும்
போரழி யானிவ் வெய்யோன் புகழழி யாத பொற்றோள்
வீரவி தாவென் றான்வீ டணன்விளைவு தேர்வான்.

(இ-ள்.) 'புகழ் அழியப்பெருமலிருத்தற்குக் காரணமான அழகிய தோள்வலிமையையுடைய வீரனே! சூலப்படையை யேந்திய பெருமையிற் சிறந்தவனாகிய சிவபெருமான் தன்னருளோடு கொடுத்த இலை அழியாமலுள்ள தேர் அழியாதபோதும், (இந்தச்) சிலை கையிலிருந்தபோதும் இந்தக்கொடியவன் போரில் அழிந்திடான்; இது திண்ணம்' என்று கூறினான்: (யாவனெனில்),—விளைவதை யுணர்பவனாகிய விபீடணன்; (எ-று.)—ஆர் - சக்கரத்துள்ள இலை: ஆரழியாத சூலம் என்றே கூட்டி, ஆர்-இலையென்றலும் ஒன்று. பி - ம்:—[1] அந்தணன். (3109)

37.—எச்சரிக்கைபெற்ற இலட்சுமணன் இந்திரசித்தின் தேரைத் தன் வில்வல்லமையினால் அச்சுவேறு ஆணிவேறு ஆக்குதல்.

பச்சைவெம் புரவி வீயா [1]பல்லியச் சில்லி [2]பாரின்
நிச்சய [3]மற்று [4]நீங்கா வென்பது நினைந்து வில்லின்
விச்சையின் [5]கணவ னானான் [6]வின்மையால் [7]வயிர மிட்ட
அச்சினோ [8]டாழி வெவ்வே றாக்கினா [9]னாணி நீக்கி.

(இ - ள்.) வில்வித்தையில் தலைமைபெற்றவனான இலட்சுமணன், '(பாகனை யொழிக்கவும் தானே பாகுதொழிலைச் செய்து இவன் போரைச் சமாளிக்கிறான்; இந்தத் தேரிற்பூட்டிய) கொடிய பச்சைக் குதிரைகளோ இறந்துபடா: பல்லியம்போலொலிக்கின்ற சக்கரம் உடைந்துபோய்ப் பூமியில் நீங்கமாட்டா: திண்ணம்' என்பதை நினைந்து, (தன்) வில்லின்வல்லமையாற் கடையாணியைக் கழற்றி,வயிரத்தன்மை பொருந்திய அச்சுடனே சக்கரத்தை வெவ்வேறாகப் பிரித்திட்டான்; (எ - று.)—பல்லியம் - பலவகைவாச்சியம். பி - ம்:—[1] பல்லியற். [2] ப்பாருள், யாருள். [3] அன்றி. [4] நீங்காது. [5] கணவனான. [6] வன்மையால், வண்மையால். [7] வயிரமீட்ட. [8] ஆணி. [9] நாணே. (3110)

38.—குதிரை வலிமையற்றுச் சிதறுதல்.

மணிநெடுந் தேரின் [1]றட்டு விட்டது மறிதலோடும்
அணிநெடும் புரவி [2]யெல்லா மாற்றல வாய வன்றே
இணிநெடு மரமொன் றாழி வாண்மழுத் தாக்கச் சிந்திப்
[3]பணைநெடு முதலு [4]நீங்கப் [5]பாங்குறை பறவை [6]போல.

(இ - ள்.) அழகிய நெடிய தேரின் தட்டுஎன்றஉறுப்பு பூட்டு விட்டுப் போனதனால் அந்தத்தேர் அழிந்தவுடனே அழகிய நெடிய குதிரைகளெல்லாம்,—வலிய [தமக்குப்பற்றுக்கோடான] நெடிய மரமொன்று ஆழிபோற் கூரிய கோடாலிப்படை தாக்குவதனாற் பருத்தநீண்ட அடிப்பகுதியுமுட்பட ஒழிந்திட (ஆங்கு) இனிது உறைந்துவந்த பறவைகள் (சிதறுவன)போல, சிதறி வல்லமையற்றனவாயின; (எ-று.)

பற்றுக்கோடாயிருந்த பொருள் நீங்கவே, அதனை யொட்டிய பிராணிகள் சிதறுமென்க. விட்டு அது மறிதலோடும் என்று பிரிக்க. பி - ம்:—[1] கட்டு. [2] எல்லாமற்றவாறன. [3] பணையொடு. [4] நீங்கிப். [5] பாங்குறு: [6] போலும். (3111)

39.—இந்திரசித்து வானத்து மறைந்துபோதல்.

இழிந்ததேர்த் தட்டி னின்று [1]மங்குள்ள [2]படைக ளள்ளிப்
[3]பொழிந்தன னிளைய [4]வள்ளல் கணைகளால் துணித்துப் போக்க
[5]மொழிந்திரு வகையில் விண்ணை [6]முட்டினு னுலக மூன்றுங்
கிழிந்தன வென்ன வார்த்தான் கண்டில ரோசை கேட்டார்.

(இ - ள்.) அழிந்த தேரின் தட்டிலிருந்து அங்கிருந்த படைக் கலங்களையெல்லாம் (இந்திரசித்து) அள்ளிப் பொழிந்தனன்: (அவற்றை), இளையபெருமாள், (தம்) கணைகளால் துணித்துப் போக்க, சொல்லுஞ்சொல் முடிவதற்குமுன் [வெகுவிரைவில்] வானத்தில் மூண்டுநின்று 'உலக மூன்றும் கிழிந்திட்டன' என்று தோன்றும்படி ஆரவாரித்தான்: (அப்போது எவரும் அந்த இந்திர சித்தைக்) காணமாட்டாதவராகி, அவனாரவாரத்தை மாத்திரம் கேட்டார்கள்; (எ - று.)—பி - ம்:—[1]ஆங்குள்ள, வரங்களிற். [2]படையை. [3]பொழிந்தவை. [4]வீரன். [5]மொழிந்ததோரளவில். [6]மூட்டினன், முட்டினது. (3112)

40.—இந்திரசித்து பொழிந்த கல்மழையால் வானரவீரர் மடிந்து விழுதல்.

மல்லின்மா மாரி யன்ன தோளினன் மழையின் [1]வாய்ந்த
கல்லின்மா மாரி பெற்ற வரத்தினற் சொரியுங் காலைச்
செல்லும்வான் [2]திசைக [3]ளோரார் சிரத்தினே [4]டுடல்கல் சிந்தப்
புல்லினர் நிலத்தை [5]நின்ற வானர வீரர் [6]போகார்.

(இ - ள்.) பெரியமழையை யொத்தவனாகி [கறுத்து] வலிமை கொண்ட தோளையுடையவனான இந்திரசித்து, (படைக்கலமில்லா மையினால்) மழையை யொத்துப்பொருந்திய பெரிய கல்மழையை(த் தான்) பெற்றுள்ள வரத்தினாற்பொழியும்போது,-போகாதுநின்ற வானர வீரர், (அப்பாற்) போகத்தக்க பெரிய திசைகளை அறிய மாட்டாதவராய், சிரத்தினோடு உடம்புகள் வீழ நிலத்தைத் தழுவிக் கிடந்தார்கள்; (எ - று.)—பி-ம்:—[1]வாய்த்த. [2]திசையுள். [3]ஓராச். [4]உடலஞ்சிந்திப். [5]நின்று. [6]போல்வார். (3113)

41.—இந்திரசித்து வானத்துமறைந்து கல்மழைபொழியவே, இளையபெருமாள் திசைகளெங்கும் வாளியேவுதல்.

[1]காண்கிலன் கல்லின் மாரி யல்லது காளை வீரன்
சேண்கலந் தொளித்து நின்ற [2]செய்கையால் திசைக ளெங்கும்
மாண்கலந் [3]தளந்த மாயன் வடிவென முழுதும் [4]வௌவ
ஏண்கலந் தமைந்த வாளி யேவினு னிடைவி டாமல்.

(இ - ள்.) வானத்திலே ஒன்றுபட்டு (இந்திரசித்து தன்னை) மறைத்துக்கொண்டுநின்ற தன்மையினாலே, காளைபோன்ற வீரனான இலட்சுமணன், கல்மாரியல்லது (வேறொன்றைக்) காணமாட்டாதவனாய், பெருமைபெற்றுத் திசைகளெங்கும் அளந்த (திருவிக்கிரமனான) திருமாலின் வடிவுபோல(த் திசைகள்) முழுவதையும் கவரும்படி பெருமைபெற்றமைந்த அம்புகளை இடைவிடாமலேவினான்; (எ-று.)—பி-ம்:—[1]காண்கில. [2]செயற்கையாற்...ளெங்கும், செயலினைத் தெளிந்தொர்க்கி. [3]அமைந்த. [4]வவ்வி. (3114)

42.—இரத்தம்பெருக இந்திரசித்து வானத்துக்காணப்படுதல்.

மறைந்தன திசைக [1]ளெங்கும் [2]மாறுபோய் [3]மலையு மாற்றல்
[4]குறைந்தன னிருண்ட மேகக் குழாத்திடைக் குருதிக் கொண்மூ
உறைந்துள தென்ன நின்ற [5]னுருவினை யுலக மெல்லாம்
[6]நிறைந்தவன் கண்டான் காணு வினையதோர் [7]நினைவ தானுன்.

(இ-ள்.) (இலட்சுமணன்விடுத்த அம்புகளால்), திசைகளெங்கும் மறைந்தன: மாருக எதிர்த்துப் பொருகின்ற வல்லமை (இந்திரசித்து) குறையப்பெற்ருன்: (அப்போது) இருண்ட மேகக் கூட்டத்தினிடையில் செவ்வானம் உறைந்துளதென்னுமாறு நின்ருனது உருவினை, உலகமெல்லாம் நிறைந்தவனுன இலட்சுமணன் கண்டான்; கண்டு, இப்படிப்பட்ட ஒரு எண்ணத்தைக் கொண்டவனுனன்; (எ-று.)—'இனையதோர்நினைவு' என்பதை, மேற்செய்யுளிற் காண்க.

வானத்தினிடையே உடலெல்லாம் செந்நீருடனே தோன்றும் இந்திரசித்துக்கு, இருண்டமேகக்குழாத்திடை உறைந்துளதாகிய குருதிக்கொண்மூ ஏற்ற உவமையாம். குருதி - செந்நிறத்துக்கு, ஆகுபெயர். மறைந்தன திசைகளெங்கும் மாறுபோய்என்பதற்கு - அம்புகள் இந்திரசித்துக்கு மாருகப்போனதனுல் திசைகளெங்கும் மறைந்தன எனினுமாம். பி-ம்:-[1] எல்லாம். [2]மாயம்போய். [3]மறையு மாற்ருல். [4]குறைந்தன. [5]வடிவினை. [6]நிறைந்தமன். [7]நினைப்பன்.()

43.—இலட்சுமணன் இந்திரசித்தின் விற்கையைக் கொய்ய அம்புஏவுதல்.

சிலையறு தெனினு மற்றத் திண்ணியோன் றிரண்ட [1]தோளாம்
மலையறு தொழியா தென்று [2]வரிசிலை யொன்றும் வாங்கிக்
கலையறுத் திங்க ளன்ன வாளியாற் கையைக் கொய்தான்
விலையறு மணிப்பூ ணேடும் வில்லொடும் நிலத்து வீழ.

(இ-ள்.) 'வில் (எனது அம்புகளால்) துண்டிக்கப்படமாட்டாதென்ருலும், அந்தவலியோனுன இந்திரசித்தின் திரண்டதோளாகிய மலை துண்டிக்கப்படாமற் போகாது' என்று சொல்லி, (இலட்சுமணன்), கட்டமைந்த ஒருவில்லை வளைத்து, விலைதீர்க்கமுடியாத [மதிப்பிடமுடியாத] மணிகளழுத்திய ஆபரணங்களோடும் வில்லோடும் நிலத்திலே வீழ, மானினுல் அற்றுப்போதலில்லாத (அர்த்த)சந்திரனை யொத்த பாணங்களினுற் கையை யறுத்துவீழ்த்தினுன்; (எ-று.)—மற்று-வினைமாற்று.

தேரும் வில்லும் உளவாக இவனை வெல்லமுடியாதென்று ஸ்ரீவிபீடணுழ்வான் கூறியதை யொட்டி இந்திரசித்தின்தேரை ஆணியைக் கழற்றி அச்சுவேறு ஆணிவேருக்கிச் சிதைத்த இலட்சுமணன், வில்லைப் பாணத்தைக்கொண்டு துண்டிக்க முடியாதென்று துணிந்து அதனைப் பற்றிய கையையே துணித்து வீழ்த்தினுனென்க. பூர்ணசந்திரனினிடைப்பகுதி களங்கமாகிய கலையினுல் [மானினுல்] அற்று [அறுபட்டு]த்தோன்றும்; பிறைச்சந்திரனது இடையீடமோ அவ்வாறு கலையினுல் அற்றுத் தோன்ருதாதலால்,

பிறைச்சந்திரனை 'கலையரு த்திங்கள்' என்றார்; 'பாகவான் பிறை போல் வெவ்வாய்ச்சுடுகணை' என மேல் வருவதும் காண்க. ஆகவே, இத்தொடர்க்கு - (தன்னுடைய) கலைகள் [கிரணங்கள்] குறையப்பெறாத பூர்ணசந்திரனென்று பொருளுரைத்தல் பொருந்தாது. பி - ம்:—[1]திண்டோள். [2]வடிக்கணை. (3116)

44.—இந்திரசித்தின் கைஅற்றுவீழ்தல்.

பாகவான் பிறைபோல் வெவ்வாய்ச் சுடுகணை படுத லோடும்
[1]வேகவான் [2]கடுங்கா லெற்ற முற்றும்போய் [3]விளிந்த நாளின்
மாகவான் நடக்கை மண்மேல் வீழ்ந்தது மணிப்பூண் மின்ன
மேகமா காயத் திட்ட வில்லொடும் வீழ்ந்த தென்ன.

(இ-ள்.) வானத்துத்தோன்றும் (சந்திரனுடைய) பாகமாகிய பிறைபோன்ற வெவ்வியவாயைக்கொண்ட சுடுகின்ற கணை பட்ட வுடனே, மிக்க வேகங்கொண்ட கொடுங்காற்று மோதுவதனால் யாவும் அழிந்துபோன நாளில் [யுகாந்தகாலத்திலே], ஆகாயத்தி லுள்ள மேகமானது (தன்மீது) இட்டவில்லோடும் (மண்ணின் மீது) வீழ்ந்த தென்னும்படி, மாகத்தினின்று [ஆகாயத்தினின்று] மிகப் பெரிய (இந்திரசித்தின்) கையானது, மணிப்பூண் மின்ன (வில்லோடும்) மண்மேல் விழுந்தது; (எ-று.)

தற்குறிப்பேற்றவணி. வான்பிறை-சிறந்தபிறையுமாம். வான்-ஆகாயம், பெருமை. மாகவான் - மகாகமென்னப்படுகின்ற வான முமாம். பி-ம்:—[1]மோக. [2]கொடுங். [3]விளியும். (3117)

45.—கீழ்வீழ்ந்த இந்திரசித்தின் கை துடித்தல்.

படித்தலஞ் சுமந்த நாகம் பாகவான் பிறையைப் பற்றிக்
கடித்தது போலக் கோல விரல்களா லிறுகக் கட்டிப்
பிடித்தவெஞ் சிலையி னோடும் பேரெழில் வீரன் பொற்றோள்
துடித்தது மரமுங் கல்லுந் துகள்படக் [1]குரங்குந் துஞ்ச.

(இ-ள்.) பூமியைச்சுமந்து கொண்டுள்ள ஆதிசேஷன் பாகமா யுள்ள சிறந்த பிறைச்சந்திரனைப்பற்றிக் கடித்ததுபோல அழகிய விரல்களினால் உறுதியாகக்கட்டிப்பிடித்த கொடியசிலையினோடும், பேரழகையுடையவீரனது பொற்றோளானது,-மரமும் கல்லும் துகளாகவும் குரங்குகள் இறக்கவும் துடிக்கலாயிற்று; (எ-று.)— வளைந்த வில் பிறைச்சந்திரனையும், வில்லைவிரல்களாற் பிடித்த கை அந்தப் பிறைச் சந்திரனைக் கவ்வும் படத்தோடுகூடிய ஆதி சேஷனையும், மற்றைக் கைப்பகுதி அவ்வாதிசேஷனது உடற் பகுதியையும் போலுமென்க. வில்லை இறுகப்பிடித்துள்ள பூமியில் வீழ்ந்த கைக்கு இல்பொருளுவமை கூறினர். பி - ம்:—[1]குரங்கு. ( )

46.—இந்திரசித்தின் கை அற்றுவீழ்ந்ததைக் கண்ட வானவரின் அதிசயம்.

அந்தர மதனி னின்ற வானவ ரருக்கன் வீழாச்
சந்திரன் [1]வீழா மேரு மால்வரை தகர்ந்து [2]வீழா

இந்திர சித்தின் பொற்றோ [3]ளிற்றிடை விழுந்த தென்றால்
எந்திர மனைய வாழ்க்கை யினிச்சில [4]ருகத்தெ னென்றார்.

(இ - ள்.) வானத்தினின்ற வானவர், 'சூரியன் வீழ்ந்திடாமலும் சந்திரன் வீழ்ந்திடாலும் மேருமால்வரை யுடைந்துவீழாமலுமிருக்கையில், இந்திரசித்தின் பொற்றோளானது இடையிலே துண்டுபட்டு விழுந்ததென்றால், எந்திரம்போன்ற [இன்னபோது கெடுமென்பது உணரப்படாத] (இந்தஉயிரோடு கூடிவாழும்) வாழ்க்கையை (உலகத்து)ச் சிலர் இனி (நிலையற்றதென்று நிலையாமல்) உவந்து என்னபயன்!' என்று கூறினார்கள்; (எ - று.)—அருக்கன் முதலியோர் வீழ்ந்தால் இவன்கை வீழத்தக்கதேயன்றி, இவ்வளவு சாமானியமாக இவன்கை வீழத்தக்கதன்று என்பார் 'அருக்கன் வீழா...வீழா இந்திரசித்தின்கையே யறுந்திட்டதனால்,இன்னபோதுமுடியுமென்று அறுதியிடமுடியாத உயிர்வாழ்க்கையை உவப்பதனால் யாதுபயன் என்றனர் தேவரென்க. பி - ம்:—[1]வீழ, வீழ்க. [2]மேல். [3]இற்றினி. [4]உகப்பதென்னே, உவந்ததென்றார். ()

47.—அதுகண்ட இராக்கதரின் கலக்கம்.

மொய்யுற மூர்த்தி யன்ன [1]மொய்ம்பினு னம்பி னுலப்
பொய்யறச் சிறிதென் றெண்ணும் பெருமையான் புதல்வன் பூ
மையறக் [2]கரிதென் றெண்ணு [3]மனத்தினான் வயிர மன்ன [த்த
கையறத் தலையற் றார்போற் கலங்கினார் நிருதர் கண்டார்.

(இ - ள்.) நெருங்கிய தருமத்தின் சரீரத்தையொத்த [தருமமே வடிவுபடைத்து வந்தாற்போன்ற] வலியவனான இலட்சுமணனுடைய அம்பினால், பொய்யை (பஞ்சமகாபாதகங்களுள் ஒன்று என்று கருதாமல்) மிகவும் அற்பமானது என்று எண்ணுகின்ற அந்தப் பெருமைபெற்ற இராவணனுடைய மகனும், உண்டாக்கிய அஞ்சனத்தைக்காட்டிலும் மிகவும் கரியதென்று எண்ணுதற்குரிய [கொடிய எண்ணங்கள் நிறைந்த]மனத்தையுடையவனுமான இந்திரசித்தின் வயிரம்போன்ற [உறுதியான] கை யறுபடவே, (அதனைக்) கண்டவரான நிருதர், (தம்) தலையற்றவர்போலக் கலக்கமடைந்தனர்; (எ - று.)—தீமனமுடைமையை மனம் இருண்டிருப்பதெனக் கூறுதல்,மரபு. பெருமையான் -பிறகுறிப்பு. சிலைக்கையறவே இனித் தம் தலைஅறுவது திண்ணமென்று இராக்கதர் கலங்கினர். பி ம்:—[1]முன்பினன். [2]கரியதென்னும். [3]நிறத்தினன். (3120)

48.—வானரர் மேல்வீழ்ந்து அரக்கர்களை மடித்தல்.

அன்னது நிகழும் வேலை யார்த்தெழுந் தரியின் வெள்ளம்
மின்னெயிற் றரக்கர் சேனை யாவரும் மீளா வண்ணம்
கொன்னகக் கரத்தாற் [1]பல்லான் மரங்களான் மானக் குன்றாற்
[2]பொன்னெடு நாட்டை யெல்லாம் புதுக்குடி யேற்றிற் றன்றே.

(இ - ள்.) (இந்திரசித்தின்கை அற்றுவீழ்கையாகிய) அந்தச் செயல் நடந்தபோது, குரங்குவெள்ளம்,—ஆரவாரித்துக்கிளர்ந்து, மின்னல்போன்ற எயிற்றையுடைய அரக்கரின் சேனையிலே

மீண்டு போகாதபடி கொல்லுந்தன்மையுள்ள நகத்தையுடைய கையினாலும் பல்லினாலும் மரங்களினாலும் பெரிய குன்றுகளினாலும் நெடியபொன்னுலகம் [சுவர்க்கம்] முழுவதையும் புதுக்குடியாக ஏறச்செய்தது; (எ - று.)

'அரக்கர்சேனையைக் கொன்றது' என்றபொருளில், 'அரக்கர் சேனையை அரியின்வெள்ளம் பொன்னாட்டைப் புதுக்குடியேற்றிற்று' என்றது - பிறிதினவிற்சியணி. அன்றே - தேற்றம். பி-ம்:—[1]காலான். [2]பொன்னுடை. (3121)

49.—இந்திரசித்து இலக்குமணனைநோக்கி உன்னை முடித்தன்றி யான் முடியேனெனல்.

காலங் கொண் டெழுந்த மேகக் கருமையான் செம்மை காட்டும்
ஆலங்கொண் டிருண்ட கண்டத் தமரர்கோ னருளிற் பெற்ற
சூலங்கொண் [1]டெறிவலென்று தோன்றினான் [2]பகையின் றோற்ற
மூலங்கொண் டுணரா நின்னை முடித்தன்றி முடியே [3]னென்றான்.

(இ - ள்.) விஷத்தையுட்கொண்டு இருண்ட கண்டத்துடனே செந்நிறத்தைக்கொண்ட தேவதேவனான சிவபெருமானுடைய அருளினாலே பெற்ற சூலத்தைக்(கையிற்)கொண்டு, (இதனை)எறிவேன் என்று தோன்றியவனும் கார்காலத்து(நீரைக்)கொண்டு எழுந்த மேகம் போன்ற கருநிறமுடையவனுமான இந்திரசித்து,—'பகையினுடைய பிறப்பு வரலாற்றையறியாத உன்னைக் கொன்றொழித்தல்லாமல் (நான்) இறவேன்' என்று கூறினான்; (எ-று.)—தோற்றம்-பிறவி: 'எமது பிறப்பு வலிமை முதலிய சிறப்புக்களை யறியாது பொருபவன் நீ' என்று பழிப்பான், 'பகையின் றோற்றமூலங் கொண்டுணரா நின்னை' என்றான். பி - ம்:—[1]எறிவன். [2]பகையிற் றோற்ற, பகையிற்றோன்ற. [3]என்னா. (3122)

50.—இந்திரசித்து மாயப்போர் புரிதல்.

காற் றென வுருமே றென்னக் கன [1]லெனக் கடைநா ளுற்ற
[2]கூற்றமோர் சூலங் கொண்டு [3]குறுகிய தென்னக் கொல்வான்
தோற்றினா னதனைக் காணா வினித்தலை துணிக்குங் [5]காலம்
ஏற்றதென் றயோத்தி வேந்தற் கிளையவ [6]னிதனைச் செய்தான்.

(இ-ள்.) காற்றென்னவும் இடியேறென்னவும் கனலென்னவும் கடைநாளிற்பொருந்திய யமன் ஓர் சூலங்கொண்டு குறுகிய தென்னவும், கொல்லும்பொருட்டு, (இந்திரசித்து),—தோன்றினான்; அதனைக்கண்டு அயோத்திக்கு அதிபதியாகிய இராமபிரானுக்கு இளையவனான இலட்சுமணன் இனி (இவனுடைய) தலையைத் துணிக்குங் காலம் வந்திட்டதென்று இச்செயலைச் செய்யலானான்; (எ-று.)—பி-ம்:—[1]என்ன. [2]கூற்றெனவுருவு. [3]குறுகுறுது. [4]தன்னை. [5]காலை. [6]இளைய. (3123)

51.—'இராமனே பரம்பொருளானால் இந்திரசித்தைக்கொல்க' என்று இலக்குமணன் அம்பு ஏவுதல்.

*மறைகளே தேறத் தக்க வேதியர் வணங்கற் [1]பால
இறையவ [2]னிராம னென்னு நல்லற மூர்த்தி யென்னில்
பிறை[3]யெயிற் றிவனைக் கோறி யென்றொரு பிறைவாய் வாளி
[4]நிறையுற வாங்கி விட்டா னுலகெலா [5]நிறுத்தி நின்றான்.

(இ-ள்.) 'மறைகளே ஆராய்ந்து அறியத்தக்கவனும் வேதம் வல்ல அந்தணர்கள் வணங்குதற்கு உரியவனுமானதேவர் தலைவன் இராமனென்கிற சிறந்ததருமமூர்த்தியே யாவா னென்பது சத்தியமானால், பிறைபோன்ற எயிற்றையுடைய இவனைக் கொல்வாய்' என்று ஒருபிறைவாயையுடைய அம்பை(த் தன்வலிமை) நிறைத லுறப் பூரணமாகவளைத்துவிட்டான்: (அதனால்), உலக மெல்லா வற்றையும் (அரக்கரால் அழியாதபடி) நிலைநிறுத்தி(த் தானும் புகழுடனே) நிலைநின்றான்; (எ - று.)—உலகெலாம் நிறுத்திநின்றான் - தன்முடிமீது தாங்குவதனால் உலகமுழுவதையும் நிலைபெறச் செய்கிற ஆதிசேஷனுடைய அமிசமான இலக்குமணனெனினுமாம். பி - ம்:—[1] பாலான். [2] இராமனேயந், இராமனென்னின். [3] எயிற்றவனை. [4] நிறைவுற. [5] நிறுத்த. (3124)

52.—இந்திரசித்தின் தலை அறுபடுதல்.

நேமியுங் குலிச வேலும் [1]நெற்றியி னெருப்புக் கண்ணன்
நாமவே லூனு மற்றை நான்முகன் படையு நாணத்
தீமுகங் கதுவ வோடிச் சென்றவன் சிரத்தைத் தள்ளிப்
பூமழை [2]வானோர் சிந்தப் [3]பொலிந்ததப் பகழிப் புத்தேள்.

(இ-ள்.) அந்த (இலட்சுமணன் விடுத்த) தெய்வவாளியானது,—(விஷ்ணுவின்) சக்கரப்படையும் (இந்திரனது) வச்சிராயுதமும், நெற்றியிலே நெருப்புக்கண்ணையுடையவனான சிவபெருமானது அச்சத்தை விளைக்கிற வேலும் மற்றும் பிரமதேவன்படையும் நாணுமாறு நெருப்புத் தன) வாயிலேபற்றியெரிய ஓடிச்சென்று, அந்த இந்திரசித்தினுடைய தலையை (உடலினின்று) அப்புறப்படுத்தி(த் தேவர்கள) மலர்மாரிபொழிய விளங்கிற்று; (எ - று.)

தம்மாலறுக்கமுடியாத இந்திரசித்தின் தலையையறுத்துத் தள்ளியதனால்,நேமிமுதலியவை இந்தலட்சுமணனது பகழியைக் கண்டு நாணுவன வாயின குலிசவேல்-குலிசப்படை. புத்தேட்பகழியென மாறுக இனி, பகழிப்புத்தேள் - அம்புத்தெய்வமென்பாருமுளர். 'குலிசவேல' என்ற இடத்து, வேலென்றசிறப்புப்பெயர் பொதுப்பொருளது பி-ம்:—[1] வாயுவும். [2] மாரி,அமரர். [3] போந்தது,புகுந்தது.

53.—இந்திரசித்தின்தலை வீழ்வதற்குமுன் அவனுடல் மண்ணில்விழுதல்.

அற்றவன் றலைமீ தோங்கி [1]யண்டமுற் றணுகா முன்னம்
பற்றிய சூலத் தோடும் [2]உடனிலை பகழி யோடும்

---

*"தர்மாத்மா ஸத்யஸந்தஸ்ச, ராமோ தாஸரதிர்யதி, பௌருஷேசாப்ரதி த்வந்த்வ:, "ஸரைநம் ஜஹி ராவணிம்" என்றார், ஸ்ரீவால்மீகி பகவான்.

எற்றிய காலக் காற்றான் மின்னொடு மிடியி னோடும்
[3]சுற்றிய புயல்வீழ்ந் தென்ன வீழ்ந்தது சோர னியாக்கை.

(இ-ள்.) அவ்விந்திரசித்தின் தலை அற்று மேலே எழுந்து பூமியிற்பொருந்திச் சேர்வதற்கு முன்னம், வஞ்சனைக்குணத்தையுடைய அந்த இந்திரசித்தின் உடல், மின்னலோடும் இடியினோடுஞ் சூழ்ந்த மேகம் வீசிய யுகாந்தகாலக் காற்றினால் விழுந்தாற்போல (க் கையிற்) பற்றிய சூலத்தினோடும் தன்னிடத்து நிறைந்த அம்புகளோடும் வீழ்ந்தது; (எ - று.)—கொண்ட படையும் உடல்நிறை பகழியும்-மின்னலுக்கும், வீழ்ந்தபோது தோன்றிய ஒலி - இடிக்கும், உடல்-மேகத்துக்கும், உவமையாம். அண்டமும்-வானமுமாம். வி - ம்:—[1]அண்டத்தை. [2]உடலூறு, உடலுறை. [3]இற்றொருகாள மேகம் வீழ்ந்தென வீழ்ந்ததியாக்கை. (3126)

54.—இந்திரசித்தின் தலை மண்மேல் விழுதல்.

[1]விண்டலத் திலங்கு திங்க [2]ளிரண்டொடு [3]மின்னு வீசுங்
குண்டலத் துணைக ளோடுங் கொந்தளக் குஞ்சிச் [4]செங்கேழ்ச்
சண்டவெங் [5]கதிரோன் செக்கர்த் [6]தழலொடும் மருவித் தாம
மண்டலம் [7]விழுந்த தென்ன விழுந்தது தலையும் மண்மேல்.

(இ - ள்.) கொடிய உஷ்ணகிரணனான சூரியனது ஒளியுள்ள மண்டலம் ஆகாயத்திலே விளங்குகின்ற பிறைச்சந்திரனிரண்டோடும் மின்னலைவீசுகின்ற குண்டலமிரண்டினோடும் தலைமயிராகிய செம்மைநிறம் விளங்குகின்ற செந்நிறத்தழலோடும் பொருந்தி விழுந்தாற்போல, (இந்திரசித்தின்) தலையும் மண்மேல் விழுந்தது;

திங்களிரண்டு-இரண்டுவக்கிரதந்தங்கட்கு உவமை. துணை - இரண்டு. இல்பொருளுவமை வந்ததனால், தற்குறிப்பேற்றமாகும். வி-ம்:—[1]விண்டலத்தியங்கு. [2]இரண்டென. [3]மின்னும், மின்னின. [4]செங்கட். [5]கதிரின்கற்றை. [6]தழையொடுமிரவித்தாய, தழையொடுமிரவிதானம். [7]வீழ்வது. (3127)

55.—இந்திரசித்துஇறக்கவே அரக்கர் இரிந்தோடுதல்.

[1]உயிரிறப் புக்க காலை [2]யுண்ணின்ற வுணர்வி னோடும்
செயிறு பொறியு [3]மந்தக் கரணமுஞ் சிந்து மாபோல்
அயிலெயிற் றரக்க ருள்ளா ராற்றல ராகி [4]யான்ற
எயிலுடை யிலங்கை நோக்கி யிரிந்தனர் படையும் விட்டார்.

(இ-ள்.) (உடலிலுள்ள) ஆன்மா (அந்தஉடலை விட்டு) நீங்கத் தொடங்கிய காலத்து, உள்ளேநின்ற உணர்ச்சியினோடும் குற்றமற்ற ஐம்பொறிகளும் அந்தக்கரணமும் அப்பாற்படுவனபோல, (இந்திரசித்து இறக்கவே, சேனையிலுள்ள) கூரியபற்களைக் கொண்ட அரக்கராகியுள்ளவர், தரித்துநிற்கமுடியாதவராகி, (கையிற்கொண்ட) படைகளையும் போகட்டுவிட்டு, சிறந்தமதிலை யுடைய இலங்கைநகரை நோக்கி நிலைகெட்டு ஓடினார்; (எ - று.)—[1]உயிர்புறத்துற்ற. [2]உண்ணிறை. [3]மற்றைக்கரணமும். [4]ஆற்றல், ஆற்ற. (3128)

56.—தேவர்கள் மகிழ்ச்சியினல் ஆரவாரித்தல்

வில்லாள ரானூர்க் கெல்லா மேலவன் விளித லோடும்
செல்லாதவ் விலங்கை வேந்தற் கரசெனக் [1]களித்த தேவர்
எல்லாருந் தூசு நீக்கி யேறிட வார்த்த போது
கொல்லாத விரதத் தார்தங் கடவுளர் கூட்ட மொத்தார்.

(இ-ள்.) வில்லாளராயுள்ளவர்கட்கெல்லாம் மேலானவனை இந்திரசித்து இறந்தவுடனே, '(இனி), அந்த இலங்கைவேந்தனுக்கு அரசு நடவாது' என்று மனமகிழ்ச்சிகொண்ட தேவர்கள் யாவரும், (தம் அரையிலுடுத்திருந்த) ஆடைகளையவிழ்த்துமேலேவீசியெறிந்து ஆரவாரஞ்செய்தபோது, கொல்லாவிரதத்தைக் கொண்டவரான அருகமதத்தவருடைய தெய்வங்களின்கூட்டத்தை யொத்தார்;

ஆடைவீசுதல், தாம் கொண்டமகிழ்ச்சியைக் காட்டும்: இந்திரசித்துவதத்தாலான வெற்றி எல்லாவற்றினும் சிறத்தலால், வானவர் ஆரவாரித்தல் பூமழைபொழிதல் என்பவற்றோடு நில்லாமல் ஆடையை யவிழ்த்து வீசுதலுஞ் செய்தாரென்க. கொல்லாவிரதத்தாரின் தெய்வம்-அரையில் ஆடையின்றி அம்மணமாக இருக்கும். அரையிலாடையின்றி யிருக்கையென்ற பொருளில் 'அம்மணம்' என்றபெயர் வழங்கியதும், இதற்கு ஒரு சான்றாகும். (அம்மணம் = அமணம்; அமணம்-அமணனது தன்மை). பி-ம்:—[1]களித்துத். ()

57.—திருமால் முதலியோரை வானரர் தம்கண்ணூற் காணுதல்.

வரந்தரு முதல்வன் மற்றை மான்மறிக் கரத்து வள்ளல்
புரந்தரன் முதல்வ ராய நான்மறைப் [1]புலவர் பாரில்
நிரந்தரந் [2]தோன்றி நின்றா ரருளினு னிறைந்த நெஞ்சர்
கரந்தில ரவரை யாக்கை கண்டன [3]குரங்குங் கண்ணால்.

(இ-ள்.) (வேண்டுவோர்வேண்டிய) வரத்தைத் தரவல்ல திருமாலும் மான்குட்டியைக் கரத்திலேந்திய உதாரகுணமுள்ளவனை சிவபெருமானும் நான்மறைகளை யோதிக்கொண்டிருக்கும் கடவுளாகிய பிரமதேவனும் இந்திரனும் முதல்வராய அருளினால் நிறைந்த நெஞ்சையுடைய தேவர், (தம் முருவத்தை) மறைத்துக்கொள்ளாமற் பூமியிலே (அப்போது) நிரந்தரமாகக் காணப்பட்டிருந்தனர்; அவருடையயாக்கையைக் குரங்கும் (தம்) கண்ணாற் கண்டன; (எ-று.)—கரந்திலரென்பதை, 'அருளினால் நிறைந்த நெஞ்சர்,' என்பது சமர்த்தித்து நின்றது: தொடர்நிலைச்செய்யுட்குறியணி. திரிமூர்த்திகள் போர்க்களத்துக்கு எழுந்தருளிக்குரங்குகளுள்பட எல்லார்க்கும் காட்சியளித்தது, இந்திரசித்தின் வெற்றியின மிக்க சிறப்பை விளக்கும். பி-ம்.—[1]புலவரானோர். [2]தோன்ற. [3]குரங்கு.

58.—இறந்தவானரர் கடவுளரருளினுல் உயிர்பெற்றெழுதல்.

அறந்தலை நின்றார்க் கில்லை யழி [1]வென்னு மறிஞர் வார்த்தை
சிறந்தது சரங்கள் பாயச் சிந்திய [2]சிரத்த வாகிப்
பறந்தலை யதனின் [3]மற்றப் பாதக வரக்கன் கொல்ல
இறந்தன [4]கவிக ளெல்லா மெழுந்தன விமையோ ரேத்த.

(இ - ள்.) அம்புகள் பாய்ந்ததனாற் சிரம் சிந்தப்பெற்றன வாகிப் போர்க்களத்திலே பாதக வரக்கனான அந்த இந்திரசித்தினாற் கொல்லப்பட்டு இறந்தனவாகிய கவிகளெல்லாம், (கடவுளருளினால்) இமையோரேத்த உயிர்பெற்றெழுந்தன: (அதனால்), 'அறத்தை மேற்கொண்டு நின்றவர்கட்கெல்லாம் அழிவு இல்லை' என்கிற அறிஞர்வார்த்தை சிறப்புற்றதாயிற்று; (எ - று.)—கீழே கடவுளர் வருகையைக்கூறி, இங்கு வானரங்கள் உயிர்பெற்றெழுந்தமையைக் கூறியதனால், அச்செயல் கடவுளருளாலானமை பெறப்படும். அறிஞர்வார்த்தை சிறத்தல் - அறிஞர் கூறிய சொல் பழுதுபடாது நடத்தைக்கு வருதலென்ற பொருளைக் காட்டும். பி - ம்:—[1]என்பது. [2]சிரத்தர். [3]வந்த. [4]கவியும். (3131)

59.—அங்கதன் இந்திரசித்தின் தலையையேந்தி முன்னணியிற் செல்ல, அநுமான்மீது இலக்குமணன் செல்லுதல்.

ஆக்கையி னின்று வீழ்ந்த வரக்கன் [1]றன் றலையை யங்கை
தூக்கின [2]னுள்ளங் கூர்ந்த வாலிசேய் [3]தூது செல்ல
மேக்குயர்ந் தமரர் வெள்ள [4]மள்ளியே தொடர்ந்து வீசும்
பூக்கிளர் பந்தர் நீழ லனுமன்மே லிளவல் போனான்.

(இ - ள்.) உடலினின்று (வேறுபட்டு) வீழ்ந்த அரக்கனுடைய தலையை மனமகிழ்ச்சிமிக்க வாலிகுமாரனான அங்கதன், - அழகிய கையிலேந்தியவனாய் முன்னணியிற் செல்ல,வானத்து உயரவிருந்த அமரர்களின்திரள் அள்ளித் தொடர்ந்துஎறிந்த விளங்குகின்ற பூக்களினாலாகிய பந்தரின் நிழலில், இளையபெருமாள், அநுமான் மீது ஏறியவண்ணம் போனான்; (எ - று.)—தொடர்ந்து வீசும் பூக்கிளர்பந்தர் - நடைப்பூப்பந்தர் போலும். பி - ம்:—[1]செந்தலையை, செய்தலையை. [2]துள்ளுங்கூத்தன். [3]தூசு. [4]அள்ளினர்...வீசும், இடைவிடார் வீசுகின்ற. (3132)

60.—இராமன் இந்திரசித்தின்தலையை அங்கதன்கையிற் காணுதல்.

வீங்கிய தோளன் தேய்ந்து மெலிகின்ற [1]பழியன் [2]மேன்மேல்
[3]ஓங்கிய வுவகை யூறு முள்ளத்த னும்பர்க் காகத்
[4]தேங்கிய கடலை முன்னாள் கிசித்தவன் சேய்செங் கையால்
[5]தாங்கிய குரிசில் பற்றிக் கொணர்ந்திடு[6]தலையைக் கண்டான்.

(இ - ள்.) (இயற்கையாகப்) பருத்த தோளையுடையவனும் தேய்ந்து மெலிகின்ற பழியையுடையவனும், மேன்மேல் ஓங்கிய மகிழ்ச்சி சுரக்கின்ற உள்ளத்தையுடையவனுமான ஸ்ரீராமன்,—(ஆழமாகத்) தேங்கிய பாற்கடலைத் தேவர்களின்பொருட்டாக முன்னாள் கடைந்தவனான வாலியின் குமாரனான பெருமை சிறந்தோன்(தன்) சிவந்த கையால் தாங்கியதாய்ப்பற்றிக்கொணர்ந்திடுந் தலையைக் கண்டான்; (எ - று.)—பி - ம்:—[1]விழியன். [2]மீதுற்று. [3]ஓங்கிய முடியன் திங்க ளொளிபெறுமுகத்தனுள்ளால், ஓங்கிய முகத்தன் திங்கட்கொளிர்கின்ற முகத்தனுள்ளாய். [4]வாங்கிய அயன்மீப்போய்வளர்கின்ற புகழன்வந்துற்று. [5]ஓங்கியவுவகையாளனிந்திரன். [6]உரைப்பதானான், இனைய சொன்னான். (3133)

61.—இருகவிகள்—ஒருதொடர்: கையில் இந்திரசித்தின் தலையை யேந்திவரும் அங்கதனைக் கண்டு, இராமன் கூறுதலைத் தெரிவிக்கும்.

எல்லி [1]வான் மதி யினுற்ற களையென [2]என்மேல் வந்து
புல்லிய வடுவும் [3]போகா தென்றகம் [4]புலம்பு கின்றேன்
[5]சொல்லிய தரும நல்கத் [6]துவக்கற்றுத் துயரந் தீர்ந்தேன்
செல்வமும் பெறுதற் குண்டோ குறையினிச் சிறுமை யாதோ.

(இ - ள்.) இரவில் விளங்குகின்ற வெள்ளிய சந்திரனிடத்துப் பொருந்திய களங்கம்போல என்மேல்வந்து பொருந்திய வடுவும் போகாதென்று மனத்திற்குள் வருந்தாநிற்கின்றவனான நான், (நூல்களிற்) கூறப்பட்ட தருமதேவதை கருணைசெய்யப் பிணிப்பு நீங்கி (அந்தத்) துயரம் நீங்கப் பெற்றேன்; செல்வமகளையும் பெறுதற்குக் குறையுண்டாமோ? இனி (எனக்குச்) சிறுமை யாதோ? (எ - று.)—வான்மை—வெண்மை. வடு - மாற்றான்கையிற் பறிகொடுத்தானென்பது. பி - ம்:—[1]வாள், வாழ். [2]இரண்டுமென்றுள். [3]போகா. [4]புழுங்குகின்றேன். [5]வில்லியர்திலகம், வில்லிய திலகம், வில்லியரொருவர். [6]துடைத்துறும் வெறுமை. (3134)

62. *தென்றலை [1]யாழி சூழ்ந்த திண்மதி லிலங்கை காக்கும்*
[2]புன்றலைக் கள்வன் பெற்ற புதல்வனை யிளவல் வீழ்த்த
[3]வன்றலை யெடுத்து நீமுன் வருதலால் வான ரேச
என்றலை [4]யெடுக்க லானே னினிக்குடை யெடுப்ப னென்றான்.

(இ - ள்.) தென்புறத்துக் கடலாற் சூழப்பட்ட திண்ணிய மதிலையுடைய இலங்கையைக் காக்கும் செம்பட்ட மயிரையுடைய தலையைக்கொண்ட வஞ்சனைக்குணமுள்ள இராவணன் பெற்ற புதல்வனை இளையவன் (கொன்று) வீழ்த்த, (அவனுடைய) வலிய தலையை நீ கையிற்கொண்டு முன்னே வருதலால், வானரேசனே! (இதுவரையில் நாணத்தாற் கவிழ்ந்திருந்த) என்னுடைய தலையை யெடுக்கலானேன்: இனி, (என்) வெண்கொற்றக் குடையையும் எடுப்பேனென்று கூறினான்; (ஸ்ரீராமன்) (எ-று.)

குடையெடுத்தல் - வெற்றிபெற்றதற்கு அடையாளமாக வெண்கொற்றக் குடையைப் பிடித்தல்: எனவே,வெற்றிபெறுதல். புன்தலையென்பது செம்பட்ட மயிர்த்தலை என்ற பொருளில் வருதலை "புன்றலையிரும் பரதவர்" என்ற பட்டினப்பாலையிலும் காண்க. பி-ம்:—[1]ஆழிதொட்டோன் சேயருட்சிறுவன் செம்மல், ஆழிதொட்டார்தேவருட் சிறுவன்செம்மல். [2]வென்றலைத் தென்னை யார்த்துப் போர்த்தொழில் கடந்தவெய்யோன்,வென்றலைத்தென்ன ...வெய்யோன். [3]இன்றலை...வானரேச, தன்தலை யெடுப்பக்கண்டு தானவர் தலைகள் சாய. [4]எடுத்தேனின்னை தனிக். (3135)

63.—இராமனருகிலிருந்தவர் அங்கதனைப் புகழ்ந்துரைத்தல்.

வான்றலை யெடுக்க வேலை மண்டலை யெடுக்க வானோர்
கோன்றலை யெடுக்க வேதக் குலந்தலை யெடுக்கக் குன்றாத்
தேன்றலை யெடுக்குந் தாராய் தேவரை வென்றான் றீய
ஊன்றலை யெடுத்தாய் நீயென் றுரைத்தன ருவகை மிக்கார்.

(இ-ள்.) 'குறையாத தேன் தன்னிடத்துத் தோன்றப்பெற்ற மலர் மாலையை யணிந்தவனே! வானுலகத்தார் (குனிந்த) தலையை நிமிரஎடுக்கவும், கடலாற்சூழப்பட்ட மண்ணுலகத்தார் அச்சம் நீங்கித் தலையெடுக்கவும், வானோர்க்குத் தலைவனான இந்திரன் தலையெடுக்கவும், வேதத்தொகுதி தலையெடுக்கவும், தேவரைவென்றவனான இந்திரசித்தின் தீய வன் தலையை யெடுத்துவந்தாய் நீ' என்று உவகைமிக்கவராய், (இராமனருகினின்றவர்) கூறினார்கள்;

அங்கதன் இந்திரசித்தின் தலையையெடுத்து வந்தது—வானத்தார் முதலியோர் தலையை யெடுக்க ஏதுவாயிற்று எனச் சமத்காரந்தோன்றக் கூறியவாறு காண்க. 'தலையெடுத்தல்' என்பது பொருள்வேறுபாட்டுடன் பலமுறைவந்தது - சொற்பின்வருநிலையணி இச்செய்யுள் பல பிரதிகளிலில்லை. (3136)

64.—இந்திரசித்தைவென்று இலக்குமணன்மீண்டுவருவதை இராமன் காணல்.

வரதன்போய் மறுகா நின்ற [1]மனத்தினன் மாயத் தோனைச்
சரதப்போர் வென்று மீளுந் தருமமே [2]தாங்க வென்பான்
விரதம்பூண் [3]டுயிரி னோடுந் தன்னுடை மீட்சி நோக்கும்
பரதன்போ னிருந்தான் றம்பி வருகின்ற பரிசைப் பார்த்தான்.

(இ-ள்.) மிகவும்கலங்காநின்ற மனத்தையுடையவனும், 'தருமதேவதை தாங்க, மாயத்தையுடையவனான இந்திரசித்தை நிச்சயமாக [தவறாமல்] போரில்வென்று (இலக்குவன்) மீளுவான்' என்று எண்ணியிருப்பவனும், விரதத்தை மேற்கொண்டு தன்னுடைய உயிருடனே [யாதோரிடையூறுமின்றி] மீட்சியையே யெதிர்பார்த்திருக்கும் பரதனைப் போன்று (இலக்குமணன்வென்று மீண்டுவருவதை எதிர்பார்த்து) இருந்தவனுமான இராமன், தம்பி வருகின்ற தன்மையைக்கண்டான்; (எ - று.)—வரதன்-இராமன். போதல் - மிகுதல். பி - ம்:—[1]மன்னன்மா, மன்னுமா. [2]தாங்குகென்பான். [3]உய்வாரோடும். (3137)

65.—இலக்குமணனைக் கண்ட இராமன் கண்ணீர் பெருக்கியதன் வருணனை.

வன்புலங் கடந்து மீளுந் தம்பிமேல் வைத்த மாலைத்
தன்புல நயன மென்னுந் தாமரை சொரியுந் தாரை
அன்புகொ [1]லழுக ணீர்கொ லானந்த வாரி யேகொல்
[2]என்புக ளுருகிச் சோருங் கருணைகொ லி[3]யார தோர்வார்.

(இ-ள்.) பகைவனிடத்துச்சென்று வென்று மீளுகின்ற தம்பிமேல் வைத்த தன் பொறியாகிய நயனமென்கின்ற தாமரை ஒழுங்காகச் சொரியும் நீர்த்தாரையானது,—அன்பினாற் பெருகியதோ? (பிரிந்திருந்ததை நினைந்ததனாலுண்டாய) அழுகையால் நேர்ந்த கண்ணீர்கொலோ? (பிரிந்தவன் திரும்பி வந்ததனாலான) ஆநந்தத்தின் பெருக்கோ? என்புகளும் உருகிப் பெருகுதற்குக்காரணமான கருணையின்பெருக்கோ? அதனை அறிந்து சொல்வார் யாவர்? (எ-று.)

இலட்சுமணனிடத்து இராமபிரான் பேரன்பு உடையவனாதலாலும், பிரிந்தாரைக் கூடுமிடத்துப் பிரிவுத்துயரம் தோன்றுத

லும் மகிழ்ச்சி தோன்றுதலும் இயற்கையேயாதலாதலும், இராம பிரான் கருணைமூர்த்தியாதலாலும், அப்பிரானுடைய கண்ணீரை 'அன்புகொல' முதலியவாகக் குறித்தார்: தன்மைத்தற்குறிப்பேற்ற வணி. பி-ம்:—[1]கழிகணீர்கொல். [2]என்புற. [3]யாரேதேர்வார். ()

66.—இராமபிரானது திருவடிகளில் இந்திரசித்தின் தலையைச் சமர்ப்பித்தல்.

[1]விழுந்தழி கண்ணி னீரு முவகையுங் களிப்பும் விங்க,எழுந்தெ திர் [2]வந்த வீர னிணையடி முன்ன ரிட்டான், [3]கொழுந்தெழுஞ் செக் கர்க் கற்றை [4]வெயில்விட வெயிற்றின் [5]கூட்டம்,அழுந்துற [6]மடித்த பேழ்வாய்த் தலை[7]யடி யுறையோன் ருக.

(இ-ள்.) கண்களினின்று இழிந்து பெருகுகின்ற நீரும் உவகை யும் களிப்பும் மிக எழுந்து எதிரேவந்த வீரனை ஸ்ரீராமபிரா னுடைய இரண்டு திருவடிகளின்முன்னே, சுவாலைதோன்றுகின்ற செவ்வானத்தையொத்த மயிர்க்கற்றையின் தொகுதி ஒளிவிட, பற்களின் தொகுதி அழுந்தும்படி மடித்த பிளவுபட்ட வாயை யுடைய (இந்திரசித்தின்) தலையை ஒப்பற்ற பாதகாணிக்கையாக அமையவைத்தான், (இலட்சுமணன்);(எ - று.)

களிப்பு - தான் செய்வது இன்னது என்பது தெரியமுடியாத படி தலைதடுமாறுதற் கேதுவாகிய மனநிலை. சினக் குறியாகப் பல்லைக் கடித்த உதட்டுடனும் செம்பட்டமயிருடனும் இந்திரசித் தின் தலை யுள்ளதென்பது பின்னிரண்டடிகளில் விளங்கும்.பி-ம்:— [1]விழுந்திழி. [2]நின்ற. [3]கொழுந்தெரிசுடரின், கொழுந்தழிசுடரின். [4]குழாங்கொள். [5]ஈட்டம். [6]கடித்த. [7]உறையடி, அடியிறை. ()

67.—அப்போதைய இராமபிரானுடைய மகிழ்ச்சி.

தலையினை நோக்குந் தம்பி கொற்றவை தழீஇய பொற்றோன், மலையினை நோக்கும் நின்ற மாருதி வலியை நோக்கும், சிலையினை நோக்குந் தேவர் செய்கையை நோக்கும் செய்த,கொலையினை நோக்கு மொன்று முரைத்திலன் களிப்புக் கொண்டான்.

(இ - ள்.) (இந்தமகாவீரனும் தலையறுப்புண்டானே' என்ற பெருவியப்புடன் அந்தத்) தலையைப் பார்ப்பான்: (அந்தத்தலையை யறுத்துவீழ்த்த பெருவீரம்பெற்ற) தம்பியினுடைய வெற்றிமகள் தழுவிய பொற்றோளாகிய மலையை நோக்குவான்; (அந்தத்தலையை யறுக்க அம்பையெய்த இலக்குமணனது) வில்லை நோக்குவான்: (இலக்குமணனுக்கு வாகனமாகவும் வேறுவகையாகவும் இந்திர சித்தை வெல்லுதற்குத் துணையாயிருந்து அப்போது) எதிர்நின்ற மாருதியின் வலிமையை நோக்குவான்; (இந்திரசித்தின் வதையாற் களிபேருவகைகொண்ட) தேவர்களின்செய்கையை நோக்குவான்; (தம்பி) செய்த இந்திரசித்தின் கொலையினை இங்ஙன் பாராட்டிக் களிப்புக்கொண்டவனாய், ஒன்றும் உரையாதவனாயினான் (ஸ்ரீராம பிரான்); (எ-று.)—உரையாடாதிருந்தமைக்குக் காரணம்-களிப்பு மிகுதி. சொற்பொருட்பின்வருநிலை. (3146)

68.—ஸ்ரீராமன் தாளில் இலட்சுமணன் வீழ்ந்துவணங்குதல்.

காள[1]மே கத்தைச் செக்கர் கலந்தெனக் கரிய [2]குன்றம்
நாள்வெயிற் பரந்த தென்ன நம்பிதன் தம்பி மார்பில்
தோளின்மே லுதிரச் செங்கேழ்ச் சுவடுதன் னுருவில் தோன்றத்
தாளின்மேல் வணங்கினானைத் தழுவினன் தனித்தொன் றில்லான்.

(இ - ள்.) தனிப்பட்டு(த் தனக்கு) உவமையாவதொரு பொருளைப் பெருதவனாய்க் குணபூர்ணனான இராமபிரான்,—(தன்)பாதங்களில் வணங்கினவனான தன் தம்பி இலட்சுமணனை, காளமேகத்தைச் செவ்வானம் கலந்தது போலவும் கரியகுன்றத்தில் காலைவெயில் பரந்ததுபோலவும் (அவனுடைய) மார்பிலும் தோளின்மேலும் பரந்த உதிரத்தின் செந்நிறச்சுவடு தன்னுருவிலே காணப் படத் தழுவிக்கொண்டான்; (எ - று.)

அரக்கரோடு பொருது வென்று வந்த இலட்சுமணனுடைய மார்பிலும் தோளிலும் படிந்திருந்த இரத்தக்கறையானது அழுக் தத்தழுவிய ஸ்ரீராமபிரானுடைய திருமேனிற் படியவே, அத்திரு மேனியிற்படிந்த கறை காளமேகத்திற் கலந்த செக்கரையும் கரிய குன்றத்துப்பரந்த நாள்வெயிலையும் போன்று தோன்றிற்றென்ற வாறு. பரம்பொருளான திருமாலால் வடிவம் உருவம் படைக்கலம் முதலியனவெல்லாம் அடியார்பொருட்டுக் கொள்ளப்பட்டனவே என்ற நூற்கொள்கைபற்றி 'தனித்தொன் றில்லான்' என்றுரெனினும் பொருந்தும். பி - ம்:—[1]மேகத்திற். [2]குன்றின். (8141)

வேறு.

69.—இராமன் இலட்சுமணனைப் புகழ்தல்.

கம்ப மதத்துக் களியானைக் காவற் சனகன் பெற்றெடுத்த
கொம்பு மென்பா லினிவந்து குறுகி னா[1]ளென் றகங்குளிர்ந்தேன்
வம்பு செறிந்த மலர்க்கோயின் மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பி யுடையான் பகையஞ்சா னென்னு மாற்றந் தந்தனையால்.

(இ - ள்.) '(இலக்குமணா! நீ இந்திரசித்தைச் செயித்ததனால் இனி இராவணனும் கொல்லப்பட மீட்சிபெற்று), கட்டுத்தறியிற் கட்டப்படுகின்ற மதக்களிப்புக்கொண்ட (அரசசின்னமான பட்டத்து)யானையையும், காக்கப்படும் நாட்டையுமுடைய சனகன் பெற்றெடுத்த கொம்புபோன்ற சீதையும் இனி என்னிடம் வந்து குறுகினவளாவளென்று மனங் குளிர்ந்தேன்: மணம் நிரம்பிய தாமரைமலரை(த் தன்) வாழிடமாகவுடைய பிரமதேவன் படைத்த பெரிய நிலத்தில் 'தம்பியுடையான் பகைக்கு அஞ்சான்' என்ற பழமொழியை (உன் செயலால்) நிலைநிறுத்தினாய்:'(எ - று.)— என்று ஸ்ரீராமன் இளையபெருமாளை நோக்கி முகமன் கூறி னென்று வருவித்து முடிக்க.

தம்பியாகிய உன்னைப் பெற்றதனாலன்றோ நீ இந்திரசித்தை இப்போது வெல்ல, இனி இராவணனை வெல்வது அருமையன்று என்ற கருத்து எனக்குத் திட்பமாக உண்டாயிற்றென்றவாறு. 'தம்பியுடையான் பகையஞ்சான்' என்ற பழமொழியைப் பெய்த

கூறியிருத்தலால், இச்செய்யுள் - உலகவழக்குநவிற்சியணியாம், "எம்பியை யீங்குப்பெறலே னென்னைகாகரிய தென்றான்" என்ற சிந்தாமணி இங்கு நினைவுறுகின்றது. இச்செய்யுள், சில பிரதிகளிலில்லை. பி - ம்:—[1]நன்றெனக். (3142)

வேறு.

70.—இராமபிரான் இலட்சுமணனுடற்புண்களை யொற்றிப் போக்குதல்.

தூக்கிய தூணி வாங்கித் தோளொடு [1]மார்பைச் சுற்றி
வீக்கிய கவச பாச [2]மொழித்தது [3]விரைவி னீக்கித்
தாக்கிய பகழிக் கூர்வாய் தடிந்த புண் தழும்பு மின்றிப்
போக்கினன் தழுவிப் பல்கால் பொற்றடந் தோளி னொற்றி.

(இ-ள்.) (தோளிற்) கட்டிய தூணிரத்தை (அப்பால்) வாங்கி, தோளுடனே மார்பைச் சுற்றிக் கட்டியுள்ள கவசக்கட்டை யவிழ்த்து அதனை விரைவிற் கழற்றி, மோதிய அம்புகளின் கூரிய வாய் வெட்டியதனாலான புண்களைப் பலமுறைதழுவி அழகிய பெரிய தோளினாலொற்றித் தழும்புமில்லாதபடி போக்கினன், (ஸ்ரீராமன்); (எ - று)—இளையோர் மூத்தோர்க்குச் செய்யும் பணியை, அன்புமிகுதியால், இராமன், இளையோனுக்குச்செய்தா னென்க. பி - ம்:—[1]மார்பிற். [2]விசித்தது. [3]விரகின். (3143)

71.—இராமபிரான் விபீடணனைப் புகழ்தல்.

ஆடவர் திலக நின்னா [1]லன்றிக லனும னென்னும்
சேடனா லன்று [2]வேறோர் தெய்வத்தின் சிறப்பு மன்று
வீ. ணன தந்த [3]வெற்றி யீதென [4]விளம்பி மெய்ம்மை
ஏடவிழ் மாலைக்[5] மார்ப னிருந்தன னினிதி னிப்பால்.

(இ - ள்.) இதழ்விரியப்பெற்ற மாலையையணிந்த மார்பனான ஸ்ரீராமன்,—(இலட்சுமணனை நோக்கி), 'ஆடவரிற் சிறந்தோனே! (இப்போது தோன்றிய) இந்த வெற்றியானது, உன்னாலன்று: வலிமையையுடைய அநுமானென்கிற சிரேட்டனாலன்று: வேறான தெய்வத்தின் மகிமையினாலுமன்று; விபீடணன் கொடுத்த வெற்றி (யாகும்)' என்று உண்மையைச் சொல்லி, இங்கு இனிது இருந்தனன்; (எ - று.)

இந்திரசித்து வதைத்தது மாயாசீதையென்பதைத் தெளிவித்தும் நிகும்பிலையில்வேள்வியை முடியவொட்டாது பேருதவி புரிந்தும் விபீடணன் தக்கபடி நடந்திராவிட்டால், இலட்சுமணனுடைய வில்வித்தைத் திறனும் அநுமானது அபாரமான உடல் வலிமையும் தெய்வசகாயமும் இருந்தாலும், இந்திரசித்தின்வதை நடந்திருக்கமுடியா தாகையால், 'விபீடணன் தந்தவென்றியீது' என்று உண்மையை இராமன் தெரிவித்தனனென்க. இனி, அங்கு இராவணன் இந்திரசித்து இறந்ததையறிந்து புலம்புவதைக் கூறப் போகின்றாராதலின், 'இப்பால் இனிதனிருந்தனன்' என்றார். ஆரணியகாண்டம் முதல்கவனிக்குமிடத்து, இராமராவணசம்பந்தமான நிகழ்ச்சிகளுள்ளே சூர்ப்பணகையினங்க பங்கம்-சீதையினைக்

கவர்தல், இலக்குமணனுதியர் நாகபாசத்தாற் கட்டுண்ணுதல்-கருடன் வந்து அக்கட்டை நீக்குதல், இலக்குமணனுதியர் பிரமாத்திரத்தால் உயிர்சோர்தல்-சஞ்சீவிமலையால் யாவரும்உயிர்பெற்றெழுதல் என இவ்வாறு இன்பதுன்பங்களைத் தரும் செயல் மாறிமாறிவாராநிற்க, இனி, இராமன்பக்கத்தார்க்கு இராக்கதவுபத்திரவம் அத்துணை யாக இல்லாது இன்பமே விளைதலால், இனிதினிருந்தனனென்ற தென்ப ஒருசாரார். பி - ம்:— சன்றிக்த. [2]மற்றோர். [3]வெற்றி. [4]விளம்பும். [5]மார்பரிருந்தனர். (3144)

ஸ்ரீ வான்மீகத்தில் நிகும்பிலையாகப்படலம் இந்திரசித்துவதைப் படலம் என்ற இவற்றிலுள்ள சரிதம் வருமாறு:—"நிகும்பிலையில் ஹோமத்திற்குமுயன்று அதனை நிறைவேற்றாமல இருக்கும்போது 'எவன் உன்னை யெதிர்த்து வருத்துவானோ, அவன் இந்திரசத்துரு வானஉன்னை வதைப்பான்'என்று அந்த இந்திரசித்துக்குப் பிரமன் கூறியுள்ளான்: ஆகையால், இலக்குமணனை இப்போது ஏவுக" என்று விபீடணன ஸ்ரீராமனை வேண்டிக்கொண்டதும்,அப்பிரான், இந்திரசித்தினியல்பை எடுத்துரைத்து, 'வானர சைனியங்களோ டும் விபீடணனுடியரோடும் இந்திரசித்தை வெல்லுமாறு செல்லுக' என்று இளையபெருமாளை யேவினன். இளையபெருமாள் போர்க் கோலங்கொண்டு புறப்படுகையில், வானரசைனியங்களும் உடன் சென்றன: கரடிச்சேனைகளும் உடன்சேர்ந்தன. அச்சேனைக ளுடனே வெகுதூரங்கடந்து சென்று இலட்சுமணன், விபீடண னுடும் அநுமான் அங்கதன் என்பவர்களோடும் இருந்து நிகும் பிலையைக் காவல் செய்யும் அரக்கச் சேனையைக் கண்டனன. அப் போது விபீடணன் இலட்சுமணனை நோக்கி 'இந்த அரக்கப் பெருஞ் சேனையை வானரரும் அழிக்கட்டும்: நீயும் இதனைப் பிளக் தாயாயின், இந்திரசித்து புலப்படுவான்:அவன், தான் தொடங்கிய சடங்கை முடித்து வருமுன் கொன்றிட வேண்டும்; பிறகு கொல்ல முடியாது' என்றனன். அந்த விபீடணனது மொழிப்படியே வான ரர்களும் இலக்குமணனும் பொரலாயினர். அப்போது இந்திர சித்து, தன்படை பகைவரால்வருத்தப்படுவதுகேட்டு, தொடங்கிய சடங்கு முடியுமுன்னேசினங்கொண்டு அரக்கத்துணைவரோடு போர்க்குஎழுந்து, அநுமான் அரக்கர்களை உருமாய்த்துக் கொண் டிருத்தலைக் கண்டு, அவனை நோக்கிச் சென்று கடுமையாகப் பொருதனன்.

அப்போது விபீடணன் செம்மையிலுள்ள இந்திரசித்தை இலட்சுமணனுக்குச் சுட்டிக்காட்டி, 'இவன் நிகும்பிலையென்ற ஆலமரத்தினடியிலுள்ள ஆலயத்தைச் சேர்ந்து அதனில் பூதங்கட் குப்பலிகொடுத்துப் பொரவருவானாயின், யாவர்கண்ணுக்கும் புலப் படான்; ஆகையால், வேள்வியைமுடிப்பதற்கு நிகழ்வதன்முன் அவ னைக்கொல்வாய்' என்று அந்த நிகும்பிலையென்ற ஆலமரத்தண்டை அழைத்துக்கொண்டு போயினன். இலக்குமணன் அங்குநின்றிருக் கையில், இந்திரசித்து போர்க் கோலங்கொண்டு இலட்சுமணனுக் குப் புலப்பட்டனன்; இலட்சுமணன் அவனை நோக்கி 'போர்தருக' என்ன; இந்திரசித்து அங்கு விபீடணன் இருப்பதுகண்டு அவ்

வீடணனது செயலைப் பலபடியாகக் கண்டித்துக் கூறினான். வீடணன் அவற்றுக்குத் தக்க சமாதானங்களைக் கூறி, 'நீ விரைவில் இலட்சுமணனாலிறப்பாய்' என்றனன்.

அப்பால் அனுமான் தோளில் விளங்கும் இலக்குமணனைக் கண்டு, இந்திரசித்து, 'முன்னர் இராப்போரில் நீவிர் அடிபட்டு வீழ்ந்ததை மறந்திட்டீர்போலும்' என்பது முதலாகப் பலவாறு வீரவாதங்கூற, இலக்குமணன் 'கள்ளன்போல மறைந்துபொருத அதனைக்குறித்துத் தற்புகழ்ச்சி செய்வதிற் பயன் என்ன? வல்லாயாயின் நேர்நின்று பொருக' என்ன, அப்போது இருவர்க்கும் மும்முரமான போர் நடக்கலாயிற்று. அப்போரில் இலட்சுமணனது அம்பால் இந்திரசித்து முகவொளி குறைந்தானாக, வீடணன் அதனைச் சுட்டிக்காட்டி, 'இவன் தோள்வியுற்றானென்று தெரிகின்றது: இவனைக் கொல்ல விரைந்து முயல்க' என்ன, கடுமையான அம்புகளை இலட்சுமணன் விடுக்க, அரக்கன் முகூர்த்த நேரம் மூர்ச்சையடைந்திருந்தான். பின்பு தெளிந்து, முன் தான் செய்துகாட்டிய பராக்கிரமச்செயலை மெச்சி வீரவாதங்கூறி, அம்புகளை விடுத்து, வீடணனிடத்துச் சினமும் பரபரப்பும் அதிகரித்தமையால் அவன்மீதும் நூறு பாணங்களை விடுத்தனன். அப்போது இலட்சுமணன் புன்சிரிப்புச் செய்து, 'உன்னுடைய பாணங்கள் உறுதியற்றவை யாதலால்' வருத்தப்படுத்தாமல் இனியனவாக மேல்விழுகின்றன: சூரர் இங்ஙனம் பொரார்' என்று சொல்லி, வலிமையுள்ள பாணங்களை யெழுத்துவிட, அதனால் இந்திரசித்தின் கவசம் பொடியாகி வானத்தினின்று நட்சத்திரம் விழுவதுபோல உதிர்ந்தது: இந்திரசித்து உக்கிரங்கொண்டு பல பாணங்களைத் துரக்க, இலட்சுமணனது கவசமும் சிறிந்துவிழுந்தது. இங்ஙனம் வெகுநேரம் கழிந்தும் வெற்றி தோல்வியின்றி, இருவரும் அம்புகளையும் அஸ்திரங்களையும் விடுவதும் எதிர்விடுவனவற்றைத் தடுப்பதுமாக இருந்தனர்.

இவ்வாறு நேரம்கழிவதுகண்டு வீடணன் மந்திரிமாரோடு தானும் போரிற் கிளர்ச்சிகொண்டனன். ஜாம்பவான் தன் சேனையுடன் கூடியவனாகி, அரக்கச்சேனையோடு கடுமையாகப் பொருதனன். அனுமானும் சாலமரத்தைக் கொண்டு பல்லாயிரமரக்கரைத் தாக்கினன்.

வீடணனால் அம்பெய்யப்பெற்ற இந்திரசித்தோ இலட்சுமணனையே,எதிர்த்துப் பொருதனன். அவ்விருவர்க்கும் வெற்றிதோல்வியின்றி மிக்க கடும்போர் நிகழ்ந்ததாக, அதுகண்டு இருடியர் அஞ்சி 'உலகங்கட்கு மங்கள முண்டாகுக' என்று வாழ்த்தினர்: போர் காணும் தேவகணத்தாரும் அஞ்சி விலகினர். அப்போரில் இலட்சுமணன் இந்திரசித்தின் தேர்ப்பாகனுடைய சிரத்தை யறுத்து வீழ்த்த, இந்திரசித்து தானே தேரைச் செலுத்தியவண்ணம் பொரலாயினன். எதிரி தேரையோட்டுஞ் சமயந்தோறும் இலட்சுமணன் அவனைத் தாக்கவே, இந்திரசித்து போர்ச்செருக்கு ஒழிந்து வருந்தினான்: வானரயூதபதிகள் இலக்குமணனைப் புகழ்ந்தனர்.

அப்போது, ப்ரமாதி சரபன் ரபசன் கந்தமாதனன் என்னும் வானர வீரர் நால்வரும் இந்திரசித்தின் தேர்க்குதிரைகள் நான்கின்மேற் பாய்ந்து அவைகளைக்கொன்று பெருந்தேரையும் முறித்தனர். பதாதியான இந்திரசித்து கூரிய அம்புகளை எய்தவண்ணம் நெருங்கிவர, இலட்சுமணன் தன் அம்புகளால் தடுத்திட்டான்.

இங்ஙனம் போர்நிகழ்கையில், அரக்கர்களும் தந்தலைவனை இந்திரசித்தைக் கவிந்துகொண்டு அவனுக்குப் பக்கபலமாக இருந்தனர். அப்போது இந்திரசித்து, அரக்கர்களைப் புகழ்ந்து 'இந்தத் திசையெல்லாம் இருள்மூடிக் கொண்டிருத்தலால், நிகழ்வதின்ன தென்பது புலனாகாதிருக்கின்றது. இங்கு நீவிர் எதிராளிகளுடன் போர்புரிந்து கொண்டிருப்பின், நான் இலங்கை சேர்ந்து வேறொரு தெய்வத் தேரின்மீது ஏறிக்கொண்டுவருவேன்' என்று சொல்லி, அவர்கள் அங்ஙனமே புரிய வானரர்களை ஏமாற்றி இலங்கை சேர்ந்து திவ்யமான தேரொன்றின்மீது வல்லமையுள்ள பாகனோட்டிவர மீண்டுவந்து சேர்ந்தான்: அதுகண்ட இலட்சுமணன் முதலியோர் அவ்விந்திரசித்தினுடைய திறமையை வியந்தனர்.

அப்பால் இந்திரசித்து பெருஞ்சினங்கொண்டு ஓயாமல் அம்பு எய்து வானரர்களைக்கொல்லவே, வானரர்கள் அஞ்சி இலட்சுமணனைச் சரணமடைந்தனர். பிறகு, இலட்சுமணன் கடுஞ்சினங்கொண்டு அம்பெய்து அவனது விற்களைத் துணித்துக் கவசத்தையும் பிளந்தான். இங்ஙனம் இலட்சுமணன் வெகுகடுமையாகத் தன் வீரியத்தைக் காட்டிக்கொண்டு பல அரக்கர்களையும் எய்து பாகனையும் வீழ்த்தினான். இந்திரசித்து வேறொரு விற்கொண்டு இலக்குமணன் மீது அம்புதொடுத்து அவனது கவசத்தைப் பிளக்கப்பார்க்க, அது அபேத்யகவசமாயிருந்ததுகண்டு அவன் நெற்றியின்மீது அம்பு தொடுத்தான். இவ்வாறு போர்நிகழ்கையில், இந்திரசித்து விபீடணன்மீதும் வானரர்மீதும் அம்புகளைத் தூவ, விபீடணன் தன் கதாயுதத்தால் அவன் தேர்க்குதிரைகளைப் புடைத்துவீழ்த்தினான். சாரதியையும் குதிரையையு மிழந்த இந்திரசித்து தேரினின்று கீழே குதித்து அத்தேரிலுள்ள சக்தியென்னும் படையையெடுத்து விபீடணன்மீது எறிய, இலட்சுமணன் இடையே அதைப் பத்துச் சுக்கலாகுமாறு துணித்திட்டான். இந்திரசித்து சிறியமாஸ்திரத்தை எடுத்துவிட, குபேரன் ஸ்வப்நத்திலே தனக்குக் கொடுத்திருந்த அஸ்திரத்தை இலக்குமணன் தொடுக்க, இரண்டும் மோதிக் கீழ்விழுந்தன. இருவரும் தமது அஸ்திரங்கள் பழுதுபட்டமைக்கு நாண, இலட்சுமணன் வாருணாஸ்திரத்தைவிட, அரக்கன் ரௌத்ராஸ்திரத்தினால் அதனைத் தடுத்திட்டு ஆக்நேயாஸ்திரத்தைத் தொடுக்க, இலக்குமணன் சூரியாஸ்திரத்தினால் தடுத்திட்டான். தன் அஸ்திரம் பழுதுபடவே, சினம்மிஞ்சிய அரக்கன் ஆஸுராஸ்திரத்தைவிடுக்க, இலட்சுமணன் மாஹேஸ்வராஸ்திரத்தினால் அதனைத் தடுத்திட்டான்: இவ்வண்ணம் அவ்விருவருடைய போரும் ஆச்சரியமாக இருந்தது. இருடியர்முதலியோர், 'இலட்சுமணனுக்கு வெற்றி யுண்டாகுக' என்று வாழ்த்தினர். அப்பால் இலட்சுமணன் மிகச் சிறந்த அம்பு ஒன்றை

யெடுத்து வில்லேப்பூட்டி ஐந்திராஸ்திரத்தை அபிமந்திரித்து, 'ஸ்ரீராமன் தருமஸ்வபாவனும் சத்தியசந்தனும் ஆண்மையில் தன்னெப்பாரில்லாதவனுமாயின், கணையே! இவனைக் கொல்க' என்று சொல்லி விடுத்தனன்: அந்தக்கணை அந்த இந்திரசித்தினுடைய தலையைத் துண்டித்துத் தரையில் வீழ்த்தியது. அது கண்டு வானரர்முதலியோர் பெருமகிழ்ச்சிகொண்டு கொக்கரித்தனர்; சாம்பவான் முதலிய பலர் இலட்சுமணனைப் புகழ்ந்தனர்: தேவர்கள் பூமாரிபெய்தனர்: அந்தர துந்துபி முழங்கிற்று. சில தேவர்கள் தாமே போர்க்களத்தில் நேரேவந்துகண்டு இந்திரசித்து இறந்ததை நம்பினர்.

பிறகு இலட்சுமணன் இந்திரசித்தைவென்ற மகிழ்ச்சியுடனே உடலிற் பொத்திய பாணங்களாற் சோர்ந்து வானரர்கள்சூழ, அனுமான்மீதும் விபீடணன்மீதும் ஊன்றியவண்ணம் போர்க்களத்தினின்று ஸ்ரீராமனிருக்குமிடத்துக்கு விரைந்துபோய், அப்பிரானை வலஞ்செய்து வணங்கி அருகில் நின்று இந்திரசித்து மாண்டதைத் தெரிவித்தானாக, ஸ்ரீராமன் மனமுவந்து இலக்குமணனை நோக்கி, 'நீ இந்திரசித்தைக் கொன்றதனால், இனி இராவணனைக் கொன்று சீதையை மீட்டதாகவே நினைக்கிறேன். இராவணனுக்குப் பெரிய பற்றுக்கோடாகஇருந்த அவன்மகன் மூன்று நாள்கள் முற்றிலும் பொருது கொல்லப்பட்டானன்றோ? விபீடணனும் அனுமானும் இந்தப் போரில் மிக்க திறமையைக் காட்டியுள்ளார்' என்றுகூறி, அவனை மடியிலிருத்தி உச்சிமோந்து உடலெல்லாம் கணைகளாற்பொத்துண்டு புண்பட்டிருப்பது கண்டு மிகவருந்திக் கையினால் தடவிக்கொடுத்து, சுடேணனென்பவனையழைத்து, 'நீ சிகிச்சைசெய்வதில் வல்லவனாதலால், இந்த இலக்குமணனையும் விபீடணனையும் மற்றும் கணையாற் புண்பட்ட வானரர்களையும் பிணி நீங்கித் தந்நிலையினராகுமாறுசெய்க' என, அவனும் ஓஷதியொன்றை இலட்சுமணனது மூக்கில்வைத்து மோக்கச்செய்தனன்: அம்மாத்திரத்தால் அவ்விலக்குமணனுடைய உடலில் பொத்துண்டிருந்தசல்லியங்களெல்லாம் நீங்கி வேதனையுந்தீர்ந்தது: புண்களும் உலர்ந்திட்டன: இவ்வண்ணமே அனைவரையும் சொஸ்தராக்கினன். யாவரும் புண்ணொழிந்து இன்னிலையையடைந்து இந்திரசித்து மாண்டமைக்கு மனமுவந்திருந்தனரென்பதாம்.

இந்திரசித்துவதைப்படலம் முற்றிற்று.

---

28 - ஆவது இராவணன் சோகப்படலம்.

(இந்திரசித்து மாண்டதையறிந்து) இராவணன் துயரமுற்றதைக் கூறும் படலமென்பது, பொருள். சில ஒற்றர் இந்திரசித்து மாண்டதும் அரிதிற் போர்க்களத்தைநீத்துச் சென்று இலங்கையையடைந்து மிக்க நடுக்கத்தோடு இராவணனுக்குச் செய்தியறிவித்ததும், அருகிலிருந்த தேவர்முதலியோர் 'உலகுக்கு என்ன நேருமோ!' என்று அஞ்சியொளிக்க, இராவணன் அவரத்துடனே

சினம்விஞ்சச் செய்திசொன்ன ஒற்றர்களை வாளினால் ஒரே வீச்சாக வீசினான். பின்புபுதல்வனிடந்தவைத்திருந்தஅன்பும் கொடுங்கோபமும்வெளித்தோன்ற இருபது கண்களிலும் இரத்தக் கண்ணீர் தாரைதாரையாய்ப்பெருகப் பற்களை நெறுநெறென்று கடித்துக் கைகளால்மோதி வெகுவாய்ப் புலம்பினான். மற்றும் இறந்துவீழ்ந்துகிடக்கும் மகனுடலைக் காணப் புறப்பட்டுச் சென்று போர்க்களங்குறுகி, களத்தில்வீழ்ந்துகிடக்கும் பரிமா முதலியவற்றினுடல்களை ஒரு நாளெல்லாம் புரட்டிப்பார்த்து முதலிற் கையைக் கண்டான். கண்டதும் பித்துப்பிடித்தவன் போன்று அந்தக்கையைத்தலையிற்கொள்வதும் பெருமூச்சுடனே மார்பிற்கொள்வதும் தன்கழுத்தில் வைத்துக்கொள்வதும் கண்களில் ஒற்றிக்கொள்வதுமாயிருந்தான். பிறகு தலையற்ற அவ்விந்திரசித்தினுடலைக்கண்டு அந்தப்பிணத்தின்மேல்வீழ்ந்து ஒருவரும்பட்டிராத பெருஞ்சோகத்துடனே பலபடிபுலம்பிப்பின் அதனை எடுத்துக்கொண்டு இலங்கையிலே பெண்களின்திரள் கோவெனக்கதறியழுகின்ற அரண்மனையிற்போய்ச்சேர்ந்தான். பின்பு 'இவ்வாறெல்லாம் நமக்குத் துயரம் நேர்ந்ததற்குக் காரணம், சீதையேயல்லவா! ஆகையால், அவளைக் கொன்றுவிடு கின்றேன்' என்று விரைய, அதுகண்ட மகோதரன் பலபடிகூற, இராவணன் சினந்தணிந்து இந்திரசித்தினுடலைத் தயிலத்தோணியி லிட்டுவைக்குமாறு நியமிக்க, பணியாளர் அவ்வாறே செய்தார்க ளென்றசெய்தி இப்படலத்திற் கூறப்படுகின்றது.

வேறு.

1.—இந்திரசித்து இறந்த செய்திசொல்ல இராவணனிடம் தூதரோடுதல்.

[1]ஓத ரோதன வேலை [2]கடந்துளார்
[3]பூத ரோதரம் புக்கெனப் [4]போர்த்திழி
சீத ரோதக் குருதித் [5]திரையொரீஇத்
தூத [6]ரோடினர் தாதையிற் சொல்லுவான்.

(இ - ள்.) தூதர்-ஒற்றர்கள்,—தாதையின் - (இந்திரசித்தின்) தந்தையாகிய இராவணனிடத்தில், சொல்லுவான் - (புதல்வனான இந்திரசித்து இறந்ததைச்) சொல்லும்பொருட்டு, - போர்த்து இழி-(போர்க்களமெங்கும்) போர்த்துக்கொண்டு இழிகின்ற, சீதம் ரோதம் குருதி திரை-குளிர்ச்சியையும் கரையையுமுடைய இரத்தக் கடலை, ஒரீஇ-நீங்கி—ஓதம்-பெருவெள்ளமாகத்திரண்ட, ரோதனம் -அழுகையைக்கொண்ட, வேலை - அரக்கக் கடலை, கடந்து உளார் -கடந்தவராகி, பூதர உதரம் புக்கென - மலையின் உள்ளிடத்திற் புகுந்தாற்போல, (இலங்காநகரின் கோபுரவாயிலிற்புகுந்து), ஓடினர் - ஓடினார்கள்;(எ - று.)

இந்திரசித்து இறந்தசோகத்தாற் புலம்பும் பெருந்திரளான அரக்கரை அத்தூதர் கடந்துசென்றமையை, 'ஓதரோதன வேலை கடந்துளார்' என்றார். இலங்கையின் கோபுரவாயில் மேருமலையைத் தொளைசெய்துவைத்தாற்போல் இருத்தலால், இராவணனிடத் துச் செல்வதற்காகத் தூதர்கள் அவ்வாயிலைக்கடந்தமையை 'பூத

ரோதரம் புக்கென' என்று உபமானமுகத்தால் விளக்கினர். அமர்க்களத்தைக் கடக்குமிடத்து இரத்தவெள்ளத்தைத் தூதர்கடந்து சென்றனரென்பது, மூன்ருமடியிற் குறிக்கப்பட்ட பொருள். இரத்தம் உடலிலிருந்துவெளிப்படும்போது வெம்மையாயிருக்குமாயினும் பிறகு குளிர்ந்துவிடுமாதலால், 'சீதக் குருதி' என்றனர். இச்செய்யுளில், திரிபுஎன்ற சொல்லணி காண்க. ஓதம்-வெள்ளம். ரோதனம்-அழுகை. பூதரோதரம்-குணசந்திபெற்ற வடமொழித்தொடர்; பூதரம்-பூமியைத்தாங்குவது என மலைக்குக் காரணக்குறி. ரோதம்-கரை. திரை-கடலுக்கு, ஆகுபெயர். குருதித்திரைக்குக் கரை, நாற்புறத்திலுங் குவிந்த சவங்களெல்லாம். ரோதநம், ரோதம் என்று வடமொழியிற் பிறந்தவண்ணமாகவே கூறினர்: 'ராசமர்புரி' என்றதுபோல. பி - ம்:—[1] ஓதரோதமர், ஓதரோதரம், ஓதரோமதா, ஓதரோதந்தம். [2] கடந்துராய்ப். [3] பூதரோதனம், பூதரோந்தரம். [4] போக்கறுஞ், போக்கலும், போர்த்துறும், பொய்த்துள. [5] திசை. [6] ஓதவெங்காலிற்றுணேந்துளார், ஓடினர் தாதையிற் சொல்லுவார். சிலபிரதியிற் கீழ்ப்பாடலோடு படலம் முடிக்கப்படாமல், இந்தப்பாட்டின் முன் இராவணன்சோபம் என்று எழுதியுள்ளது. (3145)

2.—தூதர் இராவணனைக் கிட்டுதல்.

அன்றி லங்கரும் பேடைக ளாமென
முன்றிலெங்கு [1]மரக்கியர் [2]மொய்த்தழ
இன்றி லங்கை யழிந்ததென் றேங்குவார்
சென்[3]றி லங்கையிற் ருதையைச் சேர்ந்துளார்.

(இ - ள்.) அழகிய கரிய அன்றிற்பேடைகள்போல வீட்டின் முன்னிடமெங்கும் அரக்கமாதர்கள் நெருங்கி யழுதுகொண்டிருக்கையில் (அத்தூதுவர்), 'இன்று இலங்கையழிந்துவிட்டது' என்று ஏங்குபவர்களாய், விளங்குகின்ற வேற்படையைக்கொண்ட (இந்திரசித்தின்) தந்தையான இராவணனைச் சென்றுசேர்ந்தவரானர்;

நான்காமடியில், 'அயில்' என்பது - ஐயில் என்று போலி பெற்றுவந்தது. பி - ம்:—[1] அரக்கரை. [2] மொய்த்தெழ, மொய்த்தொழி. [3] இலங்கையினிப் பகைசெந்துளார், இலங்கையிற் ருதையிற் சேர்ந்துளார். (3146)

3.—தூதர் இந்திரசித்து இறந்தசெய்தியை இராவணனிடம் தெரிவித்தல்.

பல்லும் வாயு மனமுந்தம் பாதமும்
நல்லு யிர்ப்பொறை யோடு நடுங்குவார்
இல்லை யாயின [1]னுன்மக னின்றெனச்
சொல்லி னர்பயஞ் சுற்றத் [2]துளங்குவார்.

(இ - ள்.) (அத்தூதுவர்), தம்முடைய பல்லும் வாயும் மனமும் பாதமும் சிறந்த உயிர்ச்சுமையோடு நடுங்கப்பெற்றவரும், அச்சஞ் சூழ்ந்துகொள்ள நிலைகலங்கியவருமாகி, 'இன்றைக்கு உன் மகன் இல்லையாயினன்' என்று (இந்திரசித்து இறந்தசெய்தியைச்) சொல்லினர்; (எ - று.)—பி - ம்:—[1] நும். [2] தொடங்கினர், துளங்கினர்.

4.—ஆங்கிருந்த வானவர் முதலியோர் அதுகேட்டு 'இராவணன் என் செய்வானே?' என்று ஓடியொளித்தல்.

மா[1]டி ருந்தவர் [2]வானவர் மாதரார்
[3]ஆடல் நுண்ணிடையார்[4]மற்று மியாவரும்
விடு மின்றிவ் வுலகென [5]விம்முவார்
ஓடி யெங்கணுஞ் சிந்தி [6]யொளித்தனர்.

(இ-ள்.) (அதுகேட்டு), இராவணன்பக்கத்திலிருந்தவரான வானவர்களும், ஆடுந் தன்மையுள்ள நுண்ணிய இடையைக் கொண்டவரான மாதரார்களும் மற்றுமுள்ளாரும், (இராவணனுடைய சினத்தினால்) இன்று இவ்வுலகமானது அழிந்து விடுமென்றுபுலம்புபவராய், ஓடிஎங்கும் சிதறியொளித்துக் கொண்டனர்; (எ - று)—பி - ம்:—[1]இருந்தனர். [2]மாதவர்வானவர், வானவர்மாதர். [3]ஈடு, ஈடில். [4]மற்றியாவரும். [5]விம்மினர். [6]ஒளித்ததால். (3148)

5.—செய்திசொன்ன தூதரை இராவணன்வெட்டித் தான் கீழ்விழுதல்.

சுடர்க்கொ ழும்புகை தீவிழி தூண்டிடத்
[1]தடற்று வாளுருவித்[2]தரு தூதரை
மிடற்று [3]வீச லுரு[4]விழுந் தானரோ
கடற்[5]பெ ருந்திரை போற்கரஞ் [6]சோரவே.

(இ - ள்.) கோபாக்கினியின் கொழுவியபுகையைத் தீவிழிகின்ற கண்கள் வெளிப்படுத்தவும், (இராவணன் தனது) வாட்படையை உறையினின்று உருவி (மெடுத்துத் துயர்ச் செய்தியை)க் கொணர்ந்த தூதுவர்களைக் கழுத்தினிடத்தில் வீசி, பெரியகடலலைகள்போற் கைகள் சோர்ந்திட வீழ்ந்திட்டான்; (எ - று.)—'தூதரைக் கொல்லலாகாது' என்ற நூன்முறைமையையும் துயரமிகுதியால்மறந்திட்டானாய், இராவணன் நற்செய்திக்குச் சம்மானிப்பது போலத் தீச்செய்தி சொல்லியதற்குச் சம்மானமாக வாளைவீசினன்: அங்ஙன் வீசின இராவணன் வெட்டிய கன் கைகள் சோர்ந்திட, கோப சோகங்களைத் தாங்கலாற்றாது கீழ்வீழ்ந்தனனென்பதாம். தீவிழி நெருப்புப் பொறி புறப்பட விழிப்பது; கண். பி-ம்:—[1]தடக்கை.[2]தருந். [3]வீசலுற்றான்.[4]விழுந்தார்.[5]கருந்திரை.[6]சேரவே.

6.—புத்திரசோகத்தால் இராவணனுக்குச் சினத்தீ மிக்குத் தோன்றுதல்.

வாய்ப்பி றந்து [1]முயிர்ப்பின் [2]வளர்ந்தும்வான்
[3]காய்ப்பு றுந்தொறுங் கண்ணிடைக் காந்தியும்
போய்ப[4]பி றந்திவ் வுலகைப் [5]பொதியும்வெந்
தீப்பி றந்[6]துள தின்றெனச் [7]செய்ததால்.

(இ - ள்.) (புத்திரசோகமானது)—'வாயினிடத்திற் பிறந்தும், பெருமூச்சில்வளர்ந்தும் மிகதியாகக்காய்தல் பொருந்துந்தோறுங் கண்ணினிடையில் விளங்கியும் பிறந்துபோய், இவ்வுலகைமூடுகின்ற கொடிய (சினத்) தீயானது இன்று இராவணனுக்குத் தோன்றியுள்ளது' என்னுமாறு செய்தது; (எ - று.)

புத்திரசோகத்தால் இராவணனுக்கு மிகுந்த சினம் தோன்றிற்றென்றவாறு. சினத்தீத் தோன்றியது - வாயைக்கடித்தல், பெருமூச்சுவிடுதல், உறுத்துப்பார்த்தல் முதலிய செயல்களாற் புறத்து விளங்குவதால், 'வாய்ப்பிறந்தும்...பொதியும்வெந்தீ' என்றார். பி-ம்:—[1]உயிர்ப்பு, உயிர்ப்பும். [2]வளர்க்தும்வன், வளர்ந்துவான். [3]காப்பிறந்தறுவான், காப்புறுந்தொறு. [4]பிறங்கிவ்வுலகம். [5]பொதிய. [6]உளவனறென. [7]செய்கையால், சென்றதால். ()

7.—இதுவும் அது.

படம்பி றங்கிய பாந்தளும் பாருமபேர்ந்து
இடம்பி றங்கி [1]யலம்[2]பெயர்ந் தீடுற
உடம்பி றங்கிக் [3]இடந்துழைத் தோங்குதீ
விடம்பி றந்த கடலென [4]வெம்பினன்.

(இ - ள்.) (தன்) உடல் தளர்சியுற்று(த் தரையிற்) கிடந்து வருந்துதலால், (ஆயிரம்) படங்களோடு விளங்குகின்ற ஆதிசேஷனும் (அவனால் தாங்கப்படுகின்ற) பூமியும் (தாம்) இருக்குமிடத்தை விட்டுப் பெயர்ந்து ஒலித்து அலமந்துவலிகுலைய, (இராவணன்), ஓங்குகின்ற கோபத்தீயினால் விடந்தோன்றிய கடல்போல வெதும்பினான்; (எ - று)—இடம்பேர்ந்து பிறங்குதல்- இடம்விட்டுப்பெயர்ந்து ஒலித்தல். பி - ம்:—[1]வலம் [2]பெயர்த்தீண்டுற. [3]கிடந்துதைத்து, கிடந்துமைத்து. [4]விம்மினன். (8151)

8.—இராவணன் கண்ணீர் பெருக்குதல்.

திருகு வெஞ்சினத் தீநிகர் சீற்றமும்
பெருகு காதலுந் [1]துன்பும்[2]பிறங்கிட
இருப தென்னு மெரிபுரை கண்களும்
உருகு செம்பென வோடிய [3]தூற்றுநீர்.

(இ-ள்.) (யாவும்) நிலைகெடுதற்குக் காரணமான தீயையொத்த கொடிய கோபமென்று சொல்லப்படுகின்ற சீற்றமும்(மேன்மேற்) பெருகுகின்ற அன்பும் துன்பமும் விளங்கித் தோன்றியதனால், இருபது என்று சொல்லப்படுகின்ற (இராவணனுடைய) எரியையொத்த கண்களினின்று (மேன்மேற்) சுரக்கின்ற அழுகைக் கண்ணீரானது, உருகின செம்புபோல் ஓடலாயிற்று; (எ - று.)

பகைவனிடத்துச் சீற்றம், மகன்மீதுள்ள அன்பு, அவனையிழந்ததனாலுண்டான துன்பு என்ற இவற்றால் இராவணனுடைய கண்களிலிருந்து வெப்பக்கண்ணீர் பெருகலாயிற்றென்க. பி - ம்:—[1]அன்பும். [2]பிழிந்திட, பிறழ்ந்திட. [3]ஊன்றின, ஊறின. (3152)

9.—சினத்தினால் இராவணன் பற்களைக் கடித்துத் தரையில் மோதுதல்.

கடித்த பற்குலங் [1]கற்குலங் [2]கண்ணற
இடித்த காலத் துருமென வெங்கணும்
அடித்த கைத்தல மம்மலை யாழிநீர்
[4]பொடித்த வாய்தொறும் பொங்கின மீச்செல.

(இ - ள்.) (இராவணன் நெறுநெறென்று) கடித்த பற்களின் டத்தினால் மலைக்கூட்டத்தின்மீது கண்ணோட்டமில்லாமல்

இடித்த மழைக்காலத்து இடிபோல எங்கணும் (பேரொலியுண்டாக) அம்மலையில் (இராவணன்) மோதிய கைத்தலத்தினால் [கைத்தலத்தினால்மோத] பொடியாய்விட்ட அம்மலையிடந்தோறும் கடலினீர்கள் மேற்செலப் பொங்கின; (எ - று.)

இலங்கை கடலிடையிலுள்ள தீவு ஆதலால், தான்உள்ள திரிகூடாசலத்தில் இராவணன் கையினால் மோதுகையில் மோதப்பட்ட மலையினிடமெல்லாம் பொடியாய்விடவே, கீழிருந்த ஆழிநீர் கிளர்ந்துபொங்கி மேற்செல்வதாயிற்றென உயர்வுநவிற்சியணி படக் கூறினார். பி-ம்:—[1]கைக்குலம். [2]கண்ணுற. [3]கைததலத்து. [4]வெடித்த. (3153)

10.-நான்குகவிகள்-இராவணன் புலம்புதலைத் தெரிவிக்கும்.

மைந்த வோவெனும் மாமக னேயெனும்
எந்தை யோவெனு [1]மென்னுயி ரேயெனும்
முந்தி னேனுனை நா[2]னுள னேயெனும்
வெந்த புண்ணிடை வேல்பட்ட [3]வெம்மையான்.

(இ - ள்.) (அப்போது) வெந்த புண்ணினிடையில் வேல்பட்டாற்போன்ற கொடுந்துன்பத்தை யடைந்தவனான இராவணன்,— மைந்தனே! ஓ!! என்பான்: சிறந்தமகனே! என்பான்; எந்தையே! ஓ! என்பான்; என்னுயிரே! என்பான்; உனக்கு முந்தினவனாகிய நான் உயிரோடு இருக்கின்றேனே!! என்பான்; (எ - று.)—ஓ-இரக்கப் பொருளது.

சீதையைப் பெறவேண்டுமென்று தான் செய்துவந்த முயற்சி பலியாமையோடு தலைமகனாகிய இந்திரசித்து இறந்த துயரையும் அடைந்தவனான இராவணனை 'வெந்தபுண்ணில் வேல்பட்ட வெம்மையான்' என்றார். இச்செய்யுள் அடுத்த பாடலின்பின் சிலபிரதியில் உள்ளது. பி-ம்:—[1]என்மகனே. [2]உளனே. [3]வெம்மையாய். (3154)

11. புரந்த ரன்பகை [1]போயிற்றன் றோவெனும்
அரந்தை [2]வானவ ரார்த்தன ரோவெனும்
கரந்தை சூடியும் [3]பாற்கடற் கள்வனும்
[4]நிரந்த ரம்பகை நீங்கின ரோவெனும்.

(இ-ள்.) இந்திரனது பகை போயிற்றன்றோ! என்பான்: (இது வரையில் நம்மால்) துன்பத்தையடைந்தவரான வானவர்கள் (மகிழ்ச்சியால்) ஆரவாரித்தாரோ! என்பான்; கரந்தையைச்சூடிய சிவனும் பாற்கடலில் ஒளித்துக்கொண்டுள்ள வஞ்சனைக் குணத்தையுடைய திருமாலும் நிரந்தரமாகத் தம்பகை நீங்கப்பெற்றாரோ! என்பான்; (எ - று)

சிலபிரதிகளில் இச்செய்யுளின் முதலிரண்டடிகள் தம்முள் மாறியுள்ளன. பி - ம்:—[1]போயினதோ. [2]வானரர். [3]பார்க்கடல். [4]நிரந்தவான்பகை நீங்கினரோ. (3155)

12. நீறு பூசியு நேமியு நீங்கினர்
மாறு முன்றெனு வேலை மறைந்துளார்

ஊறு நீங்கின ராயுவ ணத்தினேடு
ஏறு மேறி யுலாவுவ [1]ரென்னுமால்.

(இ - ள்.) விபூதியைத்தரித்தவனுன சிவபெருமானும் திருமாலும், (மாறுபட்டு) எதிர்நிற்பதினின்று நீங்கினவர்களாய் மலையோடு கடலில் மறைந்துள்ளவர்கள்,—(இப்பொழுது) இடையூறு நீங்கினவர்களாய்க் கருடப்பறவையோடு இடபத்தின்மீது ஏறி யுலாவுவார்கள் என்று சொல்லுவான்; (எ - று.)—ஊறு - அச்சமுமாம். 'நீறுபூசி' 'நேமி' என்று கூறியதற்கு எதிராக, 'உவணத்தினேடு', 'ஏறு' என்றது-எதிர்நிரனிறைப்பொருள்கோள். சிவனும் திருமாலும் மலையிலும் கடலிலும் வசிப்பதை, தனக்கு அஞ்சி மறைந்து வசிப்பதாகக் கற்பித்துக்கொண்டான். பி - ம்:—[1]சேயெனும். (3156)

13. வான மானமும் வானவ ரீட்டமும்
போன போன [1]இசையிடம் [2]புக்கன
தான மானவை [3]சார்கில [4]சார்குவது
ஊன [5]மானிடர் வென்றிகொண் டோவெனும்.

(இ - ள்) வானவர்களின் கூட்டமும் (அவர்கள் ஏறிச்செல்லுகின்ற) வானத்திற் சஞ்சரிக்கவல்ல விமானங்களும், (இந்திரசித்துக்கு முன்னே எதிர்த்து நிற்கமாட்டாமல் அச்சத்தினுல்) ஓடிப்போன ஓடிப்போன திக்குக்களில் தானே பதுங்கினவை, (இதுவரையில்) தமக்கு உரியனவான தானங்களிற் சேரமாட்டாதனவாயின: அவை, (மீண்டு) சேருவது தாழ்மையான மானுடரின் வெற்றியைக் கொண்டுதானே? என்பான்; (எ - று.)—ஆனவை - அவை: இனி, தானமானவை என்று ஒன்ருக எடுப்பினுமாம். மானம்-விமானமென்பதன் முதற்குறை. பி-ம்:—[1]திசையிடைப். [2]புக்கனர். [3]சார்கிலர். [4]சார்குவ. [5]மானிடர்கள், மானுடன். ()

14.—இருகவிகள்-இராவணனுடைய துயர்நிலை.

கெட்ட தூதர் [1]கிளத்தின [2]வாறொரு
கட்ட மானிடன் கொல்லவென் காதலன்
பட்டொ ழிந்தன [3]னேயெனும் [4]பன்முறை
விட்ட ழைக்கு முழைக்கும் வெதும்புமால்.

(இ - ள்.) தீமையையுடைய ஒற்றர் சொன்னவாறு கஷ்டப்படுகின்ற ஒருமனிதன் கொல்ல எனது புதல்வன் உயிரொழிந்து அழிந்தனனே! என்பான்: பலமுறை ('மைந்தா!' மைந்தா!' என்று) குரல்விட்டுக் கூப்பிடுவான், வருந்துவான்; (மனம்) வெதும்புவான், (இராவணன்); (எ-று.)—சில பிரதியில், இச்செய்யுள், "எழுமிருக்கும்" என்ற அடுத்த பாடலுக்குப்பின். பி - ம்:—[1]கிளர்த்தின, கிளத்தினர். [2]போய் [3]ஓ. [4]பான்முறை. (3158)

15. எழுமி ருக்கும் [1]நடக்கு [2]மிரக்கமுற்று
அழும ரற்று [3]மயர்க்கும் [4]வியர்க்கும்போய்
விழும்வி ழிக்கு முகிழ்க்குந்தன் [5]மேனியால்
உழு[6]நிலத்தை யுருளும் புரளுமால்.

(இ-ள்.) (பின்னும் இராவணன் துயரமிகுதியால்) எழுந்திருப்பான்: உட்காருவான்: நடப்பான்: இரக்கங்கொண்டு அழுவான்: கதறுவான்: சோர்வான்: (உடல்) வியர்க்கப்பெறுவான்: எழுந்து போய் விழுவான்: (கண்ணை) விழித்துப் பார்ப்பான்: (பின்பு) மூடிக் கொள்ளுவான்: தன் உடலாற் பூமியை யுழுவான்: புரண்டுஉருளுவான்; (எ-று.) பி-ம்:—[1] இரைக்கும் [2] இரக்கம். [3] பரக்கும், உயிர்க்கும். [4] அழைக்கும், வியக்கும். [5] மேனியை. [6] நிலத்தையுறமுழும். ()

16.—ஏழுகவிகள் - இராவணன் சிரங்கள் புலம்பியன கூறும்.

ஐயனேயெனு மோர் [1] சிரம் யானினம்
[2] செய்வ னேயர சென்னுமங் கோர் [1] சிரம்
கையனே [3] னுனைக் காட்டிக் [4] கொடுத்தநான்
உய்வ னேயென் றுரைக்குமங் கோர் [1] சிரம்.

(இ-ள்.) அப்பொழுது (இராவணனுடைய பத்துச்சிரங்களில்) ஒரு சிரமானது, ஐயனே என்னும்: அங்கு ஒரு சிரமானது யான் இன்னும் அரசு செய்வேனே என்னும்: அங்கே ஓர்சிரமானது, உன்னைப் பகைவர்கையிற் காட்டிக்கொடுத்த அற்பனாகிய யான் உய்வேனோ! என்னும்; (எ-று.)—'அங்கு' என்பதை அசையாகக்கொள்ளினுமாம் பி-ம்:—[1] தலை. [2] செய்யனே யரசே யெனும். [3] கையனே. [4] கொடுத்தியான். (3160)

17. எழுவிற் கோல மெழுதிய [1] தோள்களால்
தழுவிக் கொள்கலை [2] யெனுமங் கோர்தலை
உழுவைப் போத்தை யுழையுயி [3] ருண்பதே
செழுவிற் சேவக னேயெனு மோர் [4] சிரம்.

(இ-ள்.) ஓர் தலையானது, '(சந்தனக்குழம்புகளாற்) கோலமெழுதப் பெற்ற இரும்புத்தூணையொத்த தோள்களினால் (என்னைத்) தழுவிக்கொள்ளாயலிருக்கின்றாயே!' என்றுசொல்லும்; ஒரு தலையானது, 'வளப்பமுள்ள வில்வீரனே! புலியேற்றை மான் உயிருண்பது தகுதியோ!' என்று கூறும்; (எ-று.)—அலங்காரமாகத் தோள்களிற் கோலமெழுதுதலுண்டு: அன்றி, மகளிரையணையும் போது அவர்கள்மார்பில் அணிந்த கோலம் பதிந்திருப்பதைக் கூறியதுமாம். இனி, 'எழுவிற்கோலமெழுதிய தோள்களால்' என்பதற்கு-போரில் மூண்டெழுகின்ற வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளாற் பகைவர்கள் மேனியிலெழுதுகின்ற தோள்களால் அல்லது பகைவர் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளாலெழுதப் பெற்ற (வலிமைபெற்ற) தோள்களால் எனினுமாம்: கோல் - அம்பு: அம்-சாரியை. இதுவரையில் ஐந்து சிரங்கள் கூறப்பட்டன. இனி, ஒவ்வொரு தலை கூறுவது மேல் ஐந்து செய்யுள்களிற் கூறப்பெறும். பி - ம்:—[1] கைகளால் [2] ஓவெனும். [3] உண்பதோ. [4] தலை. மூன்றுமடியிற் பிறிதுமொழிதலணி யுள்ளது. (3161)

18. நீலங் காட்டிய கண்டனும் நேமியும்
ஏறுங் [1] காட்டி னெறிந்த படைக்கெலாம்
[2] தோளுங் காட்டித் துரந்தனை மீண்டுநின்
ஓலங் காட்டிலை யோவெனு மோர் [1] சிரம்.

(இ-ள்.) ஒருதலையானது,—'நீலநிறத்தைக்கொண்ட கண்டத்தையுடையவனான சிவபெருமானும், சக்கரபாணியாகிய திருமாலும், எதிர்க்கின்ற தொகுதியாயெறிந்த படைகளுக்கெல்லாம் தோல்வியையுண்டாக்கி, (அவர்களைத்) துரத்திவிட்ட நீ மீண்டும் உன் குரலைக் காட்டாமற் போனாயோ!' என்று கூறும்: (எ-று.)— காட்டின்-காடுபோல; தொகுதியாக என்றபடி. தோல்-தோல்வி: முதனிலைத்தொழிற்பெயர். துரந்தனை-துரந்தனே: வினையாலணையும் பெயர். இச்செய்யுள், சிலபிரதிகளில் "காகமாடும்" (20) என்ற செய்யுளின்பின் உள்ளது. பி-ம்: [1] காட்டில். [2] கோலம். [3] தலை ஒரு பிரதியில் இரண்டுமூன்றும் அடிகள் 'கோலங்காட்டித் துரந்த படையெலாம், ஏலுங்காட்டிலெறிந்தனையீண்டநின்' என்று உள்ளன. (3162)

19. [1]துஞ்சி னாய்கொல் துணைபிரிந் தேனெனும்
வஞ்ச மோவெனும் வாரலை யோவெனும்
நெஞ்சு நோவ நெடுந்தனி யேகிடந்து
அஞ்சி னே[2]னென் றரற்றுமங் கோர்தலை.

(இ-ள்.) அங்கே ஒருதலை,—'நீ இறந்திட்டாயோ! (நான்) துணையைப் பிரிந்திட்டேனே!' என்று கூறும்: (உனக்கு நேர்ந்த இவ் விபத்து) வஞ்சகமோ! என்று கூறும்; இனித் திரும்பிவரமாட்டாயோ! என்று கூறும்: (நான்) தன்னந்தனியே கிடந்து அஞ்சினேன்' என்று நெஞ்சு நோவக் கதறும்; (எ-று.)—இச்செய்யுள், சிலபிரதிகளில் "சேலியற்கண்" (21) என்ற செய்யுளின் பின் உள்ளது: சிலபிரதிகளில் "காகமாடு" (20) என்றதன்பின்உள்ளது: சிலபிரதிகளிலில்லை; ஆயினும், "ஐயனே" (16) என்ற செய்யுள் தொடங்கி, பத்துத்தலைகளும் புலம்புதலைக் கவி கூறுகின்றாராதலின், அந்தச் செய்யுளில் மூன்றுதலைகளும் அடுத்த "எழுவில்" என்றசெய்யுளில் இரண்டு தலைகளும் புலம்புதல் கூறப்பட்டனவாதலாலும், பிறகு ஒவ்வோர் தலையே கூறப்பட்டுவருவதனாலும், மற்றையைந்து தலைகட்கு ஐந்து செய்யுட்கள் வேண்டுமென்க. பி-ம்:—[1] துஞ்சும்போது. [2] என்னமருமகனேயெனும். (3163)

20. காக மாடு களத்திடைக் [1]காண்பனோ
[2]பாக சாதனன் மௌலியோ டும்[3]பறித்து
[4]ஓகை [5]மாதவ ருச்சியின் வைத்தநின்
வாகை நாண்மல ரென்னுமற் றோர்தலை.

(இ-ள்.) பின்னும் ஒருதலையானது,—'இந்திரனுடைய (வெற்றிமாலையை அவன்) கிரீடத்துடன் (நீ) பறித்ததனால் (உனது அகமலர்ச்சிக்காக) மகிழ்ச்சி காட்டிய மாதவர் (உனது) உச்சியிலே வைத்த உன்னுடைய அன்றுமலர்ந்த வெற்றிமலர்மாலையைக் காகங்களாடுகின்ற போர்க்களத்திடைக் காண்பேனோ? (இதுதக்கதோ?) 'என்னும்; (எ-று.)-இனி, மாதவரென்பது-பிரமதேவரைக் குறிக்குமெனக்கொண்டு, நீ இந்திரனை வென்றமையால் மிக மகிழ்ந்து பிரமதேவன் உன் உச்சியிலே உனதுவெற்றிக்கு அறிகுறியாக அந்த இந்திரனது வாகைமாலையைச் சூடினானே, அதனை இன்று காகங்கள் சஞ்சரிக்கின்ற களத்திற் புரளக் காணுமது

தக்கதோ!! என இரங்கு மென்றுமாம். பி-ம்:—[1]காண்பனே, காண்பனேல். [2]பாகசாதன். [3]பொறித்து. [4]ஓதை, ஓகம் [5]மாதவவுச்சியின் வைத்தநின், மாதவர்வைத்தெனவுச்சியில், மாதவர்வைத்தவனுச்சியில். சிலபிரதியில் இச்செய்யுள் "கூற்றம்" (22) என்ற பாடலின்பின் உள்ளது. (3164)

21. சேவி யற்[1]க ணியக்கர்தந் [2]தேவிமார்
[3]மேலி னித்தவிர் கிற்பர்கொல் [4]வீர நின்
[5]கோல விற்குரல் கேட்டுக் குலுங்கித்தம்
தாலி யைத்தொட லென்னுமற் றோர்தலை.

(இ-ள்.) மற்றோர் தலையானது,—'வீரனே! சேல்மீனையொத்த கண்களையுடைய இயக்கமனைவியர் உன்னுடைய அழகியவில்லினொலியைக் கேட்டு நடுங்கித் தம்தாலியைத் தொடுதலை யினிமேல் தவிர்வார்களோ!' என்று சொல்லும்; (எ-று.)—இதற்குமுந்தி இந்திரசித்து வில்லையொலிப்பிக்கும்போது 'தங்கணவரிறத்தலினால் தந் தாலிக்கு எங்குப் பங்கம் வருகின்றதோ?' என்ற கருத்தினால் தம் தாலியைத் தொட்டுப் பார்ப்பர் இயக்கியரென்க. பி-ம்:—[1]கண்ணியர்தேவர், கணித்தேவர் தந். [2]தேவியர். [3]மேல் விதிர்க்கப் படரார். [4]வீரனுன், வீரனுங். [5]கோலு. (3165)

22. [1]கூற்ற முன்னெதிர் வந்துயிர் கொள்வதோர்
ஊற்றந் தானுடைத் தன்றெனை யும்[2]மொளித்து
ஏற்ற வெவ்வுல குற்றனை எல்லையில்
ஆற்ற லாயென் [3]றுரைக்குமங் கோர்தலை.

(இ-ள்.) அங்கே ஒருதலையானது, 'எல்லையில்லாத வல்லமையுள்ளவனே! (எல்லாருயிரையுங்கொள்ளும் யமன் உன்னெதிரே வந்து உயிர் கொள்ளுவதற்குரிய ஒப்பற்ற வலிமையைத் தான் உடையதன்று; (அவ்வாறு இருக்கவும்), என்னையும் ஒளித்து (உனக்கு) ஏற்ற எந்த உலகத்தையடைந்தாயோ? (சொல்)' என்று சொல்லும்; (எ-று.)—பி-ம்:—[1]சீற்றம். [2]ஒழித்து. [3]அழைக்கும்.

23.—இராவணன் மகனை நாடப் போர்க்களங் குறுகல்.

இன்ன வாறழைத் தேங்குகின் றானெழுந்து
உன்னு [1]மாத்திரத் தோடினன் ஊழிநாள்
பொன்னின் வானன்ன [3]போர்க்களம் புக்கனன்
[2]நன்மகன்றன தாக்கையை நாடுவான்.

(இ-ள்.) இவ்வாறு கதறிக்கொண்டு ஏங்குகின்றவனை இராவணன் நினைக்குமளவிற்குள் எழுந்தோடி ஊழிக்காலத்திலே செம்பொன்னின் நிறத்தைக் கொண்ட வானத்தை [செவ்வானத்தை]ப் போன்ற [இரத்தக்காற் செந்நிறமடைந்துள்ள] போர்க்களத்தில் (தன்) சிறந்த மகனுடைய உடலைத்தேடும் பொருட்டுப் புகுந்தான்; (எ-று.)—பி-ம்:—[1]மாத்திரைத்தோடித் தாழினான். [3]பொற்களம். [2]தன்மகன். (3167)

24.—தேவர்முதலியோர் இராவணனைத்தொடர்ந்து சென்று 'என்ன விளையுமோ?' எனஇரங்குதல்.

[1]தேவ ரேமுத லாகிய சேவகர்
[2]யாவ ரும்முட னேதொடர்ந் தேகினர்
மூவ கைப்பே [3]ருலகின் முறைமையும்
[4]ஏவ தாகு[5]மென் றெண்ணி யிரங்குவார்.

(இ - ள்.) தேவர்முதலாகிய பணியாளர்கள் யாவரும், இராவணனுடன் தொடர்ந்துசென்றவர்களாய், 'மூவகைப்பெரிய உலகின் முறைமையும் யாதாகுமோ?' என்றெண்ணி இரங்குவாராயினர்; (எ-று.)—பி-ம்:—[1]தேவர்கள். [2]ஏவரும். [3]உலகம், உலகும். [4]யாவது. [5]இன்றென்ன. (3168)

25.—களத்தில் இராவணனைக் கண்ட பேய்முதலியவற்றின் செயல்.

அழுத வாற்சில வன்பின போன்றடி
தொழுத வாற்சில தூங்கின வாற்சில
உழுத [1]யானைப் பிணம்புக் கொளித்தவால்
[2]கழுதும் புள்ளு மரக்கனைக் காண்டலும்.

(இ - ள்.) (அந்தப்போர்க்களத்தில்) இராவணனைக் கண்டவுடனே,—பேய்களும் (கழுகு முதலிய) பறவைகளும்(என்ற இவற்றிற் சில) அன்பையுடையனபோல அழுதன: சில அடிதொழுதன; சில சோர்ந்தன; சில போரில் முயன்றுபொருத யானைகளின் பிணங்களிற் புகுந்து ஒளிந்துகொண்டன; (எ - று.)—பேய்களும் பறவைகளும், பிணத்தைத்தின்ன வந்தவை. பி-ம்:—[1]ஆனை. [2]கழுகும்.

26.—இராவணன் தன்மகனுடலை ஒருநாள் முழுவதுந் தேடிப் பிணங்களினிடையிற் பார்த்தல்.

கோடி கோடிக் குதிரையின் கூட்டமும்
ஆடல் வென்றி [1]யரக்கர்த மாக்கையும்
ஓடை [2]யானையுந் தேரு [3]முருட்டினான்
நாடி னான்றன் மக[4]னுடல் நாளெலாம்.

(இ-ள்.) இராவணன் தன்மகனுடலைத் தேடியவனாய்ப் பல கோடிக் கணக்கான குதிரைக் கூட்டங்களையும், வலிமையையும் வெற்றியையுமுடைய அரக்கரின் உடலையும், நெற்றிப்பட்டமணிந்த யானைகளையும், தேர்களையும் ஒருநாளெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்; (எ - று.)—உடல் நாளெலாம் என்று பிரிக்க. பி - ம்:—[1]அரக்கரது. [2]ஓண்கரி. [3]உழக்கினான். [4]உடனுடுவான். (3170)

27.—இராவணன் இந்திரசித்தின்கையைக் காண்டல்.

மெய்[1]கி டந்த விழிவழி [2]நீருக
நெய்கி டந்த கனல்[3]புரை நெஞ்சினான்
மொய் கிடந்த சிலையொடு மூரிமாக்
கைகி டந்தது கண்டனன் கண்களால்.

(இ - ள்.) தன்னுடம்பிலிருந்த கண்களிலெல்லாம் நீர்சிந்த, நெய்பெய்யப்பெற்ற நெருப்பையொத்த [கோபாக்கினி மிக்குத் தோன்றுகிற] நெஞ்சையுடையவனான இராவணன்,—வலிமை பொருந்திய சிலையுடனே கிடந்ததாகிய வலியபெரிய (துண்டுபட்ட இந்திரசித்தினது) கையைக் கண்களாற் கண்டான்; (எ - று.)— இதுவரையில் இவ்வாறான கோலத்தைப் பாராத கண்ணாற் பார்க்க நேர்ந்ததுபற்றி 'கண்களாற்கண்டான்' என்றார். பி-ம்:—[1]கிடந்து, கடந்து. [2]நீர்விழ. [3]பொரு. (3171)

28.—இராவணன் இந்திரசித்தின் கையை யெடுத்துத் தலைமேற்கொள்ளல்.

பொங்கு தோள்வளை யுங் [1]கணைப் புட்டிலோடு
அங்க தங்களு மம்பு [2]மிலங்கிட
வெங்க ணாக மெனப்[3]பொலி மெய்க்கையைச்
செங்கை யாலெடுத் தான்சிரஞ் சேர்த்தினான்.

(இ - ள்.) கிளர்ந்துதோன்றுகின்ற தோளில் வளையக்கட்டப் பெற்றுள்ள அம்புப்புட்டிலோடு, தோள்வளைகளும் அம்பும் விளங்கிக்கொண்டிருக்க, கொடுங்கண்ணையுடைய சருப்பம்போல விளங்குகின்ற(இந்திரசித்தின்) மெய்ம்மையான கையை (இராவணன் தன்)சிவந்தகையினா லெடுத்துத் தலைமீதுசேர்த்துக்கொண்டான்; (எ - று.)-'வளையும்'-பெயரெச்சம். 'மெய்க்கை'-இதற்கு முன் பகைவரையழிப்பதில் தவறாத கை. பி-ம்:—[1]விரற், பொழி. [2]அலங்கிட, அலம்பிட. [3]பொலிகின்றதைச், பொலிமெய்யதைச். (3172)

29.—அப்போதைய இராவணன் செயல்கள்.

கற்றின் மார்பில் தழுவுங் கழுத்தினிற்
சுற்றுஞ் சென்னியிற் [1]சூட்டுஞ் சுழல்கணோடு
ஒற்றும் [2]மோந்திட் டுருகு [3]முழைக்குமால்
முற்று நாளின் விடுநெடு மூச்சினான்.

(இ-ள்.) (அப்போது இராவணன்),—(கண்ட இந்திரசித்தின் கையை) மலைபோன்ற வலிய (தனது) மார்பிலே தழுவிக்கொள்வான்; கழுத்தினிற் சுற்றிக்கொள்வான்; சென்னியிற் சூடிக்கொள்வான்; சுழல்கின்ற (தன்) கண்களில் ஒற்றிக்கொள்வான்; மோந்து பார்த்து உருகுவான்; வருந்துவான்; ஆயுள்முடிகின்ற [மரண] காலத்தில் விடுகின்ற பெருமூச்சைக் கொள்வான்; (எ - று.)-பி-ம்:—[1]சூழும். [2]சோரும், ஓர்ந்திட்டு, மோந்துள். [3]உளைக்குமால். (3173)

30.—இந்திரசித்தினுடலைக் கண்டு இராவணன் விழுந்து புலம்புதல்.

கைகண் டான்பின் கருங்கடல் [1]கண்டென
மெய்கண் டானதன் மேல்விழுந் தானரோ
பெய்கண் டாரை யருவிப் பெருந்[2]திரை
[3]மொய்கண் டார்திரை வேலையை மூடவே.

(இ-ள்.) கையைக்கண்டவனாகிய இராவணன்,—பின்பு கரிய கடலைக் கண்டாற்போல அவ்விந்திரசித்தினுடலைக் கண்டவனாய்,

பொழிகின்ற கண்ணீர்த்தாரையாகிய அருவியினாலியன்ற பெருங் கடலானது போர்க்களத்தைக் கண்ட வீராகளாகிய அலைபொருந் திய கடலை மூட, அவ்வுடலின்மேல் விழுந்தான்; (எ - று.)—கண் களிலிருந்து பெருகிய பெருஞ் சோகநீர்வெள்ளம் அரக்கவீரர் நிரம் பக் கிடக்கின்ற போர்க்களமெங்கும் பெருகியோட, இந்திரசித் தினுடலின்மேல் இராவணன் விழுந்தானென்க. மொய் - போர்க் களம். உருவகமும் உயர்வுநவிற்சியும் காணலாம். பி-ம்:—[1]போன் றவம், கண்டன. [2]புனல் [3]உய்கண்டார்திரை வேலையினோட்டு வான், பொய்கண்டார்திரைவேலையிற்போக்குவான், ஒய்கண்டா ரிலைவேலையினோடுவான். (3174)

31.—இருகவிகள்—இராவணனது துயர்ச்செயலைத் தெரிவிக்கும்.

அப்பு மாரி [1]யழுந்திய [2]மார்பைத்தன்
அப்பு மாரி [3]யழுதிழி [4]யாக்கையின்
அப்பு(ம்) [5]மாரி னணைக்கும் அரற்றுமால்
அப்பு மானுற்ற தியாவருற் றாரரோ.

(இ-ள்.) மரித்தலைச் செய்கின்ற அம்புகள் அழுந்திய (இந்திர சித்தின்) மார்பை, (இராவணன்),—அழுதலினால் கண்ணீர்மழை யிழிந்த தன்னுடலிலே ஒற்றிக்கொள்வான்; மார்பில் அணைத்துக் கொள்வான்; வாய்விட்டுக் கதறுவான்; அந்த (இராவணனென் கின்ற) புமான் அடைந்த வருத்தத்தை (இதுவரையில்) யாவர் அடைந்தார்? (எ-று.)—முதலடியில், அப்பு - அம்பு என்பதன் வலித்தல். மாரி-மரித்தல். இரண்டாமடியில், அப்பு - அப் என்ற வடசொல்லின் விகாரம்; நீரென்றபொருளது; இங்குக் கண்ணீர். மூன்றாமடியில் 'மார்'-மார்பு என்பதன் மரூஉ. நான்காமடியில், புமான் = புமாந்; புருஷன்: வடசொல். இச்செய்யுள்-யமக மென் னுஞ் சொல்லணியுடையது. பி - ம்:—[1]அழுத்திய. [2]மாரைத். [3]அழுந்திய, அழுத்திய. [4]யாக்கையன். [5]மார்பில். (3175)

32. பறிக்கு மார்பிற் பகழியைப் பன்முறை
முறிக்கும மூர்ச்சிக்கும் [1]மோக்கு முயங்குமால்
எறிக்கும் [2]வெங்கதி ரோடுஉல கேழையும
கறிக்கும் வாயினிட் டின்றெனக் [3]காந்துமால்.

(இ-ள்.) (பின்னும் அவ்விராவணன், இந்திரசித்தின்) மார்பி லுள்ள அம்புகளைப் பேர்த்தெடுத்துப் பலமுறை முறிப்பான்; மூர்ச்சிப்பான்; (அவ்வுடலத்தை) மோந்துபார்ப்பான்; தழுவுவான்; (இவன்), வீசுகின்ற வெப்பக் கிரணங்களைக்கொண்ட சூரியனோடு ஏழுலகங்களையும் இன்று வாயிலிட்டுக் கடிப்பானென்று (கண்ட வர்) கருதும்படி கோபிப்பான்; (எ-று.)—இராவணனுக்குக் கோபம் சோகத்தினாலெழுந்ததென்க. பி-ம்:—[1]ஏங்கும். [2]பைங். [3]காந்துவான். (3176)

33.—இராவணனுடைய சினத்தால் தேவர் முதலியோரின் அச்சம்.

தேவ ரோடு முனிவருஞ் சீரியோர்
ஏவ ரோடு [1]முடன்திரி கின்றிலர்

மூவ ரோடு முலகொரு [2]மூன்றுடன்
[3]போவ தேகொல் முனிவெனும் [4]பொம்மலால்.

(இ-ள்.) '(இவனுடைய)கோபமானது,—திரிமூர்த்திகளோடும் ஒரு மூன்று லோகத்தோடும் போய்விடுவதோ?' என்று கொண்ட வருத்தத்தினால், தேவர்களுடனே முனிவர்களும் சிறந்தவரெவர்களோடும் உடன் திரியாதவராயினர்; எ - று.)-'திரிமூர்த்திகளுடனே மூவுலகமும் இந்த இராவணன் சினத்தினால் அழிந்துவிடுமோ!' என்று வருந்தித் தேவர்முதலிய சிறந்தோர் பலரும் இராவணனுடைய சினத்திற்கு அஞ்சி வெளிவருவதற்குப் பயந்து ஒளிந்து இடந்தனரென்றபடி. பி-ம்: [1]உடனறிகின்றவர், இடமின்றி நின்றவன். [2]மூன்றொடும். [3]போவதேனும். [4]பொம்மலால், பொம்மலார்.

34.—இந்திரசித்தின் தலையைக் காணாத இராவணன் வருத்தம்.

கண்டி லன்றலை [1]காந்திய [2]மானிடன்
கொண்[3]டி றந்தன [4]னென்பது கொண்டவன்
புண்டி றந்தன [5]நெஞ்சன் பொருமலன்
விண்[6]தி றந்திட விம்மி யரற்றினான்.

(இ - ள்.) (இராவணன், இந்திரசித்தின்) தலையைக் காணாதவனாய்,—கோபித்து 'அந்த மானுடன், தலையைக்கொண்டு அகன்றான்' என்பதைக் கருதியவனாய், புண்திறந்தாற்போன்ற நெஞ்சையுடையவனும் பெருஞ்சோகத்தையுடையவனுமாகி, விம்மி, ஆகாசம் பிளந்து போம்படி யரற்றத் தொடங்கினான்; (எ - று.)—இராவணனரற்றுதலை, மேல் ஐந்து கவிகளிற் காண்க. அம் மானிடன் என்றது-'அ மானிடன்' என விகாரப்பட்டு வந்து; இனி, 'காந்திய' என எடுப்பினுமாம். இறத்தல்-கடந்துபோதல். பி-ம்:—[1]காதிய. [2]மானிடர். [3]அகன்றனன, இறந்தனர். [4]என்பதும் [5]நெஞ்சம். [6]திறந்திற.

வேறு.

35.—ஐந்து கவிகள்-இராவணன் அரற்றுதலைத் தெரிவிக்கும்.

[1]நிலையு[2]மா திரத்து நின்ற யானையும் நெற்றிக் கண்ணன்
மலையுமே [3]யெளிய வோநான் [4]பறித்தற்கு [5]மறுவின் மைந்தன்
தலையுமா ருயிருங் கொண்டா [6]ரவருட லோடுந் தங்கப்
புலையனேன் [7]இன்னு மாவி சுமக்கின்றேன் போலும் போலும்.

ஆறு கவிகள - ஒருதொடர்.

(இ - ள்.) நிலையாகவுள்ள திக்கில் நின்ற யானைகளும் நெற்றிக் கண்ணை யுடையவனான சிவபெருமானுடைய கைலாசமலையு மட்டுமா, நான் பறிதற்கு எளியவாயின? (அற்ப மனிதர்கள் நான் பறித்தற்கு எளியரல்லராய் விட்டாரோ!) குற்றமற்ற (என்) மைந்தனது தலையையும் அரிய உயிரையும் கொண்டவரான அந்தப் பகைவர் உடலோடுந் தங்கியிருக்க, இழிகுணத்தையுடைய நான் இன்னும் ஆவியைச் சுமக்கின்றேன்போலும் போலும்; (எ - று.)

இதுவும் அடுத்த இரண்டு கவிகளும், புலம்பலில் இராவணன் தன்னைப் பழித்தலைத் தெரிவிக்கும்.

பகைவரை யொழிக்கமாட்டாத நான் உயிர்வைத்துக்கொண்டிருப்பது தகுதியன் றென்பதைக் குறிப்பிக்க, 'சுமக்கின்றேன் போலும்போலும்' என்கின்றான். பி-ம்:—[1] நிலையின். [2] மாத்திரத்து. [3] எளியவென்னன், எளியவென்ன, எளியவாயான், எளியவேநான். [4] மறித்தற்கு, மறிதற்கு, மனிதர்க்கு. [5] மறிந்த, மறித்த. [6] எனவுடனுங்கின்ற, எனவுடலோடுந்தாங்கிப், அவருடலோடுந்தாங்கிப், அவருடலோடுந்தாக்கப். [7] எனினும். (3179)

36. எரியுண வளகை மூதூர் [1] இந்திர னிருக்கை யெல்லாம்
பொரியுண வுலக மூன்றும் பொதுவறப் [2] புரந்தேன் போலாம்
அரியுணு மலங்கன் மௌலி [3] இழந்தவென் மதலை யாக்கை
நரியுணக் கண்டே னுணின் [4] நாயுணு முணவு நன்றால்.

(இ-ள்.) (நான்) அளகையென்ற பழமையான ஊரை நெருப்புண்ணவும், இந்திரனது இருக்கையான சுவர்க்கலோகமெல்லாம் (தீயின்வன்மையாற்) பொரிந்து விடவும் (செய்து), உலக மூன்றையும் வேறொருவர்க்கும் பொதுவாகாதபடி காப்பாற்றினேன்போலும்! வண்டுகளுண்கின்ற பூமாலையை யணிந்த தலையையிழந்த என் புத்திரனது உடலை நரியுண்கையிற் கண்டவனாகிய யான் உண்ணும் உணவைக்காட்டிலும் நாயுண்கின்ற உணவும் நல்லதாகும்;

'என்னுடைய பிழைப்பு நாய்ப்பிழைப்பினுங் கடைகெட்டது' என்று தன்னை இராவணன் நொந்தவாறு. வெறுப்பினாலும் இகழ்ச்சியினாலும் 'உலக மூன்றும் புரந்தேன்போலாம்' என்கிறான்; 'நானா புரந்தவன்' என்ற பொருளும் இங்குத் தொனிக்கும். பி-ம்:—[1] இந்திரர் திருக்கை. [2] புகுந்தேன். [3] என் மகனழிந்த. [4] நானுணும். (3180)

37. பூண்டொரு பகைமேற் புக்கென் [1] புத்திர னோடும் போனார்
மீண்டிலர் விளிந்து வீழ்ந்தார் விரதிய ரிருவ ரோடும்
ஆண்டுள குரங்கு மொன்று [2] மமர்க்களத் தாரு [3] மின்னும்
மாண்டிலர் இனி [4] மற் றுண்டோ இராவணன் வீர வாழ்க்கை.

(இ-ள்.) (போர்க்கோலத்தை) மேற்கொண்டு ஒரு பகையின் [இலக்குமணன்] மீது (போர்செய்யப்) புகுந்து என் புத்திரனோடும் போனவர்கள், (எவரும்) மீளாதவராய் இறந்து வீழ்ந்தார்; அந்தப் பக்கத்திலுள்ள தவக்கோலம் பூண்ட இரண்டு மனிதருடனே அங்குள்ள குரங்குகளும் பொருந்தும் போர்க்களத்தில் இன்னும் யாரும் மாண்டிலர்; இராவணனுடைய வீரவாழ்க்கையைப்பற்றி இனி வேறு (கூறவேண்டியது) உண்டோ? (எ-று.)

என் பக்கத்தவராய்ச் சென்றவரெல்லாம் இறக்க, மாற்றார் பக்கத்து எவருஞ் சாகாமலிருக்கக் கண்டுகொண்டிருக்கின்ற நான் வீரனென்று பேர்பூண்டு வரலாமோ? என் வீரம் மிக அழகிது!! என்று தன்னைப் பழித்தவாறு. இருவரோடும் - இருவருள்ளும்,

ஆரும்-எவராயினும்,—ஆண்டுஉள குரங்குகளுள்ளும், ஒன்றும் - ஒருவரும், மாண்டிலர் என்று உரைக்தலும் ஒன்று. 'இனிமற்றுண்டோ இராவணன் வீரவாழ்க்கை' என்பதற்கு-இனியும் இராவணனுக்கு வீரவாழ்க்கை யுண்டாகுமோ? உண்டாகாது என்பாருமுளர். இது, தன்னைப் படர்க்கையாக வைத்துக் கூறியது. பி-ம்:—[1]புத்திரரோடும். [2]மாகளத்து [3]இன்னம், வந்து. [4]வேறு. (3181)

38. கந்தர்ப்ப ரியக்கர் சித்த ரரக்கர்தங் கன்னி மார்கள், [1]இந்தொக்குஞ் சொல்லி ருைருன் தேவியர் திருவி னல்லார், வந்துற்றெங் கணவன் றன்னைக் [2]காட்டென்று மருங்கில் விழ்ந்தால், [3]அந்தொக்க [4]வரற்ற வோநான் கூற்றையு [5]மாடல் கொண்டேன்.

(இ - ள்.) கந்தருவர், இயக்கர், சித்தர், அரக்கர் ஆகிய இவர்களின் மகளிராய்ப் பண்ணையொக்குஞ் சொல்லையுடையவரான இலக்குமியைக் காட்டிலும் அழகிய உன்தேவியர் வந்து நெருங்கி 'எம்முடைய கணவனைக் காட்டுவாய்' என்று சொல்லி (அலறியழுது) என்னருகே வீழ்ந்தால், யமனையும் வெற்றிகொண்டவனாகிய நான்,—அவர்களுடனும் (உங்கள் கணவனை யமன் கொண்டுபோய் விட்டானென்று சொல்லி) அரற்றுதலைச் செய்யவோ! கஷ்டம்!! (எ-று.) இதுமுதல் இரண்டு கவிகள் இந்திரசித்தைச் சுட்டிப் புலம்புவன.

'யமனையும் அலறச்செய்த நான் மகளிர்க்கு மறுமொழிசொல்லமாட்டேனாய் உடனரற்றுதல் எவ்வளவு எளிமை!!' என்றுஇந்திரசித்தை முன்னிலைப்படுத்தி இராவணன் புலம்பினனென்க. நான்காமடியில், 'அந்த'-ஹந்த என்ற வடசொல்லின் திரிபு. அந்த + ஒக்க = அந்தொக்க; அகரக்கேடு விகாரம். இனி, அந்த எனப்பிரித்து அப்படி எனப்பொருள் கொள்ளலும் ஒன்று. "அந்து செய்குவன்" என இராவணன்வதைப்படலத்து வருவது காண்க. பி-ம்:—[1]செந்தேற்குஞ், செந்தோங்குஞ். [2]காட்டொன்று. [3]வெந்தொக்க. [4]அரற்றலோ. [5]வெற்றி. (3182)

39. சினத்தொடுங் கொற்ற [1]முற்ற விந்திரன் [2]செல்வம் மேவ, நினைத்தது முடித்து நின்றேன் நேரிழை யொருத்தி [3]நீரால், எனக்கு நீ செய்யத் தக்க கடனெலாம் [4]ஏங்கி யேங்கி, உனக்குநான் செய்வ [5]தானேன் [6]என்னின்யா [7]ருலகத் துள்ளார்.

(இ-ள்.) கோபத்துடனேநின்று வெற்றியை நிறைவேற்றவும் இந்திரசம்பத்தைப் பெறவும் (இவ்வாறு முன்பெல்லாம்) நினைத்ததை முடித்துநின்றேன், (யான், இப்போது அந்நிலைமை கெட்டு), நேர்மையான ஆபரணங்களைப் பூணற்கு உரிய ஒருபெண்ணின் பொருட்டாக,(நாளடைவில்) எனக்கு நீ செய்யவேண்டிய ஈமக்கடன்களை யெல்லாம் மிக்க இரக்கங்கொண்டு உனக்கு நான் (இப்போது) செய்யவேண்டியவனானேன்; என்னைப்போன்ற [தௌர்ப்பாக்கிய முள்ளவர்] உலகத்தில் யார் இருக்கின்றார்? (எ-று.)

"நீ செயக்கடவன கடன்கள் இரக்கமுற்றுனக்கவன் செய்யுமென்றன னினையோன்" என்று பிரமாத்திரப்படலத்தில் வந்தது, இங்கே கருதத்தக்கது. பி - ம்:—[1]முற்றி. [2]செல்வமேவி, செல்வன்

றேவி. [3]நேரால், நின்றுள். [4]இரங்கி. [5]என்னின். [6]எண்ணிலார். [7]உலகின். (3183)

40.—பலரும்புலம்ப, இராவணன் இந்திரசித்தினுடலுடன் இலங்கை புகல்.

என்பன பலவும் பன்னி யெடுத்தழைத் திரங்கி யேங்கி
அன்பினுல் மகனைத் தாங்கி யரக்கிய [1]ரரற்றி வீழப்
பொன்புனை நகரம் புக்கான் கண்டவர் [2]புலம்பும் பூசல்
ஒன்பது திக்கு மற்றை யொருதிக்கு முற்ற தன்றே.

(இ - ள்.) என்பன பலவற்றையுஞ் சொல்லிக் குரலெடுத்துக் கூவி இரங்கி யேக்கமுற்று, அன்பினுல் மகனைச் சுமந்து, அரக்கியர் வாய்விட்டுக் கதறிக்கொண்டுவிழ, பொன்னுலலங்கரித்துச்செய்யப் பெற்ற நகரத்திற் புகுந்தான், (இராவணன்): (அப்போது), கண்டவர்யாவரும் புலம்புகின்ற ஆரவாரமானது, பத்துத்திக்கிலும் போய்ப் பொருந்தியது; (எ - று.)—கிழக்கு தென்கிழக்கு முதலிய எட்டுத்திக்குகளும் கீழும் என்னும் இவை அருகே நிற்க, பத்தாவது திசையாகிய வானம் சேய்மையில் நிற்பதனுல் அதனைத் தனியே பிரித்து ஒன்பதுதிக்கும் மற்றையொருதிக்கும் என்ருர்.
பி - ம்:—[1]அமைத்து. [2]புலம்பப். (3184)

41.—பலமாதரின் துயரச்செயல்.

கண்களைச் [1]சூல்கின் ருருங் கழுத்தினைத் [2]தடிகின் ருரும்
[3]புண்கொளத் திறந்து மார்பி [4]னீருளைப் போக்கு வாரும்
[5]பண்கள்புக் கலம்பு நாவை யுயிரொடு பறிக்கின் ருரும்
எண்களிற் [6]பெரிய வாற்ருர் இருந்துயர் [7]பொறுக்க லாற்ருர்.

(இ-ள்.) தொகையில்மிக்க ஆறுபோன்றமாதர்கள்,-(தங்கள்) கண்களைத் தோண்டுகின்றவர்களும், கழுத்தை வெட்டிக்கொள்ளுபவர்களும், புண்கொள்ளும்படி பிளந்து (அம்) மார்பின்மூலமாக ஈரலை வெளிப்படுத்துகின்றவர்களும், இராகங்கள் புகுந்து ஒலிக்கின்ற நாவை உயிருடனே பறிக்கின்றவர்களுமாகி, (அப்போது தமக்குநேர்ந்த) பெருந்துயரைப் பொறுக்கமாட்டாதவராயினுர்;

இந்திரசித்தினுடைய உடலுக்குக் கீழ் 30-ஆஞ் செய்யுளில் கடலை உவமை கூறியதனுல், அவ்வுடலைச்சாரும் மகளிரை ஆருகக் கொண்டாரென்னலாம். அவர்கள் பெருந்திரளினராயிருந்தமை பற்றி,'எண்களிற்பெரிய' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. அந்நகரிலே தீவிர ராஜபக்தியையுடைய சில ஆடவர்கள் 'நம்மைக் கண்ணனுர் உயிரேயன்னுர் என இவ்வாருகப் பாராட்டிய குமார சக்கரவர்த்தி யிறந்த பின்னர் நாம் உயிரோடிருந்து இந்தக் கோரக் காட்சியைக் காணுதல் கூடாது' என்று கண்களைச் சூல்கின்ருரும் உயிரொடுபறிக்கின்ருருமாயினர் எனக் கூறினுருமுளர்: அங்ஙனம் கூறுமிடத்து, பண்கள் புக்கலம்பும் என்று நாவுக்கு அடைமொழி கொடுத்திருப்பது இனிது பொருந்துவதாகத் தோன்றவில்லை.
பி-ம்:-[1]சூர்கின்ருரும். [2]கடிகின்ருரும். [3]புண்பட. [4]ஈரலைப். [5]பெண்கள் புக்கிரங்கி...பிடுங்குவாரும். [6]பெரியரிந்த. [7]பொறுக்கிலாதார்.

42.—பெண்களின் கண்ணீர்வெள்ளம்.

மாதிரங் கடந்த [1]திண்டோள் மைந்தன்றன் மகுடச் சென்னி
[2]போதலைப் புரிந்த யாக்கை [3]பொறுத்தனன் [4]புகுதக் கண்டார்
ஓதநீர் வேலையன்ன கண்களா லுகுத்த வெள்ளக்
காதல் நீர் ஓடி யாடற் கருங்கடன் மடுத்த தன்றே.

(இ - ள்.) திக்குகளெல்லாம்வென்ற திண்ணிய தோளைக் கொண்ட மைந்தனான இந்திரசித்தின் கிரீடமணிந்த தலை நீங்கிய உடலைச் சுமந்தவனை (இராவணன்) வருவதைக் கண்டவரான மகளிர்களின் வெள்ளமான நீரைக்கொண்ட கடல்போற்பரந்த கண்களாற் சொரிந்ததும் அன்பைத்தோற்றுவிப்பதுமான அழுகை நீர் வெள்ளமானது,— அலையாடுதலைக்கொண்ட கரியகடலை நிரப்பிற்று; (எ - று.) — போதலைப்புரிதல்-நீங்குதல். அன்றே-தேற்றம். பி - ம்:—[1]தோளான்வீரன். [2]போதலர் துறந்த, போதலாற்புரிந்த. [3]பொருதவன். [4]போதக், போகக். (3186)

43.—அரக்கியர் அழ, இராவணன் இந்திரசித்தினுடலைக் கொண்டு அரண்மனை புகல்.

ஆவியி னினிய காத லரக்கியர் முதல்வ ராய
தேவியர் குழாங்கள் [1]சுற்றிச் சிரத்தின்மேல் தளிர்க்கை சேர்த்தி
ஓவியம் வீழ்ந்து வீழ்ந்து புரள்வன வொப்ப வொல்லைக்
கோவியல் கோயிற் புக்கான் குருதி[2]நீர்க் குமிழிக் கண்ணான்.

(இ-ள்.) இரத்தத்தைக் குமிழ்த்தலைக்கொண்ட கண்களையுடையவனான இராவணன்,—உயிரினும் இனிய அன்பைக்கொண்ட இராக்கத மகளிர் முதலோராகிய (அவ்விந்திரசித்தின்) மனைவியரின் கூட்டங்கள் சூழ்ந்துகொண்டு (தங்கள்) சிரத்தின்மேல் தளிர் போன்ற கைகளை வைத்தவண்ணம் சித்திரப்பதுமை தரையில் விழ்ந்து வீழ்ந்து புரள்வனவற்றையொப்ப (ப் புரண்டுகொண்டிருக்க), விரைவாக அரசர்க்குரிய அரண்மனையிற் புகுந்தான்; (எ - று.)—தலையின்மேற் கையை வைத்துக்கொண்டிருத்தல், சோகத்தைக் குறிப்பிக்கும். பி - ம்:—[1]சுற்றச். [2]நீர்குமிழிய. சில பிரதியில் 'கோவியங்கோயில் புக்கார் குருதிநீர்க் குமிழிக்கண்ணார்' என்று நான்காமடி. (3187)

44.—மண்டோதரி வருதல்.

கருங்குழற் கற்றைப் பாரங் கால்தொடக் கமலப் பூவாற், குரும்பையைப் புடைக்கின் றாள்போற் கைகளால் [1]முலைமேற் கொட்டி, [2]அருங்கலச் சுமை தாங்க லகலல்கு லன்றிச் சற்றே, [3]மருங்குலு முண்டோ வென்ன மயன்மகள் மறுகி வந்தாள்.

(இ-ள்.) மயன்மகளான மண்டோதரியானவள்,—கரியகூந்தலின் பாரமாகிய தொகுதி காலைத் தீண்ட, தாமரைப்பூவினாற் குரும்பையைப் புடைக்கின்றவளைப்போல(த் தன்) கைகளால் முலைமேற் புடைத்துக்கொண்டு, அருங்கலமாகிய மேகலாபரணத்தின் பாரத்தைத் தாங்குவதற்கு அகன்ற அல்குலேயல்லாமல் நுண்ணிய

தாகிய இடையும் இருக்கின்றதோ என்னுமாறு, (ஒல்கியொசிந்த வண்ணம் துயரத்தாற்) கலங்கிவந்தாள்; (எ - று.)—அருங்கலம் - அருமையான [சிறந்த] ஆபரணங்களாகிய முத்தாகாரம் முதலியன என்பாருமுளர். பி-ம்:—[1]முலையிற். [2]அருந்தலை தளிர்ப்பொற் பாத நிலத்தொடு மஃதேயன்று, அருள்கலத்தளிர்ப்பொற்பாத நிலத்தொடு மஃதேயன்று, அருள்கலத்தளிர்ப்பொற்பாத நிலந் தொடு மதுவேயன்றி. [3]மருங்குலு முண்டுண்டென்ன, மருங்குலுண்டுண்டென்னும். (3188)

45.—வந்த மண்டோதரி இந்திரசித்தினுடலின்மேல் விழுதல்.

தலையின்மேற் சுமந்த [1]கையள் [2]தழலின்மேன் மிதிக்கின் றாள்போல்
நிலையின் [3]மேன் மிதிக்குந் தாள [4]ளேக்கத்தால் நிறைந்த நெஞ்சள்
கொலையின்மேற் குறித்த வேடன் [5]கூர்ங்கணை யுயிரைக் [6]கொள்ள
மலையின்மேன் மயில்வீழ்ந் தென்ன மைந்தன்மேன் மறுகிவீழ்ந்தாள்.

(இ - ள்.) தலையின்மேற் சுமந்த கையையுடையவளும், நெருப்பின்மேல் மிதிக்கின்றாள்போலப் பூமியின்மேல் மிதிக்கின்றதாளையுடையவளும், ஏக்கத்தால் நிறைந்த நெஞ்சையுடையவளுமாகி,—(மண்டோதரியானவள்), - கொல்லுதல்தொழிலில் எண்ணங்கொண்ட வேடனுடைய கூரிய கணை உயிரைக் கொள்ள, மயிலானது மலையின்மேல்விழுந்தாற்போல, இந்திரசித்தினுடலின்மேல் துயரத்தாற் கலங்கி வீழ்ந்தாள் ;(எ - று.)

நிலை - ஸ்திரா என்றவடசொல்லின் மொழிபெயர்ப்பு. வெறுந்தரையில் தாளைவைத்து நடந்து பழகாமையால், அழலில் மிதிக்கின்றாள்போல் நிலையில் மிதிக்கலானாள். மலை - இந்திரசித்தின் மார்புக்கும், மயில் மண்டோதரிக்கும் உவமை. பி-ம்:—[1]கையாள், கைகள். [2]அனலையே, தணலின்மேல். [3]மேற்பதைக்குங். [4]நேசத்தால், ஒக்கத்தால். [5]கூன்கணை. [6]கூட. (3189)

46.—சோகக் குறியோடு நின்ற மண்டோதரி புலம்பத் தொடங்குதல்.

உயிர்த்தில ளுணர்வு [1]மில்லள் உயிரிலள் [2]கொல்லோ வென்னப்
பெயர்த்தில ளியாக்கை யொன்றும் பேசலள் [3]விம்மி யாதும்
வியர்த்திலள் [4]நெடிது போது [5]விம்மலள் [6]மெல்ல மெல்ல
[7]அயர்த்திலள் அரிதில் தேறி வாய்திறந் தரற்ற லுற்றாள்.

(இ-ள்.) (வீழ்ந்த மண்டோதரியானவள்,—நெடுநேரம்) மூச்சுவிட்டாளில்லை: உணர்வும் இல்லாதவளானாள்: 'உயிரற்றவளோ!' என்று கருதுமாறு உடம்பை யசைத்திலள்; ஒன்றும் பேசலள்: நெடுநேரமாகத் துயரம்மிக்குச் சிறிதும் விம்மலள்: வியர்த்திலள்: மெல்லமெல்ல அயர்ப்பு நீங்கினவளாய் அரிதில் தேறி விம்மி வாய்விட்டுக் கதறத் தொடங்கினாள்; (எ - று.)—மண்டோதரி கதறுதலை, மேல் ஏழுகவிகளிற் காண்க. பி-ம்:—[1]இல்லை. [2]கொல்லென்

றெண்ணி, என்கொலென்னப். [3]அல்லது, பிறிதொன்று, பிறங்கி, [4]நெடியபோதும். [5]விம்மினள். [6]மெள்ளமெள்ள. [7]அயிர்த்திலள், அயர்ந்தனள். (3190)

47.—ஏழு கவிகள்—மண்டோதரி புலம்புதலைக் கூறும்.

கலையினால் திங்கள் [1]போல வளர்கின்ற [2]காலத் தேஉன்
சிலையினா லரியை வெல்லக் காண்பதோர் [3]தவம் முன்செய்தேன்
தலையிலா வாக்கை காண எத்தவஞ் செய்தேன் அந்தோ
நிலையிலா வாழ்வை [4]யின்னும் நினைவதோ நினைவி லாதேன்.

எட்டுக்கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) சந்திரன் கலையினால் நாளுக்கு நாள் வளர்வதுபோல வளர்கின்ற இளம்பருவத்திலேயே உன்னுடைய வில்வலியினால் இந்திரனை வெல்லக்காண்பதற்கு ஏதுவாகிய ஒப்பற்ற தவத்தை முன் செய்துள்ள நான், (இப்போது) தலையில்லாத (உன்) உடலைக் காண்பதற்கு என்ன பாவஞ்செய்தேனோ! அந்தோ! நல்லெண்ணமில்லாதவளாகிய யான் நிலையில்லாததான உடலோடு வாழ்வதை இன்னும் நினைக்கக்கடவேனோ? (எ - று.)

நிலையில்லாத உடலுடன் வாழ்க்கையை விரும்பி மேற்கொள்வது, எனக்குத் தக்கதன்றென்றபடி; உயிர்விடுகலே தக்கது என்பது கருத்து. இரண்டாவது வந்த 'தவம்' என்பது - எதிர்மறையிலக்கணையாகிய பிறகுறிப்பால், தீவினையைக் காட்டிற்று. இந்திரனையும் இளம்பருவத்தில் நீ வெல்ல அதனைக்கண்டு களிக்குமாறு தவஞ் செய்திருந்த எனக்கு, அவ்வண்ணஞ் சூரனான மகனுடைய தலையை மாற்றுங்கொள்ள, முண்டமாகிய உடலைக் காணும் தீவினை எவ்வண்ணம் நேர்ந்ததோ! என்று இரங்கியவாறு. அரி - இந்திரன். அரி என்ற சொல்லுக்கு - பகைவன் சிங்கம் என்ற பொருளும் உண்டு. பி-ம்:—[1]என்ன. [2]காலத்தையே. [3]தவமுஞ் [4]இன்னம். ()

48. ஐயனே யழக னேயென் னரும்பெற [1]லமிழ்தே ஆழிக்
கையனே மழுவனே [2]யென் றிவர்வலி கடந்த [3]கால
மொய்யனே முளரி யன்ன நின்முகங் கண்டி லாதேன்
உய்வனோ உலக [4]மூன்றுக் கொருவனே [5]செருவ லோனே.

(இ - ள்.) சக்கரத்தைக் கையிலேந்திய திருமாலும், மழுப்படையை யுடையவனான சிவபெருமானும் என்ற இவர்களின் வலிமையை வென்று (எதிர்ப்பவர்க்கெல்லாம்) யமன்போன்ற வலிமையுள்ளவனே! உலகம் மூன்றுக்கும் ஒப்பற்றவனே! போரில் வல்லவனே! ஐயனே! அழகனே! என்னுடைய பெறுதற்கரிய அமுதே! தாமரை மலரையொத்த உன் முகத்தைக் காணப்பெறாத யான் உய்வேனோ? (எ - று.)

தலையற்ற உடலைக் கண்டதனால், இவ்வாறு கூறினளென்னலாம். இரண்டாமடியில் ஏகாரங்கள் - எண்ணுப்பொருளன.

காலன் + மொய்யன் = காலமொய்யன்: யமன்போல் வலியன். திருமால் சிவன் இவர்கள் வலிமையினும் மேம்பட்ட வலிமைபெற்று, இந்திரசித்து, தன்னை யெதிர்ப்போர்க்கெல்லாம் கூற்றுவனாகும் வலிமைபடைத்தவனென்பாள், 'ஆழிக்...மொய்யனே' என்றாள். சிவவிட்டுணுக்களின் வலிமை கடந்தவனை யமன்போன்ற மொய்யனென்பது தகாதெனக்கருதி, காலம் மொய்யன் எனப்பிரித்து - சமயத்துக்கு ஏற்ப உதவும் வலிமையுள்ளவனென்றுருமுளர். இச்செய்யுள், சிலபிரதிகளில் "முக்கணன்" (52) என்ற பாடலின்பின் உள்ளது. பி-ம்:—[1] மருந்தே. [2] என்றவர். [3] காலை. [4] மூன்றில். [5] சிலே.

49. தாளரிச் சதங்கை [1]யார்ப்பத் தவழ்கின்ற பருவந் தன்னிற்
கோளரி யிரண்டு பற்றிக் கொணர்ந்தனை [2]கொணர்ந்து [3]கோபம்
மூளுறப் பொருத்தி மாட முன்றிலின் [4]முறையி னோடும்
[5]மீளரு விளையாட் டின்னங் [6]காண்பனோ விதியி லாதேன்.

(இ-ள்.) தாள்களில் (உள்ள) பரலிட்ட சதங்கைகள் ஒலிக்கும்படி தவழ்கின்ற பருவத்தில்தானே (நீ) இரண்டுவலிமையுள்ள சிங்கங்களைப் பிடித்துக்கொணர்ந்தவனாய்வந்து மாளிகையின் முன்றிலில் கோபம்மூளும்படி (அவைகளை) மூட்டவிட்டு முறைமையோடு (செய்கின்ற) மீளமுடியாத (உன்னுடைய) விளையாட்டை நல்வினையில்லாத யான் இன்னங் காணப்பெறுவேனோ? (எ - று)— குழந்தைப்பருவத்து விளையாட்டு மீளவராதாதலால், 'மீளருவிளையாட்டு' என்றது (சாகுந்தலநாடகத்து இருடியாச்சிரமத்தில் சகுந்தலையின் புதல்வனான பரதன் சிங்கக்குட்டியைப்பற்றி அதன் வாயைத்திறப்பித்துப் பல்லையெண்ணினான் என்று வரும் குழந்தைப் பருவ விளையாட்டு இங்குக்கருதத்தகும்). ஓகாரம்-எதிர்மறையோடு புலம்பல். பி - ம்:—[1] ஆர்க்கும் பருவத்தே தளிர்க்கைதன்னால். [2] கொணர்ந்த. [3] கோமுன். [4] முறையினோடி. [5] மீளிரு. [6] காண்பனே.()

50 அம்புலி [1]யம்ம வாவென்று அழைத்தலும் அவிர்வெண் டிங்கள்
[2]இம்பர் வந் தானை அஞ்ச லெனவிரு கரத்தி [3]னேந்தி
வம்புறு மறுவைப் பற்றி முயலென வாங்கும் [4]வண்ணம்
எமபெருங் களிறே காண வேசற்றே னெழுந்தி ராயோ.

(இ-ள்.) (குழந்தைப்பருவத்தில் சந்திரனை நோக்கி) 'அம்புலீ அம்ம! வா' என்று (நீ) அழைத்தலும், விளங்குகின்ற வெள்ளிய சந்திரன் ('இராவணேசுவரனாயகன் அழைத்தபோது போகாவிட்டால் அனர்த்தம்விளையுமே' என்று அஞ்சி) இவ்வுலகில் (வந்தான்): வந்தவனை, 'பயப்படாதே' என்று சொல்லி, இரண்டு கைகளினாலும் ஏந்திக்கொண்டு, (பலராலும்முயலென்று சொல்லப்பெற்று அத்திங்களிடத்து) வீணாகப்பொருந்திய களங்கத்தை முயலென்று பற்றிக் கைக்கொள்ளுதற்குமுயலும் விதத்தைக் காண்பதற்கு ஆசைகொண்டேன்: எமது பெரிய யானையைப் போன்றவனே! (காலத்திரை மூடிவிட்ட அந்த-விசித்திர விளையாட்டுக் காட்சியை இன்னும் ஒருதரம் விளையாடிக் காட்டி என்னாசையைத் தீர்க்க நீ) எழுந்திருக்கமாட்டாயோ! (எ - று.)— அம்புலியை 'அம்ம' என்றது-அன்புபற்றியமரபுவழுவமைதி. பி-ம்:—[1] அம்மா.

[2]நம்பவுன்றனை நயானைக்கஞ்சினன் மருங்கு, நம்பவுன்றனையானை மறுத்திடாமருங்கு. [3]நண்ண, நின்றான். [4]வாட்கை, வாழ்க்கை. ()

51. இயக்கிய [1]ரரக்கி மார்கள் விஞ்சைய [2]ரேழை மார்கள்
முயற்கறை [3]பயிலாத் திங்கள் முகத்தியர் [4]முழுக நின்னை
[5]மயக்கிய முயக்கந் தன்னான் மலரணை யமளி மீதே
அயர்ந்தனை யுறங்கு வாயோ அமர்பொரு [6]தலசி னாயோ.

(இ - ள்.) இயக்கிகளும் அரக்கிமார்களும் வித்தியாதரஸ்திரீகளும் ஆகிய முயலாகிய களங்கம்நீங்கிய சந்திரன்போன்ற முகத்தையுடைய ஸ்திரீகள் உன்னைப் பூர்ணமாக(த் தம்)வசப்படுத்திய முயக்கத்தினால் மலரணையாகிய படுக்கையின்மீது அயர்ந்தவனாயுறங்குகின்றாயோ? (அன்றி) போர்செய்து அலுத்து உறங்குகின்றாயோ? (எ - று.)—சிருங்காரநிலையிலும் வீரநிலையிலுமே நிற்பவனுக்கு அவலநிலை நேர்ந்திட்டதே யென்று புலம்பியவாறு. பி - ம்:—[1]அரக்கர்மாதர், அரக்கிமாதர். [2]ஏனைமாதர், ஏழைமாதர். [3]மலராத், இலாத, மெலிந்த. [4]முருக. [5]நயக்குநர்மருள நீ நின்நளிர் முகங்காட்டிநல்காய்,நயக்குநர்மருள நீயும்... [6]அஞ்சினாயோ. (3195)

52. முக்கணான் முதலி னோரை யுலகொரு [1]மூன்றி னோடும்
புக்கபோ ரெல்லாம் வென்று [2]நின்றவென் புதல்வனை போலாம்
மக்களி லொருவன் கொல்ல [3]மாள்பவன் வான மேரு
[4]உக்கிட அணுவொன் றோடி யுதைத்தது போலு மம்மா.

(இ - ள்.) ஒருமூன்று உலகத்திலும் புகுந்தபோரிலெல்லாம் திரிநேத்திரனான சிவபெருமான் முதலினோரை வென்று நின்ற என்புதல்வனை, மக்களில் ஒருவன் கொல்வதனால் மாள்வான் போலும்? (இது, நம்பத்தக்கதன்று: இச்செயலானது). 'வானம் வரையில் வளர்ந்த மேரு சிந்தும்படி ஓர் அணுவானது ஓடி உதைத்ததையொக்கும்; (இது என்ன) வியப்போ! (எ - று.)—அம்மா-வியப்புக்குறிப்பு. பி-ம்:-[1]மூன்றினேடும், [2]நின்றவன். [3]மாளவதேமான, வாழ்வதேவான. [4]உக்குமென்காலால் வேரோடொடிதலுமுளதே யம்மா, உக்கவென்காலால் வேரொடொடித்தலும்...,...வேரொடொடிவதும்.... (3196)

53. [1]பஞ்செரி யுற்ற தென்ன வரக்கர்தம் பரவை யெல்லாம்
வெஞ்சின [2]மனிதர் கொல்ல [3]விளிந்ததே மீண்ட தில்லை [ந்த
அஞ்சினே [4]னஞ்சினே [5]னச் சீதையென் றொரு [6]அமிழ்தில் தோய்
தஞ்சினா லிலங்கை [7]வேந்தன் நாளைமேத் [8]தகைய னன்றே.

(இ - ள்) பஞ்சிலே தீப்பொருந்தினாற்போல அரக்கருடைய சேனாசமுத்திரமெல்லாம் கொடுங்கோபத்தையுடைய மனிதர் கொல்ல இறந்ததேயாம்; (போனது) திரும்பினதில்லை: (நான்) மிகவும் அஞ்சினேன் அஞ்சினேன்; அந்தச்சீதையென்கின்ற அமிழ்தத்தில் தோய்த்த நஞ்சினாலே இலங்கையரசனும் [இராவணனும்] நாளைக்கு இத்தன்மையுடையவனானானன்றோ [இறந்துவிடுவானன்றோ]? (எ - று.)—வெளிக்கு இனிமைபயப்பவள் போலத் தோன்றி, இறுதியில் தீமைவிளைத்தலால், 'சீதையென்றமிழ்திற்றோய்த்த நஞ்சு' என்றான். மனிதன் சினப்போரால் அரக்கர்பரவை

எளிதிலழிந்ததற்கு, எரியுற்ற பஞ்சு உவமை. பின் நிகழப் போவதை மண்டோதரி முற்கூட்டியே அறிவிப்பதுபோல் அரற்றுந் திறம் காண்க. பி-ம்:-[1] மஞ்சரி. [2] மனிதன். [3] விளிந்தவர். [4] நடுங்கினேன். [5] இச். [6] அமிர்தாற்செய்த. [7] வேந்துநாளை. வெந்துநாளை என்றும் படிக்கலாம்; (அப்போது, இலங்கைவெந்து, இராவணன் நாளையித் தகையனன்றோ (எனப்பொருள் படும்.) [8] தகையது. (3197)

54.—இராவணன் சீதையை வெட்டச்செல்லுதல்.

என்றழைத் [1]திரங்கி யேங்க இத்துயர் [2]நமர்கட் கெல்லாம்
பொன்தழைத் தனைய வல்குற் சீதையால் [3]புகுந்த தென்ன
[4]வன்தழைக் கல்லின் நெஞ்சின் வஞ்சகத் தாளை வாளால்
கொன்றிழைத் திடுவ னென்று வோடினு [5]னரக்கர் கோமான்.

(இ - ள்.) என்று (இவ்வாறாக மண்டோதரி) கூவி இரங்கி ஏங்குகையில்,—அரக்கர்களுக்கு அரசனான இராவணன்,—'இத் துயரமானது நம்மவர்க்கெல்லாம் பொன் தழைத்தாற்போன்ற அல்குலையுடைய சீதையினால் வந்ததாகும்' என்றுகருதி, 'வன்மை தழைத்தலைக்கொண்ட கல்நெஞ்சையுடைய வஞ்சனைக்குணமுள்ள அச்சீதையை வாளாற்கொன்று (பகைவர்களுக்குத்) தீமைவிளைப்பேன்' என்று சொல்லி(ச் சீதையிருக்குமிடம்நோக்கி)ஓடலானான்; (எ - று.)—இந்திரசித்தினிறப்பால் தோன்றியுள்ள பெருவருத்தம் மண்டோதரியின் புலம்பலால்வளரப்பெற்ற இராவணன், "இலங்கை வேந்தனானையித்தகையன்" என்று அவள்பேச்சில் தன்சாவையும் கேட்டபோது மிதமிஞ்சிய சினம்மூள, வாளால்வெட்டுமாறு கருதிச் சீதையுள்ள விடத்துக்கு ஓடினானென்பதாம். பி - ம்:— [1] இரங்கநோக்கி, ஏங்கிநோக்கி. [2] எமர்கட்கு, எங்கட்கு. [3] புகுந்ததோதான். [4] வன்றளைக்கல்வி நெஞ்சவஞ்சகத்தாளை. [5] கொடியனுள் பால். (3198)

55.—இராவணன்செயலைத் தடுத்து மகோதரன் கூறத் தொடங்கல்.

ஓடுகின் றானை நோக்கி யுயர்பெரும் [1]பழியை [2]யுச்சிச்
சூடுகின் றானென் றஞ்சி மகோதரன் துணிந்த நெஞ்சன்
மாடுசென் றடியின் வீழ்ந்து வணங்கிநின் புகழ்க்கு மன்னு
கேடுவந் [3]தடுத்த தென்று இனையன [4]கிளத்த லுற்றான்.

(இ - ள்.) (அவ்வாறு) ஓடுகின்ற இராவணனை நோக்கி மகோதரன் '(இவன்) அழியாத பெரும்பழியை(த் தன்) தலையில் சுமந்துகொள்ளப்போகின்றானே' என்று அஞ்சி, (சீதையைக்கொல்லத்) துணிவுகொண்டநெஞ்சையுடையவனான அந்த இராவணனருகிற் சென்று அடியில்வீழ்ந்து வணங்கி, 'அரசனே! உன்னுடைய கீர்த்திக்குக் கெடுதி வந்துசேர்ந்துவிட்டது' என்று பின்வருமாறு சொல்லத்தொடங்கினான்; (எ-று.)-அதை அடுத்த ஐந்துகவிகளிற் காண்க.

இராவணன் பெருவெறியோடிருக்கையில் அவன் கருத்திற்கு மாறாகச் சொல்வது துணிச்சலின் செயலென்று அந்தமகோதரனை 'துணிந்த நெஞ்சன்' என்கிறார். "உன்மகனுயிரை இலட்சுமணன் அம்புகள் பருகிடநீகதறப்போகின்றாய்(மாயாசனகப்-59)"

என்றுதுணிச்சலாகச் சீதாபிராட்டி இராவணன் முன்னர்க் கூறிய போது சீதையினிடத்துக் காதலினும் புத்திரவாஞ்சை மிக்கிருந்ததனால் இந்தச்சீதையைக் கொல்லுவோமென்ற கருத்தோடு ஓட, அப்போதும் மகோதரனே தடுத்தான்; இந்திரசித்து கொல்லப்பட்ட அந்தத்துயரம் மந்தோதரிபுலம்பலால் உச்சநிலையையடையவே, 'இத்துயரம் சீதைநிமித்தத்தாலல்லவோ நமக்குநேர்ந்தது? கல்நெஞ்சளாகிய இந்த வஞ்சகியைக் கொன்றுதீர்வேன்' என்று இராவணன் வெறிகொண்டு ஓடியது அவனது மனநிலைக்குத் தக்கதே: இந்நிலையிலும் மகோதரன் அறம்நோக்கிக் கூறுகின்றான்போல இராவணனைத் தடுக்கின்றானென்பது ஓராச்சரியமான விஷயமேயாமென்ப. ஸ்ரீவான்மீகத்திற்கு ஏற்ப, மகோதரன் என்றவிடத்து 'சுபாரிசன்' என்ற பாடமிருப்பினுமாம். பி-ம்:—[1] பிழிய, பழியின். [2] உச்சி. [3] உறுவதென்று, உற்றதென்றே. [4] கிளக்கல், கிளரல். ()

56.—ஐந்துகவிகள்-ஒருதொடர்: சீதையைவெட்டவேண்டாமைக்கு மகோதரன் இராவணனிடம் காரணம் கூறுதலைத் தெரிவிக்கும்.

நீருள தனையுஞ் [1]சூழ்ந்த நெருப்புள தனையும்[2] நீண்ட
பாருள தனையும் [3]வானப் [4]பரப்புள தனையும் காலின்
பேருள தனையும் [5]பேராப் பெரும்பழி பிடித்தி போலாம்
போருள தனையும் வென்று புகழுள தனையு [6]முள்ளாய்.

(இ - ள்.) (இதுவரையில் நேர்ந்துள்ள) போரத்தனையையும் வென்று புகழையெல்லாம் கொண்டிருப்பவனே! (நீ) ஐம்பெரும்பூதங்கள் இருக்குங் காலம் வரையிலும் அழியாத பெரும்பழியைக் கைக்கொள்வாய் போலும்; (எ - று.)—சூழ்ந்த - வளைத்துக்கொள்ளும் தன்மையுள்ள. கால் - காற்று. செய்யுளாகலின் ஐம்பெரும்பூதங்களை முறைபிறழ வைத்தார். பி - ம்:—[1] நீண்டு. [2] சூழ்ந்து. [3] காயப். [4] பரப்பினது. [5] மாயாப். [6] உள்ளால். (3200)

57\. தெள்ளருங் கால கேயர் சிரத்தொடுந் [1]திசைக்கண் யானை
வெள்ளிய மருப்புச் சிந்த வீசிய [2]விசயத் தொள்வாள்
வள்ளிய மருங்குல் செவ்வாய் மாதர்மேல் வைத்த போது
[3]கொள்ளுமே யாவி தானே நாணத்தாற் குறைவ தல்லால்.

(இ - ள்.) (இவ்வளவுவலிமையுடையவரென்று) தெளிவதற்கு முடியாத காலகேயருடைய சிரத்துடனே திக்கஜங்களின் வெண்ணிறமுள்ள தந்தங்கள் சிந்தும்படி வீசிய வெற்றிபெற்ற ஒள்ளிய வாளை, கொடியையொத்த அழகிய இடையையும் செந்நிறவாயையுமுடைய மாதர்மேற் செலுத்தியபோது, (அவ்வாளானது) தானே நாணத்தினால் இறுவது அல்லாமல் (அம்) மாதராவியைக் கொள்ளுமோ? [கொள்ளாது]; (எ - று.)

இராவணன் புகழிற் பெருவிருப்பின னென்பதை உணர்ந்து அவன் புகழ்ப்பெருமையைப் பாராட்டிக்கூறி அதற்குக் குறைவு நேருமென்கின்றான் மகோதரன். வீரரைவெட்டுதற்கு ஏற்பட்ட தெய்வவாளானதால், அது பெண்கொலை புரியாது: ஆகவே,

பெண்கொலைக்கு முயன்ற பழியொன்றுமே சேருமென்று கூறிய வாறும், நீ கொல்லப்பார்த்தாலும் வாள் கொல்ல நாணுமே என்ற படி. காலகேயர் - கச்யபருக்குக் கலையென்பவளிடத்துப் பிறந்தவரெனவும், புலோமருக்குத் திதியென்பவளிடத்துப் பிறந்தவரெனவுங் கூறுவர்; இவர்கள் அசுரர்; பொன்னிறமுள்ளவர்; மகாபலசாலிகள்: இந்திரனைப் பலமுறை வெற்றிகொண்டவர்கள். கடலில் ஒளித்திருந்த இவர்களைத் திசைக்காவலரை வெல்லச்சென்ற இராவணன் வருணன்மாளிகைக்குச் செல்லுமுன் வென்றானென்பதை, "அங்கரிவிட்டரக்கனடல்வருணன் றனைவெல்லா னவன்றான் மேவுங், கன்னகிரிதனைமூடிக் காலகேயரை யெல்லாங் கணத்திற் கொன்று, தன்னுடைய தங்கையாந்தடவரைத்தோள் சூர்ப்பணகை தன்னைக் கொண்ட, மின்னனைய சுடரிலைவேல் வித்யுச்சிங்கன் றனைவெங் களத்து வீழ்த்தான்" என்ற உத்தரகாண்டச் செய்யுளாலறிக. இச்செய்யுள் சில பிரதிகளில் "ஓடுகின்றானை" (55) என்பதன்பின் உள்ளது. குன்றதல் - குன்றுதலுமாம் பி-ம்:—[1] திசைக்கை. [2] விசயவொள்வாள். [3] கொள்ளுமோதானவ்வாவி. (3201)

58. [1] மங்கையர் குலத்து ளாளைத் தவத்தியை முனிந்து [2] வாளாற்
சங்கையொன் றின்றிக் [3] கொன்றாற் குலத்துக்கே தக்கானென்று
கங்கையஞ் சென்னி யானுங் கண்ணனுங் கமலத் தோனும்
செங்கையுங் கொட்டி யுன்னைச் சிரிப்பரால் [4] சிறிய னென்று.

(இ - ள்.) (இந்தத் தெய்வவாளையன்றி வேறுவாளைக்கொண்டு வெட்டுவாயென்றாலும், பெண்கொலை பாவம்: தவத்தியின் கொலை மிக்கபெரும்பாவம்: அவ்வாறாக) ஸ்திரீஜாதியைச் சேர்ந்தவளும், தவக்கோலத்தை யுடையவளுமாகிய சீதையைச் சினந்து சிறிதுங் கூச்சமில்லாமல் வாளாற் கொன்றால்,—கங்கையை அழகியசென்னியில்வைத்த சிவபெருமானும், திருமாலும், பிரமதேவனும், ராக்ஷஸகுலத்துக்கேஏற்ற தகுதியையுடையவனென்றும் அற்பனென்றுஞ் சொல்லி(த் தமது) செவ்வியகைகளைக் கொட்டி உன்னைச் சிரிப்பார்கள்;— (எ-று.) தெய்வவாள் வெட்டாது என்று கீழ் வந்ததனால் தெய்வவாளை யன்றி வேற்றுவாளைக்கொண்டு வெட்டுவாயென்றாலும் என்று வருவிக்கப்பட்டது. செங்கையும் என்ற உம்மை - சிரிப்பதேயன்றி என்ற பொருளைத் தழுவியதால் எச்சவும்மை. பி-ம்:—[1] மங்கையக். [2] வாளிற். [3] கொன்றாய். [4] சிறியை. இச்செய்யுள் "ஓடுகின்றானை" (55) என்ற பாடலின்பின் சிலபிரதிகளில் உள்ளது. (3292)

59. நிலத்தியல் பன்று வானின் நெறியன்று [1] நீதி யன்று
தலத்தியல் பன்று மேலோர் [2] தருமமே [3] லதுவு மன்று
புலத்தியன் மரபின் [4] வந்து புண்ணிய [5] மரபு [6] பூண்டாய்
[7] வலத்தியல் பன்று [8] மாயாப் பழி[9] கொடு மறுகு வாயோ.

(இ - ள்.) புலஸ்தியனுடைய வமிசத்திலே பிறந்ததனால் பரிசுத்த குலத்திற்பிறந்தவனென்ற புகழைப் பூண்டவனே!-(நீ ஒரு பெண்ணைக் கொல்வது), பூலோகத்தாருடைய இயல்பல்ல; வானுலகத்தாருடைய இயல்புமல்ல; (சத்தியலோகம் முதலிய மற்றெந்த)

உலகத்திலுள்ளவர்களுடைய இயல்பும் அன்று; மேலோருடைய தருமமென்(று நினைப்) போமாறால், அதுவும் அன்று; நீதி சாஸ் திரத்திற்கும் ஏற்றதன்று: வெற்றிக்கு, உரியது மன்று: (இப்படிப் பட்ட இழிதொழிலைச்செய்து) மாயாப்பழியைப் பெறுமாறு மனங் கலங்கப்பெறுவாயோ! (எ-று.)—பி-ம்:—[1]புறத்தினின்ற, புறத்து நின்ற. [2]கருமமேல், தருமமே. [3]அன்றுதக்க. [4]வந்த: [5]விரதம். [6]பூண்டார். [7]பலத்து. [8]மாயப். [9]கொள. (3203)

60. இன்றுநீ யிவளை வாளா[1] லெறிந்துபோய் [2]இராமன் றன்னை
வென்று[3]மீண் டிலங்கை மூதூ ரெய்தினை [4]வெதும்பு வாயோ
பொன்றினள் சீதை [5]யென்றே [6]போவர்க ளவர்தா மல்லால்
வென்றிட முடியா தென்னும் வீரமோ விளம்ப வென்றான்.

(இ-ள்.) இன்று இவளை நீ வாளால் எறிந்துபோய் இராமனை வென்று மீண்டு இலங்கையென்கிற பழமையான ஊரை அடைந்து (விரும்பிய சீதையை யிழந்த காரணத்தினால் மனம்) புழுங்கிக் கிடப்பாயோ? (சீதையைக் கொல்லாமல் எதிரிகளைக் கொன்றால் விரும்பிய சீதையைப் பெறலாம்: அங்ஙனமாக, அறிவாளியான நீ கழி விரக்கங்கொள்ளுஞ் செயலைச் செய்வாயோ? செய்யாய்: ஆதலால், சீதையைக் கொல்ல வேறு காரணம் வேண்டும்: அது) 'சீதையிறந் திட்டாளென்று கருதி அவர்கள் தாமே திரும்பிச்சென்று விடுவார் கள்: (அங்ஙனம் அவர்களைச்) செல்லவிடுவதல்லாமல் (அவர்களை) வென்றிட முடியாது' என்ற சூரத்தனமோ! (இவ்விரண்டிற் சீதை யைக் கொல்லுமாறு காரணம்?) சொல்லுவாயாக என்று வினவி னான், (மகோதரன்); (எ - று.)

நீ சீதையைக்கொல்வதாற் பெறலாகும் பயனென்று கருதக் கூடியவை-சீதையை யிழத்தலால் மனம்வெதும்புதல், பகைவரை நேரே பொருது வெல்லமுடியாமையால் அப்பகைவர்களைத் தாமே திரும்பச் செய்யும் சூரத்தனம் என இவை; இவைகளில் நீ விரும் பியது எது? இரண்டும் விரும்பத்தக்கனவல்ல. உனது இந்தச் செயலால் உன் விருப்பத்தை இழந்தவனுவதோடு நீ கோழையென் பதும் பெறப்படுமென்பது குறிப்பு மகோதரன் கூற்றில் இராவ ணன் செயலைத் தடுத்து வாளைக்கீழ்வைக்குமாறு அன்னான் மனத்துப் பொருந்தும்படி இறுதியாகக் கூறிமுடித்தவகை, ஊன்றி யறிந்து உவத்தற்குஉரியது வீரமென்பது-இகழ்ச்சி தோன்றக் கூறிய பிறகுறிப்பு. விளம்பல்-வியங்கோள். பி - ம்:—[1]எறிந்தனை. [2]மனிதன. [3]பின். [4]விளம்புவாயோ. [5]இன்று, என்று. [6]புரவல புதல்வன்றன்னைக் கொன்றவர் தம்மைக் கொல்லக் கூசினை போலு மென்றான், புரவல...சால..., புரவல...கூசினை கொள்க... (3204)

61.—இராவணன் சீதையை வெட்ட முயல்வதைவிட்டு இந்திரசித்தினுடலை எண்ணெய்த்தோணியிலிடச் சொல்லுதல்.

என்னலு மெடுத்த கூர்வா ளிருநிலத் திட்டு [1]மீண்டு
மன்னவன் மைந்தன் றன்னை மாற்றலர் [2]வலிதிற் கொண்ட

சின்னமு மவர்கள் [3]தங்கள் சிரமுங் கொண் டன்றிச் [4]சேர்கேன்
[5]தொன்னெறித் தயிலத் தோணி வளர்த்துமி னென்னச் சொன்னான்.

(இ - ள்.) என்று (மகோதரன்) சொல்லவும், (தான்) எடுத்த கூரியவாளைப் பெரியநிலத்தி லிட்டு, (தான் செய்யத்தொடங்கிய தொழிலினின்று) மீண்டு, ராக்ஷஸராஜனை இராவணன், (தன்) மைந்தனைப் பகைவர்வலிமையாற்கொண்ட துண்டிக்கப்பட்ட சிரத்தையும், அம்மாற்றலரின் சிரத்தையும் கொண்டுவருதலில்லாமல் திரும்பேன்; பழமையான முறைப்படியே (இந்திரசித்தின் உடலை) எண்ணெய்த்தோணியிலிடுமின்கள் என்று சொன்னான்; (எ - று.)— சின்னம்-துண்டிக்கப்பட்டது: வடசொல்; இங்கே, இந்திரசித்தின் சிரசு. தோணி-திரவபதார்த்தம் கொட்டிவைக்கும் பேரளவுள்ள பாத்திரம். பி - ம்:—[1]மீண்டான், மீண்ட. [2]வலியாற். [3]தத்தம், தந்தம். [4]மீளேன், சேரத், சேர்த்தேன். [5]துன்னருந், துன்னெறித்.

அச்சிட்டபிரதிகளில் அடுத்தபாடலில்தான் இராவணன் சோகப்படலம் முடிகின்றது; ஆயினும், பலஏட்டுப்பிரதிகளில் இச்செய்யுளோடு இப்படலம் முடிவதாலும், அப்படி முடிவது பொருத்தமாக இருப்பதாலும் இங்ஙனம் கொள்ளப்பட்டது. இச்செய்யுளினிறுதியில, சிலபிரதியில் இராவணன் சோபம் இந்திரசித்துவதைப் படலம் முற்றும் என்று உள்ளது. (3205)

இந்தப்படலத்துக்கூறிய கதை ஸ்ரீ வான்மீகத்திற்கூறியபடி வருமாறு:—இராவணனுடைய மாளிகையிலிருந்து அவனுக்குத் துணை புரியும் மந்திரிமார் இந்திரசித்தின் வதத்தைத் தாமேநேரில்தெரிந்து கொண்டு மனவருத்தத்துடன் இராவணனிடம் அறிவித்தனர். அவன் அத்துயரச்செய்தியைக் கேட்டதும் புத்திரசோகத்தினால் மூர்ச்சித்து வெகுநேரம் கழிந்தபின் தேறினன். பின்னர் அவ்விராவணன் ஐம்பொறி கலங்க எளிமையுடன், 'இந்திரனையும் புறங்கண்ட நீ எப்படி இலக்குவனிடம் அகப்பட்டுக்கொண்டாய்? இனி எல்லாத் தேவர்களும் நீ இறந்ததைச் செவியுற்று அச்சமற்றுத் திரிவார்கள். நீ இல்லாமையால் இந்த லோகமே எனக்குச் சூனியமாகத் தோன்றுகின்றது. இனி, களிற்றைப் பிரிந்த பிடியானைகளைப் போல அரக்கக்கன்னியர் கதறுவதைக் கேட்கும்படியாயிற்றே! நீ எனக்கு ஈமக்கடனைச் செய்யவேண்டியது முறையாயிருக்க, உனக்கு நான் ஈமக்கடன் செய்யும்படியாயிற்றே! இதுவரையில் என் மனச்சள்ளையைப் போக்கிக்கொண்டிருந்த நீ எனக்குச் சல்லியம்போன்ற சுக்கிரீவனும் இலட்சுமணனும் பிழைத்திருக்கையில் அச்சல்லியத்தைப்போக்காமல் எங்குப் போயினை?' என்று பலவாறாகப் புலம்பினான். பின்னர் அந்தத் துயரம் சினத்தைமூட்டக் கண்களினின்று நெருப்புப்பொறி பறக்க முகஞ் சிவந்து பலைநெறுநெறென்று கடித்தான். அந்தச் சீற்றக் குறியைக் கண்டு, இனி எதிரிகள் இறந்துவிடுவார்களென்று அரக்கர் மகிழ்ந்தனர். அவ்வண்ணம் உக்கிரமான கோபத்துடனே இராவணன், 'என் துயர்க்கெல்லாம் காரணமான சீதையை வெட்டி வீழ்த்துவேன்' என்று சொல்லி நண்பர்கள் தடுக்கவும் கேளாமல் சீதையிருக்கும் அசோகவனிகையை நோக்கிச் சென்றான். அங்ஙனம் தன்னை வெட்டுமாறு சினந்து வருகின்ற

இராவணனைக் கண்டு சீதை நடுநடுங்கிப் பலவாறு புலம்பினள். அவ்வேளையில் இராவணனுக்கு நெருங்கிய நண்பனான சுபார்சுவன் இராவணனைக்கிட்டி 'சீதையைக்கொல்வது புலத்தியகுலத்திற் பிறந்து பெருவீரம் பூண்ட உனக்குத் தகாது: ஆகையால், எதிரிகளான இராமன் முதலியோரை வதைத்துச் சீதையைக் கைப்பற்றுவதே முறைமை' என்று நீதியாகவும் இனிமையாகவும் எடுத்துக் கூறினான். அதனால், இராவணன், தன்மனநிலை மாறித் தன் மாளிகை சேர்ந்து, பிறகு நண்பர்களாற் சூழப்பட்டு மீளவும் சபா மண்டபம் சேர்ந்தானென்பது.

இராவணன்சோகப்படலம் முற்றிற்று.

---

29 - ஆவது படைக்காட்சிப்படலம்.

[தூதுவரால் அறிவிக்கப்பட்டு, வந்த] படைகளை (இராவணன்) காணுவதைக் கூறும் படலமென்பது, பொருள்.

ஆங்காங்குள்ள ராக்ஷசசேனைகளை வருமாறு பணித்த இராவணனது கட்டளையைத் தூதர் அவ்வாறே அறிவிக்க, அப்படைகளெல்லாம் தலைவருடன் திரண்டு வந்தனவாக, அவ்வாறு படைகள் வந்ததைத் தூதுவர் இராவணனுக்கு அறிவித்தார். அவ்வரக்கர் தலைவன் கோபுரத்தின்மீது ஏறி அச்சேனைகளைக் காண, 'இந்தச் சேனை இவ்விடத்தது, இந்தச்சேனை இவ்விடத்தது' என்று தூதுவர் பகுத்துக் காட்டினர். பிறகு இராவணன் 'இச்சேனைகளின் மூழுத்தொகை எவ்வளவு?' என்ன, 'பித்தர் இதன் அளவு ஓராயிர வெள்ளமென்றனர்: அது இதனளவுக்கு மிகச்சிறிது' என்று சொல்ல, இராவணன் அந்தச் சேனைகளின் தலைவரை அழைத்து வருமாறு பணித்தான். அக்கட்டளைப்படியே வந்த தானைத்தலைவர் வணங்கிநிற்க, இராவணன் சேமம் விசாரித்தபின், அவர்கள் தம்மை வரவழைத்தகாரணத்தை வினவ, சீதை காதலாற் புகுந்துள்ளவற்றை யெல்லாம் இராவணன் விவரித்தான். அது கேட்டு அவர்கள் 'மனிதர்மீதும் குரங்கின்மீதும் சென்று பொருவதா?' என்று நக, அப்போது புஷ்கரத்தீவின் தலைவனான வன்னியென்பவன் அவர்களைக் கையாலமர்த்தி 'அந்த மானுடருடைய வலிமை யாது?' என்று வினவ, மாலியவான் ஆகியோடந்தமாக நிகழ்ந்தனசொல்லி 'சீதையைவிட்டிடுவதே நன்று' என்ற தன் கருத்தைப் புலப்படுத்த, வன்னி, 'சீதையைவிடுதல் முன்னர்ச் செய்யத்தக்கது: இந்திரசித்தும் இறந்த இப்போது செய்தல் தக்கதன்று; பகைவரை முடிப்பதே கடமை' என்று சொல்ல, பிறகு அரக்கர்யாவரும் 'பகைவென்று வருவோம்' என்று சபதஞ் செய்து சென்றன ரென்பது, இப் படலத்துங் கூறும் பொருள்.

1.—ஆங்காங்கிருந்து படைகள் வந்திருத்தலைத் தூதர் இராவணனுக்கறிவித்தல்.

அந்தொழி லவருஞ் செய்தா ரயயிடை யானைத்துந் திக்கும்
பொந்திய நிருதர் தானை கொணரிய போய தூதர்

ஒத்தன ¹ரணுகி வந்து வணங்கின ரிலங்கை யுன்னூர்ப்
பத்தியி ²னமைந்த தானைக் கிடமிலை ³பணியென் றென்றார்.

(இ - ள்.) (இந்திரசித்தினுடலைத் தைலத்தோணியிலிடுவதாகிய) அத்தொழிலை ஆங்கிருந்தபணியாளர் செய்தார்கள்: அவ்வேளையில்,—அனைத்துத்திக்குகளிலும் நிரம்பியிருந்த அரக்கச்சேனையைக் கொணரும்பொருட்டுச் சென்றிருந்த தூதுவர், ஒருசேர நெருங்கிவந்து (இராவணனை)வணங்கினவராய், 'இலங்கையென்கிற உன்னூரில் வரிசைவரிசையாக (இப்போதுவந்து) பொருந்தியுள்ள சேனைக்கு இடமில்லை [ஆங்காங்கிருந்து மிகத்திரண்ட பெருஞ்சேனை வந்துள்ளன]: (இனி, நாங்கள் செய்யக்கடவ) கட்டளை யாது? என்று வினவினார்கள்: (எ-று.)—பி-ம்:—¹அணுக. ²இடைந்த. ³பணியிது, பணியேது. (3206)

2.—இராவணன் 'சேனை எங்குளது?' என்ன, தூதர் விடைகூறுதல்.

ஏம்பலுற் ¹றெழுந்த மன்ன னெவ்வழி ²யெய்திற் ³றென்றான்
கூம்பலுற் ⁴றுயர்ந்த கைய ரொருவழி கூற லாமோ
வாம்புனற் பரவை யேழு மிறுதியின் வளர்ந்த ⁵தென்னத்
தாம்பொடித் தெழுந்த தானைக் குலகிட ⁶மில்லை ⁷யென்றார்.

(இ-ள்) மகிழ்ச்சி பொருந்தியெழுந்த இராவணன், '(வந்த சேனை) எவ்விடத்தில் இருக்கிறது?' என்று வினவினான்; குவிந்தோங்கிய கையையுடைய தூதுவர், (அவ்விராவணன் வினவிற்கு விடையாக, 'அச்சேனை இனவிடத்திலுள்ளதென்று) ஓர் இடத்தைச் சுட்டிக் கூறமுடியுமோ? தாவுகின்ற நீரையுடைய எழுகடல்களும் யுகாந்தகாலத்திற் பொங்கியெழுந்த தென்னுமாறு தாம் பொங்கியெழுந்த சேனைக்கு இந்த உலகத்தில் இடம் போதாது' என்று கூறினார்கள்; (எ-று.)—'தானைக்கு உலகிடமில்லை' என்றதில் 'எல்லாம் இறந்து விரைவில் வீரசுவர்க்கஞ் சேரும்' என்று அமங்கலப்பொருள் தொனித்தல் காண்க. பி-ம்.—¹எழுதுந். ²எய்தின். ³என்னக். ⁴எழுந்த. ⁵என்னத். ⁶தானில், தாமில். ⁷என்றான்.

3.—சேனை இலங்கையை நோக்கி வருதல்.

மண்ணுற நடந்த தானை வளர்ந்தமாத் தூளி மண்ட
விண்ணுற ¹நடக்கின் றாரும் மிதித்தன ²ரேக மேன்மேல்
³கண்ணுற லருமை ⁴காணக் கற்பதின் ⁵முடிவிற் கார்போல்
⁶எண்ணுற லரிய சேனை யெய்திய திலங்கை நோக்கி.

(இ-ள்.)பூமியிற்பொருந்த நடந்த சேனையினாலே மிக்க பெருந்தூளி நெருங்கியதால், ஆகாயத்திற்பொருந்தி நடக்கின்ற தேவர்களும் காலையூன்றியவர்களாய்ச் சென்றுகொண்டிருக்க, யுகாந்தகாலத்துமேகம்போல எண்ணமுடியாத [பெருந்திரளாயுள்ள] அச்சேனை, (தூளிப்பரப்பினால்) பார்த்தற்கு அருமையாகக் காணப்பட்டு இலங்கையை நோக்கி மேன்மேற் பொருந்திற்று; (எ-று.)

சேனையின் தொகுதியெழுப்பிய தூளியானது வானத்தில் பூமிப்பரப்புப்போற் படிவதனால் பூமியிற் கால்பாவாது அவ்வானத்

துச்செல்கின்ற தேவர், பூமியிற் கால்வைத்துச் செல்வதுபோல் வானத்தரையான ஆங்குச் செல்லலாயினரென்பது முன்னிரண் டடியிற் கூறிய பொருள். யுகாந்தகாலத்தில் மிகுதியாக எழும் மேகம்போற் பெருந்திரளாயுள்ள அச்சேனை மிகுதியாக எழுப்பிய தூளி, அச்சேனையைப் பிறர் பார்க்கவொட்டாமல் தடுத்து நிற்க, அஃது இலங்கைநோக்கிச் சென்றமையைப் பின்னிரண்டடியிற் கூறினர். முடிவு - யுகாந்தகாலம். பி-ம்:—[1]நடிக்கின்றாரும். [2]ஏகி. [3]கண்ணுறவு. [4]காணக். [5]இறுதிக். [6]எண்ணுறவு. (3208)

4.—சேனைகளின் வருணனை.

[1]வாட்டனின் [2]வாங்க [3]மின்று மழையதி னிருள[4]மாட்டா
ஈட்டிய முரசி னார்ப்பை [5]யிடிப்பெதிர் [6]முழங்க மாட்டா
மிட்டினி யுவமை யில்லை வேலை [7]மீச் சென்ற [8]வென்னில்
[9]திட்டிய [10]படையு மாவு மியானையுந் தேருஞ் [11]செல்ல.

(இ - ள்.) வாள்கள் (மின்னுவது)போல, மேகங்கள் விளங்க மின்னலைப்பெற்றிரா; (அன்றியும்), அவ்வரக்கச்சேனைபோல (மேகங்கள்) இருண்டிருக்கமாட்டா: நெருங்கிய முரசினுடைய ஆரவாரத்திற்குமாறாக (அவ்வானத்தின்) இடிப்புகள் கர்ச்சிக்க மாட்டா: (ஆகையால், அச்சேனைக்கு மேகங்கள் உவமையாக மாட்டா: படைக்கலம்) தீட்டப்பெற்றுள்ள பதாதிகளும், குதிரைகளும், யானைகளும், தேரும் எல்லாம் கடல்மீது நடந்துசென்றன வென்றால், (அச்சேனையால் மிதிக்கப்பட்ட கடல் அச்சேனைக்கு உவமை யாகுமோ? ஆகாதன்றோ)? இனி மீண்டும் (அந்தச் சேனைக்கு) உவமை (கூறுமாறு) வேறுபொருள் இல்லை; (எ - று.)

அரக்கர்களுடையனவாதலால், கடலிலும் செல்லும் வல்லமையன அந்தச் சேனைகளென்னலாம்: இனி, பூமியில் இடம் போதாமையால் கடலிலும் அச்சேனைகள் சென்றன என்றலும் ஒன்று. சேனைகளின் காலால் மிதிக்கப்பட்ட பொருளாகையினால் அக்கடலை இச்சேனைக்கு உவமையாகச் சொல்ல முடியாதென்பது, பின்னிரண்டடிகளிற் கூறியபொருள்; எதிர்நிலையணி. இனி, இதனை ஏதுவிலக்கணி எனக் கொள்ளவுமாம். ஈட்டிய - ஈண்டிய என்பதன் வலித்தல். செல்ல-முற்று. நான்காமடியில், படை-பதாதி; தீட்டிய என்பதற்கு ஏற்பப் படைக்கலம் என்பது வருவிக்கப்பட்டது. பிம்:—[1]வாட்டனை. [2]வயங்கா, வயங்கு. [3]மின்றே. [4]மாட்டார். [5]இடிப்பொடு, இடியொடு. [6]முழக்கமாட்டா, முழக்கவொட்டா. [7]மேல். [8]என்னின், சென்னி. [9]நீட்டிய. [10]தேரும்......படையும். [11]செல்லா. (3209)

5.—சேனையின் மிகுதி.

உலகினுக் குலகு போய்ப்போ யொன்றின்றன் [1]ஒதுங்க லுற்ற
[2]தொலைவருந் [3]தானை மேன்மே லெழுந்தது தொடர்ந்து [4]சுற்ற
நிலவினுக் கிறையு மீறு [5]நீங்கின [6]நிமிர்ந்து நின்றன
அளவியு மூத்து செல்லு [7]மாதுரித் தஞ்சி யம்பால்.

(இ - ள்.) (எண்ணிக்கையில்) தொலைதலற்ற [எண்ணிக்கையில்லாத] சேனை மேன்மேல் எழுந்ததாய்த் தொடர்ந்துசூழ, (அச்சேனைத் தொகுதியைக்கண்ட அச்சத்தால்) உலகுக்குமேல் உலகாயுள்ள இடங்கள் போய்ப்போய் ஒன்றிலொன்று ஒதுங்கத்தொடங்கின: நிலவுக்குரிய தலைவனாகிய சந்திரனும், நட்சத்திரங்களும், (தாம் இருந்த இடத்தைவிட்டு) நிமிர்ந்து நீங்கின; சூரியனும், அஞ்சி முந்துசெல்லும் வழியைவிட்டு அப்பால் நின்றான்; (எ-று.)

சேனைத்தொகுதியைக் கண்ட உலகுகள் முதலியவை, 'இடம் பற்றாமையால் அச்சேனைகள் நம்மேல் வந்தால் தாங்கமுடியாது' என்று அஞ்சித் தம்மிடத்தைவிட்டுச் சென்றன என்பது, முன்னிரண்டடியிற்கூறிய பொருள். இச்செய்யுளில் சேனையின்மிகுதியை விளக்க வந்த தொடர்புயர்வுநவிற்சியணி காண்க. பி - ம்:—[1]ஒதுங்கா. [2]தலைவரும். [3]தானைதன், தானையின். [4]சுற்றி. [5]நீக்கிட. [6]நிமிர்ந்து சென்றார், நிமிரநின்றார், நிமிரநின்றான், நிமிர்ந்து நின்றார், நிமிரநின்ற. [7]பரிசு. (3210)

6.—அச்சேனைகள் இலங்கைக்கு வந்த வருணனை.

மேற்பட விசும்பை முட்டி மேருவின் விளங்கி [1]விண்ட
நாற்பெரு வாயி லூடு மிலங்கையூர் [2]நடக்குந் தானை
[3]கார்க்கருங் கடலை மற்றோ [4]ரிடத்திடைக் [5]காலன் றானே [ன.
[6]சோர்ப்பது போன்றதி யாண்டுஞ் சுமை [7]பொறா துலக [8]மென்

(இ - ள்.) மேலிடம்பொருந்த வானத்தை முட்டி மேருவைப்போல் விளங்கித் திறந்துள்ள நான்குபெரியவாயில் வழியாக இலங்கையூரை நோக்கி நடக்கின்ற அந்தச்சேனையானது,-யமனே, 'கருநிறமுள்ள பெருங்கடலை, உலகம் எவ்விடத்தும் சுமை பொறாது' என்ற காரணத்தால் மற்றொரு இடத்திலே சோர்ப்பதையொத்திருந்தது; (எ - று.)

வெளியிலிருந்துவந்து இலங்கையிற் புகுஞ் சேனை விரைவில் அழியப்போவதாகிக் கடல்போற் பரந்திருந்த தென்பது, இங்குக் கூறிய தற்குறிப்பேற்றத்தாற் பெறப்படும். முதலடி-இலங்கையின் நாற்பெருவாயிலின் தன்மையை விளக்குவதாகும். சோர்த்தல் - இருந்த இடத்தைவிட்டு வேறோரிடத்திற்குப் போகச்செய்தல். பி - ம்:—[1]நின்ற. [2]நடந்த. [3]காற்றடங், கார்ப்பெருங். [4]இடைக்கிடை. [5]காணவாங்கி. [6]சேர்ப்பது. [7]பெறாது. [8]மன்னோ, என்று. ()

7.—அச்சேனைகள், மதிலின்மேலாகவும் இலங்கையுட் புகுதல்.

நெருக்குடை வாயி லூடு புகுமெனி னெடிது காலம்
[1]இருக்குமித் தன்மை யென்ன [2]மதிலினுக் கும்ப ரெய்தி
[3]அரக்கனை திலங்கை யுற்ற [4]வண்டங்க ளனைத்தி னுள்ள
[5]கருக்குல மேக மெல்லா [6]மொருங்குடன் கலந்த தென்ன.

(இ - ள்.) 'நெருக்கையுடைய வாயிலின் வழியாக உள்ளே புகுவோமென்றால் (புகுகின்ற) இத்தன்மையானது நெடுங்காலமிருக்

கும்' என்று கருதி, (அச்சேனைகள், வாயிலின் வழியாகவே உட்புகுவதென்று கொள்ளாமல்),-அண்டங்களெல்லாவற்றிலுமுள்ள கருக்கொண்ட மேகக்குழாமெல்லாம் ஒருகாலத்தில் ஒருசேரக் கலந்தாற்போல, மதிலின்மேற்புறத்தைப் பொருந்தி இராவணனுடைய இலங்கையிற் புகுந்தன; (எ-று.)—புகும்=புகுதும் என்பதன் விகாரம். தற்குறிப்பேற்றவணி. பி-ம்:-[1] இருக்குமத்தனையே, இருக்குமத்துணையே, இருக்கவத்தன்மை. [2] மதிலுக்கும். [3] அரைக்கணத்து, அரக்கரது. [4] கண்டங்கள். [5] கருக்கிளர். [6] ஒருவழி. ()

8.—இராவணன் அச்சேனை முழுதையுங் காண விரும்புதல்.

அதுபொழு தரக்கர் கோனு [1]மணிகொள்கோ புரத்தி னெய்திப்
பொதுவுற [2]நோக்க லுற்று [3]ஞெருநெறி போகப் போக
விதிமுறை காண்ப னென்னும் வேட்கையான் வேலை யேழுங்
கதுமென வொருங்கு நோக்கும் பேதையிற் காதல் கொண்டான்.

(இ - ள்.) அப்பொழுது அரக்கர் தலைவனான இராவணனும்,—அழகு பொருந்திய கோபுரத்தின்மேற் பொருந்தி, ஏழ்கடல்களையும் ஒருசேர விரைந்து பார்க்கவேணுமென்று விரும்புகிற மூடனைப் போல விருப்பங்கொண்டவனாய்,—பொதுவாகப் பார்க்கத்தொடங்கி(ப் பார்வை) ஒருவழி போய்க்கொண்டிருக்க,—முறைப்படியே [பிரித்துப் பிரித்துக்] காண்பேனென்னும் விருப்பத்தையுடையவனானான்; (எ-று.)-ஓரேகாலத்திற்காண முடியாதவாறு தானை மிகப் பேரளவுடையதாக இருக்கவே, பார்வை ஒருவழிசெல்லப் பிரித்துப் பார்க்க விரும்பலாயினன் இராவணனென்க. பி-ம்:—[1] ஆசனத்திருக்கை புக்கான், மாசிலாத்தரணிபுக்கான். [2] நோக்கினல்லால், [3] ஒருவழி. (3213)

9.—தூதுவர் அணிகளை முறையேகாட்டிச் சொல்லத் தொடங்குதல்.

மாதிர மொன்றி னின்று [1]மாறொரு திசைமேன் மண்டி
ஓதநீர் செல்வ [2]தன்ன தானையை [3]யுணர்வு கூட
வேதவே தாந்தங் கூறும் பொருளினை விரிக்கின் றூர்போல்
தூதுவ ரணிகள் தோறும் வரன்முறை [4]காட்டிச் சொன்னார்.

(இ-ள்.) ஒருதிக்கிலிருந்து மற்றொரு திக்கின்மேல் நெருங்கிக் கடல்நீர் செல்வதுபோன்ற தானையை, தூதுவர்கள்,-வேதவேதாந்தங்கள் சொல்லும் பொருளை விரிக்கின்றவர்போல, சேனையின் அணிகள் தோறும் (இராவணனது) அறிவு கூடும்படியாகச் சுட்டிக்காட்டி முறையாகச் சொன்னார்கள்; (எ - று.)

சேனையை இராவணன் விதிமுறைகாண்பனென்னும் வேட்கையனாகவே, வேதவேதாந்தங்களில் விரிவாகக்கூறும் நுண்மையாயுள்ள பரம்பொருளின் சொரூபத்தை நல்லாசிரியன் சீடனுக்கு உணர்வு கொள்ளும்படி விளங்கக் கூறுவதுபோலத் தூதர்கள் இராவணனுக்குப் பரந்த அந்தச் சேனையை அணியணியாகப் பிரித்து உணரக் கூறலானார்களென்க. பி-ம்:—[1] மற்றொரு. [2] என்னத். [3] ஒருங்குகூடி, உணர்வு கூட்டி. [4] நோக்கிச்சொல்வார். (3214)

வேறு.

10.—பதினெட்டுக்கவிகள் - இன்னாரின்னார் இன்னின்ன இடத்தவரென்பதைத் தூதுவர் கூறுவதைத் தெரிவிக்கும்.

சாகத் தீவினி னுறைபவர் [1]தானவர் சமைத்த
யாகத் திற்[2]பிறந் தியைந்தவர் தேவரை [2]யெல்லாம்
மோகத் திற்[3]பட [4]முடித்தவர் மாயையின் முதல்வர்
மேகத் தைத்தொடு மெய்யின ரிவரென [5]விரித்தார்.

(இ - ள்.) இவர்கள்,—சாகத்தீவினிலுறைபவர்கள்: **தானவர்** முயன்று செய்த யாகத்திற்பிறந்து பொருந்தியவர்: தேவர்களை யெல்லாம் மோகத்திற் புகுமாறு தீர்த்தவர்; மாயைகள் செய்வதில் முதன்மைபெற்றவர்; மேகத்தைத் தொடுகின்ற உடலையுடையவர் என்று (ஒரணிலையச்சுட்டி) விரித்துரைத்தார்; (எ-று.) **பி-ம்:-**[1]தாபதர். [2]மேனாள். [3]புக. [4]முடிந்தவர். [5]விதித்தார். (3215)

11. **குசையின் தீவினி னுறைபவர் [1]கூற்றுக்கும் விதிக்கும்**
வசையும் [2]வன்மையும் [3]வளர்ப்பவர் வானநாட் டுறைவார்
இசையுஞ் செல்வமு மிருக்கையு மிழந்ததிங் கிவரால்
விசயந் [4]தாமென [5]நிற்பவ ரிவர்நெடு விறலோய்.

(இ - ள்.) மிக்க பராக்கிரமத்தையுடையவனே! இவர்**கள்,—** குசைத்தீவில் வசிப்பவர்: யமனுக்கும் பிரமனுக்கும் முறையே பழிப்பையும் வல்லமையையும் வளர்ப்பவர்: வெற்றியே வடிவுபடைத்துள்ளதாமென்று சொல்லுமாறு நிற்பவர்; வானநாட்டிலுறைகின்ற தேவர்கள் இவர்களால்தான் கீர்த்தியையும் செல்வத்தையும் இருப்பிடத்தையும் இப்போது இழந்தது; (எ - று.)

கூற்றிற்கு வசை-கொல்லமுடியாமையாலும், பிரமனுக்கு வன்மை-தான் படைத்தஉயிர் இறவாதிருத்தலாலுமாகும். **பி-ம்:—** [1]இவர் கொடுங்கூற்றின். [2]மென்மையும். [3]வளர்த்தவர். [4]தோளென, நானென, தானென. [5]நின்றவரிவர்நெடு, உவகைமிக் கெழுந்தனர். (3216)

12. **இலவத் தீவினி னுறைபவ [1]ரிவர்கள் பண் டிமையாப்**
புலவர்க் கிந்திரன் பொன்னக ரழிதரப் பொருதார்
நிலவைச் செஞ்சடை வைத்தவன் வரந்தர [2]நிமிர்ந்தார்
உலவைக் [3]காடுறு தீயென வெகுளிபெற் றுடையார்.

(இ-ள்.) இவர்கள்,—சான்மலித்தீவிலுறைபவர்: இமையாக் கண்ணைப்படைத்த தேவர்களுக்கரசனான தேவேந்திரனது சொர்ண மயமான அமராவதிநகரம் அழியுமாறு முன்பு பொருதவர்: பிறைச் சந்திரனைச் செஞ்சடையில் வைத்தவனான சிவபெருமான் வரம்தர மேன்மைபெற்றவர்: காட்டில் காற்றோடு பொருந்திய தீப்போல வெகுளியைப் பெற்றவர்: (எ-று.)—உலவை-காற்று: மரச்செறிவு எனினுமாம். **பி-ம்:—**[1]இவரிடம். [2]நிமிர்வார். [3]காட்டுறு. (3217)

13. **அன்றிற் றீவினி னுறைபவ ரிவர் [1]பண்டை யமரர்க்கு**
என்றைக் கும்மிருந் துறைவிட [2]மாம்வட மேருக்

குன்றைக் கொண்டுபோய்க் குரைகட [3]லிடவறக் [4]குலைந்தோர்
சென்றித் தன்மையைத் [5]தவிருமென் றிரந்திடத் தீர்ந்தோர்.

(இ - ள்.) இவர்,—கிரௌஞ்சத்தீவில் வசிப்பவர்: பழமையான தேவர்களுக்கு என்றைக்கும் இருந்துறைகின்ற இடமாகிய வடமேருக்குன்றைக் கொண்டுபோய் ஒலிக்கின்ற கடலிலே போகடத் தொடங்க, (அத்தேவர்கள்) மிக நடுங்கினவர்களாய்ச் சென்று 'இத்தன்மையை நீங்குங்கள்' என்று வேண்ட அச்செயலைத் தவிர்ந்தவர்;—(எ - று.)—பி-ம்:—[1]பண்டவ்வமரர்க்கு. [2]என்றிட, ஆமென்னும், எனவட. [3]இடலுற்ற, இடையுற. [5]குலத்தோர், குயத்தோர். [5]திருமென்று. (3218)

14. [1]பவளக் குன்றினி னுறைபவர் வெள்ளி [2]பண் பழிந்தோர்
குவளைக் கண்ணி [3]யங் கிராக்கதக் கன்னியைக் கூட
அவளிற் றோன்றின [4]ரையிரு கோடியர் தொய்தின்
[5]திவளப் பாற்கடல் [6]வறள்படத் தேக்கினர் [7]சிலநாள்.

(இ - ள்.) (இவர்கள்),—பவளக்குன்றிலுறைபவர்கள்: சுக்கிராசாரியன் குணம்மாறி [காமபரவசனாகி] ஒரு குவளைமலர் போன்ற கண்களையுடையவளான இராக்கதக்கன்னியை அங்குப் புணர அவளிடத்திலிருந்து தோன்றியவர்: பத்துக்கோடித் தொகையை யுடையவர்: (வெண்ணிறத்தோடு) விளங்குகின்ற அந்தப் பாற்கடல் வறண்டுவிடும்படி விரைவாகச் சிலநாளில் தேக்கினவர்; (எ - று.)—தேக்குதல் - நிரம்பப்பருகுதல். பி - ம்:—பவளத்தீவினில், பவளக்குன்றிடை. [2]பண்பழிக்தே, பண்பழித்தோர். [3]ஓர். [4]ஆயிருகோடியர், ஐயையிருகோடி. [5]துவளப். [6]பாழ்படத், வறள்தரத். [7]சின்னாள். (3219)

15. [1]கந்த மாதன மென்பதிக் கருங்கடற் கப்பான்
மந்த மாருத [2]மூர்வதோர் [3]கிரியதில் வாழ்வோர்
[4]அந்த காரத்தொடு [5]மாலகா லத்தொடும் பிறந்தோர்
இந்த வாளெயிற் றரக்க [6]ரெண் ணறிந்தில மிறைவ.

(இ-ள்.) இறைவனே! இந்த வாள்போன்ற எயிற்றையுடைய அரக்கர், இக்கருங்கடற்கப்பாலுள்ள கந்தமாதனமென்பதாகிய இளங்காற்று தவழப்பெற்ற ஒப்பற்ற கிரியில் வாழ்பவர்: (பிறத்தலில்) இருட்டையும் ஆலகாலத்தையும் ஒத்துப்பிறந்தவர்;(இவர்கள்) எண்ணிக்கையை (நாம்) அறிந்திலோம்; (எ - று.)—பி - ம்:—[1]கந்தமாருதமென்பர். [2]உறுவதோர், மூரல்வதோர். [3]கிரியிதில், கிரியினில். [4]அந்தகாலத்தவ், அந்தகாலத்தொடும். [5]ஆலகாலத்துடன். [6]எண்ணிறந்தனர், எண்ணிற்றந்தவர், எண்ணிறந்தவர் ()

16. மலய மென்பது [1]பொதியமா மலையதின் மறவோர்
நிலைய மன்னது [2]சாகரத் தீவிடை [3]நிற்கும்
[4]குலையு மிவ்வுல கெனக்கொண்டு நான்முகன் [5]கூறி
[6]உலைவி லீரிரு ளுறையு [7]மென் றிரைந்திட வுரைந்தார்.

(இ - ள்.) மலயமென்பது, பொதியமாமலையாகும்; அதில் தோன்றிய வீரராகிய இவருடைய வாழிடமென்கின்ற அது, கட

லிடையே யுள்ள தீவில் இருக்கும்; '(இவர்கள் இவ்வுலகில் வசித்தால்) இந்த உலகமே அழிந்துவிடும்' என்று கருதி, பிரமதேவன் (இவர்களை நோக்கி) 'அழிவில்லாதவர்களே! இங்கு வசியுங்கள்' என்று கூறி வேண்ட, (இவர்கள் அங்கு) உறைவதானார்; (எ-று.) பி-ம்:—பொதியினல்லாதினி, பொதியமாத்தீவினில், பொதியிலர் தீயிடை. [2]சாகரத்தீயிடை. [3]நிற்கில். [4]குலையுமெவ். [5]கூற. [6]உலைவிலர். [7]என்றிட. (3221)

17. [1]முக்க ரக்கையர் மூவிலை வேலினர் முசுண்டி
சக்க ரத்தினர் [2]சாபத்த ரெனநின்ற தலைவர்
நக்க ரக்கடல் [3]நாலொரு மூன்றுக்கும் நாதர்
புக்க ரப்பெருந் தீவிடை யுறைபவர் புகழோய்.

(இ-ள்.) புகழையுடையவனே! '(இவர்கள்),—செம்மட்டியைக் கையிற் கொண்டவர்: மூவிலைவடிவான வேலையுடையவர்: முசுண்டியையுஞ் சக்கரத்தையுங் கொண்டவர்: வில்லையேந்தியவர்' என்று சொல்லப்படுகின்ற தலைவர்கள்; முதலையையுடைய ஏழுகடல்களுக்குந் தலைவர்: புட்கரமென்னும் பெருந் தீவினிடையில் வாழ்பவர்; (எ - று.) முக்கரம்=முத்கரம்: நக்கரம்=நக்ரம்: வடசொற்கள். பி-ம்:—[1]முற்கரக். [2]சாபத்தின்றனி. [3]நாலொடு. (3222)

18. மறலி யைப்பண்டு தம்பெருந் தாய்சொல வலியால்
[1]புறநி லைப்பெருஞ் சக்கர மால்வரைப் பொருப்பின்
விறல்கெ டச்சிறை யிட்டய னிரந்திட விட்டோர்
[2]இறலி யப்பெருந் தீவிடை [3]யுறைபவ ரிவர்கள்.

(இ - ள்.) இவர்கள்,—இறலியென்ற அப்பெருந்தீவில் வாழ்பவர்கள்: முன்பு தம் பெருமைபெற்ற தாய்சொல்ல (இவ்வேழுலகுக்கும்) அப்பாலுள்ள சக்கரவாளமெனப்படுகின்ற பெரிய மலையிலே (தம்முடைய) வலியினால் யமனை வலிகெடச்செய்து சிறையிலிட்டு, பிரமதேவன் இரக்க (அவ்யமனைச் சிறையிலிருந்து) விடுத்தவர்; (எ - று.)—பி-ம்:—[1]புறநிலத்தரும், புறநிலந்தரும். [2]இறலியைப். [3]உற்றவர். (3223)

19. வேதா ளக்கரத் [1]திவர் [2]பண்டு புவியிடம் விரிவு
[3]போதா துந்தமக் கெழு [4]வகை யாய்நின்ற புவனம்
பாதா ளத்துறை வீரென நான்முகன் [5]பணிப்ப
நாதா [6]புக்கிருந் [7]துனக் கன்பினுளி வ [8]ணடந்தார்.

(இ-ள்.) தலைவனே! வேதாளத்தின் கையைப்போன்ற கையையுடைய இவர்,—'முன்னொருகாலத்திலே பூலோகத்தில் வசிப்பதற்கு உமக்கு இடம் விஸ்தாரமாகப் போதாது; எழுவகையாய் நின்ற உலகத்துள் பாதாளத்தில் உறைவீர்,' என்று பிரமதேவன் பணித்ததனால் (பாதாளத்தில்) புக்கிருந்து, உன்னிடத்தன்பினால் (இப்போது) இங்கேவந்தார்கள்; (எ - று)—பி-ம்:—[1]ஈவர். [2]இவ்வுலகிடம், பண்டுலகிடம். [3]போதாளப்புகும், போதாபுக்குமக்கு, போதாபுக்குமற்று. [4]வகையால். [5]பணிக்க. [6]புக்கிருந்தார், புக்கிருந்தனர். [7]உனக்கரிதினின், உனகருத்தினின். [8]இடைந்தார், அடைந்தார். (3224)

20. நிருதி நன்குலப் புதல்வர்நின் குலத்துக்கு நேரே
பருதி [1]தேவர்கட் கெனத்தக்க பண்பினர் [2]பானக்
குருதி பெற்றில [3]ரேற்கட லேழையுங் குடிப்பார்
இருணி றத்தவ [4]ரொருத்தரேழ் [5]மலையையு மெடுப்பார்.

(இ - ள்.) (இவர்கள்),—நிருதியென்னும் திக்பாலகியினது குலத்துப்பிறந்த புதல்வராவர்: உன்குலத்துக்கு நேரே (சேர்ந்தவர்): தேவர்கட்குப் பருதியெனச்சொல்லத்தக்க [அரக்கருள் மேம்பட்டுத் தோன்றுகின்ற] பண்பையுடையவர்: குடித்தற்கு உரிய இரத்தத்தைப் பெருமற்போவாரேயாயின் கடலேழையுங் குடிப்பர்: இருள்நிறத்தையுடையவர்: ஒருத்தரே ஏழுமலையையு மெடுத்தற்குரியவர்; (எ - று.)—பி - ம்:—[1]தேவர்கள். [2]யானைக். [3]எனில், ஆழ். [4]ஒருவர். [5]உலகையும், மலையினை. (3225)

21. பா[1]ர ணைத்தவெம் பன்றியை யன்பினாற் [2]பார்த்த
கார ணத்தினி [3]னாதியிற் பயந்த [4]பைங் கழலோர்
பூர ணத்தடந் திசைதொறு மிந்திரன் புலரா
வார ணத்தினை [5]நிறுத்தியே [6]சூடினர் வாகை.

(இ - ள்.) பூமிதேவியை யணைத்த விருப்பந்தரத்தக்க பன்றியை அன்பினால் (அந்தப்பூமிதேவி) பார்த்த காரணத்தினாலே ஆதியிற் பெறப்பட்ட பசும்பொன்னாற் செய்த கழலினையுடையவராவர், (இவர்கள்); (இவர்).-பெருந்திக்குத்தோறும் (மதம்)வற்றாத (தம்முடைய) யானைகளை (அத்திக்கு)ப் பூரணமாகும்படி நிறுத்தி இந்திரனைவென்ற வெற்றிமாலையைச் சூடியவர்; (எ - று.)

பகைவரைவென்றவர் தம்யானைகளைப் பகைவர்நாட்டிடெல்லைகளில் வைத்தல் மரபுஎன்பர்: "ஒன்று, ரிகலறநூறித் தன்மத வாரணந், திசைதொறு நிறுவிய...சீவகங்கன்" என்றதுங் காண்க. பி - ம்:—[1]அணைந்த, மணந்த, [2]பார்க்கும். [3]ஆதியான். [4]வெங். [5]நிறுத்தினன், நிறுத்தியது. [6]இவர்வாகைஞ்சி. (3226)

22. மறக்கண் வெஞ்சின மலையென [1]விந்நின்ற வயவர்
இறக்கங் [2]கீழிலாப் பாதலத் துறைகின்ற [3]விகலோர்
அறக்கண் [4]துஞ்சில னாயிரம் [5]பணைத்தலை யனந்தன்
உறக்கந் தீர்ந்தன [6]னுறைகின்ற நிலர் [7]நடந் தொறுக்க.

(இ-ள்.) கொடுங்கண்களையும் கடுங்கோபத்தையுமுடைய மலை போன்ற (பெருந்) தோற்றமுள்ள இந்த நின்றவீரர்கள்,—(தன்னிலும்) கீழேஇறங்குவதற்கு இடமில்லாத பாதலத்து உறைகின்ற பராக்கிரமத்தையுடையவர்: இவர்கள், (தாம்) உறைகின்ற இடத்து நடந்துஅலைத்தலினால், ஆயிரம் படத்தோடுகூடியதலைகளையுடையஅனந்தன்,—உறக்கம் நீங்கினவனாய் மிகவும் கண்துஞ்சாதவனாயினான்;(எ-று.)-பி-ம்:—[1]விண்ணின்ற. [2]கீழ்லவாசலத்து, கீழிலாரசாதலத்து. [3]விறலோர். [4]துஞ்சிலர். [5]நனந்தலை. [6]உணர்கின்றது, உறைவிடம். [7]வரவு, தொடர்ந்து. (3227)

23\. காளி யைப்பண்டு கண்ணுதல் காட்டிய கா்லை
மூள முற்றிய [1]சினக்கொடுந் தீயிடை முளைத்தோர்
கூளி கட்குதல் லுடன்பிறந் தார்பெருங் குழுவாய்
வாளி மைக்கவும் வாளெயி றிமைக்கவும் வருவார்.

(இ-ள்.) (இவர்கள்),—முன்பு நெற்றியிற் கண்ணையுடைய சிவபெருமான் காளியை(த் தோற்கும்படி *ஊர்த்துவதாண்டவஞ் செய்து) காட்டிய பொழுது (அக்காளியினது) மூளுமாறுமுதிர்ந்த கோபமாகிய கொடுந்தீயினின்றுபிறந்தவர்: பேய்கட்குச் சிறந்த உடன்பிறந்தவர் போன்றவர் [அறைந்துகொல்லுந்தன்மையர்]: (கையிற்பிடித்த) வாட்படை விளங்கவும், ஒளிபொருந்திய பற்கள் ஒளிரவும் பெருங்கூட்டமாய் வருபவர்; (எ-று.)

நடனத்தில் சிவபெருமான் காளியை வேறுவகையால் வெல்ல முடியாது ஒருகாலைத் தூக்கிப்புரியும் ஊர்த்துவதாண்டவத்தைச் செய்தானாக, எல்லா நடனங்களிலும்வென்ற அவள் அந்த ஊர்த்துவதாண்டவத்தைப் புரிய நாணித் தோற்றுச் சிவபிரானது வஞ்சகவெற்றிக்காகச் சினந்தாள்: அச்சினத்து நின்று தோன்றியவர் இவரென்க. பி-ம்;—[1]சினத்தொடும், சினக்கடும். (3228)

24\. பாவந் தோன்றிய காலமே தோன்றிய பழையோர்
தீவந் தோன்றிய[1]முழைத்துணை யெனத்தெறு கண்ணர்
கோவந் தோன்றிடிற் றாயையு முயிருணுங் கொடியோர்
சாவந் தோன்றிட வடதிசை மேல்வந்து சார்வார்.

(இ-ள்.) வில்லானது தோன்றும்படி வடதிக்கின்மேல் வந்து சேர்கின்றவர்களாகிய இவர்கள்,-பாவந்தோன்றிய காலத்திலேயே தோன்றிய பழையவர்கள்: தீபங் காணப்படுகின்ற இரண்டுகுகைகளென்று சொல்லுமாறு (தோன்றி) அச்சத்தைவிளைக்கின்ற கண்களையுடையவர்: கோபந்தோன்றினால் தாயையும் உயிருண்ணக்கூடிய கொடியவர்; (எ-று.)

பழையோர் கையும் வில்லுமாய் வடதிசைப்பக்கத்து வந்தனரென்க. செந்நிறக்கண்களுடனே தோன்றும் குழிந்தாழ்ந்த குவளையிணைகள் தீபந்தோன்றும் முழையிணைபோலும்: "கொள்ளிகொண்டிரண்டே முழையுட்புகக் குன்றுதோன்றுவபோல விழிப்பன" என்ற கலிங்கத்துப்பரணி இங்குக் காணத்தக்கது. பாபம், தீபம், கோபம், சாபம் எனப் பகரஎதுகைபடப் படிப்பதுமுண்டு. பி-ம்:—[1]முழையெனத்தெறுகின்ற, முழைதொறுமெனத்தெறுங், முடையெனத் தெறுசுடர்க், முறைமையாமெனத்தெறு, முழைத்துணையெனத்தறு. (3229)

25\. சீற்ற மாகிய [1]வைம்முக னுலகெலாந் தீப்பான்
ஏற்ற [2]மாநுதல் விழியிடைத் தோன்றின ரிவரால்

---

*ஊர்த்துவம்-மேல்; தாண்டவம்-நடனம்: எனவே, ஒருகாலை மேலே தூக்கிச் செய்யும் நடனமாகும்.

கூற்ற மாகிய கொம்பி[3]னைம் பாலுடைக் [4]கொடுமை
[5]ஊற்ற மாகப்பண் [6]டுதித்தவ ரென்பவ ருவரால்.

(இ - ள்.) இவர்கள்,—சீற்றங்கொண்டுள்ள ஐம்முகங்களை யுடையனான சிவபிரான் உலகெல்லாவற்றையுந் தீக்கும்படி கொண்டுள்ள பெரிய நெற்றிக்கண்ணினிடத்திலிருந்து தோன்றினவர்; அதோ அங்கிருப்பவர்,—கூந்தலைக்கொண்ட யமன் என்று சொல்லத்தக்க ஓர்மாதின் கொடுமைக்கு ஊன்றுகோலாக முன்பு பிறந்தவரெனப்படுவார்; (எ - று.)

'ஐம்பாலுடைக்கொம்பு' எனவே, பெண்ணாயிற்று. பி - ம்:— [1]நான்முகனுலகுளவுயிரெலாம், நான்முகன் முதலிடை யுலகெலாம். [2]நாள்மற்றெவ்வெரியிடை, நாள் மற்றவ்வெரியொடும். [3]ஐம்பாலிடை, அம்பாலுடை. [4]கொடுமைக்கு. [5]ஊற்றமாகி, ஏற்றமாக. [6]உதித்தனர், உதித்துளோர். (3230)

26. காலன் [1]மார்புழைச் சிவன்கழல் பட [2]வன்று கான்ற
[3]வேலை யேயன்ன குருதியில் தோன்றிய வீரர்
சூல [4]மேந்திமுன் னின்றவ ரிந்நின்ற தொகையார்
[5]ஆல காலத்தி னமிழ்தின்முன் பிறந்த[6]போ ரரக்கர்.

(இ - ள்.) சூலத்தைக்கையிலேந்தி முன்னே நின்றவர்,—யமனுடைய மார்பில் சிவபெருமானுடைய திருவடிபட அப்பொழுது (அம்மார்பு)கக்கிய கடலையொத்த இரத்தத்தினின்றும் தோன்றிய வீரராவர்; (பெருந்) தொகையாயுள்ள இவர், 'ஆலகாலத்துக்கும் அமிழ்துக்கும் முன்பாகப்பிறந்த போரரக்கர்; (எ-று.)—பி - ம்:— [1]மார்பினிற், மார்பிடைச். [2]பண்டு. [3]வேலையேயென்ன, வேலையே யெனக். [4]ஏந்தியகையினர், ஏந்தியுநின்றவர், ஏந்தியே நின்றவர். [5]ஆலகாலமுமமிர்தமும், ஆலகாலத்துமமிழ்தினும், ஆலகாலத்தமுதொடும். [6]பேரரக்கர், போலரக்கர். (3231)

27. வடவைத் [1]தீயினில் வாசுகி கான்றமா [2]கடுவை
இடவத் தீயிடை யெழுந்தவ [3]ரிவர்கண மழையைத்
[4]தடவத் தீயென [5]நிமிர்ந்த குஞ் சியருவர் தனித்தேர்
[6]கடவத் தீந்தவெம் புரத்திடைத் தோன்றிய கழலோர்.

(இ-ள்.) இவர்கள்,—(பாற்கடலைக் கடைந்தபொழுது) வாசுகி கக்கிய பெரியவிஷத்தை வடவைத்தீயில் விட, அத்தீயினின்றும் பிறந்தவர்: தொகுதியாகிய மேகத்தைத் தீண்டும்படி தீப்போல் நிமிர்ந்துள்ள குஞ்சியை யுடையவராகிய அதோ உள்ளவர்கள், ஒப்பற்ற தேரை(ப் பிரமனாகிய சாரதி) தூண்டிச்செலுத்த(ச் சிவபெருமானால்) தீய்ந்துபோன கொடியதிரிபுரத்தில் தோன்றிய வீரக்கழலை யுடையவர்; (எ - று.)—முதலிரண்டடியையும் நான்காம் அடியையும் அவர்பிறவியை யுண்மையாகவே கூறியன வெனக் கொள்ளாது, தற்குறிப்பேற்றவணியாக் கூறியன வெனக்கொள்வர். பி - ம்:—[1]தீயினை, தீயிடை. [2]கடுவைத்திட, கடுவைவிடவத். [3]இவரிவர், இவரினம். [4]தடவத்திமிர, தடவித்திமிர், தடவைத்தீயென. [5]நிமிர்ந்தவர்தறுகணரிறைவர், குஞ்சியர்சங்கரன் தனித்தேரர், குஞ்சியரிவருவர்..., குஞ்சியரிறையவர்..., [6]சுட. (3232)

28.—அச்சேனையிலுள்ளவர் இன்னார் இத்துணையரென்று சொல்லமுடியாமை.

[1] இனைய ரின்னவ [2] ரென்பதோ ரளவில ரைய
நினைய வுங்குறித் துரைக்கவு மரிதிவர் [3] நிறைந்த
வினைய மும்[4] பெரு வரங்களுந் தவங்களும் [5] விளம்பின்
அனைய பேருக மாயிரத் தளவினு [6] மடங்கா.

(இ-ள்.) ஐயனே! இத்தனையவர் என்பதற்கும், இன்னாரென்பதற்கும் ஓரளவில்லாதவர், (இவர்கள்: இவர்களைப்பற்றி) நினைக்கவும் குறிப்பிட்டுச் சொல்லவும் முடியாது; இவர்களிடத்தில் நிறைந்துள்ள வஞ்சனைகளும் பெருத்த வரங்களும் தவங்களும் சொல்லப்புக்கால், அப்படிப்பட்ட பெரிய யுகம் ஆயிரத்திலும் அடங்காவாம்; (எ - று.)—'அனைய' என்பது-மிகப்பல நாள் பெற்றதென்ற குறிப்பு. பி - ம்:—[1] எனையர். [2] என்பதொன்றிந்திரற்கேயும். [3] நினைந்த. [4] பெருந்தவங்களும்வரங்களும். [5] விசும்பின். [6] அடங்கார். (3233)

29.—வந்த சேனையோரின் திறமை.

ஒருவரே [1] சென்றவ் வுறுதிறற் குரங்கையு மூரவோர்
இருவ [2] ரென்றவர் தம்மையு [3] மொருகைகொண் டெற்றி
வருவர் [4] மற்றினிப் [5] பகர்வதென் வானவர்க் கரிய
[6] திருவ வென்றனர் தூதுவ ரிராவணன் [7] செப்பும்.

(இ-ள்.) தேவர்கட்கும் அரிய சம்பத்தையுடையவனே! (இச்சேனையிலுள்ளவர்களில்) ஒருத்தனே போய் அந்த மிக்கதிறலுடைய குரங்கையும், வலிமையுடையவர் எனப்படுபவராகிய (இராமலக்ஷ்மணர்) இருவரையும் ஒருகையைக்கொண்டு அடித்துவருவான்: வேறினிச்சொல்லவேண்டுவதென்ன? என்று தூதுவர்சொன்னார்கள்; (அப்போது) இராவணன் சொல்பவனானான்; (எ - று.)—குரங்கை-அநுமானையென்னலாம்: இனி, பால்பகாவஃறிணைப் பெயரென்றுகொண்டு, வானரங்களெல்லாவற்றையும் என்ப. பி - ம்:—[1] சென்றிவ். [2] என்பவர். [3] முன்கைகொண்டெற்றி, முன்கையோடெற்றி, ஒருகையோடொற்றி. [4] மாறினி, என்னினி. [5] பகர்வது. [6] திருவை, திருப. [7] நிகழ்த்தும். (3234)

30.—'இராவணன் இச்சேனைக்கு அளவுஎன்?' எனத் தூதுவரின் விடை.

[1] எத்தி றத்திதற் கெண்ணெனத் தொகைவகுத் தியன்ற
[2] அத்தி றத்தினை [3] யறைதிரென் [4] றுரைசெய வவர்கள்
ஒத்த வெள்ளமோ [5] ராயிர முளதென [6] வுரைத்தார்
பித்த ரிப்படைக் கெண்[7] சிறி தென்றனர் பெயர்ந்தார்.

(இ-ள்.) 'இச்சேனைக்கு எண் எத்திறத்தில் என்று தொகையை வகுத்துப் பொருந்திய அத்திறத்தினைச் சொல்லுங்கள்' என்று (இராவணன்) வினவ, அத்தூதுவர்கள்,—பொருந்திய வெள்ளம் ஓராயிரமுளது என உரைத்தவர் பித்தராவர்: இந்தப்படைக்கு

(அளவிட்டுச் சொல்லுவதற்கு இப்பொழுது கணிதநூலிலுள்ள) உச்ச எண்ணே சிறியது' என்று சொன்னவர்களாய் விலகுகின்றார்கள்; (எ-று.)—பி-ம்:—[1] எத்துணைத்திறத்தது, எத்துணைத்திதற்கு. [2] இத். [3] அறைதி. [4] உரைசெய்வாரவர்கள். [5] எழுநூறுமென, ஆயிரம்மென. [6] உரைத்திடுவர், உரைப்பார். [7] அரிது. (3235)

31.—இராவணன் சேனுபதிகளை அழைத்துவரச்சொல்லுதல்.

படைப்பெருங்குலத் தலைவரைக் [1] கொணருதி ரென்பால்
இடைத்து [2] நானவர்க் குற்றுள பொருளெலாங் [3] கிளத்தி
[4] அடைத்த நல்லுரை விளம்பின னளவளா [5] யமைவுற்று
[6] உடைத்த பூசனை வரன்முறை [7] யியற்றுவென் றுரைத்தான்.

(இ - ள்.) (இராவணன், தூதரை நோக்கி), 'நான் நெருங்கி அந்தப் படைத்தலைவர்க்கு நிகழ்ந்துள்ள விஷயங்களையெல்லாஞ் சொல்லி, ஏற்ற நல்லவார்த்தைகளைச் சொல்லினவனுய். மனம் பொருந்தி அளவளாவித்தெரிந்து உள்ளபடி பூசனைகளை வரன்முறையாயாற்றுமாறு பெருந்தொகுதியாயுள்ளபடைத்தலைவர்களை என்னிடத்தி லிட்டுக்கொணடுவாருங்கள்', என்றுகூறினுன்; (எ - று.) —பூசனைஎன்பது-சம்மானஞ் செய்து கௌரவித்தலே. உடைத்த= உடைய. பி-ம்:—[1] கொணர்குதிரெனபாற், கொணருதிர்பண்பாற். [2] நாள். [3] கிளர்த்தி. [4] அடுத்து. [5] உவந்தே. [6] உடைத்தோர். [7] இயற்றெனச் சொன்னுன். (3236)

32.—இராவணன்தாளிற் சேனுபதிகள் விழுந்துவணங்குதல்.

தூதர் கூறிடத் திசைதொறுந் திசைதொறுந் [1] தொடர்ந்தார்
ஓத வேலையி னுயக ரெவரும்வந் துற்றார்
போது தூவினர் வணங்கின ரிராவணன் பொலன்றாள்
மோது [2] மோலியின் [3] பேரொளி [4] வானினை [5] முட்ட.

(இ - ள்.) தூதர் (இராவணன் கட்டளையைச்) சொல்லவும், பெருக்கைக்கொண்ட கடல்போற்பரந்த சேனைக்குத் தலைவர்யாவரும்,—திக்குக்களி னிடங்களிலெல்லாமிருந்து தொடர்ந்துவந்தவராய் இராவணனுடைய அழகிய தாள்களிலே மலர்களைத்தூவி (அருச்சித்து) மோதுகின்ற கிரீடத்தின் பேரொலியானது வானத்தைமுட்ட வணங்கினுர்; (எ - று.)—வந்துற்றார் = உற்றுவந்தார். பி - ம்:—[1] தொடர்ந்த. [2] மோலியர். [3] பேரெழில். [4] விசும்பினை, விசும்பின் மேல். [5] முடங்க. (3237)

33.—இராவணன் வணங்கினவரை க்ஷேமம்விசாரித்தல்.

அனைய ரியாவரு மருகுசென் [1] றடிமுறை வணங்கி
வினைய [2] மேவின ரினிதினங் கிருந்தபோ தோர் வேலை
[3] நினையும் [4] நல்வர வாகநும் வரவென [5] நிரம்பி
மனையு மக்களும் [6] வலியரே யென்றனன் மறவோன்.

(இ - ள்.) அவர்கள்யாவரும், (இராவணனுடைய) அருகிற்சென்று பாதங்களை முறையேவணங்கி வணக்கம்பொருந்தியவராய் அங்கே இனிதாக இருந்தபோது,—வீரகுணத்தையுடையவனை இராவணன்,—(அவர்களை நோக்கி),—'நும்முடையவரவு நினைக்

இன்ற நல்வரவாகுக' என்றுசொல்லி மனம்நிரம்பி, '(நும்முடைய) மனைவியரும் மக்களும் திடமாக இருக்கின்றார்களா?' என்று க்ஷேமம் விசாரித்தான்; (எ-று.)—பி-ம்:—[1]உற, முடி. [2]மேனியோ ரினிதினங்கு, மேவினனருகினங்கு, மேவினனருகுணங்கு, மேவின னருகிணங்கு. [3]நினைய, நினையின். [4]மன்னவர்முகந்தொறும் விரும் பின். [5]நிரப்பி. [6]வலியரோ. (3238)

34.—சேனாதிபதிகளின் விடை.

பெரிய [1]திண் [2]புயனியுளை தவவரம் பெரிதால்
உரிய வேண்டிய பொருளெலா முடிப்பதற் [3]கொன்றோ
[4]இரியல் தேவரைக் கண்டனம் பகைபிறி தில்லை
[5]அரிய தென் [6]னெமக் கென்றன ரவன்கருத் தறிவார்.

(இ-ள்.) பெரிய வலிய புயம்படைத்த நீ(தலைவனாக)உள்ளாய்: (நாங்கள்) தவத்தினாற்பெற்ற வரமோ பெரியது: உரியனவாய் வேண்டியனவான காரியங்களையெல்லாம் முடித்துக்கொள்வதற்கு அருமையானதோ? தேவர்களை நிலைகெட்டோடச் செய்தோம்; பகையோ வேறேயில்லை: எமக்கு அருமையானது என்ன உள்ளது? என்று கூறினார்கள்: (யாவரெனில்),— அந்த இராவணனுடைய கருத்தையறிபவர்களான சேனாதிபதிகள்; (எ-று.)—'அரியதென்' என்ற சொற்றொடர்-நீ எப்பணிசெய்யச் சொன்னாலும் அதனைச் செய்து முடிப்போம் என்ற கருத்தினது: இவ்வாறு கூறியதுபற்றியே அவர்களை 'கருத்தறிவார்' எனறது. பி - ம்:—[1]நின். [2]புயமாயிரம், புயமுயர்ந்துள, புயயாமுளம். [3]என்றோ. [4]இரிய. [5]அரிய. [6]நமக்கு. (3239)

35.—சேனாபதியர் வினவ, இராவணன் தன்செய்தியை உரைத்தல்.

மாத ரார்களு மைந்தரு [1]நின்மருங் கிருந்தார்
பேது றுதவ ரில்லைநீ வருந்தினை பெரிதும்
யாது காரண மருளென [2]வினையவ ரிசைத்தார்
சீதை காதலிற் [3]பிறந்துள பரிசெலாந் [4]தெரித்தான்.

(இ-ள்.) 'உன்பக்கத்திலிருந்த மாதரார்கள் மைந்தர்கள் என்றவர்களில் கலக்கமுறுதவர்களில்லை: நீ மிகவும் வருந்தியுள்ளாய்: (இவ்வாறுவருந்த) யாதுகாரணம்? சொல்லியருள்வாய்' என்று அவர்கள் கூறினார்கள்: (அதற்கு இராவணன்), சீதையினிடத்துக் காதலால் (தனக்குத்) தோன்றியுள்ள நிலைமையையெல்லாம் கூறிவிட்டான்; (எ-று.)-பி-ம்:-[1]நுன்மருங்கிருந்தார், அருகிருந்தாரும். [2]இளையவருரைத்தார். [3]புகுந்துளபொருளெலாம், புகுந்துள பரிசவன். [4]செப்பும், தெரிந்தான். (3240)

36.—இருகவிகள்—சேனாபதிகள் சிரித்துக்கூறுவன தெரிவிக்கும்.

கும்ப கன்னனொ டிந்திர சித்தையுங் குலத்தின்
வெம்பு வெஞ்சினத் தரக்கர்தங் குழுவையும் வென்றார்
அம்பி னாற்[1]சிறு மனிதரே நன்றுநம் மாற்றல்
நம்ப சேனையும் வானர மேயென [2]நக்கார்.

(இ-ள்.) கும்பகன்னனுடனே இந்திரசித்தையும் (வீர) குலத்துப்பிறந்த (மனம்) வெதும்புகின்ற கொடுங்கோபத்தையுடைய அரக்கர்தங் கூட்டத்தையும் அம்புகொண்டு வென்றவர்,—சிறிய மானுடரே; நம் வல்லமை நன்று! நம்பனே! (அவர்களுடைய) சேனையும் வானரமே! என்று சொல்லிச் சிரித்தார்; (எ-று.)—, அம்பினால், சிறுமனிதர், சேனையும் வானரமே, என்டன - 'வென்ற கருவியும் அற்பம்: வென்றவரும் எளியர்: அன்னார்க்குத் துணையான சேனையும் வலிமையற்றது' என்ற கருத்தின. தக்க காரணம் இல்வழிக் காரணம் தோன்றியதாய்க் கூறியது - விபாவனையணி. வந்த அரக்கச்சேனாதிபதிகள் மாற்றாராற்றலைக் கனவிலும் காணாதவராதலின் நக்கனர். பி-ம்:—[1]சில. [2]நக்கான். (3241)

37.—இதுவும் அது.

உலகைச் சேடன்ற[1] னுச்சிநின் றெடுக்க[2]வன் றுஓரேழ்
மலையை வேரொடும் வாங்கவன் று அங்கையால் [3]வாரி
அலைகொள் வேலையைக்[4]குடிக்கவன் று அழைத்தது மலரோடு
இலைகள் கோதுமக் குரங்கின்மே லேவக்கொ லெம்மை.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ-ள்.) (நீ) எங்களை வரவழைத்தது,—இந்தஉலகத்தை ஆதிசேஷனுடைய உச்சியிலிருந்து அப்பாலெடுப்பதற்கு அன்று; ஒப்பற்ற எழுகுலாசலங்களை அகங்கையால் வேரோடும் பறிப்பதற்கு அன்று; அலைகொண்டகடலைக் குடிப்பதற்குஅன்று: மலரோடு இலைகளைக் கோதித்தின்கின்ற அந்தக் குரங்குப்படையின்மேல் (போர்செய்ய) ஏவுவதற்காகவோ? (எ - று.)

அரும்பெருங் காரியத்தைச் செய்வதற்கு எங்களை ஏவவேண்டுமேதவிர, அற்பக்குரங்குகளின்மேற் பொருமாறு ஏவுவது தகுதியன்று என்றவாறு. சேனாபதிகள் தமது அறியாமையால் நகைத்து ஏளனம்படப் பேசினர். உலகைச் சேடன்றனுச்சிநின்று எடுக்க வன்றுஎன்பது முதலியன தெரிந்திருந்தும் அதனைக் கூறியது - விலக்கணியாகும். மலையை வேரொடும்கையால் வாரி வாங்குதல் - வேரொடும் பெயர்த்தெடுத்தல் இனி வாரி அலை - நீரலையுமாம்: வாரிக்குடிக்க என்னவுமாம். பி - ம்: [1]உச்சிமேல். [2]ஒன்றா. [3]வாங்கி. [4]இறைக்க, இறைக்க. (3242)

38.—பரிகசித்த அரக்கரைவிலக்கிப் புட்கரத்தீவிற்கு அரசனான வன்னியென்பவன் 'அந்தமானிடரின் வலி யாது?' என விசாரித்தல்.

என்னக் [1]கையெறிந் திடி[2]யுரு மேறெனா[3]நக்கு
மின்னும் [4]வெள்ளெயிற் றரக்கரை யங்கையால் விலக்கி
வன்னி [5]யென்பவன் [6]புட்கரத் தீவுக்கு மன்னன்
[7]அன்ன மானிடர் தம்வலி[8]யாதென வறைந்தான்.

(இ - ள்.) என்றுசொல்லிக் கைகொட்டிப் பேரிடிபோல(ப்) பேரொலி யுண்டாகுமாறுசிரித்து, விளங்குகின்ற வெண்ணிறப் பற்களையுடைய அரக்கர்களை(த் தன்னுடைய) அழகியகையினால் விலக்கிப்புட்கரத்தீவுக்குமன்னவனான வன்னியென்பவன் அந்தமா

னிடரின் வலி எப்படிப்பட்டது?' என்று கூறினான் [வினவினான்]; (எ - று.)-இலங்கையிலிருந்த அரக்கருடையவும் இராவணனுடையவும் நிலைமையையும் எளியபேச்சையும் நேரிற்கண்டும் கேட்டும் நின்றதனால், அவர்களுள் எதையும் ஊன்றியறியும் வன்னி வினவினான். பி - ம்:—[1]கைம்மறித்து. [2]உருமாமென, உருவாமென. [3]நக்க. [4]வாள். [5]என்றவன். [6]புட்கலத். [7]அன்னமானுடரார்வலி, அன்னமானுடர்யாரவர். [8]வலியயென்று, யாவதென்று, 'அன்னதோர் நரர்வலிய ரென்றேயவர்க்கறைந்தான்' என்று சிலபிரதியில் நான்காமடி. (3243)

39.—மாலியவான் பதில் கூறத்தொடங்குதல்.

மற்ற வாசகங் கேட்டலும் மாலிய வான்வந்து
உற்ற தன்மையும் மனிதர தூற்றமு முடனும்
கொற்ற வானரத் தலைவர்தந் [1]தகைமையும் [2]கூறக்
கிற்றும் [3]கேட்டிரா [4]லென்றவன் கிளத்துவான் [5]கிளர்ந்தான்.

(இ - ள்.) பின்பு அந்த (வன்னியின்) வார்த்தையைக்கேட்டவுடனே, மாலியவானென்பவன்,—'(அப்போது)'நிகழ்ந்துள்ள தன்மையையும் மனிதருடையவல்லமையையும் உடன்நிற்கின்ற வெற்றி பொருந்திய வானரத்தலைவர்களின் குணத்தையும் கூறும் வல்லமையுடையோம்[சொல்வோம்]: கேளுங்கள்' என்றுசொல்லி, அவன் சொல்லுவதற்குமூண்டான்; (எ - று)—'வந்த' என்பது சொல்விழுக்காடாக வந்தது; இனி, வந்து - முன்வந்து என்று உரைப்பாருமுளர். கூறக்கிற்றும் என்றதனால், மாற்றாரின் தன்மைகூறல் எளிதன்றென்பது பெறப்படும். பி - ம்:—[1]தலைமையும், வலிமையும். [2]கூறிக். [3]கேட்டிரே, கேட்டிரேல். [4]என்றனன். [5]துணிந்தான். (3244)

40.—ஒன்பதுகவிகள்-மாலியவான் ஸ்ரீராமனது வல்லமையைக் கூறுவன.

பரிய தோளுடை [1]விராதன்மா ரீசனும் பட்டார்
கரிய மால்வரை நிகர்[2]கர தூடணர் கதிர்வேல்
திரிசி ராவவர் திரைக்கட [3]லனபெருஞ் சேனை
ஒருவி லாலொரு நாழிகைப் [4]பொழுதினி னுலந்தார்.

(இ - ள்.) (இராமனுடைய) ஒரேவில்லால் பருத்ததோள்களையுடைய விராதனும் மாரீசனும் இறந்தார்; கரிய பெரிய மலையையொத்த கரன் தூடணன் ஒளிபொருந்திய வேலையுடைய திரிசிரா என்கின்ற அவர்களும் (தங்களுடைய) அலைபொருந்திய கடலையொத்த பெருஞ்சேனையோடு ஒருநாழிகைப்பொழுதில் அழிந்தார்; (எ - று.)—பி - ம்:—[1]வீரமாரீசனும் பட்டான். [2]கரன்றூடணன். [3]எனும், எனப். [4]பொழுதிடை, போதிடை. சிலபிரதிகளில் இச்செய்யுளின் முதலடி, நான்காவதடியாக உள்ளது. ஒருபிரதியில் 'பரிய தோளுடை வீரமாரீசனும்பட்டான்' என்ற பாடம் நான்காம் அடியாகவுள்ளது. (3245)

41. **ஆழி யன்னநீ ரறிதி[1]ரன் றேகட லனைத்தும்**
ஊழிக் காலெனக் [2]கடப்பவன் வாலியென் போனை
ஏழு [3]குன்றமு மெடுக்குறு மிடுக்கனை யிந்நாள்
பாழி மார்பகம் பிய்த்துயிர் குடித்ததோர் பகழி.

(இ - ள்.) கடலைப்போன்று பரந்த நீங்கள், (ஒருதினத்தில் தானே) எல்லாக்கடலையும் யுகாந்தகாலத்துக் காற்றுப்போலக் கடப்பவனாகிய வாலியென்போனை அறிவீரன்றோ? சப்தகுலாசலங் களையும் பெயர்த்தெடுக்கவல்ல வலிமைபடைத்த அவனை, இங்கா லில் (இராமனுடைய) ஒருபகழியானது,—வலியமார்பினிடத்தைப் பிளந்து உயிரைப்பருகிற்று; (எ - று) - இச்செய்யுள் "பரியதோளுடை" (40) என்ற செய்யுளுக்கு முன் ஒருபிரதியிலுள்ளது: ஆயினும், கூறும் பொருளை நோக்கி இங்ஙன் பதிப்பித்தது. பி-ம்:-[1] அன்றேழ். [2]கடப்பவன். [3]குன்றையும். (3246)

42. இங்கு [1]வந்துநீர் வினுயதே னெறிதிரைப் பரவை
அங்கு [2]வெந்தில தோசிறி [3]தறிந்தது மிலிரோ
கங்கை [4]சூடிதன் கடுஞ்சிலை யொடித்தவக் காலம்
உங்கள் வான்செவி [5]புகுந்தில தோ [6]முழங் கோதை.

(இ-ள்.) நீர் இங்குவந்து வினவுவது ஏன்? அலைமோதுகின்ற கடல் (ஆக்கினேயாஸ்திரத்தினுல் அவ்விராமனுல் எரிக்கப்பட்ட பொழுது, நீரிருக்கும்) அந்த இடத்தும் வெந்திலதோ? (அதனை நீங்கள்) சிறிதும் (கவனித்து) அறிந்ததும் இலீரோ? (சீதை பொருட்டுக் கன்னியாசுல்கமாக வைத்ததான) கங்கையைச் (சிரசில்) சூடியசிவபெருமானுடைய வலிமைபொருந்திய வில்லை (இராமன்) ஒடித்த அந்தக்காலத்து முழங்கியஓசை உங்கள்பெருஞ்செவியில் விழுந்ததில்லையோ? (எ - று.)—கடல்வெந்ததும், சீதையை மனைவி யாகப் பெறுதற்குக் கன்னியாசுல்கமாக ஏற்படுத்திய சிவபிரான் சிலை பேரோசைதோன்ற இற்றதுமே அன்னுர் வலிமையை முன்னமே உமக்குத்தெரிவித்திருக்குமே! என்றவாறு. பி.ம்:—[1]நீர் வந்து. [2]வெந்திலவோ. [3]அறிந்தும்மிலிரோ. [4]சூடினன். [5]கேட் டிலவோ. [6]முழக்கோதை. (3247)

43. ஆயி ரம்பெரு வெள்ளமுண் டிலங்கையி னளவில்
[1]தீயின் வெய்யபோ ரரக்கர்தஞ் [2]சேனையச் சேனை
போய [3]தந்தகன் புரம்புக [4]நிறைந்தது போலாம்
[5]ஏயு மும்மை[6]நூன் மார்பின ரெய்தவில் லிரண்டால்.

(இ-ள்.) இலங்கையின் எல்லையில் தீப்போன்றகொடியபோா ரக்கரின் சேனை ஆயிரம்பெருவெள்ள முண்டு: அப்படிப் பெருந் தொகையாயுள்ள சேனையானது,—முப்புரிநூலைப் பொருந்திய மார் பையுடைய அந்தராமலக்ஷ்மணர் அம்புதொடுத்துவிட்ட இரண்டு விற்களால் யமபுரத்தில் உட்புகச்சென்று நிறைந்ததுபோலும்; (எ - று.)—மும்மைநூல், வில்லிரண்டு என வந்தது ஒருவகைநயம். பி-ம்:—[1]தீய. [2]சேனையைச்சேனை, சேனையுஞ்சேரப். [3]அந்தகபுரம். [4]நின்றது. [5]ஏய. [6]நூறம்மவந்து, நான்மார்பர்வந்து, நூன் மணிதரே. (3248)

44. கொற்ற வெஞ்சிலைக் [1]கும்பகன் னனுமுங்கள் கோமான்
பெற்ற [2]மக்களும் [3]பிரகத்தன் [4]முதலிய பிறரும்
மற்றை வீரரு மிந்திர சித்தொடு மடிந்தார்
இற்றை நாள்வரை யானுமத் [5]திவருமே யிருந்தோம்.

(இ - ள்.) வெற்றிபொருந்திய கொடியவில்லையுடைய கும்ப கன்னனும் உங்களது அரசனாகிய இராவணன்பெற்ற (அதிகாயன் முதலிய) மக்களும் பிரகத்தன் முதலிய பிறரும், மற்றுமுள்ள வீரரும் இந்திரசித்துடன் மடிந்தார்கள்; இன்றுவரையிலும் யானும் இவருமே யிருந்தோம்; (எ - று.)

நான்காம் அடியில், மற்று-வினைமாற்று இந்திரசித்தும் புதல் வனேயாயினும் அவனைத் தனியே யெடுத்துக்கூறியது சிறப்புப் பற்றி: இங்ஙனங் கூறுவதனை வடநூலார் கோபலீவர்த்தநியாயம் என்பர் பி-ம்: [1]கும்பகர்ணனனுங்கள. [2]மைந்தரும். [3]பிதுக்களும். [4]முதலினர் [5]இவனும், அவனும். (3249)

45. மூலத் [1]தானையென் றுண்டது மும்மைநூ றமைந்த
சூலச் [2]சேனையின் வெள்ளம்மற் [3]றதற்கின்று குறித்த
காலச் செய்கையால் நீர்[4]வந்து ளீரினித் தக்க
சீலச் [5]சேனையுஞ் சேனையின் செய்கையுந் தெரிக்கில்.

(இ-ள்.) மூலச்சேனையென்று (ஒன்று) உண்டு: அது மூன்று நூறமைந்த தொகுதியான சேனையின்வெள்ளம்: அதற்கு இன்று (போர்செய்யுமாறு) குறிக்கப்பட்ட காலத்தன்மையால் அச் (சேனைக்கு ஒத்தாசையாக நீர் வந்துளீர்: இனித்தகுதியான வீர வொழுக்கமுள்ள (மாற்றார்) சேனையையும் அதன் செய்கையையும் தெரிவிப்பின்,—(எ - று.)—"ஏகியது" என அடுத்த கவியோடு தொடரும்.

தஞ்சேனைசமுத்திரங்களோடு வந்துள்ளவர் தவிர, மூல பலமாக வேறே மும்மை நூறமைந்த சேனையுமுண்டு: அம்மூலத் தானை வருக என்று குறித்ததனால், அதனையொட்டி நீவிரும் வந்துளீர்: இனி, நுமக்குத் தெரியுமாறு மாற்றார் சேனையையும் அதன் செய்கையையும் தெரிவிப்பேமென்றவாறு.பி-ம்:-[1]தானையை. [2]சேனையிவ். [3]அதற்கு. [4]வந்திலீரெனத்தகக,வந்திலீரலக்கழ லோர், வந்திராயினக்கழலோர். [5]செய்கையுங்கவிப்பெருஞ்சேனை யுங், செய்கையைச் சேனையின் செய்கையுங், செய்கையுஞ் சேனையின் செய்கையும். (3250)

46. ஒருகு ரங்குவந் திலங்கையை [1]மலங்கெரி யூட்டித்
திருகு வெஞ்சினத் தக்கனை நிலத்தொடுந் தேய்த்தும்
பொருது தூதுரைத் தேகிய தரக்கியர் புலம்பக்
கருது [2]சேனை யாங்[3]கடலுமாக் கடலையுங் கடந்து.

(இ-ள்.) (நீங்கள் குரங்குச்சேனை தானே என்று சாமானியமாகச் சொல்கிறீர்களே; இனி, குரங்குகளின் வலிமைகூறுவேன்:) ஒரு குரங்குவந்து இலங்கையைக் கலங்குதற்குக்காரணமான தீயை மூட்டி,- அரக்கியர் புலம்பும்படி, மாறுபடுகின்ற கொடுஞ்சினததை யுடைய அக்கனை [அட்சகுமாரனை]நிலத்தோடுந்தேய்த்துப் பொருது மதிக்கத்தகுந்த சேனையாகியகடலையுங் கொன்று தூதுரைத்துப் பெரியகடலையுங்கடந்து போய்விட்டது; (எ - று.)—பி-ம்:—[1]மலக் கெரி. [2]சேனையுங், சேனைமாக், கொன்றுமாக். [3]கடலையும். (3251)

47 கண்டிலீர் [1]கொலாங் கடலினை மலை[2]கொண்டு கட்டி
மண்டு போர்[3]செய [4]வானர ரியற்றிய மார்க்கம்

உண்டு வெள்ளமோ ரெழுபது மருந்தொரு நொடியிற்
கொண்டு வந்தது மேருவிற் கப்புறங் குதித்து

(இ - ள்.) (நீங்கள் இகழ்ந்துகூறிய) குரங்குகள் நெருங்கிய போரைச் செய்யுமாறு மலை கொண்டு கட்டி கடலிலியற்றிய சேதுவைக் கண்டிலிரோ? (எதிரிகள் பக்கத்து) எழுபதுவெள்ளஞ் சேனை யுள்ளன: (ஒருவானரம்) மேருவிற்கு அப்புறம்குதித்து ஒரு நொடியில் மருந்துமலையைக் கொணர்ந்தது;(எ - று.)—இப்பாட்டின் போக்கால், ஒருநிமிஷத்தில் தாவிச்சென்று மேருவிற்கு அப்பால் மருந்துமலையைக் கொணர்ந்துவந்த வானரத்தைப்போலவே பெருந்திறல்படைத்த எழுபதுவெள்ளம் வானரமுண்டு என்பது, பெறப்படும். கடலினை=கடலில். பி-ம்:—[1]கொலோ. [2]கொடு. [3]செய்த. [4]வானரம். (3252)

48. இதுவி யற்கையோர் சீதையென் [1]றிருந்தவத் தியைந்தாள்
பொதுவி யற்கைதீர் கற்புடைப் பத்தினி பொருட்டால்
விதி[2]வி ளைத்ததவ் வில்லியர் வெல்கநீர் வெல்க
முது[3]மொ ழிப்பதஞ் சொல்லின னென்றுரை முடித்தான்.

(இ-ள்.) இப்போரெழுந்த இயல்பு,—சீதையென்று மிக்க தவத்து இயைந்தவளான பொதுவியற்கைதீர்ந்த [வேறொருவர்க்கில்லாது தனக்கே சிறப்பியல்பாக அமைந்த] கற்பையுடைய ஒரு பத்தினியின் பொருட்டால் விதி விளைத்தது: அவ்வில்லியரே வெல்க: நீரே வெல்க: பழமையான மொழிகளால் [+ழப்பேச்சாக] நிகழ்ச்சியைச்சொல்லினேனென்று பேச்சை முடித்தான் (மாலியவான்); (எ - று.)—பி-ம்:—[1]இருந்தவத்துாயார். [2]விளைத்தவர். [3]மொழிப்பலன். (3253)

49.—'இத்தனைநாள் பொராமைக்குக் காரணம் என்?' என, குரங்குடன் பொருதல்தகாதென்றிருந்தேனென்று இராவணன் கூறுதல்.

வன்னி மன்னனை நோக்கிநீ [1]யிவரெலா மடிய
என்ன [2]காரண மிகல்செயா திருந்ததென் றிசைத்தான்
புன்மை [3]நோக்கினன் [4]நாணினற் [5]பொருநிலே னென்றான்
[6]அன்ன தேலினி யமையுமெங் [7]கடனஃ [8]தெ . . .

(இ-ள்.) வன்னியென்ற அவன்,—(அரக்கர்) மன்னனை இராவணனை நோக்கி,'நீ இவரெல்லாம்மடியவும் போர்செய்யாதருந்தது என்ன காரணம்?' என்றுவினவினன்: (தான் முதனாட்போரில் தோற்றதைக் கூறாமல், மாறாக அவருடைய குரங்குச்சேனை இவற்றின்) இழிவை நோக்கினவனாய் வெட்கத்தினால் போர் செய்யாதிருந்தேன்' என்றான், (இராவணன்): 'அவ்வாறாயின், இனி, எனதுகடமையாக அப்போர்செய்தல் அமையும்' என்றான, (வன்னி); (எ - று.)—[1]அவர். [2]காரணத்து. [3]கண்டியாம். [4]நாணினன், நாணினேன். [5]பொருந்திலேன், பொருகிலம். [6]அன்னதே. [7]கடமைய, கடமையும், கடமையஃது, கடமையது. [8]அன்றே. (1)

50.—இரண்டுகவிகள்-மாலியவான்சொற்படி சமாதானத்திற்கு இது காலமன்றுஎன்று வன்னி கூறுதலைத் தெரிவிக்கும்.

முது ணர்ந்த விம் முதுமகன் கூறிய முயற்சி
சீதை யென்பவன் தனைவிட் [1]டம் மனிதரைச் [2]சேர்தல்
ஆதி யின்றலை [3]செய்தக்க தினிச்செய [4]விழிவால்
காத [5]லிந்திர சித்தையா [6]மியாண்டினிக் [7]காண்டும்.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) பழஞ்செய்தியையுணர்ந்த இந்த முதியமகன் [மாலியவான்] கூறிய முயற்சி, சீதையென்பவளை விட்டு அம்மனிதரைச் சேர்ந்திடுவது: (அது), முதலிற் செய்யத்தக்கது: இனிச்செய்வது இழிவைத் தருவதாம்: அன்பிற்குஉரிய இந்திரசித்தை யாம் இனி எங்கே காண்போம்? (எ-று.)

மாலியவான் 'சீதையைவிட்டிட்டு இந்தமனிதரைச் சேர்தல் தக்கது' என்று இங்கு வெளிப்படையாகக் கூறுவிடினும், இராமாயரின் திறத்தைச் சொல்லும் முறைமையிலிருந்து அந்தக் கருத்துத் தொனிப்பதுகொண்டு, சீதையைக்கொடுத்து இராமனைச் சேர்தல் தக்கதென்று மாலியவான் கூறியதாக வன்னி கூறினானென்க. இழிவு விளைவதன்றி, இறந்தவர்மீண்டு வாராராதலால், சீதையைவிட்டிடுதல் தக்கதன்றென்கிறான் வன்னி யென்க. காதலிந்திரசித்து-வீரரின் அன்புக்குஉரியவனும் வீரரிடத்து அன்பு செலுத்துபவனுமான இந்திரசித்து. பி - ம்:—[1]இம். [2]திருத்தல். [3]செயத்தக்கது. [4]அழிவால். [5]இந்திரசித்தையும். [6]மாய்வித்தல். [7]கண்டும், காண்மே. (3255)

51. [1]விட்ட மாயினு மாதினை வெஞ்சமம் விரும்பிப்
பட்ட வீரரைப் பெறுகிலம் பெறுவது [2]ப்பழியால்
முட்டி மற்றவர் [3]குலத்தொடு முடிக்குவ தல்லால்
[4]கட்ட மத்தொழில் செருத் [5]தொழி லினிச்செயுங் கடமை.

(இ - ள்.) மாதினை விட்டிட்டோமானாலும், கொடியபோரில் விரும்பி இறந்தவீரர்களை (இனிப்) பெறமாட்டோம்: (ஆகவே, இப்போது சீதையை விட்டுச் சமாதானஞ்செய்தால் நாம்) பெறுவது, (அஞ்சினோமென்ற) பழியேயாம்; வருத்தமெடுத்துக்கொண்டு மாற்றவரைக் குலத்தோடுமுடிப்பது செய்யத்தக்கதல்லாமல், அச்சமாதானத்தொழில் கஷ்டமானது [செய்யத்தகாதது]: இனிச் செய்யவேண்டியகடமை செருத்தொழிலே: (எ - று.)—பி - ம்:—[1]விட்டமாதினையியினும், விட்டமாதரைவீயினும்,விட்டம்மாதினையாயினும். [2]பழிப்பால். [3]குலத்தையும். [4]கட்டமைத்தொழில்செருத், கட்டமாத்தொழிலினிச். [5]தொழில்செருச் செயுங். (3256)

52.—அரக்கர் இராவணனிடம் தாம் மாற்றாரை வென்று வருவதாகச் சேறல்.

என்[1]றே மூத்தன ரிராக்கத [2]ரிருக்கநீ யாமே
சென்று மற்றவர் [3]இங்குடற் [4]குருதிநீர் தேக்க

[5]வென்று [6]மீளுதும் [7]வெள்குது மேன்மிட லில்லாப்
புன்றொழிற்குல [8]மாகுமென் றுரைத்தனர் போனார்.

(இ-ள்.) என்று (வன்னி) சொல்ல, (அவனுடனிருந்த) இராக்கதரும் போருக்கு எழுந்தவராய், (இராவணனை நோக்கி), 'நீ (இங்குத்தானே) இருப்பாய்; யாமே போய் அந்த மானிடரின் சிறிய உடலின் இரத்தத்தைக் குடித்து வென்று மீள்வோம்; பின்வாங்குவோமேயானால், வலிமையற்ற புல்லிய தொழிலையுடைய குலத்திற் பிறந்தவராவோம்' என்றுசொல்லிப்போகலானார்; (எ - று.)

வன்னியென்றசேனாபதி யெழுகையில், உடனிருந்த சேனாபதிகளான அரக்கரும் எழலாயினர்; அப்பொழுது இராவணனும் உடன்செல்லுமாறு எழ, அரக்கர் 'நீ இருக்க; யாமே வென்றுமீளுதும்' என்று உரைத்துச்சென்றனரென்க. வெவ்வேறிடத்திருந்து இராக்கதசேனைகளைத் தலைவரோடு வரவழைத்த விவரம், ஸ்ரீவான்மீகத்திலில்லை. பி-ம்:—[1]எழுந்தனன். [2]இருந்தி. [3]சில்லுடைக். [4]குருதியுங். [5]கொன்று. [6]மீள்குதும். [7]வெள்குவதன்மிடலில்லா, வெகுள்வதென் கொற்றவவென்றார். [8]இன்றினியென்றவர்புகன்றார், இன்றினியென்றனர் போனார். 'வென்றுமீளுதும் வெஃகுவதென் மிடலில்லாப், புன்றொழிற்குலமொன்றவே யென்றனர்புகன்றார்' என்று பின்னிரண்டடிகள் சில பிரதியில். (9257)

*படைக்காட்சிப்படலம் முற்றிற்று.

---

30 - ஆவது மூலபல வதைப்படலம்.

மூலபலத்தை ஸ்ரீராமன் வதஞ்செய்ததைக் கூறும் படலமென்பதுபொருள். (பலம் - சேனை; சேனைகள்-நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை, மூலப்படை, கூலிப்படை என்று ஆறுவகைப்படும்; இவற்றுள் மூலப்படையாவது-தொன்றுதொட்டுவருஞ்சேனை.)

அரக்கர் கூறியதுகேட்டு இராவணன், 'நான் வானரச் சேனையை உயிருண்கின்றேன்; நீயிர் இராம லட்சுமணரை வதை செய்யுங்கள்' என்ன, அவர்கள் தம்தமது வாகனங்களின்மீது ஏறிப் போய்த் தங்கள் சேனையுடன் சேர்ந்தார்கள்; இராவணன் அந்தச் சேனைகளுக்கு முன்னே தனது மூலபலத்தை அனுப்புமாறுகட்டளையிட்டு, தான் தேரிலேறிப் புறப்பட்டு யாவரும் அஞ்சி நடுங்கும்படி வானரசேனைகளின்மீது சென்றான். அப்போது வள்ளுவர் யானைமீது முரசு அறைவித்துத் தெரிவிக்க, இராவணனுடைய மூலபலங்கள் பத்துத்திக்கிலும் நிறைந்து திரண்டன. எங்கும் அரக்கச்சேனையாகவே யிருந்தது கண்டு தேவர்கள் நடுநடுங்கிச் சிவபிரானிடம் முறையிட, அப்பிரான் 'இவர்களையெல்லாம் ஸ்ரீராமமூர்த்தி சங்க

*மூலபெலவரவுகாண்படலம் முற்றும் என்றும், மூலபலஞ் சேனை காண்படலம் முற்றும் என்றும் சிற்சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றன.

ரிப்பார்: அஞ்சற்க' எனச் சமாதானப் படுத்தினன். இது இங்ஙனமாக, வானரர்கள், அச்சேனைத்திரளைக்கண்டு அஞ்சிச் சிதறியோடலாயினர்; சுக்கிரீவன் அங்கதன் அநுமான் என்ற இவர்கள் தாம் அப்போது ஓடாதவர்கள். அப்போது ஸ்ரீராமன் விபீடணனை வினவி அச்சேனைகளின் வரலாற்றை யறிந்தபின், அஞ்சியோடின வானரர்களை யழைக்குமாறு பணிக்க, அங்கதன் ஓடினவர்களை யழைக்கவும் வானரத் தலைவர்கள் தமது அச்சத்தைத் தெரிவித்து நிற்க, அவ்வங்கதன் சாம்பவானை நோக்கி, 'யாவருக்கும் அறிவை யுணர்த்துகிற நீ இப்படி அஞ்சியோடலாமோ?' என்று பலபடியெடுத்துக் கூறவே, சாம்பவான் எப்படிப்பட்டவரையும் அஞ்சி நடுங்கச்செய்யும் எதிரிகளின் பல பராக்கிரமங்களை எடுத்துக்கூறி நாணி நிற்க, அங்கதன், 'நம்மால் இச்சேனைகட்கு முன் செய்யலாவது ஒன்றுமில்லை: ஸ்ரீராமனைச் சார்ந்திருப்போம்; வந்தது வரட்டும்' என்று கூறித்திரும்ப, ஜாம்பவானுடனே வானரர்களும் திரும்பி வந்து சேர்ந்தனர். அப்போது ஸ்ரீராமன் வானரசேனையைப் பாதுகாக்குமாறு இலட்சுமணனுக்குக் கட்டளையிட்டு, சுக்கிரீவன் முதலானோரை அன்னுனுக்குத் துணைவலிமையாக வைத்திட்டுத் தாம் தனியே போர்க்குச்செல்ல, அவ்வேளையில் அநுமான் தன் தோளின்மீது ஏறிக்கொண்டாவது அல்லதுதான் அருகிருந்து குற்றேவல்புரிய உடன்பட்டாவது பொருமாறு வேண்ட, அவனையும் இலட்சுமணனுக்கே துணைபுரியும்படி பணித்துத் தான் தனியே சென்று ஓய்ச்சலொழிவின்றிச் சாரிகை திரிந்து மாற்றார் சேனையை மருட்டி அம்பு மழைகளைப் பொழிந்து முன்னணிச் சேனைகளையெல்லாந் தொலைத்தனன்.

அதுகண்ட இராடசசசேனாதிபதி வன்னியென்பவன் 'ஒருவனையெதிர்க்க நாம் இத்தனைபேரிருந்து முடியாமல் மயங்குவதா? நாம் ஒருமித்துமேல் விழுந்தாலும் அவ்விராமனை ஒன்றுஞ் செய்யாமற் செயதிடலாமே' என்று சொல்ல, அப்போது ஏழுவெள்ளம் சேனைகள் ஒருங்கே இராமனை வளைந்துகொண்டு படைக்கலங்களைப் பொழிய, இராமன் எல்லாவற்றையும் ஒழித்துச் சின்னபின்னப் படுத்தியபின் மேன்மேலும் வந்து பொருந்தியும் அப்பிரானால் நூறுவெள்ளஞ் சேனை நொருங்கிவிட, அப்பால் பதினாயிரங்கோடிச் சேனைத் தலைவர் ஸ்ரீராமனைக்கிட்டி வெகு கடுமையாகப் பொரலானார்கள். அப்போது தேவர்களும் அஞ்ச, சிவபிரான் சமாதானப் படுத்தினன். இராமபிரான் பெருவிசைகொண்டு பொருது அவ்வீரரையும் வீழ்த்தி எஞ்சினவர்களை ஓடிப்போகாதவாறு சரக்கூடம்கட்டித்தடுத்துப்பொர, யாவரும் அஞ்சி நடுங்கினர்: அப்போது வன்னியென்பவன் தைரியங்கூறி யாவரையும் ஒன்றுசேர்த்துக் கடுமையாகப் பொருதனன். ஸ்ரீராமன் காந்தர்வாஸ்திரம் விடுக்க, இராவணன் மூலபலம் பெரும்பாலும் ஒழிய, வெவ்வேறிடங்களிலிருந்த அரக்கர் திரண்டு பொரலாயினர்: ஸ்ரீராமன் சாரிகைசுற்றிப்பொருகின்ற விசையினால்அப்போரில்அவர்கட்கு எங்கும் இராமனாகவே தோன்றியதன்றியும், தம்மவரே இராமனாகத் தோன்றினபடியால் தம்மவரைத் தாமே வதைப்பவருமா

யினர். சிவபெருமானும் பிதாமகக்கடவுளும் அவ்விராமபிரானுடைய வில்லினின்று வெளிவரும் அம்புகளைக் கணக்கிடுவோமென்று பார்த்து முடியாமல் திகைத்து, இராமனது திறலில் வியப்புக்கொண்டனர்.

ஸ்ரீராமனுக்குமுன் பலகோடி இராட்சதவீரர் மாண்டது கண்டு எஞ்சிநின்றவர் தெய்வப்படைகளை விடுத்து வெல்வோமென்று கருதி நாராயணாஸ்திரம் முதலிய பல அஸ்திரங்களை விடுக்க, ஸ்ரீராமனும் அந்தந்த அஸ்திரங்களினாலே அவற்றையொழித்து, தான் தனியே அவர்கள்மீது தெய்வப்படைகளை விடுப்பின் உலகுக்குக் கேடு உண்டாமென்று கடுமையான கணைகளினாலேயே அந்த அரக்கர்சேனை முழுமையையும் ஒழித்தான். ஆயிரம் யானையும் பதினாயிரந்தேரும் ஒருகோடி குதிரையும் ஆயிரஞ்சேனைகளும் இறந்தகாலை ஸ்ரீராமனுடைய வில்லிற்கட்டிய மணி, ஒருதரம் கணீரென ஒலிக்கும்: அந்தமணி ஏழரைநாழிகை ஓயாது ஒலித்ததென்றால், இறந்தவரின் தொகையை எவ்வாறு கணக்கிடுவது? இவ்வாறு அரக்கர் ஒழியவே பூமிபாரம் நீங்கிற்று.

இவ்வண்ணம் மூலபல அரக்கரையெல்லாம் ஒழித்தபின்பு, முனிவர் முதலியோர் மகிழத் தேவர்கள் பூமாரிசொரியப் பொருத இளைப்புத்தீர்ந்து ஸ்ரீராமன் அப்போர்க்களத்தை விட்டு இளையபெருமாளோடு இராவணன் பொருகின்ற இரணகளத்தைநோக்கிச் செல்லலானனென்பது, இந்தப்படலத்துக் கூறும் பொருளாகும்.

1.—பொருமாறு போகத்தொடங்கிய சேனைபதிகட்கு இராவணன் இராமலட்சுமணரைக் கொல்லுமாறு கட்டளையிடுதல்.

வானரப்பெருஞ் சேனையை யானொரு வழிசென்று
[1]ஊனறக்குறைத் துயிருண்பனீயிர்போ யொருங்கே
ஆன[2]மற்றவ ரிருவரைக் கோறிரென் [3]றறைந்தான்
தானவப்பெருங் [4]கரிகளை [5]வாட்கொண்டு தடிந்தான்.

(இ-ள்.) அசுரராகிய பெரிய யானைகளை வாள்கொண்டு வெட்டினவனாகிய இராவணன்,—(சேனாபதிகளை நோக்கி), 'யான் ஒருபுறமாகப்போய் வானரப்பெருஞ்சேனையை உடலறும்படி வெட்டி, உயிருண்பேன்: நீயிர் ஒருசேரச்சென்று, (எதிரிகளாகப்) பொருந்திய அந்த இரண்டு வீரர்களைக் கொல்லுமின்' என்று கூறினான்; (எ-று.)—தானவக்கரிகளை வென்றவன் வானரச்சேனையை, யுயிருண்பனென்று செல்லுகின்றானென இராவணனுடைய நிலைமாற்றத்தைக் காட்டுகிறார்; இது முறையிற்படர்ச்சியணி என்னும் பரியாயாலங்காரம். போர்செய்து வெல்லல் தம்கடனென்ற சேனாபதிகளிடம் தானும் அத்தொழிலில் ஒருபங்கு எடுத்துக்கொள்வதாக இராவணன் கூறுகின்றான். பி-ம்:—[1]ஊனுற. [2]அப்பெயர். [3]அமைத்தான், அமைந்தான். [4]கிரிகளை. [5]வாள்கொடு, வேரொடுங்.

2.—இராவணன் மூலபலத்தைமுற்படச்செல்ல ஏவுமாறு பணித்தல்.

எனவுரைத்தலு மெழுந்து [1]தம்பிரத [2]மேலேறிக்
கனை[3]திரைக்கடற் சேனையைக் கலந்தது காணு

விளைய மற்றில மூலமாத் தானையை விரைவோடு
[4]இனையர் முற்செல [5]வேவுகென் றிராவண னிசைத்தான்.

(இ - ள்.) என்று (இராவணன்) சொன்னவுடனே, (அச்சேனை கள்) எழுந்து தம்முடைய இரதத்தின் மீது ஏறி, ஒலிக்கின்ற அலை யைக் கொண்ட கடல்போற்பரந்த சேனையைச் சேர்ந்ததைக் கண்டு, '(வேறு) செயலில்லை: பெரிய மூலபலத்தை விரைவாக இவர்கட்கு முற்செல்லுமாறு ஏவுக' என்று இராவணன் கூறி ஞன்; (எ - று.)—அவ்வரக்கர்சேனைக்குமுன் தன் வசத்திருந்த மூலச் சேனையைச் செல்லவிடுமாறு இராவணன் பணித்தனனென்க. பி - ம்:—[1]தம்மூர்தி. [2]போயேறிக். [3]கடற்பெருஞ், கடிபெருஞ். [4]இனைய. [5]ஏகென. (8259)

3.—இராவணன் வானரசேனையின்மீது போர்க்கு எழுதல்.

[1]ஏவி யப்பெருந் [2]தானையைத் தானும் [3]வேட் டெழுந்தான்
தேவர் மெய்ப்புகழ் [4]தேய்த்தவன் சில்லியந் தேர்மேற்
காவன் மூவகை யுலகமு முனிவருங் கலங்கப்
பூவை [5]வண்ணத்தன் சேனமே லொரு[6]புறம் போனன்.

(இ - ள்.) தேவர்களுடைய உண்மையான புகழை யழித்தவ ணுகிய இராவணன்,—அந்த மூலபலத்தை ஏவி, தானும் (போரில்) விருப்பங்கொண்டு எழுந்தவனுய், காவலிலுள்ள மூவகையுலகமும் முனிவருங் கலங்குமாறு, சில்லியைக்கொண்ட தேரின்மேல் (ஏறி), பூவைவண்ணத்தனை இராமபிரானுடையசேனை [வானரசேனை] மேல் ஒருபுறஞ் சென்ருன்; (எ - று.)—பூவைவண்ணத்தன்-காயாம் பூப்போன்ற நிறமுள்ள திருமால்: இங்கே, இராமபிரான். இப்பட லத்து முதற்செய்யுளிற்போலவே இங்கும் தேவர்புகழைத் தேய்த் தவன் வானரசேனைமேற்சென்ருனென்ருர். பி-ம்:—[1]ஏவிய. [2]சேனை மேல், சேனையை. [3]விட்டு. [4]துய்த்தவன்,செயிர்த்தவன். [5]வண்ணன் றன். [6]இறம். (8260)

4.—இராவணன் கட்டளைப்படி வள்ளுவர் முரசறைய மூலபலம் எங்கும் நெருங்குதல்.

எழுக சேனையென் றியானைமேல் [1]மணிமுர [2]செற்றி
வழுவில் வள்ளுவர் துறை [3]தொறும் விளித்தலும் வல்லைக்
[4]குழுவி[5]யீண்டிய தென்பராற் ஞுவலய முழுதுந்
தழுவி விண்ணையுந் திசையையுந் தடவு[6]மாந் தானை.

(இ-ள்.) குற்றமற்ற வள்ளுவர்,—'சேனையெழுக' என்றுயானை மீது அழகியமுரசத்தை அடிப்பித்து உரிய இடங்களிலெல்லாம் கூவிச்சொல்லுதலும்,—விரைவாகப் பூமிமுழுவதும் தழுவி வானத் திலும் திக்குக்களிலும் பரவவல்ல அந்தச்சேனை திரள்திரளாகி நெருங்கியது; (எ - று.)—இராவணன் ஏவியபடியே வள்ளுவர் தெரி விக்க, அவ்விராவணனுடைய மூலபலம் எங்கும் நிறைந்ததென்க. என்பர், ஆல்-அசைகள். பி-ம்:—[1]அணி. [2]ஏற்றிஎன்றும்படிக்க லாம். [3]தறை. [4]குழுவின், குழுவும். [5]நீண்டியது. [6]மாத். (8261)

5.—திரண்டசேனையின் வருணனை.

அடங்கும் வேலைக ளண்டத்தி [1]னகத்தகன் மலையும்
அடங்கு [2]மன்னுயி [3]ரனைத்துமவ் வரைப்பிடை [4]யவைபோல்
அடங்குமே[5]மற்றப் [6]பெரும்படை யரக்கர்த மியாக்கை
அடங்கு மாயவன் குறளுருத் [7]தன்மையி னல்லால்.

(இ - ள்.) அண்டத்தின் உள்ளிடத்தில் கடல்கள் அடங்கியுள்ளன: அக்கடல்களுள்ள எல்லைக்குள் பரந்த மலைகளும் நிரம்பிய பிராணிகளும்அடங்கியிருக்கும்: அவைபோல எல்லாவுலகங்களையும் தன் ஈரடியால் அளக்கும் வல்லமையமைந்த யாக்கை அடங்கிய குறளுருவின் தன்மையினல்லாமல் அப்பெரும்படை அச்சிறுதீவிலடங்குமோ? (எ - று.)

அண்டம் எனில் ஏதோ சிறுபொருள்போலத்தோன்றும்: அவ்வாறானசிறியஅண்டத்தில் பெருங்கடல்கள் அடங்கியிருப்பன போல அங்ஙனன கடல்களினெல்லைக்குள் பெருமலைகளும் பல்வகையாகி நிரம்பிய பிராணிகளும் அடங்கியிருக்கும்: அவைபோலக் குறளுருவில் உலகையெல்லாம் அளக்கவல்லபேருருவம் அடங்கியிருக்கும்: அவ்வண்ணமேஇலங்கையென்றசிறுநகரில் பெரும்படை அடங்கிய தென்றவாறு. பெரிய அண்டத்தில் இருக்கத்தக்க கடல் மலை உயிர்கள் எல்லாம் வாமனத்திருவுருவங்கொண்ட திருமாலின் வயிற்றிலடங்கியிருந்ததுபோல, மிக்க பெருந்தொகுதியான மூலத்தானை அவ்விலங்கையினுள் அடங்கியிருந்ததெனக்கருத்துப்பட உரைப்பினுமாம். மிகுதியணியை யங்கமாகக்கொண்ட **உவமையணி.** மேல் 16-ஆஞ்செய்யுளில், சேனை வெளிவரும் இலங்கைவாயிலுக்கு அண்டம் உண்டுமிழுங் திருமாலின்வாயை யுவமைகூறுவர்.

பி - ம்:—[1] அகத்தனமலைகள். [2]மூன். [3] அனைத்தையும், அனைத்துமரல். [4]அவர் போல், அவைபோய். [5]மற்றைப். [6]இரும். [7]தன்மையாலல்லால், தன்மையினவரால். நான்காமடி. 'அடங்குமாய்வதற்குற்றொரு தன்மையவல்ல' என்று ஒருபிரதியில். (3262)

6.—ஏழுகவிகள்-ஒருதொடர்: அரக்கச்சேனைவீரரின் தன்மைகூறும்.

அறத்தைத் தின்றருங் கருணையைப் பருகிவே றமைந்த
மறத்தைப் பூண்டுவெம் பாவத்தை மணம்புணர் மணாளர்
[1]நிறத்துக் காரன்ன நெஞ்சினர் [2]நெருப்புக்கு நெருப்பாய்ப்
[3]புறத்தும் [4]பொங்கிய பங்கியர் காலனும் புகழ்வார்.

(இ - ள்.) (அந்தமூலபலத்திலுள்ள சேனைவீரர்),—அறத்தை (அன்னமாக) வாயிற்போட்டுக்கொண்டு, அரிய கருணையை(நீராகக்) குடித்துவிட்டு (அறத்திற்கு) மாறாக அமைந்த மறத்தை (ப்பூணூலாக) மேற்கொண்டு, கொடியபாவத்தை (மனைவியாக)க் கட்டிக்கொண்டின்ற மணவாளப்பிள்ளைகள்; நிறத்தினால் மேகத்தையொத்த [கரிய] நெஞ்சையுடையவர்; நெருப்புக்கு நெருப்புப்போன்ற [கடுஞ்சீற்றங்கொண்டு] (அம்மனத்திலுள்ள நெருப்புப்) புறத்துப் பொங்கினாற் போன்ற [செம்பட்ட]மயிரையுடையவர்; (கொலைத் தொழிலில் தன்னின் மேம்பட்டவரென்று) காலனும் கொண்

டாடத்தக்கவர்; (எ-று.)—தன்னினும் கொலைத்தொழிலில்முந்துறுதலால், காலனும் இவ்வீரரைப் புகழ்வனென்க. நிறத்துக்காரன்ன நெஞ்சினர்-அறியாமைநிறைந்த மனத்தினர் என்றவாறு. நெருப்புக்கு நெருப்புஆய்-நெருப்பினும் அதிகமாகவெம்பி யெனினுமாம். பொங்குதல்-மேலெழுதல். இருண்ட கடலினுள் வடவைபோலப் பாவம்நிறைந்தநெஞ்சிற் சினம்மூண்டு, அத்தீமேலெழுந்தாற் போன்று மேனோக்கிய *செம்பட்டமயிரினர் அவர் என்க. தன்மை நவிற்சியையும் தற்குறிப்பேற்றத்தையும் கலசி அரக்கரைவருணித்துள்ள மகாகவிஞரின் கவிநயம் அதிசயிக்கத்தக்கது. பி - ம்:—[1]நிறத்துக்காரெனும், நிறத்திற்காரென்ற. [2]நெருப்பிற்கு நெருப்பாய். [3]புறத்திற். [4]போகிய. (3263)

7. நீண்ட [1]தோள்களால் வேலையைப் புறஞ்செல நீக்கி
வேண்டு மீனொடு மகரங்கள் வாயிட்டு விழுங்கித்
[2]தூண்டு வானுரு மேற்றினைச் செவிதொறுந் தூக்கி
[3]மூண்ட [4]வான்மழை [5]யுரித்துடுத் [6]துலாவரு மூர்க்கர்.

(இ-ள்.) (பின்னும் அவ்வீரர்), நீண்டகைகளால் கடலின்நீரைப் புறத்தே செல்ல நீக்கி வேண்டிய மீனுடனே மகரங்களை(த் தம்) வாயிலேயிட்டு விழுங்கி, மேகத்தினாலுண்டாக்கப்படுகின்ற பேரிடியைக் காதுதோறும் அணிகலமாக அணிந்து, வானத்துமூண்ட மழைகளை யுரித்து உடுத்துக்கொண்டு உலாவுகின்ற கொடுமைக் குணமுள்ளவர்; (எ-று.)

வீரரின் கொடுமையை விளக்கவந்த தொடர்புயர்வுநவிற்சியணி. புறஞ்செலநீக்குதல்-ஒதுக்குதல்: வாரியிறைத்துவிடுத லெனக் கூறினாருமுளர். வான் தூண்டுதல் - வானத்தினாலுண்டாக்கப்படுதல். உருமேறு-பேரிடிதோன்றுவதற்குக் காரணமான பெருமின்னல். அரக்கர்க்கு இரண்டே செவியென்று திண்ணமாக இல்லாமையால் செவிதொறும் என்றது. பி - ம்:—[1]தாள்களால், கால்களால். [2]தூண்டுவார். [3]மூண்டு. [4]மாமழை. [5]புரிந்துடுத்து, முரித்துடுத்து. [6]உலாய்நடை முயல்வார், உலாவருமுருவர், உலாய்வருமுருவர். (3264)

8. மால்வ ரைக்குலம் [1]பரலென மழைக்குலஞ் [2]சிலம்பாக்
கால்[3]வ ரைப்பெரும் பாம்புகொண் டசைத்தபைங் கழலார்
மேல்வ ரைப்படர் கலுழன்வன் காற்றெனும் [4]விசையோர்
நால்வ ரைக்கொணர்ந் துடன்பிணித் தாலன்ன நடையார்.

(இ-ள்) (பின்னும் அந்தக்கொடியவீரர்), பெரியமலைக்குலம் பரலென்னுமாறு அமைய மழைக்குலம் சிலம்பாக, தாளில் மலைகளிலுள்ள பெரும்பாம்புகொண்டு கட்டிய பைம்பொன்னாற்செய்த கழல்களையுடையவர்கள்: மேலெல்லையிற் பறந்துசெல்லுகின்ற கருடனும் கொடிய காற்றுமென்று சொல்லத்தக்க விசையையுடையோர்: யானையைக்கொணர்ந்து பிணித்தாற்போன்ற நடையையுடையவர்; (எ - று.)

வரைகளைப் பரலாகஇட்டு அம்மலைகளைக் கவிந்த மழைகளைச் சிலம்பாகக்கொண்டு அணிந்தும், மலைப்பாம்பாகிய நாணினாற் பசிய

*செம்பட்ட மயிர்-செந்நிறம்பொருந்திய மயிர்: இச்சொல்லை 'செம்பட்டைமயிர்' என்று வழங்குகின்றனர்.

விரக்கழலைக் கட்டியுமுள்ள பாதத்தரென்பது, முன்னிரண்டடிகளிற் கூறிய பொருள். மூன்றுமடி, விரைவையுணர்த்தும். ஈற்றடி - யானைபோன்ற கம்பீரமான நடையையுடையாரென்க. வாய்தொங்குதல்பற்றி யானைக்கு 'நால்வாய்' என்று பேரிருத்தலால், யானையை நால்வரை யென்றார்: நால்வரை-(வாய்) தொங்குகின்ற மலைபோன்றது: யானை; அடையடுத்த உவமையாகுபெயர். ஓசைநோக்கி 'நால்வரைக் கொணர்ந்து' என இரட்டித்துவந்தது, பி - ம்:—[1]மானென. [2]சிலம்பக். [3]வரைக்குலஞ்சிலம்பு. [4]வெய்யோர். (3 65)

9. உண்ணுந் [1]தன்மைய வூன்[2]முறை தப்பிடி னுடனே
[3]மண்ணி னின்றமா லியானையை வாயிடும் பசியார்
தண்ணி னீர்முறை தப்பிடிற் றடக்கையாற் றடவி
விண்ணின் மேகத்தை [4]வாரிவாய்ப் [5]பிழிந்திடும் விடாயர்.

(இ - ள்.) (மற்றும் அவ்வீரர்),—உண்ணுந்தகுதியுடைய ஊன் உண்ணவேண்டிய வேளைக்குக் கிடைக்காது தவறுமாயின், உடனே பூமியில் (திசைக்காவலாக) நின்ற பெரிய யானைகளை வாயிலிட்டு உண்ணுதற்கு ஏற்ற பசியையுடையவர்: குளிர்ந்த இனியநீர் குடிக்கவேண்டியவேளைக்குக் கிடையாவிடின் (தமது) பெரியகையால் தடவி வானத்திலுள்ள மேகத்தை வாரி வாயிற் பிழிந்து கொள்ளுதற்கு ஏற்ற விடாயையுடையவர்; (எ - று.)

மண்ணினின்ற மாலியானை-புவியில் எட்டுத்திசையிலுமுள்ள திக்கஜங்கள். பி-ம்:—[1]தன்மையினூண், தன்மையவூண். [2]பிழைத்துளதெனின், பிழைத்துளவெனின், முறைதப்பினவ். [3]பண்ணின். [4]வானின். [5]பெய்திடும். இச்செய்யுள் சிலபிரதிகளில் "நீண்ட தோள்களால்" (7) என்பதற்குப் பின்னும், இதன்பின் "மால்வரைக் குலம்" (8) என்ற பாடலும் காணப்படுகின்றன. (3266)

10. உறைந்த மந்தா [1]முதலிய கிரிகளை யுருவ
[2]எறிந்து வேனிலை காண்பவ ரிந்துவா லியாக்கை
சொறிந்து நீர்வுறு தினவினர் [3]மலைகளைச் சுற்றி
அறைந்து கற்றமாத் தண்டின ரசனியி னார்ப்பார்.

(இ - ள்.) (பின்னும் அவ்வீரர்கள்,—பூமியில்) தங்கிய மந்தரம் முதலிய மலைகளை ஊடுருவுமாறஎய்து (தம்முடைய) வேலின் கூரிய நிலைமையைச் சோதித்து அறிபவர்: இந்துவினால் தம்முடலைச்சொறிந்து தினவுதீரப்பெறுபவர்: (தாம் ஆயுதம் பயில்கையில்) மலைகளின்மீது சுற்றியறைந்து கற்றுக்கொண்ட பெரிய தண்டாயுதத்தை யுடையவர்; இடிபோன்று பெருஞ்சத்தஞ் செய்பவர்; (எ - று.)

முதலிரண்டடிகட்கு-குளிர்ச்சி நீங்குமாறு பனியுறைந்துள்ள மந்தரம் முதலிய கிரிகளைத் துளைபடும்படி கையாற்குத்தி வெம்மையுண்டாக்குபவரென்று, பொருள்காண்பாருமுளர்: இப்பொருளில், வேனிலைக் காண்பவர் என மிகும். இந்து - பிறைச்சந்திரன்; முழுமதியென்றே கொண்டு, சிப்பி கொண்டுசொறிதல்போல முழுமதி

கொண்டு சொறிந்து என்பாருமுளர். ஈற்றடியில் மலைகளைச்சுற்றி வந்து அறைந்து என்றலும் ஒன்று.—பி-ம்:—[1]முதலினூற்.[2]எறிந்த வேனுனைக். [3]மலையெனச். (3267)

11. சூலம் வாங்கிடிற் சுடர்மழு [1]வெறிந்திடிற் [2]சுடர்வாள்
[3]கோல வெஞ்சிலை [4]பிடித்திடிற் கொற்றவேல் கொள்ளின்
சால [5]வான்தண்டு [6]தரித்திடிற் சக்கரந் தாங்கின்
காலன் மால்சிவன் குமரனென் றிவரையுங் கடப்பார்.

(இ - ள்.) சூலாயுதத்தைக் கையிற்கொண்டாலும் சுடருள்ள மழுவை யெறிந்தாலும், சுடருள்ள வாள் அழகியகொடிய வில் இவைகளைக் கையிற்கொண்டாலும், வெற்றிபொருந்திய வேற் படையைக் கைக்கொண்டாலும், மிகவும் பெரிய தண்டாயுதத்தை யேந்தினாலும், சக்கரப்படையைத்தாங்கினாலும், யமன் திருமால் சிவன் குமாரக்கடவுள் என்ற இவரையும் வெல்ல வல்லவர்;(எ - று.)

இந்தச் சேனையிலுள்ள வீரர்கள் சூலம் முதலியவற்றைத் தாங்குவாராயின், அந்தச்சூலம் முதலியவற்றைத் தாங்கும் யமன் முதலியோரையும் விஞ்சியிருப்ப ரென்க. சூலம்-காலனுக்கும், மழு - சிவபெருமானுக்கும், வாள் சிலை தண்டு சக்கரம் என்பன-திருமாலுக்கும், வேல் - குமாரக்கடவுட்கும் உரியன. கடப்பார் என்றதை உவமவாசகமாகக்கொண்டு உரைத்தலும் ஒன்று. பி - ம்:—[1]வாங்கிடிற், ஏந்திடிற். [2]மூரி. [3]கோலும். [4]பிடித்தலில். [5]வாள். [6]திரித்திடில், தரிக்கில். (3268)

12. ஒருவ ரேவல்ல ரோருல கத்தினை [1]வெல்ல
இருவர் [2]வேண்டுவ ரேழுல கத்தையு மிறுக்கத்
திரிவ ரேலுடன் திரிதரு நெடுநிலஞ் செவ்வே
வருவ ரே[3]லுடன் கடல்களுந் [4]தொடர்ந்துபின் வருமால்.

(இ - ள்.) ஒருலகத்தினை வெல்வதற்கு ஒருத்தரே (போதுமான) வலியையுடையவர்; ஏழுலகத்தையும் வெல்வதற்கு இருவரே வேண்டப்படுவர்: (அன்னார்) திரிவராயின் அவருடனே நெடுநிலமும் உடன்திரியும்: நேரேவருவராயின் (அவ்விசையால்) அவருடனே கடல்களும் தொடர்ந்து பின்வரும்: (எ - று.)—ஆல்-தேற்றம். பி - ம்:—[1]உண்ண, அண்ண. [2]வேண்டுவதேழுலகத்தையுமிறுக்க, வேண்டுவரேழுலகிற்றையு மிறுக்கிற். [3]கனைகடல்களும், அதன்கடல்களும். [4]நடந்து. 'ஒருவர் வேண்டுவரோருலகத்தினை யுண்ண' என்று ஒருபிரதியில் முதலடி. (3269)

13.—சதுரங்கசேனைகளின் மிகுதி.

மேக [1]மெத்தனை [2]விரிஞ்சன்ற னண்டத்து விரிந்த
நாக [3]மத்தனை [4]நளிர்மணித் தேர்களு நாளு
[5]போக மூற்றின வெத்தனை யத்தனை புரவி
[6]ஆக மூற்றின வெத்தனை யத்தனை [7]யனிகம்.

(இ-ள்.) பிரமனாற்படைக்கப்பட்ட அண்டத்திற்குள் விரிந்த மேகம் எத்தனையோ, அத்தனை யானைகள் (அன்னுளன): நளிக்

கின்ற மணிகளையுடைய தேர்களும் மிகப்பல: (போரிற்) செல்லுமாறு தொழில்முற்றியதேர்கள் எத்தனையோ, அத்தனை புரவிகள்: உடலில் (நல்லிலக்கணம்) நிரம்பினவான புரவிகள் எத்தனையோ, அத்தனை காலாட்படை.; (எ - று.)

பல அண்டங்கள் இருத்தலால் அவற்றினுள்ளெல்லா முள்ள மேகங்களையெல்லாம் ஒன்றுசேர்த்தால் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு யானைகள் அச்சேனையி லுள்ளன. அவ்வாறே தேர் புரவி காலாட்களும் உள்ளன என்றவாறு. யானைகளைப்போலவே தேர்கள் மிகப்பலவென்பார் 'நாறு' என்றார். அனிகம் - இங்கு காலாட்படை. பி-ம்:—[1] அத்தனை. [2] அத்தனைமால் கரிவிரிந்த. [3] எத்தனை. [4] நளிமணித்தேர்களுநாளு, நளிர்மணித்தேர்களுமாளா, அத்தனை நளிர்மணித்தேர்கள, அத்தனைதேர்நனி நாளுப். [5] போகமெத்தனை யத்தனை புரவியினீட்டம். [6] ஆகமேலனவெத்தனை யத்தனை, ஆகமெத்தனை யத்தனையானையின், ஆகமெத்தனையத்தனை யவன்படை, ஆகமுற்றியவெத்தனையத்தனை. [7] அவதி. (3270)

14.—நால்வகைச் சேனைகளின் அலங்காரம்.

இன்ன தன்மைய யானைதே ரிவுளியென் றிவற்றின்
பன்னு [1]பல்லண [2]மருமமற் றுறுப்பொடு பலவும்
பொனனு நன்னெடு மணியுங்கொண் டல்லது புனைந்த
சின்ன [3]முள்ளன வில்லன மெய்ம்முற்றுந் [4]தெரிந்தால்.

(இ - ள்.) இப்படிப்பட்ட தன்மையையுடைய யானை தேர் குதிரை என்ற இவற்றின் உடல்முழுதையும் ஆராய்ந்துபார்த்தால், சிறப்பித்துச்சொல்லத்தக்க மேற்றவிசும் பல அவயவங்களுடனே மருமத்தானங்களும், பொன்னையும் சிறந்த பெரிய இரத்தினங்களையுங் கொண்டுபுனைந்துள்ளனவன்றி, இந்தப்பொன்மணிகளினுலியலாத சின்னத்தை உடையன இல்லாதனவாயின; (எ - று.)— பல்லணம் முதலிய யாவும் பொன்மணிகளினுலியன்ற சின்னத்தோடு அமைந்துள்ளன என்றவாறு. சதுரங்கங்களில் மூன்றைக் கூறியது, பதாதிக்கும் உபலட்சணம். சின்னம்-அறுபட்டன. இனி, சின்னம்-சிறுமை எனக்கொண்டு சின்னமுள்ளன இல்லன எனினுமாம். பி-ம்:—[1] பல்வணப், பல்வடப். [2] பருமமற்று, பருவமுற்று. [3] இல்லன வல்லன, அல்லனவல்லன. [4] தெரிந்தான். (3271)

15.—படைகளெழுப்பிய தூளியும் மதநீரும்.

இப்பெ ரும்படை [1]யெழுந்திரைத் தேகமே [2]லெழுந்த
[3]துப்பு நீர்த்தன தூளியின் படலமீத் தூர்ப்பத்
[4]தப்பில் கார்நிறந் தவிர்ந்தது கரிமதந் தழுவ
உப்பு நீங்கிய தோங்குநீர் [5]விங்கொளி யுவரி.

(இ - ள்.) இப்படிப்பட்ட பெரியசேனை எழுந்து ஆரவாரஞ் செய்துகொண்டு செல்ல, மேலேகிளம்பிய பவளத்தின் நிறத்தையுடைய தூளியின் தொகுதி மேலிடத்தை மறைத்ததனால், குற்றமில்லாத மேகமும் (தனது) கருநிறம் நீங்கியது [செந்நிறத்தைப் படைந்தது]; யானை மதம் பாய்ந்து கலந்ததனால், மிக்க நீரையும்

பேரொலியையுமுடைய உப்புக்கடல், (தன்) உவர்ப்புச்சுவை நீங்கியது; (எ - று.)

இந்தச்செய்யுளில் கார் தனதுகருநிறத்தை நீக்துச் செந்நிறத்தையடைந்ததாகக் கூறியதும், உப்புக்கடல் அத்தன்மை நீங்கிக் கரிமதச்சுவையையடைந்ததாகக்கூறியதும் பிறிதின்குணம்பெறலணியாம். இங்குத்தூளியின் மிகுதியும், யானைகளின்மிகுதியும் பெறப்படுவது விருகோளணியாகும். பி - ம்:—[1] எடுத்து. [2] எழுந்து. [3] துப்புதிர்ந்தன...... தூர்ப்பத், துப்புறச்சினத்துற்றன தூளியின் படலம். [4] தப்பக். [5] வீங்கலை, விலங்கலை. (3272)

16.—மூலசேனைகள் புறப்பட்ட இலங்கைநகரின் வாயில் வருணனை.

மலையும் வேலையு மற்றுள பொருள்களும் வானோர்
நிலையு மப்புறத் துலகங்கள் யாவையு நிரம்ப
உலைவு ருவகை [1] யுண்டுபண் டுமிழ்ந்தபே [2] ரொருமைத்
[3] தலைவன் வாயொத்த விலங்கையின் [4] வாயில்கள் தருவ.

(இ-ள்.) (மூலசேனையை) வெளியிடுவனவாகிய (இலங்கையின்) வாயில்கள்,—மலையும் கடல்களும் மற்றுமுள்ள பொருள்களும் தேவர்களின் இருப்பிடமும், அப்புறமுள்ள உலகங்களும் ஆகிய யாவும் அழியாதபடி (தன் வயிற்றினுள்) நிரம்புமாறு முன்பு உண்டு (பின்னர்) உமிழ்ந்த பெரிய ஒப்பற்ற தலைவனான கடவுளது வாயை யொத்தன; (எ - று.)—[3] தலைவன்வாயொத்தது என்ற பாடத்துக்கு, வாயில்கள் தலைவன் வாயொத்தது - ஒருமைப்பன்மைமயக்கம்: இலங்கையின் ஒவ்வொருவாயிலும் திருமாலின் வாயையொத்த தென்க. பி-ம்:—[1] உண்டுமிழ்ந்தளந்த, உண்டுமீண்டுமிழ்ந்த. [2] உவமை [3] தலைவனேயொத்தது, தலைவன்வாயொக்க. [4] வாயில்கடோறும். (3273)

17.—மூலசேனையின் மிகுதியும் வானரங்கள் இரிந்தோடினமையும்.

கடம்பொ ருமதக் களிறுதேர் பரி [1] மிடை காலான்
படம்பொ ருமையி னனந்தலை யனந்தனும் பதைத்தான்
விடம்பொ ருதிரி யமரர்போற் குரங்கின மிதிக்கும்
இடம் [2] பொ ருமையுற் றிரிந்துபோய் [3] வடகரை யிறுத்த.

(இ-ள்.) கன்னத்தினின்று தங்காது பெருகுகின்ற மதநீரைக் கொண்ட களிற்று யானைகளும் தேர்களும் குதிரைகளும் நெருங்கிய காலாட்களும் என்ற இவற்றின் பாரத்தைப் பரவியதலைகளையுடைய அநந்தனும் (தன்) படம் தாங்கமுடியாமையால் துடித்தான்: (பாற்கடலினின்று ஆலகாலவிஷம் தோன்றியபோது அவ்) விஷவேகத்தைத் தாங்கமுடியாமல் நிலைகெட்டோடிய அமரர் போல், குரங்குக் கூட்டங்கள், (அரக்கரின் பெருஞ்சேனையைக் கண்டு அஞ்சித் தாங்கள்) ஊன்றிநிற்கின்ற இடத்தில் பொறுத்துக் கொண்டு நிற்க முடியாமையினால் நிலைகெட்டுப்போய் வடகரையில் தங்கின; (எ - று.) பி-ம்:—[1] இடைக்காலாள், இடைக்கடவ, மிடைகடல்கள், படைகடற்றின். [2] பெருமையிற்றிரிந்து, பொருமையினிரிந்து. [3] வடதிசை. (3274)

18.—கவிக்கூற்று-யமனும் விதியும் தீவினையும் இலங்கையில் அரக்கவீரரை வேட்டையாடச் சென்றமை.

ஆழி மால்வரை [1]வேலி[2]சுற் றிடவகுத் தமைந்த
ஏழு வேலையு மிடு [3]வலை யரக்கரே யினமா
வாழி காலனும் விதியும்வெவ் வினையு[4]மே மள்ளர்
[5]தோழ மாமதி லிலங்கை[6]மால் வேட்டமேற் றொடர்ந்தார்.

(இ - ள்.) சக்கரவாளகிரி வேலியாகச்சுற்றிநிற்க (இடையே) வகுத்து அமைத்துள்ள ஏழுசமுத்திரங்களினிடமும் வலையிடும் இடம்: அரக்கரே தொகுதியாகவுள்ள (வேட்டையாடும்) மிருகம்: காலனும் விதியும் தீவினையுமே (வேட்டையாடும்) வீரர்: (இவ்வீரர் அரக்கரடைபட்டுள்ள) பெரியமதிலாற் சூழப்பட்ட இலங்கையாகிய தொழுவத்திற் பெரிய வேட்டைத்தொழிலில் தொடர்ந்து வந்தனர்; (எ - று.)

முற்றுருவகவணி. அரக்கச்சேனைவீரர் விரைவில் தொலைவரென்றுவிளக்கியபடி. வேலை-வேலையைக்கொண்ட இடம். இடுவலை - இடுகின்ற வலையைக்கொண்ட இடம். அரக்கரை 'மா' என்று கூறியதனால், அவர்கள் வாழிடத்தை 'தோழம்' என்றார்: தோழம் = தொழுவம்: கொட்டில்; இங்கே. மிருகங்கள் வாழுமிடமென்று பொருளைக் காட்டிற்று. வாழி-அசை. பி-ம்:—[1]வேலை. [2]சுற்றிடை. [3]திரை. [4]வேறுள்ள. [5]தோழமாகிய,தோழிமாமதில். [6]மாவேட்டை மேற்றொடர்ந்தார், மாதொடர்ந்திடவந்தார், மால்வேட்ட மேற்றொடர்ந்தான். (3275)

19.—பேரொலி தோன்றுதல்.

ஆர்த்த வோசையோ வலங்குதே ராழியி [1]னதிர்ப்போ
கார்த்திண் மால்கரி முழக்கமோ வாசியின் கனிப்போ
போர்த்த பல்லியத் தரவமோ நெருக்கினுற் [2]புழுங்கி
வேர்த்த வண்டத்தை வெடித்திடப் [3]பொலிந்தது மேன்மேல்.

(இ-ள்.) நெருக்கினாற் புழுங்கிவேர்க்கின்ற அண்டத்தைவெடித்திடும்படி மேன்மேல் விளங்கித் தோன்றியது, (பதாதிவீரர்கள்) ஆரவாரித்த ஓசையோ? அசைந்து செல்லுகின்ற தேர்களின் சக்கரத்தின் அதிர்ப்பு ஒலியோ? கரியவலிய பெரியயானைகளின் வீரிடும் முழக்கமோ? குதிரைகளின் கனைப்பொலியோ? (எல்லாவொலிகளையும்) மறைக்கின்ற பல்வகை வாச்சியங்களினொலியோ? (எ - று.)—அப்போது பதாதிவீரர்களின் ஆர்ப்பு முதலியன, மிகுத்தோன்றின என்றவாறு. பொருட்பின் வருநிலையணி. பி-ம்:—[1]அதிர்வோ. [2]புழுங்கு. [3]பொடித்தது. (3276)

20.—சேனாசமுத்திரத்தின் வருணனை.

வழங்கு பல்படை [1]மீனது மதகரி மகரம்
முழங்கு கின்றது [2]முதிரிரைப் பரியது முரசம்
தழங்கு [3]பேரொலி [4]கலிப்பது தறுகண்மா [5]திருதப்
புழுங்கு வெஞ்[6]சினச் சுறவது [7]நிறைபுடைப் புணரி.

(இ - ள்.) நிறைதலையுடைய (அந்தச்சேனை) சமுத்திரம்,-விடுத்தற்கு உரிய பல படைக்கலமாகிய மீனைக்கொண்டது; மதயானையாகிய மகரம் [முதலை] முழங்கப்பெற்றது: மடங்குகின்ற அலையாகிய குதிரையையுடையது; முரசம் ஒலிக்கின்றபேரொலியாகிய பேரோசையைக்கொண்டது; அஞ்சாமையையுடைய பெரிய வீரராகிய மனம்புழுங்குகின்ற கொடுங் கோபத்தையுடைய சுறுவையுடையது;

உருவகவணி. நிறைபு - நிறைதல். பி ம்:—[1] மீனத்து. [2] முது. [3] போரொலி. [4] களிப்புறுங். [5] வீருநர். [6] சினத்தரக்கராற், சினச்சுறவின். [7] குறைப்படைப், நிறைப்படைப், நிறைபடப், இடைபட்ட.

21.—இதுவும் அது.

தசும்பிற் பொங்கிய திரள்புயத் [1] தரக்கர்தந் தானை
பசும் [2] புற் றண்டல மிதித்தலிற் கரிபடு மதத்தின்
அசும்பிற் சேறுபட் [3] டளறுபட் டமிழுமா லடங்க
விசும்பிற் சேறலிற் கிடந்ததவ் விலங்கன்மே லிலங்கை.

(இ - ள்.) குடம்போன்றுள்ள பொங்கிய திரண்ட புயங்களைக் கொண்ட அரக்கரின்சேனை, பசும் புல்லைக் கொண்ட குளிர்ந்த இடங்களை மிதித்தலாலும், யானைகளினின்று தோன்றுகிற மதநீர்ப் பெருக்காலும், வழுக்குநிலைத்துச்சேறு போன்று அந்தச் சுவேலாசலத்தின் மீதுள்ள இலங்கை முற்றிலும் குழை சேறுபட்டு அமிழ்ந்திடும்: ஆனால், (பலரும்) வானவழியிற் சேர்ந்திட்டதனால் (அழியாது) கிடந்தது; (எ - று.)

சேனையிலுள்ளார் பலரும் வான்வழிசென்றதனால் இலங்கை குழைசேற்றிற்பட்டு அழியாது எஞ்சியதென,வருணனை மூலமாகச் சேனை மிகுதியை விளக்கியவாறு. பி - ம்:—[1] இராக்கதர். [2] பொற்றிண்டலம், புற்றண்டலை. [3] அழுந்துபட்டழியும். (3278)

22.—வானவர் அரக்கச்சேனையைப் பார்த்து நடுங்குதல்.

படியைப் பார்த்தனர் பரவையைப் பார்த்தனர் படர்வான்
முடியைப் பார்த்தனர் பார்த்தனர் நெடுந்திசை முழுதும்
[1] வெடியப் [2] பார்ப்பதோர் வெள்ளிடை கண்டிலர் மிடைந்த
கொடியைப் பார்த்தனர் [3] வேர்த்தனர் வானவர் குலைந்தார்.

(இ - ள்.) வானவர்கள்,—பூமியைப் பார்த்தனர்: (சேனைக்)கடலைப் பார்த்தனர்; பரவிய வானத்தினுச்சியைப் பார்த்தனர்; நெடிய திசை முழுதும் பார்த்தனர்: (எங்கும்) நெருங்கிய கொடிகளைக் கண்டனர்; சேனையில்லாதுபோகப் பார்க்கத்தக்கதொரு வெற்றிடத்தைக் கண்டிலர்; (உடல்)வேர்த்தவராய் நடுங்கினார்கள்;

வெடிதல் - சேனைசமுத்திரம் இல்லாதிருத்தல். பி-ம்:—[1] விடிய. [2] பார்த்தது. [3] வேர்த்தன, (3279)

23.—தேவர்கள் அரக்கச்சேனையைக் கண்டுவியந்துகூறுதல்.

உலகின் [1]நாமலா வுருவெலா மிராக்கத வுருவா
[2]அலகில் பல்படைப் பிடித்தமர்க் கெழுந்தவோ அன்றேல்
[3]விலகு நீர்த்திரை [4]வேலையோ ரேழும்போய் விதியால்
[5]அலகில் பல்லுருப் [6]படைத்தன வோவென வயிர்த்தார்.

(இ-ள்.) 'உலகினுள் நாமல்லாத உருவங்களெல்லாம் இராக்கதவுருவாகி, எண்ணுக்கு அடங்காத பல படைக்கலங்களையேந்திப் போர்க்கு எழுந்தனவோ? அன்றேல், விலகுகின்ற நீரைக்கொண்ட திரையையுடைய கடல்களேழும் போய் விதியினால் அளவில்லாத பலஉருவங்களைப் படைத்தனவோ?' என்று ஐயுற்றுக் கூறினர், (தேவர்கள்); (எ-று.)

தேவர்கட்குத் தம்மைத் தவிர அரக்கச்சேனையே புலப்படுவதனால் 'நாமலாவுரு' என்றார். தற்குறிப்பேற்றவணி. பி-ம்:—[1]மால்வரை. [2]அலகிலாப். [3]விலகினீர், இலகுநீர். [4]வேலையோடேழும். [5]அலைகொள்பல், புலைகொள்பல், புலைகள்வல். [6]பொடித்தனவோவென்று புகன்றார், பொடித்தனவாமெனப் பொலிந்தார். (8280)

இங்கே சிலபிரதியில்

மூன்றி னூற்றிரெ டாயிர முளவன வெள்ளம்
ஆன்ற தேர்பரி கரியவை யானையு மடங்கி
மூன்று லோகமு முற்றும்போய் முடிவுறு மென்ன
என்று சென்றதவ் விராமன்மே லிராக்கதப் பரவை.

என்று ஒரு செய்யுள் காணப்படுகின்றது.

24.—இதுவும் அடுத்தகவியும்-தேவர்கள் சிவபெருமானிடத்து அவ்வரக்கச்சேனையைப்பற்றி அஞ்சிக்கூறலைத் தெரிவிக்கும்.

நடுங்கி [1]நஞ்சடை கண்டனை வானவர் நம்ப
ஒடுங்கி யாங்கரந் துறைவிட [2]மறிகில முயிரைப்
பிடுங்கி யுண்குவ ரியாரிவர் பெருமை [3]பண் [4]டறிந்தார்
முடிந்த [5]தெம்வலி [6]யென்றன ரோடுவான் [7]முயல்வார்.

(இ - ள்.) தேவர்கள், நஞ்சம் அடைந்த கண்டனை சிவனை நடுங்கியடைந்து, 'நம்பனே! யாங்கள் ஒடுங்கி மறைந்து வாழ்தற்கு உரிய இடத்தையறிகிலேம்: (இவர்களோ), உயிரைப் பிடுங்கி யுண்டிடுவர்: இவர்பெருமையை முன்னம் உணர்ந்தவர் யாவர்? எம்வலி (இன்று) முடிந்திட்டது' என்று கூறியவராய், ஓடுதற்கு முயல்பவரானார்கள்; (எ - று.)

நஞ்சடைகண்டன்-கருத்துடையடைகொளியணி: முன்னர்ப் பாற்கடலினின்று எழுந்த ஆலகாலவிஷத்தினின்று காத்ததுபோல, இப்போது இவ்வரக்கர்கடலினால் தோன்றும் கொடுமையைக் காத்தற்கு ஏற்றவன் அப்பிரான் என்ற கருத்தை விளக்குதல் காண்க. பி-ம்:—[1]நஞ்சுண்ட. [2]உணரலாம். [3]கண்டு. [4]அறிவார். [5]எங்கலம். [6]என்றவர். [7]முயன்றார். (8281)

25. ஒருவ ரைக்கொல்ல வாயிர மிராமர்வந் தொருங்கே
இருப திற்றிரண் டாண்டுநின் றமர்செய்தா லென்னாம்
நிருத ரைக்கொல்வ திடம் [1]பெறு விடையினின் றன்றோ
பொருவ திப்படை கண்டு [2]தம் முயிர்பொறுத் தன்றோ.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ-ள்.) (ஓடமுயன்றவர் அந்தச்சிவபிரானிடம் சற்றுத்தேறிப் பின்வருமாறு அபயம் வேண்டுவார்:—இவர்களுள்) ஒருத்தரைக் கொல்லவும் ஆயிரம் இராமர் ஒருங்கேவந்து இருபத்துநான்கு வருடம்நின்று போர்புரிந்கால்தான் என்னவாகும்? [அப்போதும் இவர் களுள் ஒருத்தரைக்கொல்லவும் முடியாது என்றபடி]: மற்றும் அப்பிரான் நிருதரைக்கொல்வதென்பது, (நிற்க) இடம்பெற்று ஓரிடத்தில் நிலையாக நின்றாலல்லவோ (கைகூடும்? வெற்றிடமில்லாமல் இவர்கள் எங்கும் நிரம்பியுள்ளார்களே! மேலும், ஒருகால் எதிர்ப்பவர் நிற்க இடம்பெற்றாலும், இவ்வரக்கப்படைகளுடன்) போர்செய்வது, இவ்வரக்கப்படையைக் கண்களாற்கண்டு தம்முடைய உயிரைத் தாங்கும்வல்லமையைப் பெற்றபின்பு அல்லவோ (இயலும்)? (எ-று.)

இருபதிற்றிரண்டு-இரண்டுபன்னிரண்டு: இப்போது பதினான்கு வருஷம் வனவாசம்செய்யவந்த ஸ்ரீராமன் பின்னும் இங்குத் தங்குவதாககொண்டு இரண்டுவியாழவட்டம் [ஒருவியாழவட்டம்—ஒருமுறை பன்னிரண்டுராசிகளிலும் வியாழன் சென்று வருங்காலமாகிய பன்னிரண்டு வருஷம்] பொருதாலும், இவர்களைச் சங்கரிக்க முடியாதென்ற கருத்தைக் காட்ட, 'இருபதிற்றிரண்டாண்டு' என்றது. இருபதிற்றிரண்டு என்பதற்கு - நாற்பது எனப்பொருள் கூறுவாரும், நாற்பத்துநான்கு என்று கூறுவாருமுளர். பெறு-பெற்ற; உடன்பாட்டெச்சம். பி-ம்:—[1]பெற்றோர் நிலையில், பெற்றோரிடையில், பெற்றாரிடையில். [2]தன்னுயிர். ()

26.—'இராமபிரான் யாவரையுஞ் சங்கரிப்பார்: நீர் அஞ்சற்க' என்று சிவபெருமான் கூறுதல்.

என்றி றைஞ்சலு [1]மணிமிடற் றிறைவனு மினிநீர்
ஒன்று மஞ்சலிர் வஞ்சனை யரக்கரை யொருங்கே
கொன்று நீக்குமக் கொற்றவ னிக்[2]குல மெல்லாம்
பொன்று விப்பதோர் [3]விதிதந்த தாமெனப் புகன்றான்.

(இ - ள்.) என்றுகூறி (த் தேவர்கள்) வணங்கவும்,—நீலரத்தினம்போன்ற [கறுத்த] கண்டத்தையுடையவனான சிவனும்,—(அத்தேவர்களை நோக்கி,) இனி நீங்கள் சிறிதும் அஞ்சாதீர்; அந்தக் கொற்றவன், வஞ்சகக்குணமுள்ள அரக்கரை ஒருசேரக் கொன்று நீக்குவான்; இந்த அரக்கக்குலத்தையெல்லாம் அழிக்கச் செய்வதாகிய ஊழானது (இங்கே இவர்களைக்) கொண்டுவந்துள்ளதாம் என்றுகூறினான்; (எ-று.)-பி-ம்:—[1]இருள். [2]குழு. [3]விதிதரத். ()

27.—இரண்டு கவிகள்-வானரர்கள் மூலபலத்தைக் கண்டு அஞ்சியோடியமையைத் தெரிவிக்கும்.

[1]புற்றி னின்றுவல் லரவினம் புறப்படப் பொருமி
இற்ற தெம்வலி யெனவிரைந் திரிதரு மெலிபோன்
மற்றை வானரப் [2]பெருங்கடல் [3]பயங்கொண்டு [4]மறுகிக்
கொற்ற வீரரைப் பார்த்தில திரிந்தது குலைவால்.

(இ-ள்.) (பின்பு) புற்றிலிருந்து வலிய பாம்புக்கூட்டம் புறப்பட (அது கண்டு) வருந்தி 'எம்வலிமை ஒழிந்திட்டது' என்று விரைந்து நிலைகெட்டோடும் எலியைப்போல, அந்த வானரப் பெருஞ்சேனை (அரக்கரின் மூலபலத்தைக்கண்டு) அச்சங்கொண்டு மனங் குழம்பி, வெற்றிபொருந்திய வீரரான ஸ்ரீராமலட்சுமணரையும் கருதாமல் நடுக்கத்தோடு நிலைகெட்டோடிற்று; (எ-று.)

கொற்றவீரரைப் பார்க்கல் - இதுவரையில் வெற்றியே பெற்று வந்த இராமலட்சுமணரின் திறமையை நினைத்துப் பார்த்தல்; இது-அச்சம் ஒழிதற்கு ஏதுவாம். "ஒலித்துக்காலென்னுழவரி யெலிப்பகை, நாகமுயிர்ப்பகெடும்" என்றது, இங்குக் காணத்தக்கது. பி - ம்:—[1]புற்று நின்றுபல. [2]பெருமபடை. [3]பயத்தொடு, பயத்திடை. [4]வெருவிக். (3284)

28. அணையின் [1]மேற் சென்றசிலசில வாழியை நீந்தப்
புணைகள் [2]தேடின சிலசில [3]நீந்தின [4]போன
[5]துணைக ளோடும் [6]புக் கழுந்தின சிலசில தோன்றாப்
பணைக [7]ளேறின [8]மலைமுழைப் [9]புக்கன பலவால்.

(இ-ள்.) சிலவானரங்கள், அணையின்மீது (ஏறிச்) சென்றன: சில வானரங்கள், கடலைக் கடப்பதற்குப் புணைகளைத் தேடின; சில வானரங்கள், (புணையைவேண்டாமல்) நீந்திப்போயின; சிலவானரங்கள், துணைகளோடும் போய் (நீந்தமாட்டாமல்) நீரிற்சென்று அழுந்தின; சிலவானரங்கள் (கண்ணுக்குத்) தோன்றாமல் [எவருங் காணாதிருக்கும்படி] (இலைகளடர்ந்த) மரக்கிளைகளிலேறின; பல வானரங்கள், மலைக்குகைகளிற் புக்கன; (எ-று.)

'இரிந்தது குலைவால்' என்று மேற்கூறியதை இதனால் விவரிக்கின்றார். பி - ம்:—[1]மேற்சிலசென்றன, மேற்சிலர்சென்றனர். [2]தேடினர்சிலர் சிலர், [3]நீந்தினர். [4]பொருத, பொருதார். [5]துணைகடோறும். [6]புக்கழுந்தினர் சிலர் சிலர். [7]ஏறினர். [8]பல. [9]புக்கனர் பலரால், புக்கனபலரால், புக்கவும்பலவால். (3285)

29.—இரிந்த வானரங்களின் அச்சச்சொல்.

அடைத்த பேரணை யளித்தது [1]நமக்குயி ரழிவால்
உடைத்துப் போதுமா லவர்தொட ராமலென் [2]றுரைத்த
புடைத்துச் [3]செல்குவர் [4]விசும்பினு மென்றன போதோன்
படைத்த திக்கெலாம் [5]பாய்ந்தன வென்றன பயத்தால்.

(இ-ள்.) '(கடலை); அடைக்குமாறு கட்டிய பெரிய அணையா யானது நமக்கு உயிரழிவை யுண்டாக்கிவிட்டது: (ஆகையால், நம்மை) அந்த அரக்கர் தொடராதபடி (அதனை) உடைத்துவிட்டுப் போவோம்' என்று (சிலவானரங்கள்) கூறின; (சிலவானரங்கள்), வானத்திலும் (நம்மைஅரக்கர்) புடைத்துச் செல்வரென்றன: (சில வானரங்கள்), பிரமன்படைத்த திக்குக்களிலெல்லாம் (அரக்கர்) பாய்ந்துள்ளாரென்று அச்சத்தாற்கூறின; (எ-று.)

இரிந்தபோது வானரங்கள் கூறியவற்றை இதனாற்கூறுகின்றார்: இனி, அணையிற் சென்றவானரங்களின் கூற்றாகக்கொள்ளுதலுமொன்று. இங்ஙன் கொள்ளுமிடத்து, பின்னிரண்டடிகள் கடலணையை உடையாமைக்குக் காரணம் தெரிவிக்குமென்க. போதோன் - கமலத்தில் வீற்றிருப்பவன்: பிரமன். பி-ம்:—[1]நமக்குயிரழிவான், நம்முயிரழிய, நமக்குயிருடைய, பேருயிரடைய. [2]உரைத்துப். [3]செல்குவ. [4]விசும்பினூடேறினவோதான், விசும்பினுமென்றனர்போக்கென், விசும்பினுமென்றவர் போர்க்கப். [5]பரந்தனசென்றன, பரந்தனர்சென்றனர், பாய்ந்தனசென்றன, பரந்தனரென்றனர். (3286)

30.—சுக்கிரீவன் அநுமான் அங்கதன் இவர்கள் தவிர, மற்றையோர் நிலைகெட்டோடியமையை இராமன் காணுதல்.

அரியின் வேந்தனு மனுமனு [1]மங்கத னவனும்
பிரிய கிற்றில [2]ரிறைவனை நின்றனர் [3]பின்றார்
இரிய லுற்றனர் மற்றையோ ரியாவரு மெறிநீர்
விரியும் [4]வேலையுங் [5]கடந்தது நோக்கினன் வீரன்.

(இ-ள்.) குரங்குகட்கு அரசனாகிய சுக்கிரீவனும் அநுமானும் அங்கதனும் (என்ற இம்மூவரே) இராமனைப்பிரிந்துசெல்லமாட்டாமல் பின்னிடாதவராய் நின்றார்; மற்றையோர்யாவரும், நிலைகெட்டு ஓடத்தொடங்கினர்; அலை வீசுகின்ற நீர்பரவப்பெற்ற கடலும் (தனனிலையைக்) கடந்தது; (இவற்றை யெல்லாம்) மகாவீரனான ஸ்ரீராமன் கண்டான்; (எ - று.)

வானரர்கள்சென்றவிசையால் கடலும் நிலைகடந்ததென்க. பி-ம்:—[1]அங்கதன்றனும். [2]இறைவரை. [3]பிரிந்தார். [4]வேலையைக். [5]கடந்தனர். (3287)

31.—இருகவிகள்-ஸ்ரீராமன் 'இப்படை வந்தவையென்'? என்று வினவ, விபீடணன் கூறுதலைத் தெரிவிக்கும்.

இக்கொ டும்[1]படை யெங்குள தியம்புதி யென்றான்
மெய்க் [2]கொ டுந்திறல் வீடணன் விளம்புவான் [3]வீர
திக்க னைத்தினு மேழுமாத் தீவினுந் [4]தீயோர்
புக்[5]க மைத்திடப் [6]புகுந்துள திராக்கதப் புணரி.

மூன்று கவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) 'இந்தக்கொடும்படை எங்கே (இத்துணைக்காலம்) இருப்பைப்பெற்றது? சொல்வாய்' என்றுவினவினன் (ஸ்ரீராமன்),

உண்மையான கொடியவலிமையுள்ள விபீடணன் (பின்வருமாறு) விடைகூறுவானானான்:—'வீரனே! எல்லாத்திக்குக்களிலும் ஏழு பெரிய தீவுகளிலும் கொடியதூதர் போயழைத்திட அரக்கரின் பெருந்திரள்வந்துளது; (எ - று.)—எல்லாத்திசைகளிலும் எல்லாத் தீவுகளிலும் சென்று தூதர்மூலமாக இராவணனாலழைக்கப் பட்டுச் சேனைக்கடல் வந்துள்ளதென்று விபீடணன் தெரிவித்தா னென்க. 'விபீடணன் விளம்புவான்' என்பதற்கு, 'அடிமலர் தொழுதவன் சொன்னான்' (33) என்று முடிபுகாண்க. ஏழுதீவு - நாவலந்தீவு முதலியன. பி - ம்:—[1]பகை. [2]கடும். [3]வீரன். [4]உறைவோர். [5]அடைந்திட, அழைத்தது. [6]புகுந்தது. (3288)

32. ஏழெனப்படுங் கீழுள தலத்தினின் றேறி
ஊழி முற்றிய கடலெனப் புகுந்தது [1]முளதால்
வாழி [2]மற்றவன் மூலமாத் தானைமுன் வருவ
ஆழி வேறினி [3]யப்புறத் தில்லைவா ளரக்கர்.

(இ - ள்.) ஏழென்றுசொல்லப்படுகின்ற கீழுள்ளஉலகத்தி னின்று (இங்கு) ஏறி, யுகாந்தகாலத்தில் (உலகத்தைச்) சூழ்ந்த கடலைப்போலப் புகுந்த சேனைத்திரளும், (இங்கு) உள்ளது; முன்னே வருவது, அந்த இராவணனுடைய பெரிய மூலபலமாகும்: கொடிய அரக்கரின் (சேனை) சமுத்திரம், இனி அப்புறத்தில் வேறே யில்லை; (எ - று.) வாழி - முன்னிலையசை. கீழே தூதர்மூலமாக அழைக்கப்பட்டுப் பலதிசைகளினின்றும், ஏழுதீவுகளினின்றும் அரக்கர்படை வந்தமைகூறி, இங்குமூலபலம் கீழுலகத்தினின்றும் வந்திருத்தலையும் அம்மூலப்படைமுன்னும் மற்றப்படைபின்னு மாக அரக்கர் சேனைசமுத்திரமெல்லாம் அங்கிருத்தலையும் தெரி வித்தவாறு. பி-ம்:—[1]உளவால். [2]பெற்றவன், மற்றவண். [3]இல்லை யப்புறத்தின். (3289)

33.—இந்தச்சேனைசமுத்திரமெல்லாம் விரைவிலழிந் தொழியுமென்று தான்கருதுவதை விபீடணன்தெரிவித்தல்.

ஈண்[1]டிவ் வண்டத்தி லிராக்கத ரெனும்பெய ரெல்லாம்
மூண்டு வந்தது தீவினை [2]முன்னின்று [3]முடுக்க
மாண்டு [4]வீழுமின் றெனநின்ற தென்மதி வலியூழ்
[5]தூண்டு கின்றதென் [6]றடிமலர் தொழுதவன் சொன்னான்.

(இ-ள்.) தீவினையானது நின்று முன்னேசெலுத்த, இவ்வண் டத்தில் இராக்கதரென்று பெயர்படைத்த சேனையெல்லாம் இங்கே மூண்டுவந்தது; (ஆகலால்), வலியஊழ்வினை தூண்டுவ தனால் இன்று (இந்தச்சேனைத்திரள்) மாண்டுவீழுமென்று என் புத்தி எண்ணுகின்றது என்று ஸ்ரீராமனது திருவடித்தாமரைகளைத் தொழுது அந்தவிபீடணன் சொன்னான்; (எ - று.)—''ஊழிற் பெரு வலியாவுள மற்றொன் றுசூழினுந் தான் முந்துறும்'' என்ற திருக் குறள் இங்கு நினைக்கத்தக்கது. பி-ம்:—[1]வந்துள, வந்துளது, இவ் வண்டத்துள். [2]பினைநின்று, பின்னின்று. [3]முடுக. [4]வீழுமின்றென் பதென்னெண்மதவிதியாற், வீழ்பவரென்பதெனவ மதி விதியாற். [5]தூண்டுகின்றனர், தூண்டுகின்றனன். [6]அடிதொழுதனன். (3290)

34.—அஞ்சியோடிய வானரசேனையை யழைத்துவருமாறு ஸ்ரீராமன் அங்கதனுக்குக் கட்டளையிடுதல்.

கேட்ட வண்ண லு முறுவலுஞ் சீற்றமுங் கிளரக்
[1]காட்டு கின்றனன் காணுதி யொருகணைத் தென்று
[2]ஓட்டின் மேற்கொண்ட தானையைப் [3]பயந்துடைத் துரவோய்
[4]மீட்டி கொல்லென வங்கத னோடினன் [5]விரைந்தான்.

(இ - ள்.) (விபீடணன் வார்த்தையைக்)கேட்ட பெருமையிற் சிறந்த ஸ்ரீராமனும், புன்சிரிப்பும் கோபமும் மூள, '(இவர்கள்படும் பாட்டை) ஒரு கணைத்திற் காட்டுகின்றேன்: காண்பாய்' என்று சொல்லி, (பின்பு, அங்கதனை நோக்கி), 'வலியோனே! ஓட்டத்தை மேற்கொண்டுசென்ற (குரங்குச்) சேனையை அச்சம்நீக்கி மீட்பாயா?' என்ன, அங்கதன் (அச்சேனையை மீட்டுக்கொணர) விரைந்தோடலானான்; (எ - று.)—ஓட்டு—முதனிலைதிரிந்த தொழிற்பெயர். பி-ம்:—[1]காட்டுகின்றனென். [2]ஓட்டமேற்சென்ற. [3]உரங்கொடுத்து. [4]மீட்டுக்கொள்கென. [5]விரைந்து. (3291)

35.—வானரசேனைத்தலைவர் மீண்டுவருதல்.

[1]சென்று [2]சேனையை யுற்றனன் [3]சிறைசிறை கெடுவீர்
நின்று [4]கேட்டபி னிங்குமி னெனச்சொல்லி நேர்வான்
ஒன்றுங் கேட்கிலெ [5]மென்றதக் குரக்கின [6]மூரையால்
வென்றி வெந்திறற் படைப்பெருந் தலைவர்கள் மீண்டார்.

(இ-ள்.) (அங்கதன்) போய் (வானர சேனையை) யடைந்து, 'பற்பல பக்கங்களிலும் சிதறியோடுபவர்களே! நின்று (யான் சொல்வதைக்) கேட்டபின் (போகவேண்டுமென்று தோன்றினால்) போய்விடுங்கள்' என்று நல்வார்த்தையாகச் சொல்லி (ப்பின்னுஞ்) சொல்புவனானான்: 'நாங்கள் ஒன்றையுங் கேட்கமாட்டோம்' என்றது, அந்தக் குரங்கினம்; (ஆயினும் இவன்) பேச்சினால், வெற்றியையும் கொடியவலிமையையும் பெற்றிருந்த வானரச் சேனைப் பெருந்தலைவர்கள் (ஓடுவதினின்றும்) மீண்டார்; (எ-று.)—நேர்தல் - சொல்லுதல்; "நேர்தலாயிரத்து" என்றதுங் காண்க. பி - ம்:— [1]சென்ற. [2]தானையை. [3]சிறிதிறை, சிறிதினம். [4]கேட்டுப். [5]என்றனர், என்றன. [6]முறையால். (3292)

36.—அங்கதன் வினவ, நின்ற சேனாபதியர் தாம் ஓடிய காரணத்தை யுரைக்கத் தொடங்குதல்.

[1]மீண்டு வேலையின் [2]வடகரை யாண்டொரு வெற்பின்
ஈண்டி னார்களை யென்குறித் [3]திரிவுற்ற தென்றான்
ஆண்ட நாயக கண்டிலை போலு [4]நீ யவரை
மாண்டு செய்வதே [5]னென்றுரை கூறினர் மறுப்பார்.

(இ - ள்.) (ஓடுவதினின்றும்) மீண்டு சமுத்திரத்தின் வடகரையில் அங்கே ஒருமலையில் நெருங்கினின்றவரான சேனாபதிகளை நோக்கி, 'என்ன கருத்துக்கொண்டு (நீங்கள்) நிலைகெட்டு ஓடியது?'

என்று (அங்கதன்) வினவினான்: 'ஆண்டநாயகனே! நீ அந்த அரக்கரைக் கண்டதில்லைபோலும்; (நான்) மாண்டு செய்யப் போவது என்?' என்று (போர்க்குவருவதை) மறுப்பவராய்(ப் பின் வருமாறு) உரைகூறினார்கள்; (எ.-று.)—கூறுவதை, மேல் எட்டுக் கவிகளிற்காண்க. பி - ம்:—[1]மீண்ட. [2]வடவரை. [3]இரிகின்றது, இரிவுற்றீர். [4]நீவாரை, நீரவரை. [5]என்றனர். (3293)

37.—இதுமுதல் எட்டுக்கவிகள்-ஒருதொடர்: சேனாபதிகளின் விடை.

ஒருவ னிந்திர சித்தென வுள்ளவ னுளநாள்
செருவி [1]னுற்றவை கொற்றவ மறத்தியோ தெரியிற்
பொருவின் [2]மற்றவ ரிற்றில ரியாரொடும் பொருவார்
இருவர் விற்பிடித் தியாவரைத் தடுத்துநின் [3]றெய்வார்.

(இ - ள்.) இந்திரசித்துஎன்று பேர்படைத்துள்ளவனான ஒருவன் உள்ளநாளில், கொற்றவனே! போரில் நிகழ்ந்தவற்றை மறந்துவிட்டாயோ? ஆலோசிக்குமிடத்து, ஒப்புமையில் அவ்வரக்கர் (அவ்விந்திரசித்துக்குத்) தோற்றவரல்லராய் யாவரோடும் பொருவார்; (இவ்வாறிருக்க), இருவீரர் விற்பிடித்து யாவரைத் தடுத்துநின்று எய்யவல்லர்? (எ-று.)

ஒரு இந்திரசித்து பொருதபோது என்னபாடுபடுத்தினான்! அவனைப் போன்ற பலகோடிவீரர் வந்திருக்கும்போது இவ்விருவீரர் என்னசெய்யமாட்டுவரென்றே யஞ்சினோ மென்றவாறு. பி-ம்:—[1]உற்றன. [2]மற்றவரிற்றிலர், மற்றவருற்றனர். [3]எய்தார்.

38. *புரங்க டந்தவப் புனிதனே முதலிய பலவோர்*
வரங்க டந்துல களிப்பவ ரியாவரு மாட்டார்
கரந்த டங்கினர் [1]னிமற்றவ் வரக்கரைக் கடப்பார்
குரங்கு கொண்டுவந் தமர்செயு மானுடர் [2]கொல்லாம்.

(இ-ள்.) வரங்களைக் கொடுத்து உலகத்தோரைக் காக்கின்றவராகிய திரிபுரத்தைவென்ற பரிசுத்தமூர்த்தியாகிய அந்தச் சிவபெருமான் முதலியதேவர்கள் யாவரும்,—முன்னிற்கமாட்டாராய் ஒளிந்து அடங்கி விட்டனர்: இனி, அவ்வரக்கரைவெல்பவர், வானரங்களைத் துணையாகக் கொண்டுவந்து போர்செய்கின்ற மானுடரோ? (எ-று.)—இரண்டாமடியில், வரங்கள் தந்து எனப்பிரிக்க. பி-ம்:—[1]யாரினியரக்கரைக், மற்றிவ்வரக்கரைக், மற்றிவ்வுலகினைக். [2]கொல்லோ. (3295)

39. *ஊழி யாயிர கோடிநின் [1]றுருத்திர னோடும்*
ஆழி யானுமத் [2]தயனொடு புரந்தர னவனும்
[3]சூழ வோடின [4]ரொருவனைக் கொன்றுதந் தோளால்
வீழ மாசெய்ய [5]வல்லரேல் [6]வென்றியி னன்றே.

(இ - ள்.) உருத்திரனோடு திருமாலும் மற்றும் பிரமனுடனே இந்திரனும் ஆயிரகோடி ஊழிக்காலம் பொருதுநின்று (வெல்லமாட்டாது), சூழவும் ஓடினராகி, (அன்னவர்)ஒருவனைத் தம்தோள்

வலியாற் கொன்று விழுமாறு செய்யவல்லமையுடையரேல் வென்றியினும் நன்றேயாம்; (எ-று.)

ஆயிரவூழிக்காலம் சிவபெருமான் முதலியோர் எதிர்நின்று பொருது ஒருவரைக்கொன்று வீழ்த்தவும் வல்லமையற்றவராவரென்றால், இவ்விரு மானுடரால் அவ்வரக்கரை வெல்லுதல் கூடுமோ? என்றவாறு. பி-ம்:-[1] உருத்திரரோடும். [2] அயனுமப், அமரரும். [3] சூழுமோடினால், சூழுமோடினர், சூழவோடினால். [4] ஒருவரை. [5] வல்லரோ, வல்லவோ, வல்லரே. [6] யெனப்பினன்றே. (3296)

40. என்னப் பாமற்றிவ் வெழுபது வெள்ளமு [1] மொருவன்
தின்னப் போதுமோ [2] தேவரின் வலியமோ [3] சிறியேம்
[4] முன்னிப் [5] பாரெலாம் படைத்தவ னொளெலா முறைநின்று
உன்னிப் பார்த்துநின் [6] றுறையிடக் [7] குறையுமோ [8] யூகம்.

(இ-ள்.) என்ன ஆச்சரியம்!! இந்த எழுபது வெள்ளம் வானரச்சேனையும் ஒருவன் தின்பதற்குத்தான் போதுமா? சிறியோமாகிய யாம் தேவர்களைக்காட்டிலும் வலிமைபடைத்துளோமோ? (இந்தச்சேனை) வியூகமானது, முறைநின்று ஆராய்ந்து உலகங்களையெல்லாம் (முன்பு) படைத்தவனான பிரமதேவன் ஒருநாளெல்லாம் உன்னித்துப் பார்த்துநின்று உறையிடுமாறு குறைந்தவளவையுடையதாகுமோ? (எ - று.)

ஒருவன் தின்னுதல்-ஒருவனா லழிக்கப்படுதல். உறையிடக் குறைதல்-உறையிட முடியாதவாறு, பேரளவுடையதாதல். பிரமனே உறையிட்டு எண்ணினாலும் எண்ணமுடியாதது இந்த அரக்கச்சேனை யென்பது, பின்னிரண்டடிகளின்கருத்து. உறையிடுதல்-பேரளவுள்ள பொருளை யெண்ணும்போது கணக்குத் தெரியுமாறு நூற்றுக்குஒன்று என இவ்வாறாகக் குறித்தல். என்னப்பா-வியப்புப்பொருளைக் குறிப்பிக்கும். பி - ம்:—[1] ஒருவர். [2] அவர்தம்மின். [3] சிறின். [4] முன்னை. [5] பாரகம். [6] அறையிடக். [7] குறையுமிவ். [8] ஓதம். ()

41. நாய கன்தலை பத்துள கையுநா லைந்தென்று
[1] ஓயு நெஞ்சின மொருவன்மற் றிவண்வந் திங்குற்றார்
[2] ஆயி ரந்தலை [3] யதற்கிரட் டிக்கைய ரையா
[4] பாயும் வேலையிற் கூலத்து மணலினும் பலரால்.

(இ-ள்.) நாயகன் ஒருவனுக்குத் தலை பத்துள்ளன; கையும் இருபது என்று (கருதி முன்பே) ஓய்கின்ற மனத்தையுடையவராேனாம்: இப்போது இங்கு வந்துற்றாரோ, ஆயிரந்தலைகளையும், அதற்கு இரட்டிப்பான [ஈராயிரங்] கைகளையும் உடையார்; ஐயா! (அவர்கள் எண்ணிக்கையில் அலை) பாயப்பெற்ற கடற்கரையிலுள்ள மணலினும் பலராவர்: (எ - று.)—இவர்களைப்பற்றி எம் மனம் ஓய்வதைப்பற்றிச் சொல்லவேணுமோ? என்பது குறிப்பு.

மிகப்பலருக்குக் கடல்மணலை யுவமைகாட்டுவதை "நினைப் பான்புகிற் கடலெக்கலி னுண்மணலிற்பலர்" என்ற பெரியார் பாசுரத்திலுங் காண்க. பி-ம்:-[1] ஓயுமுள்ளதேயொருவன் மற்றவன்

வந்திங்குற்றார், ஒயுநெஞ்சின மொருவனங்கவனில் வந்துற்று, ஒயு மூள்ளத்தேம்......உற்றார், ஒயுநெஞ்சினன்...இவர்வந்திங்குற்றார். [2]ஆயிரங்கரம், ஆயிரங்கையர். [3]ஐந்நூறுதலையினரையா. [4]மாய. ()

42. கும்பகன்னனென் [1]றுளன்மற்றிங் கொருவன்கைக் கொண்ட
அம்பு தாங்கவு [2]மிடுக்கில மவன் [3]செய்த தறிதி
உம்ப ரன்றியே யுணர்வுடை யார்பிற ருளரோ
நம்பி [4]நீயுமுன் றனிமையை யறிந்திலை நடந்தாய்.

(இ - ள்.) கும்பகர்ணனென்றுள்ளவனை இங்கிருந்த ஒருவன் கையாண்ட அம்பைத் தாங்கவும் வலிமையற்றவராயிருந்தோம்; அவன் செய்தபோரை (நீ) அறிவாயே: (அவனைப்போற் பலர் இங் கிருக்கின்றார்களே); தேவர்களன்றியே உணர்வையுடையவர் பிற ருளரோ? (அவர்களும், அஞ்சுகின்றார்களே): நம்பி! அறியாப் பிள்ளையாதலால், நீயும் தனிமையையுடையவனாய் (இங்கு) நடந்து வந்தாய்; (எ - று.)

நீ அறியாப்பிள்ளையாதலால், 'இளங்கன்று பயமறியாது' என்ற பழமொழிப்படி அச்சமின்றி இங்குவந்தாய்; அறிவுநிரம்பின பெரியோனாயின், நீயும் இவ்வாறு எங்களைக்கூவ வந்திருக்கமாட் டாய்; அச்சத்தினால் எங்கேனும் மறைந்துகிடப்பா யென்றவாறு. பி - ம்:—[1]ஒருவனங்கவன்கையிற். [2]மிடுக்கிலன். [3]செய்தவறிவை. [4]நீயுன தருமையை, நீயுன் றனருமையை. (3299)

43. அனும னாற்றலு [1]மரசன தாற்றலு மிருவர்
தனுவி னாற்றலுந் [2]தம்முயிர் தாங்கவுஞ் சாலா
கனியுங் காய்களு [3]முணவுள முழையுள கரக்க
மனித ராளினெ [4]னிராக்கத [5]ராளினென் வையம்.

(இ - ள்.) அநுமன்வல்லமையும் சுக்கிரீவன்வல்லமையும் இரு வீரரான இராமலட்சுமணரின் விற்களின் வல்லமையும் (அன்னவர்) தம்முயிரைத் தாங்குவதற்கும் போதா: (அங்ஙனிருக்க, எங்களை எவ்வாறு அவர் காப்பார்? நாங்கள் கிட்கிந்தைக்குப் போவோமேயானால்), கனியும் காய்களுமாகிய உணவோ கிடக்கின்றன: (எதிரிகள் வந்து கொல்லாதபடி) மறைந்துவாழ மலைமுழைகளோ இருக்கின்றன: (நாங்கள் அங்கேபோய் வாழும்படி விடைதருவாய்:) (இவ்) வையத்தை மனிதராண்டாலென்ன? இராக்கதராண்டா லென்ன? (எ - று.)

நாங்கள் மனிதரல்லேலாம்: அரக்கரல்லேலாம்: எமக்கு இரு திறத்தாராட்சியும் ஒன்றே: அங்ஙனிருக்க ஒருதிறத்தார் வெற்றி பெற்று ஆள உதவ அழைக்கின்றாயே! ஈதென்? என்பது குறிப்பு: "இராமனாண்டாலென்ன, இராவணனாண்டாலென்ன" என்ற பழமொழி, இந்தச்செய்யுளின் ஈற்றடியாற் கூறப்பட்டதாகும். ஆகவே, இச்செய்யுள்-உலகுவழக்குநவிற்சியணியாம். வையம்-பூமி. பி-ம்:—[1]அரசன்றன், அரசன்றான். [2]தங்களையின்னுயிர் தாங்கா, தங்களைத்தாங்குவார்தாங்கார், தங்கடமுயிரினைத்தாங்கா. [3]காணுள. [4]இராக்கதர். [5]ஆள்கிலென். (3300)

44. [1]தாமுளா ரன்றே புகழினைத் திருவொடுந் [2]தரிப்பார்
யாமு ளோமெனி [3]னெங்கிளை யுள்ளதெம் [4]பெரும
[5]போமி னீரென்று [6]விடைதரத் [7]தக்கனை [8]புரப்போய்
[9]சாமி னீரென்றல் [10]தருமமன் றென்றனர் தளர்ந்தார்.

(இ - ள்.) தாமுளாராணு ரன்றே புகழினைத் திருவோடு தரிப்பவராவார்? யாங்களுளோமானாலன்றோ (எம்மாற் காக்கப்பட்டு) எம் தலைவ! எமது சுற்றமும் உள்ளதாகும்; காப்பவனே! [இளவரசே] நீங்கள் போங்களென்று (நீ எங்கட்கு) விடைதருதற்கு உரியை: நீர் சாமினென்றுகூறுதல் (உனக்குத்) தருமம்அன்று என்று (மனந்) தளர்ந்து கூறினார்கள்; (எ - று.)

சுவரைவைத்துக்கொண்டே சித்திரமெழுதலாகு மதுபோல, நாங்கள்நிலைத்த பிறகல்லவா எவ்வாறுசெய்யின் புகழுண்டாகுமென்று ஆலோசிக்கவேண்டும்? எங்கட்கே ஆபத்து நேர்கின்ற காலத்தில் உயிர்தப்பஓடிவிடுவது பொருத்தமேயன்றிப் புகழை நாடி உயிரை விடவோ? எம்முயிரை விட்டால், அதனால் எமது கிளைஞரும் மாள்வரே! ஆகவே, நீர்க்கமாய்ப் போய் வாருங்களென்று எமக்கு விடை தருவதல்லாமல், சாகும்படி போர்க்குவருக என்றல் இளவரசனுன உனக்குத் தருமமாகாதென்றவாறு. பி-ம்:- [1]சேமுளாரலரேபுகழ்த். தாமுளாரவரேபுகழ்த், [2]திரிப்பார். [3]எங்ஙனம். [4]பெருமான். [5]போழனீர், போமுளீர். [6]விரைதரக். [7]தக்கன். [8]புகழோய். [9]சாமுன். [10]தருமமோ. (3301)

வேறு.

45.—இதுமுதல் ஐந்துகவிகள் ஒருதொடர்: அங்கதன் சாம்பவானிடம ஓடுவதுதகாதென்றற்குப் பலபடி நியாயங் காட்டித் தெரிவித்தலைக் கூறும்.

சாம்பனை வதன நோக்கி வாலிசே யறிவு [1]சான்றோய்
பாம்பணை [2]யமல னேமற் றிராமனென் றெமக்குப் பண்டே
[3]ஏம்பல் [4]வந் தெய்தச் சொல்லித் தேற்றினை [5]யல்லை யோநீ
[6]ஆம்பலம் பகைஞன் றன்னோ டயிந்திர [7]மமைந்தோ னன்னும்.

(இ - ள்) வாலிபுத்திரனுன அங்கதன்,—சாம்பவானுடைய முகத்தைப்பார்த்து, 'அறிவுஒழுக்கங்களால் மிக்கவனே! ஆம்பல் மலருக்குப் பகைவனுன சூரியனிடத்து ஐந்திரவியாகரணங் கற்றவனுன அநுமானையொத்தவனே! நீ, ஆதிசேஷசயனத்திற் சயனித்துக்கொண்டுள்ள அமலனே இந்த வீரனுன ஸ்ரீராமனென்று எமக்குமுன்னமே மகிழ்ச்சிவந்து பொருந்தச்சொல்லித் தேற்றினையல்லையோ? (எ - று.)—மிகஇளையவனுன அங்கதன் யாவரினும் மூத்தோனுன சாம்பவானுக்கு, ஓடலாகாமைக்குப்பலபடி காரணங் கூறுகின்றவாறு காண்க ஏம்பல்- மங்கலாய்ப்புமாம். ஓடு-இடப் பொருளில் வந்தது. இச் செய்யுளிலுள்ள 'நோக்கி' என்பதுமேல் 49-ஆஞ் செய்யுளில் "என்னச்சொன்னான்" எனமுடியும். பி-ம்:—[1]சார்ந்தோய். [2]அமலன்மற்றிவ்விராமன், அமலன்மற்றிவ்வீரன். [3]தேம்பல். [4]வந்துகவச் சொல்லித்தேற்றினைப், வந்துற்றகாலத் தியம்பினுய். [5]இல்லையோநீ, இரவிபோலாம், இரதிபோலாம், இரதபோலாம். [6]ஆம்பலன். [7]நிறைந்தோன். (3302)

46. [1]தேற்றுவாய் [2]தெரிந்து சொல்லாற் [3]றெருட்டியித் [4]தெருளிலோரை, ஆற்றுவா [5]யல்லை நீயு[6]மஞ்சினை [7]போலு மாவி, [8]போற்றுவா யென்ற போது புகழென்னும் புலமையென்னும், கூற்றின்வாயுற்றால் வீரங் [9]குறைவரே [10]விறைமை [11]கொண்டார்.

(இ - ள்.) ஆராய்ந்து (நய) மொழியால் இந்தத்தெளிவில்லாத வானரங்களைத் தெளிவுறுத்தித் தேற்றத்தக்காயானநீயும், ஆற்றுதலில்லாதவனாய் அஞ்சினாய்போலும்? (அன்றியும், உன்புலமையையும் புகழையும் போற்றாது) உயிரையே போற்றுபவனானாய் என்றபோழ்து புகழ்தான் என்னவாகும்? புலமைதான் என்னவாகும்? தலைமைகொண்டவர் (ஒருகால்) யமனவாயிலே பொருந்தினாலும், (அதற்காகத் தம்) வீரம் குறையப்பெறுவரோ? (எ - று.)— "தாமுளாரன்றே புகழினைத் திருவோடுந் தரிப்பார்" என்றசொல்லைக் கண்டித்துக் கூறியவாறு. பி-ம்:-[1]தேற்றுவார், தேற்றுவார்த், [2]சிறந்த, தெரிந்த. [3]தெருட்டுவாய, திரட்டியத். [4]தெளிவிலோரை. [5]அல்லை. [6]அஞ்சினார். [7]போல. [8]போற்றினாய். [9]குறையுமோ, குறைவதே, குறைவதோ. [10]விறன்மை. [11]கொண்டாய். (3303)

47. அஞ்சினும் பழியும் பூண்டா [1]மம்புவி யாண்டு மாவி,துஞ்சுமா [2]றன்றி வாழ வொண்ணுமோ நாண்மேற் றோன்றின், [3]நஞ்சுவாயிட்டா [4]லன்ன [5]வமுதனேறு நம்மை யம்மா, தஞ்சமென [6]றணைந்தவீரர் [7]தனிமையிற் [8]சாதல்நன்றே.

(இ - ள்.) (இப்போது நாம்) அஞ்சினோம்: (அஞ்சினமையால்) பழியையும் பூண்டோம்: அழகியபூமியில் (இப்போர்களத்தை விட்டு) எங்கு(ச்சென்றாலும், நம்முடைய) வாழ்நாளமேல் (எமன்) தோன்றுவானாயின், ஆவி இறப்பதன்றி வாழமுடியுமோ? (நாம் இப்போது இராமபிரானோடு நில்லாதுபோயவிட்டால்), நஞ்சினை வாயிலிட்டாற்போன்ற அமிருதம்போலாகுமேவாமலலோ? நம்மைத் தஞ்சமென்று சேர்ந்த வீரரைத் தனிமையாகி விட்டிட்டுப் போவதினும் (நாம்) சாதலே நல்லது; (எ - று.)— அம்மா-வியப்பிடைச்சொல்.

நஞ்சுவாயிட்டாலன்ன வமுதன்றே= அமிழ்து (என்றுகருதி) வாயிட்டாலன்ன நஞ்சன்றே-அமிழ்தெனக்கருதி வாயிலேயிட்ட நஞ்சுபோல் வேவாமல்லவோ என்றவாறு. பி-ம்:—[1]அமரினுள்பாண்டும். [2]அமரினிலாண்டும், அமரினுலாண்டும். [3]நஞ்சினையிட்டால். [4]அன்னது. [5]அமிழ்தன்றே, அமுதனறே. [6]அடைந்த, உணர்ந்த. [7]தனிமைநாஞ். [8]சார்தல். (3304)

48. தானவரோடு மற்றைச் சக்கரத் [1]தலைவ னோடும்
வானவர் [2]கடைய [3]மாட்டா மறிகடல் கடைந்த வாலி
யானவ னம்பொன் றாலே [4]யயர்த்தமை [5]யயர்த்த தென்னி
[6]மீனலர் வேலை பட்ட துணர்ந்திலை போலு மேலோய்.

(இ - ள்.) தானவரோடும் மற்றைச் சக்கரப்படையையுடையனான திருமாலோடும் வானவர்கடைய மாட்டாத (அலை) மடங்குகின்ற கடலைக்கடந்த வாலியானவன் (இராமபிரானுடைய) அம்

பொன்றினாலே உயிர்சோர்ந்தமையை நீ மறந்ததென்? மேலோனே! (அவ்விராமபிரானுடைய அம்பினால்) மீன்விளங்குகின்ற கடல் அடைந்தநிலைமையை உணர்ந்தாயில்லைபோலும்; (எ - று.)—இப்போது அங்கதன் கூறுவது, எப்படிப்பட்டவர்க்கும் அழிவுகாலத்து அழிவுவருமென்றும், இராமபிரான் வெற்றி பெறுவானென்றும் தெரிவிக்கும். பி-ம்:—[1] தலைவரோடும். [2] செய்ய. [3] மாட்டார். [3] அழிந்தமை, உலர்ந்தமை, உகந்தமை. [5] ஆர்த்ததென்ன. [6] மீனலா, மீனகு. (3305)

49. எத்தனை யரக்க ரேனுந் தருமமாண் டில்லை [1]யன்றே
அத்தனை யறத்தை வெல்லும் பாவமென்[2] றறிந்த துண்
பித்தரைப் போல நீயு மிவருடன் பெயர்ந்த தன்மை [டோ
ஒத்தில தென்னச் சொன்னு னவனிவை [3]யுரைப்ப தானுன்.

(இ - ள்.) அரக்கர் எத்தனைபேர் இருந்தாலும், தருமமென்பது அங்கே இல்லையன்றோ? மிகுதியாயுள்ள தருமத்தைப் பாவம் வெல்லுமென்பதும், அறிந்தது உண்டோ? (ஆகவே, அரக்கரழிவது திண்ணம்): பித்தரைப் போலநீயும் இந்தவானரர்களோடும் (இராமனுள்ள இடத்தை) விட்டுச்சென்ற தன்மை (உன் தகுதிக்கு) ஒத்ததாகஇல்லை என்றுசொல்லி முடித்தான்: அந்தச்சாம்பவான் இவ்வார்த்தைகளைச் சொல்வதானான்;(எ-று.)—அறம் வெல்லும் பாவந்தோற்கு மென்ப: ஆதலால், நமக்கே வெற்றி என்கிறான் அங்கதன். சாம்பவான் கூறுவனவற்றை, மேல் ஐந்துகவிகளிற் காண்க.பி-ம்:—[1] என்றே, அன்றே. [2] அறிதல். [3] உரைப்பான்.

50.—ஐந்துகவிகள்—சாம்பவான் கூறுவதைத் தெரிவிக்கும்.

நாணத்தாற் சிறிது போது [1]நலங்கின [2]னிருந்து [3]பின்னர்,
தாணெனுத்த திரடோள் [4]வீர தோன்றிய வரக்கர் [6]தோற்றம், காணத்
[5]தானிற்கத்தானக் கறை[7]மீடற் றவர்க்கு மாமே, [8]கோணற்பூ வுண்
ணும் [9]வாழ்க்கைக் குரங்கின் [10]மேற் குற்ற முண்டோ.

ஆறு கவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) (அப்போது சாம்பவான்), நாணத்தினாலே சிறிது போழ்து மனம்வாடியவனாயிருந்து பின்பு,—(அங்கதனை நோக்கிக் கூறுவான்):—தூணையொத்த திரண்டதோளையுடைய வீரனே! (இப்போது) வந்துள்ள அரக்கரின் தோற்றத்தைக் காணவாவது (கண்டபின் அஞ்சியோடாது அவர் முன்னே) நிற்கவாவது விஷக்கறைகொண்ட கண்டத்தையுடையவனான அந்த உருத்திரமூர்த்திக்குத்தான் முடியுமோ? (அவ்வாறாயின்), உடற்கோணுதலையுடைய மலரையுண்டுவாழும் வாழ்க்கையைக்கொண்ட குரங்குகள் (ஓடிப்போயினவென்றால் அவற்றின்) மேற் குற்றம் உண்டோ?

இச்செய்யுளிலுள்ள 'பின்னர்' என்பது, "என்றெடுத்தெண் கின்றானைக்கிறையவனியம்பலோடும்" என 55-ஆங் கவியோடு தொடரும். 'கோணல்' என்பதைப பூவுக்கு அடைமொழியென்று கொள்ளலுமாம். சங்காரக்கடவுட்கும் இவ்வரக்கர்தோற்றம் அச்சம் விளைக்குமாயின், சபல சித்தமுள்ள குரங்குகள் அஞ்சியோடியதில் வியப்பென்னை? என்றவாறு: தொடர்நிலைச்செய்யுட்பொருட்

பேறணி. -பி-ம்:-[1]நல்கினன். [2]இருந்த. [3]பின்னும். [4]மைந்த, மைந்தன். [5]வீரம். [6]தானிறங்கவந்தக். [7]மிடற்றவற்குமன்றே, மிடற்றவனுக்காமோ. [8]கோணப். [9]யாக்கை. [10]பாற். (3307)

51. தேவரு மவுணர் தாமுஞ் [1]செருப்பண்டு செய்த[2]காலம்
ஏவரே யென்னுற் காணப் பட்டில ரிருக்கை [3]யான
மூவகை யுலகி னுள்ளா [4]ரிவர்துணை யாற்றன் முற்றும்
பாவக [5]ருளரே கூற்று மிவருடன் பகைக்க வற்றே.

(இ - ள்.) தேவர்களும் அவுணர்களும் போர்செய்த காலத்தில் என்னுற் காணப்பட்டிலாதவர், எவர்? இருப்பிடமான மூவகை யுலகிலுமுள்ளாரில் இவரளவு வலிமைநிரம்பிய கொடியோருளரோ? யமனும் இவருடன் பகைக்க வல்லமையுடையதோ? (எ - று.)-பி-ம்:—[1]பண்டுபோர். [2]காலே. [3]ஆன்ற. [4]அவர். [5]உளரோ கூற்றையஞ்சினுற் குற்றமுண்டோ, உளரேகூற்றையஞ்சினுர் பழியுமுண்டோ, உளரேகூற்றையஞ்சினுர் பயமுமுண்டோ. (3308)

52. மாலியைக் கண்டேன் [1]பின்னை மாலிய வானைக் கண்டேன், கால[2]நே மியையுங் கண்டே னிரணியன் [3]றனை யுங்கண்டேன், ஆலமா விடமுங் கண்டேன் மதுவினை [4]யனுச னோடும், வேலையைக் கலக்கக்கண்டே[5]னிவர்க்குள மிடுக்கு முண்டோ.

(இ - ள்.) மாலியைக் கண்டேன்: பின்னை மாலியவானைக் கண்டேன்: காலநேமியைக் கண்டேன்: இரணியனையும் கண்டேன்; கொடிய ஆலகால விஷத்தையும் கண்டுள்ளேன்: (கைடபனென்ற) தம்பியுடனே மதுவென்பானையும் கடலைக்கலக்குகையிற் கண்டேன்; இவ்வரக்கர்க்குள்ள வலிமை அவர்கட்குஉண்டோ? (எ - று.)-மாலியவான் மாலி சுமாலியென்பவர்-பூர்விகராட்சசர்: மாலியவான் கேகசியைவிச்சிரவமுனிவரிடம் ஏவி இராவணாதியரைத் தோன்றச் செய்தவன். காலநேமி-நூறுதலைகளையும் நூறுகைகளையும்படைத்த இவன் இரணியன்மகன்: தன் தந்தையைக்கொன்ற திருமாலிடம் போர்செய்யத்தொடங்க, திருமால் தலைகளையும் கைகளையும் சக்கரத்தாலறுக்க, கபந்தரூபமான அவனைக் கருடன் மார்பினுல் வீழ்த்தினுனென்ப. (மதுகைடபர்சரிதை, அதிகாயன் வதையில் 67-முதல் 10-செய்யுள்களாற் கூறப்பட்டுள்ளது.) பி-ம்:-[1]பண்டை, மற்ற. [2]நேமியைக். [3]தன்னைக். [4]அசனியோடு. [5]உவர்க்குள்ள. (3309)

53. [1]வலியிதன் மேலே பெற்ற வரத்தினர் மாயம் வல்லோர்
ஒலிகடன் மணலின் மிக்க [2]கணக்கின ருள்ள நோக்கிற்
கலியினுங் கொடியர் கற்ற படைக்கலக் கரத்த ரென்றால்
மெலிகுவ தன்றி யுண்டோ [3]விண்ணவர் [4]வெருவல் கண்டாய்.

(இ-ள்.) (இவ்வரக்கர்கள்), இப்படிப்பட்ட பலத்துக்குமேலே வரமும் பெற்றவர்: மாயம்வல்லவர்: ஒலிக்கின்ற கடலின் மணலைக் காட்டிலும் மிக்கபேரெண்ணினராக உள்ளவர்; (இவர்களின்) மனத்தைப் பார்த்தாலோ, கலியினும் கொடுமைகொண்டவர்: (அன்றியும்) கற்ற படைக்கலத்தைக் கையிற்கொண்டவர்: இவ்வாறுனால், விண்ணோர் வெருவுவதையும் கண்டாய், (நான்முகனாகிய நாம்)

மெலிவதல்லாமல் (வேறொருசெயல் நமக்கு) உண்டாகுமோ? (எ - று.)—பி-ம்:—[1]வலியிது, வலியது. [2]கணக்கிலர். [3]விண்ணுற. [4]மெலிவு. இச்செய்யுள் ஒருபிரதியில் இல்லை. (3310)

54. ஆகினு [1]மையம் வேண்டா வழகிதன் றமரி னஞ்சிச்
[2]சாகினும் பெயர்ந்த தன்மை பழிதரு நரகிற் [3]றள்ளும்
[4]ஏகுது மீள வின்னு மியம்புவ துளதா [5]லைய
மேகமே [6]யனையான் [7]கண்ணி னெங்ஙனம் விழித்து நிற்றும்.

(இ-ள்.) இப்படியிருந்தாலும், சாவதாயிருந்தாலும், போருக்கு அஞ்சிப் பெயர்ந்ததன்மை, அழகியதன்று: (மேலும், இம்மையிற்) பழியை விளைக்கும்: (மறுமையில்) நரகத்திலே தள்ளும்: (இவ்விடயத்தில்) ஐயம்வேண்டா: (ஆகலால்), மீளச்செல்வோம் ஐய! இன்னும் சொல்லவேண்டுவது ஒன்று உண்டு: (அது), மேகத்தையொத்த வனான ஸ்ரீராமனுடைய கண்முன்னே எங்ஙனம் விழித்து நிற்போம்? (என்பதே); (எ - று.)—அரக்கர் பெருஞ்சேனையைக்கண்டு அஞ்சி ஓடிய நாங்கள் எமது வேந்தனான சுக்கிரீவனுக்குத்தலைவனாகிய இராமபிரான் கண்முன்னே போய்நிற்பதற்கு நாணமாக இருக்கின்றதே என்றனன். பி - ம்:—[1]ஐயவுண்டாலார்க்கேனும், ஐயமுண்டாலறத்திலும், ஐயமுண்டாமாகிலும். [2]சாகிலம், போகிலம். [3]போக்கும். [4]ஏகுமே, ஏகுதி. [5]எய்தி. [6]அனையார். [7]காண, கண்முன். (3311)

55.—அந்தச் சாம்பவானுக்கு அங்கதன் சமாதானம்கூறுதல்.

என்றெடுத் தெண்கின் றானைக் கிறையவ னியம்ப லோடும்
வன்றிறற் குலிச மோச்சி வரைசிற கரிந்து வெள்ளிக்
குன்றிடை நீலக் கொண்மூ வமர்ந்தென மதத்தின் [1]குன்றின்
நின்றவ [2]னளித்த மைந்தன் மகனிவை நிகழ்த்த லுற்றான்.

(இ - ள்.) என்று கரடிச்சேனைக்குத் தலைவனான சாம்பவன் எடுத்துச் சொல்லுதலோடும், மிக்கவலிமையையுடைய வச்சிராயுதத்தை யோங்கி யெறிந்து மலைகளைச் சிறகரிந்து, வெள்ளிக்குன்றில் நீலநிறமுள்ள மேகமொன்று பொருந்தினாற்போல் மதத்தையுடையமலைபோன்ற ஐராவதமென்றயானையில் நின்றவனாகிய இந்திரனுக்குப் புதல்வனான, வாலியென்பானதுமகனான அங்கதன் இவ்வார்த்தைகளைக் கூறலானான்; (எ-று.)—சாம்பவான் கூறியதற்கு அங்கதன் மறுமொழி கூறுகின்றான். அங்கதன் கூறுபவற்றை மேல் இரண்டுகவிகளிற் காண்க. குன்று-யானைக்கு, உவமையாகுபெயர். பி-ம்:—[1]குன்றம். [2]அருளும். இச்செய்யுள் பலபிரதியிலில்லை. ()

56.—இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்: சாம்பவானுக்கு நாணம் நீங்க, அங்கதன்கூறுஞ் சமாதானத்தைத் தெரிவிக்கும்.

எடுத்தலுஞ் [1]சாய்தல் தானு [2]மெதிர்த்தலு மெதிர்ந்தோர் தம்மைப்
படுத்தலும் வீர வாழ்க்கை [3]பற்றினர்க் [4]குற்ற மேனுள்
[5]அடுத்ததே யஃது [6]நிற்க வன்றியு மொன்று [7]கூறக்
கடுத்தது [8]கேட்டீர் நீருங் கருத்துளீர் கருதி நோக்கின்.

(இ-ள்.) (நாமே பகைவரை) விஞ்சுதலும் தோற்றலும், (பகைவர்) எதிர்த்துநிற்றலும், எதிர்ந்தோரைக் கொல்லுதலும், வீர வாழ்க்கையை மேற்கொண்டார்க்கு முன்னாள்தொடங்கி அடுத்ததே; அஃது இருக்கட்டும்: அன்றியும், ஒன்றுகூற விரைந்து அது கேட்டு (இங்கு) இருந்துளீர்: (அதனால்), ஆராய்ந்து பார்க்குமிடத்து நீரும் ஆராய்ச்சியுள்ளவரே: (எ - று.)—ஆராய்ந்து தொழில் செய்வார்க்கு அச்சத்திற்குக்காரணமிருக்கையில் அஞ்சிவிலகுதலும், சற்று ஊன்றிப்பார்த்தால் அச்சம் நீங்கியநிலையில் அஞ்சாது முனையில் வந்து கூடிநிற்றலும் இயல்பேயாதலால் நாணவேண்டுவதில்லை யென்று சாற்று வாக்கியத்திற் போதரும் பி-ம்:—[1]சாய்த்தலும். [2]இறத்தலும். [3]பற்றிநற்கு. [4]உற்று. [5]அடுக்கநேயதெலாம், அடுத்ததேலாகும். [6]நிற்ப. [7]கூறற்கடுத்தது, கூற்றுக்கடுத்தது. [8]கேட்டுமீண்டிங்கிருந்துளீரேது நோக்கின், கேட்டீரீண்டிக் கிளர்ந்துநீர் தருதனோக்கின். (3318)

57. ஒன்று [1]நீ ரஞ்சலைய யாமெலா [2]மொருங்கே சென்று
நின்றுமொன் றியற்ற [3]லாற்றேம் நேமியான் றனே நேர்ந்து
கொன்றுபோர் கடக்குமாயிற் கொள்ளுதும் வென்றி[4]யன்றேல்
பொன்றுது[5]மவனோ டென்றான் [6]போதலோ புகழன் றென்றான்.

(இ - ள்.) நீர் சிறிதும் அஞ்சவேண்டாம்: ஐய! யாமெல்லாம் ஒருங்கே சென்று நின்றும் ஒருசெயலும் இயற்றுதற்கு வல்லமையுடையோமல்லோம்: சக்கராயுதத்தையுடையவனாகிய திருமாலின் அமிசமான ஸ்ரீராமனே (சென்று பகைவரை) யெதிர்த்துக்கொன்று போரைக் கடப்பானாயின் வெற்றிகொள்ளுவோம்; அல்லாவிடின், அவனுடனே உயிரொழிவோமென்று கூறியவனாய், (அப்பிரானை விட்டு) ஓடிப்போதலோ புகழன்று என்றுகூறி முடித்தான்; (எ-று.) —பி-ம்:-[1]நீ. [2]ஒருங்கு. [3]ஆற்றும். [4]அன்றிப். [5]அவரோடென்றான், அவரோடொன்றார், அவரொடொன்றார். [6]போதலேயழகிற்றென்றான், போதலோபுகழின்றன்றே, பொருதலேபுகழதன்றால்.

58.—சாம்பவான் சொற்படி வானரத்தலைவர் திரும்பிவர, மூண்ட அரக்கச் சேனைகளைக் கண்டு ஸ்ரீராமன் தம்பிக்குக் கூறத்தொடங்குதல்.

ஈண்டிய தானை நீங்க [1]நிற்பதென் யாமே [2]சென்று
[3]பூண்டவெம் பழியி னோடும் [4]போந்தனம் [5]போவ தென்னா
மீண்டனர் தலைவ ரெல்லா மங்கத னோடும் வீரன்
மூண்டவெம்[6] படையை நோக்கித் [7]தம்பிமேல் மொழிவ தானான்.

(இ - ள்.) (அப்போது சாம்பவான்), 'நெருங்கிய சேனை நீங்க நிற்பது குறித்து என்ன வியப்பு? யாமே போர்க்களத்தைவிட்டுச் சென்று அதனாற் பூண்ட கொடிய பழியினோடும் (திரும்பி) வரலானோம்: (ஆகவே, யாவரும்) திரும்பிவரட்டும்' என்று கூற, தலைவரெல்லாம் (அழைத்த) அங்கதனோடும் திரும்பிவந்தனர்: மகாவீரனான ஸ்ரீராமன், மூண்டுள்ள கொடிய (அரக்கர்) சேனைகளைப் பார்த்துத் தம்பியினிடம் (பின்வருமாறு) கூறலானான்; (எ-று.)

போவது-ஒருவகை வியங்கோள்: இனி, தொழிற்பெயராகக் கொண்டு, 'தக்கது' என்று ஒருமுற்றுவருவித்து உரைத்தலும் ஒன்று. மூண்ட வெம்படைஎன்றது-போரில்மூண்ட மூலபலத்தோடுகூடிய அரக்கர் சேனையை யென்க. 'தம்பி மேல்மொழிவதானன்' என்பதற்கு-இளையபெருமான் பிறகு சொல்வதானான் என்று உரைத்து, "அத்தநீ" என்றபாடலை இலக்குமணன் மொழியாக வுரைப்பினுமாம். சேனைமீண்டமை 235-ஆங் கவியிற் கூறப்படும். பி-ம்:—[1]நின்றதென். [2]என்று. [3]பூண்டனம். [4]போந்தநாம். [5]போதும். [6]பகையை. [7]தம்பிக்கு. (3315)

59.—ஸ்ரீராமன் நான் ஒருவனே இவ்வரக்கரையெல்லாம் கொல்வேனெனல்.

அத்தநீ [1]யுணர்தி யன்றே [2]யரக்கர்தா னவுண ரேதான்
[3]எத்தனை யுளரென் றாலு மியான்சிலை யெடுத்த போது
[4]தொத்துறு கனலின் வீழ்ந்த பஞ்செனத் [5]தொலையுந் தன்மை
[6]ஒத்ததோ ரிடையூ [7]றுண்டென் றுணர்விடை [8]யுதிப்ப தன்றால்.

(இ - ள்.) இராமன் இலட்சுமணனை நோக்கிக்கூறுவான்:— 'அத்தனே! அரக்கரென்ன, அவுணரென்ன (இவர்) எத்தனைபேர் உள்ளாரென்றாலும், (அவர்கள்யாவரும்), நான் வில்லையெடுத்து அம்புதொடுத்தபோது, திரளாகப்பொருந்தியநெருப்பிலே வீழ்ந்த பஞ்சுபோல அழியுந்தன்மையைநீ அறிவாயன்றே; (என்திறமைக்கு) ஏற்பதான ஓரிடையூறு உண்டென்று (என்) மதிக்குள் தோன்றுவது (எனவும்) இலலை; (எ-று.)

'எதிர்ந்தவர் எல்லாரையும் ஒருங்கே என்வில்லினால் நான் மாய்ப்பேனென்பதிற் சிறிதும் சந்தேகம் இல்லை: என திறமை உனக்குந்தெரிந்ததன்றோ!' என்று ஸ்ரீராமன் வானரர்க்குத் தெளிவுண்டாகத் தன் திறமையைப் பாராட்டிக் கூறினான். தன்னுடையாற்றலுணராரிடைத் தன்னைப் புகழ்தலும் தகுமன்றோ என்க. பி - ம்:—[1]உணர்த்தி, அறிதி. [2]அரககரேயவுணர்தானெனன். [3]எத்துணை. [4]தொத்தறு. [5]தொலைந்த. [6]ஒத்ததோ. [7]உண்டோ. [8]உதித்ததுண்டோ, உதித்ததென்றான். (3316)

60.—மூன்றுகவிகள்—ஓடிய வானரசேனையை மாருதிமுதலியவரோடிருந்து பாதுகாப்பாயென்று ஸ்ரீராமன் இலட்சுமணனுக்குக் கூறுதல்.

காக்குந [1]ரின்மை [2]கண்ட கலக்கத்தாற் கவியின் சேனை
போக்கறப் [3]போகித் தத்த முறைவிடம் [4]புகுத லுண்டால்
[5]தாக்கியிப் படையை முற்றுந் தலைதுமிப் பளவுந் தாங்கி
[6]நீக்குதி நிருத ராங்கு நெருங்குவார் [7]நெருக்கா வண்ணம்.

(இ - ள்.) காப்பவரில்லாமையைக்கண்ட கலக்கத்தினால் குரங்குச்சேனை (யுத்தத்திற்குச்) செல்லுதலொழிய ஓடிப்போய்த் தத்தம் வாழஉரிய இடங்களிற் புகுவதுண்டு: ஆதலால், (நான்) இந்த இராட்சச சேனையைத்தாக்கி முற்றவும் தலையைவெட்டி வீழ்த்துமளவும் (நீ) இந்தக்குரங்குச் சேனையைத்தாங்கி ஆங்கு நிருதர்நெருங்கிவந்து நெருக்காதபடி தவிர்ப்பாய்: (எ-று.)—பி-ம்:—[1] இன்னாங்,

[3]கண்டார். [4]பொங்கித்தந்தம், பொதிந்துதத்தம், போக்கித்தத்தம். [4]புகுந்ததுண்டேல், புகுதலுண்டேல். [5]தாக்கிய. [6]நீக்குநீ. [7]நெருங்கா. (3317)

61. இப்புறத் திணைய சேனை யேவியாண் டிருந்த தீயோன்
அப்புறத் [1]தமைந்த சூழ்ச்சி [2]யறிந்தவ னயலே [3]வந்து
தப்பறக் கொன்று [4]நீக்கி லவனையார் [5]தடுக்க வல்லார்
வெப்புறு கின்ற துள்ளம் வீரநீ [6]யன்றி [7]வில்லால்.

(இ - ள்.) இவ்விடத்து இப்படிப்பட்ட சேனையை யேவிவிட்டு அங்கேயிருந்த தீயோனும் பொருந்திய சூழ்ச்சியையுடையவனுமான இராவணன், அப்புறத்தில் அயலேவந்து தவறுதலின்றி வானரப் படைகளைக்கொன்று நீக்கினால், வீரனே! அந்த இராவணனை நீயல்லது வில்லினால் தடுக்கவல்லவர் யாவர்? (இதுபற்றி) மனம் வருந்துகின்றது; (ஆதலால்). (எ - று.)—பி - ம்:—[1]அமைத்த. [2]அறிந்தனன், அறிந்ததன். [3]வந்தால். [4]வீழ்க்கில், நீக்கும். [5]தடுக்கற்பாலார், தடுக்கத்தக்கார். [6]அலது. [7]வில்லோர். (3318)

62. மாருதி யோடு [1]நீயும் [2]வானரக் கோனும் வல்லே, பேருநிர் சேனை காக்க வென்னுடைத் தனிமை பேணிச், [3]சோருதி [4]ரென்னின் வெம்போர் தோற்றும்நா மென்னச் சொன்னான், வீரன் [5]மற்றதனைக் கேட்ட விளையவன் விளம்ப லுற்றான்.

(இ - ள்.) மாருதியுடனே நீயும் வானரத்தலைவனான சுக்கிரீவனும், விரைந்து சேனைகாக்கச் செல்லுங்கள்: என்னுடைய தனிமையைக் கருதி மனந்தளாவீராயின், நான் கொடும்போரில் தோற்போம் என்று மகாவீரனான ஸ்ரீராமன் சொன்னான்: அதனைக் கேட்ட இளையபெருமாள் பின்வருமாறு சொல்லத்தொடங்கினான்; (எ - று.)—பி - ம்:—[1]நீயிவ். [2]வானரத்தலைவரோடும். [3]சோருதி. [4]எண்ணின். [5]மற்றிதனை. (3319)

63.—இலக்குமணன் இராமன் கூறியதை யுடன்படுதல்.

[1]அன்னதே கரும மைய வன்றியு [2]மருகே நின்றால்
என்னுனக் குதவி [3]செய்வ திதுபடை யென்ற போது
சென்னியிற் சுமந்த [4]கையர் [5]தேவரே போல [6]யாமும் [க்கி.
பொன்னுடை வரிவி [7]னாற்றல் புறனின்று [8]காண்டல் போ

(இ - ள்.) (இலட்சுமணன் ஸ்ரீராமனைநோக்கி), 'ஐயனே! அதுவே செய்யத்தக்கசெயல்: அன்றியும் உன்னருகேநின்றால், அரக்கப்படை இது ஆன போது [பேரளவினதும் பெருவலிபடைத்ததுமாக இருத்தலால்], தேவரைப் போல யாமும் சென்னியிலே கூப்பியகையையுடையவராய்ப் பொற்கட்டையுடைய வில்லாற்றலைப் புறத்திலிருந்து பார்த்தலைத் தவிர்த்து, உனக்கு உதவி செய்வது என்ன உள்ளது? (எ - று.)—பி - ம்:—[1]அன்னது. [2]அனைவேம். [3]செய்தும். [4]கையான். [5]தேவரைப். [6]யானும். [7]எக்கிப். [8]காண்டுமென்றான், காண்டிபோகலி, காண்டல்போக்கில். (3320)

64.—அப்போது அநுமான் ஸ்ரீராமனிடம் தன்வேண்டுகோளைத் தெரிவித்தல்.

என்றவ னேக லுற்ற காலையி னனும னெந்தாய்
புன்றொழிற் குரங்கெ னுதென் றோளின்மே லேறிப் புக்கால்
நன்றெனக் [1]கருதா நின்றேன் அல்லது நாயி னேனுன்
பின்றனி [2]நின்ற போது [3]மடிமையிற் [4]பிழைப்பி லென்றான்.

(இ - ள்.) என்று சொல்லி அந்த இலட்சுமணன் போகத் தொடங்கியபோது,-அநுமான், (ஸ்ரீராமனை நோக்கி),'எந்தாய்! புல்லியதொழிலையுடைய குரங்குஎன்று அவமதியாமல் என்தோளின் மேலேறிக்கொண்டு போரிற் புகுந்தால், நல்லதுஎன்று கருதுகின்றேன்: அல்லாவிடின், நாய்போற் கடைப்பட்டவனான நான் உன் பின்னே தனியேநின்றபோதும் அடிமையிற் பிழைப்பு இல்லாததாகும்' என்று (தன் எண்ணத்தைத்) தெரிவித்துக்கொண்டான்: (எ - று.)—அநுமான் தான் வாகனமாகவேண்டும்: அன்றி அடிமையாகவாவது உடனிருக்கவேண்டும் என்று ஸ்ரீராமபிரானிடம் இதனால் தெரிவித்துக்கொள்கிறான். பி-ம்:—[1]கருதுகின்றேன். [2]நிற்றுமாயின். [3]அடித்தொழில். [4]பிரியேன். (3321)

65.—இரு கவிகள் இராமன் 'நீ இலட்சுமணனுக்குத் துணையாயிரு' என்று அநுமானுக்குக் காரணத்துடன் கூறுதலைத் தெரிவிக்கும்.

[1]ஐயநிற் [2]கியலா [3]துண்டோ விராவண னயலே [4]வந்துற்று
எய்யுவிற் கரத்து வீர[5]னிளக்குவன் றன்னோ டேற்றால்
மொய்யமர்க் [6]களத்தி னுன்னைத் துணை [7]பெரு னென்னின் [8]முன்ப
[9]செய்யுமா வெற்றி யுண்டோ சேனையுஞ் [10]சிதையு மன்றே.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (இராமன் அநுமானை நோக்கிக் கூறுவான்:—) ஐயனே! உனக்கு முடியாத செயலும் உண்டோ? இராவணன் அருகிலேவந்து பொருந்தி, எய்கின்ற வில்லையேந்திய கையையுடைய வீரனான இலக்குமணனோடு எதிர்த்தால், (அப்போது) நெருங்கிய போர்க்களத்திலே உன்னைத் துணைபெறுமற் போனால், வலியவனே! பெறக்கூடிய பெருவெற்றி விளையுமோ? (அன்றியும்), குரங்குச் சேனையும் கெடுமல்லவோ? (எ - று.)—பி-ம்:—[1]ஐயனுக்கு. [2]ஒண்ணாது. [3]உண்டே. [4]வந்தால். [5]இளையவன். [6]களத்தன். [7]பெருதொழியின். [8]முன்பு. மொய்ம்ப. [9]செய்யும் வெற்றியுமுண்டாமோ. [10]சிந்துமன்றே. (3322)

66 ஏரைக்கொண் டமைந்த குஞ்சி யிந்திர சித்தென் பான்றன், போரைக்[1]கொண் டிருந்த [2]முன்னு ளிளையவன் றன்னைப் [3]போக்கிற்று, ஆரைக்கொண் டுன்னு லன்றே [4]வென்றதங் கவனை யின்னம் வீரர்க்கும் [5]வீர நின்னைப் [6]பிரிகலன் வெல்லு மென்பேன்.

(இ - ள்.) அழகைக்கொண்டு அமைந்த மயிர்முடியையுடைய இந்திரசித்து என்பவன்தன் போரைக் கொண்டிருந்த முன்னாளில் இளையவனை அனுப்பியது ஆரைக்கொண்டு? (உன் வலிமையில்

நம்பிக்கைகொண்டேயல்லவா?) அக்களத்தில் அவனை வென்றது உன்னாலேயல்லவோ? வீரர்க்கும் வீரனே! நின்னைப் பிரியாதவனாய் (அந்த இலட்சுமணன்) இன்னும் வெல்வானென்று கருதுவேன்; (எ-று)—பி ம்:—[1] கொண்டிருந்து, கண்டிருந்து. [2] மேனன். [3] போக்கின். [4] வென்றதன்றென்னச் சொன்னான், வென்றதென்றென்னச் சொன்னான். [5] வீரன். [6] பிரிகிலன், பிரிகிலேன். (3323)

67.—ஸ்ரீராமன் சொல்லியதைக் கேட்டு அநுமான் இளையபெருமாள் பின்னே செல்லுதல.

சேனையைக் காத்தென் [1]பின்னை திருநகர் நீர்ந்து போந்த
யானையைக் காத்து [2]மற்றை யிறைவனைக் காத்தென் நீர்ந்த
வானையித் தலத்தி னோடு மறையொடும் வளர்த்தி யென்றான்
ஏனை [3]மற் றுரைக்கி லாதா [4]னிளவல்பின் னெழுந்து [5]சென்றான்.

(இ - ள்.) சேனையைக்காத்து, என்பின்னால் அழகிய அயோத்தியாபுரியினின்று நீங்கிப்போந்த யானைபோன்றவனான இளவலைப் பாதுகாத்து, மற்றைச்சுக்கிரீவனைப் பாதுகாத்து, மனவல்லமையைக்கடந்துநின்ற வானுலகத்தை இவ்வுலகத்தோடும் மறையோடும் வளரச்செய்வாய் என்றான்; மாறாக வேறு உரைக்கமாட்டாதவனாய், (அநுமான்),—இளவல்பின்னே எழுந்து போனான்;(எ-று.) —பி - ம்:—[1] பின்னர். [2] மற்றும். [3] மற்றுரைத்திலாதான். [4] இளவலோடு. [5] போனான். (3324)

68.—விபீடணனையும் இலட்சுமணனுக்குத் துணைபோகச் சொல்லுதல்.

வீடண நீயு மற்றுன் தம்பியோ டேகி வெம்மை
[1]கூடினர் செய்யு மாயந் [2]தெரிந்தனை [3]கூறிக் கொற்றம்
[4]நீடுறு தானை தன்னைத் [5]தாங்கினை நில்லா யென்னில்
[6]கேடுள தாகு மென்று [7]னவனது [8]கேட்ப தானான்.

(இ-ள்.) 'விபீடணனே! நீயும் உன் தம்பியோடு போகி வெம்மையுடையவராகிய அரக்கர் செய்கின்ற மாயத்தை ஆராய்ந்து கூறி, கொற்றம் நீடுறுகின்ற தானையைத் தாங்கிநில்லாயென்றால், தீமையுண்டாகும்' என்று (இராமன்) கூறினான்: அவன் அது கேட்டு (அதன்படியே) நடப்பதானான்: (எ - று.)—விபீடணனிடத்து இலட்சுமணனை 'உன் தம்பி' என்று ஸ்ரீராமன் கூறிய அன்பு மொழி, பாராட்டத்தகுந்தது; விபீடணனைத் தம்பியாக அங்கீகரித்தமையை விபீடணனடைக்கலப்படலத்து 146-ஆஞ் செய்யுளிற் காண்க. பி - ம்:—[1] கூடினை. [2] தெரிந்தன, தெரித்தனை, தெரித்திநீ. [3] குறிக்கொண்டேகி, [4] நீடுள. [5] தாங்கிநீ. [6] கோடுள. [7] கேட்டிய. [8] தலைமேற்கொண்டான், கிடைப்புக்கொண்டான். (3325)

69.—சுக்கிரீவனாதியயாவரும் இலட்சுமணனுக்குத் துணையாகச் செல்லுதல்.

சூரியன் [1]சேயுஞ் செல்வன் சொற்றதே [2]யென் னுஞ் [3]சொல்லன்
ஆரியன் பின்பு [4]போனு னனைவரு மதுவே நல்ல

காரிய மென்னக் கொண்டார் கடற்படை காத்து நின்றார்
வீரியன் [5]பின்னர்ச் செய்த செயலெலாம் [6]விரிக்க லுற்றாம்.

(இ - ள்.) சூரியபுத்திரனான சுக்கிரீவனும் ஸ்ரீராமன் கூறியதையே [மதித்துக்கூறிய சொல்லையுடையவனாகி இலக்குமணன் பின்னே போகலுற்றான்: யாவரும் அதுவே நல்லகாரிய மென்று கொண்டார்களாய், கடல்போன்ற வானரப்படையைக் காத்து நின்றார்; வீரமுள்ளவனான ஸ்ரீராமன், - பின்புசெய்த செயலையெல்லாம் இனி விவரித்துச்சொலலத் தொடங்கினோம்; (எ - று.) ஈற்றடி -கவிக்கூற்று. பி-ம்:—[1]செல்வன் மற்றச். [2]என்னும். [3]சொல்லால், சொல்லான். [4]போனவனை வரும். [5]பின்னைச். [6]விளம்பல். (3326)

70.—இராமன் போர்க்கோலம் பூணுதல்.

வில்லினைத் தொழுது வாங்கி யேற்றினான் [1]வின்னாண் மேருக்
கல்லெனச் [2]சிறந்த [3]தேயுங் [4]கருணையங் கடலே யன்ன
எல்லொளி மார்பில் [5]வீரக் கவசமிட் [6]டிமையா வேதச்
சொல்லெனத் [7]தொலையா வாளித் தூணியும் புறத்துத் தூக்கி.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ-ள்.) கருணைக்கடலான ஸ்ரீராமமூர்த்தி தாமே (கையால்) தொழுது வில்லை யெடுத்து வில்நாணியை யேற்றி, (பிறகு) மேருமலைபோலச் சிறந்ததாயினும் [கவசத்தைவேண்டாததாயினும்] அந்தவிளங்குகின்ற ஒளியையுடைய (தனது) மார்பிலே வீரக்கவசத்தையிட்டு, (ஒருவராற்) செய்யப்படாத வேதச்சொற்களைப் போலத் தொலையாத [எடுக்கஎடுக்கக் குறையாத] அம்புகளைக் கொண்ட தூணீரத்தையும் முதுகிலே கட்டி, (மூலப்படையின் முன்னணியைச் சேர்ந்தான்: அப்போது),(எ - று.)— "கூசினபொடியாலெங்கும்" என்று மேற் கவியில் முடியும்.

விஷ்ணுவின் வில்லாதலால், அதனைத் தொழுது வாங்கினான். "அநந்தாவை வேதா:" என்று வேதமே கூறுவதால், 'வேதச்சொல்லெனத் தொலையாவாளி' என்றார். அன்ன = அந்த. பி-ம்:—[1]மெய்ந்நாண். [2]செறிந்தது. [3]ஏனும். [4]கருணையின். [5]தீராக். [6]இமையோர். [7]தொலைவிலாத. (3327)

71.—அரக்கர்சேனையின் முன்னணிவந்து இராமனோடு பொருதல்.

[1]ஓசனை நூற்றின் [2]வட்ட மிடை [3]விடா [4]துறைந்த சேனைத்
தூசிவந் தண்ணல் தன்னைப் போக்கற வளைந்து சுற்றி
வீசின படையு மம்பு [5]மிடைதலும் விண்ணோ ராக்கை
கூசின [6]பொடியா லெங்குங் [7]குமிழ்த்தன [8]வியோம கூடம்.

(இ - ள்.) நூறுயோசனைதூரம் வட்டமாக இடைவிடாது பொருந்தின சேனையின் முன்னணிவந்துபெருமையிற்சிறந்தவனான ஸ்ரீராமனைப் போக்கு இல்லாதபடிவளைந்து சூழ்ந்துகொண்டுவீசின படைக்கலங்களும் அம்புகளும் செறிதலும், தேவர்தம் உடல்கள்

கூச்சமடைந்தன; அப்போது எழுந்த தூளியால் ஆகாயத்தினிட மெங்கும் குமிழிகொண்டாற்போலாயின [பரவின]; (எ - று.)—பொடியால் என்பதற்கு-மயிர்ப்பொடிப்பினுலென்றுமாம். பி-ம்:—[1]யோசனே. [2]வட்டத்திடை. [3]அருது. [4]உற்ற. [5]மிடைதலின். [6]பொடியாவேனும், ஓடியாவேனும். [7]குமிழ்த்தனர். [8]ரோமக் கூட்டம். (3328)

72.—இமையோர் இராமனை யேத்துதல்.

கண்ணனே யெளியே [1]மிட்ட கவசமே கடலே யன்ன
வண்ணனே யறத்தின் வாழ்வே மறையவர் வலியே [2]மாரு து
ஒண்ணுமே [3]நீய லாதோ [4]ரொருவர்க்கிப் படைமே லூன்ற
எண்ணமே முடிந்தி யென்று வேத்தின ரிமையோ ரெல்லாம்.

(இ - ள்.) (அப்போது) தேவர்களெல்லாம்,—'கண்ணனே! எளியவராகிய எங்கட்கும் பாதுகாப்பாகப்பொருந்திய கவசமே! கடலையொத்த நிறத்தையுடையவனே! அறத்தின்வாழ்வே! மறையவர்க்கு வலிமையாகியிருப்பவனே! நீயல்லாத எவரேனும் ஒருவர்க்குப் பின்வாங்கிடாமல் [முதுகுகாட்டியோடாமல்] இப்படைமேல் எதிர்த்தல் ஒண்ணுமோ? (எம்முடைய) எண்ணத்தை [இராட்சசசங்காரத்தை] நிறைவேற்றுவாய்' என்று சொல்லித் துதித்தார்கள்: (எ-று.)—கண்ணன்-கண்ணுகுபவன். பி-ம்:—[1]விட்ட. [2]மற்ரோர்க்கு. [3]நின். [4]ஒருவர்க்குப், ஒருவரிப். (3329)

73.—முனிவர் அஞ்சி, 'ஸ்ரீராமன்வெல்க'என்று ஆசிகூறுதல்.

முனிவரே முதல்வ ராய வறத்துறை முற்றி னோர்கள்
தனிமையு மரக்கர் தானைப் பெருமையுந் [1]தரிக்க லாதார்
பனி [2]வரு கண்ணர் விம்மிப் பதைக்கின்ற நெஞ்சர் பாவத்து
அனைவருந் தோற்க வண்ணல் வெல்கவென் றாசி சொன்னார்.

(இ-ள்.) முனிவரே முதல்வராகிய அறத்துறையில் நிரம்பி நிற்பவர்,—(ஸ்ரீராமனுடைய) தனிமையையும் அரக்கரின் சேனைப் பெருமையையும் (கண்டு) தரிக்கமாட்டாதவராய், நீர்த்துளி வருகின்ற கண்களையுடையவரும் விம்மிப் பதைக்கின்ற நெஞ்சை யுடையவருமாகி, 'பாவத்தையுடைய அனைவரும் தோற்க; அண்ணல் வெல்க' என்று வாழ்த்துக்கூறினார்கள்: (எ-று.)-பி-ம்:-[1]தரிக்கலாற்ருர், தரித்திலாதார். [2]வருங். (3330)

வேறு.

74.—மற்றுமுள்ள தேவராதியரும் இராமனை வாழ்த்துதல்.

மற்றும் வேற றத்துள் நின்ற வான [1]நாட னைத்துளோர்
கொற்ற வில்லி வெல்க வஞ்ச மாயர் வீக குவலயத்து
உற்ற தீமை தீர்க வின்றொ டென்று கூறி னார்[2] நிலம்
துற்ற வெம்ப டைக்கை நீச [3]ரின்ன வின்ன சொல்லினார்.

(இ - ள்.) மற்றும்வேருக அறத்துள்நின்ற வானநாட்டில் முற்றவுள்ளவரெல்லாம், — 'வெற்றிபொருந்திய வில்லாளியான

ஸ்ரீராமன் வெல்க; வஞ்சனையுள்ள மாயாவிகள் அழிக; பூமியிற் பொருந்திய தீமை இன்றோடு தீரக' என்று கூறினார்கள்; நிலத்து நெருங்கிய கொடியபடைக்கலமேந்திய கையையுடைய நீசர்கள் இவ்வாறு இவ்வாறு கூறலானார்கள்: (எ - று.)—அரக்கர்கள் கூறியவற்றை மேல்மூன்று கவிகளிற் காண்க. இச்செய்யுள் அநேக பிரதிகளி லில்லை. பி - ம்:—[1]நாட்டு. [2]நிலத். [3]இன்னர். (3331)

75.—மூன்றுகவிகள்—இராமன் தைரியத்தைக்கண்டு அரக்கர்வியந்து கூறுதலைத் தெரிவிக்கும்.

[1]இரிந்த [2]சேனை சிந்தி யாரு [3]மின்றி யேகநின்று நம்
விரிந்த [2]சேனை கண்டி யாது மஞ்ச லின்றி வெஞ் [5]சரம்
[6]தெரிந்து [7]சேவ கன்றி றம்ப [8]வின்றி யெய்து செய்கையான்
புரிந்த தன்மை வெற்றி மேலு நன்று மாலி பொய்க்குமோ.

ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) நிலைகெட்டோடிய சேனை சிதறி எவருமில்லாமற் போய்விடவும், நம்முடைய பரந்த சேனையைக்கண்டு சிறிதும் அஞ்சுதலின்றி(த் தான் தனித்து) நின்று கொடிய அம்புகளை ஆராய்ந்து (இந்த) வீரன் மாறுபடுதலின்றி எய்து (பொருகின்ற) செய்கையால், (இவனது இச்) செய்கை வெற்றியினும் மேம்பட்டதே: மாலி பொய் கூறுவானோ? (எ - று.)

நம்மைக்கண்டமாத்திரத்து வானரசேனைகளெல்லாம் ஓடிச் சிதறிவிடவும் தான் மனத்திடம் குறைதலின்றி நம்மோடு எதிர்த்து நிற்கின்றான்: இவன் வெல்லவேணுமென்பதும் இல்லை: இவனது இச்செய்கையே வெற்றியைவிட மெச்சத்தக்கது: இவன் திறமை குறித்து மாலி முன்பு பாராட்டிக்கூறியது சிறிதும் பொய்படாதென்று இராக்கதர் கூறினரென்க. மாலி=மாலியவான்: இராமன் திறமையை மாலியவான் கூறியதைப் படைக்காட்சிப்படலத்துக் காண்க. எய்துபுரிந்த என்க. பி-ம்:—[1]இரிந்து. [2]தானை. [3]இன்றியேயும். [4]சமம். [5]தெரிந்த. [6]சேவகந். [7]இன்றிநின்றசெய்கையால், இன்றியே செய்வீரியம். (3332)

76. [1]புரங்க ளெய்த புங்க வற்கு முண்டு [2]தேர்பொ ருந்தினார்
பரந்த தேவர் [3]மாய னம்மை வேர றுத்த பண்டைநாள்
விரைந்து புள்ளின் மீது விண்ணு ளோர்க ளோடு மேவினான்
கரந்தி லன்த னித்தொ ருத்த னேரும் [4]வந்து காலினான்.

(இ - ள்.) முப்புரத்தை எய்தழித்த பரமற்கும் (பூமியாகிய) தேர்உண்டு: பரவியதேவர் துணையாகப் பொருந்தினார்; மாயன் நம்மை வேரறுத்த முன்னாளில் கருடப்புள்ளின்மேல் தேவர்களோடும் விரைந்து பொருந்தினான்: (இப்போதோ) தனித்த ஒருத்தன் ஒளியாதவனாய்க் காலினால்வந்து (நம்மை) எதிர்க்கின்றான்: (எ-று.)—நேரும்-முற்று. வேற்றுமையணி. பி - ம்:—[1]புரங்கடந்த. [2]தேர்ப். [3]மாய. [4]வந்தகாலனான். (3333)

77. தேரு மாவு மியானை யோடு சீய [1]மியாளி [2]யாதியா
மேரு மானு [3]மெய்யர் நின்ற வேலை யேழின் [4]மேலவால்
வாரும் வாரு மென்ற ழைக்கு மானி டற்கிம் மண்ணிடைப்
பேரு மாறு [5]நம்மி டைப்பி ழைக்கு மாறு மெங்ஙனே.

(இ-ள்.) தேரும் குதிரைகளும் யானையுடன் சீயமும் யாளியும் ஆகியாக மேருவையொத்த மேனியையுடைய காலாள் வீரருடன் நின்றசேனைகள், ஏழுகடல்களினும் மிக்கனவாய் உள்ளன; (அப்படியிருக்கவும்) 'வாருங்கள், வாருங்கள்' என்று அழைக்கின்ற மானுடற்கு இந்தப்பூமியில் தப்பிப்போகும் வகையும் நம்மிடத்து உயிருய்யும்வகையும் எங்ஙனே? (எ-று.)—ஆல்-தேற்றம். பி-ம்:—[1]ஆளி [2]ஆகியாய். [3]என்ன, மேய, மெய்ய. [4]மேலவாய், மேலவா, வெய்யவாய். [5]நம்முழைப். (3334)

78.—இராமன் வில்நாணொலியை எழுப்புதல்.

என்று சென் [1]றி ரைத்தெ ழுந்தோர் சீய வே [2]ற டர்த்ததைக்
குன்று [3]சூழ்வ ளைத்த போற்றொ டர்த்த சேனை கூட லும்
நன்றி தென்று ஞால மேழு நாக மேழு [4]மா னுதன்
வென்றி வில்லை வேத நாத னாணெ றிந்த [5]வேலைவாய்.

(இ-ள்.) என்று (தம்முட்) சொல்லியவண்ணம் (அரக்கர்) சென்று ஆரவாரித்தெழுந்து, (தனியே) ஓர் ஆண்சிங்கம் பொருததை யானைகள் சூழ வளைத்ததுபோலத் தொடர்ந்தசேனை (இராமனைச்) சுற்றிக்கொள்ளுதலும், 'இது நன்று' என்றுசொல்லி, கீழேழுலகமும் மேலேழுலகமும் ஒப்பாகப்பெற்ற [பெரும்பாரமமைந்த] தன்னுடையவெற்றிவில்லை வேதநாதன் நாணெறிந்தபோதில்,—(எ-று.) 'புலர்ந்த' என மேற்கவியோடு முடியும் குன்று - உவமவாகுபெயரால், யானையைக் காட்டிற்று. பி-ம்:—[1]அடர்த்திரைத்து. [2]எதிர்ந்ததை, அடர்ந்ததை. [3]வந்துசூழ்வளைத்த போற்றொடர்ந்து, வந்து சூழ்வளைந்தபோற்றொடர்ந்த. [4]ஆன. [5]எல்லைவாய். (3335)

79.—இருகவிகள்—அரக்கச்சேனையில் துர்நிமித்தந் தோன்றியமை கூறும்.

கதம் [1]பு லர்ந்த சிந்தை [2]வந்த காவல் யானை [3]மாலொடு
மதம் [4]பு லர்ந்த நின்ற வீரர் வாய் [5]பு லர்ந்த மாவெலாம்
பதம் [6]பு லர்ந்த [6]வேக மாக வாள ரக்கர் பண்புசால்
விதம் [7]புலர்ந்த தென்னின் வென்ற வென்றி சொல்ல வேணுமோ.

(இ-ள்.) காவலாகவந்த யானை,—மதமயக்கத்தோடு மதமும் மாறிவிட்டன; மனத்திற் பொங்கிவந்த கோபமும் மாறிவிட்டன; (அங்கு) நின்ற வீரரின் வாய் புலர்ந்தன; குதிரைகளெல்லாம், கால்வேகம் குறைந்தன; நாகம்போன்ற பெருந்தோற்றமுடைய கொடிய அரக்கரின் (போர்செய்யும்) பண்புமிக்க நிலைமையும் மாறிவிட்டதென்றால், (இராமபிரான்) வென்ற வென்றியின் தன்மையைச் சொல்லவேண்டுமோ! (எ-று.)

வேகம்ஆக அரக்கரின் போர்ப்பண்பு கான்றவிதம் என்றும் உரைக்கலாம். வென்றவென்றி சொல்லவேணுமோ என்பதற்கு - இங்ஙனம் அரக்கர் பக்கத்துத் திமித்தந்தோன்றியதனுல் அவர் களின் வெற்றியைப்பற்றி நாம் கூறவேண்டியதில்லை யென்றலும் ஒன்று. மாகப் =மஹாகம்: பேராகாயம். பி - ம்:—[1]புலந்தசிந்தை. [2]வெந்த, வந்து. [3]மாவொடும். [4]புலந்து, புலர்ந்து. [5]புலர்ந்த. [6]வேக மோய. [7]புலந்தது...வென்றி, புலம்புலர்ந்தவென்றியன்று, புலம் புலர்ந்த வென்றியின்று, புலர்ந்தவென்றியின்றுவேறு. (3336)

80. [1]வெறித்தி ரிந்த வாசி யோடு [2]சீய மாவு மீளியும்
[3]செறித்த மைந்த [4]சில்லி யென்னு மாழி கூடு தேரெலாம்
[5]முறித்தெ றிந்து முந்த யானை வீசு மூசு பாகரைப்
[6]பிறித்தி ரிந்து [7]சிந்த [8]வந்தொ ராகு லம் [9]பி றந்ததால்.

(இ - ள்.) சிங்கமும் பேய்களும், திகைத்து நிலைகெட்டோடிய குதிரையுடனே(தாம்)கட்டப்பட்டிருந்த சில்லியென்னப்படும் சக்க ரங் கூடியதேரை யெல்லாம் முறித்தெறிந்து முற்பட்டுப்போகவும், யானைகள் (அங்குசத்தை) வீசுகின்ற நெருங்கிய பாகரை உயிர் போக்கி நிலைகெட்டுச் சிதறவும், (அங்கே அரக்கச்சேனையில்) ஒரு கலக்கமான நிலை வந்து தோன்றிற்று; (எ - று.) பி - ம்:— [1]வெறிந்திரிந்து, எறித்திரிந்த, வெறித்திரிந்து [2]சீயமாவியாளியும், சீயமீளியாளியும் [3]செறிந்து. [4]சில்லிபுல்லுமாழி கூடுதேரெலாம், சில்லிபுல்லு மாழியோடுகூடுதேர்,முந்துசில்லிபுல்லுமாழிகூடுதேர், சில்லியென்னு மாழியோடுதேரெலாம். [5]முறிந்தெறிந்துமுந்த, முறிந்தெழுந்த, முறிந்தெழுந்தமுந்த, முறிந்தெழுந்தணிந்த, முறிந் தெழுந்தமுற்கை, முறித்தெழுந்தமுற்கை. [6]பிறந்திருந்து, பிறிந் திரிந்து. [7]சிந்தை. [8]நொந்து. [9]பிறந்த. (3337)

81.—இதுவும் அடுத்தகவியும்—ஸ்ரீராமன் துர்நிமித்தந் தோன்றிய அரக்கச்சேனையின்மீது அம்புஏவியதைத் தெரிவிக்கும்.

[1]இந்நி மித்த மிப்ப டைக் [2]கி டைந்து வந்த டுத்ததோர்
[3]துந்நி மித்த மென்று கொண்டு வானு ளோர்கள் துள்ளினர்
[4]அந்நி மித்த முற்ற போத ரக்கர் [5]கண்ண ரங்கமேல்
மின் [6]னிமிர்த்த வன்ன வாளி வேத நாதன் வீசினன்.

(இ - ள்.) இந்த நிமித்தங்கள் இந்த (இராக்கத) சேனைக்கு இடையூறுவந்து அடுத்ததாகிய ஒப்பற்ற துன்னிமித்தமென்று (மனத்துக்) கொண்டு வானுளோர்கள் துள்ளினர்கள்; அந்த நிமித்தங்கள் தோன்றியபோது அரக்கர்வருந்த, அவர்மேல் மின் னலைநிமிர்த்தாலொத்த அம்புகளை வேதநாதனுகிய ஸ்ரீராமன் எறிந் தான்; (எ - று.)—கண்ணரங்க, கண்-தமிழுபசருககம். பி - ம்:— [1]என்னிமித்தம், எந்நிமித்தம். [2]இடந்துடித்தடுத்தது, இடத்துவந் தெடுத்தது. [3]துன்னிமித்தம். [4]அன்னிமித்தம். [5]மேலரங்குகள், மேலரங்குதன், மேலவாங்குதன். [6]நிமிர்த்தது. (3338)

82. ¹ஆளி மேலு மாளின் மேலு மானை மேலு மாடன்மா
மீளி மேலும் வீரர் மேலும் வீரர் ²தேரின் மீதினும்
³வாளி மேலும் வில்லின் மேலு மண்ணின்மேல் ⁴வளர்ந்தமாத்
தூளி ⁵மேலு மேற வேற வீரன் வாளி தூவினான்.

(இ - ள்.) வீரனான ஸ்ரீராமன், காலாட்களின்மீதும் ஆனைமேலும் ஆடுந்தன்மையுள்ள குதிரைமேலும், (தேர்களிற் பூட்டிய) யாளிமேலும், பேய்களின்மேலும், (தேரையோட்டுகின்ற) வீரர்மேலும், வீரரேறிய தேரின்மேலும், (அவர்கள் எய்த) அம்புகளின்மேலும், (அம்புகளைச் செலுத்திய) வில்லின்மேலும், (சேனைபுடைபெயர்ச்சியால்) பூமியின்மீது பெருகித் தோன்றிய மிக்கதூளிகளினும் மேன்மேலும் மிக அம்புகளைத்தூவினான்; (எ - று.)

சேனைகளின் புடைபெயர்ச்சியால் மண்தூளி மேன்மேலும் மிகுவதாயிற்றென்க. இராமனெய்த அம்புகளின்மிகுதியை விளக்க 'தூளியினும்மிக அம்பு தூவினான்' என்றார். இனி, மிகுதியாக அம்புதூவியதை தூள்பறக்க எய்தானென்ற வழக்குபற்றிக் கூறினதாகக் கொள்வாருமுளர். பி - ம்:—¹யாளி. ²தேரின்மேலும் வெவ், தேரின்மீதரும். ³வாளின். ⁴எழுந்தமா. ⁵மேல. (3339)

83.—இதுமுதற் பதினாறு கவிகள் - அரக்கர்சேனைகள் பட்ட வகையை வருணனைவகையாற் கூறும்.

¹மலைவி ழுந்த வாவி ழுந்த மான யானை ²மன்னர்செந்
தலைவி ழுந்த ³வாவி ழுந்த ⁴தாய வாசி தாளறும்
சிலைவி ழுந்த வாவி ழுந்த ⁵திண்ப தாகை திங்களின்
கலைவி ழுந்த வாவி ழுந்த வெள்ளெ யிற்ற காடெலாம்.

(இ - ள்.) சீற்றமுள்ள யானைகள்,—மலைவிழுந்தவாறு விழுந்தன; தாவின குதிரைகள்,—வீரர்களின் செந்தலை விழுந்தவாறு விழுந்தன; அடியற்ற விற்கள் விழுந்தவகையாக வலிய பெருங் கொடிகள் விழுந்தன; வெள்ளிய கோரப்பற்களின் தொகுதியெல்லாம், திங்களின்கலைகள் விழுந்தவகையாக விழுந்தன; (எ - று.)

முதலடியிலும் நான்காமடியிலும் வந்துள்ள மலை திங்களின் கலையென்பன - அப்பிரகிருதமான உபமானங்கள். மற்றையிரண்டடிகளிலுள்ள மன்னர் தலை, தாளறுஞ்சிலை என்பன-வர்ண்யங்களான உபமானங்கள் பதாகை-பெருங்கொடி பி - ம்: ¹வரை. ²மன்னர். ³ஆய். ⁴தானைவாசிதள்ளுறுஞ், தாயவாசிதாளிறும், தாரைவாளிதாளறுஞ். ⁵தேர்விழுந்த. (3340)

84. வாடை நாலு பாலும் வீச மாக ¹மேக மாலைவெங்
கோடை மாரி ²போல வாளி ³கூட வோடை யானையும்
ஆடன் மாவும் வீரர் தேரு மானு ⁴மாள்வ தானவால்
பாடு பேரு மாறு ⁵கண்டு ⁶கண்செல் பண்பு ⁷மில்லையால்.

(இ - ள்.) நாற்புறத்திலுமாகக் காற்றுச் சுழற்றியடிக்கப் பெரியவானத்திலுள்ள மேகவரிசைகள் கொடுங்கோடையிற் பெய்யும் மாரிபோல இராமசரம் மிகுதியாகக்கூடுவதனால்-நெற்றிப் பட்டமணிந்த ஆனைகளும் வலியகுதிரைகளும் வீரரின்தேர்களும் பதாதிகளும் மாள்வதாயின: (அங்ஙனம் மாள்வதனால்), பக்கத்தே பெருகிச் சென்ற (உதிரமயமான) ஆற்றைக் கண்டு கண்செல்கின்ற பண்பும் இல்லையாயின; (எ - று.)

இறந்த பிராணிகளினுடலினின்று கண்கொண்டுபார்க்கமுடியாதபடி வெகுகோரமாக இரத்தநதி பெருகலாயிற்றென்றவாறு. ஆடல்-அடல் என்பதன் நீட்டல்: விகாரங்கொள்ளாமல், ஆடல்-ஆடுந்தன்மையுள்ள எனினுமாம். பி - ம்:—[1]மோக, லோக. [2]போலும். [3]கூடியோட. [4]மாள்வதானவர். [5]கொண்டு. [6]பண்செய், கண்செப், போர்செய், பண்சொல். [7]இன்மையால். (3341)

85 விழித்த கண்கள் [1]கைகள் மெய்கள் வேற லைக்க ழுத்தினில்,
தெழித்த வாய்கள் செல்ல லுற்ற தாள்கள் தோள்கள் செல்வினைப்,
பழித்த [2]வாளி [3]சிந்த நின்று [4]பட்ட வன்றி [5]விட்ட [6]கோல்,கழித்த
வாயு தங்க ளொன்று செய்த தில்லை [7]கண்டதே.

(இ-ள்.) (இராமபிரானைச்சினந்து) விழித்த கண்களும் (தாக்க ஓங்கிய) கைகளும் (மேல்விழுந்து அமுக்கமுயன்ற) உடல்களும் கழுத்தின்மேலிருந்து வெல்லுதலைப்பழித்த வாய்களும் (இட்டித் தாக்க) நடக்கலுற்ற தாள்களும் (மோதித்தாக்கமுயன்ற) தோள்களும் ஆகியவை,—மேகத்தைப் பழித்த [மேகத்தினும்மிகுதியாகப் பொழிகின்ற] அம்புகளை (ஸ்ரீராமன்) தூவ அழிந்தனின்றனவன்றி, அவ்வீரர் விட்ட அம்பும்(உறை)கழித்த ஆயுதங்களும்(ஸ்ரீராமனை) ஒன்றுசெய்யக் கண்டதில்லை; (எ - று.)

ஸ்ரீராமனை அரக்கர்படைக்கலமும் அம்புகளும் ஒன்றுஞ் செய்யமாட்டாவாயினவென்பது, ஈற்றடியிற் கூறிய பொருள. ஸ்ரீராமன் வீரம் கண்கூடாகத்தெரிவதனால், மனப்பூர்வமாகவன்றி வெளிக்குப் பழித்தன வென்பார் 'வேறலைக்கழுத்தினில் தெழித்த வாய்கள்' என்றுசொன்னலாம்: வேறல்-வெல்லுதல் பி - ம்:—[1]கைகள்மெய்கள் விற்கள் வேல்கள் வாளிகள், கைகள் விற்கள் வேல்கள் வாள்கள் விண்ணினுள். [2]வாசி. [3]சீறி. [4]பட்டதன்றி, பட்டஇன்றி. [5]இட்ட. [6]தோல். [7]கண்டதால், கண்டிரே. (3342)

86. தொடுத்த வாளி யோடு விற்று ணிந்து [1]வீழ முன்றுணிந்து
எடுத்த வாள்க ளோடு தோள்க ளிற்று [2]வீழ மற்றுடன்
கடுத்த [3]தாள்கள் கண்ட மாகு மெங்ங னே [4]க லந்துநேர்
[5]தடுத்த வீரர் தாமு மொன்று செய்யு மா [6]ச லத்தினால்.

(இ - ள்.) (அரக்கவீரர்) தொடுத்த அம்புகளோடு விற்கள் கண்ணெதிரில் துணிந்துவீழும்:(அம்புர்வில்லும் பழுதுபட்டனவே யென்று ஏங்கிப் பின்பு அவர்கள்) துணிந்தெடுத்த வாள்களோடு

தோள்கள் இற்றுவீழும்: மற்றும் உடனே(அஞ்சிஓடுவோமென்று) வேகங்கொண்ட (அவர்களுடைய) தாள்கள் துண்டமாகும்: (இவ்வாறாயின்), அரக்கவீரர் நேரேகலந்து (இராமபாணங்களைத்) தடுத்துத் தாமும் கோபத்தினால் (அவ்விராமபாணங்கட்கு மாறாக) ஒன்று செய்யும் வகை எங்ஙனே? (எ-று.)

இதனால், வீரர்பட்டமை கூறப்பட்டது. முதலிரண்டடிகட்கு-தாம் முன்னர்த்தொடுத்து விடுத்த அம்புகளோடுவில்லும் துணிந்துவீழ்வதற்குமுன்னமே, பின்பு அவ்வரக்கர் துணிந்த கைகளிலெடுத்தவாள்களும் அவற்றை யேந்திய கைகளும் துண்டுபட்டுவிழுமெனினுமாம்: முறைபிறழ்வுயர்வுநவிற்சியணி பி-ம்:—[1]வீழுமென். [2]வீழுமற்றது, வீழுமுறறுடன் [3]வாள்கள். [4]கலந்துடன். [5]தடுத்த. [6]சலத்தினர், சலத்தினன். இங்கே சிலபிரதிகளில் "எட்டு" (89), "ஊர" (88), "குரந்துணிந்து" (87), "தொடுத்த" (86) என்ற முறையிற் பாடல்கள் காணப்படுகின்றன. (3343)

87\. குரந்[1]து ணிந்து கண்[2]சி தைந்து பல்ல ணங்[3]கு லைந்துபேர்
உரந்[1]து ணிந்து வீழ்வ தன்றி யாவி யோட வொண்ணுமோ
சரந்து ணிந்த வொன்றை நூறு சென்று சென்று [5]தள்ளலால்
வரந்[6]து ணிந்த வீரர் போரின் முந்த வுந்து வாசியே.

(இ-ள்.) (இராமபிரானுடைய) அம்பு இலக்காகக்குறித்த ஒரு பொருளின்மீது நூறாகச்சென்று சென்றுவீழ்த்துவதனால், (தாம் பெற்ற) வரத்தினால் துணிவுகொண்ட வீரர் போரில் முந்துமாறு செலுத்திய குதிரைகள்,-குளம்புகள் துணிந்தும் கண்சிதைந்தும் பல்லுடன் மேல்வாயும் அழிந்தும் பெரியமார்புதுணிந்தும் வீழ்வதல்லாமல், உயிருடன் தப்பியோடத்தான் முடியுமோ? (எ-று.)

இதனால், குதிரைபட்டமை கூறப்பட்டது. பல்லணம் என்று ஒரு சொல்லாகக்கொண்டு-முதுகிலிட்ட தவிசுஎன்றல் மிகப் பொருந்தும்: பல்லணம்=பல்யயநமென்ற வடசொல்லின் சிதைவு. பி - ம்:—[1]துணிந்த. [2]சிதைந்த, சிதர்ந்து. [3]குலைந்த. [4]தள்ளினால். [5]துணிந்துவந்தவீரர் போரிலுந்து. (3344)

88\. ஊர [1]வுன்னின் மு ன்பு பட்டு யர்ந்த வெம்பி ணங்களால்
பேர [2]வொல்வ தன்று பேரி னுயி ரம்பெ ருஞ்சரம்
தூர [3]வொன்று நூறு கூறு [4]பட்டு குந்து யக்கலால்
தேர்க ளொன்று [5]வந்த பாவி யென்ன செய்கை [6]செய்யுமே.

(இ - ள்.) ஊர்ந்துசெல்லக்கருதின் முன்புஇறந்து மேடாகக் கிடக்கின்ற கொடியபிணங்களால் (இடம்விட்டுப்) போகவும் கூடியதாக இல்லை; (அரிதிற்) பேர்ந்துசென்றாலோ (ஸ்ரீராமன் விடுகின்ற) ஆயிரக்கணக்கான பெரிய அம்புகள் நிரம்ப அடைதலால் ஒருதேர் நூறுபகுதியாகிச் சிந்திவிடும்: (ஆகவே), சோர்வு கொள்வதன்றி, தேர்களென்று வந்த பாவி என்ன செய்கை செய்யும்? (எ - று.)

இதனால், தேர்கள்பட்டமை கூறப்பட்டது. இரதிகர்களின் செயலை 'ஊரவுன்னின்' என்றார். நினைத்தபடி செல்லப்பெருமையால், தேர்களை 'பாவித்தேர்' என்றது. பி-ம்:-[1]உன்னி. [2]உண்பது, ஒன்பது. [3]நூறு கூறு சென்று. [4]பட்டுகுத்துயக்கலால், பட்டுகுத் தயக்கலால். [5]வந்தவாவி. [6]செய்யுமோ. (3345)

89. எட்டு வன்றி சைக்க ணின்ற [1]யாவும் வல்ல யாவரும்
இட்டி னுய்ந்த போகி லார்க [2]ளென்ன நின்ற [3]கேள்வியால்
முட்டும் வெங்கண் [4]மான யானை யம்பு [5]ராய முன்னமே
பட்டு வந்த போல்[6]வி ழுந்த வென்ன தன்மை பண்ணுமே.

(இ-ள்.) முட்டுந்தன்மையுள்ள கொடிய கண்களையும் ரோஷத்தையும் படைத்த யானைகள்,—அம்புஉராய்ந்ததனால், முன்னமே இறந்து வந்தன போல விழுந்தன: (அவை), என்னசெய்கை செய்ய மாட்டும்? 'வலிய, எட்டுத்திசைகளில்நின்ற எல்லாச்சேனைகளும் வலிமைபெற்ற எல்லாவீரர்களும் இட்டினால் உய்ந்துபோகார்' என்னுமாறு கேள்வியோடு நின்றன; (எ - று.)

இதனால், யானைகள் பட்டமை கூறப்பட்டது. என்னநின்ற கேள்வியால்— இவ்வாறானசொல் எங்கும் கேட்கப்படுமாறு, அந்தப் போர்க்களத்தில் நிகழ்ந்தன வென்க. இனி, என்றகாரணத்தால் அப்போரின் கடுமையைக் கேட்டமாத்திரத்தோடு நின்றன என்றுமாம். முன்னமே இறந்தபொருள் விழுந்தனபோல,யானைகள் அவ்வளவு இலகுவாக விழுந்திட்டன என்பது, பின்னிரண்டடிகளிற் கூறிய பொருள். பி-ம்:—[1]யாதுமல்லவாய்வரும், யாதுமல்லயாவரும். [2]என்று. [3]கேள்வியாம். [4]மாலியானை. [5]பாய. [6]விழுந்தது. ( )

90. வாவி கொண்ட புண்ட ரீக[1]மன்ன கண்ணன் வாளி யொன்று, [2]ஏவி னுண்டை நூறு கோடி கொல்லு மென்ன [3]வெண்ணுவான், [4]பூவி னண்டர் கோனு மெண்ம யங்கு மன்ன போரின் வந்து, ஆவி கொண்ட கால னூர்க டுப்பு [5]மென்ன [6]தாகுமே.

(இ - ள்.) நீர் நிலையிலுள்ள செந்தாமரைமலரையொத்த கண்களையுடையவனான ஸ்ரீராமன், ஒருபாணத்தை யேவினால் அந்த வில்லுண்டை நூறுகோடிபிராணிகளைக்கொல்லுமென்றகாரணத்தினால், (இறந்த உயிர்களை) எண்ணுபவனான பூவிலுறைகின்ற தேவர்தலைவனான பிரமதேவனும், எண்ணுவதில் திகைப்புக்கொள்பவனானான்; அந்தப்போரில்வந்து (இறந்தபிராணிகளின்) உயிரைக் கொண்ட யமனானவனுடைய விரைந்துதொழில்செய்யுந்தன்மையும் எப்படிப்பட்டதாகுமோ? (எ - று.)

இறந்தவுயிர்களைக் கணக்கிடுதலும் ஆகாது; வில் விரைந்து கொல்வதற்கேற்ப யமனால்விரைந்து அவ்வுயிர்களைக் கொண்டு செல்லுதலு மாகாதென்று, இராமபிரானது வில் செய்யும் கொலைத்தொழிலைத் தொடர்புயர்வுநவிற்சியணி வகையால் வியந்தவாறு. பி-ம்:-[1]மன்னனன்ன, அன்னகண்ண. [2]ஏவிலுண்ட. [3]உன்னுவான். [4]பூவிலுண்டகோனுமெய். [5]அன்னது. ஆகுமோ, ஆகுமால்.

91. கொடிக்கு லங்கள் தேரின் மேல யானை மேல கோடைநாள்
இடிக்கு லங்கள் வீழ வெந்த காடு போலெ ரிந்தவால்
முடிக்கு லங்கள் கோடி கோடி சிந்த வேக முற்றுரு
வடிக்கு லங்கள் வாளியோட [1]வாயி னூடு தீயினால்.

(இ-ள்.) கூரிய அம்புக்கூட்டங்கள் கோடிக்கணக்கான (அரக்கரின்) முடிக்குலங்களைச் சிந்துமாறு வேகம்நிரம்பி ஓடுகையில், (அவ்வம்புகள் தம்) வாயிலிருந்துகக்கிய தீயினாலே, தேரின்மீதும் யானைமீதுமுள்ள கொடிக்குலங்கள் கோடைக்காலத்தில் இடிக்குலங்கள் வீழ்வதனால் வெந்த காடு போல எரிந்தன; (எ-று.)-வடி வாளிக்குலங்கள் என்று மாறுக. முற்றுரு-செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட்டெச்சம். உறு-துணைவினை. பி-ம்:—[1]வாயினூடு. (3348)

92. அற்ற வேலும் வாளு [1]மாதி யாயு தங்கள் [2]மீதெழுந்து
உற்ற வேக முந்த வோடி யோத வேலை யூடுறத்
துற்ற வெம்மை கைம்மி கச்சு றுக்கொ ளச்[3]சு வைத்ததால்
[4]மற்ற நீர்வ றந்து [5]மீன்ம றிந்து மண்செ றிந்தவால்.

(இ-ள்.) (இராமபாணங்களினால்) முறிந்துபோன வேலும் வாளும் முதலிய ஆயுதங்கள், (வீரர்கள் வலிமைகொண்டெறிந்ததனால்) பொருந்திய வேகம் செலுத்தமேலெழுந்து ஓடி, நீர்ப்பெருக்கைக்கொண்ட கடலினுள்ளே பொருந்துகையில், (தம்மிடத்து) நெருங்கிய வெம்மை மிக்கிருக்கச் சுறுசுறுவென்னும் ஒலிதோன்றப் பருகியதனால், அந்த(க் கடலின்) நீர்வற்றி (அக்கடலில்வாழும்) மீன் உயிர்மடங்கி [இறந்து] மண்ணில் நெருங்கின; (எ-று.) பி-ம்:—[1]ஆகி. [2]மீ. [3]துகைத்தவால். [4]வற்றி. [5]பின். (3349)

93. போர[1]ரி ந்த மன்று ரந்த புங்க வாளி பொங்கினார்
ஊ[2]ரெ ரிந்த நாள்து ரந்த தென்ன மின்னி யோடலாம்
[3]நீரெ ரிந்த வண்ண மேநெ ருப்[4]பெ ரிந்த நீணெடும்
தேரெ ரிந்த [5]வீரர் தஞ்சி ரம்[6]பொ டிந்து [7]சிந்தவே.

(இ-ள்.) போரிற் பகைவரையடக்கவல்ல ஸ்ரீராமன் செலுத்திய கூர்முனையுள்ள அம்பு, பொங்கிவந்த அசுரர்களின் திரிபுரம் எரிந்த நாளில் செலுத்திய அம்புஎன்னுமாறு மின்னி ஓடுவதனால் (கடலின்) நீர் எரிந்தது போலவே, வீரர்தம்சிரம் பொடியாகிச்சிந்துமாறு நெருப்புப்பற்றியெரிந்தன: (அதனால்), மிகநீண்ட தேர்களும் எரிந்தன; (எ-று.)—'நீரெரிந்தவண்ணம்' என்று கடலின் ஆக்நேயாஸ்திரம் விடுத்தபோது அந்நீரெரிந்ததை உவமைகூறினார். பி-ம்:—[1]எறிந்தமன். [2]எறிந்த. [3]ஊர். [4]எரிந்து. [5]வீரரஞ். [6]பொதிந்த, பொரிந்து. [7]சிந்துமே. (3350)

94. பிடித்த வாள்கள் வேல்க ளோடு தோள்கள் பேர ராவெனத்
துடித்த [1]யானை மீதி ருந்த போர்தொ டங்கு சூரர்தம்
மடித்த [2]வாய்ச்செ ழுந்த லைக்கு லம்[3]பு ரண்ட [4]வானில்மின்
இடித்த வாயி னிற்ற மாம லைக்கு லங்க ளென்னவே.

(இ-ள்.) யானையின் மீதிருந்து போர்தொடங்குகின்ற சூரருடைய தோள்கள், பிடித்த வாள்களுடனும் வேல்களுடனும் (இற்றுப்) பெரிய அராப்போலத் துடித்தன: (அவர்களுடைய சினத்தினால்) மடித்த வாயைக்கொண்ட செழுமையான தலைகளின் தொகுதிகள்,—வானத்தில் இடிதாக்கிய இடத்திலே இற்றுப் போன பெரியமலைச் சிகரத்தொகுதிபோல, (இற்றுப்) புரண்டன; (எ-று.) மின்-இலச்சணையால் இடியையுணர்த்திற்று. மலை-சிகரத்துக்கு, இலக்கணை பி-ம்:—[1]வானம். [2]வாயசெங், வாய்கள்செங். [3]புரண்டு. [4]வானமின். (3351)

95. கோர வாளி [1]சீய மீளி கூளி யோடு [2]ஞாளியும்
போர [3]வாளி னோடு [4]தேர்கள் நூறு கோடி பொன்றுமால்
நார வாளி ஞால வாளி [5]ஞான வாளி நாந்தகப்
பார வாளி [6]வீரவாளி [7]வேகவாளி பாயவே.

(இ-ள்.) நாரங்களையாள்பவனும் இவ்வுலகையாள்பவனும் ஞானஸ்வரூபியும் நாந்தகமென்ற பெருமைபெற்ற வாட்படையை யுடையவனுமாகிய வீரத்தையாள்பவனான ஸ்ரீராமனுடைய வேக முள்ள அம்புகள் பாயவதனால், பயங்கரமான யாளிகளும் சிங்கங்களும் வலிமையுள்ள பேய்களோடு செந்நாயும் (ஓடுகின்ற) சாரதியுடனே உயிர்போய்விட, தேர்கள் நூறுகோடி அழிவனவாயின; (எ-று)—ஆளிமுதலியவை, தேரிற்கட்டியவை. நாரம் - ஆன்மா. 'போ' என்ற பகுதி விரித்தலால் ரகரவொற்றும், அகரவிகுதியும் பெற்று 'போர' என்று வந்தது: இனி, போர-போரினுள்ள எனக் குறிப்புப்பெயரெச்சமுமாம். பி-ம்:—[1]சீயமாளி. [2]நாளியும். [3]வாளியோடு. [4]தோள்கள். [5]நாகவாளி. [6]வீரன். [7]ஏகவாளி. (3352)

96. ஆழி [1]பெற்ற தேர ழுந்து மாள ழுந்து [2]மாளொடச்
சூழி பெற்ற மா[3]வ ழுந்தும் வாசி யுஞ்[4]ச ரிக்குமால்
பூழி பெற்ற வெங்க ளங்[5]கு ழிப்ப டப் [6]பொழிந்தபேர்
ஊழி பெற்ற [7]வாழி [8]யென்ன சோரி நீரி னுள்ளரோ.

(இ-ள்.) புழுதிபெற்ற கொடிய போர்க்களம் குழிப்படும்படி (வீரர்மேனியிலிருந்து) பொழிந்ததாகிப் பெரியயுகாந்த காலமுண்டாக்கிய கடலென்னுமாறு (தோன்றிய) இரத்தத்தின் பெருக்கினுள்ளே சக்கரங்களைக் கொண்டதேர், அழுந்தும்: காலாட்படை, அழுந்தும்: பாகனுடனே நெற்றிப் பட்டத்தைப்பெற்ற அப்படிப் பட்ட [மிகச்சிறந்த] யானை, அழுந்தும்; குதிரையும் சுழித்து நிற்கும்; (எ - று.)—ஆல், அரோ-ஈற்றசைகள். பி - ம்:—[1]அற்ற. [2]ஆளொடும், ஆளுடன். [3]எழுந்து. [4]சுருக்குமால். [5]குளம்படப், குழம்பிடைப். [6]பொழிந்து. [7]வேலை. [8]அன்ன. (3353)

97. அற்றுமே [1]லெழுந்த வன்சி ரங்கள் தம்மை [2]யண்மிமேல்
ஒற்று மென்ன வங்கு மிங்கும் [3]விண்ணு ளோர்[4]ரோ துங்குவார்
[5]சுற்றும் வீழ்த லைக்கு லங்கள் [6]சொல்லு [7]கல்லின் மாரிபோல்
எற்று மென்று [8]யாரு மோரு [9]மேங்கு வா [10]ரி ரங்குவார்.

(இ - ள்.) 'அற்று மேலேயெழுந்த வலிய தலைகள் தம்மை நெருங்கி மேலேபடும்' என்று விண்ணுளோர்கள் அங்குமிங்கும் ஒதுங்குவார்: சுற்றிலும் வீழ்கின்ற தலைக்குலங்கள் சொல்லப்படுகின்ற கல்லின்மாரிபோல(த் தம்மீது)தாக்குமென்று பூமியில்வாழ்வாரும் ஏக்கமுற்று (அஞ்சி) வருந்துவார்:(எ-று.)—விண்ணுளோர் பாருளோர் என்ற இருதிறத்தார்க்கும் தாக்கி வருத்தமுண்டாக்க வல்லது அப்போதைய போரென்க. பி - ம்:—[1]எழுந்துவெஞ். [2]அண்மையில். [3]வானுளோர் [4]ஒடுங்கினர், ஒதுங்கினர். [5]சுற்று. [6]சொல்லுங் [7]கல்லு [8]பாரினெங்கும். [9]வாழுவார், வாழ்குவார். [10]இரங்கினர், இறங்குவார். (3354)

98. மழைத்த மேகம் [1]வீழ்வ வென்ன [2]வான மான வாடையிற், சுழித்து வந்து [3]வீழ்வ வென்ன மண்ணின் மீது துன்னுமால், அழித் [4]தொடுங்கு கால மாரி [5]யன்ன வாளி [6]யோளியால், விழித் தெழுந்து வானி னூடு [7]மொய்த்த பொய்யர் மெய்யெலாம்.

(இ - ள்.) (உலகத்துப்பிராணிகளையெல்லாம்) அழித்தலால் (உலகம்) ஒடுங்குகின்ற (யுகாந்த) காலத்து மாரியையொத்த (இராமபிரானுடைய) பாணங்களின் தொகுதியால் (அறுபட்டுச் செய்வதறியாது) திகைத்து மேலெழுந்து ஆகாயத்து மொய்த்த பொய்யருடைய உடலெல்லாம்,—மழைபொழியுந் தன்மையைக் கொண்ட மேகம் வீழ்வனபோலவும் வானத்துச்செல்லும் விமானங்கள் பெருங்காற்றினாற் சுழலுதலை யடைந்து வீழ்வனபோலவும் மண்ணின்மீதுவந்து நெருங்கவிழும்; (எ - று.)

கீழ்ச்செய்யுளில் சிரங்கள் வீழ்வதை வருணித்த கவி, இச்செய்யுளில் உடல்விழும் வகையை வருணிக்கின்றாரென்க. பி - ம்:—[1]வீழ்வது, வாழ்க. [2]வானமானவாடையில். [3]வீழ்வது. [4]ஒதுங்கு. [5]அம்புபாய, யாளியன்ன, ஆரியன்றன், அன்னமன்னன். [6]வாளியால், முன்னமே. [7]மொய்ய. 'சுழித்து வீழ்வதென்ன மண்ணின் மீதுவந்து துன்னுமால்' என்று சிலபிரதிகளில் இரண்டாமடி, ()

வேறு.

99.—அரக்கர்கள் செய்த போர்.

தெய்வநெடும் படைக்கலங்கள் [1]விடுவர்சிலர் சுடுகணைகள் சிலையிற் கோலி, எய்வர்சில ரெறிவர்சில ரெற்றுவர் [2]சுற் றுவர்மலைகள் பலவு மேந்திப், பெய்வர்சிலர் பிடித்துமெனக் கடுத்துறுவர் படைக்கலங்கள் பெறாது வாயால், வைவர்சிலர் தெழிப்பர்சிலர் வருவர் சிலர் திரிவர்சிலர் வயவர் மன்னோ.

(இ - ள்.) சிலவீரர், சிறந்த தேவாஸ்திரங்களை விடுவர்: சிலர், சுடுகின்ற அம்புகளை வில்லிலிட்டு எய்வர்; சிலர், (எறிபடைக் கலங்களை) வீசியெறிவார்; சிலர், மலைகள்பலவுமேந்திச் சாரிகை சுற்றிப்பொழிந்து தாக்குவர்: (சிலர் இராமனைப்) பிடித்துக்கொள்ளுகிறோமென்று விரைந்துவருவார்கள்; சிலர், (தமக்குப் பொரு

தற்குப்) படைக்கலங்கள் கிடையாமையால் வாயால் வைவர்: சிலர் அதட்டுவார்கள்; சிலர் (எதிர்த்து) வருவர்: சிலர், (மகிழ்ச்சி கொண்டு) திரிவார்கள்; (எ-று.)—[1] எறிவர். [2] குத்துவர். (3356)

100.—இதுவும் அது.

ஆர்ப்பர்[1] பல ரடர்ப்பர்பல [2] ரடுத்தடுத்தே படைக்கலங்க ளள்ளி யள்ளித், தூர்ப்பர்பலர் மூவிலைவேல் [3] தூரப்பர்பலர் கரப்பர்பலர் சுடு தீத்தோன்றப், பார்ப்பர்பலர் நெடு [4] வரையைப் பறிப்பர்பலர் பக லோனைப்பற்றிச் சுற்றுங், கார்ப்பருவ [5] மேகமென வேகநெடும் படை யரக்கர் [6] கணிப்பி லாதார்.

(இ-ள்.) பகலோனைப் பற்றிச் சுற்றுகின்ற கார்காலமேகம் போல வேகமுள்ள நெடும்படைக்கலங்களை யேந்திய எண்ணற்ற அரக்கருள், பலர், ஆரவாரஞ் செய்வார்கள்: பலர், (நெருங்கிப்) பொருவார்கள்: பலர், அடுத்தடுத்துப் படைக்கலங்களை அள்ளி யள்ளி மிகுதியாக (ப்பூமியை) த் தூர்ப்பார்போல எறிவார்கள்: பலர், மூவிலைவேலை விடுவார்கள்; பலர் (இராமபாணம் தம்மீது படாதபடி) ஒளிந்துகொள்வார்கள்: பலர் (கண்களிற்) சுடுகின்ற நெருப்பு வெளிப்பட (உக்கிரமாக ஸ்ரீராமனை விழித்து)ப்பார்ப்பார் கள்; பலர் (அப்பிரான் மேலெறிவதற்குப்) பெரியமலைகளை வேருடன் பேர்ப்பார்கள்: (எ-று.)—கரப்பது-சமயம் பார்த்துப் பகையை யொறுத்தற்கு என்னலாம். பி-ம்:—[2] அடுத்தடுத்த. [3] தொடுப்பர். [4] வரைகள். [5] மேகநிற. [6] கணக்கிலாதார். [1] பலர் என்ற இடங்களிலெல்லாம் சிலர்என்று சிலபிரதிகளிற் பாடம். ()

101.—ஸ்ரீராமன் அரக்கர்படைகளை வென்று விளங்குதல்.

எறிந்தனவு மெய்தனவு மெடுத்தனவும் பிடித்தனவும் படைக ளெல்லாம், [1] முறிந்தனவெங் கணைகள்பட முற்றினசுற் றினதேரு மூரிமாவும், நெறிந்தனகுஞ் சிகளோடு நெடுந்தலைக ளருண்டனபே [2] ரிருளி னீங்கிப், பிறிந்தனவெய் யவனென்னப் பெயர்ந்தனன்மீ துயர்ந்ததடம் பெரிய தோளான்.

(இ-ள்.) (அரக்கர்கள்) எறிந்தவைகளும் எய்தவைகளும் (விடுமாறு) எடுத்தனவும், (கையிற்) பிடித்தனவுமாகிய படைக்கலங்கள் யாவும் (ஸ்ரீராமனது) கொடிய அம்புகள்பட முறிந்திட்டன: (அப்பிரானைச் சுற்றி) முற்றுகையிட்ட தேர்களும் முற்றுப்பெற்றன; வலியயானைகளும், நெறிந்தமயிர்களுடனே நெடுந்தலைகளுருண்டன: மேலோங்கிய மிக்க பெருந்தோளையுடையவனான ஸ்ரீராமன், பேரிருளினின்று நீங்கப்பெற்றும்பிரிந்த அந்தச்சூரியன்போல வெளிப்பட்டுத் தோன்றினன்; (எ-று)—கருநிறங்கொண்ட பகைப்படையைத்தொலைத்து வெளிப்பட்ட இராமபிரானுக்கு, இருளினின்று பிரிந்துவெளிப்பட்ட சூரியன் உவமை முற்றுகல்-ஒழிதல். பி-ம்:—[1] முறிந்தனவும். [2] இருளைநீங்கி, இருளைநீங்க. (3358)

102.—இராமசரத்தின் செயல்.

[1]சொல்லறுக்கும் வலியரக்கர் தொடுகவசந் துகள்படுக்குந் துணிக்கும் யாக்கை, வில்லறுக்குந் தலையறுக்கு மிடலறுக்கு மடலறுக்கு மேன்மேல் வீசுங், கல்லறுக்கு [2]மரமறுக்குங் [3]கையறுக்குஞ் செய்யமள்ளர் கமலத் தோடு, நெல்லறுக்குந் திருநாட னெடுஞ்சரமென் றா[4]லெவர்க்கு [5]நிற்க லாமோ.

(இ - ள்.) கழனியிலுள்ள உழுதொழிலாளர் (விளைந்த) நெற்பயிர்த்தாளோடு (அப்பயிர்களிடையேமுளைத்த) தாமரைகளையும் சேர்த்தறுக்கும் (நீர்வளமுள்ள) சிறந்த கோசலநாட்டையுடைய ஸ்ரீராமனுடைய நெடிய அம்பு,—சொல்லமுடியாத உடல்வலிமை படைத்த அரக்கர் பூண்டுள்ள கவசத்தைத் தூளாக்கும்; (அவர்களின்) யாக்கையைத் துண்டுபடுத்தும்; வில்லையறுக்கும்; சிரசைக் கொய்யும்; வலிமையை யொழிக்கும்; போர்த்திறமையை யொழிக்கும்; மேன்மேலும் வீசுகின்ற மலையைத் துண்டாக்கும்; மரத்தை அறுக்கும்; (மலையையும் மரத்தையும்பற்றிய) கையை யறுக்கும்; என்றால், (இந்த அம்புகட்குமுன்) எவர்க்கேனும் எதிராக நிற்க முடியுமோ? (எ - று.)—சொல்லறுக்கும்-(பெரியோரின்) சொல்லைத் தட்டுகின்ற என்பாருமுளர். பி-ம்:—[1]தொல்லறுக்கும். [2]மார்பறுக்கும். [3]கரம். [4]அவர்க்கு. [5]நிற்கலாமே, நினைக்கலாமோ. (3359)

103.—போர்கண்ட தேவர் பேசுவன.

கா[1]லிழந்தும் [2]வாலிழந்துங் [3]கையிழந்துங் கழுத்திழந்தும் [4]பருமக் கட்டின், மேலிழந்தும் மருப்பிழந்தும் விழுந்தன[5]வென் குநல்லால் [6]வேலை யன்ன, [7]மாலிழந்து மழையனைய மதமிழந்து [8]கதமிழந்து மலைபோல் வந்த, [9]தோலிழந்த தொழிலொன்றுஞ் [10]சொன்னார்க ளில்லைநெடுஞ் சுரர்க ளெல்லாம்.

(இ - ள்.) பெருமைபெற்ற தேவர்களெல்லாம்,—காலிழந்தும் வாலிழந்தும் கையிழந்தும் கழுத்திழந்தும் பருமத்தின்மேலே கட்டுதலையுள்ள அம்பாரியிழந்தும் தந்தங்களையிழந்தும் மலைபோலவந்த யானைகள் விழுந்தன என்று சொல்லுவரல்லாமல், (இராமபிரான் போரைக்கண்டதும்) கடல்போற் பரந்த அவ்யானைகள், (வெல்லவேணுமென்ற) ஆசையை யிழந்தும் மழைபோலப் பெருகும் மதத்தை யிழந்தும், (இயற்கையாயமைந்த) கோபத்தை யிழந்தும் (இவ்வாறு) இழந்துபோன (மாலிழத்தல் முதலிய அத்) தொழிலொன்றையும் சொன்னார்களில்லை; (எ - று.)

வாலிழந்தமைமுதலியன கண்ணுக்குப் புலனாதலால், அவற்றைக் கூறினாரே யன்றி, வெகுவிரைவாக இராமபிரான் அம்பு தொடுக்கையில் அவ்யானைச்சேனைகள் மாலிழந்தமை முதலியன தேவர்களாலும் காணவரிதாயின வென்க. அன்ன-குறிப்புவினையாலணையும்பெயர். பி - ம்:—[2]வாயிழந்தும். [3]கழுத்திழந்த கையிழந்த. [4]கனகக்காட்டின், பாமக்கட்டின். [5]ஏங்கினவல்லால், என்குவவல்லால், என்குநவல்லால். [6]வேலையென்ன, வேறுவேறு.

[7] மாலுழந்தமலையனைய, மாலிழந்துமையனைய. [8] வலி. [9] தோள். [10] சொல்லினவரில்லை, சொல்லினரில்லை. [1] இழந்தும் என்றவிடங்களிலெல்லாம் 'இழந்து' என்று பாடங் காணகின்றது. (3360)

வேறு.

104.—பலகோடி அரக்கர் பொர, ஸ்ரீராமன் ஒருத்தனுகவே யாவரையும் வென்றமையை இதுமுதல் நான்கு கவிகள் கூறும்.

வேல்செல்வன சதகோடிகள் விண்மே [1]னிமிர் விசிகக்
கோல்செல்வன சதகோடிகள் கொலைசெய்வன [2]மலைபோல்
தோல்செல்வன சதகோடிகள் [3]துரகந்தொட ரிரதக்
கால்செல்வன சதகோடிக ளொருவன்னவை கடிவான்.

(இ - ள்.) (அந்தப்போரில் ஸ்ரீராமன்மீது) செல்வனவான வேல்கள், நூறுகோடிகள்: வானத்தில் நிமிர்ந்து செல்வனவான விசிகமென்று சொல்லப் படுகின்ற அம்புகள், சதகோடிகள்; கொலைசெய்யுந் தன்மையவான மலைகளுளவேல் அவைபோலச் செல்வனவான யானைகள், சதகோடிகள; குதிரைகள் பூட்டப்பெற்றுள்ள இரதங்கள், சக்கரங்களாற் செல்வன சதகோடிகள்; அவற்றையெல்லாம் கடிவான், (ஸ்ரீராமன்) ஒருவனே; (எ - று.)—பி-ம்:—[1] விடு. [2] மலைய, மலையக், மலையைக். [3] துரகத்தொடுமிரதக், துரக்தொடினரிந்தக். (3361)

இச்செய்யுளுக்குப் பின் சிலபிரதிகளில் ஒருசெய்யுள் காணப்படுகின்றது: அது வருமாறு:—

கோல்பொத்திய நெடுநாணினிற் கோமான்தொடை நெகிழ
மேல்பொத்திய நிருதக்குலம் வேரோடுடன் விளியத்
தோல்பொத்திய வுயிர்யாவையுந் தொடக்கற்றுடன் மடியக்
கால்பொத்திய கையொத்தன காகுத்தன்வெங் கணையால்.

105. ஒருவில்லியை யொருகாலையி னுலகேழையு [1]முடற்றும்
[2]பெருவில்லிகண் முடிவில்லவர் [3]சரமாமழை [4]பெய்வார்
பொரு[5]வில்லவர் கணைமாரிகள் [6]பொடியாம்வகை பொழியத்
திருவில்லிகள் தலைபோய்நெடு மலை[7]போலுடல் சிதைவார்.

(இ - ள்.) உலகேழையும் வருத்துகின்ற பெரியவில்லாளிகளான கணக்கற்ற அரக்கர்,-ஒரு வில்லாளியை, ஒரேகாலத்தில், (இலக்காகக்கொண்டு) மிக்கசரமழையைப் பெய்பவரானார்; பொருகின்ற வில்லையுடையவரின் அம்பு மழைகள் பொடியாம்வகை (ஸ்ரீராமன் அம்புகளைப்) பொழிவதனால், பாக்கியமற்றவரான அரக்கர்கள் தலையறுபட்டுப்போய் நெடுமலைபோலுள்ள உடல்சிதைபவரானார்கள்; (எ - று.)—பி - ம்:—[1] உற்றுப், உழக்கும், ஒறுக்கும். [2] பொரு. [3] சரமாரிகள். [4] பொழிவார், பெய்தார். [5] வில்லியர் வில்லிவை. [6] பொடியாவன டோழ்ந்தது. [7] போலுயிர். (3362)

106. நூறுயிர மதயானையின் வலியோரென நுவல்வோர்
மாறுயின ரொருகோல்பட மலைபோ லுடன் மறிவார்
ஆறுயிர [1]முளவாகுத [2]லழிசெம்புன [3]லவைபுக்கு
[4]ஏறு[5]தெறி கடல்பாய்வன [6]சினமால்கரி யினமால்.

(இ - ள்.) நூறாயிரம் மதயானையின் வலிபெற்றவ ரென்று சொல்லப்படுபவரான அரக்கர்,-(ஸ்ரீராமனுடைய) ஓரம்புபட (அந்நிலைமை) மாறுபட்டவராய், மலைபோன்ற உடல் ஒழியப்பெற்றார்கள்: அழிபட்டதனால் தோன்றிய இரத்தங்களில் ஆயிரம்யாறுகள் தோன்றுவவாயினமையால், அவயாறுகளிலே புகுந்து (நீந்திக்) கரையேற முடியாமல், சினமும் மதமயக்கமு முள்ளனவான யானையினம் (அந்தக் குருதிநீராற்றுப் பெருக்குடனே) அலையெறிகின்ற கடலிற் பாய்வனவாயின; (எ - று.)

உதிரநீர்ப்பெருக்குக்கள் விரைந்துசெல்லுகையில் அவற்றால் ஈர்க்கப்பட்டு யானைகள சென்று கடலிற் சேர்ந்தனவென்க. பி-ம்:- [1]உளவாகுவ, உளதாகுதல், உளராகுவர், உளவாகுவது. [2]வழி. [3]அது. [4]ஏறு. [5]நெறி. [6]சிலமால, சினமா. ஒரு பிரதியில 104-ஆம் பாடலின்கீழ்க் கொடுத்த "கால்பொதுய" என்ற பாடல், இப்பாடலின் பின்னே யுளளது. (3363)

107. மழு[1]வற்றுகு மலை[1]யற்றுகும் வளை[1]யற்றுகும் வயிரத்து, எழு[1]வற்றுகு [2]மெயிறற்றுகு மிலை[1]யற்றுகு [3]மெழுவேல், [4]பழுவற்றுகு மதவெங்கரி பரி[1]யற்றுகு மிரதக், குழு[1]வற்றுகு [5]மொருவெங் கணை [6]தொடைபெற்றதொர் குறியால்.

(இ-ள்.)ஒப்பற்ற கொடியகணை தொடுக்கப்பெற்றதோர் குறியினால், (அரக்கரெறிந்த) மழு அற்றுச் சிந்திவிடும்; மலையும் அற்று உகும்; வளையென்னும்படையும் அற்றுஉகும்: உறுதியுள்ள எழுவும் அற்றுஉகும்; பற்கள அற்று உகும்; மேலோங்கியவேல இலையற்று உகும்; மதவெங்கரி விலாவெலும்பு அற்றுஉகும்; குதிரை அற்று உகும்; இரதத்தொகுதி அற்றுஉகும்; (எ - று.) பி - ம்:—[1]இற்று. [2]இலையற்றுகுமயிலெற்றுகும், இலையற்றுகு மெயிற்றற்றுகும். [3]எறி. [4]பழுதற்றுகும். [5]ஒருவன். [6]ஒருவன்வில்லொடுதொடையால. (3364)

108.—அரக்கர் மிகுதியாகப் போரிலிறத்தல்.

ஒருகாலையி னுலகத்துறு முயிர்யாவையு முண்ணும்
வருகாலனு மவன்தூதரு நமன் றானுமவ் வரைப்பின்
[1]இருகா லுடை யவரியாவருந் [2]திரிந்தாரினைத் திருந்தார்
அருகாயிர முயிர்கொண்டுத மாறேகல [3]ரயர்த்தார்.

(இ - ள்.) ஒரு காலத்திலே உலகத்திலே பொருந்திய உயிரெல்லாவற்றையும் உண்ணும் வல்லமையமைந்த அப்போர்க்களத்து வந்த காலனும் தூதரும் நமனும் யாவரும் இருகாலுடையராதலால், திரிந்தவர்களாய் இளைத்திருந்த அருகேயுள்ள ஆயிரக்கணக்கான

உயிர்களைக்கொண்டு தம்முடைய வழியேசெல்வதற்கும் மறந்தார் கள்; (எ-று.)—நமன்-யமனுடைய பிரதானி; இனி நமன் என்பது யமனைக் காட்ட, காலன் என்பது அவ்யமனுடைய மந்திரியைக் காட்டுமென்றலும் உண்டு. பி-ம்:—[1]இருகாலுடைவரையாமென. [2]விழுந்தார், இரிந்தார். [3]அயர்ந்தார். (3365)

109.—போர்க்களத்துக் கவந்தங்க ளாடுதல்.

அடுக்குற்றன மத[1]யானையு மழி[2]தேர்களும் பரியும்
[3]தொடுக்குற்றன விசும்பூடுறச் சுமந்[4]தோங்கின வெனினும்
மிடுக்குற்றன கவந்தக்குல மெழுந்[5]தாடலி னெல்லாம்
நடுக்குற்றன பிணக்குன்றுக [6]ளுயிர்நண்ணின வென்ன.

(இ-ள்.) வரிசையாகப் பொருந்தினவாய் அழிந்த மதயானை களும் தேர்களும் பரியும் (ஒன்றன்மேலொன்று) தொடுத்தல் பொருந்தினவாகி வானத்திற்பொருந்த மிகுதியாக உயர்ந்தன வாயினும், மிடுக்குள்ளனவாய்க் கவந்தங்களின் கூட்டம் எழுந்தாடு வதனால், பிணக்குன்றுகள் உயிர்பெற்றனவென்று எல்லாப் பிராணிகளும் நடுக்கமடைந்தன; (எ-று.)—கவந்தம்-தலையற்றதும் தொழிலுடன் கூடியதுமான உடல்: "பேரொத்த வாயிரம்பேர் மடிந்தாற் பிறக்குங்கவந்தம், நேரொத்தவாடும்". கவந்தங் களினாட்டத்தால் பிணக்குன்றுக ளசையவே, 'அரக்கப்படையின் பிணங்களுயிர்பெற்றிட்டனவோ!' என்று மற்றைப்பிராணிகள் நடுக்குற்றன என்க.—பி-ம்:—[1]யானைகள். [2]கோள்களும். [3]தொடுக் குற்றுற. [4]ஏங்கின. [5]ஆடின. [6]உயிர்க்குற்றன. (3366)

110.—செந்நீர்படிந்த ஸ்ரீராமன் வருணனை.

பட்டாருடற் [1]படுசெம்புனல் திருமேனியிற் படலால்
கட்டார்சிலைக் கரு[2]ஞாயிறு புரைவான்கடை யுகநாள்
சுட்டாசறுத் துலகுண்ணுமச் சுடரோனெனப் பொலிந்தான்
ஒட்டாருடற் குருதிக[3]ளுளித் தெழுந்தானையு மொத்தான்.

(இ-ள்.) இறந்தாருடைய உடலினின்று வெளிப்பட்ட இரத்த நீர் (தன்) திருமேனியிற் படுவதனால், கட்டுப்பொருந்தியவில்லைப் பிடித்த கருஞாயிற்றைப் போல்பவனான ஸ்ரீராமன்,—யுகாந்த காலத்திலே உலகத்தைச் சுட்டு விரைவிலே யொழியுமாறு உண்ணு கின்ற அந்தச்சூரியனைப்போல் விளங்கினான்; (அன்றியும்), பகை வரின் உடற்குருதியிலே மூழ்கியெழுந்த பரசுராமனையும் போன் றான்; (எ-று.)-கடையுகம்=யுகக்கடை: இலக்கணப்போலி. பகைவர் குருதியால்தோன்றிய சியமந்தபஞ்சகமடுவில் பரசுராமன் மூழ்கி யெழுந்தானென்பது, வரலாறு. பி-ம்:—[1]புது. [2]நாயிறு. [3]களித்து.

111.—இறந்தவர்போக, மற்றையரக்கர் ஸ்ரீராமனைச் சூழ்ந்துகொளல்.

தீயொத்தன வுருமொத்தன சரஞ்சிந்திடச் சிரம்[1]போய்
[2]மாயத்தமர் [3]மடிகின்றரெனவும் [4]மறந் [5]குறையா

காயத்திடை யுயிருண்[6]டிட வுடன்மொய்த்தன கலாயால்
[7]ஈயொத்தன நிருதக்குல நறவொத்தன னிறைவன்.

(இ - ள்.) 'தீயையொத்தனவும் உருமை யொத்தனவுமான பாணங்களை (ஸ்ரீராமன்) சிந்துவதனால் சிரம்போகப்பெற்று மாயத்தையுடைய தம்மவர் (அமரில்) இறக்கின்றார்கள்' என்ற காரணத்தினாலும் வீரங்குறையாமல், (தமது) உடலிடையிலுள்ள உயிரையும் (அவ்விராமசரங்கள்) உண்ணும்படி ஒருமகிழ்ச்சியோடு சேர மொய்த்தனவாகிய (மற்றுமுள்ள) நிருதக்குலம் ஈயையொத்தன; இராமபிரானே, நறவையொத்தனன்; (எ - று.)

இங்கு, நறவு-தேன்: தேன் கூண்டுக்கு, இலக்கணை. தேன் கூண்டைத் தேனீக்கள் மொய்ப்பனபோல் அரக்கர்குலங்கள் ஸ்ரீராமனை மொய்த்தன வென்க. பி - ம்:—[1]போர். [2]மாயத்தவர், மாயத்தனர். [3]படுகின்றனர், மடிகின்றவர். [4]மனங், மதங். [5]குறையார், குழையார். [6]இடைகிழிந்தோடுவக்கணையால், இடையுடன் மொய்த்தெழுகளியால். [7]ஈமொய்த்தது, ஈயொத்தது. (3368)

112.—ஸ்ரீராமன் அங்ஙனம் தன்னை மொய்த்தாரை யழித்தமையை இதுவும் அடுத்த கவியும் கூறும்.

மொய்த்தாரையொ ரிமைப்பின்றலை [1]முடுகத்தொடு சிலையால்
[2]தைத்தானவர் [3]கழற்றிண்பசுங் கா[4]யொத்தனர் சரத்தால்
[5]கைத்தார்கடு களிறுங்கனத் தேருங்கனத் தழுந்தக்
[6]குத்தானழி குழம்பாம்வகை [7]வழுவாச்சரக் குழுவால்.

(இ - ள்.) (அங்ஙனம்) நெருங்கின அரக்கரை ஓரிமைப்பினில் வேகமாக (அம்புகளைத்) தொடுத்துவிடுகின்ற வில்லாற் பொத்தினான், (ஸ்ரீராமன்): அந்த அரக்கர், (பொத்திய) அம்புகளால் திண்ணியபசியகழற்சிக்காயையொத்தனர்: பகைவர்களுடைய விரைவுள்ள யானையையும் கனமான தேரையும் தவறாத அம்புக் கூட்டத்தினால் பெருகுகின்ற குழம்பாம் வகைசெய்து (அவை) களத்திலேயழுந்த உகுத்தான; (எ - று.)

கைத்தார்-பகைவர். ஈற்றடியில், உகுத்தானென்ற சொல், முதற்குறை விகாரம் பெற்றுவந்தது. அம்புத்தொகுதி பொத்தப் பெற்ற அரக்கருடற்கு, இயற்கையாக மேற்புறத்து முள்நிரம்பியிருக்கப்பெற்ற வலிய கழற்சிக்காய் உவமை. பி-ம்:—[1]முடுகிற்றொரு, முடுகிற்றொடு. [2]கைத்தான். [3]கழலிற். [4]ஒத்தன. [5]கைத்தார் நெடுந்தேரும் கடுங்களிறுங், கைத்தானவெங்களிறுங் கடுந்தேருங். [6]குய்த்தாரழி. [7]புரிந்தான்கணைக். (3369)

113. பிரிந்தார்பல ரிரிந்தார்பலர் பிழைத்தார்பல ருழைத்தார், புரிந்தார்பலர் நெரிந்தார்பலர் புரண்டார்பல ருருண்டார், எரிந்தார்பலர் [1]கரிந்தார்பல ரெழுந்தார்பலர் விழுந்தார், சொரிந்தார்குடல் [2]தமித்தார் [3]தலை தொலைத்தாரெதிர் தொடர்ந்தார்.

(இ - ள்.) (இராமபிரான் அம்புக்கணங்களை விடுத்தபோது, அரக்கர் கூழாங்களிலே), உயிர்பிரிந்தார்கள் பலர்; நிலைகெட்டோடினார் பலர்; (இலக்காகாமல்) தவறிவிலகினர்கள் பலர்; (பலர்) வருந்தினர்; பலர் (போரை) விரும்பிச் செய்தார்கள்: பலர், உடல் நெரிந்தார்; பலர், மண்ணிற் புரண்டார்; (பலர்), உருண்டார்; பலர், எரிந்தார்; பலர் கரிந்தார்; பலர், எழுந்தார்; (பலர்), வீழுந்தார்: (பலர்) குடல் துண்டிக்கப்பட்டவராய், (அக்குடலை) வெளிச் சொரிந்தார்கள்; (பலர்), எதிர்தொடர்ந்து தலைதொலைந்தார்; (எ - று.)—[3] தலைதொலைந்தாரெதிர்கிடந்தார்-என்ற பாடத்துக்குத் தலைதொலைந்து எதிரே தரையில் விழுந்துகிடந்தா ரென்க. பி-ம்:- [1] சரிந்தார், இரிந்தார். [2] துணிந்தார். [3] தலைகிடந்தாரெதிர் தொடர்ந்தார். (3370)

114.—துணிப்புண்ட அரக்கரின் வருணனை.

மணிகுண்டலம் வலயங்குழை மகரஞ்சுடர் மகுடம்
அணிகண்டிகை கவசங்கழல் [1] திலகம்முத லகலம்
[2] துணியுண்டவ ருடல்சிந்தின [3] தொடர்கின்றன சுடரும்
திணிகொண்டலி னிடைமின்குல மிளிர்கின்றன [4] சிவண.

(இ-ள்.) நெருங்கிய நீர்கொண்டமேகத்தினிடையே மின்குலங்கள் விளங்குவன ஒப்பத் துணியுண்டவரின் உடலிலே தொடர்ந்து விளங்கினவான இரத்தின குண்டலமும் வலயமும் மகரக்குழைகளும், சுடர்கின்ற மகுடமும், அழகியகண்டிகையும் கவசமும் வீரக்கழலும் திலகமும் முதலியனவான அணிகலங்கள்,—சிந்துவனவாயின; (எ - று.)—முதல கலம் எனப்பிரிக்க: கலம் - அணிகலம். பி - ம்:—[1] அதிகம் முதலிலகத், திலகம்முதலிகலும், திலகம் முதலகலத். [2] துணிவுண்டவர். [3] தொடர்கின்றது, சுடர்கின்றது. [4] சிவணி. (3371)

115.—இதுமுதல் ஆறுகவிகள் - அரக்கர் அதிசயிக்கும்படி இராமன சாரிகைதிரிந்தமையைத் தெரிவிக்கும்.

முன்னேயுளன் பின்னேயுளன் [1] முகத்தேயுள னகத்தின்
[2] தன்னேயுளன் மருங்கேயுளன் தலைமேலுளன் [3] மலைமேல்
கொன்னேயுள னிலத்தேயுளன் விசும்பேயுளன் [4] கொடியோர்
என்னேயொரு கடுப்பென்றிட விருஞ்சாரிகை [5] திரிந்தான்.

(இ-ள்.) அச்சமுண்டாக (நம்)முன்னேயுள்ளான்: பின்னேயுள்ளான்: (தம்சேனையின்) முகத்தினிடத்துள்ளான்; அகத்தினிடத்தேயுள்ளான்; (நம் இரு) பக்கத்திலும் உள்ளான்; தலைமேலுள்ளான்; மலைமேலுள்ளான்: நிலத்தே யுள்ளான்; விசும்பிலே யுள்ளான்: (இவனுடைய) ஒப்பற்றவிரைவு இருந்தபடி என்னே! என்று கொடியோரான அரக்கர் வியந்துகூறுமாறு (ஸ்ரீராமன்) பெருஞ்சாரிகை திரிந்தான்; (எ-று.)-பி-ம்:—[1] முகத்தின். [2] தன்னேரினன். [3] தலை. [4] கொடியோன். [5] திரிந்தார். (3372)

116. என்னேரின னென்னேரின [1]னென்றியாவருமெண்ணப்
பொன்னேர்[2]வரு வரிவிற்கரத் [3]தொருகோளரி போல்வான்
[4]ஒன்னார்பெரும் படைப்போர்க்கட லுடைக்கின்றன னெனி
[5]அன்னேரல குடனேதிரி நிழலேயென லானான். [னும்

(இ - ள்.) (அங்ஙன் விசைபெறச்சாரிகை திரிந்தகனல்) யாவரும் '(ஒரு ராமனே பல ராமராகவந்துள்ளான்:) 'என் நேரிலுள்ளான், என் நேரிலுள்ளான்' என்று கருத, பொன்னிறம் நேர்மையாகப் பொருந்தியதும், கட்டமைந்ததுமான வில்லேந்திய கரத்தையுடைய ஒப்பற்ற மிடுக்குள்ள ஆண்சிங்கத்தை யொத்தவனை ஸ்ரீராமன், பகைவரின் பெரும்படையாகிய கவிதலையுடைய கடலையுடைக்கின்றானாயினும் அல்லையொத்த அப்பகைவருடனே திரிகின்ற நிழலே யென்று சொல்லத்தக்கவனானான்; (எ - று.)

உடனிருந்தும் சாயை கைக்கு அகப்படாதவாறுபோல, அரக்கருக்கு அருகில்தானேயிருந்தும் கைக்கு அகப்படாதவனாயினன் ஸ்ரீராமனென்க. அல்-இருள். பி - ம்:—[1]என...எண்ணப், என்றியாவருமியம்பப். [2]பொரு.ஒருவன்புகுந்தேற்றூர், [3]ஒருகோளரிபொருவான், ஒருகோளரிபோலவான். [4]அன்னார் விடு பெருவேற்படையவர்தேர்கரிபரியாய், ஒன்னார்கெடும்...உறையன்றுளதெனினும், அன்னான்பொரவிடும்வேற்படையவர்தேர்கரிபரியாய். [5]அன்னேரவருடனேதிரி தழலேயெனலானான், அன்னேருடனெதிரேவரு... ஆன. (8373)

117. பள்ளம்படு கடலேழினும் படியேழினும் பகையின்
வெள்ளம்பல வுளவெண்ணினும் வினையம்பல தெரியாக்
[1]கள்ளம்பட்ட [2]பெருமாயையிற் [3]காந்தாருருப் பிறந்தார்
உள்ளன்றியும் புறத்தேயு[4]முற் றுளனாமென வுற்றான்.

(இ-ள்.) பள்ளம்பொருந்திய கடலேழிலும் ஏழுலகங்களிலும் பகைமையையுடைய பலவெள்ளஞ்சேனைகள் உளவானாலும், பல வஞ்சனைத்தொழிலை அறிந்து கள்ளம்படர்ந்த மிக்கமாயையால் (தம்) உருவைக்கரப்பவராய்ப்பிறந்தாரான அரக்கரின் உள்ளிடத்தன்றிப் புறத்தேயும் பொருந்தியுளனென்னுமாறு (சாரிகையாற்) பொருந்தி நின்றான், (ஸ்ரீராமன்); (எ - று.)

ஸ்ரீராமன், "அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா [உள்ளே புகுந்து ஜநங்களை ஶாஸநம்பண்ணுகிறவனை ஸர்வாத்மாவாவன்]' என்னப்படுகிற பரம்பொருளின் சொரூபியாதலால், அவன் அந்தக் கள்ளவரக்கரிடத்தும் உட்புறக்கானென்பது பெறப்படும்: அவன் இப்போது விரைந்து சாரிகைதிரிந்து பொருவதனைல்,ஒவ்வொருவரின் புறத்தும் உளனாயினனென்க. ஈற்றடிக்கு- அவ்வரக்கர்களுடைய உள்ளத்தின்கணிருப்பதன்றியும் அவர்களுக்குப்புறத்தும் வியாபித்திருக்கின்ற தம்முடைய ஸ்வபாவத்தின்படியே எங்கும் இராமனாயிருந்தான் என்றுமாம்: "அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்தித: [உள்ளும்வெளியும்

அவைகளையெல்லாம் வ்யாபித்து நாராயணன் இருக்கின்றான்]" என்று ஸ்ருதி கூறுதல் காண்க. அச்சத்தினால் அவ்வரக்கனுட்புறத்தும், சாரிகை திரிவதனால் வெளிப்புறத்தும் இருக்கின்றான் ஸ்ரீராமனென்க. பி-ம்:—[1] கள்ளம்படு [2] நெடு. [3] கரந்தானுடன்பிறந்தான், கரந்தானுருப்பிறந்தான், கரந்தா லுடல்பிறந்தான. [4] இன்றுளானுமென, அன்றுளதாமென. (3374)

118. [1] நானாவிதப் [2] பெருஞ்சாரிகை திரிகின்றது [3] நவிலார்
போனானிடை [4] புகுந்தானெனப் புலன்கொள்கிலர் [5] மறந்தார்
தானாவது முணர்ந்தா னுணர்ந் துலகெங்கணுந் தானே
ஆனான் [6] வினை துறந்தானென விமையோர்களு மயிர்த்தார்.

(இ - ள்.) (இருந்த இடம்விட்டுப்) போனவனாய் இடையிலே புகுந்தானென்பதை(த் தம்) அறிவினாற் கொள்ளமாட்டாதவராய், (ஸ்ரீராமன்)நானாவகையான பெருஞ்சாரிகை திரிவதையும்(அறிந்து) சொல்லத்தெரியாதவராய் மறந்து, இமையோர்களும் (ஸ்ரீராமன்) 'உணர்வுமயமாய் உலகுஎங்கணுந் தானேயான பரம்பொருள் தான் ஆவதையும் உணர்ந்தவனாய், (தான் அவதாரத்திற் செய்ய வேண்டிய தொழிலாகிய ராட்சச சங்காரத்) தொழிலைத் தவிர்ந்தான் போலும்' என்று சந்தேகித்தார்கள்; (எ - று.)

ஸ்ரீராமன் சாரிகைதிரிந்து பொருகையில், அவ்விரைவுத் தொழிலைக் கண்டறியமாட்டாமையால், தேவரும் 'ஸ்ரீராமன் சாரிகைதிரிந்து பொருகின்றான்' என்று அறிந்து சொல்லமுடியாமல், இராட்சச சங்காரஞ் செய்யவேண்டிய தொழிலைவிட்டுத் தானான தன்மையையும்மேற்கொண்டிட்டானோ?' என்று ஓர் ஐயப்பாட்டைக் கொண்டனரென்பதாம். மறந்து=திகைப்புக்கொண்டு. தானானதன்மை-எங்குமுளனாகை. பி-ம்:—[1] நானாவிதம். [2] பெருஞ்சிரிதை. [3] நவில்வார். [4] புகுந்தாரவன். [5] மறுத்தார். [6] எனவிமையோர்களுமமரேசரு மயிர்த்தார். (3375)

119. சண்டக்கடு நெடுங்காற்றிடை [1] துணிந்தெற்றிடைத் தரைமேல், கண்டப்படு மலைபோனெடு மரம்போற்கடுந் தொழிலோர், [2] துண்டப்படக் கடுஞ்சாரிகை திரிந்தான்சரஞ் [3] சொரிந்தான், அண்டத்தினை யளந்தானெனக் கிளர்ந்தானிமிர்ந் தகன்றான்.

(இ-ள்.) (முன்பு திரிவிக்கிரமாவதாரத்தில்)ஓங்கியுயர்ந்தவனாகி அண்டத்தையளந்தவனை திருமாலைப்போலக் கிளர்ந்தானான ஸ்ரீராமன், கொடிய விசையுள்ள நெடியசண்டமாருதம் இடையே துண்டுபடும்படி வீசுவதனால் தரைமேற் கண்டப்படும் மலை போலவும் நெடுமரம்போலவும் கொடுந்தொழிலையுடைய அரக்கர் துண்டாம்படி கடுஞ்சாரிகைதிரிந்தானாய், சரங்களைச் சொரிந்தான்;

சாரிகைதிரிகையில் எங்குங் காணப்பட்டமையால், திரிவிக்கிரமன்போலக் கிளர்ந்தானென்றார். சண்டமாருதம் வீசுவதனால் மலையும் மரமும் கண்டப்பட்டுத் தரைமேல் விழுவதுபோல,

இராமன் அம்பெய்தவண்ணம் சாரிகைதிரிவதனால் கொடுந்தொழி லோர் கண்டமாக்கப்பட்டுத் தரைமேல் விழுந்தாரென்க. பி-ம்:— [1]தொடர்ந்தேறிட. [2]துண்டப்படுந். [3]துறந்தான். (3376)

120. களியானையு நெடுந்தேர்களுங் கடும்பாய்பரிக் கணனும்
தெளி [1]யாளியு மூரட்சியமுஞ் சினவீரர்தந் [2]திறமும்
வெளிவானக மிலதாம்வகை விழுந்தோங்கிய [4]பிழம்பால்
[4]தளிமாமலை மலைதாவின னடந்தான்கடற் [5]கிடந்தான்.

(இ-ள்.) கடலிற்பள்ளிகொண்டருளுந் திருமாலினவிசமான ஸ்ரீராமன், களியானையும் நெடுந்தேர்களும் விரைந்துபாயுங் குதிரைத்திரளும் (மேம்பட்ட வலிமையுடையதென்று) தெளியப் பட்ட யாளியும் மாறுபாட்டையுடைய சியமும் சினமுள்ளவீரர்தம் கூறுபாடும் கீழ்விழுந்து வானகமும் வெற்றிடம் இல்லாதபடி ஓங்கிய பிழம்பினால், பெரியதொருமலையிலிருந்து மற்றொருமலையில் தாவி நடப்பவனாயினான், (ஸ்ரீராமன்); (எ-று.)

பிணக்குவியல் மலைமலைகளாகக் குவிந்துகிடத்தலால், சாரிகை திரியும் இராமன் ஓர்பிணமலையிலிருந்து மற்றொருபிணமலையில் தாவி நடக்கும்படி யாயிற்றென்பதாம். பிழம்பு-திரள். பி-ம்:— [1]யாளியாழறம். [2]சிரமும். [3]மிளிரும், பிணப்பேர். [4]களிர்மாமலை மலை, களிர்மாமலர்தலை, களிர்மாமலைபல. [5]கடந்தான். (3377)

வேறு.

121.—ஆறுகவிகள்-சேனையழிந்தமையின் வருணனை.

அம்ப ரங்கள் தொடுங்கொடி [1]யாடையும்
[2]அம்ப ரங்க ளொடுங்[3]களி [4]யானையும்
அம்ப ரங்க வழுந்தின சோரியின்
[5]அம்ப ரங்க மருங்கல மாழ்ந்தென.

(இ-ள்.) அம்பரம் கம்-கடலின்நீரிலே, அரு கலம் ஆழ்ந்து என-அரிய மரக்கலம் ஆழ்ந்தாற்போல,—அம்பு-(இராமபிரா னெய்த) அம்புகள், அரங்க-அழுந்தலால்,—அம்பரங்கள் தொடும் கொடி ஆடைஉம்-வானத்தைத் தொடுகின்ற கொடிச்சீலையுடனும், அம்பரங்களொடும்-அம்பாரிகளுடனும், களியானைஉம்-மதக்களிப் புள்ள யானைகளும், சோரியின்-இரத்தவெள்ளத்திலே, அழுந் தின—; (எ-று.)

கொடிச்சீலையுடனே அம்பாரிகளைக்கொண்டயானைகள் சோரி வெள்ளத்தில் அமிழ்ந்தது, மரக்கலங்கள் கூம்புடனே கடல்நீரில் அமிழ்ந்தது போலுமென்று குறித்தார்: தற்குறிப்பேற்றவுவமை யணி. நான்கடிகளிலும் முதலிற் சில எழுத்துக்கள் ஒன்றிவரப் பொருள் வேறுபட்டுவந்தது. யமகமென்னுஞ் சொல்லணியாம்; மேலும் இதுகாண்க. முதலடியில், அம்பரங்கள்-ஆகாயம் என்றும் இரண்டாமடியில், அம்பரங்கள்-அம்பாரிகளென்றும், நான்காமடி யில், அம்பரம்-கடல் என்றும் பொருள்பட்டன. பி-ம்:-[1]ஆடைய.

[3]அம்பரங்கடொடுங். [3]கொடி. [4]யானைகள், யாளியும். [5]அம்பரங்கள் வருங், அம்பரங்கவரும், அம்பரங்களருங். (3378)

122. [1]தம்ம னத்திற் சலத்தர் மலைத்தலை
வெம்மை யுற்றெழுந் தேறுவ [2]மீளுவ
தெம்மு னைசெரு மங்கைதன் [3]செங்கையால்
[4]அம்ம னைக்குல மாடுவ [5]போன்றவே.

(இ - ள்.) தமதுமனத்திற் கபடங்கொண்டுள்ளவரான அரக்கரின் மலைபோன்ற தலைகள் (இராமபிரானது அம்புகளால்) அறுக்கப்படுங் கொடுஞ்செயலுக்கு உட்பட்டு (அவரது உடல்களினின்று) எழுந்து உயரச்சென்றனவாய் மீள்வன,—போர்முனையிலே போர்க்குரியவீரமகள் தனது செங்கையால் அம்மனைக்குலங்களை யாடுமவற்றைப் போன்றன; (எ - று.)

ஸ்ரீராமபிரானம்புகளாலறுக்கப்பட்டு மேலெழுந்துமீளும் அரக்கர் சிரத்தை வருணித்தவாறு அரக்கரின் தலைகள் அறுபட்டு உடலினின்று மேலெழுந்து கீழ்விழுவன விசயமகள் மேலெறிந்த அம்மனைகள் கீழ்விழுவன போலுமெனக் குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. வெம்மை-கொடுமை: கொடுஞ்செயலுக்கு ஆகுபெயர். பி-ம்:—[1]தம்மனத்த. [2]மீள்வன, வீழ்வன. [3]கொங்கையால். [4]அம்முலைக்குலம். [5]பெற்றதே. இச்செய்யுள் சிலபிரதியில் "அங்கதங்கள்" (124) என்ற பாடலுக்குப்பின் உள்ளது. (3379)

123. கேட கங்கண [1]வங்கையொ டுங்கிளர்
கேட கங்கள் [2]துணிந்து கிடந்தன
கேட கங்கி ளர்கின்ற [3]களத்தநன்
கேட கங்கள் மறிந்து [4]கிடந்தவே.

(இ-ள்.) வேட்டைக்குஉரிய கங்கணம் பூண்ட அழகிய கையுடனே விளங்குகின்ற கேடகங்கள், துணிந்து கிடந்தன; தீமை தன்னிடம் விளங்குகின்ற போர்க்களத்தனவாய் அழகிய தும்பை மலர்மாலையுடைய தலைகள் உருண்டுகிடந்தன: (எ - று.)

இது - அரக்கர்களின் கைகளும் தலைகளும் அறுபட்டுக்கிடந்தமையைத்தெரிவிக்கும். முதலடியில், கேடம்-வேட்டை: இங்கு, இலக்கணையால், கொலைத்தொழிலை யுணர்த்திற்று. இரண்டாமடியில், கேடகங்கள்-பரிசைகள்: மூன்றும் அடியை-கேடு அகம் கிளர்கின்ற களத்த நன்கு எனப் பிரிக்க. அகம்-இடம். களத்த - களம் என்பதனடியாப்பிறந்த குறிப்புவினையாலணையும்பெயர். களத்த-களத்திலுள்ளனவான சேனைகள், தம்முடையகேடகங்கள் துணிந்துகிடந்தன:அன்றியும், ஏட-தும்பைமலரைச்சூடிய, கங்கள் -சிரசுகள். மறிந்துகிடந்தன என்னலுமாம். ஏடு பூவிதழ்: இங்கே, இலக்கணையால், (தும்பை) மலர்மாலையைக் காட்டிற்று. ஏட - குறிப்புப்பெயரெச்சம். கம்-சிரசு: அதன் பன்மை - கங்கள். நன்கு என்பது, நான்காமடியின் முதலிலுள்ள 'ஏட' என்பதற்கு விசேடணம். பி.ம்:—[1]வன்கை நெடுங்கிளர், அங்கையொடுகிளர், அங்கையொடுங்கின. [2]துணித்து. [3]களத்தன, களத்தெனக், கரத்தன. [4]கிடந்தன. (3380)

124. ¹அங்க தங்களத் தற்²றழி தாரொடும்
³அங்க தங்களத் தற்⁴றழி வுற்றவால்
புங்க வன்கணைப் புட்டில் ⁵பொருந்திய
புங்க வன்கணைப் ⁶புற்றர வம்பொர.

(இ - ள்.) புருஷரிற்சிறந்தவனான ஸ்ரீராமனுடைய ஆவநாழி கையிற் பொருந்திய (அந்தக்) கூரிய நுனியையுடைய வலியகணை யாகிய புற்றரவம் பொருதலினால், தோள்வளை கழுத்தை யொத்தது: [கழுத்து அற்றதுபோல அறுபட்டது என்றபடி]; தேனொழுக்கெடுத்த மலர்மாலைகளுடனே அழகிய கோபமும் போர்க்களத்தில் நீங்கியழிவுற்றன; (எ - று.)

இராமபிரான் கணையால் கழுத்தைப்போலவே அங்கதமும் அழிவுற, போர்வீரர் கழுத்தற்றதனால் தம்மாலையும் கோபமும் அழிபட்டவராயினரென்க. முதலடியில், அங்கதம் - தோள்வளை. களம் - கழுத்து. அற்று-'அன்' என்ற இடைச்சொல்லினடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று. இரண்டாமடியில், அற்று - அறு என்ற பகுதியினடியாகப்பிறந்த வினையெச்சம். போர்வீரரைக் கோபமும் சிறப்புறச்செய்யுமாதலால், 'அம்கதம்' என்றார். களம்- போர்க்களம். புங்கவன்-புருஷரிற்சிறந்தவன். புங்கம் - கூர்நுனி. பி-ம்:—¹அங்கவெங்களத்தற்று, அங்கவங்களத்தற்று. ²அழிதேரொடும், அழிந்தாரொடும். ³அங்கவெங்களத்தற்று, அங்கதங் கணத்தற்று. ⁴அவியுற்றவால், அழியுற்றவால். ⁵பொருந்தவப் பொருந்தவம். ⁶புற்றரவும். (3381)

125. கயிறு சேர்கழற் ¹கார்நிறக் கண்டகர்
எயிறு ²வாளி படத்துணிந் தியானையின்
வயிறு தோறு மறைவன வானிடைப்
புயறொ றும்புகு வெண்பிறை ³போன்றவே.

(இ-ள்.) கயிற்றினோடுபொருந்திய வீரக்கழலையணிந்த கார் நிறம் பொருந்திய கொடிய அரக்கரின் கோரப்பற்கள் அம்புகள் பட்டதனால் துணிப்புண்டு யானையின் வயிறுதோறும் மறைவன,—வானிடையிலுள்ள மேகங்கள்தோறும் புகுகின்ற வெண்ணிறப் பிறையையொத்தன; (எ - று.)—யானைகள்-புயலையும், எயிறு - பிறைச்சந்திரனையும்போலுமென்க; தன்மைத்தற்குறிப்பேற்றம். பி - ம்:—¹காரினில். ²வாளியினிற்றன. ³போன்றவால். (3382)

126. வென்றி வீர ரெயிறும் விடாமதக்
குன்றின் வெள்ளை மருப்புங் ¹குவிந்தன
என்று மென்று ²மமைந்த விளம்பிறை
³ஒன்றி மாநிலத் ⁴துக்கவு ⁵மொத்தவால்.

(இ-ள்.) வெற்றிபொருந்திய வீரரின் கோரப்பற்களும் விடாத மதத்தையுடைய மலையையொத்தயானையின் வெண்மைநிறமுள்ள தந்தங்களும், குவிந்தனவாய்,—பலநாளினும் அமைந்த இளம்

பிறைகள் ஒன்றுசேர்ந்த பெரியநிலத்திலே சிந்தினவற்றையும் ஒத்தன; (எ-று.)

எயிறும் மருப்பும் பல ஆதலால், அவற்றிற்கேற்ப இளம்பிறை பலவாதற்காக 'என்றும் என்றுமமைந்த விளம்பிறை' என்றார்; வண்ணவடிவுகளால் வந்த தன்மைத்தற்குறிப்பேற்றம். பி-ம்:—[1] குவித்தன. [2] எழுந்த. [3] ஒன்றின். [4] உற்றவும். [5] ஒத்ததால், ஒக்குமால். (3383)

127.—இரத்தக்கடல் பரந்ததனால் பலதீவுகளிலும் உறைவோர் நெடுமலைகளின்மீது ஏறுதல்.

[1] ஒவி லாருட லுந்துதி ரப்புனல்
[2] பாவி வேலை யுலகு பரந்தலால்
தீவு தோறு மினிதுறை [3] செய்கையர்
ஈவி லாத நெடுமலை யேறினார்.

(இ-ள்.) கணக்கற்றவரான அரக்கரின் உடலினின்று வெளிப்பட்ட இரத்தநீர்க்கடல் பரவிக் கடல்சூழ்ந்த தீவுகளெங்கும் பரந்தலினால், தீவுதோறும் இனிமையாகவாழுந்தன்மையரானவர் (கடற்பெருக்கினால்) அழிதலில்லாத நெடியமலைமீது ஏறினார்கள்; (எ-று) —உலகு-உலகின் ஒரு பகுதியாகிய தீவுக்கு இலக்கணை.

அவ்வத்தீவைச் சூழ்ந்த கடல்களிலும் இரத்தநீர்பாயப்பெற்று அவ்வக்கடல் தாம் வாழுமிடங்களிற் பெருகுவதனால் அவ்வத்தீவில் வாழுமவர் ஆங்காங்குள்ளமலைமீது ஏறினாரென்க. கடலின்நீர் உலகமெங்கும் பரத்தலிற் பலதீவுகளினின்று வந்த அரக்கர் மலைமீதேறினார்களெனக் கூறுவாருமுளர். பி-ம்:-[1] ஓய்விலாத நதியுதிரப்புனல், ஓய்வில்காலத்தின் றீவினையொத்தன, ஓய்வில் காலுந்தியுதிரப்புனல். [2] பாய்வில்வேலையினூடு பரந்தவால், பாய்வில்வேலையுலகுபரத்தலால். [3] சேர்கையர். (3384)

128.—விண்முதலியவற்றில் உயிர்முதலியன நிறைதல்.

[1] விண்ணி றைந்தன மெய்யுயிர் வேலையும்
புண்ணி றைந்த [2] புனலி னிறைந்தன
மண் [3] ணிறைந்தன பேருடல் வானவர்
கண் [4] ணிறைந்தன விற்றொழிற் கல்வியே.

(இ-ள்.) உடலிலுள்ள உயிரால், விண்ணிடங்கள் நிறைந்தன; கடலும், புண்ணினின்றுவெளிப்பட்ட நிறைந்த இரத்தநீரினால் நிறைந்தன; (யுத்த) பூமிகளும், (அறுபட்டு) விழுந்த உடலினால் நிறைந்தன; விற்றொழிலைப்பற்றிய கல்வியால், வானவரின்கண்கள் நிறைந்தன; (எ-று.)

சொற்பொருட்பின்வருநிலை. தநுர்வித்தையைப்பற்றி என்னென்ன கூறியுள்ளனவோ, அவைகளையெல்லாம் வானவர்கள் இப்போரிற் கண்கூடாகக் கண்டனரென்க. பேருடல் - வினைத்

தொகை: பண்புத்தொகையாகப் பெரியஉடலெனினுமாம். பி-ம்:— [1]விண்ணிறந்தன. [2]புனலினிற்றந்தன. [3]நிறைந்தவவ். (3385)

129.—சோரிவெள்ளத்துடன் படைக்கலங்கள் கடலில் புகுதல்.

[1]செறுத்த வீரர் பெரும்படை சிந்தின
பொறுத்த சோரி புகக்கடல் புக்கன
[2]இறுத்த [3]நீரிற் செறிந்தன வெங்கணும்
[4]அறுத்து [5]மீன முலந்த [6]வனந்தமே.

(இ - ள்.) கோபித்த வீரர்களின் பெரும்படைகள்,—சிந்தினவாகி, (தம்மைத்) தாங்கின இரத்தநீர் புக்கதனால் (தாமும் அவ்விரத்தநீருடனே) கடலிற்புக்கு, (அக்கடலில்) தங்கிய நீரிலே நெருங்கினவாகி எங்கும் அறுத்தலால் உயிருலந்த மீன்கள் பலவாகும்; (எ-று.)

போர்க்களத்திற் சிந்தின வாள்முதலியவை குருதி வெள்ளத்திழுலடித்துக்கொண்டுபோகப்பெற்றுக் கடலிற்புக்கு இங்குள்ள மீன்களைத் துண்டிக்க, அதனாற் பலமீன்கள் உயிர்துறந்தனவென்பதாம்: தொடர்புயர்வுநவிற்சி. பி - ம்:—[1]செறுத்து. [2]இறுத்து. [3]கானிற். [4]அறுத்த. [5]மீன்முதனந்த. [6]அனந்தமால். (3386)

130.—அப்போது ஸ்ரீராமன் வெல்வதைப்பற்றி மாலியென்ற படைத்தலைவன் தன்னுட் சிந்தித்துக் கூறலுறல்.

ஓல்வ தேயிவ் வொருவ[1]னிவ் வூகத்தைக்
கொல்வ தே[2]நின் று [3]குன் றன யாமெலாம்
[4]வெல்வ தேது மிலாமையின் [5]வெண்பலை
மெல்வ தேயென [6]மாலி விளம்பினுன்.

(இ - ள்.) வலிமைதேய்ந்த இந்தஒருத்தன் இந்த (அரக்கரின்) வியூகத்தை (எதிர்த்து) நின்றுகொல்வதே! மலையையொத்த நாமெல்லாம் வெல்வதென்பது சிறிதும் இல்லாமையினால் வெண்பல்லை மெல்வதோ என்று மாலி யென்பவன் (கருதி மற்றைச் சேனுவீரர்களைப்பார்த்துப் பின்வருமாறு) கூறலானான்; (எ-று.)—மாலி கூறுவதை மேலிரண்டுகவிகளிற் காண்க.

ஓல்வ-வெல்லக்கூடியவை: வலிமையும்பராக்கிரமமும். இனி, இவ்வொருவன் இவ்வியூகத்தைக் கொல்வதென்பது ஓல்வதாவதே! மலைபோன்ற நாமெல்லாம் வெல்வதென்பது ஏதுமிலாமையினால் [மரம்போல]வாளா இருந்து வெண்பல்லை மெல்வதே என்று உரைப்பினுமாம். ஊகம் = வியூகம்: படைவகுப்பு: இங்கே படையென்ற பொருளில் வந்தது.மாலி மூலபலப்படைத்தலைவரில் ஒருவன் போலும். ஒருசாரார் "வன்னி' என்று காணப்படும் பாடம் தவறானது: ஏனெனில், 184-ஆம் பாடல்வரையிலும் மூலபலவதையைப்பற்றிக் கூறுவதென்பது, "எய்யெனுமாத்திரத்தவிந்த தென்பரால், செய்தவத்திராவணன் மூலச்சேனையே'' (184) என்பதனாற் பெறப்படுவதனாலும், வன்னியென்பவன் பலதிசைகளினின்றும் வந்த அரக்கப்படைகளுள் ஒன்றற்குத் தலைவனாத

லாலும்; மூலபலச்சேனையில் அன்னவனிருந்து பேசினனென்பது பொருந்தாமை காண்க என்ப: இனி, 177-ஆம் பாடலை நோக்குமிடத்து [6]வன்னி என்ற பாடம் கொள்ளத்தக்கதே யென்று தோன்றுகின்றது. பி-ம்:—[1]நம்யூகத்தை, இவ்யூகத்தை, இவ்வோதத்தை. [2]நின்ற. [3]குன்றெனை. [4]வல்லது. [5]வன்பனை, வன்பலை. "ஆயிரம்" (132) என்று தொடங்கும் பாடல் முதலிலும், அதன் பின் "கோல்" (131) என்று தொடங்கும் பாடலும், அதன்பின் இப்பாடலும் சிலபிரதியில் உள்ளன: சிலபிரதியில், "கோல்" என்பதன்பின் "ஆயிரம்" என்றபாடலும், அதன்பின் "ஒல்வது" என்ற இப்பாடலும் உள்ளன. (3387)

131.—இதுவும் அடுத்தகவியும்-மாலி மற்றைச் சேனைவீரர்கட்குக் கூறுவதைத் தெரிவிக்கும்.

கோல்வி ழுந்[1]தழுந் தாமுனங் கூடியாம்
மேல்வி ழுந்திடி னும்[2]மிவன் வியுமால்
கால்வி ழுந்த மழையன்ன [3]காட்சியிர்
[4]மால்வி ழுந்துளிர் போலு [5]மயங்கிநீர்.

(இ-ள்.) (இராமனுடைய) பாணம் வந்து விழுந்து அழுந்தாத முன்யாம்கூடி மேல்விழுந்திட்டாலும், இவன் அழிந்திடுவான்; கால்விழுந்த மழைபோலத் தோன்றுகின்ற காட்சியுடையீர்! நீர் அறிவு மயங்கி, திக்பிரமைக்கு உட்பட்டீர்போலும்; (எ-று.)—நாம் இந்த ராமனாகிய எதிரியோடு படையெடுத்துப் பொரவேண்டுமென்பதும் இல்லை: நாமெல்லாந் திரண்டு அந்த எதிரியின்மேல் விழுந்தோமானாலும் அவன் இறந்தொழிவானே! நீங்கள் ஏன் திகைத்து நிற்க வேண்டுமென்றான். உளிர்=உள்ளீர்: முன்னிலைப் பன்மைக்குறிப்பு முற்று. கருநிறங்கொண்டு அம்புமழை பொழிவதால், அரக்கர் கால்விழுந்த மழையன்ன காட்சியராவர். பி-ம்:—[1]அழுந்தாதமுன். [2]அவன். [3]காட்சியர். [4]அல்விழுந்துளிர்போல, மால்விழுந்துளர்போல, மால்விழுந்தளிபோல. [5]மயங்குவீர், மயங்கினீர். (3388)

132. ஆயி ரம்பெரு வெள்ள [1]மரைபடத்
[2]தேய நிற்பது [3]பின்னினி யென்செயப்
பாயு முற் றுட னேயெனப் பன்னினான்
நாய கற்கொ ருதவியை நல்குவான்.

(இ-ள்.) ஆயிரம் பெருவெள்ளமாகிய சேனை (அம்புகளால்) அரைக்கப்படுதலினால் அழியநிற்பதாகும்: (இது அழிந்த) பின்பு இனி என்னசெய்ய (வேண்டுவது உள்ளது)? (ஆகையால்), உடனே மனவுறுதி கொண்டு (இராமன்மீது) பாயுங்கள் என்று (தன்) தலைவனுக்கு ஒருதவியைச் செய்வானாய்க் கூறினான்; (எ-று.)—பி-ம்:—[1]அரைப்பட, அடிப்பட. [2]தேயில். [3]பின்பினியென்செயப், புண்ணினிச்சேயகை. "காயமித்தனையும்மவன் மேற்செல, பாயுமுற்றுடனேயெனப்பன்னினான்" என்று பின்னிரண்டடிகள் சில பிரதியில். (3389)

133.—அரக்கர் பலவகைப்படைகளைப் பொழிதல்.

உற்[1]று ருத்[2]தெழு வெள்ள முடன்றெழாச்
சுற்று முற்றும் [3]வளைந்தன [4]தூவின
ஒற்றை மால்வரை [5]மேலுயர் தாரைகள்
பற்றி மேகம் [6]பொழிந்தெனப் பல்படை.

(இ-ள்.) பொருந்திக் கோபித்தெழுகின்ற (அரக்கரின்) சேனை, வெள்ளம் மாறுபட்டெழுந்து சுற்றிலும் முற்றும் வளைந்தனவாய், ஒருமால்வரைமேல் மேகங்கள் பற்றி மிக்க மழைத்தாரைகளைப் பொழிந்தனபோலப் பல படைக்கலங்களைத் தூவின; (எ-று.)

பொழியும் படைக்கலத்திற்குத் தூவும்மழைத்தாரைகள் உவமை. ஒன்று-ஒற்றையென ஆயிற்று. மால்-பெரிய. பி-ம்:—[1]ஒறுத்து. [2]ஒருவெள்ளம். [3]வளைத்தவர், வளைத்தனர். [4]தூவினர். [5]போல். [6]பொழிந்தன. (3390)

134.—அப்படைகள் சிந்தும்படி ஸ்ரீராமன் சரமழைபொழிதல்.

குறித்[1]தெறிந்தன [2]வெய்தன [3]கூற்றுறத்
[4]தறித்துத் தேருங் களிறுந் [5]தரைப்பட
மறித்த வாசி துணித்தவர் மாப்படை
தெறித்துச் சிந்தச் சரமழை சிந்தினன்.

(இ-ள்.) (அரக்கர்) குறித்தெறிந்தனவும் எய்தனவுமான வற்றைப் பல பகுதிப்படத் துண்டித்து, தேரும் யானைகளும் தரையிற்படவும், மடக்கிய குதிரைகளைத் துண்டித்து அக்குதிரை யிலேறியவரின் பெரிய படைகள் தெறித்துச்சிந்தவும் சரமழை களை (இராமன்) தூவினான்; (எ-று.)—பி-ம்:—[1]எழுந்தன. [2]வெய்யன. [3]கூறுறத், கூற்றிறத், கூற்றிறந், கூற்றதைத். [4]தறிக்க தேரும், தரித்ததேருங். [5]கறைபட. (3391)

135.—இரத்தவெள்ளம் பெருகப் பேய்கள் கூத்தாடுதல்.

வாய்[1]வி ளித்[2]தெழு [3]பஃறலை வாளியில்
போய்வி ளித்த குருதிகள் பொங்குவ
பேய்[4]க ளிப்ப [5]நடிப்பன [6]பெட்புறும்
தீ[7]வி ளித்திடு தீப நிகர்த்தவால்.

(இ-ள்.) வாய்ப்புறத்கிற் சத்தித்துக்கொண்டு எழுகின்ற பலதலைகளையுடைய அம்புகளினால் இறந்துபோகின்ற சேனைகளி னிடத்தினின்று பொங்கியெழும் இரத்தங்களைக்கண்டு (அங்குப்) பேய்கள் மகிழ நடிப்பவற்றின் (வாயில் தோன்றுகின்ற) தீ, விரும் பத்தக்க கலங்கரை விளக்கத்தைப் போன்றன; (எ-று.)

இரத்தவெள்ளம் பெருகுவதுகண்டு அப்பெருக்கின் முகப்பே பாடிக் கூத்தாடும் கொள்ளிவாய்ப்பேய்களின் வாயிலேதோன்றும் நெருப்பு, கலங்களை இங்குவரலாமென்று தெரிவிக்கும் கலங்கரை விளக்குப்போன்றன என்றவாறு; தற்குறிப்பேற்றவணி. போய்

விளித்த—விளித்துப்போவன: விகுதிபிரித்துக்கூட்டல். கலங்கரை விளக்கம் - (இங்கே சேமமான கரையுள்ளது என்று) மரக்கல மாலுமிகளை அழைக்குந் தீபம்: விளக்குக்கூடு: [Light house]. பி-ம்:—[1]விரித்து. [2]எழ. [3]ஏபரன்றலை [4]விளிப்பு, களிப்பு. [5]நடப்பன. [6]வேட்புறும். [7]விளித்தன, விளிப்புறு. (3392)

136.—இரத்தவெள்ளம்பெருகப்பெற்ற பூமிதேவியின் வருணனை.

நெய்கொள் சோரி நிறைந்த [1]நெடுங்கடல்
[2]செய்ய வாடைய ளன்ன[3]செஞ் சாந்தினள்
வைய மங்கை பொலிந்தனண் மங்கலச்
செய்ய கோலம் [4]புனைந்தன்ன செய்கையாள்.

(இ - ள்.) நிணத்தைக்கொண்ட சோரியினால் நிறைந்த பெருங் கடலாகிய செந்நிறமுள்ள ஆடையை யுடுத்தவளும் அப்படிப்பட்ட செந்நிறச் சாந்து பூசிக்கொண்டிருப்பவளுமான பூமியாகிய மங்கை, மங்கலகாலத்திற்கொள்ளும் செந்நிறக்கோலத்தைப் புனைந்தாலொத்த செய்கையை யுடையளானாள்; (எ - று)

கணவனைக்கூட லுறுகின்ற மகளிர் செங்கோலம் பூண்பரென் பதனை "சேக்கைமேலினிதிருந்தாங்கு, அரத்தப்பூம்பட்டரைமிசை யுடீஇக், குரற்றலைக்கூந்தற் குடசம்பொருந்திச்,சிறுமலைச்சிலம்பிற் செங்கூதாளமொடு,நறுமலர்க்குறிஞ்சி நாண்மலர்வேய்ந்து,குங்கும வருணங்கொங்கையினிழைத்துச், செங்கொடுவேரிச் செழும்பூம் பிணையால், சிந்துரச்சுண்ணஞ் சேர்ந்தமேனியில், அந்துகிர்க் கோவையணியோடு பூண்டு...செவ்வணிகாட்ட" என்ற சிலப்பதிகாரத்தாலும் அறியலாம். இனி, மணத்தின் கடைநாளில் ஆலத்தியை மேலேபெய்தலாற் செய்யவான ஆடையைத் தரித்தல் நிகழ்தலைக்கொண்டு கூறிய தென்பாருமுளர். பி - ம்:—[1]பெருநம். [2]ஐய. [3]செந்தாளினள். [4]புனைந்தனள். (3393)

137.—இதுவும்—இரத்தப்பெருக்கின் வருணனை.

உப்புத் [1]தேனுநெய் யோண்டயிர் பால்கரும்பு
அப்புத் தாமெனன் [2]றுரைத்தன வாழிகள்
துப்புப் போற்குரு திப்புனல் [3]சுற்றலால்
தப்பிற் றவ்வுரை யின்றொர் [4]தனுவினால்

(இ - ள்.) உப்பு தேன் நெய் ஒண்டயிர் பால் கருப்பஞ்சாறு நன்னீர் என்று கூறப்படுகின்ற ஏழுகடல்களும் பவழம்போலுள்ள [செந்நிறமான] இரத்தநீரால (எங்குஞ்) சூழ்தலால், இன்று ஒரு தனுவினால் ஏழுகடல்கள் உள்ளன என்ற அந்தவார்த்தை தவறிற்று; (எ-று.)

ஏழுகடல்களுள்ளன என்று நூல்களிற் கூறிய உரை தவறி, இரத்தக் கடலொன்றே எங்கும் உளதாயிற்றென்றவாறு: தொடர் புயர்வுநவிற்சி. தேனு, உ-சாரியை.பி-ம்:-[1]தேன்மது. [2]உரைப்பன. [3]உற்றலால். [4]தனுவினே. (3394)

138.—இராமன் தனு வளைந்திருத்தலும், அரக்கப்படையின் அளவின்மையும்.

ஒன்றுமேதொடை கோலொரு கோடிகள்
சென்றுபாய்வன திங்க ளிளம்பிறை
அன்று [1]போலென லாகிய [2]தச்சிலை
என்று [3]மாள்வ [4]ரெதிர்த்த விராக்கதர்.

(இ - ள்.) தொடுத்துவிடுகை, ஒருமுறையே; அம்புகளோ ஒரு கோடிகள் சென்றுபாய்வன; (அவ்விராமனுடைய) அந்தச்சிலை அன்று தோன்றிய இளம்பிறைத்திங்கள்போலு மென்னுமாறு வளைந்துள்ளது; (இவ்வாறு இருப்பினும்) எதிர்த்த அரக்கர் என்று மாள்வரோ? (எ - று.)

ஒருதொடையில் ஒருகோடி அம்பு வெளிப்படுமாறு இராமன் தன்வில்லை வளைத்தவண்ணமே யிருந்தான்: அதாவது - இடைவிடாமல் அம்புதொடுத்த வண்ணமே இருந்தானென்பது, முதல் மூன்றடிகளில் கூறிய பொருள். அரக்கர் அளவின்றி மிக்கிருந்தது பற்றி, 'எதிர்த்த இராக்கதர் என்று மாள்வர்?' என்றது. பி-ம்:— [1]போல்வனவாகிய. [2]இச்சிலை. [3]மாள்வது. [4]எதிர்ந்த. (3395)

வேறு.

139.—இதுமுதல் ஏழுகவிகள்—மீண்டும் கடும்போர்புரிந்து அரக்கப்படை ஸ்ரீராமசரத்தாற் பட்டமையைத் தெரிவிக்கும்.

[1]எடுத்தவ ரிரைத்தவ [2]ரெறிந்தவர் செறிந்தவர் மறங்கொ டெதிரே, தடுத்தவர் சலித்தவர் [3]சரிந்தவர் பிறந்தவர் தனிக்க ளிறுபோல், கடுத்தவர் [4]கலித்தவர் [5]கறுத்தவர் செறுத்தவர் [6]கலந்து சரமேல், தொடுத்தவர் [7]துணிந்தவர் [8]தொடர்ந்தனர் கிடந்தனர் துரந்த கணையால்.

(இ - ள்.) (இராமனுடைய பராக்கிரமத்தைக்கண்டு அரக்கர் மீண்டும் ஆயுதங்களை) எடுத்து(ப்பொருவதிலுள்ள களிப்பினால்) பேராரவாரஞ்செய்து எறிந்தவரும், வீரகுணத்தைக்கொண்டு எதிரே நெருங்கி(வந்து இராமன் அம்புகளைத்) தடுத்தவரும், (தடுக்கமுடியாமையினால்) சலித்து நிலைமாறிப்பிரிந்து சென்றவரும், தனித்த மதயானைபோல விசைகொண்டு செருக்கிக்கோபித்தவரும், (சிறியவராய்) நெருங்கிவந்து சரத்தைமேலே தொடுத்தவரும், (ஸ்ரீராமன்) துரந்த அம்புகளினால் துண்டுபட்டவராய்த் தொடர்ந்து கிடந்தனர்; (எ - று.)

பி - ம்:— [1]எடுத்தவனிரைத்தவர். [2]எதிர்ந்தவர் செறிந்தவர், எதிர்ந்தவரெதிர்ந்தவர், எறிந்தவரெதிர்ந்தவர். [3]கலித்தவரெதிர்ந்தவர், சரிந்தவரிருந்தவர். [4]களித்தவர். [5]செறுத்தவரிறுத்தவர். [6]கவர்ந்து. [7]துணித்தவர், துணிந்தனர். [8]தொடர்ந்தவர், தொடர்ந்திலர். (3396)

140. ***தொடுப்பது சுடர்ப்பகழி யாயிர [1]நிரைத்தலை [2]துரந்த துறைபோய்ப், படுப்பது [3]வயப்பகழி யாயிரவரை யன்றுபதி னாயிரவரைக், கடுப்பது கருத்துமது கட்புலன் மனங்கருதல் [4]கல்வி யிலவேல், [5]எடுப்பது படப்[6]பொருவ தன்றி [7]யிவர் செய்வதொரு நன்றி யுளதோ.***

(இ - ள்.) தொடுப்பது, சுடரையுடைய பகழி ஆயிரமாகும்; வரிசையான அவை விரைந்து விடுக்கப்பட்ட துறையிற்போய்க் கொல்வது, வெற்றி பொருந்திய பகழியைக்கொண்ட ஆயிரம் வீரரை யன்று; பதினாயிரவரையாகும்; (அந்த அம்புகளின்) விசை, அப்படிப்பட்டது; (அந்த அம்பை விடுத்தவரின்) கருத்தும், அவ்வாறானதே; கட்புலனும் மனமும் (அந்த அம்புகளின் விசையைக்) கருதுதற்கும் கல்வியுடையனவல்ல; இந்த அரக்கர், (தாம் கொண்டுள்ள) வேற்படையை யெடுப்பது (தாம்) இறப்பதற்காகப் பொருவதன்றி, (மாறாகச்) செய்வதற்கு ஏற்ற ஒரு நற்செயலும் உள்ளதோ? (எ - று.)—கட்புலன் மனங்கருதல் கல்வியில-இராமபாணம் கண்ணினுங் கருத்தினும் விசைகொண்டதென்றவாறு. பி-ம்:—[1]நினைந்தவது. [2]துறந்த, துரந்து. [3]வயப்படைஞர், வயப்பகைஞர். [4]கையினயில்வேல், கல்வியிற்றதுவே. [5]அடுப்பது, படுப்பது. [6]பெறுவது. [7]அவர். (3397)

141. ***தூசியொடு நெற்றியிரு கையினொடு பேரணி கடைக்குழை [1]தொகுத்து, ஊசிநுழை யா[2]வகை சரத்தணி [3]வகுக்குமவை யுண்ணு முயிரை, [4]ஆசைகளை [5]யுற்றுருவு மப்புறமு மோடுமத னிப்பு றமுளார், ஈசனெதி ருற்றுறுவ [6]தல்லதிகன் முற்றுவதோர் கொற்ற மெவனோ.***

(இ-ள்.) (அரக்கர்சேனையின்) முன்னணியும் நெற்றியும் இரு சிறகும் (இடையிலுள்ள) பேரணியும் பின்னணியும் ஆகிய இவற்றைத்தொகுத்து ஊசியும் நுழையாவகை அம்புகளின் தொகுதியை வகுப்பவனாயினான், (ஸ்ரீராமன்); அந்த அம்புகள், (அரக்கரின்) உயிரையுண்ணும்; திக்குக்களிற் பொருந்தி ஊடுருவும்; அப்பாலும் ஓடும்; அந்த அம்புக்கு இப்புறமுள்ளவராகிய அரக்கர், கடவுளாகிய ஸ்ரீராமனுக்கு எதிரேபொருந்தி (உயிர்)சிந்துவதல்லது வலிமை முற்றிச் செய்வதாகிய ஒருவெற்றியென்பது ஏது? [அவ்வரக்கர்க்குவெற்றியுண்டாகாது என்றபடி]; (எ - று.)—பி-ம்:—[1]வகுந்து. [2]வெகு. [3]வகுக்கும்வகை......உயிரை, வகுத்து நிரையுண்ணுநசையால். [4]ஆசைதனை. [5]உற்றுருவவப். [6]இல்லை. (3398)

142. ***ஊனகு வடிக்கணைக ளூழியன லொத்தன வுலந்தவுலவைக், கானக நிகர்த்தன ரரக்கர்மலை யொத்தன களித்த[1]மதமா, மானவன் வயப்பகழி வீசுவலை யொத்தன [2]வளைப்புன லுள்வாழ், மீனகுல [3]மொத்தன கடற்படை யினத்தொடும் விளிந்[4]துறுதலால்.***

(இ - ள்.) ஊன் விளங்குகின்ற கூரியஅம்புகள் யுகாந்தகாலத் தீயையொத்தன; அரக்கர்கள் (அவ்வூழித்தீயினால்) அழிந்துபோன

மரக்கூட்டங்களைக்கொண்ட கானகத்தையொத்தார்கள்; களிப்புக் கொண்ட மதயானைகள், (நெருப்புப்பட்டுவேகின்ற) மலைக்குச் சமமாக இருந்தன; (அன்றியும்), மனுகுலத்துக்தோன்றியவனான ஸ்ரீராமனது வலிபொருந்திய அம்புகள், வீசிய வலையை யொத்தன; கடல்போன்ற அரக்கப்படைகள் இனத்தொடும் இறந்துபோனதால் (உலகை)வளைத்தலைப்பொருந்திய கடலுள் வாழ்வனவாகி (அவ்வலையிலகப்பட்டிறந்த) மீன்கூட்டத்தை யொத்தன; (எ-று.)

மீனகுலம்-வடசொற்றொடர்: ஆதலின், இயல்பு. பி-ம்:—[1]கதமா. [2]வளைக்குளுலவா, வளைப்புளுலவா. [3]ஒத்தது, ஒத்தனர். [4]இறுதலால், அறுதலால். (3399)

143. ஊழியிறு திக்கடுகு மாருதமு மொத்தன னிராம[1]னுடனே, பூழியென வுக்குதிரு மால்[2]வரைக ளொத்தன ரரக்கர் [3]பொருவார், ஏழுலகு [4]முற்றுயிர்கள் யாவையு [5]முருக்கியிறு திக்கணின்வரும், ஆழியையு மொத்தன[6]னம் மன்னுயிரு மொத்தன ரலைக்கு நிருதர்.

(இ-ள்.) இராமன்,-யுகாந்தகாலத்து விரைந்து வீசுகிற சண்டமாருதத்தையும் ஒத்தான்: (அவ்வாறு சண்டமாருதம் வீசுவதால்) உடனே புழுதியாகச்சிந்தி உதிர்கின்ற பெரியமலைகளை யொத்தனர், (அவ்விராமனுடன்) பொருபவராகிய அரக்கர்; (அன்றியும், ஸ்ரீராமன்), ஏழுலகங்களையும் பொருந்தி உயிர்கள் யாவற்றையும் அழித்து யுகாந்தகாலத்திற் பொங்கிவருகின்ற கடலையும் ஒத்தனன்: (அவ்விராமபிரானால்) அலைக்கப்படுகின்ற அரக்கர், (அவ்யுகாந்தத்துப் பொங்குங் கடலால் அழிக்கப்படுகின்ற) நிலைபெற்ற அந்த உயிர்களையும் ஒத்தனர்; (எ-று.)—பி-ம்:—[1]உழையே. [2]வரையும். [3]பொருதார். [4]ஒத்து. [5]முறுக்கும், ஒறுக்கும், முறுக்கி. [6]இராமனுயிரொத்தனராக்கர் மலைவார். (3400)

144 முதலுமாக லாயிடையு மாயிறுதி யாயெவையு [1]முற்றுமுயலுங், காலமென லாயினனி ராமனவ்வரக்கர்கடை நாளில் [2]விளியுங், கூலமில் சராசர மனைத்தினையு மொத்தனர்[3] நரைக் கலெழும், ஆலமென லாயின[4]னி ராமனவர் மீனமென லாயி னர்களால்.

(இ-ள்.) முதற்காரணமாயிருந்து இடையுமாய் இறுதியுமாகியுள்ள இராமன், எல்லாப்பொருளும் முற்றுவதற்கு இடமாகி முயல்கின்ற யுகாந்த காலமென்று சொல்லுதற்கு ஏற்றவனாயினன்: அந்த அரக்கர்கள்,—யுகாந்த காலத்தில் இறக்கின்ற வரம்பில்லாத சராசரங்களெல்லாவற்றையும் ஒத்தனர்; ஒலிக்கின்ற கடலிலெழுகின்ற ஆலகால விஷத்திற்கு ஒப்பாயினன், இராமன்: (அவ்வாலகாலத்தில் இறந்த) மீனென்று சொல்வதற்கு ஏற்றவராயினர் அவ்வரக்கர்கள்; (எ-று.)—முற்றுதல்-அழிதல்.

யுகாந்தகாலம்என்பது இறுதியை விளைவிப்பதால், அரக்கர்க்கு இறுதி விளைக்கின்ற ஸ்ரீராமன் அவ்யுகாந்தகாலத்திற்கு

ஒப்பாவ னென்க. ஸ்ரீராமன் யுகாந்தத்தையும் ஆலத்தையும் ஒத்திருக்க, அரக்கர் யுகாந்தத்திலழியும் பொருளையும் ஆலத்தினால் இறக்கும் மீனத்தையும் ஒத்தனரென்றார். பி-ம்:-[1] முற்றுமுறலும். [2] விளையும். [3] குரைக்கடல். [4] அவ்வீரன். (8401)

145. வஞ்சவினை செய்துநெடு [1] மன்றில்வளா மூண்டுகரி பொய்க்கு [2] மறமார், நெஞ்சமுடை யோர்கள்குல மொத்தனர ரக்க ரற [3] மொக்கு நெடியோன், நஞ்சநெடு நீரினையு மொத்தனன டுத்ததனை [4] நக்கி னரையும், பஞ்சமுறு [5] நாளில்வறி யோர்களையு மொத்தன[6] ர ரக்கர் படுவார்.

(இ - ள்.) வஞ்சகமான தொழிலைச்செய்து, பெருமைமிகுந்த நியாயசபையில் பொருளைப்பெற்றுக்கொண்டு [லஞ்சம்வாங்கிக்கொண்டு] பொய்க்கரி கூறுகின்ற அநீதிபொருந்திய நெஞ்சத்தையுடையவர்களின் குலத்தை யொத்தனர், அரக்கர்; பெருமை பொருந்திய இராமன், (அந்தக்குலத்தை யழிக்கும்) அறக்கடவுளை யொப்பவனானான்; (அன்றியும், இராமன்), நஞ்சத்துடன் கூடிய மிக்க நீரினையும் ஒத்தனன்; அதனை அடுத்துநக்கினவரையும், பஞ்சமுற்றகாலத்து வறியோர்களையும் ஒத்தவராய், அரக்கர், இறப்பவரானார்; (எ - று.)

மன்றிற் கரிபொய்த்தவர் குலத்தோடு கெடுவரென்க. இவ்வாறு அரக்கர்கள் மாண்டதற்குக் காரணம்-வஞ்சனையுடையவராயிருந்தமையென்பார், 'அரக்கர்கள் வஞ்சவினைசெய்து கரிபொய்க்கு மறமார் நெஞ்சமுடையோர்க ளொத்தனர்' என்றார். பி-ம்:-[1] மண்ணில். [2] மறமா, மறவன். [3] ஒத்த. [4] நக்குநரையும். [5] நாள்வறுமையோர்களையும். [6] அவ்வீரர். (8402)

146.—இலங்கையிலுள்ளும்புறமும் தெரியாதபடி இரத்த வெள்ளந் தோன்ற அரக்கியர் கலங்கி யலறியோடுதல்.

வெள்ளமொரு [1] நூறுபடும் வேலையினவ் வேலையு[2] மி லங்கை வெளியும், பள்ளமொடு [3] மேடுதெரி யாதவகை சோருருதி பம்பி யெழலும், [4] உள்ளுமதி லும்புறமு மொன்றுமறி யாதலறி யோடினர்களாற், கள்ளநெடு மான்விழிய ரக்கியர்க லக்கமொடு கால்கள் குலைவார்.

(இ - ள்.) ஒரு நூறுவெள்ளஞ்சேனை யிறக்குஞ் சமயத்தில் அந்தக் கடலும் இலங்கையின் வெளியிடமும் பள்ளமும் மேடும் தெரியாதபடி பெருகுகின்ற இரத்தவெள்ளம் நிரம்பி யெழலும், கள்ளத்தன்மையைக் கொண்டு நெடிய மானின்விழியையொத்த விழியைக்கொண்ட அரக்கியர்கள், மதிளின் உள்ளும் புறமும் ஒன்றுந்தெரியாமல், கால்கள் குலையக் கலக்கத்தோடு அலறியோடினர்; (எ - று.)—பி-ம்:-[1] நூறொருடிரு நூறுபடும் வேலையின், நூறொருடிரு நூறுபடவேலையும், [2] இலங்கைநகரும். [3] மேடுமறியாதபடி. [4] உள்ள.

147.—நூறுசதகோடி படைத்தலைவர் தாங்கிநிற்றல்.

நீங்கினர் நெருங்கினர் முருங்கின [1]ருலைந்துலகி [2]னீளு மலை போல், [3]வீங்கின பெரும்பிணம் விசும்புற வசும்புபடு சோரி[4]விரி வுற்று, [5]ஓங்கின நெடும்பரவை யொத்[6]துயர வெத்திசையு முற்[7]றெ திருறத், [8]தாங்கினர் படைத்தலைவர் நூறுசத கோடியர் [9]தடுத்த லரியார்.

(இ - ள்.) (சேனைவீரர்), நெருங்கிப்பொருது உயிர்குன்றி அழிந்து (உயிர்) நீங்கினர்: (அதனால்), உலகில் நீளும் மலைபோற் பெரும்பிணங்கள், வானத்திற் பொருந்த ஓங்கிமிக்கன; பெருக்குப் பொருந்திய இரத்தங்கள், விரிவுற்று, பெரியகடலையொத்துஉயர எத்திசையினெல்லையிலும் சென்று எதிராகப் பொருந்தும்படி [மீண்டு] ஓங்கி நின்றன; (அவ்வேளையில்) தடுத்தற்கு அரிய வரான நூறு சதகோடியினரான படைத்தலைவர், (இராமபிரானோடு) எதிர்ந்து நின்றனர்; (எ - று.)— நூறுசதகோடி-பதினாயிரங்கோடி. பி-ம்:—[1]உலந்து. [2]வீழுவெருவில். [3]வீங்கினர். [4]வருவித்து. [5]ஓங்கினன். [6]இயைவ, இசைவ. [7]எதிர்வுற. [8]தாங்கின. [9]தடுப்ப வரியார். (3404)

148.—இதுவும் அடுத்த கவியும் — படைத்தலைவரும் ஸ்ரீராமனும் பொருதமையைத் தெரிவிக்கும்.

தேருமத மாவும்[1]வரை யாளியொடு வாசிமிகு சீயமுதலா, வூரு மவை யாவையு [2]நடாயினர்க டாயினர்களுந்தி னர்களாற், காருமுரு மேறுமெரி யேறுநிகர் வெம்படையொ டம்பு கடிதின், தூரும் வகை [3]தூயினர் [4]துரந்தனர்க ளெய்தனர் [5]தொடர்ந்த னர்களால்.

(இ-ள்.) (அந்தப்படைத்தலைவர்கள்), தேரும் மதம்பொருந்திய யானையும் மலையிற் சஞ்சரிக்குந்தன்மையுள்ள யாளியோடு குதிரையும் (வலிமை)மிக்க சிங்கமும் முதலாக ஊர்தியாகவுள்ள எல்லாவற்றையும் கடாவிநடத்தி, (ஸ்ரீராமனை நோக்கிச்) செலுத்தினார்கள்; (அன்றியும்), மேகமும் பேரிடியும் பேரனலும் ஒத்த கொடிய படைகளுடனே அம்புகளையும் விரைவின் (போர்க்களம்) தூரும்படி தூவினார்கள்; விரைந்து எய்தவண்ணம் நெருங்கித் தொடர்ந்தார்கள்; (எ - று.)

படைக்கலங்களைத் தூவுதலும், அம்புகளை எய்தவண்ணம் நெருங்கித் தொடர்தலுஞ் செய்தனர் படைத்தலைவரென்க. பி-ம்:- [1]வயமாவும் வரையாளியொடு, வரையாளியொடுபாய்புரவி. [2]நடாவினர்கடாவினர். [3]வீசினர், சிந்தினர். [4]எய்தனரெறிந்தனர். [5]தொடர்ந்தனையரால். (3405)

149. ***வம்மி[1]னட வம்மினெதிர் வந்துறும தாருயிர் வரங்கள் [2]பிறவுந், தம்மினென [3]வின்னமொழி தந்தெதிர் பொழிந்தன [4]தடுப்ப ரியவாம்,வெம்மினென [5]வெம்பகழி [6]வேலையென வேயின னல் வெய்ய வினையோர், தம்மின மனைத்தையு [7]முனைந்தெதிர் [8]தடுத்தனர் தனித்த னியரோ.***

(இ - ள்.) (ஸ்ரீராமன் அந்தப்படைத்தலைவர்களைப் பார்த்து), 'வாருங்கள்; (நான்) அடுமாறு வாருங்கள்; எதிரேவந்து நுமது அருமையான உயிரையும் வரங்களையும் மற்றுமுள்ளவற்றையும் தந்திடுங்கள்' என இம்மொழிகளைச்சொல்லிக்கொண்டு, எதிர்முகமாகப் பொழிந்தனவும் தடுப்பரியனவுமான கொடிய அம்புகளைக் கொடிய மின்னலைப்போலவும் கடலைப்போலவும் ஏவினன்: அந்தக் கொடிய செயலையுடைய படைத்தலைவர் தனித்தனியே எதிர்நின்று அந்த அம்புகளின் கூட்டம் எல்லாவற்றையும் ஊக்கங்கொண்டு தடுத்தனர்; (எ - று.) அரோ-ஈற்றசை.

அட! வம்மின் என்று எடுப்பினுமாம்: அட-இகழ்ச்சிக்குறிப்பு. நட வம்மின்என எடுத்து நடந்துவம்மின் என்றுகூறி, வினையெச்சம் பகுதிமாத்திரமாய்வந்தது என்பாருமுளர். அம்புகள் ஒளியினால் மின்னலையும் பேரளவினால் கடலையும் போலும். தம் இனம்-அரக்கவர்க்கமுமாம். பி-ம்:-[1]எட. [2]பலவும். [3]இன்னமொழி தந்தெதிர் பொழிந்தனர், இன்னமொழி மொழிந்தனர். [4]தடுப்பவரியார், தடுப்பரியராய். [5]வன்பகழி. [6]வேலயில்கள்வேலையென, வேலையின வெல்லையில, வேலையெனவம்பினவைவ், வேலையென வேலையில. [7]முனிந்தெதிர், முனைக்கெதிர். [8]தடுத்தனன், தடுத்தன. (3406)

150.—மூன்றுகவிகள்—அரக்கர் கடும்போர்புரியத் தேவர்கள் சிவபிரானைக்கிட்டி வணங்கி 'இப்போர் எவ்வாறு ஆகும்? என்று வினவுதலைத் தெரிவிக்கும்.

அக்கணையை யக்கண மறுத்தனர் செறுத்திக [1]லரக்க ரடையப், புக்கணைய லுற்றனர் [2]மறைத்தனர் புயற்[3]கதிகம் வாளி பொழிவார், திக்கணை [4]வகுத்தன ரெனச்[5]செல நெருக்கினர் [6]செருக்கின் [7]மிகையால், முக்கணனை யுற்றடி வணங்கியிமை யோர்[8]ரிவை மொழிந்தனர்களால்.

(இ - ள்.) வலிமையுடைய அரக்கர்கள் யாவரும், புகுந்து ஒன்றுசேர்தலைப்பொருந்தி, (இராமபிரான் விடுத்த) அவ்வம்புகளைக் கோபித்து அக்கணத்தில்தானே அறுத்தொழித்து, புயலைக் காட்டிலும்மிகுதியான அம்புகளைப் பொழிபவராய் (ஸ்ரீராமனை) மறைத்துத் திக்குக்கு ஒருஅணையை வகுத்தாற்போல மிக்க கருவத்தோடு மிகவும் நெருக்கினின்றார்கள்; (அப்போது), இமையோர்,— மூன்று கண்களையுடையவனான சிவபிரானை நெருங்கி திருப்பாதங்களை வணங்கி இவ்வார்த்தைகளைச் சொல்லலானார்கள்; (எ - று.)— இமையோர் மொழிந்ததனை அடுத்த இருகவிகளிற் காண்க. இராமபிரான் தம் கண்ணுக்குப் புலனாகாவாறு அரக்கரான்மறைக்கப்பட்டமையால், இமையோர் பேரச்சங்கொண்டு மொழியலாயினரென்க. பி-ம்:—[1]அரக்கரடரப், அரக்கரகடாய்ப். [2]மறைந்தன. [3]அதிகமாரி. [4]வகுத்தனவெனச். [5]சிலர். [6]செருக்க, நெருக்கின். [7]மிசையான். [8]இது. (3407)

151. படைத்தலைவ ருற்றொருவர் மும்மடி யிராவண னெனும் [1]படிமையோர், கிடைத்தன ரவர்க்கொரு [2]கணக்கில வளைத்த

ணர் [3]கிளர்ந்து லகெலாம், [4]அடைத்தனர் தெழித்தன ரழித்தனர் [5]தனித்துள னிராம னவரோ, துடைத்தன[6]ரெம் வெற்றியென [7]வுற்றன ரினிச்செயல் பணித்தி சுடரோய்.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) படைத்தலைவர்களிற் பொருந்திய ஒவ்வொருவரும், இராவணனினும் மும்மடங்கானவரென்று சொல்லத்தக்க தன்மையுடையவர்; (போரில்) வந்து நெருங்கினவரான அவர்க்கு ஓரெல்லையில்லை; (அன்னார்) வளைந்துப் பொங்கி உலகினிடத்தையெல்லாம் அடைத்துக்கொண்டு அதட்டலுடனே அழிக்கத்தொடங்கியுள்ளார்: இராமன் தனித்துள்ளான்: அவ்வரக்கர்களோ எமதுவெற்றியைத்துடைத்துள்ளாரென்னுமாறு பொருந்தியவர்; தழல்வண்ணனே! இனி, நிகழுஞ்செயல் யாது? சொல்வாய்: (எ - று.)-படிமை-தன்மை. பி-ம்:—[1]பெயரினுர். [2]கணக்கிலர். [3]கிளைத்து. [4]புடைத்தனரடித்தனர்தெழித்தனர், அடைத்தனர் தெழித்தனரடர்த்தனர், அடைத்தனரழித்தனர்தெழித்தனர். [5]தெரித்துள திராமனை வனே. [6]நம், செய். [7]உற்றன. இச்செய்யுள் சிலபிரதிகளில் அடுத்த பாடலுக்குப்பின் காணப்படும். (3408)

152. எய்தகணை யெய்துவதன் [1]முன்பிடை [2]யறுத்திவர்களேழுலகைமும், [3]மொய்கொள்கணை [4]மாமுகி லெனும்படி வளைத்தனர் [5]முனிந்த னர்களால், [6]வைதுகொலி னல்லது மறப்படை கொடிப் படை கடக்கும் வலிதான், [7]செய்ய[8]திரு மாலினொ டுனக்குமரி தென்றனர் திகைத்து [9]விழுவார்.

(இ-ள்.) (ஸ்ரீராமபிரான்) எய்த அம்பு வந்துசேர்வதற்கு முன்னம் நடுவிலேயே (அந்தக்கணையை) அறுத்துவிட்டு இவ்வரக்கர்கள் ஏழுலகங்களிலும் நெருங்குதலைக்கொண்டு திரண்ட பெரிய முகிலென்னும்படி வளைத்துக் கொண்டவராய் முனிந்துள்ளார்கள்; இவ்வரக்கப்படையைச் சபித்து ஒழித்தால் ஒழிக்கலாமே தவிர, வீரத்தைக்கொண்ட படையைக்கொண்டு (எதிர்த்து) வெல்லக்கூடிய வலிமை, செவ்விய திருமாலினுடனே உனக்கும் அருமையானது என்று கூறினவராய்த் திகைத்து விழலானார்கள்; (எ - று.)

மறப்படைகொடு இப்படை எனப் பிரிக்க. வாய்ச்சாபத்தாலன்றிக்கைச்சாபத்தால் இவர்கள் மாளாரென்றூர்: வாய்ச்சாபம்-சபித்தல்: கைச்சாபம் - வில். பி-ம்:—[1]முன்படை. [2]துணித்திவர்கள். [3]பெய்தகணை, மொய்த்தகணை. [4]மாமுகிலினிற்புடை, மாமுகிலெனப்புடை. [5]பிடித்தனர்கள்போல், உளைத்தனர்களால். [6]வைதகலின். [7]செய்த. [8]திருமாலுடன். [9]விரைவார். (3409)

153.—இதுவும் அடுத்தகவியும் 'அரக்கர்தோற்க ஸ்ரீராமன் வெல்வான்' என்று சிவபிரான் கூறியதைத் தெரிவிக்கும்.

[1]அஞ்சலினி யாங்கவர்க ளைத்தனைவ ராயிடினு மத்தனைவரும், [2]பஞ்சி [3]யெரி யுற்றதென வெந்தழிவ ரிந்தவுரை பண்டு முள

தாம், நஞ்சமமிழ் தத்தை[4]நனி வென்றிடினு நல்லற நடக்கு மதனை, வஞ்ச[5]வினை பொய்க்கருமம் [6]வெல்லினுமி ராமனை[7]யம் மாயர் கடவார்.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (நீங்கள்) இனி அஞ்சற்க: அவ்வரக்கர் அங்கே எத்தனை பேராயிருந்தாலும் அத்தனைபேரும் பஞ்சில் நெருப்புப் பற்றினாற்போல வெந்தழிந்தொழிவார்; இந்தப்பேச்சு முன்னமே யுண்டானது: நஞ்சமானது அமிருதத்தை மிகவும் வென்றிட்டாலும், நடக்குமதான நல்லறத்தை வஞ்சவினையாகிய பொய்ச்செயல் வென்றாலும், மாயச்செயலையுடைய அவ்வரக்கர் இராமனை வெல்லமாட்டார்: [ஸ்ரீராமனே அவ்வரக்கரை யெல்லாம் வெல்வான் என்றபடி;] (எ-று.)

வென்றிடினும், வெல்லினும் என்ற இடத்துள்ள உம்மைகள் வெல்லுதல்நிகழாது என்ற பொருளைக் காட்டும். வஞ்சவினையும் பொய்ச்செயலு மெனினுமாம். அஞ்சல்-எதிர்மறைவியங்கோள் முற்று. பி - ம்:—[1]அஞ்சியயரன்மினவர், அஞ்சிபயரேலவர்கள். [2]பஞ்சில். [3]அனல். [4]நலியாதுநனி. [5]வினையைத்தருமம், வினையக் கருமம். [6]வென்றிடினுமையனை. [7]இவ்வஞ்சர். (3410)

154. அரக்கருள [1]ரார்சிலரவ் விடண [2]னலாதுலகி னாவி யுடையார், இரக்கமுள [3]தாகினது நல்லற மெழுந்துவளர் கின்ற இனிநீர், கரக்கமுழை தேடியுழல் கின்றிலிர்க [4]ளின்றொரு கடும்ப கலிலே, [5]குரக்கின்முத [6]லையகனை [7]யாளுடைய கோளுழுவை கொல்லு [8]மிவரை.

(இ - ள்.) அந்தவிபீடணனையல்லாது உலகில் ஆவியுடைய ராகிய அரக்கருள் எந்தச்சிலர் தாம் உளர்? இரக்கமென்பது உள்ள தாயின், அதனால் நல்லஅறம் எழுந்துவளர்கின்றதாகும்: இனி, நீர் ஒளித்துக்கொள்ளும்படி குகைகளைத் தேடிக்கொண்டு உழலவேண்டா: இந்தஒருநாளின் நடுப்பகலிலே, குரங்குகட்கு முதன்மைத்தலை வனான சுக்கிரீவனை அடிமையாகவுடைய வலிய புலிபோன்றவனான ஸ்ரீராமன், இவ்வரக்கரைக் கொல்லுவான்; (எ - று.)—பி - ம்:— [1]ஆர்சிலர்கள், ஆகிடலவ். [2]அலாலுலகிலாவி. [3]ஆகியது, ஆகிறது. [4]நின்றொரு. [5]குரக்கு. [6]நாயகரை. [7]வாள். [8]அவரை. (3411)

155.—பிரமனும் உருத்திரமூர்த்தி கூறியதை உடன்பட்டுச் சொல்ல, அப்போது ஸ்ரீராமன் வாளிமழையால் அரக்கர் தலையைக் குவித்தல்.

என்று [1]பரமன்பகர நான்முகனு மன்னபொரு ளே[2]யிசைத லும், நின்றுநிலை யாறினர்கள் [3]வானவரு மானவனு [4]நேமி யென லாம், [5]துன்றுநெடு [6]வாளிமழை [7]மாரியினு [8]மேலன தூரந்துவிரை விற், [9]கொன்றுகுல மால்வரைகண் மானுதலை மாமலைகு வித்த னனரோ.

(இ - ள்.) என்று சிவபெருமான் சொல்ல, பிரமதேவனும் அவன் கூறியதையே உடன்பட, வானவர்களும் (மனத்தடுமாற்றம் ஒழிந்து) நின்று (தம்) நிலையில் மனமமையப்பெற்றார்கள்; மனு குலத்திற் பிறந்தவனாகிய ஸ்ரீராமனும்,சக்கரம்போல் வட்டவடிவாகப்பொருந்திய நெருங்கிய நெடியவாளிமழையை மாரியினும் மேலனவாகத் துரந்து விரைவிலே கொன்று குலமலைகளை யொக்கின்ற பெரிய தலைமலைகளைக் குவித்தனன்; (எ - று.)

பெருமலைபோல ஸ்ரீராமனா லறுக்கப்பட்ட அரக்கரின் சிரக் குவியல் குவிந்தன வென்க. தவறுமலறுத்தலால், வாளிமழைகள் நேமியெனற்கு ஏற்றனவாயின. பி-ம்:—[1]சிவனும். [2]இசைத்தலும். [3]வானவர்கள். [4]நேமியெனலாத். [5]வென்றி, [6]வானினுழை, வாளியவை. [7]வாளியினும், தூளியினும். [8]மேலவை. [9]குன்று. (3412)

வேறு.

156.—இதுமுதல் மூன்றுகவிகள் - அரக்கர் அழிந்துபட்டதன் வருணனை.

மகர [1]மறி [2]கடலின் வளையும் வயநிருதர்
சிகர மனையவுடல் சிதறி [3]யிறுவருயிர்
பகர வரியபதம் விரவ வமரர்[4]பழ
நகர மிடமருக [5]நவையர் நலிவுபட.

(இ-ள்.) மகரமென்னும்மீனைக் கொண்டதும் (அலை) மடங்கப் பெற்றதுமான கடல்போல (ஸ்ரீராமனை) வளைந்துகொண்ட வலிமையையுடைய குற்றமுள்ளவரான அரக்கர்—(தம்முடைய) உயிர் பகர்தற்கு அரிய [மிகச்சிறந்த] சுவர்க்கபதவியைப் பொருந்தவும் அமரருடைய பழமையான தேவலோகம் இடம் இல்லாமற் போகவும், மலைச்சிகரத்தையொத்தஉடல் சிதறுண்டு வருத்தமுற முறியப் பெற்றார்கள்; (எ - று.)

நவையரான நிருதர் எனக் கூட்டுக. இறுதல்-முறிதல். குற்றெழுத்துப் பயின்றுவருதலால், இது - குறுஞ்சீர்வண்ணமெனப் படும். அன்றியும், இதுமுதல் பதினான்குகவிகள் -சந்தவிருத்தங்கள்: "இவற்றில் நிரையசையால் தொடங்கும் பாக்கள் - "தனன தனனதன தனன தனனதன" என்ற சந்தக்குழிப்புள்ளவை. பி-ம்:-[1]எறி. [2]கடலில். [3]உருளவுயிர், இரிவருயிர். [4]படி. [5]அணியர். இச்செய்யுளின்பின் "தினகரனை" (163) என்ற பாடல் சிலபிரதியிலுள்ளது. (3413)

157. உகளு [1]மிவுளிதலை துமிய வுற [2]கழல்கள்
[3]அகழி யறவலிய [4]தலைக ளறு தலைவர்
துகளி னுடல்கள்[5]விழ வுயிர்கள் சுரருலகின்
மகளிர் [6]வணமுலைகள் தழுவி யகமகிழ.

(இ - ள்.) வலியபாதங்கள் (தாம் வீழ்தலால் இலங்கையின்) அகழியற்றிட [தூர்ந்திட], (தமது) வலியதலைகளறப்பெற்ற

(குதிரைத்) தலைவர்களின் உடல்கள் தூளிபோல் பொடியாய்விழ அவர்களுயிர்கள் சுரருலகிலுள்ள மகளிரின் அழகியமுலைகளைத் தழுவி மனம்மகிழாநிற்க, (அவர்களேறிய) குதிரைகள் தலைதுண்டு பட்டதனாற் புரண்டு வீழும்; (எ-று.)

குதிரைவீரரான நிருதருயிர்கள் சுவர்க்கமடைந்து தேவசரீரத்தைப் பெற்றுத் தேவதாஸ்திரீகளின் வனமுலைகளைத் தழுவ, அவர்களேறிய குதிரைகளும் அவர்களுடலும் தலையறுப்புண்டு வீழ்வனவாயின வென்றவாறு. தலை துமிய இவுளி உகளுமென்க. வீரர்களின் உடலினின்று கால்களும் தலைகளும் வேறு வேறாக அறுபட்டமை முன்னடிகளில் விளங்கும். பி - ம்:—[1] புரவி தலை. [2] தலைகள். [3] தகளியுற. [4] தலைவர றுகுவன. [5] விழி, [6] இள. இச்செய்யுளின்பின் "பாறு படு" (164) என்ற செய்யுள் சிலபிரதிகளில் உள்ளது. (3414)

158. மலையு மறிகடலும் வனமு [1]மருநிலமும்
உலைவி லமரருறை யுலகு முயிர்களொடு
தலையு முடலுமிடை [2]தழுவு தவழ்குருதி
அலையு மரியதொரு [3]திசையு மிலதணுக.

(இ-ள்.) மலைகளிலும் (அலை) மடங்குகின்ற கடல்களிலும் வனங்களிலும் மருப்பூமியிலும் அழிதலில்லாத அமரருறைகின்ற உலகத்திலும், (அரக்கரின்) தலைகளையும் உடல்களையும் இடையே தழுவிக்கொண்டு தவழ்கின்ற குருதிக்கடலும் உயிர்களும் இல்லாத ஒருதிசையும் அணுகுமாறு இல்லை; (எ-று.)—எங்கும் அரக்கருயிரும், தலைகளும் உடல்களும் பொருந்திய இரத்தக்கடலும் நிரம்பியிருந்தனவென்க. மரு-நீரில்லாத பிரதேசம்: வடசொல். அலை - கடல். பி - ம்:—[1] வறுநிலனும், உறுநிலனும், அறுநிலமும். [2] தழுவுமிழீ. [3] திசையிலவைதரும், திசையுமிலதருகு. (3415)

159.—அரக்கர் முதல்வர் விளிய, வானவர் பூமழைபொழிதல்.

இனைய செருநிகழு மளவி னெதிர்பொருத
வினைய [1]முடைமுதல்வ ரெவரு முடன்விளிய
அனைய படைநெளிய [2]வமரர் சொரிமலர்கள்
[3]நனைய விசையினெழு துவலை [4]மழைகலிய.

இதுமுதல் மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) இப்படிப்பட்ட போர் நிகழும்பொழுது, எதிரே பொருத வஞ்சனைக்குணமுள்ள முதல்வரான அரக்கரெல்லாம் ஒருசேர அழிய, (அவர்களின்) அந்தச்சேனை தத்தளிக்க அமரர் சொரிந்தமலர்களின் மொட்டுகளிலுள்ள விசையாகஎழுந்த மதுத்திவலைகளின் மழை மிக,—(எ-று.)—இரியலுறுபடையை, விலகி, கடவ (160), விலகியது (161) என முடியும்.

[4]மழைகலிய என்ற பாடத்திற்கு-மகிழ்ச்சியினால் தேவர்கள் மலர்மாரிபொழிய அம்மலர்மாரித்திவலைதான் இடைவிடாது நிற்றலால் வானத்துமழையைப் பூமியிற்பெய்யவொட்டாது தடுத்தன

வென்க. பி-ம்:—[1]உடையமுதலவரும். [2]அமரரழிகுருகி, அமரிணழி குருதி. [3]துணையின். [4]மழைபொழிய. இச்செய்யுள் சிலபிரதியில் "அழகிது" (162) என்ற பாடலுக்குப்பின் உள்ளது. (3416)

160.—இராக்கதர் சிதறியோடிய சேனைகளை நிறுத்தி இராமன்மீது செலுத்துதல்.

இரிய லுறுபடையை நிருத ரிடைவிலகி
[1]எரிகள் சொரியுநெடு விழிய ரிழுதையர்கள்
[2]இரிக இரிகவென வுரறு தெழிகுரலர்
[3]கரிக ளரிகள்பரி கடிதி னெதிர்[4]கடவ.

(இ - ள்.) இராக்கதர்கள், நடுவே விலகிப்போய், நிலைகெட்டு ஓடுதலுற்ற சேனையை(க் கிட்டி), நெருப்பைச்சொரிகின்ற நீண்ட கண்களையுடையவரும், 'அசாரமானவர்களே! திரும்புக, திரும்புக' என்று உரத்து அதட்டிக்கூறுகின்ற குரலையுடையவருமாகி, யானைகளையும் சிங்கங்களையும் குதிரைகளையும் விரைவாக (ஸ்ரீராமனெதிரே) செலுத்த,—(எ - று.) —பி-ம்:—[1]எரியகனல் சொரியும். [2]திரிகையெனவுரறுதெழிலர்மிகுகுரலர். [3]கரிகளரிபரிகள், கரிகள் பரிகளரி. [4]கவவ. (3417)

161.—அரக்கர்படை மும்முரமாகப் பொருதல்.

உலகு செவிடுபட மழைக [1]ளுதிரவுயர்
அலகின் மலைகுலைய வமரர் தலையதிர
இலகு [2]தொடுபடைக ளிடியொ [3]டுருமனைய
விலகி யது[4]திமிரம் வளையும் வகைவிளைய.

(இ-ள்.) உலகு செவிடுபடவும், (வானத்தினின்று) மேகங்கள் கீழே சிந்தவும், உயர்ந்த அளவிடமுடியாத மலைகள் நிலைகுலையவும், தேவர்களும் தலைநடுங்கவும், விளங்குகின்ற செலுத்தப்பெறும் படைகள் (ஓசையாலும் ஒளியாலும்) இடியுடனே மின்னலையொத்தனவாக, (நிலைகெட்டோடிய அரக்கச் சேனை), இருள்வளையும் வகை விளையுமாறு (ஸ்ரீராமனைச் சூழத்) திரும்பி நின்றது; (எ - று.)

ஆரவாரிப்பினால் உலகு செவிடுபட்டனவென்க; அதிர்ச்சியினால் மழைகளுதிர்ந்தன. [4]'திமிலம்வளையும்வகை விளைய' என்ற பாடத்துக்கு-நெருங்கியபோர் சூழ்ந்துகொள்ளுந்தன்மை விளைய, (இரியலுற்றசேனை) விலகியது என்க. பி-ம்:—[1]உயரவுயர். [2]கொடு. [3]உருமலைய. [4]திமிலம்விளையுமலைதலிய, திமிலம்விளையும்வகை விளைய. இச்செய்யுள் "அழகிது" என்று தொடங்கும் அடுத்த பாடலுக்குப்பின் சிலபிரதிகளிலுள்ளது. (3418)

162.—இனி, எட்டுக்கவிகள்-அரக்கருடன் ஸ்ரீராமன் கடுமையாக நடத்திய போரைக் கூறும்.

அழகி தழகிதென வழக னுவகையொடு
பழகு மதியவரை யெதிர்கொள் பரிசுபட

[1]விழைவி னெதிரவதி ரெரிகொள் விரிபகழி
மழைகள் [2]முறைசொரிய வமரர் மலர்சொரிய.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ-ள்.) சுந்தரவுருவினனான ஸ்ரீராமனும், 'அழகாகவுள்ளது, அழகாகவுள்ளது' என்றுசொல்லி, மகிழ்ச்சியுடனே பழகிய அதிதியரை எதிர்கொள்கின்ற தன்மைபொருந்த விருப்புடனே (அரக்கரை) எதிர்கொள்ளுமாறு அதிர்கின்ற எரியைக் கொண்ட விரிந்த அம்புமழைகளை முறையே சொரியவும், (அதுகண்ட) தேவர்கள் மலர்மாரி பொழியவும்,—(எ - று.)—"தினகரனையணவு கொடிகள் திசையடைவ" என அடுத்த கவியில் முடியும். பி - ம்:—[1]விழியினெதிரெதிரி னெரிகள் விளி, விழைகுமெதிரவெதிரெதிர் கொள் விரி, விழைவினெதிரெதிர்களெரிகள்விரி. [2]மழை. (3419)

163\. தினக ரனை[1]யணவு கொடிகள் [2]திசையடைவ
[3]சினவு பொருபரிகள் செறிவ வனுகவுயர்
அனக னொடு[4]மமரின் முடுகி யெதிரவெழு
கனக வரை [5]பொருவ கதிர்கொள் மணியிரதம்.

(இ - ள்.) சூரியனைத் தொடுகின்ற கொடிகள் திசைகளிற் சென்றுசேர்வனவாக, கோபிக்கின்ற போர்செய்யுங் குதிரைகள், (போர்முனையில்) நெருங்குவனவாகிச் செறிவனவாக, ஒளியைக் கொண்ட மணிகளழுத்திய இரதம்,—மேன்மைபெற்ற குற்றமற்ற ஸ்ரீராமனோடு போரிலேவிரைந்து எதிருமாறுவருகின்றமேருமலையையொத்தன; (எ - று.)—கொடியும் பரிகளும் இரதங்களினுடையன. பி - ம்:—[1]அணைய. [2]திசைகளொடும். [3]வனசகனியுலகுவயிரமிலகுவன, வனசகனியிலகுவயிரமிலதனுக. [4]அமரிலடுகிமுடுகுவன், அமரின்முடுகியெழுபவன. [5]பொருதகடியபரியிரதம், பொருவுகடிகைபரியிரதம். இச்செய்யுள், சிலபிரதிகளில் "மகரமறிகடல்" (156) என்ற பாடலுக்குப்பின் உள்ளது. (3420)

164\. பாறு படுசிறகு கழுகு பகழிபட
நீறு படுமிரத நிரையி[1]னுடல்தழுவி
வேறு [2]படர்படர விரவி சுடர்[3]வலையம்
மாறு பட[4]வுலக நிரைக ளளறுபட.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அம்புகள் படுவதனால் நீறுபடுகின்ற இரதவரிசைகளிலுள்ள வுடலை, பருந்தும் பொருந்தியசிறகினையுடைய கழுகும் தழுவி வேறாகச் செல்லுதலைப் பொருந்தவும், (அங்ஙன் அவை செல்வதனால்) சூரியனது ஒளிவட்டம் நிலை மாறுபடவும், (ஆங்குச் சிந்திய பிணங்களாலும் இரத்த நீராலும்) உலகநிரைகள் மாறுபட்டனவாய்ச் சேற்றின்தன்மையைப் பொருந்தவும்,—(எ - று.)

இச்செய்யுளின் முதற்சீரில் 'தனன' என்ற சந்தக்குழிப்புக்குப் பதிலாகத் 'தான' என்ற சந்தக்குழிப்புஉள்ளது. இச்செய்யுள்

சிலபிரதியில் "உகளும்" (157) என்பதன்பின்னிருக்க, இதன் பின் "மலையும்" (158) என்ற பாடல் உள்ளது; சிலபிரதியில், இச் செய்யுள் "தேவர் திரி" (167) என்ற செய்யுளின்பின் உள்ளது. பி-ம்:—[1]உடல்விரவி, உடறவிர. [2]தொடர். [3]மலையம். [4]உலகின் மலைகளளறுபட, உலகிலாறுபலபடர. (3421)

165. அருகு கடல்திரிய வலகின் [1]மலைகுலைய
[2]உருகு சுடர்களிடை திரிய[3] வுரனுடைய
இருகை யொருகளிறு திரிய விடுகுயவர்
திரிகை யெனவுலகு முழுது முறை[4]திரிய.

(இ - ள்.) (ஒப்பற்ற) வலிமையுடைய இருகைகளைக்கொண்ட களிறு போன்ற ஸ்ரீராமன் (மண்ணை) இடுகின்ற குயவரின் திரிகையைப் போல (அம்பெய்தவண்ணம்) திரிவதனால், அருகிலுள்ள கடல் திரியவும், அளவில்லாத [பேரளவுள்ள] மலைகள் நிலை குலையவும், உருகுவதற்குக்காரணமான இரு சுடர்களும் வானத்தினிடையே மாறுபடவும், உலக முழுவதும் (தாம் இருக்கும்) முறையினின்று மாறுபடவும்,—(எ-று)—இச்செய்யுள் சிலபிரதியில் "தேவர்திரி" (167) என்றதன் பின்உள்ளது. இராமன் அம்பெய்த வண்ணம் சாரிகை திரிவதனால் மண்ணிலே கடல்களும் மலைகளும், விண்ணிலேகதிர்களுமாக, இங்ஙன் மண்ணும் விண்ணும் அடங்கிய உலகமுழுவதும் திரியலுற்றன என்க. திரிகை-சக்கரம். பி - ம்:—[1]மலைதிரிய. [2]அருகு. [3]வரிவிலுடை. [4]திரிவ. இச்செய்யுளுக்குப் பிரதியாக ஒருபிரதியில்,

திரிய வலகின்மலை திரிய விருசுடர்கள்
திரிய வொருவனெதிர் சினவி னெடுமடர
வரிகை யொருகளிறு திரிய விடுகுயவர்
திரிகை யெனவுலகு முழுதுமிடைதிரிய.

என்று ஒரு பாடல் காணப்படுகின்றது. (3422)

166. சிவனு மயனுமெழு திகிரி யமரர்பதி
யவனு மமரர்குல மெவரு [4]முனிவரொடு
[1]கவன முறுகரண [2]மிடுவர்[3]கழுதினமும்
நமனும் வரிசிலையு மறனு நடனவில.

(இ - ள்.) (அப்போது) பேய்க்கூட்டங்களும் யமனும் கட்டமைந்த (ஸ்ரீராமனது) வில்லும் அறனும் கூத்தாட, சிவபெருமானும் பிரமதேவனும் (போர் செய்ய) எழுகின்ற சக்கரப்படையையுடைய அமரர்குழுவுக்குத்தலைவனை திருமாலும் அமரர் குலத்தைச் சேர்ந்த எவரும் முனிவர்களும் (மகிழ்ச்சியினால்) விரைவுபொருந்திய குட்டிக்கரணம் போடுவாராயினர்; (எ-று.)

கரணமிடுதல்-தலையைக் கீழாகவைத்து உடலைத்தூக்கியுருண்டு விழுகை: இது, மகிழ்ச்சியினாற்செய்யுஞ் செயலாகும். பி - ம்:—[1]முனிவரரும். [2]கமனமுதல் கரணம். [3]இருவர், இடுவ. [4]கழுவினமும். 'கவனமுதல்கரணமனகன்கவலையிட' என்று சில

பிரதிகளில் மூன்றுமடி. இச்செய்யுள் சிலபிரதியில் "அழகிது" (162) என்பதன் பின் உள்ளது.

இப்பாடலுக்குப்பின் சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படும் பாடல் வருமாறு:—

கரிய திலதமலே திரிய வலிசுடர்கள்
இரிய வொருவி லுடை யிருகை யொருகளிறு
திரிய விடுகுயவர் திரிகை யெனவுலகு
தெரிய வெழுகடலு முழுது முறைதிரிய. (3423)

167. தேவர் திரிபுவன [1]நிலையர் [2]செருவிதனை
ஏவ ரறிவுறுவ ரிறுதி முத[3]லறிவின்
மூவர் [4]தலைகள்பொதி ரெறிவ [5]ரறமுதல்வ
பூவை நிறவவென வேத முறை[6]புகழ.

இரண்டு கவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) 'திரிபுவனங்களிலும் தம்மிருப்பைக் கொண்டவரான தேவர்களில் எவர் இந்தச்செருவினது இறுதி இன்னவாகு மென்பதை அறிவார்கள்? முதன்மையறிவைக்கொண்ட மூவர்கள் (இந்தச்செருவைக்கண்டு) தலைநடுக்கங்கொள்வார்கள்; 'அறத்திற்குமுதல்வனே! பூவை மலர்போன்றநிறமுள்ளவனே!' என்று வேதபுருஷன் முறைமைபடப் புகழ,—(எ - று.) இச்செய்யுளில், 'வேதமுறை புகழ' என்ற எச்சம், (166) 'அறனும் நடனவில, சிவனும்...முனிவரொடு கரணமிடுவர்' எனக் கீழே சென்று இயையும். "குறுமையு நெடுமையும் அளவிற், கோடலின்" என்பவாதலால், இரண்டுகுற்றெழுத்துக்குப் பதில் 'வே' என நெட்டெழுத்தொன்று வந்தது. இனி, 'வேத' என்றவிடத்து 'மறையும்' எனப் பாடங்கொள்ளினுமாம். பி-ம்:—[1]நிலையில். [2]செருவிறலை. [3]உணர்வின். [4]தலைபொதிர்கள். [5]உறு. [6]புகழ்வ. (3424)

168. எய்யு மொருபகழி யேழு கடலுமிடு
வெய்ய களிறுபரி யாளொ டிரதம்விழ
[1]ஒய்ய வொரிகதியி னோட வுணரமரர்
[2]கய்க ளெனவவுணர் கால்கள் கதி[3]குலைவ.

(இ-ள்.) (அப்போது இராமபிரான்) எய்கின்ற ஒப்பற்ற பகழியினாலே ஏழுகடலிலும், (முகபடாம்) இட்ட கொடியகளிறு குதிரை பதாதி இரதம் என்னும் நால்வகைச் சேனையும் விழாநிற்கையில், (பாற்கடலைக்கடையுமாறு) விரைய ஒரு கதிகொண்டு செல்லுகின்ற அவுணர் அமரர் என்ற இவர்களின் கைகளைப்போல (அஞ்சியோடுகின்ற) அரக்கரின்கால்கள் கதிகுலைவனவாயின; (எ - று.)—இச்செய்யுளின் முதற்சீர் 'தைய' என்ற சந்தக்குழிப்பையும், மூன்றுஞ்சீர் 'தான' என்ற சந்தக்குழிப்பையும் கொண்டன. இதனோடு சந்தச் செய்யுள் முற்றும்; மேற்செய்யுள் சந்தக்குழிப்புக்கு ஒத்துவரவில்லை யென்ப: இனி, வடநூற்

போக்கையொட்டிப் பார்ப்பின், அடுத்தசெய்யுளின் மூன்று நான்கா மடிகளிலுள்ள, பு, வெ, என்பன நெடிலோசை பெற்றனவாகிச் சந்தக்குழிப்புக்கு ஏற்றவாகும். பி - ம்:—[1]ஒய்யினொரு. [2]கைய னெனவுணரக். [3]குலைய. (3425)

169. [1]**அண்ணல் விடுபகழி யானை யிரதமயல்**
பண்ணு புரவி[2]படை வீரர் தொகுபகுதி
[3]**புண்ணி னொடுகுறிகள் புள்ளி யென[4]விரைவின்**
[5]**எண்ணு வனவனைய [6]வெல்லை யிலநுழைவ.**

(இ-ள்.) பெருமையிற்சிறந்தவனான ஸ்ரீராமன் விடுகின்ற பகழிகள், (தைப்பதனால்)—சமீபத்திலேயுள்ள யானை இரதம் சேணமமைந்தபுரவி படைவீரர் என்ற இவை கூடிய பகுதிகளிலே புண்ணொடுதோன்றியவடுக்கள் புள்ளிபோலத் தோன்ற, (அச்சேனைகளை) விரைவில் எண்ணுபவற்றை யொத்தனவாகி எல்லையில்லாதனவாய் நுழைவனவாயின; (எ - று.)

இராமபிரான் விடுத்த எல்லையற்ற சரம் சதுரங்கசேனைகளின் உடலிற்பாய்ந்து புண்வடுவையுண்டாக்கியது - அந்தச்சேனைத் திரளை அந்தப் பாணங்கள் எண்ணுகையிற் புள்ளியிட்டதனைப் போன்றிருக்க, விரைவிற்சென்றன எனக்கூறித்தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. நூற்றுக்கு ஒருபுள்ளி அல்லது ஆயிரத்துக்கு ஒருபுள்ளி என இவ்வாறு கணக்கிடுவோர் புள்ளியிடும் இயற்கை, இங்குக் கருதத்தக்கது. இச்செய்யுளின் முதற்சீர் 'தன்ன' என்ற சந்தக்குழிப்பினது.—பி - ம்:—[1]அண்ணலடு. [2]படைவர் தொகுதி பகுதி. [3]புண்ணினிடு. [4]விரவி. [5]எண்ணுமளவு. [6]எல்லையில் நுழைய, எல்லையினினுழைய. (3426)

வேறு.

170.—அப்போது ஸ்ரீராமன் சரமதில் சமைத்தல்.

சுருக்கமுற் றதுபடை சுருக்கத் தாவினிக்
[1]**கரக்கமுற் றொருபுறத் [2]தென்னுங் கண்ணினால்**
அரக்கருக் கன்று [3]செல் வரிய தாம்வகை
சரக்[4]கொடு நெடுமதில் சமைத்திட் டானரோ.

(இ - ள்.) (அப்போது இராமன், 'இவ்வரக்கர்) படை குறைவதாயிற்று; (இங்ஙனம்) சுருங்குவதனால், (எஞ்சிய படை) இனி ஒருபுறத்திற் பொருந்தி ஒளித்துக்கொள்ளும்: (அங்ஙன் ஒளித்துக் கொள்ளாதவாறு செய்வேன்) என்கின்ற கருத்தினால்', அப்போது அரக்கர்க்கு (அப்பாற்) செல்வது இயலாதபடி (அவர்களைச்சூழச்) சரத்தாலியன்ற கொடிய நெடிய மதிலை அமைத்தான்; (எ - று.)

கண் - எண்ணம்; கண்ணுதல் - கருதுதல். செல்வு - போகை: தொழிற்பெயர். பி - ம்:—[1]கரக்குமுற்று, கரக்கமற்று. [2]என்றும். [3]செல்லரியவாம்வகை, செல்வரியதாகிய, செவ்வரியவாம்வகை. [4]கடு. (3427)

171.—அரக்கர் சரமதிலைக் கடக்கமாட்டாமை.

மாலியை மாலிய வானை மால்வரை
போலுயர் கயிடனை மதுவைப் [1]போன்றுளார்
சாலிகை [2]யாக்கையர் [3]தணிப்பில் வெஞ்சர
வேலியைக் கடந்திலர் [4]லகை [5]வென்றுளார்.

(இ - ள்.) உலகைவென்றுள்ளவரும், மாலியையும் மாலிய வானையும் பெருமலைபோலுயர்ந்துள்ள கைடபனையும் மதுவையும் போன்றுள்ளாருமாகிய கவசமணிந்த உடலையுடையவரான அவ்வரக்கர்கள், (இராமபிரானுண்டாக்கியதான) தணிதலில்லாத கொடிய அம்பினாலியன்ற (அம்) மதிலைக்கடக்கமாட்டாதவராயினர்; (எ - று)—சாலிகை - கவசம். பி - ம்:—[1]போன்றுள. [2]யாக்கையது. [3]அளப்பில்வெஞ், அரக்கர்செஞ். [4]உலகை. [5]மேற்கொள்வார். (3428)

172.—அரக்கர்சேனை வற்றுதல்.

[1]மாண்டவர் மாண்டனர் மற்றுளோரெலாம்
[2]மீண்டன ரொருதிசை யேழு வேலையும்
மூண்டற [3]முருக்கிய வூழிக் [4]காலத்தில்
தூண்டுறு சுடர்சுடச் சுருங்கித் தொக்கபோல்.

(இ - ள்.) (இராமபிரானது சரத்தால்) மாண்டவர் மாண்டொழிந்தனராக, மற்றுள்ளோரெல்லாம், தூண்டுதல் பொருந்தினாற்போன்று விளங்குகின்ற (வடவைத்) தீ மூண்டு மிகவும் [எல்லாவற்றையும்] அழிக்கின்றயுகாந்தகாலத்தற் சுட, (அதனால்) ஏழுகடல்களும் வற்றிச் சுருங்கித் திரண்டனபோல ஒருதிசையில் மீண்டனர்; (எ - று.)

போர்க்களமெங்கும் பரவியிருந்த அரக்கர் பலர் மாள எஞ்சியவர் அக்களத்தின் ஓரிடத்திலே தொக்கதற்கு, ஊழிக்காலத்து வடவைக்கனலால் ஏழுகடல்களும் வற்ற வற்றாதுஎஞ்சிய அக்கடல்களின் நீர்ப்பகுதி சுருங்கிய இடத்தில் தொகுதலை உவமை காட்டினார்: இதனால், இராமசரத்தின் கொடுமை விளங்கும். சுடர் - தீ. பி - ம்:—[1]மாண்டனர்மாண்டனர், மாண்டவர்மாண்டற. [2]ஈண்டினர். [3]முருங்கிய. [4]காலத்தீத். (3429)

173.—இதுமுதல் ஐந்துகவிகள் ஒருதொடர்; இராமனது சரக்கொடுமைகண்டு திகைத்த அரக்கர் கூறியமை தெரிவிக்கும்.

புரஞ்சுடு கடவுளும் புள்ளின் பாகனும்
அரஞ்சுடு குலிசவே லமரர் வேந்தனும்
உரஞ்சுடு கிற்கில [1]ரொருவ னாமுடை
வரஞ்சுடும் வலிசுடும் வாழு நாள்சுடும்.

(இ - ள்.) திரிபுரத்தையெரித்த சிவபெருமானும், கருடனையேறிச் செலுத்துவோனாகிய திருமாலும், காய்ச்சி அரத்தினால் அராவப்பட்டுள்ள வச்சிரப்படையையுடைய தேவர்க்கதிபனான

இந்திரனும் (நம்முடைய) வலிமையை அழிக்கமாட்டாதவராயினர்; (தனிப்பட்டமனிதனான) ஒருவன், நாம் பெற்றுள்ள வரத்தின் வலிமையைக் கெடுப்பான்: (நம்முடைய) வலிமையையும் அழிப்பான்: வாழ்நாளையும் போக்குவான்; (எ-று.)—பி-ம்:—[1]ஒருவர். ()

174. ***ஆயிர வெள்ளமுண் [1]டொருவ ராழிசூழ்***
மாயிரு ஞாலத்தை மறிக்கும் [2]வன்மையோர்
[3]ஏயின பெரும்படை [4]யிதனை யோர்விலால்
ஏயெனு மாத்திரத் தெய்து கொன்றனன்.

(இ-ள்.) ஒருவரே, கடலாற்சூழப்பட்ட மிகப்பெரியபூமியைத் தடுத்துப் போர்செய்யவல்ல வலிமையையுடையோர்: (அப்படிப்பட்டவர்), ஆயிரம் வெள்ளமென்னுந் தொகையினர் (நம்சேனையில்) உண்டு; (அவ்வாறு) பொருந்தின இந்தப்பெரியசேனையை (இவ்விராமன் தனது) ஒரு வில்லினால் ஏ யென்னும் அளவிற்குள் எய்துகொன்றிட்டான்; (எ - று.)—பி - ம்:—[1]ஒருவன். [2]பான்மையோர். [3]மேயின. [4]அதனை. **(3431)**

175. ***இடைபடும் [1]படாதன விமைப்பி லோர்படை***
[2]புடைபட வலங்கொடு விலங்கிப் போகுமால்
படைபடு கோடியோர் [3]பகழி யாற்பழிக்
கடைபடு [4]மரக்கர்தம் [5]பிறவி கட்டமால்.

(இ-ள்.) (வேறு எவராலும்) வெல்லப்படாதனவான தேவர்களுடைய படைகளும் போர்க்களத்தில் (எம்படைக்கு முன்னே) இறந்துபடும்; (அங்ஙனம் அவை) புடைக்கப்படுவதனால், (நம்படை) வெற்றியைப்பெற்று அப்பாற்செல்லும்: (இப்படிப்பட்ட) படைகளிற் பொருந்திக் கோடிக்கணக்கினராய் (இராமனது) ஒருசரத்தினால் தாழ்மையான பழியைப்பெற்ற அரக்கருடைய பிறவியானது கஷ்டத்தை உண்டாக்குவதற்கேயாயிற்று; (எ - று.)

தேவசேனைகளையும்வென்ற இவ்வரக்கப்படை இப்போது ஒரு மனிதன் சரத்தினால் எளிமைப்பட்டுப் பழியடைதலால் இவ்வரக்கப் பிறவியே கஷ்டத்தைத் தருவதாயிற்றென்கின்றனர். தம்மைப் படர்க்கையாகப் பேசுகின்றனர். இமைப்பிலோர்-தேவர். இடை-போர்க்களமாகிய இடம். பி-ம்:—[1]படாதினி. [2]புடைபடு, படைபடும், உடைபடும். [3]சரத்தினாற். [4]அரக்கராம். [5]பிறவிக் கட்டமால், பிறவிக்கட்டம்மா. **(3432)**

176. ***பண்டுல [1]குய்த்தவ னோடும் பண்ணமை***
குண்டையின் பாகனும் பிறருங் கூடினர்
அண்டர்கள் விசும்பினில் [2]ஆர்க்கின் றருளைழக்
கண்டில மிவனெடு மாயக் கள்வனால்.

(இ - ள்.) முன்பு உலகத்தைப்படைத்தவனான பிரமதேவனோடும், சேணமமைந்த எருதை ஏறிச்செலுத்தும்வனான சிவனும், (இந்திராதியரான) மற்றோரும் ஒருங்கு திரண்டுள்ளார்: வானத்தில் நின்று ஆர்க்கின்றவரான தேவர்களிடையில் (மாயவனான விஷ்ணு

வைக்) காண்கின்றே மில்லை: (ஆகையால்), இந்த இராமன் மிக்க மாயத்தையும் கள்ளத்தையுமுடைய திருமாலேயாவன்; (எ-று.)— பி-ம்:—[1] அளித்தவனேடும், உதித்தவனேடும். [2] ஆர்க்கின்றாரிடை

177. கொன்றன னினியொரு கோடிகோடி [1]மேற்று
அன்றெனிற் [2]பதுமமேற் றாகில் [3]வெள்ளமாய்
[4]நின்றது நின்றினி நினைவ தென்பிற
[5]ஒன்றென வுணர்கென வன்னி யோதினன்.

(இ-ள்.) இப்போது ஒருகோடி கோடிக்கணக்கினும்மேலாக, அன்றெனின் பதுமமென்னுங் கணக்குக்கும்மேலாக (இவ்விராமன் நம்மைக்) கொன்றான்: ஆதலால், (இப்போது) சேனை, வெள்ள மென்னும் அளவினதாய் (எஞ்சி) நின்றது; வேறொன்றை ஒரு பொருளாக இப்போது நின்று நினைவது என்ன (பயன்தரும்)? ஆராய்க என்று (படையிலுள்ள அரக்கர்கள்) கூற, வன்னியென் பவன் கூறலானான்; (எ-று.)

பிறஒன்றெனநினைவதென்-இவனைத் தெய்வமாகமதித்து வழி படுவது செய்யத்தக்கதே தவிர, மாறுபட்டுச்செய்ய நினைக்கத்தக் கது ஒன்றில்லை யென்றவாறு. கம்பராமாயணசாரத்தில் 173 முதல் 179-வரையிலுமுள்ளன-சரத்திற்குட்பட்ட அரக்கர் தம்முள்ளே கூறிக்கொள்வன என்றும், இங்கு "வன்னியோதினன்" என்ற இடத்து உன்னியோதினன் என்றாற்போன்ற பாடமே இருக்கத் தக்கதென்றும் கூறியுள்ளார். இனி, வன்னியென்ற பேருள்ள படைத்தலைவன் இந்த மூலபலத்தினும் ஒருவனுளனென்றுவது, மூலபலத்தை யொட்டிச்சென்ற பலதிசைப் படைகளுள் ஒன்றின் தலைவனை வன்னியே இனித்தாம் செய்யவேண்டுவது குறித்து இங்ஙன் கூறுகின்றானென்றுவது கொள்ளலாம். பி - ம்:—[1] மற்று. [2] விந்தமற்றாகில், பதுமமன்றாயின். [3] வெள்ளமாம். [4] நின்றன நின்றன. [5] ஒன்றெனநினைகென, என்றனனுணர்கென. (3434).

178.—இதுவும் அடுத்தகவியும்-வன்னியென்பவன் அரக்கரை நோக்கிச் செயவேண்டியதைக் கூறுதலைத் தெரிவிக்கும்.

விழித்துமோ விராவணன் முகத்து மீண்டியாம்
பழித்துமோ நம்மைநாம் [1]படுவ தஞ்சினால்
அழித்துமோர் பிறப்புறு நெறிசென் [2]றண்மயாம்
[3]கழித்துமிவ் வாக்கையைப் புகழைக் [4]கண்ணுற.

(இ-ள்.) (பகைவரால்) கொல்லப்படுதற்கு அஞ்சினோமானால், திரும்பிச் சென்று யாம் இராவணன்முகத்து விழிப்போமோ? (செயிக்கமுடியாமற்போனாலும் செத்துப்போயிருக்கலாமே: செத் தோமில்லையே! என்று கழிந்ததற்கு இரங்கி) நம்மையே நாம் பழித்துக் கொண்டிருப்போமோ? (இவைசெய்யத்தக்கனவல்ல)! (புறங்காட்டாது எதிர்த்துநின்று இறந்தோமென்ற) புகழைப் பெறுமாறும் மீண்டும் பிறத்தலில்லாத ஒருநெறியைச் சென்று சேரவும் இவ் யாக்கையை யாம் (ராமபாணங்களுக்கு இரையாகப்) போக்கக்கடவோம்; (எ - று.)

போரிலிறந்தால் வீரசுவர்க்கம் பெறலாமாதலால், 'பிறப்புறு நெறிசென்றணம' என்றது. சுவர்க்கத்தையும் மோட்சத்தையும் அபேதமாகக் கூறும் மரபு இங்குக்கருதத்தக்கது. அழித்தும்— மீண்டும்: "அழித்துப்பிறந்தனனாகிக் கண்ணுற". பி - ம்:—[1]படுவதஞ்சியே, படுவதஞ்சினும், படுதலஞ்சினால், படுத்தலஞ்சினால், படுத்தலஞ்சினும். [2]ஆங்குயாம், அண்மைநாம், அண்முவாம். [3]கழித்துமேல். [4]கண்ணினு. (3435)

179. [1]இடுக்கினிப் பெயர்ந்துறை யெண்ணு வேமெனின்
[2]அடுத்தகூர் வாளியி னரண நீங்கலோம்
எடுத்தொரு முகத்தினு செய்தி யாமினிக்
கொடுத்துநம் [3]முயிரென வொருமை [4]கூறினான்.

(இ - ள்.) இடுக்கான (இந்) நிலையில், ('புறங்காட்டியோடுதல் வீரருக்குத்தகாது' என்பதைப்பொருட்படுத்தாது) இப்போது அப்பாற்சென்று உறைதலைப்பற்றி யெண்ணுவோமானால், அடுத்துள்ள கூரிய வாளியினாலியன்ற அரணத்தினின்று [சரமதிலிலிருந்து] நீங்கமுடியாதவராவோம்: இனி, நாம் ஒருமுகமாகப் பொருந்திப் பொருது நம்முயிரைக் கொடுப்போமென்று ஒருமைப்படக்கூறினான்; (எ - று.)

வன்னி பலபடி ஆலோசனை கூறுது, ஓரே தீர்மானமாகக் கூறினனென்பார். 'ஒருமைகூறினான்' என்றார். எடுத்தல் - பகைவன்மீது சென்று பொருதல். பி - ம்:—[1]இடுக்கினிற்போந்துவேறு, இடுக்கினிப்பேர்ந்துறை, இடுந்தினிப்பெருந்துறை. [2]தடுத்தகூர் வாளியினுரைத்தாங்கலேம், தடுத்தகூர்வாளியின்றுரைநீக்கிலாது அடுத்தகூர்வாளியினணை நீங்கலால். [3]உயிரையென்று. [4]கூறினர்.

180.—அரக்கர்யாவரும் இராமபிரானை வளைத்துஅதிர்த்தல்.

இளக்கரு நெடுவரை யீர்க்கு [1]மாறெலாம்
அளக்கரிற் [2]பாய்ந்தெனப் பதங்க மாரமுல்
விளக்கினில் விழ்ந்தென விதி[3]கொ டுந்தலால்
வளைத்திரைத் தடர்த்தனர் மலையின் மேனியார்.

(இ-ள்.) இளகுவதற்கு அரிய [கடினமான] நெடியமலையையும் இழுத்துச்செல்லவல்ல ஆறுகள்யாவும் கடலிற் பாய்ந்தாற்போலவும், விட்டிற்பூச்சி நிறைந்த தீச்சுடரையுடைய விளக்கினில் வீழ்ந்தாற்போலவும், ஊழ்வினை (பிடரியைப்) பிடித்துக்கொண்டு தள்ளுதலால் மலைபோன்ற மேனியையுடைய அ(வ்வ)ரக்கர்கள் (இராமபிரானை) வளைத்துக்கொண்டு இரைத்தவண்ணம் அடர்க்கலாயினர்; (எ - று)—பி - ம்:—[1]ஆறனை. [2]பரந்தெனமதங்கியாரமுல். [3]கொணர்ந்தலால், கொடுத்தலால். (3437)

181.—அரக்கர் பலபடைக்கலங்களை ஸ்ரீராமன்மீது தூவுதல்.

மழு[1]வெழுந் தண்டுகோல் [2]வலயம் நாஞ்சில்வாள்
எழுவளிற் [3]குந்தமே வீட்டி தோமரம்

கழு[4]விகற் [5]கப்பண முதல கைப்படை
[6]தொழுவினிற் புலியனு னுடலிற் றூவினார்.

(இ - ள்.) மழுவும் (போரில்) மூண்டெழுகின்ற தண்டும் அம்பும் வலயமும் நாஞ்சிலும் வாளும் எழுவும் கூர்முனையை(த் தன்னிடத்து)க் கொண்ட குந்தமும் வேலும் ஈட்டியும் தோமரமும் கழுக்களும் பராக்கிரமத்தைக் காட்டுகின்ற கப்பணம்முதலிய கையாற் பிரயோகித்தற்கு உரிய படைக்கலங்களை, தொழுவத்திலே யுள்ள புலியையொத்தவனான ஸ்ரீராமனுடைய உடலிலே (அவ்வரக்கர்) தூவினார்கள்; (எ-று.)—தொழுவம்-மாட்டுக்கொட்டில்.

தொழுவத்துப்புலியை ஸ்ரீராமனுக்கு உவமைகூறியதனால், ஸ்ரீராமனுடைய பராக்கிரமத்திற்குமுன்னே அரக்கர் பசுப்போல்வ ரென்பது பெறப்படும். பி-ம்:—[1]எழுத். [2]வளையம், வளைய. [3]குலிச வேல். [4]முதற், முழுக். [5]கற்பணம். [6]தொழுவிடைப், தொழு மனிற். (3438)

182.—இராமபிரான் அவ்வரக்கர்மீது காந்தர்வாஸ்திரம் விடுதல்.

காந்தருப் பம்மெனுங் கடவுண் மாப்படை
வேந்தருக் கரசனும் [1]வில்லி [2]னூக்கினான்
பாந்தளுக் கரசெனப் பறவைக் கேறெனப்
போந்[3]துருத் ததுநெருப் பனைய [4]போர்க்கணை.

(இ-ள்.) காந்தருப்பமென்கின்ற தெய்வத்தன்மை பொருந்திய சிறந்த அஸ்திரத்தை, சக்ரவர்த்தியாதற்குஉரிய ஸ்ரீராமனும் வில் லில்தொடுத்து விடுத்தான்; போரில்விடுத்த நெருப்பை யொத்த (அந்த) அஸ்திரம், பாம்புகட்கு அரசனான ஆதிசேஷனைப் போலவும் பறவைகட்குத் தலைவனான கருடனைப்போலவும் (வில்லினின்று) புறப்பட்டுச்சென்று கோபித்தது; (எ - று.)—பி - ம்:— [1]விலக்கி. [2]வீக்கினான். [3]உருத்தன. [4]பொற்கணை. (3439)

183.—அந்த அஸ்திரத்தின் வருணனை.

மூன்றுகண் ணமைந்தன [1]வைம்மு கத்தன
[2]ஆன்றமெய் தழலன [3]புன லு மாழ்வ
வான்றொட [4]நிமிர்வன வாளி மாமழை
தோன்றின புரஞ்சுடு மொருவன் தோற்றத்த.

(இ - ள்.) மூன்றுகண்ணமைந்தனவும் ஐந்துமுகங்களையுடையனவும், சிறந்த உடம்புகள் தழலைப்போன்றனவும் புனலில் மூழ்குவனவும் வானத்தை யளாவ வளர்ந்தனவுமான மிக்க (அந்தக்) கணைமழைகள், திரிபுரதகனஞ் செய்த ஒப்பற்ற சிவபெருமான்போன்ற தோற்றத்தவாய்க் காணப்பட்டன; (எ-று.)

சிவபெருமான் மூன்றுகண்களும் ஐந்துமுகங்களும் தழல்நிற வடிவும் கங்கையில் ஆடுதலும் வான்தொடநிமிர்தலும் உடையவனாதல், இங்குக் கருதத்தக்கது. காந்தர்வாஸ்திரத்தினின்று மூன்று

கண்கள் முதலியனபெற்ற அம்புகள் தோன்றினஎன்க: கணைப் பன்மைபற்றி, 'அமைந்தன' முதலிய பன்மைமுற்றுக்கள் வந்தன. பி-ம்:—[1]வைமுகத்தன. [2]ஆன்றனநெய்கனல், ஆன்றருநெய்கனல். [3]புகையுமாமென, புனலுமாடின. [4]நிவர்வன. (3440)

184.—பத்துக்கோடிச் சேனைத்தலைவர் அழிந்திட மூலபலம் நொடிப்போதில் ஒழிந்துபோதல்.

ஐயிரு கோடிய ரரக்கர் வேந்தர்கள்
[1]மொய்வலி வீரர்க ளொழிய முற்றுற
எய்யெனு மாத்திரத் தவிந்த தென்பரால்
செய்[2]தவத் திராவணன் மூலச் சேனையே.

(இ - ள்.) பத்துக்கோடிக்கணக்கினரான அரக்கவேந்தராகிய நெருங்கிய (உடல்) வலியுள்ள வீரர்கள் மிச்சமில்லாமலொழியுமாறு அழிந்திடவே, செய்த தவத்தையுடைய இராவணனது மூலபலம் ஏயெனுமளவில் அழிந்திட்டது; (எ - று.)—என்பர், ஆல் - அசைகள்: என்பர் என்பது, ஸ்ரீவான்மீகமுனிவரைக் குறித்துக் கூறியதுமாம். ஏயெனுமளவில்-வெகுவிரைவிலென்றபடி. இந்தப் படலத்தில் இதுவரை மூலபலப்போர் கூறப்பட்டது. பி- ம்:—[1]மெய்யெனும். [2]பலத். (3441)

185.—இதுவும் அடுத்தகவியும்-ஒருதொடர்: பலதிசைகளினின்றும் பாதாளத்தினின்றும் வந்த அரக்கப்படைகள் போரச்சேறலைத் தெரிவிக்கும்.

மாப்பெருந் தீவுக ளேழு [1]மாதிரம்
[2]பாப்பரும் பாதலத் துள்ளும் பல்வகைக்
காப்பரு மலைகளும் பிறவுங் காப்பவர்
[3]யாப்புறு [4]காதல ரிராவ ணற்கவர்.

(இ-ள்.) மிகப்பெரிய ஏழுதீவுகளிலும் (எட்டுத்) திசைகளிலும் பாம்புகள் வசிக்கின்ற அருமையான பாதாளலோகத்திலும் பலவகைப்பட்ட காத்தற்குஅரிய மலைகளிலும் மற்றுமுள்ள இடங்களிலும் காப்பவராய் இராவணனிடத்து உறுதியாகப்பூண்ட அன்பையுள்ளவர்கள், (வந்த) அந்த வீரர்கள்; (எ-று.)-இதுமுதல் பல திசைகளிலிருந்தும் பாதாளத்திலிருந்தும் வந்தபடைகளின் போர் கூறப்படும். இந்தச்சேனைகள் மூலபலத்தையொட்டியே சென்றனவாதலால், இவற்றின் வதையையும் மூலபல வதத்திலேயே சேர்த்துள்ளார். 'நண்ணினார்' என்று மேற்செய்யுளிற் கூறுவதனால், இங்கு அவர்களின் தன்மையைக் கவி கூறுகின்றாரென்க. பாப்பு-பரப்புஎனினுமாம். பி - ம்:—[1]மாதிரப், மாகளப், மாத்திரப். [2]பாப்பெரும். [3]ஆப்புறு. [4]காவலர். (3442)

186. மாத்தட [1]மேருவை வளைந்த வான்சுடர்
[2]கோத்தகன் மார்பிடை [3]யணியுங் கொள்கையார்
பூத்தவி சுகத்தவன் [4]புகன்ற பொய்யறு
நாத்தரும் [5]பேதிய [6]சாத்தர் நண்ணினார்.

(இ - ள்.) மிகப்பெரிய மேருமலையைச் சூழ்ந்துவருகின்ற சிறந்த சுடர்களாகிய சூரியசந்திரர்களைக்கோத்து அகன்ற மார்பிடத்து அணிகின்ற தன்மையுள்ளவர்களும், தாமரைமலரை இருப்பிடமாகவுகந்த பிரமதேவன் உபதேசித்த மந்திரங்களைப் பொய்யற்ற நாத்தழும்பேற ஜபித்ததனாற் பெற்ற வரத்தை யுடையவர்களுமாகிய அவர்கள், வந்துசேர்ந்தனர்; (எ-று.)— பி - ம்:—[1]மேருவையளந்துவானுறை,மேருவைமறைந்தவானென, வையகமளந்தவானவன். [2]கோத்தன. [3]அணிந்த. [4]புகன்று. [5]ஏறியார். [6]அரக்கர், வரத்தை. (3443)

187.—வந்த அரக்கர், 'யாவரும் ஒருங்கு திரண்டா, தனித்தனியா பொருவது?' என்று தமக்குள் வினவுதல்.

[1]நம்முளின் [2]டொருவனை [3]வெல்லு நன்கெனின்
வெம்முனை யிராவணன் றனையும் வெல்லுமால்
இம்மென வுடனெடுத் தெழுந்து சேறுமோ
செம்மையில் தனித்தனிச் செய்து மோசெரு.

(இ-ள்.) 'இப்போது நமக்குள் ஒருவனை நன்றாக (இந்தராமன்) வெல்வானானால் கொடியபோர்முனையில் இராவணனையும் வென்றிடுவான்: (இது) நிச்சயம்: (இப்போது) இம்மென்னுமளவிலே ஒரு சேரக் கிளர்ந்தெழுந்து பொருமாறுசெல்வோமா? (அன்றி), நேர்மையுடனே தனித்தனிப்போர்செய்வோமா? (என்று வந்து) சேர்ந்த அவ்வரக்கர்கள் தமக்குள் வினவிக்கொண்டனர்): (எ - று)-ஒருத்தனோடு பலர்திரண்டு பொருதல் முறைமையன்று ஆதலால் தனித்தனிப்பொரச் செல்வதனை, 'செம்மையில் தனித்தனிச்செய்துமோசெரு' என்றனர். பி-ம்:—[1]நம்மில். [2]ஒருவரை. [3]வெல்லினன்றிலா, வெல்லுநன்றெனில். (3444)

வேறு.

188.—அப்போது வன்னி ஒருங்கேசென்று பொரவேண்டுமென்றுசொல்ல, யாவரும் அதனை உடன்படல்.

[1]எல்லோ மெல்லோ மொன்றி வளைந்திந் நெடியோனை
[2]வல்லே [3]வல்ல போர் [4]வலி கொண்டு மலையோமேல்
[5]வெல்லோம் வெல்லோ மென்றனன் வன்னி மிடலோரும்
[6]தொல்லோன் சொல்லே நன்றென [7]வஃதே துணிவுற்றார்.

(இ - ள்.) (அங்ஙனம் அரக்கர் வினவிக்கொண்டிருந்ததைக் கேட்டிருந்த பிரதான சேனாதிபதியான) வன்னியென்பவன், 'எல்லோரும் எல்லோரும் ஒற்றுமைப்பட்டுச் சூழ்ந்து நெடியவனான இந்த ஸ்ரீராமனை விரைவாக வல்ல போர்வல்லமைகொண்டு போர் செய்யோமே யானால், வெல்லமாட்டோம் வெல்லமாட்டோம்' என்று கூறினான்; வலிமையுள்ள அரக்கர்யாவரும் 'பழமையுள்ள சேனாதிபதியாகிய வன்னியின் சொல்லே நன்று' என்றுசொல்லி, அச்செயலையே துணிந்திட்டனர்; (எ - று.)—பி - ம்:—[1]நில்லோ மெல்லோநின்று, நில்லேமெல்லாமொன்றி, எல்லோமெல்லோமின்று. [2]வல்லோம். [3]வல்லே. [4]வளமுற்றி, வலிமுற்றி. [5]வெல்

லேம் வெல்லேம்,வெல்லாம் வெல்லேம். [6]தொல்லோய்சொல்லே, தொல்லோர்சொல்லே, சொல்லோசொல்லோ. [7]வந்து. (3445)

189 —அரக்கர்களின் ஆர்ப்பாட்டம்.

அன்னுர் தாமு மார்கலி யேழு [1]மெனவார்த்தார்
மின்னுர் வான [2]மிற்றுறு மென்றே விளிசங்கம்
கொன்னே யூதித் தோள்புடை கொட்டிக் [3]கொடுசார்ந்தார்
என்னும் வைய [4]மென்படு மாலித் [5]திசையேதாம்.

(இ - ள்.) அந்த அரக்கர்களும் ஏழுகடல்போல ஆரவாரித்தனர்: (பின்பு) மின்னல்பொருந்திய வானம்இற்று வீழ்ந்திடுமென்று சொல்லுமாறு ஒலிக்கின்ற சங்கை அச்சமுண்டாக ஊதித் தோளினிடத்துத் தட்டிக்கொண்டு சேர்ந்தார்: இவ்வுலகம் என்னவாகுமோ? இத்திசையும் எப்பாடுபடுமோ? (எ - று.)—கொன்னே யூதி என்பதற்கு - வெற்றியில்லாதிருக்கையில் வீணே யூதி என்றுருமுளர். ஈற்றடி-கவிக்கூற்று. பி - ம்:—[1]உடனுர்த்தால். [2]வீற்றுறுமென்ருல், வீசுறுமென்ருல். [3]கொடிதார்த்தால், கொடுசேர்ந்தால். [4]என்படுவானர். [5]திசையெல்லாம். (3446)

190.—ஸ்ரீராமன் வில்நாணியைத்தெறித்து ஒலியெழுப்புதல்.

ஆர்த்தா ரன்னு ரன்ன கணத்தே யவராற்றல்
[1]தீர்த்தா னுந்தன் வெஞ்சிலை நாணைத் [2]தெறிவுற்ருன்
[3]பேர்த்தான் பேர்த்தான் முற்று மளந்தான் பிறசங்கம்
ஆர்த்தா லொத்த [4]தவ்வொலி யெல்லா வுலகுக்கும்.

(இ - ள்.) அங்ஙனஞ்சேர்ந்த அவ்வரக்கர் ஆரவாரித்தார்கள்: அக்கணத்தில்தானே (இதுவரையில்) அவ்வரக்கரின் ஆற்றலைத் தீர்த்து வென்றுவந்தவனுன ஸ்ரீராமனும் தன் கொடியவில்நாணியைத்தெறித்தான்: (அதனுல்தோன்றிய) அந்தஒலி, (இராக்கதர் முழக்கத்துக்குஎதிர்முழக்கமாய், தன்தாள்களைப்) பேர்த்துப் பேர்த்து எல்லாவுலகங்களையும் அளந்த திருமாலின் (வெற்றிப்புகழோடு) விளங்குஞ்சங்கம் எல்லாவுலகிலும் ஆரவாரித்ததையொத்தது; (எ - று.)—பி - ம்:—[1]தீர்த்தான்ருனும். [2]தெறிப்பு, தெரிப்பு, தெரிவு. [3]போர்த்தான் பொற்ருேள்...புகழ்ச்சங்கம். பேர்த்தான்...பிறசங்கம். [4]வில்லொலியெல்லாம். (3447)

வேறு.

191.—இதுமுதல் நான்குகவிகள்-அவ்வரக்கரின் தன்மையையும் அவர்கள் ஸ்ரீராமனைவளைந்து பொருதலையும் தெரிவிக்கும்.

பல்லாயிர கோடியர் [1]பல்கலை நூல்
வல்லா [2]ரவர் மெய்ம்மை வழங்கவலார்

எல்லாவுல கங்களு மேறியபோர்
வில்லாள ரரக்கரின் மேதகையார்.

இதுவும் அடுத்த கவியும் - ஒரு தொடர்.

(இ - ள்.) பலஆயிர கோடிக்கணக்கானவரும் பலகலை நூல்களிலும் வல்லவர்களும், நேர்வழியிலே (படைகளை) வழங்குதற்கு வல்லவர்களும், எல்லாவுலகங்களிலும் பிரசித்திபெற்ற போரில் வல்ல வில்லாளிகளான அரக்கருள மேன்மைபெற்றவர்களும்,— (எ - று.)—'சென்றுசெறிந்தனர்' என்று முடிவுகாண்க. வல்லாரவர், அவர் - முதல்வேற்றுமைச்சொல்லுருபு. பி - ம்:—[1]பல்படையே. [2]இவர். (3448)

192. வென்றுருல கங்களை விண்ணவரோடு
ஒன்றுவுயர் தானவ[1]ரோதமெலாம்
கொன்றார்நிமிர் கூற்றென வெவ்வுயிரும்
தின்றாரெதிர் சென்று செறிந்தனரால்.

(இ - ள்.) உலகங்களையெல்லாம் வென்றவர்களும், விண்ணவரோடு ஒருசேர (வலிமை) சிறந்த தானவரின் பெருங்கூட்டத்தையெல்லாம் கொன்றவரும், (உயிரைக்) கொண்டுபோவதற்கென்றே யேற்பட்ட யமன்போல எவ்வுயிரையுந் தின்றவருமான அவ்வரக்கர்கள், (ஸ்ரீராமனுக்கு) எதிரே சென்று நெருங்கினார்கள்; (எ - று.) ...ஓதம்-கடல்: பெருந்திரளைக்காட்டிற்று. ஒன்றா-சேராத எனினுமாம். பி - ம்:—[1]யூகமெலாம். (3449)

193. வளைத்தார் மதயானையை[1]வன்றொழிலில்
தளைத்தா ரெனவந்து தனித்தனியே
உளைத்தா ருருமேறென [2]வொன்றலபோர்
விளைத்தா ரிமையோர்கள் வெதும்பினரால்.

(இ-ள்.) வந்து, மதயானையைத் தளையிட்டாற்போல் வலிய போர்த்தொழிலால் (ஸ்ரீராமனை) வளைத்துக்கொண்டு தனித்தனியே (தடுத்துப்) பேரிடிபோலக்கர்ச்சித்து ஒருபடித்தல்லாத போரை விளைத்தார்; (அதுகண்டு) தேவர்களும், மனம் வாடினார்கள்; (எ-று.)-பி-ம்:-[1]வன்றொழுவில், வான்றொழுவில். [2]ஒன்னலர்.

194. [1]விட்டிய வழங்கிய வெம்படையிற்
சுட்டிய நிமிர்ந்த சுடர்ச்சுடரும்
கட்டியு மொருங்கு கலந்தெழலால்
உட்டியுற வெந்தன வேழுலகும்.

(இ - ள்.) (பகைவன் இரணகளத்தை) விட்டொழியுமாறு (அரக்கர்) விடுத்த கொடியபடைக்கலங்களினின்று சுடும்படி எழுந்த சுடரையுடைய தீயும், (சினத்தினால் அவர்களுடைய) கண்களினின்று புறப்பட்ட தீயும் ஒருசேரக்கலந்து மேலெழுந்ததனால், ஏழுலகங்களும் உள்ளே தீயுறவெந்திட்டன; (எ - று.)

'விட்டிய' என்பது, அரக்கரின் கருத்துப்பற்றிக் கூறியது: இது-செயவென்னும் வாய்பாட்டுச்சொல்: சுட்டிய என்பதும்

இவ்வாறான சொல்லே. பி - ம்:—[1]வெட்டிய. [2]விளங்கிய. இச்செய்யுள் "தேரார்ப்பொலி" என்ற அடுத்த பாடலுக்குப்பின் சில பிரதிகளிற் காண்கிறது. (3451)

195.—அவ்வரக்கச்சேனையில் தோன்றிய பலவகையொலி.

தேரார்ப்பொலி வீரர் தெழிப்பொலியும்
தாரார்ப்பொலி யுங்[1]கழல் தாக்கொலியும்
[2]போரார்சிலை நாணி புடைப்பொலியும்
[3]காராற்பொலி யுங்களி றூர்ப்பொலியும்.

(இ-ள்.) தேர்கள் (ஓடும்போது தோன்றுகின்ற) ஆரவாரமான ஒலியும், வீரர்கள் அதட்டுகின்ற ஒலியும், கிண்கிணிமாலைகளின் பேரொலியும், வீரக்கழல் (ஒன்றோடொன்று) தாக்குவதனாலான ஒலியும், போரிலேமூண்டவில்லின் நாணியைப் புடைத்தலினாலான ஒலியும், கருநிறத்தோடுவிளங்குகின்ற யானையின் வீரிடுதலினாலான ஒலியும் (அந்தச்சேனையில் மிக்குத்தோன்றின); (எ - று.)— வினைவருவித்து முடிக்க. பி-ம்:—[1]கழலார்ப்பு. [2]போரார்ப்பொலி, போரார்ச்சிலை, போராற்சிலை. [3]காரார்ப்பொலியும். (3452)

196.—ஸ்ரீராமன் அவ்வரக்கச்சேனைக்கு முன்னே நிற்றல்.

எல்லாரு மிராவண னேயனையார்
வெல்லாவுல கில்லவர் மெய்[1]வலியார்
[2]தொல்லார்படை வந்து தொடர்ந்ததென
நல்லானு முருத்தெதிர் நண்ணினனால்.

(இ - ள்.) (அந்த அரக்கப்படையிலுள்ளவர்) எல்லாரும் இராவணனையேயொத்தவர்; (தாம்) வெல்லாத உலகம் இருக்கப்பெறாதவர் [எல்லாவுலகங்களையும் வென்றவரென்றபடி]; உடல்வலி படைத்தவர்; (இப்படிப்பட்ட) பழமையானவரின்படை வந்து தொடர்ந்ததென்று கருதி, நற்குணமுடையவனை ஸ்ரீராமனும் கோபித்து(ப் பொருமாறு அவர்களுடைய) எதிரே சென்றான்; (எ - று.)— இச்செய்யுள் -"வென்றார்" என்று தொடங்கும் 192-ஆம் செய்யுளின் பின் இருந்தால் பொருத்தமாக இருக்கும். பி - ம்:— [1]வலியாற். [2]சொல்லார்புடை. (3453)

197.—இராமபிரான் அம்புமழை பொழிதல்.

ஊழிக்கனல் [1]போல்பவ ருந்தினபோர்
ஆழிப்படை யம்பொடு மற்றகலப்
பாழிக்கடை நாள்விடு பன்மழைபோல்
வாழிச்சுடர் வாளி வழங்கினனால்.

(இ - ள்.) யுகாந்தகாலத்துத்தீக்கு ஒப்பானவரான அரக்கர் செலுத்தின போர்க்குரிய கடல்போற்பரந்த (பலவகைப்) படைக்கலமும் (எய்யக்கொண்ட) அம்புடனே அற்று அகன்றிடுமாறு, வலிய யுகாந்தகாலத்துப் பெய்கின்ற பெருமழைபோல வாழ்ச்சி

பெற்றுச் சுடர்பொருந்திய அம்புகளை (ஸ்ரீராமன் மிகுதியாக)ப் பொழிந்தான்; (எ-று.)—பி-ம்:—[1]போலவருந்தின. (3454)

198.—இனி, பதினொருகவிகள்—இராமபாணங்களால் துணிப்புண்ட அரக்கப்படையின் வருணனையைத் தெரிவிக்கும்.

கூரோடு தொடர்ந்த சுடர்க்கணை [1]தான்
தாரோ டகலங்கள் தடிந்திடலும்
[2]தேரோடு மடிந்தனர் செங்கதிரோன்
ஊரோடு [3]படிந்தன ளொத்[4]துரவோர்.

(இ-ள்.) வலிமையோடு பொருந்திய [வலிமையுடன் செலுத்திய] ஒளி பொருந்திய (அவ்விராம)பாணம், (பகைஞரின்) வெற்றிமாலை சூடப்பெற்றமார்புகளை ஊடுருவவே, செந்நிறக் கதிரவனான சூரியன் ஊர்கோளோடும் பொருந்தியதை யொத்து, வலிய அவ்வரக்கர் (தம்) தேர்மீது மடிந்தனர்; (எ-று.)—தேருக்கு-ஊர்கோளும், வீரர்க்குச் சூரியனும் உவமை: தற்குறிப்பேற்றவணி. ஓடகலம்-ஓடுகின்ற மார்பு: வினைத்தொகை. தாரோடு - மாலையுடனே எனினுமாம். ஊர்-ஊர்கோள்: சந்திரசூரியரைச் சுற்றிச் சிலகாலத்துத் தோன்றும் மண்டிலம். பி-ம்:—[1]தன். [2]தேரோடும் விழுந்தனர். [3]மடிந்தனன், மறிந்தனர், மறித்தனர், மடிந்தன. [4]உளதால். (3455)

199. [1]கொல்லோடு சுடர்க்கணை [2]கூற்றினிணப்
பல்லோடு [3]தொடர்ந்தன [4]பாய்தலினால்
செல்லோடெழு மாமுகில் சிந்தினபோல்
வில்லோடும் விழுந்த [5]மிடற்கரமே.

(இ-ள்.) கொல்லுதல்தொழில் மிக்குள்ள சுடரையுடைய கணைகள் யமனுடைய நிணம்படிந்த (பற்கள்போன்ற) பற்களால் தொடரப்பெற்றனவாய்ப் பாய்தலினால், (அறுபட்டுப்பிடித்த) வில்லுடனே விழுந்த வலிய (அவ்வரக்கர்) கைகள், மின்னலுடனே எழுகின்ற கரியமேகங்கள் சிந்தினபோற் (காணப்பட்டன); (எ-று.) கூற்றின், இன்-ஒப்பு. வச்சிரதம்ஷ்ட்ரம், அர்த்த சந்த்ரம் முதலியனவாகப் பலவகை அம்புகள் உள்ளமை அறியத்தக்கது. அரக்கர் கரத்துக்கு முகிலும், விற்களுக்கு மின்னலும் ஒப்பு: தற்குறிப்பேற்றம். பி-ம்:—[1]சொல்லோடு. [2]கூற்றினரும், சுற்றினரும். [3]தொடர்ந்தெனப். [4]பாய்கலாற். [5]விடக்கரமே. (3456)

200. செம்போ டுதிரத்திரை யாழியின்வாய்
வெம்போ டரவக்குல மேனிமிரும்
கொம்போடும் [1]விழுந்தன வொத்த [2]குறைந்து
அம்போடு விழுந்த வடற்கரமே.

(இ-ள்.) வெட்டுண்டு (தொடுக்க எடுத்த) அம்போடும் செந்நிறத்தோடு பொருந்திய இரத்தங்களான அலைகடலிலே விழுந்த வலிய கைகள்,—சீறியோடுகின்ற அரவக்குலம் (தாம் தங்கிய) மேலோங்கிய மரக்கிளைகளோடும் விழுந்ததனை யொத்தன;(எ-று.)

—மரக்கொம்புகட்கு விற்களும், அம்புகட்கு அரவக்குலமும் ஒப்பு. வெம்பு - வெம்புதல்: கொதித்தல். முதனிலைத்தொழிற் பெயர்: இனி, வெம்பியோடு என்பதன் விகாரமுமாம். பி - ம்:— [1]எழுந்தன. [2]குறைத்து. (3457)

201. முன்னோடு [1]உதிரப்புனல் [2]மூதுலகைப்
பின்னோடி [3]வளைந்த பெருங்கடல்வாய்
மின்னோடும் [4]விழுந்தன மேகமெனப்
பொன்னோடை நெடுங்[5]கரி புக்கனவால்.

(இ-ள்.) பொன்னோடையணிந்த நெடிய யானைகள், முன்னே யோடுகின்ற உதிரநீரைப் பின்பற்றி ஓடி, பழமையான உலகை வளைந்த பெரிய கடலினிடத்து மின்னோடு விழுந்த மேகம் போலப் புக்கன; (எ - று.)

பொன்னோடையையணிந்த கரியயானைகள் உதிரப் பெருக்கா லீர்க்கப்பட்டுக் கடலிலே சேர்ந்தவை, கடலில் மின்னோடுவீழும் மேகம்போலு மென்றார்: தற்குறிப்பேற்றவணி. இனி, போர்க்களத் தினின்று ஓடிய உதிரநீர் உலகத்தைப் பின்பற்றிக் கடல்போல வளைய அந்த உதிரநீரில் மின்னலொடு மேகம் விழுந்தாற்போலப் பொன்னோடையணிந்த ஆனைகள் புக்கனவென்றலும் ஒன்று. பி-ம்:—[1]உதிரத்திடை, உதிரத்திரை. [2]மூவுலகைப். [3]வளைத்த. [4]எழுந்தன. [5]கிரி. (3458)

202. மறவெற்றி யரக்கர் வலக்கையொடும்
[1]நறவக்குரு திக்கடல் வீழ்நகைவாள்
சுறவொத்தன மீது [2]துடித்தெழலால்
இறவொத்தன [3]வாவு மினப்பரியே.

(இ-ள்.) மணமுள்ள குருதிக்கடலிலே, வீரத்தையும் வெற்றி யையுமுடைய அரக்கரின் வலக்கையுடனே வீழ்ந்த ஒளியுள்ள வாள்கள்,—மேலே துடித்து எழுதலாலே சுறவையொத்தன; அங்ஙனமே தாவுகின்ற இனமான பரிகளும் இறவுமீனையொத்தன;

இராமபிரானது சரத்தால் அணிப்புண்டு பிடித்த வாட்படை யுடனே இரத்தவெள்ளத்து வீழ்ந்த அரக்கர்களின் வலக்கைகள் துடிக்கும்போது பிறழ்ந்து தோன்றுவதால் நீரிற்பிறழ்ந்து செல் லும் சுறுமீன்கள்போன்றன: தற்குறிப்பேற்றவணி. சுறுமீன்கட்கு முன்புறத்துக் கத்திபோன்ற ஓருறுப்பு இருப்பது இயல்பென்பது ஈண்டுக் கருதத்தக்கது. 'மீது துடித்தெழலால்' என்பது, பரிக்கும் சேரத்தக்கது. பி-ம்:-[1]இறவக. [2]தொடர்ந்தெழலால். [3]வாமிவுளிப் பரியே. (3459)

203. தாமச்சுடர் வாளி [1]தடிந்தகலப்
பாமக்குரு திப்படி யின்றபடைச்
[2]சேமப்படர் கேடக மால்கடல்சேர்
ஆமைக்குல [3]மொத்தன யத்தனையால்.

(இ - ள்.) பேரொளிபொருந்திய அம்புகளால் (கை) அறுக்கப் பட்டுச் செல்வதனுல் பரவிய அந்தக்குருதியிலே படிகின்றனவாய்ப் படையிலுள்ள வீரர்(தமது)ரட்சைக்காகக்கொண்டனவான கேட கங்கள், பெரியகடலைச் சேர்ந்த ஆமைக்குலமெத்தனை அத்தனை யாகும்; (எ - று.) தாமச்சுடர்-ஒருபொருட்பன்மொழி. பாம் அக் குருதி என்று பிரியும். படைப்படரின் [சேனு வீரரின்] சேமக் கேடகம் என்க. படரின் [படர்களுடைய] சேமக்கேடகம் ஆமை போலும் எனக் கருத்துக் காண்பர். பி-ம்:—[1] தடித்தகலப். [2] சேமப் பிடி, சேமப்படை. [3] ஒத்தன. (3460)

204 காம்போடு பதாகைகள் காருதிரப்
பாம்போடு கடற்படி வுற்றனவால்
வாம்போர்நெடு வாடை [1] மலைந்தகலக்
கூம்போடுயர் பாய்கள் குறைந்தனபோல்.

(இ - ள்.) போர்புரிவதுபோன்ற தாவுகின்ற மிகுதியாக வீசப் பெற்ற பெருவாடையினுல் மரக்கலங்களின் உயர்ந்தபாய்கள் கூம் புடனே (கடலுள்) மூழ்கியனபோல, காம்போடுகூடிய பதா கைகள் கறுப்புநிறமடைந்திட்ட உதிரப்பரப்பாகிய ஓடுந்தன்மை யுள்ள கடலிற் படிவுற்றன; (எ-று.)—[1] மலைந்துஎனப் பாடமிருப் பின் கலம். போர்வாம் நெடுவாடை என்க. கூம்பு-மரக்கலத்துக் கட்டப்பெறும்பாயைத் தாங்கிநிற்கும் மரக்கொம்பு. மலைந்து அகல எனப் பிரித்து - அகல மலைதலால் என்றலுமொன்று. தற்குறிப் பேற்றவணி. பி-ம்:—[1] மலைத்தகலக், குறைந்தகலக். (3461)

205. மண்டப்படு [1] சோரியின் வாரியின்வீழ்
[2] கண்டத்த கரத்தொகை கவ்வியதால்
[3] முண்டத்திளர் கண்டன முட்டொகுவன்
துண்டச்சுற வொத்த துடித்தனவால்.

(இ - ள்.) மிகுதியாகப் பெருகுகின்ற குருதிநீரிலே வீழ்ந்த துண்டிக்கப்பட்ட கைத்தொகுதியை (அம்புகள்) கவ்வியதனுல், (அவை),—தாமரையின் விளங்குகின்ற தண்டினையொத்த முள் தொக்க வலியதுண்டத்தையுடைய சுறவுகளையொத்தனவாய்த் துடித்தன; (எ - று.)—முள்தொக்கவலிய துண்டச்சுறவை யொத் தன, துண்டிக்கப்பட்ட சோரிவாரியில்வீழ்ந்த கைகள் என்க. முண்டம்-முண்டகம் என்பதன்விகாரம். 'கவ்வியதாள், முண்டத் திரள்கண்டன முட்டொகுவன்' என்ற பாடத்திற்கு-கண்டிக்கப் பட்டனவான கரத்தொகையும் (அம்புகளைக்) கவ்வியதாளும் முண் டத்திரளும் காணப்பட்டவை, முள்தொக்கவலிய துண்டச்சுறவை யொத்தன வென்க. பி-ம்:—[1] பல்கணைமாரியின். [2] கண்டத்தொகை கவ்வியதோள். [3] முண்டத்திரிதண்டின் முரட்டொருவன். (3462)

206. தெளிவுற்ற பணிங்குறு சில்லிகோள்தேர்
[1] விளிவிற்றுற [2] வேறுற வீழ்வனதாம்

[3]அளிமுற்றிய [4]சோரிய வாழியிலாழ்
ஒளிமுற்றிய திங்களை [5]யொத்துளவால்.

(இ - ள்.) தெளிவுபொருந்திய பளிங்கினாலியன்ற சில்லியை யுடைய தேர் அழிந்துபோகையில் வேறாகவீழ்வனவாகிய அச் சில்லிகள், பாணங்களினால் நிரம்பத்தோன்றிய இரத்தநீரையடைந் தனவாய், கடலில் ஆழ்கின்ற ஒளிநிரம்பிய சந்திரர்களை யொத் துள்ளன: (எ - று.)—இரத்தநீரிற் படிந்த பளிக்குச் சில்லிகள் அத்தமிக்குஞ் சந்திரர்போன்றிருந்தனவென்றார்; **தற்குறிப்பேற்ற வணி.** அளி - பாணம். பி - ம்:—[1]விளிவுற்றுக, விளியுற்றுற, வீளி விற்றுக. [2]வேறுகவீழ்வனவும். [3]அளிபெற்றுகு, அளிவற்றுகு. [4]சோரியிலாழியிலாழ், சோரியின் வாரியினூழ், சோரியினூழியினார். [5]ஒத்துளதால். (3463)

207. நிலை[1]கோடலில் வென்றி [2]யரக்கரைநேர்
கொலை [3]கோடலின் மன்குறி கோளுறுமேல்
சிலைகோடிய தோறு [4]சிரத்திரள்வன்
மலைகோடியின் மேலு [5]மறிந்திடுமால்.

(இ - ள்.) நல்வழியைக் கொள்ளுதலில்லாத (இதுவரையில்) வெற்றிபெற்றிருந்த அரக்கரை நேராகக் கொலைகொள்வதில் [கொல்வதில்] ஸ்ரீராமன் மனத்திலெண்ணங்கொள்கின்றானென் பதனால், (அப்பிரானுடைய) சிலை கோடியபோதெல்லாம் சிரத்திர ளாகிய வலியமலைகள் கோடியின்மேலும் மறிந்திடுவனவாயின; (எ - று.)—நிலை-நல்வழி. வளைத்து அம்புகளைத் தொடுத்தலாற் சிரங்கள்கொய்யப்பட்டு வீழ்வது வெகுவிரைவில் நிகழ்ந்ததென்ற வாறு. பி - ம்:—[1]கொண்டலில். [2]அரக்கரும். [3]கோடநமன், கோடி நமன். [4]சினத்தின. [5]மறிந்திறுமால், மறிந்துறுமால். (3464)

208. திண்மார்பின் [1]மிசைச்செறி சாலிகையின்
கண்வாளி கடைச்[2]செறி கானநுழைந்து
எண்[3]வாயுற மொய்த்தன [4]வின்னறையுற்று
உண்வாய்வரி வண்டின மொத்தனவால்.

(இ - ள்.) வலியமார்பின்மீது நெருங்கக்கட்டிய கவசத்தி னிடத்து அம்புகளின் கடையாகிய செறிந்ததொகுதி நுழைந்து எண்ணுந்தன்மை பொருந்திமொய்த்தலை,—இனியதேனையுற்று உண்ணுகின்ற வாயையுடைய வரியமைந்த வண்டுகளின் இனத்தை யொத்தன; (எ - று.)

இது, இராமபிரானது அம்புகள் எதிரிகளின் கவசத்திற் பொத் தியவற்றின் வருணனை. கானம் - திரள் என்ற பொருளில் வந்தது. செய்யுளோசையின்பம் நோக்கி, 'வாளிகடை' என இயல்பு. பி-ம்:- [1]மிசைசசெறு. [2]சிறைக்கண்ணின், சிறைகாண. [3]வாயற, வாயிற. [4]இன்னுறை, இன்னறவு. (3465)

209.—இதுமுதல் நான்குகவிகள் - அரக்கப்படையைக் கொன்று குவிக்குமாறு ஸ்ரீராமன் சாரிவந்தமையை வருணனைவகையாற் கூறும்.

பாருடு களத்தொரு வன்பகலின்
கூறாகிய நாலிலோர் கூறிடையே
[1] நூறாயின யோசனை [2] நாழிகள்சால்
[3] மாறாதுழல் சாரிகை வந்தனனால்.

(இ - ள்.) பருந்துகள் சஞ்சரிக்கின்ற நூறுயோசனைப் பரப்புள்ள போர்க்களத்தைத் தனிவீரனான ஸ்ரீராமன் பகலின்நான்கில் ஒரு பகுதியான காலத்திலே (அரக்கரைக்) கொன்றுகுவித்தல் தொழிலுக்கு ஏற்ப மாறாது செய்கின்ற சாரிகை வந்தனன்;(எ-று.)

ஸ்ரீராமன் போர்க்களமுழுதும் சாரிகைவந்தவண்ணம் அரக்கரைக் கொன்றொழிக்குந்தொழிலை ஏழரைநாழிகையிற் செய்தனனென்றவாறு. பி-ம்:—[1] நூறாகிய. [2] நாழில்களாம், நாழில்களாம். [3] மாறாததொர். (3466)

210 நின்றாருட [1] னின்று நிமிர்ந்தயலே
சென்றாரெதிர் சென்று [2] திரிந்திடலால்
தன்றாதையை யோர்வுறு [3] தன்மகனேர்
[4] கொன்றானவ னேயிவ னென்றுகொள்வார்.

(இ - ள்.) (இவ்விராமன்) நின்றாருடனே நின்றும், வேற்றிடத்துப் புடைபெயர்ந்து சென்றாரெதிரே சென்றும், திரிந்துபொருது கொல்லுதலால், ஓர்தல்பொருந்திய தன்மகனுக்குநேரே அவன் தாதையைக் கொன்றானாகிய அந்த நரசிங்கமூர்த்தியே யிவனென்று கருதுவார்கள்; (எ-று.)

"எங்குமுளன்கண்ணன்" என்றபடி போர்க்களத்தில் எங்குந் திரிந்து காணப்படுதலால் இவன் திருமாலே யென்று அப்போர்க்களத்திலுள்ளோர் கொள்வாராயினரென்பதாம். ஓர்வுறுமகனென்றது, ஞானவானான பிரகலாதனை. இனி, ஈற்றடியில் 'கொன்றானெனவெய்து குறைத்தனனால்' என்ற பாடத்தைக் கொண்டு-இவ்விராமன், நின்றாருடனே நின்றும் சென்றாருடனே சென்றும் திரிபவனாயுளான்: ஆகவே, அரக்கச்சேனையை இவன் கொன்றானென்பது தக்கதன்று: தாதையருடனே இடைவிடாது நிற்கும் புத்திரனே கொன்றானாகவேண்டுமென்று அச்சேனையிலுள்ளவர் கருதும்படி அம்பினாற்கொன்றானென்று பொருள் கூறுவாருமுளர்: இதன் கருத்து - சாரிகை திரிவதனால் இவ்விராமன் எங்கும்இருந்து அம்பு எய்து, எய்யப்பட்டவர் உயிரழியும்போது வேற்றிடத்துச் செல்வதனாலும், அருகிலிருந்து அம்பு வீழ்வதனாலும், இராமன் எய்துகொன்றானென்ற கருத்து நீங்கி அருகேயிருக்கும் மைந்தனே அவன் தந்தையைக் கொன்றானென்ற கருத்து அச்சேனையிலுள்ளார்க்கும் போர்காணுவார்க்கும் தோன்றிற்றென்பது. பி - ம்:—[1] வந்து. [2] சிதைந்திடலால். [3] என்மகனேர்.

'கொன்றானவனே யவனென்று கொளீர், கொன்றானிவனென்பதே னென்று கொள்வார். (3467)

211. இங்கேயுள னிங்குள னிங்குளனென்று
அங்கே[1] யுணர் கின்ற வலந்தலைவாய்
வெங்கோப [2] நெடும்படை வெஞ்சரம்விட்டு
எங்கேனும் வழங்குவ [3] ரேகுவரால்.

(இ-ள்.) (இராமன் வெகுவிசையாகச் சாரிகை வருவதுபற்றி எங்குந்தோன்றுவதால்), 'இங்கே யுள்ளான், இங்கு உள்ளான், இங்கு உள்ளான்' என்று அந்தப் போர்க்களத்தில் அறிகின்ற கலக்கமான நிலையிலே, (அச்சேனையிலுள்ளார்) கொடுங்கோபத்துடனே நெடியவிற்படையினின்று கொடுஞ்சரத்தை விட்டு (இராமனை இலக்காகப்பெறாது) எங்கேனும் எய்து (தாம்) உயிர் செல்லப்பெறுவர்; (எ - று.)

சாரிகைதிரியும் விரைவினால் எங்குப்பார்த்தாலும் இராமனாகத் தோன்றுதலால் இராமன்மீது அம்பெய்ய வேண்டுமென்று தொடுத்து அவனில்லாத வேறெங்கேயோ வீணில் அம்பெய்து அப்பிரானம்புகளால் தம்முயிர் நீங்கப் பெற்றனர் அச்சேனையிலுள்ளாரென்றவாறு: ஏகுவர் என்பதற்கு-திரிவார்கள் என்பாருமுளர். பி-ம்:—[1] உழல்கின்றவலந்தலையால், உணர்கின்ற வலந்தலைவாய். [2] நெடுஞ்சரவெம்படை. [3] எய்குவரால். (3468)

212. ஒருவன்னென வுன்னு [1] முணர்ச்சியிலார்
இரவன் [2] றிது வோர்பக [3] லென்பர்களால்
[4] கரவன்றி இராமர் [5] கணக்கிலரால்
பரவைமணலிற்பல ரென்பர்களால்.

(இ-ள்.) (இராமனம்புகள் இருளை யோட்டித் தாம் சுவாலித்ததால், அரக்கர்கள்), 'இது இரவு அன்று, ஒருபகல்' என்பார்கள்: (அன்றியும், இராமன்) ஒருவன் (தான் உளன்) என்று நினைக்கின்ற உணர்ச்சியில்லாத அவர்கள், 'இது வஞ்சகம் அன்று: இராமர் கடலின் மணலைப்போல மிகப்பலராகிக் கணக்கில்லாதவராவர்' என்பார்கள்; (எ - று.)—பி-ம்:—[1] உணர்ச்சியிலீர். [2] இதுவோ. [3] எய்தினரால். [4] கரவன்றி. [5] கணக்கிலவாம், கணக்கறவப். ஒரு பிரதியில் 'இரவன்றதுவோ பகலெய்தினரால்' என்று இரண்டாமடி. (3469)

213.—அரக்கச்சேனையில் ஒருவரையொருவர் தாமே யடித்துக்கொண்டு மாண்டமை.

ஒருவன்னொரு வன்மலை போர்[1] லுயர்வோன்
ஒருவன்படை வெள்ளமொ [2] ராயிரமே
ஒருவன்னொரு வன்னுயி [3] ருண்டதனால்
ஒருவன்னுயி[4] ருண்டது[5] முள்ளதுவோ.

(இ-ள்.) (அந்த அரக்கச்சேனையில்) ஒவ்வொருவனும் மலை போலுயர்ந்த தோற்றமுள்ளவன்: (அங்குள்ள) ஒப்பற்ற வலிய படை, ஓராயிரம் வெள்ளமாகும்: (அப்படையில், தம்மைத் தாமே இராமனாக மயங்கி,) ஒருவன் மற்றொருவனுடைய உயிரை யுண்ட தல்லாமல், ஒப்பற்ற வீரனான ஸ்ரீராமன் (அப்போது அவர்களுடைய) உயிரை உண்டதும் உள்ளதோ? (எ - று.)—ஏகாரம்-வினாவகையால் எதிர்மறைப்பொருளை யுணர்த்திற்று.

இதனால், இராமபிரானாற் கொலையுண்டவரினும் தம்மவரைத் தாமேயடித்துக்கொன்றவர் பலரென்று கூறியவாறு. இங்ஙனம் அவர்கள் செய்தது-இராமன் வெகுவிரைவுடன் சாரிகை திரிகையால் ஓரிடத்துள்ளானாகத் தோற்ற, அவனைக் குறியாகக்கொண்டு விடுத்த அப்படைக்கலம் அதற்குள் அவ்விராமன் வேற்றிடத்துச் சென்றிடுவதனால், அங்கிருந்த அரக்கன்மேல் தாக்குவதனாலேயாம்: இங்ஙனம் ஒவ்வொருத்தர்படையும் இராமன்மீது படாது தம்மவர் மீது படுதலால், அச்சேனையோர் தம்மைத் தாமே மாய்த்துக் கொள்பவராயினரென்க இராமபிரான்படையால் வதையுண்டவரினும் தம்மவர் படையால் வதையுண்டவரே பலரென்றவாறு. இச்செய்யுளில், 'ஒருவன்' என்றசொல் பன்முறைவந்தது, சொற்பொருட்பின்வருநிலை. இரண்டாமடியில் ஒருவன் படை எனப்பிரியும். பி-ம்:—[1]உயர்வோர். [2]ஆயிரமேல், ஆயிரமும். [3]உண்ணுதலால். [4]உண்பதும். [5]உள்ளதுவே. இச்செய்யுள் சில பிரதிகளில் "தேர்மேல்" என்ற அடுத்த பாடலுக்குப்பின் உள்ளது. (3470)

214, 215.—அந்தச் சேனாவீரரான அரக்கருக்கு இராமனது தோற்றம்.

தேர்மேலுளர் மாவொடு செந்தறுகண்
கார்மேலுளர் மாகடன் மேலுளரிப்
பார்மேலுள ரும்பர் பரந்துளரால்
போர்[1]மேலை விராமர் புகுந்திடுவார்.

என்னும்படி யெங்கணு மெங்கணுமாய்த்
துன்னுஞ் [2]சுழ லுந்திரி யுஞ்சுடரும்
பின்னும்[3]மருங்கு முட லும்பிரியான்
மன்னன்மகன் வீரர் மயங்கினரால்.

இரண்டுகவிகள் ஒருதொடர்: ஒருங்கே பொருளுரைக்கப்படும்.

(இ-ள்.) (214) 'போரை மேற்கொண்டவராய்ப் புகுந்து அழிப்பவராகிய இராமர்,—தேர்மீது உள்ளார்: குதிரையுடனே, அழிப்பனபோல் தோன்றுகின்ற செந்நிறக்கண்களைக்கொண்ட யானையின்மீது உள்ளார்: பெரிய கடல்மீது உளார்: இந்தப்பூமியின் மீது உளார்: வானிற் பரந்துள்ளார்: (215) என்று நினைக்கும்படி, தசரதசக்கரவர்த்தித் திருமகன் எவ்விடத்திலும் எவ்விடத்திலும் பொருந்தி, பின்புறத்திலும் அருகிலும் உடலிலும்பிரியாதவனாகி, நெருங்குவான்: சுழல்வான்: திரிவான்; சுடர்வான்; (அதுகண்டு) அரக்கவீரர், மயங்குவாராயினர்; (எ-று.)—பி.ம்:—[1]மேவியவீரர்,

மேலயர்வீரர், மேலுமிராமர். [2]திரியுஞ் சுடருஞ்சுழலும், திரியுந் தொடருஞ்சுழலும். [3]அருகும்மெதிரும். "ஒருவன்" (213) என்ற பாடலையும் அரக்கர் கூற்றாகக்கொண்டு மூன்று பாடலையும் ஒரு தொடராக்கினுமாம். (3472)

வேறு.

216.—ஸ்ரீராமனது கோதண்டத்திலுள்ள மணி கணகணென்று ஒலிக்க, சதுரங்கசேனைபடுதல் முதலியன நிகழ்தல்.

படுமத [1]கரிபரி சிந்தின பனி[2]வரை யிரதம விந்தன, [3]விடு திசை செவிடு[4]பி ளந்தன விரிகட [5]லளறெழ ழுந்தன, [6]அடுபுலி [7]யவுணர்த மங்கைய ரலர்விழி [8]யருவிகள் சிந்தின, கடுமணி [9]நெடியவெ னுஞ்சிலை கண[10]கண கணகணெ னுந்தொறும்.

(இ-ள்.) (ஸ்ரீராமனுடைய) நெடியதெனப்படும் வில்லிலுள்ள கொடிய ஓசையுடைய மணிகள் (அம்பு எய்யும்போது வில் அசைவதனால் தாமும் அசைந்து) கணகணகணகணவென்று ஒலிக்குந்தோறும், மதம்படு கரியும் பரியும் சிந்தின; இமயமலைபோன்ற இரதம் அழிந்தன: பரந்ததிசைகள் அக்குரலால் செவிடுபடப் பிளந்தன: பரந்த கடல் சேறுபட்டெழுந்தன; (தம் கணவர்க்கு நேரக்கூடிய நிலையை நினைதலால்) கொல்லுகின்ற புலிபோன்ற அரக்கருடைய மங்கையரின் பரந்த விழியினின்று அவலக்கண்ணீரருவிகள் சிந்தின; (எ-று.)

"*தனதன தனதன தந்தன தனதன தனதன தந்தன*" என்ற சந்தக்குழிப்புக்கு இந்தச்செய்யுளின் நான்கடியும் ஏற்றிருத்தலால், இச்செய்யுளொன்றும்-*சந்த விருத்தமாம்*. அளறது, அது-பகுதிப்பொருள்விகுதி. விடுதிசையென்பதற்கு-(நான்கு அல்லது எட்டு என்று) சொல்லப்படுகிற திசையெனினுமாம். பி-ம்:—[1]கரிகள். [2]வரையல திரிந்தன. [3]விடுபடைதிசை. [4]பரந்தன. [5]அளறெழுந்தன. [6]விடு. [7]அவுணர் மங்கையர். [8]அருவி. [9]நெடியவெஞ்சிலை, சிலையினசைந்தன, நெடியவன்வெஞ்சிலை. [10]கடிகை யொரரை செழுகம்பலை, கணகணகண வெனுந்தொறும். இதன்பின் சில பிரதிகளில் "ஆனையாயிரம்" (228) என்ற பாடல் உள்ளது. (3473)

வேறு.

217.—இராமபிரானது விசை.

ஊனேறு [1]படைக்கை வீர ரெதிரெதி [2]ருருவந் தோறும்
கூனேறு சிலையுந் தானுங் குதிக்கின்ற கடுப்பின் கொட்பால்
வானேறி னார்கள்தேரு மலைகின்ற வயவர் தேரும்
தானேறி [3]வந்த தேரே யாக்கினான் தனியே யன்னான்.

(இ-ள்.) ஒப்பற்ற ஆண்சிங்கம் போன்றவனான ஸ்ரீராமன்,— ஊன்படிந்த படைக்கலமேந்திய கையையுடைய வீரரின் எதிரெதிராக அவரவருருவந்தோறும் வளைவுமிக்க சிலையுந் தானுமாகக்

குதிக்கின்ற வேகத்தின் தன்மையால்,-இறந்தவரின்தேரும் பொரு கின்றவீரரின் தேரும் (போர்க்களத்துக்குத்) தானேறிவந்ததேர் போலத் தோன்றுமாறு செய்தான்; (எ-று.)

விசையின் மிகுதியால்,-வீரரில்லாததேரிலும் பொருகின்றவர் தேரிலும் தான் உளன்போலத் தோன்றலாயினன் ஸ்ரீராமனென்ற வாறு. இவ்விராமன் கால்வைத்துவந்தது தரையிடமே யாக லாலும், அந்தத்தரை திரிபுரதகனகாலத்திற் சிவபிரானுக்குத் தேர்த்தட்டாயமைந்ததனாலும், தானேறிவந்த தேரேயாக்கினான் என்பதற்கு-தரைமட்டமாக்கினானென்றுபொருள் கூறுவாருமுளர். வான்-வீரசுவர்க்கம். பி - ம்:—[1]பட [2]ஊருந்தோறும், உறுக்குந் தோறும். [3]நின்ற. (3474)

218.—இராமபிரானது கைவிசையின் வருணனை.

காயிருஞ் சிலையொன் றேனுங் கணைப்புட்டி [1]லொன்ற தேனும்
[2]தூயெழு பகழி மாரி மழைத்துளித் [3]தொகையின் மேல
ஆயிரங் கைகள் செய்த செய்தன வமலன் செங்கை
ஆயிரங் [4]கையுங் கூடி யிரண்டுகை [5]யாய வாறே.

(இ - ள்.) (பகைவரைக்) காயவல்ல பெரிய சிலை ஒன்றுதா னென்றாலும் அம்புப்புட்டில் ஒன்றுதான் என்றாலும் (அப் பிரானால்) தூவப்பட்டு எழுகின்ற அம்புமழை மழைத்துளிகளின் தொகையைக் காட்டிலும் மிக்கன: (அப்போது) குற்றமற்ற இராமனுடைய (இரண்டாகிய) செங்கை, ஆயிரங்கைகள்செய்த செயலைச் செய்தன: ஆயிரங்கை யொன்றுகூடி இரண்டுகையான வாறு என்ன அதிசயம்!! (எ-று.)

இது கவிக்கூற்று: சேனையிலுள்ளோரின் கூற்றுமாம். ஆயி ரங்கைகள் கொண்டு அம்புவிடுதல் தொழிலைச் செய்தால் எவ்வளவு செய்யலாமோ, அவ்வளவு எண்படத் தன் இரண்டு கைகளாலும் இராமன் அம்புகளை விடுத்தானென்றவாறு. இங்கு ஆயிர மென்றது-மிகப்பல என்னும் பொருளது. பி-ம்:—[1]ஒன்றுமேனும், இரண்டுமேனும், ஆண்டுமேனும், காண்டுமேலும். [2]தூயவெம், [3]தொகைக்குமேலாம். [4]கைகள்கூடி, கையுங்கூட்டி. [5]ஆயவன்றே, ஆனதன்றே. (3475)

219.—இராமனை அவன்செயலாற் பலமுகத்தவனெனல்.

பொய்யொரு [1]முகத்த னாகி மனிதனும் புணர்ப்பி [2]தன்றால்
மெய்யுற [3]வுணர்ந்தோம் வெள்ள மாயிர மிடைந்த [4]சேனை
[5]செய்யுறு [6]வினைய மெல்லா மொருமுகந் தெரிவ துண்டே
[7]ஐயிரு நூறு மல்ல வனந்தமா முகங்க ளம்மா.

(இ - ள்.) ஒருமுகத்தையுடையனாகி மனிதனாயிருக்கின்ற இந் தத்தோற்றம், (மெய்) அன்று: பொய்யேயாகும்; (இவ்விஷயத்தை), மெய்யாகவுணர்ந்தோம்: ஆயிரவெள்ளமென்ற கணக்கோடு நெருங் கிய சேனைசெய்த போர்ச்செயலையெல்லாம் ஒருமுகம் அறிவதென்

பது உண்டோ? (இவனது முகம்) ஆயிரமுகமேயும் அன்று: முகங்கள், அளவற்றனவாகும்; (எ - று.)

ஆயிரவெள்ளஞ் சேனை செய்யும் செயல்களையெல்லாம் இராமன் ஒருவனேயுணர்ந்து அதற்கேற்ற மாற்றுச்செயலைச்செய்து அழிப்பதால், இவன் ஒருமுகத்தையுடையவன்போலத் தோன்றினும் இத்தோற்றம் பொய்த்தோற்றமேயன்றி உண்மைத்தோற்றமல்ல. இவனுக்கு ஆயிரத்தினும் மிகமேம்பட்ட சிறந்த முகங்கள் கண்ணுக்குப் புலனாகாது இருக்கவேண்டுமென்றவாறு. இதனையும் கவிக்கூற்றென்றேனும், சேனையிலுள்ளோரின் கூற்றென்றேனும் கொள்க. பி-ம்:—[1]மனிதனாகி. [2]என்றல, என்ன, என்றால். [3]உணர்ந்த. [4]வீரர். [5]செய்வுறு, செய்யுறும். [6]விசயமெல்லாம். [7]கையிரு நூறுகோடி. (3476)

220.—சிவபிரான் முதலியோர்க்கும் இராமனம்புகள் அளவிடமுடியாமை.

கண்ணுதற் [1]பரமன் தானு நான்முகக் கடவுள் தானும்
[2]எண்ணுதுந் தொடர [3]வெய்த கோலெனா வெண்ண லுற்றார்
பண்ணையால் [4]வகுக்கமாட்டார் தனித்தனிப் பார்க்க [5]லுற்றார்
ஒண்ணுமோ கணிக்க [6]வென்பா ருவகையி [7]னுயர்ந்த தோளார்.

(இ - ள்.) கண்ணை நுதலிலேயுடைய பரமனான உருத்திரமூர்த்தியும் நான்முகக்கடவுளும் தொடர்ச்சிபொருந்த (ஸ்ரீராமன்) எய்த அம்பை எண்ணுவோமென்று சொல்லித் தனித்தனிப் பார்க்கலுற்று எண்ணத்தொடங்கினார்களாய், பெருந்திரளாயிருத்தலால் எண்ணமாட்டாதவராகி மகிழ்ச்சியினாற்பூரித்த தோள்களையுடையவராய் '(இந்த அம்புகளை) எண்ணுதற்கு முடியுமோ?' என்பாராயினர்; (எ - று.)—பி - ம்:—[1]மூர்த்திதானும், மாயன்றானும். [2]எண்ணுறும். [3]எய்வகொல்லெனும். [4]வகுப்பட, பகுக்க. [5]ஆற்றார். [6]என்றார். [7]உணர்ந்துகோளார், நிமிர்ந்த தோளார். இது சிலபிரதியில், "குடைக்கெலாம்" (222) என்ற பாடலின்பின் உள்ளது. (3477)

221.—இந்திராதிதேவர்கள், அளவிடமுடியாத அம்புகளை ஸ்ரீராமன் எய்தமைபற்றி அதிசயித்தல.

வெள்ள மீரைந்து [1]நூறே விடுகணை யவற்றின் [2]மெய்யே
[3]உள்ளவா றுளவா மென்றோ ருரைகணக் [4]குரைத்து மேனும்
கொள்ளையோ [5]ருருவை நூறு [6]கொண்டன பலவாற் கொற்ற
வள்ளலே [7]வழங்கி னானே வென்றனர் மற்றை வானோர்.

(இ - ள்.) (பொரவந்த அரக்கர்சேனைத்தொகுதியோ), ஆயிரம் வெள்ளமாகும்; அந்தச் சேனைகளின்மீது (சொல்லுமாறு) விடுத்த கணைகள் சேனையுள்ளவளவினவாக உள்ளவாமென்று பேச்சுக்காகஒருகணக்குக் கூறுவோமென்றாலும் மெய்யாகுமோ? [சரியாகுமோ?] ஆகாது: ஏனெனின், கொள்ளை கொள்கின்ற ஒவ்

வொருவ ருருவையும் நூறுதுண்டாகச் செய்தவை பல அம்புகளாகும்;(ஆகவே, இவ்வாறான பெருந்திரளான அம்புகளையும்)வெற்றி பொருந்திய உதாரகுணமுடையவனான ஸ்ரீராமனே விடுத்தானே! என்று (வியந்து) மற்றைவானவர்கள் கூறினார்கள்; (எ - று.)— கீழ்ச்சிவபெருமானும் பிரமனும் கூறியவற்றைச் சொல்லியதனால் இங்கு 'மற்றைவானோர்' என்றது. பி-ம்:—[1] நூறேல். [2] மென்மை, மெய்ம்மை. [3] உள்ளவாறுள்ளதாமென்றே ருரைக்கணக்கு, உள்ள ...உரைக்கணக்கு, உள்ளவாறுள்ளமென்று ருரைக்குரைக்கு. [4] உணர்துமேனும், உணர்ந்துமேலும். [5] உருவு. [6] கொண்டனன், கொண்டாலன்ன. [7] வழங்கினானே. (3478)

222.—முனிவர், ஸ்ரீராமபாணங்கள் அளவிடற்கு முடியா எனல்.

குடைக்கெலாங் கொடிகட் கெல்லாங் [1]கொண்டன குவிந்த கொற்றப், படைக்கெலாம் பகழிக் கெல்லாம் [2]யானைதேர் பரிமா வெள்ளக், கடைக்கெலாந் துரந்த வாளி [3]கணித்தகற் [4]களவை காட்டி, [5]அடைக்கலா மறிஞர் யாரே யென்றனர் முனிவ [6]ரப்பால்.

(இ - ள்.) அப்பால் முனிவர்கள், குடைகளும் கொடிகளும் (போர்க்களத்தை) வியாபித்துக்கொண்டனவாகித் திரண்டுள்ள வெற்றிபெற்ற படைக்கலங்களும் (அரக்கர்விடுத்த) அம்புகளும் யானை தேர் பரிமா என்ற வெள்ள வெல்லையுள்ளனவும் ஆகிய இவற்றுக்கெல்லாம் (அழிவுண்டாக ஸ்ரீராமன்) துரந்த அம்புகளை எண்ணி அதற்கு ஓரளவைகாட்டி அறுதியிடுதற்குத்தக்க அறிஞர் யாவர் தாம்? என்றனர்; (எ - று.)

[2]யானைதேர் பரிமாவாதிக் கடைக்கெலாம் என்ற பாடத்துக்கு -யானை தேர் பரிமாமுதலாக (பதாதி) இறுதியாக உள்ள சேனைகட்கெல்லாம் என்று பொருளுரைக்க பி - ம்:—[1] கொண்டெனக், கொண்டனர். [3] கணித்திதற்கு. [4] அளவுகாட்டி, அளவைக்காட்டி. [5] அடைக்கெலாமறிஞர், இடைக்கலா முனிவர். [6] இப்பால். [3] கணி தத்திற்கு என்றும்படிக்கலாம். இங்கே ஒரு பிரதியில்,

இட்டதோர் பெயரின் னீரை யாயிரம்
பட்டபோ தோடுமோர் படுகு றைத்தலை
கட்டநூ றாயிரங் கவந்த மாடிடத்
தொட்டனன் சிலையணி மணிது னுக்கென.

மாத்திரைப் போதினின் மணிதொ னித்திடப்
போர்த்தொழி லரக்கர்மேல் பொருத பூசலில்
ஏத்திடை யிடைவிடா தேழு நாழிகை
கீர்த்தியன் சிலைமணி கிணிகி ணென்றதே.

என்று இரண்டுபாடல்கள் காணப்படுகின்றன. அந்தப் பிரதியில் "ஆனையாயிரங்" (228) என்ற பாடல் காணப்படவில்லை. ()

223.—அரக்கரின் துண்டிக்கப்பட்ட கை கால் கழுத்து முதலியன கிடந்தவற்றின் வருணனை.

[1]கண்டத்துங் கழுத்து மீதாய்க் கபாலத்துங் கடக்க [2]வுற்ற [மை
சண்டப்போ ரரக்கர் தம்மைத்[3]தொடர்ந்துகொன் றமைந்த தன்
பிண்டத்திற்[4]கருவாந் தன்பே ருருக்களைப் [5]பிரமன் தந்த
அண்டத்தை நிறையப் பெய்து [6]குலுக்கிய தனைய தான.

(இ - ள்.) கொடும்போர்செய்கின்ற அரக்கரைத் தொடர்ந்து (அவர்களுடைய) கண்டத்திலும் கழுத்துக்குமீதாக மண்டையோட்டிலும் கடந்துசென்ற அம்புகள் கொன்றமைந்த தன்மை,—கருப்பிண்டத்துப்பொருந்திய தன்னுடைய மிக்க உருக்களைப் பிரமன் படைத்த அண்டத்தில் நிறைய இட்டுக் குலுக்கிய தன்மையையொத்தன; (எ - று.)

இராமசரங்களால் அறுபட்டுக் கைவேறு கால்வேறு கழுத்து வேருகக் துண்டிக்கப்பட்டு அச்சேனை கிடந்ததன்மை,பிரமன் தான் படைக்கவேண்டிய பிராணிகள் கருவாயிருக்க, அக்கருக்களை அண்டத்துக்குள் இட்டுவைத்தாற்போலிருந்த தென்றவாறு: தன்மைத் தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]கண்டத்திற்கீழுமேலும், கண்டத்துங்கண்மீதுற்ற, கண்டத்துங்கீழுமீதிற். [2]உற்ருன். [3]தொடர்ந்து கொட்புணருந், தொடர்ந்துகோல்புணருந். [4]கருவதான. [5]பிரமற்றந்த. [6]குலுக்கியதனையனன்றுன், குலுங்கியதனையனுனன். 'பிண்டத்துக் கருவராகும் பேருருக்களையவந்த' என்று ஒரு பிரதியில் மூன்ருமடி. (3480)

224.—பத்துக்கோடி அரக்கவீர ரிறந்துபட, மற்றையோர் தெய்விகப் படைகளைப் பிரயோகிக்கக் கருதி ஸ்ரீராமனை நெருங்குதல்.

[1]கோடியை யிரண்டு தொக்க படைக்கல [2]மள்ளர் கூவி
[3]ஓடியோர் [4]பக்க மாக வுயிரிழந் [5]துலைந்த லோடும்
[6]வீடிநின் றழிவ தென்னே விண்ணவர் படைகள் வீசி
மூடுது மிவனை [7]யென்றி யாவரு [8]மூண்டு மொய்த்தார்.

(இ-ள்.) பத்துக்கோடியென்னுந் தொகுதியினரான படைக்கலமேந்திய அரக்கவீரர் கதறிக்கொண்டு ஒருபக்கமாக ஓடி உயிரையிழந்து அழிந்தவளவிலே,—'(நாம் சாதாரணப்படைக்கலங்களை) வீசி உயிர்கொல்லப்பட்டு நின்று அழிவது எதற்காக? தேவர்களின் அத்திரங்களை விடுத்து இவனை ஒழிப்போம்' என்றுகருதி யாவரும் அங்ஙன்செய்ய ஒருப்பட்டு நெருங்கினூர்கள்; (எ - று.)—பி-ம்:—[1]கோடியே. [2]மன்னர்கூடி, மள்ளர்கூடி. [3]மூடி. [4]பாகம். [5]உலர்தலோடும், உழைத்தலோடும். [6]வீடியின்று. [7]என்னு. [8]மூடுகி.

225.—அரக்கர் தேவாஸ்திரங்களை விட, ஸ்ரீராமன் அவைகளை அந்தந்த் தேவாஸ்திரங்களாலேயே தடுத்தல்.

விண்டு[1]வின் படையே யாதி [2]மேயவன் படையி ருகக்
கொண்டொருங் குடனே விட்டார் குலுங்கிய தமரர் கூட்டம்

அண்டமுங் [3]கீழ மேலா வாகிய [4]நதனை யண்ணல்
கண்டொரு முறுவல் காட்டி யவற்றினை யவற்றாற் காத்தான்.

(இ - ள்.) திருமாலின் படைக்கலம்முதல் (பெருமை) பொருந்திய பிரமன்படை ஈருகவுள்ளவற்றை (அரக்கர்) கைக்கொண்டு உடனே ஒருசேர விட்டார்கள்: (அதுகண்ட) தேவர்களின் கூட்டம் நடுநடுங்கிற்று; அண்டமும் கீழ்மேலாக மாறியது: அவ்வாறு நேர்ந்தமையைப் பெருமையிற்சிறந்த ஸ்ரீராமன் கண்டு ஒரு புன்சிரிப்புச் செய்து, அந்தத்தேவாஸ்திரங்களை அத்தேவாஸ்திரங்களாலேயே தடுத்திட்டான்; (எ - று.)

வைஷ்ணவாஸ்திரத்தை வைஷ்ணவாஸ்திரத்தினாலும், பிரமாஸ்திரத்தைப் பிரமாஸ்திரத்தினாலும், ஐந்த்ராஸ்திரத்தை ஐந்த்ராஸ்திரத்தினாலும் என இவ்வாருக எய்து தடுத்திட்டான் ஸ்ரீராமனென்றவாறு. விண்டுவின் படை - வைஷ்ணவாஸ்திரம். பி - ம்:— [1]வன். [2]வெயிலவன், வெய்யவன். [3]கீழ மேலாய்த்தாக்கியது, கீழ மேலதாகியது, கீழும்மேலுமாகியது. [4]அனைய. (3482)

226.—இராமன் அரக்கர்தலைகளை அம்புகளாற் கொய்து வீழ்த்தல்.

தானவை தொடுத்த போது தடுப்பரி துலகந் தானே
பூநனி வடவைத் தீயிற் புக்கெனப் [1]பொரிந்து போமென்று
[2]ஆனது [3]தெரிந்த [4]வள்ள லளப்பருங் கோடி யம்பால்
ஏனையர் தலைக ளெல்லா மிடியுண்ட மலையி னிட்டான்.

(இ-ள்.) 'தான் அவ்வாருன தெய்விகாஸ்திரங்களைத் தொடுத்தால் அப்போது (பிறரால் அவை) தடுத்தல் அரியதாகும்: (மேலும்), மலரானது வடவைத்தீயில் நன்கு புகுந்தாற்போல, இவ்வுலகம் தானே பொரிந்துபோய்விடும்' என்று பொருந்திய அந்த விஷயத்தை ஆராய்ந்தறிந்த உதாரகுணமுள்ள ஸ்ரீராமன்,—(அவ்வரக்கரைக்கொல்லுமாறு தெய்வாஸ்திரங்களை விடுக்காமல்), அளத்தற்கரியனவான கோடிக்கணக்கான அம்புகளாலேயே மாற்றாராகிய அரக்கரின் தலைகளையெல்லாம் இடிவீழ்ந்த மலைபோலத் தோன்றும்படி வீழ்த்தினான்; (எ - று.)—உலகம் பொரிந்துபோமே யென்று கருணைகொண்டு தெய்வாஸ்திரத்தை எய்யா திருந்தமையால், ஸ்ரீராமனை 'வள்ளல்' என்றார். பி-ம்:—[1]போனதாமென்று, பொரிந்து மென்றால். [2]ஆனவை, தானவை. [3]மறந்த. [4]அண்ணல்.()

227.—அரக்கவெள்ளம் அவியப் பூமிதேவி பாரம் நீங்குதல்.

ஆயிர வெள்ளத் தோரு மடுகளத் தவிந்து வீழ்ந்தார்
மாயிரு ஞாலத் தாள்தன் வன்பொறைப் பார நீங்கி
மீயுயர்ந் [1]தெழுந்தா ளன்றே வீங்கொலி வேலை நின்றும்
[2]பேயொருங் கண்டத் தோடுங் கோடியோ சனைகள் பொங்கி.

(இ - ள்.) ஆயிரவெள்ளந்தொகையுள்ள அரக்கப்படையைச் சேர்ந்தோர் யாவரும், போர்க்களத்திலே உயிரொழிந்து வீழ்ந்தார்கள்; மிகப்பெரிய பூமிக்கு உரியதேவி தனது வலிய பாரமாயிருந்த

சுமை நீங்கியதனால், பேரொலியையுடைய கடலினின்றும் ஒருசேர வெளிப்பட்டுத் தன்னண்டத்தோடும் கோடி யோசனை தூரம் கிளர்ந்துபோய் மேலெழுந்து ஓங்கினாள்; (எ - று.)—அன்றே - தேற்றம்.

பாரத்தாற் பெருங்கடலுக்குள் அழுந்திக்கிடந்த பூமிதேவி அப்பாரம் நீங்கவே, உலகவுருண்டையோடு கோடியோசனை மேலெழுந்து கிளர்ந்து ஓங்கினாளென்க. பி - ம்:—[1]எழுந்தானன்றே, எழுந்ததன்றே. [2]போயொரு கண்டத்தோடும். (3484)

வேறு.

228.-கவிக்கூற்று: மிகப்பலவரக்கர்மடிந்தமையை நிரூபித்தல்.

ஆனை யாயிரந் தேர்பதி னாயிர [1]மடர்பரி யொருகோடி
சேனை காவல ராயிரம் பேர்படிற் [2]கவந்தமொன் றெழுந்தாடும்
[3]கான மாயிரங் கவந்தநின் றாடிடிற் கவின்மணி கணிலென்னும்
[4]ஏனை யம்மணி யேழரை [5]நாழிகை யாடிய தினிதன்றே.

(இ-ள்.) யானைகள் ஆயிரமும் தேர்கள் பதினாயிரமும் அடர்க்குந்தன்மையுள்ள குதிரைகள் ஒருகோடியும் சேனைகாவலர் ஆயிரவரும் இறந்தால், கவந்தம் ஒன்று (போர்க்களத்திலே) எழுந்து ஆடும்: காடுபோன்ற (பெருந்திரளான) ஆயிரங்கவந்தம் எழுந்து நின்று ஆடுமாயின் (ஸ்ரீராமனது கோதண்டத்திற்கட்டியுள்ள) அழகியமணி (ஒருமுறை) கணீரென்று ஒலிக்கும்: மற்றை அம்மணி (இந்தப்போரிலோ) இனிதாக ஏழரை நாழிகை யாடியது; (எ - று.)—அன்றே - தேற்றம்.

இப்போரில் இறந்தவர் மிகப்பலரென்பது, இவ்வாறு விளக்கப்பட்டது. இச்செய்யுளிற்கூறிய விஷயத்தைப் பிள்ளைப்பெருமாளையங்கார் "பேரொத்த வாயிரம்பேர் மடிந்தாற் பிறக்குங்கவந்த, நேரொத்தவாடு மதாயிரமாடி னெடுஞ்சிலையி, னேரொத்தகிண்கிணி சற்றேயொலிடுமத்தேர்யாமநின்று, காரொத்தமேனியரங்கர்தம் போரிற்கறங்கியதே" என்று கூறியுள்ளார். இச்செய்யுளையடியொற்றி "அனேகமாயிரம்பேர்படக் கவந்த மொன்றாடு மக்கவந்தங்க,ளனேகமாயிர மாடவெஞ்சிலைமணியசைந்தொரு குரலார்க்கு, மனேகநாழிகை யருச்சுனன் சிலைமணியார்த்த தக்களம்பட்ட, வனேகமாயிரம்விருதரை யளவறிந் தார்கொலோவுரைக்கிற்பார்" என்று வில்லிபாரதத்திற் கூறியமையும் கருதத்தக்கது. பி - ம்:—[1]அடர்ப்பரி. [2]செழுமணிக்கவந்த மொன்றாடும் என்ற பாடம் மோனைக்கு ஏற்குமாயினும், ஓசைக்கு ஏற்றிருக்கவில்லை. [3]கானமாயிரங்கவந்தநின்றுடலிற்கட்டிய மணியொருதிரென்னும், கான...நின்றுடிடிற்...கணிலென்னும் [4]ஏனையிம்மணி [5]இடைவிடாதாடின யிலங்கை, இடைவிடாதாடின திலங்கை, இடைவிடாதாடியவன்றே. "சேனைகாவலத்தாயிரஞ்சிதைந்திடிற்கவந்தமொன்றாடும்" என்று இரண்டாமடி சிலபிரதியிற் காணப்படுகின்றது. ()

வேறு.

229.—தேவர் முதலியோர் துயர்நீங்குதல்.

[1]நினைந்தன முடித்தே மென்று வானவர் துயர [2]நீத்தார்
[3]புனைந்தனன் வாகை [4]யென்று விந்திர னுவகை பூத்தான்
[5]வனைந்தன வல்லா வேதம் [6]வாழ்வுபெற் றுயர்ந்த [7]மாதோ
அனந்தனுந் தலைக ளேந்தி யயர்வுயிர்த் [8]தவலந் தீர்ந்தான்.

(இ - ள்.) தேவர்கள் நினைந்தவை முடியப்பெற்றோமென்று துன்பம் நீங்கினார்கள்; வெற்றிமாலை சூடினேனென்று இந்திரன் மகிழ்ச்சிதோன்றப்பெற்றான்; (ஒருவராற்) செய்யப்படாதனவான வேதம் வாழ்ச்சியைப்பெற்று மேம்பட்டன; (பூமியின்கீழ்நின்று தாங்குகின்ற) ஆதிசேஷனும் (தலைப்பொறைகுறைந்ததனால்) தலையெடுத்து மூச்சுவிடப்பெற்று வருத்தம்நீங்கினான்; (எ - று.) பி.ம்:—[1]நினைந்தது முடித்தோம். [2]தீர்ந்தார். [3]புனைந்தனென். [4]என்பான். [5]வனைந்தனரெல்லாம், வனைந்தனவல்ல. [6]வரம்பு. [7]மாந்தர். [8]அல்லல். (3486)

230.—தேவர் முதலியோர் ஸ்ரீராமனை வாழ்த்துதல்.

தாய்படைத் துடைய செல்வ [1]மீகெனத் தம்பிக் கீந்து, வேய் படைத் [2]துடைய கானம் விண்ணவர் தவத்தான் மேவித், தோய் படைத் [3]தொழிலால் யார்க்குந் துயர்[4]துடைத் தானை நோக்கி, [5]வாய்படைத் துடையாரெல்லாம் வாழ்த்தினார் வணக்கஞ்செய்தார்.

(இ-ள்.) தாய் '(நீ) படைத்த செல்வத்தை ஈவாயாக' என்று சொல்ல, (தன்) தம்பிக்கு (அவ்வரசச்செல்வத்தை)க் கொடுத்திட்டு, மூங்கில்பொருந்திய காட்டில் தேவர்கள்செய்த தவத்தினாற் பொருந்தி,மேற்கொண்ட படைக்கலத் தொழிலால்[போர்த்தொழிலால்] யாவர்க்கும் துன்பத்தைப் போக்கியவனான, ஸ்ரீராமனைப் பார்த்து, வாயைப்படைத்தவர் யாவரும் வாழ்த்தினவராய் வணங்கலானார்கள்; (எ - று.)——பி - ம்:—[1]ஈதென. [2]அனைய. [3]தொழிலோர். [4]தொலைத்தானை, கெடுத்தானை. [5]வாய்படைத்தார்களெல்லாம், வாய்படைத்துடையாரந்தோ. (3487)

231.—தேவர்கள்வாழ்த்தப் போர்க்களத்தில்நிற்கும் ஸ்ரீராமபிரானது தோற்றம்.

[1]தீமொய்த்த வனைய செங்க [2]ணரக்கரை முழுதுஞ் சிந்திப்
பூமொய்த்த கரத்த [3]ராகி விண்ணவர் போற்ற நின்றான்
பேய் [4]மொய்த்து நரிக ளீண்டிப் பெரும்[5]பிணம் பிறங்கித் தோன்
றுமத்துள்[6]தமிய னின்ற களை[7]மிடற் றிறைவ னொத்தான். [றும்

(இ - ள்.) தீமொய்த்தாற்போன்ற செந்நிறம்படைத்த கண்களையுடைய அரக்கர்யாவரையும் (போர்க்களத்தில்) வீழ்த்தியதனால் பூநெருங்கிய கைகளையுடையவராய்த் தேவர்கள்யாவரும் துதிக்க நின்றவனான ஸ்ரீராமன், பேய்மொய்த்து நரிகள்நெருங்கி

மிக்க பிணங்கள் விளங்கித் தோன்றுவதான மயானத்துள்ளே தனிப்பட்டவனும்நின்ற (நஞ்சுக்) கறையைக் கண்டத்திற் கொண்டுள்ள சிவபிரானை யொத்தான்; (எ - று.)—பி - ம்:—[1]தீயெரித்தனைய. [2]இராக்கதர்தம்மைச். [3]ஆதி. [4]மொய்த்த. [5]பிணக்களத்தில். [6]தனியே. [7]மிடற்றவனை, மிடற்றிறையும். (3488)

232.—இதுவும் அது.

[1]அண்டமாக் களமும் வீந்த [2]வரக்கரே வுயிரு [3]மாகக்
கொண்டதோ ருருவந் தன்னை விறுதிநாள் வந்து [4]கூட
[5]மண்டுநாண் மறித்துங் [6]காட்ட மன்னுயி ரனைத்தும் வாரி
[7]உண்டவன் றானே யான [8]தன்னொரு மூர்த்தி யொத்தான்.

(இ-ள்.) பெரிய போர்க்களம் அண்டமும், அழிந்த அரக்கரே (அவ்வண்டத்துள்ள) உயிர்களுமாக, (அங்கு ஸ்ரீராமன் தான்) கொண்டதான ஓருருவத்தினால், யுகாந்தகாலம் வந்துகூட, ஸ்ருஷ்டி காலத்தில் மீண்டும் (எல்லாவற்றையும்) படைத்தற்கு நிலைபெற்ற பிராணிகளையெல்லாம் வாரியுண்டவன் தானேயான தன்னொரு மூர்த்தியை யொத்தான்; (எ - று.)

அரக்கரையெல்லாம் மடியச்செய்து தான் அங்குத் தனித்து நின்ற ஸ்ரீராமன் யுகாந்தகாலத்து (எல்லாவுயிர்களையும்) வாயுட்கொண்டு நிற்கும் திருமாலை யொத்தானென்க. பி-ம்:—[1]அண்டமீதளவுஞ்சேர்ந்த, அண்டமதளவவீந்த. [2]அரக்கரெவ். [3]மாளக். [4]கூடி. [5]மண்டுநன்மறிந்தும், மண்டுநாண்மறித்துக். [6]கொண்ட. [7]உண்டதான். [8]உருத்திர. (3489)

233.—தேவர்கள் மலராலும் சந்தனத்தாலும் உபசரிக்க, ஸ்ரீராமன் இலட்சுமணனுள்ளவிடம் நோக்கிச் செல்லல்.

ஆருலந் [1]துறந்த தேவ ரள்ளினர் சொரிந்த வெள்ளச்
[2]சேகறு மலருஞ் சாந்துஞ் செருத்தொழில் வருத்தந் தீர்க்க
[3]மாகொலை செய்த வள்ளல் வானமர்க் களத்தைக் கைவிட்டு
ஏனை னிளவ லோடு மிராவண னேற்ற [4]கைம்மேல்.

(இ - ள்.) துன்பம்நீங்கிய தேவர் அள்ளிச்சொரிந்த பெருந்தொகையான குற்றமற்ற மலர்களும் சந்தனமும் போர்த்தொழிலால்விளைந்த வருத்தத்தைத் தீர்க்க, (அரக்கரைப்) பெருங்கொலை செய்த வள்ளல் கொடிய அந்தப் போர்க்களத்தை விட்டு, இளைய பெருமாளுடனே இராவணன் எதிர்த்த போர்க்களத்தை நோக்கிச் சென்றான்; (எ - று.)

மேற் அறுபதாஞ்செய்யுள்முதல் பத்துச் செய்யுள்வரை—இராவணன் பொருமாறு வரின் அவனைச் சார்ந்தோரால் குரங்குச் சேனைக்குத் தீங்கு நேராதவண்ணம் அநுமான் வீடணன் சுக்கிரீவன் இவர்களையும் அவ்விளையபெருமாளுக்குத் துணையாக அமையும்படி ஏவியனுப்பியமைகூறி, இப்பால் மூலபலத்தை, முன்னிட்ட அரக்கச்சேனையோடு ஸ்ரீராமன் பொருததாகக் கூறியதனால்,

அந்த அரக்கபலத்தைவென்ற ஸ்ரீராமன், தன் தம்பி இராவண னோடு பொரும் பக்கம் நோக்கிச்செல்லலானனெனக் கூறுகின்ரு ரென்க. கை-படையணி. பி-ம்:—[1] துறக்கத். [2] சேகுறு. [3] மாகுலஞ். [4] போர்மேல். (3490)

234.—கவிக்கூற்று: அரக்கச்சேனைவதை கூறினேம்: இனி, இராவணனுடன் இலக்குமணன் பொருதசெயலைக் கூறுவோமெனல்.

[1] இவ்வழி [2] யியன்ற வெல்லா மியம்பினு மிரிந்து போன
தெவ்வழி யாற்றல் வெற்றிச் [3] சேனையின் செயலுஞ் சென்ற
வெவ்வழி யரக்கர் கோமான் செய்கையு மிளைய வீரன்
எவ்வமி லாற்றற் போரு [4] முற்றுநா [5] மியம்ப லுற்றும்.

(இ-ள்.) இங்கு [ஸ்ரீராமபிரான் போர்செய்தவிடத்து] நிகழ்ந் தன எல்லாம் கூறினேம்; (இனி), நிலைகெட்டுச்சென்ற பகைவரை யழிக்கவல்ல வல்லமைபொருந்திய வெற்றியுள்ள (குரங்குச்) சேனை யின் செயலும், எதிர்த்துச்சென்ற கொடியமுறைமையைக் கொண்ட அரக்கர் தலைவனை இராவணன் செய்கையும், இளைய பெருமாளுடைய குற்றமற்ற வல்லமைபொருந்திய போரும் முழு வதையும் நாம் சொல்லத்தொடங்கினேம்: (எ-று.)—இயன்ற என் றது-மூலபலவதையையும் பல திசைகளின்று வந்த அரக்கச்சேனை வதையையும். பி-ம்:—[1] இவ்வுழி. [2] இயன்றதெல்லாம். [3] சேனையுஞ் செயலும், சேனையின் செலவும். [4] உற்றதும். [5] விளம்பலுற்றும். இச்செய்யுள் சிலபிரதியில் "பெரும்படைத்தலைவர்" என்ற பாடலுக்குப்பின் அடுத்த படலத்தின் முதற்செய்யுளாக உள்ளது.

235.—நிலைகெட்டுச் சென்ற குரங்குச்சேனையும் மீளுதல்.

பெரும்படைத் [1] தலைவர் யாரும் பெயர்ந்திலர் [2] பெயர்ந்து போய்நாம், விரும்பினம் வாழ்க்கை யென்ருல் [3] யாரிடை விலக் கற் பாலார், வரும்பழி துடைத்தும் [4] வானின் வைகுதும் யாமு மென்னு, இருங்கடல் பெயர்ந்த தென்னத் [5] தானையு மீண்ட திப்பால்.

(இ - ள்.) பெரியசேனைத் தலைவரெல்லாரும், (போர்க்களத்தி னின்று) மீண்டாரில்லை [மீண்டும் போர்க்களத்திற்கே சென்றிட் டார்கள்]; மீண்டுபோய் நாம் வாழ்க்கையை விரும்பினேமென்ருல் [உயிர்வாழ்தலை வேண்டிநாம் போர்க்களத்தினின்று மீண்டிட்டோ மானல்], இடையே தடுத்தற்கு உரியார் யாவர்? [எவருமில்லை]; ஆயினும், வரக்கடவ பழியைத் துடைப்போம்: (போர்களத்துச் செல்வதனுல் இறப்போமென்ருலும்), யாமும் வீரசுவர்க்கத்துக்குச் செல்வோம் என்று உறுதிகொண்டு, பெரியகடல் நிலைபெயர்ந்தாற் போல வானரச்சேனையும் இங்கு(ப் போர்க்களம் நோக்கி) நிலை பெயர்ந்து சென்றது; (எ-று.)

வானரசேனையோடியமை கீழ் இருபத்தேழாஞ்செய்யுள்முதல் கூறப்பட்டிருத்தல் காண்க. அங்ஙனம் ஓடிச்சென்ற வானரங்கள் தமது தலைவர்கள் மீண்டு போர்க்களத்தைச் சேர்ந்தமையாலும், இலக்குமணன் தம்மைக் காப்பாற்ற ஒருப்பட்டமையாலும், மனத்தில் துணிவுகொண்டு மீண்டன என்பது, இங்குக் கூறப்பட்டது. வானரத்தலைவர் மீளவந்தமை, கீழ் ஐம்பத்தெட்டாஞ் செய்யுளிற் கூறப்பட்டுள்ளது. பி-ம்:—[1] தலைவர்பொன்றயாமெலாம், [தலைவர் போன்றயாமெலாம் என்று படிக்க இடமுண்டு]. [2] பிரிந்துபோனேம். [3] யார்பழி [4] மாண்டுவைகுதும்வானிலென்னு. [5] சேனையும். ஒரு பிரதியில்படைக்காட்சிப்படலம்முதல் இதுவரையிலுமுள்ள பகுதி, **மூலபலவதைப்படலம்** என்ற பெயரோடு காண்கின்றது. ()

ஸ்ரீ வான்மீகிமுனிவர் இந்த மூலபலவதையைக்கூறிய வகை வருமாறு:—அநந்தரம் இராவணன் சபைகூட்டிச் சேனுபதிகளை நோக்கி 'நீவிர் உங்களுடைய முழுவலிமைகொண்டு ஸ்ரீராமனைத் தொலைக்க: அவனை யழிக்க முடியாமற்போனாற் பெரும்போர்செய்து அவ்விராமனுடையஉடலைப் புண்படுத்துக: பிறகு நானே அவனைக் கொல்வேன்' என்றனன். சேனுபதிகள் இசைந்து தேரேறிச் சேனைகள்சூழச்சென்று போர்க்களம் குறுக, இருதிறத்தார்க்கும் கடும்போர் நிகழ்ந்தது. அப்போது இராக்கதர்களின் கடும்போரைத் தாங்கமாட்டாது வானரங்கள் நிலைகெட்டு ஸ்ரீராமனைச் சரணமடைந்தன. அவ்விராமன் வெகு வீரைவோடு சாரிதிரிந்து அரக்கச் சேனையையழிக்கையில், இங்குள்ளானென்று அவனைக் காண முடியவில்லை: இராமன்செல்லுமிடத்துள்ள அரக்கனையே இராமனுகத் திகைத்து, அரக்கர் தம்மைத்தாமேவதித்தலும் புரிந்தனர். அன்றியும், அச்சத்தினால் இராமனொருவனையே அனேகமாயிரம் இராமபிரானுகவும் கண்டனர். அப்போரில் முகூர்த்த காலத்திற்குள், ஏழுகோடியே இருபதுலட்சந்தேர்களும், பதின்மூன்று கோடியே பன்னிரண்டுலட்சத்து இருபதினாயிரம் யானைகளும், பத்துக்கோடியேயிருபதுலட்சத்தறுபதினாயிரம் குதிரைகளும், நூற்றுநாற்பத்தைந்து கோடியேஎண்பதுலட்சம் காலாட்களும் சுதரிசன மென்ற சக்கரம்போற் சுழன்று பொருத அந்த ஸ்ரீராமனால் தொலைந்தன. அநந்தரம் எஞ்சின அரக்கர் அச்சத்தாற் குலைந்து இலங்கைக்கு ஓடினர். அந்தயுத்தபூமி பெரிய மயானம்போற் காணப்பட்டது. அப்போது ஸ்ரீராமன் தன்னருகிலிருக்கும் சுக்கிரீவன் முதலியோரை நோக்கி, 'நான் முகூர்த்தகாலத்திற்குள் மூலபலத்தையெல்லாம் ஒழித்தது மாயையினாலன்று: அஸ்திரங்களைத் தொடுத்து விடும் வல்லமையினால்தான் ஆயிற்று: இவ்வாறான திறல் சங்காரத்தொழிலுக்கு உரிய சிவபிரானுக்கும் எனக்குமே உள்ளது,' என்றான். அப்போது கடவுட்படைகளிலும் மற்றைப் படைக்கலங்களிலும் தேர்ந்துள்ள வல்லமைவாய்ந்த அந்த ஸ்ரீராமன் அரக்கர்சேனையையெல்லாம் ஒழித்தத்துகுறித்து வானத்தில் தேவர்களும் கந்தர்வர்களும் சித்தர்களும் முனிவர்களும் கூடி வாயாரப் புகழ்ந்து கொண்டாடினர்.

மூலபலவதைப்படலம் முற்றிற்று.

———

31 - ஆவது வேலேற்றபடலம்.

ஸ்ரீவிபீஷணுழ்வான்மீது இராவணனெறிந்த வேலை இளைய பெருமாள் தாம் ஏற்றதைக் கூறும் படல மென்பது, பொருள்.

மூலபலத்தைக்கண்டு அஞ்சியோடி அங்கதனுல்தேற்றப்பட்டுத் தலைவர்கள் மீளுதலும், தாமும் மீண்ட வானரசேனைகள் இராவணன் சேனையுடன் தம்மைநோக்கி யுத்தகோலத்தோடு வருவது கண்டு யுத்தத்தில் மூள, இருதிறத்துச்சேனைகளும் கைகலந்து பொருகையில், அவ்விராவணன் தன்னுடையசேனை வலியொடுங்குவதுகண்டு கொதித்துக் கடுங்கணை பொழிய, வானரசேனை நிலை கெடுவதாயிற்று: அப்போது இளையபெருமாள் அவ்வானரசேனைகளை 'அஞ்சற்க' என்று நிலைநிறுத்தி, இராவணனோடு கிட்டிப் பொர, அரக்கன் இலட்சுமணனது திறமையைக் கண்டு சிந்தை கொண்டு மோகனுஸ்திரத்தை விடுக்க, விபீடணன் பேச்சினுல் இலக்குமணன் அதனை விஷ்ணுவின்படைகொண்டு தடுத்திட்டான். அதுகண்டு சினம்மூண்டு இராவணன், மயன் தந்த வேலை விபீடணன்மீது எறிய, விபீடணன் அதன் மகிமையை யெடுத்துக் கூறவே, இலக்குமணன் அதனைத் தன் மார்பில் ஏற்குமாறு செல்ல, வீபீடணன் அவனைமுந்த, அவர்களை விலக்கி அங்கதனும் சுக்கிரீவனும் அநுமானும் என்ற இவர் முந்துறலானுர்கள்; அதற்காக அவர்கள் பட்ட அவத்தைக்கு ஓரெல்லையில்லை. இறுதியாகச் சரணுகதனைக் காக்கவேண்டுமென்ற உறுதியான கருத்துடனே இளையபெருமாள் யாவரையும் முந்தி அந்த வேலைத் தன் மார்பிலேற்று மூர்ச்சையாயினன். அப்போது விபீடணன் கடுங்கோபங்கொண்டு இராவணனது தேர்க்குதிரைகளை யொழித்தான். ஒழிக்கவும், இராவணன் வானத்தின்மீதுநின்று விபீடணன்மீதும் அநுமான்மீதும் அம்புமழை பொழிந்து, 'என்காரியம் முடிந்தது' என்று சொல்லி இலங்கைக்குச் செல்ல, விபீடணன் 'எங்கடா ஓடிப்போகிறுய்? இலட்சுமணனை வேலால் உயிர்வாடச்செய்த உன்னைக் கொன்று நானும் உயிர் மாய்வேன்' என்று தொடர, இராவணன் விபீடணப்பசுவால் இனி நமக்கு என்ன? வந்த காரியம் முடிந்திட்டது, என்று அவன்பேச்சை இலட்சியஞ்செய்யாமல் இலங்கையிற் புகுந்திட்டான். பிறகு வானரரும் விபீடணனும் பெருந் துன்பத்தை யடைந்தனராக, 'இலட்சுமணன் இறந்தபின் நான் உயிர் வாழேன்' என்று விபீடணன் இறக்கத்துணிய, சாம்பவான் தடுத்து, 'அனுமான் ஓஷதிகொணர, இலட்சுமணன் உயிர் பெறுவான்' என்றுகூறி யாவரையும் சமாதானப்படுத்த, சாம்பவான்மொழிப்படியே அநுமான் ஓஷதிகொணர்ந்து இலட்சுமணனை யுயிர்ப்பிக்க, உயிர்பெற்றெழுந்த இலட்சுமணன் விபீடணன் தீங்கின்றியிருப்பதையுணர்ந்து மகிழ, பிறகு யாவரும் இராமபிரானைச்சேர்ந்து வணங்கினராக, சாம்பவான் நிகழ்ந்தவைகளை இராமபிரானிடம் கூறினுன். அப்பிரான் அகமகிழ்ந்து அநுமானுக்கு முகமனுரைத்து வாழ்த்தி இலட்சுமணனைத் தழுவி அவன் செயலைப்பாராட்டி, ஒருமலையிலிளைப்பாறியிருந்தனனென்பது; இப்

படலத்திற் கூறிய பொருள். வேலேற்றுப்படலம் என்று இப் படலத்துக்குப்பெயர் சிலபிரதிகளிலுள்ளது.

வேறு.

1.—இராவணன் தேரேறிச் செல்லுதல்.

சில்லி யாயிரஞ் சில்லுளைப் பரியொடுஞ் [1]சேர்ந்த
[2]எல்ல வன்கதிர் மண்டில மாறுகொண் டிமைக்குஞ்
செல்லுந் தேர்மிசைச் சென்றனன் தேவரைத் தொலைத்த
வில்லும் [3]வெங்கணைப் புட்டிலுங் கொற்றமும் விளங்க.

(இ - ள்.) ஆயிரஞ்சக்கரங்களுடனே சிலவாகிய [நீட்சியற்ற] பிடரிமயிரோடுகூடிய ஆயிரங்குதிரைகளோடுபொருந்திச் சூரியனுடைய ஒளி பொருந்திய மண்டிலத்துடன் மாறுபாடுகொண்டு விளங்குவதான (விரைந்து) செல்லுந் தேரின்மீது, (இராவணன்), தேவர்களையழித்த வில்லும் கொடிய அம்புகளைக்கொண்ட தூணீரமும் வெற்றியும் விளங்க, (அப்போர்க்களத்தைநோக்கிச்) சென்முன்; (எ - று.)

கத்தரிக்கப்பட்டதனுல், 'சில்லுளை' என்றது. 'ஆயிரம்' என்பது-மத்திமதீபமாய், 'சில்லி' என்பதனோடும், 'பரி' என்பதனோடும் இயையும். பி-ம்:-[1]செறிந்த. [2]எல்லவாம். [3]வெல்கணைப்.(3493)

2.—இராவணன் ஓராயிரவெள்ளம் அரக்கர்சேனையை ராமலக்ஷ்மணர்மேற் செலுத்தி, தான் வானரசேனையை யெதிர்ப்படுதல்.

அரக்கர் சேனையோ ராயிர வெள்ளத்தை யமரில்
துரக்க மானுடர் தம்மையென் றுருபுடை துரந்து
வெருக்கொள் வானரச் சேனைமேற் றன்செல்வான்விரும்பி
இருக்குந் தேரொடும் போயவ னிராவண னெதிர்ந்தான்.

(இ - ள்.) 'மானுடர்களைப் போரிலே வென்றுஓட்ட' என்று ஓராயிரம்வெள்ளம் அரக்கர்தஞ்சேனையை ஒருபக்கத்தில் விரைவாகச் செலுத்தி, அச்சங்கொண்ட தான வானரச்சேனையின்மீது தான் செல்லவிரும்பி ஏறியிருக்குந் தேருடனே போனவனை இராவணன் (அவ்வானரசேனையைக்) கண்ணுற்முன்; (எ - று.)

'இராமலட்சுமணர்களை நீங்கள் வெல்லுங்கள்: யான் வானரர்களை வெல்வேன்' என்று படைத்தலைவர்களை நோக்கிச்சொல்லிய இராவணன் அப்படைத்தலைவரின் சேனைகள் போரில் மூண்டது கண்டு தன்மூலபலத்தை அவற்றுடன் செல்லுமாறுபணித்துத் தான் வானரர்களுடன் பொருமாறு தேரிலெழுந்தானென்று மூலபலவதைப்படலத்து முதல் மூன்றுசெய்யுளிற் கூறியதை யனுவதித்து, அவ்விராவணன் வானரசேனையைக் கண்ணுற்றமையை இங்குக் கூறுகின்முரென்க. இங்ஙனம் வானரரையும் நரரையும் வேறுபடுத்துங் கருத்துள்ளான் இராவண னென்பதை ஊகித்

துணர்ந்த ஸ்ரீராமன் தான் மூலபலங்களை வெல்வதாகச்சொல்லி வானரர்க்குப் பாதுகாவலாக இலக்குமணனைச் செல்லுமாறு ஏவி, அவனுக்குத்துணையாகச் சுக்கிரீவன் விபீஷணன் அநுமான்முதலியோரை யனுப்பினனென்பது, கீழ்க்கூறப்பட்டது. இச்செய்யுள் பல பிரதிகளில் இல்லை. (3494)

3.—இராவணனுடன் சென்ற சேனைகள்.

நூறு கோடித்தேர் நொறில்பரி [1] நூற்றிரு கோடி
[2]யாறு போன்மத மாகரி யையிரு கோடி
ஏறு [3]கோளுறு பதாதியு [4]மிவற்றிவற் றிரட்டி
சீறு கோளரி யேறனை [5]னுடனன்று சென்ற.

(இ-ள்.) நூறுகோடித்தேர்களும், விரைவையுடைய இருநூறு கோடிக்குதிரைகளும், யாற்றைப்போல மதநீரைப்பெருக்குகின்ற பத்துக்கோடிப் பெரியயானைகளும், இங்குக்கூறிய சேனைகள் யாவற்றினுக்கும் இரட்டிப்பாயுள்ள ஆண்சிங்கம்போன்ற வலிமையைக்கொண்ட காலாட்சேனைகளும், கோபிக்கின்ற மிடுக்கைக்கொண்ட ஆண்சிங்கம்போன்றவனான இராவணனுடனே அன்று சென்றன; (எ-று.)-கோள்-வலிமையும், மிடுக்கும். பி-ம்:—[1] நூறிரு கோடி. [2]மாறுகோளுடைமால்கரி, ஆறுகோடுடை மால்களிறு, யாறுமாமதமால்கரி. [3]கோளறும், கோளறு. [4]அவற்றினுக்கிரட்டி. [5]உடன்சென்றசேனை, உடனவைசென்ற, உடனதுசென்ற. (3495)

4.—பேரிகைகள் முதலியன ஒலித்தல்.

மூன்று வைப்பினு [1]மப்புறத் துலகினு முனையின்
ஏன்று [2]கோளுறும் வீரர்கள் வம்மினென் றிசைக்கும்
ஆன்ற [3]பேரியு மதிர்குரற் சங்கமு மசனி
ஈன்ற காளமு மேலேழொடே [4]ழுலகமு மிசைப்ப.

(இ-ள்.) '(சுவர்க்கம் மத்தியம் பாதாளம் என்ற) மூன்று உலகத்திலும் அப்பாற்பட்ட உலகத்திலும் போர்க்களத்தில் எதிர்த்தலைப்பொருந்திய (அரக்க) வீரர்கள் வாருங்கள்' என்று சொல்லுகின்ற[சொல்வதுபோல் ஒலிக்கின்ற]பெரிய பேரிகையும், அதிர்கின்ற குரலையுடைய சங்கமும், இடிபோன்ற பேரொலியையுண்டாக்குகின்ற எக்காளமும் மேலேழ் கீழேழ் என்ற உலகங்களிலெல்லாம் ஒலிப்பனவாயின; (எ-று.)

பேரிகைகள் ஒலிப்பது-முனையில் எதிர்க்கவிரும்பும் வீரர்களை வாருங்கள் என்று இசைப்பதுபோலுமென்றார்; தற்குறிப்பேற்றவணி; இங்குத் தற்குறிப்பேற்றவுருபு மறைந்துவந்தது: இவ்வாறு வருவதனை, வடநூலார் கம்யோத்பிரேட்சை யென்பர். ஏன்று கோள் - எதிர்த்தல்; முதனிலைதிரிந்ததொழிற்பெயர். பி-ம்:— [1]முப்புறத்து. [2]கொள்ளுதும், கொன்னுறும். [3]பேரிகையரி. [4]உலகினும். (3496)

5.—வானரவீரர் இராவணனையும் இராக்கதசேனையையுங் காணுதல்

அனைய வாசிய வரக்கர்க்கு மரக்கனை யவுணர்
[1]வினைய வானவர் [2]வெவ்வினைப் பயத்தினை வீரர்
[3]நினையு [4]நெஞ்சினைச் [5]சுடுமதோர் [6]நெருப்பினை [7]நிமிர்ந்து
கனையு [8]மெண்ணையுங் கடப்பதோர் கடலினைக் கண்டார்.

(இ-ள்.) அவுணரால் மாயச்சூழ்ச்சிசெய்யப்படுபவரான தேவர்களின் கொடிய தீவினைப்பயன்போன்றவனும், வீரர்களின் நினைக்குந்தன்மையுள்ள நெஞ்சைச் சுடுவதான ஒப்பற்ற நெருப்புப் போன்றவனுமான அப்படிப்பட்ட அரக்கர்க்கெல்லாம் பெரிய அரக்கனை இராவணனையும், எண்ணிக்கையெல்லாங்கடப்பதாய் ஓங்கிஒலிப்பதான (அவனுடைய) ஒப்பற்ற (சேனை) சமுத்திரத்தையும், (வானரவீரர்கள்), கண்டார்கள்; (எ-று.) பி-ம்: —[1]வினையை. [2]வெல்வினைப்புயத்தினை. [3]நினைவில். [4]நெஞ்சையும். [5]சுடுவதாய். [6]நெருப்பினில். [7]நிமிர்ந்த [8]விண்ணையுங்......கடலினைக், கூற்றையுங்குடிப்பதோர் கூற்றினைக். (3487)

6.—கண்ட வானரர்கள், யுத்தகோலாகலத்தோடு ஆரவாரித்தல்.

கண்டு [1]கைகளோ டணிவகுத் [2]துருமுறழ் கற்கள்
கொண்டு கூற்றமு நடுக்குறத் தோள்புடை கொட்டி
அண்ட [3]கோளங்க ளடுக்கழிந் துலைவுற வார்த்தார்
மண்டு[4]போரிடை மடிவதே நல[5]மென [6]மதித்தார்.

(இ-ள்.) (வானரவீரர்கள்,—அவ்வாறு வந்த அரக்கனைச்) சேனையோடு கண்டு, (தம்மை) அணியாகவகுத்து, 'நெருங்கிய போரில் (இராமகாரியத்துக்காக) உயிரையும்விடுவதே நன்மை' என்று மதித்தவர்களாய், யமனும் நடுக்கமடையும்படி தோட்புறங்களிற்கொட்டிப் பேரிடிபோல் தாக்கவனவான மலைகளை(த் தம்கைகளில்) ஏந்திக்கொண்டு, (அதிர்ச்சியினால்) அண்ட கோளங்கள் (தாம்) அடுக்காகவுள்ள நிலைமை அழிந்தொழியுமாறு பேராரவாரஞ் செய்தார்கள்; (எ-று.)-கை-சேனை. கற்கள்-மலைகள் பி-ம்:- [1]கன்களோடு. [2]உருமுழற், உருமுறு. [3]கோடிகள், கோளகை. [4]போர்செய்து. [5]என்று. [6]வலித்தார். (3488)

7.—இருதிறத்துச் சேனைகளும் பொருதல்.

[1]அரக்கன் [2]சேனையு மாருயிர் [3]வழங்குவா னமைந்த
[4]குரக்கு வேலையு மொன்றொடொன் றெதிரெதிர் [5]கோத்து
நெருக்கி நேர்ந்தன [6]நெருப்பிமைப் [7]பொடித்தன நெருப்பின்
[8]உருக்கு செம்பென வம்பரத் [9]தோடின துதிரம்.

(இ-ள்.) இராட்சசனுடையசேனையும் (தமது) அரியஉயிரைக் கொடுக்க வேண்டுமென்றாலும் அதற்கும் சம்மதித்த குரங்குச் சேனையும் ஒன்றோடொன்று எதிர்எதிராகப்பொருந்தி நெருக்கிப் பொருதன: (அப்போர்க்களத்தில்), இமைப்பொழுதிற்குள் (எங்

கும்) நெருப்புத்தோன்றின; நெருப்பிலுருக்கினசெம்புபோல இரத்தம்கடலைநோக்கியோடிற்று; (எ - று.) இமை-கண்ணுமாம். பி-ம்:—[1]அரக்கர். [2]சேனையை. [3]வாங்குவான். [4]குரக்கின். [5]கோத்த. [6]நெருப்பிடை. [7]பொடித்தென. [8]உருக்குசெம்பொன். [9]ஓடின. ()

8.—இதுமுதல் மூன்றுகவிகள்-இறந்துவிட்டசேனையின் வருணனை.

அற்ற [1]வன்றலை யறுகுறை யெழுந்தெழுந் [2]தண்டத்து
[3]ஒற்ற [4]வானக முதயமண் டிலமென வொளிரச்
[5]சுற்று மேகத்தைத் [6]தொத்திய குருதிநீர் துளிப்ப
முற்றும் வையகம் [7]போர்க்கள மாமென முயன்ற.

(இ-ள்.) அறுபட்ட வலிய தலை அற்ற உடற்குறையினின்றும் எழுந்து எழுந்து வானத்திற்பொருந்துவதனால் வானினிடம் உதயமண்டிலம்போல் விளங்காநிற்க, (வானத்தைச்) சூழ்ந்துள்ள மேகத்திலே(அந்தத்தலைகளினின்றுந்) தொத்திய இரத்தநீர்(கீழே) துளித்தலால் வையகம்முழுவதும் போர்க்களமென்று சொல்லும்படியாக முயன்றன போன்றன; (எ - று.)

குருதியோடுகூடிய தலை உடலிலிருந்து எழுந்தெழுந்து வானத்துச்சென்றதனால் அந்தவானத்தினிடம் உதயமண்டலம்போற் காணப்பட்டதென்பது, முன்னிரண்டடிகளிற் கூறப்பட்ட பொருள்: அவ்வாறான தலைகளினின்று இரத்தம் வானத்துச்சூழ்ந்துள்ள மேகத்திற்படியவே, அம்மேகம் நீரைப்பொழிவதுபோல் பூமியெங்கும் இரத்தத்தைப்பொழிந்ததனால், போர்க்களம்போலப் பூமியெங்கும் இரத்தம்பெருகலாயிற் றென்பது. பின்னிரண்டடியிற்கூறப்பட்டபொருள். இவ்வாறுகூறியதொடர்புயர்வுநவிற்சியணியால், சிரம்அறுபட்டவர் மிகப் பலர் என்பது தொனிக்கும். அற்றவன்றலை...அண்டத்துஒற்ற - தலையறுபட்ட முண்டத்திலிருந்து இரத்தநீர்பீறிட்டு வானத்துப்பாய என்று கொள்ளவுமாம். பி-ம்:—[1]வான்றலை. [2]அண்டம், அண்ட. [3]ஒற்றை. [4]வாண்முகம். [5]சுற்றிய. [6]தோற்றிய [7]போர்க்களமாமெனமுயல, போர்க்களம் போன்றனமுதிர்தம், போதுரக்களமாமென்று முரஞ்ச. (3500)

9. தூவி யம்பெடை [1]யரியினை மறிதரச் சூழி
தூவி யம்பெடை [2]சோர்ந்தன சொரியுடற் சுரிப்ப
மேவி யம்படை படப் [3]படக் குருதியின் வீழ்ந்த
மேவி யம்படைக் கடலிடைக் குடரொடு [4]மிதந்த.

(இ-ள்.) அம் படை கடலிடை-அழகிய(அரக்கர்)சேனையாகிய சமுத்திரத்தில், மேவி-பொருந்தி, (இலட்சுமணன்), அம்பு எடை - அம்பையெடுக்கையில், (—மதநீருண்ண வந்த), தூவி - சிறகினையுடைய, அம் பெடை-அழகியபெடையோடுகூடிய, அரி இனம் - ஆண்வண்டுகளின்தொகுதி, மறிதர-மீண்டுபோக, (அவ்யானைகள்) சூழி-முகபடாத்தை, தூவி-அப்பாலெறிந்து, சோர்ந்தன-சோர்வையடைந்தனவாய்,—வியம் மே-பெருமைபொருந்திய, படை படபட-

(இலட்சுமண) சரம் படுந்தோறும், குருதியின் - இரத்தத்திலே, சொரி உடல்-சிந்துகின்ற தம்முடல், சுரிப்ப-சுழன்றமிழும்படி, வீழ்ந்த-வீழ்ந்தனவாய், குடரொடும்-குடலுடனே, மிதந்த - மிதந்தன; (எ-று.)

இலட்சுமணன் அம்பை யெடுக்கவும் யானைகள் தம் முகபடாத்தை யெறிந்துசோர்ந்து, அம்புபடுந்தோறும் இரத்தப் பெருக்கில் தமதுஉடல் அழுந்தும்படிவீழ்ந்து குடலுடனே மிதந்தன என்றவாறு. இது முன்னிரண்டடிகளின் முற்பகுதி ஒருவகையாகவும், பின்னிரண்டடிகளின் முற்பகுதி ஒருவகையாகவும் அமைந்த **யமகவணி**. 'அரியினம்' என்ற இடத்துள்ள 'இனம்' என்பது, பெடையென்பதனுடனும் இயையும். 'சூழிதூவி' என்றமையால், 'யானைகள்' என்ற எழுவாய் வருவித்து உரைக்கப்பட்டது. 'மேவி' என்ற வினையெச்சம், அம்பெடைஎன்ற இடத்து 'எடை' என்பதிலுள்ள 'எடு' என்ற முதனிலையோடு முடியும். மூன்றுமடியில், 'மேவு' என்றபகுதி விகாரப்பட்டுவந்தது; மேபடை-வினைத்தொகை. **பி-ம்:—**[1] இரிவனசொரிதர, அரியினமரிதர. [2]படிந்தெனச்சோரியுட்சுரிப்ப, சோர்ந்தெனச்சோரியுட் சுழிப்ப. [3]படாக், படர். [4]மிதப்ப, மிதிப்ப. (3501)

10. **கண்[1]டி றந்தனர் கணவர்தம் முகத்தவா முறுவல்**
கண்[1]டி றந்தனர் மடந்தைய ருயிரொடுங் கலந்தார்
[2]பண்[1]டி றந்தன பழம்[3]புணர் வகம்புகப் [4]பன்னிப்
[5]பண்[1]டி றந்தன புலம்பொலி சிலம்பொலி [6]பனிப்ப.

(இ-ள்.) மடந்தையர்-மகளிர்,—கண் திறந்தனர் கணவர்தம்-கண்ணைத்திறந்தவராகிய (தம்) கணவரின், முகத்தஆம் - முகத்திலேதோன்றிய, முறுவல்-சிரிப்பை, கண்டு - பார்த்து,—பண்டு இறந்தன பழம் புணர்வு-முன்(தாம் அனுபவித்துக்) கழிந்தனவான பழமையான (சுரதநூலிற்கூறிய) கரணங்கள், அகம் புக-(தம்) நெஞ்சில் நினைவுக்குவரவே, பன்னி-(அவற்றை) விவரித்துக்கூறி, பண் திறந்து அன புலம்பு-சம்பூர்ணராகங்களை விட்டுப் பாடுவதைப் போல (இன்னிசையுண்டாக)ப்புலம்புகின்ற, ஒலி - ஒலியுடனே, சிலம்புஒலி - சிலம்பினொலியும், பனிப்ப - ஒலிக்க,—(கணவருக்கு இறப்பு நேர்கின்றதே! என்ற பெருவருத்தத்தைத் தாங்கமாட்டாமல்), இறந்தனர் - (தாமும்) உயிரொழிந்தவராய், உயிரொடும் கலந்தார்-(தம்) கணவருடனே (சுவர்க்கலோகத்திற்) சேர்ந்தார்கள்; (எ - று.)

பதிவிரதையரான சில அரக்கியர் தம்கணவனிறக்குந் துயரத்தினால் உயிரிழந்து அவனுடனே சுவர்க்கலோகத்துக் கலந்தனரென்க. இராமசரத்தாலடிபட்டு உயிர்போகும்நிலைமையையடைந்த தம் கணவரை அவருடைய மனைவியர் கிட்டும்போது அக்கணவர் தாம் சாகுந்தறுவாயில் அம்மனைவியரைக் கண்ணைத்திறந்து பார்க்க, அம்மகளிர்க்குத் தாம் முன்னர் அந்தக்கணவருடனே துய்த்த புணர்ச்சிக்கரணங்கள் நினைவுக்குவரப்பண்ணைத்திறந்தாற் போல் அவற்றையெல்லாம் கூறிப்புலம்பினர் அம்மகளிரென்க. பெருவீரராதலால், சாகுந்தறுவாயிலும் அவ்வீரருக்கு முறுவல்

மாறவில்லை. பண்-ஏழுசுரங்களையும் கொண்டது. **பி-ம்:—**[1]இறந்தன, இறந்தவர். [2]பண்டிறந்தனர். [3]புணர்க்களன்புகப், புணர்க்களம்புகப், புணர்நகம்புகப். [4]பண்ணிப். [5]பண்மறந்தன. [6]பணிப்பார், பணிப்ப. (3502)

11.—மாற்ருரின்போரால் தன்சேனை தருக்கழியுமென்று இராவணன் கூறல்.

ஏழு மேழுமென் [1]றுரைக்கின்ற வுலகங்கள் [2]யாவும்
ஊழி [3]பேர்வதே யொப்பதோ ருலைவுற [4]வுடற்றும்
நூழில் வெஞ்சம [5]நோக்கியவ் விராவண னுவன்ருன்
தாழி லென்படை [6]தருக்கறு மென்பதோர் தன்மை.

(இ-ள்.) மேலேழ் கீழேழ்என்று சொல்லுகின்ற உலகங்கள் எல்லாமும் ஊழிக்காலம் நிலைபெயர்வதையொப்பதாகிய ஒப்பற்ற நாசத்தைப் பொருந்துமாறு கடுமையாகச்செய்யும் (எதிர்த்தவரைக்) கொன்றுகுவிக்குந் தன்மையுள்ள கொடியபோரைப் பார்த்து, அந்த இராவணன், 'தாழ்வில்லாத என்னுடைய சேனை செருக்குஒழியும்' என்ற ஓர் தன்மையைக் கூறினான்; (எ-று.)—**பி-ம்:—**[1]இசைக்கின்ற. [2]எவையும். [3]போவனவொப்பன. (போவதேயொப்பதோர் எனவும் படிக்கலாம்.) [4]இடற்று, உடற்ற. [5]நோக்கிய ராவணன். [6]தளர்வுறும். (3503)

12.—வானரசேனைகளுடன் பொருத அரக்கச்சேனை முற்றுங்கெடுதல்.

மரமுங் கல்லுமே வில்லொடு [1]வாண்மழுச் சூலம்
அரமுங் [2]கல்லும்வேல் [3]முதலிய வயிற்படை [4]யடக்கிச்
சிரமுங் கல்லெனச் சிந்தலிற் [5]சிதைந்ததச் சேனை
உரமுங் கல்வியு முடையவன் செரு [6]நின்ற தொருபால்.

(இ-ள்.) (வானரரெறிந்த) மரங்களும் கற்களுமே, (அரக்கரெறிந்த) வில்லும் வாளும் மழுவும் சூலமும் அரமும் கவண்கல்லும் வேலும் முதலிய கூரியபடைக்கலங்களை யடக்கி, (வில்முதலியவற்றை உபயோகித்த அரக்கர்களுடைய) சிரங்களையும் கல்லைப்போலச் சிந்தும்படி செய்ததனால், அவ்வரக்கச்சேனை சிதைந்திட்டது: வலிமையும்போர்க்கல்வியுமுடையவனான இலக்குமணனுடைய போரோ ஒருபுறம் நிகழ்ந்து நின்றது; (எ-று.)

கீழ்தொட்டு இச்செய்யுளின் மூன்றடிவரையில் வானரர்களின் வெற்றியைக் கூறிமுடித்து, இச்செய்யுளின் நான்காவது அடி தொடங்கி இலட்சுமணன் போர்த்திறமையைக் கவி கூறுகின்ருர். **பி-ம்:—**[1]வாள்களும்வேலும். [2]கல்லுமே. [3]முதலியவியற்படை, முதலியவாய்ப்படை. [4]அடுக்கிச். [5]சிதைந்தன, சிந்தின, சிதைந்ததென், சிதைந்தென. [6]நின்ற. (3504)

13.—அநுமானுடனேகூடிய இலட்சுமணன் இராக்கதப் படையை வென்றமைஇரண்டுபாடல்களாற் கூறப்படும்.

அழலுங் [1]கட்களிற் றணியொடு துணிபடு [2]மாவி
சுழலும் பல்பரித் [3]தேரொடு புரவியுஞ் சுற்றச்

சுழலுஞ் சோரிநீ ராற்றொடுங் கடலிடைக் கலக்கும்
குழலு நூலும்[4]போ லனுமனுந் தானுமக் குமரன்.

(இ-ள்.) அநுமனும் இலக்குமணனென்ற அந்தக் குமரனும் நாற்குழலும் நூலும்போல(ச் செல்ல), நெருப்பை வெளிவிடுகின்ற கண்களையுடைய களிற்றுவரிசையுடனே துண்டுபட்டதனுலுயிர் சுழல்கின்ற பல பரிகளைப்பூண்ட தேரும் குதிரைகளும்,— நாற்புறத்திலும் வெளிப்பட்டுப் பாய்கின்ற இரத்த நீராற்றினுடனே சமுத்திரத்தினிடத்தே கலக்கும்; (எ - று.)

அநுமானும் இலக்குமணனும் தொடர்ந்துசென்று பொரவே, பகைவரின் களிறுமுதலியன இறந்து, இரத்தப்பெருக்காற்றின் வழியே கடலிற் கலக்குமென்பதாம். பி-ம்:-[1]கற்களோடு. [2]ஆலிச், அமலிச். [3]தேரினத்தொகுதியுமன்ன, தேரோடுகுதிரையுமண்ண. [4]போன்ம். (3505)

14. *வில்லுங் கூற்றுவற் குண்டெனத் திரிகின்ற வீரன்*
கொல்லுங் [1]கூற்றெனக் குறைக்குமிந் நிறைபெருங் குழுவை
ஒல்லுங் கோளரி யுருமன்ன குரங்கின துகிரும்
பல்லுங் [2]கூர்கின்ற [3]கூர்கிலா வரக்கர்தம் படைகள்.

(இ - ள்.) யமனுக்கு வில்லும் உண்டென்று (கண்டோர்) கருதும்படி (வில்லுடனே) திரிகின்ற வீரனான இலக்குமணன்,— இந்த நிறைந்த (சேனைப்) பெருந்திரளைக் கொல்லுங் கூற்றுவன் போலக் குறையச்செய்வான்; வலிமைபெற்ற வலியசிங்கத்தையும் இடியையுமொத்த குரங்கின் [அநுமானின்] நகமும் பல்லும் கூர்மையைப்பெறுகின்றன; அரக்கரின்படைகளோ, கூர்மையைப் பெருதனவாயின; (எ - று.)

'கூர்கின்ற' என்ற காரணப்பொருட்டான வினைச்சொல், கூராயிருத்தலினுல் நிகழும் நாசத்தைக் குறிக்கும். 'கூர்கிலா' என்ற இடத்தும் இவ்வாறே காண்க. பி - ம்:—[1]கூற்றுறக். [2]கூர்கின்ற. [3]கூர்கில. கூர்க்கில. 'பல்லுங்கூர்த்தில தரக்கர்தம்படைகளையன்றி' என்றும் சிலபிரதிகளில் நான்காமடி காணப்படுகின்றது. (3506)

15.—இங்ஙன் தன்சேனை யழிபடுவது கண்டு இராவணன் கொதித்தல்.

கண்டு [1]நின்றிறைப் பொழுதினிக் காலத்தைக் கழிப்பின்
உண்டு கைவிடுங் கூற்றுவ [2]னிருதர்பே ருயிரை
மண்டு வெஞ்செரு நாளொரு [3]கணத்திடை மடித்தே
கொண்டு [4]மீள்குவன் கொற்றமென் றிராவணன் கொதித்தான்.

(இ-ள்.) (அங்ஙனம் தன்படையழிவதைச்) சற்றுநேரம்கண்டு நின்று, 'இனிக் காலத்தைப் போக்கினுல் யமன் (மிச்சமாகிநிற்கின்ற) அரக்கரின் பெரியஉயிரை முற்றவும் உண்டிட்டு (இப் போர்க்களத்தை) விட்டிடுவான்; (ஆகையால்), மூள்கின்ற கொடிய

போரிலே ஒருகணத்திலே நான்(பகைவரை) மடித்து, வெற்றியைப் பெற்றுமீள்வேன்' என்று சொல்லி இராவணன் வெம்பினான்;

அரக்கரின் பெருமையை உயிரின்மேலேற்றி, 'பேருயிர்' எனப் பட்டது. பி - ம்:—[1]நின்றவப் பொழுதினைக் காலத்தைக் கழிவின். [2]இருந்த. [3]களத்திடை. [4]மீள்கவென். மண்டுவெஞ்செரு பொழுதினிற் செருக்களத்தினிடையே என்றுசிலபிரதியில் மூன்றாமடி. ஒருபிரதியில் 'கண்டுநின்றிறைப் பொழுதினிற் செருக்களத் திடையே, கொண்டு மீள்வன் வெங்கூலத்தைக் கொடிய வென் படையால், உண்டுகைவிடுங்கூற்றுவனிருதர் தமுயிரைக், கொண்டு கொற்றமென்றிராவணன் கரங்கொண்டு கொதித்தான்' என்று பாடங் காண்கின்றது. (3507)

16.—இராவணன் அம்புகளைத் துரத்தல்.

ஊதை போல்வன [1]வுருமுறழ் திறலன வுருவிப்
[2]பூத ரங்களைப் பிளப்பன வண்டத்தைப் பொதுப்ப
மாதி ரங்களை யளப்பன மாற்றருங் கூற்றின்
தூது போல்வன [3]சுடுகணை முறைமுறை [4]துரந்தான்.

(இ-ள்.) காற்றைப்போல விரைவைப் பெற்றனவும், இடியை யொத்து அழிக்கும் வலிமையை யுடையனவும், மலைகளை ஊடுருவிப் பிளப்பனவும், அண்டத்தைத் துளைப்பனவும், திக்குக்களையளப்பனவும் [திசையுள்ளவளவுஞ் செல்வனவும்], மாற்றுதற்கு அரிய யமனுடைய தூதர்போற் கொல்வனவுமான சுடுந்தன்மையுள்ள அம்புகளை முறைமுறையாக விரைந்து செலுத்தினான், (இராவணன்); (எ - று.)—பி-ம்:—[1]உருமுள. [2]பூதலங்களை. [3]கடுங்கணை. [4]சொரிந்தான். (3508)

17.—இராவணன் கடுங்கணையால் வானரசேனை நிலைகெடுதல்.

ஆளி [1]போன்றுள னெதிர்ந்த[2]போ தமர்க்களத் [3]தடைந்த
[4]ஞாளி [5]போன்றுள [6]வென்பதெ னள்ளிரு ளடைந்த
காளி போன்றன னிராவணன் வெள்ளிடைக் [7]கரந்த
பூளை போன்றதப் பொருசினத் தரிகள்தம் புணரி.

(இ - ள்.) சிங்கத்தையொத்தவனாகிய இராவணன் எதிர்த்துப் போர்புரிந்தபோது, போர்க்களத்திலேசேர்ந்திருந்த வானரங்கள் நாய்கள்போல(இழிவடைந்து)நின்றன என்பது எதற்காக?[சிங்கத்திற்கு முன் நாய்கள்போலும் இராவணனுக்குமுன் வானரங்கள் என்று சொல்லவுந் தகாதென்றபடி]: நடுஇரவிலே வந்தடைந்த காளிபோன்று (மிகக் குரூரனாக) இருந்தான், இராவணன்: வெற்றிடத்திலே(காற்றுக்கு முன்னே இருந்த இடந்தெரியாது) ஒளித்த பூளைப்பூண்டைப் போன்றது, அந்தப்பொருகின்ற சினத்தை யுடைய வானர(சேனை) சமுத்திரம்; (எ-று.)—காற்றடிக்கும்போது பூளைப்பூ இருந்த இடந்தெரியாது நிலைகுலைந்துபோவதுபோல இராவணனம்பு தாக்கியபோது வானரசேனை நிலைகுலைந்தோடலுற்ற

தென்றவாறு. அடைந்த-பெயர். பி-ம்:-[1]போன்றுளது. [2]பேர்மறக் [3]எதிர்ந்த, அடைந்தார். [4]நாளி. [5]போன்றுளது, போன்றுளர் [6]எனவெதெனள்ளிருளுடைந்த. [7]கலந்த. (3509)

18.—நிலைகெட்டோடிய வானரசேனைகளை 'அஞ்சற்க' என்று விலக்கி, இலட்சுமணன் அநுமான்தோள்மீதுசென்று இராவணனை யெதிர்த்தல்.

இரியல் போகின்ற சேனையை யிலக்குவன் விலக்கி
அரிக ளஞ்சன்மி னஞ்சன்மி னென்றருள் வழங்கித்
[1]திரிய மாருதி தோளெனுந் [2]தேர்மிசைச் சென்றான்
எரியும் வெஞ்சினத் திராவண [3]னெதிர்புகுந் தேற்றான்.

(இ-ள்.) இலட்சுமணன்,—நிலைகெட்டுஓடுகின்ற (வானர) சேனையை 'வானரர்களே! அஞ்சாதேயுங்கள், அஞ்சாதேயுங்கள்' என்று கருணை செய்து தடுத்து, திரிகின்ற அநுமானுடைய தோளென்கிற தேரின்மீது (ஏறிச்) சென்றவனாய், எரிகின்ற கொடுங்கோபத்தையுடைய இராவணனுக்கு எதிரேபுகுந்து (அவனை)எதிர்த்தான்; (எ-று.)-பி-ம்:-[1]தெரிய. [2]தேரிடைச். [3]நேர்.

19.—இரண்டு கவிகள்-இலக்குமணனும் இராவணனும் நெருங்கிப் பொருதலைத் தெரிவிக்கும்.

ஏற்றுக் கோடலு மிராவண னெரிமுகப் பகழி
நூற்றுக் கோடியின் மேற்செலச் சிலைகொடு [1]நூக்கக்
காற்றுக் கோடிய பஞ்செனத் [2]திசைதொறுங் கரக்க
வேற்றுக் கோல்கொடு விலக்கின னிலக்குவன் விசையால்.

(இ-ள்.) (இலட்சுமணன் வானரசேனையைத்தாங்கியவண்ணம்) எதிர்த்துப்பொருதலும், இராவணன் நெருப்பை முகத்திலே யுடைய அம்புகளை நூற்றுக்கோடியினும் விஞ்ச வில்லைக்கொண்டு செலுத்த, (அந்த அம்புகள்) காற்றுக்குமுன் ஓடின பஞ்சுபோலத் திக்குக்கள்தோறுஞ்சென்று ஒளிக்கும்படி இலக்குவன் விசையோடு வேறு அம்புகளைக்கொண்டு விலக்கினான்; (எ-று.)-பி-ம்:—[1]தூவக். [2]தலந்தொறும். (3511)

20\. விலக்கி னான்தடந் தோளினு மார்பினும் விசிகம்
உலக்க வுய்த்தன னிராவண னைந்தொடைந் துருவக்
கலக்க [1]முற்றில னிளவலு முள்ளத்திற் கனன்றான்
அலக்க ணெய்துவித் தா[2]னட லரக்கனை யம்பால்.

(இ-ள்.) (தன்கணைகளை) விலக்கினவனான இலட்சுமணனுடைய பெரியதோளின்மேலும் மார்பின்மேலும் அம்புகளை இராவணன் நன்கு பதியச் செலுத்தினான்: பத்துப்பாணங்கள் (தன்னுடலை) ஊடுருவிச்செல்லவும், கலக்கத்தையடையாதவனாகி, இளையபெருமாளும்,—மனத்திற்கோபித்து, வலிய அரக்கனை(த் தன்னுடைய)அம்பினால் துன்பம் அடைவித்தான்; (எ-று.)—பி-ம்:- [1]உற்றிலாவுள்ளத்தவிளவலும், உற்றிலாவுள்ளத்தினிலக்குவன். [2]அன்றவ்வரக்கனை. (3512)

21.—இதுமுதல் நான்குகவிகள் — ஒருதொடர்: இலக்குமணனது வலிமை கண்டு இராவணன் மோகனாஸ்திரத்தை விட, விபீடணன் மொழியால் திருமாலின்படைகொண்டு அதனை இலக்குமணனொழித்ததைக் கூறும்.

காக்க லாகலாக் கடுப்பினிற் றொடுப்பன கணைகள்
நூக்கி னான்[1]கணை நுறுக்கின னரக்கனு நூழில்
[2]ஆக்கும் வெஞ்சமத் தரிதிவன் றனை[3]வெல்வ தம்மா
நீக்கி [4]யென்னினிச் செய்வதென் றிராவண னினைந்தான்.

(இ-ள்.) தடுத்தற்குமுடியாத விசையோடு தொடுப்பனவாகிய அம்புகளைச் செலுத்தினான் (இலக்குமணன்:) (அந்த) அம்புகளை நொருங்கச்செய்தவனாகிய இராவணனென்ற அரக்கனும், '(பகைவரைக்)கொன்றுகுவித்தலையுடைய கொடியபோரில் இவனை வெல்வது அருமையானது: அம்மா! (இவனை)விட்டிட்டு இப்போர்து செய்யக்கூடியவீரம் என்?' என்று எண்ணமிட்டான்; (எ-று.)-'அம்மா' என்பது, இலட்சுமணன் வீரத்தை நினைந்து இராவணன் வியந்தமையைப் புலப்படுத்தும். பி - ம்:—[1]அவை. [2]ஆக்கி. [3]வெல்லவம்பால், வெல்வதம்பால். [4]எண். (3513)

22. கடவுண் மாப்படை தொடுக்கின்மற் றவைமுற்றுங் [1]கடக்க
விடவு மாற்றவும் [2]வல்லனன்றி யாரையும் வெல்லும்
தடவு மாற்றலைக் கூற்றையுந் தமையனைப் போலச்
சுடவு [3]மாற்றுமெவ் வுலகையு [4]மெவனுக்குந் தோலான்.

(இ-ள்.) (இவனையோ சாதாரணமான கணைகளால்வெல்ல முடியாது:) தேவதைகளைக்கொண்ட பெரிய அஸ்திரங்களைத் தொடுத்தால், அவைமுழுதும் கடந்துவிடவும் தாங்கவும் வல்லமை யுடையவனாவதன்றி யாரையும் வென்றுவிடுவான்: யமனையும் வலிமையைச் சோதித்துப்பார்ப்பான்: தமையனைப்போலவே எவ்வுலகையும் சுடுதலையும் செய்யும் வல்லமையுள்ளான்: எவர்க்குந் தோலான்; (எ - று.)—பி - ம்:—[1]மங்க. [2]வல்லனேல். [3]ஆற்றலும் வல்லனே. [4]அவனுக்கும், யாவர்க்கும். (3514)

23. மோகமொன்றுண்டு மூதலவன் வகுத்தது முன்னா
ளாக மற்றது [1]கொற்றமுஞ் சிவன்தனை யழிப்பது
ஏக [2]முற்றிய விஞ்சையை யிவன்வயி னேவிக்
காக [3]முற்றுமல் [4]களத்தினிற் [5]கிடந்துவன் கடிதின்.

(இ - ள்.) மோகனாஸ்திரமென்று ஒன்றுஉண்டு: (அது) மூதற்கடவுள் முன்னாளில் இயற்றியதாகும்: அதுசிவனையும் வெற்றியையழிக்கவல்லது: ஒப்பற்றதாகி (மந்திரம்) நிரம்பிய (அந்த) அஸ்திரத்தை இவன்மீது செலுத்தி, காகங்கள் நிரம்பிச் சஞ்சரிக்கின்ற களத்திலே (இவனை) விரைவில் வீழ்ந்து கிடக்கச்செய்வேன்; (எ - று.)—மற்று - அசை.

முன்னாளாக-முன்னாளில் என்றபடி: இனி, ஆக மற்றது என்று தனியேயெடுத்து, ஆகம் - கண்ணுக்குத் தெரியக்கூடிய

வடிவம், அற்றது - இல்லாதது என்று உரைப்பாருமுளர். சிவன் தனையும் கொற்றம் அழிப்பது என இயையும்: எதிர்ப்பவன் சிவ பெருமானேயாயினும் அவன்மீது இந்த அஸ்திரம் விடப்பட்டா லும் அவனையும்தோற்கச்செய்வதென்றபடி. தசைமுதலியன உண் ணும்பொருட்டுக் களத்தில் காகம் நிரம்பியிருக்குமென்க. விஞ்சை- இலக்கணையால், மோகனாஸ்திரத்தைக்காட்டிற்று. பி-ம்:-[1]கொற்ற மீங்கிவன் றனை யளிப்பது. [2]முற்றியன்னவை யவைதனையேவிக். [3]உற்றுறழ். [4]களத்திடைக். [5]கிடப்பன, கடத்துவன். (3515)

24\. என்ப துன்னியவ் விஞ்சையை மனத்திடை யெண்ணி
முன்பன் மேல்வரத் துரந்தன னதுகண்டு முடுகி
[1]அன்பின் வீடண னுழியான் படையினி னறுத்தி
என்ப தோதின னிலக்குவ னதுதொடுத் தெய்தான்.

(இ - ள்.) என்ற இதனையெண்ணி அந்த மோகனாஸ்திர மந் திரத்தை மனத்தினாற் கருதி, வலிமையுள்ள இலட்சுமணன்மேற் செல்லுமாறு விரைந்துசெலுத்தினான், (இராவணன்): அதுகண்டு விபீடணன், அன்பினாலே விரைந்து 'திருமாலின்படையால் (இந்த மோகனாஸ்திரத்தை) அறுத்திடுவாய்' என்பதை (இலட்சுமணனுக் கு)ச் சொன்னான்; இலட்சுமணனும், அந்த அஸ்திரத்தைத் தொடுத்துவிடுத்தான்; (எ - று.)—பி - ம்:—[1]அன்பன். (3516)

25.—இலட்சுமணன் மோகனாஸ்திரத்தை நீக்குதலும் இராவணன் விபீடணனிடம் சினங்கொள்ளுதல்.

வீட ணன்சொல [1]விண்டுவின் படைக்கலம் விட்டான்
மூடு வெஞ்சின மோகத்தை நீக்கலு முனிந்தான்
மாடு [2]நின்றவ னுபாயங்கண் மதித்திட வந்த
கேடு நந்தமக் கென்பது மனங்கொண்டு கிளர்ந்தான்.

(இ - ள்.) விபீஷணன்வான் சொல்லவே (இலட்சுமணன்) விஷ்ணுவின் படைக்கலத்தை விடுத்தவனாய் மூடியவெஞ்சினத் தோடுகூடிய [மிக வுக்கிரமான] மோகனாஸ்திரத்தை நீக்குதலும்,- முனிந்தவனாய், (இராவணன்), 'அருகேயிருப்பவனான விபீடணன் உபாயங்களை யாலோசித்துச் சொல்லவிளைந்த தீங்கு நமக்கு' என்பதை மனத்திற்கொண்டு பொங்கினான்; (எ - று.)—கேடு—தன் விருப்பின்படி தன்மாற்றானை வீழ்த்தாமல் தான்விடுத்த படை யொழிந்தமை. பி - ம்:—[1]விட்டுவின். [2]நின்றுவன். (3517)

26.—மயன்தந்தவேலால் தன்தம்பியை யுயிர்கொள்ள இராவணன் கருதுதல்.

மயன்கொ டுத்தது [1]மகளொடு வயங்கனல் வேள்வி
அயன் [2]படைத்துள தாழியுங் குலிசமு [3]மனையது
உயர்ந்த [4]கொற்றமு மூழியுங் கடந்துள [5]துருமித்
சயந்த னைப்பொருந் தம்பியை யுயிர்கொளச் சமைந்தான்.

(இ-ள்.) மயனென்பவன் (தன்மகளை மணஞ்செய்து கொடுத்த போது அம்) மகளுடனே (தனக்குக்) கொடுத்ததும், விளங்குகின்ற நெருப்பையுடைய வேள்வியிலே பிரமதேவன் படைத்ததும், சக்கராயுதத்தையும் வச்சிராயுதத்தையும் ஒத்ததும், (மாற்றாரின்) உயர்ந்த வெற்றியையும் யுகாந்த காலத்துத் தீயையும் கடந்துள்ளதுமான இடியைப்போன்றபடையால், வெற்றியே யொருவடிவு படைத்தாற் போன்றுள்ள (தன்) தம்பியை யுயிர்கொள்ளுமாறு கருதினான்; (எ-று.)

மயன்கொடுத்த வேலையெறிய ஒருப்பட்டமையைக் கூறினாரென்க. கொற்றத்தைக்கடத்தல்-பிறருடைய வெற்றியைப் போக்குதல். ஊழியைக்கடத்தல்-ஊழியினும் கடுமை விஞ்சியிருத்தல். ஊழி - யுகாந்தகாலத்துத் தீயெனக் கொள்ளப்பட்டது: யுகாந்த காலமென்றே கொள்வதுமொன்று. உருமின் - உருமைப்போல எனக் கூறினுமாம். சயந்தனை - இந்திரகுமாரனை ஜயந்தனென்பவனையென்று உரைத்தலுமாம். பொரும் = பொருவும். பி - ம்:—[1]மகளிடை...வேள்வி, மகளுடை மங்கலவேள்வி. [2]படைத்தது வாழியும். [3]அனைய. [4]கொற்றமா வூழியும். [5]உருவின். (3518)

27.—இராவணன் விபீடணன்மீது வேலை யேவுதல்.

விட்ட போதினி னொருவனை [1]விட்டியே மீளும்
பட்ட [2]போதவ [3]னான்முக னாயினும் படுக்கும்
வட்ட வேலது வலங்கொடு வாங்கினன் வணங்கி
எட்ட [4]நிற்கலாத் தம்பிமேல் [5]வல்விசைத் தெறிந்தான்.

(இ-ள்.) விட்டபோது ஒருத்தனை உயிர்கொண்டே மீளுவதும் (அதுமேலே) பட்டபோது படப்பெற்றவன் நான்முகக்கடவுளாகவேயிருந்தாலும் (அவனையும்) உயிரொழிக்கவல்லதுமான அந்தவேலை வட்டமாக வலங்கொண்டு வணங்கி வாங்கித் தூரத்தில்லாத [சமீபத்தில்நிற்கிற] தம்பிமீது மிகவும் வேகமுண்டாக்கி எறிந்தான்; (எ-று.)—வேலது, அது-பகுதிப்பொருள்விகுதி. பி-ம்:- [1]மீட்டியே. [2]போதது. [3]நான்முகற்காயினும். [4]நிற்கிலாத. [5]விரைந்ததையெறிந்தான். (3519)

28.—விபீடணன் 'இப்படை என்னுயிரை மாய்க்கும்' என்ன இலட்சுமணன் அஞ்சாதேயென்று தான் அங்குச் சார்தல்.

எறிந்த காலையில் வீடண னதனிலை யெல்லாம்
அறிந்த சிந்தைய னைய[1]வீ தென் னுயி ரழிக்கும்
பிறிந்து செய்யலாம் பொருளிலை யென்றலும் பெரியோன்
அறிந்து [2]போக்குவ லஞ்சல்நீ யென்றிடை [3]யணைந்தான்.

(இ - ள்.) (இராவணன் அந்தவேலை) எறிந்தபோது, அந்தப் படைக்கலத்தின் தன்மையையெல்லாம் உணர்ந்த மனத்தனான விபீடணன் (இலட்சுமணனை நோக்கி), 'ஐயனே! இது என்னுயிரை யழிக்கும்; (இதைக்) கடந்து செய்யக்கூடிய [இதனினின்று தப்பக் கூடிய] செயல் ஒன்றுமில்லை' என்று கூறலும், பெருமையுடை

யோனை இலட்சுமணன் '(இதைப்போக்கும் வகையை) அறிந்து போக்குவேன்: நீ அஞ்சாதே' என்றுசொல்லி, அந்த இடத்தைச் சார்ந்தான்; (எ-று.)—'பிறிது'என்பது பிறிந்துஎன விகாரப்பட்டு வந்ததெனின், (இதற்கு) மாறாகச் செய்யக்கூடிய செயல் என்று உரைக்கலாம். பி-ம்:—[1] இது. [2] போக்குவன், காக்குவன். [3] அணைத்தான், நடந்தான். (3520)

29 —இலக்குமணன்விடுத்த அம்புமுதலியன அவ்வேலினை யொன்றுஞ் செய்யமாட்டாதொழியத் தேவர் மனம் வருந்துதல்.

எய்த வாளியு [1]மேயின படைக்கலம் யாவும்
[2]செய்த மாதவத் தொருவனைச் சிறுதொழிற் [3]றீயோன்
[4]வைத வைவினி லொழிந்தன விடணன் மாண்டான்
உய்த லில்லையென் றும்பரும் [5]பெருமன முலைந்தார்.

(இ-ள்.) (இலட்சுமணன்) தொடுத்துவிடுத்த கணைகளும் ஏவின படைக்கலங்களும் எல்லாமும், செய்தபெருந்தவத்தையுடைய ஒப்பற்றவனை அற்பத்தொழிலைப்புரியுந்தீயவன் இட்டிய வசவுபோலப் பயன் விளைக்காதனவாக,—(அப்போது)தேவர்களும் 'வீபீடணன் மாண்டான்: (இனிப்) பிழைப்பு இல்லை' என்று (தம்முடைய)பெருமனத்தில் வருந்தினர்; (எ-று.)—பி-ம்:—[1] மேவின, ஏவின. [2] செய்ய. [3] தீயோர். [4] வைதவாமொனமறிந்தன. [5] திருமுகம்.

30.—இதுவும் அடுத்த கவியும்-அவ்வேலைத் தம்தம் மார்பிலேற்குமாறு இலக்குமணன் முதலியோர் ஒருவரையொருவர் முந்துதலைக் கூறும்.

தோற்ப னென்னினும் புகழ்நிற்குந் தருமமுந் [1]தொடரும்
[2]ஆர்ப்பர் நல்லவ ரடைக்கலம் புகுந்தவ [3]னழியப்
பார்ப்ப [4]தென்னெடும் பழிவந்து தொடர்வதன் முன்னம்
ஏற்ப [5]னென்தனி மார்பினென் றிலக்குவ [6]னெதிர்ந்தான்.

(இ-ள்.) '(அடைக்கலமாக அடைந்த விபீடணனைக் காத்தற்காக நான் உயிரைத்) தோற்பேனேயானாலும் (அடைக்கலங்காத்த புகழ் நிலைத்து நிற்கும்: தருமப்பயனும் (மேலுலகத்து என்னைத்) தொடர்ந்துவரும்: நல்லவர் (என் செயலைக் கண்டு மகிழ்ச்சியால்) ஆரவாரஞ்செய்வார்கள்: (நம்மை) அடைக்கலமாகவந்துசேர்ந்தவன் அழிந்திடும்படி பார்த்துக்கொண்டிருப்பது ஏதுக்கு? (அடைக்கலம் புகுந்தோரைப் பாதுகாவாது விட்டனன் சூரிய வமிசத்துக்குமாரனென்ற) கொடிய பழி வந்து தொடருமே: அது) தொடர்வதற்கு முன்பு என்னுடைய தனித்தமார்பில் நானே (அவ்வேலை) ஏற்பேன்' என்று சொல்லி, இலக்குவன், (அவ்வேலுக்கு) எதிராக நின்றான்; (எ-று.)—அடைக்கலம் காத்தோரைக் காத்த தருமத்திற்கு உதவுவதால், 'தனிமார்பு' என்றான். என்னினும் = எனினும்: விரித்தல். பி-ம்:—[1] தொடங்கும். [2] ஆர்ப்ப. [3] உலக்கப், உலக்கிற், நிற்கப். [4] என்பெறப், என்றபிற். [5] என்றனி, என்றிணி. [6] நேர்ந்தான். (3522)

31. இலக்கு வற்குமுன் வீடணன் புகுமிரு வரையும்
விலக்கி யங்கதன் மேற்செலு மவனையும் விலக்கிக்
கலக்கும் வானரக் காவல னனுமன்முன் [1]கடுகும்
அலக்க [2]ணன்னதை யின்னதென் றுரைசெய [3]லாமோ.

(இ-ள்.) (அந்தவேலைத் தன்மார்பிலே ஏற்றுக்கொள்வதற்கு) இலட்சுமணனுக்குமுன்னே விபீடணன் புகுபவனானான்: அவ்விருவரையும் விலக்கி அங்கதன் முன்னே செல்பவனானான்: வானரத் தலைவனான சுக்கிரீவன், அவ்வங்கதனையும் விலக்கி (த் தான்) சேர்பவனானான்: அநுமான் (அவனினும்) விரைந்து முந்துவானானான்: (அங்குப் பிறந்த) அத்துன்பநிலையை இன்னதென்று சொல்ல முடியுமோ? (எ-று.)—பி-ம்:—[1]கடுக. [2]உற்றதை. [3]ஆமே. (3523)

32.—இறுதியாக இலக்குமணன் அவ்வேலைத் தன்மார்பிலேற்றல்.

[1]முன்னின் றாரெலாம் பின்னுறக் [2]காலினின் முடுகி
[3]நின்மின் [4]யானிது விலக்குவ னென்றுரை நேரா
மின்னும் வேலினை விண்ணவர் கண்புடைத் திரங்க
பொன்னின் மார்பிடை [5]யேற்றனன் முதுகிடைப் [6]போக.

(இ - ள்.) (தன்) முன்னேயிருந்தவரெல்லாம் (தனக்குப்) பின்னே பொருந்துமாறு காற்றினும் விரைந்துசென்று, 'நில்லுங்கள்: யான் இதனை விலக்குவேன்' என்று உரைத்து, விண்ணவர் கண்ணில்மோதிக்கொண்டு அழ, முதுகினிடத்து ஊடுருவிச் செல்லுமாறு, மின்னுகின்ற (அந்த) வேலைப் பொன்போன்ற (தனது) மார்பிலே (இலக்குவன்) ஏற்றான்; (எ - று.)—பி - ம்:— [1]முன்னினாரெல்லாம். [2]காலினும். [3]நின்னில். [4]யானது. [5]எய்தனன். [6]போன. (3524)

33.—விபீடணன் தண்டாயுதத்தால் இராவணனுடைய தேர்க்குதிரைகளையும் சாரதியையும் அழித்தல்.

எங்கு நீங்குதி [1]நீயென வீடண னெழுந்தான்
சிங்க வேறென்ன [2]சீற்றத்தா னிராவணன் தேரில்
பொங்கு [3]பாய்பரி சாரதி யொடும்படப் புடைத்தான்
சங்க வானவர் தலையெடுத் திடநெடுந் தண்டால்.

(இ - ள்.) (போர்க்களத்தைவிட்டுப் புறப்படமுயன்ற இராவணனை நோக்கி) விபீடணன், 'நீ எங்கே போகப்பார்க்கிறாய்?' என்று எழுந்து, ஆண்சிங்கம்போன்ற சீற்றத்தையுடையவனாய், இராவணனுடைய தேரிலே கிளர்ந்துபாய்கின்ற குதிரைகள் சாரதியுடனே இறந்து வீழவும், திரளாயுள்ள வானவர் தலையெடுத்திடவும் நெடிய தண்டாற் புடைத்தான்;—(எ-று.)—பி-ம்:-[1]இனியென. [2]சீற்றத்தவ்விராவணன், சீற்றத்தினிராவணன். [3]சாரதி புரவியின் றலையொடு. (3525)

34.—விபீடணன்மீதும் அனுமான்மீதும் கணைகளையெய்து, தன்காரியம் முடிந்ததென்று இராவணன் இலங்கைக்குச் செல்லுதல்.

சேய்வி சும்பினி னிமிர்ந்துநின் றிராவணன் சீறிப்
பாய்க டுங்கணைப் பத்தவ னுடல்புகப் பாய்ச்சி
ஆயி ரஞ்சர மனுமன்ற [1]னுடலினி னழுத்திப்
போயி னஞ்செரு முடிந்ததென் றிலங்கையூர் புகுவான்.

(இ - ள்.) இராவணன்,—(தன்தேரைவிட்டுச்) சேய்மையி லுள்ள விசும்பினில் உயரச்சென்று சீறி, பாய்கின்ற கடியபத்துக் கணைகளை அந்த விபீடணனுடைய உடலிற்புகும்படி செலுத்தி, அநுமானுடைய உடலில் ஆயிரஞ்சரங்களையழுந்தஎய்து, 'செரு முடிந்தது' என்று சொல்லி இலங்கையூரிற் புகுவானாய்ப் போயி னன்; (எ - று.)—பி-ம்:—[1]உயிரிடை, உகத்திடை, உரத்திடை. ()

35.—இராவணனைத் தொடர்ந்து விபீடணன் வெகுளுதல்.

தேடிச் [1]சேர்ந்தவென் பொருட்டினா லுலகுடைச் செல்வன்
வாடிப் போயின னீயினி வஞ்சனை [2]மதியால்
ஓடிப் போகுவ தெங்கடா வுன்னொடு முடனே
வீடிப் போவனென் றரக்கன்மேல் வீடணன் [3]வெகுண்டான்.

(இ - ள்.) '(அடைக்கலமாகத்) தேடியடைந்த என்பொருட்டி னாலே உலகையெல்லாமுடையனான ஸ்ரீமான் [இலட்சுமணன்] (வேலாலுருவப்பட்டு) வாடிப்போயுள்ளான்: இப்படியாயினபின்பு நீ (உன்னுடைய) வஞ்சனைப்புத்தியினால் எங்கடா ஓடிப்போவது? (உன்னோடுபொருது உன்னைக் கொன்று) உன்னுடன் உடனே உயி ரொழிந்துபோவேன்' என்று (அந்த) இராவணன்மீது விபீட ணன் வெகுண்டான்; (எ - று.)—பி - ம்:—[1]சேர்ந்தவன். [2]மதி யாய். [3]எழுந்தான். (3527)

36.—காரியம் முடிந்தபின் 'இவனோடுஎன்?' என்று இராவணன் இலங்கையிற் புகுதல்.

வென்றி யென்[1]வய மானது [2]வீடணப் பசுவைக்
[3]கொன்றி னிப்பய மில்லையென் றிராவணன் கொண்டான்
[4]நின்றி லனொன் றுநோக்கிலன் முனிவெலா நீத்தான்
பொன் [5]றிணிந்தன மதிலுடை யிலங்கையூர் [6]புக்கான்.

(இ - ள்.) 'வெற்றியோ என்வசமாகிவிட்டது: வீடணனாகிய பசுவைக்கொன்று இனிப் பயனில்லை' என்று (மனத்துக்) கொண்ட வனாய், இராவணன்,—எதிர்த்துநிற்றல்செய்யாமலும் (அந்தவீட ணனைப் பொருட்படுத்தி) ஒருசிறிதும் கண்ணெடுத்துப்பாராமலும் கோபத்தையெல்லாம் விட்டவனாய், பொன் நெருங்கியுள்ளனவான மதில்களையுடைய இலங்கையூரிலே புகுந்தான்; (எ - று.)—இழிவு தோன்ற, 'வீடணப்பசுவை' என்றது. பி-ம்:—[1]வசம். [2]வீடணன். [3]கொன்றுமோர். [4]நின்றுதான். [5]திணிந்தவன். [6]புகுந்தான். (3528)

37.—பிறகு விபீடணனும் வானரரும் இலட்சுமணனுக்கு நேர்ந்த நிலைமைக்காகப் பெருந்துன்பத்துளாழ்தல்.

அரக்க னேகினன் வீடணன் வாய்திறந் தரற்றி
இரக்கந் தானென விலக்குவ னிணையடித் தலத்தில்
[1]கரக்க லாகலாக் [2]காதலன் விழ்ந்தனன் [3]கலுழ்ந்தான்
குரக்கு வெள்ளமுந் தலைவருந் துயரிடைக் குளித்தார்.

(இ - ள்.) இராவணன் போய்விட்டான்: வீபீடணன் ஒளிக்க முடியாத அன்பையுடையவனாய், வாய்விட்டுக்கதறி (ஓருரு வெடுத்துவந்த) இரக்கமே யென்று (கண்டோர்) கருதும்படி இலட்சுமணனுடைய பாதங்களிரண்டில் வீழ்ந்து கண்ணீர்பெருக்கி வருந்தினான்: குரக்கு வெள்ளமும் (வானர) சேனாபதிகளும் துன்பத்து ளாழ்ந்தார்: (எ - று.)—"அன்பிற்குமுண்டோவடைக்குந்தாழார்வலர், புன்கணீர்பூசறரும்" என்பவாதலால், 'கரக்கலாகலாக் காதலன்' என்றார். பி - ம்:—[1]கரக்கலாதகக். [2]காதலின். [3]கலுழக், கவிழ்ந்தான். (3529)

38.—'இலக்குமணனுயிர்பொன்ற, நான் இருப்பதிற் பயனில்லை' என்று விபீடணன் இறக்கமுயல, சாம்பவான் தடுத்தல்.

பொன்[1]னரும்புறு தார்ப்புயப் பொருப்பினான் பொன்ற
என்னிருந்துநா னிறப்பனிக் கணத் [2]தெனை யாளும்
மன்னிருந்தினி [3]வாழ்கில னென்றனன் மறுக
நின்னி [4]லென்றனன் சாம்பவ னுரையொன்று நிகழ்த்தும்.

(இ - ள்.) அழகுபொருந்திய அரும்புகொண்டு தொடுக்கப்பெற்ற மாலையையணிந்த மலைபோன்ற தோள்களையுடையவனான இலட்சுமணனிறக்க, (நான்) இருந்து என்னபயன்? இக்கணத்தில் தானே நான் இறப்பேன்: இனி [இலக்குமணன் உயிரொழிந்த பின்] என்னையாளும் மன்னவன் [ஸ்ரீராமன்] உயிருடனிருந்து வாழமாட்டானென்று மனஞ்சுழலக் கூறினான், (வீபீடணன்): (அப்போது), நில்நில் என்று (விபீடணன் இறப்பதைத்) தடுத்துச் சாம்பவான் ஒருபேச்சைச் சொல்பவனானான்; (எ - று.)—சாம்பவான் நிகழ்த்தும் உரையை அடுத்த கவியிற் காண்க.

இனி, 'பொன்னிரும்புறுங் காளிமப் பொருப்பினான் பொன்ற' என்ற பாடத்திற்கு—'இராவணனுடைய மோகனப்படையால் இலட்சுமணனிறக்க' என்ற உபமேயப்பொருளை, இரும்பிலே பொருந்திய காளிமத்தொகுதியால் பொன் அழிந்திட என்று முதலடி உவமையினால் தெரிவித்தது, **பிறிதுமொழிதலணி** யென்க. **பி-ம்:**—[1]இறும்புறு காந்தமாப், இறும்புறுகளிம்பெனப். [2]என்னை. [3]வாழ்கலனென்றனன், வாழ்கிலேனென்றவன். [4]எண்கிறை, என்றிறை, என்கின்ற. (3530)

39.—'அநுமான் இருக்கையில் ஒஷதிகொணர்ந்து பிழைப்பிப்பானாதலால் எவரும் வருந்தவேண்டா' என்று சாம்பவான் தேற்றுதல்.

அனும னிற்கநா மாருயிர்க் [1]இரங்குவ தறிவோ
நினையு [2]மத்துணை மாத்திரத் துலகெலா நிமிர்வான்

வினையி னன்மருந் தளிக்கின்று [3]ளுயிர்க்கின்ளுன் வீரன்
[4]தினையு மல்லலுற் றழுங்கன்மி னென்றிடர் [5]தீர்த்தான்.

(இ-ள்.) 'வினையும் அந்த அளவினெல்லைக்குள் உலகெல்லாம் ஓங்கிச் செல்லவல்லவனும், (தன்) செயலால் நல்ல ஔஷதிகளைக் கொணர்ந்து தருகின்றவனுமான அநுமான் இருக்கையில், நாம் அரிய உயிருக்கு இரக்கங்கொள்வது அறிவு ஆகுமோ? (அன்றியும்), வீரனை இலட்சுமணன் உயிர்ப்புடையவனுயுமிருக்கின்றான்: (ஆதலால்), சிறிதும் துன்பமுற்று வருந்தாதீர்கள்' என்று கூறி(ச் சாம்பவான்) துன்பத்தைப் போக்கினன்; (எ-று.)—பி-ம்:—[1] இரங்குறில். [2] இத்துணை. [3] வீரர்க்குவீரன். [4] இனையும். [5] அறுத்தான், நீத்தான். (3531)

40.—இதுமுதல் மூன்று கவிகள்-சாம்பவான் சொற்படி அநுமான் மருந்து கொணர்ந்து இலக்குமணனை உயிர்ப்பித்தலைக் கூறும்.

மருத்தின் காதலன் மார்பிடை யம்பெலாம் வாங்கி
இருத்தி யோகடி தேகலை யிளவலை [1]யின்னம்
வருத்தங் [2]காணுமோ மன்னவ [3]னென்னலு [4]மன்னுன்
கருத்தை [5]யுன்னியம் மாருதி யுலகெலாங் கடந்தான்.

(இ-ள்.) வாயுபகவானுடைய அன்பிற்கு உரியமகனான அநுமானுடைய மார்பினிடத்துள்ள அம்பெல்லாவற்றையும்போக்கி(ப் பிறகு சாம்பவான்) 'இளையபெருமானை (இவ்வாறு) வருத்தத்துடனிருக்க இராமபிரான் காணப்பொறுப்பனே? (இங்ஙனுள்ள நிலைமையறிந்தும் நீ) விரைந்து (மருந்துகொணரச்) செல்லாதவனாய் இருக்கக்கடவாயோ?' என்று கூறலும், அவன் கருத்தையுணர்ந்து, அந்தமாருதி, (மருந்துகொணர) இவ்வுலகத்தினிடங்கள் பலவற்றையுங் கடந்தான்; (எ-று.)—பி-ம்:—[1] இங்ஙன், இஞ்ஞன். [2] காணுமே, கான்றவோ. [3] என்றனன். [4] மன்னன். [5] உன்னியு. ()

வேறு.

41. உய்த்தொரு [1]திசைமே லோடி யுலகெலாங் கடக்கப் பாய்ந்து, [2]மெய்த்தரு மருந்து தன்னை [3]வெற்பொடுங் கொணர்ந்த வீரன், பொய்த்தலில் [4]குறிகள்தானே [5]பொதுவற நோக்கிப் [6]பொன்போல், [7]வைத்தது வாங்கிக்கொண்டு வருதலில் வருத்த முண்டோ.

(இ-ள்.) (தன்கருத்தைமருந்துகொணர்வதிற்) செலுத்தி வடதிசையென்னும்) ஒருதிக்கின்வழியில் ஓடி உலகினிடங்கள் பலவற்றையும்கடந்திடுமாறுபாய்ந்துசென்று மெய்ம்மையுடன் பொருந்திய [தவருமற்பயனை விளைக்கின்ற] மருந்தினை வெற்புடனே முன்னர்க்கொணர்ந்துவந்த வீரனாகிய அநுமான்,—பொய்த்தலில்லாத அடையாளங்களைத் தானே பொதுவல்லாமல் [விசேடமாகக்] கவனித்துப்பார்த்து, நிதிபோற் போற்றி வைத்ததனை மீண்டும் கொண்டுதருதலில் வருத்தமுண்டோ? [இல்லையன்றோ?](எ-று.)

முன்னொருமுறை அரிதிற்றேடிக் கண்டுபிடித்து ஓஷதி மலையைக் கொணர்ந்துவந்துள்ள வீரனான அநுமான், அதனை மீண்டு வைத்தபோதே நிதியைவைப்பதுபோலக் குறிபார்த்து வைத்துள்ளானாதலால், அவ்வோஷதிமலையை யெளிதிற்கொணர்ந்தானென்க. பி-ம்:—[1] திசையேயோடி, திசையேயொல்லை. [2] மெய்த்தரு, மெய்த்தமெய். [3] வேரொடும். [4] குறிகெடாமே, குறிகடாமே. [5] பொதுவுற. [6] பொன்மேல். [7] வைத்தவை. (3533)

42. தந்தனன் மருந்து தன்னைத் தாக்குதன் [1] முன்னே யோகம், வந்தது மாண்டார்க் கெல்லா முயிர்தரும் வலத்த தென்றால், [2] நொந்தவர் நொய்வு [3] தீர்க்கச் [4] சிறிதன்றே [5] நொடித்தன் முன்னே, இந்திர னுலக மார்க்க வெழுந்தன னிளைய வீரன்.

(இ - ள்.) மருத்துமலையைக் கொணர்ந்தான், அநுமான்; அந்த மருந்தின் காற்று (உடல்)மேற் படுதற்கு முன்னே பிரஜ்ஞை வந்திட்டது: மாண்டவர்க்கெல்லாம் உயிரைத்தரும் வல்லமையுள்ளது (அம்மலையிலோஷதி) என்றால், (கணைபொத்தி) 'நொந்தவருடைய அந்நோவைத்தீர்த்தல் (அதற்கு) அற்பமான செயலன்றே [பெருங்காரியமல்லவன்றே]? கைந்நொடிக்கும் அளவிற்குள் தேவலோகத்தவர் (மகிழ்ச்சியினால்) ஆரவாரிக்க, இளையவீரன் எழுந்திட்டான்; (எ - று.)

வேல் அழுந்தத்தாக்கியதாலான நோவின்மிகுதியால் மூர்ச்சையடைந்துள்ளானேயன்றி, உயிர்நீத்திலனென்பது தோன்ற, 'நொந்தவர் நொய்வு தீர்க்கச்சிறிதன்றே' என்றார். யோகம்-நீங்கிய அறிவு வந்துசேர்கை. பி-ம்:—[1] முன்னம்வேகம், முன்னமேக்கம். [2] நொந்தனனோவு, நொந்தவர்நோவு. [3] தீர்த்தல். [4] வலிதன்றே. [5] நொடிதன் முன்னம். சில பிரதிகளில் வேலேற்றபடலம் இதனுடன் முடிய, அடுத்தசெய்யுளில் **வானரச்சேனை களங்காண்படலம்** தொடங்குகின்றது. (3534)

43.—எழுந்த இலட்சுமணன் விபீடணன் சேமத்தை யறிந்து அரக்கன் படுவது திண்ணமென்று உவகை கொள்ளல்.

[1] எழுந்துநின் றனுமன் தன்னை யிருகையாற் றழுவி யெந்தாய்
விழுந்திலை [2] னன்றே [3] மற்றவ் வீடண னென்று விம்மித்
தொழுந்துணை யவனை நோக்கித் துணுக்கமுந் துயரு நீக்கிக்
கொழுந்தியு மீண்டாள் பட்டா னரக்கனென் றுவகை கொண்டான்.

(இ - ள்.) (இலட்சுமணன்) எழுந்து நின்று அநுமானை(த் தன்) இருகைகளாலும் தழுவிநின்று, 'எந்தாய்! மற்றும் அந்த விபீடணன் இறவாமலிருக்கின்றானன்றே!' என்று விசாரித்தறிந்து, தொழுகின்ற துணைவனான அவனை [விபீடணனை]ப் பார்த்து (மனத்திலிருந்த) அச்சமும் துயரமும் நீங்கி, உவகைக் கண்ணீருகுத்து, 'கொழுந்தியும் (இனிச்) சிறை மீண்டாள்: இராவணனும் இறந்தான்' என்று மகிழ்ச்சிகொண்டான்; (எ-று.)

இனி, இராவணனைவதஞ்செய்து சீதையைச் சிறைமீட்பது திண்ணமென்பான் 'கொழுந்தியும் மீண்டாள்: பட்டான் அரக்கன்' என்று இறந்தகாலத்தாற் கூறினன்: தெளிவினால்வந்த காலவழுவமைதி. கொழுந்தி-சகோதரன் மனைவி. மீண்டாள்=மீட்கப்பட்டாள். விம்மி-உவகைக் கண்ணீருகுத்து. பி - ம்:—[1]எழுந்திருந்து. [2]அன்றே. [3]மற்றவீடணன். (3535)

44.—எல்லாரும் இராமனை நோக்கிச் செல்லுதல்.

தருமமென் றறிஞர் சொல்லுந் தனிப்பொருள் தன்னை [1]யின்னே
கருமமென் றனும [2]னாக்கிக் [3]காட்டிய தன்மை [4]கண்டால்
[5]அருமையென் னிராமற் கம்மா வறம்வெல்லும் பாவந் தோற்கும்
இருமையு நோக்கி [6]னென்று விராமன்பா லெழுந்து [7]சென்றார்.

(இ - ள்.) தருமமென்று அறிஞர் (கொண்டாடிச்) சொல்லுகின்ற ஒப்பற்றபொருளைப்பற்றி இப்போதே செய்யத்தக்கதென்று அனுமன் நிரூபித்துக் காட்டியதன்மையை ஆலோசித்தால், இராமபிரானுக்கு [நிறைவேறுதற்கு] அருமையானசெயல் என்ன உள்ளது? [ஒன்றுமில்லை] ஆச்சரியம்! இம்மை மறுமைகளைக் கவனித்துப் பார்க்குமிடத்து 'அறம் வெல்லும்: பாவம் தோற்கும்' என்று சொல்லிக்கொண்டு (யாவரும்) இராமனிடத்து எழுந்து சென்றார்; (எ-று.)

'தருமம் முடிவில் நன்மையையே விளைக்கும்' என்பதை அநுமான் இலக்குமணனுடைய நோயைத் தீர்த்து அவனை மூர்ச்சை தீர்ந்து எழுந்திருக்குமாறு செய்ததனால் நிரூபித்துக் காட்டியவனவன். பி - ம்:—[1]பின்னே. [2]ஆகக். [3]காட்டியதினைய. [4]கண்டான். [5]அருமையோயேதுமக்கவ், அருமையேதிராமற்கம்மா. [6]என்றும். [7]போனார். (3536)

45.—இராமபிரானைத் தலைவர் சென்றடைந்து வணங்க, இராமபிரான் 'விளைந்ததென்?' என வினவுதல்.

ஒன்றல பலவென் [1]றோங்கு முயர்[2]பிணந் தும்ப ரொன்று
குன்றுகள் பலவுஞ் சோரிக் குரைகட [3]லனைத்துந் தாவிச்
சென்றடைந் திராமன் [4]தன்னைத் திருவடி வணக்கஞ் செய்தார்
வென்றியின் [5]தலைவர் கண்ட விராமனென் விளைந்த தென்றான்.

(இ - ள்.) ஒன்றல்லாமற் பல என்று சொல்லுமாறு மிகவும் ஓங்கியுள்ள பிணங்களின் வானளவும்பொருந்திய குன்றுகள் பலவற்றையும் இரத்தங்களாலாகிய ஒலிக்கின்ற கடலெல்லாவற்றையும் கடந்துசென்று சேர்ந்து, இராமபிரானைத் திருவடியில் வெற்றிபெற்ற தலைவர் வணங்கினார்: (அவர்களைக்) கண்ட இராமன் 'நிகழ்ந்தது யாது?' என்று விசாரித்தான்; (எ - று.)

இராவணன்வந்தாற் பொருமாறு அனுப்பிய தலைவர்கள் உற்சாகத்துடனே மீண்டுவந்து தன்னைவணங்கியதனால் ஆங்கு நிகழ்ந்ததைக் கூறுமாறு ஸ்ரீராமன் அவர்களை வினவினனென்க.

இராமன் இலட்சுமணனுள்ள இடங்குறித்துவருகையில், இடையிலே தலைவர்யாவரும் ஸ்ரீராமனைக் கண்டாரென்க. பி - ம்:— [1]ஓதும். [2]பிணைத்தும்பரோங்கும். [3]பலவும். [4]செம்பொற். [5]தலைவர் கண்டானுரைத்திடும். [6]பிணைத்தும்பரோடும் குன்றுகள் என்ற பாடத்துக்கு-பிணைத்தினுலியன்ற வானத்துச்செல்கின்ற குன்றுகள் என்க. (3537)

46.—சாம்பவான் நிகழ்ந்தவற்றையெல்லாம் சொல்ல, ஸ்ரீராமன் அநுமானைக் கொண்டாடி வாழ்த்துதல்.

உற்றது முழுது நோக்கி யொழிவற [1]வுணர்வு ளூறச்
சொற்றனன் சாம்பன் வீர னனுமனைத் [2]தொடரப் புல்லிப்
பெற்றனெ னுன்னை [3]யென்னை பெருதன பெரியோ[4]யொன்றும்
[5]மற்றிடை யூறு செல்லா வாயுளை [6]யாக வென்றான்.

(இ - ள்.) (அதுகேட்ட) சாம்பவான், நிகழ்ந்ததை முழுதும் ஆலோசித்து (ஒன்றும்) விடாமல் (இராமன்) மனத்திற் பதியச் சொன்னான்: மகாவீரனான ஸ்ரீராமன் அநுமானைத் தொடர்ச்சியாக [இடைவிடாது] கட்டியணைத்து, 'உன்னைப் பெற்றுள்ளேன்: பெருமையுடையோனே! (நான்) பெருதவை எவை? பின்னும் சிறிதும் இடையூற்றையடையாத ஆயுளையுடையையாகுக' என்று வாழ்த்தினான்; (எ-று.)

அநுமான் சிரஞ்சீவியாயினும், அன்பின்மிகுதியால் மீண்டும் வாழ்த்தினான் ஸ்ரீராமனென்க. செயற்கரிய செய்தமையால், 'பெரியோய்!' என விளிக்கின்றான். பி - ம்:—[1]உணர்வினூன்றச். [2]தொடர்ந்து. [3]என்னே, என்னே. [4]என்று. [5]மற்றிடையூறொன்றில்லா, மற்றிடையூறுவாரா, மற்றிடையீறுசெல்லா. [6]ஆதி. ()

47.—இலட்சுமணன் பெருமகிழ்வோடு ஸ்ரீராமனைத் தொழுது சார்தல்.

புயல்பொழி யருவிக் கண்ணன் [1]பொருமலன் பொங்கு கின்றான்
உயிர்புறத் தொழிய நின்ற [2]வுடலன்ன வுருவத் தம்பி
துயர்[3]தமக் குதவி மீளாத் துறக்கம்[4]போய் வந்த தொல்லைத்
தயாதற் கண்டா [5]லொத்தான் றம்முனைத் தொழுது [6]சார்வான்.

(இ - ள்.) மேகம்போற்பொழிகின்ற நீரருவியைக்கொண்ட கண்களையுடையவனும், உவகையழுகையைக்கொண்டுநிற்பவனும், மகிழ்ச்சிபொங்கப்பெற்றவனும், உயிர் புறத்திலேதவிர்ந்துநிற்கத் தனிப்பட்டு நின்ற உடலினை யொத்தவனுமாகிய அழகிய இளைய பெருமாள், துயரத்தைத் தங்களுக்குக் கொடுத்திட்டு மீளாதசுவர்க்கத்தையடைந்து (மீண்டும்) வந்தபழைமையான தயரதனைக் கண்டாலொத்தவனாகித் தமையனான ஸ்ரீராமனை(க்கண்டு அவனை)த் தொழுது சேர்பவனானான்; (எ-று.)

இலட்சுமணன் இராமபிரானைத் தன்னுயிராகக் கருதுபவனென்பதும், தமையனைத்தந்தைபோலக் கருதுபவனென்பதும் இச்

செய்யுளில் விளங்கும். பி - ம்:—[1]பொம்மலன், பொருமினன். [2]உடலன்னவுறவற், உடம்பன்னவுறுப்பிற், உடம்பன்னவுருவிற். [3]நமக்கு. [4]பெற்றுயர்ந்த. [5]ஒத்த. [6]சேர்ந்தான். (3539)

48.—இதுவும் அடுத்த கவியும்-ஒருதொடர்: ஸ்ரீராமன் விபீடணனுக்காக இலட்சுமணன் உயிர்நீத்தமையைப் பாராட்டிக்கூறல்.

இளவலைத் [1]தழுவி யைய [2]விரவிதன் குலத்துக் கேற்ற
வளவின [3]மடைந்தோர்க் காகி மன்னுயிர் [4]கொடுத்த வண்மைத்
துளவியல் தொங்க லாய்நீ யன்னது துணிந்தா யென்றால்
[5]அளவிய லன்று செய்தற் கடுப்பதே யாகு [6]மன்றே.

(இ - ள்.) இளைய பெருமாளைத் தழுவிக்கொண்டு, (ஸ்ரீராமன்) 'ஐயனே! அடைந்தவரைப் பாதுகாத்தற்காக மன்னுயிரைக் கொடுத்தவல்லமையால் இரவியின்குலத்திற்குஏற்ற வண்மைக் குணமுடையவராளும்: துளவத்தினா லியன்ற மாலையைப் பூண்டவனே! நீ அச்செய்கையைத் துணிந்துசெய்தாயென்றால் (அச் செயல்)மிக்க பெருமையைத்தரக்கூடிய செயலாய் அப்போது செய் தற்கு அடுத்தசெயலேயாகுமல்லவோ?' (எ - று.)

அடைந்தோரைத் தன்னுயிரைக்கொடுத்தும் பாதுகாத்த லென்ற இந்தப் பெருமைபெற்ற செயல் சூரியகுலத்துப் பிறந்த நமக்கு ஏற்றதாய்ச்சிறக்குமென்றவாறு.பி-ம்:—[1]நோக்கி. [2]இராகவ குலத்துக்கு, இரவிவங்கிசத்துக்கு, இராகவர்குலத்துக்கு. [3]அடைந் தோர்த்தாங்கி, அடைந்தோற்றாங்கி. [4]அளிக்குந்தன்மை, கொடுக் குந்தன்மை, கொடுக்கும்வண்மை. [5]அளவியதன்று. [6]என்றான். ()

49. [1]புறவொன்றின் [2]பொருட்டா யாக்கை புண்ணுற வரிந்த புத்தேள், அறவனு [3]மைய நின்னை நிகர்க்கில னப்பால் நின்ற,[4]பிற வினை யுரைப்ப தென்னே பேரரு ளாள ரென்பார், கறவையுங் கன்று மொப்பார் [5]தமர்க்கிடர் காண்கி லென்றான்.

(இ-ள்.) 'ஒருபுறாவைக் காப்பதன்பொருட்டாக உடலைப் புண் ணாக்குமாறு அரிந்துதந்த தெய்வத்தன்மையையுடைய தருமமூர்த் தியான சிபிசக்கரவர்த்தியும், ஐயனே! உன்னை ஒவ்வான்: அந்தச் சரிதத்தினும் வேறுபட்டுநின்ற பிறசெயலை உரைப்பது,எதற்காக? பேரருளாள ரென்பார் தம்மைச்சார்ந்தோர்க்கு இடரைக்காண்பா ராயின் கறவையும் கன்றும் போன்றவராவர்' என்றான்,(ஸ்ரீராமன்);

தன்னுயிரை மாற்றான் கையினின்று விடுவிக்கவேண்டுமென்று வேண்டிய புறாவின்பொருட்டுத் தன்னுடலைக் கொய்து கொடுத்த சிபிசக்கரவர்த்தியினும், தன்னைக் காக்கவேண்டாததோடு தன்னைக் காவாது கடுக்கவும் முயன்ற விபீடணன்பொருட்டுத் தன்னுயி ரையே கொடுத்த இலட்சுமணன் சிறப்புப்பெறுவனென்க. கறவை - தன்கன்றுக்கு இரங்குந் தன்மையது. பி-ம்:-[1]புறவுநின். [2]பொருட் டால்,பொருட்டின். [3]நின்னையைய. [4]பிறவினி. [5]தமக்கிடர். (3541)

50.—இராமபிரான் இளைப்பாறுதல்.

சாலிகை முதல வான போர்ப்பரந் தாங்கிற் றெல்லாம், நீல்நிற [1]நாயி றன்ன நெடியவன் முறையி னீக்கிக், [2]கோல்சொரி தனுவுங் கொற்ற வனுமன் கைக்கொடுத்துக் கொண்டல், [3]மேல்நிறை குன்ற மொன்றின் மெய்ம்மெலி வாற்றலுற்ருன்.

(இ - ள்.) கவசம்முதலாகிய போர்க்காகத் தாங்கிய பாரத்தையெல்லாம் முறைமையின் நீக்கி, நீலநிறமுள்ள சூரியனையொத்த ஸ்ரீராமன், அம்பைச்சொரியும் வில்லையும் வெற்றிபொருந்திய அனுமான் கையிற் கொடுத்து, மேகம் மேலே நிறையப்பெற்ற குன்றமொன்றிலே உடலின் தளர்ச்சியை ஆற்றலானுன்; (எ - று.)

இதற்கு-இலட்சுமணனது கவசத்தை நீக்கி அவனை யிளைப்பாறச்செய்தானென்று கூறுவாருமுளர். பி-ம்:—[1]ஞாயிறென்னும். [2]கோலியதனுவும். [3]மேலுறைகுன்றமொன்றின், மேலுயர்குன்றினின்று, மேலுறைகின்ற குன்றின். (3542)

மூலபலவதைப்படலத்துக்குப்பின் வேலேற்றபடலம் முடியும் வரை நிகழ்ந்தசரிதையை ஸ்ரீவான்மீகிமுனிவர் கூறிய விதம் வருமாறு:- இவ்வண்ணம் ஸ்ரீராமன் அந்தமூலபலங்களை எளிதில் வதைத்ததும், அந்தப்போரில் தப்பியோடினவர்களும் இலங்கையிலேயே யிருந்தவர்களும் தம்மனைவியரோடு சிந்தைக்கடலுள் ஆழ்ந்தனர். அப்போது அரக்கமகளிர் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு 'சூர்ப்பணகையினால் விளைந்த தீங்கு இது' என்றும், 'இராமன் விராதனையும் கரன் முதலியோரையும் கபந்தனையும் வாலியையும் கொன்ருனே: இவற்றுள் ஒவ்வொன்றுமே இராமனுடைய பேராற்றலுக்குப் போதுமான அத்தாட்சியாகாதோ? இராவணன் தன்தம்பியின் பேச்சைக் கேட்டிருப்பின் இவ்விதமான நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டிராதே: கும்பகர்ணன் அதிகாயன் இந்திரசித்து முதலியோர் மாண்டபின்பும் இராவணனுக்கு அறிவுதோன்றவில்லையே! விபீடணன் இராமனையே சரணமடைந்ததனால் நல்ல காரியமேசெய்தவனுயினன். நாம் அனுதைகளாய்ப் பரிதவிக்கிருேம்: நம்மை இந்த விபத்தினின்றும் காப்பாற்றுவாரில்லையே!' என்றும் புலம்புபவரானுர்கள்.

அந்தப்புலம்பலொலியைக் கேட்டதும் இராவணன் சற்றுக் கவலையிலாழ்ந்திருந்து, பிறகு சினம்பொங்க, அருகேயிருந்த மந்திரியரான மகோதரன் மகாபாரிசுவன் விருபாட்சன் என்னும் அரக்கர்களைப்பார்த்து,'விரைவிற் போருக்குப் புறப்படும்படி சேனைகட்குக் கட்டளையிடுக' என்றனன். அவர்களும் மன்னவன் பணியைத் தெரிவிக்க, அரக்கர்களும் முனைமுகம் நோக்கிச்சென்றனர். பிறகு மகோதரன் கைகூப்பியவண்ணம் நிற்க, இராவணன் 'பகைவெல்லப்போகின்றேன்: குரங்குகளெல்லாம் முனைமுகத்து உயிரிழக்கும்' என்று பலபாட சொல்லிக்கொண்டு, "தேரைச் சித்தஞ்செய்து விற்களைக்கொணர்க; சேனைகள் என்னைத் தொடர்ந்து வரட்டும்

என்றனன். மகாபாரிசுவன் சேனாத்யட்சர்க்கு இராவணன் கட்டளையைத் தெரிவிக்க, அவர்கள் வீடுவீடாய்ச் செய்தி தெரிவித்து அரக்கர்சேனையை யரிதிற்றிரட்டிக் கொணர்ந்தனர்; பின்னர்த் தன் கட்டளைப்படிவந்த இரதத்தில் இராவணன் ஏறிக்கொண்டு சேனைகள்தொடர வடக்குவாயிலின் வழியாகப் புறப்பட்டுப் போர்க்களஞ் சென்றான்: அவ்வேளையிற் பலவகைத் தீக்குறிகள் தோன்றின. இராவணன் அவைகளைப் பொருட்படுத்தாமற் சென்றனன். அங்கு அரக்கர்க்கும் வானரர்க்கும் நெருங்கியபோர் நிகழலாயிற்று. இராவணனும் உட்புகுந்துபொரவே, வானரசேனைகள் மிகவுஞ் சேதமடைந்தன: இங்ஙன் இராவணன் வானரசேனையைப் பறக்கடித்து ஸ்ரீராமனைக் கிட்டினன்.

அப்போது சுக்கிரீவன் வானரரைப் பாதுகாக்கும்படி சேனாகுல்மத்தில் சுஷேணனென்பவனை நிறுத்தி மிகக்கடுமையாக அரக்கச்சேனையோடுபொர, ராட்சசசேனை மறிந்தது: அவ்வேளையில் அரக்கரைத்தாங்கி விரூபாட்சன் சுக்கிரீவனோடு பொரவர, இருவர்க்கும் கடும்போர் நிகழ்கையில், இறுதியாகச்சுக்கிரீவன் தனனுள்ளங்கையாலறைய, விரூபாட்சன் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு தரையில் விழுந்திட்டான். அதனால், வானரசைனியம் பெருமகிழ்ச்சியடைய அரக்கச்சேனை பெருந்துயரடைந்தது.

தன்சைனியம் குறைவதைக் கண்ட இராவணன் மிகவருந்தி, மகோதரனைப்பார்த்து, 'நீயே இந்தவேளையிற் பொருது எனக்கு வெற்றியைத் தரத்தக்கவன்' என்று புகழ்ந்து தூண்ட, அவ்வரக்கன் பேருற்சாகத்துடன் பகைஞர்படையிற்புகுந்து வெகு மும்முரமாகப் பொருது வானரர்களை நிலைகெட்டோடச் செய்தனன். அங்ஙனம் ஓடிய வானரர் சுக்கிரீவனைச் சரணமடைய, அவன் அரக்கன்மீது மரங்களையும் மலைகளையும் எடுத்தெறிய, அவைகள் மகோதரனால் நொறுக்கப்பட, பிறகு போர்க்களத்தில் விழுந்துகிடக்கும் பரிகம் முசலம் என்பவைகளைச் சுக்கிரீவன் பிரயோகிக்க, அவை அரக்கனெறிந்த தண்டாயுதங்களோடும் முறிந்து வீழ்ந்தன. பிறகு முஷ்டி யுத்தஞ்செய்து சலித்துப் பின்னரும் கத்திகேடகங்களை யெடுத்து இருவரும்பொருகையில் மகோதரனுடைய கத்தி சுக்கிரீவன் கேடகத்திற்பாய, அவ்வேளையிற் சுக்கிரீவன் மகோதரனுடைய கழுத்தைக் கொய்திட்டனன். அதனால், அரக்கர்நிலைகெட, சுக்கிரீவனை வானவர்முதலியோர் புகழ்ந்தனர்.

மகோதரன் மாண்டதைக்கண்டு மகாபார்சுவன் அங்கதனுடைய சேனையோடு கடுமையாகப் பொர, அங்கதன் தன் இருப்புத்தடியால் சாரதியையும் அந்தமகாபாரிசுவனையும் மூர்ச்சிக்கச் செய்ய, கவாட்சனும் சாம்பவானும் பெருஞ்சிலையால் அவ்வரக்கனுடைய தேர்க்குதிரைகளையும் தேரையும் முறித்தனர். மூர்ச்சை தெளிந்ததும் மகாபாரிசுவன் பாணங்களால் கவாட்சனையும் சாம்பவானையும்தாக்கி அங்கதனுடன் கடுமையாகப்பொர, இறுதியாக அங்கதன் மகாபார்சுவனுடைய மார்பில் முஷ்டியினால் மோத,

அரக்கன் இதயம்வெடிக்கப்பெற்று வீழ்ந்தான். வானரர்கள் பெரு மகிழ்ச்சியினால் இலங்கையைச்சார்ந்த பல இடங்களிலும் ஆரவாரஞ்செய்தனர். தேவர்களும் மகிழ்ச்சிகாட்டினர்.

அனந்தரம் இராவணன் கண்டு சினம்மூண்டு தேரினின்று பேரொலியுண்டாக இராமனை எதிர்த்துப்போயினன். பூமிமுழுவதும் இரதத்தின் பேரொலியால் அதிர்ந்தது. அப்போது இராவணன் தாமாஸாஸ்திரத்தைப் பிரயோகிக்க, வானரர்கள் நாற்புறத்திலும் வீழ்ந்தனர். அக்காலத்து, இராமன் இலட்சுமணனோடுகூடி யுத்த சன்னத்தனாகி வில்நாணியைத்தெறித்து ஒலியெழுப்ப, அவ்வொலியைக் கேட்டமாத்திரத்தில் பல அரக்கர்கள்வீழ்ந்தனர். இராவணன்கிட்டினனாக, இலட்சுமணன் சில அம்புகளெய்ய, அவற்றையெல்லாம் தன்னம்புகளாற்போக்கி இலட்சுமணனைப் பொருட்படுத்தாமல் இராமனோடுபொரலானான். அப்போரில் ஆஸுராஸ்திரத்தை யபிமந்திரித்துப் பலமுகங்களையுடைய அம்புகளை இராவணன் எழுப்ப, ஸ்ரீராமனுடைய ஆக்நேயாஸ்திரத்தினால் பலவகை முகமுள்ள பாணங்கள் கிளம்பி அவைகளையெல்லாம் உருமாய்த்தன. இங்ஙனம் ஸ்ரீராமனும் இராவணனும் பல வகைக்கதிகளுடனே பல அஸ்திரங்களாலும் பாணங்களாலும் பொராநிற்கையில், இலட்சுமணன் ஒருபாணத்தினால் மனுஷ்யன் தலையைக் கொண்டதான இராவணன் தேர்த்துவசத்தை யறுத்து, அவனுடைய தேர்ப்பாகனது தலையையும் கொய்து, அவனுடைய வில்லையுந் துண்டித்தனன். அந்தவேளையில் விபீடணன் அவ்விராவணனது தேர்க்குதிரைகளைக் கதாயுதத்தினால் மாய்த்தனன்.

அப்போது இராவணன் தேரினின்றுகுதித்துச் சக்தியை விபீடணன்மேல் விடுத்தனன். அது விபீடணனைச் சார்வதற்கு முன்னே இலட்சுமணன் தான் முன்போய்நின்று அதை மூன்று பாணங்களால் துண்டித்துவிட்டனன். அப்பால் இராவணன் மயன்நிருமித்த மஹாசக்தியையெடுத்துச் சுழற்றினமாத்திரத்தில் விபீடணன் பிராணசந்தேகமடைய, இலட்சுமணன் அவனைத் தப்புவிக்கும்பொருட்டு முன்னின்று இராவணன்மேற் கணைகள் பொழிய இராவணன் விபீடணன்மேல் அந்தமஹாசக்தியை எறியும் எண்ணம்மாறி இலட்சுமணன்மேல்விடுத்தனன்: இராமன் அதுகண்டு 'இலட்சுமணனுக்கு மங்களமுண்டாகுக' என்று சொல்ல, அதுவலிகுன்றி இலட்சுமணனுடைய மார்பில் ஆழமாகப் பொத்தியதால் இலட்சுமணன் கீழ்வீழ்ந்தனன். அதுகண்ட ஸ்ரீராமன் கண்களில் நீர்ததும்பி இராவணன்மேற் சீற்றங்கொண்டு மற்றவர்களாற் பேர்த்தெடுக்க முடியாமற்போன அந்த மஹாசக்தியைப் பேர்த்தெடுத்து முறித்தெறிந்திட்டு அநுமான் சுக்கிரீவன் முதலியோரை இலட்சுமணனைக் காத்துக்கொண்டிருக்குமாறுபணித்து, இராவணனுடன் கடுமையாகப்பொருதனன். அப்போரில் இறுதியாக இராவணன் இராமபாணங்களினால் அஞ்சியோடினன். அவ்வாறு இராவணன்மீது அம்பைப் பொழிந்துகொண்டுநின்ற ஸ்ரீராமன் சுஷேணனைப் பார்த்து இலட்சுமண

னுக்கு நேர்ந்தநிலையைக்கருதி மிகவருந்த, சுஷேணன் இலட்சுமண னிடமுள்ள சுபலட்சணங்களைக்காட்டி ஸ்ரீராமனைத்தேற்றி, அநுமானை ஓஷதிமலையிலிருந்து விசல்யகரணிமுதலிய ஓஷதிகளைக் கொணருமாறு சொல்ல, அநுமான்சென்று அவ்வோஷதிகள் இன்னவையென்று காணமுடியாமையால் அம்மலைச்சிகரத்தையே பேர்த்துக்கொணர, சுஷேணன் ஓஷதியால் இலட்சுமணனைச் சொஸ்தனாகச்செய்ய, வானரர்யாவரும் சுஷேணனைக் கொண்டாடினர். ஸ்ரீராமன் இலட்சுமணனைத்தழுவி 'நீ மரணம் அடைவாயாயின் எனக்குப்பிராணனாலும் பயனில்லை: சீதையினாலும் பயனில்லை: போர் தான் எற்றுக்கு?' என்ன, இலட்சுமணன் ஸ்ரீராமனை நோக்கி 'நீர் இப்படி வலியற்றவன்போற் பேசுவது தகாது: அத்தமித்தற்குள் இராவணனை நீர் கொல்வதைப் பார்க்கவிரும்புகின்றேன். போரில் இராவணன் இறந்துபடவேண்டுமென்று விரும்பினால்,விபீடணனுக்குச்செய்து கொடுத்த பிரதிஜ்ஞை நிறைவேற்ற விரும்பினால், சீதையிடம் விருப்பமுள்ளதானால் விரைவில் என் சொல்லைச் செய்க' என்றனனென்பது.

வேலேற்றபடலம் முற்றிற்று.

32-ஆவது வானரர் களங்காண்படலம்

வானரர்கள் (ஸ்ரீராமபிரான் பொருதுவென்ற மூலபலங்கள் மற்றும்வென்ற அரக்கப்படைகள் வீழ்ந்துகிடக்கும்) போர்க்களத்தைக் கண்டதைக் கூறும் பகுதி.

இவ்வண்ணம் நிகழ்ந்தபின்பு சுக்கிரீவமகாராசன் தம் சேனையுடன் இராமனைக் கிட்டி வணங்கி, 'மூவுலகத்தினும் அடங்காத சேனையை வென்றது எவ்வாறு?' எனவினவ, ஸ்ரீராமன் 'விபீடணனோடு களத்திற்சென்று கண்டால்விளங்கும்' என்று மறுமொழிகூற, தலைவர் யாவரும் ஆசை தூண்டியதனால் விபீடணனோடும களத்திற்சேர்ந்து இறந்துவீழ்ந்திருக்குஞ் சேனைகளைக் கண்டு அஞ்சிநடுங்கி ஒடுங்கி மெல்லத்தேறி 'ஆயிரம் பருவம் கண்டாலும் காட்சிக்கு ஓரெல்லையில்லை; இதனைத் துறைப்படுத்துக் காட்டுவாய்' என்ன, விபீடணனும் அங்ஙனமே காட்ட, வெகு நாழிகை கண்டும் முழுதும் காணுதல் இயலாது என்றுகொண்டு, யாவரும் 'பின்பு பார்த்துக் கொள்வோம்; இவ்வளவுநேரம்கண்டும் சிறுதளவு கண்டபாடு இல்லை; இராமனைச் சேர்வோம்' என்று சொல்லி அவனைச்சார்ந்து வணங்கி அப்பிரானுடைய திறமையை நினைந்து பெருவியப்புக்கொண்டு பெருமூச்செறிந்து தங்கியிருந்தனரென்பது இப்படலத்துக் கூறும் பொருள்.

இப்படலம் சிலபிரதியில் **வானரச்சேனைகளங்காண்படலம்** என்ற பேரோடு "எழுந்துநின்று" (வேலேற்றபடலம்-43) என்ற

செய்யுளில் தொடங்குகின்றது. சிலபிரதியில் "தொழுதனர்' என்ற இப்படலத்தின் மூன்றுஞ் செய்யுளில் **வானரர்களங்காட்சிப் படலம்** என்ற பெயரோடு **வானரத்தலைவர்கள்களங்காட்சிப்படலம்** என்ற பெயரோடும் தொடங்குகின்றது: சிலபிரதியில் படலம் இங்குத்தொடங்கி, இதுவும் இராவணன் களங்காண்படலமும் ஒன்றாக, இரண்டுக்குஞ் சேர்ந்து **களங்காண்படலம்** என்ற பெயரே காணப்படுகின்றது.

1.—சுக்கிரீவன் தன்தானையோடுவந்து வணங்கிநிற்க, வானரர் இராமபிரானாலொழிந்த அரக்கரின் பெருமையை நோக்கி நடுக்கமும் திகைப்புமடைந்து நாணமுறுதல்.

[1]ஆயபின் கவிதன் வேந்து [2]மளப்பருந் தானையோடு
மேயின னிராமன் பாதம் விதிமுறை [3]வணங்கி வீந்த
தீயவர் பெருமை நோக்கி நடுக்கமுந் திகைப்பு [4]முற்றார்
[5]ஓய்வுறு மனத்தா ரொன்று முணர்ந்திலர் நாணமுற்றார்.

(இ-ள்) அவ்வாறானபின், வானரர்தலைவனாகிய சுக்கிரீவனும், —அளக்க முடியாத வானரசேனையுடனே இராமனுடைய சீர்பாதங்களில் விதிமுறை வணங்கிக் கிட்டினான்: (அப்போது), ஒழிந்திட்ட கொடியவரின் பெருமையைநோக்கி நடுக்கமும் திகைப்புங் கொண்டு ஓய்தலையடைந்த மனத்தையுடையவரான வானரர் ஒன்றும் உணர முடியாமல் நாணமடைந்தனர்; (எ - று.)

தாங்கள் பெருவீரரென்றும் இராமனுக்குத்துணைபுரிகின்றோமென்றும் வந்திட்டு எதிராளிகளின் பெருந் தொகுதியான வீரரைக் கண்டதும் தமது மனநிலை வீரங்குன்றி மாறுபட்டு ஓடினராதலால் யாவரும் நாணங்கொண்டனரென்க. பி-ம்:—[1]ஆயவெங் கவியின். [2]மடிப்பருங். [3]வணங்கியிந்தத். [4]திர. [5]ஓய்வுருமனத்தானொன்றுமுரைத்திலர். (3543)

2.—'மூன்றுலகத்தினும் மிக்க அரக்கர்சேனையை வென்றது எவ்வாறு?' என்று சுக்கிரீவன்வினவ, ஸ்ரீராமன் விபீஷணனோடு அதனைக் காணுமாறு பணித்தல்.

மூண்டெழு சேனை வெள்ள [1]முலகொரு [2]மூன்றின் மேலும்
[3]நீண்டுள வதனை யைய வெங்ஙன நிமிர்ந்த [4]தென்றான்
தூண்டிரண் டனைய திண்டோள் சூரியன் [5]புதல்வன் சொல்லக்
[6]காண்டி நீயரக்கர் வேந்தன் தன்னொடுங் களத்தை யென்றான்.

(இ - ள்.) தூண் திரண்டாற்போன்ற வலியதோளையுடைய சூரியகுமாரனான சுக்கிரீவன், (போரில்) மூண்டெழுந்த சேனை வெள்ளமானது, உலகம் மூன்றுக்கும் மேலாகவும் நீண்டிருந்தது: ஐயனே! அச்சேனையைக கடந்து வென்றது எவ்வாறு? என்று வினவினான்; (அங்ஙனம்) வினவ, (இராமன்) அரக்கர்வேந்தனான விபீடணனோடு நீ களத்தைக் காண்பாயென்றான்; (எ - று.)

'மூவுலகத்தினும் அடங்காத பெருமையையுடைய அரக்கச் சேனையையெல்லாம் ஒருத்தனாகக்கடந்திட்டு வென்றதுஎவ்வாறு?'

என்று சுக்கிரீவன் வினவ, இராமன் தன்னால்வீழ்த்தப்பட்டுச் சேனைகள் வீழ்ந்துகிடப்பதை வீபீடணனோடும் போர்க்களஞ் சென்று காண்பா யென்று கூறினனென்க. தன்வீரப்பெருமையைத் தன்வாயினாற் சொல்லவிரும்பாமல் களந்தைக் காணுமாறு கூறினான். சிலபிரதிகளில் இங்குத்தான் வேலேற்றபடலம் முடிவடைகின்றது. பி-ம்:-[1]உலகொடு. [2]மூன்றுமுற்றி. [3]நீண்டுளது. [4]என்ன. [5]சிறுவன். [6]காண்டிரால். (3544)

3.—வணங்கிவிட்டு வானரத்தலைவர் விபீடணனோடுசென்று போர்க்களங் காணுதல்.

தொழுதனர் தலைவ ரெல்லாந் தோன்றிய காதல் தூண்ட
எழுகென விரைவிற்[1]சென்று ரிராவணற் கிளைவ லோடும்
கழுகொடு பருந்தும் பாறும் பேய்களுங் கணங்கள் மற்றும்
குழுவிய களத்தைக் கண்ணி னோக்கினர் துணுக்கங் கொண்டார்.

(இ-ள்.) தலைவர்களெல்லாம் (ஸ்ரீராமனைத்) தொழுது (உள்ளத்துத்) தோன்றிய விருப்பம் தூண்டுவதனால் 'எழுக' என்று சொல்லி, இராவணன் தம்பியான விபீடணனோடும் விரைவிற் போய்,—கழுகுடனே பருந்தும் பாறும் பேய்களும் மற்றுமுள்ள காக்கை முதலியவற்றின் கூட்டங்களும் திரண்ட படுகளத்தைக் கண்ணால் நோக்கி அச்சங்கொண்டனர்; (எ-று.)—பாறு-பருந்தின் சாதிபேதம். பி-ம்:—[1]தேந்தாரிராகவன், சென்றுரிராவணன். ()

4.—படுகளங்கண்ட வானரர் முதலிற் பேரச்சமடைந்து பிறகு மகிழ்ச்சிமிகுதல்.

ஏங்கினர் நடுக்க முற்று ரிரைத்திரைத் துள்ள மேற
விங்கினர் வெருவ லுற்றார் விம்மினா ருள்ளம் [1]வெம்ப
ஓங்கினர் மெள்ள மெள்ள வுயிர்நிலைத் துவகை [2]யூன்ற
[3]ஆங்கவ ருற்ற தன்மை [5]யாரறிந் தறைய கிற்பார்.

(இ-ள்.) (பின்னும் அவ்வானரர்),—ஏக்கங்கொண்டார்; நடுக்கமடைந்தார்; மிகவும் ஆரவாரித்து மனத்தில் (அச்சம்) மிகப் பருக்கப்பெற்றார்; வாய்புலற்றத் தொடங்கினார்; உள்ளம் வெதும்ப வருந்தினார்; மெள்ள மெள்ள உயிர்நிலைக்கப்பெற்று மகிழ்ச்சி யூன்ற மேம்பட்டனர்; அப்போது அவருக்கு நேர்ந்த தன்மையை எவர் அறிந்து சொல்ல மாட்டுவர்? (எ-று.)—பி-ம்:—[1]வெம்பி. [2]ஊறி, ஊற. [3]வாங்கினார், ஆங்கிவர் [4]யார்கொலோபகரற்பாலார். ()

5.—உயிரிழந்துகிடக்கும் அரக்கச்சேனையைக் குறித்துக் கூறுமாறு வானரர் வினவ, விபீடணன் கூறத்தொடங்குதல்.

ஆயிரம் பருவங் [1]கண்டுங் காட்சிக்கோர் [2]கரையிற் றன்றால்
[3]மேயின [4]துறைகள் தோறும் [5]விம்மினார் நிற்ப நல்லாள்
பாய்திரைப் [6]பரவை யேழுங் [7]காண்குறு [8]பதக ரென்ன
[9]நீயிருந் துரைத்தி [10]யென்றார் விடண னெறியிற்[11]சொல்வான்.

(இ - ள்.) 'பாய்கின்ற அலையையுடைய கடலேழும் (ஒருங்கு திரண்டாற்போற்) காணப்படுகின்ற பாதகரான அரக்கர் பொருந்திய இடங்கள்தோறும் (காண்பவர்கள் அச்சத்தினால்) அழுது கொண்டு நிற்பதல்லாமல், ஆயிரம் வருஷங்கண்டாலும் காண்பதற்கு ஓர்எல்லையில்லை யாகையால், நீ இருந்து உரைப்பாய், என்று (வானரர்) வினாவினார்: என்று வினாவவே, விபீடணன் முறைப்படி கூறலானான்; (எ - று.)—பி-ம்:—[1]கண்டால். [2]அளவிற்றன்றால். [3]போயின. [4]உவகையோடும். [5]விம்மினாநிற்பது, விம்மினர் புலம்பல். [6]வேலை. [7]காண்குறும். [8]பதகன். [9]நீயிர்தேர்ந்து. நீ தெரிந்து. [10]என்றான். [11]சொன்னான். (3547)

வேறு.

6.—இதுமுதல் இருபத்தொன்பது கவிகள்-விபீடணன் இறந்தசேனைகளைச் சுட்டிக் கூறுவதைத் தெரிவிக்கும்.

காகப் பந்தர்ச் செங்கள மெங்குஞ் செறி[1] கால
[2]வோகத் தம்பிற் பொன்றின வேனு [3]முடலொன்றி
மேகச் சங்கந் தொக்கன [4]வீழும் [5]வெளியின்றி
நாகக் [6]குன்றம் நின்றன காண்மின் நமரங்காள்.

(இ - ள்.) நம்முடையவர்களே! காகப்பந்தலைக்கொண்டதும் (இரத்த நீர்படுதலாற்) செந்நிறமடைந்ததுமான போர்க்களமெங்கும் நெருங்கிய யமனுடைய தொடர்பைக்கொண்ட அம்பினால் இறந்துகிடந்தனவாயினும், (தாம்) உடல்கள் ஒன்றுபட்டதனால் மேகத்திரள் படியப்பெறுகிற யானைகளாலியன்ற மலைகள் வெளியில்லாமல் நின்றனவற்றைக் காண்மின்கள்; (எ - று.)

காகப்பந்தரின்கீழே யானைகள் இராமனம்புகளால் உயிர் மாண்டனவாயினும் அவை உடலொன்றுபட்டு மேகம் படியப்பெறுங் குலாசலங்கள் நிற்பனபோலக் காணப்படுபவற்றைச் சுட்டிக்காட்டியவாறு. மாமிசம் மிக்கவிடத்துக் காகங்கள் பந்தரிட்டாற்போல் வானத்தில் நெருங்கிப்பறத்தல் இயல்பு: ஆதலால், 'காகப்பந்தர்ச்செங்களம்' என்றது. கொலைபுரிதலால், இராமபாணங்கள் 'காலவோகத்தம்பு' எனப்பட்டன. ஓகத்து - யோகத்து என்பதன் திரிபு. நாகக்குன்றம்-நகக்குன்றமென்பதன் விகாரம். குலாசலத்தைக்குறிக்க, ஒருபொருட்பன்மொழியாக, நாகக்குன்றமென்றது. இனி, நாகங்களைக்கொண்ட குன்றமென்றும், யானையாகிய குன்றமென்றும் கூறுவாருமுளர். 'மேகச்சங்கந் தொக்கனவீழும்' என்பது, குன்றத்துக்கு இயற்கையடைமொழி. நமரங்காள், அம்-சாரியை. பி - ம்: —[1]காலம். [2]மோகத்தம்பிற், வேகத்தம்பிற், யோகத்தம்பிற். [3]உடனொன்றி, உடலொன்றின். [4]ஏழும். [5]வெளியின்மை. [6]குன்றினின்றன. (3548)

7. வென்றிச் செங்கண் வெம்மை யரக்கர் [1]விசையூர்வ
[2]ஒன்றிற் கொன்றுற் றம்பு தலைப்பட் டுயிர்நுங்கப்
பொன்றிச் சிங்க [3]நாக வடுக்கல் பொலிகின்ற
குன்றிற் றுஞ்சுந் தன்மை நிகர்க்குங் குறிகாணீர்.

(இ - ள்.) (முன்பெல்லாம்) வெற்றிபொருந்தியவரும் செங் கண்ணையுடையவருமான வெம்மையைக்கொண்ட அரக்கர்கள், விரைந்து செல்வனவும் ஒன்றிற்கொன்று முந்துற்றனவுமான ராம சரங்கள் தம்மீதுபட்டு உயிரைக் கொள்ளுதலால் இறந்து (ஏழு குலமலைபோற்கிடக்கும் யானைப்பிணங்களின்மீது விழுந்து), பாம்புகளைக்கொண்ட அடுக்கல் விளங்குகின்ற மலையில் தூங்கு கின்ற சிங்கத்தின் தன்மையை யொத்திருக்குங் குறியைக் காண் மின்கள்; (எ - று.)

இராமபாணங்கள் பொத்தியிறந்த அரக்கர் யானைப்பிணங் களின்மீது வீழ்ந்துகிடத்தலைச் சுட்டிக்காட்டியது, இது. அடுக் கல் - அடுக்கினாற்போலுங் கல். உற்றம்பு என்ற இடத்து, உற்ற என்ற பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல். பி - ம்:—[1] விசை யூர, மிசையூர. [2] ஒன்றுக்கொன்று, ஒன்றிச்சென்று. [3] நாகமடுக் கிற், நாகமடுக்கப், நாகவடுக்கிற். (3549)

8. அளியிற் பொங்கு [1] மங்கண னேவு மயில்வாளிக்
களியிற் பட்டார் வாண்முக [2] மின்னுங் கரையில்லாப்
புளினத் [3] திட்டிற் [4] கண்ணகன் வாரிக் கடல்பூத்த
நளினக் [5] காடே யொப்பன [6] காண்மின் நமரங்காள்.

(இ - ள்.) நம்மவர்களே! கருணையினால் ததும்பப்பெற்ற அழகியகண்களையுடைய இராமன் ஏவுகின்ற கூரிய அம்பினால் மதக்களிப்போடு இறந்திட்டவரின் வாண்முகங்கள், விளங்கு கின்ற கரையைப்பெற்றிராத மணல் திட்டைக்கொண்ட இட மகன்ற நீரையுடைய கடலிலேபூத்த தாமரைத் தொகுதியை யொத்துத் தோன்றுவனவற்றைக் காண்மின்கள்; (எ - று.)

அம்பு பொத்தப்பெற்று இறந்த கறுத்த அரக்கப்பிணங்களி னிடையே மதக்களிப்பாற் செந்நிறம்பெற்ற அவர்முகங்கள் கிடப் பவை - கருநிறக்கடலில் தாமரைக்காடு மலர்ந்திருப்பவற்றை யொக்குமென்றார்: தற்குறிப்பேற்றவணி. 'மின்னுங்கரையில்லாப் புளினத்திட்டிற்கண்ணகன்வாரி' என்பது,கடற்கு இயற்கையடை மொழி. முகத்திற் பொத்திய பாணங்கள் - தாமரையில் மொய்க் கும் வண்டுகள் போலு மென்பாரும், அளியிற்பொங்கும் - வண்டு களால் மொய்க்கப்பெற்ற என்று கூறி நளினக்காட்டிற்கு அடை யாக்குவாருமுளர். பி - ம்:—[1] கங்கமுதற்பல்குலமார்க்கக், கங்கை முதற்பல்கணமார்க்கக். [2] என்னுங்கரையில்ல, மின்னுங்கரை யில்ல, எங்குங்கரையில்லார். [3] திட்டைக். [4] கண்கனல்சோரிக், கண்ணகன்சோரிக். [5] கானையொத்தன. [6] பார்மின். (3550)

9. [1] பூவாய் வாளிச் செல்லெறி காலைப்பரி [2] பொன்றக்
[3] கோவார் விண்வாய் வெண்கொடி [4] இன்பா வொடுகூட
[5] மாவார் திண்டேர் [6] மண்டுத லான்நீர் [7] மறிவேலை
நாவாய் மானச் செல்வன காண்மின் நமரங்காள்.

(இ - ள்.) நம்மவர்களே! சிறப்புப்பொருந்திய வானத்தை முட்டுகிற வெண்கொடியையுடைய குதிரைகட்டுதலுறுகின்ற வலிய தேர்கள், கூர்மை பொருந்திய அம்புகளாகிய இடி எறிந்த காலத்து (த் தம்பாற்கட்டிய) குதிரைகள் இறந்துபடவும் (இரத்தப்பெருக்காலிழுக்கப்பட்டுச்) செல்வதனுல், நீர்த்திரைமடங்கப்பெற்ற கடலிலே திண்ணியபாயோடுகூட மரக்கலங்களை யொத்திருக்கச் செல்வனவற்றைக் காணுங்கள்; (எ - று.)

பூட்டிய குதிரைகள் இராமசரங்களால் இறந்திடவும் வெண்கொடித்தேர்கள் இரத்தப்பெருக்கா லீர்க்கப்பட்டுச் செல்பவை, கடலிற்செல்லும் பாய்கட்டியமரக்கலம்போலு மென்றவாறு: குதிரைகள் பொன்றவும் தேர்கள் செல்வனவெனக்கூறியது-**பிறிதாராய்ச்சியணியாம்:** இதனை, வடநூலார் விபாவநாலங்காரமென்பர்: இது **தற்குறிப்பேற்றவணிக்கு** அங்கமாய்வந்தது. பூ - கூர்மை. செல்-இடி. கோ - தலைமை; சிறப்பு; சந்திரசூரியர் எனினுமாம். **பி-ம்:—**[1]பாவாய். [2]பொன்றிக். [3]கோவாய்வன்பாய், தேவார்விண்வாய். [4]திண்கால்கொடு, திண்காலொடு. [5]மாவாய், மாவார்த். [6]மண்டுகுலாநீர், மண்டுபுலானீர். [7]மறு. (3551)

10. [1]ஒழுகிப் பாயு மும்மத வேழ முயிரோடும்
[2]எழுகிற் கில்லாச் செம்புனல் வெள்ளத் திடையிற்ற
[3]பழகிற் றல்லாப் பஃறிரை [4]தூங்கும் படர்வேலை
முழுகித் தோன்று [5]மீனர சொக்கும் முறை[6]நோக்கீர்.

(இ - ள்.) வெளியேசிந்திப்பாய்கின்ற மூன்றுமதங்களையுடைய யானைகள் உயிருடனேயிருந்தும் (இராமசரம்பட்டதனுல்) எழமுயன்றுதலைதூக்கியும் எழுந்திருக்கமாட்டாமல் இரத்தவெள்ளத்திலே மூழ்கியது,—(இதுவரையிற்) பழகியிராத பல அலைகள் மடங்கிவிழப்பெற்ற பரவிய கடலிலே முழுகுவதும் வெளித்தோன்றுவதுமான மீனரசை யொத்திருக்கப்பெற்ற முறைமையைக் காண்மின்; (எ - று.)—பல் + திரை = பஃறிரை.

இரத்தக்கடலில் முழுகுவதால், 'பழகிற்றல்லா...வேலை' எனப்பட்டது. உயிருடனிருந்தும், வேழங்கள் இராமசரத்தாலடியுண்டு இரத்தவெள்ளத்தினிடைப்பட்டு எழுந்து தலைதூக்குவதும்வெளிச்செல்லமுடியாமல் அங்குத் தானே மூழ்குவதுமாவது, அபூர்வமானதொருகடலிலே மீனரசு எழுந்து மூழ்குந்தன்மையைப் போலுமென்றார்: **தற்குறிப்பேற்றவணி.** மீனரசு - திமிங்கிலமென்பர். எழுந்து செல்லமாட்டாமைக்குக் காரணம் தம்மீது அம்புபாய்ந்தமை: இரத்தவெள்ளத்தினிடைப் பட்டமையே யெழுந்துசெல்லமுடியாமைக்குக் காரணமென்றலும் ஒன்று. **பி - ம்:—**[1]முழுகிம்மாயும். [2]எழுகற்கில்லா, எழுகிற்கெல்லா, மெழுகிச்செல்லாச். [3]பழகிற்கில்லா. [4]தாங்கும். [5]மீனிறை. [6]காணீர். (3552)

11. கடக்கா ரென்னப் பொங்கு கவந்தத் தொடுகைகள்
தொடங்கா நிற்கும் [1]பேயில யத்தின் தொழில்[2]பண்ணி

[3]மடக்கோ வில்லா வார்படி மக்கூத் தமைவிப்பான்
[5]நடக்கால் காட்டுங் [6]கண்ணுள [8]ரொக்குந் நமரங்காள்.

(இ - ள்.) நமரங்காள்! தம்முடல் மேகத்தையொத்திருக்கக் கிளர்ந்தெழுகின்ற கவந்தத்திற்குஏற்பக் கைகளைச் சேர்க்காநிற்கின்ற [தாளம்போடுகின்ற] பேய், இலயத்தின்செயலைச்செய்த வண்ணம் மடங்குதலில்லாத [சோம்புதலில்லாத] நீண்ட அபிநயக்கூத்தை (மாணாக்கர்க்குப் பொருந்தச் செய்யும்பொருட்டு நடனக்காலைக்காட்டுகின்ற பரதாசாரியரை ஒக்கும்; (எ - று.)

கவந்தங்கள் கூத்தாடுகையில் அதற்குஏற்பத் தாம் கைத்தாளமிட்டுக் கூத்தாடும் பேய்கள் - கூத்துப்பயிலும் மாணாக்கர்க்கு அக்கூத்தைக் கற்பிக்கும்பொருட்டுத் தாளமிட்டுக் கூத்தாடிக்காட்டுகின்ற பரதாசிரியரைப்போலு மென்றவாறு. கண்ணுள்-கூத்து: அதனைச்செய்பவர்-கண்ணுளர்: கூத்தர்: இங்குக் கூத்தைப் பயில்விக்கும் ஆசிரியரைக் காட்டிற்று. "கவந்தமாடமுன்புதங் களிப்பொடாடுபேயினம், நிவந்த ஆடலாட்டுவிக்கும் நித்தகாரர் போலுமே" என்ற கலிங்கத்துப்பரணி ஒப்புக்காணற்குரியது. கூத்தரையே கூறுவதாக உரைப்பினுமாம், கடம்-உடல். கடக் காரென்னப்பொங்கு-நீரைக்கொண்ட மேகம்போலக் கிளர்ந்தெழுகின்ற என்றல் ஏற்கும். கடக்காரென்ன - மதநீரையுடைய காரை [யானையை] யொத்தஎன்று பொருள் ஓதுவாருமுளர். மடக்குஓவில்லா-முடங்குதல் நீங்காத என்றலும், '[4]படிமைக் கூத்து' என்று பாடமோதி - வெறியாளன் ஆடும் வெறியாட்டு என்றலும் உண்டு. பி-ம்:—[1]பேய்சிலநாதத், பேய்நிலயத்தின். [2]பூண்ட,பண்ண, பேணி. [3]மடக்கோர், வடக்கோ. [5]நடக்கோல். [6]கண்ணினர். [7]ஒப்பாம். (3553)

12\. மழுவிற் [1]கூர்வாய் வன்ப [2]விடுக்கில் வயவீரர்
குழுவிற் [3]கொண்டார் நாடி [4]தொடக்கப் பொறி[5]கூட்டத்
தழுவிக் கொள்ளக் கள்ள மனப்பே யவை[6]தள்ளி
நழுவிச் [7]செல்லு மியல்பின காண்மின் நமரங்காள்.

(இ - ள்.) நமரங்காள்! வாயிலே மழுப்போலக்கூரிய வலிய பல்லையும் இடுங்குதலில்லாத வெற்றியையுமுடைய (அரக்க) வீரர் கூட்டமாக இருப்பவரின் (உடலின்) நரம்புகள், தொடக்குதலையுடைய [கட்டுதலையுடைய] யந்திரம்போல(த் தம்மையும்) உட்படுத்துமாறு தழுவிக்கொள்ள, வஞ்சகமுள்ள மனத்தையுடைய பேய்கள் அவற்றைத் தள்ளி நழுவிச்செல்லுகின்றவற்றைக் காணமின்கள்; (எ - று.)

கூட்டமாயிருந்த அரக்கவீரரின் உடலிலிருந்து அறுபட்டு எழுந்த நரம்புகள் தொடக்கப்பொறிபோல் தம்மைக்கட்டுப்படுத்துமாறுதழுவ, அவற்றைத்தப்பிச்செல்லும் பேய்களைக் காண்மின்களென்று காட்டுகின்றனன் விபீடணனென்க. இனி, [2]இடுக்கின், என்றுகொண்டு கவந்தங்களோடு(தாளமிட்டு) நர்த்தனஞ்செய்யப்

புக்கபேய்களின் கால்கள் அக் கவந்தங்களின் பல்லிடுக்கிலே சிக்கிக் கொள்ள, அவற்றின் உடல்நரம்புகள் கூட்டமாகத் தம்மைப் பொறிகளைப்போல் தொடக்குமாறு ஆரம்பிக்க, இக் கவந்தங்களோடு நம்மால் நர்த்தனஞ்செய்யமுடியாதென்று அப்பேய்கள் மெல்லவிலகிச் செல்வதைக்காணீரென்று இப்பாட்டுக்குப் பொருளுரைப்பாருமுளர். பி-ம்:—[1]கூர்வாள். [3]கொண்டங்காடி,கொண்டன்ஞடி. [4]துடித்தப. [5]கூட்டித்,கூடித். [6]தள்ள, தம்மை, [7]செல்லாவீழ்வன, தள்ளிப்பேர்வன, செல்லவீழ்வன,செல்லாவியல்பின.(3554)

13. பொன்னின் ஞேடை [1]மீன்பிறழ் நெற்றிப் புகர்வேழம்
பின் னும் முன் னும் மாறின வீழ்விற் [2]பிணையுற்ற
தன்னின் னேரர் மெய்யிரு பா லுந் [3]தலைபெற்ற
என் னுந் தன்மைக் கேய்வன பல்வே றிவைகாணீர்.

(இ - ள்.) பொன்னுலியன்ற நெற்றிப்பட்டத்திஞல் ஒளி விளங்குகின்ற நெற்றியிலே (செம்) புள்ளிகளைப்பெற்ற(இரண்டு) யானைகள் (இராமசரங்களால்) வீழ்கையில் பின்புறமாகவும் முன்புறமாகவும் மாறினவாய்ச் சேர்தல் பொருந்தியவை,தன்னில்(தான்) ஒப்பாக உடம்பின் இருபாலும் தலையைப்பெற்ற விசித்திரமிருகம் என்னுந் தன்மைக்குஏற்றன பல்வேருன இவற்றைக் காணீர்;

யானைகள் இராமசரங்களால் அடிப்பட்டு வீழ்கையில் ஒன்றன் பிருஷ்டபாகம் மற்ருென்றன் பிருஷ்டபாகத்தோடுபொருந்த மாறி வீழ்பவைபல, இருபுறத்திலும் ஒருநிகரான தலையைப்பெற்ற மிருகங்கள் பல்வேறு போன்றுள்ளவற்றைக் காண்மினென்றவாறு. நேரா-உடன்பாட்டெச்சம். பி-ம்:—[1]மீன். [2]பிணைவுற்ற [3]தலைபெற்றது. (3555)

14. நாமத் திண்போர் முற்றிய [1]கோபந் நகை [2]நாறும்
பாமத் [3]தொன்னீ ரன்ன நிறத்தோர் பகுவாய்கள்
தூமத் தோடும் [4]வெங்கன லின் னுஞ் சுடர்கின்ற
ஓமக்குண்ட மொப்பன பல்[5]வே றிவைகாணீர்.

(இ - ள்.) அச்சத்தைவிளைக்கின்ற வலியபோரில் முதிர்ந்த கோபம் கடுஞ்சிரிப்பில் தோன்றப்பெற்றனவும் பரவுதலையுடைய பழமையான நீரையுடைய கடலையொத்த நிறத்தைக்கொண்டனவுமான ஒப்பற்ற பிளவுபட்ட வாய்கள்,-புகையுடனே கொடியகனல் இன்னும் எரிகின்ற ஓமகுண்டங்களையொப்பன பல்வேறு இவற்றைக் காணீர்; (எ-று.)

இறந்து கீழ்வீழ்ந்துகிடக்கின்ற வீரரின்பகுவாய்கள் கோபத்தோற்றம் மாருமையால், புகைகனல்களுடனே சுடர்கின்ற ஓமகுண்டம்போலுமென்கின்ருன். பி-ம்:—[1]காலந், நாளிந். [2]நின்றும். [3]தெண்ணீர். [4]வெங்கனலோடும். [5]வேறுவை. (3556)

15. [1]மின் னும் மோடை யாடல் வயப்போர் [2]மிடல்வேழக்
கன்னம் மூலத் [3]தற்றன வெண்சா மரை[4]காணீர்

[5]மன்னும் மாநீர்த் தாமரை மானும் [6]வதனத்த
அன்னம் [7]மெல்லத் [8]துஞ்சுவ [9]வொக்கும் மலைவ[10]காணீர்.

(இ - ள்.) மின்னுகின்ற நெற்றிப்பட்டத்தையும் ஆடலையுமுடைய வெற்றிபொருந்தியபோரிலே வலிமையைக்காட்டியயானைகளின் காதின் அடிப்புறத்தினின்று நீங்கிய வெண்சாமரைகளைக் காணீர்: நிலைபெற்ற மிக்கநீரிற்பொருந்திய தாமரைமலரையொத்த (வீரர்களின்)முகத்தின்மீது படிந்த அவைகள், அன்னப்பறவைகள் (தாமரைமலர்களில்) மெல்லத்துஞ்சுமவற்றையொக்கும்: காண்மின்கள்; (எ - று.)

பரந்த முகத்திற் சாமரை படிவதைப்பற்றிய தற்குறிப்பேற்றவணி நிற்கும்போது ஆடுவது யானைகட்கு இயல்பு: காதுகளின் மேற்புறத்தில் சாமரம்மாட்டப்பெறுவது பண்டைக்கால வழக்கம். பி-ம்:—[1]பின்னும். [2]மத. [3]உற்றன, இற்றன. [4]காண. [5]மன்னர் மன்னத், மன்னும்வாசத்,மன்னர் மாளத். [6]வதனத்தால்,வனமீதே. [7]பூவிற், பூமேற், மழுவில். [8]துஞ்சின. [9]ஒக்கின்றன, ஒக்கின்றவை. [10]பாரீர். (3557)

16. [1]ஒளின் முற்று [2]துற்றுயர் வேழத் தொளிர்வெண்கோடு
ஆளின் முற்றுச் செம்புனல் வெள்ளத் தவைகாணீர்
கோளின் முற்றுச் [3]செக்கரின் மேகக் [4]குழுவின்கண்
நாளின் முற்று வெண்பிறை [5]போலுந் நமரங்காள்.

(இ - ள்.) நமரங்காள்! ஒழுங்காக முற்றுகைசெய்யாது (தனித்தனியே)உற்று உயர்ந்த வேழங்களின் விளங்குகின்ற வெண்கோடுகள் வீரர்கள்நிரம்பாத செந்நீர்வெள்ளத்திலுள்ளவை,—ஒளியையுடைய முற்றுத செந்நிறமுள்ள மேகத்திரளிற் காணப்படும் நாள்நிரம்பாத வெண்பிறைபோலத் தோன்றும்; காண்மின்கள்; (எ - று.)

செந்நீரிற்படிந்ததனாற் செந்நிறமான யானைகளின் தந்தங்கள் செந்நிறங்கொண்ட வானத்துத்தோன்றும் இளம்பிறைபோலுமென்றார்; திரண்டுவருமாயின் ஒன்றன்மேலொன்று விழுமாதலால், அதனைத்தவிர்க்க 'ஒளின்முற்றுது' என்றது. வீரர்களின் பிணங்கள் நிரம்பிய இடத்து யானைகள் விழுந்துகிடப்பின் அவ்யானைத்தந்தம் தோன்றுவதருமைபற்றி, 'ஆளின்முற்று' என்றது. கண்ணுக்குப்புலனாகவேண்டு மாதலால், முற்றுச்செக்கர்மேகம் கூறப்பட்டது. பி-ம்:—[1]வேளின், ஒளிம். [2]உற்றிகல். [3]செருக்கண், செக்கருள். [4]குழிவிண்ணின். [5]போல்வ. (3558)

17. கொடியும் வில்லுங் [1]கோலொடு வேலுங் குவிதேரும்
துடியின் பாதக் குன்றின் மிசைத்[2]தோல் விசியின்கட்டு
ஓடியும் வெய்யோர் கண்ணெரி [3]செல்ல வுடன்வெந்த
தடியுண் டாடிக் கூளி [4]தடிக்கின் றனகாணீர்.

(இ - ள்.) கொடி வில் அம்பு வேல் என்ற இவைகள் குவிந்துள்ள தேரிலும், துடியென்னும்பறைபோன்ற பாதங்களை

யுடைய மலைபோன்ற தோற்றத்தைக்கொண்ட யானையின்மேல் தோலாற் கட்டப்பெற்ற அம்பாரியிலும், இராமபாணங்களால் உயிர் களையப்பெற்று அழிந்த கொடியோரான அரக்கரின் கண்களிலிருந்து வெளிப்பட்டுத் தீச் சென்றதனால் ஒருசேரவெந்த மாமிசங்களையுண்டு பேய்கள் (களிப்பினால்) கூத்தாடி உடல்பருப்பனவற்றைக் காண்மின்; (எ-று.)

யானைவீரர் தேர்வீரர்களின்கண்களினின்றுபொங்கும் கோபத்தீயாற் பக்குவமாகவெந்த தசையைப் பேய்கள் உண்டு மகிழ்ந்து உடல்பருக்கப்பெறுமென்க. தேரிலும் விசியிலும் கட்டு ஓடியும் வீரர்என இயையும். கட்டு=உயிர் களையப்பெற்று: இறந்தகால வினையெச்சம்: ஓடிதல்-அழிதல். பி - ம்:—[1]கோலொடு தண்டுங். [2]தோல்விசுமஞ்சுட்டு. தோறுவர்ச்சுட்டு, தோல்விசியுஞ்சூட்டு. [3]சிந்த [4]தடிக்கின்றவை. (3559)

18. சகரம் முந்நீர்ச் செம்புனல் வெள்ளந் [1]தடுமாறு
மகரந் [2]நன்மீன் [3]வந்தன [4]கண்டு மனமுட்கிச்
சிகரம் மன்ன [5]யாவைகொ லென்னச் சில [6]நாணி
[7]நகரல் நோக்கிச் செல்வன காண்மின் நமரங்காள்.

(இ - ள்.) நமரங்காள்! சகரர்தோண்டியதான கடலோடு (யானைப் பிணங்களையடித்துச்செல்லும்) செந்நீர் வெள்ளமுந் தடுமாறுவதனால், சுறுமீன்கள் அங்குவந்தவை,—(அவ்யானைகளைக்) கண்டு, 'மலையையொத்த இவையாவையோ?' என்று மனத்து அஞ்சி அப்பாற்போகும் (வழி) நாடிச் செல்வனவற்றைக் காண்மின்; (எ - று.) பி - ம்:—[1]தடுமாறி, தடுமாற. [2]தன்மீன். [3]வந்தது. [4]காணு,காண்டும். [5]யானைகொல். [6]நாளின். [7]நகரம் நோக்கி. (3560)

19. விண்ணிற் [1]பட்டார் [2]வெற்புறழ் காயம் பலமென்மேல்
மண்ணிற் செல்வார் மேனியின் [3]வீழ மடிவுற்றார்
எண்ணிற் றீரா வன்னவை [4]தீரு மிடலில்லாக்
கண்ணிற் [5]றீயார் விம்மி [6]யுளைக்கும் படிகாணீர்.

(இ-ள்.) வானத்தில் இறந்தாரின் மலையையொத்த உடல்கள் பல மேன்மேல் மண்ணிற்செல்வாரின் மேனியில் வீழவே, (அந்த மண்ணிற்செல்பவர்கள்) உயிர்சோர்ந்தாராய், கணக்குக்கு அடங்காத அவ்யாக்கைகளினின்று நீங்கிட வலிமையற்று, கண்ணில் தீப்பொறியைக் கக்கினவராய் அழுது வருந்துகின்ற வகையைக் காணீர்; (எ - று.)

வானத்துச்செல்லும் அரக்கவீரர் சிலர்மீது இராமபாணம் பட்டு அவர்களை வீழ்த்த அவ்வாறுவீழ்ந்த அவ்யாக்கைகளினால் பூமியிற்செல்லும் சிலவீரர் உயிர்குன்றிக் கண்ணில் தீப்பொறி பறக்க விம்மிக் கத்துவதைக் காட்டுகின்றான்! விபீடணனென்க. பி-ம்:-[1]செல்வார். [2]வெம்புறழ். [3]மீள. [4]நீவுமிடனல்லாக், தீருமிடமில்லாக். [5]தோன்றார். [6]உழக்கும். (3561)

20. அச்சிற் றிண்டே ராணையின் மாமே [1]லகன்வானின்
மொய்ச்சுச் சென்றார் [2]மொய்குரு தித்தா ரைகண் [3]முட்ட
உச்சிச் சென்றா னாயினும் வெய்யோ னுதயத்தின்
குச்சிச் சென்று [4]ஞெந்துள னாகுங் குறிகாணீர்.

(இ - ள்.) அச்சைப்பிரதானமாகக்கொண்ட வலியதேரின் மேலும் யானையின்மேலும் குதிரையின்மேலும், அகன்ற வான வழியாக நெருங்கிச் சென்றவரான அரக்கவீரர்களின் (இராமசரங்களாலடிபட்ட உடல்களினின்று பெருகிய) நெருங்கிய இரத்த வொழுக்குக்கள் மேலே பாய்வதனால், சூரியன் உச்சிப்போதிற் சென்றிருந்தானாயினும், உதயமலையின் சிகரத்திற் சென்றானை யொத்துத் தோன்றுங் குறியைக் காணீர்; (எ - று.)

இரத்தத்தின் தாரை தன்மேல்முட்டியதனால் உச்சிக்காலத்துச் சூரியன் உதயகாலத்துச் சூரியன்போலச் செந்நிறத்தவனாகக் காணப்பட்டன னென்பதாம். பி - ம்:—[1]காலாளின். [2]மொய்க். [3]முட. [4]ஒத்துளது. (3562)

21. காறோய் மேனிக் கண்டகர் கண்டம் படுகாலை
ஆறோ வென்ன [1]விண்படர் செஞ்சோ ரியதாகி
[2]வேறாய் நின்று [3]வெண்மதி செங்கேழ் நிறம் [4]விம்மி
மாறோர் வெய்யோன் மண்டில [5]மொக்கின் றதுகாணீர்.

(இ - ள்.) காற்றின் தன்மைபொருந்திய [விரைந்துசெல்ல வல்ல] மேனியையுடைய பகைஞர் துண்டப்படும்பொழுது, விண்ணிற்படர்ந்த (அந்தச்) செந்நிறச்சோரி 'ஆறோ!' என்று கருதும்படி தோன்றியதனால், வேறாகநின்ற வெள்ளியசந்திரன் செந்நிறம் மிக்கு(ச் சந்திரனுக்கு) மாறான ஒரு சூரியமண்டிலத்தைப் போன்றிருப்பதைக் காணீர்; (எ - று.)

இங்குச் சந்திரன் வெண்மைநிறம்மாறிச் சூரியமண்டலம் போல் செந்நிறத்தவனானானென்று கூறியது - பிறிதின்குணம்பெறலணியாம். கால் தோய் - இரத்தக்கால்படிந்த என்று கூறினுமாம். இனி, காறு ஓய்என்று பிரித்து, காறு - அளவு [அதாவது - பராக்கிரமம்] ஓய்ந்த என்று கூறினாருமுளர். கண்டகர் - முட்போலக் கொடியவர்; எனவே, பகைவரைக்காட்டும். பி - ம்:—[1]விண்டவர். [2]வேறோர். [3]வெண்மணி. [4]விம்ம. [5]ஒக்கும்வகை, ஒக்கும்மவை. ()

வேறு.

22. வானணைய மண்ணணைய [1]வளர்ந்தெழுந்த [2]பெருங்குருதி மகர வேலை, [3]தானணைய வுற்றெழும்பா ரவைதெளித்த புதுமழையின் [4]துள்ளி தாங்கி, மீனணைய நறும்[5]போதும் விரையருந்துஞ் சிறைவண்டு நிறம்[6]வே றெய்திக், [7]கானகமுங் கடிபொழிலு முறி [8]யீன்ற போன்றொளிர்வ காண்மின் காண்மின்.

(இ - ள்.) வான்நணையவும் மண் நணையவும் மிக்கு எழுந்த பேரிரத்தத்தினால் மகரம்வாழுமிடமான கடலும் தான் நணைந்திட

வும் (இங்ஙனம் பிணங்களினின்று)பொருந்தியெழுகின்ற தெளித்த புதுமழையின் துளியைப் பூமியினிடங்கள் தாங்குவதனால், நட்சத் திரம்போல் விளங்குகின்ற [வெள்ளிய] நறுமணமுள்ள மலர் களும் நறுமணமுள்ள தேனை நுகர்கின்ற சிறகையுடைய வண்டு களும் வேற்றுநிறத்தையடையாநிற்க, காட்டினிடமும் நறுமண முள்ள பொழில்களும் (தம்மீதுதெறித்த குருதியினால்) தளிரை யீன்றாற்போலத்தோன்றுமவற்றைக் காண்மின் காண்மின்;

நனைய - நனைய தெளித்த மழைத்துளியைப் பாரவைதாங்க, ஆங்குள்ள போதும் வண்டும் நிறம்வேறெய்தின என்க: **பிறிதின் குணம்பெறலணியும் தற்குறிப்பேற்றவணியும் சேர்ந்துவந்த சேர்வை யணி.** எய்தி=எய்த: எச்சத்திரிபு. பி - ம்:—[1]வலோங்கெழுந்த. [2]கொழுங். [3]தானனைவுற்றெழும்பறவைச்சிறை. [4]துளியதாகி. [5]போதின் விரையரும்புங்கறை. [6]வேறாகக். [7]கானினமுங், கானன முங். [8]ஈன்றதென. (3564)

23. வரைபொருத [1]மதயானைத் [2]துணைமருப்பும் [3]இளர்முத்து மணியும் வாரித், திரைபொருது [4]புறங்குவிப்பத் திறங்கொள்பணை மரமுருட்டிச் சிறைப்புள் ளார்ப்ப, நுரைக்[5]கொடியும் வெண் [6]குடையுஞ் [7]சாமரையு மெனச்சுமந்து [8]பிணத்தி னோன்மைக், கரை[9]பொருந்துங் கடன்மடுக்குங் கடுங்குருதிப் [10]பேராறு காண் மின் காண்மின்.

(இ - ள்.) மலையோடுபொருத மதயானையின் இரட்டைத் தந்தங்களும் விளங்குகின்ற முத்துக்களும் மணிகளும் என்ற இவற்றை வாரிக்கொண்டு அலைகள்மோதி ஒருபுறத்திற் குவிப்ப வும், கூறுபாட்டைக்கொண்ட கிளைகளையுடைய மரத்தை யுருட்டு தலாற் சிறைகளையுடைய பறவைகள் ஆரவாரிக்கவும், கொடி வெண்குடை சாமரை என்ற இவைகளை யெல்லாம் நுரையென்னு மாறு சுமந்துகொண்டு, பிணங்களினாலான வலிய கரை பொருந் தியதும் கடலிற் செல்வதுமாகிய கொடியகுருதிப்பேராற்றைக் காணுங்கள், காணுங்கள்; (எ - று.)

மணிமுதலியவற்றை ஒருபுறத்திற் குவித்தும், பெருங்கிளை களையுடைய மரங்களையுருட்டுதலால் அங்கு வாழுகின்ற பறவை களை ஆரவாரிக்கச் செய்தும், குடைமுதலியன நுரைபோல் தோன்ற அவற்றைச் சுமந்தும், பிணங்களாகிய வலியகரையைக் கொண்ட குருதிப்பேராறு கடல்நிரம்பப்பாயுமெனக் காட்டிய வாறு. பி - ம்:—[1]மதவானை. [2]வளை, வளர். [3]கிளை. [4]பிறங்குவிப்ப. [5]குடையும். [6]கொடியும். [7]சாமரமும். [8]பிணத்தினுண்மைக். [9]பொருத. [10]பேர்யாறு. (3565)

24. கைக்குன்றப் பெருங்கரைய நிருதர்[1]புயக் கற்செறிந்த [2]கதலிக் கானம், மொய்க்கின்ற பரித்[3]திரைய முரட் [4]கரிக்கைக் [5]கோண்மாவ முளரிக் கானின், [6]மெய்க்கின்ற வாண்முகத்த விழுங்

குடரின் பாசடைய நிணமேற் [7]சேற்ற, உய்க்கின்ற [8]வுதிரநிறக் களங்குளங்க ளுலப்பிறந்த [9]வுலையுங் காண்மின்.

(இ - ள்.) கையையுடைய மலைபோன்ற யானையாகிய பெருங் கரையைப் பெற்றனவும், நிருதருடைய புயங்களாகிய (திரள்) கல் செறிந்தனவும், கொடிகளின்தொகுதி நெருங்கிய குதிரைகளாகிய அலைகளையுடையனவும்,மாறுபடுகின்ற யானைக்கைகளாகிய முதலைகளைக் கொண்டனவும், தாமரைக்காடு போல மெய்யைப்படைத்த ஒள்ளியமுகத்தையுடையனவும் [ஒள்ளியமுகங்களாகிய தாமரைக் காட்டைப்பெற்றனவும்], விழுகின்ற குடராகிய பாசிலையையுடையனவும், நிணமாகிய சிறந்தசேற்றையுடையனவுமான (தன்னிற் பட்டோரை)உட்கொள்ளுகின்ற செந்நிறமுள்ள களமாகிய உதிரக் குளங்கள் அளவிறந்தன உதோ தோன்றுவனவற்றையும் காண்மின்; (எ - று.)—**முற்றுருவகவணி.** கோண்மா-முதலை. **பி-ம்:—**[1]பயக் காற்செறிந்த. [2]பதனங்காப்ப. [3]திரையும். [4]கரியின். [5]குரைமாவும். [6]நெய்க்கின்ற. [7]சேற்றில். [8]உதிரநீர்க்குளங்களுலப்பில. [9]காண்மின். [7]செற்ற எனப்படிப்பாருமுளர்'உய்க்கின்ற வுதிரநீர்க்களங்களுலப் பிலவிறந்த வுலகைக்காண்மின்' என்று ஒருபிரதியில் நான்காமடி.

25. நெடும்படைவாள் நாஞ்சி [1]லுழு நிணச்சேற்றி னுதிரநீர் நிறைந்த காப்பிற், [2]கடும்பகடுபடி [3]தோய்ந்த [4]கடும்பரம்பி னின மள்ளர் [5]பரந்த [6]கையிற்,படுங்கமல மலர் [7]நாறு முடிபரந்த பெருங் கிடக்கைப் [8]பரந்த பணிணைத், தடம்பணையி னறும்பழனந் தழுவி யதே யெனப் [9]பொலியுந் [10]தகையுங் காண்மின்.

(இ - ள்.) நெடியவாட்படையாகிய கலப்பையினால் உழுகின்ற நிணமாகியசேற்றிலே உதிரநீராகிய நிறைந்த நீர்க்கட்டினையும், விரைவுள்ள யானைகளாகிய எருமைக்கடாக்கள்படிந்து தோயப் பெற்றதாகி விரைவாகப்பரவுதலையுடைய இனமான வீரராகிய கடிய பரம்பு அடிக்குந் தொழிலினையுடைய கூட்டமான உழவர்கள் பரந்த (இரு) புறத்தினையும் (பெற்று), முளைத்த தாமரைமலரின் மணம் நாறுகின்ற தலைகளாகிய நாற்றுமுடிகள் பரந்துகிடந்த பெரிய வயல்களைக்கொண்ட நறியமருதநிலத்தின் தன்மையைத் தழுவியதெனப் பொலிகின்ற தன்மையையுங் காண்மின்; (எ - று.)

போர்க்களத்தை மருதநிலம்போலு மென **உருவகவணி**வகை யாற் கூறினார்: இந்த உருவகத்திற்கு, 'கடும்பகடு, கடும்பரம்பி னினமள்ளர், நாறுமுடி' என்ற இடங்களிலுள்ள **சிலேடையணி** அங்கமாய்நின்றது. கடும்பகடு ஆகியபகடு, கடும் பரம்பின் இன மள்ளராகிய கடும்பரம்பின் இனமள்ளர், நாறுகின்ற முடியாகிய நாற்றுமுடி என்க. கலப்பையும், உழுஞ்சேறும், நீர்தேக்குதலும், எருமைக்கடாக்கிடந்த பரம்படிக்குந் தொழிலைக்கொண்ட மள்ளர் பரந்த மருங்கும், நாறுமுடிபரந்த பெருங்கிடக்கையும், பண்ணை மகளிர் கூட்டமும் மருதநிலத்துக்காணப்படும்: வாட்படையும்,நிண மும், உதிரத்தேக்கும், கடாக்களிறு தோய்ந்த பரம்பினின மள்ளர் பரந்த மருங்கும், தாமரை மலர்நாறுமுடி பரந்தகிடக்கையும் இந்தப்

போர்க்களத்து உள்ளன என்க. பி - ம்:—[1]உழ. [2]படும். [3]கிடந்த. [4]கரும். [5]கலந்த. [6]கையுட். [7]நாற்று. [8]கரந்த. [9]பொலிந்த. [10]தன்மை.

26. வெளிதீர்த்த [1]வரைபுரையு மிடலரக்க ருடல்விழவும் வீரன் [2]வில்லின், [3]ஒளிதீர்த்த முழுநெடுநா ணுருமேறு பலபடவு முலகங் கீண்டு, நளிதீர்த்த [4]நாகபுரம் புக்கிழிந்த பகழி[5]வழி நதியி னோடிக், களிதீர்த்துப் புகமண்டுங் [6]கருங்குருதித் தடஞ்சுழிகள் காண்மின் காண்மின்.

(இ - ள்.) கட்டுத்தறியைப் போக்கிய யானையையொத்த வலிய அரக்கரின் உடல்கள் விழவும், மகாவீரனான ஸ்ரீராமனுடைய விளங்குகின்ற (காதுவரையில்) இழுக்கப்பெற்ற வில்லின் முழு நெடுநாணினால் பல இடியேறுபோன்ற ஓசை தோன்றவும், உலகத்தைக்கீண்டு நடுவிடத்துப் பிளவுபட்ட பாதாளலோகத்துப் போயிழிந்த (இராம)பாணங்களினாற் பெருகியதாய் நதிபோலோடிக் களிறுகளை இழுத்து நெருங்கச் செல்லுகின்ற மிக்க குருதிப்பெருக்கின் பெருஞ்சுழிகளைக் காண்மின்கள் காண்மின்கள்; (எ - று.)

இராமசரங்கள் தாம்புறப்படும்போது நாணினின்று பேரொலியைப் பரப்பிப் பிறகு அரக்கருடலைவீழ்த்து இவ்வுலகத்தைக்கீண்டு பாதாளத்திற் புகுமென்று, அப்பிரானது கணைகளின் தன்மை மூன்றடிகளிற் கூறப்பட்டது. அவ்வாறு சரங்கள் சேனைகளின் உடலைப்பிளந்து செல்லும்போது, அவ்வழியால்தோன்றிய இரத்தப்பெருக்கு நதிபோலவோடி யானைகளையும் தம்மிடத்து அகப்பட இழுத்துச்செல்லும்போது அந்த இரத்தநதியிற் பெருஞ்சுழிகள்தோன்றுவதைக் காட்டுகின்றன னென்க. வரை-உவமவாகுபெயர். வெளில்-கட்டுத்தறி. தடம்-நதி. தடஞ்சுழிகள்-பெருஞ்சுழிகளுமாம். நளில்-நடுவிடத்தில். மண்டப்புகும் எனமாறுக. பி-ம்:—[1]வரைபுரைவ மிடலரக்கருடல், பைபுரவிமிடலாட்களுடல். [2]வில்லிற்று. [3]ஒளிறீர்த்த முறநெடு. [4]நாகர். [5]தொறுநதியினோடி, வழிதொறும்போய். [6]கடுங்குருதி. (3568)

27. கைத்தலமுங் [1]காத்திரமுங் கருங்கழுத்து நெடும்புயமு முரமுங் கண்டித்து, [3]எய்த்திலபோய்த் திசைகள்தொறு மிருநிலத்தைக் [4]கிழித்திழிந்த தென்னி னல்லால், [5]மத்தகரி வயமாவின் வாணிருதர் [6]பெருங்கடலின் [7]மற்றிவ் வாளி, [8]தைத்துளதாய் நின்றதென வொன்றேயுங் காண்பரியதகையுங் காண்மின்.

(இ-ள்.) கையினிடமும் முன்னங்காலும் கரியகழுத்தும் நெடும்புயமும் உரமும் கண்டித்து (அவ்வளவிலும்) இளையாதனவாய்ப் போய்த் திக்குக்கள்தோறும் (சென்று) பெருநிலத்தைக் கிழித்துக்கொண்டு (அந்தஇராமசரம் பாதாளத்திலும்) இழிந்த தென்று சொன்னாற் சொல்லலாமேதவிர, மதம் பிடித்தயானைகளிலும் வெற்றி பொருந்திய குதிரைகளிலும், கொடிய நிருதராகிய பெருங்கடலிலும் இவ்வாளிகளுள் ஒன்றேனுங் தைத்ததாய் நின்றிட்டது என்று காணமுடியாத சிறப்பையுங் காணுங்கள்; (எ-று.)

இராமபாணம் ஊடுருவி யப்பாலுஞ் சென்றிடாமற் சேனைகளின் உடலிற் பொத்தியவண்ணமாகவே நின்றிட்டது ஒன்றுமில்லையென்பதை யூன்றிப்பாருங்க ளெனக்காட்டுகின்றன வென்க. காத்திரம் - யானையின் முன்னங்கால். கைத்தலம் - துதிக்கையின் நுனிப்பாகம். பி-ம்:—[1]காற்றரமும். [2]கடுங்***கண்டித்து, கழுத்து நெடும்புயமுரமுங்கடிதுபோக. [3]எத்திசைபோய்த். [4]குழித்திழிந்த. [5]மைத்தகளிற்றினமாவின், மைக்களிற்றின் வயமாவின். [6]பெருடலில். [7]தெரியில்வாளி, மற்றிண்வாளி. [8]தைத்தனவானின்றவென, தைத்துளவாய் நின்றதென. (3569)

வேறு.

28. குமுத நாறு [1]மதத்தன [2]கூற்றன
சமுத ரோடு [3]மடிந்தன [4]சார்தரும்
[5]திமிர மாவன்ன செய்கைய வித்திறம்
அமிர்தின் வந்தன வையிரு [6]கோடியால்.

(இ-ள்.) குமுதநாறும் மதத்தையுடையனவும், யமனையொத்தனவும், பாகரோடுமடிந்தனவும், சார்கின்ற கரும்பன்றிபோன்ற செய்கையையுடையனவுமான இப்படியுள்ள பத்துக்கோடியானைகள் (பாற்கடலில்தோன்றிய) அமிருதத்தோடு வந்தனவாம்; (எ - று.)

ஸம்மிதரென்ற வடசொல்-ஒத்தவரென்ற பொருளில் உள்ளது: அது-ஒத்தபாகரென்ற பொருளில் இங்கு வந்ததென்னலாம். இருளியென்றும் 'கருமா' என்றும் பன்றிக்குப் பெயரிருத்தலால், அதனை 'திமிரமா' என்றார். பெருந்தொகுதியாக விழுந்து கிடப்பதுபற்றி, யானைகளை 'திமிரமாவன்ன செய்கைய' என்றது. பி-ம்:—[1]முகத்தன. [2]மையன. [3]முடிந்தன. [4]தாள் தரும், சார்க்கரும். [5]திமிர்தமாலன்ன வின்னன, திமிதமாலன்னவின்னன. [6]கோடியே.

29. ஏறு நான்முகன் வேள்வி யெழுந்தன
ஊறு மாரியு [1]மோங்கலை யோதமும்
மாறு மாயினு மாமத [2]மாய்வரும்
ஆறு மாறில வாறிரு [3]கோடியால்.

(இ-ள்.) சுரந்துபெய்கின்ற மழையும் ஓங்கிய அலையையுடைய கடலும் நீர்மாறுமாயினும் மிக்கமதநீராய்வருகின்ற ஆறு மாறப்பெறுதனவான (இந்த) ஆறிரு [பன்னிரண்டு] கோடியானைகள்—பெருமைமிக்க பிரமதேவ னியற்றியவேள்வியினின்று எழுந்தன; (எ-று.) பி-ம்:—[1]ஓங்கலையே தக. [2]மாறல. [3]கோடியே. (3571)

30. உயிர் [1]வறந்து முதிரம் [2]வறந்துதம்
மயிர் [1]வறந்து மதமற வாதன

புயல வன்றிசைப் போர்மத வாணையின்
இயல்ப ரம்பரை [3]யேழிரு [4]கோடியால்.

(இ-ள்.) (இதோவுள்ள) ஏழிரு [பதினான்கு] கோடியானைகள்,—உயிர்வறந்திடினும் உடலிலுள்ள இரத்தம் வறந்திடினும் தமது மதமயக்கம் வறந்திடினும் மதம்மாத்திரம் நீங்காதனவாய், மேகத்திற்கு உரிய தலைவனான இந்திரனுடைய திக்கில் [கீழ்த்திசையில்] இருக்கும் போர்செய்யுந் தன்மையுள்ள மதங்கொண்ட (ஐராவதமென்ற)யானையின் பொருந்தியபரம்பரையை(ச் சேர்ந்தன);(எ-று.)

இந்தப் பதினாயிரங்கோடியானைகள் - ஐராவதகுலத்தில் தோன்றியவை யெனக் காட்டியவாறு. பி-ம்:—[1]மறந்து. [2]மறந்துதம், மறந்துக. [3]ஏழெழு. [4]கோடியே. (3572)

31. கொடாது நிற்றலிற் கொற்ற நெடுந்திசை
[1]எடாது நிற்பன நாட்ட மிமைப்பில
வடாது [2]திக்கின் மதவரை யின் [3]வழிக்
கடாமு கத்த முளரிக் கணக்கவால்.

(இ-ள்.) ('நீவிர் இதனைத் தாங்குங்கள்' என்று பிரமன் திசைப் பாரத்தைத் தாங்குந்தொழிலைக்) கொடாதுநிற்பதனால் வெற்றிபொருந்திய நெடிய திசைகளை(த் தாம்) தாங்காது நிற்பனவும் (தேவர்களைப்போலக்) கண்கள் இமைத்தலில்லாதனவுமாகி, வடக்குத்திக்கிற்குஉரிய (சார்வபௌமமென்னும் பேரைக் கொண்ட) யானையின் சந்ததியாகத்தோன்றிய மதநீர்ப்பெருக்கை முகத்திற்கொண்ட இவைகள் பதுமமென்றபெருந்தொகையின வாம்; (எ-று.)—திக்கசங்களைப்போலத் திசைகளைத் தாங்கவல்லன ஆயினும்,பிரமன் நியமியாத குறையால் திசையானைகளாக இவைகளிருக்கவில்லை யென்பது,முன்னிரண்டடிகளின் பொருள். பதுமம்-ஓர் பெருந்தொகை: கோடிகோடி யென்பர். பி-ம்:—[1]எடாது மிட்டன. [2]திக்கினிற்கைவரையின், [3]விழிக். (3573)

32. வான வர்க்கிறை வன் [1]திறை தந்தன
ஆன [2]வர்க்கமோ ராயிர கோடியும்
தான வர்க்கிறை வன்திறை தந்தன
[3]ஏன வர்க்கங் [4]கணக்கில விவ்வெலாம்.

(இ-ள்.) இவையெல்லாம்,-தேவர்கட்குத் தலைவனான தேவேந்திரன் கப்பமாகத் தந்தனவான களிற்றுவர்க்கம் ஓராயிர கோடியாம்; தானவர்க்குத் தலைவன் திறையாகத் தந்தனவான மற்றோர் ஆனைவர்க்கம்(இவையெல்லாம்) கணக்கில்லாதன;(எ-று.)—அந்தப் படுகளத்தில் ஓரிடத்துக் குவிந்துகிடப்பனவும் மற்றோரிடத்துக் குவிந்துகிடப்பனவுமான யானைப்பிணங்களை விபீடணன் 'இவ்வெலாம், இவ்வெலாம்' என்று சுட்டிக்காட்டுகின்றான். பி-ம்:—[1]இறைதந்தன, திறைதந்தவாறு, திறைதந்தவற்று. [2]வர்க்கமிவ், வர்க்கமது. [3]ஆனை. [4]கணக்கிலையாமரோ,கணக்கிலவீதெலாம். ( )

33. பாற்க டற்பண் டமிழ்தம் [1]பயந்தநாள்
ஆர்த்தெ ழுந்தன வாயிர மாயிரம்
மாற்க ணப்பரி யிங்கிவை [2]மாறுவை
மேற்கின் வேலை வருணனை வென்றவால்.

(இ - ள்.) முன்பு பாற்கடலில் அமிருதத்தை யுண்டாக்கிய நாளில், ஆரவாரித்துக்கொண்டெழுந்தனவும், ஆயிரம் ஆயிரங் கணக்கானவுமான பெரிய தொகுதியான குதிரைகளாகும், இங்கே (இராமசரங்களா லடிபட்டு விழுந்து கிடப்பனவாயுள்ள) இவை: மாறுக அதோ இருப்பவை,மேற்குக்கடலிலுள்ள வருணபகவானை வென்றுபெற்றவை; (எ - று.)—பி - ம்:—[1]எழுந்த. [2]மற்றுவை, மாறுசெய். (3575)

34. இருநி திக்கிழ வன்[1]னிழந் தேகின
[2]அரிய வப்பரி யாயிர மாயிரம்
விரி[3]சி னத்திகல் விஞ்சையர் [4]வேந்தனைப்
பொருது பற்றிய தாமரை போலுமால்.

(இ - ள்.), பெருநிதிக்குத் தலைவனான குபேரன் இழந்துவிட்டனவாய் அரியனவான அந்தக்குதிரைகள், ஆயிரமாயிரமாகும்: (அதோ இருப்பவை), விரிந்த சினத்தையும் பராக்கிரமத்தையுமுடைய விஞ்சையர்க்கரசனைப் பொருது கவர்ந்தவை, பதுமமென்னும் கணக்கினபோலும்; (எ - று.)—பி-ம்:—[1]இகழ்ந்தேகின. [2]வரவயப்பரி, அரியவயப்பரி, அரிவயப்பரி. [3]சினத்திவை. [4]வேந்தரைப். (3576)

35.—இவ்வாறு விபீடணன் காட்டுகையில் பின்னர் பார்த்துக்கொள்வோமென்று யாவரும் இராமனிடத்துச் செல்லத்தொடங்குதல்.

என்று காணினுங் காட்டினு மீ[1]திறைக்
[2]குன்று [3]காணினுங் [4]கோளில தாதலால்
நின்று காணுது நேமியி னுனுழைச்
சென்று காண்டுமென் றேகினர் செவ்வியோர்.

(இ - ள்.) என்று (விபீடணன் சொல்லாநிற்கையில்), நற்குணமுடைய வானரர், '(நாங்களே) கண்டாலும் (நீ காட்டிக்)கண்டாலும், இந்த இறந்த அரக்கசேனை, மலையரசனை இமயத்தினைக் கண்டாலும் காணமுடியுங் கொள்கையை யுடையதன்று: ஆதலால், சிலகாலம் பொறுத்துப் பார்த்துக்கொள்வோம்;(இப்போது) சக்கரப்படையேந்திய திருமாலினவதாரமான ஸ்ரீராமனிடத்திற்போய் (அவனைக்) காண்போம்' என்று (ஸ்ரீராமனுள்ள இடத்துக்குச்) சென்றார்கள்; (எ - று.)—என்று எனபதன்பின், விபீடணன் சொல்கையில் என வருவிக்க. இறைக்குன்று = குன்றுக்கிறை:மலையரசு: இமயமலை. பி - ம்:—[1]இரைக். [2]குன்றுங். [3]காணெனும். [4]கோது. (3577)

36.—யாவரும் இராமபிரானருகே அவன் போர்த்திறமையை வியந்து பெருமூச்சுக்கொண்டிருத்தல்.

ஆரி யற்றொழு [1]தாங்கவன் பாங்கரும்
போரி யற்கை நினைந்தெழு பொம்மலார்
பேரு யிர்ப்பொ டிருந்தனர் பின்புறு
காரி யத்தி னிலைமை கருதுவார்.

(இ - ள்.) (சென்றவர்), ஆரியனை [இராமனைத்]த் தொழுது அங்கே அவனுடைய பக்கத்தில் (அவனுடைய) அருமையான போர்த்திறமையினியல்பை நினைந்து எழுகின்ற வியப்பையுடைய வராய், பெருமூச்சுடனே யிருந்தவராகிப் பின்பு நடக்கும் காரியத் தின்நிலைமையைக் கருதுபவராயினர்; (எ - று.)

இந்தப் படலத்திற் கூறிய விஷயமும், அடுத்த இராவணன் களங்காண் படலத்திற் கூறிய சரிதையும் ஸ்ரீவால்மீகிராமாயணத் திற் காணப்பட்டில. 'பின்புறும் காரியத்தினிலைமை கழறுவாம்' என்பது பாடமாயின், கவிக்கூற்றாம். பி-ம்:—[1]ஆங்கரும். (3578)

வானரர் களங்காண்படலம் முற்றிற்று.

---

33 - ஆவது இராவணன் களங்காண்படலம்.

இராவணன் (மூலபலமுள்பட மடிந்த உண்மையைத் தெளி யும் பொருட்டு அச்சேனைகள் மடிந்துவீழ்ந்துகிடக்கும்)களத்தைக் காணுவதைக் கூறும் படலமென்பது பொருள்.

அமரர்கள் வருத்தமுறும்படி வானரர்களை ஓட்டி, இலக்கு மணனை மயன்கொடுத்த வேலால் வீட்டி, இலங்கையிற் பெரு மகிழ்ச்சியோடிருந்த இராவணன், போர்க்களத்துத் தனக்கு உத விய வீரர்க்கு விருந்தளிக்கும் விருப்பமுடையவனாகி வானநாட்ட வரை வருகெனக் கூவி, 'தேவலோகத்துப் போகத்தை இவ்வரக்க வீரர் நுகருமாறு தருக' எனப் பணிக்க, சுவர்க்கலோகத்து உணவு முதலியவற்றை அரக்கவீரர்க்கு வானநாட்டியர் நுகர்வித்துக் கொண்டிருக்கையில், அரக்கச்சேனை யாவு மிறந்ததைக் கண்ட தூதுவர் விரைந்து இராவணனருகில்வந்து பேரச்சத்துடனே அவன் காதில் மெல்லத்தெரிவிக்க, அதுகேட்ட இராவணன் சினத்துடனே அச்சமும் துன்பமும் தோன்றச் சற்றுநேரம் திகைத்து நின்று, பிறகு 'என்னினும் வலியராய்க் கடல்மணலி னும் பலரான அரக்கவீரர் மிச்சமின்றியிறந்தனர் என்றது பொய் போலும்' என்று அயிர்த்துக்கூற, மாலியவான், தூதுவர்கூறியது மெய்யேயாகுமென்பதற்குப் பலநியாயங்களை யெடுத்துக்காட்டி, 'உன்பொருட்டினால் உன்கிளைஞரெல்லாம் கேடு அடைந்தனராத

லால்,இப்போதாவது சிட்டர் தொழிலைக் கைக்கொள்வாய்'என்ன, இராவணன் சீறி 'நான் இலக்குமணனைக் கொன்றிட்டேனுதலால், இனி வானரரெல்லாம் அழுங்க, இராமனும் தன்னுயிர்ப் பொறையைத் தாங்கமாட்டாது விட்டிடுவான்: எப்படியும் வெற்றி என் வயத்ததே' என்று பேசிக்கொண்டிருக்கையில், அநுமான் கொணர்ந்த ஓஷதிமலையால் இலட்சுமணன் உயிர்த்தெழுந்ததைக் கண்கூடாகக்கண்ட தூதுவர் அங்குநின்று வந்து அச்செய்தியைத் தெரிவித்தனர். மூலபலம் மிச்சமில்லா தொழிந்திட்டதை இராவணன் நம்பவில்லையாதலால், அதனுண்மையைக் காணக் கோபுரத்தின்மீது ஏறி, அரக்கியரின் புலம்பலொலி செவிப்படப் போர்க்களத்து அலங்கோலங்களை பலவற்றையுங் கண்களாற் கண்டு,நெஞ்சம் புண்பட்டுக் கோபுரத்தினின்று இறங்கி அத்தாணிமண்டபத்தைச் சேர்ந்தனனென்பது. இப்படலத்துக் கூறப்படுகின்றது.

1.—இலங்கையூர்ச் சென்ற இராவணன் வெற்றி பெற்றதனால் மகிழ்ந்திருத்தல்.

அலக்க ணெய்தி யமர ரழிந்திட
உலக்க வானர வீரரை யோட்டியவ்
விலக்கு வன்றனை வீட்டி யிராவணன்
துலக்க மெய்தினன் தோமில் களிப்பினே.

(இ - ள்.) தேவர்கள் துன்பமடைந்து அழிந்திடுமாறு வானர வீரர்களை வலியழியும்படி துரத்தியும் அந்த இலக்குமணனைக் கொன்றும் குற்றமற்ற களிப்போடு இராவணன் இலங்கையில் விளக்கமுற்றிருந்தான்; (எ - று.)

கீழ் வேலேற்றபடலத்தில் இராவணன் இலங்கைக்கு ஏகினமையை 36-ஆஞ் செய்யுளிற் கூறிய கவி, இச்செய்யுளில் அவன் அங்கு மகிழ்ச்சியோடிருந்ததற்குக் காரணம்-குரக்குச்சேனையை ஓட்டியமையும்,இலக்குமணனை வீட்டியமையுமே: இவையே தேவர்கள் அலக்கணெய்துதற்குங் காரணமென்க. இச்செய்யுள் பலபிரதிகளிலில்லை: ஆகவே,பலபிரதிகளில் இரண்டாம் பாடலில் தான் படலம் தொடங்குகின்றது. (3579)

2.—தன்னிடத்து அன்போடு போரில்உதவியவர்க்கு விருந்தளிக்க இராவணன் விரும்புதல்.

பொருந்து [1]போர்ப்பெருங் கோலத்திற் போர்த்தொழில்
[2]வருந்தி னர்க்குத்த மன்பினின் [3]வந்தவர்க்கு
அருந்து தற்[4]கமை வாயின [5]வாக்குவான்
விருந்த மைக்க [6]மிகுகின்ற வேட்கையான்.

(இ - ள்.) தம்முடைய அன்பினால் வந்தவராகி மேற்பூண்ட பெருமை பெற்ற போர்க்கோலத்தோடு போர்த்தொழிலில் வருந்

தினவர்களுக்கு, உண்பதற்குஏற்றவைகளை யாக்கும்பொருட்டு (இராவணன்) விருந்தமைத்தற்கு மிகுகின்ற வேட்கையுடையவனானான்; (எ - று.)—பி - ம்:—[1]பொற்பெருங்கோயிலுட். [2]வருந்திநன் குற்ற. [3]வந்தவர். [4]அமைவாயுற. [5]வாக்கிநல். [6]அமைகின்ற.(3580)

3.—இராவணன் வான நாட்டாரை வருவித்து அவ்வுலகத்துப் போகத்தை ஈங்கு அமைக்க எனல்.

வான நாட்டை வருகென வல்விரைந்து
[1]ஏனை நாட்டவ ரோடும்வந் [2]தெய்தினர்
[3]ஆன நாட்டந்த போக [4]மமைத்தீர்மற்று
ஊன நாட்டி [5]னிழுத்தி ருயிரென்றான்.

(இ-ள்.) வானநாட்டவரை மிகவிரைந்து வருக என்று(இராவணன்) கூறுதலும், மற்றைநாட்டவராகிய தானவர்நாட்டிலுள்ளாரோடும் (அவ்வானவர்) வந்துசேர்ந்தார்: (அவரைநோக்கி, இராவணன்),—'அந்தநாட்டிலுள்ள அப்படிப்பட்ட [மிகச்சிறந்த] போகத்தை (இங்குள்ளவீரர்க்கு) அமைப்பீர்: மாறாகக் குறைவுசெய்தால் உயிரையிழப்பீர்' என்று கட்டளையிட்டான்; (எ - று.) ஓசைக்குச்சேர, அந்தபோகம் என இயல்பாயிற்று.—பி-ம்:-[1]ஏன. [2]எய்தலும். [3]மானநாட்டந்த, ஆனகாட்டத்த. [4]அமைந்த. [5]இழந்தீர். ()

4.—வானுலகத்து நறவுமுதலியன ஆங்கு வருதல்.

நறவு [1]மூனு நவையற நல்லன
பிறவு மாடையுஞ் சாந்தமும் பெய்ம்மலர்த்
[2]திறமு நானப் புனலொடு [3]சேக்கையும்
புறமு முள்ளும் நிறையப் [4]புகுந்தவால்.

(இ-ள்.) குற்றமற நல்லனவான கள்ளும் மாமிசமும் பிறஉண்பொருளும், ஆடையும் சந்தனமும் பெய்தமலர்வகைகளும் ஸ்நாநத்திற்குஉரிய நீரும் படுக்கையும் (அரண்மனையின்) புறமும் உள்ளும் நிறையப்புகுந்தன; (எ - று.)-நானப்புனல்-கஸ்தூரிகலக்கப்பெற்ற திரவவடிவமான வாசனை நீர்: இக்காலத்து 'அத்தர்' எனப்படுவது என்றலும் ஒன்று. பி - ம்:—[1]ஊனும். [2]திறவும். [3]செய்கையின். [4]புகுந்ததால். (3582)

5.—அரக்கவீரர்க்குச் சுகந்தத்தைலந்தேய்த்து நீராட்டல் முதலியன செய்யுமாறு வானவமகளிர் வருதல்.

நான [1]நெய்ந்நன் குரைத்து நறும்புனல்
ஆன [2]கோதற [3]வாட்டி யமுதொடும்
[4]பான மூட்டிச் சயனம் பரப்பவும்
[5]வான [6]நாடிய ரியாவரும் [7]வந்தரால்.

(இ - ள்.) வாசனைத்தைலத்தை நன்றாகத்தேய்த்து நறுமணமுள்ள புனலினால் பொருந்தியகுற்றம்நீங்க நீராட்டி,உண்டற்குரிய

பொருளுடனே பருகுதற்கு உரியவற்றையும் ஊட்டி, படுக்கையைப் பரப்பும்படி வானநாட்டு மகளிர்யாவரும் வந்தனர்; (எ-று.) -வந்தர் - வந்தாரென்பதன் விகாரம். சயனம்பரப்புதல் - இடக்கரடக்கல். நானம்-கத்தூரி. பி - ம்:—[1] நெய்யுரைப்பாரும். [2] தோதற. [3] அட்டி. [4] பானமுற்றுமுழுதும்பரப்பவும், பானமூட்டியடிசில் பரப்புவான். [5] மான. [6] நாட்டியர். [7] வந்தவால், வந்ததால். (3583)

6.—இதுவும் அடுத்த கவியும் - அரக்கவீரர் இன்பம் அனுபவித்தலைத் தெரிவிக்கும்.

பாடு வார்கள் பயில்[1] நடம் பாவகத்து
ஆடு வார்க ளமளியி [2] னின்புறக்
[3] கூடு வார்கண் முதலுங் குறைவறத்
[4] தேடி னாரெனப் பண்ணையிற் [5] சேர்ந்தவால்.

(இ - ள்.) (சிலதெய்வமகளிர்), பாடுவார்கள்: (சிலர், தாம்) பழகிய நடனத்தை அபிப்பிராயத்துடனே ஆடுவார்கள்; (சிலர்), படுக்கையில் இன்ப முண்டாகக் கூடுவார்கள்: முதற்பொருளும் குறைவறத்தேடினவர்க்குப்போல அம்மகளிர் கூட்டத்தால் (விருந்தினர்க்கு எல்லா வின்பங்களும்) பொருந்தின; (எ-று.)

முதற்பொருள் அழியாமல் இலாபம்பெற்றார் அப்பொருளால் தாம் விரும்பிய இன்பங்களை அனுபவிக்கவல்லராதல்போல, அவ்வரக்கவீரர் மிக்க இன்பங்களைப் பெறலாயின ரென்பதாம். முதலும் என்றஎச்சவும்மையால்,இலாபமும்என்பது பெறப்பட்டது. பி-ம்:- [1] நெடும். [2] அன்புறக். [3] கூடுவார் முதலியாருங்குறைவற, கூடுவார் கண்முதலகுறையற. [4] தேடினான்,தேடுவார். [5] சேர்ந்ததால். (3584)

7. **அரச ராதி யடியவ [1] ரந்தமா**
வரைசெய் மேனி யிராக்கதர் [2] வந்துளார்
[3] விரைவி னிந்திர போகம் [4] விளைவுறக்
[5] கரையி லாத பெருவளங் [6] கண்ணினார்.

(இ - ள்.) இராசகுலத்துப்பிறந்தார்முதலாக அடிமைசெய்வாரிறுதியாக, வந்துள்ளாரான மலையையொத்த உடல் படைத்த இராக்கதர், விரைவில் இந்திரபோகம் (தமக்கு) விளைந்ததனால், அளவிடமுடியாத அந்தப்பெரும்போகத்தை அனுபவித்தனர்; (எ-று.) பி-ம்:—[1] அந்தமால். [2] வந்தவால். [3] விரைசினிந்திரன் விரைசெயிந்திரன். [4] விளைதர, விழைதர. [5] கரைசெலாத. [6] கண்ணினான் என்றபாடத்துக்கு - கரைசெல்லாத அந்தப்பெருவளத்தை(ப் பாராட்டி யிராவணன்) கருதுபவனானானென்க. (3585)

8.—இதுவும் அடுத்த கவியும்-மூலபலம் முதலியன அழிந்தது கண்டதூதர் இராவணனிடம்வந்து அச்செய்தியைச் சொல்லத்தொடங்குவதைக்கூறும்.

இன்ன தன்மை [1] யமைத்த விராக்கதர்
மன்னன் மாடுவந் [2] தெய்தி வணங்கினார்

அன்ன [3]சேனை களப்பட்ட வாறெலாம்
துன்னு தூதர் செவியிடைச் சொல்லுவார்.

(இ - ள்) இவ்வாறான தன்மையையமைத்த இராக்கதரின் மன்னனான இராவணனுடைய அருகில் ஆலோசனைக்குரிய தூதர், வந்துசேர்ந்து வணங்கினராகி, அந்த அரக்கச்சேனைகள் போர்க்களத்திற்பட்ட வகையெல்லாம் (அவ்விராவணனுடைய) காதினிடம் [இரகசியமாகச்] சொல்லலானார்; (எ - று.) பி - ம்:— [1] அமைந்த. [2] ஏத்தி. [3] சேனைகள்பட்டதவ்வாறெல்லாம், சேனைகள் பட்டனவாறெல்லாம். (3586)

9. நடுங்கு கின்ற வுடலினர் நாவுலர்ந்து
ஒடுங்கு கின்ற வுயிர்ப்பின ருள்[1]ளழிந்து
இடுங்கு கின்ற விழியின [2]ரேங்கினர்
பிடுங்கு கின்ற [3]வுரையினர் பேசுவார்.

(இ - ள்.) நடுங்குகின்ற உடலினையுடையவரும், நாவறண்டு குறைகின்றமூச்சையுடையவரும், மனமழிதலால் இடுங்குகின்ற கண்விழிகளையுடையவரும், வலியவருகின்றசொற்களையுடையவருமாகி ஏக்கங்கொண்டு (அத்தூதுவர்) பேசலானார்கள்; (எ - று.)

இச்செய்யுள் - தூதுவர் செய்திசொல்லத்தொடங்கியபோது அத்தூதுவர்க்குநேர்ந்தநிலையைத்தெரிவிப்பது: கூறியது கூறலன்று. மனத்திலிருந்துகொண்டு வாய்மூலம் வெளிவர மறுக்கின்ற வார்த்தைகளை அத்தூதுவர் வலிந்துவெளிப்படுத்தலால் 'பிடுங்குகின்றவுரையினர்' என்றது. பி - ம்:— [1] இழிந்து, அலைந்து. [2] ஏங்கிமேல், ஏங்கின்மேற். [3] மொழியினர், உணர்வினர். (3587)

வேறு.

10.—இராமன்வில்லால் மூலபலம் முதலியன மாண்டமையைத் தூதுவர் தெரிவித்தல்.

[1] இன்றியார் விருந்திங் குண்பா ரிகன்முகத் திமையோர் [2]தந்த
வென்றியா யேவச் சென்ற வாயிர [3]வெள்ளச் சேனை
[4] நின்றுளார் [5]புறத்த தாக விராமன்கை [6]நிமிர்ந்த சாபம்
ஒன்றினால் [7]நான்கு மூன்று கடிகையி [8]னுலந்த தென்றார்.

(இ - ள்.) போர்முகத்து இமையோரால் தரப்பெற்றவெற்றியையுடையவனே! [தேவர்களைவென்றோனே!] (நீ) ஏவச்சென்ற ஆயிரமென்னுங்கணக்கினவான சேனை போர்க்களத்தினிடத்ததாக, இராமன்கையில் ஓங்கியவில்லொன்றினால் ஏழுநாழிகையில் அழிந்திட்டது! இங்குவிருந்துண்பவர் யாவரோ, (அவர்களே) நின்றுள்ளார் என்று (அந்தத்தூதர்) கூறினார்; (எ - று.)—புறத்தது - போர்க்களத்தினிடத்தது. பி - ம்:- [1] இன்றிரா. [2] ஆத்த. [3] வெள்ளஞ். [4] நின்றது. [5] புறத்தாராக [6] நெடிய. [7] இரண்டு. [8] உலந்ததென்றான், 'சென்றுளார்புறத்தராக விராமன்றன்றிரள்கைச்சாபம்' என்று சில பிரதிகளில் மூன்றுமடி காண்கின்றது. (3588)

11.—தூதுவர் மகிழ்ச்சியைக்கொண்டாடுவதற்கு உரிய காலம்அன்று எனல்.

வலிக் [1]கடன் வானு ளோரைக் கொண்டுநீ [2]வகுத்த போகம்
களிக்கட [3]னளிப்ப னென்று நிருதர்க்குக் [4]கருதி னாயேல்
பலிக்கட [5]னளிக்கற் பாலை யல்லதுன் குலத்தின் பாலோர்
ஒலிக்கட லுலகத் தில்லை யூ[7]ருளா ருளரே யுள்ளார்.

(இ - ள்.) நீ (உன்) வலிமையின் முறைமையால் வானுளோரைக் கொண்டு (தேவலோகத்துப்) பலவகையாகவுள்ள போகத்தை அரக்கர்க்கு மகிழ்ச்சியின் கடமையாகச்செய்வேனென்று கருதினையேல், (இப்போது அந்த வானுளோரைக் கொண்டுவகுத்த போகத்தை அங்ஙனம் இறந்தவர்க்குப் பலிக்கடனாகக் கொடுத்தற்கு உரியையல்லது) உன்குலத்தைச் சேர்ந்தோர்க்குக்கொடுக்க இயலாது: (ஏனெனில்),—உன்குலத்துச் சேர்ந்தவர் ஒலியையுடைய கடலாற்சூழப்பட்ட உலகத்தில்இல்லை: ஊரிலுள்ளவர்தான் உயிரோடு இருப்பவராகவுள்ளார் (என்றும் அத்தூதுவர் கூறினர்);

ஊரிலுள்ளார்தவிர, மற்றையரக்கரெல்லாம் மாண்டுவிட்டனராதலால், நீ விருந்திடவகுத்த போகம்அங்ஙனம் இறந்தோர்க்கு உத்தரகிரியைப் பிண்டம்போடுதற்கே உதவும்: இதுவே இப்போது செய்தற்குஉரியது என்றவாறு. பி-ம்:—[1]கடம். [2]வருத்தப்போகம், வகுத்த புன்கம். [3]அளிப்பதென்று, களிப்பானென்று. [4]கருதினையே. [5]அமைக்கார்வல்லை. [6]பாலர். [7]உளாருளராலுள்ளார், உளாரேயிங்குள்ளார். (3589)

12.—அதனைக்கேட்ட இராவணன் சினந்து திகைத்துநிற்றல்.

ஈட்டரு முவகை யீட்டி யிருந்தவ[1]னிசைத்த மாற்றம்
கேட்டலும் வெகுளி யோடு துணுக்கமு [2]மிழவும் [3]கிட்டி
ஊட் டரக் கனைய செங்கண் நெருப்புக வுயிர்ப்பு விங்கத்
தீட்டிய படிவமென்னத் தோற்றினன் திகைத்த நெஞ்சன்.

(இ - ள்.) (மற்றவர்களாற்) பெறமுடியாத மகிழ்ச்சியைப் பெற்றிருந்தவனான இராவணன், (தூதுவர்) சொன்ன வார்த்தையைக் கேட்டலும், சினத்துடனே அச்சமும்துன்பமும் பொருந்தப் பெற்று, செவ்வரக்கை யூட்டியதுபோன்ற செந்நிறக் கண்களினின்று நெருப்புச்சிந்தப் பெருமூச்சுமிக, திகைப்புக்கொண்ட நெஞ்சையுடையவனாய், எழுதிய சித்திரம்போலத் தோன்றினான்; (எ-று.)—பி-ம்:—[1]உரைத்த, இசைந்த. [2]இழிவுங். [3]கிட்ட. [4]அரக்குண்டவெங். (3590)

13.—தூதர்பேச்சை இராவணன் ஐயுற்றுக்கூறுதல்.

என்னினும் வலிய ரான விராக்கத ரியாண்டும் [1]வீயார்
உன்னினு முலப்பி லாதா ருவரியின் மணலி [2]னீள்வார்
பின்னொரு பெயருமின்றி [3]மாண்டன ரென்று சொன்ன
[4]இந்நிலை யிதுவோ பொய்ம்மைம [5]விளம்பினீர் [6]போனுமென்றான்.

(இ - ள்.) (மூலபலமும் அவற்றுடன் சென்றவருமான வீரர்) என்னினும் வலியரான இராக்கதர்: எங்கும் இறவார்: (மனத்தினால்) எண்ணுவோமென்றாலும் அளவிடமுடியாதவராகிக் கடல் மணலினும் மிக்கிருப்பவர்: (அவர்களில்) பின்னொருவருமின்றி மாண்டனரென்று பேசுகின்ற இந்த நிலைமையான இதுவோ பொய்ம்மையாகக் கூறினீர்போலுமென்று (இராவணன் தூதர் மொழியை நம்பாது ஐயுற்றுக்) கூறினான்; (எ-று.)—பி-ம்:—[1]யாரும். [2]மேலோர். [3]மாண்டிறப்பிறந்தான்செய்த, மான்றனர் பிறந்தோன்செய்த, மாண்டனரென்று பேசும். [4]வின்னிலை. [5]விளம்பினர், விளம்புதிர். [6]விரைவின். (3591)

14.—நான்குகவிகள் - இராவணன் சொல்லைக்கேட்ட மாலியவான், தூதுவர்மொழி தவறுயிராதென்று நிரூபித்துக் காட்டி, 'பெரியோர் செயலை மேற்கொள்க' என, இராவணன் சினந்ததைக் கூறும்.

கேட்டய [1]லிருந்த மாலி யீதொரு [2]கிழமைத் தாமோ
ஓட்டுறு தூதர் பொய்யே யுரைப்பரோ வுலகம் யாவும்
வீட்டுவ திமைப்பி னன்றே வீங்கெரி [3]விரிந்த வெல்லாம்
மாட்டுவ னொருவ னன்றே யிறுதியின் [4]மனத்தா லென்றான்.

(இ - ள்.) (அதனைக்) கேட்டு அருகிலேயிருந்த மாலியவான், '(மூலபலத்துடன் சென்ற அரக்கர்யாவரையும் விடாமல் இராமன் கொன்றானென்ற) இது (ஐயுறுவதற்குஉரிய) ஒருமுறைமையை யுடையதாமோ? [ஆகாது]; (நிகழ்ந்ததை) ஓடிவந்து கூறுதலுற்ற தூதுவர் பொய்யாகவே (ஒன்றை) யுரைப்பாரோ? விரிந்தஎல்லாப் பொருளையும் இறுதிக்காலத்தில் [யுகாந்தகாலத்தில்] (தன்) சங்கற்பத்தினால் அழிக்கக்கருதுகின்றவனான சங்காரமூர்த்தி தான் ஒருத்தனாக இருந்தல்லவா (உலகம்எல்லாவற்றையும்) வீங்கிய [மிக்க] நெருப்பைக்கொண்டு இமைப்பொழுதில் நன்றாக அழிப்பது' என்று கூறினான்; (எ-று.) மாட்டுவன் - மாளச்செய்பவன்: சங்காரமூர்த்தி.

சங்காரக்கடவுள் தானொருத்தனாகவே உலகத்துவிரிந்துள்ள எல்லாப்பொருள்களையும் உகாந்தத்தில் நெருப்பினால் சிறிதும் விடாமல் அழிக்கின்றானன்றோ! கடவுளே ஒருகாரியத்தைச் செய்யக்கருதினால் செய்யமுடியாததென்பதில்லை யாதலால், இராமன் ஆயிரம் வெள்ளத்த அரக்கச்சேனையையற வொழித்தானென்பது, பெரியதன்று: ஆகவே, தூதுவர் வார்த்தையை ஐயுறாதுநம்பலாமென்று மாலியவான் இராவணனைத் தெளிவித்தவாறு மூன்றாமடியில், இமைப்பின் நன்றே எனப் பிரிக்கப்பட்டது. பி-ம்:—[1]இருந்து [2]கிழ்மைத்தாமோ. [3]விரிந்ததென்ன. [4]மனத்தாலன்றே. (3592)

15. *அளப்பரு முலகம் யாவு [1]மளித்துக்காத் [2]தழிக்கின்றான் றன், உளப்[3]பெருந் தகைமை தன்னா லொருவனென் றுண்மை*

[4]வேதங், [5]இளப்பது [6]கேட்டு மன்றே [7]யரவின்மேற் கிடந்து மேமூன், முளைத்தபே ரிராம னென்ற வீடணன் மொழிபொய்த் தாமோ.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) தன்னுடைய மனத்தின் பெருந்தகுதியினால் [சங்கற்பத்தினால்] அளத்தற்கு அரிய உலகம் எல்லாவற்றையும் படைத்துக்காத்து அழிக்கின்றவன் ஒப்பற்றபரம்பொருள் என்று உண்மையாக வேதம்கூறுவது கேட்டிருக்கின்றோமன்றோ! (அப்பரம் பொருள் திருப்பாற்கடலில்) முற்காலத்து ஆதிசேஷனிற் கிடந்து (இங்குத்) தோன்றிய பெருமைபெற்ற ஸ்ரீராமன் என்று கூறிய (தத்துவஞானியான) விபீடணனுடையசொல் பொய்ம்மைப்பட்டதாகுமோ? (எ - று.)—பி - ம்:—[1]அமைத்துக். [2]அழிக்கின்றாரும். [3]பருந்தன்மை, பருந்தகைமை, பெருந்தன்மை. [4]என்று. [5]கிளப்பதும், கிளப்புறக். [6]கேட்டி. [7]அநந்தன்மேற்கிளந்து. (3593)

16. ஒன்றிடி [1]னதனை யுண்ணு [2]முலகத்தி னுயிர்க்கொன் றாத,
நின்றன வெல்லாம்[3]பெய்தா லுடனுங்கு நெருப்புங் காண்டும்,
குன்றொடு மரனும் [4]புல்லும் பல்லுயிர்க் [5]குழுவுங் கொல்லும்,
வன்றிறற் காற்றுங் காண்டும் வலிக்கொரு வரம்பு [6]முண்டோ.

(இ-ள்.) (உண்ணுதற்குஉரிய) ஒன்றை(த் தன்னுள்)இட்டால் அதனை உண்ணுவதான இவ்வுலகத்துப் பிராணிக்கு உண்ணப் பொருந்தாதனவாய் நின்றவற்றையெல்லாம் பெய்தாலும் (அவற்றையெல்லாமும்)உடனே விழுங்கவல்லதான நெருப்பையும் கண்டுள்ளோம்:குன்றொடு மரனையும் புல்லையும் பலவகைப்பிராணி வர்க்கங்களையும் கொல்லவல்ல வலியதிறலையுடைய காற்றையும் கண்டுள்ளோம்: வலிக்கு ஒருவரம்பும் உள்ளதோ? (எ-று.)

இவ்வுலகத்திலே ஜீவராசிகள் தாம் உண்ணுதற்குரிய பொருளையிட்டால் உண்ணும்: இவ்வியல்புக்குமாறாக எதையும் உண்ணும் நெருப்பையும், குன்று மரன் முதலியவற்றை யொழிக்க வல்ல காற்றையும் கண்டுள்ளோம்: ஆகவே,இன்ன இடத்து இந்த வலிமையுள்ள பொருள்தான் இருக்குமென்று ஓர்வரம்பு கட்ட முடியாது; இவ்வாறிருப்பதால், மனிதனும் அரக்கப்படைகளை யெல்லாம் வெல்லத் திறன் படைத்திருப்பானென்று தெளியலாமென்றவாறு: **வேற்றுப்பொருள்வைப்பணியோடு வந்த பிறிது மொழிதலணி**. பி - ம்:—[1]உலகை. [2]உலகத்தினுயிர்க்கொன்றாக, உலகத்துளுயிரொன்றோறுதி. [3]பொய்தானுடனுகு. [4]மானும். [5]குலமும். [6]உண்டாமோ. "ஒன்றிடினதனை யுண்ணுமுலகத்தைவிற கென்றோத" என்று சிலபிரதியில் முதலடி. (3594)

17. பட்டது முண்டே யுன்னை [1]யிந்திரச் செல்வம் பற்று,
விட்டது [2]மெய்ம்மை யைய [3]மீண்டொரு வினையு மில்லைக், கெட்ட
துன் பொருட்டினாலே நின்னுடைக் கேளி ரெல்லாஞ், சிட்டது
செய்தி யென்று [4]னதற்கவன் சீற்றஞ் செய்தான்.

(இ-ள்.) 'உன்னை இந்திரனுடைய செல்வம் பொருந்திய காலமும் உண்டு: (அது, இப்போது உன்னிடத்துப்)பற்று விட்டது என்பதும் மெய்ம்மை: ஐயனே! மீண்டு (செய்வதற்கு உரியது) ஒரு செயலும் இல்லை: உன் பொருட்டினால் உன்னுடையசுற்றமெல்லாம் கேடு அடைந்திட்டது: (ஆகையால்),சிட்டர்மேற்கொள்ளுவதாகிய அப்படிப்பட்ட செயலைச் செய்வாய்' என்றான்: அதற்கு அவ்விராவணன் கோபங்கொண்டான்; (எ - று.)

சிட்டு-சிட்டரின் தன்மை: சிட்டர்-ஶிஷ்டர்: நல்லொழுக்கமுடையவர். சிட்டதுசெய்தி என்றது-பிறர்மனையை நயத்தலை விட்டுச் சீதையை இராமனிடத்துக்கொடுத்து அவனைச் சரணமாக அடைவாயென்றவாறு. பி - ம்:—[1] இந்திரர், இந்திர. [2] மேன்மையையா, மெய்யேயையா. [3] மீட்டொருவினையம். [4] இராவணன். ( )

18.—இலக்குமணனைக் கொன்றேனாதலால், வெற்றி யென்னதே யென்று இராவணன் கூறுதல்.

இலக்குவன் தன்னை வேலா லெறிந்துயிர் கூற்றுக் கீந்தேன்
அலைக்கணிற் றலைவ ரெல்லா மழுந்தின ரதனைக் கண்டால்
உலக்கு[1]மா லிராமன் [2]பின்ன ருயிர்ப்பொறை [3]யுகவா னுற்ற
மலக்கமுண் [4]டாகி னாக வாகையென் வயத்த தென்றான்.

(இ - ள்.) 'இலக்குமணனை வேலினாலெறிந்து அவனுயிரை யமனுக்குக் கொடுத்திட்டேன்:(வானரத்) தலைவரெல்லாம்(இலக்குமணன் இறந்ததனால் தோன்றிய) வருத்தத்தில் அழுந்தியுள்ளார்: அதனைக் கண்டால்,பின்னே உயிர்ச்சுமையை உகவானாய் இராமன் உயிரொழிவான்; (மூலபலம் முதலியவற்றின் நாசத்தால்) நேர்ந்த துன்பம் (எனக்கு) உண்டானால் உண்டாகட்டும்; (எப்படியும்) வெற்றி என்வயத்தில்தான் இருக்கின்றது' என்றான்; (எ-று.) —பி-ம்:—[1] மெய். [2] பின்னே, பின்னை. [3] உதவுவான். [4] ஆகிலாத. ( )

19.—இலக்குமணன் உயிர்பெற்றமையைக் கண்ட தூதுவர் அப்போதுவந்து அதனைக் கூறுதல்.

ஆண்டது [1]கண்டு நின்ற [2]தூதுவ ரைய மெய்யே
[3]மீண்டதவ் வளவி னாவி மாருதி மருந்து [4]மெய்யில்
தீண்டவுந் [5]தாழ்த்த தில்லை யாருமச் செங்க ணானைப்
பூண்டனர் [6]தழுவிப் புக்கார் காணுதி போதி [7]யென்றார்.

(இ - ள்.) அப்போர்க்களத்தில் (இராவணனதுவேலாற்பட்ட இலக்குமணன் மருத்துமலையால் உயிர்மீண்ட) அதனைக் கண்டு நின்ற தூதுவர், (அப்போது இராவணனைக்கிட்டி), 'ஐயனே! மாருதிகொணர்ந்த ஔஷதி உடம்பிற்படவும் அந்த அளவில் (இலட்சுமணனுடைய) உயிர் மீண்டது: (சிறிதும்) தாமதிக்கவில்லை: மெய்யே: தலைவரெல்லாம் அந்தச்செந்தாமரைக்கண்ணனை [இலட்சுமணனை]க் கவிந்துகொண்டவராய், தழுவிப்புகுந்தனர்: (அதனைச் சென்று காண்பாய்) என்றார்; (எ-று.)

இராவணன் 'நான் இலக்குமனைக் கொன்றிட்டேனாதலால், வெற்றி என்னதே' என்று சொல்லிக்கொண்டிருக்கையில் போர்க்களத்து இலட்சுமணன் ஓஷதிமகிமையால் உயிர்பெற்றெழுந்ததைக் கண்கூடாகக்கண்ட வேறுசிலதூதுவர் வந்து அந்த இலக்குமணன் பிழைத்தெழுந்த செய்தியைக் கூறினரென்க. அரக்கர் சேனைவெள்ளம் மாண்டதைக் கூறிய தூதுவரே இலக்குமணன் பிழைத்தெழுந்தசெய்தியைக் கூறினரெனப் பொருள் கூறினருமுளர்: அது சிறவாது. தமதுபேச்சில் ஐயுறுதல்கூடுமென்று 'மெய்யே, காணுதிபோதி' என்றார். பி-ம்:—[1] கேட்டு. [2] தூதர்கள். [3] மீண்டதவ்விளவல். [4] மேனி. [5] தாழ்ந்தது. [6] மருந்துவெற்பைவீசினன்புக்கது, தழுவிப்புக்கார் போதுதிகாணின். [7] என்றான். (3597)

20.—ஆயிரம்வெள்ளத்ததான அரக்கச்சேனை யிறந்ததை ஐயுற்ற இராவணன் கோபுரத்தின்மீது ஏறி, அதனுண்மையைக் காணுதல்.

தேறில னாதலானே மறுகுறு சிந்தை [1]தேற
ஏறினன் கனகத் தாரைக் கோபுரத் தும்ப ரெய்தி
ஊறின சேனை வெள்ள [2]முலந்தபே ருண்மை யெல்லாம்
[3]காறின வுள்ள நோவக் [4]கண்களாற் றெரியக் கண்டான்.

(இ - ள்.) (அரக்கச்சேனைவெள்ளம் முழுவதும் அழிந்ததை) நம்பிலனாதலால் கலங்குகின்ற மனந்தெளியச் சுவர்ணமாலையாலலங்கரிக்கப்பட்ட கோபுரத்தின் மேலிடத்தை ஏறியடைந்து, மேன்மேற் சுரந்துவருந்தன்மையவான சேனைவெள்ளங்கள் ஒழிந்த மிக்கஉண்மையையெல்லாம் வருந்திய உள்ளம் பின்னும் வருந்தக் கண்களாலுணரப் பார்த்தான், (இராவணன்); (எ - று.)

நாகபாசத்தாலும் பிரமாத்திரத்தாலும் மாண்ட இலக்குமணன் உயிர்பெற்றெழுந்ததைக் கண்டிருத்தலால், இராவணனுக்கு இலக்குவனுயிர்பெற்றெழுந்ததில் ஐயமில்லை யாதலால், மூலபலம் முதலியவற்றின் நாசத்தைப் பற்றிய ஐயந்தீரவே கோபுரமேறிக் காணலாயினனென்க. பி-ம்:—[1] தேய. [2] உலந்தனபெருமை. [3] காறினருள்ளநோவக், காறினவுள்ளனாய். [4] கண்களிற். (3598)

21.-இராவணன் அரக்கியரின் அழுகையொலியைக் கேட்டல்.

[1]கொய்தலைப் பூசற் பட்டோர் குலத்தியர் [2]குவளை தோற்று
நெய்தலை வென்ற வாட்கண் குமுதத்தி [3]னீர்மை காட்டக்
கைதலை [4]வைத்த பூசல் [5]கடலொடு நிமிருங் காலைச்
செய்தலை யுற்ற வோசைச் செய[6]லதுஞ் செவியிற் கேட்டான்.

(இ - ள்.) போரில் தலைகொய்யப்பெற்று இறந்தவரின் [தலையறுப்புண்டவரின்] குலஸ்திரீகள் [மனைவியர்] குவளைதோற்க நெய்தல்மலரையும் வென்ற வாள்போன்ற (தமது) கண்கள் செவ்வாம்பலின் தன்மையைக்காட்ட [கண்கள் அழுவதனாற் சிவந்து தோன்ற]க் கையைத் தலையிலேவைத்த (வண்ணம் கதறுகின்ற)

அழுகை யாரவாரம் கடலொலியோடு மிக்குத்தோன்றியவளவில், (இங்ஙனம் அரக்கியர்) செய்தலைப் பொருந்திய புலம்பலோசை யாகிய அச்செயலையும் செவியிற்கேட்டான்(இராவணன்); (எ-று.)

மூலபலம் முதலியவற்றின் நாசம் கண்களால் நேரேகண்டு அறியப்பட்டதுபோல் அவ்வரக்கியர் பூசலும் அறியப்படும்படி செவியிற்கேட்டதென்றவாறு. கொய்தலைப் பூசற்பட்டோர்-பூசலில் தலைகொய்யப்பட்டோரென்க; கொய்-முதனிலைத்தொழிற் பெயர். கொய்தலைப் பூசற்பட்டோர் என்பதற்கு-உழவரென்று கூறினருமுளர். பி-ம்:—[1] கொய்தலம். [2] குவளையோடு. [3] நேர்மை. [4] உற்ற. [5] கடலொலிமிருங், கடலெலாமதிருங். [6] இது, அது. ()

22.—இதுமுதல் நான்குகவிகள்—பலவகைத் துக்ககரமான தோற்றங்களை இராவணன் காணுதலைக் கூறும்.

[1] எண்ணுநீர் [2] கடந்த யானைப் பெரும்பிண மேந்தி யாணர்
[3] மண்ணினீ ரளவுங் கல்லி நெடுமலை [4] பறித்து மண்டும்
[5] புண்ணினீ ராறும் பல்பேய் புதுப்புன லாடும் பொம்மல்
கண்ணினீ ராறு [6] மாறுக் கருங்கடன் மடுப்பக் கண்டான்.

(இ - ள்.) எண்ணுந் தன்மையைக் கடந்த யானையின் மிக்க பிணத்தைத் தாங்கிக்கொண்டு, பூமியினடியிலுள்ள நீரளவுந் தோண்டி நெடியமலையைப் பறித்து மிக்குச் செல்லுகின்ற புண்களிலிருந்து பெருகிய புதிய இரத்தநதிகளையும் (அந்தநதிப்) புதுப்புனலிலே மூழ்குகின்ற பலபேய்களின் கூட்டத்தையும் (தன்) கண்களிலிருந்து (வருத்தத்தினாற்) பெருகுகின்ற நீர்கள் மாறுமற் கருங்கடலிற்சேருமாறு (அவ்விராவணன்) கண்டான்; (எ - று.)

பட்டவரின் புண்களிலிருந்து குருதிநீர் ஆறுய்ப்பெருக, அவ்யாறுகளில் மூழ்கும் பேய்களின் தொகுதிகளைக் காணும்போது, இராவணனுடைய கண்களிலிருந்து துயரத்தினாற்கண்ணீர் ஆறுய்ப்பெருகலாயிற்றென்பதாம். பி-ம்:—[1] எண்ணினீர். [2] கடந்த வானைப். [3] மண்ணுநீர். [4] மறித்து. [5] புண்ணினீராறு, புண்ணுநீராறு. [6] நூறுய்க், மாறக். சிலபிரதிகளில் இச்செய்யுளை யடுத்து "குமிழி நீர்" (25) என்ற பாடல் உள்ளது. (3600)

23. *முற்றியற் சிலைவ லாளன் மொய்க்கணை துமிப்ப வாவி*
பெற்றியல் பெற்றி பெற்று மென்னவா ளரக்கர் யாக்கை
சிற்றியற் குறுங்கா லோரிக் குரல்கொளை யிசையாப் பல்பேய்
கற்றியல் பாணி கொட்டக் களிநடம் பயிலக் கண்டான்.

(இ - ள்.) சிறியதன்மையையும் குறியகாலையுமுடைய நரியின் குரல் பாட்டினிராகமாக (அமைய), பலபேய்கள் (தாம்) கற்றுப் பழகிய தாளத்தைக் கொட்டாநிற்க, 'நிரம்பியகுணத்தையுடையனாகி வில்வில்வல்லமையுள்ளவனாகிய ஸ்ரீராமனுடைய நெருங்கு தலையுடைய அம்புகள் (மிகுதியாகத்) துணிக்கப் பெற்றதனால் ஆவியைப்பெற்று இயன்றதனாலான நன்மையைப் பெற்றோம்

என்று கொடிய அரக்கரின் யாக்கைகள் களிப்போடு நடனஞ்செய்வதனைக் கண்டான்; (எ - று.)—இச்செய்யுள் பலபிரதிகளிலில்லை.

இராமசரத்தால் துணிப்புண்டு இறக்கநேர்ந்தது குறித்துக் கொண்டாடிய வண்ணம் கவந்தங்கள் ஓரிக்குரல் இசையாகப் பேய்கள் பாணிகொட்டக் கூத்தாடலாயினவென்க. பலபேரைக் கொன்றால்தான் கவந்தமெழுந்தாடு மென்ற நூற்கொள்கைபற்றி, 'மொய்க்களைதுமிப்ப ஆவிபெற்றியல்பெற்றி பெற்றும்' என்று கவந்தங்கள் கூறியன என்றலும் ஒன்று. (3601)

24. விண்களிற் சென்ற [1]வன்றோட் கணவரை யலகை வெய்ய
புண்களிற் கைகள் நீட்டிப் புது நிணங் [2]கவர்வ நோக்கி
மண்களிற் றொடர்ந்து வானிற் பிடித்து [3]வள் ளுகிரின் [4]மானக்
கண்களைச் [5]சூன்று நீக்கு மரக்கியர் [6]குழாமுங் கண்டான்.

(இ - ள்.) வானத்திற் சென்ற [ஓங்கிய] வலியதோள்களையுடைய (தம்முடைய) கணவரைப் பேய்கள் வெவ்வியபுண்களிலே கைகளை நீட்டிப் புது நிணங்களைக் கவர்வதைப்பார்த்து, மண்களில் தொடர்ந்துசென்று வானிலே (சென்ற அப்பேய்களைப்) பிடித்து (த்தமது) கூரிய நகங்களாற் பேரளவுள்ள (அவற்றின்)கண்களைத் தோண்டி நீக்குகின்ற அரக்கியர் குழாத்தையும் கண்டான்;(எ-று.)

பேய்கள் இறந்துகிடக்கின்ற தம்கணவரின் யாக்கைகளிலே புண்களின் வழியாக நிணத்தைக்கவர்வதுகண்ட அரக்கியர் சினந்து மண்ணிடங்களிலே அவற்றைப்பிடிக்குமாறு தொடர, அவை வானத்திற்செல்ல, அவ்விடங்களிலும் அப்பேய்களைப் பிடிக்கத் தொடர்ந்து சென்று பற்றியவராய் அவ்வரக்கியர், கண்களிருப்பது பற்றியே புண்ணின் வழியாகத் தம் கணவரின் நிணத்தைக் கவர்கின்றன இப்பேய்களென்று அவற்றின் கண்களைத் தோண்டலாயினரென்க. வானில் என்றவிடத்து 'வாளில்' என்று பாடமோதி-கோரக்காட்சியைக் காணநேர்ந்த தமதுகண்களைப்பற்றிக் கொண்டு வாளினாலும் (வாள்கிடைக்கப்பெறாதவர்) நகங்களினாலும் சூன்று நீக்கும் அரக்கியர்குழாத்தைக்கண்டான் என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1]வான். [2]கவரநோக்கி, கவரநோக்கும். [3]வள்ளுகிரான். [4]மாளக். [5]சூழ்ந்து. [6]குழுவுங். (3602)

25. குமிழிநீ ரோடுஞ் சோரிக் கனலொடுங் கொழிக்குங் [1]கண்ணன்
தமிழ்நெறி [2]வழக்க [3]மன்ன தனிச்சிலை [4]வழங்கச் சாய்ந்தார்
[5]அமிழ்பெருங் குருதி வெள்ள மாற்றுவாய் முகத்திற் றேக்கி
உமிழ்வதே யொக்கும் வேலை யோதம்வந் துடற்றக் கண்டான்.

(இ-ள்.) (கண்களிலிருந்து வருத்தத்தால்) குமிழ்த்தலையுடைய கண்ணீரோடு (சினத்தினால்) நெருப்புடன் சூருகியும் கொழிக்கின்ற கண்களையுடையவனை இராவணன்,-தமிழ்மொழியில் மரபாகவுள்ள வழக்குக்கள் போல [மிகப்பலவாக] ஒப்பற்ற (இராமனது)வில் (அம்புகளை) வழங்க இறந்த அரக்கரது அமிழ்த்

துகின்ற பெருங் குருதிப்பெருக்கை ஆற்றின் முகத்துவாரத்தினுற் குடித்து உமிழ்வதுபோலக் கடலின்வெள்ளம் வந்து அலைமோதுவதைக் கண்டான்; (எ - று.)

கடல்நீர் அலைமோதுகையில் முகத்துவாரவழியாகக் குடித்த குருதிநீர் வெளிப்படுவது, மிகுதியாகப்பருகிய குருதிநீரைக் கடல் உமிழ்வது போலுமென்றுர்: **தற்குறிப்பேற்றவணி.** மிகுதியாகப் பருகி விட்டால் அங்ஙன் பருகியதைச் சிலவேளையில் வாந்தியெடுக்குந்தன்மை இங்குக் கருதத்தக்கது. பி - ம்:—[1]கண்ணுற். [2]வழக்கின். [3]மன்னன். [4]வழக்கிற். [5]இமிழ். (3603)

26.—கோரக்காட்சிகளைக்கண்ட இராவணன் கோபுரத்தினின்று இழிதல்.

விண்பிளந் [1]தொல்க வார்த்த [2]வானரர் விக்கங் கண்டான்
மண்பிளந் தழுந்த வாடுங் கவந்தத்தின் வருக்கங் கண்டான்
கண்பிளந் தகல நோக்கும் வானவர் களிப்புங் கண்டான்
புண்பிளந் [3]தனைய நெஞ்சன் [4]கோபுரத் திழிந்து போந்தான்.

(இ - ள்.) வானம் பிளந்து அசையுமாறு ஆரவாரித்த வானரரின் மிகுதியைக் கண்டான்; பூமி பிளவுபட்டு (ப்பாதாளத்தில்) அழுந்தும்படி ஆடுகின்ற கவந்தத்தின் தொகுதியைக் கண்டான்; (இயல்பாகவே எப்போதும்விழித்திருக்குந் தமது) கண்களை (அச்சம் நீங்கி) விரித்து விரிவாகப்பார்க்குந் தேவர்களின் மகிழ்ச்சியையுங் கண்டான்: (இவற்றையெல்லாங் கண்டமையால்) புண் பிளவுபட்டிருந்தாற்போன்ற [வருத்தம்மிக்க] நெஞ்சத்தையுடைய இராவணன் கோபுரத்தினின்று கீழிழிந்துபோனுன்: (எ-று.)—பி-ம்:—[1]ஏங்கவார்க்கும். [2]வானர. [3]இனைய. [4]கோபுரமிழிந்துபோனுன். சிலபிரதியில், மூன்ருமடியில் 'கண்பிளந்தொக்கவார்க்கும் வான்முனி கண்ங்கள கண்டான்' என்று பாடம் காண்கின்றது. (3604)

27.—அரசாட்சிமண்டபத்தை இராவணனடைதல்.

நகைபிறக் கின்ற வாயன் நாக்கொடு கடைவாய் [1]நக்கப்
புகைபிறக் கின்ற மூக்கன் பொறிபிறக் கின்ற கண்ணன்
மிகைபிறக் கின்ற நெஞ்சன் வெஞ்சினத் தீமேல் வீங்கிச்
சிகை[2]பிறக் கின்ற சொல்ல னரசிய லிருக்கை சேர்ந்தான்.

(இ - ள்.) சினச்சிரிப்புத்தோன்றுகின்ற வாயையுடையவனும், (கோபந்தோன்ற) நாவைக்கொண்டு கடைவாயை நக்க(க் கோபாக்கினி)ப் புகை வெளிப்படுகின்ற மூக்கையுடையவனும், (சினத்தீப் பொங்குவதனுல்) நெருப்புப்பொறி வெளிப்படுகின்ற கண்களையுடையவனும், குற்றம்தோற்றுதற்கு இடனுன நெஞ்சையுடையவனும், கொடுங்கோபத்தீ மேலோங்கப்பெற்று அனற்கொழுந்து [உக்கிரம்]தோன்றுகின்ற சொல்லையுடையவனுமான இராவணன் அரசாட்சியைப்பற்றி ஆராயும் இடமாகிய அத்தாணிமண்டபத்தைச் சேர்ந்தான்; (எ - று.)—பி-ம்:—[1]நக்கிப். [2]சிறக்கின்ற.(3605)

இராவணன் களங்காண்படலம் முற்றிற்று.

34 - ஆவது இராவணன் தேரேறு படலம்

இராவணன் இராமபிரானோடுபொருமாறு தேரின்மீது ஏறியதைக் கூறும் படல மென்பது, பொருள்.

அத்தாணிமண்டபத்திலே சிங்காதனத்துச் சீற்றந்தோன்ற வீற்றிருந்த இராவணன் மகோதரனென்பவனை நோக்கி, 'எஞ்சிய சேனைகளைப்போர்க்கு வருமாறு முரசறைக' என்றுகட்டளையிட, இராவணன் சொற்படியே முரசு அறைந்ததனால் அரக்கச்சேனை திரள, பிறகு அவ்விராவணன் தானங்கள் புரிந்து போர்க்கோலம் பூண்டு தெய்விகத்தேரை வரச்சொல்லி அதனைத் தொழுதுபூசித்து மறையவர்க்குத் தானஞ்செய்து, தேரேறி, 'பகைவனையாவதுஒழிக்க வேண்டும், நானாவது ஒழியவேண்டும்: இரண்டிலொன்று இன்று நிகழவேணும்' என்று பிரதிஜ்ஞைசெய்து, வில்நாணெறிந்து மிகுந்த ஆர்ப்பாடத்துடனே போர்க்குப் புறப்பட்டானாக, அதனால் எல்லாவுலகத்தோரும் நடுங்க, வானரத்தலைவரெல்லாம் அஞ்சிக் குலைய, அப்போது விபீடணன் ஸ்ரீராமனுக்கு இராவணன் யுத்த சந்நத்தனாய் வந்தனனென்பதை அறிவித்தானென்பது, இப்படலத்துக் கூறப்படுகின்றது. அச்சிட்டபிரதிகளிலும் சிலஏட்டுப் பிரதிகளிலும் இந்த இராவணன்தேரேறுபடலம், அடுத்துள்ள இராமன் தேரேறுபடலம் என்ற இரண்டும் தனித்தனியாகக் காணப்படாமல் ஒன்றாக, **'தேரேறுபடலம்'** என்ற பெயரோடு காணப்படுகின்றன.

1.—இராவணன் 'எஞ்சியசேனைகளைத் திரண்டுவருமாறு முரசு அறைக' என்று மகோதரனிடம் கட்டளையிடுதல்.

பூதர மனைய மேனிப் புகைநிறப் புருவச் [1]செந்தீ
மோதர னென்று நாமத் தொருவனை [2]முறையி னோக்கி
[3]ஏதுள திறந்தி லாத [4]இலங்கையு ளிருந்த சேனை
[5]யாதையு மெழுகென் றனை [6]மணிமுர செற்று கென்றான்.

(இ-ள்.) மலைபோன்ற உடலையும் கண்களிற் செந்தீயையும் (அந்தத்தீயின்) புகைநிறமமைந்த புருவங்களையுமுடைய மகோதரனென்று பேர் பெற்ற ஒருவனை முறைமையிற் பார்த்து (இராவணன்), 'இறத்தலில்லாததான சேனை இலங்கையூருள் யாது உளதோ, இருந்த அச்சேனை யெல்லாமும் எழுக என்று அழகிய முரசத்தை ஆனைமீது ஏற்றி அடிப்பிக்க'எனக் கட்டளையிட்டான்;

கண்கள் தீப்போலத் தோன்ற அக்கண்களின்மீதுள்ள புருவங்கள் புகைபோலத்தோன்றுமென்க. இனி, 'எழுகென்றனை' என ஒருசொல்லாக்கொண்டு, இறந்தன போக எஞ்சிய சேனை போர்க்கு எழட்டும் என்று ஆலோசனை கூறிய அந்த மகோதரனை நோக்கியே இராவணன் முரசறைக எனக் கட்டளையிட்டானென்றலும் ஒன்று. பி-ம்:—[1]செங்கண், செங்கேழ். [2]முகத்து. [3]யாதுளது.

[4] இலங்கையின். [5] யாதினை யெழுகென்றனை. [6] மணிமுரசறைகவென்றான், அணிமுரசறைகெனென்றான். (3606)

2.—இலங்கையூரிலிருந்த சேனைகள் திரளுதல்.

எற்றின முரசி னோடு மேழ்ரு [1] நூறு கோடி
கொற்றவாள் நிருதர் [2] சேனை சூழ்இயது கொடித்திண்டேரும்
[3] சுற்றுறு துளைக்கை மாவுந் துரகமும் பிறவுந் தொக்க
வற்றிய வேலை யென்ன விலங்கையூர் [5] வறளிற் றாக.

(இ - ள்.) சாற்றிய முரசத்துடனே பதினான்குநூறுகோடி வெற்றி பொருந்திய கொடிய அரக்கரின் சேனை திரண்டது; கொடிகளையுடைய வலியதேரும் சூழ்ந்துகொள்ளுந்தன்மையதான துளையுள்ள கைகளையுடைய யானையும் குதிரையும் மற்றும்பதாதிகளும் வற்றிப்போன கடலென்னும்படி இலங்கையூர் வறுமையையுடையதாகத் தொக்கன; (எ-று.)-பி-ம்:-[1] கோடிகோடி. [2] தானை. [3] துற்றுறுதனைக். [5] வறளிற்றான. (3607)

3.—இராவணன் செய்த போர்ப்புறப்பாட்டுக் கொடை.

ஈசனை யிமையா முக்க [1] ணிறைவனை யிருமைக் கேற்ற
பூசனை [2] முறையிற் செய்து திருமறை புகன்ற தானம்
வீசின னியற்றி மற்றும் [3] வேட்டன வேட்டோர்க் கெல்லாம்
ஆசற நல்கி யொல்காப் போர்த்தொழிற் கமைவ தானான்.

(இ - ள்.) பரமைசுவரியமுடையவனும், இமைத்தலில்லாத முக்கண்களையுடையவனுமான சிவபெருமானை இம்மைமறுமைகளுக்கு ஏற்ற பூசனையை முறைமையாகச் செய்து, சிறந்தவேதங்களிற்கூறுகின்ற தானங்களை (ஏற்றபாத்திரங்களைப்பார்த்து) வீசிக்கொடுத்துப் பின்னும் விரும்பினவைகளை விரும்பினோர்க்கெல்லாம் குற்றமறக் கொடுத்துத் தளர்தலில்லாத போர் செய்யுந் தொழிற்குப் பொருந்தியவனானான்; (எ-று.)—பி-ம்:—[1] ஒருவனை. [2] முறையே. [3] வேட்டவர் வேட்டது. (3608)

வேறு.

4.—இராவணன் கொண்ட போர்க்கோலத்தைப் பதினான்குகவிகள் கூறும்.

அருவி யஞ்சனக் குன்றிடை யாயிர மருக்கர்
[1] உருவி னோடும்வந் துதித்தன ராமென [2] வொளிரக்
கருவி நான்முகன் வேள்வியிற் படைத்ததுங் கட்டிச்
செருவி னிந்திரன் தந்தபொற் கவசமுஞ் சேர்த்தான்.

(இ - ள்.) நீரருவிகளைக்கொண்ட கருநிறமலையிலே ஆயிரஞ்சூரியர் வேற்றுருவத்தோடும்வந்து உதித்தனரோ என்னும்படி ஒளிவிட, (உலக சிருஷ்டிக்குக்) காரணமான பிரமதேவன் வேள்வியிலே தோற்றுவித்ததும் போரில் (இந்திரசித்து தேவேந்திரனைக்) கட்டியதனால் அவ்விந்திரன்(தோற்ற அவ்வேளையில்)தந்ததுமான பொற்கவசத்தை(த் தன் உடம்பிற்) கட்டியணிந்துகொண்டான்;

அருவி - குன்றிற்கு இயற்கையடைமொழி. இராவணன் மார்பில் அணிந்த கவசம், ஆயிரஞ்சூரியர் ஒருருவெடுத்து ஒருமலையில் உதித்தனரென்னுமாறு விளங்கிற்றென்றார்; தற்குறிப்பேற்றவணி. நான்காமடியில் உம்மை-எதிரது தழுவியது. பி - ம்:—[1] உருமினோடும். [2] ஒளிரும். (3609)

5. வாள்வ லம்பட மந்தரஞ் [1] சூழ்ந்தமா சுணத்தின்
தாள்வ லந்தொளிர் தமனியக் கச்சொடுஞ் சார்த்திக்
கோள்[2]வ லந்தன [3] குவிந்தன வாமெனுங் கொள்கை
[4] மீள்வில் கிம்புரி [5] மணிக்கடி சூத்திரம் வீக்கி.

பதினான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) மந்தரமலையைச்சூழ்ந்த (வாசுகியென்னும்) பாம்புபோல முயற்சி கொண்டு (இடையிற்) சுற்றப்பட்டு ஒளிர்கின்ற பொன்னாலியன்ற கச்சிலே உடைவாளை வலப்புறமாகப் பொருந்தச் சேர்த்தி, (மேருமலையை) வலம் வருவனவான கிரகங்கள் குவிந்தனவாகுமென்ற கொள்கை மீளுதலில்லாமல் கிம்புரிபோன்ற வட்டவடிவம் (தன்னிடம்) அமைந்த இரத்தினங்களாலியன்ற கடிசூத்திரத்தைக் கட்டி,—(எ - று.)—இது முதல் ஒவ்வொருபாடலிலுமுள்ள வினையெச்சங்கள் அடுக்கிப் பதினெட்டாங்கவியில் முடியும்: ஆதலால் அங்கு முடிவு காட்டப்படும்.

இதனால், பொற்கச்சையும் உடைவாளையும் இரத்தினக் கடிசூத்திரத்தையும் இடையிற்கட்டியமை கூறப்படுகின்றது. இராவணன் இடையைச் சூழ்ந்த பொற்கச்சு மந்தரஞ்சூழ்ந்த மாசுணம் போன்றிருக்க, அப்பொற்கச்சிலே உடைவாளை வலப்புறமாகச் சேர்த்தியமை முன்னிரண்டடிகளிற் கூறப்பட்டது. பின்னிரண்டடிகளில், அரையைச்சுற்றிக் கட்டிய இரத்தினங்களாலியன்ற அரைநாண்-மேருமலையைச் சூழக் கோள்கள் தொக்கிருந்தன போலுமென்றார்; தற்குறிப்பேற்றவணி. கிம்புரி - தந்தப்பூண்: இலக்கணையால் வட்டவடிவமென்ற பொருளது. ஈற்றடியிற் கூறிய மணிக்கடிசூத்திரம் உடையின்மேல் தரிப்பதாகும். வலம்பட -வெற்றி யுண்டாக எனினுமாம். பி - ம்:—[1] சுழன்ற, அணைந்த. [2] வளர்ந்தன. [3] குருந்துளவாயன, குவிந்துளவாயன்ன. [4] மீள்விளங்கிய. [5] மணக். (3610)

6. மறை[1]வி ரித்தென்ன [2] வாடுறு மானமாக் கலுழன்
சிறை[3]வி ரித்தென்ன கொய்சக மருங்குறச் சேர்த்தி
முறை[3]வி ரித்தன்ன முறுக்கிய கோசிக [4] மருங்கில்
பிறை[3]வி ரித்தன்ன வெள்ளெயிற் [5] றரவமும் பிணித்து.

(இ - ள்.) வேதங்களை விரித்தாற்போல ஆடுதல்பொருந்திய பெருமைபெற்ற பெரியகருடபகவானது சிறையை விரித்தாற்போல[விரித்த சிறைபோல]க்கொய்சகத்தை(ஆடையாகவுடுத்திய கோசிகத்தின்) இடத்திலே பொருந்தச்சேர்த்து, முறுக்கமைந்த வெண்பட்டாடையை முறையேவிரித்தாற்போல (அணிந்த) இடை

யிலே பிறையை வெளிவிட்டாற்போல் தோன்றுகின்ற வெள்ளிய கோரப்பற்களையுடைய அரவத்தையும் கட்டி;—(எ-று.)

இதனால்,முறுக்கமைந்த வெண்பட்டாடையை முன்னேகொய்சகமமைய வைத்து விரித்துஉடுத்து, அந்தஆடை அவிழாதபடி வெள்ளெயிற்றரவத்தாற் பிணித்தமை கூறப்படுகின்றது. ஆடுறு சிறைஎன்க. பி-ம்:—[1]விரித்தன்ன, விரித்தென, விரித்தன்ன. [2]மாடுறு, வாவுறு. [3]விரித்தென்ன, விரிந்தன, விரிந்தன்ன. [4]முறையே, முறையில். [5]அரிமுகம். (3611)

7. மழைக்[1]கு லத்தொடு [2]வானுரு மேறெலாம் வாரி
[3]அழைத்தெ டுத்தன வனையவா ளுடைமணி யார்த்து
முழைக்கி டந்த[4]வல் லரியின [5]முழங்குவ போல்வ
தழைக்கு [6]மின்னொலிப் பொன்மலர்ச் சதங்கையுஞ் சாத்தி.

(இ-ள்.) மேகக்கூட்டத்தினிடத்து இருக்கின்ற சிறந்த பேரிடியிற்றோன்றும் மின்னல்களையெல்லாம் வரவழைத்து வாரியெடுத்தன போன்ற ஒளிகளையுடைய மணிகள் பொருந்தப்பெற்று, குகையிற்கிடந்த வலிய சிங்கங்களின் தொகுதி முழங்குபவற்றைப் போல்வனவாய்த் தழைக்கின்ற [கம்பீரமான] இடியொலியைக் கொண்ட அழகியமலரின் வடிவையுடைய சதங்கையென்னும் அணியையும் (பாதங்களில்) அணிந்து,—(எ-று.)

மின்னல்கள்போன்று பேரொளிவாய்ந்த அரதனங்களை இழைத்து மலர்களின் வடிவாக அமைந்த சதங்கையென்னும் அணியைமுழையிலுள்ளசிங்கவினங்களின் கர்ச்சனைபோன்று கம்பீரமான இன்னொலியுண்டாகப் பாதங்களில் அணிந்தமையை இதனாற் கூறினார். ஆர்த்துத்தழைக்கும் இடியொலிச்சதங்கையென்க. மின்-இடி. இன்னொலியென எடுப்பாருமுளர். பி-ம்:—[1]சலத்தொடும். [2]வானவல்லேறலாம். [3]இழைத்தொடுத்தன வனையவளுடைய, இழைத்தெடுத்தனவனைவாளிடை. [4]பல்லரி. [5]முழங்கு போரார்ப்பிற்றழைக்கும், முழங்குவபோல்வந்தழைக்கும். [6]மின்னொளிப்பொன்மலர்ச், இன்னொலிப்பொன்மலைச். (3612)

8. உரு[1]மி டித்தபோ தரவுறு மறுக்கம்வா னுலகின்
இரு[2]நி லத்திடை யெவ்வுல கத்திடை யாரும்
புரித ரப்படும் பொலங்கழ [3]லிலங்குறப் பூட்டிச்
சரியு டைச்சுடர் [4]சாய்நலஞ் சார்வுறச் சாத்தி.

(இ-ள்) இடியிடித்தபோது அரவு அடைகின்ற கலக்கத்தை வானுலகத்திலும் பெரிய (இந்தப்) பூமியிலும் எவ்வுலகத்திலும் யாவரும் அடையுமாறு ஒலிக்கின்ற பொன்னாலியன்ற கழலை விளக்கமுண்டாகப் பூட்டிச் சரிந்த உடையில் சுடர் காய்தலினாலான அழகுண்டாகச் சாத்தி,—(எ-று.)—கழலின்சுடர்உடுத்த ஆடையில் வீசுதலால், 'பொலங்கழல்...சரியுடைச்சுடர்சாய் நலஞ் சார்வுறச்சாத்தி' என்றது. புரிதர-அடைய.பி-ம்:—[1]இடித்துழியர

வெணக்கரக்கமாவுலகின், இடித்தபோதயர்வுறு மறுக்கம்வானுலகின். [2]நிலத்தினில். [3]அலங்குறப். [4]சாய்வலம், சாயலுஞ். (3613)

9. நாலஞ் சாகிய கரங்க ளினனந்தலை யனந்தன்
ஆலஞ் சார்மிடற் றருங்கறை கிடந்தென [1]விலங்கும்
[2]கோலஞ் சார்நெடுங் கோதையும் புட்டிலுங் கட்டித்
[3]தாலஞ் சார்ந்த [4]மா சுணமெனக் கங்கணந் தழுவ.

(இ - ள்.) (நீண்ட) நாக்குச்சேர்ந்த பாம்புபோலத்தோன்றுங் கங்கணத்தை(க்கைகள்) தழுவிநிற்கையில்,—இருபதாகியகைகளில் அகன்ற தலைகளுள்ள அனந்தனுடைய விஷஞ்சார்ந்த கழுத்தினின்று (போக்குதற்கு) அரிய கறை கிடந்தாற்போல விளங்குகின்ற வடிவமைந்த நெடிய முன்கைத்தோற்கட்டும் விரற்புட்டிலும் என்பவைகளைக் கட்டி,—(எ - று.)—விரற்புட்டிலும் முன்கைத்தோற்கட்டும் கிடப்பது அனந்தன்கறைகிடப்பதுபோலும். தாலம் = தாலு: நாக்கு: அம் - சாரியை. நாக்கை நீட்டுதல் பாம்பிற்கு இயல்பாதலால், 'தாலஞ்சார்ந்தமாசுணம்' எனப்பட்டது. பி - ம்:—[1]இலங்கு. [2]கோலஞ்சா. [3]சாலம். [4]மாதனமென. (3614)

10. கடல்க டைந்தமால் வரையினைச் சுற்றிய கயிற்றின்
[1]அடல்க டந்ததோ ளலங்குபோர் வலயங்க ளிலங்க
உடல்க டைந்தநா ளொளியவ [2]னுதிர்ந்தபொற் கதிரின்
சுடர்[3]த யங்குறக் குண்டலஞ் [4]செவியிடைத் [5]தூக்கி.

(இ-ள்.) கடலைக்கடைந்த பெரிய (மந்தர) மலையினைச் சுற்றிய (வாசுகியென்ற) கடைகயிறுபோல வலிமையைக்கடந்த [வலியோரையெல்லாம் வென்ற]தோளில் அசைகின்ற போர்வலயங்கள் விளங்குகையில், உடலை(த்துவஷ்டாவென்பவன் சாணையிலிட்டு)க் கடைச்சல்பிடித்த காலத்திற் சூரியன் உதிர்த்த பொன் கதிரின் சுடர்விளங்குமாறு குண்டலங்களைச் செவியிடையணிந்து,—(எ - று.)

இதனால், போர்வலயங்களைப் புயங்களிலணிந்தபின் செவிக்குக் குண்டலமும் அணிந்தமைகூறப்படுகின்றது. த்வஷ்டாவின் புத்திரியான ஸம்ஜ்ஞாதேவி தன் கணவனை சூரியனுடைய ஒளியைத் தாங்கமுடியாமல் தன் சாயையைத் தேவியாக நிருமித்துத் தந்தையின் வீட்டிற்குச் சென்றிட, பிறகு பலகாலஞ்சென்றபின் அவளது தந்தையின் வேண்டுகோட்கு ஏற்ப அச்சூரியன், தன் ஒளி குறையுமாறு சாணைபிடிக்க ஒருப்பட்டனனென்பது, புராண வரலாறு. பி - ம்:—[1]அடைகிடந்த. [2]உதித்தபொற்கதிற். [3]தயங்குறு. [4]செவிதொறுங். [5]தாங்க. (3615)

11. உதயக் [1]குன்றத்தோ டொத்தநி றுலாவுறு கதிரின்
[2]துதையுங் குங்குமத் தோளொடு தோளிடைத் தொடரப்
புதையி ருட்பகைக் குண்டல மனையவை பொலியச்
சிதையில் திங்களு மீனும்போன் [3]முத்தினந் திகழ.

(இ-ள்.) உதயபருவதத்திலே பொருந்தி அந்தமலையில் உலாவுறுகின்ற சூரியகிரணம்போல நெருங்கிய குங்குமச்சேற்றை

யணிந்த தோளுடனே (கூடிஅத்) தோள்களினிடத்து நெருங்கிய இருட்குப் பகையான சூரியர்போன்ற அப்படிப்பட்ட குண்டலங்கள் தொடர்ச்சியுறப்பொலிகையில் குறைதலில்லாத சந்திரனும் நட்சத்திரங்களும்போல் முத்துக்களின் கூட்டம் திகழவும்,-(எ-று.)

இதனால், இழ்க்கவியிலே அணிந்ததாகக்கூறப்படும் குண்டலம் குங்குமச் சேறணிந்த தோள்களின்மீது படும்படி யிருத்தலும், தோளையடுத்துக் கழுத்தில் முத்துவடம் அணிந்தமையுங் கூறப்பட்டன. பி-ம்:—[1]குன்றத்தொடக்கத்தின், குன்றத்தொடோதத்தின். [2]துதையக். [3]முகத்தினம். (3616)

12. வேலை வாய்வந்து வெய்யவ ரனைவரும் [1]விடியுங்
காலை யுற்றன ராமெனக் கதிர்க்குலங் [2]காலும்
மாலை பத்தின்மேன் [3]மதியமுன் னுளிடைப் பலவாய்
[4]ஏல முற்றிய [5]வளையமுத் தக்குடை யிமைப்ப.

(இ - ள்.) கடலினிடத்துச் சூரியரனைவரும் விடியுங்காலையில் வந்து பொருந்தினராமெனக் கிரணங்களைக்காலுகின்ற முடிவரிசைப் பத்தின்மேல் சந்திரன் முன்னுளினிற் பலவானவடிவம் பொருந்த முற்றியதற்கு ஒப்ப முத்துக்குடை விளங்கவும்,-(எ-று.)

இதனால், முடிமாலைகளும் அவற்றின்மீது வெண்குடையும் விளங்குதல் வருணிக்கப்படுகின்றது. முடிமாலை-பத்துச்சிரசுகளிலுமணிந்த பத்தாகவுள்ள கிரீடத்தொகுதி. சந்திரன் ஒருவடிவாக இராமல் பலவடிவாக இருத்தலைக் கொள்ளுதலால், 'இப்போது வெண்குடை வடிவத்தைக் கொண்டதோ?' என்னுமாறு அந்த வெண்கொற்றக் குடை தோன்றிற்றென்க. இனி, பத்துச்சிரசின் மீது பத்துக்குடைகள் பிடிக்கப்படுகின்றனவற்றின் வருணனை என்பாருமுளர். பி-ம்:—[1]வெய்ய,மடியும். [2]சாலும். [3]மதியமு னாளிடைப்பலவாம். [4]மூலை, மூலம். [5]முத்தினத்திரள்குடைமொய்ப்ப, முத்தவெண்குடைகணின்றிமைப்ப. (3617)

13. படுத்த பல்[1]வளக் குன்றினின் முழையன்ன பகுவாய்
வகுத்த வான்கடைக் [2]கடைதொறும் வளையெயிற் றீட்டம்
மிகுத்த நீலவான் மேகஞ்சூழ் விசும்பிடைத் [3]தசும்பூடு
உகுத்த செக்கரிற் பிறைக்குல முளைத்தன [4]வொக்க.

(இ - ள்.) பகுத்துக்கூறப்படுகின்ற பல்வளங்களையுடைய குன்றிலே குகையையொத்த பிளவுபட்டவாயிலே வகுக்கப்பெற்ற பெரிய கடைவாய்தோறும் கடைவாய்தோறும் வளைந்த பற்களின் கூட்டம், மிகுதியாகவுள்ள நீலநிறமுள்ள பெரியமேகஞ்சூழ்ந்த ஆகாயத்தில் பாலிகைப்பாத்திரங்களை ஊடேயுகுத்தாற்போன்ற செவ்வானத்திலே (தானியமுளையென்னத்தக்க) பிறைக்குலம் முளைத்தவற்றை யொத்திருக்கவும்,—(எ-று.)

கருநிறமுள்ள இராவணனது செந்நிறக்கடைவாயிலே வெண்ணிறக் கோரப்பற்கள் தோன்றுவதை வருணித்தவாறு: உருவகத்

தைத் தன்னுட் கொண்ட தன்மைத்தற்குறிப்பேற்றவணி. திட்டுத் திட்டான செக்கர்-பாலிகையிடும்பாத்திரம்போலுமென்க. தசும்பு-கோபுரவிமானத்து உச்சிச்சிகரமுமாம். பி - ம்:—[1]கலைக், வளங். [2]திசை. [3]தசும்போடு. [4]ஒத்த. (3618)

14. ஒத்த தன்மையி [1]னொளிர்வன தாளத்தி [2]னொக்கத்
தத்து இன்றன வீரபட் டத்தொகை [3]தயங்க
முத்த [4]வோடையின் முரட்டிசை [5]முழுமத [6]யானை
பத்து நெற்றியுஞ் [7]சுற்றிய [8]பேரெழில் படைக்க.

(இ - ள்.) ஏற்பட்டுள்ளதன்மையோடு விளங்குகின்றனவான முத்துக்களையொப்ப ஒளிவீசுவனவான வீரபட்டத்தொகை விளங்குவதனால், முத்தினாலியன்ற நெற்றிப்பட்டத்தையுடைய மாறுபடுந் தன்மைகொண்ட நிரம்பிய மதத்தோடுகூடிய திக்கசங்களின் நெற்றி சூழ்ந்த பேரெழிலைப் பத்துநெற்றியும் படைக்கவும்,—(எ - று.)

இதனால், இராவணன் நெற்றியில் வீரபட்டம்கட்டியதைக் கூறுகின்றார். திக்கசங்களின்நெற்றியில் முத்துப்பட்டமணிந்தாற்போல இராவணனுடைய பத்துநெற்றிகளில் வீரபட்டம் கட்டப்பெற்றுள்ளதென்க; உவமையணி. மதயானை நெற்றிசுற்றிய ஓடையின் பேரெழிலைப் பத்துநெற்றியும்படைக்க என்று, நெற்றி யென்பதைப் பதவுரையில் இருமுறைகூறிக்கொள்க. பி - ம்:—[1]ஒளியவனுதயத்துள். [2]ஓதம். [3]தகைந்த, தகைந்து. [4]ஓடைய. [5]மும்மத. [6]கரிபோல். [7]சந்திரன். [8]படரெழில், போலெழில். (3619)

15. புலவி மங்கையர் பூஞ்சிலம் பரற்றடி போக்கித்
[1]தலைமை [2]கண்ணினர்த் தாழ்கிலா மணிமுடித் தலங்கள்
உலக [3]மொன்றினை விளக்குறுங் [4]கதிரினை யோட்டி
[5]அலகி லெவ்வுல கத்தினும் வயங்கிரு ளகற்ற.

(இ - ள்.) புலத்தலைக்கொண்ட மங்கையரின் அழகிய சிலம்புகள் ஒலிக்கின்ற அடியைத் தவிர்த்துத் தலைமையைக்கருதுகின்றவர்களை வணங்காத இரத்தினமிழைத்துச்செய்யப்பட்ட முடித்தலங்கள், உலகமொன்றை விளங்கச்செய்யுஞ் சூரியனை(த் தன்னொளிக்கு முன்னே) புறங்கொடுத்தோடச்செய்து கணக்கில்லாத உலகினிடமெல்லாமும் விளங்குகின்ற இருளையகற்றவும்,—

இராவணன், புலவியைக்கொண்ட மகளிரை அந்தப்புலவியைப்போக்க வணங்குவதன்றி 'நாம் தலைமையுடையோம்' என்று செருக்குகின்றவர்களை ஒருபோதும் வணங்காதவனென்பது, முன்னிரண்டடிகளிற் கூறிய பொருள். சூரியனும் தோற்குமாறு அதனினும் மிஞ்ச இராவணன் கவிக்க முடித்தலங்கள் கதிரை வெளியிடுகின்றன என்பது, இச்செய்யுளிற் பின்னிரண்டடிகளிற் கூறிய பொருள். பி - ம்:—[1]தலைமைக். [2]கண்ணினர். [3]மூன்றையும். [4]அருக்கனை. [5]அலகுபல்லுலகத்தினும்படரொளி யெறிப்ப. (3620)

16. [1]நாக நானில நான்முக னுடன நயந்த
[2]பாக [3]மூன்றையும் வென்றுகொண் டமரர் [4]முன் பணிந்த
வாகை [5]மாலையு மருங்குற வரிவண்[6]டொ டளவித்
தோகை யன்னவர் விழிதொடர் தும்பையுஞ் [7]சூட்டி.

(இ - ள்.) சுவர்க்கலோகமும் பூலோகமும் பிரமலோகமும் என்று விரும்பிச் சொல்லப்படுகின்ற மூன்றுபகுதியையும் வென்று கைக்கொண்டதனால் தேவர்கள் முன்பு அணிந்த வெற்றிமாலையையும் (அதன்) பக்கத்திற் பொருந்த இரேகைகளையுடைய வண்டுகளோடு சேர்த்து மயிலையொத்தவர் விழிதொடரப்பெற்ற தும்பை மாலையையுஞ் சூட்டி,—(எ - று.)

மூவுலகையும் வென்றமைக்காகத் தேவர்கள்முன்பு சூட்டிய வாகைமாலையின் பக்கத்தில் தும்பைமாலையை இப்போது தான் போர்க்குச் செல்லுவதற்கு அறிகுறியாகச் சூடினன் இராவணனென்றவாறு. அத்தும்பைமாலையில் வண்டுகளும் மகளிரின் விழிகளும் மொய்க்கின்றன என்று கூறியது - உடனவிற்சியணியாம். பி - ம்:—[1]நாகர். [2]பாகை. [3]னைன்றியும். [4]முன்பணித்த, முன்பளித்த. [5]மாலையின். [6]ஏரளவி. [7]சூடி. (3621)

17. [1]அகழி வேலையைக் காலத்தை யளக்கர்நுண் மணலை
[2]நிகழு மீன்களை விஞ்சையை [3]நினைப்பதே னின்ற
இகழ்வில் பூதங்க ளிறப்பினு மிறுதி[4]செல் லாத்தன்
புகழெ னச்சரந் தொலைவிலாத் [5]தூணியும் பூட்டி.

(இ - ள்.) (இலங்கைக்கு) அகழியாக அமைந்த கடலையும் காலத்தையும் கடலின் நுண்மணலையும் (அக்கடலிற்) பொருந்திய மீனையும் கல்வியையும் (அளவிடமுடியாமைக்கு உவமையாகச் சொல்லலாமா? என்று) நினைப்பது எதற்காக? நிலைத்து நின்ற இகழ்வில்லாத பூதங்கள் ஒழிந்தாலும் ஒழிதலில்லாத தன்னுடைய புகழைப்போல அம்புகள் தொலைதலில்லாத அம்பறாத்தூணியையும் பூட்டி,—(எ - று.)

அளவிடமுடியாமையில் பிரசித்த உவமையாகச் சொல்லப்படுகின்ற வேலை முதலியவற்றை இராவண சரத்துக்கு உவமையாகா என்பது பெறப்பட 'நினைப்பதென்' என்று மறுத்தது, எதிர்நிலையணியின் பாற்படும். நிகழும்மீன் என்றது-வானத்து நிகழும் மீனையும் கடலில் வாழும் மீனையும் காட்டவல்லது. பி - ம்:—[1]அகழும். [2]நிகழுமானில, நிகழுமாதிகள், நிகழுமாதியாம். [3]நினைப்பதே நின்ற, நினைப்புறநின்ற. [4]செல்லாத. [5]தூணியின். (3622)

18 —'வருக' என்ன, இராவணனுக்குத் தேர்வருதல்.

வருக தேரென வந்தது [1]வையமும் வானும்
உரக தேயமு மொருங்குட னேறினு முச்சிச்
சொருகு பூ[2]வன்ன [3]சுமையது துரக[4]பின் றெனினும்
நிருதர் கோமக னினைந்துழிச் செல்வதோர் [5]நினைப்பில்.

(இ - ள்.) பூமியிலுள்ளாரும் வானுலகத்தாரும் நாகர்கள் வசிக்கின்ற பாதாளலோகத்தாரும் ஒருசேர ஏககாலத்தில் ஏறினாலும் உச்சியிற் சொருகுகின்ற உச்சிப்பூ என்னும் அணியைப் போன்ற சுமையையுடையதும், குதிரை இல்லாவிட்டாலும், அரக்கர் தலைவனான இராவணன் நினைந்தவிடத்தில் நினைந்த அந்த ஓர்கணத்தே போகவல்லதுமாகிய தேரானது, (இராவணன்) 'வருக' என்ன, வந்திட்டது; (எ - று.)

மூவுலகத்தாரும் தன்மீது ஏறினாலும் அவற்றாலான சுமை உச்சிப்பூவை யணிவதனால் எவ்வளவோ அவ்வளவேயாகத் தோன்றுமாறு பெருமைவாய்ந்தது அந்தத் தேரென்பது, முதல் மூன்றடிகளிற் கூறிய பொருள். பி - ம்:—[1]வானமும்மண்ணும். [2]என்னுஞ். [3]சுமந்த. [4]என்று. [5]இமைப்பில். ஐந்தாம் பாடல்முதல் பதினெட்டாம் பாடல்வரையிற் பதினான்குபாடல்களுக்கு முடிபு:—சார்த்தி-வீக்கி (5), சேர்த்தி-பிணிதது (6), சாத்தி (7), பூட்டி—சாத்தி (8), கங்கணந்தழுவக்கோதையும் புட்டினுங்கட்டி (9), இலங்க-தூக்கி (10), தொடர-திகழ (11), இமைப்ப (12), ஒக்க (13), படைக்க (14), அகற்ற (15), சூட்டி (16), பூட்டி (17), தேர் வருக என, வந்தது (18) என்க. (3623)

19.—இதுமுதல் ஐந்துகவிகள் - வந்த தேரின் வருணனை.

ஆயிரம்பரி [1]யமுதொடு [2]வந்தவு மருக்கன்
[3]பாய்வ யப்பசுங் குதிரையின் [4]வழியவும் படர்நீர்
வாய்[5]ம டுக்குமா வடவையின் வயிற்றின்வன் காற்றின்
நாய கற்கு[6]வந் துதித்தவும் [7]பூண்டது [8]நலத்தின்.

(இ - ள்.) (அந்தத்தேர்),—சில அமிருதத்தோடு தோன்றியனவும், சில சூரியனுடைய பாயுந்தன்மையுள்ள வலிய பச்சைக் குதிரையின்மரபில்தோன்றியனவும், சில பரவிய (கடலின்) நீரை (மிகாதபடி) வாயினால் உறிஞ்சுகின்ற சிறந்த வடவையின்வயிற்றிலே வலிய காற்றுக்குத் தலைவனான வாயுதேவனுக்குத் தோன்றியனவுமாகி இப்படியுள்ள ஆயிரங்குதிரைகளை அழகாகப் பூண்டது;

இதனால், அத்தேரிற் பூட்டிய குதிரைகளைக் கூறினார். இராவணன் பொருட்டுவந்த தேர் ஆயிரம்பரிகளை இணைத்து பூண்டுள்ளது - அப்பரிகள்—அமுதத்தோடு வந்தவை முதலியனவாம் என்க. பி - ம்:—[1]அமுதத்தின். [2]வந்தும். [3]பாயவப. [4]வழியதும். [5]மடுக்குறும். [6]வந்துதித்ததும். [7]பூணடதோர். [8]நலத்தால். (3624)

20\. பாரிற் செல்வது விசும்பிடைச் [1]செல்வது பரந்த
நீரிற் செல்வது [2]நெருப்பினுஞ் செல்வது நிமிர்ந்த
[3]போரிற் செல்வது [4]போய்நெடு முகட்டிடை விரிஞ்சன்
ஊரிற் செல்வ [5]தெவ் வுலகினுஞ் செல்வதோ ரிமைப்பின்.

(இ-ள்.) (பின்னும் அத்தேர்),—பாரிலே செல்வதுபோலவே, வானத்திலும் செல்வது; பரந்த நீரிலே செல்வது; நெருப்பிலுஞ்

செல்வது: மூண்டபோரிலே செல்வது: அண்டமுகட்டிலும்போய்ப் பிரமனுடைய ஊரிலுஞ் செல்வது: ஓரிமைப்பில் எவ்வுலகத்திலும் செல்வது; (எ-று.)

இதனால், அந்தத்தேரினுடைய கமனத்தின் சிறப்புக் கூறினார். பி-ம்:—[1]படர்வது. [1]நெருப்பிடைச். [3]மேருச். [4]பொன்னெடு, போனெடு. [5]எவ்வுலகத்துஞ், எவ்வுலகமும். (3625)

21. எண்டிசைப்பெருங் [1]களிற்றிடை மணியென விசைக்கும்
கண்டை [2]யாயிர கோடியின் [3]தொகையது கதிரோன்
மண்டிலங்களை மேருவிற் குவித்தென வயங்கும்
[4]அண்டம் விற்குநன் [5]காசினாற் [6]குயிற்றிய [7]தடங்க.

(இ-ள்.) (பின்னும் அத்தேர்),—எட்டுத்திக்கிலுமுள்ள பெரிய திக்கஜங்களின் மணிபோல ஒலிக்கின்ற கண்டை ஆயிர கோடி யென்னுந்தொகையினை யுடையது; சூரியனுடையமண்டலங்களை மேருவிற் குவித்தாற்போல விளங்குகின்ற அண்டத்தை விலையாகக் கொள்ளுஞ் சிறந்த இரத்தினத் தொகுதி முழுவதும் இழைக்கப் பெற்றது; (எ-று.)

இதனால், அந்தத்தேர் பலமணிகள்கட்டப்பட்டு இரத்தினங்களிழைக்கப்பெற்று விளங்குந் தன்மை கூறப்படுகின்றது. ஓங்கிய தேரில் பல இரத்தினங்கள் அமைந்திருப்பது, மேருவிற் சூரிய மண்டலத்தைக் குவித்தாற்போலும். பி-ம்:—[1]களிற்றிடு. [2]ஆயிரங். [3]தகையது. [4]கண்டவிற்குனன். [5]காசினம். [6]இயற்றியது. [7]அலங்கை, அலங்க. (3626)

22. [1]மூனைவர் வானவர் முதலின ரண்டத்து முதல்வர்
[2]எனைவ ரீந்தவு மிகலினி லிட்டவு மியம்பா
[3]வினையின் [4]வெய்யன [5]படைக்கலம் வேலையென் றிசைக்கும்
சுனையி னுண்மணற் [6]றொகையன [7]சுமந்தது தொக்க.

(இ-ள்.) (மற்றும் அத்தேர்), இவ்வுலகவுருண்டையுள் முதன்மை பெற்றவரான முனிவரும் வானவரும் முதலியோரான எப்படிப்பட்டவரும் [மிக்கபெருமைபெற்றவரும்] ஈந்தனவும், போரில் (தோற்றவர்) கொடுத்திட்டனவும், சொல்லமுடியாத வாறு போர்த்தொழிலிற்கொடுமையையுடையனவுமான படைக்கலங்கள் வேலை யென்றுசொல்லப்படுகின்ற நீர்ச்சுனையினுள் மணலின் தொகையை யுடையனவாகித் திரண்டவற்றைச் சுமந்தது;

பலருந் தந்த படைக்கலங்களை மிகுதியாகக்கொண்டது அந்தத்தேரென்றவாறு. தொக்க - பலவின்பாற்பெயர். கடல் மணற்றொகையனவாய்த்தொக்கவான படைக்கலங்களைச் சுமந்தது அந்தத் தேரென்க. பி-ம்:—[1]முனிவர். [2]எனைவரன்னவரீய்ந்தவு மிகலினிட்டனவும், எனைவரன்னவர்யாவருமிகலிலிட்டனவும். [3]வினையும். [4]வெய்யவும். [5]படைக்கலவேலை. [6]தொகையது. [7]சுமந்து பின்றொடர, சுமந்துதொகுத்த, அமைந்தவை தொகுத்த. (3627)

23. கன்ன னேமியுங் கண்ணுதல் கணிச்சியுங் கமலத்து
அண்ணல் குண்டிகைக் [1]கலசமு மழியினு மழியாத்
திண்மை [2]சான்றது தேவரு [3]முணர்வருஞ் [4]செய்கை
உண்மை யாமெனப் பெரியது வென்றியி னுறையுள்.

(இ-ள்.) (மற்றும் அத்தேர்), திருமாலின்சக்கராயுதமும், கண்ணுதற்கடவுளான சிவபிரானது மழுப்படையும் தாமரையில்வசிக்கும் பெருமையிற் சிறந்தவனான பிரமதேவனுடைய குண்டிகையாகிய பாத்திரமும் அழிந்தாலும் அழியாத வலிமைமிக்கது: தேவரும் உணர்தற்கு அருமையான வேலைப்பாட்டுடனே வென்றிக்கு உறைவிடமாகி உண்மையைப்போற் பெரியது; (எ-று.)—பி-ம்:—[1]கமலமும். [2]ஆன்றது. [3]முனிவருஞ். [4]திரும்பா. (3628)

24.—இராவணன் தேரைப்பூசித்து யாத்திராதானஞ் செய்தல்.

அனைய தேரினை யருச்சனை வரன்முறை [1]யாற்றி
[2]இனைய ரென்பதோர் கணக்கிலா மறையவ ரெவர்க்கும்
வினையி னன்னிதி முதலிய வளப்பரும் வெறுக்கை
[3]நினையி னீண்டதோர் பெருங்கொடை யருங்கட னேர்ந்தான்.

(இ-ள்.) அப்படிப்பட்டதேரினை அருச்சனையை நூன்முறைப்படி செய்து, இத்தனைவரென்பதான ஒருகணக்குஇல்லாத பிராமணர் எவர்க்கும் செய்யவேண்டியமுறைப்படி நல்லநிதிமுதலிய அளக்கமுடியாத செல்வத்தை நினைக்கவும்முடியாதபடி மிக்கதான ஒப்பற்ற அருமையான தானமாக(ப் பிறர்க்குச்செய்தற்கு) அரிய கடமையைச் செய்தான்; (எ-று.)—முன்னே கூறிய தானம் போர்க்குப் புறப்படுதற்காகச்செய்ததென்றும், இப்போது செய்யுந் தானம் தேரில் ஏறும்போது செய்வதென்றும் அறிக. எப்படியும் இன்றோடுபோர் முடியுமென்று தானஞ்செய்தான்போலும். பி-ம்:—[1]இயற்றி. [2]இனையர், இனையது. [3]நினைய. (3629)

25.—இராவணன் தேரிலேறுதல்.

ஏறி னான் [1]தொழு திந்திரன் முதலிய விமையோர்
தேறி னார்களுந் [2]தியங்கினர் மயங்கினர் திகைத்தார்
வேறு [3]தாஞ்செயும் வினையிலை மெய்யினைம் புலனும்
ஆறி னார்களு [4]மஞ்சின ருலகெலா மனுங்க.

(இ-ள்.) (அத்தேரைத்) தொழுது (இராவணன் அதன்மீது) ஏறினான்: மனந்தேறினவர்களான இந்திரன்முதலிய தேவர்களும் அறிவுசோர்ந்து மயங்கினராய்ப் பிரமித்தார்கள்: வேறே தாம் செய்யக்கூடியகாரியம் இல்லாமையால், உடலிலுள்ள ஐம்புலன்களும் அடங்கப்பெற்ற முனிவர்களும் உலகமெல்லாம் வருந்த(த் தாம்) அஞ்சினர்; (எ-று.)

இராட்சசசங்காரத்தின்பொருட்டே திருமால் இராமனாகத் திருவவதரித்திருக்கின்றானென்று தெளிந்த தேவர்கள்முதலியோரும் அஞ்சி அறிவு சோர்ந்து மயங்கித் திக்பிரமைகொள்ளும்படியா

யிற்று, அவ்விராவணன் அந்தத்தெய்வத்தேரிலேறியபோது என்றபடி. பி - ம்:—[1] எழில். [2] நடுங்கிட நடுங்கினர். [3] தான்செயும், நாஞ்சொலும். [4] மயங்கினர். (3630)

26.—இராவணனுடைய சபதம்.

மன்ற லங்குழற் சனகிதன் மலர்க்கையான் வயிறு
[1] கொன்ற லந்தலைக் கோடு[2] நெடுந் துயரிடைக் குளித்தல்
[3] அன்றி தென்றிடின் மயன்மக ளத்தொழி [4] லுறுதல்
இன்றி ரண்டினொன் றாக்குவன் தலைப்படி னென்றான்.

(இ - ள்.) '(யான்) போர்செய்யத்தொடங்கின் [போர்செய்யத்தொடங்குவதனால்], நறுமணம்பொருந்திய அழகியகூந்தலையுடைய சானகி தன்னுடையமலர்போன்ற கையினால் வயிற்றை வருத்தி(த் தான்) அலைச்சலைக்கொண்டு நெடியதுன்பக்கடலிலிடையே மூழ்குதல், இதுநிகழாதாயின் மயனுடைய புத்திரியான மந்தோதரி அத்தொழிலையடைதல், இவ்விரண்டிலொன்றை இன்றைக்கு ஆக்குவேன்' என்று கூறினான், (இராவணன்); (எ - று.) —பி-ம்:—[1] கொன்றலந்தலையொடு. [2] தன்மலர்க்கண்ணீரிடை, தன்னெடுங்கணீருற. [3] அன்றதன்றெனின். [4] உழத்தல், உழைத்தல். ( )

27.—இராவணனுடைய தோற்றம்.

பலக ளந்தலை மௌலியோ [1] டிலங்கலிற் [2] பஃறோள்
அலக ளந்தறி யாநெடும் படைகளோ டலங்க
விலக ளந்[3] தரு கடற்றரை விசும்பொடு [4] வியப்ப
உலக ளந்தவன் [5] வளர்ந்தன னெனவுயர்ந்தான்.

(இ - ள்.) பலகழுத்துக்களின்மீது தலைகள் கிரீடங்களோடு விளங்குகையில் பல [இருபது] கைகள் அளவினால் அளக்கமுடியாத [மிகப்பல] நெடிய படைகளோடு அசையாநிற்க, விலகியுள்ள உப்பளத்தைத் தருகின்ற கடலினாற் சூழப்பட்ட பூமியுடனே விசும்பிலுள்ளவர் வியப்ப, உலகளந்தவன் வளர்ந்தனனென்னும்படி வளர்ந்தான்; (எ - று)—தோள்-கை. பி - ம்:—[1] இயங்கலிற். [2] பல. [3] திருகடற்றிரை, தருகடற்றிரை. [4] வீய, விம்ம. [5] ஓங்கினன்.

28.—இராவணன் தோள்தட்டி யாரவாரித்தல்.

[1] விசும்பு விண்டிரு கூறுறக் [2] கற்குலம் வெடிப்பப்
பசும்புண் விண்டெனப் [3] புவிபடப் பகலவன் பசும்பொன்
[4] தசும்பி [5] னின்றிடை திரிந்திட [6] மதிதகை யமிழ்தின்
அசும்பு சிந்திநொந் துலைவுறத் தோள்புடைத் தார்த்தான்.

(இ - ள்.) வானம் விண்டு இரண்டு பகுதியாகவும், மலைக்குலம் வெடிக்கவும், பூமி பசியபுண்விண்டாற் போலாகவும், சூரியன் பசும்பொற்குடம்போன்றிருந்து தன்னிருப்பிடத்தினின்று திரிந்திடவும், சந்திரன் (தன்) குணமாகிய அமிருதத்துளியைச் சிந்தி நொந்து வருந்தவும் (தன்) தோளைப்புடைத்து ஆரவாரித்தான், (இராவணன்); (எ - று.)—தோள்புடைத்த அதிர்ச்சியால் வானம்,

விள்ளுதல்முதலியன நிகழ்ந்தனவென்றார்; தொடர்புயர்வுநவிற்சி யணி. அசும்பு-சிறுதிவலை. பி - ம்:—[1]விசும்புதன் மறுகூறுகக். [2]குலவரை வெடிப்பப், குலவரை வெடித்த. [3]புடைபடப். [4]தசும்பு. [5]நின்றிடை திரிந்தன. [6]மதித்தகை. (3633)

29.—இராவணன் தன் வில்நாணியைத் தெறித்தல்.

[1]நணித்து வெஞ்[2]சம மென்பதோ ருவகையி னலத்தால்
திணித்த டங்கிரி [3]வெடித்துகச் சிலையை [4]நாண் தெறித்தான்
[5]மணிக்கொ டுங்குழை வானவர் தானவர் மகளிர்
துணுக்க மெய்தினர் மங்கல நாண்களைத் தொட்டார்.

(இ - ள்.) 'கொடியபோர் சமீபித்தது' என்பதைப்பற்றிய ஒப்பற்ற உவகையின் நன்மையினால் வலிய பெரிய கிரி வெடித்துகச் சிலைநாணைத் தெறித்தான்: வளைந்த மணிக்குழைகளையணிந்த வானவர் தானவர் என்ற இவர்களுடைய மகளிர் (மனத்தில்) அச்சங்கொண்டவராய் (த் தமது) மங்கலநாண்களைத் தொடலாயினர்; (எ - று.)

'தமது மாங்கலியசூத்திரத்திற்குக் கேடு வந்திட்டதோ?' என்று அவற்றைத் தானவ வானவமகளிர் தொட்டனரென்க. எதைப்பற்றி அச்சமுண்டாகின்றதோ, அதனைத் தொட்டுப்பார்த்தல், இயல்பு. பி - ம்:—[1]நணித்த. [2]சமர். [3]இடிந்திடச், இரிந்திடச், இடந்துகச். [4]நாணெறிந்தான். [5]தணிக். (3634)

30.—இராவணனது தோற்றம்.

[1]சுரிக்கு மண்டலந் தூங்குநீர்ச் [2]சுரிப்புற [3]வீங்க
இரைக்கும் பல்லுயி ரியாவையு நடுக்கமுற் றிரியப்
பரித்தி லன்புவி படர்சுடர் [4]மணித்தலை பலவும்
[5]விரித்தெ ழுந்தன னனந்தன்மீ தென்பதோர் [6]மெய்யான்.

(இ - ள்.) சூரியமண்டல சந்திரமண்டலங்கள் சுழன்றுதோன்றுவதற்கு இடமான மிக்கநீரையுடைய கடலிலே சுழற்சிபொருந்துமாறு (அக்கடலின் நீர்) பொங்கவும், (ஏதேனும் ஆபத்துநேரின்) ஆரவாரிக்குந்தன்மையுள்ள பலஉயிர்களெல்லாமும் நடுக்கமுற்று நிலைகுலையவும், 'அநந்தனானவன் புவியைப் பரிக்காதவனாய்ச் சுடரைக்கொண்ட மணிகளையுடைய (தன்) பலதலைகளையும் மேலே விரித்தெழுந்தானோ?' என்னுமாறு தோன்றுகின்ற ஒப்பற்ற உடலையுடையவனான், (அந்தஇராவணன்); (எ - று.)

வளர்ந்து தோன்றியவனை அந்தஇராவணன், 'இவ்வுலகபாரத்தைத் தாங்குகின்ற அநந்தனென்ற ஆதிசேஷனே மணித்தலைபலவும் விரித்தெழுந்தானோ?' என்னுமாறு தன்னுடலால் தோன்றினனென்க: தன்மைத்தற்குறிப்பேற்றவணி தூங்குநீர் - அன்மொழி. பி-ம்:—[1]சுரித்து, துரிந்து. [2]சுழியுற, கழியுற. [3]வீங்கி. [4]மணித்தலை [5]விரைந்தெழுந்தன. [6]வெய்யன். (3635)

31.—இராவணன் போர்க்களத்துத் தோன்றுதல்.

தோன்றி னான்வந்து சுரர்களோ [1]டசுரரே தொடங்கி
மூன்று நாட்டினு முள்ளவ [2]ரியாவரு [3]முடிய

ஊன்றி னுன்செரு வென்றுயி ருமிழ்தர [4]வுதிரம்
கான்று நாட்டங்கள் வடவனற் கிருமடி கனல.

(இ-ள்.) சுரர்களுடனே அசுரர் தொடங்கி மூவுலகத்திலுமுள்ளவர் 'யாவரும் முடிய(இராவணன்)போரில் ஊற்றங்கொண்டான்' என்ற காரணத்தினுல் இரத்தத்தைக்கக்கி உயிர்சிந்தவும், (தன்) கண்கள் வடவைத்தீயினும் இருமடங்கு ஜ்வலிக்கவும், (போர்க்களத்தில் அவ்விராவணன்) வந்து தோன்றினுன்: (எ - று.)—நாட்டங்கள் வடவனற்கு இருமடிகனல் என்பதற்கு - இராவணன் கண்கள் வடவைத்தீயினும் இருமடங்கு உக்கிரமாகச்சொலிக்க எனவும், உயிருமிழ்தர உதிரங்கான்று என்பதற்கு உயிரைக்கக்குவார்போல உதிரத்தைக்கக்கவந்து தோன்றினுன் எனவும் பொருள் கூறுவர். பி - ம்:—[1]உரகரே. [2]யாரொடும். [3]முடியும். [4]வெந்தீக்.()

32.—அப்போது தோன்றிய நிலைமாறுபாட்டைச் சுக்கிரீவன்முதலியோர் காணுதல்.

உலகிற் றேன்றிய மறுக்கமு மிமைப்பில ருலைவும்
மலையும் வானமும் வையமு [1]மறுகுறு [2]மறுக்கும்
அலைகொள் வேலைக ளஞ்சின [3]சலிக்கின்ற வயர்வும்
தலைவ னேமுதற் றண்டலி லோரெலாங் கண்டார்

(இ-ள்.) உலகிலேதோன்றிய கலக்கமும், தேவர்களின் வருத்தமும், மலைகளும் வானமும் பூமியும் ஆகிய இவைகள் சுழல்கின்ற சுழற்சியும், அலைகளைக்கொண்ட கடல்கள் அஞ்சினவாய்ச் சலிக்கின்ற தளர்நிலையும், சுக்கிரீவன்முதலிய தடுக்கப்படாதவலிமையையுடையவர் யாவரும்கண்டனர்; (எ - று.)—மறுக்கு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். பி - ம்:—[1]நடுக்குறு, நடுக்குற. [2]மலைவும், வலியும். [3]சலிக்கின்றயாவும். (3637)

33.—அந்நிலைவேறுபாட்டைக்கண்டு சுக்கிரீவன் முதலியோர் துணுக்குற்றெழுதல்.

பிறிற்று மண்ட மென்பதோ ராகுலம் பிறக்க
வேறிட் டோர்பெருங் கம்பலை பம்பிமேல் வீங்க
மாறிப் பல்பொருள் [1]வகுக்குறுங் காலத்துண் மறுக்கம்
ஏறிற் றுற்றுள தென்னை [2]கொ லோவென [3]வெழுந்தார்.

(இ - ள்.) 'இவ்வண்டமானது பிறப்பெற்றதோ?' என்று கருதுமாறுஆன ஒருதடுமாற்றநிலை தோன்றவும், (இதுவரையிற் கண்ட நிலைமையினின்று) வேறுபட்ட ஒருபேரொலி நெருங்கி மேல் மிகவும், அழிந்திட்டதனுற் பலபொருள்களையும் படைத்தற்கு உற்ற காலத்திலே தோன்றுங் கலக்கம் (இப்போது) மிகுதியானதாகத் தோன்றியுள்ளது: (இது) என்னை கொலோ?' என்று (சுக்கிரீவன் முதலியோர்) எழலானுர்கள்; (எ - று.)—மாறுதல் - நிலைமாறுதல்: அழிதலாயிற்று பி - ம்:—[1]மாய்வுறு. [2]கொலாமென. [3]எழுந்தான். (3638)

34.—இராவணன் தேர்மீதேறித் தன்சேனையோடு வருகின்றானென்பதைச் சுக்கிரீவன் முதலியோர் அறிதல்.

கடல்க ளியாவையுங் க ் மலைக் குலங்களுங் காரும்
திடல் [1]கொண் மேருவும் விசும்பிடைச் செல்வன சிவண
அடல்கொள் சேனையு [2]மரக்கனுந் தேரும் வந்தார்க்கும்
[3]கடல்கொள் பேரொலிக் [4]கம்பலை யென்பதுங் [5]கண்டார்.

(இ - ள்.) கடல்களெல்லாமும் கல்மயமான மலைத்தொகுதிகளும் மேகமும் மிக்கமேடான நிலையைக்கொண்ட மேருவும் வானத்தில் செல்வனவற்றை ஒத்திருக்க, வலிமையைக்கொண்ட (இராக்கத) சேனையும் இராவணனும் (அவன்) தேரும் வந்து ஒலிக்கின்ற கடல்களின் பேரொலியையொத்த ஆரவாரம் (இது) என்பதையும் அறிந்தார்; (எ - று.)

இராவணன் அரக்கச்சேனை இவற்றிற்குக் கடல்கள் மலைக்குலங்கள் என்ற இவையும் அவன்தேருக்கு மேருவும் உவமை. சப்தத்தைக் குணமாகக்கொண்ட வான்வழியே பேரொலி வருவதனால், அங்ஙனம்வந்த சேனை முதலியவற்றின் ஒலி, கடலின் பேரொலியை யொத்திருந்ததென வருணித்தார். வந்து - சொல் விழுக்காடு. முறையே நான்கடியிலுமுள்ள கடல் திடல் அடல் கடல் என்பன, லகரரகரப்போலிபெற்ற பாடமும் உண்டு. பி-ம்:— [1]கொளமேரு. [2]அரக்கரும். [3]குடல்கள். [4]கம்மலை. [5]கொண்டார், கொண்டான். (3639)

35.—இராவணன் வருகையை விபீடணன் ஸ்ரீராமனுக்குக் கூறுதல்.

எழுந்து வந்தன னிராவண [1]னிராக்கதத் தானைக்
கொழுந்து [2]முந்திய துற்றது கொற்றவ குறுங்குற்று
அழுந்து கின்றது நம்பல மமரரு மஞ்சி
விழுந்து சிந்தினரென்றனன் விபீடணன் [3]விரைவான்.

(இ - ள்.) 'வெற்றியோனே! இராவணன் (தன்சேனையோடு) புறப்பட்டுவந்தான்: இராக்கதருடையசேனையின் முன்னணிமுந்திவந்திட்டது; (அதுகண்டு) நம்சேனை நடுங்கி (அச்சத்தில்) மூழ்குகின்றது: தேவர்களும் அஞ்சிக் கீழ்விழுந்து சிதறினார்கள்' என்று விபீடணன் விரைவனாய் (ஸ்ரீராமனிடம்) கூறினன்; (எ - று.)— பி-ம்:—[1]இராக்கதர்தானை. [2]முற்றியது, முற்சவந்து, முற்றிவந்து. [3]விரைந்தான். (3640)

இராவணன் தேரேறுபடலம் முற்றிற்று.

35-ஆவது இராமன் தேரேறுபடலம்

ஸ்ரீராமன் இராவணனுடன் போர்புரியுமாறு இந்திரனனுப்பிய தேரின்மீது ஏறியதைத் தெரிவிக்கும் படலம் என்பது பொருள்.

விபீடணன் இராவணனது வருகையைத் தெரிவிக்கவும், வானரசேனை கைகுவித்து வாய்குழறி அபயம்வேண்டுங் கூச்சல் மிக, ஸ்ரீராமன் எழுந்து போர்க்கோலங்கொள்ளாநிற்கையில், சிவபெருமான் தேவர்களைநோக்கி 'இன்றோடு போர்முடிகின்றது இராவணன் ஒழிவான்: இராமனுக்குத் தேரனுப்புக' என்ன, தேவர்களும் 'இது செய்தற்குஉரியது' என்ன, இந்திரனும்உடன்பட்டு மாதலியைத் தேர்கொணருமாறு கட்டளையிட, அவன் கொணர்ந்தனன்: அப்போது தேவர்கள் இரதத்திற்குஉரிய தேவதையையேத்தி 'ஸ்ரீராமனுக்கு வெற்றிதருக' என்றுசொல்லி மலர்மாரி தூவியனுப்ப, மாதலி அத்தேரையோட்டிக்கொண்டுபோய் இராமன் முன் நிறுத்தினன்: ஸ்ரீராமன் அந்தத்தேரையும் தேரோட்டியையும்பற்றி வினவ, மாதலி, தன்னை இன்னனென்றுதெரிவித்து, அத்தேரைத் தான் இந்திரன்கட்டளையாற் கொணர்ந்தமையைத் தெரிவித்தானாக, ஸ்ரீராமன் அத்தேரைப்பற்றி மற்றும் ஐயுற, அத்தேர்க்குதிரைகள் ஸ்ரீராமபிரானுடைய ஐயத்தைத் தம் வேதக் குரலாற்போக்கவும், மீண்டும் ஸ்ரீராமன் அநுமானையும் இலக்குமணனையும் வினவிக் கருத்துத்தெரிந்து அத்தேரிலேறியமை இதிற் கூறப்படுகின்றது இராமன்றிருத்தேரேறுபடலம் என்று சிலபிரதியிலும், இராகவன்றிருத்தேரேறுபடலம் என்று சிலபிரதியிலும் இந்தப் படலத்திற்குப் பெயர் காணப்படுகின்றது.

வேறு.

1.—ஸ்ரீராமன் போர்க்கு எழுதல்.

தொழுங்கையொடு வாய்குழறி மெய்ம்முறை [1]துளங்கி
விழுந்துகவி சேனை[2]யிடு பூசன்மிக விண்ணோர்
அழுந்து[3]படு பாலமளி [4]யஞ்சவெழ வந்நாள்
எழுந்தபடி யேகடி தெழுந்தன னிராமன்.

(இ - ள்.) கூப்பியகையுடனே வாய்குழறி உடம்பின் நிலைமை சலித்துக் கீழ்விழுந்து கவிசேனை செல்கின்ற பேராரவாரம் மிகவே, ஸ்ரீராமன்,—துன்பத்திலழுந்திய அந்த நாளில் 'பயப்படாதீர்கள்' என்று அபயமளித்துத் தேவர்களுக்காகப் பாற்கடலில் (ஆதிசேஷ) சயனத்திலே (யோகநித்திரையினின்று) எழுந்ததன்மையொப்பக் கடிதெழுந்தனன்; (எ - று.)

பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கையில் இராவணனியரால் துன்புற்ற தேவர்கள் கூக்குரலிட்டனராக, அதனைச் செவியேற்று அவர்களின் துயரையொழிக்கத் திருமால் தசரதசக்கரவர்த்திக்குப் புதல்வனாகத்தோன்றுவதற்கு எழுந்ததுபோலவே, தேவாமிசமான வானரரின் பூசலைக்கேட்டு அவர்கள் துயர்தீர இராவணவதஞ் செய்யும்படி ஸ்ரீராமன் எழுந்தனனென்க. வானரர் கைகுவித்து வாய்குழறிச்செய்த பூசல் - தம்மைக்காக்கவேண்டுமென்பது கருதி.

பி - ம்:—[1]துளங்க. [2]படு. [3]படமீது, பணிமீது. [4]அஞ்சியெழும், துஞ்சியெழும். (3641)

2.—மூன்றுகவிகள் - ஸ்ரீராமன் போர்க்கோலங்கொள்ளுதலைத் தெரிவிக்கும்.

கடக்களி றெனத்தகைய கண்ணனொரு காலன்
விடக்கயி றெனப்பிறழும் வாள்வலன் விசித்தான்
மடக்கொடி [1]துயர்க்குநெடு வானினுறை வோர்தம்
இடர்க்கட லினுக்குமுடி வின்றென [2]விசைத்தான்.

(இ-ள்.) மதநீர்ப்பெருக்கையுடைய ஆண்யானையென்று சொல்லத்தக்க தன்மையையுடைய ஸ்ரீராமன், ஒப்பற்ற யமனுடைய விஷமுள்ள பாசாயுதம்போல் விளங்குகின்ற வாட்படையை வலப்புறத்திற் கட்டினான், 'மடப்பத்தையுடைய கொடி போன்றவளான சீதையின் துயரத்திற்கும் நெடியவானத்தில் வாழ்பவரான தேவர்களுடைய துயர்க்கடலுக்கும் முடிவுகாலம் இன்றாகும்' என்று கூறினான்; (எ-று.)

இன்றைத்தினம் இராவணன் ஒழிந்திடுவா னென்றபடி.

பி-ம்:—[1] தனக்கும். [2] இசைப்பான். (3642)

3. தன்னக வசத் [1]தருவு தங்கவொரு தன்னின்
பின்னக வசத்தபொரு ளில்லைபெரி யோனை
[2]மன்னக வசத்துற [3]வரித்தெனல மாதோ
[4]இன்னக வசத்தையுமொ ரீசனென லாமால்.

(இ-ள்.) பெரியோனாகிய அவ்விராமனை நிலைபெறக் கவ்வசத்துபொருந்த [வலிமைபொருந்த] (க் கவசம்) வரிந்தது என்று சொல்லத் துணியோம்; (ஏனெனில்), தன்னெஞ்சின்வசமாக [ஸங்கல்பப்படி] சரீரமுள்ள எல்லாப்பொருளுந் தங்க, தன்னினும் வேறாக (அக்கடவுளால்) வலிமைபெறாத ஒருபொருளில்லை: (ஸ்ரீராமனைத் தனனிடத்துக் கொண்டமையால்) இந்தக்கவசத்தையும் ஒப்பற்ற அந்தக்கடவுளே யென்னலாம்; (எ-று.)

கடவுள் எல்லாப்பொருளிலுந் தங்கி அவ்வப்பொருட்குச் சத்தியைத் தருகின்றானென்பதும், அவனிலும் வேறாகி அவனால் வலிவு பெறாத ஒரு பொருளுமில்லை யென்பதும் நூற்கொள்கையாதலால், அப்படிப்பட்ட கடவுளுக்குக் கவசமென்று ஒன்று உடலிற்பதிந்து ரட்சையாக நிறகக் கட்டப்பட்டது என்றுசொல்வது பொருந்துவதாகாது: இக்காலத்து ஸ்ரீராமபிரானைத் தன்னுட்கொண்டமையால் அந்தக்கவசத்தையும் ஒருகடவுளாகப் பாராட்டுதலாகிய இவ்வளவே நம்மாற் செய்யத்தக்கதென்பதாம். இரண்டாமடியில், பின்னகம் - வேறுபட்டது: அசத்தம் = அசக்தம். மூன்றாம் அடியில, கவ = கவ்வ. செய்யுளின்பத்தின் பொருட்டு, 'மன்ன கவ' என்பதும், 'கவ சத்து' என்பதும் இயல்பாயின. பி-ம்:—[1] உலகு. [2] உன்ன. [3] விரிந்ததெனமாதோ. [4] அன்ன. 'மன்னகவசத்துறவரிந்ததெனவலகோ' என்று சிலபிரதியில் மூன்றாமடி. (3643)

4. புட்டிலொடு [1]கோதைகள் [2]புழுங்கியெரி கூற்றின்
[3]அட்டிலென [4]லாயமலை ரங்கையி னடக்கிக்

கட்டியுல இற்பொரு ளெனக்கரையில் வாளி
[5]வட்டில்புறம் [6]வைத்தவை பொருந்திட வரிந்தான்.

(இ - ள்.) மனம்வேர்த்துக் கொதிக்கின்ற யமனுடைய அட்டி லென்று சொல்லத்தக்கதான வீரற்புட்டிலுடனே கையுறையை யும் மலர்போன்ற (தன்) அழகியகையிலே யடங்கச்செய்து கட்டி, உலகிலுள்ள பண்டங்கள் போலக் கரையில்லாதனவான வாளி களைக் கொண்ட தூணிகளை முதுகிலேவைத்து அவைபொருந்தக் கட்டினான்; (எ - று.)

வட்டில்-அம்பறுத்தூணி. இருபுறத்தும் இரண்டு அம்பறுத் தூணிகள் கட்டினமையால்,'அவை' என்றது. பி-ம்:-[1]கோமதலைய. [2]புழுங்க. [3]பட்டில். [4]ஆயமலனங்கையிலடங்க, ஆயமலர் மங்கையி னடங்க. [5]வட்டிபுறம். [6]வைத்தயல்வயங்குறவலித்தான், வைத் தவை பொருந்திடவலித்தான்.

இங்குச் சிலபிரதிகளில் ஒருபாடல் காணப்படுகின்றது வரு மாறு:—

[1]இத்தகைய ளுகியகல் செய்தவினை [2]யின்னே
கொத்துமுடி கொய்வனென நின்றெதிர் குறிப்பத்
தத்தமுறு வற்செய றவிர்ந்ததென வானிற்
சித்தர்கண் முனித்தலைவர் சிந்தைமகிழ் வுற்றார்.

பி - ம்:—[1]இத்தலையனுயது. [2]என்னே. (3644)

5.—சிவபெருமான் ஸ்ரீராமனுக்குத் தேரனுப்புமாறு தேவர்களிடம் கூறுதல்.

மூண்டசெரு வின்றளவின் [1]முற்று[2]மினி வெற்றி
ஆண்[3]டகைய துண்மையினி யச்சமகல் வுற்றீர்
பூண்டமணி யாழிவய மாநிமிர் பொலந்தேர்
ஈண்டவிடு வீ[4]ரமர ரென்[5]றர னிசைத்தான்.

(இ-ள்.) 'தேவர்களே! இப்போது மூண்டுள்ளபோர் இன்றள வில் முற்றுப்பெறும்: இனி, வெற்றியானது ஆண்மைக்குண முடைய இராமனுடையதே: (இது) உண்மை: இனி அச்சம் நீங் கினவராய், சக்கரங்களையுடையதும் வெற்றிபொருந்திய குதிரைகள் நிமிர்ந்துசெல்லப்பெற்றதுமான மணிபூண்ட பொன்மயமான தேரை (ஸ்ரீராமனுக்கு அமரிலே) நெருங்கவிடுவீர்' என்று சிவபெரு மான் கூறினான்; (எ-று.)

தேவர்கள்-போர்காணுமாறு வானத்துவந்தவர்கள். இரா வணபயத்தைவிட்டு ஸ்ரீராமனுக்குத் தேரனுப்புமாறு உருத்திர மூர்த்தி கூறினனென்க. பி-ம்:—[1]முற்ற. [2]மூனிவானும், முனிவோ னால், மிகவெற்றி. [3]தகையுமுண்மை, தகையுமும்மை, தகைய தும்மை, தகையுநும்மை. [4]அமரில். [5]அயன். (3645)

6.—தேவேந்திரன் ஸ்ரீராமனுக்கு உதவக்கருதித் தேரைக் கொணருமாறு மாதலிக்குச் சொல்லுதல்.

தேவ[1]ரது கேட்டிது [2]செயற்குரிய தென்றார்
ஏவல்புரி [3]யிந்திர னு மற்றென விசைத்தான்

மூவுலகு [4]முந்து மொர் கணத்தின் [5]மிசை முற்றிக்
[6]கோவில்புரி கேன்பொருவில் தேர்[7]கொணர்தி யென்றான்.

(இ - ள்.) தேவர்கள் அந்த உருத்திரமூர்த்தியின் வார்த்தையைக் கேட்டு 'இது செய்தற்கு உரியது' என்று (இந்திரனிடம்) கூறினர்; ஏவல்புரிகின்ற இந்திரனும் 'அப்படியே' என்று கூறினவனாய்,'மூவுலகும் முந்துந்தன்மையுள்ள ஒப்பற்ற தேரை ஒருகணத்திறகுள் (ஸ்ரீராமனுக்குக்)|கோவிலாகச் செய்வேன்: அலங்கரித்துக் கொணர்தி' என்று (மாதலியை நோக்கிக்) கூறினான்; (எ - று.)—கோவில்—கோ + இல்: யாவருக்குந்தலைவனான கடவுள் தங்குமிடம்: தன் தேரை ஸ்ரீராமனுக்கு இயங்குங்கோவிலாக்குவேனென றனன இந்திரனென்க. பி - ம்:—[1]இது. [2]செய்குரியதென்றார். [3]இந்திரனுமத்தொழிலிசைத்தான், இந்திரவெனத்தொழுதிசைத்தார், இந்திரனென***இசைத்தான். [4]முந்தொரு, இன்றொரு. [5]முறை. [6]காவல்புரிதன். [7]கவர்தியென்றான், கொணர்திகாலம். ()

7.—மாதலி, தேர் கொணர்தல்.

மாதலி [1]கொணர்ந்தனன் மகோததி [2]வளாவும்
பூதல மெழுந்துபடர் தன்மைய பொலந்தேர்
[3]சதமைதி மண்டலமு மேனை [4]யுள அந் [5]தன்
பாதமென நின்றது [6]படிந்தது விசும்பில்.

(இ - ள்.) கடல்சூழ்ந்துள்ளதாகி (அசைதலில்லாத) பூதலமே யெழுந்து படர்ந்தாறபோன்ற தன்மையுடைய பொறதேரை மாதலி கொணர்ந்தான்: அமைதலையுடைய(இந்தச்)சந்திர மண்டலமும் மற்றுமுள்ளதும் தன்னுடைய அடிப்பகுதி என்று சொல்லுமாறு நின்றதான அத்தேர், வானத்திறபடிந்தது; (எ - று.)

மண்டலம் - சூரியசந்திரமண்டலம் முதலியன. பி - ம்:—[1]கொணர்ந்தனன். [2]அளாவும். [3]சீதமதி. [4]உளவும். [5]திண். [6]படர்ந்துவிசும்பின். "வந்தானை (15)' என்ற பாடல் சிலபிரதிகளில் இங்கேயுள்ளது. (3647)

8.—இதுமுதல் ஏழுகவிகள்-வந்த தேரின் வருணனை.

குலக்கிரிக ளேழின்வலி கொண்டுயர் [1]கொடிஞ்சும்
[2]அலைக்குமுயர் பாரின்வலி [3]யாழியினி [4]னச்சும்
கலக்கற வகுத்தது சுதத்தரவ [5]மெட்டும்
வலக்கயிறு கட்டியது முட்டியது வானை.

(இ - ள்.) (அந்தத்தேர்),—குலமலைகள் ஏழின் வலிமையைக் கொண்டு சிறந்த கொடிஞ்சும், அலைமோதுகின்ற சிறந்த பாரின் வலியுள்ள சக்கரத்துடனே அச்சும்,களங்கமில்லாமல்[உறுதியாக] அமைக்கப்பெற்றது: சீற்றமுள்ள அஷ்டமகாநாகங்களையும வலிமையுள்ள கயிறாகக்கொண்டு கட்டப்பெற்றது; வானை முட்டியது[மிகவோங்கியுள்ளது]; (எ-று)-பி-ம்:-[1]கொடிஞ்சின். [2]அலக்

குரியபாரும். [3]ஆழியும். [4]நலத்த, நலச்சும். [5]எட்டின்.சிலபிரதியில் 'இலக்கணமவகுத்தத னுகத்தரவமெட்டின்' என்று மூன்றாமடி காணகிறது. (3648)

9. ஆண்டினொடு [1]நாளிருது திங்களிவை [2]யென்று
மீண்டனவு [3]மேலனவும [4]விட்டிவிசி தட்டின்
பூண்டுளது தாரகை மணிப்[5]பொருவில் கோவை
நீண்டபுனை தாரினது [6]நின்றுளது குன்றின்.

(இ - ள்.) (அத்தேர்),—வருஷத்துடனே இருதுவும் மாதமும் நாளும் ஆகிய இவைஎன்று சொலலப்படும் மீண்டனவும் இனிமேல் வருவனவும் எனற இவற்றையடக்கி உறுதியாகவமைத்த தட்டிலே பூண்டுளது: தாரகையெனப்படுகின்ற இரத்தினங்களின் ஒப்பற்ற கோவையிலாகிய நீண்ட அலங்கரிக்கின்ற மாலையையுடையது: மலைபோல நிற்பது; (எ - று.)

மீண்டன-கழிந்தன: மேலன - எதிர்காலத்துவருவன: இவ்வி ரண்டையும் கூறவே, இப்போது இருப்பனவும் அடங்கும். ஆண்டு முதலியன, அவற்றிற்குரிய தேவதைகளையாம். தேவதாமயம் அத்தேரென்க. ஆண்டு முதலியவற்றை ஒப்புமையாகவுடைய தட்டுகளையுடையது என்று முதலிரண்டடிகட்கு ஒரு சாரார் பொருள் கூறினர். பி-ம்:—[1]நாளுமிடு. [2]யாவும்,என்று. [3]வல்வன. [4]விடடுவிரி, மீட்டுவிரி, விடடுவிசி. [5]பொருவு. [6]நின்றுலவு, நின்றுளதோர். (3649)

10. மாதிர மனைத்தையு [1]மணிச்சுவர்க ளாகக்
கோதற வகுத்தது மழைக்குழுவை யெல்லாம்
மீதுறு பதாகையென வீசியது மெய்ம்மைப்
[2]பூதமவை [3]யைந்தின்வலி யிற்பொலிவ தம்மா.

(இ-ள்.) (அத்தேர்),—திக்குக்கள் எல்லாவற்றையும் அழகிய சுவர்களாகக் குற்றமற வகுத்தது; மேகத்தின் கூட்டத்தையெல்லாம் மேலே பொருந்திய கொடியாகப் பறக்கப்பெறுவது: அழியாத பஞ்சபூதங்களின் வலிமைகொண்டு பொலிவது; (எ - று.)— அம்மா-வியப்பிடைச்சொல. பி - ம்:—[1]மணிச்சுவர்ஙமானக். [2]பூதமிவை. [3]ஐந்தும். (3650)

11. [1]மரத்தொடு [2]மருந்துலகில் யாவுமுள வாரித்
தரத்தொடு [3]தொடுத்தகொடி தங்கியது சங்கக்
கரத்தொடு தொடுத்தகடன் மீதுதிமிர் காலத்து
உரத்தொடு கடுத்தகத மோதையது நேதை.

(இ - ள்.) (அத்தேர்),—மரத்துடனே பூண்டு ஆகிய உலகி லுள்ளஎல்லா ஓரறிவுயிர்களையும் வாரிச் சிறப்பாகத்தொடுத்த கொடியையுடையது: தொகுதியான அலையோடு பொருந்திய சமுத் திரம மேலேபொங்கிவருகின்ற (ஊழிக்) காலத்து வலிமையோடு விரைந்துதோன்றுகின்ற உக்கிரமான ஓசை, அந்தத் தேரினின்று தோன்றுகின்ற ஓசை; (எ - று.)

யுகாந்தகாலத்திற் கடல் பொங்கியழிக்கும்போது உண்டாகும் ஓசைபோன்ற பேரோசை, அந்தத்தேரினின்று தோன்றுமென்க. கதழ்தல்-உக்கிரமாதல். பி-ம்:—[1]வரத்தொடு. [2]தொடுக்கு. [3]கொடுத்த. (3651)

12. பண்டரிக ணுந்தியயன் வந்தபழ மூத்தைப்
புண்டரிக மொட்டனைய மொட்டினது பூகம்
[1]உண்டன வயிற்றிடை யொடுக்கி [2]யுறைகின்ற
[3]அண்டசன் மணிச்சயன [4]மொப்ப தகலத்தின்.

(இ-ள்.) அத்தேர்,—முன்பு திருமாலினுடைய நாபியில் பிரமன் வருதற்குக் காரணமான மிகப்பழமையான தாமரை மொட்டை யொத்த மொட்டையுடையது: உயிர்களாகிய உண்டவற்றையெல்லாம் வயிற்றில் ஒடுக்கி வாழ்கின்ற லோககர்த்தாவாகிய திருமாலின் அழகியசயனமாகிய ஆதிசேஷனை அகலத்தில் ஒத்திருப்பது; (எ-று.)—[3]அண்டசமணிச்சயனம் என்ற பாடத்திற்கு, அண்டசம்-முட்டையிற்பிறந்ததான, மணிச்சயனம் என்க. பி-ம்:—[1]உண்டவை. [2]உமிழ்கின்றோன், உமிழ்கிற்போன். [3]அண்டவமணிச், அண்டசனியற், அண்டசனியச் [4]ஒத்தது. (3652)

13. வேதமொரு நாலுநிறை வேள்விகளும் வெவ்வேறு
ஓதமவை [1]யேழுமலை யேழுமுல கேழும்
பூதமவை யைந்துமெரி மூன்றுநனி பொய்தீர்
[2]மாதவமு மாவுதியு மைம்புலனு மற்றும்.

14. அருங்கரண [3]மைந்துசுட ரைந்து [4]திசைநாலும்
[5]ஒருங்கரண மூன்றுமுழல் வாயுவொரு பத்தும்
பெரும்பகலு [6]நீளிரவு மென்றிவை பிணிக்கும்
போரும்பரிக [7]ளாகநனி பூண்டது [8]பொலந்தேர்.

(இ-ள்.) (14) (அந்த) அழகியதேர்,—(13) ஒருநான்கு வேதங்களும் நிறைந்த வேள்விகளும் வெவ்வேறான ஏழுசமுத்திரங்களும் ஏழுமலைகளும் உலகேழும் ஐந்துபூதங்களும் மூன்றுஅக்கினிகளும் மிகவும் பொய்ம்மை தீர்ந்த மாதவமும் ஆவுதியும் ஐம்புலனும், மற்றும் (14) அருமையான ஐந்துஇந்திரியங்களும் பஞ்சாக்கினிகளும் நான்குதிசைகளும் ஒருசேரவமைந்தமூன்றுமதிலும் சஞ்சரிக்கின்ற தசவாயுக்களும் பெரும்பகலும் நீண்டஇரவும் என்ற இவற்றையெல்லாம் (தேரிற்) பூட்டுகின்ற பொரும்பரிகளாக மிகவும் பூண்டது; (எ-று.)

அழிந்திடாமலிருத்தல் மிக்கவலிமை அளவிடமுடியாமல் ஓங்கியிருத்தல் சலிப்பில்லாமல் வேகமாகச்சஞ்சரித்தல் முதலிய தன்மைகளால் அத்தேரிற் பிணித்துள்ள பரிகட்கு வேதம்முதலியன உவமையாகுமென்பது குறித்து, வேதம்முதலியவற்றைப் பரிகளாகப்பூண்டது அத்தேர் என்றார். அக்கினிமூன்று-காருகபத்

தியம் ஆகவநீயம் தட்சிணாக்கினியென்பன. பஞ்சாக்கினிகள் - நான்கு திசையில் நான்கு அக்கினியும் மேலே சூரியனும் என்பவை மும்மதில்-பொன் வெள்ளி இரும்பு என்ற இவற்றாலானவை. தச வாயுக்கள்—பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், இருகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்பன. பி - ம்:—[1] உலகேழுமலையேழும். [2] மாதிரமுமாகுதியும், மாதிரமுமாவுதியும். [3] அஞ்சுசுடரஞ்சு. [4] மறை. [5] பொருங்கரணம், ஒருங்குகுணம். [6] நள்ளிரவும். [7] ஆகி. [8] பொலன்றேர். (3653, 3654)

15.—தேவர்கள் அத்தேரை வேண்டுதல்.

வந்ததனை வானவர் வணங்கி வலியோய்நீ
எந்தைதர வந்தனை யெமக்குதவு இற்பாய்
[1] தந்தருள்வை வென்றியென [2] நின்று [3] தகைமென்பூச்
சிந்தினர்கள் மாதலி கடாவிநனி சென்றான்.

(இ - ள்.) வந்த அத்தேரைத் தேவர்கள் வணங்கி, 'வலிமையுடையோனே! நீ எமது தலைவனாகிய இந்திரனது கட்டளையால் வந்துள்ளாய்: (ஆகவே), எமக்கு உதவுவாய்: (ஸ்ரீராமபிரானுக்கு) வெற்றியைத் தந்து எங்கட்கு அருள்புரிவாய்' என்று (எதிரே) நின்று, அழகிய மெல்லியபூவைச் சிந்தினார்கள்; மாதலி தேரைத் தூண்டி நன்கு விரைந்து சென்றான்; (எ - று.)

தெய்வத்தன்மையுள்ள தோாதலால், தேவர்கள் அதன் அதிதேவதையை நோக்கி இங்ஙன் வேண்டினார். பி - ம்:—[1] தந்துதவு, தந்துருவ. [2] நின்ற. [3] தவ, தலம். இச்செய்யுள் 'மாதலி' (7) என்ற பாடலுக்குப் பின்னிருக்க இதன்பின் "குலக்கிரி" (8) என்ற பாடல் சிலபிரதிகளில் உள்ளது. (3655)

16.—தேர் ஸ்ரீராமனிடத்து விரைந்துவருதல்.

வினைப்பகை [1] விசைக்கொடி [2] விசும்புருவி மான
மனத்தின்விசை பெற்றுளது வந்ததென வாரோடு
அனைத்துலக முந்தொழ வடைந்த தமனன்பால்
நினைப்புமிடை பிற்பட [3] நிமிர்ந்தது நெடுந்தேர்.

(இ - ள்.) (அந்த) நெடுந்தேரானது,—(மாய) வினைக்குப் பகையான மெய்ஞ்ஞானத்தின் விசையுடனே பெருமைபெற்ற மனத்தின் விசையையும் பெற்றுளதாகி, விசும்பை ஊடுருவிக்கொண்டு வந்ததென்று வானிலுள்ளாரோடு அனைத்துலகத்திலிருப்பவரும் தொழாநிற்கையில், எண்ணமும் இடைந்து பிற்படக் குற்றமற்றவனான ஸ்ரீராமனிடத்துவந்துசேர்ந்ததாய் நிமிர்ந்துநின்றது; (எ - று.)—இச்செய்யுள் சிலபிரதிகளில்லை. [2] விசும்புறு விமானம் என்ற பாடத்துக்கு—பகையைக் களையும் வினையிலே விசைகொண்டு விசும்புறுகின்ற விமானத்தின் விசையையும், மனத்தின் விசையையும் பெற்றுள்ளதாய் என்ப. பி - ம்:—[1] மிசை. [3] நிமிர்ந்துயர், (3656)

17.—அத்தேரினை ஸ்ரீராமபிரான் கொண்டாடுதல்.

அலரிதனி [1]யாழிபுனை [2]தேரிதெனி லன்றால்
உலகின்முடி விற்[3]பெரிய வூழொளி யிதன்றால்
நிலைகொ ணெடு மேருகிரி யன்றுநெடி தம்மா
[4]தலைவரொரு [5]மூவர்தனி மான[6]மிது தானோ

(இ - ள்.) சூரியனுடைய ஒற்றைச் சக்கரம்பூண்ட தேர் (போன்றது) இது என்றால், (ஒற்றைச்சக்கரமுடைத்தன்றாதலால் இதனை) அவ்வாறு சொல்லுதல் பொருந்தாது: (இப்போது உலகம் முடிவுறுங்காலமன்றாதலால்) உலகம் முடிவுறுங்காலத்துப் பெரிதாகத்தோன்றுகின்ற ஊழித்தீயினொளியும் இது அன்று; (இது,— ஓரிடத்து நிலைத்தலின்றிச் சஞ்சரித்தலால்), நிலைத்தலைக் கொண்ட நெடியமேருகிரியும் அன்று: இது நெடியதாகி ஒப்பற்ற தலைவர்களான திரிமூர்த்திகளின் தனியான [பெருமைபெற்ற] விமானமோ? (எ - று.)

ஒற்றைச்சக்கர மின்மையால் சூரியன் தேரன்று: நிலையாது சஞ்சரித்தலோடு, (மேருமலையினும்) உயர்ந்திருத்தலால், மேரு அன்று: ஒருகால் திரிமூர்த்திகளின் விமானமாயிருக்கலாமோ? வெப்பமின்றியிருத்தலால், இதனொளிக்கு ஊழித்தீயொளியும் ஒப்பாகாதுஎன்று வியந்துகூறினான் ஸ்ரீராமனென்க. **அபநுதியணி** யோடு **தற்குறிப்பேற்றமும்** கலந்துவந்தது. மானம்=விமானம்: முதற்குறை. பி - ம்:—[1]ஆழிமிகு. [2]தேரிதனினன்றால். [3]பெரியவோமொழியினன்றால், பெரியவூழொளியதன்றால். [4]தலைவரொடு. [5]மூவர்தனின். [6]அதுதானே. (3657)

18.—ஸ்ரீராமன் மாதலியை அத்தேர்கொணர்ந்து வந்தது குறித்து வினவ, அவன் கூறத்தொடங்குதல்.

என்னையிது நம்மையிடை யெய்தலென வெண்ணா
[1]மன்னவர்த மன்னன்மகன் மாதலியை வந்தாய்
பொன்னினொளிர் தேரிது[2]கொ டார்புகல வென்றான்
அன்னவனு மன்னதனை யாகவுரை செய்தான்.

(இ-ள்.) தசரதசக்கரவர்த்திகுமாரனான ஸ்ரீராமன் 'இது, நம்மிடத்து வருவது என்னை? என்று நினைத்து, மாதலியைநோக்கி, 'பொன்னொலொளிர்கின்ற இந்தத்தேரைக்கொண்டு யார்சொல்ல வந்தாய்?' என்று வினவினான்: அந்தமாதலியும் அவ்விஷயத்தைப் பொருந்த உரைசெய்தான்; (எ - று.)—கீழைச்செய்யுள் தொடங்கி இச்செய்யுளின் முதலடிவரையில் ஸ்ரீராமன் எண்ணியதைத் தெரிவிக்கும். பி-ம்:—[1]மன்னவர்கள். [2]கொடார்புகறி. (3658)

19.—இனி ஐந்துகவிகள்-ஒருதொடர்: மாதலிகூறிய விடை.

முப்புர மெரித்தவனு நான்முகனு முன்னாள்
அப்பக லியற்றியுள தாயிர [1]மருக்கர்க்கு
ஒப்புடைய [2]வூழிதிரி [3]காலு[4]முலை வில்லார்
இப்பொருவில் தேர்[5]வருவ [6]திந்திரன தெந்தாய்.

(இ - ள்.) எனது தாய்போன்றவனே! திரிபுரதகனஞ்செய்த சிவபிரானும் நான்குமுக முடையவனான பிரமதேவனும் முன்னாள் (உலகத்தைப் படைத்த) அந்தக்காலத்தில் இயற்றியது: ஆயிரஞ் சூரியர்க்கு ஒப்பாகவுள்ளது: கற்பம்பெயர்கின்ற காலத்திலும் அழிதலில்லாததாகி வருவதான இந்த ஒப்பற்றதேர், இந்திரனுடையதாகும்: (எ - று.)—'எந்தாய்' என்பதற்கு-எனது தந்தைபோன்றவனே! எனினுமாம்: பி-ம்:—[1] அருக்கர். [2] ஆழி. [3] நாளும். [4] உலேகில்லாது, உலேகல்லா. [5] கொணர்வது. [6] இந்திரனில். (3659)

20. அண்டமிது போல்வன [1]வளப்பில வடுக்கிக்
கொண்டுபெய ருங்[2]குறுகு நீளு[3]மவை கோளுற்று
உண்டவன் வயிற்றினையு மொக்கு [4]முவமைக்குப்
புண்டரிக நின்சர மெனக்கடிது [5]போமால்.

(இ - ள்.) இதுபோல்வனவான அண்டங்கள் அளப்பில்லாதவற்றை(த் தன்மீது) அடுக்கிக்கொண்டு பெயரவல்லது: அவ்வண்டங்களைத் தன்னிடத்துக்கொண்டே குறுகவும் நீளவும் வல்லது: உவமை கூறுமிடத்து அங்ஙனம் அண்டங்களை(த் தன்னிடத்துக் கொண்டு அவற்றை) உண்டவனான திருமாலின் வயிற்றையும் ஒக்கும்: தாமரை மலர்போன்ற(கண் கால்முதலிய) உறுப்புக்களை உடையோனே! உன்னுடைய சரம்போலக்கடிதுபோம்; (எ-று.)—இதுவும் அடுத்த கவியும் "நீருமுளவே" (22) என்றதன்பின் சில பிரதியில் உள்ளன. உவமைக்கு என்பதை ஈற்றடியிலும் சேர்க்கலாம். பி - ம்:—[1] அளப்பிலவடுக்கில், அலப்பிலடுகிற்கு. [2] குறுகி. [3] இவை. [4] உவமிக்கில். [5] போதும், போகில், போதில். (3660)

21. கண்ணுமன முங்[1]கடிய காலு[2]மிவை கண்டால்
உண்ணும்[3]விசை யாலுணர்வு பிற்படர வோடும்
விண்ணுநில னும்[4]மென விசேடமில தந்தே
[5]எண்ணுநெடு நீரினு நெருப்பிடையு மெந்தாய்.

(இ - ள்.) எந்தாய்! கண் மனம் கடியகாற்று என்ற இவைகளைக் கண்டால்,(இத்தேர் தான்கொண்ட)விசையினால்(அவற்றை) உண்டுவிடும் [வெல்லும்]: (அன்றியும்), உணர்ச்சியும் பிற்படரும்படி (தான் முந்துற்று) ஓடும்; (இத்தேர் தான் ஓடுதற்கு) வானமும் பூமியும் என்று விசேஷம் இல்லை: (தேர் செல்லமுடியாதென்று) எண்ணப்படுகின்ற நெடியநீரிலும் நெருப்பினிடையும் (இத்தேரின் ஓட்டம்) அவ்வாறனதே; (எ-று.)

கண் மனம் முதலிய விரைந்துசெல்லும்பொருளினும் விரைவையுடைய இத்தேர், விண் மண் நெருப்பு நீர்என்ற எந்த இடத்தும் வேறுபாடுஇன்றி ஒருதன்மையதாக ஓடுமென்றவாறு. பி-ம்:—[1] நெடிய. [2] இடை. [3] இசையால். [4] விகடசேட னிலத்தே. [5] எண்ணி.

22. நீரு[1]முள வேயவையொ ரேழுநிமிர் இற்கும்
பாரு[2]முள வேயதி னிரட்டியவை பண்பிற்

பேரு[3]மொரு காலையொரு காலுமிடை பேராத்
தேரு[4]முள தேயிது வலாலுலகு செய்தோய்.

(இ-ள்.) உலகையெல்லாம் படைத்த கடவுளே! கடல்களும் உள்ளனவன்றோ, அவையேழும்,— அந்தக்கடலைக் காட்டிலும் இரட்டியாய் [பத்தனாகி] நிமிர்கின்ற உலகமும் உள்ளனவன்றோ, அவையும்,—(தமது) தன்மையினின்றும் ஒருகாலத்தில் மாறுபடும்: ஒருகாலும் (தன்பண்பினின்று) நிலைமைமாறுபடாத தேரும் இதுவலலால் வேறு உளதோ? (எ-று.) [3]ஒரு காலையிருகாலையிடை பேரா என்றபாடத்திற்கு-ஒருக்ஷணகாலத்தில் இருமுறை பேர்ந்து சூழ்ந்துவருமென்று பொருள். பி-ம்:—[1]உளவெய்தினினீரிலெழுகிற்கும், உளதேயிதனினீரிலெழுகிற்கும். [2]உளதேயதனில், உளதேயிதின். [3]உளவேயிதுவலாது, இதுவேயிதுவலாது. (3662)

23. தேவரு முனித்தலைவ ருஞ்சிவனு [1]முன்னாள்
மூவுல களித்த[2]வவனும்[3]முதல்வ முன்னின்று
ஏவினர் சுரர்க்கிறைவ [4]னீந்துளவி தென்றான்
மாவின்மன மொப்பவுணர் மாதலி [5]வலித்தான்.

(இ-ள்.) முதல்வனே! தேவரும் முனித்தலைவரும் சிவனும் முன்னாள் மூவுலகு அளித்த அந்தப்பிரமனும் முன்னின்று ஏவினார்: (அவர்களின் கட்டளைப்படியே) தேவர்கட்குத்தலைவனான இந்திரன் ஈந்துள்ளது இத்தேர் என்று குதிரைகளின்மனத்தைத் தகுதியாக உணர்ந்த மாதலி திடமாகக்கூறினான்; (எ-று.) முனித்தலைவரும் பிரமனும் ஏவினாரென்பதை இங்கு அநுவாதமாகக் கூறியதனால், முன் அரனும் தேவரும் கூறினாரென்ற விடத்து இவரும் கூறினாரென்று கொள்ளவேணும். பி-ம்:—[1]மேமனாள். [2]முதலும். [3]முடுகி, முடுக. [4]ஈந்துளவன், ஈந்துளவது. [5]வலத்தால். (3663)

24.—இராமன் 'இத்தேர் அரக்கர்மாயையால் தோன்றியதோ?' என்று ஐயுற, தேர்க்குதிரைகள் அந்த ஐயத்தைப போக்குதல்.

ஐய[1]னிது கேட்[2]டிக லரக்கரகள மாயச்
செய்கைகொ லெனச்சிறி து சிந்தையில் நினைந்தான்
[3]மெய்யவ னுரைத்தமொழி வேண்டியிடை பூண்ட
மொய்[4]யுளை வயப்பரி மொழிந்த முதுவேதம்.

(இ-ள்.) ஸ்ரீராமன் இதனைக்கேட்டு, 'வலிய இராக்கதரின் பரர்த மாயச்செய்கையோ?' என்று சிறிது மனத்திற (சந்தேகங்கொண்டு) சிந்தித்தான்: அத்தேரினிடத்துப் பூண்ட நெருங்கிய பிடரிமயிரையுடைய வலிமை பொருந்திய குதிரைகள் பழமையான வேதவாக்கால் அந்த மாதலி யுரைத்தது மெய்யென்று (ஸ்ரீராமனே) வேண்டற்பாடுதோன்ற உரைத்தன; (எ-று.)—பி-ம்:—[1]அது. [2]அதவ்வரக்கமகன். [3]மெய்தவன், மெய்யுற. [4]அரி. (3664)

25.—தெளிந்த ஸ்ரீராமன் மாதலியைநோக்கி, 'உன்பேரைக் கூறுக' என, அவன் தன்பெயரைக் கூறுதல்.

இன்னையினி யையமென வெண்ணிய விராமன்
[1]நல்லவனை[2]நீயுனது நாம[3]தனில் லென்ன

[4]வல்லிதனை யூர்வதொரு மாதலி யெனப்பேர்
சொல்லுவ ரெனத் [5]தொழுது நெஞ்சினொடு சொன்னான்.

(இ - ள்.) இனி ஐயமில்லையென்று கருதின ஸ்ரீராமன்,—நற்குணமுடையவனான சாரதியைநோக்கி, 'நீ உனதுபேரைக் கூறுக' என்று வினவ, (அவன்), 'வலிய இந்தத்தேரை ஊர்தலையுடைய ஒருமாதலி யென்று (என்) பேரைச்சொல்லுவார்கள்' என்று தொழுது மனப்பூர்வமாக விடைகூறினான்; (எ - று.)—பி - ம்:— [1]நல்லவினை. [2]நீயெவனையென்ன, நீயெனையுநல்க. [3]நவில்கிற்பான், நவில்கிற்பார். [4]வல்லனை, வல்லவனை. [5]தொழுதநெஞ்சினிவை, தொழுது நெஞ்சினிலை. (3665)

26.—ஸ்ரீராமன் அநுமானையும் இலக்குமணனையும் 'உம்கருத்துஎன்?' என, அவர் தாம் அத்தேரைப்பற்றி ஐயுறவு கொள்ளாமையைத் தெரிவித்தல்.

மாருதியை நோக்கியிள வாளரியை நோக்கி
நீர்கருது கின்றதை நிகழ்த்துமென நின்றான்
[1]ஆரியனை வணங்கியவ ரையமிலை [2]யையர்
தேரிது புரந்தரன தென்றனர் [3]தெளிந்தார்.

(இ - ள்.) ஆரியனான ஸ்ரீராமன், மாருதியைநோக்கியும் இளைய கொடுஞ்சிங்கம்போன்ற இலட்சுமணனைநோக்கியும் 'நீர் கருதுவதைச் சொல்லுங்கள்' என நின்றானாக, அவரும் (ஸ்ரீராமனை) வணங்கி, 'ஐயனே! ஐயம் இல்லை: இத்தேர் (அரக்கன் விடுத்த மாயத்தேரன்று:) இந்திரனுடையதே' என்று மனந்தெளிந்தவராய்க் கூறினார்; (எ - று.) பி - ம்:—[1]ஆரியனையேவணங்கியையமிலை. [2]மெய்யே. [3]தெரிந்தான். (3666)

27.—ஸ்ரீராமன் அத்தேரில் ஏறியிருத்தல்.

விழுந்துபுரள் தீவினை [1]நிலத்தொடு [2]வெதும்பத்
தொழுந்தகைய நல்வினை [3]களிப்பினொடு துள்ள
அழுந்துதுய ரத்தமர [4]ரந்தணர்கை முந்துற்று
எழுந்து[5]தலை யேறவினி தேறின னிராமன்.

(இ - ள்.) தீவினை விழுந்து (தான்) புரள்கின்ற மண்ணோடு (மண்ணாகி) வாடவும், தொழுந்தன்மையதான நல்வினை மகிழ்ச்சியொடு துள்ளவும், (இதுவரையில்) துயரத்து அழுந்தியிருந்தவரான அமரர் அந்தணர் என்ற இவர்களின்கை முற்பட்டெழுந்து தலைமீது ஏறவும் இராமன் இனிதாக(த் தேரின்மீது) ஏறினான்; (எ - று.) அழுந்து...தலையேற என்பதற்கு, துயரத்தழுந்திய தேவர்முனிவர் பக்கம் முன்னேறியோங்கித் தலைமைமிகவும் என்று உரைக்கலாம். பி-ம்:—[1]குலத்தொடும். [2]விலங்கத். [3]கணத்தினொடு. [4]அந்தணர்கள். [5]கரையேற. (3667)

ஸ்ரீவான்மீகி ராமாயணத்தில் வேலேற்றபடலச் சரிதத்திற்குப் பின், இரத மேறுவதைப்பற்றிச் சொல்லிய சரிதை வருமாறு:-பின்பு இலக்குமணன் கூறிய மொழியைச் செவியேற்றதும் ஸ்ரீராமன் **யுத்த சன்னத்தனாக, அதற்குள் இராவணன் மற்றொரிரதத்தின்**

மீதுஏறி, ஸ்ரீராமன்மேல் எதிர்த்துவந்து கணைகளைமழைபோற் பொழிந்து ஸ்ரீராமனை வருத்தினன். ஸ்ரீராமனும் அவ்வாறே கடுங் கணைகளால் இராவணனை வருத்தினன்: அப்போது தேவர்களும் கந்தர்வர்களும் தானவர்களும் இராவணன்தேரிலிருந்தும் ஸ்ரீராமன் மண்மீதிருந்தும் பொருவது ஒத்ததன்றென்று சொல்லிக்கொள்ள, தேவேந்திரன் ஆலோசித்து மாதலியை யழைத்துத் தன்தேரை ஸ்ரீராமனுக்குக் கொண்டுபோகும்படிகட்டளையிட்டான். மாதலியும் தேவேந்திரனது தேரையோட்டிக்கொண்டு விண்ணினின்று இறங்கி ஸ்ரீராமனிடம் வந்து. உளவுகோலைக் கையிற்கொண்டு அஞ்சலிசெய்து 'காகுத்ஸ்தனே! நீ பகைவரையடக்கும் வலிமை யுள்ளவன்: உனக்கு வெற்றி யுண்டாகும் பொருட்டுத் தேவேந்திரன் இந்தத் தேரை யனுப்பியுள்ளான்: தநுசையும், அக்கினியை யொத்த கவசத்தையும், சூரியனை யொத்த பாணங்களையும், கூர்மையையுடைய இந்தச் சக்தியையும் கொடுத்திருக்கிறான்: இவற்றை யெல்லாம் கைக்கொண்டு இந்த இரதத்திலேறிப் பகைவனான இராவணனை வதிப்பாய்' என்றனன். அதுகேட்ட ஸ்ரீராமன் அந்தத் தெய்வத்தேரை வலம்வந்து வணங்கி அந்தத்தேரிலேறின னென்பது.

இராமன் தேரேறுபடலம் முற்றிற்று.

---

36 - ஆவது இராவணன் வதைப்படலம்.

ஸ்ரீராமன் இராவணனை வதித்ததைக் கூறும் படலமென்பது, பொருள்.

ஸ்ரீராமன் தேவர்வாழ்த்தத் தேரேறிச்செல்கையில் இராவணன் தேரேறி ஸ்ரீராமனைநோக்கிவராநின்றானாக, அப்போது மகோதரன் இராவணனிடத்து அநுமதிபெற்று லக்ஷுமணனோடு பொரச்சென்று இடையே இராமனைக் கண்டு பொருது மடிந்திட, ஸ்ரீராமபிரானைநோக்கிப் புறப்பட்ட அவ்விராவணன் பலதீமித்தங் கண்டும் மனவுறுதிகுன்றாது ஸ்ரீராமனைக்கிட்ட, இருவர்க்கும் பெரும்போர் நிகழ்ந்தது; அந்தக்கடும்போரில் இராவணன் தேருடன் அந்தரத்திற் சென்றுபொர, ஸ்ரீராமனும் அவ்வாறு செய்யப் பின் இருவர்தேரும் வானிலும் மண்ணிலும் திரிய, இருவரும் பல பல அஸ்திரங்களை விடுத்துப் பொரலாயினர்; பின் அப்போரில் இராவணன் சிறப்புவாய்ந்த சூலத்தைவிடுக்க, அதனை ஸ்ரீராமன் உங்காரத்தாற் பொடியாக்கினன். அதுகண்ட இராவணன் இவன் கடவுளின் அவதாரம்போலு மென்றுகருதி, யாராயினுமாகுக பொருவேனென்று பொர, அங்ஙன் பொருகையில் ஸ்ரீராமன் இராவணனுடைய தலையையறுக்க அறுக்க அத்தலைமுளைப்பதாயிற்று: அப்போது ஸ்ரீராமன் அவனுடல்முழுவதையும் தனது பாணங்களால் தொளைத்து மூர்ச்சிக்கச்செய்ய, அதுகண்ட இராவணசாரதி இரதத்தை விலகிச் செலுத்தினனாக, ஸ்ரீராமன் 'மூர்ச்சித்தவன் மீது படைவிடுதல் கூடாது' என்ன வாளாவிருக்க, 'இதுவே இரா

வணைக் கொல்லத்தக்க சமயம்' என்று தான் ஓட்டுந்தேரை இராவணன்தேரைநோக்கி மாதலிசெலுத்த, மாதலியின்சொல்லை ஸ்ரீராமன் மறுத்துக்கூறினன்: அப்பால் இராவணன் களைநீங்கித் தன் தேர்ப்பாகனைக் கடிய, பாகன் நிகழ்ந்ததுகூறித் தன் செயலைப் பொறுக்குமாறுவேண்ட, பின்பு இராவணன் தன் தேரை இராமனைநோக்கிவிடச்சொல்லி, அப்பிரானோடு முன்னிலும் மிகக் கடுமையாகப் பொர, ஸ்ரீராமன் அவன் படைக்கலங்களைச் சிதைத்துப் பிரமாஸ்திரத்தை விடுத்து அவனையும் மாய்த்தனன். அவன் இறந்த பின் அவ்விராவணனைக் கிட்டி 'அவனது முதுகில் தழும்பிருத்தல் கண்டு, ஸ்ரீராமன் இவனைவென்றது எனக்குப் பழியே விளைக்கும்' என்று மிகவருந்த, வீபீடணன் உண்மைதெரிவித்துத் தெளிவிக்க, பிறகு ஸ்ரீராமன் 'வயிரத்தைவிட்டு இராவணனுக்கு ஈமக்கடன் நடத்துக' என்று விபீடணனுக்குக் கட்டளையிட்டனன். அக்கட்டளையைச் சிரமேற்கொண்ட விபீடணனும் இராவணன்மீது விழுந்து துயர்மிகப் புலம்பிச் சாம்பவான்தேற்ற ஒருவாறுதேறி எழுந்தனன். பிறகு, இராவணனது மனைவிமார் வந்து அவனைத் தழுவிப் புலம்புகையில், மண்டோதரி அவ்விராவண னுடலைத்தழுவிப் புலம்பித் துயரத்தால் உயிரொழியப்பெற்றாள். அதுகண்டு யாவரும் அவளைக் கொண்டாடினர். அப்பால் விபீடணன் இராவணனுக்கும் மண்டோதரிக்கும் ஈமக்கடனைச்செய்து மற்றும் இறந்த அரக்கர்க்கெல்லாம் செய்யவேண்டிய அந்திமச் சடங்குகளை முறைப்படிசெய்து இராமபிரானைக் கிட்டித் துயர் தோன்ற நிற்க, அப்பிரான் அவனைத் தேற்றினனென்பது, இப்படலத்துக் கூறும் பொருள்.

வேறு.

1.—தேரின்மீதேறிய இராமனைத் தேவர்வாழ்த்துதல்.

ஆழியந் தடந்தேர் வீர னேறலு [1]மாசி கூறிப்
பூழியிற் சுரித்த தன்மை நோக்கிய புலவர் [2]போத
ஊழிவெங் காற்றின் [3]வெய்ய கலுழனை [4]யொன்றுஞ் சொல்லார்
வாழிய வனுமன் [5]தோளை யேத்தினர் மலர்கள் தூவி.

(இ - ள்.) வீரனான ஸ்ரீராமன் அழகிய பெரியதேரில் ஏறுதலும், (அத்தேரின்) சக்கரம் புழுதியிலே புதைகின்றதன்மையை நோக்கிய தேவர்கள் வாழ்த்துக்கூறி, யுகாந்தகாலத்துத் தோன்றுங் கொடிய காற்றுப்போல மிகவும் கொடுமைவாய்ந்த கருடனை உவமையாகச் சிறிதுஞ் சொல்லாதவர்களாய் அநுமான்தோளை மலர்கள் தூவித் துதித்தார்கள்; (எ - று.)

ஆழி-சக்கரம், போத வெய்ய என இயையும். ஸ்ரீராமன் தேரேறியதும், தேவர்கள் அப்பிரானைவாழ்த்தி, இதுவரையும் இவ்வவதாரத்தில் ஸ்ரீராமபிரானை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு உதவிய அநுமான்தோளை மலர்கள் தூவி ஏத்தினரென்க. வாழிய-முன்னிலையசை. பி-ம்:—[1] அமலச்சில்லி, அலங்கற்சில்லி. [2] எல்லாம்,

போல்வார். [3]அன்ன. [4]உவமை. [5]தானென்று...மலருந்தூவி, தோளென்றேத்தினர் மலருந்தூவி. (3668)

2.—தேவர்களாரவாரிக்க, இராமபிரானேறியதேர் செல்லுதல்.

எழுகதேர் சுமக்க [1]வெல்லோம் வலியும்புக் கின்றே [2]பொன்றி
விழுக[3]போ ரரக்கன் வெல்க வேந்தர்க்கு வேந்தன் விம்மி
[4]அழுகபோ [5]ரரக்கி மாரென் றார்த்தன ரமர ராழி
முழுகிமீ தெழுந்த தென்னச் சென்றது மூரித் திண்டேர்.

(இ - ள்) '(இத்)தேர் எழுக்கடவது: (அன்றியும்), எல்லோ முடைய வலிமையும் பெறக் கடவது: (இத்தேர்) புகுதலால் இன்றே போர்செய்யும் இராவணன் இறந்துபோய்(ப் போர்க்களத்தில்) வீழக்கடவன்: வேந்தர்க்கு வேந்தன் வெல்லக்கடவன்; போர்செய்யும் அரக்கருடைய மனைவிமார் விம்மியழக்கடவர்' என்று அமரர் ஆரவாரித்தனர்: வலியஉறுதியான(அத்)தேர், சக்கரம் (பூமியில்) முழுகி மேலெழுந்தாபோற் சென்றது; (எ-று.)

அமரர்களின் ஆர்ப்பரவத்தினிடையே ஸ்ரீராமபிரானேறியதேர் சென்றதை வருணித்தவாறு: இனி ஈற்றடியால், தேரின் மேற்பகுதி பாரமாயிருத்தலால், அத்தேரின் சக்கரம் புதைந்தாற்போலப் பூமியிற்படிந்து சென்றதென்றுமாம். பி - ம்:—[1]எல்லா வலியும். [2]ஒன்றி. [3]போயரக்கன், போரரக்கர். [4]எழுக. [5]அரக்கிமார்களென்றனர். (3669)

3.—இராவணன் தன்தேரை ஸ்ரீராமனிருக்குமிடத்துவிடுமாறு தன்சாரதிக்குக் கூறுதல்.

அன்னது கண்ணிற் கண்ட வரக்கனு மமர ரீந்தார்
மன்னெடுந் தேரென் றுன்னி [1]வாய்மடித் தெயிறு தின்றான்
பின்னது [2]கிடக்க வென்றுத் தன்னுடைப் பெருந்திண் டேரை
[3]மின்னிவர் வரிவிற் செங்கை யிராமன்மேல் விடுதி யென்றான்.

(இ - ள்.) அவ்வாறு இராமன்தேரின்மீது வருவதைக்கண்ணிற்கண்ட இராவணனும், 'நிலைபெற்ற நெடியதேரை அமரர் கொடுத்தார்கள்' என்பதை நினைந்து (அவர்கள்மீது சினத்தினால்) வாயைமடித்துப் பல்லினாற் கடித்தான்; பிறகு அதுகிடக்கட்டுமென்று சொல்லித் தன்னுடைய பெரிய வலியதேரை 'ஒளியை விடுகின்ற கட்டமைந்த வில்லையேந்திய செவ்விய கையையுடைய இராமபிரானிருக்குமிடத்து விடுவாய்' என்று (தன்பாகனுக்குக்) கட்டளையிட்டான்; (எ - று.)

இவ்வாறு மாற்றாரான தேவர்களிடத்துக் காணுதகை இப்போது காணும்படி நேரிட்டதென்பார் 'அன்னதுகண்ணிற்கண்ட வரக்கன்' என்றார். 'இதற்குமுன்பெல்லாம் நமக்குமுன்னே ஒடுங்கிக்கிடந்த இத்தேவர்கள் இப்போது நமக்குமாறாக, அற்பமானுடன் வென்றுவிடுவானென்றல்லவா அச்சம்நீங்கி இவ்வாறெல்லாஞ் செய்கிறார்கள்! இந்தப்பகைவனை வென்றதும் இவர்களைச்

சும்மா விடுவேனே? அதஞ்செய்தே தீர்வேன்' என்று இராவணன் கருதியமை 'பின்னது கிடக்க' என்ற சொற்றொடரில்தோன்றும். அன்னது-இராமனேறி வருந்தேரை யெனினுமாம். பி - ம்:—[1]வாய் கடித்து. [2]முடிப்பன். [3]மின்னகு. (3670)

4.—நிலைகெட்டோடிய வானரர்கள் அச்சம்நீங்கிப் போர்க்களஞ் சேர்ந்து பொருதல்.

[1]இரிந்தவான் கவிக ளெல்லா மிமையவ ரிரத மீந்தார்
அரிந்தமன் வெல்லு மென்றற் கையுற வில்லென் [2]றஞ்சார்
[3]திரிந்தனர் மரமுங் கல்லுஞ் சிந்தினர் [4]திசையோ டண்டம்
பிரிந்தன கொல்லென் றெண்ணப் [5]பிறந்தது முழக்கின் பெற்றி.

(இ - ள்.) நிலைகெட்டோடிய சிறந்த வானரர்களெல்லாம் 'தேவர்கள் (இராமனுக்கு) இரதம் கொடுத்தனர்: (ஆகையால்), பகையையடக்கும் வல்லமையுள்ள இராமன் வெல்வானென்பதற்கு ஐயமில்லை' என்று சொல்லி அச்சம்நீங்கியவராய், மீண்டும் (போர்க்களம்) வந்து மரங்களையும் கல்லையும் சிந்தினர்: (அதனால்), 'திசைகளுடனே இவ்வுலகவுருண்டையும் பிளந்திட்டனவோ?', என்று எண்ணும்படி முழக்கத்தின்நிலை தோன்றிற்று; (எ - று.)—'திசையோடண்டம்பிரிந்தனகொல்'என்று எண்ணியது-போரினைக்காண வந்த வானவரின் எண்ணமென்னலாம். வானரர்நிலைகெட்டமை - இராவணன்தேரேறுபடலத்தின் இறுதிச்செய்யுளிற்கூறப்பட்டுள்ளது. பி-ம்:—[1]இரிந்தன. [2]அஞ்சா. [3]திரிந்தன. [4]மலையோடண்டம். [5]பிறந்தன. (3671)

5.—பலவகையொலிகள்.

[1]வார்ப்பொலி முரசி னோதை [2]வாய்ப்புடை வயவ ரோதை
போர்த்தொழிற் [3]களத்தை முற்றுஞ் சுற்றிய பொம்ம லோதை
[4]ஆர்த்தலி னியாரும் பார்வீழ்ந் தடங்கின ரிருவ [5]ராடல்
தேர்க்குர லோதை பொங்கச் செவிமுற்றுஞ் செவிடு [6]செய்ய.

(இ - ள்.) வாரினால் விளங்குகின்ற முரசினுடைய ஓசையும், போர்செய்யத்தகுதிபொருந்திய வீரரின் ஓசையும், போர்த்தொழில் நிகழும் களத்தை முற்றிலும் (சதுரங்கசேனைகள்) சூழ்வதனாலான மிக்க ஓசையும், (இராவணன் ஸ்ரீராமன் என்ற) இருவருடைய சஞ்சரித்தலைக்கொண்ட தேர்க்குரலினாலான ஓசையும் மிகுந்து ஆரவாரித்தலினால் (தமது) செவி முழுவதையும் செவிடுசெய்யவே, எவரும் பூமியில் விழுந்து (அச்சத்தினால்) உயிரொடுங்கினர்; (எ - று.)—பொம்மல்-மிகுதி. பி-ம்:—[1]வார்ப்பொலியியத்தின், ஆர்ப்பொலி வயத்தின். [2]வயவர்வாய்ப்புடைப்பினோதை. [3]களத்து மற்றுமுற்றிய. [4]ஆர்த்திலர், பார்த்திலர். [5]ஆற்றல். [6]செய்த, செல்ல. (3672)

6.—'நீ என்கருத்திற்குஇசையத் தேரோட்டுவாய்' என்று மாதலியினிடம ஸ்ரீராமன் கூறுதல்.

மாதலி வதன நோக்கி மன்னர்த மன்னன் மைந்தன்
[1]காதலாற் கரும மொன்று கேட்டியாற் களித்த சிந்தை

[2]ஏதலன் மிகுதி யெல்லா [3]மியற்றிய பின்றை யென்றன்
சோதனை நோக்கிச் செய்தி [4]துடிப்பிலை யென்னச் சொன்னான்.

(இ-ள்.) சக்கரவர்த்தித் திருமகனான இராமன், மாதலியின் முகத்தை நோக்கி, 'செய்யவேண்டிய செயலைக்குறித்து ஒன்று அன்புடனே கேட்பாய்; களிப்புக்கொண்ட எண்ணமுடையவனான பகைவன் தன்னுடைய மிக்கசெயலெல்லாம் செய்தபின்பு, என்னுடைய தூண்டுதலை யொட்டி (விரையத்தேரோட்டுந்தொழிலைச்) செய்வாய்; (இப்போது) விரையாதே' என்று சொன்னான்; (எ-று.)

இராவணனுடைய ஆர்ப்பாடமெல்லாம் தீரட்டும்; இப்போது அவசரப்படாதே: பிறகு நான் சொன்னபடி தேரைத் தூண்டலாமென்று இராமன் கூறினனென்க. சோதனை - சோதநா; வடசொல்; தூண்டுதலென்று பொருள். பி.ம்:—[1]காதுதல், காதலக். [2]ஏதிலன். [3]இடையிற்றபின்றையென்றன், இயம்பினனன்றே யென்னச். [4]துப்பிலை. (3673)

7.—மாதலி உடன்பட்டுக்கூறுதல்.

வள்ளனின் கருத்து மாவின் சிந்தையு மாற்ற லார்தம்
உள்ளமு மிகையு [1]முற்ற குற்றமு [2]முறுதி [3]தானும்
கள்ளமில் காலப் பாடுங் கருமமுங் கருதே னாயில்
தெள்ளிதென் விஞ்சை யென்றா னமலனுஞ் [4]சீரி தென்றான்.

(இ-ள்.) 'வரையாதருளுந்தன்மையோனே! உன்னுடைய கருத்தையும், குதிரைகளின் எண்ணத்தையும், பகைவர்களின் மனத்தையும், நேர்ந்த மிகுதியையும் குறையையும் உறுதியானதையும் வஞ்சனையில்லாமற் பயன் விளைக்குங்காலத்தின் நிலைமையையும் (மேற்கொண்டுள்ள) காரியத்தையும் ஆராய்ந்து (என்தொழிலைச்) செய்யாவிடின் என்னுடையவித்தை மிகத் தெளிவுள்ளதாகும், என்று மறுமொழிகூறினான் (மாதலி); குற்றமற்றவனான ஸ்ரீராமனும் நல்லதென்று கூறினான்; (எ - று.)

'உற்ற' என்பது மத்திமதீபமாய் மிகை குற்றம் என்ற இரண்டனோடும் இயையத்தக்கது. 'என் விஞ்சைதெள்ளிது' என்றதொடர்-பிறகுறிப்பு வகையால், தெள்ளிதன்று என்று பொருள்படும். என் விஞ்சை-நான் கற்றுள்ளவித்தை; குதிரையோட்டும் வித்தையென்னலாம். பி.ம்:—[1]மற்றகுற்றமும். [2]இறுதி [3]காணும். [4]செவ்விது.

8.—'உனக்கு இராமனோடு போர் நிகழ்கையில், எனக்கு வேறே பொர விடையளிக்கவேண்டும்' என்று மகோதரன் இராவணனை வேண்டுதல்.

தோன்றின னிராம [1]னிதாற் புரந்தரன் [2]துரகத் தேர்மேல்
என்றிரு வருக்கும் வெம்போ[3] ரெய்திய திடையே யானோர்
சான்றென நிற்றல் குற்றந் தருதியால் விடை யீ யென் றென்றான்
[4]வான்றொடர் குன்ற மன்ன மகோதர னிலங்கை [5]மன்னை.

(இ - ள்.) 'தேவேந்திரனனுப்பிய குதிரையுள்ள தேரின்மீது இராமன் இதோ தோன்றியுள்ளான்; எதிர்த்துள்ள நம் இருவருக்கும் கொடும்போர் கிட்டியுள்ளது; (இவ்வாறுயிருத்தலால், நம்மிருவர்க்கும்) நடுவேயான் ஓர் சாட்சியாக [போர் செய்யாமல் வாளா] இருத்தல் குற்றமாகும்; ஆதலால், இப்போது (பொருமாறு) விடை தருவாய்' என்று வானத்தைத் தொடர்கின்ற மலைபோன்ற தோற்றமுள்ள மகோதரன் இலங்காதிபதியான இராவணனைக் கேட்டான்; (எ - று.)—பி-ம்:—[1]எந்தாய். [2]துரந்த. [3]எய்திய விடையேவானோர். [4]வான்றெடுங். [5]மன்னன். (3675)

9.—'நீ இலக்குமணனோடுபொருக' என்று இராவணன்கூறுதல்.

அம்புய மனைய கண்ணன் றன்னை [1]யா னரியி னேறு [நின்று
தும்பியைத் தொலைத்த தென்னத் தொலைக்குவன் றொடர்ந்து
தம்பியைத் தடுத்தி யாயிற் றந்தனை கொற்ற மென்றான்
[2]வெம்பிய லரக்க னஃதே செய்வனென் [3]றவனின் மீண்டான்.

(இ-ள்.) 'செந்தாமரைமலர்போன்ற கண்களை யுடையவனான ஸ்ரீராமனை யான் ஆண்சிங்கம் யானையைத் தொலைத்ததென்னும்படி அழித்திடுவேன்: (அவ்விராமனைத்) தொடர்ந்துநிற்கின்ற தம்பியைத் தடுத்துப் பொருதாயாயின், (நீ) வெற்றியைத்தந்தவனாவாய்' என்று (மறுமொழி) கூறினான், (இராவணன்); வெம்புந்தன்மை கொண்ட அரக்கனான மகோதரன் 'அதனையே செய்வேன்' என்று அவ்விராவணனிடத்தினின்று மீண்டான்; (எ-று.)—பி-ம்:—[1]ஆளரியின். [2]வெம்பிகல். [3]அவனும். (3676)

10.—இலட்சுமணனை நெருங்குமுன் இராமன்தேர் நெருங்கிவிட, மகோதரன் அவன்மீதே தேரை விடுமாறு கூறுதல்.

மீண்டவ னிளவல் நின்ற பாணியின் [1]விலங்கா முன்னம்
ஆண்டகை [2]தெய்வத் திண்டே ரணுகிய தணுகுங்காலை
மூண்டெழு வெகுளி யோடு மகோதரன் [3]முனிந்து முட்டத்
தூண்டுதி தேரை யென்றான் [4]சாரதி தொழுது [5]சொன்னான்.

(இ-ள்.) (அங்ஙனம்) மீண்டவனாகிய மகோதரன், இளைய பெருமாள் நின்றிருக்கின்ற இடத்தைச் சேர்வதற்குமுன்னம் ஆண்மைக் குணம் நிறைந்த ஸ்ரீராமனுடைய தெய்வத்தன்மையுள்ள வலிய தேர் நெருங்கியது; நெருங்கும்போது, மகோதரன் மூண்டெழுகின்ற சினத்தோடு, (தன்சாரதியைநோக்கி), '(தேர்) சினங்கொண்டாற் போன்று (இராமன்தேரை) முட்டுமாறு (நம்) தேரைச் செலுத்துவாய்' என்றான்; (அதற்கு அவனுடைய) சாரதி தொழுது (பின்வருமாறு) சொல்லலானான்; (எ-று.)—சாரதி கூறுவதை அடுத்த செய்யுளிற் காண்க. முனிந்து என்றான் என இயைத்தலும் ஏற்கும். பி-ம்:—[1]விளங்கா. [2]தெய்வத்தேர்வந்தணுகிய தணுகாமுன்னம். [3]வெகுண்டு. [4]மகோதரன்சூதன், சாரதி தேர்ந்து, சாரதிமுனிந்து. [5]சொல்லும், சொல்வான். (3677)

11.—சாரதி, 'இராமபிரானைக் கிட்டாமல் அப்பாற்போதலே சேமம்' என்று மகோதரனுக்குக் கூறுதல்.

எண்ணருங் கோடி வெங்க ணிராவண ரேயு [1]மின்று
நண்ணிய பொழுது மீண்டு நடப்பரோ கிடப்ப தல்லால்
அண்ணல்தன் தோற்றங் கண்டா லையநீ கமல மன்ன
கண்ணனை யொழிய [2]யிப்பாற் [3]செல்வதே கரும மென்றான்.

(இ - ள்.) 'பெருமையிற்சிறந்தவனான ஸ்ரீராமனது தோற்றத்தைக் கண்டால், (பின்பு இந்தஇராவணனொருத்தனே யன்று;) எண்ணுதற்குஅரிய கோடிக்கணக்கான (இவனைக்காட்டிலும்) கொடுங்கண்களையுடைய இராவணர்கள் இன்று கிட்டிய சமயத்திலும், (இறந்து தரையிற்) கிடப்பதன்றி (உயிருடன்) மீண்டு செல்ல வல்லரோ? (ஆதலால்) ஐயனே! நீ செந்தாமரை மலர் போன்ற கண்களையுடையவனான ஸ்ரீராமனை விட்டு இப்பாற்சேர்தலே செய்யத்தக்க செயலாம்', என்றான், (சாரதி); (எ - று.)—ஒழிய = ஒழிந்து; எச்சத்திரிபு. பி - ம்:—[1]இன்னம், மீண்டு. [2]அப்பால். [3]போதலே, பொருவதே, சேறலே. (3678)

12.—ஸ்ரீராமனோடு மகோதரன் பொருது முடிதலை, இதுமுதல் நான்குகவிகள் கூறும்.

என்றலு மெயிற்றுப் பேழ்வாய் [1]மடித்தடா வெடுத்து நின்னைத்
தின்றனெ [2]னெனினு முண்டாம் பழியெனச் சீற்றஞ் சிந்தும்
குன்றனை தோற்றத் தான்றன் [3]கொடிநெடுந் தேரி னேரே
[4]சென்றதவ் விராமன் றிண்டேர் விளைந்தது திமிலத் திண்போர்.

(இ-ள்.) என்று (சாரதி) கூறவும், (அவன்சொல்லைக்கேளாமல் மகோதரன்) பற்கள்தோன்றுகின்ற பிளவுபட்ட வாயைமடித்து, 'அடா! (நீசொன்னசொற்கு நின்னை எடுத்துத் தின்றுவிடுவேன்: அங்ஙனம்) உன்னை எடுத்துத்தின்றேனென்றாலும் (சாரதியைத் தின்றிட்டானென்ற) பழிப்பு உண்டாம்' என்றுகூற, (அப்போது) சினத்தை வெளிவிடுகின்ற மலையையொத்த தோற்றத்தையுடையவனான மகோதரனுடைய கொடிகட்டிய நெடியதேரின் நேராக அவ்விராமனது வலிய தேர் சென்றது: (அப்போது அவ்விருவர்க்கும்) நெருங்கியவலியபோர் நிகழ்ந்தது; (எ - று.)—என, சென்றது என இயையும்: என, சிந்தும்என இயைப்பினுமாம். மகோதரன் தன் சேனையோடுகூடி இராமபிரானோடு பொருதமை, மேற்கவியில் விளங்கும். பி-ம்:—[1]மடித்திடா, மடித்தெடா. [2]என்னினுண்டாம்பழியெனச் சீற்றங்கொண்டான், என்னில்...பழியெனச்சீற்றந் தீர்ந்து. [3]அகடிதற்றடந்தேர், கொடித்தடந்தேரின், [4]சென்றன. (3679)

13. *பொற்றடந் தேரு மாவும் பூட்கையு [1]மிலங்கு வாட்கைக்*
கற்றடந் [2]திண்டோ ளாரு [3]நெருங்கிய கடல்க ளெல்லாம்
வற்றின விராமன் வாளி வடவனல் பருக [4]வென்றான்
ஒற்றை[5]வன் றடந்தே [6]ரோடு மகோதர[7]னொருவன் சென்றான்.

(இ-ள்.) பொன்னாலியன்ற பெரியதேரும் குதிரைகளும் யானைகளும் விளங்குகின்ற வாளைக் கையிலேந்திய மலைபோற்பரந்த திண்ணியதோளையுடைய பதாதிகளும் (ஆகிய) நெருங்கிய(சேனைக்) கடல்களெல்லாம்,—இராமபிரானுடைய அம்புகளாகிய வடவாக்கினிபருகுவதனால் வற்றினவாக, (அப்பிரான்) வென்றான்; (அதனால் தனது) வலியபெரிய ஒற்றைத்தேருடனே மகோதரன் ஒருவனாகவே (எதிர்த்துச்) சென்றான்; (எ-று.)—உருவகவணி. பி-ம்:—[1]புலவண், புலவும், பலவுண். [2]திரடோளாரும். [3]நெருக்கிய. [4]வன்றாள். [5]அம். [6]ஓட்டி. [7]ஒருங்கு. (3680)

14. ***அசனியே றிருந்த கொற்றக் கொடியின்மே லரவத்தேர் மேற், [1]குசையுறு பாகன் தன்மேற் கொற்றவன் [2]குலவுத்தோண் மேல், விசையுறு பகழி மாரி [3]வித்தினான் விண்ணி னோடுந், [4]திசை களுங் கிழிய வார்த்தான் [5]தீர்த்தனு முறுவல் செய்தான்.***

(இ-ள்.) (இந்திரத்துவசமான) இடியேறு தங்கிய வெற்றி பொருந்திய துவசத்தின் மேலும், ஒலிபொருந்திய தேரின்மீதும், கடிவாளத்தைப்பற்றிய தேர்ப்பாகன் [மாதலீ] மீதும் வெற்றி பொருந்தியவனான ஸ்ரீராமனது விளங்குகின்ற தோளின்மீதும் வேகம் பொருந்திய அம்புமழையை விதைத்தவனாய், (மகோதரன்) ஆகாயத்தோடு திக்குக்களும் கிழியும்படி ஆரவாரஞ்செய்தான்; (அதுகண்ட) பரிசுத்தமூர்த்தியாகிய ஸ்ரீராமனும் புன்சிரிப்புச்செய்தான்; (எ-று.)—முறுவல், எள்ளல்பற்றியது. பி-ம்:—[1]குசை தொடும். [2]குவவுத். [3]வீசினன். [4]திசைமுகம். [5]தீதுறும். (3681)

15. ***வில்லொன்றாற் கவச மொன்றால் [1]விறலுடைக் கரமோ ரொன்றாற், கல்லொன்று [2]தோளு மொன்றாற் கழுத்தொன்றாற் கடிதின் வாங்கி, செல்[3]லொன்று [4]கணையா லையன் [5]சிந்தினான் செப்பி வந்த, சொல்லொன்றாய்ச் செய்கை யொன்றாய்த் துணிந்தன னரக் கன் துஞ்சி.***

(இ-ள்.) பெரியோனாகிய இராமன்,—அவ்வரக்கனுடைய வில்லை ஒரு பாணத்தினாலும், கவசத்தை ஒருபாணத்தினாலும், வலிமை பொருந்திய கைகளை ஒவ்வோர்பாணத்தினாலும், மலையையொத்த தோளையும் ஒருபாணத்தினாலும், கழுத்தை ஒருபாணத்தினாலுமாக இடியையொத்த (தன்) கணைகளால் விரைவிற்போக்கிச் சிதறச்செய்தான்: (அப்போது) அரக்கன்,—இறந்து, சொல்லிவந்த சொல் ஒருவகையாகவும் செய்கையொருவகையாகவும், (போகத்) துண்டு பட்டான்; (எ-று.)

தான் இராமனுடன் எதிர்த்துப் பொருதுகொல்வதாகக்கூறியது மாறுபட்டுத் தான் கொல்லப்பட்டதால், 'சொல்லொன்றாய்ச் செய்கையொன்றாய்த் துஞ்சித் துணிந்தனன்' என்றாரென்ப. இலக்குமணனைப் பொருது வெல்வேனென்று வந்தவன் இப்போது அவ்வண்ணனாற் போரிற் கொல்லப்பட்டதனால் இவ்வாறு கூறியதென்னலாம். வில்லொன்றால் முதலிய இடங்களிலுள்ள 'ஆல்' என்பதை அசையாகக்கொண்டு, வில்லொன்று கவசம்ஒன்று

...கழுத்தொன்று (ஆகியஇவற்றையெல்லாம்), ஐயன் செல்லொன்றுகணையாற் கடிதின்வாங்கிச் சிந்தினன் என்று உரைகூறலும் ஒன்று. பி-ம்:—[1] வில்லுடைக். [2] தோளுந்தாளுமோரொன்றாற் கழுத்துமொன்றால், தோளுந் தாளுமொன்றொன்றாற்...ஒன்றால், [3] என்று. [4] கணைகள். [5] செப்பியவழியே செய்தான். (3682)

16.—மகோதரன் இறந்ததுகண்டு, இராவணன் இரதத்தை இராமன்மீது செலுத்தச்சொல்ல, சாரதி அங்ஙனமே செலுத்துதல்.

மோதரன் முடிந்த வண்ண மூவகை [1] யுலகத் தோடு
[2] மாதிர மெவையும் வென்ற வன்றொழி லரக்கன் [3] கண்டான்
சேதனை யுண்ணக் கண்டான் செலவிடு செலவி டென்றான்
சூதனு [4] முடுகத் தூண்டச் சென்றது துரகத் திண்டேர்.

(இ - ள்.) மகோதரன் இறந்தவகையை மூவகையுலகத்துடனே திக்குக்களையெல்லாம் வென்ற வலியதொழிலையுடைய அரக்கன் கண்டு, (அத்துயரம் முதலில்) தன்னறிவை யுண்டிடக் கண்டவனாய் [மூர்ச்சித்தவனாய்](ப் பின்பு தெளிந்து 'இராமனை யணுகத் தேரைச்) செல்லவிடுக, செல்லவிடுக' என்றான்: பாகனும் விரையத்தூண்ட, குதிரைபூட்டிய திண்ணிய தேர் (அவ்விராமனை நெருங்கச்) சென்றது; (எ-று.)—பி - ம்:—[1] உலகுமுற்றும், உலகமுற்றும். [2] மாதிரத்தோடுவென்றவான், மாதிரத்தோடுவென்றவன். [3] நின்றான். [4] முடுகி. (3683)

17.—இராமபிரான் அரக்கச் சேனைகளை நீருக்குதல்.

பனிப்படா நின்ற தென்னப் [1] பரக்கின்ற சேனை பாறித்
தனிப்படா [2] னாகி [3] னின்னந் தாழ்கில னென்னுந் தன்மை
[4] நுனிப்படா நின்ற [5] வீர [6] னவனெனுன் று நோக்கா வண்ணம்
குனிப்படா நின்ற வில்லா [7] லொல்லையி னூறிக் கொன்றான்.

(இ - ள்.) 'பனியானது ஒழிகின்றதுபோலப் பரந்துள்ள அரக்கச்சேனை சிதறிப்போய்(த் தான்) தனிப்பட்டவனாகவிடின் இனியும் தாழ மாட்டான் [ஒருகால் சேனையெல்லாம் ஒழிந்துபோனால் இவ்விராவணன் வணங்கிவருதலும் கூடும்], என்ற கொள்கையால், கூரிய ஆராய்ச்சி பொருந்திய வீரனாகிய அந்த ஸ்ரீராமன்(தன் விற்றொழிலைச்) சிறிதும் அவ்விராவணன் காண முடியாதபடி விரைவிலே வளைதலைப்பொருந்திய வில்லினால் (அரக்கச்சேனையைப்) பொடியாக்கிக் கொன்றான்; (எ-று.)—நுனிப்படா நிற்றல்-கூரிய ஆலோசனைபொருந்தி யிருத்தல். பி - ம்:—[1] படர்கின்ற, பார்க்கின்ற. [2] என்னில். [3] உள்ளம். [4] துனி. [5] வள்ளல். [6] பிறர், இவன். [7] முன்னம். [8] ஒல்லென. (3684)

18.—இதுமுதல் நான்குகவிகள்- இராவணனுக்குத் தீநிமித்தங்கள் தோன்றுதலைத் தெரிவிக்கும்.

அடல்வலி யரக்கத் கப்போழ் தண்டங்க [1] ளழுந்த மண்டும்
[2] கடல்களும் வற்ற வெற்றிக் கால்கிளர்ந் துடற்றுங் காலை

வடவரை முதல வான [3]மலைக்குலஞ் சலிப்ப [4]போன்று
சுடர்மணி வலயஞ் சிந்தந் துடித்தன [5]விடத்த பொற்றோள்.

(இ - ள்.) அப்போது,—பெருவலிபடைத்த அரக்கனாகிய இராவணனுக்கு,—அண்டங்கள் முழுகிவிடும்படி (அவற்றினுள்ளே எழுந்து) இளர்கிற கடல்களெல்லாம் வற்றும்படி வெற்றிபொருந்திய சண்டமாருதம் உக்கிரமாக வீசுகின்ற (யுகாந்த) காலத்தில், மேருமலை முதலியவான மலைத்தொகுதிகள் சலிப்பனபோன்று ஒளியுள்ள மணிகளழுத்திய தோள்வளை சிந்தும்படி இடப்பக்கத்து அழகிய தோள்கள் துடிக்கலாயின; (எ - று.)

இராவணனுக்கு இடப்புறத்துள்ள பத்துத் தோள்களும் துடித்தன என்க. தோள் துடித்ததற்கு - மேருமுதலியமலைகள் ஊழிக்காலத்துச் சண்டமாருதத்தாற் சலித்தலை உவமையாக்கினார். பி - ம்:—எழுந்து. [2]கடல்களுமற்ற. [3]மலைகளும். [4]மானச். [5]இடத்துப். (3685)

வேறு.

19. உதிர மாரி சொரிந்த துலகெலாம்
அதிர வான மிடித்த தருவரை
பிதிர [1]வீழ்ந்த தசனி யொளிபெருக்
[2]கதிர வன்றனை யூருங் [3]கலந்ததால்.

(இ - ள்.) இரத்தமழை, உலகமுழுவதும் பெய்தது: வானத்தில் அதிர்ச்சியுண்டாக இடித்ததான இடி, பெருமலைகள் பொடிப்பொடியாகி யுதிருமாறு வீழ்ந்தது; பரிவேடமும் ஒளிபெருமலுள்ள சூரியனைச் சேர்ந்தது; (எ - று.)

'ஒளிபெரு' என்பதைக் கதிரவனுக்கு அடைமொழியாக்காமல், வீழ்ந்தது என்ற முற்றுடன் இயைத்தும், கலந்தது என்பதனோடு இயைத்தும் உரைப்பாருமுளர். இடித்ததான அசனியென்க. அசனி - இடி. "காலமுகில் செங்குருதி காலவருமாலோ" என்றார், செயங்கொண்டார். பி - ம்:—[1]வீழ்ந்த. [2]கதிரவன்றனி. [3]கலந்தவால். (3686)

20. வாவும் [1]வாசி நடுங்கின [2]வாங்கலில்
ஏவும் வெஞ்சிலை நாணிடை [3]யிற்றன
நாவும் வாயு முலர்ந்தன நாண்மலர்ப்
பூவின் மாலை புலால்வெறி [4]பூத்ததால்.

(இ - ள்.) தாவிச்செல்லுந்தன்மையுள்ள குதிரைகள், நடுங்கின: பின்வாங்குதலில்லாத ஏவுந்தன்மையுள்ள கொடிய விற்கள், நாண் இடையிலே அறுந்துவிட்டன; (அவ்விராவணனுக்கு) நாவும் வாயும் உலர்ந்திட்டன; (அவன் பூண்டிருந்த) அன்றுமலர்ந்த மலர் கொண்டுதொடுத்தமாலையும் புலால்நாற்றம் தோன்றப்பெற்றது;

மாலையைப் பன்மையாகக் கொள்ளின், 'பூத்த' எனப் பலவின்பால் முற்றான பாடத்தைக்கொண்டு உரைக்க. "பூவிரியுமாலைகள்

புலால்கமழுமாலோ" என்றது, கலிங்கத்துப்பரணி பி-ம்:—[1]வாசி கடுங்கின. [2]ஓங்கயில். [3]அற்றன. [4]பூத்தலால். (3687)

21. [1]எழுது வீணைகொ டேந்து பதாகைமேல்
[2]கழுகுங் காகமு மொய்த்தன கண்கணீர்
ஒழுகு கின்றன [3]வோடிக லாடண்மாத்
[4]தொழுவில் நின்றன போன்றன சூழிமா.

(இ - ள்.) எழுதிய [சித்திரவடிவாக அமைந்துள்ள] வீணையைக்கொண்டு மேம்பட்டுள்ள துவசத்தின்மீது கழுகுகளும் காகங்களும் நெருங்கின: ஓடுந்தன்மையுள்ள மிகவலிய குதிரைகளின் கண்களினின்று நீர் ஒழுகுவனவாயின; முகபடாத்தையுடைய விலங்காகிய யானைகள், தொழுவில் அடைக்கப்பட்டனபோன்று கிடந்தன [வலிமை காட்டாதனவாயின]; (எ - று.)—இராவணனுக்குஉரியது, வீணைக்கொடி. பி-ம்:—[1]இழுகும், இழுகு. [2]கழுதுங். [3]ஓடின. [4]தொழுது. (3688)

22.—துர்நிமித்தங்களை இராவணன் இலட்சியஞ்செய்யாமை.

இன்ன [1]வாகி யிமையவர்க் கின்பஞ் செய்
துன்னி மித்தங்கள் தோன்றின தோன்றவும்
[2]அன்ன தொன்று [3]நினைந்ில னாற்றுமோ
என்னை [4]வெல்ல [5]மனித்தனென் றெண்ணுவான்.

(இ - ள்.) இப்படிப்பட்டனவாகி இமையவர்க்கு இன்பத்தைச் செய்கின்ற துர்நிமித்தங்கள் (இராவணனுக்குத்) தோன்றின: (அங்ஙனந்)தோன்றவும், 'மனிதனான இராமன் என்னை வெல்ல மாட்டுவானோ?' என்று எண்ணுபவனாய், அந்தத்துர்நிமித்தம் ஒன்றையும் இலட்சியஞ் செய்யாதவனாயினான்; (எ - று.)—பி - ம்:—[1]தன்மை. [2]அன்னவொன்றும், அன்னதன்மை. [3]நினைத்திலன், அறிந்திலன், உணர்ந்திலன். [4]வல்ல. [5]மனிதன். (3689)

23.—இராவணன் தேர்வருதலும், வானரவீரர் இருபாலும் ஒதுங்குதல்.

விங்கு தேர்செ லும் வேகத்து வேலைநீர்
ஓங்கு [1]நாளி லொதுங்கு முலகுபோல்
தாங்க [2]லாற்ற கிலார் [3]தடு மாறித்தாம்
நீங்கி னா[4]ரிரு பாலு நெருங்கினார்.

(இ - ள்.) கடல்நீர் பொங்கிவரும் (உகாந்த) காலத்து ஒதுங்குகின்ற உலகுபோல, (வேகம்) மிக்க தேர் செல்லும் வேகத்தினால் இருபாலும்நெருங்கின வானரவீரர் தாம் தடுமாறிப்போய்த் தாங்கமாட்டாதவராய் அப்பாற் சென்றார்கள்; (எ - று.)

அவாந்தர பிரளயகாலத்தில் மேலுலகத்திலிருப்பவர் அதனின்மேலான உலகத்துச் சென்றிருப்பரென்ற நூற்கொள்கை, இங்குக் கருதத்தக்கது. உலகு - ஆகுபெயர் பி - ம்:—[1]நாளுக் கொதுங்கும். [2]ஆற்றகலார். [3]தடுமாற்றத்தான், தடுமாற்றத்தர். [4]இருகாலும். (3690)

24 —இதுமுதல் நான்குகவிகள்—இராமராவணர் பொரு வதைப் பற்றிய வருணனை.

கரும முங்[1]கடைக் கண்ணுறு ஞானமும்
[2]அருமை சேரு மவிஞ்சையும் விஞ்சையும்
பெருமை சால் [3]கொடும் பாவமும் பேர்கலாத்
தரும மும்மெனச் சென்றெதிர் [4]தாக்கினர்.

(இ - ள்.) கருமமும் (அக்கருமத்தின்) முதிர்ந்தநிலையில் தோன்றும் ஞானமும் போலவும், (பண்டங்களின் நிலையை) உள்ள படி தெரியவொட்டாமற் செய்கின்ற அவிச்சையும் விஞ்சையும் போலவும், வலிமை பொருந்திய கொடியபாவமும் அழிவில்லாத தருமமும் போலவும் (இராவணனும் இராமனும்) எதிரெதிராகச் சென்று தாக்கினார்கள்; (எ - று.)

ஒருவன் கருமயோகத்தைச் செய்யின் அதனால்மனம் தூய்மை யடையப் பின்பு ஞானம்உதிக்கும்: அந்த ஞானயோகத்தைப் பெற் றோர்க்குப் பந்தத்தை யுண்டாக்குவதாகிய கர்மயோகம் மாறாகத் தோன்றுதல், இயற்கை. மாறுபட்டிருக்கும் தன்மையால் கர்ம ஞானங்கள் முதலியன ராவணராமர்க்கு உவமைகள். அருமை சேர்தல் - இல்லாமையைச் செய்தல்: உண்மைத்தன்மையைத் தெரியவொட்டாமற் செய்தல். விஞ்சை=வித்யா: ஞானம்; அதற்கு எதிர்த்தட்டானது - அவிஞ்சை : அஜ்ஞானம். பி - ம்:—[1]கடை காணுறு. [2]அருமமூர்ந்தவவிஞ்சையும். [3]நெடும். [4]தாக்கினன். (3691)

25. சிரமோ ராயிரந் தாங்கிய சேடனும்
உரவு கொற்றத் துவணத் தரசனும்
பொரவு டன்றனர் போலப் [1]பொருந்தினர்
இரவு [2]நன்பக லும்[3]மென லாயினர்.

(இ - ள்.) ஓராயிரம் சிரங்களைத் தாங்கிய ஆதிசேடனும் வலிமையுடனே வெற்றியையுமுடைய கருடராஜனும் பொருமாறு மாறுபட்டனர் போலப்பொருந்தி, (அந்த ராவணனும் ராமனும்) இரவும் நண்பகலும் போலவும் (தம்முள் மாறுபட்டுத்) தோன்றி னார்கள்; (எ - று)—பி - ம்:—[1]பொலிந்தனர். [2]நன்பகலும். [3]என வேற்றனர், எனலாயினன். (3692)

26. வென்றி யந்திசை யானை வெகுண்டன
ஒன்றை யொன்று [1]முனிந்தன வொத்தனர்
அன்றி யுந்நர சிங்கமு [2]மாடகக்
குன்ற மன்னவ னும்பொருங் கொள்கையார்.

(இ - ள்.) (அந்தராமராவணர்கள்),—(இயல்பாகவே) வெகுட்சி கொண்டனவான வெற்றிபொருந்திய அழகிய திசையானை (யிரண்டு) ஒன்றையொன்று சினந்தவற்றையும் ஒத்தனர்; அன்றி யும், நரசிங்கமும் பொன்மலையை யொத்தவனான இரணியகசிபுவும் பொருகின்ற தன்மையையு முடையவராயினர்; (எ - று.)

ஸ்ரீராமனுக்கு நரசிங்கமும், இராவணனுக்கு இரணியகசிபுவும் உவமை. பி-ம்:—[1] முனிந்தவும். [2] ஆதிமாப் - பன்றியும் பொருமாறன்னபண்பினர். ஆதியாம் - பன்றியும்போர வென்றனர் பண்பினால், ஆதியாம்-பன்றியும்மெனலாயினர் பண்பினைல், ஆதிமாப் - பன்றியும் மென்கின்றதொர் பண்பினர்.சிலபிரதியில் இச்செய்யுள் "துவனவில்லின்" என்று தொடங்கும் அடுத்த செய்யுளின்பின் காணப்படுகின்றது. (3693)

27. [1] துவன வில்லின் பொருட்டொரு தொல்லைநாள்
எவன விசனென் பார்[2] பொர வேற்றெதிர்
புவன மூன்றும் பொலங்கழ லாற்றொடும்
அவனு மச்சிவ னும்மென லாயினர்.

(இ - ள்.) (அன்றியும் ராமராவணர்கள்),—பழமையான [முன்] ஒரு காலத்தில் 'எவன் அந்தமுதற்கடவுள்?' என்பவராய், ஒலியுள்ள வில்லின் பொருட்டாகப் பொருமாறு மேற்கொண்டு எதிர்த்த மூன்று புவனங்களையும் (தம்முடைய) பொன்னங்கழலால் தீண்டிய அந்தத் திருமாலும் அச்சிவனும் போலவும் ஆயினர்; (எ - று.)

விசுவகருமாவினால் நிருமிக்கப்பட்ட இரண்டு விற்களைக் கொண்டு தேவர்களின் தூண்டுதலாற் சிவனும் விட்டுணுவும் பொருத வரலாறு, பாலகாண்டத்துப் பரசுராமப்படலத்துக் கூறப்பட்டுள்ளது. 'எதிர் அவனும் அச்சிவனும்' என இயையும். துவனம் = த்வாநம்: வடசொல். அ-உலகறிசுட்டு. அவீசன்-தொகுத்தல். பி-ம்:—[1] துவனி. [2] தொழ. 'எவனவில் வலியென்றிமையோர் தொழ' என்று சிலபிரதிகளில் இரண்டாமடி. சிலபிரதிகளில் இச்செய்யுள் "சிரமொராயிரம்" (25) என்ற செய்யுளுக்குப்பிறகு உள்ளது. (3694)

28.—இராவணன் சங்கத்தொனி செய்தல்.

கண்ட [1] சங்கர னான்முகன் கைத்தலம்
விண்[2]ட சங்கத் தொல்லண்டம் [3] வெடித்திட
அண்ட சங்கத் தமரர்த மார்ப்பெலாம்
உண்ட [4] சங்க மிராவண னூதினன்.

(இ - ள்.) (போரைக்) கண்டுகொண்டிருந்த சங்கரன் நான்முகன் என்பவரின் கைத்தலங்கள் (தாம் மேற்கொண்ட தொழிலினின்று) நீங்கி அசங்கவும் [நடுங்கவும்], பழமையான அண்டம் வெடித்திடவும், மேலுலகத்துத் தொகுதியாயுள்ள தேவர்களின் (வெற்றி) யாரவாரத்தையெல்லாம் ஒழித்ததான சங்கத்தை இராவணன் ஊதினன்; (எ - று.)

இராவணன் தன்சங்கத்தை யூதியது, போரில் உற்சாகம் மூண்டெழுதற்காக. மூன்றாமடியில், அண்டம்-மேலுலகம், சங்கம்-தொகுதி என்க. திரிபு என்னுஞ் சொல்லணி. பி - ம்:—[1] சங்கர நான்முகர். [2] அசங்கித் [3] வெடிபட, வெடிப்புற. [4] சங்கை. (3695)

29.—திருமாலின் சங்குதானும் ஒலித்தல்.

சொன்ன சங்கின தோசை [1]துளக்குற
என்ன சங்கென் றிமையவ [2]ரேங்கிட
அன்ன சங்கைப் [3]பொறாமை யினாலரி
தன்ன [4]வெண்சங்கந் தானு [5]முழங்கிற்றால்.

(இ - ள்.) அந்தச்சங்கினோசையைப் பொறாமையினால், சொல்லப்பெற்ற (அச்) சங்கினுடையவோசையும் நடுங்கவும், 'இது என்ன சங்கு?' என்று இமையவரும் ஏக்கங்கொள்ளவும், திருமாலினுடைய வெண்ணிறமுள்ள சங்கமாகிய ஸ்ரீபாஞ்சசன்னியம் தானும் முழங்கிற்று; (எ - று.)—மூன்றாமடியில் சங்கு - ஆகுபெயரால், அதனோசையைக் காட்டிற்று. திருமாலின் சங்கமான பாஞ்சசனியம் தானே ஒலித்ததென்க. பி - ம்:—[1]துளங்குற. [2]ஏங்குற. [3]பொறாமையினாரியன். [4]ஒண்சங்கந்தானும், வெண்சங்குதானே, வெண்சங்குதானும். [5]முழக்கிற்றால். (3696)

30.—பஞ்சாயுதங்கள் அடிமைசெய்யுமாறுவந்து அருகே நிற்க, ஸ்ரீராமன் அவற்றைக் காணாதிருத்தல்.

[1]ஐயனைம்படை தாமு [2]மடித்தொழில்
செய்ய வந்தயல் நின்றன தேவரின்
மெய்ய னன்னவை கண்டிலன் வேதங்கள்
பொய்யில் நன்மைப் [3]புலன்தெரி யாமைபோல்.

(இ - ள்.) திருமாலின் ஐம்படைகளும் திருவடித்தொண்டு செய்யக் கருதி (இராமபிரானுக்கு) அருகே வந்துநின்றன; தேவர்களின் உண்மைக்கடவுளாகிய ஸ்ரீராமன், வேதங்கள் பொய்யில்லாத தன்மைத் தம்மறிவால் அறியாமைபோல அவற்றைக் காணாதவனாய் நின்றான்; (எ-று.)

மெய்யன் - என்றும் அழியாது நிற்பவன். பஞ்சாயுதங்கள் அடிமை செய்யவந்து நிற்கவும், ஸ்ரீராமன் மானுடபாவனையால் அவற்றைக் காணாதவன்போல்நின்றனனென்க. ஐம்படைகளாவன - சுதரிசனமென்ற சக்கரமும், பாஞ்சசனியமென்ற சங்கமும், கௌமோதகியென்ற கதையும், நாந்தகமென்ற வாளும், சார்ங்கமென்ற வில்லுமாம். பி - ம்:—[1]ஐயனைப்படைத்தானும். [2]அமர்த்தொழில். [3]புறந்தெரியாமைபோல், புலன்றெரியாமையால், பொலிந்தெரிதன்மையால். (3697)

31.—மாதலி இந்திரன்சங்கை யெடுத்து ஊதுதல்.

ஆசை யும்விசும் பும்மலை [1]யாழியும்
தேச மும்மலை யுந்நெடுந் தேவரும்
கூச வண்டங் [2]குலுங்கக் குலங்கொடார்
வாச வன்சங்கை மாதலி [3]வாய்வைத்தான்.

(இ-ள்.) திக்குக்களும் வானமும் அலைபொருந்திய கடல்களும் நாடுகளும் மலைகளும் நெடியதேவரும் கூச்சங்கொள்ளவும், அண்டம்குலுங்கவும்,சிறப்பைக்கொண்ட வெற்றிமாலையையணிந்த இந்திரனுடைய சங்கை மாதலியானவன் (தன்) வாயில்வைத்து ஊதினான்; (எ-று.)—குலம் கொள் தார் என்று பிரிக்க. பி - ம்:—[1] ஆழியின். [2] குலுங்கிக்குலைந்திட. [3] ஊதினன். (3698)

32.—இராமபிரான்மீது இராவணன் அம்பு தூவுதல்.

துமில வாளி யரக்கன் துரப்பன
[1] விமலன் மேனியின் [2] வீழ்வதன் முன்னமே
[3] கமல வான்முக நாடியர் கட்கடை
[4] அமலன் மேனியிற் றைத்த வனந்தமால்.

(இ-ள்.) அரக்கன் விரைவாகச்செலுத்துவனவான நெருங்கிய அம்புகள் குற்றமற்ற ஸ்ரீராமபிரானுடைய திருமேனியில் வீழ்வதற்கு முன்னம், கமலம்போன்றமுகமுள்ள வானநாடியரின் கடைக்கண்ணோக்கம் குற்றமற்றவனான ஸ்ரீராமனது மேனியில் தைத்தவை அநந்தமாகும்; (எ-று.)

ஸ்ரீராமபிரானது மெல்லியதிருமேனியில் இராவணபாணம் வீழ்கையில், 'இந்த அருமந்ததிருமேனியில் கொடிய ராவணசரம் படுகின்றதே!' என்றகுறிப்போடு வானநாடியர் இராமன் திருமேனியைக் கண்டனரென்க. விரைவில்தொழில்நிகழ்ந்ததை வற்புறுத்த 'மேனியின் வீழ்வதன்முன்னம்' எனப்பட்டது. இது, அத்தியந்தாதிசயோக்தி. பி - ம்:—[1] விமலவாயவன், விமலவாயனன். [2] வீழுதன். [3] கமலவானனநாடியர்கட்கணை, கமலவானவர்நாடியர் கட்கணை, கமலவானகநாடியர்கட் கடை. [4] அமல (3699)

33.—இராமராவணர்களின் தேர்க்குதிரைகள் ஒன்றையொன்று கடுமையுறப் பார்த்தல்.

சென்ற தேரொ [1] ரிரண்டொடுஞ் சேர்த்திய
[2] குன்றி வெங்கட் குதிரை [3] குதிப்பன
ஒன்றை யொன்றுற் றெரியுக நோக்கின
இன்று தீர்வன போலுஞ் சினத்தன

(இ-ள்.) (போர்க்களத்துச்) சென்ற (இராமராவணர்களின்) ஒப்பற்ற இரண்டுதேர்களிலும் பூட்டியனவாகிக் குன்றிமணி போல(ச்சிவந்து) வெம்மைதோன்றுகின்ற கண்களையுடையனவான குதிரைகள்,-தாவிச்செல்வனவும், இன்றுதான் தீருமென்று தோன்றுகின்ற சினத்தையுடையனவுமாகி, ஒன்றையொன்று நெருங்கி நெருப்புச்சிந்தப் பார்ப்பனவாயின; (எ-று.)—இன்று தீர்வனபோலும் - இன்றுவிடுவனபோலும் எனினுமாம். பி - ம்:—[1] இரண்டிலும். [2] குன்றின். [3] குனிப்பன. (3700)

34.—தேர்க்கொடிகள் ஒன்றோடொன்று மோதுதல்.

கொடியின் மேலுறை வீணையுங் கொற்றமா
இடியி னேறு முறையி [1]னிடித்தன
படியும் விண்ணும் பரவையும் [2]பன்முறை
முடியு மென்பதோர் [3]மூரி [4]முழக்கினால்.

(இ - ள்.) (இராவணனுடைய தேர்க்)கொடியின்மேல்தங்கியுள்ள வீணையும்(இராமபிரானுடையதேர்க்)கொடியின்மேல் தங்கியுள்ள வெற்றி பொருந்திய பெரிய இடியேறும்,பூமியும் ஆகாசமும் கடல்களும் அழிந்துவிடுமென்று கருதுதற்குஇடனான ஒப்பற்ற பெருமுழக்குடனே பலமுறை முறைமையாக இடித்தன; (எ - று.) இராவணன் காந்தர்வவித்தையில் தான் மிகவல்லவன் என்பதற்கு அறிகுறியாகத் தன் கொடியில் வீணையினுருவத்தைக் கொண்டுள்ளானெனக் கூறினார்போலும். மானுடத் தலையைக் கொண்ட துவசத்தை இராவணன் கொண்டிருந்தானென்று முதனூலில் வருகின்றது. இந்திரனுடைய தேராதலால் கொடியில் இடியேறு இருந்தது. பி - ம்:—[1]இடத்தன. [2]பண்பற. [3]மாரி. [4]முழக்கென, முழக்கின. (3701)

35.—இருவர்வில்லொலிகளின் வருணனை.

எழு வேலையு [1]மார்ப்பெடுத் தென்னலாம்
விழு வெங்க ணிராவணன் வில்லொலி
ஆழி நாதன் சிலையொலி யண்டம்விண்டு
ஊழி [2]பேர்வுழி மா[3]மழை யொத்ததால்.

(இ - ள்.) விழிக்கனிபோல(ச் சிவந்த) வெவ்வியகண்களையுடைய இராவணனுடைய வில்லினொலி, ஏழுகடல்களும் ஆரவாரஞ்செய்யலாயிற்றென்று சொல்லுதற்கு ஏறப்பொருந்தியது; சக்கரப்படைகொண்ட தலைவனான திருமாலினமிசமாகிய இராமனுடையவில்லினொலி, இவ்வண்டத்தை விள்ளச்செய்து உலகம் அழியுங்காலத்துத் தோன்றுகின்ற பெரியமேகத்தினொலியையொத்தது; (எ - று.)—பி-ம்:—[1]ஆர்ப்படுத்து. [2]ஓவுழி. [3]மறை. ( )

36.—அநுமனாதியோர் அவ்வொலிகளாற் செய்கையற்று விழுந்திடுதல்.

ஆங்கு நின்ற வனுமனை [1]யாதியாம்
வீங்கு வெஞ்சின வீரர் [2]விழுந்தனர்
ஏங்கி நின்ற தலா[3]லொன் றிமைத்திலர்
வாங்கு சிந்தையர் [4]செய்கை மறந்துளார்.

(இ - ள்.) அங்கேநின்ற அநுமனை முதலாகவுள்ள மிக்க கொடியசினத்தைக்கொண்ட வீரர்கள்,—சிந்தை (தம்மினின்று) நீங்கப்பெற்றவரும் செய்கைமறந்தவருமாகி,ஏங்கிநின்றதல்லாமல் எதனைச்செய்வதற்கும்மாட்டாதவராகி விழுந்திட்டனர்; (எ - று.) —பி - ம்:—[1]ஆதியாய், ஆழியாய். [2]விழித்தனர். [3]ஒன்றுமிமைத்திலார். [4]செங்கை. (3703)

37.—தேவரின் செயல்.

ஆவ தென்னைகொ லாமென் [1]றறிகிலார்
ஏவர் வெல்வரென் [2]றெண்ணல ரேங்குவார்
போவர் மீள்வர் பதைப்பர் பொருமலால்
தேவ ருந்தங்கள் செய்கை [3]மறந்தனர்.

(இ - ள்) (அவ்வொலிகேட்ட) அச்சத்தினால், தேவரும்,—எவர் வெல்வரென்று எண்ணமாட்டாது ஏங்குபவராய், 'ஆகப்போவது என்னை கொலாம்?' என்று அறியும்வல்லமையற்று, போவதும் மீள்வதும் பதைப்பதுஞ்செய்பவராகி,தங்கள் செய்கையை மறந்தவரானார்; (எ - று.)—பி - ம்:—[1] அறைகுவார். [2] எண்ணுவர். [3] மறைந்தனர். இச்செய்யுள் சிலபிரதியிலில்லை. (3704)

38.—ஸ்ரீராமபிரானுடைய சரமாரியினும் தேவர்களின் பூமாரி முந்துதல்.

[1]சேண வந்தர நோக்கலுந் திண்சரம்
பூண முந்தின [2]சிந்தின பூமழை
காண வந்த கடவுளர் [3]கையெலாம்
[4]ஆண வந்துணை [5]யாருள ராவரோ.

(இ-ள்.) (இராமபிரானுடைய) வலியசரங்கள் தூரத்திலுள்ள வானத்துக் குறிநோக்கிப் பாயவும், (போர்) காணவந்த கடவுளரின்கைகளாலெல்லாஞ் சிந்தப்பெற்ற பூமழை, (அவ்வானத்தை) அலங்கரிக்குமாறு முற்பட்டுத் தோன்றின; ஆணவத்துக்குத் துணையாகுபவர் யாவரோதாம்? (எ - று.)

அரக்கன் ஆணவமுள்ளவனாதலால் அவனுக்குமாறான இராமபிரான் சரத்தை நோக்கவே தேவர்கள் மலர்மழைசிந்தினரென்பதாம் இங்கு இராமபிரான் ஆணவமற்றவனாதலால் அவனைத் தேவர்கள் கொண்டாடினரென்பதைச் சமர்த்திக்க, எதிர்மறையாக 'ஆணவந்துணை யாருளராவரோ?' என்றார். முதல் மூன்றடிகளை ஈற்றடியிற்கூறிய பொதுப்பொருள் சமர்த்தித்துநிற்பது-வேற்றுப்பொருள்வைப்பணியின்பாற்படும். ஆணவம் - செருக்கு. பி-ம்:—[1] சேணிலத்தமர் நோக்கவுந்தன்சிரம்,சேணவந்தமர்...சிரம். [2] சிந்தினர். [3] கண்ணெலாம். [4] ஆணவன்றுணை, ஆணவந்தனை, ஆணவந்தனர். [5] யாருளராவரே. (3705)

39.—இருவர்வில்லுந் தோன்றியதன் வருணனை.

நீண்ட [1]மின்னொடு [2]வானொடு [3]நீலவில்
பூண்டி ரண்டெதிர் [4]நின்றவும் போன்றன
ஆண்ட வில்லிதன் வில்லு மரக்கன் தன்
நீண்ட [5]வல்லவ ரில்லாச் சிலையுமே.

(இ - ள்.) (என்னை) ஆண்ட வில்லாளியாகிய ஸ்ரீராமனுடைய வில்லும் அரக்கனுடைய நீண்டவல்லவரில்லாத சிலையும்,—நீண்ட

ஒளியோடு வானிலே நெடிய நீலவில் இரண்டு அணிந்து எதிர் நின்றவற்றையும் போன்றன; (எ-று)

இராமராவணரின்விற்கள் இரட்டை வானவிற்களைப் போலு மென்றார். வானவில்லிரண்டு உள்ளன வென்பதை, "வடுத்தயிர் விசும்பிற் செல்லும் வார்சிலையிரண்டும்" "வானில்வந்திட்ட விற்க ளிரண்டு", "இரட்டைவரிசிலையாற் பஞ்சவண்ணமகரதோரண நாட்டி" என்பவற்றா லறிக. இச்செய்யுட்கு-எதிர்த்த ராமன் ராவ ணன் என்ற இருவரும் எதிர்த்திசைகளிலுள்ள இருகருமேகங்கள் போன்றனராக, இயற்கையாக ஒரே வானவில் தோன்றுதற்கு மாருக இரண்டு வானவிற்கள் ஏககாலத்தில் எதிராகத்தோன்றி நிற்போன்றன என்று கருத்து உரைத்துள்ளார், ஓராராய்ச்சியா ளர். நீண்டவல்லவரில்லாச்சிலை - வளைக்கவல்லவரில்லாமையைச் சொல்லுவானேன்? தொட்டுத்தூக்கவல்லாரும் இல்லாதது அந்த இராவணன் சிலை யென்றவாறு. பி - ம்:—[1] விண்ணொடு. [2] வானிடு [3] நீண்டவிற். [4] நின்றன. [5] வல்லாரில்லாத, வல்லிரில்லாத. (3706)

40.—இராவணனுடைய ஆர்ப்பு வில்லின் தெழிப்பு இவற்றின் வருணனை.

அரக்க னன்றெடுத் [1] தார்க்கின்ற [2] வார்ப்புமப்
[3] பொருப்பு மெய்விற் றெழிப்பு [4] மூண் டென்பபோல்
[5] குரைக்கும் வேலையு மேகக் குழாங்களும்
இரைத் [6] திடிக்கின்ற வின்றுமோ ரீறிலா.

(இ - ள்.) (ராமராவணயுத்தம் நிகழ்ந்த) அக்காலத்தில், இரா வணன் குரலெடுத்து ஆரவாரஞ்செய்த ஆரவாரமும், அந்தமலை போன்ற உடலைப் படைத்த வில்லின் பேரொலியும் (இப்படித்தான்) இருந்தன என்று (உரத்துக்) கூறுவனபோல, ஒலிக்கின்ற கடலும் மேகக்குழாங்களும் இன்றும் ஓர் எல்லையில்லாமல் இரைத்து இடிக் கின்றன; (எ - று.)—இச்செயல்கள் முடிவில்லாதனவாய் என்றும் நிகழ்வன என்க.

இராவணன் செய்த ஆர்ப்பும் அவன் வில்நாணியைத் தெறித்து எழுப்பியஒலியும்-முறையே, கடலிரைச்சலையும் மேக கர்ச்சனையையும் போலுமென்பது கருத்து. பி - ம்:—[1] ஆர்த்தன. [2] ஆர்ப்புடன், ஆர்ப்பும்பேர். [3] பொருப்புவில்லிற், உரப்புமோவிற், குரப்புமாவின். [4] உண்டேகொலாம். [5] குரக்குவேலையும். [6] இடிக் கின்றது. (3707)

41.—இருகவிகள்-இராவணனது சினத்தின் நிலை கூறும்.

மண்ணிற் செல்வன செல்லினு மாசற
[1] எண்ணிற் [2] சூன்மழை யில்ல விராவணன்
கண்ணிற் [3] சிந்திய தீக்கடு வேகத்த
விண்ணிற் செல்வன [4] விண்ணின்று வீழ்வன.

(இ - ள்.) ஆலோசிக்குமிடத்து, இராவணனுடைய கண்ணி னின்று சிந்திய (சினத்) தீக்கள், மிக்கவிரைவைப் படைத்தனவாய்

வானத்திற் செல்வனவாயின: (அதனால்) கருக்கொண்ட மழைகள், (அவ்) விண்ணினின்று வீழ்வனவாய் மண்ணிற்செல்பவை செல்லினும் மாசற (விண்ணில்) இல்லாதனவாயின; (எ-று)—தொடர் புயர்வுநவிற்சியணி. பி-ம்:—[1]விண்ணிற். [2]சூழ்மழை [3]சிந்தைய... வேகத்த, சிந்தினதிக்கடு வெங்கணே, சிந்தினதீக்கடு வெங்கண். [4]மீண்டன்று மீள்கில, வெந்தன வீழ்வன. (3708)

42 மாக்க லங்கவிச் [1]சிந்தையன் மாதிரம்
நாஸ்[2]க லங்க நகுந்தொறு [3]நாவொடு
காஸ்[4]க லங்குவர் [5]தேவர் கணமழைச்
சூல் [6]கலங்கு மிலங்கை துளங்குமால்.

(இ-ள்.) திருமாலாகிய ஸ்ரீராமனுக்குக் கலங்குதலில்லாத சிந்தையையுடைய இராவணன் நான்குதிசைகளும் கலங்கும்படி சிரிக்குந்தோறும், தேவர்கள் நாக்குடனே பாதங்களும் கலங்கப்பெறுவர்; தொகுதியான மழைகளின் சூலும் கலங்கும்; இலங்கையும் சலிக்கும்; (எ - று.)—வீரநகை கூறியது. மழைச்சூல் - மேகத்தின் கருப்பம். பி - ம்:—[1]சிந்தைய, சிந்தையின். [2]கலங்கும். [3]நாவொடும். [4]கலங்குவ. [5]தேவர்தங். [6]கலங்கவிழுங்கத்துலங்குமால், கலங்கும் விலங்கறுளங்குமால். இச்செய்யுள் ஒரு பிரதியில் "இக்கணத்து" என்ற அடுத்த பாடலின் பின் உள்ளது. (3709)

43.—இராவணன் மருங்கிற் படைக்கலம் விளங்குதல்.

இக்க ணத்து மெறிப்ப [1]தடித்தென
[2]நெக்க மேகத் [3]துதிக்கும் [4]நெருப்பெனப்
பக்கம் வீசும் [5]படைச்சுடர் பஃறிசை
[6]புக்குப் போகப் பொடிப்பன போக்கில.

(இ-ள்.) இவ்விடத்தும் [பூமியிலும்] மின்னல் வீசுவனபோலவும், பிளவுபட்டுத் தோன்றுகின்ற மேகத்திற் பிறக்கும் நெருப்புப்போலவும், இடைப்பக்கத்தினின்று வீசும் படைக்கலங்களில் ஒளிகள் பலதிசைகளிலும் புகுந்துசெல்ல, (அதனால்) கெடுபவை மிகப்பல; (எ-று.)

பொடிப்பன என்பதற்கு - மயிர்க்கூச்செறியுந் தன்மையைக் கொண்டவை யெனினுமாம். இக்கண்-இவ்விடம்: அத்து-சாரியை. பக்கம்-போர்செய்யும்பக்கமான இடம். தடித்து-மின்னல். பி-ம்:— [1]தடித்தன. [2]செக்கர். [3]உதிக்கும். [4]நெருப்பல. [5]படர்சுடர் [6]புக்கபோதப். (3710)

44.—இதுவும் அடுத்த கவியும்-இராவணனுடைய சினச்சொல்.

[1]கொற்ற விற்கொடு கொல்லுதல் கோளிலாச்
[2]சிற்றை யாளனைத் தேவர்தந் தேரொடும்
பற்றி வானிற் சுழற்றிப் படியின்மேல்
[3]எற்று வேனென் [4]றுரைக்கு மிரைக்குமால்.

(இ-ள்.) (இப்போது என்) வெற்றியுடைய வில்லைக்கொண்டு கொல்லுதற்கு எண்ணங்கொள்ளாமல், சிறுமையையுடையவனான இராமனைத் தேவர் தந்த தேருடனேபற்றி வானிற்சுழற்றிப் பூமியின்மேல் மோதுவேனென்று உரைப்பான், கர்ச்சிப்பான்; (எ-று.)- அற்பமானுடனை வில்லாலெதிர்த்துப்பொரவேண்டிய அவசியமுமில்லை: தேவர் ஈந்ததேருடனே வானிலெடுத்து எறிவேனென்று இரைந்து கூறுபவனானான் இராவண னென்க. பி-ம்:—[1]குற்றம் விற்கொடுகொல்லுதல், கொற்றம்பிறகொடுகொல்லுதல், கொற்றம்பிற்கொடுகொள்ளுதல். [2]சிற்றையானின. [3]எற்றுகமென்று. [4]இசைக்கும், இரைக்கும். (3711)

45. தடித்து வைத்தன்ன வெங்கணை தாக்கற
வடித்து [1]வைத்தன்ன மானுடன் தோள்வலி
[2]ஒடித்துத் தேரை யுதிர்த்தொரு வில்லொடும்
பிடித்துக் கொள்வன் சிறையெனப் [3]பேசுமால்.

(இ-ள்.) (மற்றும் இராவணன்),—மின்னலை வைத்தாற்போன்ற வெவ்விய கணை தாக்கும்படி மிகவும் காய்ச்சியடித்துக் கூராக்கி, அப்படிப்பட்ட மனிதனின் தோள்வலியை யொழித்து (அவனேறிய) தேரை(ப் பொடியாக) உதிரச்செய்து,(அவனுடைய) ஒருவில்லுடனே சிறைபிடித்துக்கொள்வே னென்று பேசுவான்;

தாக்கு - முதனிலைத்தொழிற்பெயர்: தாக்க என்றசெயவெனெச்சம், அகரம் தொக்குவந்த தென்றலுமாம். வடித்து வைத்து - கூராக்கி வைத்து. பி-ம்:—[1]வைத்ததுமானுடற்கே. [2]ஒடித்த. [3]பேருமால். (3712)

வேறு.

46.—இராவணன் அம்புஎய்தல்.

பதைக்கின்றதோர் மனமும்[1]மிடை படர்கின்றதோர் சினமும்
விதைக்கின்றன பொறிபொங்கின விழியும்[2]முடை வெய்யோன்
[3]குதைக்கின்றன நிமிர்வெஞ்சிலை [4]குழையக்[5]கடுங் காலால்
உதைக்கின்றன [6]சுடர்வெங்கணை யுருமேறென வெய்தான்.

(இ-ள்.) பதைக்கின்றதான ஒருமனமும், இடையிடையே தோன்றுவதான ஒருசினமும், (எங்கும்)வித்துவனபோல் தோன்றுகின்றனவான தீப்பொறிகள் இளர்ந்தெழப்பெற்ற கண்விழியுமுடைய கொடியோனான இராவணன்,-அம்புகளை வெளிவிடுகின்ற நிமிர்ந்தகொடியசிலையை வளையுமாறுகொண்டு, விரைவுள்ள முனையாற் செலுத்துவனவான ஒளியுள்ள கொடிய அம்புகளை உருமேறுபோல எய்தான்; (எ-று.)

வெய்யோன் கணையெய்தான் என்க. குதைக்கின்றன-குதையினின்று வெளிவருவனவான அம்புகள்; பெயர். அம்புகளை நிமிர்க்கின்ற வெஞ்சிலை என்று சிலையைச் சிறப்பித்தவாறு. பி-ம்:—

[1]இடைப்பிடிக்கின்றதோர், படைபடிக்கின்றதொர். [2]உள. [3]குதைக்குன்றென, குதிக்கின்றன. [4]சூலயக். [5]கொடுங்காலே, கொடுங்கடுங்கால். [6]என. (3713)

47.—இராவணன் விடுத்த அம்புகளின் வருணனை.

[1]உருமொப்பன கனலொப்பன வூற்றந்தரு கூற்றின்
மருமத்தினு [2]நுழைகிற்பன மழை[3]யொப்பன வானோர்
நிருமித்தன [4]படைபற்றற நிமிர்வுற்றன வமிழ்தப்
பெருமத்தினை முறைசுற்றிய பெரும்[5]பாம்பினும் பெரிய.

(இ - ள்.) (அவ்வரக்கன் விடுத்த அம்புகள்), இடியை யொப்பனவும், கனலையொப்பனவும், வலிமைபொருந்திய யமனுடைய மருமத்திலும் நுழையுந்தன்மையுள்ளனவும், மழையையொப்பனவும், வானவரால் நிருமிக்கப் பட்டனவான படைக்கலங்கள் பற்றறும்படி நிமிர்வனவும், அமுதமெழுமாறு கடைந்த பெரியமத்தாகிய மந்தரமலையை முறைமையாகச் சுற்றிய பெரிய வாசுகியென்னும் பாம்பினும் பெரியனவுமாகும்; (எ - று.)—பி-ம்:—[1]உருமொத்தன கனலொத்தன. [2]நுழைகின்றென. [3]ஒப்பென.[4]படையுற்றன. [5]பாம்பெனப். (3714)

48.—இராவணனம்புகளை இராமபிரான் தடுத்தல்.

அண்டப் [1]பட நெடுமேருவைத் [2]தொளைத்துள்ளுறை தொங்காது, அண்டத்தையும் பொதுத்தேகுமென் றிமையோர்களுமயிர்த்தார், கண்டத்தெறு கணைக்காற்றினைக் கருணைக்கடல் கனகச், சண்டச் [3]சர மழைகொண்டவை யிடையேயறத் தடுத்தான்.

(இ-ள்.) 'நெடியமேருவைத் துண்டப்படும்படி தொளைத்து (அங்குத்தானே) உள்ளுறைந்துதங்கிவிடாது அண்டத்தையுந் தொளைத்துச் செல்லும்' என்று தேவர்களும் (அவ்விராவண பாணத்தைப்பற்றிச்) சந்தேகித்தார்கள்; கிருபாசமுத்திரமான ஸ்ரீராமன், துண்டு துண்டாக அழிக்கவல்ல கணைகளாகிய காற்றையும் பொன்மயமான கொடிய சரமழையையுங்கொண்டு அவை இடையேயற்றுப்போம்படி தடுத்தான்; (எ - று.)—பி - ம்:—[1]படு. [2]துணித்துள்ளிறந்தொங்க, துணித்துள்ளிடைத் தொங்கா, துணித்துள்ளுறை தொங்கா. [3]சரஞ்சிலை. (3715)

49.—இராவணன் மீண்டும் சரமாரிபொழிதல்.

உடையான்முயன் [1]றொருகாரிய [2]முறுதீவினை [3]யுடற்ற
இடை [4]யூறுறச் [5]சிதைந்தாங்கெனச் சரஞ்[6]சிந்தின விறலும்
தொடையூரிய கணைமாரிகள் தொகை [7]தீர்க்கவை துரந்தான்
[8]கடையூறுறு [9]கணமாமழை கால்வீழ்ந்தெனக் [10]கடியான்.

(இ-ள்.) வலிமையுடையவன் முயன்ற ஒருகாரியம் மிக்க தீவினை வருத்துதலால் இடையூறுபொருந்தச் சிதைந்தாற்போல் இராவண சரமும் வலிமைசிந்தின: (அப்போது), கொடியவனான இராவணன்,—கடைக்காலத்தில் ஊறுவிளைக்கின்ற திரண்ட பெரியமேகங்கள் காலிறங்கிப் பெய்தாற்போல், தொடுத்தல்

தொழில்முற்றுப்பெற்றனவான அம்புமழைகள் கணக்கிறந்தவைகளைச் செலுத்தினான்; (எ - று.)—பி - ம்:—[1]உயர். உய், உறு. [2]முதுதீவினை. [3]இயற்ற. [4]ஊறறச், ஊறெனச். [5]சிதைத்தாங்கென. [6]சிந்தினன்வீடலும், சிந்தினவீடலும். [7]தீர்ந்தன, தீர்த்தன. [8]கடையூறறு. [9]கனமாமழை, கணமாரிகள். [10]கடிவான். ()

50.—இராவணனம்புகளின் செயல்.

விண்போர்த்தன திசைபோர்த்தன மலைபோர்த்தன [1]விசையோர்
கண்போர்த்தன கடல்போர்த்தன படிபோர்த்தன கலையோர்
எண்போர்த்தன [2]வெறிபோர்த்தன விருள்போர்த்தன [3]வென்னே
திண்போர்த்தொழி லென்றானையி னுரிபோர்த்தவன் திகைத்தான்.

(இ - ள்.) '(இராவணனெய்த அம்புகள்) விண்ணைப் போர்த்தன; திக்குக்களைப் போர்த்தன; மலைகளைப் போர்த்தன; விசையாக அறியுந்தன்மையுள்ள கண்களைப் போர்த்தன; கடலைப் போர்த்தன; பூமியைப்போர்த்தன; கலைவல்லோரின் எண்ணைப் போர்த்தன; வெறி மிக்கன; இருள்கொண்டு மூடின; (இந்த இராவணனுடைய) வலியபோர்த்தொழில் என்ன வியப்பாயுள்ளது!' என்று ஆனையின் தோலைப்போர்த்தவனான சிவபிரானும் திகைப்புக்கொண்டான்; (எ - று.)—பி - ம்:—[1]இமையோர். [2]எரிபோர்த்தனவிருள், இருள்போர்த்தனவெரி. [3]விண்ணோர் திண்போர்த்தொழிலின்று. (3717)

51.—இராவணபாணத்தால் வானரசேனை சிதற, ஸ்ரீராமன் இராவணனம்புகளை விலக்குதல்.

[1]அல்லாநெடு பெருந்தேவரு மறைவாணரு மஞ்சி
[2]எல்லார்களுங் கரங்கொண் [3]டிரு விழிபொத்தின [4]ரிருந்தார்
செல்லாயிரம் விழுங்காலுகும் விலங் [5]கொத்தது சேனை
வில்லாளனு மதுகண்டவை விலக்குந்தொழில் வேட்டான்.

(இ - ள்.) அந்தச்சிவபெருமானல்லாத நெடிய பெருமைபொருந்திய தேவரும் வேதவித்துக்களான பிராமணரும் ஆகிய எல்லாரும், அஞ்சி(த் தம்) கையைக்கொண்டு இருகண்களையும் மூடினவரா யிருந்தார்கள்: (அக்காலையில், வானரச்)சேனை, ஆயிரம்இடிகள் விழும்போது பொடிப்பொடியாய்ச் சிந்துவதாகிய மலையை யொத்தது; அதனைக் கண்டு, வில்லாளியாகிய ஸ்ரீராமபிரானும், அவ்வம்புகளை விலக்குந்தொழிலை விரும்பினான்: (எ - று.)—பி - ம்:—[1] அல்லாநெடு. [2]எல்லாருந்தம். [3]தம். [4]இரிந்தார். [5]ஒத்தன. (3718)

52.—ஸ்ரீராமபாணம் தழைக்க இராவணபாணங் கெடுதல்.

செந்தீவினை [1]மறைவாணனுக் கொருவன் [2]சிறு விலைநாள்
முந்தீந்ததொ ருணவின்பய னெனலாயின முதல்வன்
[3]வந்தீந்தன வடிவெங்கணை பலவாயவை வகுத் [4]தமைந்த
வெந்தீவினைப் பயனொத்தன வரக்கன் [5]சொரி விசிகம்.

(இ - ள்.) முதற்கடவுளாகிய ஸ்ரீராமன் வந்து விடுத்த கூரிய கொடிய அம்புகள்,—செந்நிறத்தீயில்(ஓமஞ்செய்) தொழிலையுடைய

வேதம்வல்ல அந்தணனுக்கு முன்பே பஞ்சகாலத்தில் ஒருவன் ஈந்ததான ஓர் உணவினால் விளையும் பயனென்றுசொல்லுமாறு ஆயின [பெரும்பயனை விளைத்தன என்றபடி]: அரக்கனாகிய இராவணன் சொரிந்த அம்புகள், அவ்விராவணனாற் செய்யப்பட்டுப் பொருந்திய கொடியதீவினைப் பயனையொத்தன [நற்பயனை விளைக்காவாயின]; (எ - று.)—பி - ம்:—[1] மறையாளனுக்கு. [2] சிறுமலைநாண். [3] வந்திர்த்தன. [4] அமைத்த. [5] விடு. (3719)

53.—ஐந்துகவிகள்—இராமராவணர்கள் ஒத்துப்பொருதமையைத் தெரிவிக்கும்.

நூறாயிரம் வடிவெங்கணை நொடியொன்றினின் விடுவான்
[1] ஆறாத்திறன் மறவோனவை தனிநாயக[2]னறுப்பான
கூறாயின கனல்[3]சிந்தின குடிக்கப்புனல் குறுகிச்
சே[4]றாயின பொடி[4]யாயின திட[4]ராயின [5]கடலும்.

(இ - ள்.) தணியாத வலிமையையுடைய கொடியோனாகிய இராவணன்,—ஒருநொடிப்போதில் லக்ஷக்கணக்கான கூரிய கொடிய அம்புகளை விடுவானாயினான்: ஒப்பற்றதலைவனாகிய ஸ்ரீராமன், அவைகளை அறுப்பவனானான்: துண்டிக்கப்பட்டனவான அம்புகள்,-நெருப்பைச்சிந்தினவையாய்(ச் சமுத்திரத்தை) நெருங்கி (அதன்)நீரைக் குடிக்கவே, அக்கடலினிடங்கள(முதலிற்)சேறாகிப் பின்பு அச் சேற்றுநீரையும் உறிஞ்சுதலால், பொடியாகி (அவ்விடங்கள்) திட்டாயின; (எ - று.)—பி - ம்:—[1] ஆறாத்திறமறவோன். [2] துரப்பான், துரப்ப. [3] சிந்துவ. [4] ஆவன. [5] கடலே, கடலுன். (3720)

54. *வில்லாற்சரந் [1] தூக்கின்றவற் கூடாமிடல் வெம்போர்*
மல்லா[2]ரெழு மழுத்தோமர மணித்தண்டிருப் புலக்கை
தொல்லார்[3]மிடல் வளைசக்கரஞ் சூலம்மிவை தொடக்கத்து
எல்லாநெடுங் [4]சரத்தாலெடுத் தெறிந்தான்செரு வறிந்தான்.

(இ - ள்.) வலிமைகொடிய போரில் வல்லவனும் போர்முறைமையையறிந்தவனுமாகிய இராவணன்,—வில்லினால் சரத்தை வெளியிடுவானாகிய இராமனுக்கு (எதிராக) கூடாதன எழு, மழு, தோமரம், அழகிய தண்டாயுதம், இருப்புலக்கை, மிகப்பழமைபொருந்திய வலிமையுடைய வளை, சக்கரம், சூலம் இவை முதலாகிய எல்லாப் படைக்கலங்களையும் (தனது) நீண்டகரத்தால் எடுத்தெறிவலாயினன்;(எ - று.)—வளையென்று ஓர்படைக்கலமுண்டென்பது, இந்திரன் முடிமேல்வளையெறிந்தபடலம் முதலியவற்றாற் பெறப்படும். பி - ம்:—[1] தூக்கின்றவற்றிடையே. [2] மழுவெழுத், மழுவெழுக். [3] அயில்சுடர், அயில்வாள். [4] தடக்கையெடுத்து. ()

55. *வேலாயிர மழுவாயிர மெழுவாயிரம் விசிகக்*
கோலாயிரம் பிறவாயிர மொருகோல்படக் குறைவ
காலாயின கனலாயின [1]வுருமாயின கதிய
சூலாயின [2]மழையன்னவன் தொடைபல்வகை தொடுக்க

(இ-ள்.) கருக்கொண்ட மழையையொத்தவனாகிய ஸ்ரீராமன், காற்றின் தன்மையமைந்தனவும் கனலின் தன்மையமைந்தனவும் இடியின் தன்மையமைந்தனவுமான பலவகையான போக்குக்களைக் கொண்ட அம்புகளைத் தொடுத்து விடுகையில், - (அவ்வம்புகளில்) ஓரம்புபட வேலாயிரங்களும், (ஓரம்புபட) மழுவாயிரங்களும், (ஓரம்புபட) எழுவாயிரங்களும், (ஓரம்புபட) விசிகமென்று சொல்லப்படுகின்ற ஆயிரம் அம்புகளும், (ஓரம்புபடப்)பிற (ஆயுதங்கள்) ஆயிரங்களும் துண்டப்படுவனவாயின; (எ-று.)

கோல்-அம்பு. கோலென்பது தண்டாயுதமென்ற பொருளையுமுடையதனால் அப்பொருளை விலக்க, 'விசிகக்கோல' என்றார்: ஸ்ரீராமபாணங்களுள் ஒவ்வோரம்பினால் அரக்கனெய்த வேலாயிரம் முதலியவை குறைந்தன வென்க. பி - ம்:—[1] உருமாயினகதியின், எனலாயின கனியச். [2] மழையன்றொடைபலவாயின. (3722)

56. ஒத்துச்செரு விளைக்கின்றதொர ளவின்றலை யுடனே
பத்துச்சிலை யெடுத்தான்கணை தொடுத்தான்பல [1] முகிலாத்
தொத்துப்[2]படு நெடுந்தாரைகள் சொரிந்தாலெனத் [3] தூரந்தான்
[4] குத்துக்கொடு நெடுங்கோல்படு களிறுமெனக் கொதித்தான்.

(இ - ள்.) (இவ்வாறு இருவரும்) ஒத்துப் போர்புரிகின்ற சமயத்தில், (ஸ்ரீராமபாணம் தன்மீதுபொருந்துவதனால்) கொடிய நெடிய குத்துகோல் படப்பெற்ற களிறு என்னும்படி கொதித்தவனான இராவணன், உடனே பத்துச்சிலைகளை யெடுத்துக் கணைகளைத் தொடுத்தவனாய், பலமுகில்களுமாக [ஏழுமேகங்களுஞ் சேர்ந்து] தொகுதிபட்ட நெடியதாரைகளைச் சொரிந்தாற்போல வெளிச்சிந்தினான்; (எ - று.)

'இதுவரை எதிரியின் ஒருவில்லுக்கு எதிராக ஒரு வில்லைக் கொண்டு பொருததனால் ஒத்தபோராக ஆயிற்று: இனி என்கை விஞ்சுமாறு பொருவேன்' என்று கருதிய இராவணன் இருபது கைகளையுடையவனாதலால், பத்துக்கைகளாற் பத்துவில்லை யெடுத்துப் பத்துக்கைகளால் அம்பு தொடுத்து விடுத்தனனென்க. பி-ம்:—[1] முகில்போற். [2] பட, படும். [3] துறந்தான். [4] குத்துப்படு. ()

57. ஈசன்விடு சரமாரியு மெரி[1] சிந்துறு தறுகண்
நீசன்விடு [2] சரமாரியு மிடையெங்கணு நெருங்கத்
தேசம்[3] முதலைம்பூதமுஞ் [4] செருக்கண்டன செருக்கிக்
[5] கூசம்மயிர் பொடிப்[6] பதறன [7] வலையாயின கொடிய.

(இ-ள்.) தலைவனாகிய ஸ்ரீராமன் விடுகின்ற சரமாரியும் எரியைச் சிந்துகின்ற அஞ்சாமையையுடைய நீசனான இராவணன் விடுகின்ற சரமாரியும், இடையே எல்லாவிடங்களிலும் நெருங்குதலால்,—(அப்பெரும்) போரைக் கண்டனவான நிலம்முதலிய ஐம்பூதங்களும், கொடிய அனர்த்தப்படப்பெற்றனவாய், உற்சாகங்கொண்டு மயிர்க் கூச்சுப் பொடித்தலை, அடியோடு நீங்கின;(எ-று.)

உற்சாகத்தோடு ராமராவணயுத்தத்தைக் கண்டுகொண்டிருந்த ஐம்பூதங்களும், கணை நெருக்கத்தால் நெருப்புத்தோன்றி எரிக்கத் தொடங்கவே அவ்வுற்சாகங் குன்றலாயின என்றபடி. ஐம்பூதம் அவற்றிற்குஉரிய தேவதைகளைக் காட்டுமென்னலாம். தேஸம் - வடசொல்: இனி; தேஜஸ் என்பதன் விகாரமெனக்கொண்டு, அக்கினியென்பாருமுளர். பி - ம்:—[1]சிந்துவ. [2]கணைமாரியும். [3]முதலிய. [4]செருக்கண்டனர் நெருக்கக், செறிவுற்றனசெருவிற். [5]சூசி. [6]உற்றன,உற்றென,உற்றனர். [7]மனம்வானவர்குலையா, மனம்வானவர் குலைந்தார், அனலாயினகுலைய. (3724)

வேறு.

58.—அரக்கன்தேர் வானத்து எழுதல்.

மந்தரக் கிரியென மருந்து மாருதி
தந்தவப் பொருப்பெனப் [1]புரங்கள் தாமெனக்
கந்தருப் பந்நகர் விசும்பிற் [2]கண்டன
அந்தரத் [3]தெழுந்ததவ் வரக்கன் தேரரோ.

(இ - ள்.) (அப்போது) அந்த இராவணனுடைய தேரானது,— வானத்திற் காணப்பட்ட அப்படிப்பட்ட மந்தரகிரிபோலவும், (இறந்தவரைப் பிழைப்பிக்கும்) மருந்துக்காக மாருதி கொணர்ந்த அந்தச் சஞ்சீவிமலைபோலவும், திரிபுரம்போலவும், கந்தருவநகரம் போலவும் வானத்தி லெழுந்து தோன்றிற்று; (எ - று.)

இராமனைப் போரில் விஞ்சவேணுமென்று பத்துக் கரங்களாலும் சரமாரிபொழிந்த இராவணன், 'இராமனை விஞ்ச இதுமாத்திரம் போதாது; விண்ணினின்றும் பொருவேன்' என்று வானத்து எழுந்து போரலானனென்க. முப்புரமென்றாராயினும், தேரொன்று ஆதலால், திரிபுரங்களில் ஒவ்வொன்றும் இத்தேர்க்கு உவமையென்க. கருடபகவான் பாற்கடலைக் கடையுமாறு மந்தரமலையை வானவழியாகக் கொணர்ந்து அப்பாற்கடலில் வீசினனென்பது, முதலடியில் அறியத்தக்கது. கந்தருப்பந்நகர் = கந்தர்வ நகரம்: மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் முதலிய அமைந்துள்ள நகரம் போல ஆகாயத்தில் தோன்றி மறையுந் தன்மையதென்பர். கந்தருப்பந்நகர் என்பதன்பின் 'என' என்று ஒருசொல் வருவித்துக் கொள்ளப்பட்டது. இனி, [2]'கண்டென' என்ற பாடத்தைக்கொண்டு கந்தருப்பந்நகர் விசும்பிற் கண்டாற்போலவும் என்று உரைத்தலும் ஒன்று. கண்ட அன்ன என்பவை - கண்டன எனத்தொக்கன. பி-ம்:—[1]புரங்கணடாமென, புரங்கடானென, படங்கண்டாமென. [3]எழுந்தன. (3725)

59.—இராமன் காண்கையிலேதானே இராவணன் விடுத்த சரத்தால் வானரசேனை யொழிதல்.

எழுந்துயர் தேரிசை யிலங்கைக் காவலன்
[1]பொழிந்தன சரமழை யுருவிப் [2]போதலால்

ஒழிந்தது மொழிகில தென்ன வொல்லெனக்
கழிந்தது கவிக்குல மிராமன் காணவே.

(இ-ள்.) (வானத்து)எழுந்து ஓங்கிய தேரின்மேலிருந்து இலங்காதிபதியாகிய இராவணன் பொழிந்தனவான சரமழை (வானர சேனைகளினுடலை) யுருவிப் போதலால், இராமன்காண்கையில் தானே ஒழிந்ததும் ஒழியாததுமாயிற் றென்னும்படி விரைவாக வானரக்கூட்டம் உயிர்நீங்குவதாயிற்று; (எ-று.)—ஒழிகிலது-குற்றுயிராகக்கிடக்கின்றது என்றவாறு. பி - ம்:—[1]பொழிந்தனன். [2]போகலால். (3726)

60.—இராமன் மாதலியைநோக்கி 'தேரை வானத்தி லெழவிடுக' எனல்.

முழு[1]விடு தோளொடு [2]முடியும்[3]பஃறலை
விழு[4]விடு வேனினி விசும்பு [5]சேமமா
மழவிடை யனையநம் படைஞர் மாண்டனர்
எழவிடு தேரையென் றிராமன் கூறினான்.

(இ - ள்.) (அதுகண்ட) இராமன், '(இராவணனம்புகளால்) இளங்காளையைப்போன்ற நம்படைஞர் மாண்டனர்:(ஆகவே,நான்) இனி (வானரர்களை மாய்த்த அந்த இராவணனுடைய) முழுவை யொத்த தோளுடனே கிரீடமணிந்த பலதலைகளையும் விழவிடுவேன்:விசும்பிற் சேமமாக எழும்படி தேரை விடுக' என்று(மாதலியினிடம்) கூறினான்; (எ - று.)—வானத்துத் தேரிற் செல்பவனை வதைக்க வானத்துத் தேரைச் செலுத்தச் சொல்லினனென்க. முடிப்பஃறலையும் என மாறுக. பி-ம்:—[1]அடு. [2]முடியப். [3]வன்றலை. [4]விடுகுவன். [5]சேமமோ. (3727)

61.—மாதலி உடன்பட, இராமபிரானேறிய தேரும் வானத்துச் செல்லுதல்.

அந்துசெய் குவனென் [1]றறிந்த மாதலி
உந்தினன் தேரெனு மூழிக் காற்றினை
இந்துமண் டிலத்தின்மே லிரவி மண்டிலம்
வந்தென [2]வந்ததம் மானத் தேரரோ.

(இ-ள்.) அவ்வாறே செய்வேனென்று(இராமபிரான் கருத்தை) அறிந்து கூறிய மாதலியானவன், தேரென்ற யுகாந்தகாலத்துக் காற்றினைச் செலுத்தினான்: அந்தப்பெருமைபெற்ற தேரானது, இந்துமண்டிலத்தின்மீது சூரியமண்டலம்வந்தாற்போல வந்தது; (எ - று.)—அரோ-ஈற்றசை.

இந்துமண்டலத்தின்மேலிரவிமண்டலம் வருதல் - **இல்பொருளுவமை.** சந்திரமண்டலத்துக்குமேலே அத்தேர் சென்றதால், இவ்வாறு வருணித்த தென்றலும் ஒன்று. அந்து என்பது அவ்வாறு என்றபொருளில் கன்னட பாஷையிலும் வழங்குகின்ற தென்ப. பி-ம்:—[1]அறிந்து. [2]வந்தது. (3728)

62.—மூன்றுகவிகள்-இருவர்தேரும் சாரிகை திரிதலைத் தெரிவிக்கும்.

இரிந்தன மழைக்குல [1]மிழுகித் திக்கெலாம்
[2]உரிந்தன வுடுக்குல முதிர்ந்து சிந்தின
நெரிந்தன நெடுவரைக் குடுமி [3]நேர்முறை
திரிந்தன சாரிகை தேருந் தேருமே.

(இ - ள்.) (இராவணன்) தேரும் (இராமன்) தேரும் (ஆகிய இரண்டும்),—நேரான முறைமையிற் சாரிகைதிரிந்தன;(அந்தவிசையினால்), மேகத் தொகுதிகள் திக்குக்களிலெல்லாம் பரந்து நிலைகெட்டோடின; நட்சத்திரக் கூட்டங்கள் உரிந்தனவாய்ப் பொடிப்பொடியாகச் சிந்தலாயின; நெடியமலைகளின் சிகரங்கள் நெரிந்தன; (எ - று.) நேர்முறை-வஞ்சனையில்லாதநிலை. இழுகுதல்-பரத்தல். திக்கெலாம் உரிந்தன எனத் தனி முற்றாக முடிப்பினுமாம். பி-ம்:—[1]இழுக்கு. [2]முரிந்தன. [3]நேர்வரை. (3729)

63. வலம்வரு மிடம்வரு மறுகி [1]வாநெடு
நிலம்வரு[2]மிடம்வல [3]நிமிரும் வேலையும்
அலம்வருங் குலவரை யனைத்து மண்டமும்
சலம்வருங் [4]குயமகன் திகிரித் [5]தன்மைபோல்.

(இ-ள்.) (அத்தேர்களிரண்டும்),-வலம் வரும்: இடம்வரும்: கலங்கி, வானினுடனே நிலத்து வரும்: இடமாகவும் வலமாகவும் ஓங்கும்: (அதனால்),கடலும் குலவரையாவும் அண்டங்களும், சுற்றுந்தன்மையைக்கொண்ட குயவனுடைய சக்கரத்தின் தன்மைபோலச் சுழலலிடும்; (எ - று)—பி - ம்:—[1]வானவரும். [2]இடம்வரும். [3]நீருண், நெடிய, நீரும். [4]குயவன். [5]தன்மையே. (3730)

64. எழும்புக [1]ழிராமன்தே ரரக்கன் தேரிதென்று
உழுந்துருள் [2]பொழுதினெவ் வுலகுஞ் சேர்வன
தழும்பிய தேவருந் தெரிவு [3]தந்திலர்
[4]பிழும்பின திரிவன வென்றும் பெற்றியார்.

(இ - ள்.) உழுந்துருள்பொழுதுக்குள் எவ்வுலகமுஞ்சேர்வனவாகிய அத்தேர்களைக் குறித்து, 'மிக்கெழுகின்றபுகழையுடைய இராமனுடைய தேராகும் (இது): இது அரக்கனுடையதேராகும்' என்று (பிரித்துணர்தலைப்) பழகிய தேவரும் அறியாமடியாதவராயினர்; (பின்னை அவர்கள் என்ன உணர்ந்தாரென்னில்,—இருதேர்களும் தனித்தனி) பிழம்புடையனவென்றும், திரிகின்றன என்றும் உணருந்தன்மையையுடையரானார்கள்: (எ - று.)

இராமராவணர்களின் தேர்ப்பிழம்பும் அவை திரிகின்றனவுமே தேவர்களாலும் உணரக்கூடியனவாயினவன்றி, 'இன்னது ஸ்ரீராமன் தேர், இன்னது இராவணன் தேர்' என்று விசையின் மிகுதியால் அத்தேவர்களாலும் அறியமுடியவில்லையென்பதாம். பி - ம்:—[1]இறைவன். [2]பொழுதின், போதினும். [3]தாங்கிலர். [4]பிழம்பன திரிவன, பிழம்புள திரிவன, பிழம்புள திவினை. (3731)

65.—தேர்களின் சாரிகைவிசையால் நிகழ்ந்தவை.

உக்கிலா [1]வுடுக்களு [2]முருள்கள் தாக்கலின்
நெக்கிலா மலைகளு நெருப்புச் சிந்தலின்
வக்கிலாத் திசைகளு முதிரம் வாய்வழிக்
கக்கிலா வுயிர்களு மில்லை காண்பன.

(இ - ள்.) சக்கரங்கள் தாக்குதலால் சிந்திவிழாத நட்சத்திரங்களும், (தாக்கும்போது) நெருப்புச்சிந்துதலால் நெகுதலில்லாத மலைகளும், பிளவுபடாத திசைகளும், உதிரத்தை வாயின்வழியாகக் கக்காத உயிர்களும் காணக் கூடியனவாய் (எவையும்) இல்லை; (எ - று.)—இருதேர்களும் விரைந்து சாரிகை செல்லுகின்ற அதனால், உதிராத விண்மீன்களும் பிதிராத மலைகளும் பிளவாத திசைகளும், உதிரத்தைக் கக்காத உயிர்களும் இல்லையென்றவாறு. வக்குதல் - எரிதலென்பாருமுளர். பி - ம்:—[1]உயிர்களும். [2]உருக் கடாக்கலின். (3732)

66.—இதுமுதல் நான்குகவிகள்-அத்தேர்களின் விசையைத் தெரிவிப்பன.

இந்திர னுலகத்தா ரென்ப ரென்றவர்
சந்திர னுலகத்தா ரென்பர் தாமரை
அந்தண னுலகத்தா ரென்ப ரல்லரால்
மந்தர மலையினு [1]ரென்பர் [2]வானவர்.

(இ - ள்.) (போர்காணுமாறுகூடியிருந்த) தேவர்கள்,—(இராம ராவணர்கள் தம்தேர்களுடனே) இந்திரனுலகத்திலுள்ளாரென்பர்: அங்ஙனம் கூறினவரே, சந்திரனுலகத்தா ரென்பர்: (அன்றியும்), தாமரையில் வீற்றிருக்கின்ற அந்தணனாகிய பிரமனுடைய உலகத் தாரென்பர்; (அங்ஙனம் கூறினவரே, ஆங்குஉளார்) அல்லர்; மந்தர மலையிலுள்ளாரென்பர்; (எ - று)—இச்செய்யுள் சிலபிரதியிலில்லை. பி-ம்:—[1]என்பர். [2]தானவர். (3733)

67. பாற்கடல் [1]நடுவினு ரென்பர் பல்வகை
[2]மாற்கட லினுக்குமவ் [3]வரம்பி னுரென்பர்
மேற்கட லாரென்பர் கிழக்கு ளாரென்பர்
[4]ஆர்க்கிடை [5]யுருமென்ப [6]ரறிந்த வானவர்.

(இ - ள்.) பேரறிவுடைத்த தேவர்கள்,—(இராமராவணர் களைப்பற்றி), பாற்கடலில் நடுவிலேயுள்ளா ரென்பர்; பலவகை [எழுவகை]யான பெரிய கடலுக்கும் அப்பாற்பட்ட எல்லையி லுள்ளா ரென்பர்: மேற்கடலிடத்துள்ளா ரென்பர்: கிழக்கே யுள்ளாரென்பர்:(அவர்களுடைய) தேர்ச்சக்கரத்தின் இலைவடிவான உறுப்பிலே இடி (உள்ளது) என்பர்; (எ-று.)

மனிதரறிவினும் தேவர்களின் அறிவு மிக்கதாதலால், அவரை 'அறிந்த வானவர்' என்றூர். ஆர்க்கிடையுருமென்ப ரென்றது அவர்கள் மேகமண்டலத்தின ரென்று கூறியவாறு: ஆர்க்கிடை-ஆரென்று சொல்லப்படுகின்ற இலைவடிவான சக்கரத்

தினுறுப்பி லென்க. பி - ம்:—[1]நடுவணோர், நடுவணுர், நடுவணே. [2]மாற்கடலேழுக்குமவ். [3]வரம்பிலார். [4]ஆர்ப்பிடை. [5]இதுவென்பர். [6]அறியும். (3734)

68. மீண்டன வோவென்பர் [1]விசும்பு விண்டுகக்
கீண்டன வோவென்பர் [2]கீழ வோவென்பர்
பூண்டன புரவியோ புதிய காற்றென்பர்
மாண்டன வுலகமென் [3]றணங்கும் வாயினர்.

(இ - ள்.) (இன்று) உலகங்கள் இறுதியடைந்ததா மென்று வருந்திக் கூறும் வாயையுடையவரான தேவர் முதலியோர்,—(தேர்கள்) திரும்பியனவோ என்பர்; விசும்பு விண்கிந்தும்படி கீண்டனவோ என்பர்: (தேரிற்) பூட்டப்பட்டுள்ளவை, குதிரைகளோ? [அல்ல]: புதியதன்மையுள்ள காற்றுக்களேயென்பர்; (எ - று.)

'புரவியோ' என்ற ஓகாரம், வினவகையால் எதிர்மறையுணர்த்திற்று. மூன்றுமடி - குதிரைகளிடத்து அத்தன்மையை மறுத்துக் காற்றாகக் கூறப்பட்டமையால், அவநுதியணியாகும். பி - ம்:—[1]விசும்பை [2]கீழுகவோ. [3]உணரும், உரைக்கும். (3735)

69. ஏழுடைக் கடலினுந் தீவொ ரேழினும்
ஏழுடை மலையினு [1]மூலகொ ரேழினும்
சூழுடை யண்டத்தின் [2]சுவர்க ளெல்லையா
[3]ஊழிய காற்றெனத் திரிந்த [4]வோவில.

(இ - ள்.) ஏழகடலினும் ஒரேழுதீவுகளிலும் ஏழுமலையிலும் உலகு ஓரேழிலும் சூழ்தலைக்கொண்ட இவ்வண்டத்தின் சுவர்ப்புறங்கள் எல்லையாக, ஊழிக்காலத்துத் தோன்றிய காற்றுப்போல (அத்தேர்கள்) ஒழிவில்லாதனவாய்த் திரிந்தன; (எ—று.)

'புரவியோபுதியகாற்றென்பர்' என்றதற்குஏற்ப, இங்கு 'காற்று' என்றது-தேர்களிற்பூட்டிய குதிரைகளை யென்றல் ஏற்கும். ஊழிய - குறிப்புப் பெயரெச்சம். பி - ம்:—[1]உலகமேழினும். [2]சுவரினெல்லையே. [3]ஊழியிற், ஊழியக். [4]ஓய்வில. (3736)

70.—இராவணன் படைக்கலம் பொழிதல்.

உடைக்கட லேழினு [1]மூலகு மேழினும்
இடைப்படு தீவினு மலையொ ரேழினும்
அடைக்கலப் பொருளென [2]வரக்கன் வீசிய
படைக்கல மழைபடு [3]துளியின் பான்மைய.

(இ-ள்.) (பூமிக்கு)உடையாகவுள்ள கடல்களேழிலும் உலகம் ஏழிலும் பூமியினிடையேயுள்ள (ஏழ) தீவுகளிலும் மலையோரேழிலும் (வைத்திருந்த) அடைக்கலப்பொருளைப்போல அரக்கன் எடுத்து வீசிய படைக்கலங்கள், (மழைபெய்கையில்) வீழ்கின்ற மழைத்துளியின் தன்மையையுடையனவாயின; (எ - று.)

அடைக்கலப்பொருள்-ஆபத்துக்காலத்து உதவும்படி வைத்துள்ள பொருள். இதுவரையில் வழங்காது சேமித்துவைத்திருந்த படைக்கலங்களை மழைபோலப்பொழிந்தனன், இராவணனென்றபடி. கடலேழ் முதலியவற்றிற் சேமித்துவைத்திருந்த அருமையான படைக்கலங்களைவீசியது, அடைக்கலப்பொருளையெடுத்து வீசினாற்போலு மென்றார். பி-ம்:—[1] உலகொரேழினும். [2] அரக்கர். [3] துளியின்பன்மைய, துளியின்பன்மையால். (3737)

71,—இராவணன்விடுத்த படைக்கலங்களை இராமபிரான் அறுத்தொழிதல்.

ஒறுத்துல கனைத்தையு [1] முழலு மோட்டிடை
[2] இறுத்தில விராவண னெறிந்த வெய்தன
அறுத்தலுந் தடுத்தலு மன்றி யாரியன்
[3] செறுத்தொரு தொழிலிடைச் செய்த தில்லையால்.

(இ-ள்.) இராவணனெறிந்தனவான படைக்கலங்களும் எய்தனவான அம்புகளும், தங்காதனவாய், உலகு எல்லாவற்றையும் அழித்து ஓட்டத்தோடு சஞ்சரிப்பனவாயின: இராமபிரான் (அந்த எறிந்தனவற்றையும் எய்தனவற்றையும்) அறுத்ததுந் தடுத்தது மன்றி, இடையே கோபித்து ஒரு தொழிலையும் செய்ததில்லை;

இராவணன் விடுத்தவற்றைத் தடுப்பதற்கே இராமபிரானுக்குப் போது சரியாயிருந்த தென்றபடி. ஓட்டு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். பி-ம்:—[1] உழன்றும். [2] இறுத்திலன். [3] செறித்திடையொருதொழில், செறுத்தொடையத்தொழில். (3738)

72.—பலவிடத்துந் திரிந்த தேர் இலங்கையை யணுகுதல்.

விலங்கலும் வேலையு மேலுங் கீழுரும்
அலங்கொளி [1] திரிதரு முலகி னைத்தையும்
கலங்குறத் திரிந்ததேர [2] ரூழிக் காலக்காற்று
[3] இலங்கையை யெய்தின நிமைப்பில [4] வந்தரோ.

(இ-ள்.) மலைகளிலும், கடல்களிலும், மேலுலகங்களிலும், கீழுலகங்களிலும், விளங்குகின்ற ஒளிவடிவான சந்திராதித்யர் திரிகின்ற உலகம் எல்லாவற்றிலும் கலங்குதலுண்டாம்படி திரிந்ததாகிய ஒரூழிக்காலக்காற்று இலங்கையை இமைப்பனவிற்குள் வந்தடைந்தது; (எ - று.)

ஊழிக்காலக்காற்று, தேரைக் குறிக்குமென்பர்; ஆயினும், குதிரையைக் குறிக்கு மென்றலே பொருந்து மென்பது முன்னர்க் கூறப்பட்டது மேற் செய்யுளிலும் 'தேர்ப்பரி' என வருதல் காண்க. தேரைச் சாதியொருமையாக, 'எய்தினது' என்றார். அலங்கொளி- அன்மொழித்தொகை. பி - ம்:—[1] திரிதலும். [2] ஊழிக்காற்றென. [3] இலங்கையிற்போந்தன, இலங்கையை யெய்தின, இலங்கையை எய்திய, [4] வந்ததே. (3739)

73.—தேர்ப்பரிகளின் திறம்.

உய்த்தவல் கனைத்தினு [1]முழன்ற சாரிகை
[2]மொய்த்தது கடலிடை மணலின் [3]மும்மைசால்
வித்தகர் கடவிய விசயத் [4]தேர்ப்பரி
[5]எய்த்தில வியர்த்தில விரண்டு [6]பாலவும்.

(இ - ள்.) திறமையுள்ள தேர்ப்பாகர் தூண்டிச்செலுத்திய (இராமராவணரென்ற) இருபாலாருடையனவுமான வெற்றிபொருந்திய தேர்ப்பரிகள்,—செலுத்தப்பட்டு, கடலினிடத்து மிகுதியுள்ள மணலினும் மும்மடங்கு அதிகமாக உலகமெல்லாவற்றிலும் சாரிகை திரிந்தன: (ஆயினும்), இளைப்படைந்தில: உடலும் வேர்த்தில: (எ - று.)—கடலிடை மொய்த்ததாகிய மணலெனக. பி-ம்:— [1] முயன்ற. [2] மொய்த்துயா, மொய்த்துள. [3] மும்மையால், மும்மைய. [4] திண்பரி. [5] எய்த்ததனுமுசதில, எய்த்தலவுயிர்த்தில. [6] பாலுமே.

74.—இராமனேறிய இரதத்து இடிக்கொடியை இராவணன் அறுத்துச் சிந்துதல்.

இந்திரன் தேரின் [1]மேலுயர்ந்த [2]வெந்தொழில்
[3]உந்தரும் பெருவலி யுருமி னேற்றினைச்
சந்திர [4]னனையதோர் சரத்தி னூற்றரைச்
சிந்தின னிராவண னெரியுஞ் [5]செங்கணான்.

(இ - ள்.) (அப்போது) நெருப்புத்தோன்றுகின்ற செந்நிறக் கண்களையுடையவனான இராவணன்,-இந்திரனுடைய தேரின்மேல் உயர்ந்து விளங்கியதும் கொடுந்தொழிலால் தள்ளுதற்கு அரியதுமான மிக்க வலியுள்ள இடியேற்றின கொடியை, சந்திரனை யொத்த தோர் சரத்தினால் தரையிலே சிந்தினான்; (எ - று.)—சந்திரனனையதோர் சரம்-அர்த்தசந்திரபாணமெனலாம். பி - ம்:— [1] மீது. [2] ஏந்தொழில். [3] உய்ந்தரும். [4] அனையது. [5] சிந்தையான். (8741)

75.—இடிக்கொடி கடலில் விழுதல்.

[1]சாய்ந்தவல் [2]லுருமுபோ [3]யரவத் தாழ்கடல்
பாய்ந்த[4]வல் லுருமென [5]முழங்கிப் பாய்தலும்
காய்ந்தபே [6]ரிரும்பின்வன் கட்டி காலுறத்
தோய்ந்தநீ ரெனச்சுருங் கிற்றாழியே.

(இ - ள்.) (தரையில்) சிந்தியவலிய இடிக்கொடி போய் ஒலியையுடைய ஆழ்ந்த கடலிலே வலிய இடிபாய்ந்ததுபோல முழங்கிக்கொண்டு பாய்தலும், காய்ந்த பெரியவலிய இரும்பின் கட்டி பொருந்தத் தோய்த்த நீர் போலக் கடலும் வற்றியது; (எ - று.)—காலுற. கால்-[illegible]. பி - ம்:— [1] சாய்ந்தவல், காய்ந்தவல். [2] உருமும, உவர்த்தாழ. உவரிக்கார். [4] வெங்கணைவலய. [5] முழங்கப், முழங்கிப், முழக்கப். [6] இரும்பினை, இரும்பினன். (87[illegible])

76.—இராமன் தேர்க்குதிரைகளின் மீதும் மாதலியின்மீதும் கணைத்தொகுதிகளை இராவணன் விடுத்தல்.

[1]எழுத்தெனச் சிதைவிலா விராமன் தேர்ப்பரிக்
[2]குழுக்களைக் கூர்ங்கணைக் குப்பை [3]யாக்கிநேர்
[4]வழுத்தரு மாதலி வயிர மார்பிடை
அழுத்தினன் [5]கொடுஞ்சர மாறி ரண்டாறரோ.

(இ - ள்.) (அப்போது இராவணன்),—சப்தப்பிரம்ம்போல அழிவில்லாதனவான இராமனுடைய தேரிற்பூட்டிய குதிரைத் தொகுதிகளின்மீது கூரிய அம்புத் தொகுதிகளைப் பிரயோகித்து, நேரேயுள்ள துதிப்பதற்குஅரிய [பெரும்புகழ்படைத்த] மாதலியின் வயிரம்போன்ற [உறுதியான] மார்பின்நடுவிற் கொடிய பன்னிரண்டு அம்புகளை அழுந்துமாறு செலுத்தினன்; (எ - று.)—

பி - ம்:—[1]எழுக்கெனச். [2]குழுத்தனை. [3]ஆக்கினன். [4]வழுத்தலில். [5]வெஞ்சரம். (3743)

77.—மாதலியின்மார்பில் இராவணன் அம்புசெலுத்தியது கண்டு ஸ்ரீராமன் மிகவும் வருந்துதல்.

நீல்நிற நிருதர்கோ னெய்த [1]நீதியின்
சால்புடை மாதலி மார்பிற் றைத்தன
[2]கோலினு மிலக்குவன் கோல [3]மார்பின்வீழ்
வேலினும் [4]வெம்மையே [5]விளைந்த [6]வீரற்கு.

(இ - ள்.) கருநிறமுள்ள அரக்கர்தலைவனான இராவணன் எய்தவையாய், நீதியொடுமேன்மைக்குணமுடைய மாதலியின் மார்பில் தைத்தனவான அம்புகளினாலும், ஸ்ரீராமனுக்கு,—இலக்குமணனுடைய அழகியமார்பிற் பாய்ந்ததான வேலைக்காட்டிலும் வெம்மையே விளைந்தது; (எ - று.)

இலட்சுமணனுடையமார்பில் வேல் தைத்தபோது எவ்வளவு வருத்தம் உண்டாயிற்றோ அதனினும்மிகுதியாக வருத்தம், மாதலி மார்பில்தைத்த அம்புகளினால், ஸ்ரீராமபிரானுக்கு உண்டாயிற் றென்றபடி: இதனால், ஸ்ரீராமன் தன்னையடைந்தார்திறத்துக் கருணையைக் காட்டுபவனென்பதை விளக்கியவாறு. [5]விளைத்த என்ற பாடத்துக்கு-தைத்தன [பாணங்கள்],-இலக்குவன் கோல மார்பின்வீழ் கோலினும் வேலினும் வெம்மையே விளைத்தன என்க.

பி-ம்:—[1]நீதியிற். [2]கோலினை. [3]மார்பின். [4]வெம்மையை. [6]வீரர்க்கு. இச்செய்யுள் அச்சிட்டபிரதிகளிலும் சில ஏட்டுப்பிரதிகளிலும் "வானரத்தலைவனும்" (82) என்பதன்பின் இருப்பினும், பலஏட்டுப் பிரதிகளில் இங்கு இருப்பதாலும், பொருட்பொருத்தமிருத்தலாலும் இங்குப் பதிப்பிக்கப்பட்டது. (3744)

78.—இராமன் இராவணனம்புகளினால் தேவர்கள் கண்ணுக்கு மறைபடுதல்.

மண்டில வரிசிலை [1]வான [2]வில்லொடு
[3]துண்டவெண் பிறையெனத் [4]தோன்றத் தூவிய

[5]உண்டை [6]வெங் கடுங்கணை யொருங்கு மூடலால்
கண்டில ரிராமனை யிமைப்பில் [7]கண்ணினர்.

(இ - ள்.) மண்டிலமாகவளைத்த கட்டமைந்த (இராவணனுடைய) வில்லானது, இந்திரதனுசுபோலவும் துண்டுபட்ட வெள்ளியபிறைச்சந்திரனைப் போலவும் தோன்றிக்கொண்டிருக்க, (அந்த வில்லினின்றும்) தூவிய உண்டையான மிகக்கொடிய அம்புகள் ஒருசேர மூடுதலால், இமைப்பில்லாத கண்ணை யுடையவர்களான தேவர்களும் இராமபிரானைக் காணமாட்டாதவராயினர்; (எ - று.)—பி-ம்:—[1]மான. [2]வில்லொரு, வில்லொடும். [3]துண்டவன். [4]தானே தூவிய. [5]உண்ட. [6]வெங்கணையவை. [7]கண்ணினன்.

79.—இதுமுதல் நான்குகவிகள்—தேவர்முதலியோர் அபபோதடைந்த நிலையைத் தெரிவிக்கும்.

தோற்றன னேயினி யென்னுந் தோற்றத்தால்
[1]ஆற்றல்சா லமரரு [2]மச்ச மெய்தினர்
[3]வேற்றவ ரார்த்தனர் மேலுங் [4]கீழுமாய்க்
[5]காற்றியக் கற்றது கலங்கிற் [6]றண்டமே.

(இ - ள்.) (அறிவில்) வலிமையமைந்த தேவர்களும்,—(அப்போது) இனி (இராமபிரான்) தோற்றேவிட்டா னென்கின்ற எண்ணத்தினால் அச்சமடைந்தனர்: பகைவர்களாகிய அரக்கர் (மகிழ்ந்து) ஆரவாரஞ் செய்தார்கள்: காற்றானது மேலும் கீழும் இயங்குதலொழிந்தது: இவ்வண்டமே நிலை கலங்கிற்று. (எ - று.) பி-ம்:—[1]ஆற்றலார், ஆற்றலர். [2]அச்சத் தாழ்ந்தனர். [3]வேற்றலரார்த்தனர், ஏர்த்தனதாலற. [4]கீழுரும். [5]காற்றது கனலது. [6]உம்பரே. (3746)

80 அங்கியுந் தன்னொளி யடங்கிற் [1]றார்கலி
[2]பொங்கில [3]திமிர்த்தன விசும்பிற் [4]போக்கில
வெங்கதிர் [5]தண்கதிர் விலங்கி மீண்டன
[6]மங்குலி னெடும் [7]புயல் மழை[8]வ றந்ததால்.

(இ - ள்.) அக்கினியும் தன்னொளி குறையப்பெற்றது; கடல்களும் (அலைகளின்றி) கிளர்தலொழிந்து அசைவற்றுக்கிடந்தன; சூரியசந்திரர்கள் வானத்தில் இயங்குதலொழிந்து விலகி அப்பாற்சென்றன; வானத்தினின்று மேகம் மழை வறண்டிட்டது: (எ-று.)—ஆர்கலி - நீரைத்தன்னகத்தேயுடையது; வினைத்தொகையன்மொழி. பி-ம்:—[1]ஆதலின். [2]பொஙகின, பொங்கல, பொங்கியது. [3]அமர்ந்தன. [4]போகில. [5]இரவியும். [6]மங்குவ. [7]புனல். [8]தழைந்ததால். (3747)

81. திசைநிலை கடகரி செருக்குச் சிந்தின
[1]அசைவில வேலைக [2]ளார்க்க வஞ்சின
[3]விசைகொடு [4]விசாகர்தை [5]நெருக்கி [6]யேறினன்
[7]குசனென மேருவுங் குலுக்க முற்றதே.

(இ - ள்.) அங்காரகன் விசையுடனே விசாகநட்சத்திரத்தை ஆக்ரமித்து ஏறினன்; என்றஇதனால் (நிமித்தமாக) திக்குக்களில் நிலையாகவுள்ள மதயானைகளோட்டும், (தாமது) செருக்கு ஒழிந்தன; கடல்கள், அசைதலில்லாதனவாய் ஒலிசெய்வதற்கும் அஞ்சின: (அசையாத) மேருவும் சலித்தலை அடைந்தது; (எ - று.)

கீழ்ச்செய்யுளில் கடல் கிளர்த்தலில்லாது தம்பித்திருந்தமையைக் கூறினார்; இங்கு ஆர்க்க அஞ்சினமையைக் கூறினாரென வேறுபாடு காண்க; விசாகமென்பது - இட்சுவாகு வமிசத்தவரின் நட்சத்திரமாதலால், அதை அங்காரகன் ஆக்கிரமித்தால், இட்சுவாகுவமிசத்தார்க்குத் தீங்கு நேருமென்க; இவ்விடத்து ஸ்ரீவான்மீகிபகவானும் "ஆகரம்யாங்காரகஸ்தஸ்தௌ விஶாகாமபி சாம்பரே" என்றது காண்க. இனி, 'விசைகொடு விசாகத்தைநெருக்கியேறினன் - குசனென' என்பதற்கு - குசன் - அங்காரகன், விசாகத்தை-விருச்சிகராசியில், நெருக்கிஏறினன் - வக்கிரித்துச்சென்றானென்று பொருள்கூறுவாருமுளர்; அங்காரகன் விருச்சிகத்தில் வக்கிரித்துச்சென்றால் மன்னர்க்குத் தீங்குண்டாமென்பது, சோதிடநூற்கொள்கை. [7]குசையுறு என்ற பாடத்துக்கு, குசை-குஶ: கடிவாளக்கயிறு: இலக்கணையால் நாணியைக் காட்டிற்று. சிவபிரானுக்கு மேரு வில்லாயமைந்தபோது நாணியைப் பெற்றிருந்தமை காண்க. இனி, குசை-குஜம் என்பதன்விகார மெனக்கொண்டு, மரங்களையுடைய மேரு என்னவும் இடமுண்டு. குசை [குஸம்]=நீர் எனக்கொண்டு, குசையுறு மேகம் என இயைப்பினுமாம். பி - ம்:—[1]அசைவிலா. [2]ஆர்ப்ப. [3]விசையொடு. [4]மேகத்தை, விசாலத்தை, ஓகத்தை. [5]நெருங்க. [6]மேற்கொண்ட. (3748)

82\. வானரத் [1]தலைவனு மிளைய மைந்தனும்
[2]ஏனையத் தலைவனைக் [3]காண்கி லேமெனக்
கானகக் [4]கரியெனக் கலங்கி னார்கடல்
மீனெனக் கலங்கினர் [5]வீரர் வேறுளார்.

(இ-ள்.) வானரத்தலைவனான சுக்கிரீவனும் இளையபெருமாளும், மற்றையோரும், '(போர்க்களத்தில் நாம்) தலைவனான அவ்விராமபிரானைக் காணவல்லமை அற்றவராயினோம்' என்று சொல்லி (த்தம் இனத்திற்குத் தலைமையான யானையரசைக் காணப்பெறாத) காட்டு யானைகள் போலக் கலங்கினார்கள்; மற்றுமுள்ள வீரர்கள் (திருவணைகட்டிய காலத்துக்) கடலிலுள்ள மீன்போலக் கலங்கினார்கள்; (எ-று.)-ஏனை = ஏனையோர். பி-ம்:-[1]தலைவரும். [2]யாமுனைத். [3]காண்கிலாரெனக். [4]கிரி. [5]வீரர்மேலுளார், அம்புவீழ்ந்தநாள், ஆர்ப்புவீழ்ந்தநாள். (3749)

83.—அப்போது இராமபிரான் இராவணனெய்த சரங்களைக் கொய்து அவ்விராவணன்மீது பல அம்புகளையெய்து அவனை நோவச் செய்ய, தேவர்கள் தேறுதல்.

[1]எய்தன சரமெலா மிமைப்பின் [2]முந்துறக்
[3]கொய்தன னகத்திவெங் கோலின் கோவையால்

நோய்சென வரக்கனை நெருங்க [4]நொந்தன
செய்தன னிராகவ னமரர் தேறினர்.

(இ - ள்.) (இராவணன்) எய்தனவான அம்புகளையெல்லாம் இமைப்பொழுதிற்கும் முற்பட வெவ்விய சரத்தொகுதியாற் கொய்துபோக்கி இராகவன்,—விரைவாக அவ்வரக்கனை (அம்புகள்) நெருங்குமாறு (விடுத்து) அவன் மனம் நோவுதற்கு ஆன செயலைச் செய்தான்; (அகனால்), தேவர்கள் தேறுதலடைந்தனர்; (எ - று.)—நொந்தன=நோவன; இயல்பினால்வந்த காலவழுவமைதி. பி - ம்:—[1]எய்ததற். [2]முன்னுறக். [3]எய்தனன் விசும்பினை நிரப்பி, செய்தனன் விசும்பினை நிரப்பி. [4]நேர்ந்தன, நேர்ந்தெனச். (3750)

வேறு.

84.—இராவணன் விற்களையெல்லாம் ஸ்ரீராமன் இடையே குறைத்தல்.

[1]தூணுடை நிரைபுரை கரமவை தொறுமக்
[2]கோணுடை [3]மலைநிகர் சிலையிடை [4]குறையச்
[5]சேணுடை [6]நிகர்கணை சிதறின னுணர்வொடு
ஊணுடை யுயிர்தொறு [7]முறைவுறு மொருவன்.

(இ - ள்.) நல்லறிவோடு (தன்னை) ஊணை வுடையரான ஞானிகளினிடத்தெல்லாம் (மனவுவப்போடு) உறைபவனான திருமாலின் அமிசமான ஸ்ரீராமன்,—தூண்களினுடைய வரிசையையொத்தனவான (பத்துக்) கைகளிலுங் கொண்டுள்ள அந்த வளைதலையுடைய மலைகளை நிகர்த்த விற்கள் இடையிலே துண்டுபடும்படி, வெகு தூரம் (செல்லுதலை) உடையனவாய்(த் தம்மைத் தாமே) நிகர்த்த அம்புகளைச் சிதறினன்; (எ - று.)

இராவணன் தன்பத்துக்கைகளாற் பிடித்த பத்துவிற்களையும் ஸ்ரீராமன் இடையே துண்டித்தன னென்பதாம். எம்பெருமான் எல்லாப்பொருள்களிலும் எள்ளினுள் எண்ணெய்போல நீங்காது உறைகின்றானாலும், ஞானிகளின் ஆன்மாவினுள் மிக்க மனவுவப்போடு எழுந்தருளியிருக்கின்றானென்பது, நாற்கொள்கை. உபநிடதங்களில் பரமபாருளை "அந்நம்" என்று கூறியிருப்பதும், நம்மாழ்வார் "உண்ணுஞ்சோறு...கண்ணன்" என்று அருளிச் செய்திருப்பதும், இங்குக் காண்க. இச்செய்யுளிற் குற்றெழுத்துப் பயின்றுவந்தது-குறுஞ்சீர்வண்ணம் எனப்படும்: மேலும் இது காண்க இது முதல் 94-ஆஞ் செய்யுள் வரை சந்தக் குழிப்புக்கு ஒத்திருக்கலால், இவை சந்தவிருத்தமாகும். பி - ம்:—[1]தூணிடை. [2]கோணிடை. [3]மலைநுகர். [4]குலையச். [5]சேணிடை. [6]நிமிர்கணை சிதிரனற். [7]உணர்வுடை, முறையுறும். (3751)

85.—இராமபிரானுடைய தேர்க்கொடியிற் கருடன் நிற்றல்.

படையுக விமையவர் பகுவரல் கெடவந்து
இடையுறு [1]திசைதிசை யிறுகுற [2]விறைவன்

அடையுறு கொடிமிசை யணுகின னளவில்
கடையுக [3]முடிகெழு கடல்புரை கலுழன்.

(இ-ள்.) யுகாந்தகாலத்துப் பொங்கியெழுகின்ற அளவில்லாத கடல்போற் பெருந்தோற்றமுள்ள கருடன்,—(இராவணனுடைய) விற்படை குறைபடுகையில், இமையவரின் துன்பங்கெட (இவ்வுலகில்) வந்து, இடம் பொருந்திய பலதிசைகளும் (நிலைகெடாமல்) உறுதியாகத் தங்குதல்பொருந்தத் தலைவனுகிய ஸ்ரீராமனுடைய (தேரிற்) பொருந்தியுள்ள கொடிமீது அணுகிச் சேர்ந்தான்; (எ-று.)—இடித்துவசம் வீழ்ந்திட்டதனால், ஆங்குக் கருடன் வந்து தங்கினன்; இடித்துவசம் வீழ்ந்திட்டமை 75-ஆம் பாடலிற் கூறப்பட்டது. பி - ம்:—[1]சிறைதிசையிழுகுற, சிறைதிசையிருளுற. [2]இனைய. [3]முடியெழு. இச்செய்யுள் சிலபிரதியில் "திசையுறு" (87) என்பதன்பின் உள்ளது. (3752)

86.—இதுவும் அடுத்த கவியும்-இராமபிரான் கணைதூவி அரக்கனுடைய கவசத்தை யூடுருவச்செய்து வீணைக் கொடியைத் தரைப்படுத்தியமையைத் தெரிவிக்கும்.

[1]கயில்விரி வறவரு கவசமு முருவிப்
[2]பயில்விரி குருதிகள் பருகிட வெயிலொடு
அயில்விரி சுடுகணை கடவின [3]னறிவின்
[4]துயில்வழி யுணர்தரு சுடரொளி யொருவன்.

(இ - ள்.) துயிலும்போதே (தன் முற்றுணர்வினால் யாவற்றையும்) அறியவல்ல பரஞ்சோதியாகிய ஒப்பற்ற முதற்கடவுள் [ஸ்ரீராமன்],—மூட்டுவாய் விரிதலில்லாமலுள்ள கவசத்தையும் இடையேதொளைத்துக்கொண்டு, (உடலிற்) பொருந்தியுள்ள மிக்க இரத்தத்தைப் பருகும்படி ஒளியுடனே கூர்மைவிரிந்த சுடுகின்ற அம்புகளைச் செலுத்தினான்; (எ - று.)—பி - ம்:—[1]கயில்விரிவற வரி, கயில்விரிவுறவரு, கயில்பிரிவுறவுறக், கயில்விரிகடைபுணர். [2]பயில்வரு. [3]அறியும், அறிவுற்று [4]உயிருடனெனவுறை, துயில் விரிவிழியுணர், துயில்பிரிவளிவுணர். (3753)

87. திசையுறு துகிலது செறுமழை சிதறும்
விசையுறு முகிழது விரிதரு சிரனொடு
இசையுறு கருவியி [1]னினிதுறை கொடியைத்
தசையுறு கணைகொடு [2]தரையுற விடலும்.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) திசையிற்பொருந்திய துகிலையுடையதும் நெருங்கிய மழையைச் சிதறவல்ல விசைபொருந்திய அரும்புபோன்ற உறுப்பையுடையதுமான பரங்கசிரத்துடனே இசையும்பொருந்திய(வீணையென்னும்) கருவி இனிதாகப்பொருந்தப்பெற்ற (இராவணனது தேர்க்) கொடியை, (ஸ்ரீராமன்) தசைபடிந்துள்ள அம்புகளைக் கொண்டு தரையிற்பொருந்துமாறுதள்ளுதலும்,—(எ - று.)—

'விடலும்' என்ற எச்சம், அடுத்த செய்யுளிலுள்ள 'நண்ணலும்' என்ற சொல்லோடு இயையும். பி - ம்:—[1] இலகுறு, இனிதுயர். [2] தகையுறவுரறி. (3754)

88.—'இராமன்கொடியில் கருடன் தங்கிவிட்டதனால் இனி நமக்குக் கவலையில்லை' என்று தேவர்கள் கூறுதல்.

பண்ணவ னுயிர்[1]கொடி யெனவொரு [2]பரவைக்
கண்ணக னுலகினை வலம்வரு கலுழன்
நண்ணலு மிமையவர் நமதுறு கருமம்
[3]எண்ணல முனிவினி னிவறின னெனவே.

(இ - ள்.) ஒப்பற்ற கடலாற்சூழப்பட்ட இடமகன்ற உலகை வலம்வருந்தன்மையுள்ள கருடன் ஸ்ரீராமனுடைய சிறப்பமைந்த கொடியாகுமென்று (அப்பிரானுடைய தேர்க்கொடியின்மேற்) பொருந்துதலும், தேவர்கள் 'நமக்கு ஆகவேண்டிய செயலைப்பற்றி இனி எண்ணமாட்டோம்; (ஏனெனில்,—கருடன்) சினமுடையவனாகி (இராமபிரானுடைய தேர்க்கொடியில் தங்கியிருக்க) ஆசை கொண்டுள்ளான்' என்றுசொல்லுதலும்—(எ - று,)—'ஏயினன்' என அடுத்த கவியில் முடியும்.

இச்செய்யுள் "படையுக" (85) என்றதன்பின் இருப்பின் நலமெனத்தோன்றுகின்றது. கருடன் இராமபிரானது தேர்க்கொடியில் தங்கியதும் இராவணன் தேர்க்கொடியை ஸ்ரீராமன் வீழ்த்தியதும் நிகழவே, தேவர் தமக்கு ஆகவேண்டிய காரியம் நிறைவேறுமென்று களித்தனர். முனிவினின் இவறினன் - ஸ்ரீராமன் சினங்கொண்டு (இராவணனைவெல்ல) விரும்பியுள்ளானென்றல் ஏற்கும். பி-ம்:—[1] கொடியினை. [2] பறவை. [3] எண்ணல முனிவனறவறினனெனவே, எண்ணலாமுனிவன்றிவறினனென்னவே, எண்ணினமுனிவரொடெய்தினனெனவே. (3755)

89.—ஸ்ரீராமன்மீது இராவணன் தாமதாத்திரம் விடுதல்.

ஆயதொ ரமைதியி [1]னறிவினி னறிவான்
நாயக னொருவனை [2]நலிகில துணர்வான்
ஏயின னிருளுறு [3]சரமலை யெனுமத்
[4]தீவினை தருபடை தெறுதொழின் மறவோன்.

(இ - ள்.) அப்படிப்பட்டதான ஓர்சமயத்தில், அழிக்குந்தொழிலைக்கொண்ட மறக்குணமுடையோனான இராவணன், ஞானத்தினால் (உணர்தற்கு) உரியவனை ஒப்பற்ற (லோக) நாயகனாகிய ஸ்ரீராமனை(த் தான் விடுத்த அம்புகள்) நலியாமற்போனதை யுணர்ந்தவனாய், (இந்த அஸ்திரம் இராமனுக்குத் துன்பத்தை விளைத்தே தீருமென்று எண்ணி) இருளையுண்டாக்குகின்ற சரமை யென்கின்ற அந்தத்தீவினையைத் தருகின்ற படையை ஏவினான்; (எ - று.)

இராவணன் கணைகள் பழுதுபட்டமையை 83 - ஆங் கவியா லறியலாம். எப்படிப்பட்டவர்க்கும் மனத்தி லிருளைத் தருதலால் 'தீவினை தருபடை' எனப்பட்டது. இனி, கலிஇல துணர்வான் என் பதற்கு - தான் இப்போது எய்யப்போகின்ற தாமதாத்திரம் அவ் விராமனை கவியமாட்டாதென்பதை யறிந்தவனாகிய இராவணன் அப்படையை யேவினன் எனக் கூறினருமுளர். பி - ம்:—[1] அறிவி னுளறிவன், அறிவினனைமையும். [2] நலிஇல துணரான், நலிஇல துணரா, கல்இன னுணரான். [3] தாமதம். [4] தீயென வருபடை. (3756)

90.—அந்தத் தாமதாத்திரத்தின் தன்மையும் செயலும் மூன்றுபாடல்களாற் கூறப்படும்.

தீமுக முடையன சிலமுக முதிரம்
தோய்முக முடையன சுரர்முக முடைய
பேய்முக முடையன பிலமுக நுழையும்
[1]வாய்முகம் வரியர வனையன வருவ.

(இ-ள்.) அந்தத் தாமதாத்திரத்தால்தோன்றிய (அம்புகளிற்) சிலவற்றின் முகம், நெருப்பைக்கக்குகின்ற முகமுடையனவாம்: (சில), இரத்தம் படிந்த முகங்களையுடையன; (சில), தேவமுக முடையன; (சில), பேய்முகமுடையன; (சில) பிலத்தில் நுழை கின்ற வாயிடத்தைக்கொண்ட வரியமைந்தனவான அரவையொத் தனவாய் வருவன; (எ - று.) பி - ம்:—[1] வான்முகம். (3757)

91\. ஒருதிசை முதல்கடை யொருதிசை யளவும்
இருதிசை யெயிறுற வருவன [1]பெரிய
கருதிய [2]கருதிய புரிவன கனலும்
பருதியை மதியொடு பருகுவ பகழி.

(இ-ள்.) (அன்றியும் அப்) பகழிகள்,—ஒருதிசையின் தொடக் கம்முதல் (அதற்கு எதிரான) மற்றொருதிசையின் முடிவுவரையி லும் இருதிசைகளிலும் (தம் விஷப்) பற்கள்பொருந்த வருவன; மிகப் பெரியவை; (தன்னை விடுத்தவன்) நினைத்தவற்றையெல்லாம் செய்பவல்லன: எரியுந்தன்மையுள்ள சூரியனைச் சந்திரனோடு பருகுந்தன்மையுள்ளன; (எ - று.)—கீழ்ச்செய்யுளில் அரவை யொத்தன என்று கூறியதை, இது, விவரிப்பதென்னலாம்.பி-ம்:— [1] எரியக், வெருவ. [2] புரிவனவழலுறுகழலும். (3758)

92\. இருளொரு திசையொரு திசை[1]வெயில் விரியும்
சுருளொரு திசையொரு திசைமழை தொடரும்
உருளொரு திசையொரு திசை[2]யுரு முரலும்
மருளொரு திசையொரு [3]திசைசிலை வருடம்.

(இ-ள்.) (இராவணன் விடுத்த அந்தத்தாமதாத்திரத்தினால்), ஒரு திசையில் இருளும், மற்றொருதிசையில் வெயிலும் விரியும்: ஒரு திசையில் சுழல்காற்றும், மற்றொருதிசையில் மழையும் தொட ரப்பெறும்: ஒருதிசை சக்கரமும், ஒருதிசை இடியும் முரலும்: ஒருபுறத்தில் மருள் (மிக), மற்றொருபுறத்தில் கல்மழை (பொழி

யும்); (எ - று.)—பி - ம்:—[1]எரியெரியின். [2]உருமிடலும். [3]திசை செல வருடம், திசையிலவருடம். (3759)

93.—இதுவும் அடுத்த கவியும்-ஸ்ரீராமன் ஆராய்ந்து சிவாஸ்திரத்தை விடுதலைத் தெரிவிக்கும்.

இனையன நிகழ்வுற வெழுவகை யுலகும்
கனையிருள் கதுவிட [1]வமரர்கள் கதற
[2]வினையுறு [3]தொழிலிடை விரவலும் விமலன்
[4]நினைவுறு [5]தகைமையி னெறியுறு முறையின்.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) இவ்வாறான நிகழ்ச்சிகள் நிகழ்ந்துகொண்டிருக்க, நெருங்கியுள்ள இருள் ஏழுவகை யுலகங்களையும் கவிந்துகொள்ளவும், தீவினையினால் நேர்ந்தாற்போன்ற செயலிலே (இவ்வுலகம்) அகப்பட்டுப்பொருந்துதலும், அமரர்கள் கதற (இவற்றையெல்லாம் கண்டு) குற்றமற்றவனான ஸ்ரீராமபிரான்,—நேராகியமுறைமையின நினைவின்றதன்மையினால்,—(எ - று.)—'கருதிவிடுதலும்' என அடுத்த கவியோடு தொடரும். பி - ம்:—[1]உயிரிடை கதற. [2]வினையது. [3]தொழிலிகை. [4]வினையுறு. [5]தகையினன். (3760)

94. கண்ணுத [1]லொருவன [2]தடுபடை கருதிப்
பண்ணவன் விடுதலு மது[3]தனி பருக
[4]எண்ணுறு கனவினொ டுணர்வென [5]விமையில்
துண்ணென [6]நிலையினி னெறிபடை தொலைய.

(இ - ள்.) நெற்றிக்கண்ணையுடைய ஒப்பற்றவனான சிவபெருமானது கொல்லுந்தன்மையுள்ள அஸ்திரத்தைக் கருதி ஸ்ரீராமன் விடுதலும்,—அது மிகவும் (அந்தத்தாமதாஸ்திரத்தைப்) பருகியதனால், எண்ணப்படுகின்ற கனவோடு நனவுபோல [கனவில் தோன்றிய பொருள் உணர்வு தோன்றியபோது மறைந்துவிடுதல் போல] இமைப்பொழுதில் வெகு விரைவில் (அரக்கன்) எறிந்த தாமதாஸ்திரம் தொலைந்துவிட,—(எ - று.)—'எரிந்தகண்ணினன்' என அடுத்த கவியோடு தொடரும். இராவணனுடைய தாமதாஸ்திரத்துக்கு எதிர் சிவாஸ்திரமே என்று கருதி, அதனை விட, தாமதாஸ்திரம் தொலைந்தமை காண்க. "சங்கராத் ஜ்ஞாநம் அந்விச்சேத்" என்றவாறு சிவன் அறிவைத் தருங் கடவுளாதலால், மாயவிருளைப் போக்க அவன்படை யுதவிற்று. துண்ணெனல் - விரைவுக் குறிப்பு. வெகுவிரைவில் அஸ்திரம் தொலைந்தது என்பார் 'இமையில் துண்ணெனுநிலையினின்' என்றார். பி - ம்:—[1]ஒருவனை. [2]தரு. [3]தனி. [4]எண்ணிறு, எண்ணுவ. [5]விடவிற. [6]நிலையின, நிலைமையின்.(3761)

வேறு.

95.—இராவணன் பலபாணங்களை இராமன் திருமேனியில் அழுந்தவிடுதல்.

விரிந்த தன்படை [1]மெய்கடை போய்வெளவ வீய்ந்த
எரிந்த கண்ணினன் [2]னெயிற்றிடை [3]மடித்தவா யினன்தன்
[4]தெரிந்த வெங்கணை கங்கலுஞ் சிறையல இறந்தான்
அரிந்த மன்றிரு மேனிமே லழுந்திடநின் றூர்த்தான்.

(இ - ள்.) பரவியிருந்த தான் விடுத்த தாமதாத்திரமானது மெய்யைக்கண்ட பொய்போல அழிந்ததாக, எரிந்த [நெருப்பு வெளிப்படுகின்ற] கண்களையுடையவனும் பற்களினிடையே மடித்த வாயையுடையவனுமான இராவணன், கொடிய பருந்திற்கு கட்டப்பட்டனவும் தெரிந்தெடுத்தனவுமான தன்னுடைய வெவ்வியகணைகளைப்பகைவரை யடக்குபவனான ஸ்ரீராமன் திருமேனியில் அப்படிப்பட்ட [வாயாற்சொல்லுதற்கு அரிய] திறமையுடனே அழுத்தமாகப் பதியவைத்துநின்று ஆரவாரஞ்செய்தான்; (எ-று.) —இச்செய்யுளின் முதலடி, "எறிபடைதொலைய" (94) என்றதன் அநுவாதம். பி - ம்:—[1] மெலியவீந்தமைகண்டே, மெய்...வீய. [2] எயிற்றினை. [3] கடித்தனனெரியத். [4] தெரிந்தவெங்கணைபவிந்திட—வெஞ்சமரதனுல், தெரிந்த...திறத்த. (3762)

96.—இராவணன் ஆசுராஸ்திரம் விடுதல்.

[1] ஆர்த்து வெஞ்சினத் [2] தாசுரப் படைக்கல மமரர்
வார்த்தை யுண்டதின் னுயிர்களான் மறலிதன் வயிற்றைத்
தூர்த்த திந்திரன் [3] துணுக்குறு தொழிலது தொடுத்துத்
தீர்த்தன் மேல் [4] வரத் துரந்தன [5] னுலகெலாந் தெரிய.

(இ-ள்.) (இராவணன்) ஆரவாரஞ்செய்து, (பின்னும்), தேவர்களின் புகழையுண்டதும், இனியஉயிர்களால் யமனுடைய வயிற்றை நிரப்பியதும் இந்திரனும் திடுக்கிடும்படியான செயலையுடையதுமான மிகவுக்கிரமான ஆசுராஸ்திரத்தை, உலகெல்லாம் அறியும்படி, பரிசுத்தமூர்த்தியான ஸ்ரீராமன்மேல்வரத் தொடுத்து விடுத்தான்; (எ-று.)—பி-ம்:—[1] ஆர்த்த. [2] அரக்கன்வெம், அசுரர்தம். [3] பலந்தனைத்தொலைத்தது. [4] செலத். [5] உலகங்கடிரிய. (3763)

97.—ஆசுராஸ்திரம் ஸ்ரீராமன்மேற் செல்லுதல்.

ஆசு ரப்பெரும் படைக்கல மமரரை யமரின்
ஏசு விப்பதெவ் [1] வுலகமு மெவரையும் வென்று
வீசு வெற்[2] பிறத் துரந்தவெங் கணையது விசையின்
பூசு ரர்க்கொரு கடவுண்மேற் [3] சென்றது [4] போலாம்.

(இ-ள்.) தேவர்களைப் போரில் ஏசுவிப்பதும், எவ்வுலகத்திலுமுள்ள எவரையும்வென்று (தன்மீது) வீசிய மலைகளையும் முறிந்துபோம்படி வெளிவிட்ட கொடிய அம்புகளையுடையதுமான (அந்த) ஆசுரமென்ற பெரிய அஸ்திரமானது,—விசையுடனே பிராமணர்தொழும் முக்கிய கடவுளான ஸ்ரீராமன்மேற் சென்றது; (எ-று.) போல், ஆம்-அசைகள்.

பூசுரர்-நிலத்தேவர்; அந்தணர். 'பூவின் மேலிருக்கும் சுரர்-பிரமா' என்றுகொண்டு, பிரமனுக்குங் கடவுளாகிய திருமால் என்று கொள்வாருமுளர். பி-ம்:—[1] உலகையும். [2] உறுவெங்கணையெனவவைவிசையிற், உறத்துரந்தனவெங்கணைவிசையிற்,இற*** த்தணையெனவிசையின். [3] சென்றன. [4] போலும் (3764)

98.—ஸ்ரீராமன் ஆக்கினேயாஸ்திரத்தினால் ஆஸுராஸ் திரத்தை யழித்தல்.

நுங்கு கின்றதிவ் வுலகையோர் நொடிவரை யென்ன
[1]எங்கு நின்றுநின் றலமரு மமரர்கண் [2]டிரைப்ப
மங்குல் வல்லுரு மேற்றின்மே லெரிமடுத் தென்ன
அங்கி தன்னொடும் படைதொடுத் திராகவ னறுத்தான்.

(இ - ள்.) ஓர்நொடிப்போதில் இவ்வுலகை (இராவணன் விடுத்த ஆசுராஸ்திரம்) விழுங்குகின்ற தென்று எங்கும்நின்று நின்று அலமருகின்றதேவர் கண்டு (மகிழ்ச்சியினால்) ஆரவாரஞ் செய்ய, மேகத்திலுள்ள வலியஉருமேற்றின்மீது எரி மடுத்தாற் போல நெடிய ஆக்கினேயாஸ்திரத்தைத் தொடுத்து இராகவன் (அந்த ஆஸுராஸ்திரத்தை) அறுத்தான்; (எ - று.)—பி-ம்:—[1]எங்கு மெங்குநின்றமரர்கள்கண்புடைத்து, எங்குமெங்குநின்றலம்வரு மமரர்கண்டு. [2]இமைப்ப. (3765)

99.—இராவணன் மீண்டும் அம்புஎய்தல்.

கூற்றுக் [1]கோடி னுங் கோடல [2]கடலெலாங் குடிப்ப
[3]நீற்றுக் குப்பையின் மேருவை [4]நூறுவ நெடிய
காற்றுப் பின்செல[5]ச் செல்வன வுலகெலாங் கடப்ப
நூற்றுக் [6]கோடியம் பெய்தன னிராவண னொடியில்.

(இ - ள்.) யமன் (தன்னுடையகொல்லுதற்றொழிலினின்று) கோடினாலும் கோடாதனவும், கடலெல்லாங் குடிப்பனவும், மேரு மலையைப் புழுதித்திரள்போலாகுமாறு நூறுவனவும், நெடியன வும், (விசையிற்) காற்றும் (தமக்குப்) பின்செல்லுமாறு செல் வனவும், உலகெல்லாவற்றையும் கடப்பனவுமான நூற்றுக்கோடி அம்புகளை ஒருநொடிப்போதில் இராவணன் எய்தான்; (எ - று.) பி - ம்:—[1]கோடலுங்கோடுங். [2]உலகெலாங். [3]நீற்றிற். [4]நூறுப நெடிய, நூறுவநெரியக். [5]வருவன. [6]கோடியிற். (3766)

100.—இராவணன் எய்த அம்புகளை முனிவர் பாராட்டிக் கூறுதல்.

என்ன கைக்கடுப் போவென்பர் சிலர்சில [1]ரிவையும்
அன்ன [2]மாயமே யம்பல வென்பரவ் வம்புக்கு
இன்ன முண்டுகொ லிடமென்பர் சிலர்சில ரிகற்போர்
முன்ன மித்தனை முயன்றில னென்பர் [3]முனிவர்.

(இ-ள்.) முனிவர்களிற்சிலர், 'என்ன கைவிசையோ!' என்பர்; சிலர் 'இவையும் அப்படிப்பட்ட மாயமே, அம்பு அல' என்பர்; சிலர் 'அப்படிப்பட்ட அம்புகட்கு இன்னும் இடம்உண்டுகொல்! [இந்த இடம்போதுமோ?]' என்பர்; சிலர் 'இதற்குமுன்னம் வலிமையுள்ள எந்தப்போரையும் இத்தனை முயன்று செய்திலனாம்' என்பர்; (எ - று.)—இவையும் - எச்சவும்மை. மாயமே அன்ன - மாயமே போலும் எனினுமாம். பி-ம்:—[1]இயையும். [2]மாயமேயம்பரம்புக்க தென்றயிர்த்தார், மாயமாமம்பலம்புக்கதென் றயிர்த்தார், மாய மாமரவென்பரவ்வம்புக்கு [3]முனைவர். (3767)

101.—இராவணனெய்த அம்புகளை இராமன் பிளந்தமை.

மறைமு தற்றனி நாயகன் வானினை மறைத்த
[1]சிறையு டைக்கொடுஞ் சரமெலா மிமைப்பொன்றிற் றிரியப்
[2]பொறைசி கைப் [3]பெருந் தலைநின் றும் புங்கத்தி னளவும்
பிறைமு கக்[4]கடு வெஞ்சர மவைகொண்டு பிளந்தான்.

(இ-ள்.) வேதத்தினாற்பிரதிபாதிக்கப்படுகின்ற ஒப்பற்ற தலைவனான ஸ்ரீராமன்,—ஆகாயத்தைமறைத்த சிறகையுடையனவான (இராவணன் விடுத்த) கொடியசரங்களையெல்லாம் ஓரிமைப்போதில் மாறும்படி, அர்த்தசந்திர மெனப்படும் மிகக்கொடிய பாணங்களைக்கொண்டு பாரமான உச்சியைக்கொண்ட பெரிய தலைப்பாகத்திலிருந்து கூரிய நுனிவரையிலும் பிளவுறச் செய்தான்; (எ-று.)—

பி-ம்:—[1]சிறை... இமையொன்றில், சிறைமுகக்கடுங்கணையெலாமம்பினிற். [2]அறைசிதைப், அறைநிறைப். [3]பொருந். [4]கொடுஞ்சரங்களிற்றுரந்தெனப், கொடுஞ்சரங்களாலங்கத்தைப், தடங்கடுங்கொடுஞ்சரங்கொண்டு, கொடுநெடுங்கடுஞ்சரங்களாற். (3768)

102.—இராவணன் மயாஸ்திரத்தை விடுதல்.

அயன்ப டைத்தபே ரண்டத்தி னருந்தவ மாற்றிப்
பயன்ப டைத்தவ [1]ரியாரினும் படைத்தவன் பல்போர்
வியன்ப டைக்கலந் தொடுப்பனு னினியென விரைந்தான்
மயன்படைக்கலந் [2]துரந்தனன் தயரதன் மகன்மேல்.

(இ - ள்.) பிரமதேவனாற்படைக்கப்பட்ட பெரிய அண்டத்தினுள் (செய்தற்கு) அரிய தவத்தைச்செய்து பயன் படைத்தவர் யாவரினும் (பெரும்பயன்) படைத்தவனான இராவணன்,—'இப்போது பலவான போரிலும் உபயோகித்த பெருமைபெற்ற படைக்கல்த்தை நான் தொடுத்துவிடுவேன்' என்று விரைந்தவனாய், தயரதகுமாரனான ஸ்ரீராமன்மேல் மயன்படைக்கலத்தை விடுத்தான்: (எ - று.)—பலபோரிலும் பெருமைபெற்றபடைக்கலமென்றது - மயன் படைக்கலத்தையே குறிக்கும். இனி, பலபோர்களிலும் பெரும் பயன்படைத்த படைக்கலங்களைத் தொடுப்பேனென்று கருதினனெனினுமாம். மயன் - இராவணனுக்குமனைவியான மண்டோதரியின் தந்தை. பி-ம்:-[1]யாரையும். [2]தொடுத்தனன்.

103.—தேவர்முதலியோர் அஞ்சுகையில், இராமன் அந்தப் படைக்கலத்தின் நிலையைத்தெரிதல்.

விட்ட னன்[1]விடு படைக்கலம் வேரொடு முலகைச்
சுட்ட னன் [2]னெனத் துணுக்கமுற் றமரருஞ் சுருண்டார்
கெட்ட னம்மென வானரத் தலைவருங் [3]கிழிந்தார்
சிட்டர் தந்தனித் தேவனு மதனிலை தெரிந்தான்.

(இ - ள்.) '(அஸ்திரத்தை இராமனை இலக்காகக்கொண்டு தொடுத்து) விட்டவனாகிய இராவணன் (தான்) விடுத்த அந்தப் படைக்கலத்தால் வேரோடும் உலகைச் சுட்டான்' என்று அச்சங்கொண்டு தேவருஞ் சுருண்டார்; '(நாம்) அழிந்திட்டோம்' என்று

வானரத்தலைவரும் பிளவுபட்டோடினர்; சிட்டரின் ஒப்பற்றதேவ னை திருமாலும், அந்தப்படையின் நிலையைத் தெரிந்தான்;(எ-று.) —பி - ம்:—[1]மயன். [2]எனுங். [3]இளர்ந்தார். (3770)

104.—இராமன் காந்தருவாஸ்திரத்தால் அதனை யழித்தல்.

பாந்தட் பஃறலைப் [1]பரந்தகன் புவியிடைப் பயிலும்
மாந்தர்க் கில்லையால் வாழ்வென வருகின்ற வதனைக்
காந்தர்ப் பம்மெனுங் [2]கடுங்கொடுங் கணையினாற் கடந்தான்
ஏந்தற் பன்மணி யெறும்வலித் [3]திரள்புயத் திராமன்.

(இ - ள்.) 'ஆதிசேஷனுடைய ஆயிரந்தலைகளிலே பரந்து அகன்று கிடந்துள்ள பூமியிலே வாழ்கின்ற மாந்தர்க்கு [இராம னுக்கு] வாழ்ச்சியில்லை' என்று வருகின்ற அந்தப்படைக்கலத்தை [மயாஸ்திரத்தை],—மலைபோன்றனவும் பலமணிகளாலியன்ற அணிகலன்பூணுதற்குஉரியனவுமான பெருவலிபடைத்த திரண்ட புயத்தையுடைய ஸ்ரீராமன்,—காந்தருவமெனப்படுகின்ற மிகக் கொடிய அஸ்திரத்தினால் வென்றிட்டான்; (எ - று.)—"ஏந்தற் பொற்றோளிறாய்" என்றார், ஆரணியகாண்டத்தும். ஏந்தல் - (உலகை) ஏந்துவது [தாங்குவது]: மலை; பூதரம் என்ற ஒருபெய ரிருத்தல் காண்க; இனி, ஏந்தல் - உயர்ச்சி அல்லது பெருமை என லும் ஒன்று. பன்மணி - அன்மொழித்தொகை. பி - ம்:—[1]பரந்த னன்...பரந்த, பரந்தகன்றவிசிடைப்பார்மேல், பரப்பதன்றவி சிடைப்பார்மேல், பரந்தன......பயிலும். [2]கடவுண்மாப்படையி னால், கடுங்கொடும்படையினால். [3]தடம். (3771)

105.—இராவணன் தண்டாயுதத்தை யெறிதல்.

பண்டு நான்முகன் படைத்தது [1]கனகனிப் பாரைத்
[2]தொண்டு கொண்டது மதுவெனு [3]மவுணன்முன் தொட்டது
[4]உண்டிங் கென்வயி [5]னதுநாந் துயிருண்ப னென்னுத்
தண்டு கொண்டெறிந் தானைந்தொ டைந்[7] துடைத் தலையான்.

(இ - ள்.) 'முன்பு பிரமதேவனாற்படைக்கப்பட்டதும், இரணி யன் இந்தப்பூமியைத் தன்னடிப்படுத்தற்கு உதவியாயிருந்ததும், மதுவென்னும் அசுரன் முன்பு உபயோகித்ததுமான ஒருதண்டு இங்கு என்னிடத்து உள்ளது; அதனைச் செலுத்தி (இப்பகைவனை) உயிரை யுண்பேன்' என்றுசொல்லி, பத்துத்தலைகளையுடைய இரா வணன் (அந்தத்) தண்டாயுதத்தைக் (கையிற்) கொண்டு (பகை ஞன்மேல்) வீசியெறிந்தான்: (எ - று.)—பி - ம்:—[1]கணிப்பரும் பாரை, கண்கணிப்பாரை. [2]கொண்டு. [3]அவுணனுங். [4]உண்டதென், உண்டுதன், உண்டதன். [5]இது. [6]என்றோர். [7]உயர். (3772)

106.—இரண்டுகவிகள்-ஒருதொடர்: இராவணனெறிந்த தண்டாயுதம் வருதலைக் கூறும்.

தாருகன்பண்டு தேவரைத் தகர்த்தது தனிமா
மேரு [1]மந்தரம் புரைவது [2]வெயிலன்ன வொளியது
[3]ஒருகந்தனி னுலகநின் றுருட்டினு முருளாச்
சீருகந்தது [4]முகந்தது வானவர் சிரங்கள்.

(இ - ள்.) முன்னொருகாலத்தில் தாருகனென்னும் அசுரன் தேவரை முறியடித்ததற்குக் கருவியானதும், ஒப்பற்ற பெரிய மேருவையும் மந்தரத்தையும் ஒத்ததும், வெயிலையொத்த ஒளியை யுடையதும், ஒருகத்தளவும் உலகமெல்லாம் ஒன்றுகூடி உருட்டி னாலும் உருளாத சிறப்பினாற் கொண்டாடப்படுவதும் வானவர் சிரங்களை முகந்ததும்,—(எ - று.)—"வெருவ வந்தது" என அடுத்த கவியில் முடியும். இச்செய்யுள் சிலபிரதியில் "பண்டு நான்முகன்" (105) என்றசெய்யுளின்முன் உள்ளது. பி - ம்:—[1] கந்தரம்புனை வது. [2] வெயிலினு மொளியது, வெயிலெனமிளிர்வது. [3] ஒருகஞ் செல, ஒருகந்தனி. [4] நெரித்தது தானவர் சிரத்தை, முகந்தன... சிரங்கள், முகந்தது தானவர்சிரங்கள். (3773)

107. **பசும்[1]பு னற்பெரும் பரவைபண் [2]டுண்டது பனிப்புற்று**
அசும்பு பாய்கின்ற தருக்கனி னொளிர்கின்ற தண்டம்
தசும்பு போலுடைந் [3]தொழியுமென் [4]றனைவருந் தளர
விசும்பு பாழ்பட வந்தது [5]மந்தரம் வெருவ.

(இ - ள்.) பசியநிறமுள்ள பெரிய கடலை முன்பு உண்டதும், குளிர்ச்சி பொருந்திய நீர்கசியப்பெற்றதும், சூரியனைக்காட்டிலும் விளங்குகின்றதுமான (அந்தத்) தண்டாயுதம், இவ்வண்டமானது நீர்க்குடம்போலுடைந்து ஒழிந்திடுமென்று யாவரும் மனஞ்சோர வும், (விசும்பிலுள்ள பொருள்களெல்லாம் தாக்கப்பட்டதனால் அவ்) விசும்பு பாழாய்விடவும் மந்தரம்வெருவவும் வந்தது;(எ - று.) மந்தரம்வெருவுவது, தன்னினும் ஓங்கிநிற்பதனால். அசும்பு - பகை வருடைய உதிரநீர்க்கசிவு என்னலாம். பி - ம்:—[1] புனற்படு. [2] உண் டெனப்பனிப்புற்று, உண்டனபணியாது, உண்டெனப்பணிவுற்று, உண்டவன்பணிப்புற்று. [3] அழியுமென்று. [4] யாவரும். [5] மேருவும், தேவரும். (3774)

108.—இராமபிரான் அம்பெய்து அத்தண்டாயுதத்தைப் பொடியாக்கல்.

[1]கண்ட தாமரைக் கண்ணனக் கடவுண்மாக் கதைதான்
[2]அண்டர் நாயக [3]னாயிரங் கண்ணினு மடங்காப்
[4]புண்ட ரீகத்தின் முகையன்ன புகர்முகம் விட்டான்
உண்டை நூறுடை [5]நூறுபட் டுள[6]தென வுதிர்த்தான்.

(இ - ள்.) (அதனைக்) கண்ட செந்தாமரைக்கண்ணனான ஸ்ரீராமன்,—அந்தத்தெய்வத்தன்மையுள்ள பெரிய கதாயுதத்தை, தேவர்களின் தலைவனான இந்திரனுடைய ஆயிரங்கண்களிலும் அடங்காததாய் நூறுஉண்டைகளையுடையதும் தாமரைமொட்டை யொத்த ஒளிபொருந்திய முகமுள்ளதுமான அம்பைவிடுத்து'முன் னமே நூறுபட்டுள்ளதோ?' என்று (கண்டவர்) கருதும்படி (பொடிப்பொடியாக) உதிரச்செய்திட்டான்; (எ - று.)—புகர்முகம்- அம்புக்கு, அன்மொழித்தொகை.உண்டை- திரண்டவடிவுள்ளதாகி இலக்கில் எய்யப்படுவது. பி - ம்:—[1] கண்டுதாமரைக்கடவுண்மாப் படையெனக் கருதா, கண்டு...மாக்கதையெனக்கழறு, கண்ட

தாமரைக் கடவுண்மாப்படையன்னகதையை. [2]அண்டநாயகன். [3]ஆயிரத்தளவினுமடங்காப்-, ஆயிரத்தளவிலுமடங்கப். [4]புண்டரீகத்தின் பொகுட்டன்ன புகர்முகவம்விட்டான், புண்டரீகமொட்டனையதோர் புகர் முகவம்பால், புண்டரீகத்தின் பொகுட்டன்ன புகர்முகக் கணையால். [5]கிறுபட்டுளது, நூறுபட்டுள. [6]ஒல்லையினுதிர்த்தான், பொரிந்துதிர்ந்த. (3775)

109.—இராவணன் மாயாஸ்திரம்விடக் கருதுதல்.

[1]தேய [2]நின்றவன் சிலைவலங் [3]காட்டினன் றீராப்
[4]பேயை யென்பல [5]துரப்பதிங் கிவன்பிழை யாமல்
ஆய தன்பெரும் படையொடு [6]மடுகளத் தவியு
மாயை யின்படை தொடுப்பனென் றிராவணன் [7]மதித்தான்,

(இ - ள்.) அழியுமாறுநின்றவன்,—'(நாம் அற்ப அஸ்திரத்தைப்பிரயோகித்ததனால் நம்பகைவன் தன்னுடைய) வில்வலிமையைக் காட்டினன்; (இவனைத்) தீர்க்கமாட்டாத பேய்போன்ற [உபயோகமற்ற] பல அஸ்திரங்களை (இவன்மீது) துரப்பதில் என்ன பயன்? இப்போது இவன் பிழையாமல், பொருந்திய தன்பெரும் படைக்கலத்தோடும் அடுகின்றபோர்க்களத்திலே யவிந்துவிடும்படி, (பெரும்படையாகிய)மாயாஸ்திரத்தைத்தொடுப்பேன்' என்று இராவணன் நினைத்தான்; (எ - று.)—பி - ம்:—[1]சேயைநின்றவன் என்ற பாடத்திற்கு-சேயைப்போலநின்றவனென்பர்: சேய் - குமாரக்கடவுள். [2]நின்றிவன். [3]காட்டியான். [4]பேயையென்பதில். [5]துரக்குவதினிப். [6]கிளையொடும்படிய, கிளையொடுமடங்க. [7]வலித்தான். (3776)

110.—இராவணன் மாயாஸ்திரம் விடுதல்.

பூசனைத்தொழில் புரிந்துதான் முறைமையிற் போற்றும்
ஈசனைத்தொழு திருடியுஞ் [1]சந்தமு மெண்ணி
ஆசை பத்தினு மந்தரப் பரப்பினு மடங்கா
[2]வீசி னன்செல [3]வில்லிடைத் தொடைகொடு விட்டான்.

(இ - ள்.) (அந்த அஸ்திரத்தைப்) பூசிக்குந்தொழிலைச்செய்து, தான் முறைமையாகத் துதிக்கின்ற சிவபிரானைத் தொழுது, (அந்த அஸ்திரமந்திரத்துக்குஉரிய) இருடியையும் சந்தசையும் எண்ணி (உச்சரித்து), பத்துத்திக்குக்களிலும் வானகப்பரப்பிலும் அடங்காது (எங்குஞ்) செல்லும்படி வில்லிடையில் அம்புகொண்டுவீசித் தொடுத்துவிட்டான்; (எ - று.)—பி - ம்:—[1]சாந்தமும். [2]வீசிமுற், வீசிமேற், ஈசன்மேற். [3]வில்விசை. (3777)

111.—மாயாஸ்திரத்தால் முன்இறந்த அரக்கர் உயிர்பெற்றெழுந்தாற்போற் பேரொலி செய்தல்.

மாயம் [1]பொத்திய வயப்படை [2]விடுதலும் வரம்பிற்
காய [3]மெத்தனை யுளநெடுங் காயங்கள் கதுவ
ஆய முற்றெழுந் தாரென வார்த்தன ரமரில்
தூய [4]கொற்றவர் சுடுசரத் தான்[5]முன்பு துணிந்தார்.

(இ-ள்) மாயைநிரம்பியுள்ள வெற்றிபொருந்திய அஸ்திரத்தை (இராவணன்) விடுதலும், பரிசுத்தமான வெற்றிபெற்ற ஸ்ரீராம லக்ஷ்மணர்களுடைய சுடுகின்ற அம்பினால் போரில் முன்பு துணிக்கப்பட்டு உயிரிழந்து கிடந்தவரான அரக்கர்களின் வரம்பில்லாத உடல் எத்தனையுள, (அவைகளெல்லாம்) நெடியவானத்தை யளாவும்படி (பிராண)லாபத்தையடைய, (கிடந்தனர்)எழுந்தனர்போல (அவர்கள்) ஆரவாரித்தார்கள்; (எ-று.)—இரண்டாமடியி லுள்ள இரண்டாவதான 'காயம்' என்றசொல் ஆகாயம் என்பதன் முதற் குறை. ஆயம்-லாபம். பி - ம்:—[1]பொத்தியல். [2]விடுத்தலும். [3]அத்தலையுள, அத்தனையும். [4]கொற்றவன். [5]அமர் துணிந்தார், முனைந்தொலைத்தான். (3778)

112.—இதுவும் அது.

இந்தி ரற்[1]கொரு பகைஞனு மவற் [2]கிளை யோரும்
தந்தி ரப்பெருந் [3]தலைவருந் தலைத்[4]தலை யோரும்
மந்தி ரச்[5]சுற்றத் தவர்களும் [6]வரம்பிலர் [7]பிறரும்
அந்த ரத்தினை [8]மறைத்தனர் மழையுக வார்ப்பார்.

(இ - ள்.) இந்திரசித்தும், அவனுக்குத் தம்பிமாரான அதிகாயன் நிகும்பன் என்பவர்களும், பெரும்படைத்தலைவர்களும், (மற்றுந்) தலைமையாக அமைந்தோரும், (மகோதரன்முதலிய) மந்திரிமாரும் எல்லையற்றவரான பிறரும் ஆகாயத்தினைமறைத்தவர்களாய், மழையுஞ் சிந்தும்படி ஆரவாரிப்பவரானார்; (எ-று.)—பி - ம்:—[1]அரும். [2]இளையோனும். [3]பரவையின், பரவையும். [4]தலையெவரும். [5]சுற்றத்தெவர்களும். [6]வரம்பில். [7]மற்றும். [8]நிறைந்தனர். (3779)

113.—இதுவும் அடுத்த கவியும்-இறந்த சேனைகளெல்லாம் வந்து எங்கும் நெருங்கியதைத் தெரிவிக்கும்.

[1]குடப்பெ ருஞ்செவிக் குன்றமு மற்றுள குழுவும்
படைத்த [2]மூலமாத் தானையு [3]முதலிய பட்ட
விடைத்[4]தெ ழுந்தன யானைதேர் பரிமுதல் [5]வெவ்வேறு
[6]அடைத்த வூர்திக ளனைத்தும்வந் தவ்வழி [7]யடைய.

(இ - ள்.) குடம்போன்ற பெருஞ்செவிகளைப்படைத்த மலைபோன்ற தோற்றமுள்ள கும்பகருணனும், மற்றுள்ள வீரவர்க்கமும், (இராவணன்) பெற்றிருந்த மூலப்படையும் முதலிய இறந்தவைகளும்,(மற்றும்) யானை தேர் பரி முதல் வெவ்வேறாகப் பொருந்திய வாகனங்களெல்லாமும் வந்து அவ்வழிப் பொருந்தச் சினந்தெழுந்தன; (எ - று.)—பி - ம்:—[1]குடைப், கடப். [2]வீரமா. [3]முந்துளார்பட்டார், முதலினர்பட்டார். [4]எழுந்தனர். [5]வெவ்வேல், [6]படைத்த. [7]அடைந்த. ஒருபிரதியில் 'குடச்செவிக்கும்பகருணனும் மற்றுளகுழுவும் என்று முதலடி காண்கின்றது. (3780)

114 [1]ஆயி ரம்பெரு வெள்ளமென் றறிஞரே [2]யறைந்த
காய்சி னப்[3]பெருங் கடற்படை களப்பட்ட வெல்லாம்

ஈச னிற்பெற்ற வரத்தினு [4]லெய்திய வென்னத்
[5]தேச முற்றவுஞ் [6]செறிந்தன திசைகளுந் [7]திகைக்க.

(இ - ள்.) பெரிய ஆயிரம்வெள்ளமென்று அறிஞரே சொன்னவும் களத்திலிறந்தனவுமான காயுந்தன்மையுள்ள சினத்தைக் கொண்ட பெரிய கடற்படையெல்லாம்,—ஈசனிடத்துப் பெற்ற வரத்தினுல் மீண்டும் உயிர்பெற்றெழுந்தன என்னும்படி திக்குக்களிலுள்ளாரெல்லாந் திகைப்பத் தேசமெங்கும் நெருங்கின; (எ - று.)—கடற்படை - கடல்போன்றபடை: உவமைத்தொகை. பி-ம்:—[1] ஆசிலப். [2] அறைந்தார். [3]பெரும்படை களத்திடைப்பட்டதெல்லாம். [4]எய்தியது. [5]தேசு. [6]தெரிந்தது,செறிந்தது. [7]திசைப்ப.

115.—மாயத்தினு லுயிர்பெற்றெழுந்தாற் போன்ற சேனைவீரர்கள் அறைகூவுதல்.

[1]சென்ற வெங்கணுந் தேவரு முனிவருஞ் [2]சிந்த
[3]வென்ற தெங்களைப் [4]போலும்யாம் விளிவது [5]முளதோ
இன்று காட்டுது மெய்துமி னெய்துமி னென்னுக்
கொன்ற கொற்றவர் தம்பெயர் குறித்[6]தறை கூவி.

(இ-ள்.) (உயிர்த்தெழுந்தனபோன்ற அச்சேனைகள்), 'வென்றது எங்களைப்போலும் [நாங்கள் வெல்லப்பட்டுக் கொல்லப்பட்டேம் போன்றேம்]: (அங்ஙன் தோன்றும் மாத்திரமன்றி)யாம் இறப்பதும் உளதோ? [இல்லை]: இன்று (எமது திறமையைக்) காட்டுவோம்: (பொருமாறு) வாருங்கள், வாருங்கள்' என்று (தம்மைக்) கொன்ற வெற்றியாளரின் பெயரைக் கூறி அறைகூவிக் கொண்டு, தேவரும் முனிவரும்(அஞ்சிச்)சிதறியோடும்படி எங்குஞ் சென்றன; (எ - று.)—அறைகூவுதல்-போருக்கழைத்தல். இன்று காட்டுதும் என்பதற்கு—('நாங்கள் இறக்கவில்லை' என்பதை) இன்று (மெய்ப்பித்துக்)காட்டுகிறோம் என்றலும் உண்டு. பி-ம்:—[1]சென்றது. [2]சிசைப்ப. [3]வென்ற. [4]போலுமால், போலுமாம். [5]உளதேல், விளியே. [6]அறைகூறி, அறைகூற. (3782)

116.—அஸ்திரத்தினுற் பூதங்களும் பேய்களும் தோன்றுதல்.

பாரி டந்துகொண் [1]டெழுந்தன பாம்பெலும் [2]படிய
பாரி டந்[3]துணைந் தெழுந்தன மலையன்ன [4]படிய
பேரி டங்[5]கது வரிதினி விசும்பெனப் பிறந்த
பேரி டங்கரின் கொடுங்குழை யணிந்தன பேய்கள்.

(இ-ள்.) (மாயாஸ்திரத்தினுல், பாதாளலோகத்துள்ள வாசுகி முதலிய) பாம்புகள் பூமியை இடந்துகொண்டு எழுந்தன என்னுந் தன்மையனவும் '(இவற்றிற்கு இந்தப்)பெரியஇடம் தங்குதற்குப் போதாது; இனி விசும்பே (தங்குதற்குரியது)' என்றுதோன்ற மலையன்ன உடல்படைத்தனவுமான பூதங்கள், விரைந்து மேலெழுந்தன: (நீரில்)உலாவுகின்ற முதலையையொத்த வளைந்தகுழைகளை [மகரகுண்டலங்களை] அணிந்திருந்தனவான பேய்கள் பிறந்தன; (எ - று.)

இரண்டாமடியில் பாரிடம் - பாரிஷதம்: பூதம்: வடசொல். முதலடியில், படிய - தன்மையவை: இரண்டாமடியில், உடலையுடையவை: இரண்டிடத்தும் வினையாலணையும்பெயர்கள். மூன்றுமடியில், பேரிடம் - பண்புத்தொகை: பண்புத்தொகையன்மொழியாய், பெரிய இடத்தையுடைய பூமிஎனினுமாம். கதுவு - முதனிலைத் தொழிற்பெயர்: இனி, கதுவரிது என்ற இடத்து, கதுவு என்ற செயவெனெச்சம், ஈறு தொக்குவந்ததெனினுமாம். பேரிடங்கர் - வினைத்தொகை. பி-ம்:—[1] எழுந்துளவாம், எழுந்தனவாம். [2] படியப். [3] தொடர்ந்து. [4] படிவப். [5] பெறலரிதினி விசிம்பினிற். (3783)

117.—மாயாஸ்திரத்தினாலுயிர்பெற்றவர்கள் முனிவரஞ்சப் பலவகைப்படைக்கலமேந்தி நிற்றல்.

தாம சத்தினிற் பிறந்தவ ரறந்தெறுந் தகையர்
தாம சத்தினிற் [1] செல்கிலாச் சது [2] முகத் தவற்குத்
[3] தாம சத்திரஞ் செய்பவர் பரிந்தனர் தளரத்
[4] தாம சத்திரஞ் சித்திரம் [5] பொருந்தினர் தயங்க.

(இ - ள்.) தாமசத்தினில் பிறந்தவர் - மாயாஸ்திரத்தினால் தோன்றியவரான, அறம்தெறும் தகையர் - அறத்தையழிக்கவல்ல வல்லமையுள்ள அரக்கராதியர்,—தாம்—, அசத்தினில் - நேர்மையற்றவழியில், செல்கிலா - செல்லாமல், சதுமுகத்தவற்கு - நான்முகனான பிரமதேவனுக்கு, உத்தாமம் - சிறந்த, சத்திரம் - யாகத்தை, செய்பவர் - செய்பவரான முனிவர், பரிந்தனர் தளர - (மனம்) வருந்தினவராய்த் தளரவும், தாமம் - ஒளிபொருந்திய, சத்திரம் - படைக்கலங்கள், தயங்க - விளங்கவும், சித்திரம் - விசித்திரமாக, பொருந்தினர் -: (எ - று.) - தாமசம் = தாமஸம். மூன்றுமடியில், சத்திரம் - ஸத்ரம்: நான்காமடியில், ஶஸ்த்ரம்: ஈரிடத்தும் வடசொற்கள். பி - ம்:—[1] செல்கிலர். [2] முகத்தவர்க்குந். [3] தாமசத்தினைத் தொடர்ந்தவர் பரிந்தனர்தாழ்ந்தார், தாமசத்தினைத் தொடரவர் பரந்தவாளரக்கர், தாமசத்தினை... தளரத். [4] தாமசத்தினை மதித்தனர். [5] பொருதனர், பொருந்திய, பொருதன. (3784)

118.—அசுரர் விஞ்சையர் இவர்கள் அந்த மாயாஸ்திரத்தினால் திசைதொறும் தோன்றி நெருங்குதல்.

தாம விந்துமீ தெழுந்தவர்க் கிரட்டியின் தகையர்
தாம [1] விந்துவின் பிளவெனத் தயங்குவா ளெயிற்றர்
[2] தாம விஞ்சையர் [3] கடற்பெருந் தகையினர் [4] தரளத்
தாம விஞ்சையர் துவன்றினர் திசைதொறுந் தருக்கி.

(இ - ள்.) தாம் அவிந்து [இறந்து] அதன்பிறகு உயிர்பெற்றெழுந்தவரான அரக்கர்கட்கு இரட்டியான பெருமைபெற்றவர்களும், ஒளியுள்ள இந்துவின் பிளவு போலவிளங்கும் ஒளி பொருந்திய கோரப்பற்களையுடையவர்களும், தாவுகின்ற அவிஞ்சையை

யுடையவர்களும், கடல்போற் பெருந்தகைமையுடையவருமான அசுரர்களும், முத்துத்தாமமணிந்த வித்தியாதரரும் திக்குக்கள் தோறும் செருக்கி நெருங்கினர்; (எ-று.)

முதலடியில், 'தாம் அவிந்து' என்றும், இரண்டாமடியில் 'தாமம் [ஒளியுள்ள] இந்துவின்' என்றும், மூன்றாம் அடியில், 'தா(வு)ம் [தாவுகின்ற] அவிஞ்சையர்' என்றும் பிரிக்க. அவிஞ்சை-மாயம். தரளத்தாமம் - முக்தாஹாரம்: தாமம் - ஹாரம். பி - ம்:—[1] இந்துவிற்பிளவன்ன. [2] தாமவிஞ்சையிற். [3] கடப்பருந். [4] தளராத், சார்ந்த, சாரத். (3785)

119.—மாயத்தினால்தோன்றிய அவர்கள் படைதாங்கி நிற்றல்.

> தாம டங்கலு முடங்குளை யாளியுந் [1] தகுவார்
> தாம டங்கலு நெடுந்திசை [2] யுலகொடுந் தகைவார்
> தாம டங்கலுங் [3] கடலு [4] மொத் தார்தருந் தகையார்
> தாம டங்கலுங் கொடுஞ்சுடர்ப் [5] படைகளுந் தரித்தார்.

(இ-ள்.) தாம்-தாவுந்தன்மையுள்ள, மடங்கலும் - சிங்கத்தையும், முடங்கு உளை - முடங்கிய பிடரிமயிரையுடைய, யாளியும்- யாளியென்ற மிருகவிசேடத்தையும், தகுவார் - ஒப்பவரும்,—தாம் அடங்கலும்-தாங்கள் யாவரும், நெடு திசை - நெடிய திசைகளை, உலகொடும் - உலகுடனே, தகைவார் - (போரில்) தடுக்கவல்லவர் களும்,—தா-வலியையுடைய, மடங்கலும் - ஊழித்தீயையும், கடலும் - கடலையும், ஒத்து - (உருவத்தால்) ஒப்பாகி, ஆர்தரும் - (போர்க்களமெங்கும்) நிறைகின்ற, தகையார் - பெருமையை யுடையவருமான அவர்கள், தாம்-ஒளியுள்ள, மடங்கலும் - இடிகளையும், கொடு சுடர் படைகளும்-ஒளியுள்ள கொடியபடைகளை யும், தரித்தார்-தாங்கி நின்றார்; (எ-று.)

'படைகளுடன் இடியையும் தரித்தார்' என்று கூறியதனால், இடியைப் பறித்து அவற்றையும் படைக்கலமாக அவர்கள் கொண்டாரென்பது, பெறப்படும். நான்காம் அடியில், தாம்-தாமமென்பதன்விகாரம். பி - ம்:—[1] தகைவார், தகையார், தருக்கார். [2] உலகெலாந். [3] காரை. [4] ஒத்தார்தருந்தகைத்தார், ஒத்தார்த்திடுந் தகையார், ஒத்தார்த்தரும்பகையைத், ஒத்தனர்தருவகையனையார். [5] படையொடுந். (3786)

120.—மாயாஸ்திரத்தின் செயலைக்கண்ட இராமன் மாதலியை வினவுதல்.

> இனைய தன்மையை நோக்கிய விந்திரை கொழுநன்
> வினைய மற்றிது மாயமோ விதியது வினையோ
> வனையும் வன்கழ லரக்கர்தம் [1] வரத்தினோ மற்றோ
> நினைதி யாமெனிற் பகரென மாதலி [2] நிகழ்த்தும்.

(இ - ள்.) இப்படி நிகழ்ந்த தன்மையை நோக்கிய திருமகள் கொழுநனை ஸ்ரீராமன்,—(மாதலியைநோக்கி), 'இந்தச்செயல் மாயமோ? (அல்லது) விதியின் வினையோ? அணிந்த வலிய கழலை

யுடைய அரக்கருடைய வரத்தினால் நிகழ்ந்ததோ? இங்குக்கூறிய வகையினும் வேறோ? அறிந்தாயானால், (இதனை இன்னதெனச்) சொல்வாய்' என்று வினவ, மாதலி கூறுபவனானான்; (எ - று.)— மாதலி கூறுவதை, அடுத்த கவியிற் காண்க. பி - ம்:—[1] மாயையோ. [2] நிரப்பும். (3787)

121.—மாதலி இது மாயச்செய லென்னுதல்.

இருப்புக் [1]கம்மியற் கிழை[2] நுழை யூசி[3]யொன் றியற்றி
விருப்பிற் [4]கோடியால் விலைக்கெனும் [5]பதடியின் விட்டான்
கருப்புக் கார்[6]மழை [7]வண்ணவக் கடுந்திசைக் களிற்றின்
மருப்புக் கல்லிய [8]தோளவன் மீளரு மாயம்.

இரண்டு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) 'கருப்புக்காலத்துத்தோன்றிய கரிய [நீர்கொண்ட] மேகத்தைப்போன்றவண்ணனே! இரும்புவேலைசெய்கின்ற கம்மியனுக்கு நூலிழை நுழைகின்ற ஊசியொன்றைச் செய்து விருப்பினோடு '(இதனை) விலைக்குக்கொள்வாய்' என்கின்ற அறிவிலான் போல, கடுமையுள்ள அந்தத்திக்கஜத்தின் தந்தத்தினால் தோண்டப்பட்ட தோளையுடையவனான இராவணன் மீள்வதற்கு அருமையான மாயாஸ்திரத்தை விடுத்துள்ளான்: (எ - று.)

மாயவனான உன்னிடத்து மாயாஸ்திரத்தை விடுத்தது இருப்புக்கம்மியனிடத்து ஊசியைச்செய்துகொண்டு வந்து விலைகூறும் மூடன் நிலைமையை யொத்ததாகு மென்றவாறு. "கொண்டுழிப் பண்டம் விலையொரீஇக் கொற்சேரி, நுண்டுளைத் துன்னூசிவிற் பாரின்", "வைகொண்ட வூசி கொற்சேரியின்விற்றெம்மில் வண்ண வண்ணப், பொற்கொணடுநிற்கலுற்றோ புலையாத்தின்னிபோந் ததுவே" "கற்றதொன்றின் றிவிடினும் குடிப்பிறந்தார், மற் றொன்றறி வாரின்மாணமிகநல்லர், பொற்பவுரைப்பான்புகவேண் டாகொற்சேரித், துன்னூசிவிற்பவரில்" என்பன காண்க; பயனின் முயற்சிக்கு, இது கூறப்படும்; பதடி-பதர்: உள்ளீடு [அரிசி] இல்லாத நெல்: இது, அறிவிலியென்ற பொருள்குறித்தது. வண்ணம் என்றசொல் - இரட்டுறமொழிதலால், நிறத்தையும் தன்மையையும் ஒருங்கே யுணர்த்திற்றெனக. பி - ம்:—[1] கம்மியர்க்கு, கம்மியர். [2] துளை. [3] என்று. [4] கோடிரால். [5] பதகரில், தன்மையின். [6] நிற. [7] அன்ன. [8] தோளினான் செய்தமாயை. (3788)

122.—மாதலி இந்தமாயாஸ்திரம் உன்னால் ஒருநொடியில் நீங்குமெனல்.

[1]வீக்கு வாயயில் வெள்ளெயிற் றரவின்வெவ் விடத்தை
மாய்க்கு மாநெடு மந்திரந் தந்ததோர் [2]வலியின்
நோய்க்கு நோய்தரு வினைக்கு [3]நின் பெரும்பெயர் நொடியின்
நீக்கு வாயுனை நினைக்குவார் பிறப்பென நீங்கும்.

(இ - ள்) நோயைப் போக்குவதன்பொருட்டும் துன்பம் தருகின்ற வினைகளைப் போக்குவதன்பொருட்டும் உனது பெருமை

பெற்ற பெயரைக் கீர்த்தனஞ்செய்தால், (அங்ஙனங் கீர்த்தனஞ் செய்பவர்க்கு அவற்றை) நீக்குபவனே! வாயிலே கூரிய வெள்ளிய எயிற்றைக்கொண்ட அரவினுடைய உயிரையழிக்கவல்ல கொடிய விடத்தைமாய்க்குமாறு நெடுமந்திரம் தந்ததனை ஒப்பற்றவலிமை யினாலேபோல (உன்னுடைய அஸ்திரவிசேஷத்தினால் மாய்க்கப் பட்டு, இந்தமாயாஸ்திரமானது) நின்னை நினைப்பவரின் பிறப்புப் போல நீங்கிவிடும்; (எ - று.)—என்று மாதலி கூறினனென்க. **உவமையணி.** நொடிந்தல் - சொல்லுதல். வீதல் - இறத்தல்: வீக் குதல்-இறக்கச்செய்தல்: வீக்கு - பிறவினை முதனிலை. பி - ம்:—[1]வீக்கும்மாயின, வீக்குவாயன, வீய்க்குவாயன்ன. [2]வலியும். [3]நுன்.

123.—ஸ்ரீராமன் ஞானாஸ்திரம் விடுதல்.

வரத்தி னாயினு மாயையி னாயினும் [1]வலியான்
உரத்தி னாயினு முண்மையி னாயினு மோடத்
[2]துரத்தி யாலென ஞானமாக் [3]கடுங்கணை துரந்தான்
சிரத்தினான்மறை யிறைஞ்சவுந் [4]தேடவுஞ் [5]சேயோன்.

(இ - ள்.) நான்கு வேதங்களும் (தம்முடைய) சிரோபாக மாகிய உபநிடதங்களினால் வணங்குவதற்கும் தேடுவதற்கும் முடி யாதவாறு அப்பாற்பட்ட பரம்பொருளாகிய ஸ்ரீராமன்,—'(இங் குத்தோன்றியுள்ளது) வலிமையுள்ளவனான இராவணனுடைய வரத்தினாலேனும் மாயையினாலேனும் அல்லது (இயற்கை) உடல் வலிமையினாலேனும், அல்லது உண்மையினாலேனும் சரி, (எப்படி யினாலாயினும்) ஓடுமாறு (இதனை) அப்பாற்படுத்துவாய்' என்று சொல்லிப் பெருமைபொருந்திய விரைவுள்ள ஞானாஸ்திரத்தை விடுத்தான்; (எ - று.)—துரத்தியென்று அஸ்திரதேவதையைக் குறித்துக் கூறியது. இனி, 'வலிய' என்று பாடங்கொண்டு, இப் போதுதோன்றியுள்ளமாயத்தை. வரத்தினாலோ மாயையினாலோ, வலிய உரத்தினாலோ உண்மையினாலோ, துரத்தியால் என-துரத் துவாயென்று (மாதலி) தூண்ட என்றலும் ஒன்று. பி - ம்:—[1]வலி யோர். [2]துரத்தினாலென [3]கொடுங். [4]தொடரவுஞ். [5]தெரியான், செய்யோன். (3790)

124.—மாயாஸ்திரம் அழிதல்.

துறத்த லாற்றுறு ஞானமாக் கடுங்கணை தொடர
[1]அறத்த லாது[2]செல் லாதுநல் லறிவுவந் தணுகப்
பிறத்த[3]லாற்றுறும் பேதைமை பிணிப்புறத் தம்மை
[4]மறத்த லாற்றந்த மாயையின் [5]மாய்ந்தது மாயம்.

(இ - ள்.) (ஸ்ரீராமபிரான்) விடுத்ததனால் நெருங்கிய கடிய ஞான மாக்கணை தொடரவே,—அறத்திலே யல்லாது (வேறுஅக ருமவழியிற்) செல்லாதபடி நல்லறிவு வந்துசேர்வதனால், பிறத்த லாலே [பிறப்பினாலே] நெருங்கிய பேதைமை (தம்மைப்) பந்தப் படுத்தத் தம்நிலைமையை [ஆன்மஸ்வரூபத்தை] மறந்திட்டதனால் தோன்றிய மாயை (யழிவது) போல அந்தமாயாஸ்திரம் அழிந் தது; (எ - று.)

ஞாநாஸ்திரத்தினால் அந்த இராவணனுடைய மாயாஸ்திரம் அழிந்ததற்கு, ஞானத்தினால் பிறவிக்குக்காரணமான மாயை யொழிவதை உவமை கூறினார். பிறவியினால் இந்தப்பிரபஞ்சத்திற் பிணிப்புறுமாறு பேதைமை தோன்றுகின்றது: அப்பேதைமையினால், ஆத்மஸ்வரூபம் மறைக்கப்படுகின்றது. அதனால், மாயைக்கு உட்படுகின்றது ஆன்மா: அந்தமாயையைக் கடவுளருளாற்பிறக்கும் ஆன்மஞானம் போக்குமென்க. செத்த அரக்கர் உயிர்பெற்றார்போலவும் இல்லாத அரக்கர் உயிருள்ளார்போலவும் இவ்வாறு தோன்றிய பொய்த்தோற்றங்களோடு அந்தமாயாஸ்திரம் ஒழிந்ததென்க. பி-ம்:—[1] அறத்தலாறது, அறத்தினைது. [2] சேறலால், தேறலால். [3] ஆற்றுமப். [4] மறுத்தலால். [5] மாய்ந்ததம்மாயை. (3791)

வேறு.

125.—இராவணன் சூலத்தைக்கொள்ளுதல்.

நீலங் [1]கொண்டார் கண்டனு நேமிப் படையோனும்
மூலங் [1]கொண்டார் கண்டக ராவி [2]முடிவிப்பான்
காலங் கொண்டார் [3]கண்டன முன்னே கழிவிப்பான்
சூலங் கொண்டா னண்டரை யெல்லாந் [4]தொழில்கொண்டான்.

(இ - ள்.) நீலநிறங்கொண்டுபொருந்திய கண்டத்தையுடையவனை சிவபெருமானும், சக்கரப்படையைத் தரித்த திருமாலும், (திருமாலினது நாபீகமலமாகிய) பிறப்பிடத்தைக்கொண்ட பிரமதேவனும்,—லோககண்டகரான அரக்கரின் ஆவியை முடிப்பதற்குக்காலங்கொண்டார்: அண்டரையெல்லாந் தொழில்கொண்டவனை இராவணன், எதிரிற் காணப்படும் பொருளையெல்லாம் ஒழிக்கக் கருதிச் சூலப்படையைக் (கையிற்) கொண்டான்; (எ-று.)

திரிமூர்த்தியர் அரக்கராவி தொலைய இது ஏற்றகாலமென்று எண்ணியிருக்கையில், இராவணன் சூலத்தைக் கொண்டானென்றவாறு. பலபொருள்களும் இச்சூலத்தாலழியுமென்று, 'கண்டன முன்னே கழிவிப்பான்' என்றார். பி - ம்:—[1] கொண்ட. [2] முடிகிற்பார், முடிவிப்பார். [3] கொண்டென முன்னேகழிவிக்கும், கொண்டனர் முன்னேகழிவிப்பான், ஆயினுமுன்னிற் கழிவிக்கும். [4] தொலைவித்தான், தொலைகொண்டான். (3792)

126.—இராவணன் சூலம்விட்டதை இராமபிரான் காணுதல்.

[1]கண்டா குலமுற் றுயிர மார்க்கின் றதுகண்ணிற்
கண்டா குலமுற் றும்ப [2]ரயிர்க்கின் றதுவீரர்
கண்டா குலமுற் றுஞ்சுடு மென்றக் கழல் வெய்யோன்
[3]கண்டா குதன்முன் செல்லவி லைத்துள் ளதுகண்டான்.

(இ-ள்.) ஆயிரம் கண்டா குலம்-ஆயிரம் கண்டையின் தொகுதி, முற்று-முற்றிலும், ஆர்க்கின்றது - ஒலிக்கப்பெற்றதும், உம்பர் - தேவர்கள், கண்ணின் கண்டு - கண்ணினாற் கண்டு, ஆகுலம் உற்று-துன்பமடைந்து, அயிர்க்கின்றது-(இது என்னசெய்யுமோ?

என்று) சந்தேகிக்கின்றதும், 'வீரர்கண்-(எதிர்ப்பக்கத்து)வீரரிடத்துள்ள, தா-வலிமையையும், குலம் - சிறப்பையும், முற்றும் சுடும் - அடியோடு எரித்துவிடும்,' என்று-, அகழல் வெய்யோன் - வீரக்கழலையணிந்த அந்தக் கொடிய இராவணன், கண் தாகுதல்முன் - (பிறருடைய) கண் பார்ப்பதற்கு முன்னம், செல்ல-செல்லும்படி, விசைத்து உள்ளது - விரைந்து விடுத்துள்ளதுமாகிய சூலத்தை, (ஸ்ரீராமபிரான்), கண்டான் - பார்த்தான்; (எ - று.)

சுடுமென்று விசைத்துள்ளது என இயையும். பி - ம்:—[1]கண்டார். [2]பதைக்கின்றது கண்ணிற், அயர்க்கின்றது வீரர். [3]கண்டாயுதன்முன், கண்டாவுதன்முன். (3793)

127.—சூலத்தின் தன்மை.

எரியா நிற்கும் [1]பஃறலை மூன்று மெரியஞ்சத்
[2]திரியா [3]நிற்கத் [4]தேவர்க ளோடத் திரளோட
இரியா நிற்கு மெவ்வுல குந்[5]தன் னொளியேயாய்
விரியா நிற்கு[6] நிற்கில தார்க்கும் விழி[7]செல்லா.

(இ - ள்.) எரிவதான (அந்தத்) திரிசூலமானது மூன்று அக்கினிகளும் அஞ்சுமாறு திரியாநிற்க, (அதுகண்டு) தேவர்களோடவும் (வானரர் முதலிய ஏனையர்) திரள் ஓடவும், நிலைகெடுகின்ற எவ்வுலகத்திலும் தன்னொளியேயாகி விரியாநிற்கும்: எவர்க்கும் (அதனைக் கண்டால்) விழிசெல்லாமல் நிற்கிலது; (எ - று.)

நிற்கிலதார்க்கும் விழிசெல்லா - எல்லார்கண்களையுங்கவரவல்லதென்றபடி. வடநூன்முறைப்படி மூன்றுமுதல் பன்மையெனப்படுதலால், முத்தலைச் சூலத்தைப் பஃறலையென்றார்; இது - பண்புத்தொகையன்மொழி. பி-ம்:—[1]என்றலை மூன்றினெரியஞ்சி, பஃறலை...சிந்தி. [2]தெரியா. [3]நிற்கும். [4]தேவரை நாடித்திரளோடும், தேவர்களோடே திரளோட, தேவரையோடத் திரளோடுப். [5]பேரொளியாக. [6]நின்றவர்யார்க்கும். [7]செல்லார், செல்ல. (3794)

128.—இச்சூலத்தை வெல்வாயென்று ஸ்ரீராமனைத் தேவர் வேண்டுதல்.

செல்வா யென்னச் செல்ல விடுத்தா னிது தீர்த்தற்கு
ஒல்வாய் நீயே வேறொரு வர்க்கும் [1]முடையாதால்
வல்வாய் வெங்கட் சூல மெனுங்கா லனை[2]வள்ளால்
வெல்வாய் வெல்வா யென்றனர் வானோர் மெலிகின்றார்.

(இ - ள்.) வானோர்,—(மனம்) மெலிகின்றாராய், 'செல்வாயென்று சொல்லி(த் திரிசூலத்தைச்) செல்லுமாறு (இராவணன்) விடுத்தான்: இதனைத் தீர்த்தற்கு வலிமையுடையாய் நீயே: (இது), வேறொருவர்க்கும் அழியாது: (ஆதலால்), வலியவாயையுடைய கொடுமையைக்கொண்ட சூலமென்கின்ற காலனை, வள்ளால்! (நீயே) வெல்வாய், வெல்வாய்' என்று கூறினார்; (எ - று.)-126-ஆஞ் செய்யுளில் 'செல்லவிசைத்துள்ளது கண்டான்' என்று வந்தமையால் 'செல்வாயென்னச்செல்லவிடுத்தான்' என்றது. இதை

இராவணன் செயலைக் கூறுங் தேவர்களின் கூற்ருகக் கொள்ளாமல் கவிக்கூற்ருகக் கொள்ளினுமாம். பி-ம்:—[1] மிடையாதால், முடியாதால். [2] வள்ளால், வாளா. (3795)

129.—இராமபிரான் அந்தச் சூலாயுதத்தின்மீது எறிந்த சரங்கள் வீணுதல்.

அனையும் வேகத் தாலுரு மேறுந் [1] துன்னென்ன
வனையுங் காலிற் [2] செல்வன தன்னை மறவாதே
நினையு ஞானக் கண் [3] ணுடை யார்மேல் நினையாதார்
வினையம் [4] போலச் [5] சிந்தின வீரன் சரம்வெய்ய.

(இ - ள்.) விரைந்துவருகின்ற விசையினால் பேரிடியும் அச்சங்கொள்ளாநிற்க, சஞ்சரிக்கின்ற காற்றைப்போல விரைந்துசெல்வனவான ஸ்ரீராமன் விடுத்த வெய்ய சரங்கள்,—தன்னை மறவாதே தியானிக்கின்ற ஞானக்கண்ணுடையரான பரமபாகவதர்மேல் '(எம்பெருமான் ஒருவன் உளன்' என்று) நினைக்கவும்மாட்டாதாருடைய தீச்செயல்கள் (பயன் படாமற்போவன) போலப் பயன் படாதொழியுமாறு (அந்தச்சூலாயுதத்தின் மீது) சிந்தின; (எ - று.)

சூலாயுதத்தின் மீது வீரன் சிந்தின பாணங்கள் பரமபாகவதர்க்கு ஞானவீனர் செய்யுந்தீச்செயல்கள் பயன்படாமற்போவன போலப் பயன்படாவாயின என்பதாம். பிரகலாதனைக் கொல்லுமாறு இரணியகசிபு செய்தவை பயன்படாமற் போனது, இங்குக் கருதத்தக்கது. பி - ம்:—[1] தனினென்ன. [2] செல்வன தன்மை, செல்வதறன்னை. [3] உடையான். [4] என்ன. [5] சிந்தினன். (3796)

130.—அஸ்திரங்களை யெய்தும் ஒன்றும் பயன்படாமற் போகவே செய்வகையறியாதான்போல் ஸ்ரீராமனிருத்தல்.

எய்யு மெய்யுந் தேவ ருடைத்திண் படையெல்லாம்
பொய்யுந் [1] துய்யு [2] மொத்தவை சிந்தும் புவி தந்தான்
வையுஞ் சாப [3] மொப்பென வெப்பின் வலி [4] கண்டான்
ஐய னின்ருன் [5] செய்வகை [6] யொன்று [7] மறிகில்லான்.

(இ-ள்) புவிதந்தவனை ஸ்ரீராமன்,—தேவருடைய திண்ணிய படைகளையெல்லாம் விடாதுஎய்பவனானான்: அவை பொய்யும் துய்யும் ஒத்து (அந்தச்சூலத்தை ஒன்றுஞ்செய்யமாட்டாது) சிந்தின; ஐயன், வைகின்ற சாபம்போல வெம்மையையுடைய அந்தச்சூலத்தின் வலிமையைக் கண்டானாய், செய்யும்வகை ஒன்றையும் அறியாதவனாய் [அறியாதான்போல] நின்ருன்; (எ - று.)— துய் - பஞ்சின்சிறுநுனி, பஞ்சுஎனினுமாம். பி - ம்:— [1] மெய்யும். [2] ஒப்பன, ஒத்திவை. [3] ஒப்பதின்வெம்பும், ஒப்பனவொப்பின். [4] கண்டே. [5] செய்வகை. [6] எல்லாம். [7] அறிவில்லான். ()

131.—சூலம் இராமனை நெருங்கிவருதல்.

மறந்தான் செய்கை [1] மற்றெதிர் [2] செய்யும் வகையெல்லாம்
துறந்தா னென்று வும்பர் துணுக்கந் தொடர்வுற்ருர்
அறிந்தா னஞ்சிக் கால்குலை யத்தா [3] னறியாதே
பிறந்தான் [4] நின்ருன் [5] வந்தது சூலம் பிறரஞ்ச.

(இ - ள்.) (இப்போது, 'இந்தச்சூலத்திற்குச் செய்யக்கடவ செயலை) மறந்தவனாய் எதிராகச் செய்யும் செய்கையின் வகையை யெல்லாம் துறந்தான்' என்று சொல்லித் தேவர்கள் அச்சம் தொடரப்பெற்றனர்: தருமதேவதையும் அஞ்சிக் கால் நடுங்க, (மானுடனாய்ப்) பிறந்தவனான இராமன் தன் தெய்வத் தன்மையை அறியாமலே நின்றான்; (அவ்வேளையில், அந்தச்) சூலம் பிறர் அஞ்சும்படி (நெருங்கி) வந்தது; (எ - று.)—செய்யும் செய்கைவகை என்று கூட்டப்பட்டது. பி - ம்:—[1]மாறு. [2]சொல்லுமதியெல்லாம். [3]அறியாது. [4]என்றான். [5]வந்தன.

இங்கு ஒருபிரதியில் இரண்டுசெய்யுள்கள் காணப்படுகின்றன: அவை வருமாறு:—

நெற்றிவிழி யானய னிறைந்த மறையாளர
மற்றையம ரர்புவியில் வானவர்க ளீரைந்து
உற்றதலை தானவன் விடுங்கொடிய சூலம்
இற்றொழிய வான்றளிவு மோவென விசைத்தார்.

வேதமொரு நாலுமுள வேள்விகளும் வெவ்வேறு
ஓதமுத லாயுதவு பூதமவை யைந்தும்
நீதியொடு கால்குலைய நீசன்விடு சூலம்
மீதளியு மென்றிதய மெண்ணின னிராமன். (3798)

132.—இராமபிரானது உங்காரத்தால் அச்சூலம் பொடியாயுதிர்தல்.

[1]சங்கா ரத்தாற் [2]கண்டை யொலிப்பத் தழல்சிந்தப்
[3]பொங்கா ரத்தான் மார்பெதி ரோடிப் புகலோடும்
[4]வெங்கா ரத்தான் [5]முற்று முனிந்தான் வெகுளிப்பேர்
உங்கா ரத்தா லுக்கது பன்னூ றுதிராகி.

(இ - ள்.) (அந்தச்சூலாயுதம்),—சங்காரத்தொழிலோடு மணிகள் ஒலிக்கவும், நெருப்புச் சிந்தவும், மிக்க ஆரத்தை அணிதற்கு உரியவனான ஸ்ரீராமபிரானது மார்புக்கு எதிராக ஓடிப் புகுந்தவளவில்,—(அவ்விராமன்), கொடிய உக்கிரத்தோடு மிகவும் கோபித்தான்; (அவனுடைய) கோபத்தினால் தோன்றிய பெரிய உங்காரத்தினால் (அந்தசூலம்) பலநூறு பொடிகளாகிச் சிந்தியது; (எ - று.)—மாதலி தந்த மஹாசக்தியால் இராவணனெறிந்த சக்தியை நீறாக்கினான் ஸ்ரீராமனென்று வான்மீகத்தி லுள்ளது. பி - ம்:—[1]சங்காரத்தா, சங்கராரரத்தார். [2]தண்டை. [3]பொங்காராத்தான். [4]வெங்காரார்த்தான். [5]முற்ற. (3799)

133.—அதுகண்ட வானோரின் கொண்டாட்டம்.

ஆர்ப்பா ராறு [1]ரச்சமு மற்று ரவர்மாரி
தூர்ப்பா ரானார் துள்ளல் புரிந்தார் [2]தொழுதென்றார்
தீர்ப்பாய் நீயே [3]தீயென வேறாய் வருதீமை
பேர்ப்பாய் போலா மென்றனர் வானோ ருயிர்பெற்றார்.

(இ - ள்.) (அதுகண்ட) வானவர்கள்,—(போனற்போன்ற தம்முடைய) உயிர் மீண்டுவரப்பெற்றவராய், ஆரவாரிப்பவரானுர்: அச்சமும் நீங்கப்பெற்றூர்; மலர்மழையைத் தூர்ப்பவரானுர்: துள்ளுதலைச் செய்தார்: தொழுகின்றவராய் '(இந்தச்சூலத்தின் கொடுமையைத்) தீர்க்கவல்லவனுகிய நீயே தீப்போல (இனியும்) வெவ்வேருய்வரக்கூடிய தீமைகளை யெல்லாம் நீக்குவாய்' என்று கூறினூர்கள்; (எ-று.)—போல்—ஒப்பில்போலி. பி - ம்:—[1]அச்சமுன். [2]தொடர்கின்றூர். [3]தீயெனநீயே...தீமை, தீயனநீயே...தீமை, தீயன தீயாருயர் தீமை. (3800)

134.—இதுவும் அடுத்த கவியும்-இராவணன் இராமனைப் பரம்பொருளாயிருக்கலாமெனக் கருதியமையைத் தெரிவிக்கும்.

[1]வென்ரு னென்றே யுள்ளம் [2]வெயர்த்தான் விடுசூலம்
[3]பொன்ரு னென்னிற் போகல தென்னும் பொருள் கொண்டான்
ஒன்ரு முங்காரத் [4]திடை யுக்கோ டுதல்காணு
நின்ரு [5]னந்நாள் வீடண ஞர்சொல் நினைவுற்ருன்.

(இ - ள்.) '(நாம்) விட்ட சூலம் (இராமன்) இறந்தாலொழிய (அவனைவிட்டு வெறுமனே) போகாது' என்கின்ற கொள்கையை மனத்திற்கொண்டவனுன இராவணன்,—ஒப்பற்றதாகிய (ஸ்ரீராம பிரானது) உங்காரத்தினுல் (அந்தச்சூலம்) பொடிப்பொடியாய்ப் பிதிர்ந்து உதிர்ந்து போதலைக் கண்கூடாகக்கண்டு நின்றவனுகி,— '(இவன் நம்மைத் திண்ணமாக) வென்றவனே யாவன்' என்றே கருதி மனத்தில் (அச்சத்தினுல்) வெயர்த்தான்: அப்போது விபீடணனுர் சொல்லை நினைக்கலுற்ருன்; (எ - று.)

பொருள் - கொள்கை. ஒன்று - ஒப்பற்றது: பெருமதிப்புக்கு உரியது. பி - ம்:—[1]வென்றேனென்றே, வென்றேநின்றே. [2]வியர்த்தான். [3]பொன்ருநின்ற, பொன்ருவாயின், பொன்ருவென்னில். [4]தீயுற்ரேருடுதல்காணு. [5]அன்னுன். (3801)

135. சிவனே வல்லன் நான்முக னல்லன் திருமாலாம்
அவனே வல்லன் மெய்வர மெல்லா மடுகின்ருன்
தவனே வென்னிற் செய்து முடிக்குந் [1]தரனல்லன்
இவனே தானவ் வேத முதற்கா ரண[2]னென்ருன்.

(இ - ள்.) '(நமது) உண்மையான வரத்தையெல்லாம் பயன்படாமற் செய்பவனுகிய இவன்,—சிவனுயிருக்கலாமோ என்ருல் (அவன்) அல்லன்: நான்முகனுயிருக்கலாமோ என்ருல் (அவனும்) அல்லன்; (ஒருகால்) திருமாலாகிய அந்த மூர்த்தியாயிருக்கலாமோ வென்ருல், (அவனும்) அல்லன்: (இனிப்பெருந்) தவமுடையான் ஒருவனுயிருப்பனே வென்ருல் (அவன் இவ்வளவு பராக்கிரமச் செயலைச்) செய்துமுடிப்பதற்கு ஏற்ற தகுதியையுடையவனல்லன்; (ஆகையால்), இவன் அந்த வேதமுதல்காரணனுன பரம்பொருள் தானே?' என்ருன், (இராவணன்); (எ - று.)

வீடணனார்சொல் நினைவுற்றவகையைக் கூறுவது, இச்செய்யுள். திரிமூர்த்திகளும் இதற்குமுன் தன்னெதிரில் வலியொடுங்கிக் கிடந்தமையால், 'அம்மூவரும் அல்லர்' என்றான். ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற மூத்தொழில்களைச் செய்வதற்காகத் திரிமூர்த்திகள் தோன்றியுள்ளாரென்பதும், பரம்பொருள் மனோவாக்காயங்களுக்குஎட்டாத பரமபதத்தில் தனியேவாழ்கின்றதென்பதும் நூற்கொள்கை. திரிமூர்த்திகளையும் பரம்பொருளையும் மந்திரங்கள் மூலமாகவும் தம்பேரறிவுமூலமாகவும் காட்டிக்கொடுக்க வல்லராதலால், திரிமூர்த்திகளினும் மேம்பட்டவர் தவர் என்பது தோன்ற இங்குக் கூறியுள்ளார்: "கரியமாலினும் கண்ணுதலானினும், உரியதாமரை மேலுறைவானினும்...பெரியரந்தணர்" என்று அயோத்தியாகாண்டத்துக் கூறியிருப்பதுங் காண்க. பி-ம்:—[1] தரம். [2] என்பான், ஆவான். (3802)

136.—எதிர்ப்பவன் எவனாகஇருப்பினும் போர்செய்வதாக இராவணன் உறுதிகொள்ளுதல்.

[1] யாரே னுந்தா னாகுக யானென் தனியாண்மை
[2] பேரே னின்றே வென்றி முடிப்பன் [3] பெயர்கில்லேன்
நேரே [4] செல்வன் [5] கொல்லெ னரக்க னிமிர்வெய்தி
[6] வேரே [7] நிற்கு [8] மீள்கில னென்னா [9] விடலுற்றான்.

(இ-ள்.) '(எதிர்ப்பவன்) எவனாக இருந்தாலும் இருக்கட்டும்: யான்என்னுடைய தனிப்பட்ட ஆண்மையினின்று பேரேனாய் நின்றே வெற்றியை முடிப்பேன்: பின்வாங்கேன்: (பகைவனைப் பொருது) கொல்ல நேரேசெல்வேன்' என்றுகூறும் இராவணன், உற்சாகங் கொண்டு, 'வென்றியின்வேர் (என்னிடத்து) நிலைத்து நிற்கும்: (அங்ஙன் பூர்ண ஜயம்பெற்றாலன்றி) மீள்கிலேன்' என்று சொல்லி, (மேலும்) பொருதற்குப் பொருந்தினான்; (எ-று.)— சத்துவகுணம் சிறிதுதோன்றப்பேசலுற்ற இராவணன், மீண்டும் ரஜோகுணந் தலையெடுக்கப் பேசலுறுகின்றானென்க. கொல்லஎன் =கொல்லென்: அகரந் தொகுத்தல். பி-ம்:—[1] ஆர். [2] பேரேநின்றே, பேரேநின்றேன். [3] புகழ்பெற்றேன், அகலல்லேன். [4] செல்லும். [5] கொல்லுமெனிற்றானிமிர்வெய்தி, கொல்லுமரக்கனிமிரெய்தி. [6] வேரா. [7] நிற்க. [8] மீள்கலது. [9] மிடல். (3803)

137.—இராவணன் நிருருதிப்படையை விடுதல்.

நிருதித் திக்கி [1] னின் றவன் வென்றிப் படை நெஞ்சில்
கருதித் தன்பால் [2] வந்த தவன்கைக் கொடு [3] காலன்
[4] விருதைச் [5] சிந்தும் [6] வில்லின் வளித்துச் செலவிட்டான்
குருதிச் செங்கண் தீயுக ஞாலங் குலைவெய்த.

(இ-ள்.) 'நிருருதிதிக்கில் [தென்மேற்கில்] நிற்குந் திக்குப்பாலகனது வெற்றிபொருந்திய படையை (விடுவதாக) மனத்தில் எண்ண, (அப்போது) தன்னிடத்தில் வந்ததான (அப்) படையை அவ்விராவணன் (தன்னுடைய) கையிற்கொண்டு, யமனுடைய

விருதைச் சிந்தவல்ல வில்லிற்பூட்டி (த் தன்னுடைய) இரத்தம் போற்சிவந்த கண்களினின்று தீப்பொறிபறக்கவும் உலகம் நடு நடுங்கவும் செல்லுமாறு விடுத்தான்; (எ - று.)

நிருருதிதிக்கின்நின்றவன்படை - நிருருதிதிக்பாலகனிடத்தி னின்றுகிடைத்த படை: நிருருதியென்ற திசைக்காவல் செய்யுந் தேவதை பெண்பாலாயினும், இன்னதிக்குப்பாலகன் இன்னு னென்று கூறும்வழக்குப்பற்றி, ஆண்பாலாற் கூறினர்: இனி, 'நின்றவள்' என்று பாடங்கொள்வாருமுளர்: அன்றி, தென்மேற் குத் திசையின் கீழிருந்து பூமியைத் தாங்குபவனான சங்கபால னென்னும் நாகனது படைஎன்பாருமுளர். நிருதி=நிருருதி. நிரு தித்திக்கு - செய்யுளோசைநோக்கி இரட்டிற்று. பி - ம்:—[1]நின்ற வர். [2]வங்கதை வன்கைக்கொடு, வைத்ததைவன்கைக்கொடு, வைத் தவுன் கைக்கொடு. [3]காண. [4]விருதிற். [5]சிந்தி. [6]வில்லினிலுந்திச்.()

138 —இதுமுதல் மூன்றுகவிகள்—ஒருதொடர்: இராவணன் விட்ட படையால் விளைந்தமை தெரிவிக்கும்.

வையந் தூஞ்சும் [1]வன்பிடர் நாக மண[2]மஞ்சப்
[3]பையுங் கோடிப் பஃறலை யோடு [4]மளவில்லா
மெய்யும் வாயும் பெற்றன [5]மேருக் கிரி[6]சால
நொய்தென் றோதுந் தன்மைய [7]வாக நுழைகின்ற.

(இ-ள்.) இவ்வுலகம் தங்குகின்ற வலியபிடரையுடைய ஆதி சேஷன் மனமஞ்சும்படி வரிசையாகவுள்ள பலதலைகளோடு படமும் அளவில்லாதவுடலும் வாயும் பெற்றனவும் மேருமலையும் மிகஇலேசானதுஎன்று சொல்லுந்தன்மையவாய் நுழைகின்றன வும்,—(எ - று.)—இராவணன்விடுத்த நிருருதிப் படையினின்று தோன்றிய நாகங்களின் தன்மையை மூன்றுகவிகள் கூறும். பெற் றன-பெற்ற நாகங்களென்னில், 'நுழைகின்ற' முதலியவாக மேல் வருவனவெல்லாம் முற்றுக்களாம். 'இராவணன் ராக்ஷஸாஸ்திர த்தை விடுக்க நாகங்கள் அதனினின்று தோன்றின' என முதனூல் கூறும். பி - ம்:—[1]வல்விட, மன்பிடர். [2]அஞ்சாப். [3]ஐயங்கோடிப், ஐயங்கொள்ளப். [4]அமைவு. [5]மேகத்திரி. [6]காலன், தானும். [7]வானின், ஆன. (3805)

139. வாய்வாய் தோறு மாகடல் போலும் விடவாரி
போய்வார் கின்ற [1]பொங்கனல் கண்ணிற் [2]பொழிகின்ற
[3]மீவா யெங்கும் வெள்ளிடை யின்றி [4]மிடைகின்ற
[5]பேய்வா யென்ன வெள்ளெயி றெங்கும் பிறழ்கின்ற.

(இ-ள்.) ஒவ்வொருவாயினிடமாகவும் பெரியகடல்போலும் விஷநீர் மிகுதியாகப்பெருகப்பெற்றனவும், மிக்கநெருப்பைக் கண் ணின்மூலமாக வெளிப்படுத்துவனவும், மேலிடமெங்கும் வெற்றிட மின்றி நெருங்குகின்றனவும், பேயின்வாய்போல எப்புறத்திலும் வெள்ளிய கோரப்பற்கள் விளங்கப்பெற்றனவும்,—(எ - று.)பி-ம்:—

[1]வெங்கனல். [2]பொலிகின்ற. [3]மீவான், மீய்வாய். [4]மெலிகிற்ப: [5]பேன்வாயென்ன, பேய்வாயெங்கும். (3806)

140. கடித்தே தீருங் கண்ணகன் ஞாலங் [1]கடலோடும்
குடித்தே தீரு மென்[2]றுல கெல்லாங் குலைகின்ற
முடித்தா[3]னன்றோ வெங்க ணரக்கன் முழுமுற்றும்
பொடித்தா னுகு மிப்பொழு தென்னப் [4]புகைகின்ற.

(இ - ள்.) '(இந்த அஸ்திரம் இராமபிரானைக்) கடித்தேதீரும்; இடமகன்ற ஞாலத்தைக் கடலோடும் குடித்தேதீரும்' என்றுகருதி உலகமெல்லாம் நடுங்குதற்குக் காரணமானவையும், 'கொடுங் கண்ணையுடைய இராவணன் பிரபஞ்சம்முழுவதையும் முடித்தானாய் இப்பொழுதே படுசூரணப்படுத்தினவனுவானன்றோ!' என்னுமாறு சிறுந்தன்மையுள்ளனவு மாயின, (இராவணன் விடுத்த அந்த நிருதிப் படையினின்று தோன்றிய நாகங்கள்); (எ - று.)—பி - ம்:—[1]கடலேழும். [2]உயிரெல்லாம். [3]என்றே. [4]புகைகின்றார், புகைகின்றான். (3807)

141.—இராமபிரான் கருடாஸ்திரத்தினுல் நிருருதிப் படையை எதிர்த்தல்.

அவ்வா றுற்ற வாடர வங்[1]கா லகைல்வாயால்
கவ்வா நின்ற மால்வரை [2]முற்று மவைகண்டான்
எவ்வாய் தோறு [3]மெய்தின வென்னு வெதிரெய்தான்
தவ்வா [4]வுண்மைக் காருட மென்னும் படைதன்னுல்.

(இ - ள்.) அவ்வாறுபொருந்திய ஆடுந்தன்மையையுடைய நாகங்கள் (விஷத்தைக்) கக்குகின்ற பரந்தவாயினுற் கவ்வப்பெற்ற பெரியஎல்லையையுடைய அந்த இடங்கள் [போர்க்களம்] முழுதும் கண்டவனுகிய ஸ்ரீராமன் '(இந்த நாகங்கள் ஓரிடமும் விடாமல்) எல்லாவிடங்களிலும் பொருந்தின' என்றுஎண்ணி, (அந்த அஸ்திரத்தைப் போக்குவதற்கு) நீங்காத உண்மையையுடைய [தவறுமலழிக்கவல்ல] காருடமென்கின்ற அஸ்திரத்தைக் கொண்டு எதிராகப் பிரயோகித்தான்; (எ - று.)—வாயால் மால்வரைமுற்றும் கவ்வாநின்றனவான அரவம் அவற்றைக் கண்டான் எனினுமாம். பி - ம்:—[1]தன்னடல், காலனல், தன்னகல், தானகல். [2]முற்றும் வகை. [3]எகினவென்ன. [4]மெய்மைக், மேன்மைக். (3808)

142.—காருடாஸ்திரத்தின் தன்மை.

எவ[1]ணைத் தன்மைத் தேகின நாகத் தினமென்னப்
பவணத் தன்ன [2]வெஞ்சிறை வேகத் தொழிற்பம்பச்
சுவணக் [3]கோலத் துண்ட நகந்தோல் சிறை [4]வெல்போர்
உவணப் புள்ளே யாயின [5]வஃதே ருலகெல்லாம்.

(இ - ள்.) (இராவணன் விடுத்த அந்) நாகத்தின் கூட்டம் எவ்விடத்து எத்தன்மையையுடையதாய்ச் சென்றதோ அவ்வகையை ஒப்பவே காற்றையொத்த கொடிய சிறகின் வேகத் தொழில்நிரம்பப் பொன்மயமான மேனிநிறத்தையும் மூக்கையும் நகத்தையும்

பழமையானசிறகையும் கொண்ட போர்வெல்லுந் தன்மையுள்ள கருடப்பறவைமயமாகவே மேலுலகமெல்லாமாயின; (எ - று.)— நிருருதிப்படையால்தோன்றிய நாகங்கள் சென்ற இடத்தெல்லாம் காருடப்படையால் தோன்றிய கருடப்புட்கள் செல்வனவாகி நெருங்கி வானத்துநிறைந்தன என்க. சுவணம் = ஸ்வர்ணம்.பி-ம்:— [1] அத்தன்மைத்து. [2] வெஞ்சினவேகத்தொழில், வெஞ்சிறைவேகத் தழல். [3] கொல்லத்தண்டங்கத்தோர், கோலத்துண்டாகத்தோற். [4] வெம்போர், வேல்போல். [5] எல்லாம். (3809)

வேறு.

143.—இதுமுதல்மூன்றுகவிகள்-அந்தக்காருடாஸ்திரத்தின் வருணனை.

அளக்கரும் புள்ளின [1] மடைய வாரழல்
[2] துளக்கரும் வாய்தொறு [3] மெரியத் தொட்டன
[4] இளக்கரு மிலங்கைத்தீ [5] யிடுது மீண்டென
விளக்கின [6] மெடுத்தன போன்ற [7] விண்ணெலாம்.

(இ - ள்.) அளப்பதற்கரிய (கருடப்) புள்ளினங்கள் யாவும், சலிப்பித்தற்கு அரிய வாய்கள்தோறும்நிறைந்த அக்கினியை எரியுமாறுகொண்டவை,—இளகச்செய்வதற்கு அரியதான இலங்கையிலே விரைவாகத் தீயிடுவோமென்று விண்ணுலகத்திலிருப்பவரெல்லாம்விளக்குக்களினினத்தை எடுத்தவற்றை யொத்திருந்தன;

அந்தக்காருடாஸ்திரத்தினால் தோன்றிய கருடப்புட்களின் வாயில் சினந்தோன்ற அக்கினி பற்றியெரிவதைத் தற்குறிப்பேற்ற வணியால் வருணிக்கின்றாரென்க. மூன்றாமடி முற்றுமோனை. பி - ம்:—[1] ஆயவாரழல், ஆவமாரழித், அரவமாரழல். [2] துளக்கறு. [3] எரியிற்றோன்றுவ, எரியத்தோன்றுவ. [4] வளப்பெரு. [5] இடுமின். [6] எடுத்தது. [7] விண்ணின, விண்ணென, விண்ணினே. (3810)

144. குயின்றன சுடர்மணி [1] கனலின் குப்பையிற்
பயின்றன [2] சுடர்தரப் [3] பதும நாளங்கள்
வயின்றொறுங் [4] கவர்ந்தெனத் [5] துண்ட [6] வாள்களால்
அயின்றன புள்ளின [7] முகிரி னள்ளின.

(இ-ள்.) (அரவுகளின்சிரசிற்) பதிந்தனவான ஒளியுள்ள மணிகள் அக்கினித்திரளை யொப்பப் பொருந்தியனவாய்விளங்க, (அந்தக் கருடப்புட்கள்)—பதுமநாளங்களை இடந்தோறும் கவர்ந்தாற்போல (நாகங்களை)க்கால்நகங்களால் அள்ளினவாய், மூக்குக்களாகிய வாள்களால் (கொத்தித்) தின்றன; (எ - று.)

கருடப்புட்களாற் கவ்வப்பெற்ற நாகங்கள் தாமரைநாளங்கள் போன்றிருக்க, அந்தநாகங்களின் சிரசிலுள்ள மாணிக்கங்கள் கனற்குப்பைப்போற்சுடர்வனவாயின வென்க. நாகங்கள் தாமரை நாளங்களையொத்திருந்தமைக்கு ஏற்ப, மணிகள் தாமரைமலரை யொக்குமென்க. பி - ம்:—[1] கவினக். [2] குடர்சுடர்ப். [3] பதுமராகங்கள். [4] கவர்ந்தன. [5] பணியை. [6] வாய்களால். [7] உகிரும். (3811)

145. எவ்வகை யுரகமு மிரியல் போயின
நொவ்விய னுற்றென நொடிப்ப தென்னினி
அவ்வயி னரனணி யடல ராவுமே
கவ்வையி னுழந்தன சிறையின் காற்றினே.

(இ - ள்.) அப்பொழுது சிவபிரானணிந்த வலிய நாகங்களுமே, (கருடப்பறவைகளின்) சிறகுகளினின்றுதோன்றிய காற்றினால் துன்புற்று வருந்தின: இனி எவ்வகை நாகமும் நோகுந்தன்மையைப்பெற்று நிலைகெட்டு ஓடினவென்று பாராட்டிச்சொல்வதிற் பயனென்னை? (எ - று.)—தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. இச்செய்யுள் பலபிரதிகளிலும் இல்லை. (3812)

146.—இராவணன் சினத்துடன் சரங்களைத் தூவுதல்.

ஆயிடை யரக்கனு மழன்ற நெஞ்சினன்
[1]தீயிடைப் [2]பொடிந்தெழு முயிர்ப்பன் சீற்றத்தன்
மாயிரு ஞாலமும் விசும்பும் [3]வைப்பறத்
தூயினன் சுடுசர முருமின் [4]தோற்றத்த.

(இ - ள்.) அப்போது, இராவணனும்,—கோபித்த மனமுடையவனாகி, தீயானது இடையே பொறியாகப்பறக்கின்ற பெருமூச்சுடையவனும் கோபத்தையுடையவனுமாகி, பெரியஇந்த உலகமும் வானமும் வெற்றிடமில்லாதுபோக இடிபோன்ற தோற்றமுடைய பாணங்களைத்தூவினான்; (எ - று.)—பி-ம்:—[1]தீயினிற். [2]பொடித்தெழு. [3]மாய்ந்தறத். [4]தோற்றத்தான். (3813)

147.—இராவணசரம் வீழ்ந்திட, இராமசரம் அவ்வரக்கன் மார்பிற் புகுதல்.

[1]அங்கவெங் கடுங்கணை [2]யயிலின் வாய்தொறும்
வெங்கணை படப்பட விசையின் [3]வீழ்ந்தன
புங்கமே தலையெனப் புக்க போலுமால்
துங்கவா [4]ளரக்கன தாகத்திற் [5]றோற்றல.

(இ - ள்.) அப்போது அந்த மிகக்கொடிய கணைகள், (தம்முடைய) கூர்மையையுடைய முனைதொறும் (இராமனுடைய) கொடியகணைகள் படப்பட விசையுடனே (திரும்பி) வீழ்ந்தனவாய் மேம்பாடுபொருந்திய வாளரக்கனுடைய மார்பிலே புங்கமே தலையாகப்புக்கனவாய்க் காணப்படாதனவாயின; (எ - று.)

அங்கு அ வெம் எனப் பிரிக்க. போலும்-உரையசை: வாக்கியாலங்காரம். இராவணனுடையபாணங்கள் இராமபாணங்களால் மீண்டு திரும்பிச்சென்று அவ்விராவணனுடைய மார்பிலேபுக்குப் பொத்தியதால் அங்குத்தானே அழுந்திக்கிடந்தனவென்க. புங்கம்-அம்பின் நுனி. பொத்துகையில் அம்புமுனை காணப்படாது தலையே மேலே காணப்படுவதால், 'புங்கமே தலையெனப்புக்க' என்றது. பி-ம்:—[1]அங்கவங். [2]அயில, அயிலை. [3]மீண்டன. [4]அரக்கன்றன்றிறத்தில் [5]தோன்றல, தோன்றலை. (3814)

148.—இராவணனுடைய தளர்ச்சியும் இராமனுடைய ஊக்கமும்.

ஒக்கநின் றெதிரம [1]ருடற் றுங் காலையின்
முக்கணன் கடவரை யெடுத்த மொய்ம்பற்கு
[2]நெக்கன [3]விஞ்சைகள் நிலையிற் றீர்ந்தன
மிக்கன விராமற்கு வலியும் [4]வீரமும்.

(இ-ள்.) பொருந்தநின்று எதிர்த்துப் போரைச்செய்யும்போது, திரிநேத்திரனை சிவபெருமானுடைய பெரிய மலையை யெடுத்தவனை வலிமையையுடைய இராவணனுக்கு(க் கற்ற) வித்தைகள் (ஞாபகத்துக்குவருந்) தன்மை குறைந்தனவாய், (தம்) நிலையில் நீங்கின: இராமற்கு வலியும் வீரமும் மிகுந்தன; (எ - று.)—ஒக்க நின்று - இராமனோடு உயர்வுதாழ்வுஇன்றிச் சரிசமமாகப்போரில் நின்று என்றபடி. பி - ம்:—[1]உழக்கும். [2]நெக்கென. [3]விஞ்சையும், விஞ்சையின். [4]வேகமும். (3815)

149.—இராவணன்தலையை இராமனறுத்தல்.

[1]வேதியர் [2]வேதத்து [3]மெய்யன் வெய்யவர்க்கு
[4]ஆதிய [5]னணுகிய [6]வற்ற நோக்கினன்
சாதியி னிமிர்ந்ததோர் தலையைத் தள்ளினன்
பாதியின் [7]மதிமுகப் பகழி யொன்றினால்.

(இ - ள்.) அந்தணர்கள் ஓதுகின்ற வேதத்தின் உண்மைப் பொருளாகிய ஸ்ரீராமன்,—கொடியோர்களான அரக்கருக்கு முதல்வனை இராவணன் நெருங்கிய சமயம்பார்த்து, (இதுவே இவன் சிரசைக் கொய்யத்தக்கசமயமென்று கருதி) தொகுதியில் நிமிர்ந்த தோற்றமுள்ளதொரு தலையை அர்த்தசந்திரபாணமொன்றினால் அறுத்துத்தள்ளினன்; (எ-று.)—பி - ம்:—[1]வேதியன். [2]வைத்தது. [3]மெய்யும். [4]ஆதியின், ஆதியை. [5]அணுகினன். [6]ஆற்றல், ஆறை. [7]பிறைமுகப். ஒருபிரதியில் முன்னிரண்டடிகள் 'வேதியர்வேதத்து மெய்த்தவித்தகன், நீதியுமுறைமையுநெறியுநிற்கலா' என்று உள்ளன. (3816)

150.—இராவணன்தலை கடலில் வீழ்தல்.

மேருவின் கொடுமுடி [1]வீசு காலெறி
போரிடை [2]யொடிந்துபோய்ப் புணரி புக்கென
ஆரியன் சரம்பட வரக்கன் வன்றலை
நீரிடை விழுந்தது நெருப்பொ [3]டன்று போய்.

(இ-ள்.) வீசுந்தன்மையுள்ள வாயுபகவானோடு (ஆதிசேஷன்) செய்தபோரிலே மேருவின்கொடுமுடி ஒடிந்துபோய்க் கடலிற் புகுந்தாற்போல, ஆரியனை ஸ்ரீராமனதுசரமும் பட்டதனால் அரக்கனுடைய வலியதலை நெருப்புடனே அன்றுபோய்(க் கடலின்) நீரிடை விழுந்தது; (எ - று.)பி-ம்:—[1]வீசுங். [2]ஒடித்துப். [3]ஒன்று, என்று. (3817)

151.—இராவணன்சிரம் விழுந்ததுகண்டு வானவர் கொண்டாடுதல்.

குதித்தனர் பாரிடைக் [1]குன்று [2]கூட்டற
மிதித்தனர் [3]வடகமுந் தூசும் வீசினர்
துதித்தனர் பாடின ராடித் துள்ளினர்
[4]மதித்தன ரிராமனை வானு ளோரெலாம்.

(இ - ள்.) வானுளோரெல்லாம்,—குதித்துப் பூமியிலே திரிகூடமலையானது நெக்குவிடும்படி மிதித்தார்கள்: வடகத்தையும் தூசையும் வீசினார்கள்: துதித்தனர்: பாடினர்: ஆடித்துள்ளினர்: இராமனைப் பாராட்டினார்கள்; (எ - று.)—வடகம் - மேலாடை. தூசு - அரையாடை. பி - ம்:—[1]குன்றங். [2]கூறுற. [3]வடமொடு, படமுகம். [4]மதித்தனன். (3818)

152.—இராவணன் தலை மீண்டும் முளைத்தல்.

[1]இறந்ததோ [2]ருயிருடன் [3]கருமத் திட்டினாற்
பிறந்துள தாமெனப் பெயர்த்து [4]மத்தலை
மறந்தில தெழுந்தது மடித்த வாயது
சிறந்தது தவமலாற் செயலுண் டாகுமோ.

(இ - ள்) இறந்ததான ஒருபிராணி கருமத் தொகுதியினால் உடனே பிறந்துளதாவது போல மீண்டும்(முன்கொண்டநிலையை) மறவாமல் சினத்தினால் மடித்த வாயையுடையதாய், அத்தலை எழுந்தது: சிறந்ததாகிய செயல் தவமல்லாமற் பிறிதாகுமோ?

அறுபட்டதலை மீண்டெழுந்தது தவத்தினாற்றலாலென்பதை ஈற்றடிவிளக்கிற்று: வேற்றுப்பொருள்வைப்பணி. சிறந்ததான தவம் இல்லாவிடின் (இவ்வாறான) செயல் நிகழுமோ? என்று ஈற்றடிக்குப் பொருள் கூறுவாருமுளர். ஈட்டு - தொகுதி. பி - ம்:—[1]பிறந்தது. [2]உயிரிடைக். [3]கருமத்து. [4]ஓர்தலை. (3819)

153.—தோன்றிய தலை ஸ்ரீராமனை வைது ஆரவாரித்தல்.

கொய்தது [1]கொய்தில தென்னுங் [2]கொள்கையின்
[3]எய்தவந் தக்கணத் [4]தெழுந்த தோர்சிரம்
[5]செய்தவெஞ் சினத்துடன் சிறக்குஞ் செல்வனை
[6]வைதது தெழித்தது மழையி னார்ப்பினால்.

(இ - ள்.) கொய்யப்பெற்றதாகி, 'கொய்யப்பட்டிலது' என்ற எண்ணமுண்டாகும்படி அக்கணத்தில்தானேவந்து தோன்றியதான ஒருதலை,—கொண்ட கொடுங்கோபத்துடனே, சிறப்புப் பெற்றசெல்வனான ஸ்ரீராமனை மழைபோன்ற ஆரவாரத்துடனே, திட்டி யதட்டியது; (எ - று.)

செய்த வெஞ்சினத்துடன் - வெளிக்காட்டிய கோபக்குறியுடனே: அதாவது - வாய்மடித்துக்கொண்டு உக்கிரமாகப் பார்த்த வண்ணம் எழுந்ததான ஓர்சிரம் என உரைப்பாருமுளர். பி - ம்:—[1]கொய்திலனேறுங், கொய்திலவென்னும். [2]கோணெறி. [3]ஐதத

தெரிந்தில, ஐந்துதெரிகில, ஐந்துதெரிந்தது, ஐந்துதெரிகுவது, ஐயதுதெரிந்துமோ. [4]அமரர்க்கச்சந்தான், அமரர்க்காயினும், அமரராயினும். [5]செய்ததுந்தெரிந்ததுஞ் சிலைக்குத்தேவனை, செய்தது தோன்றிடர்ச் சிலைக்குச்செல்வனை, செய்ததுதெரிந்ததில் சிலைக்கைச் செல்வனை, செய்தது தெரிந்தது சிவற்குஞ்செல்வனை, செய்ததுந்தெரிந்திலை சிலைக்குநதேவனை. [6]வைததுந் தெழித்தது மழையினார்ப்பதும், வைதது...ஆர்ப்பது. (3820)

154.—கடலில்வீழ்ந்த இராவணன்தலையும் ஆரவாரித்தல்.

[1]இடந்தது கிரிக்குவ டென்ன வெங்கணும்
படர்ந்தது குரைகடல் பருகும் பண்பது
விடந்[2]தரு[3]விழியது [4]முடுகி வேலையில்
[5]கிடந்தது மார்த்தது மழையின் கேழது.

(இ - ள்.) விஷத்தைக் கக்குகின்ற கண்களை யுடையதாகி விரைந்து கடலிற்கிடந்ததான தலையும்,—மலைச்சிகரம் குத்தியெடுக்கப்பட்டதென்னுமாறு (தோன்றி) எங்கும் சென்றதாகி மேகத்தின் ஒப்பைக்கொண்டு ஒலிக்கின்ற கடலின்நீரைப் பருகுகின்ற தன்மையைப்பெற்று, ஆரவாரித்தது; (எ - று.)—மழையின்கேழது-மழைபோன்ற கருநிறமுடையதானது எனத் தலையைக் காட்டுவதாகக் கொள்ளுதலும் ஏற்கும். பி-ம்:—[1]இடைந்தது. [2]தகு, தழு. [3]விழியின். [4]முழுகி, முழுதும். [5]கிடந்ததுவார்த்தது கீழ்மையையோன்றலை, கிடந்தது...கேழன. ‘படர்ந்தன, பண்பின, விழியன, கிடந்தன, ஆர்த்தன, கேழனஎன்ற பன்மையானபாடம், ஒருபிரதியிலுள்ளது. (3821)

155.—இராமபிரான்தோளில் இராவணன் பதினன்கு அம்புகளை யெய்தல்.

விழுத்தினன் [1]சிரமெனும் வெகுளி மீக்கொள
[2]வழுத்தின னுயிர்களின் முதலின் [3]வைத்தவோர்
[4]எழுத்தினன் தோள்களி னேமொ டேழுகோல்
அழுத்தின னசனியே றயிர்க்கு மார்பினன்.

(இ - ள்.) பேரிடியும் அயிர்க்கவல்ல ஆரவாரத்தையுடையவனான இராவணன்,—(தன்) சிரத்தை வீழ்த்தினனென்கின்ற சினம் மிகுவதனால், (யாவராலும்) துதிக்கப்பட்டவனாகி உயிரெழுத்துக்களின் முதலிலே வைகக்கப்பட்டதொரு அகாரத்தின் ரூபியாயிருக்கின்றவனை ஸ்ரீராமனுடைய தோள்களிலே பதினன்கு பாணங்களைப் பதியுமாறு விடுத்தான்; (எ - று.)

உயிர்களின்முதலில் வைத்ததோரெழுத்து-அகாரம்: திருமால் அகாரரூபியாயிருக்கின்றானென்பதை “அக்ஷராணாம் அகாரோஸ்மி” என்றதனாலும் அறியலாம். வழுத்தினன் = வழுத்தப் பட்டவன்: செயப்பாட்டு வினைப்பொருளில்வந்த செய்வினை. வல்தோள் என இயையும். பி - ம்:—[1]தலையெனும், தலையென. [2]வழுத்தின. [3]வைத்ததோர், வைத்தவேர், வைத்தபேர். [4]எழுத்தின்வல்.

156.—இராவணன்கையை இராமபிரான் அறுத்தல்.

[1]தலையறிற் றருவதோர் [2]தவமு முண்டென
[3]நிலையுறு நேமியா னறிந்து நீசனைக்
கலையுறு திங்களின் [4]வடிவு காட்டிய
சிலையுறு கையையுந் [5]தலத்திற் சேர்த்தினன்.

(இ - ள்.) '(கொய்த தலை மீண்டும்உடனே முளைத்ததனால்) தலையற்றால் (மீண்டும் அதனைத்) தருவதாகிய ஒருதவப்பயனும் (இவனுக்கு)உண்டு' என்று நிலையாகப்பொருந்திய சக்கரப்படையை யுடையவனான ஸ்ரீராமன் அறிந்து, நீசனான (அந்த) இராவணனை, (சில) கலைகள்பொருந்திய திங்களின்வடிவைக்காட்டிய [அர்த்த சந்திரன்போல் வளைந்துள்ள] வில்லைப்பிடித்த கையையும் (அறுத்துத்) தரையில் தள்ளினன்: (எ - று.)

இராவணன் தலை கொய்தாலும் மீண்டும் முளைக்குந்தன்மைய தாதலையுணர்ந்து, இனிச் சிரத்தைக்கொய்வதிற்பயனிலையென்று அவ்விராவணனது விற்பிடித்தகையைக் கொய்து வீழ்த்தினன் ஸ்ரீராமனென்றவாறு. பி - ம்:—[1]தலையிறத், தலையறத். [2]தவமுண் டென்பதை. [3]நிலையுறநோக்கியநேமியோன்மகன். [4]வளைவுகாட்டிய, வளையுங்காட்சிய, வளையுங்காட்சியிற். [5]நிலத்திற், தலத்துச்.

157.—அறுபட்ட கையும் மீண்டும் முளைத்தல்.

[1]கொற்றவெஞ் சரம்படக் குறைந்து போனகை
[2]பற்றிய கிடந்தது சிலையைப் பாங்குற
மற்றொர்கை [3]பிடித்தது போல [4]வவ்வியது
அற்றகை [5]பிறந்ததை [6]யார றிந்துளார்.

(இ ள்.) (இராமபிரானுடைய) வெற்றிபொருந்திய கொடிய அம்புபட்டதனாற் குறைந்துபோன கை பற்றியிருந்ததான சிலையை அழகுபொருந்த மற்றொரு கை பிடித்ததுபோல(த் தோன்றிய கை யானது) பிடித்துக்கொண்டது; அற்றுப்போன கை பிறந்ததை அறிபவர் யாவர்? (எ - று.)

அற்றகையிலிருந்த வில்லை ஏற்கெனவேயிருந்த கை பற்றியது போல முளைத்த கை பிடித்துக்கொண்டதனால், வேறொரு கை தோன்றிற்றென்பதுவும், காண்பவர்க்குத் தெரிந்துகொள்ள முடியாதாயிற்றென்பதாம. பி-ம்:—[1]கொற்றவன. [2]பற்றியே. [3]அடுத் ததுகாலை, பிடித்தது சிலையை. [4]வவ்விய, வறுவியது, வவ்வியை. [5]எறிந்ததை, பிறந்தகை. [6]யாரதேர்குவார், யாவர்தேர்குவார். ()

158.—இராவணன், அற்ற தன் கையை மாதலிமீது மறறொருகையால் எடுத்தெறிதல்.

பொன் [1]கயிற் றூர்தியான் வலியைப் [2]போக்குவான்
முன்கையிற் றுறுமயிர் [3]முள்ளிற் [4]றுள்ளுற
[5]மின்கையிற் [6]கொண்டன வில்லை விட்டிலா
வன்கையைத் தன்கையின் வலியின் வாங்கினன்.

(இ - ள்.) (இராவணன்),—அழகிய கயிற்றைப்பிடித்துக் கொண்டு தேரைநடத்துபவனான [சாரதியான] மாதலியின் வலிமையைப் போக்குபவனாகி, முன்னங்கையிலே நெருங்கிய மயிர் முள்ளுப்போல் துள்ளிக்கொண்டிருக்க, மின்னலைக்கையிற் கொண்டாலொத்துத் தோன்றுகின்ற வில்லை விட்டிடாததான வலிய கையைத் தன் கையின் வலிமையாலெடுத்து வீசினான்; (எ - று.)

இராவணன் கை வில்லைப் பிடித்திருப்பது, மின்னலைப்பிடித்திருப்பதுபோலுமென்க. மாதலிமீது அற்ற கையையெடுத்து வீசும்போது அதனைப்பற்றிய கையில் மகிழ்ச்சியால் மயிர்க்கூச்செறிந்ததை 'முன்கையில் துறுமயிர் முள்ளிற் றுள்ளுற' என்றார். மேற்செய்யுளில் 'பற்றிய கிடந்தது சிலையை மற்றவன்கைபிடித்து' என வந்ததனால், 'வில்லைவிட்டிலாவன கை' என்பதற்கு முன் ஒருபோதும் வில்லைவிட்டிலாத [வீரகுணத்துக்கு அடையாளமாக வில்லை யேந்தியவண்ணமேயுள்ள] வன் கை என்றுபொருள் காண்க. வில்லின் ஒளிமிகுதியை விளக்க, அதற்கு மின்னலையுவமைகூறினரென்னலாம். பி - ம்:—[1] கையிற்று. [2] போக்கினான், போக்கென. [3] முன்னில். [4] துள்ளுறும். [5] பின். [6] கொண்டனன், கொண்டன. இச்செய்யுள் பலஏட்டுப்பிரதிகளி லில்லை. (3825)

159.—இராவணன் அற்ற தன் கையை யெறியவே, மாதலி வாயினால் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு நிலைதளர்தல்.

விளங்கொளி வயிரவா ளரக்கன் வீசிய
தளங்[1]கிளர் [2]தடக்கைதன் மார்பிற் றாக்கலும்
உளங்கிளர் பெருவலி [3]யுலைவின் மாதலி
துளங்கினன் வாய்வழி யுதிரந் [4]தூவுவான்.

(இ-ள்.) விளங்குகின்ற ஒளியையுடைய வயிரவாளைப்பெற்ற அரக்கனான இராவணன வீசிய பருத்துக் கிளர்ந்த பெரிய கை தன் மார்பிலே தாக்கியவுடனே, உள்ளத்துக் கிளாகின்ற பெருவலி அழிதலில்லாத மாதலி, வாயின்வழியாக உதிரத்தை வெளிச் சிந்துவானாய் நிலைகலங்கினான்; (எ - று.)—பி - ம்:—[1] களி. [2] தடக்கைவில. [3] உலவி. [4] தூங்குவான, தூங்குவார். (3826)

160.—இராவணன் தோமரத்தை அந்த மாதலிமேற் செலுத்துதல்.

மாமரத் [1]தார்கையால் வருந்து வானையோர்
தோமரத் தா லுயிர் [2]தொலைப்பத் தூண்டினன்
[3]தாமரத் தாற்போராத் [4]தகைகொள் வாட்படை
காமரத் தாற்சிவன் கரத்து [5]வாங்கினான்.

(இ - ள்.) அரத்தால் அராவப்படாத தன்மையைக்கொண்ட [அராவப்படாமலே இயற்கையாகக் கூர்மையாகவுள்ள] வாட்படையைக் காமரமென்ற பண்ணைப்பாடிச் சிவபிரானுடைய கையினின்று வாங்கினவனாகிய இராவணன்,—பெரிய மரம்போற் பொருந்தின (தன்) கை (மார்பிலே தாக்கி)யதனால் வருந்துபவனான மாதலியை ஓர் தோமரத்தினால் உயிரைப்போக்க (எண்ணி)ச் செலுத்தினான்; (எ - று.)

மூன்றாமடியின் முதலிலுள்ள தாம் - அசை. தாம் - தாவுகின்ற, அரமுமாம். மாமரத்தார் கையால் என்பதற்கு- பெருமைபெற்ற மரமாகிய வில்லினோடு பொருந்திய கையால் என்று உரைப்பாருமுளர். இதில் திரிபு என்ற சொல்லணிகாண்க. பி-ம்:—[1] நடக். [2] தொலையத். [3] தாமரத்தார்ப்பெறு, தாமரத்தாற்பெற்ற, தாம்வரத்தாற்பெற்ற, தாம்வரத்தாற்பெறுந். [4] தன்மைமுற்றுறக், தவத்தனென்னினும், தவனன்றென்னவுங், தவமின்றென்னநன், தவமின்றென்னவுங். [5] வாட்கொண்டான். (3827)

வேறு.

161.—இராமன் அந்தத்தோமரத்தை யழித்தல்.

மாண்ட தின்றொடு மாதலி வாழ்வென
மூண்ட [1] வெந்தழல் சிந்த முடுக்கலும்
ஆண்ட வில்லியோ [2] ரைம்முக வெங்கணை
தூண்டி னான் [3] துக ளானது தோமரம்.

(இ - ள்.) 'இன்றோடு மாதலியின் உயிர்வாழ்க்கை ஒழிந்திட்டது' என்னுமாறு மூண்ட கொடிய தழலைச் சிந்துமாறு (தாமரப் படையை) விரையச் செலுத்தவும்,(யாவரையும்) அடிமை கொண்ட வில்லாளியான இராமன் ஒருபஞ்சமுகாஸ்திரத்தைச் செலுத்தினான்; (அதனால்), தோமரம் துகளாய்விட்டது; (எ - று.)— பி - ம்:—[1] வெம்படை சிந்தமுடுக்கினன், வெந்தழல்சிந்தமுடுகலும், வெந்தழல்சிந்திமுடுக்கலும். [2] அயின்முக. [3] நெடுந்தோமரம் தோய்வர, நெடுந்தோமரந்தோமற. (3828)

162.—இராவணனதுதலையை ஸ்ரீராமன் ஒய்வில்லாமல் அறுத்தல்.

ஒய்[1]வ கன்ற தொருதலை [2] நூ றுறப்
போய கன்று புரளப் பொருகணை
ஆயி ரந்தொடுத் தா[3]னறி வின்றனி
நாய கன்கைக் கடுமை [4] நடத்துவான்.

(இ - ள்.) ஞானத்திற்குரிய ஒப்பற்றதலைவனான இராமன்,—(தனது) கைவிசையைச் செலுத்துபவனாய், ஒய்தல் இல்லாததாகி ஒருதலை நூறுமுறை முளைக்கவும் (அவையாவும்) வெகுதொலைவாக அப்பாற்பட்டுப்போய்ப் புரளும்படி போர்செய்யவல்ல அம்புகள் ஆயிரங்களைத் தொடுத்தான்; (எ - று.)—'அறிவின்றனிநாயகன்' என்றவிடத்து—"ஒண்டாமரையாள்கேள்வ, னொருவனையே நோக்குமுணர்வு" என்ற பெரியார்பாசுரம் கருதத்தக்கது பி-ம்:— [1] அகன்ற. [2] நூறுறை, நூற்றுறை, நூறிறை, நூற்றப். [3] திருவின்றனி. [4] நடத்தியே. (3829)

163.—அறுபட்ட இராவணன் தலைகள் பலவிடங்களிலும் விழுதல்.

நீர்த்[1]த ரங்கங்கள் தோறு நிலந்தொறும்
சீர்த்த மால்வரை தோறுந் [2] திசைதொறும்

பார்த்த பார்த்த விடந்தொறும் பலீறலே
ஆர்த்து [3]வீழ்ந்த [4]வசனிகள் [5]வீழ்ந்தென.

(இ - ள்.) (அறுபட்ட) பல தலைகளும்,—கடலின் அலைகளிலும் நிலங்களிலும் சிறப்புப்பெற்ற பெரியமலைகளிலும் திசைகளிலும் கண்ட கண்ட இடங்களிலும் இடிகள் விழுந்தாற்போலப் பேராரவாரஞ்செய்துகொண்டு விழுந்தன; (எ - று.)—பி - ம்:— [1]தடங்கடலூேறும். [2]சிலைதொறும். [3]வீழ்ந்தது, வீழ்ந்தவன். [4]அசனியின், நாணிகள். [5]வீழ்ந்தன. (3830)

164.—மலைமுதலியவிடங்களில் அறுபட்ட இராவணனுடைய சிரங்களால் நேர்ந்த நிலை.

தகர்ந்து மால்வரை [1]சாய்வுறத் தாக்கின
மிகுந்த [2]வான்மிசை மீன மலைந்தன
புகுந்த மாமக ரக்குலம் போக்கற
முகந்த [3]வாயிற் [4]புனலினை [5]முற்றுற.

(இ - ள்.) (அறுபட்டுவிழுந்த இராவணனுடையசிரங்கள்) பெரிய மலைகளைப் பிளவுபட்டுச் சாயும்படி தாக்கின; பரந்த வானமீதுள்ள நட்சத்திரங்களை மோதின; (அன்றியும், கடலிற்) புகுந்தனவாய், பெரிய சுறுமீன்திரள்கள் போக்கிடம் அற்றுப்போகும்படி கடல்நீரைமுழுவதும் (தம்) வாயினால் மொண்டிட்டன: (எ - று.)— பி - ம்:—[1]சாயறத். [2]வாம் விசையாற்றலை வீழ்ந்தன, வான்...... மீளமலைந்தன. [3]வாரிப். [4]புணரியை. [5]முற்றவும். (3831)

165.—அறுபட்ட இராவணனது சிரங்களின் கண்களைப் பேய்கள் தோண்டுதல்.

பொழுது [1]நீட்டிய புண்ணியம் போனபின்
பழுது [2]செல்லுமன் றேமற்றப் பண்பெலாம்
தொழுது சூழ்வன [3]முன்னின்று தோன்றவே
கழுது [4]சூன்ற விராவணன் [5]கண்ணெலாம்.

(இ - ள்.) நெடுநாளாக அனுபவித்துவந்த புண்ணியப்பயன் நீங்கியபின், மற்றை(க்கீர்த்திமுதலிய)நற்குணங்களெல்லாம் பழுதுபட்டுப் போகுமன்றே! (ஆகவே, முன்பெல்லாம்) தொழுதுவலம் வருவனவாகிய பேய்கள், எதிரேநின்றுவெளிப்படையாக இராவணன் கண்களைத்தோண்டின; (எ - று.)

'முன்பெல்லாம் இராவணனுக்குஅஞ்சி அவனைவணங்கி வலம்வருந் தன்மையனவான பேய்கள் அவன் கண்ணெதிரிலே தானே யாவருமறிய அவ்விராவணன் கண்ணைத் தோண்டியெடுக்கலாயின' என்ற சிறப்புப்பொருளை, 'ஒருவனுடையபுண்ணியம் நீங்கினபின் அவனுடையகீர்த்தி பிரதாபம் முதலிய நற்குணங்கள் பழுதுபடுமன்றோ?' என்ற பொதுப்பொருள் சமர்த்தித்து நின்றது: வேற்றுப்பொருள்வைப்பணி. பி - ம்:—[1]நீட்டித்த, செல்லினும். [2]சொல்லும், காட்டும், போகும், போக்கும். [3]ஆதலிற்றோன்றிய, முன்னின்று தோற்றவெங். [4]சூழ்ந்த, சூழ்ந்தது, சூழ்வன, சூர்கின்ற. [5]முன்னெலாம். (3832)

166.—இராவணன் இராமபிரான்மீது வாள்முதலியன வீசுதல்.

வாளும் வேலு முலக்கையும் வச்சிரக்
கோளுந் தண்டு [1]மழுவெனுங் கூற்றமும்
தோளின் பத்திகள் தோறுஞ் [2]சுமந்தன
மீளி [3]மொய்ம்ப னுருமென வீசினான்.

(இ - ள்.) பெருவலி படைத்தவனான இராவணன் (தன்) தோளின் வரிசைகள்தோறும் சுமந்தனவாகிய வாளும் வேலும் உலக்கையும் வலிமையுடைய வச்சிரப்படையும் தண்டாயுதமும் மழுவென்கின்ற யமனும் ஆகிய இவற்றை, இடிபோல விழும்படி (இராமன்மேல்) வீசியெறிந்தான்; (எ - று.)—கோள் வச்சிரமும் என மாறுக: கோள் - வலிமை. மீளி மொய்ம்பன்-ஒருபொருட்பன்மொழி. பி-ம்:—[1]எழு. [2]சுமந்தவன், சுமந்ததம். [3]மொய்ம்பின். ()

167.—'இராவணனை வெல்லும்வகை யாது?' என்று ஸ்ரீராமபிரான் ஆலோசித்தல்.

அனைய [1]சிந்திட வாண்டகை வீரனும்
வினைய மென்னினி [2]யாதுகொல் வெல்லுமா
[3]நினைவெ னென்ன நிசாசரன் மேனியைப்
புனைவன் வாளியி னாலெனப் [4]பொங்கினான்.

(இ-ள்.) அப்படிப்பட்ட படைக்கலங்களை (இராவணன்) வீசியெறியவும், ஆண்களிற் பெருமைபெற்றவனும் மகாவீரனுமாகிய ஸ்ரீராமனும் 'இனிச்செய்யவேண்டியதொழில் என்? (இராவணனை) வெல்லும் வகையாது? ஆலோசனை செய்வேன்?' என்று ஆராய்ந்து (பின்) 'அரக்கனான இராவணனுடைய மேனியை அம்புகளால் நிரப்புவேன்' என்று தீர்மானித்துக்கோபித்தான்; (எ-று.) மூன்றுமடியில் 'நினைவென்' என்றது தன்மையொருமை முற்று. பி-ம்:—[1]சிந்திய. [2]யாதுகொலோவென, யாதுகொல் வேறலாம், யாதுகொல்வெல்லலாம். [3]நினைவைநானினைத்தானெடு, நினைவைமன்னினைத்தான், நினைவைமுன்னினைந்தான், நினைவவென்னினைந்தீர், நினைவனென்னினைந்தான். [4]பொங்குவான். (3834)

168.—இராவணன் மேனியெங்கும் இராமபிரான் தன் அம்புகளால் பொத்திவிடுதல்.

மஞ்ச ரங்கிய மார்பினுந் தோளினும்
நஞ்ச ரங்கிய கண்ணினு நாவினும்
[1]வஞ்சன் மேனியை வார்கணை [2]யட்டிய
பஞ்ச ரம்மென லாம் [3]வகை பண்ணினான்.

(இ - ள்.) மேகத்தைத் தோற்கடித்த [மிக்ககருநிறமுள்ள] மார்பிலும், தோளிலும், விஷத்தைத்தோற்கடித்த [கொடுந்தோற்றமுள்ள] கண்களிலும் நாக்கிலுமாக (எங்கும் அம்புகளை யெய்து), வஞ்சனைக்குணமுடைய இராவணன் மேனியை, நீண்ட

அம்புகள் தங்குவதற்கு ஏற்பட்ட கூடு என்று சொல்லும்படி செய்தான், (ஸ்ரீராமன்); (எ-று.)

பஞ்சரம் - அம்புக்கூடு: பறவைக்கூடு எனினுமாம். அவ்வாறாயின், இராவணன் மேனியைப் பறவைக்கூடாகக் கொள்வதற்கு ஏற்ப அவ்விராமன்கணைகளைப் பறவைகளாகக் கொள்க. பி - ம்:— [1]வஞ்சமேனியை. [2]வட்டியின், வட்டியாய்ப். [3]படி. (3835)

169.—இராமபாணங்கள் எங்கும் நிறைதல்.

[1]வாய்நி றைந்தன கண்கள் மறைந்தன
[2]மீநி றங்களி னெங்கு மிடைந்தன
தோய்வு றுங் [3]கணை செம்புனல் [4]தோய்ந்தில
போய்[5]நி றைந்தன வண்டப் புறமெலாம்.

(இ - ள்.) (இராவணன்) வாய்களில் நிறைந்தனவும், கண்களில் மறைந்தனவும், சிறந்த மார்பின் இடங்களிலெல்லாம் நெருங்கியனவுமாகிப் பதிதலுற்ற அம்புகள்,—இரத்தம் தோயப் பெறாமல் (அவனது உடலைத் துளைத்துவிட்டு) அண்டத்தினப்புறமெல்லாம் போய்நிறைந்தன; (எ - று.)

உடலில் நுழைந்து வெளிப்பட்ட விசையை விளக்க, 'உதிரம் தோயப்பெறாமல்' என்றது. தோய்வுறும் - இராவணன்மீது படிதலுள்ள, கணை-அம்புகள் சில, வாயில் நிறைந்தன: (சிலவற்றால்) கண்கள் மறைந்தன; மீநிறங்களின்-மார்பினிடங்களி லெல்லாம், மிடைந்தன-நெருங்கிய கணைகள், செம்புனல் தோய்ந்திலவாய் அண்டப்புறமெல்லாம், போய்நிறைந்தன என உரைத்தலும் ஒன்று.—பி - ம்:—[1]வாய்மறைந்தன, வாயுமடைந்தன. [2]மே... மிடைந்தன, வீயமேனிகளெங்குமிடைந்தன, மீயமேனிகள்... மிடைந்தன. [3]கனல். [4]தோய்ந்தயின். [5]நிறைந்ததில். (3836)

170.—இராமனம்பால் இராவணன் அயர்ந்துவருந்துதல்.

மயிரின் காறொறும் வார்கணை [1]மாரிபுக்கு
உயிருந் [2]தீர வுருவின வோடலும்
செயிருஞ் சீற்றமு நிற்கத் [3]திறல்திரிந்து
[4]அயர்வு தோன்றத் துளங்கி [5]யழுங்கினான்.

(இ - ள்.) (தனது) மயிர்க்கால்கள்தோறும் நீண்ட (இராமபிரானுடைய) அம்புமழை புகுந்து உயிரும் ஒடுங்கும்படி ஊடுருவினவாய் ஓடுதலும்,—பகைமையும் கோபமும்நிற்கவும் வலிமை திரிந்து தளர்ச்சிதோன்ற நிலைகலங்கி வருந்தினான், (இராவணன்); (எ - று.)—'நிற்க' என்பதற்கு - ஒழிய என உரைப்பாருமுளர். பி-ம்:—[1]வாளி. [2]தீய. [3]திறம். [4]அயர்வும். [5]அழுங்கினான். (3837)

171.—இராவணன் தன்தேரின்மீது மூர்ச்சித்துக் கிடத்தல்.

வாரி நீர்நின் றெதிர்[1]மக[2]ரம்படச்
சோரி சோர வுணர்வு [3]துளங்கினான்

தேரின் மேலிருந் தான்பண்டு தேவர்தம்
ஊரின் மேலும் பவனி [3]யுலாவுவான்.

(இ - ள்.) முன்பு தேவர்களின் ஊரிலும் பவனியாக உலாவு பவனுகிய இராவணன், கடலின்நீரிலிருந்து எதிர்த்துவந்த மகரங்கள் இறந்துபடும்படி (தன்னுடலினின்று) இரத்தஞ்சோர அறிவு கலங்கினவனாய் [மூர்ச்சித்தவனாய்]த் தேரின்மேற் கிடந்தான்;

வெம்மையான இரத்தம்மிகுதியாகப் பாய்வதனால், வாரிநீர் நின்றெதிர் மகரம் பட்டன. இராவணனது திறல் மாறியதை இதில் விளக்குகிறார். பி-ம்:—[1]வாரிமிழ்ந்தென, மகரம்வர, மகரம் படர். [2]துளங்கியே. [3]உலாவினான். (3838)

172.—இராவணசாரதி தேரை விலக்கி நிறுத்தல்.

ஆர்த்துக் கொண்டெழுந் தும்பர்க ளாடினர்
வேர்த்துத் தீவினை [1]வெம்பி விழுந்தது
[2]போர்த்துப் பொய்த்தன னென்று பொலங்கொள்தேர்
பேர்த்துச் சாரதி போயினன் [3]பின்றுவான்.

(இ - ள்.) (அதுகண்டு மகிழ்ச்சியினால்) தேவர்கள் ஆரவாரஞ் செய்து கொண்டு மேலெழும்பிக் குதித்துக் கூத்தாடினார்கள்; தீவினை (உடல்) வேர்த்து (மனம்) வருந்தி விழுந்திட்டது; (இராவணனுடைய) தேர்ப்பாகன் '(இராவணன் இராமபாணத்தால் உடலெங்கும்) மூடப்பட்டு அறிவுச்சாய்ந்தான்' என்று (அங்கு நிற்கப்) பின்வாங்கினவனாய், அழகுகொண்ட தேரை (அவ்விடத்தினின்றும்) திருப்பிக்கொண்டு சென்றான்: (எ - று.)—பி - ம்:—[1]வெந்து. [2]போர்த்துப்போந்தனனென்று, போர்த்துக் கொய்தனனென்று, போர்க்கயர்ந்தனனென்று. [3]பின்னுற. (3839)

173.—அப்போது இராமபிரான் அம்புஎய்ததலைத் தவிர்தல்.

கைது றந்த படையினன் கணைகள்
மெய்து றந்த வுணர்வினன் வீழ்தலும்
எய்தி றந்[1]தவிர்ந் தானிமை யோர்களை
உய்தி றந்துணிந் தா[2]னற முன்னுவான்.

(இ - ள்.) இமையோர்களை உய்யச்செய்கின்ற வகையிலே துணிவுகொண்டு தொழில் செய்பவனாகிய ஸ்ரீராமன்,—கையை விட்டு நழுவிய படைக்கலமுடையவனும் இடம் பரந்த உடலை விட்டு நீங்கிய பிரஞ்ஞையையுடையவனுமாகி (இராவணன் மூர்ச்சித்து) விழுதலும், அறத்தை நினைப்பவனாய், அம்புஎய்யுஞ் செயலை நீங்கினான்; (எ - று.)

'எய்திறந் தவிர்ந்தான்' என்பதை, அறமுன்னுவானென்பது சமர்த்தித்துநின்றது: தொடர்நிலைச்செய்யுட்குறியணி. பி - ம்:—[1]துறந்தான். [2]தவமுன்னுவன், என்னதுன்னுவான். (3840)

174.—இதுவும் அடுத்தகவியும்—மாதலி இராவணனைக் கொல்லச்சொல்ல, இராமன் 'நீதியன்று' என மறுத்ததைத் தெரிவிக்கும்.

[1]தேறி னற்பின்னை [2]யாதுஞ் செயற்கரிது
ஊறு தானுற்ற [3]போதே யுயர்தவன்
தூறு வாயென மாதலி [4]தூக்கினன்
ஏறு சேவக னும்மிதி யம்பினன்.

(இ - ள்.) (அப்போது) மாதலியானவன், (இராமபிரானை நோக்கி), 'மிக்கதவத்தையுடையவனாகிய இராவணனை (உணர்வு) தெளிந்தாற் பிறகு ஒன்றுஞ்செய்யமுடியாது: (ஆகையால் அவன்) மூர்ச்சித்திருக்கின்ற இப்போதே அழித்திடுவாய்' என்று தூண்டினன்; மிக்க வீரமுள்ளவனான ஸ்ரீராமனும், இதுகூறினன்;(எ-று.) 'இது' என்றது-மேற்கவியில் வருவதனை. பி - ம்:—[1]தேறினன். [2]யாரும். [3]போழ்திவனின்னுயிர், போழ்தேயுயர்த்தவன், போதவுயிர்தனை, போதினுய்யாதவர். [4]நோக்கினன். (3841)

175. படைது றந்து [1]மயங்கிய [2]பண்பினு
னிடை[3]தெ றும்படி [4]பார்த்திகல் நீதியின்
நடைது றந்துயிர் [5]கோடலு [6]நன்மையோ
கடை [7]துறந்தது போரென் கருத்தென்றான்.

(இ - ள்.) 'படைக்கலத்தைக் கைவிட்டு அறிவுசோர்ந்த நிலைமையை யுடையவனாகிய இராவணனிடத்து (அவனை) அழிக்கக்கூடியநிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்த்து, போர்முறையின் ஒழுங்கைக் கைவிட்டு உயிர்கொள்வதும் நன்மையோ? என்மனம் போர்செய்வதை (இப்போது) முற்றும்விட்டுள்ளது' என்று (இராமன்) கூறினன்; (எ - று.)

பண்பினனிடை, இடை - ஏழனுருபு. பி - ம்:—[1]மயங்கினன். [2]பண்பினோர், பண்பினேடு. [3]பெறும்படி, பெறுந்துயர். [4]பார்த்தக. [5]கோடல்செய், கொள்வது. [6]நன்மையைக். [7]திறத்ததுபேரின், துறந்தபோருனற், துறந்து பேரென்ன. (3842)

176.—இராவணன் உணர்வுபெற் றெழுதல்.

[1]கூவி ரஞ்செறி பொற்கொடித் தேரொடும்
போவ ரஞ்சின ரன்னதோர் போழ்தினின்
ஏவ[2]ரஞ்சலி யாதவ ரெண்ணுடைத்
தேவ ரஞ்ச விரர்வணன் தேறினன்.

(இ - ள்.) கூவிரம்பொருந்திய பொற்கொடியோடுகூடின தேரோடும் போகுவாராய் அச்சங்கொண்டவரான அரக்கருள், அப்போது (இராமபிரானுடைய தருமகுணத்திற்காக அவனை) அஞ்சலி செய்யாதவர் யாவர்? [எவரும் இராமனை வணங்கினர்கள்]; (பிறகு) மதிப்பையுடைய தேவர்கள் அஞ்ச, இராவணன் மூர்ச்சை தெளிந்தான்; (எ - று.)

கூவிரம் - தேரில் ஆசனத்துள இராக நடப்பெறுவதும் வீரர் பற்றிக் கொள்வதற்கு உதவுவதுமான தாமரைமொட்டுவடிவின தான உறுப்பு: தேரின் தலையலங்காரமென்றும் பொருளுண்டு. கூபரம்என்ற வடசொல், நுகத்தடியைத் தாங்கும்மர மெனப் பொருள்படும். பி-ம்:—[1]கோவரம். [2]அஞ்சலிலாதவரென்றுடைத், அஞ்சினரென்னும்பொழுதினில். (3843)

177.—தேரை விலக்கிநிறுத்தியதற்காகச் சாரதிமேல் இராவணன் சினங்கொள்ளுதல்.

உறக்க நீங்கி [1]யுணர்ச்சியுற் றானென
மறக்கண் வஞ்ச னிராமனை [2]வான்றிசைச்
[3]சிறக்குந் தேரொடுங் கண்டிலன் சீற்றத்தீப்
பிறக்க நோக்கினன் பின்னுற நோக்கினான்.

(இ-ள்.) கொடுமையை வெளிக்காட்டுகின்ற கண்களையுடைய வஞ்சனான அவ்விராவணன் உறக்கம்நீங்கி உணர்வுபெற்றான் போன்றவனாக [மூர்ச்சைநீங்கி உணர்வுபெற்றவனாக] (அப்போது), பெரியதிக்குக்களிற் சிறந்துதோன்றுந் தேருடனே ஸ்ரீராமனைக் காணாதவனாய், (நாணத்தினால்) பின்புறம்நோக்குபவனாய்(த் தன் சாரதியைக்) கோபத்தீப்பிறக்க விழித்துப் பார்த்தான்;

பின்னுறநோக்கினான் என்பதற்குத் தன்பின்புறத்தில் இராமனைப்பார்த்தான் என்று கூறுதலுமுண்டு. பி-ம்:—[1]உணர்தலுற்றானென, உணர்ச்சியுற்றானவன். [2]வான்றனி, வன்றனி,வன்றிசை. [3]திறக்கும். (3844)

178.—மூன்றுகவிகள்-ஒருதொடர்: இராவணன் தன்தேர்ப் பாகனை வெறுத்துக்கடிந்து வாளோச்ச, அவன்பணிதலைத் தெரிவிக்கும்.

தேர்தி ரித்தனை தேவருங் [1]காணவே
வீர விற்கை யிராமற்கு வெண்ணகை
பேர வுய்த்தனை [2]யேபிழைத் தாயெனாச்
சார திப்பெய ரோனைச் சலிப்புறா.

(இ - ள்.) 'தேவருங்காணும்படி தேரைத் திருப்பிச்செலுத்தினாய்; (அதனால்), வீரமுள்ள வில்லையேந்திய கையையுடைய இராமற்குப் பரிகாசச் சிரிப்புத் தோன்றச்செய்தாய்; (ஆகவே,) பிழைசெய்தவனானாய்' என்று சொல்லிச் சாரதியென்று பெயர் கூறப்படுபவனை வெறுத்து,—(எ - று.)—'உருத்தெழா' என அடுத்த கவியோடு தொடரும். தன்பகைவரான தேவர்கள்முன்னிலையில் மாற்றானுக்குப் பின்னிடைந்தது தனக்குப் பேரவமானம் பயக்குமென்ற கருத்தினால், 'தேவருங்காணத் தேர்திரித்தனை' என்கின்றான். பி - ம்:—[1]காணவோ. [2]என். (3845)

179. தஞ்ச [1]நானுனைத் தேற்றத் தரிக்கிலா
வஞ்ச நீபெருஞ் [2]செல்வத்து [3]வைகினை

[4]அஞ்சி னேனெனச் செய்தனை யாதலால்
உஞ்சு போதி[5]கொ லாமென் றுருத்தெழா.

(இ - ள்.) 'தாங்குதற்குமிக்க வஞ்சனையுடையோனே! இரட்சகனாகிய நான் உன்னைத் தேற்ற [நம்பப்படுத்த], நீ பெருஞ்செல்வத்து வைகினாய்; (நான் உனக்குச் செய்த உதவிக்குமாறாக) அஞ்சினேனென்று (என்னைப் பகைவர்) கருதும்படி செய்தாய்: ஆதலால், கோபித்தெழுந்து,—(எ-று.)—'வாள் கடைக்கணித்தோச்சலும்,' எனத்தொடரும். வஞ்சன் - பகைவரிடத்துப்பரிதானம் வாங்கிக் கொண்டு உரியதலைவனுக்குத் தீமை விளைப்பவன்: இங்ஙனமெல்லாம் திட்டியதாக முதனூலிலும் வந்துள்ளது. பி - ம்:— [1]என்றுனையெண்ணத்தருதலால், நானுனைத்தேற்றத் தருக்கிலா, நானுனைத்தேற்றத்தருக்கெலாம். [2]சோபத்து. [3]மல்கினாய். [4]அஞ்சினான், அஞ்சினாய் [5]கொலோ. (3846)

180. வாள்க டைக்கணித் தோச்சலும் வந்தவன்
தாள்க டைக்கணி யாத்தலை [1]தாழ்வுறு
[2]மூள்க டைக்கடுந் தீயின் முனிவொழி
கோள்க டைக்கணித் தென்றவன் கூறுவான்.

(இ - ள்.) (இராவணன்) வாளைக் கடைக்கண்ணாற்பார்த்து (அந்தச் சாரதிமீது விடுக்குமாறு) ஓங்கியவளவில், அந்தப்பாகன், —கிட்டி (அந்த இராவணனுடைய) பாதங்களைப் பார்த்துத் தலைதாழ்ந்து, '(என்)எண்ணத்தை அருள்கொண்டு ஆராய்ந்து யுகாந்தகாலத்துத் தோன்றுகின்ற கொடிய கனல்போல மூள்கின்ற சினத்தை ஒழிவாயாக' என்று சொல்லியவனாய் (மீண்டும்) கூறுவான்; (எ - று.)—தேர்ப்பாகன் கூறுவதை அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

கடைக்கடுந்தீயின் மூள்முனிவுஎன்க. கோள் - எண்ணம். பி - ம்:—[1]தாழ்வுற, சாய்குறு. [2]நீள்கடைக்கடுந்தியின்னநின்முனி-யாள்கடைத் தின்றறிவிப்பதுண்டெனா, மூள்கடைக் கடுந்தீயென நீமுனி - யாள்கடைத்தொன்றறிவிப்பதுண்டெனா, மூள்கடைக் கடுந்தீயினின் முன்னம்வந் - தாள்கடைத் தொன்றறிவிப்பதுண்டெனா, மூள்கடைக் கடுந்தீயின் முனிவரா...எனா. (3847)

181.—இரண்டுகவிகள்-சாரதி தேரைத் திருப்பிச் செலுத்தியதன் காரணத்தை இராவணனுக்குக் கூறுதலைத் தெரிவிக்கும்.

ஆண்டொ ழிற்றுணி வோய்ந்தனை [1]யாண்டிறை
ஈண்ட [2]நிற்றிடி னையனே நின்னுயிர்
[3]மாண்ட தக்கண மென்றிடர் மாற்றுவான்
மீண்ட இத்தொழி லெம்வினை [4]மெய்ம்மையால்.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஐயனே! பராக்கிரமச்செயலைக் துணிந்துசெய்தலி னின்றும்ஓய்ந்து உயிரொடுங்கினை[மூர்ச்சித்தவிட்டாய்]; அங்குத் தானே ஒரு கணப்போது பொருந்தநின்றால், நின்னுயிர் அக் கணமே மாள்வது நிச்சயமென்றுகருதி, (உனக்குத்) துன்பம் நேராது தவிர்க்கும்பொருட்டு மீண்டதாகிய இத்தொழில் (நிகழ்ந் தது): (உனதுஅடியவராகிய) எமது செயல், (எப்போதும்) உண்மையானதாகும்: (எ-று.)—பி-ம்:—[1] ஆங்கிறை. [2] நிற்பினையே நெடியோய், நிற்பினையேகலையே, நிற்றிடினையனேனின். [3] மாண் டொழித்தியனையது, மாண்டதிக்கணமென்று. [4] வெம்மையால், ஒருபிரதியில் 'மீண்டெதிர்ப்படின் மேவிலையேயுயிர்' என்று இரண்டாமடி. (3848)

182. ஓய்வு [1] மூற்றமு நோக்கி [2] யுயிர்ப்பொறைச்
சாய்வு நீக்குதல் சாரதி [3] தன்மைத்தால்
மாய்வு நிச்சயம் [4] வந்துழி வாளிறுற்
காய்வு நக்கதன் றூற்கடை காண்டியால்.

(இ - ள்.) சாரதிசெய்யவேண்டியதொழில், (தன்னுடைய இரதிகன்) ஓய்ந்திருப்பதையும் வலிமையுடனிருப்பதையும் கவனித் தறிந்து மாய்வுநிச்சயமாகவந்திட்டபோது[வருமென்று தோன்றிய போது](அவனது) உயிராகியபாரத்துக்குத் தளர்வு நேராமல் அப் பாற்கொண்டு வைத்தல் (ஆகும்): (ஆகலால், என்மீது) வாளிறைச் சினங்கொண்டு கொல்லுதல், தக்கதன்று: முடிவாக [தீர] ஆலோ சித்தப்பார்; (எ-று.)—பி-ம்:-[1] முற்றவும். [2] உயிர்பெற்ற. [3] தன்மை யால். [4] வந்தது, வந்துள. (3849)

183.—இராவணன் இரக்கங்கொண்டு 'தேரைமீட்க' என்ன, பாகன் அவ்வாறேசெல்ல, இராமனைக் காணுதல்.

என்றி றைஞ்சலு மெண்ணி [1] யிரங்கினான்
வென்றி யந்தடந் தேரினை [2] மீட்கெனச்
சென்றெ திர்ந்தது தேருமத் [3] தேர்மிசை
நின்ற வஞ்ச னிராமனை நேர்வுறு.

(இ - ள்.) என்று சொல்லி (அந்தப்பாகன்) வணங்குதலும், (இராவணன் அவன்செயலை) ஆராய்ந்து (அவன்மீது) இரக்கங் கொண்டவனாய், 'வெற்றிபொருந்திய அழகிய பெரியதேரை மீட்பாய்' என்றுசொல்ல, தேரும்போய்(இராமனை)எதிர்ப்பட்டது; அந்தத்தேர்மீதுநின்ற வஞ்சனைக்குணமுள்ள இராவணன் இரா மனைச் சந்தித்து,—(எ - று.)—'வெங்கணைகோடியின்கோடிகள் தூற்றினன்' என அடுத்த கவியோடு தொடரும். பி-ம்:—[1] இரங்கு வான். [2] மீளெனச். [3] தேர்த்திசை. (3850)

184.—இராவணன் இராமன்மீது அம்புவிடுதல்.

கூற்றின் வெங்கணை [1] கோடியின் கோடிகள்
தூற்றி னான்வலி [2] மும்மடி தோற்றினான்

வேற்ஞேர் வாளரக் கன்னென வெம்மையால்
ஆற்றி ஞன்செருக் கண்டவ ரஞ்சினூர்.

(இ - ள்.) யமனைக்காட்டிலும் கொடிய அம்புகள் பலகோடிக் கணக்காயுள்ளவைகளைப் பொழிந்தான்: '(இவன்) வேருேர்கொடிய அரக்கனோ?' என்னுமாறு வலிமை (முன்னிலும்) மும்மடங்கு தோன்றப்பெற்றவனாய், கொடுமையோடு போரைச் செய்தான்: (அதனைக்) கண்டவர் (யாவரும்) அஞ்சினூர்கள்; (எ - று.)—பி-ம்:—[1]கொடிய. [2]மும்முறை.

இங்கே ஒருசெய்யுள் காணப்படுவது வருமாறு:—

அஞ்ச லின்றி யமர்க்களத் தாரியன்
வெஞ்சி னத்தொடு வேலரக் கன்பொர
எஞ்ச வேழு திவச மிராப்பகல்
விஞ்சு போர்செயும் வேலையில் வீரனும். (3851)

185.—இதுவும் அடுத்தகவியும்-இராமன் கணைசிந்தி இராவணன் வில்லைத் துண்டித்தமையைக் கூறும்.

எல்லுண் டாகி னெருப்புண்[1]டெனுமிதோர்
சொல்லுண் டாயது [2]போலவன் தோளிடை
வில்லுண் டாகின் வெலற்கரி தாமெனுச்
செல்லுண் டாலென்ன தோர்கணை [3]சிந்திஞன்.

(இ - ள்.) 'புகையுண்டானல் நெருப்புஉண்டு என்கின்ற இது ஒருபழஞ்சொல் உண்டாகியதுபோல், 'அந்த இராவணனுடைய தோளினிடத்து வில்இருக்குமாயின் வெல்லுதற்கு அரிது ஆம்' என்று கருதி, இடியை யுட்கொண்டதையொத்த ஓர்கணையை விடுத்தான், (இராமன்): (எ - று.)

'புகையுண்டாயின் நெருப்புண்டு என்பது போல இவன் தோளில் வில்லுண்டாயின் நமக்கு வெற்றியில்லையென்பது நிச்சயம்' என்றுதுணிந்து, அவ்விராவணன்வில்லை முறிக்கக் கணையை இராமன் விடுத்தானென்பதாம். "புகையுளவிடத்து நெருப்புண்டு" என்பது, மணிமேகலை. எல் - இலக்கணையால், இருள்நிறமுள்ள புகையை யுணர்த்திற்று; எல் - ஒளி யென்பாருமுளர். பி - ம்—[1]எனுமிதச், எனுமியற். [2]போலிவன். [3]சிந்தியார். (3852)

186. நார ணன்படை [1]நாயக னுய்ப்புரும்
பார ணங்கினைத் [2]தாங்குறும் பல்வகை
வார ணங்களை வென்றவன் வார்சிலை
ஆர ணங்கை யிருதுணி யாக்கினூன்.

(இ - ள்.) திருமாலின் அவதாரமூர்த்தியான தலைவன் [இராமன்]—(அங்ஙனம்) கணைகளைச் செலுத்தி, பூமிதேவியைத் தாங்குகின்ற பலவகை [எட்டான] (திக்கு) யானைகளை வென்றவனான இராவணனுடைய நீண்டவில்லாகிய நிறைந்த அச்சந்தருவதை

இருதுண்டாக்கினான்; (எ - று.)—பி - ம்:—[1] அதிநயப்புறுப், ஆகி நயப்புறுப், ஆகநயப்புறுப். [2] தாங்கும்பலவகை. (3853)

187. – அதுகண்ட தேவரின் மகிழ்ச்சி.

அயன்ப டைத்தவில் லாயிரம் பேரினன்
வியன்ப டைக்கலத் தாலற்று வீழ்தலும்
உயர்ந்து யர்ந்து [1]குதித்தன [2]ரும்பரால்
பயன்ப டைத்தனம் பஃறவத் தாலென்றார்

(இ - ள்) பிரமதேவனாற் படைக்கப்பட்ட வில், ஆயிரந்திரு நாமங்களையுடையவனான ஸ்ரீராமனுடைய பெரியபடைக்கலத்தினால் துண்டுபட்டுவீழ்தலும், தேவர்கள் உயர்ந்துயர்ந்து குதித்தார்களாய்ப் பலவகைத் தவத்தினால் பயன்பெற்றோமென்று கூறினார்;

இங்கு 'ஆயிரம்பேரினன் வியன்படைக்கலம்' என வந்ததனையும், 'நாரணன்படை' எனக் கீழ்ச்செய்யுளில் வந்ததனையும், 185-ஆம்பாடலின், 'செல்லுண்டாலன்ன தோர்கணை' என்பதற்கு-நாராயணாஸ்திரம் என்று பொருள் கொள்வது ஏற்கும். பி - ம்:—[1] குனித்தனர். [2] உம்பரார், உம்பரும், உம்பரே. (3854)

188.—இராவணன் வில்லையெடுத்துக்கொண்டேயிருக்க, இராமன் அவற்றை யழித்துக்கொண்டேயிருத்தல்.

மாறி மாறி வரிசிலை வாங்கினான்
[1] நூறி நூறு நொடியிரு நூறலை
வேறு வேறு [2]திசையுற வெவ்வங்கணை
நூறி நூறி யிராம [3]னுறுக்கினான்.

(இ - ள்.) (இராவணன்) மாறிமாறிக் கட்டமைந்த வில்லை எடுத்தவண்ணமிருந்தான்: இராமன், அந்தக் கோடிவிற்களை வெவ்வேறு திசையிலே பொருந்தக் கொடிய அம்புகளாற் பொடிப்பொடியாக்கி நுறுக்கிவிட்டான்: (எ - று.) பி - ம்:—[1] அறுநூறிநொடி, ஆறினூறிநொடி, நாறிநாறிநொடி, நூறிநூறிநொடி. [2] விளிவுற. [3] நுணுக்கினான். (3855)

189.—இராவணன் இராமனுடைய மார்பின்மீது இருப்புலக்கை முதலியவற்றை விடுத்தல்.

இருப்பு லக்கை [1]வேல் தண்டுகோ லீட்டிவாள்
நெருப்பு லக்க வருநெடுங் [2]கப்பணம்
திருப்பு லக்க வுய்த்தான் திசையானையின்
மருப்பு லக்க வழங்கிய மார்பினான்.

(இ-ள்.) திக்கசங்களின் தந்தங்கள் முறியும்படி எதிர்கொடுத்த மார்பையுடையவனான இராவணன், [illegible] மார்பிலே நீங்க [illegible]) [illegible] கொண்டார் [illegible] டு, அப்பாற்செல்லும்படி, இருப்புலக்கை,

வேல், தண்டு, குத்துக்கோல், ஈட்டி, வாள், நெருப்பும் (தன்) வெம்மைகுறையும்படி [மிக்ககொடுமையுடன்] வருகின்ற நெடிய கப்பணம் ஆகிய இவற்றை விடுத்தான்; (எ - று.)—விற்களையெல்லாம் இராமசரம் துண்டிக்கவே, இராவணன் விற்போரைவிட்டு இருப்புலக்கை முதலியவற்றை யெடுக்கலானான். பி-ம்:—[1]நீடனாடு வேலீட்டி, கோறண்டு வேலீட்டி. [2]கற்பணம். (3856)

190.—இராவணன் விடுத்தவற்றையெல்லாம் பொடிபடுத்தி, 'இவனையொழிக்க உபாயம் யாது?' என்று ஸ்ரீராமன் நாடுதல்.

அவையனைத்து [1]மறுத்தகன் வேலையிற்
குவையனைத்து மெனக்[2]குவித் தான்குறித்து
இவையனைத்து மிவனை [3]வெல் லாவெனு
நவையனைத்துந் துறந்தவ னுடினான்.

(இ - ள்.) (இராவணனெறிந்த இருப்புலக்கைமுதலிய) அவ்வாயுதங்க ளெல்லாவற்றையும் (தன்னம்புகளினால்) அறுத்தொழித்து அவையெல்லாம் அகன்றகடலில் திட்டுஎன்று நிலைக்குமாறு குவித்தவனாய்,குற்றம்யாவையும்நீங்கினவனான ஸ்ரீராமன், - இவையாவும் இவனைவெல்லாஎன்றுஎண்ணி (அவனைக் கொல்ல யாதுசெய்வதென்று) ஆராய்பவனாயினன்; (எ - று.)—குறித்துக் குவித்தான்=குறிக்கக்குவித்தான். பி - ம்:—[1]அறுத்தனன்வேலை யிற், அறுத்தலைவேலையைக், அறுத்தகன்வேலையைக். [2]குறித்தான். [3]வெல்லாதெனு. (3857)

191.—இதுவும், அடுத்தகவியும்-ஒருதொடர்: இராமன் நாடிப்பிரமாஸ்திரம் விடுக்கத்தீர்மானித்ததைத்தெரிவிக்கும்.

கண்ணி னுண்மணி யூடு கழிந்தன
[1]எண்ணி னுண்மண விற்பல [2]வெங்கணை
புண்ணி னுண்ணுழைந் [3]தோடிய புந்தியோர்
[4]எண்ணி னுண்ணிய வென்செயற் பாற் [5]றெனு.

(இ-ள்.) 'ஆலோசிக்குமிடத்து (இதுவரையிலும் நாம் எய்தனவாகி) நுண்ணியபணவிலும் பலவாய்ப் புத்திமான்களின் எண்ணினும் நுண்ணியனவான வெங்கணைகள் கண்ணினுள் மணியினூடும் நுழைந்து சென்றன: (அன்றியும்), புண்ணினுள்ளும் நுழைந்தோடிய (அவையாவும் இவனை ஒன்றும் செய்யமாட்டிற்றில: அதலால், இப்போது) என்னசெய்யத்தக்கது?' என்று ஆலோசித்து,—(எ - று.)—'எண்ணிவலித்தனன்' என்று அடுத்த கவியோடு முடியும். புண்ணினுள்நுழைந்தோடிய-ஏற்கவே படைகள் புண்செய்தவிடத்துப் புகுந்து பின்னும் புண்செய்தனவேயன்றி வேறுசெய்ய மாட்டிற்றிலஎன்றபடி பி-ம்:-[1]எண்ணு. [2]ஈர்ங்கணை. [3]ஓடினபுந்தியோர்,ஓடியபுண்ணியர். [4]எண்ணுநுண்ணிய, எண்ணினுன்னிலது. [5]என்றான். (3858)

192. [1]நார ணன்றிரு வுந்தியி னான்முகன்
பார [2]வெம்படை வாங்கியிப் பாதகன்
[3]மாரி னெய்வனென் றெண்ணி [4]வலித்தனன்
ஆரி யன்னவ னாவி யகற்றுவான்.

(இ - ள்.) ஸ்ரீராமன், அந்த இராவணனுடைய உயிரைப் போக்கும்பொருட்டு, ஸ்ரீமந்நாராயணனுடைய திருவுந்தியிலே யுள்ள நான்முகனது பெருமைபெற்ற கொடியகணையையெடுத்து, 'இந்தப் பாதகனுடைய மார்பில்எய்வேன்' என்று எண்ணித் தீர் மானித்தான்; (எ - று.)—அகற்றுவான் - முற்றெச்சம்: வானீற்று எதிர்காலவினையெச்சமுமாம். மார்—மார்பு: மரூஉ. பி - ம்:—[1]நார நாண்மலர்மேல்வந்த. [2]வாளியைவாங்கினன் பார்த்தனன், வாளி யைவாங்கியபாதகன், வாளியைநோக்குடன் பார்த்திலன். [3]மார்பி லெய்வல், மார்பினுய்ப்பன். [4]மதித்தனன். (3859)

193.—இதுவும் அடுத்த கவியும்-ஸ்ரீராமன் பிரமாஸ்திரத்தை விடுத்தமையைத் தெரிவிக்கும்.

[1]முந்தி வந்துல கீன்ற முதற் [2]பெயர்
அந்த ணன்படை [3]வாங்கி யருச்சியாச்
[4]சுந்த ரன்சிலை நாணிற் [5]றொடுப்புறு
மந்த ரம்புரை தோளுற வாங்கினான்.

(இ - ள்.) முற்பட்டுத்தோன்றி உலகைப்படைத்த முதல்வ னெனப்பெயர்பெற்ற அந்தணனான பிரமதேவனுடைய அஸ்தி ரத்தை எடுத்து அருச்சித்து, கட்டழகுடையவனான ஸ்ரீராமன், (தன்) வில்நாணியில் தொடுத்து, மந்தரமலையையொத்த தோளிற் பொருந்த இழுத்தான்; (எ - று.)—பி - ம்:—[1]முந்து. [2]பொருள். [3]ஆங்கு. [4]சுந்தரச். [5]தொடுக்குறு. (3860)

194. புரஞ்சு டப்பண் [1]டமைத்தது [2]பொற்பணை
மரந்து ளைத்தது வாலியை [3]மாய்த்துளது
[4]அரஞ்சு டச்சுடர் [5]நெஞ்ச னரக்கர்கோன்
உரஞ்சு டச் [6]சுட ரோன்மக னுந்தினான்.

(இ - ள்.) திரிபுரத்தைச் சுட்டெரிப்பதற்காக முன்பு அமைத் ததும், அழகியகிளைகளுள்ள மரங்களை [ஏழு சாலமரங்களை]த் துளைத்ததும், வாலியைமாய்த்துள்ளதுமான அந்த அஸ்திரத்தை, அரம்தாக்கவும் (அஞ்சாது மகிழ்ச்சியால்) விளங்குகின்ற நெஞ் சைக் கொண்ட அரக்கர்தலைவனான இராவணனை மார்பைத் தாக்கும்படி, சூரியகுலத்துத் தோன்றியவனான ஸ்ரீராமன்செலுத்தி னான்; (எ - று.)—அரஞ்சுடச்சுடர்நெஞ்சன் - மாற்றார்படைக்கலத் துக்கு அஞ்சாதவனென்றபடி. பி - ம்:—[1]அமைந்தது, அமர்ந்தது. [2]போர்ப்பணை. [3]மாய்த்தது, மாய்த்துள. [4]அரஞ்சுடர். [5]அம்புவரக் கிளைல், அம்பதரத்கிளைல், அப்பகவாற்றலாவ. [6]சுடரோன்மகன் தோன்றினான், சுடர்மேனியினுந்தினான். (3861)

195.—பிரமாஸ்திரம் இராவணன்மீது செல்லுதல்.

காலும் வெங்கன லுங்கடை காண்கிலா
[1]மா லுங் [2]கொண்ட வடிக்கணை மாமுகம்
நாலுங் கொண்டு நடந்தது நான்முகன்
மூல மந்திரந் தன்னொடு [3]மூட்டலால்.

(இ-ள்.) திருமாலினமிசமான ஸ்ரீராமன் கொண்டதாகிக் காற்றும் கொடுங்கனலும் முடிவுகாணமாட்டாத (வேகமும் கொடுமையுமுடைய) கூரிய (அந்தக்) கணையானது, நான்முகனுக்கு உரிய பீஜாட்சரத்தைக்கொண்ட மந்திரத்தோடு அபிமந்திரித்து விட்டதனால், பெரிய நான்கு முகங்களையும்கொண்டு சென்றது; (எ - று.) —பி - ம்:—[1]மேலும். [2]கொண்டிவ். [3]முட்டலால். (3862)

196.—பிரமாஸ்திரத்தினு லேற்பட்ட நிலை.

ஆழி மால்வரைக் கப்புறத் [1]தப்புறும்
பாழி [2]மாக்கட லும்வெளிப் [3]பாய்ந்ததால்
ஊழி ஞாயிறு மின்மினி [4]யொப்புற
வாழி வெஞ்[5]சுடர் பேரிருள் வாரவே.

(இ - ள்.) (அந்த அஸ்திரம் தன்னுடைய) கொடிய சுடரினால் மிக்க இருளைப் போக்குகையில், யுகாந்தத்தில் தோன்றும் சூரியனும் மின்மினியை யொத்துத்தோன்ற, பெரிய சக்கரவாளமலைக்கு அப்புறத்துள்ள நீர்நிறைந்த வலியபெரியகடலும் [பெரும்புறக் கடலும்] வெளிப்பாய்ந்தது; (எ - று.)—வாழி - அசை இனி, வெஞ்சுடர் - அந்த அஸ்திரத்தின் வெவ்வியவொளி, பேரிருளை வாருமாறு ஆழிமால்வரைக்கு அப்புறத்துள்ள மாக்கடலுக்கும் பெரும் புறக் கடலுக்கும் வெளியேபாய்ந்தது எனினுமாம். பெரும்புறக் கடலுக்கு அப்பால் பேரிருள் சூழ்ந்திருக்கும் என்பது புராணக் கொள்கை. பி - ம்:—[1]அப்புறம், அப்புறப். [2]மால்வரையும். [3]பாய்தலால். [4]ஒத்தவால், ஒப்புறும் [5]சுடர்ப்பேரிருள். (3863)

197.—பிரமாஸ்திரம் இராவணன் மார்பிற் பாய்தல்.

அக்க ணத்தி [1]னயன்படை [2]யாண்டகை
சக்க ரப்படை யோடுந் தழீஇச்சென்று
புக்க தக்[3]கொடி யோனுரம் பூமியும்
திக்க னைத்தும் விசும்புந் [4]திரிந்தவே.

(இ - ள்.) அக்கணத்தில் பிரமாஸ்திரமானது புருஷோத்தமனை ஸ்ரீராமனுடைய சக்கரப்படையுடனே சேர்ந்து [சுதரிசனமாழ்வானது அமிசத்தையும்பெற்று] சென்று அந்தக்கொடியோனை இராவணனுடைய மார்பிற்புக்கது; (அக்கணத்து அந்த அஸ்திரம் புகுந்த அதிர்ச்சியினால்) பூமியும் திக்குக்கள்யாவும் விசும்பும் (நிலை) திரிந்தன; (எ - று.)—பி-ம்:—[1]அயல்கின்ற. [2]ஆண்டகைச். [3]கொடிபோல். [4]திரியவே, தெரியவே. (3864)

வேறு.

198.—இராவணனுயிரிழத்தல்.

முக்கோடிவாணாளு முயன்றுடைய [1]பெருந்தவமு [2]முதல்வன் முன்னாள், எக்கோடி [3]யாராலும் [4]வெலப்படா யெனக்கொடுத்த வரமு [5]மேனைத், [6]திக்கோடு [7]முலகனைத்துஞ் செருக்கடந்த [8]புய வலியுந் தின்று மார்பிற், புக்கோடி யுயிர்பருகிப் புறம்போயிற் றிராகவன்தன் புனித வாளி.

(இ - ள்.) இராமபிரானெய்த பரிசுத்தமான அந்த அஸ்திர மானது,-(இராவணனது) முக்கோடியாயுளையும், (அவன்) முயன்று செய்த பெருந்தவத்தையும், முதற்கடவுளரிற்சேர்ந்தவனான பிரம தேவன் முற்காலத்தில் 'முப்பது முக்கோடித்தேவர்களில் எந்த வரிசையிற் சேர்ந்தவராலும் வெல்லப்படாய்' என்றுகொடுத்த வரத்தையும், மற்றும் திக்கொடும் உலகனைத்திலும் போரினால் வென்ற புயவலியையும் ஒழித்துவிட்டு, (அவனுடைய) மார்பிலே புகுந்து உடலெங்கும்குடைந்து உயிரைப்பருகிவிட்டுப் புறத்திற் போயிற்று; (எ - று.)

இப்படலத்தில் 243ஆஞ் செய்யுளில் "அரைகடையிட்டமை வுற்ற முக்கோடி ஆயு" என்று கூறுவதனால், சில்லறையாயுள்ள அரையை இங்கே சொல்லாதுவிட்டாராயினும் மூன்றரைக்கோடி யாயுளென்றே கொள்க. பிறர்மனைநயத்தலாகிய தீவினையைச் செய்துள்ள உயிரை முழுதும் தான்பரிசித்துப் புனிதமாக்கியத னால், 'இராகவன் தன்புனிதவாளி' என்றது. "முதலாவார் மூவரே யம்மூவ ருள்ளும், முதலாவான் மூரிநீர்வண்ணன்" என் பது, பெரியார்பாசுரம். அஷ்டவசுக்கள் ஏகாதசருத்திரர் துவாத சாதித்தியர் இரட்டையரான அசுவினீதேவதைகள் எனத் தேவர் கள் பலதிறப்பட்டிருத்தல் காண்க. பி - ம்:—[1]பெருவரமும். [2]முனி வர்தாமே, முதல்வர்தாமே, மூனைவர்தாமே. [3]எவராலும். [4]வெல ப்படாத, வெலப்படான். [5]மேன்மை. [6]திக்கோடி. [7]எவ்வுலகுஞ். [8]பெரு. (3865)

199.—இராவணனைக்கொன்ற அம்புமீண்டு இராமபிரானுடைய தூணியிற் புகுதல்.

ஆர்க்கின்ற [1]வானவரும் [2]மந்தணரு முனிவர்களு மாசி கூறித், தூர்க்கின்ற [3]மலர்மாரி [4]தொடரப்போய்ப் பாற்கடலிற் றாய்நீ ராடித், [5]தேர்க்குன்ற விராவணன்தன் [6]செழுங்குருதிப் பெரும்பர வைத் திரைமேற் சென்று, கார்க்குன்ற மனையான்றன் கடுங்கணை புட்டிலி[7]னடுவட் கரந்த தம்மா.

(இ - ள்.) கரிய குன்றையொத்தவனான இராமபிரானுடைய விசையுள்ள கணையானது, (மகிழ்ச்சியினால்) ஆரவாரஞ்செய்கின்ற வானவரும் அந்தணர்களும் முனிவர்களும் வாழ்த்துக்கூறி(ப் பூமிய னிடத்தைத்) தூர்த்துவிடுமாறு மிகுதியாகப்பொழிகின்ற புஷ்ப

வர்ஷம் தொடரப்போய்ப் பாற்கடலிற் பரிசுத்தமாகநீராடி (திரும்பிக்)குன்றம்போன்ற தேரையுடைய இராவணனுடைய;வளனுள்ள இரத்தப்பெருங்கடலின் அலைமேற் சென்று, புட்டிலினுட் புக்கு ஒளித்தது; (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல்: அக்கணைச் செய்கையை வியந்தவாறு. இறந்தஉடலைத்தீண்டிய வாலாமை [தீட்டு] நீங்கப்பாற்கடலில்நீராடிய கணை, மீண்டும் அபரிசுத்தி யுண்டாகாமைப்பொருட்டுக் குருதித்திரைக்கு மேலாகச் சென்று கணைப்புட்டிலிற் கரந்த தென்க. இனி, தூய்மை பெறும்படி பாற்கடலிலே நீராடின அக்கணை அந்நிலையோடு மீண்டுவந்து சேர முடியாதபடி இராவணனுடைய குருதிப்பரவை அலைமோதிற்று என்று தகுதியின்மையணிபடக் கூறியதாக் கொள்ளினுமாம். இதனால்,கணைபட்ட அரக்கனுடைய உடலினின்று பெருகிய குருதியின் மிகுதி தொனிக்கும். "மீதலைத்த பெருந்தாரை விசும் பளப்ப" என்பர் மேலும். மற்றும், இச்செய்யுளீற்றடியிலுள்ள 'புட்டிலின் நடுவண்கரந்தது அம்மா' என்ற சொற்களை நோக்குங்காலத்தும் இங்ஙன் பொருள் கொள்ளலும் நேரிதே. பி - ம்:—[1]அமரர்களும். [2]முனிவரருமந்தணரும், முனிவர்களுமந்தணரும். [3]அலர். [4]சொரிய. [5]திரக்கின்ற, போர்க்கின்ற, தேர்க்கின்ற. [6]பெருங்குருதிச்செழும். [7]நடுவுட். (3866)

ஒருபிரதியில் இச்செய்யுளோடு **இராவணன்வதைப்படலம்** முடியமேல் **விடணன்வண்டோதரிபுலம்பற்படலம்** என்று காண்கின்றது.

200.—தலைகீழ்ப்பட இராவணன் விழுதல்.

கார்நின்ற மழைநின்று முரு[1]முதிர்வ வெனத்திணிதோட் காட்டினின்றும், தார்நின்ற மலை[2]நின்றும் [3]பணிக்குலமு மணிக் குலமுந் [4]தகர்ந்து சிந்தப்,போர்நின்ற [5]விழிநின்றும் [6]பொறி நின்று புகையோடுங் குருதி [7]பொங்கத், [8]தேர்நின்று நெடு[9][10]நிலத்துச் சிர முகங்கீழ்ப் படவிழுந்தான் சிகரம் போல்வான்.

(இ - ள்.) போரில்நிலைத்துநின்ற (அரக்கரினமான மலைக்குச்) சிகரம் போலிருந்தவனான இராவணன்,—கருநிறம்பொருந்திய மேகத்தினின்றும் இடிஉதிர்வதுபோல நெருங்கியதோள்தொகுதியினின்றும் மாலைதங்கிய மலைபோன்ற மார்பினின்றும் ஆபரணத்தொகுதிகளும் இரத்தினத்தொகுதிகளும் உடைந்துசிந்தவும், விழியினின்று தீப்பொறி(வெளிப்பட்டு)நின்றுபுகையுடனே குருதி பொங்கவும், தேரினின்று பெரியநிலத்திலே சிரசுடன் சேர்ந்த முகம் கீழ்ப்படவிழுந்தான்; (எ - று.)—பத்துத்தலைகளென்பார் 'சிரமுகம்' என்றுரென்பாருமுளர். சிரமுகம்-பிரதானமுகமுமாம். பி - ம்:—[1]நின்று. [2]அதிர்வ, அதிர்ந்த, அதிர்ப்ப. [3]நின்ற. [4]மணிக்குலமும்பணி. [5]தளர்ந்து. [6]வழிநின்று, விழுநின்றும். [7]பொறி நின்ற, பொறைநின்று. [8]பொங்கித். [9]பேர்நின்று. [10]நிலத்தின் முகங்கள், நிலத்துச்சினமுகம். (3867)

201.—இராவணனுடைய முகம் பொலிவுற்றிருத்தல்.

வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க மனமடங்க வினையம் வீயத், தெம்மடங்கப் [1]பொருதடக்கைச் செயலடங்க [2]மயலடங்க வாற்றல் தேயத், தம்மடங்கு முனிவரையுந் [3]தலையடங்க நிலையடங்கச் [4]சாய்த்த நாளின், மும்மடங்கு பொலிந்தனவம் முறைதுறந்தா னுயிர்துறந்த முகங்க ளம்மா.

(இ - ள்.) கொடிய சிங்கம் வெகுண்டாற்போன்ற கோபம் அடங்கவும், மனம் ஒடுங்கிடவும், வஞ்சனை யொழியவும், பகைவரொடுங் கும்படி போர்செய்த பெரிய கைகளின் செயல் அடங்கவும், (சீதைமீது கொண்ட காம) மயல் அடங்கவும், வலிமை யொடுங்கவும்—உயிர்துறந்த அந்த நீதிமுறையைத் துறந்தவனை இராவணனுடைய முகங்கள்,—தமக்குள்ளே அடங்கியிருக்கின்ற முனிவரையும் தலையடங்கவும் நிலையடங்கவும் முறியடித்த நாளினும் மூன்று மடங்கு பொலிந்தன; (எ - று.)

மகாவீரனாதலால், இறக்கும்போது முகப்பொலிவுமிக்கதென்பர். இனி, இராகவன் தன்புனிதவாளி உடல் புகுந்து தடவியதனால் மனச்சிறையில் கரந்த காதற்சீதை நீங்க முகங்கள் மாசுநீங்கிக் கலப்புப்பொன்னைப் புடமிட்டாற்போல் மும்மடங்கு பொலிந்தன எனலாம்: வாலியும் 'ஏவு கூர்வாளியால் எய்து நாயடியனேன், ஆவிபோம் வேலைவாய் அறிவு தந்தருளினாய்' என்றபடி புனித இராமசரத்தால் தத்துவஞானம் பெற்றவனானதுபோல, இங்கு இராவணனும் ஆவிபோம் வேலைவாய் இராமசரத்தால் மாசுநீங்க முகப்பொலிவு பெற்றான் என்பதே சிறக்கும். அம்மா என்பது - அங்ஙனம் பொலிந்தமைக்கு வியந்தமையைத் தெரிவிக்கும். தம்மடங்குதல் - தம்முயிரைக் காமாதிகட்கு உள்ளாக்காமல் அடங்கியிருக்கச் செய்தல்: இனி, தம் - மூச்சு எனக் கொண்டு, யோகமுறையில் கும்பித்தலாகிய மூச்சடக்குதலைக் காட்டு மென்றுருமுளர். முனிவரையும், உம்மை - உயர்வு சிறப்பு. தெவ்+மடங்க = தெம்மடங்க: 'தெவ்வென்மொழியே...மவ்வரின்வஃகான் மவ்வுமாகும்" என்றது காண்க. பி - ம்:—[1]பொருந்தடங்க. [2]மயலடங்கா. [3]தலையடங்கா. [4]சாய்ந்தவேனும், சாய்த்தவேனும், சாய்த்தவேலும். ()

202.—இராமன் இரதத்தினைக் கீழ்இறக்குவித்து இராவணனைப்பார்த்தல்.

[1]பூதலத்தி னுக்குவாய் நீவிடுமிப் பொலந்தேரை யென்றபோதின், மாதலிப்பே ரவன்கடவ மண்டலத்தி னப்பொழுதே வருதலோடும் [2]மீதலைந்த [3]பெருந்தாரை விசும்[4]பளப்பக் கிடந்தா தன் மேனி முற்றுங். காதலித்த வுநவாகி யறம்[5]வளர்க்குங் கண்ணாளன் தெரியக் கண்டான்.

(இ - ன்.) 'நீ சாரத்தியஞ்செய்கின்ற இந்த அழகியதேரைப் பூதலத்தில் ஆக்குவாயாக' என்று (ஸ்ரீராமன் மாதலிக்குக் கட்டளை

யிட்ட) போதிலே, மாதலியென்றபேரையுடைய அந்தப்பாகன் தூண்டப் பூதலத்தில் அப்பொழுதே (தேர்) வருதலோடும், அறத்தை வளர்க்கின்ற கருணையையுடையவனுகிய ஸ்ரீராமன்,—மேலே அலைமோதிக்கொண்டுள்ள மிக்க (இரத்தப்) பெருக்கு விசுப்பு வரையிற் செல்லக்கிடந்தானுடைய மேனிமுழுவதும் (தான்) காதலித்த உருவேயாகித்தோன்றக் கண்டனன்; (எ - று.)

இது, இராவணன் விழுந்துகிடந்த இடத்தை இரதம் நணுகியதும், அத்தேரிலிருந்தபடியே அவனைக் கண்டமை கூறிற்று. தேரினின்று இறங்கி இராவணனைக் கண்டமையை அடுத்த செய்யுள் கூறும். 'இராவணனது உள்ளே யிருந்த ராகம் [ராகம் - காதலும் செந்நிறமும்: சிலேடை.] மேலேஎங்கும்வழிந்ததோ?' என்று கருதப்படுமாறு அவனது உடலெங்கும் இரத்தப் பெருக்கினால் ராகத்தையடைந்து விழுந்திருப்பதை ஸ்ரீராமன் கண்டானென்பதாம். தன்மேனிமுற்றும் காதலித்த உருவாகி அறம்வளர்க்குங் கண்ணுளன் என்ற தொடர் - தன் உடல்முழுதும் கண்டாரெவரும் விரும்பத்தக்க எல்லா லட்சணங்களும் அமையப்பெற்றுத் தருமம் வளர்க்கத்தோன்றிய கருணுவான் என்றுபொருள் பட்டு ஸ்ரீராமனைக் காட்டுமெனினுமாம். பி-ம்:—[1]பூதலத்த தாக்குவாயாகவினிப், பூதலத்தாக்குவாயாமினியிப். [2]மீதலத்த. [3]பெருஞ்சோரி. [4]அலைச், அலச, அளக்க. [5]காக்கும். (3869)

203.—தேரை இந்திரனிடம் கொண்டுபோமாறு மாதலியை அனுப்பிவிட்டு, ஸ்ரீராமன் இராவணனை நணுகிக் காணுதல்.

தேரினை நீ கொடுவிசும்பிற் செல்கென்ன [1]மாதலியைச் செலுத்திப் பின்னர்ப், [2]பாரிடமீ தினினணுகித் தம்பியொடும் படைத்தலைவ [3]ரெவருஞ் சுற்றப், போரிடைமீண் டொருவருக்கும் புறங்கொடாப் [4]போர்வீரன் பொருது வீழ்ந்த, சீரினையே மனமுவப்ப வுருமுற்றுந் [5]திருவாளன் தெரியக் கண்டான்.

(இ - ள்.) 'நீ தேரைக்கொண்டு விசும்பிற் செல்க' என்று சொல்லி மாதலியையனுப்பிவிட்டு, பின்பு பாரிடமீதினிற் சேர்ந்து, திருமகள் கணவனை ஸ்ரீராமன், தம்பியுடனே படைத்தலைவர் எல்லோரும் (தன்னைச்) சூழ, (இதுவரையிற்) போரிலேமீண்டு ஒருவற்கும் புறங்கொடாப் போர்வீரனுகிய இராவணன் பொருது வீழ்ந்துள்ள சிறந்தநிலையையே (தன்) மனமுவக்கும்படி (அவனது) உருவமுற்றும் கண்ணுக்குத் தெரியக் கண்டான்; (எ - று.) பி-ம்:—[1]மாதலியுஞ்சென்ற. [2]பாரிடைப்போயினிது. [3]பலருஞ். [4]தீரனையே: [5]திருமார்பன். இச்செய்யுள் சில ஏட்டுப்பிரதிகளி லில்லை.

204.—இராவணனுடைய தலை முதலிய உறுப்புக்களின்மீது வானரங்கள் ஏறிக் கூத்தாடுதல்.

இலைமேவுங் கடல்புடைசூ ழுலகனைத்தெலாங் காத்தளிக்கு மடற்கை வீரன், சிலைமேவுங் கடுங்கணையாற் படுகளத்தே மனத்

நிலைமை சிதைந்து வீழ்ந்தோன், தலைமேலுந் தோண்மேலுந் தடமுது கிற் [1]படர்புயத்துந் [2]தாவி யேறி, [3]மலையினின் றாடுவபோ[4]லாடின வால் வானரங்கள் வரம்பி லாத

(இ - ள்.) அலைபொருந்திய கடலினால் நாற்புறமுஞ்சூழப் பெற்ற பூமி முழுவதையும் காத்து இரட்சிக்கின்ற வலியகையை யுடைய வீரனாகிய ஸ்ரீராமனது வில்லிற்பொருந்திய கொடிய அம்பி னாலே போர்க்களத்தே மனத்திண்மைகெட்டு இறந்துவீழ்ந்தவனான இராவணனுடைய தலைமீதும் தோளின்மீதும் பெரியமுதுகிலும் படர்ந்தபுயத்திலும் தாவியேறி,வரம்பில்லாதனவான வானரங்கள் மலையினின்று ஆடுவனபோல ஆடின; (எ - று.)

பி - ம்:—[1]பிடர்ப்புறத்தும். [2]தாவித்தாவி. [3]மலைமேல். [4]நின் றாடின. முன்னிரண்டடியில் சிலபிரதிகளிற் காணப்படுகின்ற[5]'புலை மேலுஞ் செலற்கொத்துப்பொதுநின்ற செல்வத்தின் புன்மைத் தன்மை, நிலைமேலுமினி[1]யுண்டோநீர் மேலைக்கோலமெனு[2]நீர் மைத் தன்றே' என்ற பாடத்துக்கு - இழிந்த இடத்துஞ் செல்லு தற்குப் பொருந்திநின்று (ஒருவர்க்கேயுரியதாகாமற் பலர்க்கும்) பொதுவாந்தன்மையுள்ள செல்வத்தினுடைய இழிந்த தன்மை நிலைத்திருக்கும் திறத்திலும் (இராவணனே செல்வமொழிய அவ னுடலின்மீது வானரங்கள்கூத்தாட உயிர்நீத்துச் சென்றபின்பு) இனியும் (எண்ணுதற்கு இடம்) உண்டோ? (அச்செல்வம்) நீரின் மீது எழுதிய கோலத்தின் தன்மையுடையதன்றே என்க. பி-ம்:— [1]உண்டே. [2]மேலிற். [3]நிலைமைத்தன்றே. (3871)

205.—இராவணனதுமார்பிற் பாய்ந்த திக்கஜத்தின் தந்தம் முதுகில் அணிபோல் விளங்க ஸ்ரீராமன் காணுதல்.

தோ[1]டுழுத நறுந்[2]தொடையற் றுகையுழுத [3]இளவண்டின் [4]சுழியத் தொங்கற், பாடுழுத படர்[5]வெரிநின் [6]பணியுழுத வணி [7]திகர்ப்பப் [8]பணைக்கை யானைக்,கோடுழுத நெடுந்[9]தழும்பின் குழுவை தழுவி யெழுமேகக் குழுவின் கோவைக், காடுழுத [10]கொழும் [11]பிறையிற் கறை [12]கழன்று [13]கிடந்தனபோற் கிடக்கக் கண்டான்.

(இ - ள்.) அகவிதழ்பொருந்திய நறுமணமுள்ள (மலரால்) தொடுக்கப்பட்ட மாலைத்தொகுதிகளில் தங்குந்தலையுள்ள பல சாதிகளான பிரிவுகளைக்கொண்டவண்டுகள் வந்துபடிகின்ற சுழியமென்ற மலர்மாலைகள் பக்கங்களிற் படியப்பெற்ற பரவிய முதுகு, இனியவேலைப்பாடு கொண்ட அணிகலன்களை ஒக்கு மாறு பருத்த கையையுடைய (திக்)கஜத்தின் தந்தங்கள் (தாம்) உழுவ தனால் தோன்றிய நெடியதழும்பின் கொத்தினைப் பொருந்தி எழு கின்ற மேகத்திரளின் வரிசையாகிய காட்டின சஞ்சரிக்குந்தன்மை யுள்ள கொழுவிய பிறைகள் களங்கம் நீங்கிக்கிடந்தனபோலக் கிடக்கக் கண்டான்; (எ - று.) வெரிந், முதுகு. தழுவிப் பிறையிற் கறைகழன்று கிடந்தனபோற் கிடக்கக் கண்டானென்க.

தொடையல் - தோளணிமாலை. தொடையலிலிருந்த வண்டுகள் சுழியத்தில் வந்து மொய்க்கின்றன என்க. சுழியம்-முடியைச் சுற்றி வைக்கும் மலர்மாலை: வளையமெனப்படுவது. சுழியத்தொங்கல் - சுழியமாகியமாலை. மார்பிற்பாய்ந்துகுத்திய திக்கஜங்களின் தந்தங்கள் முதுகின்வழியாய் வெளிப்பட்டுக்கிடப்பவை பிறைச்சந்திரரையும், அத்தந்தத்தையடுத்துத் தோன்றும் தழும்பு பிறையினின்றுநீங்கித் தனிக்கிடக்குங் களங்கத்தையும்போன்றிருக்க,இராவணன்முதுகு மேகம் போலுமென்க. வெரிநிலே சுழியத் தொங்கல் பிறைபோலுமென்பாரும், தொடையல் பிறைபோலுமென்பாருமுளர். இச்செய்யுளில் தற்குறிப்பேற்றவுவமையணி காண்க. சுழியம் முடியணியெனக் கொள்ளுதலும் ஒன்று பி-ம்:—[1]உழுது. [2]செரியல, தொடையில். [3]திளை. [4]சுழியிற், சுழியற். [5]வென்னில். [6]மணி. [7]நிரைய, நிகர்த்த. [8]பகைநல்யானை. [9]தழும்பும். [10]கொடும். [11]பிறையின். [12]சுழன்ற. [13]கிடப்பன.

இச்செய்யுளோடு இராவணன்வதைப்படலம் முடிய, அடுத்த பாடல் முதல் "மற்றையோர்க்கும்" (252) என்ற பாடல் முடியும் வரையில்மண்டோதரிசோகப்படலம் என்றுசிலபிரதியிற்காணப்பட, வேறுசிலபிரதிகளில் "அன்னதோவென்று" (216) என்ற செய்யுளோடு இராவணன்வதைப்படலம் முடிய, "அவ்வகையருளி வள்ளல்" (217) என்ற பாடலில் மண்டோதரிபுலம்புறுபடலம் தொடங்குகின்றது. (3872)

வேறு.

206.—இதுமுதல் நான்குகவிகள்-இராவணனை வென்றமை தனக்குச் சிறப்பைத்தராதென்று ஸ்ரீராமன் புன்சிரிப்புடன் கூறுவதைத் தெரிவிக்கும்.

தளிரியல் பொருட்டின் வந்த [1]சீற்றமுந் [2]தருக்கி னோன்தன்
இளரிய னுருவி னோடுங் [3]கழிப்புறக் கிளர்ந்து தோன்றும்
வளரியல் [4]வடுவிற் செம்மைத் தன்மையு மருவ நின்ற
[5]முளரியங் கண்ணன் மூரன் முறுவலன் மொழிவ தானான்.

(இ-ள்.) (இராவணனை) அணுகின்ற தாமரைமலரைப்போன்ற கண்களையுடைய ஸ்ரீராமன்,—தளிர்போன்ற மெல்லிய தன்மையையுடைய சீதாதேவியின் பொருட்டுத் தோன்றிய கோபமும்செருக்குக் கொண்டவனை இராவணனது விளங்குந்தன்மையுள்ள வடிவோடுங்கிழிபட்டுப்போக. விளங்கித்தோன்றுகின்ற வளருந் தன்மையுள்ள தழும்பினாலே (தன்வீரச்செயல்) செம்மையுடைய தல்லாமையையும் (மனத்துட்கொண்டு), புன்சிரிப்புவெளித் தோன்றப்பெற்றவனாய்(ப் பின்வருமாறு) கூறலானான்; (எ-று.)

'தருக்கினோன்றன் உருவினோடு சீற்றம் கழிப்புற' என்றது - இராவணனுருவம் இராமபாணத்தால் துண்டிக்கப்பட்டதனால் அப்பிரானது சீற்றம் நீங்குவதாயிற்று என்றவாறு: உடனவிற்சியணி. 'செம்மைத்து' என்பதற்கு 'தன்செயல்' என்ற தோன்று

வெழுவாய் வருவிக்க. தன்வீரச்செயல் வெளிநோக்கிற்குச் செம்மை யுடையதுபோலத் தோன்றினும், பகைவன்முதுகின் தழும்பைக் காணுமிடத்துச் செம்மையுடையதல்லாமையுங் கொண்டுள்ள தெனபார் 'செம்மைத்தன்மையும்' என்றார். சிற்றமும், உம்மை - உயர்வுசிறப்பு. பி-ம்:—[1]சீற்றத்தான். [2]தரிக்கினுன்றன். [3]சூழிப் புறக், கீழிவுறக். [4]திலகமன்னசெம்மையை மருவிநின்ற, உலக மன்ன செம்மையை மருவிவாய்ந்த, கருணைச்செம்மைத்...மருவ நின்ற, வகிரிற்செம்மைத்...மருவநின்று. [5]முளரியல். (3873)

207. [1]வென்றியா னுலக மூன்று [2]மெய்ம்மையான் மேவினு
னும், [3]பொன்றினா னென்ற தோளைப் [4]பொதுவற நோக்கும்
[5]பொற்பும், [6]குன்றியா சுற்ற தன்றே [7]யிவனெதிர் [8]குறித்த போரிற்,
பின்றியான் முதுகிற் பட்ட [9]பிழம்புள தழும்பி னம்மா.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (சுவர்க்கம் மத்திமம் பாதாளம்என்ற) மூன்றுலகங் களையும் உண்மையில் வெல்லுஞ்செயலோடு பொருந்தினாலும், (இவ்விராவணன்) இறந்துபட்டானென்ற காரணத்தினால் (என்) தோள்வலியைப்பற்றிப் பொதுவற நோக்கக்கூடிய அழகு, இவ் விராவணன் எதிராகக்குறித்துச் செய்தபோரிற் பின்னிட்டவனாய் (அதனால்) முதுகிற்பட்டதழும்பாகஉள்ள பிழம்பினால் குன்றிக் குற்றம்பொருந்தியதாகு மன்றோ? (எ - று.)

மூவுலகையும் வென்றிட்ட இராவணனை வென்றதனால் என் தோள்வலிமைபொதுவறப் பாராட்டற்குரியதென்று தோன்ற லாம்: ஆயினும், இப்போது இராவணன்முதுகில்தழும்பு காணப் படுவதனால் அஞ்சி முதுகுகொடுத்து ஓடியவனைத் தோள்வலி கொண்டுதொலைத்தேனென்பது பெறப்படுமாதலால், 'இராமன் பகைவர்க்கு அஞ்சி முதுகுகொடுத்தோடியவனை வென்றான்'என்று பரிகசித்தற்கு இடனாகி என்தோள்வலிக்குப் பழிப்பு உண்டாகுமே தவிர மேன்மையுண்டாகாது என ஸ்ரீராமன் கூறுகின்றனனென்க. போரிற் புறங்காட்டுதல்போலவே புறங்காட்டியோடியவனை வெல்வதும் புகழ்ச்சிக்குக்காரணமாகாது பழிக்கே காரணமா மென்க. பி - ம்:—[1]வென்றியான் [2]வெய்மையின்மேயினுனும், மெய்ம்மையின்மெய்யினுலும். [3]பொன்றியானென்னும், பொன்றி யாகின்ற, பொன்றியானென்று [4]பொதுவற [5]பொற்புக். [6]குன றியாசிற்றதன்றே, குன்றியாச்சுற்றதன்றே, குன்றிமாசுற்ற தன்றே. [7]அவன். [8]குறிப்பா. [9]தழும்புளபிழம்பின். (3874)

208. கார்த்தவீ ரிய[1]னென் பானுக் கட்டுண்டா னென்னக்
[2]கற்கும், வார்த்தையுண் டதனைக்கேட்டு நாணுறு [3]மனத்தினேற்
குப், போர்த்தலை [4]புறமிட்டேற்ற புண்ணுடைத் [5]தழும்பும்
போனாம், [6]தேர்த்தனுங் காண [7]லுற்ற விசனு ரிருக்கை [8]நீத்த.

(இ - ள்.) 'கார்த்தவீரியார்ச்சுனனென்பவனால் (இவ்விராவணன்) கட்டுண்டான்' என்று சொல்லப்பட்ட வார்த்தை யுண்டு: (இவ்வுலகிற்கேட்கப்படும்) அதனைக் கேட்டதனாலேயே நாணங் கொண்ட மனத்தையுடைய எனக்கு, (இவ்விராவணன்) போரிலே முதுகு காட்டியதனால் தோன்றிய புண்ணினுடைய தழும்பும் நேராகக் காணப்பட்டது! சிவபெருமானுடைய இருப்பிடமாகிய கைலாசம் நிற்கட்டும்; (எ - று.)

'இராவணனென்பவன் முன்னமே கார்த்தவீரியனால் வெல்லப் பெற்றுக் கட்டுப்பட்டுள்ளானாதலால், அவனை வென்றதைப் பற்றி ஏற்கெனவே நாணங்கொண்டுநின்ற எனக்கு, அந்த என் நாணத்தை மிகுவிக்குமாறு முதுகிற்றழும்பும் காணநேர்ந்ததே! முதுகு கொடுத்தவனையா நாம வென்றது! இதனை நினைக்க என் நாணம் மிகுகின்றது' என்றனனென்பதாம். ஈசனிருக்கைநிற்க என்றது - இவன் கைலாயத்தின் கீழ் கைந்நசுக்குண்டுநடுங்கியவனாதலாலும் இவனை வென்றதிற் சிறப்பில்லையென்பதுபெறப்படும்; ஆயினும், அது குறித்துத் தெய்வமலையென்று ஒருபோக்குச்சொல்லலாமாதலால், அதனை இங்குக் கூறாது விலக்கினேனென்ற கருத்தைத் தெரிவிக்கும். பி - ம்:— [1]என்பான்கைக். [2]கேட்டும். [3]மனத்தினேற்கும். [4]பிறகடேற்றம். [5]தழும்பு. [6]ஏற்றமும். [7]உற்றது. [8]நிற்கும். (3875)

209. மாண்டொழிந் [1]துலகி னிற்கும் வயங்கிசை [2]முயங்க மாட்டாது, [3]ஊண்டொழி [4]லுகந்து தெவ்வர் முறுவலென் புகழை யுண்ணப், [5]பூண்டொழி லுடைய மார்பா போர்ப்புறங் கொடுத்தோர்ப் போன்ற, ஆண்[6]டொழி லோரிற் பெற்ற வெற்றியு [7]மவத்த மென்றான்.

(இ - ள்.) (ஆபரணங்களைப்) பூணுந்தொழிலைக்கொண்ட மார்பையுடையவனே! உண்ணுந்தொழிலையே விரும்பிப் பகைவரின் பரிகாசச்சிரிப்பு என் புகழை ஒழித்துவிடப் போரிற் புறங் கொடுத்தோரைப் போன்ற ஆண்மைத்தொழிலையுடைய இவ்விராவணனார் பெற்ற வெற்றியும் உண்மையானதல்ல; (ஆகையால், போரில் இராவணன்) மாண்டு ஒழிந்ததனால் உலகில் நிலைத்துநிற்கும் விளங்குகின்ற கீர்த்தியும் (இனி என்னைச்) சேரமாட்டாது என்று சொன்னான்; (எ - று.)

அடுத்த செய்யுளில் வீடணன் மறுமொழிகூறுவதாக வருவதனால், இச்செய்யுளிலுள்ள விளி விபீடணனைக் குறிக்கும். சுத்த வீரனைவெல்லும் வெற்றியே புகழைத்தரும்: இவ்விராவணன் புறங்கொடுத்தவனென்று இவனது முதுகின் தழும்பினால் ஏற்படுவதுபற்றிச் சுத்தவீரனாகாத இவனை வென்றதனால், புறங்கொடுத்தோரை வெல்வதுபோன்ற இவனைவென்ற எனக்கும் பழியுண்டாகுமேயன்றிப் புகழ் உண்டாகாதென்றவாறு. பி-ம்:— [1]உலகமேத்த. [2]வழங்கமாட்டார், முயங்கமாட்டார். [3]வீண். [4]உயர்ந்ததெவ்வர் நகைசெய வுயிரையோம்பிப், உகந்துதெவ்வர்முறுவறம் புகழை

யுண்ணப். [5]தாண்டொழிற் றுளர்ந்ததோளாற் றம்முயிர்க்குதவத் தோற்ற, தாண்டொழிற் றொடர்ந்ததோளிற் றம்முயிர்க்குதவத் தோற்ற, தாண்டொழிற்றுறந்ததோளின் றூருயிருதவற்கொத்த, தாண்டொழி றுறந்ததோளிற் றுருவியரேற்றந் தோற்ற. [6]தொழிலறிவு. [7]அழுகிற்று, அழுகிது, விசைத்தது, அசைத்தது.

210.—விபீடணன் கூறத் தொடங்குதல்.

அவ் [1]வுரை யுரைப்பக் கேட்ட வீடண னருவிக் கண்ணன்
வெவ்[2]வுயிர்ப் போடு நீண்ட விம்மலன் வெதும்பு நெஞ்சன்
[3]செவ்வியிற் றொடர்ந்த வல்ல செப்பலை செல்வ வென்று
எவ்வுயிர்ப் [4]பொறையு நீங்க விரங்கினின் றினைய சொன்னான்.

(இ - ள்.) அவ்வாறானவார்த்தையை (ஸ்ரீராமன்) கூறக்கேட்ட விபீடணன், அருவிபோற் கண்ணீர்பெருகுகின்ற கண்களையுடையவனாய், வெவ்விய பெருமூச்சுடனே மிக்க இரக்கங்கொண்டு வாடுகின்ற மனமுடையவனாகி, 'செல்வனே! செவ்வைபொருந்தாத சொற்களைச் சொல்லக்கடவையல்லை' என்றுசொல்லி, உயிரைப் பொறுத்தல் சிறிதுமில்லையென்னுமாறு நீங்க [பெருவருத்தத்தினால் உயிரொடுங்கினாற்போலத் தோன்ற] இரக்கங்கொண்டு (பின்வருமாறு) சொல்லலானான்; (எ - று.)—விபீடணன் கூறுவதை மேல் ஐந்துகவிகளிற் காண்க.

தனக்கு அண்ணனான இராவணனுடைய வீரத்துக்குக் குறைவு கூறியதனால், விபீடணன் வருந்திக் கூறலானான். மேலே இராவணன் வீரம் பழிப்பற்றதென்பது விளக்கப்படும். பி - ம்:— [1]உரைக்கெதிர்நோக்கி. [2]உயிர்ப்பொடுங்கிநீண்ட, உயிர்ப்போடுகின்ற [3]செவ்வியால். [4]பொறையினோடு, பொறையுநீங்கி, பொறையுமேங்கி, பொறையினோடும், பொறையுநல்கி. (3877)

211.—இதுமுதல் ஐந்துகவிகள்-இராமபிரானுக்கு விபீடணன சமாதானங் கூறுதலைத் தெரிவிக்கும்.

ஆயிரந் தோளி னானும் வாலியு மரிதி னைய
மேயின வென்றி [1]விண்ணோர் சாபத்தின் [2]விளைந்த மெய்ம்மை
தாயினுந் தொழத்தக் காள்மேற் றங்கிய காதற் றன்மை
நோயுநின் முனியு மல்லால் வெல்வரோ துவலைப் பாலார்.

(இ - ள்.) ஐயனே! ஆயிரந்தோளை யுடையவனான கார்த்தவீரியார்ச்சுனனும் வாலியும் அருமையாகப்பெற்ற வெற்றிகள் தேவர்களின் சாபத்தினால் நேர்ந்தன: (இவ்விஷயம்) மெய்ம்மையாகும்: (இப்போது) தாயினிடத்துக் காட்டிலும் (பெரும்பணிவு கொண்டு) தொழத்தகுதியுள்ளவளான சீதாபிராட்டியினிடத்துத் தங்கிய காதலின் வடிவமான நோயும் உன் முனிவும் இல்லாவிட்டால் (வாயினால்) வீரர்போலத்திரிகின்றவர் வெல்லவல்லவரோ? [அல்லரென்றபடி]: (எ - று.)

நுவலற்பாலார் - சிறப்பித்துச்சொல்லுதற்குஉரிய வீரரெனி னுமாம். எதிர்ந்தார்வலிமையிற் பாதிபெறுமாறு வாலி வரம் பெற்றுள்ளதனுலும்,முகம் மாறுபட்டபிராணிகளினுல் தீங்குநேரு மென்று நந்தி சாபமிட்டதனுலும், வாலி இராவணனை வென்றா னென்க. கார்த்தவீரியன் இராவணனைவென்றதற்கு ஏற்பநேர்ந்த சாபவரலாறு புலப்படவில்லை. இப்போது இராவணன் கொல்லப் பட்டதற்குக் காரணம்-சீதையின் மூலமாக விளைந்த காதல் நோயும், உன்கோபத்தீயுமே: இவையில்லாவிடின், வேறு வகை யால், இராவணனைக் கொல்லமுடியாதென்றன னென்க. பி - ம்:—[1] இன்னோர். [2] விழைந்தமென்னூழ்த், விளைத்தமேன்மை. (3878)

212. நாடுள தனையு [1]மோடி [2]நண்ணலார்க் காண்கி லாமற்
[3]பீடுள குன்றம் போலும் பெருந்திசை [4]யெல்லை யானைக்
கோடுள தனையும் புக்குக் [5]கொடும்புறந் [6]தழுந்து புண்ணின்
பாடுள [7]தன்றித் தெவ்வர் படைக்கலம் பட்டென் செய்யும்.

(இ - ள்.) உலகமுள்ள எல்லைவரையுஞ்சென்று (ஆங்குள்ள பகைவரனைவரையும் வென்று மேலும் எதிர்த்தற்குப்) பகைவரைக் காணமாட்டாமல் [கிடைக்கப்பெருமையால்] (இவைகளை எதிர்ப் பேனென்று) பெருமைபொருந்திய மலையையொத்த பெரிய திக்குக் களினெல்லையிலுள்ள யானை(களோடுபொர, உக்கிரங்கொண்டு எதிர்த்த அவை)களின் தந்தங்கள் உள்ள அளவெல்லாம் (மார் பின்வழியாகப்) புக்குவளைந்த முதுகின் வெளிவரையில் அழுந்துவ தனுலான புண்ணினுலுண்டான தழும்பு (இவன்முதுகில்) உள் ளது: (இவ்வாறு இவன் முதுகில் தழும்புக்குக் காரணம் திசை யானைகளின்கொம்புகளே) அன்றிப்பகைவரின் படைக்கலம் இவன் (வச்சிரதேகத்திற்) பட்டு என்னசெய்யமாட்டும்? (எ - று.)—திசை யானைக் கொம்புகள் பல்வகைப்படைகளினும் வலிமைபெற்றவை யென்பது பெறப்படும்.

முதுகில் தழும்புதோன்றியதற்குக் காரணத்தை விளங்கச் சொல்லுகின்றனன், விபீடணனென்க. பி - ம்:—[1] உற்று. [2] நலிந்த நாளரிமுன்னுக, நவின்றநாளரிமுன்னுக. [3] மாடுளதனையுமுற்றும் வவ்வின. [4] வலியினுனை. [5] கொழும் [6] எழுந்தபுண்கோட், கழும்புண் கொண்டு, அழுந்தும் புண்ணின். [7] இவன்மேற்றேவர். (3879)

213. அப்பனை யனைத்து மார்புக் கணியெனக் கிடந்த [1]வீரக்
கைப்பனை முழங்க மேனு ளமரிடைக் [2]கிடைத்த [3]காலன்
[4]துப்பினை வயிர வாளி விசையினுங் [5]காலின் தோன்றல்
வெப்பனை [6]குத்தி னுலும் வெரிநிடைப் [7]போய வன்றே.

(இ-ள்.) அந்தத்தந்தங்கள் யாவும் (அந்தத் திசையானைகளாற் பிடுங்கமுடியாமல் முறிந்தவை, இவன்) மார்புக்கு ஆபரணமாகக் கிடந்தன: (அவை) முற்காலத்தில் வீரத்துக்கு அறிகுறியாகக் கைச்சங்கம் ஒலிக்கப்போரில் எதிரிட்ட யமனுடைய வலிமை பொருந்திய உறுதியுள்ள அம்புகளின் விசையினுலும் வாயுகுமார

னை அனுமானுடைய வெம்மைபொருந்திய குத்தினாலும் மூர்ச்சித் திடத்திற் போயின: (எ - று.)—கிடந்த - பெயர்: இச்சொல், போய என்ற பலவின்பால்முற்றுக்கு எழுவாயாகும். பி - ம்:—[1]வீரன். [2]கலந்த, கலந்தான். [3]நாளில், என்று [4]துப்பன, துப்பனை. [5]கானற்றோன் றல். [6]குத்தினாலே. [7]போயது. சிலபிரதியில் "வென்றியாய்" (215) என்ற பாடலின்பின் இதுவும் அடுத்த செய்யுளும் உள்ளன. (3880)

214. அவ்வடு [1]வன்றி யிந்த [2]வண்டத்துப் [3]புறத்து [4]மான்ற
தெவ்வடு [5]படைக ளஞ்சா [6]திவன்வயிற் [7]செல்லிற் றேவ
வெவ்விட மீசன் தன்னை விழுங்கினும் பறவை வேந்தை
அவ்விட [8]நாக மெல்லா [9]மணுகினு [10]மணுக லாற்றா.

(இ - ள்.) தலைவனே! ஆராய்ந்தறியுமிடத்து, அந்தத் (தங்கம் பாய்ந்ததனாலுண்டான) தழும்பேயல்லாமல், கொடியவிஷம் சிவபெருமானை விழுங்கினாலும் பறவைகட்கு அரசனான கருடனை அந்த விஷமுள்ள நாகமெல்லாம் (துன்புறுத்துமாறு) நெருங்கினாலும், இந்தஉலகிலும் வெளியுலகங்களிலும் சிறப்புப்பொருந்திய பகைவரைக் கொல்லவல்ல படைக்கலங்கள் அச்சமில்லாமல் இவனிடத்தில் (தழும்பை உண்டாக்குமாறு) நெருங்குவதற்கு வல்லமை யுள்ளனவாகா; (எ-று.)

'செல்லுதற் பொருளையுடைய வினைச்சொற்கள் அறிதற் பொருளையுமுடையன' என்பவாதலால், 'செல்லில்' என்பதற்கு-ஆராய்ந்தறியுமிடத்து எனப்பொருள் கொள்ளப்பட்டது; செல்லுதல் - புத்திசெல்லுதலென்க. படைக்கலங்களை யேந்தியவரின் அஞ்சுதற்றன்மையைப் படைக்கலத்தின் மீது ஏற்றிக்கூறியது, உபசாரவழக்கு. பி - ம்:—[1]இன்றி. [2]அண்டத்தின், அண்டத்துப். [3]திறத்தும். [4]மற்ற, மானத். [5]படைக்கணஞ்சாது, படைக்கண் சாலின். [6]அவன். [7]செல்லுமன்றே. [8]மறுகாவெல்லாம். [9]அடுகினும். [10]அணுகாதன்றே. இச்செய்யுள், சில்பிரதியி லில்லை. (3881)

215. [1]வென்றியாய் பிறிது முண்டோ வேலைசூழ் [2]ஞால
மாண்டோர், பன்றியா யெயிற்றுக்கொண்ட [3]பரம்பரன் முதல பல்
லோர், என்றியா மிடுக்கண் டீர்வ [4]தென்கின்ற [5]ரிவரின் றுன்னால்,
[6]சென்றினா னென்ற [7]போதும் [8]புலப்படார் [9]பொய்கொ லென்பார்.

(இ - ள்.) வெற்றியோனே! கடலினாற்சூழப்பெற்ற பூமியை அக்காலத்தில் [முற்காலத்தில்] ஒப்பற்ற வராகாவதாரமாய்(த் தன்னுடைய)கோரப்பற்களிற்கொண்ட பராபரனை முதலாகவுள்ள பலரும், 'நாங்கள் (இவனால்தோன்றும்) துன்பத்தினின்று நீங்குவது என்றைக்கு?' என்று சொல்லிக்கொண்டே யிருக்கின்றனர்: 'உன்னால் இவ்விராவணன் இன்று இறந்தான்' என்றபோதும் (அச்சத்தினால்) வெளிப்பட்டுத் தோன்றாதவராய், '(இராவணன் இறந்தது) பொய்யோ?' என்று கூறுபவராகின்றார்கள்; (எ - று.)

இதனால், இவ்விராவணனைக் கொன்றது, அரும்பெருஞ்செய லென்று விளக்கியவாறு. இராவணவதத்தின் அருமையைத் தெரிவிக்க, 'பரம்பரன் முதலபல்லோர் என்றியா மிடுக்கண்டீர்வதென்கின்றார்' என்றான். பரம்பரன் என்றது - அமிசமான திருமாலை. பி-ம்:—[1]வென்றியா. [2]ஞாலம்விண்டோர், ஞானமெல்லாம், ஞாலமுண்டோய். [3]பராபரன். [4]எனநின்றார். [5]இவனின் றன்னார், இவனை நின்றால், இவனினுன்னால் [6]வென்றியான் [7]போது. [8]புலப்பட்டார். [9]பொய்யேயென்பார். (3882)

216.—இராமபிரான் விபீடணனை நோக்கி 'இராவணனிடத்துப் பகைமையைவிட்டு ஈமக்கிரியை செய்க' என்று பணித்தல்.

அன்னதோ வென்னு [1]வீசனையமு நாணு நீங்கித்
தன்னதோ [2]ளிணையை நோக்கி [3]வீடணா தக்க தன்றால்
என்னதோ [4]விறந்துளான் மேல் [5]வயிர்த்தல்நீ யிவனுக் [6]கீண்டச்
சொன்னதோர் விதியி னாலே கடன்செயத் துணிதி யென்றான்.

(இ - ள்.) 'அப்படியா?' என்றுசொல்லி, (யாவர்க்குந்) தலைவனாகிய ஸ்ரீராமன்,—ஐயமும்(அதனால் தோன்றிய) நாணமும் நீங்கி, தன்னுடைய தோளிணையைப் (பாராட்டுங் குறிப்பினால்) பார்த்து. (பிறகு, வீடணனைநோக்கி), 'விபீடணா! இறந்துவிட்டவன்மேல் (பின்னும்) வயிரங்கொண்டு (வாளா) இருத்தல் என்னசெயல்? (இது) தக்கதன்று: நீ இவனுக்கு விரைவாக (நூல்களிற்) சொல்லியுள்ளதான ஒருமுறைமையினால் ஈமக்கடனைச்செய்யத் துணிவாய்' என்று கட்டளையிட்டான்; (எ - று.)—இந்த இடத்து வான்மீகி பகவான் "மரணாந்தாநி வைராணி [பகைமைகள் மரணத்தை முடிவாகவுடையன]" என்றனர். பி-ம்:—[1]வீரன். [2]அணைய. [3]வீடணன் றகர்த்ததன்றால். [4]இறந்துளார்மேல், இறந்துளான்பால். [5]வயிரநீ. [6]ஈண்டு. (3883)

217.—ஸ்ரீராமன் தன்னைத் தொழவந்த தேவர்களைக் காணச் செல்லல்.

அவ்வகை [1]யருளி வள்ள லனைத்[2]துல கங்க ளோடும்
எவ்வகை யுள்ள தேவ ரியாவரு [3]மிறைஞ்சுப் பொங்கிக்
[4]கவ்வையிற் றீர்ந்தார் வந்து வீழ்கின்றார் தம்மைக் காணச்
[5]செவ்வையி னவர்முற் [6]சென்றான் வீடண னிதனைச் செய்தான்.

(இ-ள்.) வரையாதருளுந்தன்மையனாகிய ஸ்ரீராமன் அவ்வாறு (விபீடணனைநோக்கி) அருளிச்செய்துவிட்டு,(இராவணனைக்கொன்றதற்காக இராமனிடத்து) மகிழ்ந்து துதித்துத் துன்பத்தினின்று நீங்கினவராய் வந்துதொழுவருகின்றவரான எல்லாவுலகங்களிலுமுள்ள பலவகையாகவுள்ள தேவர்யாவரையுங் காண்பதற்காக நேர்மையோடு அவர்கள்முன்னே செல்பவனானான்: விபீடணன் இதனைச் செய்யலானான்; (எ - று.)—விபீடணன் செய்வதனை அடுத்த செய்யுளிற் காண்க. பி-ம்:—[1]அருள. [2]உலகங்க

டோறும். [3]உரைத்துப். [4]கவ்வையிற்றிரிந்தார், கவ்வையற்றிருந்தார். [5]செவ்வையின்றவமுன். [6]செல்வான். இச்செய்யுள் சிலஏட்டுப் பிரதிகளிலில்லை. (3584)

218.—இராமபிரான் கட்டளைப்படி ஈமக்கடன் செய்யக் கருதிய விபீடணன், துயரினுல் இராவணன்மீது வீழ்தல்.

[1]போழ்ந்தென வரக்கன் [2]செய்த புன்றொழில் [3]பொறையிற் றுமால்
வாழ்ந்தநீ யிவனுக் கேற்ற [4]வரன்முறை [5]வகுத்தி யென்னத்
தாழ்ந்ததோர் கருணை தன்னுற் றலைமக னருளத் [6]தள்ளி
[7]வீழ்ந்தன னவன்மேல் வீழ்ந்த மலையின்மேன் மலைவீழ்ந் தென்ன.

(இ-ள்.) 'பிளந்தாற்போல அரக்கன்செய்த புல்லியதொழில், (இப்போது) பொறுக்கத்தக்கது: (இராவணனைப்போல ஆகாமல்) வாழ்ச்சிபெற்ற நீ இவனுக்குத் தக்க ஈமக்கடனை முறைப்படி செய்வாய்' என்று மனவிரக்கத்தைத்தெரிவிக்கின்ற ஒப்பற்ற கருணையினுல் தலைமகன் [ஸ்ரீராமன்] அருள்புரிய, வீழ்ந்துள்ளமலையின்மேல் மலைவிழுந்தாற்போல(த் துயரத்தால்) தள்ளப்பட்டு அந்த இராவணன்மேல் விழுந்தனன், (ஸ்ரீவிபீடணன்); (எ - று.)

முதல்மூன்றடிகள் 'வீடணு!...துணிதி' (216) என்று கீழ் வந்ததன் அநுவாதம். இறந்தவனிடத்துப் பகைமைநீங்கி உரிமையைப் பாராட்டவேண்டுமென்று ஸ்ரீராமபிரான் கருணையோடு அருளிச்செய்ததனுல், ஸ்ரீவிபீடணுழ்வான், இராவணனிடத்துப் பகைமை நீங்கி அவனுக்குஈமக்கடன்புரியக் கருதுகையில், தமையன் முறைமையைக் கருதியதனுல் துயரம் மிக அவன்மீதுவிழுந்து பின் வருமாறு புலம்பலாயின னென்க. பி - ம்:—[1]போழ்ந்தன, போழ்ந்தெழ. [2]செய்வகை. [3]பொறையினைற்றல், பொறையினன்றன். [4]வழிக்கடன். [5]வருத்தி. [6]தாளின். [7]வீழ்ந்தவன்றன்மேல் வீழ்ந்தான். ()

219.—விபீடணன் இராவணனைக்குறித்து அரற்றத் தொடங்குதல்.

[1]ஓவரு முலகத் தெல்லா வுயிர்களு [2]மிரங்கி யேங்கத்
தேவரு முனிவர் தாமுஞ் சிந்தையி [3]னிரக்கஞ் சேரத்
தாவரும் [4]பொறையி னுன்த [5]னறிவினுற் றகையத் தக்க
[6]ஆவலுந் [7]துயருந் தீர வரற்றினுன் பருவ யார.

(இ - ள்.) அழிவில்லாத உலகத்திலுள்ள எல்லாப்பிராணிகளும் இரக்கங்கொண்டு ஏக்கமுறவும், தேவரும் முனிவரும் (தம்) சிந்தையில் இரக்கம் பொருந்தவும், அழிவில்லாதபொறுமையையுடைய விபீடணன் தன்னறிவினுல் மாற்றிக்கொள்ளுதற்குஉரிய ஆவலும் துயருந் தீரப் பிளவுபட்ட வாய்திறம்பக் கதறிப் புலம்பத் தொடங்கினுன்; (எ - று.)—விபீடணன் புலம்புதலை, மேல் எழு கவிகளிற் காண்க.

ஓவு - அழிவு. ஆவல் - பற்று: துயர்-வருத்தம்: இவ்விரண்டும் விவேகத்தினுற் போக்குதற்குஉரியன வாதலால், 'அறிவினுல்

தகையத்தக்க' என்று அவற்றுக்கு அடைமொழி கொடுத்தார். இனி, [5]அறிவினைத்தகைந்துநிற்கும் என்ற பாடத்தைக் கொள்ளுதல் ஏற்கும். அரற்றுவது, ஆவலும் துயருந் தீர்தற்கு ஒருவழியாதலால், விபீடணன் அரற்றினானென்க. பி-ம்:—[1]எவரும். [2]இரங்கிநெஞ்சிற், இரங்கநெஞ்சிற், எரியினெஞ்சின். [3]அவலங்கூர, இரக்கஞ்செய்ய, இரக்கஞ்செய்த. [4]பொறையினாலும். [5]தாங்கலாற்றாததல்லால், அறிவினாற்றகைத்து நின்ற, அறிவினாற்றகைக்க நின்ற, அறிவினைத்தகைத்துநிற்கும். [6]யாவரும். [7]துயரம். (3886)

வேறு.

220.—ஏழுகவிகள்—விபீடணன்புலம்பலைத் தெரிவிக்கும்.

[1]உண்ணாதே [2]யுயிருண்ணா தொரு[3]நஞ்சு சனகியெனும் [4]பெரு
நஞ் [5]சுன்னைக், கண்ணாலே நோக்கவே [6]போக்கியதே[7]யுயிர் நீயுங்
களப்பட் டாயே, [8]எண்ணாதே னெண்ணியசொ லின்றினித்தா
[9]னெண்ணுதியோ வெண்ணி லாற்றல், அண்ணாவோ வண்ணாவோ
[10]வசுரர்கள்தம் பிரளயமே யமரர் கூற்றே.

எட்டுக் கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அளவிடுதற்குஅரிய வல்லமையையுடைய அண்ணாவோ! அண்ணாவோ! அசுரர்க்குப் பிரளயகாலம்போன்றவனே [அசுரர்களை யொழிப்பவனே]! அமரர்கட்கு யமனே! எந்த ஒப்பற்ற நஞ்சும் உட்கொள்ளாமலே உயிரைக்கொள்ளமாட்டாது: (அதற்குமாறாக), சானகியென்றபெரு நஞ்சானது (நீ) கண்ணாலே நோக்கியமாத்திரத்தில் உன்னை உயிரைப் போக்கிவிட்டதே!) இது, மிகவும் ஆச்சரியமான செயலாகும்!! (வீரர்க்கெல்லாம் வீரனான) நீயும் (சாதாரணமனிதனைப்போல) களத்தில் (அந்தோ) உயிரொழிந்து கிடக்கின்றாயே!! (உன்னை அண்ணனென்று) எண்ணாமல் விட்டுச்சென்றவனான என்னுடைய ஆராய்ந்துகூறிய சொல்லை இன்று இப்போதுதான் எண்ணப்போகின்றாயோ? (எ-று.) 1

தான் தமையனை விட்டுச்சென்றமைக்கு இரங்குவான் 'எண்ணாதேன்' என்று தன்னைக் கூறிக்கொள்கிறான். அவலநிலையில் இங்ஙனியம்பல் இயல்பு. சானகியென்னும் நஞ்சு உண்ணாநிலையிற் கண்ணாலே நோக்கிய மாத்திரத்து உயிரைப் போக்கியதனால் 'பெருநஞ்சு' எனப்பட்டது: இங்கு வேற்றுமையணி காண்க. எண்ணாதேன்...எண்ணுதியோ என்பதற்கு - (இராமன்மகிமையைச் சுயமாக அறியாதிருந்த) யான் (ஈசுர பிரேரணையால் அவன் பரம்பொருளென்று) மதித்தறிந்து (சீதையை அவனிடம் விட்டிடு என்று) சொல்லிய நற்புத்தியான சொல்லை (அவனை நீ அறியாத அப்போது அவனாற்றலை எண்ணினாயில்லையானாலும் அறிந்த) இப்போதாவது எண்ணுகின்றாயோ? என்று உரைத்தலும் ஒன்று. பி - ம்:—[1]உண்ணாத. [2]உயிருண்ண, உயிருண்ணா, உயிருண்ணும் [3]மருந்து. [4]ஒரு. [5]உன்றன். [6]போகியதே, போக்கினாய். [7]நீயுயிருங்.

[8]என்னுதே. [9]எண்ணுதியே.[10]அசுரர்கடற். 'உண்ணுநஞ்சுயிருண்ணுவொரு...நஞ்சுன்னை' என்ற ஒருபிரதியில் முதலடி. (8887)

221. [1]ஓராதே [2]யொருவன்த னுயிராசைக் குலமகண்மே [3]லுற்ற காதல்,[4] தீராத [5]வசையென்றே னெனைமுனிந்த முனிவாறித் தேறினாயோ, [6]போராசைப் பட்டெழுந்த குலமுற்றும் பொன்ற வுந்தான் [7]பொங்கி நின்ற, [8]பேராசை [9]பெயர்ந்ததோ [10]பெயர்ந் தாசைக் [11]கரி[12]யிரியப் புருவம் பேர்த்தாய்.

(இ - ள்.) திசையானைகள் நிலைபெயர்ந்து ஓடுமாறு புருவத்தை நிலைபெயரச் செய்தவனே! 'ஆராய்ச்சியின்றி ஒருவனுடைய உயிர் போல் விருப்பிற்குஉரிய குடிப்பிறந்த ஸ்திரீயினிடத்துப்பொருந் திய காதலானது, தீராத பழி(யை விளைக்கும்)' என்று கூறினேன்: (அப்போது நீ) என்னைச்சினந்த சினம் தணிந்து (இப்போது அவ் வுண்மையை) அறிந்தாயோ? போரிலே விருப்பங்கொண்டு எழுந்த (அரக்கரின்) குலம் முழுவதும் இறக்கவும் மேன்மேல் வளர்கின்ற பேராசை நீங்கியதோ? (எ - று.)

உன்னுடைய பெருங்காதலால் அரக்கர்குலமே மடிந்துவிட் டதே! நான் சொன்னபோது என்பேச்சைக் கேட்டு நடந்திருந் தால் இந்த ராட்சசகுலமே யன்றி நீயும் உயிருடன் இனிதிருக் கலாமே!! என்றவாறு. ஆசைக்கரி-திசையானை. பி-ம்:—[1]ஓராசை. [2]ஒருவன்மேல். [3]உய்த்த, உடைய. [4]தீராசை. [5]பழி...எனை, பழி... றனை,வழியன்றென்றெனை. [6]பேராசை. [7]பொங்காநின்ற, பொன்று நின்ற. [8]போராசை. [9]தீர்ந்தனையே, பெயர்ந்ததே. [10]பிறவாசை. [11]இரி.[12]முரிய.'போராசைக் கிரியிரியத்திசையானை மருப்பொசித்த பெரியதோளாய்' என்று ஒரு பிரதியில் ஈற்றடி. (8888)

222. அன்றெரியில் விழுவேத வதியிவள்கா [1]ணுலகுக்கோ ரன்னை யென்று, குன்றனைய நெடுந்தோளாய் கூறினே னதுமனத் துட் [2]கொள்ளா தேபோய், [3]உன்றனது குலமடங்க வுருத்தமரிற் படக்கண்டு முறவா காதே, பொன்றினையே [4]யிராகவனார் [5]புய வலியை யின்றறிந்து [6]போயினாயே.

(இ - ள்.) 'அக்காலத்து அக்கினிப்பிரவேசஞ்செய்த வேதவதி யென்பவளே உலகுக்கெல்லாம் ஒப்பற்ற தாயான இவள்காண்' என்று குன்றையொத்த நெடிய தோளையுடையவனே! கூறினேன்: அதனைமனத்தினுட் கொள்ளமாட்டாதவனாய்ப்போய், உன்னு டைய குலமெல்லாம் போரில் கோபித்துஇறந்துவிழுதலைக்கண்டும் (நீ இராமபிரானோடு) உறவுபூண்டு ஒற்றுமையாயிராமல் இறந்திட் டாயே! இராகவனாருடைய புயவலியை இன்று நேரே கண்டறிந்து உயிர்நீங்கினாயே!! (எ - று.)

இறந்துவீழ்ந்துகிடக்கின்ற இராவணனைப்பார்த்துப் புலம்பிக் கூறுகின்றனன் ஸ்ரீவிபீடணனெனக. குன்றனைய நெடுந்தோளாய் முதலியன - இராவணனைக் குறித்த விளிகள். பி - ம்:—[1]அமருலகுக்கு,உலகுதனக்கு. [2]கொள்ளிலாதாய்,கொள்ளாதேயே. [3]இனறு

ளது. [4]இராகவன்றன். [5]புயவலியின்றறிந்துதான், புயவலிநீயின்றறிந்து. [6]போகின்றாயே. சிலபிரதியில் இந்தச்செய்யுள் 221 - ஆம் பாடலின் பின்னாகவல்லாமல் "போர்மகளை" (226) என்றதன்பின் உள்ளது. (3889)

223. [1]மன்றன்மா மலரோனும் [2]வடிமழுவாள் படையோனும் வரங்களீந்த, ஒன்றலா தன[3]வுடைய முடியோடும் [4]பொடியாகி யுதிர்ந்து [5]போன, அன்றுதா [6]னுணர்ந்திலையே யானும் [7]வானாட்டை [8]யணுகா நின்ற, இன்றுதா [9]னுணர்ந்தனையே [10]யிராமனாரியாவருக்கு [11]மிறைவனாதல்.

(இ - ள்.) நறுமணமுள்ள பெரிய தாமரை மலரிலுள்ளவனான பிரமதேவனும், கூரிய மழுப்படையென்கின்ற ஆயுதத்தையுடையவனான சிவபெருமானும் ஈந்த வரங்கள் ஒன்றல்லாதனவாக [பத்தாக] வுள்ள முடியோடும் பொடியாகி உதிர்ந்துபோயின; (நீ சீதையைக் கவர்ந்துவந்த) அப்போது (இராமனைப்பற்றி) அறிந்தாயில்லையேயாகிலும், சுவர்க்கலோகத்தை யணுகி நின்ற இன்றைக்காவது அவ்விராமனார் யாவர்க்குந் தலைவராதலை அறிந்தனையா? (எ - று.)-வரங்கள் முடியோடும் உதிர்ந்துபோன-உடனவிற்சியணி.

பி - ம்:—[1]மன்றலார், மன்றல்கமழ். [2]மழுவாளி. [3]உடைவ. [4]பொடியாக. [5]போனது. [6]அறிந்திலையே. [7]அவனாட்டை. [8]அடையநின்ற, அணுகிநின்ற. [9]தெரிந்தனையே, தெரிந்ததே, அறிந்திலையே. [10]இராமன்றான். [11]இறைவர், ஈசன். (3890)

இங்கே சிலபிரதிகளிற் காணப்படும் பாடல் வருமாறு:—

அருவினைவந் தெய்தியபோ தாரர சேயுன் (றன்)
திருவினைநீ பெறுவதற்குத் திருநாமங் களைப்பரவ
ஒருபதுவா யுளவணங்க வொண்முடிபத் துளவினிய
இருபதுகை யுளவிலங்கை யென்னாக [1]வீந்தாயே.

பி-ம்:—[1]இறந்தாயே. வேறு சிலபிரதிகளிற் காணப்படும் பாடல் வருமாறு:—

அருவினைவந் தெய்தியபோழ் தார்தடுப்பா ராரதனை யறிவார் வீட்டின், திருவினைநீ பெறுவதற்கிங் கிவன்றிருநா மங்கடனைச் சிந்தித்தேத்த, ஒருபதுநா வுளவணங்க வொண்முடிகள் பத்துளவே [1]யிறைஞ்சமேரு, இருபதுகை யுளவிலங்கை யென்னாக வுயிரோடுமிழந்திட்டாயே.

பி-ம்:—[1]எழில்கொள். சிலபிரதியில் இந்தச்செய்யுள் 223-ஆம் பாடலின் பின்னாகவல்லாமல் "போர்மகளை" (226) என்றதன்பின் உள்ளது.

224 [1]வீரநா டுற்றாயோ [2]விரிஞ்சனும் யாவருக்கு மேலா [3]முன்பன், [4]பேரனா டுற்றாயோ பிறைசூடும் [5]பிஞ்ஞகன்றன் புரம் [6]பெற்றாயோ, ஆரணா வுன்னுயிரை யஞ்சாதே கொண்டகன்றா [7]ரதெலா நிற்க, மாரனார் [8]வலியாட்டந் [9]தவிர்ந்தாரோ [10]குனிர்ந்தாரோ [11]மதிய மென்பான்.

(இ-ள்.) வீரர்போய்ச்சேரும் நாட்டை யடைந்தாயோ? விரிஞ்சனுகிய யாவர்க்கும்மேலாகி முற்பட்டவனுகிய பிதாமகனது நாட்டை யடைந்தாயோ? பிறைச்சந்திரனை முடிக்கு அணியாகக் கொண்ட சிவபெருமானது நாட்டை யடைந்தாயோ? அண்ணு! (காலனுங் கண்டு அஞ்சுகின்ற) உன்னுயிரை அஞ்சாமற் கொண்டகன்றவர் யார்? அஃதுஎல்லாம் இருக்கட்டும்: மன்மதனுர்(தம்முடைய) வலிமையினுட்டத்தை (இப்போதாவது) தவிர்ந்தாரா? (இதுவரையிலும் உன்னை வெதுப்பிவந்த) மதியமென்பான் குளிர்ந்திட்டானே (எ - று.)

மகாவீரனையும் தன்வழிப்படும்படி செய்த சிறப்புப்பற்றி 'மாரனுர்' என்று மேன்மையாற்கூறினது; இனி, அவனுடையகொடுமையைக் கருதி இழிப்பினுற் கூறியதுமாம். பேரன்-பிதாமகன்: இங்கு, பிரமதேவன். பேரன் பிதாமகனென்ற பொருளில்வருதலை "உங்கள் பேரனுர்தங் தேசுடையெழுத்தே யாகில்'' என்றவிடத்துங் காண்க. பி - ம்:—[1]வீரனுடு, வீரர்நாடு. [2]விரிஞ்சனுர். [3]உன்றன். [4]பேரநாடு. [5]இறையவனுர், பெருமானுர், ஒருவன்றன். [6]உற்ருயோ. [7]அதுதான்தேவர். [8]வலியாரே, அமராட்டம், போராட்டம். [9]தவிர்ந்தாரே. [10]குளிர்ந்தானே. [11]வதனமம்மா, மதியினுர்தாம், மதியினுரும். (3891)

225. கொல்லாத மைத்துனனைக் [1]கொன்ரு[2]யென் றது [3]குறித்துக் கொடுமை [4]சூழ்ந்து, பல்லாலே யிதழ்[5]முதுக்குங் கொடும்பாவி [6]நெடும்பாரிற் [7]பழிதீர்ந் தாளோ, நல்லாருந் தீயாரு நரகத்தார் [8]சொர்க்கத்தார் நம்பி நம்மோடு, எல்லாரும் பகைஞரே யார்முகத்தே விழிக்கின்ரு [9]யெளியை யானுய்.

(இ-ள்.) கொல்லுதற்கு அரிய மைத்துனனைக்கொன்ருயென்ற அதனைக்குறித்துக் கொடுஞ்செயலைச்செய்யச் சூழ்ச்சிசெய்து கொண்டு பல்லினுலே உதட்டைக் கடிக்குங்கொடியபாவியாகிய சூர்ப்பணகை நெடிய பூமியிற் பழியைத் தீர்த்துக்கொண்டாளோ? நம்பி! நரகத்தார் துறக்கத்தார் ஆகிய தீயாரும் நல்லாரும் என்ற எல்லோரும் நம்மோடு பகைவரேயாவர்: (ஆகையால்), (இப்போது) யார்முகத்தே விழிக்கப்போகின்ருய்? (நீ) எளியவனுய் விட்டாயே! (எ - று.)

தன்கணவனைக் கொன்றவனைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று சூர்ப்பணகை சூழ்ச்சிசெய்து உன்னை மாய்வித்தாளென்பான் 'கொடும்பாவி நெடும்பாரிற்பழி தீர்ந்தாளோ' என்ருன். நல்லாருந்தீயாரு நரகத்தார் சொர்க்கத்தார் - எதிர்நிரனிறைப்பொருள்கோள். பி - ம்:—[1]கொன்ருன். [2]என்பது. [3]கேட்டு. [4]கூர்ந்து, கூறி. [5]மறைக்கும். [6]நெடும்பாரப். [7]பகை. [8]துறக்கத்தார். [9]எளிமை. ()

226. போர்மகளைக் [1]கலைமகளைப் புகழ்மகளைத் [2]தழுவியகை பொருமை [3]கூரச், சீர்மகளைத்[4]திருமகளைத் தேவர்க்குந் தெரிவரிய [5]தெய்வக் கற்பின், பேர்மகளைத் [6]தழுவுவா னுயிர்கொடுத்துப் பழி [7]கொண்ட பித்தா பின்னைப், பார்மகளைத் தழுவினையோ திசையானை [8]மருப்பிறுத்த [9]பணைத்த மார்பால்.

(இ - ள்.) விசயலக்ஷ்மியையும் சரசுவதியையும் கீர்த்தியாகிய மகளையும் தழுவிய கையானது பொருமைமிக, சிறப்புப்பொருந்திய மகளான திருமகளும் தேவர்களாலும் உணர்தற்கு அரிய தெய்வத்தன்மைகொண்ட கற்பினாற் புகழ்பெற்றவளுமான சீதாதேவியைத் தழுவுவதற்கு (விரும்பி அதனால்) உயிரையே கொடுத்துப் பழியையேகொண்ட காமப்பித்தனே! திசையானைகளின் கொம்புகளை முறித்த பருத்த மார்பினாற் பிறகு பூமிதேவியைத் தழுவினாயோ! (எ - று.)

பெருத்தமியாகிய திருமகளை தழுவவிரும்புவது கண்டு, போர்மகள் முதலியவரைத் தழுவிய கைகள் பொருமைகொண்டன என்க. இனி, 'போர்மகளை...பொருமைகூர' என்பதற்கு (போரிலும் கல்வியிலும் புகழிலும்சிறந்த இராவணனை விரும்பியடைந்துள்ள) போர்க்கு அதிதேவதையான விசயமகள் முதலியமூவரும் ('இவன் பிறர்மனை விரும்புதலாகிய பெரும்பாவஞ் செய்தவனானே! அதனால் அழிந்துபோவானே என்று மனம்வருந்துதலைப்) பொறுக்கமாட்டாமைமிக என்றுமாம். உயிரைக்கொடுத்தாவது புகழைப்பெறுதல் உத்தமர்செயல்: அதற்குமாறாக, கைகூடாதசெய்கையை விரும்பி உயிரையே பறிகொடுத்துப் பழியைக் கொண்டதனால், இராவணனை 'உயிர்கொடுத்துப் பழிகொண்ட பித்தா' என்றது. உயர்பொருளைக்கொடுத்து இழிபொருளைக் கைக்கொள்வதைப் பித்தின்செயலென்னத் தட்டில்லையென்க. இங்கு ஒன்றைக்கொடுத்து மற்றொன்றைப்பெறுதலாகிய **மாற்றுநிலையணி** காண்க; வடநூலார் பரிவ்ருத்த்யலங்காரமென்பர். இப்பாடலில் அவலச்சுவையைப் பிழிந்து கம்பர்பெருமான் வைத்திருப்ப, ஈண்டு எள்ளற்குறிப்புள்ளது எனக்கூறினாருமுளர்; அன்னார் அடுத்து வரும் 'என்றேங்கி **அரற்றுவான்றனை**' என்பதை நோக்கிற்றிலர். 'கீர்த்தி' என்ற வடசொல் அந்தப்பாஷையிற் பெண்பாலாதலால், 'புகழ்மகளை' என்றது. பார்மகளைத் தழுவுதல்-பூமியிற் பிணமாகக் குப்புறவிழுந்து கிடத்தல். பி - ம்:—[1]குலமகளை. [2]தழுவியவர், தழுவியவப். [3]போகச். [4]தேவர்க்குந்தேவர் தந்திருமகளைத், திரு...தம்மோயைத். [5]தெய்வக்கற்பை. [6]தழுவினையோ, தழுவாதுன். [7]பூண்ட. [8]மருப்பொசித்த, பணையிறுத்த. [9]பருதிமார்பால், பருதிமார்பா. (3893)

227.—சாம்பவானால் விபீடணன் தேறிநிற்க, மண்டோதரி இராவணனிறந்த செய்தியை யுணர்தல்.

என்றேங்கி யரற்றுவான் றனையெடுத்துச் சாம்பவனு மெண்ணின் [1]வேந்தன், குன்றோங்கு [2]நெடுந்தோளாய் விதிநிலையை [3]மதியாத கொள்கைத் தாகிச், சென்றோங்கு [4]முணர்வினையோ தேறாதே யழுந்துதியோ வென்னத் தேறி, [5]நின்றானப் புறத்தரக்க னிலை கேட்டாள் மயன்பயந்த நெடுங்கட் பாவை.

(இ - ள்.) என்று ஏக்கம்கொண்டு வாய்விட்டுக்கதறுகின்றவனான விபீடணனை யெடுத்து, சாம்பவானென்கின்ற கரடிகட்கு அரசன்,—'மலைபோலோங்கிய நெடிய தோளையுடையவனே! விதியின்நிலைமையை யறியாத கொள்கையைக் கொண்டதாய்ச் சென்று

ஓங்குகின்ற உணர்வையுடையையாயினையோ? தெளிவின்றி (இங்ஙனம் நீ) துயரில் அழுந்துதலைச் செய்யக்கடவையோ?' என்று சொல்ல,(ஸ்ரீவிபீடணன்) தேறி அப்புறத்துநின்றான்; மயன்பெற்ற நெடியகண்ணையுடைய பாவை போல்பவளான மண்டோதரி, அரக்கன் நிலைமையை [இராவணன் இறந்தானென்பதை]க் கேள்வியுற்றாள்; (எ - று.)

விதிநிலையைமதியாத கொள்கையாவது, துயரத்திலழுந்துதலென்பது: விதியின்நிலையையறிந்த ஓங்கிய உணர்வையுடைய நீ, இராவணன் இறந்தது விதியின் செயலென்று அறியாது இரங்குவது சிறிதுந் தகுதியன்றென்றவாறு. பி - ம்:—[1]மன்னன். [2]திரள். [3]உணராதே, மதியாதே, உணராத. [4]உணர்வினையோ......வருந்துதியோ, உணர்விலர்போற்றேறுதே வருந்தினையோ,உணர்வினர் போற்றேறுதேவருந்துதியோ, உணர்விலர்போற்றேறுதேவருந்துவரோ, உணர்வினர்போற்றேறுதுவருந்துதியோ, உணர்விலரிற் போற்றுதேவருந்தினையோ. [5]நின்றாங்குப். (3894)

வேறு.

228.—மண்டோதரி பலமாதருடன் இராவணன் இறந்து வீழ்ந்துகிடக்கும் இடத்துக்கு வருதல்.

அனந்த நூறுயிர மாக்கள் மங்கைமார்
புனைந்தபூங் குழல்விரித் தரற்றும் பூசலர்
இனந்[1]தொடர்ந் துடன்வர [2]வேகி னாளென்ப
நினைந்தது மறந்தது மிலாத [3]நெஞ்சினாள்.

(இ - ள்.) பலஇலட்சம் தொகையினரான அரக்கஸ்திரீகள் அலங்கரித்திருந்த அழகிய தம்கூந்தலை விரித்துக்கொண்டு கதறுகின்ற புலம்பலையுடையவராய்க் கூட்டமாகத்தொடர்ந்து தன்னுடனே வர,நினைப்பதும் மறப்பதும் இல்லாத நெஞ்சையுடையவளான மண்டோதரி,(இராவணன் இறந்து வீழ்ந்துகிடக்கும் இடத்துக்கு) வந்தனள்; (எ-று.)

இராவணனை மறந்து விடுவது பிறகுநினைப்பது என்பது இல்லாமல் எப்போதும் அவனைக் கருத்திற் கொண்டிருப்பவளென மண்டோதரியின் கற்புத்தன்மையைக் கூறியவாறு. பி - ம்:— [1]திரிந்து. [2]எய்தினாளென்ப, எய்தினரோ. [3]நெஞ்சினர். (3895)

229.—அரக்கியரின் புலம்பலொலி.

இரக்கமுந் தருமமுந் துணைக்கொண் டின்னுயிர்
புரக்கு[1]தன் குலத்துவந் தொருவன் பூண்டதோர்
பரக்கழி யாமெனப் பரந்து நீண்டதால்
அரக்கியர் வாய்திறந் தரற்று மோதையே.

(இ - ள்.) தயையும் தருமமும் என்றவற்றைத் துணையாகக்கொண்டு இனியஉயிரைப் பாதுகாக்கின்ற சிறந்த குலத்திலே பிறந்த ஒருவன் மேற்கொண்டதொரு நாணமற்ற செயல்போல,

அரக்கியர்வாய்திறந்து அரற்றுகின்ற ஓசையானது பரவிமிக்கது; (எ - று.)—வந்தொருவன் - தொகுத்தல். பி - ம்:—[1]நம். (3896)

230.—இதுவும் அடுத்தகவியும்-பின்னும் அரக்கமங்கையர் இராவணன் இறந்துகிடக்கும் இடத்திற்கு வந்தமையைக்கூறும்.

நூபுரம் [1]புலம்பிடச் சிலம்பு [2]நொந்தழக்
கோபுரந் [3]தொறும்புறங் குறுகி னார்சிலர்
ஆபுரந் தரன்பகை யற்ற தாமெனா
மாபுரந் [4]தவிர்ந்துவிண் வழிச்[5]சென் றார்சிலர்.

(இ - ள்.) நூபுரம் ஒலிக்கவும், சிலம்பு வருந்தியழவும், (நகர வாயிற்) கோபுரந்தோறும் வெளியே சிலர் நெருங்கிவந்தனர்; சிலர் 'புரந்தரனுக்குப் பகைஅற்றதாகும்: ஆ!!' என்றுசொல்லிப் பெரிய (தமது) உடலைவிட்டு (உயிர்நீங்க)ச்சுவர்க்கவழியிற் சென்றார்; (எ-று.)—சிலம்புஒலிப்பது அழுவதுபோலுமென்க. நூபுரம் சிலம்பு என்பன - காலணிவகைகள். பி - ம்:—[1]அலம்பிடச், சிலம்பிடச். [2]நொந்தெழக். [3]புறந்தொறும், தொறுந்தொறும். [4]தவிர. [5]செல்வார். (3897)

231. *[1]அழைப்பொலி [2]முழக்கெழ [3]வழகு [4]மின்னிடக்*
[5]குழைப்பொலி [6]நல்லணிக் குலங்கள் [7]வில்லிட
[8]உழைப்பொலி வுண்கணீர்த் தாரை மீதுக
மழைப்[9]பெருங் குலமென [10]வான்வந் தார்சிலர்.

(இ - ள்.) கூவுகின்ற ஒலி இடிமுழக்கம் போலெழவும், அழகு மின்னிடவும், குழைமுதலிய விளங்குகின்ற நல்ல அணிகலன்களின் திரள் வில்லிடவும், மான்போல்விளங்குகின்ற மையுண்ட கண்களின் நீர்த்தாரை மேலிருந்துசிந்தவும்,மழையின் பெருங்குலம் போல வான்மீதுசிலர் வந்தார்; (எ-று.)—முழக்கெழுதல், மின்னிடுதல், வில்விடுதல், தாரையுகுதல், வான்வருதல் என்ற தன்மைகள் வந்தசிலர்க்கும் மழைக்குலத்திற்கும் உள்ளமை காண்க. வில் - ஒளியும், இந்திரவில்லும். பி-ம்:—[1] அழைப்பொடு, அழைப்பனேல். [2]முழக்கிட, முழக்கென. [3]அலங்க, வழக்கு. [4]மின்னிடைக், மன்னிடைக். [5]குழைப்பொரு. [6]நன்மணிக். [7]மின்னிட. [8]உழைப்பன. [9]கருங். [10]வீழ்ந்துமாழ்கினார். இச்செய்யுள் சிலபிரதியில் "அனந்த நாறு" (228) என்ற பாடலின்பின் உள்ளது. (3898)

232.—இதுமுதல் ஆறுகவிகள்-மகளிர்வீழ்ந்தழுதலின் வருணனை

தலைமிசைத் தாங்கிய [1]கரத்தர் தாரைநீர்
முலைமிசைத் [2]தூங்கிய [3]முகத்தர் மொய்த்துவந்து
அலைமிசைக் கடலின்[4]வீ ழன்னம் போலவன்
மலைமிசைத் தோள்கள்மேல் வீழ்ந்து மாழ்கினார்.

(இ - ள்.) (அவ்வரக்கியர்), தலைமீதுதாங்கிய கையையுடையவரும், கண்விழியினின்று பெருகிய நீர் முலைமிசைச் சோர்ந்துவீழ்தற்குக்காரணமான [கவிந்த] முகத்தையுடையவருமாகி, நெருங்கி வந்து, கடலின் அலைமீது வீழ்கின்ற அன்னம்போல அவ்விரா

வனுடைய மலையினும் உயர்ந்ததோள்களின்மேல் வீழ்ந்து அறிவுசோர்ந்தனர்; (எ - று.)—பி - ம்:—[1]கரத்தின். [2]தூங்கிய. [3]கண்ணனர். [4]வீழ்ந்தன்னம். (3899)

233. தழுவினர் தழுவினர் தலையுந் தாள்களும்
[1]எழுவுயர் புயங்களு மார்பு மெங்கணும்
[2]குழுவினர் முறைமுறை [3]கூறு கொண்டனர்
[4]அழுதன ரயர்த்தன ரரக்கி மார்களே.

(இ - ள்.) அரக்கிமார்கள்,—திரண்டவராய், தலையும் தாள்களும் எழுப்போலுயர்ந்த தோள்களும் மார்பும் ஆகிய எல்லாவிடத்தும் முறைமுறையாகப்பாகங்கொண்டவராகிப் பலமுறை தழுவி, அழுதவண்ணம் அறிவு ஒடுங்கினர்; (எ - று.)

தழுவினர் தழுவினர்-அடுக்கு, பன்மைப்பொருளது. சிலர் தலைகளையும், சிலர் தாள்களையும், சிலர் புயங்களையும், சிலர் மார்பையும் என இவ்வாறு தழுவியழுதலால், 'தழுவினர்...குழுவினர் கூறுகொண்டனர்' எனத் தற்குறிப்பேற்றவணி தொனிக்கக்கூறினர். அங்ஙன் இராவணனுறுப்புக்களைக் கூறுகொண்டு தழுவியழுது அயர்த்தனர் அரக்கியரென்க. பி - ம்:—[1]எழுவிய. [2]குழிவின. [3]கூறு கூறுகொண்டு. [4]அழுதிலருயிர்த்திலராவிதீர்த்திலர், அழுதிலருயிர்த்திலராவிநீத்திலர். (3900)

234. வருத்தமே தெனினது புலவி வைகலும்
பொருத்தமே [1]வாழ்வெனப் [2]பொழுது [3]போக்கினர்
ஒருத்தர்மே லொருத்தர் [4]வீழ்ந் துயிரிற் [5]புல்லினார்
[6]திருத்தமே யனையவன் சிகரத் [7]தோள்கள்மேல்.

(இ - ள்.) '(இந்தமகளிர்க்கு இதுவரையில் நேர்ந்த) வருத்தம் யாது என்றால், அது (இராவணனிடம்நேர்ந்த) புலவியாகும்: அவர்கட்கு இன்பவாழ்க்கை அவ்விராவணனுடன் பொருந்தியிருப்பது' என்னுமாறு பொழுது போக்கிவந்த அந்த அரக்கியர், (இப்போது இராவணன் இறந்திட்டதனால், வீரந்தங்கிய) துறையென்னத்தக்கவனான அந்தஇராவணனுடைய மலைபோன்ற தோளின்மேல் ஒருத்தர்மேல் ஒருத்தர்வீழ்ந்து உயிரைத்தழுவுவது போலத் தழுவினார்; (எ - று.)

இதுவரையில் இராவணனுடன் கலத்தலின்பமும் புலவிவருத்தமுந்தவிர வேறு ஒன்றையும் அறியாத இராவணனுடைய மனைவிமாரான அரக்கர்மகளிர் அவ்விராவணன் இறந்ததனால், ஒருவர்மேலொருவர்வீழ்ந்து அவனுயிரைத் தழுவுவார்போல அவனது தோள்களைத் தழுவினாரென்பதாம். திருத்தம் = தீர்த்தம்: இலக்கணையால், வீரந் தங்கிய துறையைக் காட்டிற்று. திருத்தம் என்பதனைத் திரு தாம் என்பதன் திரிபெனக் கொண்டு, இலக்குமியேதாம் எனக் கண்டவர்கூறுமாறு எனப் பொருளுரைத்தலும்

ஒன்று. பி-ம்:—[1] வாழ்வெனும். [2] புலவி. [3] போக்குவார். [4] வந்துயிரிற். [5] புல்லுவார். [6] திருத்தமேதென, திருத்தமேயென, [7] தோளின்மேல்.

235. **இயக்கிய ரரக்கிய ருரக ரேழையர்**
[1] மயக்கமில் [2] சித்தியர் விஞ்சை மங்கையர்
[3] முயக்கியன் முறைகெட [4] முயங்கி னார்[5] கள் தம்
துயக்கிலா வன்பு[6] மூண் டெவருஞ் சோரவே.

(இ - ள்.) இயக்கியரும், அரக்கியரும், நாகசாதிப்பெண்களும், மயக்கமற்ற சித்தசாதிப்பெண்களும், வித்யாதரஸ்திரீகளும் ஆகிய எவரும்,—தம்முடைய மாறுபாடில்லாத அன்பு மூண்டிருக்தலால், (இராவணன் இறந்துகிடத்தலைக்கண்டுஅறிவு) சோர, தழுவுகின்ற முறைமைகெட அவனை முயங்கினார்கள்; (எ-று.)

இறந்துகிடப்பவனைத் துயர்மூள இயக்கியர் முதலியோர் தழுவுவதனால், முயக்கியன்முறை கெடுவதாயிற்று. இயக்கியர் முதலியோர்-இராவணனுடைய காதலிமார். உரகரேழையர்-நாகரின் பெண்கள். பி-ம்;—[1] மயக்கலில். [2] சித்திய. [3] முயக்கியென், முயக்கிய, முயக்கினர். [4] முயக்கினார். [5] கிடந்து. [6] கொண்டு, கண்டு. (3902)

236. **அறந்[1] தொலை வுறமனத் [2] தடைத்த சீதையை**
[3] மறந்திலை யோவினு [4] மெமக்குன் வாய்மலர்
திறந்திலை விழித்திலை யருளுஞ் செய்கிலை
இறந்தனை யோவென விரங்கி [5] யேங்கினார்.

(இ - ள்.) (அங்ஙனம் முயங்கிய மகளிர்), தருமமும் அழியும்படி(காதல் கொண்டு) மனத்தில்வைத்துள்ள சீதையை இன்னும் [இறந்தபின்பும்] மறந்ததில்லையோ? (அதனால்) இப்போதும் எமக்கு உன்வாய்மலரைத் திறந்தாயில்லையோ? [வாய்திறந்து பேசாதிருக்கின்றாயோ?] (எங்களைக்) கண்டுவிழித்துப்பார்த்தாயில்லையோ? எம்மீது வேறுஎவ்விதமாகவும் அருள் புரிந்தாயில்லையோ? (நீ) இறந்திட்டாயோ. என்று (மனத்தில்) வருத்தங்கொண்டு ஏக்கமுற்றழுதனர்; (எ - று.)—இரக்கப்பொருளதான ஓகாரம் வேறிடத்துங் கூட்டப்பட்டது. ஓகாரத்தைக்கூட்டாமலும் உரைக்கலாம். துயரமிகுதியால் 'இறந்தவன் பேசுதல்முதலியன புரியான்;என்பதைக்கருதாமல் இன்னுஞ் சீதையைமறவாமையால்தான் வாய்மலர்திறத்தல்முதலிய செய்யவில்லை என்கின்றனர். அருளும், உம்-இசைநிறை. பி - ம்:—[1] தலையுற, தொலைவிலர். [2] அடைந்த. [3] மறந்திலையோயினும், மறந்திலையோவென. [4] எமக்கு, மெய்க்கண். [5] ஏங்கினாள். (3903)

237.—மண்டோதரி இராவணன்மார்பில் வீழ்ந்து இரங்கிப் புலம்பலுறுதல்.

தரங்கநீர் வேலையிற் றடித்து வீழ்ந்தென
உரங்கிளர் [1] மதுகையா [2] னுரத்தி [6] னுற்றனள்
மரங்களு மலைகளு முருக வாய்திறந்து
இரங்கினள் மயன்மக ளினைய பன்னினள்.

(இ - ள்.) மயனுடையகுமாரியாகிய மண்டோதரியானவள்,— மனவலிமையோடு விளங்குகின்ற உடல்வலிமையுள்ளவனான இராவணனுடைய மார்பின்மேலே, அலைகளைக்கொண்ட நீரையுடைய கடலிலே மின்னல் வீழ்ந்தாற்போலப் பொருந்தினவளாய் [வீழ்ந்தவளாய்], மரங்களும் மலைகளும் உருகுமாறு வாய்விட்டு அழுது இவ்வாறுகூறலானாள்; (எ - று.)—மண்டோதரி புலம்பலிற் பன்னியதை மேல் எட்டுக்கவிகளிற் காண்க. இவ்வுவமை ஸ்ரீவான்மீகத்திலும் வந்துள்ளது. மதுகை-உடல்வலி. பி - ம்:—[1]இராவவணன். [2]உருவின். [3]வீழ்ந்தனள். இச்செய்யுள் ஒருபிரதியிலில்லை. (3904)

வேறு.

238.—எட்டுக்கவிகள்—மண்டோதரி புலம்பல்.

[1]அன்னேயோ வன்னேயோ [2]வாகொடியேற் கடுத்தவா றரக்கர் வேந்தன், [3]பின்னேயோ [4]விறப்பதுமுன் [5]பிடித்திருந்த [6]கருத்ததுவும் [7]பிடித்திலேனோ, [8]முன்னேயோ [9]விழுந்ததுவு[10]முடித்தலையோ [11]படித்தலைய [12]முகங்கள்தானோ, [13]என்னேயோ வென்னேயோ விராவணனார் [14]முடிந்தபரி சிதுவோ பாவம்.

ஒன்பது கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அன்னேயோ! அன்னேயோ! கொடியஎனக்கு நேர்ந்த நிலைமை மிகவும் கஷ்டமானது! (யான்) அரக்கர்தலைவனாகிய இராவணன் இறந்தபின்போ இறப்பது? முன்புதொடங்கி உறுதியாகக் கொண்டிருந்த மனக்கருத்தையும் (நான்) அடையாது போய்விட்டேனோ? (என்) முன்புறத்தில் தானே விழுந்திருப்பதும் இராவணனுருடைய கிரீடந்தரித்த தலைதானோ? பூமியினிடத்தனவை இராவணனுருடைய முகங்களோ? இராவணனார் உயிர் முடிந்திட்ட நிலைமை என்னேயோ என்னேயோ! இதுவோ மிக்க பாவத்தின் விளைவு!! (எ - று.)

முதலடியில், அம்மாஎன்பதுபோல அன்னேயென்பதும் இரக்கக்குறிப்புச்சொல். ஓகாரமும் இரக்கத்தைப் புலப்படுத்தும்; இனி துன்பத்தால் தாயைநினைந்து விளித்ததாகவுமாம். ஆ - துயரக்குறிப்பு. 'அரக்கர் வேந்தன்பின்னேயோ இறப்பது' என்பதையடுத்து 'முன்பிடித்திருந்த கருத்ததுவும் பிடித்திலேனோ' என வந்ததனால், இராவணனுக்குச் சாவு நேருமென்று தோன்றினால் அவனுக்கு அதுநேர்வதற்குமுன்னம் தன்னுயிரை மாய்ப்பதாக மண்டோதரி எண்ணியிருந்தாளென்பது, பெறப்படும். 'இதுவோ பாவம்' என்ற தொடர் - தேவாதியரெல்லாம் அஞ்சும்படி மகோந்நதபதவியிலிருந்த மகாவீரனான இராவணனார் கொலையுண்டு பருந்துகளும் காகங்களும் கொத்தும்படி தரையில்வீழ்ந்து கிடக்கும் இந்நிலைமை ஏற்பட்டது - எம்முடையபாவமென்றும், இராவணனார் செய்த தீவினைப்பயனென்றும் பொருள்படும். இதுவோ,

ஓ-தெரிநிலை. மற்றைஓகாரங்கள்-இரக்கப்பொருளன. பி - ம்:—[1]அன்னையோ வன்னையோ. [2]ஆகொடியோர்க்கென்னோநான், அறக்கொடியோர்க் கடுத்ததுதான், ஆகொடியோர்க் கடுத்தநாள், ஆகொடியேற்கடுத்ததுதான், ஆகொடியேற்கடுத்ததுமிவ். [3]பின்னையோ. [4]இருப்பதுமுன். [5]பிடித்திருந்தன். [6]மனக்கருத்தும். [7]பெற்றிலேனோ, பெற்றிலேனே, பிடித்திலேனே. [8]முன்னையோ. [9]இரப்பதுவும், இறப்பதுவும், விழுந்ததிவன். [10]முடித்தொகை யோகங்கலைய. [11]கரத்தொகையோ, படித்தலையே. [12]முகங்காட்டாறோ, முகங்காட்டாயோ. [13]என்னையோ, வென்னையோ. [14]முடிந்ததுவும், கிடந்தபரிசு. (3905)

239 [1]வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலுங் கீழும், எள்ளிருக்கு மிடமின்றி யுயிரிருக்கு மிடநாடி [2]யிழைத்த வாறோ, கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியை [3]மனச்சிறையிற் [4]கரந்த காதல், உள்ளிருக்கு [5]மெனக்கருதி யுடல் [6]புகுந்து தடவியதோ வொருவன் வாளி.

(இ-ள்.) ஒப்பற்ற இராமனுடைய அம்பு,-வெண்ணிறமுள்ள எருக்கமலரையணிந்த சடைமுடியையுடையவனான சிவபெருமானெழுந்தருளியிருக்கிற கைலாசமலையைத் தூக்கியெடுத்த (இராவணனுடைய) அழகியஉடலின்மேலும் கீழும் எள்ளிருத்தற்கு உரிய இடமில்லாமல் உயிரிருக்கின்ற இடத்தைத் தேடிச் செய்த வகையோ? தேன் பொருந்தியிருக்கப்பெற்ற மலரையணிந்த கூந்தலையுடைய சானகிப்பிராட்டியைக்குறித்து மனமாகிய சிறையில் ஒளித்துவைத்துள்ள காதலானது உள்ளே எங்கேயாவது பதுங்கியிருக்குமெனக் கருதி உடல்முழுதும் புகுந்துதடவியதோ? (எ-று.)

உடலெங்கும் எள்ளிடவும் இடமின்றி இராமபாணம் தொளைத்திருப்பது கண்ட மண்டோதரி, அவ்விராமபாணம் இராவணனுடைய உயிரிருக்குமிடம் தேடியதனாலாகியதோ? அன்றிப் புறத்திற் சீதையைச் சிறைவைத்ததற்குக் காரணம் மனச்சிறையிலுள்ள காதலாதலால், அதனை யொழித்தற்கு அவ்விராமபாணம் உடலெங்கும் திரிந்ததனாலாகியதோ? என்று தற்குறிப்பேற்றவகையாற் கூறுகின்றாள். 'கற்புடையமகளிர் பிறருடைய மனத்தில் தங்குதல் செய்யார்' என்பது தமிழ்நூல்களிற் பயிலுதலால், அதற்குமாறாக இராவணனுடைய காதல் சீதையை மனத்துத் தங்குமாறு புரிந்ததனால் மாறானதொழிலை யொழிக்கவே இராமபாணம் காதலைத் துருவித்தேடிப்போக்கியதாகக் கற்பித்தது. இப்பாடலின்பின் ஒரு பிரதியில் "ஆராவமுதாய் (245)" என்ற பாடலும் அதனையடுத்து "அன்னையவள் சீதை" என்ற பாடலும் உள்ளன. பி - ம்:—[1]வெள்ளெருக்கின்மலர், வெள்ளெருக்குமலர். [2]நுழைந்தவாறோ. [3]கடுஞ்சிறையில், கடுந்துயரில். [4]வைத்த. [5]என்றெண்ணி [6]பிளந்துதடவினதோ, புகுந்திங்குலாவினதோ, பிளந்துதடவியதே. (3906)

240. [1]ஆரம்போர் [2]திருமார்பை யகன்முழைக ளெனத்திறந் தி[3]வ் வுலகுக் கப்பால், தூரம்போ யினவொருவன் சிலைதுரந்த [4]சரங்களே [5]போரிற் றோற்றும், வீரம்போ யுரங்[6]குறைந்து வரங் குறைந்து [7]வீழ்ந்தானே [8]வேறே கெட்டேன், ஓ[9]ரம்போ யுயிர்பரு கிற் [10]றிராவணனை மானுடவ னாற்ற மீதோ.

(இ - ள்.) ஒப்பற்றவனான ஸ்ரீராமனுடைய வில் விரைந்து வெளிவிட்ட அம்புகள், முத்தாகாரத்தை யணிந்த அழகிய மார்பை வாயகன்ற குகைபோலப் பிளவுபடும்படிசெய்து இவ்வுலகத்திற்கு அப்பால் வெகுதூரஞ்சென்றன; (அந்த அம்புகளினால்) போரிலே காணப்படுகின்ற வீரம்போய் மனவலிமைகுறைந்து வரமும் குறைந்து (முன்னிலும் தன்னிலை) வேறாக (இராவணன்) வீழ்ந்திட்டானே! கெட்டேன்!' (அவ்விராமபாணம்) பட்சபாதம்நீங்கி இராவணனையும் உயிரைப் பருகியிட்டது!' மானுடனுருடைய வலிமை இப்படிப்பட்டதோ! (அதனை இதுவரையும் அறிந்தேனில்லையே);

வேறே வீழ்ந்தான்-(படைஞரையெல்லா மிழந்து தோல்வியுற்றுத்) தனியே வீழ்ந்தான். 'மானுடவனாற்றமீதோ'-என்ற தொடரில், 'இவன் கேவலமானுடனல்லன்: மானுடவேடம்பூண்ட பரம்பொருள்' என்பது, தொனிக்கும். ஓர் அம்பு - ஒப்பற்ற பிரமாஸ்திரம். ஓய்ந்த உயிரைப்பருகிற்று என்றலும் உண்டு. பி - ம்:— [1]ஆரம்பேர். [2]நன், அல், பெரு. [3]வைத்தும். [4]நெடுஞ்சரங்கள், சரணங்களெனப். [5]போரிற்றோற்று. [6]குறைத்து. [7]வீழ்ந்தானோ, வீழுந்தனையே. [8]ஏறே, ஒருவன், வேறோ, ஒருங்கே. [9]அம்போ. [10]அறிகின்றேனிராவணனார், இராவணனை மானிடவன், இராவணனை மானுடனார். (3907)

241. காந்தையருக் [1]கணியனைய [2]சானகியார் பேரழகு மவர் தங் கற்பும், ஏந்துபுயத் திராவணனார் [3]காதலுமச் சூர்ப்பணகை யிழந்த மூக்கும், வேந்தர்பிரான் தயரதனார் பணிதன்னால் வெங் [4]கானில் விரதம் பூண்டு, [5]போந்ததுவுங் [6]கடைமுறையே புரந்தரனார் பெருந்தவமாய்ப் போயிற் [7]றம்மா.

(இ-ள்.) பெண்பாலார்க்கெல்லாம் அணிபோல விளங்குகின்ற சானகியாருடைய பேரழகும், அவருடையகற்பும், ஓங்கியபுயத்தைக்கொண்ட இராவணனுருடைய காதலும், அந்தச்சூர்ப்பணகை யிழந்த மூக்கும், சக்கரவர்த்தியாகிய தயரதனுருடைய கட்டளையினாற் கொடுங்கானில் விரதவொழுக்கத்தை மேற்கொண்டு, (இராமன்) வந்ததுவும், முடிவாகத் தேவேந்திரன்செய்த தவப்பயனாக ஆயிட்டது: ஆச்சரியம்! (எ - று.)

இராமன் தந்தையுரையைப்போற்றக் கானகத்து வந்தநிலையில், சூர்ப்பணகை அப்பிரானிடத்துக் காதல்கொண்டு அங்கபங்கஞ் செய்யப்பெற்றுச் சீதையினழகை இராவணனுக்கு வருணித்துக் கூறிக் காதலை மூட்ட, அவன் பெருங்கற்புடையளான அச்சீதையைச் சிறைப்படுத்தியதே அவனுடைய வதத்திற்குக் காரணமாய்த்

தேவர்கட்கெல்லாம் நன்மையை விளைத்த தாகையால், அந்நிகழ்ச்சியை எடுத்துச்சொல்லிப் புலம்புகின்றனள், மண்டோதரியென்க. கடைமுறை-முடிவு. தேவேந்திரன் தவத்துக்குப் பயன் - ராக்ஷஸ சங்காரம். பி - ம்:—[1] அணியான. [2] சானகியாரமுகுமவர்கற்பும்வெற்போடு. [3] காமமும். [4] கானம். [5] போந்தனவும். [6] கடைமுறையிற், கடைமுறைபோய். [7] அன்றே. (3908)

242. தேவர்க்குந் திசைக்கரிக்குஞ் சிவனார்க்கு மயனார்க்குஞ் [1] செங்கண் மாற்கும், [2] ஏவர்க்கும் வலியானுக் கொன்றுண்டா மிறுதியென வேமாப் புற்றேன், [3] ஆவற்க ணீயுழந்த, [4] வருந்தவத்தின் பெருங்கடற்கும் [5] வரமென்னு மன்ற, காவற்கும் வலியானோர் [6] மானுடவ னுளனென்னக் கருதி னேனோ.

(இ-ள்) 'தேவர்கட்கும் திசையானைகட்கும் சிவனார்க்கும் பிரமனார்க்கும் புண்டரீகாட்சனான திருமாற்கும் மற்றுமுள்ள எவர்க்கும் விஞ்சிய வலிமையுடையவனான இராவணனுக்கு, முடிவுகாலம் எப்போது உண்டாகப்போகின்றது? [ஒருபோதும் உண்டாகாது]' என்று மனச்செருக்குக் கொண்டிருந்தேன்: (அந்த இறுமாப்பில்) 'நீ ஆவலோடு வருந்திச்செய்த பெருங்கடல்போற்பரந்த அரிய தவத்திற்கும் அத்தவத்தினாற் பெற்ற வரமெனப்படுகிற சிறந்த காவற்கும் (அழிவையுண்டாக்கவல்ல) வலிமைபடைத்தவனான ஒருமானுடன் உளன்?' என்றுதான் எண்ணங்கொண்டேனோ?

நீ தவப்பயனாற்பெற்ற வரம், உன்னுயிருக்குக்காவலாக எப்போதும் இருக்குமென்று இறுமாப்பினாற் கருதினேனே யன்றி, இவ்வரக்கர்களைத் தொலைக்க ஒருமனிதன் வருவனென்ற எண்ணத்தையும் கொள்ளாமற்போனேனே! என்று வருந்துகின்றாள். எதிர்பாராதபோது நேர்ந்த துன்பம் பேரிடர்விளைத்தல், இயற்கை. ஆவற்கண்=ஆவலோடு; ஏழாம்வேற்றுமைப் பொருளில் வந்தது. பி - ம்:—[1] செங்கணாற்கும் [2] யாவர்க்கும். [3] யாவர்க்கும்நீயிழைத்த், ஆவற்கணீயுழன்ற, யாவர்க்குநீயுழந்த, வாவற்கு நீயிழைத்த. [4] இருந். [5] வரமென்றேனும், இறையானெய்தும். [6] மானுடனாருளரென்னக், மானிடனாருளரென்று. (3909)

243. அரைகடையிட் டமைவுற்ற [1] முக்கோடி யாயுவும்பேரறிஞர்க் கேயும், உரைகடையிட் டளப்[2] பரிய பேராற்றற்[3] றோளாற்றற் குலப்போ வில்லை, திரைகடையிட் [4] டளப்பரிய வரமென்னும் பாற்கடலைச் சீதை யென்னும், பிரைகடையிட் [5] டழிப் பதனை யறிந்தேனோ தவப்பயனின் பெருமை பார்ப்பேன்.

(இ-ள்.) மூன்றரைக்கோடி யாயுளுக்கும் பேரறிஞராலும்வாய்ப்பேச்சால் முடிவிட்டு அளவுசெய்துரைக்கமுடியாத பெருவலிமைகொண்ட புயவலிமைக்கும் அழிவே இல்லை(என்று எண்ணினேன்); (அதனால்), தவப்பயனின் பெருமையே பெரிதாக எண்ணியிருந்த நான்,-அலைகளை முடிவிட்டு அளக்கமுடியாத வரமென்னப்

படுகின்ற பாற்கடலைச் சீதையென்கின்ற பிரையானது இறுதிக் காலத்து இடப்பட்டு அழிக்கப்போவததை யறிந்தேனோ? (எ-று.)

'வரபலத்தைச் சீதாபிராட்டி திரித்துவிட்டாளே! இவ்வாறு நிகழுமென்று எண்ணுமற் போனேனே!!' என்று மண்டோதரி வருந்துகின்றாள். வரத்தைப் பாற்கடலாக உருவகித்ததற்கு ஏற்ப அதனை நிலைதிரியச்செய்த சீதையைப் பிரையாகக்கொண்டனர்: **முற்றுருவகவணி.** 'திரைகடையிட்டளப்பரிய' என்றது - பாற்கடலுக்கு இயற்கையடைமொழி. சீதை-சீதையினிடத்துக் காதல். பி - ம்:—[1]கோடிமூன்றுயுவினும், முக்கோடியாயுவுமுன், கோடிமூன்றுயுளைப்பேர், கோடிமூன்றுயுப்பேர். [2]அரிது. [3]பேராற்றற்கு. [4]அமைப்பரிய. [5]அழிப்பரிய. (3910)

244 ஆரனு ருலகியற்கை [1]யறித்தக்கா ரவையேழு மேழு [2]மஞ்சும், வீரனு ருடல்துறந்து விண்புக்கார் கண்புக்க வேழ [3]வில்லால், நாரநாண் மலர்க்கணையால் [4]நாளெல்லாந் தோளெல்லா நைய வெய்யும், [5]மாரனுர் தனியிலக்கை [6]மனிதனு ரழித்தனரே வரத்தினாலே.

(இ - ள்.) உலகினியல்பை யறிதற்குத் தக்கவரான அவர் யார்தாம்? [எவராலும் உலகவியற்கையை உண்மையாக முற்றும் அறிதல் இயலாது என்றபடி]; அந்தமேலுலகமேழும் கீழுலகமேழும் அஞ்சுதற்கு உரிய வீரனும் உடலைத்துறந்து விண்ணிற்புக்கனர்; கணுப்பொருந்தியகரும்புவில்லால் (வண்டொழுங்காகிய) நாணியைக்கொண்ட நாண்மலராகிய அம்பினால் நாளெல்லாம் தோளெல்லாம் நைந்திடும்படி எய்கின்ற மன்மதனுடைய தனிபபட்ட இலக்கை [இராவணனை] மனிதராயிருப்பவர் தமதுமேன்மையான பலத்தினாலே அழித்துவிட்டனரே! (எ-று.)

முதலடியிற்கூறிய பொதுப்பொருளைப் பின்மூன்றடிகள் சமர்த்தித்து நின்றன: **வேற்றுப்பொருள்வைப்பணி.** 'வேழவில்லான்' என்றும் பிரித்துப்படிக்கலாம். இராமனழிப்பதற்குமுன் மன்மதன் தவிர வேறுஎவராலும் எய்யப்படாமையால் 'மாரனுர் தனியிலக்கை' என்றது. பி-ம்:—[1]அறிதற்கார் [2]அஞ்ச. [3]வில்லார். [4]நாடோறும். [5]நாரனுர். [6]அழித்தாரோமனிதனுர், மனிதனுரழித்தார்தம். இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை.

இங்கே ஒருசெய்யுள் சிலபிரதியிற் காணப்படுவது வருமாறு:—

அன்னையவள்சீதை யனைத்துலகு மீன்றாளென்று
உன்னி [1]யுறைத்தே னுரைகேளா துத்தமனே
பின்னை யிராமன் சரத்தாற் பிளப்புண்ட
உன்னுடைய பேருடல முற்றொருகால் நோக்காயோ.

பி - ம்:—[1]உரைமறைத்த. (3911)

வேறு.

245. ஆரா வமுதா யலைகடலிற் [1]கண்வளரும்
நாரா யணனென் [2]றிருப்பே னிராமனை நான்
ஓராதே கொண்டகன்ரு [3]யுத்தமனூர் தேவிதனைப்
[4]பாராயோ நின்னுடைய மார்பகலம் [5]பட்டவெல்லாம்.

(இ - ள்.) நான் இராமனைத் திருப்திபிறவாத அமிருதம் போன்றவனாய் அலைகின்ற (பாற்) கடலிலே நித்திரைபுரிகின்ற நாராயணனென்று அறுதியிட்டிருக்குந் தன்மையேன்; (என்னுடைய கொள்கையைச் சிறிதும்) ஆராய்ச்சி செய்யாமல் (அந்த) உத்தமனுருடைய மனைவியை (த் தண்டகாரணியத்தினின்று) கவர்ந்து கொண்டு (அங்குநின்று) அப்பாற் சென்றிட்டாய்; (அதன்பயனாக இப்போது) உன்னுடைய மார்பின்பரப்பு அடைந்தனவற்றையெல்லாம் பார்க்கமாட்டாயோ? (எ-று.)

மண்டோதரி துயரத்தினால் மனம்மாறுபட்டுச் சொல்வதனால், 'பாராயோ நின்னுடையமார்பகலம் பட்டவெல்லாம்' என்றாள். இவ்வாறே முன்பின்வருவனவற்றிற்குங் காரணங் காண்க. தேவர்களாலும் வெல்லமுடியாதவனைக் கேவலமானுடன் வெல்வது பொருந்தாதாதலால், பிரமன்கொடுத்த வரத்தைப் பழுதாக்காதபடியும் தன்னுடைய விபூதியை நலியுமவனை நிரசிக்கும்படியும் ஏற்ப மானுடவுருக்கொண்டு சங்கசக்ரதாரியான ஸ்ரீமந்நாராயணனே இங்ஙனம் வந்துள்ளானென்று ஸ்ரீராமனுடைய பரத்வத்தை மண்டோதரி அறுதியிட்டுக் கூறுகின்றனளென்க.
பி - ம்:—[1]கண்வளர்ந்த. [2]பலகாலுநானுரைப்ப. [3]உத்தமன்றன். [4]பாராய்நீ. [5]பட்டது. இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை. (3912)

வேறு.

246.—மண்டோதரி இராவணனுடலைத்தழுவித் தன்னுயிர் நீங்குதல்.

என்ற ழைத்தன ளேங்கி யெழுந்தவன்
பொன்ற ழைத்தன பொருவரு மார்பினைத்
தன்[1]ற ழைக்கைக ளாற்ற ழுவித்தனி
நின்ற ழைத்துயிர்த் தானுயிர் நீங்கினாள்.

(இ - ள்.) என்று புலம்பினவளாய், (அந்தமண்டோதரி) ஏக்கங்கொண்டு, (பிறகு), எழுந்து அந்த இராவணனுடைய பொன்னணிகலம் தழைந்திருக்கப்பெற்ற ஒப்பற்ற மார்பைத் தன்னுடைய தளிர்போன்ற கைகளால் தழுவித் தனித்துநின்று உரக்கக் கூவிப் புலம்பிப் பெருமூச்சு விட்டாள்; (உடனே) தன்னுயிர் நீங்கப்பெற்றாள்; (எ - று.)—பி-ம்:—[1]தழிக், தனிக், தளிக். (3913)

247.—மண்டோதரியை யாவரும் புகழ்தல்.

வான [1]மங்கையர் விஞ்சையர் [2]மற்றுமத்
தான மங்கைய ருந்தவப் பாலவர்

ஆன மங்கைய ரும்மருங் கற்புடை
மான மங்கையர் தாமும் வழுத்தினர்.

(இ-ள்.) வானநாட்டிலுள்ளமகளிரும் விஞ்சையரும் மற்றும் அந்த (ப்பாதாள)த் தானத்திலுள்ள மங்கையரும் தவத்தின் கூற்றிலே பொருந்திய முனிவரின் பத்தினிமாரும் அரியகற்பையுடைய மநுஷ்யஸ்திரீகளும் (அந்தமண்டோதரியைக்)கொண்டாடினார்கள்;

தன்கணவன் இறந்தானென்பதைக் கேள்வியுற்றதும் அடக்க முடியாத்துன்பம் பிடர்பிடித்துந்தப் போர்க்களத்துவந்து அவ்விராவணன்மீது விழுந்து புலம்பி உயிர்த்த மாத்திரத்தில் தன்னுயிர்நீங்கப்பெற்ற மகாபதிவிரதையான மண்டோதரியின் செயல் யாவராலும் புகழத் தக்கதாயிற்றென்க. மானமங்கையர் = மானவ மங்கையர். இரண்டாமடியில், தானமங்கையர் - தானவமங்கைய ரெனினுமாம். முன்னும் பின்னும் மகளிரைக் குறிக்குஞ் சொற்கள் வந்ததனால், விஞ்சையரென்பது - வித்தியாதரமகளிரை யுணர்த்தும். பி - ம்:—[1]மங்கையரும், மற்றும். [2]மற்றுயர், மற்றுமெத், முற்றுடைத். (3914)

248.—ஈமத்தில் இராவணனை விபீடணன் ஏற்றுதல்.

[1]பின்னர் விபீடணன் பேரெழிற் [2]றம்முனை
[3]வன்னி கூவி வரன்முறை யான்முறை
[4]சொன்ன வீம விதி[5] முறை யாற்றெருகுத்து
இன்ன னெஞ்சினெ [6]டிந்தனத் [7]தேற்றினான்.

(இ - ள்.) பிறகு விபீடணன், கிரமப்படி அக்கினியைப் பிரதிஷ்டை செய்து ஈமவிதியை வேதம்கூறியமுறையால் தொகுத்து, வருத்தமுற்ற மனத்துடனே மிக்கஎழிலையுடைய தன்னண்ணனை (அந்த) ஈமவிறகிலே யேற்றினான்; (எ - று.)

விபீடணன் முன்னர்ச்செய்யவேண்டிய முறைமைகளை முறையிற்செய்து தகனஞ்செய்யுமாறு சிதையில் இராவணனை வைத்தனனென்பதாம். ஈமவிதி - அந்திமச்சடங்கு. ஈமவிறகு-இறந்தவுடலை யெரிக்குமாறு அடுக்கி வைத்த காஷ்டம்: இது, சிதை யெனவும் படும். பி - ம்:—[1]பின்னை. [2]தம்முனர். [3]மன்னிமுன்னும், மன்ன முன்னும், மன்னிகழ்ந்த,மன்னிமுன்னி,வன்னிமுன்னம். [4]சொன்ன நன்னர், சொன்னவீமம், சொன்னசொன்ன, நன்னர்சொன்ன. [5]வழியால். [6]அஞ்சலித்து, இந்தனம். [7]ஏற்றினர். (3915)

249.—விபீடணன் இராவணனுக்குத் தகனம் முதலியன செய்தலை மூன்றுகவிகள் கூறும்.

[1]இந்த[னத்தி]ல் சந்தன[மிட்டு]மேல்
[2]அந்த [3]மானத் தழுகுறத் தானமைத்து
[வ]ந்த [4]வோசையுங் கூற [5]வார்த்திடை
[6]முந்து சங்கொலி [7]யெங்கு [8]முழங்கிட.

இரண்டு கவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) எரிகின்ற காஷ்டமாக அகிற்கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் இட்டு, பிறகு அப்படியிட்ட பெருமையுடனே அழகுபொருந்த (இராவணனுடலைச் சிதையிலே) கிடத்தி, எந்த ஓசையும் கீழ்ப்படும்படி இடையேயிடையே ஆரவாரித்து முந்துகின்ற சங்கொலி எங்கும் ஒலிக்க,—(எ - று.)— அகரச்சுட்டு - பிரசித்தியையுணர்த்திற்று. பி-ம்:—[1] இந்தனத்தொடு. [2] ஏற்படுத்து, ஏர்படுத்து. [3] மானமழகுடன், வானமழகுடன். [4] நாமமும். [5] ஆர்த்தெழ. [6] தந்த. [7] ஓங்கி. [8] தழங்கி, முழங்கி. இதுவும், அடுத்த செய்யுளும் சிலபிரதிகளிலில்லை. (3916)

250, கொற்ற வெண்குடை யோடு கொடிமிடைந்து
உற்ற வீம விதியி [1] னுடம்படி இச்
சுற்ற மாதர் [2] தொடர்ந்துடன் சூழ்வர
மற்ற வீரன் [3] விதியின் [4] வழங்கினான்.

(இ - ள்.) வெண்கொற்றக்குடையோடு கொடியும் நெருங்கிப் பொருந்திய ஈமவிதிக்குஉடம்பட்டிருந்து சுற்றம், மாதர் தொடர்ந்து உடன் சூழ்ந்துவர, பினபு அந்தவீரன் [விபீடணன்] விதியின்படி (நெருப்பை) வழங்கினான்; (எ-று.)-- அரசனானதனால் குடைகொடிகள் ஈமவிதியில் வந்தன என்க. பி-ம்:—[1] உடம்படச். [2] பதிந்துடன். [3] மதியின், விழியின். [4] வணங்கினான். ஒருபிரதியில், 'உற்றுவிம்மி மதியினுடன்படச்' என்று இரண்டாமடி காண்கின்றது. (3917)

251. [1] கடன்கள் செய்து முடித்துக் [2] கணவனோடு
[3] உடைந்து போன மயன்மக [4] ளோடுடன்
[5] அடங்க வெங் [6] கன லுக்கவி யாக்கினான்
குடங்கொள் நீரினுங் கண்சோர் குமிழியான்.

(இ - ள்.) குடங்கொண்ட நீரினும் மிகுதியாகக் குமிழியுண்டாகும்படி கண்ணீரைப் பெருக்குபவனான விபீடணன்,—(செய்யவேண்டிய)கடமைகளையெல்லாஞ் செய்துமுடித்து, கணவனுடனே உயிரொழிந்துபோன மயன்மகளான மண்டோதரியுடன் (அவ்விராவணன்) அடங்கும்படி (அவர்களைக்) கொடிய கனலுக்கு அவிசாகச் செய்தான்; (எ - று.)

மண்டோதரியையும் இராவணனையும் அங்கினியிலிட்ட,அவ்வக்கினி அவிசை யெரிப்பதுபோல அவர்களை யெரிக்கலாயினனென்க. அவிசு - ஹவிஸ்: அக்கினிதேவனுக்கு இடும் உணவுப்பண்டம். பி-ம்:-[1] கடன்செய் செய்கை,கடன்கொள் செய்கை. [2] கணவன்றோள், கணவனை. [3] தொடர்ந்துபோன, உடன்றுடர்ந்த. [4] தன்னுடன். [5] அடங்கலும். [6] கனலிற்கரி. (3918)

252.—விபீடணன், இறந்த அரக்கரனைவர்க்கும் ஈமக்கடன்செய்து ஸ்ரீராமனை யடைதல்.

மற்றை யோர்க்கும் வரன்முறை யால்வகுத்து
உற்ற தீக்கொடுத் [1] துண்குறு நீருகுத்து

[2]எற்றை யோர்க்கு [3]மிவனல தில்லென
வெற்றி வீரன் குரைகழன் மேவினான்.

(இ-ள்.) மற்றையோர்க்கும் (நூல்களிற்) கூறிய முறைப்படி (செய்யவேண்டிய கடமைகளை) யாராய்ந்து, 'எவர்க்கும் இவனையல்லாமல் (சிரத்தையுடன் ஈமக்கடன் செய்யக்கூடியவர்) இல்லை' என்னுமாறு பொருந்திய தகனம்முதலிய ஈமக்கடனைச் செய்து, உண்ணுமாறு ஜலதர்ப்பணங்களும் கொடுத்து, (பிறகு) வெற்றி பொருந்திய வீரனான ஸ்ரீராமனுடைய ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளினிடம் வந்து சேர்ந்தான், (விபீடணன்);

அடியவன் அடையவேண்டிய துறை சுவாமியின் திருவடிகளேயாதலால், 'வீரன் குரைகழன் மேவினான்' என்றார். உண்ணுநீருகுத்தல்-வாஸோதகதிலோதகங்கொடுத்தல். பி - ம்:—[1]உற்றவை செய்தனன், உண்குறு நீர்கொடுத்து. [2]இற்றையோர்க்கும். [3]எவர்க்குமிவனென, இங்கியானலதில்லென, இன்றியானலதில்லென.

மண்டோதரிபுலம்புதலைத் தனியே ஒருபடலமாகக் குறித்த பிரதிகளில் இதனோடு இப்படலம் முடிய, அடுத்தபாடல்முதல் வேறுபடலம் தொடங்குகின்றது. ஒரு பிரதியில் "கார்நின்ற" (200) என்ற பாடல் தொடங்கி இதுவரையில் **வீடணன்வண்டோதரி புலம்பற்படலம்** என்று உள்ளது. (3919)

253 வந்து தாழ்ந்த துணைவனை வள்ளலும்
சிந்தை வெந்துயர் [1]தீருதி தெள்ளியோய்
[2]முந்தை யெய்து [3]முறைமை யிதாமென
[4]அந்த மில்லிடர்ப் [5]பார மகற்றினான்.

(இ - ள்.) வந்துவணங்கின நண்பனான விபீடணனை நோக்கி, உதாரகுணமுடையவனான ஸ்ரீராமனும், 'அறிவுள்ளவனே! (உன்) மனத்துள்ள கொடுந்துயர் தீர்க; முற்காலந்தொட்டுநடக்கும் முறைமை இதுவே' என்று சொல்லி, எல்லையில்லாத் துன்பச் சுமையைப் போக்கினான்; (எ - று.)

விபீடணன் இறந்தோர்க்கெல்லாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துவிட்டு மனத்திற்கொண்ட வருத்தம் முகத்துத் தோன்ற ஸ்ரீராமபிரானருகில் வந்து நின்றானாக, அப்பிரான் 'பிறந்தோர் இறப்பது முன்றொட்டு நிகழ்வதுதானே; விவேகியான நீ இறந்தோர்பொருட்டுத் துயருறுதல் தக்கதோ?' என்றுசொல்லித் தேற்றினானென்க. தெள்ளியோய்-கருத்துடையடைகொளி. பி-ம்:- [1]தீரினித. [2]முந்தையோது, முந்தையோர்க்கு, முந்தையோர்கள், முந்தியெய்து. [3]முறைமையுளோய். [4]அந்தவில்லிடைப். [5]பாசம்.

சிலபிரதிகளில் இந்தப் பாடலில், பிராட்டியார் திருவடிதொழுத படலம் என்றும், சிலபிரதிகளில் சீதை திருவடிதொழுதபடலம் என்றும், சிலபிரதிகளில் **விபீடணன்முடிசூட்டுபடலம்** என்றும், சில

பிரதிகளில் **விபீடணன் பட்டாபிஷேகப்படலம்** என்றும் பெயர் கொண்டு படலம் தொடங்குகின்றது.

இங்கே ஒருபிரதியிற் காணப்படும் பாடல் வருமாறு:—

இளைய வீர னிளவலை நோக்கிநீ
புனையு மன்முடி சூட்டுதி போயென
அனைய வீர னடியி னிறைஞ்சலே
அனைய னோடு மனுமனைச் சார்கென.

இப்பாடலிலுள்ளபிரதியில் இந்தச் செய்யுளோடு படலம் முடிய, அடுத்த பாடல்முதல் **விபீடணனபிஷேகப்படலம்** என்று காண்கின்றது. (3920)

இராமராவணரிருவரும் தேரேறியபின் இராவணன்வதைப்படலத்துச் சரிதையை ஸ்ரீவான்மீகிமுனிவர்கூறியவகை:- அப்பால்இராமராவணர்கட்குப் பெரும்போர்நிகழ்ந்தது. அப்போரில் இராமன் இராவணன் விடுத்த காந்தர்வாஸ்திரத்தைக் காந்தர்வாஸ்திரத்தினுலும் தெய்வாஸ்திரத்தைத் தெய்வாஸ்திரத்தினுலும் தடுக்க, இராவணன் சினம்மூண்டு ராக்ஷஸாஸ்திரத்தைத் தொடுக்க, அதினின்று பலசர்ப்பங்கள்தோன்றிப் பலதிக்குக்களிலுஞ் சூழ்ந்து கொண்டு இராமன்மேல் எதிர்த்தன: ஸ்ரீராமன் அதுகண்டு காருடாஸ்திரத்தைத் தொடுக்க, கருடப்புட்கள் தோன்றி, அந்தநாங்களை உருமாய்த்தன. இப்படித் தான்விடுத்த அஸ்திரங்கள் பயனற்றனவாகவே, இராவணன்சீறி ஆயிரங்கணைகளைத்தொடுத்து இராமனை வருத்திப் பலகணைகளை மாதலியின்மீது பொழிந்து ஒருகணையால் இந்திரத்துவசத்தைக் குறிவைத்து எய்து, கணைத்தொகுதியால் தேர்ப்பரிகளையும் நோவச்செய்தனன். இதுகண்ட சித்தர் முதலியோர் வருந்தினர். அப்போது வானத்திலும் சிலகோளாறுகள் புலப்பட்டன. இராவணன் தன்திறலைக் காட்டவே, இராமன் எரிப்பதுபோன்ற சிற்றங்கொண்டான்; இருவரும் மும்முரமாகப் பொருகையில், போர்காணுந் தேவதானவர் 'இராமன் வெல்க' என்றும், 'இராவணன்வெல்க' என்றும் தந்தமதுபட்சபாதத்திற்கு ஏற்பக் கூறினர். இராவணன் அப்போது இராமன் மீது எதனை விடுக்கலாமென்று, ஆலோசித்து மஹாசூலத்தைக் கையிற்கொண்டு ஆர்ப்பரவத்துடனே வீரவாதஞ்செய்து விடுத்தனன். எட்டுமணிகளையுடைய அந்தச்சூலத்தைப் பலகணைகளால் தடுக்கமுயன்றும் அந்தச்சூலத்தின் மேற்பட்ட கணைகளெல்லாம் பொடிப்பொடியாய்ச் சிதறிவிடவே, ஸ்ரீராமன் மாதலி கொணர்ந்து கொடுத்ததான பல கண்டைகளையுடைய இந்திரனது மஹாசக்தியை யெடுத்துச் சுழற்றிவிடுக்க,அது இராவணனுடைய சூலத்தை முறித்துத்தரையில் விழுத்தியது. அப்பால் இராமன் பலகணைகளைத்தொடுத்து அவ்விராவணனுடைய தேர்க்குதிரைகளை நோயுறுத்தி அவ்விராவணனுடைய மார்பிற் பலகணைகளையும் நெற்றியில் மூன்றுகணைகளையும் விடுக்க,அவன் தன் உடலெல்லாம்

இரத்தம் பெருகச் சிற்றம்விஞ்சி இராமன்மேற் சரமாரிபொழிந் தான். இராமனும் இராவணன்விடுத்த கணைகளைத் தடுப்பதும் மேலும் கணைகளைப்பொழிவதுமாயிருந்தான்.

வானத்தில் கணைகள் இருளைப்போற் சூழ்ந்துநிற்கையில், வீர னான ஸ்ரீராமன் சுபசகுனந்தோன்ற உற்சாகம்மூண்டு இராவண னைப்பார்த்து ஏசிக் கணைமழைகளைப்பொழிந்து மிதமின்றி இமி சித்தனன். இராவணன் அப்போது ஊக்கங்குன்றி மாறுசெய்ய இயலாது சோர்ந்துநிற்க, அவனுடைய தேர்ப்பாகன் போர்செய்யு மிடத்தினின்று தேரை மெல்ல அப்பாற்கொண்டு போயினன். பின்னர்த் தேறுதலடைந்த இராவணன் தன்பாகனை முனைமுகத்தி லிருந்து தேரை அப்பாலோட்டிக்கொண்டுவந்ததுகுறித்துச் சினந்து பல டி கடுமையாகப் பேச, பாகன் தன்மீது குற்றமில்லா மையையும் பாகன் செய்யவேண்டியமுறை இன்னதென்பதையும் எடுத்துக்காட்டி அவ்விராவணன்மனங்கொள்ளும்படி சமாதானங் கூறித் தான் இதுவரையில் உண்ட கடன் தீர அவன்விரும்பின படியே நடப்பதாகஉறுதிகூற, இராவணன் அந்தப்பாகனுக்குப் பொற்சுருடியைப் பரிசு அளிக்க, பாகன் தேரை இராமனுக்குநேர் முகமாக நடத்தினன் தேரும் இராமனருகில் வந்தது.

(*போர்காணத் தேவர்களோடு வந்திருந்த அகஸ்தியமுனிவர் 'இராவணனைவெல்வது எவ்வாறு?' என்று இராமன் கவலைகொண் டிருப்பதையும் இராவணன்மீண்டுவந்திருப்பதையுங்கண்டு, அவ் விராமனுக்கு ஆதித்யஹ்ருதயத்தை உபதேசித்தனராக, ஸ்ரீராமன் அந்தஸ்தோத்திரத்தைஜெபிக்க, ஸூர்யபகவான் இராமனை யநுக் கிரகித்தனன்.) பகைவன்தேர் அணுகுவது கண்டு பாகனை ஜாக்கிர தைப்படுத்தி,ஸ்ரீராமன் மாதலிகொடுத்த இந்திரவில்லையும் பாணங் களையும் எடுத்துப் பொரலாயினன். இருவர்க்கும் பெரும்போர் நிகழ்ந்தது. இராவணனுக்குத் தீமையைத் தெரிவிக்கும் பலநிமி த்தங்களும் இராமனுக்கு நன்மையைத்தெரிவிக்குஞ் சுபசகுனங் களும் தோன றின. இருவரும் மிக்கதைரியத்துடனே வெகுகடுமை யாகப்பொருகையில், ராட்சச சேனைகளும் வானரசேனைகளும் தாம் படையேந்திநிற்பினும் பொராது அவர்கள்செய்யும்போரையே இமைகொட்டாது பார்த்தவண்ணம் எழுது சித்திரங்கள்போல நின்றன. ஆங்கு இராவணன் இராமனுடைய த்வஜத்தை வீழ்த்த முயல, இராவணனெறிந்த பாணங்கள் இந்திர ரதத்தின்மகிமை யால் அதனை நணுகாதனவாக, இராமன இராவணனது தேர்க் கொடியை யறுதது வீழ்த்தினன்: அப்போது இராவணன் கடுஞ் சினங்கொண்டு எதிரியின் தேர்க்குதிரைகளைக் கணைத்தொகுதி யால் தாக்கவும் அவை தாமரைத்தண்டினுல் தாக்கப்பட்டனபோல்

---

*அகஸ்தியர் உபதேசிக்க, ஆதித்யஹ்ருதய மந்திரத்தை ஸ்ரீராமன் ஜபித்து சூரியனுடைய அநுக்கிரகத்தைப்பெற்றதைக் கூறும் வான்மீகிராமாயணப்பகுதி இடைச்செருகலாய் வந்த தென் பது, சிலர் கொள்கை.

இலட்சியஞ்செய்யாதனவாக, அளவில்லாச் சீற்றத்துடனே மீளவும் சரமாரிபொழிந்தும் தடி சக்கரம் உலக்கை முதலிய படைக்கலங்கொண்டும் ஸ்ரீராமனைத் தாக்கினன். அவை யாவும் இராமபாணங்களால் தடையுண்ணவும், இராவணன் ஊக்கங்குறையாமற் கணைகளைப் பொழிய, இராமனும் அநாயாசமாக அங்ஙனமே பொழிய, கணையினால் வேறொரு ஆகாயம் இயன்றதுபோலப் புலப்பட்டது. மூகூர்த்தகாலம்நிகழ்ந்த அந்தப்பெரும்போரில் இருவரும் ஒருவருக்கொருவர் மாறுசெய்துகொண்டு பொருகையில் இராமன் இராவணனுடைய தேர்க்குதிரைகளைத் தன்குதிரைகளுக்கு அருகு இருக்கவொட்டாது துரத்தினான். இராவணன்சீறி இராமன்மீது கணைகொண்டுதாக்கவும் அப்பிரான் இலட்சியஞ்செய்யாதிருக்க, மாதலியையும் தாக்கலானான். இராவணபாணங்கள் மாதலியையொன்றுஞ்செய்ய மாட்டாமற் போயினவாயினும், ஸ்ரீராமன், தன்னைத் தாக்கியதற்குச் சினவாது மாதலியைத் தாக்கியதற்கு வெகுண்டு தன்னெதிரில் அவ்விராவணனை நிற்கவொட்டாது செய்தனன்.

மீண்டும் கடும்போர் மூண்டது. அப்போரில் இராவணனெறிந்த படைக்கலவிசைத்தொனியால் கடல்கள் கலங்கின: பூமி நடுங்கிற்று: காற்று வீசாது அடங்கிற்று. தேவர்கள்முதலியோர் இராமனுக்கு வெற்றியுண்டாகுமாறு ஜபஞ்செய்து அந்தப்போரை நிகரற்றதெனக் கொண்டாடினர். அப்போது ஸ்ரீராமன் மிக்க கொடிய அம்பினால் இராவணன்சிரத்தை யறுக்க, அது முளைக்கலாயிற்று. இங்ஙன் நூற்றொருமுறையறுக்கவும் நூற்றொரு முறையும் அச்சிரம் முளைத்தது. அப்போது ஸ்ரீராமன் 'மாரீசன் கரன் கவந்தன் முதலியோரைக் கொன்ற கணை இராவணனைக் கொல்லத் திறனற்றதே!' என்ற சிந்தையுடனே கடுமையாகப் போரை நடத்தினான். அவ்விருவர்க்கும் இரவும் பகலும் ஓயாக் கடும்போர் நிகழ்ந்தது.

அப்போது மாதலி ஸ்ரீராமனைநோக்கி, 'நீ ஒன்றும் அறியாதவன் போன்று இராவணன் விடும் அஸ்திரத்துக்குப் பிரதியஸ்திரம் தொடுப்பது மாத்திரமே பணியாகக் கொண்டுள்ளாயே! இராவணனுக்கு மரணகாலம் அணுகிவிட்டது. பிரமாஸ்திரத்தைத் தொடுப்பாயாக' என்று நினைவு மூட்டினன். பிரமதேவன் அகஸ்தியருக்குக் கொடுக்க, அம்முனிவர் தனக்குக் கொடுத்த கணையையெடுத்து வில்லிற்பூட்டி இராமன் அந்தத்திவ்யாஸ்திரத்தை இராவணன்மீது எய்ய, இராவணன் மார்புபிளவுண்டு வில்லைப் பிடித்த கைப்பிடி சோர உயிர்நீங்கி மண்மீதுவிழுந்தனன். எஞ்சிய அரக்கர் அஞ்சியோடினர்: வானரர் இராமஜயத்தையும் இராவணநாசத்தையும் கூறியவண்ணம் கர்ச்சித்தனர். வானத்துத் துந்துபி முழங்கிற்று; ஸ்ரீராமனது தேர்மீது வானத்தினின்று மலர்மாரி விழுந்தது. வானருடைய கொண்டாட்டத்துடனே வானவர்புரியுந் துதியும் கேட்கலாயின. சுக்கிரீவன் அங்கதன் விபீ

டணன் முதலியவர்களும் சாம்பவான் முதலிய நண்பர்களும் இலட்சுமணனுடன் வெற்றிபெற்ற இராமனைப் பூசித்தனர். இலட்சுமணனாதியோரால் சூழப்பெற்ற இராமன் வானவர்களாற் சூழப்பெற்ற தேவேந்திரன்போல விளங்கினன்.

இராவணன் மாண்டு தரையில்விழுந்திருப்பதைக் கண்டு விபீடணன் துயரத்தைத் தாங்கமுடியாது பிரலாபிக்க, ஸ்ரீராமன் 'வீர தருமத்திற் சலியாது உறுதியாக நின்று பொருது உயிர்துறந்து துறக்கமடைந்தவனைக் குறித்துப் புலம்புதல் தகாது. போரில் வெற்றிதோல்விகளில் ஒன்று நியதியின்றி விளைவது திண்ணமாகலாலும், பிறந்தோர்க்கு இறப்பென்பது இயற்கையேயாதலாலும் இவ்வுண்மையை மனதிலாராய்ந்து துயரொழிந்து மேல் நிகழ்த்தவேண்டியதைக் குறித்து ஆராய்க' என்றனன். விபீடணன் இராவணனுடைய நன்மைகளை யெடுத்துக்கூறி 'இவனுக்குப் பிரேதகாரியங்களைச் செய்ய உடன்பாடுதருக' என்ன, ஸ்ரீராமன் 'பகைமை மரணம்வரையில்தான்: நம்பயன் கைகூடிற்று: இவனுக்கு ஸம்ஸ்காரஞ்செய்க; உனக்குப்போலவே இவன் எனக்கும்' என்றான்.

இராவணனிறந்ததுகேட்டு அவனுடையமனைவியர் கோவென்றுகதறிக்கொண்டு அந்தப்புரத்தினின்று வெளிப்பட்டுப் போர்க்களத்தைச்சேர்ந்து, தம்கணவனுடைய தோளின்மீது ஒருத்தியும் முகத்தின்மீது ஒருத்தியும் மார்பின்மீது ஒருத்தியும் தாளின்மீது ஒருத்தியுமாக இங்ஙனம் அவனுடைய உறுப்புக்களின்மீது விழுந்து அன்றிற்பறவைபோற் புலம்பலாயினர். அவ்வண்ணம் அவர்கள் புலம்புகையிற் பட்டமகிஷியான மண்டோதரி தன் கணவன் மாண்டுவீழ்ந்திருப்பதுகண்டு பொறுக்கொணுத் துயரத்துடனே கதறி யழுபவளாகி, 'மானுடர்க்குக்கிட்டவொண்ணுத நிலத்திலேநின்று ஒருடம்பிலே அம்புபட்டால் அவ்வடிவத்தை விட்டுவேற்றுருக்கொள்ளவல்ல உன்னை இராமன்கொன்றானென்பது எவ்வாறுபொருந்தும்? இந்திராதி தேவர்களோ உன்னைக் கொல்லவல்லவரல்லர்! போர்க்கருவிகள் அனைத்தும் நிறைந்துள்ள உன்னைப் போரில்எதிர்த்து இராமன்வென்றானென்பதை ஆராயுமிடத்து, "இராமன்கேவலமனுஷ்யனன்று: தம்வடிவத்தைமறைத்துத் தேவர்கள் வானரர் முதலியோராக உருக்கொண்டு துணையாகஅமையவந்த பரம்பொருளின் அம்சம்" என்று தோன்றுகின்றது. கரன்வதம், வாலிவதம், ஓர்வானரத்தைக்கொண்டு அசோகவனிகையை முறிப்பிக்கை, ஸேதுநிர்மாணம் முதலியவற்றைக் கேட்டபோதே இராமன் கேவலமானுடனல்லனென்று உணர்ந்தேன். தீவினை புரிந்தோன் அதன்பயனை யனுபவித்தே தீரவேண்டும். விபீடணன் நன்மைபுரிந்தோனுகையால் இராமனை யடைந்து நலம் பெற்றான். நீயோ விபீடணனும் மற்றையோரும் சொல்லவும் கேளாது தீவினைப்பயனைப்பெற்றாய்: தேவாதியர்களால் சாவுநேராதபடி வரம்பெற்றாயாகலால், பரம்பொருளான விஷ்ணுவே தன்விபூதியான உலகத்தை நலியும் உன்னைப் பரி

வாரங்களோடு முடித்துப் புகழுடன்வீற்றிருக்கின்றான்: எல்லாப் பிராணிகட்கும் சாவுக்கு நிமித்தம் வேண்டுமாகையால், சீதையின் நிமித்தம் உனக்கு மரணம் ஏற்பட்டது: "மகனோ இந்திரனையும் வென்றவன்; கணவன் மூவுலகையும்வென்றவன்' என்று இவ்வாறாகச் செருக்குக்கொண்ட எனக்குக் கைம்பெண்ணாகவேண்டிய நிலை நேர்ந்ததே! சீதை இனித் துயரொழிந்து தன்கணவனுடன் இனிதிருக்கப் போகின்றாள்: நானோ மூட்டாக்கிட்டுக்கொண்டு துயரத்திற் கிடக்கவேண்டியகாலம் வந்துவிட்டது. ஐயோ! உன்னுடல் போர்க்களத்திற் புழுதிபடியப் புரண்டுகிடக்கும் காலமும் வந்ததே! போரில்மாண்டவனைக்குறித்துச் சோகிக்கக்கூடாதாயினும் பெண்ணாகையால், என்மனம துயரப்படுகின்றது. நீ மரணமடைந்ததைக் கேள்வியுற்றும் என்நெஞ்சம் ஆயிரஞ் சுக்கலாய்ப் போகாமையால், நான் உன்னிடம் அன்புடையவளென்பது பொய்' என்று இங்ஙனம் பலவாறு புலம்பி இராவணன் மார்பில்வீழ்ந்து மேகத்தினிடையிற் றோன்றும்மின்னற்கொடிபோலவிளங்கினாள்.

அவ்வாறுவீழ்ந்து மூர்ச்சித்த மண்டோதரியை அவளுடைய சக்களத்திமார் எடுத்துத்தேற்றி அவர்களெல்லாரும் கதறுகையில், ஸ்ரீராமன் விபீடணனைப் பார்த்து, 'ஈமக்கடனைச் செய்க' என்ன, இராமனுடைய மனப்பூர்வமான அநுமதியைப் பெற்றே ஈமச்சடங்கைச் செய்யக்கருதிய விபீடணாழ்வான், 'இவ்விராவணன் என்னுடன் பிறந்தவனேயாயினும், இவனுடைய தீக்குணங்களைக் கருதுமிடத்து நான் ஈமச்சடங்கைச்செய்யாது தவிர்தலே தகுதி: இதனால்,எனக்குப்பழிப்பு உண்டாகாது' என்ன, ஸ்ரீராமன் விபீடணனைப்பார்த்து, 'விபீடணா! நீ என் விருப்பத்தையே செய்ய வேண்டியவன்: உன்னால் எனக்கு வெற்றியுண்டானதனால், உன் நன்மையையே யான் சொல்லவேண்டியவன். இவனை ஸம்ஸ்கரிப்பது எனக்குவிருப்பமானது: உனக்கும் நலமானது. இவனிடத்துச் சிலதீக்குணங்கள் இருந்தனவாயினும் உத்தமகுணங்கள் பலவும் உள்ளன.மரணம்வரையிலும்தான் பகை:உனக்கு எப்படியோ அப்படியே இவன் எனக்கும் சுற்றத்தான். இவனுடைய ஈமக்கடனைச் செய்க. இதனால் உனக்குப் புகழே விளையும்' என்ன,உடனே விபீடணன் ஸ்திரீகளையெல்லாம் அப்பால் அனுப்பிவிட்டு யாகசீலனுக்குச் செய்வதுபோல் ஸம்ஸ்காரஞ்செய்தனன். தகனஞ்செய்து மூழ்கித் தருப்பணஞ்செய்து ராவணஸ்திரீகளைப் பட்டணத்திற்குள் பிரவேசிக்கச்செய்த பின்னர், விபீடணன் இராமனிடம்வந்து வணங்கி அவன் மருங்கே பணிவுடன் நின்றானாக, ஸ்ரீராமன் சேனைகளும் சுக்கிரீவனும் இலட்சுமணனும் சூழ்ந்திருக்க மகிழ்வோடிருந்தனனென்பது.

இராவணன் வதைப்படலம் முற்றிற்று.

37 - ஆவது மீட்சிப்படலம்.

இராமபிரான் இராவணனைக் கொன்றபின் சீதை சிறைமீண்டதையும் சீதாராமலட்சுமணர் வனவாசம் முடிந்து இலங்கையிலிருந்து திருவயோத்திக்கு மீண்டதையும் உணர்த்தும் பாகமென்று பொருள்.

ஸ்ரீராமன் விபீடணனைத்தேற்றியபின் இலட்சுமணனைநோக்கி 'நீ வானரவீரர்களுடன்சென்று விபீடணனுக்கு முடிசூட்டுக' என்ன, தேவர்களும் விபீடணனுடைய பட்டாபிஷேகத்துக்கு வேண்டுவனசெய்ய, இளையபெருமாள் முடிசூட்டினன்; தேவர்கள் மலர்மாரி பொழிந்துவாழ்த்தினர். விபீடணன் ஸ்ரீராமனைத் தொழ வேணவாக்கொண்டு இலக்குமணனிடம் இராச்சியத்தையொப்பித்து அப்பிரானைத் தொழ,ஸ்ரீராமன் விபீடணனை எடுத்துத்தழுவி நீதிகளையுபதேசித்தான். பின், ஸ்ரீராமனேவலால் அநுமான் இராவணனிறந்த செய்தியைப் பிராட்டிக்குத் தெரிவிக்க, அவள் உடல் பூரித்துப் பெருமகிழ்ச்சியாற் பேசநாவெழாது சற்றுநேரம்வாளாவிருந்து பிறகு அநுமனைப்புகழ்ந்து 'உனக்கு யான் செய்யத்தக்கது யாது உளது?' என்றாள். அநுமான் 'உன்னைநலிந்த அரக்கியரைக் கொல்லுமாறு வரம்தருக' என்றான். அதுகேட்ட அரக்கியர் சீதாபிராட்டியைச் சரணம்புக, அவ்வரக்கியர்க்குப்பிராட்டி அபயமளித்து, அநுமனை நோக்கி 'இவ்வரக்கியர் தலைவ னேவலைச் செய்தனராதலால், இவர்மீது குற்றமில்லை: இவர்களைக்கொல்லுதல் தக்கதன்று' என்ன, அநுமான் 'உன் தயவு' என்றான்.

அவ்வேளையில் விபீடணனை நோக்கிச் சீதையை யலங்கரித்து அழைத்துக்கொண்டுவருமாறு இராமபிரான் பணித்தான். கோலங்கொள்ளுதற்குப் பிராட்டி உடன்படாதிருப்பினும் விபீடணன் இராமனது பணியென்று இசைவிக்க, தேவமங்கையர் பலவகையாகப் புனையப் பின்னர் அப்பிராட்டியை விமானத்தின்மீது ஏற்றி இராமனிடம் அழைத்துச்சென்றான். செல்கையில் தேவர் முனிவர் வித்தியாதரர்முதலியோரின் மங்கைமார் தொடர்ந்துவரச் சான ஜப்பிராட்டி ஸ்ரீராமனைக் கண்டு பூமியிலிறங்கி மகிழ்ச்சிக்கண்ணீர் பெருக வணங்கி நின்றாள்.

சீதையைக்கண்ட இராமன் கடுஞ்சொற்களாற் பலவாறு கடிந்து 'நீ இறத்தலே தக்கது' என்ன, கேட்டவரனைவரும் அரற்றினர்: சீதை கலக்கமுற்றுப் பொறுக்கொணாத துயரத்துடனே தன்னிலையை நொந்து, 'எனக்கு இறத்தலேதக்கது' என்று மொழிந்து, இளையபெருமாளைக்கொண்டு அக்கினியை மூட்டுவித்தாள். பிறகு, 'யான் கற்புஇழந்தேனெனின், தீக்கடவுளே! நீ என்னைச் சுடுக' என்று சொல்லி, வேதம்முதலியன வருந்தவும் இந்திராணிமுதலிய தேவமங்கையர் கண்ணில்மோதிக்கொண்டு துள்ளவும் பிரமாதியர் நடுங்கவும் அக்கியிற் பாய்ந்தனள். பாய்தலும் அப்பிராட்டியின் கற்புக்கனலால் தன்னுடலெரியப்பெற்ற

தீக்கடவுள் அப்பிராட்டியை யேந்திவந்து ஸ்ரீராமன் முன்னிலையில் வணங்கிநிற்க, ஸ்ரீராமன் சீதையைக் குற்றமற்றவளென்று உணர்ந்து அங்கீகரித்தனன்.

அப்போது தேவர்களின்வேண்டுகோளினால் பிரமதேவனும் உருத்திரமூர்த்தியும் இராமபிரானிடம் வந்து அப்பிரானுடைய உண்மைநிலையைக் கூறித் துதித்துச் சீதையின் கற்புத்திறத்தையும் தெரிவித்துச்சென்றனராக, பின் உருத்திரமூர்த்தியின் மொழியினால் தசரதன் வந்து இராமனைத் தழுவி மகிழ்ந்து, கைகேயியையும் பரதனையும் துறவாது மனைவியும் மகனுமாகக்கொள்ளுமாறு அவ்விராமன்வேண்டிய இருவரங்களையும் அரிதில்தந்து மீண்டு துறக்கம்புக்கான். பின்னர்த் தேவர்கள்வந்து 'வேண்டும் வரம்கேள்' என்று இராமனிடம் கூற, அப்பிரான் களத்துஇறந்த வானரங்களெல்லாம் உயிர்பெற்றுஎழுமாறுவேண்ட, அவ்வாறே யளித்து விரைவில் அயோத்திசேருமாறு சொல்ல, ஸ்ரீராமன் விபீடணன்கொணர்ந்த புஷ்பகவிமானத்தில் சீதா லட்சுமண சமேதனாய் விபீடண சுக்கிரீவ ஆஞ்சனேயாதி பரிவாரங்கள் சூழ ஏற, புட்பகம் வானவழியே அயோத்திநோக்கிச் செல்லலாயிற்று. ஸ்ரீராமன், சானகிக்கு இலங்கை திருவணை முதலிய காட்சிகளைக் காட்டிக்கொண்டேவர, அவ்விமானம் கிட்கிந்தையைச் சேர்ந்தது; சேரவும் சீதையின் விருப்பின்படி அந்தக் கிட்கிந்தையிலுள்ள வானரங்களையும் விமானத்திலேற்றிக்கொண்டு ஸ்ரீராமன் 'இது கோதாவரி: இது உன்பிரிவுத்துயரை யுண்டாக்கியஇடம்' என்று காட்டியவண்ணம் நிற்க, புட்பகஞ்செல்லுகையில் இது பரத்துவாசாச்சிரமமென்றுகூறி அங்கு இறங்கி முனிவனடிபணிந்து அம்முனிவன்சற்கரிக்க, பின்பு வானரர் செல்லுமிடம்வளம்பெற வரம் பெற்றனன். பின்பு, பரத்துவாசமுனிவன் யாவர்க்கும்விருந்தமைக்கவே,அநுமானைப் பரதனுக்குத்தன்மீட்சியையறிவிக்குமாறு அனுப்பினான். அனுமான் குகனுக்கும் செய்திதெரிவித்துப் பரதனைச்சேர்ந்த சமயத்து,பதினான்கு வருடஞ்சென்றும் ஸ்ரீராமன் வாராமையால் அந்தப்பரதன் அக்கினிப் பிரவேசஞ்செய்ய நிச்சயித்துச் சத்துருக்கனனுக்குத் தன் கருத்தைத்தெரிவித்துக் கௌசலை தடுக்கவும் கேளாமல் தீயில்விழ முந்தினனாக, அநுமான் அவ்வேளையில் ஆங்குச்சேர்ந்து தடுத்து எரியையவித்து ஸ்ரீராமன் வருகையைக் கூறிக் கணையாழியையளிக்க யாவரும் ஆனந்த பரவசராயினர்.

அப்பால் பரதன் அனுமானைத் தன்வரலாறுகூறச்சொல்லிக் கேட்டு நகரையலங்கரிப்பித்து ஸ்ரீராமனை யெதிர்கொள்ளப் பரிவாரங்களோடு நடந்து, இராவணாதியரக்கர்களையொழித்த ஸ்ரீராமனது பராக்கிரமச்செயலை யோதக்கேட்டவண்ணஞ் செல்லலானான்: அக்கால் தபோதனன் செய்தவிருந்தை யாவருமுண்டபின் ஸ்ரீராமன் தன்னைக்காணவந்த குகப்பெருமானை ஆதரித்து அன்றிரவுநீக்கிச் சூரியோதயத்து யாவரும் புட்பகவிமானமேறி அயோத்திநோக்கிச் செல்லலாயினர். செல்லுகையில் அநுமான்

பரதாழ்வானுக்குச் சுட்டிக்காட்ட, பரதன் ஸ்ரீராமனைக்கண்டு சேவிக்கையில் அவ்வனுமன் விமானத்திற்பாய்ந்து ஸ்ரீராமனுக்குப் பரதன்திறம்முதலியன கூறினான். அப்போது புட்பகவிமானம் இராமன் நினைவின்படி புவியிலிறங்கிற்று. தாய்மார் வசிட்டன் முதலியோரை இராமனாதியோர் வணங்க, இராமனாதியோரைப் பரதன் முதலியோர் வணங்க, இங்ஙனம் நிகழ்ந்தபின் ஸ்ரீராமன் யாவரையும் புட்பகவிமானத்திலேற்றிக்கொண்டு அயோத்தியை யடுத்த நந்திக்கிராமத்தையடைந்து புவியிற்சேர்ந்தமை இந்த மீட்சிப்படலத்துச் சொல்லப்படுகின்றது.

1.—இராமன் விபீடணனுக்குத் தேறுதல்கூறி, இலக்குமணனை நோக்கி ஒன்று சொல்லத்தொடங்கல்.

[1]வருந்தல் நீதி மனுநெறி யாவையும்
பொருந்து [2]கேள்விப் [3]புலமையி னோயென
அருந்த வப்பய னுடைத் தாற் [4]கறைந்து
[5]இருந்த வத்[6]திளை யோற்கி தியம்பினான்.

(இ - ள்.) 'மனுதருமசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட நியாய வழிகளெல்லாம் பொருந்திய நூற்கேள்வியையும் அறிவுத் தேர்ச்சியையுமுடையவனே! (நீ) வருந்தாதே, என்று, (செய்தற்கு) அரிய தவத்தைச் செய்துள்ளதன் பயனால் (முன்புவந்து தன்னைச்) சரண மடைந்தவனான விபீடணனுக்குச் சொல்லி,—பெரிய தவ வொழுக்கத்தையுடைய (தன்) தம்பியான இலக்குமணனுக்கு இவ் வார்த்தையைச் சொல்பவனானான் (ஸ்ரீராமன்); (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க. இதற்கு 'இராமன்' என்ற தோன்றா எழுவாய் வருவிக்க.

புலமை-இயற்கையறிவோடு நூற்பயிற்சியாலாகும் செயற்கை யறிவையும், நூல்வழக்கையேயன்றி உலகவழக்கையும் அறிதலையும் உணர்த்தும். எல்லாவுயிர்க்கும் புகலிடம் சரணாகதரக்ஷகனான ஸ்ரீராமபிரானே யென்ற சாஸ்திரசித்தாந்தத்தை உள்ளபடி யுணர்ந்து அப்பெருமானைப் பிரதியட்சமாகத் தரிசித்துத் திருவடியில் வீழ்ந்து அடைக்கலமடைந்து உய்வுபெறுதல் அரிய பெரிய தவத்தின் பயனாலன்றி இயலா ததலாலும், விபீடணன் பெருந் தவம்புரிகையில் இராவணனுக்குக் காட்சிதந்து வேண்டிய வரங் களைக் கொடுத்தருளிய பிரமதேவன் அவ்விபீடணனைநோக்கி 'நீ யாதுவரம் வரிக்கின்றனை?' என்றபோது அவன் "அடியேனுக்கு எவ்வளவுசங்கடம் நேர்ந்திருக்கையிலும் அதருமத்திற் புத்தி செல்லாதிருக்கவும், எதுதோன்றினும் அதெல்லாம்தருமத்திற்கு இணங்கிப் பயன்படவும் வரந்தரவேண்டும்" என்று வேண்டி அத் தவத்தின் பயனாகப்பெற்ற வரத்தின்படி ஆபத்காலத்தில் நல்லறிவு தோன்றப்பெற்று இராவண சம்பந்தத்தைத் துறந்து பெருமானைச் சரணமடைந்தவனாதலாலும், விபீடணனை 'அருந்தவப்பயனு லடைந்தான்' என்றார். இளையபெருமாளுக்குப் பெருந்தவம்-அராதி

யாய் ஆதிசேஷனாகிற நிலையில் திருமாலுக்கு அநேகவித கைங்கரியங்களைச் செய்துவருதல் மாத்திரமேயன்றி அவதாரவிசேஷத்திலும் பிரியாமல் உடனிருந்து பலவகைப் பணிவிடைகளைச் செய்து பேறுபெறுந்தன்மை: இனி, மரவுரியுடுத்தல் சடைமுடிதரித்தல் காமவின்பங்களைவிடுதல் ஊணுறக்கமொழிதல் முதலிய தவவிரதங்களைப் பதினான்குவருஷகாலம் சிறிதுந்தவறாது அநுட்டித்த சிறப்புடைமைப்பற்றி, 'இருந்தவத்திளையோனை' என்றதாகவுங் கொள்ளலாம். உலகத்திற் பிறப்பெடுத்த உயிர்க்கு இறப்புநேர்தல் இயல்பாதலையும், தீத்தொழில் செய்தவர் தவறாதுமுடிவிற்கேடடைதலும் முற்பிறப்பின் வினைப்பயன் பிற்பிறப்பில் அனுபவித்தே தீரவேண்டியதாதலும் முதலிய தருமசாஸ்திரக்கொள்கையையும் உணர்ந்த நீ, தமையனான இராவணன் இறந்ததற்குச் சோகித்தல் தகுதியன்றேயென்பார், 'நீதி மனுநெறியாவையும் பொருந்து கேள்விப்புலமையினோய்' என்றுவிளித்து, 'வருந்தல்' என்று தேற்றினர். கருத்துடையடைகொளியணி. பி - ம்:—[1]வருந்தொல், வருந்துநீதி. [2]கோவிற். [3]புலமையிதாமெனா. [4]அறம். [5]இருந்தநல், திருந்தநல். [6]இளையோன்முகநோக்கியே. (3921)

2.—'நீ வானரவீரர்களுடன் சென்று விபீடணனுக்கு முடிசூட்டு' என்று இராமன் இலக்குமணனை ஏவுதல்.

சோதி யான்மகன் வாயுவின் தோன்றல்மற்று
ஏதில் [1]வானர வீரரோ டேகிநீ
ஆதி [2]நாயக னுக்கிய நூன்முறை
[3]நீதி யானை [4]நெடுமுடி சூட்டுவாய்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்) சூரியனது மைந்தனான சுக்கிரீவனும் வாயுவின் குமாரனான அநுமானும் மற்றுமுள்ள குற்றமற்ற வாநரவீரர்களும் ஆகிய இவர்களுடனே நீ (இலங்கைநகரினுட்) சென்று, (எல்லாவற்றுக்கும்) முதன்மைத் தலைவனான ஸ்ரீமந்நாராயணன் வெளியிட்ட (வேதம்முதலிய) நூல்களிற் கூறியமுறைப்படி நீதிநெறிதவறாதவனான விபீடணனுக்குச் சிறந்தகிரீடத்தைச் சூட்டுவாய்; (எ-று.) —'என்றுகூறி' என அடுத்த கவியோடு தொடரும்.

தலைமைபற்றி, சுக்கிரீவன் அநுமான் என்ற இவ்விருவரும் எடுத்துக்கூறப்பட்டனர்: இவர்கள் இராமனுக்கும் பலவகையாக மிகவும் உதவிசெய்தமை, பிரசித்தம். சோதியான்-ஆயிரங்கிரணங்களையுடையவன்: சூரியன். வாநரம் என்ற வடசொல் - கொஞ்சங் குறைய மனிதர்போலவுள்ளதென்று காரணப்பொருள்படும். சகல சாஸ்திரங்களும் ஆதியில்முழுமுதற்கடவுளான எம்பெருமானிடத்தினின்று வெளிப்பட்டனவென்பது, நூற்கொள்கை. ஏது=ஏதம்: குற்றம். 'நீதியானை'—உருபுமயக்கம். நெடுமுடி-தொன்றுதொட்டு வந்த முடியுமாம். தோன்றல்-தொழிலாகுபெயர்.

(இராமபிரான் தனது சிறியதாயாகிய கைகேயிக்குத் தனது தந்தை கொடுத்திருந்த வரத்தை நிறைவேற்றுதற்பொருட்டுப் பதினான்குவருஷம் வனவாசஞ்செய்ய உடன்பட்டு வந்தனனாதலால், அங்ஙனம் காட்டில்வசித்தற்கேயுரிய அக்காலத்தில் நகரப்பிரவேசஞ்செய்தல் தகாதென்ற கருத்தினால், தான் இலங்கையினுட் செல்லாமல், தம்பியைச் சென்று முடிசூட்டக் கட்டளையிட்டன னென்க; முன்பு சுக்கிரீவனுக்கும் இலக்குமணனைக் கொண்டே முடிசூட்டி இராமன் கிஷ்கிந்தாபுரியினுட் செல்லாமை காண்க.) பி ம்:—[1]வானரர்யாவரொடு. [2]நான்முகன். [3]நீதியோடு. [4]மிலைச்சுகநீண்முடி. (3922)

3.—இராமன் இலக்குமணனுக்கும் மற்றையோர்க்கும் விடையளிக்க, தேவர்கள் விபீடணபட்டாபிஷேகத்துக்கு வேண்டுவசெய்யத்தொடங்கல்.

என்று கூறி [1]யிளவலொ டர்வரையும்
வென்றி வீரன் விடையருள் வேலையில்
நின்ற தேவர் நெடுந் [2]திசை யோரொடும்
சென்று தத்தம செய்கை புரிந்தனர்.

(இ - ள்.) என்று சொல்லி வெற்றிபெற்ற வீரனான ஸ்ரீராமன், (தனது) தம்பியாகிய இலக்குமணனுக்கும் மற்றும்யாவர்க்கும் அநுமதிதந்து (அவர்களனைவரையும்) அனுப்பியபொழுது, (அச்செய்தியையறிந்து) நின்ற தேவர்கள் நீண்டதிக்குக்களின் காவலர்களுடனே [அஷ்டதிக்குப் பாலகர்களுடனே] சென்று தம்தமக்கு இயன்ற உதவிச்செயல்களைச் செய்வாராயினர்; (எ - று.)—இதன் விவரத்தை, அடுத்த கவியிற் காண்க.

அஷ்டதிக்பாலகர் - இந்திரன், அக்கினி, யமன், நிருருதி வருணன், வாயு, குபேரன், ஈசானன் என இவர்; இவர்களைக் கிழக்கு முதலாக எட்டுத்திக்குக்கட்கும் முறையே பாலகரெனக் கொள்க. நெடுங்காலமாகத் தங்களுக்குப் பலவகைத் துன்பங்களை விளைத்துவந்த இராவணனைச் சங்கரித்த இராமபிரானது கருத்தைத் தழுவி, அவனது திருவுள்ளத்துக்கு உகப்பை யுண்டாக்கும் பொருட்டும், அந்த இராவணனைக் கொல்லுதற்கு ஏற்ற உதவி புரிந்த விபீடணனுக்குத் தாம் கைம்மாறுசெய்யக் கருதியும், இங்ஙனம் தேவர்கள் அவனது பட்டாபிஷேகத்துக்கு ஏற்ற செயல்களை அன்போடு செய்வாராயின ரென்க. பி - ம்:—[1]இளவலொடியாரையும். [2]திசையாரொடு. (3923)

4.—தேவர்கள் புண்ணியதீர்த்தம் முதலியன கொணர்தல்.

சூழ்க டற்புன லும்பல [1]தோயமும்
நீள்மு டித்தொகை யும்பிற நீர்மையும்
பாழி துற்றரி பற்றிய பீடமும்
தாழ்வில் கொற்றத் தமரர்கள் தந்தனர்.

(இ - ள்.) (உலகத்தைச்) சூழ்ந்துள்ள கடல்களின் தீர்த்தத்தையும் (மற்றும்) பல (கங்கைமுதலியவற்றின்) புண்ணிய தீர்த்தங்களையும், நீண்ட கிரீடங்களின் தொகுதியையும், வலிமைமிக்க சிங்கம் தாங்குவதுபோல உருவமமையச் சித்திரிக்கப்பட்ட பீடத்தையும் [சிங்காசனத்தையும்], மற்றும் (பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய)உபகரணங்களையும், குறைவில்லாத வெற்றியையுடைய தேவர்கள் (விரைவாகக்) கொண்டுவந்தார்கள்; (எ - று.)

நீள்+முடி என்பது சந்தியில் நீண்முடி யென்று ஆகாது, 'நீள்முடி' யென்றே நின்றது, எதுகைநயம்நோக்கி யென்க; மகரத்துக்கு ளகரம் இனவெதுகை யெனக் காண்க: (வடநூலாரும், யாப்பிலக்கணத்துக்கு ஏற்ப, வேண்டாதவிடத்துச் சந்தியைக் கொள்ளாது விடுவர்.) இங்கு வேண்டுவது ஒருகிரீடமேயாயினும், தேவர்கள் உபசாரமாகப் பல கிரீடங்களைக் கொணர்ந்தமை தோன்ற, 'முடித்தொகை' எனப்பட்டது; அன்றி, இராவணன் தனது பத்துத்தலையிலும் அணிந்திருந்த பத்துக்கிரீடங்களையும் கொணர்ந்தன ரென்பதுபற்றி, 'முடித்தொகை' என்றதாகவுங் கூறுவர். பி - ம்:—[1]தோசமும். இங்கே சிலபிரதியில் ஒருபாடல் காணப்படுவது வருமாறு:—

மாரு திச்செல மங்கலம் யாவையும்
மாரு திப்பெயர் கொண்டுடன் வந்தனன்
வீர விற்கை யிளவலவ் வீடணன்
வீர பட்ட மெனநுதல் வீக்கினான். (3924)

5.—பிரமன் கூறியபடி மயன் ஒரு மண்டபம் நிருமித்தல்.

[1]வாச நாண்மல ரோன்சொல [2]மான்முகன்
[3]காசு மாநிதி யுங்கொடு கங்கைசூடு
ஈச னேமுத லோர்வியந் [4]தேத்திடத்
தேசு லாமணி மண்டபஞ் [5]செய்தனன்.

(இ - ள்.) நறுமணமுள்ள புதிய [அன்றுபூத்த] (திருமாலின் நாபித்) தாமரைமலரில் தோன்றியவனான பிரமன் கட்டளையிட, மானினது முகம் போன்ற முகத்தையுடையவனான மயன், இரத்தினங்களையும் மிக்க பொன்னையுங் கொண்டு கங்காநதியை முடிமேற் கொண்டுள்ள சிவபிரான் முதலான தேவர்கள் (கண்டு) அதிசயித்துக்கொண்டாடும்படி ஒளிவீசுகிற அழகிய மண்டபத்தை (ப் பட்டாபிஷேகத்தின் பொருட்டு) அமைத்தான்; (எ - று.)

பிரளயசமுத்திரத்திற் பள்ளிகொண்டிருந்த திருமாலின் நாபியினின்று ஒருதாமரைமலர் எழுந்து விரிய, அதனினின்று பிரமன் தோன்றின னென அறிக. அசுரத்தச்சனான மயன் மான்முகமுடையவனாதலை, கீழ்க் கிட்கிந்தா காண்டத்தில் "மான்முக முகத்தவன் மயன்" என்றதனாலும் அறிக. காசு - நவரத்தினங்களுக்கும் பொதுப்பெயர். நிதி - செல்வத்தொகுதி; இங்கு இலக்

கலையாப் பொன்னை யுணர்த்திற்று. பிம்:—[1]வாசமா. [2]மாமுகன், வாசவன். [3]காசுலாநிதியும், காசுமாமணியும். [4]எய்திடத். [5]சேர்ந் தனர். இச்செய்யுள் "சூழ்கடல்" (4) என்றதன்முன் சிலபிரதி களில் உள்ளது. (3925)

6.—இளையபெருமாள் விபீடணுழ்வானுக்கு முடிசூட்டுதல்.

மெய்கொள் வேத விதிமுறை விண்ணுளோர்
[1]தெய்வ [2]நீள்புன லாடல் [3]திருத்திட
ஐய [4]னாணையி னுளிளங் கோளரி
கையி னுன்மகு டங்கவித் தானரோ.

(இ - ள்.) மெய்ம்மையைக்கொண்ட வேதங்களிற்கூறிய விதி யின் முறைமைப்படி தேவர்கள் தெய்வத்தன்மையுள்ள சிறந்த தீர்த்தங்களைக்கொண்டு அபிஷேகத்தைச் செவ்விதாகச் செய்ய, (யாவர்க்குந்) தலைவனை இராமபிரானது கட்டளைப்படி இளமை யான வலிமையுள்ள சிங்கம்போன்ற இலக்குமணன் (தனது) கையி னற் கிரீடத்தையெடுத்து (விபீடணன் முடியிலே) சூட்டினன்;

மெய்கொள்வேதம்-தத்துவப்பொருள்களை உள்ளபடி யுணர்த் தும் நூல். விண்ணுளோர் - இந்திரன்முதலியோர். புனலுக்குத் தெய்வத்தன்மை - தனது ஸ்பர்ஶமாத்திரத்தால் தீவினைதீர்த்து எல்லாநன்மைகளையும் உண்டாக்குதல். நீள்புனல் = மகாதீர்த்தம்; இனி, நெடுந்தூரத்தினின்று கொணர்ந்த புனலுமாம். ஆர்யன், ஆஜ்ஞா என்ற வடசொற்கள் - ஐயன், ஆணை எனச் சிதைந்தன. இளங்கோளரி-பலபராக்கிரமங்களிற் சிங்கவேறுபோன்ற இளைய பெருமாள்: உவமையாகுபெயர். வேத விதிப்படி தேவர்கள் அபி ஷேகஞ்செய்ய, இராமன் கட்டளைப்படி இலக்குமணன் முடிசூட்டி னனென்ற இதில், இராமன்கட்டளை வேதவிதிபோலத் தவறாது சிரமேற்கொண்டு நன்குமதிக்கத்தக்கதென்பது விளங்கும்; எம் பெருமானது ஆஜ்ஞாரூபமாக இருத்தலினாலன்றோ,வேதத்திற்கும் விசேஷகௌரவம். பி-ம்:—[1]செய்ய [2]நீர்ப். [3]திருத்தினர். [4]ஆரியனு ளிளங், ஆணையினுயிளங், ஆணையிலங்கிளங். இதன்பின் ஒருபாடல் ஒரு பிரதியிற் காணப்படுவது வருமாறு:—

வேத வோசை விழாவொலி மேலிட
நாத துந்துமி யெங்கு நடித்திட
வேத பாரக ராசி விளம்பிட
ஆதி தேவ ரலர்மழை யார்த்திட. (3926)

7.—விபீடணன் சிங்காசனத்து வீற்றிருத்தலின் வருணனை.

கரிய குன்று கதிரினைச் [1]சூடியோர்
எரிம ணித்தவி சிற்பொலிந் தென்னவே
விரியும் வெற்றி யிலங்கையர் [2]வேந்தனிழு
அரிய ணைப்பொலிந் தான் [3]தம ரார்த்தெழ.

(இ - ள்) கருநிறமுடைய [பெரிய] மலையொன்று சூரியனை (த் தனது) சிகரத்தின்மீது கொண்டு ஒளிவிடுகின்ற இரத்தினங்கள் பதித்த ஆசனமொன்றில் (இருந்து) விளங்கினாற்போல, மிகுதியான சயத்தையுடையவனும் இலங்காபுரியிலுள்ளார்க்கு அரசனுமாகிய விபீடணன், (தனது) உறவினராகிய அரக்கர்கள் (மகிழ்ச்சியால்) ஆரவாரஞ்செய்து உற்சாகமடையப் பெரிய சிங்காசனத்தில் (முடிசூடிவீற்றிருந்து) விளங்கினான்; (எ - று.)

உவமையணி. கரிய குன்று-கருநிறத்தையும் பெருவடிவையும் வலிமையையுமுடைய விபீடணனுக்கும், சூரியன்-மிகவிளங்குகிற கிரீடத்துக்கும் உவமை. கதிர் - சூரியனுக்குச் சினையாகுபெயர். [3]அறமார்த்தெழ என்றபாடத்திற்கு - இராவணன்காலத்தில் வலியழிந்து ஒடுங்கிக்கிடந்த தருமம் தருமாத்துமாவான விபீடணன் முடிசூடியமைபற்றி மகிழ்ச்சிகொண்டு ஆரவாரத்தோடு தலையெடுக்க என்று பொருள்படும். பி - ம்:—[1]சூட்டியோர், சூடியே. [2]வேந்தனவ், வேந்தென. [3]அமரார்த்தெழ. (3927)

8.—தேவர்கள் முதலியோர் மலர்மாரிசொரிதலும், வாழ்த்தலும்.

தேவர் பூமழை [1]சித்தர் முதலினோர்
மேவு காதல் விரைமலர் [2]வேறிலா
மூவ ரோடு முனிவர்மற் றியாவரும்
நாவி னாசி நறைமலர் தூவினார்.

(இ - ள்.) (சுவர்க்கலோகத்தில் வசிக்கின்ற) தேவர்கள் (கற்பக)மலர் மாரியையும், சித்தர்முதலானவர்கள் மிக்க அன்போடு வாசனையுடைய (பலவகைப்) புஷ்பங்களையும், (தம்மில் ஒருவர்க்கு ஒருவர்) மாறுபாடில்லாத திரிமூர்த்திகளுடன் முனிவர்களும் மற்றும் (வேதியர் முதலியோர்) எல்லோரும் (தமது) நாவினாற் கூறும் ஆசீர்வசனங்களாகிய நல்லமலர்களையும் (விபீடணன்மீது) சொரிந்தார்கள்; (எ - று.)

சித்தர் முதலியோர்-வித்தியாதரர், யக்ஷர், கந்தர்வர், கருடர், கின்னரர், கிம்புருஷர், சாரணர் முதலிய பதினெட்டுத் தேவகணங்களின்பாற் பட்டவர். ஸித்தர் - யோகசித்திபெற்றவர். படைப்பு அளிப்பு அழிப்புத் தொழிற்களிலும் மற்றும் பல காரியங்களிலும் திரிமூர்த்திகள் தம்மில் மாறுகொள்ளாது ஒற்றுமையுடையராயிருத்தலால், 'வேறிலாமூவர்' என்றார். நறை=நறுமை; 'ஐ' விகுதிபெற்ற பண்புப்பெயர். மங்கலவாழ்த்தாக இனியமொழிகளை விபீடணன்பொருட்டு வெளியிடுதல், மென்மலர்களைச்சொரிதலாக வருணிக்கப்பட்டது.

இனி, இச்செய்யுளுக்கு - பதினெட்டுத் தேவகணங்களுள் ஒரு திறத்தாரான தேவர்கள் தாமே கற்பகவிருக்ஷங்களின் மலர்களெல்லாவற்றையும் எடுத்துச் சொரிந்துவிட்டதனால் மற்றையோரான சித்தர்முதலானவர்கள் தங்கட்கு வேறுமலர் கிடையாமையால்

திரிமூர்த்திகளோடும் முனிவர்களோடும் மற்றும் வேதியர் முதலிய அனைவரோடுங் கூடி ஆசிர்வசனங்களாகிய நறுமலர்களைத் தூவினர்களென்று உரைப்பாரும் உளர். முந்தினபொருளில், இலா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இப்பொருளில், எதிர்மறை வினையெச்சம். பி - ம்:—[1]சிந்திச்செறிந்துற. [2]வேறிலார். (3928)

9.—இரண்டுகவிகள்—முடிசூட்டப்பெற்ற விபீடணன் இராமபிரானைத் தொழ வருதலைக் கூறும்.

முடி[1]புனைந்த நிருதர் முதலவன்
அடி[2]வணங்கி யிளவலை [3]யாண்டையந்
நெடிய [4]காதலி னோற்[5]குயர் [6]நீர்மைசெய்து
இடிகொள் [7]சொல்ல னவற்கி தியம்பினான்.

(இ - ள்.) (இவ்வாறு) மகுடாபிஷேகம் பெற்ற அரக்கர் தலைவனானவிபீடணன், (இராமனது) திருத்தம்பியான இலக்குமணனைத் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து அப்பொழுது [அல்லது அவ்விடத்தில்] மிக்க அன்பையுடைய அவ்விளையபெருமானுக்குச் சிறந்தஉபசாரங்களைச்செய்து இடிமுழக்கம்போலக் கம்பீரமாகப் பேசுங் குரலையுடையவனும் அவ்விலக்குமணனை நோக்கி இவ்வார்த்தையைச் சொல்பவனுமானான்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

உயர் நீர்மை-உயர்ந்தசிறப்பு. சொல்லன்-குறிப்புமுற்றெச்சம். இனி, 'இடிகொள்சொல்லன்' என்றது, இராக்கதனுக்கு இயற்கை குறிக்கும் பெயரெனினுமாம். பி-ம்:-[1]புனைந்தங்கிருந்த. [2]வணங்க. [3]யாண்டையின், ஆண்டுற, யாண்டையான். [4]காதலினோர்க்கு. [5]உறு. [6]நீர்மையின், நீர்மைசேர். [7]சொல்லனலற்கியம்பினன், சொல்லற்கினிதினியம்பினான். (3929)

10. விலங்கல்நாண [1]மிடைதரு தோளினாய்
இலங்கை மாநகர் [2]யான்வரு மெல்லைநீ
[3]கலங்க லாநெடுங் [5]காவ லியற்றெனா
அலங்கல் வீர னடியிணை யெய்தினான்.

(இ-ள்.) 'மலை (ஒப்பாகமாட்டாது) வெட்கமடையும்படி (பருமையும் வலிமையும்) மிக்க தோள்களையுடையவனே! யான் (இராமபிரானிடஞ் சென்று) இலங்கைமாநகரத்திற்கு மீண்டுவருமளவும் நீ சோர்வுஉண்டாகாதபடி பெரிய (இந்நகரத்தின்) அரசாட்சியைச் செய்தருள்வாய்' என்று சொல்லி வேண்டி அவ்விலக்குமணனிடம் தன் அரசாட்சியை ஒப்பித்து, (விபீடணன்),—வெற்றிமாலையையுடைய மகாவீரனான ஸ்ரீராமபிரானது உபயதிருவடியினிடம் வந்து சேர்ந்தான்; (எ - று.)

விலங்கல் - ஊர்க்கு ஒருபுறமாக விலகியிருப்பதெனப் பொருள்படுங் காரணக்குறி; ("இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும், வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" என்ற திருக்குறளில் 'வாய்ந்த மலை' என்றவிடத்துப் பரிமேலழகர், இடையதன்றி ஒருபுடைய

தாதலை மலைக்கு வாய்ப்பாகக்கூறியமை உணர்க) பி - ம்:—விலங்கரும். [2]சூழ்வரும். [3]கலங்கலாய். [4]காதலினாற்றெறா. இச்செய்யுளின் பின் ஒருபிரதியிற் காணப்படும் பாடல் வருமாறு:—

வீர மாமுடி சூடிய வீடணன்
வீர ராகவன் றாளிணை மேவிட
ஆர மார்பொ டழுந்திடப் புல்லினான்
ஆரி னாலு மறிவரு மாதியான். (3930)

11.—சுக்கிரீவனோடும் அங்கதனோடும் வந்துவணங்கிய விபீடணனைத்தழுவி இராமன் ஒன்று சொல்லத் தொடங்குதல்.

குரக்கு வீர னரசிளங் கோளரி
அரக்கர் கோமக னோடடி [1]தாழ்தலும்
பொருக்கெ னப்புகல் [2]புக்கவற் புல்லியத்
திருக்கொண் மார்ப னினையன செப்பினான்.

(இ-ள்.) இராக்கதராசனான விபீடணன், வானரர்களிற் சிறந்த வீரனாய் மகாராசனென்று பெயர்பெற்ற சுக்கிரீவனோடும் (வானரர்களுக்கு) இளவரசனான வலியசிங்கம் போன்ற அங்கதனோடும் (இராமபிரானது) திருவடிகளில் வணங்கிய வளவிலே,- திருமகளைக் கொண்ட மார்பையுடைய அந்த ஸ்ரீராமன்,— விரைவாக (ஓடிவந்து முன்பு தன்னைச்) சரணமடைந்தவனான விபீடணனை (எடுத்து)த் தழுவிக்கொண்டு இச்சொற்களைச் சொல்பவனானான்; (எ - று.)— அவற்றை அடுத்த கவியிற் காண்க.

'ஓடு' என்ற மூன்றனுருபு, 'வீரன்' என்பதனோடும், 'கோளரி' என்பதனோடும் பிரித்துக் கூட்டப்பட்டது. தீப்பட்டவீட்டினின்று விரைந்து வெளிப்படுதல்போல நீதிநெறியில்லாத இராவணனது அரண்மனையை விட்டு முன்பு விரைவாக வெளிவந்தமை தோன்ற, 'பொருக்கெனப்புகல்புக்கவன்' என்றார். பொருக்கென - விரைவுக் குறிப்பிடைச்சொல். புகல் - சரணமடையுமிடம். தொழிலாகு பெயர். திருக்கொள்மார்பன் - திருமகள் வீற்றிருக்கும் மார்பினனான திருமால்; இனி, திரு-ஜயலக்ஷ்மியுமாம். பி-ம்:—[1]தாழ்தரப், தாழலும். [2]புக்கனர் புல்லிய, புக்கவனைத்தழீஇத்.

இதன்பின் ஒருபாடல் ஒருபிரதியிற் காணப்படுவது வருமாறு:-

ஆதி நாளி லருண்முடி நின்னதென்று
ஓதி னேனவை யுற்றுள துத்தம
வேத பாரகர் வேறுளர் யாவரும்
ஓது நீதி யொழுக்கி னொழுக்குவாய். (3931)

12.—இராமபிரான் விபீடணனுக்கு நீதியை உபதேசித்தல்.

[1]உரிமை [2]மூவுல குந்தொழ [3]வும்பர்தம்
பெருமை [4]நீதி யறன்வழிப் பேர்கிலாது

'இருமை யேயர சாளுதி யீறிலாத்
தரும சீலவென் றுன்மறை தந்துளான்.

(இ - ள்.) நான்குவேதங்களை (ஆதியில்) வெளியிட்டருளிய வனுன திருமாலினது திருவவதாரமாகிய ஸ்ரீராமன்,—(விபீடணனை நோக்கி), 'அழிவில்லாத அறவொழுக்கத்தையுடையவனே! மூன்று உலகத்திலுள்ளாரும் (நன்குமதித்து) வணங்கத் தேவர்களின் மகிமைக்கும் (இராச) நீதிமுறைமைக்கும் தருமமார்க்கத்துக்கும் உரிய நிலையில் நின்று, இம்மை மறுமைப்பயன்களான புகழும் புண்ணியமும் மாறுது நிலைநிற்கும்படி (உனக்கு உரிய இலங்காராச்சியத்தை) அரசாளுவாய்' என்று கூறினுன்; (எ - று.)

உனது அண்ணனுன இராவணன் தேவர்களின் மகிமைக்கும் இராச நீதிக்கும் சாஸ்திரதருமத்துக்கும் மாறுன வழியில் நின்று புகழ் புண்ணியங்களையிழந்து பழிபாவங்களைப் பெற்றுத் திரிலோகாதிபத்தியத்தைக் கைக்கொள்ள முயன்முற்போலன்றி நீ தேவர்களைக் கொண்டாடி வந்தனை வழிபாடுகள் செய்யும் வேள்விமுதலிய வைதிகச் சடங்குகள் ஆங்காங்குத் தடையறநிகழும்படி இராசநீதியும் தருமமார்க்கமும் தவறுமல் நல்லொழுக்கத்தில் நின்று புகழ் புண்ணியங்களைப் பெற்று இராக்கதராசதானியான இலங்கையை அரசுபுரிவாயென்றனனென்பதாம். விபீடணன் மரணமின்றிச் சிரஞ்சீவியா யிருக்கும்படி பிரமனிடத்தினின்று வரம்பெற்றவனுதலால், அவனுக்கு 'ஈறிலா' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. பிரமன் துயில்கையில் வேதங்களைக் கவர்ந்து சென்ற சோமகாசுரனைத் தேவர்களின் வேண்டுகோளின்படி திருமால் மத்ஸ்யாவதாரஞ்செய்து கொன்றபின்பு தான் மீட்டுக் கொணர்ந்த அவ்வேதங்களைப் பிரமனுக்கு ஹம்ஸரூபியாயிருந்து கூறியருளினனென்பது, 'மறைதந்துளான்' என்பதிலுள்ள கதை. இனி, படைப்புக் காலத்தில் பிரமனைப் படைத்ததும் திருமால் அந்தப் பிரமனுக்குப் பழையபடியே உலகையமைத்தற்கு வேதங்களையும் தந்தானுதலால், 'மறைதந்துளான்' என்றது எனினுமாம்: "யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம், யஸ்மை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி' என்றது காண்க. அன்றி, எவராலும் ஒரு காலத்திலும் இயற்றப்படாமல் முக்காலத்திலும் ஒருபடிப்பட நித்தியமாயிருத்தலால் அபௌருஷேயமென்று பிரசித்திபெற்றுச் செய்யாமொழியென்று கூறப்படுகிற வேதங்களைத் திருமால் உண்டாக்கினனென்று உரைத்தற்கு இடமின்மை உணர்க. தொழ அரசாளுதி என இயையும். புதிய அரசாட்சிபெற்ருேர்க்கு நீதிகளைப் பெரியோருபதேசித்தல் முறைமையாம். உரிமைபேர்கிலாது, இருமைபேர்கிலாதுஎன இயையும். பி-ம்:—[1] உருமை. [2] மூன்று. [3] ஓங்குமுன். [4] இருமையும், இருமையோய். (3932)

13.—இராமன் விபீடணனுக்கு நீதிகூறியபின் அநுமானை நோக்குதல்.

பன்னு நீதிகள் பற்பல கூறிமற்று
[1]உன்னு டைத்தம ரோடுயர் [2]கீர்த்தியோய்

மன்னி[3] வாழ்கென் றுரைத்தடன் மாருதி
தன்னை நோக்கினன் [4]தாயர்சொல் நோக்கினான்.

(இ-ள்) (தனது மாற்றாந்) தாயான கைகேயியினது சொல்லைப் பரிபாலித்தவனான இராமபிரான்,—ஆராய்ந்துதேர்ந்தெடுத்து பல பலநீதிகளை (இவ்வாறு) சொல்லி மற்றும் (வீபீடணனை நோக்கி), 'சிறந்தபுகழையுடையவனே! உன்னுடைய இனத்தாருடன் சேர்ந்து வாழ்வாயாக' என்று உரைத்து, வலிமையையுடைய அநுமானை நோக்கினான்; (எ-று.)

தனது தந்தையான தசரதன் தனதுசிறியதாயானகைகேயிக்கு முன்பு கொடுத்திருந்த இரண்டு வரங்களை நிறைவேற்றுதற்குக் கட்டுப்பட்டவனாய்நிற்கிற நிலையில்,இராமன் அக்கைகேயி தன்னை நோக்கிச் சொன்ன சொல்லின்படி இராச்சியத்தைவிட்டு வனவாசஞ் சென்றனனாதலால், அவன் 'தாயர் சொல்நோக்கினான்' எனப்பட்டான். பி - ம்:—[1]உன்னுடைத்தவரோடு, உன்னுடைந் தவரோடு, [2]கீர்த்தியின், கீர்த்தியே. [3]வாழ்கவரைத்திடம், வாழ்கென்றுரைத்தனன். [4]தாய்சொலை, தாய்சொலல். இச்செய்யுளில் விபீடணனபிடேகப்படலம் முடிய அடுத்தபாடல்முதல் *பிராட்டி திருவடிதொழுதபடலம் சிலபிரதிகளில் தொடங்குகின்றது.

வஞ்ச கக்கொடி யான்முனம் வவ்விடப்
பஞ்ச ரக்கிளி யென்னப் பதைப்பவள்
நெஞ்சி னிற்றுயர் நீக்கிய தென்றுநீ
அஞ்ச னைப்புதல் வாவருள் வாயென்றான்"

என்று ஒருபாடல் "பன்னுநீதி" என்றதன்பின் ஒருபிரதியிற் காணப்படுகின்றது. இந்தப்பிரதியில் இப்பாடலின் பின் சீதாபிராட்டி திருவடி தொழுதபடலம் தொடங்குகின்றது. (3933)

14.—இராமன் அநுமானிடம் சீதைக்குச் செய்திகூறி யனுப்புதல்.

[1]இப்பு றத்தின வெய்துறு காலையில்
[2]அப்பு றத்ததை [3]யுன்னி யனுமனைத்
துப்[4]பு றச்செய்ய வாய்[5]மணித் தோகைபால்
செப்பு றிப்[6]படி போயெனச் செப்பினான்.

(இ - ள்.) இப் புறத்து இத்தன்மையனவான செயல்கள் நிகழ்ந்த பொழுது, (இராமன்), இனிநடக்கவேண்டியதை ஆலோசித்து அநுமானை (நோக்கி) 'பவழத்தையொத்த அழகிய சிவந்த வாயையுடைய அழகிய மயில்போன்ற சானகியினிடத்தில் (நீ) சென்று இங்குநடந்த செய்திகளையெல்லாம் சொல்வாய்' என்று சொல்லினான்; (எ - று.)

இன=இன்ன: இராவணவதம், முடிசூட்டப்பெற்ற வீபீடணனுக்கு இராமன் நீதிபோதித்தல் முதலியன. பத்துப்பாட்டுள்

---

* பிராட்டிதிருவடி தொழுபடலம் என்று சிலபிரதிகள்.

பெரும்பாணாற்றுப்படையில் "அவ்வாய் வளர்பிறை" என்பதற்கு- 'அழகிய இடத்தையுடைய வளரும்பிறை' என்றும், நெடுநல்வாடையில் "அவ்வித ழவிழ்பதம்" என்பதற்கு 'அழகிய இதழ்கள் விரியுஞ் செவ்வி' என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையெழுதிப் போந்தமைகொண்டு, இங்கு 'அச்செய்ய வாய்' என்பதற்கு - அழகிய சிவந்த வாய்' என்று உரை கூறப்பட்டது. இனி, அகரத்தைச் சுட்டாகக் கொண்டு, 'தோகை' என்பதனோடு இயைத்து, அத்தோகை பால்-அந்தச் சானகியினிடத்து என்று உரைத்தலும் ஒன்று. பி-ம்:—[1] இப்புறத்தின்ன செயலுறும் வேலையில், இப்புறத் தினிதெய்துறுமெல்லையில், இப்புறத்தின்னது...காலையில், இப் புறத்தினசெய்கையிக்காலையென்று. [2] அப்புறத்தினை. [3] உன்னும். [4] உறழ். [5] பெருந். [6] படியோய். (3934)

15.—அநுமான் இராமன்கூறியசெய்தியைச் சீதையினிடம் சொல்லத் தொடங்குதல்.

[1] வணங்கி யந்தமின் மாருதி [2] மாமலர்
[3] அணங்கு [4] சேர்கடி காவுசென் [5] றண்மினான்
உணங்கு கொம்புக் குயிர் [6] தரு நீரெனச்
சுணங்கு தோய்முலை யாட் [7] கிவை [8] சொல்லுவான்.

(இ-ள்.) சிரஞ்சீவியான அநுமான் (இராமனை) வணங்கி(விடை பெற்றுச் சென்று), சிறந்த தாமரைமலரில்வசிக்கும் பெண் தெய்வமான இலக்குமியினம்சமாகிய சீதாபிராட்டி (சிறை) யிருந்த காவலுள்ள அசோகவனத்தையடைந்து, வாட்டமுற்ற பூங்கொம்புக்கு (மீளத்) தழைத்தற்குக் காரணமான நீர்போலச் சுணங்கு பொருந்திய முலையை யுடையளான அப்பிராட்டிக்கு (நடந்த) இச்செயல் களைச் சொலவானாயினன்; (எ-று.)—அநுமான்கூறியதை 17-ஆங் கவிமுதல் மூன்றுகவிகளிற் காண்க. பி-ம்:—[1] வணங்கியே யின்ற, வணங்கியேஎய்ய, வணங்கியெய்கிய, வணங்கியெய்திய. [2] வாரணம். [3] இணங்கு. [4] தன், தண். [5] எய்தினான். [6] பெறு, வரு. [7] அவை. [8] சொல்லினான். (3935)

16.—அநுமான் களிப்புப்பாராட்டிக்கொண்டு சீதையின் முன்னிலையிற் பாடி ஆடுதல்.

பாடி னான் [1] திரு நாமங்கள் பன்முறை
கூடு [2] சாரியிற் குப்புற்றுக் கூத்தநின் று
ஆடி னங்கை யிரண்டு [3] மலங்குறச்
சூடி நின்றனன் குன்றன்ன தோளினான்.

(இ-ள்.) மலைபோன்ற தோள்களையுடையவனான அநுமான்,— (இராமபிரானுடைய)திருப்பெயர்களைப் பலமுறைசொல்லிப் பாடிக் கொண்டும், பொருந்திய வலசாரி இடசாரிமுறையிலே குதித்துத் திரிந்துகொண்டும், (ஓரிடத்தில்) நின்று ஆனந்ததாண்டவஞ்

செய்துகொண்டும், அழகிய கைகளிரண்டையும் நடுக்கமடையக் கூப்பித் தலைமேல் வைத்துக்கொண்டும், (பிராட்டியின் எதிரிலே) நின்றான்: (எ - று.)—இது செய்திசொல்லிய அநுமான் நிலையை மொழிந்தது.

அலங்குற - மிகுதியாக நடுங்க: களிப்பின் மிகுதியால் உடம்பு நடுங்குதல், இயல்பு. இனி அலங்குற என்பதற்கு - ஒளிசெய்ய என்றும்,மலர்போலப் பொருந்த என்றும் உரைப்பினும் அமையும். தலைமேற் கைகளிரண்டையுங் கூப்பிவைத்துத் தொழுதல்,த்ரியங்க நமஸ்காரமெனப்படும் பி-ம்:-[1] மெய்ப்படித்தலமண்டலம்.[2] சாரிகை கூத்துக்குனித்துநின்று, சாரிகைக்கொட்டிக்குனித்துநின்று, சாரியிற்கூட்டிக்குனித்து நின்று. [3] இணங்குற. இச்செய்யுள் சிலபிரதியில் "ஏழைசோபனம்" (17) என்றதன்பின் உள்ளது. (3936)

17.—அநுமான் சோபனம்பாடிக்கொண்டு செய்திகூறியதை இதுமுதல் மூன்றுகவிகளிற் கூறுகின்றார்.

ஏழை சோபன மேந்திழை சோபனம்
வாழி சோபன [1]மங்கல சோபனம்
[2]ஆழி யான வரக்கனை [3]யாரியச்
சூழி யானை [4]துகைத்தது சோபனம்.

(இ - ள்.) (மகளிர்க்குஉரிய குணமாகிய) பேதைமையுடையாளே! சோபனம்:தரித்த ஆபரணங்களையுடையாளே! சோபனம்: வாழ்வாயாக: சோபனம்: மிக்க மங்களம்: (தீக்குணங்கட்கும் தீச்செயல்கட்டும்) வரம்பெல்லையான இராக்கதனாகிய இராவணனை நன்குமதிக்கத்தக்கவனான இராமபிரானாகிய முகபடாத்தையுடைய பட்டத்துயானை (காலினால்) துகைத்து அழித்துவிட்டது; சோபனம்; (எ - று.)

சோபனம் என்பதற்கு - (நினக்கு) மங்களமுண்டாயிற்று என்றும், (நினக்கு) மங்கலச்செய்தி (கூறுகின்றேன்யான்) என்றும் கருத்து. மங்கலசோபனம் என்பது - ஒருபொருட்பன்மொழி. ஏழை-ஏழைமையுடையாள்;பண்பாகுபெயர். ஏழைமையென்பது-மகளிர்க்கு உரிய குணம் பலவற்றுள் ஒன்றாகிய 'மடமை'என்பதன் பரியாயப்பெயராய் நின்றது: இனி, சிலகாலமாக எளிமையடைந்திருந்தமையைக் குறித்து 'ஏழை' என விளித்ததாகவுங் கொள்ளலாம். 'ஏழை-இப்போது அணிகலம் பூணாதவள்: ஏந்திழை - இனி, ஆபரணங்களைப் பூணப்போகின்றவள்' என்று கொள்வாருமுளர். ஆழி ஆன - கடல்போன்ற எனினுமாம். அரக்கனை ஆரியச்சூழி யானை துகைத்தது - உருவகம். வலிமை, நடை, மேன்மையான தோற்றம் என்பனபற்றி, இராமனை யானையென்றார். பி-ம்:—[1] மங்கலஞ். [2] ஆழியானைய. [3] அண்ணலாஞ். [4] தொலைத்தது. இங்கே ஒரு பிரதியிற் சிலபாடல்கள் காணப்படுகின்றன: அவை வருமாறு:—

1. மங்கை சோபன மாமயில் சோபனம்
பங்க யத்துறை பாவையே சோபனம்
மங்குல் வாளி யரக்கனை யாரியச்
சிங்க மின்று சிதைத்தது சோபனம்.

2. வல்லி சோபன மாதரே சோபனம்
சொல்லி னல்லநற் றேகையே சோபனம்
அல்லி ளுளி யரக்கனை யாரிய
வல்லி யங்கள் வதைத்தது சோபனம்.

3. அன்னை சோபன மாயிழை சோபனம்
மின்னி னுண்ணிடை மெல்லியல் சோபனம்
அன்ன வாளி னரக்கனை யாரிய
மன்ன னின்று வதைத்தது சோபனம்.

4. நாறு பூங்குழ லுயகி சோபனம்
நாறு பூங்குழ லுரியே சோபனம்
ஆறு வாளி யரக்கனை யாரிய
வேறு மின்று மெரித்தது சோபனம்.

5. சொன்ன சோபனந் தோகை செவிபுக
அன்ன முன்னி யனுமனை நோக்கியே
அன்ன போரி லறிந்துள தையரீ
இன்ன மின்ன மியம்புதி யாலென்றாள். (3937)

18. தலை[1]கி டந்தன தாரணி தாங்கிய
மலை[2]கி டந்தன போன்மணித் [3]தோன்றிரை
அலை[4]கி டந்தென வாழி கிடந்தன
நிலை[5]கி டந்த வுடல் [6]நிலத் தேயென்றான்.

(இ - ள்.) '(அந்த இராவணனுடைய) தலைகள் பூமியைத் தாங்குகிற மலைகள் (விழுந்து) கிடந்தனபோலக் (கீழேவிழுந்து) கிடந்தன; இரத்தினுபரணங்களையணிந்த (அவனுடைய) தோள் வரிசைகள் கடலிற்பொருந்தினவாகிய அலைகள்போலக் கீழ் விழுந்து புரண்டன; (அவனுடைய) உடம்பு தரையிலே (விழுந்து) அசைவின்றிக்கிடந்தது' என்று (அநுமான் சீதைக்குச்) செய்தி கூறினான்; (எ - று.)

பருத்தவடிவத்தோடு நிலத்திற்கிடத்தல்பற்றித் தலைக்கு மலையையும், நீண்டவடிவத்தோடும் புண்ணீர்ப்பெருக்கோடும் வரிசை வரிசையாய்ப் புரளுதல்பற்றித் தோளுக்குக் கடலின் அலையையும் உவமைகூறினார். மலைகள் பூமியின்கீழ் நெடுந்தூரமளவும் வேரூன்றிநின்று பூமியைத் தாங்குதல்பற்றி 'பூதரம்' என்று ஒருபெயர் பெறுதலால், 'தாரணிதாங்கிய மலை' எனப்பட்டது. தாரணி - தரணியென்பதன் விகாரம். மணி - அழகும், உறுதியுமாம். 'கிடந்தன' என்ற சொல் மூன்றனுள், முதலதும், மூன்றாவதும்-முற்று; மற்றையது - பெயர். கிடந்த - கிடந்தது என்பதன் விகாரம். பி - ம்:—[1]கிடந்ததும். [2]கிடந்தது. [3]தோளெனும். [4]கிடந்தன. [5]கிடந்தது''வாளி, கிடந்ததுடல். [6]அிலத்து. (3938)

19. அன்ன [1]லாணையின் [2]வீடண ஞமறக்
[3]கன்னி லாதவன் [4]காதல் தொடர்தலால்
பெண்ண லாது பிழைத்[5]துள தாகுமென்று
என்ன லாவதோர் பே[6]ரில தாலென்றான்.

(இ-ள்.) 'பெருமையிற்சிறந்தவனான ஸ்ரீராமபிரானது கட்டளையினாலும் விபீடணனாகிய கொடுந்தன்மையுடையனல்லாதவனது அன்பு இடைவிடாமலிருந்ததனாலும் பெண்பால் ஒழியப் பிழைத்துள்ளதென்று நினைக்கத்தக்கபேர் ஒன்றும் (இலங்கையில்) இல்லையாயிற்று' என்றும் (அநுமான் சீதைக்குச் செய்தி) கூறினான்; (எ - று.)

இலங்கையில் மகளிர்பிழைத்திருத்தல் உண்டேயன்றி ஆடவரில் பிழைத்துள்ளபேர் எவரும்இல்லை யென்னும்படி அரக்கரனைவரும் அழிக்கப்பட்டனரென்பது,பின்னிரண்டடியின் கருத்து. அந்த அரக்கரழிவுக்குக் காரணம், இராமபிரானது சங்கல்பமும், அதற்குஏற்ப இலங்கையினின்று வந்து சரணமடைந்த விபீடணன் அவ்விடத்து மருமங்களையெல்லாம் உரிய சமயங்களில் எடுத்துச்சொல்லி அன்போடு துணைபுரிந்தமையு மாதலால், அவை, முன்னிரண்டடியிற் குறிக்கப்பட்டன. மறக்கண்ணிலாதவன் - தருமாத்துமா என்றபடி. பி - ம்:—[1]ஆணையவ். [2]வீடணனுமகற். [3]கண்ணனனவன், கண்ணலாதவன். [4]காசெருடந்தாரலாற், காசெருடர்ந்தானலாற். [5]உள. [6]இலதாம். (3939)

20.—அச்செய்தி கேட்டவுடனே பிராட்டியினுடம்பு பூரித்தல்.

ஒருக லைத்[1]தனி [2]யொண்மதி நாளொடும்
வரு[3]க லைக்குள் [4]வளர்வது [5]மானுறப்
பொரு[6]க லைக்குலம் [7]பூத்தது [8]போன்றனள்
பருக லுற்ற வமுது பயந்தநாள்.

(இ - ள்.) பானஞ்செய்தற்கு உரிய அமிருதம்போன்ற அவ்வசனங்களை (அநுமான் சீதைக்கு)ச் சொன்னபொழுது,—(அவள்),—ஒற்றைக்கலையொன்றையேயுடைய ஒள்ளிய பிறைச்சந்திரன் நாள்தோறும் (ஒவ்வொன்றாத்) தோன்றுகின்ற கலையில் வளர்வதாகிய மான் பொருந்துதலால் (அங்ஙனங் களங்கமாகிய மான் தோன்றாமலிருக்கும்பொருட்டு)நெருங்கிய அக்கலைகளின் தொகுதியாவும் (ஒருங்கே) நிரம்பப்பெற்றதைப் போன்றனள்; (எ - று.)

பருகலுற்ற அமுது பயந்த நாள் - சுபசெய்தியைக்குறித்த இன்சொற்களாகிய திவ்வியாமிருதத்தை அநுமான் இவ்வாறு பிராட்டிக்குத் தந்தபொழுது என்க. முன்பு விரகதாபத்தாலும் மற்றும்பலவகைச் சோகத்தாலும் நாளடைவிலே மிகவும் மெலிந்துகிடந்த பிராட்டியின் அவயவங்கள்,அநுமான் கூறிய சுபவசனத்தைச் செவியுற்று உணர்ந்தவளவிலே, சடக்கென்று பூரிப்படைந்தன; அதனால், ஒற்றைக்கலையுள்ள பிறைச்சந்திரன்

நாளடைவிலன்றிச் சடக்கென்று மற்றைக்கலைகள் பதினைந்தும் ஒருங்கே நிரம்பப்பெற்றாற்போன்றன வென்றார். பாற்கடல் கடைந்த காலத்தில் தேவாமிருதத்துடனே ஒற்றைக்கலையுடைய தாய்த்தோன்றிய பிறைச்சந்திரன்,பின்புநாளடைவில் தன்கலைகள் வளர்ந்துவருதலையும், தன்வடிவத்திற் களங்கம் நன்குவிளங்குதலையுங் கண்டு 'தனக்கு இக்களங்கம்நேர்தற்கு ஏது கலைகள் ஒருங்கே வளராது நாள்தோறும்வளர்தலாகிய குறையே' என்று கருதி, அக்களங்கத்தை யொழித்தற்பொருட்டு ஒருங்கு கலைகள் வளரப் பெற்றாற்போன்றன வெனக்கற்பித்துக்கூறியவாறும்: தற்குறிப் பேற்றவணி. [8]போன்றன என்றபாடத்தைக்கொண்டு - பிராட்டியின் திருமேனியிற் பூரித்த அவயவங்கள் தனித்தனி களங்கமில்லாத பூர்ணசந்திரன்போலு மென்றலுமொன்று. கலை - சந்திரன் பங்கு. பி - ம்:—[1]கவின். [2]வெண். [3]கலைக்கு. [4]வளர்ந்தது, வருவது, வருமறு. [5]மாறுறு, மாறுறப். [6]வரை. [7]பூத்தன. [8]பருகலுற்றவமுதன்ன பான்மையாள். (3940)

21.—அகத்துமகிழ்ச்சிதோன்றப் பிராட்டியின்கொங்கை பருத்தல்.

ஆம்பல் வாயு முகமு [1]மலர்ந்திடத்
தேம்பு நுண்ணிடை [2]தேயத் திரண்முலை
ஏம்ப[3]லாசைக் இரட்டி[4]வந் தெய்தினுள்
பாம்பு [5]கான்ற பனிமதிப் [6]பான்மையாள்.

(இ - ள்.) (இராகுகேதுக்களென்ற) பாம்பினாலுட்கொள்ளப் பெற்று வெளிப்பட்ட குளிர்ந்த சந்திரன்போன்ற தன்மையை யுடையவளான சீதை, ஆம்பல்மலரையொத்த வாயும் முகமும் (மகிழ்ச்சிக்கு அறிகுறியாக) அலர்ந்திடாநிற்க, வாடுகின்ற நுண்ணிய இடை பின்னும்வருந்தும்படி திரண்ட முலை மகிழ்ச்சியோடு தோன்றிய காதலினால் இரட்டிப்பாகவந்து பொருந்தப்பெற்றாள்; (எ - று.)—துரதிருஷ்டப்பீடை நீங்கிப் பொலிகின்ற சீதைக்கு, பாம்புகான்ற பனிமதி ஏற்ற உவமையாம். பி - ம்:—[1]அலர்ந்தன. [2]நோவத். [3]ஆசைக்கிடாம். [4]விசைத்திடப். [5]பாவையாள். 'கானற்' என்றும் படிக்கலாம். (3941)

22.—பிராட்டியின் உவகைப்பூரிப்பு முதலியவற்றின் வருணனை.

[1]புந்தி யோங்கு முவகைப் பொருமலோ
உந்தி யோங்கு [2]மொளிவளைத் [3]தோள்கொலோ
[4]சிந்தி யோடு [5]கலையுடைத் தேர்கொலோ
முந்தி[6]யோங்கின யாவை [7]முலைகொலோ.

(இ-ள்.) (அந்தப்பிராட்டியின்) மனத்திலோங்குகின்ற உவகையினாலுண்டான பூரிப்போ,(உடற்பூரித்தலால்) தள்ளப்பட்டு அகல்கின்ற ஒளிபொருந்திய வளையலையணிந்த தோள்களோ, அவிழ்ந்து அப்பாற்போய்விடுகின்ற ஆடையணிந்த அல்குலோ, தனங்களோ முற்பட்டு ஓங்கினவை யாவையோ? (எ - று.)

தேர்=தேர்த்தட்டு: அல்குலை உவமையினாலேயே கூறினார். உவகைமிகுதியில் அரையிலாடை நில்லாதென்க. பி - ம்:—[1]புந்தியோபோர், புந்தியோகல். [2]ஒளிர். [3]தோள்களோ. [4]சிந்தையோடு, சிந்தியோங்கு. [5]கடையுடைத். [6]ஓங்கியது. [7]முலைகளோ. (3942)

23.—பிராட்டியினிடம் தோன்றிய மகிழ்ச்சியின் நிலை.

குனித்த கோலப் புருவங்கள் கொம்மைவேர்
பனித்த கொங்கை மழலைப் [1]பணிமொழி
[2]நுனித்த [3]தொன்று நுவல்வதொன் றாயினள்
[4]கனித்த வின்களி [5]கள்ளினிற் காட்டுமோ.

(இ-ள்.) அழகியபுருவங்கள் வளையப்பெற்றன; கொங்கைகள் பருமையோடு வெயர்வை யரும்பப்பெற்றன; கொச்சையாகச்சொல்லப்படுகின்ற சொற்களையுடைய அச்சீதை, கூர்ந்து ஆலோசித்தது ஒன்றும், சொல்லுவதுமற்றொன்றுமாகப் பெற்றாள்; முதிர்ந்த இனியமகிழ்ச்சி கள்ளைப்போன்று தோன்றுமோ? (எ - று.)

புருவங்குனித்தல் முதலியன கள்ளுண்டார்க்கும் நிகழ்வனவாதலால், பிராட்டியினிடத்து அவை நிகழ்ந்ததுகண்டு 'களி கள்ளினிற்காட்டுமோ' என்றார் பி-ம்:—[1]பனி. [2]நுனிப்பது. [3]ஒன்றாய். [4]கனிக்கவின். [5]கள்ளுண்டு காட்டுவாள், கள்ளினைக்காட்டுமால், கள்ளென்று காட்டுமால், கண்ணின்று காட்டுமால். (3943)

24.—பிராட்டி களிப்புமிகுதியால் ஒன்றுஞ்சொல்லமாட்டாது வாளாவிருத்தல்.

அனைய ளாகி யனுமனை நோக்கினள்
இனைய தின்ன தியம்புவ தென்பதோர்
[1]நினைவி லாது நெடிதிருந் தாள்நெடு
மனையின்[2]மாசு துடைத்த மனத்தினள்.

(இ-ள்.) பெருமையையுடைய இல்லறவாழ்க்கையினதுகுற்றத்தைப் போக்கிய மனநிலையையுடையவளான சீதை,—அத்தன்மையளாய் [உள்ளமும் உடலும் பூரித்தவளாய்] அனுமனைப் பார்த்து, இத்தன்மையான இன்னவார்த்தையைச் சொல்வதென்ற ஓர் எண்ணம் தோன்றாமலே நெடும்பொழுது சும்மா இருந்தாள்; (எ - று.)

'நெடுமனையின் மாசு துடைத்த மனத்தினள்' என்றதன் கருத்து:-'இல்லறம் துறவறம் என்ற இருவகையறத்துள் இல்லறம் சிறந்ததோ? துறவறம்சிறந்ததோ?' என்று ஆராயுமிடத்து, இல்லறவாழ்வில் வாழ்க்கைத்துணைவியரானமகளிர் சிறுபான்மை கற்பழிவு நாணமின்மை அடங்காமை முதலிய குணக்கேடு உடையராதல் காணப்படுதலால், அத்தன்மை இல்லறவாழ்க்கைக்கே ஒரு களங்கமாய், 'மனைவி மாண்புடையளாயின் இல்லறம் சிறந்தது; இல்லையாயின், துறவறமேசிறந்தது' என்றுவிகற்பித்துச் சொல்லும்படி ஆகிறதன்றோ? அப்படிப்பட்ட அபவாதம் முற்றும் ஒழியும்படி, பிராட்டி, தான் பிறன்வசப்பட்டுப் பத்துமாச காலம்

அவனது நகரத்திற் பலவகைத்துன்பங்கட்கும் இடமாகச் சிறையிருப்பிலிருக்கையிலும் கற்புநிலையைக் கைவிடாமையாகிய மனநிறையையுடையளாயின ளென்பதாம். மனை - வீடு: இல்வாழ்க்கைக்கு ஆகுபெயர். ஒருபெண்ணினுடைய நடத்தை தனது நன்மை தீமைகளால் தான் பிறந்த குடும்பத்துக்கும் புகுந்தகுடும்பத்துக்கும் புகழையும் பழியையும் முறையே உண்டாக்கக்கூடுமே: அங்ஙனம் தான் வளர்ந்தகுடியாகிய சனககுலத்துக்கும், புகுந்த குடியாகிய ரகுகுலத்துக்கும், சிறிதும் களங்கமுண்டாகாதபடி மனத்தைக் கற்புநெறியில் நிறுத்திய பிராட்டி யென்றுங் கருத்துக்கொள்ளலாம். மனை - குடி, குலம். பி - ம்:—[1]நினைவிலாமை. [2]மாட்சி. (3944)

25.—அநுமான் பிராட்டியைநோக்கி 'ஒன்றும் சொல்லாததேன்?' என்றல்.

[1]யாதி தற்கொன் [2]றியம்புவ லென்பது
மீது யர்ந்த வுவகையின் விம்மலோ
தூது பொய்க்குமென் றோவெனச் சொல்லினன்
நீதி வித்தக னங்கை [3]நிகழ்த்தினள்.

(இ-ள்.) நியாயமுணர்ந்து அவ்வழியில் நடப்பவனான அநுமான்,—(சீதையை நோக்கி, 'யான் செய்திகூறியதற்கு நீ மறுமாற்றமொன்றுங் கூறாமல் மௌனமாயிருத்தல்),வரம்புகடந்து மேலிட்ட களிப்பின் பூரிப்பினால் 'இம்மொழிக்குஏற்ப என்னமறுமொழி கூறுவேன்?' என்று ஒன்றும் தோன்றாதிருந்தபடியோ? (அன்றி), இத்தூதன் வார்த்தை பொய்யாயிருக்கக்கூடுமென்று எண்ணி, '(இம்மொழிக்கு என்ன மறுமொழி கூறுவேன்?' என்று உபேக்ஷித்து விட்டபடியோ? என்று (விகற்பமாகச்) சொல்லிவினவினான்; மகளிரிற் சிறந்தவளான பிராட்டி (அதற்குஏற்ற மறுமொழி) கூறுபவளானாள்; அதனை, அடுத்த நான்கு கவிகளிற் காண்க.

தான்வகுத்துக்கூறுவான், கூறியதுகூறுவான், ஓலைகொடுத்துநிற்பான் என மூன்றுதிறத்தராய்த் தலை இடை கடை என்று வகுக்கப்படுகிற தூதர்களுள் தான்வகுத்துக்கூறுதலாகிய உத்தமவிலக்கணம் அமைந்தவன் மந்திரிக்குச்சமானமானவனாதலின் அத்தன்மை சிறப்பையுடைய தூதன் ஆஞ்சநேய னென்பார், 'நீதி வித்தகன்' என்றார். பி - ம்:—[1]ஏது. [2]இயம்பலை, இயம்பலம். [3]நிகழ்த்துவாள். (3945)

26.—இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்: பிராட்டியின் மறுமொழி.

மேக்கு [1]நீங்கிய வெள்ள வுவகையால்
[2]ஏக்க முற்[3]றென் றியம்புவ தியாதென
நோக்கி நோக்கி 'யரிதென நொந்துளேன்
பாக்கி யம்[5]பெரும் பித்தும் பயக்குமோ.

(இ - ள்.) (தனக்கு) மேலானது (ஒன்று) இல்லாததான களிப்புப் பெருக்கினால் (யான்) திகைப்படைந்து, '(இச்சுபவசனத்திற்கு

ஏற்ப) என்ன மறுமொழி கூறுவது?' என்று ஆராய்ந்துகொண்டு, '(இதற்கு ஏற்றபடி என்னுற் சொல்லக்கூடியவார்த்தை ஒன்றும்) இல்லை' என்று எண்ணி, (அதனால்) சிந்தைகொள்ளேன்; (ஒருவர்க்குப்) பாக்கியம் (நேர்தல்) இப்படிப்பட்ட பெரியபித்தத்தையும் தரவல்லதோ? (எ - று.)

மேக்குநீங்கிய வெள்ளவுவகையால் ஏக்கமுற்று-அளவி லாநந்தத்தாற் பரவசப்பட்டு. வெள்ளவுவகை-உவகைவெள்ளம். பயக்குமோஎன்ற ஓகாரம்-வினவுவகையால், வியப்பை விளக்கும்; பித்தத்தைப்போக்கக்கூடியதாகிய பாக்கியம் பெரும்பித்தத்தைத் தருவதாமோ வென்று வியந்தபடியாம். பாக்கியம் - நல்வினைப்பயனால் நன்மைநேர்தல். பி-ம்:—[1] வீங்கிய. [2] ஆக்கம். [3] இங்கு. [4] இருந்துழி. இருந்தனன். [5] இது, வேறு. (3946)

27. முன்னை நீக்குவென் மொய்சிறை யென்றநீ
பின்னை [1] நீக்கி [2] யுவகையும் பேசினை
[3] என்ன பேற்றினை யீகுவ தென்பதை
உன்னி நோக்கி யுரைமறந் [4] தோவினேன்.

(இ - ள்.) முன்பு [முதன்முறை தூதனுய்க் கடல்தாவிவந்தபோது] 'வலிய (உனது) சிறையிருப்பை (நான்) நீக்குவேன்' என்று (எனக்கு) அபயங்கூறிய நீ, பின்னை (அவ்வாறே சொன்ன சொல் தவருமல் என் சிறையிருப்பை) நீக்கி [சிறையிருப்புக்குக் காரணமான இராவணனைத் தொலைத்தற்கு உதவி] அச்சந்தோஷ சமாசாரத்தை (எனக்குவந்து) கூறுதலுஞ்செய்தாய்; (இப்படி மகோபகாரஞ்செய்த உனக்கு), என்னபாக்கியத்தைக் (கைம்மாறுகக்) கொடுப்பது? [நீசெய்த உதவிக்கு ஏற்ப ஈயத்தகுதியுடையது யாதொன்றும் இல்லையே]' என்கிற இவ்வொன்றையேஎண்ணிச் சிந்தித்து, (அச்சிந்தையின்மிகுதியால்) பேசமறந்து ஒன்றுஞ் சொல்லாது விட்டேன்; (எ - று.)

உம்-இறந்ததுதழுவிய எச்சம். ஈகுவது-தொழிற்பெயர், வினைமுற்றுத்தன்மைப்பட்டது; இதனை, வடநூலார் 'பாவே ப்ரயோகம்' என்பர். நோக்குதல் - மனத்தினுல் ஆராய்தல். பி - ம்:— [1] நோக்கி, நீக்கினை. [2] ஒகையும். [3] என்னபேற்றினை யீகுவனென்பதை, என்னவின்றுனக்கீகுவனென்பதை, என்னையீகுவனென்பதுபெற்றிலன். [4] ஓயினேன், ஒய்வினேன். (3947)

28. உலகை மூன்று [1] முதல்வற் கொருதனி
விலை [2] யி லாமையு [3] முன்னினென் [4] மேலவை
[5] நிலையி லாமை நினைந்தனெ னின்னையென்
தலையி னுற் [6] றொழு வேதகுந் [7] தன்மையோய்.

(இ - ள்.) தன்மையையுடையவனே! (நீசெய்த பேருதவிக்குக் கைம்மாருக) மூன்று உலகங்களையும் (உனக்குக்) கொடுக்கலாமென்று ஆலோசிக்குமிடத்து (அவை நீ செய்த பேருதவிக்கு) ஒரு

சிறிதும் ஈடாகாமையையும் அறிந்தேன்; மற்றும் அவ்வுலகங்கள் என்றும் நிலைநிற்பனவன்றி அழியுந்தன்மையனவாதலையும் கருதினேன்; (இங்ஙனம் கைம்மாறு யாதும் இன்றாகவே), உன்னை(நான்) தலையினால் வணங்குதலே தகுதியாம்; (எ-று.)

விலையிலாமையும் என்ற உம்மை - எதிரதுதழுவிய எச்சப் பொருளோடு இழிவுசிறப்புப்பொருளு முடையது. 'அவைநிலையிலாமை நினைந்தனென்' என்பதன் கருத்து - அவ்வுலகங்கள் பெருவிலையனவாயினும் நிலையில்லாதனவாதலால், நீ செய்த நிலையான உதவிக்கு ஈடாகாஎன்பதாம்: "காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப்பெரிது" "பயன்தூக்கார்செய்தவுதவி நயன்தூக்கின், நன்மைகடலிற் பெரிது''என்ற திருக்குறள்கள் இங்குக் காணத்தக்கன. 'தொழவேதகும்' என்ற ஏகாரம்-பிரிநிலையோடு உயர்வுசிறப்புப்பொருளது. ஆண்டாள் "தலையல்லாற் கைம்மாறிலேனே" என்று அருளிச்செய்ததை இங்கே அறிக. அதற்குப் பூர்வாசாரியர்கள் 'நீ பண்ணின உபகாரத்துக்கு இத்தலையாற்செய்வது ஒன்று உண்டோவென்று என்தலையை உனக்கு ஆக்கிக் காலமெல்லாம் உன்காலிலே வணங்கி வர்த்திக்குமத்தனையென்கிறாள்' என்று வியாக்கியானமும், "ஸர்வஸ்ய காத்ரஸ்ய ஶிர: ப்ரதாநம்" என்கிறபடியே அவயவவிசிஷ்டனான என்னை உனக்குச் சேஷமாக்கிக் காலமெல்லாம் அடிமைசெய்கையொழிய வேறுஉபகாரமில்லை யென்றாள்' என்று அரும்பதமும் இட்டருளியவாறும் காண்க. தன்மை - ஆடவர்க்கு உரிய குணமாகிய அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்பனவும், மற்றும்பல உத்தமகுணங்களுமாம். பி-ம்:—[1]உதவினுமுத்தம. [2]இலாமையின். [3]முன்னலன். [4]மேவுசீர். [5]நிலையிலவதென்றெண்ணினன், நிலையிலாவதென்றெண்ணியும், நிலைநிலாதவென்றெண்ணினன். [6]தொழவுந். [7]தண்மையோய், தன்மையே. (3948)

29. ஆதலாலொன் [1]றுதவுதலாற்றலேன்
யாது செய்வதென் றெண்ணியிருந்தனென்
[2]வேத நன்மணி [3]வேகடஞ் செய்தன்ன
தூத வென்னினிச் செய்திறஞ் சொல்லென்றாள்.

(இ - ள்.) இங்ஙனம் ஆகுதலால் யாதொன்றையும் (உனக்குக் கைம்மாறாகக்) கொடுக்க இயலாதவளான நான் என்ன செய்யக்கடவதென்று சிந்தித்துச் சும்மா இருந்தேன்; (அன்றி, வேறன்று): துளையிட்டு உபயோகித்தற்கு உரிய நல்லஇரத்தினத்தை, சாணை பிடித்து அழுக்ககற்றி ஒப்பனைசெய்தாற்போன்ற தூதனே! இனி (யான் உன்பக்கல்) செய்யத்தகும் செயல்யாது? (நீயே) சொல்வாய்? என்றாள், (பிராட்டி); (எ - று.)

'மீதுயர்ந்த வுவகையின் விம்மலோ தூதுபொய்க்குமென்றோ' என்று அநுமான் ஐயப்பட்டு வினவியதற்கு, பிராட்டி 'பின்னதன்று முன்னதே'என ஐயமகற்றி விடையளித்தவாறாம்; வேதம் -

வடசொல்; தொளையிடுகையென்று பொருள். மாசுமறுவற்ற இரத்தினம்போலச் சிறந்தவனும் அனைவரும் தலைமேற்கொண்டு கொண்டாடத்தக்க உத்தமதூதன் அநுமானென்க. பி-ம்:—[1] இயம்புதல். [2] வேதநாயகன். [3] ஏவியசெய்திடும், வேகடஞ்செய்மணி, மேவியசெய்திடும். (3949)

30.—அநுமான் 'இன்னதுசெய்யவேண்டுவது' என்றல்.

எனக்க ளிக்கும் வரமெம் பிராட்டி நின்
மனக்[1]க ளிக்குமற் [2]றுன்னையம் மானவன்
தனக்க ளிக்கும் [3]பணியினுந் தக்கதோ
புனக்க ளிக்குல மாமயில் போன்றுளாய்.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) எமது தலைவியே! வனத்திலே களிப்போடுதிரிகிற சிறந்த சாதி மயிற்பேடையையொத்துக் களித்துள்ளவளே! எனக்கு (நீ) கொடுத்தருளும் வரம் நீ அடைந்திருக்கிற மனக்களிப்புக்கு ஏற்ப உன்னை (உடன்கொண்டுபோய்) அந்த மநுகுலதிலகனை ஸ்ரீராமபிரானுக்குச் சமர்ப்பிக்கின்ற அடிமைத்தொழிலினும் தகுதியானது வேறொன்றுஉண்டோ? [இல்லையென்றபடி]; பி-ம்:— 'எனவுரைத்து' என வருங்கவியோடு தொடரும்.

'நீ இப்பொழுது அடைந்த மனக்களிப்புக்கு ஏற்ப, இனி உடனே நான் உன்னை அழைத்துக்கொண்டுபோய் இராமனது சன்னிதியிற் சேர்க்கும்படி எனக்கு அநுமதியளித்தலே நீ தந்தருள வேண்டும் வரம்' என்றான், அநுமான். மானவன் - (வைவசுவத) மநுவினது குலத்திற் பிறந்தவன்: வடமொழித் தத்திதாந்த நாமம். பி - ம்:—[1] களிப்பும். [2] உன்னி. [3] பணியிது. (3950)

31.—மற்றும் அநுமான் சீதையை நோக்கி 'கொடிய அரக்கியரை யான் வதைக்குமாறு அநுமதிதருக' என்றல்.

எனவு ரைத்துத் [1]திரிசடை யாளெம்மோய்
[2]மனவி னிற் சுடர் மாமுக மாட்சியாள்
தனையொ ழித்திவ் வரக்கியர் தங்களை
வினையி னிற்சுட [3]வேண்டுவென் யானென்றான்.

(இ - ள்.) என்று சொல்லி, (மற்றும் அநுமான் பிராட்டியை நோக்கி),'எமது தாயே! இரத்தினம்போலக் களங்கமற்றுவிளங்குகிற அழகிய முகத்தின் மலர்ந்ததோற்றமுடையவளான திரிசடை யென்னும் இராக்கதமாதைத் தவிர்த்து, (மற்ற)இந்த இராட்சசிகளை யான் கொடியவகையால் எரித்தழிக்க விரும்புகிறேன் என (மற்றொருவரம்) வேண்டினான்; (எ - று.)

அரக்கியரனைவரும் இராவணனது கட்டளைப்படி சீதையை இணக்கும்பொருட்டுப் பலவாறு வெருட்டிவருத்தி அப்பொழுதெல்

லாம் திரிசடை அச்சீதைக்கு உற்றதுணையாய்நின்று இன்சொற்களால் தேறுதல் கூறிவந்தமையை அநுமான் தூதுசென்றபோது தான் கட்புலனாகக் கண்டனனாதலால், அவளைவிட்டுக் காவற்றொழில்பூண்ட மற்றை யரக்கியர்களையெல்லாம் யான் இப்பொழுது பலவாறு உபத்திரவித்து வதைக்க விரும்புவேனென்றான். மணவு-இரத்தினப்பொதுப்பெயர்.

எம்மோய் என்றதைத் திரிசடைக்கு அடைமொழியாக்கி, எமது தாய்போன்றவளான திரிசடையை யென்றலும் ஒன்று; அவ்வுரைக்கு, பிராட்டி பக்கல் அன்புடையவளாயிருந்தமை பற்றித் திரிசடை அநுமானால் எமது தாய் போன்றவ ளென்று பாராட்டப்பட்டன ளென்க. பி - ம்:—[1] திரிசடையாளெனும், திரிசடையாயசெம், திரிசடையெம்மைசெம். [2] மணையினிற். [3] தொடரு மணமாட்சியாள். (3951)

32.—இதுவும் அது.

உரை[1]ய லாவுரை யுன்னை [2]யுரைத்துராய்
[3]விரைய வோடி [4]விழுங்குவ மென்றுளார்
[5]வரைசெய் மேனியை வள்ளுகி ராற்பிளந்து
[6]இரைசெய் வேன்மற லிக்[7]இனி யென்றுமால்.

(இ - ள்.) சொல்லத்தகுதியல்லாதவார்த்தைகளைச் சொல்லி, விரைய ஓடி மேல்விழுந்து உன்னை விழுங்குவோ மென்று உறுக்கிப் பேசியுள்ளவர்களாகிய அரக்கியர்களுடைய மலைபோன்ற [மிகப்பெரிய] உடம்பை இப்பொழுது கூரிய (என் கைந்) நகங்களாற் பிளந்திட்டு யமனுக்கு உணவாக்குவேன் என்றுசொல்வான், (அநுமான்); (எ - று.)

மேற் தொகுத்துக்கூறியதை இங்ஙனம் வகுத்துக்கூறியவாறும். இவ்வரக்கியர்களைத் தான் வதைப்பதற்குக் காரணம், இங்கு விவரிக்கப்பட்டது. கொல்வேனென்ற பொருளை 'மறலிக்கிரைசெய்வேன்' என வேறு வாய்பாட்டாற் கூறினது, பிறிதினவிற்சியணி. உராய் - உராய்ந்து; பகுதியே வினையெச்சப்பொருள் பட்டது: "வரிப்புனைபந்து", என்பதில் 'வரி' என்பது வரிந்து என்று பொருள்படுதல் காண்க. பி - ம்:—[1] இலா. [2] உரைத்துளார். [3] விரைவின். [4] விழுங்குவன். [5] வசை. [6] இசை. [7] இனிதென்பனால். ()

33.—அநுமான்சொற்கேட்ட அரக்கியர் சீதையைச் சரணமடைதல்.

[1]குடல்கு ழைத்துக் குருதி [2]குடித்திவர்
உடன்மு ருக்கியிட் டுண்குவே னென்றலும்
அடல ரக்கிய ரன்னைநின் பாதமே
விடல மெய்ச்சர ணென்று [3]விளம்பலும்.

இதுமுதல் நான்குகவிகள் - குளகம்.

(இ-ள்.) 'இவ்வரக்கியர்களுடைய குடல்களைப் பறித்தெடுத்து இரத்தத்தைக்குடித்து உடம்பைச் சின்னபின்னமாகச்சிதைத்து உண்பேன்' என்று (அநுமான் கோபத்தோடு) சொன்னவுடனே, (அதுகேட்ட) கொடுமையையுடைய ராக்ஷசிகள், 'தாயே உன்னுடைய திருவடியே (எங்கட்கு) உண்மையான ரக்ஷகம்: (அதனை நாங்கள்) விடமாட்டோம்' என்றுசொல்லிச் (சீதையைச்) சரணமடைந்தவளவிலே, (எ - று.)—"அன்னை அஞ்சன்மின் எனு மாருதிமுகம் நோக்கி (34) நோய்செயல் என்றனள் (36)" என அடுத்த கவிகளோடு தொடரும்.

'குருதிகுடித்து உடல்உண்குவென்' என்றது, கோபாவேசத்தாலாகிய வார்த்தை. முருக்கி - முருங்கியென்பதன் பிறவினை; முருங்குதல் - அழிதல். முன்னிரண்டடி - முன் இரண்டுசெய்யுள்களின் அநுவாதம்: தொடர்ச்சிதோன்றக் கூறியது. பி - ம்:— [1]குடர். [2]குடித்துவந்து - இட, குடித்தவர்-உடல். [3]வெருவலும். ()

34.—இதுமுதல் மூன்றுகவிகள்—சீதை அநுமானுக்குக் கூறுஞ் சமாதானவார்த்தையைத் தெரிவிக்கும்.

அன்னை யஞ்சன்மி னஞ்சன்மின் நீரெனு
மன்னு மாருதி மாமுக நோக்கிவேறு
என்ன தீமை யிவரிழைத் தா[1]ரவன்
சொன்ன [2]சொல்லின தல்லது [3]தூய்மையோய்.

(இ-ள்.) (லோக) மாதாவான சீதாபிராட்டி, 'நீங்கள் பயப்படாதிருங்கள், பயப்படாதிருங்கள்' என்றுசொல்லி (அவ்வரக்கியர்க்கு அபயமளித்து,) நிலைபெற்ற அநுமானுடைய சிறந்தமுகத்தைப் பார்த்து,—பரிசுத்தகுணமுடையவனே! இந்த அரக்கியர்கள் (தங்கள் தலைவனான) அவ்விராவணன் (தங்கட்குக்) கட்டளையிட்டபடியே கடுஞ்சொற்களை (என்னைநோக்கி)ச் சொன்னதேயல்லாமல், (தாமாக எனக்கு) வேறு என்ன தீங்குசெய்தார்கள்? [ஒன்றுமில்லையே யென்றபடி]; (எ - று.)—இக்கவியில் 'எனு' என்றதும் 'நோக்கி' என்றதும் - மேல் 36-ஆம் கவியில் வருகிற "என்றனள்" என்றமுற்றைக் கொள்ளும்.

தலைவன் கட்டளைப்படியே அடிமைகள் தொழில்செய்தல் முறையேயாதலால், ராக்ஷசராசனான இராவணனது கட்டளைப்படியேஇந்த ராக்ஷசிகள் என்னை உறுக்கிக் கடுஞ்சொற்கள் கூறினது குற்றமாகாது என்றனள் பிராட்டி யென்க. இவர்கள் தாமாக ஏதேனும் தீங்குசெய்திருந்தால்மாத்திரமே குற்றமாகலாமென்பாள், 'என்னதீமை யிவரிழைத்தார்' என்றாள்; இதில், தம் தலைவன் கட்டளைப்படி செய்யாவிடின் இவர்குற்றஞ் செய்தவராவரேயன்றித் தலைவன் சொற்படி நடந்தபோது குற்றமற்றவரேயாவரென்ற பொருளுந் தோன்றும். இங்கு வினா-இன்மைகுறித்து நின்றது.

மக்கள் அறிந்தேனும் அறியாமலேனும் செய்த பிழைகளைப் பொறுத்தல் தாயின் இயல்பு ஆகலின், அங்ஙனம் உலகினன்னை யான பிராட்டி அரக்கியர்பிழையைப் பொறுத்தருளினளென்பது பட,'அன்னை அஞ்சன்மின் அஞ்சன்மின் நீர் எனு'என்றார்.பிராட்டி தன்னுயிரை விடுவதாகக் கருதுகையில் திரிசடை தன் கனாநிகழ்ச்சி யைக் கூறித் தேற்ற, அதுகேட்ட காவலாளியரான அரக்கியர் அஞ்சிப் பிராட்டியைச் சரணம்புக, 'உங்கட்குச் சரணமாவேன்' என்று பிராட்டி அபயமளித்தாளென ஸ்ரீவான்மீகத்திற் சுந்தர காண்டத்து வந்துள்ளது. தூய்மை - மனமொழிமெய்களின் பரி சுத்தி; கருத்துச்சொற்செயல்களில் தீமையின்மை. பி-ம்:—[1]எனச். [2]சொல்லினவல்லது. [3]தூய்மையோ. (3954)

35. யா[1]னி ழைத்த வினையினி னிவ்விடர்
தா[2]ன டுத்தது தாயினு மன்பினோய்
கூனி யிற்கொடி யாரல ரேயிவர்
போன வப்பொருள் போற்றலை புந்தியோய்.

(இ-ள்.) பெற்றதாய் (மக்களிடத்திற்)கொள்ளும் அன்பினும் மிக்க அன்பை என்பக்கலுடையவனே! யான்செய்த தீவினைப்பய னால் இந்தத்துன்பம் (எனக்கு) நேர்ந்தது; (இதற்காக இவர்களைச் சினத்தல் முறைமையன்று); இவ்வரக்கியர்கள் (எமது துன்பங்கட் கெல்லாம் காரணமான இந்தக்) கூனிபோலக் கொடுமையுடையவர் களல்லரே! தேர்ந்த அறிவுடையவனே! ஒழிந்துபோன அச்செயலை நீபாராட்டவேண்டா (மறந்துவிடுக); (எ - று.)

வினைப்பயன் தவறாதாதலின், யான்செய்த தீவினையால் எனக்கு இத்தகையஇடர் நேர்ந்தது; இதன்பொருட்டுப் பிறர்மேற் கோபிக்கக் காரணமில்லை யென்பது, முதல்வாக்கியத்தின் கருத்து. நீ இத்தன்மையை அறியாயல்லை; ஆயினும், என்னிடத்து மிக்க அன்பினால் இவ்வாறு சீற்றங் கொள்கின்றனையாமித்தனை யென் பது பட, 'தாயினுமன்பினோய்' என்றும், 'புந்தியோய்' என்றும் விளித்தாள். "நன்றல்ல, தன்றே மறப்பது நன்று" என்றபடி இவர்களின் கடுஞ்சொல்லையும் கொடுஞ்செயலையும் பொருள்செய் யாது விடுதலே தகுதி யென்பது, "போனவப்பொருள் போற் றலை" என்பதன் கருத்து. பெருந்தீங்குகட்கெல்லாம் நாற்றங் காலாய் நின்ற கொடிய கூனியினிடத்தும் சிறிதும் சீற்றங்கொள் ளாத இராமபிரானது பெருந்தகைமையை நீ அறிவாயன்றே; அங்ஙனம் இருக்க, எளிய இவர்கள் திறத்திற் சீற்றங்கொள்ள லாமோ வென்பாள், 'கூனியிற் கொடியாரலரே யிவர்' என்றாள். மூன்றாமடிக்கு - இவர்கள் (நீசொல்லுகிறபடி கொடியவர்க ளென்றே கொண்டாலும்) கூனியைக்காட்டிலும் கொடியவர் களல்லரே என்று பொருள் கொள்ளினுமாம்; மிகக்கொடிய அக்கூனியின் விஷயத்தில் இராமன் ஏதேனும் தண்டனை செய்யக் கண்டதுண்டோ வென்பது, இதன் உட்கோள். தான் இராமனை மாயமானின்பின்னே வலியச் செலுத்தியதும்,பின்பு அவன்பின்னே இலக்குமணனையும் வலியத் துரத்தியதுமாகிய தீயவினையின் பய

ஞக இராவணன் தன்னைக் கவர்ந்து சிறைவைத்தலாகிய தீங்கு நேர்ந்தமைபற்றி, 'யானிழைத்த வினையினினிவ்விடர் தானடுத்தது' என்றனளென்னலாம். 'பகவதபசாரத்திலும் பாகவதாபசாரம் கொடியது; அது உடனே தவறாது பெருந்தீங்கு விளைக்கும்' என்கிற தத்துவப்பொருளுக்குத் திருஷ்டாந்தமாக, சீதை இலக்குமணனைக் கடிந்து வெருட்டியவுடனே அவட்குச் சிறையிருப்பதாகிய கொடிய தண்டனை நேர்ந்ததென்பர், உணர்ந்தோர். தாயினுமன்பினேய் என்பது, கருத்துடையடைகொளி. என்மீது வைத்துள்ள அன்பு போலவே, இந்த அரக்கியரிடத்தும் நீ அன்புவைக்கவேண்டுமென்பது குறிப்பு. பி-ம்:—[1] அடுத்த. [2] அடுத்துளவாயினுந் தன்மையாற்.

36. எனக்கு நீயரு ளிவ்வரந் தீவினை
தனக்கு வாழ்விட மாய சழக்கியர்
மனக்கு நோய்செய லென்றனள் மாமதி
[1] தனக்கு மாமறுத் தந்த முகத்தினாள்.

(இ-ள்.) கொடிய பாவச்செயல்களுக்கு இருப்பிடமாகவுள்ள அறிவில்லாதவர்களான இவ்வரக்கியர்களுடைய மனத்துக்குத் துன்பஞ்செய்யாதே: நீ எனக்கு இந்தவரத்தைத் தந்தருள்வாயாக என்று (அநுமானை நோக்கிக்) கூறினள்: (யாவளெனில்), பெரிய பூர்ணசந்திரமண்டலத்துக்குப் பெரியகளங்கத்தை யுண்டாக்கிய திருமுகமண்டலத்தின் அழகுடையவளான சானகிப்பிராட்டி;

அரக்கியர்களை நான் கொல்லும்படி அனுமதிசெய்தலாகிய வரத்தை எனக்கு நீ தந்தருளவேண்டுமென்று அநுமான் சீதையை வேண்ட, தயாநிதியாகிய அப்பிராட்டி, அதற்கு இணங்காமல், அவ்வரக்கியரைச் சிறிதும் வருத்தாதிருத்தலாகிய வரத்தை எனக்கு நீ தந்தருளவேண்டுமென்று மாறாக அநுமானை வேண்டி அவ்வநுமான் வேண்டுகோளை மறுத்தனளென்பதாம். நீ சொல்லுகிறபடி இவ்வரக்கியர்கள் கொடியவர்களென்றே கொண்டாலும், பாபஜந்மமாகிய ராக்ஷசஜன்மத்துக்குத் தீவினைசெய்தல் இயல்பேயாதலால், அதனைப்பொறுத்தல்வேண்டுமென்னுங் கருத்துப்பட, 'தீவினை தனக்கு வாழ்விடமாய சழக்கியர் மனக்கு நோய்செயல்' என்றனள். "பாபாநாம்வாஶுபாநாம்வா - வதார்ஹாணாம்ப்லவங்கம! கார்யம் கருணமார்யேண நகஶ்சிந்நாபராத்யதி" என்பர் ஸ்ரீவான்மீகி. சந்திரனுக்கு இயல்பாகவுள்ள களங்கத்தை, சீதையின்முகத்துக்கு அது தான் ஒப்பாகமாட்டாமையால் அடைந்த அவமானத்தின் குறியாகக் கற்பித்து 'மாமதிதனக்கு மாமறுத் தந்த முகத்தினாள்' என்றார்; தற்குறிப்பேற்றவணி. சந்திரமண்டலத்தைக் காட்டிலும் அழகியதாய்க் காண்பவர் கண்கவர்ந்து அவர்கள்மனத்தை மகிழ்வித்து விளங்கும்முகமென்க. இராவணவதத்தையும் இராமவிஜயத்தையும் அநுமான் சொல்லக் கேட்டதனாலாகிய ஆநந்தத்தாற் பிராட்டியின் திருமுகத்தில் தோன்றிய புதுமலர்ச்சி, இதில் விளங்கும். பி-ம்:—[1] தனக்குலாமறு, தனக்குலாமதி. (8956)

37.—அதற்கு அநுமான் இசைதலும், இராமன் வீடணனை நோக்கிச் 'சீதையைக் கொணர்க' என்றல்.

[1]என்ற போதி [2]னிறைஞ்சின னெம்பிரான்
தன்று ணைப்பெருந் தேவி தயாவென
நின்ற காலை நெடியவன் [3]வீடணா
சென்று [4]தாரம தேவியைச் சீரொடும்.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) என்று (பிராட்டி) கூறியபொழுது, (அநுமான்), 'எமது தலைவனான இராமபிரானது இல்வாழ்க்கைத்துணைவியான சிறந்தமனையாளாகிய உனது திருவருளின்படியே (யாவது)' என்று சொல்லி வணங்கி நின்ற வளவிலே, (நற்குணங்களால் அனைவரினும்) பெரியவனான ஸ்ரீராமன், (இராட்சசராசனை நோக்கி), 'வீடண! (நீ) போய் என்னுடைய மனையாளை அலங்காரத்தோடு அழைத்துக் கொண்டுவா;'—(எ - று.)—'என்னுங்காலை' என வருங் கவியோடு தொடரும்.

பெருந்தேவி - கற்பென்னுங் கலங்காரிலைமையாலாகும் மிக்க மேம்பாட்டைக்கொண்டதேவி என்ற பொருளைக் குறிக்கும். 'எம்பிரான் தன் துணைப்பெருந்தேவி தயாவென' என்றதில் இங்ஙனம் தன்பக்கல் தீமைகளைச்செய்தவர்களிடத்திலும் மாறாத திருவருளையுடைமை "என்னடியாரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்" என்னும் இயல்பினனான பெருமாளினது பெருந்தன்மைக்கு ஏற்ற பெருந்தேவிக்குத் தகுதியே என்பது தோன்றும். இனி, இரண்டாமடிக்கு - இப்பிராட்டி தயைவடிவமானவள் என்று எண்ணியெனவும் பொருள்கொள்ளலாம். தயா - வடசொல்: சீரொடும் - வைபவத்துடன். பி - ம்:—[1]என்றகாலை. [2]இறைஞ்சினின்று. [3]வீடணன், வீடணா. [4]தாழ்ந்தனன் சீதையை, தம்மினச்சீதையை, தாரந் தந்தேவியை. (3957)

38.—விபீடணன் சென்று பிராட்டியை வணங்குதல்.

என்னுங் காலை யிருளும் [1]வெயிலுங்கார்
மின்னுங் [2]காலை யியற்கைய வீடணன்
உன்னுங் காலைக் [3]கொணர்தியென் றேதுமப்
பொன்னின் காற்றளிர் சூடினன் [4]போந்துளான்.

(இ - ள்.) என்று (இராமபிரான்) கட்டளையிட்டவளவிலே,—இருளையும் வெயிலையும் மேகத்தினிடத்தே தோன்றும்மின்னலையும் வெளிச்சொரிகிற அழகிய இயல்பையுடையவனான விபீடணன், (அங்குநின்று பிராட்டியிருக்கும் அசோகவனிகைக்கு) வந்து,—நினைக்குமளவிலே [வெகுவிரைவிலே] அழைத்துக்கொண்டுவா என்று (இராமபிரானால்) சொல்லப்பட்ட அந்த இலக்குமியினமிசமான சீதாபிராட்டியினது திருவடிகளாகிய தளிர்களைத்(த் தனது) முடியிற் சூடினான். (எ - று.)

இராமன் கட்டளையிட்டவுடனே விபீடணன், பிராட்டியிருக்குமிடத்து வந்து அன்னவளின் தளிர்போல் மெல்லிய சிவந்த திருவடி தனதுமுடியிற்படும்படி அவள் பாதத்திற் சாஷ்டாங்கமாக விழுந்து தண்டனிட்டன னென்பதாம். விபீடணன் தனது மேனியின் கருநிறத்தால் இருளையும், தான் இப்பொழுது தரித்த திவ்யகிரீடத்தின்ஒளியால் சூரியகாந்தியையும், தனது கரிய உடம்பிலணிந்துள்ள ஆடையாபரணங்களின் விளக்கத்தால் காளமேகத்தில் தோன்றும் மின்னலையும் வெளித்தோன்றுவித்தல் பற்றி, அவனுக்கு 'இருளும் வெயிலுங் கார்மின்னுங் கால் ஐஇயற்கைய' என்று அடைமொழி கொடுக்கப்பட்டது. கால் - வினைத்தொகை; காலுதல் - சொரிதல். ஐ - அழகிய என்றபொருளைத் தந்த உரிச்சொல். இனி, காலையென ஒரு சொல்லாகவே கொண்டு, இருளோடும் வெயிலோடும்கூடி மேகம் மின்னுமாயின் அவ்வியற்கை போன்ற தன்மையையுடைய விபீடண னென்று பதவுரைகூறி இக்கருத்தை யமைப்பினுமாம். 'கால்தளிர் சூடினன்'- உருவகம். பி - ம்:—[1]வெயிலும்போல், பயிலுங்கார், வெயிலுங்கான். [2]மாலி. [3]கொணர்வனென்றேடியப், கொணர்வனென்றேடியப், கொணர்வனென்றேதவப், கொணர்தியென்றேதவப். [4]போற்றினான், போயினான், போதுவான். (3958)

வேறு.

39.—விபீடணன் பிராட்டியைநோக்கி 'அலங்கரித்துக் கொண்டு இராமன்பக்கல் எழுந்தருள்க' எனல்.

வேண்டிற்று முடிந்த தன்றே [1]வேதியர் வேத னின்னைக்
காண்டற்கு விரும்பு கின்றா னும்பருங் காண [2]வந்தார்
[3]பூண்டகக் கோலம் [4]வல்லை புனைந்தனை வருத்தம் போக்கி
[5]ஈண்டுக்கொண் டணைதி யென்றா னெழுந்தரு ளிறைவி யென்றான்.

(இ - ள்.) '(எல்லாப்பொருள்களுக்குந்) தலைவியே! விரும்பப்பட்டதாகிய சத்துருசயம் நிறைவேறிவிட்டது: வேதமுணர்ந்தவர்களான முனிவர்களால் தியானித்து உணரப்படுபவனாகிய ஸ்ரீராமன், உன்னைப் பார்க்க விரும்புகிறான்; தேவர்களும் (உன்னைத்) தரிசிக்க வந்துள்ளார்; 'இவ்விடத்தில் [என்னிடத்தில்] அழைத்துக்கொண்டு வா' என்று (இராமன் எனக்குக்) கட்டளை கூறியுள்ளான்; (ஆதலால் நீ), மனத்துயரைவிட்டு, விரைவாக ஆபரணங்களால் தகுதியாக அலங்காரஞ்செய்துகொண்டு வந்தருள்வாய்' என்று (விபீடணுழ்வான் பிராட்டியைநோக்கிக்) கூறினான்; (எ - று.)—பி - ம்:—[1]வேதியர் தேவர், வேதியர்தேவன். [2]நின்றார். [3]பூண்டக்க. [4]வல்ல. [5]ஈண்டறக்கொண்டு. (3959)

40.—'அலங்காரமின்றி யான்வருதல் தகுதி' என்று பிராட்டி கூறுதல்.

யானிவ ணிருந்த [1]தன்மை யிமையவர் குழுவு மெங்கள்
கோனுமம் முனிவர் தங்கள் கூட்டமுங் முறைத்துக் கேற்ற

வானுயர் கற்பின் மாத[2]ரீட்டமுங் [3]காண்டல் மாட்சி
[4]மேனினி கோலங் [5]கோடல் விழுமிய தன்று வீர.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) வீரனே! நான் இவ்விடத்திலிருந்த விதத்தைத் தேவர்களுடைய கூட்டமும், நமக்கெல்லாந்தலைவனான இராகவனும், அங்குவருகிற முனிவர்களுடைய கூட்டமும், (தமது)குலத்துக்கு ஏற்ற மிகச்சிறந்த கற்புநிலையையுடைய தேவமாதர்களின் கூட்டமும் பார்த்தல் தகுதியாம்; இங்ஙனம் ஆனபின்பு (உன்னால்) கருதிச்சொல்லப்பட்ட அலங்காரத்தை (நான் செய்து) கொள்ளுதல் சிறப்புடையதன்று; (எ - று.)—'என்றனள் இறைவி' என வருங் கவியோடு முடியும்.

'யான் இவ்விலங்கைநகரினுட் சிறையிருந்தபோது உள்ள நிலைமை இன்னதென்று எனது கணவனான எம்பெருமானும் தேவர்களும் முனிவர்களும் கற்புடையமாதர்களும் உள்ளபடி காணுமாறு யான் இப்பொழுது உள்ள தோற்றத்துடனே இராமபிரான்சன்னிதியில் வருதலே தகுதி; அலங்கரித்துக்கொண்டு வருதல் உரியதன்று' என்று விபீடணன்சொல்லைப் பிராட்டி ஒருசார் மறுத்தனளென்பதாம். 'எங்கள்' என்றதன்மைப்பன்மை - எல்லாவுயிர்களையும் உளப்படுத்தியது; எனக்குத் தலைவனாதல் போலவே எல்லாவுயிர்கட்குந் தலைவனென்றவாறு. திருமாலுக்கு அடிமையாகுந் திறத்தில் திருமகளோடு மற்றையனைத்துயிர்களோடு வாசியில்லையென்க. திருமகள் ஜீவகோடியிற் சேர்ந்தவளென்பது, இங்குப் போதரும். பி - ம்:—[1]வண்ணம். [2]வருக்கமும். [3]கண்டால். [4]மேனனி, மேலினைக். [5]கண்டால், கொள்ளல். (3960)

41.—'இராமபிரான் கட்டளை' என்று விபீடணன் வற்புறுத்துக்கூற, பிராட்டி உடன்பட தேவமாதர்கள் அலங்கரித்தற்கு வருதல்.

என்றன ளிறைவி [1]கேட்ட விராக்கதர்க் கிறைவ [2]னீலக்
குன்றன தோளி னான்றன் [3]பணியினிற் [4]குறிப்பி தென்றான்
நன்றெனா நங்கை நேர்ந்தாள் நாயகக் கோலங் கொள்ளச்
சென்றனர் வான நாட்டுத் திலோத்தமை [5]முதலோர் சேர.

(இ - ள்.) என்று (மறுத்துச்) சொன்னாள், பிராட்டி; (அது) கேட்ட ராக்ஷசராசனான விபீடணன், 'நீலமலைபோன்ற திருத்தோள்களையுடையவனான ஸ்ரீராமனது கட்டளையினால் (யான்) விண்ணப்பித்தவாறாகும் இது' என்று கூறினான்: (அங்ஙனஞ் சொன்னவுடனே), உத்தமஸ்திரீயான சீதை, 'நல்லது' என்று சொல்லிச் சிறந்த அலங்காரத்தைச் செய்துகொள்ள) உடன்பட்டாள்; (அங்ஙனம் அப்பிராட்டிக்கு ஏற்ற) சிறந்த அலங்காரஞ் செய்யும் பொருட்டுத் திலோத்தமை முதலிய தேவலோகத்து அப்சரஸ்ஸ்திரீகள் ஒருங்கு வந்துசேர்ந்தார்கள்; (எ - று.)

'அலங்காரஞ் செய்துகொண்டு வரும்படி சொன்னது, இராமபிரான் கட்டளைபற்றியே யன்றி என் கற்பனையாலன்று' என்று விபீடணன் கூறினான்: கணவன் கட்டளை யென்றவுடனே, அதிலுள்ள குணதோஷங்களைப் பாராமலே அதற்கு இணங்குவது உத்தமமகளிர்க்குப் பண்பு ஆதலால், 'நன்றென நங்கை நேர்ந்தாள்' என்றார். 'நன்று' என்றது, அங்கீகாரத்தை விளக்கும் வார்த்தை. நாயகக்கோலம் - அனைத்துலகுக்குந் தலைவனான எம்பெருமானது மனைவிக்கு உரிய அலங்காரம்.

திலோத்தமை - ஆவீறுஐயான வடசொல்; உலகத்திற் படைக்கப்பட்ட அழகுடைய மங்கையரது உடம்பிற் சிறந்த அழகை எள்ளளவுஎள்ளளவாக எடுத்துத் திரட்டி அதுகொண்டு பிரமனால் அமைக்கப்பட்ட பெண்: (திலம் - எள், உத்தமா-மேலானவள்.) தேவமாதர்கள் அலங்காரஞ் செய்யவந்தது, தேவாதிதேவனான இராமனது திருவுள்ளக்குறிப்பைநோக்கிய தேவர்களின் கட்டளையினாலென்க. பி - ம்:—[1]கேட்டான். [2]அந்தக், நீதிக், நீதக். [3]பணியெனக், பணியினும், பணியினிக். [4]குறிப்போன், குறிப்பன். [5]முதலோர் சேர்ந்தார், முதலசெய்யோர், முதலர்சேர்ந்தார்.(3961)

42.—தேவமாதர்கள் நீராட்டத்திற்குரிய வாசனைப்பண்டங் கொணர்தல்.

மேனகை யரம்பை [1]மற்றை யுருப்பசி வேறு [2]முன்ன
[3]வானக நாட்டு மாதர் [4]யாருமஞ் சனத்துக் கேற்ற
[5]நானநெய்[6]யூட்டப் பட்ட [7]நலையில [8]கலவை [9]தாங்கிப்
போனகந் துறந்த தையல் மருங்குற [10]நெருங்கிப் புக்கார்.

(இ - ள்.) மேனகையும் ரம்பையும் மற்றை ஊர்வசியும் வேறுமுள்ள தேவலோகத்து மகளிரெல்லோரும் (பிராட்டிக்குத்) திருமஞ்சனஞ் செய்தற்கு உரிய கஸ்தூரிப்புழுகுகலந்த குற்றமற்ற கலவைச்சாந்தை எடுத்துக்கொண்டு, (இராவணன்கைப்பட்டது முதல் இலங்கையிற் சிறையிருந்த பத்துமாசகாலமாக) உணவை ஒழித்துநின்ற உத்தமஸ்திரீயான சானகியினது பக்கத்திலே பொருந்த(த் தம்மில்) நெருக்கமாக வந்துசேர்ந்தார்கள்; (எ - று.)

குரு சிஷ்யக்கிரமத்தை உலகத்தார்க்கு உணர்த்தும்பொருட்டுத் திருமால் தானே நரனென்ற சிஷ்யனும் நாராயணனென்ற குருவுமாக இரண்டுவடிவங்கொண்டு பதரிகாச்சிரமத்தில் எழுந்தருளியிருக்கையில், இந்திரனேவலால் அவர்கள் தவநிலையைக் குலைக்குமாறு அங்குவந்து ஆடல்பாடல் முதலியவிநோதங்களைச் செய்த அப்ஸரஸ்ஸ்திரீகளை மயக்கும்பொருட்டு மிக அழகுடைய ஒருபெண்ணை யுண்டாக்கும்படி அந்நாராயணமூர்த்தி திருவுள்ளங்கொள்ள, அச்சங்கற்பத்தால் அப்பெருமானது ஊருவினின்று தோன்றிய பெண் அக்காரணத்தால் ஊர்வசியெனப் பெயர்பெற்றனள். (ஊரு - தொடை; அதிற் பிறந்தவள், ஊர்வசீ.) மஞ்சனம்-மஜ்ஜநமென்ற வடமொழியின் விகாரம். பி-ம்:—[1]மற்றவுருப்பசி. [2]என்னும். [3]வானகை. [4]யாவருமனத்திற்கேற்ற. ஆடு

மஞ்சனத்தின் வாய்ந்த. [5]நானகை. [6]உடனிராடி, உட்பட்டாய, உடன்பட்டாய. [7]நலையிலா, நனைமலர், நனைபலன். [8]நன்னீர், உழையர், அமைய. [9]தாங்கப். [10]நோக்கிப். (3962)

43.—அரம்பை பிராட்டிக்குக் கூந்தல் வகிர்தல்.

காணியைப் [1]பெண்மைக்கெல்லாங் கற்பினுக் [2]கணியைப் [3]பொற்
ஆணியை யமிழ்தின் வந்த [4]வமிழ்தினை யறத்தின் தாயைச் [பின்
சேணுயர் [5]மறையை யெல்லா [6]முறைசெய்த [7]செல்வ னென்ன
வேணியை [8]யரம்பை மெல்ல [9]வரன்முறை வகிர்ந்து விட்டாள்.

(இ - ள்.) பெண்ணிலக்கணங்களுக்கெல்லாம் விளைநிலமான வளும், பதிவிரதாதருமத்துக்கு (ஓர்) ஆபரணமாக அழகு செய் பவளும், அழகென்னும் பொன்னின் (மாற்றுமதிப்புகளை யறி தற்கு) உரையாணிப்பொன்போ லுள்ளவளும், (திருப்பாற்கடலி னின்று) தேவாமிருதத்துடனே திருவவதரித்த (ஒரு) திவ்யா மிருதம் போன்றவளுமான பிராட்டியினது தலைமயிர்ச்சடையை, அரம்பையென்னுந்தேவமாது,—மிகச்சிறந்த வேதமுழுவதையும் ஒழுங்குபடுத்துகிற திருமால்போல, மெல்ல ஒழுங்காகச் சிக்கு விடுத்து வகைப்படுத்தி வாரிவிட்டனள்; (எ - று.)

இனி,வானமாதர் பிராட்டியை நீராட்டியலங்கரிக்கலை நான்கு கவிகளாற் கூறுகின்றாரென்க. பிராட்டி இராவணன்கைப்பட்டது முதல் கூந்தலை ஒப்பனைசெய்திலளாதலால் அக்கூந்தல் சிக்குப் பட்டுச் சடைத்தன்மையடைந்திருந்ததாக, அங்ஙனம் சிக்குப்பட்ட தலைமயிரை அரம்பைமெல்ல வகிர்ந்து செம்மைசெய்ததற்கு-வேதம் நிலைகுலைய, திருமால் தான் பிரவேசித்து வேதவியாச னென்று பெயர் பெறுபவனாய் அவ்வேதத்தைத் தக்கபடி எளிதில்வகுத்து ஒழுங்குப்படுத்துதலை உவமை கூறினார். அயோநிஜையான பிராட்டியின் வேணிக்கு, அபௌருஷேயமான வேதம் உவமை கூறப்பட்டது; இதனால், அக்கூந்தலினது தூய்மையும், அது எம் பெருமானது திருவுள்ளத்துக்கு மிகப்பாங்காயிருக்குந் தன்மையும் புலனும். பிராட்டியாகிய ஒருபமேயப்பொருளினிடத்து'பெண்மைக் கெல்லாங் காணி' என்பது முதலிய பல உபமானப்பொருள்களின் தன்மையை ஏற்றிக் கூறியது - பலபடப்புனைவணி. காணிபோன்ற வளைக் காணியென்றே கூறினது,உபசாரவழக்கு. அமிழ்தின் வந்த வமிழ்து; "அமுதில்வரும்பெண்ணமுது" என்றார் பெரியாரும்.

கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகம் என முறையே வருகிற நால்வகையுகங்களுள் திரேதாயுகத்தில் நடந்த தான இராமசரித்திரத்தில் பிராட்டியின் கூந்தலை அரம்பை செம்மைசெய்ததற்குத் துவாபரயுகத்தில் வியாசர் வேதத்தை வகுத்ததை உவமைகூறல் தகுமோ? எனின்,-காரணம் காரியத் துக்கு முந்தியதாதல் வேண்டுமென்ற நியதிபோல உபமானம் உப மேயத்துக்கு முந்தியதாதல் வேண்டுமென்ற நியதியில்லாமையால், கவி தான் அறிந்ததும் லோகப்பிரசித்தமுமான எதையும் உவமை

கூறத்தகுமென்க.தாயை வேணியைச் சுகிர்த்துவிட்டாள்-இரண்டு செயப்படுபொருள் வந்த வினை. சிறையிருந்த காலத்தில் பிராட்டியின் கூந்தல் பேணப்படாது சடையாயிருந்த தென்பதை "குமையுறத்திரண்ட தொரு சடையாகிய குழலாள்" என்று சுந்தரகாண்டத்துக் காட்சிப் படலத்து வருதலாலும் அறிக. பி - ம்:—[1] பெண்ணுக்கு. [2] இடைந்த, அமைந்த. [3] பொற்பார். [4] அழகினை. [5] முறையை. [6] உரைசெய்த. [7] செல்வனன்ன, செய்கையென்ன. [8] வகிர்ந்து, சுகிர்ந்து. [9] வரன்முறைத்திறத்து..., வரன்முறைசுருக்கு..., வரன்முறை சுருக்கவிட்டார், வீரன்முறைசுகிர்த்து... (3963)

44.—தேவமாதர் பிராட்டிக்குப் பல்விளக்கி நீராட்டல்.

பா[1]கடர்ந் தமுது [2]பில்கும் பவளவாய்த் தரளப் பத்தி
சேகற[3]விளக்கி நானந் தீட்டிமண் சேர்ந்த காசை
வேகடஞ் [4]செய்யு மாபோல் மஞ்சன விதியின் வேதத்து
[5]ஓகைமங் கலங்கள் [6]பாட [7]வாட்டினர் உம்பர் மாதர்.

(இ - ள்.) தேவஸ்திரிகள்,—சர்க்கரைப்பாகுபோன்று (இன்சுவை) மிகுந்து அமிருதம்போன்ற இன்சொற்களை வெளியிடுந் தன்மையதான பவழம்போலச் சிவந்த (பிராட்டியின்) திருவாய் மலரிலுள்ள முத்துவரிசைபோன்ற பல்வரிசையை(ப் பத்துமாச காலமாக விளக்காமையால்) வைரம் பற்றிய அழுக்கு நீங்கும்படி தேய்த்துச் சுத்திசெய்து, பரிமள தைலத்தை (அப்பிராட்டியின் சிரசில் இட்டு)த் தேய்த்து மண்படிந்த இரத்தினத்தைச் சாணை பிடித்துச் சுத்தஞ்செய்யும் விதம்போல, வேதங்களில் விதித்த ஸ்நாநத்துக்கு உரிய முறைப்படி, களிப்போடு மங்கலவாழ்த்துப் பாடல்களைப் (பலமகளிர்) பாடாநிற்க நீராட்டினார்கள்; (எ - று.)

'பாகு அடர்ந்து' என்றது, அதராமிருதத்தின் இனிமைமிகுதியைக்குறித்தது. அமுது, தரளப்பத்தி - உவமையாகுபெயர்கள். வேதத்து ஓகை எனப்பிரியாமல் வேதம் தோகைஎனப்பிரித்து - வேதத்தினால் (யாவர்க்கும் மாதாவெனக்) கூறப்பட்ட பெண்ணை [சீதையை] என்று உரைப்பாருமுளர்: அது மோனைக்கு ஏற்காது. பி - ம்:—[1] அமர்ந்து. [2] நல்கும், பல்கும். [3] விளங்கி. [4] செய்யுமாறின், செய்யுமார்பில். [5] ஓதை. [6] பாடி. [7] வாழ்த்தினார். (3964)

45.—தேவமாதர் சீதைக்குக் கலவைச்சாந்துபூசிக் குங்குமமப்பிப் பட்டாடையணிந்து மேகலைபூட்டியமை.

உரு[1]வின பவள வல்லி பானுரை யுண்ட தென்ன
மருவினை [2]கலவை பூட்டிக் குங்கும முலையின் [3]மாட்டிக்
கருவினை [4]மலரின் [5]காட்சிக் காசறு துகில் [6]காமன்
[7]திருவினை யல்குற் கேற்ப மேகலை தழுவச் [8]செய்தார்.

(இ - ள்.) அழகுமிக்க பவழக்கொடி பால்நுரையால் மூடப்பட்டதென்னும்படி (பிராட்டியின் சிவந்த திருமேனியில்) பரிமளம்

மிக்க (வெண்ணிறமான) கலவைச்சந்தனத்தைப் பூசிக் குங்குமப் பூங்குழம்பை (அவள்) கொங்கையில் அப்பி, கருவிளமலர்போன்ற தோற்றமுள்ள குற்றமற்ற [சிறந்த] பட்டாடையோடு காமனது செல்வம் விளங்குகின்ற இடைக்குஏற்ப மேகலையென்னும் இடையணியையும் பொருந்தச் சாத்தினர்; (தேவமாதர்); (எ-று.) மேகலை -எண்கோவை யிடையணி. பி-ம்:—[1]விளைப். [2]சாந்தம்பூசி. [3]ஆட்டி. [4]கமலங். [5]காட்சிக்காசறுதூசும், காட்சிக்காசுறுதூசும், நாட்டத் தஞ்சனமெழுதிக். [6]சாத்தித். [7]திருவினையுலைக்கேற்ப, திருவிளையல்குற்கேற்ற. [8]சேர்த்தார். (3965)

46.—தேவமாதர் பிராட்டிக்கு மற்றுஞ் சில அலங்காரம் செய்து மங்களவாலத்தி சுழற்றல்.

சந்திரன் தேவி மாரித் றகை [1]யுறு [2]தரளப் பைம்பூண்
[3]இந்திரன் தேவிக் [4]கேற்ப வியைவன பூட்டி யாணர்ச்
சிந்துரப் பவளச் செவ்வாய்த் தேம்பசும் [5]பாகு தீற்றி
[6]மந்திரத் தயினி [7]நீரால் வலஞ்செய்து காப்பு மிட்டார்.

(இ-ள்.) இந்திராணி யணிவதற்கு ஏற்கும்படி பொருந்தியவையும் சந்திரனது மனைவியரான நக்ஷத்திரங்கள்போல அழகுமிக்க முத்துக்களினாலாகியவையும் பசும்பொன்வேலைப்பாடு உடையவையுமாகிய (ஆரம்முதலிய) ஆபரணங்களைப் பூட்டி, புதிய சிந்தூரம் போலவும் பவழம்போலவும் செந்நிறமுடையதான (அப்பிராட்டியின்) வாயில் இனிய பசிய தாம்பூலசாரத்தைத் தடவி, மந்திரோச்சாரணத்தோடு ஆலத்திநீரை வலமாகச்சுழற்றி (அதனால்) ரக்ஷையையும் செய்தார்கள்; (எ - று.)

அசுவினிமுதலிய இருபத்தேழுநட்சத்திரங்களும் தட்சமுனிவனது புத்திரிகளாய்ச் சந்திரனுக்கு வாழ்க்கைப்பட்டவரென அறிக. நட்சத்திரங்களை முத்துக்களுக்கு உவமை கூறியது, அழகும் ஒளியும் பற்றி. வாயிதழ் மிக்க செந்நிறமுடையதாய் விளங்கி அழகு செய்யும்படி அதற்குச் செஞ்சாயந் தீற்றுகிறதொரு வழக்கத்தின்படி, வெற்றிலைபாக்குச் சுண்ணாம்புகலந்திடித்த சாரத்தை வாயில் தீற்றினரென்க. தின் என்னும் பகுதியிலிருந்து தீற்றி யெனப் பிறவினை இறந்தகாலவினையெச்சம் வந்ததெனக் கொண்டால், பிராட்டிக்கு வெற்றிலை மடித்துக்கொடுத்து அத்தாம்பூலத்தை அவள் வாயினால் மெல்லும்படிசெய்து என்று பொருள் கொள்ளலாம்; தீற்றி = தின்பித்து. பாகு-பாக்கு; இது, வெற்றிலை சுண்ணாம்புகளுக்கும் உபலக்ஷணம். அயினி - செந்நிறச்சோறு; அதனோடுகூடிய மஞ்சள்நீர், அயினிநீர். ஆலத்தி சுழற்றுதல் திருஷ்டிதோஷம் கழிதற்பொருட்டாகலின், 'மந்திரத்தயினிநீரால் வலஞ்செய்து காப்புமிட்டார்' என்றார். இனி, மங்களவாலத்தி சுழற்றி மற்றும் பலவகை ரட்சைகளைச் செய்தார்களென்று உரைப்பினுமாம். ஆலத்திநீரைக் கைவிரலால் தொட்டு நெற்றியிற் காப்பாக இடுதலும், சிறுவெண்கடுகின் பொடிகளை நெற்றியிற் காப்பாக இடுதலும் முதலிய ரட்சைகள் செய்யும் மரபும் உண்டு. பி - ம்:—[1]பெறு. [2]பவளப். [3]இந்திரை. [4]ஏற்ற. [5]பாகுந்தீற்றி.

பாகும்பற்றி. [6]மந்திரித்தயினி, மந்திரத்தயனீர். [7]சுற்றிவலஞ்செய்தார், சுற்றிவாழ்த்தினர். (3966)

இங்கே ஒருபிரதியிற் சிலபாடல்கள் காணப்படுவன வருமாறு:—

1. சென்றவன் றன்னை நோக்கித் திருவினு ளெங்கே யென்ன
மன்றலங் கோதை யாளும் வந்தனண் மானந் தன்னில்
என்றனை னென்ன லோடு மீண்டுநீ கொணர்க வென்ன [ருன்.
நன்றெனை வணங்கிப் போந்து நால்வரைக் கொணர்க வென்

2. காத்திர மிகுத்தோர் நால்வர் கஞ்சுகிப் போர்வை யாளர்
வேத்திரக் கையோ ரீண்டி விரைவுடன் வெள்ளந் தன்னைப்
பாத்திடப் பரந்த சேனை பாறிடப பரமன் சீறி
ஆர்த்தபே ரொலியென் னென்ன வரிகளார்ப் பரவ மென்ருர்.

3. என்றபோ திராமனைய வீடணு வென்ன கொள்கை
மன்றலங் குழலி னுளை மணம்புணர் கால மன்றித்
துன்றிய குழலி னுர்தாஞ் சுயம்வர வாஞ்சை (சூழு) போதும்
வென்றிசேர் களத்தும் வீர வீழுமிய தன்று வேலோய்.

4. அற்புத னினைய கூற வையவீ டணனு மெய்தச்
செப்பிள மூலையா டன்பாற் செப்பவுந் திருவ னுளும்
அப்பினுட் டுயிலை ரீத்து வயோத்தியி லடைந்த வண்ணல்
ஒப்பினைக் கண்ணிற் கண்டே யுளாகினைந் தினைய சொன்ருன்.

47.—பிராட்டியை விமானத்திலேற்றி இராமனிடம் அழைத்துச்செல்லுதல்.

மண்டல மதியி னுப்பண் [1]மானிருந் தென்ன மானம்
[2]கொண்டன ரேற்றி [3]வான மடந்தையர் தொடர்ந்து கூட
[4]மண்டி[5]வா னரரு மோட வரக்கரும் [6]புறஞ்சூழ்ந் தோட
அண்டர்நா யகன்பா லண்ணல் விடண னருளிற் சென்ருன்.

(இ - ள்.) சந்திரமண்டலத்தின் நடுவிலே மான் இருந்தாற்போல விமானத்திலே (பிராட்டி வீற்றிருக்கும்படி அதில் அவளைக்) கொண்டு ஏற்றித் தேவமாதர்கள் (விடாது) அருகிற்சூழ்ந்து உடன்வர, வாநரவீரர்களும் (அவர்களைச் சார) நெருங்கி ஓடிவர, இராக்கதர்களும் (அவர்களைச்சார) வெளியிற் சூழ்ந்துஓடிவர, பெருந்தன்மையையுடையவனுகிய வீபீடணன் தேவர்க்கெல்லாந் தலைவனுன ஸ்ரீராமபிரானிடத்து (அப்பெருமான்) கட்டளையிட்டருளியபடி (பிராட்டியை அழைத்துக்கொண்டு) சென்ருன்;

மிக்கவிளக்கத்தையுடைய விமானத்துக்குச் சந்திரமண்டலத்தையும், மானின்பார்வைபோன்ற பார்வையழகையுடைமையால் மானெனப்படுகிற பிராட்டி அவ்விமானத்தின்நடுவில் வீற்றிருத்தற்கு அந்தச் சந்திரமண்டலத்தினடுவிற் காணப்படுகிற மான் வடிவையும் உவமைகூறினர். சந்திரன்வடிவில் தெரிகிற களங்கத் தோற்றத்தை மான்வடிவென்றல், கவிமரபு. மானம்= விமானம்: விகாரம். பிராட்டியையேற்றிய விமானத்தை யடுத்துத்

தேவமாதரும், அவர்களையடுத்து வாநரரும், அவர்களையடுத்துப் புறத்தில் அரக்கர்களும் சூழ்ந்து வந்தனர்.

விலங்கினமாகிய வாநரங்களை 'வானரர்' என உயர்திணையாகக் கூறுதல் இலக்கணத்துக்கு ஒக்குமோ வெனில்,—உயர்திணை அஃறிணையென்ற பகுப்பிற்குக் காரணம் முறையே அறிவின் நிறைவும் குறைவுமே யாதலால், அவ்வறிவிற் குறைவின்றி ஐம்பொறியறிவோடு பகுத்தறிவையுங் கொண்டு மனிதர்போலவே தொழில்திறமமைந்த தெய்வக்குரங்குகளை உயர்திணையின்பாற் படுத்துதல் ஒக்குமென்க; இத்தன்மை, கரடியாகிய சாம்பவானுக்கும், கழுகாகிய சடாயு சம்பாதி யென்பவர்க்கும் பொருந்தும். தொல்காப்பியத்து மரபியலில் உரைகாரர் "மாவும் மாக்களும் ஐயறிவினவே" என்ற சூத்திரத்தின் கீழ்க் குரங்கை விலங்கின மென்று பொதுவகையாற் கூறியவர்தாமே "மக்கள்தாமே ஆறறிவுயிரே" என்ற அடுத்த சூத்திரத்தின் கீழ் 'குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன எனப்படும் மனவுணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராய் அடங்கும்' என்றமை காண்க. 'ஒரோவழி அஃறிணைப்பொருள்கள் மொழியாற்பேசுவன உளவாயின், அது தெய்வத்தன்மைமுதலியன விசேடத்தானன்றிப் பொருட்டன்மையான் அன்மையின் அமைத்துக்கொள்வது' என்ற இலக்கணவிளக்கச்சூறாவளியும் இங்குக் காணத்தக்கது. பி-ம்:—[1]மின். [2]கொண்டதில். [3]மான. [4]உண்டை, உண்ட. [5]வானவருமொள்வாள். [6]ஒருங்குசூழ. (8967)

வேறு.

48.—அளவிறந்த தேவர்களும் ருஷிகளும் தேவஸ்திரீகளும் ருஷிபத்தினியரும் வித்தியாதரமாதர்களும் முதலியோர் பிராட்டியை நெருங்கல்.

இப்புறத் திமையவர் [1]முனிவ ரேழையர்
அப்புறச் செவந்தவாய் [2]விஞ்சைத் தோகையர்
முப்புறத் துலகினு [3]மெண்ணின் [4]முற்றினோர்
[5]ஒப்புறக் குவிந்தன ரோகை [6]கூறுவார்.

(இ-ள்.) இப்பால் [பிராட்டி இராமபிரான்பாற் சென்றவிடத்தில்] தேவர்களும், இருடிகளும்,(அவர்களின்)பெண்பாலாரும், பவழத்தை யொப்பச் சிவந்த வாயையுடைய வித்தியாதரஸ்திரீகளும், (மற்றும்)மூவகையுலகங்களிலுமுள்ள தொகையில்மிக்கவர்களான பிறமகளிரும் ஆனந்த வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே ஒருசேர(வந்து)திரண்டார்கள்; (எ-று.) பி-ம்:-[1]முனிவரேனையர், முனையர்சேனையர். [2]தெய்வத்தோகையர். [3]எண்ணி. [4]முற்றிலார். [5]ஒப்பிற. [6]கூடுவார், கூறவே. இதுமுதல் ஐம்பத்தொன்பதாவது கவி வரையிலுமுள்ளபாடல்கள் சிலபிரதிகளில் இல்லை. சிலபிரதிகளில் "எச்சிலென்னுடல்" (57) என்ற பாடல் 48-ஆவதாகவும், "மானமீது" (58) என்ற பாடல் 49-ஆவதாகவும், "பிறப்பினும்" (59) என்ற பாடல் (50)-ஆவதாகவும், "சிலமும்" (56) என்ற பாடல் 51-ஆவதாகவும், "இப்புறத்து" என்ற இந்தப்பாடல

முதல் "அருந்ததியனைய" (55) என்ற பாடல்வரையிலுமுள்ள பாடல்கள் முறையே 52-ஆவது தொடங்கி 59-ஆவது பாடலாகவும் உள்ளன. (3968)

49.—இங்ஙனம் அனைவரும் பிராட்டியைச் சுற்றி நெருங்குகையில் அவர்களை அரக்கர் அடித்துத் துரத்த அவர்கள் மிகக்கதறுதல்.

அருங்குலக் கற்பினுக் கணியை [1]யண்மினர்
[2]மருங்குபின் முன்செல வழியின் றென்னலாய்
நெருங்கினர் நெருங்குழி நிருத ரோச்சலால்
கருங்கடன் முழக்கெனப் [3]பிறந்த கம்பலை.

(இ-ள்.) (இவ்வாறு அனைவரும்),—அருமையான [உயர்]குலத்தில்வளர்ந்தவளும் பதிவிரதாதருமத்துக்கு அலங்காரமானவளுமான பிராட்டியை யடுத்துச்சூழ்ந்து, பக்கங்களிலும் பின்னும் முன்னும் ஒதுங்குதற்கும் வழியில்லை யென்னும்படி மிகுதியாக நெருங்கினார்கள்: (அங்ஙனம் அடர்த்தியாக) நெருங்கினவிடத்து, அரக்கர்கள் (அவர்களை விலகும்படி) வெருட்டியடித்துத்துரத்தியதனால் கருநிறமான கடலின் முழக்கம்போலப் பேரொலிகள் உண்டாயின;

கம்பலை-அச்சப்பட்டவர்கள் கதறிய ஒலி. அருங்குலம் - ஜநககுலம், முழக்கு-முழங்கும்ஒலி; முதனிலைதிரிந்த தொழிலாகுபெயர். பி - ம்:—[1]அன்பினாற். [2]மருங்குற. [3]பொலிந்த. (3969)

50.—அங்ஙனங்கதறிய ஒலி கேட்ட இராமன், 'அதற்குக் காரணம் என்ன?' என்று வினவி, முனிவர்களாற் செய்தியறிதல்.

அவ்வழி யிராமனு மலர்ந்த தாமரைச்
[1]செவ்விவான் முகங்கொடு செயிர்த்து நோக்குறா
இவ்வொலி யாவதென் [2]றியம்ப விற்றெனக்
கவ்வையின் முனிவரர் [3]கழறி னாரரோ.

(இ-ள்.) அப்பொழுது இராமனும், மலர்ந்த தாமரைமலர்போல அழகியதாய்விளங்குகிற (தன்) முகத்தினாற் கோபித்து [முகத்திற் கோபக்குறி கொண்டு நோக்கி] 'இந்தஓசை எதனாலாகியது?' என்று வினவ, கபடமில்லாத இருடிச்சிரேஷ்டர்கள் (அதன் காரணத்தை) இன்னதென்று சொல்லினார்கள்; (எ - று.)

பிராட்டியைச் சூழ்ந்து நெருங்குகிற சனங்களை அரக்கர்கள் அடித்தலால் அச்சனங்கள் கதறுகிற ஆரவாரம் இதுவென்று உள்ளபடி முனிவர்கள் பெருமானுக்குச்செய்திகூறினர். கவ்வை - பழிமொழியுமாம். கவ்வையின்-துன்பமுள்ள எனினுமாம். கவ்வையின்-பேரொலியோடு, கழறினார் என்னவுமாம். பி - ம்:—[1]செவ்வியான். [2]இயம்புமின்றென. [3]கூறினாரரோ. (3970)

51.—உடனே இராமன் கோபத்தோடு விபீடணனைக் கண்டித்தலை மூன்றுகவிகள் கூறும்.

[1]முனிவரர் வாசகங் கேட்பு றுதமுன்
நனியிதழ் துடித்திட [2]நகைத்து வீடணன்
தனை [3]யெழ நோக்கிநீ [4]தகாத செய்தியோ
புனிதநூல் கற்றுணர் புந்தி யோயென்றான்.

(இ-ள்.) (அங்ஙனம்) சிறந்த முனிவர்கள் சொன்ன வார்த்தையைக் கேட்டதற்கு முன்னமே (இராமபிரான்), உதடு மிகத் துடிக்கக் கோபச்சிரிப்புக்கொண்டு விபீடணனை நன்றாக உறுக்கிப் பார்த்து, 'பரிசுத்தமான சாஸ்திரங்களைக் கற்றறிந்த அறிவுடையவனே! நீ தகுதியற்ற செயல்களைச்செய்யக் கடவையோ?' என்று (கடிந்து) கூறினான்; (எ - று.)

தேவர்முதலியோரை அரக்கர்கள் ஓச்சினமையாகிய குற்றத்தை அவ்வரக்கர் தலைவனான விபீடணன்மேலேற்றி இராமபிரான் அவனைக்கண்டித்து அறிவுகூறுவானாயின னென்க. அடிமைகளின் குற்றத்தைத் தலைவனதாகப் பாவித்தல், இயல்பு. 'கேட்புறுதமுன்...என்றான்' என்றது - விரைவுதோன்றக் கூறியவாறு. பி - ம்:—[1]முனிவர்கள். [2]நகைத்த. [3]உற. [4]தகாது. (3971)

52. கடுந்திற [1]லமர்க்களங் காணு மாசையால்
நெடுந்திசைத் தேவரு நின்ற யாவரும்
அடைந்தன ருவகையி [2]னடைகின் றார்களைக்
[3]கடிந்திட [4]யார்சொனார் [5]கருது நூல் [6]வலாய்.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) நன்குமதிக்கப்படுகிற சாஸ்திரங்களில் வல்லவனே! கொடிய ஆற்றலோடு போர்நடத்திய இடத்தைப் பார்க்கவேண்டுமென்னும் ஆசையினால் நெருக்கங்கொண்டு மகிழ்ச்சியோடு வந்து சேர்கிறவர்களான நீண்ட திக்குக்களில் வசிக்கிற தேவர்களையும் மற்றுமுள்ள எல்லோரையும் வெருட்டியோட்டும்படி சொன்னவர் எவர்? (எ - று.)

தேவர்கள்முதலியோர் வந்து நெருங்கியதற்குப் போர்க்களங் காணும் அவாவும் ஒருகாரணமாதலால், அது இங்குக் குறிக்கப்பட்டது. 'அடைகின்றார்களை' என்பதிலுள்ள இரண்டனுருபு, பிரித்தெடுத்து, 'தேவர்' என்பதனோடும், 'யாவர்' என்பதனோடும் கூட்டப்பட்டது. 'யார்சொனார்' என்பது யான் கட்டளையிட்டேனா எவரும் கட்டளையிடாதிருக்கையிலே அரக்கர்கள் சாதுக்களுக்கு இங்ஙனம் தீங்குசெய்தல் பெருங்குற்றமன்றோ என்றும் உணர்த்தியபடியாம். பி - ம்:—[1]அமரர்கள். [2]அணைகின்றார்களை. [3]கடிந்திடல். [4]ஆர். [5]நீதி. [6]வலார். (3972)

வேறு.

53\. பரசுடைக் கடவுள் நேமிப் பண்ணவன் பதுமத் தண்ணல்
[1]அரசுடைத் தேரிவை மாரை யின்றியே யமைவ துண்டோ
உரைசெயற் கரிய தேவ [2]ரேனையோர் [3]கலந்து காண்பான்
விரகுறின் [4]விலக்கு வாரோ வேறுளார்க் கென்கொல் [5]வீர.

(இ - ள்.) வீரனே! மழுவென்னும் ஆயுதத்தையுடைய சிவபெருமானும் சக்கராயுதத்தையுடைய கடவுளாகிய திருமாலும் (அத்திருமாலினது நாபித்) தாமரைமலரில் தோன்றிய பெரியோனான பிரமனும், தலைமையையுடைய (தம்தம் மனைவியராகிய) மகளிரை உடன்கொள்ளாமலே யிருப்பது உண்டோ? (தலைமைத் தேவர்களான திரிமூர்த்திகளே இங்ஙனமாகிறபோது) மற்றுமுள்ளோர்களைப்பற்றிச்சொல்லவேண்டுவது என்னே? எல்லைகாணவொண்ணாத [பெருந்திரளான] தேவர்களும், மற்றைமுனிவர் முதலியோரும், கூடிப் (போர்க்களத்தையும் எம்மையும்) காணுதற்கு வந்து நெருங்கினால் (அவர்களை) வெருட்டித்துரத்துவாருண்டோ? (எ - று.)

அன்போடு காணவருகின்றவர்களைக் கடிந்தமை குற்றம் என்று கீழ்க்கவியிற் பொதுப்படக்கூறி, அங்ஙனம்வரும் மகளிரைக் கடிந்தமை முறையன்றென்பதைச் சிறப்பாக இக்கவியிற் கூறியவாறு. திரிமூர்த்திகளும் மனைவியரை இன்றியமையாதவராகக் கொண்டிருத்தல், முன்னிரண்டடியில் உணர்த்தப்பட்டது. அத்தன்மை கொண்டு யாவர்க்கும் மனைவியர் இன்றியமையாதவரென்பதனைச் சாதிப்பார், 'வேறுளார்க்கு என்கொல்' என்றார். இங்ஙனம் ஒருபொருளைச்சொல்லி அதுகொண்டு கைமுதிகநியாயமென்னும் தண்டாபூபிகாநியாயத்தால் மற்றொருபொருளைச் சாதித்தல் தொடர்நிலைச் செய்யுட்பொருட்பேறணி. 'வீர' என விளித்தது, 'நின்வீரத்தன்மைகாட்ட இதுவோ இடம்!' என்றற்கு. பி - ம்:— [1]அரசுடைத்தேவிமாரை. [2]உன்னையோர். [3]கரந்துகாண்பான், காண்கின்றோரை. [4]விலங்குவாரோ, விலக்குவாமோ. [5]வீரம். ()

54.—இராமன் கண்டித்துக்கூறிய சொல்லைக் கேட்டு, விபீடணன் அஞ்சி உள்ளமும் உடலமும் நடுங்குதல்.

ஆதலா னரக்கர் கோவே யடுப்பதன் றுனக்கு [1]மின்னே
[2]சாதுகை மாந்தர் தம்மைத்த டுப்பதென் றருளிச் செங்கண்
வேதநா யகன்று ணிற்ப வெய்துயிர்த் தலக்க ணெய்திக்
கோதிலா மனது மெய்யுங் [3]குலைந்தனன் குணங்கள் தூயோன்.

(இ - ள்.) ஆதலால், இராட்சசராசனே! இப்பொழுது சாதுஒழுக்கத்தையுடைய சனங்களைத் தடுப்பது உனக்கும் அடுப்பது அன்று என்று சிவந்ததிருக்கண்களையுடையவனும் வேதங்கட்குத் தலைவனுமான இராமபிரான் அருளோடுசொல்லி நிற்க, குணங்களாற்பரிசுத்தனான விபீடணன் வருத்தமடைந்து, வெவ்விதாகப் பெருமூச்சுவிட்டு, குற்றமில்லாத மனமும் உடம்பும் (அச்

சந்தால்) நடுங்குவானுயினன்; (எ - று.)—சாது-சற்குண அமைதி. சாது - ஸாது. பி - ம்:—[1]பின்னே, முன்னே. [2]சாதுனைத, சாதுவாம். [3]குலுங்கினுன். (3974)

55.—சானகி போர்க்களஞ்சார்ந்து இராமனதுதிருக் கோலத்லதக் காண்பவளாய்த் தன்னிலே தான்கூறுதல்.

அருந்ததி யனைய நங்கை யமர்க் [1]கள மணுகி யாடல்
பருந்தொடு கழுகும் பேயும் பசிப்பிணு நீரு மாறு
விருந்திடு வில்லின் [2]செல்வன் விழாவணி விரும்பி நோக்கிக்
கருந்தடங் கண்ணு நெஞ்சுங் களித்திட [3]வினைய சொன்னுள்.

(இ - ள்.) (கற்பில்) அருந்ததிதேவியைப்போன்ற பிராட்டி,- போர்க்களத்தைச் சமீபித்து, வலிமையையுடைய பருந்துகளும் கழுகுகளும் பேய்களும் (தம்தம்) பசிநோய் நீங்கும்படி (அவற்றிற்கு அரக்கருடல்தசையை) விருந்துணவாகஇட்ட (கோதண்டமென்னும்) வில்லையேந்திய ஸ்ரீமானுன இராமபிரானது அழகிய போர்க்கோலக்காட்சியை விருப்பத்தோடு நோக்குபவளாய், கரிய பெரிய (தன்) கண்களும் மனமும் களிப்படைய இத்தன்மைய சொற்களைச் சொல்பவளானுள்; (எ - று.)—அவற்றை, மேற் காண்க.

அருந்ததீ-வசிஷ்டமுனிவனது பத்தினி; இவள், பதிவிரதாதருமத்திற் சிறத்தலால், கற்புடையமாதர்க்கு உவமை கூறப்படுவாள்: ஏனையோரினும் இவட்குச் சிறப்பு, நட்சத்திரநிலையிலும் கணவனை விட்டுப்பிரியாது உடனிருத்தல்.பதினெட்டுவகை உடற்குற்றங்களுள் ஒன்ருதலால், பசி, பிணியெனப்பட்டது. பி - ம்:—[1]களத்தணுகி, களங்குறுகி, களநணுகி [2]செல்வவிழா. [3]விருப்பமுற்ருள், விருப்புமுற்ருள். (3975)

வேறு.

56.—அநுமான்செய்த உதவியைச் சீதை பாராட்டிக் கூறுதல்.

சீலமுங் காட்டியென் கணவன் [1]சேவகக்
கோலமுங் காட்டியென் [2]குலமுங் காட்டியிஞ்
ஞாலமுன் [3]காட்டிய கவிக்கு நாளுக்
காலமுங் [4]காட்டுங்கொ லென்றன் கற்பென்ருள்.

(இ - ள்.) (என்னுடைய) நல்லொழுக்கத்தின் நிலைமையையும் (என் கணவனுக்குத்) தெரியச்சொல்லி, எனது கணவனுகிய (அப்) பெருமானது பராக்கிரமத்தின் தோற்றத்தையும் (உலகம்) அறியச் செய்து, எனது குலத்தின்பெருமையையும் (யாவர்க்கும்) விளக்கி, இவ்வுலகத்தையும் (அழிவில்லாது) காணப்படும்படிசெய்த குரங்காகிய அநுமானுக்கு என்கற்பு, நாள்கள் இடையறுத காலமுள்ளளவும் வாழ்தலாகிய சிரஞ்சீவித்தன்மையைத் தவருமல் உண்டாக்குமோ? என்று (தன்னிலேதான்) சொல்லினுள்; (எ-று.)

தமக்கு மிக்கநன்மையுண்டாம்பொழுது அக்களிப்பினால் அந் நன்மைக்குக் காரணமானவரை மறவாமல் உள்ளத்திற்கொண்டு வாழ்த்துதல் செய்நன்றி மறவாத சான்றோரது இயல்பு. பி-ம்:— [1]செய்தவக். [2]குணமும். [3]காட்டியக். [4]காட்டுமே கொல்லென். ()

57.—சீதை இராமபிரானைக் காணுதல்.

எச்சிலென் னுடலுயி [1]ரேகிற் றேயினி
நச்சிலை யென்பதோர் [2]நவையி லாளெதிர்
பச்சிலை வண்ணமும் பவள வாயுமாய்க்
கைச்சிலை [3]யேந்தி [4]நின் றதனைக் கண்ணுற்றாள்.

(இ - ள்.) 'எனது உடம்பு (இராவணன் கொணர்ந்து சிறை வைத்ததனால்) அசுத்தி (யடைந்தது): (அவ்வுடம்பு), உயிர்நீங்கி யதேயாம், இனி (எனக்கு) ஆசை யொன்றுமில்லை'என்று சிந்தித்த சிந்தனையையுடைய குற்றம்சிறிதுமில்லாதவளான பிராட்டி,— (தன்) எதிரிலே பச்சிலை போன்ற திருமேனி நிறத்தையும் பவழம் போன்ற திருவாயையுமுடையனும் (ஸ்ரீராமன்)கையில் வில்லேந்தி நின்ற காட்சியைப் பார்த்தாள்; (எ - று.)

'எச்சிலென்னுட லுயிரேகிற்றே யினிநச்சிலை' என்பது இரா வணன் கைப்பட்ட சீதை இலங்கையிற் சிறையிருந்தகாலத்திலெல் லாம் சிந்தித்திருந்தசிந்தை; அதாவது - என்உடம்பு, இராவணன் கொணர்ந்து சிறைவைத்ததனால் அசுத்தப்பட்டது; இதனை என் கணவன் விரும்பான்: ஆதலின், எனது பிராணநாயகனைப் பிரிந்த இவ்வுடம்பு, உயிரையொழித்துத் தற்கொலை செய்துகொண்டு இறத்தற்கே யுரியது;இனி, எனக்கு உயிர்வாழ்வின்மேலும் வேறு எதன்மேலும் ஆசைகொள்ளத் தகுதியில்லையென்று பலவாறு பிராட்டி அப்பொழுதெல்லாம் சிந்தித்திருந்தசிந்தையென்க. பி-ம்:- [1]எய்திற்றேயினி, ஏகிற்றெனென. [2]நவைவந்துள்ளுறப். [3]தாங்கி. [4]நின்றனை. (3977)

58.—சீதை விமானத்தினின்று இறங்குதல்.

மானமீ தரம்பையர் சூழ [1]வந்துளாள்
போனபே ருயிரினைக் கண்ட பொய்யுடல்
தானது கவர்வுறுந் தன்மைத் தாமென
ஆனனங் காட்டுற வவனி [2]யெய்தினாள்.

(இ-ள்.) தேவமாதர்கள் (தன்னைச்) சூழ்ந்துவர விமானத்தின் மேல் (ஏறி) வந்தவளான சீதை,—(தன்னை விட்டு) நீங்கிச்சென்ற சிறந்த உயிரை மீளக்கண்ட நிலையற்றதானஉடம்பு தான் அவ் வுயிரை உட்கொள்ளமுயலும் தன்மையதாகுமென்னுமாறு [பிராணநாயகனான இராமனைச் சாரும்படி] (இருந்து, தன்) முகத்தை (அவ்விராமபிரானுக்கு)க்காட்ட (விமானத்தினின்று) நிலத்திலிறங்கினாள்; (எ - று.)

சீதை தரையில் இறங்கி இராமபிரான் தன்முகத்தைக் காணு மாறு அவன் கண்ணுக்கு இலக்காய்நின்றன ளென்க. இடையிரண்டடியில் வந்த உவமை - மாயமானின் பின்னே தொடர்ந்து சென்றது முதல் தன்னைப் பிரிந்துநின்ற தனது பிராணநாயகனான ஸ்ரீராமனைக் கண்ட சீதை உடனே அப்பெருமானைச் சாரவிரும்புந் தன்மையளானதை விளக்கும். சீதை ஸ்ரீராமனைத் தன்னுயிராகக் கொண்டிருந்தாளென்பது, இந்நூலிற் பலவிடத்து வருகின்றது. அரம்பை - ஒரு தேவமாது: இதன்பன்மையாகிய அரம்பையரென்பது-இலக்கணையாய்த் தேவமாதரைக் குறித்துநிற்கும்: அரம்பை முதலியோர் என்றுபொருள்கொள்ளலாம். பி - ம்:—[1]வந்துளார். [2]ஏகினார். (3978)

59.—கணவனைக் கண்டு தொழுததனாற் சீதை கவலையொழிதல்.

பிறப்பினுந் துணைவனைப் பிறவிப் பேரிடர்
துறப்பினுந் துணைவனைத் [1]தொழுது [2]நானினி
மறப்பினு [3]நன்றிது [4]மாறு [5]வேறுவீழ்ந்து
இறப்பினு நன்றென வேக்க நீங்கினாள்.

(இ-ள்.) '(இப்பிறப்பில்மாத்திரமேயன்றி) எப்பிறப்பெடுத்தாலும் துணைவனாகின்றவனும் பெரியபிறப்புத்துன்பம் நீங்கினாலும் துணைவனாகின்றவனுமானபெருமானை நான் (கண்டு) சேவித்திட்டதனால், இனி (அப்பெருமானை நான்) மறந்துவிட்டாலும் நல்லதே; இதற்கு மாறாக, வேறுவகையாய் (நான்) வீழ்ந்தொழிந்தாலும் நல்லதே' என்று எண்ணி(ப் பிராட்டி) கவலையொழிந்தாள்; (எ - று.)

'என் கணவனை நான் காணாமலே போய்விடுவேனோ?' என்று நெடுநாளாகப் பிராட்டி ஏங்கிக்கிடந்தவளாதலால், அக்கணவனைக் கண்டவுடன் 'நான் என் கணவனைக் கண்டு சேவிக்கப் பெற்றேன்; இனி எனக்கு யாதுநேருமாயினும் குற்றமில்லை' என்று எண்ணி அந்தஏக்கம் நீங்கினளென்பதாம். கருமவசத்தால் உடம்போடு கூடிப் பிறப்பெடுத்து இவ்வுலகில் வாழ்கிற நிலையிலும், அரிய பெரிய அப்பிறப்புத்துன்பம் ஒழிந்து முத்தியடைகிற நிலையிலும் சீவாத்மாவுக்குப் பரமாத்மாவே உற்றனசெய்து உதவுபவனென்ற சாஸ்திரார்த்தம், 'பிறப்பினுந் துணைவனைப் பிறவிப் பேரிடர் துறப்பினுந் துணைவனை' என்ற தொடர்களில் விளக்கப்பட்டது. பி - ம்:—[1]தொழுத. [2]நானெனை, நானுனை. [3]நன்றினி, நன்றென. [4]மற்றும். [5]வேறுவந்து. (3979)

60.—இராமன் சீதையை நோக்குதல்.

கற்பினுக் [1]கரசினைப் பெண்மைக் காப்பினைப்
பொற்பினுக் [2]கழகினைப் புகழின் வாழ்க்கையைத்
[3]தற்பிரித் தருள்புரி [4]தருமம் போலியை
[5]அற்பினத் தலைவனு மனைய நோக்கினான்.

(இ-ள்.) (எல்லாவுயிர்களிடத்தும்) அன்பையுடைய நாயகனுன அந்த இராமபிரானும், - பதிவிரதாதருமத்துக்குத் தலைவியும், (நாணம்முதலிய) பெண்மைக்குணங்கட்குப் பாதுகாவலாகவுள்ளவளும், (எல்லாவகை) அழகுகட்கும் அழகுசெய்பவளாயிருப்பவளும், கீர்த்தி (அழிவின்றி எங்கும்பரவி) நிலைத்துவாழ்தற்குக் காரணமானவளும், (தலைவனுகிய) தன்னைப்பிரிந்து(தனியேயின்று) கருணைசெய்கிற தருமத்தின்வடிவம்போன்றவளுமான சானகியை நன்ருகப் பார்த்தான்; (எ - று.)

சிறந்த கற்பையும் நீங்காத பெண்மைக்குணங்களையும் நல்ல அழகையும் மிக்கபுகழையுமுடையவள் சீதை யென்பது, முன்னிரண்டடியின் கருத்து. பிராட்டி சிறையிருந்தது தேவஸ்திரீகளின் சிறையை விடுவிக்கைக்காக வாகையாலும், சிறைமீளும் முன்னரே தன்னை நலிந்த அரக்கியரின் நடுக்கங்கண்டு, 'அஞ்சன்மின்' என்று அபயமளித்ததனுலும், சீதையை 'தற்பிரிந்தருள்புரி தருமம் போலியை' என்றது. இங்கு, "பிராட்டிமுற்படப் பிரிந்தது தன் க்ருபையை வெளியிடுகைக்காக" என்ற ஸ்ரீவசனபூஷணவாக்கியமும், அதன் வியாக்யானமும் காணத்தக்கன. அற்பின் நோக்கினுன் என இயைத்தலும் ஒன்று. பி - ம்:—[1] அரசியைப். [2] அணியினைப். [3] தப்புறப்புரிந்தருள், தற்புறந்தருள்புரி, தற்புரிந்தருள்புரி. [4] தருமபோலியை. [5] அப்பினுட், அற்பெனுந், அற்புறத், அற்புதத்.

61.—இராமன் சீதையின்கற்புறுதியைப் பரிசோதிக்கக் கடிந்துகூறத்தொடங்குதல்.

கணங்குழு துணைமுலை [1]முன்றிற் றூங்கிய
அணங்குறு நெடுங்கணீ ராறு [2]பாய்தர
[3]வணங்கியன் [4]மயிலினைக் [5]கற்பின் வாழ்வினைப்
பணங்கிளர ரரவென [6]வெழுந்து [7]பார்ப்புறு.

எட்டுக் கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) நிறவேறுபாடுபொருந்திய இரட்டையானமுலையின் மேற்புறத்து(க் கண்களினின்று) சோர்ந்த வருத்தத்தைத்தெரிவிப்பதான மிக்க கண்ணீராறுபாய வணங்கிய தன்மையையுடைய மயில்போன்ற சாயலுள்ளவளும் கற்பு வாழ்ச்சிபெறுதற்கு இடனுமான சீதாபிராட்டியை, படமெடுத்த பாம்புபோலப் பொங்கிச் சீறிப்பார்த்து,—(எ - று.)—'பார்ப்புறு' என்ற 'செய்யா' வென்னும் வாய்பாட்டுஉடன்பாட்டெச்சம், 69-ஆஞ் செய்யுளிலுள்ள 'என்றனன்' என்ற முற்ருேடு முடியும்.

ஆனந்தக்கண்ணீராறுபாயத் தன்னைவணங்கிய சீதையை இராமன் கோபக்குறிதோன்ற நோக்கிச் சிலகடுஞ்சொற் சொல்வானுயினனென்னலுமாம். பி - ம்:—[1] முன்பிற். [2] வார்வுற, பாருற, பாடுற. [3] வணங்கிய. [4] மயிலியல். [5] மாசில்கற்பினைப். [6] முனிந்து, முனிவன். [7] பன்னுவான், பண்ணவன். (8981)

62.—ஏழுகவிகள்-இராமன் சீதையைப் பலவாறு கடிந்து கூறியன தெரிவிக்கும்.

ஊண்டிற முவந்தனை யொழுக்கம் பாழ்பட
மாண்டிலை முறைதிறம் பரக்கன் [1]மாநகர்
ஆண்டுறைந் [2]தடங்கினை யச்சந் தீர்ந்திவண்
மீண்டதென் [3]னினைவென்னை விரும்பு மென்பதோ.

(இ - ள்.) நீதிநெறிதவறிய இராக்கதனான இராவணனது பெரிய இலங்கைநகரமாகிய அவ்விடத்தில் (நெடுநாள்) வசித்து (அவன்கீழ்) அடங்கியிருந்தாய்; (அங்கு) அறுசுவையுள்ள உணவு வகைகளை விரும்பியுண்டு வாழ்ந்தாய்; (உனது) நல்லொழுக்கம் அழிந்திடவும் (நீ) இறந்தாயில்லை; (இத்தன்மையளான நீ), அச்சமின்றி இவ்விடத்தில் [இப்பொழுது] மீண்டுவந்தது யாதுகருதி? '(இராமன்) என்னை விரும்புவான்' என்பது (உன்) கருத்தோ?

சீதை சிறையிருந்த பத்துமாசகாலத்திலும் யாதோருணவையும் சிறிதும் உட்கொள்ளாமல் "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாம் கண்ணன்" என்றபடி இராமசிந்தனையாலும் இராமனது ஸத்தாமாத்திரத்தாலும் தெய்வசங்கற்பத்தாலும் உயிர்த்திருக்கவும், இராமன் அவளை நோக்கி 'ஊண்திறமுவந்தனை' என்றது—நெடுநாள் இறவாது உயிர்வாழ்ந்திருந்தமையாதலால் உணவுஉண்டேயிருப்பாயென்று அநுமானபிரமாணவகையால் அல்லது அருத்தாபத்தியால் அவள்மேற் குற்றமேற்றிக் கூறியவாறும்: பிறவற்றுக்கும் இங்ஙனமே கண்டுகொள்க. பி-ம்:—[1]மாணகர். [2]அடங்கிநீ. [3]இவனென்னை, இவனமை. (3982)

63. உன்னைமீட் பான்பொருட் டுவரி தூர்த்தொளிர்
மின்னை[1]மீட் டுறுபடை யரக்கர் [2]வேரறப்
[3]பின்னைமீட் டுறுபகை [4]கடந்தி லேன் [5]பிழை
யென்னைமீட் பான்[6]பொருட் டிலங்கை யெய்தினேன்.

(இ - ள்) உன்னை(ச் சிறை) மீட்டு அழைத்துக்கொள்ளுதற் பொருட்டு,—கடலை (மலைகளைக்கொண்டு) நிரப்பியடைத்து (அணைகட்டி), விளங்குகிற மின்னலை(த் தமது ஒளிக்கு ஒப்பாகாமையால்) புறங்கொடுத்தோடச்செய்கிற [பேரொளியுள்ள] ஆயுதங்களையுடைய இராக்கதர் வேரோடழிய(ச் செய்து), பின்பும் மேன்மேற் போர்செய்து பெரும்பகையாகிய இராவணனை அழித்தேனில்லை; (மற்று எதற்காக எனில்), (தன்மனையாளைக் கவர்ந்து சென்றவனைக் கொன்றிலனென்ற)பிழையினின்று என்னை மீட்டுக் கொள்ளுதற் பொருட்டே (நான்) இலங்கைக்கு வந்து பகைவென்றேன்; (எ - று.)

நான் கடல்கடந்து இலங்கைசேர்ந்து ஆயுதபாணிகளான அநேக ராக்ஷசர்களை நிர்மூலப்படுத்தி, விடாதுபொருது இராவணனைக் கொன்றது, உன்னைச் சிறைமீட்டு அழைத்துக்கொள்ள விரும்பியன்று; மனையாளை மாற்றான்கொள மாறுசெய்யாது

விட்டன னென்ற பழி எனக்கு வாராமைப் பொருட்டேயென்றன னென்பதாம். பி - ம்:—[1]மீட்டுறுபகை, வீடறுபடை. [2]வேரறுத்து. [3]இன்ன, பன்னி, பன்னே. [4]இடித்திலேன். [5]பழி. [6]அமைந்து. இச் செய்யுள் ஒருபிரதியில் "பெண்மையும்" (66) என்பதன்பின் உள்ளது. (3983)

64. மருந்தினு [1]மினியமன் னுயிரின் வான்றசை
அருந்தினை [2]யேநற வமைய [3]வுண்டியே
இருந்தனை [4]யேயினி [5]யெமக்கு மேற்பன
[6]விருந்துள வோவுரை [7]வெம்மை நீங்கினாய்.

(இ - ள்.) (என்பக்கல்) அன்புநீங்கியவளே! மிக்க பிராணிகளின் பெரிய மாமிசங்களை அமிருதத்தைக்காட்டிலும் சுவைமிக்கனவாகிக் கொண்டு (இலங்கையிற்) புசித்தனையே;மதுவை மிகுதியாகக் குடித்தனையே; (இவ்வாறு மதுமாமிசபட்சணஞ்செய்து) இருந்தாயன்றோ? (அத்தன்மையளான நீ), இனி எமக்கும் தகுதியாகச்செய்யும் (அத்தன்மையவாகிய) விருந்துகள் உள்ளனவோ? உரை; (எ - று.)

ராக்ஷசராசனது ராசதானியில் அவன்கீழடங்கிப் பலநாள் உயிர் வாழ்ந்திருந்த நீ, அவ்வரக்கரது வழக்கப்படி மதுமாமிசங்களை வெறுப்பின்றி விருப்பத்தோடு புசித்தேயிருப்பாய்; அப்படிப்பட்ட நீ இப்பொழுது இங்கு வந்தது,உன்னோடு முன்புஉறவுடைய எங்கட்கும் அந்த மதுமாமிசவிருந்து செய்விக்கக் கருதியோ? சொல் என்றன னென்பதாம். "வெம்மைவேண்டல்" என்ற தொல்காப்பிய உரியியற் சூத்திரத்தால், வெம்மை யென்பது - விருப்பத்தை யுணர்த்தும்போது உரிச்சொல்லாதலை யுணர்க. இனி, வெம்மைநீங்கினாய் என்பதற்கு - (கணவனைப் பிரிந்து பிறர் மனையில் வாழ்ந்தமைபற்றித்) தவித்த லில்லாதவளே! என்று உரைப்பினும் அமையும். மதுமாமிசங்கள் அரக்கர்கட்குத் தேவாமிருதத்தினும் உருசிக்கின்றன வென்பது பற்றி, அவற்றிற்கு 'மருந்தினுமினிய' என்ற அடைமொழி கொடுத்தது. இங்குச் சீதையைப் பழிக்கும் முகத்தால் மதுமாமிசங்களை யுண்பவர் கடவுளின் பிரீதிக்கும் பாத்திரராகாரென்ற தமது கொள்கையைத் தொனிக்க வைத்திருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கது. பி - ம்:—[1]அரிய, உரிய. [2]பெரு. [3]உண்டனை. [4]போய். [5]எமர்க்குமேற்பன, எமக்குமேயென. [6]விருந்துளவே. [7]வெறுமை. (3984)

65. கலத்தினிற் [1]பிறந்தமா மணியிற் காந்துறு
நலத்தினிற் [2]பிறந்தன [3]நடந்த நன்மைசால்
குலத்தினிற் பிறந்திலை கோனில் [4]கிடம்போல்
நிலத்தினிற் பிறந்தமை நிரப்பி னுயரோ.

(இ - ள்.) ஆபரணங்களிற் பதிக்கப்படுகிற சிறந்தஇரத்தினங்கள் போல(ச்சிறப்புப்பெற்று) விளங்குகிற நன்மையோடு பொருந்தியனவான குணஞ் செயல்கள் (உன்னிடம்) ஒழிந்தன; (ஆகவே) மேன்மைமிக்க உயர்ந்தகுலத்திற் பிறவாமல் வலிமையில்லாத

புழுப்போல நிலத்தினின்று (நீ) தோன்றியதற்கு ஏற்றதன்மையைப் பூர்ணமாகச் செய்துவிட்டாய்; (எ - று.)—அரோ-ஈற்றசை.

தேர்ந்தெடுத்து ஆபரணங்களிற் பதிக்கப்படும் விலையுயர்ந்த சிறந்த இரத்தினங்கள் விளங்குதல்போலப் புகழ்பெற்று எங்கும் விளங்கத்தக்க நற்குணநற்செய்கைகள் உன்னிடம் ஒழிந்தன வென்பது முன்னிரண்டடிகளின் கருத்து. கருப்பத்தினின்று பிறவாமல் நிலத்தினின்று தோன்றினவளான நீ நற்குணநற்செய்கையுடையளாயிருப்பின் அயோநிஜையென்று பேர்பெறுவை; அதற்கு இப்பொழுது இடமில்லை: நற்குணநற்செய்கைகள்மிக்க உயர்குலத்தில் நீ பிறந்தவளாயிருப்பின் அக்குலத்துக்கு ஏற்ற நல்லொழுக்க முடையளாயிருத்தல் கூடும்; அங்ஙனம் பிறவாது புழுப்போலத் தரையிற் பிறந்தமைபற்றி, அதற்கு ஏற்ப அற்பத் தன்மையையே முற்றிலும் உடையளாயினை யென்பது,பின்னிரண்டடியின் கருத்து. சனகராசன் யாகபூமியை உழுதபோது உழுபடைச் சாலினின்று தோன்றியவள் சீதை யென்பது இச்செய்யுளினிற்றடியிற் கருதத்தக்கது. 'கலத்தினிற் பிறந்தமாமணி' என்பதற்கு இரத்திநாகரமான கடலில்தோன்றிய மரக்கலத்திற் கொணரப்பட்ட சிறந்த இரத்தினமென்று பொருள்கொள்ளுதலு மொன்று. பி-ம்:—[1]பிறந்து. [2]பிறந்தது, பிறந்தொளி. [3]நடந்து, நடாத்து. [4]இட்டம்பொன். ஒருபிரதியில் 'நலத்தினர்குலம்பிறந்துடந்து நன்மைசால்' என்று இரண்டாமடி. (3985)

66. பெண்மையும் பெருமையும் [1]பிறப்புங் கற்பெனும்
திண்மையு மொழுக்கமுந் தெளிவுஞ் சீர்மையும்
உண்மையு நீயெனு மொருத்தி தோன்றலால்
வண்மையின் மன்னவன் புகழின் [2]மாய்ந்தனால்.

(இ-ள்.) (நாணம்முதலிய) மகளிர்க்குஉரிய குணங்களும் இழிகுணமில்லாமையும் உயர்குடிப்பிறப்புக்குஏற்ற இயல்பும் பதிவிரதாதருமமென்கிற கலங்காநிலைமையும் நல்லொழுக்கமும் (கணவனையேதெய்வமாகக் கொள்ளும்) அறிவுத்தேர்ச்சியும் புகழும் பொய்யொழுக்கமில்லாமையுமாகிய இவை,-நீ ஒருத்திதோன்றியதனால் ஈகையில்லாத அரசனது கீர்த்தி (அழிதல்) போல (உலகத்தில்) அழிந்தன; (எ - று.)

இங்ஙனம் தீயொழுக்கமுடையளான நீயொருத்தி உலகத்தில் தோன்றியமைபற்றி, உலகத்திற் பெண்மைமுதலியன கேடடைந்தன என்றவாறு. அங்ஙனம் கேடடைதற்கு, தானஞ்செய்யாதவனது புகழ் அழிதல் உவமை கூறப்பட்டது: 'ஈதல் இசைபட வாழ்தல்'' என்றபடி புகழுக்கு ஈகையே சிறந்த காரணமென்பதும், அது இல்லாதவன் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களாற் படைத்தபுகழும் அழியுமென்பதும் அறியத்தக்கன. திருக்குறளுரையில் 'கற்பென்னுங் கலங்காநிலைமை' என்று உரைத்தது, இங்கு உணரத்தக்கது. உண்மை-மனமொழிமெய்கள் மாறுபடாமை; அக

மாகிய மனத்தின் கருத்தும், புறமாகிய சொற்செயல்களும் தம்மில் மாறுபாடின்றியிருத்தல். பெண்மையும்......உண்மையும்மாய்ந்தது -பன்மையொருமை மயக்கம். "ஏக: பாபானி குருதே-பலம் புங்க்தே மஹாஜந:" [ஒருவன் தீவினைகளைச் செய்கின்றான்: அதன் பயனைப் பலசனங்கள் அனுபவிக்கின்றார்கள்] என்றபடி உன் ஒருத்தியின் ஒழுக்கக்கேட்டினால், உலகத்து மகளிர்க்கெல்லாம் பழிப்பு விளைகின்றது என்க. பி - ம்:—[1]பிறப்பில். [2]மாய்ந்தவால், மாய்த்ததால். (3986)

67. அடைப்பரைம் புலன்களை யொழுக்க மாணியாச்
சடைப்பரந் [1]தகைந்ததோர் தகையின் மாதவம்
[2]படைப்பர்வந் திடையொரு பழிவந் தாலது
துடைப்பர் தம் [3]முயிரொடுங் குலத்தித் [4]தோகைமார்.

(இ-ள்.) உயர்குலத்துமகளிர்,—(தம்கணவரைப் பிரிந்தகாலத்துப்) பஞ்சேந்திரியங்களை(த் தந்தமக்கு உரியபுலன்களில் தடையின்றிச் செல்லவொண்ணாதபடி) அடக்கிவைப்பர்; நல்லொழுக்கத்தையே உறுதியாகக்கொண்டு (தமதுதலைமயிரைச் சிக்கற வாரி முடியாமல் சடைத்தொகுதியாகத் திரித்துவிட்டு அந்தச்) சடாபாரத்தைத் தரித்தலோடு கூடிய ஒப்பற்ற தடையில்லாத (கற்பென்னும்) பெருந்தவத்தையுடையராயிருப்பர்; (அங்ஙனமிருக்கையிலே தமக்கு) ஒருபழி இடையேவந்துநேர்ந்தால், தம் உயிரை விட்டொழிந்து அப்பழியைப் போக்கிக்கொள்வர்; (எ - று.)—இப்படியுள்ள குல ஸ்திரீகளுக்குஉரிய நற்குணநற்செயல்கள் உன்னிடத்தில் இல்லையே யென்பதாம். இது, பிரிந்தமகளிருக்கு இருக்கவேண்டிய குணங்கூறியது. பி - ம்:—[1]புனைந்தொளிர்ந்தகையின், புனைந்தொளிர்தகையின், தவிர்ந்ததோர்தன்மை. [2]படைப்பரந்து. [3]உயிர்கொடு. [4]தோகையார். (3987)

இங்கே ஒருபிரதியில் மூன்றுசெய்யுள்கள் காணப்படுகின்றன: அவை வருமாறு:—

1. அழிபுகழ் செய்திடு மரக்க ராகையால்
பழிபடு மென்பரால் பாரு ளோரெலாம்
விழுமிய தன்றுநீ மீண்ட திவ்விடம்
கழிபடு மென்றனன் கமலக் கண்ணனே.

2. கண்ணுடை நாயகன் கழிப்ப னென்றபின்
மண்ணிடைத் தோன்றிய மாது சொல்லுவாள்
எண்ணுடை நங்கையர்க் கினிய ளென்றநான்
விண்ணிடை யடைவதே விழுமி தென்றனள்.

3, பொங்கிய சிந்தையள் பொருமி விம்முவாள்
சங்கைய னென்றசொற் றரிக்கி லாமையால்
மங்கையர் குழுக்களு மண்ணுங் காணவே
அங்கியின் விழலே பழகி தாமரோ.

68. [1]யாதியா [2]னியம்புவ துணர்வை [3]யிடறச்
சேதியா நின்றதுன் [4]னொழுக்கஞ் செய்வது
[5]சாதியா லன்றெனிற் [6]றக்க தோர்நெறி
போதியா லென்றனன் புலவர் புந்தியான்.

(இ-ள்.) யான் (பல) கூறவேண்டுவது என்ன? உனது தீயொழுக்கம் (என்) அறிவை [மனத்தை] வலியற அறுக்கின்றது; (ஆதலால், இப்பொழுது நீ) செய்யக்கடவது (யாதெனில்,)—இறந்தொழி; அங்ஙனமன்றாயின், (உனக்குத்) தக்கதோரிடத்திற் சென்றிடு என்று (சீதையைநோக்கிக்) கூறினான்; (யாவனெனில்,)— ஞானிகளுடைய மனத்தில் வீற்றிருப்பவனாகிய ஸ்ரீராமன்; (எ-று.)

நீ இறந்தாவது ஒழி; அன்றி, உனக்கு இஷ்டமானபடி வேறு எங்கேயாவதுதொலைந்துபோ; நான் உன்னைச் சேர்த்துக்கொள்ளேனென்று ஸ்ரீராமன் கூறினனென்க. 'செய்வதுசாதியா லன்றெனின் தக்கதோர்நெறி போதி' என்பதற்கு - உன்னுடைய நடக்கை சாதிக்கு ஏற்றதன்றாதலால் நீ இங்குவராது உனக்கு உரியவிடத்தே செல் என்றுஉரைப்பாரும் உளர். புலவர்புந்தியான் - அறிவுடையார் கொண்டாடும் அறிவுடையான் என்று பொருளுரைத்தலும் ஒன்று. அதிபரிசுத்தையும் மகாபதிவிரதையுமான பிராட்டியை நோக்கிப் பெருமான் இங்ஙனம் நிர்த்தாட்சிணியமாகச் சொன்னது, அவளுடைய கற்பின்நிலைமையை யாவரும் கண்டு உணரும்படி செய்யவேண்டுமென்னுங் கருத்தினாலேயேயென்றும், அவளிடம் தூய்மையில்லாமையினாலாவது அவளுடைய தூய்மையைத் தான் அறியாமையாலாவது அன்று என்றும் அறிக: இவ்வுண்மை, மேல் விளங்கும். பி-ம்:—[1]ஏது. [2]இயம்புவன். [3]ஈண்டறச். [4]ஒழுக்கச் செய்தியாற், ஒழுக்கஞ்செய்தியாற். [5]சாதியான். [6]தக்கதோ. (3988)

69.—இராமனது கடுஞ்சொற்கேட்டு அனைவரும் கலங்குதல்.

[1]முனைவரு மமரரு மற்று முற்றிய
நினைவரு மகளிரு [2]நிருத ரென்றுளார்
எனைவரும் வானரத் தெவரும் வேறுளார்
அனைவரும் வாய்திறந் தரற்றி னாரரோ.

(இ-ள்.) (அந்த இராமபிரானது வசனத்தைக்கேட்டதும்) பெரியோரான முனிவர்களும் தேவர்களும் மற்றும் நிறைந்த எண்ணவொண்ணாத [மிகப்பலரான] மாதர்களும் அரக்கர்களாகவுள்ளவர் எல்லோரும் வாநரவகையிற் சேர்ந்தவர்களெல்லோரும் மற்றும் (கரடி முதலிய வர்க்கங்களிற்) சேர்ந்தவர்களெல்லோரும் (இராமன் பிராட்டியைநோக்கிக் கடிந்துகூறிய கடுஞ்சொற்களைக் கேட்டு மனம் பொறாமையால்) வாய்திறந்து கதறினார்கள்; (எ-று.)

முனைவர் - முன்னோர்; 'முன்னோனை முனைவன் என்பது, ஓர் சொல்விழுக்காடாம்; முன்என்பதனை முனை யென்பவாகலின்' என்பது, தொல்காப்பியவுரை. வேறுளார்என்றது, கரடியாகிய ஜாம்பவான் முதலியவரைக் கருதி. பி-ம்:—[1]முனிவரும். [2]நிருபர். (3989)

70.—இதுவும் அடுத்த கவியும்-இராமனது கடுஞ்சொற்களைச் செவியுற்ற சீதையின் வருத்தத்தைக் கூறும்.

கண்ணிணை யுதிரமும் புனலுங் [1]கான்றுக
மண்ணினை [2]நோக்கிய மலரின் மைவருவாள்
[3]புண்ணினைக் கோலுறுத் தனைய [4]பொம்மலாள்
உன்[5]னினைப் போவிநின் றுயிர்ப்பு [6]விங்கினாள்.

(இ - ள்.) (வெட்கத்தால்) தரையைநோக்கி(த் தலைகவிழ்ந்து) நின்ற செந்தாமரைமலரில் வீற்றிருக்கின்ற திருமகளினது திருவவதாரமான சீதாபிராட்டி, - (இவ்வளவுகாலம் இராமனைப்பிரிந்து வருந்தியவள் இப்பொழுது அவ்விராமன் சொன்ன கடுஞ்சொற்களைக் கேட்டவளவிலே), புண்ணைக்கோல்கொண்டு கிளறினாற்போன்ற பெருந்துன்பத்தால், (தனது) இரண்டு கண்களினின்றும் இரத்தமும் நீரும் மிகுதியாகச்சிந்த, மனத்திற் பிரஜ்ஞை தவறி நின்று பெருமூச்சுவிட்டாள்; (எ - று.)

கண்கள் உதிரஞ்சொரிதல் - கோபத்தின் காரியமும், அவை நீர் சொரிதல் - விசனத்தின் காரியமுமாம். பி - ம்:—[1]கான்றது. [2]நோக்கியே, நோக்கியம், நோக்கினள். [3]புண்ணினிற், புண்ணிடைக். [4]பொம்மலாள். [5]நினைவோய, நினைவோட, நினைப்போடு. [6]விங்குவாள். (3990)

71. *[1]பருந்தடர் சுரத்திடைப் பருகு நீர்நசை*
வருந்தருந் துயரினுன் மாள லுற்றமான்
இருந்தடங் [2]கண்டதி னெய்து ருவகைப்
பெருந்தடை யுற்றெனப் பேதுற் றனரோ.

(இ - ள்.) பருந்துகள் மிக்க பாலைவனத்திலே (அகப்பட்டு) நீர் குடிக்க வேண்டுமென்ற விருப்பத்தால் [தாகத்தால்] வருந்துதலாகிய அரிய துன்பத்தால் இறக்கிற நிலையை யடைந்த மான் பெரிய தடாகத்தைப் பார்த்து அத்தடாகத்தில் இறங்கவொண்ணாதபடி பெரியதடை நேரப்பெற்றாற்போல (இராமபிரானைச் சார முடியாதபடி பெருந்தடையேற்பட்ட அப்போது பிராட்டி அறிவு) கலங்கினாள்; (எ - று.)

கொடிய அரக்கர்கள் வசிக்கும் ஊராகிய இலங்கையிலே அகப்பட்டு இராமபிரானைச்சேரவேண்டுமென்னும் ஆசையினாலாகிய துன்பத்தால் மிக வருந்திய ஜாநகி அவ்விராமபிரானைக் கண்டும் அவனிடம் சாரவொண்ணாதபடி பெருந்தடைப்பட்டதை உவமையால் விளக்கினார். "தயரதன்பெற்ற மரதகமணித் தடத்தினையே" என்றார் பெரியாரும். சுரம் - ஐவகைநிலங்களுள் நீரும் நிழலு மில்லாததும் பிராணிசஞ்சாரத்துக்குச் சிறந்ததல்லாததுமான பாலைநிலம். அதன் கருப்பொருள்களுள், பறவை - கழுகும் பருந்தும் புறாவுமெனக் காண்க. பி - ம்:—[1]பருந்தடை. [2]கண்டத்தில். (3991)

72.—சீதை உலகை நோக்கிச் சில சொல்லிப் பின்பு இராமனைநோக்கிச் சில சொல்லத் தொடங்குதல்.

உற்றுநின் றுலகினை நோக்கி [1]யோடரி
முற்றுறு நெடுங்கணீ ராலி மொய்த்துக
[2]இற்றது போலும்யா னிருந்து பெற்றபேறு
உற்றதா [3]லென்தவ மின்றென் றேதுவாள்.

(இ - ள்.) (இவ்வாறு மதிமயக்கம்) அடைந்துநின்று,— (பிராட்டி),—பரந்துசெல்லும் செவ்வரி நிரம்பிய நீண்டகண்களினின்று நீர்மழை மிக்குச் சிந்த, உலகத்தாரை முன்னிலைப்படுத்தி, 'நான் (இவ்வளவுநாள் தீயொழுக்கமின்றி நல்லொழுக்கத்தோடு) உயிர்வாழ்ந்திருந்து பெற்ற பயன் இவ்வளவினதேபோலும்; எனது நல்வினை (இவ்வளவோடு) இன்று பயன்தந்துகழிந்தது' என்றுகூறி, (இராமனைநோக்கிச் சிலவார்த்தை) சொல்பவளானாள்; (எ - று.)—அவற்றை, அடுத்த ஐந்துகவிகளிற் காண்க.

நெடுமையைக் கண்ணுக்கு அடைமொழியாக்காமல், நீராலிக்கு அடைமொழியாக்குதலும் ஒன்று. யான்பெற்றபேறு, என்கணவனைக் கண்டுதொழுதலாகிய இவ்வளவினதேபோலு மென்பது, மூன்றுமடியின் கருத்து. இனி, பின்னிரண்டடிகளுக்கு-'யான் இருந்து பெற்றபேறு—இற்றதுபோலும் - அழிந்ததுபோலும்', என்று-என்றும், என்தவம்—, இன்று அவம் உற்றது என்று - இப்பொழுது (எனக்குத்) தீங்காகநேர்ந்தது' என்றும் சிந்தித்து, ஓதுவாள் என்று பதம்பிரித்து உரைத்தலும் ஒன்று. பி - ம்:— [1]ஓரடி. [2]இற்றிது. [3]இன்றெனற்றவமென்று, இன்றேடென்றென்று, இன்றவமென்றென்று. (8992)

73.—இதுமுதல் ஐந்துகவிகள் ஒருதொடர்: சீதை இராமனைநோக்கிச் சொல்லும் மறுமொழி.

மாருதி [1]வந்தெனைக் [2]கண்டு வள்ளனீ
சாருதி யீண்டெனச் சமையச் [3]சொல்லினன்
யாரினு [4]மேன்மையா னிசைத்த தில்லையோ
சோருமென் னிலையவன் றூது மல்லனோ.

(இ - ள்.) வரையாத அருளுந்தன்மை யுடையவனே! அநுமான் (முன்பு இவ்விலங்கையில் அசோகவனிகைக்கு) வந்து, என்னைப் பார்த்து,('நான் இராமதூதன்: நீ பகைவென்று என்னை மீட்டற்கு) இவ்விடத்துக்கு எழுந்தருள்வாய்' என்று (எனக்குத்)தேறுதலாம்படி கூறிப்போனான்; எல்லோரினும் மேலானவனான அவ்வநுமான், (யான் தற்கொலை செய்துகொள்ளுமாறு இங்குச்) சோர்ந்து கிடந்த என்னுடைய நிலைமையை (உள்ளபடி உனக்கு)க் கூறினதில்லையோ? அவ்வநுமான் தூதலட்சணபூர்த்தியுடையனல்லன்போலும்; (எ-று.)

'அநுமான், முன்பு கடல்கடந்து இலங்கைக்கு வந்து என்னைக் கண்டு இராமதூதனென்று தன்னைத் தெரிவித்தபோது, என்னைப் பிரிந்திருக்கிற உன்னுடையநிலைமையை எனக்குச்சொன்னதுமன்றி, பகைவென்று என்னை மீட்டற்பொருட்டு நீ விரைவில் இவ்விடத்துக்கு எழுந்தருள்வாயென்று எனக்குத் தேறுதலுண்டாம்படி கூறினான்' என்றது - உன்னைப் பிரிந்தவருத்தத்தால் மரணமடைய இருந்த நான் அந்தத் தேறுதல் வார்த்தையினாலேயே மனத்தை ஒருவாறு சமாதானப்படுத்திக்கொண்டு இதுவரை உயிர் வைத்திருந்தேன்; இல்லையாயின், முன்னமே இறந்திருப்பேனென்றவாறு; இது-'மாண்டிலை' என்று இராமன் குற்றஞ்சாட்டியதற்குக் கூறிய மறுமொழி. 'தான்வகுத்துக் கூறுதலாகிய உத்தமவிலக்கணமமைந்த சிறந்த தூதன்போல வந்து உன்னுடையநிலைமையை எனக்குக் கூறிய அந்த அநுமான் உன்னைப் பிரிந்து இங்கு வசித்த காலத்தில் யான் சோர்ந்திருந்த நிலைமையை, உனக்குக் கூறியதில்லையோ?' என்றது - அங்ஙனங் கூறியிருந்தால் 'ஊண்திற முவந்தனை' என்பதுமுதலாக என்மீது குற்றஞ்சாட்டக் காரணமில்லையே யென்றவாறு. இங்ஙனம் சொல்லவேண்டியதைச் சொல்லாது விட்டதனால் அவன் தூதலட்சணம் சரிவர அமையப்பெற்றவனல்லனோ வென்று வெறுத்துக்கூறினாள். முன்பு தான் மிக வருந்தி உயிர் துறப்பதாக இருந்த சமயத்தில் அநுமான் சடக்கென வந்து இராமநாமத்தோடு இராமகுணங்களை யெடுத்துக் கூறித் தன்னை உயிர்ப்பித்த உதவியைக் கருதி, அவனை 'யாரினும் மேன்மையான்' என்றாள். பி - ம்:—[1]வந்தெனக்கு. [2]ஆண்டு. [3]சொல்லிப்பின். [4]மெய்ம்மையான். இச்செய்யுள், சிலபிரதியில் "எத்தவம்" என்ற அடுத்த பாடலின்பின் உள்ளது. (3993)

74. எத்தவ மெத்நல [1]மென்ன கற்புநாள்
இத்தனை [2]காலமு [3]முழந்த [4]வீதெலாம்
[5]பித்தென லாயவம் [6]பிழைத்த தா[7]லன்றே
உத்தம [8]நீமனத் துணர்ந்தி லாமையால்.

(இ - ள்.) புருஷோத்தமனே! இவ்வளவுகாலமாக நான் சிரமத்தோடு காத்துவந்தனவாகிய எத்துணைச்சிறந்த தவமும் எத்துணை நற்குணநற்செய்கைகளும் எத்துணைச்சிறந்த பதிவிரதா தருமமும் ஆகிய இவைகளையெல்லாம் நீ (உனது) திருவுள்ளத்தில் அறிந்திடாததனால், (ஒவ்வொன்றும்) பைத்தியச் செயலென்னும்படி வீணே பழுதுபட்டது; (எ - று.)

இங்குத் தவமென்றது - ஊணுறக்கமின்றித் தன்உடம்பை ஒறுத்துத் துன்பங்களைப்பொறுத்து ஐம்பொறியடக்கி மனத்தை யொருவழிப்படுத்திக் கற்புடையளான தனக்குத் தெய்வமும் அனைத்துயிர்க்குந் தெய்வமுமான இராமபிரானையே தியானித்திருத்தல். அவம்-வீண். ஈதெலாம் பித்தெனலாய்ப் பிழைத்தது - ஒருமைப் பன்மையக்கம். பி-ம்:—[1]என்றன், என்னல். [2]காலமாய். [3]உளைந்த, உழன்ற. [4]இவ். [5]பித்தெனலாயறம், பித்தெனலாயது.

[6]பிழைத்ததாம். [7]என்றோ, மன்னோ. [8]நின். சிலபிரதியில், "மாருதி" (73) என்பதன்பின் "பங்கயத்து" (76) என்ற பாடலிருக்க,அதன்பின் இப்பாடலுள்ளது. (3994)

75. பார்க்கெலாம் பத்தினி பதுமத் தானுக்கும்
பேர்க்கலாஞ் சிந்தைய ளல்லன் [1]பேதையேன்
[2]ஆர்க்கெலாங் [3]கண்ணவ னன்றென் றா[4]லது
தீர்க்கலாந் [5]தகையது தெய்வந் தேறுமோ.

(இ - ள்.) பேதைமையுடையளான நான், நிலவுலகமுழுவதிலுஞ் (சிறந்த) பதிவிரதை; (படைத்தற்கடவுளான) பிரமனுக்கும் மாற்றக் கூடிய மனநிலையுடையேனல்லேன்:(இங்ஙனம் இருந்தும்), உலகத்தவரெல்லோர்க்கும் கண்ணாகிய இராமபிரான் (என்னுடைய நிறை) அத்தன்மையதன்றென்று கூறினால், அக்கருத்தை மாற்றும்படியான வகையை (வேறொரு) தெய்வம் அறிவதோ?

உலகமுழுவதுக்கும் நான் உத்தமபத்தினியென்றும், பிரமனாலும் மாற்ற முடியாத மனநிறையை யுடையேன் என்றும் பிராட்டி தன்னைத்தானே புகழ்ந்துகூறியது, தன்னுடையகுணத்தைத் திருவுள்ளத்திற் கொள்ளாமல் தன்னை எதிரிலே பழித்த இராமபிரானது உள்ளத்தின் ஐயத்தை அகற்றும் பொருட்டு. உலகமெங்கும் எப்பொழுதும் நடக்கிற செயல்களெல்லாவற்றையும் அறியவல்ல திவ்வியஞானக்கண்ணை யுடையவனும், எல்லோருடைய காட்சியறிவுக்கும் காரணமாகிற சூரியனைத் தோற்றுவித்த திருக்கண்ணையுடையவனும், அனைவர்க்கும் உள்ளத்திலுணர்வை உண்டாக்குபவனும், யாவராலுங் கண்போல் அருமையாகப் பாராட்டப்படுபவனும், யாவர்க்கும் கண்போல இன்றியமையாதவனு மாதலால், எம்பெருமான், 'ஆர்க்கெலாங் கண்ணவன்' எனப்பட்டான். "கண்ணாவானென்றும், மண்ணோர் விண்ணோர்க்குத்,தண்ணார்வேங்கட, விண்ணோர் வெற்பனே" என்றார், திருவாய்மொழியிலும். மேற்காட்டிய பாசுரத்தின் வியாக்கியானத்தில் 'கண் என்று நிர்வாஹகன்' என்று உரைத்தது கொண்டு, இங்கும், எல்லோர்க்கும் களைகணாகிய அவனென்று உரைப்பினுமாம்; களைகண் - இரட்சகன்: சரணமடையுமிடம். 'அப்படிப்பட்ட இராமபிரான் தானே அறியாதவன்போல எனது கற்புநிலைமையைத்தக்கதன்றென்று உபேட்சித்துவிட்டால், அப்பெருமானுடைய திருவுள்ளத்துக்கு ஐயமகற்றி நம்பிக்கையுண்டாக்கவல்ல தெய்வந்தான் வேறு உண்டோ?' என்றது, எவர்க்கும் இயலாது என்றவாறு. இப்படித் தன்னை இராமன் பின்பு உபேக்ஷிக்கக்கூடுமென்று முன்னதே உணராது தான் இதுகாறும் உயிர்வைத்திருந்தமைபற்றி, 'பேதையேன்' என்று தன்னைத்தானே வெறுத்துக்கொண்டாள். பி-ம்:—[1]பேதையென்று. [2]ஆர்க்கலாம். [3]கணிவனும், கணவனது, சொல்லியென். [4]இனித். [5]தகையதோ. (3995)

76. பங்கயத் தொருவனும் விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்

அங்கையி னெல்லிபோ லனைத்து நோக்கினும்
மங்கையர் மனநிலை யுணர வல்லரோ.

(இ - ள்.) தாமரைமலரில்தோன்றிய ஒரு மூர்த்தியான பிரமனும் விருஷபத்தை வாகனமாகக்கொண்டு ஏறிநடத்துகிற சிவனும் (பாஞ்சசந்நியமென்னுஞ்) சங்கத்தைக் கையிலேந்திய தருமசொரூபியான திருமாலும் (ஆகிய திரிமூர்த்திகளும்),—உள்ளங்கைநெல்லிக்கனியைப்போல எல்லாப் பொருள்களையும் உள்ளபடியுணர வல்லராயினும் மாதர்களுடைய மனத்தின் நிலைமையை (இன்னதன்மையதென்று உள்ளபடி) அறிய வல்லரோ? [அல்லரென்றபடி];

அங்கையின்நெல்லி - வடமொழியில் 'கரதலாமலகம்' எனப்படும். அங்கையிற் கொண்ட நெல்லிப்பழம், முழுவதும் எளிதில் நன்கு பார்க்கக்கூடியதும் மேலுள்ள வரைகளைநோக்கி அவற்றைக் கொண்டே உள்ளேயுள்ள விதையின் வரைகளையும் உணரக்கூடியதும் ஆதலால், ஐயந்திரிபற நன்கு நோக்கி யுணரப்படுதற்கு உவமை கூறப்படும். மங்கையர்மனத்தின் தூய்மையும் தூய்மையின்மையும் அவர்களுடைய சொற்செயல்களைக்கொண்டு, எவர்க்கும் நன்கு உணரத்தக்கனவல்ல வென்பது கருத்து. ஆதலால், யான் நெஞ்சைக் கற்புநெறியில்நிறுத்தியிருந்த நிறையை என் கொழுநன் அறிந்திலனென்றவாறு. (3996)

77. ஆதலிற் [1]புறத்தினி [2]யாருக் காகவென்
கோதறு நவத்தினைக் கூறிக் [3]காட்டுகேன்
சாதலிற் சிறந்ததொன் றில்லை தக்கதே
வேதநின் பணி[4]யது விதியு மென்றனள்.

(இ - ள்.) வேதசொரூபியே! இங்ஙனமாகுதலால், இனி எனது குற்றமற்ற கற்புநெறியை (வேறு) யாருக்குத்தான் சொல்லியுணர்த்தக் கடவேன்? (இந்நிலையில் எனக்கு), இறத்தல்போலச் சிறந்தது வேறொன்றில்லை; ('சாதி' என்று) நீ கட்டளையிட்டது தகுதியானதே; (எனது) வினைப்பயனும் அங்ஙனமே உள்ளது போலும் என்று சொன்னாள், (பிராட்டி); (எ - று.)—விதியும் என்பதற்கு என் கடமையு மென்றும் உரைகூறலாம். பி-ம்:—[1]பிறர்க்கினி, புறத்தினின், புறத்துநான். [2]ஆருக்காகுகேன், ஆருக்காகவிக். [3]காட்டுவேன். [4]இது. (3997)

78.—சீதை இலக்குமணனைநோக்கித் தீயமைக்கச் சொல்ல, இராமனும் அநுமதிசெய்தல்.

இளையவன் றனை [1]யழைத் திடுதி தீயென
வளையொளி முன்கையாள் வாயிற் [2]கூறினள்
[3]உளைவுறு [4]மனத்தவ னுலகம் யாவுக்கும்
[5]களைகணைத் தொழுதவன் கண்ணிற் கூறினான்.

(இ - ள்.) வளையல்கள் ஒலிக்கின்ற முன்னங்கையையுடையவளான பிராட்டி, இளையபெருமாளை (அருகில்) அழைத்து '(யான் குதித்தற்பொருட்டு) அக்கினியை அமைப்பாய்' என்று வாயினால் (வெளிப்படையாகச்) சொன்னாள்; (அதுகேட்டு) வருத்தம் மிக்க மனத்தையுடையவனான அவ்விலக்குமணன், (இராமபிரானது திருவுள்ளத்தை அறிதற்பொருட்டு) உலகத்து உயிர்களெல்லாவற்றிற்கும் புகலிடமான அப்பெருமானை வணங்க, அந்தஸ்ரீராமனும் கண் பார்வையின் குறிப்பினால் (அவ்வாறே தீயமைக்கச்) சொன்னான்;

'கூறினாள்' என்றவிடத்து 'வாயின்' என்றதுவேண்டாதாயினும், பின் 'கண்ணிற்கூறினான்' என வருவதை நோக்கிச் சொல்லவேண்டிற்றென்க. அன்றியும், 'எரியே அவனைச்சுடல்' என்ற வாயாற் கூறினாள் என்றபடியுமாம். ஈற்றடியில் 'கூறுதல்' என்றது, கருத்தைப் புலப்படுத்தலை: "முகனுரைக்கும் உள்நின்ற வேட்கை" என்பதில் 'உரைத்தல்' என்பதுபோல. உலகம்-இங்கு, சீவான்மா. பி - ம்:—[1]அமைத்திடுதி, அமைத்தீதி, அமைத்திடுக. [2]கூறலும். [3]உளேவறு. [4]மனத்தினன், மனத்தற்கு. [5]களைகளை தொழிலவன், களைகணையனையவன், கடவுளேயனையவன். (3998)

79.—இலக்குமணன் தீ மூட்ட, சீதை அதனை அடுத்தல்.

ஏங்கிய [1]பொருமலி னிழிக ணீரினன்
வாங்கிய வுயிரின [2]னளைய மைந்தனும்
ஆங்கெரி [3]விதிமுறை [4]யமைவித் தானதன்
பாங்குற நடந்தனள் [5]பதுமப் போதினாள்.

(இ-ள்.) (இராமனதுகருத்தை யறிந்தவளவிலே) உயிர்நீங்கியவன் போலான [மரணவேதனைக்கு ஒப்பான மிக்கசோகத்தையடைந்த] அந்தவீரனான இலக்குமணனும், விம்மிவிம்மி அழுதலாற் சொரிகிற கண்ணீரை யுடையவனாய், அவ்விடத்தில் [அப்பொழுது] தீயை (அக்கினிப்பிரவேசவிதியைக் கூறுகிற) சாஸ்திரங்களிற் சொன்ன முறைப்படி (மூட்டிச்) சித்தஞ் செய்தான்; செந்தாமரை மலரில்வாழும்திருமகளினது அவதாரமான சீதை, அத்தீயினருகில் பொருந்தச் சென்றாள்; (எ - று.)

மெல்லியசெந்தாமரையில் வாழ்பவள் கொடியசெந்தீயிற் குதித்தற்கு அணுகின ளென இரக்கந் தோன்றக் கூறினார். வாங்கிய உயிரினன் - நெடிதாக எறிந்த பெருமூச்சையுடையவனாய் என்றுமாம். பி - ம்:—[1]பொருமலன். [2]இளைய. [3]விரி. [4]அமைப்பித்தான். [5]பதுமப்போதனாள், பதுமத்தாளினாள். (3999)

80.—அப்பொழுது உலகத்திலுண்டான தடுமாற்றத்தை, இதுமுதல் நான்குகவிகளிற் கூறுகிறார்.

[1]தீயிடை யருகுறச் சென்று தேவர்க்கும்
தாய்தனிக் [2]குறுகனுந் தரிக்கி லாமையால்
வாய்திறந் தரற்றின [3]மறைகள் நான்கொடும்
[4]ஓய்வினல் லறமுமற் றுயிர்கள் யாவையும்.

(இ - ள்.) (மற்றையெல்லாவுயிர்கட்கும் மாத்திரமேயன்றிச் சிறப்புடையுயிரான) தேவர்கட்கும் தாயான ஜாநகிப்பிராட்டி தனியே அக்கினியிலே (புகுபவளாய் அதன்) சமீபத்திலே பொருந்தச்சென்று சேர்ந்தவளவிலே,—(அந்தக்கடுஞ்செயலைச்)சகிக்கமாட்டாமையால், நான்கு வேதங்களுடனே ஒழிவற்றதான சிறந்ததருமமும் மற்றை அனைத்துயிர்களும் (தம்தம்) வாயைத்திறந்து கதறின;

மறை-வேதபுருஷன். அறம்-தருமதேவதை. உயிர் - பிராணி. தேவர்க்கும் தாய்-லோகமாதா.எல்லாப்பிராணிகட்கும் மூலகாரணமாதலாலும் தந்தையாகிற பெருமாளுடைய தேவியாதலாலும் அவற்றிற்கெல்லாம் தாயாகிறவள்: எல்லாவுயிர்களிடத்தும் தாய்போல மிக்க அன்புடையவள்; அவ்வுயிர்களால் அன்போடு தாய்போல மதித்துப் பாராட்டத்தக்கவள். பி - ம்:—[1] தீயினை. [2] உறுதலும். [3] வரைக்கண். [4] மாய்வினல்லறமுமற்று, ஓய்விலாவறமுது, ஓய்வுறுமறமுமற்று. (4000)

81\. வலம்வரு மளவையின் மறுகி வான்முதல்
உலகமு முயிர்களு மோல மிட்டன
அலம்வர லுற்றன [1]வலறி யையவிச்
சலமிது தக்கில தென்னச் [2]சாற்றின.

(இ - ள்.) (பிராட்டி அக்கினிப்பிரவேசஞ் செய்தற்பொருட்டு அவ்வக்கினிதேவனைப்) பிரதட்சிணஞ்செய்யுமளவிலே, சுவர்க்கம் முதலிய உலகங்களும் (அவ்வுலகங்களிலுள்ள) பிராணிவர்க்கமும், (தாம்) நிலைபெயர்ந்து சுழன்று கோவென்றுகதறின; மிகத்துன்பப்பட்டன; கதறியொலித்து (இராமனைநோக்கி), 'ஐய! இத்தன்மையதான இத்தணியாக்கோபம் தகுதியில்லாதது' என்று சொல்லின; (எ - று.)

வலம்வருதல் - வலப்பக்கமாகச்சூழ்ந்துவருதல். அலம் - மிக்க சஞ்சலம். பி - ம்:—[1] அழுதவையனச், அலறியையனச், அலறியையனை. [2] சாற்றினன். (4001)

82\. இந்திரன் [1]தேவியர் [2]முதல வேழையர்
அந்தர வானினின் றாற்று கின்றவர்
செந்தளிர்க் கைகளாற் சேய ரிப்பெருஞ்
சுந்தரக் [3]கண்களை யெற்றித் [4]துள்ளினார்.

(இ - ள்.) இந்திரனது மனைவிமார் முதலான தேவமாதர்கள், ஆகாய வெளியிலேநின்று கதறுகின்றவர்களாய்ச் சிவந்ததளிர்போன்ற (தங்கள்) கைகளால் சிவந்த ரேகைகளையுடைய பெரிய அழகிய (தங்கள்) கண்களை மோதிக்கொண்டு துடித்தார்கள்;

இப்படிப்பட்ட மகாசோகத்துக்குக் காரணமான செயலைத் தங்கள் கண்களாற் பார்க்க நேர்ந்த வருத்தம்பற்றி, அக்கண்களைக் கைகளால் மோதுவாராயினர். பி - ம்:—[1] தேவியே, தேவியை. [2] முதலா. [3] கலைவனை. [4] சோர்ந்தனர். (4002)

83. நடுங்கினர் [1]நான்முகன் [2]முதல நாயகர்
படங்குறைந் ததுபடி சுமந்த [3]பாம்புவாய்
விடம்[4]பரந் துளதென வெதும்பிற் றுலகு
[5]இடந்திரிந் தனசுடர் கடல்க [6]ளேங்கின.

(இ - ள்.) பிரமன்முதலிய தலைமைத்தேவர்களெல்லோரும் (உள்ளமும் உடலும்) நடுங்கினார்கள்; (கீழிருந்து) பூமியைச்சுமக்கிற ஆதிசேஷனும் படம் ஒடுங்கிற்று; உலகமுழுவதும் (அப்பாம்பின்) வாயினின்று விஷம் (கக்க) எங்கும்பரவுதலால் தவிப்பது போலத் தவிப்படைந்தது; சூரியன் முதலிய சோதிகள் இடம்பிறழ்ந்தன; கடல்கள் அமுகையொலியைச்செய்தன; (எ - று.) பி - ம்:—[1]நாயகன். [2]முதலா. [3]பாந்தளும். [4]பிறந்துளது, பரந்துள. [5]இடந்தனசுடர்கடாம். [6]ஏந்திய. (4003)

84.—சீதை அங்கியங்கடவுளைநோக்கி, 'நான் கற்புக்குறையுடையேனாயின் என்னைச் சுடுக' எனல்.

[1]கனத்தினூற் [2]கடந்த[3]பூண் [4]மூலைய [5]லகைவளை
மனத்தினால் [6]வாக்கினூன் மறுவுற் றேனெனின்
சினத்தினாற் சுடுதியாற் றீச்செல் வாவென்றூள்
[7]புனத்துழாய்க் [8]கணவற்கும் வணக்கம் போக்கினூள்.

(இ - ள்.) (அப்பொழுது) பருமையினால் மிக்குள்ளனவும் பூணணிந்தனவுமான தனங்களையுடைய கைவளையளான பிராட்டி, —(அக்கினியை நோக்கி), 'அக்கினிபகவானே! (நான்) மனமொழி மெய் என்னுந் திரிகரணங்களுள் எதனாலேனும் களங்கமுடையேனாயின், (என்னை நீ) கடுமையாக எரித்திடு' என்றுசொல்லி, புனத்தில் தோன்றுந் திருத்துழாயையணிந்த கணவனான இராமனையும் நமஸ்கரித்தாள்; (எ - று.)—அவதாரங்களில் திருமாலணியும் மாலைகள் திருத்துழாயினமிசமாகுமென்பர். மனோவாக்குக்களைக் கூறியது, காயத்திற்கும் உபலட்சணம். பி - ம்:—[1]கனத்தினன். [2]கடைந்த. [3]பூ. [4]முலையள், முலையைக், முலையக். [5]கற்பினால். [6]வாங்கினன். [7]வனத். [8]கணவற்கு. (4004)

85.—பிராட்டி அக்கினிப்பிரவேசஞ்செய்ய, அவளுடைய கற்புத்தீயினால் அனற்கடவுள் வேதல்.

நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை
[1]ஏய்ந்ததன் [2]கோயிலே யெய்து வாளெனப்
பாய்ந்தனள் பாய்தலும் [3]பாவின் பஞ்செனத்
தீந்ததவ் வெரியவள் கற்பின் றீயினால்.

(இ - ள்.) நீந்தவொண்ணாத நீரில் [ஆழ்ந்த பெரிய நீர்நிலையில்] ஓங்கியெழுந்த செந்தாமரைமலராகிய பொருந்திய தனது வாழிடத்தையேசென்று சேர்பவள் போல் (அந்தச்செந்தீயிற் பிராட்டி) விரைவாகப் பிரவேசித்தாள்; (அங்ஙனம் அவள்)குதித்த

வளவிலே அந்தத்தீ அப்பிராட்டியினுடைய பதிவிரதாதரும மாகிய நெருப்பினால் வெண்ணிறமுள்ள [சுத்தமான] பஞ்சுபோல எரிந்திட்டது; (எ - று.)

அழுக்கற்ற பஞ்சைத் தீ விரைவில் எளிதில் எரித்தழித்தல் போல, பரிசுத்தமான அந்த அக்கினியைப் பிராட்டியின் பதிவிரதா தருமமாகிய அக்கினி எரிக்கத்தொடங்க அது பிராட்டியைச் சுட மாட்டாமற்போயிற்றென்க. பால் என்றது, இங்கு, இலக்கணை யாய் வெண்ணிறத்தின்மேல் நின்றது. நிறம்பற்றிச் செந்தாமரை யும் செந்தீயும் தம்மில் ஒக்கும். இங்கு, ஜாநகிப்பிராட்டி, திருமக ளாகிய தனக்கு வாழ்விடமான செந்தாமரைமலரினுள்ளே இனிது சென்று சேர்தல்போல அச்செந்தீயிலே இனிதுசென்றுசேர்ந்தன ளென்பது விளங்க, உவமைகூறினார். இவ்வுவமை - சீதைக்கு நெருப்பு வெப்பஞ்செய்யமாட்டாது தட்பஞ்செய்தலைத் தெரிவிக் கும். பி - ம்:—[1]ஏய்ந்தன. [2]கோயிலுள். [3]பாவின், அனலிற், பாலிற். (4005)

86.—அக்கினிதேவன் தவிப்படைந்து பிராட்டியை ஏந்திக் கொண்டு இராமபிரானைக்குறித்து ஓலமிடுதல்.

[1]அழுந்தினள் [2]தங்கைமத் றங்கை யாற்[3]சுமந்து
எழுந்தன [4]னங்கிவெந் தெரியு மேனியான்
தொழுங்[5]கரத் துணையினன் சுருதி ஞானத்தின்
கொழுந்தினைப் பூசலிட் டரற்றுங் கொள்கையான்.

(இ - ள்.) (இவ்வாறு தன்னில்) அழுந்தினவளாகிய உத்தம ஸ்திரீயான சீதையை, (அவளது கற்பின் அனலால்) தவிப் படைந்து எரிகிற வடிவையுடையவனாகி, உடனே (அந்த) அக் கினிதேவன், வேதங்களினாலுணர்த்தப்படுகிற தத்துவஞானத் தின் கொழுந்தாகிய இராமபிரானைக் குறித்து (அபயம்வேண்டி)ப் பேரொலி செய்து கதறுகிற தன்மையையுடையவனும் குவித்து வணங்குகிற இரண்டுகைகளையுடையவனுமாகி, அழகிய தனது கைகளால் தாங்கிக்கொண்டு எழுந்தான்; (எ-று.)

சுருதிஞானத்தின்கொழுந்து-வேதப்ரதிபாத்யமான பரப்ரஹ் மம். இராமபிரானைநோக்கிப் பூசலிட்டது, தனது தவிப்பை யுணர்த்துதற்கென்க. அக்கினிதேவன் ஏழுகைகளையுடையவனாதல் இங்கு அறியத்தக்கது. "ஸப்தஹஸ்தாஸோ அஸ்ய" என்றது காண்க. இருகைகள் தொழுதமிற்க மற்றைக் கைகளால் தாங்கின னென்னலாம். பி - ம்:—[1]அழுந்தின. [2]நங்கையை. [3]எடுத்து. [4]அங் கம். [5]துணைக்கரத்தினன். (4006)

இச்செய்யுளின் பின் சிலபிரதியில் ஒருபாடல் காணப்படு கின்றது, வருமாறு:—

அஞ்சின னஞ்சின னைய வஞ்சினன்
[1]பஞ்சிவர் மெல்லடிப் பதுமத் தாடன்மேல்
[2]விஞ்சிய கோபத்தால் வினையு மீதெலாம்
[3]தஞ்சமோ மறைமுதற் றலைவ வீதென்றான்.

பி - ம்:—[1]பஞ்சினின், [2]துஞ்சிய. [3]தஞ்சனையலைத்தன.

87.—தீக்குதித்ததனால் பிராட்டியின்மேனி சிறிதும் வாட்டமுறாமை.

[1]ஊடின சீற்றத்தா [2]லுதித்த வேர்களும்
[3]வாடிய வில்லை[4]யா லுணர்ந்து மாறுண்டோ
பாடிய வண்டொடும் பனித்த தேனொடும்
சூடின [5]மலர்களீர் [6]தோய்த்த [7]போன்றவால்.

(இ - ள்.) (தன்பக்கல் தன்கணவன்) காட்டிய கோபத்தாலாகிய தாபத்தால் (சீதையின்மேனியில்) அரும்பிய வேர்வைநீர்த்துளிகளும், உலரவில்லை; (இந்நிகழ்ச்சி சீதையின்கற்பைச் சிறப்பாக நிரூபித்ததென்று உணர்த்துவதன்றி) கற்பின்சிறப்பைக் குறித்து வேறுசொல்லவேண்டுவது உண்டோ? (மற்றும் அந்தப் பிராட்டியின் கற்பின் திண்மையைத் தெரிவிப்பன கூறுவேன்:) (அப்பிராட்டி கூந்தலிற்) சூடிய பூக்கள், (தம்மிடம்மொய்த்து) இசைபாடுகிற வண்டுகளோடும் (இடைவிடாது) துளிக்கின்ற தேனோடும் (நெருப்பிலாழ்ந்த அடையாளம் சிறிதுமின்றி) நீரில் தோய்த்து எடுக்கப்பட்டனபோலக் குளிர்ந்து காணப்பட்டன;

கீழ் இராமன் சீதையினிடங் காட்டிய கோபம் அவளது கற்புநிலையை உலகம் அறியச்செய்விக்கவேண்டுமென்னுங் கருத்தினால் அன்புபற்றி நிகழ்ந்ததென்பது தோன்ற, 'ஊடினசீற்றம்' எனப்பட்டது. இனி, 'ஊடின சீற்றத்தால்' என்பதற்கு - (பிராட்டி பெருமாளிடம்) கொண்ட கோபத்தாலென்று உரைப்பாருமுளர். மோனைத்தொடைக்கு ஏற்ப உணர்த்தும் மாறு எனப் பதம்பிரிக்க. மாறு - வேறு வழி யென்க. பி-ம்:—[1]ஊறின. [2]உதிர்த்த. [3]மாறின, வாடினது. [4]மற்று. [5]மலர்க். [6]தோய்ந்த. [7]போலுமால். (4007)

88.—அப்பொழுது உலகம் தடுமாற்றமொழிய உயிர்கள் களித்தல்.

திரிந்தன வுலகமுஞ் [1]செவ்வ னின்றன
[2]பரிந்தவ ருயிரெலாம் [3]பயந்த விர்ந்தன
அருந்ததி முதலிய [4]மகளி ராடுதல்
[5]புரிந்தனர் நாணமும் பொறையு [6]நீங்கினார்.

(இ - ள்.) (பிராட்டி தீக் குதிக்கச்சென்றபொழுது), நிலைகுலைந்தனவான உலகங்களும், (இப்பொழுது அப்பிறழ்ச்சியொழிந்து) சரிவர நின்றன; இரங்கியவர்களுடைய உயிர்களெல்லாம், அச்சமொழிந்தன; அருந்ததி முதலான மாதர்கள், (களிப்புமிகுதியாற்) கூத்தாடுபவராகி வெட்கமும் அடக்கமும் நீங்கப்பெற்றனர்; (எ - று.)—இதுவும், கீழ்க்கவியும்-கவிக்கூற்று; இவற்றை, அக்கினி தேவன் வார்த்தையாகக்கொண்டு அமைக்கவும் இடமுண்டு. பி - ம்:—[1]செவ்வை, செம்மை. [2]பரிந்தன. [3]பயமும்நீங்கின, பயத்தினிங்கின, பயந்துநீங்கின, பயத்தாநீங்கின. [4]மகளிர்யாவரும், மகளிராரொடும். [5]பொருந்தியாரொடும். [6]போற்றினார், ஏந்தினார். ()

89.—அக்கினிதேவன் இராமபிரான்பக்கம் முறையிடுதல்.

கனிந்துயர் கற்பெனுங் கடவுட் [1]டியினுல்
[2]நினைந்திலை [3]யென்வலி [4]நீக்கி னுயென
[5]அநிந்தனை யங்கிநீ யயர்வி லென்னையும்
முனிந்தனை யாமென முறையிட் டானரோ.

(இ - ள்.) '(நீ எனதுஎளிமையைத்) திருவுள்ளத்திற் கொள்ளாமல், முதிர்ந்துசிறந்த (உன்மனைவியினது) பதிவிரதாதருமமாகிய தெய்வத்தன்மையுள்ள அக்கினியைக்கொண்டு என்வலிமையை யொழித்திட்டாய்' என்றும், 'நீ (சீதாதேவியைமாத்திரமேயன்றி உன்பக்கல்) யாதோரபசாரமும்படாதஎன்னையும் கோபித்தனைபோலும்' என்றும், பழிப்புக்கு இடமில்லாதவனுன அக்கினிதேவன், (இராமபிரானை நோக்கித் தன்குறைகூறி) முறையிட்டான்; (எ - று.)

கனிந்து-உரியபக்குவமடைந்து, பதப்பட்டு. அயர்வு-சோர்வு; தவறிப் பிழைசெய்கை. அநிந்தனையங்கி நீ என்றுஎடுத்து, பழிப்பற்ற யாகாக்கினி சொரூபியாகிய நீ யென்று உரைத்தால், 'முறையிட்டான்' என்பதற்கு அக்கினி யென்ற தோன்ருஎழுவாய் வருவிக்கவேண்டும். பி - ம்:—[1]தீயைநீ, தீமைநீ. [2]நினைந்தனை. [3]என்வயின். [4]நீங்கினுய். [5]அநிந்தனைவழங்கிநீ மனத்தினுலெனை, அனந்தனைமயங்கிநீ மனத்தினென்னையும், அநிந்தனையங்கியான் மனத்தினுலெனை, அநிந்தனையங்கிநீயயர்கிலென்னையும், அநிந்தனையங்கிநீ யாகிலென்னையும். (4009)

90.—அந்த அக்கினிதேவனை இராமன் சிலவினுவல்.

[1]இன்னதோர் காலையி னிராமன் யாரைநீ
என்னைநீ [2]யியம்பிய தெரியுன் தோன்றியிப்
புன்மைசா லொருத்தியைச் சுடாது [3]போற்றினுய்
அன்னதார் [4]சொல்லவீ [5]தறைதி யாலென்ருன்.

(இ-ள்.) இத்தன்மையதான ஒரு [இங்ஙனம் அக்கினிமுறையிட்ட அச்] சமயத்தில், இராமன்,—(அவனைநோக்கி), 'நீ யார்? நீ நெருப்பினுள்ளே தோன்றிக் கூறியது என்ன? தீயொழுக்கம் மிக்க ஒருத்தியான இவளை (நீ) எரித்திடாமல் பாதுகாத்தாய்; அத்தன்மை யார்சொல்ல (நிகழ்ந்தது)? இவ்வினுவகைக்கு விடைகூறு' என்று சொன்னுன்; (எ - று.)

அன்னது ஆர் சொல்ல-யார்சொல்லைக்கேட்டு அப்படி நீ செய்தாயென்றபடி. பி-ம்:—[1]இன்னதே. [2]இயம்புவது. [3]போக்கினுய். [4]சொல்லுவது. [5]அறிதி. (4010)

91.—இதுமுதல் ஐந்துகவிகள்—அக்கினிதேவன் மறுமொழி.

அங்கியா [1]னென்னையிவ் [2]வன்னை கற்பெனும்
பொங்கு[3]வெந் தீச்சுடப் பொறுக்கி லாமையால்

இங்கணைந் தே[4] னூறு மியற்கை நோக்கியும்
[5]சங்கியா நிற்றியோ வெவர்க்குஞ் சான்றுனாய்.

ஆறு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) யான் அக்கினிதேவன்: என்னை லோகமாதாவாகிய இத்தேவியினது பதிவிரதாதருமமாகிய பொங்கியெழுகிற வெவ்விய நெருப்பு எரிக்க, (அந்தத்தாபத்தை யான்) பொறுக்கமாட்டாமையால் இங்கு அணைந்தேன்: யாவர்க்கும் சாட்சியானவனே! (இங்ஙனம் எனக்கு) நேர்ந்த தன்மையைப் பார்த்தபின்பும், (இப்பிராட்டியின் ஒழுக்கத்தைப்பற்றி நீ)சங்கித்து நிற்கக்கடவையோ?

சான்றுளாய் - (எல்லோரினும்) மேம்பட்டவனே! என்றுமாம்.
பி-ம்:-[1] இணைவிலா, இணையிலான். [2] அணையின். [3] திச்சுடவது. [4] எனதியற்கைநோக்கியும், என்திறத்தையெண்ணியும். [5] சங்கையாய். ()

9. **வேட்பது [1]மங்கையர் விலங்கி னுரெனில்**
[2]கேட்பதும் பல்பொருட் கையங் கேடற
மீட்பது [3]மென்வயி னென்னு மெய்ப்பொருள்
[4]வாட்பெருந் தோளினுய் மறைகள் [5]சொல்லுமால்.

(இ - ள்) 'ஒளியையுடைய பருத்த தோள்களையுடையவனே! (குலஸ்திரீகளை) விவாகஞ்செய்துகொள்வதும், (அந்த) மாதர்கள் (இல்லறத்தினின்று) விலகினுரென்று (எவராலேனும்) கூறப்படுமாயின் (அவர்களுடைய ஒழுக்கத்தைக்குறிப்பித்துப் பிரமாணமாக வைத்துக்) கேட்பதும், (மற்றும்) பலவிஷயங்களிலுண்டான சந்தேகத்தைப் பிழையில்லாதபடி நிவிருத்தி செய்துகொள்வதும் (ஆகிய இவையெல்லாம்), என்பக்கலிலேயே (நிகழக்கடவன)' என்கிற தத்துவார்த்தத்தை வேதங்கள் (வெளிப்படையாகக்) கூறுமன்றே! (எ-று.)

அக்கினிசாட்சியாக விவாகஞ்செய்துகொள்ளுதலும்,மங்கையரொழுக்கத்தைப்பற்றி ஐயமுண்டானபோது அவர்களை அக்கினிசாக்ஷியாகச் சொல்லும்படி கேட்பதும், மற்றும்பலவிஷயங்களில் 'நெருப்பிலிடினும் கெடாதிருப்பின் தூய்மையுடையது'என்று சந்தேகநிவிருத்தி செய்துகொள்ளுதலும் இங்குக் குறிக்கப்பட்டன. இல்லறத்தினின்று விலகினுரெனச் சங்கிக்கப்பட்ட மகளிர் தீக்குதித்து மீளின் ஒழுக்கந்தவருதவரென்று கொள்ளப்படும் மரபுபற்றி அவர்களுடைய ஒழுக்கத்தைக்குறித்துச் சோதிப்பது என்றபொருளும், 'மங்கையர்விலங்கினுரெனிற் கேட்பது' என்றதில் அடங்கும். (பல்பொருட்கு ஐயம்கெடறமீட்பது—"உங்கள் மந்திரம் ஏடுஒன்றில் இட்டுக ஓரேட், டெங்கள் மந்திரந்தன்னையும் இட்டுக இரண்டும்,அங்கிவாயிடின் வெந்தநுதோற்றது அவ்வங்கி, நுங்கிடாதது வென்றது" என்று சபதஞ் செய்து சமணர்க்கும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்க்கும் நடந்த கனல்வாதத்தின் முடிவு போல்வன காண்க.) 'வாட்பெருந்தோளினுய்' என்பதற்கு - வாள்முதலிய படைக்கலங்களிற் பயின்ற பெருமையுள்ள கையை

யுடையவனே! என்று உரைத்தலு மொன்று. பி-ம்:—[1] மங்கையை [2]கேட்பது. [3]மேன்மையின். [4]வாட்பொரு. [5]கூறுமால். (4012

93. [1]ஐயுறு பொருள்களை [2]யாசின் மாசொரீஇக்
கையுறு [3]நெல்லியின் கனியிற் [4]காட்டுமென்
மெய்யுறு கட்டுரை கேட்டு மீட்டியோ
[5]பொய்யுரு மாருதி யுரையும் [6]போற்றலாய்.

(இ-ள்.) பொய்ம்மையில்லாத அநுமானுடைய வார்த்தையையும் நன்கு மதித்து (ஏற்றுக்கொண்டு அதன்படி சானகியைக்)கைக்கொள்ளாத நீ,சந்தேகிக்கப்பட்ட பொருள்களின் உண்மைநிலையை விரைவாக (அந்தஐயமாகிய) குற்றத்தை நீங்கி (அகங்கையிற்) பொருந்திய நெல்லிக்கனியைப்போல நன்குகாட்டுந் தன்மையுள்ள எனது உண்மைபொருந்திய உறுதிமொழியைக்கேட்டாயினும் (அச்சீதையை)மீட்டு அழைத்துச்சேர்த்துக்கொள்வாயோ? (எ-று.) —இது, மீட்டருளுக வென்று வேண்டியபடி. பி-ம்:—[1]ஐயறு. [3]நெல்லியங். [4]காட்டுவேன். [5]பொய்யறு, பொய்யுறும். [6]போக்குமோ. [2]அரசின் என்று படிக்கவுமாம். (4013)

94. தேவரு முனிவருந் [1]திரிவ நிற்பவும்
மூவகை யுலகமுங் கண்கண் மோதிநின்று
[2]ஆவெனல் கேட்கிலை யறத்தை [3]நீக்கிவேறு
ஏவமென் றொருபொருள் [4]யாண்டுக் [5]கொண்டியோ.

(இ-ள்.) தேவர்களும் முனிவர்களும் சஞ்சரித்துநிற்பனவான மற்றைப்பிராணிகளும் (மேல் கீழ் நடு என்னும்) மூன்றுவகை யுலகத்துப் பிராணிகளும் (பிராட்டி அக்கினிப்பிரவேசஞ்செய்யத் தொடங்கியபோது அதனைப் பார்த்துச் சகிக்கமாட்டாமல் தம்தம்) கண்களை(க் கைகளால்) மோதிக்கொண்டுநின்று ஆஎன்று கதறியதை(நீ) கேட்டுணர்ந்தாயில்லைபோலும்; (நீ) தருமத்தைக் கைவிட்டு(அதற்கு) மாறான (இவ்வகை) அதருமமாகிய ஒரு பொருளை எங்கிருந்து கொண்டாயோ? (எ-று.)—ஆ-இரக்கக் குறிப்பு இடைச்சொல். எவ்வம் என்பது-எதுகை நோக்கி, ஏவம்என விகாரப்பட்டது. பி-ம்:—[1]தெரிய, திரிய, திரிப. [2]ஆவெனக். [3]நீக்கவே. [4]எங்ஙன். [5]கண்டியோ, காண்டியால். (4014)

95. [1]பெய்யுமே மழைபுவி பிளப்ப தன்றியே
செய்யுமே பொறையறம் நெறியிற் செல்லுமே
உய்யுமே [2]யுலகிவ ளுணர்வு சீறினால்
[3]வையுமேல் [4]மலர்மிசை யயனு மாயுமே.

(இ-ள்.) (மகாபதிவிரதையான) இச்சீதாதேவி மனத்திற் கோபங்கொண்டால், மேகம் (மழை)பொழியுமோ? பூமி(உயிர்களை விழுங்கிடப்) பிளந்துவிடுவதல்லாமல் (எல்லாப்பாரங்களையும்) பொறுத்துக்கொண்டிருக்குமோ? தருமம் செவ்விதாக நடக்குமோ? உலகம் நிலைத்திருக்குமோ? இவள்கோபங்கொண்டு சபிப்பாளானால்,தாமரைமலரின்மேல் வாழும் பிரமனும் இறந்திடுவானன்றோ?

(எ - று.)—என்று அக்கினிதேவன் கூறிமுடித்தா னென்க.பி-ம்:—[1]மெய்யுமே. [2]உலகில்வாழ். [3]வையமேல், வையுமே. [4]மலரய னுலகுமாயுமால். (4015)

96.—அக்கினிதேவன் பிராட்டியை இராமனருகிற் கொணர்தல்.

பாடுறு [1]பன்மொழி யினைய பன்னிநின்று
ஆடுறு தேவரோ டுலக மார்த்தெழச்
சூடுறு [2]மேனிய வலரி தோகையை
மாடுறக் கொணர்ந்தனன் வள்ளல் கூறுவான்.

(இ - ள்.) (பிராட்டியின்கற்பினனலால்) தாபம்மிக்க வடிவத்தை யுடைய அக்கினிதேவன்,—இத்தன்மையனவான பெருமை மிக்க பல வார்த்தைகளைச் சொல்லிநின்று, (பிராட்டியின்கற்புநிலையைக்கண்ட களிப்பினால்) கூத்தாடுகின்ற தேவர்களுடனே (மற்றை) யுலகத்து உயிர்களும் ஆரவாரித்து மகிழ்ச்சிமிக, மயில் போலுஞ் சாயலுடைய பிராட்டியைப் (பெருமாள்) பக்கத்திலே பொருந்தக் கொண்டுவந்து சேர்த்தான்; (அப்பொழுது), வரையாதருளும் இயல்பினனான இராமபிரான், (சில) சொல்லி யருளலானான்; (எ - று.) அவற்றை, அடுத்த கவியிற் காண்க.

அலரி-(சுவாலைகளாற்) பரந்துவிளங்குபவ னென்று பொருள் படுங் காரணக்குறி: இ-பெயர்விகுதி; இப்பெயர், பெரும்பாலும் சூரியனுக்குவழங்கும்; சிறுபான்மை இலக்கணையாய், மூச்சுடர்களுள் மற்றொருசுடராகிய அக்கினிக்கு வழங்கிய தென்க. பி-ம்:—[1]பணி. [2]மேனியன்வணங்கித், மேனியவங்கி. (4016)

97.—அப்பொழுது இராமன் சொன்ன அங்கீகாரவார்த்தை.

அழிப்பில சான்றுநீ யுலகுக் காதலால்
இழிப்பில [1]சொல்லிநீ யிவளை யாதுமோர்
பழிப்பில [2]ளென்றனை பழியு மின்றினிக்
கழிப்பில ளென்றனன் கருணை யுள்ளத்தான்.

(இ-ள்.) 'நீ உலகத்து உயிர்கட்கெல்லாம் (நீதிநெறி) தவறுத லில்லாத சாட்சியாகிறாய்; ஆதலால், இகழ்ச்சிக்கு இடமில்லாத சிறந்தவார்த்தைகளைச் சொல்லி நீ இவளை யாதொரு குற்றமுமில்லாதவ ளென்று சொல்லினை: (ஆதலால் இவளிடத்து யாதொரு) பழியு மில்லை;இனி (இவள் என்னால்) நீக்கத்தக்கவளல்லள்'என்று கூறியருளினன்: (யாவனெனின்),—திருவருளையுடைய திருவுள்ளத்தை யுடையவனான ஸ்ரீராமபிரான்; (எ-று.)

கருணையுள்ளத்தா னாதலின், 'இனிக்கழிப்பிலள்' என்றனனென்க; கருத்துடையடைகொளியணி. பி - ம்:—[1]சொல்லிவந்து. [2]என்றெனையமரரங்கினி.

சிலபிரதியில் இதனோடு சீதாபிராட்டி திருவடி தொழுதபடலம் அல்லது பிராட்டி திருவடிதொழுபடலம் முடிய, அதன்மேல் "இன்று

சென்று" (141) என்ற பாடல்வரையிற் கடவுளர் காட்சிப்படலம் என்று காண்கின்றது. (4017)

வேறு.

98.—அச்சமயத்தில் இராமனுக்கு அவனது யதார்த்த சொருபத்தை உணர்த்தும்படி தேவர்கள் பிரமனை வேண்ட, அவன் இசைதல்.

உணர்த்து வாயுண்மை யொழிவின்று காலம்வந் துளதால்
[1]புணர்த்து மாயையிற் [2]பொதுவுற [3]நின்றவை [4]யுணரா
இணர்த்து ழாய்த்தொங்க [5]லிராமற்கென் றிமையவ ரிசைப்பத்
தணப்பில் தாமரைச் சதுமுக னுரைசெயச் சமைந்தான்.

(இ - ள்.) '(தானே தனது சங்கற்பத்தால்) உண்டாக்கிய மாயையிலே மற்றைச்சீவாத்மாக்கள்போலவே (பரமாத்மாவாகிய தானும் ஆழ்ந்து) நின்று (தனதுஉண்மையான) அந்நிலைகளை அறியாதவன் போலுள்ள பூங்கொத்துக்களையுடைய திருத்துழாய் மாலையைத் தரித்த இராமபிரானுக்கு (அந்த) உண்மை நிலைகளை விடாமல் (நீ) அறிவிப்பாய்;(அதற்கு ஏற்ற) காலம் (இப்பொழுது) வந்துளது' என்று தேவர்கள் சொல்ல, பிரிதலில்லாத (திருமாலின் நாபித்) தாமரைமலரில்தோன்றிய நான்கு முகமுடையவனான பிரமன் (அந்தப்பகவானுடைய நிஜசொருபங்களைச்) சொல்லத் தொடங்கினன்; (எ - று.)—அவற்றை, அடுத்த பதினான்குகவிகளிற் காண்க.

'முழுமுதற்கடவுளாகிய ஸ்ரீமந்நாராயணனது திருவவதார மூர்த்தியான இராமபிரான், ஆத்மாக்களை வசப்படுத்துதற்குத் தான் இப்பொழுகொண்ட மனிதவடிவத்துக்கு ஏற்பத் தானும் அம்மாயையை யேற்றுக்கொண்டு அதன் வசப்பட்டுநின்று, சில நாள் பிரிந்த மனைவியைச் சேர்த்துக்கொள்ளுகிற விஷயத்தில் சங்கைகொண்டு தடுமாற்றமுற்று நிற்றலால், 'இச்சமயத்தில் அவனது உண்மைநிலைகளை அவனுக்கு உணர்த்தவேண்டுவது அவசியம்; இல்லாவிடின், அவன் பிராட்டியை அங்கீகரியாமல் விலக்கிவிட்டால் தீங்கு விளையும்' என்று இந்திரன் முதலிய தேவர்கள் பிரமனைத் தூண்ட, அவன் அங்ஙனமே அப்பரமனுக்கு யதார்த்த ஸ்திதிகளைச் சொல்லத்தொடங்கின னென்பதாம். பொதுவுற நின்று - சீவாத்மாக்களினும் பரமாத்மாவாகிய தனக்கு யாதொரு விசேஷமும் தோன்றாதபடி அவைபோலவே தானும் நின்று.

பி - ம்:—[1]புணர்த்த. [2]பொதுவற. [3]நின்றவப். [4]புணரா,புராணன், புராணம், புராண. [5]இராமனென்று. (4018)

99.—பிரமன் இராமனுக்கு அவனது சொருபத்தை யுணர்த்துதல், இதுமுதற் பதினான்குகவிகளிற் கூறப்படுகிறது.

மன்ன தொல்[1]குலத் தவரினத் துணையொரு மனிதன்
என்ன [2]வுன்னலை [3]யுன்னை நீ யிராமகே ளிதனைச்

சொன்ன நான்மறை [4]முடிவினிற் [5]றுணிந்தமெய்த் துணிவு
நின்ன லாதில்லை [6]நின்னின் [7]வே றுளதில்லை நெடியோய்.

(இ - ள்.) ஸ்ரீராமனே! தலைவனே! பெருமையுடையவனே! உன்னை, தொன்றுதொட்டுவருகிற சூரியகுலத்தவரான அரசரது வருக்கத்தில்தோன்றியமாத்திரமான மநுஷ்ய னென்று எண்ணுதே: உன்னுடைய இந்த உண்மைநிலையைக் குறித்து (யான் சொல்லும்)இவ்விண்ணப்பத்தை நீ கேட்டருள்வாய்; சிறப்பித்துச் சொல்லப்படுகிற நான்குவேதங்களின் முடிவில் [வேதாந்தத்தில்] சித்தாந்தஞ்செய்யப்பட்ட உண்மையான தத்துவம், உன்னையல்லாமல் வேறுஇல்லை; உன்னையல்லாது வேறு என்றும் நிலைத்துநிற்கும்பொருள் இல்லை: (எ - று.)

'நின்னலாதில்லை' என்றும், 'நின்னின் வேறுளதில்லை' என்றும் இரண்டுவகை வாய்பாட்டால் ஒருகருத்தையே சொன்னது, வற்புறுத்துதற்கென்க. பி - ம்:—[1]குலத்தவரித்தனை, குலத்தவரினத்தனை, குலத்தவரினத்துளன். [2]உன்னினை. [3]இன்னமுமிறைவ. [4]துணிவினில். [5]துணிபெருந்துணிவு, துணிந்தவெத்துணிவும். [6]ஆயினும். [7]பழையது, வேறுள்ளிலை, வேறுள்ளன, வேறுலகமும்.

100. பகுதி யென்றுள தியாதினும் பழையது பயந்த
[1]விகுதி யால்வந்த விளைவுமற் றதற்குமேல் [2]நின்ற
புகுதி [3]யாவர்க்கு மரியவப் புருடனு [4]நீயிம்
[5]மிகுதி யுன்பெரு மாயையி னுல்வந்த விக்கம்.

(இ - ள்.) எப்பொருளினும் பழமையதான மூலப்பிரகிருதி யென்று உள்ள தத்துவமும், (அந்த மூலப்பிரகிருதி) தந்த விகாரத்தா லுண்டான காரியங்களாகிய தத்துவங்களும், அத் தத்துவப் பொருள்களனைத்துக்கும் மேலாய்நின்ற எவர்க்கும் கண்டுணர்தற்குஅரியனுன அந்த ஜீவாத்மாவாகிய தத்துவமும் (ஆகஎல்லாப்பொருள்களும்), நீ: மிகப் பரந்ததாகக் காணப்படுகிற இந்தப் பிரபஞ்சத் தோற்றமெல்லாம், உனது பெரியமாயையாகிய சங்கற்பத்தா லுண்டான பரப்பாம்; (எ - று.)

சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தம் என்னும் பஞ்ச தந்மாத்திரைகளும், மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் பஞ்ச ஞானேந்திரியங்களும், வாக்கு பாணி பாத பாயுர் உபத்தம் என்னும் பஞ்ச கர்மேந்திரியங்களும், நிலம் நீர் தீ காற்று வானம் என்னும் பஞ்ச பூதங்களும், மகத் அகங்காரம் மனம் பிரகிருதி என்னும் நான்கும், ஆக, பிரகிருதி தத்துவங்கள்-இருபத்துநாலு. இருபத்தைந்தாவது தத்துவம் - ஆத்மா; இருபத்தாறுவது தத்துவம் - பரப்ரஹ்மம். நித்தியமாய் அளவில்லாததாய்த் திரிகுணாத்மகமாய் ஜகத்துக்குக் காரணமாய்த் தனக்கு ஒருகாரணம் உற்பத்தி விநாசம் இல்லாததாயிருக்கிற மூலப்பிரகிருதி யென்பது பரமாத்மாவின்கிரியாசாதநரூபமென்றும், நித்தியமான ஆத்மாவும் அத்தன்மையதே யென்றும், சிருஷ்டி காரியத்தில் விருப்பங்கொண்ட பரமாத்மாவினது இச்சையாகிய சங்கற்பத்தாற் சலனப்பட்ட மூலப்பிரகிருதியினின்று மகத்தத்துவமும், அதினின்று அகங்

காரமும், அதினின்று சப்தமும், சப்தத்தினின்று ஆகாசமும்,ஆகாசத்தினின்று ஸ்பர்சமும், ஸ்பர்சத்தினின்று வாயுவும்,வாயுவினின்று ரூபமும், ரூபத்தினின்று அக்கினியும், அக்கினியினின்று ரஸமும், ரஸத்தினின்று ஜலமும், ஜலத்தினின்று கந்தமும், கந்தத்தினின்று பூமியும் உண்டாயினவென்றும், சாத்விகம் ராஜசம் தாமசம் என மூவகைப்பட்ட அகங்காரத்தில் சப்ததங்மாத்திரை தாமச அகங்காரத்தின் காரியமென்றும், பஞ்சஞானேந்திரியங்களும் பஞ்சகன்மேந்திரியங்களும் மனமும் சாத்துவிகாகங்காரத்தில் தோன்றியவை யென்றும், தாமசாகங்காரமும் சாத்துவிகாகங்காரமும் சுவ காரியங்களைப் பிறப்பிக்கும்போது ராஜசாகங்காரம் துணைக்கருவியாயிருக்குமென்றும் அறிக. ஆதிகாரணமும் அவ்யக்தமுமான மூலப்பிரகிருதியும், அதன்காரியமான இருபத்து மூன்று தத்துவங்களும்,சிவாத்மாவும் பரமாத்மாவாகிய ஸ்ரீமந்நாராயணனது சொரூபமே யென்பதும், அந்த இருபத்தைந்து தத்துவங்களின் சம்பந்தத்தினு லாகிய பிரபஞ்சமுழுவதும் அந்த எம்பெருமானது அநுக்கிரகரூபமான சங்கல்பத்தால் ஆகியதே யென்பதும், இப்பாட்டின் கருத்து. எல்லாத்தத்துவங்களிலும் எம்பெருமான் நின்று அவற்றைத் தனக்குச் சரீரமாகக்கொண்டிருத்தலால், 'அவையெல்லாம் நீ' என்றது.

'ப்ரகிருதியென்கிறது - விகாரங்களைப் பிறப்பிக்கையாலே' என்ற தத்த்வத்ரயவாக்யமும், 'ப்ரகிருதியென்கிறது, மஹதாதி விகாரங்களைத் தன்பக்கலினின்று ஜநிப்பிக்கையாலே'என்ற அதன் வியாக்கியாந வாக்கியமும் இங்கு உணரத்தக்கன. பிரகிருதி நித்தியமாதலாலும், சிருஷ்டிக்கு முன்னமே உள்ளதாதலாலும் மற்றைப்பிராகிருத தத்துவங்களுக்குக் காரண மாதலாலும், 'பகுதி யென்றுளது யாதினும்பழையது' எனப்பட்டது. ஆத்மாவுக்கு 'அதற்கு மேல்நின்ற' என்ற அடைமொழி கொடுத்தது, பிரகிருதி போலவே நித்தியமாய்ப் பிராகிருத தத்த்வங்களுக்குமுன்னமே யுள்ளதான ஆத்மா விபரீதஞானத்தையுண்டாக்குகிற அசித்தாகிய பிரகிருதிபோலன்றிச் சித்தாகிய தான் ஞானத்துக்கு இடமாயிருத்தலினலென்க. அந்த ஆத்மா கண்முதலிய இந்திரியங்களுக்குப் புலனாகாமல் மனத்தினுணர்வுக்கே புலனும்படி யிருத்தலால், அதற்கு 'புகுதியாவர்க்குமரிய' என்ற அடைமொழி கொடுத்தது. இது பற்றியே, ஆழ்வார் ஆத்மஸ்வரூபத்தை "ஞானங்கடந்ததே" என்றதும்.

மூலப்பிரகிருதியும் அதன் காரியமான இருபத்துமூன்றுதத்துவங்களும், அவையனைத்துக்கும் மேல்நின்ற [இருபத்தைந்தாவது தத்துவமாகிய] ஆத்மாக்களும், எவர்க்கும் சென்று சேர்தற்கு அரிய பரமபுருஷனாகிய ஸர்வேசுவரனும் இராமனாகிய நீயே யென்று உரைகூறினும் அமையும்: இவ்வுரைக்கு 'நின்ற' என்பது-பெயர். பி - ம்:—[1] மிகுதியால். [2] விளம்பும். [3] யாவதும். [4] புகலும், நீயே, நீயும், நீயம். [5] மிகுதியாவு நின்மாயையினால்வந்த, தகுதி... தந்த. (4020)

101. முன்பு [1]பின்பிரு புடையெனுங் குணிப்பரு [2]முறைமைத்
தன்பெ ருந்தன்மை தாந்[3]தெரி மறைகளின் றலைகள்
மன்பெ ரும்[4]பர மார்த்தமென் றுரைக்கின்ற மாற்றம்
[5]அன்ப நின்னையல் லான்மற்[6]றிங் கியாரையு மறையா.

(இ - ள்.) (எல்லாவுயிர்களிடத்தும்) அன்பையுடையவனே! முதல் நிலையாகிய தோற்றமும் இறுதிநிலையாகிய நாசமும் ஆகிய இரண்டு எல்லைகளென்று சொல்லப்படுகிற அளவு இல்லாத ஒழுங்கையுடைய தமதுபெருந்தன்மையை(ப் பிறர் அறியமுடியாமல்) தாமே அறிவனவான வேதங்களின் சிரசுகள்[வேதாந்தமாகிய உபநிஷத்துக்கள்] மிகமேலான பரம்பொருளென்று சொல்லுகிற சொல் உன்னைக்குறிக்குமேயல்லாமல் இங்குவந்துள்ள (யானும் சிவனும் இந்திரனும் முதலிய) மற்றைத்தேவர்களுள் எவரையும் சொல்லமாட்டா; (எ - று.)

வேதம் தான் உற்பத்திவிநாசமில்லாமல் கடவுள்போல நித்தியமாயிருக்கும் பெருந்தன்மையை யுடைமையாலும், அத்தன்மை தான் யார்க்கும் எளிதில் அறியவொண்ணாமையாலும், அவ்வேதம் இருக்குமுதலாகப் பலவகைப்படுதலாலும், 'முன்பு பின்பு இரு புடையெனுங் குணிப்பருமுறைமைத் தன்பெருந்தன்மை தான் தெரிமறைகள்' எனப்பட்டன. மறைகளின் தலைகள்-வேதத்தின் முடிவாகிய உபநிஷத்துக்கள். பி - ம்:—[1]பின்பிடை, பின்பின. [2]முறைய. [3]தெரியாமறைகணின்ற, தெரிமறைகளின்றலைய, தெரியாமறைத்தலைய, தெரிமறைகளின்றலைகொள். [4]பேர்மாயை, பரமாற்பன், பரமாற்பம், பரமார்த்தன். [5]அன்பு, அன்பின். [6]இன்றுரையும், இங்காரையும். (4021)

102. எனக்கு [1]மெண்வகை யொருவற்கு மிமையவர்க் கிறைவன்
தனக்கும் [2]பல்பெரு முனிவர்க்கு முயி[3]ருடன் றழீஇய
அனைத்தி னுக்குநீ யே[4]பர மென்பதை [5]யறிந்தார்
வினைத்[6]து வக்குடை விட்[7]டருந்தளை நின்று [8]மீள்வார்.

(இ-ள்.) '(பிரமனாகிய) எனக்கும் எட்டுவகை வடிவையுடைய ஒருகடவுளான சிவனுக்கும் தேவராசனான இந்திரனுக்கும் பலரான சிறந்தமுனிவர்களுக்கும் உயிரோடு கூடிய எல்லாப்பொருள்களுக்கும், நீயே பரம்' என்கிற உண்மைப்பொருளை யறிந்தார், (இரு) வினைகளின்தொடர்ச்சியையுடைய விடுவித்தற்கு அரிய பாசபந்தத்தினின்று மீண்டு முத்தியடைவார்கள்; (எ - று.)

நிலம் நீர் தீ காற்று வானம் என்னும் பஞ்சபூதங்களும், சூரிய சந்திரர் என்னும் இருசுடரும், யஜமானனும் ஆகிய எட்டுவகை வடிவமுடைமையால், சிவபிரான், 'எண்வகையொருவன்' எனப் பட்டனன்; இதுபற்றி, அஷ்டமூர்த்தியென்று ஒருபெயர். பெருமுனிவர்-மகாருஷிகள்; பிரமவிருடிகள். பல்முனிவர் என்க. எம்பெருமான் அசேதனங்களுக்கும் இறைவனே யாயினும், சிறப்புப்பற்றி, 'உயிருடன் தழீஇய அனைத்தினுக்கும் நீயே பரம்' என்று சேதனப் பொருள் எடுத்துக் கூறப்பட்டது. இனி, பேரும் உருவமுமுள்ள

பொருள்கள் எல்லாவற்றுக்கும் உயிருண்டு என்ற கொள்கை பற்றி, இங்ஙன் கூறியதெனினுமாம். பி - ம்:—[1] எண்வகை மூர்த்திக்கும், எண்வகை யுருவற்கும், எண்களாய் மூர்த்திக்கும். [2] பல்வகை. [3] உடற்றழீஇய. [4] பரன். [5] அறியார். [6] துடக்குடை, துடக்கிடை. [7] இருங். [8] விடுவார். (4022)

103. என்னைத் தான்முத [1] லாகிய [2] வுருவங்க ளெவையும்
முன்னைத் தாய்தந்தை யெனும்பெரு மாயையின் [3] மூழ்கித்
தன்னைத் தானறி யாமையிற் [4] சலிப்பவச் சலந்தீர்ந்து
உன்னைத் [5] தாதையென் றுணர்குவ முத்திவித் தொழிந்த.

(இ - ள்.) என்னை முதலாகவுடைய பிராணிகளிற் பலவும்,—(உற்பத்திக்குக்) காரணமான தாயும் தந்தையுமென்கிற[சுற்றந்தாரிடத்துப் பாசமாகிய]பெரியமாயையில் அழுந்தி,தமது நிலைமையை [ஆத்துமசொரூபத்தை]த் தாம்உணராமையால் (நற்பேறு பெறுமல்) துன்பப்படுவனவாம்; அந்த அறியாமைநீங்கியொழிந்த சில சீவராசிகள், உன்னையே (அனைத்துக்கும்) மூலகாரணமென்று உண்மையுணர்வனவாய் வீட்டுலகத்துக்கு விதையாம்; (எ - று.)

என்னை முதலாகவுடைய ஆத்துமகோடிகளிற் பெரும்பாலன, பரமாத்மாவாகிய உனக்குச் சீவாத்மாவாகிய தாம் அடிமையென்றும், "அத்தனாகி யன்னையாகி யாளு மெம்பிரானுமாய், ஒத்தொவ்வாத பல்பிறப்பொழித்து நம்மையாட்கொள்வான்" நீயே யென்றும் சீவாத்ம பரமாத்மசொரூபங்களை யுணர்தலின்றி, தம் தமது சன்மத்துக்குப் பிரத்யட்ச காரணமான தாயும் தந்தையும் முதலிய உறவினரிடத்து அன்பு செய்தலாகிய பாசபந்தத்திற்பட்டு மீள்வில்லாது முத்திபெறுமல் மாறிமாறிப் பல்பிறப்பும் பிறந்து இறந்து வருந்தும்; இவையொழியச் சில சேதநங்களே அங்ஙனமின்றி நின் அருளால் ஜீவபரஸ்வரூபங்களை உணர்வனவாய் அதனால் உறவினரிடத்து ஆசாபாசம்ஒழிந்து உன்னையே சகலவித பந்துவாகக்கொண்டு உனக்கு அடிமைப்பட்டுப் பிறப்பு அற்று முத்திபெறுவன என்றனன் பிரமனென்க. இவ்வுலகத்தில் தனது நிலையையும் கடவுளின் நிலையையும் அறிந்த ஆன்மா வீட்டுலகத்திற் சென்று முளைத்தலால், அதனை 'முத்திவித்து' என்றார்; இதனைத் திருக்குறளில் "வானென்னும் வைப்பிற்கு ஓர்வித்து" என்றாற்போலக் கொள்க: அங்குப் பரிமேலழகர் 'அந்நிலத்திற் சென்று முளைத்தலின், வித்து என்றார்: ஈண்டுப்பிறந்திறந்து வரும் மகனல்லன் என்பதாம்' என உரைத்தது உணரத்தக்கது. பி - ம்:—[1] ஆக்கியிவ் [2] உருவந்த. [3] மூயங்கித், முடங்கித். [4] சலித்தலிற்சலம், சலித்ததுசலம், சலித்ததச்சலம், சலித்தவத்தனை. [5] தானினைந்து..., தானெனவுணர்வது..., தாயெனவுணர்வதுமுந்திவித்தொழிந்தாய், தாயெனவுணர்வது மூற்றிவித்தொழிந்தாய், தாமெனவுணர்வதுமுற்றுவித்தொழிந்தாய், தாவெனவுணர்வது மோகிவித்தொழிந்தீர். (4023)

104. [1]ஐயஞ் சாகிய தத்துவந் [2]தெரிந்தறிந் தவற்றின்
மொய்[3]யெஞ் சாவகை மேனின்ற [4]நினக்கு[5]மேல் யாதும்
பொய்[6]யெஞ் சா[7]வில தென்னுமீ தருமறை புகலும்
வையஞ் சான்றினிச் [8]சான்றுக்குச் சான்றிலை [9]வழக்கால்.

(இ - ள்.) 'இருபத்தைந்தான தத்துவங்களை ஆராய்ந்து அறியுமிடத்து,—உண்மைகுறையாதபடி அந்த இருபத்தைந்து தத்துவங்களுக்கும் மேலே (இருபத்தாருவது தத்துவமாய்) நின்ற உனக்கு மேலே யாதும் பொய்ம்மை மிகாமல் [மெய்யாக] இல்லை' என்னும் இவ்வுண்மைப்பொருளை அறிதற்கு அரிய வேதம் கூறும்; (இதற்கு), உலகத்து உயர்ந்தோரும் சாட்சியாவர்; இனி, (அவர்களை நம்புவதற்கு வேருெருசாட்சி வேண்டியதில்லை: ஏனெனின்) —, வியவகார தருமத்தில் சாட்சியை நம்புதற்கு ஒருசாட்சி வேண்டப்படுவதில்லை யன்றோ? (எ - று.)

"உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே" என்றதனுல், வையம் என்பதற்கு-உயர்ந்தோரென்று உரைக்கப்பட்டது. "வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே, நிகழ்ச்சி யவர்கட் டாகலான" என்றதும் காண்க. சாட்சிக்கு ஒருசாட்சி யில்லை யென்பது, வழக்கு நூல்வல்லார் துணிபு. சாட்சி=ஸாக்ஷீ: நேரே கண்டவனென்ற பொருளினது. பி - ம்:—[1]ஐயைஞ்சு, ஐயைந்து. [2]தேர்ந்தறிந்து, தேர்ந்தறிவு. [3]அஞ்சா. [4]எனக்கு. [5]மேலாகிப், மேலாயோர், மேல் யாரோ. [6]அஞ்சார், அஞ்சா. [7]உளது, நின்றது. [8]சான்றுக்குஞ். [9]வழக்கே. (4024)

105. அளவை யா[1]லளந் தாமன்றென் [2]றறிவுறு மமைதி
உளவை யாவையு முனக்கில்லை [3]யுபநிடத் துனது
களவை [4]யாய்ந்துறத் தெளிந்தில தாயினுங் [5]கண்ணால்
[6]துளவை யாய் [7]முடி யாயுளை நீயெனத் துணியும்.

(இ - ள்.) திருத்துழாயை(ச் சிறந்ததென்று) தேர்ந்தெடுத்துத் தரித்த திருமுடியையுடையவனே! பிரமாணங்களைக்கொண்டு ஆராய்ந்து ஆம் என்றும் அன்று என்றும் அறிகிற நிகழ்ச்சியாகவுள்ளவையெல்லாம் உனக்கு இல்லை: உபநிடத்து உனதுஒளிப்பை ஆராய்ந்து முழுவதும் நன்கு அறிந்திலதாகுலும், (தனது ஞானக்) கண்ணினுல் நீ உள்ளாயென்று நிச்சயித்துச்சொல்லும்; (எ - று)

அளவையாவது - பொருளின் உண்மைநிலையை அளவிட்டு அறிதற்குக் கருவியான பிரமாணம். அது எட்டுவகைப்படும்; அவையாவன - பிரதியட்சம், அநுமானம், ஆகமம், உபமானம், அருத்தாபத்தி, அபாவம், ஐதிஹ்யம், சமபவம் என்பன. அவற்றுள் ஐம்பொறிகளின் உணர்வுகொண்டு அறிதல்-பிரதியக்ஷம். புகையைக்கண்டு அதுகொண்டு நெருப்புஉண்டெனல்-அநுமானம், பெரியோர்வாய்ச்சொல் - ஆகமம். மரை பசுப்போல் எனல் - உபமானம். "பகலுண்ணுன், பருத்திருப்பான்' என்றவிடத்து இரவில் ஒளித்து உண்பான் என உணர்தல் - அருத்தாபத்தி. முன்னும் இல்லை, பின்னும் இல்லை; ஒன்றிலொன்றில்லை, ஒருகாலத்தும்

இல்லை யெனல் - அபாவம். இம்மரத்திற் பேயுளது என்பது-ஐதிஹியம். ஆயிரத்தில் நூறுஉண்டு எனல் - சம்பவம். இவற்றுள் ஐதிஹியம், சம்பவம் என்பவற்றைப் பலர் வேறுபிரமாணங்களாகக் கொள்ளார். இவை எட்டையும், காட்சி அநுமானம் ஆகமம் என்னும் மூன்றில் அடக்குவர். உபமானம் பிரதியக்ஷத்திலும், அருத்தாபத்தியும் சம்பவமும் அநுமானத்திலும், ஐதிஹியம் ஆகமத்திலும், அபாவம் மூன்றிலும் அடக்கப்படும், இதன் விரிவைத் தருக்க நூல்களிற் காண்க.

ஜீவாத்மாக்களாகிய எங்களெல்லோராலும் பலவகைப் பிரமாணங்களைக் கொண்டு ஆராய்ந்து பரமாத்மாவாகிய உனது சொரூபம் உண்டென்றும் இல்லையென்றும் கூறப்படுவதே யன்றி இங்ஙனம் நீ ஆராயத்தக்க பொருள் ஒன்றுமில்லை யென்பதும், நீ ஆராய்ச்சி யில்லாமலே நினது இயற்கையுணர்வினால் யாவும் உணர்கின்றாய் யென்பதும், முதல்வாக்கியத்தின் கருத்து. உள்ளவை யென்பது, உளவை யெனத் தொக்கது. எம்பெருமானது சொரூபத்தை உள்ளபடி கண்டு உணர்த்தக் கருதி அதனை ஆராய்ந்து கொண்டே சென்ற உபநிஷத்து தனக்கு அது எட்டாமையால் அறிந்த அளவு கொண்டு கடவுளினுண்மையை அறுதியிட்டு வெளியிட்டு மூலப்பிரமாணமாய் நிற்றல், பிரசித்தம். கண்ணால் தெளிந்திலது என இயைத்தலும் ஒன்று. பி - ம்:—[1] அனந்தமாகுமென்று, அறிந்தாமன்றென்று, அளந்தாமென, அளந்தாறு மென்று. [2] அளவுறும். [3] உபநிடதத்துன், உபநிடதத்துனக்கு, உபநிடதத்துநின், உபநிடத்தம்முன். [4] யாவையுமறிந்திலது, ஆய்ந்துறத்தெரிகிலது, ஆய்ந்துறத்தெளிந்தில. [5] கள்ளார். [6] துளவையார். [7] முடியாயவனுளன், முடியானவனுளன், முடிமாயவனுளன், முடியானுளது.()

106. [1] கரண மென்றுள வுன்னைவந் தறிவுகா ணாமே
[2] அரண மல்லவர்க் கிவைகடந் தறிவரி தாக
மரணந் தோற்றமென் [3] றிவற்றிடை [4] மயங்குப வவர்க்குன்
சரண மல்லதோர் சரணில்லை [5] யன்னவை தவிர்ப்பான்.

(இ-ள்.) (நின்கருணைக்கு) இலக்காகாதவர்க்கு அறிவு அடுத்து உனது சொரூபத்தை உணரவொண்ணாதபடி (ஐம்) பொறிகளென்று உள்ளவை பெருந்தடையாம்; இவ்வைம்பொறிகளை வென்று (உன்னை) அறிதல் அரியதாதலினால், (அவர்கள்), இறத்தலும் (மீளப்) பிறத்தலும் ஆகிய இத்துன்பங்களிலே மாறி மாறி உழல்வார்கள்: அவர்க்கு அத்துன்பங்களை நீக்குதற்கு உனது திருவடியன்றி வேறுபுகலிடமில்லை; (எ - று.)—அரணம் - அரண்: இலக்கணையாற் பெருந்தடையென்ற பொருளது. அல்லவர் - கருணைக்கு இலக்காகாதவர். பி-ம்:—[1] அரணமாவையும், கரணமொன்றுள, கரணமொன்றுளது. [2] அரணமவ்வவர்க்கிவைந்தன நடத்தற்குமரிதாம், கரணமற்றவையாவையுங்கடந்திலதாக, அரணமவ்வறிவகைகடந்தகல்வறிவரிதாக, கரணமவ்வறிவைக்கடந்தகல்வரி

தாக. [3]அவற்றிடை. [4]மயங்குறுமவற்றுன். மயக்குறுமவற்றுன், மயங்குமறுவற்றுள், மயங்குறுமவற்குன். [5]அன்னது. (4026)

107. தோற்ற மென்பதொன் றுனக்கில்லை [1]நின்கணே [2]தோற்றும்
ஆற்றல் சான் [3]முதற் பகுதிமற் [4]றதனுளாம் பண்பால்
[5]காற்றை முன்னுடைப் பூதங்க ளவை[6]சென்று கடைக்கால்
விற்று [7]விற்றுற்று வீவுறு நீயென்றும் [8]வீவியாய்.

(இ-ள்.) உனக்கு (ஒருபொருளினிடத்து)த் தோன்றுதலென்கிற ஒரு நிலை [உற்பத்தி] இல்லை; வல்லமைமிக்க மூலப்பிரகிருதி, உன்னிடத்தினின்றே வெளிப்பட்டது: மற்றையெல்லாத் தத்துவங்களும் அந்தமூலப்பிரகிருதியினின்று வருகையினால் வாயுமுதலான பஞ்சபூதங்களும், (மற்றுமுள்ள) அத்தத்துவங்களும் சங்கார காலத்தில் தனித்தனிப் பிரிபட்டு லயித்து அழிவடையும்; நீயோ எப்பொழுதும் அழியாய்; (எ - று.)

சர்வேசுவரன் ஒருவனே உற்பத்திவிநாசமின்றி நித்தியனென்க. மூலப்பிரகிருதி நித்தியமாயினும் பரமாத்மாவின் சொருபத்தினின்று வெளிப்படுதலால், 'நின்கணே தோற்றும் ஆற்றல் சால் முதற்பகுதி' எனப்பட்டது. இருபத்தைந்துதத்துவங்களுள் புருஷன் மற்றை இருபத்து மூன்றுதத்துவம்போல மூலப்பிரகிருதியின் காரியமல்லாவிடினும்,உரைமெழுக்கிற் பொன்போல மூலப்பிரகிருதியில் அடங்கியிருந்து அதனின்று ஆதியில் வெளிப்பட்டனனென்பதை "நிறைபரஞ்சுடர் நெடுமலர்க்கட்கடை சிறிது, பிறழ மாயையிற் பிறந்தனனொரு பெரும் புருடன்" என்ற பாகவதத்தாலும் அறியலாம். விசித்திரமான சிருஷ்டிக்குச் சாதனமாதலால், முதற்பகுதிக்கு 'ஆற்றல்சால்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. சிருஷ்டிகாலத்தில் எந்தப்பொருள் எந்தப்பொருளினின்று தோன்றியதோ, அந்தக் காரியப்பொருள் அந்தக்காரணப் பொருளிலே மகாப்பிரளயகாலத்தில் அடங்குமென்பது, நூல் துணிபு. பிரளயத்தில் நிலம் தன்குணமாகிய கந்தத்துடன் நீரிலும், அந்நீர் தன்குணமாகிய ரசத்துடன் தீயிலும், அத்தீத்தன்குணமாகிய ரூபத்துடன் காற்றிலும், அக்காற்றுத் தன்குணமாகிய ஸ்பரிசத்துடன் வானத்திலும், அவ்வானம் தன்குணமாகிய சப்தத்துடன் அகங்காரத்திலும் லயிக்க, இவ்வாறே ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் மனமும் தம்தம் உற்பத்திஸ்தானமான அகங்காரத்திலே லயிக்க, அகங்காரம் மகத்தில்லயிக்க, அதுபிரகிருதியில் லயிக்க, அதுவும் புருஷனும் பரமாத்மாவிலே லயிக்க, பரமாத்மா ஒருவனேஎன்றும் லயமின்றி நிற்கின்றனனென்க. எம்பெருமானது திருவவதாரம் கருமவசத்ததன்றி இச்சையின் வசப்பட்டதென்பது, 'தோற்றமென்பதொன்றுனக்கில்லை' என்றதில் வெளியாம். பி - ம்:—[1]நினக்கொன்று, நினக்கெனத். [2]தோற்றம். [3]முகப். [4]அதனுளான்மாறக், அதனுளான்மாறு, அதனுளவாமாற். [5]காற்று. [6]இடைக்காலம். [7]விற்றுற. [8]வீயாய். (4027)

108. [1]மின்னைக் [2]காட்டுதல் போல்வந்து [3]விளியுமிவ் வுலகம்
தன்னைக் காட்டவுந் தருமத்தை [4]நாட்டவுந் தனியே
எ னைக் [5]காட்டுதி யிறுதியுங் [5]காட்டுதி யெனக்கு
முன்னை[6]க் காட்டலை [7]யொளிக்கிறு மிலைமறை [8]யுரையால்.

(இ-ள்.) (விரைவில் அழியுந்தன்மையதான) மின்னலை(மேகம்) தோற்றுவித்தல்போலத்தோன்றி அழியுந்தன்மையையுடைய இவ்வுலகங்களைத் தோற்றுவிக்குமாறும், (அவ்வுலகங்களில்) தருமத்தை நிலைநிறுத்துமாறும், (நீ) அநாதியாய் ஒருவனாயிருந்து (முதலில்)என்னைப் படைக்கின்றாய்; (அவ்வுலகங்களோடு எனக்கு) அழிவையும் செய்விக்கின்றாய்; எனக்கும், (காரணமாகிய) உன்னுடைய உண்மைநிலைமுழுவதையும் காட்டுகின்றாயில்லை; (அப்படி நீ) மறைந்துநின்றாலும், வேதவாக்கியங்களைக்கொண்டு (நான் உன்னுடைய சொரூபத்தைச் சிறிது அறிவதனால், உன்னை எனக்கு) முற்றும் ஒளிக்கின்றாயுமில்லை; (எ - று.)

'இறுதியுங் காட்டுதி' என்பதற்கு - சங்காரகர்த்தாவாகிய சிவனை (என்னைக்கொண்டு) உண்டாக்குகின்றா யென்று உரைத்தலும் ஒன்று. எனக்கும், உம்-உயர்வுசிறப்பு. பி - ம்:—[1]மின்னுக், மின்னிக. [2]காட்டுவ, காட்டிய. [3]விளியுமே, விளியுமாம், விளியுமெய். [4]காட்டவும். [5]காட்டிலை, [7]ஒளிக்கின்றும். [8]உரையாய்.(4028)

109. என்னு ருக்கொடிவ் வுலகினை [1]யீனுதி யிடையே
உன்னு ருக்கொடு புகுந்துநின் றோம்புதி [2]யுமையோன்
தன்னு ருக்கொடு துடைத்திமற் [3]றிதுதனி யருக்கன்
முன்[4]னு ருக்கொடு பகல்செயுந் [5]தரத்தது முதலோய்.

(இ - ள்.) முதற்பொருளானவனே! (பிரமனாகிய) எனது வடிவத்தைக்கொண்டு (நீ) இவ்வுலகங்களைப் படைக்கின்றாய்; (திருமாலாகிய) உனது வடிவத்தைக்கொண்டு இடையில் எழுந்தருளி நின்று (அவ்வுலகங்களைப்) பாதுகாக்கின்றாய்; சிவனதுவடிவத்தைக் கொண்டு(அவற்றை) அழிக்கின்றாய்; இதுஒப்பற்றவனான சூரியன் (யாவர்க்கும்) எதிரில் (கட்புலனாக விளங்குகிற தன்) வடிவத்தைக் கொண்டு பகற்பொழுதைச் செய்கின்ற தரத்தது; (எ—று.)—மற்று - அசை.

சூரியன் தனது உதயத்தாற் பகலையுண்டாக்கித் தான் சஞ்சரித்து உச்சமடைந்து கழிதலால் அப்பகலைநடத்தித் தனது அஸ்தமனத்தால் அப்பகலை முடித்தல்போல நீ திரிமூர்த்திசொரூபத்தில் பிரமனுக்கு அந்தராத்மாவாய் நின்று உலகத்தின் தோற்றத்தையும், திருமாலாகிய தானாய் நிலையில்நின்று அவ்வுலகத்தின் காப்பையும், சிவனுக்கு அந்தராத்மாவாய்நின்று அவ்வுலகத்தின் அழிவையுஞ் செய்கின்றனையென்பதாம். பி-ம்:—[1]பூணுதி. [2]உமைகோன். [3]அது. [4]உருக்கொடவ்வருள் செய்யும், உருத்தொரு... உருக்கொண்டிங் குருத்தெய்யும். [5]தரத்தினை. (4029)

110. திருக்கு வான்மலி செல்வத்துச் செருக்குவேந் திறத்துத்
தருக்கு மாய்வுறத் தானவ ரரக்கர்வெஞ் சமரில்
இருக்க மாழ்கிநொந் துனைப்புகல் யாம்புக விழையாக்
கருக்கு ளாய்வந்து தோற்றுதி யீங்கிது கடனே.

(இ - ள்.) பொருட்குவியலாக நிறைந்த ஐசுவரியத்தினால் கருவப்படுகிற எங்களிடமுள்ள அகங்காரம் அழியும்படி தானவரும் அரக்கரும் கொடிய போர்செய்து அதில் (எங்களை) அஞ்சியோடச் செய்ய,—யாம் மனம்வருந்தி உடல்நொந்து உன்னைச் சரணமாக அடைய, (அக்கொடியவர்களையழித்து எங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, நீ உனக்குத்) தகுதியில்லாத பிறவிகளிற் பொருந்தி வந்து இங்கு அவதரிக்கின்றாய்; இது (உனக்குக்) கடமையோ? (எ - று.)

பிரமன்முதலிய தேவர்கள் தாம் எம்பெருமானருளால் அளவிறந்த ஐசுவரியத்தைப்பெற்று அதனாற்செருக்கிப் பகவானை மறந்து களிப்புற்றிருக்கையில், அசுரர் ராக்ஷசர்முதலிய பல துஷ்டவர்க்கங்கள் அவர்களை எதிர்த்துப் போர்செய்து வென்று துரத்த, அத்தேவர்கள் ஓடிச் சென்று எம்பெருமானைச் சரணமடைய, அப்பெருமான் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்தற்பொருட்டுத் திருவருளால் மத்ஸ்யம் கூர்மம் வராகம் நரசிங்கம் முதலிய பிறவிகளைக் கொண்டும், அதிதி ரேணுகை கௌசல்யை முதலியோரது கருப்பத்தில் வாமநன் பரசுராமன் ஸ்ரீராமன் முதலாகவும் அவதரிக்கின்றனனென்க. நித்யனாய்க் கர்மவசப்படாதவனாய்ப் பிறப்பு இறப்பு இல்லாத பகவானுக்குக் கர்ம வசப்பட்ட உயிர்கள் பிறத்தற்குஉரிய எப்பிறப்பும் தகுதியல்லாமைபற்றி, 'இயையாக் கரு' எனப்பட்டது. அந்தப்பிறப்பில் அவதரிக்கும்போது சிறிதும் வேறுபாடு தோன்றாதபடி அதற்குஉரிய குணங்தொழில்களில் ஊன்றிநிற்கிற தன்மை, 'ஆய்வந்து' என்றதனால் விளங்கும். திரு-பொருள்: குவால்-குவியல். இது கடனே - அடியார்கள் வருந்தும்போது வந்து அவர்கள் வருத்தத்தை மாற்றுதல் தலைவனான உனக்குக் கடமையோ என்றபடி: உனது இயல்பான கேவலகிருபையாலே இங்ஙனம் தோன்றுகின்றனை யென்பது உட்கோள். இச்செய்யுள், பலபிரதிகளிலில்லை. (4030)

111. ஓங்கா ரப்[1]பொருள் தேருவோர் தாமுன்னை யுணர்வோர்
ஓங்கா ரப்[2]பொரு ளென்றுணர்ந் திருவினை [3]யுகுப்போர்
ஓங்கா ரப்பொரு [4]ளாமன்றென் றாழிசென் றுலும்
ஓங்கா ரப் [5]பொரு ளேபொரு ளென்கலா வுரவோர்.

(இ-ள்.) ஓங்காரப் பொருள் தேருவோர்தாம் உன்தன்மையை உள்ளபடி அறிந்தோராவார்; (அவர்கள் உன்னை) ஓங்காரப் பொருளென்று அறிதலால், இருவினைகளை ஒழிப்பார்கள்; பிரணவப் பொருளே பரம்பொருளாகும் என்று உண்மையுணரமாட்டாத (உலகசம்பந்தமான) அறிவையுடையவர்கள், பிரணவப்பொருளாகிய உன்னை உண்மைப்பொருளென்றும் அன்றென்றும் சந்தேகங்

கொண்டு நெடுங்காலங் கழித்தாலும், (இருவினையுகுக்கமாட்டாத வராவர்); (எ-று.)

'இருவினையுகுப்போர்' என்று கூறினதற்கு ஏற்ப, 'இருவினையுகுக்கார்' என்பது,பின்னே வருவிக்கப்பட்டது: இந்த எதிர்நிலைச் சொல்லெச்சம், அவாய்நிலையின்பாற்படும். ஓம் என்பது - பிரணவம்; அது - அஉம் எனப்பிரிந்து, அகாரவாச்யனான திருமாலுக்கு மகாரவாச்யனான ஜீவன் அடிமை எனப் பொருள்படும். இதன் கருத்தை நோக்க, திருமால் எல்லாவுயிர்களையும் அடிமையாக வுடையவன் என முடிதலால், திருமாலை 'ஓங்காரப் பொருள்' எனக்கூறினார்; "ப்ரணவோ பகவத்வாசீ - ப்ராதாந்யாத் அர்த்த ஸம்பவாத்" என்ற வடநூல்மேற்கோளையுங் காண்க. 'இருவினையுகுப்போர்:' என்றது, இருவினையையும் ஒழித்து எப்பொழுதும் அழியா நிலைமைத்தாகிய முத்திப் பேரின்பத்தினை யடைபவர் என்றவாறு.

முத்திபெறுவோர் அவசியம் அறியவேண்டிய ஸ்வஸ்வரூபம், பரஸ்வரூபம், புருஷார்த்தஸ்வரூபம், உபாயஸ்வரூபம், விரோதிஸ்வரூபம் என்னும் ஐந்தனையும் சகல வேதசாரமாகிய பிரணவம் தன் சொல்லாற்றலாலும் பொருளாற்றலாலும் உணர்த்துவதனால், அதனை யறிபவரே இருவினையுகுக்கும்வல்லமை யுடையோராவர். பிரணவப்பொருளை உள்ளபடி அறியாதவர்கள் பலயுகங்கள் கழிந்தாலும் இவ்வுலகத்திலேயே பிறந்தும் இறந்தும் இடர்ப்பட்டுக்கொண்டேயிருப்பரென்பது, பின்னிரண்டடியின் கருத்து. 'என்று' என்பதை ஆம், அன்று என்ற இரண்டிடத்துங் கூட்டுக. உரவோர்-பிரபஞ்ச விஷயமான அறிவுடையோர். பி-ம்:—[1]பொருளாவுனையுணர்வுறுமுரவோர். [2]பொருளென்றுவந்து, பொருளென்றென்று, பொருளென்று கொண்டு, பொருளொன்றுணர்ந்து. [3]உருப்போர். [4]என்றுகண்டுருவக்கண்டாலும், இடையறிந்தூழி கண்டாலும், இடையறிந்தூழி சென்றாலும், ஆமென்றென்றூழி கண்டாலும். [5]பொருண்மெய்ப்பொருளென மனத்துன்னூர்,பொருணீயெனவுணர்குவருரவோர். (4031)

112\. [1]இனைய தாகலி னெம்மையு [2]மூன்றுல கையு[3]மீன்று
மனையின் மாட்சியை [4]வளர்த்தவெம் மோயினை வாளா
[5]முனைய லென்றது முடித்தனன் [6]முந்துநீர் முளைத்த
[7]சினையின் பந்தமும் பகுதிக ளனைத்தையுஞ் செய்தோன்.

(இ - ள்.) (உனதுசொரூபம்) இத்தன்மையதானதனால்,—எம்மையும் மூன்று உலகையும் பெற்று இல்லறத்தின் மேன்மையை (அழகுபெற) நடத்திக்காட்டுகிற (இந்த) எமது தாயை[சீதையை] வாளா வெறுக்கவேண்டா என்று (தான் கூறத்தொடங்கிய) அவ்விஷயத்தைச் சொல்லி முடித்தான்; (யாவனெனில்,—எல்லாவற்றிற்கும்) முற்பட்டதன்மையையுடைய திருமாலினிடத்தினின்று தோன்றியவனும் (ஜீவராசிகளுக்குத்) தேகங்களின் சம்பந்தத்தையும் பலவகைப்பட்ட பகுப்புக்களையும் உண்டாக்கியவனுமான பிரமன்; (எ - று.)

முந்துநீர் - முற்பட்ட தன்மையையுடைய திருமால்: வினைத் தொகையன்மொழி. சினை-அங்கம்; எனவே, தேகமாயிற்று: அதன் பந்தமாவது - உயிரை உடம்பினுட்புகுத்தல். பகுதி-பிரிவு: இங்கே தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்ற எழுவகைப்பிறப்புக்களின் விரிவான எண்பத்துநான்கு லட்சம் யோனிபேதங்களைக் குறிக்கும். 'முந்துநீர் முளைத்த சினையின் பந்தம்' என்பதற்கு-முற்பட்டநீரில் [பெருங்கடலில்]தோன்றிய உருண்டைவடிவான அண்டமென்றும் பொருள் கூறலாம். பி-ம்:—[1] இனையகாதலின்எம்மை. [2] மூவுலகையும். [3] ஈன்றிம்,ஈன்ற. [4] வளர்த்து. [5] முனியலென்றது, முனியலென்றுரை. [6] முன்புநீர் முளரிச். [7] சினையில் வந்து தொல்மந்திரம்யாவையுஞ் செய்தாய், சுனையின்வந்தரும் பவுநிகமனைத்தையுஞ்செய்தோன். (4032)

113.—இதுவும், அடுத்த கவியும்-ஒருதொடர்: சிவபிரான் இராமபிரானுக்கு அவன்தன்மையையுணர்த்துதலைக்கூறும்,

என்னு மாத்திரத் தேறமர் கடவுளு [1] மிசைத்தான்
உன்னை நீயொன்று [2] முணர்ந்திலை போலுமா லுரவோய்
முன்னை [3] யாதியா மூர்த்திநீ [4] மூவகை யுலகின்
அன்னை [5] சீதையா மாதுநின் [6] மார்பின்வந் தமைந்தாள்.

(இ - ள்.) என்று (பிரமன்கூறி) முடித்தவளவில்,—இடபவாகனத்தில் வீற்றிருப்பவனான சிவபெருமானும் சொல்பவனானான்:—வலிமையுள்ளவனே! நீ உன்தன்மையை (இன்னதென்று) சிறிதும் அறியவில்லைபோலும்; நீ மிகவும் அநாதியாயுள்ள முழுமுதற்கடவுளாவாய்; மூன்று வகையான உலகங்களுக்குந் தாயான சீதையாகிய தேவி (திருமாலான) உனது திருமார்பில் வந்து பொருந்தியுள்ள இலக்குமியே; (எ - று.)

'நீ யுன்னை யொன்று முணர்ந்திலை' என்றது, நீ கொண்டுள்ள மனிதத்தன்மைக்கு ஏற்ப நடிக்கின்றாயென்றபடி. இலக்குமி திருமாலின் திருமார்பில் உறைகின்றாளென்பது, நூற்கொள்கை. பி-ம்:—[1] இசைப்பான். [2] அறிந்திலை. [3] ஆகிய. [4] மூவுலகிற்கும். [5] மார்பகத்தமைந்தாள்,மார்புறைந்தமைந்தாள், மார்பில்வந்தணைந்தாள்.

114. *துறக்குந் தன்மைய ளல்லளாற் றொல்லையெவ் வுலகும்*
பிறக்கும் [1] பொன்வயிற் றன்னையிப் பெய்வளை பிழைக்கின்
இறக்கும் பல்லுயி [2] ரிறைவநீ யிவன்றிறத் திகழ்ச்சி
மறக்குந் [3] தன்மைய தென்றனன் [4] மழுவலான் வழுத்தி.

(இ - ள்.) (யாவர்க்குந்) தலைவனே! பழமையான எல்லாவுலகங்களும் தோன்றுதற்கிடமான அழகிய வயிற்றையுடைய தாயாகிய சீதை, (உன்னால் வெறுத்துக்) கைவிடத்தக்க தீயொழுக்கமுடையவளல்லள்; (அன்றியும்), அணிந்த வளையல்களையுடைய இச்சீதை விஷயத்தில் (நீ) தவறுநினைத்துக்கைவிட்டால், எல்லா

வுயிர்களும் இறக்கும்: (ஆதலால்) நீ இவள்விஷயத்தில் அவமதிப்புக்கொள்ளுதல் மறந்துவிடத்தக்கதே என்று சிவபெருமான் துதித்துக் கூறினன்; (எ-று.)

பெய்வளை - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. 'இப்பெய்வளை பிழைக்கின் இறக்கும் பல்லுயிர்'-காத்தல் தொழிலைக்கைக்கொண்ட திருமாலினது மனைவியாயிருந்து உலகங்களையெல்லாங் காக்கிற தாயாகிய இவளுக்கே தீங்குநேரிட்டால் காப்பாற்றுவாரின்றி உயிர்கள்யாவும் அழிந்துவிடுமென்றபடி. சீதையின் தூய்மையை அக்கினிதேவ னுணர்த்தியதற்குமேல், குறிப்பாகப் பிரமனும் சிவபெருமானும் உணர்த்தியிருத்தல் காண்க. பி - ம்:—[1]மென்மையிற்றன்மை. [2]யாவையும், இராமநீ. [3]தன்மைய. [4]வரதர்க்கும்வரதன். (4034)

115.—சிவபெருமான் மேலுலகத்திலிருந்த தசரதனிடம் இராமனைக்கண்டு துயர்நீக்கச் சொல்லுதல்.

பின்னு நோக்கினன் [1]பெருந்தகைப் புதல்வனைப் பிரிந்த
இன்ன லாலுயிர் துறந்திருந் துறக்கத்து ளிருந்த
[2]மன்னற் சென்றுநின் மைந்தனை மனங்கொளத் தெருட்டி
முன்னை [3]வான்றுயர் [4]நீக்குதி மொய்ம்பினோ யென்றான்.

(இ - ள்.) (சிவபெருமான்),—மேலும் (செய்யவேண்டுவதை) ஆலோசித்தவனாகி, பெருமைக்குணமுடைய (தனது) குமாரனாகிய இராமனைப் பிரிந்ததனாலுண்டான துன்பத்தினால் இறந்து பெருமையையுடைய விஷ்ணுலோகத்தி லிருந்தவனான தசரதமகாராசனிடத்தைச் சேர்ந்து, 'வலிமையுள்ளவனே! உனது குமாரனாகிய இராமனை(ப்பார்த்து, அவன்) மனம்திருப்தியடையும்படி அறிவுமூட்டி (உன்மனத்தில்) நெடுநாளாகவுள்ள மிக்கதுன்பத்தைப் போக்குவாய்' என்றுகூறினான்; (எ - று.)

முன்னைவான்துயர்-இராமன் வனத்துக்குப்போனபோது அவனைப் பிரிந்ததனாலுண்டான துன்பம். அயோத்தியாகாண்டத்தில் தசரதசக்கரவர்த்திமரணமடைந்த செய்தி கூறியவிடத்து "இந்திரன் முதல்வராய கடவுளர் யாரு மண்டிச்,சந்திரனனைய தாங்கோர் மானத்தின் தலையில் தாங்கி, வந்தன னெந்தைதந்தை யென மனங்களித்து வள்ள, லுந்தியானுலகி னும்பர் மீள்கிலாவுலகத் துய்த்தார்" என்றதை நோக்கி,இருந்துறக்கத்துள் என்பதற்கு-பெருமையையுடைய விஷ்ணுலோகத்தி லென்று பொருள் கொள்ளப்பட்டது; இது, பிரமலோகத்துக்கு மேற்பட்டதாய்ப் பரமபதம் போலவே கருமவசத்தால் மறித்துவருதலில்லாத மேம்பாடுடையது. பி - ம்:—[1]முன்புதான், முன்புதற், உன்னைமுன். [2]மன்னர் மன்னவன்றசரதற்காண்டலும்வணங்கி, மன்னனூங்குளவண்ணலைச் சென்றுகாணந்து, மன்னவற்சென்று கண்டுநின்மைந்தனைத் தெருட்டி, மன்னனூங்குவற்சென்று நீ கண்டனைவணங்க, மன்னனூங்குவற்சென்று நீ கண்டிவண்வணங்கி. [3]உன்றுயர், வன்று

யர். [6]நீக்குவானயன் றனைமொழிந்தான், நீக்குதியென்பது முறையால், நீக்குதிமுன்பினேயென்றான். இந்தப்பாடலுக்குப்பின் ஒரு பாடல் சிலபிரதிகளிற் காணப்படுவது வருமாறு:—

என்ற வாசக [1]மெறும்வலித் தோளினு னியம்ப
மன்றல் தங்கிய மலரவன் வாசவற் கூவித்
துன்று[2]தாரினோன் சுரருடன் [3]துருவினை துடரச்
சென்று [4]மற்றவற் றருகென வணங்கினன் சென்றான்.

பி - ம்:—[1]ஏறுகந்தேறினான், ஏறமர்கடவுளும். [2]தாரினைப். [3]வரு. [4]மன்னவன். (4035)

116.—தசரதன் பூமியில் வருதலும், இராமன் அவனை வணங்குதலும்.

[1]ஆதி யான்பணி யருள்பெற்ற [2]வரசருக் கரசன்
காதல் மைந்தனைக் [3]காணிய வுவந்ததோர் கருத்தால்
பூத லத்திடைப் [4]புக்கனன் புகுதலும் [5]பொருவில்
[6]வேத வேந்தனு மவன்மலர்த் [7]தாள்மிசை விழுந்தான்.

(இ - ள்.) முதற்கடவுளான சிவபெருமான் அருளிய கட்டளையைப்பெற்ற அரசர்க்கரசனான தசரதன் (தன்) அன்பிற்குஉரிய குமாரனைக் காணும்படி கிளர்கின்ற மனத்தோடு பூமியில்வந்தான்; வந்தவுடனே, ஒப்பில்லாத வேதங்களுக்குத் தலைவனான இராமபிரானும், அத்தசரதனுடைய தாமரைமலர்போன்ற பாதங்களில் விழுந்துவணங்கினான்; (எ - று.)

சிவபெருமான், முதற்கடவுளர் மூவரில் ஒருவனாதலால், 'ஆதியான்' எனப்பட்டான். [6]வேதவேந்தன் என்ற பாடத்துக்கு, 'வேதவேத்யன்' என்ற வடசொற்றொடரின் விகாரமென்க. பி - ம்:— [1]ஆதியாய். [2]அரசர்க்குமரசன். [3]காணியவந்ததோர், காணியவிருப்புறுங், காணியவமைந்ததோர், காணியவுயர்ந்ததோர். [4]புகுந்தனன். [5]பொருமி. [6]தாளினில், தாளிணை. (4036)

117.—தசரதன் மகிழ்ந்து கூறத்தொடங்குதல்.

வீழ்ந்த மைந்தனை [1]யெடுத்துத்தன் விலங்க[2]லா கத்தின்
ஆழ்ந்[3]த முத்திடத் [4]தழுவித்தன் கண்ணினீ ராட்டி
வாழ்ந்த [5]சிந்தையின் [6]மனங்களுங் களிப்புற மன்னன்
போழ்ந்த துன்பங்கள் புறப்பட நின்றிவை புகன்றான்.

(இ - ள்.) (தசரதமகா)ராசன் (தன்பாதத்தில்) வீழ்ந்துவணங்கிய குமாரனை (க் கைகளால்)எடுத்துத் தனது மலைபோன்ற மார்பில் நன்றாக அழுந்தும்படி [இறுகக்]கட்டியணைத்துத் தனது கண்ணீர்ப்பெருக்கினால் (அவனை) முழுகப்பண்ணி, நல்வாழ்வுபெற்றோமென்ற எண்ணத்தோடு அந்தக்கரணங்களும் களிப்பு மிகவும் (இராமனைப்பிரிந்ததனால் தன்னை) வருத்திய துன்பங்கள் நீங்கியொழியவும், (இராமனெதிரில்) நின்றுகொண்டு இவ்வார்த்தைகளைச் சொல்வானாயினான்; (எ - று.)—அதனை, மேல்மூன்றுகவிகளிற் கூறுகின்றார்.

கண்ணீர் - உவகையிலாகியது; இது, ஆநந்தபாஷ்பமெனப் படும். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என நால்வகைப்படுகிற அந்தக்கரணங்கள், இங்கு 'மனங்கள்' எனப்பட்டன. புறப்பட - வெளிப்பட எனினுமாம். பி - ம்:—[1]எடுத்தனன். [2]மார்பத்தில். [3]அழுந்துற. [4]தழுவிக்கண்ணருவிநீராட்டி, தன்கண்ணருவிநீராடி. [5]சிந்தையன். [6]மனமிகக்களிப்புற்று. (4037)

118.—இதுமுதல் மூன்று கவிகள்—தசரதன் வார்த்தை.

அன்று கேகயன் மகள்கொண்ட வரமெனு [1]மயில்வேல்
இன்று காறுமென் னிதயத்தி னிடைநின்ற தென்னைக்
கொன்று நீங்கல திப்பொழு [2]தகன்றதுன் குலப்பூண்
மன்ற [3]லாகமாங் [4]காந்தமா மணியின்று வாங்க.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அக்காலத்தில் [முதலிற் பட்டாபிஷேகத்துக்கு நிச்சயித்தசமயத்தில்] கேகயராசனது மகளாகிய கைகேயி நிறைவேற்றிக்கொண்ட வரமென்று பெயர்பூண்ட கூரிய வேலாயுதமானது இதுவரையிலும் எனது இதயத்தினிடை நின்றது; எனது உயிரைநீக்கியும் (என்னை) விடாமலே பற்றியிருந்தது: (அது), இன்று உனது சிறந்த ஆபரணங்களையணிந்ததும் (இயற்கையில் திவ்விய) கந்தமுடையதுமான மார்பாகிய சிறந்த காந்தமணி (உன்னைத்தழுவிய) இச்சமயத்தில் ஒழித்ததனால், அகன்றது;

வரமெனும் அயில் வேல் - அயில் [கூரிய இரும்பினாலியன்ற] வேலை வரமென்று பெயர்பூண்டு தன் தன்மை மறைந்துள்ளது எனக்கூறியதனால், அவநுதியணி. மன்றல்-துளவமாலைமலர்மாலைகளையணிவதனாலான மணமுமாம். மணி - சிறந்தபொருள்; வடசொல். காந்தமணி - காந்தக்கல். கைகேயி கொண்ட வரத்தினால் இராமனைப்பிரிந்து அதனால் தனக்குநேர்ந்த மனத்துன்பம் இப்பொழுது அவனைத் தழுவினமைபற்றி நீங்கியதை, 'வரமெனும் அயில்வேல் உன் ஆகமாங்காந்தமாமணி இன்றுவாங்க அகன்றது' என்றார். வரத்தை இரும்புமயமான வேல் என்றதற்கு ஏற்ப, இராமனது மார்பை அதனைக் கவருங் காந்தமென்றார்; உருவகவணி. காந்தம்-இரும்பைக் கவரவல்லதொரு பொருளென்பது பிரசித்தம். இங்கே 'கைகேயிவரம்' என்றது, இராமன் நாடுதுறந்து பதினான்குவருஷம் காட்டுக்குச் செல்லவேண்டுமென்பதை. பி-ம்:—[1]நெடு. [2]அகன்றநின். [3]மார்பமாம், ஆகமாள். [4]வரந்தர மணியினின், வரந்தந்த மணியினின், மரகதத்தாணியின். (4038)

119. மைந்த ரைப்பெற்று வானுயர் [1]தோற்றத்து [2]மலர்ந்தார்
சுந்த ரப்பெருந் [3]தோளினு யென்துணைத் தாளின்
பைந்து கட்களு மொக்கில ராமெனப் படைத்தாய்
[4]உய்ந்த வர்க்கருந் துறக்கமும் புகழும்பெற் றுயர்ந்தேன்.

(இ - ள்) அழகிய பெரிய தோள்களையுடையவனே! (நல்ல) புத்திரரைப்பெற்று மிகச்சிறந்த தோற்றத்துடன் விளங்கினவர்களும் எனது இரண்டு கால்களிலுள்ள சிறிய தூளிகளுக்கும் ஒப்பாகா ரென்னும்படி (திருமாலாகிய நீ என்னிடம் தோன்றி எனக்கு மிக்க பெருமையை) உண்டாக்கினாய்: (தீவினையினின்று) நீங்கினவர்க்கும் (கிடைப்பதற்கு) அரிய மேலுலகத்தையும் கீர்த்தியையும் அடைந்து சிறப்புற்றேன்; (எ - று.)

மேலுலகத்தையடைந்த தசரதன் தன் புதல்வனான இராமனை இங்ஙனம் துதித்தற்குக் காரணம், உண்மையறிவு தன்மனத்தில் வெளிப்பட்டமையெனக. நன்மகப்பெற்றோர் யாவரினும் தசரதனுக்குச் சிறப்பு, திருமாலை மகனாகவுடைமை. திருக்குறளில் "வானுயர்தோற்றம்" என்றவிடத்து "வான்றோய்குடி" என்றாற்போல இலக்கணை வழக்கு' என்ற பரிமேலழகருரை வாக்கியம், இங்கு உணரத்தக்கது. பி-ம்:—[1]கொற்றத்து. [2]மலர்ந்த, வாழ்ந்தார். [3]தோளினர். [4]உய்ந்தவர்க்கும்வன், உய்ந்தவர்க்குறும். "மைந்தரைப் பெற்று வானுலகாள்வரென்றுலகில், அந்தரத்தவருரைக்கின்ற வாய்மையின்றகவால், நின்றனைப்பெற்று நேயமாலெழுத்தெட்டுநினையா, உய்ந்தமாதவருயருறுந் துறக்கநாடுற்றேன்" என்று சில ஏட்டுப்பிரதியிற் பாடம். (4039)

120. பண்டு நான்தொழுந் தேவரு முனிவரும் பாராய்
கண்டு [1]கண்டெனைக் கைத்தலங் குவிக்கின்ற காட்சி
[2]புண்ட ரீகத்துப் புராதனன் தன்னொடும் [3]பொருத்தி
[4]அண்ட மூலத்தொ ராசனத் திருத்தினை யழக.

(இ-ள்.) அழகுடையவனே! முன்பு [பூமியில் மனிதனாயிருந்தபோது] என்னால் வணங்கப்பட்ட தேவர்களும் முனிவர்களும் (இப்பொழுது) எனனைப் பலமுறையும் நோக்கிக் கைகூப்பித்தொழுகின்ற தோற்றத்தைப் பாராய்: (இன்னும் என்னை, திருமாலின் நாபீ) கமலத்தில் தோன்றிய பழையவனான பிரமனோடு சமானனாய் அண்டகோளத்தின் மேலுள்ளதோரிடத்தில் இருக்கச்செய்தாய்;

இவ்வெல்லாச் சிறப்புக்களும் எனக்கு மகனாய்ப்பிறந்த உன் மகிமையாலேயே நேர்ந்தன வென்பதாம். பி-ம்:-[1]கொண்டெனைக். [2]புண்டரீகப். [3]பொருந்த, பொருந்தத் [4]துண்டமூலத்தொராசனத்து, அண்டர்மூவரோடாசனத்து, அண்டமூலத்தலரசென. ()

121.—தசரதன் சீதையினருகிற் செல்லுதலும், அவள் அவனை வணங்குதலும்.

என்று மைந்தனை [1]யெடுத் தெடுத் திறுகுறத் தழுவிக்
குன்று போன் [2]றுள தோளினுன் சீதையைக் [3]குறுகத்
தன்று ணைக்கமல் [4]வணங்க றுங் கருணையாற் றழுவி
நின்று மத்திவை நிகழ்த்தின னிகழ்த்தரும் புகழோன்.

(இ - ள்.) என்று கூறி, மலையையொத்து [உயர்ந்து] விளங்குகிற தோள்களையுடையனான தசரதன்,—புத்திரனான இராமனைப் பல முறையெடுத்து அழுந்தக்கட்டியணைத்து(ப் பின்பு) சீதையைச் சென்று கிட்ட, (அவள்) தன்னுடைய இரண்டுபாதங்களையும் வணங்கினவளவில், சொல்லுதற்குஅரிய கீர்த்தியையுடையனான தசரதன் (அவளைப்)பரிவுடன் அணைத்துநின்று இவற்றைக் கூறுபவனானான்; (எ - று.)—அவற்றை அடுத்த மூன்று கவிகளிற் கூறுகின்றார். மற்று - அசை; பின்பு எனினுமாம். பி-ம்:—[1]எடுத்தணைத்து. [2]உயர். [3]குறுகித். [4]தாழ்தலும். (4041)

122.—இதுமுதல் மூன்றுகவிகள்—தசரதன் சீதைக்குத் தேற்றரவு கூறுதலைத் தெரிவிக்கும்.

நங்கை [1]மற்றுநின் கற்பினை [2]யுலகுக்கு [3]நாட்ட
அங்கி புக்கிடென் [4]றுணர்த்திய வது[5]மனத் தடையேல்
சங்கை யுற்றவர் [6]பெறுவது முண்டது சரதம்
கங்கை நாடுடைக் கணவனை [7]முனிவுறக் கருதேல்.

நான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) 'நங்காய்! உனது கற்பின்பெருமையை உலகத்தார்க்கு அறிவிக்க அக்கினிப்பிரவேசஞ் செய்' என்று (இராமன் உன்னைநோக்கிக்) கூறிய அவ்வார்த்தையை (ஒருகுறையாக) மனத்திற்கொள்ளாதே; (உலகத்திலே) சந்தேகங்கொண்டவர்கள் (அச்சந்தேகம் நீங்குதற்காகச், சத்தியஞ்செய்யச் சொல்லி அதுசெய்யக் கண்டு தெளிதலும் உண்டு: (இது உலகவழக்கமே: ஆதலால், அப்படி உன்னைச் சத்தியஞ்செய்யச் சொன்னவனான) கங்காநதி பாயப்பெற்ற நாட்டுக்குத்தலைவனாகிய உனது கணவனான இராமன் மீது சீற்றங்கொள்ளக் கருதவேண்டா; (எ - று.)

சத்தியஞ்செய்தல் - அக்கினிப்பிரவேசம், குடப்பாம்பிற் கையிடுதல் முதலியன. இச்செய்யுளின் மூன்றாமடிக்கு - உலகத்தில் எவரேனும் உனது கற்பிற் சந்தேகங்கொண்டிருப்பராயின் அவர் அது நீங்கி உண்மையுணரப் பெறுவதாகிய பயன் இதனாலுண்டன்றோ! என்றும் உரைக்கலாம். பி - ம்:—[1]நின்பெருங்கற்பினை. [2]உலகினின். [3]காட்ட. [4]உரைத்தனன். [5]மனத்திடையே. [6]தேறுவதுண்டது. [7]முனிவெனக் (4042)

123\. **பொன்னைத் தீயிடைப் [1]பெய்வதப் பொன்னுடைத் தூய்**
தன்னைக் காட்டுதற் கென்பது மனக் [2]கொளல் தகுதி [மை
உன்னைக் காட்டினன் கற்பினுக் கரசியென் றுலகிற்
பின்னைக் [3]காட்டுவ [4]தரியதென் றெண்ணி[5]யிப் பெரியோன்.

(இ - ள்.) 'பொன்னை நெருப்பிலிட்டுக்காய்ச்சுதல் அந்தப் பொன்னினது குற்றமற்றதன்மையைக் காட்டுதற்கேயாகும்' என்கிற இத்தன்மையை மனத்திற்கொள்ளுதலேதக்கதாம்: சிறந்த நற்குணங்களையுடைய இவ்விராமன் இவ்வுலகத்தில் (இச்சமயம் தப்பினால்) பிறகு (உனது கற்பின்சிறப்பை இங்ஙனம் தலைமைத்

தேவர்கள் முதலியோருங் காணும்படி) தெரிவிக்க முடியாதென்று நினைத்து (அப்பொழுதே) உன்னை (அக்கினிப்பிரவேசஞ்செய்யச் சொல்லிஅதனால்) நீ கற்பினுக்குத்தலைவி யென்றுதெரிவித்தான்;

சுத்தமான பொன்னை எத்தனை முறை புடமிட்டாலும் எடையும் மாற்றும் குறையாது அது தன் தூய்மையைக்காட்டுமென்க. 'உன்னை அக்கினியிற் பிரவேசிப்பித்தது உன் குற்றமற்ற தன்மையைத் தெரிவித்தற்காக' என்னும் உபமேயத்தை உபமானமுகத்தாற் பெறவைத்ததனால், முன்னிரண்டடி - பிறிதுமொழிதலென்னும் அலங்காரம். பி - ம்:—[1]பெய்தலப், பெய்வது. [2]கொளக்கருதி, கொளத்தகுதி. [3]காட்டுதற்கு. [4]அருமை. [5]அப். (4043)

124. பெண்[1]பிறந்தவ ருருந்ததி [2]யேமுதற் பெருமைப்
பண்பி றந்தவர்க் கருங்கல மாகிய பாவாய்
மண்பி றந்தக முனக்குநீ [3]வானின்றும் வந்தாய்
எண்பி றந்தநின் குணங்களுக் [4]கினியிழுக் கிலையால்.

(இ - ள்.) பெண்ணாகப்பிறந்தவர்களாகிய அருந்ததி முதலான சிறந்த கற்பின்குணம் மிக்கவர்களுக்கு அருமையான அணிகலம் போலவிளக்கத்தைச்செய்கிற பாவைபோன்ற சீதையே! உனக்குப் பிறப்பிடமோ, (உலகத்தார்க்குப்போலன்றிப்) பூமியேயாகும்; நீ பரமபதத்திலிருந்து (திருமால் இராமனாகத் திருவவதரித்தபோது சீதையாக) வந்து தோன்றினாய்;(இவ்வாறு சிறப்புற்றதனால்) இனி எண்ணிறந்த உனது நற்குணங்களுக்கு யாதொருகுற்றமுமில்லை; (எ - று.)

'ஆகாசம்போட்டது, பூமி ஏந்திற்று' என்னும் பழமொழி, மூன்றாவது அடியில் அமைந்திருப்பது - உலகவழக்குநவிற்சியணி. சீதை அயோநிஜையென்பதும், திருமகளின் அவதாரமென்பதும் இங்கு வெளியாம். எண்பு - நன்குமதிப்புமாம். பி - ம்:—[1]பிறந்தவர்க்கு. [2]எனும். [3]மாறின்றி. [4]இழுக்கெனநினையேல், இனியிழுக்கில்லை, இனியிழுக்கிழையேல். இச்செய்யுள் சிலபிரதிகளில் இல்லை: இங்குப் பல பிரதிகளில் ஒரு பாடல் காணப்படுகின்றது: அது வருமாறு:—

எனக்கு மெண்வகை முனிவர்க்கு மிமையவ ருலகந்
தனக்கு மற்றிவள் தாயென மனக்கொளத் தகுதி
மனத்தின் யாவர்க்கும் மறு[1]வறுத் திடுமிவண் மலராள்
புனத்து மாய்முடிப் புரவல னீ[2]ன்ற புகழோய்.

பி - ம்:—[1]அறுத்தருளுமிம்மதுவார். [2]பெற்ற. (4044)

125.—பிறகு தசரதன் இலக்குமணனைத் தழுவுதல்.

[1]என்னச் [2]சொல்லியவ் வேந்திழை திருமனத் தியாதும்
[3]உன்னச் செய்வதோர் முனிவின்மை [4]மனங்கொளா வுவந் [தான்
பின்னைச் [5]செம்மலவ் விளவலை யுன்னன்பு [6]பிணிப்பத்
தன்னைத் தானெனத் தழுவினன் கண்கணீர் ததும்ப.

(இ - ள்.) என்று சொல்லி, சிறந்தவனாகிய தசரதன்,—ஆபரணங்களையணிந்த அந்தச் சீதை (இராமன் தீயிற்குதிக்கச் சொன்னதைப் பற்றித் தன்) சிறந்தமனத்தில் நினைத்தலைச் செய்கின்ற வெறுப்பைச் சிறிதுங் கொள்ளாமையைத் (தான்) மனத்தினால் எண்ணி மகிழ்ந்தான்; பிறகு, மனத்தை அன்பானதுகட்ட [அன்புற்றமனமுடையவனாய்], கண்களில் (ஆனந்தத்தால்) நீர்ததும்ப, அங்கிருந்த (இராமனது) தம்பியான இலக்குமணனை, தன்னையே தான் தழுவினதுபோல [ஈருடம்பென்று? தான்றாது ஓருடம்பென்றே தோன்றும்படி இறுக]த் தழுவினான்; (எ - று.)—முனிவு - கோபமுமாம். பி - ம்:—[1] என்னைச். [2] சொல்லியது. [3] உன்னற்செய்வதோர், முன்னிச்செய்வதோர், முன்னைச்செய்யவோர், முன்னைச்செய்வினை. [4] மனக்கொளாவுவந்தாள். [5] செம்மலே. [6] பிணிக்குந். ()

126.—இதுவும், அடுத்த கவியும்—தசரதன் இலக்குமணனை நோக்கிக் கூறுதலைத் தெரிவிக்கும்.

கண்ணி னீர்ப்பெருந் தாரைமற் றவன்சடைக் கற்றை
[1] மண்ணி னீத்தமொத் திழிதரத் தழீஇ நின்று மைந்த
[3] எண்ணி னீக்கரும் [4] பிறவியு மென்னெஞ்சி னிறந்த
புண்ணு [5] நீக்கினை [6] யுமையனைத் தொடர்ந்துடன் [7] போந்தாய்.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) (தசரதன்,—தனது) கண்களினின்று சொரிகிற நீர்ப்பெருக்கானது அவ்விலக்குமணனது தொகுதியான சடையினின்று ஸ்நானத்தினாற் பெருகுகிற நீர்வெள்ளம்போன்று இழியும்படி (அவனைத்) தழுவிக்கொண்டே, 'மைந்த! உன் தமையனை (வனத்துக்குப் புறப்பட்டதுமுதல்) விடாது தொடர்ந்து (அவனுக்கு வேண்டிய பலஉபசாரங்களையுஞ் செய்து) அவனுடனே வந்தாய்; (அதனால்), கணக்கில்லாத நீக்குதற்கு அரிய (உனது) பிறப்பையும் என்மனத்தில் மிகுந்துள்ள துன்பங்களையும் நீக்கினை; (எ - று.)

தசரதன் இலக்குமணனை இறுகத்தழுவியபொழுது பெருக்கிய கண்ணீர் இலக்குமணன்மேற் பெருகி, அவன்சடையின்வழியே தரையில்விழுந்ததை, நீராட்டின நீர் கீழ்விழுவதுபோலு மெனக் குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. மண்ணுதல்-கழுவுதல்: இங்கே, ஸ்நானஞ்செய்தல். இனி, மண்ணில் நீத்தம் - பூமியில் (ஓடும்) வெள்ளமுமாம். தமையனுக்குச் சிசுருஷைசெய்த நல்வினையால், பிறவியென்பது நீங்கு மென்கிறான். பி - ம்:—[1] மண்ணு. [2] நின்ற. [3] எண்ணி. [4] துன்பமென்னெஞ்சினின்றகலாப். [5] நீக்கி, நீத்தனை. [6] உனையனை, நுமையனை, தமையனை. [7] போந்து. (4046)

127. *புரந்த ரன்பெரும் பகைஞனைப் [1] போர் [2] வென்ற வுன்றன்*
[3] பரந்[4] து யர்ந்ததோ ளாற்றலே [5] தேவரும் பலரும்
நிரந்த ரம் [6] புகல் கின்றது [7] நீயிந்த வுலகின்
அரந்தை யாம்பகை துடைத்தற நிறுத்தினை யைய.

(இ-ள்.) ஐய! இந்திரனது பெரும்பகைவனான இந்திரசித்தைப் போர்செய்து அழித்து வெற்றிபெற்ற உனது விசாலமான உயர்ந்த தோள்களின் வல்லமையே, தேவரும் பலரும் நிரந்தரம் புகல்கின்றதாகும்; நீ இந்த உலகத்திற்குத் துன்பத்தையுண்டாக்குகிற பகையையொழித்துத் தருமத்தை நிலைபெறச்செய்தாய்; (எ-று.)

பதினான்குவருஷம் நித்திரையின்றியிருந்த ஒருவனாலன்றி மற்றுளவராலும் தன்னைக் கொல்லமுடியாதபடி வரம்பெற்றிருந்த இந்திரசித்தை, அங்ஙனமே வனத்தில் இராமனுக்குப் பாதுகாவலாகும்பொருட்டுத் துயிலின்றியிருந்த இலக்ஷுமணன் கொன்றானென வறிக. ஆற்றலே புகல்கின்றது-செயப்படுபொருள் செய்வது போலச் சொல்லப்பட்டது. பி-ம்:—[1]பொரா. [2]வென்றது. [3]வரம்பு, பாம்பு. [4]உய்ந்த. [5]வானமுமண்ணும், தேவரும்பிறரும். [6]புகழ்கின்றது. [7]நீதியினில்லா, நிமிர்ந்ததுவுலகின். (4047)

128.—தசரதன் இராமனை வரம் கேளென அப்பிரான் 'என் விருப்பம் நிறைவேறிற்று' எனல்.

என்று பின்னரு மிராமனை யானுனக் கீவது
ஒன்று கூறுதி யுயர்குணத் தோயென [1]வுனையான்
சென்று வானிடைக் கண்டிடர் தீர்வெனென் றிருந்தேன்
இன்று காணப்பெற் றேனினிப் பெறுவதென் னென்றான்.

(இ-ள்.) என்றுசொல்லி(த் தசரதன்), பின்பும் இராமனை (நோக்கி), 'உயர் குணத்தோய்! யான் உனக்குத் தரத்தக்கதொரு வரத்தைக் கேட்பாயாக' என்றுசொல்ல,—(அதற்கு இராமன்), 'நான் உன்னை மேலுலகத்திற் சென்று தரிசித்து (எனது) மனத்துயரை நீக்கிக்கொள்ளலா மென்று நினைத்திருந்தேன்;' (அங்ஙனமன்றி நீயே வந்ததனால்) இப்பொழுது (உன்னைத்) தரிசிக்கப்பெற்றேன்; இனி (யான்) பெறக்கூடியதான (உன்னைத்தரிசித்தலினுஞ் சிறந்த) பேறு யாது உளது?' என்றான்; (எ - று.)

இராமனுக்கு இடர். தான் வனவாசஞ்செல்லத் தன்பிரிவுத் துயரால் தசரதன் உயிர்துறந்ததனாலும், அக்காலத்துத் தான் அத்தந்தையைப் பார்க்கப்பெறாமையாலும், நேர்ந்தது. பி-ம்:—[1]அனையான், உரையாச். (4048)

129.—கைகேயியையும் பரதனையும் அங்கீகரிக்குமாறு வேண்டுதல்.

ஆயி னும்முனக் கமைந்ததொன் றுரையென வழகன்
தீய ளென்றுநீ துறந்த[1]வென் தெய்வமு [2]மகனும்
தாயுந் தம்பியு மாம்வரந் தருகெனத் தாழ்ந்தான்
வாய்தி றந்[3]தெழுந் தார்த்தன [4]வுயிரெலாம் [5]வழுத்தி.

(இ-ள்.) 'ஆனாலும், உனக்குத் தக்கதொருவரத்தை (நீ) கேட்பாயாக' என்று (தசரதன் இராமனைநோக்கிக்) கூற, (அதற்குக்) கட்டழகையுடையவனான இராமன், 'தீயவளென்று நீ கைவிட்ட

எனக்குத் தெய்வம்போற் சிறந்தவளான கைகேயியும் (அவளது) புதல்வனுன பரதனும் (எனக்கு முறையே) தாயும் தம்பியும் ஆம் படியான வரத்தைத் தந்தருள்வாயாக' என்று கூறி வணங்கினுன்: அப்பொழுது இவனது நற்குண விசேடத்தைக் கண்டு, (உலகத்தி லுள்ள) ஜீவராசிகள்யாவும் உற்சாகங்கொண்டு (இவனை) வாய் விட்டுத் துதித்து ஆரவாரித்தன; (எ - று.)

'தாயும் தம்பியும் ஆம் வரம் தருக' என்றது - அநாதியாய் வருகிற க்ஷத்திரியதருமத்துக்கு விரோதமாக மூத்தவனுன இராம னைக் காடு செல்லும்படியும், இளையவனுன தன்மகனை நாடாளும் படியும், கைகேயி வரம் வேண்டினமைக்காகத் தசரதன் அவள்மீது கோபங்கொண்டு 'நீ என்மனைவியு மல்லை: உன்மகன் என்மகனும் அல்லன்' என்று மனப்பூர்வமாக அவ்விருவரையும் வெறுத்து உற வொழிந்ததை மறந்து இப்பொழுது மீண்டும் அவர்களது உறவு முறையைக் கைக்கொள்ளவேண்டுமென்று வேண்டியபடி. தசரதன் துறந்த விவரத்தை ''இன்னேபலவும் பகர்வான் இரங்காதாளை நோக்கிச், சொன்னே னின்றே யிவளென்தார மல்லள் துறந்தேன், மன்னே யாவான் வருமப் பரதன் தனையும் மகனென்று, உன்னேன் முனிவா வவனு மாகா னுரிமைக் கென்ருன்'' என்ற அயோத்தியா காண்டச் செய்யுளினுல் அறிக. இராமன் தனது இயற்கைநற் குணத்தாலும், தாயைத் தெய்வமாகப் பாவிப்பது முறையாதலா லும், கைகேயியை 'என்தெய்வம்' என்று சிறப்பித்துக் கூறினுன். இச்செய்யுளில் தசரதனுடைய முன்னிலையில் இராமன் கைகேயி யைச்சொல்லும்போது 'தீயளென்றுநீதுறந்த என் தெய்வம்'என்று மிகவும் சதுரப்பாடு அமையக் கூறியதாக அமைத்த கவித்திறம் மிகப்பாராட்டி யின்புறுதற்குத் தக்கது. இங்கு இராமனை 'அழகன்' என்றது - உடலழகு மாத்திரமன்றி வாயினுலும் அழகுபடப் பேசு பவன் என்ற கருத்தினது. பி-ம்:—[1]உன்தேவியும். [2]சேயும். [3]எடுத் தார்த்தன, எடுத்தழைத்தன. [4]உலகெலாம். [5]வாழ்த்தி. *(4049)*

130.—தசரதன் மறுமொழி.

வரத கேளெனத் தயரத னுரைசெய்வான் மறுவில்
பரத னன்னது பெறுகதான் [1]முடியினைப் [2]பறித்திவ்
விரத வேட [3]மற் றுதவிய பாவிமேல் விளிவு
சரத நீங்கல தாமென்ருன் றழீஇயகை தளர.

(இ - ள்.) '(வேண்டுவோர்க்கு வேண்டிய) வரங்களைத் தரு பவனே! (யான் சொல்வதைக்) கேட்பாயாக' என்று தசரதன் (இராமனைநோக்கிக்) கூறுவானுகி,—'குற்றமற்ற பரதன் (மாத் திரம் நீ கேட்டபடி எனக்கு மகனுகும்) அத்தன்மையைப் பெறக் கடவன்: (உனக்குச் சூட்டும்படி நிச்சயித்திருந்த) கிரீடத்தைச் சூட்டவொண்ணுது தடுத்து (அதற்குமாருக உனக்குத்) தான் இந்தத் தவவேடத்தைக்கொடுத்த பாவியான கைகேயியின்மீது (நான்கொண்ட) கோபமானது நிச்சயமாய் நீங்காதாகும்' என்று இராமனைத்) தழுவிய கைகள் நழுவக் கூறினுன்; (எ - று.)

இராமனை வனஞ்செல்லச் சொல்லி மரவுரி முதலியவற்றைக் கைகேயிதானே கொணர்ந்து கொடுத்ததனால், 'விரதவேடம் மற்று உதவிய பாவி' என்றான். தாய் தனக்கென்று இராச்சியத்தை வரமாகப்பெற்றிருக்கவும் மறுத்து, அயோத்தியாநகரிலும்வாழாமல் நந்திக்கிராமத்திலே அவனது வருகையையே நோக்கியிருக்கும் பரதனது நல்லொழுக்கத்தைக் கருதி, அவனுக்கு, 'மறுவில்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. ஆகவே, மறுவில் பரதன்-கருத்துடையடைமொழியணி. தழுவியகை தளர்தற்குக் காரணம்-கைகேயி விஷயமான கோபத்தினாலுண்டாகிய உள்ளச்சோர்வினாலான உடற்சோர்வு. பி - ம்:—[1]முடியுனைப். [2]பறித்து. [3]அன்று, என்று. (4050)

131.—இராமபிரானது மொழியால் தசரதன் கோபந் தவிர்தல்.

ஊன்[1]பி ழைக்கிலா வுயிர்நெடி [2]தளிக்குநீ ளரசை
வான்[3]பி ழைக்கிது முதலெனு தாள்வுற மதித்து
யான்பி ழைத்ததல் லாலெனை யீன்றவெம் பிராட்டி
தான்பி ழைத்ததுண் டோவென்ரு னவன்சலந் தவிர்ந்தான்.

(இ-ள்.) (அதற்கு இராமபிரான்), "சிறிதும் தவறுதலுண்டாகாமற் பிராணிகளை நன்றாகப்பாதுகாக்கவேண்டிய பெரிய அரசுரிமையை 'இது மிக்ககுற்றத்திற்குக் காரணமானது' என்று நினையாமல் ஆளும்படி நினைவு கொண்டதனால் நான் தவறு செய்தேனேயன்றி, என்னைப் பெற்று வளர்த்த என் அன்னை [கைகேயி] தான் தவறு செய்தது உளதோ" என்றான்: (அது கேட்டவளவில்), அந்தத் தசரதன் கோபம் நீங்கினான்; (எ - று.)

ஊன்பிழைக்கிலா வுயிர் என்பதற்கு - தேகசம்பந்தத்தைத் தவறாது [நீங்காது] பெற்றுள்ள பிராணிகளை யெனினுமாம். இனி இச்செய்யுளுக்கு-நிலையில்லாத தேகபோஷணத்துக்கே உபயோகியாகிற இராச்சியபாரத்தை இது பெருங்குற்றத்துக்கு மூலமானதென்றெண்ணாமல் ஆளவிரும்பி முதலில் அதற்கு இசைந்தது எனது குற்றமாமேயன்றி அன்புள்ள எனதுதாயானகைகேயிஎன் பக்கலருளினால் எனக்கு அதனைநீக்கினது குற்றமாகுமோ என்றான் இராமன்: அதுகேட்டவுடனே தசரதன் அவள்மேற் கோபந்தணிந்தானென்னுங் கருத்துப்பட உரைத்தலு மொன்று. ("பின் குற்ற மன்னும் பயக்கும் பரசென்றல்பேணேன், முன்கொற்றமன்னன் முடிகொள்கெனக் கொள்ள மூண்டது, என்குற்றமன்றோ இகன் மன்னவன் குற்றம் யாதோ" என்று அயோத்தியாகாண்டத்தில் இராமன் இலக்குமணனைநோக்கிச் சொன்ன வார்த்தையோடு இவ் வார்த்தையை ஒப்பிடுக.) கைகேயி தன்மீது அன்புள்ளவளென்பதையும் தன்னாற் பாராட்டத் தக்கவளென்பதையும் விளக்குமாறு அவளை ஸ்ரீராமன் 'எனையீன்றவெம்பிராட்டி' என்றான். பி - ம்:—[1]பிழைத்திலா, பிழைத்திடா, பிழைக்கிலாது. [2]அளிக்க நின்னுரையை, அளித்தரசுரிமை, அளித்திடுமுரவோய், அளித்த நின்னரசை. [3]பிழைக்கிதுமுதலெனுநதனையேமதித்த, பிழைக்கிலா

மதத்தது முத்லென் (வாள்வதென்) மதித்த, பிழைக்கிதுமுத லெனத் தளர்வதேமதித்த. (4051)

132.—தசரதன் இராமனுக்கு வரமளித்தது கண்டு தேவர்கள் வியந்துகூறுதல்.

எவ்வ ரங்களுங் கடந்தவ [1]னப்பொரு [2]ளிசைப்பத்
தெவ்வ ரம்பறு கானிடைச் செலுத்தினுட் கீந்த
அவ்வ ரங்களு மிரண்டவை [3]யாற்றினுற் [4]கீந்த
இவ்வ ரங்களு மிரண்டென்ருர் [5]தேவரு மிரங்கி.

(இ - ள்.) எல்லா வரங்களையும் கடந்துள்ளவனுன இராமபிரான், அவ்வாறு சொல்லி (வரம்வேண்டி)ப்பெற,—(அவற்றைக் கேட்ட) தேவர்களும், (இராமன்மீது) பரிவுகொண்டு,—'எல்லையில்லாத பகைவர்களையுடைய காட்டிலே (இராமனைப்)போகச்செய்தவளான கைகேயிக்கு (த் தசரதன் முன்பு) கொடுத்த அந்தவரங்களும் இரண்டு: அவ்வரங்களின்படியே நடந்தவனுகிய இராமனுக்கு (அத்தசரதனே இப்பொழுது) கொடுத்த இந்தவரங்களும்இரண்டு!' என்று வியந்து கூறினுர்கள்; (எ - று.)

பிரமன்முதலியோர் இராவணுதிராக்ஷசர்களுக்குக் கொடுத்த பலவகைவரங்களுக்குந் தவறுண்டாகாதபடி திருமால் அவற்றிற்கு ஏற்பத் தான் திருவுருக்கொண்டு தொழில்களைநடத்திவரங்களைப் பயனிலவாகச்செய்கிறதனுல், 'எவ்வரங்களுங்கடந்தவன்' என்றது. இனி, இதற்கு-எவ்வித வரங்களையும் வேண்டாதவ னென்றும், எல்லாமேன்மைகளையுங் கடந்து அவற்றிற்கெல்லாம் மேலுள்ளவ னென்றும்பொருள் கொள்ளுதலுமாம். இத்தொடர் - தசரதனைக் குறிப்பதெனக் கொண்டு, (இராமன்வார்த்தையாற் கோபந்தணிந்தவனுன) தசரதன் அவ்விராமன்வேண்டுகோட்கு இணங்கி வாக்கு அளிக்க எனினும் அமையும். தான் பெற்றவரங்களைக்கொண்டுதன் திறத்தில் தீங்கிழைத்தவளான கைகேயிவிஷயத்தில் இராமபிரான் சிறிதும் சினங்கொள்ளாது அவள்மீது தசரதன்கொண்டிருந்த கோபத்தையும் ஆற்றி, அவளுக்கு நன்மையையே செய்யத் துணிந்து அத்தசரதனிடத்து வரங்கள் வேண்டின அருமையைப் பாராட்டித் தேவர்கள் இங்ஙனம் இராமனது குணுதிசயத்தைவியந்தனர். தசரதனிடத்துக் கைகேயிகொண்ட இரண்டு வரங்கள் இராமன் காடு ஆளுதலும் பரதன் நாடு ஆளுதலும்: இராமன் கொண்ட இரண்டுவரங்கள்-தசரதனுக்குக் கைகேயி மனைவியாதலும் பரதன் மகனுதலுமெனக் காண்க. பி-ம்:—[1]இது, இப். [2]இசையத். [3]ஆற்றினுட்கு. [4]அளிக்க. [5]இமையவர், அமரரும். (4052)

133.—தசரதன் விமானமேறி மீண்டு மேலுலகஞ் செல்லுதல்.

வரமி ரண்டளித் தழகனை யிளவலை மலர்மேல்
விரவு பொன்னினை மண்ணிடை நிறுத்திவிண் ணிடையே

உரவு [1]மானமீ தேகின னும்பரு முலகும்
பரவு மெய்யினுக் குயிரளித் துறுபுகழ் படைத்தோன்.

(இ-ள்.) விண்ணுலகத்தவரான தேவர்களும் மற்றையுலகத் தவர்களும் சிறப்பித்துக்கூறுகின்ற சத்தியத்தின்பொருட்டுஉயிரை விட்டு [இறந்து] (சத்தியந்தவறாதவனென்று) மிக்க கீர்த்திபெற்ற வனான தசரதன்,—(இராமபிரான் கேட்டபடி அவனுக்கு அந்த) இரண்டு வரங்களையும் கொடுத்தபின்பு,—பேரழகையுடையவனான இராமனையும் (அவனது) தம்பியாகிய இலக்குமணனையும் தாமரை மலரின்மேல் வீற்றிருக்கின்ற இலக்குமியினமிசமான சீதையையும் பூமியில்நிற்கும்படி அநுமதிகொடுத்து வலியவிமானத்தின்மேலேறி மேலுலகு சென்றான்; (எ - று.)

தான் கைகேயிக்குக்கொடுத்திருந்த வரங்களைப் பொய்க்க மாட்டாது தசரதன் இராமனை வனஞ்செல்லவிட்டு அப்புத்திர சோகத்தாலே தான் உயிர்துறந்தமையால், 'மெய்யினுக்கு உயி ரளித்து உறுபுகழ் படைத்தோன்' என்றார். பி-ம்:—[1]வானமீது. இதுமுதல் நான்குசெய்யுள்கள், சில பிரதியிலில்லை. ஆயினும், ஐந்தாவது செய்யுளாகிய "முந்தைநாள் (137) என்பதை நோக்கு மிடத்து 133-முதலிய பாடல்கள் இன்றியமையாதன வெனத் தோன்றுகின்றது. (4053)

134.—இராமன் தேவர்களிடம் வரம்வேண்டுதல்.

கோட்டு வார்சிலைக் குரிசிலை யமரர்தங் [1]குழாங்கள்
மீட்டு நோக்குறா வீரநீ வேண்டுவ வரங்கள்
கேட்டி யாலென [2]வரக்கர்கள் [3]விளப்பருஞ் செருவில்
[4]வீட்ட மாண்டுள குரங்கெலா மெழுகென [5]விளம்பி.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ-ள்.) தேவர்களின் கூட்டம், வளைக்கின்றநீண்ட வில்லை யேந்திய புருஷோத்தமனான இராமபிரானைத் திரும்பவும்பார்த்து, 'வீரனே! நீ விரும்பியவரங்களை(எம்மிடத்து)க் கேட்பாயாக'என்று கூற,—(இராமபிரான்), 'சொல்லுதற்கு அரிய (பெரும்) போரில் இராக்கதர்கள் அழிக்க உயிர்மாய்ந்த குரங்குகளெல்லாம் உயிர் பெற்று எழுவனவாக' என்று ஒருவரம் வேண்டி, (எ - று.)— 'என்றான்' என அடுத்த கவியோடு முடியும். பி - ம்:—[1]குழுவும். [2]அரக்கர்தம். [3]கிளர்பெருஞ். [4]வீட்டி. [5]இயம்பி. (4054)

135. **பின்னு மோர்வரம் வானரப் பெருங்கடல் பெயர்ந்து**
மன்னு [1]பல்வன மால்வரைக் குலங்கள் [2]மற் றின்ன
துன்[3]னி டங்கள்[4]காய் கனிகிழங் கொடுதேன் [5]றுற்ற
[6]இன் னு ணீருள வாகென [7]வியம்பிடு கென்றான்.

(இ - ள்.) 'பெருங்கடல்போலுள்ள [பரந்த] வாநரசேனை போய்ச்சேர்கிற பலகாடுகளும் பெரியமலைகளின் தொடர்களும் இவைபோன்ற (குரங்குகள்) சேரத்தக்க வேறிடங்களும், (இவ் வாநரங்களுக்கு இரையாகிற) காய்கனி கிழங்குகளுடனே தேன் களும் நெருங்கியனவும் இனிய பருகுதற்குஉரிய நீர் உள்ளனவும்

ஆகக்கடவன என்று மற்றும் ஒருவரம் தரவேண்டும்' என்று கூறினான்; (எ-று.)—பி-ம்:—[1]அவ்வனம். [2]மற்றிவர்கள், மற்றிவைகள், மற்றவர்கள். [3]இடங்களில். [4]தேன்காய், கனிகிழங்கோடு. [5]துற்றும், துற்றி, துன்றி. [6]இன்னுநீருளவாகென, இன்னினீருளவாகென, மின்னுரநீள்வரவகமே, இன்றுநீள்வரவாகமேல். [7]விளம்பிடும். ()

136.—இராமன் வேண்டியபடி தேவர்கள் வரமளித்தல்.

வரந்த ரும்முதன் [1]மழுவலான் முனிவரர் தானோர்
[2]புரந்த ராதிமற் றேனையோர் தனித்தனிப் புகழ்ந்தாங்கு
அரந்தை வெம்பிறப் பறுக்குநா யக[3]நின தருளாற்
குரங்கி னம்பெறு கென்றன ருள்ளமுங் [4]குளிர்ப்பார்.

(இ - ள்.) வரங்கொடுக்குந் தன்மையுள்ள பிரமனும் சிவபெருமானும் இருடிச்சிரேஷ்டர்களும் தேவர்களும் இந்திரன்முதலிய மற்றவர்களும்,—(இராமனைத்) தனித்தனியே துதித்து மனமும் குளிரப்பெற்றவராய்,—அப்பொழுது 'துன்பத்துக்கு இடமான கொடியபிறப்புக்களை அறுத்தொழிக்குந் தலைவனே! உனது கிருபையினால் வாநரக்கூட்டம் (உயிரையும் உணவுகளையும்) பெறுக' என்றனர்; (எ - று.)

பிரமனை 'முதல்' என்றதற்குக் காரணம், ஸுரஜ்யேஷ்டன் லோகேசன் ஸ்வயம்பூ ப்ரஜாபதி விதி என்பவை முதலாக அவனுக்கு வழங்கும் பெயர்களின் பொருள்களை நோக்கிக் காண்க. இங்கு 'முனிவரர்' என்றது, தேவரிஷிகளையெனக் கொள்க; அன்றேல், கீழ்ச்செய்யுளில் 'அமரர் தங்குழாங்கள்' என்றதனோடு மாறுகொளக்கூறலாகும். பதினெட்டுத் தேவகணங்களுள் தேவவிருடியரும் ஒருவகையினராதல் அறிக. பி-ம்:—[1]மலரவன் மழுவலான். [2]புரந்தராதிமற்று......புகல்வார். [3]நின்றன். [4]குளிர்ப்பான்.(4056)

137.—இறந்த வாநரங்கள் உயிர்ப்பெற்றெழுந்து இராமனை வணங்குதல்,

முந்தை நாண்முதற் [1]கடைமுறை [2]யளவையு முடிந்த
அந்த [3]வானர மடங்கலு [4]மெழுந்துட னார்த்துச்
[5]சிந்தை யோடுகண் களிப்புறச் செருவெலா நினையா
[6]வந்து தாமரைக் கண்ணனை [7]வணங்கின [8]மகிழ்ந்து.

(இ - ள்.) (போர்) தொடங்கிய நாள் முதலாகப் போர்முடிந்த நாள் வரையிலும் இறந்தனவான அந்தவானரங்கள்யாவும் உடனே உயிர்பெற்றுஎழுந்து யுத்தத்தையெல்லாம் நினைத்து, (தம்பக்கத்து நேர்ந்த வெற்றியைப் பற்றி) ஆரவாரஞ்செய்து, மனமும் கண்களும் களிப்படையச் செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடையனான இராமபிரானைச் சமீபித்து மகிழ்ச்சியோடுவணங்கின; (எ - று.)—பி - ம்:—[1]கடன்முறை. [2]யாவையும், அளவையின். [3]வானரர். [4]எழுந்துடனார்த்த, எழுந்தெழுந்தார்த்துச், எழுந்துறவுற்றுச். [5]சிந்தை கண்ணிணை. [6]வந்த. [7]வணங்கினர். வணங்கியே. [8]மகிழ்ந்தார். (4057)

138.—வானரங்கள் ஆரவாரித்தலும், தேவர்கள் இராமனை நோக்கி ஒன்றுகூறத் தொடங்குதல்.

கும்ப கன்னனோ டிந்திர சித்துவெங் குலப்போர்
வெம்பு வெஞ்சினத் திராவணன் முதலிய வீரர்
அம்பின் மாண்டுள வானர [1]மங்குவந் தார்ப்ப
உம்பர் யாவரு மிராமனைப் பார்த்திவை யுரைத்தார்.

(இ - ள்.) கும்பகர்ணனும் இந்திரசித்தும் கொடிய சிறந்த போரிற் கொதிக்கின்ற கடுஞ்சினத்தையுடைய இராவணனும் முதலான வீரர்களுடைய அம்புகளினால் இறந்துபட்டனவான குரங்குக் கூட்டங்கள், (பிழைத்தெழுந்து) அங்கு [இராமனதுபக்கத்தில்] (திரண்டு) வந்து பேரொலி செய்ய, (அப்பொழுது) தேவர்களெல்லோரும், இராமனைப்பார்த்து இவ்வார்த்தைகளைக் கூறுபவரானார்கள்; (எ - று)—அவற்றை, அடுத்த மூன்றுகவிகளிற் கூறுகின்றார். பி - ம்:—[1]அடங்கவந்து, அடங்கலும். (4058)

139, 140.—இதுமுதல் ஐந்துகவிகள்-ஒருதொடர்: இராமனை நோக்கிய தேவர்கள் வார்த்தை.

இடையு வாவினிற் சுவேலம்வந் திறுத்தெயி லிலங்கைப்
[1]புடைய வாவுறச் சேனையை [2]வளைப்புறப் போக்கிப்
[3]படைய வாவுறு மரக்கர்தங் குலமுற்றும் படுத்துக்
கடையு வாவினி லிராவணன் தன்னையுங் [4]கட்டு.

வஞ்ச ரில்லையிவ் வண்டத்தி [5]னெனும்படி [6]மடித்த
கஞ்ச நாண்மலர்க் [7]கையினை யன்னைசொற் [8]கடவா
அஞ்சொ டஞ்சு[9]நான் கென்றெனு மாண்டுபோய் முடிந்த
பஞ்ச மிப்பெயர் படைத்துள திதி [10]யின்று [11]பயந்த.

இவ்விரண்டு கவிகளும் - குளகம்.

(இ-ள்.) (139)கிருஷ்ணபட்சத்து இடையில்[அஷ்டமிதிதியில்] (இலங்காநகரமுள்ள இடமான) சுவேலமலையில் வந்துதங்கி, (அன்றைக்கே)மதில்கள் சூழ்ந்த இலங்கையின் சுற்றுப்பக்கத்தில் வானர சேனைகளை விரும்பி முற்றுகைசெய்யும்படி செலுத்தி ஆயுதங்களை விரும்புகிற[அல்லது போர் செய்தலில் உற்சாகமுடைய]இராக்கதர்களுடைய வமிச முழுவதையும் கொன்றொழித்து,(அந்தக் கிருஷ்ண பக்ஷத்தின்)கடைசிநாளில் [அமாவாசையில்] (அரக்கர் தலைவனான) இராவணனையும் கொன்று, (140) இவ்வுலகத்தில் (இனி) வஞ்சகர்களான அரக்கர்கள் இல்லை யென்றுசொல்லும்படி யொழித்த அன்று பூத்த தாமரை மலர்போன்ற கைகளையுடையவனே!(நீ)தாயான கைகேயியின்வார்த்தையை மறுக்காமல், 'எப்பொழுது பதினான்கு வருஷமும் (முடியும்)'என்று நினைக்கின்ற வருஷங்கள் சென்று கழிந்துவிட்டன:இன்றைத்தினமானது பஞ்சமியென்னும் பெயர்கொண்ட திதியை உண்டாக்கிற்று; (எ-று.)

'இராமபிரான் பங்குனிமாசத்திற் கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி திதியன்றைறமாலைக்காலத்தில் இலங்காநகரமுள்ள இடமான சுவேல மலையில் வாநரசேனையுடன் ஏறி, அன்றிரவே சேனையைக்கொண்டு இலங்கையை முற்றுகைசெய்து,மறுநாள் [நவமிதிதி] பகற்பொழுதுக்கு மேல் அரக்கரோடு போர்தொடங்கி,ஆறுநாட்களில் கும்பகர்ணன் இந்திரசித்து முதலிய பல அரக்கர்களையும் கொன்று மூல பலத்தையும் வதைத்து வெற்றிபெற்று, ஏழாநாள் [அமாவாசை] அன்றைக்கு இராவணனுடன் மீண்டும் போர் தொடங்கி அன்றிரவின் பிற்பொழுதில் அவனையுங் கொன்று வெற்றிபெற்றனன்' என்று வால்மீகி ராமாயணத்தின் நுட்பமான கருத்துக்களை ஆராய்ந்து தெளியக்கூறுகின்றதான **ராமாயாணஸார ஸங்க்ரஹ**மென்னும் வடநூல் கூறும். ஒவ்வொருபக்ஷத்திலும் பதினைந்தாந் திதியாகிய இறுதிநாளைக்குறிக்கிற 'உவா' என்னும் பதம், இங்கு இலக்கணையாய்ப் பக்ஷமென்னுமாத்திரமாகி நின்றது. இடையுவா - உவாவினிடை;முன்பின்னாகத்தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை; இலக்கணப்போலி.இடையுவாஎன்பதற்கு-நிகண்டுகளில்பூர்ணிமை யென்று பொருள்கூறி யிருப்பதுகொண்டு அவ்வாறே யுரைப்பாருமுளர். 'உவா' என்னும் பதத்திற்கு, 'கடை' என்ற அடைமொழி கொடுத்தது, பூர்வபக்ஷத்துப் பதினைந்தாநாளைக் குறியாமல், அபர பக்ஷத்துப் பதினைந்தாநாளையே குறித்தற்கு; இது, இனம்விலக்க வந்த அடைமொழி, [பூர்வ பக்ஷம் - முந்தின பக்ஷம், சுக்ல பக்ஷம், வளர்பிறைக்காலம்; அபரபக்ஷம் - பிந்தினபக்ஷம், கிருஷ்ணபக்ஷம், தேய்பிறைக்காலம்.] கடையுவா-கடையாகிய உவா எனப் பண்புத் தொகை. என்று-எண்ணிடைச் சொல்.

'இன்று பஞ்சமிப்பெயர் படைத்துள திதி பயந்த' என்றசொற் போக்கினால், பெரும்பாலும் அன்றைக்குச் சதுர்த்திதிதி இருந்த தென்றும், பின்பு பஞ்சமிதிதி வருகிறதென்றும் பெறப்படும். இவ் விடத்து,'அமாவாசையில் இராவணசங்காரம் ஆனபின்பு,பிரதமையில் இராவண சம்ஸ்காரமும், துவிதியையன்று விபீடணபட்டாபிஷேகமும், திருதியையன்று ஜாநகீபரிசோதனையும் நடந்து, மறுநாளாகிய சதுர்த்தியில் இராமன் வானரசேனையுடன் புஷ்பகத்தின் மீதுஏறிப் புறப்பட்டு அன்றிரவிற் கிஷ்கிந்தை சேர்ந்து, அங்குள்ள வாநரமகளிரைக் கூட்டிக்கொண்டு, பஞ்சமியன்று பரத்துவாசரது ஆச்சிரமஞ்சேர்ந்து, அன்றைத்தினமே பதினான்கு வருஷமும் முடிகிறபடியால், தன்வருகையைத் தெரிவிக்கும்படி அநுமானைப் பரதனிடம் தூது அனுப்பினன்' என்ற **ராமாயணஸார சங்க்ரஹம்** உணரத்தக்கது. பி - ம்:—[1]உடை. [2]வளைவுற. [3]படையைவீழ்வுறும். [4]கட்டும், கரந்தாய். [5]புறத்தென. [6]மடித்தாய். [7]கையனை, கையினால். [8]காத்த, கடவாது, காரும், காறும். [9]நாலென்றது. [10]என்று. [11]பகர்ந்து. (4059, 4060)

141. இன்று [1]சென்றுநீ பரதனை யெய்திலை யென்னில்
பொன்று மாலவ னெரியிடை யன்னது போக்க

வென்றி வீர நீ போதியா லென்பது [2]விளம்பா
நின்ற தேவர்கள் [3]நீங்கினு ரிராகவ னினைந்தான்.

(இ-ள்.)'வெற்றிபெற்ற வீரனே! நீ இன்றைக்குப் புறப்பட்டுப் போய்ப் பரதனைச் சேர்ந்திடாயானால், அந்தப்பரதன் (முன்பு பிரதிஜ்ஞை செய்துள்ளபடி நீ வரவில்லையென்னுங் காரணத்தால்) அக்கினியில் விழுந்து உயிரை விடுவான்: அவ்வாறு அவனிறப்பதைத் தடுக்க (இப்பொழுதே) நீ போகவேண்டும்' என்பதைச் சொல்லி(அங்கு இராமனெதிரில்) வந்திருந்த தேவர்கள் (இராமனை நீங்கித் தங்கள் தங்களிருப்பிடத்துக்குச்) சென்றுர்கள்; (உடனே), இராமபிரான் (பரதனைச்சென்று சேர்வதைப்பற்றிச்) சிந்திப்பவனுனன்; (எ-று.)

"ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ, நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலங், கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரிச், சாமிது சரதம்நின்னுணை சாற்றினேன்" என்று முன்பு சித்திரகூடபருவதத்தில் இராமபிரான் முன்னிலையிலே பரதாழ்வான் பிரதிஜ்ஞைசெய்திருத்தலை அயோத்தியாகாண்டத்திற் காண்க. பி-ம்:—[1]நீசென்று. [2]விளம்பி, இயம்பா. [3]ஏகினுர். சிலபிரதிகளில் பிராட்டியார்திருவடிதொழுபடலம் இச்செய்யுளோடு முடிய, மேல் மீட்சிப்படலம் தொடங்குகின்றது. "உணர்த்துவாயுண்மை"(68) என்ற பாடலிற் கடவுளர்காட்சிப்படலம்தொடங்குகின்ற பிரதியொன்றிலும்இங்கு மீட்சிப்படலம் தொடங்குகின்றது: வேறுசில பிரதிகளில் "எழுபது வெள்ளம்"(160)என்றபாடலில்மீட்சிப்படலம் தொடங்கும்.(4061)

142.—இராமன் 'அயோத்திக்கு விரைந்துசெல்ல ஊர்தியுண்டோ?' என்று வினவ, விபீடணன் விமானமுண்டென்றல்.

ஆண்டு [1]பத்தொடு நாலுமின் ரேடறு மாயின்
மாண்ட தா [2]மினி யென்குலம் [3]பரதனே [4]மாயின்
ஈண்டுப் [5]போகவோ [6]ரூர்தியுண் டோவென வின்றே
தூண்டு மானமுண் [7]டென்றடல் வீடணன் [8]தொழுதான்.

(இ-ள்.)பதினுன்கு வருஷங்களும் இன்றோடே முடியுமானுல், (நான் வரவில்லையென்ற காரணத்தாற்)பரதன்(இறப்பான்; அப்படி) இறந்தால், இனி எனதுவமிசம் அழிந்ததேயாகும்; (ஆகையால்), 'இப்பொழுதே சென்று சேரத்தக்கதொரு வாகனம் உள்ளதோ' என்று (இராமன் விபீடணனை) வினவ, (அதற்கு), வலிமையுடைய விபீஷணன், 'இன்றைக்கே (சென்றுசேரும்படி) தூண்டத்தக்க விமானம் (இங்கு) உளது' என்று தொழுதுகூறினுன்; (எ-று.)

மாண்டதாம்-தெளிவுபற்றியகாலவழுவமைதி. பரதனொருவன் இறந்தால் அதுகாரணமாக மணவொற்றுமையையுடைய மற்றெல்லாரும் இறந்தொழிவது நிச்சயமென்று, தனக்குப் பரதன் மேலுள்ள அன்பை இராமன் வெளியிட்டபடி. பி-ம்:—[1]பத்தொரு.

[2]அன்றே, என்றே, இன்றே. [3]பரதனும், பரதனே. [4]மாளும். இன்றேக. [5]போவது,போவதோர். [6]உபாயமே தென்றவன்வினவ. உபாயமென்னேவெனவின்றே.[7]என்றனன்.[8]சொன்னான். இச்செய் யுளின்பின் ஒருபிரதியில் காணப்படும்பாடல் வருமாறு:—

வங்க நீணெடு வடதிசை வானவன் விமானம்
துங்க மாகவி யெழுபது வெள்ளமுஞ் சூழ்ந்தால்
எங்கு ளாரெனு மிடமுள ததின்மிசை யேறிப்
பொங்கு மாநகர் புகுதியிப் பொழுதினி யென்றான். (4062)

143.—விபீடணன் புட்பகவிமானத்தின் தன்மையைக் கூறி 'இதனிற் செல்வாய்' எனல்.

வாங்கி னானிரு நிதியொடு தனதனில் வள்ளால்
ஓங்கு மால்வெள்ள மெழுபஃ தேறினு மொல்காது
ஈங்கு ளாரெலா மிவருவ திவரினீ யினிது
பூங்கு லாநகர் புகுதியிஞ் ஞான்றெனப் [1]புகன்றான்.

(இ - ள்.) (மீண்டும் விபீடணன் இராமனைநோக்கி), 'வரையாது அருளுந்தன்மையுடையவனே! குபேரனிடத்தினின்று (இராவணன் இவ்விமானத்தைப்) பெருஞ்செல்வத்துடனே கவர்ந்து கொண்டான்: (இவ்விமானம், உன்னிடமுள்ள)மிகப்பெரியஎழுபது வெள்ளஞ் சேனை (தன்மிது) ஏறினாலும் தளராது: இங்குள்ளவர் யாவரும் ஏறக்கூடியது: நீ (இதன்மீது) ஏறுவாயாயின் இன்றைக்கே அழகுவிளங்குகின்ற அயோத்தியாபட்டணத்திற் சுகமாய்ப்போய்ச்சேர்வாய்' எனப் புகன்றான்; (எ - று.)

தனதன் - (தன்னையடுத்தவர்க்குச்) செல்வத்தைத் தருபவனென்று குபேரனுக்குக் காரணப்பெயர். இவன் இளமையில் பிரமனைநோக்கித் தவஞ்செய்துபெற்றிருந்ததான நினைத்தபடி தடையின்றிச்செல்லவல்ல இப்புஷ்பகவிமானத்தை, இராவணன் இவனோடு போர்செய்து வென்று வலியக் கவர்ந்து சென்றனனென அறிக. பி - ம்:—[1]புகலா.

சில பிரதியில் இப்பாடல் இல்லை: "மங்கலா நிதி வடதிசை வானவன் மானம், துங்கமார் கவி யெழுபது வெள்ளமுஞ் சூழ்ந்தா, லெங்குளாரெனுமிடமுள திதன்மிசை யேறிப், பொங்குமாநகர் புகுதியிப் பொழுதினி லென்றான்" என்று சிலபிரதியிலும், "வாங்கினானளகேசனைத் [1]துரந்து மிம்மானம், ஓங்குமூவுலகத்தவ ரேறினு முரவோய், ஆங்கிடம் [2]பினு முடைய தாமதுதனி லேறிப், பூங்குலா நகர்புகுதியிப்பொழுதினிலென்றான்." (பி - ம்:—[1]துரந்திந்த விமானம். [2]பின்னுமுடையதொன்றதுதனில் என்று) வேறு சில பிரதியிலும் பாடல் காணப்படுகின்றது. (பின்னும் வேறொருபிரதியில் "வாங்கினனதுமாநிதி யோடவண்மானம், ஏங்கு வெள்ளமோரெழுபது மேறினுலின்னும், ஆங்கு ளோரெலா மேறுவததனை நீயேறிப், பூங்கு லாநகர் புகுதியிப் பொழுதினிலென்றான்" என்று இங்குக்காணப்பட, இதனையடுத்துப் பின்வரும்பாடல்கள் உள்ளன; வருமாறு:—

1. என்று [1]தேரினை வீடணனெய்திய [2]தென்றான்
[3]நன்று தானென நாயக னேறின [4]னவரோடு
ஒன்று தானிளங் [5]கோவொடு மக்கவி வெள்ளம்
[6]ஒன்று தானென வொருதிசை யிருந்தது மொக்கும்.

பி-ம்:—[1]தேரினிலீண்டவந்தேறுதி. [2]என்ன. [3]நன்றிதாமென, நன்றிதாகென. [4]நலனோடு. [5]கோவுடன்கவிப்பெருவெள்ளம், கோவுடன் கவிவெள்ளமொருங்கே. [6]ஒன்றினாரெலாம். இங்கே ஒருபிரதியில் படலம் முடிகின்றது. இனி,

*இயமப்படலம்.

1. **வேறு.** ஏறினன் விமானந் தன்னி லிராமனு மிளைய கோவும்
மாறிலாச் சனகி யோடு வளநக ரிலங்கை வேந்தும்
கூறிய வனுமன் சாம்பன் குமரன்வெங் கவிவந் தேற
மாறிலோர் நிலத்து நின்றார் வயந்தனா் கொத்தி லுள்ளார்,

2. மாறதாய் வெள்ளஞ் சேனை மானத்தின் வராமை நோக்கி
ஏறுநீர் தேரி லென்னக் கருணன்வந் தெதிர்ந்த போது
சீறிய நுமரி லெங்கோன் றாக்கிட வரக்கன் சீறி
நீறெழப் பிசைந்தே யிட்டா னெற்றியி லென்னச் சொன்னார்.

3. **வேறு.** என்ற வாசகங் கேட்டலும் வானர ரிறங்கி
நின்ற போதினி லிராகவன் றேரினின் றிழிந்தான்
பொன்று மாவரக் காரண மென்னெனப் புழுங்காத்
துன்று தார்ப்புயத் திலக்குவ பொறியெனச் சொன்னான்.

4. **வேறு,** வரிசிலை யிராம னோலை [1]மறம்புரி மறலி காண்க
எரிகொளு மிலங்கைப் [2]போரி லின்னுயிர் [3]துறந்து போந்த
[4]குரிசிலை வயந்தன் றன்னைத் தேடியே [5]கொணர்க வன்றேல்
உரியதன் [6]பதமும் வாழ்வு மொழிப்பனென் [7]றெழுதிவிட்டான்.

---

* ..சந்தனுயிர்வரு படலம் என்ற பெயருடன் இங்குக்கூறிய விஷயத்தைத் தெரிவிக்கும் பாடல்கள் 158-ஆம் பாடலுக்குப்பின் சிலபிரதிகளிற் காணப்படுகின்றன. இங்குள்ள பாடல்களிற்பலவும் ஆங்கு உள்ளன: அவை இடையிற்புள்ளிகளிட்டு முதலும் இறுதியுமே ஆங்குக் காட்டப்படும். இங்கு இல்லாத பாடல்கள் முழுதும் காட்டப்படும். அந்தப்பிரதியிலும் 'வாங்கினான்' என்ற செய்யுளுக்குப்பின் "என்றுதேரினை" என்ற இச்செய்யுளும் உள்ளது. வசந்தனென்றுபேர்பூண்ட வானரவீரனைக் கும்பகர்ணன் பிசைந்து உயிர்போக்கி அவனதுதசை முதலியவற்றை உடலிற்பூசிக் கொண்டானென்ற விஷயம், உத்தரகாண்டத்து அசுவமேதப் படலத்துள்ள "வெய்யவன்மறுத்து, வயந்தனைப்பிசைந்து" (228) என்பதனாற் பெறப்படுமென்க. அசுவமேதப்படலத்து 159-ஆவது பாடல்முதல் 260-வரையிலுமுள்ள செய்யுட்கள் சிலபிரதிகளிற் காணப்படவில்லை: ஆகவே, வசந்தனைப்பற்றிக் கூறிய பாடல்களைக் குறித்து ஐயம் மிகுகின்றது.

பி-ம்:—[1] மறப்பிலர்மறலிகாண. [2] பூசல். [3] இழந்துபொன்சேர், இழந்து பொன்றும். [4] உருவிலான் றன்னைத்தேடித் தேடியே, தெரிவிலாவசந்தன் றன்னைத்தேடியே. [5] கொணரானுகில்,கொணர்வவன்றே, கொணரீராகில். [6] குலமும். [7] உணர்த்தி,

5. அக்கணத் தருகு நின்ற வனுமன்கைத் திருமு கத்தைத்
[1] தக்கவ னீட்டவாங்கித் [2] தன்றலை மிசையிற் சூடி
இக்கணம் வருவன்வாழி[3] யிராமவென் றிருதோள் கொட்டி[ன்.
மிக்கமா மடங்கல் போல [4] விண்ணிடை [5] விசைத்துப் பாய்ந்தா

பி-ம்:—[1] தக்கவாநீட்டை. [2] தாழ்ந்துதன்றலைமேற், தளர்ந்து தன்றலைமேற். [3] இராமன். [4] விண்மிசை. [5] விசைந்து, விரைந்து.

6. வேறு. மண்டிப் [1] புக்கனன் மறலிதன் [2] பெரும்பத நரகில்
தண்டிப் புண்[3] டறுப் புண்டெரிப் புண்டவர் தம்மைக்
கண்டு மாருதி கண்புதைத் [4] தரியரி யென்ன
[5] மிண்டி யேறினர் நரகிடை வீழ்ந்தவ ரெல்லாம்.

பி-ம்:—[1] பாய்ந்தவன். [2] பதத்தினிற்செல்லத். [3] அறுப்புண்டெரியுண்பவர்தம்மைக், அருநரகிடைப்படு முயிர்தன்னைக். [4] அரிகரி. [5] மண்டி மிண்டெரி.

7. துளங்கி யந்தகன் வந்தடி தொழுதலுந் [1] தோலா
வளங்கொள் மாருதி வசந்தனைக் காட்டென வவனும்
உளங்க லங்கியுன் ளுயக னடியரிங் குறூர்கள்
[2] விளங்கு கீர்த்தியாய் தேடு [3] விண் ணவர்புரத் தென்ருன்.

பி-ம்:—[1] தேராள். [2] விளைந்த. [3] வானவர்.

8. சொன்ன கூற்றுவன் [1] றன்னைத்தன் வாலிடைத் [2] துவக்கிப்
பொன்னின் கற்பக[3] ப்பதியிடைக்[4] கொண்டுபோய்ப் புகலும்
[5] முன்னை வந்துகண் டிந்திரன் [6] முனிவெனே வென்ன
[7] மன்ன வேகுவன் வயந்தனைக் காட்டுதி யென்ருன்.

பி-ம்:—[1] தன்னையும்வாலினிற். [2] சுருக்கிப். [3] நாட்டிடை. [4] குதிக்கொண்டுபோக, குதிக்கொண்டுபுகலும். [5] முன்னின்வந்துகண்டு, முன்னிற்கண்டுவந்து. [6] முனைவனே. மன்னனேதலன்காட்டுதி வசந்தனை.

9. வல்ல ரக்கரை மடித்தெமை யெடுத்தமா ருதியே
இல்லை [1] யிங்கய [2] னுலகிடை யறிதியென் றிசைப்பச்
சொல்லு மங்கவன் றன்னையும் வாலிடைத் [3] துவக்கிப்
பல்லு யிர்த்திறம் படைத்தவ [4] னுலகிடைப் பாய்ந்தான்,

பி-ம்:—[1] மற்று. [2] உலகி லுண்டேயறியென்னச்-சொல்ல, உலகிலுண்டேயெனவினிய-சொல்ல. [3] சுருக்கிப். [4] உலகத்திற்.

10. சிந்தை [1]தூயவன் செலவுளந் துளங்கு நான்முகனும்
[2]வந்த காரிய மேதென வயந்தனைப் பார்த்துச்
சுந்த ரத்[3]தடந் தோள்வில்லி நின் றன னவன்ருன்
[4]உந்த னீள்பதத் துளானெனிற் காட்டென வுணர்த்தும்.

பி-ம்:—[1]நான்முகனனுமன்முன் செலமனந்துளங்கி, தூயவன் செலவுளநடுங்குநான்முகனும், தூயநான்முகன் றனைவணங்கவுஞ் சீறி. [2]வந்து கண்டெனேவரவென. [3]பெருந்தோளவன், பெருந் தோள்வில்லி. [4]இந்தநீள் பதத்துளனெனிற்கொணர்தியீண்டென் ருன்.

11. என்னு டைப்[1]பெரும் பதத்தின்மே லாகிய வெந்தை
தன்னு டைப்பெருஞ் [2]சோதியிற் கிழதாய்த் தழைத்த
[3]மின்னு நீரொளி விண்டுவின் [4]பதத்துவான் விறலோய்
அன்ன வன் றனைக் கொணருதி யாங்கணைந் தென்ருன்.

பி-ம்:—[1]பதந்தனக்குத்தான்மேலவாவெந்தை, பதந்தனக்கு மேலாயெந்தைவாழும், [2]சோதிக்குக்கிழதாய்த்தழைத்த, சோதியாந் தயாபரமூர்த்தி. [3]மின்றிகழ்ந்தொளிர், மின்னுநீடொளி. [4]பதத்தி னுன்விறலோன், பதத்திலான்விறலோன்.

12. [1]என்று நான்முகன் சொல்லவு மியமனிந் திரனை
ஒன்ற [2]வால்கொடு துவக்கின னொருகுதி [3]கொண்டான்
மின்றி கழ்ந்தொளி விளங்கிடும் விண்டுவின் [4]பதத்திற்
சென்று கண்டுகொண் டிழிந்தனன் றிசைமுகன் பதியில்.

பி-ம்:—[1]என்றநான்முகன் றன்னையுமிந்திரன்யமனொடு,என்று நான்முகன் றன்னை விட்டியமனிந்திரனோடு. [2]வாலொடுந்துவக்கிமே லொருகுதி. [3]கொள்ளா. [4]பதத்தே.

13. மலரின் மேலயன் வசந்தற்கு முன்னுரு வழங்கக்
குலவு [1]வாசவன் யமனைவிட் டிருநிலங் குறுகி
அலகில் வீரன்ற னடியிணை யவனொடும் வணங்கிச்
[2]சலமுந் தீர்த்தனன் படையையு [3]மேற்றினன் றேர்மேல்.

பி-ம்:—[1]வாலிலங்கவரை, வாலின்மேலவரை. [2]சலமுதிர்ந்த வன்படையை, சலமுந்தீர்ந்தனன்..., சலமுந்தீர்ந்தவன்...,சல முதிர்ந்தவன்படையொடும். [3]உய்த்தனன் றடந்தேர்மேல், உய்த் தனன் றடந்தோளான்.

வேறுபிரதியில் "வாங்கினான்" (143) என்ற இந்தச்செய்யு ளுக்குப்பின் காணப்படுஞ் செய்யுள்கள் வருமாறு;—

1. • என்று...... .... ஒக்கும். (143-1)

•இயமப்படலத்துவந்த செய்யுள்கள், முதலும் இறுதியுமே காட்டப்படும்.

2. ஏறினு னிராமன் றேர்மே லெழின்மலர் மாதிஞேடும்
ஏறினு னிளைய கோவு மிராக்கதர் வேந்த ஞேடும்
ஏறினு னனுமன் சாம்ப னிடபனே முதலோ ரேற
மாறினூர் நிலத்து நின்ருர் வசந்தகோத் திரத்தி லுள்ளார்.

3. ஏறின னிளைய கோவு மிரவிசேய் சாம்ப னீலன்
ஏறினன் வாலி மைந்த னென் றனர் பலரு மேறச்
சீறிய கும்ப கன்னன் [1]சினத்திடைச் சிதைந்து [2]பட்டோன்
மாறிலா வசந்தன் சேனை நின்றது [3]பாரின் மண்மேல்.

பி - ம்:—[1]சிதைத்திடச். [2]பட்ட. [3]மாறி.

4. வேறு. பாரி னின் றதங் கொருவெள்ளப் படைவரத் தம்மை
வாருந் தேரின்மே லெனக்கும்ப கர்ணன்வந் தேன் ற
போரி லெம்படைத் தலைவஞே பொன்றின னவனை
நீறு நேர்பிசைந் திட்டன னெற்றியி லென்ருர்.

5. ஆழி வெள்ளமோ ரெழுபது மனுமனே முதலாம்
ஏழு[1] மூன்றுமாம் பெரும்படைத் தலைவரை யிராமன்
சூழ நோக்கினன் சுக்கிரீ பன் றனைப் பாரா
வாழி மாப்படை யனைத்தும்வந் தனகொலோ வென்ருன்.

பி-ம்:—[1]மூன்றெனும், மூன்றிரு.

6. இரவி கான்முளை [1]யிறங்கிவந் திராமனை [2]யிறைஞ்சி
சுருதி யாயொரு பொருள்[3]சொல் லுவதொ டர்ந்து
வருவ தான[4]விச் சேனையில் வசந்தனென் றுரைக்கும்
ஒருவன் வந்திலன் [5]கண்டரு ளுதியென வுரைத்தான்.

பி - ம்:—[1]திரிந்து, திருந்த. [2]எய்தி. [3]சொல்லுவதுணர்ந்து. [4]நஞ், [5]கண்டருணீ.

7. கசிந்த [1]ஞானங்கள் கலங்கலில் கழற்கும்ப கருணன்
இசைந்த [2]போரின்வந் தெய்தலு மிவன் றனை யெடுத்துத்
தசைந்த தோல்மயி ரெலும்பிவை தனைத்தெரி யாமல்
பிசைந்து [3]மோந்துடற் பூசினன் பெருநுதற் [4]கணிந்தே.

பி - ம்:—[1]நானங்கள்கமழ்தலில், நானங்கள்கவர்ந்தொளிர். [2]தேரின். [3]போந்து. [4]அணிந்தான்.

8. வேறு. இசைந்தசீ ராம ஞேலை யிலங்கையிற் பூச றன்னில்
வசந்தனைக் கண்டதில்லை [1]மதித்தவா றழகி தம்மா
வசந்தனைக் கொண்டு தானும் வருகஞே வாரா ஞகில்
நமன்குலங் களைவ னென்ரு [2]னைவர வென் ற வீரன்.

பி - ம்:—[1]மதித்தயான். [2]நாளைவாவென் றவீரன், ஐவரை வென் ற வீரன்.

9. வரிசிலையிராமனேலை... ... விட்டான். [143 - 4]
10. அக்கணத்து ... ... பாய்ந்தான். [,, - 5]
11. மண்டி ... ... எல்லாம். [,, - 6]
12. துளங்கி ... ... புரத்தென்றான். [,, - 7]

13. செல்வனே யின்னங் கேளா யான்றெறி பாசக் கையால்
அல்லெனு மரக்கர் தம்மை வம்மினென் றழைத்து மெள்ள
[1]நல்லிருட் பரவை மேனி [2]நாரணன் றமரைக் கண்டால்
செல்லவே போமினென்று விடுக்குவன் செவியிற் செப்பி.

பி-ம்:—[1]நல்லிதழ்ப்பாவை. [2]நாயகன்.

14. சொன்ன ... ... என்றான். [143 - 8]
15. வல்லரக்கரை ... ... பாய்ந்தான். [,, - 9]
16. சிந்தை ... ... உணர்த்தும். [,, - 10]
17. என்னுடை ... ... என்றான். [,, - 11]
18. என்று ... ... பதியில். [,, - 12]
19. மலரின் ... ... தேர்மேல். [,, - 13]

ஒருபிரதியில் கடவுளர் காட்சிப்படலம் இங்கே முடிய, 147-ஆம் பாடலில் திருவணைச்சிறப்புப்படலம் தொடங்குகின்றது. ()

144.—இராமன் அவ்விமானத்தைக் கொணருமாறு கூறுதல்.

**இயக்கர் வேந்தனுக் கருமறைக் கிழவனன் றீந்த
துயக்கி லாதவர் மனமெனத் தூயது சுரர்கள்
வியக்க வான்செலும் புட்பக விமானமுண் டென்றே
மயக்கி லான்சொலக் கொணருதி வல்லையி னென்றான்.**

(இ - ள்.) 'யக்ஷர்களின் அரசனான குபேரனுக்கு (அவன் தவஞ் செய்த) அக்காலத்தில் (உணர்தற்கு) அரிய வேதங்களுக்கு உரியவனான பிரமன் கொடுத்ததும், குற்றமற்ற பெரியோரது மனம் போலப் பரிசுத்தமானதும், தேவர்களும் அதிசயிக்கும்படி ஆகாசத்தில் (விரைந்து) செல்லக்கூடியதுமான புட்பகவிமானம் (இங்கே) உள்ளது' என்று அஜ்ஞாநமில்லாதவனான விபீடணன் சொல்ல, (இராமன்), (நீ அதனை) விரைவிற் கொணர்வாயாக' என்று கூறினான்; (எ - று.)—வசந்தனை மீட்டுக்கொணர்ந்ததைத் தெரிவிக்கும் பாடல்களைப் பெற்றுள்ள பிரதிகளெவற்றிலும் 144, 145, 146-பாடல்கள் இல்லை. (4064)

145.—விபீடணன் புட்பகவிமானத்தைக் கொண்டுவருதல்.

**அண்ட கோடிக ளநந்தமொத் தாயிர மருக்கர்
[1]விண்ட தாமென [2]விசும்பிடைத் திசையெலாம் விளங்க**

கண்டை யாயிர கோடிக ³ளொளிப்புறக் கஞலக்
கொண்ட ணந்தன னெடியினி ⁴னரக்கர்தங் கோமான்.

(இ-ள்.) அநேக வுலகவுருண்டைகள் திரண்டதை யொத்து [மிகப்பெரிதாய்], ஆகாயத்தில் ஆயிரஞ்சூரியர்கள் (ஏககாலத்தில்) தோன்றினாற்போல(த் தன்பேரொளியால்) எல்லாத்திக்குக்களும் விளக்கமடையவும், (தன்னிடங்கட்டிய) மிகப்பலவான மணிகள் அதிகமாகச் சத்திக்கவும்,—இராக்கதர் தலைவனான விபீடணன்,—(இராமபிரான் கட்டளைப்படியே அந்தப்புஷ்பகவிமானத்தை) ஒரு மாத்திரைப்பொழுதிலே கொண்டுவந்தான்; (எ - று.)—(அண்டங்கள்-விமானத்தின்பரப்புக்கும், அருக்கர் அதன் ஒளிக்குக் உவமை. பி-ம்:—¹விண்டுலாயென. ²விசும்பொடுதிசைகளும். ³மறையெனக் கலிப்பக். ⁴இலங்கையர். (4065)

146.—புட்பகத்தின்மேலே தேவர் பூமாரிபொழிதல்.

அனைய ¹புட்பக விமானம்வந் ²தவனியை யணுக
இனிய ³சிந்தனை யிராகவ ⁴னுவகையோ டினிநம்
வினைய முற்றிய தென்றுகொண் ⁵டேறினன் விண்ணோர்
⁶புனைம லர்சொரிந் தார்த்தன ராசிகள் ⁷புகன்றே.

(இ-ள்.) அந்தப் புஷ்பகவிமானம் (ஆகாயமார்க்கமாய்ப்) பூமியில் வந்துசேர, (எப்பொழுதும்) நல்ல எண்ணங்களையேயுடைய இராமபிரான், (அவ்விமானத்தைக் கண்டதனால்) மனமகிழ்ச்சியுடனே 'இனிமேல் நமது காரியம் [இன்றைக்கே பரதனைச்சென்று சேர்வது] நிச்சயமாக நிறைவேறும்' என்று நினைத்துக்கொண்டு (அதன்மேல்) ஏறியருளினான்; (அப்பொழுது) தேவர்கள் வாழ்த்துக்கூறி, அழகியமலர்களைப் பொழிந்து (மகிழ்ந்து) ஆரவாரித்தார்கள்; (எ - று.)

புஷ்பகம்-நினைத்தபடி செல்லவல்லதெனக் காரணப்பொருள் படும். பி-ம்:—¹புட்பகமானம். ²அவனிடை. ³சிந்தையன். ⁴உவகையின். ⁵எழுந்தனன். ⁶புனையுமாமலர்பொழிந்தனர். ⁷புகன்றார்.

147.—புட்பகத்தின்மீது சீதையும் இலக்குமணனும் ஏறுதல்.

வணங்கு நுண்ணிடைத் திரிசடை ¹வணங்கவான் கற்பிற்கு
இணங்க ²ரின்மையா ளேக்கியோ ரிடரின்றி யிலங்கைக்கு
அணங்கு³தானென விருத்தியென் றையன்மாட் டணைந்தாள்
⁴மணங்கொள் வேலிளங் கோளரி மானமீப் படர்ந்தான்.

(இ-ள்.) சிறந்தபதிவிரதாதருமத்தில் ஒப்பற்றவளான சீதை,—ஒசிகின்ற மெல்லிய இடையையுடைய திரிசடையென்பவள் (தன்னை) வணங்க (அவளைப்) பார்த்து, (நீ) சிறிதுந்துன்பமில்லாமல் இவ்விலங்காநகரத்துக்கு ஒருதெய்வப்பெண்போல(இங்கேயே) இருப்பாயாக' என்று (அவட்குக்) கூறி, இராமனருகிற் சேர்ந்தாள் [விமானத்தின்மீது ஏறினாள்]; (பகைவரிரத்தந்தோய்தலால்)

முடைநாற்றம் வீசப்பெற்ற வேலாயுதத்தையுடைய வலிய இளஞ் சிங்கம்போன்ற இலக்குமணனும் அவ்விமானத்தின்மேலேறினான்; பி-ம்:—[1] வணங்கு. [2] இன்மையான், [3] தார். [4] பணங்கொள்வேலிளங் கோள்வரி. சிலபிரதியில், பணங்கொளுகணைப் பள்ளியான் மான மீப் படர்ந்தான்என நான்காவதடி. ஒருபிரதியில்இந்தப்பாட்டுள்ள விடத்து இரண்டு பாடல்கள் காணப்படுகின்றன: வருமாறு:—

1. வணங்கு நுண்ணிடைத் திரிசடை வணங்குவாள் கற்பிற்கு
இணங்க ரின்மையா னேக்கியோ ரிடரின்றி யிலங்கைக்கு
அணங்கு தானென விருத்திய நயன்றந்தை யருளப்
பணங்கொள் வேலிளங் கண்ணினுள் சீதைபர் டணைந்தாள்.

2, மைய லின்றியே யிலங்கைமா நகர்காத்து மாதே
செய்ய ளாகிய திருவெனப் பொலிந்தினி திருத்தி
கைக ளான்மிகப் புல்கியே கண்கணீர் ததும்பப்
பொய்யி லாமனத் திரிசடை விடையெனப் போனாள். (4067)

148.—விமானத்தின் மீதுஉள்ள இராமன், விபீடணன்முதலியோரைப் பார்த்துக் கூறுதல்.

அண்ட முண்டவன் [1] மணியணி யுதரமொத் தனிலன்
சண்ட வேகமுங் குறைதர நினைவெனுந் [2] தகைத்தாய்
விண்டலந்திகழ் [3] புட்பக விமானமா மதன்மேற்
கொண்ட கொண்டல்தன் துணைவரைப் பார்த்திவை [4] குணித் [தான்.

(இ - ள்.) (பிரளயகாலத்தில்) அண்டங்களையெல்லாம் உட் கொண்டருளிய திருமாலினது அழகுபொருந்திய திருவயிற்றை யொத்து, வாயுவினது உக்கிரமானவேகமும் குறைந்ததென்னும் படி (வேகத்தில்) மனத்தை உவமைகூறத்தக்கதன்மையுடையதாய் ஆகாயத்தில் விளங்குகின்ற விமானமாகிய அந்தப்புட்பகத்தின் மேல்ஏறிக்கொண்டுள்ள காளமேகம்போன்றவனான இராமபிரான், —(விபீடணன்முதலிய) தனது சிநேகிதர்களைநோக்கி, இவ்வார்த் தைகளை ஆலோசித்துக் கூறுபவனானான்; (எ - று.)—அவற்றை, அடுத்த நான்கு கவிகளிற் காண்க.

ஏககாலத்தில் அநேகபிராணிகளை உட்கொள்ளுந்தன்மை பற் றித் திருமாலின் திருவுதரமும், நினைந்தவிடங்களி லெல்லாம் விரைந்துசெல்லுந்தன்மைபற்றி மனமும் புட்பகத்திற்கு உவமை யாம். பி-ம்:—[1] அணிமணி. [2] தரத்தாய். [3] விமானமாம் புட்பகமதன் மேல், புட்பகவிமானத்தின்மேல், புட்பகமானமாமதன்மேல், விமா னப் புட்பகமெனலும். [4] குறித்தான். (4068)

149.—இதுவும், அடுத்த கவியும்-குளகம்: விபீடணனைநோக்கிய இராமன் வார்த்தை.

வீடணன்றனை யன்புற நோக்குறு [1] விமலன்
தோ[2]டணைந்ததார் மவுலியாய்ச் சொல்வதொன் றுளதுன்

மாட ணைந்தவர்க் கின்பமே வழங்கிநீ [3]ளரசின்
நாட ணைந்தவர் புகழ்ந்திட வீற்றிரு நலத்தால்.

(இ - ள்.) குற்றமற்றவனான இராமபிரான் விபீடணனை அன்போடு பார்த்து,—பூவிதழ்களாற் கட்டப்பட்ட மாலையை யணிந்த முடியையுடையவனே! (நான் உனக்குச்) சொல்லவேண்டுவது ஒன்று உண்டு: உன்னிடஞ் சேர்ந்துள்ளவர்க்கு நன்மையையே செய்து, நாட்டிலுள்ளார்யாவரும் கொண்டாடும்படி பெரிய இவ்வர சாட்சியிலேயே (எல்லா)நன்மைகளோடும் வாழ்வாயாக; (எ-று.)— வீடணன் தனை, நோக்குறு, விமலன் என்றவற்றிற்கு முடிக்குஞ் சொல்-அடுத்த கவியில் 'புகன்றனன்' என்பது. பி-ம்:—[1]விரைப் பூங். [2]அணிந்த. [3]வான-நாடு, வீர-நாடு. (4069)

150. நீதி யாறெனத் தெரிவுறு [1]நிலைமைபெற் றுடையாய்
ஆதி நான்மறைக் கிழவனின் குலமென [2]வமைந்தாய்
ஏதி லார்தொழு மிலங்கைமா [3]நகரினு ளினிநீ
போதி யாலெனப் புகன்றனன் நான்மறை புகன்றான்.

(இ - ள்.) 'நீதிநெறி (இதுதான்) என்று (உன்குணஞ்செயல்களை நோக்கி உலகத்தார்) தெரிந்து கொள்ளும்படியான நிலைமையையடைந்துள்ளவனே! அநாதியான நான்குவேதங்களுக்கும்உரியனான பிரமன் உன்குலத்துக்குப் பெரியோனென்று சொல்லுஞ் சிறப்பைப் பொருந்தியவனே! இனி நீ பகைவர்கள் வணங்கும்படியான [அரண்வலிமையுடைய] இலங்கா நகரத்திற்குட் செல்வாயாக' என்றுகூறி அநுமதிகொடுத்தான்: (யாவனெனில்)— நான்குவேதங்களையும் வெளியிட்டருளிய திருமாலின் திருவவதார மூர்த்தியான இராமபிரான்; (எ-று.)

பிரமனதுமகனான புலஸ்தியனுக்குப் பிறந்த விச்சிரவசின் புதல்வனாதலால், விபீடணனை, 'ஆதிநான்மறைக்கிழவனின் குலமெனவமைந்தாய்' என்றான். பி-ம்:—[1]நீர்மை. [2]அமைத்தாய். [3]நகரினுக்கினிநீ. (4070)

151.—சுக்கிரீவனை நோக்கிய இராமன் வார்த்தை.

சுக்கி ரீவநின் [1]தோளுடை [2]வன்மையாற் றெசந்தொ
[3]சுக்கி ரீவனைத் [4]தடிந்துவெம் [5]படையினு லசைத்த
மிக்க வானரச் [6]சேனையி [7]னிளைப்பற மீண்டூர்
புக்கு வாழ்கெனப் புகன்றன னீறிலாப் புகழோன்.

(இ-ள்.) எல்லையில்லாத புகழையுடையவனான இராமபிரான்,- (சுக்கிரீவனை நோக்கி), 'சுக்கிரீவ! உன்னுடைய புயவலியினால் [உன்னுடைய உதவியினால்) பத்துஎன்னும் எண் கூட(ப் பெற்றுள்ள) கழுத்துக்களை யுடையவனான இராவணனைக்கொன்றேன்; (பகைவர்களுடைய) கொடிய ஆயுதங்களினாற் சோர்வடைந்தகூட்டமான குரங்குச்சேனையினது தளர்ச்சி நீங்கும்படி மீண்டு ஊர் புக்கு வாழ்க' என்றுகூறினான்; (எ - று.)

தசம் தொகு அக்கிரீவன் என்றும் பிரித்துப் பொருள் கூற லாம். அ-சுட்டு. தசக்கிரீவனைத் தொகத் தடிந்து என்று கூட்டியும் பொருள் கூறலாம்; தொகுதல்-இங்கே, அழிதல். அசா-தளர்ச்சி. பி-ம்:—[1]தோளிடை.. [2]வன்மையிற்றெகைத்த, வண்மையிற்றுணி வால், வண்மையினுற்றச். வன்மையாற்றசந்தோய். [3]சுக்கிரீவனை, அக்கிரீவனை. [4]தடிந்தகம். [5]படைகளாலசந்து, படைகளாற்றளர் ந்து. [6]சேனையும். [7]வினைப்புற மீண்டுரைப், இளைப்புறமீண்டுர். ()

152.—அங்கதன் முதலியோரை நோக்கி இராமன்கூறுதல்.

வாலி சேயினைச் சாம்பனைப் பனசனை [1]வயப்போர்
நீல [2]னுதிய நெடும்படைத் தலைவரை நெடிய
காலின் வேலையைத் [3]தாவிமீண் டருளிய கருணை
போலும் வீரனை நோக்கி[4]மற் றிம்மொழி புகன்ருன்.

(இ-ள்.) (பின்னும் இராமபிரான்).—வாலியின்மகனுன அங்க தனையும், சாம்பவானையும், பநசனையும், வலிய போர்செய்யுந்திற முள்ள நீலன் முதலிய பெரிய படைத்தலைவர்களையும், நீண்டகால் களினுற் சமுத்திரத்தைத் தாண்டி (இலங்கைசேர்ந்து சீதையின் வரலாறுதெரிந்து) திரும்பி வந்த கிருபையே ஒருவடிவெடுத்தாற் போன்ற வீரனுன அனுமானையும் நோக்கி, இவ்வார்த்தையை [ஊர் புக்குவாழ்க என்பதை]க் கூறினுன்; (எ - று.)

இராமனும் சீதையும் பிரிந்து வருத்தமுற்றிருக்கையில் அநு மான் கைம்மாறுகருதாது இராமனிடத்தினின்று தூதுசென்று உயிர்போம் நிலையிலிருந்த சீதையைத் தேற்றி அவளிடத்தினின்று மீண்டு இராமனையடைந்து செய்தி தெரிவித்து இவ்வாறு இருவர் கவலையையும் ஆற்றுவித்த சூரனுதலால். அவனை 'நெடியகாலின் வேலையைத் தாவி மீண்டருளிய கருணைபோலும் வீரன்' என்ருர். காலின்-காற்றுப்போலஎனினுமாம். பி-ம்:—[1]மறப்போர். [2]ஆதியர், ஆதியா. [3]கடந்துநீ. தாவில. [4]நின்று. (4072)

153.—அதற்கு அவர்கள் உடன்படாமை.

ஐய [1]னிம்மொழி புகன்றிடத் துணுக்கமோ டவர்கள்
மெய்யு மாவியுங் குலைதர விழிகணீர் [2]ததும்பச்
செய்ய தாமரைத் [3]தாளிணை முடியுறச் சேர்த்தி
[4]உய்கி லேநினை [5]நீங்கினென் றினையன வுரைத்தார்.

(இ-ள்.) இராமபிரான் இவ்வார்த்தையைக் கூற, அவர்கள் (இராமனைப்பிரிதலைப்பற்றிய) அச்சத்தால் உடம்பும் உயிரும் நடுங் கவும் கண்களில் நீர் தளும்பவும் (இராமனது) செந்தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளிலும்(தங்கள்) தலைபடும்படிவணங்கி, '(நாங்கள்) உன்னைவிட்டுப்பிரிவோமானுற் பிழைக்கமாட்டோம்' என்றுசொல்லி, (மற்றும்) இவ்வார்த்தைகளை உரைத்தார்;(எ-று.) அவற்றை, அடுத்த கவியிற் காண்க. பி-ம்:—[1]அம். [2]அரும்பச், [3]தாளினை. [4]உய்கிலோமுன்னை. [5]பிரியில். (4073)

154.—விபீடணன் முதலியோர் இராமனைநோக்கிக் கூறுதல்.

பார மாமதி லயோத்தியி னெய்திநின் பைம்பொன்
ஆர மாமுடிக் கோலமுஞ் செவ்வியு மழகும்
[1]சோர்வி லாதியாங் [2]காண்குறு மளவையுந் தொடர்ந்து
[3]பேர வேயரு ளென்றன ருள்ளன்பு [4]பிணிப்பார்.

(இ-ள்.) (இராமனிடத்து) மனத்தில் (நிறைந்த) அன்பினாற் கட்டுப்பட்டவராகிய விபீடணன் முதலியோர்,-(இராமனைநோக்கி), 'மிகப்பெரிய மதில்சூழ்ந்த அயோத்தியிற் சேர்ந்து, உனது (பட்டாபிஷேககாலத்தில்) பசும்பொன்னாலாகியதும் முத்துவரிசையுடையதுமான கிரீடத்தை (நீ) சூடுங் கோலத்தையும் (அக்காலத்து நடக்குஞ்) சிறப்புக்களையும் (அப்பொழுது உண்டாகும்) சோபையையும் கண்டு களிக்குமளவும், நாங்கள் (உன்னைப்) பிரியாமலே தொடர்ந்து மீண்டும் (ஊர்க்குத்) திரும்பும்படி' கிருபைசெய்வாய்' என்று வேண்டிக்கொண்டார்கள்; (எ-று.)—பி-ம்:—[1]சோர்கிலாது. [2]காண்டுறும். [3]போகவே, [4]பிரியார், பிணித்தார், *(4074)*

155.—இராமன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டுக் கூறுதல்.

அன்பி னாலவர் [1]மொழிந்தவா சகங்களு மவர்கள்
துன்ப மெய்திய நடுக்கமு [2]நோக்கிநீர் துளங்கல்
முன்பு [3]நாணினை ந் திருந்ததப் [4]பரிசு நும் முயற்சி
பின்பு கா ணுமா [5]றுரைத்ததென் றுரைத்தனன் பெரியோன்.

(இ - ள்.) பெருமையையுடையவனான இராமபிரான்,—அன்பினால் அவர்கள்சொன்ன வார்த்தைகளையும் அவர்கள் துன்பத்தினால் அடைந்த நடுக்கத்தையும் கருதி, (அவர்களைப்பார்த்து), 'நீங்கள் கலங்கவேண்டா; முதலில் நான் நினைத்திருந்தது அவ்விதமே [உங்களையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டுமென்பதே]; (ஆயினும்) பின்பு (நான் இவ்வாறு) கூறியது, நுமது யத்தனத்தை [உள்ளக்கருத்தை] அறிவதற்காகவே' என்று உரைத்தனன்; (எ - று.)—துன்பம்-இராமனதுபிரிவை நினைத்ததனா லாகியது. பி - ம்:—[1]துணிந்த. [2]நோக்கியதூயோன், [3]நாநினைந்து. [4]பரிசினும். [5]உற்றது. *(4075)*

156.—சுக்கிரீவன்முதலியோர் இராமன்வார்த்தையால் மனமகிழ்தல்.

ஐயன் வாசகங் கேட்டலு மரிகுலத் தரசும்
மொய்கொள் சேனையு மிலங்கையர் வேந்தனு [1]முதலோர்
வைய மாளுடை நாயகன் மலர்ச்சரண் வணங்கி
மெய்யி னோ[2]டருந் துறக்கமூற் றரென வியந்தார்.

(இ-ள்.) இராமபிரானது வார்த்தையைக் கேட்டவுடனே, வானரக் கூட்டங்களுக்குத் தலைவனான சுக்கிரீவனும் நெருக்கங்கொண்ட (வானர)சேனையும் இலங்கையிலுள்ளார்க்குத் தலைவனானவிபீடணனும் முதலிய யாவரும்,— பூமியையாளுதலையுடைய அரசனான

இராமபிரானது திருவடித் தாமரைகளை வணங்கி, (தம்தம்) உடம்புடனே (பெறுதற்கு) அருமையான சுவர்க்கத்தையடைந்தவர் போல மகிழ்ந்து அதிசயித்தார்கள்; (எ - று.)—வையம் ஆளுடை நாயகன்-விஷ்ணுவின் அவதாரமாகிய இராமன் எனக் கூறுதலும் ஒன்று. பி - ம்:—[1]முதலேழ். [2]இருந், (4076)

157.—சுக்கிரீவன் முதலியோரை விமானமேற இராமன் கட்டளையிடல்.

[1]அனைய தாகிய சேனையோ டரசனை [2]யனிலன்
தனய னாதியாம் படைப்பெருந் தலைவர்கள் தம்மை
வனையும் வார்கழ லிலங்கையர் மன்னனை வந்திங்கு
இனிதி னேறுமின் விமானமென் றிராகவ [3]னிசைத்தான்.

(இ - ள்.) அவ்வாறு அதிசயங்கொண்டுள்ள (வானர) சேனையுடனே (அவர்கட்குத்) தலைவனான சுக்கிரீவனையும், வாயுகுமாரனான அநுமான் முதலிய பெரிய சேனைத்தலைவர்களையும், கட்டிய நீண்ட வீரக்கழலையுடைய இலங்காராசனான விபீடணனையும் (நோக்கி), '(நீங்கள்) இங்கேவந்து விமானத்தின்மீது சுகமாக ஏறுங்கள்' என்று இராமபிரான் இசைத்தான்; (எ-று.) பி - ம்:—[1]அனையர். [2]அமலன். [3]உரைத்தான், இரைத்தான். (4077)

158.—அவர்கள் யாவரும் புட்பகத்தின்மீது ஏறுதல்.

சொன்ன வாசகம் பிற்படச் சூரியன் [1]மகனும்
மன்னு வீரரு மெழுபது வெள்ளவா னரரும்
கன்னி மாமதி லிலங்கைமன் னெடுகடற் படையும்
துன்னி னார்[2]நெடும் புட்பக மிசையொரு சூழல்.

(இ-ள்.) (இராமபிரான்) சொன்ன வார்த்தையும் பின்னும்படி [மிக விரைவில்] சூரியகுமாரனான சுக்கிரீவனும்பொருந்திய படைத்தலைவர்களும் எழுபதுவெள்ளம் குரங்குச்சேனைகளும் அழியாத பெரிய மதில்கள் சூழ்ந்த இலங்கைக்கு அரசனான விபீடணனும் கடல்போலப்பரந்த (அவனது இராக்கத) சேனையும், பெரிய (அப்) புட்பகவிமானத்தின்மீது ஒருபக்கத்தில் (ஏறித்) தங்கினார்கள்;

மிகப்பெரிய சேனையும் விமானத்தின் ஒருமூலையில் அடங்கியதெனக்கூறியது, பெருமையணி; இதனை வடநூலார் அதிகாலங்காரமென்பர். பி - ம்:—[1]புதல்வன். [2]பெரும்புட்பகமீதொரு.

சிலபிரதிகளில் கடவுளர்காட்சிப்படலமும், சிலபிரதிகளில் பிராட்டி திருவடி தொழுபடலமும் இங்குமுடிய, இதன்மேல் **வசந்தனுயிர்வருபடலம்** என்ற பெயர்கொண்டு சில பாடல்கள் உள்ளன; அவைவருமாறு :—

1. ஏறினன் ... ... மண்மேல். [143-3]
2. ஆழி ... ... என்றான். [,, 5]

3. என்ற காலையி லெழுந்தவ னியற்கையை நோக்கி
நன்று நாயக னறிவொடு [1]நினைவன நயந்தான்
சென்று சேனையை நாடினன் திரிந்துவந் தெய்தி
வென்றி வீரரில் வசந்தனைக் [2]கண்டிலா வெறுத்தான்.

பி-ம்:—[1]நினைவென [2]கண்டிலர்வெறுத்தார்.

4. இரவி கான்முளை ... ... உரைத்தான். [143-6]

5. என்னுங் காலை யிராமனும் யமபடர் யாரும்
மன்னுந் தொல்புர நோக்கியே மணிநகை முறுவல்
[1]உன்னி னன்றியான் தேவருக் [2]குதவிசெய் தென்னுப்
பொன்னின் வார்சிலை யெடுத்தனன் பொறுத்தனன் பொரவே.

பி-ம்:—[1]உன்னினின்று. [2]உதவியது.

6. எண்டி சாமுக மிரிந்துக யமபுரங் குலைய
அண்ட கோளகை யடுக்கழிந் துலைவுற [1]வழியாப்
புண்ட ரீகத்துப் புராதனன் முதலிய புலவோர்
தொண்டை வாயுலர்ந் தலமரத் தொடுவினு ணெறிந்தான்.

பி-ம்:—[1]அலையால்.

7. [1]பாக வான்பிறை யாமெனப் பலர்நின்று துதிப்ப
வாகை கொண்டவெஞ் சிலையினை வளைவுற வாங்கி
மேக சாலங்கள் [2]குலைவுற [3]வெயிற்கதிர் மாட்சி
சோக மெய்திமெய் துளங்கிடச் சுடுசரந் துரந்தான்.

பி-ம்:—[1]ஆகவெல்லையிலரக்கர்தம்வருக்கமோடறுத்து. [2]குலவுற. [3]வெதிர்வரமடங்கி.

8. வல்லை மாதிர மறைந்திட வானவர் மயங்க
எல்லை காண்குரு யாவரு மிரியலி லேக
வில்லை வாங்கிய கரமவை விதிர்விதிர்ப் பெய்த
தொல்லை நான்மறை துளங்கிடச் சுடுசரந் துரந்தான்.

9. வன்பு லங்கிளர் நிருதரை வருக்கமோ டறுக்க
[1]மின்பு லங்கொளு முருமென்ன வீக்கிய வில்லைத்
தன்பொ லங்கையிற் றூக்கியே தொடுத்தவச் சரங்கள்
தென்[2]பு லன்றனை நிறைத்தது [3]செறித்தன சேணில்.

பி-ம்:—[1]நின். [2]புலங்களை. [3]தேவர்களிரிய.

10. தரும ராசனும் காலனும் யமபடர் தாமும்
உருமு வீழ்ந்தெனச் சரம்வந்து வீழ்ந்ததை யுணர்ந்தும்
மரும தாரையிற் பட்டதோர் வடிக்கணை வாங்கி
நிருமி யாவிது விராகவன் சரமென நினைந்தார்.

11. கெட்ட தின்றினித் தென்புலங் கேடுவந் தெய்தி
பட்ட னம்மினிப் [1]பிழைப்பில மென்பதோர் பயத்தான்
முட்ட வெய்திய முயற்சியோ டியாவரு மொய்ப்பச்
சிட்டர் தந்தினித் தேவனை வணங்கினர் சென்றார்.

பி-ம்:—[1]பிழைப்பில்லை.

12. வேறு: சிறந்தநின் கருணை யல்லாற் செய்தவம் பிறிதிலார்
[1]புறந்தரு முனிவு சாலப் போதுமோ புத்தே ணின்னை [மேற்
[2]மறந்திருந் துய்வ துண்டோ மலர்மிசை யயனைத் தந்த
அறந்தரு சிந்தை யைய வபயநின் னபய மென்றார்.

பி-ம்:—[1]புயந்தர. [2]மறைந்துறைந்து.

13. வேறு: ஐய னேயெமை யாளுடை யண்டர்நா யகனே
மெய்ய னே[1]யெனச் சரணின்வந் தியாவரும் வீழ்ந்தார்
பொய்யி னோர்செய்த பிழைபொறுத் தருளெனப் போர்மூண்டு
[2]எய்ய நேரிலாச் சிலையினை மடக்கின னிராமன்.

பி-ம்:—[1]நினக்கபயமென்று. [2]எய்யும்வாளியைத் தூணியிலிட்டனன்.

14. •வந்த டைந்துனக் கபயமென் றடியினில் வணங்கி
எந்த னிப்பிழை பொறுத்தியென் றியம்பின ரிதனால்
உந்தன் மேற்சலந் தவிர்ந்தனன் யூகநா யகன்றான்
தந்த சேனையில் வசந்தன் வந் திலன்தரு கென்றான்.

15. அண்ண லாரியன் றருதியென் றருள லு [1]மவர்போய்
விண்ணெ லாம்[2]புகுந் தோடியே வசந்தனை விரைவிற்
கண்ணி லுடிநல் லுயிரினைக் காண்கிலா திருந்தார்
திண்ண னன் யாக்கையெங் கேயெனச் சாம்புவன் செப்பும்.

பி-ம்:—[1]அவன். [2]பரந்து.

16. கசிந்த ... ... துணிந்தான். [143-7]

17. வரிசிலை ... ... விட்டான். [,, -9]

18. அக்கணத்து... ... ... வேலை. [,, -10]

19. வேறு. அன்ன தேயென வவனுயிர்க் கமரர்தம் பதிக்கே
முன்ன தோருடற் கொண்டிவண் டாநகென மொழியச்
சொன்ன வாய்மைகேட் டனுமனுந் துணைவரைப் பாராப்
பொன்னின் பாதுகம் பணிந்தனன் விடையெனப் போனான்.

• இப்பாடலுக்குப் பதிலாக ஒருபிரதியில் வேறொருபாடல் காணப்படுவது வருமாறு:—

தன்ற ளிச்சரண் வணங்கலு மிராகவன் சாற்றும்
என்ற னிப்பிழை பொறுத்தியென் றியம்பினை யதனால்
உன்றன் மேற்சலந் தவிர்ந்தனம் யூபநா யகன்றான்
தந்த சேனையின் வசந்தன் வந்திலன் றருகென்றான்.

20. மண்டி	... ...	வீழ்ந்தவ ரெல்லாம்	[143-11]
21. துளங்கி	... ...	புரத்தென்றான்.	[,, -12]
22. செல்வனே	... ...	செப்பி.	[,, 33]
23. சொன்ன	... ...	என்றான்.	[,, 14]
24. வல்லரக்கரை	... ...	பாய்ந்தான்.	[,, 15]
25. சிந்தை தூயவன்	...	என்றான்.	[,, 16]
26. என்னு டைப்பதம்	...	என்றான்.	[,, 17]
27. என்ற நான்முகன்		...பதியில்.	[,, 18]

இதனோடு **வசந்தனுயிர்வருபடலம்** முடிய, இனித் **திருவணைச் சிறப்புப் படலம்** என்று காண்கின்றது.

28. *அன்ன காதலி மாரு நகரிடை யாங்கன்
முன்ன தோருடல் நாடியே கொணர்ந்திட முந்தச்
சொன்ன வாயுவைத் தரிசிக்க வசந்தனும் தோன்றிப்
பொன்னின் பாதுகம் புனைந்தனன் தருமனும் போனான்.(4078)

159.—இது, கவிக்கூற்று: விமானத்தின் சிறப்பு.

பத்து நாலென வடுக்கிய வுலகங்கள் [1]பலவின்
[2]மெத்தி யோனிக ளேறினும் [3]வெற்றிட [4]மிகுமால்
முத்த ரானவ [5]ரிதனிலை மொழிகுவ தல்லால்
இத்[6] தராதலத் தியம்புதற் குரியவர் யாரே.

(இ - ள்.) பதினான்காக (ஒன்றன்மேலொன்றாக) அடுக்கிய பல வுலகங்களிலும் நிறைந்துள்ள ஜீவராசிகளெல்லாம் ஏறினாலும் (இவ்விமானத்தில்) வெறுமையான இடம் அதிகப்பட்டிருக்கும்; இவ்விமானத்தின் தன்மையை முக்தர்கள் சொல்லக்கூடுமே யல்லாமல் இப்பூமியிற் சொல்லுதற்கு உரியவர் யார்தான்? [ஒருவருமில்லை]; (எ - று.)

நிலவுலகத்தார்போலன்றி வீடுபெற்றவர் அஜ்ஞானம் சிறிதுமின்றி எல்லாவற்றையும் அறியவல்ல முற்றுணர்வுடையவராதலால், அவர்களாலேயே இதன்தன்மை கூறப்படுமெனப் புட்பகத்

---

* இச்செய்யுள் ஒருபிரதியில் மாத்திரம் உள்ளது, இங்கே வேறொரு பிரதியில்மாத்திரம் ஒருபாடல் காணப்படுகின்றது: அது வருமாறு:—

அன்ன காலையிற் புட்பக விமானமாங் கடைய
முன்னி ராகவன் சானகி யிலக்குவன் முதலா
மன்னு வானர மெழுபது வெள்ளமும் வரையா
உன்னி யேறலு முச்சியிற் சொருகுபூப் போன்ற.

தின் சிறப்பை வியந்து கூறினர். மெத்து+யோனிகள்=மெத்தி யோனிகள்: குற்றியலிகரம். பி-ம்:—[1]பலவும். [2]மெய்த்த, [3]வெளியிடம். [4]மிகுமா, [5]அதனிலே. [6]தராதலமொழிதரலாற்றலர்.(4079)

வேறு.

160.—இதுவும், அடுத்த கவியும்-இராமன் புட்பகத்தின்மீது விளங்குதலைக் கூறும்.

எழுபது வெள்ளத் தோரு மிரவிகான் முளையு மெண்ணின்
வழுவிலா விலங்கை வேந்தும் வான்பெரும் படை யுஞ்[1] சூழத்
தழுவுசீ ரிளைய கோவுஞ் சனகன்மா [2]மயிலும் போற்ற
விழுமிய [3]குணத்து வீரன் விளங்கினன் விமானத் தும்பர்.

(இ-ள்.) எழுபதுவெள்ளம் வாநரசேனைகளும் (அவற்றிற்கெல்லாந் தலைவனை) சூரியகுமாரனாகிய சுக்கிரீவனும் மனத்திற் குற்றமில்லாத இலங்கையரசனான விபீடணனும்,- (அவனுடைய) மிகப்பெரிய(இராக்கத)சேனையும் சுற்றிலும்நெருங்கிநிற்கவும்,-நிறைந்த சிறப்பையுடைய இளையபெருமாளும் சனகராசன் மகளான சிறந்த மயில்போன்ற சாயலையுடைய சீதையும் வணக்கத்தோடு (பக்கங்களில்) வீற்றிருக்கவும்,—சிறந்த நற்குணங்களையுடைய வீரனாகிய இராமபிரான் புட்பகவிமானத்தின்மேல் விளங்கினான்; (எ-று.) பி-ம:—[1]சூழ்ந்த. [2]மகளும். [3]குணத்தினனும். (4080)

161. **அண்டமே போன்ற [1]தையன் புட்பக மண்டத் தும்பர்**
எண்டருங்[2] குணங்க ளின்றி முதலிடை யீறின் றாகிப் [போற்
பண்டை[3] நான் மறைக்கு மெட்டாப் பரஞ்சுடர் பொலிவதே
புண்டரீ கக்கண் வென்றிப் புரவலன் பொலிந்தான் மன்றே.

(இ-ள்.) இராமபிரான் ஏறியருளிய புட்பகவிமானமானது, உலகவுருண்டையையே ஒத்திருந்தது; (அவ்விமானத்தின்மேல்) தாமரைமலர்போன்ற கண்களையுடையவனாகிய வெற்றிபெற்ற காக்குந்தொழிற் கடவுளான இராமபிரான்,—எல்லாவுலகங்களுக்கும்மேலே (பரமபதத்தில்) எண்ணத்தக்க குணங்களில்லாமல் (அளவிறந்த குணங்களுடன் கூடி), பிறத்தலும் வளர்தலும் அழிதலும் இல்லாமல் [என்றும் ஒரே தன்மைகொண்டு], அநாதியான நான்குவேதங்கட்கும் புலனாகாத சிறந்த ஒளிவடிவமானபரமாத்மா விளங்குவதுபோலப் பொலிந்தான்; (எ - று.)

நற்குறிப்பேற்றவுவமையணி. அண்டம்-பரமபதமுமாம். எண்டரும் குணங்கள் இன்றி என்பதற்கு - எண்ணத்தக்க தீயகுணங்களில்லாம லென்றலுமாம். பி-ம்:—[1]அன்றே. [2]கணங்கள். [3]நான்முகற்கும். (4081)

162.—இராமன் கட்டளையினால் யாவரும் மனிதவடிவங் கொள்ளல்.

தேனுடை யலங்கன் மௌலிச் செங்கதிர்ச் செல்வன் சேயும்
மீனுடை யகழி வேலை யிலங்கையர் வேந்தும் வெற்றித்

தானையும் பிறரு மற்றைப் படைப்பெருந் தலைவர் தாமும்
மானுட வடிவங் கொண்டார் வள்ளல்தன் வாய்மை தன்னால்.

(இ-ள்.) தேனையுடைய மலர்மாலையைச் சூடிய முடியையுடையவனும் சிவந்த கிரணங்களையே செல்வமாகக்கொண்ட சூரியனது மகனுமான சுக்கிரீவனும் மீன்களையுடைய கடலையே அகழியாகக் கொண்ட இலங்கையி லுள்ளார்க்கு அரசனாகிய விபீடணனும் வெற்றியையுடைய (இருதிறத்துச்) சேனைகளும் பிறரும் மற்றும் பெரியசேனைத் தலைவர்களும்,—வரையாது கொடுக்குந் தன்மையனான இராமபிரானது வார்த்தையின்படி மனிதரூபத்தை ஏற்றுக் கொண்டார்கள்; (எ - று.)

இராக்கதவடிவத்துடனும் குரங்குவடிவத்துடனுமே இவர்கள் சென்றால் அயோத்திமா நகரத்திலுள்ளவர் அஞ்சுவார்களென்று இங்ஙனம் இவர்கள் யாவரையும் மனிதவடிவங்கொள்ளும்படி இராமன் கட்டளையிட்டனனென்க. துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யத் திருமால் மானிடவுருவங்கொண்டு இராமனாகத் திருவவதரித்தபோது உதவிசெய்யத் தேவர்கள் வானரவுருவங்கொண்டு பிறந்தமையால், தெய்வத்தன்மையுடைய அவர்கட்கு வேண்டிய உருவங்கொள்ளும் வல்லமை யுண்டென்றும், இராக்கதர்க்கும் இஷ்டமானவுருவங்கொள்ளுந்தன்மை இயற்கையிலேயே யுள்ளதென்றும் அறிக. இச்செய்யுள் சிலபிரதியிலில்லை. (4082)

163.—விமானம் வடக்குமுகமாகச் செல்லுகையில் இராமன் சீதையை நோக்கி ஒன்று கூறத் தொடங்குதல்.

குடதிசை [1]மறைந்த பின்னர்க் குணதிசையுதயஞ் [2]செய்வான்
வடதிசை [3]யயன முன்னி வருவதே [4]கடுப்ப மானம்
தடையொரு சிறிதின் றாகித் [5]தாவிவான் படலம் வேலை
படையமை விழியாட் கையன் இனையன [6]பகர லுற்றான்.

(இ - ள்.) (மாலைக்காலத்து) மேற்குத்திக்கில் மறைந்தபிறகு (காலையிற்) கிழக்குத்திக்கில் உதிப்பவனான சூரியன் (அவ்வியல்பையொழித்துத் தெற்கினின்று) வடக்குவழியிற் செல்லநினைத்து வருவதுபோலப்புட்பக விமானம் தடை சிறிது மில்லாமல் ஆகாய வழியிற் பாய்ந்து செல்லத்தொடங்கும்பொழுது, இராமபிரான்,— வேலாயுதம்போன்ற கண்களையுடையளான சீதைக்கு, இவ்வார்த்தைகளைக் கூறத்தொடங்கினான்; (எ - று.)—அவற்றை, அடுத்த கவிகளிற் காண்க. இல்பொருளுவமையணி. அயநம்-வழி: வடசொல். பி-ம்:—[1]மறைந்து, மறையப். [2]கொள்வான். [3]வெய்யோன், வாயில். [4]போல. [5]தாவின். [6]பகர்வதானான். இதன்பின் சிலபாடல்கள் சில பிரதிகளிற் காணப்படுவன வருமாறு :—

1. *வென்றிவீ டணன்கொ ணர்ந்த புட்பக விமானந் தன்மேல்
ஒன்றுநற் சீதை யோடு [1]மும்பரும் பிறருங் காண

---

*இந்தச்செய்யுள், திருவணைச்சிறப்புப்படலமுள்ள எல்லாப் பிரதிகளிலும் இல்லை: ஒருபிரதியில் "குடதிசை" (163) என்றதன் முன் உள்ளது.

வென்றுயர் சேனை யோடு மிராமனும் விரைவி [2]னெய்தித்
தென்றிசை யிலங்கை யாதி தேவிக்குத் தெரியக் காட்டும்.

பி-ம்:—[1]இளையவனோடுமேறி. [2]மீண்டு.

2. மன்னுபொற் கொடிக ளாட மாடமா ளிகையி னுங்குத்
[1]துன்னுபைம் பொழில்கள் [2]சுற்றத்தோரணங் துவன்றி வா
பொன்னக [3]ரொக்கு மென்று புகழ்தலிற் புலவ ராலும் [னோர்
பன்னரு மிலங்கை மூதூர் ।।வளவாய் [4]மயிலே பாராய்.

பி-ம்:—[1]துன்னுமப். [2]சுற்றித், [3]நிகர்க்கையன்று, இயற்கை யன்று. [4]வரையே.

3. வெதிரெதி ரஞ்சு மென்றோள் வெண்ணகைக் கனிவாய் வல்லி
எதிர்பொர வந்த விண்ணோ ரிறைவனைச் சிறையில் வைத்த
அதிர்கழ [1]லரக்கன் றானை [2]யஞ்சலி லாது செல்லக்
கதிர்மதி விலங்கி [3]யேகுங் கடிமதின் மூன்றுங் காணாய்.

பி-ம்:—[1]அரக்கர். [2]அஞ்சலிலாறுசெல்லாக். [3]ஓடும்.

4. வென்றிவேற் கருங்கண் மானே யென்னொடு மிகலி வெய்ய
வன்றிற லரக்க [1]னேற்ற வடதிசை வாயி னோக்காய்
கன்றிய வரக்கன் சேனைக் காவலன் றன்னை நீலன்
கொன்றுயிர் கூற்றுக் கீந்த குணதிசை வாயி னோக்காய்.

பி-ம்:—[1]ஏறும்.

5. மறத்திறல் வாலி மைந்தன் வச்சிரத் தெயிற்றோன் றன்னைச்
[1]செறுத்துயிர் செகுத்து நின்ற தென்றிசை வாயி னோக்காய்
அறத்தினுக் கலக்கண் செய்யு [2]மகம்பன்ற னுடலை யாவி
வெறுத்[3]தெதி ரனும னின்ற மேற்றிசை வாயி னோக்காய்.

பி-ம்:—[1]செயிற்றுயிர். [2]அகம்பனையனுமனன்று. [3]உயிர் செகுத்தவித்த. இச்செய்யுள் ஒருபிரதியில் அடுத்த பாடலின் பின் உள்ளது.

6. கருங்கட னிகர்ப்ப வான [1]வகழியோர் மூன்றுங் காணாய்
மருங்கடர் களபக் கொங்கை மதிநுதல் மிதிலை வல்லி
இருங்[2]கட [3]முகத்த யானை யிவுளிதேர் [4]காலாள் துஞ்சிப்
[5]பொருங்கடர் நிறத்தர் வீய்ந்த [7]போர்க்களந் தன்னைப்[8]பாராய்.

பி-ம்:—[1]அகழிகள். [2]கடன். [3]முகப்ப. [4]முடியவஞ்சாப். [5]பெருங் கடநிறத்தாய், பொருங்கடனிறைய. [6]போர்க்களமதனை. [7]காணாய், நோக்காய். ஒருபிரதியில் இரண்டாவது அடி முதலடியாகவுள்ளது. ஒருபிரதியில் "மறத்திறல்"(5)என்ற பாடலின்முன் இதுஉள்ளது.

7. கொடிமதி லிலங்கை வேந்தன் கோபுரத் தும்பர் தோன்ற
அடுதிறற் பரிதி மைந்த னவனிலை குலையத் தாக்கிச்

சுடர்முடி பறித்த வந்நா ளன்னவன் ருெல்லை வெம்போர்ப்
படியினை நோக்கி நின்ற சுவேதமால் வரையைப் பாராய்.

8. பூக்கமழ் குழலி னுய்நின் [1]பொருட்டி யான் [2]புகலா நின்றேன்
மேக்குயர் தச்சன் மைந்த னளனிவன் விலங்கலா லன்று
ஆக்கிய விதனை வெய்ய பாதக மனைத்தும் வந்து
நோக்கிய பொழுதே நூறுஞ் சேதுவை நீயு நோக்காய்.

பி-ம்:—[1]பொருட்டினுற். [2]புகலா நின்ற. (4083)

164.—இதுவும், அடுத்த கவியும்-சீதையைநோக்கி இராமன் சிலகூறுதலைத் தெரிவிக்கும்.

இலங்கையை வலஞ்செய் தேகு வெனநினைந் திடுமுன் மானம்
வலங்கிளர் கீழை வாயில் [1]வரப்பிர கத்த னீலன்
நலங்கிளர் கையின் மாண்ட திவணென நமன்றன் வாயில்
[2]கலந்திட வீங்குக் கண்டாய் சுபாரிசற் கட்ட தென்ருன்.

(இ - ள்.) இலங்காநகரத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து செல்ல வேண்டுமென்று (இராமன்) நினைத்தற்குமுன்னமே (அவ்)விமானம் (அங்ஙனமே வலமாகஎழுந்து) வலிமைமிக்க (அவ்விலங்கையின்) கிழக்குவாயிலில் வருகையில், ‘பிரகத்தனென்னும் அரக்கன் நீல னென்னும் வாநரனது அழகுமிக்க கைகளினுல் இறந்தது இவ் விடம்’ என்று (இராமன் சீதையை நோக்கிச்) சொல்ல, (பிறகு அவ்விமானம்), யமனுக்குஉரிய தெற்குத்திக்கின் வாயிலிற் சேர் கையில், [அங்கதன்] ‘சுபார்சுவனென்னும் அரக்கனைக் கொன்றது இவ்விடம்’ என்று (இராமன் சீதைக்குக்) கூறினுன்; (எ - று.)

பி-ம்:—[1]வருதலும். [2]...?...வாலிசேய்வச்சிரத்தெயிற்ருனைக் கண்டான். இதுவும் அடுத்தகவியும்திருவணைச்சிறப்புப்படலமுள்ள பிரதிகளிலெல்லாம் இல்லை. (4084)

165. **குடதிசை [1]வாயில் வேகக் குன்றரிந் தவனை வென்ற**
விடநிகர் மேக நாத னிளவலால் [2]வீழ்ந்த தென்முன்
வடதிசை வாயின் மேவ விராவணன் மவுலி பத்தும் [ருன்.
உடலமு [3]மிழந்த திங்கென் றுணர்த்திவே [4]றுரைக்கலுற்

(இ-ள்.) மேற்குத்திக்கின்வாயிலில் (விமானம் வர),—‘(இங்கு) வேகமாகப்பறந்துசெல்லும் இயல்புடைய மலைகளின் இறகுகளை அறுத்தொழித்த இந்திரனைச் சயித்தவனுன விஷம்போற் கொடிய இந்திரசித்து, (எனது) தம்பியான இலக்குமணனுல் இறந்து விழுந் தது’ என்று (இராமன் சீதைக்குச்) சொல்லுதற்குமுன்னே [அதி விரைவிலே] (அவ்விமானம்) வடக்குத்திக்கின் வாயிலையடைய, ‘இவ்விடம், இராவணன் (தனது) பத்துத்தலைகளையும் உடம்பை யும் (என்னுல்) இழந்து இறந்தது’ என்று (இராமன் சீதைக்கு) அறிவித்து, மற்றும் கூறத்தொடங்கினுன்; (எ - று,)—பி-ம்:— [1]வாயுமைந்தனகம்பனைக் குறைத்தான்வென்றி. [2]விளிந்தது. [3]மேலவ். [4]உரைப்பதானுன். (4085)

166.—இதுமுதல் ஏழுகவிகள்-சேதுவின் சிறப்பைத் தெரிவிக்கும்.

நன்னுத னின்னை நீங்கி நாள்பல கழிந்த பின்றை
மன்னவ னிரவி மைந்தன் வான்றுணை யாக நட்ட
பின்னைமா ருதிவந் துன்னைப் பேதறுத் துனது பெற்றி
சொன்னபின் வான ரேசர் தொகுத்ததிச் சேது கண்டாய்.

எட்டுக் கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அழகிய நெற்றியையுடையவளே! (நான்) உன்னை விட்டுப் பிரிந்து பலநாள் கழிந்தபிறகு, (குரங்குகளுக்கு) அரசனும் சூரியபுத்திரனுமான சுக்கிரீவனைச் சிறந்ததுணைவனுகச் சிநேகித்த பின்பு, (அச்சுக்கிரீவனுடைய கட்டளையினுல்) அநுமான்(இலங்கையில் நீ சிறையிருந்த அசோகவனத்தில்) வந்து எனது செய்தியைத் தெரிவித்து உன்கலக்கத்தையொழித்து, (அங்கிருந்துவந்து எங்களுக்கு) உன்வரலாற்றைத் தெரிவித்த பின்பு,(உன்னைச்சிறை மீட்கக்கருதி இராவணனுடன் போர்செய்யப்புறப்பட்ட வானர சேனைகள்கடலைக்கடக்கும் பொருட்டுக்) குரங்குத்தலைவர்கள் கட்டியது, இந்தச்சேதுவாகும்; (நீ இதனைக்) காண்பாயாக; (எ - று.) (4086)

167. மற்[1]றிதன் றூய்மை யெண்ணின் மலரயன் றனக்கு மெட்டா, பொற்றொடித் தெரிவை [2]யானெனென் புகலுகேன் [3]கேட்டி யன்பாற், பெற்றதாய் தந்தை யோடு தேசிகற் பிழைத்துச் சூழ்ந்த, சுற்றமுங் கெடுத்து ளோரு [4]மெதிர்தரிற் சுரர்க ளாவார்.

(இ - ள்.) பொன்னுலாகிய வளையல்களையணிந்த பெண்ணே! ஆலோசித்துப்பார்த்தால், இந்தச்சேதுவின் பரிசுத்தியை (எடுத்துக்கூறத் திருமாலின் நாபீ) கமலத்தினின்று தோன்றிய பிரமனுக்கும் முடியாது: (அதைப்பற்றி) யான் என்னசொல்லமாட்டுவேன்? (ஆயினும் நான் சொல்வதைக்) கேட்பாயாக: அன்புடன் பெற்றுவளர்த்த தாய்தந்தையர்க்கும் ஆசிரியனுக்கும் தீங்குசெய்து, (தன்னை) அடுத்துள்ள சுற்றத்தாரையுங் கெடுத்து வாழ்கின்ற மகாபாவிகளும் (இச்சேதுவைப்) பார்த்தமாத்திரத்தால், (அப்பாவம் நீங்கித்) தேவர்களாவார்கள்; (எ - று.)—பி - ம்:— [1]அதன், அரிவையானே, தெரிவைநல்லாய், [2]புகழிற்றேன்றப், கேண்மினம்பால், அப்பாற்றேன்றிப். [4]எதிர்ந்திடிற், எதிர்தலிற்.

168. இந்திரற் கஞ்சி [1]மேனு ளிருங்கடல் புக்கு நீங்காக்
[2]கந்தர சயிலந் [3]தன்னைக் கண்டவர் வினைக[4]டிர்கருங்
கந்தமா தனமென் றேதுங் கிரியிவண் [5]கிடப்ப கண்டாய்
பைந்தொடி யடைத்த சேது பாவன [6]மாய தென்றான்.

(இ - ள்.) பசும்பொன்னுலாகிய வளையல்களையுடையவளே! முற்காலத்தில் இந்திரனுக்குப் பயந்து பெரியகடலினுட் புகுந்து வெளிப்படாத குகைகளையுடையமலைகளுள் கந்தமாதநமென்று பெயர்கூறப்படுவதும் தன்னை (ஒருகாற்) கண்டவரது தீவினைகளையெல்லாம் ஒழிக்கவல்லதுமாகிய மலை இங்கே இருப்பதைக் காண

பாயாக; (அம்மலை, கடலை) அடைத்துக் கட்டப்பட்ட சேதுவின் சம்பந்தத்தால் பரிசுத்தியடைந்தது என்று (சீதையைநோக்கிக்) கூறினன், (இராமன்); (எ - று.)

கந்தமாதனத்தின் சம்பந்தத்தாற் சேதுவுக்குப் பாவனமுண்டாயிற்றென்பாருமுளர். இந்திரன் வச்சிராயுதத்தால் மலைகளின் சிறகுகளையறுத்த காலத்திற் சிலமலைகள் அஞ்சிக் கடலிற்புக்கு ஒளித்தன வென்பது, வரலாறு. பி - ம்:—[1] முன்னுள். [2] கந்தமா. [3] தன்னுட். [4] தீரும். [5] கிடத்தலாலே. [6] ஆவது. (4088)

169. கங்கையோ[1]டியமுனை[2]கோதா விரியோடு நருமதை காவேரி
பொங்குநீர் [3]நதிகள் யாவும் படிந்தலாற் புன்மை போகா
சங்கெறி தரங்க வேலை [4]தட்டவிச் சேது வென்னும்
இங்கிதி னெதிர்ந்தோர் புன்மை [5]யாவையு நீக்கு[6]மன்றே.

(இ - ள்.) கங்காநதி யமுனாநதி கோதாவரிநதி நருமதைநதி காவேரிநதி (இவைமுதலாகிய) மிக்க நீரையுடைய புண்ணியநதிகளெல்லாவற்றிலும் முழுகினுலல்லாமல் தீவினைகள் தீரமாட்டா; சங்குகளை வீசுகிற அலைகளையுடைய கடலில் தடுத்துக் கட்டிய இந்தச்சேதுவென்னப்பட்ட இங்கேயுள்ள புண்ணியதீர்த்தத்தைப் பார்த்தவர்களுடைய தீவினைகளையெல்லாவற்றையுங்கூட, (இச் சேது) ஒழித்துவிடும்; (எ - று.)

நதிகள் தம்மில் முழுகினுல்மாத்திரம் பாவத்தை நீக்க, இது தன்னைக்கண்டமாத்திரத்திலும் பாவத்தை நீக்குமெனச் சேதுவின் சிறப்புக் கூறியவாறு; வேற்றுமையணி. பி - ம:—[1] இயலுங். [2] கோதாவிரியொடுகளிந்தைச் சூழ்ந்த, கோதாவிரியொடுகாளிந்தி சூழ்ந்த. [3] கன்னி. [4] தந்த. [5] எழுமையுநீங்கும். [6] என்ருன், (4089)

170. ஆவினைக் [1]குரவ ரோடு மருமறை முனிவர் தம்மைப்
பாவையர் குழுவை யின்சொற் பாலரைப் பயந்து தம்மின்
மேவின வவரைச் செற்ருேர் விரிகடற் [2]சேது வந்து [வார்.
தோய்வரே லவர்கள் கண்டாய் சுரர்தொழுஞ் சுரர்க ளா

(இ - ள்.) பசுக்களையும் ஐங்குரவர்களையும் (ஓதுதற்கு) அரிய வேதங்களை யுணர்ந்த முனிவர்களையும் மகளிர்கூட்டங்களையும் இனியமழலைச்சொற்களையுடைய குழந்தைகளையும்அச்சங்கொண்டு தம்மிடத்துச் சரணமாகவந்து அடைந்தவர்களையும் கொன்றவர்களும், பரந்த சமுத்திரத்திலுள்ள (இச்) சேது கட்டத்தில்வந்து மூழ்குவராளுல், அவர்கள் தேவர்களும் வணங்கும் தேவர்களாவார்;

ஆவினைக் கொல்லுதல்-கோஹத்தியென்றும், குரவரைக் கொல்லுதல்-குருஹத்தியென்றும், முனிவரைக்கொல்லுதல்-பிரமஹத்தியென்றும், பாவையரைக்கொல்லுதல் - ஸ்திரீஹத்தியென்றும், பாலரைக்கொல்லுதல் - சிசுஹத்தியென்றும், நம்பிவந்து அடைந்தவர்களைக் கெடுத்தல்-விசுவாசகாதுகமென்றும் சொல்லப்படும். ஐங்குரவர்-"அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்',

என்பவர். பி-ம்:—[1]குரவர்தம்மை. [2]பாவை. இதுவும் அடுத்தகவி யும் சில பிரதிகளிலில்லை. (4090)

171\. மரக்கல மியங்க வேண்டி வரிசிலைக்[1]குதையாற் கீறித்
தருக்கிய விடத்துப் பஞ்ச பாதக ரேனுஞ் சாரிற்
பெருக்கிய வேழு மூன்று பிறவியும் பிணிக ணீங்கி
நெருக்கிய வமரர்க் கெல்லா நீணிதி யாவ[2]ரன்றே.

(இ-ள்.) மரக்கலங்கள் (கடலில் இங்குத் தடையின்றிச்)செல்ல விரும்பிக் கட்டமைந்த வில்லின் நுனியினாற் கீறி (நான்) உடைத்துத்தள்ளிய இவ்விடத்திற் பஞ்சமகாபாதகர்கள்வந்து மூழ்கினாலும், (அவர்கள்) ஏழு என்னும் எண்ணினாற் பெருக்கின மூன்று [இருபத்தொரு] பிறப்புக்களிலும் வியாதிக ளில்லாமல் கூட்டமான எல்லாத்தேவர்கட்கும் பெருஞ்செல்வம்போலப் பாராட்டத் தக்கவராவர்; (எ - று.)

இராமன் புட்பகத்தின்மீது ஏறிச்செல்லுகையில் கடலில் அவ்விடத்து மரக்கலங்கள் இடையே இனிது செல்லுதற்பொருட்டுத் தனது வில்லின் நுனியாற் சேதுவைக்கீறி யுடைத்து வழிவிட்ட வரலாற்றை விதிமுகத்தாற் கூறாது அநுவாதமுகத்தாற்கூறிப் பெறவைத்தார். இக்காரணத்தால், இவ்விடம் தநுஷ்கோடியெனப் படும். தருக்கிய-சிதைத்த. பஞ்சமாபாதகர்-கொலை, பொய்சொல்லுதல், களவு, கட்குடித்தல், குருநிந்தை என்ற ஐந்து பெரும்பாவங்களைச் செய்தவர். பி - ம்:—[1]குதையினீக்கி. [2]என்றான். (4091)

172\. நெற்றியி னழலுஞ் செங்க ணீறணி கடவு ணீடு
[1]கற்றையஞ் சடையின் மேவு கங்கையுஞ் சேது வாகப்
பெற்றில மென்று [2]கொண்டு பெருந்தவம் புரிகின் றாளால்
மற்றிதன் தூய்மையெவ்வா றுரைப்பது [3]மலர்க்கண் வந்தாய்.

(இ - ள்.) தாமரைமலரில் தோன்றிய இலக்குமியின் அமிசமானவளே! நெற்றியிலே எரிகிற சிவந்த நெருப்புக்கண்ணையும் விபூதியையும் பூண்டுள்ள பரமசிவனது நீண்ட தொகுதியான அழகிய சடையிற்பொருந்திய கங்காநதியும், '(நாம்) சேதுவாகும் பாக்கியத்தைப் பெற்றிலோமே' என்று (மனத்திற்) குறைகொண்டு, (அங்குப்) பெருந்தவஞ்செய்கிறாள் என்றால், இந்தச்சேதுவின் பரிசுத்தத் தன்மையை எப்படி (நாம்) எடுத்துக் கூறுவது? (எ-று.)

நெற்றியில் நெருப்புக்கண்ணையுடைய சிவபிரானது முடியின் மேற் சடைக்கற்றையில் கங்கை இருப்பதை, கங்காதேவி காட்டில் தீயிடையில் நின்றுகொண்டு தான் சேதுவாம்படி தவஞ்செய்வது போலு மென்று குறித்தார்: தற்குறிப்பேற்றவணி. பி-ம்:...[1]கற்றையின். [2]நாளும்,கொண்டே. [3]மலரின்மாதே. இதன்பின் சிலபாடல்கள் ஏட்டுப்பிரதிகள் பலவற்றிற் காணப்படுவன வருமாறு:—

1\. ஆங்கது காட்டக் கண்ட வாயிழை கமல மன்ன [செய்த
பூங்கழற் புயல்போன் மேனிப் புனிதவென் பொருட்டாற்

ஈங்கிதற் கேற்ற நீயே வியம்பென [1]விமானத் தின்று
[2]பாங்குற நிறுவி நின்றிங் கிவையிவை பகர லுற்றான்.

பி-ம்:—[1]இரதமாங்கே. [2]பாங்கினினிறுவி நின்றிங்கிவை, பாங்கென...பாங்கரோடிழிந்துதேவி தனக்கிவை.

2. அந்தணர் தம்மைக் கொன்றோ ரருந்தவர்க் கிடுக்கண்செய்தோர்
[1]செங்தொழில் வேள்வி செற்றோர் தீமனை யிடுவோர் [2]தம்பால்
[3]வந்திரந் தவற்கொன் றீயா [4]வைக்கும்வன் னெஞ்சர் பெற்ற
தந்தையைத் தாயைப் பேணுத் தறுகணர் பசுவைச் செற்றோர்.

பி-ம்:—[1]செந்தழல். [2]சேர்ந்து. [3]வந்தவரவர்க்கியாதே. [4]வெய்ய...பெற்ற, வன்னெஞ்சங்கிளர்ந்துபெற்ற.

3. குருக்களை யிகழ்வோர் கொண்ட குலமக ளொழியத் தங்கள்
செருக்கினுற் [1]கணிகை மாரைச் சேர்பவ ருயிர்கொல் [2]தீம்பர்
இருக்குட னமருந் தெய்வ மிகழ்பவ ரூன்கள் தின்று
பெருக்கிய வுடலர் [4]பொய்ம்மை பிதற்றுவோர் பீடைசெய்வோர்.

பி-ம்:—[1]கணிகைமாதைச், கணிகைமாதர்ச். [2]தீயர். [3]தின்னும். [4]பொய்யைப்.

4. *வெய்யவ னுச்சி சேர மிகவழி நடந்து போவோர்
மையறு முன்னோன் றன்னை வலிசெய்யுந் தம்பி மார்கள்
கையுள முதல்கள் தம்மைக் கரந்துதம் பிக்கொன் றீயார்[வோர்.
துய்யன சொற்கள் சொல்வோர் சோம்பரைச் சுளித்துக் கொல்

5. ஊரது முனிய வாழ்வோ ருண்ணும்போ துண்ண [1]வந்தோர்க்கு
ஆர்வமோ டளியா [2]தில்ல மடைப்பவ ரமணே சென்று
[3]நீரினு ளிழிவோர் பாவ நெறிகளில் முயல்வோர் சான்றோர்
[4]தாரம தணைவோர் மூத்தோர் தமையிக ழறிவி லாதோர்.

பி-ம்:—[1]வந்தால். [2]இல்லை. [3]நீரினிதளைவோர். [4]தாரமதனையோர்.

6. பின்னைவா தருவ னென்று பேசித்தட் டுவிக்கும் பேதை
கன்னியைக் கலக்கும் புல்லோர் காதலாற் கள்ளு [1]மாந்தர்
துன்னிய கலைவல் லோரைச் சுளிந்துரைக் திகழ்வோர் சுற்றம்[ர்.
இன்னலுற் றிடத்தாம் வாழ்வோ ரெளியரை[2]யின்னல்செய்வோ

பி-ம்:—[1]மைந்தர். [2]வலுமை.

7. ஆண்டவன் படவுந் தாங்க ளாருயிர் கொண்டு மீண்டோர்
நாண்டுறந் துழல்வோர் நட்பா னவரைவஞ் சிப்போர் [1]நன்மை
[2]வேண்டிடா திகழ்ந்து தீமை [3]செய்பவர் விருந்தை நீப்போர்
பூண்டுமேல் வந்த பேதை யடைக்கலம் [4]போக்கி வாழ்வோர்.

பி-ம்:—[1]நம்மை. [2]வேண்டிலர். [3]விரும்புவார். [4]பொதுக்கி.

---

*இச்செய்யுள் ஒருபிரதியில்தான் உள்ளது.

8. [1]கயிற்றிலாக் கண்டத் தாரைக் காதலித் தணேவோர் தங்கள், வயிற்றிடைக் கருவைத் தாமே [2]வதைப்பவர் மாற்றூர் தம்மைச், செயிர்க்குவ தன்றிச் சேர்ந்த [3]மாந்தரினுயிரைச் [4]செற்றோர், [5]மயிர்க்குரு ளொழியப் பெற்றம் வெளவுவோர் வாய்மையில்லோர்.

பி - ம்:—[1]கயிறகல். [2]வதிப்பவர். [3]மாதரின். [4]கொல்வோர். [5]மறிகளையொழியப் பெற்றமாறுவோர்.

9. கொண்டவன் தன்னைப் பேணுக்குலமகள் கோயிலுள்ளே, பெண்டிரைச் சேர்வோர் தங்கள் பிதிர்க்களை யிகழும் பேதை, [1]உண்டலே தரும மென்போ ருடைப்பொரு ளுலோப ரூரைத், [2]தெண்டமே யிடுவோர் மன்று பறித்துண்ணுந் தறுகண்ணுளர்.

பி - ம்:—[1]உண்டில. [2]எண்டர விகழ்வோரென்று மேற்றவர்க்கில்லையென்போர்.

10. [1]தேவதா னங்கள் மாற்றித் [2]தேவர்கள் தனங்கள்வெளவும், [3]_ாவகா ரியர்கள் நெஞ்சிற் பரிவிலா தவர்கள் வந்து, காவெனு வபய மென்று கழலடைந் தோரை விட்டோர், பூவைமார் தம்மைக் கொல்லும் புல்லர் [4]பொய்ச் சான்று போவோர்.

பி - ம்:—[1]தேவர். [2]தெய்வங்கள், செல்வம். [3]பாவகாரியர்தம். [4]போய்ச்சான்று பொய்த்தோர்.

11. முறையது மயக்கி வாழ்வோர் மூங்கையந் தகர்க்குத் தீயோர், மறையவர் நிலங்கள் தன்னை வன்மையால் வாங்கு[1]மாந்தர், கறைபடு மகளிர் [2]கொங்கை கலப்பவர் காட்டில் வாழும், பறவைகள் [3]மிருகம் பற்றிப் பஞ்சரத் தடைக்கும் [4]பாவர்.

பி-ம்:—[1]மூர்க்கர். [2]கூடக். [3]விருகம். [4]பாதர்.

12. கார்க்கன [1]வரைசேர் கானில் கடுங்குழி [2]கல்லுங்கட்டர், நீர்க்கரை யதனி லோட்டி நெடுங்கலை முயல்மான் கொல்வோர், ஊர்க்கெழு கூவல் வீழ்ந்த வுயிர்ப்பசு வெடாது போவோர், வார்[3]கெழு தனமின் னுரை வழியில்விட் டேகு மாக்கள்.

பி-ம்:—[1]வழியின்மீதே. [2]கண்ணியொட்டி, கண்ணிகட்டி. [3]கொழுங் கொங்கைமாரை.

13. *வழியடித் துண்போர் கேட்டால் வழிசொல்லாதவர்கள் வைப்பைப், பொழியிருள் களவு காண்போர் பொய்சொல்லிப்பண் டம்விற்போர், அறிவிலா வாய்மை கொன்றோ ரடைந்தது .., ...தெரிசிக்கத் தீர்க வென்றான்.

---

* இச்செய்யுள் ஒருபிரதியில் மாத்திரமே காணப்பட்டது.

14. *ஆதியர் மூவர்க் கந்நா ளருமறை யறைந்த வந்த
நீதியாம் புராணன் றன்னை யிகழ்பவர் நிரயக் கேளார்
பாதியில் விட்டு வைப்போர் படித்தவர் பிரியப் படுத்தார்
போதமி லாதார் மற்றச் சமயம்பொல் லாத தென்பார்.

15, என்றிவர் முதலா மற்று மெழுநர கடையும் பாவம்
ஒன்றினர் நன்றி தன்னை மறந்தவ ரொழிய [1]வுள்ளோர்
துன்றிய வினைக ளெல்லாஞ் சுடர்கண்ட விருளே போலத்
தென்றிசை வந்து சேதுத் தரிசிக்கத் தீரு மென்றான்.

பி - ம்:—[1]முன்னோர்.

16. வேறு. ஆங்கதுகேட் டருந்ததியே யனையாளு [1]மவதியுடன்
[2]தீங்கணுகுஞ் செய்ந்நன்றி மறந்திடுந்தீ மனத்தோர்கள்
தாங்கரும்[3]பா வங்களையு மெனக்காகத் தவிர்கவென
நீங்கிடுக [4]வதுவுமென்று [5]னிலமடந்தை பொறைதீர்த்தான்.

பி-ம்:—[1]அறிவினுடன். [2]தீங்ககலத்திருமொழிந்தாய் செய்ந்நன்றி மறந்தோரும். [3]பாதகங்களையும். [4]அதுவென்றான். [5]நிலமகடன்.

17. [1]பாரெழுவி [2]வாழ்வோர்கள் பஞ்சமாபா தகமுதலாச்
[3]சீரெழுவு திருவணையைத் தெரிசிக்கத் தீர்கவெனக்
[4]காரெழுவு திருமேனிக் [5]கண்ணனிணைப் பின்படியே
[6]ஈரெழுவர் நால்வரெனு மிருடிகளு மெழுதி னரால்.

பி-ம்:—[1]பாரேழில். [2]வாழ்வோர்தம். [3]சீரெழு, சீர்கெழுவு. [4]காரேழு. [5]கண்ணர் நினைவின். [6]ஈரேழுபேர்,

18. வேறு. என்பன பலவு மந்த வேந்திழைக் கிருந்து கூறித்
தன்பெருஞ் சேனை யோடுந் தம்பியு மரக்கர் கோவும்
பொன்பொரு விமானந் தன்மேற் போகின்ற போது மிக்க
இன்புடை யிராமன் வேலைக் கிப்புறத் திழிந்தென் செய்வான்.

பூசைப்படலமுள்ள ஒரு பிரதியில்தான் இச்செய்யுளுள்ளது.

19. வேறு. [1]திருவணை யுயர்பதஞ் செப்பி மீண்டபின்
அருகணை திருமகட் காங்கு மற்றுள
தருவணை திரள்[2]புயச் சனக வல்லிக்காங்
[3]கருவரை முகில்நிற வண்ணன் காட்டுவான்.

*இதுவும் அடுத்த செய்யுளும் 13-ஆஞ் செய்யுளுள்ள பிரதியில் இல்லை. 15-ஆஞ் செய்யுளின்பின் "தெவ்வடு" (173) என்ற செய்யுளும், அதன்பின் "மாருதி" என்றபாடலும், அதன்பின் "இது தமிழ்" (174) என்ற பாடலுமாக முறையேயுள்ளன; மற்றைப்பாடல்களில்லை.

பி-ம்:—[1] திருவணைக் குயர்புகழ் செப்பிமீண்டனன். [2] புயத்த னகவல்லிக்காங். [3] கருவணை. இச்செய்யுள் இரண்டுபிரதியில் தான் காணப்பட்டது. அவற்றுள், ஒருபிரதியில் இப்பாடலினீற்றில் **திருவணைச்சிறப்புமுற்றும்** என்று எழுதி, மேல் ***'பூசைப்படலம்'** என்று தொடங்குகிறது; அப்படலச்செய்யுள்கள் வருமாறு :—

20. **வேறு.** கப்பையெனுங் கன்னியையுங் [1] கந்தனூர்தந் தாதையை
அப்பொழுதே திருவணைக்குக் [2] காவலரா யங்கிருத்திச் [யும்
செப்பரிய சிலையாலே [3] திருவணையை வாய்கீறி
ஒப்பரியா டன்னுடனே யுயர்சேனைக் கடலுடனே.

பி-ம்:—[1] கந்தமாதனந்தன்னில், கந்தமாத்திரந்தனிலே. [2] காவலாய். [3] திருவாறு.

21. **வேறு.** வேந்தர் வேந்தனும் வேலையின் கரையினில் வரவே
வாய்ந்த சாய்கையும் வந்தது வானவர் வணங்க
ஏந்து தோள்புயத் திராமனு மிலக்குவன் ருனும்
வாய்ந்த சீதையு மானமும் வானர வேந்தும்.

22. நின்ற போதினில் நிகரிலா வகத்தியன் முதலோர்
குன்று போற்புயத் திராகவன் றனைவந்து குறுக
நன்று நின்வர வென்னவே நாதனும் வணங்கி
வென்றி வேந்தனும் வேதியர் தம்மொடு வியந்து.

21. சேது வின்கரை சேர்ந்தவத் திறல்புனை யிராமன்
ஏது வித்தல மெனக்குறு முனிவனைக் கேட்ப
வாத ராசனும் வாசுகி தானுமுன் மலைந்த
போது வந்ததிப் பொன்னக ரென்றவன் புகன்ருன்.

24. புகன்ற வன்றனைப் பூங்குழ லிராகவன் சாய்கை
அகன்ற காரணங் குறுமுனி யுரைசெய வவனும்
பகர்ந்த தேவரும் பாற்கடற் பள்ளியான் பரமன்
புகுந்த திவ்வழிப் பூவில்வந் தவனுமற் றியாரும்.

25 இருப்ப தித்தல மாகையா லிராவணன் சாய்கை
அருத்தி யின்றியே யகன்றதென் றருள்முனி யறையப்
பெருத்த தோளுடை யண்ணலும் பிரியம்வந் தெய்திக்
கருத்து மற்றினி யுரையெனக் குறுமுனி கழறும்.

26. இந்த மாநகர் தன்னிலே யிறைவனை யருச்சித்து
உந்தன் மாநக ரெய்திநற் சாய்கைபோ முரவோய்
அந்த நீதியே செய்துமென் றனுமனை யழைத்திட்டு
எந்த னுதனை யிமைப்பினிற் கொடுவர வென்ருன்.

---

*பூசைப்படலமென்பது ஒரு ஏட்டில்தான் காணப்பட்டது. 21-முதல் 41-வரையிலுமுள்ள பாடல்கள் பூசைப்படலமிருக்கும் பிரதியலன்றி வேறு எந்தப்பிரதியிலும் காணப்படவில்லை.

27. **வேறு.** அந்த வேலை முனிவ னளிதெருள்
இந்த மாநிலத் தியாவரு மின்புறக்
கந்த மேவிய கங்கையி லோர்சிலை
தந்து காணென மாருதி தாவினுன்.

28 **வேறு.** போதி யென்றவற் போக்கிய விராமனு மிந்த
மாது சீதையு மைந்தனு மிலக்குவன் ருனும்
தீது தீரவே தீர்த்தங்கள் யாவையு மாடி
ஆதி நாதனு மிருந்தன னமரர்கள் வியப்ப.

29. **வேறு.** ஆன போதினி லையன் மனத்துளே
தானி னைந்தது தாரு ரறிகுவார்
ஞான மோர்வடி வாகிய நாரணன்
மோன மாகி யிருந்தன(ன்) மூவரான்.

30. காலஞ் சென்ற தெனக்கருதிக் கையால்
கோல மான மணலினைக் கூட்டியே
ஆல முண்ட தேவிவ ராமென
ஞால முண்டவர் தம்மன நாட்டவே.

31. **வேறு.** முகுத்த மானதென முனிவனு மொழிதலு மிராமன்
மிகுத்த தோரிடத் தெய்தியே வெண்மணல் கூப்பி
அகத்தி னிற்புறம் பூசித்தே யடிமல ரிறைஞ்சிச்
செகுத்த தோளுடைத் தம்பியுஞ் சீதையுந் தானும்.

32. ஒத்த பூசனை செய்யவு மமைதியி னுள்ள
சித்தி மேவிய ஞானமுந் தொடர்விடா திருந்தோன்
அத்தன் பாதக மானவை யழிதர வியற்றிச்
சித்தம் வாழ்தர நின்றனன் றேவர்க டுதிப்ப.

33. நின்ற போதினி னிறங்களும் படலமுங் கொண்டு
வென்றி சேர்புய மாருதி விரைவினில் வந்து
நன்று செய்தனை யெனப்போய் நாதனைப் பிடுங்கி
வென்றி வாலற்று மேதினி வீழ்ந்தனன் வீரன்.

34. விழுந்த வன்றனை வெந்திற லிராகவ னோக்கி
அழுந்து சிந்தையா யறிவிலா ததனையென் செய்தாய்
பொழிந்து மாமல ரிட்டுநீ யருச்சியென் றுரைப்ப
எழுந்து போயவ னிறைவனை யருச்சனை செய்தான்.

35. **வேறு.** அவ்வி டத்தனு மான்றந்த கங்கைமேல்
வவ்வி டப்பரும் வந்திடு வான்சிலை
அவ்வி டத்தினி லியாவரு மேத்தெனுத்
தெவ்வ டக்குஞ் சிலையவன் செப்பினுன்.

36. எந்த னுத னிவனென் றிறைமகன்
தந்த நாமஞ் சராசரஞ் சார்ந்தபோது

இந்தி ரன்பிர மாமுத லெய்தினார்
வந்து வானவர் யாவரும் வாழ்த்தினார்.

37. இத்த லத்தினில் யாருமங் கோர்சிலை
வைத்து மாமனத் துள்ளே வழுத்துவார்
நத்து லாயகை நாரண னான்முகன்
பித்தன் மூவரு மேத்தப் பெறுகெனா.

38. என்றி ரான? வரசன் பெருமையின்
நன்றி தன்னை நவில வடங்குமோ
சென்று சென்று செயசெய போற்றியென்று
அன்றி ராச குமார (னை)றகுவான்.

39. **வேறு.** பூச னைத்தொழில் முடிந்தபின் பூங்கழ லிராமன்
தேவத் தச்சனை யழைத்துநீ திரைகடற் கிடந்த
காவல் மாமலை கொணர்ந்துநீ கண்ணுதற் கோயில்
பூவில் வந்தவன் சொல்வழிச் சமையெனப் புகன்றான்.

40. நந்தி யம்பதி யிறைவனை நாதனு மழைத்தே
இந்த மாமலை யிருமென யாவையு நல்கி
விந்தை தங்கிய தோளினீர் வேந்தனைப் பூசித்து
இந்த மாநக ரிருமென விராமனு மகன்றான்.

41. **வேறு.** *தேரேறி [1]மானகஞ் சென்னிமிசைச் சென்றேறக்
காரேறு கண்ணபிரான் [2]காவலவன் [3]கமழ்துளபத்
தாரேறு தடந்தோளான் தனிவயிரக் [4]குனிசிலைக்கைப்
போரேறு பொலிவுடனே வடதிசையிற் [5]போயினனால்.

பி-ம்:—[1]மானகரஞ். [2]காவலர்கோன், [3]மகிழ்துளபத். [4]சிலைகுனி. [5]போயினரால்.

பூசைப்படலம் முற்றும். இனி மீட்சிப்படலம்:—

42. சேர்ந்து சேதுவின் றென்கரை கடந்துவந் தெய்திக்
கூந்தன் மானமே [1]லிருந்தவன் வடதிசை குறுகிப்
போந்து [2]வானரப் புதுமையுஞ் சனகிக்குப் புகன்று
[3]தீர்ந்த சேதுவின் கரையையும் காட்டினன் [4]றிறலோன்.

பி-ம்:—[1]கொண்டுடன். [2]வானவர். [3]தீர்ந்து. [4]தெரிந்தான்.

---

*இச்செய்யுள் எமக்குக்கிடைத்தபிரதிகளில் இரண்டில்தான் காணப்பட்டது: பூசைப்படலமில்லாத மற்றொருபிரதியில் இச்செய்யுளினிற்றில் **திருவணைச்சிறப்புமுற்றும்** என்று எழுதப்பட்டு, மேல் **மீட்சிப்படலம்** தொடங்குகின்றது அந்தப்பிரதியில் (1) "திருவணை," (2) "தேய்ந்தமாமதி," (3) "மாருதி," (4) "தெவ்வடு" (173) என இந்தமுறையிற் பாடலுள்ளன.

43. நின்னை மீட்பதே நினைந்துசின் னெறியெலா நீந்தி
என்னை யீட்டிய திறத்தினிற் றிருவுட னிருப்பச்
சொன்ன வேற்படை யரக்கரைக் குறைத்தவிச் சேனை
மன்ன னாற்பெற்ற வழியிது வென்றியு மதனால்.

173.—வருணன் சரணமடைந்த இடத்தை இராமன் சீதைக்குக் காட்டுதல்.

தெவ்வடுஞ் சிலைக்கை வீரன் சேதுவின் பெருமை [1]யாவும்
வெவ்விடம் பொருது[2] நீண்டு மிளிர்தருங் கருங்கட் செவ்வாய்
நொவ்விடை [3] மயில னாட்கு [4] நுவன்றுழி வருண னேனாது
இவ்விடை வந்து கண்டாய் சரணென வியம்பிற் றென்றான்.

(இ-ள்.) பகைவர்களைக் கொன்ற (கோதண்டமென்னும்) வில்லையேந்திய வீரனான இராமபிரான், சேதுவின் சிறப்புமுழுவதையும், கொடிய விஷத்துடன்போர்செய்து (காதளவும்) நீண்டு விளங்குகின்ற கருமையான கண்களையும் சிவந்தவாயையும் (நுண்மையால்) வருந்துகின்ற இடையையுமுடைய மயில்போன்றவளான சீதைக்குச் சொல்லிக்கொண்டுவருகையில், (புட்பகவிமானம் தர்ப்பசயனத்தைச் சேர)—'இந்த இடம், வருணபகவான் (எனது ஆக்நேயாஸ்திரத்தின் கொடுமையைப்) பொறுக்கமாட்டாமல் வந்து (என்னைநோக்கி) அடைக்கலமென்று கூறியது: அறிவாய்' என்றான்; (எ-று.)—இராமன் சீதைக்குக் காண்பித்தது, திருப்புல்லாணி என்று வழங்குகிற தருப்பசயனம்: "அத்ர பூர்வம் மஹாதேவ:, ப்ரஸாதமகரோத் ப்ரபு:' என்ற ஸ்ரீவான்மீகம், இந்தச் செய்யுளின் பின்னிரண்டடியிற் காணத்தக்கது. பி-ம்:—[1]எல்லாம். [2]மீண்டு. [3]குயிலனாட்கு, அல்குலாட்கு. [4]துவன்றுழிவருணனேனை, நுவன்றுபின் வருணனானேன். [5]கண்டான். *(4093)*

44. **வேறு.** தேய்ந்த மாமதி போலுஞ் சிலைநுதல்
வாய்ந்த வானர [1]வாரண மாருதி
யாய்ந்த மாமணி [2]யாழியை யன்றுதான்
பாய்ந்த வெற்பு மயேந்திரம் பார்த்தியால்.

பி-ம்:—[1]வானர. [2]ஆயிழையாய்மதி. இச்செய்யுள் இரண்டு பிரதியில்தான் காணப்பட்டது: ஒரு பிரதியில் "மாருதி" என்ற பாடலின்பின் உள்ளது.

45. **வேறு.** மாருதி நின்னை நாடி வருபவ [1]னேறிப் பாயப், பாரிடைக் குளித்து நின்ற [2]பவளமால் வரையைப் பாராய், போரிடைப் [3]பொலன்கொள் பொன்றூர்ப் புரவிகள் [4]போக்கிற் றென்ன, நீரிடைத் தரங்க மோங்கு [5]நெறிகட லதனை நோக்காய்.

பி-ம்:—[1]நெறியைப்பாராய். [2]மயேந்திரவரையை. [3]புலனகள் வென்றோர். [4]பொங்கிற்றென்ன. [5]நிறை.

174.—இராமன், பொதியமலை திருமாலிருஞ்சோலைமலை திருவேங்கடமலை முதலியவற்றைச் சீதைக்குக் காட்டுதல்.

இதுதமிழ் முனிவன் வைகு[1]மியறகு குன்ற [2]முன்னுன்
[3]அது[4]வளர் மணி[5]மே லோங்க [6]லப்புறத் துயர்ந்து தோன்றும்
[7]அதிதிக ழுநந்த வெற்பென் றருடர [8]வனுமன் றேன்றிற்று
[9]எதுவென வணங்கை நோக்கி யிற்றென விராமன் சொன்னுன்.

(இ - ள்.) இராமன், 'இம்மலை, தமிழ்மொழிக்கு உரியவனுன அகஸ்தியமுனிவன் வசிக்கிற பெருமைபொருந்திய பொதியமலை; அதோ தெரிகிறது, முழுமுதற்கடவுளான திருமாலெழுந்தருளி யுள்ள இரத்தினங்களையுடைய உயர்ந்த திருமாலிருஞ்சோலைமலை: மிகவும் விளங்குகின்ற திருவேங்கடமலை அதோ உயர்ந்துகாணப் படுகின்றது' என்று (சீதைக்குச் சுட்டிக்) கூற,(அப்பொழுது சீதை) 'அநுமான் காணப்பட்ட இடம் எது?' என்று வினவ, (உடனே இராமபிரான்), திருமகளின் அவதாரமான சீதையைப் பார்த்து, (ருசியமூகபர்வதத்தைச் சுட்டிக்காட்டி) 'இதுதான்' என்று சொன்னுன்; (எ - று.)

அகஸ்தியன் வசிக்கும் பொதியமலை பாண்டியநாட்டிலுள்ளது; இது மலயமென்று பெயர்பெறும், 'முன்னுன் வளர்' என்று அடைமொழி கொடுத்ததனுலும், உடனே திருவேங்கடமலையைக் கூறுதலாலும், ஓங்கல் என்பதற்கு - திருமாலிருஞ்சோலைமலை யெனப் பொருள் கொள்ளப்பட்டது. இப்படி இவ்விரண்டு மலைகளையும் ஒருசேரக் கூறுதலை, "தென்னனுயர் பொருப்புந் தெய்வவடமலையும்," "சோலைமலையோடிரண்டாய், மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடம்" என்னும் பெரியார் பாசுரங்களினுலும் அறிக. இம்மலை-திருமால் திருப்பதிகள் நூற்றெட்டனுள் ஒன்றும், அவற்றிற்பாண்டிய நாட்டுத்திருப்பதிகள் பதினெட்டனுள் முதலதுமாகிய தலம். திருவேங்கடமலை சேஷகிரி யென்று ஒருபெயர் பெறுதலால், அதன் பரியாயநாமமாக 'அநந்தவெற்பு' எனப்பட்டது. பரமபதநாதனது ஆஜ்ஞையின்படி ஆதிசேஷன் மலையுருவமானதனுலும், மேருமலையிலிருந்து ஆதிசேஷனுடனே வாயுவினுற்கொணரப்பட்டதனுலும், இதற்கு இப்பெயர் வாய்ந்ததென்பர். இது, திருமாலினது திவ்விய தேசங்கள் நூற்றெட்டனுள் ஒன்றும், வடநாட்டுத்திருப்பதிகள் பன்னிரண்டில் முதலதுமாகிய தலம். தமக்குப் பலவகையிலும் அநுமான் உதவிபுரிந்ததுபற்றி அவன்மீது அன்புகொண்டு, சீதை, அவன் இராமபிரானை முதலிற் சந்தித்த இடத்தைக்குறித்து வினுவினளென்க. அநுமான் பிறந்த இடம் வடக்குத்திக்கிலுள்ள சுமேருமலை யாதலால், 'தோன்றிற்று' என்பதற்கு-பிறந்ததுஎனப் பொருள் கூற இடமில்லை; இப்பொழுது விமானஞ்செல்லுமிடம் அவ்விடத்துக்கு மிகத் தெற்காதலால். பி-ம்: —[1]இயலுறு, இகலறு. [2]முன்னுறு, முன்னோர், முன்றேன்றும். [3]உது. [4]வளம். [5]மால். [6]உப். [7]மதிதிகழ், அதுகமல். [8]அமலன், உம்பர்த். [9]அது. (4094)

175.—இராமன் சுக்கிரீவனது நகரைக் காட்டுதல்.

வாலியென் றளவி லாற்றல் [1]வன்மையான் மகர நீர்சூழ்
[2]வேலையைக்[3]கடக்கப் பாயும் விறலுடை யவனை வீட்டி
நூலியற் றரும நீதி நுனித்தறங்[4]குணித்த மேலோர்
போலியற் றபனன் மைந்த னுறைதரும்[5]புரமீ தென்றான்.

(இ - ள்.) அளவில்லாத சாமர்த்தியத்தின் உறுதியையுடையவனும் சுறாமீன்களையுடைய நீர்நிறைந்த கடல்களைத் தாண்டும்படி பாயவல்ல பலமுடையவனுமாகிய வாலியென்னும் பெயருடைய வானரனை அழித்து, சாஸ்திரங்களிற் கூறியுள்ள நீதிநெறிகளையே ஆராய்ந்து தருமங்களையே மதித்த பெரியோர் போன்ற தன்மையையுடைய சூரியகுமாரனான சுக்கிரீவன் வசிக்கின்ற புரம் இதுதானென்று (சீதையை நோக்கிக்) கூறினான், (இராமன்); (எ - று.)—பி-ம்:—[1]வண்மையான். [2]வேலியை. [3]கடத்தலாயும். [4]குனிக்கும். [5]பொறையீது. இச்செய்யுளுக்குப்பின் ஒருபிரதியில் ஒருபாடல் காணப்படுகின்றது: அது வருமாறு:—

ஆரிய னனைய கூற வடியிணை யிறைஞ்சி யைய
வேரியங் கமலை செப்பும் விரிந்தகிட் கிந்தை யுள்ளார்
சீரிய வயோத்தி சேரத் திருவுளஞ்செய்தி யென்னக்
கார்நிற வண்ணல் மானங் காசினி குறுக வென்றான் (4095)

176.—வானரமகளிரையும் உடனழைத்துச்செல்லவேண்டுமென்று சீதை கூறுதல்.

கிட்கிந்தை யிதுவே ஐய கேட்டியா லெனது பெண்மை
மட்குந்தா னாய வெள்ள மகளி[1]ரின் றாகி வானோர்
உட்கும்போர் சேனை சூழ வொருத்தியே யயோத்தி [2]யெய்தின்
கட்கொந்தார் குழலி னாரை யேற்றுதல் கடன்மைத் தென்றாள்.

(இ - ள்.) 'தலைவனே! இது கிஷ்கிந்தாநகர மாயின், (யான் கூறுவதைக்) கேட்டருள்வாயாக: தான் (பல) வெள்ளமென்னுங் கணக்கையுடையதாகித் தேவர்களும் (கண்டு) அஞ்சும்படியான போர் செய்யவல்ல சேனை சுற்றிலும் இருக்க, பெண்களின் துணையில்லாமல் (நான்) ஒருத்திமாத்திரமே அயோத்தியாபட்டணத்தைச் சேர்ந்தால், எனது பெண்தன்மை பெருமையடையாதாகும்: (ஆதலால்), தேனையுடைய பூங்கொத்துக்களைச்சூடிய கூந்தலையுடைய (இப்பட்டணத்திலுள்ளவரான) வானரமகளிரைப் (புஷ்பகத்தின்மீது) உடன் ஏற்றிக்கொண்டு செல்லுதல் முறைமையை யுடையதாகும்' என்று கூறினாள்; (சீதை); (எ - று.)

சீதை இராமபிரானருகில் தான் இருப்பதால் தனக்குச் சிறிதும் அச்சமில்லாதிருக்கவும், மிக்க ஆடவர்திரளில் மகளிர் துணையின்றித் தனியேயிருத்தல் தகுதியன்றென்று கருதி, வானரமகளிரைத் துணைவேண்டினளென்க. பெண்மை - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலிய மகடூஉக்குணங்கள். ஆயம் - தோழிப்

பெண்கள்: மகளிர் கூட்டமுமாம். பி-ம்:—[1]இன்ருகில். எய்தக். சிலபிரதியில் இச்செய்யுளுக்குப்பின் "இதுதமிழ்" (174), "வாலி" (175) என்ற பாடல்களுள்ளன. (4096)

இங்கே ஒருபிரதியில் இரண்டு செய்யுள்களுள்ளன: அவை வருமாறு:—

1. என்றவன் சேயை நோக்கி யிசைந்தகிட் கிந்தை யுள்ளார்
நன்றுநம் பதியைக் காண நாயக வழைத்தி யென்னச்
சென்றவன் சாம்பன் றன்னைத் திசையெட்டுந் திரியச் சாற்றி
இன்னுநஞ் சுற்ற மெல்லா மியல்புட னழைத்தி யென்ருன்.

2. என்றபோ தெழுந்து சாம்ப னிசைந்தகிட் கிந்தையுள்ளார்க்கு
ஒன்ருெழி யாத வண்ண மோதினு னேதக் கேட்டே
ஒன்றிய கடல்க ளேழு முற்றுட னுவாவுற் றென்ன
மன்றலங் குழலி ஞர்கள் துவன்றினர் மகிழ்ச்சி கூட.

177.—வானரமகளிரைக்கொணரும்படி இராமன் கட்டளை யிடச் சுக்கிரீவன்கட்டளைப்படி அநுமான் அவர்களைக் கொணர்தல்.

அம்மொழி யிரவி [1]மைந்தற் கண்ணரு னுரைப்ப வன்னுன்
[2]மெய்ம்மைசே ரநுமன் றன்னை நோக்கிநீ விரைவின் வீர
மைம்மலி குழலி னுரை மரபினுற் கொணர்தி [3]யென்னுச்
செம்மைசே ருள்ளத் தண்ணல் கொணர்ந்தனன் சென்று மன்னே.

(இ - ள்.) (சீதை சொன்ன) அவ்வார்த்தையைச் சூரியன் மகனை சுக்கிரீவனுக்கு இராமபிரான் சொல்ல,—அந்தச்சுக்ரீவன், வாய்மையுள்ள அநுமானைப் பார்த்து, 'வீரனே! நீ விரைவிற் கருமைமிக்க கூந்தலையுடைய வாநரமகளிரை முறைப்படி அழைத்துக்கொண்டுவா' என்ன, நேர்மை பொருந்திய மனத்தையுடைய பெருமையிற்சிறந்தவனை அநுமான் போய் (அவர்களை) அழைத்துக்கொண்டு வந்தான்; (எ - று.)

மரபினுற் கொணர்தல்-அந்தந்த ஸ்திரீகளுக்கு உரியபடி சிறப்புடனே வரிசைவழாமற் கொணர்தல். ஒழித்தற்கு அரிய பெண்ணுசையை யொழித்தவ னுதலால். அநுமானை, 'செம்மைசேருள்ளத் தண்ணல்' என்ருர்: இதுபற்றியே, மகளிரை யழைத்து வருவதில் மற்றவரை யேவாது சுக்கிரீவன் இவனையே ஏவினனென்க. 'மைம்மலிகுழலினுர்' என்று மானுடமகளிரைக் கூறுதல் போல வாநரமகளிரைக் கூறியுள்ளதனுல், ஆண்குரங்குகள் போலவே இவர்களும் இராமபிரானது திருவுள்ளத்தின்படி மனித வடிவங்கொண்டன ரென்பது பெறப்படும். பி-ம்:—[1]மைந்தர்க்கு. [2]மென்மை. [3]என்ருன். "என்றவன்," "என்றபோது" என்று மேற்காட்டிய பாடங்களுள்ள பிரதிகளில் "அம்மறைறவரவுதாழ்க்க வருக்கன்சேயருளினேடும்" என்று இச்செய்யுளின் முதலடி காண்கின்றது. (4097)

178.—வானரமகளிர் சுக்கிரீவனையும் இராமனையும் சீதையையும் வணங்குதல்.

வரிசையின் வழாமை நோக்கி மாருதி மாதர் வெள்ளம்
கரைசெய லரிய வண்ணங் கொணர்ந்தனன் கணத்தின் முன்னம்
விரைசெறி குழலி னார்[1] தம் வேந்தனை வணங்கிப் பெண்மைக்கு
அரசியை யையனோடு மடியிணை தொழுது நின்றார்.

(இ - ள்.) அநுமான், வரம்பு காணவொண்ணாதபடியுள்ள (வாநர) மகளிர்கூட்டத்தை ஒருநொடிப்பொழுதிற்குள் (அவரவர்க்குஉரிய) சிறப்புக்களிற் குறைவுண்டாகாதபடி பார்த்துக் கொணர்ந்தனன்; (உடனே). வாசனைமிக்க கூந்தலையுடையரான அம்மகளிர், (விமானத்தின்மீது ஏறி), தமது அரசனான சுக்கிரீவனை வணங்கி, இராமபிரானையும் ஸ்திரீநாயகமான சீதாபிராட்டியையும் இரண்டு பாதங்களிலும் வணங்கி நின்றார்; (எ - று.)

இச்செய்யுளின் முன்னிரண்டடி - அநுவாதம். விரைசெறி குழல்-அகிற்புகை முதலியவற்றால் வாசனையூட்டப்பெற்றகூந்தல்.

பி-ம்:—[1] தாம்வேந்தரை. இதன்பின் சிலபிரதிகளிற் சிலபாடல்கள் காணப்படுகின்றன: அவை வருமாறு:—

1. சந்திர மானந் தன்மேற் றாரகை சூழ்ந்த தென்ன
இந்திரன் மகனார் தாரத் தாரையும் ருமையுங் கூடி
வந்தனர் வந்து மொய்த்தார் வானர மடந்தை மார்கள்
இந்திரை கொழுநன் றன்னை யேத்தின ரிறைஞ்சி நின்றார்.

2. நின்றவா ரிதியை முன்பு நெருப்பெழக் கடைந்த போதங்கு
ஒன்றல பலவு மாங்கே யுற்பவித் தவற்றி னுள்ளே
தன்னுடன் பிறந்த முத்து மாலையைத் தரையிற் றோன்றி
மின்னென நின்ற சீதைக் களித்தனள் விரைவிற் றாரை.

3. தாரையைச் சீதை புல்கித் தாமரைக் கண்ண னன்பாற்
பாரைவிட் டகன்றான் வாலி பாருளோர்க் கவதி யுண்டோ
ஈரிது மலரோன்செய்கை தெரியுமோ தெரியாதன்றே
யாரிது தெரிய கிற்பார் காலத்தி னளவை யம்மா.

4. என்றிடத் தாரை நிற்க வெதிர்கதிர்க் கடக மொன்று
மின்றிரிந் தனைய கொள்கை மேலைநாள் விரிஞ்ச னீந்தது
அன்றது விரவி பெற்று நாயகற் கீந்த தன்று
சென்றடி யிணையி லிட்டே யிறைஞ்சியே ருமையு நின்றாள்.

5. நின்றவள் தன்னை நங்கை யங்கையாற் றழுவி நின்று
வன்றுணை மங்கை மாரு மைந்தரு மங்குச் சூழத்
தன்றிருக் கைக ளாலே தழுவின ளென்னக் கண்ணால்
ஒன்றல பலவுங் கூற வுணர்ந்துள முவகை யுற்றே. (4098)

179.—விமானம் மீண்டும் எழுந்து செல்லுதல்.

[1]மங்கல முதலா வுள்ள மரபினிற் [2]கொணர்ந்த யாவும்
அங்கவர் [3]வைத்துப் பெண்மைக் கரசியைத் தொழுது சூழ
நங்கையு முவந்து வேறோர் நவையிலை யினிமற் [4]றென்றாள்
பொங்கிய விமானந் தானு மனமென வெழுந்து போன.

(இ . ள்.) அப்பொழுது அவ்வாநரமகளிர், முறைப்படி கொண்டுவந்த அஷ்டமங்கலங்கள் முதலாகவுள்ளஎல்லாப்பொருள்களையும் (எதிரில்) வைத்து, மகளிர்க்குரிய தன்மைகளிற் சிறந்தவளான சீதாபிராட்டியை வணங்கிச் சுற்றிலும் இருக்க, சீதையும் மகிழ்ந்து 'இனிமேல் யாதொரு குறையும் இல்லை' என்றுகூறினாள். (ஒளி) மிகுந்த புட்பக விமானமும் (ஆகாயத்தில்) எழுந்து மனோவேகமாகச்சென்றது: (எ - று.)

இராமனையடைந்தபின்பு சீதைக்கு இருந்த மகளிர் துணையின்மையென்னும் ஒருகுறையும் இப்பொழுது நீங்கியதனால், 'வேறோர் நவையில்லை' என்றாள், 'விமானம் எழுந்துபோன' என்று இங்குக்கூறியதனால், முன்பு அவ்விமானம் கீழிறங்கித் தங்கியமை பெறப்படும். அஷ்டமங்கலங்களை "சாமரை தீபம் தமனியற்பொற்குடம், காமர்கயலிணை முதலாத்-தேமருவு, கண்ணடி தோட்டி கதலிகைவெண் முரசம், எண்ணிய மங்கலங்க ளெட்டு" என்பதனால் அறிக. பி-ம்:—[1]மங்கல முதலவாய. [2]கலப்பையாவும்,கலங்கள் யாவும். [3]கொணர்ந்து, [4]என்ன.

இங்கே சிலபிரதிகளிற் காணப்படுஞ் செய்யுள்கள் வருமாறு:—

1. கடிகமழ் குழலி னாளே கார்காலம் யாங்கள் வைகும்
[1]வடிவுடைச் சிகர மோங்கு [2]மாலியவானை நோக்காய்
அடுதிறற் பரிதி மைந்த [3]னகரத னழகு பாராய்
வடிவுள மலையே [4]மென்ன மராமர [5]மேழு நோக்காய்.

பி-ம்:—[1]வடிவிடைச். [2]மதங்கனதிருக்கை. [3]கிட்கிந்தை,அரணினது. [4]என்னும். [5]ஏழை.

2. கனிவளர் பவளச் செவ்வாய்க் [1]கனங்குழை நின்னைக் காணாத்
துனிவளர் துன்ப நீங்கத் [2]தோழமை நாங்கள் கொண்ட
பனிவள [3]ரிருளை மாற்றும் [4]பகலவன் சேயும் யாமும்
நனிவளர் நட்புக் [5]கொண்ட நலந்தரு நாக நோக்காய்.

பி-ம்:—[1]கருங்குழல். [2]தொடர்கின்ற கடவுண்மானப். [3]இருளகற்றும், இருளையெல்லாம். [4]பற்றும் புதல்வனோடும். [5]பருதிதன் புதல்வனோடும். [6]நாங்கள் நயந்தவிந் நாகம்நோக்காய், நாங்கள் மெய்த்தடமிதுகண்டாயே.

3. மாழையொண் கண்ணா யுன்னைப் பிரிந்தியான் வருந்து நாளில்
தாழ்விலாத் துயரம் நீங்கத் தாமரை யுந்தி யான்கை

ஆழியா மாற்றலானை யனுமனை [1]யரக்கரஞ்சும்
பாழியான் றன்னைக் கண்ட பம்பையா [2]றதனைப் பாராய்.

பி-ம்:—[1]அரக்கன். [2]இதனை. [[1]தின்ருேன்

4. பொய்வித்தி வஞ்சங் காத்துப் புலைவிளைத் தறத்தைத்
கைவித்துஞ் [2]சரத்தி னுனக் கடற்பெரும் படையை யெல்லாம்
நைவித்த [3]விரவு நான்கான் மருந்துக்கு நடந்து நம்மை
உய்வித்த வீரன் றன்னைக் கண்டிட மிதுகண் டாயே.

பி-ம்:—[1]தின்ருேர். [2]சரத்தினுனங்கடற்படை வெள்ளம். [3]இரவுநாற்கால், வீரனுற்கால்.

5. சவரிய திருக்கை [1]தானுங் கவந்தனைத் [2]தடிந்த கானும்
[3]இவர்செய [4]வெழுந்த வாற்றற் கரனுயி [5]ரிழந்த பாரும்
[6]சவையுறு [7]சுகுட்டன் மைந்தன் சரபங்கன் முதலோர் காதற்
[8]சுவையறு முனிவர் தங்க ளிடங்களுங் கருதி நோக்காய்.

பி-ம்:—[1]காணுங். [2]கண்டுதாங்கள். [3]அமாசெய, இவர்செயல். [4]கண்டுமாற்றல், எழுந்தவாறும். [5]அழித்தவாறும். [6]சமையுறு, நவையறு. [7]வசிட்டன். [8]கமைவுறு.

6. விரைகம ழோதி மாதே விராதன்வந் தெதிர்ந்து போர்செய்
நிரைதவ ழருவி [1]யோங்கு நெடுவரை யதனை நோக்காய்
சரதநா னரசு வேண்டேன் றடமுடி [2]சூடு [3]கென்று
பரதன்வந் [4]தழுது வேண்டும் [5]பருவரை யதனைப் பாராய்.

பி-ம்:—[1]ஓங்கல். [2]புனைநீ. [3]யென்னும். [4]எய்தி, [5]பனிவரையிதனை.

7. வளைபயில் தளிர்க்கை மாதே [1]வருபுனல் [2]பெருகக் கண்டு
துளை [3]பயில் வேயின் [4]றெப்ப [5]மியற்றியான் றுயரமின்றி
விளைதரு புனலை நோக்கி [6]வியந்துட னிருப்ப வெல்போர்
இளையவன் [7]றனியே நீந்தும் யமுனையா [8]றிதனைப் [9]பாராய்.

பி-ம்:—[1]வரும். [2]பெருக்கைக். [3]உடை. [4]தெற்பம். [5]இயக்கியான், இயற்றியாங், இயற்றியே. [6]அன்றுடன். [7]தனையே. [8]அதனை. [9]நோக்காய்.

8. பயனுறு தவத்தின் மிக்க பரத்துவ னிருக்கை பாராய், கயல்பொரு கங்கை யாறுங் குகனுறை நகருங் [1]காணுய், அயன் முத லமரர் போற்ற வனந்தனமே லாதி [2]மூலம், [3]துயல்வருங் கடலே யன்ன வயோத்தியைத் தொழுது நோக்காய்.

பி-ம்:—[1]பாராய். [2]மூர்த்தி. [3]துயிலுமாவரங்க மென்னும்.

9. என்றுரைத் திளவ லோடு சனகியு மிரவி சேயும்
வென்றிவீ டணனுஞ் சேனை வெள்ளமும் விளங்கித் தோன்
பொன்றிகழ் புட்ப கத்தோர் [1]பூதலத் திழிய வேவி [றப்
[2]இன்றுணைப் பரத்து வாச [3]னிடவகை [4]யிழிந்தா னன்றே.

பி - ம்:—[1]பூதலத்தீயப்போக்கி. [2]இன்றுவண். [3]இடவரை [4]சேர்ந்ததன்றே, ''திருவணை'' என்ற பாடலில் மீட்சிப்படலம் தொடங்கிய பிரதியில், இங்கு மீட்சிப்படலம் முடிய, இதன்பின் ''உன்னுமாத்திரத்து'' (185) என்ற பாடலைக்கொண்டுபரத்துவாசு ஞச்சிரமப்படலம் தொடங்குகின்றது; 180-முதலிய பாடல்கள் ''கடி கமழ்'' முதலிய இப்பாடல்களுள்ள பிரதியி லில்லை. ஒருபிரதியில் 178-முதற்கொண்டே 184-ஆவது பாடல் வரையில் இல்லை.(4099)

வேறு.

180.—கோதாவரி சீதையைப்பிரிந்த இடம் என்ற இவற்றை இராமன் சீதைக்குக் காட்டுதல்.

[1]போதா விசும்பிற் றிகழ்புட்பகம் போத லோடும்
சூதார் முலைத்தோகையை நோக்கிமுன் றோன்று சூழல்
கோதா விரிமற்றதன் பாடுயர் குன்று நின்னைப்
பேதாய் பிரிவுத்துயர் பீழை பிணித்த தென்றான்.

(இ-ள்.) எழுந்து வானத்தில் விளங்குகின்ற புட்பகவிமானம் போகவும், சூதாட்டத்தில் வைக்கப்படும் வல்லுக்காயையொத்த முலையையுடைய சீதையைநோக்கி, (இராமன்),—'பேதாய்! எதிரில் தோன்றுகிற இடம் கோதாவரி; அதனருகிலுள்ள உயர்ந்தகுன்று போன்ற இடந்தான்,(நாம் ஒருவரையொருவர்) பிரிந்துவருந்துந் துயரை உண்டாக்கியது' என்றான்; (எ-று.)—பி-ம்:—[1]போதார்.( )

வேறு.

181.—தண்டகாரணியம் சித்திரகூடபருவதம் பரத்துவாஜாச்சிரமம் இவற்றை இராமன் சீதைக்குச் சுட்டிக்காட்டுதல்.

சிரத்து வாசவண் டலம்பிடு தெரிவைகே ளிதுநீள்
தரத்[1]து வாசவர் வேள்வியர் தண்டக மதுதான்
வரத்து வாசவன் வணங்குறு சித்திர கூடம்
[2]பரத்து வாசவ னுறைவிட மிதுவெனப் பகர்ந்தான்.

(இ-ள்.) (இராமன் சீதையைநோக்கி), 'முடியிலுள்ள நறுமணத்தால் (அங்கு) வண்டுகள் ஒலிக்கப்பெற்ற தெரிவையே! கேள்: இது, மிக்க பெருமையுடைய உபாசனைசெய்பவர்களும்யாகஞ் செய்பவர்களும் உறைகின்ற தண்டகாரணிய மாகும்; அது, பெருமைபெற்ற தேவேந்திரனும் வணங்கத்தக்க (சிறப்பையுடைய) சித்திரகூடபருவதமாம்; இது, பரத்துவாச முனிவன் வசிக்கும் ஆச்சிரமமாகும்' எனப் பகர்ந்தான்; (எ - று)

திரிபு என்னுஞ் சொல்லணி. இரண்டாமடியில், தரத்து உவாசவர் எனப்பிரிக்க. உவாசவர்-உபாஸகர். உபாசனையாவது-மனத்தைப் பொறிகளின்வழியே போகாது ஒருவழிப்படக் கடவுளினிடத்துச் செலுத்துதல். சித்திரகூடம்-விசித்திரமான சிகரங்களை யுடையது; காரணக்குறி. பரத்வாஜன் என்ற வட

மொழிப் பெயர்க்கு - பிரஜைகளைக்காப்பவன் என்று பொருள் கூறுவர்: பரத்-பரிப்பவன். வாஜம்-ஜநம்: அச்சொல், பரத்து வாசவனென விகாரப்பட்டது. வாஸவன் என்னும் வடசொல்லுக்கு - வசுக்களுக்குத் தலைவனென்று பொருள்; வசு-தேவர்களில் ஒரு சாதியார்: செல்வமுமாம்.

தண்டகவனமென்னும் பெயர்க் காரணம்:-சூரியகுலத்தில் மநுசக்கரவர்த்தியினது குமாரனான இக்ஷ்வாகுமகாராசனுடைய மக்கள் நூற்றுவருட் கடைப்பட்டவனும் மூடனும் மூர்க்கனுந் துஷ்டனுமாய்த் தண்டனைக்கு உரியவனென்ற காரணங்கருதி எதிர்கால வுணர்ச்சியையுடைய தந்தையால் தண்டனென்று பெயரிடப்பட்டவனும், தண்டகனென்று வழங்கப்படுபவனுமாகிய ஓர் அரசன், விந்தியமலைக்கும் சைவலமலைக்கும் இடையிலுள்ள நிலத்தைத் தன் ஆட்சிக்கு உரியதாகக்கொண்டு மதுமந்தமென்னும் பட்டணத்தையமைத்து அங்கு அரசாண்டுவருகையில், ஒருநாள் தனதுபுரோகிதரான சுக்கிராசாரியனது ஆச்சிரமத்துட் சென்று அவன் மகளாகிய அரஜையென்பாளைக் காதலித்து வலியக் கற்பழிக்க, பின்பு அதனையுணர்ந்த அந்தப் பார்க்கவன் சினந்து 'ஏழுநாள்களில் அவன் குடும்பத்தோடும் சேனை முதலிய பரிவாரத்தோடும்அழிந்துபோக, அவனது நாடு மண்மழையால் யாதொரு ஜீவஜந்துவுமில்லாமற் பாழாகக் கடவது' என்று சபிக்க, அங்ஙனமே அந்நாடும் அவ்வரசனும் ஏழாநாள் மண்மழையால் அழிந்துபோய்விட, அவ்விடம் பின்பு காடாகித் தண்டகாரணியமென வழங்கியது என்பது. பின்பு நாளடைவில் பற்பல இருடிகள் வந்து அவ்வனத்திற் குடியேறினரென்க. பி-ம்:—[1] உவாசனை. [2] பரத்துவாசனது.()

182.—பரத்துவாசமுனிவன் இராமனை எதிர்கொள்ளுதல்.

மின்னை நோக்கியவ் வீரனீ தியம்பிடும் வேலை
தன்னை [1]நேரிலா முனிவர னுணர்ந்துதன் னகத்தின்
என்னை யாளுடை நாயக னெய்தின னென்னாத்
துன்னு மாதவர் சூழ்தர வெதிர்கொள்வான் [2]றொடர்ந்தான்.

(இ-ள்.) சீதையைப்பார்த்து அந்த வீரனாகிய இராமபிரான் இவ்வாறு கூறிவருகிறபொழுது—, தன்னை ஒப்பவரைப்பெறாத [தனக்குத்தானே சமானனான] இருடிச்சிரேஷ்டனாகியபரத்துவாச முனிவன்,—(இராமபிரான் எழுந்தருள்வதை) அறிந்து, தானிருக்கிற இடத்தில் என்னையாட்கொண்ட கடவுளான ஸ்ரீராமபிரான் வந்தருளுகின்றானென்று மனமகிழ்ச்சி கொண்டு, (அந்த எம்பெருமானை) எதிர்கொண்டு உபசரிக்கும்பொருட்டு நெருங்கிய பெரிய இருடிகள் (தன்னைச்) சூழ்ந்துவரச் சென்றான்; (எ-று.)—பி-ம்:—[1] நோக்கிய. [2] துணிந்தான். (4102)

183 —இராமன் பரத்துவாசனைக் காணுதல்.

ஆத பத்திரங் குண்டிகை யொருகையி னணைத்துப்
போத முற்றிய தண்டொரு கையினிற் பொலிய

மாத வப்பய னுருவுகொண் டெதிர்வரு மாபோல்
நீதி வித்தக னடந்தமை நோக்கின னெடியோன்.

(இ - ள்.) குடையையும் கமண்டலமென்னும் ஜலபாத்திரத்தையும் ஒருகையாற் பிடித்துக்கொண்டு, மற்றொருகையில்தண்டம் விளங்க, தத்துவஞானம்நிறைந்த நீதிநெறியையுடைய சிறந்த இருடியான பரத்துவாசன், பெருந்தவத்தின்பயன் இருடிவடிவு கொண்டு (தன்) எதிரில் வருவதுபோல வந்தமையை, பெருமை மிக்க இராமன் கண்டான்; (எ - று.)

ஆதபத்ரம் - வடசொல்; வெயிலினின்று காப்பது எனக் காரணப் பொருள்படும். ''நூலே கரகம் முக்கோல் மணையே,ஆயுங் காலை அந்தணர்க்கு உரிய'' என்ற தொல்காப்பியத்து மரபியற் சூத்திரமும். 'ஆயுங்காலை' என்றதனாற் குடையுஞ் செருப்பும் முதலாயினவும் ஒப்பன அறிந்துகொள்க' என்ற அதன் விசேடவுரையும் இங்கு உணரத்தக்கன. (4103)

184.—பரத்துவாசமுனிவனது ஆச்சிரமத்திற் புஷ்பகம் இறங்குமாறு இராமன் கருதுதல்.

எட்ப கத்தினை யளவையுங் கருணையோ [1]டிசைந்த
நட்ப கத்திலா வரக்கரை நருக்கிமா மேரு
விட்ப கத்துறை கோளரி யெனப்பொலி வீரன்
புட்ப கத்தினை வதிகென நினைந்தனன் புவியில்.

(இ - ள்.) தயையோடுகூடிய சிநேகத்தன்மை மிகச்சிறிதளவேனும் மனத்திலில்லாத இராக்கதர்களை(த் தனது) மனம் முறிந்ததனாற் கொன்று பெரியமேருமலையினது குகையினுள்ளேவசிக்கிற வலிய ஆண்சிங்கம்போல் விளங்குகின்ற (மகா) வீரனான இராமபிரான், புஷ்பகவிமானம் (அங்குத்) தரையில் தங்கும்படி நினைத்தான்; (எ - று.)

கருணாநிதியாகிய இராமபிரானது மனமும்நோம்படி பலவகைத் தீங்குகளைச் செய்ததனால், அவ்வரக்கர்களை இராமபிரான் கொன்றனனென்பார், 'எட்பக நருக்கி' என்றார்: எண்பக-மனம்முறிந்ததனால். மேருமலையின் குகையிலுள்ள ஆண்சிங்கம், விமானத்தில்நடுவில் வீற்றிருக்கின்ற இராமனுக்கு உவமை; இதனால், இராமனாற் கொல்லப்பட்ட அரக்கர்.சிங்கத்தாற் கொல்லப்பட்ட யானைகட்கு ஒப்பாவரென்ற உவமை தொனிக்கும். விட்பு - மலையிற் பிளப்பாயுள்ள இடம். அகம்-மனமும், இடமும். பி-ம்:—[1] இயைந்த. இதன் பின் சிலபிரதியிற் காணப்படும் பாடல்கள் வருமாறு:—

1. என்று மன்னவன் பற்பல புதுமையும் யாவும்
மன்ற லங்குழற் சனகிக்குக் காட்டினன் மகிழ்ந்து
குன்று துன்றிய நெறிபயிற் குடதிசைச் செவ்வே
சென்று கங்கையின் றிருநதித் தென்கரை சேர்ந்தான்.

2, *ஆர்த்து விண்ணவ ராடின ராடகத் தேரும்
பேர்த்த போதினி னிலமிசை யணுகு றப் பெரியோர்க்கு
ஆர்த்த மாகிய வடற்கரு மலையென நடந்து
தீர்த்த மாகிய கங்கையின் றென்கரை சேர்ந்தார்.

3. பாக மங்கையொ டமர்ந்தவன் பயில்வுறு கங்கை
ஆகு மீதென வறநெறி வழுவுறு வலங்கல்
மேக வண்ணனுந் துணைவரும் வியந்துட னுடித்
தாக நீங்கின ரவ்விடைத் தேவருஞ் சார்ந்தார்.

"ஆண்டுபத்து" (142) என்றபாடலில் மீட்சிப்படலம்தொடங்கும் பிரதியொன்றில் அப்படலம் இங்குமுடிய, மேல் **பரத்துவாசப் படலம்** தொடங்குகின்றது.

‡இறுத்த தேரினை யிருடிக ளெவரும்வந் தெய்தி
வெறித்து மாய்முடி வேதமெய்ப் பொருளினை வியவாப்
புறத்த தாமுயிர் பெற்றன னெனவகம் பொங்கத்
திறத்தி ராமன்பால் திருமுனி யவனும்வந் துற்றான். (4104)

185.—இராமன் பரத்துவாச முனிவனை வணங்குதல்.

உன்னு மாத்திரத் துலகினை யெடுத்தும்ப ரோங்கும்
பொன்னி னுடு[1]வந் திழிந்தெனப் புட்பகந் தாழ
என்னை யாளுடை நாயகன் வல்லையி னெதிர்போய்ப்
பன்னு[2]மாமறைத் தபோ தனன் றாண்மிசைப் பணிந்தான்.

(இ-ள்.) (இராமபிரான்) நினைத்தவளவில்,—புட்பகம்உலகத்திலுள்ள சனங்களை எடுத்துக்கொண்டு ஆகாயத்தில் உயர்ந்து செல்லுகிற பொன்மயமான தேவலோகம் வந்து இறங்கினாற்போல(த் தரையில்) இறங்க,—இராமபிரான், விரைவாக எதிரிற்சென்று, இடைவிடாது ஓதுகின்ற சிறந்த வேதங்களை யுணர்ந்தவனை பரத்துவாசமுனிவனது பாதங்களில் விழுந்து வணங்கினான்;

பொன்மயமான புட்பகம் பூலோகத்தவரை எடுத்துக்கொண்டு ஆகாயவழியாகச் சென்றதை, பொன்னுலகம் பூலோகத்திலுள்ளாரைத் தூக்கிக்கொண்டு சென்றதை யொக்கு மென்று குறித்தார். தபோதநன்-தவத்தையே தனமாகக்கொண்டவன். **பி-ம்:—** [1]வந்துளது. [2]நான்மறை. (4105)

---

*ஒருபிரதியில் இந்தப்பாடற்குப் பிரதியாக வேறொருபாடல் காணப்படுகின்றது வருமாறு:—

மான மானமீப் போனது வடதிசை வருவது
ஆன காலையி லறிவனு மாயிழை யறியச்
சேனை யோர்திறல் சேதுவின் பெருமையுஞ் செப்பத்
தான மாகிய தீர்த்தமாந் திருநதி சார்ந்தார்.

‡இந்தப்பாடல் இரண்டு பிரதியில்தான் காணப்பட்டது.

186.—பரத்துவாசன் இராமனைத்தழுவி ஆனந்தங் கொள்ளுதல்.

அடியின் வீழ்தலு மெடுத்துநல் லாசியோ டணைத்து
முடியை[1]மோயின [2]னின்றுழி முளரியங் கண்ணன்
சடில [3]நீடுக ளொழிதரத் தனதுகண் ணருவி
நெடிய [4]காதலங் [5]கலசம [6]தாட்டின னெடியோன்.

(இ-ள்.) (இராமபிரான் தனது) பாதத்தில் விழுந்துவணங்கிய வுடனே, பெருமைமிக்கவனான பரத்துவாசன்,—(அவனை)எடுத்துச் சிறந்த ஆசீர்வாதத்தோடு கட்டித்தழுவி உச்சிமோந்து நின்ற பொழுது,—தாமரைமலர்போன்ற அழகியகண்களையுடையவனான இராமபிரானது சடைக்கற்றையிலுள்ள மிக்கபுழுதிகள்நீங்கும்படி (அவனிடத்துள்ள) மிக்க அன்பினாலுண்டாகிய தனதுகண்ணீராகிய அழகிய கலசதீர்த்தத்தினால் நீராட்டினான்; (எ-று.)-பி-ம்:—[1]மோந்துடல். [2]நின்றனன், நின்றுவிழ். [3]நீர்கிளர்ந்திழிதரத், நீர்கழிந்திழிதரத். [4]காதலின். [5]கலசநீர். [6]ஆடினன். (4106)

187.—சீதையும் இலக்குமணனும் முனிவனை வணங்க, அவன் மகிழ்தல்

[1]கருகும் வார்[2]குழற் சனகியோ டிளவல்கை தொழுதே
அருகு [3]சார்தர வருந்தவ னாசிகள் வழங்கி
உருகு [4]காதலி னொழுகுகண் ணீரின னுவகை
பருகு மாரமிழ் தொத்துளங் களித்தனன் பரிவால்.

(இ-ள்.) கறுத்த நீண்ட கூந்தலையுடைய சீதையும் இலக்குமணனும் கைதொழுது (பரத்துவாசனது) சமீபத்தை யடைய, அருமையான தவத்தைச் செய்துள்ளவனான அவ்விருடி (அவ்விருவர்க்கும்) வாழ்த்துக்களைக் கூறி,(அவ்விருவரையும் நோக்குதலால்) மனமுருகுதற்குக்காரணமான அன்பினாற் பெருகுகிற (ஆனந்தக்) கண்ணீரை யுடையவனாய், சந்தோஷத்தோடு பருகுகிற அருமையான தேவாமிருதத்தையொத்து [தேவாமிருதத்தை யுண்டாற்போலச் சந்தோஷத்தையடைந்து] (அவர்களிடத்து உள்ள) அன்பினால் மனம்பூரித்தான்; (எ-று.) -பி-ம்:—[1]கருகு. [2]குழலச். [3]சார்குழி. [4]காதலன். (4107)

188.—சுக்கிரீவன் விபீடணன் முதலியோர் முனிவனை வணங்க, அவன் வாழ்த்திவிட்டு, சீதாராமரைத்தன் னாச்சிரமத்தினுள் அழைந்துச் செல்லுதல்.

வான ரேச னும் வீடணக் குரிசிலு மற்றை
[1]ஏனை வீருந் தொழுந்தொறு [2]மாசிக ளியம்பி
ஞான நாதனைத் திருவொடு நன்மனை கொணர்ந்தான்
ஆன மாதவர் குழாத்தொடு மருமறை [3]புகன்றே.

(இ-ள்.) (பரத்துவாசமுனிவன்) —வாநரராசனாகிய சுக்கிரீவனும் விபீடணனென்னும் இராக்கதராசனும், மற்றுமுள்ள வீரர்களும். (தன்னை) வணங்குந்தோறும் (ஒவ்வொருவர்க்கும்) வாழ்த்துக்களைக்கூறி (ப் பின்பு, தன்னை)ச் சார்ந்த பெரிய முனிவர்கூட்

டத்தோடும் அருமையான வேதங்களை ஓதிக்கொண்டு தத்துவ ஞானத்தினால் அறியப்படுகிற தலைவனான இராமபிரானை இலக்குமியின் அமிசமான சீதையுடனே அழகிய (தனது) பர்ணசாலையில் அழைத்துச் சென்றான்; (எ - று.)

'மற்றை', 'ஏனை' என இரண்டுகூறினது, இவ்விருவரைச் சார்ந்த வானரவீரரையும் இராக்கதவீரரையுந் தனித்தனி குறித்தற்கு எனினுமாம். பி-ம்:—[1] ஏனையோர்களும். [2] ஆசிகள்பகர்ந்தே. [3] பகர்ந்தே. (4108)

189.—முனிவன் இராமனை யுபசரித்து ஒன்றுகூறத் தொடங்குதல்.

பன்ன சாலையுட் புகுந்துநீ டருச்சனை பலவும
சொன்ன நீதியிற் புரிந்தபின் சூரியன் மருமான்
தன்னை நோக்கினன் பன்முறை கண்கணீர் ததும்பப்
பின்னர் [1] வாசக [2] முரைத்தனன் தபோதரிற் பெரியோன்.

(இ - ள்.) இருடிகளுட்சிறந்தவனாகிய பரத்துவாசமுனிவன், (தனது) பர்ணசாலையினுள்ளேசென்று (இராமபிரானுக்குச்)சிறந்த உபசாரங்கள் பலவற்றையும் சாஸ்திரங்களிற் கூறிய முறைமைப்படிசெய்த பிறகு, சூரிய வமிசத்திற் பிறந்தவனாகிய அவ்விராமனை (ஆனந்தக்) கண்ணீர் பெருகப் பலதரம் பார்த்தவனாகிப் பின்பு ஒரு வார்த்தை சொல்பவனானான்; (எ-று.)—அதனை அடுத்த கவிகளிற் காண்க.

பன்னசாலை=பர்ணசாலை: தழைக்குடிசை. மருமான்-வழித்தோன்றல். பன்முறை நோக்கினது, அன்பு பற்றி. தபோதர்= தபோதநர்; விகாரம். அன்றி, தபோதரர் என்பதன் திரிபுமாம். பி-ம்:—[1] காரியம். [2] உணர்த்தினன். (4109)

190.—இதுவும் அடுத்த கவியும்-பரத்துவாசன் இராமனது சிறப்பைக் கூறுதலைத் தெரிவிக்கும்.

முனிவர் [1] வானவர் மூவுல கத்துளோர் யாரும்
துனியு முந்திடத் [2] துயர்தரு கொடுமனத் தொழிலோர்
நனிம டிந்திட வலகைகள் நாடக நடிப்பக்
குனியும் வார்சிலைக் குரிசிலே யென்னினிக் குணிப்பாம்.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) முனிவர்களும் தேவர்களும் (இன்னும்) மூவுலகத்தினுள்ளவர் யாவரும் அச்சங்கொண்டுவருந்தும்படி துன்பங்களைச் செய்த கொடிய மனத்தையும் கொடுந்தொழிலையுமுடைய அரக்கர்கள் நன்றாக [அடியோடு] இறந்துபடவும், (போர்க்களத்திற்)பேய்கள் கூத்தாடவும், வளைந்த நீண்ட (கோதண்டமென்னும்) வில்லையேந்திய வீரனே! (எங்கள் எண்ணங்கள் யாவும் நிறைவேறியதனால் நாங்கள்) இப்பொழுது யாது சொல்வோம்? [சொல்வதற்கு ஒன்றுமில்லை யன்றோ]? (எ - று.)

'மூவுலகத்துளோர்' என்பதில் யாவரும் அடங்கவும், 'முனிவர் வானவர்' என்று தனியே யெடுத்துக்கூறினது, அவர்கட்கு உள்ள சிறப்புப்பற்றி. பேய்கள் கூத்தாடினது, தமக்குப் போரில் அரக்க ரிறைச்சியாகிய மிக்கவுணவு கிடைத்ததனால். முனிவர்கள் நெடு நாளாய் எதிர்பார்த்திருந்த இராக்கதசங்காரம் நிறைவேறினதனால் பரத்துவாசமுனிவன் 'என்னினிக் குணிப்பாம்' என்றான். 'இனி என் குணிப்பாம்' என்பதற்கு-இங்ஙனம் செயற்கரிய செய்ததனால் (உன்மகிமையை) எங்ஙனம் சொல்லமாட்டுவோம்? எனினுமாம். பி-ம்:—[1]வானுளோர். [2]துயருறுங், துயர்தொடர், துணர்தரு. ()

வேறு.

191. **விராதனுங் கரனு மானும் விறல்கெழு கவந்தன் றானும்**
மராமர மேழும் வாலி மார்பமு மகர நீரும்
இராவண னுரமுங் [1]கும்ப கருணன தேற்றந் தானும்
அராவரும் பகழி யொன்றா லழித்துல களித்தா [2]யைய.

(இ - ள்.) தலைவனே! விராதனையும் கரனையும் மான்வடிவ மெடுத்து வந்த மாரீசனையும் வலிமைமிக்க கவந்தனையும் ஏழு ஆச்சாமரங்களையும் வாலியினது மார்பையும் சுறாமீன்களையுடைய கடலையும் கும்பகர்ணனது சிறப்புக்களையும் இராவணனது மார்பையும் அராவிச்செய்யப்பட்ட அருமையான ஒப்பற்ற ஆயுதத்தா லழித்து, (நீ) எல்லாவுலகங்களையுங் காத்தருளினாய்; (எ - று.)— பி-ம்:—[1]கும்பகர்ணன் றன்றோற்றந். [2]என்றான். ஒருபிரதியில் இச்செய்யுளில்லை. சில ஏட்டுப்பிரதிகளில் 192-முதல் 201-வரையி லுமுள்ள செய்யுள்கள் காணப்படாமல், வேறேசெய்யுட்கள் காணப்படுகின்றன: அவை வருமாறு:—

1. *வேறு. இந்த வாசக [1]மியம்பினன் பின்னரு மிசைப்பான்
எந்தை நீ[2]யின்றிங் கிருந்துள வருத்தமும் போக்கிச்
சிந்தை யன்புசெய் திருநகர் நாளைநீ சேர்கென்று
அந்த மில்பரத் துவன்சொல [3]வவ்விடத் தடைந்தான்.

பி-ம்:—[1]இயம்பிய. [2]இவணிருந்துநின். [3]அவனிடத்து.

2. அடைந்த மாமுனித் தலைவனை யருச்சனை [1]செய்து
மிடைந்த சேனையாம் பெருங்கடல் சூழ்தர மேனாள்
கடைந்த பாற்கடல் கண்டுயில் நீங்கிவா னவர்கள்
[2]படிந்து போற்றிட விருந்தெனப் பரிவுட னிருந்தான்.

பி-ம்:—[1]ஆற்றி. [2]பரிந்து. இருந்தனன் பரமன்.

---

* சிலபிரதிகளில் இங்குக்காட்டிய பாடல்களுள் முதலிரண்டே யிருக்க, வேறுசிலபிரதிகளில் பலபாடல்கள் காணப்படுகின்றன. முதலிரண்டு செய்யுட்களைக்கொண்ட சிலபிரதிகளில் பரத்துவாசன் விருந்தளித்தல் முதலியவற்றைத் தெரிவிக்கும் பாடல்கள் 261-ஆம் செய்யுளின் பின்னும் ஒரு பிரதியில் 311-ஆம் செய்யுளின் பின்னும் உள்ளன: அவை ஆங்காங்குக் காட்டப்படும்.

3. **வேறு.** இருந்தபோ திராமன் றன்னை யிருடியு மியம்பு மெந்தா
பெருந்திற லிலங்கை தன்னை யெங்ஙனம் பெரியோய் நீயே [ய்
வருந்தினை குரங்கு கொண்டு மாயவல் லரக்கன் றன்னை
[1]திருந்தவப் போரின் வென்று [2]மீண்டவா செப்பு கென்றான்.

பி-ம்:—[1]திருந்திய. [2]மீண்டது.

4. இராகவ னவனை நோக்கி யிறந்தவா ளரக்க ரெல்லாம்
[1]அராவின்மா ருதியு [2]மேன்மை வீடணன் றானு [3]மாங்கே [டு
குராவரு[ஞ்] [4]சேனை யெல்லாங் கொன்றிடக் கொற்றங்கொண்
விராவியே மீண்ட [5]தென்று மீளவும் [6]பகர லுற்றான்.

பி-ம்:—[1]விராவின். [2]இந்த. [3]மிக்க. [4]படையை. [5]வென்றி. [6]விளம்பும் வீரன்.

5. தந்திர முற்ற சேனை தரைப்பட மறுப்ப டாமல்
அந்தர முற்ற [1]போதங் கருமருந் தனுமன் தந்தான்
மந்திர வித்தே யெம்பி வரிசிலை வளைத்த போரில்
இந்திர சித்தும் பட்டா னிலங்கையு மழிந்த [2]தன்றே.

பி - ம்:—[1]போதே. [2]என்னே.

6. *கறங்குகால் செல்லா வெய்யக்கதிரவ னொளியுங் காணு
மறம்புகா நகரந் தன்னில் வானவர் புகுதல் வம்பே
திறம்புகா தவிரு நாளுஞ் சிதைவிலா தேவருங் காலை
அறம்புகா மறத்தி னாலே யழிந்ததப் பதியு மையா.

7. மறக்கண்வெஞ் சினத்தின் வன்கண் வஞ்சக வரக்கர் யாரும்
இறக்கமற் றிறந்த தெல்லா மெம்பித னீட்டி னெந்தாய்
பிறப்புமே லுளதோ சூழ்ந்த பெருந்திசை பேரிற் பேராத்
துறக்கத்தோ யாதோ பெற்றா ரறிந்தருள் சுருதி நூலோய்.

8. **வேறு.** என்ற வாசக மிருந்தவன் கேட்டிக விராமன்
தன்று ணைப்பெருந் தம்பியைத் தழுவினீ தக்கோய்
வென்று மீண்டிலை யாயினவ் விண்ணவர் முனிவர்
பொன்று மாறன்றி யாருயிர் [1]புரப்பதொன் றுளதோ.

பி - ம்:—[1]பொறுப்பதுபொருளோ.

9. மாத வன்சொன்ன வாய்மையை மனங் [1]கொண்டு மறையோ
பாத [2]முந்துற வணங்கிமா முனிவனைப் பாரா [ன்
ஏதும் யான்செய்த தில்லையவ் [3]விலங்கைமேல் வெகுண்டு
வேத நாயகன் [4]புருவத்தை நெரித்தனன் விளிந்தார்.

பி - ம்:—[1]கொண்ட. [2]பங்கயம். [3]இலங்கையையிகலில். [4]வெகுளியாலிராக்கதர்.

---

* இதுவும் அடுத்த செய்யுளும் ஒருபிரதியில்தான் காணப் பட்டன.

10. அன்றி யும்பிறி துள்ளதொன் [1] றுரைசெய்வ னதுவத்
துன்று தார்புனை மாருதி பெரும்புயத் துணையால்
வென்றி கொண்டனம் யாங்கண்மேல் விளம்புவ தெவனோ
என்றி யம்பின னிருடிக்கு மிளவலு மியைந்தே.

பி-ம்:—[1] அந்தணர்க்கரசே.

11. அனும னென்பவன் வாண்முக நோக்கின னவனும்
புனித மாதவன் றனைத்தொழாப் புண்ணியப் பொருளாம்
தனுவ லங்கொண்ட தாமரைக் கண்ணவன் தனயன்
எனும தென்கோலா யாவர்க்குந் தந்தைநீ யென்றான்.

12. அங்க வன்சொல வனுமனு முரைசெய்வா னருணப்
பங்க யந்தனிற் சீதையாம் பராபரை யாட்டி
சங்க ரனயன் றன்னையுந் தரணியீ ரேழும்
தங்கு [1] பொன்வயிற் றன்னை தன் தன்மையை நிகழ்த்தும்.

பி-ம்:—[1] தன்.

13. இராக வன்பெருங் குலத்தையு மிப்பெருஞ் செல்வத்
தராத லம்புகழ் சனகன் றன் மரபையுந் தந்தென்
[1] பராப ரத்தினைப் [2] பங்கயத் தமுதெனப் பணித்தாள்
புராத னர்க்கர சேயென மாருதி புகன்றான்.

பி-ம்:—[1] பராபவத்தினை. [2] ப்யங்கயத்தமுதெனப்பணித்தான்.

14. அன்ன வாசகங் கேட்டலு மந்தணர் கோவும்
என்ன வாசகஞ் சீதைக்கின் றியம்புவதி [1] யாமென்று
[2] ஒன்றும் வாசக முரைத்தில னுள்ளன்பு குளிர
அன்னை வாசவன் திருவினைத் தந்ததென் றறைந்தான்.

பி-ம்:—[1] யாதென்று. [2] உன்னி.

15. பண் [1] கு லாவிய சுக்கிரீ வன்றனைப் [2] பாராக்
கண்கு லாமனங் களித்தவன் கழல்மிசைப் பணிந்து
மண்கு லாம்புகழ் வீடணன் [3] நீலனே முதலாம்
எண்கின் வேந்தனு மழித்தன ரிலங்கையை யென்றான்.

பி-ம்:—[1] குலாமியல். [2] பார்ப்பக். [3] அங்கதனோடு.

16. வேறு. என்றவ னியம்பக் கேட்டங் கிருந்தமா தவனு மிந்த
[1] வென்றியாந் தானைக் கெல்லாம் [2] விருந்திடுஞ் சயன மேவிக்
குன்றென வருக வென்று கூறலு மிமையோர் [3] நாட்டில்
அன்றினி யரம்பை மார்க [4] ளமுதெடுத் தாங்கு வந்தார்.

பி-ம்:—[1] வென்றியந். [2] விருந்தொடுசயனமற்றும். [3] கூட்டத்து
-ஒன்றியவானமாதர். [4] அமுதுகொண்டுற்றாரன்றே.

17. வேறு. பான நெய்யுட னுனமுஞ் சாந்தமும் பல்பூண்
ஏனை வானவர் மகளிர்க ளேந்திவந் திழிந்தார்
ஆன மெய்ப்படை தம்முடைப் போகத்து ளழுந்த
ஆன கற்பினு ளுடனெழுந் திராமனு மறைவான்.

18. முனிவன் வாண்முக [1]நோக்கிமெய் முழுதுணர் முனியே
அனும [2]னுண்ட கை யளித்தபே ருதவியின் றெம்மால்
நினைய வும்முரை நிரப்பவு [3]மரிகினி நீதி
புனித வுண்டியெம் முடனெனப் புரவலன் புகன்றான்.

பி-ம்:—[1]நோக்கியே. [2]என்றவன். [3]அரிததுநிலையால்.

19. என்ற வாசகங் [1]கேட்டலு மிருந்தவத் தெவரும்
[2]நன்று நாயகன் கருணையென் றுவகையி னவிலாத்
துன்று தாரவன் பாதுகம் தொழு[3]தருந் தொல்லோய்
ஒன்று[4]கேளென வுவகையின் மாருதி யுரைக்கும்.

பி-ம்:—[1]கேட்டந்தவிருந்தவன் முதலோர். [2]நன்றுநின் கருணை யென்றியாவரும்புகலத். [3]இனித்தோன்றல். [4]கூறுவன்கேளென.

20. [1]செய்த மாதவ முடைமையி னினக்கன்பு சிறந்து
பொய்யில் சாதனம் பூண்டனன்[2]புண்டரீ கக்கண்
ஐய நின்[3]பெருங் கருணைதா னடியனேற் கமையும்
[4]உய்யு மாறிகல் வேறுள தோவென்று மொழிந்தான்.

பி-ம்:—[1]செய்யும். [2]புண்டரிகத்தின். [3]பேரருளுண்டியென் றிணையடியமையும். [4]உய்யுமாறெனக்காணை யென்றடிதொழ வுவந் தான்.

21. [1]திருந்து மாதவன் செய்ததோர் பூசனை செயவாண்டு
[2]இருந்த போதுதன் திருவுளத் திராகவ னினைந்தான்
பெர்ருந்த மாமுடி புனைகெனப் பொருந்துறுன் போத
வருந்து தம்பிக்கு வருவன்யா னென்பதோர் [3]வாக்கை.

பி ம்:—[1]பரிந்தமாதவப் பரத்துவன் பூசனை பகர்ந்தாண்டு. [2]இருந்த காலையில்......எண்ணும். [3]வார்த்தை. (4111)

192.—'இன்று எம்விருந்தாளியாக இருக்க' என்று பரத்துவாசன் இராமனை வேண்டுதல்.

சித்திர கூடந் தீர்ந்து தென்றிசைத் தீமை தீர்த்திட்டு
இத்திசை யடைந்தெம் மில்லி னிறுத்தமை யிறுதி யாக
வித்தக [1]மறந்தி லேன்யான் விருந்தினை யாகி யெம்மோடு
இத்தின மிருத்தி யென்றுன் மறைகளி னிறுதி கண்டான்.

(இ-ள்.) 'ஞானசொருபியே! (நீ), (முன்னே)சித்திரகூடத்தை நீங்கித் (தண்டகாரணியத்தைநோக்கிச் சென்றதுமுதல்) தெற்குத் திக்கில் (விராதன்முதல் இராவணன் இறுதியாகவுள்ள இராக்க தர்களால் உண்டான) தீங்குகளை நீக்கி(த்திரும்பி) இந்தவடக்குத்

திக்கையடைந்து எமது ஆச்சிரமத்தில் தங்கினது வரையில் (நடந்த வரலாற்றைத்தத்துவஞானத்தினால் உணர்ந்த)யான்,மறந்திலேன்: (நீ)விருந்தாளியாகஎம்முடன் இன்றைக்கு மாத்திரம்இருப்பாயாக' என்று (இராமனை நோக்கி) வேண்டினான்: (யாவனெனில்),-வேதங்களின் முடிவை [வேதாந்தத்தை] யறிந்தவனான பரத்துவாசமுனிவன்; (எ-று.) பி-ம்:—[1]மறந்திலேம் யாம். (4112)

193.—பரத்துவாசன் இராமனிடம் பரதனியல்பைக் கூறுவேனெனல்.

கரதல மதனி னீடு கார்முகம் வளைய வாங்கிச்
[1]சரதவா னவர்கள் துன்பந் [2]தணித்துல கங்கள் தாங்கும்
மரகத மேனிச் செங்கண் வள்ளலே வழுவா நீதிப்
பரதன தியல்பு [3]மின்றே பணிக்குவென் [4]கேட்டி யென்றான்.

(இ-ள்.) (பின்னும் பரத்துவாசன் இராமனை நோக்கி), 'கையினால் நீண்டவில்லை வளையும்படிசெய்து,சத்தியத்தையுடைய தேவர்களது துன்பத்தைத் தீர்த்து [பகைவர்களான அரக்கர்களையொழித்து] உலகங்களைக் காப்பாற்றின மரகதரத்தினம் போன்ற திருமேனிநிறத்தையும் சிவந்தகண்களையுமுடைய வரையாதருளுமியல்புள்ளவனே! தவறாதநீதியை யுடைய பரதனது தன்மைகளையும் இப்பொழுதே சொல்வேன்: கேட்டி' என்றான்; (எ-று.)—அத்தன்மையை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க. பி-ம்:—[1]சரதம். [2]அளித்துலகந்தாங்கும். [3]இன்னே. [4]கேண்மின். (4113)

வேறு.

194 —இதுவும் அடுத்த கவியும் - பரத்துவாசன் பரதன் தன்மையை இராமனுக்கு எடுத்துக்கூறலைத் தெரிவிக்கும்.

வெயர்த்த மேனியன் விழிபொழி மழையன்மூ வினையைச்
செயிர்த்த சிந்தையன் தெருமர லுழந்துழந் [1]தழிவான்
அயர்த்து நோக்கினுந் தென்திசை யன்றிவே றறியான்
பயந்த துன்பமே யுருவுகொண் டென்னலாம் படியான்.

(இ-ள்.) (பரதன்), வேர்க்கின்ற உடம்பையுடையவன்: கண்களினின்று வழிகின்ற நீர்ப்பெருக்கை யுடையவன்:மூத்த[பழைய] ஊழ்வினையை வெறுத்த மனமுடையவன்: மனக்கலக்கத்தை அநுபவித்து அநுபவித்து வருந்துவான்: மறந்து (எதையாவது) நோக்கினாலும் (நீ எழுந்தருளியிருக்கும்) தெற்குத்திக்கையேயன்றி வேறொன்றையும் பார்ப்பவனல்லன்; அச்சத்தோடுகூடிய துன்பமே ஓருருவுகொண்டதென்று சொல்லும்படியான வடிவமுடையவன்;

மூவினை-மூத்தவினை யென வினைத்தொகை. மூன்றாகிய வினையெனப் பண்புத்தொகையாக்கி, மனம் மொழி மெய் என்னுந் திரிகரணங்களின் செயலையும் எனினுமாம். செய்தல் செய்வித்தல் உடன்படல் என்னும் புண்ணியபாவவழக்கம் மூன்றைக் கொள்ளுதலும் ஒன்று. நோக்கினும் என்ற சொல்லாற்றலால், அவன்

துன்பமிகுதியால் ஒன்றையுங் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை யென்பது பெறப்படும். பரதனுக்குப் பயம்,இராமன் தன்சொற்படி பதினன்குவருஷங் கழித்ததும் வருவனே வாரானே என்றஐயத்தி னலாகியது. பிறவற்றுக்குங் காரணம் இதுவே. பி - ம் —[1] இழி வான். (4114)

195. இந்தி யங்களைந் திநுங்கனி காய்நுகர்ந் திவுளிப்
பந்தி [1]வந்தபுற் பாயலான் பழம்பதி புகாது
நந்தி யம்பதி யிருந்தனன் பரதனின் னுமம்
அந்தி யும்பக [2]லதனினு மறப்பில னுகி.

(இ-ள்.) பரதன்,—ஐம்பொறிகளையும் (அதனதன்வழியே செல்லவொட்டாது) தடுத்து, (நல்லவுணவுகொள்ளாமல்) மிக்க காய்கனிகளையே உண்டு, குதிரைகளின் வரிசை (மேய்தற்கு)ஏற்ற புல்லையே படுக்கையாகவுடையவன்; உனது பெயரையே இரவிலும் பகலிலும் மறவாமல் (ஜபித்துக்கொண்டு சூரியவமிசத்தார்க்குப்) பழைய இராசதானியான அயோத்தியில் நுழையாமல் (அதனை யடுத்த) நந்திக்கிராமத்தில் இருக்கிருன்; (எ-று.) பி-ம்:—[1] ஏய்ந்த. [2] தன்னினும். (4115)

வேறு.

196.—பரத்துவாசமுனிவன் இராமனுக்கு முகமன் கூறுதல்.

என்றுரைத் தரக்கர் வேந்த னிருபதென் றுரைக்கு நீலக்
குன்றுரைத் தனைய தோளுங் குலவரைக் குவடு மேய்க்கும்
[1]என்றுரைத் தனைய மௌலித் தலைபத்து மிறுத்த வீர
நின்றனைப் பிரிந்த [2]துண்டே யானென நிகழ்த்தி னுனல்.

(இ-ள்.) என்று உரைத்து, (மீண்டும்),—'ராக்ஷசராசனுன இராவணனது இருபதென்று சொல்லப்பட்ட நீலநிறமுள்ள மலைகளை உவமைகூறத்தக்க தோள்களையும், குலபர்வதங்களின் சிகரங்களையும் ஒத்திருக்குமென்று உவமைகூறினல் அதற்கு ஏற்ற கிரீடம் அணிந்த பத்துத் தலைகளையும் அறுத்தொழித்த வீரனே! யான் உன்னைப் பிரிந்தது உண்டோ? [எப்பொழுதும் மனத்தில் உன்னையே தியானித்துள்ளதனுற் பிரிந்தேனல்லேன்]' என்றுகூறினன், (பரத்துவாசன்); (எ-று.)

இராவணனது தலைகளுக்குக் குலபருவதமும்,அவற்றிலணிந்த கிரீடங்களுக்கு அம்மலைகளின் சிகரங்களும் ஏற்ற உவமையாம். கைலாசம், இமயம், மந்தரம், விந்தியம், நிஷதம்,ஏமகூடம்,நீலகிரி, கந்தமாதனம் என்ற இந்த எட்டும் குலவரைகளாம்.பி-ம்—[1] மின் றிரைத்தனைய. [2] உண்டோ. (4116)

197.—இராமன் பரத்துவாசனைநோக்கிக் கூறிய விநயவார்த்தை.

[1]மின்னையே [2]யுழையி னுனும் விரைமலர்த் தவிசி னுனும்
பின்னையே புகழ்தற் கொத்த நீதிமா தவத்தின் மிக்கோய்

உன்னையே வணங்கி யுன்றனருள் சுமந் துயர்ந்தேன் மற்றிங்கு
என்னையே பொருவு மைந்தன் யானலா தில்லை யென்றான்.

(இ - ள்.) 'மின்னலைப்போன்ற உமாதேவியை அழகிய(தனது இடப்) பாகத்தி லுடையவனான சிவபெருமானும் வாசனையுள்ள தாமரைமலரை இருப்பிடமாகக்கொண்ட பிரமனும் உன்னையே துதிப்பதற்குத்தகுந்த முறைமையையுடைய சிறந்த தவத்தில் உயர்ந்தவனே! உன்னை வணங்கி (நான் அனைவரினுஞ்சிறந்தவனை) உனது அருளை மிகுதியாகப்பெற்று மேன்மையடைந்தேன்; (ஆதலால்), என்னையொத்த மைந்தன் யானன்றி வேறு எவரும் இவ்வுலகத்தில் இல்லை' என்று (இராமன் பரத்துவாசனை நோக்கிக்) கூறினான்; (எ - று.)

'மின்னையேருமையினான்' என்பதற்கு - மின்னலைப்போல விளங்குகிற மானை இடக்கையிற் கொண்டவனென்றும் கூறலாம். மான்-தாருகவன முனிவரால் ஏவப்பட்டுத் தன்னைக்கொல்ல வந்தது. பி - ம்:—[1]பின்னையேர். [2]மழுவினானும். [3]என்னையே. (4117)

198, 199.—இரண்டுகவிகள்-ஒருதொடர்; பரத்துவாச முனிவன் இராமனை 'வேண்டிய வரம் கேள்' என்றலையும், இராமன் கேட்டபடி முனிவன் வரந்தருதலையும் கூறும்.

அவ்வுரை புகலக் கேட்ட வறிவனு மருளி னோக்கி
வெவ்வரம் பொருத [1]வேலோய் [2]விளம்புகேன் கேட்டி வேண்
எவ்வர மெனினுந் தந்தே னியம்புதி [3]யெனலு மையன் [டிற்று
கவ்வையின் றாகி வென்றிக் கவிக்குலம் [4]பெற்று வாழ்க.

அரியினஞ் சென்ற சென்ற வடவிக ளனைத்தும் வானம்
சொரிதரு பருவம் [5]போன்று கிழங்கொடு [6]கனிகாய் துன்றி
விரிபுனல் செழுந்தேன் மிக்கு [7]விளங்குகென் றியம்பு கென்
புரியுமா தவனு மஃதே பாலகெனப் புகன்றிட் டானால். [றான்

(இ - ள்.) (198)(இராமபிரான்) அவ்வார்த்தை சொல்லக் கேட்ட தத்துவஞானமுடையனான பரத்துவாசமுனிவனும், (அவனை) அன்புடன் பார்த்து, 'கொடிய அரத்தினால் அராவிக்கூர் செய்யப்பட்ட வேலையுடையவனே! (ஒன்று) கூறுவேன்: (நீ அதனைக்) கேட்பாயாக: (அதுயாதெனில்), நீ விரும்பியது எந்தவரமாயினும் (அதனை உனக்கு உண்மையாகத்) தந்தேன்: (உன் விருப்பத்தைச்) சொல்வாயாக' என்று கூறினவுடனே, அவ்விராமபிரான், 'வெற்றிபெற்ற வானரக்கூட்டம் துன்பமில்லாமல் (வேண்டியவற்றைப்) பெற்று வாழக்கடவது: (199) வானரக்கூட்டம் இப்படிப்படி செல்லுகின்ற வனங்களெல்லாம் மழைபொழிகின்ற காலத்தில் (செழித்திருப்பது) போன்று கிழங்குகளும் பழங்களும் காய்களும் நிறையப் பெற்று, மிக்கநீரும் சிறந்த தேனும் நிறையப் பெற்று விளங்கக்கடவன என்று வரங்கொடுப்பாயாக' என்று (பரத்துவாசனை நோக்கி) வேண்டினான்; மிக்க தவத்தைச் செய்பவ

ஞகிய அம்முனிவனும், 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி வரம் அருளினன்; (எ - று.)

இராமபிரான் முன்பு தேவர்களிடத்தும் இப்பொழுது பரத்துவாசனிடத்தும் வாநரங்களைப்பற்றிய ஒருவரத்தையே கேட்டது, அப்பெருமான் குரங்குகளிடத்துச் செய்ந்நன்றி பாராட்டினமையை விளக்கும். பி-ம்:—[1]வேலாய். [2]விரும்பியே. [3]என்ன. [4]வாழ்கவென்ருன். [5]போலக். [6]கனியுந்துன்னி. [7]விளங்கென விளம்புகென்ருன்.

200.—பரத்துவாசமுனிவன் எல்லோர்க்கும் விருந்தளித்தல்.

அருந்தவ னைய நின்னோ டனிகவெஞ் சேனைக் கெல்லாம்
விருந்தினி தமைப்பெ னென்னு விளங்குமுத் தீயி னுப்பண்
புரிந்தொரா குதியை யீந்து புறப்படு மளவிற் போகம்
திருந்திய வான நாடு சேரவந் திறுத்த தன்றே.

(இ-ள்.) அருமையான தவத்தைச் செய்துள்ளவஞன பரத்துவாசமுனிவன், (இராமனை நோக்கி), 'தலைவனே! உனக்கும் அணிவகுப்பையுடைய (உன்னுடைய) விரும்பத்தக்க எல்லாச்சேனைகட்கும் இனிமையாக விருந்துணவு அளிப்பேன்' என்றுகூறி, சொலிக்கின்ற (ஆகவநீயம் கார்ஹபத்யம் தக்ஷிணுக்கினி என்னும்) மூன்று பகுப்பினையுடைய அக்கினியின் நடுவில் ஓர் ஆகுதியை (இஷ்டதேவதையைக்குறித்து) விரும்பிச்செய்து (முடித்து) வெளிவரும்போது, இன்பங்கள் நிறைந்த சுவர்க்கவுலகம் அங்குச் சமீபத்தில் வந்து தங்கியது; (எ - று.)

பரத்துவாசன் இராமனுக்கு விருந்தளிக்கவேண்டித் தேவர்களைக் குறித்து அக்கினியில் ஓமஞ்செய்தபொழுது, அவர்களது அருளால் தேவலோகத்திலுள்ள பலவகைச்சிறப்புக்களும் முனிவனது ஆச்சிரமத்தில் வந்து நிறைந்தன வென்க. வானநாடு - அதிலுள்ள பலவளங்களுக்கு ஆகுபெயர். (4120)

201.—அப்பொழுது இராமன் அநுமானைநோக்கி ஒன்று கூறத்தொடங்கல்.

அரசரே யாதி யாக வடியவ ரந்த மாகக்
கரைசெய லரிய போகந் துய்க்குமா கண்டி ராமற்கு
அரசியல் வழாமை நோக்கி யறுசுவை யமைக்கும் வேலை
விரைசெறி கமலக் கண்ண னனுமனை விளித்துச்[1] சொன்ஞன்.

(இ-ள்.) சுக்கிரீவமகாராசன்முதலாக அடிமைசெய்வோர்வரையிலும் [யாவரும்] (தான் செய்விக்கிற விருந்துபசாரத்திஞல்) அளவுகாணமுடியாத இன்பத்தை அனுபவிக்கும்விதத்தை(ப் பரத்துவாசன்) பார்த்து(ப் பின்பு), இராமபிரானுக்கு அரசவுரிமை தவருதபடி கவனித்து அறுவகைச் சுவையையுடைய உணவுகளை அமைக்கும்போது,—வாசனைமிக்க தாமரை மலர்போன்ற கண்களையுடையவஞன இராமன் அநுமானை அழைத்து (ஒன்று) கூறுபவஞனன்; (எ-று.)—அதனை மேற்கவியிற் காண்க,

அறுசுவை-பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஆறுசுவைகளாவன-கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு. அரசனுன இராமனுக்கு உதவிசெய்ததனுல், சுக்கிரீவன், மகாராஜனெனப்படுவன்; அத்தன்மை தோன்ற, சிறப்பாக 'அரசர்' என்றார்: இதில் 'ராக்ஷசராசனுன விபீடணனும் அடங்குவன். பி-ம்:—[1]சொல்வான். (4121)

வேறு.

202.—இராமன் அநுமானைப் பரதனிடம் அனுப்புதல்.

இன்று [1]நாம் பதி [2]வருதுமுன் மாருதி [3]யீண்டச்
சென்று [4]தீதின்மை செப்பியத்[5]தீயவித் திளையோன்
நின்ற [6]நீர்மையு நினைவுநீ தேர்ந்தெம்மி னேர்தல்
நன்றெ னுவவன் [7]மோதிரங் கைக்கொடு நடந்தான்.

(இ - ள்.) 'அநுமானே! நீ நாம் அயோத்திக்கு வருவதற்கு முன்பே இப்பொழுது விரைவாகச் சென்று, (நந்திக்கிராமத்திலுள்ள பரதனுக்கு எனது) க்ஷேமத்தைக் கூறி, (அவன் மனத்திலுள்ள பயமாகிய) அந்த அக்கினியைத் தணித்து (எனது) தம்பியாகிய அப்பரதன் மேற்கொண்டு நின்ற ஒழுக்கத்தையும் (அவனது) எண்ணத்தையும் ஆராய்ந்தறிந்து, எம்மிடத்து வந்து சேர்தல் நல்லது' என்று கூறி, (அடையாளமாகத் தனது மோதிரத்தைக் கொடுக்க), அவ்வநுமான், அந்தமோதிரத்தைக் கையில் வாங்கிக்கொண்டு சென்றான்; (எ - று.)

இராமன் தான் குறித்தகாலத்தில் வாராவிடின் அக்கினிப்பிரவேசஞ் செய்வேனென்று முன்பு பிரதிஜ்ஞைசெய்திருந்தபடிபரதன் தீமூட்டியிருப்பானென ஊகித்து 'அத்தீயவித்து' என்று கூறியதாகவுங்கொள்ளலாம். இளையோன் நினைவு-தானே அரசாள்வது, இராமன் அரசாள்வது, இராமன்தன் நாட்டில்வாராமலேயிருப்பது ஆகிய இம்மூன்றில் அவனுடைய விருப்பமானது.—பி-ம்:—[1]நம். [2]போகலம், ஏகலம், ஏகுமுன். [3]ஈண்டிச், இன்னே. அன்னே. [4]நம்வரவுரைத்துவெந். [5]தீயையுந்தீர்த்து, தீமையும்விலக்கி. [6]காலையின்வருதுமென்றேயினனெடியோன், காலையின்வருதியென்றேயினனெடியோன். [7]ஆழியும். ஒருபிரதியில் **பரத்துவாசப்படலம்** இதனோடு முடிய, மேல் **பரதனுயிர்வருபடலம்** தொடங்குகின்றது. அந்தப் பிரதியில் குகனைப்பற்றிப் பின்பு காட்டப்படும் செய்யுள்களில்லை, சில பிரதிகளில் **பரத்துவாசனுச்சிரமப்படலம்** இதனோடு முடிய. மேல் **பரதன்விரதப்படலம்** தொடங்குகின்றது. அந்தப் பிரதிகளில் குகன் செய்தியைத்தெரிவிக்கும் பாடல்களுட்படப் **பரதன்விரதப்படலம்** என்று பெயர்பெற, வேறொருபிரதியில், **குகன்விரதப்படலம்** என்று பெயர் பூண்டு ஒருபடலம்தொடங்குகின்றது.

203.—அநுமான் பரதனிடத்துச் செல்லுதல்.

தந்தை வேகமுந் தனதுநா யகன்தனிச் சிலையின்
முந்து சாயகக் கடுமையும் பிற்பட முடுகிச்
சிந்தை பின்வரச் செல்பவன் குகற்குமச் [1]சேயோன்
வந்த வாசகங் [2]கூறிமேல் [3]வான்வழிப் போனான்.

(இ - ள்.) (தனது) தந்தையாகிய வாயுவின்வேகமும் தனது தலைவனான இராமபிரானது ஒப்பற்றவில்லினின்று புறப்படுகிற அம்பின்வேகமும் (தனதுவேகத்துக்கு ஈடாகாமற்) பிற்படும்படி விரைந்து, (தனது) மனமும் பின்னாகும்படி போகின்றவனாகிய அநுமான்,—(இடைவழியிலுள்ள) குகனுக்கும் செவ்வியகுணங்களையுடைய அந்த இராமபிரான் எழுந்தருளிய செய்தியைக்கூறி, பின்பு, ஆகாசமார்க்கமாக(ப் பரதனைநோக்கி)ச் சென்றான்;(எ-று.)
—பி-ம்:—[1]செல்வன். [2]கூறவும், கூறெனை, கூறியே. [3]வான்வழிச் சென்றான். குகன் விரதப்படலம் உள்ள பிரதியில் ஒருசெய்யுள் உள்ளது வருமாறு:—

*மாருதி விடைகொண் டேக வரதனு மறையோன் பாதம்
ஆரரு ளோடு நீட வணங்கின னவனு மாசி
சீரிது கூறிச் சேறி யென்றலும் மானஞ் சேர்ந்து
போரியல் தானை யோடும் பொருக்கென வெழுந்து போனான்.

சிலபிரதிகளில் இங்குச் சிலசெய்யுள்கள் காணப்படுகின்றன: அவை குகன் செய்தியைக் கூறும்: அவை வருமாறு:—

1. **வேறு.** மானேர் விழியா ளுடனே வனமுன்
[1]போனா னொருநாள் வருநா ளிலதோ
தேனே யமுதே தெளிவே [2]தெளிவின்
ஊனே யுயிரே யுலகா ளுடையாய்.

பி-ம்:—[1]போனார். [2]தெளிவின்று.

2. **வேறு.** அம்பவளச் செவ்வா யணிகடகச் சேவகனை
வம்பவிழுஞ் [1]சோலை கோசலநா டுடைவள்ளல்
எம்பெருமா னென்னை யிழிகுலத்து நாயேனைத்
தம்பியென வுரைத்த தாசரதி தோன்றானே.

பி-ம்:—[1]சோலைசூழ்.

3. வாழி மலைத்திண்டோட் சனகன்றன் [1]மாமயிலை
ஏழுலக மாளு மிறைவன் மருமகளைத்
தாழ்வில் பெருங்குணத்தாள் தானுங் கொழுந்திநீ
தோழ னென [2]வுரைத்த தோன்றலார் தோன்றாரோ.

பி-ம்:—[1]மாமகளை. [2]உரைக்கும்.

---

*இச்செய்யுளின் சொற்பொருள்கள் பெரும்பாலும் ஒத்திருக்கச் செய்யுள்வருவதை [261-21-இல்] காணலாம்.

4. **வேறு.** துங்க விற்கரத் தோழனர் சொன்னநாள்
இங்கு வந்திலர் யானிறப் பேனென
மங்கை மாரும் படையும்வன் சுற்றமும்
அங்கு நீர்க்கங்கை யம்பியி லேற்றினன்.

5. **வேறு.** *வேத நாதனும் வில்லியும் விரைமலர்த் திருவும்
ஏது செய்யினு மென்னுயிர் முடிப்பனென் [1]றெண்ணி
ஓத [2]நீரிடை யோடம் துடைத்துயிர் விடுவான்
காத லாருடன் கங்கையி னடுவுறச் சென்றான்.

பி-ம்:—[1]உன்னி. [2]நீரிலே.

6. **வேறு.** கண்ணுந் தோளும் வலந்துடிக் குங்கரை
வண்ணப் புள்ளும் வலியும் வலத்திலே
[1]எண்ணுங் காலையி லேயெழில் மாருதி
அண்ணல் வந்தன னென்றுரை யாடினன்,

பி-ம்:—[1]பண்ணுங்காலைவந்தே. ஒருபிரதியில் இச்செய்யுள் ''உள்ள வான்கிளை'' என்ற அடுத்த செய்யுளின்பின் உள்ளது.

7. உள்ள வான்கிளை யேற்றி யுயர்குகன்
வெள்ளக் [1]கங்கையி னூக்கி விரைந்தவண்
[2]உள்ளு நெற்றி யுடைப்பள விற்புகும்
வள்ள லார்விடு மாருதி தோன்றினன்.

பி-ம்:—[1]கங்கையினேக்கி. [2]உள்ளிலேற்றி.

8. ஓங்கு வாலினை யொட்டியவ் வோடங்கள்
[1]திங்கு ருவகைச் சுற்றிக் குறுகிநீர்
ஆங்கு [2]நின் றங் கவைவலித் தானவை
[3]தீங்கி லாவகை தென்கரை சேர்ந்தவால்.

பி-ம்:—[1]நீங்கிடாவகைச்சுற்றிநெருக்கினன். [2]நின்றுவலித்தனன். [3]தீங்குதீர்த்தெனத்...சேரவே.

9. **வேறு.** கையார் வெஞ்சி லைக்கருணா கரற்குக் காத லுடைத் [தோழ
மையார் சிருங்க வேரபிர முடையாய் மிகுகோ சலைகளிறு
மையார் நிறத்தான் வந்தொழிந்தான் மிதிலை வல்லி யவளுடனே
ஐயா வந்தான் தம்பியொடு மடியே முய்ய வந்தானே.

10. **வேறு.** ஆருனை யுரையென வனுமான் கூறுவான்
சீரிய வாயுவின் [1]தோன்றல் [2]சீரியோய்
[3]சூருடை யிராமற்குத் தூத [4]னென்றுள து
[5]ஏருடைத் தலையின்மே லெழுதப் பட்டுளேன்.

---

*குகப்படலமென்று தனியே யிராத பிரதியொன்றில், 5, 8, 10, 11 பாடல்கள் காணப்படுகின்றன.

பி-ம்:—[1]புதல்வன். [2]செவ்வியோய். [3]தாருடை, ஏருடை. [4]என்றெனை. [5]ஏர்கொள்வேல்தோளினுயென்று கூறினன், ஏருள... தானென.

11. பரதனைத் தீயையும் விலக்கிப் பாருடை
வரதனை யிராமனை [1]மாறிக் காண்பது
சரதமே யினியிறை தாழ்க்கொ ணுதெனக்
கரதலத் தாழியுங் காட்டிப் போயினன். (4123)

பி - ம்:—[1]மறித்துங்

வேறு.

204.—கவிக்கூற்று: இராமன் தென்திசையிற்செய்த செயலைக் கூறின நாம், இனி அயோத்தியில்நிகழ்ந்த செயலைக் கூறுவோமெனல்.

இன்றி சைக்[1]கிட மாய விராகவன்
தென்றி சைக்கரு மச்செயல் செப்பினும்
[2]அன்றி சைக்கு [3]மரிய [4]வயோத்தியில்
நின்[5]றி சைத்துள தன்மை நிகழ்த்துவாம்.

(இ - ள்.) இதுவரையிலும் புகழுக்கு ஆதாரமாயுள்ள இராமபிரான் தெற்குத்திக்கிற் சென்று செய்தசெய்திகளைச் சொன்னோம்; (இனிமேல் அநுமான் சென்ற) அக்காலத்தில்,(யாவராலும்) புகழப்படுகிற (பகைவர்களாற் கிட்டுதற்கு) அருமையான அயோத்தியா பட்டணத்தில் பொருந்தி நடந்தவரலாற்றைக் கூறுவோம்;(எ-று.)

ஒருநகரத்துக்குச் சமீபத்திலுள்ள சிற்றூரிலுள்ளவர் அந்நகரத்தைத் தமக்குஇடமாகச் சொல்லிக்கொள்ளுதல்போல, அயோத்தியின் மிகச்சமீபமான நந்திக்கிராமத்தில் நடந்தபரதன் வரலாற்றையும் அயோத்தியில் நடந்ததாகவே குறித்தார். பி - ம்:—[1]இடன். [2]இன்று. [3]இனிய. [4]அயோத்தியுள். [5]இசைகின்ற. குகன் விரதப் படலம் என்று பெயருள்ள பிரதியில் இதனோடு அப்படலம் முடிய, இனிப் **பரதன் விரதப்படலம்** என்று காண்கின்றது. (4124)

205.—இதுமுதல் ஐந்துகவிகள் - பரதனது நிலைமையைக் கூறும்.

[1]நந்தி யம்பதி யின்றலை [2]நாள்தொறும்
சந்தி யின்றி நிரந்தரந் தம்முனர்
[3]பந்தி யங்கழற் [4]பாத மருச்சியா
இந்தி யங்களை வென்றிருந் தானரோ.

ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) நந்திக்கிராமத்திலே தினந்தோறும் (பூசனைக்கென்று ஏற்பட்ட காலை நண்பகல் மாலை என்ற மூன்று) சந்தியாகாலங்களை(யே பூசாகாலமாகக்கொள்ளுதலை)யின்றி இடைவிடாமல் [எப்பொழுதும்] தனது தமையனுரான இராமபிரானது ஒழுங்கான அழகிய வீரக்கழலையணிந்த திருவடிகளை [பாதுகையை]ப் பூசித்

துக்கொண்டு, (தனது)ஐம்பொறிகளையும்(புலன்வழிப்போக்காமற்) பாதுகாத்துத் தன்வசப்படுத்தியிருக்குந் தன்மையையுடையவனும்;-

"நந்தியம் பதியிடை நாதன் பாதுகஞ், செந்தனிக்கோன்முறை செலுத்தச் சிந்தையான். இந்தியங்களை யவித்திருத்தல் மேவினன், அந்தியும் பகலும் நீரருத கண்ணினன்" என்றார். அயோத்தியா காண்டத்திலும். இருந்தன்னெனமுற்றாகக்கொள்ளுதலுமொன்று, மேலிற்கவிகளிலும் இப்படியே. பி-ம்:—[1]நந்தியின். [2]நாளெலாம், நான்வரும். [3]அந்தி. [4]பாதமதர்ச்சியா. (4125)

206. **துன்பு ருக்கவுஞ் [1]சுற்றி யுருக்கொணு**
என்பு ருக்குந் [2]தகைமைய திட்டதாய்
முன்பு ருக்கொண் டொருவழி [3]முற்றுரு
அன்பு ருக்கொண்ட தாமென [4]லாகுவான்.

(இ . ள்.) (இராமனைப்பிரிந்த) துன்பமாகிய பெருங்கொடுந்தீ சூழ்ந்து வெதுப்புதலால் (வேறுஎவ்வகையினாலும்) உருக்கமுடியாததான எலும்பும் உருக்கப்படுந்தன்மை பொருந்தியதாக,— முன்பு ஓரிடத்திலும் [ஒருகாலத்திலும்] வடிவங்கொண்டு நிரம்பாததான அன்பென்னுங் குணந்தானே ஒரு வடிவங்கொண்டதாகு மென்று சொல்லும்படியிருப்பவனும்;—(எ - று.)

எவ்வாற்றாலும் உருகாததான எலும்பும்இராமவிரகதாபத்தால் உருகும்படி யாயினன் பரதனென்பது, முன்னிரண்டடியின் கருத்து. 'உருக்கவும்' என்ற உம்மை, எடுத்து 'என்பு'என்பதனோடு கூட்டப்பட்டது. எக்காலத்திலும் எவ்விடத்திலும் வடிவங்கொண்டு காணப்படாததான அன்பு ஒருவடிவங் கொண்டது போலத் தோன்றுகிறான் இவனென்று காண்பவரனைவருஞ் சொல்லும்படியாயினன் பரதன் என்பது. பின்னிரண்டடியின் கருத்து. "குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும்போல இதுகாண் அன்பென்று தந்துகாட்டலாகாது; அன்புடையரான குணங் கண்டவிடத்து இவை உண்மையான் ஈங்கு அன்புஉண்டென்று அநுமித்துக் கொள்ளற்பாற்று: அன்புடையரான குணம் யாவையோவெனின்?—சாவிற்சாதல், நோவின்நோதல், ஒண்பொருள்கொடுத்தல், நன்கினிதுமொழிதல், புணர்வு நனிவேட்டல், பிரிவுநனியிரங்கல் என இவை" என்ற இறையனாரகப்பொருளுரையாலும், "நோயும் வேட்கையும் நுகர்வுமென்றாங்கு, ஆவயின்வரூஉங் கிளவியெல்லாம், நாட்டிய மரபின் நெஞ்சுகொளினல்லது, காட்டலாகாப் பொருளவென்ப" என்ற தொல்காப்பியத்தாலும் அன்பிற்கு இயல்பில் உருவமில்லாமையை உணர்க: அது, உண்மைமாத்திரமுணர்த்திப் பிறம்பு உணர்த்தப்படாத தெனப்படும். பி-ம்:—[1]சுற்றமுருக்கவும், சுற்றமுருக்கொணு, துற்றியுருக்கொணு. [2]தன்மையினீட்டதாய், தகைமையினீட்டத்தான், தகைமையினீட்டத்தாய், தகைமையிதிட்டிதாய். [3]முற்றுற, முற்றற. [4]ஆயினன்,

207. [1]நினைக்க வுந்[2]தடங் கண்ணிணை நீர்வர
[3]இனைத்த தண்டலை நாட்டிருந் தேயுமக்
[4]கனத்த கந்தமுங் காயுங் [5]கனிகளும்
[6]வனத்த [7]வல்ல வருந்தலில் வாழ்க்கையான்.

(இ-ள்.) (இராமபிரான் காட்டுக்குச்சென்றதை) நினைத்தமாத்திரத்திலே விசாலமான (தனது) இரண்டு கண்களினின்றும் நீர் பெருகக் கூட்டமான சோலைகளையுடைய நாட்டிலே (தான்) இருந்தும், அந்தப் பருத்த கிழங்குகளும் காய்களும் பழங்களும் ஆகிய வனததிலுள்ளன அல்லாதவற்றை [நாட்டினுள்ளபொருள்களை] உண்ணுதலில்லாத [உண்ணுத] உயிர்வாழ்க்கையையுடையவனும்;-

பரதன் தான் காட்டிலன்றி நாட்டிலே வசித்தாலும் நாட்டாருண்ணும் உணவுகளைக் கொள்ளாமல், வனவாசஞ் செய்கிறஇராமபிரான்போலவே காட்டிலுள்ளனவான காய்கனிகிழங்குகளையே யுண்டு உயிர்வாழ்பவனுயிருந்தன னென்க. பி - ம்:—[1]நினைத்த, நினைந்த. [2]தருங்கற்பகநேர்வரும், தடங்கண்ணிணை நீரவாய். [3]நனைத்த, நனைந்த. [4]கனிந்த. [5]கனியுமவ். [6]வனைந்த. [7]அல்லது. ()

208. நோக்கிற் றென்றிசை யல்லது [1]நோக்குருன்
ஏக்குற் றேக்குற் றிரவி குலத்துளான்
வாக்கிற் பொய்யான் வரும்வரு மென்றுயிர்
போக்கிப் போக்கி [2]யுழக்கும் பொருமலான்.

(இ - ள்.) கண்ணெடுத்துப் பார்ப்பதாயிருந்தால் (இராமன் வனத்தினின்று வரக்கூடிய) தெற்குத்திக்கைப் பார்ப்பதேயன்றி (வேறொருதிக்கையும்) பாராதவனுய்)-(தமையனுரைநினைத்துமனம்) மிகவும்ஏங்கி 'சூரியகுலத்தவனுகிய இராமபிரான் வாக்கினுற்பொய் கூருதலால் நிச்சயமாய்வருவன்' என்று எண்ணி, மிகுதியாகப் பெருமூச்சுவிட்டு வருந்துகின்ற புலம்புதலையுடையவனும்,—

'வாக்கின்' என வேண்டாது கூறினது, அவன் வாய் 'பொய்க்காத சொற்கள் பயின்றது' என அறிவித்தற்காக. பி - ம்:— [1]நோக்குரு. [2]அழைக்கும், இழைக்கும், உழைக்கும். இச்செய்யுள் சிலபிரதியில் "உண்ணுநீர்க்கு" என்ற அடுத்த பாடலின்பின் உள்ளது, (4128)

209. உண்ணு நீர்க்கு முயிர்க்கு [1]முயிரவன்
எண்ணுங் கீர்த்தி யிராமன் [2]திருமுடி
மண்ணு நீர்க்கு [3]வரம்புகண் டாலன்றிக்
கண்ணி[4]னீர்க்கொர்[5]கரையெங்குங் காண்கிலான்.

(இ - ள்.) (பிராணுதாரமாகப்) பருகுகின்ற தண்ணீர்க்கும் ஜீவாத்மாவுக்கும் உயிர்போன்ற தன்மையையுடையவனுன (யாவராலும்) நன்குமதிக்கப்படுகிற புகழையுடைய இராமபிரானது (பட்டாபிஷேக காலத்தில்) திருமுடியைக் கழுவிவிழும் நீர்க்கு ஒரெல்லையைக் கண்டாலல்லாமல் (தன்) கண்ணினின்று பெருகும் நீர்க்கு ஒருமுடிவை எவ்விடத்தும் காணப்பெருதவனும்,—(எ-று.)

இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தேறினலன்றிப் பரதனுக்குத் துயரம் நீங்காது என்பது. கருத்து. வரம்பு-சமயம். கரை-முடிவெல்லை. நீர்க்குஉயிரவன் என்றது - எல்லாப்பிராணிகளும் தரித்திருப்பதற்கு இன்றியமையாததான நீரும்அவனதீனமாயிருக்குமென்றபடி. பி - ம்:—[1]உயிரதாய், உயிர்தர, உயரவைத்து, உயர்வதே. [2]திருவடி. [3]வரம்புமுண்டாலன்றிக், வரம்புமுண்டாமென்பான். [4]நீர்க்குங், நீர்க்குக். [5]கரையொன்றும். (4129)

210.—'இராமன் வரவேண்டியது எந்நாள்?' என்று பரதன் ஆலோசித்தல்.

அனைய னுய பரத னலங்கலிற்
புனையுந் தம்முனர் [1]பாதுகைப் பூசனை
நினையுங் [2]காலை [3]நினைத்தன னுமரோ
மனையின் வந்தவ னெய்த மதித்தநாள்.

(இ-ள்.) (கீழ்க்கூறிய) அப்படிப்பட்ட தன்மையையுடையனுன பரதன் பூமாலையினுல் அலங்கரிக்கப்பட்டனவான தமையனுரது மரவடிகளின் பூசையைச்செய்ய எண்ணினகாலத்தில், அவ்விராமபிரான் (தன்) அரண்மனையில் மீண்டுவந்து சேர்தற்குக் குறிப்பிட்டுள்ள நாளைப்பற்றி ஆலோசித்தான்; (எ-று.)—பி-ம்:—[1]பாதுகபூசனை. [2]காலம். [3]நினைந்தனன். (4130)

211.—'இராமன் வரவேண்டியநாள் இன்றுதான்' என்று சோதிடர்கள் பரதனுக்குத் தெரிவித்தல்.

[1]யாண்டு வந்திங் கிருக்குமென் றெண்ணினுன்
மாண்ட சோதிட வாய்மைப் புலவரை
ஈண்டுக் கூய்த்தரு [2]கென்னவந் தெய்தினுர்
ஆண்ட கைக்கின் [3]றறுதியென் றுரரோ.

(இ - ள்.) '(இராமபிரான்) எப்பொழுது இங்கே வந்துசேர்வான்?' என்றுநினைத்தவனுனபரதன்,-(தனது ஏவலாளரைநோக்கி) 'மாட்சிமைப்பட்ட சோதிடம்வல்ல உண்மைப்புலவர்களை இங்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்' என்று கட்டளையிட, (அவர்கள் போய்ச் சொன்னவளவில், அச்சோதிடர்கள், அங்கு)வந்து சேர்ந்து, (இராமபிரான் வரவேண்டியநாளைக் குறித்து உடனே பரதன் வினவியதற்கு), 'ஆண்மைக்குணமுடையனுன இராமபிரானுக்கு இன்றைத்தினம் (பதினுன்குவருடமும்) முடியுங் காலம்' என்று கூறினுர்கள்; (எ - று.)—அறுதி-மீண்டு வந்து சேரவேண்டிய எல்லையென்க. பி ம்: —[1]ஆண்டுவந்திங்கடுக்கும், ஈண்டுதான்வந்திறுக்கும், யாண்டு மின்றுெடறுதி. [2]என்றனன். [3]அவதி. (4131)

212.—சோதிடர்வார்த்தையைக்கேட்டுப் பரதன்மூர்ச்சித்து விழுதல்.

என்ற [1]போதத் திராமன் வனத்திடைச்
சென்ற [2]போதத்த தவ் [3]வுரை செல்வத்தை
வென்ற [4]போதத்த வீரனும் வீழ்ந்தனன்
கொன்ற [5]போதத் துயிர்ப்புக் குறைந்துளான்.

(இ-ள்.) என்று (சோதிடர்கள்) சொன்னபோது, (அரசாட்சிச்) செல்வத்தை (த் தனக்கு வேண்டாவென்று) வெறுத்துவிட்ட நல்லறிவுடைய வீரனாகிய பரதனும், (இராமனைத் திருப்பியழைத்து வருவதற்காகத் தான்) வனத்திற் சென்றபோது(தன்னை நோக்கிக்) கூறியதாகிய இராமனது அந்த வார்த்தை (தன்மனத்திற்கு வந்து தன்னை) மிக வருத்தியபோது மூச்சு அடங்கியவனாய் [மூர்ச்சித்து] விழுந்திட்டான்; (எ-று.)

தனது தாயின்முயற்சியால் தனக்குக்கிடைத்த அரசச்செல்வத்தைக் கைக்கொள்ளாது பற்றுவிட்டு அதனை மூத்தவனான இராமற்கே யுரியதாக்கி அவன் வனஞ்சென்றிருந்தகாலத்தும் அவனதுதிருவடிநிலைக்கே முடிசூட்டி ஆண்டமையால், பரதனை 'செல்வத்தை வென்ற போதத்த வீரன்' என்றார். கீழ் வனத்திற் சித்திரகூடத்திலே "ஆமெனிலேழிரண்டாண்டிலையநீ, நாமநீர் நெடுநகர் நண்ணிநாளிலங், கோமுறைபுரிகிலை யென்னிற்கூரெரி, சாமிது சரதம் நின் னாணை சாற்றினேன்" என்று பரதன் கூறினதற்கு, இராமன் உடன்பட்டு "அன்னதாக" என்றதை, இங்கே 'அவ்வுரை' என்றது குறிக்கும். அங்ஙனம் வாராமை குறித்து வருந்தலானான். பி - ம்:—[1]போதில். [2]போழ்தொத்து, போதொத்தது. [3]உரைச்செல்வனை. [4]ஓதத்து. [5]போழ்தொத்து,போதொத்து.

213.—நான்குகவிகள்-இராமன் வாராமைபற்றிப் பரதன் பலவாறு சிந்தித்து வருந்துதலைத் தெரிவிக்கும்

மீட்டெ ழுந்து [1]விரிந்தசெந் தாமரைக்
காட்டை [2]வென்றெழு கண்கலு ழிப்புனல்
[3]ஓட்ட [4]வுள்ள முயிரினை [5]யூசனின் று
ஆட்ட வும் [6]மவ லத்தழிந் தானரோ.

(இ - ள்.) (பரதன் மூர்ச்சை தெளிந்து) திரும்பவும் எழுந்து, மலர்ந்த செந்தாமரைத்தொகுதியை வென்றுவிளங்குகின்ற(தனது) கண்கள் கலங்கியநீரை உகுக்கவும், (தன) மனம் (இராமன் வராமையைப்பற்றிய கவலையைக்கொண்டு) நின்று உயிரை ஊசலாட்டவும், துன்பத்தினால் நிலைகலங்கினான்; (எ - று.)

இராமன் வரவில்லையே யென்னுங் கலக்கத்தினாற் பரதனுக்கு உயிர் போவதும், மீண்டும் இராமன் எழுந்தருளினாற் காணலாமே யென்னும் ஆசையினால் அவ்வுயிர் மீண்டுவருவதுமா யிருந்ததென்க. பி - ம்:—[1]விரைச்செழுந். [2]வென்றதன், வென்றொளிர். [3]ஆட்ட. [4]உள்ள. [5]ஊசிநின்று. [6]மலர்த்தாள்களருச்சியா. (4133)

214. எனக்கி யம்பிய நாளுமென் னின்னலும்
தனைப்ப யந்தவள் [1]நேயமுந் தாங்கியவ்
வனத்து வைகல்செய் யான்வந் [2]தடுத்ததோர்
வினைக்கொ டும்பகை யுண்[3]டென விம்மினான்.

(இ-ள்.) (இராமன்), என்னைநோக்கி(ப் பதினான்குவருடங் கழிந்ததும் வருகிறேனென்று) கூறிய தவணையான தினத்தையும், (அவன் இங்கு இல்லாமையால்) நான் படுகின்ற வருத்தத்தையும், தன்னைப்பெற்ற தாயான கௌசல்யை (தன்னிடம்வைத்துள்ள) அன்பையும் (தன்மேல்) தாங்கிக்கொண்டு, அக்காட்டில் வசித்திரான் [இங்கு வந்தேயிருப்பான்];(அங்ஙனம் அவன் இங்குஇப்பொழுது வாராமைக்குக் காரணமாக வனத்தில்) வந்து நேர்ந்துள்ள (அவனுயிரை யொழிப்பது) ஒரு கொடிய தீவினைப்பயனாகிய பகை உண்டுபோலும்! என்று எண்ணிக்கலங்கினான்; (எ-று.)

இராமன் மீண்டுவருவதற்கு ஒவ்வொன்றே போதுமான மூன்று காரணங்கள் இருக்கவும் அவன்சொன்னபடி திரும்பிவாராமையால் அவனுக்குப் பெரும்பகைவனால் ஏதோ தீங்கு நேரிட்டிருக்கவேண்டுமென்று நினைத்துப் பரதன் கலங்கினனென்க. விம்முதல்-தேம்பித்தேம்பி யழுதலுமாம். பி-ம்:—[1] துன்பமும். [2] அடுத்ததோ. [3] என்று. (4134)

215. மூவ கைத்திரு மூர்த்திய ராயினும்
பூவ கத்தில் விசும்பிற் புறத்தினில்
[1] ஏவர் [2] கிற்ப ரெதிர்நிற்க [3] வென்னுடைச்
சேவ கற்கென வையமுந் தேறினான்.

(இ - ள்.) 'எனது (தமையனான) வீரனுக்கு எதிரில்நின்று போர்செய்ய, (பிரம விஷ்ணு ருத்திர ரென்னும்) சிறந்தமும்மூர்த்திகளாயினும் பூமியிலும் ஆகாசத்திலும் மற்றொன்றாகிய பாதாளத்திலும் (உள்ளவர்களாயினும்), எவர்வல்லமையையுடையவர்? [ஒருவருமிலர்]' என்று ஆலோசித்து (முன்கொண்ட) சங்கையும் நீங்கப்பெற்றான்; (எ - று.)

'இராமனுக்குப் பெரும்பகையால் ஏதேனும் தீங்கு நேரிட்டிருக்குமோ?' என்று ஐயுற்ற பரதன், மும்மூர்த்திகளாலும் எதிர்க்கவொண்ணாத வலிமையையுடைய இவனுக்கு வேறுபகைவர் உண்டாகாரென அந்தச்சந்தேகம் நீங்கி, 'வாராமைக்குக் காரணம் வேறு யாதோ?' எனப் பின்னும் எண்ணலாயினனென்க. கிற்பர், 'கில்' என்னும் ஆற்றலுணர்த்தும் இடைச்சொல்-பகுதி, பி - ம் - [1] ஏவ [2] நிற்பர். [3] என்னுடைச். (4135)

216. என்னை யின்னு மரசிய லிச்சையான்
[1] அன்ன னாகி னவனது கொள்கவென்று
உன்னி னான்கொ லுறுவது நோக்கினான்
இன்ன தேநல னென்றிருந் தானரோ.

(இ - ள்.) '(அவ்விராமன்), என்னைப்பற்றி, அப்பரதன் (பதினான்கு வருடம் ஆண்டதுபோதாமல்) இன்னமும் அரசாட்சிசெய்தலின் விருப்ப முள்ளவனானால், (அவனே) அவ்வரசாட்சியைக் கைப்பற்றட்டும் என்று நினைத்தானோ?' (என்று கலங்கி), இனிச்செய்ய

வேண்டுவதை ஆலோசித்தவனாய், 'இச்செயலே (நமக்குத்)தக்கது' என்று துணிந்தான்; (எ - று.)

அத்துணிவை அடுத்த கவிகளிற் கூறுகின்றார். 'என்று' என வருவிக்க. இனி, உறுவது நோக்கினன்-(பதினான்குவருடங்கழிந்ததும் தான்) செய்ய வேண்டுவதை நினைத்தவனான இராமபிரான், 'பரதன் அரசாட்சியை விரும்பினாற் கைக்கொள்ளட்டும்' என்று, உன்னினன்-நினைத்தவனாய், இன்னதே நலன் என்று இருந்தான் கொல்-காட்டிலிருந்து நாள் கழிப்பதே நலமுடையது என்றுகருதி அவ்விடத்தே இருந்துவிட்டானோ! என்று பரதன் சங்கித்தானெனவும் பொருள்கூறலாம். பி - ம்:—[1]அன்னதாகில். (4136)

217.—பரதன் இறக்கத்துணிதல்.

[1]அனைத்தி லங்கொன்று மாயினு மாகுக
வனத்[2]தி ருக்கவிவ் வையம் புகுதுக
நினைத்தி ருந்து [3]துயர முழக்கிலேன்
மனத்து மாசென் னுயி[4]ரொடும் வாங்குவேன்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ-ள்.) (இராமன்) வனத்திலேயே இருக்கட்டும்; (அன்றி), இந்நாட்டில் வரட்டும்; அவற்றுள் எதுநடந்தாலும் நடக்கட்டும்: (இராமன் விஷயமாகப் பலவாறு) சிந்தித்து இங்கிருந்து (இத்)துன்பங்களை அனுபவிக்க மாட்டேன்: என் உயிருடனே (என்) மனத்துன்பத்தையும் நீக்கிக்கொள்வேன்; (எ - று.)—எனது உயிர் நீங்கினாலன்றி மனத்துன்பம்நீங்காது என்பது, ஈற்றடியின்கருத்து. வையம்-கோசலநாடு. பி - ம்:—[1]அனைத்தும் .....ஆகுக, அனைத்திலங்கொன்றாயினதாகுக. [2]இருக்குக. [3]நெடுந்துயர்மூழ்கிலேன், நெடுந்துயருய்க்கிலேன், பெருந்துயர்மூழ்கிலேன், துயரக்கடனீந்தி. [4]ஏனும்வாங்குவேன். (4137)

218.—பரதன் கட்டளையால் சத்துருக்கனன் வருதல்.

என்னப் பன்னி யிளவலை யென்னுழைத்
துன்னச் சொல்லுதி ரென்றலுந் தூதர்போய்
உன்னைக் கூயின னும்மு னெனுமுனம
முன்னர்ச் சென்றனன் மூவர்க்கும் பின்னுளான்.

(இ - ள்.) (பரதன்) இவ்வாறு பலவிதமாகச்சொல்லி, (தூதர்களை நோக்கி),'என்னிடத்து என் தம்பியான சத்துருக்கனனை வரச் சொல்லுங்கள்' என்று கட்டளையிட்டமாத்திரத்தில்,—தூதர் (சத்துருக்கனனிடத்திற்) சென்று (அவனை நோக்கி), 'உன் தமையன் பரதன் உன்னை அழைத்தனன்' என்று சொல்லுதற்கு முன்னமே (இராமன் பரதன் லக்ஷ்மணன் என்னும்) மூவர்க்கும் பின்பிறந்தவனாகிய சத்துருக்கனன், பரதனெதிரிற் சென்றான்; (எ-று.) (4138)

219.—இதுவும் அடுத்த கவியும்-பரதன் சத்துருக்கனனை வரம்வேண்டுதலைக் கூறும்.

தொழுது நின்றதன் தம்பியைத் தோய்கணீர்
[1]எழுது மார்பத் திறுகத் தழுவினன்
[2]அழுது வேண்டுவ துண்டைய வவ்வரம்
[3]பழுதி லாமையி னுற்றரற் பாற்றென்றான்.

(இ-ள்.) (பரதன்) (தன்னை) வணங்கிநின்ற தனதுதம்பியான சத்துருக்கனனை, நிறைந்தகண்ணீர் (பலவாறாக) வழிந்தோடப் பெற்ற (தனது) மார்பில் அழுந்தத்தழுவினவனாய், அழுது 'ஐயனே! (நான் உன்னிடத்துக்) கேட்டுக்கொள்வது ஒன்றுஉண்டு: அந்த வரமானது தவறுபடாதபடி தருதற்குத் தகுதியுடையது' என்று வேண்டினான்; (எ - று.) பி-ம்:—[1]ஒழுக. [2]முழுதும். [3]பழுதில்வாய்மையினாய். (4139)

220. என்ன தாகுங்கொ [1]லவ்வர மென்றியேல்
சொன்ன நாளி லிராகவன் தோன்றிலன்
மின்னு தீயிடை யானினி வீடுவன்
மன்ன [2]னாதியென் சொல்லை [3]மறாதென்றான்.

(இ - ள்.) (பின்னும் பரதன் தன்தம்பியைநோக்கி), 'அவ்வரம் யாதாகுமோ வென்று கேட்பையானால், (கூறுவேன், கேள்)'இராம பிரான் (தான் வருவதாகக்) கூறிய நாளில் வந்தானில்லை: (ஆகையால், முன்பு பிரதிஜ்ஞைசெய்துள்ளபடி) இப்பொழுது நான் எரிகின்ற அக்கினியில் விழுந்து உயிர்விடுவேன்; (நீ), என்சொல்லை மறுக்காமல் (இவ்விராச்சியத்துக்கு) அரசனாவாய்' என்றான்;(எ-று.) —பி-ம்:—[1]எவ். [2]ஆணை. [3]மறாய். (4140)

221.—அதுகேட்டுச் சத்துருக்கனன் வருந்தித் தாபங் கொள்ளுதலை இரண்டுகவிகள் தெரிவிக்கும்.

கேட்ட தோன்றல் கிளர்தடக் கைகளால்
தோட்ட தன்செவி பொத்தித் துணுக்குறா
[1]ஊட்டு நஞ்ச முண்டானைத் துயங்கினான்
நாட்டமும் மனமுந் நடுங்கா நின்றான்.

(இ-ள்.) (அவ்வார்த்தையைக்)கேட்ட சிறந்தவனான சத்துருக்கனன் விளங்குகிற பெரிய கைகளினால் துளைப்பட்ட தனது காதுகளை மூடிக்கொண்டு திடுக்கிட்டு, (பிறரால்) ஊட்டப்பட்ட விஷத்தையுண்டவன்போல வருந்தியவனாய், கண்களும் மனமும்நடுக்கங்கொண்டு நின்றான்; (எ - று.)—காதுபொத்தினது, கேட்கத்தகாத கொடிய வார்த்தையைக் கேட்டதனால். பி-ம்:—[1]ஊட்ட. (4141)

222. விழுந்து மேக்குயர் விம்மலன் வெய்துயிர்த்து
எழுந்து நானுனக் கென்ன [1]பிழைத்துளேன்
அழுந்து துன்பத்தி னு[2]யென் றரற்றினான்
கொழுந்து விட்டு நிமிர்கின்ற கோபத்தான்.

(இ - ள்.) (சத்துருக்கனன் சோர்ந்து) கீழ்விழுந்து, மேன்மேல் உண்டாகிற விம்முதலையுடையவனாய், வெம்மையாகப் பெருமூச்சு விட்டு எழுந்து நின்று, கொழுந்துவிட்டுக்கிளம்புகின்ற [மேன்மேற் பொங்குகின்ற] தாபத்தை யுடையவனாய், (பரதனைநோக்கி), 'துன்பத்தில் அழுந்தியுள்ளவனே! (என்னைநோக்கி இவ்வாறுசொல்லும்படி) யான் உனக்குஎன்ன பிழைசெய்துளேன்?' என்று கூறினான்; (எ-று.)—விம்மல்-புலம்பலுமாம். துன்பம்-இராமன் வரவில்லையே யென்ற கவலையினாலாகியது. கோபம்-மனத்தில்தோன்றுந் தாபம். பி-ம்:—[1]பிழைத்துளது. [2]எனச்சாற்றினான், என்றருளினான். ()

வேறு.

223.—இதுவும், அடுத்த கவியும்-ஒருதொடர்: சத்துருக்கனன் பரதன்வார்த்தைக்கு வருந்தி வெறுத்துக் கூறலைத் தெரிவிக்கும்.

கானாள நிலமகளைக் கைவிட்டுப் [1]போவானைக் காத்துப் பின்பு
போனானு மொருதம்பி போனவர்கள் வருமவதி போயிற் றென்னா
ஆனாத [2]வுயிர்விடவென் றமைவானு மொருதம்பி யயலே[3]நானாது
யானுமிவ் வரசாள்வெ னென்னேயிவ் வரசாட்சி[4]யினிதே யம்மா.

(இ - ள்.) '(தான் மூத்தமகனாய்ப் பிறந்தும் தனக்குஉரிய) இராச்சியத்தை (த் தன்தம்பிக்கென்று) கைவிட்டுக் காட்டையாளும்படி சென்றவனை [வனவாசஞ்சென்ற இராமனை]ப் பாதுகாத்துக்கொண்டு (அவன்) பின்னே போனவனும் [இலக்குமணனும்] ஒரு தம்பியாவன்; (காட்டுக்குச்) சென்ற அவ்விருவரும் மீண்டுவருவதற்கு உரிய காலவெல்லை கடந்துவிட்டது என்று நினைத்து அமைந்திராது துன்பப்பட்ட உயிரை விடவேண்டுமென்று முயல்பவனும் [பரதனும்] ஒருதம்பியாவன்: (இவர்களுடனே பிறந்து) மற்றொரு தம்பியாகிய நான்மாத்திரம் நாணமின்றி இவ்விராச்சியத்தை ஆள்வேனாம்! (இது) யாதாயிருந்தது! இந்த அரசவுரிமை மிக இனியது! (எ - று.)—அம்மா-வியப்பிடைச்சொல்; தனக்கு நேர்ந்தநிலையின் கொடுமையைப்பற்றி வியந்தவாறு: பி-ம்:—[1]போவானை. [2]எரிபுக. [3]நின்ற, ஆன. [4]இருந்தவாறே. (*4143*)

224. **மன்னிற்பின் வள[1]நகரம் புக்கிருந்து வாழ்ந்தானே பரத**
[1]னென்னும், சொன்னிற்கு மென்றஞ்சிப் [2]புறத்திருந்து மருந்த
வமே [3]தொடங்கினாயே, என்னிற்பின் னிவனுளனா [4]மென்றேயுன்
னடிமையுனக் கிருந்ததேனும், முன்னிற்பின் [5]னிருந்ததுவு மொரு
குடைக்கீ [6]ழிருப்பதுவு மொக்கு மென்றான்.

(இ - ள்.) இராமன் வனஞ்சென்ற பிறகு, (அயோத்தியிலேயே வசித்தால்), 'பரதன் செழிப்பான பட்டணத்திற் புகுந்து தங்கி வாழ்ந்தானன்றோ?' என்கின்ற பழிச்சொல் (உலகத்தில்) உண்டாகும் என்று நினைத்துப்பயந்து, (நீ, அயோத்தியில் நுழையாமல்) வெளியிடத்தில் [நந்திக்கிராமத்தில்] இருந்துகொண்டும், (அரசவேடத்தையும் ஒழித்துச்) செய்தற்கரிய தவத்தையே செய்யத்

தொடங்கினுயே; (உனது தன்மை இவ்வாறு இருக்க), நான் அக்கினிப்பிரவேசஞ்செய்து இறந்தபின்பு, (எனது தம்பியாகிய) இச்சத்துருக்கனன் பிழைத்திருப்பானென்றே உனது அடியவனுகிய என்விஷயத்தில் உனக்கு எண்ணமிருந்ததாயினும், (நீ எண்ணிய படியே) நீ இறந்த பின்பு (நான் உன்னுடனே இறவாமல்) பிழைத்திருப்பதும் (நீ இருக்கும் பொழுதே உன்னைத் தள்ளிவிட்டு) ஒற்றைவெண்கொற்றக்குடையின்கீழ் (நான்) இருந்து அரசாளுவதும் (தம்மில்) ஒத்தனவாகும்' என்ருன் (சத்துருக்கனன்); (எ-று.)

நீ அக்கினிப்பிரவேசஞ்செய்து இறந்தபின்பு நான் உயிர்வாழ்வேனுயின், நீ ஆளும் அரசாட்சியை வலியக்கைப்பற்றி வாழ்வதிலுள்ள பெரும் பாவத்தை யடைவேனுக என்று சத்துருக்கனன் பரதனைநோக்கிச் சபதங்கூறின னென்க. பி ம்:—[1] நகரேபுகலொழிந்தானேயன்ருேபரதனென்று. [2] புறத்திருந்தவ், புறத்தகன்றிவ். [3] தொடங்கிச்செய்தாய். [4] என்ருயேல், என்றேபின். [5] இருந்தேனுல். [6] இருந்ததுவும். (4144)

225.—பரதன் சத்துருக்கனனுக்குச் சமாதானங்கூறித் தீயமைக்கும்படி கட்டளையிடுதல்.

முத்துருக்கொண் டமைந்தனைய முழுவெள்ளிக் கொழுநிறத்து முளரிச் செங்கண், சத்துருக்க [1] னஃதுரைப்ப வவனிங்குத் தாழ்க்கின்ற தன்மை யானிங்கு [2] ஒத்திருக்க லாலன்றே யுலந்தாற்பி [3] னிவ்வுலகை யுலையவொட்டான், அத்திருக்குங் [4] கெடுமுடனே புகுந்தாளு மரசெரிபோ யமைக்க வென்ருன்.

(இ - ள்.) முத்தினது உருவத்தைக்கொண்டு பொருந்தினுற்போன்றதும் மிகச்சிறந்த வெள்ளிபோன்றதுமான நல்லவெண்ணிறத்தையும் செந்தாமரைமலர்போன்றசிவந்தகண்களையுமுடைய சத்துருக்கனன், அவ்வார்த்தையைக் கூற,—(அதற்குப்பரதன்), 'அவ்விராமபிரான் இப்பொழுது (வராமல்) தாமதிப்பது, நான் இங்கே உடன்பட்டு (இராச்சியத்தை) அரசாண்டிருத்தலா லன்ருே? (அவ்வாறன்றி நான்) இறப்பேனுனல், பின் (அரசனில்லாத) இந்த வுலகத்தை அலையவிடான்; (அவன் இங்குவராததாகிய) அம்மாறுபாடும் இல்லாததாகும்; (அவன்) உடனே (அயோத்தியில்) வந்து அரசாள்வான்; (ஆகையால், நான் இறப்பதற்காக நீ) சென்று நெருப்பைமுட்டுவாயாக' என்று (சத்துருக்கனனுக்குக்கட்டளை) கூறினுன்; (எ - று.)

சத்துருக்கன் - சத்ருக்நன்; பகைவர்களை யழிப்பவன்: "முத்துருக்கொண்டு செம்முளரியலர்ந்தாலொத்திருக்கும் மெழிலுடைய விவ்வொளியா, லெத்திருக்குங் கெடுமென்பதை யெண்ணுச், சத்துருக்கன்னெனச் சாற்றினராம்" என்ற பாலகாண்டச்செய்யுள் அறியத்தக்கது. பி-ம்:—[1] அது, ஈது. [2] ஒத்திருக்கலாமென்றே. [3] இவ்வுலகம். [4] கேட்டதுவே, கெடவுடனே, கேட்கவே. (4145)

226.—இரண்டுகவிகள்-கௌசல்யை அஃதறிந்து பரதனை விலக்க வந்துசேர்தலைக் கூறும்.

அப்பொழுதி [1]னவ்வுரைசென் றயோத்தியினி னிசைத்தலுமே யரியை யீன்ற, ஒப்பெழுத வொண்ணுத கற்புடையாள் வயிறு புடைத் தலமந் [2]தேங்கி,இப்பொழுதே யுலகிறக்கும் [3]யாக்கையினை [4]முடித்தொழிந்தான் மகனே யென்னு, வெப்[5]பெழுகி 'னலன்ன மெலிவுடையாள் கடிதோடி விலக்க வந்தாள்.

(இ-ள்.) அச்சமயத்தில், அவ்வார்த்தை அயோத்தியிற் சென்று சொல்லப்பட்டவளவிலே,-(அதைக்கேள்வியுற்று), திருமாலினமிசமான இராமபிரானைப் பெற்றவளும் உவமைகூறப்பெருத பதிவிரதாதருமத்தை யுடையவளுமான கௌசல்யை வயிற்றில் அடித்துக்கொண்டுவருந்தி ஏக்கமுற்று, 'மகனே! (நீ உனது) தேகத்தை (நெருப்பிற்போகட்டு) இறந்தால், இப்பொழுதே உலகத்துஉயிர்களெல்லாம் இறந்துவிடும்' என்று சொல்லிக்கொண்டே, தாபத்தினுலேயே அமைக்கப்பட்டதுபோன்று தளர்ச்சியடைந்த உடம்புடையவளாகி(ப் பரதனை அக்கினிப்பிரவேசத்தினின்று) தவிர்க்க விரைவாக ஓடிவந்தாள்; (எ - று.)

கௌசல்யைக்குப் பரதனிடமுள்ள புத்திர வாற்சல்யம் இங்கு வெளியாம். பி-ம்:—[1]இவ். [2]ஓடி, ஓங்கி. [3]இயற்கையதனை, இருக்கையினை. [4]முடித்தொழிந்தாய், இன்றொழிவாய். [5]ஒழுகினல். ()

227. மந்திரியர் தந்திரியர் [1]வளநகரத் தவர்மறையோர் மற்றுஞ் சுற்றச், சுந்தரிய ரெனைப்பலருங் கைதலையிற் பெய்திரங்கித் தொடர்ந்து செல்ல, இந்திரனே முதலாய விமையவரு முனிவரரு மிறைஞ்சி யேத்த,அந்தரமங் கையர்வணங்க வழுதரற்றிப் பரதனை வந்[2]தடைந்தா ளன்றே.

(இ - ள்.) (கௌசல்யை), மந்திரிமார்களும், சேனைத்தலைவர்களும், உறவினரான மகளிரும், பிராமணரும், செல்வமுடைய அயோத்தியாபுரியிலுள்ள மற்றும் பலவகையோரும் கைகளைத்தலைமேல்வைத்து அழுதுகொண்டு (தன்னைப்) பின்தொடர்ந்து வரவும்,—இந்திரன்முதலான தேவர்களும் இருடிச்சிரேஷ்டர்களும் வணங்கித் துதிக்கவும்,—ஆகாயத்திலுள்ள தேவமாதர்கள் வணங்கவும்,—அழுது பிரலாபித்துக்கொண்டு பரதனை வந்துஅடைந்தாள்;(எ-று.)

இந்திரன் முதலியோர் கௌசலையை இறைஞ்சித் துதித்தது, ஸர்வலோகசரண்யனை இராமனைப் பெற்ற சிறப்பினுலும், தன் புதல்வனைக் காட்டுக்கு ஓட்டிய கைகேயியின் புதல்வனிடத்து மாருத அன்புகொண்ட அவளுடைய இணையற்ற நற்குணத்தை நோக்கியதனுலு மென்க.பி-ம்:—[1]வளரந்தரத்தவர். [2]அடைந்தார்,

228.—கௌசல்யை பரதனைத் தீயில்விழ வொட்டாது தடுத்தல்.

எரி[1]யமைத்த மயானத்தை யெய்துகின்ற காதலனை யிடையே வந்து, விரியமைத்த நெடுவேணி புறத்தசைந்து [2]வீழ்ந்தொசிய மேனி தள்ளச்,[3]சொரி[4]வமைப்ப தரிதாய மழைக்கண்ணுள் தொடருதலுந் துணுக்க மெய்தாப், பரி[5]வமைத்த திருமனத்தா னடி[6]தொழுதானவள்புகுந்து பற்றிக் கொண்டாள்.

(இ - ள்.) நீர்ப்பெருக்கு அடங்குதலில்லையான [இடைவிடாது நீர்சொரிகிற] குளிர்ந்தகண்களையுடையவளான கௌசல்யை, விரித்தல் பொருந்திய [விரிந்த] நீண்ட சடைமுடி பின்புறத்தில் அவிழ்ந்து வீழ்ந்து புரளவும், உடம்பு (மெலிவால்) தள்ளாடவும்,—(சத்துருக்கனன்) தீ மூட்டிய நன்காட்டை அடைகின்றபுதல்வனை பரதனை இடைவழியில் தொடர்ந்து வந்தமாத்திரத்தில், (இராமன் விஷயமான) அன்புநிறைந்த சிறந்தமனமுடையனை பரதன், திடுக்கிட்டு(ப்பின்பு அவளது) பாதங்களை வணங்கினான்; அவள்நெருங்கி (அவனைத்) தழுவிப் பிடித்துக்கொண்டு கூறுபவளானாள்; (எ - று.)

இடையேவந்து தொடருதலும் என்பதற்கு - பரதனுக்கும் தீக்கும் இடையே குறுக்கிட்டு நின்றவளவில் என்று கருத்து உரைப்பர். இங்கே, மயானம்-தீயமைக்கப்பட்ட இடம். பி - ம்:— [1]அமைக்கும். [2]வீழ்ந்தவிழ்ப்ப, வீழ்ந்தொழிய. [3]சொரி. [4]அமைப்பற்றிருதாரை. [5]அமைந்த. [6]பணிந்தான். 'அரியமைத்தகருந்தாரைமழைக் கண்ணுடொடருதலு மிடுக்கணெய்தி' ஒன்று ஒரு பிரதியில் மூன்றாமடி. (4148)

வேறு.

229.—ஏழுகவிகள்-பரதனைத் தீயில்விழவொட்டாதுகோசலை தடுத்துக் கூறுதலைத் தெரிவிக்கும்.

மன்னி ழைத்தது மைந்த னிழைத்ததும்
முன்னி ழைத்த விதியின் முயற்சியால்
பின்னி ழைத்தது [1]மெண்ணிலப் பெற்றியால்
என்[2]னி ழைத்தனை யென்மக னேயென்றாள்.

(இ - ள்.) 'தசரதமகாராஜா செய்ததும் [புத்திரசோகத்தால் இறந்ததும்] (மூத்த)குமாரனாகிய இராமன் செய்ததும்[காட்டுக்குச் சென்றதும்], (நான்) முற்பிறப்பிற் செய்த விதியின் பயனால் (ஆயின): ஆலோசிக்குமிடத்து, (இராமபிரான்) பின்பு செய்ததும் [முற்குறித்தபடி வராமற் போனதும்], அத்தன்மையாலேயே (ஆகியதாம்): எனது குமாரனே! (நீ) யாதுசெய்யத் தலைப்பட்டாய்?' என்று (கௌசல்யை பரதனை நோக்கிக்) கூறினாள்: (எ-று.)

'ஊழ்வினைப்பயனால் கணவனும் மகனும்என்ற அவ்விருவரும் என்னை விட்டு இருவகையாய்ப்போய்விட, நீயும் இவ்வாறுசெய்வது தகுதியோ?' எனப் பரதனை நோக்கிக் கௌசலை கூறினாள். பி.ம்:— [1]எண்ணலை. [2]இழைத்தனையோ. (4149)

230. **நீ¹யி ²தெண்ணினை யேல்நெடு நாடெரி**
பாயு மன்னருஞ் சேனையும் ³பாய்வரால்
⁴தாய ரெம்மள வன்று தனியறம்
தீயின் வீழு ⁵முலகுந் திரியுமால்.

நான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) நீ இவ்வாறுசெய்வதை [தீக்குதித்தலை] நினைத்தா யாயின், பெரிய (கோசலமென்னும்) இந்நாட்டுச்சனங்கள் (உன்னோடொக்கத்) தீக்குதிப்பார்கள்: (நம்மைச்சேர்ந்த) அரசர்களும் சேனைகளும் (தீயிற்) பாய்ந்து இறப்பார்கள்; (தீக்குதிப்பது) தாயராகிய எங்களளவில் (நிற்பது) அன்று [நாங்களும் அவ்வாறே இறந்தொழிவோமென்பது மாத்திரமல்ல]: ஒப்பற்ற தருமமும் நெருப்பில் வீழ்ந்துவிடும்; உலகமும் நிலைகலங்கும்; (எ-று.)— தீக்குளித்தலையென்னமாட்டாது 'இது' என்றாள். பி - ம்:—¹அது. ²எண்ணினையே. ³பாயுமால், பாறுமால், ⁴தாயரோம். ⁵உலகமுந் தீயும். (4150)

231. **தரும நீதியின் ¹றற்பய னுவதுன்**
கரும ²மேயன்றிக் ³கண்டிலங் கண்களால்
அருமை யொன்று முணர்ந்திலை யையநின்
பெருமை யூழி திரியினும் பேருமோ.

(இ - ள்.) ஐய! உனதுசெயல், தருமமான நீதிநெறியின் சாரமாகவுள்ளதே யல்லாமல் (தருமத்திற்கு மாறுபட்டதாக எங்கள்) கண்களால் (ஒருபொழுதும்) கண்டதில்லை; உனது அருமையைச் சிறிதும் (நீ) அறிந்தாயில்லை; உனது கௌரவம் யுகம்புரண்டாலும் பேருமோ? (எ-று.)—பி-ம்:—¹தம். ²மற்றொன்றுங். ³கண்டிலன்.

232. **எண்ணில் கோடி யிராமர்க ளென்னினும்**
அண்ணல் நின்னரு ளுக்கு காவரோ
புண்ணி யம்மெனு நின்னுயிர் ¹போயினால்
மண்ணும் வானு ²முயிர்களும் வாழுமோ.

(இ - ள்.) பெருமையிற்சிறந்தவனே! (இராமன் ஒருவனேயன்றி) அநேககோடி இராமர்கள் கூடினாலும், உனது அன்புக்கு ஒத்தவராவரோ? [ஆகார்]; புண்ணியமே வடிவெடுத்து வந்துள தென்று கூறத்தக்க உனது உயிர் அழிந்தால், மண்ணுலகமும் விண்ணுலகமும் (அவற்றில் வாழும்) பிராணிகளும் இறவாமலிருக்குமோ? (எ - று.)

அயோத்தியாகாண்டத்தில் "தாயுரைகொண்டு தாதையுதவிய தரணி தன்னைத், தீவினையென்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப், போயினை யென்றபோது புகழினோய் தன்மை கண்டால், ஆயிர மிராமர் நின்கேழாவரோ வறியினம்மா" என்று குகன் பரதனைக்கூறினது, இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. நீ உன்னுயிரைப் போக்குவது, மண்ணும் விண்ணும் வாழாமைக்குக் காரணமா மென்றவாறு. பி-ம்:—¹போக்கினால். ²மறைகளும். (4152)

233. இன்று [1]வந்திலனேயெனி னுளையே
ஒன்றும் வந்துனை [2]யுன்னி யுரைத்தசொல்
பின்று மென்[3]றுண ரேற்பிழைத் தானெனில்
பொன்றுந் தன்மை [4]புகுந்தது [5]போயென்றாள்.

(இ-ள்.)(இராமன்) இன்றைக்கு வாராவிட்டாலும், நாளைக்கே உன்னை வந்து சேர்வான்; ஆலோசித்து ('பதினான்குவருடங் கழிந்ததும் வருவேன்' என்று) கூறிய வார்த்தை தவறி விடுவானென்று (நீ) எண்ணாதே; (ஒருகால் வராது) தவறிவிட்டால் (அவனுக்கு) அபாயம் நேர்ந்துவிட்டதென்பது பெறப்படுமென்றாள்: (எ - று.)

நாளைவரையிற் காத்திருந்து இராமன் வாராவிடின் அக்கினிப் பிரவேசஞ் செய்யலாமென்று கௌசலை கூறினாள். பொன்றுந் தன்மை புகுந்ததுபோய் - அக்கினியில்விழுந்து இறக்குந்தன்மை நாளை இருக்கவேயிருக்கின்றது என்றலுமொன்று. பி-ம்:—[1]வந்திலனேலினி. [2]உன்னில். [3]உண்டிரேல். [4]புரிதியின். [5]போல். ()

234. ஒருவன் மாண்டன னென்றுகொண் டூழிவாழ்
பெருநி லத்துப் பெறலரு [1]மின் னுயிர்க்
கருவு மாண்டறக் காணுதி யோகலைத்
தரும நீயல தில்லெனுந் தன்மையாய்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) சாஸ்திரங்களிற் கூறிய தருமம்நீ யல்லாமல்வேறில்லையென்று சொல்லத்தக்க நற்குணமுடையவனே! ஒருவன்[இராமன்] இறந்தானென்றுகருதி, கற்பகாலம் வரையில் வாழக்கூடிய பெரிய இவ்வுலகத்திலுள்ள பெறுதற்கு அருமையான இனிய உயிர்களைக் கருப்பமும் அழியும்படிசெய்ய ஆலோசிக்கின்றாயோ?

சகலசாஸ்திரங்களையும் உணர்ந்தவனான நீ இவ்வுலகத்திலுள்ளார் வேருடன் அழியும்படி தீக்குதித்து இறப்பது தகாதென்று சொல்லிப் பரதனைக் கௌசலை விலக்கினாள். 'கலைத்தரும நீயலதில்லெனுந் தன்மையாய்' என்ற தொடர் கருத்துடையடைகொளியணி. மாண்டனன்-சொல்தவறி வராதொழிந்தானெனினுமாம். பி-ம்:—[1]மன். (4154)

235. இறக்கை யுஞ்சில [1]ரேகலு மோகத்தால்
பிறக்கை யுங்கட னென்றுபின் பாசத்தை
மறக்கை [2]யும்மக னே [3]வலி யாவது
[4]துறக்கை தானு மென்றாள் [5]மனந் தூய்மையாள்.

(இ-ள்.) 'மகனே! சிலர் சாதலும் விட்டுப்பிரிந்துசெல்லுதலும் மோகத்தால் (மறுபடி) பிறப்பெடுத்தலும் (உலகத்தார்க்குக்) கடமையென்று எண்ணி, பின்பு (ஒருவர்க்குஒருவருள்ள) பாசத்தை மறந்துவிடுதலும் (அகங்காரமமகாரங்களைத்) துறந்து

பற்றறுதலுமே, (உயிர்க்கு) உறுதியுடையனவாம்' என்று (பின்னும்) சொன்னாள், பரிசுத்தமான மனத்தையுடைய கௌசல்யை;

பாசம்-மனைவி மக்கள் முதலாகியவரிடத்து உண்டாகும் மனப்பிணிப்பு. மறக்கை வலியாவது, துறக்கை தானும் வலியாவது எனத் தனித்தனி இயையும். மோகம்-அவா; அவித்யை. ''அவா வென்பவெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுந், தவாஅப் பிறப்பீனும் வித்து'' ஆதலால், 'மோகத்தாற் பிறக்கை' என்றாள். பி-ம்:—[1]ஏசலும் யோகத்தால். [2]காண். [3]வலியாவதென், வலியாதவன். [4]துறக்க நாணவென்றாள். [5]மனத்தூய்மையாள். (4155)

236.—மூன்றுகவிகள்-ஒருதொடர்: கௌசலைசொல்லைப் பரதன் மறுத்தலைத் தெரிவிக்கும்.

மைந்த னென்னை மறுத்துரைத் தா[1]னெனல்
எந்தை [2]மெய்ம்மையு மிக்[3]குலச் செய்கையும்
நைந்து போக [4]வுயிர்நிலை நச்சிலேன்
முந்து [5]செய்த சபத முடிப்பனால்.

(இ-ள்.) (பரதன் கௌசலையை நோக்கி), இராமனது மெய்யுரையும், இந்தச் சூரியகுலத்தினது ஒழுக்கமும் (தவறி) யழிந்துவிட, (நான்) உயிர்வாழ்தலை விரும்பமாட்டேன்; முன்புசெய்துள்ள சபதத்தை நிறைவேற்றுவேன்; (ஆகையால்), 'மகன் எனதுவார்த்தையைத் தடுத்துக்கூறினான்' என்று நினையாதே; (எ-று.)

எனல்-'அல்' விகுதிபெற்ற எதிர்மறைவியங்கோள். எந்தை மெய்ம்மை-'பதினான்குவருடங் கழிந்ததும் மீண்டுவருவேன்' என்றது. இக்குலச்செய்கை-செய்தசபதம் தவறாமை. முந்துசெய்தசபதம்-இராமன்சொன்னபடி திரும்பிவராவிட்டால் அக்கினிப்பிரவேசஞ்செய்வேனென்று தான்சொன்னது. ''ஜ்யேஷ்டப்ராதாபித்ருஸம:'' என்பவாதலால், 'எந்தை' என்றது. எந்தை-தசரதனென்பாருமுளர். பி-ம்:—[1]எனில். [2]மேன்மையும். [3]குடி. [4]உயிரினை. [5]சொன்ன. (4156)

237. [1]யானு மெய்யினுக் கின்னுயி ரீந்துபோய்
வானு ளெய்திய மன்னவன் [2]மைந்தனால்
கானு ளெய்திய [3]காகுத்தற் கேகடன்
[4]ஏனை யோர்க்கி திழுக்கில் வழக்கன்றோ.

(இ-ள்.) யானும் சத்தியத்துக்காக(த் தனது) இனியஉயிரை விட்டுச் சென்று மேலுலகமடைந்த தசரதமகாராசனது மகன் தானே; (பித்ருவாக்ய பரிபாலனஞ் செய்யும்படி தான் தன்மனத்தில் நிச்சயித்ததை நிறைவேற்றுதல்) வனத்திற்சென்ற இராமனுக்கு மாத்திரமா கடமை? மற்றவர்க்கும் (தாம்) சங்கல்பித்ததை நிறைவேற்றுதல் குற்றமற்ற ஒழுக்கமேயன்றோ? (எ-று.)—ஆல்-தேற்றம். பி-ம்:—[1]ஏனை. [2]மைந்தன்போற், மைந்தனுய்க். [3]காத்தற்கோ. [4]ஈனனேற்கு. (4157)

238. தாய்சொற் கேட்டலுந் தந்தைசொற் கேட்டலும்
பாசத் தன்பினைப் பற்றற [1] நீக்கலும்
ஈசற் கேகடன் யானஃ திழைக்கிலென்
[2] மாசற் றேனிது காட்டுவென் மாண்டென்றான்.

(இ - ள்.) தாயின்பேச்சைக் கேட்டு நடத்தலும் தந்தையின் சொல்லைக்கேட்டு நடத்தலும் அன்புவைத்தற்குரிய இடத்து அன்பை அடியோடு ஒழித்தலும் தலைவனான இராமனுக்கே முறைமையாம்; நான் அத்தொழில்களை (அவன்போல)ச் செய்ய உடன்படமாட்டேன்;(நான்)இறந்து குற்றந்தீர்ந்தேனாகி(இராமனிடத்து அன்புடைமையாகிய) இதை(உங்கட்கு)க் காண்பிப்பேன் என்றான், (பரதன்); (எ - று.)

இராமன் சொன்னபடிவரவில்லையென்று வெறுப்புக்கொண்டு பரதன் இங்ஙனம் நிஷ்டூரமாகக் கூறினான். இராமன் தாய்தந்தையர் சொல்லைக்கேட்டு நடந்தது வனத்துக்குச்சென்றதனாலும், பாசத்தன்மைப் பற்றறநீக்கினது பரதன் பரிவாரங்களுடன் வனத்திற்சென்று வேண்டவும் மறுத்துப் பின்னும் சொன்னபடிவாராதிருந்ததனாலும் வெளியாமென்க. 'அஃது' என்றது-தொகுதி யொருமை. அஃது இழைக்கிலென் - தாய்சொல்லையும் கேளேன், இராமனிடம் அன்பையும் விடேன்: ஆதலால், இறப்பேன் என்றபடி. 'மாசற்றேன் இதுகாட்டுவென் மாண்டு' என்பதற்கு - நான் இன்னது செய்வேனென்று ஆதியிற்சொல்லிக்கொண்ட சொல்லை இந்தத் தீயில் விழுந்து மாண்டுகாட்டுவேனேயானால் ஒருகுற்றமுமில்லாதவனாவேனென்று உரைப்பாருமுளர். இவ்வளவுவிவரம் முதனூலிலில்லை. பி-ம்:—[1] நீத்தலும். [2] மாசற்றோயிது,மாசற்றோவிது.(4158)

239.—அங்ஙன மிருந்த பரதனிடம் அநுமான் வருதல்.

என்று தீயினை யெய்தி [1] யிரைத்தெழுந்து
ஒன்று பூசலி டு[2] முல கோருடன்
நின்று பூசனை செய்கின்ற [3] நேசற்குக்
குன்று போல்நெடு மாருதி கூடினான்.

(இ-ள்.) என்றுசொல்லி அக்கினியைக்கிட்டி, (தான்தீயில் விழுவதைக் குறித்துக்) கூக்குரலிட்டு மிக்குப்பொருந்திய பேரொலி செய்கிற சனங்களுடன் (அவ்வக்கினியின் எதிரில்) நின்றுகொண்டு (அவ்வக்கினிக்குப்) பூசைசெய்கிற (இராமனிடத்துப்) பக்தியுள்ள பரதனிடம் மலைபோன்ற பெரிய வடிவத்தையுடையஅநுமான்வந்து சேர்ந்தான்; (எ-று.)—பி - ம்:—[1] எழுந்திரைந்து, எழுந்திரைத்து, எழுந்தரை. [2] உலகோலிட, உலகோடரு. [3] நெஞ்சற்குக், நீதியிற். ()

240.—ஐந்துகவிகள் - அநுமான் இராமனது வருகையைத் தெரிவித்து, அக்கினியை அவித்தலைக் கூறும்

ஐயன் வந்தன னாரியன் வந்தனன்
மெய்யின் [1] மெய்யன்ன நின்னுயிர் [2] வீடினால்

உய்யு [3]மேயவ னென்றுரைத் துட்புகாக்
கையி ஞலெரி யைக்கரி யாக்கினுன்.

(இ-ள்.) (அநுமான் பரதனைநோக்கி),'தலைவனுனஇராமபிரான் வந்தான், பெரியோன் வந்தான்; சத்தியத்திற்கு உடல் போன்று ஆதாரமாயுள்ளவனுன [சத்தியந்தவருத] உனது உயிர் ஒழிந்தால் அவ்விராமபிரான் உயிர்வாழ்வனே?' என்று உரைத்து (அக்கூட்டத்தின்) உள்ளேபுகுந்து (தனது) கையினுல் அவ்வக்கினியை(ப் பிசைந்து அவித்து)க் கரியாக்கினுன்; (எ - று.)

'சென்று தீதின்மைசெப்பி யத்தீயவித்து' என்ற இராமன் கட்டளைப்படி அநுமான் செய்யலாயினனென்க. மெய்யின்மெய் யன்ன என்பதற்கு - வாய்மைக்கும் ஒருவாய்மையாய் மேம்பட்டு நின்ற என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1]மெய்யவனின்னுயிர், மெய்யனினின்னுயிர், மெய்யனெனின்னுயிர். [2]வீட்டினுல். [3]மேலவன்.

241. ஆக்கி மற்றவ னுய்மலர்த் [1]தாள்களைத்
தாக்கந் தன்தலை தாழ்ந்து [2]வணங்கிக்கை
வாக்கிற் [3]கூடப் புதைத்தொரு மாற்றநீ
தூக்கிக் கொள்ளத் தகுமெனச் [4]சொல்லினுன்.

(இ - ள்.) (அவ்வாறு தீயைக்) கரியாக்கிவிட்டுப்பின்பு (அநுமான்), அந்தப்பரதனது சிறந்த தாமரைமலர்போன்றபாதங்களைப் பொருந்தும்படி தனதுதலையாற் பணிந்துவணங்கி, வாயிற் கை சேரும்படி [கையினுல் வாயை] மூடிக்கொண்டு, '(நான் இப்போது சொல்லும்) ஒருவார்த்தையை நீ ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்று (பின்னும்) சொல்லினுன்; (எ - று.)—அவ்வார்த்தையை, அடுத்த கவிகளிற் காண்க. பி-ம்:—[1]தாளிணை. [2]வணங்கினுன். [3]கூட்டி. [4]சொல்லுவான். (4161)

242. இன்ன நாழிகை [1]யெண்ணைந் துளவைய
உன்னை [2]முன்னம்வந் தெய்த வுரைத்தநாள்
இன்ன தில்லை யெனினடி நாயினேன்
முன்னம் வீழ்ந்திவ் வெரியின் முடிவெனுல்.

(இ - ள்.) ஐயனே! (இராமபிரான்) உன்னை வந்து சேர்வதாக முன்னே தவணைசொல்லியுள்ளநாளில் இன்னும் நாற்பதுநாழிகைப் பொழுது உண்டு; (நான் சொல்லும்) இச்சொல் உண்மையன்றுனுல்,—அடியவனுன நாய்போற் கடைப்பட்ட நான் (உனக்கு) முன்னமே இந்த அக்கினியில் விழுந்து இறப்பேன்; (எ-று.)

பின்னிரண்டடி - தன்வார்த்தையைத் திடப்படுத்தக் கூறிய உறுதிமொழி. எண்ணைந்து-எட்டாகிய ஐந்து; நாற்பது; பண்புத் தொகை. எட்டும்ஐந்தும் [பதின்மூன்று] என உம்மைத்தொகை யாகவுங் கூறலாம். இனி,சில என்னும் பொருளில்வந்த எண்களின் அடுக்கு எனக்கூறுதலும் ஒன்று. ஐந்துஎன்னும் எண்ணுள்ள நாழிகையுள வென்றலும் ஒன்று. பி - ம்:—[1]ஏழுளவெம்பிரான், எண்ணஞ்சுளதைய. [2]மன்னன். (4162)

243. ஒன்று தானுள துன்னடி யேன் [1]சொலால்
நின்று [2]தாழ்த்தருள் நேமிச் சுடர் [3]குணக்
குன்று [4]தோன்றள வும்மிது குன்றுமேற்
பொன்று நீயு முலகமும் பொய்யிலாய்.

(இ - ள்.) சத்தியம் தவருத தவனே! (நான் கூறவேண்டுவது) ஒன்றுதான் உண்டு (அது யாதெனில்), வட்டவடிவமாகிய ஒளிமயமான சூரியன் கிழக்குத்திக்கிலுள்ள உதயகிரியில் தோன்றுகிற வரையிலும் உனது அடியவனுகிய எனது வார்த்தையினுல் [வார்த்தையை நம்பி] (அக்கினிப்பிரவேசஞ் செய்யாமல்) நின்று பொறுத்துக்கொண்டிருப்பாயாக: (அதற்குள் இராமன் வருவன்): இத்தவணை தவறுமாயின், (பின்பு) நீயும் உலகமும் அழியுங்கள்; (எ - று.)—பி-ம்:—[1]சொல, [2]தாழ்தரு, தாழ்த்திரு, தாழ்க்குறின். [3]நெடுங். [4]தாழ்வு, இங்குச் சிலபிரதிகளில் ஒருபாடல் காணப்படுவது வருமாறு:—

பரத்துவன் வருதலும் பரிந்தி ராமனும்
கரத்துணை குவித்தன னிளைய காளையோடு
[1]எரித்திற முனியுமா சிக[2]ளி யம்பிட
விருப்பொடு மிடவகை யினிது மேயினுன்.

பி-ம்:—[1]அரி. [2]இயம்பினன். (4163)

244. எங்க ளுயகற் கின்னமு தீகுவான்
பங்க யத்துப் பரத்துவன் வேண்டலால்
அங்கு வைகின னல்லது தாழ்க்குமோ
இங்க ணல்லதொன் றின்னமுங் கேட்டியால்.

(இ-ள்.) தாமரைமலர்மாலையை யணிந்த பரத்துவாசமுனிவன், எமது தலைவனுன இராமபிரானுக்கு(த் தான்) இனிய உணவளிக்க (அதை ஏற்றுக்கொள்ளும்படி) வேண்டினதனுல், (அப்பிரான்), அம்முனிவனது ஆச்சிரமத்தில் தங்கினுனே யல்லாமல், தாமதிப்பானே? இப்பொழுது, இன்னமும் இனியதொன்றைக் கேட்பாயாக; (எ-று.)—பிராமணர்கட்குத் தாமரைமலர்மாலை யுரியது; தாமரை மணிமாலையுமாம். (4164)

245.—அநுமான் பரதனுக்கு இராமனது மோதிரத்தை அடையாளங் காட்டல்.

அண்டர் நாத னருளி [1]யளித்துளது
[2]உண்டொர் பேரடை யாள முனக்கது
கொண்டு வந்தனென் [3]கோதற்ற [4]சிந்தையாய்
கண்டு கொண்[5]டருள் வாயெனக் காட்டினுன்.

(இ - ள்.) தேவர்தலைவனுன இராமபிரான் அருள்கொண்டு (என்னிடம்) கொடுத்துள்ளதாகிய ஓர் பேர் அடையாளம் உண்டு; உனக்கு அது கொண்டுவந்தனென்; குற்றமற்ற எண்ணமுள்ள

வனே! (அதனைக்) காண்பாயாக என்று கூறி, (அநுமான் அம் மோதிரத்தைப் பரதனுக்குக்) காண்பித்தான்; (எ-று.)—பேரடையாளம்-இராமன் பெயரைக்கொண்ட அடையாளமுமாம். பி-ம்:—[1]அளித்தொன்று, அளித்துள. [2]உண்டு,உண்ட. [3]கோதறு. [4]சிந்தையால். [5]அருளாய். (4165)

வேறு.

246.—இரண்டுகவிகள் - அநுமான் காட்டிய மோதிரத்தைக் கண்டு அங்குள்ளவர் மகிழ்தல்.

காட்டிய மோதிரங் கண்ணிற் காண்டலும்
ஊட்டிய [1]வல்விட [2]முற்று முற்றுவார்க்கு
ஊட்டிய நன்மருந் தொத்த தாமரோ
ஈட்டிய வுலகுக்கு மிளைய [3]வேந்தற்கும்.

(இ - ள்.) (அநுமான்) காட்டிய மோதிரத்தைக் கண்களாற் பார்த்தவுடன், (அம்மோதிரம்),—(அங்குத்) திரண்டுள்ள உலகத்துச் சனங்கட்கும் (இராமனது) தம்பியான பரதனுக்கும், உண்பிக்கப்பட்ட கொடிய விஷத்தைப் பொருந்தி [உண்டு] இறக்குந் தருணத்தி லிருப்பவர்க்கு ஊட்டப்பட்ட நல்ல தேவாமிருதத்தை யொத்திருந்தது; (எ - று.)

விடத்திற்கு வலிமை, தன்னையுண்டாரைக் கொல்லுதல். அமிருதத்துக்கு நன்மை, தன்னையுண்டாரை உயிர்ப்பித்தல். உவமையணி. ஈட்டிய-வலித்தல். பி-ம்:—[1]வெவ்விடம், நல்விடம், தீயனல். [2]முறுக, முறுக்கி. [3]வீரற்கும். (4166)

247. அழுகின்ற வாயெலா மார்த் [1]தெழுந்தன
விழுகின்ற கண்ணெலாம் வெள்ள [2]மாறின
உழுகின்ற தலையெலா [3]முயர்ந்தெ ழுந்தன
தொழுகின்ற [4]கையெலாங் காலின் றோன்றலை.

(இ - ள்.) (அப்பொழுது அங்குள்ளாருடைய) கதறியழுது கொண்டிருந்த வாய்களெல்லாம், (மகிழ்ச்சியினால்) மிக்கஆரவாரஞ் செய்தன; (தாரை தாரையாய் நீர்) பெருகுகின்ற கண்களெல்லாம், அந்நீர்ப்பெருக்கு ஒழிந்தன; (துயரத்தினால் வீழ்ந்துபுரண்டு நிலத்தை) உழுவனபோலுந் தலைகளெல்லாம், (சந்தோஷத்தினால்) நிமிர்ந்தெழுந்தன; கைகளெல்லாம், (நன்றியறிவினால்) வாயுகுமாரனை அநுமானைத் தொழுவனவாயின; (எ-று.)—'உழுகின்ற தலை' என்றது-துயரத்தினால் தலைகவிழ்ந்து தரையில் மோதிக்கொள்ளுந் தலை யெனினுமாம். பி - ம்:—[1]எழுந்தநீர். [2]மாறிமுன், மாறிமண். [3]முயன்று. [4]கையவாய். (4167)

248.—இதுமுதல் ஆறுகவிகள்-மோதிரம்பெற்ற பரதனது மகிழ்ச்சியைக் கூறும்.

மோதிரம் வாங்கித்தன் [1]முகத்தின் மேலணைத்து
ஆதரம் பெறுவதற் காக்கை யோவெனு

[2]ஓதினர் [3]நாணுற வோங்கி னுன் றொழும்
தூதனை முறைமுறை தொழுது [4]துள்ளுவான்.

(இ - ள்.) (தன்னை) வணங்கி (மோதிரங்காட்டி) நின்ற தூதனாகிய அநுமானைப் பலமுறைவணங்கி ஆனந்தக்கூத்தாடுபவனாகிய பரதன்,—(அந்த) மோதிரத்தை (அநுமான்கையினின்று தன்கையில்) வாங்கித் தனதுமுகத்தின்மேல் அணைத்துக்கொண்டு -'(இராமபிரானை நெடுநாளாகப் பிரிந்து வருந்திய இவனது)உடம்பு (இனி அப்பிரானது) அன்பைப் பெறுதற்கு உரியதாகுமோ? [அன்பைத்தாங்கவும் வலியற்றது]' என்று கூறினவர் நாணமடையும்படி (மகிழ்ச்சியினால் உடல்) பூரித்தான்; (எ - று.)

'ஆதரம் பெறுவதற்கு ஆக்கையோ என ஓதினர் நாணுற ஓங்கினுன்' என்பதற்கு-இந்தமோதிரத்தைக்கண்டு பூரிப்பதற்கு நமதுபரதனுடைய தேகம் போதுமோ என்று சொன்னவர்கள் நாணும்படி தேகம்பூரித்தது என்று உரைப்பாருமுளர். பி-ம்:— [1]முடியின். [2]ஓதினுன். [3]உடலுற, உடற்பெற. [4]துள்ளினுன், சொல்லுவான். (4168)

249. ஆதிவெந் [1]துயரலா லருந்த லின்மையால்
ஊதுறப் பறப்பதா யுலர்ந்த யாக்கைபோய்
ஏதில னொருவன்கொ லென்ன [2]லாயது
மாதிரம் [3]வளர்ந்தன வயிரத் தோள்களே.

(இ - ள்.) (இராமனைப் பிரிந்தது) முதல் கொடியதுன்பமேயல்லாமல், (யாதொரு சந்தோஷசமாசாரமும்) அனுபவியாதபடியினால், ஊதினுற் பறக்கக்கூடியதாகி வாடின (பரதனது) சரீரமானது,-(மோதிரங்கண்ட அப்பொழுது, அந்நிலை)மாறி, '(இவன் பரதனல்லன்,) அயலானொருவன் போலும்' என்று கூறும்படி பூரித்தது; உறுதியான (அவனது) தோள்கள் மலைகள்போல ஓங்கியெழுந்தன; (எ - று.)

இனி, ஆதி வெம்துயரலால் - (இராமனைப்பிரிந்தது) முதல் கொடிய துன்பத்தினுலும், அருந்தல் இன்மையால்-உணவுகொள்ளுத லில்லாமையாலும் எனவும், மாதிரம் வளர்ந்தன-திக்குக்களையளாவ வளர்ந்தன எனவும் பொருள்கூறலாம். இரண்டாமடி, உலகவழக்குநவிற்சியணி. பி-ம்:—[1]துயரினுல். [2]ஆயினுன், [3]பொருதன, அளர்ந்தன. (4169)

250. அழுநகு மனுமனை யாழிக் [1]கைகளால்
தொழுமெழுந் [2]துள்ளும்வெங் களிது ளக்கலால்
விழு [3]மழிந் தெங்கும்போய் விங்கும் வேர்க்குமக்
குழவொடுங் [4]குனிக்குந்தன் றடக்கை [5]கொட்டுமால்.

(இ-ள்.) (அப்பரதன்),—மிக்க மகிழ்ச்சி ஆட்டுதலால், அழுவான்; சிரிப்பான்; அநுமானை மோதிரம் வாங்கிய (தனது) கைகளாற் கூப்பி வணங்குவான்; உயர எழும்புவான்; துள்ளிக்குதிப்

பான்; சோர்ந்து கீழ்விழுவான்; மனந் திகைத்துக் கலங்குவான்; மிகவும் உடல் பூரிப்பான்; உடல் வேர்ப்பான்; (பக்கத்திலுள்ள கூட்டத்தைக் கூத்தாடச்சொல்லி) அக்கூட்டத்தாருடன் கூத்தாடுவான்: தனது பெரிய கைகளைத் தட்டுவான்; (எ - று.)—இங்குக் கூறியயாவும், உவகைமிகுதியாலாய மெய்ப்பாடுகள். பி - ம்:—[1]கையினுல். [2]துள்ளுறும், துள்ளுமெய். [3]எழுந்து. [4]குளிக்கும். [5]கூப்புமால். (4170)

251. ஆடுமி னுடுமி னென்னு மையன்பால்
ஓடுமி னேடுமி னென்னு மோங்கிசை
பாடுமின் பாடுமி னென்னும் பாவிகாள்
சூடுமின் சூடுமின் தூதன் [1]தாளெனும்.

(இ - ள்.) 'பாவிகளே! கூத்தாடுங்கள் கூத்தாடுங்கள்' என்று (எதிரிலுள்ளாரை நோக்கிச்) சொல்வான்; 'இராமபிரானிடத்தில் (எதிர்கொண்டு) ஓடுங்கள் ஓடுங்கள்' என்று சொல்வான்; '(இராமபிரானது) மிக்ககீர்த்தியைப் பாடுங்கள் பாடுங்கள்' என்று சொல்வான்; 'தூதனது பாதங்களை(த் தலையில்) அணியுங்கள் அணியுங்கள்' என்று சொல்வான்; (எ - று.)

பரதன் எதிரிலுள்ளாரைநோக்கி 'பாவிகாள்' எனவிளித்தது, இராமபிரானைப் பதினன்கு வருஷம் பிரிந்திருந்தமை பற்றியும், அவன் எழுந்தருளுவதை அறிந்தும் தன்எண்ணத்துக்குத் தக்கபடி அவர்கள் அத்துணைமகிழ்ச்சியை யுடையராகத் தோன்ருதிருந்தமை பற்றியும். தூதன் தாளைத் தலைமேற்கொள்ளச்சொன்னது, இராமன்வரும் நற்செய்தியை அறிவித்த பேருதவிக்காக. பி-ம்:—[1]தோள். (4171)

252. வஞ்சனை யியற்றிய மாயக் [1]கைகையார்
துஞ்சுவ [2]ரினியெனத் தோளைக் கொட்டுமால்
[3]குஞ்சித வடிகள்[4]மண் டிலத்திற் கூட்டுற
அஞ்சனக் [5]குன்றினின் ருடும் பாடுமால்.

(இ-ள்.)'(இராமபிரானை அரசுபுரியவொட்டாது வனஞ் செல்லுமாறு) சூழ்ச்சிசெய்த மாயத்தன்மையையுடைய கைகேயியார் இனி (அவ்வாறு செய்வதற்கு இடமில்லாமல்) மனம் சோர்வார்' என்று சொல்லி (இராமபிரான் அரசுபுரியவேணுமென்ற தனது எண்ணம் நிறைவேறியதனுல் தன்வெற்றிதோன்றத்) தோளைக்கொட்டுவான்; மடங்கிய அடிகள் மண்டலாகாரமாகப் பொருந்தும்படி சுழன்று மைம்மலைபோலநின்று கூத்தாடுவான், பாடுவான்; (எ-று.)

கைகையார் என்ற பன்மை, இகழ்ச்சிபற்றியது. குஞ்சிதவடிகள் மண்டிலத்திற் கூட்டுற நின்ருடும்-ஒருகாலைப்பூமியிலூன்றி நின்று மற்றொரு காலைத் தூக்கிக்கொண்டு இவ்வாறே இரண்டு கால்களையும் மாற்றிமாற்றி முடக்கிச் சுழன்ருடுவனென்றவாறு. அஞ்சனக்குன்றை உவமைகூறியதனுல், பரதனதுநிறம் கருமை

யென்பது விளங்கும். பி-ம்:—[1]கேசியார். [2]என்றுதன். [3]குஞ்சிதவடியன், குஞ்சிதனடியன், குஞ்சிதமண்டலங். [4]மண்டலங்கள் கூட்டுற, கால்கள் கூடுற, மண்டிலத்தைக்கூடுற. [5]குன்று. (4172)

253. **வேதியர் தமைத்தொழும் வேந்தரைத் தொழும்**
தாதியர் தமைத்தொழுந் தன்னைத் தான்தொழும்
ஏதுமொன் [1]றுணர்குறா திருக்கு [2]நிற்குமால்
காதலென் [3]றதுவுமோர் [4]கள்ளின் தோற்றமே.

(இ-ள்.) (இராமன் சேமமாய்மீண்டுவரவேண்டுமென அவரவர் வேண்டிக்கொண்டதற்குஏற்ப மீண்டுவந்தானென்று அங்குள்ள) பிராமணர்களை வணங்குவான்; அரசர்களை வணங்குவான்; குற்றேவல் செய்யும் மகளிரை வணங்குவான்; தன்னைத்தானே வணங்குவான்; யாதொன்றையும் அறியாமல் இருப்பான்; (எழுந்து) நிற்பான்; அன்புஎன்று சொல்லப்படுகிறதும் ஒரு கள்ளின் தன்மையுடையதே; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கீழ்க்கூறிய சிறப்புப்பொருள்களை ஈற்றடியிற்கூறிய பொதுப் பொருள் சாதிக்க வந்ததனால், **வேற்றுப்பொருள்வைப்பணி.** ஈற்றடியை இப்படலத்து இருபத்துமூன்றாஞ்செய்யுளினீற்றடியோடு ஒப்பிடுக. இப்பாடலைக் குறித்து **விநோதரசமஞ்சரியில்** 'தமையன் வந்த சந்தோஷப்பெருக்கினால் பரதன் அங்கிருந்த பிராமணரைத் தமர்களைப்பார்த்து 'சுவாமிகளே! உங்களாசீர்வாதபலத்தினால் எங்கள் தமையன் க்ஷேமமாய் வந்தான்' என்றுசொல்லி அவர்களுக்குத் தண்டன் சமர்ப்பிப்பான். தன்னை வணங்குவதற்குஉரிய அரசர்களை நோக்கி 'வேந்தர்களே! நீங்கள் நீதி தவறாது நடப்பதனால், எங்கள் அண்ணன் சத்துரு ஜயம்பண்ணிவந்தான்' என்று சொல்லி அவர்களையும் வணங்குவான்; தங்கள் வீட்டில் வேலைசெய்யும் பெண்களைக்கண்டு 'தாதிகளே! நீங்கள் புண்ணியஞ்செய்ததனால் என் தமையன் மீண்டுவந்தான்' என்று சொல்லி அவர்களையும் கும்பிடுவான்; கடைசியில் தன்னைக்குறித்து 'அடா பரதா! நீ நல்ல அதிருஷ்டசாலியாகையால், உங்கள் அண்ணன் வந்துவிட்டான்' என்று சொல்லித் தன்னைத்தானே தொழுதுகொள்ளுவான்; தமையனும் அவனைச்சார்ந்தவர்களும் வந்ததைப்பற்றியாவது கிருககிருத்தியத்தைக் குறித்தாவது இராச்சியத்தின் பொருட்டாவது இன்னது செய்யவேண்டுமென்பது ஒன்றுந் தெரியாதவனாயிருப்பான்; அப்புறம் இப்புறம் அடிபெயராமல் எங்கே நின்றானோ அங்கேதானே திகைத்துநிற்பான்: இப்படியெல்லாம் அவன் பரவசப்படும்படி சம்பவித்ததனால் 'இந்தச்சகோதர வாற்சலியத்தாலுண்டாகிய களிப்பும் கள்ளுண்டபாவனையாகவே யிருக்கின்றது' என்று கம்பர் பிரசங்கிக்க, கொங்குதேசாதிபதி 'பரதன் பிராமணர்களைத் தொழுதது விசேஷமே: தோஷமல்ல; தன்னைப்பணியும் அரசர்களைத் தான் பணிந்ததோ தகாதசெய்கை. அதுவும் பெரிதல்ல, ஒருபரியாயமாம்: தாதியைத் தொழுதானென்றதுதான் வரம்புகடந்ததாயிருக்கின்றது' என, கம்பர் 'அவன் சந்தோஷமாகிய சமுத்திரத்தில்மூழ்கிக் கரைகாணாதிருந்தமையால்,

தன்மெய்ம்மறந்து எதிரேகண்டவர்களையெல்லாம் இன்னர் இனைய ரென்று தாரதம்மியம்பாராமல் தொழுதான்; தாரதம்மியம் பாரா விடினும் தாதிமார் தனக்கு வேருயிருப்பவர்களாகையால், அவர் களைத் தொழுததும் ஆச்சரியமல்ல; வேறல்லாத தன்னையும் வேரு கக்கருதித் தொழுதுகொண்டதே அதிக ஆச்சரியம்' என்று சொல்லக் கேட்டு யாவரும் மிகவும் அதிசயித்தார்கள் எனக் கூறி யுள்ளது காணத்தக்கது. பி-ம்:—[1]உணர்ந்திலன். [2]நீக்குமால், [3]இதுவும். [4]கள்ளிற்ருேன்றிற்றே. (4173)

254.—இதுவும், அடுத்தகவியும் - பரதன் அநுமானைக் கொண்டாடி 'நீ யார்?' என்றல்.

அத்திறத் தாண்டகை யனுமன் தன்னை நீ
எத்திறத் தா[1]யெமக் கியம்பி யீதியால்
[2]முத்திறத் தவருளே யொருவன் [3]மூர்த்திவேறு
ஒத்திருந் தாயென [4]வுணர்கின் றேனென்ருன்.

(இ - ள்.) (கீழ்க்கூறிய) அத்தன்மைகளையுடைய ஆண்மைக் குணமுள்ளவனுன பரதனுனவன்,—அநுமானை (நோக்கி), 'நீ எத் தன்மையையுடையவன்? (அதை) எமக்குச் சொல்லியருள்வாயாக; (நீ) வேருயிருந்தாலும் திரிமூர்த்திகளுள் ஒருமூர்த்தியை ஒத்திருக் கிருய் என்று ஊகித்தறிகிறேன்' என்று கூறினுன்; (எ-று.)

இயம்பியீதி, ஈ-துணைவினை. மூர்த்திவேறு என எடுத்து, திருமூர்த்திகளி லொருவனது வேறுவடிவம்போன்றிருந்தாய் எனி னுமாம். பி-ம்:—[1]எனக்கு. [2]முத்திறத்தேவருள். [3]மூர்த்தியோடு, மூர்த்திதான். [4]உரைக்கின்றேனென்ருன், உணர்கின்றேனுனை, உணரக்கூறினுன். (4174)

255. மறையவர் வடிவுகொண் [1]டணுக வந்தனை
[2]இறைவரி னொருத்தனென் றெண்ணு கின்றனன்
துறையெனக் கி[3]யாதெனச் சொல்லு [4]சொல்லென்ருன்
அறைகழ லனுமனு மறியக் கூறுவான்.

(இ - ள்.) 'வேதமறிந்த பிராமணரது வடிவத்துடன் (நீ இங்கு எம்மைச்) சேரவந்துள்ளாய்; (ஆயினும் அக்கினியை யவித்த உன்செயலால் உன்னை), தலைமைக் குணமுடைய மும்மூர்த்திகளுள் ஒருத்தனென்று எண்ணுகிறேன்; (உனது) வரலாறு எத்தன் மையது என்று எனக்கு விரைவிற் சொல்வாயாக' என்று (பின் னும் பரதன்) கூறினுன்; (அதற்கு), ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய அனுமானும் (தன்வரலாற்றை) விளங்கக் கூறுபவனுனுன்; (எ-று.) —அதனை, அடுத்த இரண்டுகவிகளிற் காண்க. பி - ம்:—[1]அணுகி. [2]இறைவனில். [3]ஆரெனச். [4]சொல்வாயென்ருன், சொல்லு மென்று. (4175)

256.—அநுமான் தன்வரலாறு கூறுதல்.

காற்றினுக் [1]கரசன்பாற் கவிக்[2]குலத்தினுள்
[3]நோற்றனள் வயிற்றின்வந் துதித்து நும்முனுற்கு
ஏற்றிலா வடித்தொழி [4]லேவ லாளனேன்
மாற்றினெ னுருவொரு குரங்கு [5]மன்னயான்.

இதுவும், அடுத்த கவியும்-ஒருதொடர்.

(இ-ள்.) அரசனே! யான் ஒரு குரங்கு; காற்றுக்கு அதிதேவதையான வாயுபகவான் மூலமாக வானரசாதியினுள் (மகப்பேற்றைக் குறித்துத்) தவஞ்செய்தவளான அஞ்சநாதேவியின் வயிற்றில் வந்துபிறந்து, உமது தமையனான இராமபிரானிடத்தில் மிகமேம்பட்ட அடிமைத்தொழிலையுடைய பணியாளனாயுள்ளேன்; (எனக்கு இயற்கையான குரங்கு) வடிவத்தை (அந்தணவடிவமாக) மாற்றிக்கொண்டுவந்தேன்; (எ - று.)

சுமேருமலையில் அரசாண்டுகொண்டிருந்த கேசரியென்னும் வானரராசனது மனைவியான அஞ்சநாதேவி திருவேங்கடமலையில் எழுந்தருளியுள்ள திருமாலை நோக்கி நெடுநாள் தவஞ்செய்ய, அத்தவத்தின்பயனாக அவளிடம் வாயுபகவானுக்கு அநுமான் பிறந்தனனென்பது வரலாறு. எம்பெருமானிடத்திற் கைங்கரியஞ்செய்வது எல்லாப்பேற்றினுஞ் சிறந்ததாதலால், 'ஏற்றிலா வடித்தொழில்' என்றான். நும்முனுற்கு ஏற்றிலா என்பதற்கு - மகாத்மாவான இராமபிரானது பெருமைக்கும் (மிகவும் அற்பனான எனது சிறுமைக்கும்) சிறிதும் ஒவ்வாததான என்றுமாம். பி-ம்:—[1]அரசனுல், அயல்வந்த. [2]குலத்துளான். [3]நோற்றுளாள். [4]ஏவலாளன்யான். [5]மன்னனே. (4176)

257.—அநுமான் தனது பெருவடிவத்தைக் காட்டுதல்.

அடித்தொழில் நாயினே [1]னற்ப யாக்கையைக்
கடித்தடந் தாமரைக் [2]கண்ணி னேக்கெனப்
பிடித்தபொய் யுருவினைப் [3]பெயர்த்து நீக்கினன்
முடித்தலம் வானவர் [4]நோக்கின் முன்னுவான்.

(இ-ள்.) (இராமபிரானுக்கு) அடிமைத்தொழில் செய்கின்ற நாய்போற்கடைப்பட்டவனான எனதுஅற்பமான வானரசரீரத்தை, வாசனையுடைய பெரிய தாமரை மலர்போன்ற (உனது) கண்களாற் காண்பாயாக என்றுகூறி, (தான்) கொண்டுள்ள பொய்யான (மானுட) வடிவத்தைமாற்றி யொழித்தவனாகி, முடித்தலம் [தனது தலைப்புறம்] வானத்திலுள்ளவர்களது கண்களில் எதிர்ப்பட வளர்பவனானான்; (எ - று.)

முடித்தலம் வானவர் நோக்கின் முன்னுவான் என்பதற்கு - தேவர்களுடைய கண்ணுக்கும் எட்டாத தூரத்தில் தனதுமுடி உயரும்படி வளரலானானென்று உரைத்தலும் ஒன்று. பி - ம்:—

[1]அருப்பயாக்கையை. [2]கண்ணிற்காணெனுப். [3]பெயர்ந்துநீங்கினுன். [4]நோக்கிமுற்றுவார், நோக்கின் முந்துவோன். (4177)

258.—அதைக்கண்டவர்கள் அதிசயமும் அச்சமுங் கொள்ளுதல்.

வெஞ்சிலை யிருவரும் விரிஞ்சன் மைந்தனும்
எஞ்சலி லதிசய மிதுவென் றெண்ணினுர்
[1]துஞ்சில தாயினுஞ் சேனை [2]துண்ணென
அஞ்சின தஞ்சனை சிறுவ [3]னுக்கையால்.

(இ-ள்.) அஞ்சநாதேவியின் புதல்வனுன அநுமானது (பெரு) வடிவத்தைக் கண்டு,—கொடியவில்லையேந்திய (பரதன் சத்துருக்கனன் என்ற) இருவரும் பிரமனதுபுத்திரனுன வசிட்டனும், இது குறைவில்லாத [மிக்க] அதிசயமானது என்று நினைத்தார்கள்; சேனையானது (அச்சத்தால்) இறந்திலதாயினும், திடுக்கிட்டுப் பயந்தது; (எ - று.)—மரணபயத்துக்கு ஒப்பான மகாபயத்தை யடைந்த தென்பதாம். பி-ம்:—[1]துஞ்சிலதென்னினுஞ், துஞ்சுவதெனவிருஞ். [2]தூக்கமுற்று [3]ஆக்கையை. (4178)

259.—பரதன் அநுமானது பெருவடிவத்தைச் சுருக்கிக் கொள்ள வேண்டுதல்.

ஈங்குநின் [1]றியாமுனக் கிசைத்த [2]மாற்றமத்
தூங்கிருங் [3]குண்டலச் செவியிற் [4]சூழ்வர
ஓங்கல வாதலி னுலப்பில் யாக்கையை
வாங்குதி விரைந்தென மன்னன் வேண்டினுன்.

(இ-ள்,) 'இங்கே [தரையில்] நின்றுகொண்டு நாங்கள் உனக்குச்சொல்லும் வார்த்தைகள், தொங்குகின்ற பெரிய குண்டலங்களை யணிந்த (உன்னுடைய) அந்தக்காதுகளிற் பொருந்தும்படி உயர்ந்து செல்லயாட்டுகின்றில: ஆதலால், (உனது) அழிவில்லாத (இந்தப் பெரிய) வடிவத்தை விரைவில் நீக்குவாயாக' என்று பரதமகாராஜன் (அநுமானை) பிரார்த்தித்தான்; (எ - று.)— பி-ம்:—[1]உனக்கியான். [2]மாற்றந்தான். [3]குண்டலஞ். [4]துன்னுற.()

260 —இதுவும், அடுத்தகவியும்-அநுமானுக்குப் பரதன் பரிசுகொடுத்தலைக் கூறும்.

சுருக்கிய வுருவனுத் தொழுது முன்னின்ற
அருக்கன் [1]மா ணவகனுக் கைய னன்பினுல்
பொருக்கென [2]நிதியமும் புனைபொற் பூண்களின்
[3]வருக்கமும் வரம்பில நனிவ ழங்கினுன்.

(இ - ள்.) பரதன், பிரீதியோடு (தனதுவேண்டுகோளின்படி) சுருக்கிக்கொண்ட வடிவமுடையவனுக வணங்கி எதிரில் நின்ற சூரியசிஷ்யனுன அநுமானுக்கு விரைவாகச் செல்வங்களையும் அணியத்தக்க பொன்னுபரணங்களின் வகைகளையும் எல்லையில்லாதனவாக மிகுதியாகக் கொடுத்தான்; (எ - று.)

அநுமான் சூரியனிடத்துச் சென்று நான்குவேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும், எல்லாவியாகரணங்களையும், விருத்தி பாஷ்யம் முதலிய உரைகளுடனும் கற்றதன்றி, மற்றுமுள்ள பல கலைகளையும் ஒரேநாளில் ஓதியுணர்ந்தா னென்பது வரலாறு. பி - ம்:—[1] மாணுக்கனை யையன்மேயினன். [2] நிதிகளும்...பூண்களும், வனத்திடைப்புகுந்ததன்மையை. [3] ஒருக்கியென்னுணர்வு றவுணர்த் தியாலென்ருன், முருக்கிதழ் மாதருமுறையினல்கினன். இச் செய்யுளின்பின் ஒருபிரதியில் "சித்திரகூடத்தை" (276) என்ற பாடல் காணப்படுகின்றது. சிலபிரதிகளில், "குன்றுறழ்" (277) என்றபாடல் முதல் "என்றவனிரங்கி" (304) என்பதுவரையிலு முள்ள பாடல்கள் இங்குக்காணப்படுகின்றன. (4180)

261. கோவொடு [1] தூசுநற் குல மணிக்குழாம்
மாவொடு [2] பரிக்குலம் வாவு [3] தேரினம்
தாவுநீ ருடுத்த[4] நற் றரணி [5] தன்னுடன்
ஏவருஞ் சிலைவலான் [6] யாவு நல்கினன்.

(இ - ள்.) அம்புதொடுத்தற்குஉரிய வில்லில்வல்லவனுண் பரதன்,—(பின்னும்) பசுக்களையும் வஸ்திரங்களையும் உயர்ந்தசாதி நவரத்தினங்களின் தொகுதியையும் யானைகளையும் குதிரைகளின் கூட்டங்களையும் தாவிச்செல்லுகின்ற தேரின்கூட்டங்களையும் தத்திப் பாய்கின்ற நீர்சூழ்ந்த சாரமான பூமியையும் (மற்றுமுள்ள)எல்லாப் பொருள்களையும் (அநுமானுக்குக்) கொடுத்தான்; (எ - று.)—மா என்னும் பொதுப்பெயர், இனம்பற்றி யானையைக் குறித்தது. பி-ம்:—[1] தூசினங்...குலம். [2] கரித்திரள்,கார்த்திரள். [3] தேர்க்குலம். [4] அத். [5] மற்றெலாம். [6] யாதுநல்கினன், தூதற்கீந்தனன். சில பிரதிகளில் இதற்குமேல் 275-ஆம் செய்யுள்வரையிலுள்ள செய்யுள்கள் காணப்படாமல் வேறுபாடல்கள் காணப்படுகின்றன; அவை வருமாறு:—

1. நின்றவ னிவ்வயி னெடிய வன்றனைச்
சென்றிறைப் பொழுதினிற் கொணர்வன் [1] சென்றெனப்
பொன்றிணிப் பொலங்கழல் வணங்கிப் போயினன்
வன்றிறல் மாருதி வளர்ந்த கீர்த்தியான்.

பி-ம்:—[1] செல்வனைப்.

2. வேறு. *ஆய காலையி லையனைக் [1] கொண்டுதன்
தூய [2] காலி னுறைவிடந் துன்னினன்
மேய சேனைக் கமைப்பன் விருந்தெனத்
தீயி னைந்து செங்கையி னேக்கினன்.

பி-ம்:—[1] கண்டு. [2] காதல்.

---

*இரண்டாவதுமுதல் ஐந்துபாடல்கள் "நின்றவன்" என்பது முதலிய பாடல்களுள்ள பிரதிகள் சிலவற்றிலும் இல்லை.

3. **வேறு.** பான நெய்யொடு நானமுஞ் சாந்தமும் பலவும்
ஆன வெள்ளிலை யோடடைக் காய்கருப் பூரம்
தேன ளாவிய முக்கனி [1]காயொடு தேன்பால்
வான நாட்டர மங்கையர் மகிழ்ந்துகொண்டிழிந்தார்.

பி-ம்:—[1]கறியமுதொடுபால்.

4. **வேறு.** கங்கைதரு கழலாற்கு மிளவலுக்குங் காரிகைக்கும்
துங்கமுடி வீடணற்குஞ் சுக்கிரீவப் பெருமாற்கும்
தங்கு[1]பெரு சேனைக்கும் தனித்தனியே பொற்கலக்கால்
அங்கடைவின் மண்டலமிட் டணிவிளங்க நிறைத்தனரால்.

பி-ம்:—[1]புகழ்ச்.

5. வெள்ளைநறும் போனகமு மிகுபருப்பும் பொரிக்கறியும்
தள்ளரிய முக்கனியுஞ் சருக்கரையு நறுநெய்யும்
எள்ளரிய பலவிதத்துக் [1]கறியமுது மிமையவர்[2] தம்
வள்ளல்முத லனைவோர்க்கும் வரிசைமுறை படைத்தனரால்.

பி-ம்:—[1]கறியதுவும். [2]தாம்.

6. நீருலவி நீர்குடித்து நினைந்திருந்தா குதிபண்ணிக்
காருலவு மேனியனுங் காரிகையு மிளங்கோவும்
தேரிரவி திருமகனுந் தென்னிலங்கைப் பெருமானும்
போரினுயர் சேனையுடன் போனகம்பற் றினர்பொலிவால்,

7. **வேறு.** அக்கணத்து ... . மார்பினன். [328]
8. உருப்பவிர் ... ... — — யாவையும். [329]
9. தீவினை — — — — மாதவம். [330]
10. என்றுரைத்து — — — தோளினன். [331]

ஒருபிரதியில் இச்செய்யுளோடு **பரதனுயிர்வருபடலம்** முடிய, "**அன்னதோரளவையின்**" (322) என்ற பாடலைக்கொண்டு **நகர்புகு படலம்** தொடங்குகின்றது; மேலுள்ள பாடல்களில்லை.

11. **வேறு.** இரவி காதலன் இலங்கையர் கோனிவ ருதவி
அரசி [1]ஞசைய தென்னலா மனுமனே யென்பான்
விரவு காதலின் நீசெய்த வுதவிக்கு வேறு
தருவ தொன்றிலை யுடனுணுந் தரமது [2]வல்லால்.

பி-ம்:—[1]ஆசையால். [2]தகுமால்.

12. முனிவன் — — — புகன்றான். [191 - 18]
13. என்ற வாசகம் — — — உரைக்கும். [,, - 19]
14. செய்த — — — மொழிந்தான். [,, - 20]

15. கொற்ற வன்னுட னுண்ணுமோ கோதின்மா தவனே
வெற்றி வீரனே யெனவஞ்சி நின்றனன் விமலன்
மற்றப் [1]போனக மொருகைவாய் வைத்தபின் வாராப்
பற்றி யப்பொழு தனுமனும் பரிகலம் பரித்தான்.

பி - ம்:—[1]போனகத்தொருகையால்.

16. பரிக லத்தமு தேந்தியே பந்திகள் தோறும்
இரவி காதலற் கங்கதற் கிலங்கையர் வேந்தற்கு
உரிய வீரர்கட் [1]களித்துத்தா னவர்களோ பாதி
வரிசை யாலுண்ண மாமுனி விருந்துமுண் டனரால்.

பி-ம்:—[1]அளித்ததுதாளுெருபாதி.

17. அன்ன காலையிற் போனக மமரர்பொற் [1]கலத்தே
முன்னம் போற் [2]படைத் துத்திரு முன்புவைத் தனரால்
[3]உன்னும் பேருல கனைத்து முண்டும் பசிதீரா
மன்னன் [4]மாமுனி விருந்துமுண் டகமகிழ்ந் தனனால்.

பி - ம்:—[1]கலத்தில். [2]படைத்தமைத்தனர். திருமுன்பு வைத்தார். [3]மன்னும். [4]மாதவன்.

18. பான நல்லமு துடன்கருப் பூரமும் பலவும்
ஏனை வானவர் மகளிர்க ளேந்திமுன் னிற்பத்
தான மெய்ப்படைத் தம்முடைப் போகத்துட் டந்த
ஆன கற்பகா டமிழ்தென் பதும யின்றான்.

19. அண்ணல் மாமுனி யருளிய போனக மளக்கர்
வண்ண னேமுதல் வானரக் கடலெலாம் வாய்ப்பெய்து
உண்ணும் வாசகங் கேட்டிமை யோர்முனி வோரும்
மண்ணு நாகரும் யாவரு மருந்துயர் மறந்தார்.

20. மானவேந்தரும் வள்ள லு மலர்க்கரம் விளக்கி
ஆன வெள்ளிலை யோடடைக் காயமு தருந்தி
ஞான மாமுனி பெருமையைப் புகழ்ந்துநா யகனும்
பானல் வேல்விழி யாளொடும் படையொடு [1]மிருந்து.

பி-ம்:—[1]எழுந்தான்.

21. வேறு. ஆரிரு ளகலுங் காலை யமலனு மறையோன் பாதம்
ஆர்வமோ டெழுந்து சென்று வணங்கலு மவனு மாசி
சீரிது கூறிச் சேறி யென்றலுந் தேர்மேற் கொண்டு
சீரிய தானை யோடுஞ் சிறப்பொடு மகிழ்ந்து சென்றான்.

22. வேறு. விருந்து முண்டுமா முனிவனை விடைகொண்டு தேர்மேல்
அருந்த தி[1]க்கற்பி னாளொடும் படையொடு [2]மமைந்தான்
வருந்து கோசலை நாடுட [3]னயோத்தியும் வாழப்
பரிந்தி ராமனு மேகினன் பரதனைக் காண்பான்.

பி-ம்:—[1]கற்பினாரொடும். [2]ஐயன். [3]அயோத்தியர்.

23. இராவணன் ... ... செய்தான். [305]

இங்குப் பரதன் விரதப்படலம் முடிய, இதன்பின் நகர்புகு படலம் "அன்னதோரளவையின்" (322) என்று தொடங்குகின்றது: 262-முதல் 275-வரையிலுமுள்ள பாடல்களுமில்லை. "சித்திர கூடத்தை" (276) என்ற பாடல் "சுருக்கிய" (260) என்ற பாடலின்பின் சிலவற்றிலிருக்கச் சிலவற்றிற் காணப்படவில்லை. 306-முதல் 321-வரையிலுமுள்ள பாடல்களும் இப்பிரதிகளிலில்லை. ()

262.—மூன்றுகவிகள்-பரதன், நகரையலங்கரித்து இராமனையெதிர்கொள்ளும்படி அயோத்தியிலுள்ளார்க்கு முரசறைவிக்கச் சத்துருக்கனனை யேவுதல் கூறும்.

இளவலை [1]யண்ணலுக் கெதிர்கொண் மென்றுநம்
வளைமதி லயோத்தியில் வாழு மாக்களைக்
கிளையொடு [2]மேகெனக் கிளத்தி யெங்கணும்
[3]அளையொலி முரசின மறைவிப் பாயென்றான்.

(இ-ள்.) (பரதன்),—தம்பியாகிய சத்துருக்கனனை(நோக்கி),—'சூழ்ந்தமதிலையுடைய (நமது) அயோத்தியில் வாழ்கிற மனிதர்களை நோக்கி, சுற்றத்தாருடனே (யாவரும்) செல்லுங்களெனவும்,இராமபிரானை எதிர்கொண்மின் எனவும் கூறி, எல்லாவிடங்களிலும் பரவுகிற பேரொலியையுடைய முரசவகைகளை (வள்ளுவர்களைக் கொண்டு) அடிப்பித்துத் தெரிவிப்பாயாக' என்றுகட்டளையிட்டான்; (எ - று.)

எதிர்கொண்ம்-செய்யுமென்முற்றின் ஈற்றுஉயிர்மெய் கெட்டு ளகரம் ணகரமாயிற்று. அளை ஒலி-பரவுகின்ற ஒலி. பி - ம்:— [1]அண்ணலையெதிர் கொள்வானகம், அண்ணலையெதிர்கொள் கென்றுநம், கண்ணனுக்கெதிர்கொள்கென்றுநம். [2]எழுகென, எய்தென. [3]அளவொலி. (4182)

263. **தோரண [1]நட்டுமேற் றுகில்பொ திந்துநற்**
பூரணப் பொற்குடம் பொலிய [2]வைத்துநீள்
வாரண மிவுளிதேர் வரிசை தான்வழாச்
சீரணி யணிகெனச் செப்பு வாயென்றான்.

(இ - ள்.) (பின்னும் பரதன் தம்பியை நோக்கி), 'தோரணம் நாட்டி(த் தோரணக்கம்பங்களின்) மேற் சீலைகளினால்,மூடிச்சுற்றி அழகிய நீர்நிறைந்த பொற்குடங்களை(ப் பலவிடங்களிலும்)விளக்கமடையும்படி வைத்து,-பெரிய யானைகளையும் குதிரைகளையும் இரதங்களையும் (அவ்வவற்றிற்கு உரிய) முறைமை தவறாமற் சிறந்த அலங்காரங்கள் செய்க என்றுங் கூறுவாய்' என்றான்; (எ - று.)— மேல் துகில் பொதிந்து என்பதற்கு-மேற்கட்டிகள் கட்டியென்றும் பொருள்கூறலாம். பி-ம்:—[1]நிறுவி. [2]வைத்துளே. (4183)

264. பரத்துவ [1] னுறைவிடத் தளவும் [2] பைம்பொனீள்
சிரத்தொகை மதிற்புறத் திறுதி சேர்தர
வரத்தகு தரளமென் பந்தர் வைத்துவான்
[3] புரத்தையும் புதுக்குமா புகறி போயென்ருன்.

(இ-ள்.) 'பரத்துவாசமுனிவனது ஆச்சிரமம்வரையிலும் பசும்பொன் மயமான நீண்டசிகரங்களின் வரிசைகளையுடைய (அயோத்தியின்) மதிலில் முடிவுபொருந்தும்படி [அயோத்தியாபட்டணத்து மதில்முதல் பரத்துவாஜாச்சிரமம் வரையிலும்] சிறந்த தகுதியான முத்துக்களினலாகிய மெல்லிய பந்தலைப்போட்டுச் சிறந்த அயோத்தியாபட்டணத்தையும் புதுப்பிக்கும்படி போய்ச் சொல்வாயாக' என்று(ம் பரதன் சத்துருக்கனனை நோக்கிச்) கூறினன்; (எ - று.)—பி-ம்:—[1] உறைவிடம். [2] பைம்பொனின். [3] புரத்தையும் புதுக்குக. புரத்தினும்...,புரத்துறப்புக்கெனப், புரத்தையும்புதுக்குவ. (4184)

265.—அக்கட்டளையைச் சத்துருக்கனன் சுமந்திரற்குத் தெரிவித்தல்.

என்றலு மவனடி யிறைஞ்சி [1] யெய்தியக்
[2] குன்றுறழ் வரிசிலைக் குவவுத் தோளினன்
நன்றுணர் [3] கேள்விய னவையில் செய்கையன்
தன்றுணைச் சுமந்திரற் கறியச் சாற்றினன்.

(இ - ள்.) என்று (பரதன்) கூறினவுடனே,—மலையையொத்த கட்டமைந்தவில்லை யேந்திய திரண்ட தோள்களையுடையவனாகிய அந்தச் சத்துருக்கினன்,—அப்பரதனது திருவடிகளைப் பணிந்து போய் நன்ருகக்கேட்டறிந்த நூற்கேள்விகளை யுடையவனும் (அதற்கு ஏற்ற) குற்றமற்ற தொழிலையுடையவனும் தனக்குத் துணைவனுமான சுமந்திரனுக்கு (அக்கட்டளையை) விளங்கக் கூறினன்; (எ-று.)பி-ம்:—[1] எய்திய. [2] குன்றன. [3] கேள்வியும்...செய்கையும். (4185)

266.—இதுவும் அடுத்த கவியும்-குளகம்: சுமந்திரன் வள்ளுவர்க்குக் கட்டளையிட, அவர்கள் முரசறைதலைத் தெரிவிக்கும்.

அவ்வுரை கேட்டலு மறிவின் வேலையான்
கவ்வையி [1] லன்பினுற் களிக்குஞ் சிந்தையான்
வெவ்வெயி [2] லெறிமணி வீதி யெங்கணும்
[3] எவ்வமின் றறைபறை யெற்று [4] கென்றிட.

(இ-ள்.) அறிவுநிறைந்ததொரு கடல்போன்றவனான சுமந்திரன் (சத்துருக்கனன் கூறிய) அவ்வார்த்தையைக் கேட்டவுடனே,—பழிப்பில்லாத அன்பினால் மகிழ்கின்ற மனத்தையுடையவனாய், 'அழகிய காந்தியை வீசுகிற இரத்தினங்களையுடைய வீதிகளிலெல்லாம் குறைவில்லாமல் அடித்தற்கு உரிய பறைகளை யடித்து (ச் செய்தி)தெரிவிப்பீர்களாக' என்று (வள்ளுவர்க்குக்)கட்டளையிட-,

(எ-று.) 'வள்ளுவர் முரச மெற்றினர்' என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

வெவ்வெயிலெறிமணி வீதி - வீறுகோளணி. அறிவின் வேலையான்-அறிவிற்கு எல்லையாகவுள்ளவ னெனினுமாம். வெவ்வெயில்-உக்கிரமான சூரியகாந்திபோன்ற காந்தி யென்றுங் கொள்ளலாம். பி-ம்:—[1]அன்பினிற். [2]புரை. [3]எவ்வமில். [4]என்றனன். ( )

267. வானையுந் திசையையுங் கடந்த [1]வான்புகழ்க்
கோனையின் றெதிர் [2]கொள்வான் கோல மாநகர்த்
தானையு மரசரு மெழுக தானென
[3]யானையின் [4]வள்ளுவர் முரச மெற்றினர்.

(இ - ள்.) வள்ளுவர்,—'ஆகாயத்தையும் திக்குக்களையும் கடந்துள்ள [எங்கும் பரவிய] சிறந்தபுகழையுடைய தலைவனாகியஇராமபிரானை இன்றைக்கு எதிர்கொள்ளும்படி அழகிய பெரிய அயோத்தியாநகரத்திலுள்ள சேனைகளும் ராஜகுலத்தாரும் புறப்படுவார்களாக' என்று யானைமேல் முரசத்தை யேற்றி யடித்தார்; (எ-று.)

வள்ளுவரைக் கொண்டு யானைமேல் முரசமேற்றி யடித்துச் செய்தி தெரிவித்தல் மரபு. இராமனை யெதிர்கொள்ளுதற்குச் சேனையும் அரசரும் எழுகவென்று முரசறைந்தமை கூறியது, மற்றைச் செய்திகளைக் கூறி முரசறைந்ததற்கும் உபலக்ஷணம். பி-ம்:-[1]வாழ்விகழ் [2]கொளக். [3]ஆனைமேல். [4]வள்ளுவன்முரசறைந்தனன்.

268.—முரசொலி கேட்டலும் நகரத்தவர் புறப்படுதல்.

முரசொலி கேட்டலு முழங்கு மாநகர்
அரசரு [1]மாந்தரு மந்த ணாளரும்
கரைசெய லரியதோ ருவகை [2]கைதரத்
திரைசெறி கடலென வெழுந்து [3]சென்றதால்.

(இ-ள்.) (அம்)முரசவாத்தியத்தின் ஓசையைக் கேட்டவுடனே, முடிவுகாணவொண்ணாததான ஒப்பற்ற களிப்பு மிக,—அரசர்களோடும் குடிகளோடும் பிராமணர்களோடும்,—ஒலிசெய்கிறபெரிய அவ்வயோத்தியாநகரம், அலைகள்நிறைந்த கடல்போல எழுந்து போயிற்று; (எ - று.)

நகரத்தவரனைவரும் எழுந்துசென்றன ரென்ற பொருளில், 'நகர் எழுந்துசென்றது; என்றார், உபசாரவழக்கு. பி - ம்:—[1]சேனையும். [2]கைம்மிக. [3]சென்றவால். (4188)

269.—அம்முரசொலியின் சிறப்பு.

அனகனை யெதிர் [1]கொள்கென் றறைந்த பேரிநற்
கனக[2] நல் கூர்ந்தவர் கைப்பட் டென்னவும்
[3]சனகன தூர்க்கென முன்னஞ் சாற்றிய
வனை [4]கடிப் பேரியு மொத்த வாமரோ.

(இ - ள்.) 'குற்றமற்றவனான இராமபிரானை எதிர்கொள்க' என்று (வள்ளுவரால்)அடிக்கப்பட்ட பேரிகையின் ஒலிகள்,—மிக்க பொன் வறியவர்கையில் அகப்பட்டால் அதனையும், சனகராசனது பட்டணத்துக்கு(ச் செல்லுக) என்றுகூறி முன்புஅடித்த அலங்கரிக்கப்பட்ட மணமுரசினொலியையும் ஒத்திருந்தன; (எ - று.)

நெடுநாளாகவறுமையால் மிகவருத்தப்பட்டுக்கொண்டிருந்த ஏழைகளுக்குப் பெரும்பொருட்குவியல் யாதொரு முயற்சியுமின்றித் தன்னடைவிற் கிடைத்தாற்போல, பதினான்குவருஷமாக இராமவிரகத்தால் வருந்திய அந்நகரத்தவர்க்கு இம்முரசொலிமிக்க மகிழ்ச்சியைவிளைத்த தென்க. சனகனது ஊர், மிதிலாபுரி. அங்குச் செல்லுதற்கு முரசறையச்சொன்னதையும், முரசறைந்ததையும், அதுகேட்டவளவில் அனைவருங் கொண்ட கொண்டாட்டத்தையும், பாலகாண்டத்தில் எழுச்சிப்படலத்திற் காண்க. பி - ம்:—[1]கொள்வான். [2]நல்கூர்ந்தவன். [3]சனகனூர்க்கெழுகென. [4]கடல். (4189)

270.—மூன்றுகவிகள்-பலரும் ஸ்ரீராமனை எதிர்கொள்ளுதற்குச் செல்லுதலைத் தெரிவிக்கும்.

அறுபதினாயிர மக்கு ரோணியென்று
இறுதிசெய் சேனையு மேனை [1]வேந்தரும்
செறிநகர் மாந்தருந் தெரிவை மார்களும்
உறுபொரு ளெதிர்ந்தென வுவந்து போயினார்.

(இ-ள்.) அறுபதினாயிரம் அக்ஷௌஹிணி யென்று வரையறை செய்யப்பட்ட சேனைகளும் மற்றும் இராசகுலத்தார்களும் நெருங்கிய பட்டணத்துச் சனங்களும் (அங்குள்ள) மகளிரும்,—அடைய வேண்டுமென்று (நெடுநாளாகவிரும்பித்) தேடிய செல்வம் தானே வந்து கிடைக்கப்பெற்றாற்போல மனமகிழ்ந்து (இராமபிரானை யெதிர்கொள்ளுமாறு) சென்றார்கள்;(எ-று.)—பி-ம்:—[1]மன்னரும்.()

271\. அன்னையர் மூவரு மமரர் போற்றிடப்
[1]பொன்னியல் [2]சிவிகையி னெழுந்து போயபின்
[3]தந்நிகர் முனிவருந் [4]தமருஞ் சூழ்தர
மன்னவன் மாருதி மலர்க்கை [5]பற்றுறா.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ-ள்.) (கௌசலை சுமித்திரை கைகேயிஎன்னும்) தாய்மார் மூவரும், தேவர்கள் துதிக்கப் பொன்னாற்செய்யப்பட்ட தண்டிகைகளில் ஏறிக்கொண்டு சென்றபிறகு,—அரசனாகிய பரதன்,—தமக்குத் தாமே சமரான இருடிகளும் சுற்றத்தார்களும் சுற்றிலும்வர அநுமானது தாமரைமலர்போன்ற கையைப்பிடித்துக்கொண்டு,-(எ - று.)—'போயினான்' என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

திருமால் நான்குவடிவங்கொண்டு தம் வயிற்றி லுதிக்கும்பாக்கியம் பெற்றிருந்தமையால், தாயர் மூவரையும் 'எங்களுடைய துயர் நீங்கக் காரணமானவர்கள் இவர்களல்லரோ!' என்று தேவர்கள் நெருங்கித் துதித்துவணங்கின ரென்க. உயர்ந்த பதவியிலுள்ளவர்கள் செல்லும்போது தகுதியரான ஒருவருடைய கையைப் பிடித்துக்கொண்டுசெல்லுதல், மரபு. பி-ம்:—[1]பொன்னினற். [2]சிவிகைமேலினிதுபோயினர். [3]துன்னிய, தன்னிகர். [4]தருமஞ். [5]பற்றினன்.

272. திருவடி யிரண்டுமே செம்பொன் மௌலியா
இருபுறஞ் சாமரை யிரட்ட வேழ்கடல்
வெருவரு [1]முழக்கென [2]வேழ மார்த்தெழப்
பொருவரு வெண்குடை [3]நிழற்றப் போயினன்.

(இ - ள்.) (இராமபிரானது) இரண்டுதிருவடிநிலைகளே செம்பொன்னாலாகிய கிரீடமாக [அவற்றைத் தலைமேற்கொண்டு],(அந்தப்பரதன்,-(தனது) இரண்டு பக்கங்களிலும் சாமரைவீசவும்,-ஏழுகடல்களின் அஞ்சத்தக்க ஒலிபோல வாத்தியத்தினிசைகள் ஆரவாரித்தெழவும்,—ஒப்பற்ற வெண்கொற்றக்குடை நிழல்செய்யவும் போயினன்; (எ - று.)

திருவடியிரண்டுமே செம்பொன்மௌலியா—"அடித்தலமிரண்டையு மழுதகண்ணினன், முடித்தல மிவையென முறையிற் சூடினன்" என்று வந்திருத்தல் காண்க. வேழம்-இசை: இப்பொருள் பிங்கலந்தையிற் கண்டது, வேழம்-யானை என்பாருமுளர். பி.ம்:—[1]முழக்கெழ. [2]வேதம். [3]நிழலிற். (4192)

273.—சூரியாஸ்தமன வருணனை.

எல்லவன் மறைந்தன னென்னை யாளுடை
வில்லியை யெதிர்கொளப் பரதன் மீச்செல்வான்
அல்லியங் கமலமே யனைய தாள்களில்
[1]கல்லதர் சுடுந்தன [2]கதிரி னென்னவே.

(இ - ள்.) பரதன் 'என்னை யடிமையாகவுடைய கோதண்டபாணியாகிய இராமபிரானை யெதிர்கொள்ளுதற்கு, (தரையின்) மீது (நடந்து) செல்லுகின்றான்: (ஆதலால்), அகவிதழ்கள்நிறைந்த அழகிய தாமரைமலரையே யொத்த (அவனது) பாதங்களிற்கற்கள் நிறைந்த வழியானது தன்னுடைய கிரணங்களினாற் சுடும்' என்று நினைத்து (அங்ஙனஞ்சுடாதிருக்குமாறு) சூரியன் அஸ்தமித்தான்; (எ - று.)

சூரியன் இயற்கையாக மறைந்ததற்கு, நடந்துசெல்லுகிற பரதன் தாள்களில் வழி சுடாமலிருப்பதற்கு மறைந்தா னென்று கற்பித்துக் கூறியது-ஏதுத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]கல்லெனச்சுடுகிலேன், கல்லதர் கடுமெனக். [2]கதிர்சென்றென்னவே.()

274.—பரதன் அநுமானைநோக்கி இராமனதுசெய்கையைக் கூறும்படி வினவல்.

அவ்வழி மாருதி யங்கை பற்றிய
செவ்வழி யுள்ளத்தான் திருவி னாயகன்
[1]எவ்வழி யுறைந்ததச் செயலெ லாம்விரித்து
இவ்வழி யெமக்குநீ யியம்பு வாயென்றான்.

(இ-ள்.) அச்சமயத்தில் அநுமானது அழகிய கைகளைப் பிடித்துக்கொண்டுள்ள நன்னெறியிற்செல்கின்ற மனமுடையவனான பரதன், 'திருமகளுக்குத் தலைவனான இராமபிரான் (காட்டில்) எங்குத் தங்கியிருந்தான்? அப்பெருமானது வரலாறு முழுவதையும் நீ எமக்கு இப்பொழுது விவரித்துக் கூறுவாய்' என்று (அநுமானை) வினவினான்; (எ - று.)

நாயகன் உறைந்தது-திணைவழுவமைதி. இனி, உறைந்தது எவ்வழி என மாற்றி யுரைக்கவும். பி-ம்:—[1]வெவ்வழியுறைந்த. ()

275.—இதுமுதல் 302-ஆம் கவிவரையில் 28-கவிகள்-அநுமான் இராமனுடைய செய்கைகள் முழுவதையுங் கூறியதைத் தெரிவிக்கும்.

என்றலு மாருதி [1]வணங்கி யெம்பிரான்
[2]மன்றலர் தொடையினா யயோத்தி மாநகர்
நின்றது மணவினை நிரப்பி மீண்டு [3]கான்
சென்றதும் நாயினேன் செப்பல் வேண்டுமோ.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ-ள்.) என்று (பரதன்) வினவியவுடனே, அநுமான்,—(அவனை) வணங்கி,—வாசனையுடைய மலர்ந்த [மலர்களினாலாகிய] மாலையையணிந்தவனே! எமது தலைவனான இராமபிரான் பெரிய அயோத்தியா பட்டணத்தில் இருந்ததையும் (மிதிலையிற்சென்று) மணஞ்செய்துகொண்டுதிரும்பி (அயோத்திக்குவந்து) வனத்துக்குச் சென்றதைரிம் அடியேன் சொல்லவேண்டுமோ? [வேண்டாவன்றோ என்றபடி]; (எ-று.)—என்றலும், மாருதி, வணங்கி என்றவை, அடுத்தசெய்யுளில்வரும் 'விரிக்குஞ் சிந்தையான்' என்பதைக் கொண்டுமுடியும். பின்னிரண்டடிகட்கு-(நீ மாதுலகிருகத்திற்குச் சென்றபோது) அயோத்தியில் ஸ்ரீராமன் தங்கியிருந்ததையும் அப்போது பட்டாபிஷேகச்சடங்கிற்குப்பூர்வாங்கமானசடங்குகளைச் செய்துமுடித்துப் பட்டாபிஷேக மணத்தைப்பெறாமல் அவன் காட்டுக்குச் சென்றதையும் நாயினேன் சொல்லவேண்டுமோ என்று பொருள்கொள்ளுதல், ஏற்கும். பி - ம்:—[1]தொழுதிங்கு. [2]மன்றலங். [3]தான். (4195)

276. சித்திர கூடத்தைத் தீர்ந்த பின்சிரம்
[1]பத்துடை யவனுடன் [2]விளைந்த [3]பண்பெலாம்

இத்தலை [4]யடைந்தது [5]மிறுதியாய போர்
[6]வித்தகத் தூதனும் விரிக்குஞ் சிந்தையான்.

(இ-ள்.) (இராமபிரான்)சித்திரகூடபருவதத்தை விட்ட பிறகு பத்துத்தலைகளையுடையனை இராவணனுடன் நேர்ந்த செயலெல்லாம் (தான்) இவ்விடத்தை யடைந்தது வரையிலும்நிகழ்ந்த சரித்திரங்களை விவரித்துக் கூறுங் கருத்துடையவனானை: (யாவனெனில்), போரில்வல்லவனை இராமனுடையதூதன்; (எ-று.)— அவ்விவரத்தை அடுத்த கவிமுதற் காண்க.

தான் இத்தலையடைந்தது-அநுமான் பரதனிடம் சேர்ந்தது. பி-ம்:—[1]பத்துடையானொடும். [2]விளைத்த. [3]பண்புந்தான். [4]அடைந்ததே. [5]இறுதியாமென. [6]வித்தகனுரைகளால் விளங்கச்சொல்லினான். (4196)

277. குன்றுறழ் வரிசிலைக் குரிசி லெம்பிரான்
தென்றிசைச் சித்திர கூடந் தீர்ந்தபின்
வன்றிறல் விராதனை மடித்து மாதவர்
துன்றிய தண்டக வனத்துள் துன்னினான்.

(இ-ள்.) மலையையொத்த கட்டமைந்தவில்லை யேந்தி புருஷசிரேஷ்டனாகிய எமதுதலைவன் [இராமபிரான்], தெற்குத்திக்கிலுள்ள சித்திரகூடபருவதத்தை விட்டுச்சென்றபிறகு மிக்க வலிமையையுடைய விராதனென்னும் அரக்கனைக்கொன்று மிக்க தவத்தையுடைய இருடிகள் நெருங்கிவசிக்கிறதண்டகாரணியத்திற் சென்று சேர்ந்தான்; (எ-று.)

சித்திரகூடம் அயோத்திக்குத் தென்புறத்தி லிருத்தலால், அதற்கு, 'தென்திசை' என்ற அடைமொழி கொடுத்தார். (4197)

278. ஆங்குறை தபோதன ரரக்கர்க் [1]காற்றலேம்
நீங்கினெந் தவத்துறை நீதி யோயெனத்
தீங்கு[2]செய் பவர்களைச் [3]செகுத்தல் திண்ணநீர்
வாங்குமின் [4]மனத்துயர் வாய்மை யாலென்றான்.

(இ-ள்.) அவ்வனத்தில் வசிக்கிற இருடிகள் (இராமபிரானை நோக்கி), 'நீதியையுடையவனே! இராக்கதர்செய்யுந் துன்பங்கட்குப் பொறுதவர்களான நாங்கள் தவஞ்செய்யுந் துறையினின்று தவறினோம்' என்று முறையிட, '(உங்கட்குத்) தீமைசெய்பவர்களை (நான்) அழிப்பது நிச்சயம்; (எனது) இவ்வார்த்தையால் நீங்கள் மனத்திற்கொண்டுள்ள வருத்தங்களை யொழிவீர்களாக' என்று (இராமபிரான் அவர்களுக்குக்) கூறியருளினான்; (எ-று.)

இருடிகள் முறையிட்டமையும், இராமபிரான் அவர்கட்குஅபயமளித்தமையும் ஆரணியகாண்டத்திற் காண்க. பி-ம்:—[1]ஆற்றலா. [2]செய்தவர்களை, [3]செகுப்பன். [4]துயரெனவாய்மைகூறினான்.(4198)

279. ஆறுநா லாண்டவண் வைகி யப்புறத்து
ஈறிலா முனிவர ரேய வாணையால்
மாறிலாத் தமிழ்முனி வனத்தை நண்ணினன்
ஊறிலா முனிவர னுவந்து முன்[1]வர.

(இ - ள்.) (இராமபிரான்)பத்துவருஷகாலம் அத்தண்டகாரணியத்தில் (முனிவர்களது ஆச்சிரமமண்டலத்தில்) தங்கியிருந்து அதன்பின்பு முடிவில்லாத இருடிச்சிரேட்டர்கள் ஏவிய கட்டளைப்படி ஒப்பில்லாத தமிழுக்கு உரிய அகஸ்தியமுனிவனது ஆச்சிரமத்தை,—துன்பமில்லாத அவ்விருடிச் சிரேட்டன் களிப்புடன் எதிர்கொண்டுவரப் போய்ச்சேர்ந்தான்; (எ-று.)

அகஸ்தியராச்சிரமத்தை யடைவதற்குமுன், ஒவ்வொரு ஆச்சிரமத்திலும் சில சிலநாளாக, முனிவர்களாச்சிரமங்கள்தோறுந் தங்கியிருக்க, இராமபிரானுக்குப் பத்துவருஷங்கள் கழிந்தன வென்க. 'ஈறிலாமுனிவரர்' என்றது - தண்டகாரணியவாசிகளாகியவால கில்லியர் முதலானோரையும், சுதீக்கணரென்ற முனிவரையும். பி-ம்:- [1]வந்தான். (4199)

280. குடங்கையில் வாரிதி [1]யணைத்துக் கொண்டவன்
தடங்கணான் தனையெதிர் தழுவிச் சாபமும்
கடுங்கணைப் புட்டிலுங் கவசந் தானு[2]மத்
திடம்படு சுரிகையுஞ் சேர வீந்தனன்.

(இ - ள்.) உள்ளங்கையிற் கடல்நீரை (யுண்ணும்படி)முகந்தெடுத்துக்கொண்டவனான அகஸ்தியமுனிவன் பெரியகண்களையுடையவனான இராமபிரானை எதிர்கொண்டுதழுவி, (அவனுக்கு) வில்லையும் வேகமாகச் செல்கின்ற அம்புகள்நிறைந்த (இரண்டு) தூணிரங்களையும் கவசத்தையும் உறுதி பொருந்திய அப்படிப்பட்ட வாளையும் ஒருசேரக் கொடுத்தான்; (எ - று.)—"இப்புவனமுற்றுமொரு தட்டினிடையிட்டா, லொப்புவரவிற்றெனவுரைப்பரிய வாள்" என்றதற்கு ஏற்ப, 'அத்திடம்படுசுரிகை' என்றார். பி-ம்:— [1]அணைத்தும். [2]மற்று-இடம்படு. (4200)

281. அப்புறத் தெருவையி னரசைக் கண்ணுறத்
துப்புறச் சிவந்தவாய்த் [3]தாகை தன்னுடன்
மெய்ப்[1]புகழ்த் தம்பியும் வீரன் தானும்போய்
[3]மைப்பொழி லுறுபஞ்ச வடியின் [3]வைகினர்.

(இ - ள்.) அதன்பிறகு பவழத்தையொப்பச் சிவந்த வாயினையும் மயில்போன்றசாயலையு முடைய சீதையுடன் உண்மையான புகழையுடைய இளையபெருமானும் வீரனாகிய இராமபிரானும்,—போய், கழுகுகளுக்கு அரசனாகிய சடாயுவைக்கண்டு மேகங்கள் தங்கப்பெற்ற [மிகவுயர்ந்த] சோலைகள் நெருங்கிய பஞ்சவடியில் தங்கி யிருந்தார்; (எ-று.)

சடாயு - சூரியன்சாரதியான அருணனதுபுத்திரன்: சம்பாதியினது தம்பி. இவன் தசரதசக்கரவர்த்தியினால் தமையன்முறை பாராட்டப்பட்டமை பற்றி, வைஷ்ணவசம்பிரதாயத்தில் இவற்கு 'பெரிய வுடையார்' என்று திருநாமம். பஞ்சவடி-ஐந்து ஆலமரங்களின் தொகுதி; அதனையுடைய இடத்துக்கு ஆகுபெயர்; அது, அகண்டகோதாவரிக் கரையில் நாசிகாத்திரியம்பகத்துக்குச் சமீபத்திலுள்ளது. பி-ம்:—[1]புகட்டம்பியும். [2]மைப்புறப்பொழிற், மைப்பொழிலுறு, மைப்பொழிலப். [3]வைகினன். (4201)

வேறு.

282. பல்பக லிறந்த பின்றைப் பாதக வரக்கி தோன்றி
[1]மெல்லிய விடையி னாளை வெகுண்டுழி யிளைய வீரன்
[2]அல்கிய திருவைத் தேற்றி [3]யவளுடைச் செவியு மூக்கும்
மல்கிய முலையுங்கொய்தான் [4]மறித்தவள் கரற்குச் சொன்னாள்.

(இ-ள்.) (அந்தப்பஞ்சவடியிற்) பலநாள் கழிந்தபிறகு, (இராவணன் தங்கையான சூர்ப்பணகையென்னும்) கொடும்பாதகியான அரக்கி (இராமனை) எதிர்ப்பட்டு, (அவனது திருமேனியழகைக் கண்டு காதல் கொண்டு தன்னைமணம்புணர்தற்கு இந்தச்சீதை இடையூறுவள் என்று எண்ணி) மெல்லிய இடையையுடையளான அச்சீதையினிடம் மனம் வெதும்பி (அவளை)க் கவர்ந்துசெல்லத் தொடங்குகையில், இலக்குமணன் கண்டு மனமழிந்தவளான சீதையைத் தேற்றி அவ்வரக்கியின் மூக்குமுதலிய உறுப்புக்களை அறுத்துவிட, அவள் மீண்டு (தனக்குப் பாதுகாவலாக இராவணனால் ஏற்படுத்தப்பட்ட சேனைக்கு முதல்தலைவனான) கரனிடம் (சென்று தனக்கு நேர்ந்த வருத்தத்தைத்) தெரிவித்தனள்;(எ-று.) பி-ம்:—[1]மெல்கிய...,மெல்லிடைமாதைநோக்கி. [2]அல்லியந். [3]அரக்கியை. [4]மடுத்தவள், மதித்தவள். (4202)

283. கரனொடு திரிசி ராவுங் [1]கடியதூ டணனுங் காந்தி
எரியுமூன் [2]றனலே யொப்பா [3]ரெழுந்துவெஞ் சேனை யோடும்
விரவின ரையன் செங்கை வில்லினை நோக்கு முன்போர்
[4]எரிதவழ் [5]பஞ்சி னுக்கா ரரக்கியு மிலங்கை புக்காள்.

(இ-ள்.) கரனும் திரிசிரஸ்என்பவனும் கொடிய தூஷணனும் என்னும் மூவரும் (சூர்ப்பணகையின் வார்த்தையைக் கேட்டுக்) கோபித்து எரிகின்ற மூன்றுவகை அக்கினிகளையே போல்பவராய் (உக்கிரங்கொண்டு) எழுந்து கொடிய (தமது) சேனையோடுங்கலந்து சென்றவர்களாய், இராமபிரான் (தனது) சிவந்தகையிலுள்ள வில்லை(ப் போர்செய்யும்படி நாணேற்றுதற்கு நினைத்து)ப் பார்த்தற்கு முன்பே [வெகு விரைவில்] நெருப்புச் சேரப்பெற்ற பஞ்சுபோல (மிக எளிதில்) அழிந்தொழிந்தனர்: (இவர்கள் இவ்வாறு ஆனபின்பு) சூர்ப்பணகையும் (தனது தமையனான இராவணனுக்குச் செய்தி கூறும்படி) இலங்கையிற்போய்ச் சேர்ந்தாள்; (எ - று.)

பின்னிரண்டடியில் மிகையுயர்வுநவிற்சியணி காண்க. பஞ்சின் போர்-பஞ்சின்தொகுதியென்பாருமுளர். வெம்மையில் மாத்திரம் அக்கினியுவமை. பி-ம்:—[1]கரிய. [2]அனலே. [3]எதிர்ந்துவெஞ்சேனை யோடும், ஏழிருகோடியோடு. [4]எரிதழற். [5]பஞ்சியொத்தார். ()

284. இருபது தடக்கை யான்மாட் டிசைத்தலு மெழுந்து பொங்கி, ஒருபது திசையு முட்க வஞ்சக வுழையொன் றேவித், தருபதஞ் [1]சமைந்த முக்கோற்[2]ருபத வடிவங் [3]கொண்டு, திருவினை நிலத்தொ டேந்தித் தென்றிசை யிலங்கை [4]புக்கான்.

(இ-ள்.) (இலங்கையிலுள்ள) இருபது பெரிய கைகளையுடையனான இராவணனிடத்தில் (சூர்ப்பணகை தனக்கு நேர்ந்த மானபங்கத்தையும் கரன்முதலியோரது நாசத்தையும் சீதையின்வடிவழகையும்) சொன்னவுடனே (அவ்விராவணன் கோபமும் காதலுங் கொண்டு) கிளர்ந்தெழுந்து பத்துத்திசையிலுள்ளாரும் அஞ்சும்படி (அச்சீதையை வஞ்சனைசெய்து கவர எண்ணி) மாரீசனாகிய ஒரு மாயமானை ஏவி,—(அதன்நிமித்தமாக இராமலக்ஷ்மணர்சீதையைப் பிரிந்த சமயம்பார்த்து, நன்மையைத்) தருதற்குக் காரணமான பக்குவமமைந்த திரிதண்டமேந்திய தவஞ்செய்தலையுடைய முனிவர் போல வடிவங்கொண்டு இலக்குமியினமிசமான சீதையைத் தரையோடு பெயர்த்து எடுத்துத் (தேரில் வைத்துக்கொண்டு) தெற்குத் திக்கிலுள்ள இலங்கையிற் புகுந்தான்; (எ - று.)

பத்துத்திசை-நான்கு பெருந்திக்குக்களும், நான்குமூலைத்திக்குக்களும், கீழ்மேல் என்ற இரண்டும். திசை-இடவாகுபெயர். 'தருபதஞ் சமைந்த' என்ற அடைமொழி, இராவணன் கொண்ட கோலம் போலிச்சந்நியாசிவேடத்தைப் புலப்படுத்தாது உண்மைத் துறவியின் வடிவமாகவே தோன்றிற்று என்பதை விளக்கும். பி-ம்:—[1]அமைத்த. [2]தாபதர். [3]கொள்ளாத். [4]சென்றான். (4204)

285. போகின்ற [1]காலை யேற்ற சடாயுவைப் பொருது வீட்டி, வேகின்ற வுள்ளத் தாளை வெஞ்சிறை யதனின் வைத்தான், ஏகின்ற [2]வஞ்ச மான்மா ரீசற்கொன் றிளவலோடு, பாகின்ற கீர்த்தி [3]யண்ணல் தந்தையைப் பரிவிற் கண்டான்.

(இ-ள்.) (இராவணன், சீதையைத் தூக்கிக்கொண்டு) செல்லுங் காலத்தில் (அவளது கூக்குரலைக்கேட்டுவந்து அவளை மீட்கும்பொருட்டு வழியில் தன்னை) எதிர்த்த சடாயுவைப் போர்செய்து கொன்று (இராமனது பிரிவினாலும் தான் அரக்கன்கைப்பட்டதனாலும்) வேகின்ற மனமுடையளான சீதையை (இலங்கையிற்சென்று அசோகவனத்தில் சிம்சுபாவிருக்ஷத்தின்கீழ் அரக்கியர்கூட்டத்தின் நடுவில்) கொடிய சிறையில் வைத்திட்டான்: (சீதையின்செய்தி இவ்வாறாக), பரவுகின்ற கீர்த்தியையுடைய பெருமையிற் சிறந்தவனான இராமபிரான் (தன்னை வெகுதூரம் ஏமாற்றிக்கொண்டு)செல்லுகின்ற மாயத்தையுடைய மான்வடிவங்கொண்ட மாரீசனைக் கொன்ற பின்பு தம்பியாகிய இலக்குமணனோடும் (தனக்குப்பெரிய)

தகப்பனார் முறையான (இராவணனா லடித்துத் தள்ளப்பட்டுக் குற்றுயிராய் விழுந்துகிடந்த) சடாயுவை இரக்கத்தோடு பார்த்தான்; (எ - று.)—பி·ம்:—[1]போதுகாத்த...... புரட்டிப்போனான், போதுங்காத்த...புரட்டிப்போயவ். [2]உழைமாரீசன் றன்னைவீழ்த்து. [3]வள்ள றந்தையை, அன்னான்றாதையை. (4205)

286. **அன்னவன் தனக்கு வேண்டு மருங்கடன் முறையி னாற்றி**
நன்னுதல் தன்னைத் தேடித் தென்றிசை நடக்கு மையன்
மன்னிய கவந்தன் தன்னை யுயிரொடு சாப மாற்றித்
தன்னையே மறப்பி லாத சவரிபூ சனையுங் கொண்டான்.

(இ-ள்,) அந்தச்சடாயுவுக்குச் செய்யவேண்டிய(கிடைப்பதற்கு) அரிய பித்ருகருமத்தை முறைமையாகச் செய்துமுடித்து (இறந்த சடாயுவின் வார்த்தையின்படி) அழகிய நெற்றியையுடைய சீதையைத்தேடிக்கொண்டுதெற்குத்திக்கைநோக்கிச்செல்லுகின்றஇராமபிரான், (இடைவழியிற்) பொருந்திய (தம்மைக்கொல்லமுயன்ற) கபந்தனென்னும் அரக்கனது உயிரையும் சாபத்தையும் ஒழித்துத் தன்னையே மறவாமல் நினைத்திருந்த [தன் வருகையையே எதிர் நோக்கியிருந்த]சபரியினது உபசாரத்தையும்ஏற்றுக்கொண்டான்;

இராமபிரான், தன்னைப்பெற்ற தந்தையான தசரதன் இறந்த போது தான் அருகிலிருந்து அவனுக்குச் சரமகைங்கரியஞ்செய்யப்பெறாதகுறை தீரப் பெரிய தந்தையான சடாயுவுக்குச் செய்தனனென்பர். இராமபிரான் கழுகாகிய சடாயுவுக்குத் தீக்கடன் நீர்க்கடன் முதலியன செய்துமுடித்ததனால், அப்பெருமானது செய்ந்நன்றி மறவாப் பெருந்தகைமை வெளியாகின்றது. கவந்தன் தன்னையுயிரொடு சாபம் மாற்றி-உடனவிற்சியணி. (4206)

287. **ஆங்கவள் தனது சொல்லா லருக்கன்மா மகனை [1]யண்மிப்**
பாங்குற நட்டு வாலி [2]பருவரல் கெடுப்ப லென்னா
ஓங்கிய மரமும் வாலி யுரமுமூ டுருவ வெய்திட்டு
ஆங்கவன் தனக்குச் செல்வ மரசொடு மருளி னீந்தான்.

(இ - ள்.) அப்பொழுது அந்தச்சபரி கூறிய சொல்லின்படி சூரியனது சிறந்தமகனான சுக்கிரீவனைச் சேர்ந்து (அவனுடன்)மனங்கலந்து (இனிதாக) நட்புக்கொண்டு 'வாலியினால் நேர்ந்த துன்பத்தை ஒழிப்பேன்' என்று (அச்சுக்கிரீவனுக்கு உறுதிமொழி) கூறி,—உயர்ந்துவளர்ந்த (ஏழு) மராமரங்களையும் வாலியின் மார்பையும் ஊடுருவித் துளைக்கும்படி அம்பெய்து அவ்வுறுதிமொழியின்படியே அச்சுக்கிரீவனுக்குச் செல்வத்தையும் அரசாட்சியையும் அருளுடன் கொடுத்தான்; (எ - று.)

'வாலிபருவரல்' என்றது, சுக்கிரீவனது மனைவியான ருமையை வலியக் கவர்ந்ததுமன்றி அவனை நாட்டிலுந் தங்கவொட்டாதுவாலி முறியடித்தமையை. பின்னிரண்டடிகள்-உடனவிற்சியணி. பி-ம்:—[1]எய்திப். [2]பருவரம். (4207)

288. காலமா மாரி நீங்கக் கவயனோ டிடபன் காந்து
நீலன்மா மயிந்தன் சாம்பன் சதவலி பனச னீடு
வாலிமா மைந்த னென்றிவ் வானரத் [1]தலை வரோடு
கூலவான் [2]சேனை சூழ [3]வடைந்தன னெங்கள் கோமான்.

(இ-ள்.) பெரிய மழைக்காலம் கழிந்தவுடன், கவயனும் ருஷபனும் (பகைவர்பக்கல்) மனங்கொதிக்கின்ற நீலனும் பெருமையுடைய மயிந்தனும் ஜாம்பவானும் சதவலியும் பநசனும் பெரிய வாலியினது சிறந்த புதல்வனாகிய அங்கதனும் என்று கூறப்பட்ட இந்தவானரத் தலைவரோடு கூட்டமான பெரிய குரங்குச்சேனை (தன்னைச்) சுற்றிலும் வர எங்களுக்குத்தலைவனான சுக்கிரீவன் (இராமபிரானிடம்) வந்துசேர்ந்தான்; (எ - று.)

சாம்பன்-ஜாம்பவாந்: கரடியாகிய ஜாம்பவானையுஞ் சேர்த்து 'இவ்வானரத்தலைவர்' என்றது, மிகுதிபற்றிச் சுருங்கச்சொல்லலென்னும் அழகு அமையக் கூறியதாம். கூலம் - குலமென்பதன் நீட்டல்; இனி, கூலம் என்பதை லாங்கூலம் என்பதன் முதற்குறையாகக்கொண்டு, வாலையுடைய என்றும் பொருள்கொள்ளலாம்; அன்றி கூலம்-கரை; அது, கடலுக்கு இலக்கணையாக, சமுத்திரம் போன்ற பெருஞ்சேனையென்றும் உரைகூறலாம். கூலம்-படையணியுமாம். பி - ம்:—[1]படைஞராய, தலைவராய. [2]சேனையோடும். [3]வந்தனன், விசைந்தனன். (4208)

289. எழுபது வெள்ளத் [1]துற்ற குரக்கின மெழுந்து பொங்கி
அழுவ நீர் வேலை யென்ன வடைந்துழி யருக்கன் மைந்தன்
தழுவிய திசைகள் தோறுந் தனித்தனி யிரண்டு வெள்ளம்
பொழுதிறை தடாது மீளப் போக்கினன் திருவை [2]நாட.

(இ - ள்.) எழுபதுவெள்ளமாகத்திரண்ட வாநரக்கூட்டம் பொங்கியெழுந்து ஆழமான நீரையுடையகடல்போல(த் தன்னை)ச் சேர்ந்தபொழுது,—சூரியபுத்திரனான சுக்கிரீவன், பொருந்தின எல்லாத்திக்குக்களிலும் சீதையைத்தேடும்பொருட்டுத் தனித்தனியாக இரண்டுவெள்ளஞ்சேனையை (ஒருமாச) காலத்திற் சிறிதுந் தவறாமல் மீண்டுவரும்படி அனுப்பினான்; (எ-று.)-அழுவம்-ஆழம்: பரப்புமாம். பி - ம்:—[1]ஈற்ற. [2]நாடி. (4209)

290. தென்றிசை யிரண்டு வெள்ளஞ் சேனையும் வாலி சேயும்
வன்றிறற் சாம்ப னோடு வாவின [1]ரேவ நாயேன்
[2]குன்றிடை யிலங்கை புக்குத் திருவினைக் குறித்து மீண்ட
பின்றைவந் தளக்கர் வேலை பெரும்படை யிருந்த தன்றே.

(இ-ள்.) இரண்டுவெள்ளம் வாநரசேனையோடும் தெற்குத்திக்கில் தாவிச்சென்றவர்களாகிய வாலியின்புதல்வனான அங்கதனும் மிக்கவலிமையையுடைய ஜாம்பவானும் (என்னைத்) தூண்ட, அடியேன் (மகேந்திர) பருவதத்தினிடத்திலிருந்து இலங்கையில்

(தாவிச்)சென்று சீதையைக்கண்டு செய்திதெரிந்து மீண்டபிறகு (சுக்கிரீவமகாராஜனது) பெரிய (வாநர) சேனுசமுத்திரம் (தென்) கடற்கரையில் வந்து தங்கிற்று; (எ-று.)—குன்றிடை யிலங்கை என்றெடுத்து-(திரிகூட)மலையிலுள்ள இலங்கை யென்றும்பொருள் கொள்ளலாம். பெரும்படையளக்கரென்க: அளக்கர்-கடல். பி-ம்:—[1]எவரும், என்னில். [2]சென்றிடை. (4210)

291. அறிவினுக் கறிவு போல்வான் வீடண னலங்கற் [1]றேளான், செறிபுயத் தரக்கன் தம்பி திருவினை [2]விடுதி யன்றேல், இறுதி[3]யுற் றனநின் வாணு [4]ளெனவவ னுரைப்பச் சீறிக், கறுவுறப் பெயர்ந்து போந்து கருணையான் [5]சரணம் பூண்டான்.

(இ-ள்.) அறிவுக்கும் அறிவுபோல்பவனும் [மிக்க அறிவுள்ளவனும்] மாலையையணிந்த தோள்களையுடையவனும் (ஒன்றன்மேலொன்றாக) நெருங்கிய (இருபது) கைகளையுடைய இராவணனது தம்பியுமாகிய விபீடணன்,—(தனதுதமையனான இராவணனை நோக்கி), 'சீதையை விட்டிடுவாயாக; அன்றேல், உனது ஆயுள் நாள் முடிவுபெறும்' என்று கூறினமாத்திரத்தில், அவ்விராவணன் கோபித்துப்பேச,—(அவ்விபீடணன் அவன்பக்கல்) வைரம்பொருந்த (இலங்கையினின்று) நீங்கிவந்து அருளுடையவனான இராமபிரானது திருவடியை அடைக்கலமாக அடைந்தான்; (எ-று.)—பி-ம்:—[1]தோளாய். [2]விடாதுகாப்பின். [3]உற்றனை, உற்றுளது. [4]என்றவன். [5]பாதங்கண்டான். (4211)

292. ஆங்கவற் கவய நல்கி யரசொடு முடியு மீந்து
பாங்கினல் வருணன் தன்னை யழைத்திடப் [1]பதைப்பி லாது
தாங்கினன் சிறிது போது தாமரை நயனஞ் சேப்ப
ஓங்குநீ ரேழு மன்னு னுடலமும் [2]வெந்த வன்றே.

(இ-ள்.) (இராமபிரான்), அச்சமயத்தில் (அக்கடற்கரையிலே) அவ்விபீடணனுக்கு அபயமளித்து, (அவனுக்கு) இராச்சியத்தையும் கிரீடத்தையும் கொடுத்து [இலங்காராச்சியபட்டாபிஷேகஞ்செய்து] (கடற்குஉரிய கடவுளான) வருணனை வணக்கத்தோடு அழைக்குமாறு பதைப்பில்லாமல் [விரைவுகொள்ளாது] சிறிது காலம் (புல்லணையில்) பொறுத்துக்கிடந்தான்: (அப்போதும் அந்த வருணன் பிரதியக்ஷமாகாது தாமதித்ததனுலே சினங்கொண்ட இராமபிரானது) தாமரைமலர்போன்ற கண்கள் (கோபத்தாற்) செந்நிறமடைய, அப்பொழுதே பெரியகடல்களேழும் (கடல்தெய்வமான) அவ்வருணனது உடம்பும் வெந்துவிட்டன; (எ-று.)

'தாமரை நயனம் சேப்ப' என்றது - ஆக்நேயாஸ்திரத்தைப் பிரயோகிக்கத் தொடங்க என்ற பொருளைத் தெரிவித்தலால், காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசாரவழக்காம். சிறிதுபோது என்பதை 'சேப்ப' என்பதனோடுங் கூட்டலாம். பதைப்பிலாது அழைத்திடவும் (வருணன்) சிறிதுபோது தாங்கினன் எனவுமாம். பி-ம்:—[1]பரிவிலாமை. [2]வெந்தது. (4212)

293. மற்றவ னவய மென்ன மலர்ச்சர [1]ணடைந்த வேலை
வெற்றிவா னரர்கள் பொங்கி வெற்பினல் வேலை [2]தட்டல்
[3]முற்றுற நன்கி யற்றி மொய்யொளி இலங்கை புக்குப்
பற்றினர் [4]சுற்றி யார்த்தார் வானவர் பயங்கள் தீர்ந்தார்.

(இ-ள்.) பின்பு அவ்வருணன் அபயமென்று (இராமபிரானது) தாமரைமலர்போன்ற திருவடிகளை யடைந்தபொழுது,—சயத்தை யடையுந் தன்மையுடைய வானரவீரர்கள் உற்சாகங்கொண்டெழுந்து மலைகளினுற் கடலை (அணைகட்டி)த் தடுத்தலை முடியும்படி நன்ருகச் செய்து (பின்பு) நிறைந்தவொளியையுடைய இலங்கையிற்புகுந்து சுற்றிலும் முற்றுகைசெய்தவர்களாய் ஆரவாரித்தார்கள்: (அவ்வொலியைக்கேட்டமாத்திரத்தில்), தேவர்கள் (இனி அரக்கர்கள் ஒழிவார்களென்று) அச்சம் நீங்கினுர்கள்; (எ-று.) பி-ம்:—[1]கொடுத்த. [2]வேலை, கோடு. [3]பெற்றிடவியற்றிநீசர் பிறங்கெயில், பெற்றிடவியற்றி நீசர்பிறங்கொளி. [4]மதிலை. (4213)

294. மலையினை யெடுத்த தோளு மதமலை [1]திளைத்த மார்பும்
தலையொரு பத்துஞ் சிந்தித் தம்பிதன் [2]தோளுந் தாளும்
கொலைத்தொழி [3]லரக்க ராயோர் குலத்தொடு [4]நிலத்து[5]வீழச்
சிலையினை வளைவித்[6]தையன் தேவர்க ளிடுக்கண் தீர்த்தான்.

(இ-ள்.) இராமபிரான்,—(இராவணனுடையனவான) கைலாசமலையைப் பெயர்த்தெடுத்த (இருபது) தோள்களும் மதங்கொண்ட மலைபோன்ற திக்கஜங்களின் தந்தங்கள் அழுந்தப்பெற்ற மார்பும் பத்துத்தலைகளும் (அவன்) தம்பியாகிய கும்பகர்ணனது தோள்களும் கால்களும் கொல்லுதல்தொழிலையுடைய அரக்கர்களின் கூட்டமும் சிதறித் தரையில் வீழ்ந்து அழியத் (தனது) வில்லை வளைத்து (அம்புதொடுத்து)த் தேவர்களுடைய துன்பத்தைப் போக்கியருளினன்; (எ-று.)—பி-ம்:—[1]கிளைத்த. [2]தாளுந்தோளும். [3]அரக்கர்சுற்றம், அரக்கனுர்தங். [4]தலத்து. [5]மாள. [6]ஐய. (4214)

295. இலக்குவன் [1]பகழி யொன்ரு லிந்திர சித்தென் ருேதும்
[2]விலக்கரு [3]வலத்தி னுனு மிளைஞருங் கிளையும் வீழ்ந்தார்
[4]மலக்கமுண் டுழலுந் தேவர் மலர்மழை தூவி யார்த்தன்று
உலக்குநர் குழுக்கள் தோறு முடற்குறை யாடல் [5]கண்டார்.

(இ-ள்.) இலட்சுமணனது ஒருபாணத்தினுல், இந்திரசித்தென்று கூறப்பட்ட (எவராலும்) விலக்கமுடியாத பலத்தையுடையவனும் இளவீரர்களும் பந்துவர்க்கமும் விழுந்து இறந்தார்கள்; (அரக்கர்களாற்) கலக்கமடைந்து வருந்திய தேவர்கள்,—(அப்பொழுது) பூமாரிபெய்து ஆரவாரித்து அந்நாளில் இறந்தவர்களது கூட்டங்கள்தோறும் கபந்தங்கள் எழுந்து கூத்தாடுதலைக் கண்டார்கள்; (எ-று.)

அநுமான் இராமன்செயல் முழுவதையுங் கூறிப் பிறகு இலக்குமணன் செயலைக் கூறுகின்ருனதலால், இராவணவதத்திற்குப்

பிறகு இந்திரசித்தின் வதம் கூறப்பட்டது. அன்று-மூலபலவதம் நிகழ்ந்த அப்பொழுது எனக்கொள்ளலாம். பி-ம்:—[1]பகழிதன் னுல். [2]வெலற்கரு. [3]வரத்தினுனும். [4]அலக்கணுண்டுழலுந் தேவரலர். [5]கண்டான். (4215)

296. **தேவரு முனிவர் தாமுஞ் சித்தருந் தெரிவை மாரும்**
[1]மூவகை யுலகு ளோரு [2]முறைமுறை தொழுது [3]மொய்ப்பப்
பூவைபோல் நிறத்தி னுனும் வீடணப் புலவர் கோமாற்கு
யாவையு மியம்பி மாண்டார்க் கியற்றுதி கடன்க ளென்ருன்.

(இ-ள்.) தேவர்களும் இருடிகளும் சித்தர்களும் (அவரவர்களுடைய) மனைவியர்களும் மற்றைமூன்று உலகத்தில் வசிப்பவர்களும் முறைமுறையாக (இராமபிரானைத்) தொழுது நெருங்க,—(அப்பொழுது காயாம்பூவைப்போலுந் திருமேனிநிறத்தையுடையனான ஸ்ரீராமனும், அறிவுடையார்களிற் சிறந்தவனான விபீடணனுக்கு(ச் சொல்லவேண்டுவன) எல்லாவற்றையுஞ் சொல்லி, 'இறந்தவர் யாவர்க்கும் சரமகிரியைகளைச் செய்வாய்' என்றுங் கூறினுன்;

பூவை-கிளியுமாம்: "சிறுகிளிப் பைதலே......நின் பசுஞ்சாம நிறத்தன்", "கிளித்தன களித்த மேனி" எனத் திருமாலினது நிறத்துக்குக் கிளிஉவமை கூறப்படுதலுங் காண்க. பி-ம்:—[1]மூவுல கிடை, மூவருமுலகு. [2]தனித்தனிப்புகழ்ந்து. [3]மொய்த்து,மொய்த் தார். இதன்பின் சிலபிரதியில் ஒருசெய்யுள் காணப்படுகின்றது வருமாறு:—

ஏடிண ரலங்கன் மார்பத் திராவணன் முதலோர்க் கெல்லாம்
வீடணன் கடன்கள் செய்து மீண்டன னவனுக் கின்னே
சூடுக மௌலி யென்னச் சுந்தர விராமன் தம்பி
மாடணை துணைவ ரோடும் மகுடமே புனைந்து விட்டான். ()

297. **நான்முகன் விடையை யூரு நாரியோர் பாகத் தண்ணல்**
[1]மான்முகன் முதலா யுள்ள வானவர் தொழுது [2]போற்ற
ஊன்முகங் [3]கெழுவு [4]வேலா யும்பர்நா யகியைச் சீறித்
தேன்முக [5]மலருந் [6]தாரா [7]னரிசொலச் சீற்றந் தீர்ந்தான்.

(இ - ள்.) (பகைவரது) மாமிசங்கள் நுனியிற் பொருந்திய விளங்குகின்ற வேலாயுதத்தையுடைய பரதனே! தேனைத் தன்னிடத்திலுடைய மலர்கின்ற பூமாலையை யணிந்த இராமபிரான், நான்குமுகங்களை யுடையனான பிரமனும் விருஷபத்தைவாகனமாக ஏறிநடத்துகிறவனுகிப் பார்வதிதேவியை ஒப்பற்ற இடப்பாகத்திற் கொண்டவனான பரமசிவனும் மானின் முகத்தையுடையவனான மயனும் முதலாகவுள்ள தேவர்கள் (தன்னை) வணங்கித் துதிக்க, தேவர்களுக்கெல்லாந் தலைவியாகிய சீதையை(ப் பிறர் மனையில் உயிர்வாழ்ந்திருந்தமைகுறித்து)க் கோபித்து, (உடனே), அக்கினிதேவன் (பிரதியக்ஷமாய்வந்து அவளது கற்பின் உறுதி நிலையை எடுத்துக்) கூறக் கோபந்தணிந்தான்; (எ - று.)

அரி-ஹரி; (அடுத்தபொருள்களை) எரித்தழிப்பவன்; அக்கினி. மால்-இந்திரனும், முகன்-(தேவர்களுக்கு) முகமாகிற அக்கினியும் என்று உரைப்பினுமாம். ஊன்முகம்கெழுவு-(பகைவரது)உடல்தசையினிடத்தே தடையின்றி ஊடுருவிச்செல்கிற என்றலும் ஒன்று. பி-ம்:—[1]மான்முதல், வான்முகன். [2]வாழ்த்த, தோற்ற. [3]கமழும். [4]வேலான். [5]அலர்ந்த. [6]தாராய். [7]எரிசொலச், தீச்சொலச். (4217)

298. மெய்யினுக் குயிரை யீந்த வேந்தர்கோன் விமானத் தெய்த, ஐயனு மிளைய கோவு மன்னமு மடியில் வீழக், கையினுற் பொருந்தப் புல்லிக் கண்ணினீர்க் கலச மாட்டிச், [1]செய்யவட் கருள்க வென்ருன் திருவினு யகனுங் கொண்டான்.

(இ-ள்.) சத்தியந்தவருமைக்காக உயிரைவிட்ட தசரதசக்கரவர்த்தி விமானத்தின்மீது (ஏறி) வர, (அப்பொழுது) இராமபிரானும் இளையபெருமாளும் அன்னப்பறவைபோன்ற [மெதுவான அழகிய நடையையுடைய] சீதையும் (அவனது) பாதங்களில் விழுந்துவணங்க, (அத்தசரதன், அவர்களைத் தனது) கைகளினுல் இறுகத்தழுவிக் கண்ணீராகிய கலசநீரினுல் முழுகப்பண்ணி 'செம்மைக்குணமுடையவளான சீதாபிராட்டியினிடம் (கலக்கங்கொள்ளாமல்) அருள்கொண்டிருப்பாயாக' என்ருன்; சீதையின் கணவனை இராமனும் (அதற்கு) உடன்பட்டான்; (எ-று.)—பி-ம்:—[1]செய்வரமருளுகென்ருன். (4218)

299. [1]என்னைநன் கருணை தன்னு லீன்றெடுத் தினிது பேணும்
அன்னையு மகனு [2]முன்போ லாகென வருளி னீந்து
மன்னவன் போய பின்றை [3]வானரம் [4]வாழ்வு கூரப்
பொன்னெடு நாட்டி லுள்ளார் வரம்பல வழங்கிப் போனுர்.

(இ-ள்.) (பின்பு) 'என்னை நல்ல அன்புடனே பெற்றெடுத்து நன்ருகப் பாதுகாக்கின்ற தாயாகிய கைகேயியும் (அவளது)மகனுன பரதனும் (என்னைவனஞ்செலுத்தும்படி கைகேயி வரம் வேண்டினதற்கு) முன் (இருந்தது) போலவே (எனக்குத் தாயும் தம்பியும்) ஆக வேண்டும்' என்று (இராமபிரான் தசரதனை) வரங்கேட்க, (அவ்வாறே) தசரதமகாராசன் அருளுடன் (அவ்வரங்)கொடுத்து(த் தனது இருப்பிடமான விஷ்ணுலோகத்துக்கு)ச் சென்றபின்பு, பெரிய பொன்மயமான சுவர்க்கலோகத்தில் வசிக்கிற தேவர்கள், வானரங்கள் (உயிரும் உணவும்பெற்று) இனிமையாய் வாழும்படி பல வரங்களை (இராமபிரான் வேண்டியபடி) கொடுத்துச் சென்ருர்கள்; (எ-று.)—பி-ம்:—[1]என்னிடைக்...என்னைத்தந்த. [2]தன். [3]வானவர், வானரர். [4]மகிழ்வு. (4219)

300. வெள்ளமோ ரேழு பத்து [1]விலங்கரும் வீர ராகி
உள்ளவ ரறுபத் தேழு கோடியு மொற்றை யாழி
வள்ளறன் மகனு முள்ள [2]மகிழ்வுற விமான மீந்தான்
எள்ளலி லாத கீர்த்தி விடண னிலங்கை வேந்தன்.

(இ - ள்.) பழிப்பில்லாத புகழையுடையவனும் இலங்கைக்கு அரசனுமாகிய விபீடணன்,—எழுபதுவெள்ளம் குரங்குகளும், இராக்கதவீரர்களாகியுள்ளார் அறுபத்தேழுகோடிபேரும், ஒற்றைச் சக்கரம் பொருந்திய தேரையுடைய வரையாதருளுந்தன்மையுள்ள சூரியனது மகனான சுக்கிரீவனும் மனம் மகிழும்படி புஷ்பக விமானத்தை (விரைவில் அயோத்திக்குச் செல்லும்படி இராமபிரானுக்கு)க் கொடுத்தான்; (எ - று.)

விலங்கர்-குற்றியலுகரத்துக்கு 'அர்' போலி. 'ஒற்றையாழி வள்ளல்தன் மகன்' என்பதற்கு (உலகமுழுவதுஞ் செல்லும்) ஒப்பற்ற ஆஜ்ஞாசக்கரத்தையுடைய தசரதசக்கரவர்த்தியின் மகனை இராமபிரான் என்று பொருள் கூறுதலும் ஒன்று. பி - ம்:—[1]வீரரும் விலங்கலாதி, விலங்கல்போல்வீரராகி. [2]மகிழ்வுறுமிரதம், மகிழ்வுறமானம். (4220)

301. [1]ஆரியன் பின்னை நின்னை யன்பினால் நினைந்து காதல்
சூரியன் மகனுந் தொல்லைத் துணைவரு மிலங்கை வேந்தும்
பேரியற் [2]படையுஞ் சூழப் பெண்ணினுக் கரசி யோடும்
சீரிய விமானத் தேறிப் பரத்துவ னிருக்கை [3]சேர்ந்தான்.

(இ - ள்.) சிறந்தவனாகிய இராமபிரான்,—பின்பு உன்னை(ச் சீக்கிரத்திற்சேரவேண்டுமென்று) அன்போடுஎண்ணிக்கொண்டே, சூரியனதுஅன்புக்குஇடமாயுள்ள புதல்வனான சுக்கிரீவனும்பழமையான சிநேகிதர்களும் இலங்கைக்கு அரசனான விபீடணனும் பெரிய நற்குணமுள்ள சேனைகளும் (தன்னைச்) சுற்றிலும் நிற்கும்படி பெண்களிற் சிறந்தவளான சீதையுடனே சிறந்த புஷ்பகவிமானத்தில் ஏறிப் பரத்துவாசமுனிவனது ஆச்சிரமத்துக்கு வந்துசேர்ந்தான்; (எ - று.)—தொல்லைத்துணைவர் - அங்கதன், ஜாம்பவான், நளன் முதலியோர். துணைவர்-போர்த்துணைவருமாம். பி - ம்:—[1]ஆரியனய்யபின்னை. [2]சேனை. [3]சேர்ந்தார். (4221)

302. அன்பினு லென்னை நின்பா லாழியுங் காட்டி யான்ற [ன்று
துன்பெலாந் துடைத்தி [1]யென்று [2]துரந்தனன் [3]தோன்றலெ
முன்பினு லியன்ற வெல்லா மொழிந்தனன் [4]முதுநீர் தாவி
[5]அன்பினு லிலங்கை முற்று மெரிக்குண [6]வாக வைத்தோன்.

(இ - ள்.) இராமபிரான் (உன்மீதுள்ள) அன்பினால் என்னை (நோக்கி) 'உன்னிடத்தில் [பரதனிடத்தில்] மோதிரத்தையுங் காட்டி மிக்கதுன்பத்தை யெல்லாம் நீக்குவாயாக' என்றுகூறி விரைவாக விடுத்தான் என்று முன்பு நடந்த செய்திகளையெல்லாங் கூறினான்: (யாவனெனில்),—பழமையானகடலைத் தாண்டி (இராமபிரானிடமுள்ள) பக்தியினால் இலங்காபட்டணம் முழுவதையும் அக்கினிக்கு இரையாக்கியவனான [கொளுத்திவிட்டவனான] அநுமான்; (எ - று.)

பரதனுக்குக் கைலாகுகொடுத்துச் செல்லும் அநுமான், இராமபிரானுள்ள கங்கைக்கரைவரையில் பரதன் நடந்துவருகையில் அவன்விருப்பின்படி நடந்தசெயல்களையெல்லாம் விளங்கக் கூறினனென்க. முதுநீர்தாவி-சிறியதொரு வாய்க்காலைத் தாண்டுவதுபோலப் பெரியசமுத்திரத்தையும் எளிதிற்பாய்ந்து தாண்டியென்றபடி. பி - ம்:—[1]என்றே. [2]விடுத்தனன். [3]என்றுதோன்ற. [4]முன்னீர். [5]வன்பினுல். [6]ஆக்கிவந்தான். (4222)

303.—பரதன் தன்நிலைமையைப்பற்றி இரங்கிக்கூறுதல்.

காலின்மா மதலை சொல்லப் பரதனுங் கண்ணீர் சோர
[1]வேலிமா மதிள்கள் சூழ [2]இலங்கையில் வேட்டங் கொண்ட
நீலமா முகில்பின் [3]போனு [4]னொருவனு னின்று நைவேன்
போலுமா லிவைகள் கேட்பேன் புகழுடைத் தடிமை [5]மன்னே.

இதுவும், அடுத்த கவியும்-குளகம்.

(இ - ள்.) வாயுவினது சிறந்தபுதல்வனுகிய அநுமான் (இவ்வாறு) சொல்ல,—(அதுகேட்ட) பரதனும்,—கண்களின்நீர் (தாரைதாரையாய்ப்) பெருக,—ஒருதம்பியாகிய லக்ஷ்மணன் பெரியமதிள்கள் வேலிபோலச்சூழ்ந்த இலங்கையில் (அரக்கரை) வேட்டையாடிக்கொன்ற கரியபெரியமேகம்போன்ற இராமபிரான் பின்னே (அவனுக்குப் பணிவிடைசெய்துகொண்டு அவனைவிடாது உடன்) சென்றான்; (மற்றொருதம்பியாகிய) நான் (உடன் செல்லாமல்) இங்கேயே இருந்துகொண்டு வருந்துபவனாய், இச்செய்திகளையெல்லாம் (உடனிருந்து அனுபவியாமற் பிறர்வாயாற்) கேட்டல்மாத்திரஞ் செய்வேன்போலும்! (இராமபிரான்பக்கலுள்ள எனது) அடிமைத்திறம் மிகவும் புகழுடையதாயிருந்தது!! (எ - று.)—'என்று' என அடுத்த கவியோடு தொடரும்.

இவைகள் கேட்பேன்நின்று நைவேன்போலும்-இவைகளைப் பின்பு காதினாற்கேட்டல்மாத்திரஞ் செய்யக்கடவேனாய் இங்கு நின்று வருந்தக்கடவேன்போலும் எனினுமாம். இன்று எனப் பதம் பிரித்து உரைத்தல், மோனைத்தொடைக்குப் பொருந்தாது. பி-ம்:—[1]வேலைமாமதிணீர். [2]இலங்கைமாவேட்டை. [3]போவான். [4]ஒருவனும். [5]என்றான். (4223)

304.—பரதன் கங்கையை யடைதல்.

என்றவ னிரங்கி யேங்கி யிரு[1]கணு மருவி சோர
வன்றிற லனுமன் செங்கை [2]வலக்கையாற் பற்றிக் காலிற்
சென்றன னிருளி னாடு செறிபுனற் கங்கை[3]சேர்ந்தான்
குன்றினை வலஞ்செய் தேரோன் குணகடற் [4]றோன்று முன்னர்.

(இ-ள்.) என்று அப்பரதன் இரண்டுகண்களிலும் நீர்பெருக மனமிரங்கி வருந்தி மிக்கவலிமையையுடைய அநுமானது சிவந்த கையை(த் தனது) வலக்கையாற் பிடித்துக்கொண்டே (அரசனுயிருந்தும் வாகனத்திலேறிச் செல்லாமல்) கால்களால் நடந்தவ

ருகி, மேருமலையைப் பிரதக்ஷிணஞ் செய்கின்ற தேரையுடையவனான சூரியன் கீழ்கடலில் உதிக்குமுன்னமே இருட்பொழுதிலேயே நிறைந்தநீரையுடைய கங்காநதியைச் சேர்ந்தான்; (எ-று.)-பி-ம்:—[1]கணீர். [2]மலர்க். [3]சூழல், சூழக். [4]தோன்றுமுன்னம். (4224)

305.—சூரியோதய வருணனை.

[1]இராவணன் வேட்டம் போய்மீண் டெம்பிரா னயோத்தி [2]யெய்தித்
தராதல மகளும் பூவிற் றையலு மகிழச் சூடும்
அராவுபொன் மௌலிக் கேய்ந்த சிகாமணி குணபா லண்ணல்
விராவுற வெடுத்தா லென்ன வெய்யவ னுதயஞ் செய்தான்.

(இ-ள்.) எமதுதலைவனாகிய இராமபிரான்,—இராவணனை வேட்டையாடுதற்காக (நாட்டைவிட்டுச்)சென்று (அதனைமுடித்துத்) திரும்பி அயோத்தியாபட்டணத்தைச் சேர்ந்து, பூமிதேவியும் தாமரைப்பூவில் வசிக்கின்ற இலக்குமியும் மகிழும்படி தரிக்கப்போகிற அராவித்தொழில்செய்யப்பட்ட பொன்னாலாகிய கிரீடத்துக்குத் தக்கதான முடிமேற்கொள்ளத்தக்க [சிறந்த] இரத்தினத்தைக் கிழக்குத் திக்குப்பாலகனாகிய பெருமைமிக்க தேவேந்திரன் பொருந்தும்படி எடுத்தாற்போலச் சூரியன் உதயமானான்; (எ-று.)

சூரியன் கிழக்குத்திக்கில் உதித்ததை, அத்திக்குப்பாலகனாகிய இந்திரன் இராமபிரானது பட்டாபிஷேகக்கிரீடத்துக்குத் தக்க சிகாமணியை ஏந்தினாற்போலு மெனக் குறித்தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி.சிகாமணி-சிரோரத்நம். தனக்கு நல்லரசன்நேர்வதனால் பூதேவியும், துன்பங்கள்ஒழிந்து நன்மைமிகுதலால்ஸ்ரீதேவியும் களிப்பரென்க. பி.ம்:—[1]இராவண வேட்டை. [2]எய்த. இச்செய்யுள்வெவ்வேறுபிரதிகளில் வெவ்வேறிடத்திற் காணப்படுகின்றது.

306.—மூன்றுகவிகள்-இராமனது வருகையில் ஐயுற்றுப் பரதன் அநுமானை வினவலைத் தெரிவிக்கும்.

காலைவந் திறுத்த பின்னர்க் கடன்முறை கமலக் கண்ணன்
[1]கூலநீள் கழல்க ளேத்திக் [2]குரக்கினத் தரசை நோக்கிச்
சாலவுங் [3]கலைகள் வல்லோய் தவறுண்டு போலும் வாய்மை
மூலமே யுணரி [4]னுன்றன் மொழிக்கெதிர் மொழியு முண்டோ.

இரண்டு கவிகள்-ஒருதொடர்.

(இ-ள்.) (பரதன்), காலைக் கடமைகளைச்செய்து முடித்தபின்பு தாமரைமலர்போன்ற கண்களையுடையனான இராமபிரானது ஒன்றோடு ஒன்றுஒத்த நீண்ட திருவடிநிலைகளை வணங்கிக் குரங்குக் கூட்டங்களுக்குத் தலைவனான அநுமானை நோக்கி, மிகவும் சாஸ்திரங்களில் வல்லவனே! உனது சொல்லுக்கு மாற்றுச்சொல்லும் உளதோ? அடிமுதல் (நன்றாக) ஆராய்ந்தால், (உனது) வார்த்தையிற் பிழையுள்ளதுபோலும்; (எ-று.)

கூலம்-குலம் என்பதன் நீட்டல்: இனமென்பது பொருள். காலைவந்து இறுத்தபின்னர்க் கடன் முறை கமலக்கண்ணன் கூலம் நீள் கழல்கள் ஏத்தி என்பதற்கு-காலைப்பொழுது வந்துசேர்ந்த வுடனே தான் தவருது அனுட்டித்து வருகிற முறைப்படி ஸ்ரீராம னது சிறந்த நீண்ட பாதுகைகளைப் பூசித்து என்றும் உரைக்க லாம். நான்காம்அடி - எதிர்மறையிலக்கணையாகிய பிறகுறிப்பின் பாற்படும். மோதிரங்காட்டிச் சபதஞ்செய்து இராமபிரானது வருகையைத் தெரிவித்த அநுமானது வார்த்தையில் மிக்க நம் பிக்கை வைத்திருந்தும், பரதன், இவ்வாறு சங்கித்தலால், இவன் இராமபிரானது வருகையைப் பெருப்பேருக நினைத்திருக்கின்ரு னென்பது பெறப்படும். பி - ம்:—[1]கோலநீளடிகள்,கோலநீள்புகழ் கள். [2]குரங்கினத்தவனை. [3]கவிகளன்ரே தவறிற்றுண்டுனது வாய்மை. [4]உந்தம். (4226)

307. எழுபது வெள்ளஞ் சேனை [1]வானர ரிலங்கை வேந்தன்
[2]முழுமுதற் சேனை வெள்ளங் கணக்கில [3]மொய்த்த வென்ருல்
அழுவநீர் வேலை [4]சுற்று மரவமின் ருக வற்ரே
விழுமிதெம் பிரான்வந் தானென் றுரைத்தது வீர வென்ருன்.

(இ - ள்.) வீரனே! எழுபதுவெள்ளம் வாநரசேனைகளும் இலங்காதிபதியான விபீடணனது பெருங்கூட்டமான சேனைத் தொகுதிகளும் கணக்கில்லாமல் [வெகுவாக] நெருங்கிவிட்டனவா ஞல், ஆழமான நீரையுடைய கடல்போல வெகுதூரம் வியாபிக்கும் ஆரவாரம் இல்லாமலிருக்கக் கூடுமோ? [இல்லாமலிராது]: (அங்ங னம் ஆரவாரம் இல்லாமையால்) 'எமது தலைவனை இராமபிரான் வந்துவிட்டான்' என்று (நீ) சொன்னது அழகியதாயிருந்தது! என்று கூறினன்; (எ - று.)

சேனையின் அரவங்கேளாமையால், பரதன், இராமன்வரவில்லை போலுமென்று ஐயமுற்று இங்ஙனங் கூறினனென்க. இனி, அழு வம் நீர் வேலை என்பதற்குக் கங்கைக்கரையில் என்று பொருள்கூற வும் இடமுண்டு. 'எம்பிரான் வந்தானென்று உரைத்தது விழுமிது' என்பது, பிறகுறிப்பு. பி - ம்:—[1]வன்றிறல். [2]முழுதுறு. [3]முடுகிற் றென்ருல். [4]அன்ன. (4227)

308. ஓசனை [1]யிரண்டுண் டன்றே பரத்துவ [2]னுறையுஞ் சோலை
வீசுதெண் டிரையிற் ருய வெள்ளமோ ரேழு பத்தும்
மூசிய பழுவ [3]மிங்ஙன் [4]கிடப்பதோ முரற்ற லின்றிப்
பேசிய தமையு [5]நங்கோ னெங்குளன் பெரும வென்ருன்.

(இ - ள்.) 'பெருமையுடையவனே! பரத்துவாசன் வசிக்கின்ற சோலையானது (இங்கிருந்து) இரண்டுயோசனை தூரத்தில்தானே இருக்கிறது; மோதியடிக்கிற தெள்ளிய அலையைக்கொண்டதான கடலின தன்மையதாகிய எழுபதுவெள்ளம் சேனைகளும் நிறைந் துள்ள அச்சோலை (இங்குக் கேட்கும்படி) ஆரவாரமில்லாமல் இவ் வாறும் இருக்குமோ! (நீ) சொன்னது தகுதியாயுள்ளது; நமது

தலைவனை இராமபிரான் எங்கேயிருக்கின்றான்? [அவன் அவ்வாச் சிரமத்திலில்லை]' என்று [அநுமானது பேச்சில் பரதன் நம்பிக்கை யில்லாமல் அவனைநோக்கிக்) கூறினான்; (எ - று.)

'பேசியதமையும்' என்றது - இனி இப்படிப் பொய்சொல்ல வேண்டா என்ற பொருளையுந் தரும். பி-ம்:—[1]இரண்டேயுள்ள. [2]உறைபிரயாகை. [3]இன்றே, இன்னே. [4]கிடப்பதாம், கிடப்பதே. [5]ஐயன். (4228)

309.—மூன்று கவிகள்-ஒருதொடர்: அநுமான் கூறிய சமாதானத்தைத் தெரிவிக்கும்.

பரதனஃ துரைத்த லோடும் பணிந்து[1]மா ருதியுஞ் சீர்சால்
விரதமா [2]தவத்து மிக்கோய் [3]விண்ணவர் [4]தம்மை வேண்டி
வரத [5]னுண் டளிப்ப வந்த வரத்தினுன் மலருந் தேனும்
[6]சரதமே மாந்தி மாந்தித் துயின்றது [7]தானை யெல்லாம்.

(இ - ள்.) பரதன் அவ்வார்த்தையைக் கூறியவுடனே, அநுமானும், (அப்பரதனை) வணங்கி, 'சிறப்புமிக்க விரதமாகியபெருந் தவத்தினால் மேம்பட்டவனே! வரந்தரவல்ல பரத்துவாசன் தேவர் களைவேண்டி ஆங்கு அளித்த வரத்தினால் வந்த மலரையும் தேனை யும் மிகுதியாகவுண்டு சேனையெல்லாம் (உண்ட களைப்பினால்) தூங்கிவிட்டது; (இது) நிச்சயம்; (எ-று.) தானையெல்லாந்துயின் றது-ஒருமைப்பன்மைமயக்கம். பி-ம்:—[1]மாருதிதானைய, மாருதியுந் தானை. [2]தவன்றனோடும், தவன்மற்றோரை. [3]விண்ணுளோர். [4]தம்மையும். [5]அன்றளித்த. [6]சுரதமே. [7]போலுந்தானை. (4229)

310. வானவர் கொடுக்க வந்த வரத்தினான் [1]மதுப மூசுந்
தேனொடு கிழங்குங் காயுங் கனிகளும் பிறவுஞ் [2]சீர்த்துக்
கானகம் பொலித லாலே கவிக்குல [3]மவற்றை மாந்தி
ஆவன மலர்ந்த தில்லை [4]யாகுநீ துயர லெந்தாய்.

(இ - ள்.) எமது தலைவனே! தேவர்கள் கொடுக்கக் கிடைத்த வரங்களினால், காட்டினிடம் வண்டுகள் மொய்க்கின்ற தேனும் கிழங்குகளும் காய்களும் பழங்களும் மற்றுமுள்ளவைகளும் நிறைந்து விளங்குதலினாற் குரங்கின் கூட்டம் அவற்றை உண்டு வாய்திறந்து ஆரவாரஞ் செய்யாததாகும்; (ஆதலால், 'இராமன் வர வில்லைபோலும்' என்ற எண்ணத்தினால்) நீ வருந்தாதே; (எ - று.) —மதுபம்-தேனைப் பருகுவது; வண்டு: வடசொல். பி-ம்:—[1]மது விற்சாலும், மதுவுஞ்சாலத். [2]தெற்றிக். [3]அதனை. [4]ஐயநீமுனிய லென்றான், ஆணைநீமுனியலென்றான். (4230)

311. இனியொரு கணத்தி [1]னெங்கோ னெழுந்தருள் தன்மை மீண்டுப்,பனிவரும் [2]கண்ணி னீயே [3]பார்த்தியென் றுரைத்தா னிப் பால், [4]முனிதன திடத்து வந்த முளரியங் [5]கண்ணன் வண்ணக், குனிசிலைக் குரிசில் [6]செய்த திற்றெனக் குணிக்க லுற்றும்.

(இ - ள்.) இனிமேல் ஒருகணத்தில் [மிகவிரைவில்] எமது தலைவனை இராமபிரான் எழுந்தருளுவதை இவ்விடத்தில் நீர் பெருகுகின்ற கண்களையுடைய நீயே பார்ப்பாய் என்று கூறிமுடித்தான்: இனிமேல், பரத்துவாசனது ஆச்சிரமத்தில் வந்த தாமரை மலர்போன்ற அழகிய கண்களையுடையவனும் அழகிய வளைந்த வில்லையேந்திய ஆண்மையிற்சிறந்தவனுமான இராமபிரான் செய்த செயலைஇன்னதென்று கூறத் தொடங்குகிறோம்; (எ-று.)-'இப்பால்' என்பதுமுதல், கவிக்கூற்று. பி-ம்:—[1]நம். [2]கண்ணினுனே. [3]பாரெனப்பணித்தான். [4]முனிவனது. [5]கண்ண. [6]செய்ததிறனெலாம்.

இங்கே ஒரு பிரதியில் "கெட்டவான் பொருள்" (327) என்ற பாடலும், அதன்பின் 26!-ஆம் பாடலிற்காட்டியுள்ள "நின்றவன்" என்ற செய்யுள்முதல் "இராவணன்" என்ற செய்யுள்வரையுள்ளனவற்றுள் 12, 13, 14, 18, 21-பாடல்கள் தவிர, மற்றவையும் உள்ளன. (4231)

312.—குகன் தன்சேனையோடு இராமனைக் காண வருதல்.

அருந்தவன் சுவைக ளாறோ டமுதினி தளிப்ப வையன்
கருந்தடங் கண்ணி யோடுங் களைகணுந் [1]துணைவ ரோடும்
விருந்தினி தருந்தி நின்ற வேலையின் வேலை போலும்
பெருந்தடந் தானை யோடுங் கிராதர்கோன் பெயர்ந்து வந்தான்.

(இ-ள்.) அருமையான தவத்தையுடைய பரத்துவாசன், ஆறு சுவைகளோடுகூடிய உணவை நன்றாகஅமைத்தருள, இராமபிரான், கரிய நீண்ட கண்களையுடையளான சீதையோடும் (தனக்கு) ஆதரவாயுள்ள சிநேகிதர்களோடும் அவ்விருந்துணவை நன்றாக உண்டு நின்றபொழுதில்,—வேடர் தலைவனான குகன் கடல்போன்ற மிகப்பெரிய சேனையுடன், (இராமனைக்காணும்பொருட்டுச் சிருங்கிபேரமென்னுந் தனது ஊரினின்று) புறப்பட்டு வந்தான்; (எ-று.)

அநுமான் இராமனது வரவைச் சொன்ன அன்றைக்கே குகன் வந்து இராமனைக் கண்டனனென அறிக. அமுது - தேவாமிருதம் போன்ற இனிய உணவுக்கு உவமவாகுபெயர். பி - ம்:—[1]தம்பியோடும். (4232)

313.—இராமபிரான் குகனைத் தழுவி க்ஷேமம் விசாரித்தல்.

தொழுதனன் மனமுங் கண்ணுந் துளங்கினன் சூழ வோடி
அழுதனன் கமல மன்ன வடித்தல மதனின் வீழ்ந்தான்
தழுவின னெடுத்து [1]மார்பிற் [2]றம்பியைத் தழுவு மாபோல்
[3]வழுவிலா [4]வளிய ரன்றே மக்களு மனையு மென்றான்.

(இ-ள்.) (குகன்,—இராமனைக் கண்களாற்) சேவித்து, (பெரும்பேறுபெற்றமையால்) மனமும் கண்களும் களிக்கப்பெற்றவனாய் (அப்பிரானை) வலம்வந்து (இவ்வளவுகாலம் பிரியநேர்ந்தமைக்கு வருந்தி) அழுதவனாய், தாமரைமலர்போன்ற (இராமபிரானது)

திருவடிகளில் விழுந்து வணங்கினன் [சாஷ்டாங்கமாகச் சேவித்தான்]; (அப்பொழுது இராமபிரான், அந்தக்குகனைத் தனது கைகளால்) எடுத்துத் தம்பியைத் தழுவுவதுபோல (அவ்வளவு அன்போடு) மார்பில் இறுகத்தழுவி, '(உனது) புத்திரர்களும் மனைவியும் குறைவில்லாத வலியை [க்ஷேமத்தை] யுடையவர்கள்தானா?' என்று வினவினன்; (எ - று.)

மனமும் கண்ணும் சூழவோடித் துளங்கினன் என எடுத்து, இராமபிரானது சௌந்தரியத்தில் மனமும் கண்ணும் ஈடுபட்டு விரைந்துசென்று சுற்றிச்சுற்றிச் சுழலமிட அழுந்தினன் என வுரைப்பாரும் உளர். இராமன் குகனிடம் சகோதர வாஞ்சை வைத்தமை, அயோத்தியாகாண்டத்திற் பெறப்பட்டது. தம்பியைத் தழுவுமா போல் - இனிப் பரதனைத் தழுவுவதுபோல எனினுமாம். பி-ம்:—[1] இராமன். [2] தம்பியர்த். [3] வழுவில, [4] வலியவோரின். (4233)

314.—குகன் தான் இராமனுடன்சென்று வனவாசஞ்செய்து அடிமைசெய்யப்பெறாமைக்குக் குறைகூறுதல்.

அருளுன துளது [1] நாயேற் கவரெலா மரிய வாய
[2] பொருளலர் நின்னை நீங்காப் புணர்ப்பினற் றொடர்ந்து போந்து
தெருள்தரு மிளைய வீரன் செய்வன [3] செய்க லாதேன்
மருள்தரு [4] மனத்தி னேனுக் கினிதன்றோ வாழ்வு மன்னோ.

(இ - ள்.) (குகன் இராமனைநோக்கி), 'அடியேனுக்கு(க் கிடைத்தற்கு அரியதாய) உன்னுடைய கருணை உள்ளது; அவர்கள்யாவரும் (எனக்கு) அருமையான பொருளாகமாட்டார்; உன்னை விட்டுப்பிரியாத மனப்பிணிப்புடனே தொடர்ந்துவந்து மெய்யுணர்வு மிக்க இளையபெருமாள் (உனக்குச்) செய்த அடிமைத்தொழில்களைச் செய்யப்பெறாதவனாகிய அஜ்ஞானம்நிறைந்த மனமுடையனான எனக்கு உயிர்வாழ்க்கை நன்றாயுள்ள தொன்றன்றோ? [இனியதன்று], (என்றான்); (எ - று.)

'இனிதன்றோ வாழ்வு' என்றது - பிறகுறிப்பு. இனி, உயிர் வாழ்க்கையொன்றுமே இனியதாம் எனினும் அமையும்; வெறுப்புரை. ஆதிசேஷனது அமிசமாகிய இலக்குமணன் தனது அடிமைத்தொழிலைச் செய்தற்காகவே உடனவதரித்து, இராமபிரானை விட்டுப் பிரியாது அவனுக்குப் பலவகையடிமைகளையுஞ்செய்து வந்தனனென்க. இச்செய்யுளினால், குகப்பெருமானது மெய்யறிவு விளங்கும். உனது திருவருள் முக்கியமேயன்றி மனைவிமக்கள் முக்கியரல்லர் என்பது முதல்வாக்கியத்தின் கருத்து. பி-ம்:—[1] நாயேனுயினேற்கு, நாயேற்கவையெலாம். [2] பொருளல. [3] செய்கலாது. [4] மனத்தேற் கெற்றோவாழ்வுதான்மன்னர்மன்னா, மனத்தினேனுக் கரிதன்றோ வாழ்வுமன்னோ. (4234)

315.—இராமன் குகனுக்குச் சமாதானங் கூற அவன்இளைய பெருமாளையும் சீதையையும் வணங்குதல்.

ஆயன பிறவும் பன்னி யழுங்குவான் தன்னை [1]யைய
நீயிவை யுரைப்ப தென்னே பரதனி னீவே றுண்டோ
போயினி யிருத்தி யென்னப் புளிஞர்கோ னிளவல் பொற்றாள்
மேயினன் வணங்கி யன்னை விரைமலர்த் தாளின் வீழ்ந்தான்.

(இ - ள்.) இவைபோல்வனவாகிய மற்றைவார்த்தைகளையுங் கூறி வருந்துபவனாகிய குகனை (நோக்கி, இராமபிரான்).—'ஐய! நீ இவ்வார்த்தைகளைக் கூறுவது யாதுகாரணம் பற்றியோ? பரதனினும் நீ வேறுவையோ? சென்று இனிதாகவிருப்பாயாக' என்று கூற,—வேடர் தலைவனான (அக்)குகன், இளையபெருமாளது அழகிய பாதங்களைச் சேர்ந்து வணங்கி லோகமாதாவாகிய சீதையினது வாசனையுள்ள தாமரைமலர்போன்ற அடிகளில் விழுந்து வணங்கினான்: (எ - று.)

'பரதனின் நீ வேறுண்டோ' என்றது, 'பரதன் வேறு, நீவேறு அல்ல; பரதன் உடன்வராது என்கட்டளைப்படி நாட்டில் இருந்தது போலவே, நீயும் உடன்வராது நாட்டிலிருந்தது தவறன்று' என்று இராமன் குகனைத் தேற்றியவாறு. புளிஞர் = புளிந்தர். பி - ம்:— [1]ஐயன். (4235)

316.—இராமபிரான் சுக்கிரீவன் முதலியோர்க்குக் குகனை இன்னானென்று தெரிவித்தல்.

தொழுதுநின் றவனை [1]நோக்கித் துணைவர்கள் தமையு நோக்கி
முழுதுணர் [2]கேள்வி மேலோன் மொழிகுவான் [3]முழுநீர்க் கங்கை
தழுவிரு கரைக்கு நாதன் தாயினு முயிர்க்கு நல்லான்
வழுவிலா வெயினர் வேந்தன் குகனெனும் வள்ள [4]லென்பான்.

(இ - ள்.) எல்லாவற்றையும் அறியவல்ல நூற்கேள்வியையுடைய சிறந்தவனான இராமபிரான்.—(தன்னை) வணங்கிநின்றவனான குகனைப் பார்த்து, (பின்பு தனக்குச்) சிநேகிதர்களான சுக்கிரீவன்முதலியோரையும் பார்த்துக் கூறுபவனானான்:—(இவன்), நிறைந்த நீரையுடைய கங்காநதியைத் தழுவியுள்ள இரண்டுகரைக்குந் தலைவன்; எல்லாவுயிர்களிடத்திலும் தாயைக் காட்டிலும் அதிகமாக அன்புகொண்டு உபகரிப்பவன்; (நீதிநெறி) தவறாத வேடர்களுக்கு அரசன்; குகனென்னும் பெயரையுடைய வரையாது கொடுக்குந்தன்மையுள்ளவனென்று (யாவராலும்) சிறப்பித்துச் சொல்லப்படுவான்; (எ - று.)

குகனைநோக்கித் துணைவர்களையும் நோக்கினது இவனைப்பற்றி உங்கட்குத் தெரிவிப்பேனென்று குறிப்பித்த வாறும். பி - ம்:— [1]சுட்டி. [2]கேள்வியாளன். [3]முறி. [4]என்றான். (4236)

317.—சுக்கிரீவன் முதலியோர் குகனை நட்புக்கொள்ளுதலும், சூரியாஸ்தமனமும்.

அண்ணலஃ துரைத்த லோடு மரிகுலத் தரச னாதி
நண்ணிய துணைவர் யாரு மினிதுறத் தழுவி நட்டார்
கண்ணகன் ஞால மெல்லாங் கங்குலாற் பொதிவான் போல
வண்ணமால் [1]வரைக்கு மப்பால் மறைந்தன[2]னிரவி யென்பான்.

(இ - ள்.) இராமபிரான் அவ்வாறு சொன்னவுடனே,—வானரக்கூட்டத்துக்கு அரசனாகிய சுக்கிரீவன் முதலாகப்பொருந்திய (இராமனுடைய) சிநேகிதர்களெல்லாரும், (குகனை) இனிமையாகத் தழுவிச் சிநேகித்தார்கள்: சூரியன், இடமகன்ற பூமிமுழுவதையும் இருளினால் மூடுபவன்போல [இருட்கு இடங்கொடுத்துக் கொண்டே] அழகிய பெரியமேருமலையின் அப்புறத்தில் மறைந்தான்:

தற்குறிப்பேற்றவணி. சூரியன் அஸ்தமித்தவுடன் உலகமுழுவதும் இருள் மூடிக்கொண்டது என்பது, கருத்து. கங்குல்-இருள். என்பான்-முதல்வேற்றுமைச்சொல்லுருபு. பி-ம்:—[1]வரைக்குமேல்பால். [2]மறையா வெய்யோன். (4237)

318.—அன்று இரவுகழியச் சூரியன் உதயமாதல்.

அலங்கலந் தொடையி னானு மந்தியின் [1]கடன்க ளாற்றிப்
பொலங்குழை [2]மயிலி னோடு துயிலுறப் புணரி [3]போலும்
[4]இலங்கிய சேனை சூழ விளவலு மெயினர் கோனும்
கலங்கலர் காத்து நின்றார் கதிரவ னுதயஞ் செய்தான்.

(இ - ள்.) விளங்குதலையுடைய அழகிய மலர்மாலையையணிந்த இராமபிரானும் (சந்தியாவந்தனம் முதலிய) மாலைக்கடன்களைச் செய்து முடித்தபின்பு பொன்னாலாகியகுழையென்னுங் காதணியையணிந்த மயிலபோலுஞ் சாயலுள்ள சீதையோடு படுத்துத்தூங்க, இளையபெருமாளும் வேடர்தலைவனான குகனும், கடல்போன்று விளங்குகின்ற சேனைகள்சூழ மனங்கலங்காதவர்களாய் [ஜாக்கிரதையாக]க் காத்துநின்றார்கள்; சூரியன் உதயமானான்; (எ-று.)—அலங்கல்-விளங்குதல், பி - ம்:—[1]சந்திமுற்றிப். [2]மயிலினோடுந் துயிறர. [3]போல. [4]இலங்கையிற். (4238)

319.—இராமபிரான் விமானமேறிச் செல்லுதல்.

கதிரவ னுதய காலக் கடன்கழித் திளவ லோடும்
[1]அதிர்பொலன் கழலி னானவ் வருந்தவன் றன்னை யேத்தி
விதிதரு [2]விமான மேவி விளங்கிழை யோடுங் கொற்றம்
முதிர்தரு [3]துணைவ ரோடு முனிமனந் தொடரப் போனான்.

(இ - ள்.) ஒலிக்கின்ற அழகிய வீரக்கழலையுடையவனான இராமபிரான் சூரியோதயகாலத்திற் செய்யவேண்டியநித்தியகருமங்களைச் செய்து முடித்து அருமையான தவத்தையுடைய அந்தப் பரத்துவாசனை வணங்கி (விடைபெற்று)த் தம்பியாகிய இலக்குமண

ளோடும் விளங்குகின்ற ஆபரணங்களையுடைய சிதையோடும் வெற்றிமிகுந்த துணைவருடனே பிரமனால் (குபேரனுக்குக்)கொடுக்கப்பட்டதான புட்பகவிமானத்தின்மீது ஏறி, பரத்துவாச முனிவனது மனம் (தன்னைப்) பின்தொடர்ந்துவர (அயோத்தியைநோக்கிச்) சென்றான்; (எ - று.)

இராமன் விட்டுச்சென்ற பிறகும் பரத்துவாசமுனிவன்பூரணானுக்கிரகத்துடனே அவனையே கருதியிருந்தன னென்பார் 'முனிமனந் தொடரப்போனான்' என்றார். விளங்கிழை - வினைத்தொகையன்மொழி. ஏத்தி-வணங்கி. பி-ம்:—[1]அதிர்தரு. [2]மானமேறி. [3]கருணையோடு. (4239)

320.—விமானத்துச் செல்லுகையில், அயோத்தியின் மதிற்புறந்தோன்றுதல்.

[1]தாவிவான் படர்ந்து மானந் தடையில தேகும் வேலைத்
தீவிய [2]கனிய தாகிச் செருக்கிய காமச் செவ்வி
ஓவிய முயிர்பெற் றென்ன வும்பர்கோ [3]னகரு மொவ்வா
மாவிய லயோத்தி சூழு மதிற்புறந் தோன்றிற் றன்றே.

(இ - ள்.) புஷ்பகவிமானம் தாவி வானத்தில் தடையில்லாமல் விரைந்து செல்லும்போது இனிய கனிகளையுடையதாய் மகிழ்ச்சி பூண்ட விரும்பத்தக்க அழகுடன்கூடிய சித்திரம் உயிர்பெற்றாற்போன்று தேவேந்திரனது (அமராவதியென்ற) பட்டணமும் (தனக்கு) நிகராகாத பெருமைவாய்ந்த அயோத்திநகரத்தைச் சூழ்ந்த மதிலின்புறந் தோன்றிற்று;(எ - று.)—[2]கன்னியாகிஎன்ற பாடத்துக்கு - கன்னிகையையொத்து [பிறர்கைப்படாமல்] சூழும் மதில் என்க. பி - ம்:—[1]தாவில். [3]திருவும். (4240)

321.—இராமன் 'அயோத்தி இதுதான்' என்ன, யாவரும் வணங்குதல்.

பொன்மதிற்கிடக்கை [1]சூழப் பொலிவுடை நகரந் தோன்ற
நன்மதிக் [2]கிழுவர் தம்மை நோக்கிய ஞான மூர்த்தி
சொன்மதித் தொருவ ராலுஞ் சொலப்படா வயோத்தி தோன்றிற்று
என்னலுங் கரங்கள் கூப்பி [3]யெழுந்தன ரிறைஞ்சி நின்றார்.

(இ-ள்.) (அப்பொழுது பொன்மயமான மதிலினிடங்கள் சூழப் பொலிவையுடைய அயோத்தியாநகரந் தோன்ற,-நல்ல அறிவுடைய தோழர்களை நோக்கிய ஞானசொரூபியான இராமபிரான் 'எவராலும் (இவ்வளவு சிறப்பையுடையதென்று) எண்ணிப் புகழ்ச்சி சொல்லமுடியாததான அயோத்தி தெரிகின்றது' என்று கூறினவுடனே, (அதுகேட்டஎல்லோரும்), கைகுவித்து எழுந்துசேவித்து நின்றார்கள்; (எ - று.)

விமானத்திலுள்ளவர் அயோத்தியாநகரை வணங்கியது, அது இராமபிரானுக்குப் பிறப்பிடமாதலாலும், தேவதாசாந்நித்தியமுடையதாதலாலும், முத்திதரும்நகரமேழனுள் ஒன்றாதலாலுமென்க. பி - ம்:—[1]சூழ்ந்த, சூழும். [2]துணைவர். [3]தொழுதனர். சில பிரதியில் இதனோடு பாதன்விரதப்படலம் முடிய,மேல் நகர்புகுபடலம் தொடங்குகின்றது. (4241)

வேறு.

322.—பரதனுடன் வருகிற அநுமான் அவ்விமானத்தைக் காணுதல்.

அன்னதோ ரளவையின் [1]விசும்ப தாயினும்
[2]துன்னிருங் [3]கதிரவர் [4]தோன்றினு ரெனப்
[5]பொன்னணி புட்பகப் பொருவின் [6]மானமும்
மன்னவர்க் கரசனும் [7]வந்து தோன்றினார்.

(இ - ள்.) அச்சமயத்தில் (தான்) ஆகாயத்தில் நெடுந்தூரத்தி லுள்ளதாயிருந்தாலும், நெருங்கிய பெரிய (பல) சூரியர்கள் (ஏக காலத்தில்) உதயமானாரென்னுமாறு பொன்மயமான அழகிய புட்பகமென்னப்பட்ட ஒப்பில்லாத விமானமும் (அதில் வீற்றிருக்கிற) அரசர்கட்கு அரசனான ஸ்ரீராமனும் வந்து (அநுமானுக்கு எதிரில்) தோன்றினார்கள்; (எ - று.)—பி - ம்:—[1]விசும்பினுயிரம். [2]துன்னொளிக், துன்னருங். [3]கதிரவன். [4]தோன்றினல். [5]பொன்னொளிர். [6]மானமேல் [7]வந்துதோன்றவே, தானுந்தோன்றிற்றால், வருகின்றார்களே. இதன்பின் சிலபிரதியிற் காணப்படுஞ் செய்யுள் வருமாறு:—

தோன்றலுஞ் சுமந்திரன் [1]தொழுத கையினன்
ஈன்றுகாத் தளித்தவை யியற்று மவ்வுரு
மூன்றுமாய் நான்குமா யைந்து மாமுதற்
[2]சான்றினைப் பரதற்குச் சுட்டிச் சாற்றுவான்.

பி-ம்:—[1]தொழுதுதொல்லுயிர். [2]சான்றுமாய்ப். (4242)

323.—இதுவும் அடுத்த கவியும் - அநுமான் விமானத்தி லுள்ளாரைப் பரதனுக்குச் சுட்டிக்காட்டுதலைக் கூறும்.

அண்ணலே காண்டியா [1]லலர்ந்த தாமரைக்
கண்ணனும் வானரக் கடலுங் கற்புடைப்
பெண்ணருங் கலமுநின் பின்பு தோன்றிய
வண்ணவிற் குமரனும் வருகின் றார்களே.

இதுமுதல் மூன்று கவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) அநுமான் பரதனை நோக்கிப் பின்வருமாறு கூறலானான்:-) பெருமையுடையவனே! மலர்ந்த தாமரைப்பூப்போன்ற கண்களையுடையவனான ஸ்ரீராமனும் கடல்போன்ற வானரசேனையும் பதிவிரதாதருமத்தையுடைய பெண்கட்கெல்லாம் அரியதோர் ஆபரணம்போன்று அழகுசெய்பவளான சீதையும் உனக்குப் பின்பு பிறந்தவனாகிய அழகிய வில்லையேந்திய இலக்குமணனும் (ஆகப் புட்பகத்தின்மீது ஏறி) வருகின்றவர்களை (இதோ) காண்பாயாக; (எ - று.)—பி - ம்:—[1]அலங்கு. (4243)

324. ஏழிரண் டாகிய வுலக [1]மேறினும்
பாழ்புறங் [2]கிடக்குறு படிய தாயதோர்

சூழொளி மானத்துத் தோன்று கின்றனன்
ஊழியா னென்றுகொண் டுணர்த்துங் [3]காலையே.

(இ-ள்.) பதினான்கு உலகங்களிலுள்ளவர்களும் (ஒருங்கு தன் மீது) ஏறினாலும் வெற்றிடம்பொருந்திய தன்மையையுடையதும் ஒப்பற்றதும் எங்கும்பரவுகிற ஒளியையுடையதுமான புஷ்பக விமானத்தில், பிரளயத்திலும் அழிவில்லாதவனான இராமபிரான், (இதோ) காணப்படுகின்றான் என்று (இவ்வாறு பரதனுக்கு அநுமான்) அறிவிக்கும்பொழுதில்;—(எ-று.)—தோன்றலும், ஆர்ப்பு சென்றது என மேல் முடிபுகாண்க.

எல்லாம் அழியும் பிரளயகாலத்தில் கடல் பொங்கி உலகங்களை மூடிக்கொள்ள எங்கும் ஜலார்ணவமான அப்பிரளயப்பெருங் கடலிலே எம்பெருமான் ஒருவனே சராசரங்களையெல்லாம் ஊறு படாமல் தனது திருவயிற்றில் அடக்கிவைத்துக்கொண்டு ஒருசிறு குழந்தைவடிவத்துடன் ஆலிலையின்மீது யோகநித்திரை செய்தருளுகின்றனனாதலால், அத்திருமாலின் திருவவதாரமான இராமனை 'ஊழியான்' என்றார். ஊழியான்-காலத்துக்குத் தலைவனுமாம். பி-ம்:-[1]எய்தினும். [2]கிடப்பதுபடியின்றுவதோர். [3]காலையில்.

325.—இராமனைக் கண்டவளவில் எதிர்கொள்ளச் சென்றவர்கள் ஆரவாரித்தல்.

பொன்[1]னொளி மேருவின் பொதும்பிற் புக்கதோர்
மின்னொளி மேகம்போல் வீரன் தோன்றலும்
[2]மன்னெதிர் வருகுந ரார்ப்பி ராவணன்
[3]தென்னகர்க் கப்புறத் தளவுஞ் [4]சென்றதால்.

(இ-ள்.) பொன்மயமான ஒளியுள்ள மேருமலையின் (பெருங்) குகையிற் புகுந்துள்ளதொரு மின்னலின்னொளியோடு கூடிய மேகம் போல வீரனான இராமபிரான் (விமானத்தின்மீது பிராட்டியுடன்) புலப்பட்டவளவிலே,—(தமக்கு) அரசனாகிய அவ்விராமபிரானை எதிர்கொள்ளவருகின்ற சனங்களின் (மகிழ்ச்சியாலுண்டான) ஆரவாரம், இராவணனுண்ட தெற்குத்திக்கிலுள்ள இலங்காபட்டணத்துக்கு அப்புறத்தளவும் போய்ப் பரவிற்று: (எ-று.)

மேரு-புஷ்பகத்திற்கும், பொதும்பிற்புக்கதோர் மின்னொளி மேகம்-அப்புஷ்பகத்தினுள்ளே சீதையுடனிருக்கும் இராமபிரானுக்கும் உவமை. முன்னிரண்டடி-உவமையணியும், ஈற்றடி-உயர்வு நவிற்சியணியுமாம். இவ்விரண்டும் திலதண்டுலந்யாயத்தால் [எள்ளும்அரிசியும்போலப் பேதந் தெரியச்] சேர்ந்திருப்பது-சேர்வையணி. பி-ம்:—[1]ஒளிர். [2]அங்கரார்தெழும், அங்கரார்த்த போர், மன்னெதிர்வருநர்கள். [3]தன்னகர்ப்புறத்தவுந்தாவிச். [4]சென்றவால். (4245)

326.—பரதன் இராமனைக் காணுதல்.

ஊனுடை யாக்கை விட் டுண்மை வேண்டிய
வானுடைத் [1]தந்தையார் வரவு கண்டெனக்

கானிடைப் [2]போகிய கமலக் கண்ணனைத்
தானுடை [3]யுயிரினைத் தம்பி [4]நோக்கினான்.

(இ-ள்.) (தன்னுடைய) மாமிசதேகத்தைவிட்டு [இறந்து] சத்தியத்தை விரும்பிய வானுலகத்தையடைந்த தந்தையராகிய தசரதரது வருகையைக் கண்டாற்போல,-காட்டிற்சென்ற தாமரை மலர்போன்ற கண்களையுடையவனும் தன்னுடைய உயிர்போன்றவனுமாகிய இராமபிரானை (அவனது) தம்பியாகிய பரதன் பார்த்தான்; (எ - று.)

தமையனது வரவுக்குத் தந்தையின் வரவை உவமை கூறியது, தமையன் தமப்பனோடொப்ப னாதலால். பி-ம்:—[1]தந்தையை. [2]எய்திய, போனவக். [3]உயிரெனத், அகமகிழ். [4]கண்டனன். (4246)

327.—பரதன் இராமனை வணங்குவதற்காக அநுமான் கையை விடுதல்.

கெட்டவான் பொருள் வந்து கிடைப்ப முன்புதாம்
பட்டவான் படரொழிந் தவரிற் பையுளோய்
சுட்ட [1]வன் மானவற் றொழுத லுன்னியே
விட்டனன் மாருதி கரத்தை மேன்மையான்.

(இ-ள்.) மேலானகுணங்கள்நிறைந்தவனான பரதன்,—(தாம் முன்பு)இழந்துபோன சிறந்தபொருள் (மறுபடி தம்மிடம்) வந்து சேர்ந்தமாத்திரத்தில் முன்பு தாம் பட்ட பெருந்துன்பங்கள்யாவும் நீங்கப்பெறுபவர்போல (முன்பு இராமபிரானை நீங்கியதனால் தனக்கு உண்டாயிருந்த) துன்பநோயை (இப்பொழுது அவனைக் கண்டதனால்) முற்றும் ஒழிந்தவனாய் [மனமகிழ்ந்து], மநுகுலத் தோன்றலாகிய இராமபிரானை வணங்கநினைத்து(த் தான் பிடித்திருந்த) வாயுகுமாரனான அநுமானது கையை நெகிழவிட்டான்;

உவமையணி, பரதனுக்கு மேன்மை-இராமன்கட்டளைக்கு எதிர் கூறாது அதனைத் தலைமேற்கொண்டு நடத்தலாகிய பாரதந்திரியமென்பர் அறிந்தோர். அநுமான்கையைப் பிடித்துக்கொண்டு பரதன் வந்ததாக முதனூலிற் கூறப்படவில்லை. பி-ம்:—[1]வான்மானவற், வானவன்வரத். இச்செய்யுள் சிலபிரதிகளில் வேறு இடத்திலுள்ளதென முன்னரே காட்டப்பட்டது; சிலபிரதிகளிலில்லை. 328-முதல் 331-வரையிலுமுள்ள செய்யுட்கள் வேறு இடத்திலுள்ளமையும் முன்னரே காட்டப்பட்டது. (4247)

328.—அநுமான் இராமபிரானை எதிர்சென்று வணங்குதல்.

அக்கணத் தனுமனு [1]மவணின் றேகியத்
திக்குறு மானத்தைச் [2]செவ்வ னெய்தியச்
சக்கரத் [3]தண்ணலைத் தாழ்ந்து முன்னின்றான்
உக்குறு கண்ணநீ ரொழுகு மார்பினான்.

(இ-ள்.) அப்பொழுது, அனுமானும்,—அவ்விடத்தினின்று (மேலெழுந்து) சென்று ஆகாயத்திற் பொருந்திய அந்தவிமா

னத்தை நேராக அடைந்து (அதில் வீற்றிருக்கின்ற) சக்கராயுதத்துக்கு உரிய பெருமைபெற்ற அவ்விராமபிரானைப் பெருகுகிற (ஆனந்தக்) கண்ணீர் வழியப்பெற்ற மார்பையுடையவனாய்வணங்கி முன்நின்றான்; (எ - று.)

அநுமான் தாவி மேலெழுந்து விமானத்தையடைந்து இராமபிரானை வணங்கினனென்க. பத்துத்திக்குக்களில் ஆகாயமும் ஒன்றாதலால், அதனை இங்கு 'திக்கு' என்றே குறித்தார்; சிறப்புப் பொருள், பொதுச்சொல்லாற் குறிக்கப்பட்டது. இனி, அவ்வடதிசையைநோக்கி வருகிற எனினுமாம். பி-ம்:—[1] அருக்கனேயெனத். [2] செலவினெய்தினான். [3] ஐயனை. கரத்தனை. மிக்குயர் முனிவனைச் சிரமமேவினன் என்று சிலபிரதியி லிரண்டாமடி. (4248)

329.—அநுமான் இராமனுக்கு அயோத்தியின் செய்தியைக் கூறல்.

உருப்பவிர் கடலிடை யொளிக்க லுற்றவப்
பொருப்பவிர் தோளனைப் பொருந்தி நாயினேன்
திருப்பொலி மார்பநின் வரவு செப்பினேன்
இருப்பன வாயின வுலகம் யாவையும்.

(இ-ள்.) (அநுமான் இராமனைநோக்கி), 'இலக்குமி விளங்குகின்றமார்பையுடையவனே! நாய்போற் கடைப்பட்டவனான அடியேன், வெப்பம் மிக்க நெருப்பினிற் குதிக்கத்தொடங்கிய மலையையொத்த தோள்களையுடைய அப்பரதனைச்சேர்ந்து உனது வருகையைத் தெரிவித்தேன்; (அதுகேட்டுப் பரதன் தீக்குதித்தலைத் தவிர்ந்ததனால்) எல்லாவுலகங்களும் (அழியாது) நிலைபெற்றிருப்பனவாயின' (என்று கூறினான்); (எ - று.)

இராமனை 'திருப்பொலிமார்ப' என்றது, திருமாலின் அவதாரமாதலால்; திரு-வீரலக்ஷ்மியுமாம். பரதனொருவன் இறந்தால் உலகத்து உயிர்களெல்லாம் இறக்குமென்பதனைக் கீழ்க் கௌசலைகூறியது கொண்டும் அறியலாம். (4249)

330.—இரண்டுகவிகள்-ஒருதொடர்: இராமபிரான் அநுமானுக்கு உபசாரமொழிகூறித் தழுவிப் புகழ்தலைக் கூறும்.

தீவினை யாம்பல செய்யத் [1] தீர்விலா
[2] வீவிலை முறைமுறை விளைவ [3] மெய்ம்மையாய்
நீ [4] யவை துடைத்துநின் [5] றளிக்க [6] நேர்ந்தனை
[7] யாயினு மன்பினு [8] யாஞ்செய் மாதவம்.

(இ - ள்.) (இராமன் அநுமானைநோக்கி), 'மெய்ம்மையோய்! தாயினும் அன்புடையவனே! நாங்கள் பலதீவினைகளை (முன்பு) செய்ய (அவைகள் எம்மைவிட்டு) நீங்காதவனவாய் அழிகின்றனவில்லாதனவாகி மேன்மேல் வந்து தீப்பயன்களைத் தருகின்றன; உண்மையாக நீ அத்துன்பங்களையொழித்துநின்றுகாப்பாற்றும்படி நேர்பட்டாய்; (இது), நாங்கள் (முற்பிறப்பிற்) செய்துள்ள பெருந்

தவப்பயனேயாம்';(எ - று.)—'என்று உரைத்து' என அடுத்தகவியோடு தொடரும்.

இராமபிரான் திருமாலின் அவதாரமாயிருந்தும் தான் கொண்டுள்ள மனிதவடிவத்துக்குத் தக்கபடி இங்ஙனங் கூறினனென்க. [2]வீவினை முறைமுறைவிளைய என்ற பாடத்துக்கு - பலமுறை எங்கட்குச்சாவுநேர என்க: இந்திரசித்துவீசிய பிரமாத்திரத்தாலும், இராவணனெறிந்த வேலாலும் இலக்குமணனுயிர்க்கு நேர்ந்த சாவைச் சஞ்சீவிகொண்டு போக்கியதாலும், பரதன் சாவை அக்கினியையவித்துப் போக்கியதாலும், 'வீவினை முறைமுறை விளைய, நீயவை துடைத்து நின்றளிக்கநேர்ந்தனை' என்றது என்க. பி-ம்:—[1]தீர்விலே. [3]மெய்ம்மையால். [4]இவை. [5]அளித்து, [6]நேர்ந்தால். [7]தாயினும். [8]யான். (4250)

331. என்றுரைத் தனுமனை யிறுகப் புல்லினன்
ஒன்[1]றுரைத் திறுப்பதெ னுனக்கு மெந்தைக்கும்
இன்றுணைத் தம்பிக்கும் [2]யாய்க்கு மென்றனன்
குன்[3]றிணைத் [4]தனவுயர் குவவுத் தோளினன்.

(இ-ள்.) இவ்வாறுகூறி, இரண்டுகுன்றுகளைச் சேர்த்தாற்போன்ற உயர்ந்துதிரண்ட (இரண்டு) தோள்களையுடையவனான இராமபிரான்,— '(கைம்மாறு கருதாது உதவிய) உன்னைப்பற்றியும் (சத்தியத்துக்காக உயிர் துறந்த) எனது தந்தையான தசரத சக்கரவர்த்தியைப்பற்றியும் (எப்பொழுதும் இடைவிடாது என்னுடனிருந்து எனக்குப் பலவகையிலும்) இனியதுணைபுரியும் (என்) தம்பியான இலக்குமணனைப் பற்றியும் என்னைப் பெற்ற தாயான கௌசலையைப்பற்றியும் (புகழ்ச்சியாக) ஒருவார்த்தை கூறி முடிப்பது எவ்வாறு (இயலும்?)' என்று அனுமனை இறுகத்தழுவினன்; (எ - று) இன்துணைத்தம்பி-பரதனென்பாருமுளர். பி - ம்:—[1]உரைத்திடுவது. [2]யார்க்கும். [3]இசைத்து. [4]அனையன, அனைய தோள். (4251)

332.—பரதன் இராமனருகில் தோன்றுதல்.

[1]ஈடுறு வான் [2]துணை யிராமன் சேவடி
சூடிய சென்னியன் தொழுத கையினன்
ஊடுயி ருண்டென வுலர்ந்த யாக்கையன்
பாடுறு பெரும்புகழ்ப் பரதன் தோன்றினன்.

(இ - ள்.) (இவ்வளவில் இராமபிரானை எதிர்கொள்ளவந்தவர்கள் நின்றஇடத்தை விமானம் அணுகியதாக,) (ஒன்றோடொன்று) ஒத்தவையும் [வேறுஒப்பற்றவையும்] (தனக்குப்) பெருந்துணையாகவுள்ளவையுமான இராமபிரானது திருவடிநிலைகளைத் தரித்த தலையையுடையவனும் கூப்பிய கைகளையுடையவனும் உள்ளே உயிர்உள்ளதென்று ஊகித்தறியும்படி வற்றிய உடம்புடையவனுமாகிய சிறப்புப்பெற்ற மிக்ககீர்த்தியையுடைய பரதன் (அருகில்) காணப்பட்டான்; (எ-று.)

உடம்பின் இளைப்புமுதலிய நிலைமையைப் பார்த்தால் உயிர் உண்டோவென்று சந்தேகித்தற்கு இடமாய், நடத்தல்முதலிய தொழில்களால் 'உயிருண்டு' என்று ஊகிக்கக்கூடிய நிலையிலிருப்பவனென்பது, மூன்றாமடியின் கருத்து. ஈடுறு-பெருமைபெற்ற என்றும், வான் துணை - முத்திநெறிக்கு வழித்துணையென்றும், பாடுறு—(புலவரால்) பாடுதல்பொருந்திய என்றும் கூறலாம். பி-ம்:—[1]தேடியமாமறை, ஈடியல்வான், ஈடியவன். [2]இணை. (4252)

333.—அநுமான் இராமனுக்குப் பரதன்வந்ததை அறிவித்தல்.

தோன்றிய பரதனைத் தொழுது தொல்லறச்
சான்றென [1]நின்றவ னிளைய தம்பியை
வான்றொடர் பே[2]ரர சாண்ட மன்னனை
ஈன்றவள் பகைஞனைக் [3]காண்டி [4]யீண்டென்றான்.

(இ-ள்.) பழமையான தருமத்துக்குச் சாட்சிபோன்றவனாகிய [நீதிநெறிக்கு ஒரு வழிகாட்டியான] அநுமான், அருகில்காணப்பட்ட பரதனை வணங்கி,—(இராமனைநோக்கி), 'மிக்கபற்றுக்குஇடமான பெரிய அரசாட்சியை(ச் சிறிதும் பற்றில்லாமற் பதினான்கு வருடம்) ஆண்ட அரசனும் (தன்னைப்) பெற்றதாய்க்குப் பகைவனுமாகிய இத்துணைச்சிறப்பையுடையதம்பியான பரதனை இப்பொழுது காண்பாயாக' என்றான்; (எ - று.)

ஒருபெரியார்க்கு மற்றொருபெரியாரைச் சுட்டிக்காட்டும்போது அன்னாரைத்தொழுது இவரின்னாரென்றல் ஒருமரபு என்பது இங்குப் பெறப்படுமென்ப. 'வான் தொடர் பேரரசு ஆண்ட மன்னன்' என்பதற்கு-பரமபதத்தையடைவதற்குச் சுலபமார்க்கமாகிய (பாரதந்திரியமென்னும்) பெரிய அரசையாண்ட அரசனென்றும் பொருள் கூறலாம். பி-ம்:—[1]நின்றநின்னிளைய. [2]அரசாட்சி. [3]சுட்டி, காட்டி. [4]ஈண்டெனா. (4253)

334.—பரதன்வரவு கண்டு இராமன் மகிழ்தல்.

காட்டினன் மாருதி கண்ணிற் [1]கண்டவத்
தோட்டலர் தெரியலா னிலைமை சொல்லுங்கால்
[2]ஓட்டிய மானத்து ளுயிரிற் றந்தையார்
கூட்டுருக் கண்டன்ன தன்மை கூடினான்.

(இ - ள்.) அநுமான் (பரதனைக்) காட்டினான்: (அப்பரதனைக்) கண்ணினாற்கண்ட இதழ்கள்மலரப்பெற்ற மாலையையணிந்த அந்த இராமபிரானது தன்மையைச் சொல்லுமிடத்து,—(அப்பெருமான்) ஏறிநடத்துகிற விமானத்தில் (வந்து காட்சிதந்த) உயிரோடுகூடிய தந்தையான தசரதமகாராசனது பொருந்திய உருவத்தைக்கண்டதுபோன்ற தன்மையை யடைந்தான்; (எ-று.)

இலங்கையில் தந்தையைக் கண்டபோது தான் அடைந்தது போன்ற மகிழ்ச்சியை, இராமபிரான் இங்குத் தம்பியாகிய பரதனைக் கண்டபோதும் அடைந்தனனென்க. பி - ம்: [1]காணவத். [2]ஓட்டியதேர்வரவுயிரிற், ஊட்டியதோமயத்துயரிற். இதன்பின்சில பிரதியில் "ஆனதோர்" (358) என்ற செய்யுள் உள்ளது: சிலபிரதிகளில் அச்செய்யுளோடு "அவ்வயின்" (355) என்ற பாடலும் உள்ளது. சிலபிரதிகளில் இங்கு "ஆனதோரளவையின்" (358) என்ற பாடல் இருக்க, அடுத்துள்ள "அவ்வயின்" (335) "எவ்வயின்" (336) என்ற இரண்டு பாடல்களும் இல்லை. (4254)

வேறு.

335.—விமானம் கீழிறங்குதல்.

**அவ்வயி னயோத்தி வைகுஞ் சனமொடு மக்கு ரோணி
தவ்வலி லாறு பத்தா யிரமொடுந் தாய ரோடும்
இவ்வயி னடைந்து ளோரைக் காண்பெனென் றிராம [1]னுன்னச்
செவ்வையி னிலத்தை வந்து சேர்ந்தது விமானந் தானும்.**

(இ - ள்.) அப்பொழுது, 'அயோத்தியில் வாழ்கிற சனங்களோடும், கெடுதலில்லாத அறுபதினாயிரம் அக்ஷௌஹிணிசேனையோடும், (கௌசல்யை சுமித்திரை கைகேயி என்னும்) தாய்மாரோடும் இவ்விடத்தில் வந்துள்ள எல்லோரையும் பார்ப்பேன்' என்று இராமன் மனத்தில் நினைத்தமாத்திரத்தில், புஷ்பகவிமானமும் செம்மையாக நிலத்தில் வந்து இறங்கிற்று; (எ - று.)—இங்குக் குறித்தவர் யாவரும், இராமபிரானை எதிர்கொள்ள வந்தவர்கள். பி-ம்:—[1]உன்னும். (4255)

வேறு.

336.—நிலத்தைச்சார்ந்த புஷ்பகவிமானத்தின் வருணனை.

**எவ்வயி னுயிர்கட்கு மிராம னேறிய
[1]செவ்விய புட்பக நிலத்தைச் [2]சேர்தலும்
அவ்வவர்க் [3]கணுகிய வமரர் நாடுய்க்கும்
எவ்வமின் மானமென் றிசைக்க [4]லாயதால்.**

(இ - ள்.) இராமபிரான் ஏறியுள்ள அழகிய புஷ்பகவிமானமானது பூமியில் இறங்கியவுடனே, எல்லாவிடங்களிலுமுள்ள உயிர்களுக்கும் அவ்வவ் வுயிர்க்கு (நல்வினையினாற்) கிடைக்கலான சுவர்க்கலோகத்துக்குக் கொண்டுபோகுந்தன்மையுள்ள குற்றமில்லாத விமானமென்று சொல்லலாம்படியிருந்தது; (எ - று.)

புட்பகவிமானம் வந்து இறங்கியதும், அதிலுள்ள இராமபிரானைச் சேவித்த யாவரும் சுவர்க்கானுபவத்தை யொத்த பேரானந்தமடைந்தமையால், அதற்குக் காரணமாகிய அவ்விமானத்தை, உயிர்களைச் சுவர்க்கானந்தத்திற் செலுத்தும் விமானத்தை யொக்குமென்றார்; தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]திவ்விய. [2]சேர்தலால். [3]எய்திய. [4]ஆனதே. (4256)

வேறு.

337.—நான்குகவிகள் - இராமனை யெதிர்கொண்ட அயோத்தியா நகரத்தாரின் நிலைமையைக் கூறும்.

தாயருக் கன் று சார்ந்த [1]கன்றெனுந் தகைய னுனன்
மாயையிற் பிரிந்தார்க் கெல்லா மனோலயம் வந்த தொத்தான்
[2]ஆயிளை யர்க்குக் கண்ணு [3]ளாடிரும் பாவை [4]யானுன்
[5]நோயுறுத் துலர்ந்த யாக்கைக் குயிர் [6]புகுந் தாலு மொத்தான்.

(இ - ள்.) (இராமபிரான்), தாயருக்கு, (பிரிந்து) அப்பொழுது சேர்ந்த கன்றென்று சொல்லத்தக்க தன்மையையுடையவனுயினுன்; மாயையினின்று நீங்கினவர்களுக்கெல்லாம் மனம்லயிக்குமிடம் நேர்ந்ததை ஒத்தான்; சிறந்ததம்பியரான பரதசத்துருக்கனர்களுக்குக் கண்களினுள் அசைகின்ற கருவிழியை யொத்து(அருமையாக) விளங்கினுன்; (எல்லோர்க்கும்), வியாதிபொருந்தி உயிர்நீங்கிப் போன உடம்புக்கு (மீண்டும்) உயிர்புகுந்தாற்போன்றதன்மையையும் ஒத்திருந்தான்; (எ - று.)

அவிச்சையொழிந்த மெய்ஞ்ஞானிகளுக்குத் தமது மனம் லயிக்குமிடம் பரப்பிரம மாதலால், அதனது வேற்றுருவமாயுள்ள இராமபிரானைக் கண்டதும் அவர்கள்மனம பரப்பிரமத்தைக் கண்டதுபோலவே பேரானந்தத்தை அடைவதாயிற்று என்பது, இரண்டாமடியின் கருத்து. மாயையாவது உள்ளதை இல்லாததாகவும், இல்லாததை உள்ளதாகவும், ஒன்றை மற்றென்ருகவுங் காட்டும் எம்பெருமானது ஒருசக்தி. மனம் அந்தமாயைக்குவசப்பட்டபோது பொருள்களின் நிலைமை யறியுந் தத்துவஞானம் தோன்றுகின்றதில்லை. ஆகவே, நிலையுள்ள பொருள்களை நிலையில்லாதன வென்றும், நிலையில்லாத பொருள்களை நிலையுள்ளன வென்றும் மாறுபடவுணரும் விபரீத ஞானம் தலையெடுக்கும்; அதனுலேயே, நித்தியமான ஆத்மாவுக்கு யாதொரு சம்பந்தமும்படாமல் அநித்தியமான தேகத்தையே பற்றிய தாய்முதலியோரிடத்துச் சுற்றத்தவரென்ற பொய்யபிமானம் உண்டாகி நிலைநிற்கின்றது; அது நீங்கவே, அம் மனம் ஆபாசபந்துக்களினிடம் பாசத்தையொழித்து உண்மையில் எல்லாவகைச்சுற்றமுமான பரம்பொருளினிடத்திலே லயிக்குமென்க. இருமை-கருமை. அன்று-இராமபிரானைக்கண்டஅப்போது என்றும், ஆய்தல் - நுணுகுதலாய், ஆயிளையர் - மெலிந்த தம்பிமார்களென்றும் உரைத்தலும் ஒன்று. பி-ம்:—[1]கன்றெனத். [2]ஆய்வளையார்க்கு, ஆயிழையார்க்கு. [3]ஆடிய. [4]ஒத்தான். [5]நோயுறவுலந்த, நோய்வுறுத்துலர்ந்த. [6]புகுந்தனையது. (4257)

338.எளிவரு முயிர்கட் கெல்லா மீன்றதா யெதிர்ந்த தொத்தான்
அளிவரு மனத்தோர்க் கெல்லா மரும்பத வமுத [1]மானுன்
[2]ஒளிவறப் பிறந்த தொத்தா னுலகினுக் கொண்க ணுர்க்குத்
[3]தெளிவருங் களிப்புச் [4]செய்யுந் தேம் [5]பிழிந் தேறலொத்தான்.

(இ - ள்.) (இராமபிரான்,—தன்னைக் காணப்பெறுது) எளிமை யடைந்த பிராணிகளுக்கெல்லாம் (தம்மைப்) பெற்ற தாய் எதிர்ப் பட்டதை யொத்தான்; (தன்னிடத்தில்) அன்புபொருந்தின மன முடையவர்களுக்கெல்லாம் (கிடைத்தற்கு) அரிய பக்குவமான தேவாமிருதம் கிடைத்தாற்போன்ருன்; (ஞானத்தால்) உயர்ந்தவ ரான முனிவர்களுக்கு (த்தனது உண்மைவடிவம்) மறைதலின்றிப் பிரதியக்ஷமானதை ஒத்திருந்தான்; அழகிய கண்களையுடைய மக ளிர்க்குத் தெளிவில்லாதமதக்களிப்பைச் செய்கின்ற இனிய மது வின் தெளிவை யொத்திருந்தான்: (எ - று.)

இராமபிரானைக் கண்டவுடன் மகளிர் களிப்புற்றுப் பரவச ராயினரென்றது, ஈற்றடியின் கருத்து. உலகு-இங்கு, உயர்ந்தோ ரான முனிவர். பி-ம்:—[1] ஒத்தான். [2] ஒளியவனுதித்ததொத்தானுல கிழைத்தும்பர்க்கெல்லாம். [3] தெளிவரக். [4] நல்கும். [5] பிழிதேறல். ()

339. ஆவியங் கவன லான்மற் றின்மையா[1] லனைய னீங்கக்
காவியங் கழனி நாடு நகரமுங் [2] கவன்று வாழும்
மாவிய [3] லொண்க ணூரு மைந்தரும் வள்ள லெய்த
ஓவிய முயிர்[4] பெற் றென்ன வோங்கின ருணர்வு பெற்றார்.

(இ - ள்.) அந்நாட்டில் உயிர் அவ்விராமபிரானேயன்றி வேறு இல்லாமையால் [யாவரும் இராமனைத் தம்முயிராகவேகருதியிருந்த தனால்] அவன் (வனஞ்செல்வதற்குத் தம்மைவிட்டுப்)பிரிய,குவளை கள் நிறைந்த அழகிய கழனிகளையுடையகோசலநாட்டிலும்(அதன் இராசதானியான) அயோத்தியாபட்டணத்திலும் (மனத்திற்) கவலைகொண்டு வாழ்கின்ற (பிளந்த) மாவடுவையொத்த அழகிய கண்களையுடையரான மகளிர்களும் ஆடவர்களும் இராமபிரான் (காட்டிலிருந்து) மீண்டுவந்தமையாற் சித்திரப்பதுமை உயிர் பெற் றாற்போல (இராமபிரான் பிரிந்தபோது இழந்த தமது இயற்கை யான) அறிவு (மீண்டும்) ஓங்கப்பெற்றார்கள்; (எ - று.)

'காவியங் கழனிநாடு' என்றதனால், அந்நாட்டின் நீர்வளநில வளங்கள் விளங்கும். மாம்பிஞ்சினுட்பிளவை மகளிர்கண்களுக்கு வடிவில் உவமைகூறுவது, மரபு. பி - ம்:—[1] ஐயன், அனையோன். [2] கலந்து. [3] உண். [4] பெற்றாலேயொத்தனர். இதுவும் அடுத்த கவியும் சிலபிரதியிலில்லை. (4259)

340. சுண்ணமுஞ் சாந்து நெய்யுஞ் சுரிவளை முத்தும் பூவும்
எண்ணெயுங் கலின மாவி லாழியு[1] மெண்ணில் யானை
வண்ணவார் மதமுந் நீரு மான்மதந் [2] தழுவு மாதர்
கண்ணவாம் புன லு மோடிக் [3] கடலையுங் கடந்த வன்றே.

(இ - ள்.) வாசனைப்பொடிகளும் சந்தனமும் நெய்யும் சுழியை யுடைய சங்குகள் ஈன்ற முத்துக்களும் பூவும் எண்ணெயும் கடிவா ளம்பூண்ட குதிரைகளின் வாயிலிருந்துவெளிவரும் நுரையும்கணக் கில்லாத யானைகளின் பலவகைநிறமுள்ள பெருகுகிற மூன்றுவகை

மதஜலமும் கஸ்தூரியணிந்த மகளிர்களது கண்களினின்று பெருகுகிற ஆநந்தபாஷ்பமும் (ஒன்ருகக்கலந்து) விரைந்து சமுத்திரத்தையுந் தாண்டிவிட்டன; (எ-று.)

சக்கரவர்த்தித்திருமகன் வந்துவிட்டனனென்கிற களிப்பினுல் மகளிரும் ஆடவரும் இராமபிரான்மீதும், ஒருவர்க்கொருவர் தங்கள் மீதும் வாரிவாரித் தூவுகின்ற வாசனைப்பொடி முதலியவைகள் அங்ஙனமே கொண்ட களிப்பினுற்பெருகுகிற குதிரைகளின் நுரையோடும், யானைகளின் மதத்தோடும், அவர்களுடைய ஆனந்தக் கண்ணீர்வெள்ளத்தோடும், ஒன்ருகக் கலந்து பெருகிக் கடலைக் கடந்தன என்றவாரும். கண்ண ஆம் எனப் பிரிப்பினுமாம். பி-ம்:—[1]மிகநல், இளநல். [2]தழுவி. [3]கடலிடைக்கலந்ததன்றே, கடலிடைமடுத்ததன்றே. (4260)

341.—வசிஷ்டன்முதலியோர் விமானத்தின்மீது ஏறுதலும் இராமபிரான் அம்முனிவனை வணங்குதல்.

அனைவரு [1]மனைய ராகி யடைந்துழி யருளின் வேலை
தனையினி தளித்த தாயர் மூவருந் தம்பி மாரும்
புனையுநூன் முனிவன் ருனும் பொன்னணி விமானத் தேற
வனைகழற் [2]குரிசின் முந்தி மாதவன் தாளில் வீழ்ந்தான்.

(இ-ள்.) யாவரும் அத்தன்மையுடையவராய் [மிக்கசந்தோஷங் கொண்டாடுபவராய்] (விமானம்) நெருங்கியபொழுது,—கருணைக் கடலாகிய இராமபிரானை இனிமையாய்ப் பெற்று வளர்த்த மூன்று தாய்மார்களும், தம்பிமாரும் பூணூலைத்தரித்த வசிஷ்டமுனிவனும் பொன்மயமான அழகிய புஷ்பகவிமானத்தில் ஏற, கட்டிய வீரக் கழலையுடைய உத்தமபுருஷனை இராமபிரான் முதலில் (தனது குலகுருவாகிய) மிக்கதவத்தையுடையனை வசிஷ்டமகாமுனிவனது பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான்; (எ-று.)—பி-ம்:—[1]இனையர். [2]இராமன்முந்தி வணங்கினுன் வசிட்டன்ருளில். இது முதல் நான்குகவிகள் பலபிரதிகளிலில்லை. (4261)

342.—வசிஷ்டன் இராமலட்சுமணர்களை ஆசீர்வதித்தல்.

எடுத்தனன் முனிவன் மற்றவ் விராமனை யாசி கூறி
[1]அடுத்துள துன்ப நீங்க வணைத்தணைத் தன்பு கூர்ந்து
விடுத்துழி யிளைய வீரன் வேதியன் தாளில் வீழ
வடித்தநூன் முனியு [2]மேந்தி வாழ்த்தினு ஞசி கூறி.

(இ-ள்.) அவ்வசிஷ்டமுனிவன் (கீழ்விழுந்து வணங்கிய) அவ்விராமபிரானை(க் கைகளால்) தூக்கியெடுத்தவனுய் (அவனுக்கு) ஆசிர்வாதஞ்செய்து (இராமவிரகத்தால் தனக்கு) நேர்ந்த துன்பங்கள் நீங்கும்படி அன்பு மிக்குப் பலமுறை அணைத்து விட்ட பின்பு, இளையபெருமாள் வசிஷ்டமுனிவனது பாதங்களில் விழுந்து வணங்க, தேர்ந்தறிந்த சாஸ்திரங்களையுடைய அந்தவசிஷ்டமுனிவனும் தழுவியெடுத்து (இராமபிரானை வாழ்த்தினதுபோல இலக்கு

மணனையும்) ஆசீர்வதித்துவாழ்த்தினன்; (எ - று)—அடுத்துள துன்பம் நீங்க-தனது பிறவித்துன்பங்களெல்லாம் ஒழியும்படி யென்றுங் கொள்ளலாம். பி-ம்:—[1]அடுத்தன. [2]முன்போல். (4262)

343.—இராமபிரான் தாயரை வணங்கல்.

கைகயன் [1]தனயை முந்தக் காலுறப் [2]பணிந்து மற்றை
மொய்குழ லிருவர் தாளு [3]முறைமையின் வணங்குஞ் செங்கண்
ஐயனை யவர்கள் தாமு [4]மன்புறத் தழுவித் தத்தம்
செய்யதா மரைக்க ணீரால் மஞ்சனத் தொழிலுஞ் செய்தார்.

(இ-ள்.) கேகயதேசத்தரசனது மகளான கைகேயியை முதலில் பாதங்களில் நன்றாகவிழுந்து வணங்கி நெருங்கிய கூந்தலையுடைய மற்றையிரண்டு தாய்மாருடைய பாதங்களையும் முறைமைப்படி வணங்குகின்ற சிவந்த கண்களையுடைய இராமபிரானை, அத்தாய் மாரும் அன்போடு இறுகத்தழுவித் தங்கள் தங்களது சிவந்த தாமரைமலர்போன்ற கண்களின் நீர்ப்பெருக்கினால் (அவ்விராம னுக்கு) நீராட்டுந்தொழிலையுஞ் செய்தார்கள்; (எ - று.) பி - ம்:— [1]தனயள். [2]வணங்க. [3]முறைமையிற்பணிந்த, முறைமுறை பணிந்த. [4]அணைத்தனர்வழுத்தியன்பால். (4263)

344.—சீதையும் லக்ஷ்மணனும் வசிஷ்டனையும் கைகேயி முதலியோரையும் வணங்குதல்.

அன்னமு முன்னர்ச் சொன்ன முறைமையி னடியில் [1]வீழ்ந்தாள்
தன்னிக ரிலாத வென்றித் தம்பியுந் தாயர் தங்கள்
பொன்னடித் [2]தலத்தில் வீழத் தாயரும் பொருந்தப் புல்லி
மன்னவற் [3]கிளவ னீயே வாழியென் றாசி சொன்னார்.

(இ-ள்.) அன்னப்பறவையின் நடைபோன்ற நடையையுடைய சீதையும் கீழ்க்கூறிய முறைமைப்படியே (வசிஷ்டமுனிவன் கைகேயி முதலிய மாமிமார் இவர்களுடைய) பாதங்களில் விழுந்து வணங்கினாள்; (பின்பு) தனக்கு ஒருவரையும்ஒப்பாகப்பெறாத வெற்றியையுடைய இளையபெருமாளும் தாய்மார் மூவருடைய அழகிய பாதங்களில் விழுந்துவணங்க, அத்தாய்மார்களும், (அவனை) இறுகத்தழுவி 'அரசனாகிய இராமபிரானுக்குத்தம்பியாந் தன்மையுள்ளவன் (அவனை விட்டுப்பிரியாது அவனுடன்வனத்துக்குச்சென்று வந்தவனான) நீ யொருவனே: வாழ்வாயாக' என்று வாழ்த்துக் கூறினார்கள்; (எ-று.)—பி-ம்:—[1]வீழத். [2]தலத்துவீழ்ந்தான் வீழ்தலும். [3]அரசநீயேவாழி, அரசனாகிவாழ்தி. (4264)

345.—இராமனைப் பரதன் வணங்க, அவனை இராமபிரான் தழுவுதல்.

சேவடி யிரண்டு [1]மன்பு மடியுறை யாகச் சேர்த்திப்
பூவடி பணிந்து [2]வீழ்ந்த பரதனைப் பொருமி விம்மி
நாவிடை [3]யுரைப்ப தொன்று முணர்ந்தில னின்ற நம்பி
ஆவியு முடலு மொன்றத் தழுவின [4]னழுது சோர்வான்.

(இ - ள்.) (இராமபிரானுடைய) அழகிய இரண்டு திருவடிநிலைகளையும் பத்தியையும் பாதக்காணிக்கையாக (அப்பிரானுக்குச்) சமர்ப்பித்து (அவனுடைய) தாமரைமலர்போன்ற திருவடிகளில் வீழ்ந்து வணங்கிநின்ற பாதனை நோக்கி விம்மிப்புலம்பி(த் தனது) நாவினாற்பேச ஒன்றும் அறியாதவனாய்த் திகைத்துநின்ற இராமபிரான், உயிரும் உடம்பும் ஒருசேரப் பொருந்தும்படி இறுகத் தழுவிக்கொண்டு அழுது தளர்பவனானான்; (எ - று.)

சேவடியிரண்டு மன்பும் அடியுறையாகச்சேர்த்தி-உடனவிற்சியணி. இராமபிரான் தன்னைவணங்கின பரதனைப் பொருமிவிம்மி நாவினாலுரையாமல் தழுவியது, அவனையும் அவனது மனநிலைமையையுங் கண்டதனா லுண்டாகிய பெருமகிழ்ச்சியினா லென்க. பொருமுதல்முதலியன-துன்பங் காரணமாகவன்றி, இன்பத்தினால் நிகழ்ந்தவையாம். நாவிடை - உருபுமயக்கம். பி - ம்:—[1] அன்பின். [2] நின்ற. [3] பெயர்ப்பது. [4] அன்புகூர. (4265)

346.—இராமபிரான் பரதன்மீது கொண்ட அன்பின் செயல்.

தழுவின னின்ற [1] காலைத் தத்திவீ ழருவி [2] கார்லும்
[3] விழுமலர்க் [4] கண்ணீர் [5] மூரி வெள்ளத்தான் [6] முருகின் செவ்வி
வழுவுறப் பின்னி [7] மூசு மாசுண்ட சடையின் [8] மாலை
கழுவின னுச்சி மோந்து கன்றுகாண் [9] கறவை யன்னான்.

(இ - ள்.) (இவ்வாறு இராமபிரான், தம்பியைத்) தழுவிநின்றபொழுது,—ததும்பிப்பெருகும் நீரருவியை வெளிவிடுகிற சிறந்த தாமரைமலர்போன்றகண்களின் பெரிய நீர்வெள்ளத்தால், இளமையின் அழகு குலையும்படி திரித்து நெருங்கிய அழுக்கடைந்த (பரதனது) சடைக்கற்றையைக் கழுவினவனாகி, உச்சிமோந்து,கன்றைக் கண்ட தாய்ப்பசுவை யொத்தவனானான்; (எ - று.)

விழு = விழுமம். இக்ஷ்வாகுவம்சத்தவர் தமது முதுமையில் தவசியரின் வேஷத்தை மேற்கொண்டு தரிக்கின்ற சடைமுடியைப் பரதன் இளமையிலேயே தரித்ததனால், 'முருகின்செவ்வி வழுவுறப் பின்னி மூசுஞ்சடை' என்றார். பி-ம்:—[1] பின்னர். [2] சாலும். [3] முழு. [4] கண்ணன். [5] வாரி. [6] முருகற். [7] மூசி, பின்னி. [8] கற்றை. [9] களிறே.

347.—இலக்குமணன் பரதனை வணங்குதல்.

அனைய நோர் காலத் தம்பொற் சடைமுடி [1] யடிய தாகக்
கனைகழ [2] லமரர் கோமாற் கட்டவற் படுத்த [3] காளை
துனைபரி கரிதே ரூர்தி யென்றிவை [4] பிறவுந் தோலின் [தான்
வினை [5] யுறு [6] செருப்புக் கீந்தான் விரைமலர்த் தாளின் வீழ்ந்

(இ - ள்.) அந்தச்சமயத்தில், ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய தேவேந்திரனை (வென்று) வலியடக்கினவனை இந்திரசித்தைக் கொன்ற இளவெருது போன்றவனாகிய இலக்குமணன்,—வேகமாகச் செல்லுகிற குதிரை யானை தேராகிய வாகனம் என்ற இவை

களையும் மற்றை விபவங்களையும், தோலினால் தொழில் செய்யப் பட்ட (இராமபிரானது) பாதுகைகளுக்கே உரியனவாக்கிய பரத னுடைய நறுமணமுள்ள தாமரைமலர்போன்றபாதங்களில், அழகிய பொன்னிறமான [சிவந்த] (தனது) சடையையுடைய முடி கீழே பொருந்தியதாக வீழ்ந்து வணங்கினான்; (எ - று.)—பி.ம்:—[1]படிய தாகக். [2]அமரர்கோனைக்கட்டறப்பிணித்த, அரக்கரச்சங்கடியவிற் பிடித்த, அரக்கர்கோனைக்கட்டறப்பிணித்த, அரக்கர்கோனைக் கட் டறத்தொலைத்த. [3]வீரன். [4]போலத். [5]அறு. [6]செருப்புநீத்த, செருப்பினீந்த, செருப்புக்கேய்ந்த. இச்செய்யுளின்பின்சிலபிரதியிற் காணப்படும் பாடல் வருமாறு:—

நீடுவே லேற்றவற் கிளைய நின்மலன்
வாடிய மனத்தனுய் வசிட்டன் முன்வரச்
சூடிய கடிமலர் தூவி [1]யார்த்தனன்
[2]ஏடவிழ் தாமரை யிறைஞ்சி [3]யெய்தினான்.

பி-ம்:—[1]வார்கழல். [2]ஏடுறு. [3]ஏத்தினான். இங்குக்காட்டிய "நீடுவேல்" என்ற இச்செய்யுள் சிலபிரதியில் "ஊடுறு" என்ற அடுத்த பாடலின் பின் உள்ளது. (4267)

348.—பரதன் இலக்குமணனைத் தழுவுதலும், இவர்களைப் பற்றி உலகத்தவர் வருந்துதலும்.

[1]ஊடுறு கமலக் கண்ணீர் திசைதொறுஞ் [2]சிவிறி யோடத்
[3]தாடொடு தடக்கை [4]யாரத் தழுவினன் றனிமை [5]நீங்கிக்
காடுறைந் [6]துலைந்த மெய்யோ [7]கையறு கவலை [8]கூர
நாடுறைந் துலைந்த மெய்யோ நைந்ததென் றுலக[9]நைய.

(இ-ள்) (அப்பொழுது கண்ட) உலகத்தார்,—'(இவ்விருவரு டைய உடல்களுள்) தனித்திருக்குந் தன்மையில்லாமல் [இராம பிரானை விட்டுப் பிரியாமல்] (அவனுடன்) காட்டில் வசித்து வருந் திய (இலக்குமணனது) உடம்போ, (தனிமைப்பட்டுச்) செயலறு தற்குக் காரணமான மனக்கவலை அதிகப்பட நாட்டில் வசித்து வருந்திய (பரதனது) உடம்போ, (எது) மிக மெலிந்தது?' என்று கூறி வருந்தாநிற்க, தாமரைமலர்போன்ற கண்களினின்று மிகுதி யாகப் பெருகுகிற நீர்ப்பெருக்கு எல்லாத்திக்குக்களிலும் பரந்து பெருக, (பரதன் தனது) முழந்தாளையெட்டுகிற பெரிய கைகளால் (இலக்குமணனை) அழுந்தத் தழுவினான்; (எ-று.)

இரண்டு உடம்பும் மெலிந்துள்ளனவாதலால், இங்ஙனம் விகற்பிக்கலாயிற்று. இராமனைப் பிரியாமல் அவனுடனே சென்று வருந்தி யிளைத்த இலக்குமணனது உடலைக்காட்டிலும் நாட்டில் தனித்து வருந்தியிளைத்த பரதனது உடம்பே நைந்துள்ளது என் பது அவர்களுட்கோளென்பது சொற்போக்கினால் தொனிக்கும். கமலக்கண்ணூடுறுநீர் என்க, ஊடு உறு கமலம்-(நீரின்) இடை

யிலே பொருந்திய கமலம் எனினுமாம்: பறிக்கப்படாது வாட்ட மின்றிப் பொலிவுற்றிருக்குந் தாமரை மலர். ஊடு உறு கண் என இயைத்து, காதளவுந் தடையின்றி நீண்டுசெல்லுங் கண் என்றலு மொன்று. பி - ம்:—[1]சேடுறு. [2]சிந்தி. [3]தாடுறு. [4]ஆட. [5]நீக்கிக். [6]உவர்ந்த. [7]கையுறு. [8]வார. [9]நைவ. (4268)

349.—இராமன் லக்ஷ்மணன் சீதை இவர்களைச் சத்துருக்கனன் வணங்குதல்.

மூவர்க்கு மிளைய வள்ளல் முடிமிசை முகிழ்த்த கையன்
தேவர்க்குத் தேவன் தாளுஞ் சேறிகழ லிளவல் தாளும்
பூவர்க்கம் பொழிந்து வீழ்ந்தா னெடுத்தனர் பொருந்தப் புல்லி
வாவிக்கு எளன்ன மன்னுள் [1]மலரடித் தலத்து வீழ்ந்தான்.

(இ - ள்.) (இராமன் பரதன் லக்ஷ்மணன் என்ற) மூன்றுபேர்க்கும் தம்பியாகிய சத்துருக்கனன், தலைமேற்கூப்பியகைகளையுடையவனாய்,—தேவாதிதேவனான இராமபிரானது பாதங்களிலும், கட்டிய வீரக்கழலையுடைய இளையபெருமாளுடைய பாதங்களிலும் மலர்த்தொகுதிகளைச் சொரிந்து வீழ்ந்துவணங்கினான்; (அவனை அவ்விருவரும்), எடுத்துநன்றாகத்தழுவ,—(பின்னர் அவன்), நீர் நிலையில் வாழ்கிற அன்னப்பறவைபோன்ற சீதையின் தாமரை மலரையொத்த பாதங்களில்விழுந்துவணங்கினான்; (எ-று.)-பி-ம்:—[1]அடியிணைத். இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை. (4269)

350.—இராமபிரான் தன்னுடன் வந்தவர்களைப் பரத சத்துருக்கனர்க்குத்தெரிவிக்க, அனைவரும் அவ்விருவரையும் வணங்கல்.

[1]பின்னிணைக்[2]குரிசில் தன்னைப் பெருங்கையால் [3]வாங்கி வீங்கும்
தன்னிணைத் தோள்க ளாரத் [4]தழுவியத் தம்பி மாருக்கு
இன்னுயிர்த் துணைவர் தம்மைக் காட்டின னிருவர் தாளும்
மன்னுயிர்க்[5]குவமை கூர [6]வந்தவர் வணக்கஞ் செய்தார்.

(இ - ள்.) (இராமபிரான், தனது) தம்பியும் ஒத்துவாழ்பவனுமான சத்துருக்கனனைப் பெரிய (தனது) கைகளால் எடுத்துப் பருத்து வளர்ந்துள்ள (தனது) இரண்டு தோள்களால் அழுந்தத் தழுவிய பின்பு, அவ்விரண்டு தம்பியர்க்கும் [பரதசத்துருக்கனர்களுக்கும்] (தனது) இனிய உயிர்போன்ற (சுக்கிரீவன்முதலிய) நண்பர்களை (இன்னாரென்று) அறிவித்தான்; (தனது) நிலைபெற்ற உயிர்க்கு ஒப்பாம்படியுள்ள வந்தவர்களான அவர்கள் (பரதசத்துருக்கனரென்ற அவ்விருவருடைய) பாதங்களையும் வணங்கினார்கள்;

லக்ஷ்மணன்போலப் பரதனைப் பிரியாமல் எப்பொழுதும்உடன் வாழ்தலால், சத்துருக்கனனை 'இணைக்குரிசில்' என்றார். பின்-பின் பிறந்தவன்: தம்பி. வந்தவர்-இராமபிரானுடன் புஷ்பகவிமானத்தில் வந்தவர்கள். பி-ம்:—[1]பின்னிளை. [2]குரிசின்மின்னை. [3]வணங்கி வாங்கும், வணங்கிநீங்கத், வாங்கி நீங்கத். [4]தழுவியதம்பிமாருக்கு.

[5]உண்மைகூர. [6]மைந்தரும், இதன்பின் பலபிரதிகளிலுள்ள செய்யுள் வருமாறு:—

ஆயிடைக் குகனும் வந்தாங் [1]காண்டவ னடியில் வீழ
நாயக னுவந்து புல்லி நண்ணியென் பின்பு வந்த
தூயனே கிளையி னேடுஞ் சுகமிருந் தனையோ வென்று
வாயிடை மொழிந்தான் மற்றை மறைகளுங் காணு வண்ணல்.

பி-ம்:—[1]ஆண்டகை. இதன்பின் "அசனி" (356) என்றசெய்யுளுள்ளது. "குரக்கினத்து" (351)முதலிய செய்யுட்களில்லை.(4270)

351.—பரதன் அவர்கட்கு உபசாரவார்த்தை கூறல்

**குரக்கினத் தரசைச் சேயைக் குமுதனைச் சாம்பன் தன்னைச்
செருக்கிளர் நீலன் தன்னை மற்றுமத் [1]திறத்தி னேரை
அரக்கருக் கரசை வெவ்வே றடைவினின் [2]முதன்மை கூறி
[3]மருக்கமழ் [4]தொடையன் மாலை மார்பினன் பரத னின்றான்.**

(இ-ள்.) வாசனைவீசுகின்ற தொடுத்தலைக்கொண்ட பூமாலையையணிந்த மார்பையுடையவனாகிய பரதன்,—வாநரசமூகத்துக்கு அரசனாகிய சுக்கிரீவனையும் (அவனது அண்ணன்) மகனான அங்கதனையும் குமுதனையும் ஜாம்பவானையும் போர்செய்வதில் உற்சாகமுள்ள நீலனையும் இன்னும் அத்தன்மையையுடைய மற்றவர்களையும் இராக்கதர்களுக்கு அரசனாகிய விபீடணனையும் (பார்த்து), தனித்தனியாக (அவரவர்க்கு) உரியபடி சிறந்த உபசாரவார்த்தைகளைச் சொல்லிநின்றான்; (எ - று.)—பி-ம்:—[1]திறத்துளோரை. [2]மேன்மை. [3]மருக்குறு. [4]தொடையன்மார்பன்பரதற்கு மகிழச் சொன்னான். ஒருபிரதியில் "ஆயிடை" என்று கீழ்க்காட்டிய செய்யுள் இதன்பின் உள்ளது. (4271)

352.—சுமந்திரன், மந்திரிகள் முதலியோருடன் இராமபிரானைக் காண வருதல்.

**மந்திரச் சுற்றத் துள்ளார் தம்மொடும் [1]வயங்கு தானைத்
தந்திரத் [2]தலைவ ரோடுந் [3]தமரொடுந் தரணி யாளும்
சிந்துரக் களிறு போல்வா [4]ரெவரொடுஞ் சேனை யோடும்
சுந்தரத் தடந்தோள் வெற்றிச் சுமந்திரன் [5]தோன்றி னானல்.**

(இ-ள்.) அழகிய பெரிய தோள்களையும் வெற்றியையுமுடைய சுமந்திரனென்னும் முக்கிய மந்திரியானவன்,—ஆலோசனைக்கு உரிய இனமாகவுள்ளவர்களான மந்திரிகளுடனும் விளங்குகின்ற சேனைகளையுடைய சேனாதிபதிகளுடனும் (மற்றும்) தன்னைச்சேர்ந்தவர்களுடனும் பூமியை அரசாளுகின்ற சிந்தூரமணிந்த ஆண்யானையையொத்தவர்களாகிய ராஜகுலத்தாரனைவருடனும் சேனையோடும் (இராமபிரானைக் காண) அருகில் வந்தான்; (எ - று.)—பி - ம்:—[1]வானினீண்ட. [2]சுற்றத்துள்ளார், [3]பலரொடுந். [4]திரளொடும். [5]தொழுதுவந்தான். (4272)

353.—சுமந்திரன் வணங்க, இராமனும் லக்ஷ்மணனும் அவனைத் தழுவுதல்.

அழுகையு முவகை தானுந் தனித்தனி யமர்செய் தேறத்
தொழுதன னெழுந்து விம்மிச் சுமந்திர னிற்ற லோடும்
தழுவின னிராமன் மற்றைத் தம்பியு மனைய நீரான்
வழுவினி யுளதன் றிந்த மாநிலக் கிழத்திக் கென்றான்.

(இ-ள்.) அழுகையும் மகிழ்ச்சியும் (தம்மில்) ஒன்றோடொன்று போர்செய்துகொண்டு (ஒன்றினும் ஒன்று) முற்பட்டு வர, (இராமபிரானைச்) சேவித்து எழுந்து கண்ணீர்பெருக்கிக்கொண்டு சுமந்திரன் நின்ற வளவில்,—இராமன் (அச்சுமந்திரனைக்) கட்டித்தழுவினான்; மற்றொருவனாகிய இளையபெருமாளும் (சுமந்திரனைக்) கட்டித் தழுவினான்; அங்ஙனம் இராமலக்ஷ்மணரால் தழுவப்பெற்றவனான சுமந்திரன், (இராமபிரானை நோக்கி), 'இனி இந்தப் பூமிதேவிக்குத் துன்பம் இல்லையாகும்' என்றான்; (எ - று.)

இராமபிரான் தனது அருமைத்திருமேனி வாடி வருந்தக் காட்டுக் கெழுந்தருளியதை நினைக்குந்தோறும் அழுகையும், பதினான்கு வருஷமும் இனிதுகழிந்து சுகமாக ஊர்க்குவந்துசேர்ந்ததை நினைக்குந்தோறும் மகிழ்ச்சியும் ஒன்றையொன்று அதிகரிக்கச் சுமந்திரனுக்கு எழுந்தன வென்க. தனக்குஉரிய அரசன் பூமிக்குப் பொறையாயிருந்த அரக்கப்பூண்டுகளை அறவொழித்து வந்து ஆள நேர்ந்ததனால், பூமி துன்பமற்ற தாயிற் றென்க. இராமன் தழுவினன், தம்பியும் தழுவினன் என இயையும். (4273)

354.—சேனைகள் இராம னநுமதிப்படி புஷ்பகவிமானத்தின் மீதுஏறி இலக்குமணனை வணங்குதல்.

ஏறுக சேனை யெல்லாம் விமானமீ தென்று [1]தன்போல்
மாறிலா வீரன் கூற வநதுள வனிக வெள்ளம்
ஊறிரும் பரவை வானத் தெழிலியு ளொடுங்கு மாபோல்
ஏறிமற் றிளைய வீர னிணையடி [2]தொழுத தன்றே.

(இ - ள்.) (சுமந்திரனுடன்வந்த சேனைகளெல்லாம் இராமபிரானை வணங்கிநிற்க), தனக்குச் சமமாக வேறொருபொருளில்லாத வீரனாகிய இராமபிரான், 'சேனைகள்யாவும் விமானத்தின்மீது ஏறக்கடவன' என்று கட்டளையிட,—(அங்குச் சுமந்திரனுடன்)வந்துள்ள சேனைத்தொகுதி சுரக்குந்தன்மையுள்ள பெரிய கடல் ஆகாயத்துள்ள மேகத்தில் அடங்குமாறுபோல (விமானத்தின் மேல்) ஏறி, (பின்பு) இளையபெருமாளுடைய இரண்டு திருவடிகளையும் வணங்கிற்று; (எ - று.)

கடல்-சேனைக்கும், ஆகாயத்திலுள்ள மேகம் - அவ்விடத்திலுள்ள விமானத்துக்கும், பேரொலிசெய்துகொண்டு அணியணியாய்ப் பரந்திருத்தலிலும் ஆகாயத்தில் வரைந்துசெல்லுதலிலும் உவமையாம். பி-ம்:—[1]செம்பொன். [2]காத்துநின்ற. (4274)

355.—தேவர்கள் புஷ்பகவிமானத்தைக் கொண்டாடிப் பூமழைபொழிதல்.

உரைசெயி னுலக முண்டான் மணியணி யுதர மொவ்வா
கரை[1]செய லரிய வேதக் குறுமுனி கையு மொவ்வா
விரைசெறி யலங்கன் மாலைப் புட்பக விமான [2]மென்றென்று
உரைசெய்து வானு ளோர்க ளொண்மலர் தூவி யார்த்தார்.

(இ - ள்.) ஆகாயத்திலுள்ள தேவர்கள், (புஷ்பக விமானத்தைப்பார்த்து), 'மணம்நெருங்கிய அசையுந்தன்மையுள்ள மாலைகளைத் தொங்கக்கட்டிய இப்புஷ்பகவிமானத்துக்கு (ஒப்புமை) சொல்லுமிடத்து உலகங்களை யுட்கொண்டருளிய திருமாலினது அழகுபொருந்திய திருவயிறும் உவமையாகமாட்டாது: எல்லை காணவொண்ணாத [அநந்தமான] வேதங்களை யுணர்ந்தவனான குறுகியவடிவமுள்ள அகஸ்தியமகாமுனிவனுடைய (சமுத்திரத்தைத்தன்னுளடக்கிய)கையும்உவமையாகமாட்டாது' என்றுபலமுறை வியந்துகூறி, அழகிய புஷ்பங்களைச் சொரிந்து ஆரவாரித்தார்கள்;

'எல்லா வண்டங்களையும் உட்கொண்டருளிய திருமாலினது திருவயிறு எல்லாவுயிர்களையுந் தன்னுள் அடக்கியிருந்ததேயன்றித் திருமாலையுந் தன்னுள் அடக்கியிராமையால் அத்திருமாலையுமுட்பட அடக்கியிருக்கும் இப்புஷ்பகவிமானத்திற்கு அது உவமையாகாது' என்றும், 'எல்லாப்பொருள்களையுந் தன்னுளடக்கியதிருமாலின் திருவயிறே உவமையாகாதபோது ஒரு சமுத்திர மாத்திரத்தைத் தன்னுளடக்கிய அகஸ்தியரது கை இதற்கு எங்ஙனம் ஒப்பாகும்?' என்றும் தேவர்கள் புஷ்பகவிமானத்தைக்கொண்டாடினரென்க. மணியணி, அலங்கன்மாலை—மீமிசைச்சொல்எனக் கொள்வாருமுளர். ஒவ்வா = ஒவ்வாது: கடைக்குறை. பி - ம்:— [1]செய. [2]மீதென்று, ஒன்றென்று. (4275)

356.—புஷ்பகவிமானத்தில் மங்களவாத்தியங்கள் முதலியன முழங்குதல்.

அசனியின் குழுவு [1]மாழி யேழுமொத் [2]தார்த்த [3]தென்ன
[4]விசையுறு முரசும் [5]வேதத் தோதையும்[6]விளிகொள் சங்கும்
இசையுறு குரலு [7]மேத்தி னரவமு மெழுந்து பொங்கித்
திசையுறச் சென்று வானோ [8]ரந்தரத் தொலியிற் றீர்ந்த.

(இ-ள்.) விரைந்துபரவுகின்ற முரசவாத்தியங்களின் ஓசையும் (அந்தணர் கூறுகிற) வேதங்களின் ஓசையும் பேரொலியைக் கொண்டுள்ள சங்கநாதமும் இராகத்தோடுகூடிய கண்டத்தொனியும், துதிக்கின்ற இனிய சத்தமும்.—இடியின்கூட்டங்களும் ஏழு கடல்களும் ஒருசேர ஆரவாரித்தாற்போல மிக்குப்பரவித் திக்குக்களின் எல்லையிற்பொருந்தும்படி சென்று தேவர்கள் ஆகாயத்திற் கூறும் (இராமனைப்பற்றிய வாழ்த்துக்களின்) ஒலியில் அடங்கின;

இம்முழக்குக்களெல்லாவற்றினும் தேவர்கள் இராமபிரானுக்குக்கூறிய வாழ்த்தொலி மிக்கிருந்ததென்பதாம். பி-ம்:—[1]வேலை. [2]ஆர்த்த, இழிந்தது. [3]என்னை. [4]விசியுறு. [5]வேதவோசையும். [6]இளிகொள்சங்கின். [7]ஏற்றின். [8]தோத்திரத்தொலியும். இச்செய்யுளுக்குப்பின் சிலபாடல்கள் காணப்படுகின்றன: அவை வருமாறு:

1. நம்பியும் பரத னோடு நந்தியம் பதியை நண்ணி
[1]வெம்பிய லெரியின் பாங்கர் [2]விலக்குவ னென்று விம்மும்
கொம்பியல் மருங்குற் றெய்வக் கோசலை குளிர்பொற் பாதம்
தம்பிய ரோடுந் தாழ்ந்தான் தாமரைக் கண்ணீர் தாழ.

பி-ம்:—[1]வெம்பிய. [2]விலக்குவானின்று.

2, மூன்றெ றன நின்ற தன்மைக் குணங்களி [1]னுயர்ச்சிக் கெல்லாம்
சான்றென நின்ற மானச் சிறுவனைத் தலைப்பட் டாட்குத்
தோன்றிய வுவகைக் காங்கோ[2]ரெல்லையுஞ் சொல்லற் பாற்றோ
ஈன்றபோ தொத்த தன்றே எதிர்ந்தபோ தொத்த [3]தன்மை.

பி-ம்:—[1]முயற்சிக்கெல்லாம். [2]உவமையும். [3]இன்பம்.

3. இணைமலர்த் தாளின் வீழ்ந்த விலக்குவன் தன்னை யேந்திப்
பணைமுலைப் பாலுங் கண்ணீர்த் தாரையும் [1]பாய நின்றாள்
பிணையெனத் தகைய நோக்கிற் சீதையைப் [2]பேடை யன்னத்
துணையினை [3]யுலகிற் கற்பின் [4]பெருங்கதித் துறையைக்
கண்டாள்.

பி-ம்:—[1]பனிப்ப. [2]பெருமை. [3]புல்லியல்லாற். [4]பெருங்கடற்.

4. நான்முகன் தாதை தான்தன் மகனென்று நல்கி விம்மிப்
பான்முலை சோர நின்ற பல்பெருந் தவத்தி னாளைக்
கான்முதற் றொழுது தங்கள் கட்டிரும் பாவம் விட்டார்
மான்முய லுருவத் தோடுந் தோன்றிய [1]வானோ ரெல்லாம்.

பி-ம்:—[1]வானரேசர். சிலபிரதியில் இப்பாடலுக்குப்பின் திருமுடிசூட்டுபடலத்து "நம்பிய" (1), "ஊழியின்" (3), "ஆய தோர்" (11) என்ற பாடல்களிருக்க, பின் நகர்புகுபடலம் முடிகின்றது. ஒரு பிரதியில் இச்செய்யுள் நான்கும் "ஆனதோர்" (358) என்ற பாடலின்பின் உள்ளன. இவற்றின்பின் திருமுடிசூட்டு படலத்து முதலேழுபாடல்களும் முறையேயிருக்க, அவற்றின்பின் (திருமுடிசூட்டுபடலம் 6-ஆம் பாடலுக்குப்பின்புள்ள) "எழுவகை" என்றபாடலும் "ஆயதோர்" (11) என்ற பாடலும் இருக்க, பின்பு நகர்புகுபடலம் முடிகின்றது. சிலபிரதிகளில் இந் நான்கு பாடல்களுடனே நகர்புகுபடலம் முடிகின்றது. இவற்றிலெல்லாம் 357-358-பாடல்களில்லை. (4276)

357.—விமானம் ஆகாயத்தில் எழுந்து செல்லுதல்.

அவ்வயின் விமானந் தாவி யந்தரத் தயோத்தி நோக்கிச்
செவ்வையிற் படர லுற்ற செகதல மடந்தை யோடும்

இவ்வுல கத்து ளோர்க[1]ளிந்திர ருலகு காண்பான்
கவ்வையி [2]னேகு கின்ற நீர்மையைக் [3]கடுக்கு மன்றே.

(இ-ள்.) அவ்விடத்தினின்று [நிலத்தினின்று] விமானம் ஆகாயத்திலெழுந்து அயோத்தியாபட்டணத்தை நோக்கி நேராகச் சென்றது,—(தாம் வசிக்கும்) பூமிதேவியுடனே இந்தப்பூமியி லுள்ளவர்கள் வானுலகத்தைக் காணும்பொருட்டுப் பேராரவாரத் தோடு போகின்றதன்மையை ஒத்திருக்கும்; (எ - று.)

பூமியிலுள்ளவர்களை யேற்றிக்கொண்டு ஆகாயத்தில் விமா னஞ்செல்வது, இப்பூமியே தன்னிடத்துள்ளாருடன் இந்திர லோகத்தைக் காண வானத்தைநோக்கிச் செல்வதை யொக்கு மெனக் குறித்தார்; **தற்குறிப்பேற்றவணி.** பி-ம்:—[1]இந்திரற் குவகை கூரக், இந்திரற்குவமைகூறக். [2]ஏறுகின்ற, ஏகுமென்ற, எழுந்து செல்லும். [3]கடுத்த. (4277)

வேறு.

358.—புஷ்பகவிமானம் நந்திக்கிராமத்தை யடைதல்.

ஆனதோ ரளவையி னமரர் கோனொடும்
வானவர் திருநகர் வருவ தாமென
மேனிறை வானவர் வீசும் பூவொடும்
தானுயர் புட்பக நிலத்தைச் சார்ந்ததால்.

(இ-ள்.) அச்சமயத்தில், (எல்லாவற்றினும்) தான் உயர்ந்த தான அப்புஷ்பக விமானம்,—தேவர்களோடும் (அவர்கட்குத்) தலைவனான இந்திரனோடும் தேவர்களுடைய அமராவதிபட்டணம் (அயோத்திமாநகரைக்காணப்பூமிக்கு) வருகின்றதுபோலு மென்று சொல்லும்படி, ஆகாயத்தில் (இராமபிரானைச் சேவித்துக்கொண்டு) நிறைந்துள்ள தேவர்கள் தூவிய புஷ்பங்களுடன் நந்திக்கிராமத் தலத்தை யடைந்தது; (எ-று.)

இராமபிரானுக்கு இந்திரனும், மற்றையோர்க்குத்தேவர் களும், புஷ்பக விமானத்துக்கு அமராவதியும் உவமை. பின்னி ரண்டடி-உடனவிற்சியணி, புட்பகவிமானம் இறங்கிச்சேர்ந்த இடம் நந்திக்கிராமமென்பதை, "நம்பிய பரதனோடு நந்தியம் பதியை நண்ணி" என அடுத்த திருமுடிசூட்டு படலத்தின் முதற் செய்யுளில் வருவதனால் அறிக. 'இராமபிரான் நந்திக்கிராமத்தை யடைந்தது ஷஷ்டி திதியின் பிற்பகலில்' என ராமாயணஸாரஸங்க் ரஹம் என்னும் நூல் கூறும். ஒருபிரதியில், இந்தப்பாடலுள்ள இடத்து

*அவ்வயி னயோத்தி வைகுஞ் சனமுட னக்கு ரோணி
தவ்விலா வாறு பத்தா யிரரொடுந் தாய ரோடும்

---

*சில மாறுதலுடன் 385-இல் இப்பாடல் உள்ளது.

இவ்வயி னடைந்து ளோரைக் காணவென் றிராமனெண்ணத்
திவ்விய விமானம் வந்து நந்தியம் பதியைச் சேர்ந்த.

என்ற பாடலிருக்க, இதன்பின் **மீட்சிப்படலம்** முற்றும் என்று உள்ளது. (4278)

மீட்சிப்படலத்துச் சரிதையை ஸ்ரீவான்மீகிபகவான் அருளியதன் சுருக்கம் வருமாறு:—இராவணவதமான பின்பு போர்காண வந்திருந்த தேவர்கள் முதலினோர், இராமனது திறல் முதலியவற்றைப் புகழ்ந்த வண்ணம் தத்தம் இருப்பிடத்துக்குச் சென்றனர். ஸ்ரீராமன் மாதலிக்குத் திவ்யரதத்தைக் கொண்டுபோகுமாறு அநுமதிதர, அன்னோனும் தேர்மீதூர்ந்து சுவர்க்க லோகத்துக்குப் போயினன். பின்பு இராமன் 'இவ்வளவு வெற்றிக்குக் காரணம் இந்தச் சுக்கிரீவனே' என மொழிந்து அவனைத் தழுவிக் கௌரவித்து இளையபெருமாளைப் பார்த்து, 'நம்மிடத்து அன்புகொண்டு பேருதவி புரிந்த இந்த விபீடணனை முடிசூட்டுக' என்றுபணிக்க, இலட்சுமணன் வானரர்களைக்கொண்டு கடலினின்று நீர்கொணர்வித்து விபீடணனுக்கு மறைமுறைப்படியே இலங்காராச்சியத்திற் பட்டாபிஷேகஞ் செய்தான்.

அப்பால் விபீடணன் தன்னிடத்துப்பரிவரான இலங்கையிலுள்ள அரக்கர்களை இன்மொழிகளாற் சமாதானப்படுத்தி இராமனைச்சார்ந்து மங்கலப்பொருளைத் தர, அவ்விபீடணனுக்குத் திருத்தியுண்டாக்குமாறு இராமபிரான் அவற்றை யங்கீகரித்த பின், அருகினிற்கும் மாருதியை நோக்கி, 'யான் இராவணனை வென்ற செய்தியைச் சீதையினிடஞ்சொல்லி, அவள் கூறுவதைத் தெரிந்து வா' என்று அனுப்ப, அநுமான் சீதையைச் சார்ந்து பணிந்து இராமபிரான் வென்ற செய்தியைத் தெரிவிக்க, அது கேட்டதும் சீதை அளவிறந்த பெருமகிழ்ச்சியால் ஒன்றுந் தோன்றாது திகைத்து நின்றநிலையில், அநுமான் 'நீ மறுமொழிசொல்லாது திகைத்துநிற்கக் காரணம் ஏன்?' என்ன, சீதை தெளிந்து, 'இன்னதுகூறுவதுஎன்று தோன்றாது நிற்கின்றேன்: மேலும் இவ்வளவுமகிழ்ச்சிச்செய்தியைத்தெரிவித்த உனக்குஇன்னதுதருவது என்றும் எனக்குத் தெரியவில்லை: உன்சொல்லுக்கு ஏற்றபரிசு இந்தமூவுலகத்திலும் இல்லை' என்ன, அனுமான் அவள்கூறிய பொருள்நிரம்பிய சொல்லைப் பாராட்டி, 'உன்னுடைய சொல்லே எனக்குப் பாரிதோஷிகம்: அதற்குஇணையானது எதுவுமில்லை' என்றுசொல்லி, 'உன்னை நலிந்த அரக்கிமாரைச் சித்திரவதஞ் செய்யுமாறு அநுமதிதருக' என்று வேண்டினன். அதுகேட்ட சீதை, 'இந்தராட்சசிகள் தலைவன்சொற்படி நடந்தார்களாகையால், இவர்கள்மீது சிறிதுங் குற்றமில்லை ஆகையால், இவர்கட்கு மாறுசெய்யக்கருதுவது தகுதியல்ல: மேலும், எப்படிப்பட்டவரையும் பொறுப்பதே பெரியோர்களின்கடமை: இந்த விஷயத்தில் பல்லூகவ்யாக்ரஸம்வாதத்தை யறிவாய்; இவர்களைக் கொல்லுகையிற் காணத்தக்க நெஞ்சுரம் எனக்கு இல்லாமையாற் பொறுத்

தேன். உலகத்தில் எவரிடத்தும் குற்றம் இருக்கத்தான்செய்யும். பெரியோனுகிய நீ இவர்கள் திறத்துக்கருணைபுரிவாய்' என்று வேண்ட, அநுமான் 'கருணுவானுன ஸ்ரீராமனது தருமபத்தினி யென்பதற்கு ஏற்ப மொழிந்தனை' என்று சீதையைப் புகழ்ந்து 'எனக்குமறுமொழிகூறுக' என்ன, சீதை 'இராமனைக்காணவிரும்பு கின்றேன்' என்ன, 'இராமனை அவசியங்காண்பாய்' என்றுசொல்லி அநுமான் ஸ்ரீராமனிருக்குமிடத்துக்கு வந்தனன்.

ஸ்ரீராமனிடத்து அநுமான் சீதையின் செய்தியைச் சொன்ன தும் அப்பிரான் 'நெடுநாள் இராவணன் வீட்டிலிருந்த சீதையை அங்கீகரிப்பின் லோகாபவாதம்நேரும்: கைவிடின் பாதகம்நேரும்: என்செய்வது?' என்று சிந்தைகொண்டு, வெப்பமாகப்பெருமுச் செறிந்து விபீடணனை நோக்கி 'சீதையைநீராட்டி அலங்காரஞ்செய் வித்து அழைத்துவருக' என்றனன். உடனே விபீடணன் சீதை யிருக்குமிடஞ்சேர்ந்து, அவள் பிரிவுக் காலத்து இருந்தநிலையோடு கணவனைப் பார்க்க விரும்பினுளாகவும், கணவன்கட்டளைப்படி செய்வதுவே தக்கதென்று தன் மடந்தைமார்மூலமாகத் தெரிவித் தனன். கொண்டானையே தெய்வமாக மதிக்கும் அந்தக்கற்புடை யாள் இணங்க, விபீடணன் மடந்தைமாரைக் கொண்டு நீராட்டி ஆடையாபரணுதிகளாற் புனைவித்து, அரக்கர் பாதுகாவலாய்வரப் பல்லக்கிலேற்றி இராமபிரானைச்சார்ந்து, சீதையை யழைத்து வந்ததைத் தெரிவிக்க, இராமன் தன்னருகில் அழைத்துக்கொண்டு வரக் கட்டளையிட்டனன். விபீடணன்சீதையைஇராமனருகிற்சேர்ப் பித்தற்காக வானரர்முதலிய திரளை வேத்திரபாணிகளைக்கொண்டு விலக்க, அப்போது பேரொலியெழுந்தது. இராமன் அதனைப் பொருமல் 'திரளை ஒதுக்கவேண்டா' என்றுபணித்து, 'என்னுடைய ஜனங்களைநீ வருத்துவது தகுதியன்று. மகளிர்க்கு நல்லொழுக்கம் வேண்டப்படுவதன்றி, ராஜோபசாரம் முதலியன அன்று: மேலும் நான் அருகிலிருக்கையில், சீதையைப் பிறர் பார்ப்பதனுற் குற்றமேயில்லை: சிற்சிலகாலங்களில் ஆடவர்முன் மகளிர்வருவது குற்றமன்று. நண்பர்களுடன் சூழ்ந்திருக்கும் என்னருகிற்சீதையை அழைத்துவா' என்ருன். இராமபிரான் மொழிப்படியே சீதை ஜநத்திரளிலே நாணத்தினுல் தன்னுடலில் தான் அடங்கு பவள்போன்று ஒடுக்கிக்கொண்டு ஆடையினுல் முகத்தைமறைத்த வண்ணம் அருகில் வந்து நின்று 'ஆர்யபுத்ர!' என்று விளித்து, முதலில் துயரம் பொங்கப் புலம்பிப் பின்னர்க் கணவன் முகத்தைக் காணப்பெற்றமையால் மனந்தெளிந்து மகிழ்ந்தாள்.

அப்போது இராமன் சீதையைப்பார்த்து 'மனைவியைக் காப் பாற்றக் கையிலாகாது பறிகொடுத்தானென்ற பழிப்புநீங்கும் வண்ணம் பகைவனைத் தொலைத்து உன்னை மீட்டேன். இழந்த புகழைப் பெற்றேன். காமப்பித்துப்பிடித்த அயலான்வீட்டில் பல திங்கள்வாழ்ந்துவந்த உன்னைப்பற்றி எனக்கு ஐயம் உண்டாயிருக் கிறது: கண்ணேயாளிக்குத் தீபம்போல் எனக்குப் பிரதிகூலை யாகத் தோற்றுகின்ருய்: ஆகையால் என்னெதிரில் நில்லாதே;

உனக்கு இஷ்டமான இடத்திற்குப்போ' என்று கடிந்துகூறினன். மிகக்கடுமையாகச் செவியில் நுழைந்த ஸ்ரீராமனதுசொற்களைக் கேட்டு, சீதை, 'மகாபாகுவே! நீ என்னை ஒரு சாமானியமான பெண்ணைப்போற் கருதி, இவ்வாறு மொழிகிறாயே: ஜநகன் என்னை வளர்த்தவனே. நான் பூமியிலிருந்து பிறந்தவள்: என்னிளமை முதல் என்நல்லொழுக்கத்தைக் கண்கூடாகக்கண்டிருக்கின்றாய்; என்னுடல் பகைவன் கைப்பட்டதற்குத் தெய்வமே பொறுப்பாளி; என் மனமோ உன்வயத்ததாகவே யிருந்தது: இதை ஆணையிட்டுச் சொல்லுகிறேன்' என்று இவ்வாறாகச் சொல்லிக் கண்களினின்று தாரைதாரையாய் நீர்பெருக, இலக்குமணனைநோக்கி, 'லக்ஷ்மணா! அவைநடுவில் என்பர்த்தா என்னைக் கைவிட்டானாதலால், சிதையை யேற்படுத்துவாயாக: இதுவே என்துயரத்துக்கு மருந்து' என்றனள்.

பெருந்துயரத்துழூழ்கிய இலக்குமணன் இராமனுடைய முகக் குறிப்பினாற் சிதையையமைப்பது அப்பிரானுக்கு விருப்பமேயென் பதையுணர்ந்து சிதையை யமைத்தனன். அப்போது சீதை இராம னுடைய திருமேனியழகை யனுபவித்தவண்ணம் அப்பிரானை வலம் வந்து கொழுந்துவிட்டெரிகின்ற அக்கினிக்கு அருகேவந்து, கைகுவி த்து, 'என்மனம் இராமனைத்தவிர வேறொருவரிடத்துச் செல்லாதிருக்கு மாயின், லோகசாட்சியான அக்கினிதேவன் என்னைப் பாதுகாக்க' என்றுசொல்லி அந்த அக்கினியை வலம்வந்து அதனுட் குதித் தனள். அங்குக்கூடியிருந்த யாவரும் ஹாஹாகாரஞ் செய்தனர்.

அப்பால் இராமன் ஜனங்களின் கூக்குரல் செவிப்படக் கண் கலங்கச் சிந்தைகொண்டிருக்கையில், குபேரன் யமன் தேவேந்திரன் சிவன் பிரமன் முதலிய தேவர்கள் பலரும் விமானத்தில் வந்து இலங்கையைச் சார்ந்து இராமனையணுகிப் பலவாறு துதித்து 'முற்று முணர்ந்தவனும் முற்றும்வல்லவனும் முழுமுதற் கடவுளு மாகிய நீ சாதாரணமனிதன்போலச் சீதை தீக்குதிக்கையில் ஏன் உபேட்சித்திருக்கின்றனை?' என்று வினவ, இராமபிரான் 'நான் தசரதகுமாரனாய்ப்பிறந்த ஒருமானுடனாகவே என்னைக்கருதுகின் றேன். 'நான் யார்? யாவரைச் சேர்ந்தவன்? எதற்காகவந்தவன்?' என்ற விவரங்களையெல்லாம் பிரமதேவன்சொல்லட்டும்' என்ன, அப்பிரமன் ஸ்ரீராமனைத் துதித்து 'நீ முழுமுதற்கடவுளான நாரா யணன்; இந்தச் சீதை இலக்குமி: இராவணவதத்தின்பொருட்டு மானுடவுருக்கொண்டனை' என்று மொழிந்தான். அப்பால் அக் கினிதேவன் புருஷரூபத்துடன் சிதையினடுவினின்று வெளிப்பட் டுத் தான் சூடிய மலர்முதலியன வாடாமற் சொலித்துக்கொண் டிருக்கப்பெற்றாள் சீதையைக்கொண்டு வந்து இராமனைச்சார்ந்து 'இராமா! என்னிடத்திற்பாய்ந்த இவள் மாசற்றவள்: இவளை யங்கீகரிப்பாயாக' என்றனன். அதுகேட்ட ஸ்ரீராமன் குற்றமற்ற வளைத் தீக்குதிக்குமாறு செய்ததற்காகக் கண்ணீர்பெருகநின்று

அக்கினியைநோக்கி 'இவள் மாசற்றவளென்பது உண்மையே; ஆயினும், மாற்றான்மனையிற் பலமாதங்கள் தங்கியிருந்தமைபற்றி உலக நிந்தையுண்டாகாதிருக்கும் பொருட்டுப் பரிசோதிக்கலாயிற்று' என இவ்வாறுகூறி, பிரமாதிதேவர்கள் ஏத்தாநிற்கையில் மனைவியைப்பெற்று மகிழ்ந்திருந்தனன்.

அப்போது சிவபிரான் இராவணவதஞ் செய்ததற்காக இராமனைத்துதித்து 'நீ அயோத்திசேர்ந்து மகுடஞ்சூடி யாவர்க்கும் மகிழ்ச்சியை விளைத்து அசுவமேதஞ்செய்து பெரும்புகழுடனே ஸ்ரீவைகுண்டம் போய்ச்சேரலாம். உன் தந்தைஉன்னைக்காணத் துறக்கத்தினின்று விமானத்தில் இதோ வந்திருக்கின்றார்; இவரைக் காண்க' என்றனன். அதுகேட்டு விமானத்திருக்குந் தந்தையாரைக் கண்டு இராமன் முதலிய மூவரும் வணங்கினர். தசரதன் இராமனைத்தழுவி 'இப்போதுதான் என்மனச்சள்ளையொழிந்தது; இராவணவதஞ்செய்து தேவகாரியத்தை முடித்த நீ அயோத்தி சேர்ந்து மகுடஞ்சூடி இனிதுவாழ்க' என்ன, தசரதனை நோக்கி ஸ்ரீராமன் 'கைகேயியும் பரதனும் என்மனைவியும் மகனுமல்லரென்று முன் மொழிந்ததை யருள்கொண்டு மாற்றுவாயாக' என்று வேண்ட, அத்தசரதன் அங்ஙனேயென்றுசொல்லி, இலட்சுமணன் தன்மையை வியந்து கூறி, சீதையைநோக்கி 'உன் தூய்மை உலகில் விளங்கும்பொருட்டே உன்னை அக்கினிப்பிரவேசஞ் செய்யும்படி இராமன் கூறினானாதலால், அதற்காக மனத்தாங்கல் கொள்ளாதே. கற்புக்கடவுளான உனக்கு யான் உபதேசிக்கவேண்டுவது ஒன்றுமில்லை' என்று தேற்றரவு கூறித் துறக்கத்தைச் சேர்ந்திட்டான்.

பின்னர்த் தேவேந்திரன் ஸ்ரீராமனைநோக்கி, 'இராவணவதஞ் செய்து எம்மிடரைத்தீர்த்தனை யாதலால், அதற்குக் கைம்மாறாக வரந்தர விரும்புகின்றேன், வேண்டுக' என்ன ஸ்ரீராமன் 'போரில் இறந்தவானரரெல்லாம் உயிர்பெற்றெழுமாறும் வானரர் செல்லுமிடமெல்லாம் அவர்கட்குவேண்டிய காய்கனிமுதலியன நிறைந்திடுமாறும் வரந்தருக' என்ன, தேவேந்திரன் அங்ஙனமே வரந்தரவே, இறந்தவானரர்யாவரும் உறங்கியெழுந்தவர்போலெழுந்து இராமனை வணங்கி நின்றனர். மற்றுமுள்ள தேவர்களும் இராமனை வாழ்த்தி விடைபெற்றுச்சென்றனர்.

பின்னர் விபீடணன் மறுநாள் வைகறையில், இராமனையணுகி, ஸ்நாநாதிகள்செய்து இரண்டொருநாள் தங்கியிருந்து என்னை 'அனுக்கிரகிப்பாயாக' என்றுவேண்ட, இராமன் 'என்னை விட்டுப் பிரிந்து வருந்துகின்ற பரதனையே என்சிந்தை நாடுகின்றது; பதினாலாண்டு கழிந்தால் அக்கினியிற் புகுவேனென்று அந்தப்பரதன் பிரதிஜ்ஞை செய்திருக்கும்போது இங்குத் தங்க எனக்கு மனம் எப்படி வரும்? நான் இன்றே அயோத்திசேரும் வழியிற் போவேன்' என்ன, விபீடணன் 'ஒருநாளில்தானே அயோத்திசேரவல்ல புஷ்பகவிமானம் இராவணனாற் குபேரனிடத்தினின்று போரிற்

கவர்ந்தது; உள்ளது' என்ன, ஸ்ரீராமன், 'ஆயின், அதனைக்கொணர்க' என்ன, விபீடணன் அவ்விமானத்தைக் கொணர்ந்து நிறுத்தினன். பிறகு ஸ்ரீராமன் விபீடணனைநோக்கி, 'நான் அரக்கரைவென்றதும் நீ இலங்கையையடைந்ததும் இந்த வானரவீரர்களினுதவியினுலேயே யாதலாலும், தொழில்முடிவிற் பணியாளரை வெகுமதிக்க வேண்டியது முறைமையாதலாலும் இவர்களை ஏற்ற பெற்றி சம்மானிக்க' என்றுகூற, விபீடணனும் மனமுவந்து வானரர்களை அவரவர்களின் தகுதிக்குஏற்பச் சம்மானித்தனன். அப்பால், இராகவன் சுக்கிரீவனை வானரர்களோடு கிஷ்கிந்தைக்குச் செல்லுமாறும் விபீடணனை இலங்கையிலிருந்து அரசுபுரியுமாறுஞ் சொல்லித் தனக்கு அயோத்தி செல்ல விடைதருமாறு கேட்டனன்: அதற்குச் சுக்கிரீவாதிவானரரும் விபீடணனும் கைகுவித்துநின்று 'நாங்கள் உனது திருவபிஷேகத்தைக்கண்டு எம்மூர்க்கு மீள விரும்புகின்றோம்: திருவருள்புரிக' என்றுவேண்ட, ஸ்ரீராமனும் இசைய, சுக்கிரீவாதிவானரரும் தன்மந்திரியரோடு விபீடணனும் அப்புஷ்பகவிமானத்திலேறி, இனிது வீற்றிருந்தனர்.

இராமனனுமதியின்மேற் புஷ்பகவிமானம் விரைந்து வானத்திற் கிளம்பிச்செல்ல, ஸ்ரீராமன் ஒவ்வோரிடத்தையும் சீதைக்குச் சுட்டிக்காட்டி, 'இங்கு இன்னது நிகழ்ந்தது, இது இன்னது' என்று தெரிவிக்கையிற் கிட்கிந்தையைத் தெரிவிக்க, சீதை 'வானரமகளிரும் உடன்வர அயோத்திக்குச் செல்லவிரும்புகின்றேன்' என்றனள். அப்போது கிட்கிந்தையினருகே விமானத்தைநிறுத்தி 'சீதையின்விருப்பின்படி வானரமகளிரை உடனழைத்துச்செல்ல விரும்புகின்றேன்' என்று ஸ்ரீராமன் தெரிவிக்க, சுக்கிரீவன் அப்பிரானுடையவிருப்பின்படி வானரமகளிரையும் வருமாறுபணிக்க, யாவரும் தம்மைப்புனைந்துகொண்டு புஷ்பகத்திலேறினராக, மீண்டும் அவ்விமானம்வானத்திற்செல்ல, ஸ்ரீராமன் பலவிடங்களையும் சுட்டிக்காட்டி இறுதியில் அயோத்தியையுஞ் சுட்டிக்காட்டி வணங்குமாறு பணிக்க, சீதை அந்நகரைப்பணிய, யாவரும் அயோத்திமாநகரைக் கண்டனர்.

சக்கரவர்த்தித்திருமகனார்காடேறிப் பதினூலாண்டுநிரம்புகையில் வளர்பிறையின்பஞ்சமியினன்று பரத்துவாசாச்சிரமத்தைச்சேர்ந்து முனிவனைப்பணிந்து, அயோத்தியின்க்ஷேமத்தை விசாரித்தறிந்த பின்பு, முனிவன் 'நீ இங்கிருந்து சென்றதுமுதல் மீண்டுவந்தது வரையில் நிகழ்ந்ததையெல்லாம் தவமகிமையால் யான் உணர்ந்தேன்: நானும் உனக்கு வரங்கொடுக்கவிரும்புகின்றேன்: நீ இன்று இங்குத் தங்கி நாளை அயோத்திசேரலாம்' என்ன, முனிவன்மொழியைத் தலையால்தாங்கி, ஸ்ரீராமன் அயோத்திக்குச் செல்லும் வழியெல்லாம் அகாலத்திலும் பூத்துக்காய்த்துச் செழித்திருக்குமாறு வரம் வேண்ட, முனிவனும் அவ்வரந் தர, பரத்துவாசாச்சிரமத்திலிருந்து அயோத்திவரையிலும் பட்டமரமுள்ளடத் தளிர்த்துப்பூத்துக் காய்த்துச் செழித்திருக்க, அதுகண்ட வானரர்கள் நிரை

நிரையாகக் காய்கனிவர்க்கங்களையுண்டு துறக்கத்திலிருப்பவர் போல் மகிழ்ச்சியுற்றனர்.

அப்போது இராமபிரான் அநுமானையழைத்து 'நான் மீண்டு வருஞ் செய்தியை என்னுயிர்த்தோழனான குகனுக்குச் சொல்லி விட்டுப் பரதனைக் கண்டு செய்திதெரிவித்து அவன் மனோ பாவத்தையறிந்துகொண்டு, ஒருகால் இராச்சியத்தைத் தானே அரசுபுரிய விருப்பங்கொண்டிருப்பானாயின், உடனே வந்துசெய்தி தெரிவிக்க' என்று சொல்லிவிடுத்தனன். அநுமானும் சென்று குகனுக்குச் செய்திகூறிவிட்டு, நந்திக்கிராமத்தில் தாபசவேஷத் துடனே பதினான்குவருடங்கடந்தும் அண்ணனார் மீண்டு வராமை யால் தன் பிரதிஜ்ஞையின்படியே அக்கினிப்பிரவேசஞ்செய்வதாக இருந்த பரதனைக்கிட்டி, இராமபிரான் இனிது மீண்டுவருஞ்செய்தி யைத்தெரிவிக்க, அளவிடமுடியாதகளிப்பினால் அந்தப்பரதன் தரை யில் வீழ்ந்து உயிர்ப்பற்றுக்கிடந்து பிறகுதேறி அநுமானைக் கட்டித்தழுவிப்பாராட்டிப் பல நன்கொடைகளை யளித்து இராம பிரானைப்பார்க்க விருப்பமுற்று, பின்னும் இராமனது செய்கைகளை விரிவாகக்கூறுமாறு வினவ, அநுமான், 'இராமன் வனத்திற்குப் புறப்பட்டது முதல் நீர் பாதுகைகளைப்பெற்றுச்சென்றதுவரையில் உமக்கே தெரியுமாதலால் அதன்பின்னர் நிகழ்ச்சிகளைக் கூறுகின் றேன்' என்று ஆரணியத்தில் நிகழ்ந்த இராமனது வரலாறுகளை யெல்லாம் விரிவாக உரைத்து, இன்றுகடந்து நாளை புஷ்யயோகத் தில் வந்துசேருவா னென்று முடித்தான்.

நிகழ்ச்சியையெல்லாஞ் செவியாரக்கேட்டபரதன்பெருமகிழ்ச்சி யுற்று, இராமபிரான்வருவதைமுன்னிட்டு நகரையெல்லாம் விரை வில் அலங்கரிக்குமாறு பணித்து, பிறகு தன்தாய்மாரும் மந்திரி மாரும் சேனைகளும் பட்டணத்துப்பிரதானரும் வந்துசேர, யாவ ருடனும் எதிர்கொள்ளுமாறுசென்று வெகுதூரங்கடந்தும் இரா மன்வருகையைப்பற்றிய குறிப்புத் தோன்றாமையால் ஐயுற்று வினவ, அநுமான் தாமதிப்பதன் காரணத்தைக் கூறிச் சற்றுக் கடந்ததும் வருகையின் குறிப்புத் தோன்றியதைச் சுட்டிக்காட்டிப் பின்பு புஷ்பகம் தோன்றியதையும் காட்டினன்: புஷ்பகம் தனக்கு நேரே வருகையிற் பரதன் அஞ்சலிசெய்ய, அவ்விமானம் தரையி லிறங்கியது. பரதன் இராமனைப்பணிய, இராமன் அவனைக்கட்டித் தழுவி உச்சிமோந்து பாராட்டினன். இராமாதியர் கௌசலியாதி யரைப் பணிதல்முதலியவற்றை ஏற்றபெற்றி புரிந்தனர். பரதன் இராமபிரானது மரவடிகளை அப்பிரானது பாதங்களிலணிந்து, 'மரவடியை உனக்குப்பிரதிநிதியாகக்கொண்டு உன்தேசம்முதலிய வற்றைப் பாதுகாத்துவர, அவை முன்னிலும் உன்மகிமையால் பதின்மடங்கு வளமுற்றிருக்கின்றன; அவற்றைக் கைக்கொண்டு இனிதிருப்பாயாக' என்றனன். வானரர்களும் விபீடணனும் 'இந் தப்பரதனைப்போன்ற உடன்பிறந்தோரை நம்மவர் பெறுதுபோ யினரே!' என்று கண்ணீர் வடித்தனர்.

அப்பால் யாவரையும் விமானத்திலேற்றிக்கொண்டு நந்திக் கிராமத்திற் பரதனுச்சிரமத்தையடைந்து குபேரனிடத்துச் சேருமாறு புஷ்பகவிமானத்துக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுக் காகுத்தன் இனிது வீற்றிருந்தனனென்பது.

மீட்சிப்படலம் முற்றிற்று.

---

38 - ஆவது *திருமுடிசூட்டு படலம்.

(ஸ்ரீராமபிரான் அயோத்திக்குமீண்டு) திருமுடி சூட்டிக்கொண்டதைக்கூறும் படலமென்பது, பொருள். நந்திக்கிராமத்தைச் சேர்ந்து ஸ்ரீராமன் தனதுசடைமுடியைநீக்கி ஒப்பனைசெய்துகொண்டு தம்பிமார் பணிசெய்யத் துணைவர்கள் சூழ்ந்துவரத் தேரேறி வானவர் முதலியோர் மலர்மழைபொழிய, ஆடம்பரத்தோடு அயோத்தி சேர, சீதையும் வானரமகளிர்சூழ விமானமேறி உடன் சென்று சேர்ந்தனளாக, அந்நகரத்தவர் யாவரும் பெருமகிழ்ச்சியி லாழ்ந்தனர். தன்னரண்மனையைச்சேர்ந்த ஸ்ரீராமன் சுக்கிரீவாதியர்க்கு இட்சுவாகுவமிசத்தவரின் கோயிலைக் காட்டுமாறு பணிக்க, பரதன் அக்கோயிலின் சிறப்பை யெடுத்துக்காட்ட, கண்ட வீடணனுதியர் ஆச்சரியமுற்று ஒருமண்டபத்தைச் சேர்ந்தனராக, சுக்கிரீவன் அங்குப் பரதனை நோக்கி 'பட்டாபிஷேகத்திற்குத் தாமதிக்கக் காரணம் ஏன்?' என்ன, பரதன், 'பலதிசைகளினின்று தீர்த்தம்வராமையே தாமதத்தின் காரணம்' என்ன, சுக்கிரீவன் அநுமானைப் பார்க்க. உடனே தீர்த்தங்கள்கொணருமாறு அனுமான் சென்றிட்டான். அப்பால் வசிட்டமுனிவரைக்கொண்டு பரதன் மகுடாபிஷேகநாளை நிச்சயித்து யாவர்க்குஞ்செய்தியனுப்ப, யாவரும் திரண்டனர். பிரமதேவன் கட்டளையால் மயன் மகுடாபிஷேகத்திற்காக ஓர் மண்டபம் வகுத்தனன்; அனுமானும் தீர்த்தங்களெல்லாம் கொணர்ந்தான்: மன்னவர்கள் சரயுவினின்று தீர்த்தங்கொணர்ந்தனர். சக்கரவர்த்தித்திருமகனுர் சீதாதேவியோடும் பளிங்குமாடத்தில் வீற்றிருக்க, முனிவர்முதலிய யாவரும் புண்ணியதீர்த்தங்களைக்கொண்டு நீராட்டியபின் ஸ்ரீவசிஷ்டமுனிவர் முடிசூட்ட, ஸ்ரீராமன்மூவுலகும் இனிதுவாழ முடிசூடிச் செங்கோல் செலுத்தியமை இப்படலத்திற் கூறப்படுகின்றது. அனேகபிரதிகளில் இந்தப்படலத்திற்குப்பெயர் **திருவபிஷேகப்படலம்** என்று உள்ளது. கிழ் நகர்புகுபடலம் என்று தொடங்கிய பிரதிகளில் இப்படலத்து முதல்மூன்றுபாடல்களும், "ஆயதோரளவில்" (திருமுடி-11) என்ற பாடலும் நகர்புகுபடலத்தைச்சேர்ந்தனவாக உள்ளன. பலபிரதிகளில் "தேவரும்" (திருமுடி-8) என்ற பாடலே

---

*திருமுடிசூட்டுப்படலம் என்று அச்சிட்டபிரதிகளிற் காணப்படுகின்றது.

இப்படலத்தின் முதற்பாடலாக உள்ளது. சிலபிரதிகளில் 1-"தேவரும்" (8), 2-"கோடையில்" (9), 3-"துருவத்தார்" (10), 4-"அறுபத்தேழ்"(5),5-"வானரமகளிர்"(7),6-"எட்டென" (6), இதன்பின் 7- "எழுவகைமுனிவரோடும்" என்ற பாடல், 8- "வாங்குதும்" (12), 9-"வேசியர்" (13), 10-"இறைப்பெரு"(14), 11-"விண்ணுறைவோர்" (15), 12-"அடுக்கிய" (26), 13 "இந்திர குருவும்" (25), 14-"சூழ்கடல்" (30), 15-"நான்முகத்து" (26), இதன்பின் 16-"அந்தணர்வணிகர்" என்ற[32-இல் உள்ள]பாடல், 17-"தெய்வநீர்" (37), 18-"அரியணை-" (38), 19-"வெள்ளியும்" (39), 20-"சித்தமொத்துளன்" (40), 21-"பன்னெடு" (41), 22- "விரதநூல்" (42) என்ற இம்முறையிற்பாடல்களுள்ளன: இவ்வாறுள்ளபிரதிகளில் இங்குக் குறிக்காத செய்யுள்களில்லை. ஆனால், "விரதநூல்"என்றபாடலின்பின் சிலபாடல்கள் உள்ளன: அவை அங்குக்காட்டப்படும்.

1.—ஸ்ரீராமன் தம்பியரோடு நந்திக்கிராமத்திற் சடையை நீக்கி, நீராடி அலங்கரித்துக்கொள்ளுதல்.

[1]நம்பிய பரத னோடு நந்தியம் பதியை நண்ணி
[2]வம்பலர் சடையு மாற்றி மயிர்வினை [3]முற்றி மற்றைத்
தம்பிய ரோடு தானுந் [4]தண்புனற் படிந்த பின்னர்
உம்பரு முவகை கூர [5]வொப்பனை [6]யொப்பச் செய்தார்.

(இ - ள்.) (தன்னிடத்து) அன்புள்ள பரதனுடனே மற்றைத் தம்பியருந் தானுமாக நந்திக்கிராமத்தைச் சேர்ந்து, வாசனை பரவுகின்ற சடையைப்போக்கி, க்ஷௌரஞ்செய்துகொள்ளுஞ் செயலைச் செய்துமுடித்து(ச் சரயூநதியின்) குளிர்ந்தநீரில் நீராடியபின்னர், (அவர்கள்யாவர்க்கும் ஒப்பனைசெய்வோர்) தேவர்களும் மகிழ்ச்சி மிகும்படி அலங்காரங்களையேற்குமாறு செய்தார்கள்; (எ - று.)— பலருந் தூவிய மலர்படிந்ததனால் சடையில் வம்புஅலருமென்க. பி-ம்:—[1]நம்பியைப் பரதன் றன்னைநானிலத்தெவருங்காண, நம்பியும்......நண்ணி, நம்பியை...நண்ணி. [2]வம்பியல். [3]ஆகமுற்றித், முற்றிமண்ணித். [4]சரயுவின்புனலிற்றோய்ந்தே, அணையதுசமைத்த பின்னர். [5]ஒப்பமை. [6]ஒப்பஞ். (4279)

2.—அயோத்திபுகுமாறு ஸ்ரீராமன் தேரேறுதல்.

[1]நிருதியின் திசையிற் றோன்று நந்தியம் [2]பதியை நீங்கி
குருதிகொப் பளிக்கும் வேலான் கொடிமதி லயோத்தி [3]மேவச்
சுருதி[4]யேத் தனைய [5]வெள்ளைத் துரகதக் குலங்கள் [6]பூண்டு
பருதியொத் திலங்கும் பைம்பூட் பருமணித் [7]தேரி னுனான்.

(இ - ள்.) இரத்தத்தை வெளிச்சிந்துகின்ற வேற்படையையுடையனான ஸ்ரீராமன்,—தென்மேற்குத்திக்கில் தோன்றுகின்ற நந்திக்கிராமத்தினின்றுநீங்கி,கொடிகளாலலங்கரிக்கப்பெற்றமதிலையுடைய அயோத்திசேருமாறு எத்துதலைக்கொண்ட வேதத்தை

யொத்த வெள்ளைக்குதிரைகள்பூண்டு சூரியனையொத்து விளங்குகின்ற பசும்பொற் கலன்களாலலங்கரிக்கப்பெற்ற பருந்தமணிகளைக்கொண்ட தேரின்மீது ஏறியவனுனன்; (எ - று.)

கடவுளைத் துதிக்குந் தன்மைவாய்ந்த வேதம் தன்னிடத்து அப்பரம்பொருளைக்கொண்டிருத்தல்போல, அந்தப்பரம்பொருளின் அமிசமாகிய ஸ்ரீராமனைத் தன்னிடத்துக்கொண்டிருத்தலால், தேர் சுருதியையொக்கு மென்க. இனி, வெண்மை நிறமுடையதாகக் கூறப்படுகின்ற சத்துவகுணத்தை முக்கியமானதாகப் பிரதிபாதிக்கும் வேதம் வெண்ணிறமுள்ள குதிரைகட்கு உவமையா மென்றலுமொன்று. பி-ம்:—[1]நிருதியங். [2]பதியினீங்கி.[3]நோக்கிச்.[4]ஒத்தனைய. [5]வெள்ளத். [6]பூண்ட. [7]தேரன். இச்செய்யுள் சில பிரதியிலில்லை ( )

3.—மற்றைத்தம்பிமார் பணிசெய்ய, ஸ்ரீராமன் தேரின்மீது சென்ற திறம்.

ஊழியி னிறுதி காணும்[1]வலியின துயர்பொற் றேரின்
ஏழுயர் மதமா வன்ன விலக்குவன் கவிகை [2]யேந்தப்
[3]பாழிய மற்றைத் தம்பி பானிறக் கவரி [4]பற்றப் [போனான்.
பூழியை[5]யடக்குங் கண்ணீர்ப் பரதன்கோல் கொள்ளப்

(இ-ள்.) கற்பகாலத்தினிறுதியைக் காணவல்ல வலியையுடையதாகிய உயர்ந்த பொற்றேரிலே ஏழுமுழமுயரப்பெற்ற மதமுள்ள யானைபோன்ற இலக்குவன் குடையைத் தாங்கிநிற்கவும், (நித்திய சத்துருக்களையும் அடக்கும்) வலிமையையுடைய மற்றொரு தம்பி [சத்துருக்கனன்] வெண்மைநிறமுள்ள சாமரையை யேந்தவும், புழுதியையும் அடக்குமாறு (ஆனந்தக்) கண்ணீரைவடிக்கின்ற பரதன் (பாகனாகி) உளவுகோலைக்கொண்டு (குதிரைகளைத்) தூண்டிச் செலுத்தவும் (ஸ்ரீராமன்) போயினான்; (எ - று.)

தேரின் போனானென்க. 'போனான்' என்பதற்கு எழுவாய்வருவிக்க. ஏழுமுழமுயர்ந்திருத்தல் அரசுவாவினிலக்கணமாம்: அரசுவாவினிலக்கணத்தை "காலோர்நான்குந் தனிக்கையுங் கோசமும், வாலுறுப்பொடேழு மாநிலந்தோய்வதும், பாலுஞ்சங்கும் போலுங் காலுகிர், காலினுந்தன் றனிக் கையினு மெய்யினும், வாலினுமருப்பினுங்கோறல்வல்லதுவா, யேழ்முழ முயர்ந் தொன்பான்முழ நீண்டு, பதின்மூன் றுமுழஞ் சுற்றுடைத்தாகித், தீயுமிழ் கண்ணுஞ் செம்புகருமுடைத்தாய், முன்னபணிந்து பின்னபணித்தாயது, யானை யரசுவா வாகுமென்ப" என்பதனாலறிக. பி-ம்:—[1]இந்திரனுயர்ந்த பொற்றேர், இந்திரனுயர்பொற்றேர்மேல், வலியின துயர் பொற்றேரளான். [2]ஏந்திப். [3]பாழியம்புயத்துத். [4]வீச. [5]அடைக்கும்.

4.—வீடணன் முதலியோர் சென்ற திறம்.

வீடணக் குரிசின் மற்றை வெங்கதிர்ச் [1]சிறுவன் வெற்றிக்
கோடணை குன்ற மேறிக் கொண்டறேர் மருங்கு [2]செல்லத்

கோடணை மலிவுச் செங்கண் வாலிசேய் [3]தூசி செல்லச்
சேடனைப் பொருவும் வீர மாருதி [4]பின்பு சென்றான்.

(இ-ள்.) சிறந்தோனாகிய விபீடணனும் மற்றும் வெவ்விய இரணங்களையுடைய சூரியனதுபுத்திரனாகிய சுக்கிரீவனும் வெற்றி பொருந்திய தந்தத்தோடுகூடிய மலையையொத்த யானையின்மீது ஏறி மேகம்போன்றவனான இராமபிரானது தேரின்பக்கத்திற் செல்லவும், மலரிதழ்களைக்கொண்ட கிரீடம்புனைந்த செங்கண் படைத்த வாலிகுமாரனான அங்கதன் முன்னணியிற் செல்லவும், ஆதிசேஷனையொத்த வீரகுணத்தோடு கூடிய அனுமான், (அப்பிரானது) பின்புறத்துச்சென்றான்; (எ - று.)—கோடணைகுன்றம் -சிகரத்தோடு கூடிய மலையென்று பொருள்பட்டுத் தேரினைக் காட்டுமென்பாருமுளர். பி-ம்:—[1]செல்வன். [2]போதத். [3]தூசு. [4]தேர்ப்பின். (4282)

5.—வானரத்தலைவர்கள் சென்ற திறம்.

அறுபத்தேழமைந்த கோடி யானைமேல் வரிசைக் [1]கான்ற
திறமுற்ற சிறப்பராகி மானுடச் செவ்வி [2]வீரம்
பெறுகுற்ற [3]வன்பருச்சி பிறங்குவெண் குடையர் [4]செச்சை
[5]மறுவுற்ற வலங்கன் மார்பர் வானரத் தலைவர் போனார்.

(இ - ள்.) (தம்) தகுதிக்கேற்ற கூறுபாடுபொருந்திய சிறப்பையுடையவராகி, மானுடரூபத்துடனேகூடி வீரத்துடனே பெற்ற அன்பையுடையவரும் உச்சிமீதுவிளங்குகின்ற வெண்குடையையுடையவரும் சந்தனச்சேற்றினால் மறுப்பொருந்திய மாலையையணிந்த மார்பையுடையவரும் அறுபத்தேழு கோடிக்கணக்கினருமான வானரத்தலைவர் யானைமீது ஏறிச்சென்றார்; (எ - று.)—பி-ம்:—[1]ஏற்ற. [2]எய்தி. [3]வனப்பர். [4]வாசம். [5]மறுவற்ற. சில பிரதிகளில் "இருபத்தமைந்தகோடியானைமேல் வரிசைக்கேற்ற, திருவொத்த சிறப்பராகி மானிடச்செவ்விவீரர், உருவத்தோளொளிரும்பூண ருச்சி வெண்குடையர்பச்சை, மருவொத்தவலங்கன் மார்பர்வானரத்தலைவர்போனார்" என நான்கடியும் மாறுபட்டு உள்ளன. (4283)

6.—பதினெண்பூமிவேந்தர் இராமபிரானைத் தொழுது சூழ்ந்திருத்தல்.

[1]எட்டென விறுத்த பத்தி னேழ்[2]பொழில் வளாக வேந்தர்
பட்டம்வைத் தமைந்த நெற்றிப் பகட்டினர் பைம்பொற் றேரர்
வட்டவெண் குடையர் வீசு சாமரை மருங்கர் வானைத்
தொட்ட[3]வெஞ் சோதி மோலிச் சென்னியர் தொழுது சூழ்ந்தார்.

(இ-ள்.) பட்டம் வைக்கப்பட்டுப் பொருந்திய நெற்றியைக் கொண்ட யானையையுடையவரும், பசும்பொன்னாலியன்ற தேரையுடையவரும், மண்டலாகாரமான வெண்குடையையுடையவரும், சாமரை வீசுகின்ற பக்கங்களையுடையவரும், வானத்தைத்தீண்டுகின்றவெவ்விய ஒளியைக்கொண்ட கிரீடம்புனைந்த சென்னியையுடையவருமான எட்டென்றுமுடிகின்றபத்து[பதினெட்டு]ப்பிரிவுடனெழுகின்ற பூமிவட்டத்து அரசர்கள், தொழுதவண்ணம்(இராம

பிரானைச்) சூழ்ந்துகொண்டனர்; (எ-று.)—பதினெட்டு நாடுகள்-சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுவம் குடகம் கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் திராவிடம் கலிங்கம் வங்கம் கங்கம் மகதம் கடாரம் கௌடம் கோசலம் என்பன. ஏழ்பொழில் - ஏழு தீவுகளையுடைய பூமியுமாம், பி-ம்:—[1]எட்டமையிறுதிப்பக்கத்து, எட்டமையிறுத்தபத்தின். எட்டமையிறுதிப்பத்தோடு, [2]பெரு. [3]செஞ். இச்செய்யுளின்பின் சிலபிரதிகளில் வழங்கும் பாடல் வருமாறு:—

எழுவகை முனிவ ரோடு மெண்டிசைத் திசைகாப் பாளர்
குழுவினர் திசைகள் தோறுங் குழாங்கொண்டு களித்துக் கூடித்
தொழுவன வமரர் கைகள் சுமக்கலாம் விசும்பிற் றுள்ளி
வழுவலின் மலர்கள் சிந்தி மானிடஞ் சுருங்கச் சார்ந்தார். (4284)

7.—வானரமகளிர் சூழச் சீதாபிராட்டி விமானத்திற் சென்றமை.

வானர மகளி ரெல்லாம் வானவர் மகளி [1]ராய்வந்து
ஊனமில் பிடியு மொண்டார்ப் புரவியும் பிறவு மூர்ந்து
மீனின மதியைச் சூழ்ந்த தன்மையின் விரிந்து சுற்றப்
பூநிற விமானந் தன்மேன் மிதிலைநாட் டன்னம் [2]போனாள்.

(இ-ள்.) வானரமகளிர்கள் யாவரும் தேவமாதர்வடிவினராய் வந்து குற்றமற்றபெண்யானைகளையும் அழகியகிண்கிணிமாலையை யணிந்த குதிரைகளையும் மற்றுமுள்ள (பல்லக்குமுதலிய)வற்றை யும் ஏறிநடத்தி, நட்சத்திரக்கூட்டங்கள் சந்திரனைச்சூழ்ந்துள்ள தன்மையொப்பப் பரவிச்சூழ, பொலிவும் இன்னிறமுங்கொண்ட விமானத்தின்மேல் மிதிலைநாட்டில்தோன்றிய அன்னம்போன்ற மெல்லியநடையினளான சீதை சென்றாள்: (எ-று.)

சீதையைச்சூழ்ந்து வானவர்மகளிருருக்கொண்டு வானரமகளி ரிருத்தற்கு, சந்திரனைச்சூழ்ந்த நட்சத்திரக்கூட்டங்களிருத்தல் உவமை. பி-ம்:—[1]ஆகி. [2]போந்தாள். (4285)

8.—தேவரும் முனிவரும் மலர்மழைபொழிந்ததன் வருணனை.

தேவரு முனிவர் தாமுந் திசைதொறு [1]மலர்கள் சிந்த
[2]ஓவலின் மாரி [3]யெய்ப்ப வெங்கணு [4]முதிர்ந்து வீங்கிக்
கேவல[5]மலராய் வேறோ ரிடமின்றிக் கிடந்த வாற்றால்
பூவெனு நாம [6]மின்றிவ்[7]வுலகிற்குப் பொருந்திற் றன்றே.

(இ-ள்.) தேவர்களும் இருடியரும் திக்குக்கள்தோறும் ஒழிவில்லாத [இடைவிடாது பெய்கின்ற] மழையை யொக்குமாறு எல்லாவிடத்தும் மலர்களைப்பொழிய மலர்மாத்திரமேயாகி வேறொன்றைக்கொண்ட இடம் இல்லாதவாறு (மலர்கள் எங்கும் மிகுதியாகச் சிந்திக்)கிடந்த தன்மையால் பூவென்கின்ற பெயரானது இப்போது இவ்வுலகிற்குப் பொருத்தமானதாக ஆயிற்று; (எ-று.) அன்றே-தேற்றம்.

பூமிக்கு மண் தரணிஎன்று பலபெயரிருந்தாலும் பூ என்று ஒருபெயருள்ளது: பூத்தவிர வேறொருபொருள் கண்ணுக்குப் புலனாகாதவாறு தேவர்களும் முனிவர்களும் மலர்களைப்பொழிந்ததனால் எங்கும் பூமயமாக இருந்ததுபற்றி வந்த காரணப்பெயரென்று 'பூ' என்றுபெயர்வந்ததற்கு இயற்கையான காரணத்தை விட்டு வேறொருகாரணம் கற்பித்துக்கூறியது-**பிறிதுநிலைநவிற்சியணி** யாகும். பி-ம்:—[1]முறையிற். [2]மேவலின். [3]ஒப்ப. [4]எதிர்ந்து. [5]மலரால். [6]அன்றிவ். [7]உலகிற்கும். (4286)

9.—யானைகள் மதநீரைப் பெருக்கல்.

கோடையில் வறந்த மேகக் குலமெனப் பதினு லாண்டு
பாடுறு மதஞ்[1]செய் யாத பணைமுகப் பருமயானை
[2]காடுறை யண்ண லெய்தக் [3]கடாந்திறந் துகுத்த வாரி
ஓடின [4]வுள்ளத் துள்ள களிதிறந் [5]துடைந்த தேபோல்.

(இ - ள்.) கோடைக்காலத்தில் நீர்வற்றிய மேகக்குழாம் போன்று பதினான்குவருஷம் வெளிப்படுதல்பொருந்திய மதத்தை யுண்டாக்காத தந்தங்களை முகத்திலேகொண்ட அலங்கரிப்போடு கூடிய யானைகள்,—காட்டில் வசித்த பெருமையிற்சிறந்தவனான ஸ்ரீராமன்மீண்டுவர, கன்னந்திறந்துசிந்திய மதநீர்கள், (அவற்றின்) மனத்துக்கொண்டுள்ள களிப்பு வெளிப்பட்டு உடைப்பெடுத்தது போல ஓடலாயின; (எ - று.)

இராமபிரான் நாட்டைவிட்டுச்சென்றபின் மதமற்றிருந்த யானைகள் இப்போது மதப்பெருக்கு எடுத்ததனை வருணித்தார்; **தன்மைத்தற்குறிப்பேற்றவணி.** மதமற்ற நிலையிலுள்ள யானைகட்கு-கோடையில்வறந்த மேகக்குலம் உவமை. இடப்பன்மை பற்றி, 'வாரியோடின' எனப் பன்மையாற் கூறினர். பி - ம்:—[1]செலாத. [2]காடுறைந்து, காடிறந்து. [3]காத்திருந்து. [4]ஓடிற்றுள்ளங், [5]உடைந்த. (4287)

10.—குதிரைகள் ஆலித்தலும் மரங்கள்பூத்தலும் மங்கைமாருடலிற் பசலை பூத்தலும்.

[1]துருவத் தார்ப் புரவி யெல்லா[2]மூங்கையர் சொற்பெற் றென்ன
[3]அரவப்[4]போர் மேக [5]மென்ன வாலித்த மரங்க [6]ளான்ற
பருவத்தாற் [7]பூத்த வென்னப் பூத்தன [8]பகையிற் சீறும்
புருவத்தார் மேனி [9]யெல்லாம் பொன்னிறப் பசலை பூத்த.

(இ - ள்.) நிலையாக அணிந்த கிண்கிணிமாலையையுடைய குதிரைகளெல்லாம், ஊமர்கள் சொல்லுந்திறமையைப் பெற்றாற்போலவும் இடியொலியைக்கொண்ட மேகம்போலவும் ஆரவாரித்தன; மலர்மரங்கள் சிறந்த[ஏற்ற]பருவத்திற் பூத்தனபோலப் பூத்தன; பகைவர்மீது வில்லைப்போலச் சீறுகின்ற [காதலித்தார்மீது வளைந்துசெல்லுகின்ற] புருவத்தையுடையவரான மங்கைமாரின் உடல்களெல்லாம் பொன்னிறப்பசலை தோன்றின; (எ - று.)

இராமபிரான்சென்ற வருத்தத்தினல் குதிரைகள் முதலியன ஆலித்தல் முதலியன செய்யாதிருந்தவை, இராமபிரான் வந்திட்டதனல் மகிழ்ச்சிநிலையையடைந்தமையைக் கூறுகின்றார். பி - ம்:—[1] துரகத். [2] மங்கையர். [3] அருவப். [4] பேர், [5] அஞ்ச, அல்க. [6] ஆன்று. [7] பூத்தது. [8] பகையிற். [9] முற்றும். (4288)

11.—ஸ்ரீராமன் தாய்மார்முதலியோரை வணங்கி, அரண்மனையை யடைதல்.

ஆயதோ ரளவில் செல்வத் தண்ண லு மயோத்தி நண்ணித்
தாயரை வணங்கித் தங்க[1]ளிறையொடு முனியைத் தாழ்ந்து
நாயகக் கோயி [2]லெய்தி [3]நானிலக் கிழத்தி யோடும்
சேயொளிக் கமலத் தாளுங் [4]களி நடஞ் செய்யக் கண்டான்.

(இ - ள்.) பொருந்திய அவ்வேளையில், செல்வத்திற்குஉரிய பெருமையிற்சிறந்தவனை இராமபிரானும், அயோத்தியை யடைந்து, தாய்மார்களை வணங்கி, திருமால்கோயிலைச்சேர்ந்து தமது குலதெய்வமான ஸ்ரீரங்கநாதனுடனே முனிவனையும்பணிந்து, பூமிதேவியுடனே செந்நிறங்கொண்ட தாமரையில் [செந்தாமரையில்] வசிப்பவளான இலக்குமியும் களிப்புக்கொண்டு நர்த்தனமாடுவதைக் கண்டான்; (எ - று.)—இறை-பாதகாணிக்கையுடனே என்பாரும், நாயகக்கோயில்-இராமனரண்மனையென்பாரும் உளர். பி - ம்:—[1] முனிவனைத்தாழ்ந்துதாமம். [2] எய்த. [3] நானிலமாதுமற்றைச். [4] திரு. (4289)

12.—ஸ்ரீராமனைக் கண்ட நகரமாந்தரின் மகிழ்ச்சித்திறம்.

வாங்குதுந் [1]துகில்க [2]ளென் னு [3]மனமிலர் கரத்திற் பல்கால்
[4]தாங்கின ரென்ற போது மைந்தருந் தைய லாரும்
வீங்கிய வுவகை மேனி [5]சிறக்கவு மென்மேற் றுள்ளி
ஓங்கவுங்[6]களிப்பாற் சோர்ந்த வுடையிலா தாரை யொத்தார்.

(இ-ள்.) ஆடைகளை அவிழ்த்துவிடவேண்டுமென்னும் எண்ணமில்லாதவரான (அயோத்தியிலுள்ள) ஆடவரும் மகளிரும்,—(நெகிழ்கின்ற ஆடையைத் தம்) கையினல் பலமுறைதாங்கினவராய் நின்றபோதும், மிக்க உவகையினல் உடல்பூரித்தலாலும் (அந்த உவகைமிகுதியால்) மேன்மேல் துள்ளிப்பாய்தலாலும், (மதுபானஞ் செய்த) களியினலே சோர்ந்த ஆடையிலாதாரான ஆடவரையும் மகளிரையும் போன்றனர்; (எ - று.)

கட்குடியர் ஆடைசோர நிற்றல்போல, இராமபிரான் வரவினல் உவகைதோன்றி யுடல்பூரித்தலாலும் துள்ளிக்குதித்தலாலும் அந்நகரத்து ஆடவரும் மகளிரும் ஆடைசோரப்பெற்றனரென்க. பி-ம்:—[1] துயில்கள். [2] என்று. என்ன. [3] மனமிலரெனும். மனமிலராலும். [4] தாங்கலமென்ற போதும், தாங்குறப்பொருந்தாரங்ஙன். [5] சிறந. [6] களியாற். (4290)

13.—உவகைமிகுதியால் அந்நகரத்தவரின் தலைதடுமாற்றச் செயல்.

வேசிய ருடுத்த கூறைவேந்தர்கள் சுற்ற [1]வெற்றிப்
பாசிழை மகளி[2]ராடை யந்தணர்[3]பறித்துச் சுற்ற
வாசமென் கலவைச் சாந்தென் றிணையன[4]மயக்கந் தன்னால்
பூசினர்க் கிரட்டி யானார் [5]பூசலார் [6]புகுந்து ளோரும்.

(இ - ள்.) வேசியருடுத்த ஆடையை (அப்போது தோன்றிய) தடுமாற்றத்தால் வேந்தர்கள் உடுத்துக்கொள்ளவும், வெற்றி பொருந்திய பைம்பொன்னிழைலாகிய அணிகலணையணிந்த மகளிராடையை அந்தணர் கைக்கொண்டு உடுத்துக்கொள்ளவும், வாசனைப்பண்டமும் மெல்லியகலவைச்சாந்தும் என்ற இவற்றைப் பூசிக்கொள்ளாதவராய்ப் புகுந்தோரும் (ஜன) நெருக்கத்தால் கலவைச்சாந்தைப் பூசிக்கொண்டிருப்பவர்க்கு இருமடங்கு பூசிக் கொண்டவர்களானார்; (எ - று.)

இராமபிரானைக் காண்பதிலுள்ள விரைவினால் ஒருவர் கூறையையொருவர் உடுப்பவ ரானாரென்க. எதிர்கொள்வதிலுள்ள விருப்பமேலீட்டால் தம்மை வாசக்கலவைச்சாந்துகளைப் பூசிக் கொள்ளாமலே வந்தவரும் வாசக்கலவைச்சாந்துகளைப் பூசியவரோடு நெருக்குவதாற் பூசியவர்களின் வாசக்கலவைச்சாந்து தம் மீது இழுசிக்கொள்ள, வாசக்கலவைபூசி வந்தவரினும் இருமடங்கு வாசக்கலவைச்சாந்தை யுடையவரானாரென்பதாம். இனி, கலவைச் சாந்தைப்பூசாத பிரமசாரியர் துறவியர் என்ற இவரும் கலவைச் சாந்து தம்மீது இழுசப்பெற்றார்களெனினுமாம். மயக்கம்-பெருந் திரளாலான தலைதடுமாற்றம். பி-ம்:—[1]வேறு,வெற்பில்,மற்றைப், ஏறப். [2]அன்றாராடையைப். [3]பரிந்துசுற்ற. [4]மயக்கத்தன்றார். [5]பூசலாற், வேதியர். [6]புகுந்துளோர்கள். (4291)

14.—இராமனுடைய வனவாசகாலத்துத் தம்கணவரைக் கூடாது கிடந்த மகளிர் அப்போது அணிகலன்பூண்டு விளங்குதல்.

இறைப்பெருஞ் செல்வ நீத்த வேழிரண் டாண்டும் [1]யாரும்
[2]உறைப்பில ராத லானே [3]வேறிருந் தொழிந்த [4]வன்றார்
பிறைக்கொழுந் தனைய நெற்றிப் பெய்வளை மகளிர் [5]மெய்யை
[6]மறைத்தனர்பூணின் மைந்த [7]ருயிர்க்கொரு [8]மறுக்கந் தோன்ற.

(இ - ள்.) அரசனாகியாட்சிபுரிகையாகிய பெருஞ்செல்வத்தை விட்டு (ஸ்ரீராமன் காட்டுக்கு)ச் சென்றிருந்த பதினான்குவருஷமும் மனமகிழ்ச்சியற்றனராதலால் (தம் கணவரைக்கூடாது) தனியே யிருந்திட்ட அந்த இளம்பிறைச்சந்திரனையொத்த நெற்றியையும் பூண்டவளையையுமுடைய (அயோத்திமாநகரத்து) மகளிர்யாவரும், ஆடவருயிர்க்கு ஒருகலக்கம்பிறக்க அணிகலன்களால் தம்முடலை மறைத்தனர்; (எ - று.)

இராமன் பட்டாபிஷேகந்தவிர்ந்து கானகஞ்சென்று னென்ற துயரத்தினுற்புனைதலின்றித் தம்கணவரையுங் கூடாதிருந்தமகளிர் பதினான்கு யாண்டுகழிந்து அப்பிரான் மீண்டுவருவதைச் செவியுற் றுத் தம்மைக்கண்ட கணவர் காமவிகாரத்தால் உயிர்மறுகும்படி இனிதாகத் தம்மை அணிகலன்களாற் புனைந்தன ரென்பதாம். பி-ம்:—[1]காற்றும். [2]மிறைப்பு. [3]வென்று. [4]மின்னார். [5]மெய்ம்மை. [6]மறைப்பனபூண்கள். [7]உயிர்களும். [8]மறுகந். (4292)

15.—வானவமகளிரும் மானுடமகளிரும் நெருங்கியமையின் வருணனை.

விண்[1]ணுறை வோர்தந் தெய்வ வெறியொடும் வேறு ளோர்தம்
[2]தண்ணறு நாற்றந் தம்மிற் றலைதடு மாறு நீரால்
மண்ணுறை மாத ரார்க்கும் வானுறை மடந்தை மார்க்கும்
உண்ணிறைந் துயிர்ப்பு [3]விங்கு மூடலுண் டாயிற் றன்றே.

(இ-ள்.) வானுலகத்தில் வாழ்கின்றவரின் தெய்விக நறுமணத் தோடு வேறான (மானுட) லோகத்திலுள்ளவரின் குளிர்ந்த நறிய மணம் தம்மிற்கலந்துவீசுகின்ற தன்மையினால் மண்ணுலகத்தில் வாழ்கின்ற மாதரார்க்கும் வானுலகத்துவாழ்கின்ற மடந்தைமார்க் கும் உட்புறத்துநிறைந்து பெருமூச்சுமிக்கு வெளித்தோன்றுகின்ற ஊடலானது உண்டாயிற்று; (எ - று.)

தேவர்களும் மானுடரும் பெருந்திரளில் ஒருவரோடொருவர் உராய்தலினாலே வானவரின் தெய்விக நறுமணம் மானுடருடலிலும் மானுடரின் குளிர்ந்த நறியமணம் தேவருடலிலும் படியவே, வான வரையும் மானுடரையும் அவரவரின் மனைவியர் காணும்போது பிற மகளிரைக் கூடியதால் நேர்ந்தது இந்தமணமென்று ஊடுமாறு இருந்ததென்றவாறு: மயக்கவணி. பி-ம்:—[1]உறையமரர், உலகோர் தந். [2]தண்ணுறு. [3]வீங்கி. (4293)

16.—விபீடணாதியர்க்கு அரண்மனையைக்காட்டுமாறு ஸ்ரீராமன் பரதனுக்குக் கட்டளையிடுதல்.

ஆயதோ ரளவி [1]லையன் பரதனை யருளி னோக்கித்
தூயவி டணற்கு மற்றைச் சூரியன் மகற்குந் தொல்லை
மேய[2]வா னரர்க ளாய வீரர்க்கும் [3]பிறர்க்கு நந்தம்
நாயகக் கோயி [4]லுள்ள நலமெலாந் தெரித்தி யென்றான்.

(இ - ள்.) அப்படிப்பட்டதான ஒப்பற்ற சமயத்தில் ஸ்ரீராமன் பரதனை அன்போடு பார்த்து, '(மனத) தூய்மையுடையனாகிய விபீடணனுக்கும் மற்றும் சூரியகுமாரனை சுக்கிரீவனுக்கும்பழமை பொருந்தியவானரர்களானவீரர்க்கும் பிறர்க்கும்நம்முடையநாயகத் தன்மைபூண்ட அரண்மனையிலுள்ள சிறப்புக்களையெல்லாந் தெரி விப்பாய்' என்று கட்டளையிட்டான்; (எ - று.)— நாயகக்கோயில் - திருமாலெழுந்தருளியிருக்கும்கோயில். பி.ம்:—[1]வீரன். [2]வானரங்க ளாய். [3]பிறர்க்குமந்த, விளம்பிநந்தம். [4]முற்றுங்காட்டுதிரம்பி. ()

17.—இராமன்கட்டளையால் துணைவர்களோடு பரதன் நாயகக்கோயிலிற் புகுதல்.

என்றலு [1]மிறைஞ்சி மற்றைத் துணைவர்கள் யாவ ரோடும்
சென்றனன் [2]னெழுந்து மாடம் பலவொரீஇ யுலகிற் றெய்வப்
பொன்றிணிந் தமர [3]ரோடும் [4]பூமக [5]ளுறையு மேருக்
[6]குன்றென விளங்கித் தோன்று நாயகக் கோயில் [7]புக்கான்.

(இ - ள்.) என்றுகூறியவுடன், (பரதன்) வணங்கி மற்றைச் சினேகிதர்யாவரோடும் எழுந்துபோய், மாடம்பலகடந்து,பொன்னு லலங்கரிக்கப்பட்டுத் தேவதைகளுடனே பூவிலுறையுந்தெய்வ மாகிய இலக்குமிவசிக்கின்ற மேருமலையைப்போலஉலகில்விளங்கித் தோன்றுகின்ற தெய்வத்தன்மையுள்ள நாயகக்கோயிலிற் புகுந் தான்; (எ - று.)—பி - ம்:—[1]அவர்களோடு மெழுந்தனனிறைஞ்சி லே. [2]சுதைசெய். [3]நாடும். [4]பூமகன். [5]உலைறந்துவாழும். [6]குன்றபுநாணவோங்கும். [7]புக்கார். (4295)

18 —நாயகக்கோயிலைக் கண்ட விபீடணாதியர் ஆச்சரியமுறுதல்.

வயிரமா ணிக்க நீல மரகத முதலா யுள்ள
செயிரறு மணிக ளீன்ற செழுஞ்சுடர்க் கற்றை [1]சுற்ற
உயிர்[2]துணுக் குற்று [3]நெஞ்சு முள்ளமு மூச லாட
[4]மயர்வறு மனத்து வீர ரிமைப்பிலர் மயங்கி நின்றார்.

(இ-ள்.) கலங்குதல் ஒருபோதுமில்லாத மனமுள்ள வீரரான விபீடணன் முதலியவர்கள்,—வயிரமும் மாணிக்கமும் நீலமும் மரகதமும் முதலாகவுள்ள குற்றமற்ற இரத்தினங்கள் வீசுகின்ற மிக்க ஒளித்தொகுதிகள் (எங்குஞ்) சூழ்தலால், தம்முயிர் அச்ச முற்று நெஞ்சமும் (அதன்செயலான) எண்ணமும்ஒருநிலைநில்லாது தடுமாறக் கண்கொட்டாது திகைத்துநின்றார்; (எ - று.)

இதுவரையில் இப்படிப் பேரொளிபடைத்த மாளிகையைக் கண்டிராமையால், சலித்தலில்லாத மனம்படைத்த வீரரான விபீடணாதியரின் உயிர்கள் துணுக்குற அவர்கள்நெஞ்சமும் எண்ணுஞ் செயலற்று ஒருநிலைகொள்ளாது போக, அன்னார்இமைப்பற்றுத் திகைப்புற்று நின்றன ரென்பதாம். பி - ம்:—[1]தெற்றி, சுற்றி. [2]துணுக்குற்ற. [3]தத்தமுள்ளநின்று. [4]மயரறுசிறப்பின்வீரர். (4296)

19.—பரதன் அம்மாடத்தின் வரலாறு கூறுதல்.

விண்டுவின் மார்பிற் காந்து மணியென விளங்கு[1]மாடம்
கண்டனர் பரதன் தன்னை வினவின [2]ரவர்க்குக் காதல்
புண்டரீ கத்துள் வைகும்[3]புராதன னகனற் றோளான்
[4]கொண்டநற் றவந்தன் னாலே யுவந்துமுன் கொடுத்த தென்றான்.

(இ-ள்.) திருமாலினுடைய திருமார்பிலே சொலிக்கின்றகௌஸ்துப மணியைப்போல விளங்குகின்ற (அந்த) மாடத்தைக் கண்டனராய்ப் பரதனை நோக்கி (அதன்வரலாற்றை) வினவின விபீடணாதி

யர்க்கு. (அந்தப்பரதன்).—தாமரைமலரில் வாழ்பவனாகிய பிரமதேவன், அகன்ற அழகியதோளையுடைய இட்சுவாகு பூண்ட சிறந்ததவத்தினாலே உவந்து அன்போடு (அவனுக்கு)முன்கொடுத்ததாகும் இது என்று (அதன்வரலாறு) கூறினான்; (எ - று.))

அகனற்றோளானின்றனென்பது, மேற்கவியில் விளங்கும். பி - ம்:—[1]கோயில். [2]வாக்குக், வாங்கு. [3]புராதனனன்பிற்பூசை, புராதனன் கண்ணுற்றோளான், புராதனன் கன்னற்றோளான். [4]கொண்டுவந்தன னந்நாளே யுவந்து கொண்டளித்ததென்றான், எண்டவந்தன்னினாலே......அளித்ததென்றான், கொண்டபின்னவனன்பாலெங்குலத்துளோர்க்களித்த தென்றான். (4297)

20.—அவர்கள் அம்மாடத்தினின்று வேறோர்மண்டபஞ் சேர்தல்.

பங்கயத் [1]தொருவ னிக்கு வாகுவிற் களித்த [2]பான்மை
[3]இங்கிது[4]மலராள் [5]வைகு மாடமென்[6]றிசைத்த போதின்
எங்களாற் றுதிக்க லாகு [7]மியல்பதோ வென்று கூறிச்
[8]செங்கைகள் கூப்பி வேறோர் மண்டப[9]மதனிற் சேர்ந்தார்.

(இ - ள்.) தாமரைமலரில் வீற்றிருப்பவனாகிய ஒப்பற்ற பிரமதேவன் இட்சுவாகுவிற்குத் தந்த பான்மையைக் கொண்ட இங்கேயுள்ள இம்மாளிகை இலக்குமிவாழுமிடமாகுமென்று (பரதன்) கூறியவளவில்,—,—'(இது) எங்களாற் புகழக்கூடிய இயல்பையுடையதோ?' என்றுசொல்லி (அதனைக் கொண்டாடித் தமது) செங்கைகளைக் கூப்பி. (விபீடணாதியர்), வேறொரு மண்டபத்திற் சேர்ந்தார்கள்; (எ - று.)—பி-ம்:—[1]ஒருவல்லிக்குப்பாங்குற, ஒருவனிக்குவாகுவுக்கருளுங். [2]பண்பால்,பான்மைத்து. [3]இங்கித, [4]மலரோன். [5]தெய்வபூசை, நல்குமாடம். [6]இசைத்தலோடும். [7]இயல்பிற்றோ. [8]செங்கரம். [9]தன்னில். (4298)

21.—சுக்கிரீவன் 'இராமபட்டாபிஷேக நாள் தெரிந்திடாமைக்குக் காரணம்என்?' என்று பரதனை வினவல்.

இருந்தன [1]ரனைய மாடத் தியல்பெலா மெண்ணி யெண்ணிப்
[2]பரிந்தன னிரவி மைந்தன் பரதனை வணங்கித் [3]தூயோய்
கருந் [4]தடங் கண்ணி னாற்குக் காப்புநா ளணியு நன்னாள்
தெரிந்திடா [5]திருத்த லென்னோ வென்றனு மண்ணல் செப்பும்.

(இ - ள்.) விபீடணன் முதலியோர் (அந்த) மாடத்தின் சிறப்பியல்புகளை யெல்லாம் எண்ணிஎண்ணியிருந்தனர்; (அப்போது) சூரியனது மகனாகிய சுக்கிரீவன் பரிவுகொண்டவனாய்ப் பரதனை வணங்கி, 'தூய்மையுடையோனே! கரியபெரிய கண்களையுடையவனாகிய ஸ்ரீராமனுக்கு(ப் பட்டாபிஷேகத்தின் பொருட்டு)க் காப்புநாணை யணிவதற்கு ஏற்ற நல்லநாளை யாராய்ந்திடாமல் (வெறுமனே) இருப்பது ஏன்?' என்று வினவியவுடனே, பெருமையிற் சிறந்தவனான பரதமகாராசன் சொல்லலுற்றான்; (எ-று.)—அதனை மேலிற்கவியின் முன்னிரண்டடிகளிற் காண்க.

'தூயோய்' என்ற விளி - இராமபட்டாபிஷேகத்திற்பேருற்ற முள்ள பரதன், காப்புநாணணிதற்குஉரியாரைத்தெரிந்திடாமைக் குத் தக்ககாரணமிருக்கு மாதலால் அதனையறியவே சுக்கிரீவன் தான் வினவுகின்றானென்ற கருத்தைக் குறிப்பிக்கும். பி - ம்:— [1]இளைய. [2]புரிந்தனர். [3]பண்பாற். [4]தடமுகிலினுற்கு. [5]இருப்ப தென்னே. (4299)

22.—தீர்த்தங்களெல்லாம் வருவதற்காகவே தாழ்க்கின்ற தென்று பரதன் விடைகூற, சுக்கிரீவன் அநுமானைக் கடைக்கணிக்க, அவன்தீர்த்தங்கள்கொணரச் செல்லல்.

ஏழ்[1]கட லதனிற் றோய மிருநதி பிறவிற் றோயம்
தாழ்விலா திவண்வந் தெய்தற் [2]கருமைத்தோர் தன்மைத் தென்ன
ஆழியோன் றுடையோன் மைந்த னநுமனைக் கடிதி னோக்கச்
சூழ்புவி யதனை யெல்லாங் கடந்தனன் காலின் தோன்றல்.

(இ - ள்.) 'ஏழ்கடல்களிலுள்ள தீர்த்தங்களும் மற்றுமுள்ள பெரிய நதியிலுள்ள தீர்த்தங்களும் குறைவிலாது இங்கே வந்து சேர்தற்கு ஒரு அருமையான தன்மையுடையது' என்று (பரதன்) சொல்ல, ஒற்றைச்சக்கரமுடைய சூரியனது குமாரனான சுக்கிரீவன் அநுமானை(க் குறிப்புடன்) நோக்க, வாயுவின்புதல்வனாகிய அவ் வநுமான் விரைவில் (தீர்த்தங்கள் கொணருமாறு) கடல் சூழ்ந்த பூமியையெல்லாங் கடந்துசென்றான்: (எ - று.)—பி-ம்:—[1]கடறன் னில். [2]உவமைத்தோதன்மைத்தென்ன, அருமைத்தோ தன்மைத் தென்ன. இச்செய்யுள் சிலபிரதியிலில்லை. (4300)

23.—பரதன் சொல்லியனுப்ப, வசிட்டமுனிவன் வருதல்.

கோமுனி யோடு மற்றை[1]மறையவர்க் கொணர்க [2]வென்று
ஏவினன் [3]தேர்வ லான்சென் றிசைத்தலு முலக மீன்ற
பூமகன் தந்த [4]வந்தப் புனிதமா தவன்வந் தெய்த
யாவரு மெழுந்து போற்றி யிணையடி [5]தொழுது நின்றார்.

(இ - ள்.) 'இருடியர்தலைவனான வசிட்டமுனிவனோடு மற்றை யந்தணரையும் அழைத்துவருக' என்று (பரதன் சுமந்திரனை) ஏவி னான்: தேர் செலுத்துவதில் வல்லவனான அந்தச்சுமந்திரன் போய்ச் சொல்லுதலும், உலகங்களையெல்லாம் படைத்த தாமரைமலரில் வாழும்மகனான பிரமதேவன் பெற்ற அந்தப்பரிசுத்தமான பெருந் தவத்தையுடையவனான வசிட்டன் வந்துசேர, யாவரும்எழுந்து துதித்து (அவனது) உபயபாதங்களை வணங்கிநின்றார்; (எ - று.)— வசிட்டமுனிவரெழுந்தருளியதைக்கூறியது, மற்றையோர்வந்ததற் கும் உபலட்சணம். பி - ம்:—[1]கணிதரைக். [2]என்றே. [3]ஏவலான். [4]காதற். [5]இறைஞ்சி. (4301)

24.—வசிட்டமுனிவன் வீற்றிருந்து பட்டாபிஷேகநாள் நாளையெனல்.

அரியணை பரத னீய [1]வதன்கணுண் டிருந்த [2]வந்தப்
பெரியவ [3]னவனை நோக்கிப் பெருதிலக் கிழத்தி யோடும்

[4]உரியமா மலரா ளோடு முவந்தினி [5]தூழிக் காலம்
கரியவ[6]னுய்த்தற் கொத்த காப்புநாள் நாளை யென்ருன்.

(இ-ள்.) பரதன் (அம்முனிவன் வீற்றிருத்தற்குச்) சிங்காதன மீய, அப்போது அதிலிருந்த அந்தப்பெரியவன்,—(காப்புநாண் அணிதற்குஉரிய நாள் எந்நாள்? என்று வினவிய) அந்தப்பரதனைப்பார்த்து, 'பெருமைபெற்ற பூதேவியுடனும் உரிய சிறந்த தாமரைமலரில் வீற்றிருக்கின்ற திருமகளுடனும் (கூடி) மன மகிழ்ந்து இனிதாக நெடுங்காலம் ஸ்ரீராமன் அரசு புரிதற்குப் பொருந்திய காப்புநாண்பூணற்குரிய நாள் நாளையாகும்' என்று கூறினன்; (எ - று.)

வசிட்டமுனிவன் தனக்கு அளித்த பீடத்திலமர்ந்ததைக் கூறியது-மற்றையோரும் தமக்குஉரிய பீடத்திலமர்ந்தமைக்கு உபலட்சணம். பி-ம்:—[1]அனகன். [2]அப்போ. [3]அவரை. [4]உரியமாமகளிரோடுமுவந்தனர், உரியனமலர்களோடுமுகந்தனர், உரியமாமகளிரோடுமுகந்தனர். [5]ஓவில்செல்வம், ஒழிவில்செல்வம். [6]துய்த்தற்கேய்ந்த. (4302)

25.—இராமபிரானது பட்டாபிஷேகநாளைக்குறித்துப் பலர்க்குஞ் செய்திபோக்குதல்.

[1]இந்திர குருவு [2]மன்னு ரேனைய[3]ரென்ன நின்ற
மந்திர[4]விதியி னரும் [5]வசிட்ட னும் விரைந்து விட்டார்
சந்திர கவிகை யோங்குந் தயரத ராமன் தாமச்
சுந்தர மவுலி [6]சூடு [7]மோரையு நாளுந் [8]தூக்கி.

(இ-ள்.)பிரகஸ்பதியையொத்தவராய் எத்தனையோபேரென்னுமாறு மிகப்பலராகவிருந்த மந்திரவிதிகளில்வல்லவர்களும் வசிட்டமுனிவனும்,—சந்திரன்போன்ற வெண்குடை யோங்கப்பெற்ற தசரதராமனுக்கு ஒளியுள்ள அழகிய திருவபிஷேகஞ்சூடுகின்ற வேளையையும் நாளையும் ஆராய்ந்து எழுதி(ப் பலர்க்கும்) விரைவிற் செய்தியனுப்பினர்: (எ-று.)—பி-ம்:—[1]இந்திரன். [2]அன்னுற்கேனையர், அன்னுற்கேய்வன, அன்னுரேயின. [3]என்னநின்ருர், எனவுநின்ருர், எனவுநின்ற. [4]விதியினாலே, விதியினாலும், முனிவர் மற்றை, விதியினர்க்கும். [5]மயர்வறவரைந்துவிட்டார். முனிவரும் விரைந்துவிட்டான், வசிட்டனே...விட்டான், வசிட்டனும்...விட்டான். [6]சூட, சூட்ட. [7]வாரமும். [8]தூற்றி. (4303)

26.—மூவுலகத்தவரும் அயோத்தியில்வந்து தங்கியதைப் பற்றிய வருணனை.

அடுக்கிய வுலக மூன்று மாதரந் தூநர் [1]கூற
இடுக்கொரு பேரு மின்றி யயோத்திவந் [2]திறுத்தா ரென்றல்
தொடுக்கறு கவியான் [3]மற்றைத் [4]தொகையினை முடிவு தோன்ற
[5]ஒடுக்குறுத் துரைக்குந் தன்மை நான்முகத் தொருவற் குண்டோ.

(இ-ள்.) ஆதரத்தையுடைய தூதுவர் (அந்தத்திருவபிஷேக மகோத்ஸவத்தை) ஒன்றன்மீது ஒன்ருகவுள்ள உலகமூன்றிலுந் தெரிவிக்க, (அம்மூவுலகங்களிலும்) இடுக்கிலும் ஒருபேருமின்றி அயோத்தியில் (யாவரும்) வந்துதங்கினுர்களென்ருல், (அந்நகரிற் கூடியவரின்) தொகையை முடிவுதோன்றுமாறுதொடுக்கின்றகவி யால் தொகுத்துச்சொல்லுந் தன்மை நான்கு முகங்களையுடைய ஒருகடவுட்குத்தான் உளதோ? (எ - று.)

இதனுல், வந்த தொகையினரைத் தாம் சொல்லாமைக்குக் கவி ஏதுகூறியவாறு. நான்முகத்தொருவன் - கருத்துடையடை மொழி. நான்முகத்தொருவ னென்றதன்பின் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. பி - ம்:—[1] கூவ. [2] இறுத்தது, எய் திற்று. [3] அற்ற... [4] துளங்கியவுரையால், துழனியையிறுதி, துளங் குறுமுடியால். [5] ஒடுக்குவந்து. (4304)

27.—வசிட்டன் முதலியோர் ஸ்ரீராமனுக்கு அபிஷேகச் செய்தியைத் தொழுதுகூறுதல்.

அவ்வயின் முனிவ னேடும் பரதனு மரியின் [1]சேயும்
[2]செவ்விய நிருதர் கோனுஞ் சாம்பனும் வாலி சேயும்
எவ்வ[3]மி லாற்றல் வீரர் யாவரு மெழுந்து சென்ருங்கு
அவ்விய[4]மவித்த சிந்தை யண்ணலைத் தொழுது சொன்னுர்.

(இ-ள்.) அப்போது வசிட்டமுனிவனுடனே பரதனும் சூரிய புத்திரனை சுக்கிரீவனும் நற்குணமுடைய அரக்கர்தலைவனை விபீடணனும் சாம்பவானும் வாலிகுமாரனை அங்கதனும் குற்ற மில்லாதவலிமையையுடைய மற்றுமுள்ளவீரர்யாவரும் அவ்விடத் தினின்று எழுந்துபோய், பொருமை யென்பதைநீக்கிய மனத்தை யுடைய பெருமையிற்சிறந்தவனை இராமனைத் தொழுது(பட்டாபி ஷேகம் நாளைக்கு என்பதைக்) கூறினுர்; (எ-று.)—பி - ம்:—[1] வேந் தும். [2] செவ்வெயில், வெவ்வியல், செவ்வியல். [3] இலாத. [4] அழித்த.()

28.—பட்டாபிஷேகத்திற்கு முன்னர்ச்செய்யவேண்டிய கடமைகளைச்செய்யப்பணித்து வசிட்டன் சென்றிடுதல்.

நாளை நீ மவுலி [1]சூட நன்மைசால் பெருமை நன்னுள்
காளை நீ [2]யதனுக் கேற்ற [3]கடன்மைமீ தியற்று கென்று
வேளையே [4]காயு நெற்றி [5]விழியினன் மேவு [6]மென்பூப்
பூளையே [7]சூடுவானைப் பொருவு[8]மா முனிவன் போனுன்.

(இ - ள்.) (வசிட்டமுனிவன் இராமபிரானை நோக்கி),—'காளை போன்றவனே [வீரனே]! நீ மகுடஞ்சூடுவதற்கு நன்மைமிகுந்த பெருமைபொருந்திய நல்லநாள் நாளையாகும்; நீ அதற்குஏற்ற மேன்மையான கடமைகளைச்செய்வாய்' என்று சொல்லி,—மன் மதனையே எரிக்கவல்ல நெற்றிக்கண்ணையுடையவனும் விருப்ப முண்டாக்கவல்ல மெல்லிய பூவாகப் பூளையைச் சூடுபவனுமாகிய

சிவபெருமானையொத்த பெருமைபெற்ற முனிவனான வசிட்டன் சென்றான்; (எ - று.)

மன்மதனைவெல்லுதல் பிரமபுத்திரனாதல் என்ற தன்மை வசிட்டமுனிவனுக்கும் சிவபெருமானுக்கும் அமைந்திருத்தல் காண்க. வேள்-மன்மதன். பி-ம்:—[1]சூடுநலந்திகழ்பெரிய, [2]கரிசமெல்லாம், கிரிச்சமெல்லாம், கருச்சியெல்லாம். [3]கழித்தியென்றுரைத்துக்கன்னல். [4]பொடியதாக, பொடியவாக, பொடிசெய்தாக. [5]விழிக்குநீணுதலின். [6]வெண்பூப், வெண்பூம். [7]சூடுவோணிற்பொள்ளென. [8]மாருதியும், மாமுனியும். (4306)

29.—பிரமன் கட்டளையால் மயன் மகுடாபிடேகமண்டபமமைத்தல்.

நான்முகத் தொருவ னேவ [1]நயனறி மயனென் றோதும்
நூன்முகத் [2]தோங்கு கேள்வி நுணங்கியோன் வணங்கு நெஞ்சன்
கோன்முகத்[3]தளந்து குற்றஞ் செற்றுல கெல்லாங் கொள்ளும்
[4]மான்முகத் தொருவ னன்னாள் மண்டபம் [5]வயங்கக் கண்டான்.

(இ-ள்.) பிரமதேவன் ஏவ, (கட்டிடமமைக்கும்) முறைமையை யறிந்தமயனென்று சொல்லப்படுகின்ற சிற்பநூலிற் படிந்தகேள்வியுடனே நுண்ணறிவுமுடையோனாகிய மான்முகம்பெற்ற ஒப்பற்றவன் [மயன்] வணக்கங்கொண்ட நெஞ்சமுடையவனாய், கோல்முகத்தினாலளந்து குற்றம் நீக்கி உலகமெல்லாங்கொள்ளவல்ல மண்டபத்தை நல்லநாளிலே விளக்கமுற நிருமித்தான்; (எ-று.)

பிரமன் கட்டளையால் அன்றைக்கே இராமபட்டாபிஷேகத்தின் பொருட்டு மயன் அகன்றமண்டபமொன்று ஒருகுற்றமும் கூறமுடியாது விளங்குமாறு நிருமித்தானென்க. உலகு - உலகத்தவர். பி-ம்:—[1]நயனெறி, நயனுறு. [2]ஒருங்கு. [3]உற்ற, உகந்து. [4]வான்முகத்தொருவனன்னான், வான்முதற்பவனங்கொள்ள, மான் ...அன்னான். [5]மலங்கக். (4307)

30.—அநுமான் நாற்கடனீர்முதலியன கொணர்தல்.

சூழ்கட னான்கிற் றோய மெழு[1]வகை யாகச் சொன்ன
ஆழ்திரை யாற்றி னீரோ [2]டமைத்தியின் றென்ன வாமென்று
ஊழியி னிறுதி செல்லுந் தாதையி னுலவி [3]யன்றே
ஏழ்[4]திரை நீருந் தந்தா [5]னிருந்துயர் [6]மருந்து தந்தான்.

(இ-ள்.) '(உலகைச்) சூழ்ந்த நான்குகடலின்நீரும் எழுவகையாகச் சொல்லப்பட்ட ஆழ்ந்த திரைகளையுடைய கடலினீரும் புண்ணியநதிகளின் தீர்த்தங்களுடனே இன்று கொண்டுசேர்ப்பாய்' என்று (சுக்கிரீவன்) கூற,—பெரிய [மரணமாயமான] துயரத்தைநீக்கும் மருத்துமலையைக்கொணர்ந்தவனான அநுமான். அப்படியேகொணர்வேனென்று உடன்பட்டு யுகாந்தத்திற் செல்லும் (தன்) தந்தையான வாயுதேவன்போல, விரைந்துசென்று, எழுகடலினீரையும் அன்றைக்கே கொணர்ந்து சேர்த்துவிட்டான்; (எ - று.)

திரை-கடலுக்குஇலக்கணை. இச்செய்யுளின் முன்னிரண்டடிகள், 22-ஆஞ்செய்யுளின் அநுவாதம், ஆபத்துக்காலத்து உதவியவனுக்கு மகிழ்ச்சிக் காலத்துஉதவுதல் பெரிதன்றென்க. பி-ம்:—[1]வகைத்தாகச். [2]அமைந்தனனென்னவாமென்று, அமைத்தனனென்னலாமே, அன்றெனவாகுமாமென்று. [3]அன்ரூ, என்ரூ, ஒன்ரும். [4]கடல். [5]இருந்துய்ய, இடர்கெட. [6]மருந்திற்றீர்த்தான்.()

31.—மன்னர்கள் சரயுவினின்று பொற்குடங்களிற் தீர்த்தங்கொணர்தல்.

எரிமணிக் குடங்கள் பன்னூற் றியானைமேல் வரிசைக் [1]கான்ற
விரிமதிக் குடையி னீழல் வேந்தர்கள் பலரு மேந்திப்
[2]புரைமணிக் காள மார்ப்பப் பல்லியந் துவைப்பப் பொங்கும்
[3]சரயுவிற் புனலுந் தந்தார் சங்கின [4]முரல மன்னே.

(இ - ள்.) வேந்தர்கள்பலரும் (தம்முடைய) பெருமைக்குப் பொருந்தியுள்ள விரிந்த சந்திரன்போன்ற வெண்குடையின் நிழலிலே விளங்குகின்ற பலநூற்றுக்கணக்கான இரத்தினக்குடங்களை யானைமேலேற்றிக்கொண்டு, உள்தொளையுள்ள அழகியகாளமென்னும் ஊதுகருவி ஆரவாரிக்கவும், பலவகைவாச்சியங்களும் ஒலிக்கவும், சங்கினம் ஒலிககவும், அலையோங்கப்பெற்ற சரயுவினின்று நீரையும் கொணர்ந்தார்கள்: (எ-று.)—பி-ம்:—[1]ஏற்ற, ஏன்ற. [2]பரு, [3]சரயுநற். [4]ஆர்ப்ப. (4309)

32.—இராமபிரான் சீதையோடு பளிங்குமாடத்திட்ட பீடத்தில் விளங்குதல்.

மாணிக்கப் பலகை [1]தைத்து [2]வயிரத்திண் கால்கள் [3]சேர்த்தி
ஆணிப்[4]பொன் சுற்றி முற்றி [5]யழகுறச் சமைத்த பீடம்
[6]ஏனுற்ற பளிக்கு மாடத் திட்டன [7]ரதனின் [8]மீது [மன்னே.
[9]பூணுற்ற திரள்தோள்[10]வீரன்[11]திருவொடும் பொலிந்தான்

(இ-ள்.) மாணிக்கத்தினலியன்றபலகை தைக்கப்பெற்று வயிரத்தாலியன்ற திண்ணிய கால்கள் சேர்க்கப்பெற்று ஆணிப்பொன் கொண்டு சுற்றுப்புறம் முடிவுபெற்று அழகுபொருந்தச்செய்த பீடத்தைப் பெருமை பொருந்திய பளிக்குமாடத்தே இட்டனர்: அதன்மேல் ஆபரணம்பொருந்திய திரண்டதோளையுடையவீரன் இலக்குமியினமிசமான சீதாபிராட்டியோடும் விளங்கினன்;(எ-று.) —பி-ம்:—[1]தைத்த. [2]வயிரத்தின். [3]ஏய்ந்த. [4]பொற்கட்டுமுற்றி, பொன்சுற்றுமுச்சி. [5]மரகதமலங்குபீடம். [6]ஆணிப்பொற். [7]இதனின். [8]உம்பர். [9]சேணுற்ற. [10]ஐயன், வள்ளல். [11]ஏறினன்சீதையோடும்.

இச்செய்யுளின்பின் பலபிரதிகளிற் காணப்படுவதொரு செய்யுள் வருமாறு:—

அந்தணர் வணிகர் வேளாண் மரபினோ ராலி நாட்டுச்
சந்தணி புயத்து வள்ளல் [1]சடையனே யனைய சான்றோர்
உய்ந்தன மடிய மென்னு [2]முவகையி னுவரி காண
வந்தன ரிராமன் கோயின் மங்கலத் துரிமை மாக்கள்.

பி-ம்:—[1]சடையனே. [2]உவகையாம். சிலபிரதிகளில் இச்செய்யுள் "மரகத" (36) என்ற பாடலின்பின் காணப்படுகின்றது. ()

33.—தேவர்கள் ஸ்ரீராமனுக்கு அபிஷேகம் நடத்துதல்.

மங்கல கீதம் பாட மறையொலி முழங்க [1]வல்வாய்ச்
சங்கினங் குமுறப் பாண்டில் தண்ணுமை[2]யொலிப்பத் தாவில்
பொங்குபல் லியங்க ளார்ப்பப் பூமழை பொழிய விண்ணோர்
எங்கணு யகனை [3]வெவ்வே றெதிர்ந்தபி டேகஞ் செய்தார்.

(இ-ள்.) மங்கலகீதங்கள் பாடவும், வேதவொலி முழங்கவும், வலிய வாயையுடைய சங்கினம் குமுறவும், தாளமும் மத்தளமும் ஒலிக்கவும், குற்றமற்ற ஒலியோங்கிய மற்றும் பல்வகைவாச்சியங்களும் ஆரவாரிக்கவும், பூமழைபொழியவும், தேவர்கள் எங்களுடைய நாயகனான ஸ்ரீராமனை வெவ்வேறாக எதிர்ப்பட்டு அபிஷேகஞ் செய்தனர்; (எ-று.)—விடைகொடுத்த படலம் 5-ஆம் பாடலைக்காண்க.
பி-ம்:—[1]வள்வாய்ச், வெற்றிச். [2]முழங்கவெங்கும், ஒலிப்பத்தாவி. [3]வேதத்தெழில், வெவ்வேறெதிர். (4311)

34.—மாதவர் முதலியோரும் சுக்கிரீவாதியரும் அபிஷேகஞ் செய்தல்.

மாதவர் மறைவ லாளர் மந்திரக் கிழவர் மற்றும்
மூதறி வாள [1]ருள்ள சான்றவர் முதனீ ராட்டச்
சோதியான் மகனு மற்றைத் துணைவரு மனுமன் றானும்
தீதிலா விலங்கை வேந்தும் பின்னபி டேகஞ் செய்தார்.

(இ-ள்.) மிக்கதவஞ்செய்கின்ற இருடியரும் வேதம்வல்லஅந்தணர்களும் மந்திரத்திற்கு உரியவரான மந்திரிமாரும் மிக்கபேரறிவாளிகளுமான ஆங்குள்ள மற்றைப் பெரியோரெல்லாம் முதலில் நீராட்ட, பின்பு சோதிமயனான சூரியனுடையமகனான சுக்கிரீவனும் மற்றைச் சினேகிதர்களும் அநுமானும் குற்றமற்ற இலங்கைவேந்தும் அபிஷேகஞ்செய்தார்; (எ-று.)—பி-ம்:—[1]உள்ளஞ். (4312)

35.—திருவபிஷேகதீர்த்தத்தின் வருணனை.

அங்கண்வா னுலகந் தாய வடிமலர்த் தவிசோ னூட்டும்
கங்கைவார் சடையி னேற்றான் கண்ணுத லொருவ னிந்நாள்
சிங்கவே றனையான் செய்ய திருமுடி யாட்டு நன்னீர்
எங்கணோற் றன்னோன் வாழு மென்றனர் புலவ ரெல்லாம்.

(இ-ள்.) அப்போது, சத்தியலோகத்திலே தாவிய (திரிவிக்கிரமனான திருமாலின்) திருவடியைத் தாமரைமலரைப் பீடமாகக்

கொண்டிருப்பவனை பிரமதேவன் கழுவியதனால்தோன்றிய கங்கையை நுதற்கண்ணையுடைய ஒருகடவுளாகிய சிவன் (தன்னுடைய) நீண்டசடைமுடியிலேற்றான்: இப்போது, சிங்கவேற்றையொத்தவனான இராமபிரானுடைய செவ்விய திருமுடியிலே அபிஷேகஞ்செய்ததனால் தோன்றிய சிறந்தநீரை அந்தச்சிவன் எவ்விடத்திலேற்று வாழ்வானென்று புலவோரெல்லாம் கூறினர்; (எ-று.)

திரிவிக்கிரமனான திருமாலின் திருவடியை யாட்டிய நீரினும் இராமபிரானான திருமாலின் திருமுடியிலாட்டிய நன்னீர் மிக்குள்ளதனால் அதனை அந்தச்சிவபிரானாலும் ஏற்கமுடியாதென்றவாறு: இதனால், திருவபிஷேக தீர்த்தத்தின் மிகுதி தெரிவிக்கும். இனி, திருவடியாட்டியநீரை முன்னமே சிரசாவகித்தனனாதலின், அச்சிரசினும் பிரதான உறுப்புவேறொன்றிலதாதலின், திருமுடியாட்டிய நீரை 'எங்கணேற்றன்னோன் வாழும் என்றனர்' என்றபடியுமாம். இச்செய்யுள் பல பிரதிகளிலும் காணப்பட்டிலது. (4313)

36.—சீதாபிராட்டியுடனே ஸ்ரீராமன் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு இருந்த தன்மை.

மரகத[1]ச் சயிலஞ் செந்தா மரைமலர்க் காடு பூத்துத்
திரை [2]யெறி கங்கை வீசுந் திவலையா னனைந்து செய்ய
இருகுழை தொடரும் வேற்கண் [3]மயிலொடு மிருந்த [4]தேய்ப்பப்
[5]பெருகிய செவ்வி கண்டார் பிறப்பெனும் பிணிகள் தீர்ந்தார்.

(இ-ள்.) மரகதமலை செந்தாமரை மலர்த்தொகுதிபூத்து அலையெறிகின்ற கங்கைவீசுந் திவலையால் நனைந்து செவ்விய இரண்டு குழைகளில் தொடர்ந்து செல்லுகின்ற வேற்கண்களைக் கொண்ட மயிலோடும் இருந்ததையொப்ப மிக்க (அவ்விராமபிரானுடைய) செவ்வியைக் கண்டவர் பிறப்பென்கிற பிணிகள் தீரப்பெற்றார்; (எ-று.)—இல்பொருளுவமை. பி-ம்:—[1]மலைமேற். [2]தவழ், கெழு. [3]மணியொடும். [4]ஏய்வ, தெய்வப். [5]பெருமிதச். (4314)

37.—திருவபிஷேகத்திற்கு வேண்டியன யாவும் இயலுதல்.

தெய்வநீ ராடற் கொத்த செய்வினை வசிட்டன் செய்ய
ஐயமில் [1]சிந்தை யானச் சுமந்திர னமைச்ச ரோடும்
நொய்தினி [2]னியற்ற நோன்பின் [3]மாதவர் நுனித்துக் காட்ட
[4]எய்தின வியன்ற பல்வே றிந்திரற் [5]கியன்ற வென்ன.

(இ-ள்.) தெய்வத்தன்மையுள்ள தீர்த்தங்களினால் அபிஷேகஞ் செய்வித்தற்கேற்ற சடங்குகளை வசிட்டன் செய்துமுடிக்குமாறு நோன்பினையுடையமாதவர் சூட்சுமமாகக்காட்டாநிற்கையில், ஐயமில்லாத மனத்தையுடையவனான அந்தச்சுமந்திரன் அமைச்சருடனே விரைவினில் சித்தஞ்செய்ய, இந்திரற்கு இயன்றனபோலப் பல்வேறு பொருள்களும்வந்தடைந்தன; (எ-று.)—அபிஷேகச்சடங்கினை வசிட்டமாமுனிவன் செய்து முடிக்குமாறு வேண்டிய சாமக்கிரிகளை யெல்லாம் மாதவர்கூறச் சுமந்திரன் அமைச்சரோடும் கொணர்ந்து சேர்த்தனனென்க. பி-ம்:—[1]சிந்தையானைச் சுமந்திர

வமைச்சனேடும். [2]இயற்றி. [3]மாதவன். [4]வெய்தினினியன்ற. எய்தின வியைந்த. [5]ஏய, ஏய்வது. (4315)

38.—ஸ்ரீராமபிரானுக்கு வசிட்டமுனிவன் திருமுடி சூட்டுதல்.

அரியணை யனுமன் தாங்க வங்கத னுடைவாள் [1]பற்றப்
பரதன்வெண் [2]குடைக விக்க விருவருங் கவரி வீச [நங்கள்
விரைசெறி [3]கமலத் தாள்சேர் [4]வெண்ணெய்மன் சடையன்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

(இ - ள்.) சிங்காசனத்தை அநுமான் தாங்கவும், அங்கதன் உடைவாளைக் கையிற்கொண்டிருக்கவும், பரதன் வெண்கொற்றக் குடையைப் பிடிக்கவும், மற்றையிரண்டு தம்பிமாரும் வெண்சாமரை வீசவும், வாசனை பொருந்திய தாமரைமலரில் வசிப்பவளான இலக்குமி சேர்ந்திருக்கப்பெற்ற திருவெண்ணெய்நல்லூர்க்கு மன்னனான சடையனுடைய வமிசத்து முன்னோராகவுள்ளோர் கொணர்ந்துகொடுக்க, வசிட்டமுனிவன் வாங்கி (ஸ்ரீராமனுக்கு) மகுடத்தைச் சூட்டினான்: (எ - று.)

சூரியகுலத்தவரெனப்படுகின்ற சோழவரசர்க்கு ஒருசார் வேளாண் மரபினர் பட்டாபிஷேகசமயத்தில் மகுடங்கொணர்ந்து தருதல் தமிழ்நாட்டுவழக்கமாதலாலும், இராமபிரான் சூரியவமிசத்தவனாதலாலும் அந்தத்தமிழ்நாட்டுவழக்கையொட்டிவேளாண் குலத்துச் சடையப்ப முதலியாரின் முன்னோர் மௌலி கொடுத்தாரென்றனரென்பர்; இனி, 'வர்த்தகஞ்செய்யும் வேளாண்மரபைச் சேர்ந்தவன் சடையப்பனாதலால், அவன் முன்னோரென்பது குபேரனைக்குறிக்கும்' எனக் கூறுவாருமுளர். கவி தம்மை யாதரித்த சடையப்பபிரபுவை எப்படியாவது இந்தப்பட்டாபிஷேகத்திற் சம்பந்தப்படுத்தவேண்டுமென்று அந்தச்சடையன் மரபுளோர் மௌலியைக் கொணர்ந்து கொடுத்ததாகக் கூறினார். சக்கரவர்த்திப் பதவி உலகத்திலுள்ள பதவிகளெல்லாவற்றிலும்சிறந்தது: அந்தப் பதவியைச் சடையன் மரபினோர் ஈந்தாரென்று மகாகவியாகிய கம்பர் தம்மையாதரித்த வள்ளலை மேம்படுத்தக் கூறிய திறம்மிகப் பாராட்டற்குரியது. பி - ம்:—[1]ஏந்த. [2]கவிகையேந்த. [3]குழலி யோங்க. [4]வெண்ணெயூர்ச் சடையன்றன்ன. (4316)

39.—ஸ்ரீராமன் மௌலிசூடியிருத்தல்.

வெள்ளியும் பொன்னு [1]மொப்பார் விதிமுறை மெய்யிற்
கொள்ளிய [2]நாளி னல்ல வோரையி னுலக மூன்றும் [கொண்ட
[3]துள்ளின [4]களிப்ப மௌலி [5]சூடினன் [6]கடலின் வந்த
தெள்ளிய திருவுந் தெய்வப் பூமியுஞ் [7]சேருந் தோளான்.

(இ - ள்.) திருப்பாற்கடலில் தோன்றிய தெள்ளிய இலக்குமியும் தெய்வத்தன்மையுள்ள பூமியுஞ் சேருந் தோளையுடையவனான ஸ்ரீராமன்,— தேர்ந்தெடுத்த சிறந்த நல்லநாளில் நல்லமுகூர்த்தத்தில் உலகமூன்றுந் துள்ளினவாய்க் களிப்ப, பிருகஸ்பதியையும்

சுக்கிராசாரியனையும் ஒத்த புரோகிதர் விதித்த முறைப்படியே கிரீடத்தை(த் தன்) சிரசிற் சூடினன்; (எ - று.)

மெய்-உடலின் ஏகதேசமாகிய சிரசையுணர்த்திற்று. கொள்ளுதல்-தேர்ந்தெடுத்தல். பி-ம்:—[1] என்போர். [2] நானுநல்லவோரையும். [3] துள்ளினர். [4] குனிப்ப, [5] சூட்டினன். [6] சுருதிநான்கும். [7] செங்கணனும். (4317)

40.—இராமன் முடிசூட, மூவுலகமுந் துயர்தீர்தல்.

[1] சித்தமொத் துளனென் றோதுந் திருநகர்த் [2] தெய்வ நன்னூல்
[3] வித்தக னொருவன் சென்னி [4] மிலைச்சிய தெனினு மேன்மை
[5] ஒத்தமூ வுலகத் தோர்க்கு முவகையி னுறுதி யுன்னில்
தத்தமுச் சியின்மேல் [6] வைத்த தொத்ததத் தாம மௌலி.

(இ-ள்.) (அத்) திருநகரிலுள்ள தெய்வநன்னூலில் [வேதங்களில்] வல்லவனென மனத்திற்கு ஒத்தவனென்று சொல்லத்தக்க வசிட்டமுனிவன் பேரறிஞனை ஸ்ரீராமனது சென்னியிலே சூட்டியதென்றாலும், அந்த ஒளியுள்ள கிரீடமானது,—மேன்மைபொருந்திய மூவுலகத்தோர்க்கும் (அப்போதுதோன்றிய) மகிழ்ச்சியினுறுதியை ஆராய்ந்துபார்ப்போமாயின், தங்கள் தங்களுடைய சிரசில்வைத்ததை ஒத்திருந்தது; (எ - று.)

மூவுலகத்தோரும் தாம் தாம் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்றனர்போல அவ்வளவு மகிழ்ச்சி கொண்டிருந்தார்களென்றவாறு. பி-ம்:—[1] சித்த மொத்துளது, சித்தமொத்தனன், சித்தமொத்தியது. [2] செல்வமென்ன. [3] உத்தமத்தொருவன். [4] விளங்கியதேனுமெய்ம்மை, விளங்கியவுயர்பொன்மௌலி. [5] ஒத்து...இறுதியுன்னில், ஒத்து மெய்க்குவமைகூரவோங்கு மூவுலகத்தோர்க்கும், [6] வைத்ததொத்தெனத்தளர்வு தீர்ந்தார். (4318)

41.—பூமிதேவி இராமனைச் சேர்தலின் வருணனை.

பன்னெடுங் கால நோற்றுத் [1] தன்னுடைப் பண்பிற் கேற்ற
பின்னெடுங் கணவன் றன்னைப் [2] பெற்றிடைப் பிரிந்து முற்றும்
[3] தன்னெடும் [4] பீழை நீங்கத் [5] தழுவினள் [6] தளிர்க்கை [7] நீட்டி
நன்னெடும் பூமி யென்னு நங்கைதன் [8] கொங்கை யார.

(இ-ள்.) மிகநெடுங்காலம் நோற்றுப் பின்பு தன்னுடைய தன்மைக்கேற்ற பெருமையுடைய கணவனைப்பெற்று இடையிலே பிரிந்து (அதனால்) நிரம்பத்தோன்றிய தன்னுடைய மிக்க பீழையெல்லாம் நீங்கவே, சிறந்த நெடிய பூமியென்கின்ற பெண் தன் கொங்கை நிரம்பத் தளிர்க்கையை நீட்டித் தழுவினள்; (எ - று.)

பட்டாபிஷேகஞ் செய்துகொண்டதனால் பூமி ஸ்ரீராமனுக்கு வசமாயிற்றென்பதைக் கவி இவ்வாறு கூறுகின்றார். இராமனைப் பிரிந்த நிலையில் வாடியன யாவும் இப்போது தளிர்த்ததனால்

'தளிர்க்கை நீட்டி' என்றுரென்னலாம். பீழை-துன்பம். பி - ம்:— [1]தானுடைப், தன்னிடைப். [2]பிரிந்திடைப்பெற்றுமுற்றும், பெற்றிடைப்பிரிந்து தேம்பும், பெற்றிடைப் பிரிந்தேமுற்ருள். [3]தன்னுடைப். [4]ஆசையாரத், மானநீங்கத், மாசுநீங்கத். [5]தழுவிய. [6]இரு, தடக். [7]தாங்க, தன்னால். [8]கொங்கையோடும். இச்செய்யுளின்பின் ஒரு பிரதியில்

இப்படித் தழுவி மாத ரிருவரு மிரண்டு பாலும்
செப்புற லரிய வின்பச் செல்வத்துட் செலுத்து நாளில்
கப்புடைச் சிரத்தோன் சென்னி கடிந்தவி லிராமன் காதல்
வைப்புடை வளாகந் தன்னில் மன்னுயிர் வாழ்த்த வந்தான்.

என்று ஒருசெய்யு ளுள்ளது. (4319)

42.—பரதனுக்கு இளவரசுமுடிசூட்டி ஸ்ரீராமன் இனிதிருத்தல்.

விரத [1]நூன் முனிவன் சொன்ன விதிநெறி வழாமை நோக்கி
வரதனு [2]மிளைஞற் காங்கண் [3]மாமணி மகுடஞ் [4]சூட்டிப்
பரதனைத் தனது செங்கோல் நடாவுறப் பணித்து நாளும்
கரைதெரி விலாத போகக் [5]களிப்பினு [6]ளிருந்தான் மன்னோ.

(இ - ள்.) விரதங்களை யனுட்டிக்குந் தன்மைவாய்ந்த சாஸ்திரங்களில்வல்ல வசிட்டமுனிவன் சொன்ன விதிமுறை தவருமற் பார்த்து, (வேண்டியவர்விருப்பின்படி) வேண்டியதைத் தரவல்லனை ஸ்ரீராமனும் (தன்) தம்பியாகிய பரதனுக்கு (இளவரசு என்பதற்கு அறிகுறியாக) அப்பொழுது சிறந்த இரத்தினகிரீடத்தைச் சூட்டி, (அந்தப்) பரதனைத் தன் செங்கோலை நடத்துமாறுகட்டளையிட்டு, நாளும் அளவிடமுடியாதபோகங்களை யனுபவிப்பதனாலான களிப்பினு ளிருந்தான்; (எ - று.)—இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை. பி-ம்:—[1]மா. [2]இளைஞர்க்கு [3]மணியணி. [4]சூடிப். [5]களியினுள். [6]இருந்தகாலை. சிலபிரதிகளில் இச்செய்யுளுக்குப்பின்

மறையவர் வாழி வேத மனுநெறி வாழி நன்னூல்
முறைசெயு மரசர் திங்கண் மும்மழை வாழி மெய்ம்மை
இறையவ னிராமன் வாழி யிக்கதை கேட்போர் வாழி
அறைபுகழ்ச் சடையன் வாழி யரும்புக ழனுமன் வாழி.

என்ற செய்யுளும், இதன்பின் விடையிறுத்தபடலத்திலுள்ள "உம்பரோடு (37) என்றசெய்யுளும் இருக்க, படலமும் யுத்தகாண்டமும் முற்றும் என்று எழுதியுள்ளது: வேறொருபிரதியில், "மறையவர்" என்ற இங்குக்காட்டிய செய்யுளோடு வேறொரு *வாழிச்செய்யுளிருக்க, படலமும் காண்டமும் முற்றும் என்று எழுதியுள்ளது. இங்ஙனிருத்தல்கொண்டு, 'கம்பர் விடைகொடுத்தபடலத்தைப் பின்புபாடிச் சேர்த்தனரோ?' எனக் கருதுகின்றனர். (4320)

திருமுடிசூட்டுபடலம் முற்றிற்று.

---

*ஓலைமுறிந்துபோய்விட்டதனால் இச்செய்யுளைக் குறிக்கமுடியவில்லை.

39 - ஆவது விடைகொடுத்த படலம்

(பட்டாபிஷேகமஹோத்ஸவத்தைக் காணுமாறு வந்திருந்தவர் யாவர்க்கும் ஸ்ரீராமன்) விடையீந்ததைக் கூறும் படல மென்பது, பொருள். பட்டாபிஷேகமானபின்பு நாடோறும் ஸ்ரீராமன் சீதா தேவியுடனே அத்தாணிமண்டபத்தில் தன்இருமருங்கிலும் வெண் சாமரைவீச, முடிமீது வெண்கொற்றக்குடைநிழற்ற,மறையவராசி கூற, மன்னவரிறைஞ்சியேத்த, மந்திரிமுதலியோர் சூழ்ந்திருக்க, பட்டாபிஷேகங்காணவந்த மன்னவராதியரும் விபீடண சுக்கிரீவ ராதியரான துணைவரும் வானரசேனாசமுத்திரமும்சூழச்சிங்காசனத் தில் வீற்றிருக்க, இங்ஙனம் இரண்டுதிங்கள் இனிதுகழிந்தது. பின்பு ஒருநாள் மறையவர்க்குத் தானமளித்தபின், மன்னவர்கட்கு ஏற்றபெற்றி பரிசுடனே விடையளித்திட்டு, சுக்கிரீவன் அங்கதன் அநுமான்முதலிய வானரவீரர்கட்கும் விபீடணன் குகன்என்ற இவர்கட்கும் ஏற்றபெற்றி முகமன்கூறிப் பரிசு அளித்து விடை யீந்தானாக, யாவரும் தத்தம் பதிக்குச் செல்ல, பின்னர் அந்தச் சக்கரவர்த்தித்திருமகன் இனிது அரசுபுரிந்தனனென்பது, இப்பட லத்திற் கூறும் பொருள்.

1.—விடைகொடுக்குமாறு ஸ்ரீராமன் சீதாதேவியுடன் ஓலக்கமண்டபத்திற்கு வருதல்.

பூமகட் கணிய தென்னப் [1]பொலிபசும் பூரி சேர்த்தி
மாமணித் தூணிற் செய்த மண்டப மதனி னுப்பண்
கோமணிச் சிவிகை மீதே கொண்டலு மின்னும் போலத்
தாமரைக் கிழத்தி யோடுந் தயரத ராமன் சார்ந்தான்.

(இ - ள்.) பூமிதேவிக்கு அணிகலம்போல் விளங்குகின்றதும் பைம்பொன்சேரப்பெற்றுச் சிறந்தமணிகள்பதிக்கப்பெற்ற தூண் களையுடையதுமாகிச் செய்யப்பட்ட மண்டபமதனுடைய நடுவில், சிறந்தமணிகளழுத்திய சிவிகையின்மேல் மேகமும் மின்னலும் போலத் தாமரைமலரில் வீற்றிருப்பவளான இலக்குமியினமிசமான சீதாதேவியோடு தசரதகுமாரனான ஸ்ரீராமன் வந்துசேர்ந்தான்; (எ - று.)—பூரி-பொன். பி-ம்:—[1]பொசி. (4321)

2.—இராமன் சிங்காதனத்து வீற்றிருத்தல்.

விரிகடல் [1]நடுவுட் பூத்த மின்னென வாரம் வீங்க
எரிகதிர்க் கடவுள் தன்னை யினமணி மகுட மேய்ப்பக்
கருமுகிற் கரசு செந்தா மரைமலர்க் காடு பூத்தோர்
அரியணைப் [2]பொலிந்த தென்ன [3]விருந்தன னயோத்தி வந்தான்.

(இ-ள்.) பரவியகடலின் நடுவிலே தோன்றிய மின்னல்போல முத்தாகாரம் மிகத்தோன்றவும், விளங்குகின்ற (ஆயிரங்) கிரணங் களை யுடையவனான சூரியனைத் தொகுதியான மணிகளழுத்திய மகுடம் ஒத்திருக்கவும், கரியமுகிலரசு செந்தாமரைமலர்த்தொகுதி

பூத்து ஒப்பற்ற அரியணையிற் பொலிந்தாற்போல, அயோத்தியில் திருவவதரித்தவனான ஸ்ரீராமன் (அரியணையில்) வீற்றிருந்தான்; (எ-று.)—பி-ம்:—[1]நடுவட். [2]பொலிவதேபோல், பொலிந்ததேய்ப்ப. [3]பொலிந்தனன். (4322)

3.—இதுமுதல் ஏழுகவிகள்-ஒருதொடர்: ஸ்ரீராமன் அத்தாணிமண்டபத்திற் சிறப்புடன் வீற்றிருக்க, வானவர் முதலியோர் சூழ்ந்திருந்தமையைத் தெரிவிக்கும்.

மரகதச் சயில மீது [1]வாணிலாப் [2]பாய்வ தென்ன
இருகுழை [3]யிடறும் வேற்க ணிளமுலை யிழைந லார்தம்
கரகம லங்கள் பூத்த கற்றையங் கவரி [4]தெற்ற
உரகரு நரரும் வானத் தும்பரும் [5]பரவி யேத்த.

(இ-ள்.) மரகதமலையின்மீது வெண்ணிறமுள்ள நிலாப் பாய்வதுபோல, இருகுழையிலிடறும் வேல்போன்ற கண்களையும் இளமுலைகளையுமுடைய அணிகலனணிந்த மகளிருடைய கைத்தாமரைகளிலே தோன்றிய அழகிய சாமரைக்கற்றை (தன்தோளின்மீது) முட்டவும், உரகர் நரர் சுவர்க்கலோகத்தவரான தேவர் என்றிவர்கள் பரவித்துதிக்கவும்,—(எ-று.)—இச்செய்யுள்முதலுள்ள செயவெனெச்சங்கள் அடுக்கி, ஏழாஞ் செய்யுளிலுள்ள 'இருந்தகாலை' என்றவிடத்து 'இருந்த' என்றதனோடு இயையும். இராமபிரானுடைய திருத்தோள்களில் வெண்சாமரைக் கற்றை தெற்றியது - மரகதச்சயிலத்து வாணிலாப்பாய்வதை யொக்குமென்க. பி - ம்:—[1]வானிலாப். [2]பரந்ததேய்ப்ப. [3]தொடரும். [4]தோற்ற. [5]பரசி. ()

4. உலக[1]மீ ரேழுந் [illegible]ன்ன வொளிநிலாப் பரப்ப வானில்
[2]திலகவா ணுதல்வெண் டிங்கள் சிந்தைநொந் தெளிதிற் [றேயக்
கலகவா ளிருதர் கோனைக் கட்டழித் திட்ட கீர்த்தி
இலகிமே னிவந்த தென்ன வெழுதனிக் குடைநின் றேய.

(இ-ள்.) (இராமபிரானுடைய) திலகமணிந்த ஒளிபொருந்திய நுதலாகிய வெண்டிங்கள் பதினான்குஉலகங்களிலும் தன்னிடத்திலுள்ள ஒளிபொருந்திய நிலாவைப் பரப்புதலால், வானிலுள்ள வெண்டிங்கள் மனம் நொந்து எளிமையுடன் தேயவும்,—'போர் விருப்பமுள்ள வாளேந்திய அரக்கர் தலைவனான இராவணனைப் பந்துவர்க்கத்தோடும் அழித்திட்ட கீர்த்தியானது விளக்கமுற்று மேலோங்கியது' என்று கருதுமாறு மேலோங்கிய தனிக்குடை நின்று பொருந்தவும்,—(எ - று.)

சந்திரன் கிருட்டிணபட்சத்தில் நாடோறும் தேய்வது, இராமபிரானுடைய முகசந்திரன் பதினான்குலோகங்களிலும் ஒளிநிலாப் பரப்புவது கண்டு தன்னால் அங்ஙனம் ஒளிபரப்பமுடியாமையால் எளிமையுற்றுத் துயருறுவதாலாகு மென்னுங் கருத்துப்பட முன்னிரண்டடிகள் கூறப்பட்டன. 'வெண்டிங்கள்' என்ற தொடர், 'திலகவாணுதல்' என்பதனோடும் 'வானில்' என்பதனோடும் இயை

யும். புகழை வெண்ணிறமுடையதென்றல், கவிமரபு. வெண்கொற்றக்குடை பிடிக்கப்பட்டிருப்பது இராவணனைக் கட்டழித்ததனால் விளைந்த கீர்த்தியே இங்ஙனம் குடையுருக்கொண்டு மேல்நிவந்தது போலுமெனப் பின்னிரண்டடிகளில் தன்மைத்தற்குறிப்பேற்றவணி காண்க. பி - ம்:—[1]மீதெழுந்ததென்ன. [2]இலகவாளொளி கொடிங்கள், திலதமாநின்ற திங்கள். (4324)

5. மங்கல கீதம் பாட மறையவ ராசி கூறச்
சங்கினம் குமுறப் பாண்டில் தண்ணுமை துவைப்பத் [1]தாவில்
பொங்குபல் லியங்க ளார்ப்பப் பொருகயற் கருங்கட் செவ்வாய்ப்
பங்கய முகத்தி னார்கள் [2]மயினடம் [3]பயில மாதோ.

(இ - ள்.) மங்கலகீதங்களை (அவற்றிற்குஉரியவர்) பாடவும், வேதம் வல்ல அந்தணர்கள் வாழ்த்துக்கூறவும், சங்கினம் குமுறவும், தாளமும் மத்தளமும் (தமக்குரிய) ஒலியைச்செய்யவும்,(குற்றமற்ற மேன்மேல்) ஒலி செய்கின்ற பலவகைவாத்தியங்கள் ஆரவாரிக்கவும்,—போர்செய்கின்ற கயல்மீனையொத்த கரியகண்களையும் செவ்வாயையுமுடையரான தாமரைபோலும் முகமுள்ள மகளிர் மயில்போன்ற நடனத்தைப் பழகவும்,—(எ-று.)—திருமுடிசூட்டுபடலம், 33-ஆம் பாடலைக் காண்க. பி - ம்:—[1]தாவிப், [2]பயில். [3]பயிலலுற்றார். (4325)

6. திரை[1]கடற் கதிரு நாணச் செழுமணி மகுட கோடி
கரைதெரி விலாத [2]சோரிக் கதிரொளி [3]பரப்ப நாளும்
வரைபொரு மாட வாயில் நெருக்குற வந்து மன்னர்
பரசியே வணங்குந் தோறும் பதயுகஞ் சேப்ப மன்னோ.

(இ - ள்.) அலைகின்றகடலிற் றோன்றும் (உதயகாலச்) சூரியனும் வெட்குமாறு செழிப்புள்ள [சிறந்த] மணிகளையுடைய மகுடவரிசைகள் அளவுகாணவொண்ணாத சொரிதலைக்கொண்ட கிரணங்களோடுகூடிய ஒளியைப் பரப்பவும்,—நாளும் மலையையொத்துத் தோன்றுகின்ற மாடவாயிலிலே நெருக்கமுண்டாகுமாறு (பெருந்திரளாக) வந்து மன்னவர் துதித்து வணங்குந்தோறும் தாளிணைகள் செந்நிறமடையவும், (எ-று.)—மகுடகோடிகள், வணங்கவந்த மன்னவருடையவை. பி-ம்:—[1]பொருகடலும். [2]சோதிக். [3]கடுப்ப.()

7. மந்திரக் கிழவர் சுற்ற [1]மறையவர் வழுத்தி யேத்தத்
தந்திரத் தலைவர் போற்றத் தம்பியர் மருங்கு சூழச்
சிந்துரப் பவளச் செவ்வாய்த் தெரிவையர் பலாண்டு கூற
இந்திரற் குவமை யேய்ப்ப வெம்பிரா னிருந்த காலை.

(இ - ள்.) ஆலோசனைக்குஉரியவரான மந்திரிமார் சூழ்ந்திருக்கவும்,—வேதம்வல்லஅந்தணர் கொண்டாடித் துதிக்கவும்,—சேனாபதிகள் போற்றி யென்னவும், தம்பிமார் அருகேசூழ்ந்திருக்கவும்,—சிந்துரம்போன்ற [செந்நிறமுள்ள] பவழத்தையொத்த செந்நிற

வாயையுடைய மகளிர் பல்லாண்டு கூறவும்,—தேவேந்திரனுக்கு உவமை பொருந்துமாறு எமது தலைவனாகிய ஸ்ரீராமன் வீற்றிருந்த போது,—(எ - று.)—'வெய்யோன் மகன்வந்துவணங்கிச் சூழ, வீடணக்குரிசில் வணங்கிச் சூழ்ந்தான்' எனஒன்பதாங்கவியில்முடியும். பி-ம்:—[1]மறையவர்க்கிறைவனோடும். இதன்பின் சிலபிரதிகளில் இரண்டு செய்யுள்கள் காணப்படுகின்றன: அவை வருமாறு:—

1. கெவனொடு [1]கெவாக்கன் தூம்பன் கேசரி கெந்த மாதன்
தவ[2]னுறு சரபன் சாம்பன் சுடேணன்சம் பாதி நீலன்
நவையறு பனசன் தாரன் [3]கெசனளன் [4]சமீர ணண்பாம்
இவ[5]னரி லோமன் மின்போ லெயிற்றின னிடபனென்போன்.

பி ம்:—[1]தெவந்தன். [2]அறு. [3]தசநளன். [4]துமிரன். [5]இரி.

2. [1]விரதன்வீ மாக்கன் வேக [2]தெரிசியே விந்தன் வெற்றிக்
கரமுடைச் சதுக்கன் சோதி முகன் [3]தெதி முகன்[4]க யந்தன்
அரன்விறற் கொடிய கோப னிடும்பனோ டரம்ப னுண்மை
தெரிதரு வசந்தன் கொற்றத் துன்முகன் தீர்க்க [5]பாதன்.

பி-ம்:—[1]விரகன். [2]கேசரி, [3]எரி. [4]கவந்தன். [5]பாகன். (4327)

8. மயிந்தன்மா துமிந்தன் கும்ப [1]னங்கத னனுமன் மாறில்
சயந்தரு குமுதக் கண்ணன் சதவலி குமுதன் தண்டார்
நயந்தெரி ததிமு கன்கோ கசமுகன் முதல நண்ணார்
வியந்தெழு மறுபத் தேழு [2]கோடியாம் வீர ரோடும்.

(இ - ள்.) மயிந்தன்முதல் கெசமுகன்ஈருகக் கூறியவர்களைப் பிரமுகராகவுடைய பகைவர் வியந்தெழத்தக்க அறுபத்தேழுகோடி யெண்ணிக்கையுள்ள வீரருடனே,—(எ-று.)—[1]அகம்பன் மற்று. [2]கோடிய. (4328)

9. ஏனையர் பிறருஞ் சுற்ற வெழுபது வெள்ளந் [1]துற்ற
வானர ரோடும் வெய்யோன் மகன்வந்து வணங்கிச் சூழத்
தேனிமி ரலங்கற் பைந்தார் வீடணக் குரிசில் செய்ய
மானவா ளரக்க ரோடு வந்தடி [2]வணங்கிச் சூழ்ந்தான்.

(இ - ள்.) மற்றுமுள்ளார்பிறரும் சூழவும், எழுபதுவெள்ளமாகப் பொருந்திய வானரரோடும் சூரியகுமாரனாகசுக்கிரீவன்வந்து வணங்கிச் சூழ்ந்திருக்கவும், தேன்மிக்குள்ள அசையுந் தன்மையுள்ள புதியமாலையைச்சூடிய வீடணனென்றகுரிசில் செவ்விய மானத்தையும் வாட்படையையுமுடைய அரக்கரோடும் வந்து அடிவணங்கிச் சூழநின்றான்; (எ - று.)—பி - ம்:—[1]இற்ற. [2]வணக்கஞ் செய்தார்.

மூன்றும்பாடல் முதல் இதுகாறுமுள்ள குளகச்செய்யுள்கட்கு முடிபுவருமாறு:—(3) தெற்ற, ஏத்த, (4) தேய, ஏய, (5) பாட, கூற, குமுற, துவைப்ப, ஆர்ப்ப, நடம்பயில, (6) பரப்ப,சேப்ப,(7) சுற்ற, ஏத்த, போற்ற, சூழ, உற, உவமையேய்ப்பஇருந்தகாலை,—

(8) வீரரோடும், (9) வானரரோடும் வெய்யோன்மகன் வந்துவணங்கிச்சூழ, வீடணக்குரிசில்அரக்கரோடு வந்தடிவணங்கிச்சூழ்ந்தான் என்க. (4329)

10.—குகன் சேனையுடனே வந்தமை.

**வெற்றிவெஞ் சேனை யோடும் வெறிப்[1]பொறிப் புலியின்[2]வெவ்வால்
சுற்றுறத் தொடுத்து வீக்கு மரையினன் [3]சுழலுங் கண்ணன்
கற்[4]றிரள் வயிரத் திண்டோள் கடுத் திற மடங்க லன்னான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க் கிறைகுகன் [5]தொழுது சூழ்ந்தான்.**

(இ-ள்.) வெற்றியையும் (உடற்) புள்ளியையுமுடைய வெவ்வியபுலியின்வாலைச் சுற்றுறப் பொருத்திக் கட்டுகின்ற அரையையுடையவனும், சுழலுந்தன்மையைக்கொண்ட கண்களையுடையவனும், கற்போல்திரண்ட உறுதி பொருந்திய தோளுடனே கொடிய திறமையையுடைய சிங்கத்தையொத்தவனும், மோதுகின்ற நீரைக்கொண்ட கங்கையிலே நாவாய்கட்குத் தலைவனுமான குகன்வெற்றி பொருந்திய (தன்)வெவ்வியசேனையுடனே வலம்வந்துவணங்கினான்; (எ-று.)—பி-ம்:—[1]பொலிப். [2]வெவ்வாய். [3]சுழல்செங். [4]திறல். [5]இறைஞ்சிநின்றான். (4330)

11.—வந்தவரை யிருக்குமாறு இராமன் கூறுதல்.

**வள்ளலு மவர்கள் தம்மேல் வரம்பின்றி வளர்ந்த காதல்
உள்ளுறப் பிணித்த செய்கை யொளிமுகக் கமலங் [1]காட்டி
அள்ளுறத் தழுவி னான்[2]போன் றகமகிழ்ந் தினிது நோக்கி
எள்ளலி லாத [3]மொய்ம்பீ ரீண்டினி [4]திருத்தி ரென்றான்.**

(இ-ள்.) வரையாதருளுந்தன்மையனான இராமனும் அவர்கள் மீது எல்லையின்றிவளர்ந்த அன்பு உள்ளே பொருந்தப் பிணித்த செய்கையை ஒளிபொருந்திய முக கமலத்தாற் காட்டிக்கொண்டு, அழுத்தமாகத் தழுவினான்போல மனமகிழ்ந்து இனிமையாகப் பார்த்து, 'பழிப்புஇல்லாத வலிமையுடையீர்! இங்கே இனிது இருங்கள்' என்றான்; (எ-று.)—பி-ம்:—[1]காட்ட. [2]போல். [3]மொய்ம்பர். [4]இருக்க. (4331)

12.—இதுவும் அடுத்த கவியும்-ஒருதொடர்: இனிதிருப்ப இரண்டுமாதங் கழிந்ததெனல்.

**நன்னெறி யறிவு சான்றோர் நான்மறைக் கிழவர் மற்றைச்
சொன்னெறி [1]யறியு நீரார் தோமறு புலமைச் செல்வர்
பன்னெறி [2]தோறுந் தோன்றும் [3]பருணிதர்[4]பண்பின் கேளார்
மன்னவர்க் கரசன் [5]பாங்கர் மரபினுற் சுற்ற மன்னோ.**

(இ-ள்.) நல்லநெறியில் அறிவுமிக்கவரும், நான்குவேதங்களிலும் உரிமைபெற்றவரும், பேசவேண்டியமுறைமையை யறியுந் தன்மையினரும், குற்றமற்ற புலமையைச் செல்வமாகப்பெற்ற

வரும்,மற்றும்நற்குணங்கட்குஉறவினருமான பலவகைப்பட்டசாத்திரத்துறைகளிலும் விளங்குகிற பக்குவசாலிகள் அரசர்க்கரசனான ஸ்ரீராமன்பக்கத்திலே முறைமைப்படி சூழ்ந்திருக்க,—(எ - று.)—பி-ம்:—[1] அறிவு. [2]வகையிற், தொன்று, [3]பருமணிப். [4]பண்பிற். [5]தன்னை. (4332)

13. தேம்[1]படு [2]படப்பை மூதூர்த் [3]திருவொடு மயோத்தி சேர்ந்த
பாம்பணை யமலன் தன்னைப்[4]பழிச்சொடும் வணக்கம் பேணி
வாம்புனற் பரவை ஞாலத் தரசரு மற்று ளோரும்
எம்பலுற் றிருந்தார் நொய்தி னிருமதி யிறந்த தன்றே.

(இ-ள்.) வாவுகின்ற புனலைக்கொண்ட கடலினாற்சூழப்பெற்ற நிலவுலகத்து அரசரும் மற்றுளோரும், தேன்பொருந்திய சோலையைக்கொண்ட மூதூராகிய அயோத்தியிலே திருவுடனே சேர்ந்த பாம்பை அணையாகக்கொண்ட திருமாலினமிசமான ஸ்ரீராமனைத் துதித்தலோடு வணங்குதலையும் விரும்பிச்செய்தவண்ணம்மகிழ்ச்சி பொருந்தியிருந்தார்: இலேசாக இரண்டு மாதங்கள் (இவ்வாறாகக்) கழிந்தன;(எ-று.)—பி-ம்:—[1]புனற். [2]படலை. [3]திருநகர். [4]பழிப்பற.

14.—கவிக்கூற்று: இனி, ஸ்ரீராமன் செய்ததைச் சொல்வோமெனல்.

நெருக்கிய வமர ரெல்லா நெடுங்கடற் [1]கிடைநின் றேத்தப்
பொருக்கென வயோத்தி [2]யெய்தி [3]மற்றவர் பொருமல் தீர
வருக்கமோ டரக்கர் யாரு மடிதர வரிவிற் கொண்ட
திருக்கிளர் மார்பி னன்பிற் [4]செய்தது செப்ப லுற்றாம்.

(இ - ள்.) நெடிய திருப்பாற்கடலினிடையிலே மிகத்திரண்ட தேவர்கள் யாவரும் நின்று துதிக்க, விரைந்து அயோத்தியிலே திருவவதரித்து அந்தத் தேவர்களின் துயரம் நீங்குமாறு கூட்டத்துடனே அரக்கர்யாவரும் மடியும்படி கட்டமைந்தவில்லைக்கொண்ட இலட்சுமி விளங்குகின்ற திருமார்பையுடையவனான இராமபிரான் பின்பு செய்ததைச் சொல்லத்தொடங்குவோம்; (எ-று.)—பி-ம்:—[1]இறை. [2]எய்தா. [3]மாற்றவர். [4]செய்ததும். (4334)

15.—ஸ்ரீராமன் அந்தணர்க்குத் தானமளித்துவிட்டு, அரசரை வருக எனல்.

மறையவர் தங்கட் கெல்லா மணியொடு [1]முத்தும் பொன்னும்
நிறைவளம் பெருகு பூவுஞ் சுரபியு நிரைத்து மேன்மேல்
குறையிதென் றிரந்தோர்க் கெல்லாங் குறைவறக் கொடுத்துப்
அறைகழ லரசர் தம்மை வருகென வருள வந்தார். [பின்னர்

(இ - ள்.) வேதம்வல்ல அந்தணர்கட்கெல்லாம் இரத்தினங்களுடனேமுத்துக்களும் பொன்னும் மிக்கவளப்பம் பெருகுகின்ற பூமியும் பசுக்களும் மேன்மேல் தொகுதியாகத்தந்து, 'இது எமக்கு வேண்டும் பொருள்' என்று இரந்தவர்க்கெல்லாம் குறைவுநீங்கக்

கொடுத்துப் பின்பு ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த அரசர்களை 'வருக' என்று அருளப்பாடுசெய்ய, (அவர்கள்) வந்தனர்;(எ - று.) —முத்துச் சிறத்தலால், தனியே கூறினுர். பி - ம்:—[1]பொன்னும் பூணும், பொன்னும்முத்தும். (4335)

16.—வந்த அரசர்களுக்கு வெகுமதியளித்து விடைதருதல்.

ஐயனு மவர்கள்த ம்மை யகமகிழ்ந் தருளி னோக்கி
வையகஞ் சிவிகை தொங்கன் மாமணி மகுடம் பொற்பூண்
கொய்யுளைப் புரவி திண்டேர் குஞ்சர மாடை [1]யின்ன
மெய்யுறக் கொடுத்த பின்னர்க் கொடுத்தனன் விடையு மன்றே.

(இ - ள்.) ஸ்ரீராமனும்,—அவ்வரசர்களை மனமுவந்து கருணையோடு பார்த்து, (அவர்கட்குப்) பூமி சிவிகை மாலைகள் சிறந்தமணிகளழுத்திய மகுடங்கள் பொற்பூண்கள் கொய்தபிடரிமயிரையுடைய குதிரைகள் வலிய தேர்கள் யானைகள் ஆடைகள் என்ற இவைகளை மனப்பூர்வமாகக் கொடுத்தபின்பு விடையுந் தந்தான்; (எ - று.)—இவ்வரசர்கள் பட்டாபிஷேகங் காணவந்தவர்கள். பி - ம்:—[1]இன்சொல். (4336)

17.—இதுமுதற் பதினைன்குகவிகள்-சுக்கிரீவன் முதலினுர்க்கு வெகுமதியளித்ததைக் கூறும்.

சம்பரன் தன்னை [1]வென்ற தயரத னீன்ற காலத்து
உம்பர்தம் பெருமா னீந்த வொளிமணிக் கடகத் தோடும்
கொம்புடை மலையுந் தேருங் குரகதக் குழுவுந் தூசும்
[2]அம்பரத் தன்னை நீத்தா னலரிகா தலனுக் கீந்தான்.

(இ-ள்.) திருப்பாற்கடலைவிட்டு (அயோத்தியில்) திருவவதரித்தவனுன ஸ்ரீராமன்,—சம்பராசுரனைவென்ற தசரதன் (தன்னைப்) பெற்ற காலத்தில் தேவேந்திரனீந்த ஒளிபொருந்திய இரத்தின கடகத்துடனே தந்தங்களையுடைய மலைபோன்ற யானைகளும் தேர்களும் குதிரைக்கூட்டமும் ஆடைகளும் (என்ற இவற்றை), சூரியனுடைய குமாரனுகிய சுக்கிரீவனுக்கு ஈந்தனன்; (எ-று.)-பி-ம்:—[1]வென்றுதசரதனின்ற, [2]அம்பரத்தனந்தர். (4337)

18. அங்[1]கத மிலாத கொற்றத் தண்ணலு மகில மெல்லாம்
அங்கத னென்னு [2]நாம மழகுறத் திருந்து மாபோல்
அங்கதங் [3]கன்னற் றேளாற் கயன்கொடுத் ததனை யீந்தான்
அங்கதன் பெருமை மண்மே லாரறிந் தறைய கிற்பார்.

(இ - ள்.) குற்றமில்லாத வெற்றியையுடைய பெருமையிற் சிறந்தவனுன ஸ்ரீராமனும்,—பூமிமுழுவதும் (அவனுடைய) அங்கதனென்கிற நாமத்தை அழகுபொருந்த (க் காரணக்குறியாக)த் திருந்தவழங்கச் செய்யுமாறுபோல, மலைபோன்ற அழகியதோளையுடைய (இட்சுவாகு) மன்னனுக்குப் பிரமதேவன் கொடுத்ததான

அங்கதமென்ற அந்த அணியை (அங்கதனென்பவனுக்குக்) கொடுத்தான்; அங்கதன்பெருமையை (இந்தப்) பூமியில் அறிந்து சொல்லவல்லவர் யார்? (எ - று.)—கல் நல்தோளாற்கு எனப் பிரிக்க. பி-ம்:—[1] அந்தம். [2] நாமத்து. [3] அகன்ற, கழன்ற. (4338)

19. பின்னரு மவனுக் கையன் பெருவிலை யாரத் தோடு
[1] மன்னுநுண் தூசு மாவு மத[2] மலைக் குழுவு[3] மீந்து
உன்னை நீ யன்றி யிந்த வுலகினி லொப்பி லாதாய்
[4] மன்னுக கதிரோன் மைந்தன் தன்னொடு மருவி யென்றான்.

(இ-ள்.) பின்னும் ஸ்ரீராமன்,—அவ்வங்கதனுக்கு, பெருவிலையுள்ள முத்தாரத்துடனே பொருந்திய நுண்ணியபட்டாடைகளும் குதிரைகளும் மதமுள்ள யானைக்கூட்டமும் (என்பவற்றை) ஈந்து, 'இந்தவுலகினில் உன்னையன்றி (வேறொருவரை) ஒப்பாகப்பெறாதவனே! நீ சூரியபுத்திரனை சுக்கிரீவனோடு பொருந்திவாழ்வாயாக' என்றான்; (எ - று.)—பி-ம்:—[1] மன்ன. [2] மலைக்கரசும். [3] ஈயா. [4] மன்னுவை. (4339)

20. [1] மாருதி தன்னை யையன் மகிழ்ந்தினி தருளி [2] நோக்கி
ஆருத விடுதற் கொத்தார் நீயலா லன்று செய்த
பே[3]ருத விக்கி யான்செய் செயல்பிறி தில்லைப்[4] பைம்பூண்
போருத வியதிண் தோளாய் பொருந்துறப் புல்லு கென்றான்.

(இ - ள்.) இராமபிரான்,—வாயுவின் புதல்வனை அநுமானை மகிழ்ந்து அருளுடனே இனிதுபார்த்து, 'உதவிசெய்வதில் (உன்னை) ஒத்தவர் நீயல்லால் (வேறு) யாவர்? (நீ) அன்றுசெய்த பேருதவிக்கு யான் செய்யுஞ் செயல் வேறொன்றில்லை: பைம்பூணையணிந்த போரிலுதவிய திண்ணிய தோளையுடையவனே! அழுத்தமாகத்தழுவிக்கொள்க' என்றான்; (எ - று.)

ஸ்ரீராமபிரானிடம் அநுமான் தான் சீதையைக் கண்டுவந்த செய்தியைக் கூறியவுடனே அப்பிரான், மனமுவந்து அவ்வநுமனைக் கொண்டாடி, 'பிரியத்தைச்சொன்ன இவனுக்கு ஏற்றபிரியத்தைச் செய்ய இயலவில்லையே யென்ற இதுவே எளிய என் மனத்தை வருத்துகின்றது. இப்படிப்பட்ட தருணத்தைப் பெற்று அப்படிப் பட்டமகாத்மாவான அநுமானுக்கு ஸர்வஸ்வமான இந்த ஆலிங்கனமே கொடுக்கப்பட்டது' என்று சொல்லித்தழுவினானென்று வான்மீகத்தில் வருகின்றது. அவ்விடத்து, "திருமேனியைக் கொடுக்கவே எல்லாம்கொடுத்ததாமிறே: ஸர்வாபாஶ்ரயமாயிறே திருமேனியிருப்பது," "ஸ்நேஹோமேபரம: என்று இவ்வுடம்பை விரும்பினவனுக்கு இத்தையே கொடுக்கவேணுமே", "இவன் ஒன்றுகொள்வானொருவனல்லன்: நாம் இவனுக்கு ஒன்று கொடுக்கப்பெறுவதுகாண் என்று குறைப்பட்டிருந்தவர் இவன் விலகாததொரு ஸமயம் பெற்று, இப்படிகொடுத்துக்கொண்டு நின்றார்: ஒருபடிகொடுத்தாராய் ஒன்றுசெய்த வித்தகனை நோக்கி, இரண்டுடம்பு கொடுத்தவனுக்கு ஒருடம்பு தரமன்றிறே. வைஷ்ணவ்யுத்க்ரதகத்திலே பிராட்டி ஒருப்பட்டவன்று அவனை யுளனாக்கினான்: 'அவகாஹ்யார்

ணவம் ஸ்வப்ஸ்யே' என்று பெருமாளை மீட்டு அவரை யுளராக்கி இப்படி இவர்க்கு இரண்டுடம்புகொடுத்தானிறே அவன்: அவன் பலபடி உபகரிக்கையாலே இவர் ஒருபடி உபகரித்தார்'' என்று ஆன்றோர் வ்யாக்யாநம் அருளிச்செய்துள்ளது இங்குக் கருதத்தக்கது. பி-ம்:—[1]மாருதிதன்னையின்னே, மாருத விமலசேயை. [2]நோக்க. [3]உதவிக்கிங்கியான். [4]மெய்ப்பூண். (4340)

21. என்றலும் வணங்கி நாணி வாய்புதைத் திலங்கு [1]தானை
முன்றலை [2]யொதுக்கி னின்ற மொய்ம்பனை முழுது நோக்கிப்
பொன்றிணி வயிரப் பைம்பூ ணாரமும் புனை[3]மென் றூசும்
வன்றிறற் கயமு மாவும் வழங்கினன் [4]வயங்கு சீரான்.

(இ - ள்.) விளங்குகின்ற கீர்த்தியையுடையவனான இராமன்,— என்று கூறவும் நாணங்கொண்டு தலைவணங்கி வாயைப்புதைத்து. விளங்குகின்ற சேனையின் முன்புறத்தில் ஒதுக்கிடத்துநின்ற வலிமையுள்ளவனை அந்த அநுமானை முழுதும்பார்த்து, பொன் றிணிந்த வயிரப்பைம்பூண்களையும் ஆரங்களையும் அலங்கரிக்கின்ற மெல்லியபட்டாடைகளையும் மிக்கவலிமையுள்ள யானைகளையும் குதிரைகளையும் தந்தான்; (எ - று.)—பி - ம்:—[1]காலை. [2]ஒதுக்கி. [3]பொன். [4]வயங்குஞ், வழங்கு. (4341)

22. பூமலர்த் தவிசை நீத்துப் பொன்மதின் மிதிலை பூத்த
தேமொழித் [1]திருவை யையன் திருவருண் முகந்து [2]நோக்கப்
[3]பரமறைக் கிழத்தி யீந்த பருமுத்த மாலை கைக்கொண்டு
ஏமுறக் கொடுத்தா ளன்னா ளிடரறிந் துதவி னாற்கே.

(இ - ள்.) பொலிவுபெற்ற தாமரைமலராகிய ஆசனத்தை விட்டுப் பொன்மதிலைக்கொண்ட மிதிலாநகரில்தோன்றிய தேன் போலினியமொழியையுடைய இலக்குமியினமிசமான சீதையை (அன்னாளிடத்து ஒருமுத்தாகாரத்தைக்கொடுத்து 'உனக்குவிருப்ப மானவற்கு இதனைப் பரிசாகக் கொடுப்பாய்' என்றுசொல்லிக் குறிப்போடு) ஸ்ரீராமன் திருவருளை முகந்துநோக்க,—(அந்தச் சீதை) பாவிற்குஉரியவளாய் வேதத்திற் கூறப்படுபவளான சரசுவதிதேவியீந்த (அந்தப்) பருத்தமுத்துக்களாலியன்ற ஹாரத் தைக் கையிற்கொண்டு தன்துன்பத்தையறிந்து உதவினவனாகிய அநுமானுக்கு இன்பமுறக் கொடுத்தாள்; (எ - று.)—பி - ம்:— [1]தெரிவை. [2]நோக்கிப். [3]பார்முதல். (4342)

23. சந்திரற் குவமை சான்ற தாரகைக் குழுவை வென்ற
இந்திரற் [1]கேய்ந்த தாகு [2]மென்னுமுத் தாரத் தோடு
கந்தடு களிறு வாசி தூசணி கலன்கள் மற்றும்
உந்தினை னெண்கின் வேந்தற் குலகமுந் துதவி னானே.

(இ - ள்.) நட்சத்திரக்கூட்டங்களைவென்றதும் சந்திரனுக்கு உவமையாக மிக்கதுமான இந்திரனுக்குஏற்றதாகுமென்னுமா றுள்ள முத்தாகாரத்துடனே கட்டுத்தறியை முறிக்கின்ற யானை

குதிரை ஆடை அணிகலன் என்பவற்றையும் மற்றுமுள்ளவற்றையும் கரடிகட்கு அரசனாகிய சாம்பவானுக்கு, முந்தி உலகங்களை யுதவினவனான திருமாலினமிசமான ஸ்ரீராமன் தந்தான்; (எ - று.)
—பி-ம்:—[1] இயைந்தது. [2] எண்ணும். (4343)

24. நவ[1]மணிக் காழு முத்து மாலையு நலங்கொள் தூசும்
உவமைமற் றிலாத பொற்பூ ணுலப்பில பிறவு மொண்தார்க்
கவனவெம் பரியும் வேகக் கதமலைக் கரசுங் காதல்
பவனனுக் கினிய நண்பன் பயந்தெடுத் தவனுக் கீந்தான்.

(இ-ள்.) நவமணிகளாலியன்ற ஆரமும் முத்துமாலையும் அழகு கொண்ட பட்டாடைகளும் வேறுஉவமைபெறாத பொற்பூணும்அழிவில்லாத மற்றுமுள்ளனவான ஒள்ளியகிண்கிணிமாலையையணிந்த விரைந்துசெல்லவல்ல வெவ்வியபரியும் வேகமுள்ள கோபத்தைக் கொண்ட யானையரசும் என்பவற்றை, வாயுதேவனுடைய இனிய நண்பனாகிய அக்கினிபெற்றெடுத்தவனான அன்புள்ள நீலனென்பவனுக்குக்கொடுத்தான்; (எ-று.)—பி - ம்:—[1] மணிக்காசும். ()

25. பதவலிச் சதங்கைப் பைந்தார்ப் பாய்பரி பணைத்திண் கோட்டு
மதவலிச் சைலம் பொற்பூண் மாமணிக் கோவை [1]மற்றும்
[2]உதவலிற் றகைவ வன்றி யில்லன [3]வுள்ள வெல்லாம்
சதவலி தனக்குத் தந்தான் சதுமுகத் தவனைத் தந்தான்.

(இ - ள்.) பிரமனைத் தந்த கடவுளினமிசமான இராமபிரான்,- பாதத்தில் வல்லியை [கொடியை] யொத்த சதங்கையோடுகூடிய பொன்னாலியன்ற மாலையைப்பூண்ட பாயுந்தன்மையுள்ள குதிரைகளும், பருத்த திண்ணியதந்தங்களையும்மிக்கவலிமையையுமுடைய மலைபோன்ற யானைகளும்,பொன்னாபரணங்களும்,சிறந்தஇரத்தின வாரங்களும் மற்றும் கொடுப்பதில் (இவைகொடுத்தற்குரிய ஆகாதவையென்று) தகைவது [தடுத்தற்குஉரியது] (எதுவும்) ஆகாதிருக்க, இல்லிலுள்ளன [மனையிலுள்ளன] எல்லாவற்றையும் சதவலியென்பவனுக்குத் தந்தான்; (எ-று.)—இச்செய்யுள் திரிபு என்னுஞ் சொல்லணியாம். பி - ம்:—[1] முத்தும், முற்றும். [2] உதவலிலுகுத்ததன்றி, உதவலித்தகையதன்றி. [3] உள்ளது. (4345)

26. பேசரி தொருவர்க் கேயும் பெருவிலை யிதனுக் கீதுக்
[1]கோசரி யிலதென் றெண்ணு மொளிமணிப் பூணுந் தூசும்
[2]மூசரிக் குவளைக் மும்மை மும்மதக் களிறு மாவும்
கேசரி [3]தனக்குத் [4]தந்தான் கிளர்மணி முழுவுத் தோளான்.

(இ-ள்.)விளங்குகின்றமணிப்பூண்களையணிந்த முழவைப்போலுந் தோளையுடையவனான இராமபிரான்,—'இதற்குஉரியமிக்கவிலைஒருவருக்கும் பேச இயலாது: இதுக்கோ சரியான [ஒத்த] பொருள் இல்லை' என்று மதித்துச்சொல்லப்படுகின்ற ஒளியையுடையமணிப் பூணும் ஆடையும் (உலகெங்கும்) பரவுந்தன்மையுள்ள வாடையைக்

களலின் மூன்று உவமையாதற்கு அமைந்த [வடவைக்கனலின் மூன்றின்வெம்மையைக்கொண்ட] மும்மதயானைகளும் குதிரைகளும் என்றஇவற்றைக் கேசரியென்பவனுக்குத்தந்தான்;(எ-று.)-பி-ம்:—[1]ஓர். [2]மூசெரிபிறக்கும்வெம்மை. [3]தனக்கும். [4]ஈந்தான். (4346)

27. வளனணி கலனுந் தூசு மாமதக் களிறு மாவும்
நளனொடு குமுதன் [1]தார னலையறு பனசன் மற்றோர்
உளமகிழ் வெய்தும் வண்ண முலப்பில பிறவு மீந்தான்
களனமர் கமல வேலிக்[2]கோசலக் காவ லோனே.

(இ-ள்.) நெற்களம்பொருந்திய கமலவேலியையக்கொண்ட கோசல தேசத்திற்குமன்னவனான ஸ்ரீராமன்,—வளப்பம்பொருந்திய [சிறந்த] அணிகலனும் ஆடைகளும் மிக்கமதங்கொண்ட களிறுகளும் குதிரைகளும் அளவில்லாத மற்றுமுள்ள பொருள்களும்என்ற இவற்றை,—நளனும் குமுதனும் தாரனும்குற்றமற்ற பனசனும் மற்றுமுள்ளோரும் மனம்மகிழும்படி ஈந்தான்:(எ-று.)-பி-ம்:—[1]காரான். [2]கௌசலைகாதலானே. (4347)

28. அவ்வகை யறுபத் தேழு கோடியா மரியின் வேந்தர்க்கு
எவ்வகைத் திறனு நல்கி யினியன பிறவுங் கூறிப்
பவ்வமொத் துலகிற் பல்கு மெழுபது வெள்ளம் பார்மேல்
கவ்வையற் றினிதுவாழக் கொடுத்தனன் கடைக்க ணோக்கம்.

(இ-ள்-) அவ்வகையாக அறுபத்தேழுகோடி யென்னும் எண்ணினரான வானரவீரர்க்கும் பலவகைப்பட்ட கூறுபாடுடைய பொருள்களைக்கொடுத்து இனியனபலசொற்களையுங்கூறி,கடலினை யொத்து உலகில் மிக்குத்தோன்றுகின்ற எழுபதுவெள்ளம் வானர சேனைகளும் துன்பமற்று இவ்வுலகில் இனிதுவாழுமாறு கடைக்கண்ணோக்கத்தைத்தந்தான்: (எ-று.)—இவ்வாறு அறுபத்தேழு கோடி வீரர்க்கும் பரிசு தந்தபின், ஸ்ரீராமன் எழுபதுவெள்ளஞ் சேனைகளும் இனிதுவாழுமாறு கருணைகொண்டு கடாட்சித்தன னென்பதாம். (4348)

29. மின்னையேர் மவுலிச் செங்கண் [1]வீடணப் புலவர் கோமான்
தன்னையே யினிது நோக்கிச் சராசரஞ் [2]சூழ்ந்த சால்பின்
நின்னையே யொப்பார் நின்னை யல[3]தில ருளரே லைய
பொன்னையே யிரும்பு[4]நேரு மாயினும் பொருவன் றென்றான்.

(இ-ள்,) மின்னையொத்த [பேரொளிபடைத்த] கிரீடமணிந்த செவ்விய கண்களையுடையனான விபீடணனென்கின்ற புலவர்தலைவனையே இனிது பார்த்து, 'சராசரத்தை [பிரபஞ்சத்தை]ச் சூழ்ந்த பெருமையினையுடைய உன்னை யொப்பவர் உன்னையல்லாது (வேறொருவர்)இலர்: உளராயின், ஐயனே!(ஒருகால்) பொன்னையே இரும்பு ஒப்பாகுமானாலும் (ஒருவரும் உனக்கு) ஒப்பு அன்று என்றான்; (எ-று.)—சால்புடையவராயிருப்பாருளரென்றாலும் பொன்னுக்கும் இரும்புக்குமுள்ளவேறுபாடு உனக்கும் அவர்க்குமிருக்கு

மென்றவாறு. பி-ம்:—[1]விபீடணன். [2]சுமந்த. [3]இல்லை. [4]நேரே பொருவெனவொக்குமென்றான். (4349)

30. என்றுரைத் தமர ரீந்த வெரிமணிக் கடகத் தோடு
வன்றிறற் களிறுந் தேரும் வாசியு மணிப்பொற் பூணும்
பொன்றிணி தூசும் [1]வாசக் கலவையும் புதுமென் சாந்தும்
[2]நன்றுற வவனுக் கீந்தா னுகணைத் துயிலைத் தீர்ந்தான்.

(இ-ள்.) ஆதிசேஷசயனத்தில் உறங்குவதைவிட்டு அயோத்தியில் வந்து திருவவதரித்தவனாகிய ஸ்ரீராமன்,—இவ்வாறுகூறி, தேவர்களீந்த விளங்குகின்றமணிக்கடகத்துடனே மிகவலிய யானைகளும் தேர்களும் குதிரைகளும் மணிகளழுத்திய பொற்பூணும் பொன்னெருங்கிய பட்டாடையும் நறுமணமுள்ள கலவைச்சாந்தும் புதிய மெல்லிய சந்தனமும் ஆகிய இவற்றை நன்மைபொருந்த அந்த விபீடணனுக்குக் கொடுத்தான்; (எ-று.)—பி-ம்:—[1]பூவு மருங்குறவுதவிப்பின்னர். [2]மன்றனிவீடணனுக்குதவினன் விடையு மன்னோ, நன்று...துயிலிற்றீர்ந்தான். (4350)

31.—குகப்பெருமானுக்கு வெகுமதியுடனே விடையும் ஈதல்.

சிருங்க[1]பே ரியதென் றோதுஞ் செழுநகர்க் கிறையை நோக்கி
மருங்கினி யுரைப்ப தென்னோ மறுவறு துணைவற் [2]கென்னுக்
கருங்கைம்மாக் களிறு மாவுங் கனகமுந் தூசும் [3]பூணும்
[4]ஒருங்குற வுதவிப் பின்ன ருதவினன் விடையு மன்னோ.

(இ-ள்.) பக்கத்திருந்த சிருங்கபேரமென்று சொல்லப்படுகின்ற செழுமையானநகர்க்குத் தலைவனனகுகனைப் பார்த்து, 'குற்றமற்ற துணைவனே உனக்கு இப்போது சொல்லவேண்டுவது யாது உளது?' என்று சொல்லி, கைம்மாவாகிய கருங்களிறுகளும் குதிரைகளும் பொன்னும் பட்டாடைகளும் அணிகலன்களும் ஒருசேரத் தந்து பின்பு விடையும் தந்தான்; (எ-று.)—சிருங்கபேரியது, அது-பகுதிப்பொருள்விகுதி. மருங்கு-பக்கம். பி-ம்:—[1]பேரியம் வேரியம். [2]என்னே. [3]பூவும். [4]ஒருங்கற. (4351)

32.—அனுமான்முதலியோர்க்கு விடைதருதல்.

அனுமனை வாலி சேயைச் சாம்பனை யருக்கன் தந்த
கனைகழற் காலி னானைக் [1]கருணையங் கடலு நோக்கி
நினைவதற் கரிது நும்மைப் [2]பிரிகென்ற னீவிர் வைப்பும்
எனதது [3]காவற் கென்ற னேவலி னேகு மென்றான்.

(இ-ள்.) அநுமான் வாலிகுமாரனை அங்கதன் சாம்பவன் சூரியபகவான்பெற்ற ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த பாதங்களையுடைய சுக்கிரீவன் என்ற இவர்களைக் கருணைசமுத்திரமாகிய சக்கரவர்த்தித்திருமகன்பார்த்து, 'நும்மைப்பிரிந்துசெல்க' என்று கூறுதல் நினைவதற்கும் கூடாததாகவுள்ளது: உம்முடைய அந்தவாழிடமும் காத்தற்கு எனக்கு உரியது: [பாதுகாக்கவேண்டியதாக எனக்குத்தோன்றுகின்றதென்றபடி]: (ஆதலால்), என்னேவலால்

(நும்மிடத்துக்குச்) செல்லுங்கள்' என்றான்; (எ - று.)—எனதது என்ற இடத்துள்ள அதுஎன்பதைப் பிரித்து வைப்பதும் எனக் கூட்டுக. பி-ம்:—[1]கருணையங்கடவுள். [2]பிரிவென்றல், பிரியென்றல். [3]காவற்கின்றேன். (4352)

33.—விபீடணனுக்கு விடைகொடுக்க, யாவரும் தம்மூர்க்குச் செல்வது கடமையே யென்று கருதுதல்.

இலங்கை[1]வேந் தற்கு மிவ்வா றினியன யாவுங் கூறி
அலங்கல்வேன் மதுகை யண்ணல் விடைகொடுத் தருள லோடும்
நலங்கொள்பே ருணர்வின் மிக்கோர் [2]நாமுறு நெஞ்சர் பின்னர்க்
கலங்கல [3]ரேவல் செய்தல் கடனெனக் கருதிச் சூழ்ந்தார்.

(இ-ள்.) இலங்கைக்கு அரசனாகிய விபீடணனுக்கும் இவ்வாறு இனிய வார்த்தைகள் யாவையுங் கூறி, வெற்றிமாலைசூடிய வேற்படையேந்திய வலிமையுள்ள பெருமையிற்சிறந்த ஸ்ரீராமன் விடைகொடுத்தருளலும்,—அழகுபொருந்திய பேரறிவினால் மிக்கவரான சுக்கிரீவன் குகன் விபீடணன் முதலியோர் (முதலில் பிரிவுக்கு) அஞ்சுகின்ற மனமுடையவராய்ப் பின்பு கலக்கம் நீங்கப்பெற்றவராய் 'ஏவியவற்றைச் செய்தல் முறைமையாம்' என்று நன்கு ஆராய்ந்து தீர்மானித்தார்கள்; (எ - று.)—கருதிச்சூழ்ந்தார்-ஒரு பொருட்பன்மொழி. பி-ம்:—[1]வேந்தனுக்கும். [2]நலனுறு. [3]ஏய. ()

34.—வந்தவர் தம் பதிக்கு ஏகல்.

பரதனை யிளைய கோவைச் சத்துருக் கினனைப் [1]பண்பார்
விரதமா தவனைத் தாயர் மூவரை மிதிலைப் பொன்னை
வரதனை வலங்கொண் டேத்தி வணங்கினர் விடையுங் கொண்டே
சரதமா நெறியும் வல்லோர் தத்தம பதியைச் சார்ந்தார்.

(இ-ள்.) உண்மையான நெறியெல்லாம் [நன்னெறியாவும்] வல்லவரான அவர்கள், பரதன் இளையபெருமாள் சத்துருக்கினன் நற்குணம் நிறைந்த விரதம்பூண்ட மாதவத்தினையுடைய வசிட்டன் தாயர்மூவர் மிதிலைப்பொன் [சீதை] வேண்டும்வரங்களைத் தரவல்ல இராமன் என்றஇவர்களை வலங்கொண்டு துதித்து வணங்கினராய், விடையும்பெற்றுக்கொண்டு தம்தம்முடைய ஊரையுஞ் சேர்ந்தார்; (எ - று.)—பி-ம்:—[1]பண்டை. (4354)

35.—குகன் சுக்கிரீவன் என்பவர்களை விபீடணன் அவர்களுடைய பதியில்விட்டு இலங்கை சேர்தல்.

குகனைத்தன் பதியி னுய்த்துக் குன்றினை வலஞ்செய் தேரோன்
மகனைத்தன் புரத்தில் விட்டு வாளெயிற் றரக்கர் சூழக்
ககனத்தின் மிசையே யேகிக் கனைகட லிலங்கை புக்கான்
அகனுற்ற காத லண்ண லலங்கல்[2]வி டணன்சென் றன்றே ற

(இ - ள்.) மனத்துப்பொருந்திய அன்பை யுடையவனும் பெருமையிற் சிறந்தவனுமான வெற்றிமாலையைப்பூண்டவிபீடணன்,- குகனை அவனுடைய பதியிற்[சிருங்கிபேரபுரத்திற்]கொண்டுபோய் விட்டிட்டு, மேருமலையை வலஞ்செய்கின்ற தேரையுடையவனான சூரியனதுமகனை [சுக்கிரீவனை] அவனுடைய (கிட்கிந்தா) புரத்தில் விட்டிட்டு, வாள்போன்ற எயிற்றையுடைய அரக்கர் சூழ்ந்திருக்க வான்வழியாகவே சென்று ஒலிக்கின்ற கடலாற் சூழப்பெற்ற இலங்கையில் அன்றேசென்று புகுந்தான்; (எ - று.)—பி - ம்:—[1]எய்தி. [2]வீடணனுமன்றே, வீடணன்சென்றதன்றே. (4355)

36 —இதுவும் அடுத்த கவியும்-ஸ்ரீராமன் யாவருஞ் சென்றபின் இனிது அரசுபுரிதலைத் தெரிவிக்கும்.

ஐயனு மவரை நீக்கி [1]யருள்செறி துணைவ ரோடும்
வையக முழுதுஞ் செங்கோன் [2]மனுநெறி முறையிற் செல்லச்
செய்யமா[3]மகளு மற்றச் செகதல மகளுஞ் [4]சற்றும்
நையுமா றின்றிக் காத்தா [5]ஞனிலப் பொறைகள் தீர்த்தே.

(இ - ள்.) ஸ்ரீராமனும்,—அந்தத்துணைவரை விடைகொடுத்தனுப்பிவிட்டுத்தன்னருள்நிரம்பிய பரதன்முதலிய தம்பிமாரோடும் பூமிமுழுவதிலும் செங்கோலானது மனுதருமசாத்திரமுறைமைப் படியே நடக்க, செவ்விய இலக்குமியாகியமகளும் பூமிதேவியும்சிறிதும் வருந்தும்வகையில்லாமல் பூபாரங்களைப்போக்கிப் பாதுகாத்தான்; (எ-று.)—இராமபிரான் அரசு இனிதுநடத்தற்கு ஆவனபுரிவதால், தம்பிமாரை 'அருள்செறிதுணைவர்' என்றது. பி-ம்:—[1]அடிதொழு, அடிசெறி. [2]மறை. [3]மகளை. [4]மற்றும். [5]நாணிலம். (4356)

37. உம்பரோ டிம்பர் [1]காறு முலகமோ ரேழு மேழும்
எம்பெரு மானென் றேத்தி யிறைஞ்சிநின் றேவல் செய்யத்
தம்பிய ரோடுந் தானுந் தருமமுந் தரணி காத்தான்
அம்பரத் தனந்தர் [2]நீங்கி [3]யயோத்தியில் வந்த வள்ளல்.

(இ - ள்.) திருப்பாற்கடலில் யோகநித்திரை புரிவதைநீங்கி அயோத்தியில்வந்து திருவவதரித்த வரையாதருளுந்தன்மையனான ஸ்ரீராமன், மேலோடுஇவ்விடம்வரையுமுள்ளமேலேழ் கீழேழ்என்ற பதினான்கு லோகத்திலுள்ளவரும், 'எம்பெருமான்' என்று துதித்து வணங்கிநின்று குற்றேவல்புரிய, தம்பியரும் தானும் தருமத்திற் பொருந்திநின்று பூமியைப் பாதுகாத்தான்; (எ - று.)—'நையுமாறின்றிக்காத்தான்' என்று பூமிகாத்ததைக் கூறியகவி, அவன் தருமத்துக்குச் சிறிதும் மாறுபாடின்றிக்காத்தானென்பது விளங்க மீண்டும் 'தானும்தருமமும் தரணிகாத்தான்' என்றார். பி - ம்:—[1]பாறும். [2]நீக்கி. [3]அயோத்திவந்திறுத்தவண்ணல், அயோத்திவந்திறுத்தகாளை. ஒருபிரதியில் இச்செய்யுளின்பின் விடையிறுத்த

படலம் முற்றும் யுத்தகாண்டம் முற்றும் என்றுளஎழுதி,சிலபாடல்கள் எழுதப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

1. வான்வளஞ் சுரக்க நீதி[1]மனுநெறி முறையே யென்றும்
தான்வளர்ந் திடுக நல்லோர் தங்கிளை தழைத்து வாழ்க
தேன்[2]வழங் கமுத மாலைத் தெசரத ராமன் [3]செய்கை
யா[4]னளந் தறைந்தபாட லிடைவிடா தொளிர்க வெங்கும்.

பி - ம்:—[1]மறை. [2]வளர்ந்தமுதமாலை, வளந்தெரியன்மாலை. [3]கீர்த்தி. [4]விழைந்தறைந்த.

2. எறிகடல் [1]ஞாலந் தன்னு ளின்றமிழ்ப் புலவர்க் கெல்லாம்
முறுவலுக் குரிய [2]வாக முயன்றன மியன்ற வின்சொல்
சிறுமையே நோக்கார் தங்கள் [3]பெருமையே சிந்தை செய்யும்
அறிவுடை மாந்தர்க் கெல்லா மடைக்கல மாக வாழ்.

பி - ம்:—[1]உலகந்தன்னில். [2]மொழிந்தனன் மொழிந்தவெஞ்சொல். [3]மேன்மையைச்.

*3. அம்பிலே ... ... ஈந்தான்.

4. நாரணன்விளையாட்டெல்லாம் ... கவிதைசெய்தான்.

5. எண்ணியசகாத்தம் அரங்கேற்றினனே.

மற்றொரு பிரதியில்

வாழிய சீரி ராமன் வாழிய சீதை கோமான்
வாழிய கௌச லேசை மணிவயி றுதித்த வள்ளல்
வாழிய வாலிமார்பு மராமர மேழுஞ் சாய
வாழிய கணையொன் றேவுந் தசரதன் மதலை வாழி.

என்றசெய்யுளும், இதன்பின் "எறிகடல்" என்ற செய்யுளும், அதன்பின் "வான்வளஞ்சுரக்க' என்றசெய்யுளும் இருக்க, படலமும் காண்டமும் முற்றும் என்று உள்ளது. (4357)

38.—பலசுருதி.

இராவணன் றன்னை வீட்டி யிராமனாய் வந்து தோன்றி
தராதல முழுதுங் காத்துத் தம்பியுந் தானு மாகப்
பராபர மாகி நின்ற பண்பினைப் பகரு வார்கள்
நராபதி யாகிப் பின்னு நமனையும் வெல்லு வாரே.

---

* இதுமுதல் மூன்றுபாடல்கள் பாலகாண்டப்புத்தகத்திற் காட்டப்பட்டுள்ளன.

(இ - ள்.) பராபரப்பொருள், இராமனாய்வந்து திருவவதரித்து இராவணனையழித்துத் தம்பியுந் தானுமாகப் பூமிமுழுதும் பாது காத்து இவ்வாறாகி நின்ற பண்புள்ளசரிதையைச் சொல்பவர்கள், மன்னராகிப் பின்னும் யமனையும் வெல்லுந் தன்மையைப் பெறு வார்கள்: (எ - று)—நராபதி-நரபதி யென்பதன் நீட்டல். (4358)

திருமுடிசூட்டுபடலம் விடையளித்தபடலம் என்ற இரண்டு படலத்துக்கூறிய சரிதையை ஸ்ரீவான்மீகிமுனிவரருளியதன் சாரம் வருமாறு:—பரதன் கைகுவித்து, 'நீ என்தாயை மகிழ்விக்குமாறு கானகஞ்சென்று சித்திரகூடத்தில் எனக்குத்தந்த இராச்சியத்தை அரிதிற்காத்தேன்: இதனைக் காப்பது எனக்கு அருந்தொழில்: இப்போது பட்டாபிஷேகஞ்செய்துகொண்ட உன்னைக் கண்டு உலகங் களிக்கட்டும்: இவ்விராச்சியத்தை நான் விரும்பேன்' என்று இங்ஙனம் வேண்ட, ஸ்ரீராமன் இசைந்தனன். பின்பு மயிர்வினைஞர் இராமாதியர்க்கு மயிர்குறைக்குந்தொழிலைச் செய்ய, அன்னவர் நீராடினர். பிறகு, சத்துருக்கனன் இராமாதியர் மூவர்க்கும் அணி கலன் புனைந்தனன்; தசரதன் மனைவியர் சீதையைப் புனைந்தனர்; கௌசல்யை வானரமகளிர்க்கு அன்போடு அலங்காரஞ்செய்தனள்.

பரதன் தேர்ப்பாகுசெய்யச் சத்துருக்கனன் குடைபிடிக்க, இலக்குமணன் ஒருகையால் விசிறிக்கொண்டு மற்றொருகையால் வெண்சாமரைவீச, விபீடணன் மற்றொருகவரி வீச, சனங்கள் மகிழ்ச்சிப்பேரொலிசெய்ய, பல்லியங்கள் முழங்க, ஸ்ரீராமன், நந்திக் கிராமத்திலிருந்து அயோத்தி நோக்கிச் சுமந்திரன் கொணர்ந்த இரதத்திலேறிச் சென்றனன். அப்போது வானத்தில் ரிஷிகள் தேவர் முதலியோர் வாழ்த்துக்கூறினர். சுக்கிரீவன் அநுமான் முதலியோரும் மற்றைவானரர்களும் யானைகள்மீது ஏறி அயோத் தியைக் காணச் சென்றனர். சீதாதேவியும் சுக்கிரீவபார்யைமுதலிய வர்களும் அயோத்தியைக்காண ஆவலுடன் சென்றனர். மந்திரி மார் முந்தியேசென்று வசிட்டமுனிவரைப் பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய உபகரணங்களைச் சித்தஞ்செய்துவைக்குமாறு சொல்லி விட்டு, இராமனை யெதிர்கொண்டனர். தன்னையெதிர்கொண்ட மந்திரிமாரிடத்துச் சுக்கிரீவனுடைய அன்பு அநுமானுடைய மகிமை வானரர்களின் வீரச்செயல் விபீடண சரணாகதி அரக்கரின் வல்லமை முதலியவற்றை ஸ்ரீராமன் சொல்ல, அவர்யாவரும் பெரு வியப்படைந்தனர்.

அங்ஙனஞ்சென்ற இராமன் தந்தையின்மாளிகையையடைந்து தாய்மாரைவணங்கி, 'என்னரண்மனையைச் சுக்கிரீவனுக்கு விடுதி யாகத் தருக' என, சுக்கிரீவனைப் பரதன் அந்த அரண்மனைக்குள் அழைத்துக்கொண்டுபோக, பணியாளர் மஞ்சம் முதலியவற்றை அம்மாளிகையிலமைத்தனர். பின்னர்ப் பரதன் சுக்கிரீவனைநோக்கி, 'இராமபட்டாபிஷேகத்திற்குவேண்டிய புண்ணியதீர்த்தங்களை வர வழைப்பாயாக. இதற்கு நீயே வல்லவன்' என்ன, சாம்பவான் அநு

மான் வேகதர்சி ருஷபன் சுஷேணன் கயன் நளன் முதலியவீரர்கள் கையில் இரத்தினகும்பங்களைக்கொடுத்து 'நாளைக்காலைக்குள் நாற் கடல்களிலிருந்தும் புண்ணியநதிகளிலிருந்தும் தீர்த்தங்களைக் கொணர்க' என்ன, விரைவுள்ள அவர்களும் வானத்துஎழுந்து சென்று அங்ஙனமே கொணர்ந்தனர்.

அப்பால் சத்துருக்கனன் புண்ணியதீர்த்தங்கள் வந்திருப் பதை வசிட்டமுனிவனுக்கும் பந்துக்களுக்குந்தெரிவிக்க, வசிட்ட முனிவர் ஸ்ரீராமனைச் சீதாதேவியோடும் இரத்தினபீடத்தில் வீற் றிருக்கவைத்து, தேவேந்திரனுக்கு அஷ்டவசுக்கள் அபிஷேகஞ் செய்வதுபோல், வாமதேவர்முதலியமற்றுள்ள ஏழுபுரோகிதமுனி வர்களுடன் தெளிந்துநன்மணங்கமழப்பெற்ற நீரினால் ஸ்ரீராம னுக்கு அபிஷேகஞ்செய்தனர். பின்னர் மற்றுமுள்ளவரெல்லாம் அப்பிரானுக்கு அபிஷேகஞ்செய்தனர். அப்போது தேவர்கள் திரண்டு ஒஷதிரஸங்களால் ஸ்ரீராமனுக்கு அபிஷேகஞ்செய்தனர். பின்பு குலமுறையாய் வந்தகிரீடத்தை வசிஷ்டதேவர் ருத்விக்கு களுடனும் மற்றும் ரிஷிகளுடனும் கூடி எடுத்து ஸ்ரீராமனது திரு முடியிற் சூட்டினர். அக்காலத்துச் சத்துருக்கனன் வெண்கொற் றக்குடை பிடிக்க, சுக்கிரீவனும் விபீடணனும் வெண்சாமரை வீசினர். அப்போது வாயுதேவன் இந்திரனால் தூண்டப்பட்டு ஒரு பொன்மாலையையும்முத்தாகாரத்தையும்இராமனுக்குக்கொணர்ந்து கொடுத்தனன். அந்தப்பட்டாபிஷேகசமயத்தில் தேவர்களும் கந்தர் வர்களும் களிப்புக்கொண்டு பாடினர்; அரம்பையர் ஆடினர். பூமி பயிர்முதலியவற்றாற் செழிப்புற்றிருந்தது. ஸ்ரீராமன் அந்தணர் கட்குக் குதிரைகள் பசுக்கள் எருதுகள் ஆடையாபரணங்கள் முத லியவற்றைக் கொடுத்தான். இரத்தினங்கள்பதித்த ஸ்வர்ண ஹாரத்தைச் சுக்கிரீவனுக்கும், சிறந்த தோள்வளையை அங்கத னுக்கும் கொடுத்திட்டு, மிகச்சிறந்ததொரு முத்தாகாரத்தைச் சீதைக்குக்கொடுத்தான்: சீதை தன்கணவனுடைய அநுமதியைப் பெற்று அனுமானுக்கு ஆடையாபரணங்களைக்கொடுத்திட்டபின், அப்பிரான் தனக்குத்தந்த முத்தாகாரத்தைக் கழற்றிக் கையிற் கொண்டு இராமனையும் வானரர்களையும் பார்க்க, ஸ்ரீராமன் 'எவ னிடத்துப் பராக்கிரமம்முதலியனநிரம்பியுள்ளனவோ,எவனிடத்து உன்மனம் மகிழ்கின்றதோ,அப்படிப்பட்ட வீரனுக்கு இதை யளிப் பாய்' என்ன, அந்தச்சீதை அநுமனுக்கு அந்த முத்தாகாரத் தைத் தந்தனள். பின்னர் மைந்தன் த்விவிதன் நளன் நீலன் முத லிய வானரவீரர்கட்கெல்லாம் அவரவர்கட்கு விருப்பமான சிறந்த பொருள்களையெல்லாம் அவரவர்தகுதிக்கு ஏற்றபடி ஸ்ரீராமன் கொடுத்தனன்.

யாவரும் பெருமகிழ்ச்சியடைந்து தத்தம் இருப்பிடத்துக்குப் போகலாயினர். சுக்கிரீவாதியர் விடைபெற்றுக் கிட்கிந்தைக்குச் சென்றனர். விபீடணன் இட்சுவாகு வமிசத்தவரின் குலதனமாகிய

ஸ்ரீரங்கவிமானத்தைப் பெற்று இலங்கைக்குப் போயினன். பகை வென்று பெரும்புகழ்படைத்த ஸ்ரீராமன் துஷ்டர்களையடக்கி இனிது அரசுபுரிந்தனன். அப்பால் ஸ்ரீராமன் இலட்சுமணனை இளவரசுபட்டத்தை யங்கீகரிக்குமாறு எவ்வளவோ வேண்டியும் அவன் அங்கீகரியாமற் போக, பிறகு பரதனை இளவரசுபட்டத்தில் அமர்த்தி, பலவகைவேள்விகளைப்புரிந்து, நாட்டில் யாதொரு குறையு முண்டாகாதவாறும் யாவரும் நல்லொழுக்கத்துடன் கூடியவரா யிருக்குமாறும் பதினோராயிரம்வருடம் இனிது அரசு புரிந்தனன்.

இந்த இராமாயணத்தைப் பக்தியோடு படிப்பவர்க்கு எல்லா நற்பயன்களும் கைகூடும்.

விடைகொடுத்தபடலம் முற்றும்.

யுத்தகாண்டம் முற்றும்.

கம்பராமாயணம் முற்றிற்று.

யுத்தகாண்டப் பிற்பகுதியின் செய்யுண் முதற்குறிப்பகராதி

யுத்தகாண்டம் முழுவதுக்கும்

அருஞ்பதவகராதி முதலியன.

அஃகுதல், அதிகா-69
அகத்தியல் முகத்துக் காட்டல், விபீ-141
அகத்திய னிராமனுக்குச் சாபம்புட்டில் கவசம் சுரிகை யீந்தான், மீட்-280
அகத்தை முகத்தினால் நோக்கி- "அகத்தினழகு முகத்தில் தெரியும்": அணி-4
அகப்பட, அணி-28
அகப்பொருள் - உள்ளுறைபொருள், இரணி - 32
அகமகிழ்தல், மூல-157
அகமெலிதல், நிகும்-128
அகம்-மனம், இடம்: மீட்-184
அகம்பன்திறம், இல-கே-33: அகம்பன் முற்பிறப்பு வரலாறு, பிரமா-123: அகம்பன் முதலிய அரக்கரோடுசென்று மனிதரைத் தாக்குவாயென இராவணன் மகோதரனையேவுதல், பிரமாத் - 95: அகம்பன் ஐந்நூறு கழுதை பூட்டிய தேரையுடையவன் - 123: அகம்பன் அம்புமழை வீச அனுமானெதிர்த்துவருதல்-125-130 அகம்பன்வர அனுமான் தண்டாயுதத்தைச் சுழற்றல் - 126: அகம்பன் கண்ணெதிரிலேயே அனுமான் பத்துக்கோடி யானை குதிரை முதலியவற்றைக்கொல்லுதல்-128: அகம்பன் தேரிற்பூட்டிய கழுதையும், அச்சும், சாரதியும் அழியுமாறு அனுமான் தண்டாயுதத்தால் அடித்தல் - 132: அகம்பன் வில்லைவிட்டுத் தண்டைக் கொண்டு அனுமானோடு பொரவெழுதல்-133: அகம்பன் பாணத்தால் அனுமான் சலித்தல்-132: அகம்பன் இடக்கையால் அனுமன் மார்பிற் குத்துதல், பிரமாத்-137: அகம்பன் அனுமானால் உயிரிழத்தல்-139: அகம்பன் மடிய அரக்கர் சேனை மாளுதல்-140

அகம்புலம்பல், இந்திர-61 [198
அகலம்-மார்பு, நிகும்-116, மூல-
அகல்-விளக்கு, படைத்-18
அகவுநாவு, நாக-67
அகழி தூர்ந்துவிடும்படி அரக்கர்கால்கள் அறுந்துவிழுதல், மூல-157
அகழிமூன்று, மீட்-163 இல் - 6
அகழியமுழுவதுபோலும், முத - 8
அகழிவெள்ளம் ஊரை வளைதல், முத-5
அகழிவேலை, இராவ தே-17
அகழ் = அகழி, மகுட-15
அகற்றுதல்-நீங்கச்செய்தல், கழித்தல், இரணி-5 [-29
அகனுறப்பொலிந்த வள்ளல், ஒற்று
அகன்பதியைச்சுட்டான், நாக-2
அகன்வான், வான, கள - 20
அகன்றுபோதல் - மறைந்துபோதல்: உருக்-108
அகஸ்தியாச்சிரமத்தை யிருடியராணையா லிராம னடைதல், மீட் - 279
அகிலுஞ் சந்தனமு மிந்தனமாதல், இராவ - 248
அக்கட, இரா, மர் - 32 [கே - 61
அக்கனைத்தேய்த்த குழம்பு, இல.
அக்கனையரைத்துள்ளவன், நாக-8
அக்கினி சொல்லால்சீதையின்மீது சீற்றந் தீர்தல், மீட்-297
அக்கினியிற் புகும் பிராட்டி ✕ புனலிடைத் தாமரைக்கோயிலை யெய்துவாள், மீட்-85
அக்கினி வலஞ்சுழிப்பின் நற்சகுனம், பிரமாத் - 166
அக்குரோணி, மீட்-335
அங்கணம்-சாக்கடை, மாயாசீ-68
அங்கண், திருமுடி - 35
அங்கதம் - வசைப்பாட்டு, முத - 149: தோள்வளை, மூல-124: குற்றம், விடை-48
அங்கதன், அங்க-28, படைத்-74 பிரமா-47, இரா. தானை - 24,

அசஞ்சலப்படை, இல. கே-41
அசத்தம் வலிமைபெருதது,இராம தே-3 [வ-117
அசத்து - நேர்மையற்றவழி, இரா
அசனிகேட்ட வளையுறைமரவம் X வானாரார்ப்புக் கேட்ட அரக்கமகளிர்: நாக-284
அசனியீன்ற கானம், வேலே-4
அசனியேறிருந்தகொடி - இந்திர ரதத்தின் மீதிருந்த கொடி, இரா. வ-14
அசனியேறு கிரிகளை யடர்த்தல்X காடி தும்பிக்கும்பங்களை யிடத்தல், நாக-47
அசனி யேற்றேடொத்தன குன்றம், நாக-177
அசிக்கும், கும்ப-64
அசும்பு - வழுக்குநிலம்: மூல-21: நீர்த்திவலை, வருண-44,பிரமா-167, நீர்க்கசிவு, அதிகா-89: நீர் வெள்ளம்-234
அசும்புபடுசோரி, மூல-147
அசும்புபாய்தேன், சேது-17 [226
அசுரர்கள்தம்பிரளயமே,இரா. வ.
அசைதொழில் - அசைதல், இரா, மங்-10
அசைத்த=அசைந்த, மீட்-151
அசையாதசிந்தை, நாக-244
அசைவற்றுக் கிடந்த இராமனைக் கண்டு தேவர் அஞ்சுதல்,பிரமா-
அசைவில்கற்பு, இரா. ம-99 [200
அச்சத்தால்மக்களநாண்களைத்தொட்டுப்பார்த்தல், இராவ. தே-29
அச்சத்தாற் கண்புதைத்தல், பிரமா-71, இரா, வ-51
அச்சமூன்றல், மாயாசீ-17
அச்சமோ வறிவோ, தெரிந்தோ, இல. கா-12
அச்சுறப்புண்ணல், முத-234 [28
அச்சிரத்தை-உபேட்சை:இரா.மங்-
அச்சிற்றிண்டேர், வான, கள-20
அச்ச, கும்ப-322,நாக-127,இராம. தே-8
அச்செனக் கேட்டல் - மனத்துப் படியும்படிகேட்டல், திரும்-9

அஞ்சலஞ்சலெனல், இரா. மங்-117
அஞ்சலி - ஒருபாணம், நாக-113
அஞ்சலித்தல், வருண-13: இரா. வ-176
அஞ்சலென்றது, ஒற்று-39
அஞ்சனக்குன்று, மீட்-252
அஞ்சனமலை, விபீ-137 [69
அஞ்சனமேகம் முனிதல், படைத்-
அஞ்சன மேனியான், விபீ-143
அஞ்சன வண்ணன் ஆழியேவுஞ் செஞ்சரம் X வானரங்கள் இலங்கையில் வீசும் கொள்ளி, மாயாசீ-23
அஞ்சனைகான்முளை, படைத்-69
அஞ்சனைசிங்கம், நாக-198
அஞ்சனைசிறுவனுக்கையாற் சேனையஞ்சினது, மீட்-258
அஞ்சனை பயந்தவள்ளல்,நாக-195
அஞ்சனை மதலை, பிரமா-35
அஞ்சியயர்தல்: மாயாசீ-31
அஞ்சினர் தொழில் வஞ்சனையாற் பற்றுதல், இரா. மங்-16 [21
அஞ்சுதல்-கீழ்ப்படுத்தல், அதிகா-
அஞ்சுமுகத்தவன், அதிகா-8
அடங்கலும் - எங்கும், எல்லாம்: சேது-57, நாக-77 [பிரமா-196
அடங்கலும் அவிப்பதற்கமைதல்,
அடங்குதல், இரணி-23, கும்-48.
அடர்தல், வருண-30, படைத்-73
அடர்த்தல், அதிகா-177
அடல், இரா. மங்-83, மூல-102
அடல்கடந்ததோள்,இரா வ.தே-10
அடல்வலி, அதிகா-97,இரா.வ-18
அடவி, மாயாசீ-70, மீட்-199
அடா, இரணி-129, நாக-73
அடாதனவறையல், அணி-17
அடாநிற்றல்- பொருந்தியிருத்தல், இரணி-129
அடிதொழுது, இரா. மங்-111
அடிதொழுதுணைவர், விடை-36
அடித்தொழில், இரா. வ-30, மீட்
அடிநாயினேன், மீட்-242 [-256
அடிப்பட்ட துயரம் நெருப்புச் சுட்ட துயரத்தில் மறைதல் X சீதையி

ன் பாலிருந்த துயரம் அயோத்
தியின் துயரத்தால் போதல்:
மாயாசீ-76
அடிப்படவருதல், நிகும்-65
அடிபேர்த்தல், அதிகா-22
அடிமலர்தொழுதல், மூல-33
அடிமுறை வணங்கிக் கூறுதல்,
படைத்-35
அடிமை, இரா.மந்-30, மீட்-224
அடிமைபுகழுடைத்து, மீட்-303
அடியவர்க்கடிமை செய்வோர்
பெறும்பயன், இரணி-32
அடியனேன், கும்ப-128
அடியில் - பாதங்களில், அங்க-42
அடியிறைஞ்சுதல், இரா.மந்-65
அடியின்வீழ்ந்துவணங்கல், இரா.
சோ-55
அடியுண்டவரக்கன் X இடியுண்ட
மால்வரை: அதிகா-242
அடியுறை, இந்திர-66, வருண 73
அடியுறையாக அன்பைச்சேர்த்து
தல், மீட்-345
அடுகளம், முத-62, நிகும்-58
அடுக்கல்-மலை, சேது-54: வான
வர், கள-7
அடுக்கிய மூவுலகு, திருமுடி-26
அடுக்கும்-தகும், மாயாசீ-62
அடுதல்-கொல்லுதல், நிகும்-37
அடுதொழில், இந்திர-20
அடுத்தது-ஏற்றது, இரணி-24
அடுத்தநாட்டரசனுணையால்நசுக்கப்
பட்டவர், விபீ-82
அடுத்துச்சொல்லல், நாக-286
அடுபுலி, மூல-216
அடுவன், அங்க-30
அடை - அடைதல், சேர்ந்தது:
இலே; இ. கா-34
அடைக்கலங் கூறுகின்றுன் இன்று
வந்தான் முதலிய காரணங்க
ளால் தள்ளற் குரியனல்லன்:
விபீ-109
அடைக்கலப்பொருள், பிரமா-197
அடைக்கல மென்றுனை விளைவு
நோக்காது பற்றல் வேண்டும்,
அடைக்கலம், கும்ப-257 [விபீ-108

அடைக்கலம்புகுதல், மாயாசீ-6
அடைக்கலம் புகுந்தவன் அழியப்
பார்ப்பது, என், வேலை-30
அடைதல்-ஆர்தல், வருண-60
அடைத்த நல்லுரை, படைக்கா-31
அடைத்தல்-அணைகட்டுதல், இல.
கே-6: மிகுதியாகப் பொருந்து
தல், முத-68: சிறைவைத்தல்,
இரா. வ-236
அடைத்து வைத்தனதிறந்துகொ
ண்டு ஆற்றுதியாயிற் கிடைத்தி,
முத-253
அடைந்தவரைக் காக்க நீ உயிர்
கொடுத்ததனுற்குரியகுலம்சிறப்
பை யடைந்ததென இராமன்
கூறல், வேலை-48
அடைந்தவர்க்கருளாவிடின் அற
னுண்மைகள் பயனின்று, விபீ-
111
அடைந்தோர்தம்மை மாயனோம்பி
வீடளிப்பன், விபீ-114 [90
அடைப்பருங்காலக்காற்று, நிகும்-
அட்ச குமாரனைச்சாந்தெனத்தரை
யில்தேய்த்தமை, அங்க-34
அட்சகுமாரன்வதை, படைக்கா-46
அட்டிலன், நாக-208
அட்டில், இராம. தே-4
அட்டிவைத்தல், கும்ப-219 [168
அட்டுதல், வருண-52, இரா. வ-
அணங்கு, ஒற்று-22, மீட்-61
அணங்குடைநெடுவேல், இந்-16
அணங்குவெள்ளெயிறு,படைத்-61
அணவுதல்-தொடுதல், மூல-163
அணிகள்தோறும் தூதுவர் வரன்
முறைகாட்டிச்சொல்லல் Xவே
த வேதாந்தங்கூறும் பொரு
ளினை விரித்தல், படைக்கா-9
அணித்தெனவணுகுதல், நிகும்-69
அணிபறித்தழகுசெய்யு மணங்கு,
அங்க - 18
அணிவகுத்தல், மூல - 141
அணுவெனச்சிறியவாக்கையுடைய
னுதல், நாக-185
அணைத்தல்-தழுவுதல், மீட்-185
அணைதல்-சேர்தல்: இரா.மந்-91

அணைதோன்றச் சேற்றமாறியவை யன், இல. கா-30 [185
அணைத்தல் - தழுவுதல், மீட் -
அணையின்றி யயர்ந்த வென்றி, கும்ப-159
அணைவகுத்ததைப்போல் அரக்கர் நெருங்கிநிற்றல், மூல-150
அண்டகோளங்கள் அடுக்கழிந்து உளைவுற வானரர்ஆர்த்தல், வேலே-46: அண்டங்கள் வாரி யுண்டவன், வருண-34: அண்டங்கள் வெடிப்பன வென்ன வடித்தான், அதிகா-239: அண்டங்கிழியவார்த்தல், அணி-26: அண்டங்குலுங்க வார்த்தல், நிகும்ப-94
அண்டசன்மணிச்சயனம் - ஆதிசேஷன், இராம. தே-12
அண்டத்துமுதல்வன், இராவ. தே. 22: ஒற்று-2 [225
அண்டமும்கீழ்மேலாதல், மூல-
அண்டமெல்லாம்வயிற்றிற்கொண்ட ஆரியன், முத-223
அண்டம்-உலகவுருண்டை, இரணிய-131: அண்டகோளம், இரணி-2: உலகம், வானம், இலக். கே. 1, 2; வான்முகடு, மாயாச-87: அண்டம்Xவேலைக்கலம்: நாக-103: X புட்பகம், மீட்-161
அண்டம் படைத்தவன்- பிரமன், பிரமா-150
அண்டம்விற்குநன்காசினம், இராவ தே-21
அண்டரை [தேவரை] யெல்லாந் தொழில் கொண்டான், இரா. வ-125
அண்டர்நாதன், மீட்-245, அண்டர் நாயகனுயிரங்கண, ரா.வ-108
அண்ணல், இரணி-148
அண்ணுவோ, இரா. வ-220
அதரம், நாக-5
அதர்மிஷ்டர்களாகிய உங்களுக்கே துறக்கம் முதலியனவாக என விபீடணன் கூறல், நிகும்-176
அதிசமாக, முத-140
அதிகாயன், இல. கே-50; அதிகா-7, நாக-4; அதிகாயன் இராவணன் மகன், அதிகா-188; நராந்தகனுக்கு அண்ணன்-209, தானவரில் வலியோரைத் தலைவிற் கொடுத்தவன்-9; காலால்வேலை கலக்கவலான்-59, சிவனிடத்தும் அஞ்சாதுஎதிர்ப்பவன்-61; திருமாலின்சக்கரத்தைத் தடுத்தவன்-62; திறனல்லாவுயிரைச் சிதையான்-65; தனுர்வேதத்தைச் சிவபிரானிடங் கற்றவன்-64; அறனல்லதன்றிமாறறியான்-65; மறனல்ல பணியைமேற் கொளாதவன்-65; மாயத்தவர் கூடி மலைந்திடினும் காயத்துயிர் விடினும் மாயஞ் செய்ய மதியான்-66; குபேரனைவெற்றிகொண்டவன்-193: நான்முகன்படையாலன்றிச் சாகான்-206; பேரிசையுறல் நல்லதென்றுணர்வான்-65; அதிகாயன், தன்னை அட்சன் முதலியோரல்லனென்றது, எதிர்மறையணி-10; அதிகாயன் செய்த சபதம், 11, 12; அதிகாயன் தேர்க்குதிரை சிவபிரானுடைய இடபத்தையொத்தவை-17; அதிகாயன்கும்பகர்ணனுடலைக் கண்டு வருந்துதல் - 29; தாதை தலை கண்டிலனென்று சலித்தல்-28; மயிடனிடஞ்சொல்லிய தூது செய்தி - 32, 35; இலட்சுமணனையழைத்துவரின் பலவகைச் சிறப்புத்தருவேனென்று மயிடனிடம் கூறுதல்-25, 37-43; அதிகாயனுடைய பூர்வசரிதை-67-76; அதிகாயனுடன் சென்றயானை கோடி-18; அதிகாயனுடன்சாமானியராற்பொரமுடியுமோXநீரைக்கொடு நீரெதிர்கிற்கொணுமோ -83; அதிகாயனைவெல்லச் சிவன் முதலோரில்லாவிடின் இலட்சுமணனே-84; அதிகாயன் சேனைவீரர் எண்ணாயிரம் மதகரி நூண்

அமுதத்தோடு ஆயிரமாயிரங் குதிரைதோன்றியமை, வான. களா-33
அமுதவிசைபாடினர், கும்ப-363
அமுதின்செய்கையான், மாயாச-94
அமுதின்வந்நீர், மாயாச-10
அமுதின்வன்மை, நாக-31
அமுதினென்றபாடல், களி-48-[47
அமுதென்று நஞ்சுவாயிடல், மூல-
அமுதுண்பாய் நஞ்சுண்பாயோ, கும்ப-131
அமைச்சர், விபீ-15: அணி-10
அமைதல்-பொருந்துதல்; இரா.மந்-32; அடங்குதல், பிரமா-173, தொடங்குதல், இரணி - 21; தோன்றிப்பெருகுதல், கும்ப-328; உடன்படல், அதிகா-52
அமைதி-தக்ககாலம், விபீ-23
அமைந்தது-ஏற்றது: இரணி-11
அமைப்பது - அடங்குவது, மீட் - 228
அமைய-அமுர்ந்த, மாயாச-64
அமையக்கேட்டல், நிகும்-172
அமைபுருக்கொண்டகூற்று, அதிகா-190
அமைவதாக்குதல், விபீ-49
அமைவனம், வருண-38
அமைவு-சேனைமுதலியன அமைகை, இரா. மந்-11
அம் = ஆம், நிகும்-42
அம்பரத்தனந்தர் நீங்கி யயோத்தி வந்த வள்ளல், விடை-37
அம்பரத்தும்பர், இரா,மந்-82 [40
அம்பரமம்பரத்தேகலாற்றல், வரு-
அம்பரம்-மேகம், ஆகாயம், வரு-40. முத-75: கடல், வேலே-7; அம்பாரி, மூல-121 [6
அம்பலி-வாச்சியவிசேடம், பிரமா-
அம்பியல்சிலை, கும்ப-282
அம்பினுற்சமிதை, பிரமாத்-165
அம்பின்முன்செலும், முத-232
அம்பின் வெம்புங்காயத்தான், நாக-232
அம்பு-தண்ணீர்; இரா. சோ-31
அம்புXபறவைகள்; நாக-97
அம்பு கற்களை யள்ளின, முத-20
அம்புக்கு முன்னஞ்சென்று அரும்பகை முடிப்பலென்றுவெம்புற்ற மனம், மகுட-42
அம்புதுண்டிக்கப்பட்டுக் கடல்நீரைப் பருகவே அக்கடல் திடமாதல், இரா. வ-53
அம்புதாக்குவது, அக்க-3
அம்புதைத்த இடந்தோறும் வெளிப்படும் குருதி, நாக-118
அம்புதொடுத்தல்முதலியனஅமரராலு முணராமுடியாமை, முத-132
அம்பு பறிக்க வாவி பிறிபவர், அதிகா-256
அம்புயக்கண்ணன், மகர-18
அம்புயமனையகன், இரா. வ-9
அம்புருவுதல், படைத்-70
அம்புவியழைத்தல், இரா.சோ-50
அம்புவாங்குதல், மகர-21
அம்பெலாங் கொம்புடைப்பனை கூறுற நூறின முத-20
அம்பொன் தனுவுடையவர், கும்ப-161
அம்போட்டி, இரா. மந்-109
அம்போருகன், இரணி-111
அம்மனையாடுதல், மூல-122
அம்மா, இரா, மந்-85
அயக்கல்-அசக்குதல், சேது-10
அயர்தல் - மனம்வருந்தல், அதிவொடுங்கல், விசாரங்கொள்ளல், இரா.மந்-17, 93: இரா. வ-233
அயர்த்தல், மருத்-12
அயர்வு-வருத்தம், அதிகா-33
அயர்வுதோன்றுதல், இரா. வ-170
அயர்வுறுதல்-இரக்கம்மிகுதல், இரணி-85 [259
அயலிருந்துருகுகாதலார், அதிகா -
அயல்-சமீபம், மூல-169
அயனம்-வழி, மீட்-163
அயனின்றவர் நாமாண்டறுதல், அதிகா-177
அயன், இரா. மந்-1, படை-18; அயன் இராவணனுக்குத் தந்த சாப வரலாறு, விபீ-101; அயன்

படை சக்கரப்படையோடு இரா
வணனூரத்துச் செல்லல், இரா,
வ-197; அயன் படைத்தவேலை
மயன் இராவணனுக்குத் தந்த
மை, வேலே-26
அயன்றந்தவேல், முத-208
அயிர்திரண்டைந்தன், விபீ-42
அயிந்திரவாய்-கிழக்கு, முத-82
அயிர் - நுண்மணல், முத - 174:
நண்மை, இரணி-167
அயிர்படர்வேலை, இரணி-144
அயிர்ப்பு, இரணி-51, விபீ-4
அயிலாகத்தழுந்தல், முத-26
அயிலின்வாய்-கூரியவாய், இரா.வ
அயில், மகாக்-80, நிகும்-113 [-147
அயில் கடந்தெரிய நோக்குமரக்
கர், அங்க-14
அயில் கடலைவற்றச்செய்த வர
லாறு, அதிகா-153
அயில்கொள் வாள், மாயாசீ-57
அயில்வாளி, வான, கள-8
அயில்வாள், படை-7
அயிறல்-உண்ணுதல், கும்ப-66
அயிற்படை, இல. கா-22
அயினிநீர் மந்திரத்தால் வலஞ்செ
ய்தல், மீட்-46
அயின்முகப்பகழி, இல. கா-20
அயோத்தி, அங்க-14, விடை-13:
அயோத்தி தோன்றிற் றென்ன
விமானத்திலுளனோர் வணங்கு
தல், மீட்-321: அயோத்திமூதூர்,
மாயாசீ-35; அயோத்தியர்குலம்,
மாயாசீ-28: அயோத்தியின் நினை
வுற இராமன் மனநிலைகலங்கல்,
மாயாசீ-77: அயோத்தியையும்
அழித்து மீள்வேனென இந்திர
சித்து கூறல்-39: அயோத்தியை
இந்திரசித்து அழித்து வருவா
னென இராமன் வருந்தல், மாயா
சீ-79: அயோத்தி வேந்தனுக்
கிளையோர்; இந்திர-50
அய்யவன், நாக-221
அரக்கச்சேனை இராமனைச்சூழ்ந்து
பொருதழித்தல், மூல-161: அரக்
கச்சேனை கடல்போன்றிருந்த
மை, 156: அரக்கர்சேனைகளைக்
கண்டுகுரங்குகள் ஓடல் X விடத்
தைக்கண்டுதேவர்கள் ஓடல்-17;
அரக்கச்சேனைக்குண்டான துர்
நிமித்தங்கண்டு தேவர் தள்ளுத
ல்-81: அரக்கச்சேனையாவும் அழி
யுமெனவிபீடணன் கூறல், மூல-
33: அரக்கச்சேனையில் ஆரவம்
பிறத்தல் - 80: அரக்கச்சேனை
யிற்பலவகையொலி யெழுதல்-
195: அரக்கச்சேனையின் முன்
னணி இராமனோடுபொருதல், 71:
அரக்கச்சேனையும் வானரசேனை
யும் கைகலத்தல், பிரமா-105:
அரக்கச்சேனையைக்கண்டு வான
ரர் பயந்து ஓடல் X பாம்பைக்
கண்டு எலிபயந்து ஓடல், மூல-
27; அரக்கச் சேனையைப்பற்றித்
தேவர்கள்சிவபிரானிடம்அஞ்சிக்
கூறல்-24, 25: அரக்கச்சேனை
ஒருதிக்கிலிருந்து இலங்கைக்கு
வருதல் X கடல் ஒருதிக்கினின்று
மற்றொருதிக்கின்மேற்செல்வது,
படைக்-9. அரக்கச் சேனைவான
ரர்களாலழிதல், வேலே - 12:
அரக்கச்சேனை வான்வழிச்சென்
றமை, மூல-21
அரக்கத்தலைவரெல்லாம் ஒருசேர
அழிந்தமை, மூல-159
அரக்கத்தன்மைநீங்கிச் சாதுத்
தன்மையடைந்தாற் பிழைக்கலா
மெனமாலி கூறல், மாயாசீ-6
அரக்கமகளிரக்கும் மேகத்திற்றுஞ்
செலேடை, இரா. வ-231
அரக்கமகளிர்புரள்வது X ஓவியம்
புரள்வது, இரா. சோ-43
அரக்கமங்கையர் விழிகளினின்றுநீ
ருகுவிசிந்தல், மூல-216
அரக்கமுதல்வர் அழிந்தமைகண்ட
தேவர் பூமழைபொழிதல், மூல-
159
அரக்கர்தானைப்படை, நிகு-29
அரக்கரசொடும் புக்கிலக்காவார்,
இல. கா-15
அரக்கருந்தவமுடையர், விபீ-18

அரக்கன் தலை நீரிடை விழுதல் X மேருவின் கொடுமுடி புணரியுகுதல், இரா. வ-150
அரக்கன படைக்கலம் X மழைபடுதுளி: இரா: வ-70
அரக்கன்றன் நீண்டவல்லவரில்லாத சிலை, இரா. வ-39
அரக்கிகள் சீதையை விமானத்திலேற்றிப் போர்க்களத்திற்கு வருதல், சீதை, கள-3
அரக்கிமார்க்கு இதுவரையில்வருத்தமென்பதுபுலவியே, இரா. வ 234
அரக்கிய ராற்றுமோதை X குலத்தொருவன்பூண்டபாக்கழி: இரா. வ-229
அரக்கியர் X குயில், பிரமா - 31 X அன்றிற்பேடை, இரா. சோ-2
அரக்கியர் அழுதுகொண்டிருத்தல் இரா. சோ - 2
அரக்கியர் இறந்துகிடக்கும் இராவணனைத் உறுப்புக்களைக் கூறுகொண்டு தழுவியழுதல், இரா. வ-233
அரக்கியர் கவவுறத் தழுவியுயிர்துறத்தல், முத-236
அரக்கியர்தம் கணவரோடு இறந்தமை, வேலே-10
அரக்கியர் தலையிற்கைவைத்துஅழுதல், இரா. கள-21 [தல், மீட்-33
அரக்கியர் பிராட்டியைச் சரண்புகு
அரக்கியர் பேய்களின் கண்களைத் தோண்டுதலை இராவணன்காணுதல், இரா. கள-24
அரக்கு செந்நிறம்: முத-165
அரக்கூட்டிய வளையகண், விபீ-1, இரா. கள-12
அரங்கிலாடுவார், இரா. மந்-107
அரங்கு-போர்க்களம்: கும்ப-319
அரங்குதல்-அழுந்துதல், சேது-59 மூல-121: அழிதல், இங்கேதோற்கடித்தல்: இரா. வ-168 [361
அரங்கொண்ட கருங்கடல், கும்ப-
அரசராதியடியவரந்தம், இராகள-7 மீட்-201 [யர் கும்ப-357
அரசனுருக்கொண்டனன்த மேனி
அரசர்க்கு ஈமவிதியிற்குடைகொடிகளுரியவாதல், இரா. வ-250
அரசர்க்குக் கைவிளக்கெடுத்தல், பிரம-149
அரசர்க்குவையகம்முதலியனஈர்ந்துவிடையுந் தருதல், விடை-16
அரசியலிச்சை. மீட்-216: அரசியலிருக்கை, இரா. கள-57: அரசியல், இரா. மந்-17: அரசியல்வழாமைநோக்குதல், மீட்-201 [6
அரசின்மேலாசைபூன்றுதல், வீபீ-
அரசு-இராச்சியம், இரா. மந்-19
அரசுடைத்தெரிவைமார், மீட்-53
அரசுவீற்றிருத்தல், நிகு-166
அரசைப்பிழைக்கு முதலெனுதூள்வுதமதித்யானேபிழைத்ததல்லது கைகேயி பிழைசெய்ததில்லை யெனக்கூறல், மீட்-131
அரஞ்சுடச்சுடர்செஞ்சன், இரா. வ-
அரஞ்சுடுகுலிசம், மூல-173 [194
அரணமூன்று, இராம. தே-14
அரணம்-பெருந்தடை, பாதுகாவல், மருத்-88, மீட்-106
அரணியன் = ஹிரண்யன்: அடைந்தோரைக்காப்பவன்: விபீ-2
அரண், இரா, மந்-36, விபீ-54
அரண்மனைமுன்றில், இல. கே-30
அரத்தச்செவ்வாய், களி-15: அரத்தப்பங்கி, முத-103: அரத்தவிழியோர், இரா. தானை-10
அரந்தை, அதிகா-276, மருத்-95: அரந்தையள், மாயாச-72: அரந்தைவெம்பிறப்பு, மீட்-136
அரமகளிர், கும்ப-363
அரமங்கையர் ஆழிவந்தவர், இரா-தானை-7
அரமொன்றுவயிரவாள், அதிகா - 212: அரம், கும்ப-361
அரம்பை, மீட்-42: அரம்பையர், மகுட-6, அரம்பையர் பிரிவுசோர்கலுதல் பிரமா-110
அரவக்கழல், மாயாசீ-28: அரவத்தேர், இரா. வ-14
அரவதண்ணிடை, முத-230 [40
அரவமாக்கடலஞ்சிவவச்சம், ஒத்த-

அரவமெலிடு, இராம. தே-8: அரவம், இர்-17, மீட்-307: அரவா லிணுக்குதல், நாக-244
அரவியல், முத-151
அரவிஞடு-நாகலோகம், இரணி-5
அரவினுமத்தை வெலியோதுதல், இரணி-50
அரவின்படை திருமூர்த்திகளையும் வீக்கிவீழ்த்தவல்லது, நாக-186
அரவின் விடத்தை மந்திரம்மாய்க்கும், இரா. வ-122
அரற்றுதல் ஆவலுந் துயருந்தீர் தற்கு, இரா. வ-219
அரணணி யராவும் சிறைக்காற்றின் கல்லையினுழந்தன, இரா. வ-145
அரனுர், இரணி-111
அரன்முதலியோரையன்றிக்குரக்கு களையேஞன்று கூட்டுதல், அங்க-
அரன்வெள்ளிக்கிரி, முத-209 [22
அராவரும்பகழி, மீட்-191
அராவிழுங்கிக் காலுமதியம்X காள வுறையின் வாங்கும் கண்ணடி, இல. கா-42
அராவெனமுனிதல், முத-239
அரி-திருமால், இரா. மந்-116: குரங்கு; இல. கா 33, அணி-6, வேலே-17. சிங்கம். இரா. சோ-47: வண்டு-36
அரிகளோர்தியஆசனம், இரா. மந்-5
அரிக்குலத் தலைவர், முத-187: அரிக்குலப் பெருமை, இல. கா-48: அரிக்குலமன்னி மீதுலகை வீசவல்லன, விபீ-133: அரிக்குல வீரர், முத-46: அரிச்சதங்கை, இரா. சோ-49
அரிதிற்றேறல், இரா. சோ-46
அரிந்தமன், மருத்-21, இரா. வ-4
அரிமுதலோர்பதமிழத்தல், இரா-54
அரியஞ்சக் களிறு முழங்கின, அதி
அரிவணை, இரா. மந்-12 [கா-21
அரியினம் பூண்டதேர், நாக-104
அரியினுர்கலி, படைத்-36
அரியின் வேந்தன், மூல-30
அரியென்று தொழுதல்; இர-85.
அரியே உலகுதந்தவன், இர்-120
அரியேறன்னகுரிசில், இல. கா-42
அரியேறு தம்பியைத்தொலைத் தென்னைத் தொலைத்தல், இரா, வ-9
அருகுதல்-அழிதல், நாக-287
அருக்கனன்னமைந்தன், நாக-176
அருக்கன், விபீ-122, நாக-288
அருக்கன்சேய், கும்ப-161: அருக்கன் மாமகன், மருத்-100
அருங்கடன் நேர்தல், இராவ. தே-24
அருங்கரணமைந்து, இராம. தே-14
அருங்கலச் சும்மை, இரா சோ-44
அருங்கவிப்புலவர், இல. கா-31
அருச்சனை-உபசாரம், மீட்-199: அருச்சனை வரன்முறை வியற்றல், இராவ. தே-24
அருச்சித்தல், மீட்-205
அருணனுதயம், கும்ப-288
அருணன் கண்களுங் கண்டிலாவி லங்கை, இல. கே-58
அருணன்றம்பி, நாக-298
அருணெறிபெய்துதல் - அருளிப் பாட்டைப் பெறுதல், விபீ-50
அருத்தி - விரும்பும் பொருள், நாக-254; அருத்தியன், விபீ-130
அருந்ததிகற்பினள், மாயாசீ-96
அருந்ததி முதலியவ ராதெல் புரிதல், மீட்-88
அருந்ததி முதலியோர்க்கருங்கல மாகியபாவை, மீட்-124
அருந்ததியனையாக்கை, இல. க-35 மீட்-55 [ஒற்று-14
அருந்ததி வந்தனைசெய் வஞ்சி,
அருந்தவன், மீட்-200
அருந்திருபிழைத்தது, கும்ப-327
அருந்துணைபிரிதல், படைத்-64
அருந்துதற்கமைவாயின, இரா. கள-
அருந்துதற்குணவு, பிரமா-88 [2
அருப்பம், முத-92 [தல்: வருண-74
அருப்பு-அல்பம் அல்லது அரும்பு
அருமறை-ஸ்வஸ்திவாசனமென்ன லாம்; மீட்-196

அருமைசேர்தல், இரா. வ-24: அரு
மைப்போர்களாற்றுதி, நாக-299
அரும்பியன் முறுவல், அதிகா-191
அரும்பெருங்காரியத்தைச் செய்ய
வன்றோ எங்களை அழைக்கவே
ண்டுமெனச்சேனுபதிகள் கூறல்,
படைக்-37
அருவிXஉத்தரீகம், இரா. தாணே-5
அருவியோடழல் கால் கண்ணன்,
அதிகா-179
அருளல்-நினைத்தல், இர்-6
அருளியளித்தல், மீட்-245
அருளில்யாக்கை, மகாக்-29-[57
அருளினுல்நிறைந்தநெஞ்ச, இந்திர
அருளின்வேலை-கிருபாசமுத்திரம்,
விபீ-54, மீட்-341
அருள்-அன்பு, தண்ணளி, இரா. மங்
-92, மீட்-198
அருள்சாந்த நோக்கம், இரணி-162
அருள்முறைபிறத்தல், பிரமா-22
அருள்வழங்கல், வேலே-19
அரைத்தல்-அழித்தல், நாக-215
அலகில்கற்புடைச்சானகி, கும்ப-79
அலகில் கேள்வி, விபீ-72
அலகு, மூல-161, இராவ. தே-15
அலகை, கும்ப-209, இரா. கள-24
அலகைகளுடனாடித்தல், மீட்-190
அலகைதுணங்கைப் பறைதுவைத்
தல், மாயாச-85
அலகைபுல்லுப, மாயாச-57
அலக்கணுறுதல், மாயாசி-56: அல
க்கணெய்தல் இரா. கள-1: அல
க்கண், வருண-62- வேலே-20
அலக்கு-வரிச்சல், ஒற்று-17 [318
அலங்கலந்தொடையினன், மீட்-
அலங்கலோதியர் பிணக் குப்பை
யில்திரிதல் X மாமயில்வரை
யின் மேல் திரிதல். படைத்-64:
அலங்கல், இரா. மங்-77: அலங்
கல்வேல், கும்ப-32; அலங்க
லோன், நாக-276: அலங்கண்மார்,
பிரமா-99
அலங்குதல்-விட்டுவிட்டுப் பிரகா
சித்தல், விளங்குதல். பிரமா-58
மருத்-60: அசைதல், இரா. தே-
37: அலங்குவேலை - அலைவீச
லின்ற கடல் விபீ-25: அலங்கு
றல்-நடுக்கமடைதல். மீடி-16
அலங்கொள, சேது-26
அலங்கொளி-சூரியசந்திரர்: இரா.
அலசுதல், ஒற்று-12 [வ-72
அலத்தகச்சீறடி, படைத்-63 [211
அலந்தலை-கலக்கமான நிலை, மூல-
அலைந்தலைப்பட, இரா. மங்-61
அலமருந்துயர், சேது-59
அலம்புதல்-ஒலித்தல், மீட்-18
அலம் வந்துகுதல்-துன்பமடைந்து
வலிகெடுதல். அதிகா-46
அலம்வரல், இர்.201: அலம்வரு
தல் செய்தல்-சுழற்சியை புண்
டாக்கல், அணி-16
அலரி-சூரியன்: படைக் - 5: அக்
கினி தேவன், மீடி-96. அலரி
காதலன், விடை-17 [-323
அலர்ந்ததாமரைக் கண்ணன்-மீட்
அலர்மாரிதூர்த்தல், இரா. வ-133
அலர்வாழ்தேவி, சிதை. கள-14
அலி, இரணி-14, முதற்-181
அலை-கடல், கும்ப-71
அலைமிளர்வால், நாக-193
அலைகொள்வேலை, இராவ. தே-32
அலைக்குமுபர்பார், இராம. தே-8
அலைத்தல், சிதை. கள-7, மூல-143
அலைபுடைத்த வாக்கர், (புடைத்த-
உவமவுருபு); கும்ப-211
அல்-இரவு, மருத்-55
அல்குதல் குறைதல், மணமழிதல்,
மீடி-282
அல்லி-பூவிதழ், படைத்-60
அல்லினுல்வருத்தன்ன பேணியன்,
பிரமா-133
அல்லிறச்செய்தநிறம், கும்ப-236
அல்லென்றுநிற்றி பகலாதி, நாக-
257 [171
அவசத்தையடைந்த வீரன், நாக-
அவசத்தொழில், நிகும்-125
அவசம், படைத்-56
அவசன், மாயாச-57
அவண, கும்ப-346
அவதரித்தமைதல், இராவ. மங்-111

அவதி எல்லை, கும்ப-42: துன்பம், மாயாசி-78
அவத்தம்-வீணே, இரா. வ-209
அவம், அதிகா-231
அவயால்கல், மீட்-292 [-26
அவருளர் அறமுமுண்டு,சிதை.கள
அவலத்தழிதல் - துன்பத்தினற் கலங்கல், மீட்-213
அவலம், மூல-229
அவனி- இரா. மங்-83,மீட்-58 [42
அவாவுதல்-விரும்புதல்,இல. கா-
அவி-அவிசு, இரா. வ-251
அளிகொள்நான்மறை, இரணி-32
அவிசு, இரணி-65
அவிஞ்சை, இரா. வ-24
அவிஞ்சையர், இரா. வ-118
அவிதர, நாக - 162
அவிதல்-அழிதல், படைத்-11
அவிர்துவீழ்தல், மூல-227 [53
அவிழ்தல்-பெருகுதல்,இரா. மங்-
அவுணர், கும்ப-257
அவுணர்வேந்தன், இரணி-123
அவைய சீ பெற்றவாறு,கும்ப-131
அவ்வரம்பு-அப்பாலெல்லை, இரா. வ-67
அவ்வியமவித்தசிந்தை,திருமு-27
அழகன், விபீ, 144, மூல-182
அழகிது-அங்கீகாரச்சொல், நாக-273: அழகிற்றேயாம் - உடன் பாட்டுச்சொல். அங்க-3
அழகின்புனைகலம், இரணி-163
அழக்கண்டு மதிர்திலாதாள், அதி
அழலுங்கண், வேலே-13 [கா-268
அழலெனமுற்றியகோபம், படைத்
அழல்விளக்கு, மூல-180 [-4
அழற்கொடியோன்,படைத்69 [35
அழற்கொழுந்தொழுகுகண்,மகர-
அழற்றருகதிரோன், இரணி-151
அழி-அழிதல், நிகும்-156
அழிகார்பெய்தல், முத-158
அழிசெம்புனல், மூல-106
அழிதல்-பெருகுதல், முத-50: நீங்குதல், கும்ப-243; பிடிபடுதல், நிகும் - 32. ஊக்கங்குறைதல்,
அழிதார், மூல-124 [நிகும்-48

அழித்தல்-கீழ்ப்படுத்துதல்: இரணிய-134
அழித்தும்-மீண்டும், மூல-178
அழித்தொழிலாலத்தார்க்கும் ஆர்கலி; பிரமா-152
அழிபடைதாங்கல், நிகும்-165
அழியாதவுள்ளமழிதல், நாக-244
அழியுங்காற்றருமுதவிக்குப் பதில் செய்தலரிது, மருத்-112 [247
அழுகின்றவாயார்த்தெழல், மீட்-
அழுகையுமுவகையு மமர்செய்தல், மீட்-353 [68
அழுக்குத்தின்னும் நரி, மாயாச-
அழுங்குதல்-வருந்துதல், கடல்கா-4,இரா.மங்-40,கும்ப-112, 271
அழுதரற்றுதல், மீட்-227
அழுத்தல், கும்ப-241
அழுந்திய பாலின்வெள்ளத்தாழி, மாயாசி 77
அழுந்துதல், நாக-182
அழுந்துயர், இராம. தே-27
அழுவரீச்வேலை, மீட்-289
அழுவம்-கடல், கடல்கா-4: நீர்ப்பரப்பு, கும்ப-361:குழி, இரணி-87: நீர்நிலம், அதிகா-163
அழைத்தல், அணி-4
அழைப்பொலி, இரா. வ-231
அளகை, இல. கே-56 [143
அளக்கரும் புள்ளினம், இரா. வ.
அளக்கர்-கடல், விபீ-16: வரு-22
அளக்கர் குருதியர் லர்திவாணகள் கடுத்தது, வருண-25 [17
அளக்கர் நுண்மணல்,இராவ.தே-
அளந்தருகடற்றுறை, இரா.தே.27
அளர்தான், முத-162
அளப்பருந்துளி அணி-25
அளப்பருந்தோள், பிரமா-35
அளப்பிலாதபகழிகள், நாக-287
அளவளாவுவத்தல், பிரமா-183
அளவிலாதகதி, நிகும்-7
அளவுதல், இரா. தே-16
அளவைகாட்டல், மூல-222
அளவைப் பெய்தல் - தத்துவப் பொருளையறியும் வகையைக் கூறுதல், இரணி-58

அன்பு-பக்தி: நாக-243 [மீட்-206
அன்பு உருக்கொண்டு முற்றுருது,
அன்வயம்-மரபு: மாயாசீ-36, பொருத்தம், மருத்-92
அன்வயித்தோர், இரணி-137
அன்றிலினுருவதாய அணிவகுத்தல், பிரமா-12
அன்றிற்பேடைXஅழுகின்றசீதை: மாயாச-36
அன்றில், இல. காண்-30
அன்றிற்றீவினர், படைக்-13
அன்றுதல்-கோபித்தல், நாக-27
அன்னக்குழாம் முட்டைகொண்டு இரிதல், முத-9 [216
அன்னதோ வெ... னுதல், இராவ-
அன்னம், ஒற்று-25
அன்னவேலே, பிரமா-89 [ச-44
அன்னைமீர்...தங்கைமீரே, மாயா
அன்னே-வியப்பிடைச்சொல்:நாக-105
அஷ்டதிக்பாலகர் மேருமலையின் எட்டுத் திக்குக்களிலும் தங்கியுள்ளவர். மருத்-53
அஷ்டநாகங்கள் கயிறுகக்கட்டப்பட்டுள்ளமை, இராம. தே-8
அஸ்திரபூசை, பிரமா-90 [238
ஆ-இரக்கக்குறிப்பு, இரா. வ-230,
ஆகமாங் காந்தம், மீட்-118
ஆகமே யாவம், இந்தி-29
ஆகுலம்-கலக்கம்:முத-35, மூல-80
ஆகுலித்தல், நாக-213, பிரமா-193
ஆகுவதாகும். கும்ப-166
ஆகுளி, இரா. தானை-12, பிரமா-7
ஆக்கினேயாஸ்திரத்தாற் கடல் வேதல், வருண-19-58
ஆக்கை, மாயாச-18
ஆசறநல்கல், இராவ. தே-3
ஆசறுத்தல், மூல-110
ஆசி, மூல-73, இரா. வ-1
ஆசு-விரைவு, விபீ-69, இல. கே-58: குற்றம், இரா. மங்-53, இல. கா. 34: மூட்டு, படைத்-82
ஆசுரப்படை. இரா. வ-96
ஆசை-திக்கு, விருப்பம், சேது-58: அங்க-4, மாயாசீ-22

ஆசைக்கரி-திக்கசம், இரா. வ-221
ஆசைநோய் கொன்றது. மாயாச-26
ஆடகக்கிரி, வருண-47 [13
ஆடகக்குன்றமன்னவன், இரா. வ-
ஆடகக்குன்றில் முருக்கின் கானக மலர்தல் × சுக்கிரீவன் மேனியில் இரத்தநீர் பெருகுதல், பிர-175
ஆடகக்குன்று × இராமலட்சுமணர்: இரா. தானை-29, ஆடகத்தலம், இல. கா-36. ஆடகத்தோள், நாக-194
ஆடலம்பரி, முத-17
ஆடல்-ஆடுதல், வலிமை, போர்புரிதல், கும்ப-323, பிரமா-170 மாயாசீ-2, சஞ்சரித்தல், இரா. வ-5. ஆடல்திருத்திட, மீட்-6
ஆடவர்க்கரசன்- புருஷோத்தமன். கும்ப-310: ஆடவர்திலகன், இர்-71
ஆடலுண்ணிடை, இரா. சே-4
ஆடன்மாகரி சேவகமமைந்தது × இலக்குமணன் பிரமாத்திரத்தினுற் சேவகமடங்கியது, பிரமா-173
ஆடுதல்-மூழ்குதல், இரணி-4: தோன்றுதல், சேது-63: மீதுபடுதல், அதிகா-24
ஆட்டிசெய்தல், மாயாசீ-70 [14
ஆட்டுதல்-நீராடச்செய்தல், மீட்-
ஆணவம், இரா. வ-38
ஆணி-ஆதாரம், நிகும்-10 வரம்பு, களி-10 ஆணிப்பொன், திருமு-32, ஆணியாயுணர்மாருதி, முத-220, ஆணியுலகினுக்கு, விபீ-64
ஆணை-கட்டளை, இரா. மங்-4, 78 உண்மை, திண்ணம், நாக-235
ஆண்டகை, இரா.மங்-100, ஆண்டகைவீரன், இரா. வ-167, இர்-36
ஆண்டலே, அதிகா-118
ஆண்டவில்லி, இரா. வ-161
ஆண்டு முதலியவற்றைத் தட்டிலடக்கியது அத்தேர், இராம. தே-9
ஆண்டொழில் இரா. மங்-68; ஆண்

ஆர்த்தல்-நெருக்குதல், ஆரவாரித்தல், கும்ப-172: ஒட்டிக்கொள்ளுதல், கும்ப-25; கட்டுதல், முத-115. ஆர்த்தவாயன-ஒலிக்கின்றவாயையுடையவை என இத்தொடர் சங்குமுதலிய வாத்தியக் கருவிகளைக்காட்டும்; கும்ப-214. ஆர்ப்பித்தல்-ஆர்ப்பாடஞ் செய்யுமாறு செய்தல், மாயாச - 11, ஆர்ப்பிறேனை, அதிகா 90, நாக-284. ஆர்ப்பு அடிக்கின்ற தென்னைச்செவிதோறும்பிடிக்கின்றது, நாக-277, ஆர்ப்பெடுத்தல், இரா. வ - 35, ஆர்ப்பையுண்ணுதல், இரா. வ-28 ஆர்ப்பொலி-கர்ச்சனையொலி: இரணி-149

ஆர்வமு முயிருமொன்ற அழுந்துறத்தழுவல், நிகும்-1

ஆலகாலம்Xவெகுளி, நாக-72 [61

ஆலங்கொண்மிடற்றவன், அதிகா-

ஆலமன்னவரக்கர், முத-51

ஆலமுண்டவன், விபீ-111

ஆலமும்வித்துமொத்தடக்குமாண்மையான், இரணி-74

ஆலம் விஷம்: இராவ. தே-9

ஆலாலமுண்டவன், அதிகா-162

ஆலி-மழை, மாயாசீ-7, மீட்-72

ஆலிநாட்டுச்சடையன், திருமு-32

ஆலிலையிற் பிள்ளை X சிலையிற் பொலிகின்றான்: இரணி-102

ஆவத்து, விபீ-103

ஆவம்-அம்புப்புட்டில், இரா மங்-88

ஆவலங்கொட்டியார்த்தல், அதிகா-

ஆவலிப்பெய்தல், சிதைகள-28[214

ஆவலுந் துயருமறிவிலுற்றனையத்தக்க, இரா. வ-219

ஆவி-புகை, இரா. மங்-13

ஆவி குறைத்தல், நிகும்-31. ஆவி சிந்துதல், மாயாசீ-31: ஆவிசுழலல், வேலே-13. ஆவிதள்ளுதல்-மூர்ச்சித்தல், மாயாச-65: ஆவி பாழ்படுதல், மருத் - 76: ஆவி பின்னமாதல், மாயாசீ-45: ஆவி போற்றல், மூல-46. ஆவியனையான்; ஒற்று - 2: ஆவிபிரல், மருத்-89. ஆவியுண்டிலையென்னவோய்தல், மருத்-3. ஆவியுண்ணல், நிகும்-2. ஆவியுமுடலுமொன்றத் தழுவல், மீட்-345, See நிகும்-1 ஆவியோடல், மூல -87

ஆவினைச் செற்றோர் சுரர்தொழுஞ்சுரர், மீட்-170

ஆவுதி, இராம. தே-13

ஆழி-கடல், இரா. மங்-35, சக்கரப்படை, வேலே-26: ஆஜ்ஞா சக்கரம், இரணி-20: வரம்பெல்லை, மீட்-17

ஆழித்துயில்கடந்தயோத்தி வந்தான் அங்க-14

ஆழிநாதன், இரா. வ-35

ஆழிப்பெருங்கனல், நிகும்-134

ஆழிமால்வரை, வருண-20: அழியக்கிரி, கும்ப-8

ஆழியான், இரா. மங்-112, மூல-39

ஆழியிழைத்தல், விபீ-28

ஆழியினிலங்கை, ஒற்று-4

ஆழியுலகுXகளம், நாக-219. ஆழியுலகுண்ண வோங்கிய வாழியொத்தது, வருண-57

ஆழியேழ், இரணி-3, நாக-17

ஆழியையகற்றித் தனுவலங்கொண்ட காமரைக்கண்ணன், பிர-171

ஆளாயும்வாழ்தியராசாள்தி, நா-256

ஆளிகள் = அளிகள் - வண்டுகள், ஆள்பவர்: நிகும்-41

ஆளித்திறல், நாக-17

ஆள்-பதாதி, வீரன், அதிகா-115, இரா. வ-13. சாரதி, மூல-95

ஆள்வினையாற்றல், இந்-3

ஆறு அளறுபடுதல், வருண-24

ஆறுஎன்பதன்பின் முடிக்குஞ்சொல் தொக்குவியப்பைக் குறிப்பித்தல், முத-194 [16

ஆறுதல்-கோபந்தணிதல், படை-

ஆறுபோற்குருதிசோர, முத-138

ஆற்றலார், நாக-14

ஆற்றலாற்றுதல், மாயாசீ-18. ஆற்றலுக்கெல்லையுண்டோ, கும்-87

ஆற்றலாற்றம், அதிகா-222; ஆம்தல்-வல்லமை, இரா. மங்-32
ஆற்றல்பேர்சல், மாயாசி-45
ஆற்றவும்வியத்தல், அங்க-16
ஆற்றில் மீன்கள் மிளிர்தல் X ஒருதிப் பேராற்றில் படைக்கலம் மிளிர்தல், பிரமா-145
ஆற்றுதல்- உறுதியாகப்பற்றுதல், முத-96: மனம் பொறுத்தல், செய்தல், நாக-55, இரா.மங்-71: வல்லமைபெறுதல், இராவ.22, நடத்துதல், முத-242, செலுத்துதல், கும்ப-258
ஆனகமுரசம், களியா-3
ஆனந்தமென்னுமறை, நாக - 255
ஆனந்தவாரி: இந்-65
ஆனவர்-அவர்: இரா. மங்-63
ஆனனமலர்தல்-வாய்திறந்து சத்தமிடல், மீட்-310
ஆனனம், மீட்-58.
ஆனிமூலாரி: கேது: இரணி-84; மருத்து-71
ஆனிறக்கண்ணன் - கவாட்சன், சேது-12
ஆனையின்மீதுகொடி, முத-104
ஆன்ற, மாயாச-65
ஆன்றமைகேள்வியர், இரா. மங்-9
இகல்-வலிமை, போர், கடல்கா-11 இரா. மங்-41,87, முத-89-இகல் நீதியின் நடை - போர்முறையினொழுங்கு, இரா. வ-175
இக்கடை, நிகும்-27 [வ-43
இக்கணத்தும்-இவ்விடத்தும், இரா
இசை-கீர்த்தி, சொல், இரணி-91 முத-251, கும்ப-22, படைக்-11
இசைதல்-உடன்படல், மாயாச 60
இசைத்தல்-புகழ்தல், மீட்-204
இசைத்து = இசைந்துளா: மீட்-
இசையாவுருவம், பிரமா-224 [204
இசையாவளர்த்தல், இரா. மங்-82
இச்சை, இரா. மங்-142. இச்சைசல்லனவுறுதிகள், இரா.மங்-101
இஞ்சி-மதில், பிரமா-36
இருளூன்ற, மீட்-143
இடகலை, கும்ப-189
இடங்கரின் போர்த்து அரக்கர்: நாக-284. இடங்கரேறு இந்திரசித்தின்தேர்ச்சின்னம், பிரமா-75
இடங்கர் கவ்வ வலைந்தயானை, சேது-16. இடங்கர்மா, வீபீ-113,
இடதுகை கும்ப-186 [முத-4
இடத்தல் - பெயர்த்தெடுத்தல், அறுத்துவீழ்த்தல், மாயாசி-72. 68: கும்ப-319
இடந்துடித்தல், நிகும்-77
இடபவயமத்தர்போர், அதிகா-228
இடபனது வீரத்தொழில், நாக.56
இடபன். பிரமா-177 இடபன்கட்டிபிறக்குதலால் வயமத்தனிறத்தல், அதிகா-236
இடப்பொற்றோள்கள் துடித்தல் X மலைக்குலஞ் சலித்தல், இரா.வ. 18
இடம்-விசாலம், மாயாசி-85: இடப்புறம், நிகும்-114
இடர்க்கடல், இராம. தே-2
இடனிது காலமீது, வீபீ-54
இடித்தல்-தாக்குதல்: அதிகா-93 இடிபோலப் பல் விழுந்தன, படைக்-37; இடிபோன்ற மணிகளிடப்பட்டுச்சிகைம்போற் கர்ச்சிக்கின்ற சதங்கை, இராம.தே-7 இடிப்பு கர்ச்சனை, நாக-132, அதிகா-90, இடியுண்டகானகம், மகரக்-11; இடியுண்டமலை X இராமசரம்பட்ட அரக்கர்தலை, மூல-226, இடியுண்டவரவின், இல. கே-55: இரா. தே - 8 இடியுருமு, மாயாச-25; இடியொடு முகிலுஞ்சேர்த மொழிதல்
இடுக்கண, இரா.வ.216[அதிகா-1
இடுக்கு - சங்கடம், இரா. மங்-24, வருண-59: இக்கட்டானசமயம், கும்ப-307: மூலைமுடுக்கானஇடம், முத-212, திருமு-26, கவ்வுகை, முத-152
இடுக்குகின்றவிழி, இரா. கள-9
இடுதல்-போகட்டிருத்தல், இரா.மங் -12: வைத்தல், இரணி-115, எறிதல், படைத்-48

இடும்பன்-ஈரடியின்காவலன், முத-63: கும்பானுவைக் கொன்றவன், முத-67; இந்திரசித்துஎய்த பிரமாத்திரத்தாற் சாய்ந்தான். பிரமா-179

இடை-இடுப்பு, நாக-282 நடு. நாக-83: எற்றசமயம் விபீ-97; உலா: முத-163: இடம், பிரமாத் 21 மூல-175: இடையூறு, மூல-81 ஏழனுருபு, இரா. மங் 81

இடைக்கு அலம்வருதல் செய்யும் முலை, அணி - 16

இடைதடாது, மீட்-289, நிகும்137

இடைதருதல் - பின்னிடைதல், இடைதல்- நாக-74, இடைந்தவர், விபீ-111 [நாக-66

இடைமுடிதல் - நடுவில்நிகழ்தல்:

இடையறிதல், பிரமா-223

இடையீடு, முத-69

இடையுவாவினிற் சுவேலம்வந்திறுத்தல், மீட்-139

இடையுறுகருமத்தினெல்லை கண்டவர்-ஞானிகள்: முத-109

இடையுற்றது, நாகபா-3

இடையூறில்லா ஆயுள், வேலே-46

இடைவிடாதுநிற்றல் - இடையீடின்றியெதிர்த்தல், இரா. மங்-55

இகடிடல் - விட்டுச் செல்லல், நிகும்-38

இகடிய-நெருங்கிய, சேது-38

இட்டுண்ணுதல்: மாயாச-35

இட்டுழி, வருண-41

இணைகள்-ஒப்பு, மீட்-147

இணங்கினர், விபீ-87

இணர்த்துழாய், மீட்-98

இணையடி, வேலே-37

இணையாரமார்பு, நாக-266

இணையாருமிலவன், முத-180

இதம்-நன்மை: ஒற்று-50

இதழ்-உதடு, படைத்-65

இதால், கும்ப-124

இதுபோது, அதிகா-15

இந்தனம், பிரமா-56; இரா, வ-248

இந்தியங்களைதல், மீட்-195

இந்தியங்களை வெல்லல், மீட்-205

இந்தியந் தொறுமுளன், இரணி-72

இந்திரகுருவன்னார் X மந்திரவிதியினர், திருமு-25 [12

இந்திரசாலம், பிரமா-92, களியா-

இந்திரசித்து அறுநூறு வெள்ளஞ் சேனையோடு மேற்றிசை வாயிலில், அணி-20: இந்திரசித்து இலக்சுமணனுலிறப்பான், கும்ப-96: இந்திரசித்தின்வில்பிரமன் இந்திரனுக்காக வயிரமலை கொண்டுசெய்ய அவனைச் சிறைவைத்தபோது அவனிடத்தினின்று கவர்ந்தது, நாக-16: இந்திரசித்திற்குத் தெய்வப்படைகளைச் சிவன் தந்தான், நாக-12, இந்திரசித்தினம்பறுத்தணி X கூற்றின் கூடு, 17: இந்திரசித்து எடுத்துக்கொண்டபடைக்கலங்கள்-18: இந்திரசித்தின் தேர்சியத்தேறு ஆயிரமபூண்டது-19: இந்திரசித்து அனுமனையும் பிணித்துளன்-32: துண்ணிய வடிவுகொண்டு வானத்துமறைந்து நாகாஸ்திரம் விடுதல்-184-186: பிரமாஸ்திரம்தொடுத்தல், பிரமா-172: இந்திரசித்தின்பிரதிஜ்ஞை, 63-66: இந்திரசித்தின் மார்பையடைந்தகுன்று X கூடமுறும் நெருப்பையுற்ற தொரிரம்பு, நாக-80: இந்திரசித்துக்குமுன் ஆயிரகோடிசேவர் வலியொழிந்தாரெனல்-89: இந்திரசித்து வீரரொழிந்திடத் தான்தனித்தல் X வற்றியகடலுள் மலை நிற்றல், நாக-100, இந்திரசித்தின்மீது இலக்குமணன X மழையின் மேன்மழை - 101: இந்திரசித்துக்கும் இலக்குமணனுக்கும்நிகழ்ந்தபோர் - 101 - 189: இந்திரசித்தின் வாளி X மின் - துருமினம்-196: இந்திரசித்தின்வேல் விழுதல் X வெயில் வீழ்தல், நிகும்-180: இந்திரசித்தின் குதிரைகள் பச்சைநிறமுடையன: இந்-37. இந்தி-

ஜித்தின தலை இலக்குமணன் சரத்தால் விழுதல் X சூரியமண்டலம் விழுதல், 54: இந்திரசித்தை மனிதர் கொள்வது X உழுவைப்போத்தை உழையுயிர் உண்பது, மேரு அணுவொன்றினூற் சிந்துதல், இரா. சோ-17, 52, இந்திரசித்தின் மெய் X கருங்கடல், இரா. சோ - 30: இந்திரசித்தைக்கண்டு துன்புற்ற மண்டோதரி மகனுடலின்மேல் விழுதல் X வேடன் அம்புபட்ட மான்மலையின்மேல் விழுதல்-45: இந்திரசித்தின் இளமைவிளையாட்டு-47: இந்திரச்செல்வம், விபீ-152; இந்திரபதம் இரா.மந்-73. இந்திரபோகம், இரா.களை-7

இந்திரர்-தேவர்கள், அதிகா-63

இந்திரவில்லினோடும் மேகம் வருவது X வில்லோடு இலக்குமணன் வருவது, நாக-90

இந்திரன் மலைகளின் சிறகரிந்தது, மூல-55: இந்திரனைச் சிறையிடுதல், இரா. மந்-113: இந்திரனை முதுகுகண்ட இராவணன், இல. கா-5: இந்திரன்பகை - இந்திரசித்து, மகா-14: இந்திரன்பாசத் தழும்பு மறையாது, நாக-32: இந்திரன் கட்டளையால் இராமனுக்குத் தேர் வந்தமை, இராம தே-15. இந்திரன் குலிசம் X சிகரம்: முத-128. இந்திரன்செம்மல், அங்க-24

இந்திரன்பதி, இரணி-5

இந்திரைகொழுநன், இரா, வ-120

இந்து X அங்கதன்: அங்க - 42 இந்து இரவியோடும் வேற்றுமை தெரிவது, மாயாசீ-9, இந்துமண்டிலத்தின்மே லிரவி மண்டிலம், இரா. வ-61

இப்பி, சேது-25

இமயங்குலவரை, மருத்-24

இமைத்தலுக்கடனில், இல.கே-28

இமைத்தல்-பிரகாசித்தல்: கும்ப-252

இமைப்பிலர், இராவ. தே-32

இமைப்பில்கண், நிகும்ப-94

இமைப்பின்னிடை, நாக-128

இமைப்பு - இமைக்கும்பொழுது: இரணி-167, முத-232

இமையவரிமைத்து வியர்வையெய்துதல், வருண-38 [இரணி-6

இமையவர்பேறு அவிர்ப்பாகம்;

இமையாமுக்கணிறைவன், இராவ. தே-3. இமையிடையாகச் சென்றான், அதிகா-179; இமையிடையொதுங்காமுன், அதிகா-213 இமையொடுங்குதல், வருண-79

இமையோர்தந்தி-திக்கஜம்: இரா. மந்-13

இம்பரினுதிர்ந்தன, வருண-40

இம்பர்ஞாலம், பிரமா-113

இயக்கர், இரா, மந்-23, சேது-10

இயக்கியர், இரா, சோ-21

இயக்கு-சஞ்சாரம், முத-3

இயங்கள், கும்ப-185

இயங்குதல், மாயாசீ-6

இயம்பலாற்றுதல்: இரா- மந்-72

இயம்பியுறுதல், இரா. மந்-58

இயலுதல், இரா, மந்-34

இயல்-பெருமை, மீட்-174

இயற்கை-நற்குணம், வருண-11

இயற்கைதாங்கல்: நிகும்-72

இயற்றி-வல்லமை, இரா. மந்-3

இயற்றுதல் - (அனுபவிக்குமாறு) செய்தல், அதிகா-51

இயைந்திருந்தான், அங்க-15

இயைபு, இரா. மந் 91

இயையாக்கரு, மீட்-110 [-154

இரக்கத்தால் அறம் வளரும், மூல

இரக்கமிலவர், விபீ-69

இரச்சாட்சனுயிரை நனன் வாங்குதல், மகரக்-31, 34

இரங்குங்காலம், மகுட-32

இரங்குபடர், இரா. மந்-61

இரட்டிவருதல், மீட்-21

இரட்டுறுமுரசமென்ன விசைத்த தேயிசைத்தல், நிகும்-164

இரணம்- பொன்; போர்: விபீ-99, அதிகா-142, மாயாசீ-8

இரணமத்தன், இல. கே-45

இரணியன் பஞ்சபூதவலிமைபடைத்தவன், இரணி- : எல்லாவண்டத்துந்தன்பெயரே சொலவாழ்ந்தான்-2: எதனுலும் சாகான-14, 18: தன்னொழுக்கத்தால் திரிமூர்த்திகளினும் மேம்பட்டமை, 53-54: பிரகலாதனைக் கொல்லுதல் X கேண்மா கரியைக்கொல்லல்-125: துணிலெற்றுதல் X உருமுவீழ்தல்-127: இரணியனது தாளலாலருச்சனை செய்யார்-9: இரணியனேவேதங்களும் பரம்பொருளென்று வணங்கியது-10: சாபமும்சேராது-16: இரணியனிடத்து அச்சத்தால் இருந்த இடந்தெரியாமல் தேவர் மறைவர்-154: இரணியசங்காரம்-153 மூல 210: இரணியாட்சன் இரணியனுக்குப் பின் பிறந்தவன்: இரணி-12 :இரணியாட்சனுக்குக் குண்டமே உதயாத்தமனமலைகள்-12

இரண்டாமபிறைபோற் சிலைவளைத்தல், நிரும்ப-117 [கும்ப-301

இரண்டாயிரம் பேய்சுமந்தவாள் -

இரண்டி னென்ருக்குதல்,இரா வ. தே-26

இரண்டுமானமுமிழத்தல் இல.கே. [56

இரதம-யாதரசம், ஒற்று-3

இரதவீரர், அதிகா-116

இரத்தகப்பருதியீன்றபூ-சூரியகாந்திப்பூ: மகர-20

இரத்தத்தில் அரக்கர்கை வெட்டுண்டு அம்போடு வீழ்ந்துகிடத்தல்Xஅலைகடலில அரவக்குலம் மரக்களையோடும வீழ்ந்துகிடத்தல் மூல - 200: இரத்தப்பெருக்கிலமுழ்ந்திய குடை × இராகுவாற் பிடிபட்ட சந்திரன, நிகும்-36: இரத்தப்பெருக்கினலேவய மங்கை மங்கலச்செய்கோலம் புனைந்தவளாகக் காணப்படுதல், மூல-136: இரத்தம் பெருக வளருகும அனுமான்Xகுணபாற் படிவுற்றபருதி, நிகும் - 122: இரத்தம்பொடித்தல்,மகுட-10: இரத்தவாற்றில் இந்திரசித்தினைமக்கால் அவிதல், நிகும்-46 இரத்தவெள்ளத்தா லீர்க்கப்பட்ட பொன்னேடைக்கரிகடலையடைதல் × மேகம்பினனேடுகடலில் விழுதல், மூல-201

இரத்தவெள்ளத்தில்யானைக்கோடுகள்கிடத்தல் X செக்கர்வெண்பிறை கிடத்தல், வான. கள-16: இரத்தவெள்ளத்தில் வாள்கள் இறவு மீன்களை யொத்திருத்தல், மூல-202

இரந்தோர்க்குக் குறைவறக் கொடுத்தல், விடை-15

இரவலர், கும்ப-225

இரவி, மகுட - 50: X இராமபாணம், வருண-49

இரவிகாணமுளை: மீட் - 160

இரவிதன்குலம்;வேலே-48 இரவிதன் பெரும்பதம், இரா.வ,78

இரவினதினகிகர்மதகரி, அதிகா-139

இரவினெண்ணிட வேறிருந்தான், ஒற்று-40

இரவு நண்பகலும்Xஇராவணனும் இராமனும், இரா. வ-25

இராக்கதசங்காரஞ்செய்து தேவர் துயர்தீர்த்தல, மீட்.294

இராக்கதப்படை மீது வானரப்படைபொரச்செலலுதல்Xதென் கடல் மேல் எனைக்கட லெழுதல்-அதிகா-88

இராக்கதப்பதாதி X விடைக்குலங்கள், பிரமா-99

இராக்கதர் தவம்முதலியன உடையோராயினும் சமயத்து அவற்றைக் கைவிடுவர், விபீ-67

இராப்பொழுதுவிடிதல், அணி-23

இராமகுணம். விபீ-130

இராமன் முதற்கடவுளினவதாரம், இரா. மந்-111, மாயாசீ - 77, இரா. கள-15, இரா, வ-135: வீடளிக்கும், கும்ப-139: கான

கம்வந்தது வானவர்கடாவவே,
இல. கா - 13: இலங்கையை
விபீடணனுக்கு அளித்தல், விபீ-
142: பல வீரர் சூழச் (சுக்கிரீவ
விபீடணர்களைலாகுதரச்) சுவே
லத்தேறுதல் × அரியரசுசீயம்
பலவும் புலிகளுஞ் சுற்ற அருவ
ரை யிவர்தல், இல. கா-26:
மகரக்கண்ணனை மாயத்தோடு
பொருது வீழ்த்தியமை, மகர-
17-29: அணைகடத்தல், ஒற்று-
6: சுக்கிரீவனைக்கொணர்ந்து வருந்து
தல், மகுட-26: வடதிசை வாயி
லில் தம்பியோடும்நிற்றல், அணி-
7: இராவணனை வெறுங்கைய
னெனக் கொல்லவுன்னுமை,
முத-251: இராவணனுக்குச்சில
கூறுதல்-252-256: கும்பகர்ண
னுடைய உறுப்புக்களைக்குறைத்
துத் தலையையு மறுத்தல், கும்ப-
339-350, 361: பரதனிறந்தா
லுயிர்வாழாமை, மாயாச - 46:
சீதையினுடைய ஆசைக்கனி,
21: கருடபகவானுக்கு முகமன்
கூறுதல், நாக-267-269, ஆயுத
பூசைசெய்யச்செல்லல், பிரமா-
90: தம்பி யிறந்தானென்று புலம்
பல்-205-220: தயிர்தோய்பிரை
போல் எங்குங்கலந்துள்ளவனெ
னல், நிகும்ப-143: சீதையை
வெட்டினதைக்கேட்டு உணர்
வற்று விழுதல், மாயாசீ-60:
இலக்குமணனை விபீடணனுக்
குத் தம்பியெனல், மூல-68: வில்
லைத்தொழுதுவாங்கல்70: ஒருவ
னாகவே பலகோடிப்படைகளை
யுங் கடிதல்-104: அம்புகளினால
போணிவகுத்தல்-141: சாமதி
லமைக்க அரக்கர் திகைத்தல்-
170, 173-177: காந்தருப்பாத்தி
ரம்தொடுத்தல்-182; சிலைவளை
ந்த போதெல்லாம அரக்கர் தலை
குனிதல், 207; பேரர்க்களமென
கும் அளறுதல்-210: இராவண
னைக் கொல்லப் பிரமாஸ்திரம்

விடுத்தல், இரா. வ-193-194;
இராமன் தேரை யிந்திரனிடம்
கொண்டுபோமாறு மாதலியை
யனுப்புதல்-203; பகைமைவிட்டு
இராவணனுக்கு ஈமச்சடங்கு
செய்யென விபீடணனிடம்
கூறல 216; தொழவந்ததேவர்
களைக் காணச் செல்லுதல்-217;
'வீடண! நமதேவியைத்தா'
எனல, மீட்-37; சீதையைக் கடி
ந்து கூறுதல், 62-68; சீதையை
அங்கீகாரஞ்செய்யுமாறு சொல்
லல்-97; இராவணனை வடக்கு
வாயிலிலேலற்றது, 163, இல-4;
பரத்துவாசனைக்காணுதல-182:
தாயசர் முதலியோர்க்குக்கன்று
முதலியனபோலுதல் 337; அரசு
புரிதல், விடை-36, 37; இரா
மனை யடையாது போனல புக
லிடமில்லை, கும்ப-141; இராம
னைக் காணும் வேட்கை சீதையி
னுவியைப் போகாது மீட்கும்,
மாயாச-23; இராமனைநாராயண
னெனறு மண்டோதரி நினைத்
திருதல், இரா. வ. 245; இரா
மனைக்கண்ட சீதை அவனைச்
சாரப்பொருந்துதல் × உயிரி
னைக் கண்டவுடல் அதனைக் கவ
ரப்பொருந்துதல்; மீட்-58; இரா
மனைப்பரமென்றறிந்தவர் பாசத்
தளையினின்றுமீள்வர்-102; இரா
மனது மேனிக்கும் வீரச்செய்
கைக்கும் சீதையால் காமனும்
நாணும்நானெனத்தக்கமே, கும்ப
-30; இராமன் கோதண்டமணி
எழுமை நாழிகைஒலித்தல் மூல-
228; இராமன் நிரிந்தசாரிகை
யால் அரக்கர்கள் அவனைத்
தத்தமக்கெதிரிலுள்ள வனுகக்
கருதல், மூல - 116; இராமன்
விற்றொழிற் காயிர மிராவண
ரமைவிலர், கும்ப-354, மனித
னுண்டாலென்ன, இராவண
னுண்டாலென்ன, மூல - 43;
இராமனகன்ன இராவணனு

டத்தை வீழ்த்தல், முத-245; இராமசரங்களால் மகோதரன் துணிப்புண்ணுதல், இரா. வ-15; இராமனுக்கும் இலக்குமணனுக்கும் உயிர் ஒன்றே, மருத்-22; ஸ்ரீராமனது சோக நிகழ்ச்சி, நாக-221-225; இராமனெனுங் களிமாவுண்டாடியகளம், அதிக-27: இராமராவணர்க்கு எழுநாள் போர் நடத்தல், இரா. வ-184; இராமபாணம் இராவணனுடைய வுயிர் பருகிப்பாற்கடலினீராடிக் குருதிப்பரவைமேற் சென்று புட்டிலிற்சார்ந்தது-199; இராமன் கடிந்து கூறியவற்றுக்குச் சீதையின் சமாதானம், மீட்-73-77; இராமனருகு சீதையை யங்கி கொணர்தல்-96; இராமனுடைய தெய்வம் கைகேயி-129; இராமனது பட்டாபிஷேகச் செவ்வி கண்டார் பிறப்பெனும் பிணிகடீர்ந்தார், திருமு-36: இராமனது முடிசூட்டுவிழாவில் தாமே முடி சூடினார்போலப் பலரும்மகிழ்ந்தனர், திருமு-40 இராமன்சொற் கடவாததனுதன், அங்க-14; இராமன் கணைXஊழியனல், மூல-14 X மறைவாணனுக்குச் சிறுவிலைகாளுசவியது; இரா. வ-52; இராமன் வின்னொலிXயுகாந்தகாலத்து மண்முதலியன வாய்ப்பெய்துண்ணு முருத்திரனார்ப்பு; முத-225; திருமாலின் சங்கொலி, மூல-190; இராமனுற்சொற்பவரக்கச் சேனையழிதல்Xவேலைச்சின்னீரிரவிபருகுதல்; கும்ப-39; இராமன்வாளிX உவணவண்ணல் 346; இராமபிரான் மார்புஇரத்தினஹாரம் நீங்கியிருத்தல் X இந்திரதனுசு நீங்கியவானத்துமேகம், விபீ-135; இராமன் தோளில் நிலாத் தவழ்தல் X மரகத மலைமேல் அராவூர்தல், ஒற்று-23; இராமனுடன் வாழ்ந்த சீதை இராவணனுடன் வாழ்வளோ X அரியோடும்வாழ்ந்தபேடை நரியொடும் வாழ்வதுண்டோ, மாயாச-68; இராமனைச்சூழ்ந்த அரக்கர் Xசிங்கத்தைச் சூழ்ந்தயானைகள், மூல-78: பகலோனைச்சுற்றிய பருவமேகம் - 100; இராமன் அரக்கரினீங்கி விளங்குதல் X வெய்யவன் இருளினீங்கிப் பெயர்தல் - 101; இராமன் மேல் அரக்கர் படைகளைத் தூவுதல் X ஒருமலையின்மேல் மேகம்மழை பொழிதல் - 133; ராமராவணர் பொருதல் X ஞானகருமங்களும் விஞ்சையவிஞ்சைகளும் பாவ புண்ணியங்களும் எதிர்தாக்குதல்; இரா. வ-24; இராமன்வில் லொலிXஊழி மாமழையொலி-35; இராமபாணம் படப்பெற்ற இராவணன்Xகுத்துக் கொடுநெடுங்கோல் படுகளிறு-56: இராமன் வரவு X தந்தையார்வரவு: மீட்-326; இராமனுடைய தோளிற்சாமரைகடெற்றுதல் X மரகதச்சயிலமீதுநிலாப்பாய்தல், விடை-3; இராமலக்ஷ்மணர்பரம்பொருளின்அமிசமானவர், இரா. மர்-85; இராமனுக்கு இரக்கமல்லால்வேறோருயிரில்லை மாயாச-24

இராமனுண்டாலென்ன இராவணனுண்டாலென்ன என்றகருத்து, மூல-43

இராமாதியர் அயோத்தி செல்கையில் மலர்மழைபொழிதல், திருமு-8

இராவணன், நிகும் - 174; இராவணன் வாலிக்கொடுங்கியவன், இரா. மர். 10; கைலையைத்தூக்கியவன்-25; மனிதரைவெல்ல வரம் பெறவில்லை-78; கார்த்தவீரியார்ச்சுனனுக்குத் தோற்றவன்-79; நந்தியினுற்சபிக்கப்பட்டவன்-80; சாபம்தன்னையொன்றுஞ்செய்யமாட்டா தென்றுன்-

106; திருமாலைப் போர்தோறுந் துரத்தியவன்-113; தன்பெயர் கேட்டலால் ஈசனும் அரியும் எய்த்தசிர்தை யராவரெனல் -116: சுக்கிரீவனைத் துகைத்தல்X மதகரியை யரிசெரித்தல்,மகுட-11: கைகளால் சுக்கிரீவனைப் பற்றுதல்X அராப்பற்றுதல்-13, சினத்துடன் சுக்கிரீவன் காத்தைப்பிடித்தல் × மேகம் உருமைத்தொடரவோடி விழுதல்-22: மந்திராலோசனைச் சபை சேர்தல், அணி-9; தானே வடதிசைவாயில் காப்பவன் - 22; வருணலோகம் முதலியவற்றை வென்றவன், அங்க-38: வானத்தார்முதலியோர் நகுவதற்குவாடாது சானகி நகுவளென்றே சாம்புதல், கும்ப-11;கும்பகர்ணனுக்கு உணவளித்துக்கலன் பூட்டுதல்-73: சீதையினிடம் கூறுவன, மாயாச-8, 49-54; சினந்து சீதைமீதுசெல்லமகோதரன்தடுத்தல்-60; கருடனைப் பற்றிக் கூறும் பரிகாசவார்த்தை, நாக-296-298: நாட்டத்து நீரொடுகுருதி தேக்கினனை: கும்ப-99; விஞ்சையர்வேந்தனை வென்றமை, வான. களா-34; யமனையும் வென்றமை, இரா. சோ-38: காலகேயரைச் செயித்தமை-57; தும்பைசூடி இராமனோடு போர்க்குச் செல்லல், இராவ. தே-16, மூவுலகையும் வென்று அமரரால் வாகை சூட்டப்பெற்றமை - 16; தேரைப் பூசித்தமை-24: எழுகடல் முதலியவற்றிற் பல கலம் வைத்திருந்தமை, இரா. வ 70; உணர்வு தெளிந்ததும் தேரைவிலக்கி நிறுத்தியதற்காகச் சாரதியைச் சினத்தல்-177; தலைகீழ்ப் படவிழுதல்-200: உயிர்துறந்தபோது முகம் மும்மடங்குபொலிதல்-201: தரைவெட்டிவீழ்த்தல், இரா. சோ-5: இராவணனது பத்துச்சிரங்களும் புலம்புதல் இரா. சோ-16-22; இராவணன் தேர் இந்திரன் தந்தது, ஆயிரம்பரி பூண்டது, முத-95: வீணைக்கொடி யுடையது-101; இராவணன் பத்துக்கார்முகம்-197; இராவணன் புலத்தியன் வழி வந்தவன், கும்ப-82: இராவணன் பொன்றினனென்பதைத் திருமால் முதலோரும் பொய்கொலென்பார், இரா.வ-215; இராவணன் வலிமைக்குத் தேவர் முதல் மூவர்வரையில் ஒடுங்குதல், இரா. மந்-23; இராவணசுக்கிரீவ யுத்தம், முத-128-131: மகுட-16-25: இராவணன் முடிமணிபறித்தது,சிவன் முடித்திங்களையும்திருமாலின் மார்பின் மணியையும்பறித்தலிற் சிறிது, மகுட-47: இராவணன் சேனையின் தொகை, இல. கே-29:இராவணன்கண்ணில்நீங்கினவர் மண்முதலியவற்றில் இலர், இரா. மந்-26; இராவணசாபம், மந்-80, 104, இராவணவதமமார்களின்போர், முத - 133-138; இராவணன் முதுகில்தழும்பிற்குக்காரணம் திசையானையின் கோடு மார்பிற்புக்கு வெளிப்பட்ட புண்ணினாலாகியது,இரா. வ. 212, இராவணன்பல்லைக் கடித்துத்தரையிலடித்தல்,இரா. சோ-9: இராவணன் முன்குரங்குகள் X சீயத்தின் முன் நாயினம், இல. கா-4; இராவணன் மகுடமணிபறித்தெழுந்த சுக்கிரீவன்Xபணிபறித்தெழுந்த கருடன், அங்க-18; இராவணன் கொடுக்க அங்கதனரசுபெறுதல் Xநாய்தரச் சீயம் நல்லரசுகொள்ளுதல்-29;இராவணன்தோளிவிரதம்Xநீலக்குன்றத்து இளவெயில், அணி-9; இராவணன் கையில்தோன்றுமிலக்குமணன்

Xகடலினலேயில் தோன்றுஞ்சந்திரன், முத-211; இராவணன் மீதுசெல்லும் இராமன்Xயானே மேற்செல்லுங் கோளரியேறு-215; இராவணன் கோயில் சேர்தல்Xகளிறுகூடம் புகுதல், கும்ப-5: இராவணனமளிசேர்தல்Xயானேசேவகஞ் சேர்தல்-9: இராவணன்கும்பகர்ணனேத் தழுவுதல்Xநின்றகுன்று சென்றகுன்றைத்தழுவுதல்-72; இராவணன் முடி Xமின்றிரைத்தருக்கனேவிரித்து மீன்தொக்கது, மாயாச-17. இராவணனேயருகு கண்டசீதை X வல்லியமருங்கு கண்ட மான்-18; இராவணன சோகத்தால் தரையில் வீழ்தல் Xமராமரம்மண்மேல் விழுதல்-76; இராவணனுள்ளவரையில் இருந்து அழியுமரக்கர்Xநீருளதனேயுமுள்ள மீன, நிகும்ப-166; இராவணன்முனிதல்: X வல்லியமுனிதல், இந்திர-12: இராவணன் கண்களிலிருந்து நீர்பெருகுதல்Xஉருகுசெம்பு ஓடுதல், இரா. சோ-8; இராவணன் வில்லொலி X எழுவேலேகளிரைர்ப்பு, இரா. வ- 35: இராவணனது வானத்தெழுந்ததேர் X மந்தரக்கிரி: மாருதிதந்த மருத்துப்பொருப்பு-58: இராவணன் றலேப்பெயர்த்தும் முளேத்தல் Xஇறந்தவுயிர் பிறத்தல் - 152. இராவணன்தோள் மார்புகளினின்று அணிகலனும் மணியுஞ்சிந்துதல்Xகார்மழை நின்றுருமுஉதிர்தல்-200, இராவணன்மீது விபீஷணன்வீழ்தல்Xமலே மேல் மலேவீழ்தல்-218; இராவணன் தோள்மீது விழும் அரக்கமடந்தையர்Xகடலலேமிசை வீழன்னம், 232 இராவணன்மார்பில் மண்டோதரி யுறுதல் X வேலேயிற்றடித்துவீழ்தல், 537

இராவணி-இந்திரசித்து, நாக-161

இரிதல், படைத்-28, மகரக்-26

இரிந்துதோற்றல் = தோற்றிரிதல், மாயாச-5

இரிந்துபாறுதல், நாக-218

இரியலிடுதல், அதிகா-266

இரியல்காணுதல், படைக்கா-34

இரியல்போதல், படைத்-63

இரியுண்டவர், நிகும்-38

இருசுடர், நிகும்-156

இருகை-இருபக்கம், மூல-141 [37

இருக்கை, இரா. மந்-35, மாயாச-

இருங்கடியரணம், இல. கே-19

இருஞ்சிறகற்றபுள் X சீதையைக் காக்கமுடியாத அனுமான், மாயாசீ-48

இருட்பிழம்பு: இரணி-140 [-212

இருதலேக்கொள்ளி யொப்பேன், இருது, இராம, தே-9

இருநிதிக்கிழவன், வான. கள-34

இருநிலமடந்தை மெய்குலேந்துவிம்முதல், நிகும்-60 [ம், மூல-44

இருந்தாலன்றே புகழைப்பெறலா

இருந்துயர்மருந்து, திருமு-30

இருபத்தாறுந்தத்துவம்பரமான்மா மீட்-104 [272

இருபுறஞ்சாமரையிரட்டல், மீட்-

இருப்புக்கம்மியன், இரா. வ-121

இருமடி, கும்ப-247

இருமையு ளோக்கல், வேலே-44

இருமையுந்துடைப்பவன், மருத்-91

இருமை யென்றுரைசெய் கடல், இரணி-64

இருவரையொருங்கு காணும்யோகி Xவிபீடணன, ஒற்று-26

இருளுடைச்சுடலே, பிரமா-148

இருளுறு தாமதம், இரா-வ-89

இருளே இராமன் ஆகநேயாஸ்திரத்தாலோட்டுதல், நாக-218

இருளொக்கு மென்று விடியாய், நாக-253

இருள்Xஅரக்கர், இல.கா-27; இருள் பாவம், நாக-245; இருள்வருணனே, நாக,217; இல. கே: 2 இருள்நீங்குதலின் வருணனே, வருண - 4; இருள்பள்ளத்தி

லன்றிவெளியிற்பல்காது X கள்ளம்கருத்திலாம், விபீ-91: இருள் போய்விடிதல் X அமரர்குன்றையும் கோட்டிற்கொண்ட வெள்ள நீர்வடிதல்: இல. கா-23

இரைத்தல் - சீறுதல், கும்ப-210, வாய்விட்டுக்கதறுதல், நாக-215

இரைத்தார்த்தல், மருத்-100[168

இரையுண்டுதுயிலும்வாளி, நாக-

இலக்கணம், விபீ-43

இலக்கம், வருண 77

இலக்கு, மூல-141, மாயாச-9

இலக்குமணன்காணெறிய அரக்கியர் மாங்கலியத்தை யெறிதல், கும்ப-209; காலன், குலிசன் காலசங்கன் மாலி மருத்தன் என்றவர்களைக் கொன்றமை, அதிகா - 125: அதிக யனசிரத்தைப் பிரமாத்திரத்தாலறுத்தல், 206: மனையும் வாழ்வுமுறக்குமாற்றினவன், நாக-153; யஞ்ஞசத்துருவைமாய்த்தல், படைத்-85; பிசாசனைக்கொல்லுதல்-99: பதினன்குவருஷம் புசியாதிருத்தல், பிரமா-209; அனுமான் மீது ஏறிக்கொள்ளுதல், கும்ப-231 நாக-101 இந்தி-59; உயிர் தோறும் பொருந்தியுள்ள கடவுளெனல், நிகும்-143; செம்மை நிறமுள்ளவன் - 163: இந்திரசித்தைக் கொன்றமை, இந்திர-62; இந்திரசித்தின்றலையை யிராமன் றிருவடியிற்சமர்ப்பித்தல்-60; இராமனைத்தன்னுயிராகக் கருதியிருத்தல், வேலே-47; இலக்குமணனால் இந்திரசித்து நிகும்பிலையிற் செய்த யாகம் கெடுதல்: நிகும்-44-51; இலக்குமணனுக்கு ஒப்பானவர் இன்னவர், முத-204, நாக-120, இலக்குமணனே தாய்முதலிய யாவுமென இராமன் இரங்கல், பிரமா-207. இலக்குமணனம்பு இரக்கமற்ற இராக்கதர்களையும் தேவர்களாக்கியது-111; இலக்குவன் சிலைநாணொலியைக்கேட்ட வரக்கர் X சீயத்தின் முழக்கங்கேட்ட யானைகள், முத - 142: இலக்குமணன் யாக்கையை யெடுத்தல் X பொன்மலையை யெடுத்தல்-209; இலக்குவன் X வேனிலான், கும்ப-221; இலக்குவன்சரம் X தமிழ் நிரம்பும் புலவர்-226; இலக்குமணன் பிரிந்தேகக்கண்ட இராமன் X விசுவாமித்திரனுடன் இராமன்செல்லக்கண்ட தசரதன், நிகும்ப-14; இலக்குமணனும் இந்திரசித்தும் பொருதல் X கடலும் கடலும் பொருதல்-108; இலக்குமணன் வேறொருகணையால் பிரமாத்திரத்தை மீட்டல் X விடமொன்று கொண்டு மற்றொருவிடத்தை மீட்டல்-139. இலக்குமணன் கண்ணைப் பலங்குறைந்த இந்திரசித்து X கலுழனண்ணப்படங்குறையரவம், இந்தி-2: இலக்குமணன் வரவுபார்த்து நிற்கும் இராமன் X இராமன் வரவுபார்த்து நிற்கும் பரதன் - 64;

இலக்குமணனம்புகளால்இராவணனம்புகளழிதல் X காற்றினாற் பஞ்சு அழிதல்: வேலே-19; இலக்குமணனம்புகள் இராவணனெறிந்த வேலினை யொன்றும் செய்யமாட்டாமை X மாதவத்தொருவனைச் சிறுதொழிற்றீயோன்வைதலை வீணிலொழிதல்-29

இலக்கை-பாதுகாப்பு, கும்ப-340

இலங்கா, இரா. மர்-20; இலங்கை X கடற்கிறைவன்பூண்ட மாலை, மூல-32; இலங்கைநகர்காப்பவரின்தொகை, இல. கே-26; இலங்கைமதிலின்விஸ்தாரம் எழுநூறுயோசனை, இல. கே-18; ["எழுநூறுயோசனைசூழ்ச்செயில்கிடந்த திவ்விலங்கை, (ஊர்தேடு-229) "உட்புலநெழு நூறென்பயோசனை" (கடறாவு - 94) என்பன

உடற்பாங்கள் கொடொதுங்கினர், நாக-64 [கிகும்-52
உடற்பொறை, அதிகா-111,
உடற்றுதல்-வருத்துதல், மருத்-98
உடனுதல்-கூடுதல், நாக-262
உடனேதிரிபிழல், மூல-116
உடன், இரா. மங்-114 [கும்ப-353
உடன்பிறப்பின்பயனேரான்,
உடன்பிறப்பு இன்றொடுங்கவிர்ந்தது, கும்ப-167
உடன்றெழுதல், மூல-133
உடுக்கள்தம்உலகு-நட்சத்திரமண்டலம், படைத்-59
உடுக்குலமுதிர்ந்து சிந்துதல், இராவ-62
உடுத்தல்-சூழ்தல், மீட்-261
உடுபம்-தெப்பம், இரணி-101
உடுமீன் தொத்தப்பொலி கனகக்கிரி × முத்துக்கள் தொத்தப்பெற்ற அனுமன்மேனி, பிரமாத்-117
உடை-உடைதல்: மகுட-12
உடைக்கடல், இரா. வ-70
உடைதல்-வலியழிதல், உயிரொழிதல் நாக-70, இரா. வ-128, 251: நிலைகெடுதல், கும்ப-188; போக்குதல், மாயாச-47
உடைந்தவர்க்குதவுதல், விபீ-111
உடைப்புறு புனலி ளேடுதல், பிரமா-17
உடையான்-ஸ்வாமி, இரணி-175
உக்கறப்பு, இலங். கே-4 [89
உங்குதல், இரா. மங்-34. படைத்-
உட்பகையையுடன் கோடலின் நஞ்சினையுடன் கொடு வாழ்தல் நன்று, விபீ-8 [168
உணங்கல்-வாட்டமடைதல், கும்ப-
உணங்குகொம்புக்கு உயிர்தருநீர் × சீதாபிராட்டிக்குஅனுமன்கூறிய சொல், மீட்-15
உணரக்கூறுதல், இரா. மங்-37
உணர்ச்சிதொடராத தன்மையுருவாய் மறைதல், நாக-252
உணர்தல்-நிச்சயித்தல்: இரணி-100: ஆராய்தல், இரா. மங்-36, மனத்துக்கொள்ளுதல், ஒற்று-28; தியானித்தல், கும்ப-115
உணர்ந்திருந்தின்னலயக்குர் தம்பி × நல்லறிவு: நாக-201 [16
உணர்ந்திலர்களொன்றும், மகுட-
உணர்ந்துகோடியல் நன்று, கும்ப-
உணர்விலி, இரா. மங்-110 [86
உணர்வுகூடுதல், மருத்-103
உணர்வுசோர்வாள், மாயாச-47
உணர்வுடையான் விபீடணனென்றும், குலக்கிழவன் மாவியவனென்றுங்கொள்ளலுமொன்று, அதிகா-273
உணர்வுதோன்றியபித்தர் × சக்கிரிவாதியர்பேச்சால் தெளிந்தாற்போன்ற இராமன், விபீ-33
உணர்வெஞ்சுதல், கும்ப-267
உணர்வொன்றுதல், விபீ-123
உண்குறுநீருகுத்தல்-தர்ப்பணஞ்செய்தல், இரா. வ-252
உண்டவர்க்குரியது முன்னஞ்சாதல், கும்ப-157 [நாக-269
உண்டிலை யென்னவின்றவுயிர்,
உண்டை, இரா. வ-78, 108
உண்ணிறைசெல்வம், சேது-19
உண்ணிறையூடல், விபீ-32
உண்ணினைப்பு பிரஜ்ஞை, மீட்-70
உன்னின்றலை கடல் என்பதை, உன்னின்று அலை கடல் எனப் பிரிக்க, அதிகா-142
உண்ணுதல்-உயிரைக் கொள்ளுதல்: இல. கே-57: சாதித்தல், முத-247: நிரம்பியிருத்தல், நிகும்-38
உண்ணு நீர்க்குயிர்க்கு முயிரவன், மீட்-209
உண்பத முலவை யாதலாலறக்கிலர், இல. கே-25
உண்மூழ்த்தல் - மனமகிழ்ச்சி குன்றல், கும்ப-207
உண்மை-திண்ணம், கும்ப-97
உண்மைபோலுயர்ந்தது இராவணன் தேர், இராவ. தே-23
உண்மையெனலாயதன்மை, நாக-260

உதயகாலத்தில் கடலும் மலையுந் தோன்றல் X இரத்தப்பெருக்கும் யானைகளுந் தோன்றல், படைத்-57
உதயகாலை, மீட்-319
உதயக்குன்று, மகுட-1 [நிகும்-73
உதயஞ்செய்தல்-அவதரித்தல்,
உதயமண்டிலம், வேலே-8
உதயம், இரணி-151 [இரணி-12
உதயவத்தமனமலைகளின் தன்மை,
உதரம்-உள்ளிடம், இரா. சேர-1
உதவலிற் றகைவ வின்றி, விடை-
உதவியோன், நாக,269 [25
உதவுதலாற்றலேன், மீட்-29
உதவுதல்-கற்பித்தல், இரணி-21: கைகொடுத்தல், முத-253, தருதல், விடை-31
உதிக்கும் அருணன் X குருதியின் செக்கர் சூழ்ந்தெழ நின்றவன்: கும்ப-287
உதிரத்தாழி, கும்ப-218
உதிரத்தொழுக்கம், முதற்-27 [24
உதிரநிறக்குளங்கள், வான. கள-
உதிரநீர், கும்ப-166
உதிரந்தூவுதல், இரா. வ-159
உதிரப்புனலில் கொடிகள் அலைதல் X கடலினிடையில் முகில் வீழ்தல், நிகும்-35
உதிரப்போர்வையான், கும்ப-295
உதிரமாரி, இரா. வ-19
உதிரமூறுதல், இரா. மந்-13
உதிரம் கடலொடுபொருதல், X கடலொடு கடல்பொருதல், அதிகா-134 [வருண-30
உதிரம் கடற்றிரை பொருவன,
உதிரவாய்ப்புரவி X கனலிகாலுறு வடவை, படைத்-47
உதிரவாரி, கும்ப-63, நாக-82 [46
உதிரவாற்றின்வருணனை, நிகும்ப-
உதிர்-பொடி, கும்ப-202: கூறு,
உதை, நாக-127 [முத-71
உதைத்தல்-வில்லினின்று செலுத்துதல் முத. 247, இரா. வ-46
உதைந்தன, கும்ப-334 [கும்ப-35
உத்தமர்க்குரியது ஒன்றில்நிற்றல்,
உத்தமனுர்தேவிதனை யோராதே கொள்ளுதல், இரா. வ-245
உத்தமன், விபீ-13
உத்தாகுருநாடு, மருத்-54, 57
உத்தரீயம்Xஅருவி; இரா. தானை-5
உத்தாமம், இரா. வ-117
உந்திவந்தான்-பிரமன், இரா-181
உந்துதல், தள்ளுதல், அதிகா-33, மாயாச-28: தாக்கிவீழ்த்துதல், நாக-96; செலுத்துதல், மகரக்-2: தூண்டுதல்- மாயாச-29: நீக்குதல், மருத்-198, தருதல், விடை-23
உந்தை, இரணி-22, விபீ-146
உந்தையை யுயிருண்டவுதவியோன், கும்ப-198
உபநிடத்து, இரணி-29
உபநிடத்துநின்களவைத் தெளிந்திலது, மீட்-105
உபயம் = உபாயம், இரணி-117
உபாயந்தேர்தல், மருத்-6
உப்பு-லவணசமுத்திரம், முதற்-27
உப்புக்கடல் முதலிய எழுகடல்கள், மூல-137 [வருண-33
உப்புவேலை யப்புவேலை யாதல்,
உமை, இல. கே-53
உமைக்கொருபாகன், பிரமா-23
உமையன்-உன்தமையன்:உமையையொருபாகத்திலுடையவன்: அதிகா-190, மீட்-126
உம்பரார்த்தாடுதல், இரா. வ-172
உம்பருக்கிறைவன், இரா. மந்-82
உம்பருமுலகும்பரவும்மெய், மீட்-
உம்பர், மகுட-2, அதிகா-9 [133
உம்பர்உணவிற்சிறந்தவர், மூல-42
உம்பர்கானெனப் பொலிதல், அதிகா-96 [தி, மீட்-320
உம்பர்கோனகருமொவ்வாவயோத்
உம்பர்தஞ்சூழ்ச்சி, இரா. மந்-111
உம்பர்நாடிழந்துவீழ்ந்தஒளியவன், நாக-202
உம்பர்நாயகி-சீதை, மீட்-297
உம்பர் மந்திரிக்குமேலாவொருமுழமுயர்ந்தஞானத்தம்பி, இல. கா-15

உயிர்நிலை-உயிர் வாழ்கை, மீட்-236
உயிர்படைத்தல் × வலிமையடை
தல்: வருண-56
உயிர்பருகல், இந்-22
உயிர்பிடுங்கியுண்ணல், மூல-24
உயிர்போக்குதல், பெருமூச்சு விடு
தல், மீட்-208
உயிர்போல்வருமகன், முத-171
உயிர்ப்பு, இரணி-133, ஒற்று-22
உயிர்ப்புப்போதல்- பெருமூச்சுமிகு
தல்: மாயாசு-36
உயிர்ப்புவீங்கல், இரா. களி-12
உயிர்ப்பொறை, இரா. சேர-3
உயிர்மாற்றுறுதல், இரா. மந்-24
உயிர்முற்று முன்பதுபோலு
முனிவு, அங்க-39
உயிர்வறத்தல், வான. கள-30
உயிர்விண்சேறல், அதிகா-236
உயிர்வீடாதுரைசெய்ததனுல்லனே
வென்றவனே, முத-183
உய்ஞ்சனனடியேனென்று வணக்
கல், விபீ-144
உய்தல்-தப்புதல், இரா. மந்-36
உய்தி, தப்பும்வழி, நாக-237
உய்திறம் சீதையைவிட்டுத்தம்பி
யோடனவளாவுதல், கும்ப-88
உய்த்தல்-நிகழ்த்துதல்,படைத்த-
150: பொழிதல், மகரக்-18:
கொணர்தல், மாயாசீ-27
உய்த்துய்ம்மின், இரணி-114[119
உய்ந்தவர்க்கருந்துறக்கம், மீட்-
உய்யும்உணர்வுநீத்தான்; சீதை-
உய்வித்தேன், இரணிய.25 [கள-3
உரகதேயம்-இராவ. தே-18
உரகமன்னசொல், இரணி-37
உரகம்பூண்டவருளே, நாக-143
உரகரேழையர், இரா. வ-235
உரக்கரி, இரணி 95
உரக்குப்பை, முத-165 [237
உரங்கிளர்மதுகையான். இரா. வ-
உரப்புதல், இரா. மந்-72 [87
உரம்-மார்பு, இரா. மர்-90, மூல-
உரம்படுதல் - வலிமைகாட்டுதல்,
வலிமையையிழத்தல், இரா.
மர்-54
உரவு-பலம், மூல-34
உரவுநாகம்Xவாள்: கும்ப-311
உரவோர்-அறிஞர், மீட்-111
உரறுதல்-ஆரவாரித்தல், இந்-24
உரறுதெழிகுரல், மூல-160
உரற்றுதல்-ஒலித்தல், கும்ப-269
உராய்-மேல்விழுந்து; மீட்-32
உராய்தல், மூல-89
உரி-தோல், இரா. வ-50
உரிமைபுரிதல்; இரணி-175
உரிமைபேர்தல் - உரியநிலையி
னின்று பிறழ்தல் மீட்-12
உரு-ரூபம், அழகு: -இரா. மந்-42
உருகுதல்-அதிகா-89, மருத்-110
உருக்கரைத்தல், பிரமா-116
உருக்கு, வருண-47 [175
உருக்குசெம்பெனக்கண், பிரமா-
உருக்குசெம்பென வுதிரமோடல்,
உருக்குதல், மீட்-206 [வேலே-7
உருத்தல், அதிகா-31,மாயாசீ-30
உருத்திரனும்முடல்கூச, நாகி-122
உருத்திரன், முத-225, மூல-39
உருப்பசி, இரா. தானை-6,மீட்-12
உருப்பம்-கோபம், இல. சே-34
உருப்பவிர்கனல், மீட்-329
உருப்புணர்செருப்பு, இரா,மந்-42
உருமிடித்துழிநாகம், முத-124
உருமிடிவீழ்தலு மிரியல்போன
மயிற்குலம்Xசுக்கிரீவன் பாவ
இரிந்த அரம்பையர், மகுட-6
உருமிற்கடுமைகாணும்வாளி, இரா.
மந்-62
உருமினல் மராமரமிடியுண்டு வீழ்
தல்Xதுயரத்தினுல் இராமன்
வீழ்தல், பிரமா-199
உருமின்வீழுயிர் × மலையின்வீழ்
வானரம், கும்ப-352
உருமின்வெய்யவன், கும்ப-124
உருமுXசிகரம், முத-128
உருமுக்கொடிபாய்ந்தகடல் Xகாய்
ந்த இரும்பின்கட்டி தோய்ந்த
நீர், இரா. வ-75 [230
உருமுமஞ்சப் பார்த்தல், அதிகா-
உருமுவென்க, நாக-62
உரூமுறழ்கணை, அதிகா-131

உள்ளக்கள்ளந்துடைத்தல், அங்க-
உள்ளங்கூர்தல், இர்-59 [35
உள்ளத்திற்கனலல், வேலே-20
உள்ளத்துள்ளதை முகமுரைக்கும், விபீ-91
உள்ளந்தள்ளுறல், மாயாசி-94
உள்ளந்தீதல், இரணி-144
உள்ளந்துயார், விபீ-133
உள்ளபரிசு, நாக-234
உள்ளமறன்வழியொழுகுவது உய்திறமுடையார்க்கே, கும்ப-170
உள்ளமேறல், வான. கள-4
உள்ளம் மருள்கெனத் துவளும், இல. கா-46
உள்ளம் வெப்புறுதல், மூல-61
உள்ளம்வெம்பல், வான, கள-4
உள்ளழிதல், படைத்-102
உள்ளன்பு பிணித்தல், மீட்-125
உள்ளாடிய வுதிரம், நிகும்-126
உள்ளுதல், முத-209
உள்ளுளன் புறத்துளனென்று ரண்ணலான், இரணி-75
உள்ளுறவுணர்ச்சி, இரணி-36
உள்ளுறைதொங்குதல்-உள்ளேயே வசித்துத் தங்குதல், இரா.வ-48
உள்ளுறைவோன் - அந்தர்யாமி: இரணி-116 [ன, இரா. வ-177
உறக்கரீக்கி புணர்ச்சிபெற்றுளே
உறக்கம் துறக்கமெய்தியவருந்துற வாதது, இரா. தானை-22
உறக்கினையென்பதல்ல துற்ற தொன்றுளதோ, கும்ப-148
உறத்தகைய - விளையக்கூடியன, இரா. மக-48
உறத்தல்-மிகுதல்: இர-138
உறநெருக்கல் - மிகச்சமீபித்தல், நாக-64
உறவினரிலக்கணம், விபீ-70
உறவு-பந்துத்துவம்: கடல்கா-7
உருதவுறுதி, கும்ப-34
உறுகால்-பெருங்காற்று, அதி-14
உறுகிரி-பெருமலை, சேது-64
உறுக்குதல்-சினத்தல், மனுட-10, முத-184, விழித்துப் பார்த்தல், நாக-40, அதட்டுதல், கும்ப-267
உறுதி-இதம், உற்றபொருள், இரா, மர்-110 விபீ-1; தீர்மானமான கருத்து, விபீ-18
உறுதிபார்க்கின் சீதையை விட்டுத் தொழுதுவாழ், அங்க-37
உறுதிவலிகாட்ட வேண்டுவதே, இரா. மக-54
உறுபகை, முத-147
உறுபொருள் - காலத்துக் கேற்ற விஷயம், செய்யத்தக்காரியம்: இரா. மக-66, விபீ-86: தேடிய செல்வம், மீட்-270
உறுமை-ஓர்வாச்சியம், பிரமா-5
உறைதர்தன-பொருந்தியன: அதிகா-40
உறைதல், இரா. மக-88
உறையிடுதல், மூல-40
உறையுள், மருத்-1
உறையுறுசிறை, நாக-298
உற்பத்தி, கும்ப-27
உற்றது-ஆபத்து, மாயாச-44
உற்றனவுற்றன-பொருந்தினயுக்திகள், இரா. மர்-46
உற்றுழி புதவற்கொத்ததுணைவர், மருத்-9
உற்றுளபொருள், படைக்கா-31
உற்றுறுதல்-ஊன்றுதல், விபீ-74
உன்மத்தன், அதிகா-228
உன்முன்-உன்னெதிர், இரணி-166
உன்னிப்பார்த்தல், மூல-40
உன்னுங்காலே, மீட்-38
உன்னுடைத்தவர் - உன்னினத்தவர், மீட்-13
உன்னைச்சிறுவனுமாகப் பெற்றேன், அங்க-26
உன்னைப்பெற்ற எனக்கு என் அரிது, வேலே-46
உன்னையிவ்வுரையுங் கேட்டேனே, மாயாச-78
ஊகம்-வானரக்கூட்டம், நாக-84
ஊக்குதல்-செலுத்தல், முத-146; முயலல், பிரமா-191
ஊங்கு-உவ்விடம், இரணி-43
ஊசல்-தடுமாற்றம், நாக-130
ஊசிதுழையாவகை, மூல-141

...ற்றங்கொள்ளல், இராவ. தே-31: எதிர்த்தல், விபீ-39; தள்ளுதல்-முதற்போர்-37
எஃகு, கும்ப-9 [39
எகினம் X புனலவன்புகழ்: வருண-
எங்கட, அதிகா-248
எங்குமுளன் கடவுள்; இரணி-124
எங்கை, கும்ப-325
எச்சில்-அசுத்தி, மீட்-57
எச்சுறுதுயர்-வறுமை, படைத்-45
எஞ்சுதல்-பின்னடைதல், நாக-139, மாயாச-56: விஞ்சுதல், இந்-31; ஒடுங்குதல். முத-208: கடத்தல், 197. அழிந்திடுதல், இரணி-162
எஞ்சுறுதல்-குறைதல், சேது-9
எடுத்தபோர் - பெரும்போர், நாக-226
எடுத்தாற்றல், மாயாச-59
எடுத்தல்-போர்செய்தல், நாக-60: தூக்குதல், பேர்த்தல், இரா. மந்-102, முத-121: தலையெடுத்தல், காக-53: கைக்கொள்ளுதல், கும்ப-339: விஞ்சுதல். மூல-56:
எடுத்தழைத்தல்-பெருங்குரலுடன் கூவுதல், கும்ப-330
எட்டிநிற்றல், வேலே-27
எட்டருநிலையன், அதிகா-137
எட்டாகியதிக்கு, காக-2
எட்டாங்கடல் X அகழி, முத-5
எட்டாவொருவன், அதிகா-74
எட்டிப்பார்த்தல், இல, கா-24
எட்டிப்பிடித்தல், கும்ப-260
எட்டுதல், இரணி-85
எட்டுப்பாம்பு, இரணி-87
எட்டெழுத்து, இரணி-43
'எட்பக' = எண்பக: அல்வழியில் எதுகைநோக்கித்திரிந்தது: எண்பகுதல்-மனம்முறிதல், மீட்-184
எண்-மனம், மருத்-47; தியானம், இரணி-115: மதிப்பு. இந்.1: அளவு, அதிகா - 142; = எண்-வலிமை, இரணி-98
எண்கணன், இரணி-154
எண்கின்வேந்தற்கு முத்தாரம்முதலியன தருதல், சிலை-22, 26

எண்கு, நிகும்ப-34
எண்குணன், இரணி-173
எண்டலம், மனமாகியஇடம், இரணி [-11
எண்டிசாமுகம், முத-63
எண்டிசைக்காவலர். இரணி-6
எண்டிசையானைகோடிறத் திரள்புயத்தழுத்தல், இல. கே-54
எண்டோளன்-சிவன், படைத்-89
எண்ணலார்-பகைவர், விபீ.96
எண்ணிலான்-வரையறைப் படாதவன் இரணி-71:
எண்ணில்-கணக்கின்றி: எண் இல்: இரணி-53
எண்ணினுநெடியவன்: இரணி-71
எண்ணின்றலைநிமிர்கதம், அதிகா-145 [வர், அதிகா-70
எண்ணுடையார்-மதிப்புப் பெற்ற
எண்ணுதல்: இரா. மந்-33, 97
எண்ணுவான்-மதிப்பிடத்தக்கவன், இல. கே-46
எண்ணுறலரியசேனைXகற்பத்தின் முடிவிற்கார், படைக்கா-3
எண்ணை விழுங்குதல், படைத-23
எண்தீர்தல், முத-15 [124
எண்பு-எண்ணிக்கை, மதிப்பு:மீட்-
எண்பெறுதல்-கணக்கிற் சேர்தல்: மாயாச-39
எண்மயங்குதல், மூல-90
எண்மேலுநிமிர்ந்துளர், அதிகா-254
எண்வகைமூர்த்தி. முத-210
எண்வகையொருவன், மீட்-102
எதிர்நோக்குதல்- பிரதியட்சமாகத் தரிசித்தல், இரணி-156
எதிர்-ஒப்பு, முச-204
எதிர்கூற்று, முத-71
எதிர்கொளல், விபீ-122
எதிர்செலல், இரா. மந்-108
எதிர்தல், அதிகா-166; படைத்-29
எதிர்ந்தோர், மீட்-169
எதிர்மண்டுதல், அதிகா-243
எதிர்வருநகர், மீட்-325
எதிர்விளம்புதல், இரா. தானை-20
எத்துதல், முத-188
எத்தேவரையும் முகங்கண்டறியாத வீட்டான், காக-38

மாயாச-48; சிறப்பு, நாக-55, தகுதி, படைத்-6; ஊக்கம், நாக-175 [முத-117, நாக-10
ஏற்றல்-எதிர்த்தல், கையேற்றல்,
ஏற்றிலா, ஏறுதல் - ஒப்பாகவருதல், மீட்-256
ஏற்றுக்கோடல், வேலே-19
ஏனகை, எல்-எய்ந்த, நகை-சிரிப்பு, இரா. தானை-6
ஏனம்-வராகம், இரணி-51
ஏனவர், இரணி-172
ஏனைக்குற்றம், கும்ப-78
ஏனையர் வருண-58
ஏனோர், அதிகா-52
ஏன்றிலது-உடன்பட்டிலது,(ஏல்-பகுதி.) மருத்-99 [4
ஏன்றுகோள்-எதிர்த்தல், வேலே-
ஏன்றுமிற்றல்-இரா. தானை-32
ஏன்றோர், அதிகா-197
ஐங்கணை, மாயாச-12
ஐங்கரகரியும்கரியின் படிகொளலாத் கோலையஞ்சுதல், அதிகா-
ஐது, முத-158 [154
ஐந்திரவியாகரணம், பிரமா-155
ஐம்பாலுடைக்கொம்பு, படைக்-25
ஐம்புலன், இராவ. தே-25
ஐம்பூதங்கள், இரா. சோ-26
ஐம்முகவெங்கணை, இரா. வ-161
ஐம்முகன், படைக் - 25
ஐயஞ்சாதிய தத்துவம், மீட்-104
ஐயறுதம்பி, கும்ப-88
ஐயன், மகரக்-24
ஐயன்வேண்டின் அது விதுவாம், சேது-27
ஐயுறவு, மாயாச-46 [விபீ-121
ஐயுறவெல்லாந்தீருமளவை,
ஐராவதத்தின் மேல் இந்திரன் இருத்தல் × வெள்ளிக் குன்றில்நீலக் கொண்மூ இருத்தல், மூல,55
ஐவிலை கவியமைகவான், இந்திர-28
ஒக்கநோக்குதல் X இரணி-44
ஒக்கவின்ப மொருவழி பூணினர், நாக-31
ஒக்கும்-பொருந்திய, சேது-18
ஒடிதல் - உயிர்களையப்பெறுதல், வான. சுள-17
ஒடித்தல்-சிதறடித்தல், சேது-62
ஒழித்தல், இரா. வ-45
ஒடியாவலி-அழியாத அகங்காரம், இரணி-104 [முடி-26
ஒடுக்குறுத்தல்-தொகுத்தல், திரு
ஒடுங்கத்தூர்த்தல், அணி-25
ஒடுங்குதல், அதிகா-122
ஒட்டகம், இல. கா-31, 43
ஒட்டார், மூல-110
ஒட்டுதல்-உடன்படல், இல. கா-2; கும்ப-259: எதிர்க்கொள்ளுதல், விபீ 67: பிரதிஜ்ஞைசெய்தல், இரணி-100, மகுட-15
ஒண்மை-வன்மை, இல. கே-54
ஒதுக்குதல்-போக்குதல், கும்ப-238
ஒதுங்கலுறல், படைக்கா-5
ஒதுங்குதல் - ஒடுங்குதல், இரா. மந்-33
ஒத்தது-சம்மதம், அதிகா-13
ஒத்தாளினம்-ஒருசேர மலர்ந்த தாமரைமலர், கும்ப-5 [125
ஒத்தல்-அனுகூலனுதல், இரணி-
ஒத்துறுதல்-மனத்திற்படுதல், ஒற்று-35 [நாக-23
ஒத்தேய்வன-ஒத்து வருபவை,
ஒப்ப-ஏற்றிருக்க, திருமு-1
ஒப்பனை, திருமுடி-1
ஒப்பாருமிலான்- "தன்னொப்பாரில்லப்பன்:" நாக-201
ஒப்பினுலுரைக்கின்றுரோவுண்மையேயுரைக்கின்றுரோ; இல. கா-11
ஒப்பு-ஒத்தல்: அதிகா-17: அலங்காரம், மீட்-46 [விபீ-58
ஒப்புற ஒருசேர, மீட்-48; பொருந்த
ஒப்பெழுத வொண்ணுத கற்புடையாள்; மீட்-226
ஒய்யு-விரைவுக்குறிப்பு, மூல-168
ஒய்யென, பிரமா-137
ஒருகுடை-ஒற்றவெண் கொற்றக்குடை, மீட்-224
ஒருங்க, நாக-177
ஒருங்காதல், அதிகா-158

ஒருங்கிபுண்ணுதல் - ஒன்றுசேர்ந் தழித்தல், காக-219
ஒருங்கு, இரா. மந்-15
ஒருங்குதல்-செருங்குதல், ஒடுங்கு தல், அழிதல், இரா. மங் - 90 கும்ப-26. பிரமா-28
ஒருதனித்தலைவன் மனக்குவருத லால் யாவையுமறியவரும், இர ணி-33
ஒருதனியிகல், அங்க-5
ஒருதொடையி லோராயிரம் மிடிர் மின்றன, அதிகா-146
ஒருநெறிபோதல், படைக்கா-8
ஒருபக லூழியொப்பன, வருண-6
ஒருபுறம்போதல், மூல-3
ஒருபேர், திருமு-6
ஒருபொருளன்று, வருண-1
ஒருமுகத்தினுலெய்தல், மூல-179
ஒருமைகூறல், மூல-179
ஒருமைத்தலைவன், மூல-16
ஒருவயிற்றுதித்தல், இரா,மங்-103
ஒருவனில்லுறைதவத்தி, இரா. மங்-51
ஒருவுதல்-நீங்குதல், அதிகா-60
ஒலிஉலகைவிழுங்கல் × திருமால் உலகைவிழுங்கல், பிரமாத்-104
ஒலிகன்பிறப்பன, மாயாச-56
ஒல்குதல் - பின்வாங்குதல், இரா. மங்-92; சோர்தல், அதிகா-72
ஒல்லென-முத-64;இரா. வ-59
ஒல்லை-விரைவு, இரணி-103
ஒல்லொலி, நிகும்-78
ஒல்வ, மூல-130
ஒல்வான், எதிர்த்துப் பொருப வன்; அதிகா-86 [ணி-95
ஒல்வீர்-வல்லமையுடையவரே, இர
ஒழிதல், இரா. மங்-64,110, இரணி-143, முத-31, நிகும்-158: இரா. வ-11
ஒழித்தல்-அழித்தல்-இரா. மங்-20
ஒருவருமுதவி, மகுட-31
ஒழிவிலுண்மை, மருத்-108
ஒழிவு-மிச்சம், இரணி-142
ஒழுகுதல்-அமிழ்ந்துவிடுதல், வரு ண-84
ஒழுக்கல்-பெருக்கு, கும்ப-349
ஒழுக்கின்மை லை, சேது-32
ஒழுக்கு-நீளச்செல்லுகை: ஒழுங்கா யிருப்பது: பிரமா-28 [கா-99
ஒழுக்குதல்-இழுக்கப்படுதல், அதி
ஒளி-விபீ-96, படைத்-28
ஒளித்தனை X கடல், சேது-64
ஒளித்தல் - மறைத்துக் கொள்ளு தல், இரா. மங்-94
ஒளித்துக்கொண்டவன் - தெரியா மற் கைக்கொண்டவன், இல. கே-6
ஒளிப்பிழம்பு, கனி-5 [202
ஒளியவன் × இலக்குமணன், காக-
ஒளிர்தல், இல. கா-35
ஒளிறுதல்-விளங்குதல், முத-45
ஒள்வாள், இரா. தானை-8
ஒள்ளியது அங்க-1
ஒறுத்தல்-அலைத்தல், படைக்கா-22; கோபித்தல், வெறுத்தல், காக-160: கொல்லல், மாயாசி-33; வருத்துதல், முத - 192: அழித்தல் - 230: வெட்டுதல் கும்ப-311
ஒற்றரை புணர்ந்த விபீடணன் X பாலின் நீரினை வேறு செய்பு மன்னம், ஒற்று-25
ஒற்றர் இலங்கைவேந்தனேவக் குரங்குருக் கொண்டுவால், ஒற் று-24
ஒற்றர்க்குயிர்கொடுத்தது, அங்க-35
ஒற்றல், வேலே-8
ஒற்று, ஒற்று-65
ஒற்றையாழிவள்ளல், மீட்-300
ஒன்றுபுதம், முத-168
ஒன்று-சிறிது, இரா. மங்-63
ஒன்றுதல், விபீ-86 இரணி-161: அதிகா-240: மீட்-233
ஒன்றுநினையவேறொன்றுகவிளைந் ததென்கருமம், மகுட-29
ஒன்றுநீரஞ்சல், மூல-57
ஒன்று பெருமையுரிமை - பொருந் திய சிறப்புள்ள உரிய செயல், இரணி-174
ஒன்றெழிந்தொன்றுதல், மகு-50

கருப்பைபோற் குரங்கு, முத-92:
[கருப்பை-எலி.]
கருமச்சூழ்ச்சியர், விபீ-14
கருமச்செயல், மீட்-204
கருமணி கண்டத்தான், மகுட-47
கருமத்தீட்டு - கருமத் தொகுதி:
இரா. வ-152 [ணி-64
கருமமும்கருமபலமுமானவன், இர
கருமம்பிடித்தல், இரணி-6
கருமனநிருதக்கள்ளர், ஒற்று-30
கருமுடித்தமைர்த மேகம், மகர-17
கருவரை X இராமன், கும்ப-163
கருவாளிக்கும் கணைகள், பிரமா -
228
கருவி, இரணி-84. இராவ. தே-4
கருவிளைமலர் X தாச, மீட்-45
கருவொடுங் கலக்குதல், பிர-193
கரைகாணுதல், மாயாச-35
கரைசெயற்கரிய தேவர், மீட்-53
கரைதெரிவிலாதபோகக் களிப்பு,
திருமு-42
கரைத்தல்-பெருக்குதல், நாக-215
கலசம்-போர், விடை-4
கலக்கம், மூல-146 [தானை-28
கலக்கும்-கலங்கச்செய்யும், இரா,
கலக்குறுகண்ணர், நாக-95
கலசம்-கலசநீர், மீட்-186
கலத்தல்-கட்டல், பிரமா-183
கலப்பை, மாயாசீ-95 [லம்-121
கலம்-அணிகலம், மூல-114:மரக்க
கலவியின்குறி, படைத்-65
கலவை X தரை. கடல். கா-9
கலாம்-போர், காக-183
கலிக்கடன், இரா. கள-11
கலிங்கக்கம்மியர், நிகும்-52
கலிதல்-மிகுதல், மூல-156
கலித்தல்-ஒலித்தல், படைத்-25;
செருக்குதல், மூல-139
கலிமா-குதிரை: நிகும்ப-18 மண
வெழுச்சியுடைய மிருகம்.("கலி
மாப்பலவுடன்பூட்டி" -பு. வெ-
12-14-) [53
கலியினுங்கொடியவுள்ளம் - மூல-
கலினமா, மீட்-340: கலினமான்,
முத-156

கலுழனைக்கண்டு சீறும் நாககுலங்
கள் x அனுமானைக்கண்டு சீறும்
அரக்கர்குலம், மாயாசீ-28
கலுழன் X இராமன்கணை: கும்ப-
311; X அங்கதன், அதிகா-183:
X புகமுடிவெழுகடல், இரா. வ
-85: கலுழன் அனுமானால் நா
ணுதல், முத-220; கலுழன் அநு
மானாற்றலை யாற்றுமோ, கும்ப-
கலுழி, மருத்-11 [29
கலுழிப்புனல்-கலங்கனீர், மீட்-213
கலை-நூல், பிரமா-115; கலைதல்-
ஒழிதல், அதிகா-28
கலைகுலாம்பரவை, அணி-28
கலைத்தோல், இரணி-31
கலைமகள், இரா. வ-226 [சேசா-47
கலையினூற்றிங்கள்வளர்தல், இரா.
கலையுடைத்தேர்-அல்குல், மீட்-22
கல்-மலை, இரா. மச்-62; ஒலிக்
குறிப்பு, படைத்-41
கல்லதர், மீட்-273 [15
கல்வினூற்கடலைக்கண்டேதல், ஒற்று-
கல்வினும் வலியதோள், அதிகா -
236, மகுட-39
கல்லின்மாரிபொழிதல் X அற்ற
தலை அப்பொழுதேழ்விழுதல், பிர
மா-146
கல்லுதல், காக-33, நிகும்-5
கல்லெடுக்கவுரியான், காக-74
கல்லெனத்திரண்டதோள், மாயா
ச-42
கல்விக்குரியிர்ந்தகீர்த்தி, மாயாசீ-
கல்விக்குப்பிறை, இரணி-57 [56
கல்வித்தாம்வார்த்தை, காக-210
கல்விமாண்பு ஒருவகையிற்றன்று,
நாக-105
கல்வியினமைவு, கும்ப-220
கவசஞ்சுற்றுதல், முத-97 [-111
கவசம்-மீனெலாம்பூத்தவாண்.முத
கவசம்பற்றற்றருகுதல்: நாக-287
கவடுகப்பொருதகாய்களிறு X கட்
டுப்படாநிலையினைக் கொண்ட
இராவணன், இரா. தானை-1
கவந்தங்களைக்கண்டுமற்றப் பிரா
ணிகள் நகைக்குறுதல், மூல-109

கற்றல்-பழகல், முத-149
கற்றவர் கற்றவருணர்வுகாண்கி லர்-வருண-56
கற்றையிலவு, விபீ-136
கனகக்கிரி, பிரமா-117
கனகநீரம், விபீ-27 [-20
கனகத்தாரைக்கோபுரம், இரா. கள
கனகமாரி, விபீ-149
கனகமான், விபீ-67 [மகுட-13
கனகவெற்பு × சுக்கிரீவனுடல்,
கனகன் X உயிருடைமேரு, இர ணிய-144
கனசினம்-மிக்கசினம், மேகத்தின் சினமுமாம்: சேது-43
கனத்தல், மீட்-207
கனம்-பருமை, மீட்-84: மேகம், சீதை. க-7
கனவி, வருண-38, மகர-36
கனவின்வீழ்ந்தபஞ்சு, மூல-59
கனலுதல், படை-65
கனலென்ச்சினத்தல், கும்-97
கனலெனும்புனல், வருண-35
கனல்Xகுருதி, முத-29 [கள-14
கனல்முன் கைப்பிடித்தல், சீதை,
கனவிறெடுணர்வென, இரா. வ-
கனவுகண்டனன், இரணி-34 [94
கனன் மின்னவிடியுண்ணுதல், அதிகா-242
கனித்த வின்களிகள்ளினிற்காட் டுமே, மீட்-23
கனிர்துயர்கற்பு, மீட்-89 [ப-39
கனியுடைமரங்கள் × அரக்கர், கும்
கனிவருங்காலத்துப் பூக்கொய்யக் கருதலாமோ, கும்ப-152
கனைக்குந்தோறுமுதிரங்கள் கக்கு வார், ஒற்று-56
கனைத்தல்-செருங்கல், மாயாசீ-76
கன்மப், இரா. மர்-15
கன்றியநிறம்-கருநிறம்: இல. கே-8
கன்றுதல், இரா. மர்-98
கன்றுபடப்பிழைத்ததாய் = அதி காயன்படப் பிழைத்திருக்குந் தானியமாலினி, அதிகா-274
கன்னமூலம், வான. கள-15
கன்னல்-நாழிகை. பிரமா-89

கன்னிநன்மயிலன்னார், களி-1
கன்னிமாமதில், மகுட-1
கன்னெஞ்சருமழுதல், சீதை. க-5
கா-காத்தல், அதிகா-15
காகப்பந்தர், வான. கள-6
காகமணி, பிரமா-216
காகம்கண்ணைக்கல்லுவ, மாயாச-57
காகுத்தன், மாயாசீ-50, அதிகா-45
காக்குநர், மூல-60
காசம்-ஆகாசம்: மருத்து-40
காசு-பொன், இல. கா-34, இரத் தினம், மீட்-5
காடு-தொகுதி. இரா. சே-18
காட்சிகைபுற வெய்துதல், நாக-
காட்சியேகடன், விபீ-19 [105
காட்டாதனகாட்டியதாதை, நாக-3
காட்டித்தருதல், கும்ப-98
காட்டுதல், இரணி-9, மருத்-62
காணி, மருத்-58
காணுதல், இரா. மர்-97, இரா. தானை-24, மருத்-66: கும்-76
காதலமிர்து, ஒற்றுக்-1
காதலருத்தி, விபீ-107
காதலன்-புதல்வன், மீட்-228
காதலின்மெலிவுறுதல், பிர-110
காதலுள்ளுறப்பிணித்த செய்கை யை முகங்காட்டுதல், விடை-11
காதலென்றதுவு மோர்களின் றேற்றம், மீட்-253
காதல்-விருப்பம். இரா. வ-6: கா தலன், அதிகா-117 [-42
காதல் நீர், மருத்-109, இரா. சோ
காதுதல்-அழித்தல், கொல்லல், இரணி-1: வெட்டுதல், மாயாசீ-49, போர்செய்தல், நாக-47
காதை-செய்தி, விபீ-118
காத்தல், இரணி-1, அதிகா-239
காத்திரம், கும்ப-319: யானையின் முன்னங்கால்-215
காந்தாமணிX ஆகம், மீட்-118
காந்தருப்பமெனும்படை, மூல-182
காந்துதல், வருண-24, கும்ப-293
கார்த்தையருக்கணி. இரா. வ-241
காப்பிடுதல், மீட்-46
காப்பு-நீர்க்கட்டு, வானர. க-25

காப்புநாண், திருமு-21,காப்புநாள் -24
காப்புறுகடன், நாக-171
காமர்ச்செவ்வி-விரும்பத்தக்க அழகு, மீட்-320 [14
காமப்பகுதியி ஐயிரண்டு, மாயாச-
காமம் வேரோடுங்கெடுத்தது, அணி-14
காமரம், இரா. வ-160
காமவாளிக்கூற்று, ஒற்று-21
காமன்கணைபடப்பூவணையெரிதல், அணி-9
காமன்திருவிளையல்குல், மீட்-45
காமன்வில் X பிறைச்சந்திரன், ஒற்று-20
காமாண்டவர், அதிகா-177
காமித்தல், நிகும்-147
காம்பு, முத-193: காம்புறங்கும் வரை, கும்ப-69
காம்போடுபதாகை X கூம்போடு உயர்பாய், மூல-204
காயம், மூல-111, இரா. வ-111
காய்தல்-கோபித்தல், நாக-124: சுடுதல், அதிகா-7 மருத்-61
காய்த்தவர்-தேர்ந்தவர், விபீ-95
காய்ப்பு-காய்ச்சுவை: அதிகா-10
காரன்னநெஞ்சு, மூல-6
காரிகை, மாயாச-50
காரிமெள், பிரமா-165
காரிழிந்தவுருமு X தேரின்பாய்ந்த னும்பானு: முத-65
காருடப்படை, இரா. வ-141
காரேறு, அதிகா-56 [-27
கார்க்கடல் X அரக்கச்சேனை, அணி
கார்க்கடல் கமலம்பூத்ததெனப் பொலிந்தான், விபீ-132: கார்க்குன்ற மனையான் - 'அஞ்சனக் குன்றமின்றதொப்பான்'; இரா. வ-199; கார்க்கோலமேனியான், கும்ப-155 [கும்ப-25
கார்த்தவீரியன், இரா. வ-208-
கார்முகம்-இந்திரவில், நிகும்-21
கார்முகத்தம்பு, முத-152
காலகேயர், இல. கே-55, அணி-18, இரா. சேர-67

காலங்கொள்ளுதல் - தக்ககாலம் பார்த்தல், இரா. வ-125
காலசங்கன்-ஓரரக்கவீரன், அதிகாயனுடன் வந்தவன்: இலக்குமணனாற் கொல்லப்பட்டவன், அதிகா-124
காலநேமி, இலங். கா-9: மூல-52
காலபாசம், கும்ப-169
காலப்பாடு-காலநிலை, இரா. வ-7
காலமாரி, நாக-197
காலமுணர்தல், இரா. மந்-66
காலம்-வருஷம், பிரமாத்-209
காலம்முதலியனவாகுபவன், கடவுள், இரணி-74
காலயோகத்தம்பு, வான. கள-6
காலவால், அதிகா-218
காலவிருள், மகுட-7
காலவெங்கனல், முத-228 X கணை,
காலனார், பிரமா-177 [ஒற்று: 44
காலன்-ஓரரக்கவீரன்: அதிகாயனுடன்வந்தவன், இலக்குமணன் கொன்றான், அதிகா-124 [131
காலன்வாய்க்களிக்கின்றேம், கும்ப-
காலன்விடக்கயிறு X வாள், இராம. தே-2 [வ-137
காலன்விருந்தைச்சிந்தும்வில், இரா.
காலுடைக்கடல், கால்-சண்டமாருதம்: கும்ப-305
காலுதல், இரா. மர்-93
காலேறினசிலை, அதிகா-155
கால்-காற்று, நிகும்-52: சக்கரம், முத-104: தேர், நாக:147: தமிழுப சருக்கம், அதிகா-103; கக்குகை, இல. கா-41: பாதம், மீட்-152; மரபு, முனை. இரா. வ-46, கும்ப-169 [59
கால்பொருதல், முத-241,படைத்-
கால்வயம், இல. கே-31
கால்வரை-தாழ்வரை, அதிகா-201
கால்வலிகாட்டல், மகுட-43
கால்விழுந்தமழை, மூல-131
காவதமெட்டு, முத-37
காவல்-இளைப்பாறுமிடம்,சேது-56
காவலன், இரா. மந்-34
காவலாளர்விழக் கனைகண்ணிலா

எவலாளர் X மாவெலாம்விழக்
களைகண்ணில்வண்டு, சேது-56
காவி, மீட்-339
காவிரி x கவிச்சேனை, ஒற்று-7, 8
காளமார்த்தல், திருமு-31
காளமேகத்தைச்சார்ந்தகதிரவன்X
இந்திரஜித்துப் பூண்டகவசம்,
நாக-118
காளவுறையில் வாங்கும் கண்ணாடி
X அராவிழுங்கிக் காலுமதியம்:
இல. கா-42 [101
காளி, வேலே-17 x வாளி, நாக-
காளிமைப்பிழம்பு, நாக-217
காறளா = கால்தளர,நாக: 70
காறுதல்-வருந்துதல், வைராக்
கொள்ளுதலுமாம், இரா. கள-
20 [இரா. வ-79
காறேய், கால்+தோய், வான.
கள-21
காற்றியக்கு, காற்று + இயக்கு,
காற்றினுக்கரசன், அணி-20
காற்றின்படை, நிகும்-130
காற்றுச்கோடியபுஞ்சு X இராவண
னம்பு, வேலே-19
காற்றுறுசாம்பல் X தர்திரம், கும்ப
-96 [ப-29
காற்றையே...வளர்கின்றனே, கும்
கானகந்தொடர்ந்ததீ, பிரமா-147
கானகம், மூல-208
கானயாறுபரந்தகடல், சேது-68
கானல்-கடற்கரைச்சோலை, விபீ-
கான்-காடு, மீட்-326 [26
கான்முகங்குழைதல், அதிகா:205
கான்முளை, படைத்-12
கிங்கரப் பெயரவரெண்பதினுயிர
வர் அநுமானால் விலங்கினவர்X
சங்கரற்கழி முப்புரத்தவர்,இல.
கே-63
கிச்சு-நெருப்பு, படைத்-45
கிஞ்சுகம் - முருக்கமலர், இரா.
தானை-14
கிடாய்கடாய்வந்த செறுத்தநெரு
ப்பு, இல. கே-34
கிடுகு, இரணி-144
கிடைத்தல்-கைக்குளடக்குதல்,இல.
கே-6: பக்கபலமாகச் சேர்தல்,
கும்ப-16: அருகுவருதல், கும்ப-
230: கிட்டுதல்:படைத்-91,அதி
கா-238; எதிரிடல், இரா. வ-
213
கிட்கிந்தை, மீட்-176
கிட்டிநுய்ந்துபோகார், மூல-89
கிணறுடைதிரமூறுதல், இரா. மங்-
கிம்புரி, இராவ. தே-5 [13
கிரணவாள், வருண-79
கிராதர்கோன், மீட் 312
கிரியெனப்பருத்தமீன், வருண-48
கிழக்குமேற்கு, மருத்-33
கிழமைத்தாதல், இரா. கள-14
கிழவர், இரா. மங்-8, கிழவன்,
கிழி, இரணி-86 [மாயாசீ-12
கிழிசோரி, அதிகா-238
கிழிதல்-வலிகெடுதல், பிளவுபடு
தல், மூத-65, இரா. வ-103
கிழித்தல், இரா. மங்-62; வருண-
42, நிகும்-90
கிளத்துதல், மூத-40
கிளர்தல், நாக-245, பிரமா-15
கிளர்த்தல், மருத்-27
கிளர்ந்துடற்றுதல், இரா. வ-18
கிளவியார் பொருள்களாற் கிளக்கு
றுதவன், இரணி-62
கிளிமொழிச்சீதை, இல, கே-70
கிளுகிளுத்தல், மாயாச-87 [92
கிளை, நிகும்-71; கோடு, அதிகா-
கிளைகொள்ளுதல்- மேன்மேலோங்
குதல், கும்ப-230
கிளைதருசுற்றம், கும்ப-33
கிளைத்தல்-கிளறிப்பார்த்தல்,நாக-
51;கிளைக்கித் தழைத்தல்-162
கிளையமைபுவனம், கும்ப-16
கிளையொடுமடிதல், இரா- மங்-99
கிற்பர், மீட்-215 [களியா-1
கின்னரர் முதலோர்கீதம்பாடுதல்-
கீடம் X சீதை: மீட்-55
கீட்டிசை, இல. கே-23 [மூத-59
கீழுற-கீழ்ப்புறமாக, வெகுளாம்:
கீழ்த்திசை வாயிலின்வீரர், இல.
கே-23
கீழ்பாலடுத்தபாதாளம், கும்ப-8

கீழ்மை-தாழ்மை, இரா-ஙம்-99
கீழ்மையோர் கீழ்மை செய்யச் சீர்த்தவர் தக்கதே செய்தல்X மேகலையும் ஆடையும் அவிழ்ந்து தொடையைச் சேரக் கூந்தல் மானத்தைக்காத்தல், களி-9
கீறுதல்-பீறுதல், இரணி-127
குகப்பெருமான், விடை-31;கங்கை தழுவிருகரைக்குநாதன், மீட்-316: கங்கைநாவாய்க்கிறைமுடன் கலன்ஞன் விடை-10; புலிவால் சுற்றுறத் தொகுத்தவரையினன் -10, தாயினுமுயிர்க்குநல்லான், மீட்-316; இராமனுக்குப் பாதனின் வேறல்லன்-315;குகனொடு மைவராளோம், விபீ-146; குகனர் செய்த நன்மை, மகுட-40; குகன் சேனையுடனே வந்தமை,
குகை-வாய், மகுட-12 [விடை-10
குங்குமம் முதலியன கிரிதாங்கிய வை, சேது-52
குசன் விசாகத்தை நெருக்கியேறு தல், இரா. வ-81
குசும்பையி னறுமலர்ச் சுண்ணக் குப்பைXசேனைகளால் விரிந்த தூளி; அதிகா-89
குசை-நாணி, மரம், நீர், இரா. வ-81; கடிவாளம், படைத்-94; இரா. வ-14
குசைத்தீவினர், படைக்கா-11
குச்சி-சிகரம், மேல்முகடு, வானரர் க-20; மகரக்-6
குச்சரக்கன்னம், நாக-113
குஞ்சரமனையான், முத-159
குஞ்சி, இரா. மங்-96
குஞ்சிதவடி, மீட்-252 [-135
குஞ்சைபிட்டிலா முட்டை, இரணி
குடங்கையில் வாரிதி யணைத்துக் கொண்டவன், மீட்-280
குடங்கொணீரினும் கண்சோர் குமிழி. இரா. வ-251
குடதிசை மறைந்தபின் குணதிசை யுதமஞ்செய்வான், மீட்-163
குடப்பெருஞ்செவிக் குன்றம்-கும்ப கர்ணன், இரா. வ-113
குடர் X பாம்பு, நாக-137: குடர் குழம்புதல், கும்ப-300
குடல் குழைத்தல், மீட்-33
குடல்சொரிதல், மூல-113
குடன், கும்ப-73
குடிக்கிறுதிரூழ்ந்தான், கும்ப-151
குடித்துக் கால்வன போன்றன, முத-39, 76
குடிவாழ்க்கை, கடவுள்வாழ்த்து
குடுவை, இரணி-101
குடைXபகைவனையழித்தகீர்த்தி - விடை-4
குடைதல்-பூட்டுதல், துளைத்தல், ஒழித்தல்,அராவுதல்,கும்ப-222 முழுகுதல், இரணி-4. அதிகா-94
குடைத்தொழில்-அரசு, அங்க-35
குடைந்தெறிகால், அதிகா-94
குணக்குன்று-உதயமலை, மீட்-243
குணங்களென்னும்பூண், மாயாச-
குணதிசை, அணி-6 [22
குணித்தல், நிகும்-122
குணிப்பு, வருண-28, மீட்-101
குண்டம், வருண-19
குண்டலம், கும்ப-252, மீட்-259: X மீன்குலம்: அதிகா-108
குண்டிகை-கமண்டலம், வருண-61 மீட்-183
குண்டிகைக்கலசம், இராவ.தே-23
குண்டை, மாயாச-40
குண்டையின்பாகன், மூல-176
குதி, அதிகா-159 [இரா. வ-33
குதித்தல் - தாவிச் செல்லுதல்;
குதித்தல் துள்ளுதல் முதலியன மகிழ்ச்சிச் செயல்,இரா. வ-151
குதிரைகளின் வேகம் குறைதல் நிமித்தம், மூல-79
குதிரைகள் தேர் கொடியோடு இரத்தத்தில் ஈர்க்கப்பட்டுச் செல்லல்Xகடலில் கொடியோடு கலங்கள் செல்லல்,வான.கள-9
குதிரை நகரினின்று வெளிவருதலின் வருணனை, முத-39
குதிரைபொன்றவும் தேர்கள்செல்வன, வான. கள-9

குதைத்தல் - குதையினின்று வருதல், இரா. வ-46

குத்தாலிலைதருவாயெனின் அன்றும் முனை, முத-182

குத்து, அதிகா-253

குந்துதல்-ஒற்றையடியால் தாவி நடத்தல்: கும்ப-349: ஊன்றுதல், பிரமா-56

குப்புறுதல், தாண்டுதல் - குதித்தல், விபீ-25, தலைகீழாதல், முத-63

குப்பை, இரா. வ-76, அதிகா-43

குமண்டை, வருண-82

குமரன்-சுப்பிரமணியக் கடவுள், சிறுவன், பிரமா-123, மூல-11

குமிழிநீர், இரா. கள-25

குமிழியூட்டுதல், இரணி-57, கும்ப-[179

குமிழ்தல், மூல-71

குமுதக்கண்ணன், விடை-8

குமுதம், இரா. கள-21: குமுதநாறு மதம், வான-கள-28

குமுதன், இரா. தானை-30. நாக-55, படைத்-81; பிரமா-177, விடை-8

குமுதாக்கன்: இரா. தானை-30

குமை, அதிகா-159, பிரமா-23

குமைத்தல், விபீ-41,-கும்ப-342

கும்பகர்ணன் × காரியல் காலன், கும்ப-114: கும்பகர்ணன் மதுவெண்பவன், அதிகா-76, வீடணனுக்குமூத்தவன், கும்ப-114; ஐராவதத் தந்தம் பறித்தோன்: இல. கே-48; இராவணனுக்கு நற்புத்தி கூறியது, கும்ப-79-89: ஐராவதத்தைபிந்திரனோடு சுழற்றினவன்-118: தேவர்களை முதுகுகாண்பவன்-123: ஊழிநாளு முறங்குவான்-116: இராவணனுக்கு இருமைமேலுமிதமுரைத்தான்-124: நீலன்மீது வெறுக்கையனென்றசூலமோச்சாமை-186: கூறியமந்திராலோசனை, இரா. மந்-48: கும்பகர்ணனுக்குச்சிக்கக்கொடு-110: கும்பகர்ணனுக்குச் சிவன்சூலத்தைக் கொடுத்தான்-122; கும்பகர்ணனது சூலத்தின் மூவிலை காலம் காலன் தீமை இவற்றை மூலமாகக் கொண்டது-318: கும்பகர்ணனிடம் மறத்தொழிலைப் பெற்று நீங்கினுரெனில் வீரமுண்டு - 341: விபீடணனைக் காக்க இராமனைவேண்டுதல், கும்ப-356-359: கும்பகர்ணனது நாசிக்காற்றுல் மலைகள்வருவது போவதாதல்-49: மல்லவீரர் வருவது போவதாதல் 50: சுக்கிரீவனோடு பொருதல்-254: கும்பகர்ணனது மூக்கையும்செவியையும் கொண்டு சுக்கிரீவன் தம்மவரைச் சேர்தல்-291: கும்பகர்ணனிடத்தினின்று வந்த சுக்கிரீவனைக்கண்ட இராமன்மகிழ்ச்சி-293. கும்பகர்ணன்சிரசை விராமன் வாயவ்யாஸ்திரத்திஞற் கடலுளழுத்துதல்-361. கும்பகர்ணனிடத்துச்சென்றபணியாளர் × தென்றிசைக்கிழவன்றூதர் - 43: கும்பகர்ணன்நிற்றல் × கடல் கிடந்தது நிற்றல்-67: கும்பகர்ணன் நிற்பவன் × விடமெழுந்தது-76: கும்பகர்ணன் வானரச்சேனையைத்துரத்துவது × சூலங்கொண்ட கடல் வேறோர் வேலையையோடித் தொடர்வது -162: கும்பகர்ணனைக் கொண்ட தேர் × செங்கதிர்ச் செல்வனைச்சூழ்ந்தவர்-243: கும்பகர்ணன்வில் × மழைக் குழாத்திடை நிமிர்ந்த பாவில்-243: கும்பகர்ணனுற் பற்றப்பட்டசுக்கிரீவன் × அரவம் விழுங்கியமதி-271, கும்பகர்ணனுடம்பில் மறைந்தும் மறையாதுமுள்ள சுக்கிரீவன் × மேகத்திட்புக்கதும்புறத்துமாமதி-272: கும்பகர்ணன்புல்லிய தலையினினறிழிகுருதி × குன்றின் வீழருவி-289: கும்பகர்ணன்போர்ப்பு × மேருவைப் பறையாக்கிக் குணில்கொண்டெடிபு மொலி-

347: கும்பகர்ணன்மெய்Xகருவரை-351
கும்பக்கரியைக்கோண்மாக் கொல்லுதல்Xபிரகலாதனை இரணியன் கொல்லுதல்: இரணிய-125
கும்ப நிகும்பர்-கும்பகர்ணன் புதல்வர். நாக-4
கும்பம், இரணி-125, கும்ப-248
கும்பன்-கும்பகர்ணன் புதல்வன், இல. கே-35: ஓர்வானரன், விடை-8
கும்பன் முதலியமூவர் அதிகாயன் தேர்க்குக் காவலாகச்செல்வர், இவர் உம்பர்க்கும் வெலற்கரியார், அதிகா-16
கும்பானுவைக் கீழைவாசலில் இடும்பன்பொருதுகொல்லுதல், முத-62
கும்பிகை-ஓர்வாச்சியம், பிரமா-5
கும்பிட்டு வாழ்கிலேன், கும்ப-160
குயமகன்திகிரி, மூல-165, இரா.
குயவட்டணை, அதிகா-9 [வ-63
குயிலுதல்-பதிதல், இரா. வ-144
குயிற்றுதல்-படைத்தல்: இரணி-135: செய்தல், நாக-246: பதித்தல், இராவ. தே-21
குரகதம், முத-154, விடை-17
குரக்கினத்தரசு, மீட்-306
குரக்குக்காப்புடையாற்றுவை கொல், முத-165
குரக்குச்சேனையில் விளக்கொளி பரத்தல் X பாலின்வேலையில் தாமரை மலர்தல், விபீ-16
குரக்குப் பிணம் X பொற்குவை, முத-120
குரங்கினது அடியுமின்றிப் போக்குதல், கும்ப-205
குரங்கின்சொல்லென நகையாது, விபீ-79
குரங்குகள் தேவர், இல. கா-11
குரங்குச்சேனை யெழுபதுவெள்ளம், மாயாசீ-20 X வலே, அணி-28
குரங்கு வெறுங்லகயாற் கொள்ளும் வெற்றி, அணி-13

குரக்கெனப் பெயர்கொடு திரியுங் கூற்றம், நாக-45
குரண்டமாடுநீர், இல. கே-56
குரம், மகரக்-21, மூல-87 [122
குரம்பு-அணைக்கட்டு, வரம்பு, முத.
குரல் கொளேயிசைத்தல், இரா-
குரவர், இரணி-50 [கள-23
குரிசில், மருத்-117, மீட்-277
குருகு, விபீ-31
குருக்கள், விபீ-12 [-2
குருதிகொப்பளிக்கும்வேல்,திருமு
குருதிக்கண்ணன்,மகர-31,பிரமா-
குருதிக்கொண்மூ, இந்-42 [1
குருதியாறொழுகும் மேனியன் X ஊதையோடருவிக ளுமிழுந் தாதுராகக்குன்றம், கும்ப-296
குருதியின் செக்கர்-கும்ப-288
குரு பிரகலாதன் செய்தியைக் கூறல், இரணி-35
குருமணித்திருமேனி, இரணி-86, பிரமா-199 [106
குருவிக்குலம் X அம்புகள், நிகும்-
குலகிரியேழ், இரணி-140
குலக்கிரிகள்Xகொடிஞ்சு, இராம. தே-8
குலக்கிளேயை நாகத்து நடச்சேறு செய்தல், மகுட-2
குலங்களோடடங்கக் கொல்லுதல், மாயாசீ-73
குலச்சிறுமை, இரா. மந்-53
குலஞ்செய்தபாவம், இந்-4
குலத்தியர், இரா. கள-21 [15
குலத்துக்கொவ்வாப்பங்கம்:கும்ப-
குலத்துத் தோகைமார் செயல், மீட்-67
குலத்துப்பிறந்தவள் X கலத்திற் பிறந்தமாமணி, மீட்-65
குலத்துமானம் - குலாபிமானம், கும்ப-170
குலத்தொடுநிலத்தனுதல்,மாயாசீ-
குலப்பூண், மீட்-118 [84
குலமடந்தையர்Xகொடி, சேது-59
குலமணிமுடி, இல. கே-55
குலமருமான், நிகும்-139
குலமறல், இரா. மந்-84

குன்றி, படைத்-55, இரா. வ-33
குன்றில் வீழ்தடித்து X முதுகில் லைதத்தவாளி, இராம. மங்-116
குன்றினை வலஞ்செய்தேரோன், மீட்-304
குன்றின்வீழ்குரீஇக்குழாம் X கும்பகர்ணன்மீதுசென்ற வானரக் குழாம், கும்ப-183
குன்று X மாருதி, நாக-78: X அடுக்கிய இந்தனம், இரணி-85: × கோயில், அதிகா-274 X பெருவாயில், இரணி-81; வரிசிலை, மூல-227: தண்டு, அதிகா-240
குன்று சுற்றிய மதகரிக் குலம் X மகோதரன் தேரைச் சுற்றிய அரக்கப்படை, பிரமா-97
குன்றுதல்-இல்லையாதல், இல. கா-34; தவறுதல், மீட்-243
கூக்கொள்ளுதல், மாயாசீ-84
கூசுதல், நிகும்-72. இரா. வ-31
கூடம், கும்ப-52. நாக-80
கூடலிழைத்தல், விபீ-28
கூடுதல், கும்ப-127
கூட்டறுதல் - ஒருசேர அழிதல், இரா. மங்-19
கூட்டிக்கொள்ளல். கும்ப-127
கூட்டு-ஒப்பு, அதிகா-1
கூக்குரு, மீட்-334
கூதிர், விபீ-29, கும்ப-296
கூத்தன், சேது-42
கூந்தல், இரா. மங்-13
கூம்பல், முத-193-படைக்கா-2
கூம்புடை நெடுகலமோடுவ X தைத்த அம்பொடுந் தாலமீன் சாலத்திரிவன, வருண-25
கூர், இரா. மங்-93
கூர்த்தல், விபீ-143. அதிகா-193
கூர்மம், அதிகா-215
கூலம் - லாங்கூலமென்பதன்விகாரம், வால்: இரா. மங்-80; கரை, வரம்பு, சேது-38, பிரமா-164: குலமென்பதன் விகாரம், மீட்-306
கூவத்தின் சிறுபுனலைக்கடலயிர்த்தல் X விபீடணனை ஸ்ரீராமனயிர்த்தல், விபீ-103, கூவலிற்புக்கு வேலைகோக்கபடுமென்று சொல்லல், சிதை, க-28
கூவிரஞ்செறிதேர், இரா, வ-176
கூவுதல்-அழைத்தல், அங்க-31: கர்ச்சித்தல்-40
கூழுடனுண்ணுதல் -ஏழையாதல்: விபீ-70
கூழையினெற்றி, முத-118
கூளி-கொலைத் தொழிலையுடையவன்: நாக-17: வான, கள-17. பேய், படைக்கா-23
கூறு, அதிகா- 38, இராவ. தே-28
கூறுகூறாக்குதல், நிகும்ப-55
கூறுபடுதல், கும்ப-343, மூல-88
கூற்றம், கடல்காண்-6, வேலே-6
கூற்றினுரையுமுயிர்கொண்டது, முத-96
கூற்றினுர்குலத்தைவெல்வித்தல், நிகும்ப-169 [-80
கூற்றினுக்கொலைவல்லார், இரணி
கூற்றின் அங்கிடிலெனப் புட்டிலொடுகோதை, இராம. தே-4
கூற்றின்றூது, வேலே-16
கூற்றின்வாய்மடுத்தல், பிரமா-75
கூற்று X கை, நாக-170 [முத-244
கூற்றுக்கையெடுத்தாடுதல்,
கூற்றும்பயப்படுதல், அதிகா-187
கூற்றுவன், வேலே-15 [மூல-134
கூற்றுறுதல்-பலபகுதியாதல்,
கூற்றென, முத-71, மாயாசீ-25
கூற்றைக் குருதியோடுயிருண்பார், இல. கே. 21 [-160
கூற்றையுமாடல்கொள்ளல், கும்ப
கூனர், ஒற்று-42
கூனியிற்கொடியாரல ராக்கியர், மீட்-35
கூனுடைக்குரங்கு, நிகும்ப-83
கூனேறு சிலை, மூல-217
கூன், வருண-19
கெடாப்புகழ், மாயாசீ-71
கெடுதல், படைத்-19
கெடுத்தல், முத-127
கெடுவால், இரணிய-24
கெட்டபொருள் இடைப்பப் பட்டதுயர் ஒழிந்தவர் X இராமனைக்

கண்டதனால் துயர் நீங்கிய பரதன்: மீட்-327
கெட்டேன்-இரக்கக்குறிப்பு, விபீ-127, இரா, வ-240
கெந்தமாதனன், பிரமா-179
கெழீஇய நட்பு, கும்ப-164
கெழுவா-ஒற்று, நாக-266
கேசரி, இரா. தானை-30, நாக-59, பிரமா-178, விடை-26
கேசவன், மாயாச-21
கேடகம்Xஆமை, மூல-203
கேடம்-வேட்டை, மூல-123
கேடு, வேலே-25
கேதங்கள் கூரவயர்த்தல்,நாக-245
கேவலம் மலராதல், திருமு-8
கேழில் ஞாலம், முத-40 [முத-40
கேழ்-நிறம், ஒப்பு, இரா. வ-154,
கேளிர், இரா. களா-17
கேள்-நட்பு, இல. கே-69
கேள்வி, விபீ-34, மூல-89
கை-இடம், வருண-26:படையணி, அதிகா-211, சேனை, வேலே-6, பக்கம், விபீ-58
கைகயன் றனயை, மீட்-343
கைகுவித்தல்போதுமென்றற் குறிப்பு, இரா. மர்-38
கைகுலைத்தல், நிகும்-60
கைகுறையானைகுருதியிற்கவிழ்ந்து வீழ்வன=பாரெடுக்குறுபன்றி, அதிகா-109
கைகூப்பிநிற்றல், விபீ-59 [305
கைகெடுதல்-செயலறுதல், கும்ப-
கைகேசி: சிதை: க-15, மீட்-130
கைகேயியின்மீது கோபம் நீங்கிலதெனல், மீட்-130
கைகொட்டிச்சிரித்தல், நாக-276, இரா. சோ-58
கைகொள்சேனை, பிரமா-90
கைக்கடுப்பு, இரா. வ-100 [162
கைக்கடுமை, முத-203, இரா. வ-
கைக்குன்றம், வான. கள-24
கைடவனே அதிகாயன், அதிகா-76
கைதடுமாறல், இர்-31 [மீட்-227
கைதலைவிற் பெய்திரங்கல்,
கைதவம், விபீ-90
கைதாங்கியசிரம், கும்ப-330
கைத்தலநிறை, முத-166 [183
கைத்தலந்தேயக்குத்தல், கும்ப-
கைத்தலைநெல்லி, இரணி-58,நாக-212, மீட்-93
கைத்தல்-கோபித்தல், வெறுத்தல் மாயாச-30, முத-77: கொல்லுதல். இரணி-114: உகைத்தல், இரா. மர்-116
கைத்தார், பகைவர், மூல-112
கைபார்த்து, வருண-54
கைபுகல், விபீ-121 [-203
கைம்முறித்தல்வியப்புச்செயல்,முத
கைம்மாறு மாரியைநோக்கியவையமியற்றுமோ, நாக-271
கைம்மிகல்-மேன்மேல்மிகல் (கைதமிழுபசருக்கமென்னலாம்)நாக-114, மூல-92: தூண்டுதல், அதி
கையகலிஞ்சி, மாயாசீ-24 [கா:67
கையறுகவலை, கும்ப-10,38, மீட்-348
கையன், விபீ-117, இரா. சோ-16
கையாற்கடனீரைநீக்கல், மூல-7
கையுங்காலுமோய்தல், கும்ப-54
கையுறைகோட்கொத்த காட்சி, நாக-267 [-38
கையெறிதல்,இரா.மந்-117 படைக்
கையைப்பிசையுறும், அதிகா-364
கையை வாயின் மூக்கின்வைத்து அயர்த்தல். நாக-222
கையோய்விலாமை, நிகும்-163
கைலாயமெடுத்தது. இரா.மந்-102, ஒற்று-52
'கைவலிக்கவதியுண்டே-'என்றதுபிறகுறிப்பு, மகுட-43 [241
கைவாங்கிற்கூடப்புரைத்தல்,மீட்-
கைவிசைத்தல்,நாக-109படைத்40
கைவிட்டுக்காலும்விட்டான் கும்ப-
கைவித்தகம், நிகும்ப-162 [169
கைவிளக்குXமின்மினிமகுட-51
கொங்கு-தேன், கடல்கா-2 [4
கொங்கைகண்டோனொத்த, கும்ப-
கொச்சை, இரா. மந்-112
கொச்சைமாளுடர்- அற்பமனிதர், இரா. மர்-101

கொள்ளை பூணுதல் - திரளாகக் குவிதல் இல. கா-23 [ப-222
கொற்றத்தரம்-சிறந்தவெற்றி, கும்
கொற்றமங்கலம், நாக-204
கொற்றமாக்கோயில்; கும்ப-43, 49
கொற்றவன், ஒற்று-65
கொற்றவில்லி, மூல-74
கொற்றவைதழீஇய பொற்றோள், இந்தி-67:கொற்றவை-ஜயலக்ஷ்மி
கொன், முத-30,நாக-106மூல-115
கொன்றணமணம், மாயாச-25
கொன்றுரவரோ, நாக-7
கொன்றையலங்கலான்,பிரமா-161
கோ-பசு, மீட்-261: சிறப்பு,வான. கள-9: வானம், சேது-25
கோசலம், மூல-102, விடை-27
கோசலை, சிதைக்-15
கோசிகனுலகுதந்தது, இரா.மர்-86
கோடணை வரிசிலை, இந்-21
கோடல்-எண்ணல், இரா.மங்-104 காந்தள், நாக-261
கோடற்குரியவகைபுரத்தல் முதலியன, வருண-11
கோடற்பொறி-கொள்ளுமளவு,இர
கோடி, இரா. வ-138 [ணி-98
கோடிகல் தண்டு, கும்ப-52
கோடு-தந்தம்,வரம்பு,இரா.மங்113: வருண-22: சிகரம், கும்ப-323: முனை, அதிகா-149: சங்கு,முத-
கோடுதல், கும்ப-358 [17
கோடைக்கதிர் X இரணியன்கண். இரணி-98:xகொடியகணை,கும்ப-310
கோடைநாளிடிக்குலம், மூல-91
கோடைப்பரிதி,மகரக்-31
கோடையில்வறந்த மேகக்குலம் X இராமவிரகத்தால் மதமின்றிக் கிடந்த யானைகள், திருமுடி-9
கோட்டி, துன்பம், நாக-108
கோட்டுதல், பிரமா-182,மீட்-134; =கோடுதல், மாறுபடல் ,விபீ-1
கோட்பு-வலிமை: படை-22
கோணம், கும்ப-28
கோணற்பூ, மூல-50
கோணிலம், முத-121

கோணுடைமலைXசிலை, இரா.வ-84
கோணுதல், விபீ-134
கோண்-பகுப்பு, இரணிய-124
கோண்மா, சேது-23:வான.கள-24
கோண்முகத்தரவம், கும்ப-271
கோதண்டமணியொலித்தல்,மூல-
கோதாவிரி, மீட்-180 [216
கோது, மருத்-79, இராம. தே-10
கோதை-விற்சட்டை,வருண-16, பிரமா-86: வரிசையுமாம், நாக-61, வில்நாண், கும்ப-285
கோதையும்புட்டிலும் இராவணன் கைகளில் ஆலஞ்சேர்கறைமிடற்றருங்கறையென விளங்கல், இராவ. தே-9
கோதையைக்கையிற் சுற்றுதல் X கற்பகக்கொம்பிணைக் கரிய நாகணம் தழுவுதல், முத-112
கோத்தல், மகராக்-10, பிரமா-57
கோபத்தோடுதிறந்த வீரரின்வாய்கள் X நமத்தோடும் சுடர்கின்ற ஓமகுண்டம், வான. கள-14
கோபமூண்ட இராவணன்xவிடம் பிறந்தகடல், இரா. சோ-7
கோபம்-மனத்தில்தோன்றும் தாபம், மீட்-225
கோபுரக்குன்றம், மகுட-2
கோபுரம்xமேருமலை: இரா. தானை
கோப்புண்ணுதல், படைத்-97 [-2
கோயில்xவடவரை, இல. சே-28
கோரையின்றலையகணை, நாக-110
கோலக்கோடல், மீட்-40
கோலப்புருவம், மீட்-23
கோலியசிலை, விபீ-92
கோல், கும்ப-251, 309: நிகும்-26, இரா. வ-83 [நிகும்-181
கோல்கொளுமொருவன் - சாரதி,
கோல்படுமணைகள், இல. கா-38
கோல்பிடித்தொழுகுநர் குருடர்கூட்டம்x வால்பிடித்தொழுகுங் கவியின்மாலை, அதிகா-100
கோலமூண்டெழுதல்,இரணி-119
கோவியல், இரா. மங்-49: இரா. சேர்-43
கோவினக்களிறு, பிரமா-159

சாபமொழி × இராமபாணம், ஒற்று
சாமரை, வான. கள-15, 23 [-45
சாம்பராயின, முத-193
சாம்பவன், நாக-176, மூல-45,வேலே-38: சாம்பவான், மீட்-152 சாம்பவன் காடிப்பெரும்படை விருத்தன், சேது-41: வானரச்சேனையைக் கடலடைக்கவருமாறுபறைசாற்றினன்-4: தேவாசுர யுத்தமறிந்தவன், மூல-51: பிரமனதுபுதல்வன், மருத்-87: மருத்துமலைக்குச் செல்லும்வழி கூறியவன்-24, 26: பிரம அஸ்திரத்திலடியுண்டிருந்ததன்மை, 17: சாம்பவானுக்குச் சாவில்லை-15
சாம்புதல்-இறந்தொழிதல், நாக-57: வாடுதல்: கும்ப-11: ஒடுங்குதல், விபீ-116
சாயகம், முத-59: மகர-18, மீட்-
சால்-ஒப்பு, இரா. தானை-15 [203
சாய்தல், முத-51, 137: நாக-21: 39, மூல-56, அதிகா-101
சாய்வு-தளர்வு, இரா. வ-182
சாரதி, படைத்-41: சாரதிசெய்ய வேண்டியதொழில். இராவ-182
சாரதியற்றதேர் × அறிவுமயங்குக் தவத்தோர், பொய்விளைமகளிர் கற்பு, இங்-28
சாரர், பிரமா-162
சாரன் = சாரணன் என்பதன்விகாரம்; இனி, சாரன்-ஒற்றனுமாம்; ஒற்று-30 [266
சாரி, கும்ப-337; சாரிகை, கும்ப-
சாரித்தல்-சாரிதிரிதல்; அதிகா-
சாரிபோதல், அதிகா-237 [161
சாருநர், அங்க-9
சார்தல்-எதிர்ச்செல்லுதல், இரணி-
சார்த்தூலன்-இராவணனுடைய [6 ஒற்றன்; அணி-8
சார்பு-இடம்; விபீ-8, 44, 57
சார்வில்வலம், இரா. தானை-24
சாலநினைத்தல்-நன்கு ஆராய்தல், இரா. மக-108
சாலம் = ஜாலம், தொகுதி; வருண-25 நிகும்-154

சாலவலசினென், நாக-287 [-50
சாலிகை-கவசம், மூல-208, வேலே
சாலிவெண்கதிர் × புரவி; படைத்
சாலுதல், மூல-43 [-35
சால், இரா. மக-93
சால்பு-மேன்மை, இல. கா-38
சாவர்ணியகரணி, மருத்-27
சானகி, இரா. தானை-6, கும்ப-11
சானகியின் கற்பினால்வெந்தது, இரா. மக-57
சான்று-சாட்சி, இரணி-67: பெருமை, மருத்-108
சான்றுக்குச்சான்றில்லை, மீட்-104
சான்றோர்கேட்கும் மொழி-புகழ்,
சிகரம்-மலை, நாக-67 [மாயாச-66
சிகால்போல்வான், இரா. வ-200
சிகரி, நாக-176
சிகாமணி, மீட்-305
சிகை-சுவாலை, படைத்-31, கும்ப-353: உச்சி, இரா. வ-101
சிங்கநாதம், பிரமா-104
சிங்கவேறனையான், விபீ-125, வேலே-33
சிங்கன்-மகரக்கண்ணனது தேர்ச்சக்கரக்காவலாள், மகரக்-7; பனசன் இவனைப்பொருது கொன்றான், மகர-35, பிரமா-1
சிங்குதல், விபீ-80, மருத்-63
சிட்டர், இரா. மக-53, விபீ-67
சிட்டர்தந்தனித்தேவன், இரா. வ-103
சிட்டு - சிட்டரின்தன்மை, இரா. கள-17
சிதைதல், நிகும்-62, இந்தி-3
சிதைத்தல், நிகும்-27
சித்தமொத்துளன், திருமு-40
சித்தர், இரா. மக-106
சித்தியர்-சித்தர்பெண்கள், இரா. வ. 235
சித்திரகூடம், மீட்-181, 192, 276
சித்திரச்சேவடிக்கழல், முத-110
சித்திரத்தேர், நாக-181
சித்திரந்திருத்தல், இரா. மக-67
சித்திரம், இல. கா-38, கும்ப-261, நாக-123, மாயாசீ-60

நாசிக்கம், மகுட-21: × கடைந்த அமுதுகொள்ளும்வள்ளல், நாக-70: × சடாயு, மகுட-5: × வாலி-17: சுக்கிரீவனை இராவணனுடைய தோள்கள் சுற்றுதல் × சூரியனை ஊர்கோள்கதுவுதல்-19: சுக்கிரீவனை ஒளிமறைத்த வரக்கன் × வெங்கதிர் கரந்த தொருமேகம், -20: சுக்கிரீவன் விபீடணனைத் தழுவுதல் × பகலும் எல்லியுந் தழுவுதல், விபீ-123: சுவேல மலையிலிருந்து இராவணக்குன்றிடைப் பாய்தல் × சூரியன் ஒரு மலையிலிருந்து வேறொருமலையிற் பாய்தல், மகுட-4; சுக்கிரீவன் முன் அஞ்சாது நின்ற இராவணன் × ஆலவிடம் அன்றிவர நின்றசிவன்-7; சுக்கிரீவன் இராவணன் முன்னிற்றல் × கயிலை நீலவரைமுன்னிற்றல்-7: சுக்கிரீவனோடும் அறுவரானோம், விபீ-146; சுக்கிரீவன் வச்சிரமுட்டியைச் சிதைத்தல், முத-54; கும்பனை மாய்த்தல், அதிகா-247; சூரியசத்துருவைக் கொல்லல், படைத்-87; இராமனடித்தலத்து இராவணனது மகுடமணியைச் சூட்டல், மகுட-33; சுக்கிரீவன் பிரிவினால் இராமனுக்கு நேர்ந்த நிலை-35; சுக்கிரீவன் இராவணனது மௌலிமணி கொண்டபோது படைக்கல முண்டோ, அணி-15; சுக்கிரீவன் அங்கதனையும் விலக்கி இராவணனெதிர்ந்த வேலேற்கமுன்செல்லல், வேலே-31; சுக்கிரீவன் முதலியோர் மானுடவடிவங்கொள்ளல், மீட்-162; சுக்கிரீவனை இராமனடைக்கது சவரிசொல்லால், மீட்-287

சுடாவன்சேய், மகுட-19 [-14

சுடரைந்து-பஞ்சாக்கினி, இரா-தே

சுடரோன்-தழல்வண்ணனான சிவன், மூல-151

சுடரோன்மகன், இரா. வ-164

சுடர், நாக-5, மீட்-83; சுடர்கள் சுற்றுற நடுவணீடோன்றும் நாயகப் பரிதி × அரக்கர் சுற்றுற நடுவண் டோன்றும் இந்திரசித்து, சுடர்க்கனல், இரணி-87 [பிரமா-11

சுடர்தல், மூல-215

சுடர்ப்படை × மேகத்துக்குஉதிக்கும் நெருப்பு, இரா. வ-43

சுடுதல், ஒற்று-48, இரா. வ-194

சுடேணன்-ஓர்வானரவீரன்: இராதானை-32, பிரமா-179

சுண்டியவலி, இர்-5

சுணங்கு, மீட்-61

சுண்ணம், கடல்கா-5, ஒற்று-31

சுதைத்தலன், மகுட-11

சுதையம் நட்சத்திரம், மகுட-4

சுந்தரம், கும்ப-355, மகா-14,

சுந்தரியர், மீட்-227 [மாயாச-16

சுபாகு-இராவணன் மாமன்; அவனுடையவதம், அங்க-32

சுபாரிசன்-ஓரரக்கத்தலைவன்; அங்கதனால் தெற்குவாயிலிற் கொல்லப்பட்டவன், முத-80

சுமத்தல், இரணி-3

சுமந்திரன், மீட்-352, திருமுடி-37

சுமத்திரை, சீதை. க-15

சுமித்திரைசிங்கம், கும்ப-208, 247

சுமை, வருண-31, மாயாச-40, 50

சும்மை, விபீ-62, களியா-2

சுயம்வரகாலம் யுத்தகளம் முதலியவிடங்களில் மாதராரைப் பலரும் பார்க்கலாமெனல், மீட்-46 இல-3

சுரபி, விடை-15

சுரம்-பாலைநிலம், மீட்-71

சுரலருகு, மூல-157

சுரர்க்கிறைவன், இராம. தே-28

சுரிகை, மாயாச-8

சுரிகைவாள், மாயாச-70

சுரிதல்-புதைத்தல், சேது-19

சுரித்தல்-சுருளுதல், இரணி-137; புதைதல், பதிதல், முத-11, கும்ப-197, இரா. வ-1

சுரிப்பு-சுழற்சி, இராவ. தே-7

சுரிவளைமுத்து, மீட்-340 [170

சுருக்கம்-குறைவு, விபீ-69, மூல-

சுருக்கில்நான்மறை, இரணி-10
சுருங்குதல், இரா. ம-62, இரா.வ-
சுருதி X குதிரை, திருமுடி-2 [75
சுரும்பு, கும்ப-100
சுருள் - சுருளுகை, பிரமா-148; சுழல்காற்று, இரா. வ-92
சுருள்திரை, வருண-49
சுலவுதல்-சுற்றுதல் நாக.69
சுலாவுதல், நிகும்-19
சுவடு, இரா, தானை-1, படைத்-26. மகரக்-29
சுவடெறிதல்-தழும்புபடுதல், தழும்பை நீக்குதல், நாக-61
சுவணக்கோலம் - பொன்னிறம், இரா. வ-141 [யா-19
சுவல்-குதிரைக்கழுத்துமயிர், களி
சுவறுதல்-வற்றுதல், முத-191
சுவாதவாதம், கும்ப-50
சுவேலம், மீட்-129
சுவையறியப்புனலூறல், கும்ப-14
சுவையாறு, மீட்-312
சுழல்கண், இரா. சோ-29
சுழி, இரணி 87, கும்ப-297
சுழிகளிற் சுரித்துத்தோன்றுதாமரைXமுழுகிமீதெழுமாதர்முகம், முத-11
சுழிதல்-வளைதல், முத-115, சுழித்தல், கடல்காண்-4, பிரமா-152 வட்டமிடுதல், கும்ப-350
சுழியம், இரா. வ-205
சுளித்தல், அதிகா-170, பிரமா-37
சுள்ளியினுறைகுரங்கு, இரா. மங்-
சுறவம், மூல-20 [25
சுறவினம், சேது-23
சுறுக்கொள்ளுதல், மகுட-22, மூல-92
சுருநாறுதல் - தீப்பற்றியநாற்றம் நாறுதல், இரா. மங்-133, see நிகும்-112
சுற்றிச்சூழ்தல், இரணி-147
சுற்றுதல்-சூழ்தல், முத-234, மீட்-206
சுற்றுமுற்றும்வளைத்தல், மூல-133
சூடுண்ணல், மாயாச-40
சூடுறுமேனி, மீட்-66
சூதன்-பாகன், கும்ப 217, இரா.
சூதார்முலை, மீட்-180 [வ-16
சூத்திரம் சூட்சுமத்தன்மை; இரா.
சூரரிலக்கணம், இந்திர-30 [தா-16
சூரியசத்துரு, இரா.மர்-43, இல. கே. 38, படைத்-21, 60
சூரியசந்திரர் அமுதுண்ணவந்த இராகுகேதுக்களை மாயற்குக் காட்டுதல்Xவிபீஷணன் சுகசாரணரை இராமனுக்குக்காட்டுதல், ஒற்று-63
சூரியனத்தமித்தல், கும்ப-2
சூரியனிலங்கையையும் எட்டிப் பார்க்கவஞ்சுவான், இல. கா-24
சூரியனுடல்கடையப்பட்ட செய்தி, இரா. தே-10
சூரியனுதித்தல், இந்திர-34
சூரியன் தேரிற் பூட்டிய குதிரைகள் பசுமைநிறமுடையன, இரா. வ, தே-19
சூரியன்புதல்வன் இராவணன் மேற்பாய்தல், X அநுமான் சூரியன் மேற்பாய்தல், மகுட-2
சூரியன்மேருவில் மாறிவடபாற் செல்வான், மருத்-56
சூரியன்மேற்பாய்ந்தவனுமன், முத-245, மகுட-2
சூரியன்மைந்தன் பதினேழுவெள்ளஞ் சேனையோடு இராமனைப் பிரியாதிருத்தல், அணி-5
சூரியாத்தமனவருணனை, விபீ 155 ஒற்று-18, மகுட-50, நாக-178, பிரமா-87, மீட்-273, 17
சூரியோதயவருணனை, இல. கா-24, அணி-24, படைத் 55, மீட்-189, 305, 318
சூருளோர்-தேவர், கும்ப-122
சூர், முத-235, படைத்-43, மூல-198
சூர்ப்பணகை, கும்ப-235-மீட்-282
சூலமிற்றவோசைXஇராமன் சிவதநுசையிறுத்தபேரொலி, கும்ப-261
சூலமென்னத்தொளைக்கும், ஒற்று-44

பழுத்துதல், 142: வலியழித்தல், இரா. மர்-102

தள்ளுதல்-பின்னிடல், பிரமா-47: துயரம், மாயாசி-94

தறி-தூண், இரணி-129

தறிபட்டவுடற்றுண்டம் × சந்திர துண்டம், நாக-49

தறுகணர், கும்ப-348

தறுகண், விபீ-31, மூல-20

தறுதல்-தெறுதல், கும்ப-154

தஸ்கர் = தஸ்கரர், கள்வர்: இரா. மர்-18

தற்கு-செருக்கு, முத-48

தற்பம்-செருக்கு, கும்ப-27

தற்பரன், மருத்-84

தனக்குந் தன்னிலையறிவருமொரு தனித்தலைவன். இரணி-33, நிகு-7

தனதன், நிகும்-70: மீட்-143

தனிக்கொலை- இரகசியமாகச்செய்யுங்கொலை, இரணி-18

தனித்தொன்றிலான், இந்திர-68

தனிநாயகன், அதிகா-75

தனிநிலை, இரணி-60

தனிமைநீங்குதல், மீட்-348

தனிமைப்பாடு, மாயாசி-74

தனு-உடல், வில், பிரமா-174, அதிகா-62

தனும்மை, நாக-32

தனுஷ்கோடி, மீட்-171

தன்போல்வரிலாப் பொன்மேனியன், அதிகா-70: தன்போன்மாறிலாவீரன், மீட்-354

தன்மை-மேம்பாடு, நற்குணமுமாம், முத-12: கொள்கை, இரா. வ-17

தா-வலி, இரா. வ-126; குற்றம், இரணி-41

தாகுதல் = தாவுதல்; இரா. வ-126

தாக்கணங்கனையவன், கும்ப-329

தாக்குதல் - மோதுதல், படுதல், கும்ப-205, மீட்-241

தாங்குதல்-பாதுகாத்தல், பொறுத்தல், மாயாச-48, பிரமா-150; தள்ளப்படுதல், அதிகா-262

தாஙகுவான்விழ அரற்றுங்கிளை ×

பழுமாம்பறிக்க அரற்றும்பறவைக்குலம், சேது-55

தாசரதி, அதிகா-276

தாடகைவதை, அங்க-32

தாடை, கும்ப-52

தாடொடுதடக்கை, மீட்-348

தாணிழல்புகுதல், நிகும்-157

தாணு. இரா, மர்-89 [10

தாணுவின்தோற்றத்தான், நிகும்-

தாதவிழ்கூந்தல், கும்ப-3

தாதியரைத்தொழும், மீட்-353

தாதுராகம், கும்ப-296

தாதை, அதிகா-51

தாதைதாதை - பிதாமகக்கடவுள், நாக-250

தாதையர், அதிகா-260

தாபதர், கும்ப-15, 205

தாமக்குடை, நாக-25

தாமச்சுடர், மூல-203

தாமதம்-தாமசாத்திரம், இராவ. வ-117

தாமதாத்திரத்தால் ஒருதிசையில் இருள்முதலியனவும் மற்றொருதிசையில் வெயில்முதலியனவும் விரிதல், இரா. வ-92, தாமதாத்திரத்தை ஸ்ரீராமன் சிவாஸ்திரத்தாற் போக்குதல்-94: தாமதாத்திரம்பலவகைப்பட்ட முகங்களையுடையது-90

தாமம்-ஒளி, மாலை, முத-223, நிகும்-32, இரா. வ-118, திருமு-32

தாமரை-ஓர்மலர், பதுமமென்றணக்கு: கடல்கா-2, அதிகா-53 வான. கள-34

தாமரைக்கண்ணன், நாக-111, விபீ-124

தாமரைக்கிழத்தியோடு ராமன் X கொண்டலும்மின்னும், விடை-1

தாமரைத்தடம் X இராமன், இல. கே-14

தாமரைத்தலையவாளி-மொட்டம்பு நாளிகாஸ்திரம், நாக-111

தாமரைப்பூ நெருப்புறுதல் X சீதை துயரில் மூழ்குதல், சிறைக-4

தாமரைப்பொகுடு, இரணி-164

தாமரைவளையம் கையில் வாங்குதல்Xஇராவணன் புகழை முளையோடும் களைந்திடுதல், மூத-6
தாமுளாரன்றே புகழினை திருவொடு தழிப்பார், மூல-44
தாம் = தாமம், ஒளி; இரா. வ-119
தாயம், விபீ-80
தாயர்சொன்றேக்கினுன், மீட்-13
தாயினன்பன், இரணி-19
தாயினுர் தொழத்தக்காள், இரா-211
தாயினும்பழகினர்க்கும் தன்னிலை தெரிக்கலாகாமாயம், அணி-3; see இல. கே-36
தாயினை இழந்தகன்றுX இராமனையும் சீதையையும் இழந்த இலக்குமணன், மாயாசி-61
தாயெரிவீழக் கண்டபார்ப்புXசனகன் இராவணனை வணங்கக் கண்ட சீதை, மாயாச-31
தாய்-தாவி, முத-74
தாய்தெரிந்துலகங்காத்த தவத்திசீதை, ஒற்று-33
தாய்ப்பறவையை வல்லூறுகொண்டெழச் சிரற்றின குஞ்சு × சுக்ரீவனைக் கும்பகர்ணன்கொண்டெழக்கதறின கவிக்குலம், கும்ப-269
தாரகைக்குழுவை வென்ற முத்தாரம், விடை-23
தாரணிதாங்கியமலை, மீட்-18
தாரம்-மனைவி, வருண-10, ஓர் பண், முத-7
தாரி-வழி, இரணி-118
தாரு—தரு,கற்பகமரம்; இரா.மங்-89
தாருகன்-ஓரரக்கவீரன், அதிகா-121, அதிகாயனுக்குத் துணையாவுடன் வந்தவன்:இவன்இலட்சுமணனோடு பொருதுஇறந்தான், அதிகா-122: 123, தாருகன், சுப்பிரமணியக்கடவுளாற் கொல்லப்பட்டு அசும்பனுய்ப் பிறந்தவன், பிரமா-123, இரா. வ-106
தாரை-சீர்வீழ்தொடர்ச்சி, இரா. வ-231: ஒழுங்கு, அதிகா-23: ஓர் ஊதுகருவி, கும்ப-51
தாரைசேய், நாக-30
தார், ஒற்று-61, அதிகா-238, நாக-26: படைத்-28; திருமுடி-7: முன்னணிச்சேனை, நிகும்-18,19
தாலமீன்-பனைமீன், வருண-25
தாலம்-நாக்கு, இராவ. தே-9:பனைமரம், அதிகா-249
தாலியைத்தொடடல், இரா.சோ-21
தாவரு = தாவுதற்கு அரிய, மாயாச-90; கும்ப-38, 58
தாவருதல்-வலிமைபொருந்துதல், இரா. மங்-23
தாவல்-இளைப்பாறுமிடம், சேது-தாவுதல், மீட்-152 [56
தாவுறுதல், அதிகா-254
தாழ்ச்சி, இரா. மங்-11
தாழ்ச்சியிற்பொருடருந்தரும்மூர்த்தி, விபீ-19
தாழ்தல்-நிறைதல், இரணி-140: மிகுதல்,90:இழிவாதல், கும்ப-332: குறைதல், மாயாச-46; தாமதித்தல், வருண-83,அங்க-25, அதிகா-54. தங்குதல், நாக-241, வணங்குதல், இரா.வ-17, நிகும்-68
தாழ்த்தல்-தாமதித்தல்,விபீ-130: நாக-300, கீழ்மைப்படுத்துதல், இல. கே-4
தாழ்ந்ததோர்கருணை-மனவிரக்கத்தைத் தெரிவிக்கின்றகருணை, இரா. வ-218
தாழ்வித்தல்-பின்வாங்கச்செய்தல் பிரமா-211
தாழ்வியாத - தாழ்ச்சி யுண்டாக்காத மேன்மைகள், இரணி-55
தாழ்வில்வாழ்வித்தல், மாயாசி-95
தாழ்வினை-தாழ்வுறச் செய்யுந்தொழில், இரா. மங்-44
தாளதாமரை, முத-7
தாளளவு, இரணி-3
தாளறுதல், அதிகா-35
தாளார்மரம், படைத்-82
தாளுறத்தொழுதல், மருத்-110

தாளெடுத்தல்-கால்விசைக் கொள்ளுதல், கும்ப-339
தாளைக் கையாற் றைவரல், நாக-223
தாள்-கால், கிரும்-37: காம்பு, நிகும் 36: முயற்சி, இரணி-161: வலிமை யென்பாருமுளர், 129
தாறு-அங்குசம், அதிகா-24, நிகும்
தானநகரம், அதிகா-275 [-46
தானம், இராவ. தே-3
தானவர், ஒற்று-63, மூல-192
தானவர்க்கிறை, வான. கள-32
தானிமாலி- இராவணன்மனைவியருள் ஒருத்தி, அதிகாயனைப்பெற்றவள், அதிகா-266, 269, 278: தானியமாலினி புலம்புகையில் உருப்பசியும் மேனகையும்அரண்மனைக்குக்கொண்டுபோதல்-274
தானை, இரா. மந்-36
தானைக்கொழுந்து, இராவ.தே-36
தானைப்புரவலன், கும்ப-191
தானையானவர், இரா. மந்-40
தானைவைப்பு, விபீ-152
திகிரிபற்றும் ஏகசாதனன், பிரமா-124 [12
திகைத்தல், மூல-152, இரா.கள-
திக்கசங்களின் தந்தங்களைமுறித்தல், இரா. மந்-113: இரா.வ-81
திக்கடங்கலும்வென்றான், கும்ப-68
திக்கனுந்தேவர், இரணி-154
திக்கணிநின்றயானை, பிரமா-38
திக்கயம், இரா. மந்-32
திக்கு-ஆகாயம், மீட்-238
திக்குவிசயம், அதிகா-271
திக்கென்றமனத்தன், களியா-21
திங்களிளம்பிறை, மூல-138
திங்களிற்பாதி, நாக-109
திங்கள்-பிறைச்சந்திரன்: X கோரப்பல், இந்திர-54: X திலகநுதல், விடை-4
திங்கள்கொதித்தது, ஒற்று-21
திசாதிசை, இரா. மந்-42
திசைகள்வெடித்தன, நாக-102
திசைகிழிதல், நாக-104 [-164
திசைக்காவலர், ஒற்று-51, அதிகா
திசைசெவிடெறிந்தன, கும்ப-209
திசைநிலைக்களிறு, மருட-42
திசைபத்து, இரா. தானை-4
திசைமுகத்தோன், இரணி-175
திசையிடித்தல், இரா- தானை-18
திசையோடண்டம்பிரிந்தனவென்ன முழக்குப்பிறத்தல், இரா. வ-4
திசையோர்-திக்பாலகர், மீட்-3
திடம், அதிகா-58, மீட்-280
திடர்-குன்று, நாக-137, திட்டு, மருத்-58: மேடு, கும்ப-320
திடல்-மலை, முத-195
திடல்-திறத்தல், வருணை-51
திடுக்கமெய்த, கும்ப-107
திட்டியின்விடம் X கற்பின்செல்வி, கும்ப-80: X கணைகள், அதிகா-122
திணித்தடங்கிரி, இராவ. தே-29
திண்டாடுதல், அதிகா-27
திண்டிறல், இரா. தானை-35
திண்ணம், இரணி-176
திண்மை, இரா. மர்-34
திமிங்கிலதிமிங்கிலங்கள், வருண-23: திமிங்கிலம், சேது-45
திமிதயிடுதல், சேது-42
திமிரமா-பன்றி, வான. கள-28
திமிரம்-இருள், மூல-161
திமிர்த்தல்-அசைவற்றுக்கிடத்தல், இரா. வ-80
திமிலம் = துமுலம், இரா. வ-12
திமிலை-ஓர்வாச்சியம், பிரமா-5
தியங்குதல், இரா. தே-25
தியந்தம், சேது-39
தியாகமாவினோதன், மருத்-58
திரளுதல், நாக-261
திரிகூடமலைவரலாறு, இல. கே-17, மருத்து-98
திரிகையொத்தமண்டலம், முத-207
திரிசடை, மாயாச-93, சீதைகள-24-29, மாயாசீ-93, மீட்-91, 147
திரிசிரசு-அதிகாயனுடன்வந்தவன் வடதிசைவாயிலில் கொல்லப்

தீர்த்தன், விபீ-143, படைத்-36
இரா. வ-14 [26, மாயாசீ-8
தீர்ந்தார்-உயிர்தப்பியவர், மாயாச-
தீர்வதுபொருளோ, நிகும்-1
தீர்வினைசேர்தல், ஒற்று-31
தீவந்தோன்றியமுறைத்துணை, ப
தீவியகனி, மீட்-320 [டைக்கா-24
தீவிழி, மாயாச-91, இரா. சோ-5
தீவினை, மருத்-72
தீவினைப்பயன் X இராவணன்சரம், இரா.வ-52
தீவினையலக்கணுற்றது, கும்ப-340
தீவினையையென்றவர், இரா.மங்-65
தீவினையொருவன் செய்யத்தீங்கிலாதோர்வீவினையுறுவர், கும்ப-144
தீவினைவேர்த்துவெம்பி விழுதல், இரா. வ-172
தீவீழ்விறகு X தந்தை பகைச்சிறைப்பட்டானென்ற துயரத்திற் பட்ட சீதை, மாயாச-34
தீற்றுதல்-பூசுதல், தின்பித்தல், ஒற்று-21, மீட்-46
தீன்-இரை, சேது-28
துகள்-தூசி, குற்றம், மீட்-186, மூல-157
துகிற்படுத்தல்-ஆடையை யொத்தல், இரணி-138 [நாக-71
துகைத்தல் - தாக்கி வருத்துதல்,
துக்கமித் தொடர்ச்சி, கும்ப-143
துங்கம், பிரமா-176, இரா. வ-147
துஞ்சலினயனத்தையன், விபீ-144
துஞ்சுதல், இரா. மங்-92, படைத்-8, மீட்-252
துடி-ஓர்பறை, பிரமா-5
துடித்தல், இரணி-88
துடிப்பு-விரைவு, இரா. வ-6
துடியின்பாதக்குன்று-யானை, வாண. கள-17
துடும்பல்-ததும்புதல்- சேது-53
துடை, அதிகா-131
துடைத்தல்-அழித்தல், இரணி-159, அணி-12, முத-195
துணங்கை, கும்ப-209
துணர்-பூங்கொத்து, மருத்-95
துணர்தல், ஒற்று-42
துணிதல், முத-63, நிகும்-71, இரா. சோ-55: துணித்தல், அதிகா-123
துணிவித்தல், நிகும்-169
துணிவு, இரா. மங்-111, விபீ-61, இரணி-83
துணுக்கம், மாயாச-29, வேலை-43: இரா. தே-29
துணுக்குறல், மாயாசீ-59, களி-19
துணை-ஒப்பு, வேளை, இரா.மங்-91, அதிகா-102, இரட்டை, நாக-242, கூட்டானபொருள், இரா. சோ-19
துணைவர், விபீ-10, 17, மீட்-148
துணைவன், விபீ-109, இல.கே-4
துண்டம்-கண்டம், மூக்கு, கும்ப-251, பிரமா-12
துண்ணெனல் - அச்சக்குறிப்பு, இரா. வ-129
துதைதல், அங்க-42, கும்ப-75
துர்நிமித்தங்கள், இரா.மங்-95, 96 மூல-81, இரா. வ-22
துப்பு-வலிமை, பவழம், சேது-60, மூல 15
துமி-துளி, சேது-42
துமிதல், பிரமா - 50, மூல-113, விடை-8
துமிந்தன் = துவிவிதன், விடை-8
துமிலம் = துமுலம், இல. கா-28, இரா. வ-32
துமுலம்-பேரொலி, முத-192
தும்பி-யானை, வண்டு, நாக-219, படைத்-58
தும்பிகலந்த தாமரை X அம்புகலந்த முகம், படைத்-58
தும்பை-போர்ச்செல்வோர் சூடும் மாலை, முத-97,232; போர், பிரமா-113
தும்பைமலர் வேள்வியிற்றூவுதல், பிரமா-165
துயக்கு-ஆசை, இரா, தானை - 1; சோர்வு, மூல-88: மனத்திரிவு, இரா. வ-235, மீட்-144
துயரமுழக்குதல், மீட்-217

தொய்யில் - மகளிர்தோளெழுது கோலம், கும்ப-75
தொலைவிலாத்துணி × கவிஞர் நாவருஞ்சொல், முத-114
தொல்லறச்சான்றெனநின்றவன், மீட்-333
தொல்லை, மருத்-86, வேலே-47
தொல்லைநாயகன், விபீ-32
தொல்லைநாள், இரா. வ-27
தொல்லைப்பொருப்பு, நாக-246
தொல்லையதுணரத்தக்க விபீடணன், மாயாசி-62
தொல்லோன், மூல-188
தொழு-சிறை, விலங்குகள் அடைக்குமிடம், இரணி-171, மூல-181, இரா. வ-21
தொழுதல், மீட்-248
தொழுதெழுதல், பிரமா-89
தொழும்பு, இரணி-171
தொன்முறைநெறி, விபீ-72
தொன்மைப்பேரகழ், முத-12
தொன்மையர், இரா. மர்-68
தொன்று-பழமை, விபீ-109
தொன்றுதொட்டு, இரணி-10
தொன்னகர், இல-கா-24
தொன்னிலை, இரணி-59
தோகை, இராவ. தே-16 [கா-170
தோகையர்வலிவென்றவன், அதி
தோடு-பூவிதழ், மீட்-149, திருமு-4: பனையோலை, களியா-4
தோடுழுதல்-அகவிதழ் பொருந்துதல், இரா. வ-205
தோட்கானம், மாயாச-8 [-100
தோட்டடக்குலுங்குதல், இரா. மர்
தோமரம், முத-58, அதிகா-169
தோக், விபீ-83, இரா. கள-1,
தோயம், திருமுடி-22 [விடை-12
தோய்தல், மாயாச-36, இரா. வ-169, மீட்-219
தோரணம், இரா. தானைகா-17, இல. கே-60, முத-44
தோரணமநட்டும்மற்றுநிலைபொதிதல், மீட்-263
தோலின்வினையுறு செருப்பு-மரவடி, மீட்-347

தோல்-தோல்வி, இரா. சோ-18: யானை, படைத்-43, அதிகா-95, கேடகம், கும்ப-299
தோழம் = தொழுவம், மூல-18
தோளாம்மலை, முத-148 [கா-269
தோளாற்றல் மெலிந்தாயோ, அதி
தோளிற்சித்திரம் எழுதல், நிகும்-170, இரா. சோ-17
தோளிற் ரேன்றும் பொன்னரிமாலை × நீலவரையின் வீழருவி, மாயாச-5
தோளைப்பூட்டுறுபாசம், நாக-242
தோளொடு தோள்நோக்கப் பல நாள்கழியும், கும்ப-111
தோள்-கை, மகுட-42, கும்ப-195
தோள்களைப்புடைத்தல், ஒற்று-46
தோள்கொட்டுதல், மீட்-252
தோள்துக்குதுணி, முத-54
தோள்புடைகொட்டல், மூல-189
தோள்புடைத்தல், கும்ப-336
தோள்வளைபூண்ட கும்பகர்ணன் கை × மாசுணஞ் சுற்றிய மந்தரம், கும்ப-345
தோள்விசை, முத-135
தோற்றம்-தோன்றிய வரலாறு, நாக-16; பிறவி, இரணி-45, மீட்-107. தோன்றுகை, அங்க-16: ஆகாரம், இரணி-148: வல்லமை, முத-255. காட்சி, இரா. வ-11; எண்ணம், இரா. வ-79 [159
தோற்றுள கூற்றின்சூழல், கும்ப-
தோன்றல் புத்திரன்: இரணி 87, நாக 286, மீட்-221
தோன்றுநிவன், அங்க-30
ந-மென்மைகுறிக்கும் இடைச்சொல் இல. கே-40
நககைளிற் பெரியவேழம், (நகம்-மலை): முத-145:
நகம்-மரம் ஒற்று-29
நகம்பலடையாகக் கொல்லும்கரசிகை மூர்த்தி × தண்டாயுதம் கொண்டு கொல்லும் அனுமான், பிரமா-122
நகமபலில்லதோர் நாசிகம், இல.
நகரம், வாண. கள-18 [கே 38

நகர், இரா. மங்-2
நகல் மதித்தல்-சிரித்தலைக் கொள்ளுதல், இரா. மங்-96 [136
நகழ்தல்-வழன்றபோதல், அதிகா-
நகுதல்-விளங்குதல், இரா. தானை 25
நகை-சிரிப்பு, இரா. மங்-45: ஒளி, மூல-202
நகைதருதல்-சிரித்தல், இரா. மங்-
நகைநாறுதல், வான.களை-14 [50
நகைபிறத்தல், இரா. களை-27
நகைப்புலத்தது, விபீ-104
நகையொடு புகையுக, வருண-9
நக்காம்-முதலை, படைக்கா-17
நக்குதல்-அழித்தல், கும்ப-318
நங்கை-இரா. தானை-2, கும்ப-330
நசைதிறத்தல் உள்விருப்பம் வெளிப் படல், இரணி-127
நச்சிரப்படை, இல. கே-40
நச்சுதல்-விரும்புதல், மீட்-236
நஞ்சம் அமிழ்தத்தை வெல்லல் × நல்லறத்தை வஞ்சவினை வெல்லல், இராமனை அரக்கர் வெல்லல், மூல-153 [-208
நஞ்சினுற்செய்தநெஞ்சினன், முத
நஞ்சின்வெய்யவன், இரா.மங்-117, விபீ-71
நஞ்சு, இரா. மங்-92, விபீ-115[14
நஞ்சுகக்கியெரிகண், இரா. தானை-
நஞ்சுமஞ்சுவிழி, இரா. தானை-13
நடக்கால் காட்டுதல், வான.களை-11
நடத்தல், முத-40, மீட்-65
நடநவிலல், மூல-166
நடம்பாவகத்து ஆடல், இரா, களை-6
நடுக்குகின்றவுடல், இரா, களை-9
நடுவணின்றதோர்மலை, கும்ப-111
நடுவன்-யமன், அங்க-30
நடை-ஒழுக்கம், அதிகா-73
நட்டல், நிகும்-38, மீட்-287
நட்டவாமெனவீழ்தல், கும்ப-219
நண்ணலார், அங்க-10, இரா, வ-212
நண்ணார்வியந்தெழுவீரர், விடை-8
நண்ணினர்-உறவினர், முத-103
நண்ணுதல்-கிட்டுதல், ஆலோசித்தல், இரா. மங்-26, 93
நண்புசெய்தல், விபீ-3
நதிகாய்மானம், அதிகா-7
நத்தொலி, நந்து + ஒலி, நாக-38
நந்திக்குநாலுதோள், இரா-மங்-80
நந்திசாபம், இரா. மங்-106
நந்தியம்பதி அயோத்திக்குக்கிருதிசையிலுள்ளது, மீட்-195, திருமுடி-2
நந்துதல், இரா. மங்-39, இரணி-65
நந்துதல் - அவிந்துகொண்டிருத்தல், நிகும்-57
நம-நம்முடைய: இரா. மங்-52
நமரங்காள், வான. களை-6, 8, 12
நமனூர், அதிகா-157, நிகும்-30
நமனுக்கும் நமன், நிகும்-91 [64
நமனைபுறுதல்-இறத்தல், இல.கே-
நமன் உயிரின்போகம் வெறுத்தல் முத-148, பிரமா-44
நமன்றிசைவாயில், அணி-19
நமோநாராயணாய, இரணி-42
நம்பரம்-நம்பொறுப்பு, இல.கா-15
நம்பன், இரா. மங்-86, முத-221, படைக்கா-36
நம்பி-கடவுள், கடவுள் வாழ்த்து.
நம்பியர்-பெரியோர், இரா. மங்-47
நம்புதல்-அன்புகொள்ளுதல், திருமுடி-1
நயத்தல் விபீ-63, நிகும்-165[
நயத்துறைநூல், அங்க-8
நயம்-முறைமை, நீதி, இரா.மங்-50, விடை-8, இனியது, கும்ப-35
நயனம், மகுட-34, நாக-245
நரகமெய்தல், இரணி-37
நரகம்-துன்பம், இரா. மங்-92
நரகில் வீழ்பவர், விபீ-117
நரகு, கும்ப-147
நரசிங்கத்தின் விசுவரூபம், இரணி-131-136: நாசிங்கமூர்த்தி பிரகலாதனை நோக்கிக்கூறிய முகமன்; இரணி-166-168: நரசிங்கமூர்த்தியின் கைத்தொகுதி × திரைப் பரப்பு-149
நரநாராயணரே இராமலட்சுமணர், பிரமா-3, நிகும்-141
நரம்பியல் இன்னாம், மருத்-106
நரர், இரா, மங்-41, அங்க-37
நரன்-மனிதன், அங்க-29; நரா

நன்னுதல், விபீ-101
நன்னெறி-ஆகாயம்: ஸத்பதம்என்பதன்மொழிபெயர்ப்பு, நாக-130
நாகக்கணை, நாக-107 [டை-30
நாகணைத்துயிலைத்தீர்ந்தான், வி
நாகபாசம், நிகும்-75: நாகபாசம் பிரமன் வேள்வியிற் படைத்தது, ஊழிக்காலத்துருமினூற்றத்தது; சிவபிரானால் இந்திரசித்துக்குக் கொடுக்கப்பட்டது,நாக-235, நாகபாசத்தால்தான் அனுமான்றேளை யிறுக்கினது, இதனால் தான் இந்திரனையுங் கட்டினது-236: நாகபாசம் தானே விடினல்லது சதுமுகன் முதல்வராய வானவரால் நீக்கமுடியாதது: 237: நாகபாசத்தாற் பத்துத் திக்கிலும் இருளிரிந்தோடுதல்-189: நாகபாசம் நாசமாதல், படைத்த-12
நாகபுரம்-பாதாள லோகம், வான. கள-26
நாகமேயனைய நம்ப, நாக-180
நாகமேழு-மேலேழுலகம், மூல-78
நாகம்-இராகுகேதுக்கள்,படைத்தலை-75: யானை, வான. கள-6
நாகம்வாழ்மூக்கு, முத-21
நாகம் வேர்போலும், சேது-34
நாகர்-தேவர்: இரா.மங்-97 [கா-42
நாகர்பாவை-தெய்வப்பெண், இல.
நாகர்புரம் - தேவலோகம், இல. கா-18
நாகலோகம் புக்கவனை × புற்றடைந்த அரா, நாக-66
நாகவுயிர்ப்பு, மகரக்-1
நாகியர், இரா. தானை-13
நாக்கொடுகடைவாய்நக்கல், இரா.
நாசம், கும்ப-31 [கள-27
நாசி, இரா. தானை-21
நாஞ்சில்-கலப்பை, கும்ப - 105, மாயாச-40
நாடி-நரம்பு, வான. கள-12
நாடு-உலகம், இரா. தே-31; ஊர், இரா. வ-212, மீட்-248 [23
நாடுதல், இரணி-128, இரா. சோ-

நாட்டம்-கண்: இரா.மங்-100, இரா
நாட்டுதல், விபீ-56 [வ. தே-31
நாணங்கூர்தல், மாயாசீ-71
நாணத்தாலூர்க்குத் திரும்பாமை, நாக-169
நாணத்தாற் பூமியை நோக்குதல், கும்ப-3, மகுட-39
நாணம்பாரித்தல். மாயாசீ-61
நாணினைத்தெறித்தல், முத-123
நாணினொல்லொலி,நிகும்ப-78 [18
நாணுதல், மாயாசீ-21, வான, கள-
நாணெறிதல், நாக-61. நிகும்ப-86
நாணொலி, முத-226, அதிகா-21 மகரக்-17: X வெள்ளங் கெடுக்கு நாளுருமினார்ப்பு, முத-127
நாணொலிவெளிப்படுத்தாத சிலை X இந்திரவில், நிகும்-21
நாணோசையாற் குரங்குகள் நிலை கெட்டோடல் X காலக்காற்றால் கடல் நிலை கெட்டோடல், நிகும்ப-90
நாண்பொருவில், நாக-105
நாண்மலர். முத-117
நாதவீணையிசை, இரா. தானை-9
நாதன், கும்ப-127
நாத்தழும்பேறுதல், மூல-186
நாந்தகப்பாரவாளி, மூல-95
நாந்தகம், அதிகா-209
நாப்பண், விபீ-133, விடை-1
நாமக்கஞ்சுகத்தர்-கஞ்சுகியரென்ற பெயரினர்: இரா. தானை-14
நாமநீர் X நறைக்கடல், சேது-52
நாமநூல், விபீ-60
நாமம், விபீ-132, இரணி-3, முத-219, வான. கள-14
நாமறுதல் - பேருமில்லை யாதல், இரா.மங்-41: படைக்-77, மருத்-
நாமுறல், விபீ-83,விடை-33 [109
நாயகக்கோயில்- ஸ்ரீரங்கநாதனென்னுந் திருமாலெழுந்தருளியுள்ள கோயிலென்றல் ஏற்கும்: திருமுடி-11, 16: X மேருக்குன்று-17
நாயகக்கோலம், மீட்-41
நாயகன், இரணி-19, மூல-132
நாயினஞ்சியங்காண்டல் X குரங்கு

248: நிகும்பன் அக்கினியைவெ
ன்றவன், கும்பகர்ணன் புதல்
வன், இல. கே-34: நிகும்பனெ
ன்ற இராவணனுக்கு மாமன்மு
றையான ஒரிராக்கதனுமுளனெ
ன்ப;நிகும்பனும்அங்கதனும்பொ
ருதல், அதிகா-248: நிகும்பனை
அனுமான் அறைந்து கொல்லு
தல்-25;நிகும்பன்மீது செல்லும்
அங்கதன் X நீலக்கிரி மேனியிர்
பொற்கிரி-249
நிசாசரர்,முத-80:நிசாசரன்,இரா.
நிடதம்-ஒருமலை, மருத்-25[மங்-42
நிணப்பல், மூல-199
நிணம், படைக்-58, வான. கள-24
நிதி-பொன், மீட்-5
நிந்தனைநறவம், விபீ-100
நியம்-காரணம், பிரமா-170
நிமித்தங்கள், விபீ-99
நிமிரச்செல்லுதல்- நேராகப்பாய்ந்
து செல்லுதல், நாக-262
நிமிர்தல்-வளர்தல், மகர-15:எழுந்
து வீசுதல்: இரணி-16:அப்பாற்
படுதல், வருண-79;மேம்படுதல்,
பிரமா-96:மேலாதல்,முத-121:
விரைந்து வருதல்-128: ஓங்கு
தல், 161: வெல்லுதல், வான.
நிமிர்வு, இரா. வ-47, 136 [கள-2
நிரத்தல்-நிரம்புதல், படைத்-56
திரளாகுதல், கும்ப-253
நிரந்தரம்-எப்போதும், நாக-54
நிரப்பினோர்- வறுமையடைந்தவர்.
நிரப்புதல், இல. கே-12 [விபீ-81
நிரம்புதல்-முடிதல், இரா. மங்-54:
மிகுதியாகக்கொள்ளுதல்,இரா.
மங்-6, இரணி-141
நிரல்-வரிசை, மாயாசீ-25
நிரவுதல், முத-151
நிருதக்கடற்றுனை, முத-51: நிருத
க்குலம்Xஈ, மூல-111 நிருத
சேனைமீது தடவரைவிழுதல்X
கடலில் இனமழைபடிதல்,அதி
கா-97; நிருதர்சவம் Xகற்குவை
மழை, முத-120: நிருதர் தானை
யானவர், இரா. மங்-40: நிருத
வேர் இராவணன், நிகும்-166
நிருதி, படைக்கா-20; நிருதிதன்
குலப்புதல்வர், படைக்கா-20;
நிருதிதிக்கினின்றவன் படை,
இரா. வ-137
நிருமித்தல்-படைத்தல்,நாக-265
நிரை-வரிசை, பிரமா-21
நிரைத்தல், சேது-49
நிலம்கம்பித்தல், இரணி-79
நிலங்குழிபடல், கும்ப-349
நிலத்தைச்சார்ந்த புஷ்பக வரு
ணனை, மீட்-336
நிலமகள் நீ த்துகிலினை நீக்கிப் பூ
நிறக்கூறை சுற்றினள், வருண-
நிலமுயங்குதல், நாக-86 [55
நிலம்-இடம், சேது-48
நிலந் விரல்கிளைத்திட நிற்றல்,
நிலவரை, கும்ப-226 [முத-250
நிலவினுக்கிறை, படைக்கா-5
நிலவு X வலை: இல. கே-5
நிலவுநீக்கிக் கருணைகாலும் மதி
முகம், விபீ-136
நிலவைச் செஞ்சடையில் சிவன்
வைத்தமை, படைக்கா-12
நிலாXஉகுத்தபால், இல. கே-7
நிலை, அதிகா-246: மூல-207:பூமி.
இராவ. சோ-45
நிலைகிடந்தகோபுரம், கும்ப-71
நிலைநிற்றல், பிரமா-219
நிலைநீங்கிற்றோற்பர், சேது-23
நிலைபோ மதிக்கல், நிகும்ப-40
நிலைமை நிரப்புதல் - நிலைமையை
ருசுப்படுத்துதல், இரணிய-123
நிலையம்=நிலயம், படைக்கா-16
நிலையிலாவாழ்வு, இரா. சோ-47
நில்லடா, கும்ப-202
நிழல்-ஒளி, இல. கா-40,நாக-247
நிறம்-வர்ணம், முத-250, மார்பு,
வருண-23, மகரக்-12: சிறப்பு.
கும்ப-84: மாயாச-65: முறை
மை. இரா, மங்-69: உடல்,
மருத்-90
நிறைத்தலைவழங்குஞ்சோரி, அதி
நிறைபு, மூல-20 [கா-223
நிறைபுற வாங்கிவிடல், இங்-51

நெஞ்சு-நடுவிடம், அதிகா-104
நெஞ்சுபுழுக்கமுறுதல், அதிகா-27
நெடிதுநல்குதல், மருத்து-114
நெடிதுநாள்வளர்த்து விட்டாற்கு உயிர்கொடாதுபோனேன், கும்ப -155
நெடிதுநிற்றல், மாயாசீ-79 [-62
நெடிதுயிர்த்தல், முத-86, படைத்
நெடியன்குறியன்னெனு நீர்மையி னுன்-அனுமான்: படைத்-90
நெடியோன், கடல்கா-6.மூல-145
நெடுங்கால்-சண்டமாருதம், முத -
நெடுநிலம்திரிதல்,மூல-12[58,177
நெடுந்தகை, முத-251
நெடுந்தலைதழுவியஎருவைX ஆண் டலை, அதிகா-118
நெடுந்தூளி, முத-41
நெடும்பகை, மகாக்-16, நிகும்6,8
நெடும்பொழுது, சீதைகள-7
நெடுவஞ்சம, கும்ப-85
நெடுவரை, மூல-100
நெடுவாடை, மூல-204
நெடுவாயு-பிரணவாயு: முத-179
நெய்கிடந்தகனல் X நெஞ்சு, இரா. சோ-27
நெய்கொள்சோரி, மூல-136
நெய்தல்குறிஞ்சிசிகர்த்தது,சேது-
நெய்த்தலைகழல், கும்ப-186 [27
நெய்த்திருண்டுயரும்மலை, இரா. தானை-5
நெய்த்தோர்-உதிரம், வருண-23, முத-151
நெய்யாடல்-மகிழ்ச்சிக்கு அறிகுறி யாகஎண்ணெய் தேய்த்துமூழ்கு தல், சிதைக-1
நெய்யார் பெருவேள்வி, சிதைக-
நெய்விழா, மருத்து-104 [20
நெரிதல், அதிகா-145, மகாக்-54
நெரித்தல்-நெருக்குதல்,மகுட-11, மாயாசு-32
நெரித்தார், அதிகா-165
நெரிந்தெழுபுருவம், மகாக்-19
நெரிபட்டழிந்தோரினரும் X எரிப் பட்டமலைக்கணிருந்தவர்,அதிகா -257

நெரியும்பல்பிணைப் பெருங்கரை, கும்ப-250
நெருக்காலெரிந்தார், அதிகா-165
நெருக்கிடுதல், இல. கே-14
நெருக்கினுலத்தல், அதிகா-253
நெருக்கு, விடை-6
நெருக்குதல், மூல-60 [163
நெருப்பாமெனவுயிர்த்தல், முத-
நெருப்பின்கற்றை, அதிகா-198
நெருப்பின்தோற்றத்தசரம்,அதிகா -122
நெருப்புக்கண்ணன், இந்-52
நெருப்புநீரினனறு, வருண-48
நெருப்புப்புறத்துப்பொங்கியபங்கி, மூல-6
நெருப்புயிர்த்தல், நாக-7
நெருப்புரைத்தாலு மொவ்வாவொ ளி, கும்ப-32 [க-20
நெருப்பெழ நிமிரப்பார்த்தல், அங்
நெருப்பைமீளத்தின்றுதின்று உமி ழ்கின்றுள் X அடிக்கடி துன்பச் செயலைக்கேட்டு வருந்துபவள்: மாயாசு-29
நெல்-வாகை, ஒற்று-17
நெளிதல்-அஞ்சுதல்,தத்தளித்தல், சுருளுதல்: அதிகா-19,முத-154 மூல-159
நெறி - நீதிமுறை, இரா. மந்-84, கும்ப-37: உபாயம், இரணிய - 108: வாழிடம், இரா. மந்-55, சன்மார்க்கம், விபீ-100
நெறிதல்-நெறிப்படுதல்,கும்ப-209
நெறிப்பு, அங்க-36
நெற்றி - சேனையின் முன்னிடம், ஒற்று-6
நெற்றியிற்கட்டிய வீரப்பட்டம் X மழைக்குமுவிடைமின்,முத-115
நெனனல், கடல்கா-5, அங்க-36
நேசத்தார், நாக-209
நேசத்தானிறைந்தநெஞ்சு, இரா. சோ-45
நேசமற்றுர்செய்தொழில், பிரமா-
நேசன்-பக்தன், மீட்-239 [219
நேடுதல், இரணி-167, அதிகா-51
நேத்திரத்தர், இரா. தானை-16

பகல்மதிக்கு உவமையானவதனம், இரா. மங்-93
பகவத்பக்தியே எப்போதும்வேணு மெனப் பிரார்த்தித்தல், இரணி-
பகழி, வருண-20, இல.கா-19[169
பகழி தைத்த யாக்கைXகழலிளம் பசுங்காய்; நாக-200
பகழித்தெய்வம், வருண-79: பகழிப் புத்தேள், இந்தி-52
பகழிமதில், கும்ப-278
பகழியுண்ணக் கொடுத்தல், அதிகா
பகழிவிதைத்தல், நிகும்-124[-270
பகிரண்டம், இரணி-130
பகிர்தல்-பிளவாதல், மகுட-24
பகிர்படுதல்-பிளவுபடுதல்; இரணிய -138 [இரா, மங்-83
பகீரதன் கங்கைதந்த வரலாறு,
பகுதி-சேனை, முத-198: பகுப்பு, இரணி-132, மீட்-112: மூலப்பிர கிருதி, இரணி-69: பகுதிXஅனு மான்; பகுதிக்கு மேற்பட்ட பதம் Xஇராமன், முத-222: பகுதி யால் யாவும்விளைந்தன, மீட்-100
பகுவாய், இரணி-134, கும்ப-352, நாக-230, இரா. வ-220, வான.
பகைஞர், இரா. வ-225 [கள-14
பகைஞனுக்கு நண்புசெய்தல், விபீ
பகைதேடிக்கொள்ளல், இந்தி-4[-3
பகைப்புலஞ்சார்தல், விபீ-65
பகைப்புலத்தோர் துணையல்லர், விபீ-104
பகைமுடித்தல், இரா. மங்-27
பகைமேற்புகுதல், இரா. சோ-37
பகைநாடுதல் - பகைமை பாராட்டு தல், அதிகா-62
பகையுறவருதல்-பகைவர் நெருங்க வருதல், விபீ-63 [படைத்-55
பகையொழித்துப் பின் நீராடுதல்,
பகைவரிரத்தத்தில்பரசுராமன்மூழ் கியெழுந்தமை, மூல-110
பகைவரிறந்த செய்தியை நகரத்தா ர்க்கு முரசறைவித்துத்தெரிவித் தல், சீதைக-1
பகைவரிறந்தாலொன்ற மகிழ்ச்சியி னால் இராவணன் நிதியை வாரி யிறைத்தல், சீதைக-1
பகைவரைத் துணையெனப் பற்றற் கேற்ற வகை, விபீ-80, 82
பகைவர்நாட்டின்எல்லையில் தம்மா னைகளை நிறுத்தல், படைக்கா-21
பக்கநோக்கிமொழிதல், இல.கே-39
பக்கம்-சிறகு, நாக-264: இடம், இரா.வ-43: பக்கபலம், நாக-31
பங்கம்-குற்றம், காக-176, மகரக்-35 நிகும்-11: தோல்வி, கும்ப-15, நாக-11
பங்கயம், இரணி-149, ஒற்று-20
பங்கன், கும்ப-159
பங்கி, மூல-6; Xகனல்; கும்ப-67
பங்கிபுகையால் வெண்ணிறங்கோ டல், முத-103
பசிக்குமருந்து, கும்ப-64
பசுங் கல்-அரைக்கும் கல், அம்பி, கடல்கா-9
பசுங்கழற்கண், அதிகா-224
பசுந்தலை, மாயாச-28
பசுந்திங்கள், ஒற்று-20
பசும்புண், முத-61, இராவ.தே-28
பசும்புலால், சேது-17
பசும்புனல், இரா. வ-107
பசும்பொன், வருண-44, இரா. தே-
பசை-இரக்கம்: இரணி-91 [-28
பச்சிமம்-பின்புறம், பிரமா-71
பச்சிரத்தம்-புதிய இரத்தம், இரா.
பச்சிலை, மீட்-57 [மங்-28
பஞ்சசேனைபதிகள், இல. கா-62
பஞ்சபாதகர், மீட்-171
பஞ்சபூதங்கள், இரணி-7
பஞ்சமம், இரா. தானை-13
பஞ்சமிப்பெயர்த்திதி, மீட்-140
பஞ்சம்-கருப்பு, மூல-145
பஞ்சரம்-பறவைக்கூடு, இரா. வ-
பஞ்சவடி, மீட்-281 [168
பஞ்சு, இரா, மங்-96, மூல-53, இரா. சோ-53
பஞ்செனச் சிவக்கு மென்காற் றேவி, விபீ-126
படகம், முத-99
படர்துடிக்கின்ற நாகம், நிகும்-77
படப்பை-சோலை, விடை-13

பண்டிரிதல்-பண் + திரிதல், இசை மாறுபடுதல், முத-9
பண்டு-முன்பு, வேலே-10, இராம. தே-12
பண்டை. இரணி-4
பண்டையுறையுள்-கடல், ஒற்று-2
பண்ணவன்-தேவன், இரணி-103 பிரமா-80, இரா. வ-88
பண்ணை-திரள், கும்ப-207, மகர-9, மூல-220; மகளிர் கூட்டம், நாக-281, இரா.கள-6; வயல் வருண-31: நீர்த்திரள், நிகும்-20
பண்பழிதல் - பண்பு அழிதல், படைக்கா-14
பண்பிறந்தவர் = பண்பு இறந்தவர், குணத்தினல் மேம்பட்டவர், மீட்,124
பதகன். அணி-27, நாக - 263
பதங்கம்-விட்டிற்பூச்சி: மூல-180
பதங்கன் சூரியன், கும்ப-212
பதகு, இரா. வ-121
பதம்-பதவி, அதிகாரத்தொழில், இரணி-4, இல. கே-72, நாக-55; பக்குவம், மீட்-284: சொல், இரணிய-28; உணவு, இரா. மர்-88; கால், மூல-79 [கும்ப-212
பதம்பெறுதல்-காலூன்றிநிற்றல்,
பதயுகம்-தாளிணை, விடை-6
பதலை-ஒருகற்பகுவாய்ப்பறை, மகர ீ-9 [முத-32
பதனம் = பதணம், மதிலுள்மேடை
பதாகை, முத-16, நாக-94, மூல-83; இராம. தே-10
பதாகையை வீரர்கையிலேர்தல், முதற்-104 [-3
பதாதி, கும்ப-256, சாக-87, வேலே
பதி-னர், அதிகா-67 [முடி-6
பதினெட்டுப்பிரிவுள்ளபூமி, திரு
பதுமநாளக்கள் X நாகங்கள்; இரா. வ-114
பதுமம்-தாமரை, இல.கே-67, மூல-177; ஓர்பேரெண், இல.கே-31
பதைத்தல்-விரைதல், நாக-110; துள்ளிக் குதித்தல், மாயாச-32
பத்தி-வரிசை, கும்ப-231, அதிகா 153, இரா. வ-166: பதாதி, முத-66: தூசம், இரணிய-155
பத்திவன்றலை, முத-41; பத்தாகிய வலியதலையுமாம். பத்தி = பத்து,
பத்தினி, வருண-76, மாயாச-90 மீட்-75 [அதிகா-245
பத்துத்திசையுஞ் செவிடெய்தின, பத்துநாலெனவடுக்கிய வுலகங்கள், மீட்-159
பந்தம்-தொகுதி(இலக்கணைப்பொருள்), பிரமா-202 [52
பந்தரினுரிமைசெய்தல், மாயாச-
பந்தரிற்கட்டும் ஆடை X முகில், சேது-13
பந்தனை-கட்டு, சேது-2, கும்ப-193
பந்தி-வரிசை, ஒழுங்கு, வருண-26; கும்ப-89, 349, மீட்-205
பப்புநீர் = பம்புநீர்மை-பரவுந் தன்மை, ஒற்று-19
பம்புதல்-பரவுதல், செறிதல், ஒலித்தல், நிறைதல், வருண-40, கும்ப-154, நிகும்-42, நாக-202
பம்பை-ஓர்வகைப்பறை, பிரமா-5
பம்மல்-தொகுதி, நாக-219, நெருக்கம், முத-152
பயஞ்சுற்றுதல்-அச்சஞ் சூழ்ந்து கொள்ளுதல், இரா. சோ-3
பயத்த துன்பம் - அச்சத்தோடு கூடிய துன்பம், மீட்-194
பயத்தல்-விளைத்தல், பெறுதல்; இரணி-51, விபீ-38
பயந்தது-பயப்பட்டது, பின்வாங்கியது என்றபடி, முத-139
பயந்தவள்-பெற்றவள், மீட்-214
பயமுற்றுக்குலைவாதல், அதிகா148
பயம்-அச்சம், இரணி-89, கும்ப-185
பயனும் பயன்றுய்ப்பானு மாகுபவன் கடவுள், இரணி-75
பயனுய்த்தல்-பயனையநுபவித்தல், இரா. மர்-62 [இரணி-69
பயன்-காரியரூபமான பிரபஞ்சம்,
பயிராதது-தவறாதது, நிகும்-113
பயிர்தல்-பயிலுதல், பிரமா-210
பயிலுதல் - பொருந்துதல், பழகுதல், இரா. வ-86, 104

பயிறல்-பயில்ல், பழகுதல்: இக்கே கூத்தாடுதல், பிரமா-31
பயிற்றியர் - பழக்க முடையவர், படைத்-48
பயிற்றுதல்-பழக்குதல். இரணி-51
பயோததி-கடல், மருத்-28 [179
பரகாயபிரவேசம், சேது-36,முத-
பரக்கழி-நாணமற்ற செயல், இரா.
பரசுடைக்கடவுள், மீட்-53[வ-229
பரசுதல்-துதித்தல். விடை-6
பரசுராமன் குமாரர்களோடுகார்த்த வீரியனையும்க்ஷத்திரியவர்க்கத்தையும் வென்றமை, ஒற்று-37
பரசுராமன் தாய் வினைசெய்யக் கொன்றனன், கும்ப-144
பரதன்.மீட்-195, 211: பரதன் தருமத்தானலதில்லெனுந் தன்மையான்-234: அன்புருக்கொண்டதாமெனலாகுவான்-206: தென்றிசையன்றி வேறறியான், 194: நகரத்தின்புறத்தேயும் அருந்தவஞ் செய்தல்:224: தவம்புரிந்துடல்வலிகுறைந்தவன், மாயாச-46: பிறவிவாங்கத்திருவடிபுனைந்த செல்வன், விபீ-138, மீட்-332: பரதனை யெதிர்க்க மூவுலகத்தாலும் முடியாதெனல், மாயாசி-83: பரதனருளுக்குமுன் எண்ணில்கோடி யிராமர்களும் அருகாகார், மீட்-232: பரதன்பெருமை ஊழிதிரியினும்போகாது, 231: பரதனுக்கு இளவரசு முடிசூட்டி ஸ்ரீராமன் செங்கோல் நடாவுறப்பணித்தல், திருமுடி-42: பரதன் சத்துருக்கினனைமன்னனுதியென வேண்டுதல்: மீட்-220: பரதனிறந்தால் உலகம் இறக்கும், மீட்-226, 230; பரதனைக்கண்டராமன் X கன்றுகாண் கறவை-346: பரதனை யிராமன் தந்தையைப்போலக் கண்டான் -334: பரதனிடம் அனுமான்மனித வடிவுடன் சென்றான்-256: பரதன்மோதிரத்தைக் கண்டபின் அடைந்த மகிழ்ச்சி-248-253: அனுமானுக்குப் பரிசு தருதல்-260: இராமனை யெதிர்கொள்ள முரசறைவிக்குமாறு கூறல், 262; நகராலங்கரிக்கக் கூறியதைச் சத்துருக்கன் சுமந்திரனுக்குக் கூறல்-265: பரதனது பராக்கிரமம், மாயாசி-
பரதாரம், இரா. மந்-52 [83, 84
பரத்துவன், மீட்-264;301;பரத்துவாசன், மீட்-181;பரத்துவாசன் சிவபிரமர்களாற் புகழ்தற்கொத்தவன்-197; பரத்துவாசனுச்சிரமம் கங்கைக்கரையிலிருந்து இரண்டுயோசனை தூரம்-308: பரத்துவாசாச்சிரமம்வரை முத்துப்பந்தர் வைக்கக்கூறுதல்-264
பரப்பு, மகுட-24
பரமன், மூல-155
பரமார்த்தம்பீ, மீட்-101
பரமேட்டி, பிரமா-226
பரம், இரணி-109, மீட்-102, சுமை, தொகுதி, இரா.மர்-90, பெருமை,
பரம்பரை, வான-கள-30[நிகும்-76
பரம்புதல், நாக-60 வான.கள-25
பரம்பொருள், இரணி-30; பரம்பொருள், மனிதனனமை, முத-116; பரம்பொருள் திரிமூர்த்திசொருபமாய்முத்தொழிலை நடத்துதல், மீட்-109; பரம்பொருள் புகுதியில்லாதவர் புலத்திற்று ஆகாது. இரணி-69
பரல், மூல-8, மாயாசி-25
பரவை, இரணி-4, அதிகா-101, மீட்-354
பரவை சிறியதனையன், முத-138
பரவை புனலற்று மணிகளட்டிய பேழையிற் பொலிந்தன, வருண-52 [மூல-122
பரவைமணலிற்பலர், இரணி-50,
பரவையென்னுங் குழி, வருண-82
பரவையேழ், இரணி-139, படைக்
பரன், இரணி-67 [கா-2
பராபரம், விடை-38
பராவுதல்-சொல்லுதல், இரணி-68, மகாக்-38

பன்னுதல், சொல்லல், ஆராய்தலென்னலுமாம், மீட்-218, பிரமா-172: விவரித்துச்சொல்லுதல், விபீ-47
பன்னெடுங் காதத்தேயுஞ் சுடவல்ல தீ, ஒற்று-23 [சோ-20
பாகசாதனன், பிரமா-124, இரா.
பாகத்திந்து × வெள்ளெயிறு,கும்ப-349
பாகம்-பாதி, பகுப்பு, பகுதி: இல. கே-70, இக்-44, நாக-180
பாகன், இரா. வ-14, முத-133
பாகு-தாம்பூலரசம், பாக்கு; மீட்-46; வெல்லப்பாகு, கும்ப-14, மீட்-44
பாகுதொழில் சிரிதாவது, இரா.
பாகுபாடு, கும்ப-349 [வ-7
பாகையன்றி யமுதினைநக்கினலும் சுவையறப்புலர்ந்தநா, கும்ப-14
பாக்கியம், கும்ப-284, இல. கே-69, 72
பாக்கியம் பெரும்பித்தும் பயக்குமோ, மீட்-26 [இரா. வ-157
பாங்கு-பக்கம், மீட்-80; அழகு,
பாசடை, இல.கா-34, வான.கள-
பாசத்தன்பு, மீட்-238 [24
பாசத்தாலார்ப்புண்ணுதல்,நா-292
பாசத்தாற் பிணிப்புண்ணுதல், நாக-209
பாசத்தை மறக்கையுந் துறக்கையும் உயிர்க்கு வலி, மீட்-235
பாசம்-சம்சாரம், நாக-201; படைக்கலவகை, இல. கே-58, மாயாசீ-84; கயிறு, மாயாச-40; கட்டு, இக்-70
பாசம்வீசல்,நாக-232, மாயாசீ-81
பாசவிசிப்பு, நாக-214
பாசறை, முத-1
பாசிழைமகளிர், திருமுடி-13
பாசுபதம், நாக-12, பிரமா-16 நிகும்-154,157
பாடி-படைவீடு, ஒற்று-16, அதிகா 253
பாடி யாற்றுதல்-பாடியாரவாரித்தல், இரணி-128

பாடிவீடு, விபீ-151
பாடு-அழிவு, இல. கே-60; பக்கம், விபீ-29, கும்ப-283, இரா.வ-205, சீதைக-22: வெளிப்படுதல், இரா. வ-212, திருமுடி-9; தக்குதல்,மாயாச-93,நல்லறிவு, முத-114
பாடுறுதல்-சிறப்புப் பெறுதல்-மீட்-332 [-32
பாட்டியாக்கைபருந்துணல், அங்க
பாணி-பக்கம், இரா. வ-10; பாடவேண்டியமுறை, களி.18; கை, இக்-26
பாணித்தல்-தாமதித்தல், முத-172, அதிகா-180
பாண்டில்-கஞ்சதாளம், பிரமா-5, திருமு-33
பாதகர் தீகிலராய் அன்பு செய்வரோ, விபீ-75
பாதம், கும்ப-353, ஒற்று-57, நிகும்-12
பாதலம், படைக்கா-32
பாதவம், முத-19
பாதாளம், படைக்கா-19
பாதிமதி, இரா. வ-149
பாதுகைப்பூசனை, மீட்-210
பார்தளிற் பெரிய திண்டோட் பார்தன், நிகும்-72
பார்தனுக்கரசு, மூல-182
பார்தன், கும்ப-109, இரா. வ-104
பாமம்-ஒளி, நிகும்-17, மூல-185, 203, வான. கள-14
பாமறைக்கிழத்தி, விடை-22
பாம்பணை, ஒற்று-28, விடை-13
பாம்பு, முத-41, 193, நாக-12
பாம்புகான்றமதிப் பான்மையான், மீட்-21
பாம்பென்னப் புரளல்,அதிகா-268
பாயலுதறிப்படுத்தல், கடல்கா-3
பாயிரம்-வரலாற்றுமுறை, மாயாச
பாயிருள், வருண-73 [-14
பாய்-பாய்மரம், படைக்-46
பாய்தல், முத-17, 33, 65; வான.
பாரகம், மரு-46 [கள-5
பாரமா மதில், மீட்-154

பாரம்-மிகுதி, இரணி-149; பெருமை, வருண-10, கரை,சேது-45
பாரவில், முத-192
பாராயண மறை, நிகும்-141
பாரிடம், வருண-49, இரா.வ-116
பாரித்தல்-பாபரப்புக்கொள்ளுதல், பிரமா-36, முயற்சிகொள்ளுதல், மாயாச-28, விவரித்தல்-87
பாரிய-பார்க்கும்படி, நாக-218
பாரிஞள்-பூதேவி, சேது-34
பாரின் மிக்க பொறைப் பத்தினி, வருண-76
பாரையின்வலைய கோடி, நாக-110
பாரையுண்பது புனல், வருண-34
பார், இரா, தே-8
பார்த்திபர் எச்சிலையிலும் பழிபட வாழத் துணியார், மாயாச-66
பார்ப்பான்-பிரமன், வருண-61, நிகும்-151
பார்ப்பு-பார்த்தல், முத-237: பறவைக்குஞ்சு: மாயாச-31 [226
பார்மகளைத் தழுவுதல், இரா. வ-
பார்மகள் குருதியுண்ணுதல், நாக-
பாலமணி,இராம. தே-1 [10
பாலம்-பிண்டிபாலம், அதிகா-124
பாலன்,இரா. மங்-66
பாலிகை, கும்ப-219
பாலிலிருந்து நீரினைவேறுசெய்யும் அன்னம் X குரங்குருக்கொண்ட ஒற்றரை யுணர்ந்துபற்றிய விபீடணன், ஒற்று-25
பாலில் நீருற்றதன்னநீரான் X சினமடங்கிய ராமன்; வருண-74
பாலுறுவெண்டிங்கள், ஒற்று-20
பால்-எழனுருபு, இரா. மங்-78
பகுப்பு, மாயாசி-34, விபீ-78
பால்கொளும் புரவி, நிகும்-181
பால்வருபனுவல், விபீ-78
பாவகம்-கருத்து, அபிப்பிராயம், கும்ப-9, இரா. கள-6
பாவகர்-தீவினையோர், மூல-51
பாவகன்-பரிசுத்தன், நாக-270
பாவகாரியர், இரா. மங்-88
பாவத்தை மணம்புணர்தல்,மூல 6
பாவனைச்சு, விபீ-164

பாவம்-தீவினை, மூல-73, இரக்கப் பொருள் தருஞ்சொல், மாயாச-
பாவனம்-பரிசுத்திகரம்,மீட்168[66
பாவனை-அபிநயம், களியா-12
பாவி,இரணி-24, அங்க-31, முத-252, மாயாச-62: பாதகமுடையாள், இரா. வ-225
பாவித்தல்-எண்ணுதல், மருத்-55
பாவுதல்-பரவுதல்,நிகும்-151,மூல
பாவை, கடல்கா-8 [-127
பாழி-அகலம், இரணி-3: வலிமை. விபீ-4, படைத்-70
பாழிதுற்றுதல்-வலிமை மிகுதல்,
பாழித்திசை, அதிகா-60 [மீட்-4
பாழ்-வெற்றிடம், மீட்-324
பாழ்படுதல், சேது-34, முத-51
பாளைதாது=பாளைத்தாது,முத-7
பாறு-பருந்து, மூல-209, மாயாச-92, அதிகா-168, படைத்-95: மாறு, மகுட-18,
பாறுகுசிறை × வாளிஞல்நூறிய கோல், கும்ப-309
பாறுதல்-சிதறுதல், முத-70,கும்ப-183,அதிகா-125,நிகும்-84
பாற்கட லகத்துறையுநாதன் X இராமன், முத-221
பாற்கடலமுவத்துள்ளது X வானரச்சேனைசூழ்ந்த அரக்கச்சேனையைக்கொண்ட இலங்கை,அணி-27
பாற்கடலில் தாமரைமலர்தல் X குரக்குச்சேனையில் விளக்கொளி பரத்தல், விபீ-16
பாற்கடல் X நரசிங்கமூர்த்தி,இரணி-149,வானரசேனை: விபீ-132
பாற்கடல்கடைந்த போதெழுந்த வோசை × ராமலக்ஷமணரின் நாணிஞேசை, களி-19
பாற்கடல்நாதனே இராமஞகத் திருவவதரித்தான், நிகும்-144
விடை-14
பாற்கடல்வைகும் பரமன் X தாளப் பந்தர் நடுவண்வைத்த மரகதம், இல. கா-41 [அணி-1
பாணத்தான்-குடியையுடையவன்,

புடைத்தல், முத-61, அதிகா-251, நாக-72
புடைபெயர்தல், கும்ப-56
புடைபெயர்த்தல் - நிலைபெயரச் செய்தல், இரா. மங்-64
புட்டிவிற்கணை × புற்றில் அரவு, மூல-124
புட்டில்-விரற்புட்டில், கணைப்புட்டில், இராம.தே-4.9, நாக-12, முத-113
புட்பகம், மாயாசி-86; புட்பகவிமானத்தில் மக்கள வாத்தியம் முழக்குதல், மீட்-356; புட்பகம் உலக முண்டானுதர மொவ்வாது-335: புட்பகவிமானத்தின் தன்மை, மீட்-143, சிதைக-29: அருக்கராயிரந் தோன்றினுற் போலும், மீட்-145; நினைவெனுந் தகைத்து-148: புட்பகம் அயோத்திநோக்கிச்செல்லல் X சூரியன் உத்தராயண மார்க்கத்துச்செல்லல்-163: புட்பகம் மங்கலம்நீக்கினரையும் ஆருயிர் வாங்கினரையுந் தாங்காது, சிதை.க-29
புணரி-கடல், வருண-32
புணரியைப் போக்கறவடைத்தல், ஒற்று-42 [அதிகா-152
புணர்தல், இரணி-107, கும்ப-3,
புணர்த்தல்-சேர்த்தல், மாயாச-3, 12, இல. கா-6
புணர்ப்பு-மனப்பிணிப்பு, மீட்-314, ஆலோசனை, இரா. மந்-15
புணை, மூல-28
புணையுறுதோள், மாயாச-43
புண்டரம்-கழுகு, படைத்-97
புண்டரிகன், இராம. தே-20
புண்டரீகக்கணம்மான், இரணி-121
புண்டரீகத் தடாகம்போலுந் திருமேனியன் ராமன், விபீ-51 [36
புண்டரீகம்-புலி, தாமரை; அங்க-
புண்டிறத்தல், முத-59, 94, கும்ப-196, இரா. சோ-34, கும்ப-196
புண்ணிடையெரிபுக்கென்ன, அதிகா-295
புண்ணியமரபு, இரா. சோ-59
புண்ணியம் பொருந்தாமுயற்சி, சேது-44
புண்ணியம்போனபின்மற்றப்பண்பு பழுதுபோம், இரா. வ-164
புண்ணியம்மெனும்முயிர், மீட்-232
புண்ணியன், நாக-214
புண்ணிற்கோலுறுதல் × வருந்திய நிலையில்இராமன்கடிதல், மீட்-70
புண்ணினீர், நாக-285, இரா.கள-
புண்ணுடைநெஞ்சு, கும்ப-160 [22
புண்ணுறு புலவு, கும்ப-145
புதல்வன், மீட்-115
புதுக்குடியேற்றல், இந்தி-18
புதுப்புனலாடும், பொம்மல், இரா,
புதுமழை, வான. கள-22 [கள-22
புதுவது, இரணி-36
புதுவலி, ஒற்று-62
புதையிருட்பொழுது, முத-113
புத்திரர், விபீ-12
புத்தேளிறுத்தல், கும்ப-239
புத்தேள்வாள், மாயாச-51
புந்தி, நாக-268
புந்தியோர், இரா. வ-191
புமான், இரா. சோ-31
புயக்குன்று, படைத்-39
புயத்துறைவலியரும்பொறையுடன் வாழ்தல் சயத்துறை, அங்க-8
புயலவன்-இந்திரன், வான.கள-30
புயல், கும்ப-220, 240 மூல-125 வேலே-48
புயற்கரைப் பசும்புனல்-மேகம்பொழிவதுபோற் பொழிந்தஇரத்த நீர், இரணி-89
புரசை, அதிகா-114 [183
புரஞ்சுடுகடவுள், மூல-38, 76, 173,
புரட்டுதல்-வீழ்த்துதல், கும்ப-313
புரத்தல், படைத்-56
புரந்தரனுர்பெருந்தவம், சானகியழகு இராவணன்காதல்சூர்ப்பணகை யிழந்த மூக்கு இராமன் வனம்போந்தது என்பன: இரா.வ
புரந்தரன், மாயாச-72 [-241
புரந்தரன்பகை, இரா.வ-230, மீட்
புரம்-உடம்பு, மாயாசி 56 [-127
புரவலன், மீட்-161

பொங்கிப் பார்த்தஇராமன் X பணங்கிளரரவு, மீட்-61
பொங்குதல்-கோபித்தல், இரா.மங் 45, இரா.வ-167 கிளர்ந்தெழுதல் கடல்கா-3, மீட்-179: பூரித்தல், மகுட-51, உற்சாகங்கொள்ளுதல், இரணி-127, நாக 278 [80
பொங்குநர்-சீற்றம் மிக்கவர், விபீ-
பொங்கொளி-சூரியன், முத-113
பொடிதல்-பொறிபாகப் பரத்தல், இரா. வ-146; பொடியாதல், மூல-93
பொடிதல் - தோன்றுதல், சேது-62, பொடியாதல், இரா. வ-43, 140, வெளிப்படுதல், நிறைதல், விபீ-125, நாக-102, 118, பிரமா-118
பொடித்திழிதல் - பொடிப்பொடியாய்வெளிப்படுதல், இரா.தானை -16
பொடிப்பு-மயிர்க்கூச்சு, இரா, வ-57
பொதி-தொகுதி, நாக-114
பொதிரெறிதல்-நடுங்குதல், அதிகா-200; பொதிர்தல் நடுங்குதல், பிரமா-13: பொதிர்-நடுக்கம், பிரமா-38
பொதுவு-நடுநிலை, இரா. மங்-33 இரணி-44; சகசம், முத-272: சாதாரணமான, வருண-30
பொதுத்தல்-பொத்தல்செய்தல், இரணி-4, வேலே 16, இரா.வ-
பொதுநெறியில்லை, இல. கா-6 [48
பொதுப்படுதல்-ஒத்தல், நாக-75
பொதுமை சார்த்தல், மாய-சி 71
பொதும்பர், விபீ-27
பொதும்பு-குகை, மீட்-325
பொதுவற-உரிமையாக, மாயாசி-51, வேலே-41, இரா. சேர-36
பொத்துதல்-மூடுதல், நிரம்புதல், நிறைத்தல், இரணி-84, மாயாச-64, மாயாசி-17, படைக்கா-1, இரா, வ-111
பொம்மல்-வியப்பு, வான. கள-36, கூட்டம், இரா. கள-22: மிகுதி, இரா. வ-5: வருத்தம், மீட்-70
பொம்மெனல், கும்ப-70, நாக-216
பொய்-அசத்தியம், மருத்-29, வெற்றிடம், அணி-10
பொய்கையில்மலர்பூத்தல் X நட்சத்திரம் வானத்து விளங்கல்,
பொய்க்கருமம், மூல-153 [இலகே2
பொய்த்தசான்றவன் குலமெனமீன்குலம் முதலறல், வருண-25: see மூல-145
பொய்த்தல்-அறிவுசோர்தல்; இரா. வ-172: தவிர்தல், இரணி-96, மாறுபடல், வேலே-41
பொய்ப்பிறவி, பிரமா-217 [-220
பொய்ம்மையாற் குடிப்பழி, பிரமா
பொய்யினும் பெரிய மெய்யான். அதிகா-229
பொய்யின் ஈட்டியதீமை, சேது-67
பொய்யுடல் கொண்டுசெல்லும் நமன்தூதர், சிதைக-32
பொரிதல், வருண-26, மூல-226
பொருக்கென-விரைவுக்குறிப்பு, பிரமா-190, விடை-14, மீட்-11, 260
பொருதல்-போர்செய்தல், ஒத்தல், இரா. மங்-35 இர்-22: அதிகா-149, 150, 276, 288, விபீ-15, கும்ப-113, நாக-216, அராவுதல், இரா. வ-160: மோதுதல், முத-177
பொருந்துதல் - முட்டவிடுதல், இரணி-3, கும்ப-157
பொருந்தல் - சேர்தல், விபீ-43, உடன்படல், நெருங்கல், கும்ப-13, மருத்-85, இயலுதல், இரணி-18
பொருப்பு, கடல்கா-1, மகுட-13, ஒற்று-17, மீட்-329
பொருப்பு மெய்விற்றெழிப்பு-இராமபிரான் வில்லொலியெனினுமாம், இரா: வ-40 [கே-34
பொருப்பைமீதிடும் புரவி, இல.
பொருமல்-வருந்துதல், புலம்புதல், அச்சம், மாயாசி, 56, பிரமா-199, இரா.வ-37, மீட்-208: பூசிப்பு, மீட்-22

பொருவியது-பொருந்தியது போர் செய்தது, இரணி-152
பொருவு-ஒப்பு, விபீ 12, முத-221
பொருள்-சாதனம், காரியம்,கடல் கா-11: விபீ 24, இரணி-35;விஷயம், நிகும்-183: உபமானப் பொருள், நாக-268
பொருள்களெல்லாம்புக்குறைவன், இரணி-123
பொலம்,படைத்-31, 64, மாயாசீ-73, நிகும்-13,மீட்-18
பொலன், நாக-214
பொலிதல்-விளங்குதல், தோன்றுதல், இரா, மந்-33, 93, இரா. தானை-2
பொழிதல்-சிந்துதல், நாக - 102, மருத்-33 [இல.கா-33
பொழுதுவிடிதலின் வருணனை,
பொறி-பிரதிமை,கும்ப-5; தீப்பொறி, வருண-22: யந்திரம்,வான. களா-12:அளவு,இரணி98:மனம்-105:ஊழ்வினை, நிகும்-106: இந்திரியம், இல. கே-21, இந் 55: புள்ளி,அதிகா-221: வண்டு,பிரமா-30
பொறிதல் - தீப்பொறிபறத்தல், கும்ப-255, முத-206
பொறித்தல்-தீப்பொறி சிதறல், வருண-32,கும்ப-17;எழுதுதல், மீட்சி-149, இல 3
பொறிபடுதல்-தீப்பொறி தோன்றுதல், இல கா-21
பொறிபடை-தீப்பொறிபறக்கின்ற படை, அதிகா-152
பொறிபிறத்தல், சேது-11,இரா-
பொறிவிலா, ஒற்று-42[களா-27
பொறுத்தல்- தன்னிடத்துக்கொள்ளுதல், தாங்குதல்,இரணி-1,நாக-146, நிகும்-134, இரா,சோ-42
பொறை-பொறுமை, இரா.மந்-19: அடக்கம், மீட்-88:பாரம்,அதிகா-40,இரா. வ-101 [93
பொறைமை-பொறுமை,இரா.மந்-
பொறையிழிதல்- பொறுக்குந்தன்மை கெடுதல், மாயாச-36

பொறையினதுஊற்றம், பெருமை முதலியன, மகுட-37
பொறையுயிர்த்தல், நிகும்-117
பொற்கலன் பொன்னிற் பிறிதாலX உலகம் கடவுளினின்றுவேறு பட்டனவல்ல,இரணி-112
பொற்குவட்டிடை மரகதக்குன்றந்தோன்றுதல் X வீரரிடை இராமன் தோன்றல், இல. கா-29
பொற்பு,இரா. மந்-2 மருத்-53
பொற்றார் = பொன்தார்-பொன்னாலியன்ற கிண்கிணிமாலை, பிர
பொற்றை-மலை, இல.கா-22[மா-6
பொற்றொடி, மீட்-166
பொன்-அழகு,வேலை-38; இலக்குமி, மாயாசீ-19, இரும்பு,அதிகா-19
பொன்கணன் - இரணியாக்கன், இரணி-121
பொன்கரிதென்னும் பொறியுகுகண், அதிகா-228 [183
பொன்குலாமேனிமைந்தன்,நாக -
பொன் சென்றறியா வுவணப்புள், நாக-20
பொன்மதில் செம்புனலால்துப்பிற் செய்த வரை போன்றது,முத-27
பொன்மலை, மருத்-92, பிரமா-157
பொன்றினவ னெழுந்தாற்போல், கும்ப-56
பொன்றுதல்-அழிதல்,போய்விடுதல்,நாக-131; அதிகா-240; இந்-10
பொன்றுவிப்பதோர்விதி, மூல-26
பொன்னகர், அதிகா-261
பொன்னடிபூண்டான், கும்ப-153
பொன்னரிமாலை, மாயாச-5
பொன்னி, ஒற்று-8
பொன்னிநாடு-சோழநாடு, மருத்-58
பொன்னுபரிகைமாடம் X தாமரை மலர், இல. கா-34
பொன்னுலகம், மாயாச-79
பொன்னுளே தோன்றிய பொற்கலம் X கடவுளிடத்துத் தோன்றிய பிரகலாதன், இரணிய-100

பொன்னெடுங் குன்றம் - மந்தரம், அதிகா-221 [-96
பொன்னைக்கொல்லுமேனி, இரணி
பொன்னைத் தீயிடைப் பெய்வது அதன் றூய்மையைக்காண X சீதையை அங்கியிற்புகச் சொன்னது அவளுடைய குற்றமற்றதன்மையை (யாவரும்) காண, மீட்-123
பொன்னொப்பார், திருமுடி-39
போகக்குறி, மருத்-36 [கும்ப-304
போகநோக்குதல்-பாகச்செய்தல்,
போகம்-உண்ணகை: முத-148: சுகானுபவம், இரா. களா-11
போக்கரும்பெருமை பிரமா-101
போக்கிலாத - எல்லையற்ற, இல. கா-21
போக்கு-தப்பிப்போகை, முத-157, அதிகா-127: நல்வழி,கும்ப-86: சலனம், ஒற்று-46; போகுதற்குரிய இடம், இரா.வ-164 [66
போக்குதல்-வீசியெறிதல்: திரும-
போத-நன்றாக,மிகவும்,இரணி-22. நாக-217
போதகம், விபீ-113, முத-100
போதத்தது- காலத்துக்கூறியது, மீட்-212
'போதமுற்றிய' என்பதைநீ திவித்தனேனும் கூட்டாமல், போத முற்றிய தண்டுளை எடுத்து- போதம் முற்றியமைனையத் தோற்றுவிக்குந் தண்டென வுரைப்பினுமாம்: மீட்-183
போதம்-அறிவு, இரணி-1,30,மீட்-212; பிரஜ்ஞை,மாயாசீ-63[46
போதம் முதல இராமன், அதிகா-
போதல்-செல்லல், தெரிதல், இரணி-109, இரா. சோ-42:ஒலியடங்குதல், முத-237: அழிந்தொழிதல், நாக-146, மருத் - 74, இரா. வ-134: கடந்திருத்தல், மாயாச-14
போதாநெறி, சேதகள-18
போதியாதது - தெரிந்துகொள்ள முடியாதது, இரணி-27
போது-மலர், வான. களா-32
போதோன்-பிரமன், மூல-29
போர = போகல்; மூல-95
போரரங்கு - போரின் நர்த்தனசாலை, இரா, மக 61
போராசைப்படெடுழுந்தகுலம், அரக்கக்குலம், இரா. வ-221
போரான் வலி, முத 203
போரிற்புறங்கொடுத்தவர் அடைவது பழி முதலியன, மூல-54
போரொணத்தோள்கள் வடமேருவின் வலிந்தன, இரா.தானை-2
போரேறிடுதல் - போர் மிகுதல், அதிகா-16
போர்க்களரிலை, முத-223-237, கும்ப-173, போர்க்களம் X மருத நிலம், வான. களா-25
போர்க்களம் பேயினூர்ப்புடையது, கும்ப-353 [கும்ப-155
போர்க்கோலஞ் செய்துவிட்டான்,
போர்த்தல்-மூடப்படுதல், இரா.வ-
போர்த்துளி, அணி 8 [172
போர்பொரப்பொங்குதல், அணி-
போர்ப்பு, முத-237 [22
போர்ப்புறங்கொடுத்தோர்ப்போன்ற ஆண்டொழிலோர், இரா. வ-
போர்மகள், இரா, வ-226 [209
போர்மத்தன் - யுத்தோன்மத்தன், இராவணனுக்குத்தம்பி முறையாகுபவனான மகோதரனுக்கு இவ்வாறு பெயரென்பது வால்மீகத்துவிளங்கும்:கம்பர்உன்மத்தனென்று அதிகா - 226 ஆஞ்செய்யுளிற் கூறுவர். போர்மத்தன் தன் யானையைத் தானே கொல்ல, பிறகு நீலன் இவனைக் கொன்றான், அதிகா-226
போர்வலயம், இராவ. தே-10
போலும்-உரையசை, முத 119
போவு-போவது, நாக-231
போழ்-பிளவு, நாக-44
போழ்தல்-பிளத்தல், இரணி-90, மாயாசீ-57 [-117
போழ்ந்த தன்பம்புறப்படுதல்,மீட்
போழ்த்தென வரக்கன்செய்தபுன்றொழில், இரா. வ-218

போற்றரும்புகழ், முத-249
போற்றி, வருண-70
போனகம், கும்ப-78, மீட்-42
போனசுவடு, மாயாசி-54
போனவென்றியன், நாக-154
மகரக்கண்ணன், மகரக்-5,13 இவன் கான்புதல்வன் -15; மகரக்கண்ணனதுமாயவடிவத்தினின்றுநிச வடிவத்தைக் கண்டறிந்து இராமபிரான் கொல்லல்-29
மகாஞ் சோரிசோர்தலாற் படுதல், இரா. வ-171
மகரநீர் பகழி யொன்றாலழிதல், மீட்-191
மகரமும் மத்தமாவும் பொருதல் X காலமழைபொருதல், சேது-21
மகரம், வருண-21, 23, வான.கள-18; இரா. வ-164
மகரம் வெருவின விளிப்புமலையானை × கஜேந்திராழ்வான்: சேது-16
மகரவேலையைக் கல்லினிலூரத் தக் கடந்தமை, ஒற்று-34
மகவுகொண்டுபோய் மரம்புகுமந்தி X இலக்குமணனைத் தூக்கிச்செல்லும் அநுமான், முத-213
மகளிருள்ளத் தூது செல்லவுயிரனுருறைபுணுடுதல், இல. கா-23
மகளிருடல் நாளினும்வணங்குதலுளதோ, இரணிய-146
மகளிர் களிமயக்கத்தால் கனக நாண் முதலியவைகளைக் கூந்தலிற் சுற்றல், களியா-16
மகளிர்நயனம் இராவணனுக்கு வருத்தம் விளைத்தல், கும்ப-4
மகளிர்நோக்கம் ஆடவர்நோக்கமாதல், மகுட-52 [நாக-279
மகளிர் விளக்கேந்திப் பரவுதல்,
மகனுடலை எண்ணெய்த்தோணியிலிடுமாறு இராவணன் கட்டளையிடல், இரா. சோ-61
மகாபாரிசுவன், இல,கே-39, படைத்-15: மகாபாரிசுவனை அங்கதன் பொருதுமாய்த்தல், படைத்-73, 79

மகுடகோடி X திரைகடற்கதிர்: விடை 6
மகுடத்தைப்பற்றியஇராமனம்பு X கதிரினையுண்டகோள், முத-247
மகுடமிழந்த விராவணன் X எல்லிமைத்தெழும்மதியமு ஞாயிறும் இழந்தஅல்லும்பகலும்; முத-284
மகுட மேற்றுதல் - தலைநிமிர்த்தசைதல், முத-143
மகோததி, இராம, தே-7
மகோதரன் X வான்றொடர் குன்றம்: இரா.வ8; மகோதரன்மாயைவல்லான், கும்ப-34, 41; மகோதரன் செய்தமாயம், மாயாச-31, பிரமா-168,169, மகோதரனென்ற போர்மத்தன் நீலனுடன் பொருதொழிதல், அதிகா-215-227; மகோதரனுக்கு இலக்குமணனைத் தடுத்திருக்குமாறு இராவணன் கட்டளையிடுதல், இரா.வ-9: மகோதரனை இராமன் துணித்தல், இரா.வ-15: மகோதரன், இரா.மர்-22-அணி.19, மாயாச-31,92, மாயாசீ-1: இரா, சோ-55-60: பிரமா-91
மகோதர மகாபாரிசுவர் இருநூறு வெள்ளஞ்சேனையோடு தென்றிசை வாயிலில், அணி-19
மக்கட்டுணையற்றனை, நாக-8
மக்களுமனையு மரிய பொருளலர், மீட்-314
"மங்கலகீதம்" என்று தொடங்கும் பாடலின் முதல்மூன்றடிகள் அங்கண் தொடங்கும திருமுடிசூட்டு படலத்து-33-ஆம் பாடலின் மூன்றடிகளோடு ஒப்பிடற்குரியன, விடை-5
மங்கலச்செய்யகோலம், மூல-136
மங்கலநாண், இராவ. தே-29
மங்கலநீங்கினுரை இவ்விமானம் சுமக்காது, சீதை-29
மங்குல்-வானம், இரா.வ-80: மேகம், கும்ப-44, இரா.வ 98 [நிகும்-116
மங்கையர் கண்கள் X அம்புகள்,

மழுவோன்-சிவன், இரணி-161
மழை, படைக்கா-4 × கருங்குவளை மாலை, இரா. தானை-8, × எய்தனவும் எறிந்தனவும், அதிகா-128
மழைகால்வீழல், இரா. வ-49
மழைக்கண்ணாள், மீட்-228
மழைக்குரத்தேர், படைத்-30
மழைத்தல், மூல-98
மழைத்தாரையும் மேகமும் × அம்புகளும் மலைகளும், நிகும்-68
மழையினீர்வழங்குகண், அதிகா-26
மழையும் கடலும் மாறினும் மாறுமதம், வான. கள-29
மழையென்றுசங்கைகொண்ட கொடை, நாக-263
மழையேறு, அதிகா-166, மகரக்-13
மள்ளர்-உழவர், வீரர், மூல-102, வான. கள 25
மறக்கண், படைக்கா-27, மீட்-19
மறத்துறை, அங்க-12, கும்ப-328
மறப்படை, மூல-152
மறம்-வீரம்: விபீ-98, மகுட-13 கொடுமை, கும்ப-342, விபீ-48 அதருமம், பாவம், மூத-252, நிகும்-173
மறலிக்கிரைசெய்தல், மீட்-32
மறலி வயிற்றையுயிர்களாற்றூர்த்தல், இரா. வ-96
மறவன்-வீரன், அதிகா-139
மறவினை-அதருமச்செயல், விபீ- [129
மறி-ஆடு, நிகும்-47
மறிகுதல்-ஒழிந்திடுதல், கும்ப-200
மறிக்கொள்ளுதல்-காலைக் கட்டி மடக்குதல், நாக-166
மறிதால-மீண்டுபோதல், மேலை-9
மறிதல்-மடங்குதல், ஒடிதல், கடல்கா-1, நிகும்-53: இறந்துவீழ்தல், வருண-37, நாக-96, நிகும்-41
மறித்தல்-மடக்குதல், மூல-131, தடுத்தல-174, பேர்த்தெடுத்தல், நாக-81 [நாக-197
மறித்தெறிதல-மடக்கியடித்தல்,
மறிந்ததேர் × மண்ணுகவீழ்விமானம்: அதிகா-110 [நிகும்-47
மறிந்திடுதல்-அறப்புண்டுவீழ்தல்.

மறிப்பு, அங்க-36 [மூ-5
மறு-களங்கம்; இரா. மந்-93, இரு
மறுகுதல்-மனங்கலங்குதல், இரா. மந்-11, இரணி-34, கும்ப-339. இரா. வ-63, சுழலுதல், நிகும்-95
மறுக்கம், மாயாசீ-95, படை-13, நிகும்-49, மாயாச-18
மறுத்தல்-உடன்படாமை; இரா. மந்-50; வரவொட்டாதுதடுத்தல்
மறை-வேதம், இராவ. தே-6 [81
மறைகளினிறுதி, மீட்-192; மறைகளின்தலை-101: மறைச்சிரம்-உபநிடதம், இரணி-61
மறைதந்துளான், மீட்-12
மறைதல்-அஸ்தமித்தல், இரணி-12: கண்ணுக்குப் புலப்படாதிருத்தல், நாக-250
மறைதுறத்தல்-வேத வொழுக்கத்திற்கு மாறுதல், இரா. மந்-51
மறைந்துறைந்தொதுக்கிவாழ்தல் அறத்துறை முதலியனவன்று, அங்க-12
மறைப்பொருள்-வேதசித்தாந்தம், இரணி-52
மறைமுடிவு, மீட்-99
மறைமுதற்றனி நாயகன், இரா. வ-101
மறை மெய்யினைப்பொய்யென்றான் நாஸ்திகன், விபீ-117
மறையவர், இராவ. தே-24
மறைவாணர், இரா. வ-51
மறைவாணர் முதலோரின்பாசங்கலந்தபசி × உரகம், நாக-263
மறைவிரிதந்தென்னவாறு சிறை, இராவ. தே-6
மற்கம், மூத-48, சேது-69 [ப-7
மனகதி-ஓரிராவணன் றாதன்: கும்
மனக்கன், மீட்-117
மனந்தொடு-ஆலோசனைகொண்டு இரா. மந்-103
மனத்திற்குமுன்செலும், மூத-232
மனத்திற் செல்லுந்தடந்தேர், பிரமா-123, நாக-100: மனத்திற்போதல், மாயாசீ-92; மனத்தினுக்க... தேர்விசை, கும்ப-278

மனத்தின் முன் செல்லுமானம், மாயாசி-88
மனத்துமாசுஉவிரொடும் வாங்குதல், மீட்-217
மனத்தையும் தீய்க்கும், கும்ப-19
மனநிலே, அங்க-10
மனநோய், கும்ப-140
மனம் அக்கமென்னக் குளிர்தல், விபீ-155
மனமெனுஞ்செந்தீ, முத-165
மணவு-இரத்தினம், மீட்-31
மனிதன், அங்க-23 [ன்,மூல-41
மனிதராளிலெனிராக்கதராளிலெ
மனிதர்சிரியர், இரா. மங்-43
மனிதனென்று எள்ளலுற்றேம்,
மனித்தன்,இரா.வ-22[வருண-42
மனுநெறி, மீட்-7, விடை-36
மனுமுதல், விபீ-60, நாக-179
மனே-வீடு. இரா. மங்-95: அறை, இலகா-34
மனேயுற்ருள் மனேவியாக இருப்பவள், இரா. மங்-50
மனேலயம், மீட்-337
மன்-அரசன்: இரா. மங்-31
மன்மதவாளி, நாக-274,மன்மதன் சரம், இல. கே-9
மன்றல்-வாசனே, மாயாசி-71, இரா. தே-26, மீட்-118
மன்றில்வளமுண்டு கரிபொய்த்தல் மூல-145
மன்னவர்க்கரசன், இல. கா-24
மன்னன்மகன், மூல-215
மன்னிலாப்படை, கும்ப-268 [98
மன்னுதல்-நிலேநிற்றல். இரா.மங்-
மன்னெறி-க்ஷத்திரியதருமம், அதிகா-35
மா-குதிரை, அதிகா-106, யானே, மீட்-261; பெருமை, 320. வண்டு: களியா-15: மரவகை, சேது-56. விலங்கு: நிகும்-41
மாகம்-வானம், இரா. தானே-19, இந்-44: படைத்-27
மாகலர்காயம், மாயாசி-82
மாகாயன்-அதிகாயன், அதிகா-82
மாசட்டர்த்தகாலை வேகடஞ் செய்தல்Xபிராக்டியை நீராக்டுதல், மீட்-44
மாசு-மேகம், இல.கா-34: குற்றம், இரா. மங்-52, இல. கா-7
மாசுணம், இராவ. தே-6
மாசுணுதல், மாயாச-13
மாடக் - அரங்கமாளிகையென்னலாம்,திருமுடி-20Xவிண்டுவின் மார்பிற்காந்தும்மணி-19
மாடு-அருகு, கும்ப-247, நாக-26; பக்கம், இரா. சோ-4, வேலே-25; இடையில், ஒற்று-9: செல்வம், இரணி-31
மாட்சி-பெருமை, இரா. மங்-11
மாட்டாமனிதன் - வலியற்றமனிதன், அதிகா-270
மாட்டுதல்-நிலைநிறுத்திக்காட்டுதல் மருத்-113, இரா. கள-14;வாய்விட்டுச் சொல்லுதல், நாக-3
மாணவகன், மீட்-260
மாணி-பிரமசாரி, முத-210
மாணுதல்-மாட்சிமைப் படுதல், மீட்-211
மாணைக்கொடி, ஒற்று-27
மாண்டார்க்கு நீர்க்கடனியற்றுமாறு விபீடணனுக்கு இராமன் கட்டளையிடல், மீட்-296
மாண்டொழிதல், விபீ-64
மாதரார்வடிவுகொண்ட நஞ்சத்தோய்முகம், மாயாச-10
மாதலி, இராம.தே-15,18. இரா. வ-6, 77
மாதவத்தொருவன், வேலே-29
மாதவன்-பெருந்தவசி, மீட்-34
மாதிரம்கடந்த தோளான்,மாயாச-2, இரா. சே-42
மாதிரம்-மலே,திக்கு,முத-16,மீட்-249
மாதலத்தலைவனுபதேசம்,அணி-
மாதலனுர், மாயாச-83 [15, 16
மாநிலக்கிழத்தி, மீட்-353
மாந்துதல்-பருகுதல்;சேது-24,கும்ப-107, மீட்-309
மாபெரும்பக்கன்-மகாபாரிசுவன், இரா. மங்-38. படைத்-2, 30

மால்கொண்டவடிக்கணையும் என
உம்மை மாறுக: உம் கதைத்
தொடர்ச்சி பற்றியது, இரா.வ-
மால்வரையேழ், வருண-18 [195
மால்விழுந்தளிர்-திக்பிரமைக்குட்
பட்டோர், மூல-131
மாழ்குதல்-ஒலித்தல், நாக-281,
வருந்துதல், மீட்-110
மாளிகையியைவு, மணிக்கற்றை
சுற்றத் தொழில் தெரிகில,
இல. கா-82 [82
மாளுதல்-கூர்மழுங்குதல்,மாயாச-
மாள்வது மெய்யெனு விறுத்து,
கும்ப-125
மாள்வன கழுத்து-ஒழிவனவான
கழுத்து, நாக-65
மாறுடினமதம், அதிகா-24
மாறுமதவாரி, அதிகா-41
மாறிச்செல்லுமுருள், கும்ப-139
மாறு-எதிரானபொருள், முத-242,
நாக-145: ஒப்பு, விபீ-35 [350
மாறுகால்-மற்றொருகால், கும்ப-
மாறுகொண்டிமைத்தல், வேலே-1
மாறுகோடல்-மாறுபடுதல், இரா.
மங்-99
மாறுதல்-மீளுதல், அதிகா-6: அழி
தல், இராவ. தே-33
மாறுமாறுதல், நாக-145
மாற்கடல், முத-117
மாற்றமீக்க, வருண-7
மாற்றம், இரா. மங்-104 இரணி-
34, மீட்-241
மாற்றக்கூற்று, வேலே-16
மாற்றருந்தம்பி, கும்ப-136
மாற்றலர்-பகைவர், இரா, மங்-104
மாற்றவன்தம்பி இங்குத்தோற்று
மோ, விபீ-68
மாற்றூர், கும்ப-359, பிரமா-91
மாற்றுவுயிர், நாக-10
மாற்றான்-பகைஞன், இல. கே-40
மாற்றுதல்-ஒழித்தல், அடங்குதல்,
இரணி-7, 134
மானத்தா லூன்றப்பட்ட மருமத்
தான், அணி-1 [கா-265
மானத்தாற் புழுங்கிலைதல், அதி

நானத்தீயெரி பொடித்துச்சிந்துங்
கண்ணன், நாக-198
மாணமாமணி-பேரளவுள்ள சிறந்த
இரத்தினமெனலாம், பிரமாத்
-145
மானம்-விமானம், இரணி-6, மா
யாச-51, பெருமை, கர்வம், ரோ
ஷம், அபிமானம், முதற் - 154,
பிரமா-6, அங்க-18 மாயாச-15;
கும்ப-10, நாக-51, இரா. கள-
24, அவமானம், அளவு, மாயாச
-7, இல. கா-29
மானவன், நாக 56, மூல-142,
155, மீட்-327
மானுயினன்-மாரீசன், இரா-மங்-
மானிடர், கும்ப-36, 92 [97
மானிடவன் இரா.மங்-97, மாயாச-
மானிடன்-சிவன், இரணி-15 [82
மானிடம் அரியினை யென்செயும்X
குரங்குகள் இராவணனை என்
செய்யும், இரா. தானை-35
மானுடப்பசுக்களுக்குவரமிலை, இரா
-மங்-102 [131
மானுடமடங்கல்-நரசிங்கம், இரணி
மானுடன், மாயாச-81. இரா. வ-
மானுடன், ஒற்று-60 [240
மானுதல்-போன்றிருத்தல், இரா.
மங்-90
மானெனவந்தவன், விபீ-77
மான், சேது-28
மான்மதம், மீட்-340
மானமுகன் பயன், மீட்-5, 297,
திருமுடி-29
மிகுதல்-உயிருடன் மிஞ்சுதல்: முத
-139, மேம்படுதல், மாயாச-74
மிகுதி-மேன்மை, முத-222, அதிக்
கிரமம், இரா. வ-6
மிகுந்த வான்-பரந்தவானம், இரா.
வ-164
மிகை-மிகுதி, குற்றம்; இரணி-147
அதிகா-134, இரா. கள - 27:
மேம்பாடு, விபீ-63
மிகைப்புலம் - மேம்பட்ட வறிவு,
விபீ-65, 104
மிக்கது-மிஞ்சுவது கும்ப-143

மேருவளவான வெற்பினம் பாரிற் செல்லுதல் x தேவர்கள் செல்லுதல், அதிகா-26
மேருவில்லாளன், நாக-18
மேருவின்சிறப்பு, மருத்-47
மேருவுங் குலுக்க முறுதல், இரா. வ-81 [சேது-3
மேருவு மணுவும் வேறுருவகை,
மேருவைத்துளக்குவார், அதிகா- [120
மேலரசெய்தல், விபீ-92
மேலவர்சிறிலுஞ்சிறப்பு,வருண-33
மேலவன் - பாகன், அதிகா - 201; மேன்மையுள்ளவன், விபீ-78
மேலொற்றுதல், மூல-97
மேலொரொழுக்கு, நிகும்-176
மேலோர்தருமம், இரா. சோ-59
மேல்வரப்போவது, விபீ-16
மேல்-வானம், இரா. மந்-80
மேல்விளைபொருளுணர்தல், இரா மந்-66
மேல்விளைவு, விபீ-7
மேல்வினை-மேலானஅருஞ்செயல், இரணி-107
மேவலர்-பகைவர், இரணி-98
மேவுதல்-பொருந்துதல், விரும்புதல், வருதல்; நிகும்-28, மாயாசீ-26, மீட்-165
மேற்கின்வேலை, வான. கள-33
மேற்கொள்ளல்-மேலேறிக் கொள்ளல், மீட்-148
மேற்செல்லுதல் - பகைவர் மீது படையெடுத்துச் செல்லுதல், கடல்கா-10
மேற்படுதல்-மிகுதல், அதிகா-178
மேனகை, களியா-31, மீட்-42
மேனிசாலவெதும்புதல், நாக-274
மேனிபுனைபுகிறெண, கும்ப-333
மேனிபொருந்துதல், சீதைக-20
மேனிமிர்ந்துவீசுதல், நாக-147
மேனிமுற்றும் காதலித்த வருவாதல், இரா. வ-202 [204
மேனிமுற்றுங்கிறத்தல், அதிகா -
மேனியாற்பூமியையுழுதல், இரா.
மேனிவடு, நாக-274 [சோ-15
மேன்மை-பெருமிதம், முத-147
மை - அஞ்சனம், இரா. மந்-84, மகுட-13; குற்றம், அதிகா-81; மேகம், விபீ-131, சேது-16
மைக்கருநிறம், கும்ப-272
மைக்குப்பை, முத-176 [வ-225
மைத்துனன்-தங்கைபுருஷன்; இரா
மைந்தர், பிரமா-41
மைந்தர்வார்த்தை X இராகவன் வாளி, கும்ப-4
மைந்தன் - புதல்வன், இரணி-35: ஓர் வானரவீரன் (மயிந்தன் எனவும் வரும்) விபீ-44
மைம்மலை x விபீடணன், விபீ-131
மைம்மலி குழலினர், மீட்-177
மையல், இரணி - 92, முத - 214, அதிகா-141, 163 [இந்-47
மையறக்கரிதென்றென்னும் மனம்,
மையனோய்க்கு மந்திரமுமருந்து மில்லை, மாயாசீ-16
மையனோய்முடித்தவா, கும்ப-354
மையொடும்பகைத்து நின்ற நிறத்தினன், பிரமா-136
மொக்குள், இரணி-158: X யாக்கை, இந்-9
மொட்டு, நாக-22, இராம. தே-12,
மொத்துதல், முத-66
மொய்-வலிமை; அதிகா-141, இரா. சோ-27: போர்க்களம், இரா. சோ-30: யானை, விபீ-131: மொய் = மொய்த்து: பகுதிவினையெச்சப் பொருளில்வந்தது, 'வரிப்புனை பந்து' என்றவிடத்துப் போல: விபீ-131
மொய்த்தல், இரா. மந்-2
மொய்க்கணை, இரா. கள-22
மொய்ச்சுச்செல்லல், வான. கள-20
மொய்த்தல், இரா. மந், 39: இரா. வ-232
மொய்ம்பர், முத-145, அதிகா-105
மொய்ம்பினோய், இரா. மந்-23
மொய்ம்பு-வலிமை, இரா. மந்-74, விடை-11: தோள், படைத்-74
மொய்ம்மதி, இரா. தானை-28
மொய்புனைவயப்பரி, இராம. தே-
மொய்வித்தகம், நிகும்-162 [24

கிரிகள் சிறையற்றுவீழ்தல், அதிகா-143: யானைகள் தலத்திடைப் புரளல்Xபொருப்புகள் புவியிலுருளுதல், கும்ப-215: யானைகள் நகரினின்று வெளிவருதல், முத-37; யானைகள் பாகரற்றபின் மதமயக்கத்தால் தம்மினத்தோடு பொருதல், அதிகா-135: யானைகள் பாகர்களின்றியே எதிரிகளின் தானையிற் புகுதல், கும்ப-220: யானைகள் பின்னும் முன்னும் மாறிவிழுந்து கிடப்பனவமெய்யிருபாலும் தலைபெற்றதன்மைக்கேய்வன, வானகன-13: யானைகள் மதநீரைப் பெருக்கல், திருமுடி-9: யானைக் காற்பட்ட செல்Xஅநுமன் கைப் பட்டபஞ்சசேனாபதிகள், இல. கே-62: யானைக்குக் கோபமும் மதமும்மறுத்தல் துர்நிமித்தம், மூல-79: யானை நாணுற நடத்தல், மாயாச-5: யானை பொற்பொடி பூசிப்பொன்மலையென்னப்போவ, இல. கா-36: யானை மத்தகத்தில் முத்து உகுதல், படைத்-54: யானை மீது கொடிகள்வைத்தல், முத-37: யானைமேற் பறைசாற்றல், பிரமா-6, மூல-4, யானையானமகாம், நாக-58

யுகம்-இரண்டு, விடை-6

யுகாந்த காலக்கடலினோசைXதேரினோசை, இராம. தே-11

யுகாந்தகாலத்திற் கல்மழைபொழிதல்Xவில்லெறிந்த கணைகள் விழுதல், படைத்-37

யுகாந்தக்காற்றினுல் உடுமீன்உதிர்தல், பிரமா-117

யுகாந்தக்காற்றினுல் யாவும் அழிதல், இக-44

யுகாந்தக்காற்று, படைத்-59

யுத்தகளத்தில் நிற்கும் இலக்குமணன் விடும் வாளிX சுடலையில் ஆடும் சிவபிரான் சடை, பிரமா-

யூகம், மூல-40 [148

யோகம், இராணி-60, மருத்-104, வேலே-42

யோகவெஞ்சேனை, அதிகா-2

யோகி, ஒற்று-26

யோகிகள்-கற்றங்கியினெடுவாயுவினிலைகண்டவர், முத-179

யோகியர், இராணி-9

யோசனை-ஓர் நீட்டலளவை, மருத் 24, 25, 26, 31

ரத்தம், அங்க-42

ராகம்-சிவப்பு, இரா. தானை-19

ராகு, இராகு. இரா. தானை-19

ராசி, அதிகா-93, நாக-94

ரோதம்-கரை, இரா. சேர-1

வகிர்-பிளவு, இராணிய-138, பிரமா-117, மருத்-27

வகிர்தல்-கிறுதல், அதிகா-160

வகுதியின் வயத்தன-வகுப்பிலடங்கியன, இராணி-69

வகுத்தல்-உண்டாக்கல், வேலே-23

வகை-அழகு, படைத்-97, விதம், மகுட-12

வகைதல்-வேறுவகையாகக் கூறுதல், சிதைக-16

வக்குதல், இரா. வ-65

வங்கம்-அலை, இராணி-101

வங்கியம்-புல்லாங்குழல், களி-11

வசஞ்செயாதவன், இல. கே-41

வசந்தன், கும்ப-177

வசிட்டன், திருமு-25: சிவபிரானையொத்தவன்-28: விரிஞ்சன்மைந்தன், மீட்-258; வசிட்டன் முதலியோர் இராமனுக்குஅபிடேகஞ்செய்தமைக் கூறல், திருமுடி-27: வசிட்டன் மௌலிபுனைகையில் பரதன் குடை கவிக்க, இரு தம்பியர் கவரிவீச, அனுமன் அரியணை தாங்க, அங்கதனுடைவாள் பற்றினன், திருமுடி-38

வசை, இரா. மர்-92, முத-171: அதிகா-264, மாயாச-65, மாயாசீ-33

வச்சிரதம்ஷ்டிரன், இரா. மந்-28, படைத்-21, 91, இல. கே-40 இவனை அனுமான் மாய்த்தான், படைத்-92

வானரம் பெரிது, விபீ-17: வானரம் மதிலைவிட் டிழிதல் X மேருவை விட்டுமாக்கடலிழிதல்; முத-31; வானரம்வருதல் × ஒருகடலடைக்க ஒழிந்தவேலைகள் வருதல், சேது-5; வானரர் இராமனுக்குச் சந்தனகுங்குமதருக்களால் நிழலுண்டாக்கல், ஒற்று-11; வானரர் இராவணன் தேர் செல்லவிலகுதல் Xவேலைநீரோங்குநாளி லுலகொதுங்குதல், இரா. வ-23: வானரர் இலக்குமணனை அரியெனவறிதல், கும்-161; வானரர்கடலில் அணைகட்டினமை, படைக்கா-47; வானரர்கொள்ளியால் இலங்கையெரிதல் × ராமன் ஆக்நேயாஸ்திரத்தால்கடலெரிதல், மாயாசீ-24; வானரர்செய்தஉதவியைப் பார்க்குமிடத்து மூவுலகத்துயிர்கள்நல்லவல்ல, நாக-240; வானரர்தலைகள் சிந்தல்Xவாடைமோதக்காலமாரி மயங்கி வீழ்தல், நாக197; வானரவீரரால் இலங்கை மதிள் தறையிலிறங்கி விழுதல், முத-15; வானரவீரர் மூர்ச்சைதெளியக் காரணங்கள், நாக-175; வானரவுருக்கொண்ட அரக்கர் அரக்கராலேயேமாய்தல், அதிகா-258

வானரேசர், கும்ப-175 [30

வானரேந்திரன்-சுக்கிரீவன், நாக-

வானவர் திசயத்துக் கைத்தலங் குலைதல், முத-194

வானவர்களைகண், இரணி-143

வானவர்க்கிறைநீயே, இரணி-172

வானவர்தானவர், படைத்-9 [15

வானவர்நாட்டினும் மழை, சேது-

வானவர்புகழுண்ட வில், முத-192

வானவர்பூமழைசிந்தல், இரா. வ-38

வானவர் போர்காண வருதல், படைத்-95

வானவர் மனம்போல மும்மைச் சுடர் குறைதல், அதிகா-198

வானவர் மார்பிடை யிற்றிலாத வானபடை, முத-97

வானவர்மார்பில்தைத்தவயில், கும்ப-195 [44

வானவாறு-ஆகாயகங்கை, வருண-

வானவில்லினிரண்டை × ராம ராவணர்களின் விற்கள்; இரா. வ-39

வானுடியர், இரா. வ-32

வானினுமொப்புறமிலா பரிமா, அதிகா-42 [யர், நாக-283

வானுடையண்ணல்செய்த மங்கை

வானுயரனுமன், மாயாசீ-16

வானுயருவகை, மாயாசீ-94

வானுயர்கற்பு, மீட்-49

வானுயர்தோற்றம்-மிகச்சிறந்தபிறவி, மீட்-119

வானுயர்ந்தவரத்தினன், கும்ப-120

வானுலகர்தாயவடி, திருமுடி-85

வானுளோர்-தேவர்கள், இரா. வ-98

வானுறைகுழுன்வரல், நாக-294

வானெடு- ஒருபொருட்பன்மொழி, முத-41

வானைமுட்டுக் தேர், இராம. தே-8

வானைமுற்றுக்கவ்வியதனையவரை, கும்ப-199

வானைவென்றான் - இந்திரசித்து, நாக-15

வானோர், மீட்-355, 356

வான்-ஆகாயம், இரா. மந்-64, பரமபதம், இரணி-152, வானுலகத்தார், பிரமா-125

வான்மீகன் இந்திரசித்தோடுசென்ற சேனைநாற்பதுவெள்ளமென்றான், நாக-24

வான்மீன் விழுதல் உற்பாதக்குறி, மாயாசீ-22 [-14

வான்முகடெட்டநீண்டமதில், முத

வான்தருவள்ளல், இரணி-125

வான்றணைச்சுற்றம், இரா. மந்-9

விகடம், நாக-146

விகுதி, மீட்-100

விகுதியின்னீக்கம் - மூலப்பிரகிருதியின் விகாரமான மிக்கபொருள், இரணி-69

விக்கல் — விக்கல், அழித்தல், நாக-8
விசயமெனும்பெண், நிகும்-160
விசயம், முத-178, அதிகா-181, நாக-242, மூல-219
விசவியகரணி, மருத்-27
விசிகக்கோல், மூல-164
விசிகம், இரா. வ-52, வேலே-20
விசித்தல், மாயாசீ-81
விசித்துக்கட்டுதல் - இறுகக்கட்டுதல், இரணி-99
விசும்பு, அதிகா-89, நாக-180, 182
விசும்புறைவோர், முத-173, நிகும்-28
விசுவாமித்திரர், இரா. மந்-86
விசை-விரைவு, இரணி-91, கும்ப-213, அதிகா-107, ஒற்று-9
விசைதிறத்தல் -வேகமாகவெளிப்படுதல், இரணி-127
விசையப்பாவை தூர்த்தன், பிரமா-153
விசையம்-வெற்றி, இரா. மந்-99
விசையுறுபகழி, இரா. வ-14
விசையுறுபறவை, இரா. மந்-10
விசையுறுமுரசு, மீட்-356
விஞ்சை, சேது-9, இரா. வ-7, இராவ. தே-17
விஞ்சையர் - வித்தியாதரர், இரா. வ-118, வான. கள-34
விடத்தைபுண்டவர் × தயாமுண்ட சீதை, சீதைக-4
விடத்தை புண்டவர்மருந்தால் மீளல், நாக-144
விடர்துடிக்கின்ற கண்டத்தண்ணல், நிகும்-77
விடமலவிழியெனுங்கண், இல. கே-28
விடமீசன்றன்னை விழுங்கினும் தெவ்வுப்படை இராவணனையணுகலாற்று, இரா. வ-214
விடமென்னப் பொங்குதல், அதிகா-213
விடவாரி, இரா. வ-139
விடற்கரும்வினை, அதிக-111
விடாமதக்குன்று, மூல-126
விடாய், மூல-9
விடியாவிருள், சீதைக-12
விடிவு, அணி-23
விடுக்குமுன் அஸ்திரத்திற்குப் பூசனைபுரிதல், இரா. வ-140
விடுதல்-தொடங்குதல், விட்டிடுதல்: அணி-11, நீங்குதல், கடல்கா-10, அனுப்புதல், இரணி-90, 115, படைத்-20: எறிதல், முத-230, அதிகா-92: பெருகுதல், நிகும்-35 பாத்தல், கொல்லப்படுதல், மூல-216
விடுத்தல் - விடைகொடுத்தனுப்புதல், வீபீ-155
விடை-உத்தரம், அனுமதி, இரா. மந்-65, கும்ப-128. இரா. வ-8, விருஷபம், இரா. மந்-83
விடைக்கிளையான்-இலக்குமணன், படைத்-82
விடைத்தல்-சினங்கொள்ளல், அதிகா-45, இரா. வ-113
விடைநல்குதல், அதிகா-19
விடையின்பாகன், இரா. மந்-25, நாக-288
விடையின்மேல் விளங்குபவன் × அங்கதன்மேல்விளங்கும் இலக்குமணன், பிரமா-19
விடையேறினர் -காளையின்தன்மை மிக்கவர், பிரமா-120
விடைவருபாகன், இல. கே-20
விடைவலோன், மகுட-46
விட்டருளுதி, இரா. மந்-99
விட்டிதல்-விட்டொழிதல், மூல-194
விட்டெழுபுரவி, முத-144
விட்டெற்றுதல் - கெட்டித்தள்ளுதல், நாக-140
விட்பகத்துறைகோளரி × புட்பகத்துத்தங்கிய இராமன், மீட்-184: (விட்பு-குகை)
விண்-வானம், கும்ப-332
விண்குலாம்வாயில், முத-36
விண்டலம், மீட்-148
விண்டவர்-பகைவர், இரா. மந்-18, வீபீ-90, கும்ப. வதை-291
விண்டிறந்திடல், இரா. சோ-34
விண்டு, அதிகா-86
விண்டுவின்படை, மூல-225, வேலே-25
விண்ணடைதல், நாக-4

விரற்புகுடில்Xதாமரையிதழ் தொ
றும்வீற்றிருந்தவண்டு,முத-113
விராதன், படைக்-41, மீட்-191,
277
விராவுதல், கும்ப-234, மீட்-305
விரிஞ்சன், இரணி-1, மூல-13,
இராவ. தே-20, இல. கா-9
விரிதல்-பரவுதல், மிகுதல், இல.
கா-33: முத-60, மலர்தல், மீட்-
விரிநீர்-கடல், முத-175 [213
விரியமைத்தநெடுவேணி புறத்த
சைதல், மீட்-228
விரிவு-பரப்பு, இரா. மங்-36
விருது, அதிகா-181; இரா.வ-137
விருத்தன்-முதியவன், இரா. மங்-
67, சேது-41
விருந்து:சேது-25, பிரமா-182, மீ
ட்-200, 312
விரூபாக்கன் நெடுங்காலமிமைய
வர்க்கிறுதி கண்டவன்: அவன்
மூலத்தானையோடுநகரிகாத்தல்,
அணி-21: விஞ்சையரைவென்ற
வன், இல. கே-43
விரை-வாசனை, இரணி-57, 70,
விரைசுதல், முத-35 [மீட்-355
விரைதல், மாயாசி-41
விலக்குதல், இரா. மங்-20, 31, மா
யாச-73
விலக்குவன் - மச்சகூர்மவராகா
தாரமெடுத்ததிருமால், பிரமா-
64
விலங்கல்-மலை, மிருகம், சேது-29,
கும்ப-343, படைத்-64 × ஆகம்,
நாக:81, மீட்-117
விலங்கினத்தை உயர்திணையாக்
கூறுதல், மீட்-47
விலங்கினர்-பகைவர், இரா.மங்-20
விலங்கு மலை, திரியக்கானஜந்து,
இரா. மங்-10, சேது-28, இரா.
வ-51
விலங்குதல்-உயிர்நீங்குதல், இல.
கே-63; பின்னிடுதல்,பிரமா 60,
எதிர்ந்துவருதல், மாயாசி-73
விலங்குநாட்டவன்- விரூபாட்சன்,
இல-48

விலாசழி, மகாக்-8, மீட்-340
வில்-ஒளி, வருண-8, நாக-240;
தனுசு, முத-35
வில்லாளரை இயண்ணில் விற்கு
முனிற்கும்வீரன், நாக-5
வில்லாளன், அதிகா-48, இரா.வ-
வில்லி, இல. கே-3, நிகும்-78:[51
வில்லினுற் சுருக்குண்ணுதல், இல
கா-64
வில்லினுற்சொல்வினல்லது சொல்
லினுற் சொலக் கற்றிலேம், கும்
ப-236
வில்லினன், ஒற்று-17
வில்லின்கல்வி, முத-141
வில்லின்செல்வன், மீட்-55
வில்லுடைமேரு × சிலைதாங்கிய
இலக்குவன், முத-141
வில்லுடன் அரக்கர் கை விழுதல்X
செல்லோடு மாமுகில்சிந்துதல்,
மூல-199
வில்வாகைவேய்தல், முத-155
வில்வித்தையின்கணவன், இங்-37
வில்வினைபொருவன், கும்ப-315
விழவிடுதல், இரா. வ-60
விழாவணி- போர்க்கோலக்காட்சி,
மீட்-57
விழி-கண், அதிகா-141, பீட்-153
விழிகாணேன்-கண்ணுக்குப் புலப்
படாதேன், மாயாச-79
விழித்தெழுதல்: மூல-98
விழியில்தழன்மாரி சொரிந்தார்,
அதிகா-238 [பீ-9
விழியெதிர்நிற்றியேல்விளிதி, வி
விழுக்கல்-சிறக்கும்படிக்கல், முத-
15
விழுங்குதல், இரணி-93, 139- ப
டைத்-23, வெல்லுதல், இரா.
தானை-3
விழுதல் - சோர்ந்துகிடத்தல்,
இரா.வ-36 அமைதல்,மகுட-22
விழுதுடையால் × கைசாற்றின
இராவணன் யாக்கை, முத-250
விழுத்தலை, நாக-41
விழுத்துதல், இரா.வ-155
விழுந்துபுரளுதல், இரா. தே-27

விழுந்தபோதல்-இறந்தொழிதல், நாக-68
விழுமிது, மீட்-307
விழுமிய, மீடு-160
விழைவு-விருப்பம், மூல-162
விழைவுமஃதே-விழைவஃதும், ஏ -அசை, நாக-179
விளக்கின்வீழ்விட்டில், மாயாசி-72
விளக்கெதிர்வந்த விட்டில் X இராவணனை தன்னெதிர்வந்தகுரங்குகள், மாயாச-27
விளக்கையும் விளக்குமேனி, களியா-5
விளங்கிழை, மீட்-319
விளம்புதல், ஒற்று-34
விளி-ஆரவாரம், மூல-189, மீடு-356
விளிஞர்-கொல்லத்தக்கவர், விபீ-10
விளிதல்-அழிதல், கும்-3, 81, பாடுதல், களியா-11
விளித்தல்-ஆரவாரித்தல், முத-173, அழைத்தல், அதிகா-231: சப்தித்தல், பாடுதல், மூல-135
விளித்திடுதீபம்-கலங்கரை விளக்கம், மூல-135
விளித்தல், மாயாச 81
விளிவு-கோபம், மீட்-130, கூப்பிடுகை, நாக-99
விளிவுற்ற பதாகைய, கும்ப-322
விளைத்தல்-உண்டாகச் செய்தல், இரா. மங்-60
விளையாடிப்பிழைப்ப செய்தாய், மகுட-38
விளையாததுன்பம் விளைத்ததெய்வம்வெளிவந்தது, நாக-266
விளைவதோர்தல், மாயாசி-8, இர்-36
விளைவு-நிகழவேண்டிய செயல், கடல்கா-11: காரியப்பயன், விபீ-52, 61, 145: தீப்பயன், நாக-210
விளைவுமண்டுணர்தல், நாக-289
விள்ளல்-முறிதல், அதிகா-289, பிரிதல், விபீ-70: துண்டமாகுதல், முத-130, திறத்தல், படைக்கா-6; வெளிப்படுதல், மீடு-145
விறலு, விபீ-112, வருண-16
விறல், ஒற்று-55, மீடு-191
விற்காலொடுபுருவம் கோட்டல், அதிகா-233
விற்கொண்டாரிவரே, நாக-116
விற்படிதிரடோன், இல. கா-36
விற்படுகணை, நாக-40
விற்றுண்ணுதல் - விலைப்படுத்திவிடுதல், மாயாச-40
விற்றொழில், அதிகா-78, 199
வினதன், பிரமா-179
வினயம்-வணக்கம், படைக்கா-33
வினயவார்த்தை, விபீ-106
வினை-செயல், இரா. மங்-30, மீடு-31: தீவினை, ஒற்று-33; பரிகாரச்செயல், நாக-194
வினைகடியான் - கொடுந்தொழிலன்: முத-172
வினைகளைக்கற்பின்வென்ற விளக்கு, மாயாச-4
வினைக்கொடும்பகை, மீடு-214
வினைஞர்-தொழில்வல்லவர், இரா. மங்-47
வினைதேர்தல் - செய்யவேண்டிய செயல் இன்னதென்று அறிதல், இரா. மங்-47
வினைத்துவக்கு, மீட்-102
வினைறும்விடை, படைத்-82
வினைப்பகை - மெய்ஞ்ஞானம், இராம. தே-16
வினைமுறைபிறழ்ந்து பயனளியா, இரணி-66
வினையம்-செய்தொழில், கும்ப-48, இரா. வ-121, மீட்-146: வேலைப்பாடு. இல. கே-19; வஞ்சனை, இரணி-80, ஒற்று-30, இரா. வ-201; தந்திரச்செயல், இரணி-147
வினையறுதொழிலர், கும்ப-7
வினையறுமுனிவர், முத-202
வினையினினிடாறுத்தல், மீட்-35
வினையின்வெய்யன படைக்கலம், இராவ. தே, 22
வீக்கம்-மிகுதி, பாப்பு, இரா. கள-26 மீட்-100
வீக்கு-கட்டு, கும்ப-355

வீற்றுவீற்றுக, முத-244
வீற்றுவீற்றுறுதல்- தனித்தனியாகப் பிரிவுபடுதல், சின்னபின்னமாதல், நிகும்-53, மீட்-107
வெஃகுதல்-விரும்புதல்,நிகும்-165
வெகுளிகொடுத்தது, மருட-27
வெகுளிச்சிரிப்பு, நிகும்-80, இந்-7, இரா. கள-27
வெங்கலுப்பு, நிகும்-14
வெங்கணன், முத-136
வெங்கணை திறந்தமெய்யர்தம்தெரிவையரைத் தழுவி வீரசுவர்க்கமடைதல், நாக-165
வெங்கண், மூல-89
வெங்கதிர்-சூரியன், கும்ப-68, மருத்-36
வெங்கரி-தணல், முத-134
வெங்கழல், மகுட-51
வெங்காரம்-கொடிய உக்கிரம்: இரா. வ-132
வெங்கை-விரும்பத்தக்க கை,கடல்கா-10
வெங்கோபசெடும்படை, மூல 211
வெங்கோல், அதிகா-194
வெஞ்சமம் கணித்தென்னும் உவகை, இராவ. தே-29
வெஞ்சாந்தெரிதல், மூல-75
வெஞ்சரவேலி, மூல-171
வெஞ்சிலை, மாயாசி-94
வெஞ்சினம், பிரமா-83
வெஞ்சொல் செவியையும் நெஞ்சையுஞ் சுடுதல், முத-91
வெடி-அச்சம், பிரமா-55
வெடிதல் = வடிதல்: மூல-22
வெடியுங்காலை-அச்ச முண்டாகும் யுகாந்தகாலமென்னலாம்: இராவ. தே-12
வெட்டுண்டு இரத்தவெள்ளத்தில் வீழ்ந்த வான்பொருந்திய அரக்கர்கை X சுறுமீன்கள், மூல-202
வெண்குடை, வான. கள-23, X குருதிஆற்றின் நுரை, பிரமா-145, வெண்குடை முதலியவற்றைப்பேய்க்கணக்குவித்தல், கும்ப-252, வெண்குடையின் கீழிராவணன் X உவாமதிக்கீழுயர்கார்: முத-98
வெண்டிரை, விபீ-29
வெண்டுகள், முத-128
வெண்ணகை, இரா, வ-178
வெண்ணிணம், கும்ப-322
வெண்ணிலாமுரட்கணை,பிரமா-77
வெண்ணெய்ச்சடையன், சேது-9
வெண்பலைமெல்வது, மூல-130
வெண்பிறை, மூல-125
வெண்மணற்பரப்பில் நிலாவீழ்தலின் வருணனை, இல-7
வெண்மதி, வான. கள-21
வெதிரின்காட்டெரி X இலக்குமணன் சரம், நாக-161
வெதிர்-மூங்கில், நிகும்-96
வெதிரின்கான் X வெங்கணை; வருண-36:X வேகின்றமனம், நாக-200
வெதுப்புதல்-வாட்டுதல், இல.வே-8, வருண-58: உவமவாசகம், அதிகா-193
வெதும்புதல், கடல்கா-9, நாக-216, மாயாச-29
வெந்தகை-வெவ்வியதன்மை, அதிகா-62
வெந்தபுண்ணிடை வேல்பட்டவெம்மை, இரா. சோ-10
வெந்தழல்வெண்ணெய், படைத்-18
வெந்திறற்சித்தி, அதிகா-208
வெந்துசாம்பராதல், பிரமா-30, மாயாசி-90
வெற்றொழில், இரா. மா-36, விபீ-38, பிரமா-41
வெப்பு-கொடுமை, வெம்மை, நாக-201, இரா. வ-213, அதிகா-167
வெப்பெழுதினுலன் னமேவிவுடையாள், மீட்-226
வெம்படைப் போர்க்கடலார்ப்பு, முத-34
வெம்பிணத்துதிரநீர், முத-209
வெம்புணீர், முத-22, கும்ப-154
வெம்புதல் - வருந்துதல், கொதித்தல், தவித்தல், இரா. மா-47, இல. கா-16:நாக-182,மூல-200

வெம்போர், படைத்-19
வெம்முனை, மூல-187
வெம்மை-கொடுமை, மூல-4, 122: விருப்பம், படைக்கா-31: பராக் கிரமம், அதிகா-4
வெயிலோன் தென்பா லெழுந்து வடபானிமிர்ந்து வருகின்றசெய் கை, நாக-247
வெயில்-வெம்மை, நிகும்-39; சூரி யகிரணம், மகர-22.மாயாச-60; வெயில்போன்ற ஒளி, இரணி-153, இரா. மந்-88
வெயில்கடந்திலாதஎயில்,அங்க-16
வெயிற்று-வெயிலையுடையது, இர ணி-96 [க-214
வெய்துறுதல்-முனர்தவித்தல், நா
வெய்யவர், இராவ. தே-12, இரா. வ-149
வெய்யவன், கும்ப-277
வெய்யவன்படை-ஆக்கிநேயாஸ்தி ரம், அதிகா,202
வெய்யவினையோர், மூல-149
வெய்யோன், வான. கள-20, 21
வெய்யோன்மகன், நிகும் - 163: விடை-9 [அதிகா-5
வெரிந், இரா. மந்-83, இரா-வ213
வெருக்கொள்ளுதல், முத-62,கும் ப-113, நாக-116
வெருவருதல்,ஒற்று-32,மாயாசீ-9
வெருவல்-அஞ்சுதல், முத-124, இந்-16, வான. கள-4 [ப-36
வெருவல்காணல்-அசைத்தல்,கும்
வெருவுதல், இரா. மந்-62, இல. வெருவுறல், நிகும்-151 [கா-2
வெறிதல்-செறிதல், முத-79
வெல்லுதல் - வெற்றிபடைத்தல், வெறுத்து விட்டிடுதல், இரா. வ-190, மீட்-212
வெல்லு மத்தனையல்லது தோற்றி லா விறலோன், முத-248
வெவ்வரம்பொருதவேல்,மீட்-198
வெவ்வலி, கும்ப-136,நிகும்-99
வெவ்வழி-துன்மார்க்கம், இல.கே-13: நாக-227
வெவ்வழியாசனம், இரா. மந்-5
வெவ்விடம்பொருது மிளிர்தரும் கண், மீட்-173
வெவ்விழிநெருப்புக, முத-123
வெவ்வுரைத்தூதுவன், நாக-8
வெவ்வேறடைவு, மீட்-351
வெவ்வேறிட்டோதுதல்,கும்ப324
வெவ்வேறு ஓதம்மலைஏழு,இரா
வெளி-சமபூமி. நாக-66[ம. தே-13
வெளில்-கட்டுத்தறி, வான. கள-26, (வெளில்தீர்த்தல்-கட்டுத் தறியைப் போக்குதல்.)
வெளிறு-அஸாரம்; முத-15, 233
வெள்குதல்-நாணங் கொள்ளுதல், இரா. மந்-44; முத-209
வெள்ளக்கடல், பிரமா-191, வெள் ள நீர்வேலை, கும்ப-169
வெள்ளம்-ஒரு பெருந்தொகையும், கடலும், கடல்கா-1, பிரமா-26: கூட்டம், மீட்-178
வெள்ளம்போற்கண்ணி, மகுட-5
வெள்ளவாரி, ஒற்று-57
வெள்ளி-சுக்கிரன், படைக்-14,நி கும்-39
வெள்ளிக்கிரிதளர்தல்X அநுமான் தளர்தல், முத-185
வெள்ளிடை,வருண-29,முத-151 மூல-22, வேலே-17 [-34
வெள்ளிமலை X அன்னம், இல. கா
வெள்ளிவண்ணம்-வெண்மைநிறம், கடல்கா-9
வெள்ளெருக்கஞ் சடைமுடியான், இரா. வ-239
வெள்ளைமருப்பு, மூல-126
வெள்ளைவள்ளுகிர், இரணி-152
வெறி-வாசனை, பிரமா-166; தீராக் கோபம், விடை-10
வெறித்தல்-திகைத்தல், மூல-80
வெறிநீர்-கடல்: வருண-32; "வெ றிகொள்வேலை" என்பதுகாண்க.
வெறிபூத்தல், இரா. வ-20
வெறிபோர்த்தல் - வெறிக்குணம் மிகுதல், இரா. வ-50
வெறுக்கை-பொருள், முத-15; இ ரா. வ. தே-24 [க-1
வெறுக்கைவெறுக்கவீசுதல்,சிந்த